"தியாகு"

# விவிலியக் களஞ்சியம்

# II

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்
சென்னை -28

# விவிலியக் களஞ்சியம்

# II

## உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ,
## க, கா, கி, கீ, கு, கூ

பதிப்பாசிரியர்

"தியாகு"

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை-28.

முதல் பதிப்பு : மே 1992
மறுபதிப்பு : ஜூன் 1995
மறுபதிப்பு : ஜனவரி 1998
மறுபதிப்பு : அக்டோபர் 2002
மறுபதிப்பு : நவம்பர் 2005
மறுபதிப்பு : அக்டோபர் 2010

**Nihil Obstat**
P.C. Thomas.

**Imprimatur**
+ M. Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ 250/-

நூல் கிடைக்கும் இடங்கள்
அருள் கடல்
சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை
மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

---

Type Setting : Savithri Laser Printing, Chennai.

Printed at : **Hi-Tech Offset Private Limited,**
#11, Srinivasa Nagar Main Road,
Koyambedu, Chennai - 107.
Ph : 044-2479 3339

## அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையை இதயத்தில் ஏற்று வார்த்தையாம் இறைவனை உதரத்தில் வளர்த்து மனு உருவான வார்த்தையை உலகிற்கு அளித்த இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு அன்பு கலந்த அர்ப்பணம்

## முன்னுரை

விவிலியக் களஞ்சியம் - இரண்டாம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் பாகத்திற்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த இரண்டாம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இந்த வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

இங்குச் சில குறிப்புகள் தருவது நல்லது. ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புக்கள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. உதவியாக ஆங்கிலச் சொற்களும் அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையியல் கட்டுரைகளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி நன்றி நவில்தல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். முதல் பகுதிக்கு எழுதிய முன்னுரையில், தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இது பலர் சேர்ந்த கூட்டு முயற்சி என்று கூறியிருந்தேன். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். ஒவ்வொருகட்டுரைக்குப் பின்னும் அதைத் தொகுத்தவரின் பெயர் கொடுக்கப்படவில்லை. இவர்கள் அனைவரின் பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என்று நன்றி உரித்தாகுக.

இந்நூலகத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Schall von Bell E.V., Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த Missio, Munchen ஆகிய இரு நிறுவத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் பகுதிக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M. ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக்கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், இறையியல் கட்டுரைகளில் பலவற்றைத் தணிக்கை செய்து உதவிய அருட் தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பகுதியின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவியும் செய்து வந்துள்ள தமிழாசிரியர் U. மீனாட்சி சுந்தரம், அருட்தந்தையர்கள் சேவியர் இளங்கோ, U. சுந்தரம் ஆகியோர்களுக்குச் சிறப்பான முறையில் நன்றிகூறுகிறேன். இம்முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசுசபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கிள் ஜெயராஜ் அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணிநிலையத்தனருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printers, Hi-Tech Offset Private Limited, சென்னை ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரனும் அளித்து வழிநடத்திய இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இந்நூலும் இதற்குப்பின் வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இந்நூலை வெளியிடுகிறேன்.

"தியாகு"

# விவிலியக் களஞ்சியம்
## அணிந்துரை

சுவாமி 'தியாகு'வின் விவிலியக் களஞ்சியம் (2-ஆம் பகுதி) விரைவில் வெளிவருவது மகிழ்ச்சியான செய்தி, பாராட்டுக்குரிய நிகழ்ச்சி. ஏறத்தாழ 1000 பக்கங்களைக் கொண்ட இப்பகுதி உயிரெழுத்தில் உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, மெய்யெழுத்தில் க, கா, கி, கீ, கு, கூ எழுத்துக்களில் தொடங்கும் தலைப்புகள் கொண்டது.

முதல் பகுதி ஒரு கனிமரத்தோப்பு என்று சொன்னது உண்மையே. பலருக்குப் பயன்பட்டுள்ளது. தமிழகக் குருக்கள் அதைச் சுவைத்துள்ளனர். துறவறச் சகோதரிகளும் அதைச் சுவைப்பர் என எதிர்பார்க்கலாம். இரண்டாயிரம் பிரதிகளாக அச்சிடப்பட்ட அம்முதற்பகுதியில் இருநூறு பிரதிகளே எஞ்சியுள்ளன.

தமிழகக் கிறிஸ்தவர்கள் இந்தப் பழத்தோப்பை மேன்மேலும் பயன்படுத்துவார்களாக. இத்தோப்பை நாளும் பேணி வளர்த்து வரும் ''தியாகு'' சுவாமியின் பணி நிலைத்த பயன் அளிப்பதாக.

+ M. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்,
தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர்.

# இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

அந்தோனிசாமி A.
அந்தோனிராஜ்
அமல்ராஜ் P.T.
அம்புரோஸ் G.
ஆரோக்கியசாமி C.
ஆரோக்கிய நாதன் P.
ஆன்ரு டிரோஸ்
இருதயராஜ் A.
இதயன் A.
உபால்டு M.
சந்தனசாமி
சந்தியாகு M.
சவரிமுத்து X.
சார்லஸ் குமார் N.A.
சுந்தரம் B.
சுந்தரம் U.
சூசை ஆரோக்கியசாமி
சேவியர் இளங்கோ
ஜான்சன் ராஜ் S.
ஜெரால்டு S.
ஜேம்ஸ் ரொசாரியோ B.
ஜோ I.F.
ஜோ லாரன்ஸ்
ஜோசப் லயனல் S
ஜோனாஸ் N.
ஞானப்பிரகாசம் F.
தாஸ் F.X.
தீஸ்மஸ் P.
பாப்புராஜ் B.
பால்ராஜ் B.
பால்ராஜ் L.
பீட்டர் சகாயராஜ்
பிரான்சீஸ் M.
போனவென்சர்
மரிய அருள்
மரியதாஸ் I.
லூர்து Y.A.
லூர்து சாமி A.
லூர்துராஜ் G.G.
வின்சென்ட் G.

# விவிலியத் திருறைப் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

## I. பழைய ஏற்பாடு

| | |
|---|---|
| 1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்) | ஆதி. |
| 2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்) | யாத் |
| 3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்) | லேவி |
| 4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்) | எண் |
| 5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்) | உப |
| 6. யோசுவா ஆகமம் | யோசு |
| 7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்) | நீதி |
| 8. ரூத்து ஆகமம் | ரூத் |
| 9 1 சாமுவேல் ஆகமம் | 1 சாமு |
| 10. 2 சாமுவேல் ஆகமம் | 2 சாமு |
| 11. 1 அரசர்கள் ஆகமம் | 1 அர |
| 12. 2 அரசர்கள் ஆகமம் | 2 அர |
| 13. 1 நாள் ஆகமம் (ஆட்சிக் குறிப்பேடு) | . 1 நாள் |
| 14. 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு) | 2 நாள் |
| 15. எஸ்ரா ஆகமம் | எஸ் |
| 16. நெகமியா ஆகமம் | நெக |
| 17. தோபியா ஆகமம் | தோபி |
| 18. யூதித்து ஆகமம் | யூதி |
| 19. எஸ்தர் ஆகமம் | எஸ்த |
| 20. யோபு ஆகமம் | யோபு |
| 21. சங்கீதங்கள் (திருப்பாடல்கள்) | சங் |
| 22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்) | பழ |
| 23. திருவுரையாளர் ஆகமம் | திருவுரை |
| 24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்) | உ.ச. |
| 25. ஞான ஆகமம் | ஞான |
| 26. சீராக்கு ஆகமம் | சீரா |
| 27. ஏசயா ஆகமம் | ஏச |
| 28. எரேமியா ஆகமம் | எரே |
| 29. புலம்பல் ஆகமம் | புல |
| 30. பாரூக்கு ஆகமம் | பாரூ |
| 31. எசக்கியேல் ஆகமம் | எச |
| 32. தானியேல் ஆகமம் | தானி |
| 33. ஓசேயா ஆகமம் | ஓசே |
| 34. யோவேல் ஆகமம் | யோவே |
| 35. ஆமோஸ் ஆகமம் | ஆமோ |
| 36. ஒபதியா ஆகமம் | ஒப |
| 37. யோனா ஆகமம் | யோனா |
| 38. மீக்கா ஆகமம் | மீக் |
| 39. நாகூம் ஆகமம் | நாகூ |
| 40. அபக்கூக் ஆகமம் | அப |
| 41. செப்பானியா ஆகமம் | செப் |
| 42. ஆகாய் ஆகமம் | ஆகா |
| 43. செக்கரியா ஆகமம் | செக் |
| 44. மலாக்கி ஆகமம் | மலா |
| 45. 1 மக்கபேயர் ஆகமம் | 1 மக் |
| 46. 2 மக்கபேயர் ஆகமம் | 2 மக் |

## II. புதிய ஏற்பாடு

| | |
|---|---|
| 47. மத்தேயு நற்செய்தி | மத் |
| 48. மாற்கு நற்செய்தி | மாற் |
| 49. லூக்கா நற்செய்தி | லூக் |
| 50. யோவான் நற்செய்தி | யோவா |
| 51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்) | அ.ப. |
| 52. உரோமையர் | உரோ |
| 53. 1 கொரிந்தியர் | 1 கொரி |
| 54. 2 கொரிந்தியர் | 2 கொரி |
| 55. கலாத்தியர் | கலா |
| 56. எபேசியர் | எபே |
| 57. பிலிப்பியர் | பிலி |
| 58. கொலோசியர் | கொலோ |
| 59. 1 தெசலோனிக்கர் | 1 தெச |
| 60. 2 தெசலோனிக்கர் | 2 தெச |
| 61. 1 திமோத்தேயு | 1 திமோ |
| 62. 2 திமோத்தேயு | 2 திமோ |
| 63. தீத்து | தீத் |
| 64. பிலமோன் | பில |
| 65. எபிரேயர் | எபி |
| 66. யாக்கோபு | யாக் |
| 67. 1 பேதுரு | 1 பேதுரு |
| 68. 2 பேதுரு | 2 பேதுரு |
| 69. 1 யோவான் | 1 யோவா |
| 70. 2 யோவான் | 2 யோவா |
| 71. 3 யோவான் | 3 யோவா |
| 72. யூதா | யூதா |
| 73. திருவெளிப்பாடு | திருவெளி |

## துணை நின்ற நூல்கள்


| | | |
|---|---|---|
| Anderson G.N. | : | A Critical Introduction to the O.T. |
| | | A History and Religion of Israel. |
| | | The Living Word of the O.T. |
| A New Catholic Commentary on Holy Scripture. | | |
| Bright J | : | A History of Israel. |
| Claus Schedl | : | History of the O.T. |
| Danielou J | : | The Lord of History |
| Daniel-Rops | : | Sacred History |
| Edman Jacob | : | God, the Lord of History |
| Elis P.F | : | The Men and Message of the O.T. |
| Grelot P | : | Introduction to the Bible |
| Harry Thomas Frank | : | Discovering the Biblical World |
| Helmer Ringgren | : | Israelite Religion |
| James Hastings | : | Dictionary of the Bible |
| Leon-Dufour X | : | Dictionary of the Bibical Theology |
| Louis Hartman | : | Encyclopedic Dictionary of the Bible |
| Mc Kenzie J.L | : | Dictionary of the Bible |
| Moriarty F.L | : | Introducing the O.T. |
| Osmund Lewry O.P | : | Introducing the O.T. |
| Robert A & Feuillet A | : | Introduction to the Bible |
| Robert A & Tricot A | : | Guide to the Bible |
| The Eerdmans Bible Dictionary | | |
| The Harper's Dictionary of the Bible | | |
| The Interpreter's Dictionary of the Bible 5 Vols | | |
| The Jerome Biblical commentary | | |
| The Jerusalem Bible | | |
| Weather head | : | A Guide to the Bible |
| William P. Baber | : | Everyone in the Bible |
| *''தியாகு''* | : | *விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)* |

# உ

**உகாரித்து (UGARIT)**

1. பண்டைய சீரிய கடலோர நகரமும் அரசுமாகும். பிற்கால வெண்கலக் காலப் பண்பாடுகள் பற்றிய அதிகமான செய்திகள் அடங்கிய ஏடுகள் இவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பழைய ஏற்பாட்டுப் பின்னணிக்கு முக்கியமுள்ள பல செய்திகளைத் தரவல்லன. இவ்விடம் இக்கால இராஸ் ஸம்ராவாகும். இது சைப்பிரசின் கிழக்கு முனைக்கு எதிராகவுள்ள சீரியன் கடற்கரையிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் இக்கால லடாக்கியாவிற்கு வடக்கில் 11 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கி.மு.6-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்களால் ''வெள்ளைத் துறைமுகம்'' என்றழைக்கப்பட்ட இக்கால மினெத்து-ஏல்-பெயிதாவோடு நெருங்கிய தொடர்புபடுத்தப்படுவதும் ஆகும்.

2. அகழ்வாய்வுகள்:-

1929-இலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள், புதிய கற்காலத்தைச் சேர்ந்த அரண் சூழ்ந்த மூன்று காலக்கட்டத்தையுடைய ஒரு குடியிருப்பு இவ்விடத்தில் இருந்ததாகச் சுட்டுகின்றன (கி.மு.6500-5250). அதற்குப் பின் வந்த செம்புக்காலத்தைச் சேர்ந்த (5250-3000) மூன்று சிறிய குடியிருப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை வலிமையான கோட்டை கொத்தளங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. தொடக்க வெண்கலக் காலத்தில் (3000-2300) உகாரித்து செழிப்புமிக்க, அரண் சூழ்ந்த நகரமாக விளங்கியுள்ளது. எபிலாயித்துப் பெயர்ப் பட்டியலில் (2400-2250) உகாரித்து என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அக்காதிய, எபிலாயித்துப் பேரரசுகள் காலத்தில் இந்நகர் வீழ்ச்சியுற்றதாகத் தெரிகிறது. (2300-2150). நகரம் கைவிடப்பட்டது அல்லது அழிக்கப்பட்டது எனலாம். ஒருகாலத்திற்கு இங்கு யாரும் குடியிருக்கவில்லை. இக்காலம் பாலஸ்தீனத்தில் நான்காம் தொடக்க வெண்கலக் காலத்தோடு ஒத்ததாகும்.

மத்திய வெண்கலக் காலத்தில் மீண்டும் குடியிருப்பு ஏற்படுகிறது (2100-1650). உலோகத் தொழிலுடைய அந்நியர் இந்நகரச் சிதைவுகளில் குடியேறினர் (2100-1900). உகாரித்து அரசு எமோரியர்கள் வருகையோடு தொடங்கியது என்று பொதுவாகக் கருதப்படும். எகிப்தின் பன்னிரண்டாவது அரச மரபு, மாரி, கீரேத்து, அலாலாக்கு ஆகியவற்றோடு கொண்ட வலிமைமிக்க தொடர்புகளால் இவ்வரசு வளர்ச்சிபெறுகிறது (1900-1750). இக்காலத்தைச் சேர்ந்த பாகாலுக்கும் தாகோனுக்கும் எழுப்பப்பட்ட இரு கோவில்களும், பலவகைப்பட்ட சிலைகளும், தூண்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பிற்கால ஏடுகளில் குறிக்கப்படும் சமயம் ஏற்கனவே வழக்கில் இருந்தது என்று சுட்டுகின்றன. மூன்றாவது காலக்கட்டத்தில் (1750-1600) உகாரித்து செல்வமிக்க இரண்டாம் தரச் சக்தியாக விளங்கியது. முதலில் யாம்காதிலும் பின்பு மித்தானியிலும் மையம் கொண்டிருந்த பெரிய சீரிய அரச அமைப்போடு உகாரித்து ஒன்றியிருந்தது.

பிற்கால வெண்கலக் காலத்தில் (1600-1185) நகரம் கலப்புத் தன்மை கொண்டிருந்தது. இக்காலம் பொதுவாகப் பொற்காலம் என்று சரியாக அழைக்கப்படுகிறது. உகாரித்து தீமை தரும் கூட்டணிகளைத் தவிர்த்தது; மித்தானி எழுச்சியுற்றபோது நடுநிலை வகித்தது; நான்காம் துத்துமோசு ஆட்சியில் (1426-1417) எகிப்துக்குப் பணிந்திருந்தது; பின்பு தனது கூட்டுறவை இத்தியர்களுக்கு மாற்றியது (1336). பின்பு 1185-இல் ஒரு பெரும் தீயால் நகரம் அழிக்கப்பட்டது. இதற்குக் கடல் மக்கள் காரணமாயிருந்தனர் என்று கருதப்படுகிறது. நகரின் சில சிதைவுகள் பாரசீகர்களும், கிரேக்கர்களும் (550-200) உரோமையர்களும் (கி.மு.2-ஆம் நூற்றாண்டு) இங்கு ஆதிக்கம் செலுத்தியதாகக் காட்டுகின்றன.

தொல்பொருள் மற்றும் ஏட்டுச் சான்றுகள், தானியம், திராட்சை இரசம், என்

ணெய் போன்ற பொருட்களைக் கொண்ட வலுவான விவசாயப் பொருளாதாரத்தை இந்நகர் கொண்டிருந்ததாகச் சுட்டுகின்றன. கப்பல்கட்டுதல், கருஞ்சிவப்புச் சாயம் செய்தல் போன்ற தொழில்கள் இருந்திருக்கின்றன. விவசாயப் பொருட்கள், பீதாம்பரம் ஆடைகள், செம்பு, சுகபோகப் பொருட்கள் ஆகியவற்றைப் பெரிய, அரச மற்றும் தனிப்பட்டோரின் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் கிழக்குப் பகுதி முழுவதிலும் வியாபாரம் செய்துள்ளன. ஒரு வலுவான கடற்படை இவ்வணிகத்தைப் பாதுகாத்தது. சீரியாவிற்கும் அதற்கப்பாலும் செல்வதற்கு உகாரித்து ஒரு பண்ட மாற்றும் துறைமுகமாக விளங்கியது. இந்த அகில உலகப் பொருளாதாரத்தை, ஐந்து வகை எழுத்துமுறைகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட ஏழு மொழிகளில் உள்ள வாசகங்களும் கல்வெட்டுக்களும், கூரியர்களின் இதிகாசங்களையும் சமய வாசகங்களையும் கொண்ட ஒரு புனித இடமும், குறிகூறப் பயன்பட்ட கல்லீரல் மாதிரிகைகளும், கூரிய தெய்வங்களின் செம்புச் சிலைகளும் பிரதிபலிக்கின்றன.

இவற்றின் விளைவாகச் செழிப்பு மிகுந்தது. பாதுகாப்பும் வலிமை பெற்றது. கோட்டைகளும், பெரிய கோபுரங்களும், நினைவு வாயில்களும் தொண்ணூறு அறைகளும், ஐந்து மண்டபங்களும் கொண்ட ஒரு பெரிய அரண்மனையும், அணிகலன் செய்வோர் பொற்கொல்லர்கள், தந்தப் பொருட்கள் செய்வோர், எழுத்தர்கள் போன்றோர் தொழில் செய்த இடமும், தனிப்பட்டோரின் பெரிய வீடுகளும், அவற்றின் அடியில் அழகு செய்யப்பட்ட அடக்கம் செய்யும் இடங்களும், பரந்த குடியிருப்புப் பகுதிகளும் அவற்றின் புனித இடங்களும், பலவகைப்பட்ட கலைப்பொருட்களும், பொன், வெள்ளியால் செய்யப்பட்ட சிலைகளும் இந்நகரில் காணப்பட்டன.

இதே காலத்தில் துறைமுக நகரமான மினெத்து-ஏல்-பெயிதாவில் குடியிருப்புகளும், வழிபாட்டு இடங்களும், கானானியர்களின் என்பது எண்ணெய் மற்றும் பழரசச் சாடிகள் கொண்ட களஞ்சியமும். படிகச் சிமிழ்களும் அழகான தந்தப்பொருள்களும், அழகு செய்யப்பட்ட கல்லறைகளும், பெரும் எண்ணிக்கையில் பாத்திரங்களும் சாடிகளும், சீரிய, அனத்தோலிய, சிப்பிரியத்து மற்றும் மைசீனிய தட்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்செழிப்பிற்கு உகாரித்துவின் அரச கோடை விடுதியாக விளங்கிய கடற்கரை நகரமான இராஸ் இபான் கானியும் சான்று பகர்கிறது.

*3. உகாரித்து வாசக ஏடுகள்:-*

பிற்கால வெண்கலக் காலத்திலிருந்து பல களிமண்தகடு ஏடுகள் கிடைத்துள்ளன. இவை உகாரித்தை ஒரு முக்கிய கண்டெடுப்பாக ஆக்கியுள்ளன. இவை அக்காதிய மொழியிலோ, இப்போது உகாரித்து என்றழைக்கப்படும் வடமேற்கு செமித்திய மொழியிலோ ஆப்பு எழுத்துமுறையில் எழுதப்பட்டுள்ளன. பின்னது, விவிலிய எபிரேய மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. இந்த ஏடுகள் அரச, குருக்கள், மற்றும் தனிப்பட்டோரின் ஆவண நிலையங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை, பெரிய தேவர்கள் பற்றிய இதிகாச புராணங்கள், கெரேத்து, தானேல், அக்காத்து போன்ற பழங்கால வீரத்தலைவர்கள் பற்றிய காப்பியங்கள், தேவர்களின், மற்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பலிகளின் பட்டியல்கள், வழிபாட்டுச் சடங்குகள், சோதிடக் கூறுகள், குறிகூறுதல் ஆகியவைபற்றிய வாசகங்களைக் கொண்டுள்ளன. சில மருத்துவம், குதிரை பராமரிப்புப் பற்றிப் பேசுகின்றன. உடன்படிக்கைகள், ஆட்சி மற்றும் சட்டம் பற்றிய ஏடுகள், பலவகையான அதிகாரப்பூர்வமான கடிதங்கள் ஆகியவைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. உகாரித்துவில் கண்டெடுக்கப்பட்ட ஆப்பு எழுத்து ஏடுகள் மற்ற பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவையாவும் சேர்ந்து அக்காலத்தில் வளர்ச்சியுற்ற நகர அரசுப்பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் பற்றிய மதிப்புமிக்க அறிவை அளிக்கின்றன.

புராணக் கதைகளைப் பொருத்தமட்டும் புயல் கடவுளான பாகால் அவரது துணைவி

*அனாத்து ஆகியோர் பற்றிய புராணங்கள் புகழ்பெற்றவையாகும். இவை ''பாகாலின் சுழல்'' எனப்படும். முதல் கதையில் பாகால், குழப்பமிக்க கடல் சக்திகளின் பிரதி நிதியான யாமோடு(கடல்) போரிட்டு, தோற் கடிக்கிறார். இதன் விளைவாக ஏல் என்ற உயர் கடவுளின் கீழ் அரசு பெறுகிறார். இந்த வெற்றி ஒரு அரண்மனையை விரும்பவும், வாய்ச்சாலகத்தாலும் தந்திரத்தாலும் ஏலின் அனுமதிபெற்று அதை அடைவதையும் இரண்டாவது விவரிப்பு எடுத்துக் கூறுகிறது. இந்தப் புதிய அரண்மனையிலிருந்து பாகால் தமது எதிரிகளுக்கும், குறிப்பாகப் பாதா ளத்தை ஆட்சி செய்யும் பெரும் பசியுடைய மோத்து கடவுளுக்கும் (சாவு) துணிகரமான சவால் விடுகிறார். இதன் விளைவான போராட்டங்கள் மூன்றாம் கதையில் விவரிக் கப்படுகின்றன. சாவு மற்றும் வாழ்வு ஆகிய வற்றைப் பிரதிபலிக்கும் இந்த இரு கடவுள் களுக்குமிடையே நடக்கும் போராட்டங் கள், அவை மனிதர்களைப் பாதிக்கும் முறை யில் விவரிக்கப்படுகின்றன. மரித்து உயிர் பெறும் கடவுளாகப் பாகால், முதலில் மோத்துக்குப் பணிந்து, பின் அனாத்து, மற்ற தேவர்களின் பெரும் உதவியுடன் உயிர் பெற்று, தமது பதவியை மீண்டும் பெறுகி றார். இவ்வாறு நம்பிக்கையுள்ள ஆனால் நிலையற்ற வெற்றியோடு ''பாகால் சுழல்'' முடிகிறது. இக்கதைகள் பருவகாலச் சுழலை ஓரளவாவது பிரதிபலிப்பதாக இக்கால விளக்கவுரையாளர்கள் புரிந்துகொள்கின்ற னர். ஆனால் இப்புராணம் மனிதவாழ்வின் பல ஐயப்பாடுகளை விரிக்க எதிரும் புதிரு மான சக்திகளுக்கிடையே நிலவும் நெருக் கடி நிலையில் அளிக்கப்படும் சிக்கல்மிக்க உளநோக்கையும் அளிக்க வல்லது.*

*இவ்வாசகங்களுக்கும் எபிரேய விவிலி யத்துக்குமிடையேயுள்ள பல தொடர்புகள், பழைய ஏற்பாட்டு ஆய்வுகளுக்கு இவ்வாச கங்களை மிக முக்கியமானதொன்றாக்குகின் றன. அதனால் எந்த விவிலியப் பாடப் புத்தகமும் விளக்கவுரைகளும் இவற்றை ஒதுக்குவதில்லை. அரமாயிக்கு, மோவா பிய, பெனிக்கிய மொழிகளோடு சேர்ந்து உகாரித்து மொழியும் எபிரேயமொழி சேர்ந்த வடகிழக்கு செமித்திய மொழியைச் சேர்ந்ததாகும். இலக்கணம், சொல்தொகுதி, கவிதை நடை, ஆகியவற்றில் இம்மொழிகள் நெருங்கிய தொடர்புடையன. பாகாலின் புராணக் கதையோடு பழைய ஏற்பாடு ஒத்தி ருக்கிறது. இஸ்ராயேலின் இறைவன் புயல் மேகங்களின் மேல் அமர்ந்து வருவதாகக் காட்டப்படுகிறார் (உப 32:26; சங் 18:10; 68:4.33; 104:3). இது இறை ஆலய அரண்ம னையோடு தொடர்புகொண்டு இடியில் அவரது ஆற்றலைக் காட்டுவதாகச் (சங் 29; 68:28-35) சித்தரிக்கிறது. அவர் லெவியத் தான் என்ற கொடிய விலங்கை வெல்கிறார் (ஏச 27:1; சங் 74:13-14; அப 3:13-14). குழப்பமிக்க கடல் சக்திகளை வெல்கிறார் (சங் 29:3.10; 89:9-10; அப 3:8.15). சாவின் தணியாப் பசியை அழிக்கிறார் (ஏச 5:14; அப 2:5): அக்காத்து வீரக்காப்பியத்தில் வரும் ஞானமிக்க நடுவரான தானேல் எச 14:14.20; 28:3-இல் தோன்றுகிறார். மேலும் பல வாச கங்கள் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களோ டும் வழிபாட்டுச் சடங்குகளோடும் தொடர்பு உடையனவாக இருக்கின்றன.*

*சீரியா, பாலஸ்தீனத்தில் பரவலாகப் பகிர்வு கொள்ளப்படும் பண்பாட்டைத்த விர, இஸ்ராயேல் தோன்றிய சூழ்நிலையை உகாரித்து வாசகங்கள் பிரதிபலிக்கின்றன. ஆனால் அவை பழைய ஏற்பாட்டில் கொண் டிருக்கும் செல்வாக்கின் தன்மை மற்றும் அளவுபற்றி, பல்வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. ஒரு கருத்து கலப்புத்தன்மை கொண் டதாகும். இதன்படி, தான்தோன்றி இஸ்ரா யேலர்கள் கானானியக் கலாச்சாரத்திலிருந்து தாங்கள் விரும்பியவற்றைச் சிறிதும் மாற்றா மல் அப்படியே தங்கள் சமயத்துக்குள் ஏற் றுக்கொண்டனர். மற்றொரு கருத்து தர்க்கவா தமுடையதாகும். இதன்படி, அவற்றின் கவர்ச்சியான கூறுகளை இஸ்ராயேலின் இறைவனுக்குச் சாற்றிக்கூறி, அவற்றின் பொருளை இஸ்ராயேலின் தனிச் சிறப்பான விசுவாசத்திற்கேற்ப மாற்றி அமைத்து, கானா னியர்களின் போட்டிச் சமயத்தை வெறுமை யாக்கும் பண்புகளை மட்டும் இஸ்ராயேலர்*

ஏற்றுக்கொண்டனர். மூன்றாவது விளக்கப்படி, இஸ்ராயேலின் கலப்புத் தோற்றத்தின் ஒரு பகுதியான கானானியர் தங்களின் சமயத்தைப் புதியதாக வந்த யாவே சமயத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொண்டனர். இக்கருத்துக்கள் ஒன்றை ஒன்று விலக்கி ஒதுக்குபவை அல்ல. ஆனால் உண்மையில் நடந்தது எந்த ஒரு கருத்தையும்விட, சிக்கல் மிக்கதாகும்.

**உசா (UZZA - வலிமை)-ஆள்**

1. பென்யாமின் இனத்தவர். கேராவின் (எகிமிலாம்) மகனும் ஏகூத்தின் வழித்தோன்றலுமாவார் (1 நாள் 8:7).

2. பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு எருசலேம் திரும்பிய ஆலய ஊழியர்களின் முன்னோர் ஆவார் (எஸ் 2:49; நெக 7:51).

**உசா (UZZA) - இடம்.**

யூதாவின் அரசர்களாகிய மனாசே, அமோன் ஆகியோர் அடக்கம் செய்யப்பட்ட அரண்மனைத்தோட்டம் (2 அர 21:18.26). ஏன் இப்பெயரால் இந்த இடம் அழைக்கப்பட்டது என்பது தர்க்கத்திற்குரியதாகும். இதற்கு இணையான விவரிப்பில் இப்பெயர் விடப்பட்டிருக்கிறது (2 நாள் 30:20.25).

**உசியா (UZZIA பலம், வலிமை)**

இவர் ஒரு அசித்தராவியர். ''முப்பதின்மர்'' எனப்படும் தாவீதின் வலிமைமிக்க வீரர்களுடன் நாளாகம ஆசிரியர் சேர்க்கும் 16 பேரில் ஒருவர் (1 நாள் 11:44). 2 சாமு 23:24-39-இல் வரும் பட்டியலில் இவர் பெயர் காணப்படவில்லை.

**உசேன்-செயெரா (VZZEN-SHEERAH - செயெராவின் காது)**

எப்பிராமினின் மகளான (அல்லது பேத்தியான) செயெரா கட்டியெழுப்பிய மூன்று கிராமங்களுள் ஒன்று (1 நாள் 7:24). பேத்-கோரோனுக்குத் தென்மேற்கில் 5 கி.மீ. தொலைவில் இன்றுள்ள 'பெய்ட்சீரா'வே இந்தக் கிராமம் என்று சில அறிஞர்கள் கூறினாலும் இன்னும் உறுதியான கருத்து உருவாகவில்லை.

**உடலைப் புண்படுத்துதல் (GASH)**

இது, துக்கத்தை எடுத்துக்காட்டும் அடையாளமாகவோ, புறஇனக் கடவுள்களின் பரவச வழிபாட்டிலோ, உடலைக் கீறிக் கொள்ளுதல், காயப்படுத்துதல், முதலியவையாகும் (எரே 41:5; 47:5; 48:37).

**உடல் (Body)**

விவிலியத்தில் உடல் என்பது மனிதன் தன் உலக வாழ்வின் போது கொண்டிருந்து, சாவில் அதைவிட்டுவிட்டு, உயிர்ப்பின் நாளில் மீண்டும் எடுத்துக்கொள்ளும் வெறும் எலும்பும் ஊனும் கலந்த கலவையாகும் என்ற பொதுவான கருத்திலிருந்து வேறுபட்டதாகும். உடலைப்பற்றிய இறையியலில் பவுல் இதனைவிட மிக உயர்ந்த தகுதியினை உடலுக்குக் கோடிட்டு காட்டுகிறார். உடலானது பல்வேறு உறுப்புகளை ஒன்று சேர்ப்பதோடு மட்டுமல்லாமல் பாவியென்னும் இயல்பான நிலை, கிறிஸ்துவிற்கென அபிடேகம் செய்யப்பட்ட நிலை, அவருடைய மகிமையின் வாழ்வு போன்ற பல்வேறு சிறப்பு மிக்க நிலையில் மனிதனை அடையாளப்படுத்தியும் காட்டுகிறது.

1. ''உடலும் ஊனும்''

பழைய ஏற்பாட்டில் உடல் மற்றும் ஊன் ஆகிய இரண்டுமே ஒரே சொல்லால் குறிப்பிடப்பட்டன. புதிய ஏற்பாட்டுக் கிரேக்கத்தில் இரண்டும் வேறு படுத்திக் காட்டப்படுகின்றன. இந்த வேறுபாட்டை விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

அ. உடலின் மேன்மை:- எல்லா மொழிகளிலும் உள்ளது போன்று உடலானது பெரும்பாலும் ஊன் என்னும் அதே உண்மையினையே குறிக்கின்றது. இவ்வாறு இயேசுவின் வாழ்வானது நமது உடலிலும் நமது ஊனிலும், வெளிப்படுத்தப்பட வேண்டும் (2 கொரி 4:10-11). இரண்டுமே முழுமனிதனைக் குறிப்பிடுவதால் உடலுக்கும் ஊனுக்கும் செமித்தியர் ஒரே மதிப்பைக் கொடுத்தனர்.

பவுல் உடலின் மேன்மையை வலியுறுத்து கின்றார். புதிய ஏற்பாட்டுப் பிற ஆசிரியர்க ளினின்று முற்றிலும் மாறுபட்டவராய் (மத் 27:52.58-59; லூக் 17:37; அ.ப. 9:40), இறந்த உடலுக்கு உடல் என்னும் சொல்லைப் பயன் படுத்துவதைத் தவிர்க்கிறார். மனிதனுடைய மனிதச்சிறப்புகளில் ஒன்றான வாழ்வினைத் தோற்றுவிக்கின்ற ஆற்றலைப் பவுல் உடலுக் குரியதென ஒதுக்கியுள்ளார் (உரோ 1:24; 4:19; 4:19; 1 கொரி 7:4; 6:13-20). மனிதனின் நிலையாத, கடந்துபோகும் கூறுகளை அதா வது வெறும் மனிதத்தன்மையுடைய கூறு களை, சிறப்பாக மனிதனின் பாவங்கள் பற்றிப் பேசும்போது பவுல் இக்கூறுகளை உடலுக்குச் சாற்றிக் கூறாமல் ஊனுக்கே சாற்றிக் கூறுகிறார். இவ்வாறு அவர் உட லின் பாவங்களைப்பற்றிய அட்டவணை யைக் கொடுக்கவில்லை (1 கொரி 6:18-இல் உள்ள ''உடலுக்கெதிரான பாவம்'' என்பது முழுமனிதனுக்கு எதிரான பாவத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்). ஊனுடன் வேறுபடுத்தப்பட்ட நிலையில் உடலானது மனிதத்துவத்தின் வெளிப்பாடாக இருப்ப தால் அது மனிதனால் மதிக்கப்படவேண்டும்.

ஆ. ஊனால் கட்டுப்படுத்தப்படும் உடல்:- பாவம் உறைகின்ற ஊனானது (உரோ 7:20) உடலின்மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்கிறது. அதனால் "பாவ ஊன்". இருப் பது போன்று (8:3) ''பாவ உடலும்'' (6:6) உள்ளது. பாவமானது உடலின்மீது ஆதிக் கம் செலுத்தக் கூடியதாக இருக்கிறது (6:16). அதன் விளைவாக உடலே மரணத்திற்கு இட்டுச்செல்கிறது (7:24). இவ்வாறு உடலா னது தாழ்வான நிலைக்கு (பிலி 3:21), இழி வான நிலைக்குக் (1 கொரி 15:43) குறைக்கப் படுகிறது. முழுவதும் புனிதமற்ற இச்சை களை நிறைவாகக் கொண்டதாய் (உரோ 6:12) உடலானது சிற்றின்ப செயல்களைச் செய்கிறது (8:13). பவுலின் இத்தகைய இறை யியலில் உடலானது, ஊனை அடிமைத்தனத் திற்குத் தாழ்த்துகின்ற சட்டம், பாவம் மற் றும் மரணம் என்னும் மூன்று சக்திகளுக்கு, உட்பட்டதாக உள்ளது (7:5). இதன் ஒளியில் உடலானது படைத்தவரின் கரங்களினின்று வருகின்ற மனிதனை வெளிப்படுத்தாமல் பாவத்தினாலும் ஊனாலும் அடிமை படுத் தப்பட்ட மனிதனையே வெளிப்படுத்துகின் றது.

2. உடலும் ஆண்டவரும்.

அ. உடல் என்பது ஆண்டவருக்காக:- புனித பவுலின் திருமுகம் பெற்ற கொரிந்தி யர்கள் திருமணமாகாதோரின் உடலுறவைப் பயங்கர விளைவுகளற்ற, முக்கியத்துவமற்ற செயல் என்று எண்ணும் படியாக சோதிக்கப் பட்டனர். பவுலின் பதில் ஆன்மா புனிதமா னது என்று எடுத்துக்காட்டியோ, இத்தகைய நடத்தையினால் ஆபத்துக்குள்ளாகும், உய ரிய வாழ்வைத் தவறான, வாழ்விலிருந்து வேறுபடுத்தியோ அமையவில்லை. ''உ ணவு வயிற்றுக்கென்றே உள்ளது; வயிறு உணவுக்கென்றே உள்ளது, என்று எண்ணுகி றீர்கள். ஆம், கடவுள் இரண்டையும் அழித்து விடுவார். ஆனால் உடல் காமத்திற்கென்று இல்லை. ஆண்டவருக்கென்று இருக்கிறது. ஆண்டவரும் உடலுக்கே'', என்று அவர் எழுதுகிறார் (1 கொரி 6:13). நிலையற்றதும் (பிலி 3:19) இறையரசைப் பெறுவதற்குத் திறமையற்றதாகவும் உள்ள (1 கொரி 15:50) ஊனின் ஆதிக்கத்திற்குப்பட்ட வயிற்றுக்கு முரண்பட்ட நிலையில் உடலானது ஆண்ட வரைப்போன்று மீண்டும் உயிர்த்தெழும் (1 கொரி 6:14); ஏனெனில் உடலானது கிறிஸ்து வின் அங்கமாகவும் (6:15) தூய ஆவியின் ஆலயமாகவும் (6:19) உள்ளது. இத்தகைய காரணங்களுக்காக, மனிதன் தனது உடலின் மூலம் இறைவனுக்கு மகிமையளிக்கவேண் டும் (6:20). ஊன் மண்ணிற்கெனத் தீர்மானிக் கப்பட்டுள்ள நிலையில், உடலானது ஆண்ட வருக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதுவே அதனுடைய ஒப்பிட முடியாத மேன்மையின் ஊற்றாகும்.

ஆ. கிறிஸ்துவின் உடல்:- துல்லியமாகக் கூறவேண்டுமாயின் உடலின் மேன்மையா னது உடல் கிறிஸ்துவால் மீட்கப்பட்டது என்னும் உண்மையிலிருந்தே வருகிறது. இயேசு ஏற்றுக் கொண்ட ''ஊனுடலானது'' (கொலோ 1:22) அவரைச் சட்டத்திற்குக்

கீழ்ப்பட்டவராக்கியது (கலா 4:4). இயேசு பாவ ஊன் வடிவை ஏற்றுக் கொண்டதால் (உரோ 8:3) அவர் நமக்கெனச் சபிக்கப்பட்ட வரானார் (கலா 3:13). அவர் நமக்கெனப் பாவ உருவானார் (2 கொரி 5:21). இறுதியாக அவர் மரணத்திற்கு உட்பட்டவரானார். ஆனால் அவரது மரணமானது பாவத்திற் கான உறுதியான மற்றும் இறுதியான மரண மாக இருந்தது (உரோ 6:10). இவ்வாறு இயேசுவைச் சிலுவையிலறைந்த சக்திகள் அனைத்தும் தங்களது வல்லமையை இழக் கும்படியாக அவர் மரணம், ஊன் மற்றும் பாவம் ஆகியவற்றின்மீது வெற்றிகொண் டார் (1 கொரி 2:6.8; கொலோ 2:15). அவர் பாவத்தைத் தண்டித்து (உரோ 8:3), சட்டத் தின் சாபத்தை ஆசியாக மாற்றினார் (கலா 3:13-14; எபே 2:15). அவர் நம்மை அடிமைத் தனத்தினின்று விடுவித்ததோடு நில்லாமல் உண்மையான பொருளில் அவர் நம்மைத் தம்முள் ஒன்றிணைத்துக் கொண்டார். அவ ருடைய வாழ்வு மற்றும் மீட்புச் செயலில், துன்பம் ஆகியவற்றின் மிகப் பரந்த செய்தி கிறிஸ்துவின் உடலாகிய ஒரே உடல் மட் டுமே உள்ளது என்பதாகும்.

இ. கிறிஸ்துவனின் உடல்:- இக்காரணங்க ளினால் கிறிஸ்துவோடு ஒன்றுபட்ட ஒவ் வொரு விசுவாசியும் கிறிஸ்துவினுடைய உடலின் மூலம், ஒரு காலத்தில் தான் உட் பட்டிருந்த சட்டம், பாவம் மற்றும் மரணம் என்னும் சக்திகளை வெற்றி கொள்ளக்கூடிய வனாக இருக்கிறான். அவன் சட்டத்திற்கு இறந்தவனாகவும் (உரோ 7:4), மரணத்திற் கெனக் குறிக்கப்பட்ட ஊனுடலானது அவ னின்றும் நீக்கப்படுமாறு (கொலோ 2:11) அவனது பாவ உடலும் அழிக்கப்படுகிறது (உரோ 6:6). திருமுழுக்குப் பெற்றபோது கிறிஸ்தவன் சுருக்கமான முறையில் கிறிஸ்து வின் முழுமையான வாழ்விற்கு உட்படுத்தப் பட்டதால், கிறிஸ்தவன் தனது அன்றாட வாழ்வைக் கிறிஸ்துவினுடைய வாழ்வின் பாணியில் அமைக்கவேண்டும் (12:1). அவன் தனது உடலையே உயிருள்ள பலி யாக அளிக்க வேண்டும்.

உடலின் மேன்மையானது உலகில் உண ரப்படுவதில்லை. ஏனெனில் உலகத்துன்பம் மற்றும் பாவநிலையில் உள்ள உடலானது, அழிவிற்கு உட்படாத மகிமைமிக்க உடலாக வும் (பிலி 3:21), ஆன்மீக உடலாகவும் (1 கொரி 15:44) மாற்றப்படும். இவ்வாறு மனி தன் ''விண்ணைச்சார்ந்த ஆதாமின் சாயலை மீண்டும் ஏற்றுக்கொள்வான்'' (1 கொரி 15:49). அழியும் உடலினின்று விண்ணக ஆண்டவரின் உடலுக்கு மாறுதல் ஏற்படு வதை, கிறிஸ்துவின் இறுதி வருகை நாளில் உள்ளதுபோலக் ''கண்இமைக்கும் நேரத் தில்'' நமது முடிவினுடைய மற்றொரு நிலையாகிய மரணமெனும் துன்பம் நிறைந்த மாற்றத்திற்கும், நாம் தயாரிக்க வேண்டும் . எனவே ''இவ்வுடலை விட்டு ஆண்டவரோடு வாழ்வதை'' நாம் விரும்பிய வர்களாய் (2 கொரி 5:8) இறுதியாகவும் முடிவற்றவிதமாகவும் கிறிஸ்துவின் ஓர் உடலை உருவாக்குகின்ற நமது உடலின் உயிர்ப்பிற்கெனக் காத்திருக்க வேண்டும்.

## உடன்படிக்கை (COVENANT)

தன்னுடைய ஒன்றிணைந்த வாழ்க்கைக்கு அனைத்து மக்களையும் நடத்திச் செல்ல இறைவன் விரும்புகிறார். மீட்பின் கோட் பாட்டிற்கு அடிப்படையாக உள்ள இக்கருத் தையே உடன்படிக்கை என்னும் தலைப்பு எடுத்துக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் அனைத்து சமய சிந்தனைகளிலும் இது ஆதிக்கம் செலுத்தினாலும், காலப்போக்கில் இது ஆழமாவதை நாம் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் இது இணையற்ற முழுமையை அடைகிறது. ஏனெனில் அது முதல் இது இயேசுகிறிஸ்துவினுடைய முழு மறைபொ ருளைத் தனது உட்பொருளாகக்கொண்டுள் ளது.

I. பழைய ஏற்பாடு:-

இறைவனுடனான மனிதனின் உறவுக ளைப்பற்றி கவனம் செலுத்துவதற்கு முன், உடன்படிக்கையானது மனிதருடைய சமூக அனுபவத்தைச் சேர்ந்ததாகும். மனிதர்கள் தங்களுக்குள்ளேயே உடன்பாடுகளாலும்,

ஒப்பந்தங்களாலும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளாண். குழுக்களுக்குள்ளேயும், ஒருவருக்கொருவர் துணைபுரிய விரும்பும் சமநிலையுள்ள தனி நபர்களுக்குள்ளும் உடன்படிக்கைகள் இருந்தன. இவ்வாறு அமைதியின் உடன்படிக்கைகள் (ஆதி 14:13; 21:22 தொ; 26;28; 31:43 தொ; 1 அர 5:26; 15:19) சகோதரர்களுக்குள் உடன்படிக்கைகள் (ஆமோ 1:9), நட்பின் உடன்பாடுகள் (1 சாமு 23:18), மற்றும் திருமணம் (மலா 2:14) போன்ற பலவகை உடன்படிக்கைகள் உள்ளன. வலிமையுடையோர் வலிமையற்றோருக்குப் பாதுகாப்பை வாக்களிப்பதாகவும், வலிமையற்றோர் வலிமையுள்ளோருக்கு பணிபுரிய ஒத்துழைப்பதாகவும் அமையும் சமநிலையற்றவர்களுக்கிடையே ஒப்பந்தங்கள் உண்டு. பண்டைய மேற்காசிய நாடுகள் அவ்வப்போது இம்முறைகளைச் செயல்படுத்தி வந்தன. விவிலிய வரலாறு இதற்குப் பல எடுத்துக்காட்டுகளை அளிக்கின்றது (நீதி 9:11-15; 1 சாமு 11:1; 2 சாமு 3:12 தொ). இவற்றில் கீழ்ப்பட்டவர் ஒரு உடன்படிக்கையை நாடலாம். ஆனால் வலிமைமிக்கவரோ தனது தேவைகளுக்கு ஏற்ப அதற்கு உடன்பட்டு நிபந்தனைகளை விதிக்கிறார் (எச 17:13-14). உடன்படிக்கையின் முடிவானது மரபினால் புனிதப்படுத்தப்பட்ட சடங்கினால் பெரும்பாலும் கொண்டாடப்பட்டது. ஈடுபட்ட குழுக்கள் தங்களுடைய உறுதிமொழியின் மூலமாகத் தங்களையே அதற்கு உட்படுத்துகின்றனர். ஒருவர் சில விலங்குகளை இரண்டாக வெட்டிய பின்னர் அனைத்து எதிர்கால மீறல்களின் மீது சாபங்களை அறிவித்துக் கொண்டே அத்துண்டுகளின் இடையே கடந்து செல்வர் (எரே 34:18). இறுதியாக அவர்கள் ஒரு நினைவுச் சின்னத்தை அமைப்பர். அதுமுதல் இவ்வுடன்படிக்கையின் சாட்சியாக இருக்குமாறு ஒரு மரம் நடப்படும் அல்லது ஒரு கல் அமைக்கப்படும் (ஆதி 21:33; 31:48 தொ). இத்தகைய அடிப்படையான அனுபவத்தின் மூலம் இஸ்ராயேலானது இறைவனுடனான தங்களுடைய உறவுகளை எடுத்துக் காட்டியது.

1. சீனாய் உடன்படிக்கை:-

உடன்படிக்கைக் கருத்தானது பழைய ஏற்பாட்டின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இதுவே அனைத்துச் சமய சிந்தனையின் தொடக்கமாகும். மீட்கப்பட்ட மக்கள் சீனாய் மலையில் யாவேயுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். இதன் மூலமாக ஆண்டவரை வழிபடுவது அதனுடைய தேசிய சமயமாயிற்று. இந்த உடன் படிக்கையானது சரிசமமானவர்களுக்கு இடையிலான ஒப்பந்தமல்ல. இது சமநிலையற்றவர்களின் உடன்பாட்டிற்கு ஒத்திருப்பதாகும். இஸ்ராயேலுக்குத் தம்முடைய பற்றுறுதியை அளிக்க மேலாண்மையான சுதந்தரத்துடன் யாவே தீர்மானிக்கிறார். தமக்கேயுரிய நிபந்தனைகளையும் விதிக்கிறார். ஆனாலும் இந்த ஒப்பிடுதலை மிகைப்படுத்தக்கூடாது. ஏனெனில் சீனாய் உடன்படிக்கையானது இறைவனையே தொடக்க காரணமாகக் காட்டுவதனால் ஒரு தனிவகையானதாக உள்ளது. இது மீட்புத் திட்டத்தினுடைய ஓர் அத்தியாவசியக் கூறை நேரடியாகவே வெளிப்படுத்துகிறது.

அ) இறைவனின் திட்டத்தில் உடன்படிக்கை:- எரிகின்ற புதரின் காட்சி முதலே, யாவே மோசேக்குத் தமது பெயரையும் இஸ்ராயேலுக்கான தமது திட்டத்தையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துகின்றார். எகிப்திலிருந்து இஸ்ராயேலை விடுவித்து கானான் நாட்டில் குடியமர்த்த அவர் விரும்புகிறார் (யாத் 3:7-10; 16:17). ஏனெனில் இஸ்ராயேல் ''அவரது மக்களாக'' இருக்கின்றனர் (3:10). அவர்களுடைய மூதாதையருக்கு வாக்களித்த நாட்டை அவர்களுக்கு அளிக்க அவர் விரும்புகிறார் (ஆதி 12:7; 13:15). இறைவனைப் பொறுத்தவரையில் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்து அதன்மேல் வாக்குறுதிகளைப் பொழிகிறார் என்பதை இது முன்சுட்டுகிறது. யாத்திரையானது ஒரேபு வெளிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கென அதன் பின்னர் வருகின்றது. தமது மக்களை ஆற்றலோடு விடுவிப்பதன் மூலம் தாமே தலைவர் என்றும், தமது சித்தத்தைப் பிறரில் செயல்படுத்த வல்லவர் என்றும்

இறைவன் காட்டுகிறார். இவ்வாறு மீட்கப்பட்ட மக்கள் இந்நிகழ்ச்சிக்குத் தங்களுடைய விசுவாசத்தினால் பதிலளிக்கின்றனர் (யாத் 14:31). இதைச் செயல்படுத்தியபின் இறைவன் தமக்கேயுரிய உடன்படிக்கையின் திட்டத்தை வெளிப்படுத்தலாம்: ''நீங்கள் நமது வாக்கைக்கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில் எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனென்றால் பூமியெல்லாம் நம்முடையது, அன்றியும் நீங்கள் நமக்கு அரசகுருத்துவத் திருக்கூட்டமும் பரிசுத்த மக்களுமாய் இருப்பீர்கள்'' (யாத் 19:5-6). இவ்வார்த்தைகள் இறை தேர்வினுடைய கைமாறற்ற பண்பை வலியுறுத்துகின்றன. இஸ்ராயேலின் சார்பாக எத்தகுதியும் இல்லாவிடினும் இறைவன் அவளைத் தேர்ந்தெடுத்தார் (உப 9:4 தொ). ஏனெனில் அவர் அவளை அன்பு செய்ததால் அவளது மூதாதையருக்கு உறுதிமொழியை நிலைநிறுத்த விரும்பினார் (உப 7:6 தொ). யூதரல்லாதோரின் நாடுகளினின்று அவளைப் பிரித்த பின்னர், தமக்கு மட்டுமென அவளை அவர் ஒதுக்கிவைத்தார். இஸ்ராயேலானது அவருடைய மக்களாக இருந்து தனது வழிபாட்டினால் அவருக்குப் பணிபுரிந்து அவருடைய அரசாக உருவாகும். இதற்குப் பிரதிபலனாக யாவே அவளுக்கு உதவிகளையும் பாதுகாப்பையும் உறுதியளிக்கிறார். யாத்திரையின் போது அவர் அவளை ஏற்கனவே ''கழுகுகளின் இறக்கைகள் மேல் சுமந்து தமக்குச் சொந்தமாக்கவில்லையா'' (யாத் 19:4). இப்போது எதிர்காலத்தை நோக்கிய நிலையில் அவளுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை அவர் புதுப்பிக்கிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டின் மீதான வெற்றியை எளிதாக்குவதற்கான ஆண்டவரின் தூதர் அவர்களுக்கு முன் செல்வார். அங்கே இறைவன் அவளைத் தமது ஆசிகளால் நிரப்பி வாழ்வையும் அமைதியையும் அவளுக்கு உறுதியளிக்கிறார் (யாத் 23:20-31). இறைவனின் திட்டத்தில் மையமான தருணம் என்ற நிலையில் உடன்படிக்கை முழுவதும் வருங்கால வளர்ச்சியை இயக்கிவைக்கிறது. ஆயினும் இந்த இயக்கத்தின் தனிப்பட்ட விவரங்கள் தொடக்கத்திலேயே முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

ஆ) உடன்படிக்கையின் விதிமுறைகள்:- இஸ்ராயேலுக்குத் தமது உடன்படிக்கையை அளித்து, உறுதிமொழிகளை அளிக்கும் போது இஸ்ராயேல் பின்பற்ற வேண்டிய சில நிபந்தனைகளையும் இறைவன விதிக்கிறார். முதல் ஐந்து நூல்களில் காணப்படும் இந்த விவரிப்புகள் இந்த நிபந்தனைகளைப் பலவாறு ஒப்பந்தத்திற்கு ஏற்புடையவையாக எடுத்துக் கூறுகின்றன. இவை ஒப்பந்தத்தை விவரிக்கின்றன. சட்டத்தை உருவாக்குகின்றன. இவற்றில் முதலாவதானது ஆண்டவரை மட்டுமே வழிபடுவதிலும் சிலை வழிபாட்டைத்தடை செய்வதிலும் அக்கறை கொண்டுள்ளது (யாத் 20:3 தொ; உப 5:7 தொ). பிற நாடுகளுடனான அனைத்து உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் விலக்குவதென்பது இந்த ஒப்பந்தத்தின் உடனடியான விளைவாகும் (யாத் 23: 14; 34:12-16). இஸ்ராயேலின் முழுவாழ்வையும் நெருங்கிய விதிமுறை அமைப்பினால் பார்க்கின்ற அனைத்து இறை விருப்பங்களையும் இஸ்ராயேல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அதனைத் தொடர்கிறது. ''மோசே, ஆண்டவர் தமக்குச் சொன்ன அனைத்தையும் அவர்களுக்குச் சொல்ல ஆண்டவர் சொன்னவையெல்லாம் செய்வோம் என்றனர்'' (யாத் 19:7-8). இது ஒரு ஆடம்பரமான பொறுப்பேற்கும் அர்ப்பணமாகும். இந்த அர்ப்பணத்திற்குக் காட்டும் மரியாதையானது இஸ்ராயேலினுடைய வரலாற்று ஊழை நிர்ணயிக்கும் நிபந்தனையாக இருக்கிறது. ஆண்டவரின் அனைத்து மக்களும் ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளனர். கீழ்ப்படிதலால் இறையாசிகள் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்படும். தங்களுடைய வார்த்தையினின்று அவர்கள் பிறழ்ந்தால், சாபங்களுக்குத் தங்களைத் தாங்களே உட்படுத்திக் கொள்வர் (யாத் 23:20-23; உப 28; லேவி 26).

இ) உடன்படிக்கையின் முடிவு:- யாத்திரையின் சிக்கலான வரலாறு, உடன்படிக்கைச்

சடங்கின் முடிவாக இரு மாறுபட்ட சடங்குகளைக் கொண்டுள்ளது. முதலாவதில், தாங்கள் தியானிக்கின்ற ஆண்டவரின் முன்னிலையில் மோசே, ஆரோன் மற்றும் இஸ்ராயேலின் மூப்பர்கள் புனித உணவை உண்கின்றனர் (யாத் 24:1 தொ). இரண்டாவதானது வட இஸ்ராயேலின் புனித இடங்களில் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரு சமய மரபினை மீண்டும் உருவாக்குவதாகத் தெரிகிறது. பன்னிரு கோத்திரங்களுக்கெனப் பன்னிரு புனிதத் தூண்களையும் பலிக்கென ஒரு பீடத்தையும் மோசே, எழுப்புகிறார். ஆண்டவருக்கும் இஸ்ராயேலுக்குமிடையே உறுதிப்படுத்தப்பட்ட இணைப்பைக் குறிப்பிடுவதற்கென மோசே சில பலிகளை ஒப்புக் கொடுத்து இரத்தத்தின் ஒரு பகுதியை பீடத்தின்மேல் ஊற்றி, மற்றொரு பகுதியை மக்களின் மீது தெளிக்கிறார். பின்னர் உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கென மக்கள் அனைவரும் ஆடம்பரமாகத் தங்களைப் பிணைக்கின்றனர் (யாத் 24:3-8). இச்சடங்கில் உடன்படிக்கையில் இரத்தமானது முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒப்பந்தம் முடிக்கப்பட்ட பின்னர், இஸ்ராயேலின் தொடக்க ஒப்பந்தத்திற்கு நூற்றாண்டுகள்தோறும் சாட்சியுரைக்கும் முறையில், பல்வேறு பொருட்கள் அதன் நினைவை நிலைநிறுத்தும். ''சாட்சிப்பலகைகள்'' (அதாவது, சட்டம் பற்றியவை) வைக்கப்பட்டுள்ள சிறிய பெட்டகமாக உடன்படிக்கையின்பேழை ஆகும். அது உடன் படிக்கையின் நினைவுச் சின்னமாகவும் இஸ்ராயேலின் இறைவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாகவும் உள்ளது (யாத் 25:10-22; எண் 10:33-36). அது வைக்கப்பட்டிருந்த கூடாரமானது ஆண்டவருக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான சந்திப்பின் இடமாக இருந்தது. இதுவே வருங்காலத்தில் கட்டப்படவிருந்த ஆலயத்தின் முன் அடையாளமாகும். இறைவனால் தமக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டமக்களுடைய அதிகாரபூர்வ வணக்கத்தைக் கோத்திரங்களின் கூட்டமைப்பு ஆண்டவருக்கு அளிக்கின்ற மைய வழிபாட்டு இடங்களாக உடன்படிக்கைப் பேழையும், சந்திப்பின் கூடாரமும் விளங்கின. ஆனால் இவை மற்ற வழிபாட்டு இடங்களைப் பாதிக்கவில்லை. இதன் மூலமாக நாட்டினை ஏற்படுத்திய தொடக்க செயலானச் சீனாய் உடன்படிக்கையுடன் இஸ்ராயேலின் வழிபாடு நிலையாகப் பிணைக்கப்படுகிறது. சட்டத்தினுடைய வரையறைகளை அறிவிக்கின்ற உடன்படிக்கையின் காரணமாக முழுச்சட்டமும் பொருளுடையதாக இருப்பது போலவே, பிறரிடமிருந்து கடன்வாங்கப்பட்டவை போலக் காணப்பட்டாலும் இஸ்ராயேலின் வழிபாட்டிற்கு அதனுடைய தனிப்பட்ட சிறப்பை அளிப்பது இந்தப் பிணைப்பேயாகும்.

ஈ) சீனாய் உடன்படிக்கையின் பொருளும் வரையறைகளும்:- சீனாய் உடன்படிக்கையானது மீட்புத் திட்டத்தினுடைய ஓர் அத்யாவசியமான கூறை உறுதியான. முறையில் வெளிப்படுத்தியது. தமது பணிக்கென அர்ப்பணிக்கப்பட்ட தமது சட்டத்தினால் ஆளப்படுகின்ற வழிபாட்டின் சமுதாயமாகவும், தமது வாக்குறுதிகளின் கருவூலமாகவும் அவர்களை அமைப்பதின் மூலம், மனிதரைத் தம்மிடம் கொண்டுவர இறைவன் விரும்புகிறார். புதிய ஏற்பாடு இந்த இறைத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றும். சீனாய் மலையில் இந்த நிறைவேற்றம் தொடங்கினாலும், பல நிலைகளில் இருபொருள்மயக்கமுள்ளதாகவும் முழுமையற்றதாகவும் உள்ளது. உடன்படிக்கையானது இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட இறைவனின் இலவசக் கொடையாக இருந்தாலும், அதனுடைய ஒப்பந்த அமைப்பானது, மீட்புத்திட்டத்தை இஸ்ராயேலின் வரலாற்று முடிவுடன் பிணைப்பதாகத் தோன்றுகிறது. மீட்பை மனித பிரமாணிக்கத்திற்குரிய சம்பளமாகக் காட்டுகின்றதாகவும் தோன்றுகிறது. மேலும் ஒரே நாட்டை மட்டுமே கருத்தில் கொண்ட இதனுடைய வரையறைகள் பிற பகுதிகளில் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள யாவற்றையும் உள்ளடக்கும் இறைவனுடைய திட்டத்தின் பொதுமைப்பண்போடு சரியாகப் பொருந்தவில்லை. இறுதியாக இறை வாக்குறுதிகளின் (இஸ்ராயேலின் உலக மகிழ்ச்சி

என்ற) தற்காலிகக் குறிக்கோள், உடன்படிக்கையின் சமய நோக்கமாகிய இறையரசை இஸ்ராயேலில் ஏற்படுத்துவதும், இஸ்ராயேலின் மூலமாக உலகம் முழுவதும் அமைப்பதையும் மறைக்கின்ற அபாயத்தையும் கொண்டுள்ளது. இத்தகைய வ்ரையறைகள் இருந்தாலும், சீனாய் உடன்படிக்கையானது இஸ்ராயேலின் வாழ்வு முழுவதையும் வெளிப்பாட்டின் தொடர்ந்த வளர்ச்சியையும் ஆண்டு நடத்திச் செல்லும்.

2. இஸ்ராயேலின் வாழ்விலும் சிந்தனையிலும் உடன்படிக்கை:-

அ) உடன்படிக்கையின் புதுப்பித்தல்கள்:- இஸ்ராயேலின் வழிபாட்டில் உடன்படிக்கையானது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டது என்று உறுதியாகக் கூறுவது விவேகமுடைய கூற்றன்று. ஆயினும் உப ஆகமமானது, சடங்கு சாபங்களின் அறிக்கை (உப 27:2-26) மற்றும் சட்டத்தை ஆடம்பரமாக வாசித்தல் (உப 31:9-13.24-27; 32:45 தொ) ஆகியவற்றுடன் கூடிய இவ்வகையான புதுப்பித்தலைச் சுட்டக்கூடிய வழிபாட்டின் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆனால் சட்டத்தை வாசித்தல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே செய்யப்பட்டது (31:10). ஆனால் இந்தப் பழைய காலத்துப் பழக்கத்தை நிரூபிக்க முடியாது. வரலாற்றின் சில குறிப்பிட்ட முக்கிய திருப்பு முனைகளில் உடன்படிக்கையின் பயனுள்ள புதுப்பித்தலைத் தீர்மானிப்பதென்பது எளிதானதே. யோசுவா அதனைச் செக்கேமில் புதுப்பித்தார். மக்கள் ஆண்டவருடனான தங்களுடைய ஒப்பந்தத்தை மீண்டும் ஏற்றனர் (யோசு 8:30-35; 24:1-28). இஸ்ராயேலின் பெரியோர்களுடனான தாவீதின் ஒப்பந்தத்தினைத் (2 சாமு 5:3) தொடர்ந்து இறைவாக்குறுதி வெளிப்படுகிறது. சீனாய் உடன்படிக்கையானது விசுவாசத்துடன் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையின்கீழ் (சங் 8:31 தொ; 132:12; 2 சாமு 7:14) தாவீதுக்கும் அவரது சந்ததியினருக்கும் யாவே தமது உடன்படிக்கையை அளிக்கிறார் (சங் 89:4-5. 20-38; 2 சாமு 7:8-16; 23:5). ஆலய அபிடேகத்தின்போது சாலமோனின் மன்றாட்டும் ஆசியும் ஒரே நேரத்தில் தாவீதின் உடன்படிக்கையுடனும் இதனை நினைவுச்சின்னமாகக் கொண்டுள்ள சீனாய் உடன்படிக்கையுடனும் பிணைந்துள்ளது (1 அர 8:14-29.52-61). இதே புதுப்பித்தல்கள் யோவாசின் காலத்திலும் (2 அர 11:17), மற்றும் குறிப்பாக, உபாகம வழிபாட்டைப் பின்பற்றிய யோசியாவின் காலத்திலும் (2 அர 23:1 தொ; யாத் 24:3-8) காணப்படுகின்றன. எஸ்ராவினுடைய சட்டத்தின் ஆடம்பர வாசகமானது இத்தகைய சூழ்நிலையையே சுட்டுகிறது (நெக 18). இவ்வாறு உடன்படிக்கைக் கருத்து அனைத்துச் சமயச் சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையாகப்பணிபுரிகின்ற, இயக்கும் கருத்தாக உள்ளது.

ஆ) இறைவாக்கினரின் சிந்தனை:- இறைவாக்கினர்களின் செய்தியானது அடிக்கடி உடன்படிக்கையினைக் குறிப்பிடுகின்றது. இறைவன்பால் இஸ்ராயேல் காட்டிய பிரமாணிக்கமின்மையை அவர்கள் ஒருமிக்க கண்டனம் செய்தலுக்கும், பாவ மக்களை அச்சுறுத்துகின்ற பேராபத்துகளைப்பற்றிப் போதிப்பதற்கும் காரணமாக இருப்பது, இஸ்ராயேல் ஏற்றுக்கொண்ட சீனாய் உடன்படிக்கையும் அதனுடைய கோரிக்கைகள் மற்றும் சாபங்களுமேயாகும். ஆனால் தங்களுடைய காலத்தவருடைய எண்ணத்திற்கேற்ப உடன்படிக்கையின் கோட்பாட்டினை உயிருடன் நிலைநிறுத்த, பழைய மரபில் சித்தாந்த முறையில் கொண்டிருந்த, சில புதிய கூறுகளை இறைவாக்கினர்கள் வெளிக்கொணர்ந்தனர். மூலத்தில் உடன்படிக்கையானது ஆண்டவருக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் என்னும் சட்டமுறையிலான தோற்றத்தை முதன்மையாகக் கொண்டிருந்தது. இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் என்னும் உறவுமுறைகளை விளக்குவதற்கான மற்ற ஒப்புமைகளுக்காக மனித அனுபவங்களை ஆராய்வதன் மூலம், இறைவாக்கினர்கள் இதற்கு உணர்ச்சி மிக்க தொனியளித்து உயிரூட்டினர். இஸ்ராயேல் மந்தையாகவும் யாவே மேய்ப்பராகவும் உள்ளனர். இஸ்ராயேல் திராட்சைக் கொடியாக

வும் யாவே அதனைப் பேணுபவராகவும் உள்ளனர். இஸ்ராயேல் மகனாகவும் யாவே தந்தையாகவும் உள்ளனர். இஸ்ராயேல் மண மகளாகவும் யாவே மணமகனாகவும் உள்ள னர். இவ்வுருவகங்கள் குறிப்பாகக் கடைசி யானது சீனாய் உடன்படிக்கையை அன்பின் சந்திப்பாகத் தோன்றச்செய்கிறது (எச 16:6-14). இறைவனின் கவனமிக்க இலவசமான அன்பு பதிலன்பைக் கோருகிறது. இப்பதி லன்பு கீழ்ப்படிதலாகச் செயல்படுகின்றது. இந்த ஆழப்படுத்தும் அனுபவத்தின் கனி களை உபஆகம ஆன்மீகம் ஒன்று சேர்த்தும் தருகின்றது. இது ஓயாமல் கோரிக்கைகளை யும் வாக்குறுதிகளையும் உடன்படிக்கை யின் அச்சுறுத்தல்களையும் நினைவுபடுத்து வதாக இருப்பின், இஸ்ராயேலின் அன்பிற் காகக்காத்திருக்கின்ற (உப 6:5; 10:12-13; 11:1) இறையன்பை (உப 4:37; 7:8; 10:15) வலியு றுத்துவதே சிறந்தது. இத்தகைய பின்னணி யில் இனிமேல் ''நீங்கள் என் மக்கள், நான் உங்கள் இறைவன்'' என்னும் உடன்படிக்கை யின் அடிப்படையான கூற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இ) புனித வரலாற்றின் தொகுப்பு:- இறை வாக்கினர்களின் போதனைக்கு இணையாக இஸ்ராயேலின் கடந்த காலம் பற்றிய புனித வரலாற்று ஆசிரியர்களின் சிந்தனையானது, உடன்படிக்கையின் கோட்பாட்டைத் தனது தொடக்கமாகக் கொண்டுள்ளது. ஏற்கனவே யாவே பாரம்பரிய ஆசிரியர், சீனாய் உடன்ப டிக்கையினை முதல் வாக்குறுதிகளின் பணிச் சட்டமாகிய ஆபிரகாமினால் முடித்து வைக் கப்பட்ட மிகப்பழமையான உடன்படிக்கை யோடு இணைத்துவிட்டார் (ஆதி 16). மோசே காலமுதல் எருசலேமின் அழிவு வரை நிகழ்ந்த வரலாற்றை (நீதி முதல் 2 அர வரை) மீண்டும் உபஆகமப்பாரம்பரிய ஆசிரியர்கள் அந்நிகழ்ச்சிகளில் சீனாய் உடன் படிக்கையின் செயல்பாட்டை வாசகர்கள் புரிந்து கொள்ளச் செய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதாவது யாவே தமது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார். ஆனால் அவருடைய மக்களின் பிரமாணிக்கமின்மை அச்சுறுத்திய தண்ட னைகளை அவர்கள் மீது விதிக்குமாறு அவ ரைக் கட்டாயப்படுத்தியது. சமாரியாவின் மீதும் (2 அர 17:7-23) எருசலேமின் மீதுமான (2 அர 23:26-27) இருவித அழிவின் பொருள் இதுவே. நாடு கடத்தப்பட்ட காலத்தில் குருக்கள் பாரம்பரிய வரலாற்றாசிரியர் படைப்பு முதல் மோசே காலம் வரை இறைவனின் திட்டத்தை வரைய முயலும் போது இறை உடன்படிக்கையானது ஒரு வழிகாட்டும் ஆற்றலாகப் பணிபுரிகிறது. படைப்புத்திட்டத்தின் முதல் சோதனை மற் றும் பெரும் வெள்ளத்தின் பேரழிவிற்குப் பின்னர் நோவாவின் உடன்படிக்கையானது உலகளாவிய பரிமாணத்தை ஏற்கின்றது (ஆதி 9:1-17). இரண்டாவது தோல்வி மற் றும் பாபேலின் சிதறலுக்குப் பின்னர் ஆபிர காமின் உடன்படிக்கையானது இறைவனின் திட்டத்தைப் பிதாப்பிதாக்களின் பிள்ளைக ளுக்கு மட்டும் உரியதாக வரையறைசெய்கி றது (ஆதி 17:1-14). எகிப்தின் துன்பங்களுக் குப்பின்னர், சீனாய் உடன்படிக்கையானது இறை மக்களை உருவாக்கியதன் மூலம் எதிர்காலத்தைத் தயாரித்தது. இவ்வாறு இஸ் ராயேலானது, சீனாய் உடன்படிக்கையைப் பின்னோக்காகச் கட்டிக் காட்டி, தனது வர லாற்றின் பொருளைப் புரிந்து கொள்கிறது.

3. புதிய உடன்படிக்கையை நோக்கி:-

அ) பழைய உடன்படிக்கையின் அழிவு:- சீனாய் ஒப்பந்தத்தின் உட்கருத்துக்களை வலி யுறுத்துவதன் மூலம் இறைவாக்கினர்கள் உடன்பாட்டின் கோட்பாட்டை ஆழமாக்கு வதை அதிகமாகவே செய்தனர். எதிர்கா லத்தை நோக்கித் தம்மையே அவர்களோடு பிணைத்துக் கொண்ட மக்களுடைய நாட கத்தை அதனுடைய முழுமையில் அவர்கள் எடுத்துக் கூறினர். மனைவியின் விபச்சாரத்தி னால் திருமணம் தோல்வியடைவது போல (ஓசே 2:4; எச 16:15-43), இஸ்ராயேலுடைய பிரமாணிக்க மின்மையின் விளைவாக (எரே 22:9), பழைய ஒப்பந்தம் முறிந்துபோனது (31:32). இந்தமுறிவில் இறைவன் எவ்வித முன்முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் விளைவுகளை மட்டுமே இதனின்று வெளிக் கொணர்ந்தார். தனது பிரமாணிக்கமின்மைக்

காக இஸ்ராயேலானது தனது வரலாற்றில் உரிய தண்டனையைப்பெறும். அவளுடைய தேசிய துன்பங்களாகிய எருசலேமின் அழிவு அடிமைத்தனம் சிதறிப்போதல் ஆகியவற்றின் பொருள் இதுவே.

ஆ) புதிய உடன்படிக்கையின்வாக்குறுதி:- இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலையில் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் திட்டமானது மாறாமலே உள்ளது (எரே 31:35 தொ; 33:20-21). எனவே இக்காலங்களின் இறுதியில் புதிய உடன்படிக்கை ஒன்று இருக்கும். இதை ஒருபுதிய மண ஒப்பந்தத்தின் கூறுகள் வழியாக ஒசேயா எடுத்துக் கூறுகிறார். இந்தப் புதிய மணஒப்பந்தம் மணமகளுக்கு அன்பு, நீதி, நேர்மை, இறையறிவு ஆகியவற்றைக் கொண்டு வரும்; மனிதனுக்கும் மற்ற படைப்புகளுக்கும் இடையே சமாதானத்தை மீண்டும் அமைக்கும் (ஒசே 2:20-24). மனித இதயம் மாற்றப்பட்டு, அதில் இறைவனின் சட்டம் பொறிக்கப்பட்டிருக்கும் என்று எரேமியா துல்லியமாகக் கூறுகிறார் (எரே 31:33-34; 32:37-41). சமாதானத்தின் உடன்படிக்கையாகிய முடிவில்லா உடன்படிக்கையை எசக்கியேல் அறிவிக்கிறார் (எச 36:26). இது சீனாய் உடன்படிக்கையையும் (எச 16:60) தாவீதின் உடன்படிக்கையையும் (34:23-24) புதுப்பித்து இதயங்களின் மாற்றத்தையும் இறை ஆவியின் கொடையையும் கொண்டு வரும் (36:26 தொ). இவ்வாறு ''நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள்; நாம் உங்களின் கடவுளாய் இருப்போம்'' (எரே 31:33; 32:38; எச 36:28; 37:27) என்று முன்னர் அறிவிக்கப்பட்ட செயல் திட்டம் நிறைவேறும்.

''ஆறுதல் செய்தியில்'', இந்த இறுதிக் கால உடன்படிக்கையானது ஆண்டவருக்கும் புதிய எருசலேமிற்கும் இடையிலான திருமணத்தின் தனிக்கூறுகளை மீண்டும் எடுத்துக்காட்டுகிறது (ஏச 54). இந்த உடன்படிக்கையானது நோவாவிற்கு உறுதியளிக்கப்பட்டதுபோன்று உறுதியானதாகவும் (54:9-10), தாவீதுக்கு வாக்களிக்கப்பட்ட அருட்கொடைகளால் அமைக்கப்பட்டதாகவும் (55:3) இருக்கும். இந்த உடன்படிக்கையை உருவாக்கியவர் ''மக்களின் உடன்படிக்கையென்றும் நாடுகளில் ஒளி என்றும்'' (42:6; 49:6 தொ) யாவேயால் ஏற்படுத்தப்பட்ட மறைபொருள்மிக்க ஊழியரேயாவார். இவ்வாறு, காட்சியானது மாட்சிமையோடு விரிவுபடுத்தப்பட்டது. மனித வரலாறு முழுவதன்மீதும் ஆதிக்கம் செலுத்துகின்ற உடன்படிக்கையின் இத்திட்டமானது காலத்தின் இறுதியில் தனது முடிவினைக் கண்டடையும். குலமூதாதையர், மோசே மற்றும் தாவீதின் உடன்படிக்கைகளில் முழுமையற்ற நிலையில் வெளிப்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையானது, யாவேயினுடைய ஊழியனுடைய தலையீட்டின் மூலமாக ஒரே நேரத்தில் உள்ளார்ந்ததாகவும் உலகளாவியதாகவும் இறுதியாக முழுமையான வடிவில் செயல்படுத்தப்படும். இஸ்ராயேலின் வரலாறானது அதன் முடிவை நோக்கிச் செல்லும் என்பது உறுதி. சீனாய் உடன்படிக்கையின் காரணமாகப் புனித உடன்படிக்கையின் பெயரை யூத அமைப்புகள் பெறும் (தானி 11:28 தொ). ஆனால் இவ்வரலாறானது உண்மையில் எதிர்காலத்தை நோக்கியும், புதிய உடன்படிக்கையை நோக்கியும், புதிய ஏற்பாட்டை நோக்கியும் அமைந்திருக்கும்.

II புதிய ஏற்பாடு:-

உடன்படிக்கையைக் குறிக்கும் ''பெரீத்'' என்ற எபிரேயச் சொல்லை ''தியாதேக்கே'' என்று மொழி பெயர்த்தபோது, எழுபது நூல் பொருள்பொதிந்த தேர்வுசெய்தது. இது கிறிஸ்தவச் சொற்றொகுதியில் பெரும் தாக்கம் விளைவித்தது. இச்சொல்லானது, தனது கிரேக்கச் சட்டமொழியில் தனது உடைமைகளை விருப்பம் போல் அளிக்கின்ற செயலை (உயில்) அல்லது ஒருவர் செயல்படுத்த விரும்பும் முறையை அறிவிக்கின்ற செயலைக் குறிப்பிடுகின்றது. இதில் சட்டரீதியான ஒப்பந்தத்தின் தன்மையைவிட, செயல்களின் போக்கைத் தீர்மானிக்கின்றவருடைய அதிகாரமே அழுத்தம் பெறுகிறது. இச்சொல்லை உபயோகிப்பதன்மூலம் கிரேக்க மொழிபெயர்ப்பாளர்கள் இறைவ

னுடைய யாவும் கடந்த தன்மையையும், இஸ்ராயேல் மக்கள் மற்றும் அவர்களுடைய சட்டத்தினுடைய தொடக்கத்தின்போது இறைவன் காட்டிய பரிவையும் வலியுறுத்து கின்றனர்.

*1. இயேசுவால் புதிய உடன்படிக்கை அமைக்கப்படுதல்:-*

''தியோதேக்கே'' என்ற சொல்லானது, இறுதி இராவுணவு பற்றிய நான்கு பகுதிகளி லும், தனிப்பட்ட முக்கியத்துவம் உள்ள கருத்தில் தோன்றுகிறது. அப்பத்தை எடுத்து ''இதை வாங்கி உண்ணுங்கள், இது என் உடல்'' என்று கூறிப் பகிர்ந்தளித்தபின், இயேசு திராட்சை இரசக் கிண்ணத்தை எடுத்து ஆசீர்வதித்து, சுற்றிலும் அனுப்பி வைத்தார். மிகக்குறுகிய வாய்பாடானது மாற்குவினால் பாதுகாக்கப்பட்டுள்ளது. ''உடன் படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24); ''பாவமன்னிப்புக்கென்று'' என்பதை மத்தேயு சேர்க்கிறார் (மத் 26:28). லூக்காவும் பவுலும் ''இக்கிண்ணம் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை'' (லூக் 22:20; 1 கொரி 11:25) என்று கூறும்போது, லூக்கா மட்டும் ''உங்களுக்காகச் சிந்தப்படும்'' என்பதைச் சேர்த்துக் கொள்கிறார். கிண்ணத்தைப் பகிர்ந்துகொள்வது சடங்குச் செயலாகும். உரைக்கப்பட்ட சொற்கள், இயேசு செய்து முடிக்க உள்ள செயலான பலருடைய மீட்பிற்கெனச் சுதந்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அவரது மரணத்துடன் அச்சடங்குச் செயலைப் பிணைக்கின்றன.

இக்கடைசிக்கூற்றிலிருந்து இயேசு தம்மைத் துன்புறும் ஊழியனாகக் கருதுகிறார் என்பதும் (ஏச 53:10-12), தமது மரணத்தைப் பரிகாரப்பலியாகப் புரிந்துகொள்கிறார் (53: 10) என்பதும் தெளிவாகிறது. இவ்வாறாக, ''ஆறுதலின் செய்தி'' சுட்டிக் காட்டுகின்ற உடன்படிக்கையின் இணைப்பாளராக அவர் ஆகின்றார் (ஏச 42:6). ''உடன்படிக்கையின் இரத்தமானது'' சீனாய் உடன்படிக்கை இரத்தத்தினால் முடித்து வைக்கப்பட்டது என்பதையும் நினைவுறுத்துகிறது (யாத் 24:8). இறைவனுக்கும் மனிதருக்குமிடையே உறுதியான இணைப்பைச் செயல்முறையில் அடையவிருக்கின்ற இரத்தத்தினாலான புதிய பலியால் விலங்குகளின் பலிகள் அகற்றப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எரேமியாவாலும் எசக்கியேலாலும் அறிவிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் வாக்குறுதியானது இவ்வாறு நிறைவேற்றப்பட்டது. இயேசுவில் மனித இதயங்கள் மாற்றப்பட்டு, இறைவனின் ஆவி அளிக்கப்படும். ஒரே சமயத்தில் பாஸ்காப்பலியாகவும் உடன்படிக்கைப் பலியாகவும் பரிகாரப் பலியாகவும் உள்ள இயேசுவின் மரணமானது, மரணத்தைப் பல்வேறு வழிகளில் எடுத்துக் கூறிய பழைய ஏற்பாட்டின் உருவகங்களை, அவற்றினுடைய முழுநிறைவிற்கு நடத்திச் செல்லும். அதனைத் தமது நினைவாகச் செய்யச் சொல்லி இயேசுவால் கட்டளையிடப்பட்ட சடங்குச் செய்கையில் இச்செயல் இனிமேல் பிரசன்னப்படுத்தப்படுமாதலால், விசுவாசத்தினால் நிறைவேற்றப்படும் நற்கருணைப் பங்கேற்பின் காரணமாக, விசுவாசிகள் புதிய உடன்படிக்கையின் மறைபொருளுடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டு, அவற்றின் அருட்கொடைகளினின்று பயன் பெறுவர்.

*2. புதிய உடன்படிக்கை பற்றிய கிறிஸ்தவ சிந்தனை:-*

*அ. புனித பவுல்:-* கிறிஸ்தவ வழிபாட்டில் மையத்தில் இயேசுவாலேயே அமைக்கப்பட்ட நிலையில், உடன்படிக்கைக் கருத்தானது, வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத இடத்திலும், புதிய ஏற்பாடு முழுமைக்கும் பின்னணியாக உள்ளது. சீனாய் உடன்படிக்கையில் அளிக்கப்பட்டுள்ள சட்டத்தைக் கடைப்பிடிப்பதை அவசியமாகக் கொண்டுள்ள யூதருக்கு எதிரான தமது விவாதங்களில், சட்டம் உருவாவதற்கு முன்னரே ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியாகிய வேறொரு இறை ஒழுங்கு உரிய சரியான முறையில் அறிவிக்கப்பட்டு விட்டது எனப் பவுல் கூறுகின்றார். சட்டமானது இந்த உடன்பாட்டை அழிக்கமுடியாது. ஆனால், கிறிஸ்துவே வாக்குறுதியின் முழுநிறைவா-

உள்ளார் (கலா 3:15-18). எனவே சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக இல்லாமல், அவரின் மீதான விசுவாசத்தின் மூலமே மீட்பு அடையப்படுகிறது. மீட்புப்பற்றி இந்த நோக்கு ஒரு உண்மையை வலியுறுத்துகிறது; பழைய உடன்படிக்கையானது, இறைவன் சுதந்தரமாக உருவாக்கிய வாக்குறுதியின் ஒழுங்கு முறையாகிய இலவசமான திட்டத்திற்குள் புகுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் உச்ச நிலையாகப் புதிய ஏற்பாடு உள்ளது. சீனாயில் அமைக்கப்பட்ட ஒழுங்கமைவு இறைவனிடமிருந்து வந்தது என்பதை எதிர்த்துப் பவுல் வாதாடவில்லை; புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைகள் இஸ்ராயேலின் சலுகைகளைச் சேர்ந்தவையாகும் (உரோ 9:4). இவற்றிற்குப் பிறவினத்தார் அந்நியராக இருந்தனர் (எபே 2:12). இறைவன் இப்போது கிறிஸ்துவில் வெளிப்படுத்தியதுடன் இத்திட்டத்தை ஒப்பிடும்போது பழைய உடன்படிக்கையின் மீதான புதிய உடன்படிக்கையின் மேன்மை தெளிவாகத் தெரிகிறது (கலா 4:24 தொ; 2 கொரி 3:6 தொ). புதிய உடன்படிக்கையில் பாவங்கள் எடுத்தெறியப்படுகின்றன. (உரோ 11:27). இறைவன் மனிதரிடையில் தங்குகின்றார் (2 கொரி 6:16). அவர் மனிதருடைய இதயத்தை மாற்றி, தமது ஆவியை அதனுள் அமைக்கின்றார் (உரோ 3:5; 8:4-16). அது இவ்வாறு இனிமேலும் வார்த்தைகளின் உடன்படிக்கையாக இல்லாமல், இறைவனுடைய மக்களின் விடுதலையைத் தன்னுடன் கொண்டுவருகின்ற (கலா 14:24) ஆவியினுடையதாக உள்ளது (2 கொரி 3:6). கிறிஸ்துவின் இரத்தமானது மனித இனத்தில் ஒற்றுமையை மீண்டும் அமைத்ததினால் (எபே 2:12 தொ) அது இஸ்ராயேல் மக்களை அடைவது போல் பிற நாடுகளையும் அடைகிறது. இயேசுவில் நிறைவேறுவதாக அவர் கண்ட இறைவாக்கு வாக்குறுதிகளின் முன்னோக்குகளை மீண்டும் எடுத்தாண்டு உடன்படிக்கைக் கருத்தை முக்கியமானதாகக் கொண்டுள்ள மனித வரலாற்றின் பொதுத் தோற்றத்தைப் பவுல் விரிவுபடுத்துகின்றார்.

ஆ) எபிரேயருக்கான திருமுகம்:- இத்திருமுகமானது சற்றே மாறுபட்ட கோணத்தில் அதே கூறுகளைக்கொண்ட ஓர் இணையான தொகுப்பினை அமைக்கிறது. சிலுவையின் மூலம் குருவாகிய கிறிஸ்து விண்ணகப்புனித இடத்திற்குள் நுழைந்துள்ளார். அங்கு அவர் எந்நாளும் இறைவனின் முன்னிலையில் நமக்கெனப் பரிந்து பேசிக்கொண்டும், அவருடனான நமது ஒன்றிப்பைத் தொடங்கியவாறும் உள்ளார். எரேமியாவால் அறிவிக்கப்பட்ட இப்புதிய உடன்படிக்கையானது இவ்வாறு செயல்படுகிறது (எபி 8:8-12; எரே 31:31-34). அதனுடைய இணைப்பாளரின் உயர்வான தன்மையால் நிறைந்துள்ள உயர்ந்த உடன்படிக்கையாக உள்ளது (எபி 6:6; 12:24). முதலாவதைப்போல இரத்தத்தில் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கையாக உள்ளது (எபி 9:20; யாத் 24:8). ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தைத் தவிர வேறெந்த விலங்கினுடைய இரத்தமும் நமது மீட்பிற்கெனச் சிந்தப்படவில்லை (9:11-12). இப்புதிய திட்டமானது இதற்கு முற்பட்டதனால் தயாரிக்கப்பட்டது. ஆனால் இது பழையதை ஒன்றுமில்லாமையாக்கிவிட்டது. மறையப்போகின்ற ஒன்றுடன் தன்னையே இணைப்பதென்பது வீணே (6:13). உயில் எழுதியவருடைய மரணத்தோடு உயில் செயல்படத் தொடங்குவதுபோல், இயேசுவின் மரணமானது வாக்களிக்கப்பட்ட உரிமைப்பேற்றிற்கு நம்மை உரிமையாளராக்குகிறது (எபி 9:15 தொ). பழைய உடன்படிக்கையானது இறைவனுடனான மனிதனுடைய சந்திப்பை முழுமையற்ற விதமாகவே உறுதிப்படுத்துவதன் மூலம், நிழல்கள் மற்றும் உருவகங்களாக நிறைவற்றதாக உள்ளது. ஆனால் இதற்கு முற்றிலும் மாறுபட்ட, நிலையில் புதிய உடன்படிக்கையானது நமது தலைமைக்குருவாகிய இயேசு இறைப்பிரசன்னத்தை எக்காலத்திற்கும் அணுகும் உரிமையை நமக்கு உறுதிப்படுத்துவதால் முழுமையானதாக உள்ளது (எபி 10:1-22). முடிவற்ற உடன்படிக்கையினுடைய இரத்தத்தினால், ஆடுகளின் உயர்ந்த மேய்ப்பராக உருவாகிய இயேசுகிறிஸ்து (13:20) பாவத்தை அழித்தல்,

இறைவனுடன் மனிதனை ஒன்றித்தல் ஆகிய விளைவுகளைப் பெற்றுத் தந்துள்ளார்.

இ) பிற வாசகங்கள் பழைய ஏற்பாட்டினை மேற்கோள்காட்ட வேண்டிய எத்தேவையும் இல்லாமல் உடன்படிக்கைக் கருத்தை நினைவிற்குக் கொண்டு வருகின்ற சொற்களில் கிறிஸ்துவினுடைய சிலுவையின் கனிகளைப் புதிய ஏற்பாட்டின் பிறநூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. சீனாய் மலையில் உள்ள இஸ்ராயேலைவிட உயர்ந்த நிலையில், நாம் ''அரச குருத்துவமாகவும் பரிசுத்த குலமாகவும்'' உள்ளோம் *(1 பேதுரு 2:9; யாத் 19:5-6).* ''எல்லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும்'' ஒரு பகுதியாக் கொண்டுள்ள *(திருவெளி 5:9-10)* சமுதாயத்திற்கு இச்சலுகையானது விரிவாக்கப்படுகிறது. ஆனால் இவ்வுலகில் புதிய உடன்படிக்கையைச் செயல்படுத்துவதில் சில வரையறைகள் உண்டு. எனவே விண்ணக எருசலேமின் இறுதிக்கால முன்நோக்கில் உடன்படிக்கையைப்பற்றிச் சிந்திப்பதென்பது அவசியமானதாக உள்ளது. இத்தகைய மனிதருடனான இறைவனின் வாழ்வில் அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார் *(21:3).* செம்மறிக்கும் அவரது துணைவியாகிய திருச்சபைக்குமான திருமணத்தில் புதிய உடன்படிக்கையானது நிறைவு பெறுகிறது *(21:2.9).*

கோட்பாடு வளர்ச்சியின் முடிவில், மனிதருடனான இறைவனின் உறவுகளை வரையறுப்பதற்கு உதவிய பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரையிலான அனைத்து நோக்கங்களையும் உடன்படிக்கையின் கருத்தானது ஒன்றாக இணைக்கிறது. அதனுடைய உட்பொருளை எடுத்துக்காட்டவேண்டுமென்றால் மகன்தன்மை, அன்பு, ஒன்றிப்பு ஆகியவை பற்றி நாம் பேச வேண்டும். எல்லாவற்றிலும் மிகமுக்கியமாக இயேசு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திய செயலுக்கு நாம் திரும்பச் செல்ல வேண்டும். தம்முடைய உடல் மற்றும் சிந்தப்பட்ட தம்முடைய இரத்தம் ஆகிய தம்முடைய ஆவியின் மூலம் அவர் மனிதரைத் தமது உடலாகவே உருவாக்கினார். இறைவனின் இக்கொடையைப்பற்றி பழைய ஏற்பாடு இன்னும் அறிந்திருக்கவில்லை. ஆயினும் அங்குள்ள அனைத்தும் இறைவனுக்கும் மனிதருக்குமிடையிலான உடன்படிக்கையைப்பற்றி அக்கறைகொண்டிருந்ததால் பழைய ஏற்பாடு வரலாறும் அமைப்புகளும் அதன் பண்புகளை மங்கலாகக் கோடிட்டுக் காட்டின.

**உடன்படிக்கையின் புத்தகம்** *(COVENANT, BOOK OF).*

*யாத் 27:7*-இல் மோசே உடன்படிக்கையின் புத்தகத்திலிருந்து வாசித்ததாகக் கூறப்படுகிறது. அதாவது இது சீனாய் மலையடிவாரத்தில் மக்கள், இறைவன் உடன்படிக்கை செய்து கொண்ட சடங்கின் போது இப்புத்தகத்திலிருந்து மோசே வாசிக்கிறார். இந்தப் பெயர் யாத் *20:23-23:33* என்ற பகுதியில் அடங்கிய ஓர் தொகுப்பைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. அநேகமாக இது இஸ்ராயேலின் வரலாறு முழுவதிலும் வளர்ச்சியடைந்த, யாவேக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கையின் எழுதப்பட்ட பகுதிகளைக் குறிக்கலாம் *(2 அர 23:2-3.11; 2 நாள் 34:30-31).*

**உடன்படிக்கையின் பேழை** *(ARK OF THE COVENANT).*

இது சாட்சியின் பேழை, யாவேயின் உடன்படிக்கைப் பேழை, யாவேயின் பேழை, இஸ்ராயேலின் இறைவனின் பேழை, என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது தூக்கிச் செல்லக்கூடிய அளவில் அமைந்த ஒரு சிறிய பெட்டி ஆகும். ஆதி.50:26-இல் இது பற்றி யோசேப்பின் இறப்பிற்குப் பிறகு அவரை அடக்கம் செய்த பெட்டியைக் குறிப்பிடும் போது பேசப்படுகிறது.

யாத் *25:10*-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல நீளம் இரண்டரை முழமும் அகலம் ஒன்றரை முழமும், உயரம் ஒன்றரை முழ

மும் கொண்ட அப்பெட்டி சேத்தீம் மரத்தால் செய்யப்பட்டது. அதன் உள்ளும் புறமும் பசும் பொன்னால் மூடப்பட்டு, அதன் மேல் தங்க மூடி ஒன்று இருந்தது. நான்கு பொன்வளையங்கள் பெட்டகத்தின் நான்கு மூலைகளிலும் பொருத்தப்பட்டிருந்தன, அதனைத் தூக்கிச்செல்ல சேத்தீம் மரத்தாலான இரண்டு கைப்பிடிகள் இருந்தன. அவையும் தங்கத்தால் மூடப்பட்டு வளையங்களுக்குள் நுழைக்கப்பட்டிருந்தன. பேழையினுள் சாட்சிச் சட்டங்கள் இரண்டு வைக்கப்பட்டன.

அதன்மேல் பசும் பொன்னால் ஆன இரக்கத்தின் அரியணை ஒன்றும் இருந்தது. அதன் நீளம் இரண்டரை முழமும், அகலம் ஒன்றரை முழமுமாய் அமைந்திருந்தது. தங்கள் இறக்கைகளை உயர விரிக்கும் இரண்டு கெருபிம்கள் இரக்கத்தின் அரியணையையும் மூலத்தானத்தையும் மூடுபவையாக எதிர் எதிரே நிற்பவையாக வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு நிற்கும் இரு கெருபிம்களுக்கு நடுவில் இருந்து கடவுள் தன் கட்டளைகளையெல்லாம் இஸ்ராயேலுக்கு வெளிப்படுத்தினார் (யாத் 25:22). இவ்வாறு கூறப்படும் விளக்கம் பின்னர் வந்த குருத்துவ மரபின் விளக்கமாயினும், இது பேழை கட்டப்பட்ட பல நூற்றாண்டுகட்குப் பின்னர் எழுந்ததாயினும் ஏறக்குறைய சரியானதேயாகும்.

உடன்படிக்கையின் பேழைக்குள் இருந்த இரு சாட்சியச் சட்டங்களும் மோசேயின் காலத்தைச் சேர்ந்தவை (1 அர 8:9). எபி 9:4-இல் ஆசிரியர் வரலாறு அல்லாத ராபிகளின் மரபிலிருந்து இந்தப்பேழைக்குள் மன்னாவைக் கொண்ட ஒரு பாத்திரமும், ஆரோனின் கோலும் இருந்ததாக மீண்டும், மீண்டும் குறிப்பிடுகிறார்.

எபிரேயர்கள் பாலைவனத்தில் பயணம் செய்தபொழுது அனைத்து மக்களுக்கு முன் உடன்படிக்கையின் பேழை சுமந்துசெல்லப்பட்டது (எண் 10:33). ஒவ்வொரு போரின் போதும் முன்னால் சுமந்து சென்றனர். கானானியர்கள் இவர்களை வென்றபோது உடன்படிக்கையின் பேழை அவர்களிடம் இல்லை (எண் 14:44). இது யோர்தானின் நடுவே முதலில் சுமந்து செல்லப்பட்டது (யோசு 3:3); எரிக்கோ நகரைச் சுற்றி ஏழு நாள்கள் தூக்கிச் செல்லப்பட்டது (யோசு 6:11).

இறைத்திருவுளத்தைக் கேட்டு அறியும் இடமாகவும் இருந்தது (நீதி 20:27). இஸ்ராயேலர் கானான் நாட்டில் குடியேறிய பின்பு சிலேவில் இது நிலையாக வைக்கப்பட்டது (1 சாமு 3:3). பெலிஸ்தியருக்கு எதிராக நடந்த போரில் இது தூக்கிச் செல்லப்பட்டது. ஆனால் பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலரை வென்று பேழையையும் கவர்ந்து சென்றனர் (1 சாமு 4:10-11). ஆனால் பெலிஸ்தியர்கள் இதனை ஒரு எதிரிச் சின்னமாகக் கண்டனர். அசுதோத்து எனும் இடத்தில் பெலிஸ்தியரின் கடவுளான தாகோன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த போது, அக்கடவுளின் உருவம் பூமி நடுக்கத்தால் கீழே தள்ளப்பட்டது (1 சாமு 5:3). மேலும் பேழை கொண்டு செல்லப்பட்ட அசுதோத்து, காத்து, எக்கரோன் எனுமிடங்களில் தொற்று நோய் பரவ ஆரம்பித்தது (1 சாமு 5:6). எனவே உடன்படிக்கையின் பேழையை மாட்டு வண்டியில் ஏற்றி அதற்கு இருகாளைகளைப் பூட்டி அனுப்பி வைத்தனர். அது பேத்துசெமேசு எனுமிடத்தில் இஸ்ராயேலரை வந்தடைந்தது (1 சாமு 6:1). ஆனால் இங்கும் தொற்று நோய் பரவியதால் (1 சாமு 6:19). அது கிரிஸ்-எயரீமில் அபினதாபின் வீட்டில் வைக்கப்பட்டது. பெலிஸ்தியருடன் ஏற்கனவே போரில் தோல்வியுற்றது மட்டுமன்று, தொற்று நோயும் பரவியதால் உடன்படிக்கையின்பேழையின் மேல் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். பின்னர் தாவீதுதான் அபினதாபின் வீட்டிலிருந்து எருசலேமில் இருந்த புதிய புனிதத்தலத்திற்குக் கொணர்கிறார். அதன் வழியில் சுமந்து வந்த ஒருவர் இறந்தார் (2 சாமு 6:2).

தாவீது உடன்படிக்கையின் பேழையில் ஒரு ஒற்றுமையின் சின்னத்தைக் கண்டார். பிரிந்து கிடந்த இஸ்ராயேலை அரசியல்

அடிப்படையில் இணைப்பதற்கு இது ஒரு அடையாளமாக அமையுமென்பதைக் கண்டதால் எபூசியரின் நகரமான எருசலேமை இஸ்ராயேலரின் தலைநகராக்கி புதிய வழிபாட்டு மையமாகவும் ஒற்றுமையின் மையமாகவும் ஏற்படுத்தினார். பேழை நகரைப் புனிதப்படுத்தியது.

உடன்படிக்கையின் பேழை அம்மோனியருக்கெதிரான போரில் சுமந்து செல்லபபட்டது (2 சாமு 11:11). சாலமோனின் ஆலயத்தில் இறுதியில் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (1 அர 8:6). அதன்பிறகு வரலாற்று நூல்களில் இது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. சங் 24:7-10 போன்றவற்றில் இது பவனியாக எடுத்துச் செல்லப்படுவது பற்றிச் சுட்டிக் காட்டப்படுகிறது. எதிர்காலத்தில் இதன்மறைவு பற்றிக் குறிப்பிடுகிறார் எரேமியா (எரே 3:16). கி.மு.587-இல் எருசலேம் ஆலயத்தின் அழிவின்போது பேழையும் அழிந்திருக்க வேண்டும். வரலாற்றுக்குப் புறம்பான ஒரு மரபு எரேமியா இதனை ஆலய அழிவினின்று பாதுகாத்தார் எனக் கூறுகிறது (2 மக்.2:5).

புதிய ஏற்பாட்டில் எபி 9:4; திருவெளி 11:19-இல் இது விண்ணக ஆலயத்தில் காட்சி தருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உடன்படிக்கையின் பேழை யாவே இறைவனின் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாக விளங்கியது. அதுபற்றிய பாரம்பரியமும் அதன் அடையாளப் பொருளும் ஒருவிதத்தில் கலந்து போயின. இஸ்லாமியத்திற்கு முந்தைய அரேபிய இனங்கள் சுமந்து செல்லும் வழிபாட்டு இடங்களைக் கொண்டிருந்ததாக நவீன ஆய்வுகள் கூறுகின்றன. பேழை பற்றிய பாரம்பரியம் இதனோடு பொருந்துவதாக உள்ளது. இந்த நாடோடி இனத்தவர்களுக்கு வீடோ, நிலையான குடியிருப்போ, கோயிலோ இருந்ததில்லை. பேழை போன்ற அமைப்பு அவர்களோடு செல்லும் புனித இடமாகியது.

உடன்படிக்கையின் பேழைபற்றிய மிக விரிவான விளக்கமொன்றும் கூறப்படாதது அதன் அடையாளப் பொருளை மிக விரிவாக விளக்கத்தடையாக இருக்கிறது. எகிப்தியர்கள் சுமந்து சென்ற தூய படகு அவர்களது கடவுளான ரே விண்ணகங்களை நாள்தோறும் சுற்றி வந்ததைக் குறிக்கும் அடையாளமாக இருந்தது போன்று உடன்படிக்கைப் பேழையும் புரிந்து கொள்ளப்படலாம். கானானிய தூபமிடும் பீடங்கள் இது போன்ற சிறிய அளவிலான கோவில்களாகக் காணப்பட்டாலும் இந்தப் பேழையை ஒத்தவையாக இவை அமையா எனக் கருதுகின்றனர் சிலர்.

கெருபிம்களின் மேல் அமர்ந்திருக்கும் ஆண்டவர் என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து (1 சாமு 4:4; 2 சாமு 6:2; சங் 80:2) உடன்படிக்கையின் பேழையே யாவேயின் அரியணை என்பதும் அதன்மேல் கெருபிம்களின் மேல் ஆண்டவர் மனிதக் கண்களுக்குப் புலப்பாடத முறையில் அமர்ந்துள்ளார் என்பதும் தெரிகிறது. கானானியத் தெய்வங்கள் விலங்குகளின் மேல் அமர்ந்துள்ளதாகக் காட்டப்படும். ஆனால் யாவேக்கு எந்தவடிவமும் இல்லையாததால் அவரின் கால்மணை மட்டுமே அடையாளமாக அவரைக் குறிப்பிட்டது. அசீரியக் கடவுள்களின் சிலைகள் தங்கள் அரியணை மேல் அமர்ந்துள்ள நிலையில் பவனியில் சுமந்து செல்லப்பட்டன.

இவ்வாறு உடன்படிக்கையின் பேழை என்பது யாவேயின் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாகவும், பாவப்பரிகாரம் நிகழ்த்துமிடமாகவும், இறைத்திருவுளம் அறிவிக்கப்படும் இடமாகவும் இருந்தது. யாவேயின் அரச மாண்பையும், அவரது தலைமைப் பண்பையும் குறிக்கும் வகையில் போர்களின்முன் கொண்டு செல்லப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக யாவே இஸ்ராயேலருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக இருந்தது. ஏனெனில் அவர்களைத் தமது மக்களாக அவரே தேர்ந்து கொண்டார். அவர்களுக்குத் தமது கட்டளைகளைத் தந்தார். அந்தக் கட்டளைகள், யாவே தமது செயலாலும் சொல்லாலும் தமது மக்களிடையே பிரசன்னமாய்

இருக்கிறார், செயலாற்றுகிறார், பரிபாலிக்கி றார் என்பதற்குப் பேழை அடையாளமாக விளங்கியது.

புதிய ஏற்பாடு, பேழை கிறிஸ்துவில் நிறைவு காண்பதாய்க் காட்டுகிறது. அவரே மக்களிடையே வாழும் இறைவனின் வார்த்தை (யோவா 1:14; கொலோ 2:9). விசுவாசிப்பவர்களுக்குள் அவர்களது மீட் புக்காகச் செயலாற்றுகிறார் (1 தெச 2:13). அவர்களின் வழிகாட்டியாக உள்ளார் (யோவா 8:12). உண்மையான பரிகாரமாகி றார் (உரோ 3:25; 1 யோவா 2:2; 4:10).

**உடும்பு** (GECKO)

விவிலியத்தில் இதன் பொருள் தெளிவாக இல்லையென்றாலும், லேவி 11:30-இன்படி இது ஓர் ஊரும் உயிரினமாகும். மேலும், இது ஒரு வகையான கீச்சிடும் குரலை எழுப்புவதால் இப்பெயர் அதற்குச் சூட்டப் பட்டிருக்கலாம். பாலஸ்தீன நாட்டில் இத்த கைய உயிரினங்கள் பல காணப்படுகின்றன. இது அசுத்த விலங்குகள் பட்டியலில் சேர்க் கப்பட்டுள்ளது. ஆகையால் இஸ்ராயேலர் இதை உண்ணக்கூடாது.

**உடைகள்:** (VESTMENTS)

இது பாகாலின் பக்தர்களின் தனிச்சிறப்பு டைய உடைகளாகும் (2 அர 10:22). மேலும் இது குருக்கள் அணியும் ஆடையையும் குறிக்கும் (எஸ் 3:10).

**உணவருந்தல்**

மேற்காசிய நாடுகளில் உணவு உண்பது, உண்டு குடிப்பதை மட்டுமல்லாமல் மனி தன் மனிதனோடும், மனிதன் இறைவனோ டும் கொண்டுள்ள உறவையும் குறித்தது. இவை மன மகிழ்ச்சிக்கும் வழிவகுத்தன (திருவுரை 10:19).

1. உணவு நேரம்:- வழக்கமாக மக்கள் காலையில் உணவு உண்ணமாட்டார்கள். இருப்பினும் வேலை செய்பவர்கள் சிறு ரொட்டித்துண்டு, அல்லது பேரீச்சம் பழம் இவற்றை உண்பார்கள். உயிர்த்த இயேசு வின் காட்சியில்தான், காலை உணவு குறிப் பிடப்படுகின்றது. இயேசு காலை உணவு உண்ண வரும்படி அப்போஸ்தலர்களை அழைத்தார் (யோவா 21:12). மற்ற இடங்களி லெல்லாம் அதிகாலையில் உணவு உண்பது கண்டிக்கப்படுகிறது (திருவுரை 10:16; ஏச 5:11; அ.ப.2:15). ராபிகளின் ஒழுங்குப்படி பொது மக்களுக்கு 10 மணியும் வயலில் வேலைசெய்பவர்களுக்கு 11 மணியும், கல்வி பயில்பவர்களுக்கு 12 மணியும் காலை உணவு நேரமாகும். பேதுருவுக்கு உச்சிவே ளையில் பசி எடுத்தது (அ.ப.10:9-10). பழைய ஏற்பாட்டில் காலை உணவைக் குறிக்கத் தனிப்பட்ட சொல் இல்லை. இது எகிப்தில் பெரிய விருந்தாக இருந்தாலும், பாலஸ்தீனத்தில் பரவலாக வழக்கில் இல்லை (ஆதி 43:16). இது உண்பதற்கும், வேலையிலிருந்து ஓய்வு எடுப்பதற்கும் உரிய நேரமாகும். அறுவடையின் போது ரூத்தும் போவாசும் காடியில் தோய்த்த அப் பத்தையும், வறுத்த கோதுமையையும் உண் டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (ரூத் 2:14).

முக்கியமான உணவு, வேலை செய்யப் போதிய வெளிச்சம் இல்லாத மாலை நேரத் தில் இருந்தது (நீதி 19:16-21; லூக் 17:7-8; ரூத் 3:2-7). இவ்வாறே காகம் எலியாவுக்குக் காலையிலும் மாலையிலும் அப்பம் கொண்டு வந்தது (1 அர 17:6). ஒரு நாளைக்கு இரண்டு முறை உண்ணும் வழக் கம் பாலைவனக் காலத்திலிருந்து வருவதா கக் கருதப்படுகிறது (யாத் 16:12). இந்த உணவைக் குறிக்கவும் தனிப்பட்ட சொல் இல்லை. மாலை நேரத்தில் பெரிய விருந்து கள் உண்பது வழக்கமாக இருந்தது. 'மாலை நேரத்தில்' இரண்டு தூதர்கள் லோத்திடம் வந்தபோது லோத்து பெரிய விருந்து வைத் தார் (ஆதி 19:1-3). ஆனால் சில விதிவிலக்கு களையும் காணலாம். ஆபிரகாம் மூன்று மனிதர்களை உச்சி வேளையில் உபசரிக்கின் றார் (18:1-8). யோபு தன் மக்களுடன் உண்ட விருந்தும் உச்சி வேளையில் நடந்ததாகத் தான் கருதப்படுகின்றது (யோபு 1:13-14).

2. விருந்தினர்:- பொதுவாக உணவு உண் ணும் போது பெண்களும் ஆண்களோடு

உண்டனர். ரூத் போவாசோடும், சகவேலைக்காரர்களோடும் உண்டாள் (ரூத் 2:14). பெரிய விருந்துகளுக்கு ஆண்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர். அபிசலோம் ஆடுகள் மயிர் கத்தரிக்கும் விழாவுக்கு அரசனின் புதல்வர்களை மட்டுமே அழைத்தார் (2 சாமு 13:23). சீராக் நூல் பெண்களை விருந்துகளில் விலக்கக் கூறுகின்றது (சீரா 9:9). முதலில் விருந்து வைப்பவர் ஊழியர்களை அனுப்பி விழாவைப்பற்றி அறிவிப்பார். விருந்து நாளின் போது மீண்டும் ஊழியர்களை அனுப்பி எல்லாம் தயார் என்று அறிவிப்பார் (மத் 22:3-4; லூக் 14:16-17; எஸ்த 5:8; 6:14).

விருந்தினர் வந்தவுடன் 'அவர்களுக்குத் தனிப்பட்ட ஆடை கொடுக்கப்பட்டது (ஏச 61:3; மத் 22:11-12). அவர்கள் தலை பூக்களால் அலங்கரிக்கப்படும் (ஏச 61:3; ஞான 2:7-8). இவ்வாறு அலங்கரிக்கப்பட்டவர்களை விருந்து கொடுப்பவர் முத்தமிட்டு வரவேற்பார். அவர்களுடைய பாதங்கள் கழுவப்பட்டன (ஆதி 18:4; 24:32; 43:24; நீதி 19:21; 1 சாமு 25:41; லூக் 7:44). பின்னர் விருந்தினர் பாதங்களும் தலையும் எண்ணெய் பூசப்படும். ஆனால் மரியாள் இயேசுவின் பாதத்தை விலையுயர்ந்த பரிமளத்தைலத்தால் பூசினாள் (யோவா 12:3; மத் 26:7; மாற் 14:3; லூக் 7:38). இதன் பின்னர் அவர்கள் உணவருந்தச் சென்றனர்.

3. உணவருந்தும்போது பழக்க வழக்கங்கள்:-

அ) இருக்கை வசதி:- பழங்காலத்தில் எபிரேயர் தரையில் அமர்ந்து உணவருந்தினர். ஆபிரகாம் மூன்று மனிதர்களுக்கு மரத்தடியில் உணவு பரிமாறினார் (ஆதி 18:8). பிற்காலத்தில், எபிரேயர்கள் கானானியர் வழக்கப்படி சிறு மேடைகளில் வைக்கப்பட்ட உணவை நாற்காலிகளில் அமர்ந்து உண்டனர். எனவே தாவீது, அரசனின் ''பந்தியில் அமரத்'' தவறக்கூடாது என்று கூறினார் (1 சாமு 20:5). சொகுசிருக்கையில் சாய்ந்துகொண்டு உண்பது அநேகமாக பாலஸ்தீனத்திற்குப் பாபிலோனியாவிலிருந்து வந்த வழக்கமாகும். இப்பழக்கம் ஆமோஸ் இறைவாக்கினரால் பொறுப்பற்ற ஆடம்பரம் என்று கண்டிக்கப்படுகிறது (ஆமோ 6:4). எஸ்தர் நூலில் இத்தகைய இருக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (எஸ்த 1:6; 7:8).

புதிய ஏற்பாட்டில் அதே பழக்க வழக்கங்கள் இருந்தாலும், உரோமானிய கிரேக்க பழக்க வழக்கங்களும் சேர்க்கப்பட்டன. ஒரு சதுர மேசை அமைக்கப்பட்டது. அதன் மூன்று பக்கங்களில் தாழ்ந்த இருக்கைகளும், ஒரு பக்கம் ஊழியர்கள் வேலை செய்ய வசதியாக வெறுமனே இருந்தது. ஒரு பக்கத்தில் மூன்று பேர் உணவு அருந்தலாம். மேசைக்குச் செங்கோணத்தில் இருக்கையில் சாய்ந்து இடது முழங்கையை ஊன்றிக் கொண்டு வலக்கையால் உணவு அருந்துவர். இடக் கையால் உண்பது விருந்தினரை இழிவுபடுத்துவது போலாகும்.

சிறப்பு விருந்தினருக்கு முதலிடம் அளிக்கப்பட்டது (1 சாமு 20:25). சாமுவேல் சவுலுக்கும் அவர் ஊழியருக்கும் விருந்தில் முதலிடத்தை அளித்தார் (1 சாமு 9:22). மற்றவர்கள் அவர்கள் வயதுக்கும் முக்கியத்துவத்துக்கும் தக்கபடி அமர்ந்தனர் (ஆதி 43:33). அமர்ந்த பின் ஊழியர்கள் கொடுத்த பாத்திரத்தில் கைகழுவிக் கொண்டனர். இது கைகளைச் சுத்தப்படுத்துவதற்கு மட்டுமல்லாது, புனிதப்படுத்தும் ஒரு சடங்காகவும் கருதப்பட்டது (மாற் 7:3). எனவேதான் பரிசேயர்கள், இயேசுவின் சீடர்கள் கழுவாத கைகளோடு உண்பதாகக் குற்றம் சாட்டினர் (மத் 15:1-2; மாற் 7:2). பின்னர் விருந்து கொடுப்பவர் விருந்தின் மீது நன்றி கூறினார். அப்பம் பலுகுதலின்போது இயேசு அப்பம், மீன் ஆகியவற்றின்மீது நன்றி கூறினார் (மத் 15;36; மாற் 8:6-7). கடைசி இரவு உணவின் போது இயேசு அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து நன்றி கூறினார் (மத் 26:26-27; மாற் 14:22-23; லூக் 22:17-19; 1 கொரி 11:24; அ.ப.27:35).

ஆ) உணவு பரிமாற்றம்:- வழக்கமாக அக்குடும்பத்தின் பெண்கள் உணவு பரிமாறி

வர். பேதுருவின் மாமியார் இயேசுவுக்குப் பணிவிடை புரிந்தாள் (மத் 8:14-15; மாற் 1:30-31; லூக் 4:38-39). ஆனால் செல்வந்தர் கள் வீட்டில் ஆண் ஊழியர்கள் இருந்தனர். சேபா நாட்டு அரசி, சாலமோன் அரசனின் ஊழியர்களின் எண்ணிக்கையைக் கண்டு வியந்தாள் (1 அர 10:5; 2 நாள் 9:4). விருந்து இரண்டு பகுதிகளை உடையது. முதல் பகுதி யில் உணவு மட்டும் பரிமாறப்பட்டது. பின் பகுதியில் திராட்சை ரசம் கொடுக்கப்பட் டது. எனவேதான் கடைசி இரவு உணவில் திராட்சை ரசத்துக்குமுன் அப்பம் கொடுக்கப் பட்டது.

விவிலிய காலத்தில் உணவுக்கென்று தனிப்பாத்திரம் இல்லை. உணவு வைக்கப் பட்டிருந்த ஒரே தட்டில் உண்டனர் (பழ 26:15). இயேசுவும் ''என்னோடு பாத்திரத் தில் கையிடுகிறவனே'' என்று தம்மைக் காட்டிக் கொடுப்பவனை அடையாளம் காண்பிக்கிறார் (மாற் 14:20; மத் 26:23; லூக் 22:21). திராட்சை ரசம் அருந்த தனிக் கிண் ணங்கள் இருந்தன. சாலமோனின் அரண்ம னையில் தங்கத்தாலான கிண்ணங்கள் இருந் தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1 அர 10:21; 2 நாள் 9:20).

உணவிலேயே மிகவும் சிறந்த பகுதி சிறப்பு விருந்தினருக்குக் கொடுக்கப்பட் டது. சாமுவேல் சிறந்த கறித்துண்டு ஒன் றைச் சவுலுக்குக் கொடுத்தார் (1 சாமு 9:23-24). கொழுப்பு நிறைந்த பொருட்கள்தான் மக்களால் விரும்பி உண்ணப்பட்டது (ஏச 25:6). விருந்தாளி மிகவும் பேராசை கொள் ளாதவராகவும், கண்டதை எல்லாம் உண்ண வேண்டும் என்று எண்ணாதவராகவும் இருக்க வேண்டும். ''மனிதனைப் போல்'' உண்ணவேண்டும்; மரியாதை முன்னிட்டு, முந்தியே நிறுத்திவிட வேண்டும் (சீரா 31:12-18).

இ) பொழுது போக்கு:- முக்கியமான பொழுது போக்கு இசையும் பாட்டுமாகும். ஆமோஸ் இவ்வாறு பாடுகிறவர்களைக் கண்டிக்கிறார் (ஆமோ 6:5; ஏச 5:12). ஆனால் பிற்காலத்தில் விருந்துகளில் இசையும் பாட் டும் ஏற்றுக் கொள்ளப்பட்டன (சீரா 32:5-6). ஊதாரி மைந்தன் திரும்பி வந்த போது அவனுடைய தந்தை இசையும் நடனமும் கொண்ட விருந்து ஒன்று ஏற்பாடு செய்தார் (லூக் 15:25). குடிப்பாடல்களும் இருந்தன (ஞான 2:6-9).

நடனமும் முக்கிய பங்கு வகித்தது. ஏரோ தின் பிறந்த நாளின் போது ஏரோதியாளின் மகள் அவையினரின்முன் நடனம் ஆடினாள் (மாற் 6:21-22; மத் 14:6-7). இதில் பல புதிர்களும் இடம் பெற்றன. சிம்சோன் தன் திருமண நாளன்று ஒரு புதிர் போட, அதன் விடையைக் கண்டபின், விருந்தினர் எதிர்ப் புதிர் போட்டனர் (நீதி 14:12-18). விருந்துக ளில் மிதமிஞ்சி உண்ணுவதும் குடிப்பதும் கண்டனம் செய்யப்பட்டது (ஏச 5:12; திரு வுரை 10:17; உரோ 13:13; கலா 5:19-21; 1 பேதுரு 4:3).

4. விவிலிய உருவகத்தில் உணவு:-

அ) பழைய ஏற்பாட்டில்:- சிரிப்பும் மகிழ்ச்சியும் விருந்துடன் தொடர்பு கொண் டவை ஆதலால், ''கவலையற்ற மனமோ இடைவிடாத விருந்து போன்றது'' என்று பழமொழி நூல் கூறுகின்றது (பழ 15:15). ஆண்டவர் பெரியதொரு விருந்தை ஏற்பாடு செய்கிறார் என்ற உருவகம் முக்கியமானது. இவை ஆண்டவரின் ஆசிராகவோ, தண்டனை யாகவோ இருக்கலாம் (ஏச 25:6; 61:3; எரே 51:39).

ஆ) புதிய ஏற்பாட்டில்:- இயேசு விருந்துக ளைத் தம் உவமைகளில் பயன்படுத்தினார் (மத் 22:1-10; லூக் 14:16-24), மேலும் இறைய ரசின் வருகை விருந்தோடு தொடர்பு படுத் தப்படுகின்றது. கடைசி இரவு உணவின் போது ''இது முதல் என் தந்தையின் அரசில் புதிய இரசம் உங்களோடு பருகும் நாள்வரை இந்தத் திராட்சைப் பழ ரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார் (மத் 26:29; மாற் 14:25; லூக் 22:18). அப்போஸ்தலர்கள் பன்னிருவ ரும் அவருடைய அரசில் ''உண்பார்கள், குடிப்பார்கள், பன்னிரு கோத்திரங்களுக்கும்

*நடுவராக அரியணையில் வீற்றிருப்பார்கள்'' (லூக் 22:30; 14:15; திருவெளி 19:9).* நற்செய்தி எல்லாருக்கும் பொதுவானது என்ற கருத்து விண்ணரசில் விருந்து என்ற கருத்தால் எடுத்துக்கூறப்படுகிறது. அவ்விருந்தில் ''கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் பந்தியில் அமர்வார்கள்'' (மத் 8:11; லூக் 13:29).

**உணவு சமைப்பதும், உணவு சமைக்கும் பாத்திரங்களும்** (COOKING AND COKKING OTENSILS)

உணவு விடுதிகளிலும் செல்வந்தர் வீடுகளிலும் தவிர மற்ற வீடுகளில் அவ்வீட்டுப் பெண்கள் உணவு சமைத்தார்கள். செல்வந்தர் வீடுகளில் சமைப்பதற்கு ஊழியர்களை வைத்திருந்தனர். அப்பம் பகலில் சுடப்பட்டது; ஆனால் மாலை உணவிற்காகத்தான் பெரும்பாலும் சமையல் செய்யப்பட்டது. இதுதான் முக்கியமான உணவு; பெரும்பாலும் ஏழைகளுக்கு இது ஒன்று தான் ஒரே உணவு. இது திராட்சைத் தோட்ட ஊழியர் உவமையை விளக்க முக்கிய கருத்தாகும் (மத் 21:1-16). ஒரு சாதாரண உழைப்பாளி தன்னுடைய குடும்பத்திற்கு மாலையில் உணவளிக்க அந்நாள் முழுவதும் வேலை செய்யவேண்டும்.

*1. சமைப்பது:-* சாதாரண வீடுகளில் முற்றத்தில் சமைக்கப்பட்டது; சீதோஷண நிலை மாறும்பொழுது உள்ளே செய்யப்பட்டது.

*அ. தானியங்கள்:-* விவிலியச் சமையல்களில் ரொட்டி மிக முக்கியமான உணவு. இதைச் செய்யப் பயன்படுத்தப்பட்டமிக முக்கியமான தானியங்கள் கோதுமையும் வாற் கோதுமையுமாகும் (எச 4:9). பணக்காரர்கள் கோதுமையையும், ஏழைகள் வாற் கோதுமையையும் பயன்படுத்தினர். ரொட்டியானது ஒலிவ எண்ணெயில் தொடப்பட்டு, கீரைகளுடனும் சுவையூட்டும் பொருள்களுடனும் சேர்த்து உண்ணப்பட்டது. கேக்குகள் தேனில் பூசப்பட்டு பலவித கொட்டைகளாலும், விதைகளாலும் தூவப்பட்டிருந்தன. நாடோடிகள் கொதித்த வெண்ணெயைப் பயன்படுத்தினர்.

தானியங்களையுண்ண இரண்டாவது வழி, அதைக் கூழாக்கி உண்பது. முதலில் கோதுமையை ஊறவைத்து, காயவைத்து அதை உடைத்துக் கஞ்சி செய்தனர். இது உப்பிலும், தேனிலும், ஒலிவ எண்ணெயிலும் சுவையூட்டப்பட்டது. பழ 27:22-இல் கோதுமையைச் சமைக்கும் இன்னொரு முறை கொடுக்கப்பட்டுள்ளது.

அறுவடை வயலில் கதிர்கள் நெருப்பின் மேல் சுடப்பட்டு, பதம் செய்யப்பட்டு உண்ணப்பட்டன (ரூத் 2:14). லேவியர் சட்டப்படி முதற் கனியில் ஒன்றாகத் தானியம் கூறப்படுகிறது (லேவி 2:14-16).

*ஆ) காய்கறிகளும், பழங்களும்:-* இவை ஏழையினுடைய உணவு. ஏனெனில் அவன் இறைச்சிக்கு ஆசைப்பட முடியாது. பலவகையான பயறுகளும் அவரை, மொச்சைகளும் மதிக்கப்பட்டன. ஏனெனில் அவை வருடம் முழுவதும் பயன்படுத்தப்பட்டன. ஏசா கதை (ஆதி 25:29-34) பயறுகளின் மகத்துவத்தை விளக்குகின்றது. இவை பெரும்பாலும் வெங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றால் சுவையூட்டப்பட்டன.

*இ) இறைச்சி:-* எபிரேயர்கள் அதிகமான மாமிசத்தை உண்பவர்கள் அல்லர் இறைச்சி உண்பது செல்வந்தருக்கு அடையாளம். சாலமோனுடைய உணவுப் பட்டியலில் இது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது (1 அர 4:23). ஏழைக்கு, இறைச்சி ஓர் அபூர்வமான உணவு; திருவிழாக்கள், குடும்பக் கூட்டங்கள், விருந்துகள் ஆகியவற்றில் மட்டும் ஏழைகளால் இறைச்சி உண்ண முடியும். பலருக்கும் விருப்பமானது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆட்டு இறைச்சியே. செல்வந்தர்கள் கன்றின் இறைச்சியையும் சேர்த்துக் கொண்டனர். இறைச்சியைப் பாதுகாக்கும் முறைகள் தெரியாததால், மிருகத்தைக் கொன்ற அன்றே உண்டு முடித்துவிட வேண்டியிருந்தது.

இறைச்சி பலவகைகளில் சமைக்கப்பட்டது. வறுக்கப்பட்டது; தண்ணீரில் வேகவைக்கப்பட்டது; எண்ணெயில் சமைக்கப்பட்டது. இறைச்சி வறுக்கப்பட்ட பொழுது சாதாரணமாக முழு மிருகமும் வறுக்கப்பட்டது. மாமிசத்தை எலும்பிலிருந்து சுலபமாகப் பிரிப்பதற்கு ஏதுவாக மாமிசமானது நன்றாகச் சமைக்கப்பட்டது. வேகவைப்பது மிகவும் சாதாரணமாக சமைக்கும் விதம். இறைச்சி வதக்கும் விதம் மீக் 3:2-3-இல் கொடுக்கப்பட்டுள்ளது; இறைச்சி எலும்பிலிருந்து பிரிக்கப்பட்டு, எலும்புச்சோறு பிரித்தெடுக்கப்பட்டது. இங்கு பணக்காரர்கள் ஏழைகளை வதைக்கும் காட்டுமிராண்டிகள் என்பதை உருவக மொழியில் மீக்கா எடுத்துக்கூறுகிறார். இறைச்சிக் குழம்பு தனித்தட்டில் வழங்கப்பட்டது (நீதி 6:19). கோழி இறைச்சியும் மற்ற இறைச்சியைப் போலவே சமைக்கப்பட்டது. மீன் பொதுவாக நெருப்பின்மேல் போட்டுச் சுடப்பட்டது (யோவா 21:9). வேக வைக்கப்பட்ட வெட்டுக் கிளிகளையும் இவர்கள் உண்டார்கள் (லேவி 11:22; மத் 3:4; மாற் 1:6).

ஈ) சுவைப்படுத்துதல்:- உப்பு சேர்ப்பதன் மூலம் உணவிற்குச் சுவை ஊட்டப்பட்டது; சாதாரண மனிதனால் காய்கறிகள் உண்ணப்பட்டதால் உப்பு மிகவும் அவசியமாக இருந்தது (யோபு 6:6; மத் 5:13; கொலோ 4:6). சாதாரணமாகச் சுவைப்படுத்தும் பொருள்கள்: வெங்காயம், பூண்டு; இவைகள் இஸ்ராயேலருக்கும் பாலைவனத்தில் கிடைக்கவில்லை (எண் 11:5). பலசரக்குச் சாமான்கள் முழுவதுமாகவோ, அரைக்கப்பட்டோ பயன்படுத்தப்பட்டன. (உ-ம்) சோம்பு, கொத்தமல்லி, சீரகம், வெந்தயம், சமுத்திர பூண்டு, துளசி போன்ற கீரைகள் சேர்க்கப்பட்டன. எல்லாவிதக் கொட்டைகளும் சேர்க்கப்பட்டன. தேனானது பூர்விக மனிதனின் சர்க்கரையாகும்.

2. சமைக்கும் பாத்திரங்கள்:- எபிரேயர்கள் சமயக்கப் பலவகைப்பட்ட பாத்திரங்களைப் பயன்படுத்தினர். அகன்ற, ஆழமற்ற பாத்திரங்கள் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. பழைய இஸ்ராயேலர் காலத்தில் இதற்குக் கைப்பிடிகள் இருந்தன. சிறிய வாயுள்ள, இரண்டு கைப்பிடிகளைக் கொண்ட, உருண்டையான இன்னொரு பாத்திரமும் இருந்தது; இது தண்ணீர் காய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஒரு கைப்பிடியுள்ள மற்றொரு வகையான சமைக்கும் சட்டியும் இருந்தது. ஏசயா, எரேமியா காலங்களில் குயவர்கள் தங்களுடைய வியாபாரக் குறிகளைப் பயன்படுத்தினர். அவர்களுடைய பாத்திரங்கள் நம்முடைய பாத்திரங்கள் இருக்கும் அளவுதான் இருந்தன. செம்பினால் ஆன பாத்திரங்களும், தட்டுகளும் மிகவும் சிறந்தவை; ஆனால் அவை அதிக விலையானவை. சாலமோனின் கோவிலில் பலவகைப்பட்ட சமைக்கும் சாமான்கள் இருந்தன.



சமயல் பாத்திரங்கள்

அடுப்பானது கவிழ்த்து வைக்கப்பட்ட சட்டிபோல இருந்தது; இதற்கு அடி இல்லை; இது சாதாரணமாக ஒரு முழ அகலமுள்ளது. இந்த அடுப்புக்குள் நெருப்பு மூட்டப்பட்டது. இதில் ரொட்டியானது அடுப்பின் உட்பகுதியில் வைத்துச் சுடப்பட்டது. வெளிப்புறம் சமமாக இருந்திருந்தால், நன்றாகச் சூடுபடுத்தப்பட்டு வெளியிலும் ரொட்டி சுடப்பட்டது. பெரிய பெரிய நகரங்களில் ரொட்டி சுடும் பொதுவான இடங்கள் இருந்தன (எரே 37:21). இவ்விடத்திற்கு வீட்டுப் பெண்கள் ரொட்டி சுட மாவைக் கொண்டு சென்றார்கள்.

## உணவுப்பொருட்கள் (FOOD)

உணவு, விவிலிய காலங்களில் வாழ்வின் தேவைகளில் ஒன்றாக இருந்தாலும் (சீரா 39:26) எபிரேயர்களும், ஆதி கிறிஸ்தவர்களும் அவர்களுடைய இக்காலத்தலைமுறை

கள்போல், பலவகை உணவுப் பண்டங்களைக் கொண்டிருக்கவில்லை. தொடக்க காலங்களில் இயற்கை அழிவுகளும் அறுவடை தவறுவதும் பஞ்சத்திற்குக் காரணமாக இருந்தன. உணவுப் பொருட்கள் அதிகமுள்ள இடங்களிலிருந்து பற்றாக்குறையான இடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்லும் வாணிக முறை வளர்ச்சியடையாததும் பஞ்சத்தின் கொடுமையை அதிகப்படுத்தியது. பஞ்சகாலத்தில் யாக்கோபும் அவருடைய பிள்ளைகளும் எகிப்திலிருந்து தானியம் பெற வேண்டியிருந்தது (ஆதி 42:1-2). இக்காரணங்களினால் உணவைச் சேகரித்தல், தயார்ப்படுத்துதல் என்பன மனித வாழ்வில் முக்கிய பகுதியாகச் செயல்பட்டன; இல்லையெனில் பட்டினியினால் இறக்க வேண்டியிருந்தது.

1. விவிலியத்தில் உணவு வகைகள்:- விவிலியம் எல்லா உணவுப் பண்டங்களையும் குறிப்பிடுகிறது என்று கூறமுடியாது. முக்கியமான வகைகள் பற்றி ஓரளவு துல்லியமான விவரங்களைக் குறிப்பிடுகிறது என்று கூறமுடியும்.

அ) இறைச்சி:- விவிலிய காலங்களில் இறைச்சி சாப்பாட்டினுடைய வழக்கமான பாகம் அல்ல. சீராக்கினுடைய உணவுப்பட்டியலில் இது காணப்படவில்லை. ஆனால் உப்பு, கோதுமை, தேன், திராட்சை ரசம் முதலியவை காணப்படுகின்றன (சீரா 39:26). குருக்கள் பாரம்பரியப்படி இறைச்சி உண்ண விரும்பாமை படைப்பிலிருந்தே வருவதாகத் தெரிகிறது. இறைவன் மனிதனைப் படைத்தபோது ''இதோ பூமியின்மீது விதை தரும் புற்பூண்டுகள் எல்லாவற்றையும் தத்தம் இனத்தின்படி தம் விதைகளைக் கொண்டிருக்கும் விதவிதமான மரங்களையும் உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம்'' (ஆதி 1:29) என்று கூறினார். வெள்ளப்பெருக்குக்குப் பிறகுதான் ''நடமாடி உயிர் வாழும் அனைத்தும்'' அதாவது விலங்குகள் உணவாகத் தரப்பட்டன (9:3). குருக்கள் பாரம்பரிய ஆசிரியர், கடந்த பொற்காலத்தில் மனிதர், விலங்குகள், படைக்கப்பட்ட யாவும் ஒற்றுமையாய் இருந்தன என்று ஓர் உன்னதச் சித்திரம் வரைகிறார். இறைவன் அவருடைய படைப்புகளிடம் ஒன்றையொன்று கொல்ல உத்தரவு அளிக்கவில்லை. விலங்கு உணவை அவர் அனுமதித்தபோதும் இரத்தத்தை உணவாகக் கொள்வதைத் தடைசெய்கிறார். ''இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணாதிருப்பீர்களாக'' (9:4). ''எந்த உடலிலுமுள்ள இரத்தத்தையும் குடிக்க வேண்டாம்'' (லேவி 17:11-14), ''இரத்தத்தை மட்டும் உண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு'' (உப 12.23).

மத காரணங்களைத் தவிர, இறைச்சியை நீக்குவதற்கு உதவிய முக்கிய காரணம், விவிலிய காலங்களில் வீட்டு மிருகங்கள் பற்றாக்குறையாக இருந்ததாகும். ஒருவன் காட்டு விலங்குகளை வேட்டையாடி இறைச்சியைப் பெறமுடியும். ஆனால் மற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விலங்குகளைக் கொல்லுதல் பொருளாதார விவேகமுடையதன்று. அதன் பயனாக இறைச்சி பலி ஒப்புக்கொடுக்கும்போதுதான் உண்ணப்பட்டிருக்கிறது. இதற்கு விதிவிலக்கும் உண்டு. மதிப்புக்குரிய விருந்தாளிக்கு அளிக்கப்பட்ட உணவில் இறைச்சியும் உண்டு. ''ஆபிரகாம் மாட்டு மந்தைக்குத் தாமே ஓடிச்சென்று, ஒரு நல்ல இளங்கன்றுக் குட்டியைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுக்க இவன் அதனை விரைவில் சமைத்தான்'' (ஆதி 18:7). அதை மூன்று மனிதர்களுக்கு விருந்தாக அளித்தார். ''கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். விருந்து கொண்டாடுவோம்'' (லூக் 15:23). ''இதோ விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்; காளைகளும் கொழுத்த மிருகங்களும் அடித்து எல்லாம் ஏற்பாடாயிற்று'' (மத் 22:4) இவை இயேசுவின் உவமைகளில் வருகின்றன.

மேற்கூறப்பட்ட வரையறைகள் செல்வந்தர்களுக்கு இல்லை. ஒரு நாள் சாலமோனுடைய சாப்பாட்டிற்குச் செலவு, கலைமான்கள், சிறுமான்கள், கவரிமான்கள், கொழுத்த பறவைகள் முதலியவற்றைத் தவிர கொழுத்த பத்துமாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும், நூறு ஆடுகளுமாகும் (1 அர 4:23). இப்படி உண்ணும் செல்வந்தர்களை ஆமோஸ் கண்டனம் செய்கிறார் (ஆமோ 6:4).

நெருப்பில் வாட்டுதலும் வேக வைத்தலும் இறைச்சியைச் சமைக்கும் வழக்கமான முறைகளாக இருந்தது. பாஸ்குச் செம்மறி வாட்டப்பட்டது; அதை வேக வைக்கவில்லை (யாத் 12:8-9; 2 நாள் 35:13). வேகவைப்பது பற்றிய குறிப்புகளை 1 சாமு 2:15-இலும், எச 24:3-5-இல் வரும் தொடர் உருவத்திலும் காணலாம்.

பறவைகளின் இறைச்சியும் பயன்பட்டது. பாலைவனத்தில் இஸ்ராயேலர்களுக்குக் காடைகள் உணவாயின (யாத் 16:13). பறவைகளின் முட்டையும் உணவாயின (உப 22:6; ஏச 10:14; லூக் 11:12). மாடப்புறாக்கள், காட்டுப் புறாக்கள் ஆகியன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. காட்டுக் குருவிகளுடைய முட்டைகளைப் பழைய ஏற்பாடு நாட்களில் தின்றிருக்கின்றனர் (உப 22:6; ஏச 10:14). பாலஸ்தீன, நாடு கடத்தலுக்கு முன்னால் கோழிக் குஞ்சைப் பற்றித் தெரியாமலிருந்தனர். எப்படியிருந்தாலும் பெட்டைக் கோழி முட்டையும் (லூக் 11:12) மீனின் உணவும் மிக அரிதாக இருந்தன. கலிலேய ஏரியில் கிடைத்த மீனையே உண்டனர். பாலைவனத்தில் எகிப்தில் உண்ட மீனுக்காக ஏங்கினர் (எண் 11:5). ஆனால் புதிய ஏற்பாட்டில் மீன் எல்லாருக்கும் பொதுவான உணவாக இருக்கிறது. ''தனியான இடத்தில்'' சீடர்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீனும் இருந்தன (மாற் 6:38 இணை; மத் 15:34). பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய நான்கு சீடர்களாவது மீன்பிடிப்போரராக இருந்தனர் (மத் 4:18; மாற் 1:16-19; லூக் 5:1-11).

ஆ) கனிகள்:- ஒலிவப் பழங்களும், திராட்சைப் பழங்களும் விவிலிய காலங்களில் அதிக முக்கியமாக இருந்தன. ஆனால் ஒலிவப் பழங்கள் எண்ணெய் எடுக்கவும், திராட்சைப் பழங்கள் இரசம் செய்யவும் பயன்பட்டன. பழமாக உண்ணப்பட்டவைகளில் அத்திப்பழம் அதிகம் பயன்பட்டது. கோடைகாலம் வருமுன் பழுத்த அத்திப்பழம், அதன் இனிய சுவைக்காக விரும்பி உண்ணப்பட்டது (எச 28:4; மீக் 7:1).

எகிப்தில் வாழ்ந்த இஸ்ராயேலரை, ஓசேயா ''முதல் அத்திப் பழங்களுக்கு'' ஒப்பிடுகிறார் (ஓசே 9:10). நாடு கடத்தப்பட்டவர்கள் ''முதன் முதலில் பழுத்த'' அத்திப் பழங்கள் போன்றவர்கள் என்றும், நாட்டிலே எஞ்சினோர் ''தின்ன முடியாத அளவுக்குக் கெட்ட'' அத்திப்பழங்கள் போன்றவர்கள் என்றும் எரேமியா அறிவிக்கிறார் (எரே 24:1-10). வற்றலான அத்திப்பழங்கள் பயணத்தில் உண்ணப்பட்டன (1 சாமு 25:18; 30:12; 1 நாள் 12:40; யூதி 10:5); கொப்பளங்களைக் குணமாக்கவும் பயன்பட்டன.

ஆப்பிளைக் குறிக்கும் எபிரேயச் சொல்லான ''தாப்புவா'' ஓர் ஆளுக்கும், இரண்டு நகரங்களுக்கும் பெயராக அமைந்துள்ளதால், பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஆப்பிள் பழம் உணவாகப் பயன்பட்டது எனலாம். ஆனால் மேற்கோள்கள் சிலவே உள்ளன (யோவே 1:12; உ.ச.2:5; 7:8; 8:5). ஆனால் இதை அடையாளம் காட்டுவது கடினம். மாதுளை (எண் 13:23; 20:5; உப 8:8), பேரிந்து, காட்டு அத்திப்பழம் (ஆமோ 7:4) ஆகியவை விவிலியத்தில் குறிக்கப்படும் வேறு சில பழங்களாகும்.

இ) காய்கறிகள்:- பாலஸ்தீன வெப்பநிலை பலவகையான காய்கறிகள் வளர்வதற்கு ஏற்றதல்ல. பாலைவனத்தில் ''வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய், கீரை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு'' ஆகியவற்றிற்காக இஸ்ராயேலர் ஏங்கினர் (எண் 11:5). இவற்றில் வெள்ளரிக்காய், வேறு இரு இடங்களில் மட்டுந்தான் குறிக்கப்பட்டுள்ளது (ஏச 1:8; எரே 10:5). மற்றவை குறிக்கப்படவேயில்லை. சிறப்பான குறிப்புகள் இல்லையென்பதால் காய்கறிகள் பயிரிடப்படவில்லை என்று முடிவு கட்டிவிட முடியாது. வெங்காயம் பரவலாகப் பயிரிடப்பட்டது. மிக அதிகமாக அவரையும், பயறும் இருந்தன. இவற்றைக் குழம்புக்குள் போட்டு கூடாக்கினர். சாதாரண வகையில் உண்டனர்கள் அல்லது ரொட்டியுடன் சேர்த்து சாப்பிட்டார்கள். பன்றிகள் தின்னும் நெற்றுகள் [illegible] நெருக்கடிகாலத்தில் உணவாயின (லூக் 15:16).

ஈ) தானியங்கள்:- விவிலிய காலங்களில் தானிய உணவுகள் அதிக முக்கிய பகுதியாக அமைந்தன. பாலஸ்தீனத்திலும், சீரியாவிலும் பார்லி, கோதுமை அதிகமாகக் கிடைத்தன. அதிக முக்கியத்துவமாகவும் இருந்தன. கோதுமை, பார்லி ஆகியவற்றிலிருந்து ரொட்டி செய்யப்பட்டது. ஒவ்வொரு உணவிலும் இடம் பெற்றது. தேவையான நேரத்தில் கம்பும், தினையும் உணவுக்காகப் பயன்பட்டன (எச 4:9), ''நிலத்தின் மேல்பரப்பை நிரவியபின், சதகுப்பையை விதைத்துச் சீரகத்தைத் தெளிப்பானன்றோ? அதற்குரிய இடத்தில் கோதுமை, வாற்கோதுமை, துவரை, பயறு இவற்றை முறைப்படி விதைப்பானன்றோ?'' (ஏச 28:25). இவ்வகைத் தானியங்கள் வேறுவகையிலும் உண்டனர். ஒருவனுடைய கைகளாலே நீட்டி அதன் பருப்புகளைத் தின்றனர். ''புதுத் தானியத்தில் செய்யப்பட்ட சில அப்பங்களையும், இருபது வாற்கோதுமை ரொட்டிகளையும், ஒரு சாக்குப் புதுத் தானியத்தையும் இறை மனிதன் எலிசாவிடம் கொண்டு வந்தான்'' (2 அர 4:42-44). வறுத்த கோதுமை அறுவடை உணவின் ஒரு பகுதியாகும் (ரூத் 2:14). அதைச் சாலமோன் அரசன்கூட தின்றிருந்ததாகக் கூறப்படுகிறது (1 சாமு 25:18; 2 சாமு 17:28).

2. அன்றாட வாழ்வில் உணவின் முக்கியத்துவம்:- உணவு வாழ்வைப் பராமரிக்கிற சாதனம் மட்டுமல்ல; சமூக பொருளாதார வாழ்வில் பொதுவாகப் பரந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது.

அ) தோழமைப் பிணைப்பு:- பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஏறக்குறைய ஒவ்வொரு உடன்படிக்கையும் பொதுவான உணவுடன் முத்திரை வைக்கப்பட்டுள்ளது. சேர்ந்து உண்ட உணவு இரண்டு பகுதி மக்களையும் ஒரே சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக உணரச் செய்தது. லாபானும் யாக்கோபும் ஒருவரை ஒருவர் சந்தேகித்தாலும், தங்கள் எல்லை உடன்படிக்கையை இரவு முழுவதும் நீடித்த உணவோடு முடித்தனர் (ஆதி 31:54). சமநிலையுடைய கட்சியினரிடையே, கிபயோனியர்கள், யோசுவாவை ஏமாற்றி, இஸ்ராயேலர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டனர் (யோசு 9:3-15). உண்மை தெரியவந்த போதும் உடன்படிக்கையை முறிக்க முடியவில்லை. ஏனெனில் உடன்படிக்கை உறவு அவ்வளவு வலிமை வாய்ந்ததாகும் (9:16-27). தாவீதுக்கும் மெபிபோசேத்துக்கும் இடையே உள்ள உறவு இத்தன்மையுடையதே (2 சாமு 9:7, 10-11). சிலருடன் உணவு உட்கொள்ள மறுத்தல் கோபத்தின் அல்லது தோழமை முறிவின் அடையாளமாகும் (1 சாமு 20:34).

தோழமைப்பிணைப்பின் அடையாளமான உணவின் முக்கியத்துவம் எபிரேய வார்த்தையில் உடன்படிக்கை என்று கூறப்பட்டுள்ளது. ''உப்பு உடன்படிக்கை'' என்ற சொல் நிரந்தர உடன்படிக்கையை உணர்த்தியது. ஏனெனில் ஒருவன் தன் தோழனோடு உப்பு உண்பது. அவனோடு கொண்டுள்ள பிரமாணிக்கப் பிணைப்பை உணர்த்தி நிற்கும் (எண் 18:19; 2 நாள் 13:5; எஸ் 4:14). ''உங்களுக்குள் உப்பு இருக்கட்டும்'' என்ற இயேசுவின் சொற்கள் (மாற் 9:50; கொலோ 4:16), சீடர்களுக்குள் இருக்கவேண்டிய பிரமாணிக்கத்தைக் குறிக்கின்றன.

ஆ) உணவுக் கொடைகள்:- உணவின் தன்மை தனிப்பட்ட சமூக உறவைக் குறிப்பிடுகிறது. ஆகவே உணவுக் கொடைகள் வெறும் சடங்கு அடையாளங்கள் அல்ல. கொடுப்பவரைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள முடிகிறது. கொடைபெற்றவர் கொடுப்பவருக்குக் கடமைப்படுகிறார் (ஆதி 32:3-21; 43:1-11).

அரசியல் தலைவரைச் சமாதானப்படுத்தும்போதும் விருந்தளிக்கப்பட்டது (1 நாள் 12:38-40; 2 சாமு 16:1; 17:27-29).

தொடக்ககால இறைவாக்கினர்களுக்குக் கூட அவர்கள் செய்த சேவைக்குக் கூலியாகவோ, அவர்கள்பால் கொண்ட நல்லெண்ணத்தின் அடையாளமாகவோ, உணவுக் கொடைகள் அளிக்கப்பட்டன (1 சாமு 9:6-7; 1 அர 14:1-3; ஆமோ 7:12; மீக் 3;5).

இ) வெளிநாட்டு வாணிபம்:- பாலஸ்தீ னத்தில் உணவுப் பொருட்கள் கிடைப்பது நிலையில்லாமலிருந்த விவிலிய காலங்களில் வெளிநாட்டு வியாபாரத்தில் உணவுப் பொருட்கள் முக்கிய இடம் வகித்தன. தனி நபர்களுக்கு உணவுக் கொடை அளிக்கப்பட்டதுபோல், இஸ்ராயேலர்களுக்கும் அண்டை நாட்டவர்களுக்குமிடையேயுள்ள உறவு, ஒருவர் மற்றவர்க்களிக்கும் கொடைகளால், மேம்பட்டது. இத்தகைய கொடைகளுக்கு எதிராக ஓசேயா இஸ்ராயேல் மக்களைப் பார்த்துக் குறை கூறுகிறார்.

''எப்பிராயீம் வெறும் காற்றை உண்டு,
நாள் முழுவதும் கீழ்காற்றைத் துரத்தித் திரிகிறான்;
பொய்யும் வன் செயலும் அவனிடம் மிகுந்துவிட்டன,
அசீரியாவோடு உடன்படிக்கை செய்கிறான்;
எகிப்துக்கு எண்ணெய் கொடுத்தனுப்புகிறான்'' (ஓசே 12:1).

அயல்நாட்டு உதவிக்கு மாற்றாக உணவுப் பொருள் எதாவது ஒருவடிவில் கொடுக்கப்பட்டது (1 அர 5:9-11). இதே வணிக முறை நாலரை நூற்றாண்டுகளுக்குப் பின்னும் கடைப்பிடிக்கப்பட்டது (எஸ் 3:7). இத்தகைய வியாபாரத்தால் தீர் நாடு பெரும் செல்வம் மிக்கதாகியது. ''யூதரும் இஸ்ராயேலரும் உன்னுடன் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டனர்; நல்ல கோதுமை, தைலங்கள், தேன், எண்ணெய், பிசின் முதலிய வாசனைப் பொருட்கள் ஆகியவற்றை உன் சந்தைகளுக்குக் கொண்டு வந்தார்கள்'' என்று எசக்கியேல் (எச 27:17) கூறுகிறார்.

ஈ) பஞ்சத்தின் அபாயம்:- விவிலிய காலத்தில் நிகழ்ந்த, யாரும் அறிந்த, பஞ்சங்கள் யோசேப்பு நிகழ்ச்சியிலும் (ஆதி 41:54; 43:13-15) எலியாவின் கதைகளிலும் (1 அச 17:1.7. 12; 18:2.5) விவரிக்கப்பட்டுள்ளன. மழையின்மையே பஞ்சத்திற்கு முக்கிய காரணமாக இருந்தாலும் வேறு இயற்கை அழிவுகளும் அதற்குக் காரணங்களாயின. ஆமோஸ், யாவேயால் அனுப்பப்பட்ட பேரழிவை உயிர்ச்சித்திரமாக விளக்குகிறார். 1) அறுவடைக்கு இன்னும் மூன்று மாதம் இருக்கும் போதே உங்களுக்கு மழையையும் நிறுத்தி விட்டோம். 2) வெப்பக் காற்றாலும் பயிர் நோவாலும் உங்களை வதைத்தோம். 3) உங்கள் சோலைகளையும் திராட்சைத் தோட்டங்களையும் வெட்டுக் கிளியால் அழித்தோம். 4) எகிப்துக்கு அனுப்பிய கொள்ளை நோய் போன்ற கொள்ளை நோயை மனிதர் மேலும், விலங்குகள் மேலும் அனுப்பினோம் (ஆமோ 4:6-19; உப 28:22; 1 அர 8:37). இவைகளுடன் கல்மழையையும் சேர்க்கலாம் (ஆகா 2:17). இது தானியப் பயிருக்கு மிகுந்த அழிவை ஏற்படுத்தக் கூடியது. இத்தகைய பஞ்ச விளைவுகளிலிருந்து தப்பும் வழி நல்ல விளைச்சலுள்ள காலத்தில் உணவுப் பொருட்களைப் பெரும்அளவில் சேர்த்து வைப்பதாகும் (ஆதி 41:34-36; 47:24). இப்படிச் செய்யாவிட்டால், சாவு இல்லையென்றாலும், துன்பப்படுவது உறுதி. இத்தகைய துன்பத்தை எரே 14:1.4-6 விவரிக்கிறது. உணவுக்காக மக்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்பதில் வியப்பில்லை (புலம் 1:11).

3. சமய வாழ்வில் உணவின் முக்கியத்துவம்:- விவிலிய காலங்களில், சமயச் சார்பற்ற நிகழ்ச்சிக்கொத்த சமய நிகழ்ச்சியும் அமைந்திருந்தது. இது உணவு உற்பத்திக்கும், உண்ணுதலுக்கும் பொருந்தும்.

அ) உணவு இறைவனுடைய கொடை:- இறைவன் வாழ்வின் படைப்பாளராகவும் காப்பாற்றுகிறவராகவும் இருக்கிறதால், விவிலிய மனிதன் உணவைத் தெய்வீகக் கொடையாகக் கருதியது இயற்கையானதே. ''ஆண்டவராகிய இறைவன் ஒரு இன்பவனத்தை வைத்து, மனிதனை அதிலே வைத்தார். பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களையும் மண்ணினின்று தோற்றச் செய்தார்'' (ஆதி 2:9). ஆனால் மனிதன் அவன் விருப்பத்திற்குச் செயல்படவிடப்படவில்லை. விவசாயம் செய்யும் முறையையும் இறை

வனே கற்றுக் கொடுக்கிறார் (ஏச 28:24-26). இவ்வாறு, ''இறைவனால் ஏற்பட்ட பயிர்த் தொழிலைக் கைவிடாதே'' என்று சீராக் தன் மகனுக்கு அறிவுரை கூறுகிறார் (சீரா 7:15). நாட்டை வெற்றி கொண்டபின் உணவுக் கொடை புதுப்பிக்கப்பட்டது. ''உன் கடவுளாகிய ஆண்டவர் நல்ல நிலத்திலே புகச் செய்வார். கோதுமை, வாற்கோதுமை, முந்திரிக் கொடிகளும், அத்திமரம், ஒலிவ மரம், மாதுளஞ் செடிகளும் அதிலே வளரும். அவ்விடத்தில் எண்ணெயும் தேனும் மிகுதியாக உண்டு. அது எக்காலமும் நிறைவாக நீ அப்பம் உண்ணத்தக்கதும், ஒன்றும் குறைவு வைக்காததுமான நாடு'' (உப 8:7-9; யோசு 24:13). மனிதனும் மிருகங்களும் ஒன்றுமே உருவாக்க முடியாது. ஆகவே சங்கீத ஆசிரியர் இறைவனைப் போற்றிக் கூறுகிறார். ''இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன; தக்க காலத்தில் உணவளிப்பார் என்று எதிர்பார்க்கின்றன. நீர் கொடுக்க, அவை பெற்றுக் கொள்கின்றன; நீர் உமது கையைத் திறக்க அவை நலன்களால் நிறைவுறுகின்றன'' (சங் 104:27-28; 145:15-16). ஆயினும் இறைவனுடைய கொடைகள் தங்களுக்குரியதாக எண்ணக் கூடாது. இஸ்ராயேல் மக்கள் இறைவனைப் பரிசோதிக்கத் துணிந்தனர்; தங்கள் இச்சையின்படி உணவு கேட்டனர். அவரால் கொடுக்க முடியுமா என்று ஐயுற்றனர். அவர் சினம் கொண்டாலும், அவர்களுக்கு மன்னாவை மழைபோல் பொழிந்தார்; தூசி போல் ஏராளமான இறைச்சியைப் பொழிந்தார். கடல் மணல் போல் எண்ணற்ற பறவைகளை வரவழைத்தார். நன்றாக உண்டனர். ஆனால் அவர்களுள் வலிமைமிக்கவர்களை வதைத்தொழித்தார் (சங் 78:18-31).

உணவு மனிதர்களுக்குள்ளேயுள்ள பிணைப்பாய் இருப்பதால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை எடுத்துக்கூறுவதிலும் உணவு இடம் பெறுவது இயல்பே. இவ்வாறு சீனாய் மலையில் மோசேயும் தலைவர்களும், ''இறைவனைக் கண்டனர்; உண்டனர், குடித்தனர்'' (யாத் 24:11). அது போல, பலிகளிலும் காணிக்கைகளில் முக்கிய செயல் உண்பதாகும். ஆலயம் இருக்கு மட்டும், உணவுக் காணிக்கை ஒப்புக் கொடுக்கப்பட்டது. பக்தியுள்ள இஸ்ராயேலன் இறைவனுடைய கொடையில் ஒரு பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுப்பதால், அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக உணர்ந்தான். ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்ட முதற்கனிகள், பத்தில் ஒரு பங்கு போன்ற காணிக்கைகளின் பின்னணி இதுவே.

ஆ) இறுதிக்காலத்தில்: இறைவன் அவருடைய வேலையின் தொடக்கத்தில் ஒரு பலன்தரும் தோட்டத்தைப் படைத்ததால், வரவிருக்கும் காலத்தில் அவருடைய விசுவாசிகளுக்கு ஏராளமான உணவைக் கொடுப்பார் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. இறைவாக்கு நூல்கள் பல புதிய காலத்தின் பொருள் சார்ந்த ஆசிர்களின் விளக்கங்களைக் கொண்டுள்ளன. ''ஆதலால், இதோ, நாம் அவளை நயமாகக் கவர்ந்திழுத்துப் பாலைநிலத்துக்குக் கூட்டிப்போய் அவள் நெஞ்சோடு பேசுவோம். திராட்சைத் தோட்டங்களை அவளுக்குத் திரும்பக் கொடுப்போம். அந்நாளில் நாம் வானத்தின் வழியாய் மறுமொழி அளிப்போம். அது நிலத்தின் வழியாய் மறுமொழிதரும். நிலமானது கோதுமை, திராட்சை ரசம், எண்ணெய் ஆகியவற்றால் மறுமொழிதரும்'' (ஓசே 2:16-17. 23-24). இதைப் போன்று ஆமோஸ் இஸ்ராயேலின் மீண்டும் அமைக்கப்படும் காலத்தை விவரிக்கின்றார் (ஆமோ 9:14). யோவேல் பயன்படுத்தும் உருவகம் இன்னும் கவர்ச்சி மிக்கதாக உள்ளது (யோவே 3:18). சாக்கடலின் நீர் நல்ல நீராக ஆவதையும் அது ''பற்பல வகை மீன்களைக்'' கொண்டிருப்பதையும் அதன் கரைகளில் ''எல்லா வகையான பழ மரங்கள்'' வளருவதையும் எசக்கியேல் முன்னோக்குகிறார் (எச 47:6-12). பிற்காலத்து வெளிப்பாட்டு நூல்களும், உலகம் கடந்து போன பிற்பாடு வானகத்தில் நடக்கவிருக்கும் மெசியா விருந்தை விவரிக்கின்றன. புதிய ஏற்பாடு இந்த வரவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றிய பல குறிப்புகளைத் தருகிறது.

இ) உணவின் மதிப்பு குறைதல்:- சமயக் காரியங்களிலும் சமயச் சார்பற்ற காரியங்களிலும் உணவு முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், அது மனித வாழ்வின் ஒரே ஆதரமாகவோ முடிவாகவோ ஒரு போதும் கருதப் பட்டதில்லை. ''மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, இறைவன் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்'' என்று உபாகமம் ஏற்கனவே படிப்பித்திருக்கிறது (உப 8:3; மத் 4:4; லூக் 4:4). உணவுப் பொருள்கள் இல்லாத போது, ''நான் ஆண்டவரில் அக்களிப்பேன், என் மீட்பரான கடவுளில் அகமகிழ்வேன்'' என்று அபக்கூக் பாடுகிறார் (அப 3:17-18).

உணவின் முடிவான முக்கியத்துவம் பற்றிய தெளிவான உட்கருத்து புதிய ஏற்பாட்டில் காணக்கிடக்கிறது. இயேசு தமது மலைப்பொழிவில், மக்கள் கூட்டத்தை நோக்கி ''உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப்பட வேண்டாம்... உணவைவிட உயிரும், உடையை விட உடலும் உயர்ந்தவையல்லவா? உங்களுக்கு இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும்'' (மத் 6:25.32; லூக் 12:22.30) என்று போதித்தார். மற்றொரு சமயத்தில் இயேசு ''வானின்று இறங்கி வந்த உணவு நானே'' என்று கூறினார். இதை எவனாவது உண்டால், அவனுக்கு மீளவும் பசியே ஏற்படாது. மன்னா அடையாளமாக உணர்த்தும் சாதாரண உணவு இத்தகைய ஆற்றலைக் கொண்டிருப்பதில்லை (யோவா 6:31-59).

''பல்வேறு நூதனமான போதனைகளால் கவரப்படாதிருங்கள்! உள்ளங்களை அருளால் உறுதிப்படுத்துதலே சிறந்தது. உணவு பற்றிய முறைமைகள் இதற்கு உதவா, இவற்றைக் கடைப்பிடித்தவர்கள் பயனொன்றும் அடையவில்லை'' என்று எபிரேயருக்குத் திருமுகம் (எபி 13:9) எழுதிய ஆசிரியர் கூறும்போது, இயேசுவின் மேற் சொன்ன கருத்துக்களையே மனதில் கொண்டிருக்க வேண்டும். பவுல் தமது எதிரிகளின் கூற்றாகிய ''உணவு வயிற்றுக்கென்றே உளது; வயிறு உணவுக்கென்று உள்ளது'' என்று கூறி ''இறைவன் இரண்டையும் அழித்துவிடுவார்'' என்று முடிக்கும்போது, உணவு பற்றிய இறுதி மதிப்பீட்டைக் கூறுகிறார் (1 கொரி 6:13).

**உண்ணாநோன்பு** (FAST. FASTING)

நோன்பின் ஆரம்பம் அறநெறி, மதசார்பான ஒழுக்கமாகிறது. நோன்பு வழிபாட்டு உணவில் அர்ப்பணிக்கப்பட்ட தசையை அருட்சாதனமுறையில் உண்ணத் தயார் செய்தலாகும். விவிலிய இலக்கியத்தில் நோன்பின் தொடக்க நோக்கத்திற்குக் குறிப்புக் காணப்படவில்லை. ஆனால் விவிலியக் குறிப்புகளின் அடிப்படையில் இந்த வழக்கத்தை விவரிப்பதுவே மேலானதாம். ஏனென்றால், விவிலியத்தில் தொடக்கப்பமுக்கத்தின்படி நோன்பு உணவு முழுவதையும் விலக்குவதைக் குறிக்கிறது. ஆழ்ந்த உணர்ச்சிகளையும் துக்கத்தையும் வெளிப்படுத்த உதவியது. இது துக்கம், சோகம், மனஸ்தாபம், பேரிடர் உருக்கமான மன்றாட்டு ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இது இயற்கையாக அமைந்த ஒரு பொது அல்லது தனிப்பட்ட வழக்கமாக இருக்கலாம். ஆனால், நாடு கடத்தலுக்குப் பின் குறிபபிட்ட காலங்களில் நோன்பு இருந்தன. இக்காலத்தில் தனிநபர் பக்தியின் பொருட்டு நோன்பிருத்தல் மக்கள் விரும்பிய வழக்கமாகியது. இயேசுவும், தொடக்க திருச்சபையும் நோன்புக்குரிய சட்டங்களை அளிக்காவிட்டாலும் மதசம்பந்தமான ஒழுக்கம் என்று கருதி மக்கள் கடைப்பிடித்தார்கள்.

1. சொல்லியல்:- இதைக்கூற விவிலியம் பல சொற்களையும் பதங்களையும் பயன்படுத்துகிறது.

அ) விவிலிய எபிரேயத்தில்:- எபிரேய வார்த்தை நோன்பை அடிக்கடி பெயர்ச் சொல்லில் குறிப்பிட்டிருக்கிறது. நோன்பு காக்குமாறு இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஒன்று கூடி வந்தனர் (நெக 9:1). இது

வினைச்சொல்லிலிருந்து தோன்றியுள்ளது. நோன்பு காத்து அழுதீர் (2 சாமு 12:21.23); நோன்பு காத்துத் தம் அறைக்குள் சென்று தரையில் விழுந்து கிடந்தார்; வினைச்சொல் லும் பெயர்ச்சொல்லும் இணைந்து பயன்ப டுத்தப்பட்டுள்ளது (2 சாமு 12:16); இவை உணவை முழுவதும் தவிர்ப்பதைக் குறிக் கின்றன. நோன்பைக் குறிக்கும் பதங்களும் பயன்பட்டுள்ளன; ''அன்று முழுவதும் சாப் பிடாது இருந்தபடியால்'' (1 சாமு 28;20); ''அவரை எழுந்திருக்கச் சொல்லி எவ்வ ளவோ முயன்றும், அவர் மறுத்துவிட்டது மன்றி அவர்களோடு சாப்பிடவுமில்லை'' (2 சாமு 12:1) '' அவன் நமக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதால்'' (1 அர 21:29), ''ஏழாம் மாதம் பத்தாம் நாளிலே உங்கள் உடலை ஒறுத்து நோன்பிருக்கக் கடவீர்கள்'' (லேவி 16:29), நோன்பிருத்தலும் ஒருவன் தன்னையே துன்புறுத்திக்கொள்ளுதலும் ஒரு பொருள் பல சொல்லாகக் கருதப்பட்டன. ''கிழிந்த போர்வையோடும் அங்கியோடும் முழந்தாளிட்டு'' (எஸ் 9:5), அரமேயிக்கில் துணை வினைச்சொல்லில் பயன்படுகிறது, ''அரசன் உண்ணவில்லை',. வைப்பாட்டிக ளையும் உள்ளே வரவிடவில்லை; அவ னுக்கு உறக்கமும் பிடிக்கவில்லை'' (தானி 6:18).

ஆ) புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில்:- புதிய ஏற்பாடு வினைச்சொல்லில் நோன்பு பயன்பட்டுள்ளது. ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்'' (மத் 9:15; லூக் 5:33). இது மதப் பழக்கமாக இருக்கி றது. நோன்பு அதன்பெயர்ச் சொல் வடிவில் எப்பொழுதும் தூய்மையான ஒழுக்கத்தைக் குறிக்கிறது. பவுல் இரண்டு எடுத்துக்காட்டு களில் வினைச்சொல்லாகப் பயன்படுத்துகி றார். ''கண்விழிப்பு, பட்டினி'' ( 2 கொரி 6:5), ''பன்முறை பட்டினி கிடந்தேன், கண் விழித்தேன்'' (2 கொரி 11:27). ''இவர்கள் விடாமல் இம்மூன்று நாட்களாக என்னுடன் இருக்கிறார்கள்'' (மத் 15:32; மாற் 8:3) ''பலநாள் ஒன்றும் உண்ணாமல் இருந்து விட்டார்கள்'' (அ.ப. 27:21); ''சிலைகளுக் குப் படைத்தது, மிருக இரத்தம், மூச்சடைத் துச் செத்ததின் இறைச்சி இவற்றை உண்ணா மலிருப்பதோடு கெட்ட நடத்தையிலிருந்து விலகி நில்லுங்கள் (அ.ப. 15:29; 1 திமோ 4:3), ''தீமையானதெல்லாம் விட்டு விலகுங் கள்'' (1 தெச 5:22; 1 பேதுரு 2:11).

2. நாடுகடத்தலுக்கு முன் நோன்பு:- தொடக்ககாலங்களில் நோன்பு சந்தேகமில் லாமல் கடைப்பிடிக்கப்பட்டிருந்தாலும், நாடு கடத்தலுக்கு முன்னால் நோன்பு பற்றி அதிகக் குறிப்புகள் இல்லை. பல குறிப்புகள் பிற்கால இலக்கிய மூலங்களைச் சேர்ந்ததா கத் தெரிகிறது. தொடக்க காலங்களில் நோன்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பழக்க மாகக் கருதப்பட்டது. பிற்காலங்களில், நோன்பைப் பக்திக்கடுத்த ஒரு தகுதியுள்ள பழக்கமாக மக்கள் உறுதியாகக் கருதினர்.

அ) தனிப்பட்டவர்களின் நோன்பு:- நாடுக டத்தலுக்குமுன் நோன்பு பக்திக்கடுத்த ஒரு தகுதியுள்ள பழக்கமாகும் என்பது பற்றிய குறிப்பு இல்லை. தனிப்பட்டவர்கள் சில குறிப்பிட்ட காலங்களில் நோன்பிருந்தனர். ஒருவர் தன்னையே தாழ்த்திக் கொள்ள நோன்பிருந்தார். சாக்கு உடை அணிந்தார். பேரிடர்காலத்திலோ, துக்க காலத்திலோ இறைவனுடைய இரக்கத்தைப் பெற நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. தாவீது தவறாகப் பதுசேபாவுடன் தகாத உடலுறவு கொண்டு பிறந்த குழந்தை நோய்வாய்ப்படு கிறது. தாவீது பிள்ளைக்காக ஆண்டவரிடம் மன்றாடி நோன்பு இருந்தார் (2 சாமு 12:16-23). குழந்தை இறந்தபிறகு நோன்பிருத்தல், மக்களின் பழக்கமாகத் தெரிகிறது. ஆகாபு தன் ஆடைகளைக் கிழித்துத் தன் உடலின் மேல் மயிராடையைப் போட்டுக் கொண்டு நோன்பு காத்த சாக்கின்மீது படுத்துறங்கி னார் (1 அர 21:27). இவ்வாறு இறைவனு டைய இரக்கத்தைத் தேடினார்.

கனவுகளிலும், காட்சிகளிலும் கடவுளிட மிருந்து செய்தி பெற்றுக்கொள்ளக்கூடிய முயற்சியின் தயாரிப்பாக நோன்பிருந்தனர். எ.கா. சவுல், இறைவனிடமிருந்து செய்தி

பெற "அன்று முழுவதும் சாப்பிடாது இருந்தபடியால், அவர் வலிமை குன்றி இருந்தார்" (1 சாமு 28:20). மோசே, எலியா போன்றவர்கள் தெய்வீக உறவைப் பெறுவதற்காக நோன்பிருந்தனர். "மோசே அவ்விடத்தில் நாற்பது பகலும் நாற்பது இரவுமாய் ஆண்டவரோடு தங்கி உண்ணாமலும் குடியாமலும் இருந்தார்" (யாத் 34:28; அர 19:8).

ஆ) பொது நோன்புகள்:- நாடுகடத்தலுக்குமுன் பொது நோன்பு பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் இப்பழக்கம் இருந்ததில்லை என்று கூறமுடியாது. பரிகார நாளில் கடைப்பிடிக்கப்பட்ட நோன்பு, நாடு கடத்தலுக்குமுன் கடைப்பிடிக்கப்பட்டதா என்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும், நாடு கடத்தலுக்குப்பின் இப்பழக்கம் திடீரென்று குருக்கள் பாரம்பரியத்தால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட தேவைகளுக்காக இயற்கையாகவே மக்கள் நோன்பிருந்தனர். எ.கா. சவுல், யோனத்தான் ஆகியோர் இறந்த போது கடைப்பிடிக்கப்பட்ட பொது நோன்பு (1 சாமு 31:13; 2 சாமு 1:12). போரின் முன்னும், போரில் தோல்வியடைந்த பின்னும், மக்கள் இறைவனுடைய இரக்கத்தை மன்றாட நோன்பிருந்தனர் (நீதி 20:26; 1 சாமு 14:24; 2 நாள் 20:3). நோன்பு பொது மக்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மனத்துக்கத்தை எடுத்துக்காட்டும் அடையாளமாக இருந்தது (1 சாமு 7:6). "நீங்கள் ஒரு நோன்பைப் பறைசாற்றி, நாபோத்தைப் பெரியோர் நடுவில் அமரச் செய்யுங்கள்" (1 அர 21:9, 12). நாடு கடத்தலுக்கு முந்தைய பொதுநோன்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு; "நோன்பு நாளன்று ஆண்டவரின் கோயிலில் இருக்கும் மக்களும், தங்கள் பட்டணங்களிலிருந்து வருகிற யூதாவின் வீட்டார் அனைவரும் கேட்கும்படி, நீ என் வாய்மொழியாய்க் கேட்டெழுதிய ஓலைச் சுருளிலிருந்து ஆண்டவருடைய வார்த்தைகளைப் படித்துக்காட்டு" (எரே 36:6,9). நாடுகடத்தலுக்கு முன் நோன்புகள் ஆழ்ந்த உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுபவையாகவும் (1 சாமு 31:13) அல்லது அரசனால் அறிவிக்கப்பட்டதாகவும் இருக்கலாம் (1 நாள் 20:3). உணவைத் தவிர்ப்பதோடு, நோன்பில், துக்கத்தையோ மனவருத்தத்தையோ எடுத்துக்காட்டும் மற்ற செயல்களும் உள்ளடங்கியிருந்தன (நீதி 20:26; 1 சாமு 7:6; 2 சாமு 1:11).

3. நாடு கடத்தலுக்குப்பின் நோன்பு:- இக்காலத்தில்தான் குறிப்பிட்ட காலங்களில் பொதுநோன்புகள் கடைப்பிடிக்கப்பட்டன. பக்திக்காக நோன்பிருத்தல் மக்களிடையே பரவியது.

அ) பொது நோன்புகள்:- பிற்காலத்தில் இக்கட்டான மற்றும் துன்பமான நேரங்களில் இயற்கையாக நோன்பிருக்கும் பழக்கம் தொடர்ந்தது. சில நோன்புகள் குழுவின் தலைவரால் இறைவனது இரக்கத்தை வேண்ட அறிவிக்கப்பட்டன (எஸ்த 8:21-23; 1 மக் 3:47; 2 மக் 13:12). மனத்துக்கத்தை எடுத்துக்காட்ட நோன்பிருக்கலாம் (யோனா 3:4). இறைவனது இரக்கத்தைப் பெற நோன்பிருந்தனர். "அரசனின் கட்டளையைக் கேட்கவே எல்லா மாநிலங்களிலும் நகரங்களிலும் கிராமங்களிலுமிருந்து யூதர்கள் பெரும் துயருற்றனர். உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பினர்" (எஸ்த 4:3,16). யோவேல் இறைவாக்கினர் புத்தகத்தில் நோன்பைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "உண்ணா நோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள்" (யோவே 1:14); "இப்போதாவது நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்" (2:12), "உண்ணா நோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள்" (2:15). நோன்பிருக்கும் போது, உணவைத் தவிர்த்தலோடு, மக்கள் அழுது புலம்பினர்; சாக்கு உடை அணிந்தனர்; சாம்பலைப் பூசிக் கொண்டனர்.

இறைவாக்கினர் செக்கரியா நூலில் நான்கு வகையான நோன்புகள் குறிப்பிடப்படுகின்றன (செக் 8:19). இது ஆலயத்தை மையமாகக் கொண்டு ஒற்றுமையான, வழி பாட்டுச் சமூகமாக யூதர்கள் அமைக்கப்பட்டதன் விளைவாகும். எஸ்தர் நூலில், பூரிம் விழா

*வுக்குமுன் மக்கள் நோன்பிருந்தனர் (எஸ்த 9:31).*

*பரிகார நாள் கொண்டாட்டம் நாடு கடத்த லுக்குப்பின் முக்கியத்துவம் பெற்றது. ''ஏழாம் மாதம் பத்தாம் நாளிலே உங்கள் உடலை ஒறுத்து நோன்பிருக்கக் கடவீர்கள்'' (லேவி 16:29.31; 23:27.29.32; எண் 29:7). அதே மாதம் இருபத்து நான்காம் நாளன்று கோணி ஆடை உடுத்தி, தங்கள் தலையின் மேல் புழுதியைத் தடவிக் கொண்டு, நோன்பு காக்குமாறு இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஒன்று கூடிவந்தனர் (நேக 9:1). இங்கு நோன்பு மனத்துக்கத்தின் அடையாள மாக விளங்கியது.*

*ஆ) தனிநபர்களின் நோன்பு:- தனிப்பட்ட வர்களுடைய நோன்பு பிற்காலத்தில் இழவுத்துன்பம், மனத்துக்கம், உருக்கமான வேண்டுதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அடையாளமாக அமைந்தது (எஸ் 10:6; நெக 1:14; தானி 9:3). தனிப்பட்டவர்கள், இறைவனிடமிருந்து செய்தி பெறத் தயாரிப்பாகவும் (தானி 10:3), பக்திக்கடுத்த செயலாகவும் (சங் 35:13; 69:10) நோன்பிருத்தல் வழக்கம். வாரத்தில் இரண்டாவது ஐந்தாவது நாட்களில் பக்தியுள்ளோர் நோன்பிருத்தல் வழக்க மாகும் (லூக் 18:12). நோன்பிருத்தலின் மதிப்பு தோபியா நூலில் குறிப்பிடப்படுகிறது (தோபி 12:8). பரிசேயர்கள், திருமுழுக்கு யோவான் சீடர்கள் ஆகியோரிடையே நிலவிய நோன்பிருக்கும் பழக்கத்தைப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது (மத் 6:16; மாற் 2:18). கும்ரான் குழுவினரும் நோன்பி ருத்தலைச் சிறப்பாகக் கடைப்பிடித்தனர்.*

*இ) நோன்பிருத்தல் பற்றி இறைவாக்கினர்கள்:- இறைவாக்கினர்களுள், எரேமியாவையும், யோவேலையும் தவிர ஏசயாவும் (58:3-4), செக்கரியாவும் (7:5) நோன்பிருத்தலைப் பற்றிப் பேசுகின்றனர். அதில் இவர்கள் நோன்பிருத்தலைக் கண்டனம் செய்யவில்லை. ஆனால் அப்பழக்கத்தில் காணப்பட்ட நேர்மையின்மையையும் போலித்தனத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.*

*4. புதிய ஏற்பாட்டில் நோன்பு:- புதிய ஏற்பாடு நோன்பு பற்றிய இயேசுவின் மனநிலையை எடுத்துக்காட்டுகிறது. அதில் தொடக்க காலக் கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவும், எவ்வாறு முதல் நூற்றாண்டு யூத சமயத்தின் பின்னணியில் நோன்பிருத்தலை ஒரு பக்திக்குரிய பழக்கமாக ஏற்றுக்கொண்டனர் என அறிகிறோம்.*

*அ) நோன்பு பற்றி இயேசுவின் போதனை:- அவரது இரு கூற்றுக்கள், இறைவாக்கினர்கள் வலியுறுத்தியதற்கு ஏற்றவாறு, இயேசுவின் போதனை அமைந்திருந்தது என்று காட்டுகின்றன. மேலும், அவரது தூதுக்கும் இறையரசின் வருகைக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பு, சிறு சிறு பக்தி முயற்சிகள்பால் கவனம் செலுத்த நேரமில்லை என்று காட்டுகின்றன.*

*ஏச 58:3-4-இன் கருத்துக்கேற்ப, எந்தப் பக்தி முயற்சிகளையும்போல், நோன்பும் இறைவனுடைய மகிமைக்காகச் செய்யப்பட வேண்டும், பிறரிடம் பெருமை பெற அல்ல என்று இயேசு போதிக்கிறார். ''நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக் காரரைப் போல் முகவாட்டமாய் இருக்க வேண்டாம்'' (மத் 6:16-18; லூக் 18:9-14). இங்கு நோன்பைப்பற்றிக் குறைசொல்லவில்லை. மாறாக வெளிப்படையாகச் செய்யப்படும் போலி அடையாளங்களைக் கடவுள் பார்க்கவில்லை. உள்ளத்தின் ஆழத்தைப் பார்க்கிறார் என்று உண்மையான நோன்பு இருக்க வேண்டிய விதத்தை எடுத்துக் கூறுகிறார். நோன்பு உண்மையான பக்தியில்லாமல் பொருள் அற்றதாகும்.*

*இயேசுவின் இரண்டாவது போதனையில் நோன்பு வித்தியாசமான விதத்தில் விளக்கப்பட்டுள்ளது. ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும்; அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்'' (மத் 9:14-15; மாற் 2:18-20; லூக் 5:33-35). அவரிலும், அவரது செயல்களிலும் வந்துள்ள இறையரசில் மகிழ்ச்சிக்கும் நன்றியுரைக்குமே இடம் உண்டு. அவரது மரணத்துக்குப்பின் அவர்கள் நோன்பிருக்க வேண்டியிருக்கும்.*

ஆனால் இயேசு ஆன்மீகச் சிக்கலான நேரத்தில் நோன்பை மேற்கொண்டர். இவை பரிகார நாளுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. இயேசு அலகையினால் சோதிக்கப்படுமாறு பாலைவனத்திற்கு ஆவியானவரால் அழைத்துச் செல்லப்பெற்றார். அங்கு நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பிருந்தபின் பசியுற்றார் (மத் 4:2; மாற் 1:13). ஆனால் நோன்பிருத்தல் பற்றிய அவரது போதனை இறைவாக்கினரின் பாரம் பரியத்துக்கும் அவரது இறுதிக்கால நோக்கிற்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது.

ஆ) தொடக்க காலத் திருச்சபையில் நோன்பு:- தொடக்க காலத் திருச்சபையில் பொது மன்றாட்டுக் காலங்களில், குறிப்பாகத் திருச்சபையில் பணியாளர்களை நியமிக்கும்போது நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. ''ஒரு நாள் அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரின் வழிபடுகையில்'' (அ.ப. 13:2-3); ''நோன்பிருந்து செபம் செய்த பின்னர், அவர்கள் விசுவாசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர்''. (அ.ப.14:23). பவுலின் திருமுகங்கள் உணவில்லாதபோது பட்டினியிருப்பதைக் குறிக்கின்றன (2 கொரி 6:5; 11:27). ஆனால் பக்தி முயற்சியாக நோன்பிருத்தல் போற்றத்தக்க பழக்கமாகத் திருச்சபையில் கருதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அப்போஸ்தலர்கள் காலத்துக்குப் பின்வந்த கிறிஸ்தவ இலக்கியங்கள் உயிர்ப்பு விழாவுக்குமுன்னும், ஞானஸ்நானத்திற்குமுன்னும் நோன்பிருத்தல் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டதைச் சுட்டுகின்றன. கிறிஸ்தவர்கள், யூதர்களைப் போல், வாரத்திற்கு இரு நாள் நோன்பிருக்க அறவுரை கூறப்பட்டதாகத் தெரிகிறது.

**உண்ணி** (FLEA)

சிறகற்ற ஒரு பூச்சி. இது தாவுவதில் ஆற்றல் மிக்கது. இப்பூச்சி பல வகைகளில் பாலஸ்தீனத்தில் காணப்படுகின்றது. தாவீது தனது முக்கியத்துவம் இல்லாத நிலைமையைச் சுட்டிக்காட்ட அடையாளமாக இதைப் பயன்படுத்துகிறார் (1 சாமு 24:14).

**உண்மை** (TRUTH)

இயல்பொருளோடு பொருந்தியுள்ள ஒரு சிந்தனை அல்லது சொல்லை இன்றைய மொழியானது உண்மை என்று அழைக்கின்றது. மெய்மை கொண்டுள்ள ஒன்று தன்னையே வெளிப்படுத்தும்போது, புத்திக்குத் தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கும்போது, அதுவே உண்மை என்று அழைக்கப்படும். இக்கண்டிப்பான அறிவுபூர்வமான கிரேக்க அணுகுமுறையானது, நம்மிடையில் சாதாரணமாகச் சொல்லப்படுவதாக உள்ளது. ஆனால், விவிலியமானது உண்மையை வேறுவிதமாகக் கருதியது. உண்மையைப்பற்றிய விவிலியக் கருத்தானது இறைவனுடனான சந்திப்பின் விளைவான சமய அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டது. ஆயினும் உண்மை பற்றிய இக்கருத்தானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ளது. விவிலிய உண்மையானது, முதன்மையாக, உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதாகும். ஆனால் புதிய ஏற்பாட்டில் உண்மையானது, கிறிஸ்து என்னும் ஆளைச்சுற்றி ஒருமுகப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டின் முழுமையாகும்.

I பழைய ஏற்பாடு:-

எபிரேயமொழியில் உண்மையைக் குறிக்கும் ''எமெத்'' என்ற சொல் ''ஆமன்'' என்ற சொல்லிலிருந்து அமைக்கப்படுகிறது; ''ஆமன்'' என்பதன் அடிப்படைப்பொருள் நம்பத்தகுந்ததாயும் உறுதியானதாகவும் நம்பிக்கைக்குத் தகுந்ததாயும் இருப்பதாகும். ஆகவே உண்மை என்பது நிலையானதும் நிரூபிக்கப்பட்டதும் நம்பிக்கைக்குரியதும் ஆன ஒன்றாகும். உண்மையான சமாதானம் (எரே 14:13) என்பது பாதுகாப்பான நீடித்த சமாதானமாகும். உண்மையான வழியானது (ஆதி 24:48) நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு உறுதியாக நடத்திச்செல்லும். ''உண்மையில்'' என்னும் சொல் சிலநேரங்களில் (ஏச 16:5) மாற்றமுடியாதது அல்லது இடைவிடாதது என்று பொருள்படும். உண்மையானது இறைவனுக்கோ மனிதனுக்கோ சாற்றிக் கூறப்படும்போது பெரும்பாலும் நம்பிக்

கைக்குத் தகுதியான தன்மை என்று பொருள் கூறப்படுவதுவே சாலச் சிறந்தது. ஏனெனில் ஒரு நபருடைய நம்பிக்கைக்குத் தகுதியான தன்மையே நமது நம்பிக்கையைத் தூண்டுகிறது.

1. இறைவனின் உண்மையானது அவருடைய மக்களின் சார்பாக அவரது வரலாற்றுத் தலையீட்டுடன் இணைக்கப்படுகிறது. யாவே நம்பிக்கைக்குரிய இறைவன் ஆவார் (உப 7:9; 32:4; சங் 3:6; ஏச 49:7). இந்த இயற்பண்பினுடைய முக்கியத்துவம் உடன்படிக்கை மற்றும் வாக்குறுதிகள் ஆகியவற்றின் சூழ்நிலையில் மட்டுமே தெளிவாகக் காணக்கிடக்கிறது. ''உம் கடவுளாகிய ஆண்டவர் வலிமையும் உண்மையும் பொருந்திய கடவுள் என்றும், தமக்கு அன்பு செய்து தம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்குத் தமது உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர்'' (உப 7:9). தாவீதின் உடன்படிக்கையைக் குறிக்கும் எண்பத்தொன்பதாவது சங்கீதம் முழுவதும் இறைவனுடைய நம்பிக்கைக்குத் தகுதியான தன்மையைப் புகழ்வதற்கெனவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் அடிப்படையான பொருள் சங் 132:11-இல் மிகவும் வெளிப்படையாக உள்ளது. (''ஆண்டவர் தாவீதுக்கு உண்மையை ஆணையிட்டுள்ளார்; அவர் அதனின்று விலக மாட்டார்''). உண்மை என்றழைக்கப்படும் ஆணையானது இங்கு, மீறத்தகாததெனத் தகுதி பெறுகிறது.

உண்மையானது, இறைவனுடைய அடிப்படையான உடன்படிக்கை மனப்பான்மை குறிப்பிடும் விதமாக அடிக்கடி பிரமாணிக்கத்துடன் இணைந்துள்ளது (சங் 88; 137:2). இது அருள்மிக்க உடன்படிக்கையாகும். இதில் இறைவன் ஒருபோதும் குறைவுபட்டதே இல்லை (யாத் 34:6-7; ஆதி 24; 2 சாமு 2:6; 15:20). பிற பகுதிகளில் பிரமாணிக்கமானது நீதியுடனோ (ஓசே 2:21-22; நெக 9:33; செக் 8:8) புனிதத்துடனோ சேர்ந்துள்ளது (சங் 71:22). இவற்றில் உடன்படிக்கையைப் பற்றிய துல்லியமான குறிப்பு எதுவுமில்லாமல், பொதுவான பொருள் மட்டுமே உள்ளது. பல சங்கீதங்களில் இறை உறுதியுடைமையானது பாதுகாப்பின் ஊற்றாகவும் இறை உதவியை நாடுகின்ற நீதிமானுக்கு அடைக்கலமாகவும் உள்ளது. ஆகவே இறை உதவியின் உறுதி மற்றும் நிலைத்த தன்மைக்குக் கவனத்தை ஈர்க்கிற (சங் 40:12; 43:2-3; 54:7; 61:8) அரண், கேடயம் மற்றும் கவசம் போன்ற உருவகங்கள் (சங் 90) பயன்பட்டுள்ளன.

உண்மையானது இறைவனின் வார்த்தை மற்றும் அவருடைய சட்டத்தின் சிறப்பியல்பாகவும் உள்ளது. இறைவாக்குறுதிகள் தாவீதினுடைய வீட்டின், நீடித்த நிலைக்கு உத்தரவாதமாக இருப்பதால் ''உமது வார்த்தையே உண்மை'' என்று தாவீது ஆண்டவரிடம் கூறுகின்றார் (2 சாமு 7:28). இறைச் சட்டத்தின் உண்மையைச் சங்கீதங்கள் போற்றுகின்றன (சங் 19:10;. 111:7-8; 119:86.138.142.151.160). உண்மையானது இறைவார்த்தையில் அடிப்படையானதும் அத்யாவசியமானது மாகும். அதாவது இறைவனின் வார்த்தையானது திரும்பப் பெற முடியாதது மற்றும் என்றும் நிலைத்திருப்பது என்பதை சங் 119:160 சுட்டிக்காட்டுகிறது.

2. மனிதனுடைய உண்மை:- இங்கும் பிரமாணிக்கத்தின் அடிப்படையான மனப்பான்மையே (ஓசே 4:2) பிரச்சனையில் உள்ளது. உண்மையின் மனிதர்கள் (யாத் 18:21; நெக 7:2) நம்பிக்கையின் மனிதர்களாகவும் உள்ளனர். ஆனால் இரு வாசகங்களும் ''இறைவனுக்கு அஞ்சி'' என்பதைச் சேர்க்கின்றன. ஆகவே, அதன் மூலமாக இவ்வொழுக்க மதிப்பீட்டினைச் சமய மற்றும் யாவேயின் சூழ்நிலையில் எடுத்துக் கூறுகின்றது. சாதாரணமாக மனிதருக்குச் சாற்றிக் கூறப்படும்போது உண்மையானது அவர்கள் உடன்படிக்கைக்கும் இறைச்சட்டத்திற்கும் காட்டும் பிரமாணிக்கத்தை நேரடியாகச் சுட்டுகிறது. இவ்வாறு உண்மையாக நீதிமான்களின் முழு நன்னெறி நிலையை விவரிக்கிறது. எனவே, முழுமை (யோசு 24:14), பிளவுபடா இதயம் (2 அர 20:3), நல்லது மற்றும் நேர்மை (2 நாள் 31:20), நேர்மை மற்றும்

*நீதி (ஏச 59:14; சங் 44:5), மற்றும் புனிதம் (செக் 8:3) ஆகியவற்றுடன் இணையமைப் புக் கொள்கிறது. உண்மை உள்ளவனாக நடத்தல் (2 நாள் 31:20; எச 18:9), ''உண்மை யுடன் நடத்தல்'' (1 அர 2:4; 3:6; 2 அர 30:3; ஏச 38:3) என்பது ஆண்டவரின் சட்டத் தைப் பிரமாணிக்கத்துடன் கடைப்பிடிப்பதா கும் (தோபி 3:5).*

''கனிவுடனும் உண்மையுடனும் நடத்து வது'' *(ஆதி 47:29; நீதி 2:14)* எனத் தனிப் பட்ட மனித நடத்தை பற்றிச் கூறப்படுகி றது. இதற்குப்பொருள் நல்லெண்ணத்துட னும் பற்றுறுதியுடனும் நிலையான அன் போடும் செயல்படுவதாகும். மேலும், உண்மை என்பது நீதியுடன் சமத்துவத்தைச் செயல்படுத்துவதும் *(பழ 29:14; எச 18:8; சங் 18:8; செக் 7:9)* பேச்சில் முழுவதுமாக நேர்மையுள்ளவனாக இருப்பதும் ஆகும். ஆனால், இங்கும் நேரிய நாவானது ''என் றென்றும் நிலைத்திருக்கும்'' *(பழ 12:19)* என்னும் உண்மையின் அடிப்படையான பொருள் தோன்றுகின்றது.

*3. வெளிப்படுத்தப்பட்ட உண்மை:-* ஞான மற்றும் வெளிப்பாட்டுப் பாரம்பரியம் ஞானம் பற்றிய ஓரளவு புதிய பருமனை உண்மையின் கருத்திற்குச் சேர்க்கின்றது. அதாவது வெளிப்படுத்தப்பட்ட உண்மையா கும் இக்கருத்துக்கள் புதிய ஏற்பாட்டிலும் காணப்படும். சில சங்கீதங்கள் *(25:5; 26:3; 86:11)* ''இறைவனின் உண்மையில் நடத்தல்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின் றன. இது இங்கே பிரச்சினைக்குரிய உண்மை, ஒழுக்க முறைப் பணிச்சட்டம் மட்டுமன்று. கடைப்பிடிப்பதற்கென இறை வன் அறிவிக்கின்ற சட்டமே ஆகும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இறைவனிடமி ருந்து வருகின்ற போதனையாகிய ''உண் மையான ஞானத்துடன் ஒரு பொருள் பிற சொல்லாகிறது. ''உண்மையை விலை கொடுத்தாயினும் வாங்கு; ஆனால் அதை விற்பனை செய்யாதே. அவ்வாறே ஞானத் தையும் நல்லுரையையும் உணர்வையும் விலைகொடுத்துப் பெறு'' *(பழ 23:23; 8:7; 22:21; திருவுரை 12:10)* ''சாகும் வரையிலும் உண்மைக்காகப் போராடு'' *(சீரா 4:33 எழு பது நூல் வாசகம்).*

உண்மையானது இறைவனுடைய திட்டத் தையும் சித்தத்தையம் குறிப்பிடுவதால் இரக சியமானதன் அல்லது மறைபொருளானதின் எல்லையை அணுகுகிறது *(தோபி 12:12; ஞான 6:22)*. தீர்ப்பின் காலத்தில் நீதிமான்கள் ''உண்மையைப் புரிந்து கொள்வர்'' *(ஞான 3:9)*. இந்நிலையானது அவருடைய உறுதி மொழிகள்பால் இறைவன் கொண்டுள்ள பிரமாணிக்கத்தை நேரடியாக அனுபவித்தல் அல்லது இறைவனின் ஆளையே காண்பது என்ற பொருளில் இல்லாமல், மனிதருக் கான இறைவனுடைய இரக்கமிகு திட்டத் தினை ஓரளவு புரிந்து கொள்வதில் அடங்கி யுள்ளது. தானியேலுடைய ''உண்மையின் நூலில்'' *(தானி 10:21)* இறைவனின் திட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறைவனின் உண்மையே வெளிப்படுத்தப்பட்ட அவரது திட்டம் *(9:13)*, விண்ணகக்காட்சி அல்லது அதன் விளக்கம் *(8:26; 10:1; 11:2)*, உண்மை யான விசுவாசம், இஸ்ராயேலின் சமயம் *(8:12)* ஆகும்.

யூத வெளிப்பாட்டு மற்றும் ஞானப் பாரம் பரியங்கள் ''உண்மை'' என்னும் சொல்லை இதே பொருளில் தொடர்ந்து பயன்படுத் தின. கும்ரான் சமுதாயத்திற்கு ''இறைவ னின் உண்மையைப் புரிந்து கொள்ளுதல்'' என்பது மறைபொருள்களைப் புரிந்து கொள்வதாகும். இந்த அறிவு, சட்டத்தைச் சரியான முறையில் விளக்குவதன் மூலமா கப் பெறப்படுகிறது. ''உண்மைக்கு மனம் திரும்புதல் என்பது மோசேயின் சட்டத்திற்கு மனந்திரும்புவதாகும்''. உண்மையானது ஒழுக்க உட்கருத்துகளைக் கொண்டு வெளிப் படுத்தப்பட்ட போதனையாகும். எனவே உண்மையானது எவ்விதமான தீமைக்கும் எதிரானதாகும். ''உண்மையின் மக்கள்'' ''உண்மையின் வழிகளைப்'' பின்தொடர்வர். கும்ரானைப் பொறுத்தவரை உண்மை என் பது உடன்படிக்கையின் பிள்ளைகளாக இருப்பதில் உள்ளடங்கியுள்ள சமயக் கருத்து களின் முழுமையாகும்.

II. புதிய ஏற்பாடு:-

1. விவிலிய உரிமைப்பேறு:- புதிய ஏற்பாட்டின் மற்றப் பகுதிகளைவிட, பவுலின் உண்மை பற்றிய கருத்து எழுபது நூல் பொருளை ஒத்திருக்கிறது. ஏனெனில் பவுல் உண்மையை நேர்மை என்ற பொருளிலும் (2 கொரி 7:14; 11:10; பிலி 1:18; 1 கொரி 5:8) அல்லது உண்மை உரைத்தல் (உரோ 9:1; 2 கொரி 12:6; எ பே 4:25; 1 திமோ 2:7) என்ற சொற்றொடரிலும் பயன்படுத்துகிறார். ''இறைவனின் உண்மை'' என்னும் வாய்பாடு அதாவது இறைவன் தம் வாக்குறுதிகளுக்குக் காட்டும் பிரமாணிக்கம் ஆழ்ந்த விவிலியத்தன்மையுடையது. (உரோ 3:7; 3:3; 15:8; 2 கொரி 1:18 தொ; நமது பிரமாணிக்கமுள்ள இறைவனுடைய வாக்குறுதிகள் கிறிஸ்துவில் தங்களது உடன்பாட்டைக் கொண்டுள்ளன). உண்மையானது அதே போன்று ஒழுக்க உண்மை, வாழ்வின் நேர்மை என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது அநீதிக்கு எதிராக உள்ளது (1 கொரி 13:6). இது நீதியுடன் ஒத்த பொருள் தரும் பிறசொல்லாகும் (எபே 5:9; 6:14). கிறிஸ்தவர்களிடையே காணப்படவேண்டுமெனப் பவுல் எதிர்பார்க்கின்ற குணவியல்பை இது குறிக்கிறது (கொலோ 1:6; 2 கொரி 13:8). பவுலைப் பொறுத்தவரையில், இறைவனின் தீர்ப்புக் கூட உண்மை மற்றும் நீதியின் முத்திரையைக் கொண்டிருக்கும் (உரோ 2:2).

இறைவனுடைய உண்மைக்கும் சிலைகளுடைய பொய்மைக்கும் இடையிலுள்ள முரண்பட்ட நிலையானது (உரோ 1:25; 1 தெச 1:9) புறவின சிலை வழிபாட்டிற்கு எதிரான யூதரின் வாதத்தினால் தூண்டப்பட்டதாகும் (எரே 10:14; 13:25; பாரூ 6:7; 47:50). ஏனெனில் உண்மையான இறைவன் உயிருள்ள நம்பத்தகுந்த இறைவனாவார். அவர் மக்களுக்குச் செவிமடுத்து அவர்களைக் காக்கின்றார்.

2. நற்செய்தியின் உண்மை:- கிறிஸ்தவ உண்மை பற்றிய கருத்து நற்செய்தியில் காணப்படுகிறது; வெளிப்படுத்தப்பட்ட உண்மை பற்றிய ஞான மற்றும் வெளிப்பாட்டுக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது. இறைவனுடைய முழுச் சித்தமும் எழுதப்பட்டுள்ள (உரோ 2:18) தங்களுடைய சட்டத்தில் இவ்வுண்மையின் வெளிப்படையான அமைப்பைக் கொண்டிருப்பதில் (2:20) யூதர்கள் பெருமை பாராட்டினார்கள். சட்டத்தின் உண்மை என்னும் யூதச் சொற்றொடருக்கு மாற்றாகப் பவுல் நற்செய்தியின் உண்மை (கலா 2:15,14) அல்லது உண்மையின் வார்த்தை (கொலோ 1:5; எபே 1:13; 2 திமோ 2:15) என்பனவற்றைப் பயன்படுத்துகிறார். உண்மையே அப்போஸ்தலரால் போதிக்கப்பட்ட இறைவனின் வார்த்தையாகும் (2 கொரி 4:2:5). இறைவனின் மறைபொருளைப் போலவே (உரோ 16:26; கொலோ 1:26; 4:3) இதுவும் வெளிப்பாட்டின் பொருளாகும் (2 கொரி 4:2).

அ) உண்மையும் விசுவாசமும்:- வார்த்தைக்குச் செவிமடுத்து (எபே 1:13; உரோ 1):4) உண்மையைப் பற்றிய அறிவினை அடைவதற்கு மனந்திருந்த வேண்டிய (2 திமோ 2:25) மனிதருக்கு நற்செய்தியின் செய்தியானது அளிக்கப்படுகிறது. விசுவாசமானது நற்செய்தியின் உண்மையை ஏற்பதாக இருக்கின்ற நிலையில் (2 தெச 2:13; தீத் 1:1; 2 தெச 2:12; கலா 5:7; உரோ 2:8), உண்மையின் மீதான அன்பும் (2 தெச 2:10) தேவைப்படுகின்றது. பிந்தைய வாசகங்களில் ''உண்மையின் அறிவை அடைவதென்பது'' (1 திமோ 2:4; 2 திமோ 3:7; எபி 10:26, நற்செய்திக்கு... செவிமடுப்பதையும், கிறிஸ்தவத்தைத் தழுவுவதையும் குறிக்கும் நிலையான வாக்காகுகிறது. ஏனெனில் உண்மையை (1 திமோ 4:3), கிறிஸ்தவ விசுவாசத்தை (தீத் 1:1) அறிந்தவர்களே விசுவாசிகள் ஆவர்.

ஆ) உண்மையும் கிறிஸ்தவ வாழ்வும்:- திருமுழுக்கின் போது உண்மைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தங்களுடைய ஆன்மாக்களைப் புனிதப்படுத்திய காரணத்தால் (1 பேதுரு 1:22) உண்மையின் வார்த்தையின் மூலம் புதிய வாழ்விற்குப் பொதுக் கிருபை

*கங்கள் விசுவாசிகளை விவரிக்கின்றன. (யாக் 1:18; 1 பேதுரு 1:23). எனவே இவ்வுண்மையை ஒரு முறை ஏற்றுக்கொண்ட பின்னர், அவர்கள் அதனின்று விலகிச் செல்லக்கூடாது (யாக் 5:19). ஆனால் கிறிஸ்துவினுடைய இறுதி வருகையை நோக்கியவர்களாய் இப்போது கொண்டுள்ள உண்மையை அவர்கள் வலுப்படுத்த வேண்டும் (2 பேதுரு 1:12). வளர்ச்சிபெற்று மீட்படைய வார்த்தையின் மீது அவர்கள் என்றென்றும் ஆர்வமாக இருக்கவேண்டும் (1 பேதுரு 2:2). இவ்வாறு ஒரு கிறிஸ்தவன் புதிய மனிதனை அணிந்து உண்மை கோரும் புனிதத்தை அடைவதாகப் பவுல் மேலும் கூறுகிறார் (எபே 4:24).*

*இ) நலமிக்க போதனையும் தவறும்:- பொய்யான போதகர்களின் (1 திமோ 4:2) கதைகளுக்கு எதிராக (1 திமோ 1:4; 4:7; 2 திமோ 4:4; தீத் 1:14) நலமிகு கோட்பாடு என்னும் பொருள்படும்படியாக (1 திமோ 1:10; 4:6; 2 திமோ 4:3; தீத் 1:9; 2:1) உண்மை பற்றிய கருத்திற்குப் புதிய, திடீர் மாற்றம் அளிக்கின்றது மேய்ப்புப்பணி திருமுகங்களில் காணப்படும் முரண் சமய வாதிகளுக்கு எதிரான வாதம். இத்தகைய போதகர்கள் உண்மையை ஒதுக்கிவிட்டனர்; திரும்பிக் கொண்டனர் (தீத் 1:14; 1 திமோ 6:5; 2 திமோ 2:18; 4:4). இவர்கள் அதற்கு எதிராகவும் எழுந்து நிற்கின்றனர் (2 திமோ 3:8). ஆனால் உயிருள்ள இறைவனின் திருச்சபையானது உண்மைக்குத் தூணும், அடிப்படையுமாக உள்ளது'' (1 திமோ 3:15).*

*ஈ) உண்மைக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அப்போஸ்தலர் புலன்களுக்கு அப்பாற்பட்ட கோட்பாட்டைப் போதிக்காமல் கிறிஸ்து என்றும் ஆளையே போதிக்கின்றார் (2 கொரி 4:5; கலா 1:16; 1 கொரி 1:23; 2 கொரி 1:19; 11:4; எபே 4:20; பிலி 1:15). ஊனுடலில் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து புறவினத்தாருக்கு அறிவிக்கப்பட்டு உலகம் முழுவதும் விசுவாசிக்கப்பட்டார் (1 திமோ 3:16). கிறிஸ்துவே உண்மை. அதற்குத் திருச்சபை காவலாளியாக உள்ளது. அவரே பக்தியின் மறைபொருள்; நற்செய்தி போதிக்கின்ற உண்மையாய கிறிஸ்து மெய்யியல் பொருளில் விண்ணரசு உயிராக இல்லாமல் நமக்கென இறந்து உயிர்த்த வரலாற்று இயேசுவாக உள்ளார். உண்மையானது இயேசுவில் உள்ளது (எபே 4:21).*

*3. புனித யோவான்:- யோவானின் இறையியலானது எல்லாவற்றிற்கும் மேலாக வெளிப்பாட்டின் இறையியலாக இருப்பதால் உண்மைக்கு முதன்மை அளிக்கிறது. யோவானின் உண்மையானது அடிக்கடி பிளோட்டோ அல்லது மெய்யியலைச் சேர்ந்த மீபௌதீக இரு பொருள்வாதமாக விளக்கப்படுகிறது. இவ்வாதத்தில் தன்னையே வெளிப்படுத்தும் தானாகவே என்றும் உள்ள இறையியல்பு உள்ளது. முந்தைய அமைப்புகளில் இன்றியமையாததுமாக இருந்திருக்கக்கூடிய வழக்கில், இறைவனை உண்மை என்று யோவான் ஒரு போதும் குறிப்பிட்டதில்லை. உண்மையில் வெளிப்படுத்தப்பட்ட உண்மை பற்றிய வெளிப்பாட்டு மற்றும் ஞான மரபினை யோவான் விரிவாக்குகிறார். இக்கருத்தைப் புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளும் எடுத்துக் கூறுகின்றன. ஆயினும் உண்மையின் வெளிப்படுத்தப்பட்ட பண்பையும் அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் யோவான் மிகவும் வலியுறுத்துகிறார்.*

*அ) தந்தையின் வார்த்தையும், உண்மையாகிய கிறிஸ்துவும்:- யோவானைப் பொறுத்தமட்டில் உண்மையானது இறைவனுடைய உயிராக இல்லாமல் தந்தையின் வார்த்தையாக உள்ளது (யோவா 17:17; 1 யோவா 1:8-11; உண்மை நம்மிடம் இல்லை''; 1:10: ''அவருடைய வார்த்தை நம்முள் இல்லை''. கிறிஸ்து தந்தையிடமிருந்து கேட்ட வார்த்தையே உண்மையாகும் (யோவா 8:26. 40; 3:33). அதை அறிவிக்கவே அவர் வருகிறார் (8:40.45-46). அதற்குச் சான்று பகர வந்துள்ளார். (18:37; 5:33). உண்மையானது கிறிஸ்து நமக்கு அறிவிக்கின்ற வார்த்தையாகவும், அவரை விசுவசிக்க நம்மை நடத்திச் செல்ல வேண்டிய வார்த்தையாகவும் உள்*

ளது (8:31-32.45-46). இங்கும், பழைய ஏற்பாட்டிலும் உள்ள வெளிப்பாட்டின் வேறுபாடானது தெளிவாக உள்ளது; ''திருச்சட்டம் மோசே வழியாக அளிக்கப்பெற்றது. ஆனால் அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாக வந்தன'' (1:17). ஏனெனில் அவரோடும் அவரிலும், வெளிப்பாடானது முழுமையாகவும் இறுதியாகவும் உள்ளது. பேயானது பொய்களுக்கெல்லாம் தந்தையாக இருக்கும்போது (8:44) கிறிஸ்துவே உண்மையை அறிவிக்கிறார் (8:45). அவரே ''அருளும் உண்மையும் நிறைந்தவராய்'' உள்ளார் (1:14). உயர்ந்த கிறிஸ்துவப் புதுமுறையானது, தாம் இறைவன் என்ற அளவில் அல்லாமல், மாறாக ஊனுடல் எடுத்த வார்த்தை என்ற அளவில், தந்தையை நாம் அறியச் செய்வதின் வழியாக (1:18), கிறிஸ்துவே வெளிப்பாட்டின் முழுமையாக இருப்பதன் காரணமாக, அவரே உண்மை என்னும் செய்தியாகும் (14:6). தாமே உண்மை என்பதின் பொருளை இயேசு விளக்கும்போது மற்றும் இருதலைப்புகளைச் சேர்த்துக் கூறுகிறார். அவரே ''வழியும் உண்மையும் உயிரும்'' ஆவார். அவரே உண்மையாக இருக்கின்ற காரணத்தினால்தான் அவர் தந்தைக்கு இட்டுச்செல்லும் வழியாக இருக்கிறார். அவர் தந்தையினுடைய வார்த்தையையும் வெளிப்பாட்டையும் பெற்றுத் தருகிறார் (17:8; 14:17). இவ்வாறு இறைவாழ்வையும் பகிர்ந்தளிக்கிறார் (1:4;3:16;6:40.47.63;17:2; 1 யோவா 5:11தொ). எனவே உண்மை என்ற கிறிஸ்துவின் சிறப்புப் பெயரானது. கிறிஸ்துவை இறைமக்னென வெளிப்படுத்துகின்றது. ஏனெனில், அவர் வார்த்தையாகவும் தந்தையின் ஒரே மகனாகவும் இருக்கின்ற காரணத்தால் அவர் உண்மையாக உள்ளார்.

ஆ) உண்மையின் ஆவி:- உலகத்திற்கான தமது வெளிப்பாடு முடிவடைந்த உடனே (யோவா 12:50) உண்மையின் ஆவியாகிய துணையாளரின் வருகையைப் பற்றி இயேசு தமது சீடர்களுக்கு அறிவிக்கிறார் (14:17;15:26;16:13). யோவானைப் பொறுத்தமட்டில் ஆவியின் அடிப்படைப் பணியானது கிறிஸ்துவிற்குச் சான்று பகர்வதும் (15:26; 1 யோவா 5:6), உண்மையின் முழுமைக்குச் சீடர்களை நடத்திச் செல்வதும் (16:13) கிறிஸ்து கூறிய அனைத்தையும் அவர்களுடைய நினைவிற்கு கொண்டுவருவது, அதாவது, அதனுடைய உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளச் செய்வதுமாகும் (14:26). துணையாளரின் பங்கானது மனிதரை கிறிஸ்துவின் உண்மையை விசுவாசத்தில் உணரச் செய்வதாய் இருப்பதால், ஆவியே ''உண்மை'' என்றும் அழைக்கப்படுகிறார் (1 யோவா 5:6). அவரே திருச்சபையின் சான்று பகர்பவராக இருந்து அதன் மூலம் நமது விசுவாசத்திற்கு எழுச்சி அளிக்கிறார்.

இ) உண்மையும் புனிதமும்:- விசுவாசியின் வாழ்வில் உண்மை கொண்டிருக்க வேண்டிய பங்கினை யோவான் வற்புறுத்தலோடு வலியுறுத்துகின்றார். விசுவாசி ''உண்மையைச் சார்ந்து இருக்க வேண்டும்'' (யோவா 18:3; 1 யோவா 3:19) என்று யோவான் கூறும்போது ஒரே முறையாக விசுவாசத்தினால் புதிய வாழ்விற்குள் நுழைவது போதுமானது என்ற பொருளில் கூறவில்லை (யாக் 1:18; 1 பேதுரு 1:22-23). மாறாக ஒருவன் ஆவியால் பிறந்து உண்மைக்கேற்ப நடக்க வேண்டும் (2 யோவா 4). இவ்வாறு இயேசுவின் வார்த்தையில் தங்குபவன் மட்டுமே உண்மையைப் பற்றிய சரியான அறிவையும், இவ்வுண்மையின் விளைவாகப் பாவத்திலிருந்து உள்ளார்ந்த விடுதலையையும்அடைவான்(யோவா8:31-32). ஏனெனில் கிறிஸ்துவின் வார்த்தையைப் போன்று (யோவா 15:3) விசுவாசமானது தூய்மைப்படுத்தும் காரணமாகும் (அ.ப.15:9). விசுவாசமானது தீயவையின் மீது வெற்றியைக் கொண்டு வருகின்றது (1 யோவா 2:14). விசுவசிப்பவனின் உள்ளத்தில் வார்த்தையின் வித்து ஆற்றலோடு நிலைத்திருக்கும்போது அவன் பாவம் செய்ய இயலாது (1 யோவா 3:9). அவன் உண்மையில் புனிதப் படுத்தப்பட்டுள்ளான் (யோவா 17:17.19).

இவ்வாறு உண்மையில் அருள் வாழ்வினுடைய உட்கோட்பாட்டினை யோவான்

காண்கிறார். ''உண்மைக்கேற்ப நடத்தல்'' (3:21; 1 யோவா 1:6), ''உண்மையில் நடத்தல்'' (2 யோவா 4:3 யோவா 3-4) என்னும் பழைய விவிலியச் சொற்றொடர்களை அவர் மீண்டும் பயன்படுத்துகிறார். ''கிறிஸ்வின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல்'' (2 யோவா 6), ''ஒருவரது செயல்கள் உண்மையாலும் விசுவாசத்தினாலும் வழி நடத்தப்படுமாறு அனைத்தையும் அனுமதித்தல்'' என்று இச்சொற்றொடர்கள் பொருள் கொள்ளுமாறு அமைத்து அவற்றிற்குக் கிறிஸ்துவப் பொருளின் முழுமையை அளிக்கிறார். ஒருவரது சகோதரர்களை ''உண்மையில்'' அன்பு செய்வதென்பது (2 யோவா 1:3; யோவா 1) நம்முள் நிலைத்துள்ள உண்மையின் ஆற்றலால் அவர்களை அன்பு செய்வதாகும் (2 யோவா 1 தொ; 1 யோவா 3:18). ''ஆவியிலும் உண்மையிலும்'' தொழுவதென்பது (யோவா 4:23-24) உள்ளிருந்து வெளிப்படுகின்ற, ஆனால் வெளி வழிபாட்டைப் புறம்பாக்காத வழிபாடாகும். ஆவியினாலும், இயேசுவின் உண்மையினாலும் தூண்டப்பட்ட இவ்வழிபாடானது அவர் புத்துயிரளித்துள்ளவர்களில் உண்மையின் ஆவி செயல்படுத்துவதாகும். இறுதியாக இது விசுவாசிக்கு அப்போஸ்தலிக்க உட்கருத்தையும் கொண்டுள்ளது. அவர் உண்மையோடு ஒத்துழைத்து (3 யோவா 8) நற்செய்தியினுடைய உள்ளார்ந்த பரவசமடையச்செய்யும் சக்தியினுடைய பணிக்குத் திருச்சபையுடன் சேர்ந்து தம்மை ஈடுபடுத்த வேண்டும்.

எனவே, உண்மையைப் பற்றிய கிறிஸ்தவப் பொருளானது, மனதின் வல்லமையால் நாம் வெல்ல வேண்டிய மெய்ம்மையின் எல்லையற்ற பரப்பல்ல. மாறாக உண்மை என்பது கிறிஸ்துவில் தோன்றி, ஆவியால் கற்பிக்கப்பட்டு, விசுவாசத்தினால் ஏற்கப்பட வேண்டிய தந்தையைப் பற்றிய வெளிப்பாடாகும். அப்போதுதான் உண்மையானது நமது வாழ்வினை உருமாற்றி ''நாங்கள் எங்களது பணிகளில் உண்மையின் ஒளியை வெளிப்படுத்துகிறோம்'' என்னும் திருச்சபையின் மன்றாட்டை நிறைவேற்றும்.

**உதடுகள் (LIPS)**

தலைமகளின் இதழ்கள் செம்பட்டு நூல் இழைகளாக அவள் முகத்தை அழகு செய்கின்றன (உ.ச.4:3); அவை அமிழ்தம் பொழிகின்றன (4:11); மேலும், உதடுகள் அசையும் காட்சியைக் கண்டு, உதடுகளே சொற்கள் (யோபு 16:5) என்று கூறுபவரும் உண்டு. பேச்சுக்குக் கைகொடுப்பது நாவு; உதடுகளும் வாயுமோ, உள்ளத்தின் உணர்ச்சியெல்லாம் வெளிப்படுத்த மௌனமாகக் காத்திருக்கின்றன.

1. உதடும் உள்ளமும்:- நல்லவை, தீயவை என்று பாராது உள்ளத்திற்குப் பணிபுரிய உதடுகள் காத்திருக்கின்றன (பழ 10:32; 15:7; 24:2). உள்ளத்தின் பண்புகளை அவை வெளிப்படுத்துகின்றன. நற்பண்புகள் நிறைந்த மன்னனின் அருளை (சங் 45:3) வெளிப்படுத்தும் அதே உதடுகள், வேசியின் கள்ளக் கவர்ச்சியையும் அறிவிக்கின்றன (பழ 5:3; 7:21). அவை பொய்யாலும் மிரட்டலாலும் அவதூறாலும் பாவிகளின் தீச்செயல்களுக்கு உதவுகின்றன (பழ 4:24; 12:22; சங் 120:2; சீரா 51:2). மலர்ந்த முகத்தில் மறைந்திருக்கும் மிகக்கீழ்மையான வஞ்சனைகளை உதடுகள் மறைக்க வல்லன; ''தீய உள்ளத்தோடு, வஞ்சகம் பேசும் உதடுகள் சேருவது, மட்பாண்டத்தில் முலாம் பூசுவதை ஒக்கும்'' (பழ 26:23). இத்தகைய வஞ்சகம் மனிதன் இறைவனோடு கொள்ளும் உறவைக்கூடப் பாதிக்கும்: ''இம்மக்கள் உதட்டளவில் நம்மைப் போற்றுகின்றனர்; அவர்கள் உள்ளமோ நம்மைவிட்டுத் தொலைவில் உள்ளது'' (மத் 15:8 இணை; ஏச 29:13).

தீயவனின் வஞ்சகத்துக்கு எதிராக, நீதிமானின் உதடுகள் உண்மையானவை; நேர்மையானவை (சங் 17:1; பழ 10:18-21; 23:15தொ). அவ்வாறு பொய்யினின்று அவைகளைப் பாதுகாக்க (சங் 34:14; 4 பேதுரு 3:10), இறைவனே புத்தி புகட்ட முன்வர வேண்டும் (பழ 22:17தொ); கீழ்ப்படிதல், பற்றுறுதி (சங் 17:14; யோபு 23:12) என்னும் மனப்பாங்குகள்மூலம் அவை இறைவனின் உதடுகளோடு இணையவேண்டும்: ''ஆண்டவரே

என் வாய்க்குக் காவல் வைத்தருளும்; என் உதடுகளாகிய வாயிலைக் காத்துக் கொள் ளும்'' (சங் 141:3; சீரா 22:27தொ).

2. ''என் உதடுகளைத் திறந்திடுவீர், ஆண் டவரே'' என்று வேண்டுகிறார் சங்கீத ஆசிரிர யர். தன்பேச்சில் எளிமை விளங்க வேண்டு மெனில் அதற்காக இறைவனை இறைஞ்சு தல் அவசியம் என்பதை அவர் உணர்ந்திருக் கிறார். ஆனால் இறைவன் முன்னிலையில் தன் பாவ நிலையை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறொன்றும் செய்ய இயலா நிலை யில் மனிதன் உள்ளான். ''ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; அசுத்த உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கின்ற எனக்கு, சேனைகளின் ஆண்டவராகிய அரச ரின் தரிசனம் கிடைத்தது'' (ஏச 6:5). இறை வனை மகிமைப்படுத்தி, ஆர்ப்பரித்து (காண் சங் 63:4.6), அவன் புகழைப்பாட வேண்டி யதை (ஓசே 14:3) உணர்ந்திருக்கும் மனிதன், அதே சமயத்தில் தான் பிறப்பிலிருந்தே பாவி யென்பதையும் அறிந்திருக்கிறான். இறைவ னுக்கு மறுமொழி கூறும்வண்ணம் (யோபு 11:5), அவன் தன் பாவம் நீங்க, அவன் உதடுகள் தீயால் தூய்மை பெறவேண்டும் (ஏச 6:6). இறைவனின் நாள் வரும்போது அவர் தம் மக்களுக்குப் புதிய உள்ளத்தை அருளி (எச 36:26), ''தூய்மையான உதடுக ளையும் கொடுப்பார்'' (செப் 3:9). இன்று இயேசுவில் இந்நம்பிக்கை நிறைவேறியுள் ளது: ''அவர் வழியாக நாம் எப்போதும் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியை ஒப்புக் கொடுக்க முடியும்; அவருடைய பெயரை அறிக்கைசெய்வதால் நம் உதடுகள் செலுத் தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலி'' (எபி 13:15). இக்காரணத்தினால், தனது செபங்கள் கேட்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், ''ஆண்டவரே, என் உதடுக ளைத் திறந்துவிடும்; என்வாய் உமது புகழை எடுத்துரைக்கும்'' என்று ஒவ்வொரு மனித னும் செபிக்கலாம் (சங் 51:17).

**உப ஆகமம்** (Deuteronomy)

காண்க: துணைச்சட்டநூல்.

**உப்பு** (SALT)

1. உப்பும் வறட்சி நிலமும்:- பாலஸ்தீனத் தைச் சார்ந்தோர் சாக்கடலையொட்டி வாழ்ந்து வந்தனர். தெற்கே உப்புப் பள்ளத் தாக்குவரை (2 சாமு 8:13; 2 அரச 14:7) நீண்டு இருந்த இந்த ஏரி, பழைய குறிப்பேடுகளில் (ஆதி 14:3; யோசு 3:16; 12:3..) ''உப்புக்கடல்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உப்பு நிலங்கள் மனிதர் வாழாத பாலைநில மாக இருந்தன (எரே 17:6; சங் 107:34; யோபு 39:6). இவைகள் தண்டனைகளுக்கு உட்ப டுத்தப்பட்ட இடமாகவும், உப்பு தண்டனை யைக் குறிக்கும் பொருளாகவும் இருந்தது போல் தெரிகிறது. லோத்தினுடைய மனைவி உப்பாக மாற்றப்பட்டுத் தண்டிக் கப்பட்டாள் (ஆதி 19:26); மேலும் வெற்றி கொண்ட ஊரின் மீது அதன் தோல்வியைக் குறிக்கும் விதமாக உப்பை அதன்மீது வீசிய தாகப் படிக்கிறோம் (நீதி 9:45). தீயோருக்கு எதிராக இதே போன்ற எச்சரிக்கை விடப்பட் டிருக்கிறது (செப் 2:9); ''இந்த இடங்களில் இனி வளர்ச்சி இருக்காது'' (உப 29:22). இருந்தாலும் ஒருநாள் நீர் இதை மேற்கொள் ளும். சதுப்பு நிலங்களும், உப்பளங்களும் உப்பாயிருக்கும்போது (எச 47:11) கோயி லின் வலப்புறமிருந்து ஓடும் ஆறானது உப் புக்கடலைச் சுத்தமாக்கிவிடும் (47:8). அப் போது இந்த இடங்கள் உயிரினங்கள் நிரம் பிச் செழிப்புற்றதாயிருக்கும் (47:8தொ).

2. வழிபாட்டு முறைகளும் தூய்மைப்ப டுத்தும் முறைகளும்:- பழங்காலப் பலி முறைகளில், பலிக்கான காணிக்கைகள் உப் பிடப்பட்டதாக இருக்கவேண்டியிருந்தன (லேவி 2:13; எச 43:24). இது இறைவனுக்கு அளிக்கப்படும் உணவு சுவையுள்ளதாக இருக்க வேண்டும் என்பதாலா? (லேவி 21:6.8.17.22) அல்லது என்றும் நிலைத்திருப் பது கடவுளின் உடன்படிக்கை என்பதைச் சுட்டிக்காட்டும் ''உடன்படிக்கையின் உப் பை'' உறுதிப்படுத்தவா? (2:13) என்பது தெளிவாக இல்லை. ஆயினும், தூபத்தைப் போன்று (யாத் 30:35), உப்பையும் தூய்மை யைக் குறிக்கும் பொருளில் பயன்படுத்திய தாகக் கொள்ளலாம். எலிசா 'கெட்டுப்போ

ன' நீரை உப்பினால் நல்லதாக்கியதாகக் (2 அர 2:19-22) கூறப்படுவதும் இதையே விளக்குகிறது. மேலும் புதிதாகப் பிறந்துள்ள குழந்தையின் மேனியில் உப்பைத் தடவும் பழக்கத்தில் (எச 16:4) சாதாரணமான உடல் நலனைக் குறிப்பதைவிட, பேயோட்டும் சடங்கின் ஒரு மாதிரியாக இருப்பதைக் காணலாம். இவ்வகையாகத் தூய்மை பெறும் விதத்தினைப்பற்றி இயேசுவும் கூறுகிறார்: ''ஒவ்வொருவனும் நெருப்பினால் உப்பிடப்படுவர்'' (மாற் 9:49), ஏனெனில் நெருப்பு, சுட்டெரித்துச் சுத்தமாக்குகிறது (1 கொரி 3:13).

3. சுவையூட்டலும் கெடாமல் பாதுகாத்தலும்:- மனிதனுக்கு மிகவும் தேவையான பொருட்களில் உப்பும் ஒன்றாகும் (சீரா 39:26); எனவே 'அரண்மனையின் உப்பைத் தின்பது' (எஸ் 4:14), அரசனிடமிருந்து ஒருவன் சம்பளத்தைப் பெறுவதைக் குறிக்கும். உப்பு உணவுக்குச் சுவையூட்டுகிறது (யோபு 6:6); உணவு கெடாமல் பாதுகாக்கிறது (பாரூ 6:27). இந்தத் தன்மைகளால் இது ஒரு உடன்படிக்கையின் தொடர்ந்த நிபந்தனையை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது. 'உப்பு உடன்படிக்கை' என்பது (எண் 18:19) இறைவனுக்கும் தாவீதுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை (2 நாள் 13:5) போன்ற நிரந்தர உடன்படிக்கை ஆகும்.

இயேசுவின் வார்த்தைகளில் தெளிவாக நாம் தெரிந்து கொள்ள இயலாத சிலவற்றில் உப்பைப் பற்றிய உவமையும் ஒன்று. ''உப்பு சாரம் இழந்தால் அதில் எப்படி சாரம் ஏற்படுத்த முடியும்?'' (லூக் 14:34; மாற் 9:50). இது ஒருவகையில் அந்த உடன்படிக்கையின் உப்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். இதன்படி ஆண்டவரோடு செய்த உடன்படிக்கை ஒருமுறை முறிவுபடும் போது, திரும்பவும் சரிப்படுத்த முடியாது என்று பொருள்படலாம். புனித மத்தேயு தரும் பொருளின்படி, விசுவசிப்பவர் 'உலகின் உப்பாயிருக்க வேண்டும்' (5:13); அதாவது இறைவனோடு அவர் கொண்டிருக்கும் உடன்படிக்கையில் ஊன்றி நின்று, உலகத்தில் மனிதனுக்குச் சாரமாக இருக்கவேண்டும். இல்லாவிடில் அவர் எதற்குமே பயனற்றவராகிறார். இத்தகைய சீடர்கள் வெளியேற்றப்படுவார்கள் (லூக் 14:35). ''உப்பு நல்ல தொன்று; உப்பைக் கொண்டுள்ளவர்களாக ஒருவரோடொருவர் சமாதானத்தில் நிலைத்திருங்கள்'' என்று மாற்கு (9:50) கூறுகிறார். இதற்குப்புனித பவுல் ''உங்கள் பேச்சு இனியதாகவும் சாரமுள்ளதாகவும் இருக்கட்டும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் எவ்வாறு பதில் அளிக்க வேண்டுமென அறிந்து கொள்வீர்கள்'' என்று விளக்கம் அளிக்கிறார் (கொலோ 4:6).

**உப்புக்கடல்**

சாக்கடலைக் குறிக்க ஐந்நூலிலும் யோசுவா நூலிலும் பயன்படுத்தப்படும் பெயராகும் (ஆதி 14:3; எண் 34:3.12; உப 3:17; யோசு 3:16; 12:3; 15:2.5; 18:19). இக்கடலின் நீர் அதிக உப்புத்தன்மை கொண்டிருப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

**உப்புநகர்**

இது, பாலை நிலப்பகுதியில், நிபிசானுக்கும் என்கேதிக்கும் இடையிலுள்ள, யூதாவைச் சேர்ந்த ஒரு நகரமாகும் (யோசு 15:62). இது தமிழ் மொழி பெயர்ப்பில் ஈர்மெலாக்கு என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கட்டடங்களின் சுவடுகளிலிருந்து, இந்நகர் கிர்பேத்து கும்ரான் ஊராகும் என்பர் அறிஞர்கள்.

**உப்புப் பள்ளத்தாக்கு (VALLEY OF SALT)**

இது சாக்கடலுக்கு அருகிலுள்ள பள்ளத்தாக்கு, இஸ்ராயேலர்கள் ஏதோமியர்களை வென்ற இடம். தாவீதின் ஆட்சிக் காலத்தில் ஏதோமை முதல் தடவையாகக் கைப்பற்றினார் (2 சாமு 8:13). வேறொரு சமயத்தில் அபிசாய் உப்புப் பள்ளத்தாக்கில் வெற்றி கண்டார். யோசபாத்து இறந்தபின் ஏதோமியர் சுதந்தரம் பெற்றிருந்தனர் (1 நாள் 18:12). இரண்டு நூற்றாண்டுகள் கழித்து அமசியா ஏதோமியர்களை முறியடித்தார்; ஏதோம் பகுதிகளைக் கைப்பற்றினார் (2 அரச 14:7).

உப்புப் பள்ளத்தாக்கு எங்குள்ளது என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பேயேர் செபாவுக்குக் கிழக்கில் உள்ள வாடி எல் மில்கா என்ற இடத்தின் பெயர் ஒத்து இருப்பதால், பலர் இதோடு சேர்த்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இஸ்ராயேலர்கள் வம்புக்குச் சண்டை இழுப்பவர்களாக இருந்திருப்பதால், பெரும்பாலும் ஏதோமியர்களின்• எல்லையில்தான் இருக்கவேண்டும் என்பது தெரிகிறது. பெரும்பாலும் சாக்கடலுக்குத் தெற்கில் உள்ள எஸ் செப்கா என்ற இடமாக இருக்கலாம்.

### உமியுடன் அரைக்கப்பட்ட மாவு (MEAL)

இது தானியத்தை உமியோடு அரைத்து தயாரிக்கப்பட்ட மாவாகும். உமி நீக்கி அரைக்கப்பட்ட மாவும் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக உமியோடு அரைக்கப்படும் மாவு கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால் விதிவிலக்காகப் பார்லியிலிருந்து தயாரிக்கப்பட்ட மாவும் பயன்படுத்தப்பட்டது (எண் 5:15). பழங்காலத்தில் இஸ்ராயேலர் பார்லியை அதிகம் பயன்படுத்தினார்கள். பிற்காலத்தில்தான் அவர்கள் கோதுமையைப் பயன்படுத்தினார்கள். உமி இல்லாமல் அரைக்கப்பட்ட மாவைவிட, உமியுடன் அரைக்கப்பட்ட மாவே அதிகம் பயன்படுத்தப்பட்டது (1 அர 4:22). இது படைவீரர்கள் முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டது (2 சாமு 17:28; 1 நாள் 12:40). சரேப்தா ஊர் விதவை வைத்திருந்தது இவ்வகை மாவு தான் (1 அர 17:12). இவ்வகை மாவு பலிக்குப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் கிதயோன் வான தூதருக்கு அளித்ததும் (நீதி 6:19), அன்னா சீலோவில் ஒப்புக் கொடுத்ததும் (1 சாமு 1:24) இவ்வகை மாவே. விபச்சாரத்தில் சந்தேகத்துக்குரிய பெண் ஒப்புக் கொடுக்க வேண்டிய பலியில் (எண் 5:15) இவ்வகை மாவுதான் பயன்படுத்தப்பட்டது. இது விடியற்காலையில் பெண்களால் அரைக்கப்பட்டது (பழ 3:15; யாத் 11:5; ஏச 47:2; மத் 24:41; லூக் 17:35). ஆண்கள் மாவரைப்பது என்பது கேவலமாகக் கருதப்பட்டது. ஆனால் எருசலேம் அழிக்கப்பட்டதால் ''இளைஞர்கள் எந்திரக் கல்லை இழுத்து வருந்தினர்'' (புல 5:13; நீதி 16:21). ஒரு நாளைக்குத் தேவையான மாவு மட்டுமே அரைக்கப்பட்டது (தி 18:6; மத் 13:33; லூக் 13:21). இது அரைக்கப்படும் போது மிகவும் இரைச்சலாக இருக்கும். இவ்வாறு இரைச்சல் இல்லாதது நகரின் அழிவின் அடையாளமாகும் (எரே 25:10; திருவெளி 18:22).

### உமிழ்தல், துப்புதல் (SPIT)

பொதுவாக விவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி உமிழும் அல்லது துப்பும் செய்கையானது கடுமையான நிராகரிப்பையும், புறக்கணிப்பையும் குறிக்கும் அடையாளச் செய்கையாகும் (எண் 12:14; உப 25:9). உலக வழக்கில் மனித உமிழ்நீர் பலவகை மந்திரசக்திகள் பெற்றது என்கின்ற மூடநம்பிக்கை பரவலாகக் காணப்படினும், லேவி 15:8-ஐத் தவிர வேறெங்கும் மனித உமிழ்நீர் தீட்டுடைத்து என்று காண்பதில்லை.

யூதர்களின் வழக்கப்படி மனித உமிழ்நீர் நோய்களினின்று நிவாரணம் தரவல்ல சக்தியுள்ளமையால் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இறைமகன் கிறிஸ்துவும் யூத மரபுப்படியே செவிடனையும் (மாற் 7:33), குருடனையும் (மாற் 8:23; யோவா 9:6) குணமாக்குங்கால் உமிழ்நீரை உபயோகப்படுத்தியதைக் காண்கிறோம்.

### உம்மா (UMMA - குழு, சமூகம்)

ஆசேர் கோத்திரத்துக்குக் கிடைத்த ஒரு நகரம் (யோசு 19:3). 'ஆக்கோ' என்ற நகரையே தவறாக 'உம்மா' என்று குறிப்பிடுவதாகச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆக்கோ என்ற கானானியர் நகரின் பெயர் யோசுவாவின் பெயர்ப் பட்டியலில் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும் (19:24-31; காண்க நீதி 1:31).

### உயர்வாயில் (UPPER GATE)

யூதாவின் அரண்களைப் பலப்படுத்தும் இடத்தில் ஒரு பகுதியாக அரசன் யோத்தாம்

கட்டிய வாயிலாகும். ஆலய வாயில்களில் ஒன்றாகும் (2 அர 15:35; 2 நாள் 27:3). இது வடக்கு நோக்கியிருந்தது (எச 9:2). இதுவும், பென்யாமீன் உயர்வாயிலும் (எரே 20:26) ஒன்றாக இருக்கலாம். பின்னது, ஆலயத்தில் வடபகுதியில் பழைய, புதிய முற்றங்களுக் கிடையில் இருந்தது.

2. நாள் 23:20-இல் உயர்வாயில், காவலர் வாயிலைக் குறிக்கலாம்.

**உயிரினங்கள், உயிருள்ள படைப்புக்கள்** *(CREATURES, LIVING)*

படைப்புப்பற்றிய யாவே பாரம்பரியத் தில்தான், மண்ணிலிருந்து உருவாக்கிய மனி தனின் உடலில் யாவே உயிரின் மூச்சை ஊதவே அவன் உயிருள்ளவன் என்று கூறப் பட்டுள்ளது (ஆதி 2:17); இதே போன்று விலங்குகளும் 'உயிருள்ளவையாயின' என் பது தெரிகின்றது (ஆதி 2:19-20; சங் 104:29-30). மற்ற இடங்களில் உயிரினங்கள் என்ற சொல் விலங்குகளையும் நீர்வாழ் படைப்புக் களையும் குறிக்கின்றது (ஆதி 1:20-21; 1:24. 30; 9:19.12.15-16; லேவி 11:10.46; எச 47:9).

எசக்கியேல் இறைவாக்கினர் தனது முதற் காட்சியில் நான்கு உயிருள்ள படைப்புக்க ளைக் கண்டார் (எச 1:5.13-15.19-20.22). இவை நான்கும் மனித உடலையும், மனித, சிங்க, எருது, கழுகு முகங்களையும் கொண் டிருந்தன. இதே போன்று அவரது இரண்டா வது காட்சியிலும் கண்டார் (எச 3:13).

இந்த மறைபொருள் மிக்க காட்சியின் பொருளை விளக்குவது கடினம். ஏனெனில் இவ்வடையாளங்களின் பொருள் மறைந்து போயிருக்கலாம். ஆயினும் ராபிகள் இந்த வித்தியாசமான காட்சியைத் தம் முறைப்படி விளக்குகின்றனர்: இப்பூமியையும், அவற் றில் உள்ள காடுகளின் தலைவனான சிங்கத் தின் மேலும், வீட்டு விலங்குகளில் வலிமை மிகுந்த காளையின் மேலும், ஆகாயத்தை ஆளும் கழுகின் மேலும், உலகை ஆண்டு நடத்தப் படைக்கப்பட்ட மனிதன் மேலும் இறைவனுக்குள்ள அதிகாரத்தைக் காட்டுகி றது. மேலும் இறைவனே இப்பிரபஞ்சம் முழுவதையும் ஆள்பவர். ஏனெனில் அவரே அனைத்திற்கும் ஊற்று என்பதே இந்த விநோதமான காட்சி உள்ளடக்கும் உண்மை யாகும்.

உயிரே இறைவன் திருமுன் கட்டுப்பட் டுள்ளது. இந்நிலை எல்லாம் வல்லவருக்கு அருகிலுள்ள விலங்குகளால் அடையாள மாக எடுத்துக்கூறப்படுகிறது. திருவெளி 4:7-8-இல் உயிருள்ள படைப்புக்கள் குறிக் கப்படுகின்றன. ஆனால் காளைக்குப் பதி லாக இளங்காளையும், நான்கு இறக்கைக ளுக்குப் பதிலாக ஆறு இறக்கைகளும் குறிக் கப்படுகின்றன. உயிருள்ள இறைவன் உயிர் வாழும் படைப்புகள் சூழ இருப்பதாகவே காட்டுவது, அவர் எல்லா உயிர்களையும் ஆள்பவர் மட்டுமன்று, அவற்றின் ஊற்றும் அவரே என்பதைக் காட்டுவதற்காகவுமே.

**உயிர், வாழ்வு** *(LIFE)*

I பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில் உயிரானது ஒரு வாழ் வைக் கொடுக்கும் சக்தியாகக் கருதப்பட் டது. உலகத்துடனும் மக்களுடனும் உறவை ஏற்படுத்திக் கொள்ள ஒரு பாதையாக அமைந்தது. இவை இல்லாது இருப்பது வாழ்வு குறைவுபட்டு மரணத்தை அணுகுவ தற்கு ஒப்பானது ஆகும். அசீரிய அரசர் இஸ்ராயேல் மக்களுக்கு வாக்குக் கொடுத்த போது வாழ்வின் எல்லா நன்மைத்தனத்தை யும் நல்கினார். ''உங்களில் ஒவ்வொருவரும் தம் சொந்தத் திராட்சைக் கொடியின் பழத் தையும், சொந்த அத்தி மரத்தின் பழத்தையும் உண்டு, தம் சொந்தக் கிணற்றின் நீரைக் குடிப்பீர்கள்: நீங்கள் மடியாமல் வாழ்வீர்கள்'' (2 அர 18:31 தொ). நாட்டை அடைந்து அதில் வாழ்வார்கள் என்று இஸ்ராயேலர்க ளுக்கு வாக்களிக்கப்பட்டது (உப 4:1; 16:20). ஏனெனில், ஒருவனுடைய நாடே ''வாழ் வோரின் நாடு'', ''வாழ்வின் நாடாகும். அதை உரிமையாக்கிக் கொள்வதன் மூலம் வாழ்வை அனுபவித்தார்கள் (உப 12:1; 30: 13; ஏச 38:11; 53:8; எச 32:23; சங் 52:7; 142:6; யோபு 28:13). 'அரசே வாழி' என்ற வாழ்த்து ரையானது வெறும் வாழ்த்து மட்டுமன்று (1

சாமு 10:24; 1 அர 1:25; 36:34; 39:2; 2 அர 11:12). இஸ்ராயேல், அரசர்களுக்கு எல்லாம் நன்றாய் அமையவும், யாவே அவர்களுக்கு வாழ்வை அளிக்குமாறும் ஆசித்தது (உப 6:24), மனிதன் நீண்ட வாழ்நாளை விரும்பு வது நன்மைத்தனத்திற்கே ஆகும் (சங் 34:13). ஆண்டவர் உயிரையும், நிலையான அன்பை யும் யோபுவுக்கு அருளினார் (யோபு 10:24). வாழ்வையும், சமாதானத்தையும் இஸ்ராயே லின் குருக்களுக்கு ஆண்டவர் அருளினார் (மலா 2:5). மனஅமைதி உடலுக்கு நலம் (உயிர்) (பழ 14:30). இரசத்தாலும் (சங் 9:9) வாழ்வு மகிழ்ச்சியுறுகிறது. ஆண்டவருக்கு அஞ்சுகின்றவர்களுக்குச் சொத்து, மதிப்பு, வாழ்வு ஆகியன சன்மானமாகக் கிடைக்கும். ஆண்டவர் வாழ்வைக் கொடுக்கும்போது அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கிறார். அவனை எதிரியின் கையினின்று விடுவிப்பார் (சங் 41:3). வாழ்வே எல்லா நலன்களுக்கும் அடிப்படையாக அமைகின்றது. அது இல் லாமல், மற்றவற்றால் பயனில்லை. செத்த சிங்கத்தைவிட உயிரோடு இருக்கிற நாய்மே லானது (திருவுரை 9:4). நிலைத்து நிற்கிற எந்த ஒரு நலனையும் தராத காரணத்தால் ஒருவன் வாழ்வை வெறுக்கலாம் (சங் 2:17); பேரிடர் காலத்தில் சாவை விரும்பலாம் (எரே 8:3). எனவேதான் மகிழ்ச்சியில்லாத வாழ்வு காற்றைப் போன்றது (யோபு 7:7).

மேலே கூறப்பட்ட கருத்துகளிலிருந்து இஸ்ராயேல் இனமானது சிலர் கூறுவது போல, மனிதனை உடலெடுத்த ஆவியாகக் கருதவில்லை; உயிர் பெற்ற உடலாகக் கருதி யது என்பது தெளிவு. மாறாக, தூண்டப்பட்ட உடலாகக் கருதியது. அது வாழ்வின் முழு மையாகும். உடல். அதன் செயல் கூறுகளின் ஆற்றலாகும்; இன்பம் அனுபவிக்கக்கூடிய சக்தியாகும். உயிரளிக்கும் தண்ணீர் ஓடு கின்ற தண்ணீராகும் (ஆதி 26:19; லேவி 15:13; எண் 19:17; எரே 2:13) இறப்பு முழு மையானதாகும். அதற்குப்பின் வரும் எந்த ஆற்றல் மிக்க செயலையும் இஸ்ராயேலர் அறியார். இறந்தவர்கள் வாழ்வதில்லை (எச 26:14). எனவே வாழ்கின்றவர்கள்தான் இறைவனைப் புகழ முடியும் (எச 38:19).

பழைய ஏற்பாட்டிலே மறுவாழ்வு என்பது பின்னால் எழுந்த ஒரு கருத்தாகும். அதுவும் உயிரை மீண்டும் பெறுதலாகவும் உடலின் உயிர்ப்பாகவும் புரிந்து கொண்டனர். எனவே தான் 'வாழ்கின்றவர்' என்ற அடை மொழியானது முதன்முதலாக இறைவனுக் குக் கொடுக்கபபட்டது (யோசு 3:10; 1 சாமு 17:26.36; 2 அரச 19:4.16; சங்.42:3; 84:3; எச 37:4.17; எரே 10:10; ஓசே 2:1). இதுதான் உண்மையான இறைவனாகிய ஆண்டவரை மற்றத் தெய்வங்களிடையேயிருந்து வேறுப டுத்தியது. எனவேதான் இறைவனை உயிர் அளிக்கும் தெய்வமாகச் சித்தரிக்கின்றார்கள். இதை வாழ்வளிக்கும் மரத்தின் கனியும் எடுத்துரைக்கின்றது (ஆதி 2:9; 3:22.24). ஆதி 2:7-இல் கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி அவன் முகத்தில் உயிர் மூச்சை ஊதவே மனிதன் உயிருள்ளவன் ஆனான். மயக்கத்திலிருந்து எழுகின்றபோது மீளவும் உயிர் கிடைத்தாற் போலாயிற்று (ஆதி 45: 27). உயிர் என்பது ஆத்துமா அன்று; மாறாக, அது மனிதனை வெளிப்படுத்தும் தன்மையா கும். எலியா விதவையின் மகனை உயிர்ப் பித்தபோது அவனிடம் மீளவும் உயிர் வந் தது (1 அரச 17:22). எனவேதான் நீதிமான் தன்பற்றுறுதியினால் உயிர் வாழ்வான் (அப 2:4). நாம் யாவே உயிரைப் பாதுகாக்கிறார் என்று கூறுவதை, விவிலியம் உயிர் அளிக்கி றார் என்று கூறுகிறது. உயிர் அவர் கையிலி ருப்பதால், அது அவரிடமிருந்து வரும் தொடர்ச்சியான கொடையாகும் (யோபு 12: 10). ஆண்டவர் தாமே உயிர் அளிப்பவரும், அழிக்கின்றவரும் ஆவார் (உப 32:39). அவர் வாழ்வின் வழியைக் காட்டுகிறார் (சங் 16: 11). ஆசிரால் உயிர் வழங்கப்படுகிறது (சங் 133:3). வாழ்வோரின் நூலில் எழுதப்பட்ட வர்களே உயிர்வாழ்வர். ஏனெனில் அவரே வாழ்வின் ஊற்று. ஆண்டவர் யாரைக் காப் பாற்றுகின்றாரோ அவர்கள் அவருடைய ஒளியின் பாதையிலே உயிர் வாழ்கின்றனர். ஏனெனில் ஒளியானது உயிர் மற்றும் நன்மை யின் கூறாகும். இருளானது இறப்பு மற்றும் தீயவையின் கூறாகும். அரசர்கள் ஆண்டவரி டம் நீடிய வாழ்வைக் கேட்பவராக அல்லது வாழ்வு கொடுத்ததற்கு நன்றி தெரிவிப்பவரா

*கத் தோன்றுகிறார்கள். 1 சாமு 25:29-இல் ''என் தலைவரின் உயிர், உம் கடவுளாகிய ஆண்டவரின் பாதுகாப்பில் வாழ்வோரின் கட்டுகளில் இருக்கும்''.*

*ஆண்டவர் தாமே உயிருக்கும் சாவிற்கும் ஆண்டவராய் இருப்பதால் ஒருவரின் செயலுக்கேற்ப வாழ்வை அளிப்பார். எனவே இஸ்ராயேலானது நன்மைக்கும் தீமைக்கும், வாழ்விற்கும் சாவிற்கும், ஆசீருக்கும் சாபத்திற்குமிடையில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவரை மட்டுமே அன்பு செய்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இஸ்ராயேல் வாழ்வைத் தேர்ந்தெடுக்கிறது (உப 30:15-20). இந்தக் கருத்தானது உபஆகமத்தில் பொதுவாக வருவதாகும் (உப 4:1; 6:24; 16:20; 30:6). மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் (உப 8:3). எனவே வாழ்வானது உடல், மனவளர்ச்சி மட்டுமல்ல மாறாக இறைவனின் திட்டம் மனிதனில் நிறைவேறுவதாகும்.*

*இந்தக் கருத்துகள் இறைவாக்கினர் நூல்களிலும் வருகின்றன. வாழ்வென்பது யாவேயைத் தேடுதலாகும் (ஆமோ 5:4.6). ஆண்டவருக்குச் செவி சாய்ப்பதன் வாயிலாகவும் (எச 55:3), அல்லது நல்லவற்றைத் தேடி, தீயதை விலக்குதலாலும் (ஆமோ 5:14) அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதின் வாயிலாகவும் (எச 20:11.13.21) வாழலாம். எச 18:இலும் 33:1-20இலும் வாழ்வென்பது தீயவற்றை விலக்கி நல்லவற்றைத் தேர்ந்தெடுப்பதில்தான் அமைகிறது என்ற கருத்து தெளிவாக்கப்படுகிறது. எனவே வாழ்வானது தீமையை விலக்குபவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்று எசக்கியேல் தீர்மானிக்கவில்லை. மாறாக வாழ்வின் முழுமையானது நம்முடைய நற்செயல்களாலேயே எண்பிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.*

*ஞான நூல்களில் வாழ்வானது ஞானத்தினுடையவும் நேர்மையினுடையவும் விளைவாகும் என்ற கருத்து தெளிவாக்கப்படுகிறது (பழ 3:2.18.22; 4:4.10.22; 6:23; 8:35; 9:6; 10:11.16 தொ; 11:30; 12:28; 13:14; 14:27; 19:23; 21:22). நேர்மையும் ஞானமும் வாழ்வு தரும் மரமாகும். இந்த ஞானமானது இறைவனுக்கு அஞ்சி வாழ்வதன் விளைவே ஆகும். எனவே ஞானத்தின் கனிகள் நல்ல உடல் நலம், வெற்றி நற்பேறு முதலியவையாகும். இந்த வாழ்வைத் தீயவர்களுக்கு ஆண்டவர் அளிக்கமாட்டார் (யோபு 36:6). எனவேதான் கிளர்ச்சி செய்யும் இஸ்ராயேல் மக்கள் செயோலுக்கு உயிரோடு செல்வர் என்ற கருத்து நிலவியது (எண் 16:30). அங்கே அவர்கள் அழிவார்கள். எனவே வாழ்வின் முழுமையான நிறைவினை அவர்களால் அடைய முடிவதில்லை.*

*பழைய ஏற்பாட்டுநூல்கள் எத்தகைய மாற்றமுமின்றி முந்தையக் கருத்துக்களையே பிரதிபலித்தன. ஞான நூல்மட்டும், சாவுக்குப் பின் வரும் வாழ்வுபற்றித் தனிப்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தது. வாழ்வு ஞானத்தின் கனியாகும் (சீரா 4:12). வாழ்வோர் மட்டுமே, இறைவனைப் போற்றுவர் (17:27 தொ). பிச்சையிடுதல் சாவிலிருந்து ஒருவனைக் காப்பாற்றுகிறது (தோபி 12:9). கடவுளே ஆக்குபவரும், அழிப்பவரும். கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகவும் (பாரூ 3:9) ஞானத்தின் வாயிலாகவும் (3:4) வாழ்வைக் காணமுடியும். மனித வாழ்வு பெற்றோரின் கொடையன்று, படைத்தவரின் கொடையாகும் (2 மக் 7:22 தொ).*

*II புதிய ஏற்பாடு:-*

*1. ஒத்தமை நற்செய்திகளில் பழைய ஏற்பாட்டுக் கருத்துகள் பிரதிபலிக்கின்றன. உப 8:3-ஆனது மாற் 4:4; லூக்.4:4-இல் கையாளப்பட்டுள்ளது. கட்டளைகளைக் கடைப்பிடிப்பதால் வாழ்வு பெறப்படுகிறது (மத் 19:16; மாற் 10:17.19; லூக் 10:28; 18:18-20). கிறிஸ்துவுக்காக யாவற்றையும் துறக்கும்போது வாழ்வு பெறப்படுகிறது (மத் 19:29; மாற் 10:30; லூக் 18:30). சொத்தினால் வாழ்வைப் பெற முடியாது (லூக் 12:15). கடவுள் வாழ்*

வோரின் கடவுள், இறந்தோரின் கடவுள் அல்ல, என்ற கருத்தைக் கிறிஸ்து சதுசேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றார் (மத் 22:32; மாற் 12:27). ஒத்தமை நற்செய்திகளில் நிறைவாழ்வானது இறப்பிற்குப் பின்பே பெறப்படுகிறது என்ற கருத்து இதில் தெளிவாக்கப்படுகிறது. இதில் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைக் கடந்து செல்கிறது. புதிய ஏற்பாட்டில் பிற புத்தகங்களும் இதைத் தெளிவுபடுத்துகின்றன. பாவத்திலிருந்து திரும்புவது சாவிலிருந்து வாழ்வுக்குத் திரும்புவதைப் போன்றதாகும் (லூக் 15:24). வாழ்விற்குச் செல்லும் வழியானது குறுகலானது. அங்குச் சிலரே அதில் நுழைகின்றனர் (மத் 7:14).

அப்போஸ்தலப் பணி நூலும் பழைய ஏற்பாட்டை எதிரொலிக்கிறது (பழ 16:11; அ.ப. 2:20; 7:30). நற்செய்தியின் வார்த்தைகள் இந்த வாழ்வின் வார்த்தைகளாகும் (அ.ப.5:20). இயேசு ''வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர்'' ஆவார் (3:15). முடிவில்லா வாழ்வானது இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே நிறைவாக அளிக்கப்படுகிறது (அ.ப.13:48). ஆண்டவர் தாமே வாழ்வின் தலைவராய் இருக்கின்றார். எனவே நிறைவாழ்வானது அன்பினாலும், கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும் மட்டுமே பெற முடியும்.

2. பவுல்:- வாழ்வு பற்றிய பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களைப் பவுல் கையாளுகின்றார். கடவுளுடைய கட்டளைகள் வாழ்வு தருபவை ஆகும். முடிவில்லா வாழ்வானது நற்செயல் செய்வதில் உறுதி தளராமல் இருப்பவர்களுக்கே உரியது (உரோ 2:7). அது இறைவனின் கொடையாகும் (6:23). அது புனிதத்தின் விளைவாகும் (6:22). மேய்ப்புப்பணித் திருமுகங்களில் இந்தக் கருத்துகள் மிகுதியாக உள்ளன. வாழ்வு விசுவாசத்தினால் வருகிறது (1 தீமோ 1:16). நம்பிக்கையினால் உறுதிப்படுத்தப்படுகிறது (தீத் 1:2; 3:7). கிறிஸ்தவன் அதைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் (1 தீமோ 6:12). அதுவே உண்மையான வாழ்வு (6:19).

முடிவில்லா வாழ்வு பவுலின் கருத்துகளில் வரவிருக்கும் வாழ்வு மட்டுமே அன்று; மாறாக ஞானஸ்நானத்தினால் பெறும் நிறை வாழ்வாகும் (உரோ 6:4). கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்ப்போடும் கொண்ட இணைப்பால் தொடங்கப்பட்ட புது வாழ்வாகும். அது ஊனியல்பைப் பொறுத்தவரை இறந்த வாழ்வு ஆகும் (8:12). ஆனால் பாவத்திற்கு உயிர்த்து வாழ்தலாகும் (6:13), புனிதத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வாழ்வு (5:18. 21); கிறிஸ்தவனில் செயலாற்றுகிறது (2 கொரி 4:11). கிறிஸ்தவன் இயேசுவின் இறப்பால் ஒப்புரவாகிறான். அவரது வாழ்வால் மீட்கப்படுகிறான் (8:11). ஆகவே பவுலின் நூல்களில், வாழ்வு இறுதிக்கால இயல் பொருளில் மட்டும் கருதப்படவில்லை.

புதிய வாழ்வானது ஆவிக்குரிய வாழ்வு ஆகும். கிறிஸ்துவினாலே அருளப்பட்ட ஆவியாகும். எனவே ஊனியல்பின் செயல்களை ஆவியால் அழிக்கும்போது கிறிஸ்தவன் உண்மையிலே வாழ்வான் (உரோ 8:13). கிறிஸ்து இயேசுவுக்குள் உயிர் தரும் ஆவியானவரின் சட்டத்தில் வாழ்வதாகும் (8:2). ஆவியின் இயல்பு, வாழ்வும் அமைதியும் ஆகும் (8:6). ஆவியானவர் ஏற்புடைமையின் வாயிலாக வாழ்வாவார் (8:10). எழுதிய சட்டம் விளைவிப்பது சாவு, ஆவியானவர் அளிப்பதோ வாழ்வு (2 கொரி 3:6). ஏனெனில் ஆவியானவரில்தான் நாம் புது வாழ்வைப் பெறமுடியும். அவரே அந்த வாழ்வை அளிக்கும் சக்தியாகும். இந்தப் புது வாழ்வானது நாம் இறைவனில் கிறிஸ்து வழியாக ஏற்படுத்திக் கொள்ளும் உறவைப் பொறுத்ததாகும். எனவே வாழ்வது கிறிஸ்துவிலே நாம் கொண்டுள்ள விசுவாசத்தினால் வாழும் வாழ்வாகும் (கலா 2:20). எனவே கிறிஸ்தவன் கடவுளுக்காகக் கிறிஸ்துவிலே வாழ்கின்றான் (உரோ 6:11; 1 கொரி 15:22; எபே 4:18; 2 திமோ 1:1; தீத் 2:12); கிறிஸ்துவுக்கென்றே வாழ்கிறான் (உரோ 14:8). அவனது வாழ்வு கிறிஸ்துவில் இறைவனுக்குள் மறைந்துள்ளது (கொலோ 3:3). அவனுக்குள் வாழ்வது கிறிஸ்துவே (பிலி 1:21). கிறிஸ்துவே அவனது வாழ்வு (கொலோ 3:4).

அவனது உடலில் இயேசுவின் வாழ்வு வெளிப்படுகிறது (2 கொரி 4:10 தொ). கிறிஸ்துவின் வாழ்வு என்ற கருத்து திருச்சபையில் ஒவ்வொரு நபரிலும் தொடர்கிறது; விரிவடைகிறது. இது பவுலுக்கு உரிய தொன்றாகும்.

இந்தப் புதிய வாழ்வானது ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனத்தால் நம் எல்லோருக்கும் நிறைவாக அளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்கு பெறுதலாகும். ஊனியல்பில் நாம் வாழும்போதுகூட பாவத்திற்கு விடுதலை பெற்றவர்களாய் வாழ முடியும். சாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாய் வாழமுடியும்.

3. யோவான்:- மனிதருக்கு வாழ்வு அளிக்கக்கூடிய ஒளி கிறிஸ்துவிலே இருந்தது (யோவா 1:4). படைப்பிலும், மீட்பிலும் கிறிஸ்துவே வாழ்வு கொடுக்கும் ஒளியாக இருக்கிறார். கிறிஸ்துவே வழியும், ஒளியும், உயிருமாவார். அவர் வழியாகத்தான் நாம் தந்தையை அறியவும், அவரிடம் வந்தடையவும் முடியும் (14:6). கிறிஸ்துவே உயிர் கொடுக்கின்ற, அப்போஸ்தலர்கள் கண்ட, சான்று பகர்கின்ற வார்த்தை (1 யோவா 1:1-2). இந்த வாழ்வு பாவமன்னிப்பாகும் (5:16). இது உயிருள்ள தண்ணீர் (யோவா 4:19; 7:38). முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் கிறிஸ்துவிடம்தான் உள்ளன. (6:68). அவரில் விசுவாசம் கொள்வதாலும் (3:15.36; 20:31), கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும் (12:50) வாழ்வை அடைய முடியும். முடிவில்லா வாழ்வைப் பிறரன்புப் பணியால் வைத்துக் கொள்ளக்கூடும் (1 யோவா 3:14). முடிவில்லா வாழ்வு அடையத் தன் உயிரை இழந்துவிட ஆயத்தமாக இருக்க வேண்டும் (யோவா 12:25).

கிறிஸ்துவை வாழ்வு கொடுப்பவராக யோவான் வெளிப்படுத்துகின்றார். கிறிஸ்துவிலே விசுவாசம் கொண்டவர் முடிவில்லா வாழ்வைப் பெற்றவராகவும், சாவுக்கும், இச்சைகளுக்கும் இறந்தவராகவும் வாழ வேண்டும் (யோவா 5:24). கிறிஸ்துவிலே தான் நமக்கு வாழ்வு அளிக்கப்படுகின்றது. கிறிஸ்துவே வாழ்வளிக்கும் அப்பமாகும். கிறிஸ்துவின் தசையைத் தின்று இரத்தத்தைக் குடிப்பவர் வாழ்வைப் பெறுவர். இதன் வழியாகக் கிறிஸ்துவிலே நாம் ஒன்றித்து வாழ முடியும். சாவு முடிவன்று. உயிர்த்தெழுதலின்போதுதான் நாம் முடிவில்லா வாழ்வைப்பெற முடியும். கிறிஸ்துவே உயிர்ப்பும், உயிரும். அவரில் விசுவாசம் கொள்பவர்கள் இறப்பினும் வாழ்வார்கள் (11:25 தொ). கிறிஸ்து அளிக்கும் மீட்பு வாழ்வின் ஒளியாகும் (8:12). ஏனெனில் அவர் ஒருவரே ஆடுகள் உயிர் பெறும் பொருட்டும், அதை மிகுதியாகப் பெறும் பொருட்டுமே வந்தவர் (10:10). அவை என்றும் அழியா; ''எவனும் அவற்றை என் கையிலிருந்து கவர்ந்து கொள்வதில்லை'' (10:28). முடிவில்லா வாழ்வை, அதைக் கொண்டுள்ள கிறிஸ்துவை அனுப்பியதன் வாயிலாக, இறைவன் அளித்தார். அவரிலே பங்கு பெறுபவர் அனைவரும் அந்த வாழ்வைப் பெறுபவர் (1 யோவா 5:11 தொ) முடிவில்லா வாழ்வானது கிறிஸ்துவையும், அவரை அனுப்பியவரையும் அறிதலே ஆகும் (யோவா 17:3).

III இறையியல் தொகுப்பு:-

என்றும் வாழும் இறைவன் முடிவில்லா வானக வாழ்விற்கு நம்மை அழைக்கின்றார். வாழ்வின் அனைத்து நிலைகளைப்பற்றிய மதிப்பையும் இறைவனைப்பற்றிய கலப்பில்லாத, தூய கணிப்பையும் வேதாகமத்தில் தொடக்கமுதல் முடிவுவரை காணலாம். இறைவன் நிறைமனதோடு தரும் உன்னதக் கொடையாக வாழ்வைக் கருதும் மனிதன் நம்பிக்கையுடனும் தளரா முயற்சியுடனும் அதனைப் பின்தொடர்கிறான் என்பதை இதிலிருந்து அறியலாம். அக்கொடையில் இறைவனின் மறையுண்மையும் வள்ளன்மையும் வெளிப்படுகின்றன.

1. உயிருள்ள இறைவன்:-

''உயிருள்ள இறைவனை'' உதவிக்கு அழைப்பதோ (யோசு 3:10; சங் 42:3...),

தன்னை ''உயிருள்ள இறைவனின் ஊழியன்'' என்று அறிமுகப்படுத்திக் கொள்வதோ (தானி 6:21; 1 அர 18:10.15), ''உயிருள்ள இறைவன் மீது'' ஆணையிடுவதோ (நீதி 8:19; 1 சாமு 19:6...) இஸ்ராயேலின் இறைவன் வல்லமையுள்ள, செயலாற்றும் இறைவன் என்று வெறுமனே அறிவிப்பதன்று. ''உயிருள்ள இறைவன்'' அல்லது ''வாழும் கடவுள்'' என்பது இறைவன் விரும்பும் பல பெயர்களுள் ஒன்று (எண் 14:21; எரே 22:24; எச 5:11..). இறைவனை இவ்வாறு அழைப்பது ''சோர்ந்து போகாத, களைப்படையாத'' (ஏச 40:28) அவருடைய அன்புணர்ச்சியின் நிறைவையும் மனவெழுச்சியின் மிகுதியையும் வல்லமையையும் உயிர்த்துடிப்பையும் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

''உயிருள்ள இறைவன்'' என்னும் இத்தலைப்பு, ''முடிவில்லா மாமன்னர் இறைவன், அவரின் கோபத்தை எவரும் தாங்கவியலாது'' (எரே 10:10). ''அவரே மீட்பர், விடுதலை வழங்குபவர், என்றென்றும் நிலைத்திருப்பவர், மண்ணிலும் விந்தைகள் புரிபவர்'' (தானி 6:27) என்னும் அவரது குணவியல்புகளை நினைவுறுத்துகின்றது. வாழ்வுக்கு, வாழும் உயிர்களுக்கு, வேதாகமம் தரும் உயர்ந்த மதிப்புக்கு ''உயிருள்ள இறைவன்'' என்னும் இத்தலைப்பே ஒரு தகுந்த சான்று.

2. வாழ்வின் மதிப்பீடு:-

அ) வாழ்வு விலைமதிக்கமுடியாத ஒன்று:-

பாருலகைப் பரமன் படைக்கையில், படைப்பின் இறுதிக்கட்டத்தில்தான் அனைத்திற்கும் மகுடம் சூட்டினாற்போல் உயிரை உண்டாக்குகிறார். ஐந்தாம் நாளில், ''கடலின் பெருநாகங்களும், திரள் திரளாக நீரில் நீந்தி வாழும் உயிரினங்களும், இறக்கையுடைய எல்லாவிதப் பறவைகளும்'' (ஆதி 1:21) உண்டாக்கப்படுகின்றன. அதன் பின்னரே உலகில் வாழும் பிற உயிரினங்களைப் பூமி பிறப்பிக்கின்றது (1:24). இறுதியாக வாழும் உயிர்களிலேயே நிறைவையும் முழுமையையும் தாங்கிய மனிதனை இறைவன் தம் சாயலில் உண்டாக்குகிறார். மனித உயிரின் வளர்ச்சியையும் வாழ்வின் மலர்ச்சியையும் உறுதிசெய்யத் தமது ஆசீரையும் அருளையும் இறைவன் வழங்குகிறார் (1:22. 28). ஆகவே, உலகில் இடையறாது போரிடும் துன்பகாலமாக வாழ்நாள் தோன்றினாலும் (யோபு 7:1) மனிதன் தன் வாழ்வைக் காத்துக்கொள்ளத் தன் உடைமை முழுவதையும் இழக்கவும் ஆயத்தமாக இருக்கிறான் (யோபு 2:4). இவ்வுலகில் அனுபவிக்கும் துன்ப வேதனைகளின் காரணமாக வாழ்வைவிட மரணமே அதிகம் விரும்பத்தக்கதாய்த் தோன்றுவது மனிதனின் உன்னத வாழ்வின் சீரழிந்த நிலையால்தான் (யோபு 7:15; யோனா 4:3). நிகழ்கால இவ்வாழ்வை நீண்ட நாள் அனுபவித்து (திருவுரை 7:17; 11:8..) ''வாழ்வோருடைய நாட்டில்'' வாழ்ந்து (சங் 27:19), ஆபிரகாமைப்போல் ''முதியவயதடைந்து நிறைந்த மகிழ்ச்சிமிக்க வாழ்நாட்களைக் கடந்து மடிவதே'' (ஆதி 25:8; யோபு 42:17) வாழ்வின் நோக்கமாகத் தோன்றுகிறது. தமக்கு மகிழ்ச்சிதரும் ஊற்றுகளாகவும் தம் வாழ்வை இவ்வுலகில் தொடர்ந்து நீடிக்கச் செய்யும் நிலைக்களன்களாகவும் (சங் 127:128) திகழும் மக்களைப் பெற்றுச் சந்ததியை விருத்தி செய்வதைப் பெற்றோர் பெரிதும் விழைகின்றனர் (ஆதி 15:1-6; 2 அர 4:12-17). எனவே, முதிய வயதினரும் அவர்தம் பிள்ளைகளும் அடங்கிய பெருங்கூட்டத்தைப் பொதுவிடங்களில் காண்பது இன்பம் தருகின்றது (செப் 8:4).

ஆ) வாழ்வு நிலையற்றது:-

மனிதனும் வாழும் பிற உயிர்களும் வாழ்வில் கொண்டிருக்கும் பிடிப்பு மிக மென்மையானதே. மரணம் அவர்களின் உயிர்த்தன்மையின் ஓர் இயல்பு நிகழ்ச்சியே. தமது இயல்புக்குக் கட்டுப்படாததும் தம்மால் தவிர்க்க முடியாததுமான மூச்சுக் காற்றைச் சார்ந்துள்ளன அவர்தம் உயிர்கள். உயிர்கள் சாவதே அவற்றின் இயல்பு. ''கொல்லவும் உயிர்ப்பிக்கவும் வல்லமை பொருந்திய இறைவனை'' (உப 32:39) உயிர்கள் தொடர்ந்து சார்ந்திருக்கின்றன (சங் 10428). அவை சுவாசிக்கும் மூச்சக் காற்று இறைவன் தரும் கொடையே (ஏச 42:5). வாழ்வு குறுகி

யது (யோபு 14:1; சங் 37:36); மறையும் புகையைப் போன்றது (ஞான 2:2); நிழலைப் போன்றது (சங் 144:4); வெறுமையானது (சங் 38:6). தொடக்க காலத்தில் இருந்ததைவிட வாழ்நாட்கள் இன்னும் குறைந்து வருகின்றன (ஆதி 47:8). நூற்றிருபது, எண்பது, எழுபது ஆண்டுகள் என்று வாழும் வயது குறைந்து வருவது உண்மை (ஆதி 6:3; சீரா 18:9; சங் 90:10).

இ) வாழ்வு புனிதமானது:-

வாழும் உயிர்களனைத்தும் இறைவனிடமிருந்தே வருகின்றன என்பது உண்மையெனினும் மனிதனின் சுவாசிக்குந்திறம் இறைவனிடமிருந்து தனிப்பட்ட முறையில் வருகின்றது. ஏனெனில் ''மனிதனின் நாசிகளில் இறைவன் உயிர் மூச்சை ஊதினார்'' (ஆதி 2:7; ஞான 15:11). அந்த மூச்சுக்காற்றையே மரணத்தின்போது எடுத்துக்கொள்கின்றார் (யோபு 34:14; திருவுரை 12:7). எனவேதான், கொலை செய்வதைத் தடுப்பதன்மூலம் உயிர்களுக்குத் தம்முடைய தனிப்பட்ட பாதுகாப்பைத் தருகின்றார் (ஆதி 9:5; யாத் 20:13). காயின் போன்ற குற்றவாளிகள் கொல்லப்படுவதையும் கடவுள் விரும்பவில்லை (ஆதி 4:11-15). விலங்குகளின் ஊனை உண்ண மனிதனுக்குத் தடையில்லையெனினும் விலங்குகளின் உயிர்களும் ஒரு விதத்தில் புனிதமானதுதான். அதனால்தான் விலங்குகளின் குருதியைத் தசையினின்று பிரித்துவிட வேண்டும் என்கிறார் இறைவர். ஏனெனில், ''உடலின் உயிர் இரத்தத்தில் உள்ளது'' (லேவி 17:11). வாழும் உயிர்களுக்கு அடிப்படை இரத்தமே (ஆதி 9:4). மேலும், இரத்தப் பலியின் வழியாகத்தான் மனிதன் இறைவனுடன் உறவு செய்து கொள்கிறான்.

3. வாழ்வைப்பற்றிய உறுதிமொழிகள்:-

அ) வாழ்வின் தடைகள்:-

''எவனுடைய சாவிலும் இறைவன் மகிழ்வதில்லை'' (எச 18:32). ஏனெனில் ''சாவுக்காகவன்று, வாழ்வுக்காகவே'' இறைவன் மனிதனைப் படைத்தார் (ஞான 1:13; 2:23). மேலும் மனிதன் ஆண்டு அனுபவிக்கப் பூமியில் ஓர் இன்ப வனத்தை இறைவன் தந்தருளினார். அதிலிருந்த 'வாழ்வளிக்கும் மரத்தின் கனி' என்றென்றும் அவனை வாழ்வித்திருக்கும் (ஆதி 3:22). ஆனால், தன்னுடையவிருப்பு, வெறுப்பிற்கேற்ப வாழ்வைத் தானே தேட மனிதன் முயன்றதால் வாழ்வளிக்கும் மரத்தின் கனியை உண்ணத் தடைவிதித்தார். இதனால், மனிதனுக்கு வாழ்வளிக்கவே மறுத்துவிட்டார் என்பது பொருளன்று. தம்முடைய திருமகனின் மரணத்தால் மனிதர்களுக்கு வாழ்வளிக்குமுன்னமே ''வாழ்வின் வழிகளைத்'' தம் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார் (பழ 2:19; சங் 16:11; உப 30:15; எரே 21:8).

ஆ) வாழ்வின் நெறிமுறைகள்:-

இறைவனின் நீதிமுறைகளைப் பின்பற்றி, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்வதே வாழ்வின் நெறிமுறையாம். இதன்படி வாழ்வோர் இவைகளால் 'வாழ்வு' பெறுவர் (லேவி 18:5; உப 4:1; யாத் 15:26. ''அவர்களின் வாழ்நாட்கள் நிறைவுபடுத்தப்பெறும்'' (யாத் 23:26). இறைவனின் நீதிநெறிகளுக்குப் பணிந்து வாழ்வோருக்கு ''வாழ்நாளின் நீடிப்பும் நல்வாழ்வும் கண்களின் ஒளியும் சமாதானமும்'' கிடைக்கும் (பாரூ 3:14). ஏனெனில் இந்நெறிகள் நீதியின் வழிகள். ''நீதி வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்'' (பழ 11:19); ''நீதிமான் தன் விசுவாசத்தினால் வாழ்வான்'' (அப 2:4) ''விசுவாசியாதவனின் பெயரோ வாழ்வோரின் நூலிலிருந்து அகற்றப்படும்'' (சங் 69:29). இறைவன் உறுதியளித்த இன்பவாழ்வு இவ்வுலகிலேயே கிட்டும் எனவும், அவர்களுக்கு இறைவன் அளித்த நாட்டிலேதான் அது அடங்கியிருக்கிறது எனவும் வெகுகாலம் இஸ்ராலேயர்கள் நம்பியிருந்தனர். இறைவனுக்கு உண்மையிலேயே ஊழியம் செய்யும் இஸ்ராயேலர்க்கு இறைவன் நல்கும் நல்வாழ்வும் வாழ்நாளின் நீடிப்பும் எந்நாட்டினர்க்கும் எந்நாளும் கிடைக்காத இன்பப் பெரும்பேறாகும் (உப 28:1).

இ) உயிர்தரும் ஊற்று இறைவன்:-

இறைவன் உறுதியளித்த உன்னத வாழ்வை இவ்வுலகிலேயே வாழ்ந்தாலும்

மண்ணகப் பொருட்களால் அது மேன்மையுறுவதில்லை. மாறாக, ''உயிருள்ள நீர்சுரக்கும் ஊற்றும்'' (எரே 2:13; 17:13), ''உயிர்தரும் ஊற்றும்'' (சங் 36:10; பழ 4:27) ஆனவரான இறைவனோடு இணைந்திருப்பதில் தான் அது மாண்புறுகிறது. ''வாழ்க்கையை விட அவருடைய அன்பு (அருள்) எவ்வளவோ மேலானது'' (சங் 63:4). அதனால் தான் இஸ்ராயேலரில் உயர்ந்த எண்ணம் கொண்டோர், 'எங்கே ஒருநாள் வாழ்வது வேறிடத்தில் ஆயிரம்நாள் வாழ்வதிலும் மேலானதோ' (சங் 84:11), அங்கே, இறைவனின் அந்த ஆலயத்தில், இறைவனைப் போற்றித் தம் வாழ்நாட்கள் முழுவதும் செலவிட விழைகின்றனர். இறைவாக்கினர்களுக்கு வாழ்வு என்பது இறைவனைத் தேடுவதுதான் (ஆமோ 5:4; ஓசே 6:1).

ஈ) சாவுக்குப்பின் வாழ்வு:-

இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்த இஸ்ராயேல் மக்களினம் இன்ப வாழ்வுக்குப் பதில் சாவையே இம்மண்ணில் மிகுதியும் சந்திக்கின்றனர். எனினும் அதே சாவின் வழியாக இறைவர் நல்வாழ்வுக்கு அவர்களை இடையறாது அழைப்பதை உணர்கின்றனர். இருளின் பிடியில் சிக்கி உழலும் பாவி ''சாவதையன்று, தீய வழியை விட்டு மனந்திரும்பி வாழ்வதையே'' இறைவன் விரும்புவதாக இறைவாக்கினர் எசக்கியேல் உரைக்கின்றார் (எச 33:11). 'உயிரற்ற சடலங்களின் தொகுப்பே இந்த இஸ்ராயேல் இனம்' என்பதை எசக்கியேல் நன்கு அறிவார். ஆயினும் அவர்களது உலர்ந்த எலும்புகளில், உயிர் தரும் ஆவியை இறைவன் ஊதினால் அவர்கள் மீண்டும் உயிர்பெறுவர் என்று அறிவிக்கின்றார் (எச 37:11-14). இறைமக்கள் அடிமைகளாக நாடுகடத்தப்பட்ட காலமுதல், ''ஆண்டவரின் ஊழியன் வாழ்வோர் உலகினின்று எடுக்கப்பட்டார். தம் இனத்தாரின் அக்கிரமங்களுக்காக வதைக்கப்பட்டார்'' (ஏச 53:8), ''தம்மையே பாவத்திற்காகப் பலியாக்கினால் பெரியதொரு சந்ததியைக் கண்டு நீடுவாழ்வார்'' (53:10) என்று யாவேயின் ஊழியனை இரண்டாம் ஏசய விவரிக்கின்றார். 'பாவம்-சாவு' என்பவை அமைத்த அரணில் பழுது தோன்றிவிட்டது. ஒருவன் தனது பாவங்களின் நிமித்தம் இறந்தாலும் வாழ்வின் மேலான இன்னொரு பகுதியை இன்னும் எதிர்நோக்கலாம். தனது பாவங்களுக்காகவன்றியும் ஒருவர் இறக்கலாம். அச்சாவின் மூலம் வாழ்வையும் அடையலாம். கடவுளை நம்பி அவர் ஆணைக்குக் கட்டுண்டிருப்பவருக்கு மரணம் நேரிடும் என்ற இறைவாக்கினரின் கூற்றை மக்கபேயர் நூலில் வரும் அந்தியோக்கசின் கொடுமைகள் மெய்ப்பிக்கின்றன. அத்தகைய மரணம் இறைவனிடமிருந்து மனிதனைப் பிரிப்பதில்லை. மாறாக, உயிர்ப்பின் மூலம் வாழ்வுக்கு அவனை இட்டுச் செல்லும் வழியே அது. அத்தகையவர்களுக்கு ''இறைவன் திரும்பவும் ஆவியையும் உயிரையும் கொடுப்பார். முடிவில்லா வாழ்வே அவர்கள் தாகந்தீர்க்கும் பானம்'' (2 மக் 7:23.36). ''இறந்து மண்ணில் உறங்கும் அவர்கள் இறுதிநாளில் உயிர்த்தெழுவர்-வானத்தில் தோன்றும் ஒளிபோன்றும் விண்மீன்களின் சுடர்போன்றும் ஒளிர்வர். அவர்களைத் துன்புறுத்தியவர்களோ முடிவில்லாத் துன்ப இருளில் ஆழ்ந்து போவார்கள்'' (தானி 12:2). நீதிமான்களின் வாழ்வு இத்தகைய மாற்றத்தை அடையும் என்ற நல்ல நம்பிக்கையை ஞான நூல் வெகுவாய் விரித்துரைக்கின்றது. ''பாவிகள் பிறந்தவுடனேயே இறந்துபடுவர்'' (ஞான 5:13). அவர்கள் வாழ்ந்தாலும் செத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ''நீதிமான்களின் ஆன்மாக்களோ கடவுளின் கையில் உள்ளன'' (3:11) அவர்கள் இறந்ததும் ''முடிவில்லா வாழ்வையும் மகிமையின் மணிமுடியையும்'' பெற்றுக் கொள்வர் (5:15 தொ).

4. இயேசு கிறிஸ்து: அவரே வாழ்வு:-

இறைவன் அளித்த வாக்குறுதிகள் இறைமகன் வருகையினால் நிறைவு பெறுகின்றன.

அ) இயேசு தரும் வாழ்வின் போதனை:-

வாழ்வு விலைமதிக்கமுடியாத ஒன்று என்பதே இயேசுவின் எண்ணம். ''உண்ணும் உணவினும் மேன்மை வாய்ந்தது உயிர்''

(மத் 6:25). ''ஓய்வு நாளை அனுசரிப்பதினும் முக்கியமானது ஓர் உயிரைக் காப்பது'' (மாற் 3:4 இணை), ஏனெனில் ''அவர் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்தோரின் 'கடவுள் அல்லர்'' (12:27 இணை). சாவின் நிழலைக் கூடக் காணவிரும்பாதவர்போல் விளங்கிய இயேசு அச்சாவினையும் ஒரு நோய் போன்றே எண்ணி முடிந்தபோதெல்லாம் அப்பிணியையும் குணமாக்கி உயிர் அருள்கின்றார். ''இயேசு அங்கேயே இருந்திருந்தால் லாசர் இறந்திருக்கமாட்டான்'' (யோவா 11:15.21). உயிரளிக்கும் இவ்வல்லமை பாவத்தின்மேல் இயேசு கொண்ட ஆற்றலையும், இறப்பும், முடிவுமில்லாப் புதுவாழ்வை அளிக்கும் சக்தியையும் சுட்டிக் காட்டுகின்றது (மத் 9:6; 19:29 இணை). 'வாழ்வு' என்று கூறப்பட வேண்டிய உண்மை வாழ்வு இதுவே (7:14; 18:8). இவ்வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வழி குறுகியது. இதனை அடைய செல்வத்தைத் துறக்க வேண்டும்; தேவையானால் உடலையும் இவ்வுலக வாழ்வையுமே பலியிட வேண்டும் (மத் 16: 25 தொ).

*ஆ) கிறிஸ்துவில் வாழ்வு:-*

ஆதிமுதல் 'வார்த்தையாய்' விளங்கும் கிறிஸ்துவுக்குள் நித்தியமும் உயிர் இருந்தது (யோவா 1:4). மனுவுருக்கொண்ட அவர் ''உயிரின் வார்த்தையானவர்'' (1 யோவா 1:1). அனைத்து உயிர்கள் மேலும் அதிகாரம் கொண்ட தலைவர் அவரே (யோவா 5:26). தமது தந்தை தம்மிடம் ஒப்படைத்த அனைவருக்கும் முடிவில்லா வாழ்வை (17:2) வழங்குகிறார்; அதுவும் மிகுதியாகத் தருகின்றார் (10:10). ''வழியும் உண்மையும் உயிரும் அவரே'' (14:6) ''உயிர்ப்பும் உயிரும்'' (11: 25), ''உயிரின் ஒளியும் அவரே'' (8:12). இயேசு தரும் உயிருள்ள நீர், அதைப் பருகுகிறவன் முடிவில்லா வாழ்வடைய அவனுள் பொங்கியெழும் ஊற்றாகும் (4:14). ''வாழ்வளிக்கும் வானக அப்பம்'' கிறிஸ்துவே. தந்தையால் அவர் வாழ்வது போல், அவரின் திருவுடலை உண்பவர் அவரால் வாழ்வர் (6:27-58). கிறிஸ்துவில் வாழ்வு நிலைக்க விசுவாசம் தேவை. ஏனெனில் ''உயிர்வாழ்க்கையில் அவரில் விசுவாசம் கொள்ளும் எவனும் ஒருபோதும் சாகான்'' (11:25). ''விசுவாசம் கொள்ளாதவனோ வாழ்வைக் காணமாட்டான்'' (3:36). ''தந்தையின் கட்டளை முடிவில்லா வாழ்வாகும்'' (12:47-50) என்றுணர்ந்து அவரின் ஆணைகளைக் கிறிஸ்து பின்பற்றுவதுபோல், கிறிஸ்துவில் விசுவாசத்தோடு வாழ்பவனும் அவரின் வார்த்தைகளை ஏற்று கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*இ) உயிரின் தலைவர் கிறிஸ்து:-*

மற்றவர்கள் எதைச் செய்ய வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகின்றாரோ, அதை அவர் முதலிலே செய்கிறார். தன் தந்தையின் மேல்வைத்த அன்பின் காரணமாகவும் மக்களின்மேல் கொண்டுள்ள அன்பின் காரணமாகவும், ஆயன் தன் ஆடுகளுக்காய்த் தன்னுயிரை அளிப்பதுபோல் தாமே மனமுவந்து தம்முயிரை கையளிக்கின்றார் (யோவா 10:11.15.17 தொ; 1 யோவா 3:16). இயேசு தம்முயிரைக் கொடுக்கின்றார்; ''மீண்டும் அதனைப் பெற்றுக் கொள்ள'' (யோவா 10:17 தொ), அதன் வழியாக, தம்மேல் விசுவாசம் கொள்பவர்க்கு வாழ்வை வழங்கும், ''உயிர்தரும் ஆவியாகப் பின் அவர் ஆகின்றார் (1 கொரி 15:45). மரித்து உயிர்த்த கிறிஸ்து ''வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர்'' (அ.ப. 3:15). தயக்கம் ஏதுமின்றி இப்புதுவாழ்வைப் பற்றி எல்லா மக்களுக்கும் போதிப்பதே திருச்சபையின் தலையாய பணியாகும் (5:20). முதல் கிறிஸ்தவர்களின் வாழ்வின் தொடர் நிகழ்ச்சிகள் இதைத்தான் உணர்த்துகின்றன.

*ஈ) கிறிஸ்துவில் வாழ்வது:-*

சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து செல்லும் நிகழ்ச்சி கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் தொடர்கிறது (யோவா 5:24). ''கிறிஸ்துவின் மரணத்திற்குள் திருமுழுக்குப் பெற்று'' (உரோ 6:3) சாவிலிருந்து உயிர்த்த விசுவாசி கிறிஸ்துவுக்குள் கடவுளுக்காக வாழ்கிறான் (6:10). தன் அனுபவத்தின் வழியே தந்தையையும் தந்தை அனுப்பிய மைந்தனையும்

அவன் அறிகின்றான். இதுதான் நித்திய வாழ்வு என்றும் உணர்கிறான் (யோவா 17:3; 10:14). விசுவாசியின் ''உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது'' (கொலே 3:3); வாழும் இறைவனின் கோயில் அவன் தான் (2 கொரி 6:16) என்பதையும் அவன் உணர்கிறான். இவ்வாறு இறைவனின் தெய் வீக இயல்பிலும் இதுவரை அவர் அறியாதி ருந்த் புதுவாழ்விலும் (எபே 4:18; 2 பேதுரு 1:4) அவன் பங்கு பெறுகின்றான். கிறிஸ்து விடமிருந்து பெற்ற திரு ஆவி அவனுள் குடி கொண்டிருப்பதால் அவ்வாவியானவர் அவ னுடைய உள்ளுயிராய்த் திகழ்கின்றார் (உரோ 8:10). உடலின் விருப்பு, வெறுப்பு கள் இனிமேல் அவனைக் கட்டுப்படுத்தா. முடிவில்லா வாழ்வை அனுபவிக்க, யாதொரு அழிவுமின்றி அவன் சாவைக் கடந்து வாழ்வுக்குச் செல்வான் (8:11). இனி மேல் அவன் வாழ்வது, அவனுக்காகவன்று, ''அவனுக்காய் மரித்து உயிர்த்த கிறிஸ்துவுக் காகத்தான்'' (2 கொரி 5:15). அவனுக்கு இனி ''வாழ்வதென்பது கிறிஸ்துவே'' (பிலி 1:21).

உ) சாவை அழித்த வாழ்வு:-

கிறிஸ்தவன் இயேசுவின் வாழ்வு தன் உடலில் வெளிப்படும்படி கிறிஸ்துவின் பாடுகளைத் தாங்கி இவ்வுலகிலேயே அவரு டைய மரணத்தில் பங்குபெறுகிற அளவுக்கு கிறிஸ்துவின் வாழ்வைத் தன் உடலில்கூட வெளிப்படுத்துவான் (2 கொரி 4:10). சாவுக் குரியது வாழ்வில் ஆழ்ந்து கலந்துவிட வேண்டும் (2 கொரி 5:4). அழிவுக்குரியது அழியாமையை (சாகாமையை) அணிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவனுக்கும் இந்த மாற்றம் மரணத்திற்குப் பின்னர்தான் நிகழும். வாழ்வைத் தடுப்பதற்குப் பதில் அதனை என்றென்றும் இறைவனில் நிலைத் திருக்கச் செய்து வாழ்வுக்கு வெற்றியருள் வது மரணமே (15:54). திருவெளிப்பாட்டு நூல் இறந்த மறை சாட்சிகள் ஏற்கெனவே இறைவனோடு விண்ணகத்தில் இருப்பதை விவரிக்கிறது (திருவெளி 6:9). கிறிஸ்து வோடு ஐக்கியமாகிவிட மரணத்தை விழை கிறார் புனித பவுல் (பிலி 1:23). இயேசு வோடு வாழும் வாழ்வு அவரின் உயிர்ப்பி னால் விளைந்த பயனே (1 தெச 5:10). விசுவாசிகட்கு இறந்தவுடனே அவ்வாழ்வு கிட்டக்கூடும். அவ்வாழ்வை ஏற்ற ஒவ்வொ ருவரும் கடவுளைப்போல் இருப்பர், அவர் இருப்பதைப்போல் அவரைப் பார்ப்பர் (1 யோவா 3:2), முகமுகமாய்க் காண்பர் (1 கொரி 13:12). விண்ணக வாழ்வின் நிலைக்க ளனே இக்காட்சி தான்.

மண்ணினின்று இறுதிநாளில் எழும் உட லும் மகிமைபெற்று முடிவில்லா வாழ்வில் பங்குபெறுகையில்தான் வரவிருக்கும் விண் ணக வாழ்வு நிறைவுறுகின்றது. பின்னர், ''நம்முடைய உயிராகிய கிறிஸ்து'' (கொலோ 3:4), ''மனிதரிடையே உள்ள கட வுளின் இல்லமாம்'' விண்ணக எருசலேமில் (திருவெளி 21:3) தோன்றுவார். அங்கே வாழ்வு நீர் நிறைந்து ஆறு ஓடும், வாழ்வின் மரம் செழித்து வளரும் (22:1.14.19). அப் பொழுது சாவு என்பதே இருக்காது (21:4). அது ''நெருப்புக்கடலுள் வீசி எறியப்படும்'' (20:14). ''அனைத்திலும் அனைத்துமான இறைவனுக்கு'' எல்லாமும் ஆட்பட்டிருக் கும் (1 கொரி 15:28). அது ஒரு புதிய இன்பவனமாய் இருக்கும். அங்கே புனிதர் கள் இறைவனின் வாழ்வையே கிறிஸ்துவுக் குள் என்றென்றும் சுவைத்து மகிழ்வார்கள்.

## உயிர்த்த இயேசு அளித்த காட்சிகள் (APPARITIONS OF CHRIST)

1. விவிலியத்தில் கண்டுள்ள காட்சிகள்

இறைவன் தன்னை வெளிப்படுத்தக் கையாண்ட பற்பல வழிகளில் காட்சிகளும் ஒன்று என்பதை மறைநூலில் காணலாம். சாதாரணமாகக் கண்களுக்குப் புலப்படாத (ஆவியுலக) ஆட்கள், காட்சிகள்மூலம் மக்க ளுக்குத் தம்மை வெளிப்படுத்துவதுபோல, பழைய ஏற்பாட்டில் இறைவன் நேரடியாகக் காட்சியளித்துத் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகின்றார்; அல்லது, மறைமுக மாகத் தமது தூதுவர்கள் வழியாகத் தமது பிரசன்னத்தை உணர்த்துகின்றார். பழை. ஏற்பாட்டில் தேவதூதர்கள் தோன்றும் பி.. காட்சிகளும், ஏனைக் கனவுக் காட்சிகளு. ஓரளவு இவ்வகையைச் சேர்ந்தவையேயா

கும். இயேசுவின் பிறப்பின்போதும் (மத் 1-2; லூக் 1:11,26; 2:9), உயிர்ப்பின்போதும் (மத் 28:2 தொ; மாற் 16:5; லூக் 24:4; யோவா 20:12), ஆண்டவரின் தூதன் அல்லது தேவதூதர்கள் காட்சியளிப்பதாகப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகின்றது. இதன்மூலம், கிறிஸ்துவினுடைய வாழ்க்கையின் உச்சக்கட்டங்களில் விண்ணகமே மண்ணகத்தில் இருந்தது என்பது உணர்த்தப்பட்டு காட்சிகள் பற்றி பழைய ஏற்பாடு கொண்டிருந்த கருத்தையும் போக்கையும் புதிய ஏற்பாடு இந்த அளவுக்குத்தான் ஏற்றுக் கொள்கிறது.

ஆனால் இறைவனின் மகிமை வெளிப்படும் இறைத் தோற்றங்களை எடுத்துக்கூறுவதைத் தவிர்ப்பதின் மூலம், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிலிருந்து முன்னேற்றமும் வளர்ச்சியும் காட்டுகிறது. ஏனெனில் இயேசு உருமாறிய காட்சி (மத் 17:1-9 இணை), அவர் கடல்மீது நடந்துவந்த காட்சி (14:22-27 இணை) ஆகியவற்றில் மறை உண்மை பொதிந்த இயேசுவின் விண்ணக இயல்புகள் தெளிவாக வெளிப்பட்டாலும், இவற்றை ''இறைத்தோற்றம்'' என்ற பெயரினால் அழைக்க இயலாது. உண்மையில், ''யாருமே கடவுளைக் கண்டதில்லை, தந்தையின் அணைப்பில் உள்ள ஒரே பேறானவர்தாம் அவரை வெளிப்படுத்தினார்'' (யோவா 1:18) என்று யோவான் கூறுவதில் புதிய ஏற்பாட்டில் நிகழ்ந்துள்ள பெரிய அடிப்படை மாற்றத்தைக் காணலாம். ஆனால் எப்படி இயேசு தம் தந்தையை வெளிப்படுத்துகிறார்? அவர் இருத்தலே வெளிப்பாடாகிறது. ''என்னைக் கண்டவன் தந்தையையேகண்டான்'' (14:9; காண் 12:45). அதாவது இறைவனே கிறிஸ்துவில் காட்சியளித்துள்ளார். ''நம் மீட்பராகிய இறைவன் நம்மீது கொண்ட பரிவும் நேசமும் வெளியானபோது'' (தீத் 3:4), மகத்தான ஒரு பெரும் மறை உண்மை இவ்விதம் வெளியாயிற்று(1 திமோ 3:16). இப்பொழுது நாம் காத்திருப்பதோ ''அவருடைய மகிமை தோன்றும்''(2: 13) இறுதி நாட்களை எதிர்பார்த்துத்தான். இவ்விறுதிக் காட்சி மின்னலைப்போல் தோன்றும் (லூக் 17:24). இக்காட்சியில் ஸ்தேவான் கண்டதுபோல இயேசு ''இறைவனின் வலப்பக்கம் நின்று'' (அ.ப.7:55) சாட்சியம் அளிப்பவராகத் தோன்றாது, ''வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து''(மத் 26:64 இணை) நடுத்தீர்ப்பாளராகக் காட்சியளிப்பார். கிறிஸ்துவாக வெளிப்பட்ட அவர், அந்நாளில் நம்மையும் ''அவரோடு மகிமையில் விளங்கச் செய்வார்'' (கொலோ 3:4). ''அவ்விறுதி வருகையில், தம் மீட்பை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கு'' (எபி 9:28), ''தம் மகிமையின் வாடாத வெற்றிவாகையைச் சூட்டுவார்'' (1 பேதுரு 5:4). ''அவர்வெளிப்படும்போது அவரைப் போலவே நாமும் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்'' (1 யோவா 3:2).

உயிர்த்த இயேசு அளித்த காட்சிகள், பழைய ஏற்பாடு கூறும் இறைத் தோற்றங்களுக்கும் உலக முடிவில் ஏற்படவிருக்கும் இறுதிவருகையின் காட்சிக்கும் இடைப்பட்டனவாக உள்ளன. ஏனெனில் அவை நசரேனாகிய இயேசுவின் முந்திய இறைநிலையைச் சிறிதளவு காட்டுவதோடு, அவருடைய மறுவருகையையும் முன்னுணர்த்துகின்றன.

2. கிறிஸ்து அளித்த வெவ்வேறு காட்சிகள்:-

இவற்றின் எண்ணிக்கையைக் குறித்து கி.பி. 55-ஆம் ஆண்டில் பவுல் தரும் அட்டவணை மிகப் பழமையானதாகும். இதற்கு முன் மரபுவழிச் செய்தியாக வந்த தகவலின் அடிப்படையில் எழுந்திருந்தது அவர் எண்ணிக்கை. இதையே ஏறக்குறைய கி.பி. 50-இல் கொரிந்து நகர மக்களுக்கும் அவர் அளிக்கின்றார் (1 கொரி 15:3 தொ). இப்பழைய விசுவாச அறிக்கையின்படி, கிறிஸ்து முதலில் கேபாவுக்கும் பின்னர் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்க்கும் தோன்றினார். பின்னர் யாக்கோபுக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். இறுதியாகப் பவுலுக்கும் தோன்றினார். ஆனால் நற்செய்திகள், சீமோனுக்கும் (லூக்

24:34), அதற்குப்பின் பதினொருவருக்கும் (மத் 28:16-20; மாற் 16:14-18; யோவா 2019-29) அவர்களோடு கூடியிருந்த பிறருக்கும் (லூக் 24:33-50 அளிக்கப்பட்ட இரு காட்சிகளைக் குறிப்பிடுகின்றன. ஆனால் அதே சமயத்தில் கிறிஸ்து தனி நபர்களுக்குத் தோன்றினதை நற்செய்திகள் குறிப்பிடுகின்றன: மரியாளுக்கும் பெண்களுக்கும் (யோவா 20:11-18; மத் 28:8-10; மாற் 6:9-11), எம்மாவுக்குச் சென்று கொண்டிருந்த சீடர்களுக்கும் (லூக் 24:13-35; மாற் 16:12 தொ), பிறகு திபேரியாக் கடற்கரையில் எழுவருக்கும் தோன்றினார் (யோவா 21:1-23). கிறிஸ்து அளித்த அனைத்துக் காட்சிகளையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: அப்போஸ்தலர் குழுவுக்கெனத் தனியாக அளிக்கப்பட்ட காட்சிகள்; பொதுவாகச் சீடர்களுக்கு அளிக்கப்பட்ட காட்சிகள். முதல் வகை திருச்சபையின் பொதுப்பணியைச் சார்ந்தவை; திருச்சபையின் அடித்தளமாக வுள்ள திருக்கட்டளைகளுக்கு இவை முதன்மை தருகின்றன. இரண்டாம் வகை தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்பட்டவை. காட்சியளிப்பவர் யாரென இனங் கண்டு கொள்வதற்கு இவை முதன்மை தருகின்றன.

3. வெளிப்பாடுமன்று, வரலாறுமன்று:-

கிறிஸ்து அளித்த காட்சிகளை நற்செய்தியாளர்கள் வெளிப்பாட்டுக் காட்சிகளாக நமக்கு அளிப்பதில்லை; ஏனெனில், இக் காட்சிகளில் (வெளிப்பாட்டு இலக்கியத்தில் இருப்பதுபோல) காட்சியாளரின் மகிமை வலியுறுத்தப்படவில்லை; மறைபொருட்கள் வெளியாக்கப்படவில்லை; காட்சியமைப்புக்களில் வழக்கத்துக்கு மாறாக எந்த விதமான ஆடம்பரமும் இருப்பதில்லை; மாறாக இயேசு என்றும்போல, வழக்கமான முறையில் அவர்களோடு உலவுகிறார்; நற்செய்திப்பணிக்குத் திருக்கட்டளை தருகிறார். நடந்தவைகளை விவரிக்க நற்செய்தியாளர் பின்பற்றும் இத்தகைய புதிய முறை, அவர்கள் பெற்றது முற்றிலும் புதியதொரு அனுபவம் என்பதற்குச் சான்று பகர்கின்றது. மேலும் சாதாரணமாக விண்ணுலகத்துக்குரியவைகளை விவரிப்பதில் ஆர்வம் காட்டும் வெளிப்பாட்டுச் சொல்முறையை இப்புதிய அனுபவம் மாற்றியமைக்கிறது.

மேலும், உயிர்த்த இயேசு அளித்த காட்சிகளைக் காலமுறைப்படி நெறிப்படுத்துவது நற்செய்தியாளரின் குறிக்கோள் அன்று. எனவே, இடம், காலம் என்பன ஒத்திருக்குமாறு, நற்செய்தியாளர் காட்சிகளை வரிசைப்படுத்த இயலாது. உயிர்த்த நாளன்று எருச்லேமில் அளித்த காட்சியையும் (லூக், யோவா), எட்டாம் நாளன்று அளித்த காட்சியையும் (யோவா), பிறகு கலிலேயாவிலும் (மத், யோவா.) பின்னர் மறுபடியும் விண்ணேற்றம் அடைந்த சமயத்தில் எருசலேமில் அளித்த காட்சிகளையம் (லூக்) ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்திக்காட்டுவது, ஏற்றுக்கொள்ள இயலாத அளவுக்குச் செயற்கையாகத் தோன்றுகிறது. ஏனெனில் இம்முயற்சி சில முக்கியமான இலக்கிய மரபுகளை மறந்துவிடுகிறது. லூக் 24:49-இன்படி ஐம்பதாம் நாள் வரை எருசலேமில் சீடர்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதால் கலிலேயக் காட்சிகள் நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லாது போகின்றது. ஆனால் மத்தேயும் மாற்கும், இயேசு அவர்களைச் சந்திக்கக் கலிலேயாதான் குறிக்கப்பட்ட இடமாகும் என்று கூறுகின்றனர். எருசலேம், கலிலேயா- இவ்விரு இடங்களுக்கும் இடையேயுள்ள நிலவியல் வேறுபாட்டை நீக்குதல் என்பது இயலாத காரியம். மேலும் காட்சி கொடுக்கப்பட்ட தேதிகளை ஒட்டியும் இதேவிதமான முரண்பாடுகள் எழுகின்றன; விண்ணேற்பு உயிர்த்த நாளன்றே நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றது லூக் 24; யோவா 20:2-ம் உயிர்த்த நாளன்றே இறைஆவி கொடுக்கப்பட்டதாகவும் (யோவ 21), பிறகு திபேரியாக்கடற்கரையில் இயேசு தோன்றியதாகவும் குறிப்பிடுகின்றது. இவற்றிற்கெல்லாம் மாறாக, அ.ப. 1:3 விண்ணேற்பு ``பல நாட்களுக்குப் பின் நடந்ததாகக் கூறுகின்றது. எருசலேமிலேயே ஒரு நாள் பொழுதுக்குள் உயிர்த்த காட்சி அனைத்தும் நிகழ்வதாக லூக்கா அமைக்கின்றார். யோவானோ, ஒரு வார காலவரைக்குள் இயேசு தோன்றுவ

தாக அமைக்கின்றார். எனவே இவர்கள் உயிர்த்த இயேசுவின் காட்சிகளை வரிசைப் படுத்திய முறை, அவரவரின் இலக்கியப் பாணிக்கேற்ப அமைத்துக் கொண்ட செய் கைமுறையாகும் என்பது தெளிவாகின்றது.

மேலும் உயிர்த்த காட்சிகளில் ஒரு புகைப் படத்துக்குரிய நுணுக்கங்களை எதிர்பார்ப் பது முறையன்று; எனவே காட்சியில் வரும் சில அம்சங்களை (கதவுகள் மூடியிருந்தன; உடலைத் தொடுதல்) அக்காட்சியின் முழு மையின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண் டுமே தவிர, அவைகளைத் தனியே எடுத்து பெரிதுபடுத்தக் கூடாது. உயிர்த்த இயேசு வின் ஒரு குறிப்பிட்ட இயல்பினை வெளிப் படுத்தவே இவை பயன்படுகின்றன.

4. இயேசுவே முன்வந்து காட்சிதருதல்; காட்சி பெறுபவர் கண்டுகொளல்; நற்செய் திப் பணிக்கு அனுப்பப்படல்:-

உயிர்த்த காட்சிகள் ஒவ்வொன்றிலும் இம் மூன்று அம்சங்களையும் காணலாம். நற் செய்தியாளரின் உள்நோக்கங்களை அறிந்து கொள்ள இவை மிகவும் உதவுகின்றன. (அ) மக்கள் சிறிதும் எதிர்பாராத வேளையில் இயேசு காட்சியளிப்பதாகவே (லூக் 24:34- ஐத்தவிர) நற்செய்தியாளர்கள் நமக்கு அறி விக்கின்றனர். இதன்மூலம், உயிர்த்த காட்சி கள், மக்கள் தங்களின் சொந்த நலனுக்காகப், புனைந்துரைத்த கட்டுக்கதைகளுமல்ல; தங் கள் விசுவாசத்தின் ஆரம்பகால ஆர்வத்தின் படைப்புமன்று, தங்கள் கட்டுக்கடங்காத கற்பனா சக்தியின் விளைவுமன்று என்பதை நற்செய்தியாளர்கள் எடுத்துக்காட்டுகின்ற னர். 1 கொரி 15 ''அவர்கள் தம்மைக் கண்டுகொள்ளும்படி கையளித்தார்'' என்று கூறுகிறது. இயேசு தாமாகவே முன்வந்து காட்சியளிக்கின்றார் என்ற கருத்து, இக்காட் சிகள் உண்மையிலேயே அவர்களுடைய ஆழமான சொந்த அனுபவம் என்பதை எடுத் துக் காட்டுகின்றது. ''இயேசுவை உயிர்த்தெ ழச் செய்து, அவர் தம்மைப் பிறருக்குக் காட்டுமாறு இறைவன் சித்தங்கொண்டார். இச்சந்திப்பின் விளைவே விசுவாசம்'' என்ற முதற் கிறிஸ்தவர்களின் போதனையோடு இக்கருத்து, ஒத்துப்போகிறது.

ஆ) காட்சிபெறுபவர் இயேசுவை அடை யாளம் கண்டுகொள்வது:-

இக்காட்சிகளின் இரண்டாம் அம்சமா கும். ''நசரேனாகிய இயேசு இவர்; இவரு டைய வாழ்வும் இறப்பும் நமக்குத்தெரிந்த தே'' என்று சீடர்கள் தங்களைச் சந்திக்கும் இயேசுவை அடையாளம் கண்டு கொள்கின் றனர். ''இறந்தவர் உயிருடன் உள்ளார்; இறை வாக்குகள் யாவும் அவரில் நிறைவே றியுள்ளன'' என்பதையும் உணர்கின்றனர். ஒருவகையில் வருங்காலத்தில் அவர்கள் பார்ப்பதற்குப் புதிதாக வேறொன்று மில்லை; ஏனெனில் அனைத்தையும் உயிர்த்த இயேசுவில் தாங்கள் கண்டுவிட் டதை அவர்கள் உணர்கின்றனர். அப்போஸ் தலர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொள்வது படிப்படியாக நிகழ்கிறது; முத லில் இயேசுவை வழிப்போக்கனாகவோ (லூக் 24:15; யோவா 21:4 தொ), தோட்டக்கா ரனாகவோ (யோவா 20:15), அதாவது சாதா ரண மனிதனாகத்தான் சீடர்கள் காண்கின்ற னர்; பிறகுதான் ஆண்டவரைக் காண்பதாக உணர்கின்றனர். இவர்கள் இவ்வாறு இயேசு வைக் கண்டுகொள்வதற்கு யாருடைய வற்பு றுத்தலும் காரணமன்று; ஏனெனில், நற்செய் திகள் கூறுவது போல நம்பிக்கையின்மை என்பது அன்றைய மரபின் ஒரு கூறு ஆகும் (மத் 28:17; மாற் 16:11,13 தொ; லூக் 24:37,41; யோவா 20:25-29); இவர்களும் அவரை நம்ப மறுத்திருக்கலாம். இறுதியாக, சாதாரண மாக இயேசு பலர் கூடி இருக்கையில் தோன் றுவதால், அவரைக் கண்டவர்கள், தாங்கள் கண்டதையெல்லாம் தங்களுக்குள் ஒப்பிட் டுச் சரிபார்த்து உண்மையை ஐயமற உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த அடிப்படை உண்மையை எழுத்தில் வடிக்க நற்செய்தியாளர் மேற்கொண்ட முயற்சிகளில், இரு அம்சங்களை ஒரே சம யத்தில் வலியுறுத்த விரும்புகின்றனர்; உயிர்த்த இயேசு இவ்வுலக வாழ்வின் வழக்

கமான விதிகளுக்குக் கட்டுப்பட்டவரல்லர்; பழைய ஏற்பாட்டில் இறைவன் நேரடியாகக் காட்சியளித்ததுபோல (ஆதி 18:2; எண் 12:5; யோசு 5:13; 1 நாள் 21:15; தொ; செக் 2:7; 3:5; தானி 8:15; 12:5..), இயேசுவும் தமது விருப்பப்படி தோன்றுகிறார்; மறைகின்றார். இருப்பினும் அவர் ஒரு பூதம் அல்லர்; எனவேதான் இயேசுவைத் தொட்டுணருதல் வலியுறுத்தப்படுகிறது. எனவே உயிர்த்த காட்சிகளைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், இவ்விரு அம்சங்களையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். கிறிஸ்துவின் உடல் உண்மையான உடல்; ஆனால் பவுல் முரணணியில் கூறுவது போல இது ''ஆவிக்குரிய உடல்'' (1 கொரி 15:44-49). ஏனெனில் இவ்வுடல் ஆவியினால் உருமாற்றம் பெற்றது (காண் உரோ 1:4).

இ) இக்காட்சிகளின் மூன்றாவது பண்பினை, அங்குக் காணப்படும் உரையாடல்களிலிருந்து பெறுகிறோம்; உயிர்த்த இயேசுவை அடையாளம் கண்டுகொள்ளும்போது, விண்ணகத்திற்கே உரிய பேற்றினை இங்கேயே சீடர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இயேசுவின் வார்த்தைகள் அவர்கள் இன்னும் நிலவுலகத்தில்தான் இருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகின்றன. 'உலகுமுடியும் மட்டும் நான் உங்களோடு இருப்பேன்' (மத் 28:20) என்ற இயேசுவின் உறுதிமொழி அவர்களுக்கு இந்தப் பொருளைத்தான் தருகிறது. தாம் ஆற்றிவந்த நற்செய்திப் பணியைத் தொடர்ந்து நடத்துமாறு இயேசு கூறுவதையும் கேட்கின்றனர் (28:9; மாற் 16:15-18; லூக் 24:48 தொ; யோவா 20:22 தொ; காண் மத் 28:10; யோவா 20:17). இயேசு தொடர்ந்து சீடர்களோடு இருப்பது இயக்கம் இல்லாத இருப்பன்று; மாறாகச் செயலூக்கமிக்க இருப்பாகும்; நற்செய்திப்பணியை நடத்திச் செல்லும் ஆக்கமிக்கதாகும்.

மேற்கூறிய மூன்று அம்சங்களும் ஒன்றோடொன்று இணைந்து இயங்க வேண்டும். உயிர்த்த கிறிஸ்து தாமே முன்வந்து நிகழ்காலத்தைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொண்டு வருகிறார்; நசரேத்தூர் இயேசுவில் இறந்த காலத்தின் இயல்புகளைக் காண்பதற்கும், எதிர்காலமாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பவும் கிறிஸ்து தம் சீடர்களை அழைக்கிறார்.

5. பவுலுக்கு இயேசு அளித்த காட்சி சில தனிப்பட்ட பண்புகளோடு விளங்குகின்றது (கலா 1:12-17; அ.ப.9:3-19 இணை). பிறர் பெற்ற காட்சிகளுக்கும் தாம் பெற்ற காட்சிக்கும் பவுல் எவ்வித வித்தியாசமும் பாராட்டுவதில்லை; மற்ற சீடர்களைப் போலத் தாமும் உயிர்த்த இயேசுவைக் கண்டதாகவே நம்புகிறார். ஆகவே தமாஸ்கு செல்லும் வழியில் இயேசு தம்மை ஆட்கொண்ட காட்சியை அதற்குப்பின் தாம் பெற்ற காட்சிகளிலிருந்து (அ.ப.16:9; 18:9; 23:11; 27:23) வேறுபடுத்திப் பேசுகின்றார். மேலும் பிறமனிதர்களின் இடையீட்டின் மூலமாக அல்லாது (கலா 1:1; காண் அ.ப.9:6; 22:15), இயேசுவே நேரடியாகப் (அ.ப.26:16 தொ) பவுலை நற்செய்தி அறிவிக்கும் பணிக்கு (கலா 1:16) அழைத்துக் கொண்டதாக இக்காட்சிக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இக்காட்சியே அவரை ஓர் அப்போஸ்தலனாக்கியது; இருந்தும் அவரைப் பன்னிருவருள் ஒருவராக ஆக்கவில்லை (1 கொரி 9:1). பன்னிரு அப்போஸ்தலர்கள் உயிர்த்த கிறிஸ்துவின் உருவில் தங்களோடு வாழ்ந்த (காண் அ.ப.2:21 தொ) நசரேனாகிய இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, அக்கிறிஸ்து கொடுத்த வார்த்தையின் அடிப்படையில் திருச்சபையைக் கட்டி எழுப்பலாயினர். பவுல், தன்னைப் பொறுத்தமட்டும் தான் துன்புறுத்திக் கொண்டுவந்த திருச்சபையின் வழியாகவே, இயேசுவைக் காண்கிறார். இதிலிருந்து இரு உண்மைகள் வெளியாகின்றன: பவுல் பெற்ற காட்சி திருச்சபையின் பிறப்பிற்குத் துணையாக அமையவில்லை; அடுத்து இக்காட்சியின் மையமாக, விளங்குவது உயிர்ப்புக்கு முந்திய இயேசு அல்லர்; மாறாக, ஏற்கெனவே எழுப்பப்பட்டிருந்த திருச்சபையாகும். இக்காரணங்களுக்காகவும், இக்காட்சியை லூக்கா விண்ணேற்புக்குப்பின் நிகழ்வதாகக் குறிப்பிடும் காரணத்தாலும், இக்காட்சி வெளிப்பாட்டு இலக்கிய நடையில்

விவரிக்கப்படுகின்றது. பவுலும் இந்நடையைத்தான் பின்பற்றுகிறார் (கலா 1:15). இக்காட்சியில் குறிக்கப்படும் ஒளி, குரல், மாட்சிமை ஆகியவை இக்காட்சியைப் பதினொரு அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட காட்சிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், பவுல், இக்காட்சியை முதல் நாற்பது நாட்களில் அருளப்பட்ட காட்சிகளோடு ஒத்த நிலையில் வைத்துப் பேசுகிறார்.

6. உயிர்ப்பும், அதைவிளக்கும் இலக்கிய நடையும்:-

பெற்ற பாஸ்கு அனுபவத்தை விவரிக்க நற்செய்தியாளர்கள் கையாளும் நடையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நாம் இரண்டு வரையறைகளை மனத்தில் கொள்ளவேண்டும். ஒருபுறம் எல்லாவற்றிற்கும் மேலாக உயிர்ப்பு நிகழ்ச்சி, உலக இறுதியில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளின் வகையைச் சார்ந்ததாகும்; எனவே இயேசு உயிர்த்தெழுந்தார் என்றால், அவர் மீண்டு உலகவாழ்வைப் பெற்றார் என்று பொருளாகாது; மாறாக இனிமேல் சாவே இல்லா வாழ்வுக்குள் புகுந்தார் (உரோ 6:9) என்று அர்த்தமாகும். எனவே இந்நிகழ்ச்சியை விவரிப்பது என்பது முடியாத காரியம். ஏனென்றால் இது நம் அன்றாட வாழ்வின் அனுபவக் கூறுகளுக்கு அப்பாற்பட்டது. ஆதலால் நமது அன்றாட மொழிவழக்கில் இதனை விளக்குவதோ, வெளிப்படுத்துவதோ கடினமான செயல். மறுபுறம் இயேசுவின் உயிர்ப்பு அப்போஸ்தலர்களைப் பொறுத்த அளவில் ஓர் உண்மை அனுபவமாகும்; இது ஓர் வரலாற்று நிகழ்ச்சி; அத்துடன் இது வரலாற்று அறிவைச் சார்ந்தும் இருக்கிறது.

எனவே உயிர்த்த காட்சிகளைப் பற்றி இருவித கோடிக் கொள்கைகளைத் தவிர்க்க வேண்டும்; 1) இயேசுவின் உயிர்ப்பு புராணம் அன்று; எனினும் உயிர்த்தகாட்சிகளின் புராண இயல்புகளைக் களைந்துவிட்டு அதன் உட்பொருளை மட்டும் உணர்வதென்பது அர்த்தமற்றது. அவ்வாறு செய்வது இறந்த தலைவர்கள் தம் தொண்டரின் நினைவில் வாழ்வது போலத்தான், இயேசுவும் வாழ்கிறார் என்ற பொருள் தரும்; இது உயிர்ப்பின் உயர்வைக் குறைப்பதாகும். இத்தகைய கோடிக் கொள்கையைத் தவிர்ப்பதற்காகவும், உயிர்த்த காட்சிகள் அப்போஸ்தலர்களின் உள்மன உந்துதலின் விளைவே என்று வாதிப்போரை எதிர்ப்பதற்காகவும் மற்றொரு கோடிக் கொள்கையை மேற்கொள்ளக்கூடாது. எதுவும் உண்மையாக இருக்க வேண்டுமென்றால் புலன்களுக்குப் புலப்படக்கூடியதாயும், காலம். இடம் என்ற அளவைகளுக்கு உட்பட்டதாயும் இருக்கவேண்டும் என்று வரையறுப்பதும் தவறாகும். உயிர்பெற்ற லாசர் தன் உறவினரோடும் நண்பர்களோடும் மீண்டு கொண்ட உறவையும், உயிர்த்த கிறிஸ்து தம்சீடரோடு கொண்ட உறவையும் ஒப்பிட்டு, ஒரே நிலையில் வைப்பது தவறு. ஏனென்றால் இயேசுவின் உயிர்ப்பு தனிச் சிறப்புமிக்கதாகும். இறந்தபின் மீண்டு உயிர்பெற்றெழுந்த ஓர் உடலைப்பற்றி நமக்குள்ள கற்பனைக் கருத்துகளை, ஒருசில மாற்றங்களோடு இயேசுவின் உயிர்த்த உடலுக்குச் சாற்றிக் கூறுவது போதாது; இவ்வாறு ஒப்பிடுவதால், உட்பொருளை மறந்துவிட்டு, வெளித்தோற்றத்திற்கே அதிக முக்கியத்துவம் தரும் நிலை ஏற்படலாம்.

உண்மையில் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி அப்போஸ்தலர்கள் பெற்ற அனுபவம் வெறும் அகத்தன்மையுடையது அன்று. அவர்களின் உள்ளுணர்வுகளால் தோன்றிய உருவவெளிப்பாடும் அன்று. உயிர்த்த இயேசுவைக் காணும் அனுபவம் அவர்களுக்குப் பலமுறை கிடைத்தது; பலருக்கும் கிடைத்தது. அந்தக் கூட்டு அனுபவமே, அக்கால மொழி நடையில், இறுதிக்காலத்தில் அனைவரும் பெறவிருக்கும் உயிர்ப்புப்பற்றி அவர்கள் கொண்டிருந்த சமய நம்பிக்கையின் அடிப்படையில் அப்போஸ்தலர்களால் வழங்கப்பட்டது. உயிர்த்த கிறிஸ்துவுடன் கொள்ளும் தொடர்பினை, மற்ற மனிதருடன் கொள்ளும் தொடர்பைப் போன்றதாக நாம் எண்ணாமல் இருக்க வேண்டுமானால்,

நாம் முன்பு குறிப்பிட்ட உயிர்ப்பின் மூன்று அடிப்படைப் பண்புகளையும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். சீடர்கள் எதிர்பாராத இடங்களிலும் நேரங்களிலும் இயேசுவே முன்வந்து காட்சி தருகிறார். இதனால் தாம் ஆண்டவரைக் காண்பது கனவா, அல்லது கற்பனையா என்ற ஐயப்பாடு அவர்களைவிட்டு நீங்குகிறது. அடுத்து, அவரைக் காணும் போது, அவ்வனுபவத்தைத் தம் இறந்த கால அனுபவங்களோடு ஒப்பிட்டுத் தமக்கு இப்போது காட்சி தருபவர், முன்பு தம்மோடு வாழ்ந்தவர்தாம் என்று அவரை அடையாளம் கண்டு கொள்கின்றனர். மூன்றாவதாக, அவரது சொற்களில் எதிர்கால இறையரசை அமைக்க வேண்டுமென்ற கட்டளையை அவர்கள் கேட்கின்றனர். இம் மூன்று கூறுகளையும் நன்கு புரிந்து கொண்டால், உயிர்த்த இயேசு இன்று நம்முடன் இருக்கும் இரகசியத்தையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

7. காணாமலே விசுவாசிப்போர் பேறுபெற்றோர் (யோவா 20:29):-

எதிர்கால விசுவாசிகளின் மனநிலையை மனத்திற்கொண்டே, தோமையார் இயேசுவை நம்பமறுத்த நிகழ்ச்சியை யோவான் எடுத்துரைக்கிறார். உயிர்த்த இயேசுவை முதலில் கண்ட அப்போஸ்தலர்கள் இருந்த சூழ்நிலையும், பிற்காலத்திய விசுவாசிகளின் சூழ்நிலையும் வேறு வேறானவை. சொல்லப்போனால், அப்போஸ்தலர்களுக்கும் இக்காட்சியனுபவம் இன்றியமையாத் தேவையன்று என்று நற்செய்திகளே குறிப்பிடுகின்றன; உயிர்ப்பின் அறிவிப்பே அவர்களுக்குப் போதுமானது (மாற் 16:13). திருமறைநூல் கூறியதை எல்லாம் அவர்கள் புரிந்து கொண்டிருந்தால் அது இயேசுவின் உயிர்ப்பை விசுவாசிக்க, சீடர்களை இட்டுச் சென்றிருக்கும் (யோவ 20:9). ஒருவிதத்தில், முதிர்ச்சியடையாத அவர்களின் இளம் விசுவாசத்திற்கு வளர்ச்சிதரும் நோக்கத்தோடுதான் உயிர்த்த இயேசு தம்மைக் காட்டினார் என்று கூறுவதும் பொருந்தும்.

ஆனால், இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது உயிர்த்த இயேசுவின் காட்சிகள் இன்றியமையாதனவாயும், தனிச்சிறப்புமிக்க முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் தோன்றுகின்றன. இதையே, நாற்பது நாள் காட்சிகள் பற்றிக் கூறும் அப்போஸ்தலர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். நசரேத்தூர் இயேசுவுடன் வாழ்ந்த அப்போஸ்தலர்கள், மிக முக்கியத்துவம்வாய்ந்த வகையில் இயேசுவுக்குச் சான்றுகளாய் விளங்கும் பேறுபெற்றனர். திருச்சபையின் தோற்றத்திற்கும், கிறிஸ்தவ விசுவாசத்தின் தோற்றத்திற்கும் மறுக்க முடியாத வரலாற்றுச் சான்றுகளுடன் ஓர் உறுதியான அடித்தளத்தை எழுப்புவது மிக மிக அவசியம். இதன்மூலம் உயிர்த்த ஆண்டவரைச் சீடர்கள் கண்ட அனுபவம் ஓர் வரலாற்று உண்மை என்று உறுதியாகக் கூறலாம். இவ்வாறு அவர்கள் கூடி உண்ணும் போதும், நடக்கும் போதும், மீன் பிடிக்கும் போதும் இயேசுவைக் கண்டனர்; களிகூர்ந்தனர். உயிர்த்து உயிருடன் வாழும் கிறிஸ்துவுடன் திடீரெனத் தொடர்பு கொள்ளுகின்றனர். இயேசுவை அடையாளம் கண்டு கொண்டதன் மூலம் இறைவன் அவர்களுக்கு விசுவாசம் என்ற கொடையைக் கொடுத்தார். ஆதலால் விசுவாசம் என்பது, ஒரு வகையில், காண்பதன் விளைவாகத்தான் இருக்கிறது எனலாம்.

ஆனால் பிற்காலத்திய விசுவாசிகளின் நிலை, காட்சி காணும் பேறுபெற்ற சீடர்களின் நிலையிலிருந்து வேறானது. அவர்களைப் பொறுத்த அளவில், சீடர்கள் கண்டதை அவர்கள் காணவில்லை; ஆனால் சீடர்கள் கண்டார்கள் என்பதை அறிவர். கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையின் போதனையின் மூலம்தான் உயிர்த்த காட்சிகளின் உட்பொருளை விசுவாசிகள் தங்கள் காலத்தில் தெரிந்துகொள்ளுகின்றனர்.

அவரது உயிர்ப்பின் மூன்று பண்புக் கூறுகள், சிறிது மாற்றத்துடன் இன்னும் இருக்கின்றன. இறைவனே, மிகத் துல்லியமாக உயிர்த்த கிறிஸ்துவே, இன்னும் முன்வந்து நம்மைத் தொட்டுத் தூண்டுகிறார்; ஆனால் அவருடைய குரல் திருச்சபையின் அன்றாடப் போதனை மூலமாகத்தான் இன்று ஒலிக்

கிறது. நசரேத்தூர் இயேசு இன்றும் தம்மை நாம் அடையாளங் கண்டுகொள்ள அழைக்கிறார். ஆனால் முதல் காட்சிகளின் வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில்தான் நாம் அவரை அடையாளம் காணமுடியும். அவர் இன்னும் இறைஅரசை அமைக்க நமக்குக் கட்டளை தருகிறார். ஆனால் அப்போஸ்தலர்களின் மரபு வழியாகத்தான் அது நம்மை அடைகிறது. உயிர்த்த கிறிஸ்து இன்றும் நம்முடன் இருக்கிறார் (மத்.28:20); ஆனால் அவருடைய உடலாகிய திருச்சபையின் மூலம்தான் அவரது இருப்பு புலனாகிறது; அத்துடன் ''அப்பம் பிடுவதில்'' அவரை அடையாளம் கண்டுகொள்ள அவர் நமக்கு இன்னும் வாய்ப்பளிக்கிறார் (லூக் 24:35).

**உயிர்ப்பு** ((RESURRELTION)

மறைநூல் கூறும் உயிர்ப்பும், கிரேக்கர் விளம்பும் இறவாமையும் முரண்பட்டவை. கிரேக்கர்களின் கூற்றுப்படி, தன்னிலேயே அழிவற்ற தன்மையை உடைய மனிதனின் ஆன்மா, சாவுக்குப்பின் உடலின் பந்தபாசங்களை முற்றிலும் அறுத்துவிட்டு, சாவற்ற தன்மையோடு இணைந்துவிடுகின்றது. மறைநூல் சிந்தனைப்படி, முழுமனிதனும் (ஆவிஉடல் அத்தனையும்) அவனது தற்போதைய நிலையில் சாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவனாகிறான். இறக்கும்போது, அவன் ஆன்மா சேயோல் என்னும் பாதாளத்தில் சிறைப்படும். உடலோ மண்ணில் அழிவுறும். ஆனால் இந்நிலை என்றும் நீடிப்பதல்ல. இறைவனின் அருளால் உயிர் பெற்று அவன் மீண்டும் எழுவான். இது, அமர்ந்த ஒருவன் எழுந்து நிற்பது போலவும், உறங்கிய ஒருவன் விழிப்பது போலவும் இருக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே உருவாகிய இவ்வெண்ணங்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் மையமாக மாறுகின்றன. ஏனெனில், ''மரித்தோரிடமிருந்து எழுந்த முதற்கனியாக'', கிறிஸ்து மீண்டும் வாழ்வுக்குத் திரும்பியிருக்கிறார்.

I பழைய ஏற்பாடு:-

1. வாழ்வின் ஆண்டவர்:-

குளிர்கால மதமதப்பிலிருந்து இளவேனிற்காலத்தில் இயற்கை புத்துயிர் பெறுவது நாம் அன்றாடம் காணும் காட்சி. இக்காட்சி, இறந்த உயிர்பெற்ற தங்களின் கடவுளின் வாழ்வைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டுவதாக ஆதிகாலத்து மேற்காசிய மக்கள் நினைத்தனர். எனவே இப்புராணத்திற்குத் தங்கள் இயற்கை வழிபாடுகளில் அவர்கள் மிகவும் முக்கியத்துவம் அளித்தனர். எகிப்து நாட்டு ஒசிரிசும், மெசெபொத்தாமியாவின் தம்மூசும், கானான் நாட்டுப் பாகாலும் (பிற்காலத்தில் பாகால் அதோனிசாக மாறுவார்) இவ்வகையைச் சேர்ந்த கடவுளராவர். வரலாற்றில் தொடக்கத்தில் வாழ்ந்து முடித்த இக்கடவுளரின் வாழ்க்கை வரலாறு இயற்கையின் மாறிவரும் பருவங்களில் திரும்பத் திரும்ப நிகழ்கிறது. மேலும் இறை வழிபாட்டு நிகழ்ச்சிகளாக நாடக உருப்பெற்று அரங்கேறும் போது, பருவ காலங்களுக்கே ஒரு புதுத் தெம்பு பிறப்பதாக அம்மக்கள் நம்பினர். உழவுத்தொழிலையே நம்பியிருந்த நாட்டுப்புற மக்களுக்குப் பருவகாலங்களின் மாற்றம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தொடக்கத்திலிருந்தே, இத்தகைய புராண வழக்கினையும் அதனையொட்டிய வழிபாடுகளையும் பழைய ஏற்பாடு முற்றிலும் நிராகரித்தது. பழைய ஏற்பாட்டின்படி வாழ்வுக்கும் சாவுக்கும் கடவுள் ஒருவரே தலைவர். ''உயிரைப் பறிப்பவரும் அவரே; உயிர் கொடுப்பவரும் அவரே; பாதாளங்களுக்குக் கொண்டுபோய், அதனின்று மீண்டும் கொண்டுவருபவரும் அவரே'' (1 சாமு 2:6; உப 32:39). ஏனெனில் பாதாளத்தின் மீதும் ஆற்றலுடையவர் அவர் (ஆமோ 9:2; சங் 139:8). எனவே அவருடைய ஆவி, வார்த்தை இவற்றின் ஆற்றலினால்தான் இளவேனில் காலத்தில் இயற்கை புத்துயிர் பெற்றுப் பொலிவடைகின்றது (காண் ஆதி 1:11 தொ. 22.28; 8:22; சங் 104:29 தொ). மனிதரிடையே அவருடைய ஆற்றல் இன்னும் சிறந்து விளங்குகின்றது. பாதாளத்தினின்று அவர்களை மீட்டு (சங் 103:4), மீண்டும் வாழ்வளிப்பவர் யாவேதான் (சங் 41:3; 80:19). குறிப்பாக அவருடைய அன்பர்களின் ஆன்

மாக்களைப் பாதாளத்தில் அழிய அவர் விட்டுவிடுவதில்லை (சங் 16:10 தொ).

சாவிலிருந்து தற்காலிகமாகப் பெறும் பாதுகாப்பை இத்தொடர்கள் மிகைப்படுத்திக் கூறுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் எலியாவும் எலிசாவும் செய்த உயிர்ப்புப் புதுமைகள் (1 அர 17:17-23; 2 அர 4:33 தொ; 13:21), செத்தவரை யாவே உயிர்ப்பிக்க வல்லவர் என்பதையும், பாதாளங்களிலிருந்து அவர்களை மீட்க ஆற்றல் படைத்தவர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. எனவே பாதாளங்களிலிருந்து, வாழ்வோர் உள்ள வானுலகுக்கு, ஆன்மாக்கள் கீழிலிருந்து மேலே செல்வது போன்ற காட்சி ஒன்றே மறைநூல் கூறும் மறுவாழ்வுக்கும், புராணங்கள் விளம்பும் இறந்த கடவுளரின் உயிர்ப்புக்கும் உள்ள ஒற்றுமை; இரண்டிற்கும் வேறு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

2. இறைமக்கள் பெறும் உயிர்ப்பு:-

தங்களுக்கு நல்ல காலம் வரும் என்று இஸ்ராயேல் மக்கள் பொதுவாகக் கொண்டிருந்த நம்பிக்கையின் அடையாளமாகத்தான் உயிர்ப்புப் பற்றித் தொடக்க கால விவிலியப் பகுதிகள் குறிப்பிடுகின்றன. திடீரென்று இறைவனின் தண்டனைக்குள்ளான இஸ்ராயேல், எதிர்பாரா விதமாகச் சாவு மேற்கொண்ட நோயாளிக்கும் (காண். ஏச 1:5 தொ) சாவுக்கு இரையான உடலுக்கும் ஒப்பிடப்படுகின்றது. ஆனால் இஸ்ராயேல் மனந்திரும்பினால், மீண்டும் வாழ்வுக்கும் யாவே அழைத்துச் செல்லமாட்டாரா, என்ன? ''வாருங்கள், திரும்பிப் போவோம் ஆண்டவரிடம்....இரண்டு நாட்களுக்குப்பின் நமக்கு அவர் புத்துயிர் ஊட்டுவார், மூன்றாம் நாள் அவர் நம்மை எழுப்பிவிடுவார்; அதன் பின் அவர் முன்னிலையில் நாம் வாழ்ந்திடுவோம்'' (ஓசே 6:1 தொ).

இது மக்கள் கொண்டிருந்த வெறும் விருப்பமே என்று கூறவியலாது. ஏனெனில், இது நிச்சயம் நடைபெறும் என்று இறைவாக்கினரின் உறுதிமொழிகள் வலியுறுத்துகின்றன. இஸ்ராயேல் மக்கள் பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்டு, தண்டனை அனுபவித்த பின்பு, மடிந்து உலர்ந்துபோன எலும்புகளுக்கு உயிர் அளிப்பது போல் (எச 37:1-14) இறைவன் தம் மக்களுக்கும் உயிரளித்து அவர்களை உயர்த்துவார். பிணத்தைப் போலப் புழுதியில் விழுந்து கிடந்தோரை விழிப்படையச் செய்வார் (ஏச 26:19). இவ்வாறு இறைவாக்கினர் உரைக்கும் உயிர்ப்பு வெறும் உருவகமே என்பதில் ஐயமில்லை; எனினும் பாதாளத்தின் (சேயோலின்) ஆதிக்கத்திலிருந்து உண்மையான விடுதலை கிடைப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை: ''சாவே, எங்கே உன் வாதைகள்? பாதாளமே, எங்கே உன் அழிவுச் சின்னங்கள்?'' (ஓசே 13:14). இவ்வாறு தம் மக்களின் நலனைக் கருதி, இறைவன் சாவின்மீது வெற்றிவாகை சூடுகின்றார்.

இறை ஊழியன் உயிர்துறந்து தீயோருடன் அடக்கம் செய்யப்பட்டார் (ஏச 53:8 தொ. 12); அதே போன்று, விசுவாசமுள்ள இஸ்ராயேலர் சிலர் தற்காலிகமாக தீயசக்திகளின் ஆதிக்கத்துக்குட்படலாம். ஆனால் காலம் வரும், அந்நாளில் அவ்வூழியனைப் போலவே, இவர்களுக்கும் வாழ்நாள் நீடிக்கப்படும்; அவர்களும் ஒளியைக்கண்டு வெற்றியில் பங்குகொள்வர் (ஏச 53:10 தொ). இதுவே வாக்களிக்கப்பட்ட உயிர்ப்பு என்னும் ஓவியத்தின் முதற்கோடுகள்; எனினும் அவை இன்னும் புரிபடாத புதிர்நிலையில் தான் இருந்தன. ஆனால் இந்த வாக்குறுதியின் காரணமாகத்தான் அடக்குமுறை அட்டூழியத்திற்கு ஆளான நீதிமான்கள், தங்கள் மீட்பர் எழுவதையும், தங்களுக்காகப் போராடுவதையும் காண்பார்கள் (காண் யோபு 19:25).

3. தனிப்பட்ட மனிதரின் உயிர்ப்பு:-

மக்கபேயர் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் உயிர்ப்புப் பற்றிய கருத்துகளில் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. அந்தியோக்கஸ் யூதர்களைப் பெருந்துன்பத்திற்கு உள்ளாக்கினான். யூதர்களில் பலர் தங்கள்

மதத்திற்காக உயிர் துறந்தனர். இவ்வாறு தங்கள் விசுவாசத்திற்காக உயிர் துறந்தோரின் நிலை என்ன என்பது பெரும் பிரச்சனையானது. இறையரசிற்காகவும், உன்னதரின் பரிசுத்தக் கூட்டத்தாரின் இறுதி வெற்றிக்காகவும் ஒருவன் காத்திருக்க வேண்டும் என்று வெகு காலத்திற்கு முன்னமே இறைவாக்கினர் மொழிந்தது அடிப்படை உறுதியாயிற்று (தானி 7:13 தொ 27; காண் 2:44). ஆனால் இதற்கிடையில் தங்கள் மறைக்காக உயிர் துறந்த புனிதர்களின் கதி என்ன? இக்கேள்விக்கு ''இறந்துபோய் மண்ணில் உறங்குகிற பலருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவதற்கும், சிலர் முடிவில்லா இழிவுக்கும் நிந்தைக்கும் ஆளாவதற்கும் எழுவர்'' (தானி 12:2) என்று தானியேலின் வெளிப்பாட்டு நூல் பதில் தருகிறது. ஆதலால் இதற்குப் பின், எசக்கியேலும் ஏசயாவும் (26) குறிப்பிடும் உயிர்ப்பை, உருவகமாகக் கருதாது, உண்மையெனக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது. அதாவது, மரித்தவர்களைத் தம் அரசில் பங்கேற்கும் வண்ணம் இறைவன் அவர்களைப் பாதாளத்தினின்று எழுப்புவார். அவர்கள் புகவிருக்கும் புதிய வாழ்வு, இவ்வுலக வாழ்விலிருந்து மாறுபட்டதாய், முற்றிலும் வேற்றுருக்கொண்டதாய் இருக்கும் (தானி 12:3). இப்பேர்ப்பட்ட நம்பிக்கைதான் மறைசாட்சிகள் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கிக் கொள்ளத் துணை செய்தது. மனிதர் அவர்களின் உலக வாழ்வைப் பறித்தாலும், உயிரைப் படைத்த இறைவனோ அவர்களுக்கு அதை மறுபடியும் கொடுப்பார் (2 மக் 7:9.11.22; 14:46); ஆனால் தீயோர்க்கு உயிர்ப்பு என்பதே இருக்காது (2 மக் 7:14).

இந்நாளிலிருந்து உயிர்ப்புப்பற்றிய கொள்கை யூதமதத்தின் முக்கிய பொதுச் சொத்தாகிறது. பரம்பரையைக் கடுகளவும் பிசகாது அனுசரிக்க வேண்டும் என்று எண்ணி, இக்கொள்கையைச் சதுசேயர் கூட்டம் ஏற்க மறுத்தது (அ.ப. 23:8); ஏளனமாகக் கேள்விகள் கேட்டுப் பரிகாசம் செய்தது (மத் 22:23-28 இணை). ஆனால் பரிசேயர்களும், ஏனோக்கு புத்தகத்தை நமக்களித்த குழுவும் (ஆதிகாலத்து எஸ்ஸேனியா கூட்டத்தினர்?) உயிர்ப்பு உண்டென நம்பிவந்தனர். ஏனோக்கு புத்தகம் பருப்பொருளின் அடிப்படையில் உயிர்ப்பினை நோக்கினாலும், உயிர்ப்பைப் பற்றி மிகச்சிறந்த முறையில் விளக்கம் தருகிறது; பாதாளங்களிலிருந்து வாழ்வு பெறும் வண்ணம் மரித்தோரின் ஆன்மாக்கள் எழும்பும்போது, ''வரவிருக்கும் உலகிற்காக'' இறைவன் தயாரித்து வைத்திருக்கும் புதிய உலகில் அவர்கள் நுழைவார்கள். அதே பாணியில்தான் இயேசுவும், ''உயிர்த்தெழும்போது வானகத்தில் கடவுளின் தூதரைப் போல் இருப்பார்'' (மத் 23:30) என்று விளம்புகிறார்.

II புதிய ஏற்பாடு:-

1. இறந்தோரிடமிருந்து எழுந்த தலைப் பேறு:-

அ) முன்னுரை:- தமக்கு வாழ்வின் மீதும் சாவின் மீதும் இறைவன் அதிகாரம் கொடுத்துள்ளார் என்பதையும், உண்மையான உயிர்ப்பை ஆரம்பித்து வைப்பவர் தாமே என்பதையும் இயேசு நன்கு அறிந்திருந்தார். எனவே 'இறுதி நாளில் நீதிமான்கள் உயிர்த்தெழுவர்' என்று ஏற்றுக்கொண்டதோடு, தம் தந்தையிடமிருந்து தாம் பெற்ற ஆற்றலுக்குச் சான்றாகப் பிறரது வேண்டுதலுக்கிணங்கி, இறந்தோர் பலருக்கு உயிரளிக்கின்றார்: யாயீரின் மகள் (மாற் 5:21-42), நயீன் நகரத்து விதவையின் மகன் (லூக் 7:11-17), தம் நண்பன் லாசர் (யோவா 11). இவ்வுயிர்ப்புகள் யாவும், இறைவாக்கினர் செய்த அருங்குறிகளை நமக்கு நினைவூட்டுகின்றன; எனினும் இவை, முற்றிலும் மாறுபட்டதன்மையுள்ள அவருடைய சொந்த உயிர்ப்பை இலைமறைகாயாக எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு பலரை உயிர்ப்பித்தலன்றி, இவ்வுயிர்ப்பைப் பற்றிய தெளிவான கருத்துக்களை இயேசு அறிவிக்கின்றார்; மனுமகன் கொலையுண்டு, மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழ வேண்டும் (மாற் 8:31; 9:31; 10:34 இணை). இதுவே மத்தேயுவின் எண்ணப்படி ''யோனாவின் அடையாளமாகும்.'' ''மனுமகன் மூன்று பகலும் மூன்று

இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்'' (மத் 12:40). இதுவே ஆலயம் சுட்டுகின்ற அருங்குறியுமாகும்: ''அவரது உடலாகிய ஆலயத்தையே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்'' (யோவா 2:19 தொ; காண் மத் 26:6 இணை). இவ்வாறு உயிர்ப்புப் பற்றி இயேசு கூறியவற்றைப் பன்னிருவர் கூடப் புரிந்து கொள்ளவில்லை (காண் மாற் 9:10). அவருடைய எதிரிகளுக்கு இது எள்ளளவும் விளங்கவில்லை என்பதால்தான், அவர்கள் காவலரை அமர்த்தி, கல்லறையைக் காவல் செய்தனர் (மத் 27:63 தொ).

ஆ) பாஸ்கா அனுபவம்:-

ஆதலால், உயிர்ப்புப் பற்றி விவிலியம் அறிவித்தது, முதன்முதலில் இயேசுவுக்குத்தான் பொருந்தும் என்பதைப் பன்னிருவர் உணரவில்லை (யோவா 20:9). எனவேதான் இயேசு இறந்து, அடக்கம் செய்யப்பட்ட போது, அவர்கள் நம்பிக்கை இழந்தனர் (காண் மத் 16:14; லூக் 24:21-24.37; யோவா 20:19). பாஸ்கா அனுபவம் ஒன்றே அவர்களின் விசுவாசத்திற்குப் புத்துயிர் அளிக்க வல்லதாயிருந்தது. வெற்றுக் கல்லறையைக் கண்டு, இயேசு உயிர்த்திருப்பார் என்று அவர்கள் நம்பவில்லை. ஏனென்றால் உடலை யாராவது வேற்றிடத்திற்கு மாற்றியிருக்கக்கூடும் என்று விளக்கம் கொடுக்கலாம் அல்லவா? (லூக் 24:11 தொ; யோவா 20:2). வெற்றுக் கல்லறையைக் கண்டு உடனே விசுவசித்தவர் யோவான் மட்டுமே (யோவா 20:8).

பின்பு இயேசு உயிர்த்து, காட்சிகள் அளிக்கலானார். இயேசு அளித்த காட்சிகளைப் பற்றி பவுல் கொடுக்கும் எண்ணிக்கைக்கும் (1 கொரி 15:5 தொ), நற்செய்தியாளர் கொடுக்கும் எண்ணிக்கைக்கும் வேறுபாடு உள்ளது. ஆனால் இங்குச் சரியாக எத்தனை முறை இயேசு தோன்றினார் என்பது அத்துணை முக்கியமன்று. இயேசு ''பல நாட்கள்'' தோன்றினார் என்று (அ.ப. 12:31) பொதுவாகவும், முக்கிய நிகழ்ச்சியான விண்ணேற்றம் வரை, இயேசு ''நாற்பது நாள் அளவாகத்'' (அ.ப. 1:3) தோன்றினார் என்று மற்றொரு இடத்தில் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புலன்களுக்குப் புலனாகும் விதத்தில் இயேசு தோன்றினார் என்பதை இக்காட்சிகள் அடிக்கோடிட்டு விளக்குகின்றன; தோன்றுவது உண்மையாகவே நசரேத்தூர் இயேசு தான். அப்போஸ்தலர்கள் அவரைக் கண்ணாரப் பார்த்து, கைகளால் தொடுகின்றனர் (லூக் 24:29 தொ 41 தொ; யோவா 21:9-13; அ.ப. 10:41). அவர் ஒரு பூதமல்ல, மாறாகத் தம் சொந்த உடலோடு காட்சியளிக்கின்றார் (மத் 28:9; லூக் 24:37 தொ; யோவா 20:20.27 தொ). ஆனால் இவ்வுடல் சாதாரண உடலுக்குரிய நியதிகட்கு அப்பாற்பட்டதாய் விளங்குகின்றது (யோவா 20:19; காண் 20:17). இயேசுவும் தாம் இவ்வுலகில் பணிபுரிந்து வந்த காலத்தில் செய்துவந்த சில வழக்கமான செயல்களைத் திரும்பவும் செய்து, அவர்கள் தம்மைக் கண்டுகொள்ளச் செய்கின்றார் (லூக் 24:30 தொ; யோவா 21:6.12). எனினும் முன்பே யூதசமயத் திருக்காட்சியாளர் படம் பிடித்துக் காட்டிய மகிமையுடன்தான் இயேசு இப்பொழுது திகழ்கின்றார்.

இயேசுவின் பாடுகளையும் சாவையும் கண்ட பொதுமக்கள் அனைவரும் அவருடைய காட்சிகளைக் காணும் பேறு பெறவில்லை. ஏனெனில் குறிப்பிட்ட சில சாட்சிகளுக்கு மட்டுமே காட்சிதர இயேசு சித்தங்கொண்டார் (அ.ப. 2:32; 10:41;13:31). இறுதியாகப் பவுலுக்கும் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் தோன்றினார் (1 கொரி 15:8). இவ்வாறு இயேசுவுக்குச் சாட்சிகளாய்த் திகழ்ந்தவர்கள் அப்போஸ்தலராயினர். உலகம் அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தமையால், ''உலகிற்கு வெளிப்படுத்தாது'' (யோவா 14:22) இவர்களுக்கு மட்டும் தம்மைக் காட்டுகிறார். கல்லறையைக் காத்த காவலர் கூட, அஞ்சி நடுங்கி (மத் 28:4) கிறிஸ்துவைப் பார்க்க முடியாது போயினர். இயேசுவின் உயிர்ப்பை விளக்குவது இயலாத செயலாகும்; ஆனால் இயேசு உயிர்த்த காட்சியை விவரிப்பது அதைவிட அரிதாகின்றது. ''பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது; கண்ணைப் பறிக்கும்படியான ஒளி வீசியது;

ஆண்டவரின் தூதன் தோன்றினார்'' என்று வழக்கமாக மறைநூல் இவ்விதக் காட்சிகளை விவரிக்கும் விதத்தில் மத்தேயு மட்டும் இக்காட்சியை வருணிக்கிறார். இயேசுவின் உயிர்ப்பு நம் அனுபவத்திற்கு அப்பாற்பட்டதொன்றாய் அமைவதால், பழைய ஏற்பாடு ஏதோ ஓரளவுதான் நமக்குக் கைகொடுத்து உதவ முடியும்; நாம் விவரிக்க முயலும் உண்மையோ ஏட்டில் வடிக்க இயலாததாய் உள்ளது.

இ) அப்போஸ்தலர் போதனை விளம்பும் உயிர்ப்பின் நற்செய்தி:-

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உண்மையாக விளங்குவதால் (அ.ப. 2:22-35), பெந்தக்கோஸ்து நாள் முதல் அப்போஸ்தலரின் போதனையின் மையமாக அது உருவெடுக்கிறது. 'இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்; ஆனால் கடவுளோ இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்து, உலகுக்கு அவர் மூலம் மீட்பு வழங்கியுள்ளார்' என்னும் உண்மைக்குத்தான் உயிர்ப்பின் நற்செய்தி முக்கியமாகச் சான்று பகர்கின்றது. யூதர்களுக்குப் பேதுரு ஆற்றிய அருளுரை (3:14 தொ), யூத சங்கத்தில் அவர் ஆற்றிய உரையின் சாரம் (4:10), எத்தியோப்பிய அமைச்சனுக்குப் பிலிப்பு கற்பித்த பாடம் (8:35), யூதர்களுக்கும் (13:33; 17:3), புறவினத்தாருக்கும் (17:31) பவுல் போதித்த போதனை, தலைமைச் சங்கத்தாரின் முன் அவர் இட்ட அறிக்கை (23:6) ஆகிய அனைத்துமே பாஸ்கா அனுபவத்தின் விளைவன்றி வேறல்ல.

மறைநூலில் உள்ளபடிதான் இது நடந்தது' (காண் 1 கொரி 15:3 தொ) என்பது இவ்வனுபவத்தின் முக்கியமானதொரு கருத்தாகும். இறைவனின் வலப்புறத்தில் மெசியாவாக மகிமையில் உயர்த்தப்படுவார் என்றும் (அ.ப. 2:34; 13:32 தொ), யாவேயின் ஊழியன் மகிமை பெறுவார் என்றும் (அ.ப. 4:30; பிலி 2:7 தொ) மனுமகன் இறைவனின் வலப்பக்கம் வீற்றிருப்பார் என்றும் (அ.ப. 7:56; காண் மத் 26:64 இணை) முன்பே இறைவாக்கினர் உரைத்த உறுதிமொழிகள் யாவற்றையும் இயேசுவின் உயிர்ப்பு நிறைவேற்றுகின்றது. அதேபோல, அன்றாட அனுபவத்திற்கு அப்பாற்பட்ட இந்நிகழ்ச்சியின் கூறுகளைத் தனக்கே உரித்தான நடையில் மறைநூல் சித்தரித்துக் காட்டத் தவறவில்லை; இயேசுவே பாதாளத்தில் அழிவுறாது, கடவுளால் மீட்கப்பட்ட புனிதர் (அ.ப. 2:25-32; 13:35 தொ; காண் சங் 16:8-11) அனைத்தையும் ஆண்டு நடத்த இறைவனிடமிருந்து அதிகாரம் பெற்ற புதிய ஆதாமும் அவரே (1 கொரி 15:27; எபி 1:15-13; காண் சங் 8); கட்டுவோரால் விலக்கப்பட்டு, மூலைக்கல்லாய் அமைந்தவரும் அவர் தாமே (அ.ப. 4:11; காண் சங் 118:22...). இவ்வாறு மகிமை அடைந்த கிறிஸ்து மறைநூல் முழுவதற்கும் விளக்கம் கொடுப்பவராய்த் தம்மையே வெளிப்படுத்தினார். இது ஒன்றும் அவருக்குப் புதிதல்ல; ஏனெனில் இப்பணி முன்பே அவரது கருத்தைக் கவர்ந்ததாய் இருந்தது (காண் லூக் 24:27 44 தொ).

ஈ) உயிர்ப்பின் உட்பொருளும் சிறப்புக் கூறுகளும்:-

அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்ப்புக்கும் மறைநூலுக்கும் இடையே ஓர் தொடர்பை ஏற்படுத்தியபின், அவ்வுயிர்ப்பு நிகழ்ச்சியைப்பற்றி இன்னும் விரிவாகவும் இறையியல் விளக்கம் அளித்தனர்: உயிர்ப்பு என்பது தந்தை மகனை மகிமைப்படுத்தும் நிகழ்ச்சியாகும் (அ.ப. 2:22 தொ; உரோ 8:11; காண் யோவா 17:1 தொ). மனுவுரு ஆனபோது ஆரம்பிக்கப்பட்டு, சிலுவையில் முற்றுப்பெற்ற மீட்புப் பணிக்கு இவ்வுயிர்ப்பு முத்திரை இட்டது. சிலுவையின்மூலம், 'இறைவனின் வல்லமை விளங்கும் இறைமகனாகவும்' (உரோ 1:4; காண் அ.ப. 13:33; எபி; 1:55; சங் 217), 'ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும்' (அ.ப. 2:36), 'தலைவராகவும் மீட்பராகவும்' (5:31), 'வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராக ஆண்டவராகவும்' (அ.ப. 10:42; உரோ 14:9; 2 திமோ 4:1) இயேசு நியமிக்கப்பட்டுள்ளார். தந்தையிடம் சென்றுள்ள இந்நிலையில் (யோவா 20:17) அவர் மனிதனுக்கு வாக்களிக்கப்பட்ட

ஆவியை அனுப்ப வல்லவராய் இருக்கின்றார் (யோவா 20:22; அ.ப. 2:33). இச்செய்கையில்தான் அவருடைய மண்ணுலக வாழ்வின் முழுப்பொருளும் தலை சிறந்த முறையில் வெளிப்படுகிறது. இதில்தான் இறைவன் தம்மை முழுவதும், தம் அன்பையும் அருளையும் மனிதருக்கு வெளிப்படுத்தினார் (2 திமோ 1:10; தீத் 2:11; 3:4). இதிலும் இறைவன் தம்மை அப்படியே காட்டவில்லை; மாறாகச் சில அடையாளச் செயல்கள் மூலமாகவும் .(யோவா 1:11), திருவுரு மாற்றம் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், இறைவனின் மாட்சி மறைவான முறையில் வெளிப்பட்டது (லூக் 9:32,35 இணை; காண் யோவா 1:14). இப்போது இயேசு தம் மகிமையில் வீற்றிருப்பதால், இறைவனின் மாட்சி திருச்சபையில் அருங்குறிகள் மூலமும் (அ.ப. 3௨6). விசுவாசிகள் மீது பொழியப்படும் ஆவியின் கொடைகள் மூலமும் (அ.ப. 2:38 தொ; 10:44 தொ) வெளிப்பட்டு வருகிறது.

''இறந்தோரிடமிருந்து பிறந்த தலைப்பேறான'' (அ.ப.26:23; கொலோ 1:18; திருவெளி 1:5) இயேசு, இவ்வாறு மீட்புப்பெற்ற உலகாகிய புதிய படைப்பில் முதல் ஆளாக நுழைந்தார் (காண் எசா 65:17). ''மகிமை பூண்ட ஆண்டவர்'' (1 கொரி 2:8; காண் யாக் 2:1; பிலி 2:11) என்ற முறையில், அவர் மீட்பையும் வழங்குகின்றார் (அ.ப. 3:6...). இறை ஆற்றலின் ஊற்றாக விளங்கும் அவர், நமக்கென்றே, தம்வழியில் ஒரு புனித சமுதாயத்தை (1 பேதுரு 2:9 தொ) உருவாக்குகிறார்.

2. உயிர்ப்பின் ஆற்றல்:-

'மீட்பு கிடைக்குமா, கிடைக்காதா?' என்று நம்மை நாமே கேட்கும் கேள்விக்கு இயேசுவின் உயிர்ப்பு தகுந்த பதிலாக அமைகின்றது. நம் விசுவாசத்தின் முதன்மையான பொருளாகவும், நம் நம்பிக்கைக்கு அடிப்படையாகவும் திசைகாட்டியாகவும் இயேசுவின் உயிர்ப்பு அமைகிறது. ''துஞ்சினோரின் முதற்கனியாக'' (1 கொரி 15:20) இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது உயிர்ப்பை இறுதி நாளோடு இணைத்துச் சிந்திக்க ஒரு வாய்ப்பளிக்கின்றது. மேலும் கிறிஸ்துவே ''உயிர்ப்பும் உயிருமாதலால், அவரில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'' (யோவா 11:25). இயேசு அளிக்கும் இப்புதிய வாழ்வில் இவ்வுலகிலேயே பங்குபெறுவோம் என்ற நம்பிக்கையை இவ்வுண்மை அளிக்கின்றது. இப்புதிய வாழ்வைத் திருவருட்சாதனங்கள்மூலம் நமக்கு அவர் அளிக்கின்றார்.

அ) இறுதிநாளில் உயிர்ப்பு:-

உடலுக்கும் உயிர்ப்பு உண்டு என்ற யூதர்கள் நம்பிக்கைக்கு உத்தாரம் அளிக்கின்றார் இயேசு. மேலும், அவ்வுடல் புதிய வளம் பெற்றதாகவும் (லூக் 14:14), முற்றிலும் வேறுபட்டதாகவும் திகழும் (மத் 22:30 தொ, இணை) என்றும் பகர்கின்றார். இவ்வருணனை, உலகமுடிவு பற்றி நற்செய்திகள் வரையும் காட்சிகளைப் போல (மத் 24 இணை) சிறப்பாக அமையவில்லை என்பது உண்மை: ஆனால் அது நமக்கு முக்கியமன்று. இயேசுவின் உயிர்ப்பு நிகழும் வரை, இவ்வுண்மையின் முழுப்பொருளும் தெளிவாகவில்லை என்பதே, இங்குக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். பிற யூதர்களைப் போல இறுதிநாள் உயிர்ப்பில் தாங்களும் நம்பிக்கை கொண்டிருந்ததை முதல் கிறிஸ்தவர்கள் உணர்ந்திருந்தனர் (அ.ப. 23:6; 24:15; 26:6 தொ). இயேசுவின் உயிர்ப்பு இவர்களின் நம்பிக்கைக்குக் கட்புலனாகும் உண்மையான அடித்தளமாக மாறுகின்றது. இயேசு உயிர்த்தெழுந்த காரணத்தால், நாமும் உயிர்த்தெழுவோம். ''இறந்தோரிடமிருந்து கிறிஸ்து இயேசுவை உயிர்ப்பித்தவர் உங்களுள் குடிக்கொண்டுள்ள தமது ஆவியால் சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார் (உரோ 8:11; காண். 1 தெச 4:14; 1 கொரி 6:14; 15:12-22; 2 கொரி 4:14).

இக்கருத்து மனத்தில் படும்படியான வகையில் மத்தேயு நற்செய்தி இயேசுவின் உயிர்ப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இயேசு பாதாளங்களில் இறங்கி, வெற்றி

வாகை சூடியவராக மேலே எழும்புங்கால், விண்ணுலக மகிமைக்காகத் தவித்து நின்ற புனிதர்கள் அவரோடு திரண்டு புடைசூழ எழுகின்றனர் (மத் 27:52 தொ). அவர்கள் மீண்டும மண்ணுலக வாழ்வைப் பெற்றதாக மத்தேயு குறிப்பிடவில்லை; மாறாக, விநோதமான வகைகளில் அவர்கள் காட்சியளித்த தாகத்தான் குறிப்பிடுகின்றார். இவை இறுதி நாளில் நடக்கவிருப்பவைகளின் அடையாளச் சின்னங்களாகும்; அவ்வளவுதான். இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது, அவரால் இறந்தோர் பலர் மீண்டும் தங்கள் வாழ்வைப் பெற்றதும், இவ்வாறே எதிர்கா லச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

புனித பவுல் இன்னும் விரிவாக இறுதி நாள் உயிர்ப்பை விவரிக்கின்றார்; அதிதூதரின் குரலொலி ஒலிக்கும்; புனிதர் கூடும் வண்ணம் எக்காளம் முழங்கும்; ஆண்டவர் மேகங்களின் மீது தோன்றுவார்; அவரை எதிர்கொள்ளப் புனிதர் புறப்படுவர் (1 தெச 4:15 தொ; 2 தெச 1:7 தொ; 1 கொரி 15:52). இத்தகைய காட்சியை யூத வெளிப்பாட்டு இலக்கியங்களிலும் காணலாம். இக்காட்சி மூலம் இவ்விலக்கியங்கள் கூறவிரும்பும் உண்மையே இங்கு நமக்கு முக்கியமாகும். கிரேக்கர்களின் கருத்துப்படி மனித ஆன்மா, உடல் எனும் சிறையிலிருந்து விடுபட்டு, சாகா நிலையை நோக்கித் தனியாகச் செல்கிறது. ஆனால் கிறிஸ்துவ நம்பிக்கையோ முழுமனிதனும் (உடலும் உள்ளமும்) மறுமலர்ச்சி பெறுவதை எதிர்பார்க்கின்றது. எப்படியெனில், ஒரு நொடியில் உடலானது முற்றிலும் புதிய வேற்றுருப் பெறும்; ஆவிக்குரிய வாழ்வைப் பெற்று, சாகாமையையும் அழியாமையையும் அணிந்துகொள்ளும் (1 கொரி 15:35-53). தீயவர்கள் உயிர்த்தெழுவார்களா? இக்கேள்விக்குப் புனித பவுல் பதில் அளிப்பதில்லை; இத்தகைய சிந்தனைகளுக்கு அவர் இடம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர் காணும் காட்சி, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்தோர் அவர் மகிமையில் பங்கு பெறுதலைப் பற்றியதேயாகும் (காண் 1 கொரி 15:12..). இவ்வுடல் உயிர்ப்பு'க்காகக் கிறிஸ்தவன் தவிக்கும் (உரோ 5:23) தவிப்பின் நிலையை எடுத்தியம்ப, கிறிஸ்துவம், உயிர்ப்பை நினையாத நேரத்தில் திடீரென்று எந்த நிமிடத்திலும் நடக்கப்போகும் நிகழ்ச்சியாகப் படம் பிடித்துக் காண்பிக்கிறது (காண் 1 தெச 4:17). அந்நாளுக்காகக் காத்திருக்கும் கிறிஸ்தவர்களின் ஏக்கம் (காண் 2 கொரி 5:1-10) ஆண்டவர் வரும் நாளையும் தேதியையும் பற்றிய வதந்திகளுக்கு இடம் தருவதாக இருத்தல் கூடாது.

இறந்தோரின் உயிர்ப்பை விவரிக்க திருவெளிப்பாடு தீட்டும் ஓவியம் இன்னும் கவர்ச்சியாக உள்ளது (திருவெளி 20:11-15): இறந்தோர் அனைவரும் (தீயவரும் நல்லவரும்) தீர்ப்புப் பெறுவதற்காகச் சாவிலிருந்தும் பாதாளத்திலிருந்தும் வெளியேறுகின்றனர். தீயோர் ''இரண்டாம் சாவில்'' மூழ்கிப் போகின்றனர்; புனிதர்களோ முற்றிலும் புதிய உலகில், புதிய வாழ்வில் பங்குபெற நுழைகின்றனர். இதுவே பழைய இன்பவனம், புதிய விண்ணுலக எருசலேம் (திருவெளி 21-22). மனித அனுபவத்திற்கு அப்பாற்பட்ட அனுபவங்களை, இவ்வாறு அடையாளங்கள் மூலம்தான் விவரிக்க இயலும்! இறந்தோரின் உயிர்ப்பைப்பற்றி நான்காம் நற்செய்தி வருணிப்பதில்லை. எனினும் அதில் உயிர்ப்பு பற்றி இரு குறிப்புக்களைக் காண்கிறோம். இறை மனுமகனின் பணியைப்பற்றி விவரிக்குங்கால், மனுமகனின் குரலைக் கேட்டே இறந்தோர் உயிர்த்தெழுவர் (யோவா 5:28; 6:40; 44); நல்லோர் வாழ்வு பெறுவர், எஞ்சியோர் தண்டனைக்குள்ளாவர் (5:29).

ஆ) எதிர்பார்க்கப்படும் உயிர்ப்பாகும்:-

இறுதிநாளில் நடக்கவிருக்கும் உயிர்ப்புப் பற்றி யோவான் அதிகமாகப் பேசுவதில்லை என்பதைக் கண்டோம். காரணம்: இறுதி நாளில் நிறைவேறும் உயிர்ப்பில் மனிதன் இவ்வுலகிலேயே பங்குபெறுவதை அவர் உணருகிறார். இயேசுவின் அதிகாரத்தால் விசுவாசிகள் சாவினின்று விடுதலை பெறுவதை (காண் யோவா 11:25 தொ), லாசர் கல்லறையிலிருந்து வெளிவரும் நிகழ்ச்சி

தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மேலும் மனுமகனுக்குரிய வாழ்வு செயலைப் பற்றிப் பேசுங்கால், இவ்வுண்மைக்குச் சான்று பகர்கின்றார்: ''நேரம் வருகிறது. ஏன் வந்தேவிட்டது. அப்பொழுது இறைவனுடைய மகனின் குரலை இறந்தோர் கேட்பர்; அதைக் கேட்டோர் வாழ்வு பெறுவர்'' (யோவா 5:25). இவ்வார்த்தைகள், ''சாவினின்று வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோம் என்பதை அறிவோம்'' (1 யோவா 3:14) என்று யோவான் தமது முதல் திருமுகத்தில் எடுத்துக்கூறும் கிறிஸ்தவ அனுபவத்தை வலியுறுத்துகின்றன. இவ்வாழ்வைப் பெற்றவர் ஒருபோதும் சாவதில்லை (யோவா 6:50; 11:26; காண் உரோ 5:8 தொ). இந்த உறுதியின் காரணமாக, இறுதி உயிர்ப்பைப்பற்றிய எதிர்ப்பார்ப்பு பாதிக்கப்படுவதில்லை; மாறாக, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து நாம் புகுந்த வாழ்வுக்கு, இவ்வுறுதி புது உரு அளிக்கின்றது.

உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வில் பங்குபெறுதலே கிறிஸ்தவ வாழ்வு என்று, புனித பவுல் 'கிறிஸ்தவ வாழ்வின் பாஸ்கா' இயல்பினை முன்னரே சுட்டிக்காட்டியுள்ளார். திருமுழுக்கின்போது அவரோடு புதைக்கப்பட்டோம். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த இறைவனின் (கொலோ 2:12; உரோ 6:4 தொ) ஆற்றல்மீது நாம் வைத்த விசுவாசத்தால், அவரோடு நாமும் உயிர்த்தெழுந்தோம். அவருடைய மகிமை நிறைந்த வாழ்வே, நாம் பெற்றுள்ள புதிய வாழ்வாகும் (எபே 2:5 மொ). ''தூங்குபவனே, விழித்துக்கொள்; இறந்தோரிடமிருந்து எழும்பு; கிறிஸ்து உன்மேல் ஒளிர்வார்' (5:14)'' என்று பவுல் கூறுகின்றார். கிறிஸ்தவ வாழ்விற்கே அடிப்படையாக அமைவது இந்நம்பிக்கைதான். கிறிஸ்துவில் புதுப்பிறப்பு பெற்ற புதிய மனிதனின் ஒழுக்க வாழ்விற்கு இந்நம்பிக்கை உயிரூட்டுகிறது; ''கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான் கிறிஸ்து இறைவனின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கின்றார்'' (கொலோ 3:1 தொ). இதுவும் கிறிஸ்துவின் நம்பிக்கைக்கு ஊற்றாக மாறுகின்றது. ஏனெனில், ''தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக'' உருமாற்றும் (உரோ 8:22 தொ; பிலி 3:10 தொ, 20 தொ) நாளை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவன் இவ்வாழ்விலேயே, விண்ணக வாழ்வில் மறைபொருளாக மறைந்து கிடக்கும் உண்மைகளையே, அவனது இறுதி உயிர்ப்பு ஒளிக்குக் கொண்டுவரும் (கொலோ 3:4).


## உரல்-உலக்கை (MORTAR)

பொருட்களை வைத்து (இட்டு) உலக்கையினால் இடித்து நொறுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரமே உரலாகும். குழியம்மி என்றும் அழைக்கின்றோம். இது தானியங்களின் உமியை அகற்றுவதற்கும், மாவாக இடிப்பதற்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், கீரைகளை இடித்துப் பிழிவதற்கும், நறுமணப் பொருட்கள் தயாரிப்பதிலும், சாயப் பொருட்கள் தயாரிப்பதிலும், மற்றும் பல பொருட்களைத் தயாரிக்கும் வேலைகளுக்கும் உரல் பயன்படுத்தப்பட்டது.

சில பாத்திரங்களின் விளிம்புப் பகுதியில் வெட்டப்பட்ட திறந்த வழியானது வடிகாலின் பணியைச் செய்தது. இத்தகைய பொருட்கள் சிறிய அளவிலான திரவப் பொருட்களைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மன்னாவைப் பொடியாக்குவதற்கும் உரல் பயன்படுத்தப்பட்டது. எந்திரக் கற்களைக் கொண்டும் மன்னாவை அரைத்தனர். பழமொழி நூலில் உரலும், உலக்கையும் உருவகங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (பழ 27:22). நீதிபதி நூலில் நிலப்பிளவை விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. செப்பனியா நூலில் (1:1) ஓர் இடத்தின பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எரிமலைப்பாறைக் கற்களின் கடினமான தன்மையை முன்னிட்டு இந்தக் கற்களைக் கொண்டு உரல்களைச் செய்தனர். சுண்ணாம்



மெசிதோவில் கண்டெடுக்கப்பட்ட உரல் உலக்கைகள்

புக்கல் உரல்களும் செய்யப்பட்டன. உலக்கையின் அமைப்பு பொதுவாக நீண்ட உருளை வடிவமாகவோ சில சமயங்களில் கூர் உருளை வடிவமாகவோ இருந்தது. இதன் தலைப்பகுதி உரலின் குழிவான பகுதியில் சேருமாறு அமைக்கப்பட்டது. எரிமலைப்பாறை வகைக் கற்களைக் கொண்டும், சுண்ணாம்புக் கற்களைக் கொண்டும் இந்த உலக்கைகள் செய்யப்பட்டன.

**உரிமை அடைந்தோரின் செபக்கூடம்** (SYNOGOGUE OF THE FREEDMEN)

அராமேயிக் பேசுபவர்களைவிட, கிரேக்கம் பேசும் யூதர்களுக்காக நடத்தப்பட்ட எருசலேமின் செபக்கூடங்களில் ஒன்று. அராமேயிக் மொழி பேசுபவர்கள் பாலஸ்தீனிய யூதர்களாவர். அ.ப. 6:9-இல் மட்டும் புதிய ஏற்பாட்டில் இந்த செபக்கூடம் குறிப்பிடப்படுகிறது. சிரேனியர்கள், அலக்சாந்திரியர்கள், சிலிசியர்கள், ஆசியர்கள் ஆகிய இவர்களுடைய செபக்கூடம் என்று அதே பகுதி குறிப்பிடுகிறது. ஆனால் இது தனித்தனி ஐந்து குழுக்களைக் குறிக்கிறதா என்று உறுதியாகச் சொல்லமுடியாது. சிரேனியர்களும், அலக்சாந்தியர்களும் ஒரு வேளை ஒரே சபையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். சிலிசியா மற்றும் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் உரிமை அடைந்தவர்களாக இருக்கலாம். உரிமை அடைந்தவர்கள் முன்னாளைய உரோமைய கைதிகள், அல்லது அவர்களின் மக்களாவர். விடுதலையானவுடன் எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

உரோமைய வரலாற்று ஆசிரியர் தாசிட்டஸ், விடுதலையான யூதக் கைதிகள் அரசுக்குப், புதிய பிரச்சனையாக இருந்தார்கள் என்று கட்டிக்காட்டுகின்றார்.

இந்தக் கிரேக்கம் பேசும் மக்களிடம் விசுவாசத்தை எடுத்துரைப்பது அவசியம் என்று இளைய திருச்சபை நினைத்ததாகத் தெரிகிறது. ஸ்தோவான் இந்தப், பணிக்கு நியமிக்கப்பட்டார். அவரும் ஞானத்தோடும், ஆவியின் துணையோடும் அதைச் செய்தார் (அ.ப. 6:10). கிரேக்கம் பேசும் புதிய கிறிஸ்தவர்களிடம் பணிசெய்ய நியமிக்கப்பட்ட எழுவரில் இவரும் ஒருவர். இந்த ஏழுபேரும் உரிமை அடைந்தவர்களைப் போல மற்ற இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாக இருக்கலாம்.

**உரிமைகள்/சட்டங்கள்** (Rights/Laws)

சட்டங்கள் மற்றும் உரிமைகள், என்பவை இருதுருவங்களாகும். ஒன்று குழுத்தன்மையையும் மற்றது தனிநபர்த்தன்மையையும் குறிக்கும். ஒரே சமுதாயத்திற்குள், அனைத்து மனித உறவுகளையும் ஆளுகின்ற அமைப்பினைச் சட்டங்கள் குறிப்பிடுகின்றன. உரிமைகள் என்பவை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சில தீர்மானிக்கப்பட்ட சாத்தியக்கூறுகளை வாக்களிப்பதன் அங்கீகாரமாக உள்ளன. ஒவ்வொரு சமுதாயமும் தனக்கே உரிய சட்டங்களைக் கொண்டுள்ளது. இவை தனது உறுப்பினர்களின் தனிப்பட்ட உரிமைகளை வரையறைப்படுத்தி உறுதியளிக்கின்ற வழிமுறையால் வேறுபடுத்தப்படுகின்றன.

இஸ்ராயேல் சமுதாயமானது தனக்கேயுரிய சட்டநெறிகளைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அதற்காகப் பெருமை கொண்டு, இறைவனிடமிருந்து பெற்ற மிக மதிப்புமிக்க கொடைகளுள் ஒன்றாக அதனைக் கருதவும் செய்தது (உப 4:6 தொ).

*1. பழைய ஏற்பாடு:-*

*அ. அதிகாரத்தினால் கமத்தப்பட்ட சட்டங்கள்:-* சட்டமானது, தீர்ப்பளிக்க அதிகாரமுடையவரால், அதாவது, அதிகாரத்தின் மீதான அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளரால் அறிவிக்கப்படும் முடிவாகும். பன்மையில் இச்சொல்லானது, உத்தரவுகள், கட்டளைகள், ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவற்றுடன் பெரும்பாலும் தொடர்புடைது. சட்டமொழி பல்வேறு அதிகார வடிவங்களைக் கவனமாய் வேறுபடுத்துகிறது. இச்சொற்றொகுதிகள், உடன்படிக்கையின் விளைவாக இஸ்ராயேல் முழுவதும் இறைசித்தத்தின் ஆட்சிக்கு உட்பட்ட காலம் முதல், இறைவனின் சட்டத்தை விவரிக்கப் பயன்பட்டன. செயல் முறையில் இறைவனால் தம் மக்களுக்கு அளிக்கப்பட்ட இச்சட்டமானது, இஸ்ராயேலின் சட்டநெறியை அமைத்தது. பரிசுத்த இறைவனுடைய சித்தத்தினை வெளிப்படுத்தியதன் காரணமாக, இது புனித நெறி என்றும் அழைக்கப்படலாம். ஆனால், எல்லா வகை வழிகளிலும், கண்டிப்பாக வழிபாட்டின் நிலையினைச் சார்ந்துள்ள புனித நிலைக்கு அப்பாற்சென்று வாழ்வு முழவதையும் கட்டுப்படுத்தியது.

*ஆ. சட்டங்களும் நீதியும்:-* இஸ்ராயேலின் சட்டநெறியில் உள்ள, எல்லாவற்றையும் உருவாக்கும், இறைசித்தத்தின் இந்தப் பிரசன்னமானது, பழங்கால மேற்காசியாவில் அசாதாரணமானதொன்றாகத் தோன்றவில்லை. ஆனால், மக்களின் பெருமையாகவும், உண்மையான இறைவனின் அடையாளத்தைக் கொண்டதாகவும் இருந்தது எனில், உலகை ஆண்டுவந்த எந்தப் பெரிய அரசுகளும், யாவேயிடமிருந்து இஸ்ராயேலர் பெற்றதைப்போன்ற சட்டநெறிகளைத் தங்களுடைய தெய்வங்களிடமிருந்து பெறவில்லை (உப 4:6 தொ). விவிலியம் முழுவதிலும், நீதி மற்றும் நேர்மையின் இணைப்பு, சட்டம் மற்றும் நீதிக்கு இடையிலான தொடர்பு என்பன மனசாட்சியினுடைய நிரந்தரக் கோரிக்கையின் அடையாளமாக உள்ளன. இதுவே, இறைவாக்கினர்களின் செய்தியாகும் (ஆமோ 5:7,24; 6:12,.... ஏச 5:7,16...; எரே 4:2; 9:23), இதுவே ஞானிகளின் போதனை (பழ 2:9). மற்றும் இது மெசியா பற்றிய நம்பிக்கையின் முக்கிய பண்புகளில் ஒன்றாகவும் உள்ளது (ஏச 1:27; 11:5; 28:17...). ஆனால், இக்கருத்தினை முதலில் வெளிப்படுத்தியவர் இறைவனே (சங் 19:10; 89:15; 119:7..). ''மண்ணகம் முழுவதற்கும் நடுவராய் இருப்பவர் நீதியளிக்க மாட்டாரா'' (ஆதி 18:25).

*இ. ஏழைகளின் உரிமைகள்:-* சட்டத்தற்கும் நீதிக்கும் இடையிலான தொடர்பானது முற்றிலும் இயல்பானதாக நமக்குத் தெரிகின்றது. நீதிக்குக் கவனம் செலுத்தாத சட்டநெறியானது எப்படிப்பட்டதாக இருக்கும்? சட்டத்திற்குத் துணை புரியாவிட்டால் நீதி என்னவாகும்? ஆனால், விவிலியத்திலுள்ள இந்த இணைப்பின் ஆற்றலும், தனித்தன்மையும், சட்டம் மற்றும் நீதியும் ஏற்றுக்கொண்ட செயல்முறையான மற்றும் ஆட்தன்மையுடைய அமைப்பிலிருந்து வருகின்றன. எவ்வளவு முழுமையானதாக இருப்பினும் நீதியானது, ஒரு விதியை மதிப்பதாக மட்டுமோ, வாய்ப்பின் சரிநிலையை உறுதிப்படுத்துவதாகவோ மற்றும் ஒவ்வொருவரையும் அவருடைய தகுதிக்கேற்ப நடத்துவதாகவோ மட்டும் இருப்பதில்லை. ஒவ்வொருநபருடைய உண்மையான தேவைகளை, மனிதரிடையே தனது நிலையைக் கண்டடைய அவனுக்குத் தேவையான குறிப்பிட்ட கவனத்தின் முறையினை, இது கண்டடைய வேண்டும். உணவைவிட அத்தியாவசியமான இந்த அத்யாவசியத் தேவையானது சட்டத்தின் அடிப்படையாக உள்ளது. இந்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்காத வகையில் நீதியானது தனக்கே உண்மையானதாக இருப்பதிலலை. இதன் ஒளியில் காணும் போது, சட்டமானது, ஏழைகள், துன்புற

றோர் போன்ற தங்களது துன்பங்களினின்று விடுபட முடியாதவர்கள் மீது முதலில் கவனம் செலுத்துகின்றது (யாத் 23:6; ஏச 10:2; எரே 5:28; யோபு 36:6.17). துரதிருஷ்டத்திற்கு இடையில் குற்றவாளியான ஒவ்வொரு இஸ்ராயேலனும் துரதிருஷ்டமுடையோரின் உரிமைகளை அனுபவிக்கின்றான் (ஏச 40:27; 49:4).

2. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாட்டின் பார்வையானது மாறுபட்டதாக உள்ளது. நீதியானது முக்கிய இடத்தைத் தொடர்ந்து வகித்தாலும், சட்டம் பற்றிய எண்ணமே மறைவதாகத் தெரிகிறது. இறைவனது மக்கள் இனியும், ஒரு நாட்டின் சமூக அமைப்புகளுடன் கூடிய அரசியல் மக்களாக இல்லாதது இதற்குக் காரணமாக இருக்கலாம். இறைவாக்கினரைப் போன்ற நடையையும், ஏழைகளின் மீது அக்கறையையும் கொண்டுள்ள யாக்கோபின் திருமுகம் கூட அவர்களுடைய உரிமைகளைக் குறிப்பிடவில்லை. ''நீதி, இரக்கம் மற்றும் நல்விசுவாசம்'' என்னும் மூன்று சொற்களில் சட்டத்தினுடைய வலுவான பொருளைக் கிறிஸ்து வரையறுக்கின்ற பகுதி மட்டுமே (மத் 23:23; மீக் 6:8) புதிய ஏற்பாட்டில் இதனைக் குறிக்கின்றது. சட்டத்தின் மீதான பழைய ஏற்பாட்டின் வலியுறுத்தலுக்கு இயேசு முழுவலிமையையும் அளிக்கிறார்; மற்றும் வார்த்தையானது புதிய ஏற்பாட்டை விட, பழைய ஏற்பாட்டிற்கே அதிக அளவில் உரியதாக உள்ளது என்பதை இது காட்டுகின்றது.

சமூக நீதியின் பிரச்சினைகள் இறைவாக்கினர்களின் காலத்தைவிட ஆதித்திருச்சபையில் அவ்வளவு கடுமையாக இல்லையென்பது இம்மறைவுக்குக் காரணமாகலாம். நடைமுறைச் செயல்பாட்டின் தொடக்கமாக உள்ள உள்ளார்ந்த மனநிலைக்கு அளிக்கப்பட்ட வளர்ச்சியோடுகூடிய முக்கியத்துவமும் இதற்குக் காரணமாகலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, சட்டம் பழைய ஏற்பாட்டைப் போன்று நீதியாகவும் ஆழ்ந்த ஆட்தன்மையுடையதாகவும், இருந்தாலும், அது நற்செய்தியால் மாற்றியமைக்கப்படுகிறது என்பதும் இதற்குக் காரணமாகலாம். உண்மையில் இதனுடைய பொன் விதியானது, ''உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (மத் 7:12) என்பதாகும். இயேசுவே அளிக்கும் கட்டளையானது, ''நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்'' என்பதாகும் (யோவா 13:34). பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்ட ஒவ்வொரு நபருடைய உரிமைகளின் மீதான கவனத்தை அழிக்கவோ, குறைக்கவோ இங்கு ஒன்றுமில்லை. ஆனால், இங்கு ஒருவர் தம்மை மற்றொரு நபரில் காணுவதற்கு அழைப்பு, பகிர்ந்து கொள்ளுவதற்கு ஆவல், ஒன்றிப்புக்கு ஆவல், தம்மையே முழுவதும் பலியாக்கச் செய்யும் அளவுக்கு ஆவல் ஆகிய புதிய உந்துதல்கள் ஏற்படுகின்றன. இறுதியாகச் சட்டங்கள் அன்பை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே இருக்க முடியும்.

## உரிமைச்சாசனம், உயில் (WILL)

புதிய ஏற்பாட்டில், ''தியதெக்கே'' என்ற கிரேக்கச் சொல், உடன்படிக்கை, உடன்பாடு, ஒப்பந்தம், உயில் என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இச்சொல் காணப்படுவதில்லை. பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கையைக் குறிக்கும் ''பெரீத்'' என்ற சொல் எழுபது நூலில் 'தியாதெக்கே' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அப்படிச்செய்யும்போது, சாசனம், உயில் என்ற பொருள் மறைந்து விடுகிறது. ஆனால் இரு காட்சியாளர்களுக்கிடையே உள்ள உடன்படிக்கையின் விளைவாக அல்லாமல் ஒருவனின் விருப்பத்தையே அறிவிக்கும் பொருளையும் தியாதெக்கே கொண்டுள்ளது. இதில், இறைவன் தமக்கும் தம்மக்களுக்குமிடையே உள்ள உறவின் நிபந்தனைகளைத் தீர்மானிப்பதாகச் சித்தரிக்கப்படுகிறார். இந்த நிபந்தனைகள் இயேசு கிறிஸ்துவின் நிபந்தனைகளில் இறுதியாக நிறைவேறுகின்றன.

ஒத்தமை நற்செய்திகளில், இயேசு உடன்படிக்கையின் இரத்தத்தைப்பற்றிப் பேசுகிறார் (மத் 26:28; மாற் 14:24; லூக் 22:20; 1 கொரி 11:25). தமது மரணத்தால் இயேசு இறைவனின் மீட்கும் சித்தத்தை நிறைவேற்றுகிறார். தம் மக்களுக்காக இறைவனது வாக்குறுதிகளையும் விருப்பத்தையும் குறிக்க சித்தம் அல்லது உடன்படிக்கை என்ற சொற்கள் பயன்பட்டுள்ளன (லூக் 1:72; உரோ 9:4; 11:27; எபே 8:6-13). எபிரேயர்களுக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் இச்சொல்லை விரும்பி, 17 தரம் பயன்படுத்துகிறார்.

விவிலியத்துக்குப் புறம்பான சூழ்நிலையில் ''தியாதெக்கே'' என்ற சொல் இறுதி உரிமைச் சாசனத்தை அல்லது இறுதி உயிலைக் குறிப்பதாக கலா 3:15; எபி 9:16-17 ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. சாதாரணமாய், உடன்படிக்கை, செய்தவன், அதை வெறுமையாக்க முடியாது. கலா 3:15-இல் வாரிக நியமிப்பது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. கிரேக்கச் சமூகங்களில், உயில் எழுதுபவர், விரும்பினால், மரணத்துக்கு முன் எப்போதும் நீக்கலாம் என்று கருதினர். எபி 9:16-17-இல் ''உரிமைச் சாசனம் எங்கே உள்ளதோ, அங்கே சாசனம் எழுதியவருடைய சாவு உறுதிப்படுத்தப்பட வேண்டும். சாவுக்குப் பின்னரே சாசனம் உறுதிபெறும்'' என்ற கூற்று, புதிய உடன்படிக்கை நிறைவு பெறுவதற்குக் கிறிஸ்துவின் மரணம் அவசியமாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

## உரிமைச் சொத்து (INHERITANCE)

இது, உடைமைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படுவதைக் குறிக்கும் சொல்லாகும். இது, வழிமரபோடு கூடிய மற்ற குடும்ப அல்லது சமூக அதிகாரங்களின் மாற்றத்திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது. பழங்கால மேற்காசியா முழுவதிலும் உடைமைகள் உரிமைச் சொத்தாகத் தந்தையிடமிருந்து மகனுக்கு மாறின.

இது உறுதியாக, நிலையாக உரிமையோடு சில பொருட்களை உடைமையாகக் கொண்டிருத்தல் இந்த உரிமைச் சொத்தாகும். இது ஒருவர் தம்மையும் தம் குடும்பத்தையும் மற்றவர்களின் இரக்கத்திற்கு உட்பட்டவர்களாக ஆக்காமல், தங்களுடைய தனித்தன்மையை விரிவாக்கப்பயன்படும்படி, பொருட்களைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. செயல்முறையில், இது விவசாயம் மற்றும் ஆயர் கலாச்சாரத்தில், நிலங்களையும் ஆட்டு மந்தையையும் ஓரளவு கொண்டிருப்பதாகும். உரிமைச் சொத்தை அடைய மேற்கொள்ளும் முறைகள் கவருதல், கொடையாகப் பெறுதல், சட்டப்படி பங்கீடு செய்தல், மூதாதையரிடமிருந்து பெறுவது (1 அரச 21:3-4) என்று பலவிதமாகப், பல்வேறு நிலைகளில் மாறுபடும்.

1. தந்தையின் சொத்துக்களை உரிமையாக்கி கொள்ளல்:-

இறைவாக்கினர் எலியா இந்த உரிமையை உறுதியாக ஆதரித்துப் பேசுகிறார். ஆகாபு, நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை எடுத்துக் கொள்ளச் சட்டப்படி முயற்சி எடுத்த போது, நாபோத்து அதற்கு இணங்க மறுத்து, ''நான் என் முன்னோரது உடைமையை உமக்குக் கொடாதபடி ஆண்டவர் என்னைக் காப்பாராக'' என்று கூறிவிடுகிறார் (1 அர 21:13). ஆனால் தன் முன்னோரிடமிருந்து வரும் உரிமைச்சொத்தைத் தன் பிள்ளைகளுக்கு அளிக்கும் நாபோத்தின் உரிமை வஞ்சிக்கப்பட்டது. போலிக்குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதை எலியா வன்மையாகக் கண்டிக்கிறார்.

இராக்கேலும் இலேயாவும் ''எங்கள் தந்தையின் குடும்பத்தில் எங்களுக்குப் பங்கும் உரிமைச் சொத்தும் உண்டோ?'' என்னும் முறையீடு செய்கின்றனர் (ஆதி 13:14,16). இந்த நிகழ்ச்சியுரை யாக்கோபின் மனைவியர் தங்கள் தந்தையிடமிருந்து சொத்தைப் பெற விரும்பியதை மட்டுமே காட்டுகிறது; அத்தகைய வழக்கு இருந்ததாகச் சட்டமில்லை.

உரிமைச் சொத்து ஒருவனது வாழ்வில் எவ்வளவு முக்கியம் உடையது என்றால், அதுவே அவனது வீடாகக் கருதப்படுகிறது

(மீக் 2:2). ''நல்லவனது சொத்து அவனு டைய மரபினரைச் சேரும். பாவி சேர்த்த செல்வமோ கடவுளுக்கு அஞ்சி நடப் போரை வந்தடையும்'' (பழ 13:22)

''போதகரே என் சகோதரன் என்னுடன் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு சொல் லும்'' (லூக் 12:13) என்ற வேண்டுகோள் தலைப்பேறாக இல்லாத சகோதரனின் கவ லையைப் பிரதிபலிக்கலாம்.

2. உரிமைச் சொத்து பற்றிய சட்டங்கள்:- இது பற்றிய சட்டங்கள் விவிலியத்தில் சிலவே உள்ளன. ஆயினும் சமூகத்திலுள்ள சில வகுப்பினரின் சொத்துரிமைமட்டும் சிறப்பித்துக் காட்டப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. இவர்களில், அடிமைப்பெண் அல்லது வைப்பாட்டியின் மகன், தலைப்பேற்றான், பெண் மக்கள், கைம்பெண்கள் ஆகியோர் அடங்குவர்.

2. அடிமைப்பெண்ணின் மகன்:- இந்த உரிமை ஒருவனது தாயின் நிலைமையால் அதிகம் பாதிக்கப்படவில்லை. அடிமைப் பெண் ஆகாரின் மகன், சாராவின் மகன் ஈசாக்கோடு உரிமைச் சொத்து அடைவதை யும், தலைப்பேற்றானின் உரிமை பெறுவ தையும் தடுக்க சாரா தனிப்பட்ட முயற்சி எடுக்க வேண்டியிருந்தது (ஆதி 21:10). பாபி லோனியச் சட்ட அமைப்பு, ஒரு வேலைக் காரி குழந்தைகளைப் பெற, அவர்களுடைய தந்தை அவர்களைத் தன் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டால், அவர்கள் மனைவியின் பிள்ளைகளோடு சொத்தைச் சமமாகப் பிரித் துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் தந்தை, அவர்களைத் தன் குழந்தைக ளாக ஏற்றுக் கொள்ளாவிடில் அவர்களுக்கு எந்த உரிமையுமில்லை. ஆனால் அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். வைப்பாட்டியின் மகனான அபி மெலக்கு, அவனுடைய தந்தையின் மனை விகளின் பிள்ளைகளோடு சொத்துரிமை கொண்டாடியது குறிப்பிடத்தக்கதாகும் (நீதி 8:30-31). ''முதலாளியின் மகன் ஒழுக்கங் கெட்டவனாயிருந்தால் அறிவுள்ள வேலைக் காரன் அவனை அடக்கி ஆள்வான்'' (நீதி 17:2). முதன்மை பெறுவான். ''தலைவன் தன் சொத்திலிருந்து எதையாவது தன் ஊழிய னுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தால் அது விடுதலையாண்டுவரையில் அவ்வூழிய னுக்குச் சொந்தமாய் இருக்கும்'' (எச 46:16-17) என்ற கூற்று கவனிக்கத்தக்கதாகும்.

ஆ. மூத்த மகன்:- தன் தந்தையின் சொத்து களிலிருந்து மூத்தமகன், இரண்டு பங்கு பெறுவான். ரூபன் இஸ்ராயேலுக்கு மூத்தம கன்; ஆனால் ''அவரது தந்தையின் படுக்கை யைத் தீட்டுப்படுத்தியதால்'' (ஆதி 49:4) அவருடைய பிறப்புரிமை யோசேப்பின் பிள் ளைகளுக்கு அளிக்கப்பட்டது (1 நாள் 5:1). ரூபனின் தீய நடத்தை அவர் மூத்தமகனின் பிறப்புரிமைபற்றிய சட்டத்தால் வரும் நன்மை அடைவதைத் தடுத்தது. யாக் கோப்பை ஈசாக் ஆசீர்வதித்த நிகழ்ச்சியுரை, மூத்தமகன் பிறப்புரிமை, சடங்குமுறை உண வோடு, ஒருசடங்காக அளிக்கப்பட்டதாகச் சுட்டுகிறது (ஆதி 21:4). ஆசீர் கூறப்பட்ட பின் அதன் விளைவுகளைத் திரும்பப் பெற முடியாது (21:37). பொதுவாக இந்தப் பிறப் புரிமை மரபிற்கேற்ப சொத்துக்கள் பிரித்த ளிக்கப்பட்டன.

இ. பெண் மக்கள்:- குலமுதியவர்களின் காலத்தில், ஆண்பிள்ளைகளின் உரிமை முதன் மையானதாகும். இது தந்தையின் பெய ரையும் உடைமையையும் நீடிக்கச் செய்தது. சந்ததியின் வளர்ச்சியை உறுதிப்படுத்தியது. ஒருவருக்குப் பெண்மக்கள் மட்டுமே இருந் தால், இந்நிலை பற்றி எண் 27:1-11 என்ற பகுதி விரிவாக எடுத்துக் கூறுகிறது. அப் போது சொத்து பெண்மக்களுக்கே உரியது என்று மோசே கட்டளையிட்டார். ஒருவருக் குப் பிள்ளைகளே இல்லையென்றால், சொத்து அவருடைய சகோதரனுக்குப் போய்ச் சேரும். சகோதரனும் இல்லையென் றால் அவருடைய தந்தையின் சகோதரனுக்கு உரிமையாகும். அப்படி யாரும் இல்லை யென்றால், அவருடைய அடுத்த உறவின னுக்கு உரியதாகும். இம்முறை நாடு முழுவ

தற்கும் சட்டமாகும். ஒரு கோத்திரத்திலிருந்து அடுத்த கோத்திரத்திற்குச் சொத்துக்கள் மாறுவதைத் தடுக்க, பெண்களை அடுத்த கோத்திரத்தில் திருமணம் செய்வது தடுக்கப்பட்டிருந்தது (எண் 36:6). நாடு கடத்தப்பட்ட பின் நிகழ்ச்சிகளின் விளைவாகவோ, இச் சட்டத்தின் விளைவாகவோ, யோபுவின் பெண் மக்கள் ஆண்பிள்ளைகளோடு சேர்ந்து சொத்தில் பங்கு பெற்றனர் என்று யோபு நூல் கூறுகிறது (யோபு 42:5).

ஈ. கைம்பெண்கள் நிலை:- இவர்கள் தங்கள் கணவர்களின் சொத்தில் பங்கு பெற்று, பாதுகாப்பு அடைவது பற்றி எந்தச் சட்டமும் இல்லை. மூப்படையுமுன் இறப்பது ஒரு பேரிடராகும்; பாவத்திற்குத் தண்டனையாகும்; அதன் விளைவுகளை உயிரோடிருக்கும் மனைவியும் அனுபவிக்க வேண்டும் என்று இதற்குக் காரணம் காட்டப்படுகிறது. ஆனால் சட்டத்திலும் மரபிலும் கைம்பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இல்லை. ''உடன் பிறந்தான் திருமணம்'' என்ற முறை கைம்பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. ஒரு குடும்பத்தின் பெயரையும் சொத்தையும் பாதுகாக்க, கைம்பெண் மீண்டும் மணம் செய்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட திருமணங்கள் கைம்பெண்களுக்கு அவர்களது மரணம் வரைப் பாதுகாப்பளிக்கிறது (மத் 22:24-26).

உ. மற்றவர்கள்:- பொதுவாக மூத்த மகன் உரிமை வழக்கு கடைப்பிடிக்கப்பட்டாலும், அரசனுடைய உடைமைகளும் அரசபதவியும் மாறுவது தன்னியக்கமாகச் செயல்படவில்லை. அரியணைக்கு உரிய உரிமை அரசனுடைய மனைவியர் குழுவாலும் ஆலோசகர்களாலும் தீர்மானிக்கப்பட்டது (1 அர 1:27-28). மீண்டும் அமைக்கப்பட்ட சமூகத்தில், ஓரிடத்தில் நிலையாக வாழும் அந்நியனுக்கும், அவனுக்குப் பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டது (எச 47:20). குருக்களுக்கு எந்தச் சொத்துரிமையும் இல்லை (44:28). கிளர்ச்சி செய்யும் மகனின் முடிவு பயங்கரமானதாகும். அவனுக்குச் சொத்துரிமை இல்லாதது மட்டுமன்று அவன் அழிக்கப்படவேண்டும் (உப 21:18-21).

மனித சமுதாயத்தில் நிலவிய இந்த அடிப்படையான அனுபவங்கள் அளிக்கும் செய்திகளின் அடிப்படையிலேயே, இறைவன் மனிதனுக்கு அளிக்கும் கொடையின் அடிப்படைக் கொள்கையைப் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் எடுத்துக் கூறுகின்றன.

II. பழைய ஏற்பாடு:-

1. கருத்தின் தோற்றம்:- தொடக்கத்திலிருந்து உரிமைச்சொத்து பற்றிய கருத்து உடன்படிக்கை பற்றிய கருத்தோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்திருக்கிறது. இறைத்திட்டத்தில் முக்கூறான உறவினை இது விவரிக்கிறது. இஸ்ராயேல் யாவேயின் உரிமைச்சொத்து; வாக்களிக்கப்பட்ட நாடு இஸ்ராயேலின் உரிமைச்சொத்து. அதன்மூலம் அது யாவேயின் உரிமைச்சொத்தாகவும் உருவாகிறது.

அ. இஸ்ராயேல், கடவுளின் உரிமைச் சொத்து:- இந்த முக்கூறான உறவுகளிலும் மிகவும் அடிப்படையாக இருப்பது 'இஸ்ராயேல் இறைவனின் உரிமைச்சொத்து' (யாத் 34:9; 1 சாமு 10:1; 26:19; 2 சாமு 20:19; 21:3) என்பதே. இக்கூற்று இறைவனுக்கும் ''அவருக்கேயுரிய'' (யாத் 19:5) அவருடைய மக்களுக்கும் இடையில் உள்ள மிக நெருங்கிய உறவைச் சுட்டிக் காட்டுகிறது. ''நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாயிருப்போம்'' (எரே 24:7; எச 37:27), என்னும் உடன்படிக்கையின் வாய்பாடானது கிட்டத்தட்ட இதனையே குறிப்பிடுகின்றது. ஆனால், உரிமைச்சொத்து பற்றியகருத்து, தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக்கும் கருத்தையும் சேர்க்கிறது. இதன் விளைவாக, இஸ்ராயேல் சமயச் சார்பற்ற சூழலிலிருந்து (பிற மக்களின் சுழலிலிருந்து) புறம்பாக்கப்பட்டு, இறைவனுடைய உலகிற்குள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆ. வாக்களிக்கப்பட்ட நாடு, இஸ்ராயேலின் உரிமைச் சொத்து:- ஆதி.15-இல் தரப்பட்டுள்ள மூதாதையரின் உடன்படிக்கை

யைப் பற்றிய வாசகப்படி, இந்த இரண்டாவது உறவானது உடன்படிக்கை பற்றிய கருத்துடன் சரிநிகராக இணைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதில், ஆபிரகாமிற்கான இறைவனின் வாக்குறுதியானது வாரிசாகிய ஈசாக்கு மற்றும் அவருடைய சந்ததி, உரிமைச் சொத்தாகிய கானான் நாடு என்னும் இரண்டு இலக்குகளைக் கொண்டுள்ளது. இயல்பாகவே, ஆபிரகாமின் வாரிசுகளும் இவ்வாக்குறுதியினை உரிமையாக்கிக் கொள்வர் (ஆதி 26:3; 35:12; யாத் 6:8). கானான், உரிமைச் சொத்தாக இன்னும் ஆபிரகாமுக்கு அளிக்கப்படாமல் அவருடைய வாரிசுகளுக்கே வாக்களிக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்த வாக்குறுதியும், அதனின்று வெளிப்படும் இஸ்ராயேலின் எதிர்பார்ப்பும் உரிமைச் சொத்து பற்றிய கருத்தைப் படிப்படியாக வளப்படுத்துகிறது. நிறைவேறாத, அளவுக்கு மீறிய, உலகியல் எதிர்பார்ப்புகளின் விளைவான ஏமாற்றங்கள், மனிதனுடைய இதயத்தைத் திருப்தியடையச் செய்யக்கூடிய உண்மையான ஒரே உரிமைச் சொத்தினை விரும்பக் கூடிய அளவிற்கு இஸ்ராயேலின் எதிர்பார்ப்பு நிலை உயர ஏதுவாகின்றன.

இ. வாக்களிக்கப்பட்ட நாடு, கடவுளின் உரிமைச் சொத்து:- முதல் இரண்டு உறவுகளினின்று இந்த மூன்றாவது உறவு வெளிப்படுகின்றது. இந்த வாய்பாடு இறைவனுக்கும் கானானுக்கும் இடையிலுள்ள இணைப்பை இயல்பானதாக வெளிப்படுத்துவதில்லை. இக்கருத்தைப் பொருத்தமட்டும், அவர்களுடைய பல்வேறு நாடுகள் பல்வேறு கடவுளர்களுக்கு உரியவை என்று கருதுகின்ற சூழ்ந்துள்ள பிற மக்களினின்று இஸ்ராயேல் வேறுபட்டதாக உள்ளது. உண்மையில் முழு உலகமும் இறைவனுக்கு உரியது (யாத் 19:5; உப 10:14). கானான் ஒரு சிறப்புப் பட்டத்தின் மூலம் அவருடைய உரிமைச் சொத்தாயிற்றெனில், அவர் அந்த நாட்டை இஸ்ராயேலுக்கு அளித்தலும் அதன் விளைவாக, தன்னுடைய உறைவிடத்தை அங்கே ஏற்படுத்த விரும்பியதுமே காரணமாகும் (யாத் 15:17). இது இஸ்ராயேலின் ஒவ்வொரு கோத்திரமும் உரிமைச் சொத்தில் தனக்குரிய பங்கைப் பெறுவதற்காகப் புனித பூமி பங்கீடு செய்யப்படுவதின் ஆழமானபொருளை அளிக்கின்றது (நீதி 13-21). ஒவ்வொரு பங்கும் இறைவனிடமிருந்து பெறப்படுகிறது. அதன் எல்லைகள் தொட்டறிய முடியாதவையாக உள்ளன (எண் 36). கட்டாயமாக விற்கப்பட்டால் ஜூபிலி ஆண்டானது சொத்துக்குரியவருக்கு ஒவ்வொரு சொத்தையும் திருப்பிப்பெற வாய்ப்பளிக்கிறது (லேவி 25:10); ''நாடு நம்முடையதாகையாலும், நீங்களோ எம்மிடத்தில் அந்நியர்களும் இரவற் குடிகளுமாகையாலும், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்க வேண்டாம்'' (லேவி 25:23). இஸ்ராயேல் தன்னுடைய நாட்டிலேயே இறைவனுடைய உழவனாக உள்ளது; இஸ்ராயேல் தனக்காக இல்லாமல் இறைவனுக்காகவே அதில் வாழவேண்டும்.

2. கருத்தின் வளர்ச்சி:-

இறுதிக்காலக் கட்டத்துடனான தொடர்பு மற்றும் ஆன்மிகப்படுத்துதல் என்னும் இரு கூறுகளைப் பழைய ஏற்பாட்டில் இக்கருத்தின் வளர்ச்சி கொண்டுள்ளது.

அ. இறுதிக்கால உரிமைச்சொத்து:- கானானை வெற்றிகொள்ளுதல் ஆதி.15-இல் வரும் உறுதிமொழியின் நிறைவேற்றமாகத் தோன்றலாம். எட்டாம் நூற்றாண்டில் தொடங்கி, இறைவனுடைய உரிமைச் சொத்தானது சிறிது சிறிதாக யூதரல்லாதோருடைய ஆதிக்கத்திற்கு உட்படுகிறது. இறைவன் தம்முடைய வாக்குறுதிகளினின்று பின்வாங்கவில்லை, இஸ்ராயேலின் பாவங்கள், வாக்குறுதிகளின் விளைவுகளைத் தற்காலிகமாக விட்டுக் கொடுக்கின்றார். இறுதிக்காலத்தில் மட்டுமே எஞ்சியுள்ள, இறைவனுடைய மக்கள் என்றென்றும் தங்களுடைய உரிமைச் சொத்தாக அந்நாட்டை உரிமையாக்கிக் கொண்டு, அதனில் நிறைவான மகிழ்ச்சியை அனுபவிப்பர் (உப 28:62-63; 30:5). உப ஆகமத்தில் உள்ள இப்படிப்பினையானது, நாடு கடத்தலின் போது (எச 45-48; எச 47:14-இல் ஆதி 15 சுட்டிக்காட்டப்படுதல்) கடத்தலுக்குப் பின்னும் (செக் 8:12; ஏச 60:21)

இறைவாக்கினரில் காணப்படுகின்றது. நீதிமான்கள் மட்டுமே உரிமைச் சொத்தினை இறுதியாக அனுபவிப்பவர்களாக இருப்பர் *(சங் 37:9.11.18.22.34; 25:13; 61:6; 69:37)*.

இஸ்ராயேலின் நம்பிக்கை பற்றிய இம்மாற்றத்தில், இறைவனால் அபிடேகம் செய்யப்பட்ட அரசனுக்கு அளிக்கப்பட்ட சிறப்பிடத்தைப் பற்றிக் குறிப்பிட இடமுண்டு. ''உமக்கு மக்களினங்களை உரிமையாக்குவோம்; உலகின் கடைசி எல்லைவரை உமக்குச் சொந்தமாக்குவோம்'' *(சங் 2:8)* என்று ஆதிகால சங்கீத ஆசிரியர் ஒருவர் வாழ்கின்ற அரசனுக்கு வாக்குறுதி அளித்திருக்கலாம். ஆனால் நாடு கடத்தலுக்குப் பின்னர் அதனை மீண்டும் வாசிக்கும் போது, மெசியாவாகிய வருங்கால அரசரைப் பற்றியதாக இவ்வாக்குறுதி புரிந்து கொள்ளப்படுகிறது *(சங் 2:2)*.

நாட்டின் உரிமைச்சொத்து, மக்களினங்களின் உரிமைச்சொத்து போன்ற இறுதிக்கால இயலானது, எப்பொழுதுமே உலக முன்னோக்கிலிருந்து விளைவதன்று. மரணத்திற்குப் பிற்பட்ட வெகுமதி பற்றிய கோட்பாடு ஒருவடிவம் எடுத்தபிற்பாடு, இந்த இறுதிக் கட்டமானது மெதுவாகச் செயல்படும். இறைவனால் நீதிமான்களுக்கு வாக்களிக்கப்பட்ட உரிமைச்சொத்தை உடைமையாக்கிக் கொள்வது *(தானி 12:13; ஞான 3:14; 5:5)*, மரணத்திற்குப் பின்னர் வரவிருக்கும் உலகில் இருக்கும். ஆனாலும், இது உருமாறிய உரிமைச் சொத்தேயாகும்.

ஆ. ஆன்மீகப் படுத்தப்பட்ட உரிமைச் சொத்து:- உரிமைச் சொத்தை ஆன்மீகப்படுத்தலின் தொடக்கம் லேவியர்களின் நிலையாகும். உப.10:9-இன் விதிமுறைப்படி ''இறைவனே அவர்களது உரிமைச்சொத்தாக இருப்பதால், தங்களுடைய சகோதரருடன் உரிமைச்சொத்து இல்லாமலிருக்கும்.'' ஆரம்பத்தில், இவ்விதிமுறையானது உலகைச்சார்ந்த வழியில் புரிந்து கொள்ளப்பட்டது: ''லேவியரின் உரிமைச் சொத்தானது விசுவாசிகளுடைய காணிக்கைகளைக் கொண்டதாக இருந்தது'' *(உப 18:1-2)*. ஆனால், அது படிப்படியாக ஒரு ஆழமானபொருளைக் கொண்டு மொத்தமாக எல்லா மக்களுக்கும் சாற்றிக் கூறப்பட்டது. யாவேயே அதனுடைய உரிமைச்சொத்து *(எரே 10:16; யாவேயே என்னுடைய பங்கு')* இந்த உறுதியானது, உலகைச்சார்ந்த உரிமைச்சொத்தாகிய கானான் நாடு இறைமக்களிடமிருந்து எடுக்கப்பட்ட காலம் முதல் *(புல.3:24)* தன் முழுப்பொருளையும் பெறுகிறது.

உரிமைச்சொத்து பற்றிய எண்ணத்தை முழுமையாக ஆன்மீகப்படுத்தலின் தொடக்கம் இதுவே. ''யாவேயே என்னுடைய பங்கு'' *(சங் 16:5; 73:26)* என்று சங்கீத ஆசிரியர்கள் கூறும்போது, தங்களது இதயத்திற்கு முழுத்திருப்தி அளிக்கின்ற முழு நன்மையையே அங்குக் குறிப்பிடுகின்றனர். முழுவதும் உள்ளார்ந்த இந்த உரிமைச்சொத்தானது எஞ்சியுள்ள விசுவாசிகளுக்கு மட்டுமே உரியது என்பது தெளிவாக உள்ளது. இது இனிமேலும், விசுவாசத்தோடு இருந்தமைக்காக அளிக்கப்படும் வெளிப்புற வெகுமதியாக இல்லாமல், விசுவாசத்தினால் விளைகின்ற மகிழ்ச்சியே ஆகும் *(சங் 119)*. இந்தப் புதிய முன்னோக்கில் நாட்டை உரிமையாக்கிக் கொள்ளுதல் வரவிருக்கும் உலகில் அவன் பெறவிருக்கும் உரிமைச் சொத்தினை ஒருவிதத்தில் எதிர்பார்க்கிறது என்பது தெளிவு.

III. புதிய ஏற்பாடு:-

1. வாக்குறுதிகளின் உரிமையாளர்:-

*அ. கிறிஸ்து ஒரே உரிமையாளர்:-* பழைய ஏற்பாட்டில் வாக்குறுதியின் உரிமையாளர் என்பது முதலில் இறைமக்களுக்கு மட்டுமாகவும், பின்னர் எஞ்சிய விசுவாசிகளுக்குமென்றும் ஒதுக்கி வைக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில், முதலாவதாக, இவ்வாறு எஞ்சியவர் கிறிஸ்துவே என்பது தெளிவாகிறது. கிறிஸ்துவில் ஆபிரகாமின் சந்ததியினர் ஒரு முகப்படுத்தப்படுகின்றனர் *(கலா 3:16)*. மகன் என்ற அளவில் உரிமைப்பேற்றின் உரிமையைப் பிறப்பினால் அவர் கொண்டுள்ளார் *(மத் 21:38)*. வானதூதர்களுடைய

*பெயரைவிட உயர்ந்த பெயராகிய (எபி 1:4), யாவேயின் பெயரையே (பிலி 2:9). அவர் உரிமையாகப் பெற்றதால், இறைவன் அவரை 'எல்லாவற்றிற்கும் உரிமையாளராக் கினார்'' (எபி 1:2).*

*ஆனாலும், இந்த உரிமைப்பேற்றினை உண்மையாகவே அடைவதற்கு, இயேசு தனது பாடுகளையும் இறப்பையும் ஏற்க வேண்டியிருந்தது (எபி 2:1-10; பிலி 2:7-11). தொன்மையான வாக்குறுதிகளை நிறை வேற்றுவதற்குத் தடையாக இருந்தது எது வெனக் காட்டினார்; அது மனிதர் கண்டு ணர்ந்த அடிமை நிலையாகும் (கலா 4:3. 8; 5:1; யோவா 8:34). இறைவன் அவர்களை உட்படுத்திய-அடைபட்டுக் காவலில் வைக் கப்பட்ட-நிலையாகும் (கலா 3:23; 4:1 தொ). இயேசு இத்தற்காலிக நிலையை முடித்த தால், நாம் அடிமைத்தன்மையினின்று வெளிப்பட்டு அவருடைய மக்களாக, அதன் மூலம் உரிமையாளர்களாக உள்ள நிலைக் குச் செல்ல முடிகிறது (கலா 4:5 தொ). அவரது மரணத்தின் விளைவாக நமக்கு வாக்களிக்கப்பட்ட முடிவில்லா உரிமைப் பேற்றினை நாம் இப்போது அடைய முடி யும் (எபி 9:15).*

*ஆ. நம்பிக்கையாளர்கள், கிறிஸ்துவில் உரிமையாளர்கள்:- உண்மையில் இதுவே கிறிஸ்துவர்களின் இன்றைய நிலையாகும். ஆண்டவருடைய ஆவி அவர்களுக்கு உயிர ளிப்பதால் அவர்கள் இறைவனுடைய சுவி காரப் பிள்ளைகளாகவும், அதன்மூலம் இறைவனுடைய உரிமையாளர்களாகவும், கிறிஸ்துவின் உடன் உரிமையாளர்களாகவும் உள்ளனர் (உரோ 8:14-17). ஈசாக்கும், யாக் கோபுவும் கொண்டிருந்ததைப்போன்று (எபி 11:9), அவர்களும் மூதாதையருக்கு அளிக்கப் பட்ட வாக்குறுதியை உரிமையாகக் கொண் டிருக்கின்றனர் (எபி 6:12.17). ஏனெனில் அவர்களே ஆபிரகாமின் சந்ததியினர் ஆவர். ஊனுடலின்படி இஸ்ராயேலின் உறுப்பின ராக இருப்பது போன்று, மோசேயின் சட்டத் திற்குக் கீழ்ப்படிதலானது உரிமைச்சொத்திற் குப் பயனற்றது. விசுவாசத்தினால் கிறிஸ்து விற்குள் இணைந்திருப்பது மட்டுமே ஏற்கப் படக்கூடியதொன்றாகும் (உரோ 4:13-14). கிறிஸ்துவின் மறைபொருளில் ''புற இனத்த வரும் ஒரே உரிமைப்பேற்றுக்கு வாரிசுகள், வாக்குறுதியில் பங்கு உடையோர் ஆயினர்'' என்பதே இதன் விளைவாகும் (எபே 3:6; கலா 3:28-29). கிறிஸ்துவைச்சுற்றிப் புதிய மக்கள் அமைக்கப்படுகின்றனர். இவர்களே ஒரே உரிமையாளர் ஆவார். அருளின் மூல மாக (உரோ 4:16) உரிமைப்பேற்றின் உரிமை இம்மக்களுக்கு அளிக்கப்படுகிறது.*

*2. வாக்களிக்கப்பட்ட உரிமைச்சொத்து:- ''அர்ச்சிக்கப்பட்டவரோடு இறைவன் மனிதருக்கு அளிக்கின்ற'' (அ.ப.20:32) ஒளி யிலுள்ள ''இறைமக்களிடையிலான உரி மைப்பேற்றின் மாட்சியானது'' (எபே 1:18) அதே நேரத்தில் அதனுடைய உண்மையான இயல்பையும் காட்டுகின்றது. கானான் நாடானது வாக்குறுதிகளுக்குப் போதிய தகு தியுள்ள இலக்காக இல்லை. விண்ணக நக ரின் உருவமாக மட்டுமே அது இருந்தது (எபி 11:8 தொ). ''உலகின் தொடக்கத்திலி ருந்தே'' (மத் 25:34) தந்தையானவர் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கெனத் தயா ரித்த உரிமைச்சொத்தானது 'அருளே' ஆகும் (1 பேதுரு 3:7); இதுவே மீட்பு (எபி 1:14); இதுவே இறையரசு (மத் 25:34; 1 கொரி 6:9; 15:50; யாக் 2:5); இதுவே முடிவில்லா வாழ்வு (மத் 19:29; தீத் 3:7).*

*இச்சொற்றொடர்கள் உரிமைப் பேற்றினு டைய அறிவுக்கப்பாற்பட்ட யாவும் கடந்த சிறப்பியல்பினை வலியுறுத்துகின்றன. இது உடல் மற்றும் இரத்தத்தின் பிடிப்பிற்குள் இல்லாமல், கிறிஸ்துவின் சாயலில் உருமாற் றப்பட்ட ஒரு நபரைக் கோருகிறது (1 கொரி 15:49-50). ஒர் அரசு என்ற அளவில் இது அவருடைய உலகளாவிய அரசுரிமையில் பங்கு பெறுதலாகும் (மத் 5:4; 25:34; உரோ 4;13; ஆதி 15; சங் 2:8). முடிவில்லாத என்ற அளவில் வாழ்வும், உயிர்த்த இயேசு கிறிஸ் துவின் வாழ்வில் பங்கு பெறுவதும் (1 கொரி 15:45-50), அதன் மூலமாக இறைவனு டைய வாழ்விலேயே பங்கு பெறுவதுமா*

கும். மரணத்திற்குப் பிறகு மகிமையில் கிறிஸ்துவோடுசேரும்போது நாம் இதனை அடைவோம். இப்பொழுது நாம், மகிமையைப் பற்றிய நம்பிக்கையை மட்டுமே கொண்டுள்ளோம் (தீத் 3:7). மகிமையை முழுமையாக அடையக்கூடிய கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கும் இவ்வேளையில். நமக்கு அளிக்கப்பட்ட தூய ஆவியே இம்மகிமையினுடைய நமது அச்சாரமாக உள்ளார் (எபே 1:14).

**உரியா** (URIAH யாவே ஒளியாவார்)

1. தாவீது தனக்கென அமைத்த 'முப்பது பேர்' படையில் ஒருவர். கித்தியர் இனத்தைச் சேர்ந்தவர். இப்படையில் புறவினத்தார் பலரும் இருந்தனர். அவர்களில் உரியாவும் ஒருவர் (2 சாமு 23:39; 1 நாள் 11:41). இவர் யூதர்களைப் பின்பற்றுவதற்குமுன் இவரது பெயர் ஆரியாவாக இருந்திருக்க வேண்டும் என்றும், அதன் பிறகு உரியா என்று மாறியது என்றும் கூறுவர். இவரோடு 'முப்பதுபேர்' படையில் இருந்த எலியாமின் (2 சாமு 23:34) மகளான பதுசேபாவை மணந்தார். அப்படியாயின் இவள் அகித்தோபலின் பேத்தியாவாள். தாவீது அவளோடு கூடியிருந்ததால் அவள் கருவுற்றாள். தாவீது எவ்வாறாகிலும் உரியாவைப் பதுசேபாவோடு இணைத்துவிட வேண்டும் என்று செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை ஏனெனில் அச்சமயத்தில் அம்மோனியர் மலைநகரான இரபாமேல் தாவீது முற்றுகையைத் தொடங்கியிருந்தார். போருக்குச் செல்பவர்கள் எந்தவிதத் தீட்டும் படாதவர்களாக இருக்க வேண்டும் என்பது அன்று இருந்த வழக்கம் (காண்க 1 சாமு 21:4). அதனை அணுவும் பிசகாது கடைப்பிடித்ததுடன் தனது வார்த்தைகளாலும் பெட்டகத்தின் மீதும், தாவீதின் மீதும், படைத்தளபதி யோவாபின் மீதும் தனது பிரமாணிக்கத்தை வெளிப்படுத்துகிறார் உரியா. இறுதியில் தாவீது யோவாபிற்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தின்படி உரியா கடும் சண்டை நடக்கும் இடத்தில் நிறுத்தப்பட்டு இறக்கிறார். அதற்குப் பிறகு அவரது மனைவி தாவீதின் மனைவியாகின்றாள் (2 சாமு 11:1). இறைவாக்கினர் நாத்தான் இதனைச் சுட்டிகாட்டிய பிறகு தாவீது திருந்துகிறார் (2 சாமு 12:1-15). தாவீதுக்குப் பதுசேபா மூலமாகப் பிறந்த சாலமோன் வழியில்தான் இயேசு பிறந்ததாக மத்தேயு தனது தலைமுறை அட்டவணையில் குறிப்பிடுகின்றார் (மத் 1:6).

2. ஏசய இறைவாக்கினருக்கு வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்குகளை வரைபலகையில் எழுதிவைத்ததற்குச் சாட்சிகளாக நியமிக்கப்பட்ட, இருவரில் ஒருவரான உரியா ஒரு குரு (ஏச 8:2). இச்சாட்சிச் செயல் அக்காலத்தில் யூதர்களிடம் நிலவிய 'இரு சாட்சிகள்' வழக்கத்திற்கு ஒத்ததாக அல்லது இவ்வாக்குகள் நிறைவேறும்பொழுது ஏசய உண்மையிலேயே இறைவனிடமிருந்து ஓர் அடையாளம் கொடுத்தார் என்பதற்குச் ஆதரவாகப் பயன்பட்டது (காண்க உப 18:22).

3. ஆகாசு மன்னன் காலத்தில் இருந்த தலைமைக்குரு. ஒருவேளை(2)-இல் வருபவராகவும் இருக்கலாம். ஆகாசு, அசீரிய மன்னன் திகிலாத்துபிலேசரைச் சந்திக்க தமாஸ்கு சென்ற போது அங்குக்கண்ட ஒரு பீட அமைப்பைப் தன் நாட்டில் அமைக்குமாறு உரியாவுக்குக் கட்டளையிட்டார். அவர் திரும்பிவரும்போது உரியாவும் அதனைச் செய்து முடித்திருந்தார் (2 சாமு 16:10-16). இதற்கு இணையான விவரிப்பில், 2 நாள் 28:22-24-இல், இக்கதை சேர்க்கப்படவில்லை.

4. இவர் கிரியத்-எயாரீம் என்னும் ஊரில் வாழ்ந்த செமாயாவின் மகனான ஒரு இறைவாக்கினர் (எரே 26:20-23). எரேமியாவுக்கு அவரது ஆலய உரைக்குப்பின் வரவிருந்த அபாயத்தை உணர்த்துவதற்காக இவரது கதை ஒரு பிற்சேர்க்கையில் கூறப்படுகிறது (எரே 26:20-23). உரியா எகிப்துக்குத் தப்பிச் சென்றாலும் மன்னனின் ஆட்களால் இழுத்து வரப்பட்டு இரக்கமில்லாது கொல்லப்பட்டுப் பொதுக்கல்லறையில் எறியப்பட்டார் (26:21-23).

5. 'மெரெமோத்து' என்பவரின் தந்தையான உரியா ஒரு குரு ஆவார். இவர்

காக்கோசின் வழிவந்தவர் (எஸ் 8:33; நெக 3:4.21). நெகமியா காலத்தில் எருசலேமின் சுவரைக் கட்டியவரில் ஒருவர்.

6. எஸ்ரா சட்ட ஒழுங்குகளைப் பொது வில் வாசித்தபோது அருகில் நின்றவர்களில் ஒருவர் (நெக 8:4). இவர் எப்பட்டமுமோ, முன்னோர் பட்டியலிலோ இல்லாமல் கூறப்படுகிறார். ஆகவே இவர் பொது நிலை யினராக இருக்க வேண்டும். இவர் (5)-இல் குறிப்பிடப்பட்டவராக இருக்கலாம்.

**உரியேல்** (URIEL இறைவன் ஒளியாவார்) -ஆள்.

1. தாவீதரசரின் காலத்தில் உடன்படிக் கைப் பேழையை ஓபேது ஏதோமின் வீட்டி லிருந்து எருசலேமுக்குக் கொண்டு வந்த போது அதனைக் கொண்டுவர உதவியவர்க ளில் ஒருவர். இவர் கெகாத்திய லேவிய குலத்தைச் சேர்ந்த தகாத்தின் மகனும் ஊசி யாவின் தந்தையுமாவார் (1 நாள் 6:24; 15:5).

2. இவர் கிபயா நாட்டைச் சேர்ந்தவர். இவரது மகள் மாக்கா மூலமாகப் பிறந்த அபியா யூதாவை மூன்று ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தார் (2 நாள் 13:2). மாக்கா, ஆசா என்ற மன்னனின் காலம்வரை அரசியாக யூதாவின் அரசவையில் வீற்றிருந்தாள் (1 அர 15:10.13; 2 நாள் 15:16).

**உரியேல்** (URIEL) - வானதூதர்

நான்கு தலைமை வானதூதர்களில் ஒருவர் உரியேல். (மற்றவர்கள் மிக்காயேல், காபிரி யேல், இரப்பாயேல்). இப்பெயரைப்பற்றி விவிலியத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. விவிலியத்திற்கு வெளியே ஏனோக்கு போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தூதர் நோவாவுக்குச் செய்தி கொண்டு சென்றவராகவும் உலகைக் கண்காணிப்பவ ராகவும் காட்சிகளில் வருபவராகவும் கூறப் படுகின்றார். விவிலிய அட்டவணையில் வராத இரண்டாம் எஸ்திராஸ் நூல் தீமைக ளைப்பற்றியும், கடவுளுடைய வழிகளைப் பற்றியும் எஸ்ரா கலக்கமுற்றிருந்த போது அவருக்குத் தெளிவுபடுத்துபவராகக் கூறப்ப டுகின்றார். யூதர்களிடம் நிலவி வந்த மிட் ராஸ்நூல்களில் உரியேல் ஒளியைக் கொண்டி ருப்பவராகவும், இஸ்ராயேலுக்கு ஒளியைக் கொண்டு வருபவராகவும் விளக்கப்பட்டுள் ளார்.

**உருகாமா** (RUHAMAH- இரக்கம் காட்டப்பட்ட)

ஓசேயாவின் மகளுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளப்பெயர் இது. மீட்பின் நாளிலே இஸ்ராயேலுக்குக் கொடுக்கப்படவேண்டிய புதுப்பெயராகும் இது. இதன் பொருள் 'அவள் இரக்கம் காட்டப்பட்டவள்' என்பதாம். இறைவன் கோப மனப்போக்கிலி ருந்து இரக்கம் உடையவராக மாறுவதை இது காட்டுகிறது (ஓசே 2:1.23).

**உருமாற்றம்** (TRANSFIGURATION)

இது இயேசுவின் வாழ்வில், மலைமீது மூன்று சீடர்களின் முன்னிலையில், அவரது தோற்றம் மாட்சிமை மிக்கதாக மாறிய நிகழ்ச்சியாகும் (மத் 17:1-9; மாற் 9:2-10; லூக் 9:28-36; 2 பேதுரு 1:16-21).

1. நிகழ்ச்சி:- இந்த மறைபொருள்மிக்க நிகழ்ச்சியில் மூன்று வியப்புக்கள் நிகழ்ந்தன;

(அ) இயேசு உருமாறினார் அல்லது அவ ரது முகமும் ஆடைகளும் அசாதாரணமான ஒளியினாலோ மகிமையினாலோ மாறின; (ஆ) நீண்ட காலத்திற்கு முன்பே இறந்து விட்ட எலியாவும் மோசேயும் தோன்றினர்; (இ) மேகத்திலிருந்து விண்ணகக் குரலொலி பேசியது.

இயேசு தம்முடன் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானை மலைக்குக் கூட்டிச் சென்றார்; அங்கே இருப்பது நல்லது என் றும் இயேசுவிற்கும், மோசேக்கும், எலியா வுக்கும் மூன்று கூடாரங்கள் அமைக்கவேண் டும் என்றும் பேதுரு கூறினார்; சீடர்கள் மூவரும் அஞ்சி நடுங்கினர்; ''இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவி சாயுங் கள்'' என்று அவர்கள் மீது நிழலிட்ட மேகத் திலிருந்து குரலொலி கேட்டது; மனுமகன்

உயிர்க்கும்வரை இக்காட்சியைச் சீடர்கள் எவருக்கும் சொல்லக்கூடாது (மத்தேயு மற்றும் மாற்கு); தங்களது அனுபவத்தைப் பற்றி அவர்கள் எவரிடமும் கூறவில்லை (லூக்கா). இவற்றில் நற்செய்தி நூல்கள் ஒத்துப் போகின்றன.

மாற்குவில் காணப்படும் சலவைக்காரன் மற்றும் பேதுருவின் அறியாமை பற்றிய குறிப்புக்களை மத்தேயு விட்டு விடுகிறார். ஆனால் இயேசுவின் முகம் கதிரவனைப் போல் ஒளிவீசியது; ஒளிரும் மேகம்; ''இவரிடம் நான் பூரிப்படைகிறேன்'' என்னும் சொற்கள்; சீடர்கள் குப்புற விழுந்தது; அஞ்சாமல் எழச்சொல்லி இயேசு அவர்களைத் தொட்டது போன்ற குறிப்புக்களைச் சேர்க்கிறார். லூக்காவும் மாற்குவை விரிவுபடுத்துகிறார்; இயேசு செபித்துக் கொண்டிருக்கும் போது அவரது முகத்தோற்றம் மாறியது; மோசேயும் எலியாவும் எருசலேமில் நிறைவேறப் போகின்ற அவருடைய இறுதிப்பயணம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்; ''நான் தேர்ந்து கொண்டவர்''; மேகம் ஒன்று வந்து அவர்கள் மேல் நிழலிட்டது; சீடர்கள் தூக்க மயக்கமாயிருந்தாலும் விழித்தெழுந்து அவருடைய மாட்சியைக் கண்டனர் போன்ற விவரங்களைச் சேர்க்கிறார்.

2. காலம்:- இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு அறிவித்த பின்னர், தம்முடைய துன்பங்கள், மரணம் மற்றும் உயிர்ப்பு, தமது சீடர்களுக்குச் சிலுவையின் அவசியம், அரசின் வருகை (மாற்கு மற்றும் லூக்கா) அல்லது மனுமகனின் வருகை (மத்தேயு) ஆகியவற்றைப்பற்றி இயேசு முன்னறிவித்ததற்குச் சில நாட்களுக்குப் பின்னர், மாற்குவின்படி ஆறுநாட்கள், லூக்காவின்படி எட்டு நாட்கள், உருமாற்றம் நிகழ்கிறது. எருசலேம் நோக்கி இயேசு தமது இறுதிப் பயணத்தைத் தொடங்குவதற்குச் சற்று முன்னர், அவரது பணியின் காரணமான வடக்கு நோக்கிய பயணத்தின் தீர்மானமான காலம் இதுவேயாகும். உருமாற்றம் நிகழ்ந்தது பகலிலா அல்லது இரவிலா என்ற கேள்விக்கு, இரவு என்று லூக்கா சுட்டுவதாகத் தெரிகிறது (9:32).

3. இடம்:- மலையின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மத்தேயுவும் மாற்குவும் உயர்ந்ததெனக் குறிப்பிடுகின்றனர்; 2 பேதுரு 1:18, அது ''பரிசுத்த மலை'' என்கிறது. உருமாற்றத்திற்கு முன்னதாக நடந்த நிகழ்ச்சிகள் செசாரியா, பிலிப்புவிற்கு அருகில் நடைபெற்றன. உருமாற்றத்திற்குப் பின்னர், இயேசுவும் அவருடைய சீடர்களும் கலிலேயா வழியாகக் கடந்து செல்கின்றனர் (மாற் 9:30). இம்மலைக்குப் பெயரிடுவதென்றால், செசாரியா பிலிப்புவிற்கு வடக்கே எழுகின்ற மிக உயர்ந்த கெர்மோன் மலையின் தென்புறத்து மலையடிவாரக் குன்றுகளில் ஒன்றாகவே இருக்கலாம். தாபோர் மலை தனக்குரிய ஆதரவாளர்களைக் கொண்டிருந்தாலும், இவ்விடம் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எருசலேம் நகர சிரிலும், எரோனிமுசும் (நான்காம் நூற்றாண்டு), உருமாற்றத்திற்குத் தாபோர் மலையைக் குறிப்பிடுகின்றனர். ஆறாவது நூற்றாண்டு முதல், இடைவெளிவிட்டு, ஆலயங்கள் கட்டப்பட்டு, அந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்கத் திருயாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சி நடந்த இடமாக மலையை அடையாளம் காட்டுவது ஏற்கக்கூடியதல்ல. ஏனெனில், இந்நிகழ்ச்சிக்கான ஒத்தமை நற்செய்திகளின் அமைப்பானது கெர்மோனுக்கு அருகில் உள்ளது; தாபோர் உயர்ந்ததல்ல; எபிரேயரின் நற்செய்தியும் (இரண்டாம் நூற்றாண்டு) மற்ற நூல்களும் தாபோர் மலையைச் சோதனையின் இடமாகக் குறிப்பிடுகின்றன; மேலும், தாபோரின் மேல்பகுதி முழுவதிலும் கவரெழுப்பப்பட்டிருந்தது.

4. பொருள்:- உருமாற்றமானது விரிவுரையாளர்களின் இன்பமாகவும், ஏமாற்றமாகவும் உள்ளது என்பர். (அ) இயேசுவின் இறைவனுடைய மகிமையானது ஒரு சம்பவத்திலேயே மையம் கொண்டிராமல், அவருடைய வாழ்வு, மரணம் மற்றும் உயிர்ப்பு முழுவதிலும் வெளிப்படுத்தப்படுவதால், நான்காவது நற்செய்தி உருமாற்றத்தினை விட்டு விடுகிறது (1:14; 2:11; 5:44; 7:18.39; 11:4.40; 12:16.23.28.41; 13:31; 17:1 ·. 5.10.22.24; 21:19).

(ஆ) ஒத்தமை நற்செய்திகளுக்குப்பின், உருமாற்றம்பற்றிய காலத்தால் முந்திய குறிப்பினை 2 பேதுரு கொண்டுள்ளது. பேதுருவின் பெயரையும் அதிகாரத்தையும் பயன்படுத்திக் கிறிஸ்தவர்கள் சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை நம்பவில்லை; தமது அன்பு மகனுக்குரிய இறைவனின் கொடையாகிய மதிப்பை மாட்சிமையில் விசுவாசிக்கின்றனர்; கிறிஸ்துவின் வருகை பற்றிய இறைவாக்குகளை இது மிகவும் உறுதிப்படுத்துகிறது என்பனவற்றை நிரூபிக்க ஆசிரியர் இச்சம்பவத்தைக் கிறிஸ்துவினுடைய மகிமையின் கண்கூடாகக் கண்ட சாட்சியாக எடுத்துக் கூறுகிறார். இக்கதையின் விளக்கமானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை உறுதிப்படுத்துகிறது.

(இ) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பேதுருவின் வெளிப்பாட்டு நூல் உருமாற்ற நிகழ்ச்சியைத் திரும்பக்கூறி, இன்பவனம் மற்றும் இரண்டாவது வருகை பற்றிய விரிவுரையாக விளக்குகின்றது.

(ஈ) திருச்சபையின் தந்தையர்கள் உருமாற்றத்தினை அடிக்கடி தொடர் உருவகமாக்கினர். கிழக்குத் திருச்சபையில் இச்சம்பவமானது, இவ்வுலகம் மற்றும் வரவிருக்கும் உலகினுடைய மாற்றத்தின் மறைபொருள் அடையாளமாகக் கூறப்பட்டது. எட்டாம் நூற்றாண்டிற்குள், இந்நாளின் (ஆகஸ்ட் 6) கொண்டாட்டமானது, உயிர்ப்பு விழா நாளைத் தவிர்த்து மற்ற எந்தப் புனித நாட்களுக்கும் இணையானதாயிற்று. மேற்குத் திருச்சபையில், பதினைந்தாம் நூற்றாண்டு வரை, பொதுவான கடைப்பிடிப்பாகக் கட்டளையிடப்படவில்லை.

(உ) நிகழ்ச்சியுரைகளின் கடுஞ்சிக்கல்களை எதிர்கொள்ளும் நவீனகால விரிவுரையாளர்கள் தங்களது விளக்கவுரையில் பெரிதும் மாறுபட்டுள்ளனர். பாரம்பரிய பாதுகாப்பாளர்கள் இந்தவிவரிப்பை வரலாற்றுப் பூர்வமானதாகவும், நம்பத்தக்கதாகவும் ஏற்றுக்கொள்கின்றனர். இதற்கு மாறாக உள்ளவர்கள் புறநிலைக் கூறுகளைப் பகுத்தறிவு வாத முறையில் நிராகரிக்கின்றனர். ஆதித்திருச்சபையின் இறையியல் நோக்கங்களைத் தெளிவுபடுத்துகின்ற அடையாளவியல் முறையில் விளக்க முயல்வர். மற்றவர்கள், பேதுருவுக்கு உயிர்த்த இயேசு அளித்த காட்சியின் கதை என்றும், இச்சம்பவம் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டதென்றும் கருதுகின்றனர். ஆனால் நற்செய்தி நிகழ்ச்சியுரையில் இந்நிகழ்ச்சியின் இடமே ஏற்கத்தக்கதாகும். ஏனெனில், இயேசுவுடையவும், அவருடைய சீடர்களுடையவும் உண்மையான தீர்மானமான அனுபவத்தைக் குறிப்பிடுவதாக இது இருக்கலாம். மத்தேயுவின் கருத்துப்படி, இயேசு இந்த அனுபவத்தை ''காட்சி'' (17:9) என்று அழைக்கிறார். காட்சி என்ற சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டிருந்தாலும் ஏற்பதற்குச் சிறந்ததாக உள்ளது. உண்மையான வரலாற்றுச் சூழ்நிலைகள் முழுத்திருப்தியளிக்கும் விதத்தில் கண்டுபிடிக்கவோ, விளக்கப்படவோ ஒருவேளை முடியாதுபோகலாம். பிற்காலக் கருத்துக்களுடன் கூடிய நற்செய்தி நிகழ்ச்சியுரைகள், உண்மைகளையும் அடையாளங்களையும் ஒன்றாக இணைக்கின்றன. ஆனாலும், நாம் இயேசுவிற்கும் சீடர்களுக்கும் ஏற்புடைய சிறப்புப் பொருளை வேறுபடுத்தலாம். அது, அவருடைய சீடர்களுக்கு, இயேசுவின் உண்மையான இயல்பையும் (ஒளியினால் அடையாளப் படுத்தப்பட்டது) மரணத்திற்குப் பிற்பட்ட அவரது வருங்கால மகிமை நிலையினையும், வெளிப்படுத்திய காட்சி நேரமாகும். இஸ்ராயேலின் சட்டத்திலும் இறைவாக்கிலும் குறிப்பிடத்தக்கவர்களான மோசே மற்றும் எலியாவைப்பற்றி அவர்கள் கண்ட காட்சி, இயேசுவிற்கும் அவருடைய பணிக்கும், சட்டமும் இறைவாக்குகளும் ஆதரவாக உள்ளதைக் குறிப்பிடுகின்றது. மேகமும் குரலும் ஓர் இடம் சார்ந்த இறைபிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளங்களாகும். சீடர்கள் இயேசுவுக்குச் செவிமடுப்பதற்காக, அவருடைய திருமுழுக்கு ஆசியை மீண்டும் கூறுகிறார். வரவிருக்கும் மரணம் மற்றும் உயிர்ப்பிற்குப் பின்னரே, தங்களுடைய காட்சியின் பொருளை அவர்கள் விளக்க முடியும். மரணத்தை எதிர்கொண்ட

நிலையில், பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பின் வழியாகத் தம்மைத் தேர்ந்தெடுத்த இறைவன் மற்றும் பெரிய ஆன்மீகத் தலைவர்களின் ஆதரவினைச் செபத்தில் கண்டடைந்த இயேசுவுக்கு லூக்கா ஆதி அழுத்தம் கொடுக்கிறது. இறைமகிமையாவது இத்தகைய உருமாறிய நேரத்தை ஒளிர்விக்கிறது; வரவிருக்கும் துன்பகரமான நாட்களுக்கு இயேசுவை உறுதிப்படுத்துகிறது.

5. மறையுண்மை:- அவரது துன்பத்தைக் காணவிருப்பவர்களையே இந்நிகழ்ச்சியைக் காணவும் இயேசு தேர்ந்தெடுக்கிறார்; பேதுரு (2 பேதுரு 1:16 தொ); யாக்கோபு மற்றும் யோவான் (மாற் 14:33 இணை; 5:37); இறைவனின் மலையில் மோசேயும் எலியாவும் கண்ட இறைமகிமைக் காட்சிகளை (சீனாயி-ஓரேபு: யாத் 19:9; 24:15-18; 1 அர 19:8-18) இந்நிகழ்ச்சி நினைவுபடுத்துகிறது. மேகம் மற்றும் நெருப்பின் நடுவிலிருந்து பேசிமட்டும் (உப 5:2-5) இறைவன் தம் பிரசன்னத்தை வெளிப்படுத்துவதில்லை. மோசே மற்றும் எலியா முன்னிலையில் இறைமகிமையால் உருமாற்றம் பெற்று, தம் சீடர்களுக்கு இயேசு தோன்றுகிறார்.

இந்த மகிமை, இறைபிரசன்னத்தின்முன் எழும் சமய அச்சத்தால் அவர்களை அச்சமுறச் செய்கிறது. ஆனால் பேதுருவிடம் சிந்தனையையும் எழுப்புகிறது. யாரை மெசியா என்று அறிக்கையிட்டாரோ அவரது மகிமை கண்டு மகிழ்ச்சி கொள்கிறார். மெசியா காலத்து இறை வாக்கினர்கள் முன்னறிவித்தது போல், இறைவன் தம்முடையவர்களோடு தங்க வருகிறார். ஆயினும் இந்த மகிமை இறுதிநாளைச் சேர்ந்ததன்று. ஒரு காலத்தில் மோசேயின் முகத்தை ஒளிர்வித்தது போல் (யாத் 34:29தொ.35), இந்த மகிமை இயேசுவின் ஆடைகளையும் முகத்தையும் ஒளிர்விக்கின்றது. மேகத்திலிருந்து குரல் அறிவித்தது போல், அன்பார்ந்த மகனான கிறிஸ்துவின் உண்மையானமகிமையாகும் (லூக் 9:32). அதே சமயம் இந்தக் குரல் இயேசு சீடர்களுக்கு அளித்த வெளிப்பாட்டை உறுதிப்படுத்துகிறது. இதைப்பற்றியே இயேசு மோசே எலியாவோடு உரையாடினார். அதாவது, எருசலேமில் நிறைவேறப்போகிற அவரது இறுதிப் பயணம் (லூக் 9:31), அவர் மகிமையில் நுழைவதற்கு அவசியமான (25:25 தொ) மரணத்தின் வழியாகக் கடந்து செல்லுதல் ஆகியவைபற்றி உரையாடினர். இறைவனின் தேர்ந்து கொண்டவரும் மகனுமான அவருக்குச் செவிசாய்க்கும்படி இறைவனது குரல் கட்டளையிடுகிறது (9:35).

புதிய சீனாயில் எதிரொலிக்கும் வார்த்தை, பழங்காலத்தில் கொடுக்கப்பட்ட சட்டத்திற்குப் பதிலாகப் புதியசட்டத்தை வெளிப்படுத்துகிறது. வார்த்தை பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று இறைவாக்குகளை நினைவுக்குக் கொண்டுவருகிறது. முதலாவது மெசியாவையும் அவரது இறைமகன் தன்மையையும் பற்றியதாகும் (சங் 2:7); இரண்டாவது இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட அவருடைய ஊழியனைக் குறிக்கிறது (ஏச 42:1); மூன்றாவது புதிய மோசேயை அறிவிக்கிறது (உப 18:15; யோவா 1:17 தொ); ''உன் இறைவனாகிய யாவே...என்னைப்போல ஓர் இறைவாக்கினரை உனக்காக ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவி கொடுப்பாயாக''. செவிகொடுப்பதின் விளைவு ஊன் ஆன வார்த்தைக்கும் செவிகொடுப்பதாகும். அவரிலே விசுவாசி இறைவனின் மகிமையைக் காண்கிறார்.

6. நிகழ்ச்சியின் நோக்கமும் விளைவும்:- உருமாற்றம் செசரிய-பிலிப்பியில் கூறப்பட்ட அறிக்கையை உறுதிப்படுத்துகிறது; இயேசு, தாமே துன்புறும் மற்றும் மகிமைமிக்க மனுமகன் என்றும், தமது மரணமும் உயிர்ப்பும் மறைநூலை நிறைவேற்றும் என்றும், தம்மைப் பற்றி வெளிப்படுத்தியதைத் திருநிலைப்படுத்துகிறது. அது இறைவனின் மகிமையையே கொண்டிருக்கும் அன்பார்ந்த மற்றும் யாவும் கடந்த மகனான இயேசுவின் ஆளை வெளிப்படுத்துகிறது. அது இயேசுவையும் அவரது வார்த்தையையும் புதிய சட்டமாகக் காட்டுகிறது. அது

பாஸ்கு நிகழ்ச்சியை எதிர்பார்க்கிறது. அதற்கு, முன் உருவம் அளிக்கிறது. பாஸ்கு நிகழ்ச்சி, சிலுவைப்பாதை வழியாக, கிறிஸ்துவை அவரது மகிமையிலும் மகனுக்குரிய மேன்மையிலும் நிறைவாக மலரச் செய்கிறது. கிறிஸ்துவின் மகிமை பற்றிய இந்த முன் அனுபவம் சிலுவை மறைபொருளில் பங்கு கொள்ள, சீடர்களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கமும் கொண்டது.

திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்தவர்கள், உருமாற்றத்தால் முன்உருவம்பெற்ற உயிர்ப்பு மறைஉண்மையில் பங்கு பெறுகின்றனர். இறுதி வருகையில் முழுஉடல் உருமாற்றத்திற்காகக் காத்திருக்கும், போது (பிலி 3:21) ஆண்டவரின் செயலால், இவ்வுலகிலேயே எப்போதும் முழுமையாக உருமாற்றம் பெற (2 கொரி 3:18) அவர்கள் அழைக்கப்படுகின்றனர். உலகிலே கிறிஸ்துவின் துன்பங்களில் பங்குகொள்ளும்போது, உருமாற்றம் சீடர்களின் விசுவாசத்திற்கு ஆதரவு அளித்ததுபோல், ஆண்டவர் இயேசுவோடு கொள்ளும் ஒவ்வொரு உண்மையான சந்திப்பும் அவர்களது விசுவாசத்திற்கு ஆதரவு அளிக்கிறது.

## உருவகம்/உருவகக் கதை (ALLEGORY)

பழம்பாரம்பரியத்தின் சொற்பொருளை விடுத்து, அதன் ஒவ்வொரு சொல்லுக்கும் புதிய, மறைந்திருக்கும் பொருளைக்காண்பது உருவக இலக்கியமாகும். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் உருவகக்கதைகளை அதிகம் பயன்படுத்தவில்லை. இது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில், யூதர்களாலும், புறவினத்தினராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கமளிக்கும் முறையாகும்; புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் சிறிதளவே பயன்படுத்துகின்றனர் (மாற் 4:10-20; மத் 13:37-43; 1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11; கலா 4:21-31). புதிய ஏற்பாட்டுக் காலத்தைய டுத்து வந்த, வேதசாட்சி யூஸ்தீன் கிளமெண்து, ஆர்ஜின் போன்றோர் உருவகத்தை அதிகம் பயன்படுத்தினர்.

1. விவிலியத்தில் உருவகம் என்ற சொல்:-
''உருவகம்'' என்ற சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில், கலா 4:24-இல் காணப்படுகிறது. இதில் பவுல் செயப்பாட்டு வினையைப் பயன்படுத்துகிறார். இந்தச் சொல்லும் அதன்பொருளும் கிரேக்கப் பின்னணியில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

2. விவிலியம் சேராத உருவக விளக்கங்கள்:-
உருவக விளக்கமுறை கிரேக்கக் கடவுள்கள் பற்றிய ஹோமெரின் கதைகளில் உள்ள மதத் தொடர்புடைய மதிப்பீடுகளை நிலை நிறுத்தச் சில கிரேக்கச் சிந்தனையாளர்களால் கடைப்பிடிக்கப்பட்ட முயற்சியின் விளைவாகும். அதே போல் அலக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதச் சிந்தனையாளர்கள், கிரேக்கச் சிந்தனையால் தூண்டப்பட்டனர். தங்கள் யூதப்பாரம்பரியத்தின் அதிகாரத்தை நிரூபிக்கவும் விளக்கவும் உருவக விளக்கமுறையைக் கடைப்பிடித்தனர்.

அ) கிரேக்கர்களிடையே உருவகமுறை:-
பல நூற்றாண்டுகளாகக் ஹோமெர், கெசியோத் ஆகியோரின் பாடல்கள் கிரேக்கர்களின் பக்திக்கு வழி வகுத்தது. இதில் யூதர்கள் தங்கள் வேத நூல்களுக்கு அளித்த மதிப்பை அவை பெற்றிருந்தன. உலக அமைப்பு, ஒழுங்கு பற்றி இந்நூல்கள் அளித்த புராண விளக்கங்களை, அறிவியல், தத்துவ வளர்ச்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பழைய உலகத்தைப் பற்றிய கொள்கைகளுக்கும், உலகைப் பற்றிய புதிய கொள்கைகளுக்கும் இடையே ஒருவகையான முரண்பாடு ஏற்பட்டது. புராணக் கதைகளைப் பாதுகாக்க விரும்பிய பக்தர்கள் பாரம்பரியத்தைப் போற்றிப் பின்பற்றினர். புதிய சிந்தனையில் பழகிய, கிரேக்கர்களால் மதிக்கப்பட்ட அறிஞர்கள், அவற்றைக் கடவுள்களின் கபட, தீய செயல்கள் என்று வர்ணித்தனர். இந்த முரண்பாட்டை விளக்க உருவக முறை விளக்கங்கள் உதவின. இம்முறை பல்வேறு வகைப்பட்ட தெய்வங்களின் பெயர்களுக்கு அளிக்கப்பட்ட யுக்தியான விளக்கங்களில் தோற்றம் கொண்டது;

மேலும், பாரம்பரியத்தைப் பல்வேறு தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முயன்றது. செயுஸ் என்ற பெயர் சென் என்ற சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டும். இச்சொல் உயிர் அளிக்கும் சக்தி என்ற பொருளில், படைக்கப்பட்ட பொருள்களை ஒழுங்குபடுத்தும் சக்தியைக் குறித்திருக்க வேண்டும். இது போலவே அரேஸ் என்ற பெயர் போரையும், கெபேஸ்து தீயையும் கிரோனோஸ் நீரோட்டத்தையும், ரேயா பூமியையும் உருவகமாக உணர்த்தின என்று விளக்கம் கூறப்பட்டது. தாலேஸ் (கி.மு. 640-546) என்ற தத்துவ அறிஞர் முதல் முறையாகப் புராணக் கதைகளுக்கு வாழ்க்கை நெறி, மற்றும் மறுவுலகைச் சார்ந்த விளக்கங்களைக் கொடுத்தார். ரெஜியும் நகர தேயாசெனெஸ் தமது காப்புரை நூலில் தொடர்ந்து உருவகக்கதை முறையை அதிகம் பயன்படுத்தி விளக்கங்கள் அளித்தார். இதே முறையில் முல்லுஸ் நகர கிராத்தெஸ் கோமெரின் முழு நூலையும் உருவக முறையில் விளக்கினார். கோமெர், கெசியோத் ஆகியோரின் நூல்களுக்கு உருவகக் கதை விளக்கமுறை சினிக், ஸ்டோயிக் தத்துவ மேதைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கடவுள்களின் பெயரையும் செயல்களையும் விளக்குவதற்கு இதை ஒரு நிலையான முறையாக அமைத்துக் கொண்டனர். பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் தொடர் உருவக முறையை எதிர்த்த போதும், இம்முறை கிரேக்க உலகத்தைப் பெரிதும் பாதித்ததைப் பிலுதார்க் போன்றவர்களின் நூல்களிலிருந்து அறியலாம். தொடர் உருவக முறையில் ஒரு பாரம்பரியத்தைப் புரிந்துகொள்ளும் விதத்தை, கிரேக்க தத்துவமேதைகள் தொடங்கி வைத்தனர். ஆகையால் பழைய பாரம்பரியங்களில் மறைந்திருக்கும் வாழ்க்கை நெறி, தத்துவ உண்மைகளை ஆழமாக அறியும் முறைகள் அவர்களோடு தொடர்புடையனவாகக் காட்டப்படுகின்றன.

ஆ) கிரேக்க யூத மரபில் உருவகமுறை:-

அலெக்சாந்திரியாவில் சிதறி வாழ்ந்த யூதர்கள் பொதுவாகக் கிரேக்க கலாச்சாரத்தாலும், சிந்தனைகளாலும் குறிப்பாக உருவக விளக்க முறையாலும் அதிகம் பாதிக்கப்பட்டனர். அதன் விளைவாகச் சில யூதர்கள் தங்களின் பாரம்பரியத்தைத் துறந்து, கிரேக்க உலகச் சிந்தனைப் போக்கைப் பின்பற்றினர். வேறு சிலர் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்தத் தொடங்கினர். காரணம், அவர்கள் தங்கள் மத மரபுகளுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க விரும்பினர்; கிரேக்க உலகச் சிந்தனைப்போக்கோடு இணைந்து போக விரும்பவில்லை. கிரேக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டு, இரண்டுமுறைகளை இணைக்க முனைந்தவர்களின் முதல் பிரதிநிதியாகக் கிரேக்க யூதர் அரிஸ்தோபூலூஸ் கருதப்படலாம். இதைச் செய்ய இவர் உருவக விளக்க முறையைப் பயன்படுத்தினார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இடையில் அலக்சாந்திரியாவில் வாழ்ந்தவர். பிலோவின் காலத்திற்குள் உருவக விளக்க முறையைப் பயன்படுத்தி, பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு விளக்கமளிப்பது ஒருநிலையான வடிவம் எடுத்துவிட்டது எனலாம்.

பிலோ ஒரு பக்தியுள்ள யூதன். விவிலியம் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளை உடையதாதலின் மதிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினார். ஆனால் அவரின் உருவக விளக்கமுறை மறைநூல்களின் உண்மையான பொருளிலிருந்து வெகுதூரம் எடுத்துச் சென்றது. இவர் பழங்கால எபிரேய பாரம்பரியத்தை அண்டவியல் ஒழுக்கவியல், அறிவு ஆதார முறை இயல், உடலியல், உளவியல் ஆகியவைபற்றிய கிரேக்க உலகச் சிந்தனையோடு ஒன்றிணைக்க முனைந்தார்; ஓரளவு வெற்றியும் கண்டார். இரண்டு வேறுபட்ட உலக நோக்குகளை ஒன்று சேர்க்க முயன்றார். பாரம்பரியத்தையும், வெளிப்பாடுடைய விவிலியத்தைக் கொண்ட யூத மதத்தையும், கிரேக்க மரபின் அறிவியல், தத்துவங்களையும் ஒருங்கிணைக்க முயன்றார். இதன் மூலம் யூத மதத்தைப் புறவினத்தார் குற்ற கூறுவதிலிருந்து காக்க முயன்றார். தன் சகயூதர்களுக்கு, ஏற்கனவே மோசே கிரேக்கர்களின் புலமையை அறிந்திருந்தார் எனக் காட்ட விரும்

பினார். தொடர் உருவக விளக்கம் மூலம், தகுதியும் திறமையும் வாய்ந்த இந்த விளக்க வுரையாளர், மறைநூலின் புதிர்களிலிருந்த திரையை நீக்கி இறை வார்த்தைகளில் மறைந்துகிடக்கும் புனித மறை உண்மைக ளையும், அவற்றின் ஆழ்ந்த பொருளையும் வெளிக்கொணரவும் முனைந்தார்.

இ) பாலஸ்தீன யூத மரபு:-

பாலஸ்தீன யூதர்களிடையே விவிலி யத்தை விளக்கும் முறை பொதுவாக உரு வக விளக்க முறைவடிவம் எடுக்கவில்லை. மிஸ்னா, மோசேயின் சட்டங்களை ராபிக ளின் சட்ட முறையில் அணுகும் திறமையை விளக்கும் ஒப்பற்ற நூலாகும். இது தனிப் பட்ட சட்டங்களைத் தற்காலிகச் சூழ்நிலைக ளுக்குப் பொருந்துமாறு விளக்கிக் கூறியது. மோதியிம்மைச் சேர்ந்த எலெயாசாரும், அக் கிபாவும் ஒரு சில விவிலியப் பகுதிகளுக்கு உருவக விளக்கம் கொடுத்தனர். ஆனால் பாலஸ்தீன நாட்டு உருவக விளக்கமுறைக் கும் கிரேக்க முறைக்கும் இடையே வேறுபா டுகள் பல இருந்தன. பாலஸ்தீன யூதஉருவக விளக்கமுறை எளிதாகவும், விவிலிய வார்த் தைகளின் சொற்பொருளுக்கு நெருங்கிய விளக்கம் அளிப்பதாகவும் அமைந்திருந்தது.

சாக்கடல் சுருள்கள் இன்னும் ஒரு வகை யான விளக்கம் இருப்பதைத் தெளிவுபடுத்து கின்றன. இது குமரான் குழுவினரால் பயன் படுத்தப்பட்டது. இறைவாக்கினர் எரே மியா யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வருவதை எடுத்துரைக்கும் பகுதியை, தானி யேல் விளக்கினார். அதிலிருந்து இம்முறை வளர்ச்சியடைந்தது. இவ்வகை விளக்கங்கள் இறைவாக்கு நிறைவு அடைவதைப்பற்றி அதிகம் பேசுகின்றன. எனவே இவற்றை நிறைவு விளக்கங்கள் எனக் கொண்டு, ராபிக ளின் சட்டவிளக்கங்களிலிருந்தும், அலக் சாந்திரியா யூதர்களின் உருவக விளக்கங்க ளிலிருந்தும் வேறுபடுத்தலாம். இவ்வாறு வேறுபடுத்துவதன் மூலம் கும்ரான் குழு உருவக விளக்க முறையைப் பயன்படுத்த வில்லை என்று பொருள் கொள்ளவேண்டிய தில்லை. மாறாக அவை தங்களுக்கென்று தனிப்பாணி வைத்து, அதை விரும்பிக் கடைப்பிடித்தனர்.

3. விவிலியத்தில் உருவக விளக்கமுறை:-

விவிலிய ஆசிரியர்களில் பவுல்மட்டுமே பழைய ஏற்பாட்டு நூல்களை விளக்குவ தற்கு உருவக விளக்கமுறையை ஏற்றுக் கொள்கிறார் (கலா 4:24). பழைய ஏற்பாட் டுப் பகுதிகளை விளக்க, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் விரும்பிப் பயன்படுத்திய விளக்க முறை நிறைவு விளக்கமுறையா கும். இருந்த போதிலும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கிறிஸ்துவின் உவமைகளை உருவக முறையில் விளக்கத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (மாற் 4:10-12). இந்தப்போக்கை, மற்ற உவமைகளுக்கு விளக்கம் அளிக்கும் முறையிலும், இதற்காக அவர்களே அமைத்த உவமைகளை உருவக மாக்குவதிலும் காணலாம்.

அ) பவுலின் திருமுகங்கள்:-

தனது திருமுகங்களில், தனது வாதத்தின் வலிமையை வெளிக்கொணர பவுல் நான்கு இடங்களில் உருவகமுறையைப் பயன்படுத் தினார் (1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11; கலா 4:21-31). கலாத்தியர்க்கு எழுதிய திருமுகத் தின் முக்கிய கருத்து, எல்லா மனிதர்களின் உரிமை வாழ்வையும், மத சுதந்தரத்தையும் அறிவிப்பதாகும். அவர் அதை விவரிக்கும் போது சிலகருத்துக்களை எடுத்துரைக்கின் றார். அப்போஸ்தலராகத் தாம் அழைக்கப் பட்டது கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே மட்டுமே, பிறர் அதிகாரத்தினால் அன்று என்கிறார். ஒரு தனி மனிதன் இறைவனை அணுகத் தடையாக இருக்கும் அதிகாரம், அமைப்புக்கள், பண்பாடு, சட்டங்கள் அனைத்தையும் ஒதுக்குகிறார். அத்தோடு உண்மையான சுதந்தரம் கிறிஸ்துவில் மட் டுமே அடைய முடியும் என்றுரைக்கிறார். உண்மையான சுதந்தரம் என்பது பயம், பாவம், கோபம், இறப்பு போன்றவற்றிலி ருந்து விடுதலை அளிக்கிறது. மனிதன் தன் னையே ஏற்புடையவனாக்கி இவற்றிலி ருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. ஆக லால், இறைவனின் இன்னருள் சேவைப்ப

டுகிறது. இறைவன், அவரது மகன் வழியாக மனிதனுக்கு ஏற்புடைமை என்னும் புதிய இயல்பை அடையும் வாய்ப்பை அளித்திருக் கிறார். கிறிஸ்துவின் வழியாக நம்மை மன் னிக்கும் இறைவனின் அன்பே நமது மீட் புக்கு ஒரே அடிப்படையாவதால், இறைவ னின் முடிவில்லா இறையரசை அடையும் ஒரே வழி, விசுவாசமும், இறைவனின் அருட்கொடையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வதுமாகும். இந்தப் போதகப் பகுதி யையும் அடுத்து வரும் அறவுரைப்பகுதியை யும் இணைக்க, பவுல் இரண்டு உடன்படிக் கைகள் பற்றிய உருவக விளக்கமுறையைப் பயன்படுத்துகிறார் (கலா 4:21-31). ஆபிரகா முக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவருள் ஆகார் என்பவள் சீனாய் மலையில் செய்யப்பட்ட உடன்படிக்கை, சட்டம், தற் போதைய எருசலேம் ஆகியவற்றைக் குறிக் கிறாள். அவள் ஒரு அடிமை. சாரா என்பவள் ஒரு சுதந்தரப் பெண்; விண்ணக எருசலே மைக் குறிக்கிறாள். ஆகாரின் மகன் இசும யேல் உடல் இயல்பு முறைப்படி பிறந்தவர். ஆனால் ஈசாக்கு வாக்குறுதியின் பயனாகப் பிறந்தவர். சாராவின் பொருள்பற்றிய உரு வக விளக்கத்தை நிறைவு செய்யாததாலும், மலட்டுத்தன்மை, பலனில்லாமை பற்றிய பொருத்தமில்லாத ஒரு எடுத்துக்காட்டை ஏசயாவிலிருந்து கூறுவதாலும், பவுல் தம் மடலின் இப்பகுதியின் பொருளை மங்கச் செய்துவிட்டார் எனலாம்.

கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11) இது போன்ற நோக்கங்களுக்காக, பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளை உருவக விளக்கமுறையில் பவுல் எடுத்துரைக்கிறார். கொரிந்திலிருந்த விரும்பத் தகாத புணர்ச்சிபற்றிய சூழ்நிலை யைப் பற்றி எழுதுகின்றார். அப்போது வர விருந்த பெந்தகோஸ்தே திருவிழாவால் தூண்டப்பட்டு (1 கொரி 16:8) புளிப்பு மாவு பற்றிய உருவகவிளக்கம் தருகிறார் (1 கொரி 5:6-8). புளிப்பு மாவு (பாவம்) மாவு முழுவ தையும் (திருச்சபை) புளிப்புள்ளதாக்குவ தால், பழைய புளிப்புமாவு முழுவதும் நீக் கப்படவேண்டும். அப்போது மாவு முழுவ தும் புதிதாகவும் புளிப்பற்றதாகவும் (மனந்தி ரும்பியவர்களின் ஏற்புடைய வாழ்வு) திருவி ழாவைக் (கிறிஸ்தவ வாழ்வு) கொண்டாடத் தகுதியுள்ளதாகவும் இருக்கும். நம்மில் இந்த மாற்றத்தை எதிர்பார்ப்பவரும், இந்தப்புதுப் பித்தலை நடக்கச் செய்பவரும் திருவிழாத் தொடங்கும்முன் பலியிடப்படும் செம்மறி யானவரும் கிறிஸ்துவே. இந்த உருவக விளக்கத்தில் பவுல் உறுதிக்கூற்றுகளையும், அறவுரைகளையும் ஒன்றிணைத்துக் கூறுகி றார். இவ்வாறு திருச்சபையானது புளிப் பில்லா மாவு ஆயினும் அந்நிலையிலேயே நிலைத்திருக்கும்படி தூண்டப்படுகிறது. பவுல் தன்னைப் பற்றிக் கூறும் ஓரிடத்தில், புறவினத் திருச்சபைகளை ஏற்படுத்துவதற் காகத்தான் தனது உரிமைகளைத் துறந்ததை எடுத்துக் கூறும் போது, தனது சாதாரண முறைக்கு மாறாக ஒரு சில உரிமைகளைக் கைவிடக் கட்டாயப்படுத்தப்படுவதை உணர்கிறார் (1 கொரி 9). படைவீரன், திராட்சைத் தோட்டம் உழுபவன், போரடிப் பவன், குரு எல்லோரும் தாம் செய்யும் பணிக்குத் தக்க ஊழியம் கொடுக்கப்படுகின் றனர். போரடிக்கும் மாட்டின் உரிமைகளை உருவகமாக விளக்கித் தனது வாதத்திற்கு விவிலிய அதிகாரத்தை ஆதாரமாகப் பயன்ப டுத்துகிறார் (1 கொரி 9:8-9; உப 25:4).

கிறிஸ்தவத் திருமுழுக்கு, நற்கருணை வழிபாடு ஆகியவை பற்றிப் பேசும்போது, பவுல் பழைய ஏற்பாட்டு ஒப்புமைகளைப் பயன்படுத்தி, கிறிஸ்தவ வழிபாட்டுக்குப் புறவின வழிபாட்டோடு உள்ள தொடர்பை விளக்கிக்காட்டுகிறார் (1 கொரி 10:1-11). கிறிஸ்தவ அமைப்புகள், செங்கடலைக் கடத்தல், மேகத்தூண், மன்னாவை உண்ணு தல், பாறை நீரைப் பருகுதல் போன்ற பழைய ஏற்பாட்டு விவரிப்புகளில் முன் அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. புற வின வழிபாடுகளின் திருவருள்சாதனத் தன் மையை மறுக்கவும், யூதச்சடங்குகளின் அடையாளப் பொருளை கருத்தில் கொள்ள வும் பவுல் விரும்பாததால், பழைய ஏற் பாட்டு நிகழ்ச்சிகளுக்கு உருவக விளக்கம் அளிக்கும் கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே

இஸ்ராயேல் ''மோசேயில்'' திருமுழுக்குப் பெற்றனர்; இயற்கை கடந்த பாறையிலிருந்து (கிறிஸ்து) வடிந்த நீரையும், இயற்கை கடந்த உணவையும் உட்கொண்டனர்.

பவுல் உருவக விளக்கமுறையைத் தத்துவ விளக்கங்களுக்காகப் பயன்படுத்தாததால், அவர் அலக்சாந்திரியா உருவக விளக்க ஆசிரியர்களைவிட, பாலஸ்தீன உருவக விளக்க ஆசிரியர்களை அதிகம் சார்ந்திருக்கிறார். மேலும் அவரின் உருவக விளக்கம் முக்கிய கருத்தை விளக்க அதிகமாகவும் பயன்படவில்லை; தற்செயலாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் அவரது இறையியல் நோக்கிற்கு நிறைவு விளக்கமுறை அடிப்படை போன்றது. பவுலைப் பொருத்தமட்டும் பழைய ஏற்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு உருவக விளக்கமுறை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையதன்று.

ஆ) ஒத்தமை நற்செய்திகளில்:-

ஒத்தமை நற்செய்தியாளர்களால் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் உவமைகள் உருவக விளக்கத்திற்கு இடமளித்தாலும் ஒன்றே ஒன்று மட்டுமே அவ்வாறு விளக்கப்படுகிறது. அது விதைப்பவன் உவமையாகும் (மாற் 4:1-9). களைகளின் உவமையும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது கிறிஸ்துவின் உவமையாக இல்லாதிருக்கலாம். கிறிஸ்து, உவமைகளில் பேசுவதன் நோக்கத்தை விளக்குவதன் மூலம் உருவக விளக்கம் எடுத்துக்கூறப்படுகிறது. மறைந்திருக்கும் உட்பொருளை உவமைப் பொருளின் மறை உண்மைகளை அறிந்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்ள முடியுமாதலால் உவமைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை வளர்ச்சியடைந்த ஒளிபெற்ற குழுவினரையும், அக்குழுவிற்கு வெளியே உள்ளவர்களையும் பிரிக்க ஒரு சாதனமாகிறது (மாற் 4:10-12). இந்த முகவுரையோடு நற்செய்தி ஆசிரியர் உவமையின் ஒவ்வொரு பகுதிக்கும் உருவகச் சமன்பாடு அமைக்கிறார். உருவக விளக்கம் அளிக்கும்போது சமன்பாடுகளில் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. 'விதை' ''போதிக்கப்படும் வார்த்தை''யையும், கேட்கும் மக்களையும் குறிக்கிறது. 'மக்கள்' நிலத்தையும், செடியையும் குறிக்கின்றனர். மேலும் மூல உவமையின் நோக்கும் மாற்றப்பட்டுள்ளது. உருவகத்தின் பொருள், தீமைகள் தவிர்க்க முடியாதென்பதல்ல, மாறாகத் தீமையைக் கொடுக்கும் சக்திகளுக்கெதிராகக் காத்துக் கொள்ள ஒரு எச்சரிக்கையாக அமைகிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உருவக விளக்கமுறை மிகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், அது இந்தக் காலத்தில் தான் தொடங்கியது; விரைவாக முக்கியத்துவம் பெற்று வந்தது. குறிப்பாக அலக்சாந்திரியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடையே முக்கியத்துவம் பெற்றது.

## உருவம் (IMAGE)

இறைத் தந்தையை எவரும் இதுகாறும் கண்டதில்லை. ஒருவரும் அவரைக் காணவும் இயலாது (யோவா 1:18). எனினும் அவரே தம் படைப்பின் பல உருவங்களில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இவற்றிற்கெல்லாம் மேலாக முக்கியமாகத் தம் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். இயேசுவே பரம தந்தையின் அருமைச் சாயல்; நிறைவான உரு; உன்னத வெளிப்பாடு. கிறிஸ்து தோன்றும் முன்னர், கடவுள் தமது வெளிப்பாட்டின் மகிமையைப் பழைய ஏற்பாட்டிலேயே ஒளிர வைத்தார். எடுத்துக்காட்டாக, இறைஞானம் இறைமகிமையின் தூய ஒளியாகவும், இறை மாட்சியின் உருவாகவும் இறைப்பண்பை உணர்த்தியது (ஞான 7:25). அனைத்துப் படைப்பினையும் ஆண்டு அனுபவிக்கும் பேறுபெற்ற மனிதன் முடிவில்லா வாழ்வின் வரம் பெற்று இறையின் உயிருருவாகத் திகழ்ந்தான். மனிதன் பெற்ற இறை மாட்சியை உணர்த்த வேண்டி, இஸ்ராயேல் வழிபாட்டில் உருவ வணக்கம் கண்டிக்கப்பட்டது. இக்கண்டிப்பு மனிதனின் தலைமைப் பதவிக்கு நடைமுறையில் விழுப்பம் தராவிடினும், இறை மனிதனின் வருகைக்கு - அதாவது இறைத் தந்தையை

முழுமையாக வெளிப்படுத்த உருவான கிறிஸ்துவின் வருகைக்கு - ஒரு வகையில் அடிகோலியது.

1. உருவச் சிலை தடுப்பு:-

பத்துக் கற்பனையில் உருவச்சிலைக்குக் கண்டனம் (உப 27:14; யாத் 20:4; உப 4:9-28) யூத வரலாறு நெடுக வழக்கிலிருந்தாலும் சில காலங்களில் வழுவுற்றது கண்கூடு. இக்கண்டனத்தால் பொய்த் தெய்வங்களுக் குச் சிலை எழுப்பலாகாது என்ற கட்ட ளையை விளக்குவது எளிது. ஆனால் ஒரே இறைவன் யாவேக்குங்கூட உருவ வழிபாடு கூடாது என்ற தடையை விளக்குவது கடி னம். விவிலிய ஆசிரியர்கள் யாவேயின் இயல்புகளை மனிதப் பேச்சு வழக்கு மொழி யிலேயே விளக்கியுள்ளனர். ஆகலால் யாவேயை உருவங்களில் வெளிப்படுத்துவ தைக் கண்டிப்பது அவர்களின் முதல் நோக்க மன்று; மாறாகச் சிலை ஒழிப்பால் மாய வித்தையைத் தம் மறையினின்று ஒழித்துக் காட்டுவதும், இறைவனது யாவும் கடந்த தன்மையைப் பாதுகாப்பதும் அவர்கள் நோக்கமாகும். இறைவன் தங்கக் கன்றுக ளிலோ (யாத் 32;1 அர 12:26-33) மனிதனின் கைவேலைப்பாடான உருவங்க ளிலோ தமது மகிமையை வெளிப்படுத்துவ தில்லை; மாறாகத் தமது படைப்பின் வேலைப்பாட்டில் எங்கும் ஒளிர வைக்கின் றார் (ஓசே 8:5 தொ; ஞான 13; உரோ 1:19-23). சிலை வணக்கத்தால் மனிதன் எழுப்பும் வேண்டுதலைக் கண்டு இறைவன் சமாதானம் அடைவதில்லை. ஆனால் தாமே விரும்பி இறை ஞானத்தால் மனித உள்ளத் தைத் தொட்டு, தம் இறைமகன் வழியாக மனிதனை ஈடேற்றுகிறார்.

2. இறையின் உரு-மனிதன்:-

அ) பழைய ஏற்பாடு:- 'இறைவனின் உருவம் மனிதன்' என்ற சொற்றொடர் யூத வரலாற்றுக்குச் சொந்தமன்று. பாபிலோனி யாவிலும் எகிப்திலும் மனிதப் படைப்பி னைப்பற்றி வழக்கிலிருந்த பாடல்களும் இதனைக் கையாள்கின்றன. ஆனால் இச் சொற்றொடரின் ஆழ்ந்த கருத்து சிறந்த முறையில் பழைய ஏற்பாட்டின் பொதுச் சூழ்நிலையிலிருந்து வெளிப்படுகிறது. மனி தன், மனித உருவத்தில் கற்பனை செய்யப் பட்ட ஒரு கடவுளின் உருவம் மட்டுமன்று; உருவம் செய்யத் தடைப்பட்டிருந்த அள வுக்கு யாவும் கடந்த இறைவனின் சாயலும் ஆவான். மனிதன் மட்டுமே இறையுரு என்று பெயர் சூடப்பேறு பெற்றவன். மேலும் இப்பெயர் அவனுடைய பெருமை யைப் பறைசாற்றுகிறது (ஆதி 9:6).

மனிதன் இறைவனின் சாயலைத் தாங்கிய உரு என்பதற்கு ஆதி. 1:26-29 என்ற பகுதி பின்வரும் கருத்தினைக் கொண்டுள்ளது. முதற்கண் மனிதன் படைப்பினை ஆண்டு நடத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளதாலும் (ஆதி 1:26-29), இரண்டாவதாகத் தன்னைப் போன்று சாயல் படிந்த வேறு உயிர் உருவங் களைப் பெற்றெடுக்கும் வல்லமையாலும் மனிதன் இறையுரு ஆகிறான் (ஆதி 1:28 தொ; 5:1 தொ; லூக் 3:28). சாதாரணமாகப் பழைய ஏற்பாட்டில் மனிதனைப் போற்றும் பகுதிகள் பொதுவாக மனிதனுக்குரிய ஆளும் ஆற்றலையே பெரிதும் விவரிக்கின் றன (சங் 8; சீரா 17). அதே சமயம் நேரிடை யாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்ப டும் இறைவன் உரு என்ற கருத்து விளக்கங்க ளாலும் பின்சேர்க்கைகளாலும் வளப்படுத் தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, இது ''மாண்பும் பெருமையும்'' உள்ள நிலையா கும் என்றும் ''வானதூதரைவிடச் சிறிது தாழ்ந்தது'' என்றும் அடையாளம் காண்கி றது 8-ஆம் சங்கீதம். மனிதன் இறைவன் உருவில் உள்ளான் என்ற கூற்றில் யூத மறை வல்லுநர் புகுத்திய கருத்து வேறுபாட்டிற்கு இடங்கொடாத வண்ணம், ஞானநூல் (2:23) மனிதன் உண்மையிலேயே இறையுருவாக உள்ளான் என்று எடுத்துரைக்கிறது. மனிதன் இறைவனைப் போலச் சாவாமையைப் பெற்றுள்ளதாலும் இறைச்சாயலைக் கொண் டுள்ளான் என்பதையும் இப்பகுதி விளக்குகி றது.

அலக்சாந்திரியா நாட்டில் வளர்ந்த யூத மறை, மனிதன் படைப்பில் இருநிலையி

னைக் கண்டது: மண்ணைச் சார்ந்த மனிதன் மண்ணாலானவன் என்றும், ஆன்மீக மனிதன் இறையுருவில் தோன்றியவன் என்றும் கூறியது. இரு ஆதாம்களைப் பற்றிய இக்கொள்கையைப் புனித பவுல் மாற்றியமைத்து 'முதல் ஆதாம், கடைசி ஆதாம்' என்ற புதுக்கோட்பாட்டை வகுத்தார் (1 கொரி 15:45-47).

ஆ) புதிய ஏற்பாடு:- 'இறையுரு' என்ற சொற்றொடரை அடிக்கடி எடுத்தாளும் புதிய ஏற்பாடு (1 கொரி 11:7; யாக் 3:9), இதன் கருத்தினைப் பல்வேறு இடங்களில் வளப்படுத்திப் புதுமெருகுடன் காண்கிறது. எடுத்துக்காட்டாக, கிறிஸ்து கொடுத்த குறிக்கோள் - 'உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்' (மத் 5:48) என்ற கட்டளை, மனிதன் இறையுரு என்ற கொள்கையின் அவசியமான விளைவாகத் தோன்றுகிறது. இதே போன்று ''உடன் பிறந்தானைக் காண்பது இறைவனைக் காண்பதாகும்'' என்று இயேசு கிறிஸ்து மொழிந்ததாக அலக்சாந்திரியாவின் கிளமென்து கூறுவது மனிதன் இறையுரு என்ற நம்பிக்கையிலேயே உருவானது. இந்த உறுதிப்பாடே பிறருக்கு மரியாதை செலுத்த நம்மைப் பணிக்கிறது (யாக் 3:9; ஆதி 9:6); பிறர் அன்புக்கு அடிப்படையாகிறது. புனித யோவான் கூறுவதுபோல, ''கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன், தான் கண்டிராத கடவுளுக்கு அன்பு கூர இயலாது'' (1 யோவா 4:20). இவ்வாறு மனிதன் இறையுருவாயுள்ளான் என்று காணும் பொழுது, அவன் நிறைவற்ற உரு, பாவஞ்செறிந்த உரு என்று நாம் மனத்தில் இருத்த வேண்டும். மனிதனுடைய உருவை நிறைவாக்க வேண்டியனவற்றைப் பழைய ஏற்பாட்டில் தோன்றும் ஞானம் அறிவுறுத்தியுள்ளது. இவை அனைத்தும் கிறிஸ்துவால் எய்தப்பெறுகின்றன.

3. ஞானம், இறைமாட்சியின் எழிலுருவம்:-

மனிதன் கடவுளின் உருவானாலும் குறையுள்ள உருவாவான். ஆனால் ஞானம் இறைவனுடைய வேலைத்திறனின் கறைபடியாத கண்ணாடியாகும்; அவருடைய மேன்மையின் உருவுமாகும் (ஞான 7:26). ஆதியிலிருந்தே, பூவுலகு உண்டாகும் முன்னே ஞானம் இருந்தது (பழ 8:23). எனவே மனிதனது படைப்பினில் ஞானம் ஒத்துழைத்தது என்று நாம் முடிவு செய்யலாம். இதிலிருந்து அலக்சாந்திரியப் பகுதியின் யூதமறையில் விவாதித்த சில கருத்துக்கள் தெளிவாகின்றன. இவை பிலோவிலும் எதிரொலிக்கின்றன. பிலோவின் கருத்து பின்வருமாறு: வார்த்தை இறைவனின் உருவாகும்; படைக்குந் தொழிலுக்கு வார்த்தையினைக் கடவுள் கருவியாகப் பயன்படுத்தினார். மனிதப் படைப்பிற்கு வார்த்தை அடித்திட்டமான மூல உருவம், மாதிரிகை, மூலக்கோட்பாடு ஆவார். வார்த்தை மூத்த மகனாவார்; அத்தலைமகன் உருவிலே இறைவன் மனிதனை உருவாக்கினார்.

4. கிறிஸ்து இறைவனின் உரு:-

இறைவனின் உரு கிறிஸ்து என்ற கூற்றைப் பவுலினுடைய திருமுகங்களில் மட்டும் காணலாம். எனினும் அதில் பொதிந்துள்ள கருத்து யோவானுடைய நற்செய்தியிலும் விரவியுள்ளது. கிறிஸ்து தம்மை அனுப்பியவரோடு, தூதுவர் என்ற முறையில் மட்டும் உறவு கொள்ளவில்லை. தமது தந்தையை வெளிப்படுத்தும் ஒரே பேறானவர். கண்ணிற்குப் புலப்படாத இறைவனோடு (யோவா 2:18) கொண்ட பிணைப்பு (5:19; 7:16; 8:28 தொ; 12:49) தாம் ஆற்றவந்த பணியோடு முடிந்திடவில்லை. கிறிஸ்துவின் தூது இறைவாக்கினரின் பணியை விட எவ்வளவோ மேம்பட்டது. அவருடைய தூது வார்த்தையினுடையவும் இறைஞானத்தினுடையவும் தூதோடு ஒன்றிணைந்து போகிறது. கிறிஸ்து இறைமகத்துவத்தினைப் பிரதிபலிப்பவர் (17:5,24). அவரிடம் இறை சாயல் ஆழ்ந்து படிந்துள்ளது. தம்மைக் காண்பவர் தம் தந்தையைக் காண்கிறார் (14:9) என்பது கிறிஸ்துவின் மொழி. இம்மொழியில் வார்த்தை என்ற கருத்தில்லாவிட்டாலும் உருவம் என்ற கருத்து உள்ளடங்கியுள்ளது.

மனிதனைப் பற்றிய ஆதியாகமக் கருத்தைக் கையாள்வதோடு (1 கொரி 11:7) இரு ஆதாமைப்பற்றி-அதாவது ஆதி மனிதனின் இருபடைப்பினைப் பற்றி-யூதமறை ராபிகள் விவாதித்த கருத்துக்களையும், பிலோ கொடுத்த விளக்கங்களையும், புனித பவுல் ஆங்காங்கே பயன்படுத்துகிறார். இவற்றை முதற்கண் கிறிஸ்துவுக்கும் (1 கொரி 15:49), பின்னர்ப் புதிய மனிதனுக்கும் (கொலோ 3:10) பொருத்திக் காட்டுகிறார். இறுதியாக, நிறைவான இறையுருவான ஞானத்தின் ஒளியில் கிறிஸ்துவின் இறையுரு என்ற பட்டத்தைக் காண்கிறார் (2 கொரி 3:18-4:4). இவ்வாறு பல்வேறு கருத்துக்களைப் பயன்படுத்தி, கிறிஸ்துவின் மறையுண்மையைப் பவுல், ஓரளவு இன்னும் ஆழ்ந்துணர முயல்கிறார். உரோ 8:9-இல் கிறிஸ்து இறைவனின் மகன் என்ற முறையில் இறையுருவாக உள்ளார். கிறிஸ்து இறையுருவானதால், புது மனிதன் படைப்பில் தலைமை தாங்குகிறார் (கொலே 3:10). இவ்வாறு இறையுரு என்றகருத்திற்குப் பழங்கருத்துக்களையும் புதுக் கருத்துக்களையும் ஒன்றிணைத்தலின் விளைவாகப் பவுல் கொலோ 1:15-இல் கிறிஸ்துவுக்குச் சாற்றிக் கூறும் இறையுரு என்ற கருத்து வளப்பமும் சிக்கலும் மிக்கதாகும். கிறிஸ்து படைப்புக்கு முன்னே இறைவனின் மகனாகையால், மகனுக்கும் தந்தைக்குமிடையே ஒப்பற்ற ஒப்புமை மிளிர்கிறது. அது ஆன்மீகமானதும் நிறைவானதுமாகும். கண்ணால் காண முடியாத தந்தை கிறிஸ்துவில் கண்கண்ட இறைவனாகக் காட்சியளிக்கிறார். தமது படைப்புலக வேலைப்பாட்டினில் தமது அடிச்சுவட்டினைப் பதித்துள்ள இறைவனின் பரந்த மகத்துவமாக விளங்குபவர், கிறிஸ்து. என்றும்வாழும் இறைவனின் திருவுருவாக இறந்தோரினின்று முதன் முதல் உயிர்த்தவர், கிறிஸ்து. கிறிஸ்துவின் உருவொன்றே படைப்புலகினை ஒன்றாய் நிலை நாட்டுகிறது. கடவுள் வகுத்த திட்டத்தின் தொடக்கமும், வளர்ச்சியும், முடிவும், கிறிஸ்துவைச் சார்ந்தது. சுருங்கக்கூறின், கிறிஸ்து படைப்பின் மூலக்கோட்பாடும், புதிய படைப்பால் மீண்டு அமைக்கப்படுவதின் மூலக்கோட்பாடும் ஆவார்.

5. கிறிஸ்துவின் உருவில் மாற்றம் பெறுபவன் கிறிஸ்தவன்:-

கிறிஸ்துவின் நிறைவுற்ற இறையுரு, குறைவுற்றதும் பாவமிக்கதுமான உருவுடைய மனிதனுக்குத் தேவை. கிறிஸ்து உருவில் அமைந்த பல கூறுகள் மனிதன் தன் மூலசுதியைக் கண்டு செயல்படுத்த வேண்டிய ஆக்க சக்திகளாகின்றன. எனவே மண்ணக ஆதாமின் சாயலை ஏற்ற மனிதன் இப்பொழுது விண்ணக ஆதாமின் உருவைத் தரிக்க வேண்டும் (1 கொரி 15:49). ஆதாமிருவரும் இறைவனின் ஒரே திட்டத்தில் மறைமுகமாக இணைந்துள்ளனர் (உரோ 8:29; எபே 1:3-14). முதல் ஆதாம் முறித்ததைக் கடைசி ஆதாம் கூட்டி வைத்துள்ளது தெளிவு. கிறிஸ்து கொணர்ந்த இந்த ஆக்கசக்தி ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்கையிலும் இயங்குகின்றது. இவ்வாறு கிறிஸ்துவன் கிறிஸ்துவோடு இனி ஒன்றுபட்டவனாவான் (உரோ 6:3-6; கொலோ 3:10); எனவே இறைவனின் குழந்தையுமாவான் (1 யோவா 3:2). ஆண்டவரின் அருளாட்சியால்,, கிறிஸ்தவ மக்கள் நாடோறும் இறைமகன் எனும் அவர் உருவில் - சகோதரர் பலருள் தலைப் பேறானவரின் சாயலில் - மேன்மேலும் மாட்சிமை பெறுகின்றனர் (2 கொரி 3:18; உரோ 8:29). வளரும் இம்மாட்சிமையின் முடிவு உயிர்த்தெழுதலாகும். உயிர்த்தெழும் பொழுது கிறிஸ்துவன் விண்ணக ஆதாமின் உருவை நிரந்தரமாக அணிந்து கொள்கிறான் (1 கொரி 15:49). இதற்கு ஏற்ற வண்ணம் கிறிஸ்துவே ''தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்'' (பிலி 3:21).

**உரூபு** (RUFUS - சிவப்புமயிருடைய)

1. நற்செய்தியாளர் மாற்கு தனது நற்செய்தியில் உரூபுவை சீரேனே ஊராராகிய சீமோனின் மகனும், அலக்சாந்தருக்குச் சகோதரனும் ஆவாரெனக் குறிப்பிடுகிறார் (மாற் 15:21). ஒத்தமைவு நற்செய்திகள் மூன்றும் சீமோனைக் குறிப்பிடும்போது மாற்கு மட்டும் அவரின் புதல்வர்களையும் குறிப்பிட்டிருக்கிறார். ஏனெனில் யாருக்குத் தன் நற்செய்தியை எழுதுகிறாரோ அவர்கள் சீமோனின்

குடும்பத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

2. உரோ 16:13-இல் புனித பவுல் ஆண்டவருக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட உரூபுவுக்கும் தன் தாயைப்போல இருக்கும் உரூபுவின் தாய்க்கும் வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

1,2-இல் குறிப்பிடப்பட்ட இரு நபர்களும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்புகள் உண்டு. ஆனால் உரோ 16-ஆம் அதிகாரம் எபேசு நகர் மக்களுக்கு எழுதிய தனிக்கடிதம் எனக் கூறும்போது வாய்ப்புகள் குறைகின்றன.

**உரூமா** (RUMAH - உயர்ந்த இடம், ஏற்றமான இடம்)

இது செபிதா என்ற பெண்மணியின் ஊராகும். இவளது தந்தை பெதாயா ஆவார். இவள் யோயாகிமின், தாயாவாள் (2 அர 23:36). யோசிபசு என்ற வரலாற்று ஆசிரியர் உரூமாவை, செபிதாவின் நகரமாக எடுத்துக் கொண்டார். அநேகமாக இது கலிலேயாவின் இரிம்மோனுக்கு அருகில், நசரேத்துக்கு வடக்கில் 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிர்பெத்து-ரூமே என்ற நகரமாக இருக்கலாம். பத்தாம் உரோமைப் படைப்பகுதியைத் தாக்கிய இரு ஆற்றல் மிகுந்த கலிலேய வீரர்களின் ஊர் இதுவேயாகும். மேலும், சிலர் இதைச் செக்கேமுக்கு அருகிலுள்ள அரூமா என்ற நகரத்தோடு ஒற்றுமைப் படுத்துவார்.

**உரோகலிம்** (ROGELIM - வண்ணான்)

இது கிழக்குக் கிலயாது நாட்டில் ஒரு நகரம் ஆகும். அபிசலோமிடமிருந்து தப்பிய தாவீது, மகனாயிம் என்ற ஊருக்கு வந்த போது அவரை உபசரித்த பார்சில்லாய் என்பவரின் சொந்தவூராகும் (2 சாமு 17:27-29; 19:31). இது யாபோக்கு ஆற்றுக்கு வடக்கில் 25 கி.மீ தொலைவிலும், வடகிலயாத்தில் கலிலேயாக்கடலுக்குத் தென்கிழக்கில் 17 கி.மீ தொலைவிலும் மகனாயிமுக்குக் கிழக்கிலுள்ள மலைகளிலும் உள்ள தேல் பரிசினாவாக இருக்கலாம்.

**உரோகா** (ROHGAH - கூப்பாடு கூச்சல்)

உரோகா என்பவர் ஆசேர் கோத்திரத்தில் தோன்றியவரும் செமேர் என்பவரின் மூத்த மைந்தனும் ஆவார் (1 நாள் 7:34).

**உரோசு** (ROSH - தலைவன்)

இவர் பென்யாமினின் ஏழாவது புதல்வராவார். எழுபதுநூல் இவரைப் பேலாவின் மகன் என்று குறிக்கின்றது. அப்படியானால் இவர் பென்யாமினின் பேரராவார். இவர் பிள்ளைகளின்றி இறந்திருக்கவேண்டும். ஏனெனில் இவரது பெயர் பென்யாமின் வழித் தோன்றல்கள் பட்டியலில் காணப்படவில்லை (எண் 26:38-41; 1 நாள் 7:6-12; 8:1-5)

**உரோதா** (RHODA)

யோவான், மாற்கு என்பவரின் தாயான மரியாளின் வீட்டில் இருந்த பணிப்பெண் உரோதா ஆவாள். இவள் இவ்வீட்டின் ஒரு உறுப்பினராக, அல்லது செபித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவராக இருக்கலாம். பேதுரு சிறையிலிருந்து விடுபட்டபின் கதவைத் தட்டிய உடனே அவரின் குரலை அடையாளம் கண்டு மகிழ்ந்து பிறருக்கும் அறிவித்த பெண்மணி இவளே (அ.ப. 12:13).

**உரோதானிம்** (RODANIM)

உரோதனிம் என்பவர் யாவானின் புதல்வராவார். இவரின் சகோதரர்கள் எலிசா, தார்சிசு, சித்திம் ஆகியோராவர் (1 நாள் 1:7).

**உரோது** (RHODES)

ஏகியன் கடலின் தென்கிழக்கே அமைந்துள்ள ஒரு தீவு நகரம் உரோது ஆகும். கிரேத்துத் தீவுக்கு அடுத்து மிகப்பெரியதீவு இதுதான். 16 கி.மீ. குறுக்களவுள்ள ஒரு கால்வாய் இதைச் சிறிய ஆசியாவிலிருந்து பிரிக்கிறது. இதன் நடுவில் மலைகளும் சுற்றிலும் இயற்கைத் துறைமுகங்களும் அமைந்துள்ளன. எனவே இது ஒரு சிறந்த வாணிகத் தலமாக மாறியது. அலக்சாந்திரியா, சைப்ரஸ் மற்றும் பல நாடுகளுடன் கடல்வழி வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. இங்குதான் உலகத்தின் ஏழு அதிசயங்களில்

ஒன்றான 105 அடி உயரமுள்ள உரோதுவின் கொலேகஸ் என்ற சூரியக் கடவுளின் மிகப் பெரிய சிலை இருந்தது. கி.மு. 227-இல் உண்டான ஒரு மிகப்பெரிய நிலநடுக்கத்தால் இது சேதமடைந்தது. மேலும் பனேசியு, போசிதானிய போன்ற தத்துவக் கலைஞர் களை உலகிற்குத் தந்துள்ளது. 1 மக் 15:23-இன்படி யூதர்களுடன் உரோமை செய்து கொண்ட உடன்படிக்கையையும் யூதப் பெரியகுரு சீமோனின் அதிகாரத்தையும் உறுதிப் படுத்தி, பல இடங்களுக்கு உரோமை கடிதம் எழுதியது. அதில் உரோதும் ஒன்றாகும். யூலியு சீசர் இங்குள்ள பள்ளி ஒன்றில் கல்வி பயின்றார். கி.மு. 43-இல் இது உரோமானியப்படையால் அழிக்கப்பட்டது. பவுல் மிலேத்து நகரத்திலிருந்து பயணம் மேற்கொண்டபோது 'உரோது' நகரத்தில் சிலகாலம் தங்கினார் (அ.ப. 21:1).

**உரோதொக்கு** (RHODOCUS)

இவர் யூதா மக்கபேயின் படையினைக் காட்டிக் கொடுத்தவர். யூதா வலுப்படுத்திய பேத்-சூர் கோட்டையின் இரகசியங்களைப் பகைவர்களுக்கு அறிவித்து விட்டார். பிறகு இவரைக் கண்டு பிடித்து, சிறையிலடைத்தனர் (2 மக் 13:21).

**உரோமந்தி-ஏசேர்** (ROMAMTI-EZER- உதவியில் மகிமைப்படுத்தப்பட்டேன். மிக உயர்ந்த பதவி).

இவர் தாவீதால் புனித இடத்தில் இசைக் கருவிகள் வாசிக்க நியமிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுள் ஒருவரும், ஏமானின் மகனும் ஆவார் (1 நாள் 25:4.31).

**உரோமை** (ROME) - நகர்

உரோமைநகரைத் தலைநகராகக் கொண்ட பேரரசு. இது புதிய ஏற்பாட்டின் உலகை வடிவமைப்பதில் ஒப்புயர்வற்ற இடம் வகிக்கிறது. இதற்குக் காரணம், மத்தியதரைக்கடல் பகுதியின் மீதான அதனுடைய அரசியல் பொருளாதார வலிமை. அது மட்டுமின்றி நாட்டு எல்லைகளையும் கடந்து, பல கலாச்சாரங்களும் ஒன்றை ஒன்று பாதித்து உலகலாவிய பண்பாடு உருவாவதைப் பேரரசு ஊக்கியதே ஆகும். இப் பேரரசு நற்செய்தியைப் பரப்புவதற்கு அக் கால உலகை மறைமுகமாகத் தயாரித்தது.

I தொடக்ககால உரோமையும் குடியரசும்:-

உரோமை நகரில் மக்கள் குடியேறியது பற்றிய சான்றுகள் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தினின்றே காணக்கிடக்கின்றன. இந்தக் குடியேற்றங்கள் அந்த நூற்றாண்டிலும் அடுத்த நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தன. அந்நகரானது கட்டப்படவிருக்கும் ஏழு மலைகளின்மீதும் சமூக குழுக்களாக வளரலாயின (காபிதோலின், பாலதின், குவிரினல், விமினல், எசிகுவிலின், கேலியான மற்றும் அவெந்தின் என்பன இம்மலைகள்). ஆறாம் நூற்றாண்டில் இந்தக் குடியேற்றங்கள் இத்தாலிய வாணிகத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்ட நகரநாட்டாக ஒன்றிணைந்தன. ஆயினும், இன்னும் எத்ரூஸ்கர் ஆதிக்கத்தின் கீழேயே இருந்தன.

உரோமையில் முதன்மையானதாக உருவாகி வந்த கலாச்சாரமானது பெனிக்கியர், எத்ரூஸ்கனியர் மற்றும் கிரேக்கரால் உருவாக்கப்பட்ட கிழக்கத்திய கலாச்சாரமாகும். இத்தாலியில் எந்தப் பெனிக்கியக் குடியிருப்பும் ஏற்படுத்தப்படாவிடினும் வியாபாரத் தொடர்புகளால் பெனிக்கிய ஆதிக்கம் ஏற்படலாயிற்று. எட்டாம் நூற்றாண்டில் சிறிய ஆசியாவிலிருந்து வந்திருக்கக்கூடிய எத்ரூஸ்கனியர் உரோமைக்கு வடக்கிலுள்ள எத்ரூரியாவில் குடியேறினர். உரோமை எத்ரூஸ்கனியரிடமிருந்து மற்ற நாகரிகக் கூறுகளுடன் கிரேக்க நெடுங்கணக்கைத் தழுவிய எழுத்து வடிவையும் பெற்றது. கிரேக்கக் குடியிருப்புகள் எட்டாம் நூற்றாண்டிலிருந்து இத்தாலியில் ஏற்படுத்தப்பட்டன. உரோமை நகரத்திலிருந்து நாடுகடத்தப்பட்ட கடைசி அரசன் ஒர் எத்ரூஸ்கன் ஆவார். 509-இல் இவர் வெளியேற்றப்பட்டபின், முடியாட்சிக்குப் பதிலாகக் குடியாட்சி ஏற்படுத்தப்பட்டது என்பது பாரம்பரியமாகும். ஆறாம் நூற்றாண்டின் இறுதியில், மத்தியதரைக்கடல்

பகுதியிலும் பெனிக்கிய மற்றும் கிரேக்கக் குடியிருப்புகள் அடங்கிய பகுதியிலும் மற்றும் அவர்களுடைய கீழையத் தாயகங்களிலும் எத்ருஸ்கானியரின் ஆதிக்கம் வலுவிழக்கலாயிற்று. பெனிக்கிய எத்ருஸ்க மற்றும் கிரேக்கக் குடியிருப்புகளுக்கு இடையிலான இராணுவச் சண்டைகள் உரோமையின் உயர்விற்கு வழியமைத்தன; மேற்கு மத்தியதரைக் கடல் பகுதிகளை வெல்ல வாய்ப்பளித்தன. ஆனால், உரோமையின் வல்லமையானது ஐந்தாம் நூற்றாண்டுவரை நிலையானதாக இல்லை. மூன்றாம் நூற்றாண்டுவரை முந்தைய அரசர்களின்கீழ் தான் ஏற்படுத்திய சாதனைகளினின்று உரோமைக் கலாச்சாரயானது வீழ்ந்தது. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த கல்லியச் சூறையாடல்கள் கிட்டத்தட்ட உரோமையை அழித்துவிட்டன எனலாம்.

ஆனால் கி.மு. 264-க்குள் உரோமையானது இத்தாலிய தீபகற்பம் முழுவதையும் வென்றுவிட்டது. 201-க்குள் வடக்கு ஆப்பிரிக்காவில் பெனிக்கிய நகராகிய கார்த்தேசுடனான முதல் (264-241) மற்றும் இரண்டாம் போர்களின் மூலமாக (218-201) ஸ்பெயின் முதல் தால்மேதிய கடற்கரை வரையிலான மேற்கு மத்தியதரைக்கடல் சமவெளி முழுவதன்மேலும் உரிமையை அடைந்தது. உரோமை வெற்றியால் பின்தொடரவிருக்கும் அமைப்புகள் நான்காவது மற்றும் மூன்றாவது நூற்றாண்டுகளில் நிலைப்படுத்தப்பட்டன. அந்நாடுகளின் மக்களினங்கள் முழுதும் அழிக்கப்பட்டு விடவில்லை. அவர்களுடைய அரசியல் அமைப்புகள் உரிய இடத்திலேயே இருந்தன. ஆனால், அவை உரோமை ஆளுநர் ஆட்சியமைப்பினால் மாற்றியமைக்கப்படாவிடினும், உரோமையைச் சார்ந்து வாழும் மாநில உறவினை எடுத்துக் கொண்டன. கைப்பற்றப்பட்ட இடங்களில் உரோமைக் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன (மக்கதோனியாவில் பிலிப்பி. அ.ப.16:12.21). கி.பி.212-இல் மத்தியதரைக்கடல் சமவெளிப்பகுதியில் உரிமை அடைந்தோர் அனைவராலும் அடையப்படும் வரையில் உரோமைக் குடியுரிமையானது மிகமிகத் தாராளமாக அளிக்கப்பட்டது.

கி.மு. '200-க்குப் பின்னர், ஒருவரோடொருவர் நீண்ட காலமாகப் போரில் ஈடுபட்டிருத்தல், பார்த்தியாவினால் இப்போது அச்சுறுத்தப்படுதல் முதலியவற்றினால் வலுவிழந்த கிழக்குக் கிரேக்க அரசுகளில் நிலையானது உரோமையைக் கிழக்கு நோக்கி ஈர்த்தது. கி.மு. 192 முதல் 188 வரை செலூக்கியப் பேரரசின் மூன்றாம் அந்தியோக்குவுடன் போரில் ஈடபட்டிருந்த உரோமையானது, மேற்கு சிறிய ஆசியாவின்மேல் ஆதிக்கத்தை வென்றது (அந்தியோக்குலின் மகனை அந்நேரத்தில் பிணைக்கைதியாகக் கொண்டு சென்றது 1 மக் 1:10). 167-இல் எகிப்திற்கு எதிரான நான்காம் அந்தியோக்குவின் படையெடுப்பை உரோமைப் படைகள் தடுத்ததால் அவர் எருசலேமிற்கு எதிராகத் திரும்பினார் (தானி 11:30). நான்காம் அந்தியோக்குவிற்கும் அவரது வாரிசுகளுக்கும் எதிரான போராட்டத்தில் யூதேயாவிற்கான உரோமையின் ஆதரவானது செலூக்கிய அரசாட்சியைக் கட்டுப்படுத்தியது. உரோமையை மிக வல்லமை மிக்க பங்காளராகக் கொண்ட ஓர் உடன்படிக்கை யூதா மக்கபேயுவுடன் நிறுவப்பட்டது (161; 1 மக் 8). பின்பு அது அவரது சகோதரர்கள் யோனத்தான் (144; 12:1-4.16; 14:16) மற்றும் சீமோன் (140; 12:24; 15:15-24) ஆகியோரால் புதுப்பிக்கப்பட்டது. கசமோனியருக்கு உரோமையர் அளித்த ஆதரவானது, அவர்களுடைய கிளர்ச்சியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும் (14:38-40).

கி.மு. 133க்குள் உரோமையானது மேற்குச் சிறிய ஆசியா வரையிலுள்ள கிட்டத்தட்ட மத்தியத்தரைக்கடல் சமவெளி முழுவதையும் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தியது. இராணுவ அரசியல் விரிவாக்கத்தோடு உரோமையர் தாங்கள் வென்ற நாடுகளின் பண்பாட்டையும் குறிப்பாகக் கிரேக்கப் பண்பாட்டையும் தழுவி ஏற்றுக் கொண்டனர்.

கி.மு. 60-ஐ ஒட்டி, கிழக்கு மத்தியதரைக்கடல்பகுதியில் பாம்பே பெரும்வெற்றி வீரராகத் திகழ்ந்தார். கொள்ளையரின் ஆதிக்கத்

தின் கீழ் இருந்த தெற்குச் சிறிய ஆசியாவையும் மற்றும் போந்துவின் ஆளுநர் ஆறாவது மத்ரிதேத்-தை வென்றதன் மூலம் உள்நாடு மற்றும் வடசிறிய ஆசியாவையும் அவர் உரோமையின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். உரோமையின் பெருகும் பேரரசிற்குள் சீரியா மற்றும் பாலஸ்தீனத்தையும் உட்படுத்தி, செலூக்கிய முடியாட்சியை முடிவிற்குக் கொண்டு வந்தார். பாம்பே எருசலேமிற்கு அருகில் வந்தவுடன் இரு யூத முரண்பட்ட பிரிவுகளும் என்ன செய்வது என்பதில் ஒத்துப் போகாமலிருந்தன. ஆனால், அவருக்கு நகர வாயில்களைத் திறக்க விரும்பியோர் அவ்வாறே செய்தனர். பாம்பேயை எதிர்த்தவர்கள் ஆலய வளாகத்தில் மூன்று மாத . காலம் உரோமையரை எதிர்த்துப் போரிட்டனர். ஆலயத்தை வென்றபின்னர் பாம்பே புனித இடத்திற்குள் நுழைந்தார். யூதர்களின் பார்வையில் இது ஒரு பெரிய இறை நிந்தனை ஆகும். சாலமோனுடைய சங்கீதங்கள் எருசலேமின் மீதான உரோமை வெற்றியைக் குறித்த ஒரு யூதக் குழுவின் பதிலுரையாகும்.

உரோமை ஆதிக்கத்தின் கீழ்ப் பெருகி வந்த பரந்த பேரரசையோ, இத்தாலிக்கு அப்பாலும் மேற்கொண்ட வெற்றிகளால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுடனான இத்தாலியையோ கட்டுப்படுத்துவதற்கு உரோமைக் குடியரசின் ஆட்சியானது போதுமானதாக இல்லை. கி.மு. இரண்டு மற்றும் முதல் நூற்றாண்டுகளில் நெருக்கடிநிலை வளர்ந்தது. இந்நிலைக்கு ஒரு பதில் உரோமையிலும், இத்தாலியிலும் பிற மதங்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியானது. இது பிற்காலத்தில் முக்கியம் பெறும். கி.மு. 139-இல் யூதர்களும் சோதிடர்களும் உரோமையினின்று வெளியேற்றப்பட்டனர்.

II பேரரசர்களின் கீழ் உரோமை:-

உரோமை ஆட்சியில் பெரும்பாலும் இரத்தக் களரியான போராட்டங்கள் கி.மு. 133-இல் தொடங்கி, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு நீடித்தது. கி.மு. 40-ஐ ஒட்டிய குழப்பங்கள் யூலியு சீசருடைய சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்தன. குடியரசை இது முடித்து வைத்தது. ஆனால், அரசாட்சி சீசருக்குப் பின்னரே ஓரளவு உறுதிப்பட்டது. கி.மு. 43-இல் அந்தோணி மற்றும் லெபிதுவுடன் சேர்ந்து சீசருடைய பேரனும் சுவிகார மகனுமான ஆக்டேவியன் (சாதாரணமாக அகுஸ்து என்ற பெயரில் அழைக்கப்படுவார்) அமைத்த மூவர்குழு குடியரசின் முடிவை முத்திரையிட்டது. அந்தோணிக்கும் ஆக்டேவியனுக்கும் இடையிலான போராட்டம் அக்ஸியும் என்ற இடத்தில் நடந்த போரில் தீர்மானிக்கப்பட்டது. அந்தோணி மற்றும் அவரது கூட்டாளியான எகிப்திய அழகி ஏழாவது கிளியோப்பத்திரா ஆகியோருடைய தற்கொலையுடன் அது முடிவுற்றது (கி.மு. 30). உரோமையில் ஏட்டளவில் குடியரசானது தொடர்ந்து இருந்தது. ஆனால் கி.மு. 27-இலிருந்து உரோமை உலகின் தலைவராக ஆக்டேவியன் திகழ்ந்தார்.

இத்தாலிக்கும் அதனுடைய மாகாணங்களுக்கும் ஆக்டேவியனின் ஆட்சிமுறை சமாதானத்தையும் திறமையான ஆட்சியையும் கொண்டு வந்ததும், அத்தகைய ஆட்சிமுறையை ஏற்றுக் கொள்வதற்குப் போதிய நீண்ட காலம் அவர் வாழ்ந்ததும் (கி.பி. 14 வரை) ஒரு மனிதன் ஆட்சியைப் புதிய உரோமை ஆட்சிமுறையாக நிலைப்படுத்த உதவின. அகுஸ்துவின் ஆட்சிக்காலத்தில் கலாச்சார வெளிப்பாடுகளின் வளர்ச்சியானது சமாதானம், பாதுகாப்பு, வளமை ஆகியவற்றின் விளைவான புதிய வாய்ப்புகளுக்குச் சான்றாக உள்ளது. இக்காலத்தில் வீர்கில், ஓரேசு, ஒவிது போன்ற புலவர்களும் லிவி போன்ற வரலாற்று ஆசிரியர்களும் சிறப்புப் பெற்றனர். பெரிய கட்டடத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. சிறிய கலை வடிவங்கள் தோன்றின. இலக்கியம், கலை மற்றும் கட்டடத்தின் மாதிரிகள் கிரேக்கத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அவற்றில் உரோமையரின் தனிச்சிறப்பு மிளிர்ந்தது. ஆனால், அகுஸ்து கால நன்மைகள் கலப்படமற்றவையாக இல்லை. பேரரசரின் மரணத்திற்கு முன்பே இலக்கியப் பாரம்பரியம் வீழ்ச்சியுற்றது. இதற்குக் காரணம், நாட்டின் பாதுகாப்

பிற்கும் வளர்ச்சிக்கும் தேவையெனக் கருதி ஏகாதிபத்திய ஆட்சிமுறையில் அதிக அக்கறைகாட்டியதேயாகும்.

குடியரசுக் கொள்கைகளும் அகுஸ்துவினுடைய ஆட்சியின்போது உரோமை ஆட்சியின் சிறப்புப்பண்பாகிய சர்வாதிகாரப் போக்கும் சேர்ந்து செயல்பட்டதால் அரியணைக்கான உரிமை மரபு கடினமானதாயிற்று. (யூலியு குடும்பத்திற்குள் சுவிகரிக்கப் பட்ட) அகுஸ்து மற்றும் அவரது மனைவி (கிளவுதியா) லிவியா ஆகியோரின் திருமணத்தினால் அமைக்கப்பட்ட மரபு கி.பி. 68 வரை ஆட்சியாளர்களை அளித்து வந்தது. ஏட்டளவில் ஆட்சியாளர் தனது வல்லமையை மக்களிடமிருந்து பெற்றார். எல்லாவற்றையும் படைகளே தீர்மானித்தன. இச்சூழ்நிலையில் குடும்ப சந்ததியுரிமையானது முழுமையாக ஏற்கப்பட முடியாததாக இருந்தது. அகுஸ்துவின் மகன் திபேரியு (14-37) எளிதில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆனால், கிளாதியு (41-54) ஆட்சிப்பேரவையின் எதிர்ப்பிற்கு விரோதமாக உரோமை மெய்க்காவல் படையினரால் அரசனாக்கப்பட்டார். மேலும், மாகாணப் படைகள் நீரோவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தன (54-68). நீரோவின் மரணத்திற்குப் பின்னர் போரிடும் படைகள் மூவரை அரியணையில் அமர்த்தி, அவர்களை நீக்கவும் செய்தன. பிளேவியர் என்னும் புதிய மரபு வெஸ்பாசியனில் தொடங்கி (69-79) அவரது மகன்கள் தீத்து (79-81) மற்றும் தொமித்தியன் (81-96) ஆகியோரில் தொடர்ந்தது. கி.பி. முதல் நூற்றாண்டில் உரோமையின் கொடுங்கோன்மை ஆட்சிமுறையாக உருவாகியது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் ஆட்சிப் பேரவை வல்லமை பெற்றது. முதல் நூற்றாண்டில் ஆளும் குடும்பங்கள் அரியணையினின்று நீக்கப்பட்டன. இவற்றின் விளைவாக, 2-ஆம் நூற்றாண்டில் கொடுங்கோன்மை ஆட்சிமுறை சிறிது மட்டுப்படுத்தப்பட்டது.

இரு நூற்றாண்டுகளிலும் முக்கியமான கூறு ''பாக்ஸ் உரோமான'' என்ற உரோமை அமைதியாகும். அதாவது அரசியல் ஒன்றிப்பினாலும் வலுவான படையினாலும் அடையப்பட்ட சமாதானமும் பாதுகாப்பும் ஆகும். ஆனால் பேரரசின் பணித்துறையானது வளர்ச்சியுற்றபோது அரசாங்கத்தில் மேற்கூறப்பட்ட நலன்கள் ஆற்றல்மிக்கதாக அமையவில்லை இந்த அமைதியின் சூழ்நிலையில் தான் போர் அல்லது கொள்ளையரின் அச்சமின்றி எல்லைகளைக் கடந்து தனது செய்தியைத் தடையின்றி கொண்டு செல்ல, பவுலால் முடிந்தது. உரோமை அமைதியோடு கலாச்சார ஒன்றிணைப்பும் ஏற்பட்டது. இதன் விளைவான பலவற்றில் ஒன்று இலத்தீன் மொழியானது மேற்கிலும் கிரேக்கம் கிழக்கிலும் முதன்மைபெற்றது. அரங்கக் காட்சிகள் முதலிய கேளிக்கை வகைகள், சமூக அமைப்புகள் உரோமை முறை அரசியலில் பங்கு பெறுதல் முதலியன உரோமையிலிருந்து மாகாணங்கள்வரை பரவின. கி.பி. முதல் மற்றும் அதைத் தொடர்ந்த நூற்றாண்டுகளில் ''கிரேக்க உரோமைக் கலாச்சாரம்'' பற்றித் தெளிவாகப் பேச முடியும்.

உரோமை அமைதியானது பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் திறன் வாய்ந்ததாக இல்லை. அது உண்மையில் எகிப்திலும், யூதேயாவிலும் குறைந்த அளவிலேயே செயல்பட்டது. உரோமை அரசியல் ஆதிக்கத்திற்கு எதிரான யூதர் சிலருடைய எதிர்ப்பானது, ஓரளவிற்குக் கிரேக்க உரோமைக் கலாச்சாரத்திற்குக்காட்டிய எதிர்ப்போடு சேர்ந்ததாகும். இராணுவ மற்றும் அரசியல் ஆதிக்கம், கலாச்சார ஆதிக்கம் முதலியன, மக்கபேயர் காலத்தில் இருந்ததைப்போன்று ஒன்றுபட்டுச் செயல்பட்டன. உரோமை அமைதியால் கீழ்மட்டத்திற்குப் பயன்ஏதுமில்லை. சமூக வேறுபாடுகள் வளர்ந்தன. செழிப்பின் வளர்ச்சி வாழ்வை உயர்த்த ஒன்றுமே செயல்படவில்லை.

III நகரம்:-

அகுஸ்துவின் ஆட்சியில் நகரில் எண்ணற்ற பகட்டான கட்டடங்கள் தோன்றின. முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பளிங்கு உபயோகிக்கப்பட்டது. பொது மன்ற இடம், நகரச் சுவர்களுக்கு வெளியே

வடமேற்கில் மார்சிய வளாகம் போன்ற இடங்களில் தோன்றிய புதிய கட்டடங்கள், பல தெய்வக்கோயில்கள் ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும். தலை நகரில் பகட்டான கட்டடங்களைக்கட்டுவது பேரரசின் பொதுவான பாணியாக இருந்தது. இத்தகைய கட்டடங்களில் மிக முதன்மையானது பெரிய கேளிக்கைக் கூடமான கொலோசேயும் ஆகும். இது வெஸ்பாசியன் மற்றும் தீத்துவினுடைய ஆதரவில் கி.பி. 72-80-இல் கட்டப்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டின் உரோமையானது தனது வளர்ச்சியின் உச்ச நிலையில் இருந்தது. பெரும்பாலும் பேரரசர்களால் கட்டப்பட்ட எண்ணற்ற பொதுக் கட்டடங்கள் நகரின் மையத்தில் இருந்தன. செல்வருடைய ஆடம்பர வீடுகள் பேரரசின் வளமையைப் பிரதிபலித்தாலும், பலமாடிக் குடியிருப்புகளில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழை மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் ஒரு யூத சமுதாயமானது உரோமையில் இருந்து வந்தது. பாம்பேயினால் நகருக்குக் கொண்டுவரப்பட்டு கி.மு. 62-இல் விடுதலை செய்யப்பட்ட யூதக் கைதிகளால் அது அதிகமாகியது. அனேகமாக 49-க்கு முன்பே உரோமையில், ஒரு கிறிஸ்தவ சமுதாயம் இருந்தது (அ.ப. 18:2).

அ.ப.28:14-31-இல் பவுல் உரோமைக்குவருதல் மற்றும் யூதத் தலைவர்களிடம் சாட்சி அளித்தல் (28:14-31) மற்றும், ஒருவேளை, திருவெளிப்பாட்டு நூலில் காணப்படும் சில சுட்டிக் காட்டுதல்களையும் தவிர, உரோமையில் நிகழ்ந்ததாக எந்த நிகழ்ச்சியைப் பற்றியும் புதிய ஏற்பாடு குறிப்பிடவில்லை. ஆனால், அக்கால உலகின்மேல் உரோமை கொண்டிருந்த ஆதிக்கத்தின் விளைவாக அங்கும் இங்குமான உரோமை நகர் குறிக்கப்படுகிறது. புறவின உலகம் முழுவதற்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பேரார்வத்தின்படி (உரோ 1:14; 11:13) உரோமைக்குச் செல்வதென்பது பவுலின் பேராவலாகும் (அ.ப.19:21;23:11;1:15; 15:23. 28-29.32). உரோமையின் ஆற்றலையும், அது இறைவனுடைய மக்களைக் கொடுமைப்படுத்தியதையும் மனதில் கொண்டு உரோமையைக் குறிக்கப் ''பாபிலோன்'' என்பது உருவகமாகப் பயன்படுகிறது (1 பேதுரு 5:13; திருவெளி 14:8; 16:19; 17:5; 18). நற்செய்திக்கான வேத சாட்சிகளாகப் பேதுருவும் பவுலும் (2 திமோ 1:17) உரோமையில் மரித்தனர்.

IV கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தல்:-

தலைநகரின் கட்டுக்கடங்காத மக்கள் திரளில் புற வழிபாடுகள் ஏற்படுத்திய விளைவுகளோடு உரோமை கொண்ட அனுபவமும், கிறிஸ்தவர்கள் காட்டிய இரகசியத்தன்மையும் உரோமையர் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தக் காரணமாயின. கிறிஸ்தவர்களின் இரகசியத்தன்மை அவர்களைப் பற்றிய பலபொய்யான நம்பமுடியாத கதைகளைத் தோற்றுவித்தது. இவையும் கிறிஸ்தவர்கள் நாட்டின் தெய்வங்களுக்கும் பேரரசர்களுக்கும் பலியிடத் தொடர்ந்து மறுத்ததும் அவர்களை அதிகாரிகள் துன்புறுத்தத் தூண்டின. யூதரின் விநோதமான சமயமானது குறிப்பிட்ட நாடு மற்றும் மக்களுடைய பண்டைய சமயமாகக் கருதப்பட்டு, அதிகாரப்பூர்வமான பாதுகாப்பை நெடுங்காலமாகப் பெற்றிருந்தது. இத்தகைய சலுகையைக் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கவில்லை.

கொடுமைப்படுத்துவது அதிகாரபூர்வமான நிலையான கொள்கையாகப் புதிய ஏற்பாடு காலத்திற்கு முன்னர்வரை தொடங்கவே இல்லை. கொடுமைப்படுத்தப்படுவது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படும் கருத்தாகும். ஆனால் இது உரோமையர் கொள்கை அன்று. இக்குறிப்புகள் அந்தந்த இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளையே பிரதிபலிக்கின்றன. (உதாரணமாக உரோமையினால் பொதுவாக ஆதரவளிக்கப்படாத அந்தந்த இடங்களில் நிகழ்ந்த செமித்தியருக்கெதிரான செயல்கள்). திருவெளிப்பாட்டு நூலானது உரோமை துன்புறுத்தலைப்பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்நூலானது உண்மையான அனுபவங்களைப் பற்றிக் கூறுவதற்குப் பதிலாகப், புறவினப் பேரரசின் வல்ல

மையின் போக்கை அடிப்படையாகக் கொண்ட, வரவிருக்கும் நெருக்கடி நிலையை முன்னுரைப்பதாகத் தோன்றுகிறது. திருவெளிப்பாட்டு நூல் தொமித்தியன் பேரரசராக இருந்த பொழுது எழுதப்பட்டிருக்கலாம் (கி.பி. 81-96). அவரது ஆட்சியின் போது கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கொடுமைப்படுத்தப்பட்டதற்கு அதிகச் சான்றுகள் இல்லை எனலாம்.

கி.பி. 250-வரை கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்துவது பெரும்பாலும் அந்தந்த இடத்துக்குரியதாகவே இருந்தது. கிறிஸ்தவமானது சட்டத்திற்கு எதிரானதாக இருந்தாலும், சட்டமானது சாதாரண வழக்கமாகச் சுமத்தப்படவில்லையெனப் பிளினிக்கும் பேரரசர் திரேசனுக்கும் இடையிலான கடிதத் தொடர்பு காட்டுகிறது. 250-க்குப் பிறகு சமயத்துக்காகக் கொடுமைப் படுத்தப்படுவது பேரரசு முழுவதும் பரவியது. எல்லா கிறிஸ்தவர்களையும் பேரரசிலிருந்து தொலைத்துக்கட்டுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. 306-இல் அரியணையின் ஒரு பகுதிக்குக் கான்ஸ்டன்டைன் உயர்ந்த பின்னர் (ஒரே பேரரசராக 323-இல்) கிறிஸ்தவர்கள் சகித்துக் கொள்ளப்படும் புதிய அனுபவம் கொண்டனர். உரோமை உலகில் ஆற்றலும் பெற்றனர்.

V உரோமையின் மரபுப் பண்பு:-

உரோமை தனக்குப்பின் வந்த மேற்கத்திய நாகரிகத்தின் வழியாக உயிருள்ளதாகத் தொடர்கிறது. தான் உரிமைப் பேறாகப் பெற்று மாற்றியமைத்ததும் தானே புதிதாகக் கிட்டத்தட்ட உலகின் எல்லாப் பகுதிகளிலும் இந்நிலை முதன்மையாக அமைத்ததுமான சமூகக் கலாச்சார அமைப்புகளை மேற்கத்திய கலாச்சாரத்தின் வழியாக உலகமனைத்திற்கும் அளித்துள்ளது.

கலை மற்றும் கட்டடப் பாணி முதலியவற்றில் தன்னுடைய படைப்புகளோடு கிரேக்க முறைகளையும் சேர்த்து மேற்கத்திய உலகிற்கு உரோமை அளித்துள்ளது. இதில் கிரேக்கமோ வேறெந்தக் கலாச்சாரமோ தனியாகச் செய்ய முடியாததை உரோமை செய்துள்ளது. எண்ணற்ற நவீன மொழிகளுக்கு அடிப்படையாக இருப்பது இலத்தீன் மொழியாகும். இது ஒன்றே உரோமைப் பேரரசின் சான்றாக உள்ளது. மற்றமொழிகளைவிட இலத்தீன்மொழி மேற்கத்தியத் திருச்சபையின் சிந்தனையை வெளிப்படுத்தும் ஒரே மொழியாக இருந்திருக்கிறது. உரோமை இலக்கியம் பெருமளவில் இன்றும் உள்ளது; வாசிக்கப்படுகிறது. மேற்கத்திய உலகின் இலக்கியவடிவங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாகச் சிசெரோவின் பேச்சுக்கள் இக்காலம்வரை மேற்கத்திய உலகின் உரைநடைப் பாணிகளைப் பெரிதும் பாதித்துள்ளன.

உரோமையினுடைய மெய்யியல் பாணிகளும், இயக்கங்களும், பேரரசினைத் தொடர்ந்த நூற்றாண்டுகளில், தங்களுடைய மரபுப் பண்பை விட்டுச் சென்றுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாகக், கிறிஸ்தவத்தின் மூலமான ஸ்தோயிக் ஒழுக்கச் சிந்தனையின் தாக்கத்தையும், அகுஸ்தீனுடைய சிந்தனையில் காணப்படும் புதிய பிளேட்டோவின் தத்துவ அடிப்படையையும் எடுத்துக் கூறலாம்.

உரோமைக் குடியரசானது எழுதப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குடிமக்கள், அரசாங்கம் மீற முடியாத உரிமைகளை மட்டுமின்றி நாட்டிற்கான கடமைகளையும் கொண்டுள்ளனர் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் நிறுவப்பட்டிருந்தது. இந்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் குடியரசு தோல்வி அடைந்தாலும், பேரரசு இவற்றிற்கு மாறாக இருந்தாலும் இக்கோட்பாடுகள் மேற்கத்திய உலகிற்கு அளிக்கப்பட்டன. இவற்றை அரசாங்கங்களிலும் திருச்சபையிலும் இன்றும் காணலாம். நாட்டிற்கும் நாட்டின் சமயத்திற்கும் இடையிலான அமைப்பு உறவானது, பேரரசையும் கடந்து கிறிஸ்தவ நாடுகளில் தொடர்ந்து செயல்படுகிறது.

**உரோமைப் பேரரசு** (ROMAN EMPIRE)

ஏறக்குறைய கி.மு.30-இலிருந்து கி.பி.5-ஆம் நூற்றாண்டுவரை மத்தியதரைக் கடல் நாடுகளையும் மேற்கு ஐரோப்பாவையும் அரசியல், இராணுவம், சமூகம், பொருளாதாரம் ஆகிய அனைத்து நிலைகளிலும் கட்டுப்படுத்தி முன்னோடியாகச் சென்றது உரோமைப் பேரரசு ஆகும். இத்தகைய உரோமைப் பேரரசின் உள்ளேதான் கிறிஸ்தவம் தோன்றி, வளர்ச்சிபெற்று முடிவில் உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான சமயமாகக் கி.பி.4-ஆம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. விரிவு பெற்றதும், பல நாடுகளைக் கைப்பற்றியதும்:- உரோமைப் பேரரசு என்பது ஒரேநாளில் தோன்றியதல்ல. சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று ஒரு பேரரசாக உருவெடுக்க நீண்ட காலம் எடுத்தது. முதலில் அரசர்களின் கீழ், புகழ் பெற்றது. கி.மு 508க்குப் பின்னர் ஒரு குடியாட்சி அமைப்புக் கொண்ட ஓர் அரசாக உருவெடுத்தது. தொடக்கத்தில் உரோமைக்குள்ளே பிளவுகளும் சண்டைகளும் நிறைந்திருந்தாலும் கி.மு.275-இலிருந்து இத்தாலி முழுமையையும் தன்னுள் கொண்ட உரோமை அரசு, மகா அலக்சாண்டருக்குப் பின் வந்தவர்களை எதிர்க்குமளவுக்கு ஒரு பேரரசாக உருவெடுத்தது. கி.மு.264-இல் வட ஆப்பிரிக்காவில் இருந்து வந்த கார்த்தேசியர்கள் மத்தியதரைக் கடல் வாணிபத்திற்குப் போட்டியாக வந்தனர். உரோமையர் அவர்களை எதிர்த்து, கடற்படையின் மூலம் கி.மு.241-இல் அவர்களை விரட்டி அடித்தனர். கி.மு.237-219-இல் கார்த்தேசியர்கள் ஸ்பெயினைக் கைப்பற்றினர். அவர்களின் இராணுவத் தளபதி கனிபால் இத்தாலியின் வடபகுதியில் நுழைந்து உரோமைப் படையைத் தோற்கடித்து கி.மு.203 வரை அங்கு இருந்தார். கி.மு.201-இலிருந்து கார்த்தேசியர்கள் ஒரு தனி அரசை உருவாக்கினர்.

உரோமை இந்தச் சமயத்தில் கீழைநாடுகளின் பிரச்சனையில் ஈடுபட்டு மக்கதோனியாவை உரோமையைச் சார்ந்திருக்கும் ஒரு மாநிலமாக மாற்றியது. கி.மு.148-இல் மக்கதோனியா உரோமையின் ஒரு பகுதியானது. கொரிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அழிக்கப்பட்டது. கி.மு.189-இல் மூன்றாம் அந்தியோக்கு என்ற அரசனைச் சிறிய ஆசியாவில் தோற்கடித்தபின் அவர்கள் படைகளை மீண்டும் உரோமைக்குக் கொணர்ந்தனர். கி.மு. 133-இல் உரோமை ஆசியாவின் மீது நிலையான ஆட்சி செலுத்தும் சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டது. பெர்கமோன் அரசன் தன் அரசை உரோமையருக்கு உடைமையாக எழுதிவைத்தார். நான்காம் அந்தியோக்கு எகிப்து நோக்கிப் படையெடுக்க விழைந்தாலும், அது உரோமைத் தளபதியால் தடை செய்யப்பட்டது. சீரியாவோ, எகிப்தோ உரோமையின் அடியில் இருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

பழைய கால எளிமையான வாழ்வுமுறையையே பலர் விரும்பினாலும் கிரேக்கர்களின் பாதிப்பாலும் பல அந்நிய நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியது இருந்ததாலும் கிரேக்க முறை பெரிதும் இங்கு நுழைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களும் அதிகமாயின. முக்கியமாக கி.மு.135-30-இல் வகுப்புக் கலவரங்கள் அதிகமாயின. சிசிலியில் இரண்டு அடிமைப்போர்கள் நடந்தன (கி.மு.135-32; 103-101). மேலும் ஸ்பார்டகஸ் என்பவரால் இத்தாலியில் ஒரு போரும் (73-71) உள்நாட்டில் இருந்த பிளவுகளின் அடையாளமாக அமைந்தது. மாரியஸ் (107-100) என்பவனின் கொடுங்கோலாட்சிக்குப் பின், சுல்லா (88-79) என்பவனின் ஆட்சி நடைபெற்றது. சிசரோ (63) ஒரு மத்திய அரசை உருவாக்க முனைந்து தோல்வியுற்றார். அதன்பின் மூன்று அரசியல் நோக்குடைய பாம்பே, கிராசுஸ், சீசர் என்ற படைத் தளபதிகளின் கீழ் வந்தது உரோமை அரசு. கிராசுசின் இறப்புக்குப் பிறகு பாம்பேயை மேற் கொண்ட சீசர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் 44-இல் அவரும் கொல்லப்பட்டார். பின் அகுஸ்து சீசர் ஆட்சிக்கு வந்தார். இவரே உண்மையிலே உரோமைப் பேரரசை நிறுவியவர் எனலாம். இவ்வாறு உரோமைப் பேரரசு பரந்து விரிந்தது. எதிர்பாராத,

முன்னே திட்டமிடப்படாத ஒரு வளர்ச்சி எனலாம். சிசிலி, சார்டினியா, கோர்சியா என்பன 241-238-இல் உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 197-இல் ஸ்பெயினும், மக்கதோனியா (148), ஆப்பிரிக்கா (146) பின் பெர்காமும் இதில் சேர்ந்தன. கிழக்குச் சிறிய ஆசியாவில் சிலிசியாவும் உரோமையின் ஒரு பகுதியானது. 74-58-இல் சிரேனே, பித்தினியா போன்ற பகுதிகளை அந்தந்த அரசர்களின் விருப்பத்திற்கேற்பப் பெற்றுக் கொண்டனர். இது போலவே கிரேத்தா, சிரியா, சைப்ரஸ் மேலும் காலின் மற்றப் பகுதிகளையும் உரோமையுடன் இணைத்தனர்.

அகுஸ்து ஆட்சிக்கு வந்தபின் அந்தோனி மற்றும் கிளியோப்பத்திராவை வென்றதால் எகிப்தும் (31), அவரது இறப்புக்கு முன் இல்லிரிகும் (27) கலாத்தியா (25), ரேத்தியா, நாரிகும் (கி.மு.16), யூதேயா (கி.பி.6), பானோனியா ஆகிய அனைத்தும் உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. திபேரியுஸ் சீசரின் ஆட்சியில் கப்பதோக்கியா (17) மாநிலம், கிளவுதியுவின் காலத்தில் மௌரட்டானியா (42), பிரிட்டன் (43) மோயிசியா (44), திரேஸ் (46) ஆகியவை உரோமைக்குரியவையாகின. இவை அனைத்திலும் முன்னர் உரோமைப்படைகள் தங்கியிருந்தன அல்லது உரோமை ஆளுநர்களால் ஆட்சி செய்யப்பட்டன. பின்னர் ஒருசில பகுதிகளே உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. உரோமைப் பேரரசு, தன் ஆட்சியின் உச்சநிலையில் மத்திய தரைக்கடல் நாடுகள் அனைத்தையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டிருந்தது. தென்பிரிட்டனிலிருந்து மொராக்கோ வரையிலும், கிழக்கில் அரேபியா வரையிலும் வடக்கில் துருக்கி, ருமேனியா வரையிலும், மேற்கே டான்யூப், ரைன் வரையிலும் பேரரசு பரந்துவிரிந்து கிடந்தது. பிரிட்டன் பெரும் கோட்டைச் சுவர்களால் காக்கப்பட்டது. கிறிஸ்துவம் வளர்ந்த முதல் நூற்றாண்டில் 25-28 பெரும் படைப்பிரிவுகள் எப்பொழுதும் ஆயுதந்தாங்கியவர்களாய்ப் போருக்குத் தயாராக இருந்தனர். ஒவ்வொரு படைப்பிரிவும் ஆறாயிரம் போர் வீரர்களையும், படை அதிகாரிகளையும் கொண்டிருந்தது. இது மட்டுமன்றி அந்தந்த நாட்டு வீரர்களும் அதே எண்ணிக்கையில் ஒவ்வொரு படைப்பிரிவிலும் இருந்தனர்.

2.மக்கள் தொகையும், சமூக அமைப்பும்:-

பேரரசின் மக்கள் தொகைபற்றிய கணக்குப்பற்றி வேறுபட்ட கருத்துகள் உண்டு. பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மக்கள் எண்ணிக்கை 54,000,000 தான். இதில் 1,000,000 பேர் உரோமை நகரில் வாழ்ந்தனர். கி.மு.47-இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுக்கின்படி இத்தாலியில் குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரின் எண்ணிக்கை 6,000,000 என உரோமையில் உள்ள கணக்கெடுப்புச் சுருள் கூறுகிறது. பேரரசின் மொத்த எண்ணிக்கையில் 5,000,000-க்கு மேற்பட்ட யூதர்கள் இருந்திருக்க வேண்டும். இந்த எண்ணிக்கையுடன் யோசிபஸ் குறிப்பிடும் பரிசேயர்கள் 6,000, கிறிஸ்தவர்கள் 5,000 பேரின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம் (அ.ப.4:4)

சமூகம் ஒரு பிரமிடு அமைப்பில் இருந்தது. ''செனட்'' என்னும் ஆட்சிக்குழுவைச் சேர்ந்த 600 உறுப்பினர்களும் அவர்களின் குடும்பங்களும் 1600 என்ற எண்ணிக்கையில் இருந்தனர். பெரும்பான்மையான உரோமைக் குடிமக்கள் இந்த இரண்டு வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தனர். விடுவிக்கப்பட்டவர்களும் இருந்தனர். முன்னர் அடிமையாயிருந்து விடுவிக்கப்பட்டவர் எவரும் பொதுவாகக் குடிமக்கள் ஆவது இல்லை. மூன்றாவதாக அடிமைகள் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு என்ற பெரிய எண்ணிக்கையில் இருந்தனர்.

இந்தச் சமூக அமைப்பிற்கேற்ப நாட்டின் தலைவராகப் 'பேரரசரும்', அரசருக்கு ஆலோசனை கூறும் 'மன்றமும்' (இதுவே அரசாங்க அலுவலங்களின் தலைமை மன்றம்), உரோமையை நடத்திச் செல்லும் பொறுப்பதிகாரிகளும் மாநிலங்களை ஆள

மாநில ஆளுநர்களும் செயலாற்றினர். அரசாட்சிக் காலத்தில் சமூகத்தின் முதல் இரண்டு வகுப்பைச் சார்ந்தவர்கள் அரசாங்கப் பணியில் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே பல அலுவலகங்களில் பொறுப் பேற்றுப் பணியாற்றினர்.

3. விவசாயம், தொழில், வாணிபம், செய்தித்தொடர்பு:-

பேரரசில் முக்கியமாக விளைந்தவை கோதுமை (எகிப்தில், அதிகம் விளைந்து உரோமைக்கு அனுப்பப்பட்டது), திராட்சை, ஒலிவா மற்றும் பிற காய்கறிகளாகும். நாணல் தாள்களும் எகிப்திலிருந்தே வந்தன. தங்கம், வெள்ளி, ஈயம், தகரம், தாமிரம், இரும்பு ஆகிய உலோகங்களை வெட்டி எடுக்கத் திறந்தவெளி மற்றும் மூடிய சுரங்கத் தொழில்கள் நடைபெற்றன. அதிகமான சுரங்கங்கள் அரசாங்கத்துக்குரியனவாக இருந்தன. அதில் அடிமைகள் வேலை செய்தனர். சலவைக் கற்கள் அதிகமாகக் கிரேக்கத்திலே தோண்டி எடுக்கப்பட்டன. மட்பாண்டங்கள், துணி உற்பத்தி, தோல்பொருட்கள், உலோகங்கள், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி ஆகிய அனைத்துமே அடிமைகள், விடுதலை பெற்றவர்கள் ஆகியவர்களாலே அதிகம் நடைபெற்றன. அல்லது இவற்றை நடத்த வங்கிகள் கடன் உதவி செய்து அதன் மூலம் இத்தகைய உற்பத்திகள் வளர அரசு உதவியது. வேளாண்மை மற்றும் பிற உற்பத்திப் பொருட்கள் மிகச் சிறந்த உரோமைச் சாலைகள் வழியாக உள்நாட்டிலும், மத்தியதரைக் கடல் மற்றும் பிறகடல்களின் வழியாக வெளிநாடுகளிலும் விற்கப்பட்டன. வழிப்பறிக் கொள்ளையர்கள் நிலத்தில் தொந்தரவு கொடுத்து வந்தாலும், கடற் கொள்ளைக்காரர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டனர். அரசாங்கக் காவற் கப்பல்கள் அவர்களின் தொந்தரவு இல்லாமல் காத்து வந்தன. பேரரசின் தொடக்ககாலத்தில் 120க்கும் மேற்பட்ட கப்பல்கள் பட்டு, நறுமணப் பொருட்கள், வைரம், தந்தம், முத்து, சீனப்பட்டு ஆகியவற்றைச் சுமந்து கொண்டு இந்தியா சென்றன. அரசாங்க அலுவலகச் செய்திகளைச் சுமந்து செல்ல ஒரு அமைப்பு இருந்தது. மற்றச் செய்திகளைச் சுமந்து செல்லத் தனியாட்கள் பயன்படுத்தப்பட்டனர்.

4. பணமும், வங்கிகளும்:- நாணயப் பரிமாற்றம் உரோமைப் பேரரசு முழுவதும் ஒரே முறையில் அமைந்திருந்தது. குடியரசின் காலத்தில் பணப் புழக்கத்தில் குழப்பம் ஏற்படாதிருக்கப் பணத்தின் மதிப்பை அவ்வப்பொழுது குறைப்பதின் மூலம் கட்டுப்படுத்தினர். பேரரசில் இரு நூற்றாண்டளவு வெள்ளி நாணயங்களே (தினாரி) அதிகம் புழக்கத்தில் இருந்தன. சண்டைகளின் காரணமாகவும், பணவீக்கத்தைக் குறைப்பதற்காகவும் 20%, 40% நாணயத்தின் எடை குறைந்தது.

பணப் பரிமாற்றத்திற்கு மட்டுமன்று தங்கள் அரசின் பெருமையைப் பறைசாற்றும் வழியாகவும் நாணயங்கள் பயன்பட்டன. இன்றைய தபால் தலைகள் போல அன்றைய நாணயங்களும் பேரரசரின் உருவம், அவரது குடும்பத்தின் உறுப்பினர், வாரிசு, அவரது பெருமை எனப் பல வகையில் பேரரசைப் பறைசாற்றுபவையாக இருந்தன.

தனியார் வங்கிகள் மூலமும், தனிக்கடன் அளிப்போர் மூலமும் வியாபாரத்திற்கும், பண முதலீட்டுக்கும் வழி செய்யப்பட்டன. 12% மட்டுமே வட்டி வாங்க வேண்டுமென்ற ஒரு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

5. வரிகளும், அரசாங்க நிதியும்:-

உரோமைப் பேரரசின் வரிகளுள் வணிக வரியும், வருவாய் வரிகளும், 5% அடிமைகளாயிருந்து விடுதலை பெறுவோரின் வரிகளும், உரோமைக் குடிமகனாவதற்குரிய வரிகளும் உள்ளடங்கும். தண்டங்கள், போரில் கிடைத்த பொருள்கள், அரசாங்கச் சுரங்கங்கள், சொத்துக்கள் இவற்றிலிருந்தும் வருமானம் கிடைத்தது. தனியார் சொத்து, நிலங்கள் இவற்றின்மீது இத்தாலிக்கு வெளியே உள்ளவர்கள்மீது கப்பம் என்ற வரிவசூலிக்கப்பட்டது. 'ஆயக்காரர்கள்' எனப்படும் வரிவசூலிக்கும் ஒரு அமைப்பே இருந்தது. இவர்கள் உரோமையின் சொத்தில் பங்குகொள்பவர்க

ளாக இருந்தனர். இதில் பல கையூட்டுகளும் மற்றும் தவறான கையீடுகளும் இருந்தன. உரோமைக் குடியரசில் வரிப்பணம் முழுவதும் செனட்.என்ற ஆட்சிக் குழுவின் அதிகாரத்தின்கீழ் இருந்த கருவூலங்களில் செலுத்தப்பட்டது. ஆனால் அரசர்களின் காலத்தில் இவை அதிகமாக அவருக்கும், அவரது வாரிசுகளுக்குமே போய்ச் சேர்ந்தன.

அகுஸ்து சீசரின் காலத்தில் கருவூலங்களின் வருமானம் 400,000,00 செஸ்டர்களாக இருந்தது. வெஸ்பாஸியன் காலத்தில் இது 2,500,000,000 ஆக அதிகரித்தது. இவ்வாறு அடிக்கடி வரிகள் உயர்த்தப்பட்டன.

6. சமூகச் சூழ்நிலைகள்:-

அன்றைய குடும்ப வாழ்வைப் பற்றிய பொதுவான கருத்து ஒன்றைக் கூறுவது என்பது இயலாதது. ஏனெனில் ஒருசில விமர்சக எழுத்தாளர்களைத் தவிர உரோமைக் குடிமக்களின் வாழ்வு பற்றிய ஏனைய விபரங்களைத் தெளிவாகத் தரக்கூடிய நூல்களோ, புள்ளி விபரங்களோ இல்லை. ஆனால் கி.மு.முதலாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களாலும், புதிய பணம் உரோமைக்குள் நுழைந்ததாலும் இவை பணக்காரக் குடும்பங்களை மட்டுமன்று மற்ற நிலையினரையும் பாதித்தது. உரோமைக் குடும்பங்களின் அளவு குறைந்தது. உரோமையில் இருந்த பெண்களின் வாழ்க்கை ஒழுக்கவியலாருக்குப் பெரும் துர்மாதிரிகையாக இருந்தது. அகுஸ்து சீசர் விவாகரத்தைக் குறைப்பதற்கும், விபச்சாரத்தைத் தடுப்பதற்கும், பெரிய குடும்பங்கள் உருவாவதற்கும் சட்டங்கள் இயற்றினார். இதனை அவருக்குப் பின்வந்தவர்களும் உறுதிப்படுத்தி வலியுறுத்தினர். அன்றைய பேரரசில் கருச்சிதைவு, குழந்தைகளைக் கைவிடல் முதலியன தடை செய்யப்படவில்லை. தொமிசியன், ஆண்கள் ஆண்களுடன் கொள்ளும் உடலுறவிற்கு 10,000 செஸ்டர்கள் தண்டனை விதித்தார்.

இவ்வளவு சட்டங்கள் இயற்றியும் ஒழுக்க வாழ்வில் எவ்வளவு தாழ்வுற்றிருந்தனர் என்பதைப் பவுல் கிறிஸ்தவர்களை உலகினின்று ஒதுங்கி வாழக் கூறுவதிலிருந்தே தெரிகிறது. அதற்காக எல்லாக் குடும்பங்களும் அப்படித்தான் இருந்தன என்று கூறுவதற்கில்லை. எனவே நல்ல ஒழுக்கம் நிறைந்த குடும்பங்களும் இருந்திருப்பது தெரிகிறது.

7. உரோமைச்சட்டம்:- பேரரசு மனிதர்களால் மட்டுமன்று, சட்டத்தாலும் ஆளப்பட்டது. குடியரசின் இறுதி நூற்றாண்டில் உரோமைச்சட்டம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றது. அரசர் நாட்டின் மிக உயர்ந்த நீதிபதி என்ற முறையில் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்கினார். சட்ட வல்லுநர்கள் ஆலோசனை மன்றத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் முடிவுகள் எடுத்தனர்.

நாடு, மக்கள், தனிச் சொத்துரிமை இவற்றைக் காப்பதற்காகமட்டுமன்று, இவற்றோடு தொடர்பு கொண்ட சமூகநிலைகளைக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவும் இருந்தது சட்டம். 'ஸ்தோயிக்குகள்' என்பவர்களால் சட்டத்தில் பெண்கள், அடிமைகள் இவர்களின் நிலைமை ஓரளவு உயர்ந்தது. அடிமைகள் தங்களது சொத்தை வைத்துத் தங்கள் உரிமையை விலையாகப் பெறலாம் எனும் நிலை இருந்தது. அவர்களைத் தவறாக நடத்தாதபடி அவர்களைப் பாதுகாக்கச் சட்டம் இருந்தது.

ஆனால் இன்றைய நடைமுறைபோல் ஒருவனைத் திருத்துவதற்கென்று தண்டனை கொடுக்கப்படவில்லை. ஒருவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி செய்யப்பட வேண்டுமென்ற நோக்கில் தனிமனிதக் குற்றத்திற்குத் தண்டனையும், பொதுக் குற்றத்திற்கு மிகவும் மோசமான தண்டனைகளும் வழங்கப்பட்டன.

8. உரோமையும், கிறிஸ்தவமும்:-

உரோமையர்கள் கிறிஸ்தவத்தின் மீது கொண்டிருந்த நோக்கு என்னவென்பதை அவர்கள் மற்ற அந்நிய சமயங்களை எந்த முறையில் பார்த்தனர் என்பதிலிருந்து பிரித்துப் பார்த்தால் அதனை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. பிளினி, தாசித்து, சுவதெனியுஸ் ஆகியோர் கிறிஸ்து

வத்தை ஒரு மூட நம்பிக்கை என்றனர்; அதாவது அறிவு அதிகம்அற்ற கீழ்த்தர வகுப்பினரால் உருவாக்கப்பட்ட புதிய அந்நிய சமயம் என்ற கருத்தே அவர்கட்கு இருந்தது. எவ்வாறு யூதர்கள் சிலைவழிபாடு விபச்சாரத்துக்கு இட்டுச் செல்கிறதென்று நினைத்தனரோ, அதுபோலவே உரோமையரும் அந்நிய மூடநம்பிக்கைச் சமயங்களும் விபச்சாரங்களுக்கும் மனிதனை உண்ணும் பழக்கத்துக்கும் இட்டுச் செல்லும் என நம்பினர். 'பக்கனலியா' என்ற முறையை அழித்தது பற்றி ''லிவி'' என்பவரின் விவரிப்பிலிருந்து மற்றச் சமயங்கள்மீது உரோமையருக்கு இருந்த எண்ணமும், அத்தகைய மோசமான எண்ணமே கிறிஸ்தவத்தைப் பற்றியும் அவர்களிடம் இருந்திருக்கவேண்டுமெனவும் தெரிகிறது.

இவ்வாறு கிறிஸ்தவமும் ஒரு அந்நிய சமயமாக இருந்ததால் அதனை மூடநம்பிக்கை எனக் கருதினர். உரோமையரால் பெரும் குற்றவாளி எனத் தீர்ப்பிடப்பட்டவரை ஆண்டவராக ஏற்றுக் கொண்டவர்களின் சமயத்தை நிச்சயமாக அவர்கள் மூடநம்பிக்கை என்று கூறியதில் வியப்பில்லை; அதைப் பின்பற்றியவர்களின் ஒழுக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டதில் வியப்பொன்றுமில்லை.

கிறிஸ்தவத்தைப் பற்றிய முதல் அறிக்கை போன்சியு பிலாத்துவிடமிருந்து வ்ந்தது தான். ஆனால் அது வெளிப்படுத்தப்படவில்லை. பிலாத்துவின் செயல்கள் என்ற நூல் ஒரு போலி நூலாகும். கிளாதியுவின் ஆட்சிக் காலத்தில் 'கிறெஸ்துஸ்' என்பவர் உரோமையில் யூதர்களிடையே பெரும் குழப்பம் விளைத்ததாகக் குறிப்புள்ளது. உரோமை அதிகாரிகள் கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தனர் அல்லது கண்டு கொள்ளாமல் இருந்ததாக அப்போஸ்தலர் பணி நூலில் காணப்படும் நிலை சரியானதாகும். பாலஸ்தீனத்தில் உரோமை ஆளுநர் இல்லாத போதுதான் இயேசுவின் சகோதரராகக் கருதப்பட்ட யாக்கோபு (கி.பி.62) கொல்லப்பட்டார். இருந்தாலும் கிறிஸ்தவர்கள் மேல் பலருக்கு ஓரளவு வெறுப்பு இருந்தது. நீரோவின் ஆட்சியில் உரோமையில் தீப்பிடித்த பிறகு கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் கிறிஸ்தவர்கட்கு எதிராக எச்சட்டமும் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பிளினி, திரேசனுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவத்தை மறைமுகமான தீய ஒழுக்கத்தின் இயக்கம் என்று குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

9. பேரரசு பற்றிக் கிறிஸ்தவர்களின் கருத்து:-

புதிய ஏற்பாட்டில் உரோமைப் பேரரசு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுகின்றன. இயேசுவின் எதிரிகள் அவர் வரிசெலுத்த வேண்டாமென்கிறார் என்று குற்றம் சாட்டினர் (லூக் 23:2). ஆனால் அவரிடம் நேரடியாகக் கேட்டபோது செசாருக்குரியதைச்' செசாருக்குச் செலுத்த வேண்டுமென்றார் இயேசு (மாற் 12:17 இணை). யோவான் நற்செய்திப்படி உரோமைப் பேரரசின் அதிகாரம் மேலிருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார் (யோவா 19:11). பவுல் நீரோ ஆண்ட காலத்தில் எழுதிய கடிதங்களில் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிந்து, உண்மையுடனிருந்து வரிசெலுத்த வேண்டுமெனக் கூறுகிறார் (உரோ.13:1-7); இதே கருத்துக்கள் தீத் 3:1; 1 பேதுரு 2:13-17-இலும் காணப்படுகின்றன.

வெளிப்பாட்டு இலக்கியங்கள் பேரரசு உடனடியாக அழிக்கப்படும் என்று தங்களையே தெய்வங்களாக்கிக் கொண்ட மன்னர்களுக்கு எதிராக உரைக்கின்றன (2 தெச 2:7; திருவெளி). காப்புரையாளர் யுஸ்தினும் அவரது சீடர் தேசியனும் கெட்ட அரசு எனப் பேரரசைக் கண்டிக்கின்றனர்.

இவையெல்லாம் பேரரசின் மேல் அவர்கள் கொண்டிருந்த ஒருவகை வெறுப்பையே காட்டுகின்றன. இவை பல மாநிலங்களில் புரட்சியாக வெடித்தன என்பதையும் வரலாறு ஒத்துக்கொள்கிறது. சமயத்திற்காக வேதனைப்படுத்தப்பட்டாலும் அரசுக்கும் அதிகாரத்துக்கும் உண்மையுள்ளவர்களாக

வும் சில கிறிஸ்தவர்கள் இருந்தனர். அத்தெனகோரஸ் என்பவர் மாற்குஸ் அவுரேலியுஸ் என்பவரது ஆட்சி கடவுளால் தரப்பட்டது என்றும், மெலிட்டோ என்பவர் கிறிஸ்தவமும் உரோமைப் பேரரசுடன் ஒன்றாக வளர்ந்த ஒன்று என்றும், அதனைத் தீய மன்னர்களே துன்புறுத்தினர் என்றும், ஆகவே அது அதிகாரபூர்வமான சமயமாக மாற்றப்படவேண்டுமென்றும் கூறுகிறார். நான்காம் நூற்றாண்டில்தான் இந்நம்பிக்கை உண்மையானது. கிறிஸ்தவமும் உரோமையின் அதிகாரப் பூர்வமான அரசாங்க மதமானது.

**உரோமையருக்குத் திருமுகம்** *(Letter to the Romans)*

*1. முன்னுரை:-*

*''உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' (மாற் 16:15) என்னும் இயேசுவின் வாக்கைச் சிரமேற்கொண்டு அதற்காகப் பல நற்செய்தித் தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார் பவுல். இப்பயணங்களில் உரோமைப் பேரரசில் சிறப்பான நகரங்களான எபேசு, கொரிந்து, பிலிப்பு, தெசலோனிக்கா ஆகியவற்றில் நற்செய்தியை அறிவித்து, திருச்சபையை நிறுவினார். பின் மற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது அங்கிருந்து தான் ஏற்படுத்திய அந்தத் திருச்சபையின் மக்களிடம் கடிதங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தொடர்ந்து தன் அறிவுரையை வழங்கினார். அப்படிப்பட்ட கடிதங்களுள் ஒன்றுதான் உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட கடிதமாகும். இந்தக் கடிதத்தை ஏன், எங்கு யாருக்கு எழுதினார்? என்ன நடையைக் கையாண்டுள்ளார் என்பதையும் கீழே காண்போம்.*

*2. காலம், இடம்:-*

*காலம்:- புனித பவுல் தனது பணித்தளமான ஒரொன்டஸ்க்குத் திரும்பியவுடன் அவர் தனது மூன்றாவது நற்செய்தித் தூதுரைப் பயணத்தைத் தொடங்கினார். இப்பயணத்தில் அவர் மக்கதோனியா வழியாக எருசலேம் செல்ல விரும்பினார். ''பவுல் மக்கதோனியா, அக்காயா வழியாக எருசலேம் செல்ல விரும்பினார்'' (அ.ப.19:21). இதற்கு முன்தான் அவர் இந்தக்கடிதத்தை எழுதி இருக்க வேண்டும், ஏனெனில் அவர் உரோ.15:19-இல் ''எருசலேமில் தொடங்கி அதனை மையமாகக் கொண்டு இல்லிரிக்கம் நாடுவரை எங்கணும் சுற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்துவிட்டேன்'' என்கிறார். இப்படி அவர் எருசலேம் சென்று எருசலேமின் தாய்த் திருச்சபைக்காகத் தான் திரட்டிய உதவியை (1 கொரி 16:1-4) அவர்களிடம் கொடுத்தபின் மேற்கத்திய பகுதியான உரோமைக்குச் செல்ல விரும்பினார். எனவே இதன் பின்னணியில் நோக்கும் போது இந்தக் கடிதத்தை அவர் உரோமைக்குச் செல்லுமுன் கி.பி.57-58-இல் கோடைக்காலத்தில் எழுதி இருக்க வேண்டும் (உரோ 15-10; அ.ப.19:21-21:19.*

*இடம்:- மூன்றாம் நற்செய்தித் தூதுரைப் பயணத்தின்போது அவர் மக்கதோனியா நாட்டின் தலைநகரான கொரிந்து நகருக்கு வந்து அங்கு மூன்று மாதம் தங்கினார். இங்குதான் அவர் உரோமையருக்குத் தனது கடிதத்தை எழுதினார் என ஏற்றுக் கொள்ளுகின்றனர் அறிஞர்கள்: மேலும் உரோ 16:1-இல் ''நம் சகோதரியாகிய பெபாவை அன்போடு ஏற்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; இப்பெண்மணி கெங்கிரேயாவில் இருக்கும் திருச்சபைக்குத் திருப்பணி புரிகிறவர்'' என்று பெபா என்ற பெண்மணியை அறிமுகம் செய்கிறார். இந்தக் கெங்கிரேயா கொரிந்து நகரிலிருந்து சுமார் 7 மைல் தொலைவிலிருந்த துறைமுக நகரம். இங்கிருந்து அவர் எபேசுக்குக் கப்பலேறுகிறார் (அ.ப.18:18). மேலும் உரோ 16:21-23-இல் அவர் குறிப்பிடும் நபர்களும் குறிப்பாக, காயுசு என்பவரும் கொரிந்திய திருச்சபையைச் சார்ந்தவர்கள். எனவே அறிஞர்கள் இக்கடிதம் கொரிந்து நகரில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.*

*3. சூழ்நிலையும் நோக்கமும்:-*

*எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரை நற்செய்தியை அறிவித்தபின் மேலை நாடுக*

ளைச் சிறப்பாக ஸ்பெயின் நாட்டை அவர் மனம் நாடியது (உரோ 15:19). இந்தப் பய ணத்தின்போது தனது நீண்ட நாள் ஆசை யான உரோமைத் திருச்சபையைச் சந்திப் பதை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினார் (1:13; 15:22, 24). ஆனால் இதற்குமுன் அவர் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பணி ஒன்று இருந்தது-தான் ஏற்படுத்திய காலாத் தியா, மக்கதோனியா, அக்காயா போன்ற இடங்களில் வாழ்ந்த புறவினத்திருச்சபையி டமிருந்து திரட்டிய நிதியை எருசலேமுக்குக் கொண்டு சேர்ப்பதாகும். இவ்வாறு கொரிந்து நகரிலிருந்து எருசலேமுக்குச் செல் லுமுன், இந்தக் கடிதத்தை எழுதுகிறார். அவர் எழுதிய மற்றக் கடிதங்கள் சூழ்நி லைக்கு ஏற்ப எழுதப்பட்டாலும், உரோமை யர் ஒரு விதிவிலக்காகவே நிற்கிறது. கொள் கைக் குழப்பம், பிரிவினை முதலியவை நிலவியபோது புனித பவுல் தன் கடிதங்கள் வாயிலாக அவற்றைத் தீர்த்து வைக்கவும், அவர்களோடு தொடர்பு கொள்ளவும் தன்னு டைய மற்றக் கடிதங்களை எழுதி இருந்தா லும், உரோமைத் திருச்சபைக்கு அத்தகைய தொரு சூழ்நிலையில் கடிதம் எழுதியதாகத் தெரியவில்லை.

கீழ்த்திசை நாடுகளில் தன் பணியை முடித்து விட்டதாக எண்ணி, ''புறவினத்தா ரின் அப்போஸ்தலர்'' (உரோ 11:13) என்று இங்குப் பெயர் பெற்றிருந்த பவுல், தன் னைத் தனிப்பட்ட முறையில் அறியாத உரோமைத் திருச்சபைக்குத் தன்னை அறிமு கப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் நல்ல லெண்ணத்தையும் நம்பிக்கையையும் தேடிக் கொள்ளவும் இக்கடிதத்தை எழுதினார்.

மேலும் அவர் உரோமைக்குச் செல்ல இருப்பதை அறிந்த அவரது பகைவர்கள், அவரைப் பற்றியும் அவரது போதனைக ளைப் பற்றியும் தவறான கருத்துகளைப் பரப்பி வந்தபோது, தான் உரோமையில் போதிக்க விரும்பிய நற்செய்தியின் சுருக்க மாகவும், தன்னுடைய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்கவும் இக்கடி தத்தை எழுதினார்.

கீழ்த்திசை அப்போஸ்தலப் பணியின் உச் சக்கட்டம்தான் எருசலேம் திருச்சபைக்காகத் திரட்டிய நிதியை அவர்களிடம் சேர்ப்பதா கும். இந்த நிதி வறுமையில் இருப்பவர்க ளைத் தூக்கிவிட மட்டுமன்று, எருசலேம் திருச்சபைக்கும் புறவினத்தாருக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கவுமே, இப்பணி சிறப் பாக முடிய வேண்டும் என்று எண்ணினார். ஆனால் புனித பவுல் இதுவரை திருச்சட் டத்தை எதிர்த்த ஒரு பரிசேயனாகவே கருதப் பட்டு வந்தார். எனவே அவரைத் தீர்த்துக் கட்டவும் விரும்பினர். எனவே தன் பணி சிறக்க எண்ணிய அவர் விருப்பமே சுடிதமா னது.

4. உரோமைத் திருச்சபையும் அதை நிறுவி யவரும்:-

கீழ்த்திசையில் புனித பவுல் பணிபுரிந்த போது திருச்சபையை உரோமைப் பேரரசின் முக்கிய நகரங்களில் (எபேசு, பிலிப்பு, கொரிந்து) நிறுவுவது அவர் வழக்கம். உரோ மையிலும் அவர் தூதுரைக்க விரும்பினா லும் அங்கே முன்பே திருச்சபை இருந்ததை அறிந்திருந்தார். எனவேதான், ''வேறொரு வர் இட்ட அடிப்படை மீது கட்டடம் எழுப்ப நான் விரும்பவில்லை'' (உரோ 15:20) என்கிறார். இதிலிருந்து அவர் புனித பேதுருதான் இதை நிறுவினார் என்று ஏற்றுக் கொண்டார் எனக் கூறமுடியாது. ஏனெனில் சுமார் கி.பி.49-இல் நடந்த எருசலேம் பொதுச் சங்கத்தைப் புனித பேதுரு தலைமை ஏற்று நடத்தி வைத்தார். இச்சங் கம் நடைபெறுவதற்குமுன் அவர் உரோமை நகருக்குச் சென்றதற்கு எந்த விதமான ஆதார மும் இல்லை. மேலும் கி.பி.49-இல் கிளா தியு பேரரசன் எல்லா யூதர்களையும் உரோ மையைவிட்டு வெளியேற ஆணையிட்ட தால் ஆக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் கொரிந்துக்குச் சென்றார்கள் என்பதை அப் போஸ்தலர் பணியில் காணலாம் (அ.ப.18:1-2). யூதருக்கும், யூதக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட குழப்பம் இதற்குக் கார ணமாக இருக்கலாம் என்று சுவத்தோனியுஸ் கருதுகிறார். எனவே கி.பி.49-ஆம் ஆண்டுக் குமுன்பாகவே உரோமையில் கிறிஸ்தவர்

கள் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும் கி.பி.43-ஆம் ஆண்டில் மரணமடைந்த பாம்போனியா கிரேசினா என்பவரின் கல்லறைமேல் எழுதப்பட்டுள்ள சாசனமும் இதை உறுதிப்படுத்துகிறது.

தற்கால அறிஞர்கள் அவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள் என்று கருதுகிறார்கள்; பழைய ஏற்பாட்டிலிருந்து அதிக மேற்கோள்கள் கையாளப்படுவதாலும், ஆபிரகாமைப் பற்றிய பகுதிகள் எடுத்துரைக்கப்படுவதாலும் அவர்கள் யூதக் கிறிஸ்துவர்கள் என வாதிடுகின்றனர். மேலும் உரோமை ஒரு வணிக நகரமாக இருந்ததால் பலர் அங்கு வந்தனர் என்றும், அதில் கிறிஸ்தவர்களும் இருந்தார்கள் என்றும், எண்ணத் தோன்றுகிறது.

வேறுசிலர் உரோமைத் திருச்சபையில் புறவினத்தாரே அதிகம் இருந்தார்கள் என்று கருதுகின்றனர். ஏனெனில் புனித பவுல் புறவினத்தாருக்குக் கடிதம் எழுதியது போலத்தான் குறிப்பிடுகிறார். ''புறவினத்தாரைச் சார்ந்த நீங்களும் இறைவனின் அழைப்புப் பெற்று இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்கிறீர்கள்'' (உரோ 1:5-7).

உரோமை நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் சமுதாய நிலையைப்பற்றிச் சிறப்பான சான்றுகள் ஏதும் இல்லை. எனினும் உரோ 16:3-15-இல் குறிப்பிடும் பெயர்கள் ஓரளவு அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. அவை யூத இனத்தை அல்லது கிரேக்க இனத்தைச் சார்ந்த அடிமைகள் அல்லது அடிமைகளாய் இருந்து விடுவிக்கப்பட்டவர்களின் பெயர்கள்.

எனவே உரோமைத் திருச்சபை பேதுரு உரோமைக்குச் செல்வதற்கு முன்பே இருந்தது. அது ஒரு தனி மனிதனால் நிறுவப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

5. நூலாசிரியர்.

புனித பவுல்தான் உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தை, எழுதினார் என்பது பழங்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது போலவே இன்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ''கிறிஸ்து இயேசுவின் ஊழியனும், அப்போஸ்தலனாக அழைக்கப்பெற்றவனுமாகிய பவுலாகிய யான் எழுதுவது'' (உரோ 1:1) என்று அவரே எழுதியுள்ளார்.

இருப்பினும் 16-ஆம் அதிகாரத்தில் காணப்படும் ''புகழுரைப் பகுதி பற்றிப் பல வினாக்கள் எழுப்பப்படுகின்றன. முதலில் இந்தப் புகழுரை வெவ்வேறு ஏடுகளில் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இரண்டாவதாக அதன் நடையும் வழிபாட்டில் பயன்படும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது. இதைத் தவிர இந்நடையை உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் வேறு இடங்களில் காணமுடியவில்லை. மூன்றாவதாக இதில் குறிப்பிடப்பட்டு, புறவினத்தாரின் மீட்பைக் குறிக்கும் ''மறைபொருள்'' என்ற வார்த்தை பவுலால் எழுதப்பட்ட மற்ற கடிதங்களுக்குரிய சிறப்பு அம்சமே தவிர உரோமையருக்கு உரியதல்ல. இந்த மூன்று காரணங்களும், தனித்தனியாகவோ, சேர்ந்தோ சரியான விடையை அளிக்கவில்லை. இருப்பினும் 16-ஆம் அதிகாரத்தை அப்படியே நோக்குகின்றபோது இந்தப் ''புகழுரை'' பின்னால் சேர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து 16:1-23 புனித பவுலால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அது உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் ஒருங்கிணைந்த பகுதியா என்ற வினா எழுகிறது.

உரோமையரின் முடிவுரை 15:33-இல் அமைகிறது. அவர் வாழ்த்துக் கூறுகையில் பல பெயர்களை, சுமார் 26, குறிப்பிடுகிறார். தானே அறியாத ஒரு திருச்சபையில் இத்தனை நபர்களை அவர் அவர்களின் பெயரோடு அறிந்திருத்தல் வியப்பை உண்டாக்குகிறது. இந்த வியப்பினால் ஒரு சிலர் இந்தக் கடிதம் எபேசிய திருச்சபைக்கு எழுதப்பட்டது என எண்ணுகின்றனர். புனித பவுல் ஆசியாவில் முதலில் மனம்திரும்பியவரான

எப்பைனத்து எபேசு நகருக்கு வந்திருக்க வேண்டும். மேலும் ஆக்கிலாவையும் பிரிசிக்கில்லாவையும் வாழ்த்துகிறார். இவ்விருவரும் உரோமைக்குத் திரும்பி இருக்க வாய்ப்பு இருந்தாலும், அவர்களைப்பற்றி இருக்கின்ற ஒரே குறிப்பு முந்தையதையே உறுதிப்படுத்துகிறது. இறுதியில் உரோ 16:17-20-இல் வரும் எச்சரிக்கைகள் உரோமையரின் மற்ற இடங்களில் காணப்படுபவைகளிலிருந்து வேறுபடுகின்றன. தனிப்பட்ட ஒரு திருச்சபைக்கு எழுதப்பட்டதுபோன்று உள்ளது.

வேறுசிலர் உரோ 16:3-20 மற்றொரு கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டது எனக் கருதுகின்றனர். இவர்கள் கருத்துப்படி, உரோமையர் அதனுடைய விசுவாச உண்மைகளின் செறிவின் காரணமாகப் புனித பவுலால் நிறுவப்பட்ட பல திருச்சபைகளுக்கு வெவ்வேறு தனிப்பட்ட கடிதங்களுடன் அனுப்பப்பட்டது. ஆக்கிலா, பிரிசிக்கில்லா முதலிய பெயர்கள் எபேசுக்கு அனுப்பப்பட்ட தனிப்பட்ட கடிதங்களைச் சுட்டுகின்றன. உரோமைப் பதிப்பு உரோ 1-15 அதிகாரங்களை மட்டுமே கொண்டிருந்தது என எண்ணுகின்றனர்.

மேலும் வில்லியம் பார்க்லே பவுல் 16-ஆம் அதிகாரம் கொண்ட கடிதத்தையே எழுதினார் என்றும், அதனுடைய கொள்கைச் செறிவின் காரணமாக 15-16 அதிகாரங்களை நீக்கிவிட்டு அதை ஒரு கடிதமாகத் தொகுத்து மற்றத் திருச்சபைகளுக்கு அனுப்பினர் என்றும், எனவே 15, 16 அதிகாரங்களைக் கொண்டு உரோமையிலும், அவை இல்லாமல் மற்ற இடங்களிலும் நிலவி வந்தது என்கிறார்.

6. வாசகம்:-

இக்கடிதத்தின் மூலப்படிவத்தைப் பற்றிப் பல பிரச்சனைகள் இருப்பினும், பல்வேறு கருத்துகள் நிலவினாலும், பின்வரும் கருத்துகளில் ஒற்றுமை காணப்படுகிறது. மார்சியன் என்பவர்தான் முதன் முதலில் உரோ 15:1-16:27-ஐ அந்தக் கடிதத்திலிருந்து பிரித்தார். இன்னும் சில ஏடுகளில் இப்பகுதி விடப்பட்டிருப்பது மார்சியன் இதைத் தவிர்த்ததாலும், கத்தோலிக்கத் திருச்சபையின் வாசகப் புத்தகங்களின் பாதிப்பினாலும் இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் 16-ஆம் அதிகாரம் எபேசிய திருச்சபைக்கு எழுதப்பட்ட பகுதி என்றும், உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட பகுதி அல்ல என்றும் கருதப்படுகிறது. ஆனால் இதற்கு வெளிப்படையான ஆதாரங்கள் இல்லை.

7. இலக்கிய நடை:-

புனித பவுல் யூத குலத்தில் பரிசேய்ப் பரம்பரையில் (உரோ 11:1; பிலி 3:5) பிறந்தவர். கமாலியேல் என்ற ஆசிரியரிடம் தம் முன்னோரின் சட்டங்களை நுணுகிக் கற்றவர் (அ.ப.22:3). எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக உயிர்த்த இயேசுவை நேரடியாகச் சந்தித்தவர் (அ.ப.9:1-6). இவரின் வாழ்க்கைப் பின்னணியில் அவரின் கடித நடையை புரிந்துகொள்ள முடிகிறது.

பவுல் இக்கடிதத்தில் பல நடைகளைக் கையாண்டு அதை ஒரு இலக்கியமாகவே உருவாக்கியுள்ளார். இதில் வழிபாடுகளில் பயன்படும் பகுதிகளைக் காணமுடிகிறது (உரோ 1:1-7; 16:25-27). மேலும் அவர் பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்ததால் ''இன்ப துன்ப நடுநிலைக்கோட்பாடு'' (ஸ்தோயிக்கு) அவருக்குத் தெரிந்திருந்தது. எனவே அந்நடையையும் கையாள்கிறார். அதே வேளையில் அவர் ''வினாவிடை'' உத்தியையும் எடுத்தாள்கிறார் (2:1-25). இவர் பரிசேய பரம்பரையில் தோன்றியதால் பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்தார். எனவே அக்கால அறிஞர்களைப்போலப் பெரும்பாலும் எழுபது நூல் என்ற படிவத்திலிருந்து, தன் மனப்பாடத்திலிருந்து, கூறுகிறார். (3:1-20; 4:1-25; 9:6-11:10). இவர் ஒரு சில பாடல்களையும் எடுத்தாள்கிறார் (8:31-39). எல்லா யூதப் பெரியோர்களையும் போன்று அறிவுரைப் பகுதியையும் இதில் காணமுடிகிறது (12:1 தொ; 13:11-14). அறிஞர் தூத் என்வரின் கூற்றுப்படி, புனித பவுல்

ஒரு வசையாளர்போன்று தீமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார் *(1:18-3:20)*. பெரிய தத்துவ மேதை போன்று இறை ஞானத்தையும் *(11:33-36)*, உளவியல் அறிஞர் போன்று மனித அனுபவத்தையும் ஆராய்வதைக் காணலாம் *(7:14-25)*. பெரிய கவிஞரின் நளினமான கற்பனையையும் காண முடிகிறது *(8:18-25)*.

8. நூலின் திட்டம்:-

இதில் முக்கியமான பிரிவுகள் தெளிவாக இருந்தாலும், கோட்பாட்டுப் பகுதியைப் பற்றிச் சில வினாக்கள் எழுகின்றன. இது எத்தனை சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்? இரண்டா அல்லது மூன்றா? 5-ஆம் அதிகாரம் எந்தப் பகுதியோடு செல்ல வேண்டும்? வெவ்வேறு சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்டு ஏற்கனவே மக்களிடையே நிலவி வந்த பகுதிகளைப் புனித பவுல் உரோமையருக்கு எழுதியகடிதத்தில் புகுத்தி இருக்கிறாரா? (உ.ம்.3:10-18; 5:12-21; 9:1-11:36). எது எவ்வாறு இருப்பினும், இக்கடிதத்தில் கருத்துக்களின் கோவையை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இது இக்கால அறிவியல் முறையில் எழுதப்படவில்லை. கருத்துகள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளனவே அன்றித் தொடர்ச்சியாக, தொடர்புபடுத்தி எழுதப்படவில்லை. இந்தக் கடிதத்தை முழுவதும் இறைவன் தம்மையே மனித வரலாற்றில் முழுமையாய் வெளிப்படுத்தியதை மனதில் கொண்டு எழுதுகிறார்.

I முன்னுரை *(1:1-15)*

II கோட்பாடுப் பகுதி *(1:16-11:36)*: இறைவனின் நற்செய்தி.

அ. விசுவாசத்தினால் ஏற்புடைமை *(1:16-4:25)*

1. மீட்பின் நற்செய்தி *(1:16-17)*

2. இறைவனின் சினம் மனித இனத்தின் மேல் மூண்டெழுகிறது *(1:18-3:20)*.

3. இறைவனின் நீதி இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டு விசுவாசத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது *(3:21-30)*.

4. பழைய ஏற்பாட்டிலிருந்து ஆபிரகாமின் எடுத்துக்காட்டு *(4:1-25)*

ஆ. இறைவனின் அன்பு ஏற்புடையவனுக்கு மீட்பை உறுதியளிக்கிறது *(5:1-11:36)*

1. கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவனின் மீட்பு *(5:1-11)*.

2. புதிய கிறிஸ்துவ வாழ்வு அளிக்கின்ற மூவகை மீட்பு *(5:12-7:25)*

3. கிறிஸ்து வாழ்வு ஆவிக்குரிய வாழ்வு *(8:1-39)*

4. மீட்பின் திட்டம் இறைவனின் வாக்குறுதிகளை மறுக்கவில்லை எனப் பழைய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது *(9:1-11-36)*.

III அறிவுரைப் பகுதி *(12:1-15:13)*: புது வாழ்வு.

1. ஆவியில் வழிபாடு *(12:1-13:14)*

2. வலுக்குறைந்தவர்பால் அன்பு *(14:1-15:13)*

IV முடிவுரை *(15:14-33)*

V பெபாவுக்குப் பரிந்துரைக் கடிதம் *(16:1-23)*

VI புகழுரைப் பாடல் *(16:25-27)*.

9. இறையியல் கருத்துகளும், முக்கியத்துவமும்:-

புனித பவுல் தன் அனுபவ முதிர்ச்சியாலும், பட்டறிவாலும் இதை எழுதியதால், தான் மற்றக் கடிதங்களில் எழுதி விளக்காமல் விட்டதும், எழுதாமலே விட்டதுமான கருத்துக்களை, ஆழமான இறையியல் சிந்தனையோடு இத்திருமுகத்தில் தொகுத்துத் தருகிறார். இத்திருமுகத்தில் காணப்படாத புதிய ஏற்பாட்டு இறையியல் கருத்துக்களே இல்லையெனலாம். இக்கடிதத்தில், தேர்வு, விசுவாசம், சட்டம், வாழ்வு, ஏற்புடைமை, மீட்பு, பாவம் ஆவி முதலிய இறையியல் தலைப்புகள் விளக்கப்படுகின்றன. எந்த ஒரு

கடிதத்திலும் இல்லாமல், இக்கடிதத்தில் மட்டுமே கிறிஸ்துவ மீட்பின் முழுப்பொருளையும் விளக்கி, மனிதனின் இயலாமையையும், இறைவனது மீட்புப் பணியின் முழுமையையும் விளக்குகிறார்.

எல்லாப் புதிய ஏற்பாட்டு நூல்களையும் விட, இறையியலை அதிகம் பாதித்த நூல் ஒன்று இருக்குமெனில் அது உரோமையர் தான். சில அறிஞர்கள் இதைப் ''பவுலின் நற்செய்தி'' என்றே அழைப்பர். இக்கடிதம் புதிய ஏற்பாட்டு நூல்களிலும் சிறப்பாகப் பேதுருவின் முதல் கடிதம், எபிரேயருக்கு எழுதிய கடிதம், யாக்கோபு எழுதிய கடிதம், ஆகியவற்றிலும் தன் செல்வாக்கை ஏற்படுத்தி இருக்கிறது. கிளமெண்து, இஞ்ஞாசியார், போலிகார்ப்பு, யுஸ்தீன் முதலியோரும் இதைக் கருத்தூன்றிப் படித்துப் பயன்படுத்தியுள்ளனர். திருச்சபையின் தந்தையர்கள், சிறப்பாக ஒரிஜன், கிறிஸ்ஸோஸ்தோம், அம்புரோசியர், தாமசீன் யோவான், அக்வினாஸ் தோமையார் போன்றோரும் இதற்கு விளக்கம் எழுதியுள்ளனர். சீர்திருத்தக் காலங்களிலும் இக்கடிதம் பெரிதும்தன் செல்வாக்கை ஏற்படுத்தி இருக்கிறது. சீர்திருத்தத் தலைவர்களான மார்டின் லூத்தர், கால்வின், மெலங்தோன், முதலியோர் இதற்கு விளக்கவுரைகள் எழுதியுள்ளனர். நவீன கால அறிஞர்களான கார்ல் பார்த், நைக்ரன், புரூனர் முதலியோர் சிந்தனைகளையம் இது பெருமளவில் பாதித்திருக்கிறது. இவ்வாறு, இப்படி, இக்கடிதம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

10. முடிவுரை:-

புனித பவுல் எழுதிய திருமுகங்களிலெல்லாம் மிகவும் பெரியது இது. அது மட்டுமன்றி இதன் அமைப்பையும் நடையையும் நோக்குகின்ற போது, இது அரிய கருத்துக்களையும் ஆழ்ந்த இறையியலையும் தன்னுள் கொண்டு ஒரு இறையியல் கருவூலமாகவே திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

**உரோமையில் புதிய ஏற்பாட்டுக்காலத் திருச்சபை** (CHURCH AT ROME)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த உரோமைத் திருச்சபையைப் பற்றி அறிய மிகச் சில குறிப்புகளே உள்ளன. அவையாவன:-

அ) அக்காலத்திய எழுத்தாளர்களின் குறிப்புகள்.

ஆ) உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட கிறிஸ்தவ இலக்கியங்கள்

இ) புதிய ஏற்பாட்டில் உள்ள சில குறிப்புகள்.

ஈ) புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்து கிடைத்த குறிப்புகள்

1. தொடக்கம்:- உரோமைத் திருச்சபை எப்போது நிறுவப்பட்டது எனச் சொல்ல இயலாது. அ.ப.2:10-இன் படி உரோமையிலிருந்து வந்திருந்த யூதர், யூத மதத்தைத் தழுவியவர், பேதுருவின் முதல் உரையைக் கேட்டனர். இவர்கள் இந்நற்செய்தியைத் தம் மக்களுக்கு அளித்திருக்க வேண்டும். மேலும் பார்னபா கிறிஸ்தவ மதத்தை உரோமைக்கு அளித்திருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் கி.பி.42-இல் பேதுரு அவர்களுக்கு நற்செய்தியை அளித்தார் எனக்கூறுகின்றனர். இவையாவும் முழுவதும் நம்பத்தகுந்த கூற்றுக்கள் அல்ல. சுயேடோனியுஸ் யூத மக்களிடையே குழப்பம் நிலவியதாகக் குறிப்பிடுகிறார். இது நற்செய்தி போதிக்கப்பட்டதால் ஏற்பட்டதாக இருக்கலாம். எனவே கிளாதியு பேரரசர் யூதர்களை உரோமையிலிருந்து நாடு கடத்தினார். ஆக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் இவ்வாறு உரோமையிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களாவர் (அ.ப.18:2). பவுல் இவர்களை மனந்திருப்பியதாக ஒரு செய்தியும் இல்லை; ஆகவே இவர்கள் ஏற்கெனவே உரோமையிலேயே கிறிஸ்தவர்களாக மாறியிருக்க வேண்டும். எனவே கி.பி.50-க்கு முன்பே கிறிஸ்தவம் உரோமைக்கு வந்திருக்க வேண்டும் என்று நம்ப இடமிருக்கிறது. மற்ற இடங்களில் நடந்ததுபோல், உரோமையிலும் முதல் கிறிஸ்தவர்கள் யூதச் சமூகத்திலிருந்து மனந்திரும்பியவர்களாவர்.

2. பண்பு:- கி.பி.53-58க்கு இடையில் எழுதப்பட்ட உரோமையர் திருமுகம் உரோமைத் திருச்சபையைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. பவுல் அதுவரை உரோம் சென்றதில்லை. மற்றவர்கள் கூறியதிலிருந்தே அவர் அவர்களைப் பற்றி அறிந்து கொண்டார். அவர் தமது மடல் புறவினத்தார் நிறைந்துள்ள திருச்சபைக்குச் செல்கிறது என்பதை அறிந்திருந்தார் (உரோ 1:13). கிறிஸ்தவர்கள், யூதர்களைத் தூற்ற வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கிறார். தமது திருமுகத்தை யூதர்களும் படிப்பாரென அவர் அறிந்திருந்தார் (2:1-3, 20). எனவே ஆபிரகாம் நமது தந்தை எனப் பேசுகிறார் (4:1). மேலும் அம்புரோசியாஸ்டர் அப்போஸ்தலர் காலத்திலே யூதர் உரோமையில் வாழ்ந்தனர் என்கிறார். இவர்கள் புதுமைகளைப் பார்க்காமல், அப்போஸ்தலர்களைச் சந்திக்காமல் அவர்களுடைய பாணியில் கிறிஸ்துவை நம்பினர்.

3. இலக்கிய மூலங்கள்:- நவீன அறிஞர்கள், பிலிப்பியர், கொலோசேயர், பிலமோன், எபேசியர் ஆகிய மடல்கள் உரோமையிலிருந்து எழுதப்பட்டவை என்பதை ஏற்பதில்லை. இவை செசாரியாவிலோ, எபேசிலோ எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பர். கொலோசேயர், பிலமோன் மடல்கள் பவுலுடன் இருப்பவர்களைப் பற்றிக் கூறுகிறது. யூதக் கிறிஸ்தவர்கள் பவுலுக்கு ஆதரவு அளிக்கவில்லையெனக் கொலோ 4:11 கூறுகிறது. மேலும் உரோமை அதிகாரிகளில் சிலர் கிறிஸ்தவர்களாயிருந்தனர் எனவும் இம்மடல்கள் குறிப்பிடுகின்றன (பிலி 4:22). 2 திமோ 1:15-18-இன்படி உரோமையிலே விலங்கிடப்பட்டிருந்த பவுலை ஒனேசிப்போரு காண வந்தபோது மக்கள் அவர் எங்கேயிருக்கிறார் எனக் காட்டவில்லை. மேலும் 2 தீமோ 4:9-17-இன்படி பவுலின் நெருங்கிய நண்பர்கள் பலர் அவரைக் கைவிட்டு அகன்றனர். தசிதுஸ், சூடோனியுள் போன்றோர் நீரோ பேரரசர் காலத்தில் நிகழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எதிரான வேதக் கொடுமைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். 64-இல் தொடங்கிய இந்த வேதக்கொடுமைகளின்போதுதான் பேதுருவும் பவுலும் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டவர் என்று பாரம்பரியம் கூறுகிறது. மாற்கு தனது நற்செய்தியை உரோமையில் எழுதியதாகக் கருதப்படுகிறது. இதிலே திருச்சபையின் துன்பங்களைப் பற்றியும், துன்ப வழியையும், சிலுவை வழியையும் பற்றியும் அவர் வலியுறுத்துகிறார். இவை மாற்குக்குமட்டும் உரியவையன்று. ஆயினும் உரோமைத் திருச்சபை அனுபவித்த துன்பச் சூழ்நிலையில் பொருள் பொதிந்தன. மாற்கு நற்செய்தி, மத்தேயு, லூக்கா நற்செய்திகளுக்கு மூலமானபடியால் இந்த நற்செய்தியானது உரோமைத் திருச்சபையின் தலைசிறந்த கொடையாகும்.

பேரரசர் தொமிசியன் (81-90) தனது ஆட்சிக் காலத்தின் இறுதியிலே பல உரோமைப் பிரபுக் குடும்பத்தினருக்கு நாடுகடத்தல், கொலைத் தீர்ப்பு போன்றவை வழங்கினார். கொலை செய்யப்பட்ட பிலாவியுஸ் கிளெமென்ஸ், நாடு கடத்தப்பட்ட தொமிட்தில்லா ஆகியோர் கிறிஸ்தவரென எண்ணப் படுகின்றனர். தொமிட்தில்லா, பிரிசில்லா ஆகியோரின் நிலவறைக் கல்லறை உரோமையின் முதல் கிறிஸ்தவக் கல்லறைகளாகும். உரோமைத் திருச்சபையின் பெயரால் முதலாம் கிளமெண்து கொரிந்தியருக்கு எழுதிய மடல் உரோமையில் துன்பச் சூழல்களைக் குறிப்பிடுகிறது. மேலும் எபிரேய மடலானது இந்தக் காலத்தில் எழுதப்பட்டு மற்றத் திருச்சபைகளுக்குப் போதிக்கும் அதிகாரத்தை அது ஏற்கவேண்டுமெனக் கூறுவதாகத் தெரிகிறது. அவ்வாறு உரோமைத் திருச்சபை செயல்பட்டதாகத் தெரிகிறது. எனவே, இக்காலத்திலேதான் உரோமைத் திருச்சபை தன் தலைமைப் பொறுப்பைப் பெற்றுவிட்டது என்பது உறுதி. இது கொரிந்து திருச்சபையின் உள்விவகாரத்தில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தியது. மேலும் அந்தியோக்கிய இஞ்ஞாசியார் உரோமைத் திருச்சபைக்கு மதிப்புத் தருவதுடன், அதன் முதன்மை நிலையைப் பற்றியும் பேசுகிறார். முதலாம் பேதுரு மடல் உரோமிலிருந்தே எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இம்மடல்கள் எல்லாம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டவையாகும். ஏனெனில்

திருச்சபையின் தொடக்ககால உரோமைக் கிறிஸ்தவர்கள் கிரேக்க மொழி பேசுபவர்களாவார். இலத்தின் மொழி பேசும் கிறிஸ்தவம் உரோமையில் தோன்றவில்லை; வட ஆப்பிரிக்காவில் தோன்றியது.

**உலகப் பூதங்கள், மூலப்பொருட்கள் (ELEMENT ELEMENTAL SPIRIT)**

கிரேக்க மொழியில் இச்சொல்லுக்கு மூன்று பொருட்கள் உள்ளன.

1. இவ்வுலகின் மூலக்கூறுகளைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, நிலம், நெருப்பு, நீர், காற்று ஆகியவை நான்கு மூலக்கூறுகள் என்று அழைக்கப்படுகின்றன (ஞான 7:17; 19:18). 2 பேதுரு 3:10-12-இல் ஐம்பெரும் பூதங்கள் அழிக்கப்படும் என்று கூறும் போது, இப்பொருளிலேயே கூறப்பட்டுள்ளது.

2. இச்சொல் உலகின் மூலக் கூறுகளுக்குப் பின்னால் இருக்கும் ஆவிகளையும், அதாவது உலகப் பூதங்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டது. இந்த உலகப் பூதங்கள் வாழ்வின் அடிப்படையாகவும் இவ்வுலகை ஆள்பவையாகவும் கருதப்பட்டதால், மனிதர்கள் அவைகளை வழிபட ஆரம்பித்தனர். யூத வெளிப்பாட்டு இலக்கியங்களும் இத்தகைய கருத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கலா 4:3.9; கொலோ 2:8.20 முதலியவற்றிலும் இப்பொருளிலேயே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க ஞானமும், யூதப் பழக்க வழக்கங்களும் பாரசீகப் புராணங்களும் இணைந்த ஒரு மதக் கலப்பைத்தான் கலாத்தியருக்கு எழுதிய திருமுகமும், கொலோசேயருக்கு எழுதிய திருமுகமும் தாக்குகின்றன. 'இயல்பாகவே கடவுள் அல்லாதவற்றை' வணங்குவது (கலா 4:8) விக்கிரக ஆராதனையாகும் என்று கூறுகின்றன. கலாத்தியருக்கு எழுதிய திருமுகம், யூதச் சட்டத்தையும், உலகப்பூதங்களையும் (கலா 4:3.5) வான தூதர்களையும் தொடர்புபடுத்துகிறது (கலா 3:19). கொலோசேயருக்கு எழுதிய திருமுகம், உலகப்பூதங்களையும் வானதூதர் வழிபாட்டையும் தொடர்புபடுத்துகிறது (கோலோ 2:16.20).

இங்கு ''மனிதனின் கட்டளைகளுக்கும் படிப்பினைகளுக்கும்'' (கொலோ 2:22-23) ஏற்ப சுயவளர்ச்சிகளுக்கும் ''கடவுளிடமிருந்து வரும் வளர்ச்சிக்கும்'' (2:19) இடையே முரண்பாடு உள்ளது; கிறிஸ்து அளிக்கும் விடுதலைக்கும், உலகப் பூதங்களுக்கு அடிமையாக இருப்பதற்கும் (கலா 4:9) இடையே போர் நடப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இரு திருமுகங்களிலும், மனிதனை மையமாகக் கொண்ட வாழ்வும், இறைவனை மையமாகக் கொண்ட வாழ்வும் முரண்படுத்தப்படுகின்றன.

3. விண்மீன்களையும், விண்வெளியிலுள்ள கோள்களையும் குறிப்பதற்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. இவைகள் ஆவிகளைக் கொண்டிருப்பதாகவும் அவை மனிதனின் வாழ்வையும் முடிவையும் பாதிப்பதாகவும் பலர் கருதினர் (கலா 2:10; கொலோ 2:16). இது, ஆதிக்கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட ஒரு கலப்புமதக் கூறைக் குறிக்கிறது.

**உலகம் (WORLD)**

I. பழைய ஏற்பாடு

பொதுவாக உலகம், விண்ணும் மண்ணும் (ஆதி.1:1) என்ற சொற்களால் குறிக்கப்படுகின்றது. தேபேல் என்ற சொல் எபிரேய மண்ணுலகை மட்டும் (எரே 51:15) குறிக்கும். கிரேக்க காலத்து இலக்கியங்கள் (ஞான 11:17; 2 மக் 7:9.23) உலகைக் குறிக்க 'காஸ்மோஸ்' என்ற கிரேக்கச் சொல்லைக் கையாளுகின்றன. இச்சொல் விவியத்தில் உள்ள உட்கருத்தையும், பொருட் செறிவையும் கொண்டது. உலகம் தன்னை இயக்கும் பல நியதிகளைக் கொண்டது. கவினுறு வனப்பும், என்றும் நிலைத்திருக்கும் தன்மையும் உடையது. சீராகச் சுழன்று வரும் இயக்கங்களை உள்ளடக்கியது. இத்தகைய இயல்புகளைக் கண்ணுற்ற கிரேக்க நாட்டு மக்கள் உலகம் தனக்கென ஒரு மரபு அல்லது வரம்பை உள்ளடக்கியது என்று அறிந்து

கொண்டனர். இந்த வரம்பிற்குள் மனிதர்களும் தெய்வங்களும் அடங்கியுள்ளனர் என்றும் கண்டறிந்தனர். மேலும், உலகமும் மிக அரிதாக வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. இயல்வன யாவும் இறையுருவே என்னும் கோட்பாடு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அடிப்படையாகக் கருதப்பட்டது. இதிலிருந்து, விவிலியக் கண்ணோட்டம் முழுவதும் மாறுபட்டது. உலகை இயக்கும் சக்திகளும், படைப்புக் கோட்பாடுகளும் இறைவனின் படைப்புக்களே, அவரது ஆதிக்கத்திற்குட்பட்டவையே. இறைவனின் படைப்புகள் என்ற முறையில் மீட்பின் திட்டத்தில் பங்குபெறுவதால் அவை சிறப்பு வாய்ந்தனவாகவும், பொருள் உள்ளனவாகவும் விளங்குகின்றன. உலகம், இவ்வாறு ஒரு வரையறைக்குள் இருப்பதால் தனக்குரிய இலக்கை நோக்கிச் செல்கின்றது.

1. உலகத்தின் தொடக்கம்:-

விவிலியம் நமக்கு எடுத்துக்காட்டும் உலகத்தோற்றம், மெசபொத்தாமியா, எகிப்து, கானான் ஆகிய நாடுகளின் புராணக் கதைகளிலிருந்து மாறுபட்டது. மிகைப்படுத்தாமல், பொருள்படக்கூறுவது. மிகத் தெளிவு கொண்டது. கற்பனைக் கதைகளைத் தழுவியமையாதது. காலங்களுக்கு முந்தைய புராண வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அமையாதது. மாறாகக் காலத்தையே தோற்றுவிக்கின்றது. இறைவனுக்கும் உலகுக்கும் உள்ள ஆழ்ந்த வேறுபாடு 'படைத்தல்' (ஆதி 1:1) என்ற சொல்லால் நன்கு புலப்படுகின்றது. ஆதியாகமக் கூற்றுக்களும் பிறவும் (சங் 8:104; பழ 8:22-31; யோபு 38தொ) இறைவனின் ஆக்கத் திறனையும் படைப்புச் செயலையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இதனால் பல அரிய உண்மைகள் வலியுறுத்தப்படுகின்றன; உலகுக்கும் இறைவனுக்கும் உள்ள பெரும் வேற்றுமை, ஆற்றல் மிகு (சங் 33:6-9) சொல்லால் வினையாக்குந் திறன் கொண்ட இறைவனுக்கு உலகு அடிபணிந்துள்ள நிலை, இறைவன் இயற்கை நியதிகளை ஆண்டு நடத்துபவர் (ஆதி 8:22), மனிதனை மையமாகக் கொண்ட மீட்பின் திட்டத்தில், தமது பராமரிப்பால் உலகத்தை இணைப்பவர் என்பவை இத்தகைய உண்மைகளாகும்.

இந்தப் புனித அண்டவியல், அறிவியல் நோக்குக்கும் தத்துவ ஆய்வுகளுக்கும் புறம்பானது; உலகை மனிதனோடு உறவுபடுத்துகின்றது; மனிதன் உலகின் மீது ஆதிக்கம் செலுத்தித் (ஆதி 1:28) தனது அறிவுத் திறமையால் தான் கொண்டுள்ள குறிக்கோளை நோக்கி உலகை ஈடுபடுத்துகின்றான்.

2. உலகம் உணர்த்தும் உட்பொருள்:-

மனிதனிடம் உள்ள மறையுணர்விற்கு உலகம் இரு வகைகளில் பொருள் தருகின்றது.

அ) இறைவனிடமிருந்து தோன்றியதால், உலகம் அவரது இணையில்லா நன்மைத்தனத்தைப் பிரதிப்பலிக்கும் கருவியாகத் துலங்குகின்றது. தமது பேரறிவினால் இறைவன் உலகை ஒருமைப்பாட்டுடனும் கவினுறவும் ஆக்கியுள்ளார் (பழ 8:22-31; யோபு 28:25தொ). இறைவனது, தெய்வீகமும் வல்லமையும் (ஞான 13:25தொ) இவ்வுலகப் படைப்பில் எதிரொலித்துப் பார்ப்பவர்களைப் பரவசமடையச் செய்து வியப்பில் ஆழ்த்துகின்றன (சங் 8; 19:1-7; 104).

ஆ) ஆனால் பாவச் சேற்றில் வாழும் மனிதனுக்கு இவ்வுலகம் அவனது இழிநிலையை உறுதிப்படுத்தும் சாதனமாக விளங்குகின்றது. இறைவனின் கடுஞ்சினத்தைக் காட்டும் (ஆதி 3:17 தொ) கருவியாக அமைகின்றது. மனிதனின் நலனுக்காகவே, அனைத்தையும் படைத்த இறைவன், அவற்றையே மனிதனைத் தண்டிக்கவும் கையாளுகின்றார். விவிலியத்தில் நாம் காணும் பெருந்துன்பங்களான வெள்ளப்பெருக்கு, எகிப்தில் நேர்ந்த பெருங்கொள்ளை நோய், விசுவாசங் குன்றிய இஸ்ராயேல் மீது இட்ட சாபங்கள் (உப 28:15-46) இவை எல்லாம் எவ்வாறு உலகம் மனிதனுக்கு எதிராக இறைவனால் ஏவப்படுகின்றன என்பதைத் தெளிவாக்குகின்றன.

இ) மீட்பின் வரலாற்றில், இவ்விதம் இரு விதங்களில் உலகம் செயல்படுகின்றது.

இதன் வழியாகத் தனக்குரிய தனிச் சிறப்பையும் சமய உட்பொருளையும் பெறுகின்றது. மேலும், உலகில் உள்ள படைப்பனைத்தும் இருமுகப் போக்குக் கொண்டு விளங்குவதையும் நாம் காணலாம். ஞான நூல் இதை நன்கு எடுத்துக் கூறுகிறது (ஞான 11:5-14). தண்ணீர் ஒன்றாயினும் அது எகிப்தியருக்கு இறப்பையும், இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பையும் அளிக்கின்றது. எனினும் இதே வழக்கில் பிற படைப்புக்களைப் பற்றி நாம் விளக்கிக் கூற முடியாது. ஏனெனில் நீதிமான்களும் பாவிகளும் ஒரே முடிவில் தோழமை கொண்டுள்ளார்கள். எனினும் உலகிற்கும் மனிதனுக்குமிடையே ஒருவித வெளிப்படையான மறைபொருள்மிக்க உறவு உண்டு. உலகம் என்று சொல்லும் பொழுது, பொதுவாக நமது புலன்களுக்குப் படுகின்ற இயற்கை நியதி, காலவரையறை, ஒருவித ஒழுங்கு இவற்றைத்தான் நாம் குறிப்பிடுகின்றோம். ஆனால் உலகம், இவற்றையும்விட மற்றுமொரு பொருட்செறிவும் உடையது. இச்சிறப்புப் பொருள்கொண்ட வரலாறு, மனிதன் தோன்றுமுன்னரே, தொடங்கியது அல்லது வழக்கில் இருந்தது, என்றாலும் அவனில்தான் ஒரு முடிவும் பெற இருக்கின்றது (ஆதி 1:1-2:4). இச்சிறப்பு வரலாறு மனித வரலாற்றுடன் இணைந்து சென்று இறுதியில் மனித வரலாற்றுடன் முழுமை பெறும்.

3. இறுதி இலக்கை நோக்கிச் செல்லும் உலகு:-

மனிதனைத் தோற்றுவித்து, மனித சமுதாயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள உலகம் மனிதனால் மேலும் வளர்ச்சிபெற்று, நலம் கொழித்து முழுமைபெற வேண்டிய நிலையில் உள்ளது (ஆதி 2:7; 3:19). எனவே தனது உழைப்பால் இவ்வுலகை வளப்படுத்துவதும் அதைத் தன் ஆதிக்கத்திற்குள் கொணருவதும் மனிதனின் முதற் கடமையாகும் (1:28). இதன் வழியாக, மனிதன் தன் வல்லமையை உலகில் நிலைநிறுத்துகின்றான். மானிட நல்வாழ்வுக்கென இவ்வுலகைச் சீர்ப்படுத்தி வளப்படுத்தும் வேளையில் பாவியான மனிதன் தன் பாவத்தில் இவ்வுலகை ஈடுபடுத்தும்போது அவனது உழைப்பால் ஏற்படும் பயன் என்ன? ஆகவேதான், இறைவாக்கினர்களில் இறுதிக்காலவியல் மனிதனது ஆட்சியில் உலகம் என்னவாகுகிறது என்பதைப்பற்றி அதிகம் அக்கறை கொள்வதில்லை. உலகம் நோக்கிச் செல்லும் முடிவிலேயே அக்கறை கொள்கிறது. இந்த முடிவும் இருமுகப்போக்குடையதாகும்.

அ) மனிதனுக்குரிய இறுதித் தீர்ப்பு இவ்வுலகுக்கும் உண்டு:- உலகும் அதனைச் சார்ந்த மூலப்பொருட்களும் இத்தீர்ப்பில் பங்கு பெறும். இச்சமயத்தில் உலகில் இப்பொழுது நிலவும் ஒழுங்கும் கட்டுப்பாடும் திடீரெனக் குலைந்து பெருங்கொந்தளிப்பு போன்ற நிலை உருவாகும் (எரே 4:23-36). 'நிலவுலகம் இரண்டாக் கிழிபடும்' (ஏச 24:19 தொ); ஒளி மங்கும்; விண்மீன் கூட்டம் (ஏச 13:10; யோவே 2:10; 4:15) உலகத்தின் பேரழிவையும் மனித சமுதாயத்தின் பாவ நிலையையும் நன்கு பிரதிபலிக்கும்.

ஆ) இறுதித் தீர்ப்புக்குப் பின், இறைவனது திருவருள் மனிதனுக்கு மீட்பளிப்பது போல், உலகிற்குப் புத்துயிரும் மறுமலர்ச்சியும் நல்கும். இப்புதுமை மிகு மறுமலர்ச்சி மறைநூலில் புதுப்படைப்பு என்று குறிக்கப்படுகின்றது. புதிய வானத்தையும் புதிய பூமியையும் (ஏச 65:17, 66:22) இறைவன் படைக்கவிருக்கின்றார். மறைநூலில் புதுமை பெற்ற உலகம் விவரிக்கப்படும் விதம், ஆதியிலே நம் முன்னோர் வசித்த இன்பவனத்தை மிகவும் ஒத்துள்ளது.

இ) இன்றைய உலகும் நாளைய உலகும்:- நாம் வாழும் இன்றைய உலகு, புத்துயிர் பெற்று, இறுதியில் புது உலகாக மலரவிருக்கின்றது. இதே இலக்கை நோக்கித்தான் மனித வரலாறும் செல்வதாகப் புதிய ஏற்பாட்டுக் காலத்து யூதக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. இதே கருத்தை முன் வந்து இறைவாக்கினர் பலரும் எடுத்தியம்பியுள்ளனர். அலகையின் பொறாமையால் சாவும் பாவமும் ஆட்சி செலுத்தும் இடம்தான் இன்று நாம் வாழும் உலகு (ஞான 2:24). நாளைய

உலகோ, இறைவன் தமது அரசை நிலை நாட்ட வரும் வேளையில் அமையவிருப்பது. அப்பொழுது, இவ்வுலக அமைப்புகளனைத்தும் மனித சமுதாயத்துடன் இணைந்து, மாசு நீக்கப்பட்டு, ஆதி நாளில் கொண்டிருந்த பொலிவுடன் விளங்கும். விண்ணக அமைப்புகளைப்போல் இவை மறுஉருவடைந்து மாட்சியுடன் திகழும்.

II. புதிய ஏற்பாடு

பல இடங்களில் புதிய ஏற்பாட்டிலே 'காஸ்மோஸ்' என்ற கிரேக்கச் சொல் காணக் கிடக்கின்றது. இச்சொல்லின் பொருள் பழைய ஏற்பாடு கொடுக்கும் பொருட்செறிவைப் பெரிதும் ஒத்துள்ளது.

1. உலகின் இருமுக நோக்கு:-

அ) இறைவன், தமது வார்த்தையானவர் வழியாக (யோவா 1:3.10; எபி 1:2; கொலோ 1:16) படைத்த உலக (அ.ப.17:24) அடிப்படையில் மிகச் சிறந்த படைப்பாகத் திகழ்வது உண்மையே. இவ்வாறு சிறப்புடன் மிளிர்வதால் உலகு இறைவனுக்கு நற்சாட்சியாகவும் அமைகின்றது (உரோ 1:19). இருப்பினும் வரம்பு கடந்த வகையில் உலகை நாம் மதிப்பிடலாகாது. காரணம் யாதெனில் படைப்பில் அனைத்தையும் விடச் சிறந்து விளங்குபவன் மனிதன் ஒருவனே. ''உலகையே ஒருவன் தனதாக்கினும் தன் ஆன்மாவை இழப்பானென்றால் அதனால் அவனுக்கு வரும் நலன் என்ன?'' (மத்.16:20) என்ற சொற்களும் இக்கருத்தையே எதிரொலிக்கின்றன.

ஆ) மனிதனது பாவ நிலையில் இவ்வுலகும் பெரும் பங்கு கொண்டுள்ளது. அதனால் அலகையின் வல்லமைக்கு அடிமையாய் உள்ளது. வரலாற்றின் தொடக்கத்திலே உலகம் பாவத்தில் அமிழ்ந்தது. இப்பாவச் சூழலிலே சாவின் ஆதிக்கமும் இணைந்தது (உரோ 5:12). இதனால் உலகம் இறைவனின் தண்டனைத் தீர்ப்பிற்கு ஆளாகியுள்ளது (3:19). ஆற்றல்மிகு தீய சக்திகளுடன் கொண்ட தொடர்புதான் உலகின், தீர்ப்புக்கு வழிவகுக்கின்றது. இறைவனின் திருவுளத்திற்கும், கிறிஸ்துவுக்கும் எதிராகச் செயலாற்றும் மனிதர்களிடையே இவ்வுலகு மிக வெளிப்படையாகக் காணப்படுகின்றது (யோவா 3:18 தொ; 7:7; 15:18 தொ; 17:9, 14..). இம்மனிதர்கள் வாழும் உலகின் மன்னனாக அலகை அரசோச்சுகின்றான் (12:31; 14:30; 16:11). இந்த யுகத்தின் கடவுளாகவும் இருப்பது அலகையே (2 கொரி 4:4). படைத்தவரின் திருவுளத்திற்கேற்ப உலகின் தலைவனாய் நிறுவப்பட்ட ஆதாம் அலகையின் கரங்களில் தன்னை முழுவதும் அளித்துவிட்டான். அன்று முதல் உலகு அலகையின் வலையில் சிக்கித் தவிக்கின்றது (1 யோவா 5:19). அலகையின் வல்லமையிலும் பெருமையிலும் அவனைச் சார்ந்தோரும் பங்கு பெறுகின்றனர் (லூக் 4:6).

இ) தீய ஆவிகளின் ஆதிக்கத்தால் இவ்வுலகு இருளில் மூழ்கியுள்ளது (எபே 6:12). மனிதனைத் தன் வயப்படுத்தித் தனது அடிமைகளாக்கிவிடுகின்றது (கலா 4:3.9; கொலோ 2:8.10). இறைவன் அருளும் மீட்பின் நற்செய்தியையும் நற்கொடைகளையும் உணரும் சக்தி உலகுக்கு இல்லை (1 கொரி 2:12). எதிர்க் கிறிஸ்துவின் ஆவி எவ்வாறு உலகில் செயல்படுகின்றதோ அதைப் போன்றே, இவ்வுலகும் கடவுளின் ஆவிக்கு முற்றிலும் மாறுபட்டது (1யோவா 4:13). இவ்வுலகின் ஞானம் மனிதனின் அறிவுத் திறனைச் சார்ந்தது. எனவே அது இறைவனிடமிருந்து விலகியுள்ளது. இவ்வுலகின் ஞானத்தை இறைவன் மடைமை எனக் கருதுகின்றார் (1 கொரி 1:20). உலகும் நமக்கு ஒருவகைச் சமாதானம் நல்குகின்றது. இச்சமாதானம் நம்மிடம் செல்வங்கள் கொழிக்கச் செய்வதிலும் போலிப் பாதுகாப்பு அளிப்பதிலும் தான் அடங்கியுள்ளது. இது இறைமகன் மட்டும் அளிக்கக்கூடிய உண்மைச் சமாதானத்தின் ஒருவகை நிழல்மட்டுமே (யோவா 4:27). இந்த நிலையற்ற சமாதானம் நம்மைச் சாவுக்கு இட்டுச் சென்று மீளாத் துயரில் (2 கொரி 7:10) ஆழ்த்திவிடும்.

இவ்வாறு உலகின் பாவ நிலை வெளிப்படுத்தப்படுகிறது (யோவா 1:29). வெறுப்பும்

நம்பிக்கையின்மையுமே உருவான இப்பாவ நிலை உலகின் தொடக்க நாளிலிருந்து இன்றும் வலிமையுடன் விளங்கி, விண்ணரசில் நுழைய விழைவோருக்குப் பெருந்தடையாக உள்ளது. இடறல் நிமித்தம் உலகிற்கு மிகவும் கேடு உள்ளது (மத் 18:7). இதனாற்றான் உலகம் மனிதனுக்கு உறுதியானதும் நிலையானதுமான பயன்தர இயலவில்லை. ஏனென்றால், அதன் அமைப்பு கடந்து செல்லும் நிலையில்லா இயல்புள்ளது (1 கொரி 7:31). உலகின் ஊனியல் இச்சிப்பும் இத்தகையதே (1 யோவா 2:16). நாம் இவ்வுலகைச் சார்ந்தவர் என்பதால் நமது கதியும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

2. கிறிஸ்துவும் உலகமும்:-

தமது ஒரே அன்பு மகனை உலகுக்கெனப் பணயம் வைக்குமளவிற்குக் கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார் (யோவா 3:16). இப்பேரன்புப் பெருக்கிலிருந்து உலக வரலாற்றிலே பெரும் மாறுதல் உருவாகின்றது. இப்புதிய வரலாற்றில் ஒன்றையொன்று நிறைவு செய்யும் இரு சிறப்பு அம்சங்கள் உண்டு. முதலாவதாக அலகையின் ஆதிக்கத்திலிருந்து இவ்வுலகுமீது இயேசு வெற்றி கொள்ளுதல், இரண்டாவதாக இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட புதிய உலகம் அவரில் தொடங்குதல்.

அ) இயேசு உலகை வென்றவர்:- அவரது வெற்றியை யோவானின் நற்செய்தி தெளிவாக எடுத்துரைக்கின்றது. இயேசு இவ்வுலகிலே வாழ்ந்தவர். அவர் வழியாக யாவும் படைக்கப்பட்டன. உலகமோ அவரை அறிந்துகொள்ளவில்லை (யோவா 1:10). இக்கூற்றுகள் இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையின் சுருக்கமாகும். இயேசு இவ்வுலகைச் சார்ந்தவரல்லர் (8:23; 17:14). அவ்வாறே அவரது அரசும் இவ்வுலகைச் சார்ந்ததன்று (18:36). அவரது அதிகாரம் இறைவனிடமிருந்தே வருகிறது (மத் 28:18); இவ்வுலக மன்னர்களிடமிருந்தல்ல (லூக் 4:5-8). அலகை அவர்மீது எவ்வித ஆதிக்கமும் கொள்வதில்லை (யோவா 14:30). எனவேதான் உலகம் அவரை வெறுக்கின்றது (15ு 18). சிறப்பாக அவர் உலகின் ஒளியாக விளங்குவதாலும் (9:15) அதற்கு உயிர் அளிப்பதாலும் (6:33) உலகத்தை மீட்க வருவதாலும் (12:47) இவ்வெறுப்பு மிகவும் மேலோங்கியிருப்பதை நற்செய்தி நன்கு காட்டுகின்றது. இவ்வெறுப்பு இறுதியிலே இயேசுவின் சாவிற்கும் காரணமாய் விளங்குகின்றது (1 கொரி 2:7 தொ..) உலகின் மீட்புக்கு இயேசு உயிர்விடும் அதே நேரத்தில் இந்நிலை மாற்றமடைகின்றது. உலகின் மீது தீர்ப்பிடப்படுகின்றது. அத்துடன் உலகின் மன்னனும் தீர்ப்பைப் பெற்று வீழ்ச்சியடைகின்றான் (12:31). இதுவே கிறிஸ்துவின் வெற்றி, தீய உலகின் மீது கொண்ட வெற்றி (16:33). தமது தந்தையின் மறைபொருள்மிக்க திருவுளத்தை மிக்க பேரன்பால் ஏற்ற இயேசு (14:30) உலகை விட்டுப் பிரிந்து செல்கின்றார் (16:28); தந்தையிடம் திரும்புகின்றார்; அவருடன் மாட்சியுடன் வலப்பக்கத்தில் அமர்ந்து (17:1,5) அங்கிருந்து எப்பொழுதும் உலகின் வரலாற்றை வழிநடத்துகின்றார் (அ.ப.5:9).

ஆ) புதுவாழ்வு பெற்றுப் பொலிவடைந்த உலகம்:- தமது வாழ்வு, பாடுகள், இறப்பு உயிர்ப்பால் இயேசு தாம் உலகிற்கு ஆற்ற வந்த திருப்பணியை நிறைவேற்றினார். தமது மரணத்தால் உலகின் பாவங்களை ஒழித்தார் (யோவா 1:29). தம் தசையையே உலகம் வாழ்வு பெறக் கையளித்தார் (6:51). அலகையின் அடிமையாக இருந்த உலகம் அவனது அடிமைத் தளையிலிருந்து மீட்கப்பட்டது. இயேசுவின் குருதியாம் வெள்ளப் பெருக்கிலே கழுவப்பட்டது ''இந்த வெள்ளப் பெருக்கிலே விண், மண், கடல் யாவும் மாசு நீங்கின'' (பாடுகளின் காலத் திருப்பாட்டு), எல்லாவற்றையும் படைத்த அவரே (கொலோ 1:16) தமது உயிர்ப்பால் புதுப்படைப்பின் தலைவராக நிலைபெறுகிறார். இறைவன் அனைத்தையும் அவருக்கு அடிபணியச் செய்கிறார் (எபே 1:20 தொ). அவ்விதம் பிளவுபட்ட படைப்பெல்லாம் அவரில் ஒப்புரவடைந்து, ஒன்றுபட்டு (கொலோ 1:20) இப்புதுவுலகில் ஒளியும் வாழ்வும் பெற்று மிளிர்கின்றன. இயேசுவில் விசுவாசம் கொண்ட அனைவருக்கும் இவ்வொளியும் வாழ்வும் உண்டு.

எனினும், உலகு தான் பெறவேண்டிய இலட்சியத்தை இன்னும் முழுமையாகப் பெறவில்லை. மீட்பின் திருப்பணி, துன்ப மிக்க உலகில் இன்னும் தொடர்ந்து நடை பெறும். இயேசு மாட்சியுடன் மீண்டும் வரும் இறுதி வெளிப்பாட்டு நாட்களிலே, அவர் உலகு மீது கொண்ட வெற்றி நிறைவு பெறும். அன்றுதான் படைப்புகளனைத்தை யும் இறைவன்முன் இயேசு சமர்ப்பிப்பார் (1 கொரி 15:25-28). அந்நாள் வரும்வரை, இவ்வுலகம் பேறுகாலத் துயர்போல் பெரும் அவதியுறும் (உரோ 8:19). முழுப்பருவம் அடைந்து முதிர்ச்சி பெற்ற புது மனிதன் தோன்றும் நாளையும் (எபே 4:13) பழைய உலகம் விடுபட்டுப் புது உலகம் தோன்றும் பொழுதையும் பேராவலுடன் எதிர்நோக்கி யிருக்கும்.

3. கிறிஸ்தவனும் உலகும்:- தாம் உலகில் வாழ்ந்த போது இயேசு எவ்வாறு விளங்கி னாரோ, அவ்வாறே கிறிஸ்தவர்களும் உல கில் இக்கட்டான நிலையில் உள்ளனர். அவர்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல் லர் (யோவா 15:19; 17:17). இருப்பினும் இவ்வுலகில் அவர்கள் வாழுகின்றனர் (11: 11). உலகிலிருந்து அவர்கள் விடுபட வேண் டுமென்று இயேசுவும் அவர்களுக்காகச் செபிக்கவில்லை. மாறாகத் தீமையிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுகின் றார் (17:15). தீமை நிறைந்த உலகை அவர் கள் சாராதவர்கள் என்பதால் இவ்வுலகை மீட்பது அவர்களது தலையான பணியாகத் துலங்குகின்றது (1 கொரி 5:10).

அ) உலகைச் சாரா நிலை:- கிறிஸ்தவன், உலகுடன் நட்புக் கொள்ளாது பிரிந்திருந்து, உலகால் மாசுபடாமல் தன்னையே பாது காக்க வேண்டும் (யாக் 1:27). உலகின் மீது அன்பு கொள்ளலாகாது (1 யோவா 2:15). உலகுடன் நட்புக் கொள்ளுதல் கடவுளின் பகைவனாவதாகும் (யாக் 4:4). இந்தக் கூடா நட்பால் ஒருவன் மிக இழிவான கைவிடப் பட்ட நிலைக்கு ஆளாகின்றான் (2 திமோ 4:10). இவ்வுலகம் காட்டும் மாதிரியைக் கிறிஸ்தவன் பின்பற்றாது (உரோ 12:2) இவ் வுலகிற்குரிய ஊனியல்பு இச்சிப்பை உதறித் தள்ளுகின்றான் (1 யோவா 2:16). சுருங்கக் கூறின், அவன் உலகுக்கு அறையுண்டவனா யும், உலகம் அவனுக்கு அறையுண்டதாக வும் இருக்கும் (கலா 6:14). உலகில் இருந்தா லும் அதிலிருந்து விடுபட்டவன் போல் வாழ்வான் (1 கொரி 7:29 தொ). உலகப் பொருட்களைப் பயன்படுத்துவதைப் புறம் பாக்காத இந்த ஆழ்ந்த துறப்புநிலை பிறர் அன்பின் தேவைகளுக்கு ஏற்றவாறு (1 யோவா 3:17) ஒத்திருக்கும். இத்தகையதே கிறிஸ்தவனிடம் எதிர்பார்க்கப்படும் புனி தம்.

ஆ) உலகில் கிறிஸ்துவுக்குச் சாட்சி:- பாவத் தளையில் சிக்குண்ட உலகிலே, கிறிஸ்தவனுக்கே உரிய சிறப்புப் பணியும் உண்டு. கிறிஸ்து உண்மைக்குச் சான்றுபகர வந்தார் (யோவா 18:37). அவ்வாறே, கிறிஸ் தவனும் உலகிற்கு அனுப்பப்படுகின்றான் (17:18). உண்மைக்குச் சான்று பகர்வதே அவனது சிறப்புப் பணி (1 யோவா 4:17). உலகம் மதிப்பிடும் மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்டது கிறிஸ்தவ வாழ்வு. கிறிஸ்து வும் தமது வாழ்விலே நன்கு இதைச் சுட்டி யுள்ளார் (யாவே 7:3 தொ; 14:22; காண் மத் 4:5 தொ). கிறிஸ்தவ வாழ்வு இறைவனைப் பற்றிய உண்மையான அறிவை மனிதர்க ளுக்கு வெளிப்படுத்தும் (யோவா 17:21,23). இவ்வாறு இறைவனின் வார்த்தையானவரு டன் கிறிஸ்தவனும் சான்று பகர்கின்றான். உலகெல்லாம் சென்று கிறிஸ்துவின் வார்த் தையைப் போதிக்கும் பணியையும் அவரிட மிருந்து பெறுகின்றான் (மாற் 14:9; 16:15). இந்த நற்செய்தி பரப்பும் பணியினால் சுடர் விடும் விண்மீன்கள் போல் ஒளிர்கின்றான் (பிலி 2:15).

கிறிஸ்துவைப் பகைத்தது போல் உலகம் இவர்களையும் பகைக்கும் (யோவா 15:18). தனது பாவத் தொடர்பிலிருந்து விடுபட் டோரை மீண்டும் தன் வலையில் சேர்க்க உலகம் முயலும் (2 பேதுரு 2:19 தொ). இந்தத் தவிர்க்க முடியாத போராட்டத்தின் இறுதியிலே நமக்கு வெற்றி கொணரவிருக்

கும் வலிமைமிகு கருவியாய் விளங்குவது நமது விசுவாசமே (1 யோவா 5:4 தொ). நமது உயிருள்ள விசுவாசம் உலகைக் கண்டனம் செய்யும் (எபி 11:7; யோவா 15:22). உலகம் தன்னைத் துன்புறுத்தினாலும் (யோவா 3:13; மத் 10:14 இணை), அதைக் கண்டு கிறிஸ்தவன் சோர்வடையலாகாது. மாறாகத் தேற்றுபவராகிய தூய ஆவியின் அமைதி அவனைத் திடப்படுத்தும். இவ்வுலகின் மன்னன் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டான் என்று விசுவசிப்பவனின் உள்ளத்தில் தூய ஆவியானவர் சான்று பகர்கின்றார். உலகம் இயேசுவை விசுவாசிக்காததால் பாவ நிலையில் உள்ளது. இயேசு தந்தையிடமிருந்து வந்தவர், அவருடன் வாழ்பவர் என்பதையும் உலகம் ஏற்க மறுக்கின்றது (16:8-11). உலகம் தேற்றுபவரைக் காண்பதில்லை, அறிவதுமில்லை (14:17). இவ்வாறு சாட்சி பகர்வதின் விளைவாக உலகோடு மீட்கமுடியாதபடி பிணைக்கப்படாதவர்கள் மீட்கப்பட்டு புது உலகில் கிறிஸ்துவின் தலைமையில் மகிமையடைவர்.

இ) இறுதிக் காலத்தை எதிர்நோக்கியிருத்தல்:- உலகில் மனிதன் வாழும் வரையில், கிறிஸ்தவர்களுக்கும் உலகுக்குமிடையே உள்ள பிணக்கு மறையாது. இறுதித் தீர்ப்பு நாள் வரும்வரையில் விண்ணரசின் மக்களும், தீயோனின் அடிமைகளும் கோதுமைப் பயிரும் களையும் போல் உலகில் சேர்ந்தே வாழ்வர் (மத் 13:38 தொ). எனினும் இப்பொழுதிருந்தே ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் ஒரு தீர்ப்பு நடைபெறத் தொடங்குகிறது (யோவா 3:18-21). அந்நாளில் இறைவன் தந்த தீர்ப்பு பலர் அறியப்பறைசாற்றப்படும் (1 கொரி 6:2). அந்நாளிலே, நாம் வாழும் உலகு, இறைவாக்கினர் முன்னறிவித்ததுபோல் மறைந்து விடும். புதுவாழ்வு பெற்ற மனித இனம் புதிய உலகிலே மாறா இன்பத்தில் திளைக்கும் (திருவெளி 21).

**உலகெங்கும் சுற்றி வரும் தூதர்** (PATROL)

செக் 1:10-11-இல் இச்சொற்றொடர் பயன்பட்டுள்ளது. குதிரை வீரர்கள் உலகைச் சுற்றி வருவதையும், இறைவனது தூதரிடம் அறிக்கையிடுவதையும், நான்கு தேர்களின் குதிரைகள் உலகைச் சுற்றிவரப் பொறுமை இழந்து துடிப்பதையும் (செக் 6:7) இறைவாக்கினர் காட்சியில் காண்கின்றார். இக்காட்சி யுத்தத்திற்குரிய காவல் உலா ஆகும்.

**உலர்ந்த திராட்சை** (RAISINS)

ஒருவனுக்குத் தேவையான பொருட்களில் (பயணத்திற்கோ வேறு எந்த வழிச் செலவுக்கோ) உலர்ந்த திராட்சையும் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (1 சாமு 25:18; 30:12; 2 சாமு 16:1; 1 நாள் 12:40). இந்த உலர்ந்த திராட்சையை, திராட்சைக் குலைகளை எண்ணெயில் முக்கிப் பின்னர் அதை எடுத்து வெயிலில் காயவைத்துத் தயார் செய்தனர்.

திராட்சை அடை உலர்ந்த திராட்சையை அழுத்தித் தயாரிக்கப்பட்ட உணவாகும். இது எளிதில் கெட்டுப் போகாதாகையால், பயணத்திற்கும், போர்க்கால உணவிற்கும் உகந்ததாகக் கருதப்பட்டது (2 சாமு 6:19; 16:1; 1 சாமு 25:18; 30:12; 1 நாள் 12:40). இது சாதாரண உணவாகவும் பயன்பட்டது. விழாக்கால உணவிலும் புறவின, பாலினவளர்ச்சித் தேவதைகளின் வழிபாட்டிலும் பயன்பட்டது (2 சாமு 2:5; ஓசே 3:1; எரே 7:18; 44:19).

**உலூகித்து** (LUHITH - அட்டையால் செய்யப்பட்ட)

மோவாயின் நகரங்களில் ஒன்றான உலூகித்து கொரணயிமோடு தொடர்புடையது. இது சாக்கடலின் தென் எல்லையில் உள்ள ஒரு குன்றாக இருக்க வேண்டும். சோவாருக்குச் செல்லும் வழியில் இது அமைந்திருக்கிறது (எச 15:5; எரே 48:5). அரேயோப்பொலிக்கும் (ஆர்) சோவாருக்கும் இடையிலுள்ள நகரான உலயேத்தாவாக இருக்கலாம் என்று யூசேபியுவும் எரோனிமுவும் கருதுகின்றனர்.

**உலூக்கியு** (LUCIUS - காலையில் பிறந்த)

1. இவர் ஓர் உரோமைத் தூதுவர் ஆவார். செலூக்கியர்களை எதிர்த்துப் போரிட்ட

யூதத் தலைமைக் குருவான சீமோனை ஆத ரிக்கும்படி உலூக்கிய எகிப்திய அரசராகிய ஏழாவது தோலமிக்கும், கீழை நாடுகளின் ஆட்சியாளர்களுக்கும் மடல் எழுதுகிறார் (1 மக் 15:16-21). இவரது முழுப்பெர் தரப்பட வில்லையாதலால் இவர் யாரென அடையா ளம் காட்ட முடியாததாக இருக்கிறது. இந் தத் தூதுவர் கினேயு அல்லது உலூக்கிய கல்பூர்னியு பீசோ (கி.மு. 139) ஆகவோ, உலூக்கியு செசிலியு மெத்தெல்லு (கி.மு. 142) ஆகவோ இருக்கலாம் என்று அடையாளம் காட்ட முயற்சிகள் நடந்துள் ளன.

2. சீரேனே ஊர் உலூக்கியு ஒரு இறைவாக் கினரும் அந்தியோக்கியத் திருச்சபையின் போதகரும் ஆவார் (அ.ப. 13:1). அந்தியோக் கியாவிலுள்ள கிரேக்கர்களுக்கு வார்த்தை யைப் போதித்த யூதப் போதகர்களில் உலூக் கியு ஒருவராக இருந்திருக்கலாம் (11:20-21).

3. உலூக்கியு ஒரு சாதராணக் கிறிஸ்தவரா கவும் இருக்கலாம். பிறப்பால் இவர் யூதரெ னவும் கொரிந்திலிருந்து வாழ்த்துக்கள் அனுப்பியதாக உரோமையருக்கு எழுதிய மடலில் காண்கிறோம் (உரோ 16:21). இவர் கொலோ 4:14-இல் வரும் புறவினரான லூக் காகவும் இருக்கலாம். மேலும் பவுலின் தோழனான லூக்காவே இவர் என்றும், ஆகவே மூன்றாம் நற்செய்திக்கும் அப் போஸ்தலர் பணிக்கும் ஆசிரியர் ஆவார் என்றும், ஒரு கருத்து உண்டு. இரண்டிலும் மூன்றிலும் குறிக்கப்படுவர்கள் ஒருவராக இருக்கும் வாய்ப்பு உண்டு.

**உலூசு** (LUZ - பக்கத்தில் திருப்பு, தஞ்சம் புகு)

1. பெத்தேல் (ஆதி 28:19; 35:6) எனப் பின்னர் யாக்கோபினால் பெயரிடப்பட்ட கானானேய நகரத்தின் முந்தைய பெயரே உலூசு. பென்யாமின் நாட்டு எல்லையைக் கூறும்பொழுது 'பெத்தேல்' என்னும் உலூசு என்றும் குறிப்பிடப்படுகிறது (யோசு 18:13; நீதி 1:23).

யோசு 16:2 ''பெத்தேலிலிருந்து உலூசு நோக்கிச் சென்று'' என்று கூறுவதிலிருந்து இவைகளிரண்டும் வெவ்வேறு நகரங்கள் போலத் தோன்றினாலும் பெத்தேல் உலூசு எனும் ஒரு நகரையே குறிப்பதாகக் கொள்ள லாம்.

2. இஸ்ராயேலர் பெத்தேலைப் பிடித்த போது, அதனின்று விடுபட்டுச் சென்று ஒருவன் கித்திய நாட்டில் கட்டிய நகரமே உலூசுவாக இருக்க வேண்டும் (நீதி 1:26). இது சீரியாவிலோ லெபனோனிலோ அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் இத்தி யப் பேரரசு முன்னர் இவைகளிரண்டையும் உள்ளடக்கியிருந்தது.

**உலூது, உலூதியும், உலூதியர்** (LUD, LUDIM)

இவர்கள் சிறிய ஆசியாவைச் சேர்ந்த மக்கள் எனக் கொள்ளலாம். சிறிய ஆசியா வில் (இலீதியா) ஒரு காலத்தில் வாழ்ந்ததால் இவர்களை இலிதியர் என்று கூறவும் வாய்ப் புண்டு. உலூதியர் காமின் வழிவந்தவர்களெ னவும் (ஆதி 10:13; 1 நாள் 1:11); உலூதியர் சேமின் வழிவந்தவர்களெனவும் (ஆதி 10:22; 1 நாள் 1:17) பழைய ஏற்பாடு கூறுகின்றது. இவர்களைச் சிறிய ஆசியாவோடும் (எச 66:19) ஆப்பிரிக்க மக்களோடும் (எரே 46:9; எச 30:5; 27:10) இணைத்துப் பேசுதல் சந்தே கத்துக்கு இடமாயிருக்கிறது. இவர்கள் தீருக் கும் (எச 27:10) எகிப்துக்கும் (எச 30:5; எரே 46:9) கூலிப்படையாகப் பணிபுரிந்தனர். வில் அம்பு எய்வதில் பெயர்போனவர்கள் (எச 66:19; எரே 46:9).

**உலோது** (LOD)

இது, சாரோன் சமவெளியில் தெற்கெல் லைக்கருகில், யோப்பாவிலிருந்து தென்கி முக்கே 18 கி.மீ தொலைவில் வாடி ஏல்-கபீர் அருகில் பென்யாமின் நகரம். பென்யாமின் வழித்தோன்றல்களில் ஒருவரான ஏல்பால் இந்நகரத்தைத் தோற்றுவித்தார் (1 நாள் 8:12). உலோது, காதிது, ஓனோ நகரங்கள் பாபி லோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த 720க்கு மேற்பட்டவர்க்கு மூதாதையர் நகரமாகியது என்பது பழைய ஏற்பாட்டு நூல்குறிப்பு ஆகும் (எஸ் 2:33; நெக 7:37; 11:35).

எகிப்திலிருந்து பாபிலோன் செல்லும் நெடுஞ்சாலை இதன் வழியே சென்றதால் இதனை உரிமை கொண்டாடிப் பலர் போரிட்டனர். இலிதா என்ற பெயரில் இந்நகர் சமாரியாவின் ஒரு மாவட்டத்தின் தலைநகராகத் . திகழ்ந்தது யோனத்தான் மக்கபேயின் வேண்டுகோளுக்கு இணங்கித் தெமேத்திரியு நிக்கத்தோர் கி.மு. 145-இல் இதை யூதேயாவுக்கு அளித்தார் (1 மக் 10:30.38; 11:28.34.37). உரோமையரின்கீழ் இந்நகர் பலவாறு துன்புற்றது. கி.பி. 66-இல் கல்லுஸ் என்பவர் மக்கள் எருசலேமில் கூடாரவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்பொழுது இந்நகரத்தை எரித்து விட்டார். ஆனால் கி.பி. 68-இல் வெஸ்பாசியன் இதனை மீண்டும் நிர்மாணித்தார்.

ஆதிக் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இங்கு வாழ்ந்தது (அ.ப. 9:32). இங்கு பேதுரு ஐனேயா எனும் திமிர்வாதக் காரனைக் குணப்படுத்தியதால் (அ.ப. 9:33-35) கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அருகிலிருந்த யோப்பா நகரத்தினர் இதனைக் கேள்விப்பட்டு தபீத்தாவைக் குணப்படுத்தப் பேதுருவை அழைத்தனர் (9:38).

கிறிஸ்தவம் இந்நகரத்தில் நன்கு வளர்ச்சி பெற்று 4-ஆம் நூற்றாண்டில் ஓர் ஆயர் இங்கு இருக்குமளவுக்குத் தழைத்தோங்கியது. சிலுவைப் போர்க்காலத்தில், வேதசாட்சியான புனித ஜார்ஜின் பெயரைக் கொண்டு விளங்கியது இந்நகரம்; இவரது பெயரால் எழுப்பப்பெற்ற கோவிலின் சிதைவுகளை இன்றும் இங்குக் காணலாம்.

**உலேத்தான்** (LOTAN - சுற்றிப் போர்த்தப்பட்ட)

உலேத்தான் சேயிரின் புதல்வர்களில் முதல்வர் (ஆதி 36:20). ஏதோம் நாட்டிலிருந்த கோரியரின் தலைவராவார் (ஆதி 36:22; 1 நாள் 1:39). இவர்கள் ஏதோமியர் வருகைக்கு முன் சேயிரில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 36:29).

**உலோய்** (LOIS - மிகவும் விரும்பத்தக்க, மகிழ்ச்சி உண்டாக்குகிற)

இவள் யூனிக்காவின் தாயும் திமோத்தேயுவின் பாட்டியும் ஆவாள். இவள் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்துக்காகப் பாராட்டப் பெறுகிறாள். பவுல் திமோத்தேயுவுக்கு அறிவுரை வழங்கும்பொழுது திமொத்தேயு இந்த விசுவாசிகளின் குடும்பத்தால் இறைவாழ்வில் உறுதிப்படுத்தப்பட்டதாகவும், அதே விசுவாசத்தை நினைவுக்குக் கொணர்ந்து, அதில் நிலைத்து நிற்கும் படியாகவும் கூறுகிறார் (2 திமோ 1:5).

**உலைக்களம்** (CRUCIBLE)

இந்தப் பாத்திரம் வெள்ளியைத் தூய்மையாக்கப் பயன்பட்டது. ஒருவனைச் சோதித்தறியும் சூழ்நிலையில், இது பழ 17:3; 27:21-இல் குறிப்பிடப்படுகிறது. ''வெள்ளியை உலைக்களமும் பொன்னைப் புடக்குகையும் சோதித்துப் பார்க்கும், உள்ளத்தைச் சோதிப்பவர் ஆண்டவர்''.

**உல்லா** (ULLA)

ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தலைவர் (1ம் நாள் 7:39). இப்பெயரைச் சூவா (9:32) என்றும், சூவால் என்றும் (7:36), ஆமால் என்றும் (9:35), ஆரா என்றும் (7:38) அழைக்கவேண்டும் என்று பலவாறு அறிஞர்கள் கூறுவர்.

**உவமை** (PARABLE)

ஆதித்திருச்சபையின் காலத்திலிருந்தே தனது போதனையை விளக்குவதற்காக இயேசுவால் கூறப்பட்ட கதையானது உவமை என்று அழைக்கப்பட்டது. ''பராபோலே'' என்ற கிரேக்கச் சொல் ஒப்பிடுதலை அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளது. ஒப்புமையில் பேசவும் அறிவுரை வழங்கவும் மேற்காசிய மக்கள் பெரிதும் விரும்பினர்; புதிர்களையும் பயன்படுத்தினர்.

பழைய ஏற்பாடானது, குறிப்பாக, ஞான நூல்கள் (பழ 10:26; 12:4; நீதி 14:14) நற்செய்தியின் உவமைக்கும் நம்மைத் தயாரிக்கிறது. இந்த இலக்கிய வடிவில் இரு கூறுகள் அடிப்படையாக உள்ளன. அவற்றில் ஒன்று,

ஒப்புமையாகும். இது மேற்காசிய செயல்முறை மனப்போக்கிற்கு ஒத்தது. மற்றது புதிரான முறையில் எடுத்துக் கூறுவதாகும். இவை ஆர்வத்தைத் தூண்டவும், ஆராய்வதற்குத் தூண்டுதலளிக்கவும், முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டவும், அளிக்கப்பட்ட போதனையின் யாவும் கடந்த தன்மையைக் காணவும் ஏதுவானவை. இவ்விரு கூறுகளைச் சமயநோக்கில் பார்க்கும்போது உவமைகளின் சரியான விளக்கத்தை உணரலாம்.

I ஒப்பிடுதலைப் பயன்படுத்தல்

1. செயல்முறையின் விரிவு:- அதனுடைய வரலாற்றில் தொடக்கமுதலே இஸ்ராயேல், புலன் சார்ந்த பிரதிபலிப்பை அனுமதிக்காத யாவும் கடந்த இறைவனைப் பற்றிய செயல்முறையாகப் பேசுகின்ற சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது (யாத் 20:4). எனவே அவர்கள் உலக உண்மைகள் முதற்கொண்டு இறைவாழ்வைப் பற்றித் தொடர்ந்து விவரிக்க வேண்டியவர்களாயிருந்தனர். இறைவாழ்வைப் பற்றிய பழைய வாசகங்களின் இறைவனுக்கு மனிதப்பண்புகளைச் சாற்றிக் கூறுதல் எண்ணற்ற தடவைகள் காணப்படுகின்றன. இவை யாவும் தோற்றவடிவில் உண்மையான உவமைகளைக் கொண்டிருக்கும் மறைமுகமான ஒப்புமைகளாகும் (ஆதி 2:7-8. 19.21). பிற்காலத்தில் இவை அரிதானவையாக இருந்தாலும் ஒப்பிடுவதற்கான அக்கறையானது அதிக வலுவுள்ளதாக இருக்கும் (எச 1:26 தொ). மனிதனுடைய வாழ்வே அதனுடைய ஒழுக்கம் மற்றும் சமய நிலைகளில் இத்தகைய அமைப்புகளைத் தேவையானதாகக் கொண்டிருந்தது. இறைவாக்கினர்கள் தங்களுடைய வசைகளிலும் (ஆமோ 4:1; ஓசே 4:16; ஏச 5:18) இறைவாக்குறுதிகளை வெளிப்படுத்தவும் (ஓசே 2:20-21; ஏச 11:6-9; எரே 31:21;...), இவற்றை மிகுதியாகப் பயன்படுத்தினர். அதே நேரத்தில் அவர்கள் அடையாளச் செயல்களில் நாட்ட முடையவராய் இருந்தனர்; அதாவது அவர்களின் போதனையை நடித்துக்காட்டினர் (ஏச 20:2: எரே 19:10; எச 4-5). வரலாற்று நூல்களிலும் சில மெய்யான உவமைகளும் காணப்படுகின்றன (நீதி 9:9-15; 2 சாமு 12:1-4; 14:5 தொ). ஞானிகளின் கூற்றுகளில் அவை ஏராளமாகக் காணப்படுகின்றன (பழ 10:26; 12:14; .....). பிற்கால யூதத்துவத்தில் இம்முறை விரிவடைந்தது. யூத ராபிகளிடையே இது உண்மையான போதகமுறையாக மாறியது. அமைக்கப்பட்ட உருவம் அல்லது கடந்தகால வரலாறான ''இது எதனைப் போன்றது'' என்று தொடங்கும் எப்போதனைக்கும் துணையாக அமைந்தது. ''இதனை எதற்கு ஒப்பிடுவேன்'' (மாற் 4:30; லூக் 13:18), ''விண்ணரக இதைப் போன்றது'' (மத் 13:24.31) போன்று தமது போதனையின் கருத்துகளை ஒப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்துவதில் கவனமுடையவராய் இருப்பதனால், இயேசு இவ்வியக்கத்தில் பங்கெடுக்கிறார்.

2. உவமைகளின் சமய உட்பொருள்:- புனித வரலாற்றின் பொருள் பற்றிய தங்களுடைய போதனையை விளக்குவதற்கு அன்றாட வாழ்வின் செயல்முறை உண்மைகளைப் பயன்படுத்துதல் மூலம் இறைவாக்கினர்கள் அவற்றினின்று கருத்துக்களை உருவாக்குகின்றனர். ஆயர், திருமணம், திராட்சைக்கொடி போன்றவை நற்செய்தி உவமைகளில் காணப்படுகின்றன. ஒழுக்க வாழ்வில் உறுதியான மனப்பான்மைக்கோ (பழ 4:18-19; 6:6-11; 15:4) சற்று தீர்மானமான சமூகச் சூழ்நிலைக்கோ (நீதி 9:6-15) உரிய மிகத்துல்லியமான சுட்டிக் காட்டல்கள் அவற்றில் காணப்பட்டாலும், இலவசமானதும் நன்மை நிறைந்ததுமான இறைஅன்பும், அதற்குப் பதிலளிக்க மக்கள் காட்டிய விருப்பமின்மையும் இச்சித்திரங்களின் மூலப்பொருளாக அமைகின்றன (ஏச 5:1-7; ஓசே 2; எச 16). நற்செய்தி நூல்களில் இவ்வமைப்பானது, இயேசுவின் உருவில் இறையரசானது இறுதியாக நிறைவேறுவதில் மையம் கொண்டுள்ளது. எனவே, முக்கிய இறையரசைப் பற்றிய உவமைகளடங்கிய முக்கியத் தொகுப்பு (குறிப்பாக மத் 13:1-50 இணை; 20:1-16: 21:33-22:14 இணை; 24:45-25:30) சிறப்பிடம் பெறுகிறது.

*3. உவமையும் உருவகமும்:-* சில சமயங்களில் ஒப்பிடுதல் முழுக்கதையைத் தழுவிய பொதுப் பாடத்தை எடுத்துக் கூறுவதோடல்லாமல் எல்லா விவரங்களுக்கும் குறிப்பிட்ட பொருளை அளிக்க வல்லது. இதைப் புரிந்து கொள்ளச் சிறப்பான விளக்கம் தேவைப்படும். அப்போது உவமையானது உருவகமாகிறது. இத்தகைய பகுதிகள் பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் காணப்படுகின்றன (எச 17). நான்காவது நற்செய்தியில் இத்தகைய முறையைக் காண்கிறோம் (யோவா 10:1-16; 15:1-6). உண்மையில் உவமைகள் சில உருவகப்பண்புகளை அடிக்கடி தம்முள் கொண்டுள்ளன. நற்செய்தியாளர்களும் விளக்கம் அளிக்கும் முறையால் இச்சிறப்பியல்பை வலியுறுத்துகின்றனர். இவ்வாறு லூக்கா நல்ல சமாரியன் பற்றிய உவமையைக் குறிப்பிடும்போது இயேசுவைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டும் சொற்களில் கூறுகின்றார் (லூக் 10:33.35).

II சிந்தனை வெளிப்பாட்டு முறையில் கூறுப்படுதல்

*1. பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள்:-* ஞானிகளின் புதிர்களைவிடப் (1 அர 10:1-3; சீரா 39:3) பிற்கால நூல்கள் விரும்பி மறை பொருள் மிக்க விதத்தில் எடுத்துக்கூறும் முறை சில நற்செய்தி உவமைகளின் புதிரான பண்பை விளக்கப் பெரிதும் பயன்படுகிறது. எசக்கியேலில் எதிர்காலம் பற்றிய இறைவாக்கு அறிவிப்பானது சிறிது சிறிதாக வெளிப்பாட்டுக் கூற்றாக மாறுகிறது. அதாவது தேவைப்படுகின்ற உருவகங்களின் வரிசையில் வெளிப்பாட்டின் பொருளைப் பல உருவகங்களில் வேண்டுமென்றே எடுத்துக் கூறுகின்றன. இவ்வுருவகங்களைப் புரிந்து கொள்ள விளக்கம் தேவைப்படுகிறது. ''வானதூதர்-விளக்கவுரையாளரின்'' பிரசன்னமானது பொதுவாக இச்செய்தியின் ஆழத்தையும் கடினத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு, புதிர் என்றும் உவமை என்றும் அழைக்கப்படும் எச 17:3-10-இல் வரும் கழுகு பற்றிய உருவகமானது, பின்னர் இறைவாக்கினரால் விளக்கப்படுகிறது (17: 12-21). செக்கரியாவின்காட்சிகள்வானதூதர்-விரிவுரையாளரையும் கொண்டுள்ளன (செக் 1:9; 4:5-6). தானியேலின் பெரிய வெளிப்பாட்டுக் காட்சிகளும் இத்தகையனவே. இவற்றில் காட்சியாளர் புரிந்து கொள்ளாதவராகவே எப்போதும் கருதப்படுகிறார் (தானி 7:15-16; 8:15-16; 9:22).

*2. நற்செய்தி நூல்களில்:-* அரசு மற்றும் இயேசுவின் ஆள் பற்றிய மறைபொருளே புதியதாக இருப்பதால் தமக்குச் செவிமடுப்போரின் அறிந்து கொள்ளும் தன்மைக்கேற்றவாறு இயேசுவே தம்மைப் படிப்படியாக வெளிப்படுத்துகிறார். இதன் காரணமாகவே இயேசு தமது பொது வாழ்வின் முதல் பகுதியில் ''மெசியா இரகசியத்தைத்'' (மாற் 1:34.44; 3:12; 5:43...) தமக்கேயுரிய காரணங்களுக்காக வலியுறுத்துகிறார். இதை மாற்கு வலுவாக எடுத்துக்காட்டுகிறார். மேலும் இதன் காரணமாகவே தமது போதனையின் கருத்தை அளிக்கின்ற அதே நேரத்தில் சிந்திக்கத்தூண்டி, முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு விளக்கவுரை தேவையாக உள்ள உவமைகளில் பேசுவதை அவர் விரும்புகின்றார் (மத் 13:10-33.35.36.51). அரசன் விருந்து, திராட்சைக்கொடி, ஆயன், விதைத்தல் போன்ற சில முதல்தரமான தலைப்புகள் அவருக்குச் செவிமடுப்போரைச் சரியான பாதையில் வழிகாட்டுகின்றன. ஆனால் அளிக்கப்பட்ட போதனையில் ஆழம் அவர்களிடமிருந்து நழுவி விடுகிறது. இவ்வாறு உவமைகள் விழிப்பாய் இருக்கக் கோருகின்றன. அதே சமயம் அதனை முழு அளவில் நுட்பமாக ஆராய இயலாத அல்லது விரும்பாதவர்களுக்கு மறைபொருளின் ஆழத்தினை மறைக்கின்ற திரையாகவும் உள்ளன. கிறிஸ்துவினுடைய செய்தியின் உட்பொருளை ஏற்க மறுத்த பல யூதர்களின் கடின இதயத்தால் தாக்கப்பட்ட நிலையில் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு ஏசயாவிலிருந்து எடுத்துக்காட்டு அளித்து (மாற் 4:10 தொ; மத் 13:10-15) பதிலளிப்பதைக் காட்டும்போது நற்செய்தியாளர்கள் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றனர். காட்சிகள் வேரூன்றி இவ்வுவமைகளோடு எல்லோருக்கும் புரியக்கூடிய ஒழுக்கப்படிப்பினைகளை

நோக்கமாகக் கொண்ட தெளிவான உவமைகளும் உள்ளன (லூக் 8:1 6 தொ; 10:30-37; 11:5-8).

III. உவமைகளின் விளக்கம்:-

இயேசு போதித்த விவிலிய மற்றும் மேற்காசியச் சூழ்நிலையையும், வளர்ச்சியுள்ள முறையில் போதனை அளிக்கும் அவரது நோக்கத்தையும் மனதில் கொண்டால் உவமைகளை விளக்குவது எளிதாகிறது. அவற்றினுடைய பொருளானது அன்றாட வாழ்வில் எளிய உண்மைகளும், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலான புனித வரலாற்றின் சிறந்த நிகழ்ச்சிகளுமாகும். எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய அவற்றின் முதல்தரமான தலைப்புகள் இயேசு அவற்றைப் பயன்படுத்தியபோது அவற்றினுடைய பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் ஏற்கனவே பொருள் அளிக்கப்பட்டிருந்தன. போதனை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு சுதந்தரமாக அமைக்கப்பட்ட இந்த விவரிப்புகளில் காணப்படும் நிகழ்தற்கரியன எவரையும் வியப்பில் ஆழ்த்த வேண்டியதில்லை. முரண்பட்ட அல்லது சார்பான விவாதத்தினை விவரிப்பதற்கென (லூக் 16:1-8; 18:1-5) அளிக்கப்படுகின்ற சில குறிப்பிட்ட கதாபாத்திரங்களின் மனப்பான்மையில், வாசிப்பவர் மனம் புண்படக்கூடாது. எவ்விதத்திலாவது பெரும்பாலான உவமைகளில் நாம் முதலில் இறைமைத் தன்மைக்கூறையும், மிகக் குறிப்பாகக் கிறிஸ்து மையத்தன்மைக் கூறையும் வெளிக் கொணர வேண்டும். உருவகத்தின் தன்மை எத்தகையதாயினும் நமது மனதில் தோன்றும் மையக் கதாபாத்திரம் விண்ணகத்தந்தை ஆவார் (மத் 21:28; லூக் 15:11). தமது வரலாற்றுப் பணியும் (மத் 13:3.24.31-இன் விதைப்பவன்) அல்லது அவரது வருங்கால மாட்சியிலும் (மத் 24:43-இன் திருடன்; மத் 25:14-இன் தலைவன்; மத் 25:11-இன் மணமகன்) கிறிஸ்துவே மையக் கதாபாத்திரம் ஆவார். இருகதாபாத்திரங்கள் இருக்கும்போது அவர்கள் தந்தையும் மகனும் ஆவர்.(மத் 20:1-16; 21:33.37;22:2). இது எந்த அளவிற்கு உண்மையெனில் தமது மகனையே அனுப்பியதன் மூலம் மனிதரால் கண்டறியப்பட்ட தந்தையின் அன்பே இயேசுவால் கொண்டுவரப்பட்ட மாபெரும் வெளிப்பாடாகும். உலகிற்குரிய இறைவனுடைய திட்டத்தின்மீது புதிய அரசு அளிக்கின்ற முழுமையான நிறைவைக் காட்டுவதே உவமைகளின் பணி ஆகும்.

## உள்ளார்ந்த மனிதன் (INNER, INWARD MAN)

இதன் பொருளைப் பவுலின் இறையில் ஆளுமையைப் பற்றி அவர் கூறும் கருத்துகளில் காணலாம் (உரோ 7:22-23). இவரின் இந்தக் கருத்தில் மனிதன் மூன்று கூறுகளால் ஆனவன். அ) உள்ளார்ந்த மனம்: இங்குதான் திருச்சட்டம் குடிகொண்டுள்ளது (7:23). இதை இவர் பகுத்தறிவுக்கு ஒப்புமைப்படுத்துகிறார். ஆ) உறுப்புகள் அதாவது ''வலுவற்ற என் இயல்புகள்'' (உரோ 7:18). இதிலேதான் இச்சைகளும் நாட்டங்களும் குடிகொண்டுள்ளன. இவை தங்கள் நாட்டத்திற்குத் தடையாக உள்ள சட்டங்களை ஏற்பதில்லை. இ) மூன்றாவது ''நான்'' என்ற உணர்வு. இது அறிவு, உடலின் நாட்டம் ஆகிய இரண்டையுமே அறிந்திருக்கிறது. ஒவ்வொரு ஆளிலும் இந்த உள்மனமும் ஊன் இயல்பும் ஒன்றை ஒன்று எதிர்ப்பவை என்கிறார். இதுவே மனிதனது இடர்ப்பாடான நிலையாகும்.

ஆண்டவர் அல்லது தூய ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனின் உள்மனதில் குடிகொண்டுள்ளார் என்று பவுல் கூறுகின்றார் (2 கொரி 3:17-18; எபே 3:16). இதன் மூலம் ஊனியல்பைக் கட்டுப்படுத்தத் தேவையான அருளை நமக்குத் தருகிறார் ஆண்டவர்.

## உழைப்பு (LABOUR)

உடல் அல்லது மூளைக்குத் தரப்படும் வேலையே உழைப்பு. மண்ணை ஆள்வதற்கும் தனிப்பட்டோருடையவும் சமூகத்தினுடையவும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தேவையான உடலுழைப்பை வழக்கமாகக் குறித்தது. பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் ஒவ்வொரு யூதனும் தன் சொந்த வேலையை விட்டு, எருசலேம் நகர மதிலைக்கட்டி எழுப்ப வேண்டுமென நெக

மியா கட்டளையிட்டார் (நெக 5:13). உழைப்பு எனும் சொல் அதற்கு இணையான 'உற்பத்தி' அல்லது செல்வம் எனும் பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது (ஏச 45:14; சங் 128:2). புதிய ஏற்பாட்டில் உழைப்பு இறைவனது திட்டத்தை நிறைவேற்றும் உழைப்பைக் குறிக்கிறது (1 கொரி 15:58; 2 கொரி 5:5). புதிய ஏற்பாட்டில் இது வேலையாட்களின் உடலுழைப்பையும், அதைவிடச் சரியாகக் கூறவேண்டுமெனில் ஏற்புடைமைக்கான செயல்களையும் குறிக்கின்றது.

எல்லா உழைப்பையும் நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1) தாமே உழைத்துச் சுதந்தரமாக வேலை செய்தல் (உ-ம்) விவசாயம், ஆடுமேய்த்தல், 2) தொழிலாளர்களின் வேலை, 3) அன்றாடக் கூலி வேலை 4) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அடிமையின் வேலை.

கடவுள் படைக்கும் பொழுது வேலை செய்தார் (உழைத்தார்) (ஆதி1); தொடர்ந்து வேலை செய்கிறார் (சங் 103:24; ஏச 28:29). படைப்பில் மனிதனுக்கு வேலைசெய்யும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 2:15). பாவம்தான் உழைப்பை மனிதனுக்குத் தந்தது என்பதல்ல; உழைப்பின் பலனைக் குறைத்ததோடன்றி அதனைப் பிரச்சனைகட்குரியதாக்கியது (ஆதி 3:19). உழைப்புக்குப் பால்வேறு பாடில்லை. அண்டைய மேற்காசிய நாடுகளில் பெண்கள் மிருகங்கள்போல் வேலைப் பளுவைச் சுமந்தனர். இயேசுவும் உழைத்தார் (யோவா 5:17). பவுல் தாமும் வேலை செய்தார்; கிறிஸ்தவர்களையும் வேலை செய்யத் தூண்டினார் (அ.ப. 18:3; 1 தெச 4:11; 2 தெச 3:10). எல்லா அப்போஸ்தவர்களும் அழைக்கப்படுவதற்குமுன் சிறந்த உழைப்பாளர்கள்.

கிரேக்க, உரோமைய உலகத்தில்போலல்லாமல் எபிரேயர்கள் உடலுழைப்பை உயர்வாகக் கருதினர். மனித உழைப்பு தனக்கென்று ஒரு பெருமையுடையது. உழைப்பினால் மனிதன் சிந்தும் வியர்வையும், வருத்தமும் கூடப் பெருமைக்குரியது (பழ 10:6). மனைவி செய்யும் கடின உழைப்பும் (பழ 31:15), தொழிலாளியின் உழைப்பும் (பழ 22:29) புகழப்படுகிறது. சோம்பேறி எறும்புகளிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளட்டும் (பழ 6:6). உடன்படிக்கையின் கட்டளைகளில் ஓய்வுநாள் கடைப்பிடிப்பைப்போன்று ஆறுநாள் வேலை செய்ய வேண்டுமென்பதும் ஒரு கடமையாகும் (யாத் 20:9-11). சோம்பேறித்தனம் என்பது உண்மையிலேயே ஒரு சாபக்கேடு (திருவுரை 10:18). உழைப்பு எப்போதும் ஆசீர்வதிக்கப்பட்டது (யாத் 34:21; சங் 126:1; பழ 10:4; 21:5; திருவுரை 5:11; சீராக் 10:30). உண்மையான உழைப்பாளிக்கு இறைவன் வெகுமதி அளிக்கிறார் (ஆதி 26:2; 39:5; சங் 106:36-37; திருவுரை 2:24).

உழைப்பாளிகளைக் காப்பதற்குச் சட்டம் உண்டு (லேவி 19:13; உப 24:14). அவர்கள் அடிமையோ உரிமைக் குடிமக்களோ யாராக இருப்பினும், தலைவர்கள் இரக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும் (எபே 6:9; பிலமோன்); வேலைக்காரன் கூலிக்கு உரியவனே (லூக் 10:). யாக்கோபு ஒரு மனைவிக்காகக் கடுமையாக உழைத்தார் (ஆதி 31:40-41). உழைப்பாளிகளை மேற்பார்வையிடுவோர் பலர் இருந்தனர் (ரூத் 2:5; 1 சாமு 11:5; மத் 20:1; 1 கொரி 3:9). சுதந்தரத் தொழிலாளிகள் தங்களுக்கெனச் சங்கம் அமைத்துக் கொண்டனர்.

எகிப்தில் வற்புறுத்தி வேலை வாங்குதல் இருந்தது. சாலமோனும் அவரது புதல்வர்களும் அம்முறையைப் பின்பற்றினர் (1 அர 11:28). இத்தகைய முறையில் வேலைவாங்குவது கூடாது எனச் சாமுவேல் காலத்திலே எதிர்த்துக் கூறப்பட்டது (1 சாமு 8:11-17). ஆயினும் ஆசா யூதாவில் இப்பழக்கத்தைத் தொடர்ந்தார் (1 அர 15:22). சாலை அமைப்பது, நினைவுக் கூடங்கள் கட்டுவது ஆகியவற்றில் குடிமக்களின் உழைப்பை அரசு பெறலாம். ஆனால் அது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே. இது உரோமையர்களாலும் பயன்படுத்தப்பட்டது (மத் 5:4).

**உறக்கம் (SLEEP)**

மனித வாழ்வில் இன்றியமையாத ஆனால் மறைபொருளான கூறாகிய உறக்கமானது இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளது. அவை மனிதனுக்குப் புத்துயிரளிக்கின்ற இளைப்பாறுதலும், இரவின் இருளுக்குள் மூழ்கிவிடுதலும் ஆகும். வாழ்வின் ஊற்றாகவும் மரணத்தின் சாயலாகவும் இருக்கின்ற காரணத்தால் அது வேறுபட்ட உருவகமான பொருள்களைக் கொண்டுள்ளது.

I. மனிதனின் ஒய்வு:- மனிதனுடைய வாழ்வின் மீது படைத்தவரால் சுமத்தப்பட்ட நியமத்தின் விளைவாக இரவு மற்றும் பகல், எழுதல் மற்றும் இளைப்பாறுதல் என்னும் மாறிவரும் முறைமைக்கு மனிதன் உட்பட்டுள்ளான்.

1. தன்னம்பிக்கை மற்றும் கையளித்தலின் அடையாளம்:- உழைப்பவனுக்கு ஒய்வை அளிக்கின்ற உறக்கத்தின் இனிமையைப் பாராட்டுவதும் (திருவுரை 5:11) செல்வம், நோய் அல்லது தீய மனசாட்சி போன்றவையால் உறக்கமில்லாமைக்கு உட்படுத்துபவர்களுக்காகப் புலம்புவதும் (சங் 32:4; சீரா 31:1-2) பொருத்தமானதே. நீதிக்கும் உறக்கத்திற்கும் இடையிலான பிணைப்பைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாததாகும். இரவில் விழித்திருக்கும் போது சட்டத்தைப் பற்றிச் சிந்திக்கிறவனும் (சங் 1:2; பழ 6:22) ஞானத்தைத் தனது இதயத்தில் பதியச் செய்கிறவனுமாகிய (பழ 3:24) நீதிமான் ''படுக்கைக்குச் சென்றவுடன் அமைதியாக உறங்குகிறான்'' (சங் 3:5; 4:8). இறைவனின் பாதுகாப்பின் மீது அவன் நம்பிக்கை கொண்டுள்ளான். ஏனெனில் மனிதனின் சாயலாக அமைக்கப்பட்ட சிலைகளும் உறங்கலாம் (1 அர 18:2). ஆனால் இஸ்ராயேலின் காவலராகிய இறைவன் ''உறங்குவதும் இல்லை அயர்வதுமில்லை'' (சங் 121:4). அவர் தமது பிள்ளைகளின் நன்மைக்கென இடைவிடாமல் உழைக்கிறார் (சங் 127:2; மாற் 4:27). புயல் அடித்த போதும் இயேசு ''பயப்படவில்லை'' (மாற் 4:40); யோவா 14:27; 1 திமோ 1:7). அவரது உறக்கம் அவர் இறைவனில் கொண்டிருந்த் நம்பிக்கையின் நிறைவிற்கு அடையாளமாகும் (மாற் 4:48). இச்சிந்தனைப் போக்கில் எல்லா மனித இனங்களுக்கும் அறிமுகமான உருவகத்தில் வேலைகளாலும் நீண்ட காலம் நிரம்பிய வாழ்விற்குப் பின்னர் உறக்கத்தினுடைய இளைப்பாறுதலில் நுழைவதாக மரணம் கருதப்படுகிறது. மனிதன் தனது மூதாதையருடன் உறங்குகிறான் (ஆதி 47:30; 2 சாமு 7:12). எனவே கல்லறையானது இறந்தோர் ஒய்வெடுக்கின்ற ''உறங்கும் அறைகளைச்'' சுட்டிக்காட்டுகிறது. உயிர்ப்பிலான நம்பிக்கையுடன் ''இயேசுவில் துயில்கின்ற'' (1 தெச 4:14) கிறிஸ்தவன், தான் உயிர்த்தெழுந்து வாழ்விற்குத் திரும்புகின்ற நாளைப்பற்றிய நம்பிக்கையுடன் கூடிய கனவுடன் இரவு காலத் துயிலுக்குச் செல்கிறான் (தானி 12:13).

2. இறைவனுடைய சந்திப்பின் நேரம்:- ஒருவேளை உறங்கும் மனிதன் இனியும் சுய உணர்வு இல்லாமலும் இருக்கின்ற காரணத்தினால் உறக்கத்தின் நேரமானது இறைவனது வருகைக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. இதற்குரிய காரணங்களை நிர்ணயிப்பது கடினம். இவ்வாறு தமது சித்தத்திற்கு ஏற்றவாறு செயலாற்ற, தான் தனிமையாக இருப்பதை அறிகின்ற ஆதாமின்மீது அவருக்கென ஒரு பெண்ணை உருவாக்குவதற்கென, இறைவன் ஒருவித பரவசமான ஆழ்ந்த உறக்கத்தை உண்டாக்குகிறார் (ஆதி 2:2). கலக்கமுற்றிருக்கும் ஆபிரகாமுடனான தமது உடன்படிக்கையை முத்திரையிடவும் அவர் மீது உறக்கத்தை உண்டாக்குகிறார் (ஆதி 15:2.12). பின்னர்க் காரிருளில் இறை நெருப்பு வெளிப்படுகின்றது (15:17). இறைவன் தாம் தேர்ந்து கொண்டவர்களுக்குக் கனவில் தமது மறைபொருளான பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். தமது பிரசன்னத்தை யாக்கோபுவிற்கும் (ஆதி 28:11-19), தமது மறைபொருளான திட்டங்களை இரு யோசேப்புகளுக்கும் (ஆதி 37:5 தொ.9; மத் 1:20-25; 2:13-14.19-23) வெளிப்படுத்துகிறார். இத்தகைய வெளிப்பாடானது அதனால் பயன்பெறுபவர்களை இறைவாக்கினர் போல் ஆக்குகிறது (எண் 12:6; உப 13:2;

*1 சாமு 28:6)*. வெளிப்பாட்டு நூல்கள் இதை விரும்பிப் பயன்படுத்துகின்றன (*தானி 2:4*). இறுதிக்காலத்தின் அடையாளமாக இது வாக்களிக்கப்படவில்லையா? (*யோவா 3:1; அ.ப. 2:17-18*). ''கருவுற்றவளின் கனவுகளுடன்'' (*சீரா 34:1-8*) குழப்பப்படாமலிருப்பதற்கு இது முழுமுனைப்புடன் சோதிக்கப்பட வேண்டும் (*எரே 23:25-26; 29:8*)

II. மனிதனின் மீதான காரிருள்:- இறைவனின் படைப்பான இரவே இடர் எச்சரிக்கை மற்றும் தீயசக்திகளின் நேரமாகவும் உள்ளது. உறக்கத்தில் கொடிய இரவு விலங்குகள் தோன்றலாம். அது குற்றமுள்ள இநயத்தைச் சுட்டலாம்.

தனது இதயத்தில் பெரும் திட்டங்களைக் கொண்டிருப்பவன் தனது கண்களுக்கு ஓய்வளிப்பதில்லை (*சங் 132:3 தொ; பழ 6:4*). இதற்கு மாறாகப் படுக்கையிலிருந்து எழாத சோம்பேறி வறுமைக்கு உட்பட்டு இருக்கிறான் (*பழ 6:60-11; 20:13; 26:14*). இன்னும் அதிகப் பயங்கரமானவை பொறுப்பற்ற செயல்களுக்கு நடத்திச் செல்கின்ற குடியினால் விளையும் உறக்கமும் (*ஆதி 9:21-24; 19:31-38*) அல்லது பெண்களின் அன்பால் விளையும் உறக்கமும் ஆகும். இவ்வாறு சாம்சனின் வலிமையானது தெலீலாவிடம் சரணடைந்தது (*நீதி 16:31-21*).

உறக்கமானது குற்றமுள்ள மனநிலையைச் கட்டக்கூடியது என்பதால் தவறின் விளைவைவிடப் பெரியதாக இருக்கக்கூடும். யோனாவின் உறக்கம் இத்தகையதே (*யோனா 1:5*). இறைவாக்கினர் எலியா சூரைச் செடியின் அடியில் படுத்துறங்கச் செல்வது நம்பிக்கையிழந்ததின் விளைவாகும் (*1 அர 19:4-8*). அப்போது மனிதன் பாவத்திற்குக் கைவிடப் பட்டுவிட்டான் என்பதை உறக்கம் எடுத்துக் காட்டுகிறது. யாவேயின் சினத்தின் கிண்ணத்தை வெறுமையாக்கியபின், அவன் குடிமயக்கநிலையில் தள்ளாடுகிறான் (*எரே 25:16; ஏச 51:17*). இயேசு கெதுசமனியில் செபிக்கும்போது சீடர்களை ஆழ்த்துகின்ற உறக்கமானது (*மாற் 14:34.37:40 இணை*) நெருங்கிவரும் நேரத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை மற்றும் இயேசுவிடமிருந்து தங்களைத் தாங்களே பிரித்துக் கொள்கிறோம் என்பதை அறியவில்லை என்பதைக் குறிப்பிடுகிறது. இதன் காரணமாக மீட்புப்பணியில் தாம் முற்றிலும் தனிமைப் பட்டவராக இருக்க வேண்டும் என்பதை இயேசு உணர்கிறார். இவ்வாறு பாவத்தில் தங்களைப் புதைத்துக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இயேசு உறக்கத்தை அனுமதிக்கிறார்.

III. பாவம் மற்றும் மரணத்தின் உறக்கத்திலிருந்து எழுதல்:- மேலும் உறக்கமானது பாவம் நடத்திச் செல்கின்ற மரண நிலையினைக் குறிப்பிடுகிறது. அதிலிருந்து எழுவதென்பது மனம்மாறி வாழ்விற்குத் திரும்புவதன் அடையாளமாகும்.

1. ''விழித்திரு'':- இயேசு தம்முடைய உறங்கும் சீடர்களை நோக்கி ''விழித்திருங்கள்'' என்று கூறுகிறார். இறைவன் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டதால், இறைவனைச் சார்ந்திருப்பதற்கு இஸ்ராயேல் மக்களில் ஒருவனும் விழித்திருக்கப்போவதில்லை என்பதை இயேசுவுக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இறைவாக்கினர் தெளிவுபடுத்திவிட்டனர் (*ஏச 64:6*). ஆனால், இறை அருளானது எழும் நேரத்தை விரைவுபடுத்தவுள்ளது; ''விழித்தெழு! எருசலேமே எழுந்திரு'' (*ஏச 51:17-52:1*). இது உணர்ச்சியற்ற நிலையிருந்து எழும் நேரமாகும். சினத்தின் கிண்ணமானது அடிவரை வெறுமையாக்கப்பட்டுள்ளது. இறைவனே தமது மக்களை அவர்களின் திகைப்பினின்று விடுவிப்பார். புனித நகரின் இவ்வெழுதலானது மெய்யான உயிர்த்தெழுதலாகும். புழுதியில் வாழ்வோர் அவர்களாகவே விழித்தெழுவர் (*ஏச 26:19*). தானியேலின் வெளிப்பாட்டில் இவ்வுருவகமானது உண்மையாகும்: ''மண்ணில் உறங்குகிற பலர் விழித்தெழுவர்'' (*தானி 12:2*). ஆகவே நீதிமான் மரணத்தில்

உறங்குவதற்கு அஞ்சக்கூடாது (சங் 13:14). ஏனெனில் இறைவனே மரணத்திற்குத் தலைவனாய் இருக்கிறார். இயேசுவை எழுப்புவதின் மூலம் அவர் இதனைக் காட்டுவார்.

ஆனாலும் இவ்வுயிர்ப்பிற்குத் தயாரிக்க முதலில் உண்மையான மனமாற்றத்தின் மூலம் இதயத்தைத் தட்டியெழுப்புவது அவசியம். உன்னத சங்கீதத்தில் உறங்குதல் மற்றும் துயிலெழுதல் என்னும் உருவகங்களின் மூலம் சித்தரிக்கப்படுவது இம்மனமாற்றத்தின் உரையாடலே. பிரமாணிக்கமற்ற மணமகளின் விழிதெழுதலானது திடீரென்று இருக்கக்கூடாது. ''அன்புடையாளை எழுப்பாதீர், தானே விழிக்கும்வரை தீட்டியெழுப்பாதீர்'' (உ.ச. 2:7; 3:5; 8:4). பாலைவனத்திற்குக் கடத்திச்செல்லப்பட்ட மணமகளின் இதயத்தை இந்த நல்லின்பமானது படிப்படியாக வெற்றி கொள்ளும். ''நான் உறங்குகிறேன், ஆனால் என் நெஞ்சமோ விழித்திருக்கிறது'' (சங் 5:2) என்று அவள் கூறும்படிக்கு, இறைவன் அவளிடம் பேசியுள்ளார் (ஓசே 2:16; ஏச 40:2). அன்பானது இன்னும் மிக்க வலிமையுள்ளதாக இல்லை. ஆயினும், விழித்தெழுந்தபின்னர், மணமகள் பயனற்ற பொருட்களால் தன்னையே தொல்லைப்படுத்திக்கொள்கிறாள். வந்துள்ள மணமகனைத் திரும்பச் செல்வதற்கும் அனுமதிக்கிறாள். அவள் விழித்திருப்பது அவளுக்கு நல்லது. ஆனால் அவளது விழித்திருத்தல் இறைவனின் நேரத்தைத் துரிதப்படுத்த முடியாது (ஏச 26:9). மணமகனே இறுதியாக மணமகளைத் தட்டியெழுப்புவார் (உ.ச. 8:5). மனமாற்றம் என்பது இறைவனின் செயலாகவே உள்ளது.

2. அவர்களின் உறக்கத்திலிருந்து எழுப்பப்படுதல்:- உறங்குவதற்கெனச் சுதந்தரமாகச் சென்ற கல்லறையினின்று எழுவதற்கு முன்னர், இயேசு, மரணத்தின் மீதும் அதன் சாயலாகிய உறக்கத்தின் மீதும் தமது ஆதிக்கத்தை அடையாளங்களால் வெளிப்படுத்துகின்றார். புயலின்போது தமது உறக்கத்தினால் தொல்லைப்படுத்தப்படுவதற்குத் தமது சீடர்களை அவர் அனுமதிக்கிறார் (மாற் 4:37-41). ''ஆண்டவரே எழுந்திருங்கள்'' (சங் 44:24; 78:65; ஏச 51:9) என்னும் சங்கீத ஆசிரியர்களின் துணிவான செபத்தை அவர்கள் மீண்டும் உரைக்க வேண்டுமென அவர் விரும்பியது போன்று இது அமைந்துள்ளது. உண்மையில் மரணத்தின் மீது கொண்டிருந்தது போல் அவர் கடலின்மீது அச்சம் கொண்டிருக்கவில்லை. தங்களது உறக்கத்தினின்று எழுமாறு கட்டளையிடுவதன் மூலம் அவர் யாயீரின் மகளையும் (மத் 9:24), தமது நண்பன் லாசரையும் (யோவா 11;11) எழுப்புகிறார். இவ்வாறு தமது உயிர்ப்பை முன்னடையாளங்களால் உணர்த்தினார். இவ்வுயிர்ப்பில் திருமுழுக்குப் பெற்றோர் மறைபொருளான விதத்தில் ஒன்றுபடுகின்றனர். ''தூங்குபவனே எழுந்திரு, இறந்தோரினின்று எழுந்துநில். கிறிஸ்து உன்மேல் ஒளிர்ந்தெழுவார்'' (எபே 5:14). விசுவாசி இனி ஒரு போதும் இரவில் வாழ்பவர் அல்லர்''. அவன் இனித் தூங்குவதில்லை'' (1 தெச 5:6-7) ஏனெனில் பாவத்துடனும் இரவின் தீமைகளுடனும் நிறைவேற்ற வேண்டியது எதுவும் இனி அவரிடம் இல்லை. உறங்காமல் அவர் தமது தலைவனின் வருகையை எதிர்பார்த்து விழித்திருக்கிறார் (மாற் 13:36). மணமகன் வருவது தாமதமாகும்போது, அவர் விவேகமுள்ள கன்னியரைப்போல உறங்கச் சென்றாலும், தமது விளக்கை எண்ணெய் நிரம்பியதாகக் கொண்டுள்ளார் (மத் 25:1-13). அப்போது உன்னத சங்கீதத்தினுடைய மணமகளின் ''நான் உறங்குகிறேன். ஆனால் என் நெஞ்சம் விழித்திருக்கிறது'' என்ற வாக்கானது புதிய பொருளைப் பெறுகிறது. ஏனெனில் அந்நாளானது ஏற்கனவே இரவின் ஆழத்தில் ஒளி வீசுகின்றது.

**உறவினர்** (Cousin - தாய் தந்தையரின் சகோதரி சகோதரர்களின் பிள்ளைகள்)

'உன் மாமா மகன்', ''உன் தந்தையின் சகோதரன் மகன்'' என்ற சொற்றொடர்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. இவர்கள் உறவினர் எனப்பட்டனர். பொருட்கள் விற்பதிலும் வாங்குவதிலும், சிறப்பாகத் திருமணத்திலும் ஓர் உறவினனுக்குச் சில கடமைக

ளும், உரிமைகளுமுண்டு. எரேமியாவின் உறவினர் கனமேல் அனாத்தோத்திலிருந்து சிறு நிலத்தை வாங்கும்படி எரேமியாவைக் கேட்டுக் கொண்டார் (எரே 32:7-9.12). உறவினர்களுக்கிடையே, சிறப்பாக முதல்கால் உறவினர்களுக்கிடையே திருமணமானது சாதாரணமாக நடைபெற்றது (ஆதி 24:15; 28:2; 2 9:10.19; 36:3). தங்கள் சொத்து தங்கள் கோத்திரத்திலேயே இருக்க விரும்பி செலொபகாத்தின் புதல்விகள் தங்கள் தந்தையின் சகோதரனின் புதல்வர்களையே மணந்து கொண்டார்கள் (எண் 36:11). எலயாசாரின் புதல்விகள், தங்கள் உறவினர்களான கீசின் புதல்வர்களை மணந்தார்கள் (1 நாள் 23:21-22). தகாத புணர்ச்சி பற்றிய சட்டம், ஒரு மனிதனுக்கு நெருங்கிய உறவுள்ள பெண்களைப் பட்டியல்படுத்தினாலும் மேற்கூறப்பட்ட உறவுமுறையை விட்டுவிடுகிறது (லேவி 18:6-18).

இயேசுவின் சகோதரர் சகோதரிகளைப் பற்றிக் குறிக்கும் புதிய ஏற்பாட்டு வாசகங்களில், இயேசுவின் உறவினர் என்று கொள்வது சாலச் சிறந்தது (மத் 13:55 இணை; மாற் 6:3; யோவா 2:12; 7:5; 1 கொரி 9:4; 15:7). உண்மைக்கும் ஒத்ததாகும். காண்க: ஆண்டவரின் சகோதரர்கள்.

**உறுதி பூசுதல்** (CONFIRMATION)

இந்தச்சடங்கின்தொடக்கம்அ.ப.8:16-17-இல் காணப்பட வேண்டும். சமாரியர்கள் பிலிப்புவிடம் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலர்களான பேதுருவும் யோவானும் கைகள் விரிக்கவே அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். யோவானின் ஞானஸ்நானம் மட்டுமே வாங்கியிருந்த சிலர் மீது பவுல் கைகளை விரிக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் (அ.ப. 19:1-7). புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்தின் போதே தூய ஆவியைப் பெறுவதை நாம் காண்கிறோம் (அ.ப. 2:38). கைகளை விரித்தல் கிறிஸ்தவத் திருமுழுக்கின் ஒரு அங்கமாகத் தோன்றவில்லை.

இந்தத் திருவருட்சாதனத்தின் தொடக்கம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. கீழ்ச் சொல்லப்படுவது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. நற்செய்தி சமாரியாவில் அறிவிக்கப்பட்டபோதுதான் முதன்முதலாக அது புறவினத்தாரிடையே பரவுகிறது. அப்போஸ்தலர்களின் ஆடம்பரத்தலையீடு, ஆண்டவரின் கட்டளையை (அ.ப.. 1:8) நிறைவேற்றுவதில் ஒரு முக்கியக் கட்டம் வந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது. புதிய விசுவாசிகள் அப்போஸ்தலிகத் திருச்சபையிலே முழு அங்கத்தினர் ஆகின்றனர். அதுபோலவே எபேசில் நடந்த நிகழ்ச்சியும் ''சீடர்கள்'' இப்போது திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவர்களாயினர் என்பதை வலியுறுத்துகிறது. இந்தப் பொருளில் இவ்விரு நிகழ்ச்சிகளும் உறுதிபூசுதலுக்கு முன்னோடியாகக் கருதப்படலாம்.

பொதுவாக வெவ்வேறு வயதில் இது அளிக்கப்பட்டது; (கிறிஸ்தவ விசுவாசத்தில் அடிப்படை உண்மைகளில் போதகம் முடிந்தபின்) திருச்சபையில் முழு அங்கத்தினராவதைக் குறிக்கும் சடங்காக மாறியது. கத்தோலிக்கத் திருச்சபையின் வழக்கில் உறுதி பூசுதல் ஆயரால் வழங்கப்படுகிறது. அதில் எண்ணெய் பூசும் சடங்கும் அடங்கும். 1971-இலிருந்து திருப்பலியிலேயே இச்சடங்கு கொண்டாடப்படுகிறது. பொதுவாக, வயது வந்தவருக்குத் திருமுழுக்கு அளிக்கும் அல்லது திருச்சபையின் மற்றொரு பிரிவிலிருந்து ஒருவரைத் திருச்சபையில் ஏற்கும்போது குருவால் உறுதிபூசுதல் வழங்கப்படுகிறது.

**உறுப்பினர்கள்** (MEMBERS)

இச்சொல் புதிய ஏற்பாட்டில் மட்டுமே முக்கியத்துவம் உடைய சொல். இது உடலையும், உறுப்புகளையும் குறிப்பதோடு மட்டுமல்லாமல் (மத் 5:29; உரோ 6:13; 7:23; 12:4; 1 கொரி 12:12; யாக் 3:6; 4:1), திருச்சபையின் உறுப்பினர்களையும் குறிக்கின்றது (உரோ 12:5; 1 கொரி 12:27; எபே 4:25; 5:36). இந்த இரண்டு கருத்துகளும் முரண்பாடுகள் உள்ளவை அல்ல; ஏனெனில் திருச்சபை இயேசுவின் உடலென்று கருதப்படுகிறது. 1

கொரி 6:15-இல் ''நம் உடல்கள்'' இயேசுவின் உடலின் அங்கத்தினர்களாகக் கருதப்படுகிறது.

**உற்றுக்கேள் (LISTEN)**

இறைவாக்கு மனிதனுக்கு அறிவிக்கப்படுதலே விவிலிய வெளிப்பாடாகும். மையமாகும். கிரேக்கப் புதிர்ச் சமயங்களும், கீழ்த்திசை மெய் அறிவு மதங்களும், இறைவனுக்கும், மனிதனுக்குமுள்ள தொடர்பைக் காட்சி வழியாக விளக்குகின்றன. ஆனால் விவிலியத்தில், ''கேட்பதால்தான் விசுவாசம் உண்டாகிறது'' (உரோ 10:17).

1. மனிதன் இறைவனுக்குச் செவிசாய்க்க வேண்டும்:-

அ) ''கேளுங்கள்'' என்று இறைவாக்கினர் இறைவனின் அதிகாரத்துடன் போதிக்கின்றனர். (ஆமோ 3:1; எரே 7:2). ''கவனித்துக் கேள்'' என்று தன் அனுபவ முதிர்ச்சியிலிருந்தும், திருச்சட்டத்தைப் பற்றித் தான் அறிந்ததிலிருந்தும் ஞானி அறிவுரை வழங்குகின்றார் (பழ 1:8). இறைவனின் திருஉள்ளத்தை உணர்ந்தறிய, ''இஸ்ராயேலே, உற்றுக்கேள்'' என்று பக்தியுள்ள இஸ்ராயேலன் தினமும் சொல்லிக் கொள்கிறான் (உப 6:4; மாற் 12:29). ''கேளுங்கள்'' என்று இயேசுவும் போதிக்கலானார் (மாற் 4:3.9 இணை).

உண்மை என்பதை எபிரேயர் புரிந்து கொண்டதிலிருந்து, ''கேள்'', ''இறைவனின் வார்த்தையை ஏற்றுக் கொள்'', என்ற சொற்கள் காதால் கேட்பதை மட்டும் குறிப்பனவல்ல; மனத்தால் ஏற்றுக் கொள்ளுதல் (அ.ப. 16:4), கேட்டபடி நடத்தல் அதாவது கீழ்ப்படிதல் (மத் 7:24 தொ) என்றும் பொருள்படும். இறைவார்த்தையைக் கேட்பவர் பணிந்து விசுவாசிக்கக் கடமைப்பட்டுள்ளார் (உரோ 1:5; 10:14 தொ).

ஆ) ஆனால் மனிதன் ''இறைவாக்குக்குச் செவிசாய்க்க மறுக்கிறான்'' (உப 18:16. 19). இதுவே அவனது அழிவிற்குக் காரணமுமாகும். மனிதன் இறைவனின் அழைப்பிற்குச் செவிடனாகின்றான். இதுவே அவனது விருத்தசேதன மில்லாத உள்ளத்திற்கும் செவிக்கும் காரணமாகும் (எரே 6:19; 9:25; அ.ப. 7:51). யூத மக்கள் கடவுளின் வார்த்தைக்குச் செவிசாய்க்க மறுப்பதைக் கிறிஸ்துவும் கண்டிக்கிறார்; ''நான் சொல்வதைக் கேட்க உங்களால் முடியவில்லை. இறைவனால் பிறந்தவன் அவருடைய சொல்லுக்குச் செவிமடுக்கிறான். நீங்களோ இறைவனால் பிறக்கவில்லை. ஆதலால் செவிமடுப்பதில்லை'' (யோவா 8:43.47).

''ஆண்டவர் என் காதுகளைத் திறந்தார்'' (ஏச 50:5; 1 சாமு 9:15; யோபு 36:10). தமது அடியார்களின் காதுகளை, இறைவனால்தான் திறக்க முடியும். ''என் காதுகளைத் திறந்தருளும்; அதனால் நான் கீழ்ப்படிவேனாக'' (சங் 40:7 தொ). மீட்பின் காலத்தில் ''செவிடர் கேட்பர்'' அவர்கள் இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பர் என்பதைக் கிறிஸ்துவின் புதுமைகள் உறுதிப்படுத்துகின்றன (ஏச 29:18; 35:5; 42:18 தொ; 43:8; மத் 11:5). மேகத்திலிருந்து எழுந்த குரலொலி ''இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயங்கள்'' என்றது (மத் 17:5 இணை). மரியாள் இறைவனின் வார்த்தையை ''உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்தாள்'' (லூக் 2:19.51). ''கடவுளின் வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் அதிலும் பேறுபெற்றவர்கள்''. (லூக் 11:28) என்று தாயின் மகத்துவத்தை இயேசு வெளிப்படுத்தி அவளைப் பேறுடையவளாக்கினார்.

2. மனிதனுக்கு இறைவன் செவிசாய்க்கின்றார்:-

தனது குரலுக்குச் செவிசாய்க்குமாறு மனிதன் இறைவனை வேண்டுகிறான். தான் கேட்பதை இறைவன் அருளவேண்டும் என்பதே அவனது ஏக்கம். நீதியற்றோர் செபங்களையும், பாவம் புரிவோர் செபங்களையும் இறைவன் கேட்பதில்லை (ஏச 1:15; மீக் 3:4; யோவா 9:31). ஆனால், ஏழைகள், விதவைகள், அனாதைகள், தாழ்ச்சியுள்ளோர், சிறையில் துன்புறுவோர் ஆகிய இவர்களின் குர

னுக்கே இறைவன் செவி சாய்க்கின்றார் *(யாத் 22:22-26; சங் 10:17; 102:21; யாக் 5:4).* நீதிமான்களுக்கும், தம்மீது பற்றுள்ளோருக் கும் தம் திருவுளப்படி நடப்பவர்களுக்கும், *(சங் 34:16.18; யோவா 9:31; 1 பேதுரு 3:12).* தமது திருவுளத்திற்கு ஏற்ப மன்றாடுபவர்க ளுக்கும் *(11 யோவா 5:14 தொ)* இறைவன் செவிசாய்க்கிறார். தமது திருமகன் இயேசு வுக்கு எப்போதும் செவிசாய்ப்பதால்தான் இறைவன் நமக்குச் செவிசாய்க்கின்றார் *(யோவா 11:14 தொ).* ஏனெனில் இயேசு மூலமாகவே, கிறிஸ்தவர்களின் செபம் எப் போதும் பரிந்துரைக்கப்படுகின்றது; இறை வனை நோக்கி எழுகின்றது.

**உன்னத** (SONG OF SONG)

*காண்க: பேரின்பப் பாடல்*

**உன்னதர்** (MOST HIGH)

''உயர்த்தப்பட்டவர்'' என்ற பொருளு டைய எலியோன் என்ற எபிரேயச் சொல் லின் வழக்கமான மொழி பெயர்ப்பாகும். எலியோன் என்பது கடவுள்களின் வானகத் நந்தையான ஏவின் மேற்குச் செமத்தியப் பெயராகும். இதை இஸ்ராயேல் எடுத்து, யாவே விசுவாசத்திற்கேற்ப நயப்படுத்துகின் றனர். மிகப் பழைய எபிரேயப் பாடல்களில் இப்பெயர் வருகிறது *(எண் 24:16; உபா 32:8; 2 சாமு 22:14; சங் 18:13; 21:7; 46:4; 47:2; 91:2;...).* புதிய ஏற்பாட்டில் அ.ப.7:48-இல் வருகிறது. உன்னதராகிய இறைவன் (ஏல் எலியோன்) என்ற வடிவில் சில இடங்களில் காணப்படுகிறது *(ஆதி 14:18-20,22; மாற் 5:7).*

**உன்னி** (UNNI யாவே பதில் கூறினார்)

1. தாவீது உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வந்த போது பாட கர் குழுவில் இடம் பெற்றிருந்த ஒரு லேவி யர் *(1 நாள் 15:18-20).*

2. ஏசுவா தலைமைக் குருவாயிருந்த போது திருப்பணி வேலையில் அவருக்கு உதவியவர்களில் உன்னியும் அவரது சகோத ரர் பக்புக்கியாவும் அடங்குவர். இவர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தலிலிருந்து செரு பாபேலோடு திரும்பிய லேவியர்கள் *(நெக 12:19).* எழுபது நூல் இப்பெயரை விட்டுவி டுகிறது.

# ஊ

**ஊக்கால்** (UCAL)

பழமொழிகள் ஆகமத்தில் வரும் பழமொழிகளின் ஒரு தொகுப்பிற்குக் கொடுத்துள்ள தலைப்பில் வரும் ஒரு பெயர் (பழ 30:1). ஆகுர் தனது சிந்தனைகளை வெளிப்படுத்திய அவருடைய இரு சீடர்கள் அல்லது சமகாலத்தவருள் ஒருவர். கிரேக்க மொழி பெயர்ப்பிலும் வுல்கத்தா மொழி பெயர்ப்பிலும் இப்பெயர் கொடுக்கப்படவில்லை. கத்தோலிக்கத் தமிழ் மொழி பெயர்ப்பிலும் இப்பெயர் இல்லை. இங்கு எபிரேய வாசகம் தெளிவாக இல்லை. 30:4-இல் வரும் ''நீதான் எல்லாவற்றையும் அறிந்தவனாயிற்றே'' என்ற கூற்று, ஊக்கால் ஒரு ஆளின் பெயராக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**ஊசா** (UZZAH - பலம், வலிமை)

1. அபினதாபின் மகன். அபினதாபின் வீட்டில் உடன்படிக்கைப் பேழை இருபது ஆண்டுகள்தங்கியிருந்தது.தாவீதுகிரியத்து-எயாரிமிலிருந்த அபினதாபின் வீட்டிலிருந்து உடன்படிக்கைப் பேழையை வண்டியில் எருசலேமுக்குக் கொண்டுவந்தபோது வண்டியை ஒட்டி வந்தவர்களில் ஒருவர் ஆவார். மாடுகள் இடறியதால் பேழை சாய்வது போல் தள்ளாடியது. அதனைப் பிடிப்பதற்காகக் கைநீட்டிய ஊசா திடீரென்று மரித்தார். இறைப் பேழையின் புனிதத்தன்மையைக் கெடுத்து விட்டதற்காக இறைவன் அவரைக் கொன்று விட்டதாக மக்கள் நம்பினர் (1 நாள் 13:7-10; 15:13; 2 சாமு 6:1-7). இவருக்கு ஏற்பட்ட முடிவைக் கண்ட தாவீது பீதியடைந்து பேழையைத் தன்வீட்டருகில் கொண்டு செல்ல அஞ்சி ஓபேது-ஏதோமின் வீட்டிலேயே மூன்று மாதங்கள் வைத்துவிட்டார். ஊசா இறந்த இடத்திற்கு ''ஊசாவின் வீழ்ச்சி'' என்று பொருள்படும் ''பேரேசு-ஊசா'' என்ற பெயர் வழங்கப்பட்டது.

2. லேவியக் குடும்பத்தைச் சேர்ந்த மெராரீயின் வழி வந்தவர். இவரது தந்தையின் பெயர் சிமயி. இவருக்குச் சிமயா என்றொரு மகனும் உண்டு (1 நாள் 6:29-30).

**ஊசாய்** (UZAI - யாவே கேட்டருளினார்)

நெகமியா எருசலேம் சுவரைக் கட்டியெழுப்பிய போது சிறைமுற்றத்தில் நின்று கொண்டிருந்த கோபுரத்தின் வளைவிற்கு எதிரே இருந்த பாகத்தைக் கட்டியெழுப்பிய பாலாவின் தந்தை ஆவார் (நெக 3:25).

**ஊசால்** (UZAL - அலைந்து திரிபவர்) - ஆள்

யொக்திானின் ஒரு மகனும் சேமின் வழித்தோன்றலுமாவார் (ஆதி 10:27; 1 நாள் 1:21). இவரது சந்ததியினர் ஆசாலைச் (ஏமெனின் தலைநகரான இக்கால சானா) சுற்றி வாழ்ந்த அராபிய இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

**ஊசால்** (UZAL - அலைந்து திரிபவர்) - இடம்

ஊசால் என்ற பெயரில் சீரியாவில் ஒரு நகரம் இருந்தது. இது அவுசால் என்ற பெயரின் திரிபாகும். இன்று ஏமெனின் தலைநகராக உள்ள சானாவின் பழைய பெயரே ஊசால் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் கிளாசேர் என்பவர் தமது ஆய்வின் முடிவில் சானாவின் பழைய பெயர் மாறி அதற்குச் சானா என்ற பெயர் ''அழகுள்ள'' என்ற பொருளில் அபிசினியர்களால் சூட்டப்பட்டது என்றும், ஊசால் என்பது மெதினாவின் அருகில் இருந்த அசல்லா என்ற நகரமே என்றும், அசீரிய மன்னன் அசூர்பானிப்பால் அரேபியாமீது படையெடுத்து வந்தபோது இங்கும் வந்தார் என்றும், கருதுகின்றார். இதன்படி இன்று அசல்லா நகரமே ஊசாலாவாக இருந்திருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு எச 27:19 ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. சில வாசகங்களின்படி ஊசால் திராட்சை ரசத்திற்குப் பெயர் பெற்றதாகத் தெரிகிறது.

**ஊசி** (UZZI - யாவே என் வலிமை) - ஆள்

1. ஆரோன் வழிவந்த எலயாசர் குடும்பத்தில் பிறந்த ஒரு குரு. புக்கியின் மகன்

செராக்கியாவின் தந்தை (1 நாள் 6:5-6. 51). எஸ்ராவின் மூதாதையர் (எஸ் 7:4).

2. இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த தோலாவின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:2-3).

3. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேம் திரும்பிய குடும்பங்களில் பென்யாமின் குடும்பத்தில் இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது (1 நாள் 7:7). பெலாவின் புதல்வர்களில் ஒருவர்.

4. பாபிலோனின் நாடு கடத்தலிலிருந்து திரும்பி எருசலேமில் தங்கள் சொந்த உடைமையில் முதலாவதாகக் குடியேறிய பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவரான ஏலாவின் தந்தை (1 நாள் 9:8).

5. பினியின் புதல்வர்களில் ஒருவரும் ஆசாப்பின் வழித் தோன்றலுமாவார். நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் லேவியர்களின் மேற்பார்வையாளராக இருந்தார் (நெக 11:22). மீக்காவின் மகனான மத்தனியாவின் கொள்ளுப்பேரன். ஆகவே மிகவும் பிற்காலத்தியவர் (11:17).

6. நாடு கடத்தலுக்குப்பின் யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்தபோது எதாயாவின் குரு வம்சத்தில் தலைவராக இருந்தவர் (நெக 12:19).

7. லேவியரின் தனி நபரையோ ஒரு குழுவையோ சிறப்பாக எருசலேம் நகர்ச் சுவர்கள் புனிதப்படுத்தப்பட்ட போது அவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட பாடகர் குழுவையோ குறிக்கும் (நெக 12:41)

**ஊசி (NEEDLE)**

பொருட்களைத் தோலினாலோ நூலினாலோ தைக்கப்பயன்படும் ஒரு கருவி. மேற்காசிய நாடுகளில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்தபோது பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஊசியிலிருந்து தற்போது பயன்படுத்துகின்ற ஊசி வரைக்கும் கண்டெடுத்தார்கள். பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஊசிகள் கி.மு.60-ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் எலும்பினால் செய்யப்பட்டிருந்தன. இவ்வூசிகள் அடிமுதல் நுனிவரை தட்டையாகவும், நுனியில் கூர்மையாகவும், மேல்பகுதியில் ஒரு துவாரத்துடனும் இருந்தன. கி.மு. 40-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எலும்பினால் செய்யப்பட்ட, இருபுறமும் மழுங்கின ஊசிகள் மெகிதோ என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள் துணிகள் தைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் நாம் எலும்பினால் செய்யப்பட்ட ஊசிகளைப் பார்ப்பது கிடையாது. மாறாக வெண்கலத்தால் செய்யப்பட்ட ஊசியைப் பார்க்கின்றோம். அவைகள் இப்போது செய்யப்படும் ஊசிகளைப் போன்று மேல்புறம் சிறிது தட்டையாகவும், துவாரத்தோடும் இருக்கும். கீழ்ப்புறம் சற்றுக் கூர்மையாக இருக்கும். சில ஊசிகள் துணிகளில் சிக்கிக் கொள்ளாமலிருக்க, தலையில் சிறிது வளையமாகவும் பின் போகப்போகச் சற்று வளைந்தும் காணப்படுகின்றன. அவைகளின் கனமும் தற்போதுள்ள ஊசியின் கனத்தில் இருக்கின்றது. ''தேல் ஏன்-நாஸ்பே'' என்ற இடத்தில் துணி தைக்கின்ற சிறிய ஊசி முதல் தடித்த ஊசிவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவைகள் சுமார் $1^1/_2$ அங்குலம் முதல் $5^1/_2$ அங்குலம் வரை இருக்கும்.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் வெண்கல ஊசியோடு, எலும்பினால் செய்யப்பட்ட ஊசியும் குறிப்பாகத் தந்தங்களால் செய்யப்பட்ட ஊசியும் காணப்படுகின்றன. இயேசு ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் பணக்காரர்கள் இறையரசில் நுழைவது என்று கூறுகின்றார். சில பிற்காலக் கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் ஒட்டகத்திற்குப் பதிலாக, கயிறு என்ற சொல்லைப் பயன்படுத்தி, இயேசுவின் கூற்றின் கடுமையைக் குறைக்க முயன்றுள்ளன. பிற்கால விவிலிய அறிஞர்கள், ''ஊசியின் காது'' என்றதொரு வாயி

லில் எவ்வாறு ஒட்டகம் கடினப்பட்டு நுழைகின்றதோ அப்படித்தான் பணக்காரர்கள் நிலையும் என்று விளக்கம் தருகின்றார்கள். இரண்டும் அவ்வளவு பொருத்தமாக இல்லை.

**ஊசியா** (UZZIAH - யாவே என் வலிமை ஆவார்)

*1.* யூதாவின் ஒன்பதாவது அரசன் (கி.மு. 783-743); இவர் அமசியாவின் மகனும் வாரிசுமாவார். ஊசியா என்பது அவரது அரசப் பெயராகும். இது 2 அரச 15உ13.30.32.34-இலும் 2 நாள் 26:1-27:2-முழுவதிலும் பயன்படுத்தப்படுகிறது. இவரது சொந்தப் பெயர் ''யாவே உதவி செய்தார்'' என்று பொருள்படும் அசரியா ஆகும். இதையே அரசராகம ஆசிரியர் விரும்பிப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது (2 அரச 14:21; 15:1.6-8.17.23.27). இருபெயர்களில் எபிரேய எழுத்துக்கள் ஒரு மெய்யெழுத்திலேயே வேறுபடுகின்றன. அவற்றின் வேர்ச்சொல்லின்பொருள்கள் ஒன்றையொன்று உணர்த்த வல்லன. இந்தப் பெயர் வேறுபாட்டுக்கு, இவர் அனுபவித்த தொழுநோயில் விளக்கம் காணமுயலலாம். இந்நோய் கண்டபின் இவர் தன் அரச அலுவலைச் செய்ய முடியவில்லை. ஆகவே தனி வாழ்க்கைக்குப் பின் வாங்கினார். இவருக்குப்பதிலாக இவர் மகன் யோத்தாம் ஆட்சி செய்தார். இவரது அரசப் பெயருக்குப் பதிலாக இவரது சொந்தப் பெயரைப் பயன்படுத்தும் முயற்சியை வாசகச் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவர் ஆட்சிக்கு வந்தபொழுது 16 வயதினர். இவர் 52 வருடங்கள் ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. எருசலேமைச் சேர்ந்த எக்கோலியாதான் இவருடைய தாய் (2 அரச 15:2; 2 நாள் 26:3). இவருடைய தந்தையை நிராகரித்துக் கொன்ற ''யூதாவின் மக்கள் அனைவராலும்'' இவர் அரசனாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது (2 அரச 14:21; 15:2; 2 நாள் 26:1; காண்க 2 அரச 11:17).

இவர் 52 ஆண்டுகள் ஆட்சி செய்தார் என்பது இவர் இவருடைய தந்தை அமசியாவோடும் (15 ஆண்டுகள்) மகன் யோத்தாமோடும் (10 ஆண்டுகள்) கூட்டாட்சி செய்ததையும் உள்ளடக்கலாம். இந்த 52 ஆண்டு சரியான கணிப்பாக இல்லாதிருக்கலாம். அசீரியாவின் மூன்றாம் திகிலாத்துபிலேசரின் வரலாறு, கி.மு.842-க்குப்பின் இவர் காட்சியிலிருந்து மறைந்துவிட்டார் எனச்சுட்டுகிறது. ஆகவே இவர் 42 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம்.

இவருடைய நீண்ட ஆட்சியில் சிலவற்றைத்தான் அரசர்கள் நூல் ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளார்கள். ஆனால், நாளாகம ஆசிரியர், இவருடைய வீரச் செயல்களின் பட்டியலைப் பாதுகாத்திருக்கின்றார். இவை இவருடைய ஆட்சியில் யூதாவின் வலிமையையும் செல்வாக்கையும் விவரிக்கின்றன. இவை இறையியல் கண்ணோட்டத்தில் கொடுக்கப் பட்டிருந்தாலும், நம்பக்கூடியவை. இவர் தன்னுடைய தாத்தா யோவாசைப்போன்று (2 நாள் 24:2), செக்கரியா என்ற ஆசானை வைத்திருந்தார் (2 நாள் 26:5). இதனால் ஊசியா வலிமையானார்; வலிமையுடன் அகந்தையும் வந்தது; இதனால் யாவேக்குப் பிடிக்காத அரசரானார். இதன் விளைவாக இவர் தொழுநோயாளி ஆனார்.

இவர் மேற்கில் பெலிஸ்தியருடன் போரிட்டு வென்றதாக நாளாகமம் கூறுகின்றது (2 நாள் 26:6). காத்து, யபினே, அசுதோது ஆகியவற்றின் சுவர்களை இடித்து அழித்தார். பெலிஸ்தியாவைக் கடந்து செல்லும் வணிகச்சாலைகளைக் கண்காணிக்கப் பாதுகாக்கப் பட்ட நிலையங்களைக் கட்டினார். அரேபியாவிலிருந்து செல்லும் வணிகச் சாலைகளைக் கண்காணிக்க அரேபியர்கள் தங்கியிருந்த பெத்திராவையும் வென்றார் (2 நாள் 26:7-8). இவர்தான் அநேகமாக ஏலாத்தைக் கட்டினார் (2 அர 14:22; 2 நாள் 26:2). இவர் போர்களில் வெற்றிகரமாக இருந்ததால், இவருடைய புகழானது எகிப்திய எல்லைகளையும் அடைந்தது (2 நாள் 26:8). இவர் ஆட்சியில் விவசாயமும், கால்நடைகளும் செழிப்புடன் இருந்தன. கால்நடைகளுக்குப் பெரிய தண்ணீர்த் தொட்டி

களைக் கல்லில் வெட்டிவைத்தார். இவர் விவசாயத்தில் அதிக ஆர்வம் உடையவராக இருந்ததாகத் தெரிகின்றது. பொதுவாக இவர் ஆட்சியில் நாடு முழுவதும் செழுமை யுடன் இருந்தது.

இவர் படையையும் பெருக்கி, வீரர்களுக் குத் தேவையான படைக்கருவிகளைச் செய் வித்தார் (2 நாள் 26:11-14), படையின் எண் ணிக்கை நம்பத்தகுந்தவையல்ல.

ஏறக்குறைய கி.மு. 750-இல் இவருக்குத் தொழுநோய் கண்டது (1 நாள் 5:17). நாளா கம ஆசிரியன் கூற்றுப்படி ஊசியாவுக்கு வியாதி வர ஒரு பெரிய பாவம்தான் காரண மாக இருக்க வேண்டும். இவர் 'ஆலயத்தில் நுழைந்து தூபப்பீடத்தின் மேல் தூபம் காட் டத் துணிந்ததுதான், 'இவன்செய்த பெரிய பாவம்' என்று நாளாகம ஆசிரியர்கருதுகின் றார் (2 நாள் 26:16-20). அரசராகமம் இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இந்நோயின் விளைவாக இவரால் அரச காரியங்களை நிறைவேற்ற முடியவில்லை. இவர் ஒருதனி வீட்டில் தங்கியிருந்தார் (2 அரச 15:5; 2 நாள் 26:11). இது ஒரு தொற்று வியாதி என்று கருதப்பட்டதால் இவர் தள்ளி வைக்கப்படவில்லை; ஆனால் இந்த வியாதி யின் துன்பத்தினால் இவர் தன்னுடைய அரசாங்க அலுவல்களிலிருந்து ஓய்வு தரப் பட்டார் (2 அரச 15:5). இவர் 742-இல் இறக்கும் வரை இவருடைய மகன் யோத் தாம் பிரதிநிதியாக இருந்தார்.

இவர் தன்னுடைய மூதாதையரோடு அடக்கம் செய்யப்பட்டார் (2 நாள் 26:23; 2 அரச 15:7). 1931-இல் ஒலிவ மலையில் ஒரு செதுக்கப்பட்ட கற்பலகை கண்டு பிடிக் கப்பட்டது. இது மக்கபேயர் காலத்திற்குப் பிந்தியதாகத் தெரிகிறது. அதில் ''இங்கு யூதாவின் அரசரான ஊசியாவின் எலும்புகள் உள்ளன. திறக்காதே'' என்ற குறிப்பு இருந் தது.

பிற்காலத்தலைமுறைகளின் நினைவில் இவரது ஆட்சியின் மகிமையைச் சாலமோ னின் மகிமை மட்டுமே மிஞ்சியது என்று கருதினர். இக்காலத்தில் யூதாவின் ஆற்றல் உச்சநிலையை அடைந்தது எனலாம்.

2. லேவியர் கோத்திரத்தைச் சேர்ந்த கெகாத்தியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். சவு வின் தந்தையும் உரியேலின் மகனுமாவார் (1 நாள் 6:24).

3. யோனத்தானின் தந்தை. இவர் தாவீதின் சொத்துக்களுக்குக் கண்காணிப்பாளராய் இருந்த பன்னிருவருள் ஒருவர். நாட்டிலும், நகரங்களிலும், ஊர்களிலும் இருந்த கருவூ லங்களை மேற்பார்வையிடுதல் இவருடைய வேலையாக இருந்தது (1 நாள் 27:25).

4. எஸ்ரா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு. புறஇனப்பெண்களை மணந்தவருள் ஒருவர் (எஸ் 10:21).

5. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு எருசலேமில் வாழத்திரும்பி வந்த யூதா இனத்தைச் சேர்ந்த அத்தாயாவின் தந்தை (நெக 11:4).

6. சிமியோன் இனத்தைச் சேர்ந்தவர். மீக்காவின் மகன். பெத்தூலியா நகரின் நடு வர் (யூதித் 6:15).

**ஊசியேல்** (UZZIEL ''எல் (கடவுள்) என் வலிமையாயிருக்கிறார்'')

1. லேவியருடைய பேரன்; கெகாத்தினு டைய நான்கு புதல்வருள் ஒருவர். மோசேயி னுடையவும், ஆரோனுடையவும் மூதாதை யான அம்ராமின் சகோதரர்; கோராக்கின் மூதாதையரான இசாரின் சகோதரர் (யாத் 6:18.22; எண் 3:19; 1 நாள் 6:2.18; 23:12). இவர் மிசாவேல் எல்சாபான், சித்திரி ஆகி யோரின் தந்தையாவார் (யாத் 6:22). நாதாபு, அபிகு ஆகியோர் யாவே முன் புனிதமற்ற தீயைக் காண்பித்ததற்காகக் கொல்லப்பட்ட பின் அவர்களின் உடல்களை இம்மூவரும் தான் கூடாரத்திற்கு வெளியே தூக்கிச் சென்ற னர் (லேவி 10:4-5). ஊசியேல் லேவியர் குடும்பங்களில் ஒரு துணைப்பிரிவை ஏற்ப டுத்தினார் (யாத் 6:22; லேவி 10:4; எண் 3:19; 1 நாள் 6:18; 15:10; 23:20; 24:24). லேவியர்

குடும்பங்களின் இந்தத் துணைப்பிரிவினர் இரண்டு இடங்களில் ஊசியேலியர் என்று அழைக்கப்படுகிறார்கள் (எண் 3:27.29.31; 1 நாள் 26:23). தாவீது உடன்படிக்கையின் பெட்டகத்தைச் சீயோனுக்கு மாற்றியபோது அதைக் கொண்டு வந்த லேவியர்களுள் இவர்களும் இருந்தனர் (1 நாள் 15:10). ஆலயத்தில் ஆரம்பப்பணிகளைச் செய்தவர்களில் இவர்களும் இருந்தனர். (1 நாள் 23:12.20; 24:24).

2. அநேகமாக எசக்கியாவின் ஆட்சிக் காலத்தில் அமலேக்கியருக்கு எதிராகச் சேயிர் மலையில் தங்கள் நாட்டை விரிவுபடுத்துவதற்காகச் சிமியோனியர்கள் நடத்திய வெற்றிகரமான போரில் இருந்த தலைவர்களுள் இவரும் ஒருவர். ஈசியின் ஐந்து புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 4:41-43).

3. அடிமைத்தளையிலிருந்து நாடு திரும்பிய பொழுது வந்த பெலாவின் ஐந்து புதல்வர்களுள் ஒருவர். ஒரு பென்யாமின் குடும்பத்தின் தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 7:7).

4. அடிமைத்தளையிலிருந்து நாடு திரும்பிய பாடகர் குடும்பங்களில் ஏமானின் புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 25:4). 1 நாள் 25:18-இல் இவர் ஆசரேல் என்று அழைக்கப்படுகின்றார்.

5. எதுத்தூனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (2 நாள் 29:14). இவர் அரசன் எசக்கியாவின் சீர்திருத்தக் காலத்தில் ஆலயப்பணியை மீண்டும் அமைக்க உழைத்தவர்.

6. கார்கயாவின் மகன்; பொற்கொல்லர் சங்கத்தில் ஓர் அங்கத்தினர். எருசலேமின் ஆலய மதிலைக் கட்ட நெகமியாவுக்கு இவர் உதவி செய்தார் (நெக 3:8).

**ஊசு** (UZ - செழிப்பான) - ஆள்

1. ஆராமின் மகனும் சேமின் பேரனுமாவார் (ஆதி 10:23). 1 நாள் 1:17-இல் இவர் சேமின் மகன் என்று குறிக்கப்படுகிறார்.

2. மில்க்காவுக்கும் ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும் பிறந்த மகன் (ஆதி 22:21).

3. கோரியர் தலைவர் தீசானின் மகன் அல்லது வழித்தோன்றலாவார் (ஆதி 36:28; 1 நாள் 1:42). இப்பெயர் ஓர் இனத்தை அல்லது ஒரு சமூகக் குழுவைக் குறிக்கலாம்.

**ஊசு** (UZ - செழிப்பான) - இடம்

யோபுவின் நாடு (யோபு 1:1). இது எங்கு இருந்தது என்று துல்லியமாகக் கூறமுடியாது. அறிஞர்களின் கருத்துப்படி, சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள பாலைவனத்தில், ஒருவேளை ஏதோமுக்கு அருகில் (புல 4:21; காண் ஏரே 25:20; இது பெலிஸ்தியப் பகுதியோடு ஊசைத் தொடர்புபடுத்துவதாகத் தெரிகிறது) அல்லது வடக்கில் யோபுவின் மூன்று நண்பர்களின் ஊர்களின் பகுதியில் (யோபு 2:11) இருந்திருக்க வேண்டும். மற்றவர்கள், யோசிபசையும், கிறிஸ்தவ, முஸ்லீம் பாரம்பரியங்களையும் பின்பற்றி, தமஸ்குவுக்குத் தெற்கில் கவ்ரானில் ஒருவேளை ஆராமின் புதல்வன் குடியேறிய பகுதியில் இருந்ததாகக் கருதுவர் (ஆதி 10:23). இப்பகுதி பாலைவனத்தில் இருந்தாலும் (யோபு 1:15.17.19) பயிர் செய்யக்கூடிய பகுதிகளையும் (1:14), பெரும் நகர்களையும் (29:7) கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

**ஊட்டம்** (NOURISHMENT)

மற்ற உயிரினங்களைப் போலவே உயிர் வாழ்வதற்கு மனிதன் தனக்கு ஊட்டமளிக்கக் கடமைப்பட்டுள்ளான். சடப்பொருள்களைச் சார்ந்திருக்கும் இந்நிலை அவனது நிலையற்ற தன்மைக்கு அத்யாவசியமான அடையாளமாக உள்ளது. ஆனால் அதே சமயம், நிலைத்திருப்பவராகிய இறைவனால் ஊட்டமளிக்கும்படியான வேண்டுகோளாகவும் இது உள்ளது. ஆண்டவருடையதும் அவருடைய தந்தையின் சித்தத்தைப் போன்றதுமாக (யோவா 4:34) அவனது உண்மையான ஊட்டம் ஆண்டவரிடமிருந்து வருவதாகிய தந்தையினுடைய சித்தமே என்று மனிதனுக்குக் கற்பிக்கப் படைப்பு மற்றும் கீழ்ப்படிதல், உடன்படிக்கை மற்

றும் விசுவாசம், நற்செய்தி மற்றும் பிறர்சிநேகம் என்னும் மூன்று மட்டங்களில் விவிலியமானது ஊட்டம் என்ற அடையாளத்தின் மூலம் இறைவனை விவரிக்கிறது.

*1. இறைவன் தமது படைப்புகளுக்கு ஊட்டமளிக்கிறார்:-*

''மண்ணுலகெங்கும் விதைதரும் செடிகள், பழமரங்கள் அனைத்தையும் உங்களுக்கு நாம் கொடுத்துள்ளோம். இவை உங்களுக்கு உணவாகட்டும். அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நாம் உணவாகக் கொடுத்தோம்'' (ஆதி 1:29-30) மனிதனைப்படைத்து எல்லாப் படைப்புகளுக்கும் தலைவனாக அவனை அமைத்தபின் உலகின் மற்றெல்லா விலங்குகளுக்கும் அளிப்பதுபோல இறைவன் மனிதனுக்கு உணவளிக்கிறார். இத்தகைய உலக அமைதியின் பொற்காலத்தில் எவ்விலங்கும் மற்றொன்றினுடைய ஊனைத் தின்பதில்லை. ஆனால் வெள்ளத்திற்குப் பிறகு எல்லா விலங்குகளையும் இறைவன் மனிதனுடைய உணவாகும்படி அவனது கைகளில் அளித்தபோதும் அதே மொழியைப் பயன்படுத்துகிறார் ''பசும்புற்பூண்டுகளை உங்களுக்குத்தந்ததுபோல அவையெல்லாவற்றையும் உங்களுக்குத்தந்தோம்'' (9:2-3). இம்மொழியில் அது இல்லாமல் உயிர்வாழ இயலாத இயற்கையுடன் தொடர்புடைய மனிதனின் சார்பு நிலையும் அவனது தன்னாட்சித்தன்மையும் ஒரே சமயத்தில் தோன்றுகின்றன. விலங்கானது தான் காண்கின்ற தாவரத்தினின்றோ பின்தொடர்கின்ற வேட்டைப் பொருளின்றோ தனது உணவை அடைகின்றது. மனிதன், தான் பயிர்செய்கின்ற பழங்களினின்றும் தாவரங்களினின்றும் தான் மேய்க்கின்ற தனக்குச் சொந்தமான விலங்குகளினின்றும் தனக்கு உணவை அமைத்துக் கொள்கிறான். அவன் தனது பயிரின் விளைச்சலினின்றும் தனது உழைப்பினின்றும் (3:9) தனது கரங்களின் வேலையினின்றும் (உப 14;29) உணவை உண்கிறான்.

எல்லா வேலைகளிலும் இருப்பது போன்று மனித ஊட்டத்தின் இந்தச் செயல்முறையான பண்பு சில ஆபத்துகளைக் கொண்டுள்ளது. ஒன்று மிகுதியாக உண்ணுதல்; பெருந்தீனி மற்றும் குடிபோதை போன்ற சில குறிப்பிட்ட விபரீதங்களையும் அவற்றின் விளைவுகளையும் கொண்டுள்ளது. இவை இவற்றிற்குத் தன்னையே உட்படுத்தும் மனிதனுக்கும் தீமையாக அமைகின்றன (பழ 23:20-21; சீரா 31:12:31; 37:27-31). மற்றது சொகுசான வாழ்க்கையும் (ஆமோ 6:4). ஏழைகளைச் சுரண்டுவதும் ஆகும் (பழ 11:26). இவை எல்லா ஊட்டமும் இறைவனின் கொடையே என்பதை மறந்து விடுகின்றன. உண்பதும் குடிப்பதும் பணியில் திருப்தியடைவதும் மனித மகிழ்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன என்றும் (திருவுரை 2:24; 3:13) ''பகையுடனான கொழுத்த கன்றுக்குட்டியைவிட அன்புடன் கூடிய வெறுங்கீரை உயர்ந்தது'' (பழ 15:17;17:1) என்றும் ஞான இலக்கியப் பாரம்பரியம் சமநிலையைக் கடைப்பிடித்தது. இதற்குக் காரணம் இப்பாரம்பரியம், ஐயப்பாடும் மன உளைச்சலும் தருகிற திருவுரையாளரும் கூட, ''அனைத்தும் இறைவனின் கரத்திலிருந்தே வருகின்றன'' (சங்திரு 2:24) என்பதை ஒருபோதும் மறக்காமலிருந்ததே ஆகும்.

இவ்வாறு இறைவனின் கரங்களால் உணவளிக்கப்படுகிறோம் என்னும் உயிருள்ள மனித உணர்வை நிலைநிறுத்தப் பலிகளும் காணிக்கைகளும் ஒருபுறமும், விலக்கப்பட்ட உணவுப் பொருட்கள் மறுபுறமும் முக்கிய பங்கு வகித்தன. ஒருவன் விலங்கைப் பலியிடவும் அறுவடையின் முதல் தானியங்களையும் விளைச்சலின் மிச் சிறந்த பழங்களையும் காணிக்கையாகப் புனித இடத்திற்குள் கொண்டு சென்றபின், நல்ல உணவும் விழா உணவும் கொண்டாடப்பட்டன (உப 16:1-17). ''புனித மக்களுக்குப் புனித உணவு'' (உப 14:2) என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அசுத்த விலங்குகளின் மீதான தடையானது (லேவி 11) ஊட்டமளித்தல் போன்ற மனித வாழ்விற்கு முக்கியமான ஒரு குறிப்பிட்ட பகுதியில் இறைவனின் மேலாண்மைச் சித்தத்திற்குக் காட்ட வேண்டிய மதிப்பை எடுத்துக்காட்டியது.

*2. இறைவன் தமது வார்த்தையால் தமது மக்களுக்கு ஊட்டமளிக்கிறார்:-*

உடன்படிக்கையின் மூலமாகத் தமது மக்களின் வாழ்க்கைக்கு இறைவன் பொறுப்பேற்கிறார். விண்ணிலிருந்து இறங்கிய மன்னாவும் (யாத் 16:4). இறைவனால் நேரடியாக அளிக்கப்பட்டதாகும் (16:5). அதில் மனிதச் செயல்களுக்கும் கணிப்புகளுக்கும் எப்பங்குமில்லை. இந்த மன்னாவானது புதிய நிலையின் அடையாளமாகும். ஆனால் இந்நிலையானது விசுவாசத்தை வலியுறுத்துகிறது. மன்னாவானது உடலுக்கும் விசுவாசத்திற்கும் ஊட்டமளிக்கவும், ஆண்டவரது வாயினின்று வருகின்ற வார்த்தையிலிருந்தும் (உப 8:3; ஞான 6:26; மத் 4:4) அவரது சித்தத்திலிருந்தும் மற்றும் வாக்குறுதிகளிலிருந்தும் அவர்கள் வாழ்வதையும் நீடித்திருப்பதையும் எதிர்பார்க்கவேண்டும் என்று போதிக்கவும் அளிக்கப்படுகிறது. பாலைவனப் பயணத்தின் புதுமைகளில் தனிப்பட்ட விதமாக வெளிப்படும் இந்த இறை வழிகாட்டுதல் பாலஸ்தீனத்தில் குடியேறுவதுடன் ஒரு முடிவுக்கு வந்துவிடுவதில்லை. மிகுதியானதும், இலவசக் கொடைகளின் நாடுமாகிய வாக்களிக்கப்பட்ட நாடானது, அனைத்தும் இறைவனிடமிருந்தே வருகின்றன என்பதை ஒவ்வொருநாளும் இஸ்ராயேலுக்கு நினைவுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும் (உப 8:8 தொ)

இறைவனது வார்த்தை மகிழ்ச்சி தருகின்றது (எரே 15:16). அவரது கட்டளைகள் தேனினும் இனியவை (சங் 19:10 தொ). இனிமேல் பல்வகையான பழங்களை உண்பதன்று, ஆண்டவருடைய வார்த்தையை உண்பதே முக்கியமானதாகும் (ஞான 16:26). இறைவாக்கினர் எசக்கியேலும் (எச 2:5; 3:3), அப்போஸ்தலரான யோவானும் (திருவெளி 10:8), தங்கள் செய்தியை அளிக்குமுன் இறைவார்த்தையை உண்ண வேண்டும். இது அவர்கள் விழுங்க வேண்டிய சுருளால் அடையாளமாக உணர்த்தப்படுகிறது. புதிய உடன்படிக்கையில், கிறிஸ்தவர்கள் இறைவனுடைய வாக்குகளை உண்பர் (எபி 5:12 தொ; 1 கொரி 3 தொ; 1 பேதுரு 2:2); கிறிஸ்துவாகிய ஆன்மீக உணவை உண்பர்; அந்த ஆன்மீகப் பாறையிலிருந்து பானம் பருகுவர் (1 கொரி 10:3 தொ).

*3. இறைவன் தமது பிள்ளைகளின் ஊட்டம்:-*

இறைவனின் பிள்ளையாக இருக்கின்ற காரணத்தால் மனிதன் ஒரே சமயத்தில் இவ்வுலகின் எல்லா உணவுவகைகளையும் விட்டுவிடவும் அவையனைத்தையும் உபயோகிக்கவும் முடியும். ''கொன்று சாப்பிடு'' என வானத்திலிருந்து ஒரு குரல் பேதுருவிடம் கூறியது (அ.ப. 10:3). கிறிஸ்துவன் இனிமேல் சுத்த விலங்குகளுக்கும் அசுத்த விலங்குகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்திருப்பதில்லை. அவன் இனிமேலும் இவ்வுலகப் பொருட்களுக்கு அடிமைப்பட்டவனாக இருப்பதில்லை. அவன் மகனுக்குரிய சுவிகாரத்தைக் கொண்டுள்ளான் (கலா 4:3-4). உலகில் உள்ள அனைத்தும் அவனுக்குரியவையே (1 கொரி 3:22). கிறிஸ்து இறைவனுக்கு உரியவராய் இருப்பதுபோலத் தானும் கிறிஸ்துவிற்கு உரியவன் என்பதை நினைவில் கொண்டிருத்தல் (3:23) என்னும் நிபந்தனையின் கீழ், சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப் பொருட்களும் அவனுக்குரியவையே (8:4;10:26). இப்போது அவன் எதை உண்டாலும் குடித்தாலும் அனைத்தும் அவனுக்கு நன்றிகூறுதலுக்கு ஊற்றாகும் (10:30 தொ; 1 திமோ 4:3 தொ).

இறைவன் மட்டுமே தமக்குப் போதும் என்றும் மற்றும் தமது உணவானது தமது தந்தையின் சித்தமே என்றும் காட்டுவதற்காகக் (யோவா 4:34) கிறிஸ்து நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பிருந்தார் (மத் 4:1-4). அவர் உணவை இழிவானதாக்க் கருதினார் என்று பொருளல்ல. அவர் தமது சீடர்களுடன் உண்கிறார் (யோவா 4:31). அவருக்கு அளிக்கப்பட்ட அழைப்பை ஏற்று நமது உணவில் பங்குகொள்கிறார் (மத் 11:19). அளிக்கப்பட்ட அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு அவர் தமது சீடர்களுக்குப் பரிந்துரைக்கிறார் (லூக் 10:8). மக்கள் பசியினால் துன்பப்படாமலிருக்க அவர் அப்பத்

தைப் பலுகச் செய்கிறார் (மத் 15:32). இப்புது மையின் மூலம், வானத்துப் பறவைகளைக் காக்கின்ற தந்தையானவர் (மத் 6:26) தமது பிள்ளைகள் மீது இன்னும் அதிக அளவு அக்கறை உள்ளவராக இருக்கிறார் என்று கிறிஸ்து காட்டுகிறார். ஆனால் இவை அனைத்திற்கும் மேலாக, தாமே ''வானின்று இறங்கி வந்து உலகிற்கு உயிர் அளிக்கின்ற கடவுள் தரும் உணவு'' என்று கற்பிக்க அவர் விரும்புகிறார் (யோவா 6:32 தொ). அதே போன்று மலைப்பொழிவிலும் உணவைப் பற்றிக் கவலைப்படாமல் (மத் 6:23) முதவில் இறையரசை நாடுமாறு வலியுறுத்துகின்றார் (மத் 6:33). அவ்வாறே அழிந்து போகும் உணவிற்கு அப்பாற்பட்ட ஒன்றை நாடுமாறு அவர் நம்மை அழைக்கிறார் (யோவா 6:27; உரோ 14:17). தாம் உள்ள நிலையிலேயே தமது ஊடலிலும் இரத்தத்திலும், தம்மையே நமக்கு உணவாக முன் வைக்கின்றார் (யோவா 6:56). கிறிஸ்துவின் உடலாக மாறும் உலக அப்பமாகிய நற்கருணை எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசு கிறிஸ்துவுடன் சேர்ந்து அவரது சொற்கள், செயல்கள் மற்றும் வாழ்வினால் தனக்கே ஊட்டமளிக்கின்ற திறமை மிக்க இறைவனின் பிள்ளையாக அமையுமாறு மனிதனை மாற்றுகிறது.

**ஊதாரியின் உவமை** (PRODIGAL SON)

இறைவனுடைய அன்பையும் மன்னிக்கும் மனப்பான்மையையும் இந்த உவமை விளக்குகிறது. இது படித்தவர் முதல் பாமரர் வரை அனைவருக்கும் தெரிந்தது. இந்த உவமையிலே பிரிந்த மகனை வரவேற்கும் தந்தை இறைவனாவார். மூத்த மகன், பொறுமையோடு நல்லது செய்து இறையரசை அடையும் பக்தனைக் குறிக்கிறார். ஆனால் உவமையில் சுய நேர்மையுள்ள பரிசேயரைச் சுட்டுகிறார். இளையவன் இறைவனை விட்டு விலகி வாழும் மனிதனைக் குறிக்கிறார். தந்தை மகன் கேட்ட சொத்துக்களைக் கொடுப்பது, இறைவன் மனித சுதந்தரத்தை மதிக்கிறார் என உணர்த்துகிறது. மேலும் இது அவர் நம்மேல் கொண்டிருக்கிற உண்மை அன்பையும் வெளிப்படுத்துகிறது. இந்த உவமையிலே வரும் தொலைநாடு மனிதன் தானாகவே இறைவனைவிட்டுப் பிரிந்து நிற்கும் தூரத்தைக் குறிக்கிறது. சொத்தை அவர் வீணாக்கியதுபோல் மனிதர்கள் இவ்வுலக இன்பத்திலே திளைத்து வானகக் கொடைகளை மறக்கிறார்கள். இவ்வுலகக் கவர்ச்சி மறையும்போது மனிதர்கள் இறைவன்பால் திரும்புகின்றனர். ஆனால் வானகத் தந்தை தவறியவர் மனம் திரும்பி வரும்போது இருகரம் விரித்து வரவேற்கிறார். மேலும் இந்த உவமை இயேசு ஏன் பாவிகளை வரவேற்கிறார் எனக் கேட்ட பரிசேயர்களுக்கு எதிராக ''நான் பாவிகளைத் தேடியே வந்தேன்'' என்பதை உணர்த்தப் பயன்படுகிறது.

மேலும் இது மனந்திரும்புதலைப்பற்றி இயேசு கூறிய உயிரோட்டமான, நாடகம் போல் அமைந்த மிகச் சிறந்த உவமையாகும். தவறிய மகன் தனது வாழ்வை மாற்றி அமைக்க விழைகிறான். அன்பைப் புதுப்பிக்க விரும்புகிறான் என்பது அவனது நேர்மையான பாவ அறிக்கையிலும் (11:18) தந்தையிடம் திரும்பி வருதலிலும் புலப்படுகிறது.

**ஊத்தாய்** (UTHAI யாவே மேலாண்மையுடையவராய்த் தம்மைக் காட்டியுள்ளார்)

1. யூதாவின் மகனான பேரேசின் வழி வந்த அம்மியூத்தின் மகன். பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து முதலில் திரும்பியவர்களில் ஒருவர் (1 நாள் 9:4). இவர் நெகு 11:4-இல் அத்தாயா என்று குறிக்கப்படுகிறார்.

2. எஸ்ராவுடன் பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்தவர்களில் பிகிவாயின் மகனோ வழிவந்தவரோ ஆவார் (எஸ்ரா 8:14).

**ஊப்பாசு** (UPHAZ)

தங்கம் கிடைக்கக்கூடிய இடமாகக் குறிக்கப்படுகிறது (எரே 10:9; தானி 10:5). இதைத் தவிர இந்த இடத்தைப் பற்றி வேறொன்றும் அறிவதற்கில்லை. ஊப்பாசு என்பது தங்கத்திற்குச் சிறப்புப் பெற்ற ஓப்பீர் என்ற பெயர்

(1 அர 9:28; 22:48; யோபு 22:24) தவறாக எழுதப்பட்டதாகும் என்பது பலரது கருத்தா கும்.

**ஊரி** (URI நெருப்பான, உரியா என்ற பெய ரின் சுருக்கமாக இருக்கலாம்)

1. யூதா நாட்டைச் சேர்ந்தவர். உடன்படிக் கைப் பெட்டகத்தைக் கட்டியவர்களுள் ஒரு வரும் மேற்பார்வையாளருமான பெசலே லின் தந்தையுமாவர் (யாத் 31:2; 35:30; 38:22; 1 நாள் 2:20; 2 நாள் 1:5).

2. சாலமோன் ஆட்சிக்காலத்தில், கில யாத்து மாவட்ட அதிகாரியான கெபேரின் தந்தை (1 அர 4:19).

3. மீண்டும் கட்டப்பட்ட ஆலயத்தில் வாயிற் காவலர்களில் ஒருவர் (எஸ் 10:24). இவர் புறவினப் பெண்ணை மணம் செய் திருந்தார்.

**ஊரீம் தும்மீம்** (URIM AND THUMMIM இறையருட் குறிப்புச் சின்னங்கள்)

இது ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைப் பொறுத்தவரையில் இறைவனுடைய சித்தம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளுவதற் குப் பயன்பட்ட இறைமொழிச் சாதன மாகும். இந்த உறவாடும் முறையில் மனிதன் இறைவன் முன்னால் நன்கு தயாரிக்கப்பட்ட சுருக்கமான கேள்வியைத் தொடுத்து அதற் காக மிகச்சுருக்கமாக ''ஆம்'' அல்லது "இல்லை" என்ற பாணியிலே பதிலை எதிர் பார்த்திருப்பான். நேர்முகக் கேள்வி பதில் தொடர்புக்கான தெளிவான எடுத்துக்காட்டு கள் 1 சாமு 23:9-12; 30-7-8-இல் உள்ளன. முதல் நிகழ்ச்சியிலே தாவீது அபியத்தார் என்ற குருவை ஏபோதைக் கொண்டுவரச் சொல்கிறார். இங்கு ஊரீம்-தும்மீமுக்குப் பதிலாக ஏபோது பயன்படுத்தப்பட்டுள் ளது. ஆனால், இரண்டும் ஒன்று தான். ஏபோதைக் கொண்டு வந்த பிறகு நேர்முக மாகவே இரண்டு கேள்விகளைத் தாவீது ஆண்டவர் முன் சமர்ப்பித்தார். ''உம் ஊழி யன் கேள்விப்பட்டது போல், சவுல் வரு வாரா?'' மேலும் ''கெயீலா மனிதர்கள் என்னையும் என்னுடன் இருக்கிற மனிதர் களையும் சவுல் கையில் ஒப்படைப்பார்களா?" இரண்டு கேள்விகளுக்கும் இறைவனால், ஆம் என்று பதிலளிக்கப்பட்டது. ''அவன் வருவான்'' ''அவர்கள் உன்னை ஒப்படைப் பார்கள்'' என்று பதிலளித்தார். இரண்டா வது நிகழ்ச்சியில் ஏபோது கொண்டு வரப் பட்டது. மீண்டும் தாவீது இறைவனை வேண்டினார். ''அந்தக் கள்ளர்களைப் பின் தொடர வேண்டுமா?'' மேலும் ''நான் அவர் களைப் பிடிப்பேனா?'' இறைவன் ''ஐய மின்றி நீ அவர்களைப் பிடித்து, கொள்ளைப் பொருட்களைத் திருப்பிக் கொள்வாய்'' என்று பதிலளித்தார்.

கேட்ட கேள்விகளுக்கு எதிர்மறையான பதிலை அளிக்கும் வெளிப்படையான எடுத் துக்காட்டுகள் கிடையாது. ஆனால் இரண்டு காரியங்களில் இறைவன் பதில் அளிக்க மறுத்துவிடுகிறார். இது ''இல்லை'' என்று பதில் அளிப்பதற்குச் சமமாகும். 1 சாமு 14:36-37-இல் மீண்டும் சவுல் ''நாம் இரவில் பெலிஸ்தியரைப் பின் தொடர்ந்து போக லாமா? அவர்களை இஸ்ராயேல் கையில் வீடுவீரா'' என்று சவுல் ஆண்டவரிடம் கேட் டதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவர் அன்று அவருக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. மற்றொரு நிகழ்ச்சி 28:6-இல் தரப்பட்டுள்ளது. பெலிஸ்தியர்களின் பெரும் படை ஒன்று சூனேம் என்ற இடத் தில் கூடிச் சவுலைப் பயமுறுத்தியது. ஆகவே அவர் நடுங்கிக் கொண்டு, ஆண்ட வர் உற்சாகப்படுத்தும் பதில் அளிப்பார் என்ற நம்பிக்கையில் சவுல் ஆண்டவரிடம் ஆலோசனை கேட்டார். ஆனால் ஆண்டவர் கனவு வழியாகவோ குருக்கள் மூலமாகவோ இறைவாக்கினர் வழியாகவோ அவருக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. எண் 27:21-இன்படி எலயாசர் என்ற குருவிடம் யோசுவா தன்னுடைய கேள்வியைக் கேட் கும்படி கட்டளையிடப்பட்டிருந்தார். அவர் ''யோசுவாவுக்காக எலயாசர் ஆண்டவர் முன்னிலையில் ஊரீம் வழங்கும் தீர்ப்பை நாடுவார். யோசுவாவும் அவருடன் இருக் கும் இஸ்ராயேல் மக்கள் அனைவருமான

கூட்டமைப்பு முழுவதும் எலயாசாரின் வார்த்தையின்படி வெளியே செல்லவும் உள்ளேவரவும் வேண்டும்''. போர் சம்பந்தமான நுணுக்கங்களைப் பற்றிய கேள்விகளுக்கு எதிர்மறையான பதில்கள் கிடைத்ததாகத் தெரிகின்றது.

வேறு இடங்களில் இந்தச் சாதனம் பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்புக்கள் உள்ளன *(1 சாமு 14:18.41)*. முதலாவது விசாரணை, காணாமல் போன ஆளைப்பற்றியதாகும். இரண்டாவது குற்றத்தைக் கண்டுபிடிப்பதாகும். யோனத்தான் காணாமல் போய்விட்டதாகச் சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவருடைய மகன் எங்கே இருக்கின்றான் என்பதைப் பற்றி விசாரிப்பதற்காக அகியா என்ற குருவிடம் ''கடவுளுடைய பேழையைக் கொண்டுவாரும்'' என்று கட்டளையிட்டார். ''கடவுளுடைய பேழை'' அல்லது உடன்படிக்கைப் பேழை *(நீதி 20:27)* என்பது ஏபோது அல்லது ஊரீம்-தும்மீமைக் குறிக்கும் வேறு பெயராகும். இது *1 அர 2:26*-இலிருந்து தெளிவாகுகிறது. இரண்டாவது நிகழ்ச்சியில், மக்களை மாலைவரையிலும் உணவு அருந்த வேண்டாம் என்று சவுல் தடுத்திருந்ததை மீறியவரைக் கண்டுபிடிக்க முயற்சித்தார். அப்போது சவுல் ''இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரே, இன்று உம் அடியானுக்கு நீர் மறுமொழி சொல்லாதிருப்பது ஏன்? அடையாளம் கொடும். இந்தப் பாவம் என் மேலாவது என் மகன் மேலாவது இருந்தால் அதை விளங்கச் செய்யும்; அல்லது அந்தப் பாவம் ஊர் மக்கள் மேல் இருந்தால் அவர்களைத் தூயவராக்கும்'' என்றார். யோனத்தான் மீதும் சவுல்மீதும் சீட்டு விழுந்தது. வீரர்களோ தப்பினர் *(1 சாமு 14:41)*

கடவுளுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் ''ஆண்டவரிடம் ஆலோசனை கேட்டல்'' போன்ற முன்சொற்களோடு எடுத்துச் சொல்லப்பட்டன என்பதற்கான ஏராளமான உதாரணங்கள் உள்ளன. ஏபோது, உடன்படிக்கைப் பேழை, ஊரீம்-தும்மீம் ஆகியவை குறிக்கப்படாவிட்டாலும் அவைகளையும் இறைமொழி அறிதல் வகையிலே சேர்த்துக் கொள்ளலாம் *(நீதி 1:1-2; 20:23; 1 சாமு 10:22-23; 23:2-3; 2 சாமு 2:1; 5:19.23-24)*.

இந்த வகையான இறைமொழி அறிதல் நிகழ்ச்சியில் குருதான் பணியாளர். ஏபோது உள்ள எந்த இடத்திலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படும். *யாத் 28:30*; லேவி *8:8*-இன் படி தலைமைக் குரு ஊரீம் தும்மீமைத் தன்னுடைய உடலில் சுமந்து சென்றார். உப *33:8*-இன் படி லேவியர் குலத்தில் உள்ள எல்லாக் குருக்களும் இந்தச் செயலைச் செய்வதற்குத் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். நாட்டைச் சார்ந்த முக்கிய முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலையில் மக்களின் தலைவர்களும் அரசர்களும் தலைமைக் குருவிடம் சென்றார்கள். யோசுவாவும் *(எண் 27:21)* சவுலும், தாவீதும், இந்த முறையைப் பின்பற்றினார்கள். ஆனால் ஊரீம்-தும்மீம் தனி மனிதனுடைய நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தெரியவில்லை. சிறிய கூட்டத்தின் தலைவனாக இருந்த து தாவீது குருக்களிடம் ஆலோசனை கேட்டார் *(1 சாமு 23:10-13)*. தாண் என்ற கோத்திரத்தின் ஐந்து பிரதிநிதிகள், ஏபோது கொண்டிருந்த மிக்காவிற்கு ஊழியம் செய்த லேவியனிடம் ''நாங்கள் செல்லும் பயணம் வெற்றிகரமாக இருக்குமா என்பதை நாங்கள் அறியுமாறு கடவுளிடம் கேள்'' என்று கேட்டனர். அதற்குக் குரு ''ஆண்டவர் கண்ணோக்கிக் காப்பார்'' என்றார் *(நீதி 18:5-6)*.

தாவீது காலத்திற்குப் பிறகு ஊரீம் தும்மீம் குறிப்பிடப்படவில்லை: எஸ் *2:63*; நெக *7:65*-ம் அவ்வளவு தெளிவாக இல்லை. எஸ்ரா புதிய சூழ்நிலையில் இந்த ஊரீம் தும்மீமைப் பயன்படுத்துமாறு வலியுறுத்துகிறாரா? அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு அதை மீண்டும் பழக்கத்தில் கொண்டு வர விரும்புகிறாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. யோசிபஸ் தனக்குமுன் இருநூறு ஆண்டுகள் ''இறைமொழி கேட்டல்'' என்ற வழக்கு நடைமுறையில் இல்லை என்று கூறுகிறார். ஆனால் இக்கூற்

றுக்குப் போதிய ஆதாரம் இல்லை எனலாம். ஒரு சில நிபுணர்களுடைய கருத்துப்படி, புதிய தொடர்பு சாதனமாக இறைவாக்கு ரைத்தல் வந்ததால், ஊரீம்-தும்மீம் வேலை யற்றதாக உணரப்பட்டது. ஆகவே சாலமோ னுடைய காலத்திருந்து இது நூல்களில் குறிப் பிடப்படவில்லை. அதே நேரத்தில் ''என் மக்கள் மரக்கட்டையிடம் குறி கேட்கின்ற னர். அவர்களது கோல் மறைமொழிகள் கூறுகின்றது'' என்று ஒசே 4:12-இல் கூறப் பட்டிருப்பதும், பாபிலோனிய அரசன் தெர பீம்களிடம் ஆலோசனை கேட்டான் என்ற எசக்கியேலின் குறிப்பும் (எச 21:21) ''தெர பீம்கள் வீணானதையே கூறுகின்றன'' என்ற செக்கரியாவின் கூற்றும் (செக் 10:2) இந்த இறைமொழி கேட்கும் சாதனங்கள் நாடு கடத்தப்படுவதற்கு முன் வரை பயன்படுத் தப்பட்டன என்று சுட்டுகின்றன.

ஊரீம் தும்மீம் ஆகியவற்றின் சரியான பொருள் என்னவென்று தெரியவில்லை. அவைகள் ஒரு பொருள் இரு சொற்கள் என்ற முறையில் ஐந்து முறை குறிப்பிடப் பட்டுள்ளன (யாத் 28:30; லேவி 8:8 எஸ் 2:63; நெக 7:65; எண் 33:8). இவற்றிற்கு அளிக்கப்படும் சொல்லிலக்கணம் நிறைவு டையதாக இல்லை. எழுபது நூலும் வுல்காத்தா வும் அளிக்கும் விளக்கமும் உதவியதாக அமையவில்லை. இது எந்தப் பொருட் களால் செய்யப்பட்டது, அதனுடைய வடி வம் என்ன, அதன் மேல் எழுதப்பட்ட அடையாளம் என்ன என்றெல்லாம் தெளி வாகத் தெரியவில்லை. தலைமைக்குரு தன் மார்பில் ஏபோதை அணிந்திருந்தார். அதன் மேல் சதுரப்பை போன்ற மார்புப்பட்டை சேர்க்கப்பட்டிருந்தது. அதனுள் ஊரீம் தும் மீம் வைக்கப்பட்டிருந்தது. ஆகவே ஏபோ தும், ஊரீம் தும்மீமும் ஒருபொருள் பன் மொழியாகக் கருதப்பட்டன. ஊரீம் தும்மீம் சிறு பொருட்களாகும், தாயக்கட்டை போன் றவை. இவை உலோகத்தாலோ, விலையு யர்ந்த கற்களாலோ செய்யப்பட்டவை. அவற்றின்மேல் சில அடையாளங்கள் இடப் பட்டிருந்தன. இந்த அடையாளங்கள் ஒரு வார்த்தையாக அல்லது அடையாளமாகச் சுருக்கப்பட்டிருக்கலாம்.

சிக்கலான காரியங்களில் இறைமொழி சாதனம் பல முறை பயன்படுத்தப்பட்டது. ஏனெனில் ஒரு தெளிவான முடிவை அவர் கள் கண்டுபிடிக்க முயற்சித்தனர். குருக்கள் ஊரீம் தும்மீமைப் பயன்படுத்தும்போது எந்த நுணுக்கத்தைப் பின்பற்றினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இவைகள் பையில் வைக்கப்பட்டிருந்தமையால், தேவையான போது இவைகள் குலுக்கி எடுக்கப்பட்டோ, தாயக்கட்டைகளை உருட் டுவதுபோல உருட்டிப் போடப்பட்டோ நன்மை தீமைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**ஊருணிவாயில், ஊற்று வாயில்** (FOUNTAIN GATE)

நெகமியாவால் மீட்கப்பட்ட எருசலே மின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு நகரவாயில் (நெக 2:14; 3:15; 12:37). இரு மதில்களுக்கு இடையே உள்ள வாயிலும் (2 அர 25:4; எரே 39:4; 52:7) இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

**ஊர்** (UR - ஒளி, அனற்பிழம்பு) - ஆள்

தாவீது தனக்கென அமைத்த 'முப்பது பேர்' என்றழைக்கப்பட்ட ஆற்றல்மிக்க வீரர் களில் ஒருவரான எலிப்பால் என்பவரின் தந்தை (1 நாள் 11:35); 2 சாமு 23:34-இல் வரும் எலிபெலேத்து (எலீப்பால்) என்பவ னின் தந்தையின் பெயர் அகஸ்பாய் என்று குறிக்கப்படுகிறது. இது ஊர் என்ற பெயர் பழுதுபட்டுள்ளது என்று சுட்டுகிறது.

**ஊர்** (UR - ஒளி, அனற்பிழம்பு) - இடம்

மெசபொத்தாமியாவில் முந்தைய அரச மரபு ஆட்சிக்காலத்தில் (கி.மு. 3000-2350) செழிப்புற்று விளங்கிய ஒரு நகரமாகும். இது பிற்காலத்தில் நகர ஆட்சி நாடாகத் திகழ்ந்தது. சுமேரைக் கட்டுப்படுத்தியது தனக்கே உரிய ஆளுநர்களையும், கோவில் களையும், தேவர்கள் குழுவையும் கொண்டி ருந்தது. பாக்தாதுக்கும் பாரசீக வளைகுடா வுக்கும் மத்தியில், யூப்பிரதிசு நதிக்கு மேற் கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால தேவ் ஏல்-முகையராக அடையாளம் காட் டப்படுகிறது. இந்நகரக் கண்டுபிடிப்பு

களில், விவிலியத்தில் குறிக்கப்படும் பாபேல் கோபுரத்துக்கு (ஆதி 11:8) மாதிரிகையான மூன்றடுக்கு சிகுராத்துக் கோபுரம் ஒன்றாகும்.

ஊர் நகர் மூவாயிரம் ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டுள்ளது. அதன் உச்சகட்டம் புதிய சுமேரிய மூன்றாவது அரசமரபாகும் (கி.மு. 2113-2006). இக்காலத்தில் இறை அதிகாரம் பெற்ற வல்லாளர்கள் ஆட்சி செய்தனர். மையப்படுத்தப்பட்ட ஆட்சியும், மிகவும் விரிவான ஆட்சிமுறையும் இந்த அரசமரபுக்கு உதவின. ஊரின் செல்வாக்கு சுற்றியுள்ள பகுதிகளில் பரவியிருந்தது, அதன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மாநிலங்களாகவும், மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு படைத்தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டன. பெரும் களஞ்சியங்கள் கட்டப்பட்டன. உலோக, பஞ்சுத் தொழில்கள் சிறப்புற்றிருந்தன. இங்கு நடந்த அகழ்வாய்வுகள் ஆயிரக்கணக்கான ஆப்பு எழுத்து ஏடுகளைக் கண்டுபிடித்துள்ளன. இவ்வேடுகள் நகரில் நிலவிய சட்டம், ஆட்சிமுறை, வணிகம் பற்றியவையாகும்.

இந்த அரசமரபை ஊர்-நம்மு என்பவர் தொடங்கி வைத்தார். இவரது மகன் கல்கி, ''ஊர்-நம்மு'' என்ற சட்டத்தொகுப்பைத் தோற்றுவித்தார் என்று கருதப்படுகிறது. இச்சட்டத்தில் கடுமையான வரிகள் விதிக்காமலும், செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டாமல் பாதுகாத்தும், அளவைகளை நிர்ணயித்தும், நாட்டில் நீதியை நிலவச் செய்ய வேண்டும் என்று அரசனுக்குக் கற்பிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் காணப்படுவது போல், இச்சட்டங்கள் காரண காரிய முறையிலும், நிபந்தனைவடிவிலும் உள்ளன. தண்டனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஊர், ஆபிரகாமின் தந்தை தேராகுவின் ஊராக விவிலியத்தில் குறிக்கப்படுகிறது (ஆதி 11:28). இங்கிருந்துதான் ஆபிரகாம் மெசபொத்தாமியாவுக்கும், கானானுக்கும் புறப்பட்டார் (11:31; 15;7). இந்நகர் விவிலியத்தில் ''கல்தேயர் நகரமான ஊர்'' என்று எப்போதும் குறிக்கப்படுகிறது. ஆனால் கி.மு. 1000 வரைக்கும் கல்தேயர்கள் பாபிலோன் பகுதியில் நுழையவேயில்லை.

**ஊர்பான்** (URBANUS நகரைச் சேர்ந்த, வணக்க இணக்கமுள்ள)

இவருக்குப் பவுல் வாழ்த்து அனுப்பினார் (உரோ 16:9). இவர் உரோ 16:3-இல் பிரிசிக்கில்லா, ஆக்கிலா ஆகியோருடன் சேர்ந்தும், 16:21-இல் திமோத்தேயுவோடும் சேர்ந்தும் ''உடன் உழைப்பாளர்'' என்று அழைக்கப்படுகிறார். இது இவர் சிறப்புமிக்க குழுவைச் சேர்ந்தவர் என்று காட்டுகிறது.

உரோமை அரச வீட்டு ஏடுகளில் குறிக்கப்படும் உரோமை அடிமைகளிடையே சாதாரணமாய்க் காணப்படுவதாகும் இப்பெயர். ஒருவேளை ஊர்பான், சீசரின் வீட்டைச் சேர்ந்த ஓர் அங்கத்தினராக இருக்கலாம் (காண் பிலி 4:22).

**ஊர்-மாற்கஸ்** (UR-MARKUS)

நற்செய்திகள் தோன்றியது பற்றிய சில கருதுகோள்கள் மாற்கு நற்செய்தியின் மூல வடிவம் இருந்ததாகக் கூறும். அதன் பெயராகும் இது.

**ஊர்வன** (CRAWLING THINGS)

ஊர்வன என்ற சொல் உப 32:24-இல் நச்சுப் பாம்புகளைக் குறிக்கின்றது (எரே 8:17); மீக் 7:17-இல் பொதுவாகப் புழுக்களைக் குறிக்கிறது. இவை புறவினத்தாருடைய கீழ்த்தரமான வாழ்க்கைக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன; அப 1:14-இல் மீன்களைத் தவிர்த்த நீர் வாழ் உயிரினங்களைக் குறிக்கின்றது.

இச்சொல், ஆதி 9:3-இல் நடமாடி உயிர் வாழும் விலங்குகள் யாவற்றையும் ஆதி 1:20; சங் 104:25-இல் நீர்வாழ் படைப்புகளையும் குறிக்கின்றது. இதன் சாதாரணப் பொருள் ஊர்ந்து செல்பவைகளாகும். இவை காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள், பறவைகள், மீன்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றன. பொது

வாக, இச்சொல் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் சிறிய நான்குகால் பிராணி களையும் ஊர்வனவற்றையும் பூச்சிகளையும் குறிக்கும்.

**ஊலாம்** (ULAM முதல்வன், தலைவன்)

1. மனாசேயின் கோத்திரத்தைச் சேர்ந்த மாக்கிரின் வழித்தோன்றல் (1 நாள் 7:16-17).

2. எசேக்கு என்பவரின் தலைமகன். சவு லின் சந்ததியினர். பென்யாமின் கோத்திரத் தின் வேல் வீரர்களின் தலைவர் (1 நாள் 8:39-40; 2 நாள் 14:8).

**ஊலாய்** (ULAI சுத்த நீர், கால்வாய்)

ஏலாம் மாநிலத்தில், பாராசீகத் தலைநகர மான பழங்காலச் சூசாவுக்கு அருகில் மூன்று ஆறுகள் ஓடின; தென் மேற்கில் கெர்காவும், கிழக்கில் அப்திஸ்புல்லும் ஓடிக் காருனில் பாய்ந்தன. ஊலாய் என்பது ஓர் அகன்ற செயற்கைக் கால்வாயாகும். இது கெர்கா வையும் அப்தில்புல்லையும் இணைத்து, சூசாவுக்கு அருகில் வடக்கில் அல்லது வட கிழக்கில் ஓடியது.

இதனைத் தானியேல் நூல் ஆறு என்று பொருள்கொண்டு இதன் கரையில் அவர் வெள்ளாட்டுக்கடாவும், செம்மறிக்கடாவும் பற்றிய காட்சியைக் கண்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (தானி 8:2.16). ஒரு சிலர் தானி யேல் நூலில் இதனை ஊலாய் வாயில் என்று பொருள் கொண்டனர். ஒரு வேளை இவர் களால் குறிப்பிடப்படும் வாயில் ஊலாய்க் கால்வாயை நோக்கி இருந்திருக்கலாம் (தானி 8:2.16). இக்கால்வாய் நீர் 'அசூர் பானிப்பால்' என்னும் அரசன் 'ஏலாம்' நாட் டின்மீது படையெடுத்து வென்றபோது சிவப்பாக மாறியதாக மரபு.

பழங்கால ஆசிரியர்களால் இது எயுலா யேயுஸ் என்றழைக்கப்படுகிறது.

**ஊவேல்** (UEL இறைவன் திருவுளம்)

எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தவர்களில் புறவினப் பெண்களை மனைவியாகக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் (எஸ் 10:34).

**ஊளையிடும் உயிரினங்கள்** (HOWLING CREA-TURES)

வழக்கமாக வீடுகளில் காணப்படாத காட்டு உயிரினங்களாகும் (ஏசா 13:21). இது, புதிய தமிழ் மொழி பெயர்ப்பில் ஊளை யிடும் குள்ளநரிகள் என்று குறிப்பிடப்படு கிறது. இது கழுகு, ஆந்தை, கழுதைப்புலி ஆகியவற்றையும் குறிக்கக்கூடும் என்று சிலர் கூறுவர். இவையாவும் ஓரிடத்தின் அவலநிலையை எடுத்துக்காட்டுகின்றன.

**ஊழியக்காரி/வேலைக்காரி**

இச்சொல் ஊழியம் செய்யும் வகுப்பைச் சேர்ந்த இளம், திருமணமாகாத பெண் ணைக் குறிக்கிறது.

அடிமைத் தொழில், ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு பழக்கமாக இருந்ததால், பல வீடுகளில் பெண் அடிமைகள் இருந்தனர். இத்தகைய பெண்கள் நல்ல முறையில் கவ னிக்கப்பட்டு, நடத்தப்பட வேண்டுமென்று சட்டமும் இருந்தது (லேவி 25:6; உப 15:12; யோபு 31:13). அவர்கள் இறைவன் ஆசீரில் பங்குபெற்று அவரின் பாதுகாப்பைப் பெறு கின்றனர் (உப 5:14; 12:12; எஸ் 2:65).

முதல் மனைவி மலடியாக இருக்கும் போது, இத்தகைய பெண்கள் வைப்பாட்டி களாகவோ மாற்று மனைவிகளாகவோ ஆயி னர் (ஆதி 30:3; 31:33). தாவீதின் முன்பாக அபிகாயிலும் (1 சாமு 25:24; 2 சாமு 14:15), பதுசேபாவும் (1 அரச 1:13.17) ரூத்தும் (ரூத் 3:9) தாழ்ச்சியின் அடையாளமாக அடியாள் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர். பக்தி நிறைந்த பெண்கள் தங்களை ''ஆண்ட வனின் அடிமை'' என்று அழைப்பதுண்டு (1 சாமு 1:11; லூக் 1:38.48; சங் 86:16; 116:16; அ.ப. 2:18).

**ஊழியம், பணி** (Service)

''ஊழியம்'' என்ற சொல் வேதாகமத்தில் எதிர்மாறாகப் பொருள் கொண்டுள்ளது. ஒரு பக்தன் இறைவனுக்குப் புரியும் பணி விடையையும், ஓர் அடிமை தனது தலைவ னுக்குச் செய்யும் பணியையும் குறிப்பதற்கு

'ஒரே சொல்லே' உபயோகப்படுத்தப்படுகிறது. மனிதன் எந்த அளவு இறைவனுக்குப் பணிபுரிகின்றானோ அந்த அளவு மீட்பு அல்லது விடுதலை பெறுகிறான் என்பதை மீட்பின் வரலாற்றில் காண்கிறோம். இறைவனுக்குப் பணிபுரிவது உண்மையில் ஆட்சி புரிவதாகும்.

1. ஊழியமும், அடிமைத்தனமும்:- மனித உறவுகளைப் பற்றி வேதாகமத்தில் பேசப்படும்போதுகூட, வேறுபட்ட சூழ்நிலைகளில் இச்சொல் கையாளப்படுகிறது. புறவினத்தாரிடையே, அடிமைகள், மிருகத்திற்கும், உயிரற்ற பொருட்களுக்கும் சமமாகக் கருதப்பட்டனர். அத்தகைய அடிமையின் பணியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதும் இச்சொல்லேயாகும். அதே சமயம் ஒரு வேலையாள், திருச்சட்டப்படி, தான் பணிபுரியும் குடும்பத்தின் உறுப்பினன். உண்மையான வேலையாள் நம்பிக்கைக்கும், வாரிசுக்கும் உரியவள் (ஆதி 24:2; 15:3). ஊழியத்தைக் குறிக்கும் சொற்கள் இருவகைப் பொருளையும் உணர்த்தவல்லன. இன்னும் சில சொற்கள் மதிப்பிற்காகச் செய்யப்படும் பணிகளைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, அரசர்களுக்கு உயர் அதிகாரிகள் மதிப்பிற்காகச் செய்யும் பணியையும் அதிகாரப் பூர்வமான கடமைகளைச் செய்வதையும் குறிக்க ஒரே சொல்லே பயன்படுகிறது.

2. சமயப் பணியும், கீழ்ப்படிதலும் (பழைய ஏற்பாடு):- இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அம்மக்களுக்குத் தங்கள் கடவுளுக்குப் பணிபுரிவதே பெருமையாகும். அதனால் அவர்களுக்குப் பல கடமைகளும் உண்டு. ''யாவே'' க்குப் பொறாத தனிக்குணம் உண்டு. ''தன்னைத் தவிர வேறு யாரையும் தம் மக்கள் வழிபட அனுமதிக்கமாட்டார்'' (உப 6:15). கிறிஸ்துவும் இதை மேற்கோளாகக் காட்டுகிறார். ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரைமட்டும் ஆராதிப்பாயாக'' (மத் 4:10; உப 6:13). இந்த விசுவாசம் நடத்தையிலும் வழிபாட்டிலும் காண்பிக்கப்பட வேண்டும். உப ஆகமம் இறைவனுக்குப் பணிபுரிதலின் பொருளை விளக்கக் காண்கிறோம். ''நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே பின்பற்றி அவருக்கு அஞ்சுகிறவர்களுமாய் அவருடைய கட்டளைகளை அனுசரிக்கிறவர்களுமாய், அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்கிறவர்களுமாய், அவருக்கு மட்டுமே ஊழியம் செய்து, அவரோடு ஒன்றித்திருக்கக் கடவீர்கள்'' (உப 15).

அ) வழிபாட்டு ஊழியம்:- இறைவனுக்குக் காணிக்கை செலுத்துதல், பலியிடுதல், அயராது ஆலயத்தைப் பேணுதல் முதலியன இறைவனுக்குப் பணி செய்தலாகும். இதன்படி குருக்களும், லேவியரும் 'யாவேக்கு ஊழியம் புரிபவர்கள்' (எண் 18:13; 1 சாமு 2:11.18; 3:1; எரே 33:21 தொ). இறைவன் உறையும் இடத்தைப் பாதுகாப்பதும், அவருக்குப் பணிவிடை செய்வதும், இறைகூற்றுகளுக்குத் தகுந்த விளக்கம் கொடுப்பதும் குருவின் பணிகளாகும் (நீதி 17:56). பலி செலுத்தவரும் பக்தனும் ''யாவே'' க்குப் பணி புரியவே'' வருகிறான். மேலும், இச்சொல் வழக்கமாக இறைவனுக்குச் செய்யப்படும் ஆராதனை, வணக்கம் இவற்றையும் குறிக்கிறது.

ஆ) கீழ்ப்படிதல்:- 'யாவே' விரும்பும் பணி, சடங்குமுறை வழிபாட்டோடு நின்று விடுவதில்லை. இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலின் மூலம் வாழ்வை முழுவதும் தழுவி நிற்கிறது. இதையே இறைவாக்கினரும், உபாகமும் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. ''பலிகளைக் காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது'' (1 சாமு 15:22; உப 5:29 தொ). ''நாம் விரும்புவது பலியையன்று, அன்பையே நாம் விரும்புகிறோம்; தகனப்பலிகள் நமக்கு வேண்டியதில்லை, கடவுளை அறியும் அறிவே நாம் விரும்புகிறோம்'' (ஓசே 6:6; எரே 7). இவ்வாசகங்கள் கீழ்ப்படிதலின் அவசியத்தையும், மேன்மையையும் எடுத்து இயம்புகின்றன.

*3. மனிதப் பணி வழி இறை பணி (புதிய ஏற்பாடு):-*

தம்மை வழிபடும் மக்கள், படைப்புகளை வழிபடலாகாது; இறைவன் பணி அன்போடு இணைந்திருக்க வேண்டுமென்று, கிறிஸ்து (மத் 4:10; 9:13) திருச்சட்டம், இறைவாக்கினர் இவைகளிலிருந்து எடுத்து இயம்புகின்றார். இறைபணி, அதை உந்தும் அன்பின் காரணமாக முழுமையாக இருக்க வேண்டும். இப்பணியைத் தடை செய்து போட்டியாக இருக்கக்கூடிய எதிராளியான செல்வத்தையும் இயேசு குறிப்பிடுகிறார். செல்வத்திற்குப் பணிவிடை செய்வது மனிதனை அந்தனாக்குகிறது (லூக் 16:9) என்று கூறுகின்றார். ''சிலை வழிபாட்டுக்கு ஒப்பானது பொருளாசை'' (எபே 5:5) என்று புனித பவுலும், இயேசுவைப் பின்பற்றிக் கூறுகின்றார். ''எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது; கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது'' (மத் 6:24 இணை). ஏனெனில் ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். எனவேதான், ஒருவன் கடவுளின் பணியாளனாக, கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால் செல்வப்பற்றை விட்டுவிட வேண்டியது அவசியமாகும் (மத் 19:21 இணை)

*அ) இயேசுவின் பணி:-* இறுதியாக, இறைவனின் அன்பார்ந்த மகன் இயேசு, பணி புரிய வருகின்றார். இறைவனால் அனுப்பப்பட்டவர் அவர். பழைய ஏற்பாட்டின் இறை பணியாளருடைய பணியின் நிறைவும், முழுமையும் ஆகிறார். ''தம் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும்'' (லூக் 2:49) என்று தமது 12 வயதிலேயே வற்புறுத்தினார். அவரது வாழ்வு முழுவதும் ''தந்தையின் திருவுள்ளத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று மாற்றமுடியாத தந்தையின் திருச்சித்தத்திற்கு அமைந்த வாழ்வாகக் காணப்படுகிறது (மத் 16:21; லூக் 24:26). ஆனால் தட்ட முடியாத இப்பணியே, சிலுவைச் சாவுக்கு அவரை இட்டுச் செல்கிறது. இதனால் ''நான் தந்தைக்கு அன்பு செய்கிறேன் என்பதையும், அவர் எனக்குக் கட்டளையிட்டபடி நடக்கிறேன் என்பதையும் உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்'' (யோவா 14:30). ஆனால் கிறிஸ்து அன்பினால் இப்பணியை மேற்கொள்கிறார். அதுவே இதற்கு உயர்வையும், மதிப்பையும் கொடுக்கிறது.

இறைவனுக்குப் பணிய மனிதன் மறுத்தான், மறுக்கிறான். அதற்குப் பரிகாரம் செய்து மனிதனை மீட்கவும் இறைவனுக்கு எப்படிப் பணிபுரிய வேண்டும் என்று எடுத்துக்காட்டவும் இயேசு விழைகிறார். தங்கள் குருவும் ஆண்டவருமாகிய இயேசு எவ்விதம் பணிபுரிந்தாரோ, அதுபோலவே அவரது சீடர்களின் வாழ்வும் மனிதருக்குப் பணிபுரிவதில் கழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். ''மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்'' (மாற் 10:45). ''நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன்.....ஊழியன் தலைவனுக்கு மேற்பட்டவன் அல்லன்'' (யோவா 13:16). ''நானோ உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப்போல் இருக்கின்றேன்'' (லூக் 22:27).

*ஆ) கிறிஸ்தவப் பணியின் மேன்மை:-* கிறிஸ்துவின் பணியாளர்கள், முதலில் இறைவார்த்தையின் பணியாளர்கள் ஆவார்கள் (அ.ப. 6:4; லூக் 1:2). இறைவார்த்தையைப் போதித்து, அதனால் ஒரு புனிதப் பணியை நிறைவேற்றுகின்றனர் (உரோ 15:16; கொலோ 1:23; பிலி 2:22). ''உண்மையுடனும், தாழ்ச்சியுடனும்'' தேவையானால் ''கண்ணீருடனும், பல இன்னல்கள் மத்தியிலும் இப்பணிபுரிய வேண்டும்'' (அ.ப. 20:19). துணைத்தொண்டராக, இறைமக்களின் சமூகத்திற்குப் பணிபுரிவோர் (அ.ப. 6:1-4) எவ்விதம் ஆண்டவருக்குத் தகுந்த முறையில் பணிபுரிய வேண்டுமென்று புனித பவுல் கூறுகின்றார் (உரோ 12:7.9-13). மேலும் எல்லாக் கிறிஸ்தவர்களும், திருமுழுக்கினால், பாவம் மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு ஊழியம் செய்யும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, நீதிக்கும், கிறிஸ்துவுக்கும் பணி செய்யும் சுதந்தரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர் (யோவா 8:31-36; உரோ 6-7; 1

கொரி 7:12; எபே 6:6). அவர்கள் அடிமையாக அல்லாமல், உரிமை மக்களாக இறைத் தந்தைக்குப் பணிபுரிகின்றனர் (கலா 4:7). ஏனெனில் ஆவியானவருக்குரிய புதிய நெறியில் அவருக்கு ஊழியம் புரிகின்றனர் (உரோ 7:6) ஊழியர் நிலையிலிருந்து, கிறிஸ்துவின் நண்பர்களாக அவர்களை மாற்றிய அருள் (யோவா 15:4), தாராள மனதுடனும், விசுவாசத்துடனும் இறைவனுக்குப் பணிபுரியும் ஆற்றலை அளிக்கிறது. அதனால் அவரது மகிழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு உதவி பெறுகின்றனர் (மத் 25:14-23; யோவா 15:10-11).

**ஊழ்** (DESTINY)

1. ஒரு புறவினக் கடவுளின் பெயரான மெனீ என்பதன் பொருளாகும்.

2. ஒருவரது ஊழ், குறிக்கப்பட்ட முடிவு, விதி ஆகும். பண்டைய எபிரேயரிடையே தனிப்பட்ட ஒருவனது விதி என்பது குலம், இனம், நாடு ஆகியவை போன்ற குழுவின் விதியோடு இணைக்கப்பட்டிருந்தது. மரணத்திற்குப் பின் வரும் வாழ்வைப்பற்றித் தெளிவான கருத்து எதுவும் அவர்களிடமில்லை. எனவே, ஒருவன் தனது விதியினைத் தான் சார்ந்து இருக்கும் சமூகத்துடன் நல்லுறவு கொள்வதிலும், அதனுடைய விருப்பங்களையும் விதியையும் வளர்ப்பதிலும் நிறைவேற்றினான். இது அக்குழுவின் இறைவனுடன் சரியான உறவும், கீழ்ப்படிதலும் கொண்டிருப்பதையும் உள்ளடக்கியது. ஆகவே உடன்படிக்கையைக் கடைப்பிடித்தலும் இறைச்சட்டத்திற்குக் கீழ்ப்படிதலும் பழைய ஏற்பாட்டில் வலியுறுத்தப்பட்டன (யாத் 19:5; உப 4:1-8; 5:28-33; சங் 24:10).

இஸ்ராயேலின் ஊழ் அல்லது விதியானது இறைவனின் மக்களாக இருப்பது, அவரது வல்லமைமிக்க செயல்களைக் கூறுவது (சங் 96:3; 106:8; 145:4. 11-12), மற்றும் நாடுகளுக்கு ஆசீர்வாதமாக இருப்பது (ஆதி 12:2; செக் 8:23; ஏச 43:21) ஆகும். நாடு கடத்தப்பட்ட காலத்திலிருந்து, ஒவ்வொருவனுடைய விதிக்கும் அவனவனேதான் பொறுப்பாவான் என்பது வலியுறுத்தப்பட்டது (எச 18). ஆனால், யூதர்களோ தங்களது எதிர்காலத்தைப்பற்றி ஆபிரகாமின் சந்ததிக்கென அளிக்கப்பட்ட உத்தரவாதத்தையே விடாப்பிடியாகக் கொண்டிருந்தனர் (லூக் 3:8; யோவா 8:33.39).

பழைய, புதிய ஏற்பாட்டிற்கு இடைப்பட்ட காலத்தில், தனிநபரின் உயிர்ப்புப் பற்றிய கருத்தும் அடங்கிய, விரிவான இறுதிக்கால இயல் வளர்ந்தது. நன்மை, தீமைகளின் அடிப்படையில் ஒருவனது விதி அவனது நற்செயல்களின்படி தீர்மானிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் ஒருவனது விதியானது இயேசு கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவு, அவரது போதனைகளுக்கு ஏற்றவாறு நடத்தல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது (அ.ப. 16:31; 1 யோவா 2:3; 3:21-24).

**ஊற்று, சுனை** (Fountain, Spring)

இது, மலைப்பகுதிகளில் அல்லது பள்ளத்தாக்குகளில் நீர் தோன்றி வடியும் இடமாகும். பாலஸ்தீனத்திலுள்ள சுண்ணாம்புப் பாறைகள் இத்தகைய ஊற்றுகள் வடிவெடுப்பதற்கு ஏற்றவையாக இருந்தன. ஊற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

நீர் பழங்கால மேற்காசியாவில் முக்கியமான பங்கேற்றுள்ளது. நீர் வாழ்வுக்கே மூலமாகக் கருதப்பட்டது (திருவுரை 12:6). ஊற்றுகள் பல குடியிருப்புகளுக்குக் காரணமாயின. ஆகவே அந்தந்த ஊற்றின் பெயரே, குடியிருப்புகளுக்கும் பெயராயிற்று. (எ-கா) ஏன்-தோர், ஏன்-கன்னீன், ஏன்-கேதி, ஏன்-ரோகேல், எருசலேம், மெகிதோ, காசோர், கிபயோன் போன்ற நகரங்களில், இயற்கையான ஊற்றுகளிலிருந்து நீரை நகரங்களுக்குக் கொண்டுவர, விரிவான கட்டமைப்புகள் இருந்தன. ஒரு நகரம் முற்றுகையிடப்பட்டிருக்கும் போது, இத்தகைய நீர் கொண்டுவரும் அமைப்புகள் அந்நியர் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்படவேண்டியது மிக முக்கியமாகும் (2 அர 20:20; சீரா 40:17).

பழைய ஏற்பாட்டில் சிறப்புப்பெற்ற ஊற்றுகளுக்குக் காண்க: ஆதி 24:16; நீதி 7:1; 2

அர 2:21. பழங்கால இஸ்ராயேலர்களுக்குக் கானான்நாடு ''ஆறு, ஏரி, ஊற்றுகள் மிகுந்த நாடு. அதிலுள்ள பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பல ஊற்றுகள் புறப்படும்'' நாடாகும் (உப 8:7). எடுத்துக்காட்டான வருங்காலம் பற்றிய இறுதிக்காலக் காட்சியில் உயிரளிக்கும் ஊற்றுகள் கூறப்படுகின்றன (ஏச 35:7; 49:10; யோவே 8:18; சங் 114:8). இறைவனுடைய கொடைகளில் நீரூற்றும் குறிக்கப்படுகின்றது (சங் 84:6; 10:10).

ஊற்று உருவகமாகவும் பயன்பட்டுள்ளது. ஊற்றுகள் நீரை மட்டும் கொடுக்கும் இடமன்று. இறைமகிமைத் தோற்றம் காணும் இடமுமாகும் (ஆதி 16:7; 24:42). வாழ்வும் இளைப்பாறுதலும் அளிக்க ஆண்டவருக்குள்ள ஆற்றலை ஊற்று அடையாளமாக உணர்த்தவல்லது. ஆண்டவரே இஸ்ராயேலின் ஊற்று (சங் 68:26); உயிரின் மூலம் (சங் 36:9; எச 2:13). இறைவனுக்குக் காட்டும் அச்சம் வாழ்வின் ஊற்றாகும் (பழ 14:27). ஞானியின் போதனை வாழ்வின் ஊற்றாக விவரிக்கப்படுகிறது (பழ 13:14). வழிகாட்டுதலுக்கும் (ஏச 35:7; 49:10), பாலினச் செயலுக்கும் (பழ 5:16) முடிவற்ற ஆற்றலுக்கும் (ஏச 58:11; யோவா 4:14; திருவெளி 7:17) பாவத்திலிருந்து தூய்மைபெறுவதற்கும் (செக் 13:1) ஊற்று அடையாளமாகப் பயன்பட்டுள்ளது. தீமை செய்யும் நீதிமான் கெட்டுப்போன நீரூற்றைப் போலாவான் (பழ 25:26). தண்டிக்கப்பட்ட தீயோரும் (சங் 107:33; ஓசே 13:15), பயனற்றதைச் செய்வோரும் (2 பேதுரு 2:17) வறண்ட ஊற்றுக்கு ஒப்பாவார்.

விவிலியக் கிராமங்களில் இன்றும் நீரளிக்கும் ஊற்றுகளுக்கு எடுத்துக்காட்டு: பெத்திலேகேமுக்குத் தெற்கிலுள்ள சாலோனின் குளத்திலுள்ள ஊற்று, எரிகோவில் தேல்-ஏல்-சுல்தானிலுள்ள ஊற்று, நசரேத்தூரிலுள்ள கன்னியின் ஊற்று, போன்றனவாகும். வெப்ப நீரூற்றுகள் கலிலேயாக் கடலுக்கு அருகிலும், சாக்கடலுக்குக் கிழக்கிலும் அமைந்துள்ளன. இவற்றிலுள்ள வெளிறிய மஞ்சள் நிறமுடைய சூடான நீரானது வாத நோய்களையெல்லாம் குணமாக்க வல்லது (ஆதி 36:24) என்று கருதப்பட்டது.

## ஊனியல்பு (CARNAL)

இது, உலகத்தைச் சார்ந்தவற்றை (2 கொரி 10:4) அல்லது கீழான, சீரழிந்த இயல்பின் ஆதிக்கத்திலுள்ள மனித இயல்பைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டிலே இது, பாலினப் பண்பை உணர்த்துவதாகவும் தெரிகிறது (லேவி 19:20; 18:20). 'இச்சைக்குரிய ஊனியல்பு நாட்டமுள்ள' என்ற பொருளும் இதற்குப் பொருந்தும் (உரோ 8:6).

## ஊன் அல்லது தசை (FLESH)

I. பழைய ஏற்பாடு:-

இதன் எபிரேய் வார்த்தைக்கு மனித உடலில் தோலை அடுத்துள்ள பகுதி அதாவது மாமிசம் அல்லது இறைச்சி எனப்பொருள். மனித உடலிலும் மிருக உடலிலும் உள்ள மிருதுவான தசையை இது குறிக்கும். இத்தசை மண்ணிலிருந்து உருவானது எனக் கருதினர் (ஆதி 2:7; 7:22). இறந்த பின்னும் அது மண்ணோடு ம்டியும்வரை தசை அல்லது ஊன் என்றே கூறப்பட்டது (திருவுரை 12:7). தசை உணவாகவும் உட்கொள்ளப்பட்டது (ஆதி 9:4; 40:19; 2 அர 9:36).

உடலைக் குறிக்கப் பொதுவாக எபிரேயர் தசை என்ற இச்சொல்லைப் பயன்படுத்தினர் (எண் 19:7; 1 அர 21:27). உடல் ஆன்மாவின் வெளித்தோற்றமாதலால் இரண்டும் சில செயல்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. ''என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனைப் பாடுகிறது'' (சங் 84:2-3; சங் 63:1-2).

சில இயற்கையான உறவுகளை விளக்க இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டது. ஆதாம் ஏவாளைப் பற்றிக் கூறியது (ஆதி 2:23; 25:14; நீதி 9:2; 2 சாமு 5:1). இது போலப் பலவகையான உறவுகளைக் குறிக்க இது பயன்படுத்தப்பட்டது.

பல இடங்களில் மாமிசம் என்பது மனித பலவீனத்தையும் குறிக்கும். மனிதன் தசையுடல் கொண்டவன். எனவே அழிவுக்குரிய

வன் (ஆதி 6:3; யோபு 34:15). சங் 78:39-இல் மனிதன் பலவீனமுள்ளவன் ஆதலால் கடவுள் அவன்மேல் கருணை கொண்டு பாவத்தை மன்னிக்கிறார் எனக் கூறப்பட்டுள்ளது. 2 நாள் 32:8-இல் அரசனின் தசைக் கரம் கடவுளின் கரத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. கடவுளின் கரம் எல்லாம் வல்லது (யோபு 10:4; சங் 56:4; எரே 17:5). ஏச 31:3-இல் தசையும் ஆவியும் ஒப்பிடப்பட்டுள்ளன. தசை-பலவீனமானது, ஆவி வலுவுள்ளது. பழைய ஏற்பாட்டின்படி தசைவலுவற்றது. ஆனால் பாவமானது அன்று. சங் 77:39-இல் புதிய ஏற்பாட்டுக் கருத்து காணப்படுகிறது. ''கல்லான இதயத்தை எடுத்துவிட்டுக் கனிவான இதயத்தைத் தருவார் இறைவன்'' என வாக்களிக்கப்பட்டது. இதனால் மக்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிவர் (எச 11:19-20; 36:26-27).

II. புதிய ஏற்பாடு:-

தசை என்பது எலும்பை மூடியுள்ள பகுதி. இதற்குப் பல உருவகப் பொருள்கள் உள்ளன.

1. எபிரேயமரபுப்படி தசை அல்லது ஊன் என்பது இரத்த உறவைக் குறிக்கப் பயன்பட்டது (ஆதி 2:23; உரோ 1:3; 9:3; 11:4).

2. இறைவனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மனிதன் வலுவற்றவன் என்பதைக் குறிக்க இது பயன்படுத்தப்பட்டது (மத் 24:22; மாற் 13:20; 1 பேதுரு 1:24; யோவா 1:14). பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது போலவே புதிய ஏற்பாட்டிலும் வெகுவாக இச்சொல் ஆகுபெயராக மனிதனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. மனிதனை உடலற்ற ஆவியிலிருந்து வேற்றுமைப்படுத்த எலும்பு, தசை என்ற சொற்கள் பயன்பட்டன. லூக் 24:36-43-இல் உயிர்த்த ஆண்டவர் ''நீங்கள் காணும் எலும்பும் தசையும் ஆவிக்குக் கிடையா'' என்கிறார்.

4. தசையும் இரத்தமும் என்பது கூட இரத்த உறவைக் குறிக்க ஆகுபெயராகப் பயன்பட்டது (தந்தை மகன் உறவு). ஆனால் இது பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் சீரா 14:18; 17:31-இல் இதைப் போன்றதொரு தொடர் காணப்படுகிறது. ஆனால் இந்தத் தசையும் இரத்தமும் என்ற வழக்கு புதிய ஏற்பாட்டில்தான் பயன்படத்தப்பட்டுள்ளது (மத் 16:17). பவுல்தான் இவ்வழக்கை முதன் முதலில் பயன்படுத்தியிருக்கிறார் (கலா 1:16; எபே 6:12; 1 கொரி 15:50; எபி 2:14).

இறுதி இராவுணவின் போது ''இது என் தசையும் இரத்தமும்'' என்று இயேசு கூறி அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் சீடர்களுக்கு அளித்தபோது அது அவர்களுக்கும் இயேசுவுக்கும் ஏற்படுகின்ற உறவைக் குறிக்கிறது (யோவா 6:53). இதுவே விசுவாசத்தால் ஏற்பட்ட அன்பு உறவிற்கு அடிப்படையாயிற்று. சாதாரணமாக இருந்த இவ்வழக்கத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார் இயேசு. இதன் இறையியல் கண்ணோட்டமும் மாறியது. உடலும் இரத்தமும் என்பது நமது ஆண்டவரின் உடலும் இரத்தமுமாகிய நற்கருணையை நமக்கு நினைவூட்டுகிறது.

5. பவுல் இச்சொல்லுக்கு ஒரு தனிச்சிறப்பான விளக்கம் அளிக்கிறார் (உரோ 7:7-25). பவுலின் ஆய்வுப்படி ஒவ்வொரு உள்ளார்ந்த மனிதனுக்கும் மூன்று கூறுகள் உள்ளன. ஒன்று பகுத்தறிவு: இது கடவுளின் சட்டத்தின் இருப்பிடம்; மற்றது ஊன்; இதிலிருந்து தான் சீர் கேட்டிற்கான ஆசை எழுகிறது. மூன்றாவது கூறு தன் ஆளுமை: இது சட்டத்தையோ, சீர்கேட்டையோ தேர்ந்தெடுத்து நம்மை இட்டுச் செல்கிறது. நமது சித்தத்தைக் கட்டுப்படுத்துகிறது. மேலும், சீர் கேடான ஆசை எழும் இடமாகும். ஊன் என்ற கருத்தை கலா 5:16-24-இல் பவுல் விரித்துரைக்கிறார். பவுலின் கருத்துக்கள் பழைய ஏற்பாட்டில் 'தசை' யின் சில கருத்துக்களோடு மட்டுமே ஒத்திருக்கின்றன. பவுலின் கருத்துக்கள் பிலேவின் கருத்தோடு ஒத்துள்ளன. இவரின் கருத்துப்படி ஊன் அறியாமையின் இருப்பிடமாகும். எப்பிகுரியுஸ் என்ற

மற்றொரு ஞானியின் கருத்துப்படி தசை என்பது தீய இச்சைகளையும் பாவ நாட்டங்களையும் குறிக்கும். இதற்குப் பின்னால் எழுந்த மற்ற பல தத்துவங்களும் தசை என்பதை ஓர். தாழ்ந்த நோக்குடனேயே பார்த்தன. பவுல் வாழ்ந்த காலத்தில் பாவம், பாவத்திலிருந்து விடுதலை என்ற கருத்துக்கள் எங்கும் பரவியிருந்தன.

6. இது ஒரு மங்கல வழக்காக மாறி ஆண் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்வதைக் குறித்தது (ஆதி 17:11.14.23-25; உரோ 2:28; எபே 2:11; கொலோ 2:13).

III. இறையியல் சிந்தனை:-

சில மக்களுடைய நோக்கத்தில் மனிதனுடைய ஊனுடல் ஒருவிதத் தாழ்ந்த நிலையினையும் தீமையையும் கூடக். குறிப்பிடுவதாக உள்ளது. இச்சிந்தனையானது விவிலியத்தின்மீது மறைமுகமாகவே சார்ந்துள்ளது. உண்மையில் மறைநூல் ஊனுடலை அதன் தன்மையாலே தீயதொன்றாக எப்போதுமே கருதியதில்லை; அதனுடைய தீர்ப்புக்கள் மனித இயல்பைப் பற்றிய மெய்யில் ஊக்கத்தினாலில்லாமல், இறைவெளிப்பாட்டின் ஒளியின்மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. ஊனுடலானது இறைவனால் படைக்கப்பட்டது. இறைமகனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இறை ஆவியால் உருமாற்றம் பெற்றுள்ளது. ''ஊனுடலின் உயிர்ப்பை நான் விசுவாசிக்கிறேன்'' என்று கிறிஸ்தவனால் கூற முடிகின்றது. ஏவுதல் பெற்ற நூல்களில் முதலிலிருந்து இறுதிவரை, ஊனுடலானது மனிதனுடைய படைக்கப்பட்ட தன்மையையே குறிப்பிடுகின்றது. ஆனால் இது தீய இயல்பினைக் குறிப்பிடவில்லை என்று உறுதியாகக் கூறலாம். ஊனுடலானது பாவி என்ற அளவில் மனிதனது நிலையைக் குறிக்கிறது. இத்தகைய கருத்து வளர்ச்சியின் முடிவில் ஊனுடல் என்னும் சொல்லானது, இருபொருள் நிலையை மறைத்து விடுகின்றது; அதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

1. இறைவனின் முன்னிலையில் படைப்பு:-

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், மனிதன் என்பவன் பருப்பொருள் (ஊன் அல்லது உடல்) மற்றும் அதற்கு உயிரளிக்கின்ற உருப்பொருள் (உடல் அல்லது ஆன்மா) ஆகிய இரு மாறுபட்ட தனிப்பொருள்களால் உருவானவன் என்று அறிந்து கொள்ளப்படவில்லை. அவன் தான் இருத்தலின் ஒருமைப்பாட்டை உணர்கிறான். அவன் ஊனுடலானவன் என்று கூறுவதானது, மனிதனது வெளிப்புற, உலகைச் சார்ந்த, உடல் சார்ந்த நோக்கின் படியும், அவனது உலகியல் நிலையில் தனிச்சிறப்புடன் அமைக்கின்ற ஊனுடலால் தன்னையே வெளிப்படுத்த அவனை அனுமதிக்கின்ற நிலையின்படியும் அவனைப் போற்றிப் பேசுவதாகும்.

அ) ஊனுடலின் ம்திப்பு:- ஒரு நெசவாளன் (யோபு 10:11; சங் 139:13 தொ) அல்லது குயவன் (ஆதி 2:7; எரே 1:5; யோபு 10:8-9) வடிவமைப்பது போன்று இறைவனால் அமைக்கப்பட்ட ஊனுடலானது ஊன் என்ற பெயரில் பாராட்டுக்குரியதே .(திருவுரை 11:5; 2 மக் 7:22-23). ஊனும் இரத்தமும் என்பது (சீரா 14:18; மத் 16:17), எலும்பு மற்றும் ஊன் (ஆதி 2:23; லூக் 24:39), இதயம் மற்றும் ஊன் (சங் 84:3; 73:26) போன்ற நமது உடல்சார்ந்த கூற்றைக் குறித்தாலும் அல்லது நோயிலும் (சங் 38:4; கலா 4:14), துன்பத்திலும் (2 கொரி 12:7), அல்லது இன்னல்களிலும் (1 கொரி 7:28) முழுமையான உடலைக் குறித்தாலும் அதைப்பற்றி வெறுப்பையோ புறக்கணிப்பையோ காட்டக்கூடிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை; மாறாக ஊனுடலானது எப்போதுமே வெறுக்கப்பட முடியாது (எபே 5:28-29). இறைவன் இஸ்ராயேலின் கடினமான கல்போன்ற இதயத்தை ஆர்வமுள்ள, அன்பான 'உணர்ச்சியுள்ள இதயத்தினால்' (எச 36:26) மாற்றியமைப்பார் என்று எசக்கியேல் அறிவிக்கும்போது ஊனுடலின் புகழுரையானது உச்சநிலையை அடைகிறது.

ஆ) உடலான மனிதன்:- மேலும் அதிக அடிப்படையான தகுதி ஒன்றும் அங்குள்

எது; ஊனுடலானது மனிதனை அவனுடைய புலனீடான முழுமையிலும் குறிப்பிட முடியும். ஆன்மா என்னும் சொல்லை உபயோகிப்பது போன்றே, செமித்திய இனத்தவர், உயிரியக்கமுள்ள அனைத்துப் படைப்பு (ஆதி 6:17; சங் 136:25; சீரா 40:8), மனித இனம் (ஏச 40:5-6; லூக் 3:6; யோவே 3:1; அ.ப. 2:17; மாற் 13:20; யோவா 17:2) ஆகியவற்றைக் குறிப்பிடும் ''எல்லா ஊனைப்பற்றியும்'' பேசுகின்றனர். இதே சொல்லின் மூலம், அவர்கள் மனிதனின் உள்ளியல்பையும் குறிப்பிட முடியும்; இவ்வாறாக, ஆதாம் இறைவன் தன்னிடம் கொண்டு வந்த பெண்ணில் மற்றொரு ஆளைக் காண்கிறான்; ஆனால், தன்னுடையதைப் போன்ற ஒரு ஆன்மாவை அவள் கொண்டிருப்பதாக அவன் கூறவில்லை; ''இவள் என் எலும்புகளின் எலும்பும் தசையின் தசையுமாய் இருக்கிறாள்'' (ஆதி 2:23; சீரா 36:24) என்று வியப்புடன் கூறுகின்றான். இந்த இறுதிச் சொற்கள் எல்லா உறவிற்கும் பரவக்கூடிய ஆழமான தோழமை பற்றிய உணர்வையும் (ஆதி 29:14; 37:27; உரோ 9:3), மேலும் குறிப்பாக வாழ்க்கைத் துணைவர்கள் உருவாக்குகின்ற 'ஒரே உடல்' (ஆதி 2:24; மத் 19:5; 1 கொரி 6:1; எபே 5:31) எனப்படும் புதிய உயிரையும் வெளிப்படுத்துகின்றன. அதே சொல்லானது அந்நபரைப் பற்றியும் (திருவுரை 4:5; 5:5; 2 கொரி 7:5) அவனது உளவியல் அமைப்பைச் சார்ந்த செயல்களையும், தவறான கருத்தினாலில்லாமல், உடல் சார்ந்த நிலையினைச் சந்தேகத்திற்கிடமின்றிக் குறிக்கின்றது. ஊனுடலானது துன்புறுகிறது (யோபு 14:22); அஞ்சுகிறது (சங் 119:119); ஆசைகளால் அலைக்கழிக்கப்படுகிறது (சங் 63:2); அல்லது மகிழ்ச்சிக் குரலெழுப்புகிறது (சங் 84:3); ஞானிகளின் படிப்பினைகளால் அது வாழ்கிறது (பழ 4:22); அது விருப்பமும் கொண்டிருக்கிறது (யோவா 1:13).

இ) உலக நிலைமை:- இறுதியாகப் புலனீடான மனிதனை அவனுடைய ஊனுடலால் குறிப்பிடுவதென்பது அவனது உலகத் தோற்றத்தை வெளிப்படுத்துவதாகும். இச்சொல்லானது இறைவன் மற்றும் ஆவியானவரில் விண்ணக உலகிற்கு மாற்றான நிலையில் பயன்படுத்தப்படும்போது, இத்தகைய பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

1. படைக்கப்பட்டது:- இறைவனுக்குப் புறம்பே, வானதூதர் முதற்கொண்டு, அனைத்தும் ஊனாகும் (எச 10:12); இந்தக் கூற்றில் திருச்சபையின் பல தந்தையர்களை விட அதிகக் கடினமான நிலையை யூதா திருமுகத்தில் (7) காணவில்லை; வானதூதர்களின் ஊன் நம்முடையதிலிருந்து வேறுபட்டது என்று குறிப்பிடுவதோடு அவர் நிறைவடைகிறார். அதனால் குலமுதியவர்கள் (உரோ 9:5), நமது தந்தை ஆபிரகாம் (உரோ 4:1) அல்லது உலகத் தலைவர்கள் (கொலோ 3:22; எபே 6:5), ஆகியவர்களைப் பற்றிப் பேசும் போது ''ஊனுடலின் படி'' என்று இணைத்துக் கூறுவது ஒரு போதும் தவறாகாது. அவ்வாறே, 'ஊனுடலில்' வாழ்வது என்பது (2 கொரி 10:3; கலா 2:20; பிலி 1:22 தொ; யாக் 4:1-2) உலகில் வாழ்வதாகும். காணப்படுவதாகும் (கொலோ 2:1), புலனீடாக இருப்பதாகும் (2:5). அது உலகில் வாழ்வதையே சாதாரணமாகக் குறிப்பிடும். உலகில் இயேசு வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடும்போது (1 யோவா 4:2; எபி 5:7), அவர் ஊனும் இரத்தமும் பெற்றுக் கொண்டார் என்று கூறப்படுகிறது (எபி 2:14).

2. வரையறையும் இயலாமையும்:- சாதாரணமாக ஊனைப்பற்றிப் பேசுவதென்பது ஒரு படைப்பின் உறுதியின்மையைப் பற்றிப் பேசுவதாகும். ''மனிதர் அனைவரும் புல்லுக்குச் சமம்...ஆனால், ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்'' (ஏசா 40:6-7). வானகம் சார்ந்தவற்றிற்குப் பூமியைச் சார்ந்தவை இருப்பது போன்று ஆவிக்கு ஊன் உள்ளது; இவ்வாறாக, ''ஊனியல்பின்படி தாவீதின் வழி வந்த இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியினால் ஆற்றல்மிக்க இறைமகனாக ஏற்படுத்தப்பட்டார்'' (உரோ 1:3-4; 1 திமோ 3:16). படைப்பு என்கிற நிலையில், தானாகவே இறையரசில் நுழைய மனிதனால் முடியவில்லை. ''ஊனுட

லால் பிறப்பது ஊனுடலே, ஆவியால் பிறப்பதோ ஆவி'' (யோவ 3:6; 1 கொரி 15:50). தசையும் இரத்தமும் என்ற அளவில் மனிதன் இனி ஒருபோதும், தானாகவே இறை உண்மைகளை அறிய முடியாது (மத் 16:17; கலா 1:16; எபே 6:12). அவற்றைத் தனது அறிவினால் மதிப்பிட அவன் வரம்பு மீறும்போது ''மனிதர் மதிப்பின்படி தன்னை ஞானியாகக்'' (1 கொரி 1:26) காட்டிக் கொள்கிறான். எனவே, உண்மையில், ''உயிர் அளிப்பது ஆவியே, ஊனுடல் ஒன்றுக்கும் உதவாது'' (யோவா 6:63); எடுத்துக் காட்டு நற்கருணைச் சடங்கின் பின்னணியில் மீட்பரைக் காணுதல்.

இத்தகைய உலக நிலையையே இறை மகன் ஏற்றுக் கொள்ள விரும்பினார். யோவான் கூறுவது போல, மனித வரையறைகளோடு இந்த உலகின் உண்மையான மனிதனாக ''வாக்கு மனுவுருவானார்'' (யோவா 1:14); அம்மனிதரில் விசுவாசிகள் மீட்பரையும், இறைமகனையும் காண்கின்றனர் (1 யோவா 4:2; 2 யோவா 7), முடிவில்லா வாழ்வை அடைய அவரது உடலையும் இரத்தத்தையும் உண்பதற்கு விருப்பமுள்ளவர்களாகுகின்றனர் (யோவா 6:53-58).

ஈ) ஊனுடலின் உலகம்:- இவ்வாறு, 'மண்ணுக்குச் (ஆதி 3:19; திருவுரை 12:7) சமமான ஊனுடலின் மூலம் மனிதன் இம்மைக்குரிய உலகைச் சார்ந்தவனாகிறான். இறைவன் அவனுக்கு அளித்த மூச்சின் மூலம் அவன் விண்ணக உலகுடன் உறவு கொள்கிறான். இரு உலகங்களுக்கும் உரிமையாக உள்ள இந்த எண்ணமானது, ஆவிகளின் உலகிற்கும் ஊனுடலின் உலகிற்கும் வேறுபாடு ஏற்படுத்த யூத ஆசிரியர்களைத் தூண்டியது. எபி. 12:9-இல் ஆவிகளின் தந்தையையும் ஊனுடலின்படியான தந்தையர்களையும் வேறுபடுத்துவது போல, விவிலியத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பாளருடைய கருத்துப்படி ''எல்லா ஊனுடல்களுக்கும் உயிரளிக்கின்ற ஆவிகளின் இறைவன்''. ''ஆவிகளுக்கும் எல்லா ஊனுடல்களுக்கும் இறைவன்'' ஆகிறார் (எண் 16:22; 27:16).

ஆனால் அண்ட இரு பொருள்வாதம் மனிதன் தனக்குள் ஆவி மற்றும் ஊனுடல் ஆகியவற்றின் இரு உலகங்களையும் இரண்டு உட்பொருட்களாக இணைக்கின்ற மனிதவியல் இருமைக்கோட்பாட்டோடு குழப்பப்படக்கூடாது. விதிவிலக்காக அமைந்துள்ள இருவாசகங்களுக்கும் சரியான விளக்கம் கண்டுபிடிப்பது மிக அவசியமாக உள்ளது. உரோ 7:25-இல் பவுல் கிரேக்க சிந்தனையில் உள்ளது போன்று, தன்னையே கட்டுப்படுத்தக்கூடிய செயல்திறனைக் காரணமாகக் காட்டவில்லை; ஊனுடலில் உள்ளார்ந்த பாவத்தின் சீர்குலைவிற்கு முன்னால் ஆற்றலற்று நிற்கின்ற பார்வையாளனைக் காரணம் காட்டுகிறார். மத் 26:41-இல் உள்ள ஊக்கமுள்ள ஆவியானது மனிதனின் ஒரு பாகமாக இல்லாமல், இறைவனால் அருளப்பட்ட கொடையாக உள்ளது (சங் 51:14). மனிதன் என்னும் ''கலப்பு'' முழுமையின் கூறுகளில் ஒன்றாக உடல் எங்குமே இருந்ததில்லை. 2,3-ஆம் நூற்றாண்டுகளில் இராபிகளின் சிந்தனையின் தொடக்கத்தில் மாத்திரமே, யூத உலகில் மனிதவியல் இருமைக்கோட்பாடு தழுவப்பட்டது.

2. கடவுளின் முன்னால் பாவி:-

ஆயினும், ஒழுக்கவியல் இருமைக்கோட்பாடு என்ற மற்றொன்று உண்டு. அது தோற்றுவிக்கப்பட்ட சூழ்நிலையின்படி, இந்நிலையானது கவனமாய் வேற்றுமைப் படுத்தப்பட வேண்டும். சில கிரேக்கருக்கு, உடலானது ஆன்மாவின் சிறையாக இருப்பதால், ஒருவன் தவறான சூழ்நிலையினின்று தப்பிப்பதுபோல அதனின்று தப்பிக்க முயல வேண்டும். பிற்காலத்தில் எபிக்கூரியன் பிரச்சினையின் விளைவாக, தீயதாகவும், ஆவியைத் தரம் தாழ்த்துவதாகவும் கருதப்பட்ட பாலுணர்ச்சியோடு ஒன்றாகக் கருதப்பட்டு, ஊனுடலானது சிற்றின்பத்தின் இருப்பிடமாகியது. யூதா எதிர்த்துப் போராடிய ஒழுக்க வரம்பற்ற ஞானவாதம் இத்தகைய எபிக்கூரியன் கோட்பாடுகளை ஓரளவு பிரதிபலிக்கலாம் (யூதா 4:7). இயற்கையிலேயே தீயதாக உள்ள ஊனுடலானது வெல்லப்படவேண்டும். பிற்கால யூத மற்றும் புதிய ஏற்பாட்டு

ஆசிரியர்கள், அவர்கள் அளவில் இத்தகைய போராட்டத்தைப்பற்றிப் போதிக்கிறார் களெனில் அவர்கள் அதனை முற்றிலும் மாறு பட்ட கோணத்தில் செய்கிறார்கள். அதாவது மனிதன் தனது நம்பிக்கையைக் கொண் டுள்ள படைக்கப்பட்ட நிலையான ஊனுட லானது, தீமையின் ஆவி ஆட்சி புரிகின்ற உலகினைத் தனிச்சிறப்பாகக் குறிப்பதில் முடிகிறது.

ஆ) ஊனுடலில் பாவ நம்பிக்கை:- இறை வன் மட்டுமே நம்முடைய ஆதரவாக இருக்க வேண்டுமென ஏசயா போதிக்கின் றார்: ''எகிப்தியர்களுடைய குதிரைகள் வெறும் தசைப் பிண்டங்கள், ஆவியல்ல'' (ஏச 31:3). எரேமியா இருவித நம்பிக்கை களையும் வேறுபடுத்துகிறார். ''மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; மனித பல வீனத்தையே அவன் தன் வலிமையாய்க் கொள்கிறான்; தன் இதயத்தை ஆண்டவரிட மிருந்து அகற்றுகிறான்'' என்கிறார். (எரே 17:5 தொ). பவுலும் இக்கருத்தையே பின்பற்று கிறார்; ''எந்த மனிதனும் இறைவன்முன் பெருமை பாராட்டாமலிருக்கட்டும்'' (1 கொரி 1:29). விருத்த சேதன சலுகையினைத் தங்களது பெருமையாகக் கொண்டிருந்த யூத ருக்கு (உரோ 2:25-29; கலா 6:12 தொ) முற்றிலும் மாறுபட்டவராகப் பவுல் கிறிஸ்து வைத்தவிர வேறு எவரிலும் பெருமை பாராட்ட விரும்பவில்லை (பிலி 3:3-4). அதன் விளைவாக, ஊனுடலில் வாழ்ந்தா லும் அதில் பெருமையடித்துக் கொள்ளாமல் இருக்கும்படி (2 கொரி 11:18) அவர் ஊனி யல்பின்படி நடப்பதே இல்லை (2 கொரி 10:2-3). இவ்வாறு நடப்பதன் மூலம், தனது விருப்பத்திலோ (2 கொரி 1:17), கிறிஸ்து வைப் பற்றிய தனது அறிவிலோ (5:16) ஒருவன் உடலியல்பு உள்ளவன் என்று அழைக்கப்படத் தகுதியற்றவனாகிறான் (1 கொரி 3:1.3; 2 கொரி 1:12). தவறு செய்த யூதர்களை இயேசு கண்டித்ததுபோல (யோவா 8:15), ஊனியல்பின்படி இயேசு வைத் தீர்ப்பிடுவதும் இயலக்கூடியதே: அவர்களது கண்கள் ஊனமாய் இருந்தபடி யால் (யோபு 10:4), தோற்றத்தைக் கொண்டு தீர்ப்பிட்டு (யோவா 7:24) அவர்கள், தங்களு டைய நிலையற்ற படைப்பு நிலைமையைப் பாவ நிலைக்கு மாற்றினார்கள். யோவானும் உலகைப் பாவமானது என்று விவரிக்கிறார். உடல் இச்சையைக் கண்டனம் செய்கிறார் (1 யோவா 2:16). இந்நிலையானது ஊனுட லுக்கு எதிரான குற்றச்சாட்டாக இல்லாமல், அதனைப் பாவமுடையதாக்கிய மனித விருப்பத்திற்கு எதிரானதாக உள்ளது. ஒவ் வொன்றும் தனது ஆதிக்கத்தின் கீழ் ஒரு உலகைக் கொண்டு, மனிதனுடைய இதயத் தைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளவிரும் பும் நல்லது, தீயது என இருவகையாக ஆவிகளை வேறுபடுத்தலாம். (கும்ரானில் உள்ளது போல) இது நன்மையின் ஆவி தீமையை வெற்றி கொள்ள இயலாத நிலை யில், இப்போராட்டம் நீடித்திருக்கும் என்ப தான இயல்பான இருமைக் கோட்பாட்டை எடுத்துக் கூறுவதன்று.

ஆ) பாவமிக்க உடலும் தூய்மையின் ஆவி யும்:- ஊன் மற்றும் ஆவி என்னும் இரு சொற்களைப் பயன்படுத்திப் பவுல் இப் போராட்டத்தையும் வெற்றியையும் முறைப் படுத்துகிறார். ஊனுடலுக்கும் ஆவிக்கும் இடையில் உள்ள வேறுபாடானது, கிரேக்கர் கள் ஆன்மாவிற்கும் உடலுக்கும், சுத்தத்திற் கும் அசுத்தத்திற்கும் இடையே ஏற்படுத்து கின்ற நிலைமைக்குத் தோற்றத்தில் மட் டுமே தொடர்புடையதாக உள்ளது. வானுக் கும் பூமிக்கும் இடையிலுள்ள செமித்திய எதிர்ப்பிலிருந்து இது தோன்றியிருந்தாலும், கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்ட தூய ஆவி மற்றும் நமது ஊனுடல் நம்மைக் கொண்டு வந்து சேர்த்திருக்கும் பாவம் ஆகிய இரண்டு அனுபவங்களால் இது மாற்றப்பட்டுள்ளது.

1. ஊனுடலுக்கும் ஆவிக்கும் இடையி லான போராட்டம்:- இப்போராட்டத்தை விவரிக்கும் இலக்கிய எதிர்நிலை இரு கட் டங்களில் வளர்கின்றது. இவற்றைக் கலாத்தி யருக்கும் உரோமையருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களில் காண்கின்றோம்.

விசுவாசிகள் ஊனியல்பின்படியான ஆகார் மூலமாக இல்லாமல், ஆவியின்படி சாராள் மூலமாகப் பிறந்த ஆபிரகாமின் பிள்ளைகள் என்று பவுல் தெரிவிக்கிறார் (கலா 4:21-31). சட்டமும் விசுவாசமும் வருணிக்கின்ற மீட்பினுடைய வரலாற்றின் இரு மாறுபட்ட காலங்களாகப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் குறிப்பிடப்பட்டுள்ளன. விசுவாசி பங்கு கொள்ளுகிற இரு உலகங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு இதனின்றே வருகின்றது. ஊனுடலானது, பலுகிப்பெருகுமாறு சட்டம் உருவாக்கிய பாவத்தின் மிச்சமாகத் தோன்றுகிறது. ஆவியின் கொடையால் நிறைவேற்றப்பட்டதும், சட்டத்தின் நோக்கத்தில் நல்லவையாக உள்ளதுமான அனைத்தின் உருவமாக ஆவி உள்ளது. இவ்விரு வல்லமைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடானது கிறிஸ்தவனுடைய இதயத்திலேயே விட்டுக்கொடுக்காததாக உள்ளது (கலா 5:17); அவன் ஊனியல்பின்படி வாழ முடியும்; ஆனால் ஆவியின்படி வாழ வேண்டும்; தூய ஆவியினால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையைத் தவறான வழியில் செலுத்திவிடக்கூடிய தொடர்ச்சியான அபாயமானது இதனின்றே வருகின்றது.

உரோமையருக்கான திருமுகத்தின் ஏழாவது மற்றும் எட்டாவது அதிகாரங்களில், வாழ்வு மற்றும் சாவு ஆகியவற்றின் இரு ஆதாரங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்று பவுல் காட்டுகின்றார். கிறிஸ்துவின் மூலம் மனிதன் பாவத்தை அகற்றியிருந்தாலும், மனிதனில் ஒன்றன்பின் ஒன்றாகத் தங்கியுள்ள இவ்விரு வல்லமைகளும் (உரோ 7:17-20; 8:9 தொ) விசுவாசியில் இருவகை வாழ்க்கை முறைகளை ஏற்படுத்துகின்றன (8:4-17). ஊனியல்பின்படி வாழக்கூடிய வாய்ப்பானது, பாவம் நமக்குள்ளே விட்டுச் செல்கின்ற சுவடாகும். முன்னர்த் தங்கியிருந்த ஊனுடலின் மூலம் பாவம் இதனைச் செய்கின்றது.

2. ஊனுடலின் ஆதிக்கம்:- வாழ்க்கையின் கோட்பாடாக ஏற்கும்போது, ஊனுடலானது மனிதனுடைய நடத்தையைக் கட்டளையிடுகிறது. பாவத்தினுடைய வல்லமையினின்று அதனுடைய தனிச்சிறப்புரிமைகளையும் ஆசைகளையும், உரிமைச் சொத்தாகப் பெற்று, உண்மையான தன்னாட்சி பெறுகிறது. 'பாவத்தின் சட்டத்திற்குக்' கீழ்ப்படிபவர்களை அது அடிமையாக்குகின்றது (உரோ 7:25). அதிகாரத்துடன் (கொலோ 2:23) அது பின்னர், தன் ஆசைகளையும் (உரோ 8:5 தொ) இச்சைகளையும் (உரோ 13:14; கலா 3:3; 5:13-16) வெளிப்படுத்துகின்றது. அது தீய செயல்களையும் முன் கொண்டு வருகிறது (கலா 5:19) ஊனியல்பின்படி வாழ்வானது இவ்வாறு இருக்கும் பட்சத்தில் (உரோ 7:4), புரிந்து கொள்வதும் கூட ஊனியல்புள்ளதாக மாறுகிறது (கொலோ 2:18; 1 கொரி 3:3). இது உடலுக்கும், அது தன்னிலே எப்பக்கமும் சேராததாயினும், பொருந்தும். ஊனுடலின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது 'பாவத்திற்குட்பட்ட உடல்' என்றும் பெயரைப் (கொலோ 2;11) பெறுகிறது. இது ''பாவ உடலோடு'' (உரோ 6:6) ஒன்றாக்கப்படுகிறது. இது உண்மையில் பாவத்தின் ஊனால் வடிவமைக்கப்படுகிறது (8:3).

3. கிறிஸ்துவின் வெற்றி:- ஊனுடலை ஏற்று (கொலோ 1:22), பாவமாக மாறிய (2 கொரி 5:21) கிறிஸ்துவால் பாவம் வெற்றி கொள்ளப்பட்டது. பாவத்தின் கீழ் உழன்ற ஒரு நிலையை அவர் தம்மீதே ஏற்று அதே ஊனுடலில் பாவத்திற்கெதிரான தண்டனைத் தீர்ப்பை அளித்தார் (உரோ 8:3), அதுமுதல், கிறிஸ்தவன் தனது ஊனுடலை கிறிஸ்துவில், சிலுவையிலறைகிறான் (கலா 5:24). அவன் மேற்கொண்டுள்ள போரானது திடீர் அழிவுடன் முடிவதில்லை (6:8). அவன் படைக்கப்பட்ட உண்மையான நிலையை உணர்ந்து, தனது நம்பிக்கையை ஊனுடலின்மீதோ, தனது பலவீனத்திலோ வைக்காமல், வாழ்வளிக்கும் ஊற்றாகிய மீட்பருடைய இறப்பின் வல்லமைமீது வைக்கிற அளவுக்கு அவனுக்கு வெற்றி உறுதிப் படுத்தப்படுகிறது.

# எ

**எசுக்கேல்** (JEHEZKEL - இறைவன் வலிமை அளிப்பாராக)

ஓர் இனப்பெயர் முதல்வர். ஆரோனின் வழிவந்த ஒரு குரு. தாவீது காலத்தில் குருக்களின் 20-ஆவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:16).

**எகர்-சகதூத்தா** (JEGAR-SAHADUTHA - சாட்சி மேடை)

லாபானுக்கும் யாக்கோபுவுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையை நினைவுகூற உருவாக்கிய கற்குவியலுக்கு லாபான் இட்ட அரமேயப் பெயராகும் (ஆதி 31:47). எபிரேயப் பெயரான கலயேத்தைப் போன்று இதுவும் ஓர் இடத்தின் பெயருக்கு அடிப்படையாக அமைந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை.

**எகல்லலேல்** (JEHALLELEL - இறைவன் ஒளிர்வாராக)

1. இனப்பெயர் முதல்வர்; யூதாவின் வழித்தோன்றல் (1 நாள் 4:16).

2. மெராரி குலத்தைச் சார்ந்த ஒரு லேவியன். அசரியாவின் (18) தந்தை (2 நாள் 29:12).

**எகிசிக்கியா** (JEHIZKIAH - யாவே வலிமை அளிப்பாராக)

அரசன் பெக்கா காலத்தில் எப்பிராயிம் மக்கள் தலைவனும் சல்லூம் என்பவரின் மகனுமாவார் (2 நாள் 28:12).

**எகிதியா** (JEHDEIAH - யாவே மகிழ்வாராக)

1. தாவீதின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த லேவியருள் ஒருவர். சூபாயேலின் வழித்தோன்றல் (1 நாள் 24:20).

2. மேரோனோத்தியரான இவர் தாவீதின் கழுதைகளைக் கண்காணித்து வந்தார் (1 நாள் 27:30).

**எகிப்தியன்** (EGYPTIAN)

அ.ப.21:38-இல் பவுல் தவறாக ஒரு எகிப்தியனாகத் தொடர்புபடுத்தப்படுகின்றார். இந்த வாசகம் இரண்டு கேள்விகளை எழுப்புகிறது: (அ) அவன் யார்? (ஆ) எகிப்தியனாக அறிமுகப்படுத்துவதில் லூக்கா ஆசிரியரின் உட்கருத்து என்ன?

முதல் கேள்விக்கு நற்செய்தியாளர் லூக்கா கூறும் பதில் மொழி:- 1. அவன் கிரேக்க மொழியில் பேசாததால் அவன் ஒரு நாகரீகமற்ற கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன். 2. அசீரியர்களின் தலைவனாக இருந்து நாலாயிரம் கொள்ளைக் கூட்டத்தாரைப் பாலைவனத்திற்கு அழைத்துச் சென்று குழப்பத்தை உருவாக்கியவன். 'கொள்ளைக்காரர்கள்' என்பது ஒரு சமயப் புரட்சியினை மறைமுகமாக உள்ளடக்கியிருக்கிறது. மேலும் பாலைவனத்தில்தான் மெசியா தோன்றுவார் என்ற கருத்து நிலவியது. பவுல் ஒரு சமயச் சர்ச்சையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் இதை லூக்கா தெளிவுபடுத்தவில்லை.

பெயர் சொல்லப்படாத, ஓர் எகிப்தியனைப்பற்றி யோசிபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆசிரியர் குறிப்பிடும் கிளர்ச்சியில் கொள்ளைக் கூட்டத்தார் அனைவரும் வாள் ஏந்தியவர்களாக எருசலேம் தெருக்களில் ஓடிச்சென்று மிருகத்தனத்துடன் பார்ப்பவர்களையெல்லாம் கொன்று குவித்தவர்களாக விவரிக்கப்படுகின்றனர். ஆனால் பாலைவனத்தோடு தொடர்புடையவர்களாகக் காட்டப்படவில்லை. அதே நிகழ்ச்சியில் எருசலேம் நகரையே சேதப்படுத்திய இரக்கமற்ற கொடியவர்களைப் பற்றி, மற்றொரு குழுவினரைப்பற்றி, குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இறை அருளால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக நடித்து மக்களனைவரையும் கடவுள் விடுதலை தரும் அடையாளங்களைக் காட்டுவார் என்று ஏமாற்றி, பாலைவனத்திற்குக் கடத்திச் சென்றனர். ஆனால் பெலிக்சு என்ற உரோமை ஆளுநர் ஒரு புரட்சியை முன்கூட்டியே எதிர்பார்த்ததால் காலாட்

படை, குதிரைப்படை வீரர்களை அனுப்பி அவர்களில் அதிகமான பேரை அழித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

யோசிபாசின் கருத்துப்படி எகிப்தியன் என்பவன் ஒரு போலி இறைவாக்கினனாக விவரிக்கப்படுகின்றான். அவன், எருசலேம் நுழைந்துவிடலாம் என்ற நம்பிக்கையில், முப்பதாயிரம் மக்களைப் பாலைவனத்திலிருந்து ஒலிவ மலைக்குக் கடத்திச் சென்று, அவர்களைத் தனக்குப் பணிந்து நடக்கச் செய்கின்றான். மீண்டும் பெலிக்சு உரோமைப் படைவீரர்களுடன் சேர்ந்து மக்களின் உதவியினால் எகிப்தியர்களை ஓடச் செய்தார்.

இதே நிகழ்ச்சியை மூன்றாவது முறையாக யோசிபஸ் விளக்கும்பொழுது எதிரிகளைக் கொள்ளைக்காரர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் விவரிக்கின்றார். இதில் வாள் ஏந்திய வீரர்கள் அருங்குறிகள் நிகழ்த்தப் போவதாக மக்களைக் கட்டாயப்படுத்திப் பாலைவனத்திற்கு நடத்திச் சென்றனர். பெலிக்சு அவர்களை மீட்டு வந்து தண்டித்தார். பழங்கால நிகழ்ச்சிகளில் எகிப்திலிருந்து ஒரு மனிதன் எருசலேமிற்கு வந்து மக்களை அவனுடன் ஒலிவமலைக்கு வருமாறு கட்டாயப்படுத்தினான் என்றும், அங்கு அவன் மக்களுக்கு எவ்வாறு எருசலேம் மதில் சுவர் வீழ்ச்சியுறும் என்பதைக் காட்டுவதாக உறுதி செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. உடனே பெலிக்சு குதிரைப் படை வீரர்களோடு சென்று அவர்களில் 400 பேரைக் கொன்று குவித்தார். ஆனால் எகிப்தியன் மட்டும் தப்பித்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று விவரிப்புக்களும் அ.ப.21:38-இல் கூறப்பட்டிருக்கும் எகிப்தியனும் ஒரே ஆளையோ ஒத்த நிகழ்ச்சியையோ குறிக்கிறது. எல்லா நிகழ்ச்சிகளும் எகிப்தியன் தப்பித்துச் சென்றதாகக் கூறியிருக்கிறது.

யோசிபஸ் கொடுத்திருக்கும் நிகழ்ச்சியமைப்பின்படி எகிப்தியன் ஒரு யூதனாக அல்லது மதம்மாறியவனாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் எவ்வாறு யூதனல்லாத ஒருவன் யூதக்கிளர்ச்சியை உருவாக்க முடியும்? மேலும் உரோமையர்களைத் தூக்கியெறியும் நோக்குடன் கடவுளின் கருவியாகிய இறைவாக்கினராக நடித்த எகிப்தியனைப் பற்றி யோசிபஸ் தருகின்ற விளக்கம், அந்த எகிப்தியன் யூதனாக இருந்தால்தான் பொருத்தமானதாக இருக்கும். ஆனால் ''நான் ஒரு யூதன்'' என்ற பவுலின் பதில் எகிப்தியன் யூதனல்ல என்று சுட்டுகிறது. விவிலிய விவரிப்புப்படி எகிப்தியன் 4000 பேர்களைக் கொண்டிருந்தான் என்பது யோசிபசின் எண்ணிக்கையைவிட நம்பத்தகுந்ததாக உள்ளது.

நற்செய்தியாளர் லூக்கா 'எகிப்தியன்' ஒருவனை இந்நிகழ்ச்சியில் புகுத்தியிருப்பதின் மூலம் (அ) உயர்தரக் கிரேக்க மொழி பேசும் பவுல் ஒரு நாகரீகமுடைய உரோமைக் குடிமகன் என்றும், (ஆ) உரோமை அதிகாரத்தின் பிரதிநிதி பவுலை எகிப்தியரோடு அடையாளப்படுத்தியது, அக்குற்றச்சாட்டைக் கைவிட்டு, பவுல் உரோமை அரசின்பால் கொண்ட பிரமாணிக்கத்தை எண்பிக்கவும், (இ) பவுல் நகரத்து மனிதன் என்ற முறையில் போலி இறைவாக்கினர்கள் மத் 24:24-26-இல் கூறப்பட்டிருக்கும் போலிக் கிறிஸ்துவோடு குழப்பப்படாமலிருக்கவும், (ஈ) பவுல் எபிரேய மொழியில் மக்களுக்குப் போதித்தவரும் (அ.ப.21:40) இறைவனின் திருவுளத்தை அறிய நம் தந்தையர்களின் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவருமாகிய (22:14) உண்மையான யூதர் என்றும், உரோமைப் பேரரசில் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயமாகிய யூதத்துவத்தின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற உரிமை உடையவர் என்றும் காட்டுகிறார்.

**எகிப்து** (EGYPT)

இந்நாடு வடகிழக்கு ஆப்பிரிக்காவில் ஒரு பகுதியாகும். நைல் நதியால் செழுமைப் படுத்தப்படுவது. பழங்காலத்தில் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து நைல் நதியின் நான்காவது நீர்வீழ்ச்சிவரை பரவியிருந்தது. பண்டைய உலகின் தொன்மையான மற்றும் மாபெரும் நாகரிகங்களில் ஒன்றும் ஆகும்.

I. பெயர்:-

எகிப்து என்ற சொல்லானது முதன் முதலாக ஓமரின் 'ஓடிசி'யில் குறிப்பிடப்பட்டுள்ள 'அய்கிப்டோஸ்' என்ற கிரேக்கச் சொல்லினின்று தோன்றியிருக்கலாம். இச்சொல் ''பித்தாவினுடைய ஆவியின் வீடு'' என்ற பொருள்கொண்ட எகிப்தியச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இச்சொல் முதலில் கீழ் (வட) எகிப்தைக்குறித்தது. பின் முழுநாட்டையும் குறித்தது (ஓசே 9:6; ஏச 19:13). நைல் நதியின் பள்ளத்தாக்கிற்கு இருபுறமும் உள்ள பாலைப் பகுதி சிவப்புநிலம் என்று அழைக்கப்பட்டது. இதற்கு மாறாகப் பள்ளத்தாக்கின் மண் கருமையாக இருந்ததால் பள்ளத்தாக்கு ''கருப்புநிலம்'' என்று எகிப்தியரால் அழைக்கப்பட்டது. மேல் (தென்) மற்றும் கீழ் (வட)எகிப்துப் பகுதிகளை ஒன்று சேர்த்துத் தங்கள் நாட்டை அவர்கள் ''இரு நிலங்கள்'' என்றும், ''அன்புக்குரிய நிலம்'' என்றும் அழைத்தனர். எகிப்தியரல்லாதவர் பயன்படுத்திய பொதுப்பெயரை ''மிசுராயிம்'' என்ற எபிரேயச்சொல் கி.மு. 14-ஆம் நூற்றாண்டிலிருந்தது பிரதிபலிக்கிறது. வட, தென் எகிப்துக்களை இணைத்து இரட்டை வடிவமாகும் இச்சொல் என்ற கருத்து மொழியியலுக்கு ஒத்ததாக இல்லை. பொதுவாக எபிரேயப் பெயர் எகிப்து முழுவதையும் குறித்தாலும் ஏச 11:11-இல் அது வட எகிப்தை மட்டுமே குறிக்கிறது. அங்கு அது பத்திரோக அல்லது தென் எகிப்திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது.

II. புவியியல்:-

பண்டைய எகிப்து வடக்கே மத்திய தரைக்கடலாலும் மேற்கே லிபியா பாலைவனத்தினாலும் தெற்கே சினேயில் உள்ள நைல் நதியின் முதல் நீர்வீழ்ச்சியாலும் (புதிய அரசு காலத்தில் (1500) மேரோயேவிற்கு அருகிலுள்ள நான்காவது நீர்வீழ்ச்சி வரை), கிழக்கே அராபிய பாலைவனம் மற்றும் எகித்தினுடைய ஓடையாகிய ''வாடி ஏல்-ஆரிஸ்'' ஆலும் சூழப்பட்டிருந்தது (எண் 34:5). ''மிக்தோல் முதல் சினேவரை'' என்னும் விவிலிய விவரிப்பு (எச 29:10; 30:6), வடகிழக்குப் பகுதி தொடங்கி நீர்வீழ்ச்சிவரையுள்ள எகிப்து முழுவதையும் குறிப்பிடுகிறது.

மிலேத்துவைச் சார்ந்த எகாத்தே ஆறாவது நூற்றாண்டில் கூறியது போல எகிப்து நாடானது நைல் நதியின் கொடையாகும். மேலும் உண்மையில் நாட்டினுடைய இயற்கைத் தோற்றங்கள் மட்டுமின்றி அதனுடைய வாழ்வும் நைல் நதியால் வரையறுக்கப்பட்டது. வெள்ளை நைல், நீல நைல் மற்றும் அத்திபாராநதிகள் மற்றும் பிற உபநதிகள் (இவையோ எகிப்தினுடைய எல்லைகளைக் கடந்தவை) ஆகியவை ஒன்று சேர்தலின் மூலம் உருவாக்கப்பட்ட நைல் நதியானது வடதிசை நோக்கி ஏறக்குறைய 3060 கி.மீ (1900 மைல்) தூரம் கார்தோமிலிருந்து மத்தியதரைக்கடல் வரை பாய்கிறது. சனவரியின் பிற்பகுதியில் நதியினுடைய நீர் அளவு மிகக்குறைவாக இருக்கும். எத்தியோப்பிய மலைப்பகுதிகளில் பெய்யும் பருவமழையால் பெருக்கெடுத்து சூலை-செப்டம்பர் மாதங்களில் எட்டுமடங்காகப் பெருகும். இப்பருவத்தாலான வெள்ளப்பெருக்கானது நைல் பள்ளத்தாக்கு முழுவதும் செழுமையான வண்டலைப்படியச் செய்கிறது. நிலங்களைப் பயிர் செய்ய உதவுகிறது. இது இல்லாவிடில் இயல்பாகவே மழையற்ற இப்பகுதி (அலக்சாந்திரியாவில் வருடத்திற்கு 20 செ.மீ., கெய்ரோவில் 3 செ.மீ., பிற பகுதிகளில் கணிப்பதற்கும் அரிதானது) பாலை நிலமாகவே இருக்கும் (ஏச 19:5-8).

நவீன கெய்ரோவிற்கு வடபகுதியில் 250 கி.மீ (150 மைல்) அகலமும் 160 கி.மீ. (100 மைல்) நீளமும் கொண்ட வண்டல் படிவிடம் அமையும் வண்ணம் நைல் நதி பிரிகிறது (பண்டைக் காலத்தில் கிட்டத்தட்ட பன்னிரண்டு கிளைகளைக் கொண்டிருக்கக் கூடும்). இருபது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட இப்பகுதியானது கீழ் (வட) எகிப்து என்று அழைக்கப்பட்டு அதன் தலைநகரான மெம்பிசுவரை, தெற்கே பரவியிருந்தது. (தென்) எகிப்தானது மெம்பிசின் தென்

பகுதிலிருந்து அஸ்வான் வரையிலான நைல் பள்ளத்தாக்கின் 965 கி.மீ (600 மைல்) நீண்ட சமவெளியைக் கொண்டிருந்தது. 1 கி.மீட்டரிலிருந்து கிட்டதட்ட 20 கி.மீ (12 மைல்) வரை அகலமுடையதாக உள்ள இப்பகுதியானது அரசமரபுக் காலத்திற்குமுன் இருபத்திரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அமர்னா காலம் தவிர்த்து, தென் எகிப்தினுடைய தலைநகரானது ''திபிசுவில்'' இருந்தது (நர்கூ 3:8; எரே 46:25). அபிதோசின் தெற்கில் நைல்நதி மேற்குத் திசையில் ''பகுரு-யூசுப்'' (யோசேப்பின் நதி) ஆகப் பிரிகிறது. இது பாயும் பள்ளப்பகுதி வழியாக வடக்கு நோக்கி ஓடி, கரூண் ஏரிக்குள் பாய்கிறது.

நைல் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியில், நவீன எகிப்துவின் நான்கில் மூன்று பகுதிகளை உள்ளடக்கிய (675000 சதுர கி.மீ = 260000 சதுரமைல்) மேற்கு அல்லது லிபியப் பாலைவனம் அமைந்துள்ளது. இது பெரியதும் வறண்டதுமான பகுதியாகும். பாறைகளாலும் மணலாலும் மூடி மறைக்கப்பட்ட இந்தச் சுண்ணாம்புப் பீடபூமியில் இங்கு மங்குமாகப் பல ஒயசீசுகள் (பாலைவனச் சோலைகள்) உண்டு. இவை கொப்பளிக்கின்ற நீருற்றுகளால் குடியிருக்கத்தக்கதாக அமைக்கப்பட்ட இயற்கையான பள்ளப்பகுதிகளாகும். இணை இணையாக அமைந்துள்ள 60 மீட்டரை (200 அடி) விட உயரமான மணற் குன்றுகளைக் கொண்டுள்ளது. பெரிய மணற்கடல். இது வடகிழக்கிலுள்ள ''சிவா'' ஒயசீசிலிருந்து தென்மேற்கிலுள்ள ''கிப்ரெல் கெபிர்'' மலைத்தொடர் வரை பரவியுள்ளது. கிழக்கில் நைல் நதிக்கும் செங்கடலுக்கும் இடைப்பட்ட பகுதி கிழக்கு அல்லது அராபியப் பாலைவனமாகும். இது கரடுமுரடான எரியும் தன்மையுடைய மலைகளைக் கொண்டது; கனிப்பொருள் வளமிக்கது. இங்குள்ள பல மலைமுகடுகள் 1525 மீட்டருக்கும் (5000 அடி) உயரமானவை. இவற்றிலிருந்து வழிந்தோடும் நீர் பல வாடிகளையும் (காட்டாறுகளை) பரந்த பள்ளத்தாக்குகளையும் உருவாக்கியுள்ளது. இவை இப்பகுதியில் பயணம் செய்வதற்குத் தடையாக உள்ளன.

III. வரலாறு:-

எகிப்திய வரலாறானது பல்வேறு வரலாற்றுக் காலக் கட்டங்களுக்கு ஏற்ப முப்பத்தொரு அரச மரபுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் எகிப்திய குரு மனேதோ (கி.மு.270)-வின் நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவரது நூல் மெனெசால் எகிப்து ஒன்றுபடுவதற்கும் (3200) பெரிய அலக்சாந்தருடைய வெற்றிக்கும் (332) இடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றது. இருபத்து ஆறாவது அரசுக்கு முற்பட்ட (663), குறிப்பாக மூன்றாவது ஆயிரம் ஆண்டு மற்றும் அதற்கும் முற்பட்ட, நிகழ்ச்சிகளின் துல்லியமான காலக் கட்டத்தைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது.

எகிப்தில் மனிதர் வாழ்ந்ததைப்பற்றி 8000 ஆண்டிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம வாழ்வின் வளர்ச்சி, விவசாயம், கட்டடம் கட்டுதல் மற்றும் கலைகளின் முன்னேற்றமானது வரலாற்றுக்கு முற்பட்ட அல்லது அரச மரபுகளுக்கு முற்பட்ட அடுத்த ஐந்தாயிரம் ஆண்டுகளைச் சிறப்பிக்கிறது. ஒன்றன்பின் ஒன்றாக வந்த காலக்கட்டங்கள் தாசியன்-பதரியான், அம்நாசியான் (அல்லது 1 நெகதா), கெர்செயன் (2 நெகதா) மற்றும் செமாய்னேன் (3 நெகதா) என்று அடையாளம் காட்டப்படுகின்றன. இறுதிக் காலக்கட்டத்திற்குள் (நான்காயிரம் ஆண்டின் பிற்பகுதி) சுமேருடன் குறிப்பிடத்தக்க கலாச்சாரத் தொடர்புகள் ஏற்பட்டன. எண்ணற்ற உள்நாட்டுப் பகுதிகள் ஒன்று சேர்ந்து தென் மற்றும் வட எகிப்துகளை உருவாக்கின.

ஆற்றின் கழிமுகப்பகுதியைத் தென்புறப் படைகள் வென்று தென் எகிப்தைச்சேர்ந்த அரச குடும்பத்தின்கீழ் இரண்டு எகிப்துகளும் ஒன்று சேர்க்கப்படுதலோடு எகிப்திய வரலாறு தொடங்குகிறது. ஒருவேளை, கூட்டணி சேர்தல், வெற்றி கொள்ளுதல் போன்றவை படிப்படியாகவே நடந்திருக்க வேண்டும். மேனி (ஒருவேளை நார்மாராக இருக்கலாம்) என்பவர் இரண்டு அரசுகளின் மீதும்

இரட்டை அரசுரிமையை ஏற்படுத்தி மெம்பி சில் மையத் தலைநகரை அமைத்து இருபகு திகளையும் இணைத்ததாகப் பாரம்பரியம் கருதுகிறது. இந்த அரச மரபுகளின் தொடக்க காலத்தில் அபிதோசிற்கு அருகிலுள்ள தீசைச் சேர்ந்த இரண்டு தென் மரபுகள் எகிப்தை ஆண்டன (3200-2700). இவை வலிமை மிக்க மத்திய அரசை ஏற்படுத்தின. இக்காலத்தில் பல பொறிநுட்ப முன்னேற் றங்களும் செயல்படுத்தப்பட்டன.

மூன்றாவது அரசமரபுக் காலத்தில், பழைய அரசு அல்லது பிரமீடு காலம் (2700-2150) எனப்படும் புதிய காலக் கட்டத்தில் எகிப்து நுழைந்தது. சார்கோனுடைய அக் காது நாட்டுடன் போட்டியிடக்கூடிய அள வுக்குக் கலாச்சாரம் மற்றும் செல்வச் செழிப் பிலும் எகிப்து முன்னேறியது. இது எகிப் திய வரலாற்றின் பொற்காலமாகும். வரலாற் றிலேயே முதலாவதாகக் கல்லிலிருந்து வெட்டப்பட்ட நினைவுச் சின்னமாகிய சுக் காராவில் உள்ள பெரிய படி பிரமீடைத் தனது கட்டடக் கலைஞர் (மற்றும் ஞானி, மருத்துவர்) இமோதெபியின் முயற்சியால் பார்வேன் சோசெர் என்பவர் கட்டியெழுப்பி னார். நான்காவது அரசமரபின்கீழ் எகிப்தினு டைய கட்டடக்கலையின் சாதனைகள் அவற் றின் உச்சியை அடைந்தன. கிசேயிலுள்ள கூபு (கெயோப்)வின் பெரிய பிரமீடு, மற் றும் காப்பிரே (அருகிலுள்ள சூரரிமா உரு வச்சிலை மற்றும் பள்ளத்தாக்கு ஆலயம் ஆகியவற்றையும் உருவாக்கிய செப்ரென்), மென்காரே (மிசேரினுஸ்) ஆகிய இடங்க ளில் உள்ளவையும் கட்டப்பட்டன. அடுத்த இரண்டு அரச மரபுக் காலங்கள் முழுவதும் பிரமீடு கட்டும் பணி தொடர்ந்தது. ஆனால் இச்செயல்கள் பொருளாதாரம் மற்றும் அர சாங்க ஆட்சி முறையைப் பெரிதும் பாதித் தன. இதன் விளைவாக, ஐந்தாவது அரசமர புக் காலத்தில் அரசியலாட்சியைப் பன்முகப் படுத்தும் போக்கு தொடங்கியது. ஆறாவது அரசமரபின் வணிகம் மற்றும் ஆய்வு சார்ந்த முயற்சிகளும் (தென் பாலஸ்தீன ''மணலில் உறைவோருக்கு'' எதிரான போர்ப்படையெ

11 முச்சிகளும்-2325) தங்களுக்கே உரிய பாதிப்பை ஏற்படுத்தின. 2-ஆம் பேபி-யின் தொண்ணூற்றொன்பது ஆண்டு கால ஆட்சி யின் இறுதியில் நாடானது சீர்கெட்டுப் போயிற்று. உள்நாட்டுப் போருக்குத் தயாராக இருந்தது.

அதற்குப்பின் எகிப்து முதலாவது இடைப் பட்ட காலம் எனப்படும் (2180-2040) இருண்ட காலத்திற்குள் நுழைந்தது. ஏழா வது மற்றும் எட்டாவது அரசமரபுகள் (சில அறிஞர்கள் இவற்றைப் பழைய அரசு மறைந்து கொண்டிருந்த காலக்கட்டத்திற் குள் உட்படுத்துவர்) புத்துயிர் பெற்றெழுந்த உள்நாட்டு அரசுகளின்மீது பெயரளவி லேயே ஆதிக்கம் செலுத்தினர். இருபதாண் டுகளுக்குச் சற்று மேலான காலத்திற்குள் பதினைந்து அரசர்கள் அரியணை ஏறினர். பஞ்சமும் சமூகப்புரட்சிகளும் பெருமள வில் பரவின. ஆசியாவைச் சேர்ந்தவர்கள் (கிழக்குத் திசையினர்) ஆற்று முகத்துவாரப் பகுதியில் ஊடுருவிப்பரவினர். 2160-ஆம் ஆண்டையொட்டி, பேயுமிற்கு அருகிலுள்ள ஏராக்லெயோபொலிவில் முதலாம் மெரிப்ரே கேத்தியின் கீழ், ஒரு புதிய அரச மரபு ஏற்பட்டது. எராக்லெயோபொலியைச் சேர்ந்த ஒன்பதாவது பத்தாவது அரசமரபுகள் முகத்துவாரம் பகுதியில் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றன. ஒன்பதா வது அரசமரபின் இறுதிக் கட்டத்தில் (2133) திபிசில் (தியோஸ்பெலி) மற்றொரு அரச மரபு எழுந்தது. வடபகுதியின் மீது அதிகாரம் செலுத்த அது ஏராக்லெயோபொலிவுடன் போட்டியிட்டு 2040-இல் தென் மற்றும் வட எகிப்துகளை ஒன்றுபடுத்துவதில் வெற்றி யும் கண்டது.

பதினோறாவது அரசமரபின் பிற்கால அர சர்களால் இவர்கள் வாதி அம்மாத்-தில் கரங்கங்களைத் திறந்தனர், புன்த்தோடு வாணிபத்தைத் தொடங்கினர்; மற்றும் நுபியா-வை மீண்டும் வெல்ல முயன்றனர். அமைக்கப்பட்ட அடித்தளத்தின்மேல், பன் னிரண்டாவது அரசமரபு மத்திய அரசு என்ற ழைக்கப்பட்ட (2000-1786) புதிய பொற் காலத்தை நிறுவியது. அதனை நிறுவின முத

லாம் அமெனெமெம்கெத் வலிமையான திறமைமிக்க தலைமைப் பொறுப்பை உறுதிப் படுத்தப் படிப்படியாக முயன்றார். அவர் தலைநகரைத் திபிசிலிருந்து மெம்பிசிற்குத் தெற்கே 40 கி.மீ (25 மைல்) தொலைவி லுள்ள இக்-தாவிக்கு மாற்றினார். மாவட்ட அமைப்பை மாற்றியமைத்து, அரச வாரிசுரி மையை உறுதிப்படுத்த, கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தினார். அரசமரபைச் சேர்ந்த பாரவோன்கள், ஆசியத் தாக்குதல் களுக்கு எதிராகக் கிழக்கு ஆற்று முகத்துவாரத் தில் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தி, மோயேரிஸ் ஏரியில் நீர்த்தேக்கத்தைக் கட்டி யதன் மூலம் பேயூம் பகுதியை முன்னேற்றி னர். மூன்றாவது செசோஸ்த்ரிஸ், இரண் டாம் நீர்வீழ்ச்சிவரை நுபியாவைக் கீழ்ப் படுத்துவதை நிறைவேற்றி, செக்கேம்வரை பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்தார். கிரேத்தாவுடன் வாணிபம் தொடரப்பட்டது. பிப்லோஸ் (கெபல்) கத்ன, மற்றும் உகா ரித்து ஆகிய இடங்களில் எகிப்தியத் தாக்கம் காணப்படுகிறது. இக்காலத்தில் இலக்கிய மும் வளர்ச்சியுற்றது. அமெனெம்கெத்தின் அறிவுரைகள், சினுகேயின் கதை மற்றும் நெப்பரித் தீர்க்கதரிசனம் ஆகியவை இதற் குச் சான்றாக உள்ளன. நான்காம் அமெ னெம்கெத் மற்றும் செபெக்னோப்ரு அரசியி னுடைய குறுகியகால ஆட்சியுடன் இந்த அரச மரபு முடிவுபெற்றது. பெரும்பாலான அறிஞர்கள் ஆபிரகாம் எகிப்திற்குச் சென்றது இக்காலத்தில்தான் என்பர் (ஆதி 12:10-20).

மீண்டும் ஒருமுறை மத்திய அரசானது வலுவிழந்த நிலையில் பதின்மூன்றாவது (தேபன்) அரசமரபு தோன்றியது. இதற்குப் போட்டியாக ஆற்றுக்கழிமுகப்பகுதியின் மேற்கிலுள்ள கோயிஸ் என்னுமிடத்தில் பதி னான்காம் அரசமரபு தோன்றியது. நாடுமுழு வதும் கிளர்ச்சிகள் தோன்றின. நாடானது இரண்டாவது இருண்ட காலத்திற்குள் புகுந் தது. இதை இரண்டாவது இடைப்பட்ட காலம் என்றழைப்பர் வரலாற்று வல்லுநர் கள் (1786-1550). இரண்டாவது மத்திய வெண்கலக்காலத்தைச் சேர்ந்த எமோரிய இயக்கங்களும் அந்நியர்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிழக்குக் கழிமுகப்பகுதியில் புகுந்தனர். இவர்கள் 15-ஆவது 16-ஆவது அரசமரபுகளை அமைத்தனர் (1720;1674). கைக்சோஸ் எனப்பட்ட இந்த அந்நியர்கள் அவரிசில் உள்ள தங்களுடைய தலைநகரி னின்று எகிப்து முழுவதும் தங்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் பதினேழாவது அர சினுடைய (வலுவிழந்த பதின்மூன்றாவது அரசினுடைய வாரிசு) ஒரு தேபன் அரசரா கிய காமோஸ் என்பவர் நுபிய கூலிப்படை வீரர்களின் துணையுடன் கைக்சோஸ்களைத் தாக்குவதற்காக வடக்கு நோக்கிப் பயணமா னார். இவருடைய சகோதரன் அக்மோஸ் கைக்சோஸ்களைத் தோற்கடித்தார். இவர் தென்மேற்குப் பாலஸ்தீனத்தின்மீது படை யெடுத்தார்.

கைக்சோஸ்களை வெளியேற்றுதலுடன் ஒருவேளை இவர்களை நாட்டின் ஒரு பகுதி யாக ஏற்றுக் கொண்டிருக்கலாம். எகிப்து தனது பரப்பளவை விரிவுபடுத்தியது. ஆதிக் கத்தை வலுப்படுத்தியது. இக்காலம் புதிய அரசு அல்லது பேரரசு என்றழைக்கப்படும். பதினெட்டாவது அரசினைத் தோற்றுவித்த வர் என்று அறிஞர்பலரால் கருதப்படும் அக்மோஸ் எகிப்தை மீண்டும் ஒன்றுபடுத்தி நிலைப்படுத்தினார். அவரது மகனாகிய முத லாம் அமெனொதெப்பு தென் எல்லையினை மூன்றாவது நீர்வீழ்ச்சிவரை விரிவுபடுத் தினார். அவரது வாரிசாகிய முதலாம் துத் மோசு யூப்பிரத்திசுப் பகுதியை நோக்கி முன்னேறுவதற்குமுன் நான்காவது நீர்வீழ்ச் சிக்குச் சற்றுத் தென்புறமாக உள்ள கூசு பகுதியை வென்றார். இவர் குறுகிய காலத் திற்கே ஆட்சி செய்து இறந்தார். இளைய மூன்றாம் துத்மோசிற்குத் துணை ஆட்சியா ளராக நியமிக்கப்பட்ட இரண்டாம் துத் மோசின் மனைவியாகிய கத்செப்சுத்து என்ப வர் ஆட்சியைக் கைப்பற்றினார். இவள் ஒரு ஆற்றல்மிக்க தலைவி. அவள் எண்ணற்ற கோவில்களை மீண்டும் புதுப்பித்தாள். அவ ளுடைய முன்னோர்களின் திட்டங்களை நிறைவு செய்தாள், மற்றும் அமைதியான வாணிபத்தில் ஈடுபட்டாள். அவளுடைய

ஆட்சியின் இருபத்து இரண்டாம் ஆண்டில் அரியணையைக் கைப்பற்றிய மூன்றாவது துத்மோசு, உடனடியாக நாடுகளை வென்று விரிவுபடுத்தும் பணியில் ஈடுபடலானார். இந்த வெற்றியானது, ஓரோன்தெசில் காதேசுக்கு எதிரான ஆறு போர்களையும் சீரியா மற்றும் பாலஸ்தீனத்தில் பதினேழு போர்களையும் கொண்டதாகும். எகிப்திய பாரவோன்களில் தலைசிறந்தவராக ஒரு சிலரால் இவர் கருதப்படுகிறார். அவரது வாரிசாகிய இரண்டாம் அமெனெதெப்பு ஓரோன்தெசில் எழுந்த சீரிய கிளர்ச்சியை அடக்கினார். மித்தானிய இளவரசியை மணந்ததன் மூலம் நான்காம் துத்மோசு, இத்தியருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். திபிசிலும் நுபியாவிலும் மூன்றாம் அமெனெதெப்பு பல கட்டடங்களையெழுப்பினார். அவரது ஆட்சியின் ஆறாவது ஆண்டில் சூரியக் கடவுளாகிய அதேனுக்குச் சார்பாக வலிமை மிக்க ஆமோனின் குருத்துவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த நான்காம் அமெனெதெப்பு தனது பெயரை அகெனதென் என்று மாற்றிக்கொண்டு, நவீன தேல் ஏல்-அமர்னாவிற்கு அருகில் அகெததென் என்னும் புதிய தலைநகரை ஏற்படுத்தினார். ஆனால், அமர்னா ஏடுகள் அவர் புதிய சடங்கு முறைகளிலும் தனிப்பட்ட முயற்சிகளிலும் மூழ்கிவிட்டதன் காரணமாக அரசாட்சியின் பொறுப்புகளை உதறிவிட்டார் எனக் குறிப்பிடுகின்றன. அகெனதெனுடைய இரண்டு மருமகன்களாகிய ஸ்மென்க்கரே மற்றும் துதன்கமென் ஆகியோருடைய குறுகிய ஆட்சிக் காலத்தில் அமோனிய குருத்துவம் மீண்டும் அதிகாரத்தைப் பெற்றது. வாரிசு உரிமையில் குழப்பம் ஏற்பட்டது. அது முதலில் அதேன் குருவாகிய ஆயிற்கும் படைத்தலைவனும் அந்நியனுமான கோரேம்பிற்கும் அளிக்கப்பட்டது. பின்னவர் சீரிய-பாலஸ்தீனத்தில் எழுந்த கிளர்ச்சியை அடக்கினார்.

கோரேம்பிற்குப் பின்னர் பத்தொன்பதாம் அரசைத் தொடங்கிய அவருடைய அமைச்சராகிய வயதான பெராமெசு (முதலாம் இராம்சேசு) பதவிக்கு வந்தார். முதலாம் சேத்தி பாலஸ்தீனத்தில் போரிட்டு அபிருவைத் தோற்கடித்தார். இத்தியருடன் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். தனது அறுபத்தியேழு ஆண்டுகால ஆட்சியில் இரண்டாம் இராம்சேசு, நுபியர், இலிபியர், சீரியர், மற்றும் இத்தியர் ஆகியோருடன் போரிட்டார். ஓரோன்தெசில் உள்ள காதேசில் அவர் மயிரிழையில் சூழ்ச்சியினின்று தப்பி இத்தியரைத் தோற்கடித்தார். மேலும் பதினாறு ஆண்டுகாலப் போராட்டங்களுக்குப் பின்னர் இத்திய அரசனான கத்துசிலிசின் மகளைத் திருமணம் செய்து இராம்சேசு உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். கழிமுகப்பகுதியில் அபுசிம்பெல் மற்றும் சுர்னாக்கில் உள்ள கோவில்கள் மற்றும் இராமாசேசில் (அநேகமாக விவிலிய இராம்சேசு யாத் 1:11) உள்ள அரண்மனை போன்ற எண்ணற்ற நினைவுச் சின்னங்களையும் மற்றும் கட்டடங்களையும் எழுப்பினார். இஸ்ராயேலினுடைய தொன்மையான விவிலியத்திற்கு அப்பாற்பட்ட குறிப்புகளைக் கொண்டுள்ள இஸ்ராயேலின் கல்தூணில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவரது பதின்மூன்றாவது மகனும் வாரிசுமாகிய மெர்னெப்தா பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தார். பின்னர் இலிபியர் மற்றும் மத்திய தரைக்கடல் மக்கள் ஆகியோர் அடங்கிய கூட்டமைப்புகளின் தாக்குதலை விலக்கினார். யாத்திரைக்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலம் குறித்தால், முதலாம் சேத்தி இஸ்ராயேலரைக் கொடுமைப்படுத்திய பாரவோனாகயிருக்க வேண்டும். இரண்டாம் இராமசேசு யாத்திரைக்காலத்தின் பாரவோனாவார்.

பத்தொன்பதாம் அரசமரபின் இறுதிக் காலத்தில் குறுகிய காலத்திற்குத் தொடர்ந்து அரசக் குழப்பம் ஏற்பட்டது. சேத்னகாத்து இதைத்தடுத்து நிறுத்தி இருபதாம் அரசமரபை ஏற்படுத்தினார். அரச பாரவோன்களில் இறுதியானவரும் அவருடைய மகனுமாகிய மூன்றாம் இராம்சேசு கடல் மக்களுடைய தாக்குதலை விலக்கி, பாலஸ்தீனக் கரையை நோக்கி அதனைத் திருப்பிவிட்டார். மூன்றாம் இராம்சேசினுடைய ஆட்சியின்

இறுதிக்காலத்திற்குள் எகிப்திய ஆட்சியானது படிப்படியாக வீழ்ச்சியுறத் தொடங்கியது. வயதான அரசனுடைய மரணத்திற்குச் சிறிது காலம் முன்னர், அரச அந்தப்புரத்திற்குள்ளேயே கண்டுபிடிக்கப்பட்ட கொலை முயற்சி இதனைக் கோடிட்டுக் காட்டுகிறது. பத்தாண்டுகளுக்குள், ஆசியாவிலுள்ள எகிப்தியப் பேரரசினுடைய சுவடுகள் சிதறுண்டு போயின. நான்கு முதல் பதினொன்றாவது வரையிலான பாரவோன் இராம்சேசுகளின் கீழ்ப் புதிய அரசினுடைய எஞ்சிய ஆண்டுகள் அதிகார ஊழல், கடுமையான பணவீக்கம், தொழிலாளர் போராட்டங்கள் மற்றும் அரச கல்லறைகளைப் பெருவாரியாகக் கொள்ளையடித்தல் ஆகியவற்றால் சிறப்புப் பெற்றன. பதினொன்றாம் இராம்சேசு பெயரளவிற்கே அரசனாக இருந்தார். அரச பட்டத்திற்கு உரிமை கொண்டாடிய அமோனியக் குருவாகிய கெரிகோர் மற்றும் நுபியாவின் ஆளுநராகிய பின்காசி ஆகியோரின் ஆதிக்கத்தில் நாடு நலிவுற்றது.

மீண்டும் ஒரு முறை தென் மற்றும் வட எகிப்து என்றும், எண்ணற்ற சிறிய அளவிலான சிற்றரசுகள் என்றும் துண்டுபடுத்தப்பட்ட நாடானது போட்டி அரசுகளால் ஆளப்பட்டு வந்தது. அறிஞர் சிலர் இருபத்து ஒன்று முதல் இருபத்து ஐந்தாவது அரசு மரபு வரையிலான காலத்தை (1085-664) மூன்றாவது இடைப்பட்ட காலம் என்று அழைக்கின்றனர். திபிசிலிருந்து தென் எகிப்தை இறையாட்சி நாடாக ஆமோனின் தலைமைக் குருக்களான கெரியோரின் சந்ததியினர் ஆண்டு வந்தனர். அதே வேளையில் தானிசிலிருந்து ஆண்டு வந்த இருபத்து ஒன்றாவது அரசமரபை நசுபனேப்தெத்து (ஸ்மென்தெஸ்) நிறுவினார். இரு நாடுகளுமே நிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்ற முடியவில்லை. எகிப்தின் பெருமை பெரிதும் வீழ்ச்சியுற்றிருந்தது என்பதைப் பிரதிபலிப்பதுபோல எகிப்திய வெனாமுனுடைய தீய நிகழ்ச்சி இடையூறுகளால் உள்ளத்தை உருக்கும் விதத்தில் பிரதிபலிக்கிறது. தாவீதினுடைய முன்னேற்றங்களினின்று தப்பி ஓடிய ஏதோமிய காதாதுக்கு இந்த அரசுதான் தஞ்சம் அளித்தது (1 அர 11:15-22). சாலமோன் திருமண உறவு ஏற்படுத்திக்கொண்டதும் இவர்களுடனே (3:1;9:16). தானித்து அரசைத் தொடர்ந்து கிழக்கு ஆற்றுக் கழிமுகத் துவாரத்திலுள்ள புபஸ்தியினின்று ஆண்டு வந்த பையும் மற்றும் கழிமுகப்பகுதியைச் சேர்ந்த ஆற்றல் மிக்க இலிபியரின் வாரிசுகள் ஆட்சி புரிந்தனர். இருபத்து இரண்டாவது அரசைத் (945-730) தோற்றுவித்த முதலாம் செசொங்கு எகிப்தை நிலைப்படுத்தி, தன்னுடைய மகனைத் திபிசின் தலைமைக்குருவாக ஏற்படுத்தினார். இஸ்ராயேல் பேரரசின் பிளவிற்குப் பிறகு, அவர் பாலஸ்தீனத்தின்மீது படையெடுத்து யூதாவையும் இஸ்ராயேலையும் கீழ்ப்படுத்தினார் (1 அர 14:25-26; 2 நாள் 12:2-9) செசொங்குக்குப்பின் வந்த முதலாம் ஒசோர்கோன் யூதாவிற்கு எதிராகப்போரிடுமாறு தன்னுடைய எத்தியோப்பிய படைத்தளபதியான சேராவை அனுப்பினார். ஆனால் அவரோ யூதாவின் அரசனாகிய ஆசாவினால் அடியோடு விரட்டப்பட்டார் (14:9-15). எகிப்திய ஒற்றுமையானது நிலையற்றது என மீண்டும் நிரூபிக்கப்பட்டது; உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு வெள்ளத்தினால் அழிக்கப்பட்ட நாடானது மீண்டும் ஒருமுறை போட்டி அரச மரபுகளின் பாதிப்புக்குள்ளாகியது. இருபத்து மூன்றாவதாகிய மற்றொரு இலிபிய அரசு (817-739) திபிசில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. (மனேதோ அவர்களைத் தானிசில் சுட்டிக் காட்டுகிறார்). எண்ணற்ற உள்நாட்டு அரசுகள் (ஆளுகின்ற அரசர்களின் பிள்ளைகளையும் சேர்த்து) அதிகாரத்திற்காகப் போட்டியிட்டுக்கொண்டிருந்த வேளையில் இக்காலத்தின் இறுதியில் மேலுமிரண்டு அதிகாரபூர்வ அரசுகள் எழுந்தன. இருபத்து நான்காவது அரசானது மேற்கு ஆற்றுக் கழிமுகப்பகுதியிலுள்ள சாயிசிலிருந்து குறுகியகாலத்திற்கு அரசாண்டது (730-715). அதனைத் தோற்றுவித்தவராகிய தப்னெகெத்து பெரும்பாலான மத்திய எகிப்து நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தப் பதினாறு உள்நாட்டு ஆட்சியாளர்களைச் சேர்த்துக் கொண்டார். இது புதிய அரசின் இறுதிக்காலத்தில் நான்காம்

நீர்வீழ்ச்சியின் அருகே நபத்தாவில் அமைக்கப்பட்ட நுபிய அரசின் தலைவராகிய பியாங்கியின் சினத்தைத் தூண்டியது. இருபத்து ஐந்தாவது அரசிற்குத் (730-656) தலைமை தாங்கிய பியாங்கு மெம்பிசைக் கைப்பற்றி அதனுடைய வடகூட்டணியை விரட்டியடித்துத் திபிசில் அமோனின் இறைபக்தையாகத் (கடவுளின் மனைவியாக) தனது மகளை நியமித்தார். அவரது சகோதரராகிய சாபாக்கா, மீண்டும் எகிப்தை வென்று, விடாப்பிடியாகத் தொல்லை கொடுத்த சயித் பெகென்ரெனெப்பை நீக்கினார். சாபாக்கா அசீரிய அரசன் இரண்டாம் சார்கோனோடு வெளிப்படையாக நட்புறவு கொண்டிருந்தாலும், அசீரிய முன்னேற்றத்தை எதிர்க்க சீரியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்களைத் தூண்டி வந்தார், இளைய பாரவோனாகிய சபத்தாக்கா 701-ஆம் ஆண்டில் சனகெரிபிற்கு எதிராக, யூதாவின் எசக்கியாவிற்குத் துணைபுரிய அனுபவமற்ற தளபதி தகர்காவை அனுப்பினார் (2 அர 19:9; எச 37:9). பிற்காலத்தில் பாரவோனாக இருந்த தகர்காவை அசீரிய எசார்க்கத்தோன் தோற்கடித்து 671-இல் மெம்பிசைக் கைப்பற்றி உள்நாட்டு ஆளுநர்களை ஏற்படுத்தினார். தகர்கா உடனடியாக நகரைத் திரும்ப அடைந்தாலும் அசூர்பானிபால் அவரை வெளியேற்றிவிட்டு சாயிசில் நெக்கோவை ஆளுநராக ஏற்படுத்தினார். எகிப்திய பாரவோன் தெனெதாமோன் மெம்பிசை மீண்டும் கைப்பற்ற விரும்பியபோது அசூர்பானிப்பால் திபிசை அழித்து எகிப்தின்மீதான எத்தியோப்பிய ஆட்சியை முடிவிற்குக்கொண்டு வந்தார் (663).

அசூர்பானிபால் பாபிலோனியா, எலாம் மற்றும் அரேபியாக் கிளர்ச்சிகளை அடக்குவதில் ஈடுபட்டிருந்தபோது, பாரவோன் முதலாம் சாம்திக்கு எகிப்து மீதான அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினார். அவருடைய இருபத்து ஆறாவது அரசானது (663-525), எகிப்திய மறுமலர்ச்சி அல்லது மீட்சி எனப்படுகின்ற வளமும் கலையார்வ நாட்டமும் மிக்கதொரு காலத்தைத் தோற்றுவித்தது. நினிவேயின் வீழ்ச்சிக்குப் பின்னர், தன்னுடைய அசீரியத் தோழர்களுக்கு உதவ சாம்திக்கு எடுத்த முயற்சி மெகிதோப் போரினால் சிறிது காலத்திற்குத் தடுக்கப்பட்டது. இந்தப்போரில் யூதாவின் அரசரான யோசியா கொல்லப்பட்டார் (2 அர 23:29). மூன்று மாதங்களுக்குப் பின்னர், யூதாவின் அரசராயிருந்த யோவகாசை நீக்கிவிட்டு எகிப்தியருக்கு மிகவும் சாதகமாக இருந்தவராகக் கருதப்பட்ட அவருடைய மூத்த சகோதரராகிய யோயாக்கிமை நெக்கோ அரசனாக்கினார் (23:33-34). நெக்கோவின் படைகள் 605-ஆம் ஆண்டில் கர்கெமிசு என்னுமிடத்தில் பாபிலோனியரால் வலுவாகத் தோற்கடிக்கப்பட்டன. சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றின் மீதான அதிகாரத்தை எகிப்து இழந்தது. ஆயினும் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், தங்களது தாய் நாட்டின் மீதான நெபுக்கதுனேசாருடைய படையெடுப்பைத் தடுக்க எகிப்தியரால் முடிந்தது. 569-இல் கோப்பிரா பாபிலோனியாவிற்கு எதிராகச் செதேக்கியாவைத் தூண்டிவிட்டார் (எரே 37:5; எச 17:15). இதன் விளைவாக நெபுக்கதுனேசார் எருசலேமை அழித்து மூன்றாண்டுகளுக்குப்பின் அதன் மக்கள் திரளை நாடுகடத்தினார். இரண்டாம் அக்மோசு கிரேக்க நாட்டுடன் கலாச்சார மற்றும் அரசியல் உறவுகளை வளரச் செய்தார். 539-இல் பாரசீகர் பாபிலோனை வென்றபொழுது எகிப்தின் மீதான அதிகாரத்தை அடைவதற்கு சைரசு போர் தொடுத்தார். 525-ஆம் ஆண்டு பெலுசியம் என்னுமிடத்தில் மூன்றாம் சாம்திக்கு என்னும் எகிப்திய அரசனை (அநேகமாக பாரவோன் அக்மோசினுடைய கூலிப்படை கிரேக்கத் தளபதிகளின் துணையுடன்) கம்பிசேசு தோற்கடித்தார்.

இருபத்து ஏழாவது அரசமரபாக (525-404) மனேத்தோவினால் குறிப்பிடப்படுகின்ற அக்கமேனியர்கள் எகிப்தின்மீது உறுதியாக ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். முதலாம் தாரியுசு எகிப்திய சமயத்திற்கு உரிய மரியாதை அளித்து, நைல் நதிக்கும் செங்கடலுக்கும் இடையே கால்வாயை முடித்து அல்லது மீண்டும் அமைத்ததன் மூலம் வாணிபத்தை முன்னேற்றினார். ஆனாலும் 484-இல் அவரு

*டைய மரணத்திற்குப்பின் 490-ஆம் ஆண்டில் மாரத்தானில் பாரசீகத்தின் மீதான கிரேக்க வெற்றியினால் தூண்டப்பட்டவர்களாய் எகிப்தியர்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் முதலாம் செர்சீசால் அடக்கப்பட்டனர். இவர் எகிப்தை மிகக்கடுமையாக ஆண்டார். 460-இல் எழுந்த மற்றொரு கிளர்ச்சியை முதலாம் அந்தாக்செர்சேசு அடக்கி ஒழித்தார்.*

*410-ஆம் ஆண்டில் அக்கமேனியர்களுக்கு எதிராக, சாயிஸைச் சார்ந்த அமிர்தேயுவினால் தொடங்கப்பட்ட போராட்டமானது எகிப் தின் சுதந்தரத்தை மீட்டளித்தது. இருபத்து எட்டாவது அரசினுடைய ஒரே பாரவோனா கிய அமிர்தேயுவைத் தொடர்ந்து (404-398) பாரசீகத்திற்கு எதிராக ஸ்பார்த்தர் மற்றும் ஏதேன்சியருடன் இணைந்து, நதிமுகத்துவா ரத்திலுள்ள மெந்தெசிலிருந்து இருபத்து ஒன் பதாவது அரசமரபினர் (398-378) ஆண்டனர். தாயக எகிப்திய வரிசையில் இறுதியானதான முப்பதாவது அரசமரபு (378-341) நாட்டில் வலுவற்ற ஒற்றுமையை மீண்டும் அமைத் தது. பெரும் கட்டடச் செயல்களில் ஈடுபட்டி ருந்தாலும் மெந்தேசிய மாவட்டங்களின் கிளர்ச்சியுடன் இணைந்த கிரேக்கக் கூலிப் படையின் பொருளாதாரச் சுமை பாரசீகர்க ளின் அந்நியப் படையெடுப்புக்கு எகிப்தை உட்பட்டதாக்கியது. பாரசீகத்தின் மூன்றாம் அர்தக்செர்சீஸ்ஒக்கு என்பவர் 343-இல் ஆற் றுக் கழிமுகப்பகுதியைச் சூறையாடினார். பாரவோன் இரண்டாம் நகதொரெபெ தனது இறுதி ஆண்டுகளைத் தென் எகிப்தில் அமை தியாகச் செலவழித்தார்.*

*மனேதோவைப் பின்பற்றி யுசேபியு குறிப் பிடும் முப்பத்து ஒன்றாவது அரச மரபான (341-330) எகிப்தின்மீதான இரண்டாம் பார சீக ஆதிக்கமானது, 332-இல் மகா அலக்சாந்த ருடைய முற்றுகைக்குப்பின்னர் மாக்கதோ னியரின் ஆளுகைக்கு இடங்கொடுத்தது. மீட்பர் என்று புகழப்படுபவரும், பார வோன் என்று போற்றப்பட்டவருமாகிய அலக்சாந்தர் மெம்பிசில் எகிப்திய தெய்வங் களைப் போற்றினார். சிவாவில் அமோனின் தீர்க்கதரிசனத்தை ஆலோசித்தார். அவர் வட கிழக்குக் கழிமுகப்பகுதியில் ஏற்படுத்திய அலக்சாந்திரியா நகர் எகிப்திய மற்றும் கிரேக்கக் கலாச்சாரங்களின் ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழ்ந்தது. அலக்சாந்தரின் மரணத்திற்குப்பிறகு பிலிப்பு அர்ரிதேயு மற் றும் நான்காம் அலக்சாந்தர் ஆகியோரின்கீழ் தோலமி முதலாம் சோத்தர் ஆளுநராக எகிப்தை ஆண்டார். 305-இல் தியோதோக்கி களுக்கு இடையில் ஏற்பட்ட அலக்சாந்தரு டைய பேரரசின் பிரிவுகளில் தோலமிய அரசமரபைத் தோலமி நிறுவினார். எகிப்திய மாகாண அமைப்பானது பாதுகாக்கப்பட்டு, அலக்சாந்திரியா, நாவுக்ராதிசு மற்றும் தோல மேயிசு போன்றவை கிரேக்க நகர அமைப்பு களைப்போன்று சுய அரசுகளாக அங்கீகரிக் கப்பட்டன. மூன்றாம் தோலமி யூர்கெதெஸ், அந்தியோக்கிய அரசுடன் கொண்டிருந்த நீண்ட சச்சரவைத் துரிதப்படுத்தும் விதமாக சீரியா மற்றும் பாலஸ்தீனத்திலுள்ள செலூக் கிய நாட்டைக்கைப்பற்றினார். உள்நாட்டுப் போராட்டங்கள் மற்றும் திறமையற்ற தீர்ப்பு ஆகியவற்றால் தங்களுடைய ஆட்சி சித றுண்ட நிலையில் பிற்கால தோலமியர்கள் உரோமை உதவியை நாடினர். தனது சகோத ரர்கள் பதின்மூன்றாம் மற்றும் பதினான்கா வது தோலமிகளுடனும் தனது மகன் பதி னைந்தாம் தோலமியுடனும் இந்த அரசின் இறுதிநபரான-அரசியாக ஆட்சிபுரிந்த ஏழாம் கிளியோபாத்திரா எகிப்திய ஆட்சியு ரிமையைக் காப்பதற்கு மிகவும் முயற்சித் தாள். யூலியு சீசர் மற்றும் மாற்கு அந்தோனி யுடன் அவள் அரசியல் மற்றும் தனிப்பட்ட முறையில் உறவு கொண்டிருந்தாலும், உரோ மைப் பேரரசின் முன்னேற்றத்தைத் திசை திருப்புவதில் தோல்வியுற்றாள். கி.மு.30-இல் ஆக்டேவியன் அலக்சாந்திரியாவைக் கைப்பற்றியபோது உரோமை ஆட்சியை ஏற்காது, தற்கொலையில் அந்தோனியைப் பின்பற்றினாள். கி.பி. 395-இல் பைசான் டைன் பேரரசிற்குள் ஒன்று சேர்க்கப்படும் வரை உரோமை மாகாணமாகவே எகிப்து தொடர்ந்து இருந்தது. 641-இல் முகலாய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.*

IV சமயம்:-

எகிப்திய சமயம் சிக்கல்மிக்கது. பல்லாயிரக்கணக்கான தெய்வங்களைக் கொண்டது. இவர்கள் சில சமயங்களில் ஒத்திருப்பதாய்த் தோன்றினாலும், எப்போதும் வேறுபட்டவர்கள். இவர்களுடைய அலுவல்கள் ஒன்று பட்டும் முரண்பட்டும் அமைந்திருந்தன. இவர்களைப் பற்றிய இதிகாசங்கள் வெவ்வேறுபட்டவையாகவும் முரண்பட்டவையாகவும் கூட இருந்தன. இவையாவும், நாட்டையும் அதனுடைய மக்களையும் பிரதிபலிக்கின்றன. எகிப்திய சமயமானது, நைல் நதியால் ஒன்றுபடுத்தப்பட்டாலும், எளிதில் எண்ணற்ற தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாகத் துண்டிக்கப்படக்கூடிய பரந்த நாட்டிற்குப் பொருந்தியது போன்று, உண்மையாகவே பலவகைப்பட்டதாகவும் கலப்புத் தன்மையுடையதாகவும் இருந்தது. இதனுடைய வரலாறானது மூவாயிரம் ஆண்டு கால வட்டச்சுழற்சி முறையில் அரசியல் பிளவையும் ஒன்றிப்பையும் கண்டுள்ளது.

அறிஞர் சிலர் இவை பண்டைய இன மூடநம்பிக்கைகளிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிட்டாலும், பெரும்பாலான எகிப்திய தெய்வங்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலுடன் தொடர்பு கொண்டவைகளாகவும் ஒரு தனிப்பட்ட இடத்தின் புரவலர்களாகவும் பாதுகாவலர்களாகவும் முதலில் தோன்றினர் (உ.ம்.:- மெம்பிசில் பித்தா மற்றும் செக்மென்த்து; எலியோபோலிசில் அத்தும்; கிரோக்கோதிலோபோலிசில் செபக்கும்). ஒருசிலர் அண்டவியலின் ஒருபகுதியாக வளர்ச்சியுற்றனர். இவர்களுக்கு அண்டம் சார்ந்த பணிகள் அளிக்கப்பட்டன (உ.ம்.:- ஆகாயத்தின் தேவதையாகிய நுத்; உலகின் கடவுளாகிய கெப்; வான்வெளியின் கடவுளாகிய சூ). மற்றவர்கள் தனிப்பட்ட பொறுப்புகளின் காரணமாக முதன்மை பெற்றனர் (உ.ம்.:- குழந்தை பிறப்பின் தேவதையாகிய மெசுகெந்து; உண்மை, நீதி, மெய்மையின் தேவதையாகிய மாகத்து; நற்பேறு அல்லது ஊழ் ஆகியவற்றின் ஆள் வடிவாகிய சாமி). தனிப்பட்ட இடத்திற்குரிய தெய்வங்கள் அவ்விடத்தின் அரசியல் செல்வாக்கிற்கு ஏற்பத் தங்களது செல்வாக்கினைப் பெறுவர் அல்லது இழப்பர். இதற்கு எடுத்துக்காட்டாகப் பன்னிரண்டாம் அரசினுடைய புரவலராக உருவாகிப் புதிய அரசின்கீழ், தெய்வங்களின் அரசன் என்று போற்றப்பட்ட திபிசினுடைய அமோனைக் கூறலாம். மக்கள் புதிய இடத்திற்குச் சென்றபோது பழைய உறைவிடத்தின் தெய்வங்களை வணங்குவதையே அவர்கள் பெரும்பாலும் தொடர்ந்தனர். ஆகவே அந்தந்த இடத்துக்குரிய பல்வேறு தோற்றங்கள் தெய்வங்களில் வழிபடப்படலாம். இவ்வாறு கழிமுகப்பகுதியிலும் கொப்தொசிலும் மின் என்ற தேவதையும், சாயிக, மற்றும் எஸ்னாவில் நீத் என்ற தேவதையும் வழிபடப்பட்டன. தெய்வங்கள் புதிய வடிவங்களை அடையலாம் அல்லது பல்வேறு குணங்களை ஏற்கலாம் (உ.ம்.:- தொடக்கத்தில் முகத்துவாரத்திலிருந்து வந்த இழவு வினைக்குரிய கடவுளாகிய தோத், பின்னர் எர்மோபோலிசில் நிலாக் கடவுள், ஞானத்தின் கடவுள், மந்திரத்தின் ஆண்டவர், எழுத்தின் படைப்பாளி மற்றும் புனித சட்டங்களின் ஆசிரியர் ஆனது). மற்றவர்கள் அடையாளம் குறிப்பிடப்பட்டனர் அல்லது இணைக்கப்பட்டனர் (உ.ம்.:- கோருகம் ரேயும் பின்னர் ரே கராக்தே ஆயினர்; ஆதோரும் ஐசீகம் ஆமோனும் ரேயும்; ஆமொன், மின் மற்றும் கீனும்). தெய்வங்கள் புராணங்களில் இறைக் குடும்பங்களாக இணைக்கப்பட்டன (உ.ம்.:- அமோன், முத் மற்றும் அவர்களது மகனும் நிலாக்கடவுளாகிய கொன்சு; கீனும், சதிஸ் மற்றும் மகளாகிய அனுகிசு). அனேகமாக அவர்களுடைய குணவியல்புகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் பெரும்பாலும் தெய்வங்கள் விலங்குகளின் வடிவில் சித்தரிக்கப்பட்டன (உ.ம்.:- வல்லூறுவாக கோருசு; ஆட்டுக்கடாவாக மென்தெசும் ஆமோனும்; நரியாக அனுபிஸ்). பிற்காலத்தில் பலர் மனித உடலைக் கொண்டிருந்தாலும் விலங்கின் தலையைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் (உ.ம்.:- சிங்கமாக செக்மெத்து; பூனையாக பாஸ்து).

இத்தகைய பலதரப்பட்ட தெய்வங்கள் மற்றும் தேவதைகளைச் சுற்றிச் சிக்கல்மிக்க புராண விளக்கங்கள் வளர்ச்சிபெற்றன. இத்

*தகைய புராணக்கதைகள் பல்வேறு போட்டி போடும் குருத்துவ அமைப்புகளின் படைப்புகளாக இருந்ததோடு அக்காலத்தில் நிலவிய சமூக அமைப்புகளை விளக்கவும் பயன்பட்டன; மேலும் அவை தோன்றிய புவியியல் மற்றும் அரச மரபுச் சூழ்நிலைகளையும் விளக்குகின்றன. புனித இடங்களில் குருக்கள் நிறைவேற்றுகின்ற அனுதினச் சடங்குகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. இச்சடங்குகள் இயற்கையின் முறைகளை மீண்டும் செயல்படுத்தின. குருக்கள் எழுந்து குளித்து உடைதரித்து இறை உருவங்களுக்கு உணவளித்தனர். படைப்புப்பற்றி பல்வேறு வடிவங்கள் முதன்மைபெற்றன. தென் எகிப்திலுள்ள எர் மோபோலிசில் தோன்றிய கதை காலத்தால் முந்தியதாகும். இதன்படி ஒகதோது என்ற எட்டுக் கடவுள்கள் குழப்பமிக்க நீரினின்று (நூன்) தோன்றினர்; இவர்கள் உலகைப் படைத்து நைல்நதி ஒட்டத்தையும் அனுதினமும் சூரியன் உதிப்பதையும் கட்டுப்படுத்தினர். எலியோபொலிசின் (ஒன்) இறையியல் படி, அவ்விடத்தின் கடவுளாகிய அத்தும் முதலில் தன்னைப் படைத்துக்கொண்டு, பின்னர், கயஇன்பம் மூலம் சூ (காற்று) மற்றும் தெப்னுத்து (ஈரம்) ஆகியவற்றிற்குப் பிறப்பளித்தார். அவர்கள் தங்களுடைய பங்கிற்குப் படைத்த கெப் (பூமி) மற்றும் நுத் (ஆகாயம்) ஆகியோர் ஐசிசு, ஒசிரிசு, செத் மற்றும் நெப்திக ஆகியோரைப் படைத்தனர். மெம்பிசில் ப்தா என்பவர் படைப்பவராகக் கருதப்பட்டார். இவரது இறைத்தோற்றமே எலியோபொலிசின் என்னேயாது (ஒன்பது) ஆகும். இறுதியாகத் திபிசைச் சேர்ந்த குருக்கள், ஆமோனை, முக்கிய கடவுளாக்கும் பொருட்டு, காலத்தால் முந்திய அண்டவெளிப்பாடாகச் சித்தரித்தனர்.*

*தொன்மையான அரச காலங்களினின்றே அரசர் இறைத்தன்மையுடையவராகவும் இயற்கை நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது தூண்டக்கூடிய தெய்வக்கூறுடையவராகவும், இவ்வாறு சூரியக் கட்வுள் ஒருசின் கண்கூடாகக் காணக்கூடிய உருவமாகவும் கருதப்பட்டார். பிற்காலத்தில் அவர் தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான இடையீட்டாளராக மட்டுமே கருதப்பட்டார். இதன்படி தெய்வங்களின் தந்தையாகிய ்ரயின் மகன் அல்லது காலங்களின் எலியோபொலிசின் படைப்புக் கடவுளாகிய அத்துமின் மகன் என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு அரசன் மூலமாக மட்டுமே இறை சலுகைகள் சாதாரண மக்களுக்குக் கிடைக்கக் கூடுமாதலால், அவரது நல்வாழ்வானது முக்கியத்துவம் மிக்கதாயிற்று. மரணத்திற்குப் பின்னர் அரசர் ஒசிரிசாக ஆக்கப்பட்டு மறுஉலகில் வாழ்வதற்கென உயிர்ப்பிக்கப்பட்டவர் என்று நம்பப்பட்டார்.*

*மறுவாழ்வு பற்றிய எகிப்திய நம்பிக்கையானது பிரம்மாண்டமான பிரமீடுகள் மற்றும் பிற நினைவுச்சின்னங்கள், பதனப்படுத்தப்பட்ட சடலங்கள், இழவுவினைக் கோலங்கள், விரிவான இறுதிச்சடங்குகளை விவரிக்கின்ற ஏடுகள் ஆகியவற்றில் கோடிட்டுக் காட்டப்படுகின்றது. பல மேல்வகுப்பு எகிப்தியர்கள் இனிமையான உலக வாழ்வை அனுபவித்ததன் காரணமாக மரணத்திலும் அதே போன்ற இன்பங்களுக்குத் தெய்வங்கள் தங்களை அனுமதிக்குமென நம்பினர். இறந்தோருக்கு எதிர்கால வாழ்வில் இன்பநலனை உறுதிப்படுத்துவதற்கென உணவு, பானம் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் (அல்லது அவற்றின் மந்திர அடையாளங்கள்) அவர்களுடைய உடலோடு வைக்கப்பட்டன. உடலானது பதனப் படுத்தப்பட்டு நுரையீரல், ஈரல்குலை, வயிறு மற்றும் குடல்கள் (மத்திய அரசிற்குப் பின் மூளையும்) ஆகியவை நீக்கப்பட்டு தனிப்பட்ட சாடிகளில் பாதுகாக்கப்பட்டன. உடலானது உரிய முறையில் பாதுகாக்கப்பட்டால் ஆன்மாவும் உரிய முறையில் பாதுகாக்கப்படும் என்பதே அவர்களின் நம்பிக்கை. ஆன்மாவானது பறவையின் உருவை ஏற்கும் என்று கூறப்பட்டது. (பெரும்பாலும் இறந்தோரின் தலையுடன் கூடிய வல்லூறுவாக). மறுவாழ்வில், பிறப்பு முதலே அவனுடைய இரட்டையாக இருந்த, யாவும் கடந்த ஆவியானது மனித*

னைப் பாதுகாத்து வந்தது. ஆன்மாவினுடைய மறுபிறப்பை இயலச் செய்யக்கூடிய ''வாயைத் திறத்தல்'' போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான இறுதிச் சடங்குகள், ஓசிரிஸ் மற்றும் தோத்தினுடைய தீர்ப்பிற்கெனக் கீழுலகிற்குச் செல்வதற்கு இறந்தோருக்குத் துணை புரிந்து, அதன் மூலமாக முடிவற்ற பேரின்ப வாழ்வில் ஓசிரிசுடன் எழுவதற்குத் துணையாகின. பத்தொன்பதாவது அரச மரபின் (பதின்மூன்றாம் நூற்றாண்டு) காலத்தில், கீழ் உலகிற்குச் செல்வதிலுள்ள கடுமைகளில் கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக இழவுச்சடங்குகளைக் கடுமையாக அனுசரிப்பது வலியுறுத்தப்பட்டது. இது, வளர்ந்து கொண்டு வந்த சமூக, அரசியல் சீர்கேட்டையும் பூமியில் மனித வாழ்வின் தரத்தின் தாழ்வையும் பிரதிபலிக்கலாம். கீழ் வகுப்பினர் மறுவாழ்வு பற்றிய செல்வரின் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்வதாக ஒருபோதும் தோன்றவில்லை. அவர்கள் இறுதிச்சடங்குகளைச் செய்யமுடிந்தாலும் அவர்களுடைய உலக அடிமைநிலையின் தொடர்ச்சியைத்தவிர உயர்வானதெதுவும் அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லை.

அமர்னா காலத்தில் அக்கெனதேனால் உயர்த்தப்பட்ட அத்தேன் வழிபாடு இறையொருமைக் கோட்பாட்டுப் புரட்சியாக அறிஞர்சிலரால் அடையாளம் காட்டப்படுகிறது. வாழ்வில் உயர் ஆற்றலெனச் சூரியன் கருதப்பட்டது. இது எகிப்திய வழிபாட்டில் ஏற்கனவே இருந்த பல கூறுகளை ஏற்றுக்கொண்டது. இவற்றிலிருந்து கருத்தியலான உலகளாவிய இறைவன் தோன்றினார். இவர் எகிப்தியருக்கும் மற்றவர்களுக்கும் தந்தையாவார். ஆகவே பேரரசின் எல்லாக் குடிமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவரானார். அத்தேன் மட்டுமே வழிபாட்டிற்குத் தகுதியுடைய ஒரே கடவுளாகக் கருதப்பட்டாலும் அக்கெனதேன் தன்னையே இறைவனுடைய ஒரே இடையீட்டாளராகவும் அவருக்குச் சமமானவராகவும் அறிவித்தார். மோசேயின் யாவே கோட்பாட்டை இச்சமயம் எவ்விதத்திலும் பாதித்ததாக நிரூபிக்க முடியாது.

V. மரபுரிமை:-

அதனுடைய வரலாற்றின் தொடக்க காலக் கட்டங்களிலிருந்தே எகிப்திய கலாச்சாரமானது, குறிப்பாக எகிப்தியப் பேரரசின் காலங்களில், அயல்நாட்டு நாகரீகங்களைப் பாதித்தது. தொழில்துறை, கலை மற்றும் அறிவு நாட்டம் முதலியவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்திருந்தது. எகிப்தியரின் சாதனைகளில் பெரும்பகுதி இன்றும் நீடித்துள்ளது. கலை மற்றும் கட்டடக்கலையின் எடுத்துக்காட்டுக்களான நினைவுச்சின்ன அமைப்புகளாக சக்காரா மற்றும் கிசேவில் உள்ள பிரமீடுகள், பெண்முகச்சிங்க உருவச் சிலை மற்றும் கர்னாக்கு, இலக்சோர், மெதினத்துகபு, அபுசிம்பெல் ஆகிய இடங்களிலுள்ள விரிவான பெரும் கோவில்கள் ஆகியவற்றில் இந்தத் தாக்கம் மிகவும் தெளிவாக உள்ளது. பல்வேறு தெய்வங்களின் சிலைகள் மற்றும் உருவங்கள் மற்றும் மறுவாழ்வு பற்றிய எகிப்திய நம்பிக்கைகளின் கடுஞ்சிக் கல்கள் மற்றும் மரணம் பற்றிய பழக்கங்கள் முதலியவற்றைக் குறித்துக் காட்டுகின்ற சுவர்ச் சித்திரங்கள் மற்றும் புடைப்பகழ்வுச் சித்திரங்கள் முதலியவற்றைக் கொண்டுள்ள சமயக் கலையானது அபரிமிதமாக உள்ளது. இளைய துதான்கமேனுடைய கல்லறைப் பொருட்களாகிய தட்டுமுட்டுச் சாமான்கள், நகைகள் மற்றும் சொந்தப் பொருட்கள் முதலியன, அரச வாழ்வின் மாட்சியைச் சுட்டிக் காட்டுகின்றன. நினைவுச்சின்ன கட்டடக் கலை, குறிப்பாக இரண்டாம் இராம்சேசினுடைய சிற்பக்கலை, எகிப்திய ஆட்சியாளர்களின் பெருமை, கலை மற்றும் பொறியியல் திறமைக்குச் சான்று பகர்கிறது.

பல்வேறு வகையான பரந்த எகிப்திய இலக்கியப் படைப்புக்கள் கிடைத்துள்ளன. இவை எகிப்திய அறிவுத்திறன், படைப்புத் திறன் ஆகியவற்றுக்குச் சான்று பகர்வதோடல்லாமல், அவர்களது வரலாறு மற்றும் கலாச்சாரம்பற்றிய உள்நோக்கும் அளிக்கின்றன. கர்னாக்குக் கோவிலின் சுவர்களில் உள்ள மூன்றாம் துத்மோசினுடைய அரச நாளேடுகள், மற்றும் அதிகாரபூர்வமான நாணல் எழுத்துச் சுவடிகள் புதிய அரசுக்கும்

பிற்காலத்திற்கும் வரலாற்றுக் குறிப்புக்களை அளிப்பது போன்று வெற்றித்தூண் மற்றும் பிற எழுத்துப் பொறிப்புகள், பழைய மற்றும் இடைக்கால அரசுகளின் வரலாற்றுக் குறிப்புகளை அளிக்கின்றன. சட்டப் பகுதிகள் பல்வேறு, அரச ஆணைகள் மற்றும் அத்துசிலிசின்கீழ் இத்தியருடனான இரண்டாம் இராம்சேசின் உடன்பாடு பற்றிய எகிப்திய வாசகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. கற்பனைக் கதைகளாக சினுகேயின் கதைகள், கப்பல் உடைந்த மாலுமி மற்றும் இருசகோதரர்கள் போன்றவை காணப்படுகின்றன. எண்ணற்ற சமய நூல்களாக எலியோபோலிஸ், மெம்பிசு மற்றும் திபிசுனுடைய அண்டக் கோட்பாடுகள், சாவு பற்றிய நூல்கள் (பழைய அரசின் பிரமீடு வாசகங்கள், மத்திய அரசின் சவப்பெட்டக வாசகங்கள் மற்றும் இறந்தோரின் நூல்), சடங்குகள், மந்திரங்கள், மற்றும் பதினேழாவது அல்லது பதினெட்டாவது நூற்றாண்டு வசைக்கூற்று வாசகங்கள் போன்ற எண்ணற்றவை எகிப்திய இலக்கியத்திற்குச் சான்று கூறுகின்றன. ஆமோன், தோத்து, ஓசிரிசு, நைல் நதி மற்றும் அரசர்களாகிய மூன்றாம் செகோஸ்த்திசு, மூன்றாம் துத்தோசு, இரண்டாம் இராம்சேசு மற்றும் மெர்னெப்தா ஆகியோரைப் பற்றிய பாடல்கள் மற்றும் வேண்டுதல்கள், பல்வேறு தொழிலாளர்களின் தனிப்பாடல்கள், மற்றும் நினைவு விருந்துகளில் பாடப்படுபவை ஆகியவை கவிதைகளுக்குச் சான்றுகளாக உள்ளன. ஞான இலக்கியங்கள் மிகுந்திருந்திருக்கின்றன. அவற்றில் பழமொழிகள், கட்டளைகள், நாட்டின் விவகாரங்களில் பொறுப்புடையவர்களுக்கான போதனைகள், வசைப்பாக்கள் மற்றும் நம்பிக்கையற்ற துன்பியலான உரையாடல்கள் ஆகியவை உள்ளடங்கும். இந்நூல்களின் நகல்களும், கடிதத்தொடர்பிற்கான மாதிரியாக எண்ணப்பட்ட வாசகங்களும், மற்றும் பின்பற்றத்தக்க பகுதிகளின் நகல்களும் எகிப்திய எழுத்தர் அமைப்புக்குச் சான்று பகர்கின்றன.

அறிவியல் துறையில் எகிப்தியரின் முன்னேற்றங்களில் குறிப்பிடத்தக்கது வான இயல் குறிப்புகளாகும். இவை 365, இருபத்து நான்கு மணி நேர நாட்காட்டியை (ஐந்து இடையிணைக்கப்பட்ட நாட்களுடன் கூடிய பன்னிரண்டு முப்பது நாள் மாதங்கள்) நிர்ணயித்துக் கொள்ள உதவின. இந்த நாட்காட்டியோடு ஒப்பிட்டு, நைல் நதியின் வருடாந்தர வெள்ளப்பெருக்கினைக் கணிப்பதன் மூலம், அவர்கள் 1460 ஆண்டுகள் கொண்ட ''சோத்திக்கு'' வட்டத்தை நிர்ணயித்தனர். இது அரசர்கள், அட்டவணைகள் மற்றும் பிற வரலாற்றுக்குறிப்புகளுடன் ஒன்று சேர்ந்து காலவரையறை ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது. எகிப்திய கணித முறையானது தொடக்க கட்டத்திலேயே இருந்தாலும் பெரும்பாலான செயல்முறைத் தேவைகளுக்கும் போதியதாக இருந்தது. மேலும் இதைத் திறமையான மற்றும் துல்லியமான முறையில் பயன்படுத்திப் பெரும் பிரமீடுகளை அவர்கள் கட்ட முடிந்தது. எளிய பதின்கூறு இலக்கங்களும், பின்னங்கள் பற்றிய தொடக்கநிலை அமைப்பும், பெருக்கல், வகுத்தல் பற்றிய எளிதில் கையாள முடியாத முறைகளும் பயன்பட்டன. மருத்துவப் பகுதிகள் உடலுறுப்புகளின் இடமும் அலுவல்களும், மற்றும் குருதியோட்டம் சார்ந்த அமைப்புப் பற்றிய அறிவையும், நோய்களின் தன்மையை அறிதல், அவற்றை மருந்து, அறுவைச் சிகிச்சை, மந்திரம் ஆகியவற்றால் குணப்படுத்துதல் பற்றிய திறமையையும் சுட்டிக்காட்டுகின்றன.

VI விவிலியத்தில் எகிப்து:-

1. புனித வரலாற்றில் எகிப்தின் பங்கு:- இஸ்ராயேலானது தொடர்பு கொண்டிருந்த அயல்நாடுகளில், எகிப்தைவிட அதிக அளவில் இவ்வுலக வல்லமையின் இருபொருள் மயக்க நிலையைக் காட்டுகிற நாடு வேறு இல்லை. செழிப்புமிக்க இப்பகுதியானது வறுமைக்குப்பட்ட மூதாதையர் (ஆதி 12:10. 42 தொ), நாடு கடத்தப்பட்டோர், (1 அர 11:40; எரே 26:21), தோற்கடிக்கப்பட்ட இஸ்ராயேலர், (எரே 42-43), ஓடுகின்ற நிலையில் இயேசு (மத் 2:13) ஆகியோருக்குத் தெய்வீக அடைக்கலமாக அமைந்தது. ஆனால் அதே காரணத்திற்காக அது குறிக்கோள் அற்ற மக்களுக்கு எளிதான சோதனைகளையும்

அளித்தது (யாத் 14:12; எண் 11:5;.....). தனது வலிமையால் பெருமை மிக்க பேரரசு என்ற அளவில் அது முன்னர் எபிரேயரைக் கொடுமைப்படுத்தியது (யாத் 1-13). ஆயினும் இதற்கு அப்பாற்பட்ட நிலையில், இஸ்ராயேல் இவ்வுலகச் சிறப்புகளை அடைய முயலும்போது இஸ்ராயேல் தன்னைப் பின்பற்றும் பெருமை எகிப்துக்கு உண்டு. தாவீதும் (2 சாமு 20:23-26) அவரைவிட அதிகமாக சாலமோனும் (1 அர 4:1-6) தங்கள் அரசை அமைப்பதிலும், அரசை ஆட்சி செய்யும் முறையிலும் எகிப்து முறையைப் பின்பற்றினர். நெருக்கடியான காலங்களில் சமாரியாவும் (எச 7:11), எருசலேமும் (2 அர 17:4; 18:24; ஏச 30:1-5; எரே 2:18...; எச 29:7) எகிப்தின் உதவியை நாடின. கலாச்சாரத்தின் உறைவிடம் என்ற நிலையில் மோசேயின் கல்விக்கு அது உதவி புரிந்தது (அ.ப.7:22). இறை ஏவுதல் பெற்ற ஞானிகள் சிலநேரங்களில் எகிப்தின் இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டனர் (குறிப்பாகப் பழ 22:17-23:11). ஆனால் மற்றொரு புறத்தே இஸ்ராயேலரை அவர்களுடைய இறைவனிடமிருந்து விலக்குகின்ற விபரீத, கெடுக்கும் ஆற்றலை உடைய (எரே 44:8;.....) சிலை வழிபாடு மற்றும் மந்திரிகத்தின் நாடாகவும் அது இருந்தது (ஞான 15:14-19). ஆகவே இறைவாக்கினர்கள் எகிப்தைக் கண்டனம் செய்கின்றனர் (எச 30:13.17; எரே 44).

2. இறைவனுக்கு முன்னர் எகிப்து:- எனவே யாத்திரைக்காலத்தில் இஸ்ராயேலை எகிப்து விடுவிக்க வேண்டும் என்பதற்காகவும் (யாத் 5-15; ஞான 16:19), அரசர் காலத்தில் இஸ்ராயேலுக்கு உதவியளிப்பதாக அளித்த வெறுமையான வாக்குறுதிகளுக்காகவும், இந்த அகந்தைமிக்க வல்லமையைத் தண்டிக்கவும் (ஏச 30:1-7; 31:1-3; எரே 46; எச 29:32) தனது ஞானிகளால் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்ட இந்தப் புறவின நாட்டை இழிவுபடுத்தவும் (ஏச 19:1-15) எகிப்திற்கு எதிராக இறைவனுடைய தீர்ப்பு இருந்தது என்பது வியப்பிற்குரியதன்று. இத்தலைப்புகளில் இறைவனின் சினத்தின் விளைவான அழிவிற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட மனிதச் சமூகங்களுக்கு அடையாளமாக எகிப்து உள்ளது (திருவெளி 11:8)

வரவேற்பின் நாடாக இருந்ததால் எகிப்து யாவேயின் சபையிலிருந்து எக்காலத்திற்கும் விலக்கப்படவில்லை. (உப 23:3 தொ). அதைத் தண்டித்த பின்னரும் அந்தப் பொறுத்த மட்டும் இறைவன் கட்டுப்பாட்டோடு செயல்படுகிறார். எகிப்தியர் அவரது படைப்புகளாகவே உள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களைத் தீமையினின்று விலக்க அவர் விரும்புகிறார் (ஞான 11:15-12:2). இதன் காரணமாகவே, இறுதியில் எகிப்தை மனமாற்றி அதைத் தம்முடைய மக்களுடன் ஒன்று சேர்க்க இறைவன் திட்டமிடுகிறார். இதனால் அவள் அவருக்குப் பணிசெய்யக் கற்றுக் கொள்வாள் (ஏச 19:16-25; சங் 86:4-7). தனது பாவங்களால் தண்டிக்கப்பட்டாலும் மற்ற நாடுகளைப் போன்று அவளும் மீட்பில் பங்கு பெறுவாள்.

## எகிப்து ஓடை (BROOK OF EGYPT)

கானான் நாட்டு எல்லையில் தென்மேற்காக ஓடும் ஓடை (எஸ் 34:5; 1 அர 8:65; 2 அர 24:7; 2 நாள் 7:8; ஏச 27:12; எச 47:19; 48:28). யூதா இனத்திற்குரிய பகுதியின் எல்லையாகும் (யோசு 15:4,47). ''கமாத்தின் நுழைவாயிலுடன்'' இவ்வோடை இணைத்துக் கூறப்படுகிறது (ஏச 27:12-ஐத் தவிர). இங்கு யூப்பிரத்திக வடஎல்லையாகும். எகிப்து ஓடை வாடி ஏல்-அரிசுடன் அடையாளம் காட்டப்படுகிறது. இவ்வோடை சீனாய் தீப கற்பத்தின் நடுவில் தோன்றி காசாவுக்கும், பெலுசியுமுக்கும் நடுவில் ஓடி மத்தியதரைக் கடலில் பாய்கிறது. இதன் அரபுப் பெயர் முகத்துவாரத்தில் உள்ள ஏல்-அரிஸ் என்ற ஊரின் பெயரால் வந்தது. மழைக் காலத்தில் இவ்வோடை பொங்கி நிறைந்து ஓடும். பல சிற்றோடைகள் தங்கள் நீரை இதில் வடிக்கின்றன. வெயில் காலத்தில் இது வறண்டு கிடக்கும். மற்றப் பகுதிகளில் இஸ்ராயேலின் தென்எல்லை ''எகிப்து நதி'' (ஆதி 15:18; காண் யூதி 1:9) அல்லது

சீகோர் (யோசு 13:3; 1 நாள் 13:5) அல்லது அராபாவின் ஓடை (ஆமோ 6:14) எனக் கூறப்படுகிறது. இவைகளில் எல்லாமே, அல்லது ஒரு சில 'வாடி ஏல் அரிஸ்' என்ற ஓடையைக் குறிக்கலாம். அசீரிய நாட்டு முதலாம் சார்கோனின் குறிப்பேடுகளும் சனகெரிப்பின் குறிப்பேடுகளும் பலமுறை இவ்வோடையைப் பற்றிப் பேசுகின்றன. இவ்வோடையை நைல்நதியோடு குழப்பி விடக் கூடாது.

**எகிப்து நதி** (EGYPT, RIVER OF)

ஆண்டவர் ஆபிரகாமின் சந்ததியாருக்குத் தருவோம் என்று வாக்குறுதி கூறிய நாட்டின் தெற்கு எல்லையாகும் (ஆதி 15:8). இங்கு ''மாநதி'' என்ற வார்த்தை வருவதால் நைல் நதியைக் குறிப்பிடுகின்றது என்று சொல்லப் படுகிறது. இச்சொல் யூதித்து நூலிலும் பயன் படுத்தப்படுகின்றது (யூதி 1:9).

**எகியா** (JEHIAH - ஆண்டவர் வாழ்கிறார்)

கடவுளின் திருப்பேழை தாவீது அரசனால் எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்ட போது, லேவியரான இவர் பேழையின் வாயிற் காவலனாக நியமிக்கப்பட்டார் (1 நாள் 15:24).

**எகியேலி** (JEHIELI)

எகியேல் (3)-இன் வழித்தோன்றல்களைக் குறிக்கும் இனப்பெயர் (1 நாள் 26:21-22).

**எகியேல்** (JEHIEL - இறைவன் வாழ்வளிப்பாராக)

1. எருசலேமில் திருப்பேழையின் முன் பணிபுரிந்த இசைக் கலைஞர்களில் ஒருவர் (1 நாள் 15:18.20; 16:5).

2. ககிமோனின் மகன். தாவீது அரசனின் புதல்வர்களைக் கவனித்து வந்தவர் (1 நாள் 27:32).

3. கெரிசோனிய குலத்தைச் சேர்ந்த லேவியர். இலாதான் புதல்வர்களின் தலைவர் (1 நாள் 23:8). இவர் தாவீது அரசனின் காலத்தில் ஆலயக் கருவூலக் கண்காணிப்பாளராக இருந்தார் (1 நாள் 29:8). இவர் எகியேலி என்னும் குருத்துவக் குடும்பத்தை நிறுவியவர் (1 நாள் 26:21-22).

4. யூதாவின் அரசன் யோசபாத்தின் புதல்வர்களில் ஒருவர் (2 நாள் 21:2).

5. தாவீதின் முக்கிய பாடகராகிய ஏமானின் வழித்தோன்றல். எசக்கியா அரசனின் சீர்திருத்தங்களில் அவருக்கு உதவி செய்த லேவியர்களில் ஒருவர் (2 நாள் 29:14). பிறகு ஆலயக் கண்காணிப்பாளராக இருந்தார் (2 நாள் 31:13).

6. எசக்கியாவின் சீர்திருத்தக் காலத்தில் ஆலயத்தில் மேற்பார்வையாளராக இருந்தார் (2 நாள் 31:13). இவரே (5)-இல் குறிக்கப் பட்டவராக இருக்கலாம்.

7. அரசன் யோசியாவின் சீர்திருத்தங்களின் போது, ஆலய மேற்பார்வையாளராக இருந்தவர் (2 நாள் 35:8). பாஸ்கு விழாவில் உதவி செய்தவர்.

8. பாபிலோனிலிருந்து எஸ்ராவோடு திரும்பிய அகதி ஒருவரின் தந்தை (எஸ் 8:9). ஒபதியா (10)-வின் தந்தை.

9. ஏலாமின் வழித்தோன்றலும் செக்கனியாவின் தந்தையுமாவார். இவர் எஸ்ராவின் திருமணச் சீர்திருத்தத்தில் முக்கிய பங்கெடுத்தார் (எஸ் 10:2). ஒரு வேளை அந்நிய மனைவிகளை விலக்கிவிடத் தூண்டப்பட்டவர்களுள் ஒருவரான எகியேலும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம் (10:26).

10. அந்நிய மனைவிகளை விலக்கிவிட எஸ்ராவால் தூண்டப்பட்டவர்களில் ஒரு குரு (எஸ் 10:21). கரிமின் வழித்தோன்றல்.

11. அந்நிய மனைவியை விலக்கிவிட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:26). ஒருவேளை (9)-இல் வரும் ஆளும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**எகிலா** (EGLAH - கன்றுபோடாத இளம் பசு)

தாவீதின் மனைவியருள் ஒருத்தி, இதிரயமின் தாய் (2 சாமு 3:5; 1 நாள் 3:3)

**எகிலாத்து-செலிசியா** (EGLATH-SHELISHIYAH - மூன்றாவது எகிலாத்து)

மோவாபு நாட்டில் உள்ள ஓர் இடம். மோவாப்பிற்கு எதிராக உரைக்கப்பட்ட இறைவாக்குகளில் இவ்விடத்தைப்பற்றிய குறிப்பு உள்ளது (ஏச 15:5; எரே 48:34). இவ்விடத்தைப் பற்றிய குறிப்பு இன்றும் தெரியவில்லை. சோவார் மற்றும் கொரோனயிமுக்கு இணையாக எகிலாத்து செலிசியா வருவதால் சில விளக்கவுரையாளர்கள் ''மூன்று வயது கன்று போடாத இளம் பசு'' என்ற பொருளுடைய பட்டப்பெயராகக் கருதுகின்றனர். இவ்விரு நகரங்களின் அழகையும் பலத்தையும் அடையாளமாக உணர்த்துவதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் அறியப்படாத ஓர் இடமாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர், ஒரேபெயருடைய மூன்று இடங்கள் இருந்ததாக ஏற்று, இதை ''மூன்றாவது எகிலாத்து'' என்று விளக்குகின்றனர்.

**எகிலாயிம்** (EGLAIM - குளம், குட்டை)

மோவாபின் எல்லையோரத்தில் உள்ள ஒரு நகரம். மோவாபுக்கு எதிரான இறைவாக்குகளில் குறிக்கப்படுகிறது (ஏச 15:8). இதன் இடத்தை அடையாளம் காட்டமுடியாது. வரலாற்று ஆசிரியர் யுசேபியு, ஏரா போலீசுக்கு (விவிலிய ரப்பாத், இக்கால அம்மான்) தெற்கில் 13 கி.மீ. தூரத்தில் உள்ள அகால்லீம் என்ற நகரைக் குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் உழவர்கள் குவித்த கற்குவியலான ருச்கம் ஏல்-எலிமே இன்றும் இருக்கிறது. இதுதான் எகிலாயிம் என்று அறிஞர்சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் இன்னும் தெற்கில் 7 கி.மீ தொலைவிலுள்ள கிர்பெத்து - யெல்சூல்தான் எகிலாயிம் என்று கருதுகின்றனர்.

**எகிலாம்** (HEGLAM - அவர்களை நாடுகடத்திக் கொண்டு சென்றான்)

எகூதின் மகனும், உசா, அகியூது ஆகியோரின் தந்தையுமாவார். கெராவின் மற்றொரு பெயர் (1 நாள் 8:7).

**எகிலோன்** (EGLON - இளம் எருது) - ஆள்

அம்மோனியர் மற்றும் அமலேக்கியரோடு சேர்ந்து இஸ்ராயேலரைத் தோற்கடித்த மோவாபு நாட்டு உடல்பெருத்த அரசன். யோர்தான் ஆற்றுக்கு மேற்குப் பகுதியில் எரிகோவைச் சுற்றியிருந்த பகுதிகளைக் கைப்பற்றி 18 ஆண்டுகள் கொடுமைப் படுத்தி வந்தார் (நீதி 3:12-14). இவர் நீதிபதிகள் நூலில் வரும் இரண்டாம் விடுதலை வீரரான ஏகூது என்பவரால் சூழ்ச்சியாகக் கொல்லப் பட்டார். ஏகூது கப்பம் கட்ட வந்தார். எகிலோனுக்குத் தனிப்பட்ட முறையில் செய்தி வைத்திருப்பதாகப் பாவனை செய்து, இந்தப் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஏகூது, தனது இருபக்கமும் கருக்குள்ள வாளை உடல்பெருத்த எகிலோன் வயிற்றில் பாய்ச்சினார் (3:12-25).

**எகிலோன்** (EGLON - இளம் எருது) - இடம்

எகிலோன் கானானியர்களின் அரச நகரமாக இருந்தது. எகிலோன், அமோரியர்களுடன் தற்காலிகமாக இணைந்து கொண்டு, அதோனி-சதேக்கு தலைமையில் கிபயோனியர்களின் கூட்டணிக்கு எதிராக எழுந்தனர் (யோசு 10:1 தொ). கிபயோனியர்களுடன் கொண்ட உடன்பாட்டால், யோசுவா கில்காலில் தங்கியிருந்தபோது அவர்களுக்கு உதவுவதற்கு ஒத்துக் கொண்டார். அசேக்காவிற்கு அருகில் நடந்த கடும் போரில் அதோனி-சதேக்கின் கூட்டணி முறியடிக்கப்பட்டது. தலைவர்கள் எகிலோன், அரசர் தெபீரும் உள்பட, மாக்கேதாவிற்கு அருகிலிருந்த குகையில் ஒளிந்து கொண்டனர். அங்கிருந்து அவர்கள் யோசுவாவைச் சேர்ந்தவர்களால் வெளிக்கொண்டு வரப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய உடல்களைச் சூரியன் மறையும் மட்டும் மரத்தில் தொங்கவிட்டுப் பின்பு உடல்களை வெட்டிக் குகைக்குள் புதைத்து முத்திரை குத்தினார்கள். இவ்வெற்றிக்குப் பிறகு இஸ்ராயேலர்கள் மலநாடுகள் அனைத்தின் மேலும் வெற்றி பெற்றனர் (யோசு 10:28 தொ). எகிலோனிலிருந்த அனைத்து உயிர் இனங்களையும் அழித்தார்கள் (யோசு 10:35). தொல்பொருள் ஆராய்ச்சிகள் இலாக்கீசு நகரம் அழிந்த 13-ஆம் நூற்றாண்டிலேயே எகிலோன் நகரமும் அழிந்தது என்று சொல்லுகின்றன. இதற்குப் பிறகு இலக்கீசு மாவட்டமாக, யூதாவின் ஒரு பகுதியாயிற்று (15:39).

**எகினேசியன் சாலை** (EGNATIAN WAY)

இது ஓர் உரோமைப் பெருஞ்சாலையாகும். இது அதிரியாக் கடலையும் இரேக்கக் கடலையும் இணைக்கும் உரோமைப் பேரரசின் கிழக்கு-மேற்குச் சாலையாகும். இது உரோமையிலிருந்து சிறிய ஆசியாவுக்குச் செல்வதற்கு வழிவகுத்தது. இது கிரீஸ் வெல்லப்பட்ட பின், கி.மு. 146-இல் கட்டப்பட்டது. திராக்கியமிலிருந்து தொடங்கிக் கிரீஸ் வழியாகச் சலோனிக்காவில் முடிந்தது. உரோமை வணிகர்களும் படைகளும் ஆப்பியன் சாலை வழியாகச் சென்று தென் கிழக்குத் துறைமுகமான பிரின்டிசியாவை அடைவர். அங்கிருந்து கப்பல் வழியாக அதிரியாக் கடலைக் கடந்து செல்வர். திராக்கியம் அல்லது அப்போலோனியா துறை முகங்களை அடைந்து, எகினேசியன் சாலை வழியாகத் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கிரீஸ் கடற்கரையிலுள்ள பிலிப்பை துறை முகத்தை அடைவர்.

பவுல் தமது இரண்டாம் வேதபோதகப் பயணத்தில் இவ்வழியாகத்தான் மேற்கு நோக்கிப் பயணம் செய்து பிலிப்பை, தெசலோனிக்கா, மற்றும் பெரோயா ஆகிய மூன்று இடங்களில் திருச்சபைகளை நிறுவினார் (அ.ப. 169-17:4).

**எகுதி** (JEHUDI - யூதன்)

நெத்னியாவின் மகன். இவர் ஓர் இளவரசன். இவர் எரேமியாவின் இறைவாக்குச் (ஓலைச்) சுருளைக் கொண்டுவரும்படி பாரூக்கை அழைத்துவர அனுப்பப்பட்ட ஓர் அரசவை அதிகாரி (எரே 36:14). பிறகு இவரே அச்சுருளை அரசனுக்கு வாசித்துக் காட்ட, அவர் ஒவ்வொரு பகுதியாக வெட்டி எரித்தார் (36:21-23). இப்பெயரின் இணை வடிவம், இவர் அந்நிய இனத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று சுட்டுகிறது.

**எகுதியா** (JEHUDIJAH - யூதப் பெண்)

இச்சொல் ஓர் ஆளின் பெயரல்ல. இச்சொல் சுட்டிடைச் சொல்லுடன் வருவதால் ''யூதா நாடடுப் பெண்'' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. மேலும் மெரேத்தின் மனைவி (எகிப்திய நாட்டுப் பெண்)யைப் பிரித்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது (1 நாள் 4:18).

**எகுது** (JEHUD - புகழ்ச்சி)

தாண் கோத்திரத்துப் புதல்வர்களுக்குக் கிடைத்த நகரங்களில் ஒன்றாகும். தற் பொழுது யாப்பாவுக்குத் தென்கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ள இக்கால ஏல்-யகுதியே ஆக இருக்கலாம் (யோசு 19:45). எழுபது நூல் இதை ''யாசுர்'' என்று கொண்டுள்ளது. ஆகவே யாப்பாவுக்குத் தென் கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ''யாசுர்'' ஆக எகுதை அடையாளம் காட்டுவர்.

**எகுத்தியேல்** (JEKUTHIEL - இறைவன் வலிமை அளிப்பாராக)

மெரேத்தின் வழியாக யூதாவின் வழித் தோன்றல். சானோவாகின் தந்தை (1 நாள் 4:18)

**எகுபத்தானா** (ECBATANA - ஒன்று சேரும் இடம், சேர்க்கும் இடம்)

இப்போது கமாதான் என்றழைக்கப்படும் எல்லெண்ட் என்ற மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு நகரம்.

எரோதோதசின்படி, இந்நகரம் மேதியருடைய அரசன் தெயோசஸ் என்பவரால் நிறுவப்பட்டது. மேதியர்களின் தலைநகரமாகும். ஆனால் யூதி 1:1-4-இன்படி மேதியருடைய அரசன் ஆர்பகசாது என்பவரால் கட்டப்பட்டது. இதற்கு வரலாற்று அடிப்படை அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் பெரிய சைரஸ் அரசர் எகுபத்தானைக் கைப் பற்றினார். அதன்பிறகு இந்நகரம் அக்கமோனிய அரசர்களுக்குக் கோடை உறைவிடமாக மாறியது. முதலாம் தாரியுஸ் ஆட்சிக் காலத்தில் எருசலேம் ஆலயத்தைப் புதுப்பிப்பது பற்றி சைரஸ் அரசர் பிறப்பித்த கட்டளையின் ஒரு படிவம் இங்குக் கண்டுபிடிக்கப் பட்டது (எஸ் 6:2).

இது வியத்தகு அழகுள்ள நகரம். இந்நகரத்தின் கட்டடக்கலை நுணுக்கங்களைக்

கிரேக்க நூலாசிரியர்கள் புகழ்ந்துள்ளனர். மகா அலக்சாந்தரால் இந்நகரம் அழிவுக்குட்பட்ட போதிலும், இதன் அழகு பொலிவுற்று விளங்கியது. பார்த்தியரின் ஆட்சிக் காலத்தில் இது மீண்டும் கோடை உறைவிடமாக மாறியது. சாசனியர்களுடைய காலத்தில் இதன் முக்கியத்துவம் குறைந்த போதிலும் தற்போதுள்ள நகரம் முகமதியர்களின் ஈரான் வெற்றிக்குப் பிறகு கட்டப்பட்டது. எனவே முகமதிய நூலாசிரியர்களால் இந்நகரம் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. 1220-இல் மங்கோலியர்களால் தாக்குண்டு மீண்டும் தாமெர்லேன் என்பவர்களால் தாக்கப்பட்டது. ஆனால் இவற்றின் அழிவிலிருந்து தப்பியது எனலாம். எகுபத்தான் தற்போது ஈரானிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

எகுபத்தான்-கமதான் நகரத்தில் முழுமையான அளவுக்கு இதுவரை தொல்பொருள் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. ஏனென்றால் தற்போதுள்ள கட்டடங்கள் பழைய கட்டடங்களின் மேல் கட்டப்பட்டவை. ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றால் கட்டடங்களை இடித்தாக வேண்டும். என்றாலும் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படும் வெள்ளி, தங்கப் பொருள்கள் மற்றும் பழங்காலப் பாரசீகக் கல்வெட்டுகள், மகா தாரியுசின் மூதாதையர் அரியாரம்னெயையும் அவர் மகன் ஆர்சமெசையும் குறிப்பிடுகின்றன. இவை தொல்பொருள் ஆராய்ச்சிக்கான முக்கியமான இடம் இது என்பதைச் சித்தரிக்கின்றன.

கமதானில் காணப்படும் எஸ்தர் மற்றும் மோர்தெக்காய் இவர்களின் பாழடைந்த கல்லறை சாசனிய ஆட்சியாளர் யாஸ்தெகர்டின் மனைவியினுடைய கல்லறையாக இருக்கலாம் (கி.பி. 339-420/421).

**எகுப்பா** (JEHUBBAH - யாவே (ஒருவனை ஆபத்திலிருந்து) மறைத்து வைத்தார்)

ஆசேரின் வழிவந்தவர்களில் ஒருவர். ஆசேரின் இனத்தில் பெரியாவின் வழித்தோன்றலும் சேமேரின் ஒரு மகனுமாவார் (1 நாள் 7:34).

**எகுவேல்** (JEHUEL)

எசக்கியாவின் சீர்திருத்தத்தில் உதவிய ஒரு லேவியர் (2 நாள் 29:14). இவரும் எகியேலி (3)யும் ஒருவராக இருக்கலாம்.

காண்க. எகியேலி (3)

**எகூக்கல்** (JEHUCAL - யாவே ஆற்றலுள்ள)

செலமியாவின் மகன். இவர் செதேக்கியாவின் அவையில் உள்ளவர். தனக்காக மன்றாடுமாறு எரேமியாவிடம் கேட்க செதேக்கியாவால் அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் (எரே 37:3).

எரே 38:1-இல் இவர் யூகால் என்றழைக்கப்படுகிறார்.

**எகோவா** (JEHOVAH)

இறைவனின் பெயர். கி.பி. 1520-இல் பெத்ருஸ் கலாத்தினுஸ் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கைப் பெயர். இஸ்ராயேல் மக்கள் நாடுகடத்தப்பட்ட பிறகு 'யாவே' என்ற புனிதமான பெயரை அவர்கள் பயன்படுத்தத் தயங்கினர். ஏனெனில் அப்பெயரின் புனிதம் கெட்டுவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். இப்பெயருக்குப் பதிலான ''அதோனாய்'' என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. யாவேயைக் குறிக்கும் YHWH என்ற நான்கு மெய்யெழுத்துக்களாலும், அதேனாய் என்ற சொல்லில் வரும் உயிரெழுத்துக்களாலும் எகோவா என்ற சொல் உருவானது.

**எகோவா-ஈரே** (JEHOVA-JIREH - யாவே கொடுப்பார்)

ஈசாக்குக்குப் பதிலாக ஆட்டைத் தகனப் பலியாக ஒப்புக் கொடுத்த இடத்திற்கு ஆபிரகாம் இப்பெயரைச் சூட்டினார். ''கடவுள் கொடுப்பார்'' என்ற பொருளுடைய சொல்லாகும். ஆதி 22:14-இல் காணப்படும் இதற்கு மற்றொரு பொருள் ''கடவுள் காண்பார்'' என்பதாகும். ஆனால், இங்குக் கடவுளின் பராமரிப்பே வலியுறுத்தப்பட்டிருப்பதால் ''கடவுள் கொடுப்பார்'' என்பதே சரியான பொருளாகும்.

இந்த இடம் எங்கிருந்தது என்று தெரிய வில்லை. சாலமோன் கட்டிய கோவிலிருந்த இடமே இவ்விடம் என்று மரபு ஒன்று கூறுகிறது. செக்கேமிலுள்ள மோரேயின் ஓக்கு மரம் இருந்த இடத்திலிருந்த புனித இடம் தான் இது என்று அறிஞர்சிலர் கருதுகி றார்கள்.

**எகோவா-சாலோம்** (JEHOVA SHALOM -யாவே சமாதானம் ஆவார், நலம் நல்கும் யாவே)

ஒபிராவில் கிதயோனால் கட்டப்பட்ட பலிபீடத்தின் பெயர் (நீதி 6:24).

**எகோவா-நீசி** (JEHOVA-NISSI - யாவே என் சம்மட்டியாவார், கொடியாவார்)

யாவே என்னை உயர்த்தினார், யாவே என் கொடியாவார் (யாத் 17:15). இரபிதிமில் அமலேக்கியரை வென்றதன் நினைவாக மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்குக் 'கடவுள் என்னை உயர்த்தினார்' என்று பெய ரிட்டார். இஸ்ராயேலர்களின் படைக்கு இறைவனே முன் செல்பவர் என்று அவர்கள் கருதினார்கள் (நீதி 7:20; சங் 20:7).

**எக்கபுசேல்** (JEKABZEEL - இறைவன் சேகரிக் கிறார்)

எதோமியர் எல்லையிலுள்ள யூதாவைச் சேர்ந்த ஒரு நகரம் (நெக 11;25). கபிசேலின் மற்றொரு பெயர்.

காண்க. கபிசேல்

**எக்கமயாம்** (JEKAMEAM - உறவினன் நிறுவு வானாக)

கெபிரோனின் நான்காவது மகன். ஒரு லேவியர் குடும்பத் தலைவர் (1 நாள் 23:19; 24:23).

**எக்கமியா** (JEKAMIAH - யாவே உயர்த்துவா ராக)

1. யூதா இனத்தைச் சேர்ந்த சல்லூமின் மகன். எரகுமேலின் வழித் தோன்றல் (1 நாள் 2:41).

2. அரசன் எக்கொனியா (யோயாக்கின்) வின் புதல்வர்களில் ஒருவர் அல்லது சந்ததி யினர் (1 நாள் 3:18).

**எக்கரோன்** (EKRON - வெறுமையான இடம்)

பெலிஸ்தியர்களுடைய ஐந்து நகரங்களில் வடகோடியிலுள்ள ஒரு நகரம் (யோசு 13:3). இது முதலில் தாணுக்குக் குறிக்கப்பட்டா லும் (19:43), பின்பு யூதாவுக்குரியதாகக் கரு தப்பட்டது (13:3; 15:11).

ஒரு காலத்தில் யூதா இந்நகரைக் கைப்பற் றியிருந்தாலும் (நீதி 1:18) விரைவில் பெலிஸ்தியர் இதை மீண்டும் கைப்பற்றி, மலைப்பகுதியுள்ள இஸ்ராயேலரைக் கட் டுப்படுத்த இதற்கு மூல கானானிய நகர-அரசு அமைப்புக் கொடுத்துப் பலப்படுத்தி னர். பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்ட கத்தைக் கைப்பற்றியபோது, காலப்போக் கில் அதை எக்கரோனுக்குக் கொண்டு வந்த னர் (1 சாமு 5:10). பெட்டகம் அவர்களி டையே இருந்தபோது விழைந்த தீமைக ளால் தூண்டப்பட்டு அதைப் பேத்து-செமேசில் இஸ்ராயேலரிடம் ஒப்படைத்த னர். சாமுவேல் காலத்தில் இப்பகுதியின் மேல் இஸ்ராயேலர் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினர் (7:14). ஆனால் தாவீது கோலியாத்தை எலாத்துப் பள்ளத்தாக்கில் தோற்கடித்தபின், பெலிஸ்தியரால் எக்கரோ னுக்குப் பின்வாங்க முடிந்தது (17:52).

இஸ்ராயேல் இரண்டு அரசாகப் பிளவு பட்ட (கி.மு.918) சிறிது காலத்தில் எகிப்திய பாரவோன் முதலாம் சோக்கு எக்கரோனைக் கைப்பற்றினார் (1 அர 14:25). சிறிது காலத் திற்குப்பின் இஸ்ராயேலின் அரசனும் ஆகாபு வின் மகனுமான அகசியா (853) நோய் வாய்ப்பட்டிருந்தபோது இஸ்ராயேலின் இறைவனிடம் தஞ்சமடைவதற்குப் பதி லாக, எக்கரோனின் தெய்வமான பாகால் செபூவை ஆலோசித்தார் (2 அர 1:2). இது எலியாவின் தலையீட்டைத் தூண்டியது (1:3-16). பாகாலின் வழிபாட்டின் ஒரு வடிவம் எக்கரோனின் சமயமாக இருந்தது இஸ்ரா யேலை அதிகம் பாதித்ததாகத் தெரிகிறது.

எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அமோஸ் பெலிஸ்தியரின் ஐந்து நகரங்களோடு எக்கரோனையும் கண்டனம் செய்து, வரவிருக்கும் அழிவைப்பற்றி எச்சரிக்கிறார் (ஆமோ 1:8). இந்நகரம் பல ஆண்டுகளாக ஏற்கெனவே அசீரியர்களின் தாக்குதலை உணர்ந்திருந்தாலும், 712-இல் 2-ஆம் சார்க்கோனுக்கு வீழ்ந்தது. எக்கரோனின் அரசன் பாடி அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்ததாலும், அதிகாரவர்க்கத்தினர் யூதாவின் அரசன் எசக்கியாவுக்கு ஆதரவு அளித்து, கிளர்ச்சி செய்ய வழிதேடினார். 701-இல் சனகெரிபு பாலஸ்தீனத்தை முற்றுகையிட்டார். எக்கரோனைத் தனிமைப் படுத்தி, அசீரியர்கள் அளித்த உதவியை நிறுத்தினார். நகரைக் கைப்பற்றி, பாடியை மீண்டும் அரசனாக நியமித்து, கிளர்ச்சியாளர்களை நாடு கடத்தினார்.

பிறகு வந்த அசீரிய அரசர்களுக்கு எக்கரோன் கப்பம்கட்டி, தொழிலாளர்களையும் அளித்தாலும், அதன் அழிவை எபிரேய இறைவாக்கினர்கள் முன்னறிவித்தனர் (செப் 2:4; செக் 9:5-9; காண்க எரே 25:20). பாபிலோனியர்கள் காலத்தில் அதன் நிலையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அடுத்து, இந்நகரம் பற்றிய குறிப்பு, யோனாத்தான் மக்கபேயர், தெமேத்திரியசைத் தோற்கடித்து, அசுதோதை வென்றதற்காக அலக்சாந்தர் பாலாஸ் அவருக்கு இந்நகரைக் கொடையாகக் கொடுத்தார் என்பதாகும் (கி.மு.147; 1 மக் 18:89).

கி.பி.4-ஆம் நூற்றாண்டில் அங்கு ஒரு யூதக் குழு இருந்திருக்கிறது. சிலுவைப் போரின்போதும் (1100) முதலாம் பால்டுவின்னின் படையெடுப்பின்போதும் இந்நகரம் குறிக்கப்படுகிறது.

இந்த இடம் எங்கிருந்தது என்பது பற்றித் தொல்பொருள் ஆய்வாளர்களிடையே கருத்தொருமை இல்லை. அசுதோதுக்கு வடகிழக்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள, பழங்காலப் பெயரைப் பாதுகாத்துள்ள ஆக்கீர் என்ற சிற்றூராக இருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது. சமீபத்தில் அறிஞர்பலர் இந்நகர் கிர்பெத்து ஏல்-முக்கென்னா (தேல்மிக்னே) எனக் கருதுகின்றனர். இவ்விடம் கடற்கரைச் சமவெளியின் கிழக்கு ஓரத்தில் 31 கி.மீ. உள்நாட்டில் உள்ளது. இவ்விடத்தில் நடந்த தொல்பொருள் ஆய்வுகள் இரும்புக் காலத்தைச் சேர்ந்த பெலிஸ்தியர்களின் பல பொருள்களைக் காட்டின. மேலும் யுசேபியு குறிக்கும் ஒரு பெரிய நகரையும் இந்த ஆய்வு காட்டியது. வேறுசிலர் அசுதோதுக்கு வடகிழக்கில் 18 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால கத்ராவை அடையாளம் காட்டுவர். இவர்கள் கிர்பெத்து ஏல்-முக்கென்னாவை ஏல் தெக்கே இருந்த இடமாக அடையாளம் காட்டுவர் (யோசு 19:44).

எக்கொனியா (JECONIAH யாவே நிறுவுவார்)

யூதாவைச் சேர்ந்த யோயாக்கினின் மற்றொரு பெயர் (மத் 1:11-12).

எக்கோலியா (JECOLIAH - யாவேயால் கூடும்)

யூதாவின் அரசன் அமாசியாவின் மனைவியும், அரசன் அசரியாவின் தாயும் ஆவார் (2 அர 15:2; 2 நாள் 26:3).

எசக்கியா (HEZEKIAH - யாவே என் வலிமையாவார்)

1. எசக்கியா என்பவர் கி.மு. 715 முதல் 687 வரை யூதாவின் பதினான்காவது அரசராக விளங்கினார். இவர் ஆகாசின் மகனும் வாரிசும் ஆவார்.

இவர் தனது 25-ஆம் வயதில் அரியணை ஏறினார். 29 ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2 அர 18:2; 2 நாள் 29:1). செக்காரியாவின் மகளாகிய அபி இவரது தாயாவாள். இவரது ஆட்சிக் காலத்தின் பதினான்காம் ஆண்டில் சனகெரிபு யூதாவின் அரண்சூழ்ந்த நகர்களை முற்றுகையிட்டுப் பிடித்தார் (2 அர 18:13). கி.மு. 689-இல் திரிகாக்கா அரசராகிய பொழுது இவரது ஆட்சிக் காலம் முடிவுற்றது (19:9).

எசக்கியா ஒரு சிறந்த அரசராகப் பிற்கால மக்களால் கருதப்பட்டார் (2 அர 18:5; 23:25).

யூதா நாட்டு வரலாற்றில் மிகவும் பிரச்சனை யான சூழ்நிலையில் இவர் அரசபதவியை ஏற்றார். ஆராம் ஏற்கெனவே திகிலாத்து பிலேசருக்கு வீழ்ச்சியுற்றது. அதே கதி யூதா வுக்கும் காத்திருந்தது சீரிய எப்பிராயம் போரினாலும், ஆகாசின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பெலிஸ்தியர்கள், ஏதோமியர்க ளின் தாக்குதல்களினாலும், யூதாவின் வலிமை குறைய ஆரம்பித்தது. அசீரியா விற்கு அவர்கள் செலுத்த வேண்டிய கப்பம் பெரிய சுமையாக இருந்து வந்தது. மேலும் ஆகாசின் காலத்தில் சமயத்துறையிலும் ஏரா ளமான குழப்பங்கள் ஏற்பட்டன. எனவே அரசியல் சமய மறுமலர்ச்சிதான் யூதாவின் உடனடித் தேவையாக இருந்தது. ஆகாசின் காலத்திலே ஒரு சமய மறுமலர்ச்சிக் குழு யூதாவில் இருந்து வந்தது. அக்காலத்தில் தான் ஆமோஸ், ஓசே போன்ற இறைவாக்கி னர்கள் உரைத்த இறைவாக்குகள் வடநாட்டு அரசின் அழிவின் மூலம் நிறைவேறின. எசக்கியாவைப் பொறுத்தவரையில் அரசிய லில் அதிக ஈடுபாடு காட்டியதுபோல் தோன் றினாலும் அவரிலே சமயம் சார்ந்த ஆர்வத் தையும், நாட்டு உணர்வினையும் பிரித்துப் பார்க்க இயலாது.

இந்தச் சமயச் சீர்திருத்தத்தில் ஏசயாவின் செல்வாக்கும் பாகமும் குறிக்கப்பட வேண் டியனவாகும். எசக்கியா சிலைவழிபாட்டிற் காக அமைக்கப்பட்டிருந்த மேடுகளையும் சிலைகளையும் உடைத்தார். வழிபாட்டுக் கென .அமைக்கப்பட்டிருந்த சோலைகளை யும் அழித்தார். மேலும் மோசேயால் செய்து வைக்கப்பட்டது என்று சொல்லி, தூப வழி பாடு நடத்தப்பட்டு வந்த பித்தளைப் பாம் பையும் உடைத்தெறிந்தார் (2 அர 18:4). இத்தகைய செயல்களுக்கு மக்களின் முழு மையான ஆதரவு கிடைக்கவில்லை. 2 நாள் 29-31-இல் எசக்கியாவின் சமய மறுமலர்ச்சி பற்றி நீண்ட உரை தரப்பட்டிருக்கின்றது. ஆலயமானது தூய்மைப்படுத்தப்பட்டு அர்ச் சிக்கப்பட்டது. ஆலய வழிபாடுகள் புதுப் பிக்கப்பட்டன (2 நாள் 29). இதைத் தொடர்ந்து பாஸ்காத் திருவிழா கொண்டா டப்பட்டது. வடநாட்டு அரசினைச் சேர்ந்த மக்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர் (2 நாள் 30). மேலும் மனாசே, எப்பிராயிம் நாடுகளிலும் உள்ள சிலைவழிபாடுகள் அழித்து நொறுக்கபபட்டன (2 நாள் 31:1). 2 நாள் 31-இல் முழுவதிலும் எசக்கியாவால் நடத்தப்பட்ட சமய மறுமலர்ச்சி பற்றிதான் கூறப்பட்டுள்ளது.

இந்த மறுமலர்ச்சி இயக்கமானது வட நாட்டு அரசிற்கும் சென்றது. எப்பிராயிம், மனாசே, ஆசேர், செபுலோன் நாடுகளில் மக்கள் சிலர் இவர்களின் சொல்லைக் கேட்டு நடந்தனர் (2 நாள் 30:10-11). ஆனால் பலர் எசக்கியாவால் அனுப்பப்பட்ட தூது வர்களின் சொற்களுக்குப் பணியவில்லை. ஏனென்றால் எசக்கியா எருசலேமை யாவே வழிபாட்டின் மையத்தளமாக மாற்ற முயற்சி எடுத்தபோது அசீரியர்கள் பெத்தே லில் யாவேயை வழிபட உத்தரவு அளித்தார் கள்.

யூதாவை அரசியல் துறையைப் பொறுத்த வரையில் வலிமைமிக்க நாடாக, சிறந்த நாடாக மாற்ற வேண்டும் என்பது எசக்கியா வின் மற்றொரு குறிக்கோளாகும். இவர் முதல் சில ஆண்டுகள் அசீரியவை எதிர்த்து எந்தவிதமான கிளர்ச்சியையும் செய்ததாகத் தோன்றவில்லை.

இந்த ஆண்டுகளில் எதிர்காலத்தை முன் னோக்கி எருசலேமின் படைவலிமையைப் பெருக்கினார். குறிப்பாகக் கீகோன் நீரூற் றின் தண்ணீரை நகருக்குள் கொண்டுவருவ தற்காகப் பாறையைக் குடைந்து வாய்க்கால் அமைத்தார் (2 அர 20:20; 2 நாள் 32:30). அசீரியாவின் அரசர் சார்கோன் இறந்தபின் சனகெரிபு பதவியேற்ற பொழுது ஒரு புதிய சூழ்நிலை அசீரியாவில் உருவாகியது. இந் தக் காலத்தில் பாபிலோனிய அரசன் மெரொ தாக்கு பலாதான் எசக்கியாவுக்குத் தூது அனுப்பினார். அசீரியர்களுக்கு விடாப்பிடி யான எதிர்ப்பு அளித்தார் (2 அர 20:12-15; ஏச 39:1-4). இக்காலத்தில்தான் எத்தியோப் பிய அரசரான திரிகாக்கா அசீரியாவை எதிர்த்துத் தனது படையை திரட்டினார் (2

*அர 19:9)*. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எசக்கியா பாபிலோனியா, எகிப்து போன்ற நாட்டு அரசர்களுடன் சேர்ந்து கொண்டு அசீரியாவை எதிர்த்தார் *(2 அர 18:7)*. மேலும் பெலிஸ்தியர்களைக் காசா வரை துரத்திச் சென்று, காவலர் காவல் புரியும் கோபுரங்கள், அரண் சூழ்ந்த நகர்கள் அவர்களுடைய எல்லைகள், அனைத்தையும் அழித்தார் *(2 அர 18:18)*. அசீரிய எதிர்ப்பு இயக்கத்தை ஏசயா எதிர்த்ததாகத் தெரிகிறது. சனகெரிபு கிழக்குப் பகுதியில் தன் காரியங்களைச் சரிப்படுத்தியபின் மேற்கு நோக்கித் திரும்பினார். பின் எசக்கியா ஆண்ட, பதினான்காம் ஆண்டில் அசீரிய அரசன் சனகெரிபு யூதாவிலிருந்த அரண்சூழ்ந்த நகர்கள் அனைத்தையும் முற்றுகையிட்டுப் பிடித்தார் *(2 அர 18:13)*. இந்நகர்களில் இலாக்கீசு, தெபீர் போன்றவைகளும் உள்ளடங்கும். உடனே எசக்கியா சனகெரிபுக்கு அடிபணிந்து அவர் எவ்வளவு தொகை வரியாகச் செலுத்தச் சொன்னாலும் செலுத்துவதாகக் கூறி அவனுக்குச் செய்தி அனுப்பினார். ஏனென்றால் மற்றும் உள்ள நகர்களை அசீரிய மன்னன் முற்றுகையிட்டு விடாதபடி இருக்க இம்முயற்சியைக் கையாண்டார். அசீரிய மன்னர் முந்நூறு தாலந்து வெள்ளியும், முப்பது தாலந்து பொன்னும் செலுத்தக் கட்டளை இட்டார் *(2 அர 18:15)*. அரசனின் கட்டளைப்படி கருவூலங்களிலும் ஆலயத்திலுமிருந்து அனைத்துச் செல்வங்களையும் எடுத்துச் சென்று அரசனுக்கு அளித்தார். இந்த நிகழ்ச்சி யூதாவின் செல்வச் செழிப்பைப் படம் பிடித்துக் காட்டுகின்றது *(2 நாள் 32:27-29)*.

இரண்டாம் அர 18:17-19:37 ஏராளமான பிரச்சனைகளை எழுப்புகின்றது. சனகெரிபு இலாக்கீசை முற்றுகையிட்ட பொழுது, அதைக் கைப்பற்றுவது கடினமாக இருந்த காரணத்தால் தனது படையின் ஒரு பகுதியை இரபிசகேயின் தலைமையில் எசக்கியாவின் படைகளை முறியடிப்பதற்காக அனுப்பியிருந்திருக்கலாம். ஆனால் இலாக்கீசு நகரானது முற்றுகையிடப்பட்டதேயொழியக் கைப்பற்றப்படவில்லை. சிறிது காலம் கழித்து இரபிசகே திரும்பி வந்து இலிபுனாவோடு போரிட்டுக் கொண்டிருந்த எத்தியோப்பிய அரசன் எகிப்தியப் படையோடு தனக்கு எதிராகப் படை திரட்டி வருகிறான் என்ற செய்தியை அசீரிய மன்னன் கேட்டவுடன் இலிபுனாவோடு போரிடுவது தடைசெய்யப்பட்டது. திடீரென்று அசீரியா திரும்பினார். ஆனால் கி.மு. 689-இல்தான் திரிகாக்கா எகிப்து நாட்டின் அரசனாக வந்தான். இந்தப் படையெடுப்பு ஏன் திடீரென்று நிறுத்தப்பட்டது என்பதற்கு எக்காரணமும் சனகெரிபின் ஏடுகளிலும் தரப்படவில்லை.

எனவே கிடைக்கக்கூடிய ஆதாரங்களை வைத்துக்கொண்டு ஒரு வரலாற்றைப் படைப்பது என்பது முடியாத செயலாகும்.

ஒருவேளை *2 அர 18:17-19:37*, அசீரியர்களுக்கு எதிராக எசக்கியா செய்த கிளர்ச்சியை விவரிக்கலாம். இதன்விளைவாக, எருசலேம் மீண்டும் முற்றுகையிடப்பட்டது. ஆனால் ஏசயா, எருசலேம் வீழாது என்று உறுதி அளித்திருந்தார் *(ஏச 14:24-27; 17:12-14; 31:4-9; காண்க 2 அர 19:29-34)*. ஆனால் அசீரியர்கள் திடீரென்று திரும்பிச் சென்றனர். இதற்குப் படையில் ஏற்பட்ட கொள்ளை நோயோ *(2 அர 19:35)*, சனகெரிபு அவனது நாட்டிலிருப்பது தேவைப்பட்டதோ *(19:7)* காரணமாக இருக்கலாம்.

இக்காலத்தில்தான் எசக்கியா நோயுற்றார். அவரது மன்றாட்டுக்குப் பதிலாக 15 ஆண்டு வாழ்வு அளிக்கப்பட்டது. இதுபற்றி இவர் யாவேயைப் போற்றும் பாடல் ஏச 38:10-20-இல் காணப்படுகிறது. 687-இல் எசக்கியா மரித்தபோது அசீரியர்களுக்கு எதிரான நீண்ட கால எதிர்ப்பு முடிவுக்கு வந்தது. அவரது மகன் மனாசே சமாதானம் செய்து கொண்டார்.

2. யூதா அரச குடும்பத்தைச் சேர்ந்த நேரியாவின் மகன் *(1 நாள் 3:23)*.

3. பாபிலோனிய நாடு கடத்தலிலிருந்து நெகமியாவுடன் திரும்பிய ஒரு குடும்பத்

தின் தலைவர் (எஸ் 2:16; நெக 7:21). இவரது பாபிலோனியப் பெயர் ஆத்தேர் ஆகும். புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவர்களில் இரு பெயர் களும் காணப்படுகின்றன (நெக 10:17).

4. இறைவாக்கினர் செப்பனியாவின் முன் னோரில் ஒருவர் (செப் 1:1).

**எசக்கியேல்** (EZEKIEL - இறைவன் வலி னமப்படுத்துவாராக)

இவர் மூன்றாவது பெரிய இறைவாக்கு நூலில் உள்ளவைகளை உரைத்த நாடு கடத் தப்பட்ட காலத்திய இறைவாக்கினர் ஆவார். சாதோக்கிய இனக் குருவாகிய பூசியின் மக னாகிய இவர், கி.மு.598-இல் நெபுக்கதுனே சாரிடம் யோயாக்கின் அரசன் சரணடைந்த பிறகு நாடு கடத்தப்பட்டு, பாபிலோனுக் கும் நிப்பூருக்கும் இடையில் கேபார் நதியரு கில் தேல்-அபீபு என்னுமிடத்தில் உள்ள தன்னுடைய வீட்டிலேயே வாழ்ந்தார் (எசே 3:15). 503-இல் இறைவாக்கின் அழைப்பைப் பெற்ற இவர் (1:2-3) தன்னுடன் சிறைப்பட் டோருக்குக் குறைந்த பட்சம் இருபத்து மூன்று வருடங்கள் சேவை புரிந்தார். அவரு டைய இறுதியான காலம் குறிப்பிடப்பட்ட இறைவாக்கானது 571-ஐச் சேர்ந்தது (29:17). அவரது இறைவாக்குகள் எண்ணற்ற காட்சி கள், மௌனமான பரவசநிலை மற்றும் அடையாளச் செயல்கள் ஆகியவை நிறைந் தவை. அவரது மனைவியின் மரணமே எருச லேமினுடைய வீழ்ச்சிக்கு ஒரு இறைக் கூற் றாக ஆகிறது (24:15-27).

**எசக்கியேல் திருநூல்** (BOOK OF EZEKIEL)

1. முன்னுரை:- எசக்கியேல் இறைவாக்கி னரின் வாழ்நாளிலேயே ஒரு பெரிய சகாப் தம் முடிந்தது; மற்றொன்று தோன்றியது. இவர்தான் யூதா அழியும் என்று கூறியவர். ஆனால் இவரே ஒரு புதிய அடிப்படை ஒழுங்கு ஏற்படக் காரணமாக இருந்ததால் யூதத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படுகின் றார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இறைவாக் கினர் எசக்கியேலின் காலம், இடம் போன்ற வற்றைப் பற்றி அறிஞர்கள் பல ஐயங்களை எழுப்புகின்றனர்.

2. எசக்கியேலின் பெயரும் வாழ்க்கை வரலாறும்:- எசக்கியேல் என்னும் சொல் ''ஆண்டவர் வல்லமையுள்ளவர்'' அல்லது ''இறைவன் பலப்படுத்துகிறார்'' எனப் பொருள்படும். எசக்கியேல் சாதோக்கின் வழி வந்த குரு குலத்தைச் சார்ந்த பூசி என்பவரின் மகனாவார். இவர் எருசலேமுக்கு மிக அருகி லேயே வாழ்ந்திருக்க வேண்டும். இவரும் மற்ற நகரத் தலைவர்களோடு கி.மு. 597-இல் நெபுக்கதுனேசரால் நாடுகடத்தப்பட்டதால், இவர் சமுதாயத்தில் நல்ல நிலைமையில் இருந்திருக்க வேண்டும். பாபிலோனின் தெற்கில் நிப்பூருக்கு அருகில் ஓடுகின்ற கெபார் நதியின் கரையில் அமைந்திருந்த, நாடு கடத்தப்பட்டவர்களின் முக்கிய குடியி ருப்பாகிய தேல்-அபீபு என்ற இடத்தில் தன் சொந்த வீட்டில் வாழ்ந்தார். இவர் திருமண மானவர். ஆனால் கி.மு. 588-இல் சனவரி யில் நடந்த எருசலேம் நகர முற்றுகையின் போது அவரது மனைவி இறந்துவிட்டாள். இவர் கி.மு. 593-இல் சூன் மாதத்தில், இறைவாக்குரைக்க இறைவனால் அழைக் கப்பட்டார். ஆனால் அவருடைய பிறப்பு, இறப்பைப் பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரிய வில்லை. இருப்பினும் இவர் யோசியா வின் சீர்திருத்தங்களையும், அதன் பின் வந்த சிலைவழிபாட்டுச் சீர்கேடுகளையும் பார்த் திருப்பார். இவர் நாடு கடத்தப்பட்ட இடத் தில்தான் இறந்திருக்க வேண்டும்.

எசக்கியேல் விவிலியத்தில் வரும் முரண் பாடுகள் கொண்ட குணச்சிறப்புடையவர் களுள் ஒருவர் ஆவார். இறைவாக்குப் பணிக்கு அவர் அழைக்கப்பட்டபோது அவர் போதிக்க வேண்டிய செய்திகள் அடங் கிய சுருளை ''உண்டு'', ''செரிமானம் செய்து''. பின் போதிக்க வேண்டும் (எச 2). இறைவனது கரம் அவர்மேல் இருந்தது (1:3; 3:14-22; 8:1; 33:32; 37:1; 40:1). இறைவனது ஆவி அவரை ஆட்கொண்டது (2:2; 3:12; 14:24; 8:3; 11:1; 37:1). இவ்வாறு அவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதால் அது அவரது ஆள்தன்மையில் பெரிய மாற்றங் களை ஏற்படுத்தியது. இவர் மிகவும் பிடி வாத குணமும் மனவலிமையும் கொண்ட வர். நேர்மையும் நம்பிக்கையும் கடுமையும்

கண்டிப்பும் கொண்ட எசக்கியேல் வலிமை, கட்டுப்பாடு முதலியவற்றின் உருவமாவார்.

இத்தகைய அவரின் தனிச்சிறப்புகளே அவரைப் பல்வேறு வகையில் அவருக்கு எதிராகவே விமர்சிக்கக் காரணமாயின. பழைய ஏற்பாட்டில் ஒருவருமே இவரைப் போல் பலவகைகளில், அந்தமுறையில் விமர்சிக்கப்பட்டதில்லை. இவருக்குப் பல விதமான உளநோய்கள் இருந்ததாக அறிஞர் கள் கருதுகின்றனர். ஓர் ஆசிரியர் ''விவிலி யத்திலேயே எசக்கியேல்தான் முதல் கோட் பாட்டு வெறியர்'' என்கிறார். எச 9:8; 11:13; 30:30-32 ஆகிய பகுதிகளை மனதில் கொண்டு ஆராய்ந்தால் இத்தகையதொரு கருத்தைக் கூறமுடியாது. மற்றொருவர் எல் லாக் காலத்திலும் தோன்றிய மிகப்பெரிய ஆன்மீக வழிகாட்டிகளுள் ஒருவராக எசக்கி யேலைக் குறிப்பிடுகிறார். எனவே எசக்கி யேல் வழக்கத்திற்கு மாறாகச் செயல்பட்டார் என்று கூறலாமே தவிர உளநோய் கொண்ட வர் எனக்கூறமுடியாது.

எசக்கியேலில் இரண்டு ஆன்மாக்கள் செயல்பட்டதாகத் தோன்றுகிறது: அவர் ஒரு குருவும் இறைவாக்கினரும்; கவிஞரும் இறையியல் வல்லுநரும்; சமயத்தை ஒரு அமைப்பாக வளர்த்தவரும் ஒழுக்கநெறிக ளைப் போதித்த போதகரும்; அழிவை அறி விப்பவரும், மீட்பின் தூதரும்; சிந்தனை மிக்கவரும் காட்சி காண்பவரும்; கண்டிப்பா னவரும் இரக்கமிக்கவரும் ஆவார் என்று இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். எனவே பெரும்பாலான அறிஞர்கள் இப் படிப்பட்ட ஓர் ஆளுமையைக் கண்டு வியக் கின்றனர். மலைத்துப் போகின்றனர். மேலும் யூதா அழிந்து கொண்டிருந்த நிலை யில் எரேமியாவைப் போன்ற உணர்ச்சி மிக்கவர்களை அழைத்த இறைவன் எசக்கி யேலைப் போன்ற கண்டிப்புள்ளவர்களை யும் அழைக்கின்றார்.

3. வரலாற்றுப் பின்னணியும், சமயப் பின் னணியும்:-

12A அ. வரலாற்றுப் பின்னணி:- எசக்கியேல் கி.மு. 609-இல் யோசியாவின் இறப்புக்கும், கி.மு. 587-இல் எருசலேமின் அழிவிற்கும் இடைப்பட்ட காலத்தில் இறைவாக்குரைத் வர். இவ்வேளையில் அசீரியப் பேரரசுக்குப் பதிலாகப் பாபிலோன் ஒரு வல்லரசாகத் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. அசீரியாவின் சிற்றரசுகளாக இருந்த நாடுகள் ஒவ்வொன் றாகச் சுதந்தர நாடாக அறிவித்தன. கி.மு. 622-இல் யோசியா பல சமய சமூகச் சீர்திருத் தங்களைச் செய்தார். இவ்வேளையில் யூதா எகிப்தின் கீழ் இருந்தது. கி.மு. 606-இல் நெபுக்கதுனேசார் யூப்பிரத்திசு ஆற்றைக் கடந்து, எகிப்தின் பாரவோன் நெக்கோவை கார்கேமிஸ் என்னும் இடத்தில் தோற்க டித்து, பாலஸ்தீனத்தையும் வென்று, தன் அரசோடு சேர்த்துக் கொண்டார். சில ஆண் டுகளுக்குப் பின் யூதா நாட்டினர் மீண்டும் கலகம் செய்ததால் மீண்டும் பாபிலோனிய மன்னன் அவர்கள் மேல் படையெடுத்தார். இம்முறை 597-இல் யோயாக்கினைச் சிறைப் பிடித்து நாடுகடத்தினார். ஆலயத்தைக் கொள்ளையிட்டு அதன் புனித பண்டங்க ளையும் பாபிலோனுக்குக் கொண்டு சென் றார். மேலும் ஆயிரக்கணக்கான தலைவர் களையும், தொழில் வல்லுநர்களையும் நாடு கடத்தினார். பின் யோயாக்கீனின் மாமாவான மத்தனியாவை, செதேக்கியா என்று பெயர் மாற்றம்செய்து ஆளுநராக நியமித்தார். யூதா எகிப்தியரோடு சேர்ந்து மீண்டும் சதி செய்வ தாக நெபுக்கதுனேசார் அறிந்து மீண்டும் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தார். இம் முறை விளைவுகள் இன்னும் மோசமாயிருந் தன. செதேக்கியாவைக் குருடாக்கிப் பாபி லோனுக்குக் கைதியாகக் கொண்டு சென் றார்.

ஆ. சமயப்பின்னணி:- சமயப் பின்னணி ஒரு நூற்றாண்டுக்கு முன் எவ்வாறு இருந் ததோ இப்போதும் அவ்வாறே இருந்தது. நல்லவரான எசக்கியாவுக்குப் பின் மனாசே யும் ஆமோனும், யோசியாவுக்குப் பிறகு எகோயாக்கினும், செதேக்கியாவும் வந்த னர். கானானிய வழிபாட்டு முறைகளும் வழக்கில் இருந்தன. எனவே அப்போதிருந்த நிலையை எசக்கியேல் மிகைப்படுத்திக் கூற வில்லை.

*4. எங்கே, யாருக்குப் போதித்தார்?:-*

எசக்கியேல் எங்கே யாருக்குப் போதித்தார் என்பதைப்பற்றித் தீர்க்கமுடியாத பல பிரச்சனைகள் எழுந்துள்ளன? இதைப்பற்றிக் கருத்துவேறுபாடுகளும் நிலவுகின்றன. பாரம்பரியத்தில் கி.மு. 597-இல் எசக்கியேல் தான் நாடு கடத்தப்பட்டு இறைவாக்குரைக்க அழைப்புப் பெற்ற பாபிலோனில்தான், தன் ஆயுள் முழுவதும், நாடு கடத்தப்பட்டவரி டையே பணியாற்றினார். இதைத்தான் எச 1:1-ஐ நாம் வாசிக்கிறபோது உணர்கிறோம்.

இக்கருத்தைப்பற்றி முதன் முதலில் தோரே என்பவர் ஐயம் தெரிவித்து, இந்நூல் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒருவ ரின் படைப்பு என்றும், அவர் மனாசே ஆட்சிக் காலத்திய வடஅரசனின் சூழ் நிலையை இந்நூலுக்குக் கொடுத்தார் என்றும் கூறினார். ஏனெனில் எசக்கியேல் கண்டனம் செய்யும் சிலைவழிபாட்டு முறைகள் மனா சேயின் காலத்தில்தான் நாடு முழுவதும் இருந்தன. யோசியாவின் சீர்திருத்தக் காலத் திற்குப்பின் இது பொருந்தவில்லை. பின் னால் வந்த பதிப்பாசிரியர் ஒருவர், நாளாக இறையியல் பாரம்பரிய அடிப்படையில் எசக்கியேலின் பணியைப் பாபிலோனில் அமைத்தார். இவர் சில தேதிகளையும் இன் னும் சில பகுதிகளையும் மாற்றி இது ஓர் இறைவாக்கினரால் கூறப்பட்டதுபோல அமைத்தார் என்றும் கூறுகிறார். ஸ்மித் என்ற விவிலிய அறிஞரின் கூற்றுப்படி, எசக்கியேல் வட அரசில் பணியாற்றினார். கி.மு. 734-இல் நாடு கடத்தப்பட்டு, மீண்டும் தாயகம் திரும்பி வடஅரசில் போதித்தார். ஆனால் வேறுசிலர் பாலஸ்தீனத்தில் போதித்தார் அதை ஒரு சீடர் அணுவளவும் பிசகாமல் நாடுகடத்தப்பட்ட போது பதிப் பித்தார் என்று கூறினர்.

வேறுசிலரது ஆராய்ச்சியின்படி கி.மு. 597-இல் அல்லது கி.மு. 587-இல் எசக்கியேல் நாடு கடத்தப்படுமுன் பாலஸ்தீனத்தில் தூது ரைத்தார். இன்னும் சிலர் அவர் பாபிலோ னில் மட்டுமே பணிபுரிந்தார் என்பர். இன் னும்வேறு சிலர் அவர் இரண்டு இடங்களி லும் பணிபுரிந்தார் என்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர், எசக்கியேல் இரண்டு இடங்க ளிலும் பணிபுரிந்தாலும், பெரும்பாலான ஆண்டுகள், கி.மு. 587-இல் எருசலேம் அழி யும் வரை பாலஸ்தீனத்தில்தான் பணிபுரிந் தார் எனக் கருதுகின்றனர். பாபிலோனில் தான் எசக்கியேல் பணிபுரிந்தார் என்னும் பாரம்பரிய கருத்திற்கு மாறாக, அவர் பாலஸ்தீனத்தில்தான் தன் பணியைத் தொடங்கியதாகக் கூறும் ராபிகளின் பாரம்ப ரியம் ஒன்றையும் சுட்டிக்காட்டுவர். நூலில் இறைவாக்குகளின் அமைப்பை உற்று நோக் கும்போது எருசலேமிலும் (அதி 8) கெபார் நதிக்கரையிலும் (1:1) இரண்டு பெரிய காட் சிகள் நடைபெறுகின்றன. எச 4-24-இல் அச்சுறுத்தல்களும் எச 33-37-இல் வாக்குறுதி களும் வருகின்றன. அழிவை அறிவிக்கவும் (2:3-10), மேய்ப்புப்பணிக்காகவும் இரண்டு அழைப்பைப் பெறுகின்றார். கலகம் செய் யும் இஸ்ராயேல் மக்களுக்கும் (2:3-4), நாடு கடத்தப்பட்டவருக்கும் (3:2) செய்தியை எடுத்துச் செல்ல ஆணைபெறுகிறார். இரண்டு இடங்களில் பணிபுரிந்தார் என்ப தற்கு ஆதாரமாக 2:3; 3:4.15; 8:1-4; 12:3; 14:7-12; 24:5-26 போன்ற பகுதிகளை அறிஞர் கள் சுட்டிக்காட்டுவர்.

நூலின் முற்பகுதியில் காணப்படும் பகுதி கள் பாலஸ்தீனத்தில் அவர் பணியாற்றிய தாக அறிவிப்பதுபோலத் தோன்றுகிறது. அவர் அங்கு இல்லாமலிருந்தால் சிறப்பா கப் பயனளிக்கும் முறையில் போதித்திருக்க முடியாது. பல நூற்று மைல்களுக்கப்பால் வாழ்ந்திருந்தால் எருசலேமில் நடந்தவற்றை அப்படியே அறிந்திருக்க முடியாது. கி.மு. 587-586-க்கு முற்பட்ட மக்களுக்குச் செய்து காட்டும்படி இறைவன் கூறுகின்ற ''செயல் போதனைகள்'' அவர்கள் முன் செய்யப்பட் டாலொழியப் பயனளிக்காது. மேலும் 24:5-26-இல் எசக்கியேலின் மனைவி இறந்ததால், ''அவர்கள் தங்கள் கண்களின் இன்பமாகிய'' ஆலயத்தை இழப்பர் என்று உணர்த்துவதற் காக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள வர்களுக்கு எழுதப்பட்டால் பயனேதும் இல்லை. மேலும், ஆலயம் அழிந்த ''அந்நாளி லேயே'' நகரும் அழிந்தது என்று ஒரு

நாடோடி செய்தி கொண்டு வருவது, எசக்கியேல் எருசலேமுக்கு அருகில் வாழ்ந்ததாகத் தான் பொருள்படுகிறது. நாடுகடத்தப்பட்டுத் துன்புறும் மக்கள் முன்நிற்க, ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களை நோக்கிக் கண்டன மொழிகளைக் கூறுவது உளவியல்படி நிகழமுடியாத ஒன்று. இக்காரணங்களைக் கொண்டு பாலஸ்தீனத்தில்தான் அவர் பணிபுரிந்தார் என்று வலியுறுத்துகின்றனர்.

பாபிலோனில்தான் தூதுரைத்தார் என்போரின் கருத்துப்படி எசக்கியேல் எருசலேமுக்குச் சென்றதாகக் கூறப்படும் பயணங்கள், அப்படியே உண்மையில் நிகழ்ந்தவை அன்று. ஆவி அவரை அங்குப் பரவசத்தில் இட்டுச் சென்றது. அழிவுக்குத் தீர்ப்பிட்ட நகரை அவர் ஊனக் கண்களினால் காணாமல் காட்சியில் கண்டார். தொலையுணர்வு, தொலைவிடக்காட்சி ஆகியவைகளுக்கு இணையான அவரது அசாதாரண சக்திகளை இறைவன் பயன்படுத்திக்கொண்டார். மேலும் அழிவு பற்றிய செய்தி பாபிலோனில் பேசப்பட்டாலும், நடித்துக்காட்டப்பட்டாலும், பாலஸ்தீனத்திலுள்ளவர்களுக்குப் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் பயணிகளால் எடுத்துச் செல்லப்பட்டது. மேலும் பாபிலோனுக்கு எதிராக இறைவாக்குகள் இல்லாமை குறிப்பிடத்தக்கதாகும். சிந்தனைப் போக்கில் பாபிலோனியப் பாதிப்பை நாம் ஒதுக்க முடியாது. எனவே எதையும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

எங்குப் பணிபுரிந்தார் என்பது தெளிவாக இல்லாததால், யாரைப்பார்த்துப் போதிக்கிறார் என்பதும் தெளிவாக இல்லை. இஸ்ராயேல் மக்களுக்குப் பொதுவாகப் பேசுவது போல் இருக்கிறது. இவர்கள் கலகக்காரர்கள்; இவர்கள் யாவேமீது விசுவாசம் கொண்டவர்கள்; ஆனால் நிகழ்ச்சிகள் கற்பிக்கும் பாடங்களைப் புரிந்து கொள்ளத்தவறியவர்கள்; தங்களிடையே வாழ்ந்து, உடனடியாக வரும் நற்காலத்தை எடுத்துக்கூறும் இறைவாக்கினர்களை நம்பத் தயாராக இருந்தவர்கள் (எரே 29:15; எச 13:3.6.9). எருசலேமைப் பார்த்துப் பேசும்போது ஏசயா தன் நூலின் 52:1.7-9; 54:1 ஆகிய பகுதிகளில் கையாண்ட யுக்திகளையே எசக்கியேலும் பயன்படுத்துகிறார். நாடுகடத்தப்பட்டோரிடம் பேசும்போது முன்னிலையிலும், எருசலேமிலுள்ளோரிடம் பேசும்போது படர்க்கையிலும் பேசுகிறார் (5:1-17; 11:17-20; 14:12-23).

5. நூலின் ஒற்றுமை, உண்மைத்தன்மை, தோன்றிய வரலாறு:-

இந்நூலின் தீர்க்கமுடியாத சிக்கலை விளக்க இரண்டு பாரம்பரியக் கூற்றுகள் உண்டு. ''தால்மூது'' என்ற நூலின் படி, ராபிகள் தங்கள் வேதநூல் பட்டியலைத் தயாரித்தபோது இந்நூலைச் சேர்த்துக் கொள்ளத் தயங்கினர். ''அனானியா பென் எசக்கியா'' என்ற ராபி போதிய உணவும், விளக்கெரிக்க 300 சாடி எண்ணெயும் எடுத்துக் கொண்டு ஒரு தனியறையில் தன்னை அடைத்துக் கொண்டார். இந்நூலிலுள்ள முரண்பாடுகளையும் பொருந்தாமையையும் நுணுகி ஆராய்ந்து விளக்கம் தந்த பின்னரே இந்நூல் பட்டியலில் இடம் பெற்றது. அப்படியும் சில பிரச்சனைகள் தீரவில்லை. ''இவற்றை மெசியா காலத்திற்கு முன் தயாரிப்பாக எல்லா உண்மைகளையும் தெரியப் படுத்தும்போது எலியா தீர்த்துவைப்பார்'' என்று தால்மூது கூறுகிறது.

புனித எரோணிமு எசக்கியேலின் திருநூலுக்குத் தொடக்கவுரை எழுதும்போது மற்றொரு பாரம்பரியத்தைக் குறிப்பிடுகிறார். அதன்படி குருக்கள் தங்கள் பணியைத் தொடங்கும் வரை, அதாவது 30 வயதுவரை ஒருவரும் இந்நூலின் ஆரம்பத்தையும் இறுதிப்பகுதியையும் வாசிக்கக் கூடாது. இப்பகுதிகளில் காணப்படும் ''நிறையளவு இறை அனுபவத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய நிறைமுதிர்ச்சி'' பெற்றிருக்க வேண்டுமென்பதே இதற்குக் காரணம்.

இக்கால அறிஞர்கள் எழுப்புகின்ற வினாக்கள் பழங்காலத்திலிருந்தே இந்நூலைப் பற்றி எழுப்பப்பட்டு வந்திருக்கின்

றன. யோசிபஸ் எசக்கியேல் இரண்டு நூல்களை விட்டுச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். ''பெருஞ்சபை எசக்கியேல், 12 சிறிய இறைவாக்கினர்கள், தானியேல், எஸ்தர்'' ஆகியவற்றை எழுதியதாக ''தால்மூது'' கூறுகிறது. சூன்ஸ் என்பவர் (1832) முதன் முதலில் இந்நூலின் உண்மைத் தன்மையைப் பற்றியும், சிட்சிக் என்பவர் (1847) இந்நூலின் ஒற்றுமையைப் பற்றியும் ஐயங்களை எழுப்பினர். இருப்பினும் டேவிட்சன் என்பவர் இந்நூற்றாண்டில், எசக்கியேலின் நூல் மற்ற இறைவாக்கு நூல்களைவிட எளிமையாக உள்ளது என்றும், இந்நூல் இறைவாக்கினரின் கடைசிக் காலத்தில் எழுதப்பட்டது என்றும், துண்டு துண்டாகத் தரப்பட்ட ஏசயாவின் நூலைப்போலல்லாது முழுமையாகத் தரப்பட்டது என்றும் கருதுகிறார்.

நூலின் ஒற்றுமையைப் பலர் பல கோணங்களிலிருந்து ஆராய்கின்றனர். முதலில் நாம் பல இரட்டிப்பு விவரிப்புகளைக் காண்கிறோம். அவை 3:16-21 = 33:1-9; 13:11 = 13:12; 13:16-21 = 33:1-9; 18:21-25 = 33:10-20. இந்த இரட்டிப்பு விவரிப்புகளில் ஒன்று தன்மையிலும் மற்றொன்று படர்க்கையிலும் இருப்பதை ஒருவர் கண்டார். மற்றொருவர் கவிதை எழுதும் ஆற்றல் பெற்ற ஆசிரியர், சலிப்புத் தட்டும் உரைநடைப் பகுதிகளை எழுதி இருக்க முடியாது என்று கூறி, 1200 வசனங்களில் 170 வசனங்களை மட்டும் உண்மையானவை என்று கூறினார். இர்வின் என்பவர், 250 வசனங்களை மட்டும் உண்மையானவை; மற்றவை இக்கவிதைகளை விளக்க எழுதப்பட்டவை என்றார். இவ்வாறு, பல கருத்துக்கள் நிலவினாலும், பெரும்பாலான அறிஞர்கள் இந்நூலில் பல இலக்கிய நடைகள் இருப்பதால் இன்னுமொரு ஆசிரியரும் இதை எழுதி இருக்க வாய்ப்பிருக்கிறது என முடிவு செய்கின்றனர். எனவே இதைப் பதிப்பித்தவர், பாலஸ்தீனத்திலும், பாபிலோனிலும் பணிபுரிந்த எசக்கியேலின் நூலையும், இன்னுமொரு இறைவாக்கினரின் நூலையும் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தார் என்றும், இரண்டாவது இறைவாக்கினரிடமிருந்துதான், அரியணைத்தேர், எச 40-48 பகுதிகள் வருகின்றன என்றும் முடிவு செய்கின்றனர்; ஏனெனில் அரியணைத்தேர் பகுதியில் நேரடித்தன்மை இல்லை. மேலும் ஒரு கட்டுப்பாடில்லாமல் மனம்போன போக்கில் கலந்து எழுதப்பட்டுள்ளது.

எசக்கியேலின் நூல் உருவான வரலாற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம். எசேக்கியேல் முதலில் எருசலேமிலும், பின் தான் சிறைவைக்கப்பட்ட எருசலேமின் வடக்கிலிருந்த ஒரு குக்கிராமத்திலும் போதித்தார். அவற்றைச் சிறு குழுவினருக்கோ பெருங் கூட்டங்களுக்கோ எடுத்துரைத்தார். இவற்றில் சிலவற்றை அவரே எழுதினார். எசக்கியேல் நாடுகடத்தப்பட்டபோது அவரோடு இச்சுருளையும் கொண்டு போயினார். இத்துணுக்குகள் தொகுக்கப்பட்டபோது சில இடங்களில் வரிசை முறை பிறழ்ந்துள்ளது. வெவ்வேறு காலத்தைச் சார்ந்தவை ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புகளுக்கு எசக்கியேல் ஓரளவு காரணமாக இருந்திருக்கலாம். மூன்றாவது கட்டமாக இறைவாக்கினரின் பணிக்கு இணையான ஒழுங்குடன் நூல் வடிவெடுத்தது. மேற்கண்ட நூலோடு தங்கள் வாக்குகளையும் சேர்த்து எசக்கியேலின் சீடர்கள் பதிப்பித்தனர். அதின் இறுதிப்பதிப்புதான் நமக்குக் கிடைத்திருக்கும் எசக்கியேலின் திருநூல்.

6. இலக்கிய நடை:-

இந்நூலில், புலமைமிக்க கவிதைகள், மந்தமான உரைநடை, காட்சிகள், விவாதங்கள், இறைவாக்குப் போதகங்கள், அடையாளச் செயல்கள், விரிவான தொடர் உருவகங்கள், உவமைகள் போன்ற பல இலக்கிய உத்திகள் கையாளப்படுகின்றன.

அ. அடையாளச் செயல்கள்:- ஏசயா, எரேமியா போன்ற மற்ற இறைவாக்கினர்களிடம் காணப்பட்டாலும், இவை எசக்கியேல் திருநூலில் இறைவாக்குச் செய்தியோடு தொடர்பு கொண்டிருப்பதும், அதிக அளவில் இருப்பதும், இதன் சிறப்பாகும். சிலரது கருத்துப்படி அடையாளச் செயல்கள் அப்படியே செய்ய முடியாதவை. இருதடி

கள், எசக்கியேலின் மனைவி இறந்தபோது அவர் துக்கம் கொண்டாடாமை போன்றவற்றைத் தவிர மற்றவை ஒரு போதும் செய்யப் படவில்லை. அவை நாடகப் பாணியில் எழுதப்பட்ட நிகழ்ச்சியுரைகள், அவை இலக்கியயுக்திகளாகும்.

ஆ. காட்சிகள்:- பரவச நிலை அனுபவங்களாக இருக்கலாம். ஆனால் இவை இறை அனுபவங்கள் என்பது மட்டும் உறுதி. இவ்வனுபவத்தால் தூண்டப்பெற்று அறிவு சார்ந்த முறையில் அமைக்கப்பட்ட அடையாளங்களே இவை. இவற்றையும் இலக்கிய யுக்தி என்று ஒதுக்குவாரும் உண்டு.

இ. உருவகங்கள்:- எசக்கியேல் இறைவாக்கினரால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவரின் க்ற்பனையும், விரிவான உருவகங்களும் வறட்சியான நடையில் கூறப்படுகின்றன (15:1-8.16; 17; 19:1-19; 27:4-11; 29:3-7).

ஈ. உரைநடைப் பகுதிகள்:- இந்நூலில் மிகுதியாக இருப்பினும், மிகவும் மந்தமான நடையில் உள்ளன.

7. வாசகம்:-

மசோராட்டிக் வாசகம் பல இடங்களில் பழுதடைந்துள்ளதால், திருத்தங்களை நாம் யூகித்துதான் செய்ய வேண்டியுள்ளது. போக்னெர் என்னும் விவிலிய அறிஞர் மசோராட்டிக் வாசகம், அமைதியான நடையில் எழுதப்பட்டுள்ள எழுபது நூல் கிரேக்க வாசகத்தைவிடச் சிறந்ததல்ல என்றும், பின்னது மற்ற வாசகங்களைவிட உயர்வானது என்றும் கருதுகிறார். வேறு சிலர் எபிரேய வாசகம்தான் சிறந்தது எனக்கருதுவர். தூர்னே என்பவரின் கருத்துப்படி, எழுபது நூல் வாசகம் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கிறது. ஏனெனில் மொழிபெயர்ப்பாளர், தேவையற்றது எனத்தான் கருதிய பகுதிகளையும், திரும்பக் கூறப்பட்ட பகுதிகளையும் விட்டுவிட்டு எழுதியிருக்கலாம். மேலும் இன்று பலர், எழுபது நூலில் அதி 1-27; 40-48 என்ற பகுதி ஒரு மொழிபெயர்ப்பாளராலும் அதி 28-38 என்ற பகுதி மற்றொரு மொழிபெயர்ப்பாளராலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என ஏற்றுக் கொள்கின்றனர். இன்னும் சிலர் அதி 40-48 மூன்றாவது மொழிப்பெயர்ப்பாளரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் எண்ணுகின்றனர்.

8. இறையியல்:-

எசக்கியேல் இறைவனைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம்தாம் அவருடைய இறையியல், ஆன்மீகக் கருத்துகளுக்கு அடிப்படையாக அமைந்தது. இதில் எசக்கியேலை மிஞ்சியவர் வெகுசிலரே. மேலும் எசக்கியேல் ஆலயத்திலும் அதன் வழிபாட்டிலும் இறை அனுபவத்தைக் கண்டு அதற்கு அருட்சாதனப் பொருட்கள் அளிப்பதால் அவரது ஆன்மீகம் தரத்தில் குறைந்தது; அவர் இறைவாக்கினர்களுடைய சமய நோக்கின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்பவரும் உள்ர். அடிக்கடி அவர் யாவேயின் பெயரை அழைப்பதால், அவர் எப்போதும் இறைவனைப் பற்றியே பேசிய ஒரு வெறியர் என்றும், மனிதனது அன்றாட் வாழ்வை மறந்துவிட்டவர் என்றும் குற்றம் சாட்டுபவர் உளர். புனிதம் இறைவனின் முக்கியப் பண்பாக இருந்தாலும், இந்தப் பண்புதான் அவரை மனிதனை நெருங்கி வந்து அவனோடு உடன்படிக்கை செய்து கொள்ளச் செய்தது. ''இறைவன் தம் பெயரை'' எண்பிக்கவே செயலாற்றுகிறார். பாவங்களுக்கு எதிராகச் சினங்கொள்வது இறைவனின் குணங்களுள் ஒன்று. இதைத்தான் ''இறைவனின் எரிச்சல் அல்லது பொறாமை'' (5:12; 16:42) என்று எசக்கியேல் குறிப்பிடுகின்றார். இச்சினம் மனிதனின் நம்பிக்கையற்ற தனத்திற்கு எதிராக இறைவனின் சீற்றமாகும், நேர்மையானதாகும்.

இறைவனின் பரிசுத்தத் தன்மை அவருக்கும் மக்களுக்குமிடையே உறவை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக அவர்கள் பரிசுத்தப் பெயரைக் கூவியழைப்பார்கள். ''அவரது பெயர்'' அவர்கள் மேல் இருப்பதால் அவர்களை முழுவதும் தம் உடைமையாகக் கொண்டிருக்கும் பொறாமை ஏற்படுகிறது.

*தமது பரிசுத்தத்தன்மையின் பொருட்டுத் தமது மக்களைப் பிறர் இகழ விட்டுவிட முடியாது. ஏனெனில் அவர்கள் அவரது பெயரால் அழைக்கப்படுவதால் அவர் அவர் களுடைய இரத்த உறவுக்காரர் ஆகிறார். யாவே தாமே ஈடுபட்டுள்ளார் என்பதை ''நாமே யாவே என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்'' என்ற கூற்று எடுத்துக்காட் டுகிறது. மீட்பு, மீண்டும் அமைக்கப்படுதல் ஆகியவை மக்களின் மனத்துயரத்தின் விளை வாக வரவில்லை. நீதிபதிகள் நூலில் காணப் படுவதுபோன்ற பாவம்-தண்டனை-மனத்துயரம்-மீட்பு என்ற தொடர் மறைந்து; பாவம்-தண்டனை-மீட்பு-மனத்துயரம் என மாறிவிட்டது. யாவே தம் மக்களை அவர்க ளின் மனத்துயரத்திற்காக மீட்கவில்லை: மாறாக, அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளச்செய்த, ''அவர் பெயரின்'' பொருட்டே மீட்டார். அப்போது அவர்கள் அவரை அறிந்து, தங்களது நன்றிகெட்ட தனத்திற்கு வெட்கப்பட்டு அவரிடம் திரும்பு வர் (36:31-32; 16:60.62).*

*இறைவனிடம் ஒவ்வொரு தனி நபரும் கொள்ள வேண்டிய பொறுப்புடைமையை எடுத்துக் கூறுவது இந்நூலின் சிறப்பாகும். இக்கருத்து எரே 31:29-இல் வலியுறுத்தப்பட் டாலும், எல்லா இறைவாக்கினரையும்விட எசக்கியேல்தான் இறைவன் கலகம் செய்யும் இஸ்ராயேலைத் தண்டிப்பதில் அநீதியாக நடக்கவில்லையென்றும், பரிகம், தண்ட னையும் ஒவ்வொரு தனிநபரையும் பொருத் தது என்றும் தெளிவாகக் கூறியவர். முதலில் இறைவன் இனம், நாடு என்ற குழுத்தன்மை யில் உறவு கொண்டார். ஆக்கான் என்ற ஒருவரின் குற்றத்துக்காக அவரின் குடும் பமே அழிக்கப்பட்டது (யோசு 7). தனிநபர் குழுவோடு ஒன்றாக எண்ணப்பட்டது மின்றி, ஒரு தலைமுறை அடுத்த தலைமுறை யோடு ஒன்றாக எண்ணப்பட்டது (யாத் 20:5). நாடுகடத்தப்பட்ட போது இப்பிரச் சனை மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ''தந்தையர் திராட்சைக் காய் தின்ன, பிள் ளைகளுக்குப் பல் கூசிற்றாம்'' (எச 18:2) என்ற பழமொழியை எடுத்துக்கூறி மக்கள் தங்கள் மனக்கசப்பை வெளிப்படுத்தினர். இப்போக்கை மறுத்து நான்கு இடங்களில் (3:17-21; 14:12-23; 18:1-22; 33:1-20) எசக்கி யேல் எதிர்வழக்காடுகின்றார். இறைவன் மக்களைத் தனிநபராகவே நடத்துகின்றார். தனி நபரே தன் வாழ்க்கைக்குப் பொறுப்பு. ஒருவனது குற்றத்திற்காக மற்றொருவனை ஒரு குடும்பத்திற்குள்ளேயே தண்டிப்ப தில்லை, என்று உறுதியாய்க் கூறுகிறார் (18:4; 18:18).*

*9. நூலின் திட்டமும் அமைப்பும்:*

*I. இறைவாக்குரைக்க அழைப்பு (1:1-3:27)*

*அ. தலைப்பு (1:1-3)*

*ஆ. அரியணைத்தேர் காட்சி (1:4-28)*

*இ. அழைப்பும் ஐந்து ஆணைகளும் (2:1-3;27)*

*II. எருசலேம் முற்றுகைக்கு முன்: தீர்ப்பு, அழிவு பற்றிய இறைவாக்குகள் (4:1-24:27).*

*அ. தீர்ப்பைப் பற்றி அடையாளச் செயல் கள் (4:1-5:17)*

*ஆ. தீர்ப்புக்கூறும் இறைவாக்குகள் (6:1-7;27)*

*இ. ஆலயத்தில் சிலைவழிபாடு: ஆலயத் தைவிட்டு யாவே வெளியேறுதல் (8:1-11:25)*

*ஈ. நாடு, எருசலேம், அதன் தலைவர்கள், குருக்கள், இறைவாக்கினர்கள் ஆகியோ ருக்கு எதிராக இறைவாக்குகள் (12:1-24:27).*

*III. பிற நாடுகளுக்கு எதிராகத் தீர்ப்பு (25:1-32:32)*

*அ) இஸ்ராயேலின் அண்டை நாடுகளுக்கு எதிராக (25:1-17)*

*ஆ) தீர் நகருக்கு எதிராக (26:1-28:26)*

*இ) எகிப்துக்கு எதிராக (29:1-32:32)*

*IV. இஸ்ராயேல் அமைக்கப்படுவதின் நிபந்தனையும் முறையும் (33:1-37:28).*

*அ. இறைவாக்குப் பொறுப்பு (33:1-33)*

ஆ. இஸ்ராயேலின் ஆயரும் அவரது மந்தையும் *(34:1-31)*.

இ. ஏதோம் எக்காலத்திற்கும பாலையாகும் *(35:1-15)*.

ஈ. இஸ்ராயேலே பலுகு, பெருகு *(36:1-38)*.

உ. உலர்ந்த எலும்புகள் உயிர்பெறுதல் *(37:1-14)*.

ஊ. ஒரே அரசும் அதன் வெற்றி வீரர் தாவீதும் *(37:15-28)*.

V. எல்லா எதிர்ச்சக்திகள்மீதும் இஸ்ராயேல் வெற்றி பெறுதல் *(38:1-39:29)*.

அ. கோகுக்கு எதிராக இறைவாக்கு *(38:1-39:8)*.

ஆ. தீமை நன்மையாக மாறுதல் *(39:9-20)*.

இ. இஸ்ராயேல் யாவேயை அறியும் *(39:21-29)*.

VI. மீண்டும் அமைக்கப்பட இஸ்ராயேல் பற்றிய காட்சி *(40:1-48:35)*

அ. புதிய ஆலயம் பற்றிய காட்சி *(40:1-43:27)*.

ஆ. புதிய வழிபாடு *(44:1-46:24)*.

இ. புதிய நகரமும், புதிய நாடும் *(47:1-48:35)*.

10. முடிவுரை:-

எசக்கியேலின் பணி, சுமார் கி.மு. 570-உடன் முடிந்தாலும், அவரது செல்வாக்கு வெகுகாலத்திற்கு நீடித்தது. நாடுகடத்தலுக்கு முன் நிலவிய, அதன்பின் வந்த இறைவாக்குகளையும் இணைக்கும் பாலமாக அவர் அமைகிறார். அவருக்குப்பின் வந்த இறைவாக்கினர்கள் அவரது மனப்போக்கையும் செயல்முறையையும் தாராளமாக எடுத்துக் கையாண்டிருக்கின்றனர். இறையியல் கூறுகளை இறைவாக்கு முடிவுகால இயலோடு இணைத்து வெளிப்பாட்டு இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமானவர் எசக்கியேல் என்று கூறலாம் *(7:5-12; 20:33-34; 34:25-31)*. இவ்விலக்கிய வரலாற்றில் எசக்கியேல் முன்னோடியாவார். ஆகவே யூத வெளிப்பாட்டு அல்லது காட்சி இலக்கியத்தின் தந்தை என்றழைக்கப்படுகிறார்.

எசக்கியேல் போதகம், பாரம்பரியத்தைப் பரவலாகப் பாதித்தது. ஆனால் இப்பாதிப்பு மறைமுகமானதே. நற்செய்தி நூல்கள் இந்நூலை எடுத்துக்காட்டவோ சுட்டிக்காட்டவோ இல்லை. ஆயினும் இறைவனது மகிமை மற்றும் ஆலயம் பற்றிய எசக்கியேலின் கருத்துக்கள் யோவான் நற்செய்தியின் கிறிஸ்து இயலை ஓரளவு பாதித்தன. புதிய ஏற்பாட்டிலுள்ள பிறநூல்கள் எசக்கியேலைப் பயன்படுத்தாமையை ஈடுகட்டும் விதத்தில், இந்நூலின் காட்சி உருவக முறைக்காக, இந்நூலைத் திருவெளிப்பாட்டுத் திருநூல் ஆசிரியர், அதிகமாகப் பயன்படுத்துகிறார். இதன் வழியாகத் தொடக்க காலக் கிறிஸ்தவ ஓவியத்தை இந்நூல் பெரிதும் பாதித்தது எனலாம்.

எசபெயாபு (JESHEBEAB - தந்தை நிலைத்திருப்பாராக, தந்தையின் இருப்பிடம்)

ஆரோன் குலத்திலிருந்து வந்த ஒரு குரு அல்லது குருகுலக் குடும்பம். தாவீது காலத்தில் குருக்களில் 14-ஆவது பிரிவின் தலைவர் *(1 நாள் 24:13)*.

எசரேலா (JESHARELAH - நேரானவை)

தாவீதின் காலத்தில் ஆசாபின் மகன்களில் ஒருவர். லேவியர் பாடகர்களில் 7-ஆவது பிரிவின் தலைவர் *(1 நாள் 25:14)*. *25:2*-இல் இவர் ஆசரேலா என்றழைக்கப்படுகிறார்.

எசனியா (JEZANIAH - யாவே செவிமடுக்கிறார்)

எருசலேம் பாபிலோனியர்களுக்கு வீழ்ச்சியுற்றபின், பாபிலோனிய நாடுகடத்தலுக்குப் பின் மிசுப்பா என்னுமிடத்தில் கெதலியாவுடன் தங்கியிருந்த யூதப்படையின் ஒரு தலைவர் *(எரே 40:8)*. மிசுப்பா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும் முதல்

இலாக்கீசு ஏடுகளிலும் (கி.மு. 6-ஆம் நூற்றாண்டு) இவரது பெயர் காணப்படுகிறது. 2 அர 25:23-இல் இவரது பெயர் யாசானியா என்று இருக்கிறது. இவரும் அசரியாவும் (16) ஒருவராக இருக்கலாம் (எரே 43:2).

**எசாயா** (JESHAIAH - யாவேயின் மீட்பு அல்லது விடுதலை)

1. பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப் பின்பு சாலமோனின் வழித்தோன்றலில் ஒருவர் (1 நாள் 3:21). கனனியாவின் மகனும் செருபாபேலின் பேரனும் ஆவார்.

2. எதுத்தூனின் புதல்வர் (1 நாள் 25:3.15). தாவீது காலத்தில் லேவியர் பாடகர்களில் 8-ஆவது பிரிவின் தலைவர்.

3. செபுவேலின் தலைமையில் ஆலயக் கருவூலத்தை மேற்பார்வையிட்ட லேவியர்களுள் ஒருவர். இரகபியாவின் மகன் (1 நாள் 26:25).

4. பாபிலோனிய அடிமைத் தனத்தினின்று எஸ்ராவுடன் எருசலேமிற்குத் திரும்பி வந்த எலாமித்தியர்களுள் ஒருவர். அத்தாலியாவின் மகன் (எஸ் 8:7).

5. ஒரு மெராரிய லேவியர் (எஸ் 8:19) ஆலயத்தில் பணிசெய்ய எஸ்ராவோடு திரும்பியவர்.

6. அடிமைத்தனத்துக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த ஒரு பென்யாமின் மூதாதையர் (நெக 11:7). ஈத்தியேலின்(1) தந்தையும் சல்லுவின் முன்னோருமாவார். இப்பெயர் இணைப்பட்டியல் 1 நாள் 9:7-8-இல் குறிப்பிடப்படவில்லை.

**எசானா** (JESHANAH - பழைய (நகர்))

அபியா, எரொபயாமுடன் போர் தொடுத்து இந்நகரையும் அதற்கடுத்த ஊர்களையும் கைப்பற்றிக் கொண்டார் (2 நாள் 13:19). இந்நகரம் யூதா, இஸ்ராயேல் எல்லையில் இருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது. ஒருவேளை 1 சாமு 7:12-இல் வரும் சேனுக்குப் பதிலாக இப்பெயரை வாசிக்க வேண்டும்.

பிற்காலத்தில் அந்திகோனசின் தளபதி பாப்பூசின் தலைமையகமாக இருந்தது. இதைப் பெரிய ஏரோது கைப்பற்றினார். எருசலேமுக்கு வடக்கில் 10:5 கி.மீ தொலைவிலும் இப்னேக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்கால்ப் பூர்ச் ஏல்-இசானே இந்த இடமாக இருந்திருக்கலாம்.

**எசிசாய்** (JESHISHAI - மதிப்பிற்குரிய, முதிய)

காது இனத்தைச் சேர்ந்தவர். யகிதோவின் புதல்வனும் மிக்காயேலின் தந்தையுமாவார் (1 நாள் 4:36).

**எசிபாய்** (EZBAI - ஒளிவிடுகிறது)

'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் பொருந்திய படைவீரர்களில் ஒருவரான நாகராயியின் தந்தை (1 நாள் 11:37). ஆனால் 2 சாமு 23:35-இல் எசிபாயின் புதல்வன் நாகராய் அர்பியிலிருந்து வந்த பாகராய் என்று அழைக்கப்படுகின்றான். 'எசிபாயின் புதல்வன்' (1 நாள் 11:37) 'அர்பியர்' என்பதின் திரிபாக (2 சாமு 23:35) இருப்பதுபோலத் தெரிகிறது. மேலும் நாகராயி அர்பியிலிருந்து வந்தவர் என்பதுதான் இந்த அட்டவணையிலுள்ள மூலப்பெயர் என்றும் தெரிகிறது.

**எசிபோன்** (EZBON - ஒளிமயமான)

1. காதுவின் நான்காம் மகன் (ஆதி 46:16). எண் 26:16-இல் ''ஓசினி'' என்று அழைக்கப்படுகிறார்.

2. பெலாவின் புதல்வர்களில் ஒருவர்; பென்யாமினின் குடும்பத்தவர் (1 நாள் 7:7). ஆனால் 1 நாள் 7:6-11 அநேகமாகச் செபுலோன் தலைமுறைப் பட்டியலாக இருக்கலாம். பென்யாமின் கோத்திரத்துக்குத் தவறாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

**எசிமியேல்** (JESIMIEL - இறைவன் நிறுவுவாராக)

அரசன் எசக்கியா காலத்தில் சிமியோன் இனத்தின் தலைவர் (1 நாள் 4:36).

**எசிமோன்** (JESHIMON - *பாலைநிலம்)*

பாலைவனத்தைக் குறிக்கும் எபிரேயப் பொதுச்சொல் (உப 32:10; சங் 106:14). இரண்டு பகுதிகளைக் குறிக்கும்போது இடப் பெயராகவும் பயன்படுகிறது.

1. சிப்பு அருகிலுள்ள பயனற்றநிலம் (1 சாமு 23:19.24; 26:1.3). மாவோனுக்கும் கெக்கிலா குன்றுக்கும் வடக்கிலுள்ளது. யூதாவின் மலைகளுக்குக் கிழக்கு எல்லையாகும். கெபிரோனுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் சாக்கடலின் வடமேற்குக்கரை வரையும் அமைந்துள்ளது. இது அகதிகளும் துறவிகளும் நாடிச் சென்ற பகுதியாகும்.

2. சாக்கடலுக்கு வடக்கிலும் யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும் பிசுகாமலை அடிவாரத்திலும் உள்ள உப்புப் பாலைவனமாகும் (எண் 21:20; 23:28).

**எசியேல்** (JEZIEL - இறைவன் ஒன்றுகூட்டுகிறார், இறைவன் தெளிக்கிறார்)

அசிமாவேத்தின் புதல்வரான எசியேல், தாவீது சிக்கிலாகு என்னுமிடத்தில் இருந்த போது அவரது படையுடன் சேர்ந்து கொண்ட இவர் பென்யாமின் குலத்தவர் (1 நாள் 12:3).

**எசியோன்-கெபேர்** (EZION-GEBER - வலியவனின் முதுகெலும்பு)

அக்காபா வளைகுடா ஆரம்பிக்கும் பகுதியிலுள்ள மிக முக்கியமான துறைமுகமும், வார்ப்படத் தொழிற்சாலை நகரமும் எல்லைப்புற நகரமும் ஆகும். இஸ்ராயேலர்கள் தங்கள் பயணத்தின்பொழுது மோவாபு சமவெளிக்குச் செல்லுகின்ற வழியில் தங்கியிருந்த ஓர் இடமும் ஆகும் (எண் 33:35-36; உப 2:8). இது ஒரு துறைமுகமாக இருப்பதால் இங்கிருந்து கப்பல்கள் ஒப்பீருக்குச் சென்று பொன், வெள்ளி, தந்தம், நறுமணப் பொருள்கள், மரங்கள் போன்றவற்றை ஏற்றி வந்தன (1 அர 9:26-28; 10:11.22). இக்குறிப்புகளைத் தவிர புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்து இந்நகரத்தைப் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் நமக்குத் தெரிய வருகின்றன.

1. இடம்:-

விவிலியம் தரும் சான்றுகளிலிருந்து எசியோன்கெபேர் வாடி ஏல்-அராபாவில் உள்ள துறைமுகமாகும் என்பதும் செங்கடல் பகுதியில் அதாவது அக்காபா வளைகுடாப் பகுதியிலுள்ள நகரமாகும் என்பதும் தெளிவு. பிரிட்ஸ் பிராங்க் என்பவரின் ஆராய்ச்சியின் மூலம் தற்காலத்தைய அக்கபா நகரத்திற்கு மேற்கு வடமேற்கிலிருந்து 3 கி.மீ. மைல் தொலைவிலுள்ள தேல் ஏல்-கெலெய்பே என்ற இடத்தில்தான் எசியோன்-கெபேர் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இக்கருத்தை நெல்சன் க்ளுயெக என்பவர் ஏற்றுக் கொண்டு உறுதி செய்கின்றார்.

நெல்சன் என்பவர் செய்த ஆராய்ச்சியின் படி ஒன்றன் மேல் ஒன்றாக நான்கு நகரங்கள் கட்டப்பட்டதாகவும் அந்நகரங்கள் நெருப்பினால் அழிக்கப்பட்டன என்றும் கூறுகின்றார். இந்நகரம் மன்னன் சாலமோனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து. ஏனெனில் சாலமோன் மெகிதோவிலும் பாலஸ்தீனத்தில் மற்ற இடங்களிலும் கட்டிய கட்டடங்களோடும் இவ்விடத்திலுள்ள கட்டடங்கள் ஒத்திருக்கின்றன. மேலும் இரண்டு தனிப்பட்ட நகரங்கள் இருந்ததற்கு எந்தவிதமான ஆதாரங்களும் காணப்படாததால் எசியோன் கெபேர், ஏலாத்து என்ற இரண்டு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயர்களாகும் என்றும் கூறுகின்றார். ஓர் இடத்திற்கு ஏற்பட்ட இத்தகைய பெயர் மாற்றம் மன்னன் யோசபாத்தின் (876-851) ஆட்சிக் காலத்திற்கும் அமசியாவின் (796-767) காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். நான்கு நகரங்களும் நெருப்பினால் அழிக்கப்பட்டன. இது இந்த இடம் கைப்பற்றப்பட்டு மீண்டும் கைப்பற்றப்பட்டதற்குச் சான்றுகள் ஆகும். இவற்றில் சில விவிலியத்தில் குறிக்கப்படுகின்றன.

2. வரலாறு:-

மோசேயின் தலைமையில் இஸ்ராயேல் மக்கள் எசியோன்கெபேர், ஏலாத்து என்ற

பகுதியைக் கடக்கும்பொழுது அங்கு மண் குடிசைகள்தான் காணப்பட்டன. இஸ்ரா யேல் மக்களை நேரடியாக ஏதோமைக் கடந்து செல்ல அனுமதிக்காததால், வாடி ஏல்-அராபாவிலிருந்து அக்காபா வளை குடாவிற்குச் சென்று, பின் ஏதோமின் தெற்கு, கிழக்கு எல்லைப் புறங்களைக் கடந்து சென் றனர் (உப 2:8). தாவீது அரசனால் இப்பகுதி கள் முழுவதும் கைப்பற்றப்பட்டு, மன்னன் சாலமோனால் எசியோன்-கெபேர் என்ற நகர் கட்டப்பட்டுப் பெரிய வார்ப்படத் தொழில் நகரமாகவும், வியாபாரத் தளமாக வும் மாற்றப்படும்வரை ஏதோமியர்களால் இப்பகுதிகள் எந்தவிதமான முன்னேற்றத் தையும் காணவில்லை. சாலமோன் காலத் தில் முக்கியத்துவம் பெற்ற இப்பகுதிகளில், செம்பு, இரும்பு போன்ற உலோகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அரேபியாவிலுள்ள ஓப்பீருக்கும் இந்நகருக் கும் கப்பல் போக்குவரத்து நடைபெற்றது (1 அர 9:26-28). சேபா நாட்டின் அரசி எருசலேமிற்குச் செல்லும்பொழுது இந்தத் துறைமுகத்தில்தான் வந்து இறங்கினாள் என் பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை (1 அர 10:1-13).

எபிரேயர்களின் அரசாட்சியில் பிளவு ஏற் பட்டபின், யூதாவின் ஆட்சிப்பகுதியாக எசி யோன் கெபேர் மாறுகிறது. கி.மு. 925-இல் சீசாக்கு என்பவர் பாலஸ்தீனத்தின்மேல் படையெடுத்துச் செல்லும்பொழுது இந்நகர் முதன் முதலாக அழிக்கப்படுகின்றது. இந் நகர் இருந்த இடத்திலேயே அரண்சூழ இரண் டாவது நகரம் கட்டியெழுப்பப்பட்டது. பின் சிறந்த தொழில் மையமாக இந்நகர் வளர ஆரம்பித்தது. மன்னன் யோசபாத்து என்ப வர் ஓப்பீரிலிருந்து பொன் திரட்டி வரத் தார்சிசு கப்பல் படையைக் கட்டினான். அவர் அகசியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்குத் தண்டனையாக அக்கப் பல்கள் வளைகுடாவிலேயே உடைந்து போயின. அவரது முயற்சி தோல்வியடைந்து விட்டதால் இம்முயற்சியினைக் கைவிட்டு விட்டார் (1 அர 22:47-49).

இந்நகரின் பிற்கால வரலாற்றுக்குக் காண்க: ஏலாத்து.

**எசிராவியர் (EZRAHITE)**

செராகின் வழித்தோன்றல்களான செரா கிய இனத்தின் மற்றொரு பெயர் (1 நாள் 2:6). இந்த இனத்தில் ஏத்தான், ஏமான் ஆகியோர் புகழ்பெற்ற ஞானிகளும் புலவர் களுமாவார் (1 அர 4:3; சங் 88:1; 89:1).

**எசிரி (EZRI - என் உதவி)**

கெலூபின் மகன்; தாவீதின் காலத்தில் அரச நிலங்களின் விவசாயத்திற்கும், விவசா யிகளுக்கும் தலைவராய் இருந்தார் (1 நாள் 27:26).

**எசுக்கோல் (ESHCOL - (திராட்சைக் கொத்து) - ஆள்**

1. கெதர்லாகோமேரின் தோல்வியில் ஆபி ரகாமோடு உடன்படிக்கை செய்திருந்த எமோரியர்களான ஆனேர், மமிரே ஆகியோ ரின் சகோதரன். இவர் கெபிரோனுக்கு அரு கில் வாழ்ந்தார் (ஆதி 14:13-24).

**எசுக்கோல் (ESHCOL - (திராட்சைக் கொத்து) - இடம்**

கெபிரோனுக்கு அருகே உள்ள பள்ளத் தாக்கு. இங்கிருந்துதான் இஸ்ராயேல் ஒற்றர் கள் "ஒரு கொடி முந்திரிச் செடியில் ஒரு கிளையும் அக்கிளையோடு ஒரு குலையை யும் அறுத்து அதை இருவர் ஒரு தண்டில் கட்டி எடுத்து வந்தனர்". ஏனெனில் அது அவ்வளவு பெரியதாக இருந்தது. பெரிய குலையின் காரணமாக இப்பெயர் பெற்றது (எண் 13:23-24; உப 1:24). எண் 13:22-இன்படி இப்பள்ளத்தாக்கு கெபிரோனுக்கு அருகில் இருந்தது. இப்பெயர் ஒருவேளை, அப்ராமோடு உடன்படிக்கை செய்து கொண் டிருந்த எசுக்கோலோடு தொடர்புடையதாக இருக்கலாம். இப்பெயர், திராட்சைத் தோட் டம் நிறைந்த ஒரு வாடியின் தொடக்கத்தில் கெபிரோனுக்கு வடக்கில் 3 கி.மீ. தொலை விலுள்ள புர்ச்-கஸ்கே என்ற இக்காலப் பெய ரில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**எசுதிரலோன் (ESDRAELON)**

மெகிதோன் பள்ளத்தாக்கையும் உள்ளடக்கிய இசிரியேல் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியைக் குறிக்கும் இசிரியேல் என்ற எபிரேய வார்த்தையிலிருந்து வந்த கிரேக்கப் பெயராகும் எசுதிரலோன் என்பது (காண்க யூதி 1:8; 7:3). இது மெகிதோ சமவெளி என்றும் (செக் 12:11) பெரிய சமவெளி என்றும் (1 மக் 12:49) அழைக்கப்படுகிறது.

**எசுதிராவின் நூல்கள் (BOOKS OF ESDRAS)**

விவிலியத் திருமுறையில் ஏற்கப்படாத முதலிரண்டு நூல்கள்

I. முதலாம் எசுதிரா

''கிரேக்க எஸ்ரா'' என்று சில நேரங்களில் அழைக்கப்படும் இந்நூலானது எழுபது நூலில் முதலாம் எசுதிரா என்றும், வுல்கத்தாவில் மூன்றாம் எசுதிரா என்றும் அழைக்கப்பட்டது. இது வுல்கத்தாவால் முதலில் ஒரு போலி நூலாகக் கருதப்பட்டது. திரிதெந்தின் பொதுச்சங்கம் முதல் (கி.பி. 1545-1563), வுல்கத்தா பதிப்புகள் இந்நூலைப் புதிய ஏற்பாட்டைத் தொடர்ந்து வரும் பின் இணைப்பிற்கு ஒதுக்கின பல கத்தோலிக்கப் பதிப்புகளில் இது காணப்படுவதில்லை.

இந்நூலானது சற்றே மாறுபட்ட அமைப்பினதாயினும், யோசியா அரசனின் சீர்திருத்தத்தின் காலம் முதல் (2 நாள் 35) சட்டமானது எஸ்ராவினால் மக்கள் முன் வாசிக்கப்படுவது வரையிலான காலத்தினைத் தழுவியதாய் (நெக 8:1-12), 2 நாள் 35-36; எஸ் மற்றும் நெக 7:73-8:12 ஆகியவற்றுள் காணப்படும் விவரிப்புகளுக்கு இணையான தொகுப்பாகும். முதலாம் தாரியுசின் சபையில் மூன்று யூதப் பணியாட்களுக்கு இடையே ஒவ்வொருவரும் எண்ணுவதில் எது வலிமையுள்ளது என்னும் போட்டியைப்பற்றிய பாரசீகக் கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது (1 எசுதி 3:4). பெண்ணின் வலிமை ஒப்பிட முடியாததாயினும், உண்மையானது அனைத்திற்கும் மேலானது என்று விடையளித்து வெற்றி பெற்ற செருபாபேல் அதற்குப் பரிசாக எருசலேமிற்குத் திரும்பச் சென்று ஆலயத்தை மீண்டும் கட்டக்கூடிய அதிகாரத்தைப் பெறுகிறார்.

1 எசுதிரா நூலானது அநேகமாய் மக்கபேயர் காலத்தில் தோன்றியிருந்தாலும் (கி.மு. 150-100) அதனுடைய காலம், பிறப்பிடம், ஆசிரியர் பற்றித் துல்லியமாக எதுவும் அறியப்படவில்லை. இப்பகுதியானது எழுபது நூலில் இரண்டாம் எசுதிரா (எஸ்ரா-நெகமியா) வைவிட மூலத்தின் சரளமான கிரேக்க மொழிபெயர்ப்பையே குறிப்பிடுகிறது. இக்காலத்திற்கு முதன்மை ஆதாரமாக யோசிபஸ் இப்பதிப்பையே தேர்ந்தெடுத்தார்.

II. இரண்டாம் எசுதிரா:-

எஸ்ரா திருவெளிப்பாடு என்றும் அழைக்கப்படும் 2 எசுதிரா, கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலி வரலாற்று நூலாகும். இது இந்நூல் எழுபது நூலில் ஏற்றுக் கொள்ளப்படாமையை விளக்கியது. புதிய ஏற்பாட்டில் பின்இணைக்கப்பட்ட பகுதியில் நான்காம் எஸ்திரா என்று எரோணிமு இதனை வுல்கத்தாப் பதிப்பில் சேர்த்தார். உரோமைக் கத்தோலிக்க மரபில் இது இரண்டாம் சட்டத்தின் (உபாகம்) அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை.

மற்ற ஏற்கப்படாத போலிநூல்களைப் போலன்றி 2 எசுதிரா்வானது ஒரு திருவெளிப்பாட்டு நூலாகும். இது ஒரு கலப்புத் தொகுப்பாகும். இதன் முக்கியப் பகுதியானது (3-14) கி.பி.முதல் நூற்றாண்டில் ஒரு பாலஸ்தீன யூதனால் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது. இந்நூலானது முதலில் எபிரேய மொழியில் உருவாக்கப்பட்டதாக எண்ணப்பட்டாலும் இது பிற்பாடு கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு (அதனுடைய ஒரு சில பகுதிகளே இன்றும் நிலைத்துள்ளன). இலத்தீனிலிருந்தும் கிரேக்க மொழியிலிருந்தும் பிற மொழி பெயர்ப்புகளிலிருந்தும் முதன்மையாக அறியப்படுகிறது.

முதலிரண்டு அதிகாரங்கள் யூத மக்களைக் கண்டிப்பதற்கென அழைக்கப்பட்ட இறை வாக்கினரென எஸ்ராவைக் காட்டுகின்ற பிற் கால இணைப்பாகும். இவை கிழக்கித்திய பதிப்புகளில் இல்லாமலும் அடிக்கடி 5 எசு திரா அல்லது 2 எசுதிரா என்றும் குறிப்பிடப் படுபவை ஆகும். இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் யூதக் கிறிஸ்தவத் தலைவர் ஒருவ ரால் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இந் நூலின் மையப்பகுதி (3-14 அதிகாரங்கள்) எஸ்ராவினுடைய ஏழு காட்சிகளைக் கொண்டுள்ளது: 1. சீமோனுடைய வரை முறையற்ற துன்பங்களைப் பற்றிய எஸ்ராவின் கேள்விகளும், இறைவனுடைய வழிகள் மனித உயிர்களால் புரிந்து கொள்ளப்பட முடியாதவை என்றும், வருகின்ற காலமா னது மீட்பைக் கொண்டுவரும் என்றும் உரி யேல் வானதூதரின் பதில்களும் (3:1-5:19); 2. இஸ்ராயேலை நோக்கிய இறை நேர்மை யின்மை பற்றிய எஸ்ராவின் அக்கறையும் காலத்தின் நிறைவைப்பற்றிய அவரது கேள் விகளும், மற்றும் உரியேலின் உறுதிமொழி யும், மற்றும் இறுதிக்காலங்கள் பற்றிய அடையாளங்களும்; 3. படைப்பின் நோக் கங்கள் பற்றிய விவாதம், மற்றும் இறுதிக் காலங்களின் வாக்குறுதிகள் (6:35-9:25); 4. துயருற்றுப்புலம்பும் பெண் (எருசலேம்) விண்ணக நகராக மாற்றப்படுதல் (9:26-10:59); 5. தானியேலுடைய நான்காவது அரசின் சொற்களால் (தானி 7) விவரிக்கப் பட்ட பன்னிரண்டு இறக்கைகளும் மூன்று தலைகளும் உடைய கழுகு (உரோமை) மெசியாவினால் மேற்கொள்ளப்படுதல் (11:1-12:51); 6. தாக்குகின்ற மக்கள் திரளை அழிக்கவிருக்கின்ற (13) கடலிலிருந்து எழும் மனிதன் (மெசியா, தானி 7-இல் உள்ள மனுமகன்); 7. எஸ்ரா புனித இறை வாக்குகளை மீட்டல் (14) என்பவையாகும். பிந்தைய காட்சியில் முன்னர்த் தீயால் அழிக் கப்பட்ட புனித நூல்களை மீண்டும் எழுது மாறும் எரியும் புதரினின்று எஸ்ரா அறிவு றுத்தப்படுகிறார்; நாற்பது இரவும் பகலும் இவர் இறைவனின் திருச்சட்டத்தை ஐந்து மறைநூல் அறிஞர்களுக்கு அறிவிக்க அவர் சொல்லச் சொல்ல அவர்கள் அவற்றைத் தொண்ணூற்று நான்கு நூல்களில் எழுதுகின் றனர் (14:44-இல் 904 நூல்கள் என்று வுல்கத் தாவில் உள்ள வாசகம் தவறானதாகும்). இவற்றில் இறுதி 70 நூல்கள் ஞானிகளி டையே முறையாக அறிமுகம் செய்யப்பட்ட வர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட வேண் டுமென்றும் மற்ற 24 திருமறை நூல்கள் (சாமுவேல், அரசர், நாள், எஸ்ரா, நெக மியா) பொது மக்களுக்கு அளிக்கப்படலா மென்றும் மிக உன்னதர் கட்டளையிடுகி றார். இத்தகைய அடிப்படையைக் கொண்டு திருச்சபையின் சில தந்தையர்கள் எஸ்ரா பழைய ஏற்பாட்டு நூல்களைத் தொகுத்த மைத்ததாகக் கூறுவர். இக்கருத்தானது பதி னெட்டாம் நூற்றாண்டுவரை யூத மற்றும் கிறிஸ்தவ அறிஞர்களால் ஏற்கப்பட்டு வந் தது. ஆனாலும் இக்கருத்தானது நம்பத்தகாத தாக மட்டுமின்றி வாசகத்தின் மையக்கருத் தையும் கைநழுவ விட்டுவிடுகிறது. இறுதிப் பகுதியாகிய 15-16 அதிகாரங்கள் (சில நேரங் களில் 6 எசுதிரா என்று அழைக்கப்படுவது) மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் அனேகமாக ஒரு கிறிஸ்தவ ஆசிரியரால் சேர்க்கப்பட்ட இறைவாக்குக் கருத்துக்களின் தொகுப்பாகும்.

### எசுதிரி (ESDRIS)

யூதா மக்கபேயருக்கு எதிராக நடந்த போரில் கோர்கியாவின் படைப்பிரிவில் இருந்த ஒரு படைத் தலைவர் (2 மக் 12:36).

### எசுத்தமோ (ESHTEMOH)-இடம்

எசுத்தமோவாவின் மற்றொரு பெயராகும் (யோசு 15:50). காண்க. எசுத்தமோவா.

### எசுத்தமோவா (ESHTEMOA- கேட்கும் நிலையம்)-ஆள்

1. இசிபாவின் புதல்வன்; காலேபின் வழித்தோன்றல் (1 நாள் 4:17).

2. யூதா இனத்தைச் சேர்ந்த ஒரு மாக்காவி யர். நகாமின் சகோதரி; ஒதியாவின் புதல்வர் (1 நாள் 4:19).

எசுத்தமோவா (ESHTEMDA - கேட்கும் நிலையம்)-இடம்

யூதாவின் நகரங்களில் ஒன்று. லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. 'அடைக்கல நகர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது (யோசு 21:14; 1 நாள் 6:57). பிறகு மலைப்பகுதியான கோசேனோடு இணைக்கப்பட்டது (யோசு 15:50). கெபிரோனுக்குத் தெற்கில் 14 கி.மீ. தொலைவிலுள்ள எஸ் செமூவாக இருக்கலாம். யுசேபியசின் கூற்றுப்படி, இப்பெயருடைய ஒரு யூத நகரம் கி.பி.4 - ஆம் நூற்றாண்டில் இருந்தது. இதன் மற்றொரு பெயர் எசுத்தமோ ஆகும் (யோசு 15:50).

1 சாமு 30:28-இன் படி அமலேக்கியர்களிடமிருந்து சிக்லாகைக் கைப்பற்றியதில் கிடைத்த கொள்ளைப் பொருட்களைத் தாவீது பரிசுகளாக அனுப்பி வைத்த நகரங்களில் இதுவும் ஒன்று. சவுலிடமிருந்து தாவீதும் அவர் ஆரவாளர்களும் தப்பி இங்கு வந்தபோது அவர்கள் தாவீதுக்கும் அவர் படைவீரர்களுக்கும் செய்த சேவைக்காக இப்படிப் பரிசுகளை அனுப்பிவைத்தார்.

எசுத்தாவோலியர் (ESHTAOLITE)

எசுத்தாவோலின் மக்கள். இவர்கள் காலேபின் மகன் சோபாலின் வழித் தோன்றல்களில் குறிக்கப்படுகின்றனர் (1 நாள் 2:53).

எசுத்தாவோல் (ESHTAOL அப்பால், தொலைவில்)

'தாண்' கோத்திரத்தாருக்கு முதலில் கிடைத்த நகரம் (யோசு 19:41). பிறகு யூதாவின் மாவட்டமான சோரா-அசக்காவோடு இணைக்கப்பட்டது (15:33). இந்தப் பகுதி அர்த்துப்புக்கு வடக்கே உள்ள எசுவா எனலாம். இவ்விடம் சோராவுக்குக் கிழக்கில் 2.5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு மேற்கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

எசுத்தாவோலைச் சோராவுக்கு அடுத்து வைக்கும் பழக்கம் நீதிபதிகள் காலத்திலும் தொடர்ந்தது (நீதி 13:25; 16:31; 18:2.8.11; காண்க 1 நாள் 2:53). சோராவுக்கும் எசுத்தாவோலுக்கும் இடையில்தான் சிம்சோன் இறைவனின் ஆவியானவருக்குப் பணிந்தார். அங்கேதான் அவர் புதைக்கப்பட்டார். ''தாண்'' கோத்திரத்தார் வடக்கில் குடிபெயர்ந்து இலாயிசைப் பிடிக்க அதிரடித்தாக்குதலில் இறங்கப் பயன்படுத்திய முக்கியமான மையங்கள்தாம் சோராவும் எசுத்தாவோலும் (நீதி 18).

எசுத்தோன் (ESHTON - பலமனைவியரையுடைய, பெண் தன்மையுடைய)

யூதாவின் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு குலம் அல்லது ஒரு குடும்பம். யூதாவைச் சார்ந்த மெகிரின் மகன். ஒரு காலேபியராக இருக்கலாம். இரக்காவின் மக்களில் ஒருவராக எண்ணப்படுகிறார் (1 நாள் 4:11-12). இவர்கள், ஒருவேளை இடம்விட்டு இடம் செல்லும் உலோகக் கொல்லர்கள் குழுவாக இருக்கலாம்.

எசுபாகால் (ESHBAAL - பாகாலின் மனிதன்)

சவுல் அரசனின் புதல்வர்களுள் ஒருவரான இசிபோசத்தின் மூலப் பெயராகும். இதன் மற்றொருவடிவம் இசுபாகால் ஆகும் காண்க. இசிபோசத்து, இசுபாகால்.

எசுபான் (ESHBAN - அறிவுள்ள மனிதன்)

இவர் தீசோனின் இரண்டாவது மகன். கோரியர் துணை இனத்தின் முன்னோரும் தலைவரும் ஆவார் (ஆதி 36:26; 1 நாள் 1:41).

எசுரூன் (JESURUN - நேர்மை)

இஸ்ராயேலின் மற்றொரு பெயர். பாடல்களில் மட்டும் காணப்படுகிறது. எசுரூன் என்பது அதன் நேர்மை என்று வேர்ப் பொருளை அழுத்திக்கூறும் குறுகிய அல்லது அன்பைக்காட்டும் வடிவமாகக் கருதப்படுகிறது. இச்சொல் மோசேயின் பாடல் (உப 32:15; கி.மு. 10-ஆம் நூற்றாண்டு). மோசேயின் ஆசீர் (35:5.26; கி.மு.11-ஆம் நூற்றாண்டு) ஆகிய மிகப் பழங்காலப் பாடல்களில் வருகிறது. இஸ்ராயேலின் மீட்பு மீண்டும் அமைக்கப்படுதல் பற்றி ஏச 44:2-இலும் வருகிறது.

எசுலி (ESLI)

இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:25).

**எசேர்** (JEZER - உதவி, நோக்கம்)

நப்தலியின் மூன்றாவது மகனான இவர் (ஆதி 46:24; 1 நாள் 7:13) எசேரிய வம்சத்தின் தலைவராவார் (எண் 26:49).

**எசொகாயா** (JESHOHAIAH - யாவே தாழ்த்து கிறார், யாவே வணங்குகிறார்)

சிமியோன் இனத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் (1 நாள் 4:36).

**எஸ்ஸேனியர்** (ESSENES)

இவர்கள் மக்கபேயர் கிளர்ச்சிக் காலத்திலிருந்து (கி.மு. 2-ஆம் நூற்றாண்டு) உரோமையர் எருசலேமை அழித்ததுவரை (கி.பி. 70) பாலஸ்தீனத்தில் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு முக்கிய யூதப்பிரிவினராவர். அலக்சாந்திரியாவின் பிலோ, பிளேவியு, யோசிபஸ், பெரிய பிலினி மற்றும் இப்போலிடஸ் ஆகியோரின் நூல்களில் முதலில் சான்று பகரப்பட்டு, எஸ்ஸேனியரின் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும், சாக்கடல் சுருள்களை உருவாக்கிய சமுகப் பிரிவுக் குழுவின் ஆவணங்களால் இப்பிரிவு அறியப்படுகிறது.

I. வரலாறு:-

எஸ்ஸேனியர்கள், யோனத்தான் மக்கபேயுவின் காலத்தவராக முதன் முதலில் குறிப்பிடப்படுகின்றனர் (கி.மு.150). வளரும் கிரேக்க ஆதிக்கத்தை எதிர்க்கின்ற ஆர்வமிக்க சமயகுழுவாகிய அசிதேயர் (பக்தியுள்ளவர்கள்) குழுவிலிருந்து தோன்றியிருக்கலாம். எஸ்ஸேனியர்கள் பொதுவாகப் பாலஸ்தீன யூதரிடையே தோன்றியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றனர். ஆனால் இவர்கள் நாடு கடத்தப்பட்ட பின்னர் பாபிலோனியாவிலே தங்கியிருந்து, இறைவனால் உருவாக்கப்பட்ட பேரழிவு மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கெனத் தமஸ்கு ஆவணத்தினுடைய கோட்பாடுகளுக்கேற்பத் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொண்ட யூதரிடையிலான கடும் பழைமைவாதிகள் ஆவார் என்று அறிஞர் சிலர் இப்போது கருதுகின்றனர். இவை எப்படியிருந்தாலும் மக்கபேயரின் புரட்சியைத் தொடர்ந்து பரிசேயர் மற்றும் சதுசேயருடன் சேர்ந்து ஒரு பெரிய இறையாட்சிக் குழுவாக எருசலேம் அரசியலில் அவர்கள் முக்கிய இடம் வகித்தனர் (கி.மு.104). ஆனால் சடோக்கியரல்லாத கசுமோனிய குருத்துவத்திற்கும், அப்போது நிலவிய அரசியல் உடன்பாட்டிற்கும், அவர்கள் மிகவும் எதிர்ப்புக் காட்டினர்.

இதன் விளைவாக அவர்கள் முதலில் எருசலேமிலும், மற்ற பாலஸ்தீனிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் உள்ள ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும், பின்னர் சாக்கடலின் வட மேற்குப் பகுதியிலுள்ள பாலைச்சமவெளியின் கூடியேற்றப் பகுதிகளுக்குள்ளும், பின்வாங்கினர். இக்காலத்தில் கும்ரான் சமூகமானது அமைக்கப்பட்டது. இது எஸ்ஸேனிய இயக்கத்தின் தலைமை நிலையமாக உருவாயிற்றென அறிஞர் பலர் நம்பினர். கி.மு.31-இல் ஒரு நில நடுக்கமானது கும்ரானை அழித்தபோது, பெரிய ஏரோதுவினுடைய ஆதரவின்கீழ் எருசலேமின் வட மேற்கு முனையில் எஸ்ஸேனியர்கள் இடம் மாறியிருக்கலாம். சீயோன் மலையிலுள்ள எருசலேமின் எஞ்சிய எஸ்ஸேனியக் குடியிருப்புகளுடன் கழிவறைகள், சடங்கு குளியலறைகள் மற்றும் எஸ்ஸேனிய வாசல் ஆகியவை அடங்கிய இந்தப் பகுதியே, இக் காலத்தைச் சேர்ந்த, எஸ்ஸேனியருடைய குடியிருப்பு என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஏரோதுவின் மரணத்திற்குப் பின்னர் அவர்கள் கும்ரானுக்கே திருப்பினர். முதல் யூதப் புரட்சியின் போது (கி.பி.68) உரோமையர் அவ்விடத்தைக் கைப்பற்றும் வரை அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர். கி.பி. 70-இல் எருசலேமின் அழிவிற்குப் பின்னர், சிதறுண்ட தனிக்குழுக்கள் நிலைபெற்றிருந்தாலும், எஸ்ஸேனிய இயக்கத்திற்குச் சுவடுகள் இல்லை. சிலர் இங்குமங்குமாகச் சிதறிப் போயிருக்கலாம், மற்றவர்கள் பிற யூதப் பிரிவுகளிலும் கிறிஸ்தவ திருச்சபையிலும் ஒன்றித்துப் போயிருக்கலாம்.

II நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்:-

எஸ்ஸேனிய ஆதரவாளர்கள் குறைந்த எண்ணிக்கையிலே இருந்தாலும் (நான்காயிரம் பேர்), பண்டைய ஆதாரங்கள், பல்வேறுபட்ட, சில சமயங்களில், முரண்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்குச் சான்று பகர்கின்றன. இந்நிலையானது கும்ரான் சமூகத்தை எஸ்ஸேனியரின் ஒரு பிரிவாக மட்டுமே நோக்குமாறு சில அறிஞர்களைத் தூண்டினாலும், இது எஸ்ஸேனியரைச் சார்ந்ததுதானா என மற்றவர்கள் வினா எழுப்புகின்றனர். இத்தகைய வேறுபாடுகள் உண்மையில் எஸ்ஸேனியக் குடியேற்றங்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும் சமூக வளர்ச்சியின் மாறுபட்ட வரலாற்றுக் கட்டங்களின் நிலையையும் அல்லது சாதாரண வரலாற்றாசிரியரின் சார்பு நிலையையும் பிரதிபலிப்பனவாய் இருக்கக்கூடும்.

அடிப்படையில் உண்மையான இஸ்ராயேலின் விசுவாசமுள்ள எஞ்சியோராகவும், இறைவனுடைய இறுதிக்காலச் சமுதாயத்தின் மையமாகவும் எஸ்ஸேனியர் தங்களைக் கருதினர். ஐந்நூல் விதிமுறைகளை உறுதியாகக் கடைபிடிக்கத் தீர்மானித்துள்ள ஒரு தனிமையான சமூகத்தை உருவாக்குவதன்மூலம் பிணைப்புகளை வலிமைப்படுத்தவும், இறைவனின் உடனடி வருகைக்கு ஆயத்தப்படுத்தவும், பொதுவான உணவு, படிப்பு, குளியல் போன்றவற்றையும் உள்ளடக்கிய சமூக வாழ்க்கை முறை வலியுறுத்தப்பட்டது. அனைத்து உடைமைகளும் பொதுவாக வைக்கப்பட்டு, தனிநபர்களின் தேவைக்கேற்ப உடைமைகளும், உதவிகளும், அளிக்கப்பட்டன. பிற எஸ்ஸேனிய சமுதாயத்தினின்று வருகிறவர்களுக்கு விருந்தோம்பலை உறுதிப்படுத்த நிதி சேமித்து வைக்கப்பட்டது. எஞ்சியவரின் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்காகவும், சமூக சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகவும், ஒழுங்குமுறை கடினமாக்கப்பட்டு சமுதாய விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமாக்கப்பட்டது. மேலும் துறவு மனப்பான்மையினாலோ வழிபாட்டுத் தூய்மையின் மீதான அக்கறையினாலோ இல்லாமல், இறுதிக்கால நம்பிக்கைகளுக்குப் பெரிதும் உரிய விதத்தில் சில எஸ்ஸேனியர் மணமாகாமையைக் கடைப்பிடித்தனர்.

எருசலேம் ஆலயத்தினுடைய இழி நிலையினின்று தங்களை விலக்கிக் கொண்டாலும், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்காவது எஸ்ஸேனியர் ஆலயத்திற்குக் காணிக்கைகளை அளித்தனர். ஆனாலும் தீட்டுப்படாமலிருப்பதற்கெனத் தமக்குரிய இடத்தினின்றே அவர்கள் பலிகளைக் காணிக்கையாக அளித்தனர். எருசலேமிலும் கும்ரானிலும் உள்ள வழிபாட்டுக் குளங்களின் சிதைவுகள் சான்று பகர்வது போலத் தூய்மை பற்றிய லேவியரின் சட்டங்களுக்கு அதிமுக்கிய கவனம் செலுத்தப்பட்டு நாடோறும் உடலலம்பல் போன்ற செயல்கள் கடைப்பிடிக்கப்பட்டன. சூரியோதயத்தின்போது வேண்டுதல்கள் செலுத்தப்பட்டன. உணவிற்கு முன்னும் பின்னும் செபங்கள் சொல்லப்பட்டன. இறுதிக்கால விளக்கத்தின்மீது அக்கறை கொண்டு தினசரி இறைவாக்கு வாசித்துத் தியானிக்கப்பட்டது. குறிப்பாகச், செபக் கூடத்தில் இறைவாக்குகளை வாசித்து அவற்றை விவாதிப்பதில் ஓய்வு நாளானது கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டது. ஓய்வு நாளின் புனிதத்தைக் காப்பதற்காக எஸ்ஸேனியர் அதற்கு முந்தைய நாளிலேயே உணவைத் தயாரித்து வைத்தனர். இருபத்து நான்கு மணி நேரங்களில் எந்த விதமான உடல் ஓய்விற்கான வாய்ப்பும் தங்களுக்கு மறுக்கப்படும் அளவிற்கு ஒரு சிலர் தங்களது உடல் சார்ந்த செயல்களை முறைப்படுத்தினர்.

எஸ்ஸேனிய இயக்கத்திற்குத் தங்கள் பற்றுறுதியை அளித்து அதில் அங்கத்தினராயிருப்பதற்குரிய நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க உறுதி எடுத்தனர். தொடக்க நிலையினரின் தகுதிகளைத் தேர்ந்தறியவும் குழுவின் தூய்மையைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு நீண்ட பயிற்சி அளிக்கப்பட்டது. யோசிபசின் கூற்றுப்படி புதியவர்கள் அச்சமுதாயத்தின் எல்லைகளுக்கு வெளியே கடுமையான சூழ்நிலையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பயிற்சி பெற்றனர். சமூகத்தினுடைய

உணவுக்கட்டுப்பாடு வழிபாடு மற்றும் ஒழுக்க விதிமுறைகள் ஆகிய அனைத்தை யும் நிறைவேற்றத் தகுதியுள்ளவர்கள் எனத் தங்களை நிரூபித்தபின் முழு உறுப்பினர்க ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொது உண வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். ஆயி னும் முழு உறுப்பினர்களிடையிலும் குருக்க ளும் பெரியோர்களும், உயர் அதிகாரமும் உரிமைகளும் கொண்ட படிமரபு அமைப்பு இருந்து வந்தது.

III. கிறிஸ்துவுடனான உறவு:-

புதிய ஏற்பாடு எஸ்ஸேனியரைப்பற்றி எவ்விதக் குறிப்பையும் கொண்டிராவிட்டா லும் எஸ்ஸேனியரின் போதனைகளுக்கும் ஆதிக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கைகளுக்கு மிடையே ஒப்புமைகளை அறிஞர்கள் வெளிக் கொணர்ந்தனர். சிறிது காலம் எருசலேமிலி ருந்த சில கிறிஸ்தவர்கள் எஸ்ஸேனியரு டைய வாழ்க்கை முறையினை ஒத்திருந்த ஒரு விதமான பொதுவுடைமையினைப் பின் பற்றினர் (அ.ப. 4:32 தொ): பல கிறிஸ்தவர் கள் எஸ்ஸேனியரைப் போல் விருந்தோம் பலை மிக உயர்வாக மதித்தனர் (மத் 10:11-13:7:7). மேலும், எஸ்ஸேனியரைப் போன்று தம்மைப் பின்பற்றுகிறவர்களும் இறைவனு டைய அரசில் பங்கு பெறுவோருடன் கொண்டுள்ள உறவுகளைக் குடும்ப உறவு களை விட மேலாக மதிக்க வேண்டும் என்று இயேசு கோருகின்றார் (13:46-50).

ஆயினும் எஸ்ஸேனிய மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையில் முக்கிய ஏற்றத்தாழ் வுகள் காணப்பட்டன. பெரும்பான்மை யான கிறிஸ்தவ சமுதாயங்கள் விரைவி லேயே விரும்பி ஏற்றுக் கொண்ட பொதுவு டைமையை விட்டுவிட்டுத் தனியுடை மையை மீண்டும் அறிமுகப்படுத்தின. மேலும் பழைய ஏற்பாட்டின் சடங்கு நெறி கள் கிறிஸ்துவினுடைய வருகையால் மேற் கொள்ளப்பட்டுவிட்டன என்று இயேசுவும் பவுலும் கருதினர். இதயத்தின் உள்ளார்ந்த தூய்மையானது சடங்கு முறையைவிட மிக முக்கியமானது. சட்டங்களையும் விதிமுறை களையும் உன்னிப்பாகக் கடைப்பிடிப்ப தென்பது கிறிஸ்துவின் மரணத்தினால் கொண்டு வரப்பட்ட பரிகாரத்தினின்று தரம் குறைந்ததாகும்.

எஸ்ஸேனிய இயக்கத்துடன் இயேசுவை இணைக்கின்ற முயற்சிகள் பெருமளவில் கைவிடப்பட்டுவிட்டன. புதிய ஏற்பாட்டின் எந்த ஆளும் அவர்களோடு உறவுகொண்டி ருக்கக் கூடுமாயின், நேர்மையின் கடுமை யான போதகராகிய திருமுழுக்கு யோவான் மட்டுமாகவே இருக்கும்.

**எஸ்தர்** (ESTHER *விண்மீன், மங்கை*)

எஸ்தர் நூலின் முக்கிய பாத்திரமாவாள். இவளது எபிரேயப் பெயர், மிருதுச்செடி என்ற பொருளுடைய அதசா என்பதாகும் (எஸ்.2:7). பெற்றோர் அற்ற இவள், அவ ளது சிற்றப்பன் மோர்தெக்காயால் வளர்க் கப்பட்டாள். இவள் ஏலாமின் முந்நாளை யத் தலைநகரான சூசாவில் வாழ்ந்து வந் தாள். இந்நகரம் பாரசீகர்களால் கைப்பற்றப் பட்டிருந்தது. அகசுவேரு ஆட்சிக்காலத்தில் நாடுகடத்தப்பட்ட நிலையில் பின்தங்கி விட்ட யூதர்களில் ஒருத்தி.

அரசி வஸ்தீ அரசருக்குமுன் வரக்கூடாது என்று ஒதுக்கப்பட்டபின் பல மங்கையர்களி லிருந்து அவள் இடத்தில் அரசியாக இருக் கத் தேர்ந்தெடுக்கப்பட்டாள் எஸ்தர். இந்தப் பதவியில் பாரசீகப் பேரரசில் எல்லா யூதர்க ளையும் அழிக்க ஆமான் செய்த சூழ்ச்சியை முறியடிப்பதில் தன்னுயிரையும் பணயம் வைக்கத் தயங்காதவள். அவளது முயற்சி யால் ஆமான் அழிந்தான். யூதர்கள் காப்பாற் றப்பட்டனர்.

**எஸ்தர் நூல்** (BOOK OF ESTHER)

1. முன்னுரை:-

இந்நூல் ஒரு பெண்ணைக் கதைத்தலைவி யாகக் கொண்ட ஒரு பழைய ஏற்பாட்டுப் புதினமாகும். பலவிதங்களில் தனித்தன்மை கொண்ட நூல். அனாதை அரசியாகிறாள்; நாடு கடத்தப்பட்டவன் அமைச்சனாகிறான். சதிகாரன் பழிவாங்கப் பெறுகிறான்- இவ்வாறு பல எழுச்சிகளையும், வீழ்ச்சிக ளையும் கொண்டதாகும் இந்நூல்.

2. பெயர்:-

எஸ்தர் என்பது கதைத் தலைவியின் பாரசீகப் பெயராகும். அதற்கு ''விண்மீன்'' என்று பொருள் கூறலாம். ஆனால் எஸ்தரின் எபிரேயப் பெயர் ''அதசா'' என்பதாகும். இதற்குப் பொருள் மிருதுச் செடி என்பதாகும். இது ஒரு மணமிக்க மலர்ச்செடியாகும். இது அவளது இயற்பெயராக இருக்கலாம். அல்லது கொடுக்கப்பட்ட ஒரு பட்டமாக இருக்கலாம். பின்னது உண்மையானால் அதசா என்ற சொல் அக்கேடியன் மொழியில் ''திருமணப் பெண்'' என்று பொருள்படும். இப்பட்டம் இசிதார் தேவதைக்குக் கொடுக்கப்பட்டதாகும்.

3. வாசகம்:-

இந்நூல் எபிரேயம், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. எல்லா எபிரேயப் பிரதிகளும் முரணில்லாத ஒரே நிலையானவையாகும். எழுபது நூல் வாசகம், லூசியன் வாசகம் என இரு கிரேக்க வடிவங்கள் உண்டு. இவை எபிரேய வாசகத்தைச் சுதந்தரமாக மொழி பெயர்த்துள்ளன. எபிரேய, கிரேக்க வாசகங்கள் வேறுபடுகின்றன. எபிரேய வாசகம் குறுகியது. கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தைவிட மூன்றில் ஒரு மடங்கு கூடுதலானது. கூடுதல் பகுதிகளில் சில முக்கியமானவை. இவற்றை எழுபது நூல் பிற்சேர்க்கையாகவும், லூசியன் வாசகம் வெவ்வேறு இடங்களிலும் வரிசைப்படுத்தியுள்ளன. எழுபது நூல் வாசகம் பொதுவாக மரபுவாசகமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்நூலை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்து வுல்கத்தா வாசகத்தை அமைத்த போது, புனித எரோனிமு கிரேக்க வாசகத்திலுள்ள கூடுதலான பகுதிகளை, நூலின் பிற்சேர்க்கையாக அமைத்தார். இப்பகுதிகளின் இறையூக்கத் தன்மைபற்றி எரோனிமு ஐயம் எழுப்பியுள்ளார். வுல்கத்தா வாசகத்தை எபிரேய வாசகத்தோடு ஒப்பிடுகையில், சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, சில பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன என்பது தெரியவருகிறது. இது நமக்குக் கிடைத்திருக்கும் எபிரேய வாசகத்திலிருந்து சிறிது வேறுபட்ட வாசகத்திலிருந்து எரோனிமு மொழி பெயர்த்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. எஸ்த 10:3- வரை எபிரேயத்திலிருந்து மொழி பெயர்த்தபின், எரோனிமு கிரேக்க வாசகத்தில் ஒரு பகுதியைக் கண்டிருக்க வேண்டும். அதை மொழி பெயர்த்துத் தமது வாசகத்தின் முடிவில் 10:4-11:1-இல் சேர்த்திருக்க வேண்டும். எபிரேய வாசகத்தை நிறைவு செய்யும் மற்றப் பகுதிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் கிரேக்கத்திலிருந்து மேலும் சில பகுதிகளை மொழிபெயர்த்து 11:2-16:24-இல் பிற்சேர்க்கையாய் அமைத்தார். இவ்வாறு கிரேக்கத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பகுதிகளே (10:4-16:24) கத்தோலிக்கர்களால் துணைத் திருமுறைப் பகுதியென்றும், பிரிவினைச் சகோதரர்களால் திருமுறை சேராத பகுதியென்றும் அழைக்கப்பட்டது. இப்பகுதிகளைக் கிரேக்கத்தில் கண்ட வரிசையிலேயே வுல்கத்தா வாசகம் கொண்டுள்ளது. ஆனால் 10:4 10:4-11:1 என்ற பகுதி இப்போதுள்ள இடத்தில் கதையைக் கோவையாக்கவில்லை. இது முடிவில் வரவேண்டும். பிற்சேர்க்கைகள் எங்கிருந்து வந்தன என்பது பற்றியோ, இவை மூலநூலைச் சேர்ந்தவைதான், தற்செயலான திட்டத்துடனே ஒதுக்கப்பட்டன என்பது பற்றியோ, பெரும்பாலான கத்தோலிக்க அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதுபோல், இவை மூலநூலோடு சேர்ந்த இறையூக்கம் பெற்ற பகுதிகளே என்பது பற்றியோ அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

கிரேக்க வாசகத்தில் கூடுதலாக உள்ள பகுதிகளுக்கும், எபிரேய வாசகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? இவை மொழி பெயர்ப்பன்று. கிரேக்கத்திலேயே நேரடியாக எழுதப்பட்டு, ஒரு முந்தைய எபிரேய வாசகத்தோடு சேர்க்கப்பட்டதாகக் கருதப் பல காரணங்கள் உள்ளன. 1) இப்பகுதிகளைக் கொண்ட எபிரேய, அரமெயிக் மூலம் பற்றி எத்தடயமும் இதுவரை கிடைக்கவில்லை. 2) இப்பகுதிகள் பல பழைய ஏற்பாட்டுப் பதில்களைக் கொண்டிருந்தாலும், இவை

ஒரு செமித்திய மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை என்பதற்கு ஓர் அடையாளமும் இல்லை. 3) இப்பகுதிகள் அனைத்தையும் ஒருவரே எழுதவில்லை. ஒரு சில இடைச்செருகல்களாக இருக்கக்கூடும் என்பர் சிலர். ஆனால் இப்பகுதிகளின் கிரேக்க நடையை ஒப்பிட்டுத் தெளிவு பெறப் போதிய சான்றுகள் இல்லை. 4) இப்பகுதிகளில் வரும் சில குறிப்புகள் எபிரேயப் பகுதியில் வரும் விவரிப்புகளோடு ஒத்துப் போகவில்லை (2:15-18-ஐ 14:5 ஓடும், 3:1-ஐ 16:10 ஓடும், 3:5 ஐ 12:6 ஓடும், 6:3 ஐ 12:5-3 ஓடும் ஒப்பிடுக). 5) சில பகுதிகள் இரட்டிப்பு வாசகங்களாக உள்ளன (2:5-6-ஐ 11:2-4-ஓடும், 2:2-4 ஓடும், 2:2-3-ஐ 12:1-3 ஓடும் ஒப்பிடுக).

எபிரேய வாசகத்தில் சமய போதகத்தைச் சுட்டக் கூடிய பகுதியேதுமில்லை எனலாம். இதை ஈடு செய்யம் பொருட்டே, அதாவது சில சமயக் கருத்தையாவது புகுத்த அல்லது அவற்றை வெளிப்படையாக்க, கிரேக்கப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நூலின் திட்டம் பற்றிக் கூறும்போது எப்படி இரு பகுதிகளையும் மாற்றி அமைத்து, கதையைக் கோவையாக அமைக்கலாம் என்று சுட்டிக் காட்டுவோம்.

4. திருமுறைப் பட்டியலில் எஸ்தர் நூல்:-

யூத கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலைத் தங்கள் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக் கொள்ளத் தயங்கியுள்ளன. ஏனெனில் இதன் எபிரேய வாசகத்தில் சமய போதகம் தெளிவாகவும், வெளிப்படையாகவும் இல்லை. இதை ஈடுசெய்யும் பொருட்டுத் தான் யூத விளக்கங்கள் இறைவனது நோக்கம் பற்றிய குறிப்புகளையும், எஸ்தர், மோர்தெக்காயின் மன்றாட்டுக்களையும் சேர்க்க முயன்றுள்ளன. மேலும் முழுவதும் சமயச் சார்பற்ற யூத விழாவின் போது வாசிக்கப்பட்டது. கும்ரான் குகைக் கண்டுபிடிப்புகளில் இந்நூலின் ஒரு துணுக்குக்கூட இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கி.பி. 90-ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதக் கூட்டத்தில் இந்நூல் ஏற்றுக் கொள்ளப்படுவது தர்க்கத்திற்குரியதாகவே இருந்தது. கி.பி. 2-ஆவது நூற்றாண்டில்தான் யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய ஏற்பாடு இந்நூலிலிருந்து எந்த எடுத்துக்காட்டையும் கூறவில்லை. ஆதித் திருச்சபை பழைய ஏற்பாட்டை அதன் கிரேக்க வடிவிலேயே ஏற்றுக் கொண்டது. ஆகவே எஸ்தர் நூலை அதன் நீண்டவடிவிலேயே திருச்சபை ஏற்றுக் கொண்டது. ஆனாலும் இதன் இறையூக்கத்தன்மை பற்றி ஐயம் இருந்து கொண்டேயிருந்தது. குறிப்பாகப் புனித அத்தனேசியஸ் இந்நூல் திருமுறைப்பட்டியலில் சேர்ந்ததாகக் கருதவில்லை. ஆனால் போதகத்திற்கு ஏதுவான நூலாக வாசிப்பதற்குரியது என்று கருதினார். காலத்தால் முந்தைய சில பட்டியல்கள் இந்நூலை விட்டுவிடுகின்றன. புனித எரோனிமு எபிரேயப் பகுதிகளைமட்டும் ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. கிரேக்கப் பகுதிகளைப் பிரிவினைச் சகோதரர்கள் திருமுறையைச் சேராத பகுதிகளாகக் கருதுகின்றனர். எபிரேய, கிரேக்கப் பகுதிகள் சேர்ந்த முழுநூலையும், அதன் மரபு வடிவில் திரிதெந்தின் பொதுச்சங்கம் இறையூக்கம் பெற்றதாக ஏற்றுக் கொண்டது.

5. நூல் தோன்றிய காலம்:-

இதுபற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. இக்காலக் கணிப்புக்கு நூலையே தழுவியிருக்க வேண்டியிருக்கிறது. இக்கதை பாரசீகப் பேரரசின் தலை நகரான சூசாவில் அகசுவேரு காலத்தில் நடந்ததாக உள்ளது. இது உண்மையென்றால் இந்நூல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியிருக்கவேண்டும். நூலில் வரும் நாட்குறிப்புக்கள் நம்பத் தகுந்தவையென்றால் இந்நூல் கி.மு.114-115க்கு முன் தோண்றியிருக்க முடியாது. ஏனெனில் ''தோலமி, கிளியோப்பத்திரா என்பவர்களுடைய ஆட்சியின் நான்காம் ஆண்டிலே தன்னைக் குரு என்றும் லேவியர்குலத்தினர் என்றும் சொல்லிக் கொண்ட தொசித்தேயுவும் அவர் புதல்வரான தோலமியும் பூரிம் என்னும் இக்கடிதத்தைக் கொண்டுவந்தனர். தோலமியின் மகனான இலிசிமாக்கு எருசலேமில் அதை மொழிபெயர்த்ததாக அவர் சொன்னார்''

(11:1). எகிப்திய வரலாற்றில் பதினான்கு தோலமிகளும் ஐந்து கிளியோபத்திராக்க ளும் உள்ளனர். இவர்களில் எந்தச் சோடியை இக்கூற்று குறிக்கிறது என்று கூறுவது கடி னம். நவீன ஆய்வாளர்களின் கருத்துப்படி, இங்கே குறிக்கப்படுபவன் எட்டாம் தோலமி யாக (116-107) இருக்கலாம்.

கி.மு. 180-ஐ ஒட்டி எழுதப்பட்ட சீராக் நூல் இந்நூலை அறிந்திருப்பதாகத் தெரிய வில்லை. ஏனெனில் அது தனது மூதாதையர் போற்றுரையில் எஸ்தர், மோர்தெக்காய், ஆகிய பெயர்களைக் கொண்டிருக்க வில்லை. இது இந்நூல் 180-க்கு முன் தோன் றியிருக்க முடியாது என்றுசுட்டுகிறது. கி.மு. 160-ஐ ஒட்டி எழுதப்பட்ட 2 மக் 15:36-இல் பூரிம் விழாவைப் பற்றிய காலத்தால் முந் திய குறிப்பு உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இது எஸ்தர் நூலை மக்கபேயர் ஆசிரியர் அறிந்திருப்பார் என்று உறுதியாகக் கூற வில்லை. எஸ்தர் நூலில் காணப்படும் தீவிர மான நாட்டுப்பற்று, மக்கபேயர் காலத்தில் நிலவியநாட்டுப் பற்றுணர்வோடும், புறவி னத்தார்பால் யூதர்கள் காட்டிய கடுமையான போக்கோடும் ஒத்துப்போகிறது. நூல் பழி வாங்கும் போக்கையும் அதேசமயம் வெற் றிப் பெருமிதத்தையும் காட்டுகிறது. யூதர் கள் ஒரு துன்பமிக்க காலத்தில் வாழ்ந்து தங்கள் நாடு மீண்டும் தன்னாட்சி பெறுவ தையும் சுட்டிச் செல்கிறது. ஆகவே மக்கபே யர் காலத்திற்குப் பின்வந்த இடுக்கண் நிலை இந்நூலுக்குப் பொருத்தமாக உள்ளது. பார சீக காலத்தின் இறுதி இந்நூலுக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை.

மேலும் நூலின் வரலாற்றுப் பண்பும் அதன் இலக்கிய வடிவமும் இந்நூல் பிற் காலத்தில்தான் தோன்றியது என்று சுட்டுகின் றன. இந்நூல் யூத திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகப் பிற்காலத்தில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், இதன் எந்தத் துணுக் கும் கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்ப டாமையும் இந்நூல் பிற்காலத்தில்தான் தோன்றியது என்று காட்டுகின்றன. இவற் றையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்நூல் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது எனத்துணிந்து கூறலாம். இதன் கிரேக்க மொழிபெயர்ப்பும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இக்கதை தோன்றிய காலத்தைக் கணிக்கச் சான்றுகள் இல்லை எனலாம்.

6. எவ்வாறு தோன்றியது?:-

இந்நூல், இப்போதிருக்கும் வடிவில், எப் படி உருவெடுத்தது என்பது பற்றி யூகம் செய்யலாமே தவிர உறுதியாகக் கூறமுடி யாது. மூலத்தில் ஒரு கதையிருந்தது. அதன் தோற்றம் பற்றிய ஒன்றையும் உறுதியாக அறிவதற்கில்லை. அது பழையது. அதிக நாட்டுப்பற்றும், இனப்பற்றும் கொண்டது. இக்கதை யூதர்களின் பேராபத்தையும், அதை அவர்கள் வெற்றி கொண்டதையும் முழுவ தும் சமயச் சார்பற்ற முறையில் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது (1:1-9:19). இஃ தோடு பிற்காலத்தில் வேறுதன்மையுடைய ஒருபகுதி சேர்க்கப்பட்டது (9:20 தொ). இது யூதர்கள் கடைப்பிடித்த பூரிம் விழாவை வெளிப்பட விளக்கியது. இந்த எபிரேய வடிவம் கிரேக்க மொழி பெயர்ப்பாளர்க ளால் எடுத்துப் பயன்படுத்தப்பட்டு, நீண்ட பிற் சேர்க்கைகளுடன் மறுபதிப்புச் செய்யப் பட்டது. அதன் விளைவாக, இந்நூல் இறை வன் தம் மக்கள் மேல்காட்டும் பராமரிப்பு பற்றிய ஆழ்ந்த விசுவாச அறிக்கையாக வடி வெடுத்தது. மன்றாட்டு, நோன்பின் ஆற் றலை எடுத்துக் காட்டியது. இவ்வாறு ஒரு பழைய, சமயச் சார்பற்ற கதை, இறைபக்தி மிக்க, இறையூக்கம் பெற்ற இலக்கியமாக மாறியது.

7. வரலாறா? மிட்ராசா?:-

இந்நூல் வெறும் கட்டுக்கதை என்பதிலி ருந்து உண்மையான வரலாறு என்பது வரை பலவகையான கருத்துக்கள் கூறப்பட்டுள் ளன. சில விவரங்களில் துல்லியத்தைக் கவனிப்பதோடு நிறைவு அடைபவர்கள் இந் நூல் ஒரு வரலாறு ஆகும் என்பர். இத்தகைய விவரங்கள்: கோட்டைக்கும் நகருக்குமுள்ள வேறுபாடு (3:15; 8:14; 9:6-11); அரசன் தங்கும் இடத்திற்கும் அந்தப்புரத்திற்கும்

இடையேயுள்ள வேறுபாடு (2:13-14); அரசனது திடீரென்று உணர்ச்சிவசப்படும், சிற்றின்பப்பண்பு (1:11-12; 2:1,12; 3:10; 6:1-10; 7:8-10; 8:7-12; 9:11-14). இவற்றிற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. பாரசீகர் அல்லாத ஆமானின் சகிப்புத்தன்மையற்ற தன்மை (3:1); ஏழு அமைச்சர்கள் கொண்ட ஆலோசனை சபை போன்ற பாரசீகரின் ஆட்சிமுறைகள் (1:13-21); அரசனின் மாற்றமுடியாத கட்டளை (1:9; 8:8); அரசனது அதிகாரத்தின் கீழிருந்த செய்தி அனுப்பும் மிகச்சிறந்த அமைப்பு (3:13; 8:10); அரசனது மாளிகையிலிருந்து துக்க ஆடைகள் புறம்பாக்கப்படுதல் (4:2); இவையெல்லாம் துல்லியமாக இருக்கலாம். ஆனால் வரலாற்று நூலைப் போலவே கற்பனை விவரிப்பும், உண்மையான பண்புகளை எடுத்துக் கூறலாம்.

நூலில் பல முரண்பாடுகளும் நம்ப முடியாதவைகளும் உள்ளன. வஸ்தியோ எஸ்தரோ அகசுவேருவின் அரசியாக இருக்கவில்லை; அமெஸ்ட்ரீஸ்தான அரசியாக இருந்தாள் என்று பாரசீக ஏடுகளிலிருந்து அறிகிறோம். பாரசீக அரசவையில் தங்கி, தனது மக்களைக் காத்த ஒரு யூத அரசியையோ, பாரசீக அரசவையில் உயர்பதவிக்கு வந்த பக்தியுள்ள யூதனான மோர்தெக்காயைப் பற்றியோ விவிலியத்திலோ (சீரா 44-49) அதற்குப் புறம்போ வேறு ஒரு சான்றுமில்லை. கி.மு. 597-இல் நெபுக்கதுனேசாரால் நாடுகடத்தப்பட்ட மோர்தெக்காய் அகசுவேரு காலத்தில் (486-465) பிரதம அமைச்சராக இருக்க இன்னும் தக்தி யுள்ளவராக இருக்கிறார். அவருக்கு அப்போது 100 வயதாவது இருக்கும். பாரசீகர்கள் பிறமக்களைச் சகிப்புத்தன்மையோடும் தயவோடும் நடத்தினர் என்று விவிலியத்திலிருந்தே அறிகிறோம். இதற்கு யூதர்களைக் கொலை செய்யும் திட்டம் முரணானதாக உள்ளது. வஸ்தியைப் பதவி நீக்கம் செய்ய அமைச்சர்களின் ஆலோசனை கேட்கும் அரசன் (1:13-21) முன் ஆலோசனையில்லாமல் தனது மக்களையே கொல்ல அனுமதிக்கிறான். அரசன் அனுமதியோடு அவனது மக்களையே திட்டமிட்டுக் கொல்வதும், அதுவும் இருநாளில் 73000 கொலைகள் செய்வதும் நம்பத் தகுந்ததாயில்லை. கொலை செய்யக் கட்டளையிட்டபின் காலம் தாழ்த்துவது பொருளற்றதும் உண்மைத் தன்மையற்றதுமாக இருக்கிறது (3:13தொ; 8:12). இவையெல்லாம் உண்மையில் நடந்தன என்பதற்கு விவிலியத்துக்குப் புறம்பான ஏடுகளில் சுவடுகள் காணப்பட வேண்டும். அப்படிக் காணப்படவில்லை.

அரசன் தன் அரசியின் பூர்வாங்கத்தை அறியாதிருப்பானா? யூதனான மோர்தெக்காய் தன் சகோதரனின் மகள் எஸ்தரின்மேல் அவ்வளவு அக்கறை காட்டும்போது அவள் ஒரு யூதப் பெண் என்பதை மறைக்க முடியுமா? மோர்தெக்காய் அரண்மனை வாசலுக்கு வந்துபோவது விவேகமா? மேலும் நிகழ்ச்சிகளைக் கால வரிசைப்படுத்த நூல் முயற்சிசெய்யவில்லை. இப்படியே கூறிக் கொண்டு போகலாம். இவையாவும் இந்நூல் ஒரு வரலாற்று நூல் அல்ல என்று சுட்டுகின்றன; வரலாற்று நூல் எழுதுவது ஆசிரியரது நோக்கமும் அன்று என்று காட்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட ஒழுக்க மனநிலையை வாசகர்களில் உண்டாக்க ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது. அக்கதா மிட்ராசு என்றழைக்கப்படும் இறையூக்கம் பெற்ற இலக்கிய வடிவில் இத்தகைய முரண்பாடுகளை எதிர்பார்க்கலாம். முன்பு கூறப்பட்டவையாவும் இந்நூல் வரலாற்றுப் பின்னணியில் தோன்றிய கதையாகும் என்று காட்டவல்லன. இது வெறும் கதைதான் என்று சுட்டக் கூடிய வேறு சில கூறுகளும் உள்ளன. மோர்தெக்காயைக் கொலை செய்ய அனுமதிகேட்டு இரவில்தான் ஆமான் அரசனை அணுகினானா? (6:4). அவன் அரசனுக்குக் கட்டுவதாகக் கூறும் 10,000 தாலந்து வெள்ளி கட்டமுடியாத ஒரு பெரும் தொகையாகும் (3:9). எதிர்பாராத முறையில் அரசன் தனக்குச் சாதகமாக இருப்பதைக் கண்டபின்னும், மிகவும் கொடுமையான நெருக்கடி நிலையில் உள்ள எஸ்தர் தனது வேண்டுகோளைத் தள்ளிப் போடுவாளா? (5-7) பேரரசின் எல்லா அதிகாரிகளுக்கும் ஆறுமாதத்திற்கு விருந்தளிக்கப்படு

கிறது. அரசனது அந்தப்புரத்துப் பெண்கள் ஓராண்டுக்குத் தயாரிக்கப்படுகின்றனர். மோர்தெக்காயைக் கொல்ல மிக உயர்ந்த ஒரு கழுமரம் தயாரிக்கப்படுகிறது. இந்த விவரங்கள் எல்லாம் கதைக்கு வண்ணம் அளிக்கப் பெரிதும் பயன்படலாம்.

ஒப்பிட்டு வேறுபடுத்தும் கூறுகளைக் கவனத்தில் வைத்துக்கதை அமைக்கப்படுகிறது. சதி என்னும் கருத்து முதலில் ஆமான், மோர்தெக்காய் ஆகிய இரு பாத்திரங்களுக்கு வரையறை செய்யப்பட்டாலும், பின்பு பாரசீகர், யூதர் ஆகிய இரு இனத்தவரிடையே நிலவும் பகையாக விரிவாக்கப்படுகிறது. சவுல் அகாக்கை 1சாமு 15-இல் வெற்றி கொள்வதுபோல் பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவனும் சவுலின் குடும்பத்தைச் சேர்ந்தவனுமான மோர்தெக்காய் (2:5) அகாக்கின் இனத்தைச் சேர்ந்த ஆமானை (3:1) வெற்றி கொள்கிறார். இருவருக்கும் இடையே எதிர்ப்பு, தந்திரம், மிக்க உக்கிரமாகப் பணயம் வைக்கும் மனப்பான்மை, ஆகியவை நிலவுகின்றன. வஸ்தி வெடுவெடுப்பானவள்; பழி வாங்கப் பட்ட புற இனத்தைச் சேர்ந்தவள்; இதற்கு மாறாக, எஸ்தர் அமைதியானவள், உயர்த்தப்பட்டவள்; அவள் இடத்தை இவள் எடுத்துக்கொள்கிறாள். யூதர்கள், பொதுவாகத் தங்கள் எதிரிகளின் நிலையைத் தலைகீழாக மாற்றுகின்றனர். அகசுவேரு விசித்திரமானவனாகத் தோன்றுகின்றார்; இரு சாராராலும் எளிதில் எடுப்பார் கைப்பாவையாகக் கையாளப் படுகிறார்.

செயல்கள் கையாளப் பட்டிருக்கும்முறை அனுபவ அறிவோடு நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று காட்டுகின்றன. தோற்றத்திற்குப் பொருந்தக் காட்டப்படுகின்றன. ஆழமான சூழ்ச்சிகள், வெற்றியைப் படிப்படியாக எடுத்துக்கூறி, எதிர்பார்ப்பு நிலையை உச்சநிலைக்கு இட்டுச் செல்கிறார் ஆசிரியர். மோர்தெக்காய்க்கு ஆமான் நிச்சயித்திருந்த நாளின் முன் இரவிலேயே அவர் அழிவதிலும் உள்ள முரண் அணி கவனிக்கத்தக்கது. ஊதாரி மகன் கதை சொல்லப்படும்வரை எஸ்தர் கதையை ஒத்த ஒரு கதையைச் சொல்ல வேறொருவர் இஸ்ராயேலில் தோன்றவில்லை எனலாம். நிகழ்ச்சிகளில் வேகமும் இல்லை. இனிய விவரிப்புகள் இடையிடையே புகுத்தப்பட்டுள்ளன. நாடகம் கலைப்பண்போடு முனைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இவை இந்நூலை ஒரு வரலாற்றுப் புதினம் என்று அழைக்கப் பலரைத் தூண்டியுள்ளது.

நன்னடத்தைக்குப் பிரமாணிக்கமாயிருந்த தற்காகச் சிறைப்பட்டு, விடுவிக்கப்பட்டு பாரவோன் அரசில் அமைச்சனாகி, யாக்கோபின் மக்களையும் எகிப்தியரையும் பாதுகாத்த யோசேப்பு, முற்றுகையிடப்பட்டுப் பேராபத்திலிருந்த தன் மக்களைமீட்ட யூதித்து, தானியேல் (3:6), எஸ்ரா, நெகமியா போன்ற எடுத்துக்காட்டான யூதர்கள் தங்கள் மக்களின் நன்மைக்காக அந்நிய அரசர்களின் தயவைப் பெற்று, பதவியில் உயர்ந்த கதைகள் ஆகிய வரலாற்றுக் கருவிலிருந்து எஸ்தர் நூல் வளர்ந்திருக்கலாம். எஸ்தர் பெயருக்கும் பாபிலோனியத் தேவதையின் இசிதார் என்ற பெயருக்கும், மோர்தெக்காய் என்ற பெயருக்கும் மார்தக்கு என்ற கடவுளின் பெயருக்கும் இடையே உள்ள ஒற்றுமையில் ஏதாவது பொருள் உண்டா? எஸ்தர்நூலின் சூழ்நிலைக்கொத்த நிலையைத் திருமுறைப் பட்டியலைச் சேராத மூன்றாம் மக்கபேயர் நூலில் காண்கின்றோம். இவையும், இவையொத்த சிந்தனைப்போக்கும், எஸ்தர்நூலே தனது போதகத் தன்மையை அதாவது அக்கதா மிட்ராசுத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது என்று சுட்டுகின்றன.

இவையெல்லாம் ஆசிரியர் முதன்மையாக அக்கறை செலுத்துவது வரலாறு எழுதுவதில் அல்ல; சமூக விசுவாசவளர்ச்சிக்கு ஏதுவான ஒரு போதகக் கதையை எழுதுவதிலேதான் என்று காட்டுகின்றன. ஆசிரியர் வாசகர்களின் விசுவாசத்தை வளர்க்கவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் எழுதுகிறார். இதற்காக, இஸ்ராயேல் வரலாற்றில் வேறு எங்கும் குறிக்கப்படாத ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகிறார். இது சிதறிக்

கிடந்த யூதர்களுக்கு எதிரான ஒரு பயங்கரத் திட்டமாகும். அது ஒரு பெண்ணின் இடையீட்டால் தோல்வியடைகிறது. இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சுதந்தரமாகவும் நாடகப் பாணியிலும் விவரித்து ஒரு போதக நூலை அமைக்கிறார் ஆசிரியர்.

*8. பூரிம் விழா:-*

எஸ்தர் 3:7 இல் ''பூர்'' என்ற சொல்லுக்குச் ''சீட்டுப் போடுதல்'' என்று பொருள் கொடுக்கப்படுகிறது. அதன் பன்மைச் சொல்லாகிய ''பூரிம்'' விழாக் கொண்டாடப்பட்ட இரு நாட்களைக் குறிக்கிறது. விழா நிறுவப்படுதல் 9:20-32-இல் விவரிக்கப்படுகிறது, எஸ்தர் நூல் ஒரு வரலாற்று நூலாகக் கருதப்படவில்லை என்றால், இவ்விழா யூதர்கள் ஒரு நெருக்கடியிலிருந்து தப்பியதை நினைவு கூறுவதாகக் கதை உண்மையிலேயே விளக்க முடியாது. ஆனால் இவ்விழா இருந்தது என்பது உண்மை. இதற்கு வரலாற்று ஆசிரியர் யோசிபஸ் சான்று கூகிறார். எஸ்தர் நூலில் வரும் நிகழ்ச்சிகளைப் பூரிம் விழாவோடு இணைத்துக் கூறுவதோடு நூல் முடிகிறது. இக்குறிப்பைப் பற்றி என்ன கூறலாம்?

பூரிம் விழாவுக்கும், இந்நூலுக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றியும், இவ்விழாத் தோன்றிய வரலாறு பற்றியும் பல கருத்துக்கள் உள்ளன. மேலும், தெளிவான சான்றுகள் கிடைக்கும்வரை, இவைவெறும் கருதுகோள்களாகவே இருக்கவேண்டும். பின் வரும் விளக்கம் ஓர் அறிவுசாா்ந்த கருதுகோள்களாகத் தோன்றுகிறது. பாபிலோனில் தோன்றிய ஒரு வசந்த கால விழாவை யூதர்கள் எடுத்து, ஆதார் மாதத்தில் (பெப்ரவரி-மார்ச்) சமயச் சார்பற்ற சூழ்நிலையில், கொண்டாடினர். இது சில நாடுகளில் இப்போது தபசுக்காலத்திற்கு முன்கொண்டாடப்படும் ''கார்னிவால்'' என்ற கேளிக்கைக் கொண்டாட்டத்தை ஒத்ததாகும் எனலாம். இந்த விழா நாட்களில் எஸ்தர் நூல் அதன் எபிரேய வடிவில் யூதர்களின் வெற்றிக்கு ஒத்ததாகவும் வாசிக்கப்பட்டது. காலப் போக்கில் இவ்விழா எஸ்தர் நூலில் விவரிக்கப்பட்டிருப்பதுபோல், பாரசீகத்தில் யூதர்கள் அடைந்த விடுதலையைக் கொண்டாடும் விழாவாகவும், நூல் அந்நாட்களுக்குரிய ''விழாக்கதையாகவும்'', 2 மக் 15:36-இல் வருவதுபோல் மோர்தெக்காயின் நாளாகவும் கருதப்பட்டது. ஆகவே விழாவையும் கொண்டாட்டத்தையும் எண்பித்து விளக்கும் பொருட்டு 6:20-32-என்ற சிக்கல் மிக்க பிற்சேர்க்கை நூலில் சேர்க்கப்பட்டது. இப்பிற்சேர்க்கையை முன்னிட்டுச் சீட்டுப்போடுதல் பற்றிய குறிப்பு 3:7-இல் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

*9. பழிவாங்கும் ஒழுக்கமுறை:-*

இந்நூலைப் பாராட்ட நம்மில் பலருக்கு முடியாமல் போகலாம். ஏனெனில் பகைவர்பால் காட்டும் வெறுப்பு அளவுக்கு மிஞ்சிப் போகிறது எனலாம். 9-ஆம் அதிகாரத்தில், யூதர்கள் தங்கள் எதிரிகளைப் பழிக்குப் பழி வாங்குதல் விவரிக்கப்படுகிறது. இது நமக்கு அதிர்ச்சியளிக்கலாம். யூதர்களுக்கு எதிரான சட்டத்தை நீக்குவது, ஆமான் தண்டிக்கப்பட வேண்டும் என்பது 8:11-இல் வருவது போல் தங்கள் எதிரிகளிடமிருந்து யூதர்களின் தங்களை வலிமையோடு பாதுகாத்துக் கொள்வது ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ளலாம்; ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் யூதர்கள் தாங்களே முன்முயற்சி செய்து, எதிரிகளைத் தாக்கி, பாகுபாடு இன்றிக் கொலை செய்வதும் (9:5), இன்னும் கொலை செய்யப் புதிய வாய்ப்பைத் தேடுவதாக எஸ்தர் சித்தரிக்கப்படுவதும் கிறிஸ்துவப் பாரம்பரிய ஒழுக்க முறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இந்த வேறுபாடு இருக்க வேண்டிய முறையிலேயே இருக்கிறது. ஆனால் எஸ்தர் நூலில் வரும் பழிவாங்கும் ஒழுக்க முறையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நூலில் விவரிக்கப்படும் யூதர்களின் நடத்தையைக் கிறிஸ்துவ ஒழுக்க மரபோடு ஒத்துப்போகச் செய்வது வீண்முயற்சியாகும். அப்படி ஒத்திருந்தால் அது நமக்கு வியப்பளிக்க வேண்டும். இறைவனின் பொறுமை, மேலும் மேலும் தூய்மையான ஒழுக்கக் குறிக்கோள் நெறியைப் படிப்படி

யாக அவர் வெளிப்படுத்துல், மனிதர்கள் இருக்கும் நிலையிலேயே அவர்களை ஏற்று, வளமற்ற அடிப்படையாகத் தோன்றுகின்ற வற்றின் மேல் தமது திட்டத்தை அமைக்க அவர் காட்டும் இணக்கம் ஆகியவற்றிற்குப் பழைய ஏற்பாட்டில் ஏராளமான சான்றுகள் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றிலும், இதுவே அவரது வழிமுறை யாக அமைந்துள்ளது. இதில் நாம் குறை காணுவதற்கு எதுவுமில்லை. அவரது செய் தியை எழுதிவைக்க, அவர் தேர்ந்து கொண்ட மக்களும் அவர்களது காலத்து வரையறைகளுக்கு உட்பட்டே செயல்பட்ட னர். நாமும் நமது காலத்து வரையறைக ளுக்கு உட்பட்டே செயல்படுகிறோம் என் பதை நினைவில் கொள்ளவேண்டும். எஸ் தர்நூல் தனது காலத்தில் நிலவிய வாதத்திற் குட்படாத மேல்வரிச் சட்டங்களையே ஏற் றுக் கொள்கிறது. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு, சலுகை பெற்ற கருவிகள் என்ற அளவில் தங்களின் உயர் நிலை பற்றிய கருத்து யூதச் சிந்தனையாளர்களிடையே ஆதிக்கம் செலுத்தியது. அதன் விளைவாகத் தங்களது முக்கியத்துவம் பற்றித் தனிச் சிறப் பான நோக்கம் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் பகைவர்களைப் பழிவாங்க விரும்பி யது, எப்போதும் தங்களுடைய காரியங்க ளுக்காக மட்டுமன்று, இறைவனது புகழை எண்பிக்கவும் ஆகும். இதுவே அவர்களது தலையாய குறிக்கோளாகும். யூதர்கள் இறை வனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர் களுக்கு எதிராகக்காட்டப்படும் எதிர்ப்பும், பகைமையும், ஒருவகையில், இறைவனுக் கும் அவர் உலகில் செயலாற்றும் முறைக் கும் காட்டும் எதிர்ப்பும் பகைமையுமாகும். இறுதியாக இந்தப் பழிவாங்கும் விருப்பத் தில் உண்மையான நீதியுணர்வும், பாவமும் அதற்கு இறைவன் அளிக்கும் பதிலும் பற் றிய கூரிய உணர்வு உள்ளது. இந்நிலை, தீமையின்பால் மந்தமான, முதுகெலும்பில் லாத அசட்டைத் தனத்தைவிட எவ்வளவோ மேலானது; விரும்பத்தக்கதுமாகும். இக் கருத்துக்கள் மிகைப்படுத்தப்படலாம்; அல் லது குறுகிய நோக்கில் விவரிக்கப்படலாம். ஆனால் அடிப்படை மதிப்பீடு இல்லாதவை அன்று.

10. திட்டம்:-

பிற்சேர்க்கைகள் எபிரேய வாசகத்தோடு கொண்டுள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுத லோடு இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள் ளது. இது கதையை ஒரு கோவையாகக் கொண்டுச் செல்ல உதவுகிறது.

1. முன்னுரை: *(11:2-2:6)*.
2. வஸ்தியின் வீழ்ச்சியும், எஸ்தரின் எழுச்சி யும் *(1:1-2:23)*.
3. யூதர்களை அழிக்க ஆமானின் சூழ்ச்சி *(3:1-15; 13:1-7)*.
4. மோர்தொக்காயும் எஸ்தரும் இறைவனி டம் மன்றாடுதல் *(4:1-16;13:8-14:19)*.
5. இறைவிடுதலை தயாரிக்கப்படுகிறது *(15:1-19; 5:1-16)*.
6. விதிகள் மாற்றப்படுகின்றன *(6:1-8:12;16:1-24; 8:13-9:19)*.
7. பூரிம் விழா *(9:20-10:3)*.
8. முடிவுரை *(10:4-11:1)*.

11. சமயப் பொருளும் மதிப்பீடும்:-

நூலின் எபிரேய வாசகம் 4:14-இல் வரும் மறைமுகமான குறிப்பைத்தவிர இறைவ னது பெயரைக் கொண்டிருக்கவில்லை. ஏன், இறைவனைப் பற்றியோ அவரது செயல்களைப் பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை. எபிரேயவாசகத்தில் இப்படி இருப் பது மிக விநோதமாக உள்ளது. இதற்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது.

ஆசிரியர் மனித காரியங்களில் இறைவ னது இயக்கத்தை மறுக்கவில்லை. அவரது மறைமுகமான செயலாற்றலை எடுத்துக் கூறுகிறார். அதாவது மனித காரியங்களில் இறைவன் தமது மக்களை நம்பிச் செயலாற் றவிட்டு, அதன் வழியாக அவர் செயலாற்றி நடத்துகிறார். சிதறிக்கிடந்த யூதர்கள் தாங் கள் எதிர்கொண்ட பொறுப்புகளை ஏற்கத் தயங்கவில்லை. இவர்கள் அந்நிய அரசுக் கும் தங்கள் மக்களுக்கும் பிரமாணிக்கமாய் இருக்கவேண்டும். அரசின் நன்மையையும் அதேசமயம் தங்கள் சகயூதர்களின் நன்மை

யையும் தேடவேண்டும். இரண்டுக்கும் இடையில் போராட்டம் ஏற்படும்போது, இரண்டுக்கும் பிரமாணிக்கமாய் இருப்பவர்கள்தான், ஏற்படும் இடையூறுகளை வெல்கின்றனர் என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். தனிநபரின் விதி நாட்டின் விதியோடும் மக்களின் விதியோடும் பின்னப்பட்டிருக்கிறது. யூத இனம் தொடர்ந்து இருப்பது, தனிப்பட்ட யூதர்கள் தங்கள் சக யூதர்களின் நன்மைக்காகத் தங்களையே அர்ப்பணிப்பதைப் பொறுத்ததாகும். இதற்காகச் சில சமயங்களில் தீவிரச் செயல்களையும் செய்ய வேண்டியிருக்கும். கதையில் யூத மக்களின் நன்மைக்கும் அந்நிய அரசின் நன்மைக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. யூதக் கதாபாத்திரங்கள் யூதர்களின் நன்மையைத் தேர்ந்தெடுப்பது, முரணான விதத்தில் பாரசீக அரசுக்கும் நன்மையாக அமைகிறது. யூதர்களின் எதிரியான ஆமானின் சூழ்ச்சியைவென்று எஸ்தரும், மோர்தெக்காயும் பாரசீகப் பேரரசின் நன்மைக்காகப் பாடுபடுகின்றனர். இதில் சகயூதர்களின் நன்மையைத் தேடுவது உடன்படிக்கை இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதற்குச்சமமாகும் என்றும், ஒரு நல்ல யூதனாக இருந்து, அதன் விளைவாக ஒரு நல்ல பாரசீகக் குடிமகனாக இருப்பது யாவேயின் பெயரை வெறுமனே கூப்பிடுவதைவிட மேலானது என்றும் ஆசிரியர் மறைமுகமாகப் படிப்பிக்கிறார். இப்போதகம் யூத சமயச் சிந்தனைக்குப் புறம்பானதன்று; உள்ளடங்கியதே. யூத விசுவாசத்தால் ஒளியூட்டப்படுகிறது.

ஆனால் பிற்கால வாசகர்கள், குறிப்பாகக் கிரேக்க மொழிபெயர்ப்பாளர்கள், இந்நூலை அதன் சமயச் சார்பற்ற வடிவில் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இக்குறையை நீக்கி, இந்நூல் பரிசுத்தமானது என்று ஏற்றுக் கொள்வதற்கு வேண்டி இறைவனைப் பற்றிய குறிப்புகளையும் மன்றாட்டுக்களையும் கொண்ட பகுதிகளைச் சேர்த்தனர். இவை யாவும் வெறும் மொழிபெயர்ப்புகள் அன்று. வேறொரு வாசகத்திலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவையாகும். இவற்றில் சில சமயக் கூறுகளை அறிமுகம் செய்யவோ அவற்றை வெளிப்படையாக எடுத்துக்காட்டவோ சேர்க்கப்பட்டவையாகும்.

இந்நூலின் சமய மதிப்பீடு, எஸ்தர், மோர்தெக்காய் ஆகியோரின் பழிவாங்கும் நடத்தையை அடிப்படையாகக் கொண்டதன்று, கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தின் தன்மையையே மாற்றி விடுகிறது எனலாம். இது சில இடங்களில் எபிரேயத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதை விரிவாக்குகிறது. இவ்வாறு *2:20*-இல் ''இறைவனுக்கு அஞ்சித் தனது கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி'' மோர்தெக்காய் எஸ்தரை எச்சரிக்கிறார். *6:1*-இல் ''அரசரிடமிருந்து தூக்கத்தை ஆண்டவர் விரட்டிவிட்டார்'' என்று கூறப்படுகிறது. பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்ட பகுதிகள் *(11:2-16:24)* கதைக்குப் புதிய கோணத்தை அளிக்கின்றன. தொடக்கத்தில் மோர்தெக்காயின் கனவும், முடிவில் அதுபற்றிய விளக்கமும் முழுக்கதையும் இறைவனால் கட்டுப்படுத்தப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று தெளிவாகக் காட்டுகின்றன *(11:10-12; 10:4,9-13)*. மோர்தெக்காயின் மன்றாட்டு, படைப்பவராகிய இறைவன் யாவற்றையும் ஆள்கிறார் என்று ஏற்று, அவருக்குச் சிறப்பான பணி உரியதாகும் என்று ஆர்வத்தோடு போதிக்கிறது. அந்த இறைவனே குலமுதியவர்களை வழிநடத்தினார். யாத்திரையில் தம்மையே வெளிப்படுத்தினார். அவரே இஸ்ராயேலைத் தமக்கே உரிய உரிமைச் சொத்தாகவும் பாகமாகவும் தெரிந்து கொண்டார். தமது மகிமைக்காகவே தமது இரக்கத்தினால் இஸ்ராயேலை மீட்பார். இவையாவும் பழைய ஏற்பாட்டில் சாதாரணமாய்க் காணப்படும் போதகமாகும்; இவ்விதமே எஸ்தரின் மன்றாட்டும் அமைந்திருக்கிறது. அவள் துக்க ஆடை அணிதலும், உண்ணாநோன்பிருத்தலும் குறிக்கப்படுகின்றன. ஆனால் எபிரேய வாசகத்தில் அவள் செபிப்பதாகச் சுட்டிக் காட்டப்படவில்லை என்பர் சிலர். ஆனால் மேற்கூறப்பட்ட செயல்கள் அவள் இறைவனிடம் திரும்புதலின் ஒரு பகுதியாகும். கடந்த காலத்தில் இறைவன் இஸ்ராயேலை அடிக்கடி மீட்டது போல், இப்போதும் அவர்

ஒருவராலேயே அவர்களை மீட்க முடியும். மக்களின் பதிதத்திற்காக இறைவன் அவர்களைத் தண்டித்தார். ஆனால் அவர்கள் அவருடைய மக்கள். அவரது மகிமையின் கருவியாக அவர்களைத் தேர்ந்து கொண்டார். அவர்கள் முழுவதும் அழிவதை அனுமதியார். யூதர்களின் பகைவர்கள் வெற்றிபெற்றால் அது ''கடவுள் அல்லாதவை'' பெற்ற வெற்றிபோலாகும். அதற்கு இடந்தந்து, தமது உரிமையான மகிமையை இறைவன் துறக்க மாட்டார். அவரது மக்களை மீட்டு, அவரே ''கடவுள்களின் அரசன்'' என்று தெளிவாகக்காட்ட அவரது தன்மையே கோருகிறது. இவ்வாறு, இறைவன் தமது மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதில் காட்டும் பராமரிப்பே அந்நூலின் தலையாய சமயச் செய்தியாகும். இந்த ஆறுதல் அளிக்கும் செய்தியை நாடகப் பாணியில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**எஸ்தர் நூலின் பிற்சேர்க்கை** (Additions to ESTHER)

107 வாக்குகள் அடங்கிய 6 பக்கங்கள் கொண்ட பகுதி, எபிரேய மொழியில் எழுதப்பட்ட எஸ்தர் நூலில் காணப்படவில்லை. ஆனால் எழுபதுநூல் வாசகத்தில் வெவ்வேறு இடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவற்றைச் சேர்த்து எஸ்தர் நூலின் பிற்சேர்க்கை என்று கூறுவர். இந்த இடைச்செருகல்கள் கி.மு. 100-இல் வாழ்ந்த ஓர் எகிப்திய யூதரால் செய்யப்பட்டதாக இருக்கலாம். இவரது நோக்கம், ஒருதலை நோக்கும், சமயச் சார்பற்ற தன்மையுமுடைய எஸ்தர் நூலுக்குச் சமயநோக்கு அளிப்பதாக இருக்கலாம். இப்பிற்சேர்க்கையில் இறைவன் அடிக்கடி குறிக்கப்படுகிறார். மன்றாட்டு முக்கியபாகம் வகிக்கிறது. இறைவன் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தார் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இக்கருத்து, புறஇனத்தாரை வெறுக்கும் போக்கால் பங்கப்படுகிறது.

எழுபது நூல், இவற்றை நூலின் வெவ்வேறு இடங்களில் செருகியது. இவற்றையெல்லாம் எரேனிமு ஒன்று சேர்த்து நூலின் முடிவில் அமைத்தார். இவைதான் 10:4-16:24 என்ற பகுதியாகும். ஆனால் இவற்றைப் பொருத்தமாக அமைக்கவில்லை. இவற்றைச் சரியான முறையில் வரிசைப்படுத்தினால் பின்வருமாறு அமையும்.

1. 11:2-12:6 : யூதர்கள் விடுதலை பெறுவர் என்று முன்னறிவிக்கும் மோர்தெக்காயின் கனவும்; அரசன் அகசுவேருக்கு எதிரான சூழ்ச்சியை அவர் கண்டுபிடித்தலும்.
2. 13:1-7 : யூதர்களைக் கொலை செய்ய அனுதிக்கும் அகசுவேருவின் சட்டம்.
3. 13:8-14:19 : மோர்தெக்காய் மற்றும் எஸ்தரின் மன்றாட்டுக்கள்.
4. 15:1-16 : எஸ்தர் அரசன் முன் வருதல்
5. 16:1-24 : ஆமானைத் தண்டித்து யூதர்களுக்கு உதவி செய்யும், அரசனின் இரண்டாம் சட்டம்.
6. 10:4-11:1 : மோர்தெக்காயின் கனவுக்கு விளக்கமும், எஸ்தர் நூல் உண்மைத் தன்மையுடையது என்று அவர் அறிவித்தலும்.

(1) எஸ்தர் 1:1-க்கு முன்னும், (2) 3:13-க்குப் பின்னும், (3)(4) 4:17-க்குப் பின்னும் (5) 8:12-க்குப் பின்னும், (6) 10:3-க்குப் பின்னும் அமைந்திருந்தால் பொருத்தமுடையதாக இருக்கும்.

இவற்றில் வரலாற்று மதிப்பீடு அதிகமில்லை. நூலின் முன் பகுதியோடு சில முரண்பாடுகளைக் கொண்டுள்ளது.

இவற்றைப் பிரிவினைக் கிறிஸ்தவ சபைகள் திருமுறை நூல் பட்டியலுக்குப் புறம்பானதாகக் கருதுவர். ஆனால் கத்தோலிக்கத் திருச்சபை, இப்பிற் சேர்க்கைகளையும் உள்ளிட்ட கிரேக்க வாசகத்தையே திருமுறை நூல் பட்டியலில் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்கிறது.

எஸ்ரா (EZRA - யாவே உதவுகிறார்)

1. செருபாபேலோடு பாபிலோனியாவிலிருந்து எருசலேமுக்கு வந்த குருக்களில் ஒருவர் (நெக 12:1; நெக 10:2-இல் அசரியா).

இவர் மெசுல்லாம் வீட்டைச் சேர்ந்தவர் யோயாகிம் பெரிய குருவாக இருந்தபோது குருவாக இருந்தவர் *(12:12-13)*.

*2.* நெகமியா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு *(நெக 12:33)*. ஒருவேளை *12:1*-இல் குறிக்கப் படும் எஸ்ராவின் பேரனாக இருக்கலாம். சாதோக்கின் இன வழியாக வந்த, ஆரோனின் மகன் பினகாசின் வழித்தோன்றல் *(எஸ் 7:1-5)*.

*3.* எஸ்ரா, நெகமியா, நாளாகமங்களில் உள்ள அவருடைய சொந்த வரலாற்றுக் குறிப்புகளின் ஆசிரியர் என நம்பப்பட்டவர் *(எஸ் 7-10; நெக 8-10)*. இந்தக் குறிப்பேடுகளின்படி, எஸ் *7:1-5*-இல் கொடுக்கப்பட்ட தலைமுறை அட்டவணையில் வரும் எஸ்ரா பாபிலோனியாவைச் சேர்ந்த அடிமைத்தனத்திற்குட்பட்டவர்களின் கூட்டத்தாரை கி.மு. *458*-இல் எருசலேமுக்கு வழிநடத்தியவர். இவர் மோசே சட்டத்தில் வல்லவரான குருவும் சட்ட வல்லுநரும் ஆவார். பாரசீக அரசன் பணியில் உயர்ந்த இடம் வகித்திருக்க வேண்டும். அரமேய அரச சட்டம் பெரிய அதிகாரம் இவருக்குக் கொடுத்தது *(7:27-28)*. அதற்காக இவரும் ஆண்டவருக்கு நன்றி சொன்னார். *7:7*-இன்படி அரசன் முதலாம் அர்த்தாசெருசு லோன்சிமானுசின் ஆட்சியின் 7-ஆவது ஆண்டு பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் தன் பயணத்தைத் தொடங்கினார். அவரோடு குருக்கள் லேவியர்கள், பாடகர்கள், வாயில் காப்போர்கள், ஆலய ஊழியர்கள் உடன் சென்றனர். இவரிடமிருந்து இறைவனுடைய சட்டப்படி எருசலேமையும் யூதாவையும்பற்றி விவரம் அறிய வேண்டும் என்று அரசனும் அவரது ஏழு ஆலோசகர்களும் கட்டளையிட்டிருந்தனர் *(7:14)*. யூதர்களின் ஆதரவைப் பெறுவது பாரசீக அரசனுக்கும், பேரரசின் நிலைப்புக்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் எகிப்தின் வெல்லப்பட்டபகுதி எப்போதும் நம்பிக்கைக்குரியதாக அமையவில்லை. இக்காரணத்திற்காக, அரசன் எஸ்ராவுக்குப் பல சலுகைகளும் உரிமைகளும் கொடுத்தான் *(7:15-25)*. கட்டளை பெற்ற எஸ்ரா, பயணத்திற்குத் தயார் செய்து, பாதுகாப்பான பயணத்திற்கு. இறைவனுடைய உதவியைத் தேட நோன்பிருந்தபின் முதலாம் அர்த்தாசெருசு ஏழாம் ஆண்டு *(458)* முதல் மாதம் *12*-ஆம் தேதி பயணம் தொடங்கினார். எஸ்ராவோடு அடிமைத்தனத்துக்குப் பிறகு திரும்பி வந்தவர்களின் பட்டியல் ஒன்றும் அவர் கொண்டு வந்திருந்த கோயில் பாத்திரங்களின் பட்டியல் ஒன்றும் எஸ்ரா *8*-ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புறச்சமயத்தைச் சார்ந்த பெண்களோடு யூதர்கள் செய்து கொள்ளும் திருமணங்களை எருசலேம் மக்கள் சகித்துக் கொண்டதால் எஸ்ரா அருவருப்படைந்தார் *(எஸ் 9)*. எருசலேமுக்கு வந்த *4* மாதங்களுக்குப்பின் தனது சீர்திருத்தத்தைத் தொடங்கினார். சபையோர் மனம் வருந்தினர். அந்தத் திருமணங்கள் கலைக்கப்பட்டதாகக் கட்டளையிடப்பட்டது. கலப்புத் திருமணங்கள் கணக்கெடுக்கப்பட்டன *(எஸ் 10)*. சட்டப்புத்தகம் வாசிக்கப்பட்டது *(நெக 7:73-8:12)*. கூடாரத் திருவிழா கொண்டாடப்பட்டது *(8:13-9:37)*. சட்டப்புத்தகம் வாசிக்கப்பட்டதற்கு அடையாளமாகத் தலைவர்கள் கையெழுத்துப்போட்டார்கள் *(9:38-10,39)*. கலப்புத் திருமணத்தை எதிர்க்கவும், ஓய்வுநாள், ஓய்வு ஆண்டைக் கடைப்பிடிக்கவும், 'கோயில் வரி' கட்டவும், மரம், பலிப்பொருட்கள், காணிக்கைப் பொருட்களைக் கோயிலுக்குத் தரவும் தாங்களே உறுதி மொழி எடுத்தார்கள்.

விவிலியத்திலிருந்து 'எஸ்ரா'வைப் பற்றி நமக்குத் தெரிந்ததெல்லாம் இவ்வளவுதான்; அவர் சட்டவல்லுநர். குரு என்று அழைக்கப்பட்டபோதிலும், பாபிலோனியாவிலிருந்து இறைவனின் சட்டத்தைக் கையில் எடுத்து வந்தவர் என்று சொல்லப்பட்டபோதிலும், யூதமதத்தைப் புதுப்பித்த 'இரண்டாவது மோசே' என்று கருதப்படுவதற்கான காரணத்தை விளக்குவது கடினம். அவருடைய சுயசரிதையின் பெரும்பகுதியை, அவர்தான் வரலாற்று ஆள் என்று எண்ணிக்கொண்டு 'நான்' ஆகம ஆசிரியர், அவர் இறந்து நீண்ட காலத்திற்குப் பிறகு எழுதினார். ஒரு யூதப்

பாரம்பரியம் இவரை இறைவாக்கினர் மலாக்கியோடு ஒன்றுபடுத்திக் கூறுகிறது. யூத இலக்கிய ஏடுகள் எல்லாம் இவரால் தான் மீண்டும் அமைக்கப்பட்டன என்று சொல்லப்படுகிறது. மேலும் உண்மையில் ''மோசே இவருக்கு முந்தியிராவிட்டால் எஸ்ரா ஐந்நூலைப் பெற்றிருப்பார்'' என்றும் கூறுகிறது. நாள் ஆகம ஆசிரியர் இவரைச் சட்டவல்லுநர்களின் சங்கத்தைத் தோற்று வித்தவராகக் கருதுகிறார்.

**எஸ்ரா** (EZRAH - யாவே உதவி செய்கிறார்)

யூதா இனத்தைச் சேர்ந்தவர், காலேபின் வழித் தோன்றல்களில் குறிக்கப்படுகிறார் (1 நாள் 4:17).

**எஸ்ரா, நெகமியா நூல்கள்** (Books of EZRA and NEHEMIAH)

1. நாளாகமங்களும், எஸ்ரா, நெகமியா நூல்களும் சேர்ந்து ஒரே தொகுப்பாகும். ஒரே இறையியல் அமைப்மையும் கொண் டவை. எஸ்ரா, நெகமியா நூல்கள் நாளாக மங்களின் தொடர்ச்சியாகும்; நாளாகமங்க ளைப்போல் எஸ்ரா, நெகமியா நூல்கள் மூலத்தில் ஒரே நூலாக இருந்தன. எழுபது நூல்தான் நாளாகமங்களைப்போல் இவற் றையும் இரு வேறு நூல்களாகப் பிரித்தது. எதன் அடிப்படையில் இவ்வாறு பிரிக்கப் பட்டன என்று கூற முடியாது. இப்போது இரு வேறு நூல்களாகக் கருதப்பட்டாலும் இரண்டிற்கும் சேர்ந்து அறிமுகம் வழங்குகி றோம். ஏனெனில் இரண்டு நூல்களும் ஒரே காலத்தைப் பற்றியும் ஒரே தலைப்பைப் பற்றியும் விவரிக்கின்றன என்று கூறலாம். பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும் பிய யூதர்களின் சமூக, சமய வரலாற்றை விவரிக்கிறது. திரும்பிய யூத சமூகம் ஆல யத்தை எழுப்பி உடன்படிக்கையைப் புதுப் பித்துத் தங்களையே தூய்மைப் படுத்திய மறுமலர்ச்சியைப் பற்றி இரு நூல்களும் கூறுகின்றன.

2. பெயர்:-

முதல் நூலுக்குக் குருவும், மறைநூல் வல்லுநருமான எஸ்ராவின் பெயர் கொடுக் கப்படுகிறது. எஸ்ரா என்ற சொல்லுக்கு 'உதவி' என்று பொருள் அளிக்கலாம். இரண் டாவது நூலுக்கு 'நெகமியா' என்ற பெயர் வழங்குகிறது. இச்சொல்லுக்கு ''யாவே ஆறுதல் அளிக்கிறார்'' என்று பொருள் அளிக்கலாம். ''வுல்காத்தா பதிப்பும், சில கத்தோலிக்க மொழி பெயர்ப்புகளும் இந் நூல்களை முதலாம் எஸ்ரா, இரண்டாம் எஸ்ரா என்று முறையே அழைத்தன. அண் மையில் செய்யப்பட்ட கத்தோலிக்கத் தமிழ்ப் பதிப்பு இவற்றை எஸ்ரா, நெகமியா ஆகமங்கள்' என்று அழைக்கிறது.

போலி எஸ்ரா நூல், எஸ்ராவின் காட்சி போன்ற போலி நூல்கள் இப்பெயர் பற்றிய பிரச்சனையை மேலும் சிக்கலாக்க வல்லன. அதை நாம் கவனிக்க வேண்டியதில்லை.

3. ஆசிரியரும் காலமும்:-

பெரும்பாலான ஆய்வாளர்கள் நாளாகம ஆசிரியர்தான் இவ்விரு நூல்களையும் எழுதி னார் என்று ஏற்றுக் கொள்வர். இவ்வாசிரி யர் எஸ்ராதான் என்றும் சிலர் கூறுவர். ஒருவேளை எஸ்ராவின் சீடருள் ஒருவர் இந்நூல்களை நாம் கொண்டிருக்கும் வடி வில் தொகுத்திருக்கக்கூடும். எப்போது இந் நூல்கள் எழுதப்பட்டன என்பது பற்றி அவ் வளவு இலகுவாய் முடிவு செய்ய அறிஞரால் இயலவில்லை. ஒரு சிலர் 300-க்கு முந்தியது என்பர். வேறுசிலர் 400-300-க்கு இடைப் பட்ட காலத்தில் தோன்றியிருக்கும் என்பர்.

4. மூலங்கள்:-

ஆசிரியர் இந்நூலை எழுதியபோது பின் வரும் மூலங்கள் அவருக்குக் கிடைத்தன எனலாம்.

அ. எஸ்ராவின் வாழ்க்கைக் குறிப்பு (எஸ் 7:1-10:44; நெக7:73-9:37).

ஆ. நெகமியாவின் வாழ்க்கைக் குறிப்பு (நெக 1:1-7:72; 11:1-2; 12:27-43; 13:4-31).

இவை இரண்டும் இந்நூல்களின் முதன் மையான மூலங்களாகும்.

இ. அரமேயிக்கு ஏடுகள்:- 1) எருசலேமின் சுவர்கள் கட்டுவது பற்றி பாரசீக மன்னன் முதலாம் அர்த்தாசெருசுவிடம் இரகூம் செய்த முறையீடும் மன்னரது பதிலும் (எஸ் 4:7-23). 2) எருசலேமில் ஆலயம் கட்டுவது பற்றிப் பாரசீக மன்னன் முதலாம் தாரியுவுக்குத் தத்தனாய் எழுதிய மடலும் (5:7-17) மன்னன் பதிலும் (6:3-12). ஆலயம் அர்ப்பணிக்கப்படுதல் (6:13-18). 3) எருசலேமில் ஆலய வழிபாட்டைத் திருத்தியமைக்க எஸ்ராவுக்கு அர்த்தாசெருசு விடுத்த ஆணை (7:12-26).

ஈ. எபிரேய மொழியிலுள்ள அதிகாரபூர்வமான ஏடுகள்:-

1) கி.மு. 538-இல் யூதர்களுக்கு விடுதலை அளித்துச் சைரஸ் அளித்த ஆணை (1:2-4). இது அர்த்தாசெருசு தத்தனாயிக்கு எழுதிய மடலில் காணப்படும் அரமேயிக்கு வடிவத்திலிருந்து வேறுபடுகிறது (6:3-5). 2) பாபிலோனியாவிலிருந்து திரும்பிய முதல் குழுவின் பட்டியல் (எஸ் 2:1-70; நெக 7:6-72). 3) எஸ்ராவோடு திரும்பியவர்களின் பட்டியல் (எஸ் 8:1-14). 4) புற இன மனைவியரை நீக்கிவிட வாக்குறுதி அளித்தவர்களின் பட்டியல் (10:18-44). 5)எருசலேமின் சுவர்களைப் பழுது பார்க்க உதவி செய்தவர் பட்டியல் (நெக 3:1-32). 6) உடன்படிக்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களின் பட்டியல் (10:1-28). உடன்படிக்கையின் விவரங்கள் (10:29-40). 7) நெகமியா காலத்தில் எருசலேமிலும் அதைச் சுற்றிலும் வாழ்ந்தவர்களின் பட்டியல் (11:3-36). 8. குருக்கள் லேவியர் பட்டியல் (12:1-26)

அரமேயிக்கு மூலங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இவை ஆலயமும் சுவர்களும் கட்டப்பட்டபோது எழுந்த சமாரியர்களின் எதிர்ப்பை விவரிக்கின்றன. இவற்றோடு பாரசீக அதிகார பூர்வமான ஏடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன (எஸ் 4:9-22; 5:7-17; 6:2-12). சில பகுதிகளுக்கு எபிரேய மூலமும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

இம்மூலங்களை இந்நூலின் ஆசிரியர் பயன்படுத்தும் விதம் கவனிக்கத் தக்கதாகும். எஸ் 8:36,-க்குப்பின் வரவேண்டிய பகுதியை (சட்டத்தை வாசித்தல், கூடார விழா, பாவ அறிக்கையிடுதல்) நெகமியா நூலின் திட்டத்திற்குள் புகுத்துகிறார் (நெக 7:73-9:37). விவரிப்பு படர்க்கையாக இருக்கும்போதும், வாசகத்தைத் திருத்தியமைக்கும் போதும் தவிர, இவர் சாதாரணமாக வலுவந்தமாக நுழையமாட்டார். ஒரு வேளை இவர் முன்னுரையை அமைத்திருக்கலாம் (எஸ் 7:1-11). விவிலிய ஓசையுடைய அர்த்தாசெருசுவின் கட்டளையை இவர் எழுதினரா என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாது.

பலவாறு நாட்குறிப்பிட்ட ஏடுகளை இந்நூல் கொண்டிருப்பதை மனதில் கொண்டால், நெகமியாவின் வாழ்க்கைக் குறிப்பு அதிகமாகப் பதிப்பு மாற்றம் செய்யப்படவில்லை எனலாம். இதைச் சிறப்பிக்கும் ஆழ்ந்த உணர்ச்சி அழுத்தம் இது பொய்யுடையது என்ற ஐயத்தை எதிர்க்கிறது. இந்நூலாசியரின் கைவண்ணம் 12:33-36.41-42-இல் தெரிகின்றதென்றால், அது இவ்வாசகம் பிற பகுதியோடு மாறி நிற்பதால்தான்.

கவர் கட்டுவதற்கு எதிர்ப்பு (எஸ் 4:6-23) தெளிவாக ஆலயம் கட்டியபின் வந்ததாகும். குறிக்கப்படும் அரசர்களின் பெயர்கள் இதைப் போதியமட்டும் தெளிவாக்குகின்றன. எஸ் 4:23க்கும் 5:1க்கும் இடையே உள்ள இணைப்பு அமைப்பில் குறைபாடு இருக்கிறதாகத் தோன்றுகிறது. 4:22 என்ற வரி பதிப்பாசிரியருடையதாகும்.

எபிரேய மூலம் இருந்ததென்றால் அதை இந்நூலாசிரியர் தனது விவரிப்பில் சேர்த்துக் கொண்டார் என்று கூறுவது மேல். எஸ் 3:2-8; 4:1-3க்குச் சரியான விதம் விளக்கம் கூறுவதற்கு எப்போதும் சிறிது கடினமாகவே இருக்கும். செசிபசாருக்குப் பதிலாகச் செருபாபேல் குறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சமாரியர்களின் எரிச்சலும் தொந்தரவும் காலத்திற்கு முந்தியே கூறப்படுகிறது. சான்று:- 3:8-ஐ 4:2 ஓடும்; 4:1-3-ஐ, 5:3 ஓடும் ஒப்பிடுக. ஆகவே கடினமாகக்

கண்டிக்கப்பட்ட (ஆகா 1:14-15) திரும்பி வந்தோரின் இயங்காத் தன்மையை மன்னிப்பது ஆசிரியரது எண்ணமாய் இருக்கக் கூடுமா?

5. காலவரைப் பிரச்சனை:-

அ. எஸ்ராவின் செயல்கள் நெகமியாவின் செயல்களுக்கு முந்தியவையா, பிந்தியவையா, ஒத்த காலத்தவையா என்பதுதான் பிரச்சனை. அர்த்தாசெருசுவின் ஆட்சிக் காலத்தின் அடிப்படையில் காலம் கணிக்கப்படுகிறது. ஆகவே இப்பாரசீக மன்னனைக் கொண்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இப்பெயர் கொண்ட மூன்று அரசர்கள் உள்ளனர். முதலாம் அர்த்தாசெருசு (கி.மு. 465-424), இரண்டாம் அர்த்தாசெருசு (404-358) மூன்றாம் அர்த்தாசெருசு (359-338). மூன்றாம் அர்த்தாசெருசு முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆளவில்லை (நெக 5:140); ஆகவே இவரை நமது ஆய்விலிருந்து விட்டு விடலாம்.

இந்நூல் ஆசிரியர், வெறுமனே, அர்த்தாசெருசு என்று குறிப்பிடுகிறார். முதலாம் மன்னனையா, அல்லது இரண்டாம் மன்னனையா, என்று சொல்ல முடியாது. நெகமியாவின் செயல்கள் அர்த்தாசெருசுவின் ஆட்சியின் 20-32-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தவை என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இக்கருத்து எலஃபென்டைன் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட புல்தாள் ஏட்டை அடிப்படையாகக் கொண்டது. அதே ஏட்டின்படி கி.மு. 408-இல் எருசலேமில் யோகனான் தலைமைக் குருவாக இருக்கிறார். எலியாசிபு பெரிய குருவாக இருந்த காலத்தில் நெகமியா எருசலேமுக்கு வருகிறார் (நெக 3:1). நெகமியா 12-இன் படி யோகனான் எலியாசிபுக்குப்பின் வந்தவராவார். இதன்படி முதலாம் அர்த்தாசெருசுவின் ஆட்சிக் காலத்தில் அதாவது 445 ஆம் ஆண்டில் நெகமியா முதல் தடவை யூதாவுக்கு வந்திருக்க வேண்டும். அதே ஏடு 408-ஆம் ஆண்டின் சினுபல்லித்து மக்களின் ஆதிக்கச் செயல்களுக்குச் சான்று கூறுகிறது. இந்தச் சினுபல்லித்து நெகமியாவில் (2:10-13:28) குறிக்கப்படும் சம்பல்லாத்தாயிருக்கக் கூடும். சினுபல்லித்து 108-ஆம் ஆண்டில் ஏற்கனவே முதியவராகி அவரது மக்கள் ஆட்சி செய்துகொண்டிருந்ததால், நெகமியா தனது செயல்களை முதலாம் அர்த்தாசெருசின் ஆட்சியில் தொடங்கியிருக்க வேண்டும். நூலில் குறிக்கப்படும் அரசன் இரண்டாம் அர்த்தாசெருசு என்பவர்தாம் என்று கூறும் வாதம், இரண்டாம் எலியாசிபுவையும் இரண்டாம் சம்பல்லாத்தையும் கருது கோளாகக் கொள்கிறது. ஆனால் இதற்கு ஓர் அடிப்படையுமில்லை. நெகமியா 445-ஆம் ஆண்டில் தனது செயல்களைத் தொடங்கினார் என்று உறுதியாகக் கொள்ளலாம். ஆனால் எஸ்ராவின் காலத்தை இவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது. இதற்கு மூன்று கருதுகோள்கள் உண்டு.

ஆ. எஸ்ரா நெகமியாவுக்கு முந்தியவர்:-

எஸ்ரா 458-இல் செயல்படத் தொடங்கினார். எஸ் 7:7-இன் படி அர்த்தாசெருசின் ஆட்சியில் 7-ஆவது ஆண்டில் எஸ்ரா எருசலேமுக்கு வந்தார். சரியான காலவரை என்று பொதுவாகக் கருதப்படும் மறையில் நிகழ்ச்சியுரைகளை ஏற்றுக் கொண்டால், நெகமியாவின் செயல்களைக் கணிக்க அடிப்படையாகவுள்ள அர்த்தாசெருசின் ஆட்சியில்தான் எஸ்ராவும் செயல்பட்டார். இதன்படி 458/57-இல் அவர் செயல்பட்டார். இதன்படி எஸ்ரா நெகமியாவுக்கு முந்தியவராவார். இந்நிலைக்குச் சார்பாகப் பல காரணங்களைக் காட்டுவார். முதலாம் அர்த்தாசெருசின் முதல் வருடங்களில் எஸ்ரா தனது குழுவோடு எருசலேமுக்கு வந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது (எஸ் 4:12). கி.மு. 519-இல் தாரியு எகிப்தியச் சட்டத்தைத் தொகுக்கக் கட்டளையிட்டதுபோல் முதலாம் அர்த்தாசெருசு மோசேயின் சட்டத்தைத் தொகுக்கும் பொறுப்பை எஸ்ராவிடம் ஒப்படைத்திருக்கலாம். அதிகார பூர்வமாகச் சட்டம் வாசிக்கப்படுவது ஏழாவது ஆண்டில் நடைபெற்றிருக்கலாம், அவ்வருடம் ஓய்வு ஆண்டாகவும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. செயல் அனுபவம் அதிகமில்லாத இறையியல் வல்லுந

ரான எஸ்ராவின் செயல்கள் அவ்வளவு வெற்றி பெறவில்லை. ஆகையால் செயல் அனுபவம் மிக்க ஆளுநன் நெகமியா, எஸ்ராவுக்குப்பின் செயல்படுகிறார். இந்நிலைக்கு மாறாக முக்கியமான வாதம் ஒன்று உள்ளது. கி.மு. 458-ஐ ஒட்டிப் பாரசீகப் பேரரசு முழுவதும் குழப்பத்தில் ஆழ்ந்து இருந்தது. எஸ்ராவின் தூதைப் போன்று அமைதியான தூதுக்கு இடமுமில்லை; வாய்ப்புமில்லை.

இ. நெகேமியாவுக்குப்பின் 398-ஐ ஒட்டி எஸ்ரா செயல்படுகிறார்:-

இந்நிலைக்கு இலக்கிய வரலாற்று ஆய்வுகள் ஆதரவளிப்பதாகத் தெரிகிறது. இதன்படி இந்நூலாசிரியர் காலவரையறைப்படி, தனது விவரிப்பைக் கொடுக்கவில்லை. இதற்கு மாறாக, ஆலயம் கட்டப்படுதல் போன்ற காலத்தால் முந்தைய தாரியு கால நிகழ்ச்சிகளை (515) எஸ்ரா தோன்றுதற்கு முன்னும் (எஸ் 6:1-3) பின் சைரஸ், செருசு, அர்த்தாசெருசு ஆகியோரின் காலத்தில் பிந்தைய நிகழ்ச்சியை, முன்னதாகவேயும் கொடுக்கிறார். இப்படிக் கால இடமாற்றம் எஸ்ராவின் வாழ்வு பற்றிய பகுதியிலும் நிகழ்ந்திருக்கலாம். இந்நிலைப்படி எஸ்ராவும் நெகமியாவும் செயல்களை 398/97-ஐ ஒட்டிச் செய்து முடித்தார் எனலாம். எஸ்ரா செய்ததும் நெகமியா செய்ததும் மிகத் தொடர்புடையன. ஆகவே அவற்றை வேறு பட்டவைகளாகக் கருதுவது அவ்வளவு நன்றன்று.

இவ்விரண்டு நிலைகளுக்கும் அறிஞருள் ஆதரவாளர் உண்டு. ஏதாவது ஒரு நிலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், எஸ்ரா நெகமியா வரிசையை எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இரண்டாவது நிலைக்கு இரண்டு அர்த்தாசெருசுகள் வேண்டியிருந்தது. இவற்றைத் தவிர்த்து, இடையிட்ட கருதுகோளை விரும்புகிறோம்.

ஈ. எஸ்ரா, நெகமியா ஓரளவு ஒத்த காலத்தவர்கள்:-

நெகமியாவின் இரு தூதுக்கிடையில் எஸ்ராவின் தூது அமைகிறது. தனது தூதின் முதற் பகுதியின் முடிவில் சமய வழிபாட்டுக் காரியங்களில் நிலவிய அமைதியற்ற நிலையைக் குருவல்லாத ஒருவரால் சமாளிக்க முடியாது என்பதை நெகமியா ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இது சட்ட வல்லுநரான எஸ்ராவின் தூதைத் தூண்டுகிறது. இதன்படி எஸ்ரா 'விண்ணக இறைவனின் திருச்சட்ட நூலில் வல்லுநர்' (எஸ் 7:12) என்ற பட்டத்தோடு எருசலேமுக்கு அனுப்பப்படுகிறார். அறிஞர் சிலரது கருத்துப்படி நெகமியாவோடு எஸ்ராவும் உண்மையான நிலையை அறிய எருசலேமுக்குப் பயணமானார். அங்குநிலவிய அவல நிலையை அறிந்த பின் அவர் பாபிலோனுக்குத் திரும்பி வந்து வேண்டிய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு, புதியதோர் நாடு திரும்பும் குழுவினரோடு எருசலேமுக்கு வந்தார். இக்கருதுகோளுக்கு ஏற்றபடி எஸ் 7:7-இல் இரு திருத்தம் அவசியமாகிறது. ஏழாம் ஆண்டு என்பதற்குப் பதிலாக இருபத்தேழாம் ஆண்டு என்று வாசிக்க வேண்டும். 27-ஆம் ஆண்டைத் தேர்ந்து கொண்டால் சட்டம் பகிரங்கமாக வாசிக்கப்படும்போது நெகமியாவோடு எஸ்ரா இருப்பதையும், சட்டநூல் வல்லுநரின் செயல் ஆளுநரின் செயலோடு இணைக்கப்பட்டால் எளிதில் அறிக்கை ஏன் இடம் பெயர்ந்தது என்பதையும் எளிதாக விவரிக்க முடியும் (நெக 7:37-8:9). இதன்படி எஸ்ராவும் நெகமியாவும் ஒருவரை ஒருவர் சார்ந்து செயல்பட்டனர்.

எஸ்ரா, நெகமியா ஆகியோருடைய சீர்திருத்தங்களைப் பற்றிய காலவரையறை பற்றிய பிரச்சனைக்குக் கருத்தொருமித்த விடை காண்பது எளிதன்று. ஆயினும் இருவரும் ஒரே காலத்தில் உழைத்தனர் என்ற மூன்றாவது நிலை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு மிக நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இதன்படி நிகழ்ச்சிகளின் வரிசை பின்வருமாறு நிகழ்ந்திருக்கலாம்.

உ. நிகழ்ச்சிகளின் வரிசை:-

கி.மு. 538-520 இடையில் நாடு திரும்புவோரின் பல குழுக்கள் எருசலேமை

அடைந்தன. முதற் குழுவிற்குச் செசிபசார் தலைமை தாங்கினார். இவர் தகனப் பலி பீடத்தை அமைத்தார். ஆலயத்திற்கு அடித் தளம் அமைத்தார் (எஸ் 1:1;3:13).

520-515 இடையில் ஆகாய், செக்கரியா ஆகிய இறைவாக்கினரால் உற்சாகப்படுத்தப் பட்டு (எஸ் 5:1; ஆகா 1:2; செக் 2:5-17) ஆலயத்தைத் திரும்பக் கட்டுதல் செருபாபே லால் முடிக்கப்படுகிறது. ஆலயம் திரு நிலைப்படுத்தப்படுகிறது. பாஸ்கு விழா என்ற விடுதலை விழாக் கொண்டாடப்படுகி றது (எஸ் 5:1-6:22).

515-445 இடையில் செருசு(486-465), அர்த் தாசெருசு (464-424) ஆகியோரின் ஆட்சியில் சமாரியர்கள் சுவர் எழுப்பப்படுவதை எதிர்த்து, நிறுத்தி வைக்கின்றனர் (எஸ் 4:6-23).

அர்த்தாசெருசின் 20-ஆம் ஆண்டில் (445) நெகமியா தனது முதல் தூதைத் தொடங்குகி றார். சுவர்கள் மீண்டும் கட்டப்படுகின்றன. அமைதியாக ஒன்றித்து வாழ ஒழுங்கு செய் யப்படுகிறது. கட்டட வேலை முடிகிறது; சுவர்கள் அர்ப்பணிக்கப்படுகின்றன (நெக 1:1-4:17; 6:1-7:73; 11:1-20.25; 12:27-32.37-43).

அர்த்தாசெருசின் 27-ஆம் ஆண்டில் (438) எஸ்ரா யூத சமூகத்தின் ஆன்மீகத் தலைமை யைத் திருத்தியமைக்கிறார் (எஸ் 7:1-8:36). சட்டத்தை விளக்குகிறார் (நெக 7:73-8:12). கூடார விழாவிற்குத் தலைமை தாங்குகிறார் (எஸ் 8:13-18). கலப்பு மணத்தை ஒழித்துக் கட்டத் தீர்மானிக்கிறார் (நெக 9:1-2).

அர்த்தாசெருசின் 32-ஆம் ஆண்டில் (438) 12 ஆண்டுகள் ஆண்டபின் நெகமியா சூசா வுக்குத் திரும்பினார் (நெக 5:14). அர்த்தா செருசின் மரணத்துக்கு முன் (424) நெகமியா யூதாவுக்கு இரண்டாம் முறையாகத் தூது வருகிறார். இக்காலத்தில் எஸ்ராவைப் பின் பற்றி, சமூகத்தின் சட்ட, வழிபாட்டுப் பாரம் பரியங்களைக் காக்கும் பொருட்டு ஆளுந ரான நெகமியா, தவறுகளுக்கு எதிராகச் செயல்படுகிறார் (நெக 13:4-13). இந்நிலை யில்தான் தலைவர்களிடமும் லேவியர்களிட மும், குருக்களிடமும் அவர்களின் அங்கீகா ரத்தைப் பெறும்பொருட்டு உடன்படிக்கை யைப் புதுப்பிக்கும் ஏட்டைச் சமர்ப்பிக்கி றார் (நெக 10).

மேற்கூறப்பட்டவை ஒரு கருதுகோளே. இதைவிட மேலான கருதுகோள் கொடுக்கப் பட்டால் ஏற்றுக்கொள்ளத் தயங்கவேண்டிய தில்லை. நெகமியா-எஸ்ரா என்ற வரி சையை ஏற்றுக் கொண்டால், இரண்டாம் அர்த்தாசெருசின் 7-ஆம் ஆண்டில் (398) எஸ்ரா யூதாவுக்கு வந்தார் என்று ஏற்று அவரது பணிக்குச் சிறப்பளிக்கலாம்.

6. நூலின் திட்டம்:-

அ. எஸ்ரா ஆகமம்:-

நாளாகமங்கள் விட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை இந்நூல் தொடர்கிறது.

I. இரண்டாம் ஆலயம் (எஸ் 1:1-6:22)

அ) சைரசும் நாடு திரும்புதலும் (1:1-11).

ஆ) செருபாபேலும் திரும்பியோரின் பட்டி யலும் (2:1-70).

இ) ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டுதல் (3:1-13).

ஈ) ஆலய வேலை தடைப்படுதல் - சமாரியர் கள் (4:1-24).

உ) ஆலய வேலை தொடர்கிறது; ஆலயம் திருநிலைப்படுத்தப்படுதலும், பாஸ்கு விழாவும் (5:1-6:22).

II. எஸ்ராவின் வருகையும் சட்டமும் (எஸ் 7:1-10:44; நெக 8-9)

அ) எஸ்ரா எருசலேமுக்கு வருதலும் அவ ரது குருகுல சட்டச் செயல்களும் (7:1-8:31).

ஆ) எஸ்ராவின் மன்றாட்டும், எருசலேமின் நிலையும் (8:32-10:44).

ஆ. நெகமியா ஆகமம்:-

III. எருசலேம் நகர் மீண்டும் கட்டப்படுதல் (நெக 1:1-7:72)

அ) சூசாவில் நெகமியா (1:1-2:11).

1) எருசலேமின் இழி நிலையும், நெகமி

யாவின் மன்றாட்டும் (1:1-10).

2) நெகமியாவும் மன்னன் அர்த்தாசெருசும் (2:1-8).

3) யூதாவில் நெகமியா (2:9-11).

ஆ) எருசலேம் நகர் கட்டப்படுதல் (2:12-3:32).

1) இரவில் சுவரைச் சுற்றிப் பார்த்தல் (2:12-15).

2) பொது மக்கள் ஆதரவு (2:16-20).

3) நகர் கட்டப்படுதல் (3:1-32).

இ) வெற்றிகள் (4:1-7:5).

1) போரோடு கூடிய விடா முயற்சி (4:1-23).

2) சமூக நிதிச் சீர்திருத்தம்(5:1-19).

3) முதல் தூது முடிவடைதல் (6:1-7:72.)

IV எஸ்ராவின் சட்ட அறிக்கை (8:1; 9:38)

V நெகமியாவின் இறுதிப்பணி (10:1-13:30)

அ) இஸ்ராயேலின் உடன்படிக்கை (10:1-39).

ஆ) மக்களின் கணக்கு (11:1-12:26).

இ) சுவரைப் பகிரங்கமாக அர்ப்பணித்தல் (12:27-13:11).

ஈ. விசுவாசத்தின் பாதுகாவலான நெகமியா (13:15-30).

8. வரலாற்று மதிப்பீடு:-

நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்கள் வரலாற்றுக்கு இவ்விரு நூல்கள்தான் சாட்சியாக அமைந்துள்ளன. இது ஒன்றே இந்நூல்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும். ஆனால் இவை நம்பத்தக்கவைதாமா, எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை என்ற கேள்விகள் எழும்.

ஒரு சிலர் இந்நூல்கள் வரலாற்று உண்மைத் தன்மையுடையன என்று ஏற்றுக் கொள்ள மறுப்பர். மற்றவர்கள் இந்நூல்கள் நம்பத்தகுந்தவை என்று ஏற்றுக் கொள்வர். நாளாகமங்களில் காணப்படுவதுபோல் இந்நூல்களின் ஆசிரியரும் இறையியல் நோக்கோடு வரலாற்றைப் பார்க்கிறார். இதன் விளைவாக அர்த்தாசெருசு எஸ்ராவுக்கு அளித்த ஆணைக்கு ஆசிரியர் யூதத் தொனியை அளிக்கிறார். அதில் மோசேயின் சட்டம் இறைவனது ''ஞானம்'' என்று குறிப்பிடப்படுகிறது (எஸ் 8:25). சைரஸ் 538-இல் அளித்த கட்டளை பற்றி இருவாசகங்கள் உள்ளன (எஸ் 1:2-4; 6:3-5). இது ஆசிரியர் தனது மூலங்களைத் திருத்தி எழுதினார் என்பதற்குச் சான்றாகும்.

இந்நூல்களில் வருபவை கால வரையறையைக் கொண்டிருக்கவில்லை. சான்றாக:- எஸ் 4:7-23-இல் வரும் பிற்கால நிகழ்ச்சியை எஸ் 5:1-6:22-இல் வரும்முன் நிகழ்ச்சியோடு ஒட்டுப் போடுகிறார். எஸ்ரா, நெகமியா ஆகியோரின் பணிகளின் வரிசையும் மற்றொரு சான்றாகும். இது பற்றி முன்பே கூறியுள்ளோம். இன்னும் பல பிரச்சனைகள் உண்டு. இவை விளக்கவுரையாளர்களுக்கு ஒரு பெரும் தொந்தரவாக இருந்து கொண்டேயிருக்கும். இருப்பினும் இந்நூல்களின் அடிப்படையை நம்பத் தகுதி இருக்கிறது என்று ஏற்றுக் கொள்வர் இக்கால அறிஞர்கள்.

இந்நூல்களின் மூலங்கள் உறுதியாக நம்பத்தகுந்தவை; அவற்றை அவர் பயன்படுத்தும் விதம் அவற்றின் தன்மையைப் பாதிக்கவில்லை. மேலும் மேற்காசியா வரலாறு பற்றிய அவரது வெளிப்படையான அல்லது மறைமுகமான குறிப்புகள் மேலான எண்ணத்தை உண்டாக்குகின்றன. எருசலேம் சமூகத்திற்குச் சார்பாகப் பாரசீக அரசவை காட்டிய நட்புச் செயல்கள் தங்களுக்குக்கீழ் உள்ள மாநிலங்களிடம் அவர்கள் வழக்கமாகக் காட்டிய போக்கோடு ஒத்துப் போகிறது. இந்நூலில் காணப்படும் விவரங்கள் சரியாக உள்ளன. பாரசீக நாட்டின் ஆட்சித்துறை அமைப்பு சரியாகக் கொடுக்கப்படுகிறது. ஆளுநர்களுக்குள்ளே உறவும், ஆளுநர்களுக்கும் பேரரசனாருக்கும் இடையேயுள்ள உறவும் சரியான குறிப்புகளுடன் கொடுக்கப்படுகிறது (எஸ் 4:7-23; 5:3-17; 6:1-13). சமாரியர்களது எதிர்ப்பு, யூதேயாவுக்கு எதிராக வட அரசினர் கொண்டிருந்த ஆழ்ந்து பதிந்து போன வெறுப்போடு ஒத்துப்போகிறது. நக

ரையும் ஆலயத்தையும் திரும்ப அமைத்தல், கடந்தகால இறைவாக்குகளோடும் நிகழ் கால இறைவாக்குகளோடும் ஒத்துப் போகிறது (ஆகா 1-2; செக் 1-8; மலா 1:6-10; 2:1-24). இவையாவும் இந்நூல்கள் வரலாற்று அடிப்படையைக் கொண்டவை, நம்பத்தகுந் தவை என்று காட்டவல்லன. மேலும் பகுப் பாராய்ச்சி இந்நூலின் பெரும் பகுதி ஒத்த கால ஏடுகளைக் கொண்டிருப்பதாகக் காட்டுகிறது. இதனால் முன் ஏற்றுக்கொள்ளப்பட்டதை விட இப்போது இந்நூல்களின் வரலாற்று மதிப்பீடு உயர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்கள் எருசலேமில் குடியேறிய வரலாறு' பற்றி எஸ்ரா 1-6 என்ற ஒரே மூலம்தான் வரலாற்றுக்குக் கிடைத்துள்ளது.

நெகமியா ஆகமம் திடீரென்று முடிகிறது. ஒருவேளை இதை அடுத்த வேறு ஒரு நூல் இருந்திருக்கலாம். அது நமக்குக் கிடைத்திலது.

9. இறையியல் போதகம்:-

ஆலயமும் நகரும் யூத சமூகமும் திரும்ப அமைக்கப்படுதலில் இறைவனின் மீட்கும் சித்தம் மீண்டும் செயல்படுவதாகத் தோன்றுகிறது. வாக்குறுதி, உடன்படிக்கை, பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்குப்பின் கிறிஸ்துவை நோக்கிச்செல்லும் மீட்புத் திட்டத்தில் இது புதியதொரு படியாகும்; இப்படி இந்நூல் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

யூத சமூகத்தின் சமயக் கூறு தெளிவாகத் தனித்து நிற்கிறது. தாவீதின் இவ்வுலக அரசை மீண்டும் நிறுவுவதில் மெசியாவாகிய அரசனின் வருகை, யாவே எல்லோர் மேலும் கொள்ளும் ஆட்சியை நிறுவுதல் போன்றவற்றை நாம் எதிர்பார்த்திருக்கலாம் (ஆகா 2:4-9; செக் 6:10-17; ஏச 60:62). இந்த மாயை நிலை அகற்றப்பட வேண்டியகாலம் வந்துவிட்டது. தாவீது குலத்தவரான செருபாபேலோ (எஸ் 3:21), தாவீது குலத்தைச் சேராதவரான நெகமியாவோ, அரசமரபை மீண்டும் நிறுவமாட்டார்கள். நகரையும், மக்களையும் திரும்ப அமைத்தலுக்குத் தங்களையே அர்ப்பணித்த இவ்விரு யாவேயின் பக்தர்களும் பாரசீக அதிகாரத்திற்கும் முழுமையான பற்றுறுதி காட்டினர். பாரசீகர்கள் சிலவற்றில் தாராளத்தன்மையைக் காட்டினாலும் (எஸ்1:7-10; 6:4-5:8; 7:13-26; நெக 2:49) தங்கள் ஆட்சி முறையில் (எஸ் 4:6-23; 5:3.5), சிறப்பாக வரிகளைப் பொருத்தமட்டில் (நெக 5:4-15) சிறிது கடினமாகவே இருந்தனர். அரசியல் சுயாட்சி எதிர்பார்க்கக் கூடியதன்று. ஆகவே நாடு திரும்பியவர்கள் ஆலயத்தை மையமாகக் கொண்டு வாழத் தொடங்குகின்றனர். மோசேயின் சட்டத்தை யூதா நாட்டின் சட்டமாகப் பாபிலோன் அரசு ஏற்றுக் கொண்டது. யூதர்கள் சட்டத்தைத் தியானித்தனர். அதைக் கடைப்பிடிப்பதைப் பேறாகக் கருதினர். அரசியல் சுதந்தரத்தைத் திரும்பப் பெறுவதைவிட யாவே வழிபாட்டில் சிறந்து விளங்குவதில் யூத சமூகம் கவனம் செலுத்தியது.

இது பிறர் தொடர்பற்று தனித்து நிற்கும் போக்கை ஏற்படுத்தியது. திரும்ப அமைத்தலின் விளைவான யூதத்துவம் சட்ட மனப்பான்மை கொண்டு விளங்கியது. இது பாதுகாக்கும் எல்லைக் கோடாகவும் அதே சமயம் பிற இனத்தவரிடமிருந்து பிரித்து வைக்கும் கவராகவும் அமைந்தது. யாவருக்கும் இறையரசுக்கு இட்டுச் செல்லும் கதவைத் திறந்து விடுவதற்குப்பதிலாகச் சிலருக்கு மட்டுமே அப்படிச் செய்வதாகத் தோன்றலாம். ஆயினும் இந்நிலை பிற்காலத்தில் வந்த கசிதீமியர்களின் எதிர்ப்புகளையும் மக்க பேயர்களின் கிளர்ச்சிகளையும் விளக்க ஏதுவாகுகிறது.

நாளாகம ஆசிரியருக்குப் பிரியமான கருத்துக்கள் இங்கே காணப்படுகின்றன. அவை தாவீது அரசமரபுக்குக் காட்டும் ஆதரவு. இது யூதா, பென்யாமின் இனத்தவர்களைச் சார்ந்தவர்களைக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது (எஸ் 1:5; 4:1; நெக 11:4). வழிபாட்டுச் சடங்குகள் குருக்களின் பாகம், லேவியர்களின் அலுவல் போன்ற தாவீதின் நிறுவனங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் (நெக 12:44-47) ஆகியவைகளும் இதைக் காட்டுகின்றன.

இந்நூல்களின் சமயப் பொருள், அவை அளிக்கும் செய்தியைவிட, அவை அளிக்கும் வரலாற்றில் அடங்கியுள்ளது.- இவ்விரு நூல்களும் எருசலேமிலும், பாலஸ்தீனத்திலும் யூத சமூகத்தைத் திரும்ப அமைப்பதில் எடுக்கப்பட்ட செயல் முறைப்படிகளை எடுத்துக் கூறுகின்றன. இஸ்ராயேல் யாவேயின் மக்களாவர் என்ற உறுதியையும் அவர் எல்லா இனத்தவராலும் அறியப்படுவதற்காக இஸ்ராயேல் மக்கள் பிழைத்துத் தொடர்ந்து வாழ்வர் என்ற வாக்குறுதிகளையும் அடிப்படையாகக் கொண்ட விசுவாசத்தில் இச்செயல்கள் நடைபெறுகின்றன. இந்தச் சமூகந்தான் யூதத்துவத்தின் தொடக்கமாகும். இந்த யூதத்துவம் இஸ்ராயேலின் இலக்கியங்களைப் பாதுகாத்துத் தானும் இலக்கியங்களை உண்டாக்கியது. அமைதி நிறைந்த இக்காலம் பழைய ஏற்பாட்டு விவிலியத்தின் தொட்டில் என்பர். பெரும் வரலாற்றுக் கேடுகளுக்குப் பிறகு, இஸ்ராயேல் தனது பெரும் பொருட்குவியலும் சலுகையும் இறைவனது சட்டம்தான் என்பதை உணர்ந்தது. ஆனால் இக்காலத்தில் சட்டம், கட்டுப்படுத்தும், கொடுமைப்படுத்தும், தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதிலே இன்னும் இறைவனின் அருள், இஸ்ராயேலின் தேர்வு ஆகியவற்றில் கொண்டிருந்த விசுவாசம் நிறைந்து இருந்தது. இச்சமூகம்தான் இஸ்ராயேலின் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட சமய அரசியல் சமூகத்தைப் படைத்தது. இச்சமூகத்திலிருந்துதான் புதிய ஏற்பாடும் கிறிஸ்துவமும் தோன்றின.

நாடு திரும்பி வந்த யூதர்களுக்கு ஒரு ஏமாற்றம் காத்திருந்தது. உப-ஏசயா அளித்திருந்த வாக்குறுதி, அதாவது மெசியா வருகை பற்றிய வாக்குறுதி, செயல்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால் அது தூர வருங் காலத்திற்குரியதொன்று என்று புதிய விளக்கம் கொடுக்க வேண்டியிருந்தது. நாடு திரும்பியவர்களுக்கு இதைப் புரிந்துகொள்வது கடினமாயிருந்தது. அறிய முடியாத இறைத் திட்டத்தில் மெசியா பற்றிய வாக்குறுதி செயல்பட இன்னும் காலம் நிறைவு பெறவில்லை. இன்னும் 500 ஆண்டுகள் செல்ல வேண்டியிருந்தது. அப்போது, எதிர்பார்த்த அரசர் வருவார். எல்லார் மேலும் அவர் செலுத்தும் அரசு வரும். ஆனால் அவ்வரசு மக்கள் எதிர்பார்த்த விதத்தில் வருமா?

*10. முடிவுரை:-*

இவ்விரு நூல்களோடு இஸ்ராயேல் வரலாற்றின் நாளாகம பாரம்பரியத்தின் திரை விழுகிறது. இதற்குப் பின் யூதர்களுக்கு என்ன நேர்ந்தது? தோபியா, எஸ்தர் போன்ற ஆகமங்களையும் தானியேலின் சில பகுதிகளையும் வாசித்தால் யூதர்களின் வரலாற்றைச் சிறிது யூகிக்கலாம். கி.மு. 175-ஐ ஒட்டிய வரலாற்றை மக்கபேயர் ஆகமங்கள் விவரிக்கின்றன.

இந்த 'இருட் காலத்தில்' ஒரு குறிப்பிடத்தக்க விளைவு ஏற்பட்டது. பாலஸ்தீனத்திற்கு வெளியே 'சிதறிக்கிடந்த' யூதர்கள் முக்கியத்துவம் பெற்றனர். எஸ்ரா, நெகமியா ஆகமங்களில் தெளிவாகத் தெரிவது போல், எல்லா யூதர்களும் பாபிலோனிலிருந்து திரும்பவில்லை. பலர் அங்கேயே தங்கிவிட்டனர். பிற நாடுகளில் சிதறிக்கிடந்த குழுக்கள் அலக்சாந்திரியா, அந்தியோக்கியா, உரோமை ஆகிய இடங்களில் சிறப்புப் பெற்று வாழ்ந்தனர். சமய காரியங்களில் இவர்கள் பிற மதத்தினரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தது இவர்களைக் குறியிட்டுக் காட்டியது. பிறரிடமிருந்து வேறுபடுத்தியது. இது பிறர் இவர்களைக் கொடுமைப்படுத்தக் காரணமும் ஆயிற்று. இதுவே இவர்கள் பலமும் பலவீனமும் ஆயிற்று. இதற்காகப் போற்றப்பட்டனர். அதே சமயம் பிற மக்கள் இவர்களை வெறுத்து ஒதுக்கினர்.

## எஞ்சியோர் (REMNANT)

1. பழைய ஏற்பாடு:-

''வானத்திலுள்ள எண்ணற்ற விண்மீன்களைப்போன்ற'' ஒரு சந்ததியை இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்தாலும் (ஆதி. 15:5), ''சிங்கத்தின் வாயிலிருந்து இடையன் தன் ஆட்டின் இரண்டு கால்களையோ, காதின் ஒரு பகுதியையோ பிடுங்கி எடுப்பது போல் இஸ்ராயேல் மக்கள் விடுவிக்கப்படு

*வார்கள்'' என்று ஆமோஸ் வழியாக அவர் இஸ்ராயேலை எச்சரிக்கிறார் (ஆமோ 3:12). ''எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டுமென'' இறைவன் விரும்புகிறார் (1 திமோ 2:4). பெரும் வேதனைக் காலத்தில் ''தேர்ந்து கொண்டவர்களின் பொருட்டு அந் நாட்கள் குறைக்கப்படாவிட்டால், எவ்வுயிரும் தப்பித்துக்கொள்ளாது'' என்று அவர் அறிவிக்கிறார் (மத் 24:22). தீர்ப்பின்போது காப்பாற்றப்படும் இந்த எஞ்சியோர் பற்றிய நம்பிக்கை விவிலியக் கருத்தில் முக்கிய கூறாகும். இந்தக் கருத்து, போர்கள் மற்றும் அவற்றின் விளைவாகிய படுகொலைகளுடன் தொடர்புடையதாக உள்ளன. அடிக்கடி செயற்படுத்தப்பட்ட, முறியடிக்கப்பட்டவர்களை முழுவதும் அழித்தல் (அசீரிய ஆவணங்கள், மேசாவின் கல்தூண்) இஸ்ராயேலுக்கு உயிர் பிழைத்தல் பிரச்சனையை உருவாக்கி, அதன் விளைவாக இறைவாக்குறுதிகளின் உறுதிப்பாடு பற்றிய பிரச்சனையையும் ஏற்படுத்தியது.*

*சூழ்நிலைக்கேற்ப, இச்சொல், பேரழிவால் முழுவதும் அழிக்கப்படுவதை விவரிக்க வல்லது (''எஞ்சினோர் சிலரே திரும்பி வருவர்'' ஏச 10:22; ''யாரும் மீதியாய் விடப்படமாட்டார்கள்'' எரே 11:23). அல்லது இது எஞ்சியோர் பிழைத்து வாழ்தலில் எழுகின்ற நம்பிக்கையை எழுப்ப முடியும் (எரே 40: 11). இக்கருத்து ஒன்பதாம் நூற்றாண்டின் துன்பங்களுடன் தோன்றினாலும் (1 அர 19:15-18), இது சீரா 44:17-இல் எஞ்சிய உருவமாக விவரிக்கப்பட்ட நோவா (ஆதி 6:5 தொ. 17-18), மற்றும் மக்களின் பெரும் பகுதியை அழிக்கக் காரணமாக இருந்த இஸ்ராயேலின் பாலைவனத் தண்டனைகள் (யாத் 32:28; எண் 17:14; 21:6; 25:9) ஆகியவை அடங்கிய முன் வரலாற்றைக் கொண்டதாகும்.*

*1. நாடு கடத்தப்படுவதற்கு முன் :- ஆமோசின் கருத்துப்படி முந்தைய துன்பங்கள் நாட்டினை இக்காலத்தில் எஞ்சி வாழ்வோருக்குக் குறைத்ததுபோல (ஆமோ 5:15) இறுதிக்காலத் தீர்ப்பின் நோக்கில் காணப்படுகின்ற எதிர்காலத் தண்டனைகள் இஸ்ராயேலை வெறும் சிலராகக் குறைத்துவிடும் (3:12; 5:3). சல்லடையில் தானியத்தைச் சலிப்பது போன்று இறைவன் பாவிகளை அழிவிற்குள் விழச்செய்துவிட்டு நீதிமான்களைத் தக்க வைத்துக் கொள்வார் (9:8 தொ).*

*ஏசயாவின் கருத்துப்படி, எஞ்சியோர் யாவேயின் தூய்மையில் பங்கு பெறுவர் (ஏச 4:3; 6:3). இறைப்பற்றற்றவர்களுக்கு அவர் அழிக்கும் தீயாக உள்ளார். ஆனால் மற்றவர்களுக்கு ஒளிமிக்க (10:17), தூய்மைப்படுத்தும் (1:25-28) சுடராக உள்ளார். யாவேயின் கைவேலையாகிய (4:14) இந்த எஞ்சியோர், விசுவாசத்தின் மூலம், இறைவன்மீது மட்டுமே சார்ந்து நின்று (10:20) தண்டனையினின்று தப்பிப்பர் (7:9; 29:16). இறைவாக்கினரின் சீடர்களில் இது ஏற்கனவே கருவாக உள்ளது (8:16.18). ஏழைகளால் அது அமைக்கப்பட்டிருப்பதுபோலத் தோன்றுகிறது (14: 32). ஆனால் இது வேறொரு காலத்தில் மற்றொரு இறைவாக்கில் தெளிவாக உறுதிப்படுத்தப்படும் (செப் 3:12-13). எஞ்சியோர் அனைவரும் ஒன்று சேரக்கூடிய யாவேயின் துணையாளராகிய மெசியா (10: 21 - எல்லாம் வல்ல இறைவன் - மெசியா 9:5) அவர்களுடைய தலைவராகவும் முதன்மையான மகிமையாகவும் இருப்பார் (4:2). மேலும் எஞ்சியோரும் மெசியாவும் ஒரே விதச் சொற்களால் விவரிக்கப்பட்டிருப்பதால், அவர் அவர்களின் அறிகுறியாக இருப்பர் (6:13 மற்றும் 11:1; 11:2 மற்றும் 28:5 தொ).*

*ஏசயாவின் காலத்தவராகிய மீக்காவுடன், எஞ்சியோர் என்பது வலிமையான இனமாக (மீக் 4:7) உருவாகியுள்ள, மெசியா காலத்தில் தூய்மைப்படுத்தப்பட்ட மக்களைக் குறிப்பிடுகின்ற கலைச்சொல்லாக ஏற்கனவே பயன்படுகிறது. பிற இனத்தாரைப் பொறுத்தவரை, அவர்கள் எஞ்சியோர்பால் காட்டும் போக்கிற்கேற்ப அவர்களுக்கு அழிவு அல்லது ஆசியின் ஊற்றாக இருப்பார்கள் (5:6 தொ). இவ்வாறு இது ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் அளிக்கப்பட்ட பங்கின் வாரிசாக உருவாகிறது (ஆதி 12:3).*

2. நாடு கடத்தலில் திருப்பு முனை:- எஞ்சியோரின் கோட்பாட்டிற்கு எரேமியா தீர்மானமான ஆழம் அளிக்கிறார். அவருடைய முன்னோர்களைப் போன்று அவரும், நாடு கடத்தப்படுதலினின்று தப்பி, புனித நாட்டிலேயே தங்கியுள்ள யூதரின் சிறு குழுவிற்கு இப்பெயரை அளிக்கின்றார் (எரே 4:11; 42:15; 44:12; ஆமோ 5:15; ஏச 37:4; செப் 2:7; எரே 6:9; 15:9). மெசியா நம்பிக்கையைத் தாங்கியுள்ள வாரிசுகள் நாடு கடத்தப்பட்டவர்களே (24:1-10). அவர்கள் எஞ்சியோர் என்று அழைக்கப்படுவதில்லை; அதோடு, ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகின்றனர். தனது உரையில் எரேமியா பழைய நடைமுறைகளுக்கு விசுவாசமுள்ளவராக இருக்கிறார். ஆனாலும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள மாட்சிமிக்க எதிர்காலம் பற்றிப் பேசும் போது இச்சொல்லானது இயல்பாகவே மீண்டும் தோன்றுகிறது (23:3; 31:7). எனவே எஞ்சியோரின் நிலையானது யூத இனமாகிய இக்காலச் சமுதாயத்தினின்று பிரிக்கப்படுகிறது.

எசக்கியேல் இக்கருத்தை மேலும் ஆழப்படுத்துகிறார். அவரது காலத்திற்கு முன்னர் இறைவாக்கினர்கள், நீதியுள்ள ஆன்மாக்களின் எஞ்சியோராக நாட்டைக் குறைக்கின்ற இறுதிக்காலத் தண்டனையினின்று, உடனடித் துன்பங்களை வேறுபடுத்தியதாகத் தெரியவில்லை. 587-இன் பேரழிவிற்குப் பின்னர் அதில் அழிந்தவரைவிட, தப்பித்தவர்கள் அதிக முன்னேற்றத்தை அடையவில்லை என்பதை எசக்கியேல் ஏற்க வேண்டியதாயிற்று (எச 6:8-9; 12:15-16; 14:21 தொ). எனவே நீதிமான்கள் மட்டுமே இத்தகைய துன்பங்களினின்று காப்பாற்றப்படுவர் என்று முன்கூட்டியே அவர் அறிவித்துவிட்டார் (9:4 தொ). அவர் எதிர்பார்த்த இறுதிக் காலத் தண்டனையானது இன்னமும் வர வேண்டியதாகும் (20:35-38; 34:17). அது மட்டுமே நம்பிக்கையற்றோரையும் புனித எஞ்சியோரையும் உறுதியாகப்பிரிக்கும் (28: 38; 34:20).

3. எஞ்சியோரின் மூன்று பிரிவுகள் :- எஞ்சியோர் என்ற சொல்லின் இரு தெளிவான பொருளைப் பின்வருமாறு கூறலாம். ஒன்று எண்ணிக்கையில் குறைந்த எவ்வித அழிவிலும் நிலைத்திருக்கக்கூடிய குழு. இது வரலாறு பூர்வமாக எஞ்சியோர் குழு ஆகும் (ஆமோ 5:15; ஏச 37:4; எரே 6:9; எச 9:8). மற்றது இறுதி நாட்களில் மீட்பின் பலனை அடையக் கூடியவர்களின் சமுதாயம். இது இறுதிக்கால எஞ்சியோர் குழு ஆகும் (மீக் 5:6 தொ; செப் 3:12; ஏச 4:4; 10:22; 28:5; எரே 23:3; 31:7). பிந்தையது மட்டுமே புனிதமானது. முதல் குழுவானது நிராகரிக்கப்படுவதற்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டதாகும்.

நாடுகடத்தப்பட்ட காலம்முதல் மூன்றாவது கருத்துத் தோன்றியது. அது வாக்குறுதிகளின் உண்மையான வாரிசாகவும், காப்பாளராகவும் அவற்றைக் கொண்டிருப்பவர்களுமான மக்களிடையேயிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட சமயக் குழுவினரைக் குறிப்பதாகும். பழைய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் அவர்களுக்கு எஞ்சியோர் என்ற பெயர் அளிக்கப்படாவிட்டாலும் விசுவாசமுள்ள எஞ்சியோர் என்று அவர்கள் அழைக்கப்படலாம். இப்பெயரானது புதிய ஏற்பாட்டிலும் (உரோ 11:5), ஒரு சில விவிலியத்தைச் சேராத நூல்களிலும் (தமஸ்கு ஆவணம் 1:4; 2:11) அளிக்கப்படுகின்றது. அதே அடிப்படைக்கருத்து இங்கும் செயல்படுகிறது. ஆனால் பருப்பொருள் நிலையிலிருந்து அது ஆன்மீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றது. விசுவாசமுள்ள எஞ்சியோர் என்பவர் இறைவனின் முன் சமய வாழ்வை நடத்துகின்ற சிறு பான்மையினராவர்.

விசுவாசமுள்ள எஞ்சியோர் ''யாவேயின் ஊழியராகிய இஸ்ராயேல்'', ''இஸ்ராயேலின் வழியாய் நாம் மாட்சியுறுவோம்'' (ஏச 49:3) என்றழைக்கப்படுகின்றனர். இஸ்ராயேல் முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு பணியானது எஞ்சியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது (49:5). இச்சமய, பொறுக்கியெடுத்த குழுவிலிருந்து அதனுடைய ஊழை

ஆட்தன்மைக்கு, உடலெடுத்த ஒரு தனிப் பட்ட நபர் எழுகின்றார். அவரே ஊழியன். எஞ்சியோருக்கு அளிக்கப்பட்டுள்ள பணியை அவரே, அவர் மட்டுமே, தமது மீட்பளிக்கும் மரணத்தினால் நிறைவேற்று வார் (52:13-53:12). ஆனால் இத்தனிப்பட்ட நபரில் தொடங்கி, எதிர்மறையான இயக்கம் ஒன்றும் ஏற்படுகிறது. இதன் விளைவாக மெசியாவாக மட்டுமாகக் குறைக்கப்பட்ட எஞ்சியோருக்குள் இஸ்ராயேல் மட்டுமின்றி புறவினத்தார் அனைவரும் ஒன்று சேர்க்கப்ப டுவர் (49:6; 53:11).

4. நாடு கடத்தலுக்குப் பின்னர்:- சீயோனுக்குத் திரும்பிய நாடு கடத்தப்பட்டோரின் சிறு சமுதாயத்தினர் எஞ்சியோர் என்று உரிமை கொண்டாடுகின்றனர் (ஆகா 1:12; 2:2; செப் 8:6). மேலும் தாங்களே புனித எஞ்சியோர், மற்றும் இறுதிக்கால வாக்குறுதிகள் (ஓசே 2:23-24; எச 34:26-27) தங்களுக்குச் சாதகமாக நிறைவேறும் (செப் 8:11-12) என்று நம்புமாறு சில இறைவாக்குகள் அவர்களை அனுமதித்தன. ஆனால் மீண்டும் அமைத்தல், மீட்சியானது முற்றுப்பெறாத மற்றும் அடையாளப்பொருளில் மட்டுமே மெசியாத்தன்மையுடையது என்றும், நாடு கடத்தலுக்குப் பின்னர் வந்து வரலாற்றுப் பூர்வமான எஞ்சியோர் மேலும் தூய்மைப் படுத்தப்படவேண்டியுள்ளனர் (செப் 13:8-9; 14:2) என்றும் காட்டுகிறது. விசுவாச எஞ்சியோர் பற்றிய கருத்தானது மேலும் மேலும் தெளிவாகிறது. இறைவனின் மக்கள் ''யாவேயின் எளியோராக்கப்படுகின்றனர்'' (எச 49:13; சங் 18:28; 149:4; 1 மக் 1:52-53). சங் 73:1 இஸ்ராயேலை இதயத்தில் தூய்மையானவர்களாக்குகிறது. நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட இறைவாக்கு வாசகங்கள் இக்காலத்திலும் இறுதிக்கால எஞ்சியோரைப்பற்றி அறிவிக்கின்றன (எச 65:8-12; ஒப 17; யோவே 3:5). ஆனால் அவை புறவினத்தாரையும் இக்குழுவில் அறிமுகப்படுத்துகின்றன (எச 66:19; செப் 9:7).

II. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட இறைவனின் மக்கள் பகுதி ''விசுவாசமுள்ள எஞ்சியோர்'' என்ற பெயரால் இன்னும் குறிப்பிடப்படுகின்றது (உரோ 11:5). விசுவாசமுள்ள எஞ்சியோர் மட்டுமே உண்மையான இஸ்ராயேல் என்ற மையக்கருத்தானது புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளுக்கு அடிப்படையாக உள்ளது (மத் 3:9.12; 22:14; லூக் 12:32; யோவா 1:11-12; 1:47; உரோ 2:28; 1 கொரி 10:18; கலா 6:16). ஒவ்வொரு பகுதியிலும் தன்னாட்சி உரிமையுடைய வாழ்வை அது இனி கொண்டிருக்கவில்லை. இவற்றில் திருச்சபையே எஞ்சியோராகும்.

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் இறை அருள்பாலிப்பின் இறையியலை விரிவாக்கும் பவுல் (உரோ 9:11) இறைவனின் திட்டத்தில் இம்மையக்கருத்திற்கு ஆழ்ந்த பொருளை அளிக்கிறார். கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட எஞ்சியோரின் காரணமாக இஸ்ராயேலின் பிரமாணிக்கமின்மை இறைவாக்குறுதிகளை வெறுமையாக்கி விடவில்லை. மேலும் இறை உறுதியானது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது (உரோ 11:1-7). மற்றொரு புறம், வாக்குறுதிகளின் ஒரே வாரிசான எஞ்சியோரின் வாழ்வானது, மொத்த மக்களினத்தின் பெருமளவிலான தேர்விற்குள்ளும், தனிநபர்களுடைய தேர்வின் முழுமையான இலவசத்தன்மையை வெளிப்படுத்துகிறது (9:6-18; 25-29). மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குள் மெசியாவெனும் ஆளாகக் குறைக்கப்பட்ட சிறுபான்மையினரின் தேர்வானது எல்லா இஸ்ராயேலருக்கு மட்டுமின்றிப் (11:26) புறவினத்தாரின் (11:25) மீட்புக்காகவும் நிறுவப் பட்டுள்ளது. தோற்றத்திற்கு முரண்படுகின்ற இறைநீதியின் கோரிக்கைகள் இவ்வாறாகச் சமரசப்படுத்தப்படுகின்றன. ஒரு புறம் பாவத்திற்கான தண்டனையும், மறு புறம் மனிதருடைய பாவங்கள் சீரழிக்க முடியாத, ஆனால் எக்காலத்திலும் இலவசமான வெகுமதியாக உள்ள, வாக்குறுதிகள்பால் பிரமாணிக்கம் உள்ளது.

**எடுத்துக்காட்டு/முன் மாதிரிகை (EXAMPLE)**

வார்த்தை அறிவொளி அளித்தால் எடுத்துக்காட்டானது ஈர்க்கிறது. எனவே, நல்ல கல்வியாளர் என்ற நிலையில் இறைவன் எடுத்துக்காட்டுகளையும் பழகுவதற்கு மாதிரிகளையும் மனிதன் பின்பற்ற அளிக்கின்றார்.

I. பழைய ஏற்பாடு:-

1. இறைவனின் வழிகளும் மனித எடுத்துக்காட்டுகளும்:- மனிதருடைய வலிமையின்மைக்கு ஏற்ப இறைவன் தம்மை மாற்றியமைத்துக் கொள்கிறார். இம்மனிதர்கள் உருவாக்கப்பட வேண்டிய பிள்ளைகளாகவும் திருத்தியமைக்கப் பட வேண்டிய பாவிகளாகவும் உள்ளனர். தம்முடைய சாயலாக அவர்களைப் படைத்தவர், தம்மையே பின்பற்றவேண்டியவராக அவர்களுக்கு அளிப்பதென்பது இன்னும் இயலாததாகவே உள்ளது (ஆதி 1:26-27). ஏனெனில் மாதிரிகை யாவும் கடந்த தன்மையுடையதாதலால், அதை அவர்களால் அணுகமுடியாது. இறைவனைப் போன்று இருக்க விழைவது பாவியின் செயலாகும் (3:5). நீதிமானுடைய ஒரே கவனமானது படைத்தவருடன் இணைந்து நடப்பதன்மூலம் அவரது அழைப்பிற்குப் பதிலளிப்பதாகும்; அதாவது அவரது பிரசன்னத்தினால் கோரப்படுகின்ற நிறைவான, நேர்மையான வாழ்வு வாழ்வதாகும் (17:1; 5:22; 6:9). அதே போன்று ''நான் தூய்மையாய் இருப்பது போன்று நீங்களும் தூய்மையாய் இருங்கள்'' என்னும் இறைக்கட்டளையில் இருவித மாறுபட்ட புனிதத்துவத்தைக் கொண்டுள்ளோம். இறைவனுடைய மறைபொருளின் விஞ்சிய நிறையானது இறைவனுக்குரியது; மற்றும் வழிபாட்டினாலும், தம் மக்களிடையே மும்முறை தூயவராக உள்ளவரின் பிரசன்னத்திற்குரியது; கோரப்படுகின்ற தூய்மையானது மனிதனுக்குரியது (லேவி 19:2; யாத் 29:45). எனவே இது இறைவனைப் பின்பற்றுவதற்கான ஓர் அழைப்பல்ல. ஆயினும் தாமே நடக்க விழைகின்ற வழிகளில் மனிதனும் நடக்க வேண்டுமென இறைவன் விரும்புவதை இறைவாக்கினர்களின் போதகம் எடுத்துக் கூறுகிறது (எரே 9:23; மீக் 6:8).

தங்களுடைய தந்தையரை நோக்கித் தங்களுக்குத் தேவையான எடுத்துக்காட்டுகளை மக்கள் கண்டடைவர். கனிகளைக் கொண்டு மரத்தை அறிவது போன்று, தாங்கள் பின்பற்ற வேண்டியது என்ன, விலக்க வேண்டியது என்ன என்பதைத் தங்களுடைய நடத்தையிலேயே அவர்கள் காண்பர். ஒரு புறம் ஆபிரகாமின் நம்பிக்கையும் (ஆதி 15:6; 22:12-16), மற்றொரு புறம் ஆதாம் மற்றும் ஏவாளின் சந்தேகம் மற்றும் கீழ்ப்படியாமையும் உள்ளன (ஆதி 3:4-6). இதுபோன்ற பல பாத்திரங்கள் வரலாற்றில் உள்ளன. இவற்றில் முன்மாதிரிகை அறிவொளி நிறைந்ததாக உள்ளது. ஞானிகள் தங்களுடைய சீடர்களுக்கு இவற்றை மாதிரிகையாக எடுத்துக்காட்டுகின்றனர் ( சீரா 44:16-49; 1 மக் 2:50-60). எலயசாரைப் போன்ற பெரியோர்கள், மக்கள்பால், சிறப்பாக இளைஞர்பால் தங்களுடைய பொறுப்பை உணர வேண்டும்; வேதசாட்சி மரணத்தை அடையவேண்டியிருந்தாலும் உயர்வான ஒரு முன்மாதிரிகையை அவர்கள் ஏற்படுத்த வேண்டும் ( 2 மக் 6:24-31).

2. இறைவனையும் அவரது புனிதத்தையும் பின்பற்றுதல்:- ''தேவர்களில் அவருக்கு ஒப்பானவர் எவருமில்லையென்றாலும் அவரது செயல்களுக்கு நிகரானவை எவையும் இல்லை என்றால்'' (சங் 86:8) நாம் கடவுளை எவ்வாறு பின்பற்ற முடியும்? இருப்பினும் மனிதன் சிறப்பாகக் கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்டதால் (ஆதி 1:27), உயிருள்ளவைகளில் அவரைப் போல் இருக்கிறான். ஆகையால் அவருடைய செயல்களிலும் அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும். வழிபாட்டின் மூலம் அவரைப்போல் இருக்க விரும்புகிறான். ஏனெனில், பொதுவான நம்பிக்கையின்படி ஆராதனை புரிவோன் ஆராதனையை ஏற்றுக் கொள்பவர்போல் ஆகின்றான். வீணான சிலைகளை வழிபட்டு மனிதன் வீண் ஆகிறான் (சங் 113:16;2 அர 17:15.16; எரே 2:5).

கடவுளை வழிபடுவதால் தூய்மை அடைகிறான். இந்த வழிபாடு வானுலக வழிபாட்டைப் பின்பற்றியிருக்க வேண்டும் (யாத் 24:40; 26:30). மேலும் மனிதன் சிறப்பாகத் தன்னுடைய வாழ்வில் அவரைப்போல இருக்கவேண்டும்.

''நாம், உங்கள் கடவுளாகிய ஆண்டவர், பரிசுத்தராயிருப்பதால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' (லேவி 19:2). ஆகையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் யாவேயாகிய இறைவனைப்பின்பற்ற வேண்டும் (உப 13:4). அவரே காட்டியிருக்கிற அன்பு வழியிலும் விசுவாசப்பாதையிலும் அவரைப்பின்பற்றி நடக்கவேண்டும். நீதியோடு நிறைவுள்ள அன்பை, கடவுளைப் பின்பற்றித் தேட வேண்டும் (உப 15:12-15; எரே 9:24; மீக் 6:8). அவர்கள் ஒய்வு நாளை அனுசரிப்பதிலும் படைத்தவரைப் பின்பற்றி, அதைக் கொண்டாடிப் புனிதப் படுத்தவேண்டும் (யாத் 20:11); பின்பற்றுவதற்காக எடுத்துரைக்கப்பட்ட ஒரு சில நீதிமான்களைத் தவிர (சீரா 44-50), இஸ்ராயேல் மக்கள் உண்மையில் சட்டத்தில் கூறப்பட்டவைகளுக்கும் இறைவாக்கினரது அழைப்பிற்கும் விசுவாசத்துடன் நடந்துகொண்டார்கள் என்று நாம் கூறமுடியுமா? எடுத்துக்காட்டுகள் இருந்தன; வெகு அண்மையில் இருந்தன (உப 30:14). ஆனால் அவர்கள் இதயங்கள் உட்புறத்தில் மாற்றமடைந்து, உண்மையான மகன் தன் தந்தையின் இதயத்தைப் பின்பற்றும் இதயமாக மாறத் தேவையிருந்தது.

II. புதிய ஏற்பாடு:-

1. மனித எடுத்துக் காட்டுகளினின்று இறைமாதிரி வரை:- புதிய ஏற்பாடு இன்னமும் கடந்த காலத்தை மனதிற்கு நினைவூட்டுகிறது. கொலைகாரக் காயினையோ (1 யோவா 3:12), பாலைவனக் கீழ்ப்படியாத் தலைமுறையினையோ (எபி 4:11) ஒருவன் பின்பற்றக் கூடாது. ஆனால் இறைவாக்கினர்களின் பொறுமையையும் (யாக் 5:10) இறைவனுடைய சாட்சியாளார்களின் திரளினுடைய விடாமுயற்சியையும் (எபி 12:1) முன்மாதிரியாக ஏற்க வேண்டும். மேலும், விசுவாசிகள் இத்தகைய சாட்சிகளைத் தங்களுடைய கண் முன்பே கொண்டிருந்தனர் (6:12). அவர்களது தலைவர்களுடைய விசுவாசத்தையும் (13:7) பவுலைப் போன்ற முன்மாதிரிகளின் நடத்தையையும், அவர்கள் பின்பற்றட்டும் (பிலி 3:17). அப்போஸ்தலர் தன்னைப் பின்பற்றுபவர்களாகும்படி விசுவாசிகளை அடிக்கடி வலியுறுத்துகிறார் (1 கொரி 4:16; கலா 4:12). சிறப்பாக, அவர்களுக்கு முன்மாதிரிகை அளிக்கத் தான் செய்தது போலவே அவர்களையும் பணி புரிய அழைக்கின்றார் (2 தெச 3:7-9). அவர்களது குழுக்கள், அவர்களது முறையில், முன் மாதிரிகை ஆகும்படி (1 தெச 1:7; 2:14) தான் இருந்தவாறே, பெரியவர்களும் முன்மாதிரிகளாக இருக்கட்டும் (1 திமோ 4:12; தீத் 2:6; 1 பேதுரு 5:3).

ஆனால், விசுவாசிகளுக்கு இயேசு கிறிஸ்து மட்டுமே நிறைவான முன் மாதிரியாக உள்ளார். மற்றவர்களெல்லாம் அதன் பிரதிபலிப்புகள் மாத்திரமே. பவுலும்கூட, கிறிஸ்துவைப் பின்பற்றுபவராய் இருப்பதால்தான், அவரும் பின்பற்றப்பட வேண்டியவர் ஆகிறார் (1 தெச 1:6; 1 கொரி 11:1). இதுவே அடிப்படையான புதுமையாகும். மனிதனான இறை மகனாகிய இயேசுவினால் மனிதன் தன் ஆண்டவரைப் பின்பற்றக் கூடியவனாகி (1 தெச 6), அதன் மூலம் இறைவனையே பின்பற்றக்கூடியவனாகிறான் என்பதே அடிப்படையான புதுமையாகும் (எபே 5:1). உண்மையில், நம்பிக்கையும் பிரமாணிக்கமுமாகிய நிறைவான விசுவாசத்திற்கு ஆதாரமாகவும் முன் மாதிரியாகவும் இருப்பவர் இயேசுவே (எபி 12:2). தம்மில் விசுவாசங்கொள்ளும் எவருக்கும், இறைவனுடைய பிள்ளையாகும் மற்றும் அவரது வாழ்வினின்று வாழும் வரத்தினை அளிக்கின்றார் (யோவா 1:12; கலா 2:20). அது முதல், மனிதன் ஆண்டவருடைய முன் மாதிரியைப் பின்பற்றித் தன்னுடைய வாழ்வையே அளிக்குமாறு, அவரை அமைத்த தாழ்ச்சியான அன்பின் வழியில், அவரைப் பின்தொடரலாம் (யோவா 13:15; எபே 5:2;

1 பேதுரு 2:21; 1 யோவா 2:16; 3:16). இயேசுவைப் போன்றே அவனும் தனது சகோதரரை அன்பு செய்யலாம் (யோவா 13:34; 15:12).

ஆனால் தந்தை தம்மை அன்பு செய்தது போல இயேசு அவர்களை அன்பு செய்தார் (யோவா 15:9). இயேசுவைப் பின்பற்றுவ தென்பது தந்தையையே பின்பற்றுவதாகும் (உரோ 8:29). தந்தையின் நிறைவான சாயலா கிய (கொலோ 1:15) கிறிஸ்துவின் உண்மை யான சாயலாக உருவாவதற்காக நமது அழைப்பிற்குப் பதிலளிப்பதென்பது (உரோ 8:29) படைத்தவரின் சாயலில் நம்மையே புதுப்பிப்பதாகும் (3:10; ஆதி 1:26-27; இந்த ஒப்பீடானது இப்பகுதியின் ஆழமான, இது வரை மறைவாயிருந்த பொருளை வெளிப்ப டுத்துகிறது). நமது விண்ணகத் தந்தை தூயவ ராக இருப்பதைப்போன்று நாமும் தூயவ ராக உருவாக வேண்டும் (1 பேதுரு 1:15-16; லேவி 19:2-ஐச் சுட்டிக் காட்டி, அதற்குப் புதிய பொருளை அளிக்கின்றார்). இதைச் செய்வதன் மூலம் கிறிஸ்துவினுடைய கட்ட ளையையே நாம் நிறைவேற்றுகிறோம். ஏனெனில், நிறைவான நன்மைத்தனமும் (மத் 5:48) இரக்கமிக்க அன்புமாகிய (லூக் 6:36; எபே 4:32) தந்தையை நாம் பின்பற்ற வேண்டுமென அவர் விரும்புகிறார். இதை நாம் செய்தால், ஒரு நாள் அவர் வரும் போது, நாம் பின்பற்றிய அவரைப்போன்றே நாமும் இருப்போம். ஏனெனில் அவர் உண் மையாகவே உள்ளவாறு அவரை நாம் காண் போம் (1 யோவா 3:2).

2. கிறிஸ்துவையும் அவரது அன்பையும் பின்பற்றுதல்:-

இயேசு இந்தக் கட்டளையைக் கூறுவ தோடு நிறைவுகொள்ளவில்லை: ''உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப் பதுபோல் நீங்களும் நிறைவுள்ளவராயிருங் கள்'' (மத் 5:42). இறைவனின் பிரதிபலிப் பைக் காணக்கூடிய காட்சியாகக் காட்ட அவர் வந்தார். ''அவர் கட்புலனாகாக் கடவு ளின் சாயல்'' (கொலோ 1:15). அந்தப் புலன்களால் உணர முடியாத இறைவனை அவர் அறிவிக்கின்றார் (மத் 11:27). ''மகன் தாமாகவே ஒன்றும் செய்ய முடியாது. தந்தை செய்யக் காண்கிறதையே செய்வார்'' (யோவா 5:19). ''நான் என் தந்தையிடம் பார்த்ததைச் செய்கிறேன்'' (8:38). தந்தை அவருக்கு அருளிய செயல்களைச் செய்து முடிக்கிறார் (5:36). மகனைக் காண்பவர் தந்தையைக் காண்கிறார் (14:9). ஆகையால் தந்தையைப் பின் பற்றி நடத்தல் மகனைப் பின்பற்றுதல் ஆகும். இது வானுலக மாதிரி யைப் பின்பற்றி, அதன் நிழலைத் தங்களி டம் திரும்ப உண்டாக்குவதில் நின்றுவிட வில்லை (எபி 8:5). இத்தகைய இறைவனின் மகத்தான தேர்ந்தெடுத்த அழைப்பிற்குப் பதில் கண்டிப்பாயிருக்க வேண்டும். ''அவ ருடைய மகனின் சாயலுக்கேற்றபடி உரு வைத் தாங்கும்படி அழைத்திருக்கிறார்'' (உரோ 8:29). இயேசு செய்த அவர் செயல்க ளிலும், உயிர் அளிக்கின்ற அவர் அன்பிலும் சீடர் பங்குபெறுகின்றனர். தம்மை முழுவ தும் அர்ப்பணமாக அளிக்கும் அவரது அன்பு தான் அவர் விட்டுச்சென்ற மிகச் சிறந்த முன்மாதிரியாகும் (யோவா 13:15.34). ஆண் டவர் தம் ஆவியைக் கொடுத்தால் நாம் அவரைப்பின்பற்றமுடியும். இவ்வாறு அவ ரது பாடுகளின் அடிச்சுவடுகளை நாம் பின் பற்றவும் (13:36; 1 பேதுரு 2:21). மேலும் அவர் செய்த செயல்களை நிறைவேற்றவும், இன்னும் பெரிய செயல்களைச் செய்யவும், ஆற்றல் ஏற்படும் (யோவா 14:22).

3.கிறிஸ்தவனின் முன் மாதிரிகை:-

சீடர்கள் செயல்கள், திரும்பவும் மற்றவர் கள் பின்பற்றும் நற்செயல்கள் ஆகின்றன (மத் 4:14). இந்தச் செயல்களினால் வீண் சுற்பெருமை உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், மகன் தந் தையிடமிருந்து பெற்ற அன்பைத்தான் விசு வசிப்போர் காட்ட விரும்புகின்றனர் (யோவா 17:26). இவ்வாறு தந்தையின் அன் பிற்கும் பரிசேயர்களின் மனநோக்குக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டமுடியும் (மத் 6:1-18; 23:5; யோவா 12:43). இயேசு தந்தை யின் மகிமையைத் தேடினார். அவரைப் பின்பற்றி விசுவசிப்போர் கடவுளின் மகி

மையைத் தேடுகின்றனர் (யோவா 8:50). விசுவசிப்பவர் இயேசுவின் மூலம் கண்டறிந்த தந்தையின் அன்பைத்தான் அறிவிக்க விரும்புகின்றார் (17:26). "நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிறவாறே நீங்களும் நடங்கள்" (1 கொரி 11:1) என்பது விநோதமான தும், பவுலால் அடிக்கடி கூறப்படுவதும், நிறைவேற்றப்பட வேண்டியதுமான செயலாகும். இதைத்தான் தெசலோனியர் செய்தனர் (1 தெச 1:6). அவர்கள் மறுபடி "மக்கதோனியாவிற்கும் அக்காயாவிற்கும் முன்மாதிரியாக விளங்குகின்றனர்" (1 தெச 1:7). பவுல் அவர்களது முன்மாதிரியாகவும் தன்னை முழுவதும் இந்த வழியாகத் தந்தார். இது எவ்வாறு முடிந்ததென்றால் "அவர் அவர்களைப்போல் ஆனார்" (கலா 4:12). "எல்லார்க்கும் எல்லாம் ஆனேன்" (1 கொரி 9:19-22). ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஒப்ப அவர் வாழ்வு இருந்தது (பிலி 3:7).அப்போஸ்தலரைப் பின்பற்றுதல் கிறிஸ்துவைப் பின்பற்றுதலாகும். இறுதியாகக் கடைசித் தீர்வு நாளில் நாம் எவ்வாறு இருப்போம் என்பதை வெளியிடுவதற்காக "நாம் கடவுளது சாயலைப் போல் இருப்போம்". ஏனெனில் கடவுளது மக்களின் சிறப்பை நாம் கொண்டுள்ளோம் (1 யோவா 3:2) என்று கூறப்படுகிறது.

## எட்டிக்காய் (WORM WOOD)

இது ஒரு கசப்புமிக்க சிறுசெடியாகும் (உப 29:18; எரே 9:15; ஆமோ 6:12). இச்செடி பொதுவாகக் கசப்பிற்கும், துயரத்திற்கும் உருவகமாய்ப் பயன்படுகின்றது. வேசியின் சொற்கள் தேன் போல் இனிமையாக இருப்பினும் அவளின் சேர்க்கையின் முடிவு கசப்பான அனுபவங்களை விளைவிக்கும் (பழ 5:4). கடவுளின் தண்டனை பெற்றவருக்கு இச் செடி உணவாகும் என்று கூறப்படுகிறது (எரே 3:15.19; ஆமோ 5:7). இச்செடியின் பெயர் கொண்ட விண்மீன் ஒன்று வானிலிருந்து நீர்நிலை ஒன்றில் விழுந்து அந்நீர் நிலை முழுவதையும் கசப்பாக்குகிறது. அதை அருந்திய பலர் மடிகின்றனர் என்று திருவெளிப்பாடு கூறுகிறது (திருவெளி 8:10-11).

## எண்கள் (NUMBERS)

மறைநூலின் எண்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணும்போது அவை முறையாக வழங்கப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைச் சரி பார்ப்பது அவசியம். முற்காலத்தில் எண்கள் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தமையால் அப்பகுதியானது மாற்றப்பட்டோ, பழுதாக்கப்பட்டோ இருக்கக் கூடும். இவ்வாறு 2 சாமு 24-13-இல் சில வாசகங்கள் ஏழு என்று குறிப்பிடுகின்ற நேரத்தில் அதற்கு இணையாகவுள்ள வாசகமான 1 நாள் 21:12 மூன்று என்று குறிப்பிடுகின்றது. வாசகம் உறுதிப்படுத்தப்பட்டபின் கேள்விக்குரிய எண்ணானது ஆசிரியரின் கருத்தின்படி, அதனுடைய துல்லியக் கணக்கியல் மதிப்பின்படியா, தோராயமாகவா அல்லது அதனுடைய அடையாளப் பொருளின்படி புரிந்து கொள்ளப்பட வேண்டுமா என்று கேட்க வேண்டியது அவசியமாகும். உண்மையில் நமது கலாச்சாரம் ஏற்கின்ற முறையில் பண்டைய செமிட்டிக் கலாச்சாரங்கள் கணக்கியல் துல்லிய அளவின் மீது சிறிதளவே அக்கறை கொண்டிருந்தன என்பது உறுதியாகும். ... சமயர் எண்களினுடைய வழக்கமான மற்றும் அடையாளப் பயன்பாட்டை அவை அதிகரித்தன.

I. வழக்கமான மதிப்பீடுகளும் பொருள்களும்:-

1. முழு எண்கள் அல்லது தோராயமானவைகளிலிருந்து விவிலியத்தில் வழக்கமான பயன்பாட்டுக்கு எளிதில் செல்லலாம். ஆனால் அதனைச் சொற்பொருளின் அப்படியே புரிந்து கொள்வதென்பது முடியாததாக இருக்கும். இரண்டு என்றும் என் "பல" (எண் 9:22), இரட்டையான, அளவற்ற (எரே 16:18; ஏச 40:2; 61:7; செப் 9:12; திருவெளி 18:6) என்றெல்லாம் பொருள் கொடுக்கலாம். மூன்று (3) என்கிற எண்ணானது π (பை) என்னும் எண்ணினுடைய தோராய மதிப்பாகும் (1 அர 7:33). மேலும் ஒரு சைகை (1 அர 17:21) அல்லது வார்த்தையை (எரே 7:4) மும்முறை நிறைவேற்றுதலைக் குறிக்கவல்லது. இது அழுத்தத்தையும் வலியுறுத்தலையும் "உச்சநிலையில் உச்சத்தையும்"

(ஏச 6:3) சுட்டிக்காட்டுகிறது. நான்கு (4) என்கிற எண் நான்கு காற்றுகள் (எசே 37:9; ஏச 11:2), இன்ப வனத்தின் நான்கு நதிகள் (ஆதி 2:10) போன்ற புவியியல் பரப்பின் முழுமையினைச் சுட்டிக்காட்டுகின்றது (முன்னால், பின்னால், வலம், மற்றும் இடம்). ஐந்து (5) என்கிற எண் சில சடங்கு நெறிகளின் தொடக்கத்தில் (எண் 7:17.23.29) இருந்திருக்கக்கூடிய நினைவிலிருத்தக்கூடிய மதிப்பைக் கொண்டுள்ளது (ஒரு கரத்தின் விரல்கள்). ஆனால் இது ஆதி 43:34 (பென் யாமின் பங்கானது 5 மடங்கு உயரியது), லூக் 12:6 (2 காசுக்கு 5 குருவிகள்; ஆனால் மத் 10:29-இல் 1 காசுக்கு 2 குருவிகள்), 1 கொரி 14:19 (பரவசப்பேச்சில் 10000 சொற்கள் பேசுவதை விட மற்றவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய 5 சொற்கள் பேசுதல்) ஆகியவற்றில் தோராயமானதாகவே உள்ளது. ஏழு (7) என்கிற எண் பெரும் எண்ணிக்கையைச் சுட்டுகிறது. காயின் 7 முறை பழிதீர்க்கப்படுவார் (ஆதி 7:15). நீதிமான் ஒரு நாளைக்கு 7 முறை விழுகிறார் (பழ 24:16). 7 முறை மன்னிக்க வேண்டுமெனப் பேதுரு விரும்புகிறார் (மத் 18:26), மற்றும் மதலேனாளிடமிருந்து இயேசு 7 பேய்களை வெளியேற்றுகிறார் (மாற் 16:9). ஆனால் இந்த எண்ணானது உச்ச உயர்நிலையையும் கொண்டுள்ளது. லாமெக் 77 முறை பழிதீர்க்கப்படுவார் (ஆதி 4:24). மற்றது பேதுரு 77 முறை அல்லது 70 முறை 7 முறை மன்னிக்க வேண்டும் (மத் 18:22). பத்து (10) என்கிற எண்ணானது நினைவிருத்தக்கூடிய பொருளைக் கொண்டுள்ளது (10 விரல்கள்); ஆதலின் 10 கட்டளைகள் (யாத் 34:28; உப 4:13), எகிப்தின் 10 கொள்ளை நோய்கள் (யாத் 7:14-12:29) ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. இதனின்று குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கை என்னும் கருத்து வெளிப்படுகிறது: லாபான் யாக்கோபுவின் சம்பளத்தை 10 முறை மாற்றினார் (ஆதி 31:7), மற்றும் யோபு தனது நண்பர்களால் 10 முறை வசைமாரி பொழியப்பட்டார் (யோபு 19:3). பன்னிரண்டு (12) என்கிற எண் ஓர் ஆண்டில் வரும் சந்திரனுடைய பருவங்களைக் குறிக்கும் எண்ணாகும். அது முழு வருடாந்தர வட்டத்தைச் சுட்டுகிறது. சாலமோனுடைய 12 மாவட்டங்கள் ஒவ்வொரு மாதமும், அரண்மனையில் உணவுப்பொருள் சேகரித்து அனுப்புவதை உறுதிப்படுத்துகின்றன (1 அர 4:7 -5:5). இஸ்ராயேலினுடைய 12 கோத்திரங்களின் எண் ஆண்டின் 12 மாதங்களின் பொது புனிதத்தலத்தில் நடக்கும் கலாச்சாரச் சடங்குடன் தொடர்பு கொண்டுள்ளதாக ஊகிக்கப்படுகின்றது. நாற்பது (40) என்ற எண் ஒரு தலைமுறைக் காலத்தை வழக்கமாகக் குறிக்கின்றது: பாலைவனத்தில் 40 ஆண்டுகள் வாழ்தல் (எண் 14:34); இஸ்ராயேலில் ஒவ்வொரு நீதிபதியாலும் நிறைவேற்றப்பட்ட மீட்பிற்குப் பிற்பட்ட 40 ஆண்டுகால அமைதி (நீதி 3:11.30; 5:31); தாவீதின் 40 ஆண்டுகால அரசாட்சி (2 சாமு 5:4) இவ்வாறாகக் குறிப்பிட்ட கால அளவு அறியப்படாத நீண்டகாலம் பற்றிய கருத்து வெளிப்படுகிறது: வெள்ளத்திற்கு 40 இரவும் 40 பகலும் (ஆதி 7:4), சீனாய் மலைமீது மோசே தங்கியிருந்த காலம் ( யாத் 24:18). ஆனால் எலியாவினுடைய 40 நாள் பயணமும் (1 அர 19:8), கிறிஸ்துவினுடைய நோன்பும் (மாற் 1:13) பாலைவனத்திலிருந்த இஸ்ராயேலரின் 40 ஆண்டுகளையே மீண்டும் அடையாளமுறையில் சுட்டுகின்றன. இதே போன்ற பயன்பாட்டு முறைகள் 60 மற்றும் 80 (உ.ச. 6:8), 100 (லேவி 26:8; திருவுரை 6:3; மத் 19:29-இன் 100 மடங்கு) ஆகியவற்றிற்கு அளிக்க வேண்டும். ஆயினும் எண் 11:16.24-இல் வரும் 70 முதியோர் என்பது ஏழு என்ற எண்ணின் வழக்கமான பயன்பாட்டையே குறிக்கின்றது (லூக் 10:1). அதே நேரத்தில் எழுபதினுடைய சில பயன்பாடுகள் (10 முறை 7) வாரம் மற்றும் ஓய்வு நாளின் (எரே 25:11; 2 நாள் 36:21; தானி 9:21) அடையாளவியலோடு தொடர்பு கொண்டுள்ளன. ஆயிரம் (1000) என்ற எண் குறிப்பிடத்தக்க பெரும் அளவினை மனத்திற்குக் கொண்டு வருகிறது: 1000 சந்ததிகளுக்கு இறைவன் இரக்கமுடையவராக இருக்கிறார் (யாத் 20:6; எரே 32:18). அவருக்கு 1000 வருடங்கள் 1 நாள் போன்றது (சங் 89:4). அவரது பணியில் ஒருநாள் இருப்பது மற்றவற்றைவிட 1000 மடங்கு மதிப்பு மிக்கது

(சங் 83:10). ஆனால் அதே எண் கோத்திரங்களின் உட் பிரிவுகளையும் குறிப்பிட உதவுகிறது; ஆயிரமானது நூறு, ஐம்பது மற்றும் பத்து (யாத் 18:2) என மேலும் வழக்கமாகப் பிரிக்கப்படுகிறது. மேலும் 10,000 என்பது நம்பமுடியாத எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது (லேவி 26:8). எந்நிலையிலும், இத்தகைய பெரிய எண்கள் ஆதி 24:60 அல்லது 1 சாமு 18:7 ஆகியவற்றில் தெளிவாக வெளிப்படுகின்றதுபோல், உயர்வு நவிற்சி அணிகளாகும்.

2. ஒரு எண்ணிற்குப்பின் அதற்கு அடுத்த எண்ணைக் குறிப்பிடுவது அழுத்த முக்கியத்துவம் அளிக்கும் முறையாகும். ''ஒன்றைக் கடவுள் மொழிந்தார். திரும்பத்திரும்ப (இரு முறை) நான் அதைக்கேட்டிருக்கிறேன்'' (சங் 61:11). கீழ்க்கண்டவையும் காணப்படுகின்றன: 1+2 (எரே 3:14; யோபு 40:5), 2+3 (ஓசே 6:2; யோபு 33:29; சீரா 23:16), 3+4 (ஆமோ 1-2; பழ 30:15-33; சீரா 26:5), 4+5 (எச 17:6), 5+6 (2 அர 13:19), 6+7 (பழ 6:16; யோபு 5:19), 7+8 (மீக் 5:4; திருவுரை 11:2); 9+10 (சீரா 25:7). இம்முறையானது பெரும்பாலும் எண்ணிக்கை அடிப்படை கொண்ட வாக்கு வடிவில் ஞான ஆசிரியர்களின் நூல்களில் அடிக்கடி காணப்படுகிறது.

II. அடையாளப் பொருள்கள்:-

பண்டை மேற்காசிய நாடுகள் எண்களின் அடையாளவியலை உயர்வாக மதித்தன. கணிதமானது ஒரளவு வளர்ச்சியுற்றிருந்த மெசபொத்தாமியாவில், சில புனித எண்கள் தெய்வங்களுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. பித்தகோரஸ் கணிப்புப்படி 1 மற்றும் 2 ஆண்பாலாகவும், 3 மற்றும் 4 பெண்பாலாகவும், 5 ஆனது கன்னித்தன்மையுடையதாகவும் கருதப்பட்டன. இக்கணிப்புகள் சில நேரங்களில் யூத நூல்களிலும் திருச்சபைத் தந்தையின் நூல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இக்கருத்து விவிலியத்துக்குப்புறம்பானது. அதில் எந்த எண்ணுமே புனிதமாகக் கருதப்படுவதில்லை. மற்றொரு புறம் சில பொதுவான வழக்கிலிருந்தோ, கற்றுப்புற நாகரீகங்களின் பிற்காலத் தூண்டுதல்களினாலோ சில குறிப்பிட்ட அடையாள வழக்கிலும் வடிவ இயலிலும் இவை பெரும் எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

1. அடையாளப் பயன்பாடு:- அண்ட முழுமையினைக் குறிப்பிடுகின்ற எண்ணாகிய நான்கு (எசே 1:5..; திருவெளி 4:6 ஆகியவற்றில் நான்கு உயிருள்ள மிருகங்களுக்குப் பின்னணியாகவும் உள்ளது), முழுமைப் பண்புடைய அனைத்தையும் உணர்த்துகின்றது. எச 14:21-இல் 4 ஆக்கினைகள்; லூக் 6:20தொ-இல் 4 பேறுகள் (மத் 5:1-10-இல் 8 பேறுகள்).

எண் ஏழு பாரம்பரியமாக ஒரு முழுத் தொடரைக் குறிப்பிட்டு வருகிறது: இரத்தத்துடனான 7 தெளிப்புகள் (லேவி 4:6.17; 8:11; 14:7; எண் 19:4; 2 அர 5:10); 7 விலங்குகளைச் சுட்டெரித்தல் (எண் 28:11; எச 45:23; யோபு 42:8; 2 நாள் 29:21). அது எவ்விதத் தடையுமின்றிச் சில புனிதத்தன்மையுடைய பொருட்களுடன் சேர்த்துக் கூறப்படுகிறது: தோபி 12:15-இன் 7 வானதூதர்கள்; செப் 3:9-இல் உள்ள பாறையின் மீதான 7 கண்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இது வாரத்தினுடைய நாட்களின் எண்ணிக்கையும், சிறப்பு மிக்க புனித நாளாக ஓய்வு நாளைச் சிறப்பிப்பதுமாகும் (ஆதி 2:2). அதன் பின்னர், தானி 9:2.24-இன் வெளிப்பாட்டுக் கருத்துவருகிறது. அதில் எந்த உண்மையான காலவரையறைக்கும் உட்படாமல் 70 வாரங்கள் (7 முறை 7 ஆண்டு அடங்கிய 10 ஜூபிளிகள்) மீட்புநாளுக்கு இட்டுச் செல்கின்றன. 3+4 என்று பிரிக்கப்படக்கூடிய முழுமையின் எண் என்ற பெயரில் 7-ஆனது இறைவாக்குக் காட்சிகளிலும் (ஏச 30:26; செக் 4:2), குறிப்பாக வெளிப்பாட்டுக் காட்சிகளிலும் (திருவெளி 1:12.16; 3:1; 4:5; 5:1.16; 8:2; 10:3; 15:1; 17:9) காணப்படுகிறது. ஆனால் அதனுடைய பாதியாகிய 3½-யும் குறிப்பிடப்பட்டுள்ளது (தானி 7:25; 8:14; 9:27; 12:8.11-12; திருவெளி 11:2-3.9 தொ; 12:6.4; 13:5). எதிர்மாறான நிலையில் ஆறானது (6) (7-1) முழுமையற்ற நிலையின் மாதிரிகையாக உள்ளது (திருவெளி 13:18; 666).

12 கோத்திரங்களின் எண்ணாக இருக்கும் வரையில், 12-ஆனது முழுமை எண்ணாகும். இறைவனின் மக்களை அடையாள முறையில் குறிக்கின்றது. அதன் பின்னர்ப் புதிய இஸ்ராயேலின் 12 கோத்திரங்களின்மீது ஆட்சி செலுத்தவிருக்கின்ற, இயேசுவின் 12 அப்போஸ்தலர்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது (மத் 19:28). அதே போன்று திருவெளிப்பாட்டின் புதிய எருசலேமானது 12 கோத்திரங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட 12 வாயில்களையும் (திருவெளி 21:12), 12 அப்போஸ்தலர்களின் பெயர்களைக் கொண்ட 12 அடிக்கற்களையும் (21:14) கொண்டுள்ளது. இதே முறையில் இஸ்ராயேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் 12 ஆயிரம் பேர் என்ற நிலையில் காப்பாற்றப்பட்ட மக்களின் மொத்த எண்ணிக்கையானது 144000 ஆகும் (திருவெளி 7:4-8). ஆனால் பெண் சூடியிருந்த (புதிய மனித இனத்தின் மற்றொரு அடையாளம்) முடியிலிருந்த 12 விண்மீன்கள் 12 விண்மீன்குழுக்களின் அமைப்புகளைச் சுட்டிக் காட்டலாம் (12:1).

2. வடிவ இயல்:- வடிவியலானது பண்டைக் காலத்தவரால் போற்றப்பட்ட ஒரு முறையினைக் குறிப்பிடுகின்றது. அதன்படி ஒரு பெயரில் உள்ள எழுத்துக்களின் எண் மதிப்பு ஓர் ஆளையோ பொருளையோ குறிப்பதாகக் கருதப்பட்டது. விவிலியமானது இத்தகைய சில உதாரணங்களைக் கொண்டுள்ளது.

ஆபிரகாம் திரட்டிக் கொண்டு சென்ற சிறுபடையின் 318 என்ற எண் (ஆதி 14:14), ஆபிரகாமினுடைய ஊழியனாகிய எலயேசரின் பெயர் குறிக்கும் எண்ணாக இருக்கலாம். இயேசுவின் தலைமுறைப்பட்டியில் அடங்கியுள்ள 3 x 14 சந்ததிகளிலும் தாவீது என்ற பெயரின் வடிவ இயலைக்காண முயற்சிகள் நடந்துள்ளன (மத் 1). இது ஏழு என்ற எண்ணின் அடையாளப் பயன்பாட்டின் மேல் அமைக்கப்பட்ட கருத்தாகும். இதன்படி இயேசு ''மும்மடங்கான தாவீது'' (அதாவது மிகச் சிறந்த தாவீது மெசியா) ஆவார். குறிப்பீட்டினுடைய அடிப்படையானது விவாதத்திற்குரியதாயினும், திருவெளி 13:18-இல் உள்ள விலங்கினுடைய எண் (666) இத்தகைய தொன்றாகும். இது புனித இரேனயு ஏற்கனவே உரோமைப் பேரரசைக் குறிக்கின்ற பெயரைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். இக்காலத்தில் நீரோ செசாரினுடைய எபிரேயப் பெயரை அடிப்படையாகக் கொண்டதாகப் பெருமளவில் கருதப்படுகிறது. இவை எவ்வாறாயினும் ஆறினுடைய அடையாளவியலானது இந்த மறைபொருளான பெயரின் மேல் சுமத்தப்பட்டுள்ளது.

III. முடிவுரை:- சில குறிப்பிட்ட விவிலிய எண்கள் அடையாள மதிப்பு மற்றும் வடிவியல் என்னும் இருவித முறைகளிலும் விளக்கப்படவேண்டும். ஆனால், பெரும்பாலும் இதற்கான விடைநூல் நம்மிடமிருந்து தவறிப்போய்விட்டது. அதை மீள அடைவது வெகு கடினமாகும். இவ்வாறு வெள்ளத்திற்கு முற்பட்ட மூதாதையரின் கதைக் காலங்கள் (இது மெசபொத்தாமியா கதைகளில் வரும் ஆட்களோடு ஒப்பிடத்தக்கது) ஒரு பொருளைக் கொண்டிருக்கலாம். ஆனால் இது ஏனோக்கின் கதையில் தவிர மற்றவற்றில் காணப்படவில்லை. சூரிய ஆண்டின் முழுமை எண்ணாகிய 365 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஏனோக்கு. அந்த வரிசையில் இவர் ஒரு நீதிமான். இஸ்ராயேலரின் முன்னோர்களின் காலங்கள் எண் 1:46-இல் எண்ணப்படுபவர்களின் கூட்டுத்தொகை, யோவா 5:5-இல் வரும் 38 ஆண்டுகள், யோவா 21:11-இல் வரும் 153 பெரிய மீன்கள் ஆகியவற்றிற்கு இவ்வாறே விளக்கம் கூறலாம்.

இது எப்படியிருப்பினும் மறைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது உறுதியாக உள்ளது. அவற்றினுடைய சிறப்பினை உணர்வதற்கு நிகழ்ச்சியுரையாளரின் கருத்து எப்போதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அவர்கள் துல்லியமான குறிப்பிட்ட எண்களைக் கொடுக்கிறார்களா, அல்லது தோராயமாகக் கூறுகிறார்களா? பின்னதில் உயர்வுநவிற்சியாக மிகைப்படுத்திக் கூறுகிறார்களா அல்லது கணிதவியலான

அடையாளப் பொருளில் கூறுகிறார்களா? வரலாற்று நூல்களில் போரிடுவோர் அல்லது சிறைப்பட்டோரின் எண்ணிக்கையானது பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்டதாகவே உள்ளது (யாத் 12:38). ஆனால் இது ஓர் இலக்கிய மரபாகும். இதை ஏறக்குறைய வழக்கமான கணித நோக்கத்திற்கப்பால், இந்த ஒளியில் வரலாற்று ஆசிரியர் கூறுவதைப் புரிந்து கொள்ளவேண்டும். இதே முறையில், அடையாளவியலானது தலையிட்டால், அடையாளங்களின் - பொருளுக்கே ஆசிரியர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

ஒவ்வொரு பகுதியிலும் என்ன கூறப்படுகிறது என்று கவனிப்பது அவசியம். அப்படிச் செய்தால் சமன்படுத்தப்படாத அடையாள விளக்கம் அளிப்பதையும் மாறுபாட்டுக்கு இடந் தருகின்றவற்றை உறுதியாகக் கூறுவதையும், இறுதியாகச் சில வாசகக் கருத்துக்களை வெறுமையாக்குவதையும் தவிர்க்கலாம். எண்களுடைய மதிப்போடு சேர்ந்து எண்கள் முற்றிலும் வேறுபட்ட அமைப்பைக் கூறுகின்றன. இதைப் பெரும்பாலும் இன்றைய வாசகர்கள் புரிந்து கொள்வதில்லை.

**எண்ணற்ற (MYRIAD)**

''மிரியட்'' என்ற சொல்லை நேரடியாக மொழிபெயர்த்தால் ''பத்தாயிரம்'' என்பது பொருள். சில நேரங்களில் ''எண்ணிக்கையில் அடங்காதது'' என்றும் பொருள்படும். விவிலியத்தில் குறிப்பாக யூதாநூலிலும் திருவெளிப்பாட்டிலும் ''எண்ணற்ற'' எண்ணிக்கை கோடானுகோடி, ஆயிரமாயிரம் (யூதா 14; திருவெளி 5:11) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றவைகளில் ''இருபதுகோடி'' (திருவெளி 9:16) ''ஐம்பதினாயிரம்'' (அ.ப. 19:19), ''எத்தனையோ ஆயிரம்'' (திருவெளி 21:20) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**எண்ணிக்கைநூல் (BOOK OF NUMBERS)**

1. பெயர்:- ஐந்நூலின் நான்காம் பகுதியாகிய இந்நூல் எபிரேயத்தில், ''பாலைவனத்தில்'' என்று பொருள் படும் தொடக்க வார்த்தையைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. இத்தலைப்பு, இஸ்ராயேல் 40 ஆண்டுகளாகப் பாலைவனத்தில் அலைந்து திரிந்த பெரும்யாத்திரையை நினைவுக்குக் கொண்டு வருகிறது. சீனாய் மலை அடிவார வாழ்க்கையிலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும் வரையுள்ள இஸ்ராயேலரது வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது. இக்காலத்தில் இறைவன் தம்மக்களைக் கடுமையாகச் சோதித்து அவர்களின் உரிமை நாட்டில் நுழைய அவர்களைத் தயாரித்தார். இந்நூல் இஸ்ராயேலின் மீட்புக் காவியத்தில் ஓர் இடைக்கால நூலாகும். எகிப்திலிருந்து அடைந்த விடுதலையையும் கானானில் குடியேறியதையும் இணைக்கும் நூலாகும். இவ்விதத்தில் இது இந்நூலில் ஒரு சிறப்பிடம் பெறுகிறது.

எழுபது நூல், இந்நூலைக் ''கணித்தல்'' அல்லது ''எண்ணுதல்'' என்ற பொருளுடைய பெயரால் அழைக்கிறது. பல நிகழ்ச்சிகளில் பல பொருட்கள் எண்ணப்படுகின்றன. பயணத்தின்போது பகைவர்களது எதிர்ப்பு எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. ஆகையால் போரிடக்கூடிய படைவீரர்களின் எண்ணிக்கையும் ஒருவகையான படை அமைப்பும் தேவையாயிற்று (எண் 1:1-54). எனவே இறைமக்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது. மேலும் பலிப்பொருள்கள், போரின் கொள்ளைப் பொருள்கள், சுத்திகரத்துக்குரிய நாட்கள், லேவியருடைய நகரப் பகுதிகளைப் பிரித்துக் கொடுத்தல், ஆகியவை பற்றிய எண்ணிக்கையை வரையறுப்பதில் இந்நூல் அக்கறை காட்டுகிறது. தமிழில் இந்நூலை எண்ணிக்கைநூல் என்றழைக்கிறோம்.

2. மூலங்களும் தோற்றங்களும்:- இந்நூல் பல பாரம்பரியங்களின் தொகுப்பாகும். தற்கால முறைப்படி, எண்ணாகமத்தை ஒரு நூலாகக் கருத முடியாது. இஸ்ராயேல் வரலாற்றின் பல்வேறு காலங்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்ட தொகுப்பாகும். ஏறத்தாழ 1000 ஆண்டுகள் காலத்

*தைச் சேர்ந்த வரலாற்று, சட்ட, வழிபாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட தொகுப் பென்று நாம் கூறவேண்டும்.*

*எண்ணாகமப் பகுப்பாராய்ச்சி யாவே, எலோகிம், குருக்கள் ஆகிய பாரம்பரியங் கள் இந்நூலில் காணப்படுவதாகக் காட்டுகி றது. இந்நூலில் காணப்படும் யாவே, எலோ கிம் பாரம்பரியங்களை வெவ்வேறாகப் பிரிக்கமுடியாது. கி.மு. 721-இல் சமாரியா அழிக்கப்பட்ட பின், இவ்விரு பாரம்பரியங் களும் இணைக்கப்பட்டு எழுத்து வடிவம் எடுத்திருக்கலாம். ஆனால் இந்நூலில் சிறப் பிடம் பெறுவது குருக்கள் பாரம்பரியமா கும். இப்பாரம்பரியம் தனது பண்பையும் முத்திரையையும் மனப்போக்கையும் இந் நூலுக்கு அளிக்கிறது. இந்நூலின் பெரும் பகுதி இப்பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். இது தான் இந்நூலுக்கு இறுதி வடிவத்தையும் போக்கையும் அளித்திருக்க வேண்டும் என் பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள் ளப்படும். இப்பாரம்பரியத்தைச் சேர்ந்த ஆசிரியர்தான் யாவே, எலோகிம் பாரம்பரி யப்பகுதிகளை இணைத்துப் பதிப்பித்திருக்க வேண்டும்.*

*ஊகத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பாரம்பரியங்களுக்கும் உரிய இந்நூல் பகுதி களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.*

*யாவே பாரம்பரியம்: 10:29-32; 11; 13-14; 16; 20-21; 22-24; 25; 1-5; 32.*
*எலோகிம் பாரம்பரியம்: 10; 11; 12; 13-14; 16; 20-21; 22-24; 25:1-5; 32;*
*குருக்கள் பாரம்பரியம்: 1-10; 13-14; 15; 16; 17-19; 20; 25:6-31: 54; 32; 33-36.*

*3. ஆசிரியரும் காலமும்:- ஐந்நூலின் மற்ற நூல்களைப் போல் இந்நூலையும் மோசே தான் எழுதினார் என்று யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் கூறுகின்றன. இதை, ஐந் நூல் ஆசிரியர் பற்றிய கட்டுரையில் கூறிய கருத்துக்களின்படி எடுத்துக் கொள்ள வேண் டும். மோசே மனப்போக்குப்படி எழுதப் பட்ட நூல் இது என்றும், ஆகையால் மோசே யின் அதிகாரம் பெற்றது என்றும், சில பகுதிகளை மோசேயே எழுதியதாகவும் கூற லாம்.*

*மேலும், இந்நூலில் காணப்படும் சிக்கல் மிக்க, பல பாரம்பரியங்களின் தொகுப்புத் தன்மையையும், ஆசிரியர் பற்றிய நவீன கருத்தையும் மனத்தில் கொண்டால், இந் நூலுக்கு மோசே (என்ற) ஒருவர்தான் ஆசிரியர் என்று கூற முடியாது. இதைவிட, இஸ்ரா யேல் தனது கடந்த காலத்தைப் போற்றிக் காத்து வந்த ஞாபகத்தின் விவரிப்பாகும் இந்நூல். மதிப்பும் அச்சமும் தரும் மீட்பு நிகழ்ச்சிகளைத் துய்த்த ஒருமுகம் நினைவு கூர்ந்த பாரம்பரியங்களின் விவரிப்பாகும். வரலாற்றுப் பகுதிகள் அந்த அனுபவத்தின் உயிருள்ள ஞாபகத்தைக் காத்துத் தருகின் றன. இஸ்ராயேல் சமூகம், கவனத்தோடு திட்டம் செய்து அமைக்கப்பட்டு, ஒரு சமயச் சமூகமாக, இறைவன் வழிகாட்ட, அவரது ஆதரவின் கீழ் வரலாற்றில் இயங்குவதாக இந்நூல் வரைந்துகாட்டுகிறது. இவ்வனுப வம் இறையூக்கம் பெற்ற சிக்கல் மிக்க அமைப்பை எடுத்துக்காட்டுகிறது.*

*இந்நூலின் இறுதி வடிவம், இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்த காலத் தைச் சேர்ந்ததாகும்.*

*4. திட்டம்:- கலப்புத் தொகுப்பான இந் நூலில் கருத்து ஒருமைப்பாடு இல்லை; திட் டம் இல்லை. சமூகம் சார்ந்த சட்டங்களும் ஒழுங்குகளும் அடிக்கடி இடையே புகுந்து வரலாற்று நிகழ்ச்சியுரைப் போக்கைத் தடை செய்கின்றன. ஆகையால் இந்நூலுக்குத் தெளிவான ஒருமைப்பாடுடைய திட்டம் அளிப்பது கடினமாகும். எனவே, பின்வரும் திட்டம் தோராயமாகத்தான் இருக்கமுடியும். இஸ்ராயேலர் தங்கியிருந்த நிலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு முப்பெரும் பகுதிகளாக இந்நூலைப் பிரிக்க லாம். அத்திட்டம் பொதுவாக இப்போது ஏற்றுக் கொள்ளப்படும்.*

*1. சீனாயில் இறுதி நாட்கள் (1:1-10:10)*

2. சீனாயிலிருந்து மோவாபுக்குப் பயணம் (10:11-22:1)
3. மோவாபு சமவெளியில் நடந்தவை (22:2-36:13)

5. சிறப்புக் கருத்துக்கள்:-

5.1) மக்கள்:- சீனாய் மலை அடிவாரத்தில் இஸ்ராயேலர் மக்கள் ஓராண்டு தங்கினர். இது அவர்கள் ஒரு சமய, அரசியல் அமைப்புப் பெற உதவிய மிக முக்கியமான காலமாகும். ஆனால் வேறுபாடு உடைய பலரையும், நிலையான உறுதியான ஒற்றுமையுடைய அமைப்பாக்கத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும். பாலைவனப் பயணத்தின்போது ஏற்படும் பல கிளர்ச்சிகள் இதற்குச் சான்று பகருகின்றன. இந்தக் கிளர்ச்சிகளும், பலவந்தமும் மிகுதியாக, மக்களின் ஒரு பகுதி மோசேயின் தலைமையை எதிர்க்கும் அளவுக்குப் போயிற்று. இவையாவும் சீனாயில் மக்கள் யாவேயுடன் செய்து கொண்ட உடன்படிக்கை, கட்டாயத்தாலோ பலவந்தத்தாலோ செய்து கொண்டது அன்று என்று காட்டின. ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' என்று மக்கள் கூறிய போது (யாத் 24:7) அவர்கள் விரும்பித் தன்னுரிமையுடன் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்டனர். கட்டாயத்தாலோ, பயத்தாலோ அன்று. ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' என்ற கூற்றை யாத்திரையாகமத்தில் பல தடவை காண்கிறோம். ஆனால் எண்ணிக்கை நூலுக்கு வரும்போது, இத்தகைய மனப்பான்மையை நாம் காண்பதில்லை. மாறாக, ''முணுமுணுத்தனர், முறையிட்டனர்'' போன்ற வாக்குகள் அடிக்கடி மலிந்துகிடக்கின்றன. ஆகையால் இந்நூலைக் கிளர்ச்சியின் நூல் என்றோ, சோதனையின் நூல் என்றோ அழைப்பது சாலப் பொருந்தும். இந்நூல் முழுவதும் உள்ளார்ந்த நெருக்கடி நிலை மிகுந்து காணப்படுகிறது. வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. இது ஒன்றே, இந்நூலில் வரும் வரலாற்றுப் பாரம்பரியத்தின் உண்மைத் தன்மைக்கு ஆற்றல் மிக்க சான்றாக அமைகிறது.

5.2) பெட்டகம்:- சீனாய் மலையடிவாரத்தில் ஏறத்தாழ ஓராண்டு தங்கியபின் இஸ்ராயேலர் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். பாளையங்களை அமைக்கவும், நீக்கவும் நிலையான ஒரே வகையான செயல்முறை கடைப்பிடிக்கப்பட்டது. இது மக்களிடையே குழப்பம் ஏற்படுவதைத் தவிர்த்தது. திருத்தலத்தையும் அதைச் சார்ந்த பொருட்களையும் தூக்கிச் செல்லும் பணி லேவியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது (எண் 3:4.9) இஸ்ராயேலர் பயணம் செய்தபோது உடன்படிக்கைப் பெட்டகத்திற்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டது. பெட்டகம் தூக்கப்படும்போது, மோசே ''ஆண்டவரே எழுந்தருளும் உம் பகைவர் சிதறுண்டு போகவும், உம்மைப் பழிக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப் போகவும் கடவார்களாக'' என்பார். அது இறக்கப்படும்போதோ ''நீர் இஸ்ராயேலர் என்னும் பெரும்படையிடம் திரும்புவீராக'' என்பார் (எண் 10:35-36). சீனாய் மலையடிவாரத்தில் தங்கியிருந்த காலத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டகத்துடன் யாவேயின் பிரசன்னம் கொண்டிருந்த தொடர்பை ஆழ்ந்த நம்பிக்கையுடன் இஸ்ராயேலர் ஏற்றுக் கொண்டனர். ஆகையால் இறைவனுடைய பாதுகாப்பைப் பெறுவதற்கு, எல்லாச் செயல்களும் பெட்டகத்தைச் சுற்றி உருவெடுத்தன.

5.3). சீனாயிலிருந்து காதேசுவரை:- பயணத்தின்போது வரிசை ஒழுங்குமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. எத்திரோவின் மகன் கோபாவு வழிகாட்டினார். ஆனால் சிறிது இடுக்கண் ஏற்பட்டாலும் அதிருப்தியாளர் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டத் தவறவில்லை. அவர்கள் துய்த்த முதல் நெருக்கடி நிலை உணவும், குடிநீரும் இல்லாமையாகும். மக்களிடையே குழப்பமும் கிளர்ச்சியும் எவ்வளவு இருந்ததென்றால், ஆரோனும் மிரியாமும்கூட மோசேயை எதிர்க்கத் தலைப்பட்டனர் (12:1-16). யாவே மீண்டும் மீண்டும் தலையிட்டு மக்களை நெருக்கடி நிலையிலிருந்து காப்பாற்றுகிறார். கிளர்ச்சி செய்பவர்களைத் தண்டிக்கிறார். மோசேயும் மக்களும் சென்ற பாதை,

*பாரான்பாலையில் சீயோன் மேட்டுநிலத்திற்கும் அக்காபாவின் வடக்கிலுள்ள எசியோங்கெபேர் கடற்கரை மலைகளுக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கு வழியாகச் சென்றது. அரபா ஓடையை ஒட்டிய உயர் முகடுகள் வழியாகச் சென்று நெகேபுப் பகுதியிலுள்ள காதேசுக்கு வந்து சேர்ந்தனர்.*

*5.4) காதேசில்:- பாரானில் இஸ்ராயேலர் நீண்டகாலம் தங்கியதாகவும், காதேசில் சிறிது காலமே தங்கியதாகவும் குருக்கள் பாரம்பரியம் கூறுகிறது. ஆனால் இஸ்ராயேலர் காதேசில் பல நாட்கள் தங்கியதாக உபாகம ஆசிரியர் கூறுகிறார் (உப 1:46). காதேசிலிருந்து புறப்பட்டு யாரேத்து என்னும் ஓடையைக் கடக்கும்வரை (2:14) 38 ஆண்டுகள் எடுத்ததாகக் கூறுகிறார். யாவே, எலோகிம் பாரம்பரியங்களும் இஸ்ராயேலர் காதேசில் பல ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறுகின்றன. பாரான் பாலைவனப் பகுதியும் காதேசைச் சுற்றிய பாலைவனப் பகுதியும் ஒரே நிலப்பகுதியையே குறிக்கின்றன என்று ஏற்றுக்கொண்டால் மேற்கூறப்பட்டவை ஒத்துப் போவதைக் காணலாம்.*

*காதேசிலிருந்து, கானான் நாட்டைத் தெற்கிலிருந்து கைப்பற்ற மோசே விரும்பினார். இதற்காகக் கானான் நாட்டையும் அதன் மக்களையும் மேற்பார்வையிட்டு மதிப்பீடு செய்ய ஒற்றர்களை மோசே அனுப்பினார். இவர்கள் சென்று கானான் நாடு முழுவதையும் பார்வையிட்டதாகத் தெரிகிறது. ஒரு பாரம்பரியப்படி இவர்கள் வடக்கில் உள்ள கம்மாத்தின் நுழைவாயில்வரை (எண் 13:22) சென்றதாகத் தெரிகிறது. இவ்வொற்றர்களில் பலர் திரும்பி வந்து கானானியர்களைப்பற்றிய பயங்கரக் கதைகள் கூறினர். இக்கதைகள் இஸ்ராயேலரிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. கானானியர்களை வெற்றிகொண்டு அவர்கள் நாட்டைக் கைப்பற்றுவது முடியாத காரியம் என்று எண்ணினர். யோசுவாவும் காலேபும் கானான் நாட்டின் உண்மை நிலையை எடுத்துக் கூறினர். மற்ற ஒற்றர்கள் இதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். மக்களும் பொய் சொல்பவர்கள் சார்பாகவே இருந்தனர். இந்நிலையில் மக்களுக்குள் கிளர்ச்சியெழுந்தது. மக்கள் அனைவரும் மோசேக்கு எதிராக இரவு முழுவதும் கூச்சலிட்டுக் கிளர்ச்சி செய்தனர். ''நமக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கே திரும்பிப் போகலாம்'' என்று ஒருவருக்கொருவர் கூறினர் (எண் 14:1-4). இறைவன் சினந்து அவர்களை அழிக்க விரும்புவதாகக் கூறுகிறார். மோசே வேண்டுதலால் அமைதியடைந்து, குற்றம் செய்தவர்கள் யாவரும் வாக்கு அளிக்கப்பட்ட நாட்டில் நுழைய மாட்டார்கள் என்று இறைவன் தண்டிக்கிறார். ஆண்டவருக்கு மக்கள் அளித்த இந்த அவமதிப்பான நடத்தைக்கு ஈடு செய்ய அவர்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் அலைந்து திரியவேண்டும் (எண் 14:32-35). ''நாற்பது ஆண்டுகள்'' என்பது ஒரு தலைமுறைக் காலத்தைக் குறிக்கச் செமித்தியர் பயன்படுத்தும் ஒரு முழுமையான எண்ணாகும். ஆகையால் நமது கணிப்புப்படி இருபத்தைந்து ஆண்டுகள் என்று எடுத்துக் கொள்ளலாம்.*

*ஆனால் கிளர்ச்சியாளர்கள் மனநிறைவடையவில்லை. அவர்களாகவே கானானியர்களையும் அமலேக்கியர்களையும் தாக்க முற்பட்டனர். ஆனால் ஓர்மா என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர் (எண் 14:40-45). இதன்பின் ஒரு புதிய பணிவுள்ள தலைமுறை உருவாகி வளரும்வரை காதேசைச் சுற்றியுள்ள பகுதியில் தங்க மோசே முடிவெடுத்திருக்க வேண்டும்.*

*காதேசைச் சுற்றிப் பல புகழ்பெற்ற நீருற்றுக்கள் இருந்தன என்று நமக்குத் தெரியவருகிறது. இவை பெரும் மக்கள் கூட்டத்திற்குப் போதியன. ஓர் அளவு பயிர் செய்யவும் உதவின. காதேசு வழியாகப் பல வழிகள் எல்லாப் பக்கங்களிலும் சென்றன. இது பயணத்திற்கும் வணிகத்திற்கும் பெரிதும் பயன்பட்டது. இவ்விடத்தில் தங்கி இஸ்ராயேல் ஓரளவு நிலையான வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். இக்காலத்தில் கோராகின் கட்சி, தாத்தான், அபிராம் தீர்ப்பிடப்படுதல் என்பன சிறப்புமிக்கனவாகும்.*

*5.5) கோராகின் கட்சிப் பிளவு:-* கோராகும் அவனைச் சார்ந்தவர்களும் மோசே, ஆரோன் ஆகியோரின் அதிகாரத்துக்கும் பதவிக்கும் எதிராக எழுந்து கிளர்ச்சி செய்தனர். இவர்கள் செய்த கிளர்ச்சி ஒரு சமயக் கிளர்ச்சியாகும். குருக்கள் பாரம்பரியம் இதை விவரிக்கிறது. கோராகும் அவனைச் சார்ந்தவர்களும் நடத்திய இச்சமயக் கிளர்ச்சி எண் *16:3. 11. 16-24*-இல் விவரிக்கப்படுகிறது.

கோராகு லேவியர் இனத்தைச் சார்ந்தவன். அவனும் இன்னும் 250 எதிர்ப்பாளரும் சேர்ந்து கிளர்ச்சி செய்தனர். மோசேயும் ஆரோனும் மட்டும் இதுவரை செய்துவந்த குருத்துவ வேலைக்கு மாறாக எதிர்த்தெழுந்தனர். அதற்கு உரிமை கொண்டாடினர். இக்கிளர்ச்சி, சந்திப்பின் கூடாரத்தில் கூடிய மக்கள் சபைமுன், கடும் தேர்வு முறையால் தீர்க்கப்படுகிறது. ஆரோனும் கிளர்ச்சியாளர் ஒவ்வொருவரும் தனது சொந்தத் தூபக்கலத்தில் தூபம் எழுப்பிய நிலையில் சந்திப்பின் கூடாரத்தின் முன் ஆண்டவரின் தீர்ப்புக்காகக் காத்து நிற்க வேண்டும். அப்படியே செய்தனர். ஆண்டவரிடமிருந்து தீ வந்து கிளர்ச்சியாளர்களைச் சுட்டெரித்தது. அவர்களுடைய தூபக் கலசங்கள் தகடாக அடிக்கப்பட்டு, பீடத்திற்கு உறையாயிற்று. இந்த உறை, ஆண்டவரது பீடத்தைக் குருக்கள் மட்டும் அணுகலாம் என்று இஸ்ராயேலர்களுக்கு நினைவுபடுத்தும்.

*5.6) தாத்தான், அபிராம் கிளர்ச்சி:-* இதுவும் மோசே, ஆரோனின் அதிகாரத்துக்கு எதிரான தனிக்கிளர்ச்சியாகும். முன்னதோடு பின்னிப்பிணைக்கப்பட்டு ஒரே நிகழ்ச்சியுரையாகத் தரப்படுகிறது. இது காதேசில் நடந்த அரசியல் கிளர்ச்சியாகும். யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இதை விவரிக்கின்றன. இது எண். *16:12-15. 25-34*-இல் விவரிக்கப்படுகிறது.

தாத்தானும் அபிராமும் லேவியர் குலத்தைச் சாராத பொது நிலையினர். மோசே தனக்கே எல்லா அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டதாகக் குற்றம் சாட்டிக் கலகம் செய்தனர். இதோடு பாலையில் கடின வாழ்வின் விளைவான முணு முணுப்பும், எகிப்தில் அனுபவித்த கடந்தகாலச் சுகங்களின் ஏக்கமும் சேர்ந்தன. அவர்கள் தங்களுடைய நடத்தையை விளக்குமாறு மோசே கூப்பிட்டனுப்பியபோது, இருவரும் வரமறுத்துவிட்டனர். ஆகையால் மோசே அவர்கள் தங்கியிருந்த இடம் சென்று கிளர்ச்சியாளர்களிடமிருந்து மக்களைப் பிரிந்திருக்கக் கட்டளையிட்டுத் தனது உரிமையை மெய்ப்பிக்கும்படி யாவேயை வேண்டினார். பூமி பிளந்து இருவரையும் அவர்கள் குடும்பத்தாரையும் அவர்கள் சொத்துக்களோடு விழுங்கிற்று. பழங்காலச் செமித்தியரின் குற்றத்தில் பொதுப்பொறுப்புக் கொள்கைப்படி இவ்விருவரின் பாவத்தால், அவர்களுடைய குடும்பங்களும் உடைமைகளும் கறை பிடித்தவையாயின. இந்நிகழ்ச்சி இஸ்ராயேலரிடையே ஓர் எச்சரிக்கையாகவும் படிப்பினையாகவும் நினைவுகூறப்பட்டது *(எண் 26:9-11; உப 11:6; சங் 105:17; சீரா 45:18-19)*.

இவ்விரு நிகழ்ச்சிகளுக்குப் பின்னும் மக்களின் முணுமுணுப்புத் தீரவில்லை. இறைவனது சினம் அவர்களைக் கொள்ளை நோயால் அழிக்க முனைந்தபோது, மோசே தலையிட்டு மன்றாடி அதை நீக்குகிறார்.

*5.7) ஆரோனின் குருத்துவம் மீண்டும் நிறுவப்படுகிறது:-* ஒவ்வொரு குலத்தவரையும் குறிக்க ஒரு கோல், சந்திப்பின் கூடாரத்துக்குள் வைக்கப்பட்டது. அவற்றில் லேவியர் குலத்தைக் குறித்த ஆரோனுடைய கோல் மட்டும் தளிர்த்துப் பூத்திருந்தது. அதையும் பெட்டகத்துக்குள் வைக்கும்படி இறைவன் கட்டளையிட்டார். இந்நிகழ்ச்சியின் வழியாக ஆரோனின் குருத்துவம் மக்கள் முன் நிறுவப்பட்டு உறுதி செய்யப்பட்டது *(எண் 17)*.

இதன்பின் எண்ணிக்கை நூல் *18;19*-ஆம் அதிகாரங்களில் பல சட்டங்களைக் கொண்டுள்ளது.

*5.8) மோசேயின் தவறு:-* காதேசில் மோசேயின் உடன் பிறந்தாள் மிரியம் இறந்

தாள். தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் முணுமுணுத்தனர். யாவே மக்களுக்குப் பாறையிலிருந்து நீர் கொடுக்குமாறு மோசேக்குக் கட்டளையிடுகிறார். அவ்வி தமே நீர் வருகிறது. இது மெரிபா நீர் என்றழைக்கப்பட்டது. இதில் இறைக்கட்ட ளையைச் செயல்படுத்தும்போது மோசே இருமுறை பாறையை அடித்தார். இதில் மக்களது முற்றிய நாட்பட்ட நோயாகிய அதிருப்தியின் விளைவாக மோசே இறைவ னது பொறுமையை ஐயுறத் தொடங்கினதா கத் தெரிகிறது. இதற்காக வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மக்களை இட்டுச் செல்ல மாட் டார் என்று மோசேயை இறைவன் தண்டிக்கி றார் (எண் 20). இத்தண்டனை பெறுவதற்கு மோசே ஏதாவது செய்திருக்க வேண்டும் என்பர். ஆனால் இது என்ன தவறு என்று உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. சில விளக்க ஆசிரியர்கள், மோசே ஒழுக்கக்குறை வாக நடந்திருக்கவேண்டும். அதற்காக இப் படித் தண்டிக்கப்பட்டார்; பிற்காலப் பதிப் பாசிரியர்கள் வேண்டுமென்றே இந்நிகழ்ச் சியை மறைத்துவிட்டுத் தண்டனையை மட் டும் கொடுக்கின்றனர் என்பர். இவ்வகை விளக்கத்திற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரிய வில்லை. வேறு பலர் எண்ணிக்கை நூல் வாசகத்திலேயே விடை காண முயலுகின்ற னர். இவர்கள் கூறுவது, மக்களின் தாகமும் முறையிடுதலும், யாவேயின் இறையாற்ற லுக்கு மேலும் சான்று கூறுவதற்கும், அருஞ் செயலால் நீரளித்து இயற்கையின் மேல் யாவே கொண்டுள்ள ஆட்சியை எடுத்துக் காட்டவும் ஒரு வாய்ப்பாகும். இச்சூழ்நிலை யில் கடவுளின் கட்டளைக்குப் பணிவதற் குப் பதிலாக, மோசே மக்களை அவர்களின் முறையிடுதலுக்காகக் கடிந்து கொள்ளுகி றார். ஆகையால் இது ஒரு தேவையற்ற குறுக்கீடாகும். இது இறை நோக்கத்தைத் திரித்துக் காட்டுகிறது. ஆகையால் மோசே தண்டனை பெறுகிறார் என்பர். வேறு சிலர் சங்கீதக் கருத்தைப்பின்பற்றி மோசே சினங் கொண்டு கொடும் சொற்களைப் பயன்படுத் தினார் என்பர் (சங் 105:33). உபாகமக் கருத் துப்படி (உப 1:37) இஸ்ராயேலர் கானானி யர்களை எதிர்த்துப் போராடவில்லை. இதற்கு மோசே இசைந்திருக்க வேண்டும். அதற்காகத் தண்டிக்கப்படுகிறார் என்பர். இவ்வாறு பலவாறு விளக்கம் அளிக்கலாம். ஆனால் இவ்வளவு பெரிய தண்டனைக்குக் காரணமான மோசேயின் தவறுபற்றி ஒன்றை யும் உறுதியாகக் கூற முடியாது.

5.9) காதேசிலிருந்துமோவாபுநாடுவரை:- எண் 20:21-இல் புதியதொரு பகுதி தொடங் குகிறது. சுற்றி வளைத்துச் சென்று, யோர் தான் நதிக்குக் கிழக்கேயுள்ள பகுதியை அடைந்து அங்கிருந்து பாலஸ்தீனத்தைக் கிழக்கிலிருந்து தாக்க முடிவு எடுக்கிறார் மோசே. காதேசிலிருந்து ஏதோம் நாட்டின் அரச பாதை வழியாக அந்நாட்டைக் கடந்து செல்ல அனுமதி கேட்டு ஏதோமிய அரசனுக் குத் தூது விடுகிறார் மோசே. அவன் அனுமதி தர மறுத்ததோடு இஸ்ராயேலர்களுக்கு எதிராகப் போர் வீரர்களை அனுப்பினான். ஆகையால் மோசே ஏதோம் நாட்டைச் சுற்றி மக்களை இட்டுச் சென்றார். இதன்பின் இஸ் ராயேலரின் பாதையை வரையறை செய்வது கடினமாகும். காதேசின் வடக்கிலும், சாக்க டலிலிருந்து ஒரு நாள் பயண தூரத்திலுள்ளது மான ஜெபெல் மதூராகு எனப்படும் ஓர் மலையை அடைந்தனர். இங்கு எகிப்திலி ருந்து புறப்பட்ட 40-ஆம் ஆண்டில் ஆரோன் இறந்தார் (எண் 20:22-28). பின் அரபா வழி யாக வடக்கே சென்று, ஆனோன் சுரங்கங்க ளையும் ஓபோத்தின் ஊற்றுகளையும் கடந்து, சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள பள் ளத்தாக்கை அடைந்தனர். இது தெற்கிலுள்ள ஏதோமுக்கும் வடக்கிலுள்ள மோவாபுக்கும் இடையேயுள்ள இயற்கை எல்லையாகிய யாரேத்து ஓடைக்கு மக்களைக் கொண்டு வந்து சேர்த்தது. மோவாபு நாட்டாரோடு போராடுவதைத் தடுக்க, மோசே மக்களைக் கிழக்கில் இட்டுச் சென்று வடக்காகத் திரும்பி, எமோரிய மன்னன் சீகோனது நாட் டிற்கு அழைத்து வந்தார். இவ்வரசன் தனது நாடு வழியாக இஸ்ராயேலர் அதைக் கடந்து செல்ல இசைவுதர மறுத்தான். இஸ்ராயேலர் அவனோடு போர்செய்து வென்று, எமோரி யர் நகரங்களையும், தலைநகரான கெசிபோ னையும் அழித்தனர் (21:21-26). இஸ்ராயே

லர் திருப்பயண முன்னேற்றத்தில் இன்னு மொரு தடை இருந்தது. இஸ்ராயேலர் போர் செய்து பாசான் அரசனான ஒகுவை வென்று அவனது நாட்டைக் கைப்பற்றினர் (21:33-35). இவ்வெற்றியால், யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ஆர்னோனுக்கும் பாசானுக் கும் இடையிட்ட பகுதி இஸ்ராயேலர் ஆட் சியின் கீழ் வந்தது. இவ்வாறு இஸ்ராயேலர் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள மோவாபு சமவெளியில் எரிகோவைச் சுற்றிப் பாளை யம் இறங்கித் தங்கினர். பாலஸ்தீனத்தைத் தாக்க முன்னேற்பாடு செய்தனர்.

எண் 35:48-இல் எகிப்திலிருந்து புறப் பட்ட எபிரேயர்கள் தங்கியதாகப் பல இடங் களில் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. சில இடங்களை நாம் அடையாள உறுதி செய்யலாம். மற்றப்படி இப்பட்டியல் பய னுள்ள விவரம் ஒன்றையும் தரவில்லை. இப்பட்டியலில் காணப்படும் பல பெயர்கள் பழைய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப் படவில்லை. இன்றும் அறியப்படாதவை களாகவே இருக்கின்றன.

5.10) கொள்ளிவாய்ப் பாம்பும் வெண் கலப் பாம்பும்:- சீனாயிலிருந்து மோவாபு நாட்டிற்கு இஸ்ராயேலர் செய்த திருப்பய ணத்தில் மற்றொரு நிகழ்ச்சி சிறப்புடையதா கும். அது கொள்ளிவாய்ப் பாம்புகளால் இஸ்ராயேலர் துன்புற்றதாகும் (எண் 21:4-9). தங்கள் உறவினனான மோவாபு அரசனோடு போரைத் தடுக்கும் நோக்கத்தோடு மோவாபு நாட்டைச் சுற்றிச் சென்றபோது மக்கள் பொறுமையிழந்து முணுமுணுத்த னர். இதைக் கண்ட இறைவன் கொள்ளி வாய்ப் பாம்புகளை அனுப்பி அவர்களைத் துன்புறுத்தினர். மக்கள் மோசேயிடம் மன் றாட, மோசே இறைவனிடம் மன்றாடினார். இறைவன் கட்டளைப்படி மோசே ஒரு வெண்கலப்பாம்பைச் செய்து ஒரு கோலின் மேல் கட்டித்தூக்கி வைத்தார். உண்மையான பாம்புகளால் கடிபட்டவர்கள் இந்த வெண் கலப்பாம்பைப் பார்த்தால் குணமடைந்தனர். இப்பாம்புகள் ''எரியும்'' என்று பொருள் படும் ''செரபிம்'' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றன. அவை பகட்டான சிவப்பு நிறத்தைக் கொண்டிருந்ததாலோ, அவை கடித்தபோது எரியும் உணர்ச்சியை உண்டு பண்ணியதாலோ இப்பெயர் பெற்றிருக்க லாம். இக்காலத்தில் பெயினாங் என்றழைக் கப்படும் பூனோனில், பழங்காலத்தில் செம் புச் சுரங்கங்களும், வார்ப்படத் தொழிற் சாலைகளும் இருந்தன. இது வெண்கலப் பாம்பு நிகழ்ச்சி இவ்விடத்தை ஒட்டி நடந்தி ருக்கலாம் என்று எண்ண இடம் தருகிறது. வெண்கலப்பாம்பு செய்து கோவில் நாட்டு தல் உண்மைப்பாம்புகளை அடக்குவதாக வும் அவற்றைத் துன்பமற்றவைகளாகச் செய் வதாகவும் தோன்றுகிறது. பாம்புகளின்மேல் கொண்ட அடையாள வெற்றி, இந்தப் பாம்பு களின் வாதையையே மக்களிடமிருந்து நீக்கு வதாகக் காட்டப்படுகிறது. கானானியரின் வழிபாட்டில் வெண்கலப்பாம்பு இடம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. காதேசு தேவதை வழிபாட்டில், பாம்பு உயிரின் அடையாளமாகும். கெசேர் என்னுமிடத்தில் நடந்த புதை பொருள் ஆராய்ச்சியில், வெண் கலப்பாம்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எசக்கியாவின் ஆட்சியில்கூட மோசே செய்த தாகக் கருதப்பட்ட பித்தளைப் பாம்புக்கு இஸ்ராயேலர் தூபக் காணிக்கை செலுத்திய தாக அறிகிறோம் (2 அர 18-4).

யோவா 3:14-இன்படி இப்பாம்பு, கிறிஸ்து சிலுவையில் அளிக்கும் மீட்புக்கு இறைவாக்கு அடையாளமாகும். இரண்டி லும் உயர்த்தப்பட்ட அடையாளம் அதில் விசுவாசித்து நம்புவோருக்கு உயிர் அளிக்கி றது.

5.11) மோவாபுநாட்டில் பிலயம் கதை:- இஸ்ராயேலர், தங்கள் பயணத்தின்போது ஏதோம், மோவாபு, அம்மோன் ஆகிய நாடு களில் புகவில்லை. இவர்கள் ஒருவகையில் இஸ்ராயேலருக்கு உறவினரானதால், இவர் களோடு போராடுவதை இஸ்ராயேலர் தடுக்க முயன்றனர். எமோரியர்மேல் இஸ்ரா யேலர் கொண்ட வெற்றி மோவாபு அரச னான பாலாக்கை அஞ்சச் செய்தது. ஆனால் உடனே அவன் இஸ்ராயேலரோடு போர்

புரியவில்லை. இஸ்ராயேலருக்குச் சார்பாக இயற்கைக்கு மேலானதொரு ஆற்றல் செயல் படுவதாக உணர்ந்தான். ஆகையால் அவர்க ளைச் சாபங்களாலும் மந்திரத்தாலும் கட்டுப் படுத்தி அடக்க முயலுகிறான். அம்மோன் நாட்டைச் சேர்ந்தவனும் பெயோரின் புதல் வனும், குறி சொல்லுவதில் வல்லவனும் ஆன பிலயாமை, இஸ்ராயேலர் பாளையத் தின்மேல், அழிக்கும் ஆற்றல்மிக்க சாபங்க ளைச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் யாவேதான் இஸ்ராயேலரைச் சபிப் பதைத் தடுக்கிறார் என்று பிலயாம் உணர்ந்து மோவாபுக்குப் போக மறுத்து விடுகிறார். பிலயாமுக்கு இரண்டாவது தூது அனுப்பி வருந்தி அழைத்ததால் பிலயாம் மோவாபுக் குச் செல்லுகிறார். பாலாக்கு இஸ்ராயேல ரைச் சபிக்கும்படி பிலயாமைக் கேட்டுக் கொண்டாலும் பிலயாம் வாயினின்று ஆசீர் அளிக்கும் இறைவாக்கே வருகிறது. பிலயா மைப், பாலாக்கு பாகால் மேடுகளுக்கு அழைத்துச் சென்று இஸ்ராயேலரைச் சபிக்க வேண்டுகிறான். மாறாகப் பிலயாம் இஸ்ரா யேலரின் இறைத் தேர்தலையும் அவர்களின் பெரும் எண்ணிக்கையையும் நீதியையும் போற்றுகிறார். பின் பாலாக்கு பிலயாமைப் பிசுகா என்ற இடத்திற்கு அழைத்துச் சென் றான். இஸ்ராயேலருக்கு அளித்த ஆசீரைத் திரும்ப எடுத்துவிடுமாறு மன்றாடுகிறான். பிலயாம் அப்படிச் செய்ய மறுத்து விடுகி றார். ''கடவுள் (இஸ்ராயேலை) எகிப்திலி ருந்து புறப்படச்செய்தார். அவரது வலி மையோ காண்டா மிருகத்தின் வலிமை போன்றது'' (எண் 23:22). இது இஸ்ராயேல ருடைய ஆசீரின் அடிப்படையாகும். யாக் கோபுக்கு எந்த மந்திரமும் வேலை செய் யாது. இஸ்ராயேலுக்கு எதிராக எந்தச் சாப மும் செல்லாது. இஸ்ராலேயர் சிலைவழி பாட்டை ஏற்க மறுப்பதும் ஓர் இறைவனா கிய யாவேயில் கொண்டுள்ள விசுவாசமும் பிறர் அவர்களை வெற்றி கொள்ள முடியாத வாறு செய்கிறது. அவர்கள் தனது இரையை அமைதியோடு உண்ணும் சிங்கம் போன்ற வர்கள். இக்கூற்றால் நிறைவு அடையாத பாலாக்கு பிலயாமைப் பெகோர் மலை உச்சிக்கு அழைத்துச் சென்று இஸ்ராயேல ரைச் சபிக்குமாறு வேண்டினான். ஆவி, பிலயாமை மேற்கொண்டு, இஸ்ராயேலரை ஆசீர்வதிக்கும்படி செய்தது.. இவ்வாறு இஸ் ராயேலைச் சபிக்கப் பிலயாம் செய்த முயற்சி கள் தோலவியுற்று ஆசீராய் மாறின. இதைக் கண்ட பாலாக்கின் நம்பிக்கையெல்லாம் அழிந்தது. பல முயற்சிகளோ, புதிய இடமோ, ஏற்கனவே செய்த சடங்கோ எது வும் யாவே தம் மக்கள்பால் கொண்டுள்ள பாதுகாப்பைக் கெடுக்க முடியவில்லை. பிலயாமை அவரது நாட்டிற்கு அனுப்பிவிட் டான். பாலாக்கு கோராத பிலயாமின் நான் காவது இறைவாக்கு, சினம் கொண்ட பாலாக்கு மன்னனுக்குச் செய்தியாக அமை கிறது. இதிலே பிலயாமின் இறைவாக்கு உச்சநிலை அடைகிறது. இது யாக்கோபின் குலத்தில் உதிக்கும் விண்மீனையும், இஸ்ரா யேலின் எதிரிகளை அழிக்கும் அரசனையும் முன்னறிவிக்கிறது. இஸ்ராயேலர் மோவா பைத் தாக்கி அதை வெற்றி கொள்வதையும் முன்னறிவிக்கிறது (24:17). இவ்விறைவாக் கில் ஒரு பகுதி தாவீது மன்னனில் நிறைவு பெறுகிறது. இஸ்ராயேலின், உறுதிமொழி பெற்ற மன்னனாகத் தாவீது, சுற்றியுள்ள பகைவர் நாட்டையெல்லாம் வென்று தனது அரசின் கீழ்க்கொண்டு வந்தார் (2 சாமு 2:13-4). இவ்விறைவாக்கு முழுமையாக நிறைவேறுவதற்கு இரண்டாம் தாவீதாகிய கிறிஸ்துவின் வருகைவரை காத்திருக்க வேண்டும். அவர் அஞ்ஞான உலகப் பேரரசு களின் அழிவின்மேல் புதியதோர் என்றும் நிலைக்கும் அரசை அமைப்பார் (உப 2:44; 7:14-27). சிலர் இவ்விறைவாக்கு கிறிஸ்து வைக் காணவந்த ஞானிகளின் வரலாற்று அடையாளத்தைச் சுட்டுகிறது என்பர் (மத் 2:1-12). ஆகையால் எண் 23-24-இல் வரும் இறைவாக்குகள் தாவீதின் காலத்தை அதா வது கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந் தவை என்று சிலர் கூறுவது சரியன்று. இந்நிகழ்ச்சியில் காணப்படும் இலக்கண மும் நடையும் பிற்காலத்தைச் சார்ந்ததாகத் தெரியவில்லை. ஆகையால் அறிஞர் பலர் இந்நிகழ்ச்சியுரை கி.மு. 13 அல்லது 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.

இந்நிகழ்ச்சியுரையில் சிறப்புப் பெறுவது பிலயாமின் கழுதை பேசிய நிகழ்ச்சியாகும் (எண் 22:22-35). இது பொது மக்கள் பாணி யில் நாட்டுக் கழுதையாகத் தரப்படுகிறது. கழுதை பேசுவது போன்றவை கழுதையின் விநோதநடத்தையைக் கண்டு திகைத்த பில யாமின் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை, நாடகப் பாணியில் எடுத்துக் கூறப் பயன்படு கின்றன. இக்கதை இறைவன் இயற்கையின் மேல்கொண்ட ஆதிக்கத்தை எடுத்துக் காட்டு கிறது. இயற்கை உயிருள்ளதோ உயிரற் றதோ, எப்படியாயினும், அவ்வியற்கையின் மேல் இறைவன் முழு ஆதிக்கம் கொண்டுள் ளார். தமது சொல் ஆற்றல்மிக்க விதத்தில் வெளிப்பட இயற்கையின் எந்த வடிவத்தை யும் பயன்படுத்த வல்லவர்; அவர் பயன் படுத்துவார். இந்நிகழ்ச்சியில் துன்புறுத்தப் பட்ட சுமை சுமக்கும் விலங்கின் வழியாகப் பேசுகிறார். பிற மதத்தைச் சேர்ந்த குறி சொல்பவர் வழியாகத் தமது ஆற்றல் மிக்க சொல்லை வெளிப்படுத்துகிறார். தன்னில் விசுவாசம் கொள்ளாதவனையும் தனது இறைவாக்குரைப்பவனாகத் தற்காலிகமாக இறைவன் பயன்படுத்த முடியும், அவனும் அவருக்குப் பணிசெய்வான். அவன் சொல லக்கூடும் (எண் 23:12; 24:13) சாபமோ ஆசீரோ, அவைபற்றிப் பேசப்பட்ட சொல் லின் உள்ளார்ந்த ஆற்றல் தவறாது நிறை வேறியே ஆகும் என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்து இக்கதையில் பயன்படுத்தப்படுகி றது. மேலும் இந்நிகழ்ச்சியுரை இறைவாக்கு ரைக்கும் ஆவி இஸ்ராயேலுக்குப் புறம்பே யும் செயல்பட்டது என்பதைக் காட்டுகிறது. பிற மதத்தினரிடையேயும் யாவேயின் விசு வாசத்தை அடிப்படையாகக் கொண்ட இஸ் ராயேலரின் ஆற்றல் ஏற்றுக் கொள்ளப்பட் டது. இஸ்ராயேலரோ பலவீனமானவர்கள். ஆயினும் அவர்களிடையே மறைபொரு ளான அறிவுக்கும் எட்டாத இறையாற்றல் செயல்பட்டு, அவர்களைக் கட்டாயப் படுத்தி, இறைவன் உறுதியளித்த நாட்டைக் கைப்பற்றி உடைமையாக்க அவர்களை இட் டுச் சென்றது. யாவே அவர்கள்முன் சென்று வழி நடத்தினார். இவ்வுண்மையைச் சுற்றி யுள்ள நாடுகள் உணரத்தலைப்பட்டன.

இந்நிகழ்ச்சியுரையில் யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இணைந்து இருக்கின்றன. அதன் விளைவாகச் சில முரண்பாடுகளும் உண்டு.

எண் 31:8-16; யோசு 13:22-இல் பிலயாம் வேறொரு கோணத்தில் காட்டப்படுகிறார். இங்கு அவர் இஸ்ராயேலரை யாவேயிடம் பிரமாணிக்கமின்மைக்கு இட்டுச் செல்லும் கருவியாகக் காட்டப்படுகிறார். அதனால் கொல்லப்படுகிறார். புதிய ஏற்பாட்டில் பில யாம் ஒரு போலி வழிகாட்டியாக ஆதாயத் துக்காகத் தவறு செய்பவராகக் கருதப்படுகி றார் (2 பேதுரு 2:15; யூதா 11; திருவெளி 2:14). யூத ராபிகள் பிலயாமை இழிவாகவும் ஏளனமாகவும் கருதினர்.

5.12) பினகாசு:- தனது இறைவாக்குக் காட்சியில் பிலயாம் இஸ்ராயேலின் பலத் தின் உண்மையான ஊற்று என்ன என்று அறிந்துணர்ந்தார். அவர்கள் யாவேயிடம் கொண்டுள்ள விசுவாச அடிப்படையைத் தாக்கினால் ஒழிய அவர்களுக்கு யாரும் எதுவும் எவ்விதத் தீமையும் செய்யமுடி யாது. ஆகையால் யாவேயிடம் கொண்ட விசுவாசத்தில் பிரமாணிக்கம் இழக்கும்படி இஸ்ராயேலைப் பாகால்பேயோர் வழிபாட் டுக்கு இழுக்கும்படி மோவாபு இனத்தவர்க் குப் பிலயாம் அறிவுரை கூறினார் (எண் 31:16). இதில் இவர்கள் வெற்றியும் கொண் டனர். இஸ்ராயேலர் பாகால்பேயோரை வணங்கினர். இவ்வழிபாட்டில் வழங்கப் படும் குடியில் மதியிழந்தனர். மோவாபு பெண்களோடு வேசித்தனம் செய்தனர். யாவேக்குப் பிரமாணிக்கமுள்ள இஸ்ராயே லர், மற்றவர்களின் நடத்தையைக் கண்டு சினந்தெழுந்து, அவர்களைக் கொன்று அழித்தனர். இப்படிப் பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேலர்களில் ஆரோனின் பேரனான பினகாச தான் காட்டிய ஆர்வத்தால் சிறந்து விளங்கினார் (எண் 25:6-9). இதற்குப் பரி சாக அவர் குருத்துவப் பணி பெறுகிறார். இப்படிப்பட்ட நிகழ்ச்சி மீண்டும் நடவாதி ருக்கும் பொருட்டு, இறைவன் கட்டளைப் படி மதியான் நாட்டின்மேல் போர்

*தொடுத்து இரக்கம் சிறிதும் இன்றி அவர்களை இஸ்ராயேலர் வெட்டி வீழ்த்தினர். அதில் பிலயாமும் இறந்தார் (எண் 31).*

*5.13)* மோசேயின் இறுதி நாட்கள்:- மக்கள் கணக்கு எடுக்கப்படுகிறது. கானான் நாட்டைத் தாக்க வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்நிலையில் தன் வாழ்வின் இறுதி நெருங்கி வருவதை உணருகிறார் மோசே. இறைவன் மோசேயை அபாரீம் என்னும் மலைக்கு இட்டுச் சென்று அவருக்குக் கானான் நாட்டைக் காட்டுகிறார். தனக்கு வரவிருக்கும் முடிவை முன்னுணர்ந்து தன்மக்கள் இஸ்ராயேலர் வருங் காலத்தில் கொண்டிருக்க வேண்டிய சமய, அரசியல் அமைப்புகளில் மோசே கவனம் செலுத்துகிறார். இதை உபாகமத்தில் காணலாம்.

நெருங்கிவரும் முடிவை உணர்ந்த மோசே தனக்குப்பின் மக்களுக்குத் தலைமை தாங்கி, உறுதிமொழியளிக்கப்பட்ட நாட்டிற்கு இட்டுச்செல்ல ஒரு தலைவரை நியமிக்கிறார். யாவேயின் கட்டளைப்படி யோசுவாவின் மேல் தம் கைகளை விரித்து, தம் பதவியையும் அதிகாரத்தையும் யோசுவாவுக்கு அளித்து, அவரைத் தலைவராக்குகிறார். பின், வழிபாடு பற்றியும் போரில் கிடைக்கும் கொள்ளைப் பொருளைப்பற்றியும் சட்டங்கள் அளிக்கப்படுகின்றன. பின் மோசே யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள நாட்டைச் சில கோத்திரங்களுக்குள் பகிர்ந்தளிக்கிறார். பின் கானான் நாட்டைக் கைப்பற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளையும், கைப்பற்றிய பின் நாட்டைப் பகிர்ந்து கொள்வது பற்றியும் திட்டம் செய்கிறார். இந்நிலையில் எண்ணாகமம் முடிகிறது. இந்த அரசியல் சட்ட அமைப்புகளில் மோசே கவனம் செலுத்துகிறார். இதை உபாகமத்தில் காணலாம்.

*6.* வரலாற்று மதிப்பீடு:- பலவகைச் செய்திகளையுடைய இந்நூலின் வரலாற்று மதிப்பீடு என்ன? இதில் கவனம் செலுத்தும் போது, இருநிலைக் கோடிக் கருத்துக்களை நாம் தவிர்க்க வேண்டும். முதலாவது பழம் பாரம்பரியங்கள் அடங்கிய இத்தொகுப்பு நிகழ்ச்சிகளை அவை நடந்தவாறே துல்லியமாய் விவரிப்பதாக எந்த உரிமையும் கொண்டாடவில்லை. ஆகையால், சீனாய் மலையிலிருந்து கானான் நாட்டைச் சேரும்வரை இடையிட்ட காலத்தில் நடந்தவற்றைத் துல்லியமாய் அறிய விரும்புகிறவர்கள் தவறான நோக்கோடு இந்நூலை அணுகுகிறார்கள் எனலாம். இஃது ஓர் ஆவண ஏடன்று. இத்தகைய வரலாற்றை இஸ்ராயேலரால் எழுத முடியாது. அப்படிக் கூடுமாயினும், அத்தகைய இலக்கியத்தால் அவர்களுக்குப் பயன் இல்லை. அதில் ஆர்வமும் இல்லை; அக்கறையுமில்லை. அவர்களுக்கு வேண்டியது வரலாறு பற்றிய உட்பொருளாகும். இயற்கை கடந்த ஒரு நோக்கத்திற்காகச் செயல்மிக்க இறைவனின் இடையீடுகளை வெளிப்படுத்துவது இந்த உட்பொருளாகும். ''மீட்பு'' என்ற சொல் இதை நன்கு விவரிக்கிறது. இறைவன் ஏற்கனவே வரலாற்றில் செயல் ஆற்றியுள்ளார். இப்போது இங்குச் செயல் ஆற்றிக் கொண்டுள்ளார். இனியும் வருங்காலத்தில் அவருக்கே தெரிந்த, அவருக்கே உரிய காலத்தில் உறுதியாக, இறுதியாகச் செயல் ஆற்றுவார். இக்காரணத்திற்காகத்தான் வரலாறு சிறப்புடையது என்று இஸ்ராயேலர் ஏற்றுக்கொள்வர். இஸ்ராயேலுக்குத் தனது தோற்றம், வளர்ச்சி, பாதுகாப்பு, ஒரு சாதாரண இயற்கையான நிகழ்ச்சியன்று; அது தகுதியில்லாத தனக்கு, இறைவன் அளித்த அன்புக் கொடையாகும். ஒரு சமய, இறை வரலாறு ஆகும்.

இதற்கு மாறாக, இறைவனது செய்தி மட்டும்தான் முக்கியம்; வரலாற்று நிகழ்ச்சிகள் தேவையற்றவை; தமக்குப் பொருந்தாதவை என்று இஸ்ராயேலர் கருதினர் என்று நாம் எண்ணினால் அது நம் தவறாகும்; இந்நூல் ஆசிரியர்களின் நோக்கைப் பொய்ப்பிப்பதாகும். இவ்வாசிரியர்களின் இறையியல் நோக்கு, விவிலியப் பாரம்பரியங்களின் பின் நிற்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் அடங்கிய உறுதியான அடிப்படைகளை ஒதுக்குவதில்லை; திரித்துக்கூறுவதில்லை. மனிதனது

வரலாற்றில் புகுந்துதான் இறைவன் மனி தனை மீட்டுள்ளார். காலம், இடம் ஆகிய மேடையில்தான் இஸ்ராயேலும் கிறிஸ்தவ னும் இறைவனைச் சந்திக்கின்றனர். ஆகவே வரலாற்று அடிப்படைகளை விவிலிய ஆசி ரியர்கள் புறக்கணிக்கமுடியாது;

வரலாறு, தொல்பொருள் பற்றிய ஆய்வு கள், எண்ணாகமத்தில் காணப்படும் இஸ்ரா யேலின் பாரம்பரியத்தின் அடிப்படை வர லாற்றுத் தன்மைக்குச் சான்று கூறுகின்றன. அதற்குரிய மதிப்பையும் மரியாதையையும் உயர்த்தியுள்ளன.

7. சமய மதிப்பீடு:- முன்பகுதியில் கூறியது போல் எண்ணாகமம், விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளின் இறையியல் உட்கருத்தில் முதலில் தனது கவனத்தையும் ஆர்வத்தை யும் செலுத்துகிறது. நிகழ்ச்சியுரைகள் தனிப் பட்ட குழுவினர்மீது கவனத்தை ஒருங்கு குவியச் செய்கிறது. இச்சமூகம், இறைவன் தன்னிடையே வாழுகிறார் என்கிற பெரு மையுடையதாகும். அவர்கள் பல தடவை இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாது போகலாம். ஆயினும் அவர்கள் மையமும் ஊற்றும் எப்போதும் அவரே. அவர்களி டையே இறைவனது புனித இடம் அமைக் கப்பட்டது. இறைவனது பிரசன்னத்தால் கூடாரம் புனிதமாக்கப்பட்டது. மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது இறைவன் அவர்கள்மீது தனிப்பட்ட கவலை எடுத்துக்கொள்கிறார். அதே வேளையில் புனிதச் சட்டத்தில் வெளிப் படுத்தப்பட்ட தம் விருப்பத்திற்கு அவர்கள் முழுவதும் பணிய வேண்டும் என்று கோரு கிறார். தம் மக்களைப் பாதுகாக்கிறார்; சோதிக்கிறார். அவர்கள் அவருடைய மக் கள்; அவர் அவர்களின் இறைவன்.

குருக்கள் பாரம்பரியத்தால் போற்றப் பட்டு வந்த பல வழிபாட்டு ஒழுங்குகள் எண்ணிக்கைநூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கானான் நாட்டில் நிலையாகக் குடியேறிய பிற்காலத் தைச் சேர்ந்தனவாகும்; மாறிய புதிய வாழ்க்கை நிலைக்குரியவையாகும். பய ணம் செய்யும் நாடோடி மக்களிடையே துல்லியமான மறை நாட்குறிப்பையும் விரி வான பலித்திட்டத்தையும் எதிர்பார்க்க முடி யாது. பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய பலித்திட்டத்தினுள் இவ்வளவு சட்டப்பகுதிகள் ஏன் புகுத்தப் பட்டன என்று நாம் வியக்கலாம். இச்சட்டங் கள் மோசேக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் சேர்க்கப்பட்டவையாயினும், அவை நிலையாகக் குடியேறிய சமய சமூக நிலையை எடுத்துக்காட்டினாலும், அவை மோசே வழியாக இஸ்ராயேலுக்கு அளிக்கப் பட்ட சட்டத்தின் வளர்ச்சியாகும், விரிவா கும் என்று காட்ட இதை விட மேலான கருவியைக் கையாள முடியாது. இவ்வாறு விவிலிய ஆசிரியர் மோசேக்கு மிகப் பிந்தி அறிக்கையிடப்பட்ட சட்டத்திற்கு மோசே யின் அதிகாரத்தையும் அதன் வழியாக இறை வனது அதிகாரத்தையும் அளிக்கிறார். மோசேயின் சட்டம் இஸ்ராயேலின் வர லாறு முழுவதிலும் அதன் உண்மைத் தன் மைக்கு முத்திரையிடுகிறது.

8. முடிவுரை:- ஆதியாகமம் இறைவனு டைய வல்லமையையும் (ஆதி 17:1), யாத் திரை ஆகமம் அவருடைய அருளையும் (34:6), லேவியர் ஆகமம் அவருடைய பரிசுத் தத்தையும் (19:2) விளக்க, எண்ணிக்கைநூல் அவருடைய சினத்தையும், சீற்றத்தையும் வெளிப்படுத்துகிறது. எண் 11 முதல் 25 மட்டுமுள்ள 15 அதிகாரங்களிலும் அடிக்கடி காணப்படும் சொல் ''இறைவன் சினம் கொண்டார்'' என்பதே. இஸ்ராயேலர் அடி மைத்தனத்தினின்று விடுவிக்கப் பட்டனர். நாணல் கடலைப் பிளந்து நடந்தனர். வானத் தின் மன்னாவை உண்டனர். பாறையிலி ருந்து வந்த நீரைக் குடித்தனர். மேகத்தால் வழி நடத்தப்பட்டனர். பலர் எகிப்திலிருந்து புறப்பட்டனர். ஆனால் அவர்களில் இரண்டு பேர் மட்டுமே கானான் நாட்டைச் சேர்ந்த னர். மற்றவர் விசுவாசமின்மையாலும், கீழ்ப்படியாமையாலும் இறைவனுக்கு எதி ராக முணுமுணுத்தனர். இறைவனையே சோதித்தனர் (எண் 14:22). முறையிடுதல்

(11:1), இச்சை (11:4.10.31-35), அகந்தை (12:1-15), விசுவாசமின்மை (14:1-2), ஓய்வு நாள் மீறுதல் (15:32-36), கலகம் (16:1-35), கட்சிப்பிளவு (16:41-49), நம்பிக்கையின்மை (20:2-13), ஆத்திரம் (21:4-6), தகாத உறவு (25:1-9) ஆகிய முறைகளில் இறைவனைச் சோதித்தனர். அவருக்குச் சினமூட்டினர். ஆகவே பாலையிலேயே இறந்து போயினர் (எபி 3:17-19). அவர்களில் ஒருவனும் அவர்களுடைய முன்னோருக்கு ஆணையிட்டு உறுதி மொழி வழங்கிய நாட்டைக் காணவில்லை (எண் 14:23). இறுதிவரை அவர்கள் நிலை நிற்கவில்லை. உலகமாகிய பாலையின் வழியாய் நிலையான கானானுக்குப் பயணம் செய்யும் நாம் எச்சரிக்கையடையவே, விழிப்படையவே நமது வழியைச் சீர்ப்படுத்தவே, இறைவனுக்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இருக்கவே, இவை எழுதப்பட்டிருக்கின்றன (எபி 3:12-13; 1 கொரி 10:6-11). இறுதி வரை நிலைத்து நிற்பவனே மீட்புப் பெறுவான் (மத் 10:22)

**எண்ணெய்** (OIL)

1. இறைவனின் கொடையாக் எண்ணெய்:-

இறைவன் கைம்மாறு எதுவும் கருதாமல் தமது மக்களை ஒலிவ மரங்கள் நிறைந்த நாட்டில் (உப 6:11; 8:8) சமுதாயமாக ஏற்படுத்தியபோது, அவர்களுக்குக் கோதுமை, திராட்சை ரசம் ஆகியவற்றுடன் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான எண்ணெயையும் மிகுதியாக அளித்தார் (உப 11:14). இது ஓர் இறையாசீராகத் தோன்றுகின்றது (உப 7:13 தொ; எரே 31:12). இது இல்லா வறுமை பிரமாணிக்கமின்மைக்கான தண்டனையாகும் (மீக் 6:15; அப 3:17). இதன் மிகுதி மீட்பின் அடையாளமும் (யோவே 2:19), இறுதிக்கால மகிழ்ச்சியின் அறிகுறியுமாகும் (ஒசே 2:24). மேலும் எண்ணெய் என்பது தேவையான காலங்களில் ஒதுக்கப்படமுடியாததான உணவு மட்டுமல்ல (1 அர 17:14 தொ;2 அர 4:1-7). உடலை மணம் வீசச்செய்கின்ற (ஆமோ 6:6; எஸ்த 2:12), உடலுறுப்புகளுக்கு வலிமையூட்டுகின்ற (எச 16:9), காயங்களைக் குணமாக்குகின்ற (ஏச 1:6; லூக் 10:34) தைலமுமாகும். இறுதியாக விளக்குகளில் உள்ள எண்ணெய் ஒளி அளிக்கின்ற பொருளாகும் (யாத் 27:20 தொ; மத் 25:3-8).

உலகின் இனவிருத்தியானது பாகாலிடமிருந்து வந்தது எனக்கருதி, பாகாலை வழிபடுவதற்கு இந்த எண்ணெய் பயன்படக்கூடாது. மக்களின் மீட்பானது இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் மீதான நம்பிக்கையினை மட்டுமே சார்ந்ததல்ல என்பது போன்று புறவின வல்லமைகளுடன் உடன்பாடு செய்வதற்கும் இது பயன்படக்கூடாது (ஒசே 2:7; 12:2). உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்குச் சிறந்த எண்ணெயைக் குருக்களுக்கென ஒதுக்கி வைப்பதோ (எண் 18:12), சடங்கிற்கு ஏற்பச் சிறிது எண்ணெயைப் பலிப்பொருட்களுடன் கலப்பதோ (லேவி 2:1; எண் 15:4; 28:29) தாராளமானப்பலியாக ஊற்றுவதோ போதாது. மனிதன் நீதி மற்றும் அன்பின் வழியில் இறைவனோடு இணைந்து நடந்தால் மட்டுமே, இத்தகைய கடைப்பிடிப்புகள் இறைவனுக்கு ஏற்புடையவையாயிருக்கும் (மீக் 6:7 தொ).

2. எண்ணெயின் அடையாளம்:-

எண்ணெயானது இறையாசீரின் அடையாளமாக இருந்தால், வளமையான ஒலிவ மரமானது, இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நீதிமானையும் (சங் 52:10; 126:3; சீரா 50:10), சட்டத்தில் நீதி மற்றும் மகிழ்ச்சியின் பாதையினை வெளிப்படுத்துகின்ற இறைஞானத்தினையும் (சீரா 24:14.19-23) குறிப்பிடும் அடையாளமாய் உள்ளது. விளக்குத் தண்டிலுள்ள ஏழு விளக்குகளுக்கு எண்ணெய் அளிக்கின்ற இரு ஒலிவ மரங்களும் (செப் 4:11.14), இரு எண்ணெயின் மகன்களையும் மக்களுக்குப் புது ஒளி அளித்து மீட்பின் பாதையில் அவர்களை நடத்திச் செல்லும் பணியினைக்கொண்ட அரசன் மற்றும் தலைமைக்குரு என்னும் இறைவனால் அபிடேகம் செய்யப்பட்ட இருவரையும் குறிப்பிடுகின்றன.

மேலும் எண்ணெயை அதன் மேன்மை மற்றும் நழுவுகிற பண்பின் அடிப்படையில் ஒப்பிடும்போது (பழ 5:3; சங் 109:18; பழ 27:16) அதிலே சுகத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்ற மணமிக்க தைலத்தையும், அன்பு (உ.ச.1:3), நட்பு (பழ 27:9), சகோதர ஒன்றிப்பின் மகிழ்ச்சி (சங் 133:2) ஆகியவற்றின் அழகிய அடையாளத்தினையும் காணலாம். முகத்தை ஒளிவீசச்செய்வதால் எண்ணெயானது மகிழ்ச்சியின் அடையாளமாகவும் உள்ளது (சங் 104:15). ஒருவரது தலையில் எண்ணெய் ஊற்றுவதென்பது (சங் 23:5; 92:11; லூக் 7:46; மத் 26:7) அவருக்கு மகிழ்ச்சியும் இன்பமும் கிடைக்க வாழ்த்துவதும், நட்பு மற்றும் மரியாதையின் அடையாளத்தினை அளிப்பதுமாகும்.

அரசரை அபிடேகம் செய்யப்பயன்படும் எண்ணெய் மற்றெல்லாவற்றையும்விட மகிழ்ச்சியின் எண்ணெய் என்னும் பெயரில் அழைக்கப்படத் தகுதியுள்ளது (சங் 45:8). இறைத் தேர்வின் வெளி அடையாளமாக உள்ள இது, தேர்ந்து கொள்ளப்பட்டவரை உரிமையாக்கிக்கொள்ள ஆவியின் வருகையோடு இணைந்து உள்ளது (ஏச 10:1-6; 16:13). கிறிஸ்தவ திருவருட்சாதனங்களில் உள்ள, குறிப்பாக யாக்கோபின் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (யாக் 5:14; மாற் 6:13) நோயிற்பூசுதலில், எண்ணெயின் அடிப்படை அடையாளம் பற்றிய தொடக்க நிலையில் அபிடேகத்திற்கும் ஆவிக்கும் இடையிலுள்ள இந்தத் தொடர்பு காணப்படுகின்றது. இயேசுவை மிகச்சிறந்த முறையில் தனிப்பட்ட அபிடேகம் செய்யப்பட்டவராகவும் இறைமகனாகவும் உருவாக்கிய அதே தூய ஆவியின் பல்வேறு கொடைகளைக் கிறிஸ்தவனுக்குத் தூய தைலங்கள் அளிக்கின்றன. (கிறிஸ்துவின் இறைத்தன்மையினைப் போதிக்க எபி 1:9 கிறிஸ்துவிற்கு சங் 45:8-ஐ பயன்படுத்துகிறது).

## எண்ணெய்ச் சிமிழ் (VIAL)

இது சாமுவேல் சவுலை அபிடேகம் செய்த போது அந்த எண்ணெய் வைக்கப்பட்டிருந்த கிண்ணமாகும் (1 சாமு 10:1). ஏகூ அபிடேகம் செய்யப்பட்டபோது இதே எபிரேயச் சொல் எண்ணெய்க்கிண்ணம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (2 அர 9:1.3). இது எபிரேயர் பரிமளப் பொருட்களை வைக்கப் பயன்படுத்திய சிறிய சாடியைக் குறிக்கும்.

## எண்பித்தல், மெய்ப்பித்தல் (VINDICATE)

ஒருவன் தன்னுடைய செயலை நேர்மையுடன் செய்துள்ளான் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூற, கிரேக்க எபிரேய மொழிகளிலிருந்து பயன்பட்ட பல்வேறு சொற்களின் மொழிபெயர்ப்பு.

## எதாயா (JEDAIAH — யாவே அறிவார், யாவே சலுகை காட்டினார்)

1. சிமியோன் குலத் தலைவரில் ஒருவரும் சிமிரியின் மகனுமாவார் (1 நாள் 4:37).

2. நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேமில் குடியேறிய ஒரு குரு (1 நாள் 9:10).

3. ஆரோனின் வழித்தோன்றல். தாவீதின் காலத்தில் குருக்களின் இரண்டாம் பிரிவின் இன முதல்வர் (1 நாள் 24:7).

4. ''எதாயாவின் புதல்வர்கள்'' ஏசுவா வழிவந்த குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பாபிலோனிலிருந்து திரும்பியவர்களின் பட்டியலில் இப்பெயரும் காணப்படுகிறது (1 நாள் 9:10; எஸ் 2:36; காண்க: நெக 7:39). இப்பட்டியலுக்குக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தனி நபர்களும் குடும்பங்களும் இக்குரு குலத்தைச் சேர்ந்தவர்களேயாவர். முதலில் திரும்பியவர்களுள் இந்தப் பிரிவைச் சேர்ந்த 973 பேர் இருந்தனர் (எஸ் 2:36; நெக 7:39; காண்க: 12:19.21).

5. நெகமியாவின் தலைமையில் எருசலேம் மதிலைப் பழுது பார்க்க உதவியவர்களில் ஒருவர். கருமாபுவின் மகன் (நெக 3:10).

6. நாடு கடத்தப்பட்ட பிறகு, எருசலேமில் வாழ்ந்து வந்த ஒரு குரு. யோயாரிப்பின் மகன் (நெக 11:10). இவர் (2)-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம். யோயாரிப்பின் கூட்டாளியாக இருக்கலாம்.

7. பாபிலோனிலிருந்து செருபாபேல் தலைமையில் திரும்பி வந்த குருக்கள்,

லேவியர்களில் ஒரு தலைவர். இவர் இப் பெயரைக் கொண்ட ஒரு குருகுலத்தைச் சார்ந்தவர் (நெக 12:6.19).

8. செருபாபேலோடு திரும்பிய மற்றொரு லேவியர் தலைவர் (நெக 12:7).

9. நாடு கடத்தலிலிருந்து திரும்பியவருள் ஒருவர். இவரிடமிருந்து, பெரிய குரு யோசு வாவுக்கு நினைவுச்சின்னமாக மணிமுடி அமைக்கப் பொன், வெள்ளி பெற இறை வாக்கினர் செக்கரியா கட்டளையிடப்பட் டார் (செக் 6:10.14).

## எதிரி, பகைவன் (ENEMY, ADVERSARY)

மற்றவனை விரும்பாது, வெறுத்து, அவ னுக்குத் தீங்கு செய்ய எண்ணுபவனே எதிரி. இது நாட்டிற்கும், படைக்கும் பொருந்தும்.

பழைய ஏற்பாட்டில் பொதுவாக, எதிரி என்ற சொல் இஸ்ராயேலுக்கு எதிராக உள்ள நாட்டு மக்களைக் குறிக்கும் (யோசு 24:11). அதோடு ஒருவருடைய தனிப்பட்ட எதிரிக ளையும், குறிப்பாகச் சங்கீதங்களில் (3:7) குறிக்கும் (யாத் 23:4; நீதி 16:23; 1 சாமு 18:29; எஸ்த 7:6). இதைப்போல புதிய ஏற்பாட்டில் 'எதிரி' என்பது தனிப்பட்ட எதிரிகளையே பெரும்பாலும் குறிக்கும் போது (மத் 13:25; கலா 4:16) அந்நிய மக்களையும் குறிப்பாகக் குறிக்கிறது (லூக் 1:71; 19:43; 21:20).

பழைய ஏற்பாட்டில் இறைவன் ஒரு எதிரி யாகப் பேசப்படுகிறார். அவர் இஸ்ராயேல ரின் எதிரிகளுக்கு ஒரு எதிரியாவார் (யாத் 23:22; நீதி 5:31; 2 நாள் 20:29; சங் 60:1). இந்தக் கருத்து தொடக்ககால நாட்டுப் பாரம் பரியத்தின் அடிப்படையாகும். இதன் படி இறைவன் தம் மக்களின் நலனுக்காகப் போராடும் போர் வீரராகச் சித்தரிக்கப்படுகி றார். இவ்வாறு எகிப்திலிருந்து மக்களை மீட்டு, பாலைவனத்தில் வழிநடத்தி அவர்க ளிடையே கடவுள் போர் வீரராக இருந்து மக்கள் நலனைக் காத்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கொண்டு வந்தார். இந்தக் கருத்து பாரம்பரியத்தில் மட்டுமல்ல, இறை வாக்கினர்களிலும் வெளிப்படுத்தப்படுகி றது (ஆமோ 2:9-10; மீக் 6:4-5). இறைவன் மக்கள் தம்மைக் கைவிட்டதால் அவர்களை எதிரிகளிடம் தீர்ப்புக்கு விட்டுவிட்டார் என் றும் இறைவாக்கினர் கூறியுள்ளார் (நீதி 2:14; 2 நாள் 25:8; எரே 12:7; ஓசே 5:15; 6:1; லூக் 19:41-44). இறைவனை அவரது தீர்ப்பில் இஸ்ராயேலின் எதிரி என்று அழைக்க முடிந் தது (எச 1:24; 2:5). இருந்தாலும் இஸ்ராயே லின் எதிரி என்ற அளவிலும் அவர் அவர்கள் மேல் கொண்ட அன்பே ஆதிக்கம் வாய்ந்தது என்று இறைவாக்கினர் வலியுறுத்தினர் (எச 54:7-8; எரே 30:14; 31:2-3; ஓசே 2:14). யோபு தாம் கடவுளின் எதிரியாக இருப்பதாக உணர்ந்தார் (13:24; 19:11; 33:10; 40:1).

மனிதன் தெய்வீகக் கட்டளைகளைக் கடைப்பிடிக்காது இருக்கும்போது இறைவ னின் எதிரியாகி அவரை வெறுக்கிறான் (யாத் 20:5; உப 5:8-10; 7:9-10). பவுல் பாவிகள் இறைவனின் எதிரிகளாவர் என்று கூறுகிறார் (உரோ 5:8; பிலி 3:18). மேலும் புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் உல கிற்கு நண்பராக இருப்பவன் இறைவனுக்கு எதிரியாக உள்ளான் என்று சொல்லப்பட் டுள்ளது (யாக் 4;4). அலகையே ஒப்புறவற்ற எதிரியாகும் (மத் 13:39; லூக் 10:19; அ.ப. 13:10). கிறிஸ்துவின் ஆட்சிக்குப் பணியும் இறுதி எதிரி சாவாகும் (1 கொரி 15:26; எபி 10:13).

மலைப்பொழிவில் வரும் பகைவருக்கு வெறுப்பு, பகைவருக்கு அன்பு செய்தல் போன்றவை பழைய ஏற்பாட்டு ஒழுக்கத்திற் கும், புதிய ஏற்பாட்டு ஒழுக்கத்திற்கும் உள்ள வேறுபாடு என்று தவறாக விளக்கப் பட்டு உள்ளது (மத் 5:43-44). பழைய ஏற் பாட்டில் பகைவனுக்கு அன்பு செய் என்ற உறுதியான கட்டளை இல்லை; பகைவ னுக்கு வெறுப்புக்காட்டு என்றும் எவ்விதக் கட்டளையும் இல்லை. நாட்டுப் பகைவர்க ளுக்கும் மக்களைக் கொடுமைப்படுத்துபவர் களுக்கும் வெறுப்பு, நாகூம், ஒபதியா எஸ் தர் போன்ற பழைய ஏற்பாட்டு நூல்களிலும் (காண்க: சங் 137:7-9; எச 47; 49:22-26) புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலிலும் பரவிக்கிடக்கிறது. இம்மாதிரி எண்ணத்

திற்கு இறைவனின் எல்லையற்ற பரந்ததன்மையின் கீழ் உள்ள நல்ல எண்ணமே ரூத், ஏச 19:19-25; 40:55; யோனா போன்றவற்றில் காணப்படுகின்றது (காண்: 1 அர 20:31; 2 அர 5:20-23). இஸ்ராயேலின் மூலம் உலகில் உள்ள மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே ஆதியாகமத்தின் தொடக்கத்தில் காணப்படும் தேர்ந்தெடுத்தல் என்னும் விவிலியக் கோட்பாட்டின் மையக் கருத்தாகும் (ஆதி 2:1-3; எரே 4:1-2). எரேமியா பாபிலோனியாவில் நாடு கடத்தப்பட்டு இருப்பவர்களுக்கு எழுதிய கடிதத்தில் எதிரிகளின் நலனுக்காகவும் சமாதானத்திற்காகவும் செபிக்கக் கேட்டுக் கொண்டார் (எரே 29:7).

புதிய ஏற்பாட்டில்தான் பகைவர்களை அன்பு செய்ய வேண்டும் என்று உறுதியாகக் கட்டளை இடப்படுகிறது (மத் 5:43-44). ஆயினும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒழுக்க முறையில் இக்கட்டளையை எடுத்துக் கூறினால், அதற்குப் பழைய ஏற்பாடு விவரங்களைக் கொடுக்கிறது. யாத் 23:4-5 என்ற பகுதி எவ்வாறு ஒரு மனிதன் எதிரியோடு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. தீமைக்கு நன்மை செய்வதே நீதியுடைமை என்று சவுல் விளக்குகிறார் (1 சாமு 24:17-19). யோபு தன் எதிரியின் அழிவைக் கண்டு என்றும் மகிழ்ச்சியடைந்தது கிடையாது (யோபு 31:29). பழமொழி ஆகமம் யே ாபுவின் உரிமைக்கோரிக்கையை ஒரு கட்டளையாக எடுத்துச் சொல்கிறது. உன் எதிரி விழும்போது மகிழ்ச்சியடையாதே (பழ 24: 17). பவுல் பகைவருக்கு அன்பு என்பதன் பொருளைக் கூறுவதற்குப் பழ 25:21-22-ஐ மேற்கோளாகக் கூறுகிறார் (உரோ 12:14-21): ''உனது எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு; தாகமாயிருந்தால் குடிக்கக் கொடு; இதைச் செய்வதால் அவனது தலையில் எரிதழலை வைக்கிறாய்''.

## எதிர்க் கிறிஸ்து (ANTI - CHRIST)

இவன் கிறிஸ்துவின் பேய்த்தன்மையுடைய எதிரியாவான். இச்சொல் 1 யோவா 2:18.22; 4:3; 2 யோவா 7-இல் காணப்படுகிறது. ஆனால் இக்கருத்து விவிலியத்தின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகிறது.

1. பழைய ஏற்பாடு: - இப்பெயரின் மூலக்கருத்து பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. நீதி 19:22; 20:13-இல் வரும் இழி மனிதர்கள் சில மொழிபெயர்ப்புகளில் ''பேலியாலின் மக்கள்'' என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் மிகக் கொடியவர்கள், எல்லா ஒழுக்க மரபுகளையும் மீறியவர்கள். தானியேலின் ஒரு காட்சியில், பத்துக் கொம்புகளையுடைய நான்காம் விலங்கு, அதன் அரசு எடுக்கப்பட்டு ''மனுமகனைப் போன்ற ஒருவருக்கு'' அளிக்கப்படும் வரை, ''புனிதர்களுக்கு எதிராகப் போர் புரிந்தது'' (தானி 7:7-8.13.21-22). இது மிகவும் கொடிய அழிவு சக்தியாகிய உரோமைப் பேரரசைக் குறிக்கலாம். பழைய ஏற்பாடு, எல்லாத் தீமையையும் ஒருங்கே கொண்டு சாத்தானுக்குப் பணி செய்து மெசியாவுக்கு எதிராகத் திகழ்ந்த ஒரு நபரைப் பற்றிக் கருத்துச் செலுத்தவில்லை.

2. புதிய ஏற்பாடு:- இயேசுதான் கிறிஸ்து என்பதை மறுப்பவர்களுக்கு இப்பெயரை யோவான் கொடுக்கிறார். 1 யோவா 2:18-இல் கிறிஸ்தவச் செயல்களுக்கு எதிரானவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கொண்டு உருவெடுக்கும் ஆளைக் குறிக்க இப்பெயரை ஒருமையிலும், கிறிஸ்துவின் செயலை ஏற்கெனவே எதிர்ப்பவர்களை, அதாவது விசுவாசிகளின் தோழமையைக் கைவிட்டு விட்டவர்களைக் குறிக்க இப்பெயரைப் பன்மையிலும் யோவான் பயன்படுத்துகிறார். கிறிஸ்து மனிதனானதை மறுக்கும் முந்தைய விசுவாசிகளின் பதிதத்தை எதிர்த்துப் போராடும் போது, இப்பெயர் 1 யோவா 2:22-இல் பயன்பட்டுள்ளது.

1 யோவா 4:1-6;. 2 யோவா 7-இல் ஆசிரியர் வார்த்தை மனுவுருவானார் என்பதை மறுப்பவர்களை எதிர்த்து உரைக்கிறார். மனிதனான இயேசுவையும் இறைவார்த்தையையும் வேறுபடுத்துபவனே எதிர்க்கிறிஸ்து ஆவான். யோவானுக்கு, எதிர்க் கிறிஸ்து என்பவன் இறைவனை எதிர்க்கும் ஆற்றல்

அன்று; அவன் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் அடிப்படை விசுவாச அறிக்கையை மாற்றுபவனே.

கிறிஸ்து மீண்டும் வருமுன் அக்கிரமமே உருவான இந்த மனிதன் வெளிப்பட வேண்டும் (2 தெச 2:3) என்று பவுல் விசுவசிக்கிறார். தெசலோனிக்கேயருக்கு, வெளிப்பாட்டு இலக்கிய நடையில் எழுதும் பவுல் இரண்டாம் வருகைக்குமுன் இந்த அக்கிரமி தன் தீக்குறியான ஆற்றலை வெளிப்படுத்துவான். இவ்வாறு இரண்டாம் வருகை உடனடியானதன்று என்று எடுத்துக் கூறுகிறார்.

இந்த அக்கிரமியை விவரிக்கும்போது பவுல் தானி 11-இல் காணப்படும் மொழியைப் பயன்படுத்துகிறார். இதன்படி, இந்த எதிர்க் கிறிஸ்து ''தெய்வம் எனப்படுவது (சுான் தானி 11:36) வழிபாடு பெறுவது, அனைத்திற்கும் மேலாகத் தன்னையே உயர்த்திக் கொள்வான். கடவுளுடைய ஆலயத்தில் அமர்ந்து (காண்க: தானி 11:31) தன்னைக் கடவுளெனக் காட்டிக் கொள்ளும் அளவுக்குத் துணிவான்'' (2 தெச 2:4; காண்க: தானி 11:32; ஏச 14:13-14; எச 28:2 தொ). இந்த அக்கிரமிக்கும் இறை மக்களுக்கு எதிராகப் போர் செய்யும் வரலாற்று ஆளுக்கும் இடையே ஒரு தெளிவான தொடர்பைப் பவுல் காண்கிறார்; (தானி 11-இல் சுட்டிக் காட்டப்படும்) நான்காம் அந்தியோக்கு எப்பிபான் இந்த ஆளாக இருக்கலாம். ஆனால் கடந்த காலத்தைச் சேர்ந்தவராக அல்லர், வருங்காலத்தில் வரும் எதிர்க் கிறிஸ்துவாக இந்த ஆள் அழுத்தம் பெறுகிறார்.

அக்கிரமி, அவனைப் பின்பற்றி, அவனது கடவுள் பற்றற்ற சித்தாந்தத்தைப் பற்றிக் கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் பிரதிநிதியாக விளங்குகிறான். கிறிஸ்து விசுவாசிகளோடு எப்போதும் ஒன்றித்திருப்பதுபோல், கடந்த, நிகழ், எதிர் காலத்தையும் சேர்ந்த கடவுள் பற்றற்ற எல்லா வடிவங்களின் உருவமான எதிர்க் கிறிஸ்து தன் சீடர்களின் வழியாகச் செயல்படுகிறான். அவனுக்கு இப்போது தடையாயிருப்பது நீக்கப்பட்டபின், அக்கிரமி வெளிப்படுவான். எல்லா வகையான போலி அருங்குறிகளையும் அற்புதங்களையும் வல்லமை மிக்க செயல்களையும் செய்து காட்டுவான். பின்பு கிறிஸ்துவைச் சந்திப்பான். அவர், கடவுள் பற்றற்ற தன்மையின் எல்லாத் தோற்றங்களையும் முடிவாக அழித்தொழிப்பார்.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் 13:11-10-இல் வரும் ''கடலிலிருந்து வெளிவந்த விலங்கில்'' இறைத்தன்மைக்கு உரிமைகோரும் உலகம் சார்ந்த அதிகாரத்தையுடையவனைக் காண்கிறார். இவனே எதிர்க் கிறிஸ்து. இதில் தானி 7-இன் நடையை நினைவு படுத்துகிறார். இந்த விலங்கு இறைவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் மனுக்குலத்தை அடையாளமாக உணர்த்துகிறது.

ஆனால் விவிலியம், இவன்தான் எதிர்க் கிறிஸ்து என்று காட்டும்முறையில் பெயரையோ வரலாற்று விவரங்களையோ கொடுக்கவில்லை. இப்படி அடையாளம் காட்டப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இது ஒரு வீண் முயற்சியாகும். தீமையின் ஒட்டுமொத்தப் பொது உருவமே எதிர்க் கிறிஸ்து என்பவன் என்பதோடு மன நிறைவடைவது மேல்.

## எதிர் பார்த்திரு, காத்திரு (WAIT)

எபிரேயம், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளிலும் எதிர்பார்த்திரு, காத்திரு என்பனவற்றைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் ஒரு யூதன் எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுளுக்குத்தான் காத்திருக்கின்றான். இதில் யூதன் கடவுள் வரும் வரை ஆழ்ந்த எதிர்பார்ப்போடும் நிறைவான நம்பிக்கையோடும் பொறுமையாகக் காத்திருக்கிறான் (சங் 25:3.5.21; 27:14; 39:7; ஏச 26:8; 33:2; 49;23; 51:5; 60:9). ஆண்டவருக்காகக் காத்திருப்பது நம்பிக்கையை அவர் மேல் வைப்பதாகும் (எரே 14:22; சங் 39:7; 130:5; ஏச 8:17). காத்திருப்பது மட்டும் போதாது அவரது வழியில் கடைசிவரை நிலைத்திருந்து (சங் 37:34) ''அன்பையும் நீதியையும் கடைப்பிடிக்க'' வேண்டும்

*(ஓசே 12:6).* இறைவன் அவன் ''அவமான மடைய' -விட மாட்டார் *(ஏச 49:23).* கடவுள் அவன் வலிமையைப் புதுப்பித்து *(ஏச 40: 31),* உதவி செய்வார் *(பழ 20:22).* கடவுள் கனிந்து அவன் குரலைக் கேட்பார் *(சங் 37:9).* அவருடைய மீட்பில் அகமகிழ்ந்து அக்களிப்பார்கள் *(ஏச 25:9; ஆதி 49:18).* இறுதியில் ஆண்டவர்தாமே இஸ்ராயேல் பலனளிக்கக் காத்துக் கொண்டிருப்பார் *(ஏச 5:2.7).*

புதிய ஏற்பாட்டில் எதிர்பார்த்திருத்தல், காத்திருத்தல் ஆகியவை பெற்றுக் கொள்ளு தல் என்ற பொருளையும் உள்ளடக்கியுள் ளது *(உரோ 16:2).* காத்திருப்பவர் பெற்றுக் கொள்ளுதலை எதிர்பார்க்கிறார். புதிய ஏற் பாட்டில் காத்திருத்தல் மீட்போடு தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால் இதற்கு விதி விலக்கு உள்ளது *(அ.ப. 17:16; 1 கொரி 11:33; யாக் 5:7).* நாம் இறைமக்களாக்கப்படும் நாளை நோக்கிக் காத்திருக்கிறோம். *(உரோ 8:23).*

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மீட்ப ராக விண்ணிலிருந்து வருவதை எதிர்பார்த்தி ருக்கிறோம் *(பிலி 3:20).* நோவாவின் காலத் தில் இறைவன் பொறுமையோடு காத்திருந் தார் என்று கூறப்படுகிறது *(1 பேதுரு 3:20).*

**எதிர்லெபனோன்** (ANTI-LEBANON - கீழ் லெபனோன்)

லெபனோனுக்கு இணையாகவும் அதற் குக் கிழக்கிலும் உள்ள மலைத்தொடர். பூர்வீ கக் காலத்தில் ஒருவேளை இம்மலைத் தொடரிலுள்ள சிகரங்களைக் குறிக்கப் பல பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது (சீரிய) காதேசிலிருந்து தாண் வரை யுள்ள மலைத்தொடராகும். இதன் மிக உயர்ந்த சிகரம் கெர்மோன்மலை ஆகும். மற்ற அமானா, செனீர் என்ற சிகரங்களும் குறிக்கப்பெறுகின்றன *(உ.ச. 4:4).* எபிரே யம், அராபியம், மற்றெந்தப் பூர்வீக மொழி களிலும் இதற்குப் பொதுவான பெயர் ஒன் றும் வழங்கப் படவில்லை. சில சமயங்க ளில் யாபேல் ஏல் - சார்க் பயன்படுத்தப்படு கிறது.

**எதியேல்** (JEDIAEL - இறைவனுக்குத் தெரிந்த, இறைவனால் அறியப்பட்ட)

1. ஓர் இனப்பெயர் முதல்வர். *1 நாள் 7:6.10-11*-இன்படி இவர் பென்யாமின் குலத் தைச் சேர்ந்தவர். ஆனால் தொடக்கத்தில் இத்தலைமுறை அட்டவணை செபுலோ னைப் பற்றியதாக இருந்திருக்கலாம்.

2. தாவீதின் வலிமை மிகுந்த படைவீரர்க ளில் ஒருவர். சிமிரியின் புதல்வர்களில் ஒரு வர் *(1 நாள் 11:45).*

3. தாவீது பெலிஸ்தியரோடு சேர்ந்து கொண்டு சவுலுக்கு எதிராகப் போரிட்ட போது சிக்கிலாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட மனாசேயின் படைத் தலைவர்க ளில் ஒருவர் *(1 நாள் 12:20).*

4. தாவீது அரசனின் காலத்தில் பெட்டகத் திற்கு வாயிற்காவலராக இருந்த இவர் கோராகியர் குலத்தைச் சேர்ந்தவர். மெசெ லெமியாவின் இரண்டாம் மகன் *(1 நாள் 26:2).*

**எதிரை** (EDREI - கோட்டை)

1. பாசான் நாட்டு அரசன் ஓக்கின் உறைவி டம்தான் இந்நகரம் *(உப 1:14; யோக 12:4; 13:12).* இந்நகரம் பாசான் நாட்டுத் தெற்கு எல்லையின் கரையோரத்தில் பாலைவனத் திற்கு அருகில் அமைந்திருந்தது. கிழக்கிலி ருந்தும், தெற்கிலிருந்தும் வரும் எதிரியைத் தாக்குவதற்காக அரசன் இவ்விடத்திலிருந்து கொண்டு கவனித்துக் கொண்டிருப்பான். மோசேயும், இஸ்ராயேலர்களும் பாலை வனத்திலிருந்து பாசானைக் கைப்பற்றி ஓக்கை எதிரைக்கு முன்னுள்ள சமவெளியில் முறிய டித்தார்கள் *(எண் 21:33).* இந்நகரமும் இதைச் சுற்றியிருந்த மாவட்டமும் மனாசே இனத் தின் மாக்கீர் குலத்தவர்களுக்கு ஒதுக்கப்பட் டிருந்தது *(யோக 13:31).* இதன் பெயரும், இடமும் தற்பொழுது உள்ள யார்முக் ஆற் றிற்கு அருகில் உள்ள 'டெர்ரா' வின் பெய ரால் வழங்கப்படுகிறது. இங்கிருந்து தமஸ்கு நகர் 96 கி.மீ. தொலைவிலும் கலி லேயாக் கடல் 48 கி.மீ. தொலைவிலுமுள்

ளன. இதில் பல சிதைவுகளும் எழுத்துக்க ளும், ஒரு பழங்கால பூமிக்கடியிலுள்ள சிதைவும் உள்ளன.

2. நப்தலி நாட்டில் உள்ள நகரங்களில் ஒன்று (யோசு 19:37). இதை இப்போது அடையாளம் காட்டமுடியாது. இது துத்மோசின் பட்டியலில் 91ஆவதாக வரும் தாராவாக இருக்கலாம்.

**எதினா** (EDNA - இன்பம், மணமகள் விலை, திருமணப்பரிசு)

தோபித்தின் உறவினனான இரகுவேலின் மனைவி. தோபியாவின் மணப்பெண்ணான சாராளின் தாய் (தோபி 7:12.14 தொ; 8:11-12). வுல்கத்தா மற்றும் பழைய வாசகங்கள் இவ ளது பெயரை அன்னா என்று குறிப்பிடுகின் றன. இவள் தன் மருமகனுக்குக் கூறிய பிரியா விடைவாழ்த்துரை எப்போதும் நினைவு கூறத்தக்கது (10:12).

**எதினார்க்கேயர்** (ETHNARCH - மக்களை ஆளுபவன்)

'மக்களை ஆள்பவர்' என்ற பொருளைச் சுட்டும் ஒரு சிறப்புப் பெயர். ஆளுநர் களுக்கு அடிக்கடி சூட்டப்பெற்ற ஒரு பட்டம். பல நூற்றாண்டுகளுக்கும் மேலாகப் பயன் படுத்தப்பட்டு வந்த இந்தச் சொல், தெளிவற்ற நிலையும், மாற்றமும் இணைந்து நிலை யற்ற மாறுபடக் கூடிய சொல்லாக மாறிய தால், காலத்திற்குக் காலம் தன் பொருளை மாற்றிக் கொண்டது.

''எதினார்க்'' முடியாட்சி செய்யும் அர சன், வேறொரு பெரிய அரசனைச் சார்ந்து நிற்கும்போது அவனுக்கு வழங்கப்பட்ட அரச சிறப்புப் பெயர். இப்பதவி 'நான்கில் ஒரு பகுதிக்குத் தலைவன்' பதவியைவிட உயர்ந்தது. ஆனால் அரசனைவிடத் தாழ்ந்த பட்டம். சீமோன் மக்கபேயர் படைத்தலை வராகவும் எதினார்க்காகவும் (அதிகாரியாக வும்) அழைக்கப்படுகிறார் (1 மக் 14:47). இரண்டாம் இரிக்கானு பொன் முடி மறுக் கப்பட்ட போதிலும் 'எதினார்க்காகவும், பெரிய குருவாகவும்'' இருந்தார். ஏரோதின் புதல்வன் அர்க்கெலா அரச பதவிக்குத் தகுதி யற்றவன் ஆனதால் 'எத்தினார்க்' என்று அழைக்கப்பட்டான்: பிற்காலத்தில் வந்த ஓரிசென் பாலஸ்தீனத்தின் தலைமை அதிகா ரியை 'எதினார்க்' என்று வர்ணித்துவிட்டு 'அப்பதவிக்கும்' அரச பதவிக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை என்று சேர்த்து எழு துகின்றார்.

உரோமைப் பேரரசில் உள்ள நாடுகளில் சொந்த மண்ணிலிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட தலைவர்களை வைத்து ஒவ்வொரு பிரிவையும் ஆண்டார்கள். இந்தச் சூழ்நிலை யில்தான் இந்தப் 'பதவி' பயன்படுத்தப்பட் டிருக்கலாம். உரோமைய அதிகாரத்திற்குட் பட்ட யூதேயாவின் சுற்றுப் புறங்களிலும் எகிப்தில் அலக்சாந்திரியா போன்ற யூதர்கள் வாழ்ந்த இடங்களில் உள்ள யூதர்களை நடத் தினபோது இம்மாதிரிச் சூழ்நிலை இருந் தது. இந்தக் காலக் கட்டத்தில் யூத ஆட்சியா ளர்களுக்கு 'எதினார்க்' என்ற சிறப்புப் பெயரை வழங்கியிருக்கலாம். யோசிபஸ் இதைப்பற்றிக் குறிப்பிட்டு எழுதுகின்றார். அலக்சாந்திரியாவின் பிலோ 'எதினார்க்' கைப் பயன்படுத்தவில்லை. மாறாகக் ''கெனார்க்'' என்ற சொல்லைப் பயன்படுத் தியிருக்கிறார். 'அலபார்க்' என்ற வேறொரு சொல்லும் அலக்சாந்திரியாவின் யூதர்களின் தலைவருக்குப் பயன்படுத்தப்பட்டது. இச் சொல் குறிக்கும் பொருளும் சொல்லிலக்க ணமும் தெரியவில்லை.

'எதினார்க்' என்ற சொல் புதிய ஏற்பாட் டில் ஒரே ஓர் இடத்தில் தான் குறிக்கப்படுகி றது. ''நான் தமஸ்கு நகரத்தில் இருந்த பொழுது அரேத்தா அரசன் கீழ் இந்த ஆளுநன் (எதினார்க்) என்னைச் சிறைபிடிக்க விரும்பி னான்'' (2 கொரி 11:32). விளக்கவுரை எழுது பவர்கள் தமஸ்கு நகரைத்தன் அதிகாரத்துக் குள் வைத்திருந்த நபத்தேயாவின் அரசன் அரேத்தாவின் பதிலாளி இந்த 'எதினார்க்கா?' அல்லது உரோமைய அதிகாரத்திற்குட் பட்டு எருசலேமிலுள்ள 'யூத எதினார்க்குக ளைப்போல' தமஸ்குவிலுள்ள நபத்தேய 'எதினார்க்கா'? என்பது பற்றி வேறுபடுகின் றனர்.

**எதினான்** (ETHNAN - கொடை)

அசூர், ஏலா ஆகியோரின் இளைய மகன்; யூதா இனத்தில் ஒருவர் (1 நாள் 4:7). அறிஞர்கள் சிலர், இப்பெயர் யூதாவின் செப்பேலாவிலுள்ள இதினானைச் சேர்ந்த ஒரு சமூகக் குழுவைக் குறிக்கலாம் என்று கருதுகின்றனர்.

**எதினி** (ETHNI - கொடை)

லேவிய பாடகர்களின் தலைமுறை அட்டவணையில் வரும் ஆசாபுவின் முன்னோர். கெரிசோமியப் பிரிவைச் சேர்ந்த லேவியர். செராகின் மகன். மல்க்கியாவின் தந்தை (1 நாள் 6:4). இந்த அட்டவணை பாபிலோனிய அடிமைத் தனத்துக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது. இது பெரும்பாலும் கற்பனையான அட்டவணை. தாவீது காலத்திற்குத் திரும்பிச் சென்று லேவிய வம்சாவழியைக் கண்டு பிடிக்கச் செய்த முயற்சியாகும். 1 நாள் 6:21-இல் ''எதினி'' இருக்கவேண்டிய இடத்தில் எயத்திராய் என்று இருப்பதற்குக் காரணம் எழுதினவனின் பிழையாக இருக்கலாம்.

**எதீதா** (JEDIDAH - யாவேயின் அன்பர்)

யூதாவின் அரசன் யோசியாவின் தாயும், போசுக்காத்தைச் சேர்ந்த ஆதாயாவின் மகளும் ஆவாள் (2 அர 22:1).

**எதீதியா** (JEDIDIAH - யாவேயின் அன்பர்)

சாலமோன் மேல், இறைவன் கொண்டிருந்த அன்பைக் காட்டுவதற்காக நாத்தான் இறைவாக்கினர் சாலமோனுக்கு இட்ட பெயர் (2 சாமு 12:25). அறிஞர்கள் சிலர், இப்பெயர் அரசனது அரியணைப் பெயராக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

**எதுத்தூன்** (JEDUTHUN - புகழ்)

1. தாவீதின் காலத்தில் இருந்த லேவியர் குலத்தைச் சேர்ந்த ஒரு பாடகர். ஆசாபு, ஏமான் என்பவர்களோடு இவர் சேர்க்கப்பட்டுள்ளார் (1 நாள் 25:1; 2 நாள் 5:12). மற்றொரு இடத்தில் இவ்விருவரோடு ஏத்தான் என்பவரும் சேர்க்கப்பட்டுள்ளார் (1 நாள் 15:17). இதிலிருந்து, ஏத்தான் என்பதும் எதுத்தூன் என்பதும் ஒரே ஆளையே குறிக்கின்றன என்று தெரிகிறது. அப்படியாயின், எதுத்தூன் மெராரி என்ற லேவியக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார் (1 நாள் 6:44). ஒருவேளை எதுத்தூன் என்ற பெயர் சங்கீதத் தொனியிலிருந்து வந்திருக்கலாம் (சங் 39; 62; 77). இது மூலத்தில் ''ஏத்தாளின் கரங்களில் இருந்து'' என்று இருந்திருக்கலாம்.

எதுத்தூன் இறைவாக்குரைத்ததாகக் கூறப்படுகிறார் (1 நாள் 25:1,3). ''அரசனின் காட்சியாளர்'' என்றும் அழைக்கப்படுகிறார் (2 நாள் 35:15). எதுத்தூனிலிருந்து தோன்றிய குழு முதலில் இறைவாக்கினர் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். இரண்டாவது ஆலயம் உருவான பிறகு அவர்கள் பாடகர்களாக மாறி இருக்கலாம். 1 நாள் 16:38.42-இல் எதுத்தூன் வாயிற் காப்பாளர்களின் தந்தை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஒருவேளை 16:42-ஆம் வசனத்தில் ''எதுத்தூன் புதல்வர்கள்'' என்பதற்கும் ''வாயிற்காவலராக நியமித்தார்'' என்பதற்கும் இடையில் உள்ள சில சொற்கள் விடுபட்டிருக்கலாம்.

2. கோரகிய லேவியர், ஓபேது-ஏதோமின் தந்தை. இவரது சந்ததியினர் பெட்டகத்திற்கு வாயிற்காவலர்களாகப் பணிபுரிந்தனர் (1 நாள் 16:38.42; காண்க 26:1-4.8).

3. ஒரு சங்கீதத் தொனியாகும். ''எதுத்தூனின் படி'' என்பது சங் 39; 62; 72 ஆகியவற்றின் தலைப்பாகும்.

**எத்த-காசின்** (ETH-KAZIN - இளவரசன் நேரம்)

செபுலோன் எல்லையில் உள்ள ஒரு நகர் (யோசு 19:13). இது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால் விவிலியக் குறிப்புகளின் படி காத்-கேப்பெரின் அருகில் இருக்க வேண்டும். ஒருவேளை நாசரேத்துக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள கெப்ருகென்னாவாக இருக்கலாம். கத்தோலிக்கப் பாரம்பரியம், இவ்விடத்தை இயேசு நீரைத் திராட்சைரசமாக்கிய கானாவாக அடையாளம் காண்கிறது (யோவா 2:1 தொ).

***எத்தியோப்பிய அண்ணகன்*** *(ETHIOPIAN EUNUCH)*

எத்தியோப்பியாவின் அண்ணகன், எத்தியோப்பியாவின் அரசியாகிய கந்தாக்கே என்பவளின் அமைச்சர். அவர் நற்செய்தியாளர் பிலிப்புவினால் கிறிஸ்தவ மறைக்கு மனமாற்றப்பட்டவர் (அ.ப. 8:27-40). இந்நிகழ்ச்சியைப் பொருத்தவரையில், யார் அந்த எத்தியோப்பியாவின் அண்ணகன்? அப்போஸ்தலர் பணியில் இந்நிகழ்ச்சியின் சிறப்புக்கூறு அல்லது முக்கியத்துவம் என்ன? என்ற இரண்டு கேள்விகள் எழுகின்றன.

'எத்தியோப்பியா' புவியியல் சார்ந்த சொல் என்ற முறையில் பரந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. இச்சொல் எகிப்திற்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்கா, அரேபியா, இந்தியா போன்ற இடங்களைக் குறிக்கப் பயன்பட்டது. சில சமயங்களில் மத்திய தரைக் கடலுக்கு அப்பால் தெற்கிலும், கிழக்கிலும் வசித்து வந்த மக்களைக் குறிக்கப் பயன்பட்டது. வெகுதொலைவிலுள்ள மக்களைக் குறிக்கப் பயன்பட்டது (ஆமோ 9:7). 'எரிந்த முகம்' அல்லது 'கருத்த முகம்' என்ற பொருளை இச்சொல் கொண்டிருப்பதால் கறுப்பு நிறத்தைக் கொண்டிருந்த மக்களை அழைக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

பிற்கால விவிலிய வரலாற்றில் இச்சொல் எகிப்திற்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதிகளைக் குறிக்கப்பயன்பட்டது. நைலும் அஸ்டபோராகும் (இன்றைய தக்காசி) ஒன்று கூடும் பகுதியிலுள்ள, சிறப்பாக, மேரோ ஆட்சிப் பகுதியைக் குறித்தது. வளமை நிறைந்த இப்பகுதியில் தங்கம், இரும்பு, செம்பு, உயர்ந்த கற்கள், கருங்காலி மரங்கள், பேரீச்ச மரங்கள், நறுமணப் பொருள்கள், தந்தங்கள் போன்றவை கிடைத்தன. இந்தப் பகுதி அரசியல், பொருளாதாரச் செயல்பாடுகளுக்குப் பெயர்போன இடமாகும்; எகிப்தியர்கள், அராபியர்கள், கிரேக்கர்கள், யூதர்கள் போன்றவர்களோடு முக்கியமான தொடர்பு வைத்துக் கொண்ட இடமாகும்.

எத்தியோப்பிய அரசர்கள் நபத்தாவில் இருக்கும் பொழுதும், அதன்பின் மேரோவில் இருக்கும் பொழுதும் கல்வெட்டுக்களில் எழுதுவதற்கு ஆப்புவடிவ எழுத்துக்களைப் பயன்படுத்தினர். கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து, கிறிஸ்தவ சமய காலத்தின் மூன்றாம் நூற்றாண்டுவரை அவர்கள் மொழியும் எழுத்து வடிவமும் பொதுவாக மேரோட்டிக் என்று அழைக்கப்பட்டன. இரண்டாம் தோலமி காலத்திலிருந்து அரசாட்சியானது கிரேக்கப் பண்பாட்டில் வளர ஆரம்பித்து. கி.மு. 665-இலிருந்து கிரேக்கர்கள் இங்கு வரஆரம்பித்தனர். அரசியின் மன்றத்தில் இருக்கும் உயர்ந்த அதிகாரி கிரேக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் ஏசாயாவின் நூலை வாசிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் பணியில், கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி இரண்டு காரியங்களை வலியுறுத்துகின்றது; அந்த மனிதன் ஓர் எத்தியோப்பியன். அவன் ஓர் அண்ணகன். அவரது பெயர் தரப்படவில்லை. ஆனால் அவர் ஒரு யூதரா அல்லது புறவினத்தாரா, மனம் மாறியவரா அல்லது இறைவனுக்கு அஞ்சுபவரா என்பது தெரியவில்லை.

எத்தியோப்பிய அண்ணகன் பிறப்பிலிருந்தே ஒரு யூதனா அல்லது மனம் மாறியதால் யூதனா என்பது கேள்விக்குறி. அண்ணகன் பிறப்பிலிருந்தே யூதனாக இருக்கமுடியாது. ஆனால் பெரும்பாலும் மனம்மாறிய புறவினத்தாராக இருக்கலாம். எத்தியோப்பிய அண்ணகன் இறைவனுக்குப் பயப்படக் கூடிய வகையினைச் சேர்ந்தவர். அப்போஸ்தலர் பணியில் முதன் முதல் மனம்மாறிய புறவினத்தார் கொர்னேலியு என்று குறிப்பிட்டிருப்பதால் இந்த அண்ணகன் ஒரு யூதனாக இருந்திருக்க வேண்டும் என்று கூற இயலாது. அப்போஸ்தலர் பணியில் கூறப்பட்டிருக்கும் இந்நிகழ்ச்சியில் எத்தியோப்பிய அண்ணகனை இருளிலிருந்து ஒளிக்கு வருகின்றவராகவும், இயற்கையிலே இறைவன் இல்லாத நிலையிலிருந்து இறைமக்களாகும், நிலையைக் குறித்துக்காட்டுகின்றவ

ராகவும், நற்செய்தியாளர் லூக்கா இங்குக் காட்டுகின்றார். இவ்வாறு புறவினத்தாரிடையே நற்செய்தி பரவுவதற்கு மேடை அமைக்கப்படுகிறது (காண் 10:1-48). இந்நிகழ்ச்சியுரை வெகுதொலைவில் உள்ளவர்களும், யூதவழக்கின் கடுமையான கோட்பாடுகளுக்கு ஏற்புடையவர் அல்லாதவர்களும், நற்செய்தியை ஏற்று அதற்குப் பதில் அளிக்கக்கூடும் என்று காட்டுகிறது. சங். 68:3-இல் கூறப்பட்டிருக்கும் 'எத்தியோப்பிய மக்கள் கடவுளை நோக்கித் தம் கைகளை உயர்த்துவார்களாக' என்ற வேண்டுதல் நிறைவேறுவதைத் திருச்சபை காண்கிறது.

**எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு** (விவிலியத்தின்)

எத்தியோப்பிய நாடு என்று இங்குக் குறிப்பிடப்படுவது, தற்போது சூடான் நாடு என்று அழைக்கப்படுகிறது. அ.ப. 8:26-39-இல் எத்தியோப்பிய அண்ணகன், பிலிப்பு வால் திருமுழுக்குப் பெறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் இந்த எத்தியோப்பியா நாட்டில் எப்போது, எவ்வாறு கிறிஸ்துவம் பரவியது என்பதற்குச் சரியான வரலாறில்லை. கிறிஸ்துவ மதத்தைப் பற்றி முதல் தகவல் கிடைப்பது கி.பி. 4-ஆம் நூற்றாண்டில்தான். புருமென்சியுசு என்பவர், அக்சும் என்ற இடத்தின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரைத் திருநிலைப்படுத்தியவர் அலக்சாந்திரிய நகர் சமய மூதாளர் அத்தனாசியுசு என்பவர். எனவே இந்தக் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்து, விவிலியத்தை மக்களுக்காக, அம்மக்களின் மொழியில், மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இம்மொழி பெயர்ப்பை யார் முன்னின்று செய்தனர்? என்பதற்கான சரியான தகவல் இல்லை. அபிசினியர் என்பவர்களின் பாரம்பரியக் கருத்துப்படி, இந்த எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு ஒன்பது சீரிய முனிவர்களால் செய்யப்பட்டது என்பர். இந்த ஒன்பது சீரிய முனிவர்கள், இயேசு, ஒரே இயல்பு மட்டும்தான் கொண்டு வாழ்ந்தார் என்ற தப்பறையான கொள்கையைப் பின்பற்றியவர்கள். இந்த ஒரே இயல்புக் கொள்கை கி.பி. 451-ஆம் ஆண்டு, கால்சிடன் நகரில் நடந்த பொதுச் சங்கத்தால் கண்டனம் செய்யப்பட்டது. இவ்வாறு கண்டனம் பெற்ற ஒரே இயல்புக் கொள்கையைப் பின்பற்றிய 9 முனிவர்களும் சீரியா நாட்டிலிருந்து எகிப்திற்குத் தப்பி ஓடி வந்தனர். அங்குதான் எத்தியோப்பிய மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்தனர் என்பது அபிசீனியர் பாரம்பரியக் கூற்று. ஆனால், இந்நாட்டில் ஆயராக விளங்கிய புருமென்சியுசும் இந்த மொழி பெயர்ப்பில் ஆர்வம் காட்டியிருக்க வேண்டும். ஆனால் அதற்கான வரலாற்றுப் பூர்வமான சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

இம்மொழி அராபிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. தற்போது நமக்குக் கிடைக்கும் பழஞ்சுவடிகள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இரண்டு, புதிய ஏற்பாட்டுப் பழஞ் சுவடிகள் மட்டும் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எல்லாம் எழுபதுநூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பிலிருந்து, மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 1 அரசர் நூலில் வத்திக்கான் பழஞ்சுவடித் தொகுப்பின் கிரேக்க மொழியை, இந்த எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு அப்படியே பின்பற்றியிருப்பது நன்கு தெரிகிறது.

புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியைச் சொல்லுக்குச் சொல் பின்பற்றி மொழி பெயர்த்துள்ளனர். ஒருசிலவிடங்களில், தங்களுக்கு நன்கு விளங்காதபோதோ என்னவோ, அப்பகுதிகளின் கருத்துச் சுருக்கத்தை மட்டும் தருகின்றனர்.

இந்த மொழிபெயர்ப்பு எழுபதுநூல் பட்டியலில் காணப்படும் நூல்களோடு யூபிலிகள் நூல், 1 ஏனோக்கு, 4 எசுதிரா, 4 பாரூக் மற்றும் யூசேபின் பட்டியல் ஆகியவற்றின் எத்தியோப்பிய கையெழுத்துச் சுவடிகளையும் கொண்டுள்ளது.

**எத்தியோப்பியா** (ETHIOPIA)

விவிலியம் மற்றும் பிற பண்டைய வழக்குகளிலும் எகிப்திற்குத் தெற்கில் கருமை நிறத் தோலுடைய மக்களின் நிலப்பரப்பே எத்தியோப்பியா ஆகும்.

1. பெயர்:-

''எரிந்த முகம்'' (எரே 13:23) என்ற கிரேக்கச் சொல்லால் பாரம்பரியமாக விளக்கப்பட்டு வரும் இந்த நவீனச் சொல்லானது இந்தப் பொதுவான நிலப்பரப்பைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல்லினின்றே வருகிறது ''எகிப்து'' என்ற பெயரும் பெறப்படுகின்ற ''பித்தாவின் இல்லம்'' என்னும் எகிப்தியச் சொல்லினின்றும் இப்பெயர் உருவாகியிருக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எத்தியோப்பியாவும் கூசும் ஒரு இடத்தைக் குறிக்கின்றன. எழுபது நூல் எத்தியோப்பியா என்ற பெயரையே பயன்படுத்துகிறது.

2. புவியியல்:-

பண்டைக்காலம் முழுவதும் எத்தியோப்பியாவானது ஓரளவு துல்லியமற்ற நிலையில் எகிப்திற்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பு முழுவதையும் குறிப்பதாகக் கருதப்பப்பட்டது. குறிப்பாக, மனித இனத்தில் அறியக்கூடிய மிகத்தொலையில் உள்ள நாடாகும் எத்தியோப்பியா என்றும் அதில் அரேபியாவும் இந்தியாவும்கூட உள்ளடங்கும் என்றும் கிரேக்கர்கள் கருதினர். எகிப்திய நூல்களில் இச்சொல்லானது நைல் நதியினுடைய இரண்டாவது மற்றும் மூன்றாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடையிலுள்ள சிறு நிலப்பரப்பை அல்லது மிகப்பொதுவாக முதல் மற்றும் ஆறாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட நுபியாவின் பகுதியைக் (இன்றைய வடக்குச் சூடான்) குறிப்பிடுகின்றது. விவிலியக் குறிப்புகள் பெருமளவிற்கு இந்தக் குறுகிய விவரிப்பையே கருத்தில் கொண்டுள்ளன. எத்தியோப்பியாவின் (கூசு) ஆறுகள் எனப்படுபவை (ஏச 18:1; செப் 33:10) நைல் மற்றும் அத்பரா நதிகளுடைய நீலம் மற்றும் வெள்ளைக் கிளை நதிகளைக் குறிப்பிடக்கூடும். பண்டைக்காலத்தில் ஒருபோதும் எத்தியோப்பியாவானது இன்றைய எத்தியோப்பியப் பரப்பாக (அபிசீனியா) அடையாளம் காட்டப்படவில்லை.

3. வரலாறு:-

தொல்பொருள் சான்றுகள் குறிப்பிடுவதன்படி, பண்டைய எத்தியோப்பியாவில் கற்காலத்திலும் எகிப்திய அரசமரபுகளுக்கு முற்பட்ட காலத்திலும் (கி.மு. 8000-3000) நாகரிகம் வளமுற்றிருந்தது. அளவற்ற தாது மூலப்பொருட்கள் நான்காம் அரசிலேயே (2613) எகிப்தியச் சூறையாடலைத் தூண்டின. பின்னர், வியாபாரத் தூதுகள் ஆறாம் அரசின் பாரவோன்களாகிய மெரேன்ரே மற்றும் இரண்டாம் பெபி (2200) மற்றும் இலகாசினுடைய குதேயா (2100) ஆகியோரால் அனுப்பப்பட்டன.

எகிப்தில் மத்திய அரசு அமைக்கப்பட்டவுடன் (2000) எகிப்தியப் பாரவோன்கள் நுபியாவின் வடபகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். மூன்றாம் செசோசித்திரி (1878-1843) இரண்டாம் நீர்வீழ்ச்சியின் வட பகுதியை இணைத்தார். பல்வேறு கோட்டைகள் மற்றும் வியாபாரத்தலங்களின் துணையோடு மேலும் ஒரு நூற்றாண்டிற்கு எகிப்து அப்பகுதியின் மேல் ஆதிக்கம் செலுத்தியது. கைக்சோசு ஆட்சியாளர்கள் தொடர்ந்து எத்தியோப்பியாவைக் கைப்பற்றியிருந்தமையால் இரண்டாம் எகிப்திய இடைக்காலத்தினால் சிறிதளவும் அமைதி அளிக்க முடியவில்லை. கைக்சோசை வெளியேற்றுவதற்கான நுபியருடைய உதவிக்குப் பிரதிபலனாகப் பதினெட்டாம் அரசினுடைய பாரவோன்கள் நுபியாவை மீண்டும் கைப்பற்றி (1500) நான்காம் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள நபத்தாவரை தெற்கே தங்களுடைய ஆதிக்கத்தை விரிவடையச் செய்தனர். அடுத்த ஐந்நூறு ஆண்டுகளுக்கு எத்தியோப்பியாவிலுள்ள அரசனின் மகன் எனப்படும் ஓர் ஆளுநரால் எத்தியோப்பியா ஆட்சிசெய்யப்பட்டது. பதினெட்டு மற்றும் இருபதாம் அரசுகளின் கீழ், பரந்த நீர்வசதி, புதிய நகரங்களை உருவாக்குதல், அபுசிம்பெல் உள்ளிட்ட எண்ணற்ற கோவில்களைக் கட்டுதல் போன்றவற்றால் ஊக்குவிக்கப்பட்டு, நாடானது அமைதியையும் செழிப்பையும் அனுபவித்து வந்தது.

இலஞ்சம், திறமையற்ற ஆட்சி ஆகியவற்றால் இருபதாம் அரசு மூழ்கடிக்கப்பட்ட

பின்னர் ஆளுநர் ஏரிகோர் ஆட்சிப்பொறுப்பை ஏற்று இருபத்தியோராவது அரசை உருவாக்கினார் (1065-945). எதிர்நோக்கியிருந்த மூன்றாவது இடைப்பட்ட காலத்தில் சாலமோனுடைய மரணத்தைத் தொடர்ந்து எருசலேமைத் தாக்குவதற்கென இலிபிய பாரவோன் முதலாம் செசாங்குக்கு (2 நாள் 12:2-3) எத்தியோப்பியக் கூலிப்படையினர் துணை புரிந்தனர். நபத்தாவிலிருந்து ஆட்சி புரிந்து வந்த கசித்தா 740-இல் தென்எகிப்தை வென்று இருபத்து ஐந்தாவது (எத்தியோப்பிய) அரசை ஏற்படுத்தியது வரை நடந்த மற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சிறிதளவே அறியப்படுகிறது. அவரது மகன் பியான்சி எகிப்தின் மற்றப் பகுதிகளை வென்றார். அவருக்குப் பின்வந்த அவரது சகோதரன் சபாகா தலைநகரைத் திபிசுக்கு மாற்றியமைத்து, எத்தியோப்பியாவிற்கும் எகிப்திற்கும் அரசனாக ஆட்சி புரிந்தார். அசிரிய சனகெரிபுவிற்கு எதிராக யூதாவின் எசக்கியாவிற்குத் துணைபுரிந்த தாராக்கா (2 அர 19:9; ஏச 37:9) 670-இல் ஏசர்கதோன் எகிப்தின் மீது படை எடுத்தபோது தோற்கடிக்கப்பட்டார். அவரது உடன்பிறந்தார் மகனாகிய தனெதமோன் மெம்பிசுவை மீண்டும் கைப்பற்ற முயற்சித்த போது அசூர்பானிப்பால் திபிசுவை அழித்து எகிப்தின் மீதான எத்தியோப்பிய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பதிலடி கொடுத்தார்.

எத்தியோப்பிய ஆட்சியானது தனெதமோனுக்குப் பின் வந்தவர்களின் கீழ் நபத்தாவைத் தலைநகராகக் கொண்டு தொடர்ந்தது. எகிப்தின்மீது எத்தியோப்பிய ஆதிக்கம் மீண்டும் உருவாவதைத் தடுக்க 590-இல் பாரவோன் இரண்டாம் சாம்திக்கினால் நகரானது தரைமட்டமாக்கப்பட்டது. இவ்வாறு தலைநகரானது ஐந்து மற்றும் ஆறாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடையிலுள்ள மெரோவிற்கு மாற்றப்பட்டது. 522-இல் கேம்பிசேயின்கீழ், பாரசீகர்கள் புதிய தலைநகரை முற்றுகையிட்டு வென்றாலும் (எஸ்த 1:1; 8:9) பைசாண்டின் காலத் தொடக்கம்வரை மெரோய்திக் ஆட்சி தொடர்ந்தது. கி.பி. 350-இல் அக்சுமினுடைய அரசனாகிய எசானாவினால் நகரானது கைப்பற்றப்பட்டு அப்பகுதி அபிசீனிய ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

4. விவிலிய முன்னோக்கு:-

இனத்தோற்ற முன்னோர்களின் தலைமுறைப்படி, புவியியல் மற்றும் இனவியல் பகிர்வுகளைக் காட்டுகின்ற நாடுகளின் அட்டவணையில், எத்தியோப்பியாவானது காமின் மகனாகிய கூசினால் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 10:6) எகிப்து, புத்து, கானான் ஆகியோர், இவருடைய சகோதரர்கள்; மற்றும் சாபா, கெவிலா, சபத்தா, இராகாமா, சம்தேக்கா ஆகியோர் இவரதுமக்கள் (10:7). இஸ்ராயேலர் பொதுவாகத் தங்கள் இனத்தவர்களுக்குள்ளேயே மணம் செய்து கொள்ள விரும்பினாலும் சிலர் காம் இன எத்தியோப்பியரை மணம் புரிந்தனர் (உ.ம். மோசே; எண் 12:1).

நாட்டினுடைய வணிகச் செயல்முறை பற்றியும் (ஏச 4:5:14), அரசியல் மற்றும் இராணுவ ஈடுபாடு பற்றியும் (எச 30:5-9; நாகூ 3:9; எச 38:5) அறிந்தவர்களாய், இஸ்ராயேல் இறைவாக்கினர்கள், பாவம் நிறைந்த அரசுக்கு எடுத்துக்காட்டாக எத்தியோப்பியாவைக் காட்டினர் (ஆமோ 9:7). எத்தியோப்பியாவானது உலக அரசுகளுக்கு வீழ்ச்சியடைவதோடு மட்டுமின்றி (ஏச 20:3-5) இறைவனுடைய சினத்தையும் அது அனுபவிக்கும் (செப் 2:12). எகிப்து மற்றும் சேபாவுடன் எத்தியோப்பியாவும் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலின் மீட்புக்கு ஈடாகக் கொடுக்கப்படும் (ஏச 43:3).

## எத்தேத் (JETHETH)

ஏசாவின் வழித்தோன்றல். ஓர் ஏதோமிய இனத்தின் தலைவரும் இனப்பெயர் மூதாதையருமாவார் (ஆதி 36:40; 1 நாள் 1:51).

## எத்தேர் (ETHER - வாசனைப் பொருள்)

1. இலிபுனா மாரேசா மாவட்டத்தில் செப்பேலாவில் உள்ள யூதாவின் நகர் (யோசு 15:42). எலுத்தரோபோலி என்ற பெயித்-இப்ரினுக்கு வடமேற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்து ஏல்-ஆத்தேரோடு இதை அடையாளம் காட்டலாம்.

2. சிமியோன் கோத்திரத்தின் நகர்களில் ஒன்று (யோசு 19:7; யோசு. 15:32-இல் வரும் அயின்-ரிம்போனுக்கும் பிறகு சேர்க்கப்பட வேண்டிய தொன்றாகும்). இதற்கு இணை யான பகுதியான 1 நாள் 4:32-இல் ''தொக் கேன்'' என்றுள்ளது. 1 சாமு 30:30-இல் வரும் அத்தாக்கு என்பது எத்தேருக்குப் பதிலான பிழையான வாசகமாக இருக்கலாம். பேயேர்-செபாவுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து அத்தீர் எத்தேராக இருந்திருக்கலாம்.

**எத்தேர்** (JETHER - ஏராளம்)

1. கிதயோனின் மூத்தமகன் (நீதி 8:20). இவருடைய தந்தை, சோபா, சல்முன்னா ஆகிய மிதியானியர்களைக் கொன்று பழி தீர்க்கக் கட்டளையிட்டார். இவர் சிறுபிள் ளையாய் இருந்ததால் அஞ்சி, அப்படிச் செய்யவில்லை. கிதயோனே அவர்களைக் கொன்று பழி தீர்த்தார். இதனால் ஒரு சிறுவ னால் கொல்லப்படும் இழிவிலிருந்து கைதி கள் தப்பினர் (8:21).

2. இவர் ஓர் இசுமயேலர் (1 நாள் 2:17). அமசாவின் தந்தை, முன்னோர். தாவீதுக்கு எதிராக அபிசலோம் கிளர்ச்சி செய்த போது, அபிசலோம் அமசாவைப் படைத்தலைவர் ஆக்கினார் (1 அர 2:5.32). 2 சாமு 17:25-இல் இவர் இதிரா என்றழைக்கப்படுகிறார்.

3. எரகுமேலின் வழிவந்தவர். யாதாவின் மகன். பிள்ளைகளின்றி இறந்தவர் (1 நாள் 2:32).

4. யூதாவின் இனத்தைச் சேர்ந்த ஓர் எஸ்ரா வின் மகன் (1 நாள் 4:17).

5. ஆசேர் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 7:38). ஒருவேளை 7:37-இல் வருகிற சோப் பாகின் மகன் இதிரானாக இருக்கலாம்.

**எத்துபாகால்** (ETHBAAL - பாகாலின் ஆள்)

சிதோனியரின் அரசன். இவருடைய மகள் ஈசபேல் இஸ்ராயேல் அரசன் ஆகாபை மணந்து கொண்டாள் (1 அர 16:31). அசித் தார்த்தியின் குருவான இவர் முதலாம் கிரா மின் வழித் தோன்றல்களில் கடைசியான பேலெசைக் கொன்று ஆட்சியைப் பிடித் தார். இவர் பெனிக்கியர்களின் வியாபாரத் தைத் தொடர்ந்து விரிவுபடுத்தி இலிபியா வில் அவுசா என்ற குடியிருப்பைத் தோற்று வித்தார். இவர் ஆட்சியில் ஓரண்டு முழுவ தும் பஞ்சம் நிலவியது (1 அர 17).

**எத்தூர்** (JETUR)

இசுமயேலின் மகன் (ஆதி 25:15; 1 நாள் 1:31). இத்துரேயர்களின் இனப்பெயர் மூதா தையர். இவரது சந்ததியினர், யோர்தானுக் குக் கிழக்கில் வாழ்ந்த இஸ்ராயேலர்க ளோடு போர் புரிந்தனர் (1 நாள் 5:19).

**எந்திரம், எந்திரக் கல்** (MILL, MILLSTONE)

தானியங்களை மாவாக அரைக்க உபயோ கிக்கப்படும் இரண்டு கற்களைக் கொண்ட கருவி. இருவகைக் கை எந்திரங்கள் உண்டு. ஒன்று கிட்டத்தட்ட செங்கோண வடிவை யும் சிறிதளவு குழிவானதாகவும் ஒரு முனை மற்றொரு முனையைவிடச் சிறிதளவு பரும னாகவும் உள்ளது. மெகிதோவில் கண்டெ டுக்கப்பட்ட கருவி இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். இது முப்பது அங்குலம் நீளம் உடையதாகும். புதைபொருள் ஆராய்ச்சி யாளர்கள் இக்கல்லினைச் சேண எந்திரம் என்று குறிப்பிடுகின்றனர். மேல் அல்லது அரைக்கும் கல்லானது ஒரு புறம் தட்டையான தாகவும் மறுபுறம் நீள் வட்டமானதாகவும் உள்ளது. இதனுடைய நீளமானது கீழ்க்கல் லினுடைய அகலத்திற்குச் சமமாகச் சிறிய தாக உள்ளது. அதனுடைய அகலமானது கையால் எளிதில் பிடிக்குமளவிற்குப் போது மானதாக இருந்தது. அரைப்பதானது தானி யங்கள் நிரப்பப்பட்ட பெரிய கல்லின் மேலுள்ள சிறிய கல்லினை முன்னும் பின் னும் தள்ளுவதன் மூலம் செய்யப்பட்டது. அனேகமாக இப்படிப்பட்ட சிறிய கல்லில் ஒரே நேரத்தில் பெருமளவு தானியம் அரைக் கப்பட முடியாது. ஆனால் கிரேக்கக் காலம் வரை உபயோகத்தில் இருந்த ஒரே எந்திரம் இது மட்டுமே.

இரண்டாவது வகையான கை எந்திரமானது இரண்டு உருண்டைக் கற்களைக் கொண்டுள்ளது. கீழ்க் கல்லானது மேற்பரப்பில் குவிந்ததாக உள்ளது. மேல் கல்லானது கீழ்க்கல்லின்மேல் நெருக்கமாகப் பொருந்துமாறு குழிவானதாகவும் உள்ளது. இவ்வித எந்திரத்தின் சில எடுத்துக்காட்டுகள், தானியத்தைப் பொழிவதற்கென, மேற்கல்லின் மையத்தில் ஒரு துளையைக் கொண்டுள்ளன. கிரேக்கக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இத்தகைய எந்திரமானது சாதாரணமாயிற்று. இதனுடைய பல்வேறு வேறுபாடுகள் இன்றும் அடிக்கடி காணப்படுகின்றன. இத்தகைய இரண்டு வித எந்திரங்களினுடைய கற்களும் சாதாரணமாக, கடினமான மற்றும் நுண்துளைகளையுடைய கருமையான தீக்கல்லினால் ஆனவை. இவ்வாறு அவை பல்வேறு வெட்டு முனைகளுடைய கடின மேற்பரப்பை அடிக்கடி அளிக்கின்றன.

இத்தகைய இருவித எந்திரங்களும் வீடுகளில், வீட்டுப் பெண்களால் இயக்கப்பட்டன. இதுவே அவர்களது அன்றாட இடைக்கால வேலையாகும். இதற்காக அவர்கள் அதி காலையில் எழுவர். ஊழியக்காரிகளோ, அடிமைகளோ உள்ள வீட்டில் அரைக்கும் தொழிலானது சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள்மேல் விழும் (யாத் 11:5; ஏச 47:2). அவ்வாறே சிறைப்பிடிக்கப்பட்டோர் மீதும் எந்திரத்தை இயக்கும் பணி சுமத்தப்பட்டது (நீதி 16:21; எரே 52:11).

சக்கரம் போன்ற வடிவுடைய பளுவான ஒரு கல்லானது, பெரிய, பளுவான, வட்டமான கீழ்க் கல்லின்மேல் விலங்கினால் இயக்கப்பட்ட பெரிய சமுதாய எந்திரமும் பண்டைக்காலங்களில் இருந்தன (புல 5:12; மத் 18:16; மாற் 9:42).

கை எந்திரமானது முற்றிலும் அவசியமானதாக இருந்ததால், எந்திரத்தையே முழுமையாக, அல்லது மேல் எந்திரக்கல்லை மட்டும் கடனுக்குப் பிணையமாக எடுத்துக்கொள்வதைச் சட்டம் தடை செய்தது. ஏனெனில் அன்றாட உணவிற்கு அடிப்படையான உரொட்டியைச் செய்வதற்கு உதவுகின்ற மாவைத் தயாரிக்க அவசியமான கருவியை அது குடும்பத்திற்கு இழப்பாக்குகின்றது.

அபிமெலக்குவினுடைய மரணத்தில் நிகழ்ந்ததைப்போன்று மேல் எந்திரக்கல்லானது செயல்மிக்க ஆயுதமாக இருந்தது (நீதி 9:53). பாலஸ்தீன நகரங்களிலும் கிராமங்களிலும் அதிகாலையில் அரைத்தலின் சப்தமானது பொதுவானது என்பதில் சந்தேகமேயில்லை. அது இனி எப்போதுமே கேட்கப்படாத காலமானது முழுமையான பாழ்நிலையின் அடையாளமாக இருந்தது (ஏரே 25:10; திருவெளி 18:22).

**எபசு (EBEZ)**

எபசு இசக்கார் பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:20). இது அமைந்திருந்த இடம் தெரியவில்லை. எழுபது நூலில் ''ஒய்வெடுக்கும் இடம்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ஒருவேளை தவறாக வந்துவிட்ட சொல்லாக இருக்கலாம்.

**எபரோன் (EPHRON - ' கலைமான், மான் கன்று போன்று) - ஆள்**

சோகாரின் புதல்வன். கெபிரோனில் வாழ்ந்த இத்தியனான இவரிடமிருந்துதான் ஆபிரகாம் மமிரேக்குக் கிழக்கில் உள்ள மக்கபேலாக் குகையை நானூறு செக்கேல் வெள்ளி நாணயத்திற்கு வாங்கினார் (ஆதி 23:8-17; 25:9; 49:29-30; 50:13).

**எபரோன் (EPHRON - கலைமான், மான் குட்டிகள் போன்று) - இடம்**

1. எபரோன் மலை யூதாவின் வட எல்லையில் கிரியத்து எயாரிம் அருகில் உள்ளது (யோசு 15:9). யோசு 18:15-இல் பென்யாமின் கோத்திரத்தாரின் தென் எல்லை குறிக்கப்படும் இடத்தில் அறிஞர் பலர் ''எபரோனுக்கு'' என்று இடை நுழைத்து மூலப் பாடத்திலுள்ள தவறைத் திருத்துகிறார்கள். ஏனென்றால் பென்யாமின் கோத்திரத்தாரின் தெற்கு எல்லை முடியும்போது யூதாவின் வடக்கு எல்லை ஆரம்பமாகிறது. பெத்திலகேமுக்கு

மேற்கில் மலைச்சிகரங்கள்தாம் எபரோன் என்று சொல்லப்பட்ட போதிலும், இந்த மாவட்டத்தைச் சரியாகக் கணித்துக் கூற முடியாது. இம்மலை மோசா (இக்காலக் கலோனியே) அருகிலுள்ள ஏல்-காஸ்டெல் ஆக இருக்கலாம்.

2. முதலாம் எரொபயாமிடமிருந்து யூதா அரசன் அபியா கைப்பற்றின பெத்திலகேமுக்கு அருகிலுள்ள நகர் (2 நாள் 13:19). பென்யாமின் கோத்திரத்தாருக்குச் சொந்தமான ஓபிராவும் இதுவும் ஒன்றாக இருக்கலாம் (யோக 18:23). எபரோன்-ஓபிரா பகுதி, பெத்தேலுக்கு வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு வட-வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ள எத்-தையிபே ஆக இருக்கலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். சில சமயம் இது எப்பிராயிம் என்றழைக்கப்படுகிறது (2 சாமு 13:23).

3. மக்கபேயர் காலத்தில் கார்னாயிமுக்கும் பேத்து-சானுக்குமிடையே பலமாகப் பாதுகாக்கப்பட்ட நகர். இந்நகர் இஸ்ராயேல் மக்களோடு யூதாசின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முயன்றது. ஆனால் யூதாக நகரைத் தாக்கி அதைக் கைப்பற்றினார். ஆடவர்கள் அத்தனைபேரையும் கொன்று குவித்து அந்நகரைச் சூறையாடினார் (1 மக் 5:46-52; 2 மக் 12:27-29). இந்நகர், ஒருவேளை யோர்தானுக்குக் கிழக்கில் பேத்துசானுக்கு எதிரிலும், கலிலேயக் கடலுக்குத் தென் கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலும் இருந்திருக்கலாம்.

**எபனேசர்** (EBENEZER - உதவியின் கல்)

1. இப்பாறை 'அபேக்கு' என்ற இடத்திற்கு அருகில் உள்ளது. இவ்விடத்தில் இஸ்ராயேலர்கள் பெலிஸ்தியருடன் இரண்டு முறை போர் தொடுத்தனர். இரண்டாம் போரில் உடன்படிக்கைப் பெட்டியைப் பெலிஸ்தியர் கைப்பற்றினர் (1 சாமு 4:1-11; 5:1). இவ்விடம் யாப்பாவுக்கு வடகிழக்கிலுள்ள மச்தெல் யாபாவாக இருக்கலாம்.

2. 1 சாமு 7:12 மற்றொரு பாறையைக் குறிப்பிடுகின்றது. இக்கல் மிகப்பாவுக்கும் எசானா மலைக்குமிடையில் பெலிஸ்தியர் மேல் கொண்ட வெற்றிக்கு அடையாளமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடம் மிகப்பாவுக்கு வடக்கிலும் இப்னேக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலுமுள்ள பர்ச் ஏல்-இஸ்னா அருகில் இருந்திருக்க வேண்டும்.

**எபியசாபு** (EBIASAPH - தந்தை பெருகிவிட்டார்)

கெகாத்தின் வழிவந்த ஒரு லேவியர். அசீரின் அல்லது கோரேயின் தந்தையாகக் கூறப்படுகிறார் (1 நாளா 6:23.37; 9:19). யாத் 6:24-இல் இவர் அபியசாபு என்று அழைக்கப்படுகிறார்.

காண்க. அபியசாபு.

**எபியோனியர்** (EBIONITES)

கி.பி. 2-4 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்திருந்த யூத-கிறிஸ்தவத் துறவியர் குழுவாகும். இது பிற்காலத்தில் பதிதக் குழுவாகத் தீர்ப்பிடப்பட்டது. இவர்களைப் பற்றிய குறிப்புகளை எபியோனியர் நற்செய்தி என்ற நூலிலிருந்தும் எப்பிபானியஸ் எடுத்துக் கூறும் பகுதிகளிலிருந்தும் அறிகிறோம்.

இக்குழுவைத் தோற்றுவித்த தலைவரான எபியோன் என்பவரிலிருந்து பெயர் பெறுவதாக அறிஞர் சிலர் கருதுவர்; ஆனால் ''எபியோன்'' என்ற சொல்லுக்கு ஏழ்மை என்று பொருள் கொடுக்கலாம். ஒருவேளை குழுவினரின் வறுமைநிலையிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம். கி.பி.70-இல் முதல் யூதக் கிளர்ச்சியின்போது எருசலேம் அழிக்கப்பட்டபின் அகதிகளானவர்கள். இப்பெயர் முதலில் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட்டாலும், இக்குழுவினர்களுக்கு மட்டும் குறிப்பிட்ட பொருளுடையதாகத் தோன்றுகிறது. இவர்கள் ஏழைகளைப் பற்றியும், உலக உடமைகளின் தீமையைப் பற்றியுமான இயேசுவின் போதனையைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர்.

இறையியலில், இவர்கள் கிறிஸ்துவத்திவிருந்து வேறுபட்டனர். அவர்களது கிறிஸ்து இயலில் தோன்றிய ''வறுமைக்காகவும்'' மோசேயின் சட்டத்திற்குக் காட்டிய கடுமையான அழுத்தத்திற்காகவும் சில திருச்சபைத் தந்தையரின் நகைப்பைப் பெற்றனர். இவர்கள் கன்னிப் பிறப்பையும், மனித அவதாரத்தையும் நிராகரித்தனர். இவர்கள் இயேசுவை ஒரு சாதாரண மனிதனாகவும் திருமுழுக்கின் போது தூய ஆவியால் சக்திபெற்றவராகவும் கருதினர். விசுவாசத்தால் மட்டுமே மீட்பு என்ற கருத்தை மறுத்தனர். இவர்கள் பவுவின் திருமுகங்களையும், ஐந்நூலில் மோசேக்குப்பின் சேர்க்கப்பட்ட சில பகுதிகளையும் நிராகரித்தனர். இவர்கள் புலால் உணவை உண்பதில்லை. பலிகளையும் ஏற்றுக்கொள்வதில்லை.

## எபியோனியர்களின் நற்செய்தி (GOSPEL OF THE EBIONITES)

இந்நூல் கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நூலாகும். இந்நூலிலிருந்து எப்பிபானியஸ் என்ற ஆதித்திருச்சபை எழுத்தாளர் சில பகுதிகளை எடுத்துக் கூறுகிறார். இந்நூல், எபிரேயர்களின் நற்செய்தி நூலாகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலி நற்செய்தியாகும். உண்மையில் மத்தேயு எழுதிய நற்செய்தியின் யூத, அறிவியல் வாதச் சுருக்கமாகும். திருமுழுக்கு யோவானைப் பற்றிய விவரிப்போடு தொடங்குகிறது. சீடர்களின் அழைப்பும், இயேசுவின் திருமுழுக்கு, இறுதி இரவுணவு, பாடுகள், உயிர்ப்பு ஆகியவைகளையும் கொண்டிருக்கிறது. மோசேயின் சட்டத்தை இயேசு அகற்றவில்லை. ஆனால், அதில் ஒவ்வாத பகுதிகளைக் குறிப்பாக மோசேயின் பலிகளை அகற்றினார் என்று கூறுகிறது. எபியோனியர்கள் புலால் உணவை உண்பதில்லை. எனவே, அவர்களது நற்செய்தியில் புலால் உணவு கண்டிக்கப்படுகிறது. இயேசுவின் தெய்வீகப் பிறப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பலிகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவையனைத்தையும் எப்பிபானியாசின் குறிப்புகளிவிருந்து நாம் அறிகிறோம்.

இவர்களுக்கும் சாக்கடல் சுருள்களைச் செய்த கும்ரான் குழுவினருக்கும் இடையே துறவு வாழ்க்கை முறையில் ஒற்றுமையிருந்தாலும், இறையியல் வேறுபாடுகளும், காலப்பிரிவும், யூத எஸ்ஸேனியர்களும், கிறிஸ்தவ எபியோனியர்களும் ஒரே குழுவையே குறிக்கின்றனர் என்ற கருத்தைப் புறம்பாக்குகிறது.

## எபிரேயச் சமய வரலாறு (HISTORY OF HEBREW RELIGION)

பழங்கால உலகிலே இது ஒரு தனியிடம் வகிக்கிறது. இது இஸ்ராயேலர் தோன்றிய காலத்தோடு அதாவது கி.மு.13-ஆம் நூற்றாண்டில் உருவானது. இது கிறிஸ்தவ மதம் தோன்றுவதற்கு முன் இருந்த நாம் அறிந்த யூத மதம் தோன்றுவதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இதில் காலப் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவை அனைத்திலும் இஸ்ராயேலரின் விசுவாசத்தின் தன்மை மாறவில்லை எனலாம். பரிணாமக் கொள்கைப்படி வளரவில்லை. அதன் வரலாறு முழுவதும் அதன் அடிப்படையான, தனிச் சிறப்பான பண்புகளை எப்போதும் கொண்டிருந்தது.

I. குல மூதாதையரின் சமயம்:-

மோசேயின் காலத்தில்தான் இச்சமயம் முறையாக ஏற்பட்டதெனினும், அதற்கு வித்திட்டவர்கள் அவர்களின் குல மூதாதையர்களாவர். இவர்கள் கி.மு.2000-இன் முன் பகுதியில் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறிய நாடோடி மக்கள். ஆதியாகமத்திலிருந்தும், வேதாகமத்திற்குப் புறம்பான சுவடிகளிலிருந்தும் இம்மதம் மற்றப் புறவினத்தாரின் மதங்களைவிட வேறுபட்டது என்பதை அறிய முடிகிறது. இவர்களின் இறைவன் இவர்கள் குல இறைவன் சொந்த இறைவன் எனக் கருதினர் (ஆதி 15:1; 31:53; 31:42; 19:24). ஆபிரகாமின் இறைவன், யாக்கோபின் பயபக்தி, யாக்கோபின் வல்லவர் என்றெல்லாம் இறைவன் அழைக்கப்பட்டார். நிலத்தையும், நிலத்தின் பயனையும் அவர்கள் இறைவனிடமிருந்தே பெற்றுக் கொண்டதாகக் கருதினர். இத்தகைய இறைவனுக்கு

இவர்கள் நடத்திய வழிபாட்டினை அந்தந்தக் குலத் தலைவர் அதாவது குடும்பத் தலைவர்தான் முன்னின்று நடத்துவார்.

ஏல் சத்தாய் (எல்லாம் வல்லவர்) (ஆதி 17:1; யாத் 6:3), ஏல் எலியோன் (ஆதி 14:18), ஏல் ஒலாம் (ஆதி 21:33), ஏல் ரோய் (ஆதி 16:13) ஆகியவை அவர்கள் வழிபட்ட கடவுளின் பெயர்கள். இந்த இறைவனே அவர்களின் குடும்பத்தினர் எதிர்காலத்தை நிச்சயிப்பவர் எனக் கருதினர். இவர்கள் எகிப்திற்கு வந்தபின்தான் இறைவனை யாவே என்றழைத்தனர் (யாத் 6:3). இவர்களின்' மதம், உடன்படிக்கையால் இறைவனுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட நெருங்கிய உறவையே குறிக்கிறது. இது அவர்களின் விசுவாசத்தால் தூண்டப்பட்டது. இவர்களின் பாரம்பரியத்திலும் பழக்கவழக்கத்திலும் மெசபொத்தாமியாவின் பண்புகள் சில காணப்படுகின்றன. இது அவர்களின் மூதாதையரிடமிருந்து பெற்றது.

II. பயிற்சிக்காலம்:-

1. இவர்களின் மதம் முறையாக யாத்திராகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில், அதாவது மோசேயின் காலத்தில் தான் ஏற்பட்டது. அவர்களைச் சுற்றி வாழ்ந்து வந்த மற்ற இனத்தவரின் சில பழக்கங்களும் இதில் கலக்கப்பட்டுள்ளன. இந்தச் சமயத்தைப் பற்றி நாம் ஐந்நூலில் இருந்து அறிகிறோம். இந்த மதம் ஏதோ ஒரு கடவுள் என்று அவர்கள் மனதில் எழுந்த எண்ணத்தால் தொடங்கவில்லை. மாறாகத் தங்கள் வாழ்விலே கடவுள் ஆற்றிய அரிய பெருஞ்செயல்களை உணர்ந்தவர்களாய் அவர்கள் விசுவாசத்தினால் எழுந்ததுதான் இச்சமயம்.

2. உடன்படிக்கைச் சமூகம்:-

நிகழ்ச்சிகளின் விவரங்கள் எவ்வகையாயினும், எகிப்தில் அடிமைகளாக இருந்த ஓர் எபிரேயக் குழுவினர், யாவே ஆகிய ''புதிய'' இறைவனின் கட்டளைக்கேற்ப, மோசேயால் விடுதலைக்கு இட்டுச் செல்லப்பட்டனர். அப்போது நிகழ்ந்தவை எவ்வளவு வியப்புக்குரியவை என்றால் அவை ஒரு போதும் மறக்கப்படவில்லை. இவ்விடுதலை, யாவே அம்மக்கள் தகுதி பெறாமலே அவர்களை விடுதலைக்கு அழைத்து, அவர்களுக்குச் சலுகை காட்டினார். அம்மக்கள் சீனாய் மலைக்குச் சென்றனர். அங்கு, யாவேயின் மக்களாக இருப்பதாக அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். இவ்வாறு ஒரு புதிய சமூகம் உருவாயிற்று. யாவே தங்களுக்குக் காட்டிய சலுகைகளை ஏற்கெனவே அனுபவித்ததற்கு உடன்படிக்கை பதில் அளிப்பதை அடிப்படையாகக் கொண்டது. யாவேயால் தேர்ந்தெடுக்கப்படுதல், மற்றும் அவரோடு உடன்படிக்கை செய்துகொள்ளல் ஆகியவை பற்றிய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் இஸ்ராயேலின் சமயம்.

இஸ்ராயேலரின் உடன்படிக்கை அக்காலத்தில் பேரரசர்களுக்கும். சிற்றரசர்களுக்கும் இடையே இருந்த சமரச உடன்படிக்கை போல இருந்தது. இந்த அமைப்பு பின்வருமாறு. முதலில் மன்னர் சிற்றரசனைப் பார்த்துத் தாம் அவனுக்குச் செய்த நன்மைகளைக் கூறி அவன் தனக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டவன் என உணர்த்துவான். பின் சிற்றரசன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் கூறப்படும். மன்னரின் பகை அரசனோடு, இவனும் பகையாக இருக்க வேண்டும். மன்னருக்காகப் படை ஒன்று இருக்கவேண்டும். அதோடு மன்னர்மேல் உறுதியான நம்பிக்கை இருக்கவேண்டும் (நீதி 5:13-823; 21:8-12). வருடந்தோறும் மன்னரைக் கப்பத்தோடு சந்திக்க வேண்டும் (உப 26:5-10; 1 சாமு 1:21). மன்னனின் மற்றச் சிற்றரசர்களோடு சமாதானமாக இருக்க வேண்டும் (உப 17:8-13). இத்தகைய ஒழுங்குகள் அடங்கிய ஓர் ஏடு ஆலயத்தின் கதவில் பதிக்கப்பட்டு, காலந்தோறும் பொதுமக்களுக்கு வாசிக்கப்படும் (உப 10:5; 31:9-13). அவர்களின் தேவர்கள் சார்பாகச் சாபங்களோ, ஆசீர்களோ அதில் இணைக்கப்பட்டிருக்கும் (உப 28). இதே அமைப்பு இஸ்ராயேலருக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையிலும் காணப்படுகி

றது. எனவேதான் உடன்படிக்கையின் கட்டளைகளை மீறுவதைப் பெரிய குற்றமாகக் கருதினர். இறைவனை அவர்கள் அரசராகவே கொண்டனர் (எண் 10:35-36; யாத் 15:18; எண் 23:21; நீதி 8:22; சங் 67:24; எண் 24:9; ஆதி 12:3).

3. தொடக்க கால இஸ்ராயேலின் இறைவன்:-

இஸ்ராயேலர் இறைவனை யாவே என்று குறிப்பிட்டனர். இதற்கு இருக்கின்றவற்றுக்கெல்லாம் காரணம் அவரே என்பது பொருள். (யாத் 3:14). முதலில் இதைமட்டுமே குறித்த இச்சொல் பின் கடவுளின் பெயராகவே கூறப்பட்டது. மோசேக்கு முன் இப்பெயர் வழங்கப்படவில்லை. எனவே மோசேக்குப் பின்தான் இந்த மதம் ஆரம்பிக்கப்பட்டது எனலாம். இவர்கள் 'யாவே' இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். இறைவன் வல்லவரும் எரிச்சல் உள்ளவரும் எனக் கூறப்பட்டுள்ளது (யாத் 20:5; 20:3; 22:20), அதாவது, மற்றத் தேவர்களை வழிபடுவது இறைவனுக்குப் பிடிக்காது என்பதே அதன் கருத்து. மற்ற இனத்தவரின் தேவர்கள் போல் இங்குத் தேவதைகள் இல்லை. எனவேதான் எபிரேய சமயத்திற்குப் புராணங்கள் இல்லை.

மற்ற இனத்தவரின் தேவர்கள்போல் யாவே இறைவனுக்கு உருவம் கிடையாது. மனிதப் பண்புகள் அவருக்குச் சாற்றிக் கூறப்பட்டாலும் எந்த விண்ணுலகப் பொருட்களோடும் அவர் இணைத்துப் பேசப்படவில்லை. அதாவது, மற்றச் சமயம்போலக் கடவுள் விண்மீன்களோடு ஒப்பிடப்படவில்லை (யாத் 20:24). இறைவனே நிலத்தில் செழுமையைப் பொங்கச் செய்தாலும் மற்ற இனத்தார் போல அவரைச் செழுமைத் தேவதையாக இவர்கள் வழிபடவில்லை. மற்ற இனத்தவர்கள் செய்வதுபோல் இறைவனைச் சில சடங்குகளால் தங்கள் விருப்பம் போல் கையாண்டு ஆட்டி வைக்க முடியாது. இறைவனை அவர்கள் நம்பி உண்மையுள்ளவர்களாக, அல்லது கட்டளையை மீறிப் பாவம் புரிந்தவர்களாகத் தான் வாழமுடியும். இஸ்ராயேலரின் மதத்தில் மாய வித்தைகளுக்கும் பில்லி சூனியங்களுக்கும் இடமில்லை (யாத் 20:7; 20:18; 1 சா 28:9).

உடன்படிக்கையின் கூடாரமே அவர்களின் வழிபாடுகளின் மையமாக இருந்தது. பின் பாலஸ்தீனத்தில் குடியேறியதும் ஆங்காங்கே பல திருத்தலங்களில் இறைவனை வழிபட்டனர். நீதிபதிகளின் காலத்தில் அங்கங்கே சில குலங்களில் சில நீதிபதிகள் இருந்தனர். இவர்களே இஸ்ராயேலரை எதிர்த்த பகைவரை முறியடித்தனர். இவர்கள் தேவ உந்துதலினால் தான் இந்தப் பொறுப்பை ஏற்றனர். இஸ்ராயேலரின் விசுவாசத்தைக் காப்பதும் இவர்களின் பொறுப்பு (நீதி 3:10; 11:29; 8:22-23; 9:7-15).

இவ்வாறு இஸ்ராயேலர் 12 கோத்திரங்களாகச் சுமார் 200 ஆண்டுகள் வாழ்ந்தனர். இவ்வாறு கோத்திரங்களாக இறைவனை வழிபட்ட இவர்கள் சிலோவில் ஒன்றுகூடினர். திருவிழா நாட்களில் அங்கு ஒன்றாகக் கூடி உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டனர் (1 சாமு 1:8; 3:3; 2 சாமு 6:17; 7:6-7).லேவியர்கள் மட்டுமே வழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்ற உரிமை பெற்றிருந்தனர். மோசேயே அந்த லேவியர் குலத்தில் தோன்றியவர் (நீதி 17:7-13; 18:30; 1 சாமு 1:1; 1 நாள் 6:28).

மற்றச் சமயங்களைப் போலவே இங்கும் பலவகையான பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன (லேவி 1:7; எரே 7:21-23; ஆமோஸ் 5:21-27). புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து இஸ்ராயேலரின் பலிகளில் பல கானானியப் பழக்கங்களை ஒத்துள்ளன என்பது தெரிகிறது. அறுவடைக் கால விழா போன்றவற்றுக்குப் புதிய கருத்தை இஸ்ராயேலர் அளித்தனர். பாஸ்கா விழா இவர்கள் மட்டுமே கொண்டாடக்கூடிய ஒன்றாகிறது. இஸ்ராயேலர் கொண்டாடிய இந்த விழாக்கள் இறைவன் செய்த அருஞ்செயல்களை நினைவூட்டுவதாக அமைந்திருந்தன ( யாத் 23:14-17; 34:18-24; நதி 21:19; 1 சாமு 1:3-21; உப 31:9-13).

இஸ்ராயேலருக்கு உடன்படிக்கையே முக்கியமாதலால் அந்த உடன்படிக்கையின் சட்டங்கள் பெரிதும் மதிக்கப்பட்டன (யாத் 21-23; 34). சில கடினமான பிரச்சனைகளைக் குருக்கள் தீர்த்து வைத்தனர் (உப 17:8 13; எண் 5:11-13; நீதி 10:1-5; 12:8-15).

III. அரசாட்சிக் காலம்:-

பத்தாம் நூற்றாண்டிலே அவர்களிடையே அரசர் ஆட்சி ஏற்பட்டபோது அது அவர்களின் சமய வழக்கத்திலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. தாவீதின் காலத்தில் எருசலேம் மையமாக்கப்பட்டது (2 சாமு 5:6-10). அவர்களின் கோத்திரங்களின் அதிகாரம் மாறி 12 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது (1 அரச 4:7-19). இது அரசன் நினைத்தவாறு மக்கள் மாற வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. சாலமோன் காலத்தில் பல இனத்தவரோடும் தொடர்பு கொண்டு பல இனப் புதல்வியரைத் திருமணம் செய்து கொண்டதால் அந்நாட்டு வழிபாடுகளும் எருசலேமுக்குள் புகுந்தன (1 அரச 7:13-14). அதுவரை பழக்கத்தில் இல்லாதபல அடையாளங்கள் எருசலேம் தேவாலயத்தில் கானானியக் கலைஞர்கள் கட்டியபோது புகுத்தப்பட்டன. நாட்டுக்காகக் கட்டாய உழைப்பு, கொத்தடிமை, ஏழைகளைத் துன்புறுத்தல் போன்ற இஸ்ராயேலரின் உடன்படிக்கைக்கு ஒவ்வாத சில பழக்கங்கள் அவர்களிடையே புகுந்தன (1 அரச 5:13-18).

எருசலேமுக்கு உடன்படிக்கையின் பேழையைக் கொணர்ந்து, அபியத்தாரைக் குருவாக நியமனம் செய்து, அதை வழிபாட்டு மையமாகத் தாவீது ஏற்படுத்தினார் (2 சாமு 6; 20:25; 1 சாமு 14:3; 22:20). மற்ற நாட்டைப்போல அல்லாமல், அரசருக்கும் இஸ்ராயேலரில் வழிபாட்டில் பங்கு உண்டு (1 அரச 8). தாவீதின் தலைமுறையே என்றென்றும் அரசாளும் என இறைவன் வாக்களித்தார் (2 சாமு 7:8-17; 23:1-17; 1 அரச 11:13-32). எனவே அரசனை அவர்களின் மூதாதையரின் விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டனர். சங்கீத நூல்கள் போன்ற பல நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன. இக்காலத்தில் எழுதப்பட்ட சில நூல்கள் சாலமோன், தாவீது மற்றும் பல நிகழ்ச்சிகளைப் பற்றி அறிய உதவுகின்றன (2 சாமு 9-20; 1 அரச 1-2).

சாலமோனுக்குப்பின் இஸ்ராயேல்நாடு வட நாடு (இஸ்ராயேல் என அழைக்கப்பட்டது) தென்னாடு (யூதா என அழைக்கப்பட்டது) எனப்பிரிந்தபின் சமயத்துறையிலும் பல்வேறு நிலைகளில் பல்வேறான மாற்றங்கள் தோன்றின. யூதாவில் மட்டும் தாவீதின் பரம்பரையே தொடர்ந்து அரசாண்டு வந்தது. கானான் நாட்டில் நுழைந்ததுமுதல் அவர்களின் பல பழக்கங்கள் இஸ்ராயேலரின் வாழ்விலும் ஏற்பட்டன. இதிலே பாகாலை வழிபடவும் அவர்களின் பாவினப்பெருக்க வழிபாட்டைத் தொடரவும் இஸ்ராயேலருக்கு அடிக்கடி சோதனை எழுந்தது. அவர்கள் நாட்டின் (யூதா) இறையியல் அடிப்படையில் இறைவர் தங்களைத் தேர்ந்தெடுத்தார் என நம்பினர் (சங் 2; 71; 89; 110; 132). ஒவ்வொரு அரசரும் கடவுளின் மகன் எனப்பட்டனர். அந்த இறைவனே அவனை அவன் பகைவரிடமிருந்து காப்பாற்றினார் என்றும் கருதினர் (சங் 2:7; 72:1-4; 12-14; 88:1-4; 19-37; 2 சாமு 7:12-16; சங் 2:10-11). தாவீதின் பரம்பரையில் வந்ததாலும் எருசலேமிலே தேவாலயம் இருந்ததாலும் யூதா மக்கள் பல தேவத்துரோகச் சோதனைகளுக்கு இடம் தரவில்லை எனலாம். அந்த நாட்டுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு இறைவனின் வாக்குறுதியைச் சார்ந்ததே. அந்த நாடு வீழ்ச்சியடையும் என்றால் யாவே இறைவன் தம் உடன்படிக்கையை அந்த நாட்டோடு முறித்துக் கொள்வார் என்பதே இதன் பொருள். மதம் என்பது நாட்டின் நலத்தைக்காக்க உதவும் எனக் கருதப்பட்டது. இதனால் சில சடங்குகளும், புறவினத்தாரின் சில பழக்கங்களும் புகுந்தன. நம்பிக்கையிலும் வாக்குறுதியில் நிலைத்தும் அவர்களின் வாழ்க்கை சென்றது. ஓர் அரசர் சரியில்லை என்றால் எதிர்காலத்தில் ஓர் அரசர் நம்மை விடுவிப்பார் என்ற எண்ணம் எழத் தொடங்கியது. இதன் மூலமே மெசியாவைப் பற்றிய ஓர் எதிர்பார்ப்பு அவர்களிடையே எழுந்தது.

வட நாட்டிலே (இஸ்ராயேல்) பல அரச மரபுகள் மாறி மாறி ஆண்டு வந்தன. இறை வாக்கினரால் அல்லது மக்கள் கூட்டத்தால் அரசன் நியமிக்கப்பட்டார் (1 அர 11:26-40; 12:20; 2 அர 9:1-13). முதலாம் எரொபயாம் பெத்தேல், தாண் ஆகிய இரண்டு இடங்க ளில் திருத்தலங்களை ஏற்படுத்தி வழிபாட்டு மையமாக்கினார். இது தன் நாட்டவர் எருச லேம் செல்வதைத் தடுப்பதற்காகச் செய்த வழியாகும் (1 அர 12:26-33; ஆமோ 7:10-13). பலமதக் கோட்பாடுகளை இணைத்த கலப்பு மத வழிபாட்டு முறை அவர்களி டையே பரவியது. ஆனால் அவர்கள் செய்த உடன்படிக்கையின்படி இறைவனை (யாவே) மட்டுமே வழிபட வேண்டும். ஆனால் அவர்கள் தங்கள் விருப்பம் போல் மற்றத் தேவர்களையும் வழிபட்டுப் பாவம் செய்தனர் (1 அர 8:6-7).

ஒரு சில சடங்குகளால் கடவுளைச் சரிக் கட்டிவிட முடியும் என எண்ணி உடன்படிக் கையின் சட்டங்களைச் சிறிது சிறிதாக மறக் கத் தொடங்கினர். சமுதாய வாழ்க்கையிலும் வடக்கு நாட்டிலே (இஸ்ராயேல்) ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து ஏழைகள் நசுக்கப்பட்ட னர் (ஆமோஸ்). ஒழுக்கக்கேடும், சீர்கேடும் அநீதியும் எங்கும் தலைவிரித்தாடியது. ஆனால், தென்னாட்டிலே (யூதா) இத்தகைய புறவினத்தாரின் பழக்கங்கள் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. வட அரசில் நிலவி வந்த அநீதிகளை எதிர்த்து இறைவாக் கினர்கள் குரல் எழுப்பினர்.

IV. கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து எருச லேம் வீழ்ச்சி வரை:-

எட்டாம் நூற்றாண்டிலிருந்து சிறந்த இறைவாக்கினர்கள் தோன்றினர். இவர்கள் மக்களின் மந்தபுத்தியையும் பாவ வாழ்க்கை யையும் கண்டித்தனர். இஸ்ராயேலரின் வாழ்க்கையிலே சவுலின் காலத்திலிருந்தே இறைவாக்கினர்கள் ஒரு தனிப்பட்ட சிறப் புப் பணியை ஆற்றியிருக்கிறார்கள் (1 சாமு 10:5-6. 10-13; 2 சாமு 7:1-17; 12:1-15; 24). அரசர்கள் தவறுகள் செய்தபோது அரசனைக் கண்டிக்கவும் அவர்கள் தயங்கவில்லை (1 அர 11:26-40). அவர்களுக்கு அதனால் ஏற் பட்ட கொடுமைத் துன்பங்களையும் அவர் கள் தாங்கிக் கொண்டனர் (1 அர 18:4).

ஆமோஸ் இறைவாக்கினர் சமுதாயத்தில் உள்ள அநீதிகளையும், ஓசே இறைவாக்கினர் இஸ்ராயேலரின் தேவத்துரோகச் செயல்க ளையும் கண்டித்து இறைவாக்குரைத்தனர். கடவுள் அவர்களுக்கு ஆற்றிய அருஞ்செயல் களை நினைவூட்டி அவர்களின் பாவங்க ளைச் சுட்டிக் காட்டினர் (ஆமோ 2:9-12; 13:1-2; ஓசே 11:1-4; 13:4-6). உடன்படிக்கை, கடவுளுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே நடந்த திருமணம் என ஓசே குறிப்பிடுகிறார் (2:2-13). எனவே, இஸ்ரா யேலர் வேறு தேவர்களை வழிபட்டால் அது கணவனுக்குத் துரோகம் செய்துவிட்டு வேறொரு ஆணோடு வாழ்வதற்குச் சமம் என அவர்களின் பாவத்தைச் சுட்டிக்காட்டி னர். இருவருமே மக்களை மனம்திரும்பு மாறு வேண்டினர். இவர்களுக்கு முன் இருந்த இறைவாக்கினர்கள்போல் புரட்சி யால் தீய அரசைக் கவிழ்க்க மக்களை இவர் கள் தூண்டவில்லை. மாறாக மக்களின் பாவத்தைச் சுட்டிக்காட்டி இஸ்ராயேலரின் எதிரிகள் வழியாகவே இறைவன் தீயோ ரைத் தண்டிப்பார் என நம்பினார்கள். கட வுள் மீண்டும் இஸ்ராயேலரோடு உடன் படிக்கை செய்து கொள்வார் என்ற நம்பிக்கை யையும் இந்த இறைவாக்குகள் தந்தன (ஓசே 2:14-23).

வடநாடு அழிக்கப்பட்டபின் தென்னாட் டிலே (யூத) ஏசயாவும், மீக்காவும் இறை வாக்குரைத்தனர். இவர்களும் ஆமோஸ், ஓசே போல மக்களின் பாவங்களைச் சுட்டிக் காட்டினர். அவர்களின் சீர்கேடும், சிலை வழிபாடும் உடன்படிக்கையின் சட்டங்க ளுக்கு விரோதமானவை என எச்சரித்தனர். வெளிச் சடங்குகளையும், குருக்களின் முறை கேட்டையும் இவர்கள் கண்டித்தனர் (ஏச 1:10-20; மீக் 3:5-12; 3:12; ஏச 5:1-7; 6:11-12). தாவீதின் அரியணை நித்தியத்திற்கும் இருக் கும் என்ற இறைவனின் வாக்குறுதியை ஏசயாவின் இறைவாக்குகள் நினைவூட்டு

கின்றன. ஆகாசு பகைவரைக் கண்டு பயந்த போது இந்த வாக்குறுதியை நினைவூட்டி அவனைத் திடப்படுத்துகிறார் (ஏச 7:1-9.10-17; 14:32; 18:1-6; 20). யூதா தன் பாவத்திற்காக, தாவீதுக்கு அளித்த வாக்குறுதியின் பொருட்டு முற்றிலும் அழிக்கப்படாது; மாறாகத் தன்பாவத்திற்காக அது தண்டிக்கப் படும் (ஏச 10:24-27.28-34).

ஆகாசு அசீரியாவுக்கு அடி பணிந்ததால், பல அசீரியத் தேவர்களை மக்கள் வழிபட வேண்டியதாயிற்று (2 அர 16:5-20). எனவே, எசக்கியா அதை அந்நாட்டினின்று நீக்க வேண்டியதாயிற்று. எல்லாவிதமான புறவினத்தாரின் வழிபாடுகளும் ஒழிக்கப்பட்டன (மீக் 3:12; எரே 26:16-19; 2 அர 18:1-7; 2 நாள் 33:1.10-12; 2 அர 17:25-28). இவருக்குப் பின் வந்த மனாசே காலத்தில் மீண்டும் சிலைவழிபாடு தொடர்ந்தது (2 அர 21:1-16). இவருக்குப்பின் வந்த யோசியா மீண்டும் சிலை வழிபாட்டை ஒழித்தார். செப்பனியா, எரேமியா ஆகிய இறைவாக்கினர்கள் இவரை ஆதரித்தனர். மக்களின் பாவ வாழ்க்கையை அவர்கள் கண்டித்தனர் (2 நாள் 34:3; 2 அர 22:3; 23:3). இவர்காலத்தில் தான் உபாகமத்தின் சில பகுதிகள் தேவாலயத்திலே கண்டெடுக்கப்பட்டன. உபாகமப் போதனைகளின்படி நாட்டின் நலமும் நம்பிக்கையும் உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதிலேயே இருக்கிறது. சிலைவழிபாடும், சீர்கேடும் நாட்டை அழிவுக்கே இட்டுச் செல்லும் (2 அர 23:4-14.21-25). நாட்டின் மற்றப் பகுதிகளில் இருந்த சிறு சிறு திருத்தலங்களையெல்லாம் அழித்து எருசலேமே வழிபாட்டின் மையமானது. யோசியா நீதிமானாய் இருந்ததால் சமுதாயத்தின் பல சீர்கேடுகள் சரிசெய்யப்பட்டன (எரே 22:15-16). யோசியா இறந்த சில ஆண்டுகளுக்குள் எருசலேம் கடுமையான சோதனைக்குள்ளானது.

யோசியாவின் இறப்புக்குப் பின் புறவினத்தாரின் வழிபாடுகள் உள்ளேபுகுந்தன. இறைவனின் ஆலயமும், தாவீதுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியுமே அவர்களைக் காக்கும் என இறுமாந்திருந்தனர். பகைவர் தங்களைத் தாக்கிய போது இறைவனிடமிருந்து புதுமைகளை எதிர்பார்த்தனர் (எரே 7:4; 26:8-11; 21:2). யூதா வீழ்ச்சியுற்றபோது இறைவன் ஏன் தம் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. அவரைவிடச் சக்தியான கடவுள் வேறு உண்டோ என ஐயமுறத் தொடங்கினர் (எரே 31:29; புல 5:7; எச 18:2.25.29). இஸ்ராயேலரின் இந்த இருண்ட காலங்களில் எரேமியா, எசக்கியேல், அபகூக் போன்றவர்களின் இறைவாக்குகளே அவர்களுக்குத் தெம்பூட்டின. அவர்கள் வாழ்ந்த சீர்கேடான வாழ்விற்குத் தண்டனையாகவே இத்துன்பங்கள் வந்தன என அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இந்த இறைவாக்குகள் அவர்களைப் பக்குவப்படுத்தின (எரே 7:1-15; 21:12-22:30; 4:5-8.11-18; 5:10-17.27-28). இஸ்ராயேலர் பெருமையாக நம்பியிருந்த தேவாலயமும் அரசரவையும் அழிக்கப்பட்டது, அவர்களின் பாவத்தினால்தான் என எசக்கியேலும் வலியுறுத்தினார் (எச.8-11). ஆனால் இந்தத் துன்பம் அவர்களின் விசுவாசத்தை அழித்துவிடக்கூடாது. மாறாக மனம் திரும்பினால் நல்வழி பிறக்கும் என இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர் (எரே 4:4.14; எச 18:31). முற்காலத்தில் எகிப்திலிருந்து மீட்டதுபோல், இன்றும் மனம் மாறினால் அவர்களைப் பாபிலோனிய அடிமைத் தனத்தினின்று இறைவன் மீட்பார் (எரே 24; எச 20:33-37). எரேமியா உரைத்த புதிய உடன்படிக்கையும் (எரே 31:31-39) எசக்கியேல் உரைத்த இறந்தோரின் உயிர்ப்பும் (எச 37) இஸ்ராயேலரின் மனதில் தங்கள் எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கையைத் தூண்டின.

V நாடு கடத்தப்பட்டபோதும் பிற்பாடும்:-

பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் இஸ்ராயேலரின் விசுவாசம் புதியதொரு அமைப்பைப் பெற்றது. இஸ்ராயேல் வீழ்ந்தது யாவேயின் பலவீனத்தையே குறிக்கிறது எனச் சிலர் எண்ணி, பாபிலோனியத் தேவர்களை வழிபட எண்ணினர். சிலர் தங்கள் குறுகிய கண்ணோட்டத்தை விடுத்துச் சில மாற்றங்களை மேற்கொண்டனர். இரண்

டாம் ஏசயா இச்சமயத்தில் அதாவது பாபிலோன் வீழ்ந்து சைரஸ் மன்னரானபோது, ஒரு புது நம்பிக்கையூட்டினார். இறைவன் இஸ்ராயேலரை இதோ மன்னித்து மீண்டும் ஏற்றுக்கொள்ளப் போகிறார் என நம்பிக்கையூட்டினார் (ஏச 40:1-11; 50:1; 54; 42:18-43:7; 43:8-44:5; 48). இறைவனாகிய ஆண்டவரே வரலாற்றில் இஸ்ராயேலரின் வாழ்விலே உறுதுணையாக இருக்கின்றார். தம் திட்டத்தை நிறைவேற்ற மற்றவர்களையும் கருவிகளாகப் பயன்படுத்துகிறார் என்ற எண்ணம் வளர்ந்தது (ஏச 40-48; 44:24-45:8). துன்புறும் ஊழியன் என்பதற்கு ஒரு தனி விளக்கம் கூறப்பட்டது. இறைவனுடைய ஊழியனின் துன்பத்தாலும் இடர்களினாலும் இவ்வுலகத்திற்கு உண்மையின் ஒளியைக் கொண்டுவர இறைவன் திட்டமிட்டார் (ஏச 53:10). சைரஸ் காலத்தில் இஸ்ராயேலர் விடுவிக்கப்பட்டனர். மிகுந்த துன்பத்தோடு தேவாலயம் மீண்டும் எழுப்பப்பட்டது.

பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப்பின் இஸ்ராயேல் சமூகத்தை ஒரு நாடு என்றழைக்காமல் ஒரு திருச்சபை எனலாம். தாங்கள் இறைவனால் மீட்கப்பட்ட ஒரு புதிய சமுதாயம் எனக்கருதினர். எஸ்ராவின் காலத்திலிருந்துதான் யூதமதம் என இது அழைக்கப்பட்டது எனலாம் (நெக 8-10). யூதர்களைச் சுற்றியிருந்த புறவினத்தாரின் பழக்கங்களிலிருந்து அவர்களைக் காக்க வேண்டும் என்பதற்காக, யூதச் சட்டத்தின் கீழ் அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டார்கள் (எஸ் 9-10; நெக 13:15-31). இதிலிருந்துதான் யூதர்கள் புறவினத்தாரையும் சமாரியர்களையும் வெறுத்து ஒதுக்கத் தொடங்கினார்கள். புதிதாக யூத மதத்திற்கு வருகின்றவர் வரவேற்கப்பட்டனர் (ஏச 56:6-8; 66:18-21; செக் 8:20-23; லேவி 19:34; 24:22). இத்தகைய, மற்றவரை வெறுக்கும் எண்ணம் யோனா ஆகமத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணம் ஆதித்திருச்சபை பரவிய காலத்தில் கூட எழுந்தது (எ.கா. விருத்தசேதனத்தைப் பற்றிய பிரச்சனை). இவர்கள் ஒரே கடவுளை விசுவாசித்தனர். கடவுள் வல்லமை மிக்கவர் எனக்கருதினர்.

எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கை அவர்களின் வாழ்விலே எப்போதுமே இருந்து வந்தது; மெசியாவை எதிர்நோக்கியிருந்தனர். இறுதிநாளில் இறைவன் மகிமையான ஓர் அரசை நிறுவுவார் என எண்ணினர். பின் உயிர்த்தெழுதலில் இவர்களுக்கு நம்பிக்கை ஏழ ஆரம்பித்தது (ஏச 26:19; தானி 12:2; மாற் 12:18-27; அ.ப. 23:6-10). யூத மதத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று சட்டத்தைக் கடைப்பிடிப்பது. சட்டத்தை மீறியதாலேதான் தீமை உண்டானது எனக்கூறப்பட்டதால் சட்டத்தைப்பின்பற்ற முனைந்தனர் (நெக 8-10). எருசலேமைத் தவிர மற்ற ஊர்களில் செபக்கூடங்கள் எழுந்தன. யூதர்கள் பழைய ஏற்பாட்டிலே தனியாகத் திருமறைத் தொகுப்பை ஏற்படுத்தினர். எஸ்ரா காலத்திலிருந்து ஐந்நூலே அதிகாரபூர்வ சட்ட நூலானது. இறைவாக்கினர்களின் நூல்களும் மற்ற சில நூல்களும் இதில் சேர்க்கப்பட்டன. சட்டத்தைப் படிப்பதே சிறந்ததாகக் கருதப்பட்டது (சங் 1; 19:7-14; 119). இதை ஆராய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் ராபிகள், மற்றும் சட்டவல்லுநர்கள் தோன்றினர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நாம் இத்தகைய ஒரு நிலையையே காண்கிறோம். இந்த விசுவாசமும் சட்டமும் கிறிஸ்துவிலே தான் நிறைவுற்றது எனப் புதிய ஏற்பாடு நமக்கு அறிவுறுத்துகிறது.

### எபிரேய மக்கள் (HEBREW PEOPLE)

எபிரேயர் என்ற பெயரின் மூலப் பொருளானது தெளிவாக இல்லை. ஆதியாகமத்தில் தங்களது தாய்நாடாக இல்லாத நாட்டில் மனிதர்கள் அந்நியர்களாக அலைந்து திரிவதையே இது எப்போதும் குறிப்பிடுகிறது. ஆபிரகாம் (ஆதி 14:13), யோசேப்பு (39:14; 41:12), யாக்கோபு மற்றும் அவரது பிள்ளைகள் (40:15; 43:32) ஆகியோர் இதற்கான எடுத்துக்காட்டாவர். அவர்களுடைய இனப் பெயர் முன்னோராகிய ஏபேர், ஆபிரகாமுக்கு முன்னரே வாழ்ந்தமையால் (ஆதி 10:25; 11:14) இச்சொல்லானது செமித்திய மக்களில் பெரும் பகுதியினரைக் குறிக்கப் பயன்படலாம். எபிரேயர் என்ற சொல் இஸ்ராயேல் மக்களையும் அவர்களது முன்னோ

7

ரையும் குறிக்க அந்நியராலும் (உம்.எகிப்திய ரால், ஆதி 39:14.17; யாத் 1:16-19; பெலிஸ்தி யரால், 1 சாமு 4:6.9) அல்லது இஸ்ராயேல ரல்லாதோருடன் பேசும்போது இஸ்ராயேல ராலும் (ஆதி 40:15; யோனா 1:19) பயன்படுத் தப்படும்போது இது இன அல்லது அரசியல் பெயராக வருகிறது (ஆதி 43:32; யாத் 2:11. 13).

யாத்திரையில் யாக்கோபினுடைய எபி ரேய சந்ததியினர் (யாத் 1:15; 2:6...) தங்களு டைய இனம், பிறப்பு, மற்றும் சமயம் ஆகியவற்றினால் எகிப்தியரிடமிருந்து பிரிக் கப்பட்டனர் (யாவோ, ''எபிரேயரின் கட வுள்'', 7:16; 9:1). ஆனால் அதே முறையில் கானானில் வாழ்ந்து வந்த செமித்திய மக்க ளாகிய எபிரேயர்கள் அவர்களைக் கொடு மைப்படுத்திய பெலிஸ்தியர்களிடமிருந்து வேறுபட்டனர் (1 சாமு 4:6; 13:3.19; 14:29; 29:3; எண் 24:24). ஆனால் அவர்கள் அனைவ ரும் இஸ்ராயேலரா என்பது உறுதிப்படுத்தப் படவில்லை (1 சாமு 14:21). எபிரேய அடி மைகள் பற்றிய உபாகமச் சட்டமானது (உப 15:12-13; எரே 34:14) இஸ்ராயேலரைச் சகோ தரர்களாக விவரிக்கிறது. ஆனால் இதைப் பரந்த பொருளில் எடுத்துக் கொள்ளலாம் (ஆதி 24:27). இவ்வாறு அடிமைத்தனம் வரை இச்சொல்லானது மக்களுடைய பொதுப் பெயராகவோ, சமயப்பொருளு டைய பெயராகவோ பயன்பட்டதாகத் தெரி யவில்லை.

நாடுகளின் அட்டவணைப்படி எபிரேயர் கள், எண்ணற்ற மக்களின் மூதாதையரும் சேமின் சந்ததியைச் சேர்ந்தவருமாகிய ஏபேர் என்னும் குலத்தோற்ற மூதாதையரின் வழி வந்தவர்கள் ஆவர் (ஆதி 10:21-31; 11:14-26; 1 நாள் 1:17-27). இவ்வாறு இச்சொல்லானது ஆபிரகாமினுடைய சந்ததியினரை மட்டு மின்றி நாகோர் (அரமேயர்) மற்றும் லோத்து (மோவாபியர் மற்றும் அம்மோனியா) ஆகி யோருடைய சந்ததியினரையும் உள்ளடக்கிக் குறிப்பதாகத் தெரிகிறது. ''எதிர்ப் பக்கம், அப்பாற்பட்ட பகுதி'' என்னும் பொருளு டைய நாட்டு ''ஏபர்'' என்ற எபிரேயச்சொல் லின் தழுவலான சொல்லானது கானான் வந்த-மக்களால் யூப்பிரத்திசு நதிக்கு அப்பாற் பட்ட பகுதியினின்று வந்த மக்களுக்குச் சாற்றிக் கூறப்பட்டதால் இச்சொல்லை ஆபி ரகாமுக்கும் அவரது குடும்பத்திற்கும் மட் டுமே உரிமைப்படுத்துவது மரபுமுறை விளக்கமாகும். இச்சொல்லின் ''வேர்'' எல் லையைக் கடந்தவனைச் சுட்டிக்காட்டு கிறது. இது, வெண்கல காலச் சமூகத்தின் எல்லையில் வாழ்ந்து வந்த, கருத்து வேறு பட்ட, மற்றும் வாக்குரிமையற்ற மக்களை உள்ளடக்கிய, இனத்தால் வேறுபட்ட சமூக அமைப்பாகிய அபிருவுடன் எபிரேயர்களை அடையாளப்படுத்துவதற்குச் சார்பாக இருப் பதாகத் தெரிகிறது. ஆபிரகாமும் அவரது குடும்பத்தினரும் இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டிருக்கலாம் (ஆதி 14: 13). அபிருவினுடைய கொள்ளைக்கார நிலை 1 சாமு 14:21-இல் எபிரேயருக்கும் இஸ்ராயேலருக்கும் இடையிலுள்ள வேறு பாட்டை விளக்கக்கூடும்.

பிற்கால வாசகங்களில் இது வேறுபட்ட தாக உள்ளது. யோனா 1:9-இல் புறவினக் கப்பல் மாலுமிகளுக்கு யோனா தான் ''எபி ரேயன், விண்ணகக் கடவுளின் அடியான்'' என்று கூறுகிறார். 2 மக் 7:31; 11:13; 15:37 ஆகியவற்றில் எபிரேயன் என்ற சொல்லா னது புனித நாட்டில் குடியேறிய யூதரைக் குறிக்கின்றது. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் சம யத் தொனி இல்லாமல் இல்லை; ஆனால் தேசியப் பொருள் பெறுகிறது.

புதிய ஏற்பாட்டில் ''எபிரேயன்'' என்ற சொல், பாலஸ்தீனத்திலும் பிறநாடுகளிலும் இருந்த யூதர்களைக்குறிப்பிடுகின்றது (அ.ப. 6:1; பிலி 3:5). ''எபிரேயன், எபிரேயரின் மகன்'' (பிலி 3:4; 2 கொரி 11:22) என்று பவுல் தம்மை அழைக்கும்போது தமது குடும்பத்தினுடைய பாலஸ்தீனத் தோற்றம் மற்றும் எபிரேய மொழி ஆகியவற்றை வலி யுறுத்துகின்றார். இதே வரைமுறையானது யூதக் கிறிஸ்தவர்களுக்கு, கிரேக்கர்களிட மிருந்து எபிரேயரைப் பிரித்துக் காட்டுகிறது (அ.ப. 6:1). ஆனால் இவ்விரு நிகழ்ச்சிகளி

லும் இச்சொல்லானது நேரடியான சமயப் பண்பைக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே ஆபிரகாமின் ஆன்மீகச் சந்ததியைக் குறிப்பிடுவதற்கெனக் கிறிஸ்தவச் சொற்றொகுதிக்குள் இது இடம் பெறவில்லை.

## எபிரேய மொழி (HEBREW LANGUAGE)

இது எபிரேய மக்களின் மொழி மற்றும் பழைய ஏற்பாட்டினுடைய முதன்மையான மொழியாகும். வடமேற்கு செமித்திய மொழியும், கானானியப் பிரிவுமொழியுமான இதுகானானிய மொழி என்றும் (எச 19:18) யூதாவுக்குரியது (யூதாவின் மொழி 2 அர 18:26.28; நெக 13:24; ஏச 36:11.13) என்றும் பழைய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறது. ''எபிரேயம்'' என்னும் இந்தப் பெயருக்குரிய சான்று முதலில் சீராக்கு நூலின் முன்னுரையில் குறிப்பிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டில், கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் பேசப்பட்ட பாலஸ்தீன அரமாயிக்கு பிரிவுமொழியை இது குறிப்பிடுகிறது (உ.ம். யோவா 5:2; 19:13.17.20; அ.ப. 21:40; திருவெளி 9:11).

கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கானானியமொழியினின்று ஒரு தனிப்பட்ட பிரிவு மொழியாக விவிலிய எபிரேயம் வளர்ச்சியடைந்தது. அரமேயர்களிடமிருந்து எபிரேயர் தோன்றியதாகக் கூறும் விவிலியப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு (உப 26:5) புதிதாக வந்த இவர்கள் பாலஸ்தீனத்தில் இவர்களுக்குமுன் வாழ்ந்த கானானியர்களின் மொழியையும் அக்காலத்தில் ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. பழைய ஏற்பாட்டு ஏடுகளால் விவிலிய எபிரேயமொழி முதன்மையாகப் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் அது பிற பல ஏடுகளிலிருந்தும் அறியப்படுகிறது. சான்றாகப் பதினொன்றாம் நூற்றாண்டின் 'இஸ்பெத் சார்தா' பொறிப்பு, பத்தாம் நூற்றாண்டின் பிற்காலக் கெசேர் நாட்காட்டி, மற்றும் சிலோவாம் பொறிப்பு (கி.மு.705), சமாரிய நாட்டுப் பண்டத்துணுக்குகள், இலாக்கீசு கடிதங்கள், (587), முத்திரைகள், மற்றும் நாணயங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அதன் இன்றைய வடிவில் பழைய ஏற்பாடானது இஸ்ரயேலின் முடியாட்சியின்போது நிலைப்படுத்தப்பட்ட மொழியின் ஒரு நிலையைக் குறிப்பிடுவதாக நம்பப்படுகிறது. ஆயினும் கி.மு.12-ஆம் நூற்றாண்டிலிருந்து 2-ஆவது நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த பொருள்களைக் கொண்டுள்ளது. அதில் பழங்காலப் பாடல் அமைப்புகளையும் பிற்காலப்படைப்புகளையும் காணலாம். அதன் நடையும் சொற்றொகுதியும் அரமேய, பாரசீக, கிரேக்கப் பாதிப்பைச் சுட்டுகின்றன. விளக்கக் குறிப்புகள் பயன்பட்டிருப்பது விவிலிய எபிரேய மொழி உயிருள்ள மொழியென்ற அளவில் அதன் புவியியல் மற்றும் காலவரை வேறுபாடுகளைச் சுட்டுகிறது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பிற்பட்ட காலத்தில் எபிரேய மொழிக்குப் பதிலாக அரமேயிக்கு மொழி மக்களின் பேச்சுமொழியாகியது (நெக 8:8; 13:24). ஆனால் எபிரேய மொழி இலக்கிய மற்றும் வழிபாட்டு மொழியாகத் தொடர்ந்து இருந்தது. இதற்குச் சீராக்கு நூலும், சாக்கடல் ஏடுகளும் சான்று பகர்கின்றன. கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் உரோமைக்கு எதிரான வெற்றிகரமான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து எபிரேயமானது வழக்கிலிருந்து வீழ்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

எபிரேயமானது இருபத்து இரண்டு மெய்யெழுத்துகளையுடைய அகர வரிசை மொழியாகும். இவற்றில் சில நிறுத்தங்களாகவும், ஒலிகளாகவும் வருகின்றன. வலப்புறத்திலிருந்து இடப்புறமாக எழுதப்பட்ட நிலையில் இதன் தொடக்கக் கட்டங்களில் பெரும்பாலும் வட்டமாகவும், மூடியும் உள்ள பெனிக்கிய எழுத்துமுறையை இது தழுவியிருந்தது. இத்தகைய பழமையான எபிரேய எழுதுமுறையானது பாரசீக காலத்தில் நவீன அச்செழுத்துகளிலிருந்து நன்கு அறிமுகமாகியுள்ள சதுரவடிவத் திறந்த அரமாயிக் எழுத்துக்களால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பதினான்கு உயிரெழுத்துகளின் ஒலிகள் வேறுபடுத்தப்பட்டிருந்தாலும், பழைய வாசகங்க

ளில் எதுவுமே எழுதப்படவில்லை. மாறாக, உச்சரிப்பானது வாய்மொழியால் அளிக்கப் பட்டது. கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கி இறுதியான உயிரெழுத்துக்க ளைச் சுட்டிக்காட்டுவதற்கெனச் சில குறிப் பிட்ட மெய்யெழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டன. நாடுகடத்தப்பட்ட பிற்காலத்தில் மேலும் சில உயிரொலிகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டன; அவை மேல முத்தம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டவும் உபயோகிக்கப்பட்டன. கி.பி. ஒன்பது பத் தாம் நூற்றாண்டுகளில் திபேரியப் பள்ளியின் ராபிகளான மசோரெத்தியர்கள் வாசகங் களை வாசிப்பதற்கு வரி மற்றும், புள்ளிகள் அடங்கிய அமைப்பை உருவாக்கினர். இவ் வாறு பண்டைய உயிரெழுத்து அமைப் பினை இயன்ற அளவிற்குத் துல்லியமாக அமைத்தனர். அழுத்தத்தையும் நிறுத்தத்தை யும் சுட்டிக்காட்டுவதற்கென மற்ற அடையா ளங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் எபி ரேய எழுத்துகளுக்கு அவற்றினுடைய வரி சைக்கிரமப்படி எண் மதிப்புகள் அளிக்கப் பட்டன. இது எபிரேயப் புலமையின் பல் வேறு கட்டங்களில் பெயர்கள் மற்றும் வாக்கு களுக்கு அடையாள விளக்கங்கள் அளிக்கத் தூண்டுதலாயிற்று.

விவிலிய எபிரேயத்திற்கும் மற்றச் செமித் திய மொழிகளுக்குமிடையே எண்ணற்ற ஒரு மைப்பாடுகள் திகழ்கின்றன; குறிப்பாக இவற்றில் முக்கியமானது வினைச்சொல் மற் றும் பெயர்ச்சொல்லின் மூன்று மெய்யெ முத்து வேர் ஆகும். இவை பால், எண், காலம் அல்லது தொடர்பு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கென முன்னிணைப்புகள் அல்லது உயிரெழுத்து ஓசை, உருமாற்றம் ஆகியவற்றால் மாற்றியமைக்கப்படலாம். மெய்யெழுத்துக்களுடன் தொடங்குகின்ற அசைகள் திறந்தவையாக (உயிரெழுத்துடன் முடிவதாக), அல்லது மூடியவையாகவும் (மெய்யெழுத்துடன் முடிவதாக) இருக்கக் கூடும். அவை இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்தவாறு தொடங்குவதில்லை. ஆனால் அவ்வாறு முடியலாம். எபிரேய வினைச் சொற்கள், பெயர்ச்சொற்கள், மற்றும் பெய ருரிச் சொற்கள் பால் (ஆண், மற்றும் பெண்) மற்றும் எண்ணிக்கை (ஒருமை, பன்மை, மற்றும் இரண்டும் சேர்ந்த இரட்டை) ஆகிய வற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. வினைச் சொற்கள் நபரையும் சுட்டிக்காட்டுகின்றன (பேசுகின்றவர், யாரிடம் பேசப்படுகின்றது யாரைப் பற்றிப் பேசப்படுகின்றது). ஏழு வினைச்சொல் அடிப்படைகள் செயலின் பல்வேறு தோற்றங்களை வெளிப்படுத்து கின்றது. பெயர்ச் சொற்கள் பெயர்ச்சொல் லாக அல்லது வினைச்சொல்லினின்று தோன்றலாம். பொதுவாக ஆண் பால் வடி வம்தான் அடிப்படையானது. அதிலிருந்து பெண்பால் வடிவம், பன்மை அல்லது இரட்டை வடிவம் தோன்றும். தொல் இலக் கியத்தில் காணப்படும் சுவடிகளைத் தவிர, விவிலிய எபிரேயத்தில் வேற்றுமை விகுதி கள் (உம். எழுவாய், ஆறாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை) காணப்படுவ தில்லை. பெயருரிச்சொற்கள், பால் மற்றும் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாறுபடும். பெயர் முன்னிடைச்சொல் தனியாகவோ மற்றச் சொற்களின் முன்னிணைப்பாகவோ வரலாம். சொற்றொடரியலானது வினைச் சொல், எழுவாய், செயப்படுபொருள், வினைஉரிச்சொல் அல்லது பெயர் முன்னி டைச்சொற்றொடர் என்ற வரிசையில் அமை யும். வளைந்து கொடுக்கும் கவிதை நடைக்கு அப்பாற்பட்டு இந்த வரிசை முறை யிலிருந்து விலகுதல்கள் அழுத்தம் அளிக்கப் பயன்பட்டிருக்கலாம். தெளிவற்ற அமைப்பு களும், சொற்றொகுதிகளும் மற்றச் செமித் திய மொழிகளோடு குறிப்பாக உகாரித்து மற்றும் பெனிக்கிய மொழிகளுடன் ஒப்பி டப்படுதல் மூலம் தெளிவுபடுத்தப்படலாம்.

எபிரேயத்தின் பிற்கால வடிவங்கள், கல் வித்துறை சார்ந்த மொழியென நயப்படுத்தப் பட்ட, கிரேக்க மற்றும் உரோமைக் காலங்க ளில், பேச்சுவழக்கிலுள்ள பாலஸ்தீனிய எபி ரேயத்தினின்று பிறந்த மிஸ்னா (ராபிகளின்) எபிரோயத்தையும் கொண்டுள்ளன. ராபிக ளின் கல்விக்கூடங்களில் போதக மொழியா கும் மிஸ்னா மற்றும் பிற தன்னாயித்திக்கு இலக்கியங்களில் பாதுகாக்கப்பட்டிருக்கி

றது. மத்திய காலங்களில், பல்வேறு நிலைகளுடன் தொல் எபிரேயத்தைப் பின்பற்றி இலக்கியங்கள் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதன் வெற்றி பல்வேறு வகைப்பட்டதாகும். கி.பி. பத்து-பதினைந்து நூற்றாண்டுகளில் குறிப்பாக இபேரிய தீபகற்பத்திலுள்ள யூதரிடையே நேர்த்தியான கவிதை மற்றும் மெய்யியல் அறிவியல் இலக்கியங்கள் படைக்க மத்திய கால எபிரேயம் பயன்பட்டது. இம்மாதிரி மொழியானது சொற்றொகுதியிலும் வாக்கிய அமைப்பிலும் அரபியமொழியால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நவீன (இஸ்ரேலிய) எபிரேயமொழி பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டு சீயோன் யூத இயக்கத்தவர்களால் வளர்ச்சியுற்றது. இது தொடக்கத்தில் விவிலிய மற்றும் பிற்கால எபிரேய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாய் இருந்தது. மேற்குப் பொறிநுட்பச்சமூகத்தில் அதிகம் பாதிக்கப்பட்டு உயிருள்ள மொழியாக விளங்குகிறது. இது விவிலியத்தினுடைய முதல் தரமான எபிரேயத்திலிருந்து பரந்த அளவில் வேறுபடுகிறது.

## எபிரேயருக்குத் திருமுகம் (LETTER TO THE HEBRENS)

*1. முன்னுரை:-*

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பல ஐயங்களுக்கு விடை காண முடியாத ஒரு புதிர்க் கடிதமாகவே இருக்கிறது. முதவில் இது ஒரு கடிதமா? அல்லது இறையியலை விளக்கும் நூலா? என்பதும், இதில் வருகின்ற எபிரேயர் யார் என்பதும் இன்னும் தெளிவாக இல்லை. இதை எழுதியது யார் என்பதும் இன்னும் பிரச்சனைக்குரியதாகவே இருக்கிறது. இவ்வாறு சர்ச்சைக்குரிய இக்கடிதத்தைக் கூர்ந்து நோக்குவது நலம்.

*2. ஆசிரியர்:-*

எழுதியது யார் என்றே தெரியாத எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் போன்ற ஒரு கடிதத்தின் ஆசிரியரைப் பற்றி ஆராய்கின்ற போது, அக்கடிதத்தின் உள்ளார்ந்த சான்றுகளையும், வெளியார்ந்த சான்றுகளையும் மனதில் கொண்டுதான் ஒரு முடிவெடுக்க வேண்டும்.

உள்ளார்ந்த சான்றுகளை நோக்கும்போது எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திற்கும் புதிய ஏற்பாட்டுக் காலத்திய நூல்களுக்கும் ஒற்றுமையும், அதே சமயத்தில் வேற்றுமையும் இருப்பதைக் காண்கிறோம். எபிரேயரில் பயன்படுத்தப்படும் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் ஒத்தமைவு நற்செய்தியில் இருப்பது போலவும், அதற்குத் தரப்படும் இறையியல் விளக்கங்கள் யோவான் நற்செய்தியில் உள்ளவை போலவும் இருக்கின்றன. இரண்டிலும் (எபிரேயர், யோவான்) காணப்படும் கிறிஸ்துவியல் வேறெங்கும் காணப்படவில்லை. எபிரேயரும், யோவான் நற்செய்தியும் மாட்சியடைந்த ஆண்டவரை வலியுறுத்துகின்றனவேயொழிய, பவுலையும், ஒத்தமை நற்செய்திகளைப் போன்றும் ஆண்டவரின் உயிர்த்தெழுதலை வலியுறுத்தவில்லை. ஆகவே எபிரேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் ஆசிரியர், ஒத்தமைவு நற்செய்திகளின் கருத்தோட்டத்தையும், யோவான் நற்செய்தியின் கருத்தோட்டத்தையும், அறிந்தவராக இருக்க வேண்டும். எபிரேயரும் பேதுருவின் முதல் திருமுகமும் பாவமன்னிப்பளிக்கும் (எபி 9:28; 1.பேதுரு 2:24) இரத்தம் சிந்திய (எபி 12:24; 1 பேதுரு 1:2) கிறிஸ்துவின் பலியைப் (எபி 7:27; 9:26; 1 பேதுரு 3:18) பற்றிப் பேசுகின்றன. இரண்டுமே (எபிரேயர், பேதுரு) குருத்துவத்தைப் பற்றிப் பேசினாலும், பேதுருவின், முதல் திருமுகம் இறைமக்களின் பொதுக்குருத்துவத்தையும், எபிரேயர் கிறிஸ்துவின் குருத்துவத்தையும் குறிக்கின்றன.

எபிரேயருக்கும், பவுலால் எழுதப்பட்ட மற்றக் கடிதங்களுக்கும் உள்ள ஒற்றுமையையும், வேற்றுமையையும் காண்பது நன்று. புனித பவுல் விரும்பும் சில சொற்கள் இங்கு விடப்பட்டிருப்பதும், அவர் பயன்படுத்தாத சொற்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. முன்னோக்கிச் செல்லும் வேகத்தையும் அடிக்கடி எதிர்மறைக் கருத்துக்க

ளைப் புகுத்துவதையும், ஒரு கருத்திலிருந்து இன்னொரு கருத்திற்குத் தாவுவதையும் போன்ற பவுலின் நடையை இங்குக் காண முடியவில்லை. ஓர் இன்னிசையை அமைப் பதைப்போன்ற கவனத்தையும் திறமையை யும், அமைதியான தெள்ளிய நடையையும் காண்கிறோம். இது ஒரு புறமிருக்க, பவுல் தான் இதை எழுதினார் என்போர், சிக்கல் கள் எழுந்தபோது, பவுல் தம்முடைய கருத் துக்களை ஓர் எழுத்தரிடம் கொடுத்து எழுதச் சொன்னார் என்று கூறினர். ஆனால், இன்று பெரும்பாலான விவிலிய அறிஞர்கள், பவுல் அவரின் போதனைகளையும், பாரம்ப ரியத்தையம் நன்கு அறிந்தவரிடம் தம் எண் ணத்தைக் கூறி எழுதச் சொன்னார் என்பதை ஏற்றுக் கொண்டாலும், அவருக்கும் எழுத்த ருக்குமிடையே மிகவும் தூர ஒத்துழைப்பு தான் இருந்திருக்க முடியும் எனக் கருதுகின்ற னர்.

திருமறைப்பட்டியல் நூல்களுக்கு அப் பால், அலக்சாந்திரியாவில் வாழ்ந்த பிலோ என்ற யூதருக்கும் எபிரேயத் திருமுகத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. உதாரணமாக, மண்ணுலகம், விண்ணுலகம், மண்ணகை விண் ணக சந்நிதி முதலியன. இரண்டுமே, மெல்க் கிசதேக்கின் சாயலான, இறைசந்நிதியில் நுழைந்து மக்களுக்காக மன்றாடுபவரான ஒரு தலைமைக் குருவைப்பற்றிப் பேசுகின் றன. ஆகவே, எபிரேயத் திருமுகத்தின் ஆசிரி யர் இந்தக் கருத்துகளையெல்லாம் கிறிஸ்தவ மயமாக்கி அதற்குப் புதிய பொருளைக் கொடுத்தாலும், அவர்தாம் அறிந்த இறையி யலையே அலக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதர் களுக்கே உரிய நடையில் தருகின்றார்.

3. இதைப் பவுல்தான் எழுதினாரா?

இக்கடிதத்தில் ஆசிரியர் தம்முடைய பெய ரைக் குறிப்பிடவில்லை. திருமறைப்பட்டி யல் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது வர லாற்றுக் கூறோடு கூடிய கோட்பாட்டு உண் மையாகும். ஆனால் ஆசிரியர் யார் என்பது வரலாற்றைச் சார்ந்தது. கோட்பாட்டு உண் மையைச் சார்ந்ததன்று. இவ்விரண்டிற்கு மிடையே ஏற்பட்ட குழப்பத்தினால்தான் பல பிரச்சினைகள் எழுந்தன.

மேலைநாடுகளில் உரோமை நகரக் கிள மெண்தும் (கி.பி. 96) எரிமாசும் (கி.பி. 140) அலக்சாந்திரியாவில் வாழ்ந்த பன்தேனுஸ் (கி.பி. 180) முதலியோரும் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைப் பயன்படுத்தினார் கள். அலக்சாந்திரியாவைச் சார்ந்த கிள மெண்து, பவுல் இத்திருமுகத்தை எபிரேய ருக்கு எபிரேய மொழியில் எழுதினாரென் றும், லூக்கா அதைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார் என்றும் கூறுவதாக யுசே பியு கூறுகிறார். ஒரிசன் எபிரேயரில் உள்ள கருத்துக்கள் பவுலுடையவையாக இருந்தா லும், எழுதியது அவர் அல்லர் என்கிறார். ஆனால் மூன்றாம் நூற்றாண்டில் எபிரேயர் திருமுகம் கீழ்த்திசை நாடுகளில் பவுலின் கடிதத் தொகுப்பில் சேர்க்கப்பட்டது.

ஆனால் மேலைநாடுகளில் எபிரேயர் திரு முகம் சுமார் கி.பி. 96-140-இல் பயன்படுத் தப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டாலும், அதைப் பவுல்தான் எழுதினார் என்று ஏற்றுக் கொண் டதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. மேலும் சுமார் கி.பி. 150-350-இல் இதன் மதிப்பு குறைந்து விட்டது. தெர்த்துல்லியன் இதைப் பர்னபா எழுதினார் என்று குறிப் பிட்டாலும், அதை அவர் திருமறைத் தொகுப்பில் ஏற்றுக்கொண்டதாகத் தெரிய வில்லை. முராத்தோரியின் ஏடுகளிலும் சிப் ரியன், இரனேயு முதலியோரின் நூல்களி லும் இது குறிப்பிடப்படவில்லை. கிப்போ லித்தஸ் இது திருமுறைத் தொகுப்பைச் சார்ந்ததா இல்லையா எனக் கூறாமல் இதை மிகவும் போற்றிவந்திருக்கிறார். ஆனால், இதைப் பவுல் எழுதவில்லை என்பதை அடித்துச் சொன்னார். ஆனால், படிப்படியா கக் கீழைநாடுகளில் நிலவிய ஒருமனப்பட்ட கருத்தினால் மேலை நாடுகளும் பவுல்தான் எழுதினார் என ஏற்றுக் கொள்ளத் தொடங் கின. ஆனால் சோனோ என்பவரும் அம்ரோ சியாரும் 13 திருமுகங்களே பவுலால் எழுதப் பட்டன எனக் குறிப்பிடுகின்றனர். புனித அகுஸ்தீன் இந்நூல் பவுலால் எழுதப்பட் டதா என்ற ஐயங்களை அறிந்திருந்தாலும் இதைத் திருமறைத் தொகுப்பில் சேர்த்துக் கொண்டார். கிப்போவில் (393) நடந்த

சங்கத்திலும், கார்த்தேசில் (397) நடந்த மூன்றாம் சங்கத்திலும் இது பவுலின் 13 திருமுகங்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பின்னால் நடையைக் கொண்டு ஆராயும் முறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் பல புதிய திருப்பங்கள் தோன்றின. எராஸ்முஸ் என்பவரும், கயெத்தான் என்பவரும் இதைப் பவுல்தான் எழுதினார் என்பதை மறுத்தனர். கயெத்தான் திருமறைத் தொகுப்பிலிருந்தே அதை நீக்கினார். இவருக்குப் பின்னால் வந்த லூத்தர், கால்வின், மெலங்தோன், போசா போன்றோரும் இதே கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்துகளிலிருந்து முற்காலத்திலிருந்தே அதைப் பவுல்தான் எழுதினார் என்பதை ஏற்றுக் கொள்வதற்கு முன்பே இது இறை ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட ஓர் நூல் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது தெளிவாகிறது. சுமார் 2-ஆம் நூற்றாண்டில் திருச்சபை தனிப்பட்ட நூல்களைத் திருமறைத் தொகுப்பில் சேர்க்கவோ, நீக்கவோ உரிய கோட்பாடுகளை முடிவு செய்தபோது, இறை ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட நூல்கள், அப்போஸ்தலர் ஒருவராலும் அது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று விதித்தது. இந்தச் சூழ்நிலையில் கீழை நாடுகள் எபி 13:22-25-இன் அடிப்படையில் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதாக முடிவு செய்து, அதைப் பவுல்தான் எழுதினார் என்று உறுதிகூறின. ஒரிசன், பவுல் இதை எழுதவில்லை என்பதைத் தெளிவாக ஏற்றுக்கொண்டாலும், அவருக்கு இதை எழுதியவரோடு தூரத்துத் தொடர்பு இருக்கமுடியும் என்பதையும் மறுக்கவில்லை. நாளடைவில் மேலை நாட்டினர் இது ஆவியின் ஏவுதலால்தான் எழுதப்பட்டதா என்ற ஐயத்தை எழுப்பினர். இதே போன்ற குழப்பம் சங்க ஏடுகள் விவரிப்பதிலும் ஏற்பட்டது. திரிதெந்தின் சங்கம் எபிரேயர் திருமுகத்தை இறுதியாகக் கொண்ட 14 கடிதங்களைப் பவுல் எழுதியதாக ஒரு பட்டியலை வெளியிட்டது. ஆனால், இச்சங்கத்தின் நடவடிக்கைகளை நாம் புரட்டுகிற போது, சில ஆயர்கள், எபிரேயர் திருமுகத்தைப் பவுல் எழுதவில்லை என்பதைக் கூறச் சங்க ஏடுகளில் மாற்றம் செய்ய விரும்பிய போது வேறு பலர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. எனவே சங்கம் அது திருமறைத் தொகுப்பில் சேர்ப்பதைப்பற்றியே கவலை கொண்டதாகத் தெரிகிறது.

மேலும் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாப்புவின் விவிலியக் குழு இது திருமறைத் தொகுப்பைச் சேர்ந்தது என்பதை விசுவாச உண்மையாகவும் இதைப் பவுல்தான் எழுதினார் என்பதை ஆராய்ச்சிக்கு உரியதாகவும் கூறி முடிவு செய்தது. எனவே இத்தகைய வாதங்களுக்குப் பிறகு, பவுலின் கருத்துகளை இதில் தெளிவாகக் காணமுடிந்தாலும், இத்திருமுகம் இன்னொருவரால்தான் அமைத்து எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியும்.

இதன்பின் பவுல் எழுதவில்லையென்றால் யார்தான் இதை எழுதியது என்ற வினாவை எழுப்பினால் பர்னபா, லூக்கா, உரோமையின் கிளமெண்து, பிரிஸ்கா, சில்வானுஸ், அப்பொல்லோ எனப் பலருடைய பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால், யார்தான் எழுதியது என்பது இன்னும் தெளிவாகவில்லை. கற்றறிந்த, விவிலியத்தையும், யூத அப்போஸ்தலப் பாரம்பரியத்தையும் நன்கு அறிந்திருந்த, அலக்சாந்திரியாவின் கலைகளைக் கற்றறிந்த, எழுதுவதில் திறமைபெற்றிருந்த ஒரு ஆதிக் கிறிஸ்துவர் என்றுமட்டும் கூறமுடியும். ஆகவே ''யார் எழுதியது என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும்'' என்று ஒரிசன் கூறுவதை ஏற்றுக் கொண்டாலும் எரோணிமூவோடு சேர்ந்து, ''யார் எழுதினாலென்ன? அவரும் திருச்சபையின் ஓர் அங்கத்தினர்'' என்று கூறலாம்.

*4. யாருக்கு, ஏன் எழுதப்பட்டது?*

''எபிரேயருக்கு'' என்ற தலைப்புப் பற்றிப் பன்தேனுசும், அலக்சாந்திரியா கிளமண்தும், தெர்த்துல்லியனும் சுமார் 200 ஆண்டு முதலே அறிந்திருந்தனர். மோசேயின் சட்டத்தினால் வந்த மீட்புக்கும், கிறிஸ்துவின்

மீட்புக்கும் இடையே உள்ள வேறுபாடு அடிக்கடி இதில் பேசப்படுவதன் அடிப்படையில் இது யூதக் கிறிஸ்துவர்களுக்குத்தான் எழுதப்பட்டது என்று நெடுங்காலமாகக் கூறிவந்தனர். ஒருவேளை இதன் அடிப்படையில் கூட, தலைப்பு எழுதப்பட்டது என்று எண்ண வாய்ப்பிருக்கிறது. ஆனால், இதனுடைய ஆசிரியரே யாருக்கு எழுதப்பட்டது என்று குறிப்பிடவில்லை. அந்தக் குழு ஒரு பெரிய சபையல்ல. ஆனால் ஒரு சிறிய குழுவாகத்தான் இருக்கமுடியும் (எபி 13;23). இந்தக் குழு எருசலேம் சபையாக இருக்க முடியாது. ஏனெனில் இந்தச் சபையே பலருக்கு உதவி செய்ததாகவும், இன்னும் தொடர்ந்து செய்து வருவதாகவும் குறிப்புகள் உள்ளன (எபி 6:10). இது எந்தச் சபைக்குத்தான் எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியாத நிலையிலே பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன.

இந்தக் கடிதத்தைப் பெற்றவர்கள் யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மனம் மாறியவர்கள் என்பர் ஒரு சாரார். ஏனெனில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காட்டப்படுவதால், அவையெல்லாம் புறவினத்தாருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும், இப்படி மனம் மாறியவர்கள் திரும்பவும் யூதமதத்திற்கே செல்லாமல் இருக்கத்தான் இதை எழுதினார் என்றும் வாதாடுகின்றனர். ஆனால், இது அறுதியான வாதமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. யூதமதத்திலிருந்து மனம் மாறியவர் இருந்தாலும், புறவினக் கிறிஸ்தவர்களுக்கும் புரியும்படி பழைய ஏற்பாட்டைப் பவுல் மேற்கோள்காட்டினார் என்பதற்கே உரோமையருக்கு எழுதிய திருமுகமும் சான்று பகர்கின்றது. இந்நூலின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒப்பிடுவது காப்புரைத் தன்மையுடையது அன்று; மாறாக, எதிர்மறையில் அவருக்குள்ள விருப்பத்தினாலாகும் விளைவாகும். மேலும் மதத்தை விட்டு விலகுவதைப் பற்றிப் பேசும் எபி 3:6-4:13; 6:4-8; 10:26-31; 12:16-17 ஆகிய நான்கு பகுதிகளும் முழுமையான கைவிட்டுவிடுதலைப் பேசுகின்றனவேயொழிய, திரும்பிச் செல்லும் அவர்கள் எண்ணத்தைக் குறிப்பிடவில்லை.

சிலர் பாலஸ்தீன யூதமதத்திற்கே திரும்ப விரும்பிய முந்தைய எஸ்ஸேனியர்களுக்கோ, இன்னும் கிறிஸ்தவராக மனம் மாறாத எஸ்ஸேனியர்களுக்கோ, ஆசிரியர் இதை எழுதினார் என்று கருதுகின்றனர். ஆனால், இதை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இக்கடிதம் எப்படி இம்மொழியைப் பற்றியும், கலாச்சாரத்தைப் பற்றியும் ஏதுமே அறியாத அவர்களின் உள்ளங்களைத் தொடமுடியும் என்ற ஐயம் எழாமலில்லை.

மற்றொரு சாரர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய யூதக் குருக்களுக்குப் பிரச்சனை எழுந்ததாகவும், எனவே அவர்கள் திரும்ப யூத மதத்தைத் தழுவ எண்ணியபோது ஆசிரியர் இதை எழுதினார் எனவும் கருதுகின்றனர். இக்கருத்தும் கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும் புகழ்பெற்ற யூதமதத்தைச் சார்ந்த குருக்கள், கிரேக்கமொழியில் எழுதப்பட்ட கிரேக்கக் கலாச்சாரத்திலிருந்தும் மதம் மாறிய ஒருவரால் எழுதப்பட்ட இக்கடிதத்தை எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பது பெரிய கேள்விக்குறிதான்.

ஆனால் அநேக அறிஞர்கள் இன்று உரோமைக்குத்தான் இக்கடிதம் எழுதப்பட்டது என எண்ணுகின்றனர். 1) இக்கடிதத்தைப் பற்றிய குறிப்புகள் முந்தைக் காலத்தில் முதன் முதலில் உரோமையைச் சார்ந்த கிளெமெந்து, எரிமா இவர்களின் நூல்களில்தான் காணப்படுகின்றன. 2) எபி 13:24-இல் குறிப்பிடப்படும் ''இத்தாலி நாட்டுச் சகோதரர்கள்'' அந்நாட்டிலுள்ளவர்களுக்குத்தான் வாழ்த்து அனுப்புகிறார்கள். 3) உரோமைக் கிறிஸ்தவ சமூகம் தாராளத் தன்மைக்குப் பெயர் பெற்றிருந்தது (6:10). இக்கருத்தை வலியுறுத்தும் அறிஞர்கள் ஒரு புறவினச் சமூகத்தையே குறிப்பிடுகின்றனர். மேலும் யூதக் கிறிஸ்தவர்கள் யூதமதத்திற்குத் திரும்ப விரும்பினர் என்பதைவிட, புறவினத்தாரிடையே பல

யூதக் கிறிஸ்துவர்கள் இருந்ததாகவும், புற வினத்தாரின் தொடர்பால் அவர்களின் வழி பாட்டைப் பின்பற்ற நினைத்ததாகவும், அந் நிலையில் அவர்களுக்கு எழுதப்பட்டதாக வும் இருக்கலாம். பல கருத்துகள் நிலவி னும், இக்கடிதம் எழுதப்பட்டவர்கள் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறிச் சிதறிக் கிடந்த ஒரு யூதச் சமூகத்தினர் என்பதும், அப்படிப்பட்ட உரோமையிலிருந்த ஒரு சமூ கத்தினருக்குத்தான் எழுதப்பட்டிருக்கலாம் என்பதும் அறிஞர்பலரின் கருத்தாகும்.

5. காலமும் இடமும்:-

எங்கிருந்து இக்கடிதம் எழுதப்பட்டது என்பதைக் காணமுடியவில்லை. எபிரேயர் திருமுகம் சுமார் 96-இல் உரோமைக் கிள மெண்தால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் எபிரேயரைப் பற்றித் தெரிந்து அது இன்னொருவரால் தம் நூலில் பயன்படுத்தப் பட வேண்டுமெனில் கால அவகாசம் தேவை. இந்தக் கடிதம் உரோமைச் சமூகத் திற்கு எழுதப்பட்டிருப்பின் கால அவகாசம் குறைவாகவும், வேறு சமூகத்திற்கு எழுதப் பட்டிருப்பின் அதிகமாகவும் இருக்க வேண் டும். எபி 8:13 மற்றும் 9:9-இல் ஆலய வழிபாடு இன்னும் தொடர்ந்து நடைபெறு வது போலத் தோன்றுவதால், இக்கடிதம் ஏரோதால் கட்டப்பட்ட ஆலயம், கி.பி. 70-இல் உரோமையரால் அழிக்கப்படுமுன் எழுதப்பட்டது என்பர் சிலர். ஆனால், இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெ னில், ஆசிரியர் ஆலயத்தையும், அதன் வழி பாட்டுச் சடங்கு முறைகளையும் ஓர் அடை யாளமாகவே கையாண்டுள்ளார். உள் ளார்ந்த சான்று என்று தேடினால், எபி 2:3-இல் இதன் ஆசிரியரும் எழுதப்பட்ட சமூகத்தினரும் இரண்டாவது சந்ததிக் கிறிஸ் துவர் என்பது காணப்படுகிறது. இதை எடுத் துக் கொண்டு வாதிட்டால் இக்கடிதம் கி.பி. 65-இல் நடந்த நீரோவின் வேத கலாபனைக் குப் பல்லாண்டுகள் கழித்து எழுதப்பட்டி ருக்கலாம் என்று எபி 10:32 சுட்டுகிறது. பெரும்பாலான விவிலிய அறிஞர்கள் கி.பி. 80-90-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப் பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். ஆனால் சிலர் இது கி.பி. 70-க்குச் சற்றுமுன் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்ற னர்.

எபி 13:24 ''இத்தாலிய நாட்டுச் சகோதரர் கள்'' என்று குறிப்பிடப்படுவதிலிருந்து சிலர் இது உரோமையில் எழுதப்பட்டது என்பர். ஆனால் ''இத்தாலிய நாட்டுச் சகோ தரர்கள்'' என்பது இத்தாலிய நாடடைச் சார்ந்த அவர்கள் ஆசிரியர் இக்கடிதத்தை எழுதும்போது அவ்ருடன் இருந்தார்கள் என் பதைக் குறிக்குமேயொழிய, இது உரோமை யில் தான் எழுதப்பட்டது என்பதை எந்த வகையிலும் உறுதியாகக் கூறவில்லை.

6. இலக்கிய அமைப்பு:-

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் ஒரு கடிதம் என்பதை விட மறையுரை என்று சிலர் கூறுகின்றனர். இது ஒரு இறையியல் கட்டுரையாக எழுதப்பட்டுக் கடிதத்தின் வடி வம் கொடுப்பதற்காக 13:22-24 என்ற பகுதி இணைக்கப்பட்டது என்பர் வேறுசிலர். இது ஒரு மறையுரைதான் என்று வாதிடுவோர், ஆசிரியரே எபி 8:1-இல் ''நான் சொன்னவற் றில்'' என்றுதான் குறிப்பிடுகிறாரேயொழிய, ''நான் எழுதியவற்றில்'' என்று குறிப்பிட வில்லை என வாதிடுகின்றனர். எழுது பவர் பெயர், யாருக்கு எழுதப்பட்டது வாழ்த்து இவையெல்லாம் ஆரம்பத்தில் இல்லாததால் இது ஓர் இறையியல் கட்டு ரையே என்கின்றனர் மற்றும் வேறுசிலர்.

இரண்டு கருத்துகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. மற்ற வேறு சில கடிதங்களிலும் அதனுடைய ஆசிரியர் தம் முடைய கடிதத்தைச் ''சொல்வோம்'' (காண் உரோ 3:5; 6:19) என்று குறிப்பிடுகிறார். மேலும் ஆசிரியர் பெயர், யாருக்கு எழுதப் பட்டது, வாழ்த்து இவையெல்லாம் இல் லாத கடிதங்களையும் கிரேக்கக் கலாச்சாரத் தில் சமீப காலத்தில் அறிஞர்கள் கண்டுபிடித் துள்ளனர். செமித்திய மேற்காசியாவில் தோன்றிய இந்தக் குறிப்புகளெல்லாம் இல் லாத ஒரு கடித மரபும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. ஆகவே முகவுரைக் குறிப்புகள்

இல்லாத காரணத்தால் எபிரேயர் திருமுகம் ஒரு கடிதம் அல்ல என்று கூற முடியாது. இவற்றையெல்லாம் ஒன்றாக நோக்கினால் எபி 13:22-24, இக்கடிதத்தின் மற்றப் பகுதிகள் முழுவதுமாக எழுதி முடிக்கப்பட்டபின் சேர்க்கப்பட்டதென்றும், அதைக் கடிதத்தின் ஆசிரியரோ இன்னொரு நபரோ சேர்த்திருக்கலாம் என்றும் கருதலாம். எனினும் எபி 13:22-24-இன் ஆசிரியர் இதை ஒரு கடிதமாகக் கருதியதால்தான் இப்படி எழுதினார் எனத் திண்ணமாகக் கூற இயலும். ஆகவே, இதில் மறையுரை நடை இருப்பினும், இது மறையுரை அல்ல. மிகவும் கவனத்தோடு, இலக்கிய நயத்தோடு கடித மரபினைப் பின்பற்றிப் பெரும் முயற்சியுடன் எழுதப்பட்டதொன்றாகும்.

7. நூலின் திட்ட அமைப்பு:-

I முன்னுரை (1:1-4)

II கிறிஸ்து வானதூதரிலும் மேலானவர் (1:5-2:18).

1) மீட்பரின் அரியணையேற்றம் (1:5-14)
2) நிலைத்து நிற்க அறிவுரை (2:1-4)
3) தாழ்ச்சியின் வழியாக உயர்த்தப்பெற்றார் (2:5-18)

III இயேசு நம்பிக்கைக்குரிய இரக்கமுள்ள தலைமைக் குரு (3:1--5:10)

1) நம்பிக்கைக்குரிய மகன் மோசேயை விட மேன்மை வாய்ந்தவர் (3:1-6)
2) இஸ்ராயேலின் பிரமாணிக்கமற்றதனம் தரும் படிப்பினை (3:7-4:13)
3) இயேசு இரக்கமுள்ள தலைமைக்குரு

IV இயேசுவின் நித்திய குருத்துவமும், நிரந்தர பலியும் (5:11-19:39)

1) ஆன்மீக மறுமலர்ச்சிக்கு அறிவுரை (5:11-6:20)
2) மெல்க்கிசதேக்கின் முறைப்படி கிறிஸ்துவின் குருத்துவம் (7:1-28)

அ) மெல்க்கிசதேக்கும் லேவிய குருத்துவமும் (7:1-10)

ஆ) லேவிய குருத்துவம் தேவையற்றது (7:11-28)

3. நிரந்தரப்பலி (8:1-9:28)

அ) பழைய உடன்படிக்கை, கூடாரம், வழிபாடு (8:1-9:10).

1) இயேசுவின் விண்ணகக் குருத்துவம் (8:1-6)
2) புதிய, பழைய உடன்படிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் (8:7-13)
3) பழையஉடன்படிக்கைக்கூடாரம்(9:1-5)
4) பழைய உடன்படிக்கையின் வழிபாடு (9:6-10).

ஆ) இயேசுவின் பலி (9:11-28)

1) விண்ணகச் சந்நிதானத்தில் நடைபெறும் பலி (9:11-14)
2) புதிய உடன்படிக்கையின் பலி (9:15-22).
3) குறைவற்ற முழுமையான பலி (10:1-39)
4) நிலைத்திருக்கச் செய்யும் இயேசுவின் பலி (10:1-39)

அ) பல பலிகளும், ஒரே நிறைவான பலியும் (10:1-18)

ஆ) உறுதி, நீதி, நினைவு (10:19-39)

V முன்மாதிரி, பணிவு, கீழ்ப்படியாமை (11:1-12:29)

1) முன்னோரின் விசுவாசம் (11:1-40)
2) இறைவன் தன் மக்களை நடத்தும் முறை (12:1-13)
3) கீழ்ப்படியாமைக்குத்தண்டனை(12:14-29).

VI இறுதி அறிவுரை, ஆசியுரை, வாழ்த்து (13:1-25).

8. இறையியல்:-

இக்கடித்தின் ஆசிரியர் புனித பவுலைப் போன்றே ''மகத்துவமிக்கவரது அரியணையின் வலப்புறத்திலே வானகத்தில் அமர்ந்துள்ள'' (8:1) கிறிஸ்துவை மையமாகக் கொள்கிறார். ஆனால் இயேசுவை இவர் குருவாகக் காட்டுகிறார். கிறிஸ்து எக்காலமும் இருந்த மகனும் தலைமைக் குருவுமாவார் (எபி 1:1 தொ; 7:1-10:18; 13:8-14). இவர்

கிறிஸ்துவின் மனிதத் தன்மையை வலியுறுத்துகிறார். ஏனெனில் அவருடைய மனிதத் தன்மையின் வழியாகத்தான் அவர் தம்மையே மக்களோடு ஒன்றுபடுத்திக் கொண்டு ஒரு பரிந்து பேசுபவரானார் (2:11-18; 3:15; 5:1-5). அவருடைய மீட்பளிக்கும் இறப்பு ஒரு பலியின் சக்தியைக் கொண்டுள்ளது (6:4; 9:26; 10:2; 12:26). இத்திருமுகம் உடன்படிக்கையை வலியுறுத்திக் கூறுவது இதன் தனித்தன்மையாகும். மேலும், ஆசிரியர் இயேசுவின் இறப்பு மீட்பளிப்பதாகக் கொண்டாலும், இம்மீட்பு, உயிர்ப்பில்தான் உறுதியாக்கப் படுகிறது என்று கூறும் பவுலைப் போலல்லாது, அவர் விண்ணகத்தில் நுழைந்ததினால்தான் உறுதியாக்கப்படுகிறது என்கிறார். மேலும் இதில் இறைமக்கள், பழைய ஏற்பாட்டைப் போன்று மீட்பை நோக்கிப் பயணம் செய்கிறார்கள் என்ற கருத்தும் பரவிக் கிடப்பதைக் காண்கிறோம்.

9. முடிவுரை:-

எபிரேயர், பல கருத்துக்களைத் தன்னுள் கொண்டு எழுதப்பட்ட, உயர்ந்த இலக்கிய நயம் கொண்ட கடிதமாகும். தன் மானிட வேதனையின் இறுதியில் விண்ணகத்திற்கு உயர்த்தப் பெற்ற இயேசுவின் நித்திய பலியினால் மீட்பு மனுக்குலத்திற்கு வழங்கப்பட்டது என்பதைத் திண்ணமாக வலியுறுத்துகிறது.

எபிரேயர் (HEBREW) - பெயர்

கேபேர் அல்லது ஏபேர் முன்னோர்களின் பெயர். மக்களுடைய பெயர்களிலிருந்து உருவாக்கப்பட்ட பெயராக இருக்கலாம். இச்சொல்லிற்குச் சரியான சொல் இலக்கணம் தர முடியாது. இஸ்ராயேலர்களைக் குறிக்கும் இச்சொல் புறவினத்தாரால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (ஆதி 39:14; யாத் 1:16). இந்தச் சொல்லை எபிரேயர்களே தங்கள் பெயராக வைத்துக் கொண்டனர் (யாத் 1:19). அப்போது 'எபிரேயன்' இஸ்ராயேலர்' இவ்விரண்டு சொற்களும் இடம் மாறக் கூடியவை. இஸ்ராயேலர்களுக்கும், எபிரேயர்களுக்கும் உறவு இருந்தாலும் மற்றப் பகுதிகளில், எபிரேயர்கள் கானான் நாட்டில் உள்ள ஒரு தனி இனமாகக் கருதப்படுகிறார்கள். எண் 24:23-இல் எபிரேயர்கள் அசூரைப் போன்ற ஒரு முக்கிய நாடாகத் தோன்றுகிறது.

ஆதி 10:21-இல் சொல்லப்பட்டிருக்கும் தலைமுறை அட்டவணையின்படி எபிரேயர்களின் மூதாதையர் ஏபேர் என்றழைக்கப்படுகிறார். அவரிடமிருந்து மக்கள் பலர் தோன்றியதாகத் தெரிகிறது. அவர் வழி வந்தவர்களில் ஆபிரகாம், லோத்து, நாகோர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். பழைய ஏற்பாட்டின்படி ஆபிரகாம் எபிரேயர்களுக்கும், லோத் மோவாபியர்களுக்கும் சுமோரியர்களுக்கும், நாகோர் அரமேயர்களுக்கும் குல மூதாதையர்கள் ஆவர். மாரி ஏடுகளில் நாகோர் ஒரு நகரத்தின் பெயராக அமைகின்றது. இந்தத் தலைமுறைப் பட்டியல்கள் ஓர் இலக்கிய அமைப்பாகத் தெரிகிறது. அவற்றில் காணப்படும் நபர்கள் பழங்காலத்து இனக்குழுக்களையோ, நகர்களையோ, நாடுகளையோ பிரதிபலிக்கலாம். கெபிரோனை மையமாகக் கொண்ட ஆமோரியர்களின் கூட்டாளி என்று கூறப்படுகிறது. ஆபிரகாம் ஆதி 14-இன் படி ஓர் எபிரேயர். ஆதியாகமப் பரம்பரியப்படி ஆபிரகாம் மெசபொத்தாமியாவிலுள்ள ஊர் என்ற இடத்திலிருந்து குடியேறியவர். இது முந்தைய காலக் குடியேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

எபிரேய மொழி, கானானிய, எமோரிய மொழிகளின் கலவையில் பிறந்த கிளை மொழியாகும். செமித்திய மொழியைச் சேராதவைகளும் எபிரேய மொழி வளர்ச்சியில் செல்வாக்குக் கொண்டிருந்திருக்கின்றன.

எபிரேயர்களின்படி நற்செய்தி (GOSPEL ACCORDING TO HEBREWS)

திருமறைப்பட்டியலைச் சேராத, கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நற்செய்தி கி.பி. முதல் நூற்றாண்டின் முடிவில் அல்லது 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எகிப்திலுள்ள யூதக் கிறிஸ்தவர்களிடையே தோன்றியிருக்க வேண்டும். இது, மத்தேயு நற்செய்தி

அளவுக்கு நீண்டதாக இருந்திருந்தாலும், பிறர் எடுத்துக்கூறும் துணுக்குகளில்தான் நமக்குத் தெரிய வருகிறது. இந்நூலை அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமெந்து, ஓரிசன், சிரில் போன்றவர்கள் எடுத்துக் கூறுகின்றனர். யுசேபியு, பப்பியஸ் போன்றவர்கள் இந்நூலுக்குச் சான்று பகர்கின்றனர். இந்நூலின் அரமேயிக் மூலத்திலிருந்து கிரேக்கத்திலும் இலத்தீனிலும் மொழி பெயர்த்திருப்பதாக எரோமிமு கூறுகிறார். ஆனால், ஒரு வேளை இவர் எடுத்துக்காட்டும் பகுதிகள் ஓரிசனிலிருந்து கடன் வாங்கப்பட்டவைகளாக இருக்கலாம். மேலும், இவர் எபியோனியர் நற்செய்தி, நசரேயர்களின் நற்செய்தி ஆகியவற்றோடு இதைக் குழப்பிவிட்டதாகத் தெரிகிறது.

ஒரு காலத்தில் அறிஞர்களால், இந்நூல் மத்தேயு நற்செய்திக்கு முன்னோடியாகக் கருதப்பட்டது. ஆனால், இது பிற்காலத்தைச் சேர்ந்தது என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்படும். எந்த அளவுக்கு இது மத்தேயுவைத் தழுவியது என்பது சர்ச்சைக்குரியது. திருமுறைப்பட்டியல் நூல்களில் காணப்படாத இயேசுவின் கூற்றுகளோடு, இயேசுவின் முந்தைய வாழ்வு, வாழ்வு பற்றிய கலப்புமத புராண விவரிப்புகளும் உள்ளன. இயேசுவின் சகோதரராகக் கருதப்படும் யாக்கோபுக்கு, மற்ற எல்லா அப்போஸ்தலர்களையும்விட முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பவுலுக்கு எதிரான போக்கையும் கொண்டுள்ளது.

### எபிரோன் (EBRON)

ஆசேருக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட பகுதியில் உள்ள நகரம் எபிரோன் ஆகும் (யோசு 19:28). மொசரடிக் ஏடுகளில் யோசு 21:30; 1 நாள் 6:74-இல் வரும் அபிதோனுக்குப் பதிலாக எபிரோன் என்று தவறாகக் குறிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

### எபிலால் (EPHLAL தீர்ப்பு)

எரகுமேலின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 2:37). யூதாவைச் சேர்ந்தவர். சாபத்தின் மகனும் ஓபேத்தின் தந்தையுமாவார்.

### எபெரெக்கியா (JEBERECHIAH யாவே ஆசீர் வதிக்கிறார்)

இவர் அரசன் செக்கரியாவின் (17) தந்தை (ஏச 8:2). இவர் அரசன் ஆகாசின்முன் ஏசயா அடையாள இறைவாக்குரைத்ததற்குச் சாட்சியாவார். ஒருவேளை இவர் ஆகாசின் மாமனாராகவும், எசக்கியாவின் பாட்டனாகவும் இருக்கலாம் (காண்க 2 நாள் 29:1)

### எபேசியருக்குத் - திருமுகம் (LETTER TO THE EPHESIANS)

1. முன்னுரை:- எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகம் சிறைக்கூட மடல்களில் (கொலோசேயர், பிலமோன், பிலிப்பியர், எபேசியர்) ஒன்றாகும். இது தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். கடித வடிவில் நமக்குக் கிடைத்துள்ள இப்படிவம் உண்மையிலேயே ஒரு மறையுரையாக இருக்கலாம். இதை ஒரு ஒன்றிப்புத் திருமுகம் என்றுகூட அழைக்கலாம். அத்தகைய உயர்ந்த கருத்துகளைக் கூறுகிறது. மனிதப் பிளவுகளையும், வேறுபாடுகளையும் அகற்றி, சமத்துவ வாழ்வுக்கு வழிகாட்டும் ஒரு மடலாகவே இது திகழ்கிறது.

2. நூல் தோன்றிய காலமும், இடமும்:- ''எபேசியர்'' எழுதப்பட்ட காலத்தைக் கணித்தல், அதனுடைய ஆசிரியரை முடிவு செய்வதைப் பொறுத்து அமைகிறது. புனித பவுல்தான் இதை எழுதினார் எனக் கொண்டால் இது சுமார் கி.பி. 63-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும். புனித பவுலை இதன் ஆசிரியராக ஏற்றுக் கொள்ளாவிடில், இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் முதல் பத்தாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம். எப்படி இருப்பினும் இது கொலோசேயருக்குப் பின் எழுதப்பட்டது என உறுதியாகக் கூறமுடியும். கொலோசேயர், எபேசியர் இரண்டிலும் காணப்படும் ''83'' சொற்கள் அவைகளுக்கிடையே சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றன.

''எபேசியர்'' எழுதப்பட்ட இடத்தை நோக்குங்கால், ஆசிரியர் ஒரு கைதி என்பது தெளிவாக உள்ளது (எபே 3:1; 4:1; 6:20).

ஆனால், பவுல் தான் ஏற்படுத்திய எல்லாத் திருச்சபையிலும் சில நாட்கள் சிறையிலிருந்தார். இக்கடிதம் பவுலின் மற்றக் கடிதங்களுக்குப்பின் எழுதப்பட்டிருந்தால், அவர் இரண்டாண்டுகள் கைதியாயிருந்த செசாரியாவில் (அ.ப. 23:33) எழுதப்பட்டிருக்கும், அல்லது உரோமையில் எழுதப்பட்டிருக்கலாம்.

*3. ஆசிரியரும் உண்மைத் தன்மையும்:-* முற்காலத்திலிருந்தே பவுல்தான் இதை எழுதினார் என்று ஏற்றுக் கொள்ளட்பட்டது. எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலேயே பின் வரும் பகுதிகள் அது பவுலால் எழுதப்பட்டது எனச் சான்று பகர்கின்றன. ''இயேசுவின் அப்போஸ்தலனான பவுல் யான் எழுதுவது'' (எபே 1:1) ''இயேசுவின் கைதியா'ய நான்'' (எபே 4:1). இதனுடைய ஆசிரியர் குறிப்பிடுகின்ற அனுபவங்கள் பவுலின் அனுபவங்களை ஒத்திருக்கின்றன (3:1-4; 3:7-13; 6:19-22). திருச்சபையின் தந்தையர்களான உரோமையின் கிளமெண்து, அந்தியோக்கியா இஞ்ஞாசியார், எரிமாக, போலிகார்ப்பு ஆகியோர் இதனை அறிந்திருந்தனர். இத்திருமுகத்தின் முதலும் முடிவும் புனித பவுலின் பாணியிலேயே அமைந்துள்ளன (காண். பிலிப் 1:1; 4:23). முதற்பகுதி கொள்கைக்கும், பிற்பகுதி அறநெறிக்கும் இடமளிக்கின்றன (எபே 1:3; காண்.கொலோ 1:2; கலாகு 3:4).

பவுலால் எழுதப்பட்டவைகளின் தொகுப்பிலும் எபேசியர் இடம் பெறுகிறது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் மார்சியன் என்பவர் இதை ''இலவோதிக்கேயருக்கு'' எழுதப்பட்டது என்று கூறினாலும் அதைப் பவுல் எழுதியதாகவே ஏற்றுக் கொள்கிறார். கி.பி.-2-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரேனியுசும், அலக்சாந்திரியா கிளமெண்தும் இக்கடிதத்தைப் பவுலினுடையது என்றே ஏற்றுக் கொண்டனர். முராத்தோரியன் ஏடுகளும் இதைப் பவுலினுடையது என்றே கூறுகின்றன. இவ்வாறு கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதிவரை இதனுடைய ஆசிரியர் பவுல்தான் என்பதைப் பற்றி ஐயப்பாடு ஏழவே இல்லை. பவுல்தான் இதை எழுதினார் என்று 18-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை திருச்சபையும் பாரம்பரியமும் ஏற்றுக் கொண்டாலும், 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிஞர்கள் இதை எழுதியது பவுல் தானா? என்ற வினாவை எழுப்பினர். அறிஞர்கள் பலர் (அ) மொழி, நடை இவற்றில் காணப்படும் வேறுபாட்டின் அடிப்படையிலும், (ஆ) எபேசிய திருமுகத்திற்கும் மற்றத் திருமுகங்களுக்கும் சிறப்பாகக் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திற்கும் இடையே உள்ள தொடர்பின் அடிப்படையிலும் (இ) கோட்பாடுகளின் அடிப்படையிலும் இத் திருமுகம் புனித பவுலால் எழுதப்படவில்லை என்ற முடிவுக்கு வருகின்றனர்.

*அ) மொழி, நடை வேறுபாடு:-* எபேசிய திருமுகத்தின் சொல்லமைப்பை நோக்கின், புதிய ஏற்பாட்டிலேயே இல்லாத 42 சொற்கள் இக்கடிதத்தில் காணப்படுகின்றன. இவ்வாறே மற்ற பவுலின் சம அளவுள்ள திருமுகங்களின் சொல் விகிதத்தை ஒப்பிடும்போது கலாத்தியரில் 33 சொற்களும், பிலிப்பியரில் 41 சொற்களும், கொலோசேயரில் 38 சொற்களும் உள்ளன. மேலும், புனித பவுலின் மற்றக் கடிதங்களிலேயே இல்லாத 36 சொற்கள் இதில் இருக்கின்றன. இவ்வாறு எபேசியருக்கே உரிய இந்தச் சொற்கள், திருச்சபையை மணமகளாக விளக்கும் பகுதியிலும் (எபே 5:25-33), கிறிஸ்துவ மறையின் கேடயத்தை விளக்கும் பகுதியிலும் (6:13-17) செறிந்துள்ளன.

நடை வேறுபாடும் குறிப்பிடத்தக்கது. இங்கு எளிமை இல்லாமல், பல சொற்கள் கனத்த கம்பீர நடையோடு தோன்றுகின்றன. பெயர்ச் சொற்கள் அடுத்தடுத்து அடுக்கி வருகின்றன (எபே 1:11; 19; 2:14-14). சொற்றொடர்களும் நீண்டு காணப்படுகின்றன (1:3-14; 1:15-23; 2:1-10; 3:1-6; 4:11-16).

ஆகவே, சொற்களின் விகிதாச்சாரத்தையும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள முறையையும் நடையையும் கொண்டு இது பவுலால் எழுதப்பட்டிருக்க முடியாது எனச் சிலர் கணிக்கின்றனர்.

ஆ) கடிதங்களுக்கிடையே உள்ள தொடர்பு:- எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலுள்ள 155 வசனங்களுள் மூன்றிலொரு பகுதி கருத்திலும், அமைப்பிலும் கொலோசேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை ஒத்திருக்கின்றன. இத்திருமுகத்தில் திக்கிக்கு என்பவரைப் பற்றிக் குறிப்பிடும் பகுதி (எபே 6:21-22) கொலோசேயரில் (4:7-8) அப்படியே ஒத்துப் போகிறது. இம்மடலில் காணப்படும் சொற்றொடர்கள் மற்றக் கடிதங்களோடு 85 விழுக்காடுக்கு மேல் கருத்திலும் அமைப்பிலும் ஒத்திருக்கின்றன.

எபே 1:16 - கலா 4:4,5; எபே 1:16 - பிலிப் 1:3; எபே 2:1 - உரோ 7:9; எபே 2:8 - உரோ 3:23; எபே 2:20 - 1 கொரி 12:28; எபே 3:10 - 1 கொரி 15:9; எபே 4:5 - 2 கொரி 8:6; எபே 4:10 - 2 கொரி 12:2; எபே 4:31 - 1 தெச 4:17; எபே 5:24 - கலா 3:28;

எனவே திறமையும், சிந்தனைத் திறனும் கொண்ட பவுல் இப்படி அப்படியே எழுதியிருக்க முடியாது. மேலும் இத்திருமுகத்தின் ஆசிரியர்; புனித பவுல் மற்றக் கடிதங்களில் பயன்படுத்திய அதே சொற்களைக் கையாண்டாலும் அதற்குத் தம்முடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு பொருள் தருகின்றார். உதாரணமாக, ''மறைபொருள்'' என்ற சொல் கொலோ 1:26; 2:2; 4:3; ஆகியவற்றில் திருச்சபையில் மறைந்துள்ள கிறிஸ்துவையும், எபே 1:9; 3:4 ஆகியவற்றில் யூதரும் புறவினத்தாரும் ஒன்றுபட வேண்டும் என்னும் இறைத்திட்டத்தின் வெளிப்பாட்டையும் குறிக்கிறது.

இ) கோட்பாட்டில் வேறுபாடு:- 1) எபேசியரில் உயிர்த்த மாட்சியடைந்த கிறிஸ்து வலியுறுத்தப்படுகிறார் (காண்.எபே 2:13-16). ஆனால், மற்றக் கடிதங்களில் பிரபலமாக இருக்கும் அவரின் இரண்டாவது வருகையைக் குறித்து எந்தக் குறிப்பும் இல்லை. ''உரிமைப்பேற்றின் அச்சாரம்'' (1:14) ''மீட்பின் நாள்'' (4:30) இவைகளைக் குறித்து சிறு குறிப்பே உள்ளது. இங்கே காட்டப்படும் திருச்சபை அவரது இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கும் திருச்சபை போலல்லாது வரலாற்றில் வளருகின்ற, முன்னேறுகின்ற திருச்சபையாகக் காட்சியளிக்கிறது.

2) இதில் திருச்சபை பவுலின் மற்றக் கடிதங்களில் இருப்பதைவிட எல்லோரையும் உள்ளடக்கும் பொதுத் தன்மையுடையதாக இருக்கிறது. உரோ 12:5; 1 கொரி 12:12-27-இல் கிறிஸ்துவின் உடல் தலத்திருச்சபையைக் குறிக்கிறது. ஆனால், எபேசியரில் கிறிஸ்துவின் உடல் கிறிஸ்துவையே தலையாகக் கொண்ட உலகளாவிய பொதுத் திருச்சபையைக் குறிக்கிறது.

3) எபே 5:21-33-இல் திருமணக் கொள்கை 1 கொரி 7-இல் உள்ளதைவிடத் தெளிவாகவும் முழுமையானதாகவும் உள்ளது. 1 கொரி 7-இல் பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றியே மிகவும் அக்கறை கொள்கிறார்.

ஆகவே, மேலே கூறப்பட்ட வாதங்கள் தனித்தனியாக இல்லாவிடினும். ஒன்றாகச் சேர்ந்து இதனுடைய ஆசிரியர் பவுல் இல்லை என மெய்ப்பிப்பதாக விவிலிய அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். மற்றும் வேறுசிலர் இவ்வாதங்கள், இதன் ஆசிரியர் பவுல் இல்லை என்பதை மெய்ப்பிக்கப் போதுமானவையாக இல்லை என வாதிடுகின்றனர்.

கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் உள்ள வேறுபாடுகள் சிந்தைனையின் முதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் கருத்து வளர்ச்சியை, சிந்தனை வளர்ச்சியைக் கண்டுபிடிப்பவர்கள் விவிலிய அறிஞர்கள். ஆனால் அனைவரும் இதை ஏற்றுக் கொள்வதில்லையே! மேலும் அறிஞரான பவுல் தன் அனுபவத்தினால் திரும்பவும் தான் மற்றக் கடிதங்களில் எழுதியவைகளைச் சிந்தித்து, மாற்றியமைத்து எழுத எந்தத் தடையுமில்லை. எனவே, பிற்காலத்தில் வந்த மற்றொருவர் இதை எழுதினார் என எண்ணத் தேவையில்லை.

ஒரு மடலைத் தானாகவே எழுதலாம், அல்லது ஓர் எழுத்தரைக் கொண்டு அவருக்குச் சொல்லி எழுதுவிக்கலாம் அல்லது அவரிடம் முக்கியமான கருத்துக்களைச் சொல்லி அவரையே எழுதச் செய்யலாம். இம்முறையில் எதைப்பயன்படுத்தினாலும் எழுத்தர் ஆசிரியனாகிவிட முடியாது. எனவே, பவுல் மூன்றாவது முறையைப் பின்பற்றி இருந்தாலும் அவரே இக்கடிதத்தின் ஆசிரியராவார்.

எது எப்படி இருப்பினும், எபேசியர் புனித பவுலின் வளர்ச்சியடைந்த முதிர்ச்சியான இறையியலையும் சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

*4. யாருக்கு எழுதப்பட்டது?:-* எபேசு சிறிய ஆசியாவின் மேற்குக் கரையில் அமைந்த ஒரு துறைமுக நகரம். இது உரோமை மாகாணத்தின் ஆசியத் தலைநகரமாகவும் விளங்கியது. தம்முடைய இரண்டாவது தூதுரைப் பயணத்தின்போது புனித பவுல் இங்கே தங்கினார் (அ.ப. 18:19-21). மூன்றாவது தூதுரைப் பயணத்தின்போது இதைத் தம்முடைய பணித்தளமாகக் கொண்டு. மூன்றாண்டுகள் பணி புரிந்தார் (19:1-20:1). ஏறக்குறைய இரண்டரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட அந்நகரில், துறைமுக நகரமானதால், வாணிபத்திற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் பலர் வந்து தங்கினர். இங்கு அடிமைகள் பலர் இருந்தனர் (1 திமோ 6:1.17). உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றான தயான் தேவதையின் ஆலயம் இங்குதான் இருந்தது. அன்றைய எபேசில் இரு ஆலயங்களும், ஒரு பெரிய நூலகமும், அகன்ற அங்காடியும், பெரிய மன்றமும், ஐம்பதினாயிரம் பேரை அடக்கக்கூடிய அரங்கமும் இருந்தனவாகப் புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் திருமுகத்தின் தலைப்பிலும், அதன் ஆரம்பத்திலும் ''எபேசியருக்கு'', ''எபேசுக்கு'' என்று முறையே குறிக்கப்பட்டிருந்தாலும், ஒரு சில ஏடுகளில் தலைப்பிலுள்ள ''எபேசியருக்கு'' என்ற சொல் இல்லை. உதாரணமாகப் பவுலின் கடிதங்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் ''செஸ்டர் பெயாத்தி பப்பிரஸில்'' இவ்வார்த்தை காணப்படவில்லை. வத்திக்கானஸ், சைனாய்ட்டிகுஸ் ஏடுகளிலும் இச்சொல் பின்னால் கையெழுத்துக்களால் சேர்க்கப்பட்டுள்ளது. புனித பேசில், எரோனிமு, ஒரிசன் ஆகியோர் இத்தலைப்பு இல்லாத பிரதிகளை அறிந்திருந்தனர். எனவே, வாசகத்தை நாம் ஆராய்கிறபோது மூலப்பிரதியில் இவ்வார்த்தை இல்லை என்ற முடிவுக்கே நாம் வரவேண்டி இருக்கிறது. மேலும், மார்சியோன் கொலோ 4:16-இல் ''இக்கடிதத்தை நீங்கள் வாசிக்கக் கேட்டபின் இலவோதிக்கேயா திருச்சபையிலும் வாசிக்கச் செய்யுங்கள்'' என்னும் வாக்கியத்தின் அடிப்படையில், இத்திருமுகம் இலவோதிக்கேயருக்கு எழுதப்பட்டது என்று கூறுகிறார்.

பெனுவா என்னும் விவிலிய அறிஞர் கூற்றுப்படி இக்கடிதம் எல்லாத் திருச்சபைக்காகவும் எழுதப்பட்ட ஒரு சுற்றறிக்கையாக இருக்கலாம். இதை எடுத்துச் செல்பவர், எந்தத் திருச்சபையில் படிக்கப்படுகிறதோ அதன் பெயரைச் சேர்த்துப் படிக்கத் தலைப்பு எழுதுமிடம் காலியாக விடப்பட்டிருக்கலாம். எனவே, எல்லா இடங்களுக்கும் சுற்றி வந்தபின் எபேசில் ''எபேசியருக்கு'' என்று சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், இதற்கு ஏற்றபடி கிரேக்க இலக்கியத்தில் எடுத்துக்காட்டுகள் இல்லை.

மேலும் இக்கடிதத்தில் திக்கிக்கு என்பவர் மட்டுமே தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்படுகின்றார் (6:21). இது கொலே 4:7 -இல், ''அன்புள்ள சகோதரர் திக்கிக்குக்கு'' என்பது போலவே இருக்கிறது. ஏறக்குறைய பவுல் எபேசில் மூன்றாண்டுகள் தங்கினாலும் இக்கடிதத்தில் ஒரு தனி ஈடுபாட்டுத் தொடர்பு இல்லாததும், இன்னும் நண்பர்கள் பலரை அவர் குறிப்பிடாததும் வியப்பாக இருக்கிறது. இதன் ஆசிரியர் யாருக்கு எழுதுகிறாரோ அவர்களைச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை என்பதற்கும், அவர்களும்

இவருடைய போதனையைச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை என்பதற்கும் ஆதாரங்கள் உள (1:15; 3:1; 4:21). ''அப்போஸ்தலர், இறைவாக்கினர் இவர்களை அடிக்கல்லாகவும், கிறிஸ்துவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாயிருக்கிறீர்கள்'' (2:20) என்று இதன் ஆசிரியர் எழுதுவதிலிருந்து, இந்தத் திருச்சபையை நிறுவாத ஒருவர் எழுதுவதுபோல் இருக்கிறது. ஆனால், பவுல் எப்போதுமே தம்மையே தாம் நிறுவிய திருச்சபையோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளும் வழக்கமுடையவர்.

எனவே, தலைப்பே சில மூலப்பிரதிகளில் இல்லாததாலும், எந்தத் தனிப்பட்ட நபர்களும் வாழ்த்தைப் பெறாததாலும், எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சனையும் எபேசில் எழாததாலும், எபேசை மையமாகக் கொண்ட பல சபைகளுக்குப் பொதுவாக இத்திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

5. சூழ்நிலையும் நோக்கமும்:- எபேசியருக்கு எழுதிய திருமுகம் மற்றெல்லாவற்றையும் விட, மறைக்கோட்பாடுகளை அதிகம் கொண்டுள்ளது. ஆனால், என்ன சூழ்நிலையில் இது எழுதப்பட்டது என்பதைப்பற்றிய குறிப்பு ஏதுமே இங்கு இல்லை. கொலோசேயருக்கும் இதற்கும் உள்ள தொடர்பை நோக்கும் போது, கொலோசேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் சூழ்நிலைபோல, ஞான உணர்வுக் கொள்கையே இக்கடிதம் எழுதப்படுவதற்கும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், இம்முறை அதை எதிர்ப்பதோடு நில்லாமல் அதற்குச் சரியான விளக்கமும் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கலாம். அதே வேளையில் இந்த ஞான உணர்வுக் கொள்கைக்கு எதிராக எழுதப்பட்ட விளக்கங்களைப் பவுலின், மற்றக் கடிதங்களில் காண முடியவில்லை. எனவே, இது எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சனையையும் சமாளிக்க எழுதப்பட்டதாகத் தெரியவில்லை.

6. இலக்கிய, மொழி, நடை அமைப்பு:- மற்ற நூல்களைப் போலவே, இக்கடிதத்தின் இலக்கிய அமைப்பை மொழி, நடை ஆகியவை முடிவுசெய்கின்றன. மொழியையும் நடையையும் நாம் நோக்கும்போது இதில் செமித்தியப் பின்னணியும், ஆசிய எண்ண அலைகளும் வெளிப்படுகின்றன. இவருடைய நடை பெரும்பாலும் வழிபாட்டைத் தழுவிவருகிறது. ஆனால், சில சமயங்களில் ஆசிரியர் நீண்ட சொற்றொடர்களை அமைத்தும், பல பெயர்ச் சொற்களை அடுக்கியும் எழுதுகிறார். இக்கடிதத்தின் ஆசிரியர், ஏற்கனவே வழக்கிலிருந்த கிறிஸ்தவ பாடல்களையும், செபங்களையும், மறைக்கல்விக் கருத்துக்களையும் கொண்டு இதை எழுதி இருக்கலாம். மேலும் இவருடைய நடையிலிருந்து, இவர் இந்தப் பாடல்களையும், செபங்களையும் நன்கு அறிந்து தெளிந்திருந்தார் என்பது வெளியாகிறது. மேலும் இவர் ''இணையமைப்புக்களையும்'', உள்ளடக்குதல், தூண்டு சொற்கள் முதலியவற்றையும் ஒரு தெளிந்த புலவரைப் போலப் பயன்படுத்தியுள்ளார். இவையெல்லாவற்றையும் சேர்த்தாலும் அவை ஒரு கடித அமைப்பை வெளிப்படுத்தவில்லை.

7. நூலின் திட்டமும் அமைப்பும்:-

அ) முன்னுரை:- வாழ்த்துக்கள் (1:1-2)

ஆ) கொள்கைப் பகுதி:- யூதரும் புறவினத்தாரும் இணைந்த புதிய சகோதர வாழ்வின் தலைவராகக் கிறிஸ்துவை ஏற்படுத்திய இறைவனின் மீட்புத்திட்டம் (1:3-3:21).

1. இறைப் புகழ் (1:3-14)
2. யூதரும் புறவினத்தாரும் இணைந்த புதிய சகோதரத்துவம் (1:15-2:2)
3. பணித பவுல் தூதுவர் (3:1-13).
4. செபமும் புகழுரையும் (3:14-21).

இ) அறிவுரைப்பகுதி:- கிறிஸ்தவ வாழ்வு (4:1-6:20).

1. பொதுவான கோட்பாடுகள் (4:1-5:20).
   - கிறிஸ்தவ ஒற்றுமை (4:1-16)
   - ஆன்மீக மறுமலர்ச்சிக் கோட்பாடு (4:17-5:20).

2. கிறிஸ்தவக் குடும்ப வாழ்க்கை ஒழுக்கம் (5:21-6:9).
3. கிறிஸ்தவப் போராட்டம் (6:10-17).

ஈ) முடிவுரை:- (6:18-24)

8. இறையியல்:- எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகம், மற்றக் கடிதங்களிலுள்ள கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் தனக்கென்று சில தனித்தன்மை வாய்ந்த இறையியல் கருத்துக்களைத் திரித்துவம் அல்லது மூவொரு இறைவன் அடிப்படையில் விளக்குகிறது. தந்தையாகிய கடவுள் மனித இனத்தின்மேல் கொண்ட அன்பை, கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தினார். அந்த அன்பு ஆவியிலே நமக்கு உரிமையாக்கப்பட்டது. ஆசிரியரின் கிறிஸ்துவியல் மாட்சியடைந்த எங்கும் நிறைந்த ஆண்டவரைக் காட்டுகிறது. இந்தக் கருத்து, இக்கடிதம் முழுவதும் அவரது எண்ணத்தில் இழையோடுவதைக் காணலாம். திருமுழுக்காலும், விசுவாச வாழ்க்கையாலும் இவ்வுலகிலேயே ஒருவன் கிறிஸ்துவின் அரசில் பங்கு கொள்கிறான். இந்தக் கிறிஸ்துவின் அரசு, உடல்-தலை தொடர்பு, மூலைக்கல்-ஆலயம், கணவன்-மனைவி உறவு போன்ற உயிரோட்டமுள்ள உருவகங்களால் விளக்கப்படுகின்றது.

இறுதிக்கால இயல் மிகவும் குறிப்பிடத்தகுந்த முறையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் அரசு இன்று இங்கேயே இருந்தாலும் அது இன்னும் செயலாக்கம் பெறவேண்டிய நிலையிலேயே உள்ளது. இதில் உள்ள இறுதிக்கால இயல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தோடும் யோவானோடும் ஒத்துப்போகிறது. இன்று நாம் உள்ள நிலை, ஆவியில் கிறிஸ்துவழியாக இறைவனின் அன்புக்கு நாம் காட்டும் பதிலன்பு ஆகும். இதில்தான் கிறிஸ்தவ ஒழுக்கம் ஊற்றெடுக்கிறது. இறுதியாக இது ஒற்றுமையின் கடிதம் என்று குறிப்பிட்டாலும் அது மிகையாகாது. கிறிஸ்துவே புதிய ஆதாம் ஆவார். படைப்பு முழுவதையும் தம்மிலே ஒன்றிணைத்து, மனித ஒன்றிப்பின் தனிச்சிறப்பான மூலமாக இருக்கிறார். இந்த ஒன்றிப்பு மனித முயற்சியின் விளைவன்று. கிறிஸ்து என்னும் மறைபொருள் ஆவியில் மேலும் மேலும் ஆழ்ந்து புகுவதால் வருவதாகும்.

9. முடிவுரை:- மொழி, மதம், இனம், முதலிய பிரிவினைச் சுவர்களால் பிளவுபட்டிருக்கும் இன்றைய சமுதாயத்தில் அச்சுவர்களையெல்லாம் தகர்த்தெறிந்து ஒன்றுபட்ட உண்மையான சகோதரத்துவம் மலர எல்லாக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் சுவைபட இந்நூல் தருகிறது என்பதில் ஐயமில்லை.

## எபேசு (EPHEUS - விரும்பத்தக்க)

எபேசு என்பது மேற்கு சிறிய ஆசியாவிலுள்ள கெய்ஸ்டர் என்ற ஆற்று முகத்துவாரத்தில் உள்ள நகரம். கி.மு. 1100-இல் அயோனியர்கள் இவ்விடத்தை ஆக்கிரமித்தனர். இந்நகரம் பெர்காமின் அரசரின் கையிலிருந்து கி.மு. 133-இல் உரோமையர்களின் ஆட்சி அதிகாரத்திற்குள் வந்தது. இது ஆசியா மாகாணத்தின் தலைநகராகும். இது பணபலமிக்க செல்வச் செழிப்புள்ள நகரம். ஆசியாவின் துறைமுக நகரமும், வியாபாரத் தலமுமாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இதன் மக்கள் தொகை 250,000 ஆகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் திரேசியன் அரசன் லிசிமாக்குஸ் இந்நகரை மீண்டும் பெரிதாகக் கட்டியெழுப்பியபோது கெய்ஸ்டர் ஆற்றால் அடித்து வரப்பட்ட வண்டல்மண் நகரின் மேற்குப் பகுதியை நிரப்பிவிட்டது. ஆகையால் நகரம் 3 கி.மீ. மேற்காக நகர்த்தப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில்கூட இந்நகரின் துறைமுகம் மேற்குப் பகுதிநோக்கி நகர்ந்தது. தற்காலத்திலும் எபேசு நகருக்கும் கடலுக்கும் இடையே உள்ள தூரம் 1 கி.மீ. ஆகும்.

அயோனியர்கள் வந்து எபேசில் குடியேறுவதற்கு முன்பே அங்கு அர்தெமிஸ் என்ற கிரேக்கப் பெண் தெய்வ வழிபாடு நடைபெற்றது. அர்தெமிசுக்கு எழுப்பப்பட்ட முதல் கோவில் கெரிஸ்ப்ரோன் என்ற சிற்பியால் கட்டப்பட்டது என்று ஸ்த்ராபோ கூறுகின்றார். அர்தெமிசுக்கு எழுப்பப்பட்ட

கோவிலை 1890-இல் கண்டு பிடித்தனர். உரோமையர்களின் ஆட்சிக் காலத்தில் எழுப் பப்பட்ட பொதுக் கட்டடங்களெல்லாம் அழியாமல் இருந்தன. இந்தக் கோவிலின் அடிப்படை மேடையானது 240 அடி அகல மும் 420 அடி நீளமும் கொண்டிருந்தது. கோவிலானது 160 அடி அகலமும் 240 அடி நீளமும் கொண்டிருந்தது. அதனுடைய தூண் கள் 55 அடி உயரமுடையதாக இருந்தன. பழைய காலத்தில் ஏழு உலக அதிசயங்களில் இதுவும் ஒன்றாகும். பார்வையாளர் இருக் கைகளைக் கொண்ட மைதானம், 24000 இருக்கைகளைக் கொண்ட மிகப் பெரிய அரங்கம், வியாபாரத்தலம், செராபிஸ் கோவில் செல்சசின் நூலகம் போன்றவை மற்றும் உள்ள கட்டடங்களாகும். அர்கேடி யன் தெருவால் துறைமுகமும் அரங்கமும் இணைக்கப்பட்டிருந்தன. பண்டைக்காலத் தில் எபேசு நகரம் அர்தெமிசின் கோவிலுக் கும் வழிபாட்டுக்கும் மட்டுமன்று மந்திர வாதிகளுக்கும் பெயர் பெற்ற இடமாகும் (அ.ப. 19:19). பவுல் தமது இரண்டாவது பயணத்தில் கொரிந்திலிருந்து எருசலேமிற் குச் செல்கின்ற வழியில் முதன் முறையாக எபேசில் நற்செய்தியைப் பரப்புகின்றார் (அ.ப.18:18 தொ). அங்கு, அவர் செபக்கூடத் தில் போதித்துவிட்டுக் கொஞ்ச காலம் அந் நகரில் தங்கியிருந்தார். பவுல் எபேசை விட் டுச் சென்றபின் அப்பொல்லோ கிறிஸ்துவத் தில் முழுமையாகப் பயிற்சி பெற்றிராவிட் டாலும் கிறிஸ்தவத்தைப் பற்றி எபேசில் போதித்தார். பின் ஆக்கிலாவும், பிரிசிக்கிலா வும் இறைவனின் அருள் நெறியை அப் பொல்லோவுக்குக் கற்பித்ததால் அவர் கொரிந்திற்குச் செல்கிறார் (அ.ப.18:24 தொ). மீண்டும் பவுல் தமது மூன்றாவது பயணத் தில் எபேசு நகரை அடைந்து அங்கு அவர் செபக்கூடத்தில் போதிக்கும்பொழுது, அவ ரது போதனைக்கு எதிர்ப்பு அதிகம் இருந்த தால் அவ்விடத்தை விட்டு அகன்று திரன் னுஸ் என்பவரின் கல்விக் கூடத்தில் நாள் தோறும் போதித்து வந்தார் (அ.ப.19:1 தொ).

எபேசு நகரில் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் சிலரைக் கண்டார். மேலும் அந்நக ரில் வெள்ளியினால் தியானா தேவதையின் கோயிலைப் போன்ற சிறிய படிவங்களைச் செய்யும் தெமேத்திரியுஸ் என்னும் பொற் கொல்லனால் குழப்பம் உருவாக்கப்பட் டது. இதனால் பவுல் அந்நகரைவிட்டுச் செல்கிறார். இதன்பின் பவுல் எபேசிற்குச் சென்றதாகக் குறிப்புக்களில்லை. பவுல் தமது மூன்றாவது பயணத்தின் இறுதியில் மிலேத்தில் பிரியாவிடை உரை நிகழ்த்தும் பொழுது எபேசு நகர மூப்பர்களை வர வழைத்தார் (அ.ப.20:17). எபேசில் கொடிய விலங்குகளோடு போராடியதாகப் பவுல் கூறுவதை அவர் தமது எதிர்ப்பாளர்களை எதிர்த்துப் போராடியதற்கு உருவகமாக எடுத்துக் கொள்ள வேண்டும் (1 கொரி 15:32). கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகம் இங்குதான் எழுதப்பட்டது (15:32; 16:18). கலாத்தியருக்கு எழுதிய திருமுகமும் இங்கு எழுதப்பட்டிருக்கலாம். திருவெளிப் பாட்டின் தொடக்கத்தில் கூறப்பட்டிருக்கும் ஆசியாவின் ஏழு சபைகளில் எபேசு சபை யும் ஒன்றாகும் (திருவெளி 2:1 தொ). இந்தச் சபையானது அது கொண்டிருந்த மரபுக் கோட்பாடுகளுக்காகவும், விசுவாசத்தைப் பேணிக்காத்ததற்காகவும் புகழப்பட்டது; ஆனால் எபேசு சபையின் அன்புச் செயல் களெல்லாம் அவர்களுக்குள்ளே முடங்கி விட்டதற்காக எச்சரிக்கை செய்யப்பட்டது; அதாவது கண்டிக்கப்பட்டது.

### எபூசு (JEBUS)

தாவீது எருசலேமைக் கைப்பற்றுவதற்கு முன் எருசலேமை ஆண்ட கானானிய குலத் தின் பெயர் எபூசியர்கள் என்பதாகும் (யோசு 18:16,28). இது ஓர் இனத்தை அல்லது நாட் டைக் குறிக்கும் பெயராகும். நீதி 19:10-11- இல் ''எருசலேம் என்னும் மறுபெயர் கொண்டிருந்த எபூசு'' என்று அழைக்கப்பட் டது. ஏனெனில் எபூசியர் அங்கே வாழ்ந்து வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இதி லிருந்து, எபூசு என்பது எருசலேமின் பழைய பெயர் அல்ல. மாறாக, எபூசு என்பது அங்கு வாழ்ந்த இனத்தினரின் பெயரிலிருந்து உரு வானது என்பது தெளிவாகிறது. எருசலேம் என்ற பெயர் எபிரேயர்கள் பாலஸ்தீன் நாட்

டிற்கு வருவதற்கு முன்பே இருந்தது என்பதை அறியாத பிற்கால விவிலிய ஆசிரியர்கள் அந்நகருக்கு எபூசு என்று பெயர் சூட்டியிருக்கலாம். பெயர் பிற இனத்தோற்ற முடையது. யோசு.18:28-இல் ''எபூசியர்களின் நகரம்'' என்று மொழி பெயர்க்கப்பட வேண்டும். பெயரின் சொல்லிலக்கணம் தெரியவில்லை.

ஆதி.10:16-இல் கானானிடமிருந்து தோன்றிய மற்ற வம்சங்களோடு எமோரியர்களைப் போன்று எபூசியரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆகவே, யோசிப்பசு எபூசியரைக் கானானியர்களோடு சேர்த்துக் கூறுகிறார். ஆதி 15:21-இல் எமோரியர், கானானியர், கிருகாசியர் ஆகியோருடன் எபூசியரும் சேர்க்கப்பட்டுள்ளனர். யோசுவாவுக்கு எதிராக ஒன்று சேர்ந்து வந்த எமோரிய அரசர்களில் அதோனிசதேக்கு என்ற எருசலேமின் அரசரும் (எபூசியர்) ஒருவர் (யோசு 10:5). எபூசியர்கள் கானானியர்களோடு இணைக்கப்பட்டிருப்பது அவர்கள் வாழ்ந்த நில அமைப்பின் காரணமாகத்தான். ஏனெனில் எமோரியர்களும் அவர்களது உறவினர்களும் பாலஸ்தீன நாட்டின் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களைச் சுற்றி மத்திய தரைக்கடல் பகுதியிலும் யோர்தான் பள்ளத்தாக்கிலும் கானானியர்கள் வாழ்ந்து வந்தனர் (எண் 13:29).

கானான் நாடு பிரித்துக் கொடுக்கப்பட்ட போது எபூசியர்கள் வாழ்ந்த நகரமான எருசலேம் பென்யாமின் குலத்தாருக்குக் கொடுக்கப்பட்டது (யோசு 18:28). யூதாவுக்கும் பென்யாமின் குலத்தாருக்கும் இடையே உள்ள எல்லை இன்னோம் பள்ளத்தாக்கு வழியே போய், எபூசியர் நாட்டிற்குத் தெற்கே சென்று எருசலேம் நகரை அடைந்தது (யோசு 15:8; 18:16). எருசலேமில் குடியிருந்த எபூசியரை யூதா புதல்வர் அழித்தொழிக்க முடியாது போயிற்று. ஆகையால், எபூசியர் யூதா புதல்வரோடு வாழ்ந்து வந்தனர் (யோசு 15:63). இங்கு எருசலேம் யூதா குலத்தாரோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் யூதா நாட்டிற்கு எருசலேம் தலைநகராகும் என்பதை இது குறிக்கலாம். நீதிபதிகள் காலத்தில் எருசலேம், எபிரேயர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்தது. ஆதலால்தான் எப்பிராயிம் மலை லேவியன் ஒருவன் பெத்லகேமுக்குச் செல்லும் வழியில் 'புறவினத்தாரின் நகரான' எருசலேமில் தங்க மறுத்தான் (நீதி 19:10-12).

தாவீது தமது தலைநகரை அமைக்க விரும்பியபோது, இஸ்ராயேலுக்கோ யூதாவுக்கோ சேராத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார். தாவீது சீயோன் அரணைக் கைப்பற்றிய போது எபூசியர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றது (2 சாமு 5:6-7; 1 நாள் 11:4-6). தாவீது எருசலேமைத் தமது தலைநகராக ஏற்படுத்திவிட்டு, எபூசியரான அரவுனா அல்லது ஓரினான் என்பவரிடமிருந்து மலைமேல் அமைந்த களம் ஒன்றை வாங்கினார். இந்த இடத்தில் உடன்படிக்கைப் பேழையை நிலையாக வைப்பதற்கு ஓர் ஆலயம் கட்டத் திட்டமிட்டிருந்தார் (2 சாமு 24:18-25; 1 நாள் 21:15.18:28). இது இன்னும் எபூசியர் எருசலேமில் இருந்தனர் என்பதைச் சுட்டுகிறது. பின்பு சாலமோன் ஆட்சியில் இவர்கள் கப்பம் கட்டினர் (1 அரச 9:20.20-21).

எப்பசு-தம்மிம் (EPHES-DAMMIM இரத்த எல்லை)

பெலிஸ்தியர் மறுபடியும் போருக்குப் படைகளைத் திரட்டிக் கொண்டு யூதாவினுடைய சோக்கோவுக்கும் அசக்காவுக்கும் நடுவில் பாசறை அமைத்த இடம். தாவீது பெலிஸ்திய வீரன் கோலியாத்தைக் கொன்றதும் நிறைவுற்ற போர் இது (1 சாமு 17:1). இதற்கு மற்றொரு பெயர் பசி-தம்மிம் ஆகும் (1 நாள் 11:13). இரண்டும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

''இரத்த எல்லை'' என்ற பொருளுடைய எப்பசு-தம்மிம் என்ற பெயர் அவ்விடத்திலுள்ள சிவப்பு மண்ணிலிருந்து வந்திருக்கலாம். இவ்விடத்திற்கு, சோக்கோவுக்கு வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தமூனை அடையாளம் காட்டுவர்.

**எப்பத்தா** (EPHPHATHA - திறக்கப்பட்டு)

செவிடனுக்குக் குணமளித்தபோது, இயேசு சொன்னதாகச் சொல்லப்படும் அரா மேய சொல்லின் எழுத்துப் பெயர்ப்பு. இந் தச் சொல்லை ''திறக்கப்படு'' என்று மாற்கு மொழி பெயர்க்கின்றார். தொடர்ந்து அவன் காதுகள் ''திறக்கப்பட்டன'', நாவின் கட்டு 'அவிழ்ந்தது' என்று கூறுகின்றார் (மாற் 7:34-35).

இயேசு பயன்படுத்திய உண்மையான சொற்களைப் பாதுகாப்பதில் மாற்கு அக் கறை காட்டியதாகத் தெரிகிறது. இச்சொல் எந்த மந்திரவாய்பாட்டையும் உணர்த்த வில்லை.

**எப்பப்பிரா** (EPAPHRAS - கவர்ச்சியான, அழகான)

பவுலின் அன்புள்ள உடன் ஊழியரும், கிறிஸ்துவின் விசுவாசமுள்ள பணியாளரும் ஆவர்; கோலோசையில் வாழ்ந்தவர் (கொலோ 4:12). பவுல் சார்பில் அவர்க ளிடையே (கொலோசேயரிடையே) பணி செய் தவர். தேவ ஆவியினால் கொலோசேயர்க ளிடம் உண்டான அன்பைப் பற்றி பவுலிடம் எடுத்துச் சொன்னவர் இவ்ரே.

இவருடைய சொந்த ஊர் கொலோசை (கொலே 4:12) நகரம். இவர் வழியாகவே ஆண்டவருடைய நற்செய்தியை அந்த மக் கள் அறிந்து கொண்டனர் (1:7). அங்குள்ள திருச்சபையை நிறுவியவராக இருக்கலாம். எப்பப்பிரா, எப்பப்பிராதித்து என்ற பெய ரின் சுருக்கமானாலும், இவரையும் எப்பப்பி ராதித்தையும் (பிலி 2:25; 4:18) ஒன்று என்று குழப்பக் கூடாது. எப்பப்பிராதித்து பிலிப்பை நகரத்தைச் சார்ந்தவர்.

எப்பப்பிரா கொலோசையிலும், அதற்கு அருகில் உள்ள இலவோதிக்கயாவிலும், எராப்பொலியிலும் நற்செய்தியை அறிவித்த வர் (கொலோ 4:12-13). கொலோசைய மக் கள் மேலும், இலவோதிக்கயா, ஏராப் பொலி மக்கள் மேலும் அவர் காட்டிய ஆர்வத் தைப் பவுல் பாராட்டுகிறார். பவுலின் முதல் உரோமைச் சிறைவாசத்தின்போது எப்பப் பிரா அவரைப் பார்க்கச் சென்று, கோலோ சையில் அக்கால நிலையையும் விசுவாசிகள் கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்தை யும் ஒருவர்க்கொருவர் காட்டிய அன்பையும் பற்றிப்பவுலுக்கு எடுத்துக் கூறினார் (1:4-8). பில 23-இல் எப்பப்பிரா பவுலின் உடன் கைதியாகக் குறிக்கப்படுகிறார். ஆனால், இந்தச் சிறைவாசம் பற்றி வேறுசெய்தி கிடைக்கவில்லை. அவர் மற்ற இடங்களில் இருந்த போதும், அவர் கொலோசையர்பால் காட்டிய ஆர்வம் குறையவில்லை. ஏனெ னில் இரு சமயங்களில் அப்போஸ்தலர் வழியாக அவர்களுக்கு வாழ்த்து அனுப்புகி றார் (கொலோ 4:12; பில 23). இவரது பிரமாணிக்கமும், ஆற்றலும் மிக்க பணிக் காக ஆழ்ந்த நன்றியுணர்வோடு பவுல் இவரை ''அன்புள்ள உடன் ஊழியர்'' என் றும் ''கிறிஸ்துவின் விசுவாசமுள்ள பணியா ளர்'' என்றும் (1:7) பாராட்டுகிறார்.

**எப்பப்பிராதித்து** (EPAPHRODITUS - கவர்ச்சி யான, அழகான)

பவுலின் நண்பரும் உடன் ஊழியருமா வார். பவுல் சிறையில் இருக்கும்பொழுது அவரது தேவைகளில் அவருக்குத்துணை செய்யும்படி பிலிப்பியர்களால் அனுப்பப் பட்டவர் (பிலி 2:25). பிலிப்பை நகரத்தைச் சார்ந்தவர். பிலிப்பை நகரத் திருச்சபைக்குத் தலைவராக இருந்து பணிபுரிந்தவர். பவுல் சிறையில் நோயுற்றிருந்தபொழுது பிலிப்பை நகர மக்களின் நன்கொடைகளை யும் வாங்கிக் கொண்டு, அவரோடு தங்கி, உதவி புரிய அங்குச் சென்றார். அவர் பணி செய்துவரும்போது அவரும் நோய் வாய்ப் பட்டு இறக்கும் தருவாயில் இருந்தார் (2:30). பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இந்த எப்பப்பிராதித்தை ''ஆண்டவர் பெய ரால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; மதிப்புக் கொடுங்கள்'' என்று எழுதுகிறார்.

எப்பப்பிராதித்தின் சுருக்கமான பெயரே எப்பப்பிரா என்றாலும் இருவரும் வேறு வேறு மனிதர்கள். பில 23; கொலோ 4:12-இலும் சொல்லப்பட்ட எப்பப்பிராவும்,

பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் உள்ள எப்பப்பிராதித்தும் வேறுபட்டவர்கள். எப்பப்பிரா கொலோசைய, இலவோதிக்கயா, எராப்பொலி ஆகிய சபைகளில் பணி செய்தவர். எப்பப்பிராதித்து பிலிப்பியர்களிடம் பணி செய்தவர். இருவரும் நிச்சயமாக ஒருவராக இருந்திருக்க முடியாது.

எப்பிக்கூரர் (EPICUREANS)

எப்பிக்கூரஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட தத்துவ இயல் பள்ளியிலே பயின்று எப்பிக்கூரசைப் பின்பற்றும் ஆதரவாளர்கள். எப்பிக்கூரஸ் கி.பி: 341-இல் சாமோஸ் தீவில் ஏதன்சிய பெற்றோர்களுக்குப் பிறந்தவர். கி.மு. 270-இல் ஏத்தன்சிலேயே இறந்தார். கி.மு. 322-இல் குறிப்பிட்ட கால இராணுவப் பயிற்சியை ஏதன்சில் முடித்த பிறகு, அவரும் அவருடைய குடும்பமும் சாமோஸ் தீவைவிட்டு நாடு கடத்தப்பட்டுக் கொலோபோனில் அகதிகளாக ஏழ்மையில் அடிபட வேண்டியிருந்தது. இங்கேதான் வாழ்வின் துன்பங்களில் வாடிக்கொண்டிருந்தபோதிலும் அவருடைய தத்துவத்தை உருவாக்கினார். முக்கியமாக, கடவுளர் பயம், மனிதன் துன்பம், சாவு போன்றவைகளின் பயங்களிலிருந்து மீண்டு மகிழ்ச்சிக்குச் செல்லும் வழியாக அவருடைய கொள்கையை வகுத்துக் கொண்டார். கி.மு. 310-இல் மித்திலேனேயில் அவருடைய முதல் பள்ளியைத் திறந்தார். ஆனால் சிறிது காலத்திற்குள்ளாகவே மார்மோரா கடல் கரையிலே 'லாம்சாக்குஸ்' என்ற இடத்திற்கு மாற்றிவிட்டார். அங்கேதான் சாகும்வரை அவரோடிருந்த பல சீடர்களைக் கவர்ந்திழுக்க முடிந்தது. கி.மு. 306-இல் அவருடைய நண்பர்களும் ஆதரவாளர்களும் சேர்ந்து அவருக்குத் தோட்டத்தோடு சேர்ந்த ஒரு வீட்டை ஏதன்சு நகரிலே வாங்கினார்கள். இந்தத் தோட்டம் தான் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றின சீடர்கள் கூடும் மையமாக விளங்கியது. அவர்களுக்கு நட்பின் புகலிடமாக விளங்கியது. அவருடையபோதனை கிரேக்க உலகம் முழுவதிலும் அதற்கு மேலும் பரவியது. உண்மையில் உரோமானிய லுக்ரெசியஸ் (கி.மு. 99-55) என்ற கவிஞனின் பாடல்களில் அவருடைய தத்துவம் நன்றாக விளக்கப்படுகிறது.

8A

எப்பிக்கூரசின் தத்துவம் ஒழுக்கவியல் பாடமாகும். அறிவுவாத முறை இயல் சிறுபிள்ளைத்தனமாக அமைந்திருக்கிறது. அதாவது புலன் உணர்வுகளின் ஆழத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது. அரசியல் கொள்கை பற்றிய ஆர்வம் அவரிடம் இல்லை. அவருடைய அணுக்களைப் பற்றிய கோட்பாடு 'கடவுளர்களின் செயலே தேவையற்ற ஒரு உலகத்தை' விளக்கிக் காட்டுவதாக மட்டும் அமைந்திருக்கிறது. ஏனென்றால் கடவுள்கள், தேவதைகள், பூதங்கள், வழிபாடு, பலி கொடுத்தல், மறைபொருளைத் தேடுதல், அசரீரி, மாய மந்திரம், நட்சத்திர பலன், வரப்போகும் வாழ்வைப் பற்றிய அச்சங்கள், நம்பிக்கைகள், சுருக்கமாக மதத் தொடர்புடைய எதுவுமே அவருடைய மெய்விளக்கக் கோட்பாட்டு முறையிலே இடம் பெறவில்லை. மதமே பெரிய பகைவன், நேர்மைக்குக்கேடான செயல்களைத் தோற்றுவிப்பதும் தேவையற்ற பயங்களை உருவாக்குவதுமாகும்.

எப்பிக்கூரசின் கருத்துப்படி வாழ்வின் குறிக்கோள் மகிழ்ச்சி அல்லது பேரின்பம். அதை அடைய முதலில் கடவுள்கள் பற்றிய பயத்தைக் கைவிடவேண்டும். இவ்வுலகப் பொருள்களின் இயற்கைத்தன்மையைப் புலன்களால் உணர்ந்த மனிதனிடம் இந்தப் பயம் அறவே நீங்கிவிடுகிறது. இந்த உணர்ந்தறிவே பேரின்பம் ஆகும். லுக்ரெசியசின் பெரும் காவியம் மனிதர்களுக்கு அவர் கொண்டுவரும் கோட்பாட்டின் ஆழமும் அருமையும் என்ன என்பதை எடுத்துக்காட்டுகிறது. தெமாக்ரிட்டசின் ஒரு நூற்றாண்டுக்கு முந்தை கோட்பாட்டிலிருந்துதான் தன் 'அணுக்கள் பற்றிய கோட்பாட்டை'' உருவாக்கினார். ஆனால் ஒரு விதமான இயல் உயிர்வாதத்தோடு இணைத்துத் தன் பாணியில் உருவாக்கினார். அணுக்கள் முடிவில்லாத சுற்றோட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றன. இதுதான், தாவரங்கள், மிருகங்கள், மற்றும் மனிதர்களுக்குப் பல தோற்ற

உருவங்களை அளித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கு எந்த ஒரு தெய்வீக உதவியும் தேவையில்லை. எதிர்காலம் எந்த வகையிலும் தீர்மானிக்கப்படவில்லை. எந்த வகையிலும் மனிதர்கள் தங்கள் சக்திக்கு மேல் எந்தச் சக்திக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் பொம்மைகள் அல்லர். உடலைப்போல ஆன்மாவும் அணுக்களால் ஆன ஒன்று. பேரின்பத்தைத் தரும் வாக்குறுதி கொடுப்பதாக இருந்தாலும் சரி, தண்டனைகளைச் சொல்லிப் பயமுறுத்துவதாக இருந்தாலும் சரி வாழ்வின் கோட்பாடுகள் அனைத்தும் பொருளற்றவைகள். புனித பவுல் இறந்தோரின் உயிர்ப்பைப் பற்றி ஏதன்சில் பேசினபோது, எப்பிக்கூரசின் ஆதரவாளர்கள் அவரைக் கேலி செய்திருப்பார்கள். ''நாளை இது பற்றிப் பேசும்'' என்று உரைத்தவர்கள் எப்பிக்கூரசின் ஆதரவாளர்களாக இருக்க முடியாது *(அ.ப. 17:32).*

எப்பிக்கூரஸ் குறிப்பிடும் மகிழ்ச்சி, முறையில் இன்பங்களை மிகுதியாக நுகர்வதால் அல்ல. அவரும் அவருடைய ஆதரவாளர்களும் திருமணத்தை ஒதுக்கி வாழ்ந்தார்கள். இறைச்சி, மது இரண்டையும் தொடவில்லை. உடல் உறவினால் நன்மையை விட, தீமைதான் அதிகமாக இருக்கிறது என்று கருதினர். நட்புதான் பெரிய மகிழ்ச்சி. அதாவது 'கிறிஸ்தவ அன்பும்' எப்பிக்கூரசின் கோட்பாடு கூறும் நட்பும் ஏறக்குறைய ஒன்றுதான்.

எப்பிக்கூரசின் மெய்யியில் கோட்பாடு இயலுக்கு வரலாறு கிடையாது. அவருடைய போதனைகள் எந்த ஏற்றத்தாழ்வும் இல்லாமல் கூட்டிக் குறைக்கப்பட முடியாத கோட்பாடாகப் பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

**எப்பிராத்தா** (EPHRATHAH - *பலனுள்ள*) - ஆள்

எப்பிராத்தா காலேபின் இரண்டாம் மனைவி; கூர், அசூர் ' ஆகியோரின் தாய் *(1 நாள் 2:19.24.50; 4:4).* பெத்திலகேமுக்கு எப்பிராத்தா மறுபெயராக விளங்குவதால் இத்திருமணம் கலேபியர் வடப்பக்கம் சென்றதன் நினைவைப் பாதுகாத்து அமைந்துள்ளது.

**எப்பிராத்தா** (EPHRATHAH - *பலனுள்ள*) - இடம்

1. யூதா நாட்டு நகரம் பெத்திலகேமும் எப்பிராத்தாவும் ஒன்று என்று கருதப்படுகிறது. இருப்பினும் தாவீதின் குடும்பத்தாரை எப்பிராத்தாவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதால் இரண்டு நகரங்களும் ஒன்றல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இது முற்காலக் குடியிருப்பாகும். எப்பிராத்தா பிற்காலத்தில் பெத்திலேகேமோடு ஒன்றாக இணைந்துவிட்டது. முற்பிதாக்களின் காலத்தில் அது தனி நகரமாகத்தான் இருந்தது. ஏனென்றால், இராக்கேல் அங்குதான் வழியில் இறந்தாள் *(ஆதி 35:19).* ஒரே ஓர் இடத்தில் ''பெத்திலகேம்-எப்பிராத்தா'' என்று இரு பெயர்களும் இணைந்த கூட்டுக் கலவையாகக் காணப்படுகின்றன *(மீக் 5:2).* அருகிலுள்ள முகமதிய கல்லறைக்கூடம், பெத்திலகேமுக்குச் செல்லும் வழியிலுள்ள இராக்கேலின் கல்லறையைப் பற்றிய பாரம்பரியத்தைக் காத்து நிற்கிறது. பென்யாமின் பகுதியில் செலிசாவுக்கு அருகிலுள்ள இராக்கேலின் கல்லறை பற்றிய குறிப்பு *(1 சாமு 10:2)*, எப்பிராத்தா எருசலேமுக்கு வடக்கில் ராமாவுக்கு அருகில் *(காண்க.எரே 31:15)* உண்மையில் இருக்க வேண்டும் என்று சுட்டுகிறது.

2. பாலஸ்தீனத்தில் உள்ள மாவட்டம், பழைய எப்பிராயிம் கோத்திரத்தாரின் குடியிருப்பாகத்தான் தோன்றுகிறது *(சங் 132:6).*

**எப்பிராத்தியர்** (EPHRATHITE)

எப்பிராத்தா நகரைச் சேர்ந்த ஓர் ஆள். ஓர் இனப்பெயர் *(ரூத் 1.2; 1 சாமு 17:12).*

**எப்பிராத்து** (EPHRATH)

காலேபின் இரண்டாம் மனைவி. கூர், அசூர்-ஆகியோரின் தாய் *(1 நாள் 2:19).* இவளது மற்றொரு பெயர் எப்பிராத்தா என்பதாகும் *(1 நாள் 2:24; 4:4).*

**எப்பிராயீமிர் (EPHRAIMITE)**

எப்பிராயீம் கோத்திரத்தைச் சார்ந்தவர் (நீதி 12:5; 1 சாமு 1:1; 1 அர. 11:26).

**எப்பிராயீம் (EPHRAIM - பலனுள்ளதாக இரு, பலுகிப் பெருகு) - ஆள்**

எப்பிராயீம் என்பவர் யோசேப்பின் இரண்டாவது மகன். அதே பெயருடைய குடும்பப் பெயர் மூதாதையர். பிற்காலத்தில் இப்பெயர் இஸ்ராயேலைக் குறித்தது (ஆதி 41:52; 46:20). யாக்கோபு தலைப்பிள்ளைக்கு உரித்தான ஆசீரை எப்பிராயீமுக்கு அளித்து அவரை அவரது சகோதரன் மனாசேயுடன் சேர்த்துச் சுவிகாரம் செய்து கொள்கிறார் (ஆதி 48:17-20). இப்பெயர் இஸ்ராயேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தின் பெயராக இருக்கிறது. அந்தக் கோத்திரம் யாக்கோபின் ஆசீரில் குறிப்பிடப்படவில்லை (ஆதி 49). ஆனால் மோசேயால் யோசேப்பு ஆசீர்வதிக்கப்படும்பொழுது மனாசேயுடன், எப்பிராயீமின் பெயரும் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது (உப 33:17). யோசேப்பின் குடும்பத்தில் எப்பிராயீமும், மனாசேயும் உள்ளடங்குவர். முதன் முதலில் எப்பிராயீம் ஓர் இடத்தின் பெயராக இருந்தது. பின் இஸ்ராயேலர் அவ்விடத்தில் குடியேறியவர்கள், அப்பெயரைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர் என்றும் இருக்கலாம். அப்படியாயின் யாக்கோபின் கதையானது எப்பிராயீமின் முதன்மையையும், யோசேப்பின் குல இடப்பிரிவினையையும் காட்ட, கற்பனை மிகுந்த விளக்கமாக இருக்கலாம். எண்ணாகமத்தில் கணக்கெடுப்புப்படி எப்பிரர்யிமின் புதல்வர்களாக 40,500 பேரும் (1:33), 32,500 பேர் என்றும் (26:37) கூறப்பட்டுள்ளது. எப்பிராயீமின் வம்சங்கள் பற்றி எண் 26:35-27-இலும் 1 நாள் 7:20-27-இலும் கூறப்பட்டுள்ளது.

பெத்தேல், நாரான், கெசேர், செக்கேம், ஆசா, பேத்துசான், தானாக், மெகிதோ, தோர் போன்றவை எபிராயிமின் நகரங்கள் அல்லது ஊர்களாகும் (1 நாள் 7:28). யோசு 16:4-10-இல் எப்பிராயீமின் எல்லைப்பகுதிகளாகக் கூறப்பட்டிருப்பவை 1 நாள் 7:28-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிகளை விடச் சிறிய பகுதியையே குறிக்கிறது. எப்பிராயீம் வடபுறத்தில் மனாசேயைப் பாதிக்கும் விதத்தில் தனது எல்லைப்பகுதியை விரிவுபடுத்தியது. பழைய வரலாற்று நூல்களில் எப்பிராயீம் இஸ்ராயேல் கோத்திரங்களிலே மிகப் பெரிய, வலிமைமிக்க கோத்திரமாகத் தோன்றுகிறது. மேலும் எல்லைப்பகுதிகளைப் பெருக்க வேண்டும் என்று மனாசேயும், எப்பிராயீமும் மறைமுகமாக ஆவல் காட்டியதால் அவர்கள் தங்கள் சகோதரர்களாகிய இஸ்ராயேலர்களின் நிலங்களை அபகரிக்காமல், கானானியப் பகுதிகளையும், குடியேற்றப்படாத பகுதிகளையும் அவர்கள் பகுதியாக உரிமையாக்கிக் கொள்ளலாம் என்று யோசுவா நூலில் கூறப்பட்டுள்ளது (யோசு 17:14-18).

நீதிபதிகளின் காலத்தில் எப்பிராயீமுக்கும், மற்றக் கோத்திரங்களுக்குமிடையில் வழக்குகள் குறிக்கப்படுகின்றன. கிதேயோனின் தலைமையில் மனாசேயோடும் (நீதி 7:24-8:3) இபிதா தலைமையில் கிலயாத்தோடும் (நீதி 12:1-6) வழக்குகள் எழுந்தன. பின்னது இரத்தக் களரியாக மாறிற்று. இப்போரில் எப்பிராயீமியர் தோற்கடிக்கப்படுகின்றனர். முதலாம் எரொபயாம் எப்பிராயீமைச் சேர்ந்தவர். அரசின் பிளவு, எப்பிராயீமின் மிகப்பெரிய நகரமாகிய செக்கேமில் நிறைவேற்றப்பட்டது.

வடநாட்டு அரசு முழுவதும் இறைவாக்கினர்களால், சிறப்பாக ஏசயா, எரேமியா, எசக்கியேல், ஓசேயா போன்றவர்களால், எப்பிராயீம் என்ற பெயர் சிறப்புப்பெயராகப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதின் மூலம் எப்பிராயீமின் முக்கியத்துவம் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. எப்பிராயீமின் மொழியானது தனித்தன்மைமிக்க பேச்சு வழக்கைச் சார்ந்த கூறுகளைக் கொண்டிருந்தது என்பதை 'ஷிபோலெத்' (நீதி 12:6) என்ற கதை எடுத்துக்காட்டுகிறது.

யோசுவா, நீதிபதிகள், சாமுவேல், அரசர்கள் நூல்களில் இடம்பெறும் எப்பிராயீமின் மலைநாடு என்பது வடக்கே செக்கேமிலி

ருந்து தெற்கே பெத்தேல்வரை செல்லும் மத்திய மலைத்தொடரைக் குறிக்கிறது. எருசலேமிலுள்ள எப்பிராயிம் வாயில் என்பது எருசலேம் மதில்சுவரின் வடக்கில் உள்ள வாயிலாகும். எப்பிராயிமை நோக்கி இருப்பதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றது (2 அரச 14:13; 2 நாள் 25:23; நெக 8:16; 12:39).

**எப்பிராயிம்** (EPHRAIM - பலுகிப் பெருகு) - இடம்

பாகால்-காசோருக்கு அருகிலுள்ள ஒரு நகரம். இது அபிசலோம் தன் தங்கை தாமாரைக் கற்பழித்த ஒன்றுவிட்ட சகோதரன் அம்னோனைக் கொல்லத் திட்டம் தீட்டிய இடமாகும் (2 சாமு 13:23). 2 நாள் 13:19-இல் குறிக்கப்படும் எபரோனும் யோசு 18:23; 1 சாமு 13:17-இல் குறிக்கப்படும் ஒபிராவும், இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் செல்வாக்கைக் கண்டு அஞ்சிய யூதத் தலைவர்கள் அவரைக் கொலை செய்ய முடிவு செய்ததால், ஒருவேளை இங்குதான் இயேசு தன் சீடர்களுடன் தங்கியிருந்திருக்கக்கூடும் (யோவா 11:54). இந்த இடம் எருசலேமுக்கு வட-வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவிலுள்ள எத்-தையிபேயாக அடையாளம் காட்டப்படுகிறது.

**எப்பிராயிம் காடு** (FOREST OF EPHRAIM)

யோர்தானுக்குக் கிழக்குப் புறத்தில் பரவிக்கிடக்கும் மரங்களடர்ந்த எப்பிராயிமின் காட்டில்தான் அபிசலோம் கலகம் செய்த போது யோவாபின் தலைமையில் அனுப்பப்பட்ட படை அபிசலோமைத் தோற்கடித்தது. மரத்தின் கிளைகளில் தலைமுடி சிக்கிக் கொள்ள யோவாபு அபிசலோமை ஈட்டியால் குத்திக் கொன்றது இதே காட்டில்தான் (2 சாமு 8:6-17). தன் மகனுக்குத் தப்பியோடிய தாவீது அரசன், போருக்குமுன் மகனாயிமில் தஞ்சம் புகுந்திருந்ததால் (17:27) இக்காடு யாபோக்கு ஆற்றுக்கு அருகில் இருந்திருக்க வேண்டும்.

கானான் நாட்டை வெற்றி கொண்ட போது எப்பிராயிம் இனம் யோர்தான் நதிக்கு மேற்காகத் தன் சொத்துடைமைப் பகுதியைப் பெற்றது (யோசு 16:1-10). அதிக இடம் பெற ஆர்வம் கொண்டு (காண்க 17:14-18) எப்பிராயிமியரில் சிலர் ஆற்றைக் கடந்து கிலயாத்தில் குடியேறி அங்கு வாழ்ந்திருக்க வேண்டும் (நீதி 12:4). மற்றொரு கருத்துப்படி, எப்பிராயிமுக்கு யோர்தானுக்குக் கிழக்கில் நிலம் பங்கீடு செய்யப்பட்டிருக்கலாம் . இவர்களை இபிதா தோற்கடித்த பின் (12:2-6) இதைக் கிலயாத்திடம் இழந்தனர்.

**எப்பிராயிம் வாயில்** (EPHRAIM GATE)

எருசலேம் பழைய மதிற்சுவரின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஒரு வாயிலாகும். இங்கிருந்து செக்கேம் மற்றும் தமஸ்குவுக்குச் சாலை தொடங்கியது. யூதாவின் அரசன் அமசியா காலத்தில்-(கி.மு. 800) எப்பிராயிம் வாயில் மூலைவாயிலுக்குக் கிழக்கில் நானூறு முழ நீளம் தள்ளி இருந்தது (2 அர 14:13; 2 நாள் 25:23). நெகமியாவால் இரண்டாம் முறைகட்டப்பட்ட மதிற்சுவரிலும், தொடர்ந்து இந்த வாயிலுக்கு அதே ''எப்பிராயிம் வாயில்'' என்று நெகமியாவால் பெயர் சூட்டப்பட்டது (நெக 12:39). இங்கே நாடுகடத்தப்பட்டுத்திரும்பியவர்கள் கூடார விழாவைக் கொண்டாடினர் (8:6). திரும்பக் கட்டப்பட்ட எருசலேமின் சுவர்கள் அர்ப்பணிக்கப்பட்டபோது லேவியர்களின் இரண்டாவது குழு இங்கிருந்துதான் காவலர் வாயிலை நோக்கிச் சென்றது (12:39).

இந்த வாயில், மீன் வாயில், கென்னாத் அல்லது தோட்டா வாயில், நடுவாயில் (எரே 39:12) என்று பலவாறு அடையாளம் காட்டப்படுகிறது.

**எப்பிராயிம் மலைநாடு** (HILL COUNTRY OF EPHRAIM)

எப்பிராயிம் பகுதியில், யோர்தானுக்கு மேற்கேயுள்ள மத்திய மலைத் தொடருக்கு மேற்குப் பகுதியாகும் (யோசு 17:15). ஒருவேளை, சமாரிய மலைகளுக்கு மற்றொரு பெயராக இருக்கலாம் (எரே 31:5-6). திராட்சைத் தோட்டங்களுக்கும், ஒலிவ, அத்தி

மரங்கள் பயிரிடுவதற்கும் ஏற்ற செழிப்பான பகுதியாகும். இப்பகுதியில்தான் தெபோர இஸ்ராயேலுக்கு நீதி வழங்கினாள் (நீதி 4:5); சாமுவேலின் தந்தை, எல்கானா குடியிருந் தார் (1 சாமு 1:1).

**எப்பிரேமி சீரி கையெடுத்துச்சுவடி** (EPHRAERMI-SYRI CODEX)

இக்கையெழுத்துச் சுவடி கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தைச் சார்ந்ததா கும். இச்சுவடி சற்று விநோதமானது. இச் சுவடியில் முதலில், கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் எழுதப் பட்டிருந்தன. பிரதி பழைய ஏற்பாடு, எழு பது நூல் என்ற கிரேக்க விவிலியப் பிரதி. இங்குக் காணப்படும் கிரேக்க எழுத்துநடை, ஆரம்பத்தில் எழுதப்பட்ட முறையாகும். இதனைப் பன்னிருபாக எழுத்துமுறை என் பர். இம்முறைப்படி, எழுத்துக்கள் எல்லாம் பெரிய எழுத்துகளில் எழுதப்படும். சொல் லுக்குச் சொல் இடைவெளி கொடுக்கமாட் டார்கள். இந்த எழுத்து முறையுடன் எழுதப் பட்டிருந்த, இந்த விவிலியக் கைப்பிரதி அழிக்கப்பட்டுப் பிறகு அதன்மேல் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட, வேறொரு புத்தகத்தைப் படிவம் செய்தார் கள். அப்புத்தகம் எப்பிரேம் சீருஸ் என்பவர் எழுதியதன் கிரேக்க மொழிபெயர்ப்பாகும். இவ்வாறு பழைய விவிலியத்தின்மேல் புதி யது எழுதப்பட்டிருந்தாலும், பழைய எழுத்து சரியாக அழிக்கப்பட முடியாமல் பழைய விவிலிய வசனங்கள் நன்றாக வாசிக்கக் கூடிய வகையில் அமைந்திருக்கின் றன. இச்சுவடித் தொகுப்பில் முதலில் விவி லியத்தின் எல்லாப் புத்தகங்களும் இடம் பெற்றிருந்தன. ஆனால், தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் தாள்களில், யோபு, பழ மொழி, திருவுரை, ஞானம், சீராக், உன்னத சங்கீதம் என்ற புத்தகங்களின் ஒரு சில பகுதிகளே இடம் பெற்றிருக்கின்றன. புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில் தெசலோனிக்கேய ருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம், யோவான் எழுதிய இரண்டாம் திருமுகம் இவைகளைத் தவிர, மற்ற எல்லாப் புத்தகங் களிலிருந்தும் ஒருசில பகுதிகள் இடம் பெற் றிருக்கின்றன. மூலத்தொகுப்பில் முழு விவி லியமும் அடங்கியிருந்தாலும், இப்போது உள்ளவை சில பகுதிகளே. இத்தொகுப்பில் 209 தாள்கள் அடங்கியுள்ளன. பழைய ஏற் பாடு எழுதப்பட்ட 64 தாள்களும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட 145 தாள்களும் இதில் அடங்கும். இச்சுவடி முதலில் கீழைய நாட் டில் இருந்து வந்தது. அதனை ஜான் லாஸ் கார் என்பவர் பிளாரன்ஸ் நகருக்குக் கொண்டு வந்தார். அப்போது பிளாரன்ஸ் நகரில் லொரேன்ஸோதி மெதிசி ஆட்சி செய்து வந்தார். அவர் முயற்சியால் அவர் குடும்பத் தைச் சேர்ந்த கத்தரின் தி மெதிசி என்ற இளவரசியின் கையில் சென்று இந்தச் சுவடி சேர்ந்தது. இவள் இரண்டாம் கென்றி அர சனை மணந்துகொண்டபோது, தன்னுடன் இச்சுவடியையும் பிரான்சு நாட்டிற்குக் கொண்டு வந்தாள். அதனால் இச்சுவடி பிரான்சு நாட்டில் அரண்மனை நூலகத்தில் சுாக்கப்பட்டு வந்தது. தற்போது பாரிஸ் நகரில் உள்ள தேசிய நூலகத்தில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

**எப்புன்னே** (JEPHUNNEH - அவர் (இறை வன்) திரும்புவாராக)

1. காலேபின் தந்தை (எண் 13:6; 14:6.30.38; 26:65; 32:12; 34:19; உப 1:36; 14:6.13-14; 15:13; 21:12; 1 நாள் 6:56). யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். சில இடங்களில் கெனிசியர் என்று அழைக்கப்படுகிறார் (யோசு 14:6,14; எண் 32:12; காண்க. 1 நாள் 4:15).

2. ஆசேரின் கோத்திரத்தில் உள்ள எத்தே ரின் மகன் (1 நாள் 7:38).

**எப்பைனத்து** (EPAENETUS புகழ்ச்சிக்குரிய)

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பவுலிடமிருந்து வாழ்த்துப் பெறும் கிறிஸ்த வர்களுள் ஒருவர் (உரோ 16:6). ''என் அன் புக்குரியவர்'' என்றழைக்கப்படும் இவர் ஆசியா மாகாணத்தில் பவுலின் முதல் கனி யாவார். இவர் எபேசைச் சார்ந்தவராக இருக் கலாம். ஒருவேளை இவர் பிரிசிக்கா வீட் டைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். ஆனால், பவுல் உரோமையருக்குத் தன்

திருமுகத்தை எழுதியபோது, இவர் இன்னும் எபேசிலேயே தங்கியிருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சிலர் நம்புகின்றனர்.

உரோ 16:6-இல் சிலவாசகங்களில் அக்காயா வருகிறது. இது 1 கொரி 16:15-இலிருந்து இங்குப் புகுந்த தவறாக இருக்கலாம்.

**எமிமா** (JEMIMAH சின்னப் புறா)

யோபுவிற்குச் செல்வச் சிறப்புக்களை ஆண்டவர் மீண்டும் தரும்பொழுது பிறந்த மூன்று மகள்களில் முதலாமவள் (யோபு 42:14).

**எமுயேல்** (JEMUEL இறைவனது நாள்)

சிமியோனின் மூத்த புதல்வன் (ஆதி 46:10; யாத் 6:15). எண் 26:12; 1 நாள் 4:24;-இல் இவர் நெமுயேல் என்றழைக்கப்படுகிறார்.

**எமெக்-கெசீசு** (EMEK-KEZIZ - துண்டிக்கப்பட்ட பள்ளத்தாக்கு)

பென்யாமினுக்குக் கிடைத்த பகுதிகளில் இதுவும் ஒன்று. யோர்தான் சமவெளியில் எரிகோவுக்கும் பேத்து-கொகிலாவுக்கும் அருகில் அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது (யோசு 18:21). ஆனால் சரியான இடம் யாருக்கும் தெரியவில்லை.

**எமோரியர்** (AMORITES - மேற்குத் திசையினர்)

ஒரு மேற்குச் செமித்திய மக்கள். அவர்கள் பாதுகாப்புத் தேவதையின் பெயரிலிருந்து இப்பெயர் பெற்றனர். அக்காதிய இலக்கியத்தில் இப்பெயர் அவர்கள் தோன்றியதாகக் கருதப்படும் நிலப்பரப்பையும் குறித்தது. தொடக்கத்தில் மேற்கு மெசபொத்தாமிய பாலைவனத்தையும் பிற்காலத்தில் சீரியா, பாலஸ்தீனத்தையும் குறித்தது.

கி.மு. மூன்றாம் ஆயிரமாண்டின் பிற்காலத்தில் எமோரியர்கள் பல்மைராப் பகுதியில் ஒரு நாடோடி இனமாகக் குறிக்கப்படுகின்றனர். சுமேரியர்கள் இவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதியதாகத் தெரிகிறது. 23-21-நூற்றாண்டுகளில் இவர்களில் பெரும்பகுதியினர் வளமிக்க பிறை வடிவப்பகுதியில் புகுந்தனர். இக்காலத்தில்தான் பாபிலோனியாவின் ஊரின் மூன்றாம் அரச மரபு அழிந்தபின், இவர்கள் அங்குப் பெருங்கூட்டமாகப் புகுந்து நிலையாகக் குடியேறினர். பாபிலோனியா இவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பாபிலோனின் முதல் அரச மரபில் புகழ்பெற்ற அரசன் கமூராபீ ஆவார் (1792-1750). இவர் எமோரிய நகர நாடுகளின் கூட்டணிக்குத் தலைமை தாங்கினார். இக்கால எமோரியப் பண்பாடு பற்றி 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட அக்காதிய வாசக ஏடுகள், இக்காலத் தேல்-கரீரியில் இருந்ததாகக் கருதப்படும் யூப்பிரத்திசின் மேற்குக் கரையிலுள்ள மாரியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 14-ஆம் நூற்றாண்டு எகிப்திய ஏடுகளும், ஆப்பு எழுத்து வாசகங்களும் வடக்கில் சீதோன் தமஸ்குவில் இருந்து அர்வாவரை பரவியிருந்த சீரியாவில் உள்ள எமோரிய அரசைக் குறிக்கின்றன. அமர்னா ஏடுகள் பல எமோரிய நகர அரசுகளைக் குறிக்கின்றன. இவை கபீரு படைகளுடன் தொடர்பு கொண்டதாகவும் குறிக்கின்றன. எமோரியர் என்ற பெயர் ஒரு நிலப்பரப்பைக் குறிக்கும் பெயராக ஏழாவது நூற்றாண்டுவரை காணப்பட்டாலும் ஓர் அரசியல் சக்தியாக, 1000-ஐ ஒட்டி அரமேயர் ஆதிக்கம் சீரிய மெசபொத்தாமியாவில் பரவியதோடு முடிந்துவிட்டது எனலாம்.

விவிலியத்தில், இஸ்ராயேலருக்குமுன் கானானில் வாழ்ந்த இனங்களில் எமோரியரும் ஓர் இனமாவர். நாடுகளின் பட்டியலில் (ஆதி 10:16) எமோரியர், கானானின் புதல்வர்களும் காமின் வழித்தோன்றல்களுமான கானானியரோடு பாகுபடுத்தப்படுகின்றனர். ஆபிரகாமின் பயணங்கள் இவர்களது குடிபெயர்தலோடு தொடர்பு படுத்தப்படுகிறது. பாலஸ்தீனத்தில், இஸ்ராயேலருக்கு முன் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்களைப் பொதுவாக இப்பெயர் குறிக்கிறது (ஆதி 15:16; யோசு 24:15; நீதி 6:10; 1 அர 21:26; ஆமோ 2:9-10). குறுகிய பொருளில் கானான் மலைப் பகுதியில் வாழ்ந்தவர்களைக் குறித்தது (எண் 13:29; உபா 1:7). விவிலியத்தில்

நடு வெண்கலக் காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த இன, சமூக அரசியல் கலப்பு இனத்தைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு வாசகத்தில் ''உன் தந்தை எமோரின்'' என்ற வாசகம் எமோரியருக்கும், இஸ்ராயேலருக்கும் இடையேயுள்ள உறவைச் சுட்டுகிறது (எச 16:3.45). இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தை வென்ற போது, எமோரியர், கானானியர் ஆகிய இருவரையும் பிரித்துக் காட்டுவது முடியாத காரியமாகும். ஒரு பொருளை உணர்த்தும் இருசொற்களாகப் பயன்படுகின்றன (காண்க. ஆதி 10:16). யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள எமோரிய நகர அரசுகளின் அரசர்களாகிய கெசிபோனின் அரசனான சீகோனையும், பாசானின் அரசனான ஓகையும், இஸ்ராயேலர் தொடக்கத்தில் வென்று அழித்தது பொருள் பொதிந்த நிகழ்ச்சிகளாகும் (எண் 21:21-35; உப 2:24-3:11; 4:47; யோசு 2:10; 9:10; சங் 135:11; 136:17-22). பின்பு யோசுவா யோர்தானுக்கு மேற்கில் ஆயி என்ற இடத்தில் எமோரியர்களை எதிர்கொண்டு அவர்களை வென்றார் (யோசு 7:7). மேலும், எருசலேம், கெபிரோன், யரிமூத்து, இலாக்கீசு மற்றும் எகிலோன் ஆகிய நகரங்களின் கூட்டணியைக் கிபயோனிலும் (10:1-27), யாபீனுக்கு ஆதரவு அளித்த வட எமோரியர்களைக் காசோரிலும் (11:1-14) வென்றார். எமோரியர்களின் ஒரு சிறு பகுதியினர் இஸ்ராயேலரோடு சுமூகமாக வாழ்ந்ததால் தப்பினர் (1 சாமு 7:4; 2 சாமு 21:2; எஸ் 9:1). ஆனால், சாலமோன் அவர்களைக் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தினார் (1 அர 9:20-21; 1 நாள் 8:7-8).

மற்றத் தேவதைகளோடு இவர்கள் தொடர்பு கொண்டிருந்ததால் இஸ்ராயேல் பாரம்பரியம் எமோரியர்களைத் தீயவர்களாக விவரிக்கிறது (ஆதி 15:16; யோசு 6:10; 1 அர 21:26; 2 அர 21:22; லேவி18:28; 20:22-23; யோசு 24:15).

**எம்மாவு** (EMMAUS சூடான கிணறு, சூடான ஊற்று)

யூதேயாவிலுள்ள நகரம் இது. சிலுவை மரணத்திற்குப்பின்பு இயேசு உயிர்த்து இவ்வூருக்குச் சென்று கொண்டிருந்த இரண்டு வழிப்போக்கர்களோடு நடந்து அவர்களுக்குக் காட்சியளித்தார். விவிலியத்தில் இந்நகரத்தின் பெயர் ஒருமுறை மட்டுமே (லூக் 24:13) சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு உயிர்த்த பின்பு கிளயோப்பாவிற்கும் அவருடைய நண்பருக்கும் வழியில் துணைவனாய்ச் சென்று-எம்மாவு நகரம்வரை சென்று-அன்று அவர்களோடு தங்கலானார் (லூக் 24:13 தொ).

எம்மாவு நகரம் இதுதான் என்பதை உறுதிப்படுத்துவற்கு ஒரே ஆதாரம் என்னவென்றால் எருசலேமிலிருந்து ஏழுகல் தொலைவில் எம்மாவு இருக்கிறது என்று லூக்கா நற்செய்தியாளர் சொல்லுவதுதான். அந்த நகரம் எங்கு இருந்தது என்பது பற்றி ஒரு தெளிவான கருத்தும் இல்லை. பல இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன.

அ) கொலோனியா:- எருசலேமிலிருந்து மேற்கில் யோப்பாவிற்குச் செல்லும் பாதையில் 5.6 கி.மீ. தொலைவில் உள்ளது. லூக்கா சொல்லுகின்ற தூரத்தில் இது பாதி அளவு தான். இங்கு வெர்பேசியன் 800 முதிய உரோமை வீரர்களைக் குடியேற்றினான். இந்த இடம் அநேகமாக யோசு 18:26-இல் சொல்லப்படுகின்ற மோசாவாக இருக்கலாம்.

ஆ) ஏல்-குபேய்பே:- எருசலேமின் மேற்கில் 7 கல் (11 கி.மீ) தொலைவில் உள்ளது. ஒரு பழைய மரபானது இவ்விடத்தில் காஸ் டெல்லும்-எம்மாவு என்ற உரோமையர் கோட்டையாக இருந்ததாகக் கூறுகிறது. இதைக் கி.பி. 1099-இல் சிலுவை வீரர்கள் கண்டுபிடித்தனர். இதுதான் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். புனித கிளயோப்பாவுக்கு ஆலயம் கட்டப்பட்ட போது, இந்தக் கோட்டை அழிக்கப்பட்டது.

இ) அம்வாஸ்:- எருசலேமிற்கு மேற்கில் யோப்பா செல்லும் பாதையில் 31 கி.மீ. தொலைவில் அய்யலோன் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. யூதா மக்கபேயர்களின்

எம்மாவுவோடு (1 மக் 3:40.57) ஒன்றாக்கப் படுகிறது. யூலியு ஆப்பிரிக்கானுஸ் என்பவ ரால் கட்டப்பட்டு, 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின் புதிய ஏற்பாட்டு நிக்கோபொலி என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதைப் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று ஏற்றுக் கொண்டு இவ்விடத்தில் சிலுவை வீரர்கள் ஓர் ஆலயம் கட்டினர். இதை எல்லாரும் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று ஏற்றுக் கொண்டார்கள். மறுப்பதற்கு உரிய ஒரே ஆதாரம் எருசலேமி லிருந்து 31 கி.மீ. தொலைவு என்பதுதான்.

**எயத்திராய்** (JEATHERAI)

கெரிசோமிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 6:21). 6:41-இல் இவர் எதினீ என்று அழைக்கப்படுகிறார். ஒரு வேளை இதுவே சரியானதாக இருக்கலாம். எழுத்தர்கள் இதைத் தவறாக எயத்திராய் என்று எழுதியிருக்கலாம்.

**எயாரிம்** (JEARIM காடுகளின் மலை)

யூதாவின் வடக்கு எல்லையில் அமைந் துள்ள மலை (யோசு 15:10). இந்த முகட்டில், எருசலேமுக்குக் கிழக்கில் 14.5 கி.மீ. தொலைவில், இக்காலக் கேஸ்லாவான கெசா லோன் அமைந்திருக்கிறது. அநேகமாக, எரு சலேமுக்கு வடக்கே 14.5 கி.மீ. தொலைவில் இருக்கும் சாரிஸ் என்ற கிராமம் அமைந் துள்ள சேயீர் மலையே இம்மலையாக இருக் கலாம் என்று கருதுகின்றனர் அறிஞர் சிலர்.

**எயியேல்** (JEIEL இறைவன் குணப்படுத்தி னார் அல்லது பாதுகாத்தார்)

1. ரூபன் கோத்திரத்துத் தலைவர்களில் ஒருவர் (1 நாள் 5:7).

2. கிபயோனில் வாழ்ந்து வந்த மக்களின் மற்றும் அரசன் சவுலின் முன்னோருமாவார் (1 நாள் 9:35; 8:29).

3. தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்க ளுள் ஒருவர் (1 நாள் 11:14). அரோ யேரிய ரான கோத்தாமின் மகன். இவர் மேற்சொல் லப்பட்டவராகவே இருக்கலாம்.

4. வாயில் காப்பவராகவும், ஆலயப் பாடக ராகவும் இருந்த ஒரு லேவியர். பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டபோது வீணை வாசித்தவருள் ஒருவர் (1 நாள் 15:18.21; 16:51). 1 நாள் 15:24-இல் இவர் எகியா என்று அழைக்கப்படுகிறார். 16:5-இல் இப்பெயர் யாக்சீயேலா என்று வாசிக் கப்படுவது நன்று (காண்க. 15:18.20).

5. ஆசாப்பின் குலத்தில் உதித்த ஒரு லேவியர் (2 நாள் 20:14). யகசியேலின் முன்னோர். இவர் அரசன் யோசபாத்துக்கு வெற்றியை முன்னறிவித்தார். இவர் (4)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

6. அரசன் ஊசியின் செயலர். இவர் 2 நாள் 26:11-இல் வரும் படைவீரர் அட்டவணை யைத் தயார் செய்தவர்.

7. யோசியாவின் காலத்தில் லேவியர் குலத்தலைவர். கடந்தேகும் விழவுக்குக் (பாஸ்கு) காணிக்கை அளித்தவர் (2 நாள் 35:9).

8. எஸ்ராவின் வற்புறுத்தலுக்கு இணங்கப் புறவின மனைவியை விலக்கிய ஒரு யூதர். நெபோவின் மகன் (எஸ் 10:43).

**எயுசு** (JEUZ உற்சாகப்படுத்தபபட்ட)

சாரயிமின் மகன். ஒரு பென்யாமின் குடும் பத் தலைவர் (1 நாள் 8:10).

**எயூசு** (JEUSH இறைவன்) விடுவிக்க வருவா ராக)

1. ஒகலிபாமா வழியாக எசாவுக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (ஆதி 36:5.14). இவரும் இவருடைய சகோதரர்களும் ஏதோ மிய குலங்களுக்குத் தலைவர்களானார்கள் (ஆதி 36:18; 1 நாள் 1:35).

2. பிலிகானின் மகன். பென்யாமின் இனத் தைச் சேர்ந்த வலிமை மிக்க வீரர் (1 நாள் 7:10).

3. ஏசேக்கின் இரண்டாம் மகன். பென்யா மின் இனத்தைச் சேர்ந்தவர் சவுலின் வழிவந் தவராகத் தோன்றுகிறது (1 நாள் 8:34).

*4. ஒரு கெர்சோமிய லேவியர். சிமயியின் புதல்வர் (1 நாள் 23:10-11). இவருக்குச் சில புதல்வர்கள் மட்டுமே இருந்ததால், இவரது குடும்பம் பெரியாவின் குடும்பத்தோடு சேர்த்து ஒரே குடும்பமாய்க் கணிக்கப்பட்டது (20:11).*

*5. அரசன் இரகபெயாம், மகலாத்து ஆகியோரின் மகன் (1 நாள் 11:19).*

**எயுவேல்** (JEUEL இறைவன் மீட்டுவிட்டார், குணமாக்கி விட்டார்)

*1. நாடுகடத்தலிலிருந்து திரும்பிவந்து செலேமில் குடியேறிய யூதா இனத்தைச் சேர்ந்த செராகின் வீட்டுத் தலைவர் (1 நாள் 9:6).*

*2. எலிசாபானின் புதல்வர்களில் ஒரு லேவியர். எசக்கியா ஆலயத்தைப் புதுப்பித்த போது ஆலயத்தைச் சுத்தம் செய்த 14 பேர்களில் ஒருவர் (2 நாள் 29:13). எயியேல் (4)-இல் குறிக்கப்படுபவர் இவராக இருக்கலாம்.*

*3. அதோனிக்காமின் புதல்வர். எஸ்ராவுடன் எருசலேமுக்குத் திரும்பியவர்களுள் ஒருவர் (எஸ் 8:13).*

**எவோதியா** (EUODIA செழிப்பான பயணம்)

*பிலிப்பிய திருச்சபையில் ஒரு கிறிஸ்தவப் பெண். இத்திருச்சபையில் தொடக்கத்திலிருந்தே பெண்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர் (.ப. 16:12-15). பிலி 4:2-இல் இவளையும், சிந்திக்காவையும், வேற்றுமைகளைத் தவிர்த்து ஆண்டவருக்குள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று புனித பவுல் அறிவுரை கூறுகின்றார். அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகச் சண்டையடித்துக் கொண்டார்களா, கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட பிளவுகளினால் பிறந்த பூசலா என்பது பற்றி நாம் தெரிந்துகொள்ள வழி இல்லை. இப்பெண்களுக்கு உதவி செய்ய அழைப்புப் பெறுபவர் ''தோள் கொடுத்து உழைத்த உண்மையான தோழர்'' (4:3) எப்பப்பிராதித்துவாக இருக்கலாம் (2:25).*

**எரகுமேல்** (JERAMMEEL இறைவன் இரக்கம் கொள்வாராக)

*1. தாமார் வழியாக வந்த யூதாவின் வழித்தோன்றல். கெசிரோனின் முதல்மகன். (1 நாள் 25:9.25-27). காலேபின் சகோதரன் (25: 42). இவர் எரகுமேலின் இனப்பெயர்த் தலைவராவார். இவர்கள் யூதாவின் தென் எல்லையில் தாவீது சிக்கிலாகில் ஆக்கீசின் பணியில் இருந்தபோது, இவர்களது பகுதியைக் கொள்ளையடித்தார் (1 சாமு 27:10). பிற்காலத்தில், இங்கு வாழ்ந்த யூதா பெரியவர்களுக்குக் கொள்ளைப் பொருளின் ஒரு பகுதியைத் தாவீது அளித்தார் (30:29). 1 நாள் 2:4 கால்வழி உறவுமுறையைவிடத் தத்து உறவு முறையையே குறிக்கிறது என்றும், இது எரகுமேலியர்களின் சமூக வரலாற்றைப் பிரதிபலிக்கிறது என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.*

*2. ஒரு மெராரிய லேவியர், ஒரு கீசுடைய (3) மகன் (கீசு சவுலின் தந்தை அல்லர்) (1 நாள் 24:29).*

*3. யோயாக்கிம் அரசரின் ஓர் அதிகாரி; இறைவாக்கினரான எரேமியாவின் சம காலத்தவர். எரேமியாவையும் பாரூக்கையும் பிடிக்க அனுப்பப்பட்டவர்களில் ஒருவர். ''அரசனுடைய மகன்'' என்ற பட்டம், இவரது அரச குலப்பிறப்பினை உணர்த்தலாம் (எரே 36:26).*

*4. யூதாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஒரு செமித்திய இனம். சவுலுக்குத் தப்பி, தாவீது நாடோடியாகச் சிக்கிலாகில் தங்கியிருந்தபோது இவர்களோடு தொடர்பு கொண்டார் (1 சாமு 27:10; 30:29). அடிமைக் காலத்திற்குப் பிறகுதான் எரகுமேலியர் யூதாவைச் சேர்ந்த ஓர் எபிரேய இனமாகக் குறிக்கப்படுகின்றனர் (1 நாள் 2:9.25-27.33.42).*

**எரத்து** (ERASTUS அன்பு செய்யப்பட்டவர்)

*உரோ 16:23-இல் உரோமையிலுள்ள சகோதரக் கிறிஸ்துவர்களுக்கு வாழ்த்துக் கூறும் கொரிந்து நகரப் பொருளாளர் எரத்து. இந்த*

மாதிரி ஊழியர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் பொதுவாக அடிமைகள் அல்லது அடிமைக் குடியிலிருந்து வந்தோர் ஆவர். கொரிந்தில் கி.பி. 50-100 காலத்திய இலத்தீன் மொழி பொறிக்கப்பட்ட எழுத்துத் தகடு கண்டெடுக்கப்பட்டது. அந்தப் பெயர்களில் எரத்து உரோமானிய ஆட்சியில் மேற்காப்பாளராகவும், தமது சொந்தச் செலவில் ஒரு தெருவைப் பாவியவராகவும் குறிக்கப்படுகிறார். அ.ப. 19:22-இல் பவுலின் துணைவரும் எபேசிலிருந்து மக்கதோனியாவுக்குத் திமோத்தேயுடன் உடன் சென்றவருமான ஓர் எரத்து குறிக்கப்படுகிறார். 2 திமோ 4:20-இல் கொரிந்துவில் தங்கிவிட்ட ஓர் எரத்துவுக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார். எரத்து என்ற பெயர் பலராலும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டாலும், மேல் கூறப்பட்ட யாவரும் ஓர் ஆளையே குறிக்கலாம்.

**எராகு** (JERAH நிலா)

யொக்கிதானின் புதல்வர். சேமின் வழித்தோன்றல் (ஆதி 10:26; 1 நாள் 1:20). இப்பெயர் அரபு நாட்டில் உள்ள ஓர் இடமாக இருக்கலாம். இவ்விடம் கசா-மாவேத்துக்கு அடுத்தபடியாக இருப்பதாகக் குறிப்பிடப்படுவதால் மக்ரா கடற்கரையில் அமைந்திருக்க வேண்டும். இங்கு எராக்கோன்கோம் என்ற நகரம் தோலமியால் குறிப்பிடப்படுகின்றது.

**எராப்பொலி** (HIERAPOLIS - புனித நகரம்)

எராப்பொலி என்பது சிறிய ஆசியாவிற்குத் தென்மேற்கில் உள்ள நகரமாகும். இந்நகர் லீக்கஸ் பள்ளத்தாக்கில் இப்பெயருடைய நதியை நோக்கி உள்ள நகராகும். கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்ட மிக முக்கியமான உரோமை நகரங்களில் இதுவும் ஒன்றாகும். அனாத்தோலிய தேவர்களுக்கு வழிபாட்டு மையமாக இருந்த இவ்விடம் காலப்போக்கில் சிறந்த வியாபாரத் தலமாகவும் மாறியது. செலூக்கிய மன்னர்களின் அரசாட்சியின் கீழ் இருந்த இந்நகர் கி.மு. 133-க்குப் பின் உரோமையர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. உரோமையர்களின் கீழ் இந்நகர் இருந்த பொழுது, சிறந்த, செழிப்பான நகராக விளங்கியது. சில நேரங்களில் பூகம்பத்தால் இந்நகர் பாதிக்கப்பட்டது.

இந்நகரிலுள்ள பாறைகளிலிருந்து வெளிப்படும் வெப்ப நீருற்றுகளிலிருந்து வழிந்தோடும் சூடான தண்ணீர் மருந்துப் பொருளாக விளங்கியது. இந்நகர் இருந்த இடத்தில் இரண்டு அரங்கங்களும், குளியலறைகளும் காணப்படுகின்றன. மெய்யியலார் எப்பிக்தேத்தஸ் என்பவரும், ஆதி கிறிஸ்தவ எழுத்தாளர் பப்பியஸ் என்பவரும் இவ்விடத்தில் தோன்றியவர்களாவர்.

பிற இன சமயங்களின் வழிபாட்டு மையமாகத் திகழ்ந்த இவ்விடம் கி.பி. முதல் நூற்றாண்டில் ஒரு கிறிஸ்தவ மையமாக மாறியது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும். பவுலோடு சிறைப்பட்டிருந்த எப்பாப்பிரா இந்நகரில் பணிபுரிந்தார் (கொலோ 4:12-13). யுஸ்தினியன் இந்நகரை ஒரு மறைமாவட்ட மையமாக்கினார். இதன் ஆயர்கள் பைசான்டைன் பட்டியலில் காணப்படுகின்றனர்.

இது கோலோசைக்கு வடமேற்கில் 19 கி.மீ. தொலைவிலும் இலவோதிக்கயாவுக்கு வடக்கில் 10 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலப் பாமுக்காலே என்ற இடமாக இருக்கலாம்.

**எரிகோ** (JERICHO நறுமணம், நிலா நகர்)

1. எரிகோ யோர்தான் பள்ளத்தாக்கில் தென் கடைசியில் சாக்கடலுக்கு வடமேற்கில் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மிகப்பெரிய, முக்கியமான நகரமாகும். இது பனைமர நகரம் என்றும் அழைக்கப்பட்டது (உப 34:3; நீதி 1:16; 3:13; 2 நாள் 28:15). விவிலியத்தில் வரும் எரிகோ உணர்வுகளை எழுப்பும், பொருள்பொதிந்த வரலாற்றையுடையது. எரிகோ, சமவெளி என்று குறிப்பிடப்படும் செழிப்பான சமவெளியில் (யோசு 4:13; 2 அரச 25:5; 34:3), யோர்தான் ஆற்றுக் கருகில் மோவாபுக்கு நேர்மேற்கில் (எண் 22:1; யோசு 13:22). பென்யாமினின் கிழக்குக் குன்றுக்கருகில் (யோசு 2:16,22), எப்பிராயிமையும் பென்யாமினையும் பிரிக்கும் எல்

லையில் (16:1-2) அமைந்துள்ளது. இது எருசலேமிலிருந்து கிழக்கு வடகிழக்கில் 28 கி.மீ. தொலைவிலும் யோர்தானுக்கு மேற்கில் 11 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இன்பமான சூழ்நிலைகள் கொண்டது. பழங்கால ஆசிரியர்கள் அதன் பனைமரங்களையும் பழ மரங்களையும் போற்றியுள்ளனர். அதனால் சிலர் இப்பெயருக்கு ''நறுமண மிக்க இடம்'' என்றும், வேறுசிலர் அங்கு நடந்த சந்திர வழிபாட்டைச் சுட்டும் விதத்தில் ''சந்திர நகர்'' என்றும் பொருள் கொடுப்பர்.

2. விவிலியக் குறிப்புகள்:-

கிழக்கு மேற்காகச் செல்லும் முக்கிய வணிகப் பாதையில் இது அமைந்திருந்தமை இந்நகரை வணிகத்திற்கு முக்கிய நகரமாக்கியது. போர் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்திருந்தது. ஆகவே, யோர்தானைக் கடந்ததும் இதைக் கைப்பற்றுவது இஸ்ராயேலருக்கு அவசியமாயிற்று.

இந்நகரைக் கடக்குமுன் யோசுவா இரு ஒற்றர்களை வேவுபார்க்க அனுப்பினார். அந்நகரில் இருந்த இராகாப் என்ற வேசி அவர்கள் இருவரையும் ஒளித்துவைத்துப் பாதுகாப்பளித்தாள் (யோசு 2). அவர்கள் திரும்பி வந்து எரிகோ நாட்டு மக்கள் அனைவரும் இஸ்ராயேலர்களுக்கு அஞ்சிச் சாகிறார்கள் என்று யோசுவாவிடம் கூறினர். இஸ்ராயேலர் கூட்டம் கூட்டமாயும் அணி அணியாயும் எரிகோ சமவெளியிலும் நாட்டுப்புறங்களிலும் நடந்து சென்றனர் (4:13). அவர்கள் நாளைக்கு ஒருமுறை வீதம் ஆறுநாட்கள் நகரைச் சுற்றி வந்தனர். ஏழாம் நாளில் எழுமுறை நகரைச் சுற்றிவந்து, ஆரவாரமாய் ஆர்ப்பரித்துக் கூவ, எக்காளங்கள் முழங்க, நகரின் சுவர்கள் கடகடவென்று இடிந்து விழுந்தன. இஸ்ராயேலர் இராகாபையும் அவளுடைய குடும்பத்தையும் தவிர மற்றெல்லாரையும் கொன்று குவித்தனர். அப்பொழுது யோசுவா எரிகோ நகரைச் சாபமிட்டு ''எரிகோ என்னும் இந்நகரை மீண்டும் கட்டும் மனிதன் சபிக்கப்பட்டவன்'' என்று கடுமொழி கூறினார் (யோசு 6).

எரிகோவும் அதைச் சுற்றிய பகுதிகளும் பென்யாமினுக்குப் பங்கிட்டளிக்கப்பட்டது (18:12.21). பென்யாமினுக்கும் யோசேப்புக்கும் கிடைத்த பகுதிகளின் எல்லையில் இருந்தது (6:1.7; 18:120). நீதிபதிகள் காலத்தில் மோவாபிய எகிலோன் எரிகோவைக் கைப்பற்றி, இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்தினார் (நீதி 3:13). பிற்காலத்தில் அது அம்மோனியர் ஆட்சியின் கீழ் இருந்தது. அதன் அரசன் காஹுன் இஸ்ராயேலரோடு நட்புறவு கொண்டிருந்தார். அதனால், அவரது தந்தை இறந்தபோது அவருக்கு ஆறுதல் கூறத் தாவீது தூதுவர்களை அனுப்பினார். ஆனால், கானான் அவர்களது தாடியை மழித்து அவமானப்படுத்தினார். ஆதலால், அவர்களது தாடி வளரும்வரை அவர்கள் அங்கேயே தங்க வேண்டியிருந்தது (2 சாமு 10:1-5; 1 நாள் 19:1-5).

ஆகாபு ஆட்சிக் காலத்தில் (கி.மு. 9-ஆம் நூற்றாண்டு) பெத்தேலைச் சேர்ந்த ஹீயேல் இந்நகரை மீண்டும் கட்ட, அதற்கு அடிக்கல் நாட்டும்போது தன்முதல் மகனையும், அதன் வாயில்களை அமைக்கும்போது தன் கடைசி மகனையும் பலியிட்டான் (1 அரச 16:34). இவ்வாறு யோசுவாவின் சாபம் நிறைவேறியது (யோசு 6:26). இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு இந்நகர் இறைவாக்கினர் குழுவினரை, எலிசா சந்தித்த போது, எலிசா, தன் குரு எலியா விரைவில் தன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார் என்று அறிகிறார் (2 அரச 2:4-5). இங்குதான் எலிசா எலியாவின் வாரிசாக ஏற்றுக்கொள்ளப்பட்டு (2:15-18), தன் முதல் அருஞ்செயலைச் செய்தார் (2:19-22). சீரியா-எப்பிராயிம் போரின் போது (கி.மு. 734) எப்பிராயிம் தலைவர்கள் யூத அகதிகளுக்கு இங்குதான் ஒய்வளித்தனர் (2 நாள் 28:15). யூதாவின் கடைசி அரசன் செதேக்கியா நெபுக்கதுனேசாரிடமிருந்து தப்பியோடியபோது, இங்குதான் பாபிலோனியர்களால் பிடிபட்டார் (2 அரச 25:5-6; எரே 39:5-6; 52:8-9). இஸ்ராயேலர், பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின், எரிகோவில் மீண்டும் குடியேறினர் (எஸ் 2:34). இவர்கள், எருசலேம்

மீண்டும் கட்டப்பட்ட போது உதவி செய்த னர் (நெகே 3:2). பாக்கீது அரசன் எரிகோ வின் கோட்டை மதில்களையும் கதவுகளை யும் பலப்படுத்தினார் (1 மக் 9:50). இங்கு தான் சீமோன் கொல்லப்பட்டார் என்று தோலமி கூறுகின்றார் (16:11 தொ).

ஒத்தமை நற்செய்திகள், இந்நகரோடு தொடர்புடைய மூன்று நிகழ்ச்சியுரைகளைத் தருகின்றன. திமேயுவின் மகன் பார்த்திமேயு என்ற குருடர் இங்கு, பார்வை பெற்றார் (மத் 20:29-34; மாற்கு 10:46-52; லூக் 18:35-43). லூக்காமட்டும் ஆயக்காரர்களின் தலைவன் சக்கேயுவைப் பற்றிக் கூறுகிறார் (லூக் 19:1-10). எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் பாதையில் நல்ல சமாரியன் உவமை அமை கிறது. இப்போதும் இப்பாதையில் திருடர் கள் நடமாடிக் கொண்டுள்ளனர்.

3. தொல்பொருள் ஆய்வு:-

தேல் எஸ்-சுல்தான் என்றபகுதியில் பரவ லாக அகழ்வாய்வுகள் நடந்துள்ளன. இவற் றில் யோசுவா படையெடுத்தபோது இருந்தி ருக்கக்கூடிய இந்நகரின் சுவர்கள், சான்று களில் கவனம் செலுத்தப்பட்டது. எரிகோவில் கி.மு. 9000 முதல் மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. 8000-6000 ஆண்டைச் சார்ந்த ஒரு கற்றவர் உலகத்தில் எரிகோ மிகப்பழைய நகரங்களில் ஒன்று என்ற பாரம்பரியத்தை வலியுறுத்துகிறது. இந்நகரில் மக்கள் வாழ்ந்த மற்றக் காலங்கள் 4000-ஐயும் 3200-2800-ஐயும் 2100-1900 ஐயும், 1900-1500-ஐயும் சேர்ந்தாகத் தெரிகிறது.

ஆய்வுகளின்படி, அதிகக் கனமில்லாத வெளிச்சுவரும், செங்கற்களால் கட்டப்பட்ட பாதுகாப்பு உட்சுவரும் அடங்கிய இரட் டைச் சுவர்தான் இஸ்ராயேலர்முன் விழுந்த சுவராகும் என்பர் சிலர். வேறுசிலர் இச்சுவர் யோசுவா காலத்திற்கு முந்தியதாகும் என் பர். யோசுவா காலத்தில் அழிந்துபோன நகரத்துக்குரிய சான்றுகள் இன்மை, யோசுவா, இந்நகரை வென்ற நிகழ்ச்சியை ஒரு புதிராகவே வைத்துள்ளது. அவர்கால நகர் அரித்துப்போய்விட்டது, அல்லது மற்ற சக்திகள் அதன் சுவடுகளை அழித்துவிட் டன, அல்லது அக்காலநகர் மற்றொரு குன் றின்மேல் (தேல்) அமைந்திருக்கவேண்டும் என்பன மற்ற விளக்கங்களாகும்.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டுவரை எரிகோ குடியேற்றப்படாமலிருந்ததாகத் தெரிகிறது. சுவரற்ற குடியேற்றம் பற்றிய தடயங்கள் 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரிகி றது. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாபிலோனியர் படையெடுப்புக்குப் பின் இவ்விடம் கைவிடப்பட்டது. 2-ஆம் நூற் றாண்டில் பழைய ஏற்பாட்டு நகருக்குத் தெற்கில் 1.5 கி.மீ. தொலைவிலுள்ள வாடி-கெல்ட் என்ற ஓடையின் இருகரைகளிலும் அமைந்துள்ள தூலூல் அபூ எல்-அலயீக் என்ற இடத்தில் மீண்டும் குடியேற்றம் நடந் தது. கசமோனிய அரசர்கள் தங்கள் குளிர் கால உறைவிடமாக இவ்விடத்தைத் தேர்ந் தெடுத்தனர். பெரிய ஏரோது இந்தப் ''புதிய ஏற்பாட்டு எரிகோவையும்'' அதன் அரண் களையும் மிகப் பகட்டாகப் புதுப்பித்தார். இங்குப் பூங்காக்களையும், விருந்தினர் விடுதி களையும், உரோமையர் பாணிக் குளியல கத்தையும், பொதுக்கட்டடங்களையும் அமைத்தார். இந்நகர் கி.பி. 68-இல் வெசுபே சியன் படையெடுப்பில் தப்பியது. பார்-கோக்பா காலத்திலும் (கி.பி. 132-135) பேர்டோ யாத்திரீகர் காலத்திலும் (333) இந் நகரில் மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

சிறிது காலத்திற்குப் பின் இந்நகரமும் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாகக் கிழக் கில் 1.5 கி.மீ. தொலைவிலுள்ள இடத்தில் ஒரு பைசான்டைன் நகரம் எழுந்தது. இவ்வி டத்தில்தான் இக்கால எரிகோ அமைந்துள் ளது.

## எரித்தல், எரிதல் (BURNING)

எரித்தல் என்பது விவிலியத்தில் பல இடங்களில் வருகின்றது. இது உண்மையி லேயே பொருட்களை எரித்தலைக் குறிக்க லாம். உவமையாகக் கோபம், மோகம் வேதனை, வலி என்ற உணர்வுகளைக் குறிப் பிடுவதற்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டி

ருக்கின்றது. எரியும் பொருட்கள் என்று விவிலியத்தில் குறிப்பிடப்படுவன: எரியும் முட்புதர் (யாத் 3:2), பீடத்தின் நெருப்பு (லேவி 6:9), விளக்கு (லேவி 24:2; லூக் 12:35; யோவா 5:35), மலை (உப 5:23), தூபம் (1 அர 9:25; எரே 1:17), நாணல் (யோபு 41:20), கரி (ஏசா 6:6; உரோ 12:20), நிலக்கீல் (ஏச 34:9), மணல் (ஏச 35:7), புகையும் திரி (ஏச 42:3), தீப்பந்தம் (ஏச 62:1), எரிகின்ற ஆள் (தானி 3:6.11.15-16), நகரம் (திருவெளி 18:18) என்பன ஆகும்.

உவமையாகக் கூறப்படுவன: யாவேயின் கோபம் (யோசு 7:26; சங் 69:24), வேதனை (யோபு 30:30; சங் 38:7), மோகம் (ஏச 57:5) முதலியன.

**எரிபாய்** (JERIBAI யாவே வழக்குரைக்கிறார்)

எல்னாமின் புதல்வர்களுள் ஒருவர். தாவீதின் வலிமை வாய்ந்த ப்டை வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:46; 2 சாமு 23).

**எரிபொருள்** (FUEL)

பழங்காலத்தில் இஸ்ராயேலர்கள் எரிப்பதற்குப் பல்வேறு வகையான பொருட்களைப் பயன்படுத்தினார்கள். மரங்கள், முந்திரிக்கொடிகள், முட்செடிகள், கோரைப் புல், சாணம், கரி, உமி, வைக்கோல், புதர், புல், செத்தை ஆகிய பொருட்களை எரிப்பதற்குப் பயன்படுத்தினார்கள். மரங்கள், கேதுரு, மருத மரக்கட்டைகளிலிருந்து (ஏச 44:14-16) சுள்ளிவரை (1 அர 17:12) வேறுபடலாம். முட்செடிகள் சாதாரண எரிபொருளாகப் பயன்பட்டன. கட்டைக்கரியின் பயனை எபிரேயர் நன்கு அறிந்திருந்தனர் (எரே 36:22). கட்டைக்கரி குவித்து வைக்கப்பட்டதாகத் தெரிகிறது (யோவா 21:9). வைக்கோலும் புல்லும் அதிக வெப்பத்தை அளித்து விரைந்து எரிந்து விடும். ஆனால், சாணமானது மெதுவாக ளிந்து குறைந்த வெப்பத்தையும் மிகுதியான புகையையும் தரும்.

**எரிமசு** (HERMES தேவதை)

கிரேக்கக் கடவுள் செயுசின் புதல்வர், அப்பொல்லோவின் ஒன்றுவிட்ட உடன் சகோதரன். இவர் ஏமாற்றுபவர்கள், திருடர்களுக்குத் தலைவர். நேர்மையாகவோ, நேர்மையில்லாத வழியிலோ அதிர்ஷ்டத்தைக் கொணரும் தெய்வம். அதனால்தான் திருடர்களுக்கும், கள்ள வியாபாரிகளுக்கும் காப்பாளராக இருக்கிறது இத்தெய்வம். இவர்தான் கடவுளுக்கெல்லாம் தூதுவர். எனவே, தூதரின் கோலை அதாவது மந்திரக் கோலைக் கையில் வைத்திருப்பார். மேலும் இவர்தான் பேச்சாற்றலின் கடவுள். எப்பொழுதாவது தான் இத்தெய்வத்திற்குப் பொது வழிபாடு நடைபெறும். ஆனால் பிள்ளைப் பேற்றைத் தரும் தெய்வமாகக் குடும்பங்களில் பரவலாக வணங்கப்படும் தெய்வம். தூணில் படைப்பாற்றல் சின்னமாக மார்போடு கூடிய குறிவடிவத்தில் வழிபடப்பட்டார். வீட்டுக் கதவுகளில் இச்சின்னம் பதிக்கப்பட்டிருக்கும். பழைமை வாய்ந்த நம்பிக்கையில் இது நடைபெறலாம். இன்னொரு நோக்கும் இருக்கிறது. இவர் பாதாளத்திற்கு இறந்தவர்களை வழிநடத்துகிறவர். மெர்குரி கிரகத்தோடு ஒப்பிடப்படுகின்றார். கிரேக்க ஹெலன் காலத்திய கலப்புச் சமயத்தில் எகிப்தியக் கடவுள் தோத்தோடு ஒன்றாகக் கருதப்படுகின்றார். பேரின்பத்தை அடையும் வழியை வெளிப்படுத்துகிறவர்.

இலிசித்திராவில் மூடப்பக்தியுள்ள மக்கள் அப்போஸ்தலர்களைக் கடவுள்களாகக் கருதினார்கள் ''பவுல் முக்கிய பேச்சாளராயிருந்ததால், அவரை எரிமசு (மெர்குரி) என்றும், பர்னபாவை யூப்பித்தர் என்றும் அழைத்தனர்'' (அ.ப. 14:12). எரிமசு என்றால் பேச்சாளரின் தெய்வம், தெய்வீகத்தூதர் என்று அவர்கள் நினைத்தார்கள்.

**எரிமசு** (HERMES - ஆள்)

பவுல் வாழ்த்துத் தெரிவிக்கிற ஒரு நபர் (உரோ 16:14). அவரைப் பற்றி அதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லை.

**எரிமா** (HERMAS)

உரோமையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர். இவருக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார் (உரோ 16:14).

**எரிமாவின் ஆயர்** (SHEPHERED OF HERMAS)

இந்நூல் உரோமை இறைவாக்கினர் எரிமா என்பவரால் எழுதப்பட்ட வெளிப் பாட்டு நூலாகும். எரிமா என்பவர், உரோ மையருக்கு எழுதிய திருமுகம்.16:14-இல் குறிப்பிடப்பட்டுள்ள எரிமா என்ற நபரோடு ஒன்றுபடுத்தப்படுகிறார் அல்லது தொடர்பு படுத்தப்படுகின்றார். கி.பி. 140-இல் எரிமா வின் சகோதரர் பத்திநாதர் உரோமையின் ஆயராக இருந்த பொழுது இந்நூல் எழுதப் பட்டது என்று உரோமைத் திருச்சபையினு டைய முராத்தோரியின் பட்டியல் கூறுகின் றது. இந்நூலில் தரப்பட்டிருக்கும் முதல் நான்கு காட்சிகள் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தவையாகும். இதில் வரும் இரண்டாவது காட்சியில் கிள மெண்து என்பவர் இந்நூலினை மற்றச் சமூ கங்களுக்கு அனுப்புகின்ற பொறுப்பாளரா கக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலானது மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கிறது:- 1) ஐந்து காட்சிகள். 2) பன்னிரண்டு கட்டளைகள் அல்லது ஆணை கள்.3) பத்து உவமைகள்.

முதல் நான்கு காட்சிகளில் வெளிப்படுத் துபவராக உரோதா என்ற பெயருடைய பெண் காட்டப்படுகின்றாள். இவளை எரிமா என்பவர் தன் அடிமையாக இருந்த பொழுது தனக்குப் பணிப்பெண்ணாக இருந் ததாகக் கூறுகின்றார். இப்பெண்ணை வய தான பெண் என்ற நிலையிலிருந்து இளம் பெண்ணாகவும், அழகிய பெண்ணாகவும், மாற்றம் அடைந்ததாகக் காட்டுவது திருச் சபையின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றத் தைப் பிரதிபலிக்கும் அடையாளமாகும். ஐந்தாவது காட்சியில் மன்னிக்கும் தூதன் என்ற பெயரைக் கொண்ட ஒரு ஆயன் வெளிப்படுத்துபவராக விளங்குகின்றார்.

ஆண்டவரின் இரண்டாம் வருகையும், திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் மனம் மாறுவதற்காக இரண்டாவது முறை கிடைக் கப்பெற்ற வாய்ப்பையும் வெளிப்படுத்து வதுதான் இந்த வெளிப்பாட்டு இலக்கியத்தின் மையக்கருத்தாகும். விசுவாசத்தை மறுத லித்த பெரிய தவறைச் செய்தவர்களைக் கூட மன்னிப்பதற்கு மன்னிக்கும் ஆயன் தயாராக இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமுழுக்குப் பெற்றபின் மிகப் பெரிய தவறு செய்ததால் திருச்சபையை விட்டு வெளியேற்றப்பட்ட கிறிஸ்தவர்களை மீண் டும் திருச்சபையோடு உறவுகொள்வதை ஏற் றுக்கொள்ள மறுத்த ஒரு கடினமான திருச் சபையின் மனநிலையில் ஏற்பட்ட மாற் றத்தை எரிமாவின் போதனை நமக்கு உணர்த்துகின்றது (பெபி 6:4-8; 10:26-29; 12:16-17).

மூன்றாவது காட்சியில் திருச்சபையானது ஒரு கோபுரமாக உருவகப்படுத்தப்பட்டுள் ளது. இவ்வாறு திருச்சபையைக் குறிக்கும் அடையாளமாக விளங்கும் கோபுரத்தைக் கிறிஸ்தவப் புண்ணியங்களாகிய விசுவாசம், தன்னடக்கம், தாழ்ச்சி, அறிவு, மதிப்பு, மாசற்ற தன்மை, அன்பு போன்றவைகள் தாங்கிக் கொண்டிருப்பதாக அடையாள மொழியில் கூறப்பட்டுள்ளது. எரிமாவின் கண்ணோட்டத்தின்படி இரு மனத் தன்மை தான் பாவத்திற்கு ஆணிவேராகும். இதிலி ருந்துதான் வெளிவேடம், பொறாமை, நேர் மையற்ற தன்மை, பெருமை, காமம், போன்ற தீமைகள் உருவெடுக்கின்றன. இவர் பணக்காரர்களைக் கடுமையாகச் சாடு கின்றார். இவர் தரும் அறநெறி ஒழுக்கம் சார்ந்த போதனைகள் அனைத்தும் யூத, கிரேக்க அறநெறிப் போதனைகளில் காணப் படுகின்றன. இருப்பினும் இவர் அப்போதனை களைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் தருகின்றார். இவரது அறநெறிப்போதனை கள் அனைத்தும் பன்னிரண்டு குலத்தந்தை யர்களின் அறநெறிப் போதனைகளுக்கு இணையாக இருக்கின்றன.

மனிதனுள் இரண்டுவகையான ஆவிகள் இருந்து செயல்படுகின்றன என்ற அவரது கொள்கையினை விளக்குவதில் தனி ஆர்வம் காட்டினார். இயேசுவின் மனிதத் தன்மை யைப் பொறுத்த வரையில் ''சுவிகாரக்'' கொள்கையினரின் கருத்துக்களைப் பிரதி

பலிக்கின்றார். இறைவனின் மகனைத் தூய ஆவியோடு ஒன்றுபடுத்துகின்றார். இதுவே அவரது கிறிஸ்து இயல் ஆகும்.

எரிமாவின் கருத்துக்களும், அவர்தரும் உருவகங்களும் புறவினத்தாரால் எழுதப் பட்ட நூல்களில் காணப்படும் கருத்துக்களுக் கும் உருவகங்களுக்கும் இணையாக விளங்கு கின்றன என்பது சில மதிப்பீட்டாளர் களின் கருத்து. இவரது நூலில் ஆங்காங்கே பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளையும் தந் துள்ளார். திருமறைக்குப் புறம்பான சில நூல்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கின்றார். இவரது வெளிப்பாட்டு நடைக்கு இணை யான கருத்துக்கள் இரண்டாவது எசுதிரா ஆகமத்தில் காணப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் மத்தேயு, மாற்கைப் பற்றி அறிந்திருப்பவர் போல் தோன்றுகிறது. ஆனால் லூக்கா, யோவான் நற்செய்தியைப் பற்றி அதிகமான அளவிற்கு அறிந்திருக்கமாட்டார். பவுலின் திருமுகங்கள், எபிரேயர் திருமுகம், முதல் பேதுரு, திருவெளிப்பாடு போன்ற நூல் களில் காணப்படும் சில கருத்துக்களை அங் கங்கே தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிச்சேய தந்தையர்களுக்கு எதிரானவர் களால் இந்நூல் மிகவும் உயர்ந்ததாகக் கருதப் பட்டது. திருமுழுக்குப் பெறுவதற்காகத் தயாரிப்பு நிலையில் இருப்பவர்களுக்கு அற நெறிப் போதனைகள் கொடுக்க இந்நூல் பயன்படுத்தப்பட்டது.

**எரிமோகேன் (HERMOGENES)**

''பிகெல்லு, எரிமோகேன் உட்பட்ட ஆசி யாவிலுள்ள அனைவரும்'' பவுலைக் கைவிட்டனர் என்று குறிப்பிடப்படுபவர்க ளில் இவரும் ஒருவர் (2 திமோ 1:15). கைவிட்டது இறையியல் காரணங்களுக்காக இருக்கலாம் அல்லது உரோமையில் பவு லின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள வேண் டும் என்பதும் காரணமாக இருக்கலாம். ''பவுலின் பணிகளில்'' (2:1.4.11-14) எரிமா எரிமோகேன் செப்புக் கொல்லனாகவும், தேமாவோடு ''நேர்மையின்மை நிறைந்தவ னாக''வும் வர்ணிக்கப்படுகின்றார்.

**எரிமோத்து (JERIMOTH வீங்கிய, பருத்த)**

1. பெலாவின் மகன், பென்யாமின் கோத் திரத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 7:7). ஆனால் இத்தலைமுறை செபுலோன் தலைமுறையா கக் கருதப்படுகின்றது.

2. சிக்கிலாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட ஒரு பென்யாமின் படைவீரர் (1 நாள் 12:5).

3. ஒரு மெராரிய லேவியன். மூசியின் மகன் (1 நாள் 24:30): 23:23-இல் வரும் எரெமோத்தும் (3) இவரும் ஒருவரே.

4. ஏமானின் புதல்வர்களில் ஒருவனான ஒரு லேவியப் பாடகர் (1 நாள் 25:4). 24:22-இல் குறிப்பிடுகின்ற எரெமோத்து (4) இவரே.

5. தாவீதின் மகன்; ரொபோவாமின் மனைவி. மகாலத்தின் தந்தை (2 நாள் 11:18).

6. எசேக்கியா காலத்தில் கோவில் நேர்ச் சைப் பொருட்களைக் கண்காணித்தவர்க ளுள் ஒருவர் (2 நாள் 31:13).

**எரியா (JEJAH யாவே காண்பாராக)**

கெபிரோனியர்களின் தலைவர் (1 நாள் 26:31). மற்ற இடங்களில் இவர் எரீயா என்றழைக்கப்படுகிறார்.

**எரீயா (JERIAH யாவே பார்ப்பாராக)**

ஒரு லேவியர் குடும்பத் தலைவர். கெபி ரோனின் மூத்த மகன். கொகத்தின் வழித் தோன்றல் (1 நாள் 28;19; 24:23). தாவீது காலத்தில் கெபிரோனியர்களுக்குத் தலை வர். 26:31-இல் இவர் எரியா என்றழைக்கப் படுகிறார்.

**எரியும் முட்புதர் (BURNING BUSH)**

கோரேபு என்னும் மலையருகில் மோசே எரியும் முட்புதரில் இறைவன் பிரசன்னத்தை உணர்ந்ததை இது குறிக்கிறது (யாத் 3:2-4).

புதர் என்ற வார்த்தை இங்கும் உப 33:16-இலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன் உண்மையான செடிவகையைக் கண்டுபிடிக்க அறிஞர்கள் முயன்றனர். ஆனால் முடியவில்லை. எனினும் இது ஒரு வகைக் கூர்மையான முட்களையுடைய புதர் எனலாம். இது சூரிய ஒளியைப் பிரதிபலிக்க வல்ல ஒளிவிடும் ஒருவகைப்புதர் என்று சிலர் கருதுகின்றனர். சீனாய் மலையில் உள்ள புனித கத்தரீனம்மாள் துறவு மடத்தின் துறவிகள் இங்குச் சீரியாவில் மட்டுமே காணப்படும் ஒருவகைப்புதர்ச் செடியை வளர்த்து வருகின்றனர். இதுதான் மோசே பார்த்த புதர்வகை என்றும் கூறுகின்றனர். ஆனால், இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யாருமே அறியாத ஒருவகைப் புதர்ச்செடி தான் இங்கு இருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

யாத் 3:2 இல் ஆண்டவரின் தூதர் எரியும் புதரில் மோசேக்குத் தோன்றியதாகவும், 3:4-இல் யாவேயோடு மோசே நேரடியாகப் பேசியதாகவும் நாம் வாசிக்கிறோம். இறைவனே அங்குத் தோன்றினர் என்பதை மறைத்துக் கூறத் தூதர் தோன்றினார் என்று எழுதியிருக்கக்கூடும். எது எவ்வாறு இருப்பினும் அங்கே மோசே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்தார்.

இங்கு நாம் செமித்திய மொழியின் இரு அம்சங்களை நோக்க வேண்டும்.

அ) இவர்கள் நாடகப்பாணியையும் சித்திர மொழியையும் ஆன்மீக மற்றும் மனத்தைச் சார்ந்த சில அனுபவங்களையும் எடுத்துக் கூறப் பயன்படுத்தினர்.

ஆ) புதுமைகளும் விநோதமான சில நிகழ்ச்சிகளும் வாழ்வில் ஒத்துக்கொள்ளப்பட்ட சில உண்மைகள். இதற்கெதிரான பகுத்தறிவு வாதம் எதுவும் எழவில்லை. இவை அறிவு சார்ந்த விளக்கங்களுக்குட்பட்டவையன்று. எனவே நவீன காலத்தில் ஆராய்ச்சி நடத்துபவர்கள் இத்தகைய செமித்தியப் பழக்கங்களை மனதில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கு இயற்கை சார்ந்த விளக்கங்கள் கூற முயல்வது இவற்றின் ஆன்மீக மதிப்பை அழித்துவிடும்.

**எரியேல்** (ERIEL இறைவன் காண்பாராக)

தோலாவின் புதல்வர்களில் ஒருவர் அல்லது வழித்தோன்றல். இசக்கார் இனத்தில் ஒரு குடும்பத் தலைவர் (1 நாள் 7:2).

**எரியோத்து** (JERIOTH கூடாரங்கள்)

கெசிரோனின் மகனான காலேபின் மனைவியருள் ஒருவர் (1 நாள் 2:18). மேசரோடிக் வாசகம் தெளிவாக இல்லை. எரியோத்து அசுபாவின் மற்றொரு பெயராக இருக்க வேண்டும், அல்லது அசுபா என்பவள் எரியோத்து என்ற மற்றொரு மனிதருக்கு மனைவியாக இருந்திருக்க வேண்டும்.

**எருசலேம்** (JERUSALEM அமைதியின், நிறைவின் நகரம்)

எருசலேம் இஸ்ராயேலின் ஒன்றுபட்ட அரசிற்கும். யூதாவிற்கும் தலைநகராக உள்ள தாவீதின் நகரம்; யூதர், கிறிஸ்தவர் மற்றும் இஸ்லாமியரின் புனித நகரம். ஆனால் கிறிஸ்தவ நோக்கில், இறைத்திட்டத்தில் இதனுடைய பாகம் பழமையுடையதாகும். இப்போது இதற்குப் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட ஆழ்ந்த பொருள் மட்டுமே நிலைத்துள்ளது.

1. புவியியல்:-

பாலஸ்தீனத்தின் மத்திய மலைத்தொடரை ஒட்டியும், மத்தியதரைக்கடலினின்று 58 கி.மீ. கிழக்கிலும், சாக்கடலின் வட முனையினின்று 26 கி.மீ. மேற்கிலும் எருசலேம் அமைந்துள்ளது. செக்கேமிலிருந்து கெபிரோனுக்குச் செல்கின்ற பழைய வடக்கு-தெற்கான சாலைக்குச் சற்றுக் கிழக்கிலும் எரிகோவிலிருந்தான கிழக்கு-மேற்கான சாலையின் முடிவிலிருந்தும், மற்றும் மேற்காக மத்தியதரைப் பகுதியினின்று பல்வேறு முனைகளுக்கு மேற்காக நடத்திச் செல்பவைகளினின்றும் 13 கி.மீ. தொலைவிலும், எருசலேம் அமைந்துள்ளது. நகரானது, பென்யாமினுடைய மலைப்பகுதியின் மேட்

டுச் சமவெளிக்கு ஒத்த மட்டத்தில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 640-770 மீ (1500-2100 அடி) உயரத்தில் அமைந்துள்ளது.

இப்பழமையான நகரம் கிழக்கே, ஒலிவ மலையினின்று அதனைப் பிரிக்கின்ற கித்ரோன் பள்ளத்தாக்கையும், மேற்கிலும் தெற்கிலும் இன்னோம் பள்ளத்தாக்கையும் எல்லையாகக் கொண்டுள்ளது. நகரின் வடக்கு எல்லைகள் மத்திய மலைத்தொடருடன் இணைந்துள்ளதால், அதற்குத் திட்டவட்டமான விவரிப்பு அளிக்கமுடியாது. இத்தன்மை, புறத்திலிருந்து வரும் தாக்குதலுக்கு எளியதாக்குகிறது. இந்நகரானது, தீரோபேயன் என்னும் மத்திய வடக்கு தெற்குப் பள்ளத்தாக்கினால் இரண்டு முக்கிய மலை முகடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளத்தாக்கு நகரின் தென்கிழக்கு மூலையில் இன்னோம் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகளை இணைத்து ''வாடி ஏன்-நார்'' என்னும் ஓடையாக அமைந்துள்ளது. தீரோபேயன் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கிழக்கு மலை முகடு, வடக்கில் மோரீயா மலை அல்லது ஆலய மலையையும், தெற்கில் ஒடுக்கமான சரிவான ஒப்போலையும் கொண்டுள்ளது. இன்னோம் மற்றும் தீரோபேயன் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலுள்ள பெரிய மேற்கு மலை முகடு தீரோபேயனின் ஒரு கிளையாகிய கிழக்கு-மேற்குக் குறுக்குப் பள்ளத்தாக்கினால் மேலும் பிரிக்கப்படலாம்.

நவீன கிறிஸ்துவப் பகுதிக்கு ஒத்த வடக்கிலுள்ள காரேப் மலையானது, பழைய நகரின் மிக உயர்ந்த பகுதியாக இருந்தது. அதன் கீழான பகுதிதான், சீயோன் மலை என்று இப்போது தவறாக அழைக்கப்படுகிறது.

நகரின் முக்கிய தண்ணீர் வசதியானது, தாவீதினுடைய மூல நகரின் வடமுனைக்கு வெளியே கித்ரோன் பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்டிருந்த கன்னியின் நீரூற்று எனப்படும் கீகோன் நீர்ச்சுனையாகும். நகரினுடைய வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் சுனையின். நீர் நகருக்கு எப்போதும் கிடைக்குமாறு சுரங்க வழிகள் அல்லது குடைந்த வழிகள் அமைக்கப்பட்டன. அதனுடைய தொடர்ச்சியற்ற நீரோட்டமானது கால்வாய்களையும், சேர்த்து வைக்கும் குளங்களையும் கட்டுவதை அவசியப்படுத்தியது. இன்னோம் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகள் சேருமிடத்திலிருந்து 210 மீ (690 அடி) தெற்கே அமைந்துள்ள ஏன்ரோகேலானது (அநேகமாக நவீன, பிர்-அய்யூப்) சுற்றுச் சுவர்களுக்கு உட்பட்ட நகருக்குக் குறைந்த அளவிலேயே அணுகக் கூடியதாய் இருந்ததால் நீர் அளிக்கும் முக்கிய மூலமாக அமையவில்லை எனலாம்.

2. வரலாறு:-

குடியேற்றம் பற்றிய கற்கால மற்றும் இடைக்கற்காலத்திய தொன்மையான சுவடுகள் இரப்பாயிம் பள்ளத்தாக்கை நோக்கி அமைந்துள்ள இன்னோம் பள்ளத்தாக்கின் மேற்கு மலைமுகட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உண்மையான எருசலேமானது முதலில் செம்புக் காலத்தில் (கி.மு. நான்காவது ஆயிரமாண்டின் இறுதியில்) ஒப்பேல் மலைமுகட்டில் குடியேற்றம் செய்யப்பட்டது. பின்னர் மூன்றாவது ஆயிரமாண்டில் சுவரெழுப்பப்படாத கிராமம் தோன்றியது. எபிலா பலகைகளின் (2400) முன்பதிப்புகளில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள 'சலிம்' இதுவாக இருக்கலாம்.

மேற்கு முகட்டையும் ஒப்பேலின் கிழக்குச் சரிவுகளையும் சூழ்ந்துள்ள மதில்சுவருடைய நகரின் எஞ்சிய இடிபாடுகள் இடைப்பட்ட வெண்கலக் காலத்தினைக் குறிக்கின்ற (2100-1555) பத்தொன்பதாம் நூற்றாண்டு எகிப்திய வசை நூல்களில் அவ்சாமென் அல்லது ரூஷாலிமம் என்று அழைக்கப்படும் இப்பகுதி மெல்க்கிசேதேக்கு அரசனாக இருந்த சாலேமாக இருக்கலாம் (ஆதி 14:18).

பிந்தைய வெண்கலக் காலத்தில் (1550-1200), இந்நகரானது கானானியரின் (எபூசியர்) ஆதிக்கத்தின் கீழ் வந்தது (ஆதி 10:16). பதினான்காம் நூற்றாண்டின் அமர்னா கடிதங்களில், எருசலேமின் எமோரிய அரசனா

கிய அப்து-கெபா, கபீருவின் செயலைப்பற்றியும் முறையிடுகிறார். அவரே மற்றப் பாலஸ்தீன நகரங்களைச் சூறையாடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறார். மக்களின் கலப்பினத்தன்மை எச 16:3.45-ஐ நினைவுபடுத்துகிறது. பென்யாமினுக்கு ஒதுக்கப்பட்ட நிலப் பரப்பில் சேர்க்கப்பட்டிருந்தாலும் (யோசு 18:16,28) (எபூசு எனப்பட்ட) நகரானது முன்னேறும் இஸ்ராயேலரை எதிர்த்து நின்று (10:1 தொ), கூட்டமைப்பின் காலம் முழுவதும் எபூசியரின் ஆதிக்கத்திலேயே இருந்தது (15:63; நீதி 1:21; 3:5; 1:8). ஏறத்தாழ 1300-ஐ ஒட்டிக் கிழக்குச் சரிவுகளில் கற்கள் பாவப்பட்டன (2 சாமு 5:9; 1 நாள் 11:9).

கெபிரோனில் தன்னுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில், இஸ்ராயேலுக்கும் யூதாவிற்கும் அரசனாக அறிவிக்கப்பட்டபின், தன்னுடைய இரட்டை அரசுரிமையைச் செயல்படுத்தப் பொதுவான இடமாக, தாவீது எருசலேமை நாடினார். மதில் சூழ்ந்த நகருக்குக் கீகோன் நீர்ச்சுனையினின்று தண்ணீர் செல்லும் செங்குத்தான சுரங்கக் கால்வாய் வழியாகத் தமது தளபதி யோவாபை அனுப்பாமல் கால்வாயினின்று நீர் செலுத்தும் பகுதிக்குச் செல்கின்ற சுரங்கவழியை வெட்டி விடுவதன் மூலம், தாவீது இதனை நிறைவேற்றுகின்றார் (2 சாமு 5:6-8; 1 நாள் 11:4-6). வியாபார நோக்கிலும், இராணுவ நோக்கிலும் முதன்மையான இடமாக இல்லாத, ''சீயோனின் கோட்டையானது'', தாவீதின் தலைநகருக்கு ஒரு ஞானமுள்ள அரசியல் தேர்வாக விளங்கியது. யூதாவிற்கும் பென்யாமினுக்கும் இடையில் இதுவரை வெற்றி கொள்ளப்படாத பகுதியின் மத்தியில் அமைந்து, ''தாவீதின் நகரானது'', அரசனின் சமய மையமாகியது. மேலும் தாவீது அநேகமாக நகரின் வட பகுதியிலுள்ள மோரீய மலையில், அரவுனாவின் புனித சூட்டடிப்புக் களத்திற்குக் கூடாரத்தையும், உடன்படிக்கைப் பேழையையும் மாற்றி அமைத்தார் (2 சாமு 6:1-15; 24:18-25; 1 நாள் 22:1; 2 நாள் 3:1). தாவீது, மில்லோவையும் நகர மதில்சுவரையும் பழுது பார்த்துச் சீரமைத்து (2 சாமு 5:9), அரண் சூழ்ந்த நகருக்குள் ஓர் அரண்மனையும் கட்டினார் (5:11). ஒப்பேலுடன் தொடர்பு கொண்ட நிலையில், அவருடைய அரச கல்லறை எங்கு அமைக்கப்பட்டுள்ளது என்பது இன்னும் உறுதியற்றதாகவே உள்ளது (1 அர 2:10; நெக 3:16).

சாலமோனுடைய பிரம்மாண்டமான கட்டடப்பணியானது, எருசலேமிற்குள்ளும் விரிவான புதிப்பித்தல்களைக் கொண்டிருந்தது. அவற்றில் மிக முக்கியமானது மோரியா மலையில் கட்டப்பட்ட யாவேயின் ஆலயமாகும். இது பெனிக்சிய செல்வாக்கைக் கொண்ட பல்வேறு அறைகளைக் கொண்ட ஒரு விரிவான கட்டடமாகும் (1 அர 6-8; 2 நாள் 2-4).

இதில் அரண்மனையும், ஆட்சி அமைப்புக் கட்டடத் தொகுப்பில், ''லெபனோனின் வனம்'' என்ற மாளிகையும் (1 அர 7:2-5), ''தூண் மண்டபமும் (7:6), அரியணை மன்றமும் (7:7), குடியிருப்புகளும் (7:8), மற்றும் பிற அமைப்புகளும் (7:9-12), உள்ளடங்கும். சாலமோன், நகர மதில்சுவரை மீண்டும் பெரிதாகக் கட்டினார் (3:1). இவ்வாறு, நகரின் பரப்பளவு 4-5-இலிருந்து 13 கெக்டேராக (11-இலிருந்து 32 ஏக்கராக) விரிவாகிறது. அதனுடைய மக்கள்தொகையும் இரண்டாயிரத்திலிருந்து ஆறாயிரமாக உயர்ந்தது. ஆனால், குடியேறுதலானது தென்மேற்கு மலைவரை (மேல் நகர்) பரவியதா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இப்போதைய கலப்புத்தன்மையுடைய நகரில் புறவினத்தாரின் வளர்ச்சிக்கான தடயங்கள் காணப்படுகின்றன. ஒலிவமலையின் தென்பகுதியில் இஸ்ராயேலரல்லாதோரின் தெய்வங்களுக்கான கோவில்கள் இடம் பெற்றன (11:7).

இரட்டை முடியாட்சியினின்று வட கோத்திரங்கள் விலகிய சிறிது காலத்திற்குப் பின், எகிப்தினுடைய பாவோன் சீசாக்கு, எருசலேமைச் சூறையாடினான் (14:25). ஆயினும், நகரானது யூதாவின் வழிபாட்டு மையமாகத் தொடர்ந்து வளர்ச்சியுற்றது (ஆலயத்தில் சேகரிக்கப்பட்ட பெரும் செல்வத்தின்

சான்று 15:18). ஆலயத்தைப் பழுது பார்க்கும் யோவாசு அரசனுடைய செயலைத் தவிர்த்து (அர 12:4-16), ஒன்பதாவது மற்றும் எட்டாவது நூற்றாண்டுகளில் கட்டடப்பணியானது, யூதாவைச் சுற்றியுள்ளோரின் தாக்குதல்களுக்கும், மிரட்டல்களுக்கும் பதிலளிக்கும் விதமாக (2 அர 12:17; 16:5), நகரின் மதில் சுவர்களையும் மற்றப் பாதுகாப்பு அமைப்புகளையும் அதிகரித்தலிலும், உருவாக்குவதிலும் வரையறை செய்யப்பட்டிருந்தது (15:35; 2 நாள் 26:9,15; 27:3). கோவிலைப் பழுது பார்த்துத், தூய்மைப்படுத்தியதுடன் (2 நாள் 29:3-19), நகர மதில் சுவர்களை வலிமைப் படுத்தி, வாசல்களாலும் கோபுரங்களாலும் அதனைப் பாதுகாப்பதன்மூலம் வடக்கு அரசின் அசீரியத் தோல்விக்கு (32:5; ஏச 22:10), எசக்கியா(715-687) பதிலளிக்கின்றார். இவற்றில் மிக முக்கியமானது கீகோன் சுனையைச் சுற்றிப் பாதுகாப்பு செய்து, அதனுடைய நீரைச் சீலோவாம் சுரங்க வழியின் மூலம் வாய்க்காலில் அனுப்பி, நீர் வரவை முறைப் படுத்தியதாகும் (2 அர 20:20; 2 நாள் 32:2-4; ஏச 22:9; சீரா 48:17). எசக்கியா கைதியாக்கப் பட்டாலும், சனகெரிபின் முற்றுகையி னின்று நகரம்தப்பியது (2 அர 8:13 தொ; 19:35-36; ஏச 37:36-37). மதில் சுவர்கள் தீரோபேயேன் பள்ளத்தாக்குவரை மட்டுமே பரவியிருந்தது. இக்காலத்திற்குள் நகரானது மேற்கிலுள்ள மலைவரைபரவியிருந்ததைத் தொல்பொருள் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (2 அர 22:14; 2 நாள் 34:22). இது 60 கெக்டேர் (150 ஏக்கர்) நிலத்துடன், இருபத்து நான்காயிரம் மக்களையும் கொண்டிருந்தது. ஏழாவது நூற்றாண்டில், மனாசே, ஒப்பேலில் மூல நகருக்கு வெளிச்சுவர் ஒன்றை எழுப்பினார் (2 நாள் 33:14). யோசியாவின் சமய சீர்திருத்தங்கள் புறவினத்தாரின் கோவில்களை அழிப்பதையும் (34:3-4), தேவாலயத்தைச் செப்பனிடுவதையும் (2 அரச 22:3 தொ; 2 நாள் 34:8 தொ) கொண்டிருந்தன. அதன் பின்னர், விரைவிலேயே எருசலேம், புதிய பாபிலோனியப் பேரரசின் வல்லமையை உணர ஆரம்பித்தது. 597-இல் யோயாக்கினும், ஏழை மக்களைத் தவிர்த்து மற்ற அனைவரும் பாபிலோனுக்குக் கைதிகளாக எடுத்துச் செல்லப்பட்டனர் (2 அர 24:10-16; 2 நாள் 36:10; எச 40;1). 588-இல் முதலாம் நெபுக்கதுனேசார் நகரை முற்றுகையிட்டார் (2 அர 25:1-2; எரே 39:1; 52:4-5; எச 24:1-2). இரண்டு ஆண்டுக்குள்ளாகப் பஞ்சத்தினாலும் உள்நாட்டுக் குழப்பத்தினாலும் அலைக்கழிக்கப்பட்டு எருசலேம் (2 அர 25:3-4; எரே 52:6) பாபிலோனியரிடம் விழுந்தது. அவர்கள் ஆலயத்தை அழித்து, நகரை எரித்து (2 அர 25:9-10.13-17; எரே 52:13-14,17 தொ) எஞ்சியிருந்த மக்களை நாடு கடத்தினர் (2 அர 25:11-12.21; எரே 52:28-30).

நாடு கடத்தலுக்குப் பின்னர், எருசலேமானது உருவத்திலும், மேன்மையிலும் பெருமளவு குறைந்துவிட்டது. நாடு கடத்தப்பட்ட யூதர்களில் குறைந்த எண்ணிக்கையினரே திரும்பி வந்தனர். நாட்டிலே தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டோர் மற்றும் நாட்டு மக்களுடன் சேர்ந்து, மக்கள் தொகை மொத்தம் இரண்டாயிரமாக இருந்தது. ஆயினும், ஆலயத்தைப் புதுப்பிக்கும் முயற்சிகள் உடனே தொடங்கின. உள்ளூர் எதிர்ப்பு இருந்தாலும் பணியானது ஏறத்தாழ 516-க்குள் முடிவடைந்தது (எஸ் 3:1-4:6; 4:24-6:22). ஆயினும், ஐந்தாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை, நகரின் கோட்டை கொத்தளங்களை நெகமியா செப்பனிடவில்லை. இப்போது அது ஒப்பேல் மலைமுகட்டின் கிழக்குப் பகுதிக்கு உட்பட்ட இடிந்த மண்மேடாக இருந்தது (நெக 2:11-17; 3:1-32; 12:31-43).

தோலாமியர் மற்றும் செலூக்கிய ஆட்சியின் கீழ் (மூன்றாவது மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம்) எருசலேமானது பெருமளவில் கிரேக்க ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ஆலயத்தைக் கொள்ளையிட்டுப் பாழாக்கி (1 மக் 1:21-23; 2 மக் 5:15-21) அங்கு சேயசிற்கு ஒரு பீடத்தையும் எழுப்பிய (1 மக் 1:54; 2 மக் 5:6:2) நான்காவது அந்தியோக்கு எப்பிபானின்கீழ் குறிப்பாகக் கிரேக்க ஆதிக்கம் உணரப்பட்டது. விளையாட்டரங்கைக் கட்டியெழுப்பி (1 மக் 1:14; 2 மக் 4:9-12), விளையாட்டுப் போட்டிகளை

வளர்த்ததல் மூலம் (4:17) கிரேக்க ஆதிக்கத்தை மேலும் வளரச் செய்தார். யூதரில் அவருடைய ஆதரவாளர்கள் ''தாவீதின் நகரிலோ,'' அதன் வடபுறத்திலோ ஒரு கோட்டையைக் கட்டினர் (1 மக் 1:33; 14:36). மக்கபேயரின் புரட்சியானது இத்தகைய அவதூறுகளை முடிவுக்குக் கொண்டு வந்தது. 164-ல் யூதா மக்கபேயு ஆலயத்தை மீண்டும் எழுப்பினார் (4:36-59; 2 மக் 10:1-8). சீமோனுடையவையாகக் கருதப்பட்ட (14:37), மேற்கு மலைமுகடு முழுவதையும் சூழ்ந்துள்ள கட்டடங்கள் மற்றும் பாதுகாப்பு அரண்களின் எஞ்சிய சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இக்காலத்திற்குரியவையாகக் காலம் குறிக்கப்படுகின்றன.

கி.மு. 63-இல் ஆலயத்தின் சுவர்களை உடைத்து, போம்பே எருசலேமை உரோமைக்காக வென்றார். 40-ஆம் ஆண்டில் பார்த்தியரின் துணையுடன் அந்திகோனஸ், நகரைக் கைப்பற்றினாலும், 37-இல் பெரிய ஏரோது அதனை மீண்டும் வென்றார். யூதேயாவின் அரசன் என்ற முறையில் (37:4) கசமோனிய சுவர்களை வலிமைப்படுத்தி, நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது சுவர்களை எழுப்பிப், பரந்த கட்டடத் திட்டத்தை நடத்தினார். சுவர்கள் இருந்த இடம் பற்றிய தர்க்கம் இன்றுமுள்ளது. மேற்கு முகட்டில் கோபுரங்களையும் (பிற்காலத்தில் ஆளுநர்களின் தலைமையகம்) கொண்ட பிரம்மாண்டமான அரண்மனை ஒன்றை அவர் கட்டினார். ஆலயத்தின் வடமேற்குத் திசையில் அந்தோனியா கோட்டையாக, கசமோனியா கோட்டையை மீண்டும் கட்டியெழுப்பினார். அவருடைய மிக முக்கிய திட்டமானது ஆலயத்தைத் திரும்பக் கட்டி, அதனுடைய சுற்றுப்புற இடங்களை விரிவுபடுத்தியதாகும். அரங்கம், சந்தை அல்லது பொது முனை, நீர் நிலைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், மற்றும் கோவில் பகுதியையும் மேல் நகரையும் இணைக்கின்ற மூடப்பட்ட நடைபாதை அல்லது பாலம் என்பன மற்றப் புதுமுயற்சிகளாகும். இயேசுவின் வாழ்வு (உ.ம்: கோவிலில் காணிக்கையாக்குதல், லூக் 2:22-29; ஆண்டு திருயாத்திரை, 2:41-50; சாத்தானால் சோதிக்கப்படுதல், மத் 4:5; லூக் 4:9; பாடுகள் மற்றும் உயிர்ப்பு, மத் 21-28) மற்றும் பணியின் பல்வேறு நிகழ்ச்சிகள் (யோவான் 2:12-25; 5:1-18;7:1 தொ) எரோதுவின் எருசலேமிலேயே நடைபெற்றன. பவுல் கைது செய்யப்பட்டுத் தலைமைச்சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டதும் (அ.ப. 21:27-23:10), திருச்சபையில் புறவினத்தாரின் பங்கு பற்றிய சங்கமும் (15:1 தொ; கலா 2:1-10) இங்குதான் நிகழ்ந்தது. இக்கால நிகழ்ச்சிகளை நினைவுகூறும் விதமாகப் பல பாரம்பரியமான இடங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் எருசலேமின் மக்கள் தொகையானது இருபது மற்றும் ஐம்பதாயிரத்திற்கு இடைப்பட்டதாக இருக்குமென்று கணிக்கப்படுகிறது.

கொடுமையான, உணர்ச்சியற்ற உரோமை ஆட்சியில் வெறுப்புற்றவர்களாய் கி.பி. 66-இல் எருசலேமின் யூதர்கள் கிளர்ச்சி செய்தபொழுது, கிறிஸ்தவ மக்கள் ஓடிவிட்டனர். 68-இல் வெசுபேசியன் முற்றுகையை ஆரம்பித்துப் பேரரசனாக அறிவிக்கப்பட்டவுடன் பின்வாங்கிக் கொண்டான். அவனுடைய மகன் தீத்துவின்கீழ் நான்கு படைப்பிரிவுகள் நகரைச் சூழ்ந்துகொண்டு, 70-இல் அதனைக் கைப்பற்றி ஆலயத்தை எரித்து, மக்களைக் கொன்றும் அடிமைப்படுத்தியும், அரண்மனைக் கோபுரங்களைத் தவிர்த்து, மற்ற அனைத்தையும் தரைமட்டமாக்கினர். 135-ஆம் ஆண்டில் பார் கோக்பாவின் கிளர்ச்சிக்குப் பதிலடியாக எருசலேமின் மண்மேட்டிற்குக் கீழே உள்ள பகுதியை உழுது, யூதர்கள் யாவரும் தடை செய்யப்பட்ட ஏலியா காபித்தோலினா என்னும் முழுவதும் உரோமைத் தன்மையையுடைய நகரை மேற்கு மலைமுகட்டில் கட்டினார். நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசர் நகரைக் கிறிஸ்தவ மையமாக ஏற்படுத்தினார். அவருடைய தாய் எலேனா பல பாரம்பரியமான இடங்களில் திருத்தலங்களை அமைத்தார்.

3. மாதிரி நகர்:-

இஸ்ராயேலுடைய சமயத்தின் மையமாக வும், ஆண்டவருடைய அபிடேகம் செய்யப் பட்ட (தாவீதின் வழியாக) அரசனின் அரி யணையாகவும், ஆலயம் மற்றும் வழிபாட் டுக் கூடாரத்தினுடைய பிரசன்னத்தின் மூலம் இறைவனின் மண்ணுலக உறைவிட மாகவும் (சங் 48:1-3; ஏசா 2:3) உண்மையான எருசலேமானது, காலப்போக்கில் இறைவ னுடைய மக்களையும் அரசையும் அடையா ளமாகக் குறித்து வந்தது (ஏச 2:2-3; 40:4; லூக் 21:24).

தங்களுடைய விரக்தியில், நாடு கடத்தப் பட்டோர் புதிதாகக் கட்டப்பட்ட எருசலே மைக்காண எதிர்நோக்கியிருந்தனர் (எச 36: 28). இக்காட்சியானது, இறையரசிற்கு மாதிரி யான தலைநகராக மாற்றியமைக்கப்பட்ட நகரையும் (செ 40-48; ''ஆண்டவர் அங்குள் ளார்'' எனப்பட 48:35; மலா 4:1), காலத்தின் இறுதியில் நிறைவடைய உள்ள புதுப் படைப்பின் அடிப்படையையும் (திருவெளி 21:1-22:5) சுட்டிக்காட்டுவதாக அமைந்தது.

4. இறையியல் சிந்தனை:-

I பழைய ஏற்பாடு

1) அழைப்பு:-

அ) ''உர்சாலிம்'' என்னும் கானானிய நகரானது (சாலேம் என்னும் கடவுளின் அடித்தளம்), கி.மு. 14-ஆம் நூற்றாண்டு அக்காதியஆவணங்களிலிருந்து(தேல்-ஏல்-அமர்னா கடிதங்கள்) அறியப்படுகிறது. விவிலிய மரமானது ஆபிரகாமின் காலத்தவ ராகிய மெல்க்கீசதேக்கின் நகரை இதில் அடையாளம் காண்கிறது. (ஆதி 14:18 தொ), ஆபிரகாம் தனது பலியை அளித்த மோரியா மலையுடன் இந்த இடத்தை அடையாளம் காண்கிறது (2 நாள் 3:1). நீதிபதிகளின் காலத்தில், வெற்றியை நோக்கிய தங்களது முதல் முயற்சியில் இஸ்ராயேலர்கள் தோல்வி யடைந்தமையால் (நீதி 1:21), எருசலேமானது யூதரல்லாதோரின் நகராகவே இருந்தது (19:11-12). தாவீது தமது நகர் அரணைத் ''தாவீதின் நகரம்'' (5:9) என்று அழைத்து, அதனை வலிமைப்படுத்தித், தமது அரசினு டைய அரசியல் தலைநகராக்கினார். உடன் படிக்கைப் பேழையை அங்குக் கொண்டு வந்ததன்மூலம் (2 சாமு 6), இதற்குமுன் சீலோ-வில் இருந்த, பன்னிரு கோத்திரக் கூட்டு அமைப்புகளின் வழிபாட்டுத் தலத்தை அங்கே உருவாக்கினார். நாத்தானு டைய இறைவாக்கு, இறைவன் இவ்வுறை விடத்தை ஏற்றுக் கொள்வார் என்னும் நம் பிக்கையைத் தூண்டியது (2 சாமு 7). அவ்விடத்தில் ஆலயத்தைக் கட்டியெழுப்பி, ஆடம்பரமாக அர்ப்பணம் செய்ததன் மூலம், சாலமோன் தம்முடைய தந்தையின் பணியை நிறைவு செய்தார் (1 அரச 6-8). இவ்வாறாக, நகரின் சமயத்தன்மை உறுதிப் படுத்தப்பட்டது.

ஆ) புனித நாட்டில் எருசலேமானது தனிச் சிறப்பான, இடத்தை வகிக்கிறது. தாவீதின் அரசமரபில் தனிப்பட்ட உடைமை என்ற நிலையில் இது கோத்திரங்களுக்கு அப்பாற் பட்டதாக உள்ளது. அரசியல் தலைநகர் என்ற அளவில் இறைமக்களுடைய தேசிய ஒற்றுமையை இது குறிப்பிடுகின்றது. சமயத் தலைநகர் என்ற அளவில், யாவே தமது உறைவிடமாகத் தேர்ந்தெடுத்த சீயோன் மலையிலேயே தங்கியிருப்பதால், அது இஸ் ராயேலின் ஆன்மீக மையமாக உள்ளது (சங் 78:68-69; 132:13-18). எனவே அதற்கு இரட் டிப்புப் பொருள் உண்டு; அது ஒரு புனித நகரமாகும். இஸ்ராயேலின் விசுவாசம் மற் றும் நம்பிக்கையில் அதற்கு முதன்மையான பங்கு உண்டு.

2) நாடகம்:-

இப்பொருளின் காரணமாக, அரசாட்சிக் காலத்தில் இறைமக்களுடைய அனைத்து அமைப்புகளையும் குலுக்கிய நாடகத்திற் குள் எருசலேம் கொண்டுவரப்பட்டது. அது இறைவனின் உதவியையும், சினத்தையும் மாற்றி மாற்றி அனுபவிக்கிறது.

அ) சாலமோனுடைய காலத்தில் அடைந்த உயர்ந்த நிலைக்குப் பின்னர், அவ ருடைய மரணத்தைப் பின்தொடர்ந்து பிள வின் விளைவுகளை எருசலேம் உடனே

அனுபவிக்கத் தொடங்கியது. அரசராகம மானது இதில் அரசனுடைய பிரமாணிக்கமின் மைக்கான இறை தண்டனையைக் காண் கிறது (1 அர 11). யூதாவுடன் இணைந்த நிலையில், இந்நகரானது சுருங்கிய அரசிற் குத் தொடர்ந்து தலைநகராக இருந்து, ஆல யத்தையும் கொண்டிருந்தது. ஆனால், எரொ பயாமினால் இஸ்ராயேலில் அமைக்கப் பட்ட புனித இடங்கள் அதனுடன் போட்டி யிட்டன (12:26-33). விரைவிலேயே, சமாரி யாவின் தோற்றமானது (16:24) எதிரான தலைநகரை உருவாக்கியது. தாவீதினால் நிறைவேற்றப்பட்ட அரசியல் பங்கு மற்றும் சமயப்பங்கு ஆகியவற்றின் இணைப்பானது இவ்வாறாகத் தகர்த்தெறியப்பட்டது.

இவை எல்லாவற்றிற்குப் பின்னும் முக்கி யமாக விசுவாசமிக்க யூதர்களின் பார்வை யில், எருசலேமின் சிறப்பானது தொடர்ந்து நிலைத்துள்ளது. சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு, நம்பிக்கையானது எருசலேமை நோக் கித் திரும்புகின்றது. வடக்குக் கோத்திரங் களை அதோடு ஒன்று சேர்க்க எசக்கியா முயல்கிறார். முதல் சமயச் சீர்திருத்தம் செயல்படுத்தப்படுகிறது (2 அர 18:1-4; 2 நாள் 29-31). அவரது ஆட்சியின் கீழ், சன கெரிபின் முற்றுகைக் காலத்தில் நகரானது அசா தரணமான மீட்பை அனுபவித்தது (2 அர 18;13-19:36). அதனுடைய நினைவானது, புனித நகருக்கு மகிமை அளிக்கும் முறை யில் அவர்கள் மனங்களில் பதிப்பிக்கப்பட்டு என்றும் நிலைத்திருக்கும் (சங் 47:5-9). ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர், இந்தப் புனித இடத்தைச் சுற்றி இஸ்ராயேல் இனத்தவரை ஒன்று கூட்ட யோசியா முயற்சித்தார். வழி பாடு மையப்படுத்தப்பட்டது (2 அர 22:1-23:25). தாவீதினுடைய தேசியப்பணியைக் காப்பாற்றும் இறுதி முயற்சி இதுவே.

ஆ) ஆனால் நிகழ்ந்தது என்ன:- ''ஆண்ட வருடைய கோபம் இன்னும் தணியவில்லை'' ''நாம் தேர்ந்து கொண்ட எருசலேம் நகரையும், நமது பெயர் இங்கு விளங்கும் என்று 'நாம் கூறிய ஆலயத்தையும் உதறித் தள்ளுவோம்'' என்று அவர் கூறுகிறார் (2 அர 23: 26-27). தற்காலிகச் சீர்திருத்தங்களுக் குப் பிறகும், எருசலேம் நகரானது தனது இறைவனுக்குப் பிரமாணிக்கமற்றதாக இருந்தது. அதுவே அதனுடைய முடிவைத் தீர்மானிக்கிறது. அது, சிலைவழிபாட்டிற் குத் தங்களை அளிக்கின்ற தனது அரசர்களில் பிரமாணிக்கமற்றதாக இருந்தது (2 அர 16:2 தொ; 21:3-9). அது இறைவாக்கினர்களைக் கொடுமைப்படுத்துகிறது (2 நாள் 24:21; எரே 36-38). இறைவாக்குப் போதனைகளை இழிவு படுத்தி (எரே 20), சிலைவழிபாடு ஆலயத் தில் அமைவதற்கு அனுமதிக்கின்ற (2 அர 21:4-5.7: எச 8) தன்னுடைய குருத்துவத்தி லும் அது விசுவாசமற்றதாக உள்ளது. யூதரல் லாதோருடன் கொண்ட உறவுகளால் ஈர்க்கப் பட்டு இறைவனுடைய சட்டத்திற்கு முக்கி யத்துவம் தராத அதன் மக்களிலும் அது பிரமாணிக்கமற்றதாக இருந்தது (ஏச 1:16-17; எரே 7:8). ''நீதி நிறைந்திருந்த சீயோன், எப்படித்தான் வேசியாயினளோ?'' (ஏச 1:21). உண்மையான மனமாற்றம் இல்லா விடின், இறைவனின் கோபம் அதன் மீது திரும்பும்; புனிதமான எஞ்சியோருக்கு மட் டுமே ஏசயா மீட்பைக் காண்கிறார் (ஏச 4:2-3); சீலோவுக்குச் செய்தது போலவே அதனுடைய கோயிலுக்கும் எரேமியா வாக் களிக்கிறார் (எரே 7:14); ஆண்டவர் அத னைக் கைவிடத் தீர்மானம் செய்தபடியால் (எச 10:18 தொ), எசக்கியேல், நகரினுடைய விசுவாசமற்ற செயல்கள் அனைத்தையும் சுருக்கி எடுத்துக்கூறி, அதனுடைய உடனடித் தண்டனையை அறிவிக்கிறார் (எச 1:1-12;23; 24:1-14).

இ) நெபுக்கதுனேசாரின் தாக்குதலினால் விளைந்த அதனுடைய இறுதி அழிவை இத்தகைய மிரட்டல் இறைக்கூற்றுகள் தெளிவு படுத்துகின்றன. ''நிறைவேற்றப்பட உள் ளது இறைவனின் தண்டனையே'' (எச 9:1-10:7). ஒருமுறை இவ்விளைவு அளிக்கப் பட்ட பின்னர், ''சீயோன் மகள்'' நீண்டு நிலைத்திருக்கும் தனது குற்றத்தை ஏற்க வேண்டியவளாக இருக்கிறாள் (புல 1-2), அவருடைய உரிமைச்சொத்தாகிய எருசலே மின்மீது, புறவினத்தார் செய்த அதே தீமை

யைப் புறவினத்தார் படவேண்டுமென அவ ளுடைய பிள்ளைகள் இறைவனிடம் கெஞ்சு கின்றனர் (சங் 78). இந்நாடகத்தின் முடிவில், அதுமுதல் தோன்றுகின்ற பிரச்சனையானது எதிர்காலத்தைப்பற்றியதாக உள்ளது.

3) புதிய எருசலேமை நோக்கி:-

அ) நாடகத்தை நடத்தி வைத்து அதனு டைய முடிவை அறிவித்த அளவுக்கு இணை யாக, இறைவாக்கினர்கள் மற்றொரு எருச லேமை நோக்கித் தங்களுடைய சிந்தனை யைத் திருப்புகின்றனர். அதனுடைய துன்பத் திற்குப்பின்னர் மற்றும் ஒருமுறை அது ''நீதி யின் நகரமெனவும், பிரமாணிக்கமுள்ள பட் டணமாகவும்'' உருவாகுவதை ஏசயா காண் கிறார் (ஏச 1:26-27). மீண்டும் அமைக்கப் பட்ட இஸ்ராயேலின் மக்கள் சீயோனில் வழிபடத் திரும்பி வரவிருக்கும் நாளினை எரேமியா மனதால் உணர்கிறார் (எரே 31:6. 12). பேரின்ப நாட்டின் மையமாகவும் (எச 47:1-48:29), பன்னிரு கோத்திரங்களுக்கும் பரந்து திறந்திருப்பதாகவும் (48:30-35), ''யாவே அங்குள்ளார்'' என்பதைத் தனது பெயராகக் கொண்டதாகவும் (48:35), அதனு டைய ஆலயத்தைச்சுற்றி மீண்டும் கட்டப் பட்டுள்ள வருங்கால நகரைப்பற்றி எசக்கி யேல் துல்லியமாக விவரிக்கிறார் (எச 40-46). அடிமைத்தனத்தின்போது, வருங்காலம் பற்றிய இக்கருத்துக்கள் பகட்டான வாக்குறுதி களாக வளர்ச்சியடைந்தன: இறை சினத்தின் கிண்ணமாகக் காலி செய்யப்பட்டபின் எருச. லேம் தனது விழாக்கால ஆடைகளை மீண் டும் கண்டடையும் (எச 51:17-52:2). மீண்டும் யாவேயின் துணைவியாகப் (54:4-10), பகட் டழகுடன் உருவாக்கப்பட்ட அவள் (54:11-12), தன்னுடைய பிள்ளைகள் வியக்கத்தக்க அளவில் பல்கிப்பெருகுவதைக் காண்கிறாள் (54:1 தொ; 49:14-26).

ஆ) சைரசின் ஆணையினால் விளைந்த மீட்சியும் (எஸ் 1-3), ஆலயத்தை மீண்டும் கட்டுவதும் (5-6), இறைவாக்குகளின் நிறை வேற்றத்தை, அண்மையில் அமைத்துள்ள தாகத் தோன்றச் செய்தன. அக்கால இறைவாக் கினர்கள் உலகின் சமய மையமாக உருவாக அழைக்கப்பட்ட நகரின் மாட்சியையும், அத னுடைய ஆலயத்தைப் பற்றியும் அறிவிக் கின்றனர் (ஆகா 2:6-9; ஏச 60:62). உண்மை யில் இத்தோற்றமானது விரைவில் சில சாதா ரண உண்மைகளை வெளிப்படுத்தி, மீண் டும் அடையப் பெற்ற இன்பவனத்தின் சாய லுடன் கலந்ததாக உருவாகிறது (ஏச 65:18). எல்லையற்ற மகிழ்ச்சியுடன் சீயோன், புதிய மக்களுக்குப் பிறப்பளிக்கப்போகின்றது (66:6-14). இவை இப்படியிருந்தாலும், செயல்முறையான சூழ்நிலை ஒளிமங்கிய தாக உள்ளது; நகரானது துன்பங்களில் தன் னுடைய பங்கினைத் தொடர்ந்து அனுப விக்கிறது. சுவர்கள் நீண்ட காலத்திற்குச் சிதைந்தவையாகவே உள்ளன (சங் 51:20; 102:14-18). அவற்றை மீண்டும் கட்டி யெழுப்ப நெகமியாவின் வலிமை தேவைப்படு கிறது (நெக 1-12). அதனுடைய மீட்சியாளர் களுடைய செயல்பாட்டின்கீழ், அந்நிய செல் வாக்குகளினின்று இயன்ற அளவு பிரிக்கப் பட்ட நிலையில், அது ''தோராவின் கோட் டையாக'' உருவாகிறது (நெக 13). ஆனால், அதுமுதல், சிறிய மாநிலத்தின் தலைநகரான இது, எவ்வித அரசியலின் முக்கியத்துவமும் அற்றதாக மாறுகிறது.

இ) தனது சமய அளவில் எருசலேம் இப்போது தன்னுடைய முக்கிய பணியை நிறைவேற்றுகிறது. எல்லாத் திசைகளினின் றும் யூதர்கள் அதனை நோக்கி வருகின்றனர். (தானி 6:11). மக்கள் அங்குத் திருயாத்திரை யாகச் சென்று (சங் 122), அங்கே தங்கியிருப் பதில் அகமகிழ்கின்றனர் (சங் 84). கோயி லில் அழகிய வழிபாடுகள் அமைக்கப்பட்ட காலம் இதுவே (சீரா 50:1-21). யாவே அங்கு தங்கியிருப்பதைச் சங்கீதங்கள் சிறப்பிக்கின் றன (சங் 46:48). எல்லா நாடுகளுக்கும் தாயாக, விளங்குமாறு எருசலேம் அழைக் கப்படுகிறது (சங் 87). அதன் பெயரின் பொருளை மனதில் கொண்டு ''சமாதானத்தை'' விரும்புகின்றனர் (சங் 122:6-9). இறை வனைப் புகழ ஒருவரையொருவர் அழைக் கின்றனர் (சங் 147:12 தொ). இறுதியான இறைவாக்கு வாசகங்கள் இறுதிக்காலத் தண் டனையின் அரங்கமாகவும் (யோவே 4:9-17)

எல்லா மனித இனத்திற்கும் அளிக்கப்படும் மகிழ்ச்சி விழாவின் அரங்கமாகவும் அதனைக் காண்கின்றனர் (ஏச 25:6 தொ). அவர்கள் அதனை இறுதி மீட்பாகவும், உருவ மாற்றமாகவும் காண்கின்றனர் (செக் 12:14). இறைவன் அதற்கென ஒதுக்கி வைத்துள்ள மகிழ்ச்சியை முன்கூட்டியே கவிதைச் சொற்களால் விவரிப்பதன் மூலம் (தோபி 13), அவர்கள் ஒருவரையொருவர் நம்பிக்கை கொள்ள அழைக்கின்றனர் (பாரூ 4:39-5:9). ஆனால் அதனைத் தீட்டுப்படுத்தவுள்ள அந்தியோக்கு அரசனுக்குக்கீழ், அது இன்னமும் துன்பத்தைச் சந்திக்கும் (1 மக் 1:36-40), ஆனால், அவ்வளவு ஒளியற்ற நிலையில் உள்ள இந்த வரலாற்று உண்மைக்கு முரண்பட்ட நிலையில், யூத வெளிப்பாட்டு இலக்கியங்கள் வருங்கால நகரைப்பற்றிய விசித்திரம் மிக்க உருவத்தை அளிக்கும். அவர்களுக்கு இனிமேல் விண்ணக எருசலேமே நிலைபெற்று விளங்கும். அதன் நிறைவற்ற பதிப்பே தாவீதின் நகரமாகும். இறுதிக் காலங்களில் இந்த எருசலேமானது இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு, மண்ணுலகிற்கு இறங்கி வரும். வருங்கால அமைப்பின் விஞ்சிய நிலையை, தனது பொருள் மிக்க உருவத்தை ஏற்கனவே கொண்டுள்ள வரலாற்று அனுபவத்துடன் ஒப்பிடுவதை விட, வேறெந்த உயர்ந்த வகையில் எடுத்துக் கூற முடியும்?

II. புதிய ஏற்பாடு:-

1) மண்ணுலக எருசலேமும் மீட்பின் நிறைவும்:-

மாற்கு முதல் யோவான் வரை, எருசலேமானது நற்செய்தி நூல்கள் வளர்கின்ற இடத்தைக் கொண்டுள்ளது. ஆனால் லூக்கா நற்செய்தியில் மட்டுமே, நற்செய்திக்கும் அப்போஸ்தலர் பணிக்கும் இடையிலான கீலாக அமைந்து அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

அ) மாற்குவின் நற்செய்திப்படி திருமுழுக்கு யோவானின் போதனையின் எதிரொலியானது எருசலேம் வரை சென்றடைகிறது (மாற் 1:5). ஆனால், இயேசுவால் அறிவிக்கப்பட்ட அரசினுடைய நற்செய்தியானது கலிலேயாவில் தொடங்கி, முதலில் அங்கேயே வரையறுக்கப்பட்டுள்ளது (1:28,39). கலிலேய நகரங்களின் விசுவாசமின்மையைச் சந்தித்துவிட்டு (6:1-6; 8:11 தொ; 9:30), தமது பாடுகளைப்பற்றி மும்முறை அறிவித்த பின்னரே, இயேசு எருசலேமை நோக்கித் திரும்புகிறார். தமது பலியை முழுமைப் படுத்தவே அவர் அங்கு செல்கிறார் (10:32 தொ). அதுமுதல், நாடகம் அரங்கேறுகிறது: இறைவாக்குகளில் குறிப்பிட்டபடியே, அவர் வெற்றிகரமாக நகருக்குள் நுழைகிறார் (11:1-11); ஆலயத்தைத் தூய்மைப்படுத்துவதன்மூலம் இறைவாக்கினராகச் செயல்படுகிறார் (11:15-19). வெற்றி அதிகம் நீடிக்கவில்லை. ஏனெனில் யூத அதிகாரிகளின் எதிர்ப்பை எதிர்கொள்கிறார் (11:27-12:40). அதனாலேயே, தன்னை எதிர்கொள்கின்ற மரணத்தின் பின்னணியில் (12:6-9), நகரின் தண்டனை மற்றும் அதனுடைய ஆலயம் தீட்டுப்படுதலையும் (13:14-20), காலங் கடந்த சமய நிலவரத்தின் முடிவு மற்றும் இறுதி நிறைவேற்றத்தின் முன்விளைவு (13: 24-27) ஆகியவை பற்றியும் முன்னுரைக்கின்றார். உண்மையில் மக்களால் நிராகரிக்கப்பட்டு (15:6-15) அவர்களுடைய தலைவர்களால் தண்டிக்கப்பட்டு (14:53-64), இயேசு நகருக்கு வெளியே சிலுவையில் அறையப்படுகிறார் (15:20 தொ). அவர் இறக்கும்போது, பழமையான புனித இடமானது தனது புனித இயல்பை இழந்துவிட்டது என்பதைக் குறிப்பிடும் வண்ணம், ஆலயத்திரையானது கிழிந்தது (15:33-38). இங்கு எருசலேம் பெரிய மறுதலிப்பின் இடமாக உள்ளது.

ஆ) இந்தத் திட்டத்திற்குள் மத்தேயு பல தனிக்கூறுகளைச் சேர்க்கின்றார். வரவிருக்கும் நாடகமானது இயேசுவின் குழந்தைப் பருவத்திற்கும் பொருந்தக்காட்டப்படுகிறது. யூதரல்லாதோர் விண்மீனால் வழிநடத்தப்பட்டு (எண் 24:17) மெசியாவை ஆராதிக்க பெத்லகேமிற்கு வந்தாலும் (மத் 2:1-2 தொ), தங்களுடைய இறைவாக்குகள் அறிவித்த ஒருவரை இயேசுவில் காண மறைநூல் அறிஞர்கள் அறியாது போயினர் (2:4 தொ). ஏரோது அரசன் ஏற்கனவே அவரது மரணத்

திற்காகச் சதித் திட்டம் தீட்டுகிறான் (2:16 தொ). பின்னர், எருசலேமின் மக்களின் கலக்கம் (2:3), விசுவாசச் செயலுக்கு நடத்திச் செல்வதில்லை. பெத்திலேகம் மற்றும் நாசரேத்தின் நலனுக்காக, தலைநகரானது முடிசூட்டப்படாமல் உள்ளது. தாவீதின் மகனாகிய இயேசு, தமது முன்னோரின் நகராகிய எருசலேமின் பெயரைக் கொண்டிராமல், நாசரேத்தின் பெயரையே கொண்டிருப்பார் (2:23). அவரது பொதுப்பணியின் காலத்தில், அவருடைய மோசமான விரோதிகள் எருசலேமிலிருந்தே வந்தனர் (15:1), ஆதலால் தான், இறை பிரதிநிதிகளை மரணத்திற்கு உட்படுத்தும் இந்நகரை எதிர்நோக்கியுள்ள துன்பங்களைப்பற்றி இயேசு புலம்புகிறார் (23:37 தொ). அதன் விளைவாக, உயிர்த்த இயேசு தனது அப்போஸ்தலர்களை எல்லா நாடுகளுக்கும் அனுப்புவது போன்ற இறுதிக்காட்சிகள் கலிலேயாவில் நிகழ்கின்றன.

இ) இத்தகைய மரபுசார்ந்த திட்ட அமைப்புக்குள் எருசலேமை நோக்கி இயேசு செய்த பல பயணங்களின்மீது மையம் கொண்டுள்ள மிகச் சிக்கலான வரலாற்றுக் கருத்துக்களை யோவான் அறிமுகப்படுத்துகிறார். நாடகத்தின் பெரும் பகுதி அங்கே அரங்கேறுகிறது. அவருடைய மக்களின் அவநம்பிக்கை (யோவ 2:13-25), விசுவாசிப்பதில் அவர்களுடைய சிறந்த ஆசிரியர்கள் எதிர்கொண்ட இடையூறு (3:1-12), இயேசு அங்கே நிறைவேற்றிய புதுமைகள், மற்றும் அவர் சந்திக்கவேண்டிய முரண்பாடுகள் (5:7-10) ஆகியவற்றைப்பற்றி யோவான் ஆழமாக விவரிக்கிறார். அவருடைய இறுதிப் புதுமையானது, அவரது மீட்புப்பணிக்கான இறுதிச் சான்று போன்று, எருசலேமின் வாயில்களருகே நிகழ்கிறது; ஆனால், அவர்கள் தனக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்று அறிந்தவுடனே, இயேசு அங்கிருந்து விலகிச் சென்றுவிடுகிறார் (11:1-54). தனது ''நேரத்தை'' நிறைவேற்றுவதற்கு மட்டுமே அவர் திரும்புகிறார் (12:27; 17:1). மாற்குவில் உள்ளதைவிட அதிக அளவில் பெரும் மறுதலிப்பானது இங்கே அழுத்திக் கூறப்படுகிறது.

ஈ) நற்செய்தி விவரிப்புடன் கிறிஸ்தவ தொடக்கத்தின் திட்ட அமைப்பை இணைப்பதன் மூலம், எருசலேமில் மையம் கொண்டுள்ள இப்புனித நாடகத்தின் மற்றொரு உண்மையை லூக்கா குறித்துக்காட்டுகிறார். இயேசுவின் வாழ்வில், அனைத்துமே எருசலேமை நோக்கிச் செயல்படுகின்றன. பாலன் இயேசு அங்கே காணிக்கையாக அளிக்கப்படுகிறார். அவரை எவ்வாறு கண்டுணர வேண்டுமென அங்கிருந்த விசுவாசமிக்க ஆன்மாக்கள் அறிந்திருந்தன (லூக் 2:22-38). பன்னிரண்டு வயதில் அவர் அங்கே சென்று, மறைநூல் வல்லுநர்களின் நடுவில் தமது ஞானத்தை வெளிப்படுத்துகின்றார் (2:41-50). இவை அனைத்தும் அவரது வெளிப்பாடு மற்றும் வரவிருக்கும் பலி ஆகியவற்றின் திரையிடப்பட்ட அறிவிப்புகளாகும். அவரது வாழ்வின் இறுதியாக எருசலேம் இருப்பதால் ''இறைவாக்கினர் எருசலேமிற்கு வெளியே மடிவது முறையாகாது'' (13:33). இயேசு தமது பிரிவை நிறைவேற்ற வேண்டிய நகர் வரையிலான அவரது பயணத்தை லூக்கா மிகச் சிறந்தமுறையில் அமைக்கின்றார் (9:31; 9:51; 13:22; 17:11; 18:31; 19:11). அவரது பணிக்கு எதிரான, உறுதியான மறுதலிப்பிற்கு முன்னர், மத்தேயு மற்றும் மாற்குவைவிடத் துல்லியமான சொற்களால் அவர் அதனுடைய வீழ்ச்சியை அறிவிக்கின்றார் (19:41-44; 21;20-24). ஆனால், ''யூதரல்லாதோரின் காலம்'' எனப்படும் இடைப்பட்ட காலத்தின் சூழ்நிலை, இந்நிகழ்ச்சியை இறுதி நிறைவினின்று தெளிவாகப் பிரித்துக்காட்டப்படுகிறது (21: 24-28).

உண்மையில், இயேசுவின் வாழ்க்கையானது எருசலேமில் அவருடைய பலி, தோற்றங்கள் மற்றும் விண்ணேற்றத்துடன் முடிகிறதென்றால் (24:36-53; அ.ப. 1:4-13), அப்போஸ்தலிக்க சான்று பற்றிய வரலாறு அங்கிருந்தே தொடங்குகின்றது. எருசலேமில் அவர்கள் ஆவியைப் பெறுகின்றனர் (அ.ப. 2). அந்நேரம் முதல் நற்செய்தியை எருசலேமிலிருந்து யூதேயா, சமாரிய மற்றும் உலகின் கடை எல்லைவரை கொண்டு செல்லும் தூள ҕ அவர்கள் கொண்டுள்ளனர் (1:8; லூக் 24:4·-48). உண்ைமயில் அவர்கள் நற்செய்தியை முதலில் நகரில் அறிவித்து, கிறிஸ்தவ சமூகத்தை அங்கே உருவாக்குகின்றனர்

*(அ.ப. 2-7).* இயேசுவின் மரணத்திற்குக் காரணமாக இருந்த எதிர்ப்பை அங்கே தலைமைச்சங்கத்தார் அவர்களுக்கெதிராக மீண்டும் புதுப்பிக்கின்றனர் *(4:1-31; 5:17-41)*. தூய ஆவியை இஸ்ராயேல் எதிர்த்ததற்காகவும், இயேசுவை நிராகரித்ததற்காகவும் தண்டனையாக, மனிதரின் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தின் அழிவைப்பற்றி, ஸ்தேவானின் வாய்மொழி மூலமாக, இறைவன் அறிவிக்கின்றார் *(7:44-53)*. இச்சொற்களால் கிளர்ந்தெழுந்த கொடுங்கிளர்ச்சியின் விளைவாக, கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒரு பகுதியானது, சிதறிப்பரவுகிறது *(8:1)*. அதே சமயத்தில், முரண்பட்ட விளைவாகச் சமாரியாவிலும் *(8:2-40)*, செசாரியாவிலும் *(10)*, யூதரல்லாதோர் முதன்முறையாகத் திருச்சபைக்குள் அழைக்கப்பட்ட அந்தியோக்கியா வரையிலும் *(11:19-26)* நற்செய்தி புதிதாகப் பரவுகிறது. அதே முறையில், முதல் வேதசாட்சியின் மரணமானது, இறைவனின் கரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாக உருவாகவுள்ள, துன்புறுத்திய சவுலில் மனமாற்றத்தை உண்டாக்குகிறது *(7:58-8:1 தொ; 9:1-30)*. அதுமுதல், இறைபணியாளராகச் செயல்பட, சவுல் எருசலேமை விட்டுச் செல்கிறார் *(9:30; 11:25-26)*. தாம் சிறைப்படுத்தப்பட்ட பின்னர், பேதுருவும் அதனை விட்டுச் செல்கிறார் *(12:17)*. நற்செய்தியின் மையமாக விளங்கிய தன் இடத்தை எருசலேமே இழக்கிறது. இயேசு அதைப் பற்றி முன்னறிவித்த முடிவை நோக்கிச் செல்கிறது. ஆனால் நற்செய்தி, ''உலகின் கடை எல்லைவரை'' சென்றடைகிறது.

*2) மண்ணக எருசலேமிலிருந்து விண்ணக எருசலேம் நோக்கி:-*

*அ)* பழைய எருசலேமானது, விண்ணகத்தில் ஊன்றப்பட்டுள்ள புதிய எருசலேமினால் அகற்றப்பட்டுள்ளது என்று முதல் முதலில் வலியுறுத்தியவர், தமஸ்கு செல்லும் பாதையில் மனமாற்றப்பட்ட ''தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாகிய'' பவுல்தான் *(அ.ப. 9)*. அதனுடைய தோற்றத்திற்கு வழியளிக்குமாறு அழைக்கப்பட்ட மண்ணுலக எருசலேமினால் துன்புறுத்தப்பட்டதும், நமது தாயாகவும், இறை வாக்குறுதிகளின் வாரிசாகவும் உள்ள ஆன்மீக எருசலேமை, அவர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் விவரிக்கிறார் *(கலா 4:24-31)*.

*ஆ)* எபிரேயருக்கான திருமுகம் இதே உருவகத்தைக் கொண்டுள்ளது. உயிருள்ள இறைவனின் நகராகவும் *(எபி 12:21)* திருமுழுக்கினால் கிறிஸ்தவர்கள் நெருங்கிச் சென்றடைந்த இடமாகவும் உள்ள இந்த விண்ணக எருசலேமானது, மனிதக் கைகளால் உருவாக்கப்படாமல், கிறிஸ்து பணியினுடைய இறுதியாகிய ஆலயம் உள்ள இறைவனின் இல்லமாகும் *(9:24; 9:11-12)*. இந்த ஆலயமே மாதிரியாகும். கீழுலகில் உள்ள கோயிலானது இதன் பிரதியாகவும், நிழலாகவும், மறு படைப்பாகவும், உருவகமாகவும் இருந்தது *(8:5; 10:1)*. இந்த ஆலயத்தின் யாவும் கடந்த நிலையை யூதவெளிப்பாட்டு நூல்கள் வண்ணப்பகட்டுடன் விவரித்தன.

*இ)* யோவானின் திருவெளிப்பாட்டு நூலில், திருச்சபையின் இறுதி நிறைவைப் பற்றிய தியானத்தில் புதிய எருசலேமை விவரிக்கிறார். அது செம்மறியின் மணமகளாகும் *(திருவெளி 21:1-22:5)*, ஒளிவீசும் அதிசயம், மற்றும் கனவுகளின் நகரம் ஆகும். புதிய எருசலேமைப்பற்றி விவரிக்கின்ற எசக்கியேல் மற்றும் ஏசயா ஆகியோரின் இறைவாக்குப் பகுதிகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டு மண்ணுலக நகரானது, பார்வையிலிருந்து மறையும் வண்ணம் மறுவிளக்கம் பெறுகிறது. ஆனால், மண்ணுலகத் திருச்சபையானது ஏற்கனவே அதனுடைய மறைபொருளில் பங்கேற்றிருப்பதால், அதனுடைய சாயலை ஏற்கனவே தாங்கியுள்ளது. இந்தப் புனித நகரையே புறவினத்தார் துன்பங்களால் நசுக்குகின்றனர் *(11:2)*. புதிய ஏற்பாட்டின் இறுதியில், இஸ்ராயேலின் தலைநகரும், ஆண்டவரின் பழமையான இவ்வுலக உறைவிடமுமான, இந்நகர் ஒரு போதும் உருவத்தின் மதிப்பைக் கொண்டிருக்கவில்லை. இயேசுவால் அறிவிக்கப்பட்ட புதிய துயர நிகழ்ச்சி நிறைவேறும் அதே நேரத்தில் அது தற்காலிகமாகத் தன்னிடம் கொண்டிருந்த வாக்குறுதிகள், மற்றொரு எருசலேமிற்குக் கடந்து செல்கின்றன. இந்த எருசலேமானது இப்போது இருந்தாலும், அதே சமயம் மீட்கப்பட்டவர்கள்

அனைவரினுடைய உறுதிப்படுத்தப்பட்ட தந்தை நாடாகிய, அதனுடைய இறுதி நிறைவை நோக்கிச் செல்கிறது.

## எருசலேம் ஆலயம் (JERUSALEM TEMPLE)

எல்லாச் சமயங்களிலும் ஆலயம் என்பது, மனிதர்களுடைய வழிபாட்டினைப் பெறவும் தனது உதவிகளிலும் வாழ்விலும் அவர்களைப் பங்குபெறச் செய்யவும் தெய்வம் தன்னையே பிரசன்னப்படுத்துகிற புனித இடமாகக் கருதப்படுகிறது. அதனுடைய சாதாரண உறைவிடமானது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வுலகிற்கு உரியதல்ல. ஆனாலும் ஆலயத்தின் மூலமாக மனிதன் தெய்வங்களின் உலகோடு தொடர்பு கொள்வதற்காக ஆலயம் அதனுடைய ஒருவகையில் ஒன்றாக்கப்படுகிறது. இந்த அடிப்படைச் சமயஅளவியல் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அதில் எருசலேம் ஆலயமானது மனிதரிடையே இறைவனின் பிரசன்னத்தின் அடையாளமாக விளங்குகின்றது. பழைய ஏற்பாட்டில் இது தற்காலிக அடையாளமாகவே உள்ளது. இதற்குப் பதிலாகப் புதிய ஏற்பாட்டில் மற்றொரு வகையாகிய கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை என்னும் அடையாளத்தினால் மாற்றீடு செய்யப்படும்.

I. பழைய ஏற்பாடு:-

1. எருசலேம் ஆலயம்:-

அ) இஸ்ராயேலின் தொன்மையான புனித இடம்:- பிதாப்பிதாக்களின் காலத்திய எபிரேயர்கள் ஓர் ஆலயத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் பெத்தேல் (இறைவனின் இல்லம் ஆதி 12:8; 28:17-18), பேயோர் செபா (ஆதி 26:25; 45:1), செக்கேம் (ஆதி 33:18) முதலிய புனித இடங்களைக் கொண்டிருந்தனர். இவ்விடங்களில் ''ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதனர்''. யாத்திரையின் சீனாய் இறைஆற்றல் காட்சியினால் அபிடேகம் செய்யப்பட்ட இதே மாதிரியான மற்றொரு இடமாகும் (யாத் 3:19-20). ஆனால் அதற்குப்பின் வந்த காலத்தில் பாலைவனத்தினிடையே மக்களை நடத்திச் சென்ற இறைவன் என்றும் அவர்களோடு இருக்குமாறு, உடன் கொண்டு செல்லக் கூடிய புனித இடத்தை அவர்கள் தங்களிடம் கொண்டிருந்தனர். யாத் 26-27 ஆனது கருத்தியலான விவரிப்பு அளிப்பதும் வருங்கால ஆலயத்தினால் ஓரளவு தூண்டப்பட்டதுமான திருஉறைவிடம், இறைவனை மக்கள் சந்திக்கும் இடமாக இருந்தது (எண் 1:1; 7:89...). உடன்படிக்கைப் பேழையை மூடியுள்ள இரக்கத்தின் ஆசனத்தின் மேல் கெருபிம்களின் நடுவில் இறைவன் உறைகின்றார். அங்கே அவர் இறைகூற்றுகளை அளிப்பதால் திருஉறைவிடத்திற்குச் ''சாட்சியப் பேழை'' என்ற பெயர் அளிக்கப்பட்டது (யாத் 25:22; 26:33). அங்கு அவரது பிரசன்னமானது ஒரே சமயத்தில் பலர்சார்ந்ததாகவும் மறைவானதுமாக இருந்தது. மேகத்திற்குப் பின்னால் (யாத் 33:7-11; 40:36) அவருடைய ஒளிமிக்க மாட்சியானது தம்மையே மறைத்துள்ளது (எண் 14:10; 16:19). இவ்வாறு இஸ்ராயேல கூட்டமைப்பின் மொத்தத்திற்கும் சீனாய் உடன்படிக்கையின் நினைவானது ஒரு மையப் புனித இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. கானானில் கூட்டமைப்புச் சமுதாயம் நிறுவப்பட்ட பின்னர், கோத்திரங்களுக்கான பொதுவான புனித இடமானது கில்கால், செக்கேம் (நீதி 8:30-35; 24:1-28) சீலோ (1 சாமு 1-4) ஆகிய இடங்களில் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டது. கல்லால் கட்டப்பட்ட கோயில்களால் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்ற கானானியரின் வழிபாட்டுத் தலங்களினின்று அதனைத் துல்லியமாக வேறுபடுத்தக்கூடிய தொன்மையான சிறப்பியல்பினைத் தொடக்கத்திலிருந்தே அது பாதுகாத்து வந்தது. சீனாயின் கடவுள் கானானினுடைய புறவினத்தாரின் கலாச்சாரத்தோடு கலப்பதில்லை.

ஆ) தாவீதினுடைய திட்டம்:- கூட்டமைப்பின் இந்தப் புனித இடத்தைத்தான் பெலிஸ்தியரின் கைகளினின்று உடன்படிக்கைப் பேழையை விடுவித்த பின்னர் தாவீது எருசலேமில் அமைத்தார் (2 சாமு 6). அவர் அச்சமயத்தில் வென்ற அரசியல் தலைநகரானது யாவேயின் மக்களின் சமய மையமாகவும் இருக்கும். பின்னர் இஸ்ராயேலின் சிறப்பியல்பினை விட்டுவிடாமல் அக்கால அரச அமைப்புகளைப் போன்று தமது முடியாட்சியையும் அமைக்க அவர் செயல்படத் தொடங்கியதுபோல வழிபாட்டின் பாரம்பரிய இடத்தையும் நவீனமாக்க எண்ணுகி

றார். தமக்கென ஒரு மாளிகையைக் கட்டிய பின்னர் யாவேக்கும் ஒரு கோயிலைக் கட்ட அவர் எண்ணுகிறார் (2 சாமு 7:1-4). இறைவன் அதற்கு எதிரானவராக உள்ளார். யாவேக்கென ஒரு வீட்டைக் (கோயிலை) கட்டப்போவது தாவீது அல்லர்; ஆனால் அவருக்கென யாவேயே ஒரு வீட்டைக் (சந்ததி) கட்டுவார் (2 சாமு 7:5-7). இந்த இறைபணிச் செயல் இரு வழிகளில் விளக்கம்பெறுகிறது. உடன்படிக்கையின் மக்களுக்குக் கருத்தியலான புனித இடமானது பாலைவனத்தில் தங்கியிருந்ததை வெளிப்படையாக நினைவிற்குக் கொணர்கின்றது கடந்த கால இறைஉறைவிடமே (2 சாமு 7:6-7). மேலும் ஒரே இறைவனின் உண்மையான திருவழிபாடானது, இறைமையின் மீது சிறிது பிடிப்பு உள்ளதாகப் பொய்யாகக் காட்டுபவையும் (உதாரணமாக பாபிலோனிய சிக்குராட்கள் ஆதி 11:1-9), சிலை வழிபாட்டு, மாந்திரீக, ஒழுக்கக்கேடான பயிற்சிமுறைகளால் அவசங்கைப்படுத்தப் பட்டவையுமான கோயில்களைக் கொண்டுள்ள புறஇனத்தோரின் வழிபாட்டு முறைகளின் அடிமைத்தனமான நகலில் திருப்தியடைவதில்லை.

இ) சாலமோனால் நிறைவேறுதல்:- ஆயினும் சாலமோனுடைய ஆட்சிக்காலத்தில் எவ்வித இறைவாக்கு எதிர்ப்பும் வெளிப்படாத நிலையில் தாவீதினுடைய திட்டம் நிறைவேற்றப்படுகிறது (1 அர 5:15-7:51). சீனாய் மரபிற்குப் பிரமாணிக்கமற்றதாக இல்லாத முறையில் கானானிய கலாச்சாரக் கூறுகளை ஏற்று யாவேயின் சமயம் போதிய வலிமையுடையதாக இருந்தது. மேலும் இம்மரபானது ஆலயத்தில் வலிமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கைப் பேழை ஆலயத்தின் மையமாகும் (8:1-9). எருசலேமின் புனித இடமானது கோத்திரங்களுக்கான மைய வழிபாட்டின் தொன்மையான இடமாகத் தொடர்ந்து அமைந்துள்ளது என்ற பாரம்பரியம் ஆலயத்தில் வலுவாக வலியுறுத்தப்படுகிறது. மேலும் மேகத்தின் (கோயிலின்) நடுவே தமது மாட்சியை வெளிப்படுத்துவதன்மூலம் (8:10-13) தமது பெயரைத் தங்கச் செய்கிற (7:16-21) உறைவிடமாக இந்த ஆலயத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதை இறைவன் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். உண்மையில் அவர் தமது பிரசன்னத்தினுடைய இந்தப் புலன் சார்ந்த அடையாளத்திற்கு உட்பட்டவர் அல்லர். வானங்களே அவரை உள்ளடக்கிக் கொண்டிருக்க முடியாவிடின், மண்ணக வீடானது அதனினும் குறைந்த ஆற்றலுடையதாகவே இருக்கும் (6:27). ஆனால் உறுதியான முறையில் தமது மக்கள் தம்மைச் சந்திக்க அனுமதிக்கும் வண்ணம் ''நம்முடைய பெயர் இவ்விடத்தில் விளங்கும்'' என்று கூறுகின்ற அவர் இந்த உறைவிடத்தைத் தேர்ந்து கொண்டார் (8:29).

ஈ) இறைவனுடைய மக்களின் நடுவில் ஆலயத்தின் பங்கு:- அதுமுதல் மற்றப் புனித இடங்களைப் புறக்கணிக்காவிடினும் எருசலேம் ஆலயமானது ஆண்டவருடைய வழிபாட்டின் மையமாக இருக்கும்.''இறைவனின் முகத்தைக் காண்பதற்காக'' (சங் 42:3) மக்கள் நாடுகளினின்றும் அங்கு வருவர். விசுவாசிகள் அதன்பால் உருக்கமான அன்பைக் கொண்டிருப்பர் (சங் 84:121). இறைவனின் உறைவிடம் விண்ணகத்தில் உள்ளதென்பதை மனிதர் சந்தேகத்திற்கிடமின்றி அறிந்துள்ளனர் (சங் 2:4; 103:19; 115:3). ஆனால் ஆலயமானது அவர் இங்குப் பிரசன்னப்படுத்துகின்ற அவரது விண்ணக அரண்மனையின் (யாத் 25:40) பிரதிபலிப்பாக உள்ளது. இவ்வாறு, வழிபாடானது அதிகாரப் பூர்வ தன்மை கொண்டுள்ளது. அங்கு அரசர்களும் மக்களும் தேசிய இறைவனுக்குப் பணிசெய்கின்றனர்.

2. கல்லினாலான ஆலயத்திலிருந்து ஆன்மீக ஆலயம் நோக்கி:-

அ) அடையாளம் என்ற நிலையில் ஆலயத்தின் பொருள் தெளிவின்மை:-

அரசாட்சிக் காலத்தில் இஸ்ராயேலின் வழிபாட்டில் முக்கிய பங்கை வகித்தாலும், ஆலயமானது அடையாளம் என்னும் நிலையில் சிறிது பொருள் தெளிவின்மையைக் கொண்டுள்ளது. மேற்போக்கான சமய உணர்வுடைய மக்களுக்கு அங்கு வெளிப்படையாகச் செயல்படுத்தப்பட்ட சடங்குகள் வெறும் சடங்குகளாகவே இருந்தன. மேலும், ஆலயத்தின்பால் காட்டிய பற்றுதல்

குருட்டு நம்பிக்கையாகும் அபாயமும் இருந்தது. ஆலயத்திற்குச் செல்கின்றவர்கள் சட்டத்தைப் பின்பற்றாவிடினும், எவ்விதத்திலாவது அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இறைவன் அதனைத் தமக்கே உரித்தாக்கியிருப்பது போன்று, மனிதர்கள் ''இது ஆண்டவரின் ஆலயம்! இது ஆண்டவரின் ஆலயம்'' என்று கூறுகின்றனர் (எரே 7:4). இத்தகைய தவறுதல்கள் ஆலயம் பற்றிய இறைவாக்கினர்களின் எச்சரிக்கை மனப்பான்மையை விளக்குகின்றன. இந்த இடத்தில்தான் தமது தொடக்கக் காட்சியில் ஆண்டவர் ஏசயாவிற்குத் தம்மையே வெளிப்படுத்துகின்றார் என்பது உறுதி (ஏச 6). இவ்விடமானது இறைபக்தியற்ற சனகெரிபால் அழிக்கப்படமுடியாது என்றும் அதே இறைவாக்கினர் கூறுகின்றனர் (ஏச 37:16-20. 33 தொ). புறஇனத்தாரிடமிருந்து புகுத்தப்பட்ட சிலைவழிபாட்டுப் பழக்கங்களை உள்ளடக்கிய (எச 8:7-18) அங்கே நிறைவேற்றப்படுகின்ற வழிபாட்டின் மேற்போக்கான தன்மையினைப் பழிப்பதில் ஏசயா, எரேமியா மற்றும் எசக்கியேல் ஆகியோர் போட்டியிடுகின்றனர் (ஏச 1:11-17; எரே 6:20; 7:9 தொ). இறுதியாக, நாட்டின் பாவத்திற்குத் தண்டனையாக, இந்த உறைவிடத்தை ஆண்டவர் கைவிடக் கூடும் என்பதையும் முன்னோக்குகின்றனர் (மீக் 3:12; எரே 7:12-15; எச 9-10). ஆண்டவர் தமது பிரசன்னத்தைச் சிலகாலம் உட்படுத்தியிருந்த பொருள் சார்ந்த அடையாளத்தைவிட இஸ்ராயேலின் வழிபாட்டின் உண்மைத் தன்மை மிகவும் முக்கியமானதாகும்.

ஆ) முதலாவதினின்று இரண்டாவது ஆலயம் வரை:- உண்மையில் எருசலேம் ஆலயமானது தேசிய ஊழின் மாறுபடுநிலைகளில் பங்கு பெறுகின்றது. எசக்கியா (2 அர 18:4; 2 நாள் 29:31) மற்றும் ஆலயத்தின் சாதகத்திற்கேற்பப் புனித இடத்தின் ஒருமைத்தன்மையைக் கொணர்ந்த யோசியா (2 அர 23:4-27) ஆகியோரின்கீழ், சமயச்சீர்திருத்த முயற்சிகள் முதலில் அதன் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தின. ஆனால் இறைவாக்கு அச்சுறுத்தல்கள் நிறைவேற்றப்பட்டன (25:8-17). ஆண்டவரின் மாட்சியானது அவருடைய தெய்வீகத்தன்மை இழந்த உறைவிடத்தைக் கைவிட்டது (எச 10:4.18). ஆலயத்தின் அடையாளம் இதோடு முடிந்து விட்டதா? அப்படியல்ல. ஏனெனில் இறைவாக்கினர்களின் இறுதிக்கால இறைக்கூற்றுகள் வருங்காலம் பற்றிய தங்களின் விவரிப்புகளில் அதற்கு முக்கிய இடத்தை அளித்திருக்கின்றன. உண்மையான இறைவனை வழிபடுவதில் ஒன்றிணைந்த எல்லா மனித இனங்களின் வருங்கால சமய மையமாக ஏசயா அதனைக் காண்கிறார் (எச 2:1-4). தேசிய மீட்சியின் காலத்தில் அது மீண்டும் உருவாக்கப்படுவதை எசக்கியேல் விரிவாக முன்கண்டுவிட்டார் (எச 40-48). இவ்வாறு அடிமைத்தனத்தின் முடிவில் மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்த யூதர்கள் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் முதலில் கவனம் செலுத்தினர். இதை ஆகாய், செக்கரியா போன்ற இறைவாக்கினர்கள் ஊக்குவித்தனர் (எஸ் 3:6) இறைவாக்குள் மீண்டும் ஒரு முறை அதனுடைய வரவிருக்கும் மாட்சியைப்பற்றிப் பாடுகின்றன (ஆகா 2:1-9; ஏச 60:7-11). முன்பிருந்ததைப் போலவே இரண்டாம் ஆலயத்திலும் வழிபாடு மீண்டும் தொடங்கியது. யூதர் மதத்தின் மையமாக ஆலயம் விளங்கியது. அதனுடைய தொடக்கத்தில் இருந்ததுபோன்ற இறையாட்சியமைப்புகளையே இப்போதும் கொண்டிருந்தது. அது மீண்டும், மக்களிடையே இறைபிரசன்னத்தின் அடையாளமாக விளங்கியது. அங்கு மக்கள் திருயாத்திரை செல்கின்றனர். அங்கு நடக்கும் சடங்குகளின் மகத்துவத்தைச் சீராக்கின் மகன் ஆர்வமிக்க தொனிகளால் கொண்டாடுகின்றார் (சீரா 50:5-21). இவ்வாறாக அந்தியோக்கு அரசன் அதனைப் பங்கப் படுத்தி அவ்விடத்தில் புறவினத்தாரின் புனித இடத்தை அமைத்தபோது அதனைப் பாதுகாக்க யூதர்கள் பொங்கி எழுந்தனர். அவர்களுடைய புனிதப்போரின் முதல் நோக்கமானது, பாரம்பரிய வழிபாட்டை மீண்டும் தொடங்க அதனைப் புனிதப்படுத்துவதாகும் (1 மக் 4:36-43). சில ஆண்டுகளுக்குப் பின்னர், பெரிய ஏரோது ஆடம்பரமாக அதனை மீண்டும் கட்டுவார். ஆனால் இந்த வெளிஆடம்பரத்தைவிட அதனுடைய சடங்குகளில் தடையற்ற முறையில் வெளிக்காட்டிய உண்மையான பக்தியே மிகவும் முக்கியமானதாகும்.


இ) ஆன்மீக ஆலயத்தை நோக்கி:- கல்லால் கட்டப்பட்ட ஆலயத்தின் மீது பற்றுறுதி கொண்டிருந்தாலும், இறைவாக்குக் காலத்தின் முடிவிற்குப்பின்னர், புதியதொரு சிந்தனையானது ஏற்கப்படலாயிற்று. ஆலயத்திற்கு எதிரான எரேமியாவின் அச்சுறுத்தல்கள் (எரே 7) கட்டடத்தின் அழிவு, மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அடிமைத்தன அனுபவம் போன்றவை, துணைச்சட்டப் பாரம்பரிய ஆசிரியராலும் எரேமியாவாலும் போதிக்கப்பட்ட (உப 6:4 தொ; எரே 31:31) ''இதயச்சமயத்தின்'' தேவைகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த ஆன்மீக வழிபாட்டின் தேவையைத் தெளிவுபடுத்த உதவிபுரிந்தன. அடிமைப்படுத்தப்பட்ட நாட்டில் இறைவன் எங்கெங்கு ஆட்சிசெலுத்துகிறாரோ, மற்றும் சிறப்பாக எங்கெங்கு ஆராதிக்கப்படுகிறாரோ (எச 11:16), அங்கெல்லாம் அவர் பிரசன்னமாகியுள்ளார் என்பது தெளிவாக அறியப்பட்டது. அவருடைய மாட்சியானது பாபிலோனில் எசக்கியேலுக்கு வெளிப்படுத்தப்படவில்லையா? (எச 1). இவ்வாறு அடிமைத்தனத்தின் இறுதியில் இறைவனால் கோரப்பட்ட எளிய மற்றும் மனம் வருந்திய இதயங்களின் (ஏச 66:2) ஆன்மீக வழிபாடானது புலன் சார்ந்த அடையாளங்களிலிருந்து பிரிக்கப்பட்ட இறைவனின் ஆன்மீக பிரசன்னத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படுகிறது என்று கருதுவதுபோல் யூதர்கள் கல்லால் ஆன ஆலயத்திற்குப் பெரிதும் பற்றுறுதி காட்டுவதற்கு எதிராகச் சில இறைவாக்கினர்கள் அவர்களை எச்சரிக்கின்றனர். (ஏச 66:1-2). ஆண்டவர் வானகத்தில் தங்கியிருந்து அவரது விசுவாசிகள் எவ்விடத்திலிருந்து செபித்தாலும் அவற்றிற்குச் செவிமடுக்கிறார் (தோபி 3:16). கிறிஸ்துவினுடைய வருகைக்குச் சிறிதுகாலம் முன்பு எஸ்ஸேனியர்கள் ஆலய வழிபாட்டிலிருந்து முறித்துக்கொண்டனர். இவர்கள் ஆலயம் உரிமையற்ற குருத்துவத்தால் பாழ்படுத்தப்பட்டு விட்டது என்றும் இறைவனுக்கு ஏற்ற வழிபாட்டினை அளிக்கக்கூடிய ஆன்மீக ஆலயம் தாங்களே என்றும் கருதினர். மனிதனின் கரங்களால் அமைக்கப்படாத, இறைவன் உறைகின்ற விண்ணக ஆலயத்தைப்பற்றிப் போலி வெளிப்பாட்டு நூல்கள் விவரிக்கும் காலம் இதுவே. வரவிருக்கும் உலகில் இறைவனின் உறைவிடமாக இருப்பதற்கென, காலத்தின் இறுதியில் பூவுலகில் தோன்றவிருக்கும் விண்ணக ஆலயத்தின் முழுமையற்ற சாயலாகவே இவ்வுலக ஆலயம் உள்ளது (ஞான 9:8)

II. புதிய ஏற்பாட்டுக் காலத்து எருசலேம் ஆலயம்:-

புதிய ஏற்பாட்டுக் காலத்து யூதர்களுக்கு ஒரே ஓர் ஆலயம் இருந்தது. அது எருசலேமிலிருந்த ஆலயமாகும். இஸ்ராயேல் மக்களின் கதியாகத் திகழ்ந்தது இவ்வாலயமே. மக்களது சமய சமூக வாழ்வும் இவ்வாலயத்தை மையமாக வைத்துதான் நிகழ்ந்தது. மாமன்னன் சாலமோன் முதல் ஆலயத்தைக் கட்டினார். அவ்வாலயம் எருசலேமின் வீழ்ச்சியோடு அழிந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்தபின் யூதர்கள் செருபாபேல் என்பவரது தலைமையின்கீழ் ஏறக்குறைய கி.மு. 539-இல் மீண்டும் ஆலயத்தை எழுப்பத் தொடங்கினர். சுற்றி வாழ்ந்த புற இனத்தவர் எதிர்ப்புத் தெரிவித்ததால், பாதியோடு நிறுத்தி வைக்கப்பட்டு, கி.மு. 515-இல் கட்டி முடிக்கப்பட்டு திருநிலைப்படுத்தப்பட்டது. இவ்வாலயம் சிறியதாகும். இவ்வாலயம் கி.மு. 167-இல் அந்தியோக்கு எப்பிபானால் தீட்டுப்படுத்தப்பட்டு, கி.மு. 165-இல் யூதா மக்கபேயரால் மீண்டும் திருநிலைப்படுத்தப்பட்டது. இவ்வாலயம் கி.மு. 19-வரை இருந்தது.

கி.மு. 19-இல் பெரிய ஏரோது மாபெரும் ஆலயம் ஒன்றைக் கட்டத் தொடங்கினார். இச்செயல் இவரது பக்தியின் விளைவன்று; அரசியல் தந்திரத்தின் விளைவாகும். மக்கள் அவர்மீது கொண்டிருந்த வெறுப்பை நீக்குவதற்காக இவ்வாலயத்தை எழுப்பினார். ஆலயத் திட்டம் பகட்டான தொன்றாகும். திருப்பயணிகள் வியக்கும்படி ஒரு நினைவுச் சின்னமாக ஆலயத்தை அமைக்க விரும்பினார் ஏரோது. பத்தாயிரம் ஆட்கள் வேலை செய்தனர். பரிசுத்த இடங்களில் வேலை செய்வதற்கென ஆயிரம் குருக்கள் கொத்தர் வேலைப் பயிற்சி பெற்றிருந்தனர். ஆலயத்தின் முக்கிய பகுதி பத்து ஆண்டுகளில் முடிந்தது. கி.மு. 9-இல் ஏரோது, தான் அரசு

ஏற்ற ஆண்டுவிழா நாளில் திருத்தியமைக்கப் பட்ட ஆலயத்தின் அபிடேகம் நடைபெறச் செய்தார். ஆனால், ஆலயத்தின் அழகு செய் யும் வேலை பல ஆண்டுகளாக நடந்தது. இயேசுவின் காலத்தில் ஆலய வேலை ஏற்க னவே நாற்பத்தாறு வருடங்களாக நடை பெற்றிருந்ததாகப் பரிசேயர் கூறுவதை நற் செய்தியில் வாசிக்கிறோம் (யோவா 2:20). உள்ளும் புறமும் எழிலுற ஆலயம் அமைந் திருந்தது; எல்லோரின் கவனத்தையும் ஈர்த் தது. கி.பி. 64-இல் ஆலயம் கட்டி முடிக்கப் பட்டது. ஆறு ஆண்டுகள் கழித்து உரோமை யரால் அழிக்கப்பட்டது.




எருசலேம் ஆலயத்தைப் பற்றிய விவரங் கள் யோசிப்பசின் நூலிலிருந்தும், யூதர்களின் ''தால்முட்'' பாரம்பரியத்திலிருந்தும் நமக் குக் கிடைக்கின்றன. இவ்வாலயத்தின் அமைப்பை நன்கு புரிந்துகொள்ளுவதற்கு நமது நாட்டிலுள்ள இந்துக் கோவில்களை மனதில் கொள்வது பயனளிக்கும். இந்துக் கோவில்களில் காணப்படும் பிரகாரங்கள், மண்டபங்கள், கருவறை ஆகியவைகளை மனதில் கொண்டு எருசலேம் ஆலயத்தைக் காணுதல் நல்லது.

ஆலயமும் அதைச் சார்ந்த இடமும் 2,350 அடி சுற்றளவுள்ள இடத்தை உள்ளடக்கி யன. இவ்விடத்தைச் சுற்றி அகன்ற சுவர்க ளும் மண்டபங்களும் எழுப்பப்பட்டிருந் தன. வெளிச்சுவரை அடுத்த உள்ளிடம் ''புற இனத்தார் முற்றம்'' எனப் பெயர் கொண் டது. இம் முற்றத்திற்குள் வெளியிலிருந்து நுழையப் பெரும் கதவுகளைக் கொண்ட எட்டு வாயில்கள் இருந்தன. தெற்கில் இரண் டும் (25-26 எண்கள் வரை படத்தில் காணப் படும் எண்களைக் குறிக்கின்றன) மேற்கில் நான்கும் (21-24) வடக்கில் ஒன்றும் (20) கிழக்கில் ஒன்றுமாக (19) எட்டு வாயில்கள் அமைந்திருந்தன. குருத்து ஞாயிறு அன்று ஆண்டவர் கிழக்கு வாயிலின் வழியாக ஆல யத்திற்குள் நுழைந்திருக்கலாம் (மத் 21:12; மாற் 11:11; லூக் 19:45). தெற்கு வாயில்கள் இரண்டும் நிலவறை வழிகளாகும். இவை புற இனத்தவரை முற்றத்திற்கு இட்டுச் சென் றன. இப்புற இனத்தவர் முற்றம் மிகப் பெரியதாகும். வெளிச்சுவரோடு சேர்ந்த மண்டபங்களைக் கொண்டது. வடக்கில் அமைந்த அரச மண்டபம் மூன்று தூண் வரிசைகளைக் கொண்டிருந்தது. தெற்கிலும் மேற்கிலும் இருந்த மண்டபங்களும், கிழக் கில் அமைந்த சாலமோன் மண்டபமும் (யோவா 10:23; அ.ப. 3:11; 5:12) இரண்டு தூண் வரிசைகளைக் கொண்டிருந்தன. புற இனத்தவர் முற்றத்திற்கு யாரும் செல்ல லாம். சுமை தூக்குபவர் கூட இம்முற்றத் தைக் குறுக்கு வழியாகப் பயன்படுத்துவ துண்டு. இங்குதான் மறைநூல் அறிஞர்கள் போதித்தனர்; நாணயம் மாற்றுவோர் தங்கள் கடைகளை வைத்திருந்தனர்; புறாக்களும் பலிக்கு வேண்டிய விலங்குகளும் விற்கப் பட்டன. இது ஒரு சந்தைக் கடையைப் போல் தோன்றியிருக்க வேண்டும் (மத் 21:12-13) புற இனத்தவரது முற்றத்தை அடுத்து நான்கு புறமும் கைப்பிடி மேடை ஒன்று (18) இருந்தது. இதைத் தாண்டி யூதர் அல்லா

தார் புகக்கூடாது. எச்சரிக்கை அறிவிப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மீறி உடபுகுபவர்கள் மரண தண்டனைக் குள்ளா வார்கள் என இவ்வெச்சரிக்கை அறிவித்தது (அ.ப. 21:28).

புற இனத்தவர் முற்றத்திலிருந்து உட்புக வடக்கில் நான்கும் (10, 11, 12, 17); தெற்கில் நான்கும் (7, 8, 9, 16) கிழக்கில் ஒன்றுமாக (15) ஒன்பது வாயில்கள் இருந்தன. கிழக்கு வாயில் ஒப்பனை மிக்கதாயிருந்தது; ஆத லால் ''அழகு வாயில்'' அல்லது ''அலங்கார வாயில்'' என்று அழைக்கப்பட்டது (அ.ப. 3:2). புற இனத்தவரது முற்றத்தை அடுத்து ஐந்துபடி உயரத்தில் அமைந்திருந்த உள்முற் றம் பெண்களுக்குரியது. இதைச் சுற்றிப் பல அறைகள் இருந்தன. இங்குதான் காணிக் கைப் பெட்டிகள் இருந்தன (14), (மாற் 12:41 தொ; லூக் 24:1). ஆலயக் கருவூலமும் இங்கு இருந்தது (யோவா 8:20). இம்முற்றத்துக்கு அப்பால் பெண்கள் உட்செல்ல முடியாது. இங்கிருந்து பதினைந்து படிகள் ஏறினால் இஸ்ராயேலரது முற்றம் எனப்பட்ட ஆண்க ளுக்குரிய முற்றத்தை (13) அடையலாம். இது 280 x 20 ச.அடி பரப்புடையது; வடக் கில் மூன்று வாயில்களையும் (10, 11, 12) தெற்கில் மூன்று வாயில்களையும் (7, 8, 9) கொண்டது. கிழக்கு வாயில் அலக்சாந்திரி யாவைச் சார்ந்த பெருஞ்செல்வர் நிக்கனோ ரின் கொடைப் பொருளால் கட்டப்பட்ட தால், நிக்கனோர் வாயில் (6) என்றழைக்கப் பட்டது. தூப வழிபாட்டுச் சமயத்தில் மக் கள் இங்குதான் குழுமியிருப்பர் (லூக் 1:10). பரிசேயன் செபித்த இடமும் (லூக் 18:11), அப்போஸ்தலர்கள் வழக்கமாய்ச் செபித்த இடமும் (லூக் 24:53) இதுவாகத்தான் இருக்க வேண்டும். புனித பவுல் இங்குதான் தமது நேர்த்திக் கடனைச் செய்திருக்கக் கூடும் (அ.ப. 21:26).

அடுத்த உள்முற்றம் குருக்களது முற்ற மாகும் (5). இதுவரை நாம் விவரித்த இடங்கள் யாவும் ஆலயத்தைச் சார்ந்த இடங்கள். குருக் கள் முற்றத்துக்கு அடுத்த பகுதியே ஆலயம் என்றழைக்கப்பட்டது. குருக்கள் முற்றம் ஆலயத்தைச் சுற்றியிருந்தது. இங்குத் தகன பலி கொடுக்கும்பீடம் (4) இருந்தது. இப் பீடம், நிக்கனோர் வாயில், அலங்கார வாயில் ஆகியவையோடு ஒரே வரிசையில் இருந் தது. ஆதலால் பலியிலிருந்து எழும் புகையை அலங்கார வாயிலிலிருந்தும் பார்க் கலாம். பெண்கள் முற்றம், இஸ்ராயேல் முற்றம், குருக்கள் முற்றம் ஆகியவை திறந்த முற்றங்களாகும்.

உண்மையான ஆலயம் சாலமோன் கட் டிய விதத்திலேயே கட்டப்பட்டிருந்தது. குருக்கள் முற்றத்தின் கிழக்குப் பக்கத்தி லிருந்து பன்னிரண்டு படிகள் ஏறினால் ஆலய முகமண்டபத்தை (3) அடையலாம். இது 150 x 150 ச. அடி பரப்புக் கொண்டது. இதற் குள் நுழைய 60 அடி அகலம் 30 அடி உயரம் கொண்ட வாயில் இருந்தது. முக மண்டபத் திலிருந்து 30 அடி அகலம் 15 அடி உயர முடைய வாயில் வழியாகத் தூயகத்திற்குள் (2) நுழையலாம். இத்தூயகம் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் 30 அடி உயரமும் உடை யது. இவ்விடத்தின் அலங்காரம் பற்றிய செய்தி ஏதும் நமக்குக் கிடைத்திலது. தூயகத் தில் தூபப் பீடமும், ''அப்பம் காட்டும் மேசையும்'', ஏழுகிளை விளக்குத் தண்டும் இருந்தன. மக்கள் கூட்டமாகவோ, குழுவின ராகவோ இங்குத் தொழுவதற்குச் செல்ல வில்லை. இஸ்ராயேலரின் அரசனாகிய இறைவன் இங்குக் கொலுவீற்றிருந்தார்; இங்கிருந்து தமது பிரமாணிக்கமுள்ள மக்க ளின் காணிக்கைகளையும் பலியையும் ஏற்று அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

தூயகத்தை அடுத்துத் திருத்தூயகம் (1). இது 30 x 30 x 30 அடி கொண்ட ஓர் அறை. முற்காலத்தில் உடன்படிக்கைப் பெட்டகத் தைக் கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது காலியான அறையாக இருந் தது. தூயகத்திலிருந்து இந்தத் திருத்தூயகம் ஒரு திண்ணிய திரையால் பிரிக்கப்பட்டிருந் தது. இயேசு மரித்த போது கிழிந்த திரை இதுதான் (லூக் 23:45). இவ்விடத்தில் எப் போதும் இருள் மண்டியிருக்கும். ஆண்டிற்கு ஒருமுறை ''பரிகார நாளில்'' பெரிய குரு பலிப்பொருளின் இரத்தம் தாங்கித் தூபப் பீடத்திலிருந்த தூபத்தோடு இவ்விடத்திற் குள் நுழைந்து, இரத்தத்தைத் தெளித்து விட்டு வருவார். பிறர் இவ்வறைக்குள் புகுந்

தறியார். ஆலயத்தைச் சுற்றிலும் சிறிதும் பெரிதுமாகப் பல அறைகள் இருந்தன. ஆலயம் வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. தங்கத்தகடு பொதியப் பட்டிருந்தது. ஆலயத்தைச் சார்ந்த இடங்களில் பொன்முலாம் பூசப்பட்ட கோபுரங்கள் இருந்தன. அவற்றின் காட்சி பார்ப்பதற்கு உண்மையிலே கவர்ச்சியுடையதாய் இருந்திருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஆலய அமைப்பின் விளக்கத்திலிருந்து, வழிபட வந்த மக்கள், ஆலயத்தின் புறத்தே நின்று வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு கொண்டனர் என்பதும் விளங்கும். அவர்கள் கொண்ட பங்கும் மிகச்சிறியதே. ஆலயத்துக்குள் என்ன நடக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. எக்காளத் தொனி கேட்டு விசுவாசிகள் தெண்டனிட்டு வணங்குவர்; தங்களுக்குரிய செபப் பகுதிகளைச் சொல்லுவர். ஆண்டுக்கு மூன்று முறையாவது ஆலயத்துக்கு வயது வந்த ஒவ்வொரு யூதனும் திருப்பயணம் செல்ல வேண்டும் என்று சட்டம் கூறியது (உப 16:16). ஆனால் கிறிஸ்துவின் காலத்தில் இச்சட்டம் அவ்வளவாகக் கடைப்பிடிக்கப் படவில்லை. ஆண்டுக்கு ஒருமுறைதான் பாஸ்கு காலத்தில் திருப்பயணமாக ஆலயத்துக்குச் சென்றனர். அப்போதும் ஆலயச் சடங்குகளில் நேரடியாகப் பங்கு கொள்ள வில்லை. ஆயினும் ஆலயத்தைப் பற்றிய எண்ணம் யூதன் எவனுக்கும் உண்மையான மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தது. ஆலயப் பணிக்குரிய வரியை மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் செலுத்தினர். இதை ஒரு பெரும் கடமையாகவும் கருதினர். பாலஸ்தீன யூதர்கள் மட்டுமின்றிச் ''சிதறிக் கிடந்த யூதர்களும்'' இவ்வரியைச் செலுத்தினர். இவ்வரியைத் திரட்டித் தூதுவர் மூலம் எருசலேமுக்கு அனுப்பினர். யூதர்களது இவ் வழக்கத்தை உரோமைப் பேரரசு மரியாதையுடன் அனுமதித்தது.

நற்செய்தியில் ஆலயம் பல தடவைகள் நமது கண்முன் கொணரப்படுகிறது. திருமுழுக்கு யோவான் பிறப்பைப் பற்றிய செய்தி செக்கரியா ஆலயத்தில் தூபப்பலி செலுத்தும்போது வருகிறது (லூக் 1:8 தொ). இயேசு, தாம் பிறந்த நாற்பதாம் நாள், ஆலயத்தில் யூத முறைப்படி பிதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறார் (லூக் 2:22 தொ). பன்னிரண்டு வயதில் காணாமற் போய் ஆலயத்தில் காணப்பட்டார் (லூக் 2:41 தொ). அப்போது இயேசு தமது தாயிடம் ''என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டதாக வாசிக்கிறோம். மூலக்கூற்றைத் ''தந்தையின் காரியங்கள்'' என்று மொழி பெயர்ப்பதைவிட, மேல் தரப்பட்டது போல் ''தந்தையின் இல்லம்'' அதாவது ''ஆலயம்'' என்று மொழி பெயர்ப்பது சிறந்தது என்று பல விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நிகழ்ச்சி ஆலய வெளி மண்டபங்கள் ஒன்றிலோ, ஆலயப் பள்ளியிலோ நிகழ்ந்திருக்க வேண்டும். இம்மண்டபங்களில்தான் இயேசு பிற் காலத்தில் மக்களுக்குப் போதித்திருக்க வேண்டும் (மத் 21:23; 26:55; மாற் 11:27; 12:35; 14:49; லூக் 20:1; 22:53; யோவா 7:14-28; 8:20-59; 10:23). இயேசு ஆலயத்துக்கு மிகுந்த மரியாதை காட்டினார். ஆலயத்தைக் கடவுள் வீடு என்றும் (மத் 12:4; லூக் 6:4), தமது தந்தையின் இல்லம் என்றும் (யோவா 2:16; லூக் 2:49), செபவீடு என்றும் (மத் 21:13; மாற் 11:17; லூக் 19:46) அழைக்கிறார். ஆலயத்தில் இருக்கும் இறைவன் தூயவராதலால் ஆலயமும் தூய்மை மிக்கது. ஆலயம் தன்னுள் உள்ள பொருள்களைத் தூய்மையாக்குகிறது (மத் 23:16-21). சாதாரண யூதன் மேற்கொண்ட திருப்பயணங்களையும் ஆலயக் கடமைகளையும், இயேசுவும் மேற்கொண்டிருக்க வேண்டும். அவர் ஆலயத்துக்குரிய வரி செலுத்துகிறார் (மத் 17:24-27). ஆலயத்தைச் சுத்தி செய்கிறார் (மத் 21:12 தொ; மாற் 11:15-17; லூக் 19:45 தொ; யோவா 2:14-17).

இயேசுவைப் போல் ஆதிக் கிறிஸ்தவர்களும் ஆலய வழிபாட்டில் பங்கு கொண்டனர் (அ.ப. 2:46; 3:1; 22:17). அவரைப் போலவே அப்போஸ்தலர்களும் ஆலயத்தில் போதித்தனர் (அ.ப. 5:20,25,42). பவுல் கூட எருசலேமில் இருந்த போதெல்லாம்

ஆலய வழிபாட்டில் பங்கு கொண்டார் (அ.ப. 21:26; 24:6; 12.18; 26:21).

III புதிய ஏற்பாடு

1. இயேசு கிறிஸ்து புதிய ஆலயம்:-

அ) இயேசுவும் பழைய ஆலயமும்:- இறைவாக்கினர்களைப் போன்று இயேசுவும் பழைய ஆலயத்திற்கு ஆழ்ந்த மரியாதையை அளிக்கின்றார். மரியாளினால் அவர் அங்குக் காணிக்கையாக்கப்படுகிறார் (லூக் 2:22-29). தம்முடைய தந்தையைச் சந்திக்கும் இடம் என்ற அளவில் அவர் அங்கே விழாக் கொண்டாட்டங்களுக்குச் செல்கிறார் (லூக் 2:41-50; யோவா 2:14). வழிபாட்டுச் சடங்குகளை இழிவுபடுத்துகின்ற விதிமுறைகளை அவர் கண்டிக்கின்ற நிலையிலும் அதனுடைய வழிபாட்டு முறைமைகளை அவர் ஏற்கிறார் (மத் 5:23-24; 12:3-7; 23:16-22). ஆலயமானது அவருக்கு இறைவனின் இல்லமாகவும் செபவீடாகவும் தனது தந்தையின் வீடாகவும் உள்ளது. அது வியாபாரத்தலமாக மாறும்போது அவர் கோபம் கொள்கிறார். இவ்வாறு ஒரு இறைவாக்குச் செயலாக அதனைத் தூய்மைப்படுத்துவதற்கென அவர் வியாபாரிகளை விரட்டியடிக்கிறார் (மத் 21: 12-17; யோவா 2:16 தொ; ஏச 56:7; எரே 7:11). ஆனாலும், கல்லின்மேல் கல் நிற்காது என்று அச்சுறுத்தல் மிக்க கட்டடத்தின் அழிவைப்பற்றி அவர் அறிவிக்கிறார் (மத் 23:38-39; 24:2). அவரை விசாரிக்கின்றபொழுதும் அவர் மனிதரால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தினை இடித்துவிட்டு மூன்று நாட்களில், மனிதக் கரங்களால் கட்டப்படாத ஆலயத்தைக் கட்டி முடிப்பேன் என்று கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டார் (மாற் 14:58). அவர் சிலுவையில் துன்புறும்போதும் பழியுரையாக அதே குற்றச்சாட்டு மீண்டும் எடுத்துக் கூறப்படுகிறது (மத் 27:39-40). ஆனால் இங்கு அது எதிர்காலம் மட்டுமே விளக்கக் கூடிய பொருளுடைய, மறைவான பொருட் சொல்லாகவே உள்ளது. இதற்கிடையில் அவருடைய இறுதிமூச்சை விடும் தருணத்தில் புனித இடத்தின் திரை கிழிதலானது பழமையான புனித இடமானது தனது புனிதப்பண்பை இழந்துவிட்டதையே காட்டுகிறது. யூத ஆலயமானது இறைபிரசன்னத்தின் அடையாளமாகத் தனது பணியை நிறைவேற்றுவதை இழந்துவிடுகின்றது.

ஆ) புனித ஆலயம்:- உண்மையில் இப்பணியானது அதன் பின்னர், இயேசுவின் உடலாகிய மற்றொரு அடையாளத்தினால் நிரப்பப்படுகிறது. யோவானின் நற்செய்தியானது, புனித இடத்தை அழித்து விட்டு, மூன்று நாட்களில் மீண்டும் கட்டுவது பற்றிய சொற்களை ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் சூழ்நிலையில் கூறுகிறது (யோவா 2:19). ஆனால் ''அவர் குறிப்பிட்டதோ அவரது உடலாகிய ஆலயத்தையே'' என்றும் அவரது உயிர்ப்பிற்குப்பின் அவருடைய சீடர்கள் அவரைப் புரிந்து கொண்டனர் என்றும் யோவான் உடனே சேர்த்துக் கூறுகிறார் (யோவா 2:21-22). இதுவே மனிதரின் கரங்களால் கட்டப்படாத புதிய மற்றும் உண்மையான ஆலயமாகும். முற்காலங்களில் இஸ்ராயேலின் திருஉறை ஆசாரக் கூடத்தில் அவர் அமைத்தது போலவே, அவர் மனிதரிடையில் அவரது உறைவிடத்தை, இறைவார்த்தை அமைக்கின்ற ஆலயமாக இது உள்ளது (1:14). ஆனால் கல்லாலான ஆலயமானது பயனற்றுப்போகும் நிலையை அடைய, இயேசுவே மரித்து மீண்டும் உயிர்த்தெழ வேண்டியது அவசியமாகிறது. அவரது உடலாகிய ஆலயம் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்படும் என்பதே அவரது தந்தையின் சித்தமாகும் (10:17-18; 17;14). அவரது உயிர்ப்பிற்குப் பின்னர், பூவுலகில் இறைபிரசன்னத்தின் அடையாளமாக உள்ள இவ்வுடலானது புதிய, மறுஉருவை அடையும். அது நற்கருணை வழிபாட்டில் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் பிரசன்னப்படுத்தப்படும். அப்போது பழைய ஆலயம் மறைந்துவிடும். 70-இல் நிகழும் எருசலேமின் அழிவானது, அதனுடைய அலுவல் முடிந்துவிட்டது என்பதை உறுதியான முறையில் எடுத்துக்காட்டும்.

2. திருச்சபை ஆன்மீக ஆலயம்:-

அ) கிறிஸ்தவர்களும் யூத ஆலயமும்:- ஐம்பதாம்நாள் விழா நிகழ்ச்சிக்குப்பின்

வரும் இடை மாறுபாட்டுக் காலத்தில் அப்போஸ்தலர்களும் வார்த்தையில் நம்பிக்கையுடைய விசுவாசிகளும் எருசலேம் ஆலயத்திற்குச் செல்வதைத் தொடர்ந்தனர் (அ.ப. 2:46; 3:1-11; 21:26). உண்மையில் யூத தலைவர்களும் மக்களும் நற்செய்தியை உறுதியாக ஒதுக்காத வரையில், வழிபாட்டின் பழைய இடமானது, இயேசுவால் தொடங்கப்பட்ட புதிய வழிபாட்டோடு கொண்ட எல்லாத் தொடர்புகளையும் இழந்துவிடவில்லை. இத்தகைய நிலையில் மனமாறிய யூதமக்கள் முழு உலகின் மனமாற்றத்தில் பங்குபெற முடிந்தது; ஆயினும் முறிவின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆன்மீக வழிபாட்டிற்காகத் தமது காப்புரையில் ஸ்தேவான் மனிதனின் கரத்தினால் செய்யப்பட்ட ஆலயத்தின் வீழ்ச்சியை முன்னுரையாக்கினார் (அ.ப. 7:48 தொ). இச்சொற்கள் இறைநிந்தனையாகக் கருதப்பட்டு அவரை மரணத்திற்கு இட்டுச் செல்கின்றன. பல ஆண்டுகளுக்குப் பின்னர் எருசலேமின் சிதைவானது யூதமதத்தின் கடினத்தன்மையை விரைவு படுத்தும். ஆலயம் அழிக்கப்படும். கிறிஸ்தவர்களை வெளியேற்றும் செயல் இயேசுவின் திருச்பையுடனான அதன் பிளவை முழுமைப்படுத்தும்.

ஆ) ஆன்மீக ஆலயம்:- ஆனால் இதற்கு முன்னதாகவே கிறிஸ்தவர்கள் தாங்களே புதிய ஆலயமாக, கிறிஸ்துவினுடைய உடலின் தொடர்ச்சியாக அமைந்திருப்பதை உணர்ந்து கொள்வர். பவுலின் வெளிப்படையான போதனை இதுவே. 'அடித்தளமாகவும் மூலைக்கல்லாகவும் உள்ள கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டுள்ள இறைவனின் ஆலயம் திருச்சபையே' (1 கொரி 3:10-17; 2 கொரி 6:16 தொ; எபே 2:20 தொ). இந்த ஒளிமயமான ஆலயத்தில் ஒன்றுபட்ட ஒரே ஆவியில் எவ்வித வேறுபாடுமின்றி யூதரும் யூதரல்லாதவரும், தந்தையை அணுகுவர் (எச 2:14-19).

கிறிஸ்துவின் உடலின் உறுப்புகள் என்ற அளவில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவனுடைய ஆலயமாவான் (1 கொரி 6:15; 12:27). அவனது உடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாகும் (1 கொரி 6:19; உரோ 8:11). இரண்டு கூற்றுகளும் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. இறைத்தன்மையானது உடல் சார்ந்த முறையில் தங்கியுள்ள இயேசுவின் உயிர்த்த உடலானது (கொலோ 2:9), இறைவனின் நிறைவான ஆலயமாகும். இந்த உடலின் கிறிஸ்தவ அங்கத்தினர்கள் அவருடன் சேர்ந்து, ஆன்மீக ஆலயத்தை உருவாக்குகின்றனர். அதன் வளர்ச்சிக்காக அவர்கள் விசுவாசத்திலும் அன்பிலும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் (எபே 4:1-16). இவ்வாறு மனிதரால் நிராகரிக்கப்பட்ட ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உயிருள்ள பாறையாகக் கிறிஸ்து உள்ளார். ஏம்மிலேயே உயிருள்ள கற்களாக உள்ள விசுவாசிகள், அவரோடு சேர்ந்து ஆன்மீகக் கட்டடத்தை, புனித குருத்துவத்தை, ஆன்மீகப்பலிகள் அளிக்கும் நோக்கத்திற்காக அமைக்கின்றனர் (1 பேதுரு 2:4-5; உரோ 12:1). மனிதரின் கரங்களால் செய்யப்படாத தீர்மானமான ஆலயம் இங்கே உள்ளது. இதுவே திருச்சபை, கிறிஸ்துவின் உடல், இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே சந்திப்பு நிகழுமிடம். பூமியில் இறை பிரசன்னத்தினுடைய அடையாளம். பழைய புனித இடமானது சுட்டிக்காட்டும், ஆனால் முழுமையற்ற தற்காலிகமாக மற்றும் இறுதியில் தள்ளிவைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் ஆலயத்தின் சாயல் மட்டுமே.

3. விண்ணக ஆலயம்:-

அ) எபிரேயருக்கான திருமுகம்:- ஆனால் புதிய ஏற்பாடானது பழைய ஆலயத்தின் அடையாளத்தை மற்றொரு திசையில் பயன்படுத்துகிறது. யூதமதமானது ஆலயம் சார்ந்த சொற்களால் விவரிப்பதில் வெளிப்பாட்டு நூல்கள் மகிழ்ச்சியடைகின்ற உறைவிடமாகிய, இறைவனின் விண்ணக இல்லத்தினுடைய மனிதப் பிரதிபலிப்பினை, ஆலயத்தை, ஏற்கனவே கண்டிருந்தது. எபிரேயருக்கான திருமுகமானது இந்தப் பணிச்சட்டத்திற்குள்ளேயே குருவாகிய கிறிஸ்து தம் மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் விண்ணேற்றத்தினாலும் நிறைவேற்றிய பலியை

விவரிக்கிறது. அவர் தமது உலக வாழ்வின் முடிவில், உருவக வழிபாட்டில் இருப்பது போல், விலங்குகளின் இரத்தப்பலிகளா லன்றி, தமது இரத்தத்தினாலேயே விண்ண கக் கூடாரத்தில் நுழைந்தார் (எபி 9:11-14.24). இறைவனின் பிரசன்னத்தை அணுக நமக்கு உரிமை அளிக்கும்படி ஒரு முன்னோடியாக அவர் அங்கு உள்ளே நுழைந்தார் (4:16; 10:19-20). இத்தகைய தனித்துவமிக்க குரு வுடன் ஒன்றுபட்டு, நமது விசுவாசத்தினால் நுழைவுரிமை பெற்று விட்ட நாம், இறை வன் தங்கியுள்ள திருத்தூயகத்தில் இறை பிரசன்னத்தை அனுபவிக்க முடியும் (6:9-20).

ஆ) யோவானின் திருவெளிப்பாடு:- திரு வெளிப்பாட்டில், திருச்சபையாகிய மண்ணு லக ஆலயத்தின்மீது விண்ணக ஆலயத்தின் சாயல் ஆதிக்கம் செலுத்துகின்றது. பூவுலகில் விசுவாசிகள் இறைவனுக்கு வழிபாடு செலுத்துகின்ற ஓர் ஆலயம் உண்டு. திருச் சபைக்கு எதிராகத் தமது சினத்தை வெளியிடு கின்ற கொடுமைகளின் சாயலாக உள்ள புறவினத்தார் அந்த ஆலயத்தின் வெளிப்புற மண்டபங்களில் நிறைந்திருப்பர் (திருவெளி 11:1-2). ஆனால் பலியிடப்பட்ட செம்மறி யானது அரியணையேற்றப்பட்டு செபம் மற் றும் புகழ்ச்சியின் வழிபாடு கொண்டாடப் படுகின்ற ஆலயமானது விண்ணகத்திலும் ஒன்று உள்ளது (5:6-14; 7:15). காலத்தின் இறுதியில், இந்த இரட்டைநிலையானது மறைந்துவிடும். உண்மையில் விண்ணக எரு சலேமானது முடிவில்லாத திருமணத்திற் கென அலங்கரிக்கப்பட்ட செம்மறியின் மணமகளைப் போலப் பூமிக்கு இறங்கி வரும் போது, உலகில் ஆலயத்திற்குத் தேவை இனி இராது, இறைவனும் செம்மறியுமே அதன் ஆலயமாக இருப்பர். அப்போது விசுவாசிகள் எவ்வித அடையாளத்தின் தேவையுமின்றி இறைவனை அடைவர். அல்லது அவரது வாழ்வில் முழுமையாகப் பங்கு பெறும் பொருட்டு அவரை நேருக்கு நேராகக் காண்பர். இரு உடன்படிக்கை களும் வளர்ச்சியோடு வெளிப்படுத்தியதன் உயர்ந்த மற்றும் உண்மையான நிறைவேற் றம் இதுவே

**எருசலேம் சங்கம் (COUNCIL OF JERUSALEM)**

அப்போஸ்தலர் பணியில், பக்தியுள்ள கொர்னேலியு குடும்பம் கிறிஸ்தவத்தைத் தழுவுகிறது (அ.ப.10) அந்தியோக்கியாவில் ஒரு சில புறஇனத்தார் நற்செய்தியை ஏற்கின் றனர். (11:19-26). அப்போதே கொஞ்சம் கருத்து வேறுபாடு எழுகிறது. ஆனால் சைப் ரஸ் தீவிலும் மத்திய ஆசியாவிலும் ஏராள மான புறவினத்தார் கிறிஸ்தவத்தை ஏற்ற போது திருச்சபையே எளிதாய்ப் பெரும் பாலும் புறவினத்தார் சபையாய் மாறிவிடுமோ என்ற நிலை தோன்றியபோது (அ.ப.13-14) விவாதம் முற்றியது. எனவே, புறஇனத்தா ரைத் திருச்சபையில் ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய நிபந்தனைகளை வரையறுக்க எருசலேமில் தலைவர்கள் கூடினர். இக்கூட் டமே எருசலேம் சங்கம் எனப்படும்.

இச்சங்கம் பற்றிப் புதிய ஏற்பாட்டில் இரு விவரிப்புக்கள் உள்ளன. அப்போஸ்தலர் பணி (அ.ப.15:1-29), கலாத்தியருக்கு எழு திய திருமடல் 2:1-10 ஆகிய இவற்றிடையே வேறுபாடுகள் உள்ளன. பவுல் மனந்திரும்பி எருசலேமுக்கு இரண்டாம் முறையும் (கலா) மூன்றாம் முறையும் (அ.ப.) சென்றபோது சங்கம் நடக்கிறது. போக வேண்டுமென்று இறைவன் வெளிப்படுத்தியதால் அவர் அங் குப் போகிறார் (கலா). அந்தியோக்கிய சபை அவரையும் பிறரையும் அனுப்பிவைப்ப தால் அவர் அங்குப்போகிறார் (அ.ப.). எருச லேம் தலைவர்களோடு சரிசமமாய்ப் பவுல் காரியங்களைக் கவனிக்கிறார். புற இனத்தா ரின் அப்போஸ்தலர் தாம் என்பதைப் பிறர் ஏற்றுக் கொள்ள வைக்கிறார் (கலா). எருச லேம் தலைவர்களும் சபையும் அனைத்துத் திருச்சபை மேல் அதிகாரம் செலுத்துவதாகத் தோன்றுகிறது (அ.ப.). எருசலேமில் உள்ள ஏழைக் கிறிஸ்துவர்களுக்கு உதவ, பவுல் ஆர்வமுடன் முன்வருகிறார் (கலா). அ.ப. இல் இது பற்றிக் குறிப்பெதுவும் இல்லை. எருசலேம் போதித்த நற்செய்தியோடு புதி தாய் ஒன்றும் சேர்க்கவில்லை (கலா); எருச

லேம் தலைவர்களும் சபையும் புறஇனக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புகின் றனர். இதில் ''சிலைகளால் தீட்டுப்பட்ட தைத் தொடாமலும், கெட்ட நடத்தையை விலக்கவும், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி, மிருக இரத்தம் இவற்றை உண் ணாமலும் இருக்கக்'' கேட்டுக் கொள்கின்ற னர் (அ.ப.15:29).

இந்த வேறுபாடுகளைத் தீர்க்க அ.ப.11:27-30-இன் உதவியுடன் பலவிளக்கங்கள் தரப் பட்டுள்ளன. 'ஆனால் இவற்றில் எதுவும் திருப்தி அளிப்பதாய் இல்லை. மேலே கூறிய இரு குறிப்புரைகளும் ஒரே சங்கத்தை விவரிப்பதுபோல் உள்ளன. இரண்டிலும் புறஇனத்தாரின் இடமும் விருத்தசேதனத் தின் தேவையும் பற்றிப் பேசப்படுகின்றன. அந்தியோக்கியாவிலும் எருசலேமிலும் இப் பிரச்சனை எழுகிறது. இதற்கு ஒரு முடிவு காணப் பவுல், பர்னாபா, மற்றும் பிறர் எருச லேம் செல்கின்றனர். பவுலினுடைய கட்சி வெற்றிபெறுகிறது. அதாவது விருத்தசேத னம் பிறஇனக் கிறிஸ்தவர்கட்குத் தேவை இல்லை என முடிவெடுக்கப்படுகிறது. பவுல் தம் தனி அப்போஸ்தலத்துவத்தை எண்பிக்கக் கலாத்தியருக்குத் திருமடல் எழுதுகிறார்; எனவே சில காரியங்கள் இங்கு அழுத்தம் பெறுகின்றன. ஆனால் பொது வாய் ஒற்றுமை உள்ளது.

வேறுபாடுகளில் இரண்டு குறிப்பிடத்தக் கவை: 1) அ.ப.-யில் எருசலேம் தலைவர் கள் உயர் அதிகாரம் செலுத்துவதுபோல் உள்ளது. பவுலோ சம, தனி அதிகாரம் கோருகிறார் (கலா). எனினும் தம் நற்செய் திக்கு மற்ற அப்போஸ்தலரின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்றுதானே அவர் எருச லேம் சென்றார். திருச்சபையின் ஒற்று மையை அனைவரும் விரும்பினர். திருப் பணியில் பவுல் சமநிலை பெறுகிறார். 2) தம் நற்செய்திக்குப் புதிதாய் எதுவும் மற்றத் தலைவர்கள் சேர்க்கவில்லை என்ற கூற் றுக்கு மாறாக அப்போஸ்தலர்களின் ஆணை (அ.ப.15:28-29) உள்ளது. இச் சங்கத்தின் முடி வானது எருசலேம் தலைவர்களின் பிற்சேர்க் கையா என அறியோம். எனினும் புற இனத் தார் விருத்தசேதனம் செய்யத்தேவை யில்லை என்பதே முக்கியமும் அடிப்படை யுமாகும். மற்ற லேவியச் சடங்காசாரங்களில் ஒரு சிலவற்றை, மீட்புக்கு அவசியம் என் றல்ல, மாறாக அனைவரும் நட்புறவுடன் வாழஉதவும் ஒரு வழியாகப் பவுலே ஏற்றுக் கொண்டிருக்கலாம். சிலைவழிபாட்டையும் கெட்ட நடத்தையையும் பவுல் ஏற்கனவே எதிர்க்கிறார். மற்ற இரண்டு ஆசாரங்களை யும் சமரசத்துக்காக அச்சமயம் அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். பின்பு யூதக்கிறிஸ்தவர் களின் வலுக்கட்டாயத்தைப் பார்த்து அவர் இந்த உணவு ஒழுங்குகளைப் புறக்கணித்தி ருக்கலாம். இதனால்தான்போலும் 1 கொரி 8-10-இல் இவ்வாணையைப் பற்றி எந்தக் குறிப்பும் காணோம்.

நுணுக்கங்களைத் தவிர்த்துப் பார்த்தால் எருசலேம் தலைவர்கள் பெருமனம் வைத் துப் பவுலுக்கு ஆதரவு அளித்தனர். அடிப் படையில் விருத்தசேதனம் மீட்புக்குத் தேவை யில்லை என ஏற்றுக் கொண்டார். ஆகவே பவுலினுடைய வெற்றி பெரிது என்றே கூற லாம்.

எருது, காளை (OX)

1. பாரம் இழுப்பவை:-

இவை வண்டி இழுக்கவும் (எண் 7:3; 2 சாமு 6:6), உழவுசெய்யவும் (உப 22:10; 1 சாமு 11:5; 1 அர 19:19; யோபு 1:14) போரடிக்கவும் (உப 25:4) பயன்பட்டன. ஓய்வு நாளில் இவையும் இளைப்பாற வேண்டும் (யாத் 2312). இவற்றின் தலை யீற்று ஆண்டவருக்குச் சொந்தமாகும் (யாத் 34:19; லேவி 27:26). இவை பொதுவாகப் புல்லைத் தின்றன (எண் 22:4; யோபு 6:5). எனினும் வரண்ட காலத்தில் வைக்கோ லைத் தின்றன. (ஏச 11:7) இவற்றின் சாணம் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது (எச 4:15). எருதுகள் பற்றிய விதிமுறைகள் (யாத் 21:28-22:15) என்ற பகுதியில் காணப்படுகின் றன.

2. உணவாகப் பயன்படும் எருதுகள்:-

எருது உண்ணத்தக்க விலங்கானாலும்

(உப 14:4) பொதுவாக எபிரேய மக்கள் தங்களுடைய உணவில் அதைச் சேர்த்துக் கொள்ளவில்லை. சிலகுறிப்பிட்ட சிறப்பு விழாக்களின்போது மாட்டை அடித்தனர் (1 சாமு 14:31-34; 1 அர 1:19; பழ 15:17; ஏச 22:13; மத் 22:4). அரசர்களும் பிரபுக்களும் மாட்டு இறைச்சியை அடிக்கடி உண்டிருக்க லாம் (1 அர 4:23; நெக 5:18; ஆமோ 6:4).

3. பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டவை:-

எருதைப் பலியாக ஒப்புக் கொடுக்கும் வழக்கம் மேற்காசிய மக்களிடையே வழங்கி வந்தது (அ.ப.14:13). எபிரேய மக்களி டையே இத்தகைய வழக்கமானது பண் டைய காலந்தொட்டே இருந்து வந்தது (யோத் 2:24; லேவி 3:1; 9:4; 22:23; எண் 7:88).

4. உடைமை:-

ஒரு கழுதையைக் கொண்டிருப்பதுபோல ஓர் எருதையாவது கொண்டிருப்பது வாழ்க் கைக்கு மிக அவசியமானதாகும் (யோபு 24:3). அதற்கு மாறாகப் பெருஞ் செல்வந்தர் களும் வசதிபடைத்தவர்களும் ஆடு, மாடு களை மந்தையாக வைத்திருந்தனர். அது அவர்களின் சமூக, பொருளாதார நிலைக்கு அடையாளமாகும் (ஆதி 12:16; 32:5; 2 சாமு 12:2; யோபு 1:3; திருவுரை 2:7). இவைக ளைப் பகைவர்கள் எடுத்துச் சென்றனர் (1 சாமு 15:9; 27:8; யோபு 1:14-15; எரே 5:17; 49:32).

5. அழகும் அடையாளமும்:-

சாலமோன் ஆலயத்தில் இருந்த கடல் தொட்டி பன்னிரு எருதுகளின் மேல் வைக் கப்பட்டிருந்தது (1 அர 7:25). சட்டங்களில் காளைகள் பொறிக்கப்பட்டிருந்தன (1 அர 7:29), மேற்காசியாவில் எருதுகளும் பிற விலங்குகளும் தெய்வங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டன. எருது அதனுடைய வலி மைக்கும் காளை பாலின வளமைக்கும் அடையாளமாக இருந்தது. எசக்கியேலின் காட்சியில் காணப்பட்ட கெருபுகள் கொண் டிருந்த நான்கு முகங்களில் ஒன்று எருது அமைப்பைக் கொண்டிருந்தது (எசே 1:5-10). இதனால் பாதிக்கப்பட்டுத் திருவெளிப் பாட்டில் இறைவனின் அரியணையைச் சுற்றி நின்ற உயிரினங்களில் ஒன்று எருதின் முகத் தைக் கொண்டிருந்தது. (திருவெளி 4:6-11).

**எருபாகால்** (JERUBAAL - பாகால் போராடட் டும் அல்லது பெருகட்டும்)

கிதயோன், தன் தந்தை ஒபிராவில் கட்டியி ருந்த பாகாலின் பீடத்தை உடைத்தெறிந்த தால் அவருக்கு எருபாகால் என்ற பெயர் அளிக்கப்பட்டது (நீதி 6:32). அன்றிலிருந்து இது கிதயோனின் மற்றொரு பெயராக விளங்கியது (7:1; 8:35). அல்லது கிதயோன் என்ற பெய நக்குப் பதிலாகப் பயன்படுத்தப் பட்டது (8:29; 9:1-2.5.16.19.24.28.57; 1 சாமு 12:11). இது வெவ்வேறு மூலங்களைச் சுட்டு கிறது.

இப்பெயரின் மங்கள வடிவம் ''வெட்கம் போராடட்டும் அல்லது பெருகட்டும்'' என்ற பொருளுடைய எருபாசத்து 2 சாமு 11:21-இல் வருகிறது.

**எருபாசத்து** (JERUBBESHETH - வெட்கம் போராடட்டும், வெட்கம் பெருகுகின்றது)

எருபாகால் என்ற பெயருக்குப் பதிலான பெயராகும்; மூலப் பெயரிலுள்ள பாகால் என்பதை அழிக்க, அதற்குப் பதிலாக வெட் கம் என்ற சொல்லைப் பயன்படுத்தி அமைக் கப்பட்ட சொல்லாகும் (2 சாமு 11:21)

**எருவேல்** (JERUEL - இறைவனால் நிறுவப் பட்டது)

தெக்கோவாவிற்கும் ஏன்கேதிக்கும் இடைப்பட்ட பாலைவனமாகும் (2 நாள் 20:16). சீசு ஏற்றத்தில் அமைந்திருக்கிறது. இங்குதான் யோசபாத்து அம்மோனிய, மோவாபிய, மற்றும் மெயூனியக் கூட்டணி யைத் தோற்கடித்தார்.

**எருசா** (JERUSHA - உடைமை)

யூதா அரசன் யோத்தாமின் தாயும் சாதோக் கின் மகளும் ஆவார் (2 அர 15:33; 27:1). 27:1 -இல் இப்பெயர் எருசாக்கு என்ற வடிவில் காணப்படுகிறது.

**எரெமோத்து** (JEREMOTH - வீங்கிய, பருத்த)

1. பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர், பெக்கரின் மகன் (1 நாள் 7:8). ஆனால் தலைமுறைப்படி செபுலோனைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

2. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஏல்பாலின் மகன் (1 நாள் 8:14). 8:27 -இல் வரும் எரொகாமும் இவரும் ஒருவராக இருக்கலாம்.

3. ஒரு மெராரிய லேவியர் - மூசியின் மகன் (1 நாள் 23:23). 24:30 -இல் இவர் எரிமோத்து (4) என்றழைக்கப்படுகிறார்.

4. தாவீது காலத்தில் லேவியர் பாடகர்களில் 15-ஆவது பிரிவின் தலைவர். ஏமானுக்குப் பிறந்த லேவியர்களுள் ஒருவர் (1 நாள். 25:22). இவரும் எரிமோத்தும் (5) ஒருவராக இருக்கலாம்.

5. நப்தலி இனத்தின் தலைவர்களில் ஒருவர். ஆசிரியேலின் (2) மகன் (1 நாள் 27:19).

6. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய மற்றொரு யூதன், சட்டுவின் மகன் (எஸ் 10:27).

7. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய ஒருவர். ஏலாமின் மகன் (எஸ் 10:26).

8. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய மூன்றாவது யூதன். பானீயின் மகன் (எஸ் 10:29).

**எரேக்கு** (ERECH - மிக நலமுள்ள)

சுமேரின் முக்கியமான பெரிய நகரங்களில் ஒன்று. பாக்தாத்திற்குத் தெற்கே 256 கிலோ மீட்டர்களுக்கு அப்பாலும் யூப்பிரத்திசின் கிழக்குக் கரையில் ஊரிலிருந்து 65 கி.மீ. தொலைவிலுமுள்ள இக்கால வார்கா என்ற நகரமாக அடையாளம் காட்டப்படுகிறது. ஆதி. 10:10 -இல் சீனார் நாட்டிலுள்ள நிம்ரோத்து அரசைச் சார்ந்த ஒரு நகரமாக, நாடுகளின் பட்டியலில் குறிப்பிடப்படுகிறது. எஸ் 4:9-10 -இன்படி எரேக்கின் மனிதர்களும் மற்றவர்களும் ஒசினப்பர் (அநேகமாக அசூர்பானிப்பால்) என்பவனால் சமாரியாவின் நகரங்களிலும் நதியின் அக்கரையிலுள்ள மற்ற நாடுகளிலும் குடியேற்றப்பட்டனர்.

கி.மு.4000-ஐ ஒட்டி, ''உபாய்து'' மக்களால் குல்லாப்பு என்ற கிராமம் முதலில் நிர்மாணிக்கப்பட்டது. பிற்காலத்தில், குல்லாப்பு எரேக்கு என்று அழைக்கப்பட்ட நகரின் ஒரு பகுதியாகியது. கி.மு.3000 ஆண்டுகள் தொடக்கத்தில் வாழ்ந்த மெஸ்க்கியக்கசேர் எரேக்கை நிர்மாணித்துக் கட்டி அந்நகரின் முதல் அரச மரபையும் நிறுவினார். குல்லாப்பு கிராமம் எரேக்கு நகரோடு இணைக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து என்மெர்கர், லுகல் பாண்டா, கில்காமெஸ் போன்ற அரசர்கள் ஆண்டார்கள். பிற்காலத்தில் எரேக்கை ஆண்ட முக்கிய ஆட்சியாளர்களான லுகாஸ்லா கெஸி, உத்துகெகல், சின்காஸித் (கி.மு.1800) ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பல கட்டடங்களை எழுப்பி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார்கள். கமுராபி காலத்திலிருந்து எரேக்கு பாபிலோனியாவின் ஒரு பகுதியாகப் பார்த்தியர் ஆட்சியின் வீழ்ச்சிவரை இருந்தது. எரேக்கு இந்த வீழ்ச்சியின்போது அப்படியே கைவிடப்பட்டது.

எரேக்கில் ஆன் தான் முக்கிய தெய்வம். இது சுமேரிய கடவுள்கள் கூட்டத்தின் அரசனாகத் தொடக்க காலத்தில் இருந்தது. இருந்தபோதிலும் இனான்னாதான் எரேக்கின் விருப்ப தேவதையாக விளங்கினாள். இவள் ஒரு காதல் தேவதை. இவளிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். இறையியலாரின் கருத்துப்படி இவள் சுமேரின் வளத்தையும் மக்கள் பெருக்கத்தையும் உறுதிப்படுத்த அரசன் துமுசியை மணந்தாள். எனவேதான் பிறகு வந்த சுமேரிய அரசர்கள் பலர் 'துமுசி' பெயரை அடையாள முறையில் சூட்டிக் கொண்டார்கள்.

*கி.பி.1912-13, 1928-39 மேலும் 1954-59 வருடங்களில் ஜெர்மானிய புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் எரேக்கு ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள். அதன் விளைவாக 10 கி.மீ. சுற்றளவுள்ள நகர மதிற்கவர்களையும் இரண்டு சிகுராத்துக்களையும், 3-4 ஆயிரம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த பல கோயில் களையும் கண்டுபிடித்தார்கள். பல நூற்றுக் கணக்கான செதுக்கப்பட்ட உருவப்படங்கள் கிடைத்தன; பல முத்திரைகளையும், முத் திரை பதித்த அடையாளங்களையும் கண் டார்கள். ''துமுஸி இனான்னா'' உருவம் பதித்த ஒரு வெண்கலச் சிலை கிடைத்தது; பெண்தலையைப் போல உருவம் கொண்ட கற்சிலை கிடைத்தது. மிகவும் பிற்காலத் தைச் சேர்ந்த செலூக்கிய கல்வெட்டுச் கவடி கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் பாபி லோனிய வானியலைப் பற்றிய வாசகங்கள் காணப்பட்டன.*

**எரேது** (JERED - வழித் தோன்றல், ரோஸ்)

*மெரேத்துக்கு அவரது யூத மனைவி வழி யாகப் பிறந்த மகன். கெதோரின் தந்தை (1 நாள் 4:18).*

**எரேமாய்** (JEREMAI)

*காசூமின் புதல்வர்களில் ஒருவர். புறவின மனைவியை விலக்கிவிடுமாறு எஸ்ராவால் வற்புறுத்தப்பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10: 33).*

**எரேமியா** (JEREMIAH - யாவே உயர்த்து கிறார், நிறுவுகிறார்)

*1. யோசியா அரசனின் மனைவியும் அர சன் யோவகாசு மற்றும் அரசன் செதேக்கியா வின் தாயுமான கமுத்தாளின் தந்தை (2 அர 23:31; 24:18; எரே 52:1). இலிபுனாவில் வாழ்ந்தவர்.*

*2. ஒரு மனாசேயின் இனத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் (1 நாள் 5:24).*

*3. சிக்கிலாகில் தாவீதுடன் இணைந்து கொண்ட வலிமை வாய்ந்த வீரர்களுள் ஒரு வர். பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 12:4).*

*4. சிக்கிலாகில் தாவீதுடன் இணைந்து கொண்ட காது இனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளின் பெயர் (1 நாள் 12:10,13).*

*5. நெகமியா உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெக 10:2).*

*6. செருபாபேலுடன் அடிமைத்தனத்தி னின்று திரும்பி வந்த குருக்களில் ஒருவர் (நெக 12:1). இப்பெயர் ஒரு குலத்திற்குத் தலைவராகவும் விளங்குகின்றது (12:12).*

*7. நெகமியா காலத்தில் எருசலேம் மதிலை அர்ப்பணம் செய்தபோது அங்கி ருந்த ஒரு குரு (நெக 12:34). இவர் (5)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.*

*8. அனத்தோத்திலிருந்து வந்த ஓர் இறை வாக்கினர். அவரது பணி, எரேமியா நூலில் கூறப்பட்டிருக்கிறது. இலிக்கியா என்ற குரு வின் மகன் (எரே 1:1). யோசியாவின் 13-ஆம் ஆண்டில் (627) இறைவாக்குரைக்க இவருக்கு அழைப்பு வந்தது. இது இவர் யோசியா ஆட்சியில் தொடக்கத்திலோ அவ ருக்கு முந்திய மனாசேயின் ஆட்சியிலோ இவர் பிறந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. யூதாவின் இறுதி ஐந்து அரசர்கள் காலத்தில் இவரது பணி 40 ஆண்டுகளுக்கு நீடித்தது. 587-இல் எருசலேம் பாபிலோனியர்களுக்கு வீழ்ச்சியுற்றபோது, மக்களில் எளியவர்க ளோடு யூதாவில் தங்க இவர் அனுமதிக்கப் பட்டார். ஆனால் பாபிலோனிய ஆளுநன் கெதாலியா கொலை செய்யப்பட்டபின் இவர் எகிப்துக்கு ஓடிப்போகுமாறு கட்டா யப்படுத்தப்பட்டார் காண்க. ஏரேமியா நூல்.*

*9. கபசினியாவின் மகனும் யாசானியா வின் தந்தையுமாவர். இறைவாக்கினர் எரே மியாவின் சம காலத்தில் வாழ்ந்தவர் (எரே 35:3). இவர் ஓர் இரக்காப்பியர்.*

**எரேமியாவின் நூல்** (BOOKS OF JEREMIAH)

*1. எரேமியாவின் காலம்:-*

*எரேமியா பழங்கால மேற்காசியாவின் மிகவும் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தார். ஒரு பேரரசின் வீழ்ச்சியையும்,*

அதைவிடப் பெரிய பேரரசின் எழுச்சியை யும் கண்டவர். இந்தக் குழப்பங்களின் மத்தி யில் சிற்றரசான யூதா சிக்கித் தவித்தது. அச்சமயத்தில் யூதா திறமையற்ற அரசர்க ளால் ஆளப்பட்டதால் வரலாற்றில் பெரிய சக்தியான அந்தப் பேரரசை எதிர்க்கும் முயற் சியிலேயே அழிந்து போனது.

அ. மேற்காசியா:-

அசூனசிர்பால் (கி.மு. 884-860), மூன்றாம் சால்மனேசர் (859-825) இவர்களின் வெற்றி ததும்பும் படையெடுப்புகளுக்குப்பின், அசீ ரியா ஏறத்தாழ 200 ஆண்டு ஆட்சி செலுத்தி யது. அசீரியப் பேரரசு எல்லாத் துறைகளி லும் தன் உச்சக்கட்டத்திலிருந்தது எஸ்ஸர்கத் தோன் (681-670) மன்னன் காலத்தில்தான். இப்படிப்பட்ட பேரரசின் பெருமையை அசூர்பானிபால் (669-633) தன் ஆட்சியில் காப்பாற்றி வந்தாலும் அவருடைய இறுதி யில் பேரரசு அழியும் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. சுமார் 633-இல் அசூர்பானி பால் இறந்ததும் வரலாற்றிலிருந்தே இப் பேரரசு மறைய ஆரம்பித்தது.

இவ்வேளையில் சித்தியர்கள் மேற்காசி யாவைத் தாக்கினர். இந்தத் தாக்குதல் புதிய இடங்களைப் பிடிப்பதற்கன்று. மாறாகப் புதிதாகக் குடியேறிய பகுதிகளை மிகவும் கொடுமையான முறையில் கொள்ளையிட வேயாகும். இவ்வேளையில் பாபிலோன் எழுச்சியுற ஆரம்பித்தது. எனவே பாபிலோ னில் அப்போது முடியரசனாய் இருந்த நபோபோலசார் (626-605) அசீரியாவுக்கு எதி ராகக் கிளர்ச்சி செய்தார். அசீரியாவின் ஆதிக் கத்திலிருந்து பாபிலோனை விடுவித்து சுதந் தர நாடாக்கியபின், மேதிய நாட்டின் அரசன் சியாக்சாரஸ் என்பவனின் உதவியோடு அசீ ரியாவுக்கு எதிராகப் படையெடுத்தார். அசூர் நகரத்தைக் கி.மு. 614-இலும் தலைநக ரான நினிவே நகரத்தை 612-இலும் கைப்பற் றினார். அப்போது அசீரியாவின் கடைசி அரசனாய் இரண்டாம் அசூர்-உபால்லித் காரானில் தஞ்சம் புகுந்து கொண்டு, எகிப் தின் பார்வோன் நெக்கோவின் உதவியுடன் நபோபோலசாரை மூன்றாண்டுகள் வரை எதிர்த்தார். 609-இல் நபோபோலசார் காரா னைக் கைப்பற்றி தாம் 605-இல் இறக்கும் வரை தம் பேரரசை விரிவாக்கினார். இவ் வேளையில் நபோபோலசாரின் மகனும், அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவருமா கிய நெபுக்கதுனேசார் எகிப்தியப் படைக ளைக் கார்கெமிஸ் என்னும் இடத்தில் தோற் கடித்தார். இவ்வெற்றி பாபிலோனை அக் கால அரசியலில் ஒரு பெரிய வல்லரசாக மாற்றியது. இயல்பிலேயே போரில் வல்லவ ரான நெபுக்கதுனேசார் (605-561) பெரும்பா லான ஆண்டுகளைத் தம் பேரரசுக்கு வெளி யில் போரிடுவதிலேயே கழித்தார். எகிப்து மட்டுமே பாபிலோனை எதிர்த்ததால் 601-இல் இருபடைகளும் சந்தித்தன. இறுதியாக 568-இல் பாபிலோனியப்படைகள் வெற்றி கண்டன.

ஆ யூதா: சமயப்பின்னணி:-

மனாசேயின் (687-642) நீண்ட ஆட்சிக் காலத்தில் யூதா அசீரியாவுக்குக் கப்பம் கட் டும் சிற்றரசாகவே இருந்தது. இதன் விளை வாக மெசபொத்தாமியாவின் இசிதார் வழி பாடும், சிசு பலியும், மத அடிப்படை விபச்சாரமும் பெருகின. இதே நிலை யோசி யாவின் (640-609) காலத்திலும் இருந்தது. ஆனால் 622-621-இல் ஆலயத்தில் சட்டப்புத் தகம் கண்டுபிடிக்கப்பட்டபின், யோசியா தம் அரசில் மட்டுமல்லாமல் 721-இல் அசீரி யப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்த வட இஸ்ராயேல் நாட்டிலும் பல சீர்திருத்தங்க ளைச் செய்தார். அரசியல் அமைப்பும், யாவேயின் உடன்படிக்கைக்கு மக்கள் நம் பிக்கைக்குரியவர்களாய் இருந்ததும் சாதக மாக இருந்தன.

பெரிய ஆடம்பரமான சிறப்பான விழா வில் மோசேயின் உடன்படிக்கை புதுப்பிக் கப்பட்டது. எருசலேமை மட்டுமே வழி பாட்டின் தனியொரு தலைமை இடமாக வைத்துக் கொண்டு சிலைவழிபாடு நடந்த மேட்டு நிலங்களெல்லாம் அழிக்கப்பட் டன. 609-இல் யோசியா மெகிதோவில் இறந்தபோது, இப்பெருமைமிக்க அரசாட்சி முடிவுற்றது. அரசன் நெக்கோவைக் காரா

னில் அசூர்-உபால்லித்தோடு சேராமல் தடுக்க யோசியா முயற்சித்தார். அம்முயற்சியில் உயிர் துறந்தார். இவ்வேளையில் பாபிலோனுக்கு சீரியா மற்றும் பாலஸ்தீனத்தின் மேல் அதிகாரம் இல்லாததால் நெக்கோவின் மேலாண்மையின் கீழ்ப் பாலஸ்தீனம் சிற்றரசாக விளங்கியது. நெக்கோ யோவகாசைப் பதவியிலிருந்து இறக்கி எகிப்துக்குக் கைதியாக அனுப்பிவிட்டு யோயாக்கிமை (609-598) பதவியிலமர்த்தினார். யோயாக்கிமின் காலத்தில் யோசியா ஒழித்த அத்தனையும் தளிர்த்தன. மேலும் யூதா எகிப்தின் ஆட்சியில் அடிமையாக இருந்தது. எனவே பாபிலோனை எதிர்ப்பதே அரசனின் தலையாய பிரச்சனையாக இருந்ததால், 597-இல் எருசலேம் அழிந்தது. யூதர்கள் முதன்முறை நாடு கடத்தப்பட்டனர். அவருடைய மகனான யோயாக்கின் நெபுக்கதுனேசாரால் நாடு கடத்தப்பட்டார். அவருக்குப்பின் அவருடைய மாமன் செதேக்கியா (597-587) ஆட்சிக்கு வந்தார்.

செதேக்கியாவுக்கு ஆட்சிமுறை சரியாகத் தெரியாததால், இரண்டு குழுக்களின் ஆலோசனைகளிடையே தடுமாறினார். ஒரு சாரர், பாபிலோனை எதிர்க்க எந்த அரசும் இல்லாததால், பாபிலோனுக்குச் சரணடையக் கூறினர். மற்றொரு குழுவினர், எகிப்தோடு சேர்ந்து நெபுக்கதுனேசாரை எதிர்க்கும்படித் தூண்டினர். இவர்களே இறுதியில் வெற்றியும் பெற்றனர். இதன் அடிப்படையில் செதேக்கியா பாபிலோனை எதிர்த்ததால், நெபுக்கதுனேசார் எருசலேமைக் கைப்பற்றி 587-இல் மீண்டும் யூதர்களை இரண்டாம் முறையாகப் பாபிலோனுக்கு நாடு கடத்தினார். செதேக்கியாவின் கண்களைக் குருடாக்கிப் பாபிலோனுக்குக் கைதியாகக் கூட்டிச் சென்றார். இவ்வாறு யூதா பாபிலோனியப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. பின்பு நெபுக்கதுனேசார் கெதாலியாவைப் புதிய பகுதியின் ஆளுநராகச் சுபாவில் ஆட்சியிலமர்த்தினார். ஆனால் இரண்டு மாதங்களுக்குப்பின் அம்மோனிய அரசனின் தூண்டுதலால் கெதாலியா கொலை செய்யப்பட்டார். எனவே நெபுக்கதுனேசாரின் கடுங்கோபாக்கினைக்குப் பயந்து பல யூதேய நாட்டினர் எரேமியாவை அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போயினர்.

இ. சமூகப் பின்னணி:- மக்களின் ஒழுக்கம் ஏசயாவின் காலத்தைவிட எரேமியாவின் காலத்தில் சீர்குலைந்திருந்தது. நீதி நிலைகுலைந்து போனது (எரே 5:1). விபச்சாரமும், எளியோரையும் அநாதைகளையும் நசுக்கி வதைத்தலும் அன்றாட நடைமுறையாயிற்று (எரே 25:26-28). இதை எரேமியா மிகமிக வன்மையாகக் கண்டனம் செய்தார். இவற்றிற்குச் சமூகத்தில் செல்வாக்கு உடையவர்களே காரணம் என்று பொங்கியெழுகிறார் எரேமியா (5:4-5.31)

2. பெயரும், வாழ்வும்:-

''எரேமியா'' என்ற பெயர், ''யாவே நிறுவுகிறார்'' அல்லது ''யாவே உயர்த்துகிறார்'' எனப் பொருள் கொள்ளலாம்.

இறைவாக்கினர் எரேமியா எருசலேமுக்கு வடகிழக்கில் மூன்று மைல் தூரத்திலுள்ள அனத்தோத்து என்ற குக்கிராமத்தில் கி.மு. 646-இல் அரசன் மனாசேயின் ஆட்சி முடிவில் பிறந்தார் எனலாம். இவர் குருக்கள் குலத்தைச் சேர்ந்தவர். பல நூற்றாண்டுகளுக்கு முன் சிலோவில் பெரிய குருவாயிருந்த ஏலியின் மரபைச் சார்ந்த அபியாத்தார் என்பவரை மாமன்னன் சாலமோன் அனத்தோத்துக்குத் துரத்தினான். ஒருவேளை இவ்வாறு துரத்தப்பட்ட அபியாத்தாரின் வழியாக எரேமியா ஏலியின் வழித்தோன்றலாகக் கூட இருக்கலாம். இவருடைய இளமைப்பருவம் பற்றி நமக்குவேறு செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

இத்தகைய குழப்பமான அரசியல், சமய, சமூகப் பின்னணியில்தான் இறைவன் எரேமியாவை யூதாவுக்கு இறைவாக்கினராகச் செல்ல அழைத்தார். அவருடைய பணி சுமார் 40 ஆண்டுகள் நீடித்தது (காண்.எரே. 1:1-3). உண்மையில் யூதாவின் கடைசி ஆண்டுகளிலே இறை ஊழியர்களின் ஆலோசனை பெருமளவில் தேவைப்பட்டது. எனவே எரேமியா மட்டுமல்லாது செப்பனியா,

அபக்கூக்கு, நாகூம், எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள் இறைவனின் வார்த்தையை எடுத்துரைத்தனர். இவ்வாறு பல இறைத் தூதுவர்கள் வந்தாலும் இறைவார்த்தையை நேருக்கு நேர், யாராயிருந்தாலும் எடுத்துரைப்பதில் எரேமியாவுக்கு நிகர் அவரே.

எரேமியாவின் பணியின் முதல் பகுதி 627-626-இல் அவர் இறைவாக்கினராக இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டது முதல் 609-இல் யோசியாவின் இறப்புவரை நீடித்தது. இச்சமயத்தில் இவர் உரைத்த இறைவாக்குகள் 1-6 அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. யோசியா மிகவும் இளயவயதினராக இருந்தபடியால் மனாசேயின் அட்டூழியங்களை அழிக்க முடியவில்லை. மேலும் 622-இல் ஆலயத்தில் திருச்சட்டநூல் கண்டுபிடிக்கப்பட்டபோது அவர் அனாதோத்திலேயே இருந்திருக்க வேண்டும். சட்ட அடிப்படையில் யோசியா சீர்திருத்தங்களைச் செய்ததால் அவரைப் பாராட்டியிருப்பார். இச்சமயத்தில் இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே உள்ள உடன்படிக்கையைக் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு போல விளக்குகிறார். இஸ்ராயேல் மக்கள் வழிதவறிச் சென்றால் வடக்கிலிருந்து இறைவனுடைய தண்டனையாக அரசர்கள் படையெடுத்து அழித்தொழிப்பார்கள் என்றும் இறைவாக்குரைத்தார்.

யோயாக்கிம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து எரேமியாவின் பணியிலே புதிய திருப்பம் ஏற்படுகிறது. யோசியாவின் சீர்திருத்தங்களெல்லாம் சீர்கேடான நிலைக்கு உள்ளாகி, சிலைவழிபாடு தழைத்தது. அரசியல் அளவிலே எகிப்தியக் கட்சி ஆட்சியை ஆட்டிப் படைத்தது. இவ்வேளையில் எரேமியா மீண்டும் சிலைவழிபாட்டையும், உடன்படிக்கையின் மேலெழுந்த வாரியான எண்ணத்தையும் வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கினார். பாபிலோன் எகிப்தை வெற்றி கண்டவுடனே (605) வடக்கிலிருந்து இஸ்ராயேல் மக்கள் மீது படையெடுக்கப் போகிற எதிரியார் என்று ஓரளவு தெரிந்து கொண்டார். ஆலயத்திற்குச் சென்று இறைவாக்குரைக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்ததால் யூதாவுக்கும், எருசலேமுக்கும் எதிரான இறைவாக்குகளைப் பாரூக்கு என்பவரிடம் கூற அதை அவர் ஓர் ஏட்டுச்சுருளில் எழுதி ஆலயத்தில் வாசித்தார். இதனால் கோபமடைந்த யோயாக்கிம், ஏட்டுச் சுருளை அழித்து விட்டு அவரையும் தொலைக்கத் தேடினார். ஆனால் தெய்வாதீனமாகக் காப்பாற்றப் பட்டு மீண்டும் அதைப் புதிய ஏட்டுச் சுருளில் எழுதினார் (எரே 35). இதனால் மனமுடைந்த எரேமியா இறைவனிலும், தம் பணியிலும் நம்பிகைஇழந்தார். இதைத்தான் பாடலாக ''எரேமியாவின் அறிக்கை''யில் காண்கிறோம்.

எரேமியாவின் பணியின் மூன்றாவது பகுதி 597-இல் எருசலேமின் முதல் அழிவு தொடங்கி 587-க்குப் பிறகு எகிப்தில் அவரின் (எரேமியா) இறப்புவரை நீடித்தது. 597-இல் நாடுகடத்தப்பட்ட யோயாக்கின் நாடு திரும்புவான் என மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் எரேமியாவோ இதற்கு எதிராகவே இறைவாக்குரைத்தார் (எரே 22:20-30). 594-593-இல் இவர் எருசலேமின் போலி இறைவாக்கினர்களுக்கெதிராக வெகுண்டெழுந்து பாபிலோனும் அழிவுறும் என்று இறைவாக்குரைத்தார் (51:59-64; 29:10 தொ). இவ்வேளையில் திறமையற்ற செதேக்கியா அரசியல் கட்சிகளுக்கிடையே சிக்கித் தவித்தாலும், எரேமியாவின்மீது அவருக்கு நன்மதிப்பு இருந்தபடியால் அவரைச் சதிகாரர்களின் கைகளிலிருந்து தப்புவித்தார். அவர் அனாத்தோத்துக்குத் திரும்பிச் செல்ல விரும்பியபோது பாபிலோனியருடன் சேர்ந்து கொள்ளப்போவதாகவும், தம் போதனையால் மக்களிடையே குழப்பம் விளைவிப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார் (37:11-38:28). 587-இல் எருசலேம் மீண்டும் பாபிலோனியரால் அழிக்கப்படும் வரை அங்கேயே இருந்தார். பின் அவர் கெதாலியா யூதாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு உதவினார். ஆனால் கெதாலியா கொலை செய்யப்பட்டபின்

நெபுக்கதுனேசாரின் கொடுமைகளுக்கு அஞ்சி, எரேமியாவையும் அழைத்துக் கொண்டு யூதர்கள் பலர் எகிப்துக்கு ஓடிப் போயினர். அவர் அங்கேயே சிறிது காலத்திற்குப்பின் இறந்துவிட்டதாகப் பாரம்பரியம் கூறுகிறது.

*4. நூல்:-*

***அ) ஆசிரியரும் உண்மைத் தன்மையும்:-*** இந்நூலின் எப்பகுதியை யார் எழுதியது என்பது ஒரு தீராத பிரச்சினையாகவே இருந்து வருகிறது. கி.பி. 1901-இல் தூகன் என்பவர் எரேமியாவால் எழுதப்பட்ட பகுதியை இப்போது இருக்கும் நூலின் ஐந்திலொரு பகுதியாகச் சுருக்கினார். ஆனால் பின்னர் வந்த விவிலிய அறிஞர் சிலர், இவருடைய கருத்தை ஒதுக்கிவிட்டு, இந்நூலில் பல இடைச்செருகல்கள் இருந்தாலும் பெரும்பாலானவை எரேமியாவுக்குரியவை எனக் கருதுகின்றனர். இந்நூலைப் பற்றி மோவின்கல் என்பவர் வெளியிட்ட ஆராய்ச்சியில் மூன்று வகையான ''மூலங்களைக்'' கண்டார். அவை (1) கவிதை இறைவாக்குகள் (2) சரிதைச் செய்திகள் (3) உபாகம பாரம்பரியக் கூற்றுகள் என்பன.

கவிதை இறைவாக்குகள் எரேமியாவுடையவை என்பதில் ஐயமேதுமில்லை (எரே 1-25; 30-31; 46-51). ஆனால் மோவின்கல்லும், அவரைச் சார்ந்தவர்களும் இவை பின்னர்ச் சேர்க்கப்பட்டவை என இப்பகுதிகளை ஒதுக்கிவிட்டாலும், இக்கவிதைகளை நாம் கூர்ந்து ஆழ்ந்து படிக்கும் போது பல எரேமியாவுடையவை என்பதும், இன்னும் எஞ்சியுள்ளவற்றில் எரேமியாவின் சிந்தனைக் கரு இருப்பதையும் உணரமுடியும். ஆனால் பாபிலோனைப் பற்றி இறைவாக்கு (50-51) நாடுகடத்தப்பட்டபின் எழுதப்பட்டவையாகும். உரைநடையிலுள்ள சரிதைச் செய்திகள் (26-45) பாரூக்கால் எழுதப்பட்டது எனக் கருதப்படுகிறது. எரேமியாவின் நண்பரும் செயலருமாகிய பாரூக்கு தம் தலைவர்மீது கொண்ட மரியாதையினாலும் நம்பிக்கையினாலும், அவரின் செய்திகளையெல்லாம் தொகுத்து அவற்றின் வரலாற்றுப் பின்னணியில் அமைத்தார். அஃதோடு நில்லாமல் எருசலேமின் முற்றுகையின் போது (588-587) அவருடைய பாடுகளையெல்லாம் தொகுத்தெழுதினார். இப்பகுதிகளைப்பற்றியும் எவ்வித ஐயமும் இல்லை. இவை யூதாவின் வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் பயன்படுகின்றன.

''உபாகமப் பாரம்பரிய அறிவுரைகள்'' பற்றிப் பல பிரச்சனைகள் எழுகின்றன. இவை பெரும்பாலும் ''ஆண்டவருடைய வாக்கு எரேமியாவுக்கு அருளப்பட்டது'' என்ற சலிப்புத்தரும் ஒரே வகையான பல்லவியைக் கொண்டு ஆரம்பிக்கின்றன. அவை: ஆலயத்தின் உரை (7:1-8:3); உடன்படிக்கையை மீறியதற்குத் தண்டனை (11:1-14); இறைவாக்கினரின் வாழ்க்கை நாட்டுக்கு ஓர் அடையாளம் (16:1-13); ஓய்வுநாள் கடைப்பிடிப்பு (17:19-27); குயவனும் களிமண்ணும் (18:1-12); உடைந்த சட்டியும் பசிகூருக்குச் சாபமும் (19:1-20:6); வாழ்வின் வழியும் சாவின் வழியும் (21:1-10); சமூக நீதி (22:1-5); நாடு கடத்தல் பற்றிய எச்சரிக்கை (25:1-14); எதிர்ப்பா? சரணடைவதா? (34-35) ஆகிய இப்பகுதிகளை உபாகமப் பாரம்பரிய நடையில் நாடு கடத்தப்பட்டபின் எழுதப்பட்ட எரேமியாவின் இறைவாக்குகள் என்று வகைப்படுத்தினார். மோவின்கல் 1914-இல் இதே கருத்தை ஏற்றுக் கொண்டாலும் உடனே அதனை மறுத்துப் ''பாரம்பரியம்'' என்று ஒன்று இருந்ததாகவும் அதில் எரேமியாவின் உண்மையான இறைவாக்குகள், உபாகமப் பாரம்பரிய நடைக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டன என்றும் கூறினார். அதாவது கவிதை இறைவாக்குப் பகுதிகளோடு ''வாய்மொழிப் பாரம்பரியம் இருந்தது என்றும், அதுதான் இந்த உபாகமப் பாரம்பரிய அறிவுரைப் பகுதிக்கு அடிப்படை என்றும் கருதினார். ஆனால், ஏன் எரேமியாவின் பகுதிகள் மட்டும் மாற்றப்படவேண்டும்? என்ற வினா எழுகிறது. இப்பகுதிகளுக்கும், உபாகமத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று கூறும் வேளையில், இரண்டிற்கும் இடையே வேறுபாடுகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

அப்படியிருக்க எரேமியாவுக்குரிய பகுதிகள் அவைகளுக்கென்று தனியொரு நடையைப் பின்பற்றுகின்றன என்று கூறுவதே பொருந்தும். எனவே, இந்த அறிவுரைகள் எரேமியாவின் பகுதிகளை உண்மையாகவே கொண்டுள்ளன; இவை உபாகமத்தின் போக்கில் மாற்றிக் கூறப்படவில்லை என்று கருதுவதே சிறப்பானதாகும். இப்பகுதிகளில் காணப்படும் எரேமியாவின் கருத்துக்களுக்கும், கவிதைப் பகுதிகளில் காணப்படும் கருத்துக்களுக்கும் உண்மையில் வேறுபாடுகள் இல்லை. ஆனால் இலக்கிய நடையில்தான் வேறுபாடு உள்ளது. ஒன்று உரைநடையிலும், மற்றொன்று கவிதை வடிவிலும் உள்ளன.

ஆ. நூல் தோன்றிய வரலாறு:- எரேமியாவின் இறைவாக்குகளெல்லாம் எவ்வாறு ஒன்றாகச் சேர்க்கப்பட்டு நூல் வடிவம் கொடுக்கப்பட்டன என்பது எளிதாகக் கண்டு பிடிக்க முடியாத ஒன்றாகும். இந்நூலை அப்படியே வாசிக்கிற போது பல இரட்டிப்பு நிகழ்ச்சியுரைகளைக் காண்கிறோம்.

6:12-15 = 8:10-12; 10:12-16 = 51:15-19;
16:14-15 = 23:7-8; 17:3-4 = 15:13-14;
23:19-20 = 30:23-24; 30:10-11 = 46:27-28:
49:19-21 = 50:44-46; நிகழ்ச்சிகளும் அவை நடந்த காலவரிசைப்படி தொகுக்கப்படவில்லை. அதி.21-இல் செதேக்கியாவின் ஆட்சியில் நடந்த முற்றுகை (கி.மு.588-857) குறிப்பிடப்படுகிறது. ஆனால் அதி 25-இல் செதேக்கியாவுக்கு முந்தைய அரசனான யோயாக்கிமின் ஆட்சி பற்றிய விவரிப்பு தரப்படுகிறது. கருத்து அடிப்படையிலும் சரியாகத் தொகுக்கப்படவில்லை. இவற்றை மூன்று தொகுப்பாகப் பிரிப்பர் ஆய்வாளர் சிலர். முதல் தொகுப்பு 605-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இக்கருத்தின்படி இத்தொகுப்பில் அதி 1-17வரை வரிசைப்படி அமைந்துள்ளது. அடுத்து அடையாளச் செயல்களும் (அதி 18-20), அதன் பிறகு இறைவாக்கினரையும் குருக்களையும் பற்றிய பகுதியும் (அதி 21-23) சேர்க்கப்பட்டன. இவற்றினிடையில் ''அறிக்கை'' இடைச்செருகல்களாக அமைக்கப்பட்டன. இரண்டாவது தொகுப்பில் (அதி 26-35) பாரூக் எரேமியாவின் கருத்துக்களைச் சுருக்கி எழுதியுள்ளார். இதிலும் சிறிய பகுதிகளான, போலித்தீர்க்கதரிசிகளிடம் எரேமியாவின் மோதல் (அதி 26-29); இஸ்ராயேலின் மீட்பு (அதி 30-31), செதேக்கியா காலத்து இறைவாக்குகள் (அதி 32-33), மற்றக் கருத்துகள் (அதி 34-35) ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுப்பு (அதி 36-35) பாரூக்கினால் எழுதப்பட்ட எரேமியாவின் சரிதையாகும். இறுதியாக அதி 46-51-இல் குறிப்பிடப்படும் நாடுகளுக்கு எதிராகக் கூறப்பட்ட இறைவாக்குகள் இரண்டு இடங்களில் எரே 25:13-க்குப் பிறகும், 45-ஆம் அதிகாரத்திற்குப் பிறகும் கூறப்பட்டுள்ளன. எனவே இப்போது உள்ள எரேமியாவின் திருநூல் நாடுகடத்தப்பட்டதன் இறுதியில் அல்லது உடனே அது உருவாக்கப்பட்டது எனலாம்.

இ. கிரேக்க வாசகம்:- விவிலிய அறிஞர் கே. கிராப்பின் (1852) கணக்குப்படி எழுபது நூல் கிரேக்க வாசகம் மசோரெட்டிக் எபிரேய வாசகத்தைவிட எட்டிலொரு பகுதி குறைவாக உள்ளது. பல சமயங்களில் சொற்களோ, சிறிய வாக்கியங்களோ இல்லாமல் போனாலும், சில சமயங்களில் சில பகுதிகளே இல்லாமலிருக்கின்றன. மேலும் கிரேக்க வாசகம் ''நாடுகளுக்கெதிரான'' பகுதிகளை 25-ஆம் அதிகாரத்திற்குப்பின் தருகிறது. கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தின் சுருக்கமா? அல்லது எபிரேய வாசகம் கிரேக்க வாசகத்தின் வளர்ச்சியா? எது காலத்தால் முந்தியது? ஆகிய வினாக்களுக்கு விடையளித்தல் எளிதன்று.

5. இலக்கிய நடை:-

இஸ்ராயேலின் இறைவாக்கினர்களுள் ஒருவரான எரேமியாவின் நடையும் இலக்கிய வடிவங்களும் அவர் ஒரு பெரியகவிஞர் என்பதைப் பறை சாற்றுகின்றன. அவரின் நடை மக்களின் கவனத்தைக் கவர்ந்திழுக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. நேரடித் தன்மை மிக்க நாடகப் பாணியிலமைந்த வசனங்கள் நூல் முழுவதும் உள்ளன. இவர் இதைக்

கலைக்காக அல்ல, மாறாகத் தம் தூதுரைக் கும் பணியால் உந்தப்பட்டு எழுதினார். இந்நூலில் பல இலக்கிய வடிவங்கள் உண்டு:- சந்தம் பொருந்திய இறைவாக்கு கள், தன்மை ஒருமையில் வரும் அறிக்கை கள், படர்க்கையில் உரைநடையாக வர்ணிக் கப்படும் வாழ்க்கை வரலாறு, அரச நாளேடு போன்ற வரலாறு முதலியன.

6. நூலின் அமைப்பு:-

I. தலைப்பு (1:1-3)

II. யூதாவுக்கும் எருசலேமுக்கும் எதிரான இறைவாக்குகள் (1:4-25:3)

அ. எரேமியாவின் அழைப்பு (1:4-19)

ஆ. யோசியாவின் ஆட்சிக்காலத்தில் தொடக்ககால இறைவாக்குகள் (2:1-6:30).

இ. யோயாக்கின் ஆட்சிக் காலத்தில் எரே மியாவின் பணி (7:1-20:18)

1. உண்மையான வழிபாடு (7:1-10:25)
2. முறிந்துபோன உடன்படிக்கை (11:1-13:27)
3. குற்றங்களும் தண்டனையும் (14:1-17:27)
4. இறைவாக்கினர் வாழ்வின் அடை யாளப் பொருள் (18:1-20:18)

ஈ. செதேக்கியா ஆட்சிக் காலத்தில் எரேமி யாவின் பணி (21:1-24:10)

உ. பாபிலோன் - யாவேயின் சாட்டை (25:1-13)

ஊ. புற இனத்தார்மேல் தீர்ப்பு (25:14-38)

III. நல்வாழ்வு பற்றிய இறைவாக்குகள்: இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப் பெறுதல் (26:1-35:19).

அ. எரேமியா கொடுமைப்படுத்தப்படு தல் (26:1-24)

ஆ. போலித் தீர்க்கதரிசிகளோடு போராட் டம் (27:1-29:32)

இ. ஆறுதல் மொழிகள்: இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்பெறுதல் (30:1-31:40)

1. வட இஸ்ராயேல் மீண்டும் அமைக் கப்பெறுதல் (30:1-32:2).
2. பின் சேர்க்கப்பட்ட துணுக்குகள் (31: 23-40)

ஈ. யூதா மீண்டும் நிலைநாட்டப்படுதல் (32:1-33:26)

1. மீண்டும் நிலைநாட்டப்படுதல் பற்றி வாக்குறுதி (32:1-44)
2. எருசலேமுக்கும் யூதாவுக்கும் மற்று மொரு வாக்குறுதி (33:1-26).

உ. மீட்பின் நிபந்தனைகள் (34:1-35:19)

IV. எரேமியாவின் துன்ப வரலாறு (36:1-45:5)

அ. கி.மு. 605-604-இல் எழுதப்பட்ட திரு நூல் (36:1-32)

ஆ. செதேக்கியாவும் இறைவாக்கினரும் (37:1-38:28)

இ. எருசலேமின் வீழ்ச்சி (38:28-39:18)

ஈ. மிசுபாவில் நிகழ்ந்தவை (40:1-41:18)

உ. எகிப்தில் குடியேறுதல் (42:1-44:30).

ஊ. பாருக்குக்குச் சொல்லப்பட்ட ஆறு தல் (45:1-5).

V. நாடுகளுக்கெதிரான இறைவாக்குகள் (46:1-51:64)

VI. வரலாற்றுப் பிற்சேர்க்கை: எருசலே மின் வீழ்ச்சி (52:1-34).

7. நூலின் இறையியல்:-

எரேமியாவின் இறையியல் அனுபவரீதி யானது. யாவேதான் ஒரே இறைவனென்றும் அவர்தான் வரலாற்று நாயகன் என்றும் பறை சாற்றுகிறார். யாவே எல்லாவற்றையும் படைத்து, உலகையும் அதிலுள்ள அனைத் தையும் ஆள்கிறார் (27:5; 5:22; 8:7). இவரைத் தவிர வேறு கடவுள் இல்லை. விக்கிரகங்கள் பயனற்றவை (2:5). யாவே ஒருவரே வாழ் வின் ஊற்றாகிய இறைவன் (2:13). இவர்

விண்ணுலகில் இருந்தாலும் எப்போதும் எல்லா மனிதருக்கு அருகிலும் உள்ளார் (23:23). அவர் ஒருவரே மனித எண்ணங் களை அறிகிறார் (11:20; 17:10). குயவன் களிமண்ணின் உருவத்தை நிர்ணயிப்பது போல இவர்தான் (18:1-12) இஸ்ராயேல் மற்றும் புறவினத்தாரின் நாடுகளின் முடிவை நிர்ணயிக்கிறார். யூதா பாவம் செய்த போது அதனைத் தண்டித்தார் (25:15 தொ). இப்படிப்பட்ட இறைவன் இஸ்ரா யேல் மக்களைப் பிரித்தெடுத்துத் தம் சொந்த உடைமையாக்கிக் கொண்டார். இஸ்ராயேல் மக்களோடு ஒரு தனிப்பட்ட உடன்படிக்கை யால் பிணைத்துக்கொண்டார் (7:23; 11:4; 24:7; 31:33). எனவே, இஸ்ராயேல் மக்கள் இறைவனின் இந்த அன்புக்கும் நம்பிக் கைக்கு முரியவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இஸ்ராயேல் மக்கள் இறைவனின் அன்பைப் புறக்கணித்து வழிதவறிப்பாவம் செய்த போது இறைவன் வேதனைப்படுகி றார் (2:5-31 தொ). இருப்பினும் மனந் திரும்ப அன்போடு அழைப்பு விடுக்கிறார் (29:12 தொ).

எரேமியாவின் போதனைகளில், தனிமனி தன் இறைவனோடு கொள்ளும் உறவே மேலோங்கி நிற்கிறது. கடவுள் கொள்ளும் புதிய உடன்படிக்கையில் ஒவ்வொருவனுட னும் இறைவன் தனிப்பட்ட உறவு கொள்கி றார் (31:33-34). உண்மையான மதம் இந்தத் தனிப்பட்ட உறவில்தான் இருக்கிறது (7:22). ஆனால், பாவம் செய்வது மனிதனை இறை வார்த்தையைக் கேட்கவிடாமல் செய்கிறது. ஆனால், மனிதனை மீட்க ஆண்டவர் கொள் ளும் புதிய உடன்படிக்கை மோசே செய்த உடன்படிக்கை போலன்று, மனித இதயங்க ளில் எழுதப்படும். புதிய இதயம் அருளப் படும். இதனால் மக்கள் இறைவனின் குரலைக் கேட்பர்.

**எரேமியாவின் மடல் (LETTER OF JEREMIAH)**

இது பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட யூதாவின் மக்களுக்கு (காண்க எரே 29) கி.மு. 597-இல் எரேமியா எழுதியதாக அமைந்தி ருக்கிறது. இது ஓரிசன் மற்றும் கிரேக்கத் திருச்சபைத் தந்தையர்களால் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாகக் கருதப்பட் டுப் பெரும்பாலான எழுபது நூல் பிரதிக ளில் புலம்பல் நூலுக்குப்பின் தனிப்பட்ட நூலாக வருகிறது. வுல்கத்தாவிலும் சில கிரேக்க, சீரியாக் பிரதிகளிலும் துணைத் திருமுறை நூல்களில் ஒன்றான பாரூக்கு நூலின் ஆறாவது அதிகாரமாக வருகிறது. கத்தோலிக்கத் திருச்சபை இதைத் திரு முறைப்பட்டியலைச் சேர்ந்த பகுதியாக ஏற்றுக் கொண்டு பாரூக்கு நூலின் 6-ஆவது அதிகார மாகக் கொண்டுள்ளது. பிரிவினைச் சகோத ரர்கள் இதைத் திருமுறைப்பட்டியலைச் சேராத பகுதியாகக் கருதுவர்.

எரேமியா நூலின் 10:11-இன் அரமேயிக்கு வாசகத்தை அடிப்படையாகக் கொண்ட மறையுரையாகத் தெரிகிறது. நாடுகடத்தப் பட்டவர்கள், பாபிலோனில் தங்கள் அயலா ரின் சிலைவழிபாட்டைத் தவிர்க்க வேண் டும் என்று கோருகிறது. இது ஏச 44:9-20; எரே 10:1-16 மற்றும், மனிதர் படைத்த புறஇனச்சிலைகளின் ஆற்றலற்ற தன் மையை எள்ளிநகையாடும் பகுதிகளை நினைவுபடுத்துகிறது. எரேமியா எழுதிய மடல் என்ற தலைப்பிற்குப்பிறகு, நாடுகடத் தலுக்குரிய காரணத்தையும் அதன் தன்மை யையும் முன்னுரை எடுத்துரைக்கிறது. அதை அடுத்து 9 அடிகள் புறஇன வழிபாட் டின் மடமையையும் பயனின்மையையும் பழித்துரைக்கும் முறையில் அமைந்துள் ளன. ஒவ்வோரடியும் 'அவை கடவுள்கள் அல்ல. ஆகவே அவற்றிற்கு அஞ்சவேண்டா' என்ற பல்லவியோடு முடிகிறது.

இலக்கிய, வரலாற்று அடிப்படையில் பெரும்பாலான அறிஞர்கள், இப்பகுதி கிரேக்கர்காலத்தில் குறிப்பாக கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகக் கருதுவர். சிலர் இது யோவான் இரிக்கானு காலத்தில் (2-ஆம் நூற்றாண்டின் இறுதி) அல்லது கி.மு. முதல் நூற்றாண்டில் (காண்க 2 மக் 2:2) எழுதப்பட்டதாகக் கருதுவர். அறிஞருள் பலர் இது அலக்சாந்திரியாவில் எழுதப்பட்டதாக நெடுங்காலமாகக்கருதி

வந்தனர். சிலர் மெசபொத்தாமியா அல்லது பாலஸ்தீனத்தில் எழுதப்பட்டதாகக் கருதுவர்.

அண்மைக்கால ஆய்வு, மடலில் காணப்படும் எபிரேயப் பண்புகள், மொழி பெயர்ப்பைச் சுட்டும் மற்ற மரபுகளைக்காட்டி, இம்மடல் எபிரேயத்தில் எழுதப்பட்டது என்று கூறுகிறது. வேறு சிலர், இது கிரேக்க மொழியிலோ அரமேயிக்கு மொழியிலோ எழுதப்பட்டது என்று கூறுவர். நமக்குக் கிடைத்துள்ள காலத்தால் முந்திய வாசகப்பகுதி கிரேக்க மொழியில் உள்ளது. கும்ரான் குகை 7-இல் இம்மடலின் ஒரு துணுக்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. காண்க. பாரூக்கு நூல்.

**எரோகாம்** (JEROHAM அவர் இரக்கம் கொள்வாராக)

1. எப்பிராயிம் இனத்தவர். எல்கானாவின் தந்தை. சாமுவேலின் தாத்தா (1 சாமு 1:1). 1 நாள் 6:27-34-இன்படி இவர் ஒரு லேவியர்.

2. பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:27). 8:14-இல் குறிப்பிடப்படும் எரேமோத்தாக இருக்கலாம் அல்லது (3)-இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவராக இருக்கலாம்.

3. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த புனயாவின் தந்தை அல்லது முன்னோர் (1 நாள் 9:8). இதற்கு இணையான பட்டியலில் நெக 11:7-இல் இப்பெயர் இடம் பெறவில்லை.

4. அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேமில் வாழ்ந்த ஒரு குரு (1 நாள் 9:12). அதாயாவின் தந்தை (நெக 11:12).

5. கெதோரைச் சேர்ந்த ஒரு பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். சிக்கிலாக்கில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட இருவரின் முன்னோர் (1 நாள் 12:7). ஒருவேளை (3)-இல் குறிக்கப்படுவராக இருக்கலாம்.

6. தாவீது காலத்தில் தாண் குலத்தின் தலைமை அதிகாரியாக இருந்த ஆசரேல் (3)-இன் தந்தை அல்லது முன்னோர் (1 நாள் 27:22).

7. அசரியா (13)-இன் தந்தை அல்லது முன்னோர் (2 நாள் 23:1). அசாரியா, அத்தாலியாவுக்கு எதிரான கிளர்ச்சியில் பங்கெடுத்தவர்.

**எரொபயாம்** (JEROBOAM - மக்கள் பெருகுவார்களாக)

1. முதலாம் எரொபயாம்:- வட அரசாகிய இஸ்ராயேலின் முதல் அரசர். கி.மு. 923 முதல் 901 வரை ஆட்சி செய்தார். எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர். செரேதா ஊரிலிருந்து வந்தவர். நெபாத்து-செரூயா ஆகியோரின் மகன் (1 அர 11:26).

இளைஞனாக இருந்தபோது, சாலமோனுக்கு எதிராக ஒரு வெற்றியடையாத பயனற்ற கிளர்ச்சி செய்தார் (காண்க 12:24). அரசனது கட்டடவேலைகளைக் கவனிக்கும் அதிகாரியாக இருந்தார். இவரை ஆற்றல் வாய்ந்தவனும், அறிவாளியும், கரும வீரனுமாகக் கண்ட அரசன், யோசேப்பின் இனத்தவரின் காரியங்களைக் கவனிப்பவராக நியமித்தார் (11:27-28). இத்தகைய கட்டாய வேலை செய்தல் நெடுங்காலமாக இஸ்ராயேலுக்கு எரிச்சலை ஊட்டி வந்தது (காண் உப 26:6-7). இந்த அதிருப்தியை வெளிப்படையான கிளர்ச்சியாக்க இறைவாக்கினர் அகியா ஊக்குவித்தார் (11:29-39). ஏனெனில் சாலமோன் யாவேயை விட்டுவிலகிப் பிற இனத்தவர்களுக்குப்பணி செய்யத் தொடங்கினார். ஆகவே அகியா எரொபயாமுக்கு அரச பதவியை வாக்களித்தார் (காண் 1 சாமு 10:1; 16:1; 2 அர 8:13). இதையறிந்த சாலமோன் எரொபயாமைக் கொல்ல முயன்றார். ஆனால், எரொபயாம் தப்பித்து எகிப்துக்கு ஓடி, சாலமோன் இறக்கும்வரை சீசாக்குப் பாரவோனின் பாதுகாப்பில் இருந்தார் (1 அர 11:40).

இரகபெயாம், அரசனாகப் பதவி ஏற்கச் செக்கேமுக்குச் சென்றுள்ளார் என்று கேள்விப்பட்ட எரொபயாம் எகிப்திலிருந்து திரும்பி வந்தார் (12:1-2). வட இனத்தவர்

தங்கள் வரிச்சுமையைச் சிறிது குறைக்கும் படிக் கேட்டுக் கொண்டபோது இரகபெயாம் மடத்தனமாக நடந்து கொண்டதால், அவர்கள் இரகபெயாமையும் தாவீது மரபு ஆட்சியையும் நிராகரித்துவிட்டு (12:3-16,19), அவருக்குப் பதிலாக, எரொபயாமைத் தங்கள் அரசனாக ஏற்படுத்தினர் (12:20). சாலமோனால் விதிக்கப்பட்ட அநியாய வரிகளும் கட்டாய வேலையும்தான் கிளர்ச்சிக்குக் காரணங்களாகத் தரப்பட்டுள்ளன (1 அர 12:4, 10-19). கடவுளின் மனிதராகிய செமாயா உரைத்த இறைவாக்கைப் பற்றிய உரையானது வடநாட்டில் தோன்றியதாகும் (12:21-24).

எரொபயாம் செக்கேமைத் தமது தலைநகராக்கினார். அதையும், யோர்தானுக்கு அப்பால் உள்ள பெனுவேலையும் பலப்படுத்தினார் (12:25). பிறகு எளிதில் பாதுகாக்கக் கூடிய திரிசாவுக்குத் தம் தலைநகரை மாற்றினார் (14:17). இவரது ஆட்சிக்காலம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அதிகம் காணப்படவில்லை. இருப்பினும் இவர் தம் ஆட்சிக் காலம் முழுவதும் யூதாவோடு போரிட்டார் (13:3-20; 14:19,30; 15:6-7; 1 நாள் 12:5); இரகபெயாம் மகன் அபியா (அபியாம்) விடம் ஒருதரம் தோல்வியுற்றார் (1 அர 13); கர்னாக்கின் வாசகப்படி இஸ்ராயேல் சீசாக்கால் கொள்ளையடிக்கப்பட்டுப் பாழ்படுத்தப்பட்டது என்று அறிகிறோம்.

மக்கள் எருசலேமுக்குத் தொடர்ந்து வழிபடச் சென்றால், தமது அதிகாரம் வலுவிழந்து விடும் என்று அஞ்சி, பொன்னால் இரு கன்றுக் குட்டிகளைச் செய்து பெத்தேலிலும், தாணிலும் அவற்றை மக்கள் வழிபடச் செய்தார் (12:26-30). மேடுகளில் புனித இடங்களை அமைத்தார். லேவியர் அல்லாதோரைக் குருக்களாக நியமித்தார் (12:31; 2 நாள் 11:14-15). சில சமயங்களில் அவரே பலிகளை நிறைவேற்றினார் (1 அர 12:32-33). வழிபாட்டு நாளேட்டையும் மாற்றியமைத்தார். ஏழாம் மாதமாகிய திசிரியின் 15-ஆம் நாள் தொடங்கும் கூடார விழாவை, எட்டாவது மாதமாகிய பூலுக்கு மாற்றினார். இந்தச் சமய மாற்றங்கள் சமயப் பற்றுடையவர்களுக்குக் கோபமூட்டின. இவையெல்லாம் ''எரொபயாமின் பாவங்களின்'' அடையாளமாயின. இப்பாதையில் வருங்காலத்தில் இஸ்ராயேலின் அரசர்கள் நடப்பார்கள் (உ.ம். 15:30.34; 16:26.31). காலப்போக்கில் இவை இஸ்ராயேலின் பதிதத்திற்கும் வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும் (2 அர 17:21-23). மீண்டும் மீண்டும் எச்சரிக்கப்பட்டும் இந்தப் பதிதப்போக்கில் எரொபயாம் நிலைத்து நின்றார். யூதாவைச் சேர்ந்த பெயர் தெரியாத ஓர் இறைவாக்கினர், வரவிருக்கும் அழிவைப்பற்றி முன்னறிவித்ததோ (1 அர 13:1-10) இறைவாக்கினர் அகியாவின் கூற்றுக்களோ, அவரது மகனது இறப்போகூட (14:1-18) அவரை மனம் வருந்தச் செய்யவில்லை (13:33). அவரது இந்தப் பிடிமுரண்டான பதிதப்போக்கும் மனம் வருந்தாமையும் அவரது அரச மரபின் பாவமாயிற்று. அதன் முழு அழிவுக்கு இட்டுச் சென்றது.

2. இரண்டாம் எரொபயாம்:- யோவாசின் மகனும் அவருக்குப் பின் அரசனாகப் பதவியேற்றவருமாவார். வட அரசாகிய இஸ்ராயேலின் 10-ஆவது அரசன் (786-746). ஏகூது அரச மரபின் நான்காவது அரசர். இவரது ஆட்சியில் வட அரசு அதன் செல்வச் செழிப்பில் அரச அதிகாரத்திலும் உச்சநிலை அடைந்தது. இப்போது அசீரியத்தாக்குதல்களால் தமஸ்கு அரசு பலவீனமுற்றிருந்தது. அசீரியா உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டிருந்தது. இவற்றைப் பயன்படுத்தி எரொபயாம், அமித்தாயின் மகன் யோனா இறைவாக்குரைத்தபடி, ''கெமாத்து முதல் அராபாக் கடல் வரை'' (அதாவது சாக்கடலின் தெற்குக் கரைவரை) இஸ்ராயேலின் எல்லையை விரிவாக்கினார் (2 அர 14:25; காண்க ஆமோ 6:13-14). இவர் தமஸ்கு, கமாத்து மேல் தம் அதிகாரத்தை விரிவாக்கினார். தாவீது ஆட்சிக் காலத்தில் யூதாவுக்குச் சொந்தமான பகுதியையெல்லாம் மீண்டும் வென்று சேர்த்துக் கொண்டார் (14:28). இவ்வாறு சீரியாவின் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து, மக்களின் விடுதலை வீரனாகவும்

(13:8) மக்களைப் பாதுகாக்க இறைவன் எழுப்பிய மீட்பராகவும் (14:27) ஆனார்.

இருப்பினும், எரொபயாமின் ஆட்சிக் காலத்திய செல்வச் செழிப்பு செல்வந்தர்களுக்கே சாதகமாக இருந்தது. இவர்கள் நீதிமான்களையும், எளியோரையும் கொடுமைப்படுத்தினர். பாலின ஒழுக்கக்கேடுமிருந்தது (ஆமோ 2:6-7), கலப்புச் சமயப் போக்கும் சிலைவழிபாடும் நிலவியிருந்தது (6:26). மக்கள் சுகபோகத்தில் கருத்தாய் இருந்தனர் (6:4-6). சமூக அநீதியென்ற இந்த நோய் நாட்டின் அழிவிற்கு இட்டுச் சென்றது (காண்க 2 அர 14:27). எரொபயாம் இறந்த சிறிது காலத்திற்குள் வட அரசு அதன் பதிதத்திலேயே அழிந்தொழிந்தது (கி.மு. 732; 2 அர 17:6-23).

## எரோதோத்தசு (HERODOTUS)

இவர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (484-424) கிரேக்க வரலாற்று ஆசிரியர். 'வரலாற்றின் தந்தை' என்று சிசுரோவால் அழைக்கப்பட்டார்.

1. வாழ்க்கை:- இவருடைய நூலிலிருந்து மறைமுகமாக அறிவதைத் தவிர, இவரைப் பற்றி அதிகம் தெரியாது. சுயிதாஸ் என்பவர் லிக்சிஸ், திரியே என்பதை இவரது பெற்றோர்களின் பெயர்களாக நமக்குத் தருகின்றார். கி.மு. 484-இல் கலிகார்னாசுஸ் என்ற இடத்தில் இவர் பிறந்தார். கி.மு. 454-க்குப் பின் ஏதன்சில் இவர் வசித்த பொழுது பெரிக்கிலிஸ் மற்றும் சோப்போகிலிஸ் ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும். பின்னர் இவர் 'தூரி' நகரத்திற்குச் சென்றார். இவர் இறந்தபின் தூரி நகர்ச் சந்தை இருந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார் என்று சுயிதாஸ் கூறுகின்றார். இவர் பெல்லாவில் இறந்ததாகவும் மற்றொரு மரபு கூறுகின்றது. அவர் எப்பொழுது, எங்கு இறந்தார் என்பதைப்பற்றித் தெளிவாகக்கூற நம்மால் இயலவில்லை யென்றாலும், அநேகமாகக் கி.மு. 424-இல்தான் அவர் இறந்திருக்கவேண்டும் என்று கருதப் படுகின்றது. இவர் தமது பிற்கால வாழ்க்கைச் சமயத்தில் ஆசியா, எகிப்து நாட்டுப் பகுதிகளில் பிரயாணம் செய்து தமது சிறந்த வரலாற்றை எழுதி இவ்வுலகிற்குத் தந்தார்.

2. பயணங்கள்:- இவர் தமது சுற்றுப் பயணத்தின்மூலம் சேகரித்த குறிப்புக்களைக் கொண்டுதான் வரலாற்றைப் படைத்தார். இவர் சுற்றுப்பயணம் செய்த காலக் கணிப்பைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவர் தமது பயணத்தில் யூக்சீன், பாபிலோனியா, பெனிக்கியா, எகிப்து, சீரேனே போன்ற இடங்களுக்குச் சென்றிருக்க வேண்டும்.

3. இவரது நூல்:- இவர் படைத்த வரலாற்றில் கிரேக்கர்களுக்கும், கீழை நாட்டினருக்கும் இடையே உள்ள உறவு, தொடர்பு பற்றிக் கூறுகின்றார். லிதியா அரசனான கிரோச்சின் எழுச்சி முதல் (560) பாரசீகப் போர்களின் முடிவுவரை (478) இவர் எழுதுகிறார். இவரது வரலாற்று நூல் ஒன்பது நூல்களைக் கொண்டிருக்கிறது. முதல் மூன்று நூல்களும் சைரஸ் கம்பிசெஸ், தரியுஸ் போன்றவர்களின் ஆட்சியைப் பற்றியும், இவர்களுக்குப்பின் ஆட்சிக்கு வந்த பாரசீகர்களைப் பற்றியும் விவாதிக்கின்றன. அடுத்த மூன்று நூல்கள் தாரியுசின் ஆட்சியைப் பற்றியும் சித்தியாவில் பாரசீகர்களுக்கும், அயோனியாவில் கிரேக்கர்களுக்கும் ஏற்பட்ட தோல்விகளைப் பற்றியும் கூறுகின்றன. மற்றும் உள்ள மூன்று நூல்கள் செர்சிசின் ஆட்சியைப் பற்றியும், கிரேக்க நாட்டால் பாரசீகம் அடைந்த தோல்வியைப் பற்றியும் கூறுகின்றன.

இவர் தாம் எழுதிய வரலாற்றினைத் தாம் நேரிடையாகக் கண்கூடாகப் பார்த்தவைகளைக் கொண்டும், மரபுகளில் காணப்பட்ட உண்மைகளைக் கொண்டும், புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த குறிப்புக்களை வைத்தும், இன்னும் பல நூல்களை வைத்தும் படைத்துள்ளார். அதில் ஒருவகை வீர காவிய மணம் வீசும்.

## எரோனிமு (HIERONYMUS)

1. ஐந்தாம் அந்தியோக்கு ஆட்சியின் போது பாலஸ்தீனத்திலுள்ள மாவட்ட ஆளு

நர்களில் ஒருவர். இவரும் இவருடைய சக ஆளுநர்களான திமோத்தேயு, அப்பொல்லோனியு, தெமோபோன் ஆகியோரும் ''தங்களுடைய மக்களை அமைதியாகச் சமாதானத்தோடு வாழ விடமாட்டார்கள்''. ஆகவே யூதர்களைப் பகைத்துக் கொண்டனர் (2 மக் 12:2).

2. அறிஞரும் துறவியுமான யுசேபியஸ் எரோனிமு (கி.மு. 342-420). அவர் செய்த வுல்கத்தா விவிலிய மொழிபெயர்ப்பால் புகழ்பெற்றவர். வுல்கத்தா மொழிபெயர்ப்பு இவரோடு சாதாரணமாய்த் தொடர்புபடுத்தப்பட்டாலும், இவர் மட்டும்தான் ஒரே ஒரு மொழிப் பெயர்ப்பாளர் அல்லர். பல பழைய இலத்தீன் மொழிப்பெயர்ப்புகளை அகற்றி இலத்தீனில் ஒரு மேலளவையான விவிலியத்தை அமைக்கும்படி பாப்பு, தாமசூசால் நியமிக்கப்பட்டவர். இவர் கிரேக்க கையெழுத்துச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு நற்செய்திகளைத் திருத்தி அமைத்தார். எபிரேயத் திருமுறைப் பட்டியல் நூல்களுக்கும் தோபித்து, யூதித் ஆகியவற்றிற்கும் எபிரேய மூலங்களைப் பயன்படுத்தினார். வுல்கத்தாவிலுள்ள சில நூல்கள், குறிப்பாக இணைத்துணைத் திருமுறைப்பட்டியல் நூல்கள் உட்பட்ட நூல்கள் எரோனிமுவால் மொழிபெயர்க்கப்படவில்லை. அவை பழைய இலத்தின் வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

**எலசா (ELASA)**

இவ்விடத்தில் யூதா மக்கபேயு கி.மு. 161-இல் கொல்லப்பட்டார் (1 மக் 9:5) இவ்விடம் மேல், கீழ் பேத்-கொரோனுக்கு இடையிலும் ஏல்-பிரேயிலிருந்து 15 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத்து இலாசாவாக இருக்கலாம்.

**எலதாது (ELDAD - இறைவன் அன்பு செய்தார்)**

பாலைவனக் கூடாரத்தில் இறைவாக்குரைத்த ஓர் இஸ்ராயேலர். எலதாது, மேதாது ஆகியோர் ஆண்டவருடைய ஆவியால் சிறப்பாக ஆட்கொள்ளப்பட்டவர்கள். ஆண்டவருடைய கட்டளைப்படி மோசே 70 பேரைத் தேர்ந்தெடுத்துத் தமது பணிக்கு உதவியாக வைத்துக் கொண்டார். இவர்கள் ஒரு காலத்திற்கு இறைவாக்குரைத்தனர் (எண் 11:24-25). எலதாது மேதாது 70 பேர்களில் ஒருவராக இல்லாவிட்டாலும், மேலும் பாளையத்திலேயே தங்கியிருந்தாலும் இறைவாக்குரைத்தனர் (11:26). இதைக் கண்ட யோசுவா அவர்கள் இருவரையும் கண்டிக்கச் சொன்னார். அதற்கு மோசே (மக்கள்) எல்லாருமே இறைவாக்கினராக ஆண்டவர் அவர்கள் மேல் தம்முடைய ஆவியைத் தந்தால் நலமாயிருக்கும் என்றார் (11:27-30).

**எலயாசர் (ELEAZAR - இறைவன் உதவினார்)**

1. ஆரோன்-எலிசெபா ஆகியோரின் மூன்றாம் மகன் (யாத் 6:23; காண்க. எண் 3:2; 26:60). இவர் பூத்தியேலின் புதல்வியருள் ஒருவரை மணந்து பினகாசுக்குத் தந்தையானார் (யாத் 6:25; 1 நாள் 6:4). இவரது தந்தை, மற்ற மூன்று சகோதரர்களோடு சேர்ந்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் (யாத் 28:1). அவரது மூத்த சகோதரர்கள் நதாபு மற்றும் அபிகு பிள்ளைகளின்றித் திடீரென்று இறந்துபோக, இவர் முக்கியத்துவம் பெற்றார் (லேவி 10:1-2). இப்போது ஆரோனின் மூத்த மகன் என்ற அளவில் லேவியரின் தலைவரானார் (எண் 3:32). ஆரோனுக்கு அடுத்த பெரிய குருவாக மோசேயால் நியமிக்கப்பட்டார் (20:25-28; காண்க உப 10:6). ஆரோனின் இடத்தில், மோசேயின் உதவியாளர் ஆனார் (எண் 26: 1.3.63; 27:2.21). கணக்கெடுப்பில் பங்கெடுத்தார் (26:1.63). மோசேயோடு இவரும் செலோபகாத்தின் புதல்விகளுக்குச் சொத்து அளிக்கும்படி கட்டளையிடப்பட்டார் (27:2). இதை இவர், யோசுவாவோடு சேர்ந்து, நாட்டை வென்றபின், நிறைவேற்றினார் (யோசு 17:4) கோராகும் அவனோடு சேர்ந்த கிளர்ச்சியாளர்களின் தூபக் கலசங்களைத் தட்டையான தகடுகளாக்கிப் பலிபீடத்தில் பதிக்கக் கட்டளைபெற்றார் (எண் 16:37-40). யோர்தானுக்குக் கிழக்கில் ரூபனியர்களுக்கு உடைமை அளிப்பதில் மோசேக்கு

உதவினார் (32:2,8). யோசுவாவோடு சேர்ந்து இவரும் யோர்தானுக்கு மேற்கில் உள்ள நாட்டைப் பிற இனத்தவர்களுக்குப் பகிர்ந்த ளித்தார் (யோசு 14:1; 19:51; காண்க எண் 34:17). லேவியர்களுக்கு நகரங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் பகிர்ந்தளித்தார் (யோசு 21:1).

இவருடைய சிறப்புமிக்க பணிக்காலத் தின் முடிவில், இவர் கிபயாவில் அடக்கம் செய்யப்பட்டார். இந்நகரம் எப்பிராயிம் மலைநாட்டிலுள்ள, அவரது மகன் பினகா சுக்குச் சொந்தமான ஒரு நகரமாகும். இவரது வழித்தோன்றல்களில், தாவீது அரசனுக்குப் பணி செய்த சாதோக்கு என்ற குருவும் (1 நாள் 6:12; 24:6) நாடுகடத்தப்பட்டுத் திரும் பிய காலத்திய மறைநூல் அறிஞர் எஸ்ராவும் (எஸ் 7:5) அடங்குவர். தாவீது காலத்தில் எலயாசர் வழிவந்த குருக்கள் 16 பிரிவினரும் அவரது இளையசகோதரன் இத்தாமாரின் வழிவந்தவர்கள் 8 பிரிவினருமே இருந்தனர் (1 நாள் 24:1-4).

2. அபினதாபின் மகன். பெலிஸ்தியர் பேத்து-செமேசில் உடன்படிக்கைப் பேழையை இஸ்ராயேலரிடம் திரும்பத் தந்த பின் கிரியத்து-எயாரிம் மக்கள் பேத்து செமேசிலிருந்து எடுத்துப்போய்க் காபாவிலே அபினதாபு வீட்டில் நிறுவினர். ஆண்டவரு டைய பேழையைக் காத்துக் கொள்ளும்படி அபிடேகம் செய்யப்பட்டவர் எலயாசர் (1 சாமு 7:1).

3. தோதாவின் மகன். தாவீதுக்கு உதவின ஆற்றல்மிக்க மூவருள் ஒருவர் (2 சாமு 23:9-10; 1 நாள் 11:12-14). பெலிஸ்தியர் பலரைக் கொன்ற பெருமையுண்டு இவ ருக்கு. ஒருவேளை 1 நாள் 27:4 இவரது பெயர் புகுத்தப்பட வேண்டியிருக்கலாம்.

4. மெராரியின் குடும்பத்தைச் சார்ந்த மகுவி யின் புதல்வர் (1 நாள் 23:21-22; 24:28). இவர் ஒரு லேவியர். ஆண்பிள்ளை இன்றி இறந்தார். இவர் புதல்விகள், தங்கள் சிற்றப் பன் புதல்வர்களை மணந்தனர் (காண்க 36:6-12).

5. பினகாசின் (3) மகனான எலயாசர் ஒரு குரு. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எஸ்ராவின் தலைமையில் இயங்கினார். ஆலயச் சொத்துக்களை எஸ்ரா திரும்பக் கொண்டு வந்தபோது இவரும், ஒவ்வொரு பொருளையும் நிறுத்து, அவற்றின் எண்ணிக் கையையும் எடையையும் குறித்து வைத்தார் (எஸ் 8:33).

6. பரோசின் புதல்வர்களில் ஒருவர். புற மதப் பெண்களைத் திருமணம் செய்வதைத் தடைசெய்த எஸ்ராவோடு இணைந்து கொண்டு அந்நிய மனைவிகளையும் அவர்க ளுடைய குழந்தைகளையும் தள்ளிவைத்த வர்களின் பட்டியலில் ஒருவர் (எஸ் 10:25).

7. எருசலேம் மதில்களின் அர்ப்பண விழாக் கொண்டாடிய போது கூடிப் பாடிக் கொண்டிருந்த இன்னிசைக் கலைஞரான லேவியர் (நெக 12:42). ஒருவேளை (5)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

8. மத்தத்தியாவின் நான்காவது புதல்வர். அவரான் என்று அழைக்கப்பட்டார். யூதா மக்கபேயரின் சகோதரன் (1 மக் 2:5; காண்க 2 மக் 8:23). பேத்து செக்காரியாவில் யூதா நடத்திவந்த படைக்கும் சீரியர்களின் படைக்கு மிடையே நடந்த மோதலில் ஐந்தாம் அந்தி யோக்கு யூபாத்தோர் அரசனைச் சுமந்து வந்தது போலத் தோன்றிய யானையைப் படைக்குள் புகுந்து ஓடிக் கொன்றார். அவ ரும் அந்த யானையாலேயே மிதிபட்டு வீர மரணம் எய்தினார் (1 மக் 6:43-46).

9. யாசோனின் தந்தை (1 மக் 8:17). நான்காம் அந்தியோக்கு எப்பிபான் செய்த கலாபனையில் உயிர் ஈந்த வேத சாட்சியான எலயாசர் மறைநூல் அறிஞர்களுள் முதன்மை யானவர்களில் ஒருவர் (2 மக் 6:18:31).

10. மரியாளின் கணவர் யோசேப்பின், ஆகவே இயேசுவின், முன்னோர்களுள் ஒரு வர் (மத் 1:15).

எலயாசா (ELEASAH - இறைவன் செய்தார்)

1. யூதா கோத்திரத்தின் எரகுமேல் குலத் தைச் சார்ந்த ஒரு குடும்பம் (அல்லது) ஓர் ஆள் (1 நாள் 2:39-40).

*2. சவுல், யோனத்தான் ஆகியோரின் வழித் தோன்றிய பென்யாமின் கோத்திரத்தைச் சா்ந்த ஓர் உறுப்பினர் (1 நாள் 8:37). 1 நாள் 9:43-இல் இவர் இரப்பாயாவின் மகன் எனக் கூறப்படுகிறார்.*

**எலயாதா** *(ELEADAH - இறைவன் அணி செய்தார்)*

*எப்பிராயிமின் குலத்தில் தோன்றிய ஒரு குடும்பம் (1 நகள் 7:20). எண் 26:35-37 குறிப்பிடுகின்ற இதற்கு இணையான தலை முறை அட்டவணையில் இப்பெயர் குறிக் கப்படவில்லை.*

**எலயாது** *(ELEAD இறைவன் சாட்சி அளித் தார்)*

*எப்பிராயிமின் புதல்வர்களுள் ஒருவர். ஒரு கொள்ளைத் தாக்குதலில் காத்து நாட் டைச் சேர்ந்தவர்களால் கொல்லப்பட்டார் (1 நாள் 7:21-22).*

**எலயாலே** *(ELEALEH - இறைவன் ஏறிவிட் டார்)*

*யோர்தானுக்கு அப்பால் உள்ள ஒரு நக ரம். ரூபன் கோத்திரத்தால் மீண்டும் கட்டப் பட்டது (எண் 32:3,37). பின் மோவாபியர் களின் ஆதிக்கத்தில் இருந்தது (ஏச 15:4; 16:9; எரே 48:34). இன்று இந்நகரம் கெசிபோ னுக்கு வடக்கு-வடகிழக்கில் 3 கி.மீ தொலைவில் உள்ள ஏல்-ஆல் நகரத்தோடு அடையாளம் காட்டப்படுகின்றது. யூசே பியு, கி.பி.4-ஆம் நூற்றாண்டில், இதை ஒரு முக்கியமான நகரமாகக் கருதியதாகத் தெரி கிறது.*

**எலா** *(ELA)*

*இவர் சாலமோனின் ஆட்சிக் காலத்தில் பென்யாமின் பகுதிகளுக்குக் கண்காணிப்பாள ராக இருந்த சிமயியின் தந்தையாவார் (1 அர 4:18).*

**எலாசா** *(ELASAH - இறைவன் உண்டாக்கி னார், செய்தார்)*

*1. குரு பசிகூரின் கடைசி மகன். பாவின மனைவியைக் கொண்டிருந்தவர்களுள் ஒரு வர் (எஸ் 10:22). புறவினமனைவியை அனுப்பிவிட வாக்களித்தவர்.*

*2. சாப்பானின் மகன். நெபுக்கதுனேசாரி டம் சென்ற செதேக்கியாவின் இரு தூதர் களில் ஒருவர். இவர்கள் வழியாகப் பாபிலோ னில் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எரே மியா தம் மடலை அனுப்பினார் (எரே 29:3).*

**எலி** *(MOUSE)*

*இது கொறிக்கின்ற விலங்கினமாகும். இது சுண்டெலி, எலி ஆகிய அனைத்தையும் அடக்கிய ஒரு பொதுப்பெயர் என்றே எண் ணத் தோன்றுகிறது. திரிஸ்ட்ராம் என்பவர் 19-ஆம் நூற்றாண்டு பாலஸ்தீன் நாட்டை ஆராய்ந்ததில் இதே இனத்துள் அடங்குகின்ற 23 வகையான எலிகளைக் கண்டுபிடித்துள்ள தாகக் கூறியுள்ளார். லேவி 11:29-இல் தூய் மையற்ற ஒரு விலங்கினமாகக் குறிக்கப்படு கிறது.*

*ஏச 66:17-இல் இருந்து எலி மனிதன் உண்ணக் கூடிய ஒரு விலங்கினம் என்று நாம் அறிகின்றோம். மெய்மோனிடன் தமது குறிப்பில் வயல் எலிகளை அர்ரானியர்கள் பலியிட்டதாகக் குறிப்பிடுகிறார்.*

*இவ்வெலிகள் தொத்து நோய்கள் பரவுவ தற்குக் காரணமாக இருந்து வந்திருக்கின்றன (1 சாமு 5:6.9.11-12; 6:3-4) என்ற கூற்று ஆராய வேண்டியுள்ளது.*

**எலிகூ** *(ELIHU - அவன் என் இறைவன் ஆவார்)*

*1. எப்பிராயிமைச் சேர்ந்தவர். தோகுவின் மகன். சாமுவேலின் கொள்ளுத்தாத்தா (1 சாமு 1:1). 1 நாள் 6:34-இல் 'எலியேல்' என்றும் 1 நாள் 6:27-இல் எலியாபு என்றும் அழைக்கப்படுகிறார்.*

*2. மனாசேயில் ஆயிரவர்க்குத் தலைவர்க ளுள் ஒருவர். சிக்லாகு என்னுமிடத்தில் சவுலைக் கைவிட்டுவிட்டுத் தாவீது பக்கம் சேர்ந்தவர்களுள் ஒருவர் (1 நாள் 12:20).*

*3.* கோராகு குலத்தைச் சேர்ந்த ஆலய வாயிற்காப்போன் ஓபேது-ஏதோமின் வழி வந்தவர் *(1 நாள் 26:7).*

*4.* தாவீதின் சகோதரர்களில் ஒருவர் *(1 நாள் 27:18).* இசக்கார் இனத்தின் முக்கிய அதிகாரி. ஆனால் அப்பெயர் 'எழுபது நூலைப்' பொறுத்தவரை எலியா என்று வாசிக்கப்பட வேண்டும் *(1 சாமு 16:6; 17:13.23; 1 நாள் 2:13; 2 நாள் 11:18).*

*5.* பூசியர் பரக்கேலின் மகன். இராமின் குடும்பத்தைச் சேர்ந்தவர் *(யோபு 32:2).* ஒருவேளை நாகோரின் மகன் பூசியின் வழித்தோன்றலாகவும், அதனால் ஆபிரகாமின் உறவினனாகவும், இருக்கவேண்டும் *(ஆதி 22:20-21).* மூன்று நண்பர்கள் யோபுவை அமைதிப்படுத்தத் தவறிப்போய் வாதிடுவதை நிறுத்தியபோது, யோபுவிடம் பேசுகின்ற இளைஞன் *(யோபு 32:2,4-6; 34:1; 35:1; 36:1)* எலிகூவின் உரைகள் புத்தகத்தின் பிற்சேர்க்கையாக இருக்கலாம். இராம் குடும்பத்தினர் பூசியர் அழைக்கப்படுவதால் *(காண். ஆதி 22:21; எரே 25:33; ரூத் 4:19; 1 நாள் 2:9-10).* யோபு மற்றும் அவருடைய மூன்று நண்பர்களின் பகுதியிலிருந்தே இவரும் வந்திருக்கவேண்டும். ஆயினும் எபிரேயர்களோடு நெருங்கிய தொடர்புடையவராக இருக்கவேண்டும். யோபு 32-37 அதிகாரங்களை இடையில் புகுத்தியவர் இவருக்கு அளிக்கும் செயல் வாதத்தை இறையியல் நிலைக்கு உயர்த்துவதாக அமைகிறது என்பதை அடையாளமிட்டுக்காட்டுகிறது. இவர் யோபுவைப் பாவமுடைமை, *(34:7-8),* அகந்தை *(34:37),* மேலெழுந்தவாரியான இறையியல் *(35:15)* ஆகிய அவருடைய மனித வரையறைகளுக்காகக் கடிந்துகொள்கிறார். இதற்கு மாறாகத் துணிவுடன் இறைவனது மகிமையை அறிக்கையிடுகிறார் *(36:27-37:22)* இறைவனே இறுதியில் நீதியுள்ளவர் *(34:10 தொ; 37:23-24).* அவர் தமது மேலாண்மையுடைய ஞானத்தில் துன்பத்தை ஒரு சோதனையாகப் பயன்படுத்தலாம் *(36:5-15).* இப்போது பெரும்பாலான அறிஞர்கள், எலிகூவின் உரையைப் பிற்கால இடைச் செருகலாக ஏற்றுக்கொண்டாலும், அது நாடகப பாணியில் இறைவன் புயல் காற்றில் தம்மை வெளிப்படுத்தவும் பிரச்சனைக்குத் தீர்வு காணவும் ஒரு தயாரிப்பாகவும், இடை நிலையாகவும் பயன்படுகிறது.

**எலிக்கா** (ELIKA - *இறைவனால் நிராகரிக்கப்பட்ட)*

கரோது ஊரைச் சார்ந்த இவர் பெயர், 'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்கள் அட்டவணையில் காணப்படுகிறது *(2 சாமு 23:25).* 2 நாள் 11:27-இல் வரும் இணையான அட்டவணையில் இவனுடைய பெயர் விடுபட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**எலிசபாத்து** (ELISHAPHAT - *இறைவன் தீர்ப்பிட்டார்)*

அத்தாலியாவுக்கு எதிராக யோவாசுக்கு அரசை மீட்டுத்தர முயன்ற யோயதா குருவுக்கு உதவின ஐந்து யூதாவின் படைத்தலைவர்களில் ஒருவர் *(2 நாள் 23:1).*

**எலிசபெத்து** (ELIZABETH - *இறைவன் என் உறுதியாவார் அல்லது இறைவன் என் நற்பேறு)*

அபியா வகுப்பைச் சார்ந்த குரு செக்கரியாவின் மனைவி. பாரம்பரியப்படி இருவரும் எருசலேமுக்கு மேற்கே 7 கி.மீ. தொலைவில் யூதாவின் மலை நாட்டிலுள்ள அயின் கெரேமில் வாழ்ந்தனர். திருமுழுக்கு யோவானின் தாய் *(லூக் 1:5-60).*

எலிசபெத்து என்ற பெயரைத் தாங்கிய ஆரோனின் மனைவி *(யாத் 6:23-எலிசெபா)* குருகுல வழித்தோன்றல் ஆவாள். யூத சட்டங்கள், வழக்கங்களின்படி குருக்கள் திருமணம் செய்யும்போது அவளும் குருகுல குடும்பத்தைச் சார்ந்தவளாக இருக்கத் தேவையில்லை. எனினும் செக்கரியா மணந்த எலிசபெத்தும் குருகுலக் குடும்பத்தைச் சார்ந்திருந்ததால் அவர்களுடைய திருமணம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும். மரபுத் தூய்மையோடு "ஆண்டவருடைய கற்பனைகள் முறைமை

களின்படி குறைகூற இடமில்லாமல் கடவுள் முன்னிலையில் நீதிமான்களாய் நடந்து வந்த வர்கள்'' (லூக் 1:6) என்று லூக்கா விவரிக் கின்றார். பழைய ஏற்பாட்டுக் காலத்திய பக்தி நடத்தை அவர்களில் குடி கொண்டிருந்தது.

ஆனால் ஒரு குறை இருந்தது. பழங்காலத் தில் சாரா, அன்னா போன்று எலிசபெத்து மலடியாக இருந்தாள். ஒரு யூதப் பெண்ணுக் குப் பிள்ளை பெறுவது பெரிய வரமாகும். இறைவனுடைய வல்லசெயலால் 'மலடி' என்ற கறையைப் போக்கி அந்தக் கிழட்டு வயதில் மெசியாவின் வருகைக்காக வழிக ளைச் செம்மைப்படுத்துபவர்-பெரிய வாக் குறுதிகளின் குழந்தை ஆனவரை அவள் தன் குழந்தையாகப் பெற்ற நிகழ்ச்சியைத் தகுதி யான வார்த்தைகளில் அருமையாகவும் அழ காகவும் லூக்கா எழுதி வைத்திருக்கிறார்.

இயேசுவின் தாய் மரியாளுக்கு நெருங்கிய உறவினளாக எலிசபெத்து லூக்காவால் அழைக்கப்படுகிறாள் (1:36). அவர்களு டைய உறவு எத்தகையது என்று துல்லிய மாக அறிய இந்தக் குறிப்பு அவ்வளவு உதவவில்லை. மரியாள் குருகுல வகுப்பில் வந்தவளாக இப்பகுதி அறிவிப்பது சாத்திய மாகின்றது.

சில பழைய வாசகங்களில், இரனெயு, ஓரிசன் ஆகியவர்களின் நூல்களில், மரியா ளின் பாடல் லூக்காவின் மூலப்படிவத்தில் மரியாளுக்குப் பதிலாக எலிசபெத்து- பாடியதாகச் சான்று உள்ளது. 1 சாமு 2:1-10- இல் உள்ள அன்னா பாடலைப் போல இந்தப் பாடல் சில காரியங்களில் மரியாளுக் குப் பொருந்துவதை விட எலிசபெத்துக்குப் பொருத்தமாக இருக்கிறது.

**எலிசா (ELISHA - இறைவன் மீட்பாவார்)**

எலிசா என்பவர் கி.மு.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வடநாட்டு அரசைச் சேர்ந்த இறைவாக்கினர். இவர் இறைவாக்கினர் எலியாவின் வழித்தோன்றலும் சீடருமா வார். இரண்டாம் அரசராகமம் முதல் பதின் மூன்று அதிகாரத்தில் இவரைப் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1. இவரது அழைப்பும், பணிக்காலமும்:- இவர் ஆபேல்-மெகோவாவிலிருந்த சாபாத் தின் மகனாவார். இவர் ஏரைப் பூட்டி நிலத்தை உழுது கொண்டிருந்த பொழுது எலியாவால் அழைக்கப்படுகின்றார் (1 அர 19:19). இவர் எலியாவோடு செல்வதற்கு முன்னால் நண்பர்களுக்கு அளித்த பிரியா விடை விருந்தே இவரைச் செல்வந்தர் என்று காட்டுகிறது. எலியாவின் வழித்தோன்ற லாக எலிசா அர்ச்சிக்கப்பட வேண்டும் என்று இறைவன் கொடுத்த கட்டளையில் தான் இவரது பெயர் முதன் முதலாகக் காணப்படுகிறது (1 அர 19:19-21). இச்செயல் இறைவாக்கு கூறும் வல்லமை எலிசாவுக்கு மாற்றப் பட்டதைப் பிரதிபலிக்கின்றது. மேலும் எலியா நெருப்பு மயமான தேரி னால் வானகத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது அவர் எலிசாவுக்கு விட்டுச் சென்ற போர்வை அவரது ஆவியையும் இறைவாக் குப் பணியையும் எலிசாவுக்கு விட்டுச் சென் றதைக் குறிக்கிறது (2 அர 2:13-15).

ஆகாபு அரசனின் இறுதி ஆட்சிக் காலத் தில் இறைவாக்கினர் எலிசாவின் பணி தொடங்கியிருக்கலாம் (1 அர 19:1-17) அல் லது யோராமின் ஆட்சிக்காலத்தின் முதல் வருடங்களில் தொடங்கியிருக்கலாம் (2 அர 2:15). அவரது பணிக்காலம் தோராயமாகக் கி.மு. 850-க்கும் 800-க்கும் இடைப்பட்ட காலமாகும். அவரது பணியையும், இறை வாக்குச் செயலையும் தொகுத்துத் தந்துள்ள இறைவாக்கு மரபில் அற்புதமான கதைகள், அருங்குறி நிகழ்ச்சி விளக்கங்கள் ஆகியன கலந்துள்ளன.

2. அவர் ஆற்றிய புதுமைகள்:- எலியா விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் எலிசா தனது முதல் புதுமையாக ஆண் டவர் பெயரைக் கூறி எலியாவின் போர்வை யைக் கொண்டு யோர்தான் ஆற்றின் நீரினை அடிக்க, தண்ணீர் முழுவதும் இரண்டு பிரி

வாகப் பிளவுபடுகின்றது (2 அர 2:13-14). இல்கால், பெத்தேல், எரிகோ போன்ற நகரங்களின் இறைவாக்கினர்களின் புதல்வர்கள் எலிசாவை அவர்களது தலைவராகவும் எலியாவின் வழித்தோன்றலாகவும் ஏற்றுக் கொண்டனர் (2:15).

பொதுவாகப் புதுமைகளைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள் இறைவாக்கினர்கள் குழுக்களோடு தொடர்புடையவையாகவும் அவர்களது பணிக்குச் சான்றாகவும் விளங்குகின்றன. ஆழ்ந்த மதிப்பச்சத்தையும் பக்திமிக்க வியப்பையும் காட்டுகின்றன. இறைவாக்கினர் எலிசா மிக மோசமானதாக விளங்கிய நகரத்து நீரில் உப்பைக் கொட்டி அதனை என்றும் பயன்படக்கூடிய நீராக மாற்றுகின்றார் (2 அர 2:19-22). இறைவாக்கினர் ஒருவர் மனைவியின் கணவன் இறந்தபின் அவருடைய கடன்காரன் அவரது இரண்டு பிள்ளைகளைத் தனக்கு அடிமைகள்ளாக எடுத்துக் கொள்ளவிரும்புகிறான். இதை அவர் எலிசாவிடம் முறையிட்டு உதவி கேட்க, அவள் வாழ்வு பெறும் பொருட்டுத் தேவைக்கு அதிகமான எண்ணெய் பெருகக் கூடிய அருங்குறியை ஆற்றுகிறார் (4:1-7). தன்னை நல்லமுறையில் கவனித்துக் கொண்ட சூனேமியப் பெண்ணுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று வாக்களிக்கிறார். மீண்டும் சில காலங்கள் கழித்து இறந்த அந்த மகனை உயிர் பெறச் செய்கிறார் (2 அர 4:8-37; 1 அர 17:8-24). பஞ்சகாலத்தில் இறைவாக்கினர்களின் பிள்ளைகளுக்கு இறைவாக்கினர்களின் ஊழியர்கள் நஞ்சு நிறைந்த குமட்டிக் காய்களை அதன் நச்சுத் தன்மையை அறியாமல் பறித்து வந்து உணவாகச் சமைத்துக் கொடுத்தனர். அதனை உண்ணும் பொழுது சாகவைக்கக் கூடிய நச்சுத் தன்மை அதிலிருப்பதை உணர்ந்தனர். எலிசா ஒரு பிடி மாவை அந்தக் கறியோடு கலந்துவிட நஞ்சுத்தன்மை மறைந்து விடுகின்றது (2 அர 4:38-41). மற்றொரு முறை இவர் நூறு பேருக்கு இருபது வாற்கோதுமை ரொட்டித் துண்டுகளையும், புதுத்தானியத்தில் செய்த சில அப்பங்களையும் பகிர்ந்தளித்து அவர்கள் வயிறார உண்ணுமாறு செய்தார் (2 அர 4:42-44). தொழுநோயால் துன்புற்ற சீரியாப் படையின் தளபதி நாகமானைக் குணப்படுத்தினார். ஆனால் அவர் நன்றியுடன் கொடுத்த அன்பளிப்பைப் பெற மறுத்துவிட்டார் (2 அர 5:1-19). ஒருமுறை காட்டிற்கு மரம் வெட்டச் சென்ற இறைவாக்கினரின் பிள்ளைகளில் ஒருவன் இரவல் வாங்கி வந்த கோடரி கழன்று நீரில் விழுந்துவிட்டது. அக்கோடரியை மிதக்கச் செய்கிறார். இறைவாக்கினர் எலிசா (6:1-7) தன்னைப் பிடிக்க வந்த சீரியாப் படைவீரர்களைக் குருடாக்கி அவர்களைச் சமாரியா நகருக்கு அழைத்துச் சென்று அவர்களது கண்களைத் திறந்து விடுகின்றார். பின் அரசன் எலிசாவின் வியத்தகு செயல் கண்டு, பிடிக்கப்பட்ட சீரியாச் சிறைக்கைதிகளுக்கு நல்ல விருந்தளித்து அவர்களை அனுப்பிவிடுகின்றான் (6:8-23). இறைவாக்கினரின் இறப்பு கூட வல்ல செயல்களைத் தடை செய்ய இயலவில்லை. ஏனென்றால் எலிசாவின் கல்லறையின் மேல் போடப்பட்ட இறந்தவரின் உடல் அவரது எலும்புகளின் மேல் பட்டவுடன் உயிர்பெற்றது (2 அர 13:20-21).

மேல்கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் இறைவாக்கினர், மனிதனைவிடச் சிறிது மேலானவராகத் தோன்றுகிறார். இறைவாக்கினர் சமுதாயத்தின் உறுப்பினர்களில் உயர்ந்தவராக விளங்குகின்றனர். இறைவாக்கினரின் பிள்ளைகள் எலிசாவைப் பற்றிய நினைவுகளைப் பாதுகாத்து வந்தனர். ஆனால் அவற்றை வைத்துக்கொண்டு அவரது வாழ்க்கையில் கற்பனை நயத்தை ஏற்றி மிகைப் படுத்திக் கூறியிருக்கின்றனர். இறைவாக்கினரின் புகழை மிகைப்படுத்திக் கூறவேண்டும் என்பதுதான் நிகழ்ச்சி அமைப்பாளரின் குறிக்கோளாகும். புதுமைகள் பற்றிய கதை அமைப்பிலிருந்து எழுகின்ற வரலாற்று உண்மை என்னவென்றால் எலிசா, இறைவாக்கினர்கள் சமுதாயத்தின் அன்பு செய்யப்பட்ட தலைவராவார். இவரது மனிதத் தன்மை, பக்தி, உதவிபுரியும் ஆர்வம் ஆகிய அனைத்தும் இறைவாக்கினர்கள் சமுதாயத்தில் என்றும் நிலைத்திருந்தது.

*3. வரலாற்று நிகழ்ச்சிகளில் இவரது ஈடு பாடு:-* அருங்குறிகள் அல்லது புதுமைகள் பற்றிய கதைகளில் எலிசா என்ற வரலாற்று மனிதனைப் பார்ப்பது கடினம். ஆனால், கதைகளுக்கும் வரலாற்று நிகழ்ச்சியுரைக ளுக்கும், இடைப்பட்ட இலக்கியப்பகுதிகள் எலிசாவை வரலாற்று மனிதனாகக் காட்டுவ தில் முயற்சி எடுத்துள்ளன. இவற்றில் சில கதைக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாகத் தொழுநோயாளன் நாக மானைக் குணப்படுத்துல் (2 அர 5:1-9); சீரியாப் படைவீரர்களைப் பிடித்தல் போன் றவைகளைக் கூறலாம். மற்றவற்றில் இஸ்ரா யேலின் படை மோவாபியருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த போதும் (3:4-27) சீரியாப் படைவீரர்கள் சமாரியாவை முற்றுகையிட்ட போதும் அவர் நிகழ்த்திய உரையில் வரலாற் றுக் கூறுகள் மேலோங்கி இருக்கின்றன.

வரலாற்றில் எலிசா அவரது தலைவரின் (எலியா) பணியினைத் (1 அர 19:15-18) தொடர்ந்து நிறைவேற்றுபவராகக் காட்டப் படுகின்றார். சீரிய நாட்டுக் காசயேல் மற் றும் இஸ்ராயேலின் ஏகூ ஆகியோரின் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்கிறார் (2 அர 8:7-15; 9-10). இவற்றிலிருந்து, வரலாற்றிற் குத் திசை அமைப்பது தமது கடமையாகும் என்பதை இவர் நன்குணர்ந்திருந்தார் என் பது தெளிவாகிறது. ஏகூவின் புரட்சிக்குப் பிறகு அரசவையோடு நல்லுறவு கொண்டி ருந்தார்; அரசன் யோவாஸ் இவரை நன் மதிப்போடு நடத்தினான். இவையனைத்தும், இவரது இறப்பு நிகழ்ச்சியில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன (13:14-19). அதில் அர சன் ''என் தந்தாய்! என் தந்தாய்! இஸ்ராயே லின் தேரே! அத்தேரின் பாகனே!'' என்று கூறி அழுகிறார். இவரது சீடர்கள் எலிசா விற்கு முக்கியத்துவம் அளித்ததுபோல் நவீன ஆய்வு அளிக்கவில்லை என்பதற்காக இஸ்ராயேல் வரலாற்றில் அவரது ஆதிக்கம் பற்றிக் கேள்வி எழுப்பமுடியாது. இறைவ னது சித்தத்தை அறிவித்து நாட்டின் போக்கை உருவாக்கும் உரிமையைக் கோரிய இறைவாக்கு மனப்பான்மையை அதன் தொடக்க காலத்தில் எலிசா பிரதி பலிக்கிறார்.

எலிசாபான் (ELIZAPHAN - *இறைவன் பாது காப்பாக வைத்தார்)*

*1. கெகாத்தைச் சார்ந்த லேவியர்.* மோசே, ஆரோன் ஆகியோரின் சிற்றப்பனான ஊசி யேலின் (1) இரண்டாம் புதல்வர் (யாத் 6:22). பாலைவனத்தில் கெகாத்திய கோத்தி ரத்தாரின் தலைவர் (எண் 3:30). மோசேயின் கட்டளைப்படி எலிசாபானும் அவனுடைய சகோதரன் மீசாவேலும் நாதாபு, அபிகு ஆகி யவர்களின் சடலங்களைப் பரிசுத்த இடத்தி லிருந்து நீக்கினார்கள் (லேவி 10:4). இவரிட மிருந்து ஒரு குடும்ப மரபு தோன்றுகிறது. இவரது வழித்தோன்றல்களில் சிலர் பேழை எருசலேமுக்குத் திரும்பியபோது கடைப் பிடிக்கப்பட்ட விழாக்களில் பங்கெடுக்க அழைக்கப்பட்டனர் (1 நாள் 15:8). மற்றவர் எசக்கியா ஆட்சிக் காலத்தில் ஆலயம் தூய் மைப்படுத்தப்படுதலில் பங்கெடுத்தனர் (2 நாள் 29:13).

2. செபுலோன் கோத்திரத்தில் பரினாக்கு டைய புதல்வர். கானான் நாட்டைப் பங்கிட் டுக் கொடுத்தவர்களில் எலயாசார், யோசு வாவோடு இவரும் ஒருவர் (எண் 34:25).

எலிசாமா (ELISHAMA - *இறைவன் செவி சாய்த்தார்)*

1. பாலைவனத்தில் கணக்கெடுப்பின் போது அம்மியூதின் புதல்வனான எலிசாமா எப்பிராயிம் கோத்திரத்தாருக்குத் தலைவ னாக விளங்கினார். யோசுவாவின் தாத்தா ஆவார். தமது இனத்தின் பெயரால் காணிக்கை செலுத்தினார் (எண் 1:10; 2:18; 7:48,53; 10:22; 1 நாள் 7:26). இந்தப் பெயர் மிகப் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் அது வரும் பட்டியல்கள் பாபிலோனிய அடி மைத்தனத்துக்குப் பிறகு தோன்றியதாகும்.

2. தாவீதின் புதல்வர்களில், பெயர் தெரி யாத் தாய்க்கு எருசலேமில் பிறந்தவர் (2 சாமு 5:16; 1 நாள் 3:6,8; 14:7). 1 நாள் 3:6-இல் வரும் எலிசாமா எழுதும்போது ஏற்பட்ட

பிழையாக இருக்கலாம். அது ''ஏலிசூவா' என்று வாசிக்கப்பட வேண்டும் (2 சாமு 5:15).

3. யூதாவின் அரச குலத்தில் பிறந்தவர். கெதாலியாவை வெட்டிக் கொன்ற இசுமயேலின் தாத்தாவும் ஆவார் (2 அர 25:25; எரே 41:1).

4. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த, எரகு மேலியரான சேசானின் வழித்தோன்றல் எக்கமியாவின் மகன் (1 நாள் 2:41).

5. தாவீதின் மற்றொரு மகன் (1 நாள் 3:6). இது ஏலிசூவா (காண் 2 சாமு 5:15) என்ற பெயரை எழுத்தர்கள் தவறாக எழுதியதன் விளைவாக இருக்கலாம்.

6. மக்களுக்குச் சட்டத்தைப் போதிக்க, அரசன் எயோசபாத்தால் மக்களிடையே அனுப்பப்பட்ட இரு குருக்களில் ஒருவர் (2 நாள் 17:8).

7. அரசன் யோயாக்கிமின் அரசவையில் செயலாளர் (எரே 36:12, 20-21).

**எலிசெபா** (ELISHEBA - இறைவன் நற்பேறு அல்லது நிறைவு ஆவார்)

அம்மினதாபின் மகளும், நாக்சோனின் தங்கையும், ஆரோனின் மனைவியும் ஆவாள். ஆரோனுக்கு நான்கு புதல்வர்களைப் பெற்றாள். எழுபது நூல் இப்பெயரைத் தவறாக எலிசபெத்து என்று எழுத்துப் பெயர்ப்பு செய்கிறது.

**எலிசூவா** (ELISHUA - இறைவன் மீட்பாவார்)

எருசலேமில் பிறந்த தாவீதின் புதல்வர்களில் ஒருவர் (2 சாமு 5:15; 1 நாள் 14:15). 1 நாள் 3:6-இல் எலிசாமா என்று அழைக்கப்படுகிறார். இது பின்னால் வரும் வரியிலிருந்து வந்த எழுத்துப்பிழை போலத் தோன்றுகிறது.

**எலிசூர்** (ELIZUR - இறைவன் பாறையாக இருக்கிறார்)

செதேயூருடைய புதல்வனான (எண் 10:18) எலிசூர் ரூபன் கோத்திரத்தின் குடும்பத் தலைவராய் விளங்கினார் (எண் 2:10). பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களைக் கணக்கெடுப்பதிலும் (1:5) மற்ற அலுவல்களைக் கவனிப்பதிலும் மோசேக்குத் தோள் கொடுத்து உதவிய 12 கோத்திரங்களின் குடும்பத் தலைவர்களுள் ஒருவர். தம் இனத்தின் பெயரால் ஒரு காணிக்கை செலுத்தினார் (7:30:35).

**எலிதாகா** (ELDAAH - இறைவன் அழைத்தார்)

ஆபிரகாம்-கெத்தூரா வழிவந்த பேரன்களில் ஒருவரும் மிதியானின் 5-ஆவது புதல்வருமாவார் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

**எலிதாது** (ELIDAD - இறைவன் அன்பு செய்தார்)

இவர் பென்யாமின் கோத்திரத்திலே கிசிலோனின் புதல்வர் ஆவார். எலயாசார், யோசுவா ஆகியவர்களின் நேரடிப்பார்வையில், கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க ஆண்டவரால் நியமிக்கப்பட்டவர்களுள் (எண் 34:21) ஒருவர். இந்த வரிசையிலே வருகின்ற எலிதாதும் மற்றப் பெயர்களும் கானான் நாட்டில் தொடங்கும் புதிய வாழ்வுக்கு இஸ்ராயேல் ஆண்டவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தை நமக்குக் கொடுக்கின்றன.

**எலிப்பாசு** (ELIPHAZ - இறைவன் வெற்றி பெற்றால் அல்லது இறைவன் நயமான தங்கமாவார்)

1. ஏசாவின் முதல் மனைவியான கித்திய நாட்டு ஆதாவுக்குப் பிறந்த முதல் புதல்வன். கோரிய நாட்டுத் திமினாவை வைப்பாட்டியாக வைத்திருந்தவர் (ஆதி 36:4.10-11,15; 1 நாள் 1:35-36). ஆகவே ஏதோமின் பல குலத் தலைவர்களுக்கு முன்னோராக விளங்குகின்றார் (ஆதி 36:15).

2. யோபுவின் மூன்று நண்பர்களில் முதன்மையானவரும், முதியவரும் ஆவார் (யோபு 2:11; 4:1; 15:1; 22:1; 42:7,9). அறிவுக்கூர்மையானவராக இருந்தபோதிலும், மீட்பின்

ஒழுக்கக் கண்ணோட்டத்தை மட்டும் கடைப்பிடிக்கும் கொள்கையாளராக உரை யாடல் முழுவதும் எலிப்பாசு காண்பிக்கப் படுகின்றார். அவரது செழிப்பை அனுபவிக் கும் பொருட்டு ''எல்லாம் வல்லவரின் திருத்தத்தைப் புறக்கணிக்கா'' திருக்கும்படி முதலில் யோபுவுக்கு எலிப்பாசு அறிவுரை கூறுகின்றார் (5:17). பிறகு ''நீரோ கடவு ளைப் பற்றிய அச்சத்தைத் தவிர்க்கிறீர்'' (5:4) என்று இறைவனுக்கு எதிராகப் பேசுவதா கும் குற்றம் சாட்டினார். கடைசியாய் எண் ணிக்கையற்ற பாவங்களால் குற்றம் சாட்டி, மனமாற்றம் அடையமாட்டாயா என்ற வேண்டுகோளோடு முடிக்கிறார். இது அவ ரது வினைப்பயன் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டதாகும்.

எலிப்பாசு ஒரு தேமானியன் என்று அடிக் கடி அழைக்கப்படுவதால் தேமான் ஞானத் துக்குப் பேர்போன ஏதோம் மாவட்டத்தை யும் (எரே 49:7) அதே சமயத்தில் தேமான் எலிப்பாசின் (1) மூத்தமகன் என்பதையும் குறிக்கிறது. இரண்டாவது எலிப்பாசு முத லாவது எலிப்பாசிலிருந்து வந்திருக்கலாம்.

### எலிப்பால் (ELIPHAL - இறைவன் தீர்ப்பிட்டார்)

'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்களில் ஒருவரான ஊரின் மகன் (1 நாள் 11:35). ஆனால் 2 சாமு 23:34-இல் மக்காவின் மக னான அகசுபாய்க்குப் பிறந்த எலிப்பெலத்து என்று அழைக்கப்படுகிறார். இதையே நாள் ஆகம ஆசிரியர், ''ஊரின் மகன் எலிப்பால்; மெகராத்தியரான கேப்பேர்'' (1 நாள் 11:35-36) என்று குறிப்பிடுகின்றார். 'மெகராத்தி யர்' என்ற வார்த்தை அறியப்படாததாக இருப்பதால், மாக்காவின் தவறான வாசக மாகவும் 'அகசுபாய்' நாள் ஆகம ஆசிரியரால் 'ஊர் கேப்போ' என்று வாசிக்கப்பட்டது என்றும் ஏற்றுக் கொள்வது மேலானதாகத் தெரிகிறது.

### எலிபான்டைன் தீவு புல்தாள் ஏடுகள் (ELEPHANTINE PAPYRI)

நைல் நதியில், அஸ்வானுக்கு (விவிலிய சியேனே) எதிரிலுள்ள எலிபான்டைன் தீவின் முதல் நீர் வீழ்ச்சிக்கருகில் கண்டெடுக் கப்பட்ட, அரமேயிக் மொழியில் எழுதப் பட்ட புல்தாள் ஏடுகளாகும். நூபியன் யானைத் தந்தம் இங்கு வியாபாரம் செய்யப் பட்டதால் இந்தத் தீவு இப்பெயர் பெற்றிருக் கலாம். பெயர், எகிப்திய இயேபேவ் என்ற இடத்தில் பாரசீகர்கள் காலத்தில் (கி.மு. 6-ஆம் நூற்றாண்டு) ஒரு யூதக் குடியிருப்பு இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இயேபேவ் பழைய அரசின் தெற்குக் கோடி யிலுள்ள முக்கிய வியாபாரமையமாகும்.

இந்தப் புல்தாள் ஏடுகள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இவற் றின் முதல் தொகுப்பு வியாபாரிகளிட மிருந்து கி.பி. 1893-இல் வாங்கப்பட்டாலும் 1953-க்குப் பிறகு படிப்படியாக வாங்கப்பட் டுப் பதிப்பிக்கப்பட்டது. இவை சட்டம், வியாபாரம், கவிகாரம் செய்தல் போன்ற காரியங்களைப் பற்றிச் சான்று கூறுகின்றன. கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் யூதா வில் சமூக நிலை வீழ்ச்சியுற்ற போது சில யூதர்கள் எகிப்துக்குக் குடியேறியிருக்க வேண்டும் (எரே 43-44). எது எப்படியிருந்தா லும் அகதிகள் கி.மு. 525 வரை ஓரளவு அமைதியாக வாழ்ந்ததாகத் தெரிகிறது. 525-இல் 2-ஆம் காம்பிசேஸ் எகிப்தை வென்று பாரசீக ஆதிக்கத்தை நிறுவினார். அவர் யூதர் களை எகிப்தியத் தாக்குதலிலிருந்து பாது காக்க, இக்குடியிருப்பைக் கோட்டையாக மாற்றியமைத்திருக்க வேண்டும். இங்கு, எபிரேயர்கள் ''யாகு' (யாவேயின் சுருக்கம்) என்ற இறைவனுக்கு ஓர் ஆலயம் கட்டியிருந் தனர். இந்த ஏடுகள் அவர்களின் வழிபாட்டு முறையைத் தெரிவிக்கின்றன. 410-ஐ ஒட்டி யூத ஆலயம் எகிப்தியரால் அழிக்கப்பட்டது. பாரசீக ஆதிக்கம் குறைந்தபோது, 399-இல் படை அங்கிருந்து அகன்றிருக்க வேண்டும். ஆயினும் இப்பகுதியில் பல நூற்றாண்டு களாக யூதர்கள் தொடர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

எலிபான்டைன் தீவு புல்தாள் ஏடுகளில் பல சட்டங்களைப் பற்றியதாகும். அங்குப்

பல வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. வழக்கின்போது, கடவுள் பெயரால் சத்தியம் செய்ய ஒருவன் மறுத்தால் அவன் வழக்கில் தோல்வியுற்றவனாகக் கருதப்படு வான். வீட்டு விற்பனை, கடன் வாங்குதல், திருமண ஒப்பந்தம், கடன் கொடுத்தவரின் உரிமைகள், அடிமைகள் விடுதலை, சுவிகா ரம் செய்தல் இவற்றைப் பற்றிய சட்ட ஒழுங்குகள் இப்புல்தாள்களில் காணப்படு கின்றன.

எலிபான்டைன் தீவு புல்தாள்களில் பல கடிதங்களும் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது யூதேயாவின் ஆளுநரான பகோவாவுக்கு எழுதப்பட்ட கடிதமாகும். இக்கடிதத்தில் எகிப்தியக் கடவுள் ''குனும்''-இன் குருக்களின் தூண்டுதலால் பாரசீகத் தலைவனின் உதவியுடன் கி.மு. 410-ஆம் ஆண்டில் அழிக்கப்பட்ட யாகுவின் ஆல யத்தை மீண்டும் கட்டியெழுப்ப உதவுமாறு ஆளுநரை அவர்கள் வேண்டியிருந்தனர். இக் கடிதம் சம்பல்லாத்தைப் பற்றியும் தலை மைக்குரு யோகானானைப் பற்றியும் கூறு கிறது (நெக 12:22; 13:28). இக்கடிதத்திற்கு ஆளுநரிடமிருந்து நேரடிப் பதில் ஏதும் இல் லையெனினும், பகோவாவின் சார்பிலும், சம்பல்லாதின் மகன் தெலாயாவின் சார்பி லும் பொதுநிலை அறிக்கை ஒன்று காணப் படுகிறது. அதில் ஆலயத்தைக் கட்டியெழுப் பவும், மீண்டும் வழிபாட்டை ஆரம்பிக்கவும் அவர்கள் ஊக்குவித்திருந்தனர். ஆலயம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது என்றும், பாரசீகர்களின் ஆட்சி மேல் எகிப்தில் அதிக நாட்கள் நீடித்தது என்றும் சில ஏடுகள் கூறுகின்றன. நெபேரிட்தெஸ் அரியணை ஏறியது பற்றி (கி.மு. 399) ஒரு கடிதம் கூறுகிறது. எனவே கி.மு. 399-இல் எபிரேயர் களின் குடியிருப்பு அங்கு இருந்தது என்பது தெளிவாகிறது. எலிபான்டைன் தீவிலிருந்து இந்த அரசன்தான் யூதர்களை வெளியேற்றி இருக்க வேண்டும்.

இங்கு யூதர்களின் மதம் மதக்கலப்புப் போக்கையுடையது. ஆலயப் பொருளாளரி டம் யாகு என்ற கடவுளுக்கும், எசேம்-பெத்தேல், அனாத்-பெத்தேல் போன்ற தெய் வங்களுக்கும் பணம் இருந்தது. கடவுளைக் குறிப்பதற்குப் பெத்தேல் என்ற சொல் பயன் படுத்தப்பட்டது. அனாத்-பெத்தேல் என்ற தேவதை அனாத் யாகு என்றும் அழைக்கப் பட்டாள். கடிதங்கள் சிலவற்றின் வாழ்த்துக் களில் 'கடவுளர்கள்' என்று காணப்படுகிறது.

புளியாத அப்பத் திருவிழாவை இத்தீவி லுள்ள யூதர்கள் கொண்டாட வேண்டு மென்று கி.மு. 419-இல் இரண்டாம் தாரியுஸ் என்பவர் ஆணைபிறப்பித்தார். ''ஆயத்த நாள்'', ஓய்வு நாள் பற்றியும் குறிப்புக் காணப்படுகிறது. பாஸ்கு என்ற கடந்தேகும் விழா குறிக்கப்பட்டதா என்பது ஐயப்பா டுடையது.

எஸ்ராவின் வருகையையும், சமாரியர் களின் பிரிவையும் பற்றிய காலத்தைக் கணிப் பதற்கு எலிபான்டைன் புல்தாள்கள் பெரி தும் உதவுகின்றன. எஸ்ரா நூலின் அரமேயிக் பகுதிகளின், குறிப்பாக அதி.4-இல் காணப் படும் கடிதங்களின் உண்மைத் தன்மைக்கு இப்புல்தாள்கள் சான்று பகரலாம்.

**எலிப்பெலகு** (ELIPHELEHU - இறைவன் அவனை ஆய்ந்தறிந்தார்)

யாழ் மீட்டி வந்த தலைவர்களுள் ஒருவரா கத் தாவீதால் உயர்த்தப்பட்ட லேவியர் (1 நாள் 15:18,21). இணையான பட்டியல் 2 நாள் 16:5-இல் கொடுக்கப்பட்டிருக்கும் வரி சையில் இடம் பெறாதது, இது பிற்சேர்க்கை என்பதைக் குறிக்கிறது.

**எலிப்பெலத்து** (ELIPHELET - இறைவன் விடுதலையாக உள்ளார்)

1. தாவீதின் புதல்வர். எருசலேமில் பிறந்த வர். இவரது தாயின் பெயர் தெரியவில்லை (2 சாமு 5:16; 1 நாள் 3:6,8; 14:5,7). 1 நாள் 3:14-இல் இப்பெயர் திரும்பத் திரும்ப வரு வது, எழுதும்போது ஏற்பட்டபிழையாக இருக்க வேண்டும்.

2. மாக்காவின் மகனான அகசுபாயின் மகன். தாவீதின் வலிமை வாய்ந்த படை

வீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:34). இதற்கு இணையான பட்டியல் 1 நாள் 11:35-இல் வரும் எலிப்பாலும் இவனும் ஒருவரே என்று கருதப்படுகிறது.

3. சவுல், யோனத்தான் இவர்களின் வழித் தோன்றல்; பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்தவர் எசேக்கின் மூன்றாம் மகன் (1 நாள் 8:39).

4. எஸ்ராவோடு அடிமைத்தனத்திலிருந்து மீண்டும் திரும்பி வந்தவர்களுள் ஒருவர் (எஸ் 8:13);

5. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட்1 டவர்களுள் ஒருவர். காசூமின் வழித்தோன்றல் (எஸ் 10:33).

எலிமா (ELYMAS - சூனியக்காரன்)

எலிமா என்ற சொல் அரமேயத்திலிருந்து எடுக்கப்பட்டது எலிமா என்பதற்கு மந்திர வாதி என்று பொருள் (அ.ப. 13:8). பவுலும், பார்னபாவும் சைப்பிரசிலுள்ள பாப்போசில் மந்திரவாதியும் போலித் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டனர் (அ.ப. 13:6-7). அவன் பெயர் பார்-ஏசு ஆகும். அவன் செருகியு பவுலோசின் பரிவாரத்தில் ஒருவ னாவான்.

செருகியு பவுலோஸ் என்ற ஆளுநன் இறைவனின் வார்த்தையைக் கேட்க ஆவ லாய்ப் பவுலையும், பார்னபாவையும் அழைத்தபோது, எலிமா அவர்களை எதிர்த்து, ஆளுநன் விகவசிப்பதைத் தடுக்க முயற்சி செய்தான் (13:7-8). ஆனால் ஆண்ட வரின் ஆவியால் தூண்டப் பெற்று பவுல் அவனைக் கடிந்து பேசி, ஒளியைக் காண முடியாமல் அவனது பார்வையை மங்கச் செய்துவிட்டார் (13:9-11). இதைக்கண்ட ஆளுநன் விசுவசித்தார் (13:12).

அவனது கிரேக்கப்பெயர் அவனது மந்திர வாதித் தொழிலோடு சொல்லிலக்கணமாகத் தொடர்புடையது (13:8) என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இது அதிமோஸ் என்ற சைப் ரஸ் மந்திரவாதியோடு தொடர்புடையதாக இருக்கலாம். எது எவ்வாறு இருந்தாலும், இப்பெயர் பார்-ஏசு என்ற எபிரேயப் பெய ரின் மொழி பெயர்ப்பன்று.

எலிமாயி (ELYMAIS)

பாரசீகத்திற்கும் பாபிலோனியாவுக்கும் இடையிலுள்ள பகுதியிலுள்ள ஒரு மாகா ணம். 1 மக் 6:1-இன் படி எலிமாயி என்பது பாரசீகத்தில் அமைந்துள்ள ஒரு நகரம். இந் நகரம் பாரசீக நாட்டில் பேர்போனதும், பொன், வெள்ளி மிகுந்து காணப்படும் இடமு மாகும். அங்குச் செல்வம் நிறைந்த கோயி லும், கிரீசில் முதல் முதல் அரசு செலுத்தின மக்கதோனிய மன்னான பிலிப்பின் மகன் அலக்சாந்தர் அங்கே விட்டுப்போன பொன் திரைகளும், கலசங்களும், கேடயங்களும் இருந்தன. அதனால் அந்தியோக்கு அரசன் அதைக் கொள்ளையடிக்க முயன்றான். அதை அறிந்த மக்கள் அவனை விரட்டியடித் தனர் (1 மக் 6:1-4).

தோபி 2:10-இன்படி எலிமாயி ஒரு நகர மென்றோ மாகாணமென்றோ குறித்துச் சொல்லுவதற்கில்லை. சில வாசகங்களில் ஏலாம் நகரம் என்று சொல்லப்பட்டிருக்கி றது (தானி 8:2). ஆனால் பின்னால் வந்த வாசகங்களில் எலிமியா என்பதையே பார்க் கின்றோம். ஆதலால் ஏலாம் நகரமும், எலி மாயி நகரமும் ஒன்றையே குறிப்பதாக இருக் கலாம். பல்வேறு அறிஞர்கள் இந்த நகரின் அமைப்புப் பற்றிச் சொல்லுகிறார்கள். சூசிஸ் என்ற இடத்திற்கு வடகிழக்கில் உள்ள மலைப்பகுதி என்றும், பின்னால் பாபிலோ னியாவிற்கும் பாரசீகத்திற்கும் இடையில் அமைந்துள்ள முக்கியமான சூசா நகரத்தைப் போன்றது என்றும் ஸ்த்ரோபோ கூறுகிறார். எரோதோத்தசு இந்நகரம் பாரசீகப் பேரரசில் 8-ஆவது மாகாணமாக அமைந்துள்ளது என் றும் தோலமி என்பவர் சுசியான்னாவில் ஓரத்தில் அமைந்துள்ளது என்றும் கூறுகிறார் கள். சூசாவுக்கு அருகிலும் பாரசீகத்தை நோக்கியும் உள்ள அசீரியா பகுதிதான் இது என்று ஸ்டீபன் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் அவை சிறிதளவாக இருப்பதாலும், எலிமாயி, ஏலாம், சுசியான்னா ஆகிய நகரங்கள் ஏறத்தாழ ஒன்றே என்று கூறலாம்.

**எலிமெலக்கு (ELIMELECH - இறைவன் அரசராவார்)**

நீதிபதிகள் காலத்தில் இஸ்ராயேல் நாட்டில் ஏற்பட்ட கொடிய வஞ்சத்திலிருந்து தப்பிக்கத் தன் மனைவி நகோமியோடும் இரு புதல்வர்களோடும் மோவாபு நாட்டிற்குக் குடியேறிய பெத்திலகேம் நகர மனிதர். அவரும் அவர் புதல்வர்களும் இறந்த பிறகு நகோமியும் மருமகள் ரூத்தும் பெத்திலகேமுக்கு திரும்பி வந்துவிட்டனர். பெத்திலகேமிலேதான் உறவினனான செல்வந்தன் போவாசு என்பவரை ரூத் . மணந்து கொண்டார் (ரூத் 1:2-3; 2:1,3; 4:3,9).

**எலியா (EIJAH - யாவே இறைவன் ஆவார், என் இறைவன் யாவே)**

1. எலியா - இறைவாக்கினர்: காண்க.

2. பென்யாமின் வழித்தோன்றல். எரோகாமின் புதல்வர். எருசலேமில் வாழ்ந்தவர். ஒரு குலத் தலைவராய் விளங்கினார் (1 நாள் 8:27-28).

3. எஸ்ரா காலத்தில் அடிமைத்தனத்துக்குப் பிறகு திரும்பி வந்தவர்களில் ஒரு குரு. அவர் தந்தை பெயர் காரிம். இவர் தம் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒத்துக் கொண்டவர் (எஸ் 10:21).

4. எஸ்ரா காலத்தில் புறவின மனைவியைத் தள்ளிவிட்ட ஏலாமின் மக்களில் ஒருவர் (எஸ் 10:26).

5. யூதித்தின் முன்னோர்களில் ஒருவரும் அகிதூபின் தந்தையுமாவார் (யூதி 8:1). அவருடைய பெயர் சில வேளைகளில் எலிகூ (1 சாமு 1:1) என்று தரப்படுகிறது. ஏனென்றால் கிரேக்கச் சொல் இருபொருள் மயக்கமுடையது. அது ''எலியா'', (2 அர 1:3) ''எலிகூ'' (1 சாமு 1:1) என்று இரு பெயர்களையும் குறிக்க வல்லது.

**எலியா (ELIJAH யாவே என் கடவுள்) - இறைவாக்கினர்**

I பழைய ஏற்பாடு:-

எலியா என்பவர் ஆகாபு, அகசியா ஆகியோர் இஸ்ராயேலை ஆண்டகாலத்தில் வாழ்ந்த இறைவாக்கினர். பழைய ஏற்பாட்டில் இன்னும் மூன்று பேர் இந்தப் பெயரைக் கொண்டிருக்கின்றனர். 1 அர 17-19; 21; 2 அர 1:1-2:18 ஆகிய பகுதிகளில் எலியாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்திய மதிப்பீட்டாய்வாளர்கள் இறைவாக்கினர் எலியாவின் வாழ்க்கை வரலாற்றிலிருந்துதான் இப்பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கருதுகின்றனர். கிலெயாத்திலுள்ள திசுபே ஊரைச் சேர்ந்தவர் என்பதைத் தவிர வேறொரு குறிப்புமின்றி எலியா மிகவும் திடீரென்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது 1 அர 17:1-இல் மேலே கூறப்பட்ட கருத்தை வலியுறுத்துகிறது. நெல்சன் க்ளுயேக் என்பவர் யாபேசு என்பதுதான் திசுபே என்று திரிந்து வந்திருக்கிறது என்று கருதுகின்றார். பொதுவாக மற்ற இறைவாக்கினர்களுக்குக் கொடுப்பது போல், இறைவாக்கினர் எலியாவின் தோற்றம் பற்றியும், அவரது முற்கால வாழ்க்கை பற்றியுமான கருத்துக்களை ஏன் தொகுப்பாளர் தவிர்த்திருக்கிறார் என்ற கேள்வி எழுப்பலாம். எலியா பற்றிய கதைகள் தனித்தனிப் பகுதிகளாக இருந்திருக்கலாம். எலியாவைப் பற்றிய குறிப்புக்கள் ஐந்து பகுதிகளில் தரப்பட்டுள்ளன.

1. 1 அர 17:1-18;16-இறைவாக்கினர் எலியா மூன்றாண்டுகளுக்கு நீடிக்கப் போகும் பஞ்சத்தைப் பற்றி ஆகாபுக்கு அறிவிக்கின்றார் (17:1). அவர் யோர்தானுக்கு எதிரேயுள்ள கெரித்து ஓடைக்கருகில் தம்மை மறைத்துக் கொண்டார். அங்கே காகங்கள் அவருக்கு உணவளித்தன (17:2-8). பின் அவர் பெனிக்கியாவிலுள்ள சாரபாத்து என்ற ஊருக்குச் செல்கிறார். அங்கே அவர் ஒரு விதவையின் வீட்டில் அப்பத்தையும் எண்ணெயையும் பல்கிப் பெருகச் செய்கிறார் (17:9-24). மூன்றாண்டுகளுக்குப்பின் எலியா ஆகாபுவின் பணியாளர் ஒபதியா மூலம் ஆகாபுவை எதிர்கொள்கிறார் (18:1-

17). பின் பாகால் கடவுள் மழையைப் பொழிய வைப்பார் என்று சவால் விட்டு, அதைச் செயலில் அனைவருக்கும் காட்ட பாகால் கடவுளின் இறைவாக்கினர்களைத் தன்னிடம் கர்மேல் மலைக்கு அழைத்துவர ஆகாபிடம் சவால் விடுகின்றார். இந்தச் சோதனை முறை கர்மேல் மலையில் நடைபெறுகிறது. பாகாலின் இறைவாக்கினர்கள் பலிபீடத்தைச் சுற்றிச் சடங்கு நடனமாடியும், உரக்கக் கத்தியும் பாகாலைச் செவி கொடுக்க அழைக்கின்றனர். ஆனால் அவர்கள் மன்றாட்டு கேட்கப்படவில்லை. எலியா உண்மை இறைவனாகிய யாவேயிடம் மன்றாட வானத்திலிருந்து வந்த தீ பலிப்பொருட்களை எரித்தது. அதைத் தொடர்ந்து மழையும் பெய்தது (18:8-46).

2. 1 அர 19:1-21-இல் இறைவாக்கினர் எலியா ஈசபேலின் சதித்திட்டத்தைக் கண்டு அந்நகரை விட்டு வெளியேறுகிறார். அவர் ஓரேபு மலைக்குச் செல்கிறார். அங்கே இறைவன் நிலநடுக்கம், காற்று மற்றும் மின்னல் ஆகியவற்றில் தோன்றவில்லை. தென்றலின் மெல்லிரைச்சலை உண்டாக்கி அவருக்குக் காட்சியளிக்கிறார். காட்சியளித்த இறைவன் தமஸ்குவின் அரசராகக் கசயேலையும், இஸ்ராயேலின் அரசராக ஏகூவையும், அவரது (எலியாவின்) வழித்தோன்றலாக எலிசாவையும் அபிடேகம் செய்யுமாறு கட்டளை இடுகின்றார் (19:1-18). எலியா ஏர் பூட்டி உழுது கொண்டிருந்த எலிசாவை அழைத்துத் தம்மைப் பின் தொடருமாறு செய்கிறார்.

3. 1 அர 21:1-29-நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை ஆகாப்பிற்குப் பெற்றுத் தர வேண்டுமென்ற நோக்குடன் ஈசபேல் என்பவள் நாபோத்தைக் கொலை செய்ததால் வரப்போகும் ஆகாபின் குலத்தின் அழிவைப்பற்றி எலியா எடுத்துரைக்கின்றார்.

4. 2 அர 1.-அகசியா அரசன் சுகமில்லாமல் இருந்த பொழுது சுகம் பெற வேண்டி எக்கரோனின் தெய்வமாகிய பாகால் செபூவிடம் மன்றாடியதால் அவர் இறக்கப்போவதாய் எலியா அச்சுறுத்துகிறார். இதே நிகழ்ச்சியில் தம்மைப் பிடிக்க வரும் ஐம்பது போர் வீரர்களைக் கொண்ட இரு பிரிவினரை நெருப்பு வந்து விழுங்கட்டும் என்று வேண்டுகிறார் (2 அர 1).

5. 2 அர 2:1-18:- எலியாவும், எலிசாவும் சென்று கொண்டிருந்தபொழுது வானத்திலிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட நெருப்பு மயமான தேர் வந்து எலியாவை எடுத்துச் செல்ல, அவர் தமது போர்வையையும், இறைவாக்கு உரைக்கும் வரத்தையும் விட்டுச் செல்கின்றார். எலியாவின் போர்வையைக் கொண்டு எலிசா யோர்தான் நதியின் நீரை அடிக்க, நீர் இரண்டாகப் பிரிந்ததிலிருந்து எலியா தனது ஆவியைக் கொடையாகக் கொடுத்தது உண்மையெனக் கொள்ளப்பட்டது (2 அர 2:1-18).

6. எலியாவைப் பற்றி மேலே கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் இறைவாக்கினர்கள் குழுக்களின் பாரம்பரியத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும் என்று ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்கின்றனர் (1 அர 19:18)- இவையனைத்துமே எலியா வாழ்ந்த இடத்தையும், ஆகாபின் மனைவியாகிய ஈசபேலின் வழியாகத் தீர்நாட்டுப் பாகால் தெய்வ வழிபாடு நுழைந்ததையும் அதை அவர் தனியாக எதிர்த்ததையும் பற்றிய கதையாகும். இறைவாக்கினர் எலியா, எலிசா போன்றவர்களால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அரும் பெரும் செயல்களால் பாகால் தெய்வ வழிபாடு ஒழிக்கப்படவில்லை. மாறாக, சதியாலும் கொலையாலும் அரச மரபு அழிக்கப்பட்ட பின்புதான் பாகால் தெய்வ வழிபாடும் அழிந்தது. ஆனால் யாவே இறைவன் ஓரேபு மலையில் எலியாவிற்குத் தோன்றி மற்றும் ஏகூவை அபிடேகம் செய்ய அழைப்பு விடுத்ததன் பேரில் அவர்கள் அபிடேகம் பண்ணப்பட்டு அரச பொறுப்பை ஏற்றதால் அந்நிய வழிபாட்டைக் கொண்டு செயல்பட்ட அரசாட்சி கவிழ்க்கப்பட்டது என்று இறைவாக்கு மரபு கூறுகிறது. எலியாவிற்குச் சாற்றிக் கூறப்பட்ட இந்த இறைவாக்கு மரபு எலிசாவினால் படைக்கப்பட்டதாக இருக்கலாம்.

*7. தமது பெயர் குறிப்பிடுகின்ற ''யாவே என் இறைவன்'' என்பதைத் தமது வாழ்வில் உணர்ந்தவராய் எலியாகூ ''எனக்கு முன்னரே யாவே வாழ்கின்றார்'' என்று தயாராக எழுதுகின்றார். தீயைப்போன்ற இறைவாக்கினராக உயிருள்ள இறைவனின் உடன்படிக்கையை அவர் மீண்டும் ஏற்படுத்துவார். ஏனெனில் கடவுள் கட்டளைமேல் ஆர்வம் கொண்டிருந்ததால் விண்ணில் சேர்க்கப்பட்டார் (1 மக் 2:58) ''நெருப்புச்சுவாலையில் நெருப்புக் குதிரைகள் பூட்டின வண்டியில் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார்'' (சீரா 48:9)*

*அ) பாலைவனத்திற்குத் திரும்புதல்:- எலியா ஓடிச் செல்ல வேண்டிய பாலைவனமானது அவருடைய இறைவனுடைய அக்கறையை அவருக்கு வெளிப்படுத்துகின்றது. அவர் எலியாவை கோரேபு மலைவரை போக அனுமதிக்கிறார் (1 அர 17:2 தொ; 19:4-8). மோசே ஆண்டவரைப் ''பின்னாலிருந்து'' பார்த்த அதே இடத்தில் இறைவன் தன்னை அவருக்கு வெளிப்படுத்துகின்றார் (19:9-14; யாத் 33:21.23). மோசேயைப் போன்று யாவேயுடன் கொண்ட சந்திப்பின் மூலம் திசுபியரும் மக்களுக்கான தூய்மையின் ஊற்றாக உருவாகிறார் (1 அர 19:15-18).*

*ஆ) இறைவன் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் பாதுகாவலன்:- ''சேனைகளின் கடவுளாகிய யாவேமாட்டு மிகுந்த ஆர்வம் கொண்டவனாய் இருக்கிறேன்'' (19:10) அந்நாளின் ஆள்வோரை எதிர்கொள்வதற்கு இத்தகைய முழு ஆளையும் ஆட்கொள்ளும் ஆர்வம் மிகவும் தேவைப்பட்டது. போரின் வெற்றிகள், புதிய தலைநகரின் மாட்சி, மற்றும் நகரங்களின் செழிப்பு ஆகியவற்றால் மதிமயக்கம் கொண்டவர்களாய் அவர்கள் அகந்தைமிக்க தன்னிறைவு மற்றும் நாட்டின் உயர்வு என்னும் சூழ்நிலையில் மூழ்கியிருந்தனர் (16:23-34). ''தந்தத்தால் கட்டிய வீடாகிய'' (22:39) அரச மாளிகையில் ஆகாபினுடைய யூதரல்லாத மனைவியாக ஈசபேல் இறைநிந்தனையான திட்டங்களைப் பற்றியே சிந்திக்கின்றாள். சிலை வழிபாட்டைப் பரப்புகின்ற பொறுப்புடைய சிலநூறு போலித் தீர்க்கதரிசிகளை அவள் பாகாலின் ஆலயத்தில் வைத்திருக்கவில்லையா? கர்மேல் மலையில் யாவேயின் ஆண்டவருடைய வியப்புமிக்க தலையீட்டின் மூலம் எலியா தமது எதிரிகளின் சவாலை ஏற்று அவர்களைத் தோல்வியுறச் செய்கிறார் (18). இவ்வாறு இறைவனின் உரிமைகள் இடர் நிலையில் உள்ள ஒவ்வொரு நேரத்திலும் இடிபோன்ற வன் சொற்களுடன் எலியா போராட்டத்தில் அங்கு நுழைகிறார் (2 அர 1). அவர் உண்மையான வழிபாட்டுக்கு மட்டுமில்லாமல் நீதிக்காகவும் எளியோரின் ஆதரவுக்காகவும் போராடினார். சமாதானத்தை விரும்பும் நாபோத்தைக் கொன்ற ஆகாபிற்கு எதிராக எலியா எந்த அளவிற்கு இடித்துரைத்தாரெனில் அச்சமுற்ற அரசன் மனந்திரும்புதலில் அச்செயல் முடிவடைகிறது (1 அர 21). இத்தகையவர் இறைவாக்குகளில் இதுபோன்ற அமைப்புகளால் எப்போதும் வருணிக்கப்படுவதற்குத் தகுதியுடையவரே. ''நெருப்பைப்போல் எலியா எழுந்தார். பந்தம் போல் அவருடைய வார்த்தை பற்றி எரிந்தது'' (சீரா 48:1).*

*இ) புறவினத்தாரிடையே இறைவன் சாட்சி:- 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல இஸ்ராயேலரைப் பொறுத்த மட்டில் இறைவனின் கொடைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரியவைகளாக் கருதப்பட்டன. ஆனால் எலியாவை அனுப்பிய இறைவனுக்கோ மீட்புப்பணியானது உடன்படிக்கையின் எல்லைகளுக்கும் அப்பால் செல்கிறது. ஒரு புறவினத்தார் பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்படுகிறார் (1 அர 17:10-16) அவருடைய மகன் மரணத்தினின்று விடுவிக்கப்படுகிறான் (17:17-24).*

*எலியா இறைவாக்கினர் யாவேயின் உண்மையான இறைத்தன்மையை வலியுறுத்திப் பிற தெய்வ வழிபாடுகளை அகற்றுகிறவராகத் தோன்றுகிறார். கானானிய கடவுளுக்கே உரித்தான ஒன்றாக ஏற்றிக் கூறப்படும் இயற்கைக்கு மேல் உள்ள அதிகாரத்தை யாவே இறைவனுக்கு மட்டுமே உரியதொன்றாக*

அவர் நிரூபித்துக் காட்டுகின்றார். எபிரேயப் பாரம்பரிய அறநெறி ஒழுக்கத்தை வலியுறுத்து கின்றார். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அவர் அநேக முறை சுட்டிக் காட்டப்படுவதிலிருந்து அவரது மகத்துவத் தைப் புரிந்துகொள்ள முடிகின்றது. மூல இறைவாக்குக் கதை மோசேயின் இறை அனுபவக் கூறுகளை இவரது இறையனுபவ மாகவும் ஏற்றிக் கூறுகிறது. ஏனென்றால் இருவருக்குமே இறைவன் தோன்றிய இட மும், வெளிப்பட்ட விதமும் ஒரே மாதிரியான தாகக் காட்டப்படுகின்றன. எலியா மீண் டும் வருவார் என்பது பிற்காலத்தில் எழுந்த நம்பிக்கையாகும். மலாக்கி ஆகமம் 3:23 எழுதப்பட்ட காலத்தில் இந்த நம்பிக்கை காணப்பட்டது. யாவேயின் நாளுக்கு முன் னால் எலியா வருவார் என்ற நம்பிக்கை நற்செய்திகளிலும் பல இடங்களில் காணப் படுகின்றன (மத் 11:14; 17:10; மாற் 9:11).

II புதிய ஏற்பாடு:-

1. திருமுழுக்கு யோவானும் எலியாவும்:- இந்த இறுதிக்கால எதிர்பார்ப்பானது (மாற் 1:35-36) மறைபொருள் மிக்கவிதத்தில் திரு முழுக்கு யோவானில் நிறைவேறுகிறது (மத் 17:10-13). ஏனெனில் யோவான் எலியா அல்லர் (யோவா 1:21;25). மேலும் அவரு டைய போதனையானது பிள்ளைகளின் உள் ளங்களைத் தந்தையாரிடம் திரும்பக் கொண்டு வந்தாலும் இறைவனின் சினத் தைத் தணிப்பவர் அவரல்லர்.

2. இயேசுவும் எலியாவும்:- பாலைவனத் தில் அவர் கடைப்பிடித்த தவமுயற்சிகளைப் பொறுத்தமட்டும் திருமுழுக்கு யோவான் எலியாவைப் பின்பற்றுகிறார் (மத் 3:4; 2 அர 1:8). ஆனால் அவரின் முக்கிய பண்புகளை நிறைவேற்றுபவர் இயேசுவே. நாசரேத்து நிகழ்ச்சியிலிருந்து எலியாவின் பணியைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர் தமது உலக ளாவிய பணியை விவரிக்கிறார் (லூக் 4:25-26). சாரபாத்து புதுமையானது, உருவக வடிவில் நயீம் புதுமையுடன் இணைக்கப் படுகின்றது (லூக் 7:11-16; 1 அர 17:17-24). பழிவாங்கும் நெருப்பை எலியா வானி லிருந்து இறங்கச் செய்கிறார் (2 அர 1:9.14; லூக் 12:49). பாலைவனத்தில் எலியாவிற்கு நிகழ்ந்ததுபோல ஒலிவ மலையில் வான தூதர் ஒருவர் இயேசுவிற்கு ஆறுதலளித்துத் தேற்றுகிறார் (லூக் 22:43; 1 அர 19:5.7). ஆனால் எலியாவைப் போன்று அவர் மர ணத்தைக் கேட்கவில்லை. ''தனது ஆவியா னது எலிசாவின் மீது தங்கிய நிலையில் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா (2 அர 2:1-15). ''தனது தந்தை வாக்களித்ததை'' தனது சீடர்களுக்கு அனுப்ப விருக்கிற கிறிஸ்துவினுடைய விண்ணேற் பிற்கு (லூக் 24:51; 9:51) முன்னுதாரணமாக உள்ளார்.

3. விசுவாசியும் எலியாவும்:- ''நம்மைப் போன்ற ஒரு மனிதனான'' எலியாவின் வேண்டுதலை நீதிமானுடைய செபங்க ளுக்கு மாதிரியாக யாக்கோபு எடுத்துக் கூறு கிறார் (யாக் 5:16 தொ). ''தென்றலின் மெல் லிசையில்'' (1 அர 19:12) முன்னர் யாவே யுடன் ஏற்பட்டது போன்று உருமாற்றத்தின் போது இயேசுவுடனான இறைவாக்கினரின் உரையாடலானது (மத் 17:1-8) ஆண்டவர் எல்லா விசுவாசிகளையும் அழைக்கின்ற நெருக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கிறிஸ்தவ மரபில் அமைந்துள்ளது.

**எலியாக்கிம்** (ELIAKIM - இறைவன் எழுப்பு கிறார்)

1. இலிக்கியாவின் மகன் எலியாக்கிம் ஆவார். அரசன் எசக்கியாவின் அரண்மனை மேலதிகாரி (2 அர 18:18.26.37). இந்தப் பதவி (அரண்மனை மேற்பார்வையாளன்) அரச னுக்கு அடுத்த பதவியாகச் சாலமோன் காலத்திலிருந்தே முக்கியத்துவம் பெற்ற பதவி ஆகும் (1 அர 4:2-6). ''செபினாவை நீக்கிவிட்டு எலியாக்கிமை அவன் பதவிக்கு உயர்த்துவோம்'' என்று ஏசயா இறைவாக்கு உரைத்தார் (ஏச 22:15-25). அது அப்படியே நடந்ததை 2 அர 18:18-இல் வாசிக்கின்றோம். எலியாக்கிமின் அதிகாரம் இந்த இறைவாக் கில் விவரிக்கப்பட்டபடி விண்ணரசில் நுழைவதை நிர்ணயிப்பதில் இயேசுவின்

பாகத்தை விவரிப்பதில் நினைவு கூறப்படு கிறது (திருவெளி 1:18; 3:7).

2. பார்வோன் நெக்கோ, யோசியாவின் மூத்த மகனைப் பதவி நீக்கம் செய்து எகிப்துக்கு நாடு கடத்திய பின், இரண்டாம் மகனான எலியாக்கிமை ஏற்படுத்தி அவரது பெயரை யோயாக்கிம் என்று மாற்றினார் (2 அர 23:34; 2 நாள் 36:4). இப்பெயர் மாற்றத்தில் புதிய பெயருக்கு முக்கியத்துவம் வாய்ந்த உட்பொருள் ஒன்றுமில்லை. (''கடவுள் உயர்த்துகிறார்'' என்பதற்குப் பதிலாக ''யாவே உயர்த்துகிறார்'' என்று வந்திருக்கிறது). ஒரு புதிய பெயர் அவ்வளவுதான். பார்வோன் யோயாக்கிமை மறுபதிப்பு செய்தான். 'யாவே அவன் பக்கம் இருக்கிறார்' என்று பொருள்படும் புதிய பெயர் பார்வோனின் தந்திரமான தயாரிப்பு.

3. செருபாபேலால் திரும்பக் கட்டப்பட்ட எருசலேம் மதிலின் அர்ப்பண விழாவின் போது பங்கெடுத்த ஒரு குரு (நெக 12:41).

4. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு வரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் அபியூதின் மகன் எலியாக்கிம் குறிக்கப்படுகிறார் (மத் 1:13).

5. லூக்கா தரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையின்படி எலியாக்கிம் தாவீது மகன் நாத்தானின் வழிவந்த மெலயாவின் மகன் (லூக் 3:30).

**எலியாசாபு** (ELIASAPH - இறைவன் அதிகரித்துள்ளார்)

1. இலாயேலின் புதல்வன். பாலைவனத்தில் எகரிசோனிய மக்கள் தலைவன் (எண் 3:24). கெரிசோனிய மக்கள் ஆண்டவரின் பேழையைக் காவல் புரிவதுடன் கூடாரத்தினுள்ளே மற்ற அலுவல்களையும் செய்துவந்தார்கள்.

2. காது கோத்திரத்தின் தலைவன் தெகுவேலின் அல்லது இரகு வேலின் புதல்வன் (எண் 1:14; 2:14; 7:42. 47; 10:20). பாலைவனத்தின் இஸ்ராயேல் கணக்கெடுப்பதிலும், பிற அலுவல்களிலும் மோசேக்குத் தோள் கொடுத்துத் துணைபுரிந்த 12 கோத்திரங்களின் தலைவர்களுள் ஒருவர்.

**எலியாசீபு** (ELIASHIB - இறைவன் சீர்படுத்தினார்)

1. எலியோனாயின் மகனும் செருபாபேலின் வழித்தோன்றலுமாவார் (1 நாள் 3:24).

2. தாவீது காலத்தில் பதினோராவது பிரிவில் ஒரு குரு (1 நாள் 24:12).

3. பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பிறகு புறவின மனைவியரை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்ட பாடகர்களில் ஒருவர் (எஸ் 10:27).

4. சத்தூவின் மக்களில் ஒருவர் (எஸ் 10:27). புறவின மனைவியை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர்.

5. பானியின் மக்களில் ஒருவர் (எஸ் 10:36). இவரும் புறவின மனைவியை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டவர்.

6. நெகமியா காலத்திய பெரிய குரு (எஸ் 10:6; நெக 3:1. 20-21). யோயாக்கிமின் மகனும் ஏசுவாவின் பேரனும் ஆவார் (நெக 12:10). எலியாசீபு மற்ற உடன்குருக்களை மந்தை வாயிலைக்கட்ட வழிநடத்தினார் (3:1). நெகமியாவின் எதிராளியும் அம்மோனியனுமான தோபியாசு எலியாசீபுக்கு நெருங்கிய உறவினன். ஆதலால், கடவுள் ஆலயத்தின் ஓர் அறையைத் தோபியாசுக்குத் தங்குமிடமாகக் கொடுத்ததால் எலியாசீபு தீங்கு இழைத்திருந்தார் (13:4.7). எலியாசீபு பெரிய குருதான் என்பதில் சில வேளைகளில் சந்தேகங்கள் எழுகின்றன (3:1). ஆனால் அதற்குப் போதுமான காரணமில்லை. யோயாதா, யோகனான் (எஸ் 10:6) இயோர் எலியாசிப்பின் புதல்வர்கள் ஆவர் (12:10-11). அவரது (யோயாதா வழிவந்த) பேரன்களில் ஒருவன் சாம்பலாத்து ஒரு கோரியரின் மகளைத் திருமணம் செய்தான். இது, ஆலயத்திலிருந்து அவனைப் புறமபாக்குவதற்கு

நெகமியாவுக்குப் போதிய காரணமாயிற்று (நெக 13:28).

**எலியாதா** (ELIADA - இறைவன் அறிகிறார்)

1. தாவீதின் புதல்வர்களில் ஒருவர். எருசலேமில் பிறந்தவர் (2 சாமு 5:16; 1 நாள் 3:8). இதற்கு இணையான பட்டியலில் பேலியாதா என்று அழைக்கப்படுகிறார் (1 நாள் 14:6).

2. சாலமோனின் எதிரியான இரசோனின் தந்தை (1 அர 11:23).

3. யோசபாத்தின் ஆட்சியின்போது கேடயம் தாங்கிய வில்வீரர் இரண்டு இலட்சம் பேருக்குத் தளபதியாக விளங்கினார் (2 நாள் 17:17). பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர்.

**எலியாத்தா** (ELIHTHA - இறைவன் வந்துவிட்டார்)

ஏமானின் புதல்வர்களுள் ஒருவர். தாவீது காலத்தில் ஆலய இசைக்கலைஞர் (1 நாள் 25:4). சீட்டுப் போட்டு, பாடகர்களில் 20-ஆவது பிரிவை நடத்த நியமிக்கப்பட்டவர் (25:7). ஒருவேளை இது ஆளைக்குறிக்கும் பெயராக இருக்காது. இசைக்கலைஞர்களின் பெயர் வரிசையில் சேர்ந்துவிட்ட செபத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். அப்படியென்றால் ''ஏலி அட்டா'' அதாவது ''நீரே என் கடவுள்'' என்று வாசிக்கவேண்டும்.

**எலியாபு** (ELIAB - இறைவன் தந்தையாவார்)

1. செபுலோன் கோத்திரத்தின் தலைவனான கோலோனுடைய புதல்வர்களில் ஒருவர். மோசேயின் காலக்கட்டத்தில் கணக்கெடுப்பதிலும் காணிக்கை கொடுப்பதிலும் தம் கோத்திரத்தாருக்குப் பிரதிநிதியாக விளங்கினார் (எண் 1:9; 2:7; 7:24.29; 10:16).

2. ரூபனின் குலத்தைச் சேர்ந்த பல்லூவின் மகனும் கோராகின் கிளர்ச்சியின்போது மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் நின்ற தாத்தான், அபிராம் என்பவர்களின் தந்தையுமாவார் (எண் 16:1,12;26:8-9; உப 11:6).

3. இவர் பெத்திலகேமைச் சார்ந்த ஈசாயின் தலைமகன் ஆவார். அவருடைய உயரத்தாலும் தோற்றத்தாலும் மயங்கிப்போய், அரசனாகத் தகுதியுடையவர் இவரே என்று முதலில் தீர்மானித்த சாமுவேல் பிறகு இறைவனுடைய கட்டளைப்படி இவரை ஒதுக்கிவிட்டுத் தாவீதைத் தேர்ந்தெடுத்தார் (1 சாமு 16:6-7, 12-13; 1 நாள் 2:13). ஏலா பள்ளத்தாக்கில் பெலிஸ்தியரோடு சவுல் போரிட்டுக் கொண்டிருந்தபோது சவுலின் படையில் இருந்தார் எலியாபு. கோலியாத்து இஸ்ராயேலரை இழிவுபடுத்தியபோது, உணவுப் பொருட்களைப் பாசறைக்குக் கொண்டுவந்திருந்த தம் கடைசித் தம்பி தாவீது, கோலியாத்தைக் கொல்பவனுக்குச் சவுல் அறிவித்திருக்கும் வெகுமதியைப் பற்றி விவரமாய் விசாரித்துக் கொண்டிருந்தபோது, தாவீதின் மேல் பயங்கர கோபமுற்றார் எலியாபு (1 சாமு 17:13-28). எலியாபுவின் புதல்வி அபிகாயில் தாவீதின் மகன் எரொமோத்தை மணந்து மகலாத்தைப் பெற்றெடுத்தார். மகலாத்து இரகபெயாமை மணந்து கொண்டாள் (2 நாள் 11:18).

4. ஒரு லேவியர். இறைவாக்கினர் சாமுவேல் முன்னோர்களில் ஒருவரும் கெகாத்தின் புதல்வர்களில் ஒருவரும் ஆவார் (1 நாள் 6:27). இதற்கு இணையான தலைமுறைப் பட்டியலில் எலிகூ (1 சாமு 1:1) 'எலியேல்' (1 நாள் 6:34) என்று அழைக்கப்படுகின்றார்.

5. நாடு கடத்தப்பட்டுச் சிக்கிலாகில் தாவீது இருந்தபோது அவருடைய படையில் சேர்ந்து கொண்ட காது குடும்பத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வீரர்களில் மூன்றாவது வருபவர் (1 நாள் 12:8-9). பிற்காலத்தில் தாவீது படையின் ஒரு தலைவன் ஆனார் (12:8).

6. தாவீதின் காலத்தில் யாழ் மீட்டும் லேவிய இசைக்கலைஞர் (1 நாள் 15:8,20; 16:5).

**எலியாம்** (ELIAM - இறைவன் உறவினர் ஆனார்)

கித்தியன் உரியாவின் மனைவி பதுசேபாவின் தந்தை (2 சாமு 11:3). அம்மியேல் (என் உறவினர் இறைவன் ஆவார்) என்று 1 நாள் 3:5-இல் அழைக்கப்படுகிறார். இரு பெயர்களும் ஒன்றைத்தான் குறிக்கின்றன.

2. கீலோவைச் சேர்ந்த அகித்தோபலின் மகன். ''முப்பதின்மர்'' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:34). 2 நாள் 11:36-இல் அவரது பெயர் பெலோனியனான அகியா என்று துண்டிக்கப்பட்ட வடிவில் தோன்றுகிறது.

**எலியாவா** (ELIAHBA - இறைவன் மறைக்கிறார்)

இவர் சாலபோன். ''முப்பது பேர்'' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:32; 1 நாள் 11:33).

**எலியாவின் வெளிப்பாடு** (APOCALYPSE OF ELIJAH)

1. சுருக்கமான முழு யூத வெளிப்பாட்டு நூலாகும். கர்மேல் மலையில் எலியாவுக்கு மிக்காயேல் வெளிப்படுத்திய இரகசியங்களை மித்ராசிக் மற்றும் வெளிப்பாட்டு நடையில் எடுத்துக்கூறுகிறது. இது கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்நூலின் முடிவு யோவானின் திருவெளிப்பாட்டினை ஒத்தே இருக்கிறது. மெசியாவுக்கும் எதிர் மெசியாவுக்கும் இடையேயான இறுதிப் போருடன் பாவத்தின் இக்காலம் முற்றுப் பெறுகிறது. மெசியா, செழிப்பான நாற்பதாண்டு அரசாட்சியை நிலைநாட்டுகிறார். கோது, மாகோது ஆகியோர் எருசலேமுக்கு எதிராகப் போர் புரிகின்றனர். ஆனால் அழிக்கப்படுகின்றனர். பின்னர், பொது உயிர்ப்பு நிகழ்கிறது. இறுதித்தீர்ப்பு வழங்கப்படுகிறது. இறைவனின் நேர்மைமிக்க புதிய அரசு நிறுவப்படுகிறது. தீயோர் அவியா நெருப்புக்குத் தண்டிக்கப்படுகின்றனர். நல்லோர் இறைவனின் எருசலேமும் புதிய ஏதேன் தோட்டமும் கலந்த இன்ப நிலையில் இறைவனோடு வாழ்கின்றனர். உரோமை, பாரசீகம் பற்றிய குறிப்புகளைக் கொண்டு அறிஞர்கள் இந்நூல் கி.பி. 261-இல் அல்லது அதற்குச் சிறிது முன் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கூறவும் இடமிருக்கிறது. இந்நூலின் பிற்கால அரமேயிக் வாசகம் இருக்கிறது.

2. முன்னறிவிப்புகளாக வெளிப்பாட்டுக் கருத்துக்களையும் வரலாற்று விவரிப்புகளையும் எடுத்துக்கூறும் வாக்குகளின் தொகுப்பாகிய போலி நூலாகும். இது அலக்சாந்திரியா யூதர்களால் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாக நம்பப்பட்டாலும், இது கோப்டிக் வாசகத்தில் மட்டுமே இருக்கிறது. இவ்வாசகம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. முழுவதும் கிறிஸ்தவ விளக்கத் தன்மையுடையது.

3. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆகையால், பவுலுக்குப்பிந்திய இலத்தீனில் எழுதப்பட்ட பெயர் தெரியாத நூல் இது. 1 கொரி 2:9-இல் வரும் பவுலின் எடுத்துக் காட்டுதலுக்கு (காண் சா 64:4) மூலமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது மேலே (2)-இல் குறிக்கப்பட்டதன்று.

**எலியூது** (ELIUD - இறைவன் என் புகழ் ஆவார்)

இயேசுவின் முன்னோர்களில் ஒருவர் (மத் 1:14-15; காண்க லூக் 3:23 தொ)

**எலியேசர்** (ELIEZER - என் இறைவன் எனக்கு உதவி ஆவார்)

1. எலியேசர் ஆபிரகாமின் ஊழியன். ஆபிரகாமின் மகனுக்குப் பதிலாக வாரிசாக வந்திருக்கக்கூடியவன் (ஆதி 15:2). இவர் தமஸ்கு ஊரைச் சேர்ந்தவர் என்றும் பொதுவாகக் கூறப்படும். எபிரேய வாசகம் கடினமாக இருக்கிறது. பழுதுபட்டதாகவும் இருக்கலாம். இவர் ஆதி 24:2-இல் வரும் ''வயது முதிர்ந்த'' ஊழியனாக இருக்கலாம். அறு

பது ஆண்டுகளுக்கப் பிறகு ஈசாக்கிற்கு மெச பொத்தாமியாவில் ஆபிரகாமின் உறவின ருள் பெண் தேட அனுப்பப்பட்டவர் (ஆதி 24:2 தொ).

2. மோசே சிப்போரா ஆகியோரின் இரண் டாவது மகன் (யாத் 18:4; 1 நாள் 23:15.17; 26:25). ஆண்டவர் மோசேயைப் பார்வோனிட மிருந்து காத்ததால், இப்பெயர் கொடுக்கப் பட்டது. எலியேசருக்கு இரகபியா என்ற ஒரே மகன் இருந்தான் (1 நாள் 23:17).

3. செபுலோன் கோத்திரத்தாரில் ஒருவர். இப்பெயர் ஓர் ஆளையோ குடும்பத்தையோ குறிக்கலாம். தவறாகப் பென்யாமின் கோத் திரத்தின் அட்டவணையில் தரப்பட்டிருக்கி றது (1 நாள் 7:8). இதன்படி இவர் பெக்கரின் புதல்வர்களில் ஒருவர். பென்யாமின் பேரன்.

4. இறைவனின் திருப்பேழை எருசலே முக்குக் கொண்டு வரப்பட்டபோது, திருப் பேழைக்கு முன் எக்காளம் ஊதிக்கொண்டு வந்த குருக்களில் ஒருவர் (1 நாள் 15:24).

5. தாவீது காலத்தில் ரூபன் கோத்திரத் தாரின் குலத்தலைவர். சிகிரியின் மகன் (1 நாள் 27:16).

6. யோசபாத்தின் காலத்திய ஓர் இறை வாக்கினர். மரேசாவைச் சேர்ந்த தோதவாகு வின் மகன். வட இஸ்ராயேல் அரசன் அகாசி யவோடு யோசபாத் செய்து கொண்ட உடன் படிக்கைக்கு எதிராக இவர் உரைத்த இறை வாக்கு எசியோன்-கெபேரில் கப்பல் கட்டும் செயல்களை முடிவுக்குக் கொண்டுவந்தது (2 நாள் 20:35-37).

7. எஸ்ரா காலத்திய மக்கள் தலைவர்க ளுள் ஒருவர். சுாசிப்பியாவின் மக்களுள் எருசலேம் ஆலயத்தில் பணி செய்யப் பணி யாளர்களைக் கண்டுபிடிக்க எஸ்ராவால் கட்டளையிடப்பட்டவர் (எஸ் 18:16-17).

8. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒப்புக்கொண்ட ஒரு குரு (எஸ் 10:18).

9. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒப்புக்கொண்ட ஒரு லேவியர் புதல்வர்க ளில் ஒருவன் (எஸ் 10:23).

10. தம் புறவின மனைவியைத் தள்ளி விட்ட கரீமின் மக்களில் ஒருவர் (எஸ் 10:31)

11. லூக்காவில் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒரு பெயர் (லூக் 3:29).

எலியேல் (ELIEL - ஏல் என் இறைவன் ஆவார்)

1. யோர்தானின் கிழக்குப்பக்கம் வாழ்ந்த மனாசே கோத்திரத்தாரின் ஒரு குடும்பத் தலைவர் எலியேல் (1 நாள் 5:24). இதற்கு இணையான பட்டியலில், எண் 26:28-34; யோசு 17:2 தொ-இல் இப்பெயர் வர வில்லை.

2. கெகத்தியருள் ஒருவரும், லேவிய கோவில் பாடகர்களில் ஒருவருமாவார். தோவாகின் மகனும், எரொகாமின் தந்தையு மாவார் (1 நாள் 6:34). இந்த எலியேல் 1 நாள் 6:27 குறிப்பிடும் எலியாபு (4) அல்லது 1 சாமு 1:1 குறிப்பிடம் எலிகூ (1) ஆக இருக்கலாம்.

3. பென்யாமின் கோத்திரத்தாரின் இரு குடும்பத்தலைவர்கள். ஒருவன் சிமயியின் மகன். மற்றவன் சாசாக்கின் மகன் (1 நாள் 8:20,22). இதற்கு இணையான பட்டியல்க ளான ஆதி 46:21; எண் 26:38-41-இல் இப்பெயர் காணப்படவில்லை.

4. தாவீதின் படையில் உள்ள இரண்டு வல்ல வீரர்கள் (1 நாள் 11:46,47).

5. பாலையில் தாவீதினுடைய படையில் சேர்ந்து கொண்ட காது குடும்பத்தைச் சேர்ந் தவர்களில் ஒருவன் (1 நாள் 12:11). இவன் தாவீதின் வல்ல வீரர்களில் ஒருவராக இருக்க லாம். (4)-இல் குறிப்பிடப்படும் இருவரில் ஒருவராக இருக்கலாம்.

6. ஆண்டவருடைய பேழை எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டபோது உதவியவர்களுள் ஒருவர்; லேவியர். எபிரோனின் மகன் (1 நாள் 15:9,11).

7. எசக்கியா அரசன் ஆண்ட காலத்தில் இவர் ஆலயக்காணிக்கையையும் பத்தில் ஒரு பகுதியையும் மேற்பார்க்க நியமிக்கப் பட்டவர் (2 நாள் 31:13). ஒரு லேவியர்.

**எலியேனாய்** (ELIENAI - என்கண்கள் யாவேயை நோக்கியுள்ளன)

பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்த சிமயியின் வழித்தோன்றல் (1 நாள் 8:20).

**எலியோயேனாய்** (ELIEHOENAI - என் கண்கள் யாவேயை நோக்கி உள்ளன)

1. கோராகின் குடும்பத்தைச் சேர்ந்த மெசலேமியாவின் ஏழாவது மகன். இவர் லேவியர் குடும்பத்தைச் சர்ர்ந்த வாயிற் காப்போன் (1 நாள் 26:3).

2. செராகியாவின் மகன். இவர் எஸ்ராவோடு எருசலேமுக்குத் திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 8:4).

**எலியோரேபு** (ELIHOREP - இலையுதிர் கால இறைவன்)

சீசாவின் புதல்வர். சாலமோன் அவையில் உயர் அதிகாரிகளுள் ஒருவர். இவரும் இவர் தம்பி அகியாவும் அரச செயலர்களாக இருந்தனர் (1 அர 4:3).

**எலியோனாய்** (ELIOENAI - என் கண்கள் யாவேயை நோக்கியுள்ளன)

1. அடிமைத்தனத்துக்குப் பிறகு வந்த தாவீதின் வழித்தோன்றல் (1 நாள் 3:23-24) நெயரியாவின் மூத்தமகன் சாலமோன் வழித்தோன்றல் பட்டியலில் குறிக்கப்படுகிறார்.

2. இவர் சிமியோன் குலத்தலைவராக விளங்கினார் (1 நாள் 4:36).

3. செபுலோன் குல ந தலைவர்கள் வரிசையில் வரவேண்டியவர். பென்யாமின் குலத் தலைவர்கள் வரிசையில் குறிப்பிடப்படுகிறார் (1 நாள் 7:8). பெக்கரின் புதல்வர்களில் ஒருவர்.

4. தன் புறவின மனைவியை விலக்கிவிட்ட ஒரு குரு. பசிகூரின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:22).

5. தம் புறவின மனைவியை விலக்கிவிட்ட சத்தூவின் மக்களில் ஒருவர் (எஸ் 10:27).

6. பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பிறகு வந்த குரு (நெக 12:40). மீண்டும் கட்டப்பட்ட எருசலேம் சுவர்களின் அர்ப்பணத்தில் பங்கு பெற்றவர்.

**எலியோன்** (ELYON - மிக உன்னத இறைவன்)

அனைத்திற்கும் மேலான இறைவனைக் குறிப்பதற்குக் கானானியர்கள் பயன்படுத்திய சொல் இது (ஆதி 14:18-24). இஸ்ராயேலர்களுக்கு முந்திய எருசலேமின் இறைவனோடு (ஏல்) தொடர்புபடுத்தப்பட்ட பழங்கால இறை பெயர். உன்னதக் கடவுளின் குருவாய் இருந்த மெல்க்கிசதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார். 'உன்னதக் கடவுள் வாழ்த்தப் பெறுவாராக' என்று கூறினார். உன்னதக் கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தவர். எலியோனையும், யாவேயையும் ஆபிரகாம் ஒன்றாகக் கருதுகிறார்.

காண்க: ஏல் எலியோன்.

**எலிசா** (ELISHAH - இறைவன் மீட்கிறார்) - ஆள்

நாடுகளின் அட்டவணையில் யாப்பேத்து வழித்தோன்றல்களில் வரும் பெயர்களில் ஒன்று. யாப்பேத்தின் மகனான யாவானின் மகன் (ஆதி 10:4; 1 நாள் 1:7).

**எலிசா** (ELISHAH - இறைவன் மீட்கிறார்) - இடம்

இது எகிப்துக்கும் சீதோனுக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பகுதியாகும். இது சித்திரச் சணல் நூலாடை, நீலத் துணி ஆகியவற்

றைத் தீருக்கு ஏற்றுமதி செய்ததாகக் கூறப் படுகிறது (எசே. 27:7).

எலீசா, ஆப்பு வடிவ ஏடுகளில் (உ.ம். அமர்னா ஏடுகள்) காணப்படும் அலாசியா வாக இருக்கலாம். இது சைப்ரசின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

**எலுசாய்** (ELUSAI - இறைவன் என் பலம்)

பென்யாமின் குலத்தவரான சவுலின் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் ஒருவர். சவு லின் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவ ரும் (எலுசாய் உட்பட) ஆற்றல் மிக்கவரும் திறமைமிக்க படை வீரருமாவார். மேலும் அவர்கள் வில் வீரராயும், இரு கையாலும் கவணையும் அம்பையும் கையாள்வதில் திறமை படைத்தவராயும் இருந்தனர்.

சவுலின் உறவினனான எலுசாய், தாவீ தோடு சிக்கிலாகில் சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:5).

**எலும்புகள்** (BONES)

உடல் அமைப்பு பற்றிய குறிப்புகள் விவி லியத்தில் அதிகமில்லை. ஆயினும் எலும் புக்கூடு பற்றிய குறிப்புகள் அடிக்கடி காணப் படுகின்றன. ''வலிமையுள்ள'' என்ற பொரு ளுடைய எபிரேயச் சொல்லின் வேரிலிருந்து எலும்பைக் குறிக்கும் எபிரேயச் சொல் வரு கிறது. இது எலும்பின் உறுதியையும் கடினத் தன்மையையும் குறிக்கிறது. எலும்பும் தலை யும் என்ற சொல்லைச் சொல்லும்போது அது மனிதனின் முழுமையைக் குறிக்கும். இது எலும்புகள் உணர்ச்சிகளின் இருப்பிடம் என்றும் பொருள்கொள்ளப்படுவதை விளக் கலாம் (யோபு 4:14; 20:11; எரே 20:9). எலும்பு என்ற இச்சொல் பரந்தபொருளில் மனித ஆளுமையை அல்லது குணங்களைக் குறிக்கப்பயன்பட்டது (பழ 17:22; 25:15).

படைப்பு நிகழ்ச்சியுரையில் ''விலா எலும்பு'' என்று மொழி பெயர்க்கப்படும் சொல் (ஆதி 2:21) மற்ற இடங்களில் மரப் பலகையையும் (1 அர 6:15-16) கூரவின் மடிப்பு களையும் (6:34) பக்கம் என்ற பொருளையும் (2 சாமு 16:13) குறிக்கிறது.

மரணத்திற்குப்பின் எலும்புகளைச் சேக ரித்து நல்லடக்கம் செய்யும் பழக்கமும் இருந்தது (1 சாமு 31:13).

**எலும்புக்கலம்** (OSSUARIES)

சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட இவ்வகைப் பெட்டிகள் இறந்தவரின் உடல் அழிந்தாலும் மீதமுள்ள எலும்புகளைப் பத் திரப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சொல் விவிலியத்திலே காணப்பட வில்லை யென்றாலும் இப்பொருள் விவிலிய காலத் திலே பயன்படுத்தப்பட்டது.

எருசலேமிலுள்ள அருங்காட்சியகத்தில் களிமண்ணால் வீடு போன்ற அமைப்பினால் செய்யப்பட்ட பெட்டிகள் உள்ளன. செவ் வக வடிவம் அதில் பொதுவானவை. இவை எருசலேமிலுள்ள குகைகளிலும் கல்லறைக ளிலும் காணக்கிடக்கின்றன. இதனுடைய அமைப்புகளின் பல்வேறு வடிவங்களில் உரோமையர்கள் காலத்திலிருந்து பாலஸ்தீ னத்தில் கிடைத்துள்ளன. இவை 20 முதல் 30 அங்குலம் நீளமும், 12 முதல் 20 அங்குலம் அகலமும், 10 முதல் 12 அங்குலம் உயரமும் கொண்டவை. இப்பெட்டிகளில் எபிரேயம், கிரேக்கம், அரேமேயிக்கு ஆகிய மொழிக ளில் சொற்களும் பெயர்களும் காணப்படு கின்றன. இவை இறந்தோரின் எலும்புகள் எவ்வாறு கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டன என்பதற்குச் சான்று கூறுகின்றன:

**எலூத்தரு** (ELEUTHERUS - சுதந்தரமான)

லெபனோன் மலை அடிவாரத்திலிருந்து புறப்பட்டுச் சீரியா நாட்டில் பாய்ந்து கட லில் கலக்கின்ற ஆறு. யோனத்தானின் வீரச் செயல்களைப் பேசும்போது ஒரு முக்கிய எல்லைக்கோடாகச் சுட்டிக்காட்டப்படுகி றது (1 மக் 11:7; 12:30). ஒருவேளை இது இன்றைய நெகிர் ஏல்-கெபிராக இருக்கலாம்.

**எலூல்** (ELUL - கொடி முந்திரி)

எபிரேய காலக்கணிப்பின்படி எலூல் என் பது வருடத்தின் ஆறாம் மாதம் (ஆகஸ்ட்-செப்டம்பர், ஆவணி). இம்மாதத்தின் 25-ஆம் நாள் எருசலேம் மதில்கள் மீண்டும்

கட்டிமுடிக்கப்பட்டன (நெக 6:15). பின்பு, கி.மு. 140-ஐ ஒட்டிப் பெரிய குரு சீமோனின் செயல்களை யூதர்கள் பதிவு செய்தனர். இந்த ஏடு எலூல் மாதம், 18-ஆம் தேதியைக் குறிக்கிறது (1 மக் 14:27).

## எலோகிம் (ELOHIM)

கடவுளைக் குறிக்கக்கூடிய ஒரு பொதுச் சொல். பழைய ஏற்பாட்டில் மாட்சிமையில் விளங்கக் கூடிய இறைவன் அல்லது தெய்வத்தைக் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது பன்மையில் (நாமே) இருப்பதால் பல கடவுளர் கொள்கையைப் பிரதிபலிப்பதுபோல் இருக்கும் (நீதி 9:13).

மற்றக் கடவுளரைக் காட்டிலும் யாவே தான் உயர்ந்த இறைவன் (யாத் 18:11; 12:12; 20:3; உப 10:7; 1 சாமு 4:8; 2 சாமு 7:23; சங் 6:8). எலோகிம் என்ற சொல்லானது இறைவனின் முழுமைத்தன்மையை உள்ளடக்குகிறது. பன்மையில் ஒருமைத் தன்மையைக் காட்டுகிறது. எலோகிம் என்ற சொல் ஏல் என்ற மூலச் சொல்லோடு தொடர்புடையதாக இருக்கிறது.

'ஏல்' என்ற சொல் பொதுவாக முடிவில்லாத தன்மையுடைய இறைவனைக் குறிக்கக் கூடியது. இந்தச் சொல்லை ஒவ்வொரு தனிப்பட்ட செயலுக்கு, செயலைச் செய்கின்ற சக்தியுடைய கடவுளுக்கு முன்பாகச் சேர்த்துச் சொல்லும் பொழுது அந்தத் தனிப்பட்ட தெய்வ சக்தியைக் குறிப்பதாக உள்ளது. ஒவ்வொரு மரபிலும் தனித்தனி பெயர் கொண்டு வணங்கி வந்திருக்கிறார்கள். எலியா ''என்னுடைய 'ஏல்' யாவே'' என்று குறிப்பிடுகின்றார்.

இஸ்ராயேல் மக்களுக்கு யாவே என்பது பல தெய்வங்களில் ஒன்று அன்று. மாறாக யாவே தான் முழுமுதற் கடவுள். இயற்கையின் கடவுளும், வரலாற்றின் காரணமுமாக மனிதனை வழிநடத்துகிறவர். பழைய ஏற்பாட்டின் கருத்துப்படி மற்ற எல்லாத் தெய்வங்களுக்கும் இருக்கிற அனைத்து சக்தியும் யாவேக்கு உண்டு. 'யாவே தான் எலோகிம்' என்ற உறுதிப்பாடு இருந்தது. அவரே இறைவன் என்ற நிலை வலியுறுத்தப்பட்டது. அவரைத் தவிர வேறு இறைவன் இல்லை.

படைத்தவர் தம்முடைய படைப்பின் மேலும், வரலாற்றின் மேலும் அதிகாரமுள்ளவராக இருக்கின்றார் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. படைப்பின் வரலாற்றில் மூன்று பிரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

1. படைப்பு முதல் நோவா காலம் வரையிலும் 'எலோகிம்' தான் இறைவன். அவரைத் தவிர வேறுயாரும் கடவுள் இல்லை. (எலோகிம் என்று தனிப்பெயர் யாவேக்குச் சூட்டினார்).

2. நோவா முதல் ஆபிரகாம் காலம் வரையிலும் 'யாவே எலோகிம்' என்றழைத்தனர் (ஆண்டவராகிய இறைவன்).

3. ஆபிரகாம் முதல் மோசே காலம் வரையிலும், ''யாவேதான் எலோகிம்'' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. (அவரே அனைத்துக் காலத்திற்கும் இறைவனாக இருக்கின்றார் என்று சொல்லப்பட்டது.

## எலோகியர் (ELOHIST)

ஐந்நூலின் எலோகிம் பாரம்பரியத்தின் ஆசிரியர் 'எலோகியர்' என்று அழைக்கப்படுகின்றனர். இந்தப் பாரம்பரியம் வடக்கு அரசாட்சியோடு சம்பந்தப்பட்டது. ஐந்நூலை விவரிக்கின்ற முதன்மையான மூலங்களுள் இதுவும் ஒன்று. எபிரேய மொழியில் இறைவனைக் குறிக்கின்ற எலோகிம் பொதுப் பெயரிலிருந்து இது எடுக்கப்பட்டிருக்கிறது. எலோகியர் மரபினர் கடவுளை 'எலோகிம்' என்று குறிப்பிட்டனர்.

## எலோயி, எலோயி லாம சபக்தானி (ELOI, ELOI LAMA SABACHTHANI)

காண்க. ஏலி ஏலி லாமா சபக்தானி.

## எலோவா (ELOAH)

இறைவனைக் குறிக்க யோபு நூலில் சிறப்பாகப் பயன்படும் சொல். சிலர் எலோவா

என்பது எலோகிம் என்ற சொல்லின் ஒருமை விளிச் சொல்லாகும் என்று கூறுவர். இந்தச் சொல் நாற்பத்து இரண்டு முறை யோபு நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோபு புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டது தவிர மற்ற எல்லாப் புத்தகங்களிலும் ஏறத்தாழ எலோகிம் (சங் 50:22-23) என்ற பொருளோடு அல்லது யாவே (சங் 139:19; 114:7) என்ற பொருளோடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற நூல்களில் 15 முறையே இச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (உப 32:15.17; சங் 18:31; பழ 30:5; ஏச 44:8; அப 1:11)

**எல்கனான் (ELHANAN - இறைவன் கருணையுள்ளவர்)**

1. எல்கனான் யாயிரின் மகன் கோபில் ஒரு பெலிஸ்திய அசுரனை வெட்டி வீழ்த்தியவர் (2 சாமு 21:19;1 நாள் 20:5). எல்கனானுடைய வெற்றிச் செயலுக்கு இரு வேறுபட்ட விளக்கங்கள் காணக்கிடக்கின்றன. ''எல்கனான் பெத்திலகேம் ஊரைச் சேர்ந்த யாரே-ஓரகீமின் மகன். எல்கனான், கோலியாத்தை வெட்டி வீழ்த்தியவர் என்று 2 சாமு 21:19 என்ற பகுதி தெரிவிக்கிறது. ஆனால் 1 நாள் 20:5 பகுதி ''யாயீரின் மகன் எல்கனான், கோலியாத்தின் சகோதரன் இலகுமியை வெட்டிக் கொன்றவர்'' என்று கூறுகிறது.

யாரே-ஓரகிம் என்ற பெயர் யாயிர் என்ற பெயரின் சிதைந்த வடிவோடு அடுத்தவரியில் வரும் ஓரகிம் என்ற சொல்லைத் தவறாக எடுத்துச் சேர்த்து அமைக்கப்பட்ட சொல்லாகும் என்று பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது மூல மொழியிலிருந்து நகல் எடுத்தபோது யாயிருடன் ஓரகிம் சேர்க்கப்பட்டதால் ஏற்பட்ட தவறாகும். 2 சாமு 21:19 மேற்கூறப்பட்ட திருத்தத்தோடு மூலமொழியை அப்படியே தருகையிலே 1 நாள் 20:5 ஒத்தமை திருத்தத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறது. தாவீது கொன்ற பிலிஸ்திய் வீரனைப் பெயர் தெரியாதவன் என்றும், பிற்காலப் பதிப்பாசிரியர் எல்கனான் கொன்ற அசுரனின் பெயரான கோலியாத்தை 1 சாமு 17:21:9-இல் புகுத்தினார் என்றும் அறிஞர் பலர் நம்புகின்றனர். ப்ழைய விரிவுரையாளர்கள் 1 நாள் 20:5 பகுதி கூறுவதுதான் மூலப்பகுதி என்று வாதிடுவர்.

2. தாவீதின் ஆற்றல் மிக்க முப்பது படைவீரர்களில் ஒருவனும் பெத்திலகேமைச் சார்ந்த தோதாவின் மகனுமாவார் (2 சாமு 23:24; 1 நாள் 11:26) அறிஞர் சிலர் கூறுவது போல், (1)-இல் வருபவரே இவர் என்றால் இவர் யாயிர் இனத்தைச் சேர்ந்தவராவார்.

**எல்கானா (ELKANAH - இறைவன் படைத்தார், உடைமையாக்கிக் கொண்டார்)**

1. சாமுவேலின் தந்தை. எரோகாமின் மகன்.எப்பிராயிம் மலைப்பகுதியில் சிராமத்தாயிம் சோபிமில் வாழ்ந்தவர் (1 சாமு 1:1,4,6,19,21,23; 2:11,20; 1 நாள் 6:27, 54). இவருக்குப் பென்னின்னா, அன்னா என்று இருமனைவியர் இருந்தனர். பென்னின்னா இவருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள். அன்னா மலடியாக இருந்தாள். ஆனால் இவருக்குப் பிரியமானவள். இறுதியில் அவளும் ஒரு மகனைப் பெற்றாள். எல்கானா அவளோடு சிலோவுக்குச் சென்று அவர்களது பிள்ளை சாமுவேலை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தனர்.

முதல் சாமுவேல்நூல் எல்கானா எப்பிராயிம் கோத்திரத்தார் என்று கூறுகிறது. ஆனால் 1 நாள் ஆகமம் அவரையும் சாமுவேலையும் கெகாத்து லேவியன் வழிவந்தவர் என்று குறிப்பிடுகிறது. நாள் ஆகம ஆசிரியர் 1 நாள் 6-ஆம் அதிகாரத்தில் அதிகமாகக் காணப்படும் எல்கானா என்ற பெயர்களால் குழம்பிப்போய் நேர்மையான முறையில் இத்தவறைச் செய்திருக்கலாம். ஆனால் பெரும்பாலும் அவருடைய சொந்த நோக்கத்திற்காக அறிந்தே இந்த மாற்றத்தைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

2-4. மூன்று லேவியர்களுடைய பெயர் (1 நாள் 6:22-23.25-27.35-36). யாத் 6:24 என்ற பகுதி ஆசீர், எல்கானா, எபியசாபு ஆகியோரைச் சகோதரர்களாகவும் கோராகின் புதல்வர்களாகவும் குறிப்பிடுகிறது. ஆனால்

1 நாள் 6:22-23 அவர்களைத் தந்தை, மகன், பேரன் என்ற உறவு முறையில் குறிப்பிடுகிறது.

5. லேவியர்களுடைய பெயர் அட்டவணையில் காணப்படும் ஒரு பெயர் (1 நாள் 9:16). மெராரி வழிவந்த லேவியர் பெரக்கியாவின் தாத்தா.

6. சிக்கிலாது என்னுமிடத்தில் தாவீது இருந்த போது சவுலைக் கைவிட்டுவிட்டுத் தாவீது பக்கம் சேர்ந்துகொண்ட பென்யாமின் குலத்தைச் சார்ந்த படைவீரன் (1 நாள் 12:6). கோராகியர் என்ற சிறப்புப் பெயரால் எல்கானவை அழைத்திருப்பது லேவியர் குடும்பத்திலிருந்து வந்தவர் என்று சுட்டிக் காட்டுவதைவிட, கோராகு நகரத்திலிருந்து வந்தவர் என்பதைத்தான் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்க வேண்டும் (1 நாள் 2:43). 1 சாமு 23-ஒடு ஒப்பிடும்போது 1 நாள் 12-ஆம் அதிகாரம் முழுவதும் பெரிய கற்பனையில் மிகைப்படுத்தப்படுவதாகவும் இருப்பதால் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியும் என்பது இயலாது.

7. ஆகாசின் ஆட்சியில் அரசனுக்கு அடுத்த நிலையில் இருந்த ஓர் அதிகாரி. நாட்டையே உலுக்கிய ஒரு கொலையில் இவர் கொன்று போடப்பட்டதாக நாளாகம நூல் கூறுகிறது (2 நாள் 28:7). இஸ்ராயேலும் சீரியாவும் சேர்ந்து யூதாவின் அரசன் ஆகாசைத் தோற்கடித்தபின் இவர் எப்பிராயிமைச் சேர்ந்த சிக்ரீயால் கொல்லப்பட்டார்.

8. ஆண்டவருடைய பேழையைக் காத்து வந்த லேவிய வாயிற்காப்போன் (1 நாள் 15:23). இவரும் 5-இல் குறிக்கப்பட்டவரும் ஒருவராக இருக்கலாம்.

எல்கியா (ELKIAH)

யூதித்தின் முன்னோர். அன்னியாவின் புதல்வன். ஓசியேலின் தந்தை (யூதி 8:1).

எல்கோசு (ELKOSH - இறைவன் என் அம்பாவார்)

இறைவாக்கினர் நாகூம் என்பவரின் ஊர். இந்த இடம் எங்கிருந்தது என்று உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. இது பற்றிப் பல்வேறு பாரம்பரியங்கள் உண்டு. இறைவாக்கினர் நாகூம் பிறந்து வாழ்ந்து மரித்த இடம் இக்கால மோசூலில் (பழங்கால நினிவேயின் சிதைவுகளுக்கு அருகில்) இருந்து வடக்கில் 80 கி.மீ. தொலைவிலுள்ள ''அல்-காஸ்'' என்று இடைக்காலக் கிழக்கு மரபு எடுத்துரைக்கிறது. பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்னதாக இந்த மரபின்படி எந்தக் குறிப்பும் இல்லை. அதோடு நாகூம் நூலின் அகச்சான்றுகளும் இதற்கு ஆதரவாக இல்லை.

நாகூமைப் பற்றி எரோனிமு கொடுக்கின்ற விவிலிய விளக்க அறிமுகத்தில் அவர் கலிலேயாவிலுள்ள இல்கேசி என்ற ஊருக்குச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். அக்கால மரபுகள் இல்கேசிதான் நாகூமின் சொந்த ஊர் என்று குறிப்பிடுவதாகக் கூறுகிறார். நாகூமின் ஊர் கப்பர்நாகூமாக இருக்கலாம் என்று பிற்கால கலிலேய மரபு எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் நாகூம் நூல் தோன்றுவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே, கலிலேயா அசீரியர்களுக்கு வீழ்ச்சியுற்றது. ஆகவே கலிலேயாவில் இடம் தேடுவதற்கும் ஆதாரம் இல்லை. இன்னும் சில மரபுகள் எல்கோசு என்பது சிமியோனியப் பகுதியில் அதாவது தென் யூதாவில் இருந்ததாகக் கூறுகின்றன. மேலும் போலி-எப்பிபானியு என்பவர் எல்கோசு என்னுமிடம் சீரியன் பெக்காபாஞ்ருக்கு அருகில் உள்ளது என்கிறார். அது இப்பொழுது பெயிட்-இப்பரின் என்றழைக்கப்படுகிறது. இவற்றில் எல்லாம் சரியான இடத்தைத் தெளிவாக அறியாவிட்டாலும் கால, சூழ்நிலை அமைப்புகள் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது.

எல்நாத்தான் (ELNATHAN இறைவன் கொடுத்தார்)

1. எல்நாத்தான் எருசலேமைச் சேர்ந்தவர். ஆகிபோரின் மகன் (எரே 36:12). எல்நாத்தானுக்கு நெகுசித்த என்ற மகள் ஒருத்தி உண்டு. இவர் யோயாக்கீமின் மனைவியும் யோயாக்கினின் தாயுமாவாள் (2 அர 24:8). எரேமியாவின் அருள் யோயாக்கிமுக்கு

வாசித்துக்காட்டப்பட்டபோது அதை அவன் எரிப்பதைத் தடைசெய்ய முயற்சித்த வர்களுள் எல்நாத்தானும் ஒருவர் (எரே 36:12).

எகிப்துக்கு ஓடிப்போன இறைவாக்கினர் உரியாவைப் பிடித்து வந்து தன்முன் வெட்டிக் கொல்ல யோயாக்கிமால் அனுப்பப் பட்டவர்களில் எல்நாத்தானும் ஒருவர் (எரே 26:22-23).

2. மோசேரெட்டி வாசகம் எஸ் 8:16-இல் ஞானியான எல்நாத்தானைக் குறிப்பிடு கிறது. இவர் அகதிகளோடு எருசலேமுக்குத் திரும்பியவர்.

எல்மாதம் (ELMADAM)

இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர். இவர் ஏர் என்பவரின் மகனாவார். எல்மாத முக்குக் கோசாம் என்ற மகன் ஒருவர் உண்டு (லூக் 3:28).

எல்லாசர் (ELLASAR - ஒக்)

இது ஆதி 14-இல் வரும் ஆபிரகாமின் மரபில் ஒரு நாடு என்றும், அதன் அரசன் அரியோக்கு என்றும் குறிப்பிடப்படுகிறது. இதன்படி இது மெசபொத்தாமியாவின் ஒரு நகரமாகும். அதன் அரசன் அரியோக்கு கெதர்லா-கோமோரின் கூட்டாளிகளில் ஒருவர் ஆவார் (ஆதி 14:1.9). ஆனால் வரலாற்றுப் பூர்வமாக எல்லாசருக்கும், அரியோக்குக்கும், ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில், அரசனோடு அல்லது ஒரு நாட்டோடு அடையாளம் காண முடியவில்லை. தென் பாபிலோனிய லார்சா நாட்டையும் அதன் அரசரான வாரத்-சின்னையும் அடையாளம் காட்டுவது கைவிடப்பட்டுவிட்டது.

ஆய்வாளர் சிலர், அரசனை மாரியின் சிம்ரீ-லீமின் சிற்றரசனான அரீவாக்கோடும் நகரத்தை யூப்பிரத்திசில் கார்கேமிசுக்கும் ஆரானுக்கும் இடையிலுள்ளதாகவும் அடையாளம் காட்டுகின்றனர்.

எல்லாம் வல்லவர் (ALMIGHTY)

இது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. சிறப்பாக யோபு ஆகமத்தில் இது அதிகமாகக் காணப்படுகிறது.

முதலில் இச்சொல் ஏல் சத்தாய் அதாவது மலைகளின் இறைவன் என்பதையே குறித்தது. இந்த மலைகளின் அல்லது குன்றுகளின் இறைவனைத்தான் பிதாபிதாக்களின் காலத்தில் வழிபட்டுவந்தனர் (ஆதி 7:1; 28:3; 35:1; 43:14; 48:3; 49:25). மோசே காலத்திலிருந்து தான் இறைவன் யாவே என்ற பெயரில் வழிபடப்பட்டார் என்று நாம் யாத் 6:2-3-இல் வாசிக்கிறோம்.

காலப்போக்கில் ஏல் சத்தாய் என்ற பெயர் யாவே என்ற பெயரின் பொருளில் மறு விளக்கம் பெற்றது (ரூத் 1:20-21; சங் 68:14; 90:1; எச 1:24; 10:5). யோபு நூலில் மட்டும் தான் இறைவனின் வல்லமையையும் மாட்சிமையையும் வலியுறுத்த இது பயன்படுகிறது.

புதிய ஏற்பாட்டில், ''எல்லாம் வல்லவர்'' என்ற சொல் 2 கொரி 6:18-இல் வரும். எடுத்துக்காட்டைத்தவிர பெரும்பாலும் திருவெளிப்பாட்டு நூலில் காணப்படுகிறது (திருவெளி 1:8; 4:8; 21:22).

எல்லைக்குறி (LAND MARK)

மேற்கத்திய நாடுகளில் அன்று நிலங்கள், சிற்றரசுகள், நாடுகள் இவற்றின் எல்லைகளைக் குறிக்கக் கற்கள் ஊன்றப்பட்டன (ஆதி 31:51-52). மெசபொத்தாமியா, எகிப்து ஆகிய நாடுகளில் இக்கற்களில் ஏராளமாக எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன. பாலஸ்தீனத்தில் ஒரு சில சொற்களாவது பொறிக்கப்பட்டிருந்தன. எனவே இத்தகைய எல்லையைக் குறித்துக்காட்டும் கற்களை நீக்குவது பெருங்குற்றமாகும். பாபிலோனிய, கிரேக்க, உரோமைச சட்டங்களில் குறிகல்லை நீக்குவது பெருங்குற்றமெனத் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. உபஆகமம் எல்லைக்குறிகற்களை நீக்கக் கூடாது என இருமுறை வலியுறுத்திக் கூறுகிறது (உப 19:14; 27:17). இக்குற்றம் பழைய மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றிவைக்கும் குற்றமாகக் கருதப்பட்டது (பழ 22:28;

*23:10; யோபு 24:2).* கும்ரான் குழுவின் பிழை செய்வோர் எல்லைக்குறிகற்களை நீக்குவோர் எனக் கூறப்பட்டனர்.

**எல்னாம்** (ELNAAM - இறைவன் இன்பமானவர்)

தாவீதின் வல்ல வீரர்கள் எரிபாய், யோசவியா ஆகியோரின் தந்தை *(1 நாள் 11:46).* எழுபது நூல், எல்னாம் ஒரு வீரர் என்று குறிப்பிடுகிறது.

**எவில் மெரோதாக்கு** (EVIL - MERODACH - மார்தாக்கின் மனிதன்)

பாபிலோனிய அரசன் (கி.பி. 562-560). நெபுக்கதுனேசாரின் புதல்வன். பாபிலோனிய நாட்குறிப்பு ஏடுகளில் இவர் ஆண்ட இருவருட ஆட்சியைப் பற்றி எதுவும் குறிப்பிடாததால் இந்த அரசனின் ஆட்சிக்காலத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. அரசாட்சியைக் கைப்பற்ற ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பத்தில் அவருடைய மைத்துனன் அவருக்குப் பிறகு ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினார். அவர் பெயர் நெரிகிலிசார். 'நபோனிதஸ்' அவருடைய முன்னோர்களான நெபுக்கதுனேசாரையும், நெரிகிலிசாரையும் குறிப்பிடும் போது ஈவில்-மெரோதாக்கைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார்.

நாடுகடத்தப்பட்ட, யூதாவின் அரசன் யோயாக்கினைச் சிறையிலிருந்து, இவர் விடுவித்துப், பாபிலோனில் அவரை மதிப்போடு நடத்தியதாகக் கூறப்படுகிறது *(2 அர 25:27-30; எரே 52:31-34)* இதற்குப் பாபிலோனிய ஏடுகளும் சான்று கூறுகின்றன.

**எவோதியசின் மறையுரை** (HOMILY OF EVODIUS)

கன்னியின் விண்ணேற்பினைப் பற்றி, கோப்டிக் மொழியில் எழுதப்பட்ட ஒரு போலி நூலாகும். அந்தியோக்கின் ஆயரான எவோதியு, உரோமைத் திருச்சபையில் பேதுருவின் வாரிசாகினார் என்றும், இவர் 72 சீடர்களில் ஒருவர் என்றும், எவோதியு, மரியாளின் இறப்பு, விண்ணேற்புக்கு நேரடிச் சாட்சியம் ஆவார் என்றும் இந்நூல் கூறுகிறது.

**எழுதப்பட்ட நூல்கள்** (WRITING)

1. எழுத்துத் துறையில் வரும் செலவு:-

பாபிலோனியா, எகிப்து ஆகிய நாடுகளிலே எழுதத் தேவையான மூலப் பொருட்கள் மிகவும் விலை உயர்ந்தவை; பருமனானவை. எழுதும் முறையோ மிகவும் சிக்கலானது. எனவே வெகு சிலரே இப்பணியில் முனைந்தனர். எழுத்துப் பணி பொதுவாக எழுத்தர்களால் வளர்க்கப்பட்டது. எழுதும் முறை நெபோ, தொவுத்து போன்ற தெய்வங்களின் கண்டுபிடிப்பு என அந்நாடுகள் கருதின. எழுத்துப்பணியில் பல நுணுக்கங்களை அறிந்து கொள்வது உலக விதி நிர்ணயிக்கப்படும் மறைபொருள் மிக்க பகுதியில் நுழைவது போலாகும். அசீரியா நாட்டின் சில மன்னர்கள் தாம் இத்துறையில் நுழைந்ததன் பயனாகத் தங்களுக்குப்பேறும் புகழும் பெற்றனர். சிறுவர் நமது காலத்தில் கூட, இளம் வயதிலே எழுதக் கற்றுக் கொள்ளும் போது புதியதோர் உலகில் நுழைகின்றனர். சிறந்த எழுத்தாளர்களாக இருப்பின் அவர்களுக்கு நல்ல எதிர்காலமும் வாழ்வில் முன்னேறும் வாய்ப்பும் இருப்பதைக் காண்கின்றோம்.

அன்று பாலஸ்தீன நாட்டிலே, சீனாய், பெனிக்கியாப் பகுதிகளிலே மனிதனின் அறிவுத் திறமையால் எழுத்துத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அதிலே இஸ்ராயேல் நாடும் தனது வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே எல்லாரும் எளிதில் எழுதக் கூடிய ஒரு எழுத்து முறையைக் கண்டது. இதனால்தான் பழம் கலாச்சாரம் கொண்ட நாடுகளான எகிப்து, மெசபொத்தாமியா ஆகிய நாடுகளையும் விட முன்னணியில் நிற்கும் தகுதி பெற்று விளங்கியது.

தாவீதின் காலத்திற்கு முன்பே கிதயோன் நாட்களில் சுக்கோத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் தம் ஊரின் மூப்பர்களின் பெயர்களை எழுதும் நிலையில் இருந்தான் *(நீதி 8:14).* பண்டை நாட்களிலிருந்தே, பரவலாக

இல்லாவிடினும், இஸ்ராயேலில் எழுத்துப் பணி ஓரளவு பரவி இருந்தது. அதன் சமயத்தில் இது அவசியமான ஏதுவாக இருந்தது. சாமுவேல் தமது காலத்தில் தமது அரச சட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்தி அதை எழுதி வைத்தார் (1 சாமு 10:25). யோசுவா செக்கேமில் செய்த உடன்படிக்கையை இவ்வாறே எழுதி வைத்தார் (யோசு 24:26). இதைப் போலவே சீனாய்மலையில் கொடுக்கப்பட்ட நீதிச் சட்டங்களும் மோசேயால் எழுதிவைக்கப்பட்டன (யாத் 24:4). அமலேக்குமீது கொண்ட வெற்றியும் என்றும் அனைவரின் நினைவிலும் நிற்கும்படி எழுதி வைக்கப்பட்டது (17:14). சாமுவேல் காலத்திற்கு முன்னரே எழுத்து வடிவம் பெற்ற இவற்றில் கால, இட முரண்பாடுகள் எதுவுமில்லை.

2. எழுத்தின் மதிப்பு:-

இயேசுவின் சிலுவைமீது வைக்கப்பட்டிருந்த அறிக்கையைக் கண்ட தலைமைக் குருக்கள், பிலாத்துவிடம் முறையிட அதற்கு அவர் ''நான் எழுதியது எழுதியதுதான்'' (யோவா 19:22) என்று உறுதியுடன் கூறுகின்றார். அவரது இச்செயலிலே உரோமையர், யூதர், ஏன் நற்செய்தியாளருமே, ஒரு உண்மையை உணர்த்துகின்றனர். அதாவது எழுத்து வடிவம் பெற்ற எதையும் சுலபமாக மாற்ற இயலாது என்பதே. இப்பண்பு ஒருவரின் சொல்லுக்கு மிகவும் சிறப்பிடம் அளிக்கின்றது. இதே அடிப்படையில்தான் இறைவனின் திருவாக்கும் மாறாது, என்றும் நிலைக்குத் தன்மை கொண்டுள்ளது (சங் 119:89). திருவாக்கைத் திருத்தி அமைப்பவருக்குப் பெருந்துன்பம் விளைகின்றது (திருவெளி 22:18....). இவ்வாக்கைப் பயனற்றதாக்க எண்ணி அழிக்க முயலுபவன் தன்னையே அறிவிலியாக்கிக் கொள்கின்றான் (எரே 36:23).

''கசப்பான தண்ணீர்'' குடிக்கும் சடங்கு (எண் 5:23) மற்றச் சோதனை முறைகளோடு ஒப்பிடும்போது பெரிய முன்னேற்றமானதாயிருந்தாலும், அடிப்படையிலே அக்கால மக்களின் மனத்தை நன்கு பிரதிபலிக்கின்றது. இதைப்போன்றே ஆண்டவரின் கட்டளைகளை என்றும் நினைவில் கொள்ளும்படியாக வாயிற்படிகளிலும் கதவின் நிலைகளிலும் எழுதுவது (உப 6:9; 11:20), அரசன் அரியணை ஏறும்போது அவருக்குக் கொடுக்கப்படும் சட்ட நூலின்மேலும் (17:18), பெரியகுருவின் நெற்றிப்பட்டத்தின்மேலும் (யாத் 39:30) இறைவார்த்தைகளை எழுதுவது ஆகிய இவையனைத்தும் கடவுளின் திருவாக்கு இஸ்ராயேல்மேல் கொண்டுள்ள மேலாண்மையையும் யாவேயின் திருவுளத்தின் மாற்ற முடியாத தன்மையையும் மிகத் தூய்மையான முறையில் எடுத்துக் காட்டுகின்றன.

இறைவன் தமக்கு மொழிந்த திருவாக்குகளைச் செவ்வனே எழுதிவைப்பது இறைவாக்கினரின் பணியெனக் கருதப்பட்டது. எதிர்காலத்தைக் கணித்துக்கூறும் எழுத்து வடிவம் பெற்ற சொல் மாற்றம் அடைய முடியாதது, உயரிய மதிப்புடையது என்று கீழ்த்திசை மக்கள் கொள்கின்றனர். கடவுளிடமிருந்து இறைவாக்கைப் பெறுகின்றோம் என்று இறைவாக்கினர் உணர்ந்திருப்பினும், அதை எழுதிக் காப்பதும் அவரது ஆணையால்தான் என்று உறுதியுடன் கூறுகின்றார் (ஏச 8:1; எரே 36:1-4; அப 2:2; திருவெளி 14:13; 19:9). இதனால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட வாக்கின்படி நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது (ஏச 8:16), இறைவன்தான் இவற்றை அறிவித்தார் (41:26) என்பது தெளிவாகின்றது.

3. புனித நூல்கள்:-

கடவுளின் செயல் திட்டத்தை எடுத்துக் காட்டும் ஏடாகவும் அவரது வாக்குறுதிகளையும் கட்டளைகளையும் தெரிவுபடுத்துவனவாயுமிருப்பதால், இறைவனின் வார்த்தையை அதிகாரபூர்வமாக எழுதுவது திருப்பணிகளில் ஒன்றாகும். அவை புனித நூல்களாகும். திருநூல்கள் என்ற இச்சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. ஆனால் திருச்சட்டங்கள் எழுதப்பெற்ற கற்பலகைகள் (யாத் 24:12) கடவுளது கைகளால் எழுதப்பட்டவை (31:18) யாதலால் புனித

மும் மேன்மையும் கொண்டவை என்று எண்ணப்பட்டன.

புதிய ஏற்பாடு சில சமயங்களில் திருநூல்கள் என்று ராபிகளின் சொல்லைக் கையாளுகின்றது (உரோ 1:2; காண் ''மறைநூல்கள்'' - 2 திமோ 3:15). எனினும் பொதுவாக மறைநூல்கள் அல்லது மறைநூல் என்று குறிப்பிட்ட ஒரு வாசகத்தைக் குறிக்கவோ (மாற் 12:10; லூக் 4:21) பழைய ஏற்பாடு முழுவதையும் சுட்டிக்காட்டவோ-இச்சொல்லைக் கையாளுகின்றது (யோவா 2:22; 10:35; அ.ப. 8:32; கலா 3:22). மறைநூலில் பல இடங்களில் ''இவ்வாறு எழுதப்பட்டுள்ளது'' என்ற வாசகம் காணக்கிடக்கின்றது. இது கடவுளைத் தான் குறிக்கின்றது; அவரது புனிதத் தன்மை, அனைத்தையும் கூர்ந்து நோக்கும் தன்மை, நெறி பிறழாத அவரது வாக்குறுதி இவை அனைத்தையும் காட்டுகின்றது.

4. மறைநூல் நிறைவேறல்:-

''என்னைப் பற்றி எழுதப்பட்டனவெலாம் நிறைவேற வேண்டும்'' (லூக் 24:44); மறைநூல்களில் உள்ளன நிறைவேற வேண்டும் (காண் மத் 26:54); கடவுளின் வாக்கு வீணாவதில்லை (எச 6:10); அவரது மறைநூல் ஒழிந்து போவதில்லை (யோவா 10:35) என்ற இவை போன்ற உண்மைகள் மறைநூலில் உள்ளன. ஒரு சமயத்தில் இயேசு மணல் மீது விரலால் எழுதிக்கொண்டிருந்ததாக (யோவா 8:6) நற்செய்தி கூறுகின்றது. இயேசு எந்த நூலும் எழுதிவைத்துச் செல்லவில்லை; ஆனால் மறைநூலின் மேன்மையையும் தனிச்சிறப்பையும் நன்கு எடுத்துரைத்துள்ளார். அவரது கூற்றுப்படித் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்து போகாது (மத் 5:18); அனைத்தும் நிலைத்திருக்கும் என்றும் உறுதியுடன் மொழிந்துள்ளார்.

திருச்சட்டம் நிறைவேறுவதுதான் அது நிலைத்திருக்கும் என்று கூறுவதன் பொருளாகும். திருமறை நூலிலே இறைவனின் திருவாக்கு என்றும் உயிரூட்டும் வலிமையுடன் பிரசன்னமாயிருக்கின்றது. அதே வேளையில், சில ஒழிந்து மறைந்து போகக் கூடிய அம்சங்களும் இன்னும் இருக்கலாம். உயிரளிக்கும் ஆவியானவர் ஒருவர் உள்ளார். சாவு விளைவிக்கக் கூடிய சட்டத்தின் எழுத்தும் உண்டு (2 கொரி 3:6). மறைநூலின் எழுத்தைப் படிக்குந்தோறும், நம்மில் உள்ள திரையாம் இருளைப் போக்கி, மறைநூல் எழுத்தில் பொதிந்துள்ள ஆவியானவரை நாம் கண்டுணர இயேசு வகை செய்கின்றார் (3:14). மறைநூலில் கிறிஸ்துவைக் காண்கின்றவன், முடிவிலா வாழ்வைப் பெறுகின்றான் (யோவா 5:39). ஆனால் இயேசு வார்த்தைகளில் விசுவாசங்கொள்ள மறுப்பவர்கள் மோசேயை விசுவசிப்பதாக எண்ணினால், மோசேயையும் அவர்கள் விசுவசிப்பதில்லை. ஏனென்றால் மோசே கிறிஸ்துவைப் பற்றித்தான் எழுதினார் (5:45....).

5. இதயத்தில் எழுதியுள்ள திருச்சட்டம்:-

புதிய உடன்படிக்கையானது மறைநூலின் வெறும் எழுத்துக்களில் அடங்கியதல்ல. ஆனால் ஆவியானவரால் ஒவ்வொருவனின் இதயத்திலும் எழுதப்பட்டுள்ளது (எரே 1:33). இவ்வாறு ஆவியால் இதயத்தில் எழுதப்பட்ட சட்டப்படி அவர்கள் நடப்பார்கள் (எச 36:27; ஏச 54:13; யோவா 6:45). இருப்பினும் புதிய ஏற்பாடு வேறு பிற நூல்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. இவற்றிலும் அதே இறைவனின் அதிகாரத்தைக் கண்டு, இவற்றையும் திருச்சபை திருமறை நூல் தொகுப்பில் சேர்த்துள்ளது (காண் 2 பேதுரு 3:16). இறைவனின் அதே வார்த்தையும், அதே ஆவியானவரும் இம்மறை நூலில் உள்ளனர் (காண் லூக் 1:2). சிறப்பாக, இம்மறைநூல்கள் இஸ்ராயேலின் மறைநூல் மரபில் உள்ளன. அவற்றின் பொருட்செறிவையும் உட் கருத்தையும் நமக்கு நன்கு விளக்குகின்றன. எனவே பழைய ஏற்பாடு இல்லையேல், புதிய ஏற்பாட்டு வாசகங்கள் நமக்குப் புரியவொன்னாதவையாயிருக்கும். அதைப் போன்றே, புதிய ஏற்பாடன்றிப் பழைய ஏற்பாடு வெறும் பழங்கதைகளாயும் உயிரற்ற எழுத்தாயும் பயனற்ற வாக்குறுதிகள் கொண்டதாயும் விளங்கும்.

புதிய உடன்படிக்கையில் இன்னும் பல நூல்கள் உண்டு. காலச் சூழ்நிலை அவற்றை ஒழித்து விடவில்லை. வருங்கால மக்கள் மனத்திலே இயேசுவின் மறையுண்மையை நிலைநிறுத்த இவை இன்றியமையாதவை. சிறிது சிறிதாக அலசிப்பார்த்து ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்க வேண்டிய நூலல்ல திருமறைநூல். அவையனைத்தும் ஒரே தொகுப்பாக ஒருமைப்பாட்டுடன் ஒரே மறைபொருளைச் சுட்டிக் காட்டுபவையாகக் கொளல் வேண்டும். அம்மறை பொருள் தான், கிறிஸ்துவே, ஆல்பாவும் ஓமேகாவும், தொடக்கமும் முடிவும் என்பதாம்.

## எழுதுகோல் (PEN)

எழுதுகோல் விவிலியத்தில் எழுதுவதற்குப் பயன்படும் பல கருவிகளைக் குறிக்கின்றது. இது இரும்பு எழுத்தாணியையும் (யோபு 19:24; எரே 17:1) 38 முனை நன்கு தேய்க்கப்பட்டிருக்கும் தூரிகையையும் பிளவுப்பட்ட கூரிய முனையையுடைய கருவியையும் (3 யோவா 13), உருக்கிய கன்றுக் குட்டி செய்யப் பயன்பட்ட கருவியையும் (யாத் 32:4), மரத்தில் குறியிட உதவும் ஆணியையும் (ஏச 44:13), வைரத்துண்டு முனையுடன் கூடிய ஆணியையும் (யோபு 19:24) குறிக்கலாம்.

## எழுத்தர், மறைநூல் அறிஞர், சட்டவல்லுநர் (SCRIBE)

இவர்கள் நாடு கடத்தலுக்குப்பின் திருச்சட்டத்தை விளக்குவதையும் போதிப்பதையும் தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள்.

1. வார்த்தையின் பொருள்:- எரே 36:26-இல் நிலப்பத்திரம் போன்ற அரசாங்க ஆவணங்களைக் (எரெ 32:12-15) கவனிப்பவரையும் அரசனுடைய அரண்மனையில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தவரையும் (2 அர 18:18; எரே 36:12) குறிக்கும். 2 அர 22:3-இல் எழுத்தராகிய சாப்பான் பொருளாதார அமைச்சராகவும், பின் எசக்கியாவின் ஆட்சிக்காலத்தில் செபினா என்னும் மறைநூல் எழுத்தர் அரச செயலராக இருந்ததாகவும் கருதப்படுகிறது (ஏச 36:3; 22:15 தொ). இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்படுமுன் இச்சொல் ஒரு சாதாரண உலக அலுவலைக் குறித்தது.

எழுதும் கலையில் வளர்ச்சி பெற்றிருந்த மற்றொரு வகுப்பினரும் இருந்தனர். இவர்கள் குருகுலத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் மறைநூல் வல்லுநர் ஆனார்கள். பழங்கால எழுத்தர்கள் பெயர்களைமட்டும் வழங்கினார்கள். ஆனால் பிற்காலத்தில் வந்தவர்கள் திருச்சட்டத்தை விளக்குபவர்களாகவும் இருந்தனர்.

2. தோற்றம்:-
இவர்கள் சட்டத்தை விளக்குபவர்களாக நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில் உருவாயினர். அப்போதுதான் திருச்சட்டம் யூத வாழ்க்கையின் மையமாக அமைந்தது. எனவே நாடுகடத்தப்பட்ட யூதர்கள் அதை ஆராய்வதில் ஆர்வம் காட்டினர். இவர்கள் வெறும் சட்டத்தை அறிந்தவர்களாக மட்டும் கருதப்படவில்லை. இவர்கள் பழமொழி ஆகமம், சங்கத்திருவுரை ஆகமம், தானியேல் ஆகியவற்றில் கூறப்படும் ''அறிஞர்களாகவும்'' ''நீதிமானாகவும்'' விளங்கினர் (தானி 11:33: 35; 12:3; திருவுரை 38:24 தொ). இந்த மறைநூல் அறிஞர் வகுப்பினர்தான் யூதத்திருமுறை நூல்களை வரையறுத்தனர். இவர்கள் யூதமறையின் இலக்கியங்களைச் சேகரிப்பதிலும் அவைகளுக்கு விளக்கம் கூறுவதிலும் ஈடுபட்டிருந்தனர். மேலும் இவர்கள் பிரதி எடுப்பவர்களாகவும் மறைநூலில் கலப்படம் ஏற்படா வண்ணம் பாதுகாப்பவர்களாகவும் விளங்கினர்.

யூதர்கள் நாடு திரும்பியபின் எஸ்ராவின் காலத்தில்தான் இந்த எழுத்தர்கள் போதகர்களாகவும் விளக்கவுரையாளர்களாகவும் ஆனார்கள். எஸ்ராவும் ஒரு சிறந்த சட்ட வல்லுநர் (எஸ் 7:6.11-12; நெக 8:1.4.9.13; 12:26.36).

3. பரிசேயரும் மறைநூல் அறிஞரும்:-
குருகுலத்தில் தோன்றிய எஸ்ராவைப் போலவே (எஸ் 7:12), யூதர்கள் நாடு திரும்பிய பின் வந்த சட்டவல்லுநர்கள் குருகுலமரபிலி

ருந்து வந்தவர்கள் (நெக 8:7; 2 நாள் 34:13). இவர்கள் தங்களை ஒரு குலமாக அமைத்துக் கொண்டனர் (1 நாள் 2:55) செலூக்கியர்கள் தங்கள் கிரேக்க நாகரிகத்தைப் பரப்ப முயன்ற போது, இந்தச் சட்டவல்லுநர் குழு தான் மக்கபேயர்களின் புரட்சியில் (1 மக் 7:11-17) உச்சநிலை அடைந்த எதிர்க்கும் கட்சிக்கு முதுகுத் தண்டாய் அமைந்தது. இவர்கள் கசிதீம் அதாவது ''சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் நடப்பவர்கள்'' என்று அழைக்கப்பட்டனர்.

கிரேக்க காலத்தொடக்கத்தில்தான் பொது மக்களிடையேயிருந்து தோன்றிய சட்டவல்லுநர்கள் தங்களைத் தலைவர்களாகக் கொண்ட மக்கள் கட்சியை ஆரம்பித்தனர். இவர்கள் பரிசேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். நற்செய்தியிலும், அப்போஸ்தலர் பணியிலும் சட்டவல்லுநர்கள் என்று பல முறை குறிப்பிடப்படுகின்றனர் (மத் 13:52; 9:3; மாற் 9:11.14). இந்தக் குறிப்புகள் இவர்கள் சமுதாயத்தில் ஒரு முக்கிய இடம் வகித்ததைக் காட்டுகின்றன. இவர்கள் பாலஸ்தீனமெங்கும் தங்கள் தொழிலைச் செய்தனர். மற்ற இடங்களில் சட்டவல்லுநர்கள், பரிசேயர்களுடன் இணைத்தே கூறப்படுகின்றனர். மாற்கு சட்ட வல்லுநர்களைத் தலைமைக் குருக்களுடனும் மூப்பர்களுடனும் தொடர்புடையவர்களாகக் கூறுவது அப்போஸ்தலர் பணியோடு ஒத்துப்போகின்றது (மாற் 8:31; 10:33; 11:18; 14:1; 15:31; காண்க. மத் 2:4; 21:15; லூக் 22:66; 23:10; அ.ப. 4:5; 6:12). இதிலிருந்து இந்த மூன்று வகுப்புகளிலும் மூப்பர்கள்தாம் மிகவும் குறைந்த முக்கியத்தும் வாய்ந்தவர்கள் என்று தெரிகிறது. எஞ்சி இருக்கின்ற இரண்டு வகுப்பினரில் (குருக்கள், சட்டவல்லுநர்கள்) தலைமைக் குருக்கள்தாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

4. தலைமைச் சங்கத்தில் சட்டவல்லுநர்கள்:-

தலைமைச் சங்கம் வரிசைப்படி, தலைமைக் குருக்கள், சட்டவல்லுநர்கள், மூப்பர்கள் ஆகியோர்களை அங்கத்தினர்களாகக் கொண்டிருந்தது. தலைமைக் குருக்கள்தான் பெரிய குரு; பழைய பெரிய குரு மற்றும் குருமரபினர் இவர்களைக் கொண்ட குரு குலத்தின் தலைவராவார். எனவே சட்டவல்லுநர்கள் தலைமைச் சங்கத்தில் மதிப்பு பெற்றிருந்த மற்றொரு வகுப்பினராவர். பெரிய குருவுக்கும் அவரது குடும்பத்துக்கும் அடுத்தபடியாக யூத ஆட்சிமுறையில் சிறப்புப் பெற்றிருந்தவர்கள் சட்டவல்லுநர்கள் ஆவார்கள்.

தலைமைக்குருக்கள் பெரும்பாலும் சதுசேயர்களின் கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். இந்தத் தலைமைச் சங்க சட்ட வல்லுநர்கள் பெரும்பாலும் பரிசேயர்கள் கட்சியைப் பின்பற்றினாலும், சதுசேய சட்டவல்லுநர்களும் இருந்தனர். பரிசேய சட்ட வல்லுநர்கள் தலைமைச் சங்கத்தில் இருந்தார்கள் என்பதை மட்டும் உறுதியாகக் கூற இயலும். கமாலியேல் (அ.ப. 5:34 தொ) பரிசேயரும் சட்ட வல்லுநரும் ஆவார்.

5. சட்டவல்லுநரும் இயேசுவும்:-

மாற் 7:5-இல் வரும் ''பரிசேயரும் மறைநூல் அறிஞரும்'' என்ற சொற்றொடர் மத்தேயுவில் வரும் ''மறைநூல் அறிஞரும் பரிசேயரும்'' என்ற வழக்கமாக வரும் சொற்றொடர் போல அல்ல; மாற்கு நற்செய்தியில், ''பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞரும்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக அது பயன்படுத்தப்படுகிறது. இயேசுவைக் கேள்வி கேட்டவர்கள் சட்டத்தைப்பற்றித் தர்க்கம் செய்வதால் அவர்கள் எருசலேமைச் சார்ந்த அதிகாரப்பூர்வமான மறைநூல் அறிஞராகத்தான் இருக்க வேண்டும். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் என்ற சொற்றொடர் மத்தேயு நற்செய்தியில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் சொல்லாக இருந்தாலும், லூக் 6:7; 11:53-இல் அது அவ்வாறு இருக்க முடியாது. மறைநூல் அறிஞருக்கு, பரிசேயருக்கு மேலாக முதன்மை அளிக்கப்படுகிறது. மத் 23-இல் பரிசேயரின் வெளிவேடத்தைப்பற்றி இயேசு கண்டிக்கும் போது மறைநூல் அறிஞரும் பரிசேயரும் என்று கூறுவதால் அது மூலவா

சகமாக இருக்கலாம் என்று கூறலாம். ஆனால் மற்றும் லூக்கா நற்செய்திகளில் (மாற் 12:38; லூக் 20:45; 11:46), இயேசு மறைநூல் அறிஞரின் வெளிவேடத்தை மட்டுமே கண்டிக்கிறார். மறைநூல் அறிஞரின் முக்கியப்பணி திருச்சட்டங்களைப் போதிப்பதும் அவற்றை விளக்குவதும் ஆகும். அவர்களுடைய வாழ்க்கையல்ல. மாறாக அவர்களின் அதிகாரம் மத் 23:2-3-இல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நற்செய்தியிலும் இறைவனைப்பற்றிய ஞானமுள்ள மறைநூல் அறிஞர்கள் காணப்படுகின்றனர் (மத் 8:19 - லூக் 9:57). இவர்களின் உழைப்பால்தான் பழைய ஏற்பாட்டு நூல்கள் பாதுகாக்கப்பட்டன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**எழுத்தர்களின் பிழைதிருத்தம்** (EMENDATIONS OF THE SERIBER)

மசோரோடிக் வாசகத்தில் திருத்தப்பட்ட 18 சொற்கள் எழுத்தர்களின் பிழைதிருத்தம் என வழங்கப்படுகிறது. இறைவனை மனிதனாக வர்ணிக்கும் சொற்களைத் தவிர்க்க இவ்வாறு திருத்தப்பட்டன.

**எழுத்துப்பட்டயம்** (INSCRIPTION)

இது கடினமான தலத்தில் எழுதப்பட்ட விளக்க வாசகம் அல்லது பொறிப்பாகும். பொதுவாக இது மக்களுக்கு அறிக்கையாக அமைந்தது. இத்தகைய பட்டயம் பெரிய குருவின் தலைப்பாகையில் பொருத்தப்பட்டிருந்தது. இது அவரை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர் என்று அறிவித்தது (யாத் 39:30; 29:36). புதிய ஏற்பாட்டில் இது நாணயத்தில் காணப்பட்ட எழுத்துக்களைக் குறித்தது (மத் 22:20).

இவற்றில் மிக முக்கியமானது இயேசுவுக்கு எதிரான குற்றம் எழுதப்பட்டு அவருடைய சிலுவையில் வைக்கப்பட்ட பட்டயமாகும் (லூக் 23:28; மத் 27:37). யோவானின் படி இப்பட்டயம் எபிரேய, கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்டிருந்தது (யோவா 19:19-20).

**எழுபது நூல்** (SEPTUAGINT)

கிறிஸ்தவ காலத்திற்கு முந்தைய யூதர்களின் பழைய ஏற்பாட்டு, கிரேக்க மொழி பெயர்ப்பாகும். இந்த மொழிபெயர்ப்புத் தோன்றிய வரலாற்றைக் கூறுவதாகக் கருதப்படும் அரித்தேயாவின் போலியான கடிதத்திலிருந்து இப்பெயர் வருகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூத அறிஞரான அரித்தேயா பின்வரும் செய்திகளைக் கூறுகின்றார்: இரண்டாம் தோலமி பிலதெல்பு, தாம் அலக்சாந்திரியாவில் நிறுவிய நூலகம் யூதர்களின் புனித நூல்களின் கிரேக்க மொழி பெயர்ப்பைக் கொண்டிருக்க விரும்பினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு யூதக் கோத்திரத்திலிருந்தும் 6 பேராக 72 பேர் எருசலேமிலிருந்து மொழி பெயர்ப்பைச் செய்ய அனுப்பப்பட்டனர். ஆனால், இக்கதை பின்னால் கற்பனையோடு விரிவாக்கப்பட்டது. இந்த 72 பேரும் தனித்தனி அறைகளில் பாரேஸ் தீவில் வைக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் 72 நாட்களில் மொழி பெயர்ப்பை முடித்தனர். ஆனால் அவை எல்லாம் ஒன்றாய் இருந்தன. இக்கதையில் வரலாற்றுக்கு வேண்டியவை மொழி பெயர்ப்பு நடந்த இடமும், காலமும் மட்டுமே. இம்மொழி பெயர்ப்பு அலக்சாந்திரியாவில் இருந்த யூத மக்களுக்காகச் செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. இவ்வேலை கி.மு. 250-க்கு முன் செய்யப்பட்டிருக்க இயலாது. மொழி நடையானது இது அலக்சாந்திரியாவில் செய்யப்பட்டது என்பதற்குச் சான்று பகர்கின்றது. இது ஒரு தனிப்பட்ட படிவம் என்று அறிஞர்கள் கூறினாலும், இதை உறுதிப்படுத்த முடியாது. வழிபாட்டுத் தேவையும் ஒருவகையில் இந்த மொழி பெயர்ப்புக்குத் தூண்டுகாரணமாக இருந்திருக்கலாம். கி.மு. 130-இல் சீராக்கு நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை ''சட்டம், இறைவாக்கினர், பிறநூல்கள்'' அடங்கிய கிரேக்க மொழி பெயர்ப்பு இருந்ததைச் சுட்டுகிறது. இது யூதத் திருமுறையை மூன்று பகுதிகளாகப் பிரிப்பதோடு ஒத்துப் போகிறது. இது எழுபது நூல் முடிக்கப்பட்ட காலத்தை ஒரு வேளை குறிக்கலாம்.

அண்மைக்கால விவிலிய அறிஞர்களில் சிலர் இந்திக் கிரேக்க மொழிபெயர்ப்பு ஓர் ஒன்றிய படைப்பு அல்ல என்றும், ஒரே சமயத்தில் செய்யப்படவில்லையென்றும் கருதுகின்றனர். இது வேறுபட்டபுத்தகங்களின் பல வேறு மொழிபெயர்ப்புகளையும் பல வேறுபட்ட ஆட்களால் செய்யப்பட்டவைகளையும் கொண்டுள்ளது என்றும் இவையல்லாது பாதுகாக்கப்படாத மொழிபெயர்ப்புகள் இருந்திருக்கலாம் என்றும் நம்புகின்றனர். ஆனால் கிரேக்க மொழிபெயர்ப்பு ஒரு மொழிபெயர்ப்பாளரின் வேலையில்லை என்பது தெளிவாகிறது. இத்தொகுப்பில் பல மொழிபெயர்ப்பாளர்களின் வேலைப்பாட்டைக் காணமுடிகிறது. ஒரே ஆளின் இயக்கத்தில் இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது என்பதற்கும் சான்றுகள் இல்லை. அநேகமாக யூதர்களால் மிகவும் புனிதமாகக் கருதப்பட்ட ஐந்நூல் வழிபாட்டுத் தேவைகளுக்காக முதலில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். மற்றப் புத்தகங்களில் சிலவாயினும் மொழிபெயர்ப்பாகும். இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்பு பாதுகாக்கப்படாத அல்லது எபிரேயமூலத்தில் காணப்படாத சில நூல்களையும் கொண்டுள்ளது.

இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பின் தரம் ஒரே சீராக இல்லை. இது ஏ. வக்காரி என்பவரால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அவரது கருத்துப்படி மூலத்தோடு எழுபது நூலை ஒப்பிடும்போது உன்னத சங்கீதம், சங்கத்திருவுரை ஆகமம் ஆகியவை முழுவதும் மூலத்தை அடிபெயற்றியதாகவும், சங்கீதம், இறைவாக்கினர்கள் (தானியேலைத் தவிர) சொற்பொருள் சார்ந்ததாகவும், ஐந்நூலும், வரலாற்று நூல்களும் உண்மையுள்ளவையாகவும் யோபு, பழமொழி, தானியேல், எஸ்தர் ஆகியவை சுதந்தரமாக அல்லது பொழிப்புரைத் தன்மையோடு செய்யப்பட்டதாகவும் உள்ளன. கிரேக்க மொழிமரபின்படி, யோபு, பழமொழி ஆகியவை மிகவும் நன்றாகவும், ஐந்நூல், யோசுவா, ஏசயா ஆகியவை இடைத்தரமாகவும் மற்றவை குறைந்ததரமாகவும் உள்ளன. எபிரேய வாசகத்தைப் புரிந்துகொள்வதில் ஐந்நூல் மிகவும் சிறந்ததாகவும், ஏசயா மற்றும் சிறிய இறைவாக்கினர்கள், யோபு, பழமொழி ஆகியவை தாழ்ந்த தரமாகவும் மற்றவை நடுத்தரமாகவும் கருதப்படுகின்றன. இந்த ஆராய்ச்சியின்படி இம்மொழிபெயர்ப்பு, சிறிதளவு எபிரேயமும், கிரேக்க மொழி அமைப்பில் பயிற்சி பெறாதவர்களாலும் செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது.

எழுபதுநூல் மொழிபெயர்ப்பு மட்டுமல்லாது, பழைய ஏற்பாடு பற்றிய முதல் விளக்கமும் ஆகும். மொழிபெயர்ப்பாளர்கள் ஐந்நூலின் குருக்கள் பாரம்பரிய உலகிலும், நாளாகமப் பாரம்பரிய உலகிலும் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஓரளவிற்குக் கிரேக்க கருத்துக்களால் பாதிக்கப்பட்டனர். எனவே இஸ்ராயேலின் தொடக்க இலக்கியங்களில் காணப்படும் மனிதப் பண்புக் கொள்கை இறைவனுக்குச் சாற்றிக் கூறுதல் அல்லது பொருட்களுக்கு மனித உணர்ச்சிகளை ஏற்றிக் கூறுவது ஆகியவை கைவிடப்படுகின்றன. (இவ்வாறு ''கை'' ஆற்றலாகவும் ''பாறை'' உதவியாகவும் மாறுகிறது). அந்தக்காலத்தில் உச்சரிக்கப்படாத யாவே என்ற இறைபெயர் 'ஆண்டவர்' என்ற சொல்லால் மொழி பெயர்க்கப்படுகிறது. இது யாவேக்குப் பதிலாகப் பயன்பட்ட அதோனாயி என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இதே சொல் கிரேக்கப் பண்பாட்டில் அரசனுக்குரிய பெயரும் ஆகும். அன்பைக் குறிக்கும் எபிரேயச் சொல் ''கெசது'' இரக்கத்தைக் குறிக்கும் ''எலெயோஸ்'' என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இதேபோன்று பல மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

மொழிபெயர்ப்பாளர்கள் பயன்படுத்தியது நாம் வைத்திருக்கும் எபிரேய மசோரோடிக்கு வாசகம் அன்று. மேலும் இவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் எல்லாம் தவறான மொழிபெயர்ப்பாலோ, எழுத்தர் பிழையாலோ எழுந்தவையும் அல்ல. கிரேக்க மொழிபெயர்ப்போடு உள்ள எபிரேயப் படிவம் கும்ரான் கையெழுத்துப் படி

வங்களில் காணப் படுவதிலிருந்து இந்த வேறுபாடு தெளிவாகின்றது.

கி.பி. முதலாம் நூற்றாண்டுவரை எழுபது நூல் சிதறுண்டுபோன யூதர்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. இது கிரேக்க விவிலியம். ஆதலால் கிறிஸ்தவர் கள் கிரேக்கப் பகுதிகளை மனந்திரும்பிய போது, இதை ஏற்றுக் கொண்டு பயன்படுத் தினர். எனவே அது திருச்சபையின் விவிலி யம் ஆயிற்று. புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படும் 250 பழைய ஏற்பாட்டு வச னங்களுள் 300 எழுபது நூலிலிருந்து எடுக்கப் பட்டன. புதிய ஏற்பாடு எழுபது நூல் விளக் கத்தை எப்போதும் பின்பற்றாவிடினும் இறையியல் சொற்கள் எபிரேயத்திலிருந்து கிரேக்க மொழி மூலமாக வருகின்றன.

எழுபது நூலின் அதிகாரபூர்வத்தன்மை திருச்சபையின் கிரேக்க, இலத்தீன் தந்தையர் களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. போலி-அரித்தேயாவின் கதையின் அடிப்படை யில் இதுவும் இறை ஏவுதல் பெற்றது என்று கருதினர். இக்கருத்தை மதிப்பீடு செய்ய, விவிலிய விளக்கமுறைகள் என்ற தலைப் பைக் காண்க.

கிறிஸ்தவர்கள் எழுபதுநூலை ஏற்றுக் கொண்டதால், யூதர்கள் அதை நிராகரித்த னர். எழுபதுநூல் எழுதப்பட்ட போது பூமியை மூன்று நாள் இருள் மூடியிருந்தது என்று சில ராபிகள் கூறினர். இன்னும் சிலர் அந்த நாள் யூதர்களுக்குப் பொற் கன்றுக் குட்டியின் நாள்போல் துயரமான நாளாகும் என்றனர். ஆனால், கிரேக்க நகரங்களில் வாழ்ந்த யூதர்களுக்குக் கிரேக்க வாசகம் தேவைப்பட்டது. ஆகவே யூதக்கண்காணிப் பில் பிற கிரேக்க மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டன. இப்படிச் செய்யப் பட்ட மொழி பெயர்ப்புகளில், ஆக்சிலா, சிம் மாக்கு, தியோதோசியன் ஆகியோருடைய மொழி பெயர்ப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. இவை பற்றிக் கிரேக்க மொழி பெயர்ப்புகள் என்ற தலைப்பில் காண்க.

எழுபது நூலின் பதிப்புகள்:-

முதல் மூன்று நூற்றாண்டுகளில் எழுபது நூல் அதிகம் பயன்படுத்தப்பட்டதால் பல படிவங்கள் எடுக்கப்பட்டன. அதன் விளை வாகப் பழுதுபட்டது. பழங்கால மூலத்தின் படி, அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கெசிக் கியுவும் அந்தியோக்கியா லூசியனும் கி.பி. 300-ஐ ஒட்டிப் பதிப்பித்தனர். இதன் பகுதி கள் அதிகம் கிடைக்கவில்லை. முதன்மை யான பதிப்பு ஓரிசனால் பாலஸ்தீனத்தில் செசாரியாவில் செய்யப்பட்டது (கி.பி. 254). இது எழுபது நூல் வாசக வரலாற்றுக்கு முக்கியமானதாகும். ஆறுவரிசைப் பதிப்பு என்று அழைக்கப்பட்டது. எபிரேய பாடத் தையும் மற்ற மொழி பெயர்ப்புகளையும் இணையான வரிசைகளில் கீழ்க்கண்டவாறு அமைத்தார்.

1. எபிரேய வாசகம்
2. எபிரேயம்: கிரேக்க எழுத்துகளில்
3. ஆக்கிலா வாசகம்
4. சிம்மாக்கு வாசகம்.
5. எழுபது நூல் வாசகம்
6. தியதோசியோன் வாசகம்.

இம்மாதிரி மொழிப்பெயர்ப்பை ஓரிசன் செய்தபோது, யூதர்களோடு கிறிஸ்தவர்கள் வாதிட்ட போது பயன்படவேண்டும் என்ற ஆர்வத்தாலும், எபிரேய வாசகத்தில் காணப் படாத நூல்களிலிருந்தும் வேறுபட்ட வாச கங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுக் கூறும் போது எழும் மலைப்புகளைத் தவிர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும், செய்யப் பட்டதாகத் தெரிகிறது.

இதன் மிகவும் பழங்காலக் கையெழுத் துப் படிவங்கள் கும்ரானில் இருந்து கிடைத் துள்ள சில பகுதிகளாகும். கிரேக்க மொழி பெயர்ப்பு முதன் முதலில் அல்காலா அச்ச கத்தில் அச்சிடப்பட்டது. பின் அல்டைன் பதிப்பு வெளியானது முழுவதும் திற னாய்வு கொண்ட பதிப்பு இல்லை.

## எழுவர் (THE SEVEN)

எருசலேமில் அப்போஸ்தலருக்குப் ''பந் தியில் பணிவிடை'' செய்ய உதவுவதற்காகப் பன்னிருவர் திருநிலைப்படுத்திய குழுவி னைக் குறிக்கும் சொல் (அ.ப.6:1; 21:8).

இன்று திருத்தொண்டர்பட்டத்தை இத னோடு இணைத்துவிட்டனர். பந்தியில் கிரேக்க விதவைகள் புறக்கணிக்கப்படுவதா கப் பேச்சுக் கிளம்பியதும், இவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கிரேக்கப் பெயர்களையே கொண்டிருந்த னர். ஒருவேளை கிரேக்கப் பண்பாட்டில் மூழ்கியிருந்த யூதர்களாகவும் இருக்கலாம். பழமைவாதிகளான சில யூதர்களின் பிரச்ச னைகளைத் தீர்க்கவும் இவர்கள் நியமிக்கப் பட்டிருக்கலாம்.

ஏழு என்பது, முழுமையின் அடையாள மாகக் கொள்ளப்பட்ட அக்காலக் கட்டத் தில், லூக்காவின் நூல்களில், மற்றநற்செய்தி யாளர்களின் நூல்களில் காணப்படுவதை விட, அதிக அளவில் காணப்படுகிறது.

பன்னிரண்டு என்பது இஸ்ராயேல் குலத் தின் இனங்களைக் குறிப்பது போல எழுபது என்பது அக்கால இஸ்ராயேல் கணக்குப்படி உலகில் இருந்த எழுபது நாடுகளைக் குறித் தது (ஆதி 10:32; லூக் 9:1; 10:1)

## எளிமை (SIMPLICITY)

எளிமை என்பது குழந்தையின் இயல்பு. அது பல பண்புகளைக் கொண்டது. குழந் தைக்குப் பட்டறிவு கிடையாது. கால மறிந்து, இடமறிந்து நடக்கத் தெரியாது; உள் ளத்தில் வஞ்சம் கிடையாது; சொல்லிலே நஞ்சு கிடையாது; நோக்கிலே கபடு கிடை யாது; செயலிலே அநீதி கிடையாது; குழந் தையைப் போல் கள்ளமில்லா நடத்தையும் பணிவும் கொண்டவரை எளியோர் எனப் போற்றுகின்றோம். எளிமை என்பது போலித்தன்மைக்கும் முரண்பாடு நிறைந்த வாழ்விற்கும் எதிரானது.

1. எளிமையும் ஞானமும்:-

எளிமை என்பது அறியாமையன்று; அறி யாமை ஒரு குறைபாடு. எனெனில் சிற்றறிவு டையோர் அறியாமையை உரிமையாகக் கொள்கின்றனர் (பழ 14:18). அறியாமை நம்மைத் துன்பத்திற்குள்ளாக்கிவிடும். அஞ்சு வது அஞ்சாமை பேதைமை. நுண்ணறிவு இல்லாதவன் தீமையைக் கண்டு அஞ்சி ஒளியாமல் அழிவிற்கு உள்ளாகிறான் (22:3). கபடமற்றவன் எப்பொருளிலும் மெய்ப் பொருள் காணாமல் யார் சொல்லையும் நம்பிவிடுகிறான் (14:15). மேலும் கபடமற்ற வன் அறியாமையால் வஞ்சகர் விரித்த வலையிலே வீழ்ந்துவிடுகிறான்; அவர்கள் வஞ்சக மொழிக்கு இரையாகி விடுகிறான் (பழ 7:7; 9:16; உரோ 16:8). இறுதியில் இந்த மடைமை அவன் உயிர்குடிக்கும் நஞ்சாக மாறிவிடுகின்றது (பழ 1:32). எனவே தீமையை வெறுப்பதில் குழந்தையாகவும் அறிவுத் திறனில் முதிர்ந்தவராகவும் நாம் இருக்க வேண்டும் (1 கொரி 14:20). அழி விற்கு இட்டுச் செல்லும் அறியாமையி லிருந்து ஞானம் நம்மை மீட்கிறது. ஞானம் வழங்கும் பழமொழி சிறுவருக்கு அறிவுக் கூர்மையையும் இளைஞருக்கு அறிவாற்ற லையும் அளிக்கிறது (பழ 1:4). எனவேதான் ஞானத்தைத் தேட வேண்டும். சிறுபிள்ளைத் தனத்தை விட்டு விட வேண்டும் (1:22); சிந்தித்து, நல்லுணர்வுடன், அறிவுக் கூர்மை பெற வேண்டும் (8:5; 9:4தொ). எளிய உள்ளத்துடன் நாம் இறைவாக்கை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போது ஞானம் நம் மைச் சான்றோராக்கும் (சங் 19:7); அறி யாமை என்னும் இருள் நிறைந்த உள்ளத் திற்கு இறைமொழி என்னும் ஒளி அறிவூட்டு கிறது சங் 119:130). இறைவாக்கை எளிய உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ளாததால் ஏவாள் பாம்பின் சூழ்ச்சியினால் வீழ்ச்சிய டைந்தாள் (2 கொரி 11:3). தங்களுடைய அறிவுத்திறனில் மட்டும் நம்பிக்கை வைத்து இறைவாக்கைப் புறக்கணிப்போரிடம் இறைமக்களுக்குரிய எளிமைப் பண்பைக் காண முடியாது (மத் 11:25). எனவே இறை யரசை நாம் குழந்தை உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் (மாற் 10:15; 1 பேதுரு 2:2). இந்த விசுவாசமே இறைமக்களுக்குரிய எளிமையின் முதற் பண்பு. எளிமை என்பது பேதைமையன்று. நேர்மையும் மாசின்மை யும் எளிமையின் இருகண்களெனக் கொள்ள லாம் (பிலி 2:15). இறைவனில் நம்பிக்கை

வைத்து நேர்மையுடனும் நீதியுடனும் வாழ்ந்து காட்டிய யோபு எளிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றார் (யோபு 1:8; 2:3).

2. எளிமையும் நேரிய வாழ்வும்:-

இறைவனைத் தேடுவோர் எளிய உள்ளத்துடனும் நேர்மனத்தோடும் அவரை நாட வேண்டும் (ஞான 1:1). இருமனத்தோராய் இருத்தல் கூடாது (சங் 119:113; யாக் 4:8). எளிய மனத்துடனும் இதய நேர்மையுடனும் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் (1 அர 9:4; சீரா 1:28 தொ). சாவிற்கும் அஞ்சாது தாராள சிந்தையுடன் வாழ வேண்டும் (1 நாள் 29:17; 1 மக் 2:27 - 60). இறைவனிடத்தில் உறுதியான நிலையான நம்பிக்கை வைக்கவேண்டும் (யாக் 1:8). சொல்லிலும் செயலிலும் நெறிபிறழாத நேர்மையைக் காக்க வேண்டும் (பழ 10:9; 28:6; சீரா 2:12; 5:9).

கபடமற்ற இதயத்துடன் இறைவனின் கொடைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (அ.ப. 2:46). தனக்குள்ளதை ஒளித்து வைக்காது வள்ளன்மையுடன் மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் (உரோ 12:8). உண்மைக்குக் கீழ்ப்படிந்து சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு காட்ட வேண்டும் (1 பேதுரு 1:22). இறைவனுக்கு அஞ்சி வஞ்சமற்ற உள்ளத்துடன் தங்கள் பணியை ஆற்ற வேண்டும் (கொலோ 3:22 தொ; எபே 6:5 தொ). நேர்கொண்ட பார்வை நம் வாழ்வையே சுடர்விடும் தீபமாய் மாற்றுகின்றது (மத் 6:22; லூக் 11:34). பாம்புகளைப் போல் விவேகம் உள்ளவராயும் புறாக்களைப் போல் கபடமற்றவராயும் (மத் 10:16) இருப்பதுவே எளிமையின் இலக்கணம்.

## எறும்பு (ANT)

இது பூச்சி வகையைச் சேர்ந்ததாகும். எறும்புகள் ஒரு குடும்பமாகச் சேர்ந்து வாழ்வன. இவை ஆண், பெண் வேலைக்கார எறும்புகள் என ஒரு சமூகமாக வாழ்கின்றன. 20,000 முதல் 500,000 வரையான எறும்புகளுக்கு ஓர் இராணி எறும்பு இருந்து வழி நடத்தும். இவற்றின் வளைகள் மண்ணுக்கடியில் பாலஸ்தீனத்தின் வெப்பத்தைத் தடுக்கும் வண்ணம் பல அறைகளாக அமைந்துள்ளன. இந்த அறைகள் உணவு, குழந்தை வளர்ப்பு எனப் பலவகையில் பயன்படுகின்றன. எறும்பைப் பற்றி இரண்டே இடங்களில் தான் விவிலியத்தில் பேசப்படுகின்றது (பழ 6:6; 30:25). இவை இரண்டிலும் அவற்றின் ஞானம், முன்னறிவு, சுறுசுறுப்பு ஆகியவை பேசப்படுகின்றன. இவை மழைக் காலத்திற்குத் தேவையான உணவைக் கோடை காலத்திலே முன்னெச்சரிக்கையாகச் சேகரித்து வைக்கின்றன. இந்த விவரிப்பு அறுவடை எறும்பு என்ற ஒருவகையைக் குறிப்பதாக உள்ளது. இவை சாகுபடி செய்யும் களம், தானியக் களஞ்சியங்களுக்கருகே வசிக்கின்றன. விதைத்த நெல் முளைவிடு முன் அல்லது தானியக் களஞ்சியங்களிலிருந்து, தானியங்களைச் சேகரிக்கின்றன. இவை வெயில் நாட்களில் நனைந்த தானியங்களை வெளியில் எடுத்து வந்து உலர்த்துகின்றன.

## எனாயம் (ENAIM)

இது யூதாவின் செப்பேலாவில் உள்ளது. திமினாவுக்கும் அதுல்லாமுக்கும் இடைப்பட்ட பகுதியாகும் (ஆதி 38:14, 21). ஒரு வேளை, இதுவும் எனாம் என்ற இடமும் ஒன்றாக இருக்கலாம் (யோசு 15:34). இங்கு தான் விதவையான திமினா தன் மாமனாருக்காகக் காத்திருந்தாள். அவர், இவள் ஆலய வேசி என்று எண்ணி, விபச்சாரம் செய்தார். சரியான இடத்தை இன்னும் அறிய முடியவில்லை.

## என்லில் (ENLIL)

நிப்பூர் என்ற இடத்தில் வழிபடப்பட்ட, வான மண்டலம், காற்று ஆகியவற்றின் சுமேரியக் கடவுள். பின்பு பாபிலோனியக் கடவுளான மார்துக்கோடு அடையாளம் காட்டுகின்றனர். காண்க. பேல்.

தான் விதவையான திமினா தன் மாமனாருக் காகக் காத்திருந்தாள். அவர், இவள் ஆலய வேசி என்று எண்ணி, விபச்சாரம் செய்தார். சரியான இடத்தை இன்னும் அறிய முடிய வில்லை.

**என்லில்**(ENLIL)

நிப்பூர் என்ற இடத்தில் வழிபடப்பட்ட, வான மண்டலம், காற்று ஆகியவற்றின் சுமேரியக் கடவுள். பின்பு பாபிலோனியக் கடவுளான மார்துக்கோடு அடையாளம் காட்டுகின்றனர். காண்க. பேல்.

# ஏ

**ஏகாய் (HEGAI - அரச அந்தப்புர அண்ணகன்)**

பாரசீக அரசனது அந்தப்புரத்தைக் கவனித்துக்கொண்ட அண்ணகன். எஸ்தர், அகசுவேருசைச் சந்திக்கத் தன்னையே தயாரித்துக் கொண்டிருந்த காலத்தில், அவளது நம்பிக்கையைப் பெற்றவர் (எஸ்த 2:3.8.15).

**ஏகி (EHI)**

பென்யாமின் புதல்வர்களுள் ஒருவர் (ஆதி 46:21). உரோசோடு குறிக்கப்படுகிறார். 'அகிராம்' என்ற சொல்லுக்குப் பதிலாகத் தவறாக வந்த சொல்லாகவும் இருக்கலாம். பின்வரும் பெயரோடு சேர்த்துப் பென்யாமினின் புதல்வர்களுள் ஒருவராக எண் 26:38-இல் குறிக்கப்படும் அகிராமாக இருக்கலாம். அல்லது 1 நாள் 8:1-இல் வரும் அகராகு - ஆக இருக்கலாம்.

**ஏகூ (JEHU அவர் யாவே ஆவார்)**

1. ஓர் இறைவாக்கினர். கனானியின் மகன். இஸ்ராயேலின் அரசன் பாசாவுக்கு (900 - 877) எதிராக ஆண்டவரது தீர்ப்பை அறிவித்தவர் (1 அர 16:1.7.122). இராமோத்து - கிலயாதில் சீரியர்களுக்கு எதிராக நடந்த தாக்குதலில் இஸ்ராயேலின் கொடிய அரசன் ஆகாபோடு சேர்ந்ததற்காக யூதாவின் அரசன் யோசபாத்தைக் கண்டனம் செய்த இறைவாக்கினருக்கும் இதே பெயர் கொடுக்கப்படுகிறது (2 நாள் 19:2). அதன் விளைவாக, யோசபாத்து, யூதாவை ஆண்டவரின் வழியில் நடத்தினார். 2 நாள் 20:34-இன்படி யோசபாத்தின் செயல்களை ஏகூ தனது நாளேட்டில் எழுதிவைத்தார். அவை இஸ்ராயேல் அரசர்களின் நூலில் இடம் பெற்றுள்ளன.

2. ஓமிரி அரசமரபின் கடைசி அரசனான யோராமைக் கொன்று இரத்தக் களரியில் ஆட்சிக்கு வந்த இஸ்ராயேலின் பத்தாவது அரசர் (841 - 814 கி.மு.). இவர் யோசபாத்தின் மகனும் நிமிசியின் பேரனுமாவார் (அர 9:2,14). ஆனால் ஏகூ நிமிசியின் மகன் (அல்லது) வழித்தோன்றல் என்றும் குறிக்கப்படுகிறார் (1 அர 19:16; 2 அர 9:20; 2 நாள் 22:7).

ஏகூ முதலில் ஆகாபின் சொந்த மெய்க்காப்பாளர்களில் ஒருவர் (2 அர 9:25). இஸ்ராயேலரான நாபோத்தும் அவரது புதல்வர்களும் கொலை செய்யப்பட்டதற்குச் சாட்சியாக இருந்தவர். நாபோத்தின் திராட்சைத் தோட்டத்திற்கு ஆகாபு உரிமை கொண்டாடி எடுத்துக் கொண்டபோது ஏகூ ஆகாபோடு சமாரியாவிலிருந்து இஸ்ராயேலுக்குச் சென்றார். அங்கே திராட்சைத் தோட்டத்தில் இறைவாக்கினர் எலியாவுக்கும் ஆகாபுக்குமிடையே நடந்த நாடகப் பாணி சந்திப்பைக் கண்டார். ஆகாப்பின் இந்தக் கொடுமைகளுக்காகவும், அவரது மற்றத் தீய செயலுக்காகவும், அவனது வீட்டுக்கு எதிராக ஆண்டவரின் தீர்ப்பை இறைவாக்கினர் அறிவிக்கக் கேட்டார் (9:26; காண்க 1 அர 21:17 - 19.28 - 29). மிகுந்த ஆர்வத்தோடு ஆகாபும் அவனுடைய சீதோனிய மனைவி ஈசபேலும் தீரியன் பாகால் மற்றும் அசேராவையும் இஸ்ராயேலில் புகுத்தினர். அவற்றின் வழிபாட்டை ஊக்குவித்தனர். இறைவனது தீர்ப்பை எலியா அறிவிக்கக் கேட்டு ஆகாபு மனம் வருந்தினார். அதன் விளைவாக இறைத் தீர்ப்பு (9:21) செயல்படுவது அடுத்த தலைமுறைக்குத் தள்ளிவைக்கப்பட்டது (9:27 - 29). இராமோத்து - கிலயாத்தில் ஆகாபு கொல்லப்பட்டு அவரது இரத்தத்தை நாய்கள் நக்கியதைக் கண்டபோது ஏகூ எலியாவின் சொற்களை நினைவு கூர்ந்தார் (22:38; காண்.21:24).

14 ஆண்டுகளுக்குப் பிறகு இறைவனது தீர்ப்பு ஆகாபின் வீட்டின் மேல் செயல்படுவதற்குரிய காலம் நிறைவுற்றது. அதில் ஏகூ இறைவன் தேர்ந்தெடுத்த கருவியானார். இது கோரேபு மலையில் இறைவாக்கினர் எலியாவுக்கு முதலில் அறிவிக்கப்பட்டது (19:16 - 17). ஆனால் தைலம் பூசுதல் எலிசாவின் காலத்தில்தான் நடந்தது. சீரியாவோடு நடந்த போரில் கிடைத்த காயங்களுக்கு

ஆகாபின் மகனும், இஸ்ராயேலின் அரசனுமான யோராம் மருத்துவம் செய்து கொண்டிருந்தபோது, அவரைப் பார்க்க யூதாவின் அரசன் அகசியா இஸ்ராயேலுக்குச் சென்றார். இப்போது இஸ்ராயேலின் படைகள் இராமோத்து - கிலயாத்தில் ஏகூவின் தலைமையில் தங்கியிருந்தன. எலிசா இறைவாக்கினர் புதல்வர்களில் ஒருவரை எண்ணெய்க் குடுவையோடு அங்கு அனுப்பினர். அவரும் ஏகூவை இஸ்ராயேலின் அரசனாக, அபிடேகம் செய்தார் *(2 அர 9:1 - 10)*.

இந்த அபிடேகத்திற்குப்பின், ஏகூ தன் கூடாரத்திலிருந்து வெளிவந்தபோது இறைவாக்கினரின் நோக்கத்தைத் தன் உடன் படைத் தலைவர்களுக்குச் சொல்லத் தயங்கினார். ஆனால் இரகசியத்தை மறைத்துவைக்க முடியவில்லை. படைத்தலைவர்கள் வேகமாக ஓர் அரியணை செய்து, அதில் ஏகூவை அமரவைத்து, எக்காளம் ஊதி, அவரை அரசராக அறிவித்தனர் *(9:13)*. உடனே ஏகூ தேரில் ஏறி, இஸ்ராயேலுக்குச் சென்றார். ஏனெனில் அங்குதான் அரசன் யோராம் இருந்ததை அறிந்திருந்தார். அவர்கள் நகரை அணுகிய போது கோபுரக் காவலன் அவர்களைக் கண்டு அரசனுக்கு அறிவிக்க அவன் அவர்களது நோக்கத்தை அறிந்துவர ஆள் அனுப்பினார். அவனைப் பின்போகச் சொல்லி, ஏகூவும் அவரது ஆட்களும் முன்னேறினர். நடந்ததைக் காவலன் அரசனுக்கு அறிவிக்க, அரசன் மீண்டும் ஓர் ஆளை அனுப்பினார். அவனுக்கும் அதே கதி கிடைத்தது. ஏகூதான் வருகிறான் என்று அறிந்து, அகசியாவும் யோராமும் தேரில் ஏறி, நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தில் அவரைச் சந்தித்தனர். ஏகூவின் துரோக நோக்கத்தை அறிந்த யோராம் தப்பியோட முயற்சித்தார். அப்போது ஏகூ அம்பு எய்து யோராமின் இதயத்தை ஊடுருவச் செய்ய, யோராம் தேரிலிருந்து விழுந்து மடிந்தார் *(9:24-25)*. அகசியாவும் தப்பியோடியபோது, ஏகூவின் வீரர்கள் அவரை விரட்டிச் சென்று கொன்று போட்டனர் *(9:27; காண்க 2 நாள் 22:9)*.

ஏகூ இஸ்ராயேல் நகருக்குள் நுழைந்த போது ஈசபேல் ஏகூவைத் ''தன் தலைவனைக் கொன்ற சிமிரி'' என்று இகழ்ச்சியாக அழைத்து எதிர் கொண்டாள் *(9:27; காண்க. 1 அர 16:9.20)*. அவளைக் கீழே தள்ளிவிட அவளது அறையிலிருந்த அண்ணகர்களுக்கு ஏகூ கட்டளையிட அவள் விழுந்து அவளது இரத்தம் சுவரை நனைத்தது. மேலும் குதிரைகளின் கால்களால் அவள் மிதிக்கப்பட்டாள் *(2 அர 9:33)*. அவளது ஊழியர் அவளை அடக்கம் செய்ய வந்து பார்த்தபோது அவளது தலையும் கால்களும் கைகளில் பாதியும் மட்டும் அங்குக் கிடக்கக் கண்டனர். நாய்கள் அவளது ஊனைத் தின்றுவிட்டிருந்தன. இவ்வாறு. எலியாவின் இறைவாக்கு நிறைவேறிற்று *(9:36 - 37)*. பிறகு ஏகூ துணிந்து ஆகாபின் அரச குடும்பத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களையும் கொன்று, இஸ்ராயேலின் மேல் தன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினார் *(10:1 - 7)*. அவ்வாறே ஆகாபோடு தொடர்புடைய பெரியோர்களையும், நண்பர்களையும், குருக்களையும் கொன்று போட்டார்.

''ஆண்டவர்பால் ஆர்வத்தைச்'' செயல்படுத்த அவரது தந்திரமும் இரத்தக்களரியும் பயன்பட்டன *(10:16)*. பாகாலுக்குப் பணி செய்வதுபோல் பாவனை செய்து பாகாலுக்கு ஒரு பெரிய மகத்தான பலி ஒப்புக்கொடுக்க பாகாலின் இறைவாக்கினர்களையும் வழிபடுவோரையும் ஒன்று கூட்டினார் *(10:19)*. புனிதத்தலத்தைச் சுற்றியிருக்க எண்பது வீரர்களை நியமித்து, உள்ளிலிருந்த அனைவரையும் கொன்று தீர்த்தார். மேலும் பாகாலின் சிலையைப் புனிதத் தலத்துக்கு வெளியே கொண்டு சென்று உடைத்தெறிந்தார். பாகாலின் கோவிலை இடித்து அதை ஒதுங்கும் இடமாக்கினார். இவ்வாறு ஏகூ இஸ்ராயேலில் பாகாலின் வழிபாட்டை அழித்தார் *(10:28)*.

2 அரசர்கள் நூலில் வரும் வரலாற்று ஏடு ஏகூவின் கிளர்ச்சியையே முதன்மையாக விவரிக்கிறது. அவர் உடன்படிக்கைச் சட்டத்திற்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இல்லாவிடினும், ஆகாபின் வீட்டின் மேல் இறைவ

னது தீர்ப்பை நிறைவேற்றினார். அவனது அரசமரபு இஸ்ராயேல்மேல் நான்கு தலைமுறைகளுக்கு ஆட்சி செய்தது (871 - 752). இது வடஅரசின்மேல் ஆட்சி செய்த மற்ற எந்த அரச மரபுகளையும்விட நீண்டதாகும். ஆனால் சிரிய நாட்டு அரசன் கசயேலின் தொடர்ந்த தாக்குதலினால் இஸ்ராயேலும் யூதாவும் நலிவுறுவதை நேரடியாகக் கண்டார். 842-இல் அசீரிய அரசன் மூன்றாம் சால்மனேசர் இஸ்ராயேல்மேல் தன் அதிகாரத்தை நிறுவினான். புகழ்பெற்ற கறுப்புக்கல் தூண், ஏகூவும் சில இஸ்ராயேலர்களோடு அசீரிய அரசன்முன் கப்பம் கட்டுவதாகச் சித்தரிக்கிறது. கல்வெட்டுக்கள் ''ஒமிரியின் மகன் ஏகூ'' கப்பம் கட்டியதைக் குறித்து வைத்திருக்கின்றன. நாளாகம ஆசிரியர் ஏகூவின் ஆட்சியைப் பற்றிச் சுருக்கமாகவே எழுதுகிறார். ஏனெனில், அவர் இஸ்ராயேல் மேல் அல்லாது, யூதாவின் மேல் மட்டும் தான் ஆர்வம் காட்டுகிறார் (காண்க.2 நாள் 22:7 - 9).

3. யூதாவைச் சேர்ந்த எரகுமேலின் குடும்பம், ஓபேத்தின் மகனும் அசரியா (5)வின் தந்தையுமாவார் (1 நாள் 2:38).

4. சிமியோன் இனத்தவர். யோசிபியாவின் மகன். யூதாவின் அரசன் எசக்கியாவின் காலத்தில் இவர் ஒரு குடும்பத்தின் தலைவர் (1 நாள் 4:35).

5. பென்யாமின் இனத்தவர். அனாத்தோத்து ஊரைச் சேர்ந்தவர். சவுலின் உறவினர். சிக்கிலாக்கில் தாவீதின் படையில் சேர்ந்து கொண்டவரில் ஒருவர் (நாள் 12:3).

ஏகூது (EHUD ஒற்றுமை)

1. கெராவின் புதல்வனும், பென்யாமினின் கொள்ளுப் பேரனுமாகிய இடக்கைப் பழக்கமுள்ள ஒரு வீரர். 18 ஆண்டுகளாக மோவாபியர்களின் ஆதிக்கத்திலிருந்த தன் நாட்டு மக்களுக்கு, எகிலோன் நாட்டு அரசனை நம்பிக்கைத் துரோகமாகக் கொன்று, விடுதலையளித்தார். இவ்வாறு இரண்டு தலைமுறைகளுக்கு அமைதியளித்தார் (நீதி 3:12 - 4:1).

ஒரு காலத்தில் இஸ்ராயேல் மோவாபு அரசன் எகிலோனுக்கு அடிமைப்பட்ட நாடாக இருந்தது. கப்பம் கட்டச்சென்ற ஏகூது, இறைவனிடமிருந்து அரசனுக்கு இரகசியச் செய்தி கொண்டுவந்திருப்பதாகப் பாசாங்கு செய்தார். எத்தகைய சந்தேகமும் அற்ற அரசன், தனது மெய்க்காவல்களை வெளியே அனுப்பிவிட்டு, இறைச் செய்தியைப்பெற எழுந்தபோது, இடக்கையனான ஏகூது வலப் பக்கத்திலிருந்த கத்தியை எடுத்து அரசனது வயிற்றில் குத்தி நம்பிக்கைத் துரோகமாகக் கொன்றார் (நீதி 3:15 -23).

பின் ஏகூது செயீராவுக்குத் தப்பியோடி, ஒரு படை திரட்டி வந்து யோர்தானின் ஆற்றுத்துறைகளைக் கைப்பற்றி, மற்ற இஸ்ராயேலரோடு சேர்ந்து, தங்களைக் கொடுமைப்படுத்திய மோவாபியரைக் கொன்று தீர்த்தார். இவ்வாறு இஸ்ராயேலர்களுக்கு ஏகூது விடுதலை அளித்தாலும் அவர் நீதிபதிகளில் ஒருவராகத் தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்படவில்லை. இதற்கு இவர் எகிலோனோடு நம்பிக்கைத் துரோகமாக நடந்து கொண்டது காரணமாக இருக்கலாம். எபிரே 11-இல் இஸ்ராயேல் தீவிர வீரர்களுள் இவரைச் சேர்க்கவில்லை. ஆனால் இந்நிகழ்ச்சியுரையின் உபாகமப் பாரம்பரிய முன்னுரையும் முடிவுரையும் (நீதி 3:12-15. 28-30; 4:1) இவரை இறைவனால் ஏவப்பட்ட விடுதலை வீரராகக் காட்டுகின்றன.

2. பிலிகானின் மகனும் பென்யாமினின் கொள்ளுப் பேரனுமாவார் (1 நாள் 7:10) அல்லது செபுலோனின் கொள்ளுப் பேரனுமாவார். மூலத்தில் இந்தத் தலைமுறை அட்டவணை செபுலோனின் தலைமுறை அட்டவணையாக இருந்திருக்கலாம். செபுலோனுக்குப் பதிலாகப் பென்யாமின் என்று (1 நாள். 7:6) தவறாகக் குறிக்கப்பட்டுவிட்டதால், ஏகூதின் சகோதரன் பென்யாமினையும் சேர்த்துப் பென்யாமின் இனத்தைச் சேர்ந்த பெயர்கள் புகுத்தப்பட்டுள்ளன (பென்யாமினின் தலைமுறைப் பட்டியல் 1 நாள். 8-இல் கொடுக்கப்பட்டுள்ளது).

**ஏக்கேர்** (EKER வேர், சந்ததி)

பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பின்னால் உள்ள எரகுமேல் என்ற குலத்தைச் சேர்ந்த இராமின் மூன்றாம் மகனாவார் (1 நாள் 2:27).

**ஏங்கக்கோரே/ஏன்-கக்கோரே** (EN-HAKKO-RE - கௌதாரி ஊற்று, மன்றாடுகிறவன் ஊற்று)

இலகியிலுள்ள ஒரு நீரூற்று. அதிலிருந்து சிம்சோன் நீர் குடித்தார். சிம்சோன் மிகுந்த தாகத்தினால் ஆண்டவரை நோக்கி மன்றாடினார். எனவே, ஆண்டவர் புதுமையாக அவருக்குக் கழுதைத் தாடையின் கடைப்பல்லைத் திறந்து, அதிலிருந்து தாகத்திற்கு நீர் கொடுத்தார். சிம்சோனும் அந்த நீரைக் குடித்துப் புத்துயிர் பெற்றார் (நீதி 15:19).

**ஏங்கதா/ஏன் கதா** (EN-HADDAH - ஊற்று)

இசக்காரில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:21). அநேகமாகத் தாபோர் மலையின் கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் இக்கால ஏல்கதேதே என்ற இடத்தில் அமைந்திருந்தது எனலாம்.

**ஏங்கன்னிம்/ஏன்-கன்னிம்** (EN-GANNIM - தோட்டங்களின் ஊற்று)

1. அதுல்லாம் அருகிலுள்ள யூதா பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:21). இது இருந்த இடம் இக்காலக் கிர்பெத்து உம்மா சீனா-ஆக இருக்கலாம் என்று கூறப்பட்டாலும் பேத்து-செமேசுக்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலும் பெயிட் செமாலுக்கு அருகிலுமுள்ள ஊற்றாகிய அயின்பத்தீர் பொருத்தமான இடமாக இருக்கலாம்.

2. இசக்காரின் பகுதியில் (யோசு 19:21) கெரிசோமியர்களுக்கு லேவியர் நகரமாக அளிக்கப்பட்டது (21:29). எசுதிரலோன் சமவெளியின் தெற்கிலுள்ள இஸ்ராயேலிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலச் செனின் என்பர். ஒரு வேளை கிர்பெத்து -பெயிட் - சான் அருகிலுள்ளது என்றும் அடையாளம் காட்டுவர். எருசலேமிலிருந்தும் சமாரியாவிலிருந்தும் வரக்கூடிய முக்கிய சாலை இந்த இடத்தில்தான் சமவெளியில் நுழைகிறது. அநேகமாக ஏங்கன்னிம் என்ற பெயர் ஏன்-ஓனாம் என்ற மூலப்பெயருக்குப் பதிலாகப் பயன்பட்டுள்ளது என்று சிலர் கருதுவர். 1 நாள் 6:73-இல் இவ்விடம் ஆனேம் என்று அழைக்கப்படுகிறது.

**ஏங்காசோர்/ஏன்-காசோர்** (EN-HAZOR -ஆசோரின் ஊற்று)

நப்தலி இனத்திற்குரிய பகுதியில் உள்ள நன்கு பாதுகாக்கப்பட்ட நகர்களில் ஒன்று (யோசு 19:37). கலிலேயாவின் வடக்கு மலைப்பகுதியில் உள்ள கத்சூருக்கு அருகில் உள்ள கிர்பெத்து-கசிரே என்ற இடத்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

**ஏங்கேதி/ஏன்-கேதி** (EN-GEDI கன்றுக் குட்டி ஊற்று)

சாக்கடலின் மேற்குப் பகுதியின் மத்தியிலுள்ள ஒரு முக்கியமான பாலைவனச் சோலை. எருசலேமிற்குத் தென்கிழக்கில் 56 கி.மீ. தொலைவில் உள்ளது. 300 அல்லது 400 அடி உயரமுள்ள பாறையின் மீது அமைந்துள்ள ஊற்றிலிருந்து தனது நீரைப் பெற்றது. அங்குத் தென்னை, கமுகு, திராட்சை போன்ற மரம் கொடி வகைகள் வளர்வதற்கு உரிய சூழ்நிலை அமைந்திருந்தது (உ.ச. 1:14; சீரா 24:14). இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுவது பற்றிய எசக்கியேலின் காட்சியில் எங்கேதியிலிருந்து ஏன் எகிலாயிம் வரை மீனவர் சாக்கடலில் மீன்பிடிப்பர் என்று கூறப்பட்டுள்ளது (எச 47:10).

ஏங்கேதியின் பழங்கால இடம் தேல் எச்-யூருமில் உள்ள ஊற்றுக்குத் தென்கிழக்கில் அலீன் சிடியின் இக்காலக் குடியிருப்பின் அருகில் உள்ளது.

ஏங்கேதியில் எமோரியர்கள் குடியேறியிருந்தனர். அவர்களை ஆபிரகாம் காலத்தில் கெதொர்லாகோமேரும் அவரது கூட்டணியினரும் அடிமைப்படுத்தினர் (ஆதி 14:7; இங்குக் கசிசோன்-தாமர்தான் ஏன்கேதி). பிற்காலத்தில், யூதாவின் பாலைவன மாவட்டத்தில் இவ்வூர் சேர்க்கப்பட்டது (யோசு 15:62).

சவுலிடமிருந்து தப்பியோடிய தாவீது, சவுல் தொடர்ந்து விரட்டுவதிலிருந்து இங்குதான் பாதுகாப்புத் தேடினார் (1 சாமு 23:29). இவ்வூரின் அருகிலுள்ள ஒரு குகையில்தான் தாவீது சவுலின் ஆடையின் ஒரு துண்டைச் சவுலுக்குத் தெரியாமல் வெட்டி, அவர் உயிருக்கு ஆபத்து இழைக்காமல் விட்ட நிகழ்ச்சி நடந்தது (24:1-5).

பிற்காலத்தில் மோவாபியர், அம்மோனியர் மெகூனிமியர் ஒன்று சேர்ந்த படை ஏங்கேதியில் (உண்மையில் கசசோன்-தாமார் அருகில்) சாக்கடலைக் கடந்தபின் கூடியது (2 நாள் 20:2). சீசு ஏற்றத்தில் யூதாவின் படையை எதிர்கொள்ள வாய்ப்புக் கிடைக்குமுன்னே அவர் ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டனர் (20:23).

ஏசக்கு (ESEK அவதூறு, போர்ராட்டம்)

ஈசாக்கின் வேலைக்காரர்கள் வெட்டிய கிணறு. கெராரின் மேய்ப்பர் இந்தக் கிணறு தங்களுடையது என்று சொல்லி ஈசாக்கின் மேய்ப்பர்களோடு சச்சரவு பண்ணியதால் ஈசாக்கு அதைக் கைவிட்டார். இதிலிருந்து இப்பெயர் தோன்றியது (ஆதி 26:20).

இது எங்கு இருந்தது என்று கூற முடியாது. ஆனால் கெராருக்கும் பேத்து செபாவுக்கும் இடையில், அநேகமாய் வாடி எஸ்-செரியாவில் இருந்ததாக நம்பப்படுகிறது.

ஏசயா (ISAIAH - யாவே மீட்பாயிருக்கிறார்)

காண்க. ஏசயாவின் திருநூல்(முதலாம்): பெயரும் வாழ்வும், வரலாற்றுப் பின்னணி.

ஏசயாவின் திருநூல் (முதல்) - தூயவரின் தூதர் (BOOK OF ISAIAH)

1. முன்னுரை:-

பிற்கால இறைவாக்கினரின் நூல்கள் என்று எபிரேய விவிலியம் அழைக்கும் தொகுப்பில், ஏசயா திருநூல் முதலாவதாகும். இது பெரிய அல்லது நெடுநூல் இறைவாக்கினரின் நூல்களில், முதலாவதாகும். இந்நூல், இறைவாக்கினரின் மீட்புத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கொண்ட உன்னதமான இறைவாக்குச் செயல்களைக் கொண்டுள்ளது. இதில், ஆழ்ந்த சமய போதனையைக் காணலாம். அஃதோடு பழைய ஏற்பாட்டிலேயே இதில்தான் மிகவும் சிறந்த நயமிக்க எபிரேய இலக்கிய நடையையும் நாம் கண்டு களிக்கலாம்.

2. எத்தனை நூல்கள்?

இந்நூல் சற்றுச் சிக்கலானது. இதில் எத்தனை நூல்கள் உள்ளன? எத்தனை ஆசிரியர்கள் இந்நூலை எழுதினர்? எக்காலத்தில் இந்நூல்கள் எழுதப்பட்டன என்ற இவை போன்ற பல கேள்விகள் எழ இடமுண்டு. கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை இறைவாக்கினர் ஏசயாதான் இந்நூல் முழுமைக்கும் ஆசிரியர் என்று எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.கி.பி. 19,20-ஆம் நூற்றாண்டுகளில் இந்நூல் பற்றிப் பல ஆய்வுகள் நடந்தன. அவற்றின் விளைவாக, இப்போது, ஆய்வாளர்கள், இந்நூலை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கின்றனர். முதல் 35 அதிகாரங்கள் அடங்கிய பகுதிக்கு, ஆமோசின் மகனும் இறைவாக்கினருமான ஏசயா ஆசிரியராவார் என்பர். இப்பகுதி யூதாவின் அரசர்களான ஊசியா காலம் தொடங்கி எசக்கியாவின் காலம் வரை, இடையிட்ட காலத்தில் அறிவிக்கப்பட்டதாகக் கருதப்படும். இப்பகுதியை அடுத்து வரும் நான்கு அதிகாரங்கள், எசக்கியாவின் காலத்து வரலாற்றை விளக்குகின்றன. இப்பகுதியை எழுதியது யார் என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாது. இதை ஏசயாவின் சீடர்கள் எழுதிப் பிற்சேர்க்கையாகத் தொகுத்தனர் என்று கூறுவது பொருந்தும். ஏசயா திருநூலின் முதல் முப்பத்தொன்பது அதிகாரங்கள் அடங்கிய இப்பகுதி ''முதலாம் ஏசயா'' என்று இப்பொழுது அழைக்கப்பெறுகின்றது.

அடுத்து வரும் அதி 40-55 அடங்கிய பகுதியில், ஏசயா பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. ஆயினும் இப்பகுதிக்கும் ஏசயாவின் பெயர் சூட்டுவது வழக்கமாகும். இதில், கி.மு. 587-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தல் பற்றிய முன்னறிவிப்பு இல்லை.

மாறாக நாடு கடத்தப்படுதல் ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பகுதிக் கருப்பொருள், ஏசயா திருநூலின் முதல் பகுதியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று எப்போதும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இப்பகுதிக்குப் பெயர் தெரியாத ஓர் இறைவாக்கினர் ஆசிரியராக இருந்திருக்கலாம். இப்பகுதியை உபஏசயா அல்லது இரண்டாம் ஏசயா திருநூல் என்று ஆய்வாளர்கள் அழைப்பர்.

இறுதியாக வரும் அதி 56-66 அடங்கிய பகுதி, கி.மு. 587-இல் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் தங்கள் நாடு திரும்பிய பின் நிலவிய கால நிலையை விவரிக்கிறது. இப்பகுதியில் உள்ள இறைவாக்குளில் நெருங்கிய ஒருமைப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இப்பகுதி மூன்றாம் ஏசயா திருநூல் என்றழைக்கப்படும்.

நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் மூன்றாம் ஏசயா திருநூல் எப்போது எழுதப்பட்டது என்று துல்லியமாகக் கூறுவது கடினம். ஆயினும், பின் வரும் விளக்கம் நம்பக்கூடியதாக உள்ளது. இறைவாக்கினர் ஏசயா கி.மு. 740-690-க்கு இடையிட்ட காலத்தில் போதித்தார். அவருடைய செய்தியை அவருடைய சீடர்கள் பாடல் வடிவம் கொண்ட இறைவாக்குகளாகத் தொகுத்தனர் (ஏச 8:16). ஏசயாவுக்குப் பின்னும் அவருடைய சீடர்கள் அவரது பாணியில் தொடர்ந்து போதித்தனர். அவர்கள் தாங்களே எழுதிய இறைவாக்குகளை ஏசயாவின் மூலப்பகுதியோடு (அதி 1 - 39) சேர்த்துத் தொகுத்தனர். இந்தச் சீடர்கள் குழுவைத்தான். ''ஏசயா குழு'' என்று ஆய்வாளர்கள் அழைப்பர். இக்குழு எருசலேமின் அழிவுக்குப் பின்னும் யூதாவின் மக்கள் நாடு கடத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து செயலாற்றியது.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் கவிஞரும் இறைவாக்கினருமான பெயர் அறியப்படாத ஒருவர் தோன்றுகிறார். இவர் தனக்கே உரிய முறையில் தனித்தன்மையுடையவர். இவர் அழகிய நயமிக்க பாடல்களில் ஏசயாவின் தூதைத் தொடர்ந்துரைக்கிறார். நாடு கடத்தப்பட்ட நிலைமைக்கும், அழிவிலிருந்து திரும்பி வந்த நிலைமைக்கும் (கி.மு. 537) ஏற்றவாறு இறைவனது திருவுள்ளத்தை எடுத்துரைக்கிறார். இவரை உப-ஏசயா அல்லது இரண்டாம் ஏசயா என்றழைக்கிறோம். அதி. 40 - 55 ஆகிய பகுதி இவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இரண்டாம் ஏசயாவை அடுத்து இலக்கியச் சிறப்புடைய மற்றொரு இறைவாக்கினரோ, பல இறைவாக்கினர்களோ ஏசயாவின் தூதைத் தொடர்ந்துரைத்ததாகத் தெரிகிறது. இவர்களின் பெயர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஆய்வாளர்கள் இப்பகுதியின் ஆசிரியர்களை ''மூன்றாம் ஏசயா என்ற ஒரே தொகைச் சொல்லால் குறிப்பிடுவர். ''மூன்றாம் ஏசயா'' எருசலேமும் அதன் ஆலயமும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட பின் தூதுரைத்தார். அக்கால வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இறைவாக்குகளை எழுதினார். இஸ்ராயேலின் புதிய நிலையில் தெளிவாக அறியப்பட்ட இறைச் செய்தியின் பண்புகளை மிகவும் வலியுறுத்தினார்.

அறிஞர்கள் ஒரு சிலர் எருசலேம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட காலத்தில், 2-ஆம் ஏசயாவை எழுதியவரே, 3-ஆம் ஏசயாவையும் எழுதியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஆயினும் பழைய ஏற்பாட்டு விவிலிய நூல்கள், நாம் கொண்டிருக்கும் வடிவில் கி.மு. 400 - 200-க்கு இடையிட்ட காலத்தில்தான் இறுதிவடிவம் பெற்று எழுந்தன என்று பொதுவாகக் கூறலாம். எனவே இக்காலத்தில்தான் ஏசயாவின் இறைவாக்கு அவருடைய சீடர்களின் தொடர்வாக்குகள், பிற்காலக் காட்சியுரைகள் (அதி 24-27; 34:35) ஆகிய இவையனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரே நூலாக உருவாயின என்று கருதுவதே பொருத்தமானதாகும். இந்நிலையில், ஒரு வேளை ஏசயாவின் குழுவினர் மறைந்து விட்டிருக்கலாம். உண்மையிலேயே இறைவாக்குச் செயல் கி.பி. 400-க்குப்பின் மறைந்து விட்டதாகத் தெரிகிறது. மீண்டும் திருமுழுக்கு யோவானில்தான் தொடர்கிறது.

நாம் கொண்டிருக்கும் வடிவில் ஏசயா திரு நூலைச் சீராக்குத் திருநூல் ஆசிரியர் (கி.மு. 190) அறிந்திருப்பதாகத் தெரிகிறது (சீரா48:23-25). புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் இந்நூலில் எல்லாப் பகுதிகளையும் ''ஏசயாவின் திரு நூல்'' என்றே குறிப்பிடுகின்றனர்.

ஏசயா திருநூல் தோன்றியது பற்றி மேற் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் அறி ஞர்கள் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆயி னும் யூத, கத்தோலிக்க, பிரிவினைச் சபைக ளைச் சார்ந்த சிலர் மூன்று பகுதிகளையும் ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்று கூறு வர். 1908-இல் பாப்புவின், விவிலியக்குழு, போதிய ஆதாரமின்றி அவசர முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்தது. மேற்கூறப்பட்டவை இந்த எச்ச ரிக்கைக்கு எதிரானவை அல்ல. அதற்குப் பின் நடந்துள்ள பல இலக்கிய, தொல் பொருள், புதைபொருள் ஆய்வுகளை ஆதார மாகக் கொண்டு ஏசயா திருநூலைப் பலபேர் வெவ்வேறுபட்ட காலத்தில் எழுதியுள்ளனர் என்று அறிஞர்கள் கருதத் தொடங்கினர். இப்போது போதிய சான்றுகளையுடைய இக்கருதுகோளைப் பலரும் ஏற்றுக்கொள் கின்றனர். இப் பிரச்சனைபற்றி (2-ஆம், 3-ஆம் ஏசயா பகுதிகளுக்கு வழங்கப்படும் அறிமுகத்தில்) மேலும் சிறிது விளக்கங்க ளைக் காணலாம்.

3. பெயரும் வாழ்வும்:-

ஏசயா ''ஏசாயாகு'' என்ற எபிரேயப் பெய ரின் தமிழாக்கமாகும். இப்பெயருக்கு ''யாவேயின் மீட்பு'' அல்லது ''யாவே மீட் பாயிருக்கிறார்'' என்று பொருள் கொள்ள லாம். இப்பெயர் யூதர்களிடையே அசாதா ரணப் பெயரன்று; விவிலியத்தில் பிற இடங் களில் காணப்படுகிறது (1 நாள் 3:21; 7:3; 12:6; 23:20; 24:21-2; எஸ் 10:31).

இறைவாக்கினர் ஏசயாவைப்பற்றிச் சிறித ளவே நமக்குத்தெரியவந்துள்ளது. அதுவும் ஏச 1 - 39-இல் இவர் தம்மைப் பற்றிக் கூறுவதிலிருந்தே அறிகிறோம். இவர் கி.மு. 765-ஐ ஒட்டி எருசலேமில் பிறந்திருக்க வேண்டும். இவர் யூதா நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இவருடைய தந்தையின் பெயர் ஆமோஸ் என்றும் அறிகின்றோம். இவரு டைய தந்தை வேறு. இறைவாக்கினர் ஆமோஸ் வேறு. அரசன் ஊசியாவின் தந்தை யின் சகோதரரான அமாசியாதான் இறை வாக்கினர் ஏசயாவின் தந்தையான ஆமோஸ் என்று யூதப் பாரம்பரியம் கருதுகிறது. இக் கூற்று எவ்வளவு உண்மையானது என்று கூறுவதற்கில்லை.

ஊசியா (கி.மு. 783-42), யோத்தாம் (742-35), ஆகாசு (735-15), எசக்கியா (715-687) ஆகிய நான்கு யூத அரசர்களின் காலத்தில் ஏசயா இறைவாக்குரைத்துள்ளார். ஏச 6:1-இன்படி ஊசியா இறந்த ஆண்டில் இறை வாக்குரைக்கும் அழைப்புப் பெற்றார். அப் போது இவர் பக்தியில் சிறந்த இளைஞராக இருந்திருக்க வேண்டும். எபிரேயர்கள் தங்க ளது பெயர்களின் பொருள்பற்றி அதிகக் கவனம் செலுத்தினர். இந்த வருங்கால இறைவாக்கினர் தனது பெயரின் அடையா ளப் பொருள் பற்றி அடிக்கடி சிந்தித்திருக்க வேண்டும். யூதாவில் நிலவிய ஒழுக்கச் சீர் கேட்டை அனுபவத்தால் அறிந்திருந்தார். அதற்கு ஒரே மாற்று யாவேயின் மீட்புத் தலையீடாகும் என்பதையும் உணர்ந்திருந் தார். வட அரசாகிய இஸ்ராயேலில் இறை வாக்கினர்கள் ஆமோஸ், ஓசேயா வழியாகச் செய்ததுபோல், யூதாவில் நிலவிய சூழல் களை எதிர்த்து அறைகூவல் விடும் ஒரு பெரிய இறைவாக்கினரை யாவே தோன்றச் செய்யமாட்டாரா என்று ஏசயா ஏங்கியிருக் கக் கூடும். இத்தகைய மனநிலையுடைய ஏசயா இறைவன் அழைத்தவுடன் தூதுரைக்க ஆவலோடு முன்வந்ததை நாம் புரிந்து கொள்ள முடியும். வழிபாட்டுச் சூழ்நிலை யில் ஏசயா தனது பணிக்கு அழைக்கப்படுகி றார். ஆலயத்தில் அரியணைமீது அமர்ந்து யாவே முழுவதும் ஆட்கொள்ளும் முறை யில் காட்சி அளிக்கிறார். ஏசயாவைச் சுத்தி செய்கிறார்; அழைக்கிறார். தொடக்கக் காட் சியின் வடிவமும் பொருளும் ஏசயாவை ஆட்கொள்ளுகிறது. அது இவரது வருங்கால வாழ்வையும் போதகத்தையும் அதிகமாகப்

பாதிக்கிறது. மோசே (யாத் 3:11பின்), எரேமியா (எரே 1:6-8) ஆகியவர்களோடு ஒப்பிடும்போது ஏசயா தன் பணியை விரும்பி ஏற்றார். அவர் துணிவுள்ளவர், சுயமாகச் செயல்படுபவர் - என அறிகின்றோம். இத் தொடக்கக் காட்சிக்கு முன்னும் இவர் இறைவாக்கு உரைத்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இவர் திருமணமானவர். தனது மனைவியை இறைவாக்கினள் என்று குறிப்பிடுகிறார் (ஏச 8:3). இவருடைய இரு புதல்வர்களின் பெயர்கள் அடையாளப் பொருளுள்ளவை; இறைவாக்கு நோக்குடையவை. முதல் மகனது பெயர் ''மகளே-சலால்-காஸ்-பாஸ்'' (கொள்ளை-துரிதம்-தீவிரம்; 8:3). ''செயார் யாசுபு'' (எஞ்சியது திரும்பும் - 7:3; 10:20). இரண்டாவது மகனது பெயர்) ''மகோர்-சலால்-காஸ்-பாஸ்'' (கொள்ளை-துரிதம்-தீவிரம்; 8:3). இப்பெயர்களை ஏசயா தன் இறைவாக்குப் பணியில் அடையாளங்களாகப் பயன்படுத்துகிறார்.

இவர் செல்வாக்கு மிகுந்த உயர் குடியில் பிறந்தவர் 'என்று கூறுவர். இதற்குச் சான்றாக, இவருடைய உயரிய, எபிரேய மொழி நடை, கவி நயம், அரசியல் அறிவு, அரசவைக்கு எளிதாகச் சென்று வருவதற்குரிய உரிமைகள் ஆகியவற்றைச் கட்டிக் காட்டுவர். இதற்கு மாறாக வேறு சிலர் இவர் உயர் குடிப்பிறப்பும், உயர்ந்த மனப்பண்பும், இவர் ஆற்றிய பணியின் மேன்மையுமே இவரை உயர் குடி மகனாக்கின என்று வாதாடுவர்.

ஏசயா இஸ்ராயேலின் ஆற்றல் மிக்க கவிஞர்களில் ஒருவராவார். சிந்தனை உயர்விலும், கற்பனை வளத்திலும், கூர்ந்து நோக்கும் ஆற்றலிலும், உயிரோட்டமாக விவரிப்பதிலும், ஆழ்ந்த மன உணர்விலும் அக நேர்மையிலும் சிறந்த கவியாக விளங்குகிறார். இவர் உயரிய இலக்கிய நடையில், தமது இறைவாக்குகளைத் தந்துள்ளார். இவரது நடை தெளிவானது; நேரடியானது; மொழி சுருக்கமானது; மேன்மை மிக்கது. ஏசயா ஆழ்ந்த சமயப்பற்றுடையவர்; ஆலயத்தோடும் குருக்களோடும் நெருங்கிய தொடர்புடையவர் (6:1). ஆனால் குருக்கள் குலத்தைச் சேர்ந்தவர் அல்லர்.

ஏசயா அரசியல் வல்லுநர்; புனிதருமாவார். ''பழைய ஏற்பாட்டின் தாமஸ்மூர்'' என்றே அழைக்கலாம். அரசியலிலும் அரசர்களிடமும் செல்வாக்குடையவர். அரசியல் பணிகளில் ஆலோசனை அளித்து வந்தார் (3:1-17; 7:1-25; 8:1-8; 10:24-27; 14:24-32; 20:1-6; 30:1-18; 31:1-9; 39:1-8). அரச அவையில் சலுகை பெற்றவர். ஆனாலும் அரசவையைச் சேர்ந்தவர் அல்லர். அரசர்களை எதிர்த்து இறைவனின் உரிமைக்காகப் போராடியவர்.

நகர வாசியானாலும், ஏசயா கிராம வாழ்வையும் அறிந்திருந்தார் என்பதற்கு விலங்குகள் திரும்பி வருதல் (1:3), திராட்சை, வெள்ளரித் தோட்டக் காவல் குடிசைகளில் தனித்த வாழ்வு (1:8), திராட்சை பயிரிட வேண்டிய முறை (5:1-7), நில விளைச்சலின் கணக்கு (5:10), பயிரைச் சேதப்படுத்தும் புயல் முதலியவை பற்றிய அவருடைய குறிப்புகள் தக்க சான்றுகளாகும்.

ஏசயா ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் இறைவாக்குப் பணி புரிந்தார். இக்காலத்தில் வட அரசின்மேல் இறைவாக்கினர் ஆமோஸ் முன்னறிவித்த பேரழிவு சமாரியாவின் வீழ்ச்சியில் (கி.மு. 722-21) நிறைவேறியது. வட அரசில், ஆமோஸ் பெத்தேலில் தனது கண்டனங்களை அறிவித்தார். ஓசேயா இறைவனது அன்பை எடுத்துக் காட்டித்தூதுரைத்தார். அப்போது ஏசயா இளைஞராக இருந்திருக்க வேண்டும். இடுக்கண் மிக்க ஒரு காலக் கட்டத்தில் ஏசயா இறைவாக்குரைத்தார். இஸ்ராயேல், யூதா ஆகியவற்றின் வீழ்ச்சியையும் நாட்டின் பாவங்களுக்கு உரிய தண்டனையையும் அறிவிப்பது அவரது பணியாகும். அவர் அதைத் துணிவோடும் ஆற்றலோடும் செய்தார். இவரது சமகாலத்தவரான யூதாவைச் சேர்ந்த மீக்கா என்ற மற்றொரு இறைவாக்கினர் எருசலேமில் தனது செய்தியை மக்களுக்கு அறிவித்து வந்தார். ஆயினும், ஏசயாவும்

மீக்காவும் எப்போதாவது சந்தித்தனரா என்பதற்குரிய ஒரு சான்றுமில்லை.

இஸ்ராயேலின் இறைவாக்கினருள் ஏசயா மிகப் பெரியவர் என்றால் அது மிகையாகாது. அவர் சமயத் துறையில் தனித்தன்மையுடையவர் மட்டுமல்லர்; தன்னைப் பின்பற்றுமாறு சீடர்களைத் தூண்டுவதில் ஆற்றல் மிக்கவர். இப்படி ஏசயாவைப் பின்பற்றிய சீடர்கள் ''ஏசயாவின் குழு'' என்றழைக்கப் பட்டனர். இவர்கள் ஏசயாவின் வாக்குகளை ஒன்று சேர்த்துப் பாதுகாத்தனர். முதலாம் ஏசயாவை முடிக்கும் அதி 36-39 அடங்கிய உரைநடைப்பகுதி இக்குழுவினரின் படைப் பாகும். இவர்கள் தங்களது குருவின் மூல நூலோடு அவரது பாணியில் தாங்களே படைத்த சில பகுதிகளையும் சேர்த்துப் பதிப்பித்தனர். பாபிலோனுக்கு எதிரான இறைவாக்குகள் (அதி 13-14), அதி 24-27-இல் வரும் காட்சி, அதி 33-35-இல் வரும் பாடல் ஆகியவை இப்படிச்சேர்க்கப்பட்டவைதாம். இக்குழுவினர் ஏசயாவின் பணியைத் தொடர்ந்து நடத்தினர். அவருடைய கருத்துக்களைப் பின்பற்றி அவரது பெயரால் கி.மு. 5-ஆம் நூற்றாண்டு வரை இறைவாக்குரைத்தனர். இது ஒன்றே ஏசயாவின் உயர்வைக் கணிக்கப் போதிய சான்றாகும். ஏசயாவின் இலக்கியத் தனித்திறமை அவருக்கே உரிய ஓர் இறைவாக்கு வடிவத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இக்குழுவினர், ஏசயாவின் இறைவாக்கு வடிவினைப் பின்பற்றித் தொடர்ந்து போதித்தனர்; இவ்வடிவினிலேயே இறைவாக்குகளைத் தொடர்ந்து எழுதினர். இதனால் இந்நூலின் பல பகுதிகள் தன்மையால் மிகவும் வேறுபட்டிருப்பினும், வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டிருப்பினும் ஏசயாவின் பெயரையே தாங்கி நிற்கின்றன.

2 நாள் 26:22-இன் படி ஏசயா ஊசியா ஆட்சி பற்றிய ஒரு வரலாறு எழுதியதாகத் தெரிகிறது. ஆனால் இந்நூல் பற்றி ஒன்றும் அறிவதற்கு ஏற்ற சான்றுகள் இல்லை. மேலும் சில நூல்களையும் இவர் எழுதியதாகக் கூறுவர்.

ஏசயா எப்போது, எப்படி இறந்தார் என்று உறுதியாகக் கூறமுடியாது. பிற்கால யூதப் பாரம்பரியம், இவர், தீய அரசன் மனாசே ஆட்சிக் காலத்தில் (687-42) மரப்பொந்தில் வைத்து இரம்பத்தால் அறுக்கப்பட்டு மறைசாட்சியாக இறந்தார் என்று கூறுகிறது. இக்கூற்றை உறுதிசெய்யப்போதிய சான்றுகள் இல்லை. மனாசே அப்படிச் செய்தால், வியப்பதற்கும் ஒன்றுமில்லை. திருச்சபையின் புனிதர் நாளேட்டில் ஏசயாவின் விழா சூலைத் திங்கள் ஆறாம் நாள் கொண்டாடப்படுகிறது. அவருக்குரியது மறைசாட்சித் திருப்பலியாகும்.

கிறிஸ்துவ கலைப்படைப்புகளை விவரிக்கும் நூல் ஏசயாவின் ஆகமத்திலிருந்து பல காட்சிகளைத் தருகிறது. சான்றாகச் செராபிம்களின் காட்சி (6:1-10), எசக்கிய மன்னனுக்கு அவர் செய்த அருஞ்செயல் (அரசனைக் குணமாக்கி அவனுக்காகச் சூரிய நிழலைத் திரும்பப் போகச் செய்தது 30:1-8), அவருடைய மறைசாட்சி மரணம் ஆகியவையாகும். உரோமையிலுள்ள பிரிசிக்கில்லாவின் சுரங்கக் கல்லறையில் காணப்படும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியம் மடியில் ஒரு குழந்தையைக் கொண்டு அமர்ந்திருக்கும் ஒரு மாதின் அருகில் ஒரு மனிதன் எழுத்துச் சுருளைக் கையில் கொண்டு நிற்பதாகச் சித்தரிக்கிறது. இவ்வோவியம் ''கன்னி கருத்தரித்து ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவன் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்'' (7:14) என்று இறைவாக்குரைக்கும் ஏசயாவைக் குறிக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

4. வரலாற்றுப் பின்னணி:-

ஏசயா என்ற மனிதரையும் அவரது இறைவாக்குச் செய்திகளையும் புரிந்து கொள்ள அவரது காலத்திய வரலாற்று, அரசியல், சமூக, சமயச் சூழ்நிலைகளை நன்கு நாம் அறிய வேண்டும். ஏசயா தனது செய்தியை முதன்மையாகத் தனது காலத்தவர்களுக்கே, கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச சேர்ந்த இலக்கியத்திலும் காட்சிப்படைப்பிலும் கொடுத்தா

லும், அவர் எக்காலத்திலும் மாறாத இறை உண்மைகளை நமக்கெல்லாம் அளிக்கின்றார்.

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, வட அரசாகிய இஸ்ராயேலும் தென்னரசாகிய யூதாவும் தங்களது முன்னைப் பகைமையையும் போட்டிகளையும் போராட்டங்களையும் மறந்துவிட்டு, ஒற்றுமையாய் அமைதியாய் வாழத் தொடங்கினர். இது இரு நாட்டவரது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. அண்டை நாடுகளில் நிலவிய அரசியல் நிலையும் இரு நாடுகளின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது. தெற்கில் எகிப்து நாடு மந்த நிலையில் இருந்தது. அசீரியா நாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. அதனால் பாலஸ்தீன நாடுகளின் மீது கவனத்தைச் செலுத்த அசீரியாவுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை, இச்சூழ்நிலை இஸ்ராயேல், யூதா ஆகிய நாடுகள் வளர்ச்சியுறுவதற்குக் கால வாய்ப்பினை அளித்தது. இரண்டாம் எரொபயாமின் (கி.மு. 797-762) நீண்ட பலம் வாய்ந்த ஆட்சியின்கீழ், இஸ்ராயேல் நாட்டின் பரப்பளவு விரிந்தது. அயல் நாடுகள் செலுத்திய கப்பத்தால் நாடு இதுவரை கண்டிராத வளமுற்று விளங்கியது. இதை நாம் ஆமோஸ், ஓசேயா, மீக்கா போன்ற இறைவாக்கினர்களின் கூற்றுக்களிலிருந்தும், தொல் பொருள் ஆய்வுகளிலிருந்தும் அறிகிறோம். இந்த வளம் எரொபயாமின் மரணத்திற்குப் பின்னும் நீடித்தது.

அதே காலத்தில் யூதாவும் செழிப்புற்றது. ஊசியாவின் ஆட்சியின்கீழ் (கி.மு. 783-742) யூதா மேற்கில் பெலிஸ்தியரை வென்றது (2 நாள் 26:1-15); கிழக்கில் அம்மோனியர்களையும் அராபியர்களையும் வென்று, கப்பம் கட்டச் செய்தது. ஊசியா என்ற வேந்தன் அக்காபா வளைகுடா வரை அமைந்த நாடுகளை வென்று அரசோச்சினார். உழவுத் தொழில் வளர்ந்தது. உலோகத் தொழில் சிறப்புற்றது. இராணுவம் சீர்திருத்தப்பெற்று நாட்டின் பாதுகாப்பு நன்கு வலுவடைந்தது. எருசலேமின் பாதுகாப்பு மிகுதியானது (2 நாள் 21:1-9). கலாச்சாரமும் வளர்ந்தது. இக்காலத்தைப் பற்றி ''அவர்கள் நாடு பொன் வெள்ளியால் நிறைந்துள்ளது. அவர்களுடைய கருவூலத்திற்கு அளவு இல்லை. அவர்களது நாட்டில் குதிரைப் படையும் மிகுதி, அவர்களின் தேர்ப்படைகள் எண்ணிறந்தவை'' என்று ஏசயா (2:7-8) கூறுகிறார்.

எரொபயாம், ஊசியா ஆகியோரின் ஆட்சியின் முடிவில், அசீரிய அரசியலில் உறுதியான மாற்றம் ஏற்பட்டது. மூன்றாம் திகிலாத்துபிலேசர் (கி.மு. 745-727) அசீரிய மன்னன் ஆனார். இவரை விவிலியம் ''புல்'' என்றழைக்கிறது. உள் நாட்டுக் குழப்பங்கள் தீர்ந்தன. இவர் தலைமையில் அசீரியா மீண்டும் போர்க்கோலம் பூண்டு வெற்றிப் பாதையில் முன்னேறியது. அசீரியாவிலிருந்து வரும் பேராபத்தின் நிழல் அண்டை நாடுகள் முழுவதும் பரவியது. கண்டிப்பு மிக்க திகிலாத்து பிலேசர் தனது சேனையை மேற்கு நோக்கிச் செலுத்தி சீரியாவைக் கைப்பற்றினார். அடுத்து சீரியா-பாலஸ்தீன சிறு நாடுகளைக் கைப்பற்ற முடிவு செய்தார். அவரை எதிர்த்த நாடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. வென்ற பகுதிகளைத் தனது பேரரசின் ஒரு பகுதியாக்கிக் கொண்டார். போரில் சிறைப்பிடித்த மக்களைத் தன் அரசின் வட பகுதிகளுக்கு நாடு கடத்தித் தன் அரசின் பிற பகுதிகளிலிருந்த மக்களைக் கைப்பற்றிய நாட்டிற்குள் குடியேற்றினார்.

இரண்டாம் எரொபயாமின் ஆட்சிக்குப் பின் இஸ்ராயேலில் அரசியல் குழப்பங்களும் கொலைகளும் மிகுந்தன. புதிய அரச பரம்பரைகள் தோன்றின. எரொபயாமின் மகன் செக்கரியா (746-45) பதவிக்கு வந்த ஆறு மாதத்திற்குள் சல்லூம் என்பவனால் கொல்லப்பட்டார். உரிமையின்றி அரசைக் கைப்பற்றிய சல்லூமை மெனகேம் என்பவர் கொன்று அரசைக் கைப்பற்றினார். 2-ஆம் எரொபயாமின் காலத்தில் இஸ்ராயேலில் நிலவிய செழிப்பும் அமைதியும் மெனகேமின் (கி.மு. 745-738) காலத்தில் முடிவுக்கு வந்தன. சீரியாவுக்குக் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. மக்கள் கப்பச் சுமையால் துன்

புற்றனர். அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி கள் எழுந்தன. மெனகேமின் மகனான பெக் காகியா கி.மு. 738-37-இல் கொலையுண் டார். அசீரியருக்கு எதிரான குழுவின் தலை வரான பெக்கா (737-32) அரசரானார். தமஸ் குவைத் தலைநகராகக் கொண்ட அரமேயா நாட்டோடு கூட்டுச் சேர்ந்து அசீரிய எதிர்ப் பாளர்கள் கிளர்ச்சி செய்தனர். அந்தக் கூட்ட ணியில் யூதாவும் சேரக் கட்டாயப்படுத்தப் பட்டது. ஆனால் ஊசியாவின் மகனான யோத்தாம் (கி.மு. 742-735) அதில் சேர மறுத்து விட்டார்.

இந்நிலையில் யோத்தாமின் மகனான ஆகாசு (735-15) யூதாவின் அரசரானார். இவர் பயந்த சுபாவ முடையவர். இவரும் அசீரியர் களுக்கு எதிரான அரமேய இஸ்ராயேல் கூட்ட ணியில் சேர மறுத்து விட்டார். ஆகவே, அவர்கள் இவரை எல்லாப் பக்கங்களிலும் தாக்கினர். தெற்கிலிருந்து எதோமியரும் (2 அர 16:6; 2 நாள் 28:17), மேற்கிலிருந்து பெலிஸ்தியரும் (2 நாள் 28:18) தாக்கினர். அசீரிய எதிர்ப்புக் கூட்டணியில் சேரமறுத்த தால் தமஸ்குவின் அரசனான இரசீனும் இஸ் ராயேலிலிருந்து இராமலியாவின் மகனான பெக்காவும் வடக்கிலிருந்து தாக்கினர் (எச 7:1-12; 2 அர 16:5-6). ஆகாசை நீக்கிவிட்டுப் புதிய அரச பரம்பரையைத் தொடங்கி வைப் பதாக அச்சுறுத்தியதோடு (எச 7:6), எருச லேமை நோக்கிப் படையெடுத்தனர்; இவ் வாறு நாடு மட்டுமன்று, தாவீதின் அரச மரபும் ஆபத்திலிருந்தது. இந்நிலையில் ''ஆகாசு உள்ளமும், அவன் நாட்டினரின் உள் ளங்களும் காட்டு மரங்கள் காற்றில் அலைக் கழிக்கப்படுவது போல் அலைக்கழிக்கப்பட் டன'' (7:2) என்று ஏசயா விவரிக்கிறார். இப்போரைத்தான் சீரிய - எப்பிராமியப் போர் என்று விவிலிய ஆய்வாளர் குறிப்பிடு வர் (எச 7:1 தொ; 2 அர 16:15 தொ; 2 நாள் 28:5-15).

இந்நிலையில், ஆகாசுக்கு அசீரியர்களின் உதவியை நாடுவது ஒன்றுதான் எஞ்சியிருந் தது. மனித ஆற்றலை நம்பாது இறைவனை மட்டுமே நம்பும்படியும் அவர் மீட்பு அளிப் பார் என்றும், ஏசயா ஆகாசிடம் மன்றாடி னார். மறைபொருள் மிக்க இம்மானுவே லின் பிறப்பை முன்னறிவித்தார். இம்மானு வேலின் நூல் எனப்படும் அதி 6-12-இல் காணப்படும் இறைவாக்குகளில் பெரும்பா லானவை இக்காலத்தைச் சேர்ந்ததாகும். இறைவாக்கினரது ஆலோசனையையும் எச்ச ரிக்கைகளையும் புறக்கணித்துத் திகிலாத்து -பிலேசருடைய உதவியை ஆகாசு நாடினார். அவருக்குப் பெரும் கப்பமும் கட்டினார். இது யூதாவுக்கு அசீரியர்களுடைய பாது காப்பை அளித்தது. ஆனால், இஸ்ராயேலின் அழிவை விரைவுபடுத்தியது. கி.மு. 734-இல் திகிலாத்து-பிலேசர் பெலிஸ்தியாவை வென்று எகிப்திலிருந்து உதவி வராமல் தடுத்தார். இஸ்ராயேலின் கலிலேயா, நப்த லியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று, இஸ்ராயேலைச் சமாரியாவைச் சுற்றிய சிறு நாடாக மாற்றினார்; பலரைக் கைது செய்து அசீரியாவுக்கு இட்டுச் சென்றார்; பிற இனத் தவரை இப் பகுதியில் குடியேற்றினார்; கி.மு. 732-இல் தமஸ்குவைக் கைப்பற்றி னார். இரசீனைக் கொன்றார் மக்களை நாடு கடத்தினார். இவ்வாறு வென்ற பகுதிகளை அசீரியாவின் நான்காவது மாகாணமாக்கி னார் (2 அர 16:9; ஏச 17).

யூதாவின் இடுக்கண்மிக்க வரலாற்றில் ஏசயா செய்த முயற்சி தோல்வி அடைந்தது. இது அவரது இறைவாக்குப் பணியின் முதல் கட்டத்தின் முடிவாகும். இதற்குப்பின் பொது வாழ்விலிருந்து, அவர் பின்வாங்கி னார். வரலாற்று நிகழ்ச்சிகள் தனது போத கத்தை மெய்ப்பிக்கும் வரை, தமது இறை வாக்குகளை ஏட்டில் எழுதி முத்திரையிட் டுப் பாதுகாக்க வேண்டும் என்று தமக்கு நம்பிக்கையான சீடர்களிடம் ஒப்படைக்கி றார்.

அசீரியர்களின் உதவி யூதாவுக்குத் தற்காலி கமான பாதுகாப்பை அளித்தது. ஆனால், நாடு சுதந்தரத்தை இழந்தது. திகிலாத்தின் கல்வெட்டுகளில் ஒன்று அசீரியாவுக்குக் கப் பம் கட்டும் அரசர்களில் ஆகாசும், ஒருவர் என்று காட்டுகிறது (2 அர 16:8). இந்த

நிலையை எடுத்துக்காட்ட அசீரியர்கள் மரபுகள் எருசலேமில் புகுத்தப்பட்டன. அசீரியர்களின் வழிபாட்டு முறைகள் யூதாவில் நுழைக்கப்பட்டன. இதனால் நாட்டில் கலப்பு சமய முறைகள் தோன்றின. (2 அர 16:2-4). இவ்வாறு ஏசயா எச்சரித்தவையெல்லாம் நிறைவேறின.

இஸ்ராயேலில் பெக்காவைக் கொன்று ஓசியா என்பவர் (கி.மு. 734-24) அசீரியர்களுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசரானார். கி.மு. 728-27-இல் திகிலாத்து இறந்தார். 5-ஆம் சால்மனேசர் அசீரிய நாட்டு மன்னன் ஆனார். திகிலாத்தின் மரணத்திற்குப்பின் இஸ்ராயேலில் அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி எழுந்தது. ஓசியா கப்பம் கட்டுவதை நிறுத்தினார். இதைக் கண்டு, 5-ஆம் சால்மனேசர் சமாரியாவை முற்றுகையிட்டார். இது மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடந்தது (724-21). முற்றுகை நடந்து கொண்டிருக்கும்போது சால்மனேசர் இறந்தார். 2-ஆம் சார்கோன் அசீரிய நாட்டு மன்னன் ஆனார். இவரது ஆட்சியின் தொடக்கத்தில் சமாரியா வீழ்ந்தது. இஸ்ராயேல் முழுவதும் அழிக்கப்பட்டது. இந்த வெற்றியைக் கற்களில் பொறித்து வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டார். இஸ்ராயேல் மக்கள் வட மெசபொத்தாமியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் தங்களுடைய தனித்தன்மையை இழந்தனர். நாட்டில் எஞ்சிய மக்கள் புதிதாகக் குடியேறிய மக்களோடு கலந்து போயினர்.

ஏற்கனவே, பலவீனமான யாவே வழிபாட்டோடு பிற புறமதப் பழக்க வழக்கங்களை ஏற்றுப் புதுச் சமயங்களுக்கு அடிபணிந்தனர். இவ்வாறு சமாரியர் என்ற புதிய இனம் தோன்றியது. அரசன் ஓசியா அசீரியர்களால் கைது செய்யப்பட்டார். இவரது முடிவு பற்றி விவிலியம் எதையும் கூறவில்லை. இவ்வாறு இஸ்ராயேல் நாடும், அரச மரபும் வரலாற்றிலிருந்தே மறைந்து போயிற்று. சமாரியாவின் வீழ்ச்சிக்கு முன்னும் பின்னும்தான் ஏச ஆதி 28-32-இல் அடங்கிய இறைவாக்குகளில் பெரும்பாலானவைகளை ஏசயா கூறியிருக்க வேண்டும். இக்காலத்தில்தான், பிற நாடுகளுக்கு எதிரான இறைவாக்குகளை (14:24-23:18) ஏசயா அறிவித்திருக்க வேண்டும்.

யூதாவில், ஆகாசு கி.மு. 715-இல் இறந்தார். அவரது மகன் எசக்கியா (715-687) பதவிக்கு வந்தார். இவர் பக்தி மிக்கவர். தாவீதுக்குப் பின் இறைவன்முன் நேர்மையோடு நடந்தவர். சமாரியாவில் எஞ்சியிருந்த இஸ்ராயேலர்களை யூதாவோடும், எருசலேமிலுள்ள ஆலய வழிபாட்டோடும் ஒன்றுபடுத்த முயன்றார். இந்த முயற்சியில் வெற்றியடையவில்லை. இரு நாடுகளும் இணைந்த ஒரே அரசைப்பற்றிய இவரது கனவைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது. நாட்டு இணைப்பு முடியாதபோது சமய ஒற்றுமையிலும், சீர்திருத்தத்திலும் கவனம் செலுத்தினார்.

இக்காலத்தில், ஏசயா தனது மறைந்த வாழ்விலிருந்து வெளிவந்து பொதுவாழ்வில் மீண்டும் கலந்து கொள்கிறார். எசக்கியாவுக்கு ஆலோசகராகத் திகழ்கிறார். அசீரியர்களின் ஆட்சியால் அவதியுற்ற எசக்கியா தன்னாட்சிபெற முயன்றார். ஆனால் அசீரியாவோடு நேரடியாக மோதலைத் தவிர்த்தார். ஏனெனில், தனது மக்களின் அழிவை இவர் விரும்பவில்லை. இவரது ஆட்சியின் தொடக்க காலம் அமைதியாகச் சென்றது. இப்போது எகிப்தில் புதிய அரச மரபு தோன்றி வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. எகிப்திலிருந்து உதவி கிடைக்கும் நிலையில் பாலஸ்தீன நாடுகள் அசீரியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து எழுந்தன. யூதாவிலும், அசீரியாவுக்கு எதிராக எகிப்தின் உதவியை நாடும் அரசியல் சூழ்நிலைகளும் சூழ்ச்சிகளும் தலைதூக்கின. இக்காலத்தில் ஏசயா தனது கொள்கைக் கேற்ப, போர்க் கூட்டணியில் நம்பிக்கை வைக்காது, இறைவனில் நம்பிக்கை வைக்குமாறு யூதாவின் ஆட்சியாளரை வேண்டினார். கி.மு.71-இல் அசீரியச் சேனை மற்றப் பாலஸ்தீன நாடுகளை அழித்த போது யூதா தப்பியதாகத் தெரிகிறது.

இந்நிலையில் அசீரியாவுக்கு எதிரான பாபிலோனில் கிளர்ச்சி எழுந்தது. மெரோ தாக்கு-பலதான் என்பவனின் தலைமையின் கீழ், பாபிலோன் சிறிதுகாலத்திற்குப்பின் சுதந்தரம் பெற்றது. இவர் எசக்கியாவுக்குத் தூது அனுப்பினார் (ஏச 39). அசீரியா தன் முழு பலத்தோடு பாபிலோனைத் தாக்க முயன்றது. இந்நிலையில் 2-ஆம் சார்கோன் இறந்தார். அசீரியாவில் குழப்பம் ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் அசீரியர்களுக்கு எதிர்ப்புப் பரவியது. இதை எகிப்து தூண்டியது; படை உதவி அளிப்பதாக வாக்களித்தது. இந்தக் கூட்டணிகளுக்கு எதிராக ஏசயா எச்சரித்தார். சிறப்பாக ''மனிதன் அதன்மேல் ஊன்றிநின்றால், அவனது கையைப் பொத்துக் காயமாக்கும்; முறிந்த நாணலை ஒத்த எகிப்தை நம்பக் கூடாது'' என்று எச்சரிக்கை விடுத்தார். வரவிருக்கும் சமய அரசியல் தீங்குகளையும், இக்கூட்டணிகளின் பயனின்மையையும் எடுத்துக் கூறினார். இம்முறை ஏசயா வெற்றி பெறவில்லை, அசீரிய எதிர்ப்புக் கூட்டணியில் எசக்கியா மடத்தனமாகச் சேர்ந்து அதற்குத் தலைமை தாங்கினார் (ஏச 36). அசீரியாவுக்குக் கப்பம் கட்ட மறுத்து, எசக்கியா முற்றுகைக்குத் தயாரானார் (2 நாள் 32). சார்கோனுக்குப் பின்வந்த அசீரியா மன்னன் சனகெரிபு (கி.மு. 705-681) கிளர்ச்சியை ஊக்குவித்த எகிப்தைத் தோற்கடித்தார்; கிளர்ச்சியை நசுக்கினார்; அசீரியாவை எதிர்த்த பாலஸ்தீன நாடுகளைப் பாழ்படுத்தி அழித்தார்; யூதாவையும் முற்றுகையிட்டார். ''கூண்டில் அடைபட்ட பறவை போல்'' எசக்கியாவை அடைத்து விட்டதாகப் பெருமை பாராட்டினார். ஆனால் எசக்கியா சரணடைய மறுத்துவிட்டார். எருசலேமைக் காக்க உறுதி பூண்டார். இந்நிலையில் இறைவாக்கினர் ஏசயா அரசனுக்கு ஆறுதலும், உற்சாகமும் அளிக்கிறார்; இறைவனது உதவியையும் வாக்குறுதியையும் வழங்குகிறார். இக்காலத்திய இறைவாக்குகள் நம்பிக்கை மிக்கவையாக உள்ளன. இவற்றில், பரிசுத்த நகரைச் சனகெரிபு கைப்பற்ற, யாவே விட மாட்டார் என்ற மாற்ற முடியாத மன உறுதி மிளிருகிறது. தமதுபெயர் விளங்கும் நகரை யாவே காப்பாற்றுவார் என்று மக்களுக்கு எடுத்துக் கூறி, யாவேயில் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்க மக்களை ஏசயா தூண்டினார். ஏசயா முன்னுரைத்தது போலவே, அசீரிய சேனையில் ஒரு கொள்ளை நோய் உண்டாக, அசீரியர்கள் முற்றுகையை விடுத்துப் பின் வாங்கினர். எருசலேம் காப்பாற்றப்பட்டது.

அரசர்கள் நூல்களில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் இரு செயல்கள் தெளிவாக உள்ளன. எசக்கியா அசீரியாவுக்குப் பெரும் கப்பம் கட்டினார் (2 அர 18:13 - 16). சனகெரிபின் படைகள் பெரும் அழிவடைந்து பின்வாங்கின. முற்றுகையை விட்டு விட்டு அசீரியாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது (2 அர 19:32-37; ஏச 37:35-38). ஏசயா 36-39-இல் கூறப்பட்ட இரு செயல்களும் ஒரே படையெடுப்பில் நிகழ்ந்தவையா வெவ்வேறு படையெடுப்புகளைச் சேர்ந்தவையா என்பது வாதத்திற்குரிய வரலாற்றுப் பிரச்சினையாகும். ''இருபடையெடுப்புக் கருது கோள்'' ஏனையவற்றை விட வரலாற்றுச் சான்றுகளுக்கு நிறைவு அளிப்பதாக உள்ளது. இதை ஏற்றுக் கொள்வதே மேல். ஏச 28:7-33:24-இல் வரும் இறைவாக்குகள் இக்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

கி.மு. 700-இல் முதலாம் ஏசயா காலம் முடிவுக்கு வருகிறது. இதற்குப் பின் ஏசயாவின் பணிபற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. எருசலேம் விடுதலை ஏசயாவின் விசுவாசத்தை மெய்ப்பித்தது. இவ்வாறு நாற்பது ஆண்டு காலமாக, சோதனை மிக்க, சிக்கல்கள் மிகுந்த சூழ்நிலையில் ஏசயா தனது பணியை நிறைவேற்றினார். அவர் பெற்ற காட்சி அவரது விசுவாசத்தை உறுதிப் [illegible]. அவரது பணியை ஒழுங்குபடுத்தியது. அவருக்கு வழிகாட்டியது.

5. சமய, சமூகப் பின்னணி:-

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்ராயேலும், யூதாவும் வாணிபம், தொழில், விவசாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் பெரும் வளர்ச்சி பெற்றிருந்தன; பொருட்செல்வத்தில் உயர்ந்திருந்தன

நாள் 26). அதற்கு நேர்மாறாக அருட்செல்வத்தில் மிகவும் வீழ்ச்சியுற்றிருந்தன. புதிய பணக்கார இனம் தோன்றியது. இவர்களுக்கு உண்மையான யாவேயின் சமயம் ஓர் இடைஞ்சலாக இருந்தது. ஆகவே பொதுவாகத் தலைவர்களும் மக்களும் யாவே சமயத்தின் உண்மைப் போதகத்தைப் புறக்கணித்தனர். இந்நிலையை 2 அர 15:17; 2 நாள் 26-28 ஆகிய பகுதிகள் எடுத்துக் கூறுகின்றன. இந்த அவல நிலையை வட அரசில் ஆமோஸ், ஓசேயா ஆகிய இறைவாக்கினர்களும், யூதாவில் ஏசயா, மீக்கா போன்றவர்களும் கண்டனம் செய்து மக்களுக்கு உண்மையான சமயத்தைப் போதித்தனர்.

சமூக அரங்கில் ஏழைகள் ஒடுக்கப்பட்டனர்; சுரண்டப்பட்டனர். பணக்காரர் ஏழைகளை ஏமாற்றிப் பொருள் சேர்த்தனர். ஏழைகளும், விதவைகளும் வஞ்சிக்கப்பட்டனர். இவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. பெண்கள் செல்வ மயக்கத்தில் அலைந்தனர் (ஏச 3:16-24). மக்கள் குடிவெறியில் மிதந்தனர் (22:13). உல்லாச நாட்டம், பேராசை, எளியோரைத் துன்புறுத்துதல் போன்ற தீய பண்புகள் மலிந்து காணப்பட்டன (1:4-8; 3:1; 5:8). நீதிபதிகள் ஊழல் மிகுந்து நேர்மையில் தவறினர். எளியோர்களுக்கு எதிராகவும் செல்வர்களுக்குச் சாதகமாகவும் தீர்ப்பு அளித்தனர். பொய்க் குற்றம் சாற்றி எளியோர்களின் நிலங்களையும் உடைமைகளையும், செல்வர்கள் கவர்வதற்கு உதவினர். இந்த அநீதிகளிலிருந்து எளியோர்களுக்கு விடுதலையே இல்லை. நீதிபதிகளிடமும், தலைவர்களிடமும் குருக்களிடமும்கூட ஊழலும் கைக்கூலி முறையும், அநீதியும் வஞ்சகமும் தலைவிரித்தாடத்தொடங்கின. சமய வாழ்வில் கானானியரது வழிபாட்டு முறைகள் புகுத்தப்பட்டன. ''புனித'' இடங்களும் மேட்டுப் பகுதிகளும் மிகுந்தன. யாவேயை வழிபட்ட இடத்தில் பாகாலை வழிபடத் தொடங்கினர் (2 அர 18:4; ஏச 16:9-10). சடங்கு விபச்சாரம், நரபலி, போன்ற அருவருக்கத்தக்க சடங்குகளால் யாவேயின் வழிபாடு மாசு படுத்தப்பட்டது. அந்நிய தேவதைகளின் வழிபாடு வளரத் தொடங்கியது. சமயவாழ்வும் ஒழுக்க வாழ்வும் வேறுபடுத்தப்பட்டன. சமூக நீதி, உள்ளார்ந்த சமயம் போன்ற சீனாய் உடன்படிக்கையின் கடமைகளுக்குக் கவனம் செலுத்தாமல் வெறும் புறச்சடங்குகளைச் செய்தே யாவேயின் ஆதரவையும், பாதுகாப்பையும் பெறலாம் என்று மக்களும் தலைவர்களும் எண்ணத் தொடங்கினர்.

செல்வர்கள் ஆலயத்திலும், புனித இடங்களிலும் விரிவான, பகட்டான சமயச் சடங்குகளை நடத்தினர். இந்தப் பகட்டான், நெஞ்சநேர்மையற்ற ஆலய வழிபாடுகளால் தங்களது சமய, சமூகப் பாவங்களை மூடி மறைக்க முயன்றனர். ஆனால், உண்மையான கடவுள் பற்று இல்லை (1:10-17). வாயால் இறைவனைப் புகழ்ந்தனர். ஆனால் அவர்களது உள்ளமோ அவரிடமிருந்து வெகு தூரம் அகன்றிருந்தது (29:13). குருக்களும், வழிபாட்டு இறைவாக்கினர்களும் உண்மையான சமயத்தைப் போற்றிப் பாதுகாக்கத் தவறினர். தீமைகளைக் கண்டனம் செய்யாமல் அவற்றிற்கு இணங்கி விட்டனர். மாந்தரின் ஒழுக்க வாழ்வில் அக்கறை கொள்ளவில்லை. அவர்களே அநீதியான தீர்ப்பளித்தனர். பணம் கொடுப்பதற் கேற்ப இறைவாக்குகளைக் கூறினர். இவர்களது வழிபாட்டை நிராகரித்து இறைவன் தமது மக்களைக் குற்றம் சாட்டுவதில் ஏசயா திருநூல் உச்ச நிலையை அடைகிறது. அவர்கள் வழிபாடு வெறுமையானது. உண்மையான வழிபாட்டை அகற்றவில்லை. அநீதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் உயிரற்ற, நுணுக்கமான புறச்சடங்கு முறைகள் அகற்றப்படும் என்றும், இறைவனது கட்டளைகளை மீறுவது தண்டனை பெறாமல் போகாது என்றும், இறைவாக்கினர் பறைசாற்றுகிறார். யாவேயை நம்பாது பிற நாடுகளையும் அவர்களது படைபலத்தையும் நம்பி அவர்களோடு உடன்படிக்கை செய்தனர். இந்தப் பயனற்ற போர்க் கூட்டணிகளை எதிர்த்து ஏசயா போராடினார் (14:24-19:25). ஏசயா கூறும் திராட்சைக் கொடியின் உவமை (5:1-7) மேற்கூறப்பட்ட தீமைகளையெல்லாம் நன்கு சித்தரிக்கின்றது. இத்தீமைகளை

எதிர்த்துப் பெரும்பாலும் தனியாகவே போராடினார். இப்போராட்டத்தைத் துணிவோடு உயிர்த்துடிப்பான முறையிலே செய்தார். எசக்கியா செய்த சமய சீர்திருத்தத்திற்கு இவர்தான் பெரும்பாலும் பொறுப்பாளி என்று கூறலாம்.

6. இலக்கிய வரலாறும் பண்புகளும்:-
*ஏச 1-39*-இல் அடங்கிய முதலாம் ஏசயா என்ற இலக்கியப்பகுதி, இன்றைய நூலாக உருவெடுத்த வரலாறு நீண்டதும் சிக்கல் மிக்கதுமாகும். மற்ற இறைவாக்கினர்களைப் போலவே, ஏசயா போதிக்கவே அனுப்பப் பெற்றார்; எழுதுவதற்கு அன்று. தாம் கூறியவை உண்மையானவை என்று மெய்ப்பிக்கவே அவற்றை எழுதிப் பாதுகாக்குமாறு தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார் என்று நாம் வாசிக்கிறோம் *(8:16-17; 30:8)*. அவற்றில் சில இறைவாக்குகளையாவது பலரும் அறியும் பொருட்டு எழுதிப் பாதுகாத்தனர்.

இந்நூலிலே காணப்படும் யாவும், இறைவாக்கினர் ஏசயாவிடமிருந்துதான் தோன்றின என்று எந்த நவீன அறிஞரும் வாதிடமாட்டார். எவ்வெப் பகுதிகளை இறைவாக்கினர் எழுதினார் என்று அறுதியிட்டுக் கூறுவதிலும் ஆய்வாளர்களிடையே ஒற்றுமையில்லை. சில பகுதிகளையாவது ஏசயா எழுதினார்; அவற்றைப் பாதுகாக்கக் கட்டளையிட்டார் என்றுதான் நாம் உறுதியாகக் கூறலாம் *(ஏச 8:16; 30:8)*. அதேபோது அவர் எழுதியதாகக் கூறப்படும் சில பகுதிகள், பிற்காலத்தைச் சேர்ந்தவை என்பதும் உறுதி. இந்நூலில் காணப்படும் பல பகுதிகள் கால வரையறைப்படியோ காரண காரிய அடிப்படையிலோ ஒழுங்கு படுத்தப் படவில்லை. வெவ்வேறு காலங்களிலும் வேறுபட்ட பொருள்கள் பற்றியும் கூறப்பட்டவை, அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. இதன் விளைவாக, இவற்றை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கோ, சூழ்நிலைகளுக்கோ ஏற்றவாறு விளக்குவது கடினம். சில இடங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இறைவாக்குகள் சேர்த்துத் தரப்படுகின்றன. ஆனால் இவை அறிவிற்கு ஒத்த முறையில் தொகுக்கப்படவில்லை. இந்நூலை இறுதியாகத் தொகுத்த ஆசிரியர் தெளிவான பகுதிகளுக்கிடையில் இருக்க வேண்டிய இணைப்புப் பகுதிகளை விட்டு விட்டதாகத் தெரிகிறது. ஏசயாவின் உண்மையான இறைவாக்குகளோடு மற்றவர்கள் அமைத்த வாக்குகளை அடுத்தடுத்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இது ஆய்வாளர்களது சிரமத்தை மேலும் அதிகமாக்குகிறது. ஆகையால், இந்நூலின் கட்டமைப்பில் ஒழுங்கு இருப்பதாகக் காட்ட இயலாது.

இந்தப் பின்னணியில் இந்நூலின் தோற்ற வரலாற்றை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

முதலாம் கட்டம்:- ஏசயாவிடமிருந்து வந்ததாகக் கருதப்படும் இரு தொகுப்புக்கள்: அவை சீரியா - எப்பிராமியப் போரையொட்டிய விவரிப்புகள் *(6:1-9:6)*. அவரது பிற்காலச் செயல்கள் பற்றிய தொகுப்புகள் *(அதி 28-31)*.

இரண்டாம் கட்டம்:- இது ஏசயாவின் சீடர்களது வேலைப்பாடாகும். முற்கூறிய இரு பகுதிகளையும் காப்பாற்றினர். அவற்றோடு தங்களது குருவின் மற்ற இறைவாக்குகளையும் தொகுத்தனர். அதி *1-5; 9:7-11; 9:13-23* - இப்படிப்பட்டவை. இவை ஏசயாவோடு நெருங்கிய தொடர்புடையவை, உண்மையானவை. இவை அதி *6:1-9; 6*-இல் காணப்படும் மீட்புச் செய்தியை விவரிக்கின்றன.

மூன்றாம் கட்டம்:- நூல் பெரிதாக வளர்கிறது. ஏற்கெனவே இருந்த சிறு சிறு தொகுப்புகள் உருவெடுக்கின்றன. *2:2-4; 4:2-6; 11:10-16* ஆகியவை நூலில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அதி.12 சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. பிறரால் கூறப்பட்ட வாக்குகள் ஏற்கெனவே தொகுக்கப்பட்டவைகளோடு ஒத்திருப்பதால் இந்நூலோடு சேர்க்கப்படுகின்றன. அடுத்த பகுதியின் மையம் அதி.*28-31* சேர்க்கப்படுகின்றன. இத்தோடு *29:17-24*;

*30:18-26; 32:2-8; 33:34* ஆகிய பகுதிகள் சேர்க்கப்படுகின்றன. இறுதியாக அதி.*24-27*-இல் காணப்படும் காட்சிகள் சேர்க்கப்படுகின்றன. பின்பு, அரசர்கள் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட ஏசயாவின் வாழ்க்கைக் குறிப்புகள் சேர்க்கப்படுகின்றன *(36-39)*. இவ்வாறு இந்நூலின் தோற்ற வரலாறு நிறைவு பெறுகிறது.

இந்நூல் சமய வழிபாட்டில், சிறப்பாகச் செபக்கூட வழிபாட்டில், பெரிதும் பயன்பட்டது. இப்பழக்கம் பிற்காலத் தலைமுறைகளின் உயிர்நிலையான பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்து அவற்றிற்குரிய பதிலைக் காணவும் மக்களுக்கு உதவியது. இவ்விதம், பிற பழைய ஏற்பாட்டு நூல்களைப் போல் இந்நூலும் யூதமக்களிடையே உயிருள்ள நூலாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த பிற்சேர்க்கைகள் அதிகமாயின. மக்கள் இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். இந்நூலைப் போற்றிப் பாதுகாத்தனர். இந்நூலின் வளர்ச்சியில் பிற்காலப் பதிப்பாசிரியர்களின் பாகம் பெரிதாகும்; முக்கியமானதுமாகும். இந்நூலின் தொகுத்தல், பதிப்பித்தல் ஆகியவை எப்போது முடிவடைந்தன என்று துல்லியமாகக் கூற முடியாது. இது கி.மு. 400-க்குமுன் முடிவடைந்திருக்க முடியாது. ஏனெனில் அதி 24-27 இவ்வாண்டை ஒட்டியதாகும் என்று கருதப்படுகிறது. இந்நூல் நாம் கொண்டிருக்கும் வடிவில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்போதுதான் இந்நூலின் கிரேக்க மொழி பெயர்ப்பாகிய ''எழுபது நூல்'' தோன்றியது.

இந்நூலில் காணப்படும் மொழி நடையும், நயமும் இறைவாக்கினரின் உயர்குடிப் பிறப்பையும் புலமையையும் எடுத்துக் காட்டுகின்றன. அவரது சுடர்வீசும் நடை, வனப்புமிக்க உருவகங்கள், கவிநயம் ஆகியவற்றின் காரணமாகவே விவிலியத்திலேயே இந்நூல் தலை சிறந்த நூலாகத் திகழ்கின்றது எனலாம். ஆசிரியர் தெளிவாக, நேரடியான, சுருக்கமான பொருள் பொதிந்த, மேன்மை மிக்க இனிய நடையிலே எழுதியுள்ளார். நகர மற்றும் கிராம வாழ்விலிருந்து, இவர் எடுத்துப் பயன்படுத்தும் உருவகங்கள் உயிர்ச்சித்திரமானவை; எளிதில் மறக்க முடியாதவை. இப்பண்பில் இவருக்குப் பின் வந்த எந்த விவிலிய ஆசிரியரும் இவரை விஞ்ச முடியவில்லை.

இந்நூலின் பெரும் பகுதி எண்ணிக்கையில் வேறுபட்ட அடிகளை உடைய பாடல்களால் ஆனவை. இப்பாடல்கள் பழமொழி அமைப்புடைய சிறு பாடல்களாக இருக்கலாம் *(29:9-10)*, அல்லது பல அடிகளைக் கொண்ட மிக நீண்ட பாடலாகவும் இருக்கலாம் *(9:7-10:4)*. இப்பாடல்கள் இறைவாக்குச் செய்தியைச் சுருக்கமாகக் கொண்டுள்ளன. இப்பாடல்களின் வடிவங்கள் பல வகைப்பட்டன. உணர்ச்சி மிக்க பாடல்கள், துதிப்பாடல்கள் *(11:1-9)*, தொடர் உருவகம் *(5:1-7)*, உவமை *(28:23-29)*, கண்டனங்கள், வசைப்பாக்கள் *(14:1-23)*, சங்கீதம் *(12:1-6)* ஆகியவை இவ்வடிவங்களில் சில. இந்நூலில் காணப்படும் பொருள்கள் பல்வேறுபட்டவை. சமய வாழ்வு *(19:1-5)*, சமூக வாழ்வு *(13:1-6)*, சுயசரிதை *(6:1-13)*, அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள் *(28:1-22)*, வாக்குறுதிகள், உறுதி மொழிகள் *(35:1-10)*, செபம், நன்றியுரை போற்றுரைகள், வழிபாடு ஆகியவை இந்நூலில் காணப்படும் பொருள்களில் சில. இந்நூல் ஏசயா, அவருடைய சீடர்கள், பிற்கால இறைவாக்கினர்கள் ஆகியோர் உரைக்கும் உன்னதமான செய்திகளைக் கவர்ச்சியான, உயிர்ச்சித்திரமான, கற்பனை வளம்மிக்க நடையில் பற்பல வடிவங்களில் பாதுகாத்து நிற்கிறது. இந்நூலில் ஓரளவு உரை நடையுண்டு *(அதி 36-39)*. இவ்வாறு இந்நூல் பல வகைப்பட்ட இலக்கிய வடிவங்களைக் கொண்ட சமய இலக்கியத் தொகுப்பாகும். இந்நூலை ''ஒரு சிறு நூல் நிலையம்'' என்றே ஓர் அறிஞர் அழைக்கிறார்.

அறிவுரை எங்கே முடிகிறது? அடுத்தது, எங்கே தொடங்குகிறது? என்று வேறுபடுத்த இயலாத முறையில் இந்நூல் அமைந்துள்

ளது. இந்நூலில் காணப்படும் இறைவாக்குகள் காலவரையறைப்படி தொகுக்கப்படவில்லை. ஒவ்வொரு இறைவாக்கும் எந்த வரலாற்றுச் சூழ்நிலையில் கூறப்பட்டது என்று கூறுவது கடினம்.

இறைவனது புனிதம், பாவத்தின் கொடுமை ஆகியவை பற்றி மற்ற இறைவாக்கினர்களைப்போலவே ஏசயாவும் கூறியுள்ளார். ஆனால் அவைபற்றி ஆழ்ந்த உணர்வு கொண்டிருந்தார். மற்ற இறைவாக்கினர்களைப்போலவே கண்டனங்களை இணக்கமான சொற்களில் கூறினார். எரேமியா, எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள் நூல்களில் காணப்படும் கடுமையான சொற்றொகுதிளை இந்நூலில் அரிதாகத்தான் காண முடியும். தனது காலத்து இறைவாக்கினர்களான ஆமோஸ், ஓசேயா, மீக்கா ஆகியோரைப் போன்று ஆளுநர்களை அவர்களது சமூகப் பாவங்களுக்காகக் கண்டனம் செய்கிறார். ஆனால் அவர்களைவிடச் சூழ்நிலையின் குழப்பமிக்க சிக்கல்கள், நிலையான அரசாங்கத்தின் அவசியம் ஆகியவை பற்றி ஆழ்ந்த உணர்வு கொண்டிருந்தார். அவரது ''புதிய காலம்'' பாலையில் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையன்று; மாறாக அது ஒழுங்குமிக்க சமூக வாழ்வாகும். அதில் அதிக அமைதியும் நீதியும் மற்ற நற்பண்புகளும் சிறந்து திகழும். அப்புதிய காலம், அவரது காலத்தையும் நாட்டையும் கடந்து சென்று இறைவனது பொதுத் திட்டத்திற்கு ஏற்ற எடுத்துக் காட்டான அமைப்பாகும்.

7. வாசகம்:-

நாம் கொண்டிருக்கும் ஏசயா திருநூல் வாசகம் ''மாசரோட்டிக்'' எபிரேய வாசகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வாசகம் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். கி.பி.1947-இல், கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட சுருள்களில் ஏசயாவின் நூல் முழுவதும் காணப்படுகிறது. இச்சுருள்கள் கி.மு.100-ஐச் சார்ந்த ஏடுகள். ஏசயா நூலைப் பொருத்தமட்டும் இச்சுருள்தான் காலத்தால் முந்திய ஏட்டுச் சான்றாகும். இச்சுருளில் காணப்படும் ஏசயா திருநூல் மாசரோட்டிக் வாசகத்தின் துல்லியமான தன்மையை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாசகம் பொதுவாக நல்ல நிலையிலேயே காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் எல்லா ஏடுகளும் அங்கும் இங்குமாக ஓரளவு வேறுபடுகின்றன. இவற்றை ஆராயுங்கால் இந்நூல் பற்றிப் பல பாரம்பரியங்கள் இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இடமிருக்கிறது. எபிரேய மொழியின் தொன்மை, நாம் கொண்டிருக்கும் வரம்பிற்கு உட்பட்ட அறிவு, 400 ஆண்டு கால மொழி வளர்ச்சி, எபிரேயப் பாடலின் தன்மை ஆகியவற்றின் விளைவாக மொழி பெயர்ப்புகள் சில சமயம் தெளிவில்லாமல் இருக்கின்றன. அதி. 1-35 என்ற பகுதியில் இறைவாக்குகள் கால வரையறையுடன் கொடுக்கப்படவில்லை. ஆகவே நூலின் அமைப்பிலும் இறைவாக்குகள் பற்றிய காலக் கணிப்பிலும் வேறுபாடுகள் உள்ளன.

எபிரேய விவிலியத்தின் காலத்தால் முந்திய மொழி பெயர்ப்பு கி.மு.3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மொழிபெயர்ப்பாகும். இதை ''எழுபதுநூல்'' என்றழைக்கிறோம். ஏசயா நூலைப் பொருத்த மட்டும் இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்பு எபிரேய வாசகத்தை அடியொற்றி அமையவில்லை. இது பொழிப்புரையாக அமைந்துள்ளது. பிற்கால இறையியல் கருத்துக்களும் இம்மொழி பெயர்ப்பைப் பாதித்துள்ளன.

இக்கால மொழி பெயர்ப்புகள் மாசரோட்டிக் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டவை. இதில் சில மாற்றங்கள் ஏற்படுத்த கும்ரான் ஏடுகள் பெரிதும் உதவியுள்ளன.

8. நூலின் திட்டம்:-

I. சீரியா எப்பிராயிம் போருக்கு முற்பட்ட இறைவாக்குகள் (1:1-5:30).

அ) மக்களுக்கு எதிராக (1:1-31).

ஆ) எருசலேம், யூதா பற்றிய இறைவாக்குகள் (2:1-4:6).

இ) ஆண்டவரின் திராட்சைத் தோட்டம் (5:1-30).

II. இம்மானுவேலைப் பற்றிய நூல் (6:1-12:6).

அ. தொடக்கக் காட்சி: ஏசயாவின் அழைப்பு (6:1-13).

ஆ. இம்மானுவேல் (7:1-25).

இ. ஏசயாவின் பிள்ளைகளும் சீடர்களும் (8:1-22).

ஈ. அமைதியின் அரசர் (9:1-7).

உ. வட அரசின் வீழ்ச்சியும், அசீரியாவும் (9:7-10:34).

ஊ. இம்மானுவேலின் அரசும் பொற்கால மும் (11:1-9).

எ. சிதறிப்போன இஸ்ராயேலர் ஒன்று கூடுதல் (11:10-16).

ஏ. இறைவனின் புதிய மக்கள் பாடும் இரு பாடல்கள் (12:1-6).

III. பிற இனத்தார்க்கு எதிரான இறைவாக்குகள் (13:1-23:18).

IV. ஏசயாவின் வெளிப்பாட்டுக் காட்சிகள் (24:1-27:13).

அ. உலகம் பாழ்படுத்தப்படுதல் (24:1-23).

ஆ. நன்றிப் பாடல்கள் (25:1-12).

இ. மீட்புப் பற்றிய இறைவாக்குகள் (26:1-27:1)

ஈ. யாவேயின் புதிய திராட்சைத் தோட்டம்: யாக்கோபுக்கு மன்னிப்பு (27:2-9).

உ. பல இறைவாக்குகள் (27:10-13).

V. யாவே ஒருவரே யூதாவின் மீட்பர் (28:1-33:24).

அ. சமாரியாவுக்கும் எச்சரிக்கை (28:1-29).

ஆ. எருசலேமின்மேல் தீர்ப்பு, மீட்புக் காட்சிகள் (29:1-24).

இ. எகிப்து, அசீரியாமேல் தீர்ப்பு (30:1-31:9).

ஈ. பலவகை இறைவாக்குகள் (32:1-33:24).

VI. சீயோனின் உரிமையை மெய்ப்பிக்கிறார் யாவே (34:1-35:10).

VII. வரலாற்றுப் பிற்சேர்க்கை (30:1-39:8).

அ. சனகெரிபின் படையெடுப்பும், மரணமும் (36:1-37:38).

ஆ. எசக்கியாவின் நோயும் குணம் பெறுதலும் (38:1-20).

இ. பாபிலோனியத் தூது (39:1-8).

9. சிறப்புக் கருத்துக்கள்:-

9-அ. இறைவன்:-

இறைவன் ஒருவரே, அவர் யாவே. இஸ்ராயேலின் இறைவன் ஆண்டவராவார். சுற்றியுள்ள மக்களும், இறைவனது சட்டத்திற்கு மாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களும் வணங்கும் சிலைகள் கடவுள்கள் அல்ல. அவை மனிதனது படைப்புகள் (ஏச 2:8; 17:8; 31:7). ''இருத்தல்'' இல்லாதவை, கடவுள்கள் அல்ல; இச்சொற்றொடர்களை ஏசயா விரும்பிப் பயன்படுத்துகிறார். இஸ்ராயேலிலும் யூதாவிலும் நிலவிய சிலைவழிபாடு இறைவனுக்கு அருவருப்பைத் தருவதாகும். இது இறைவனது தண்டனையை உறுதியாகக் கொண்டு வரும் (1:29 தொ; 17:10 தொ).

9-ஆ. இறைவனது பரிசுத்தம்:-

ஏசயாவுக்கு வெளிப்படுத்தப்பட்ட இறைவனது உயர் சிறப்பான பண்பு, இறைவனது பரிசுத்தமாகும். ஏசயாவுக்கு அளிக்கப்பட்ட தொடக்கக் காட்சியில் ''செராபிம்கள்'' ''சேனைகளின் ஆண்டவர்-பரிசுத்தர்! பரிசுத்தர்!'' என்று இறைவனைப் போற்றினர் (6:3). ''இறைவன் பரிசுத்தர்'' என்ற கருத்து ஏசயாவை ஆட்கொண்டது; இக்கருத்து நூல் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. நூல் முழுவதும் இறைவாக்கினர் யாவேயை ''இஸ்ராயேலின் பரிசுத்தர்'' என்ற குறிப்பிடுகிறார். பரிசுத்தம் என்ற சொல் இறைவன், படைக்கப்பட்ட அனைத்திற்கும் அப்பாற்பட்டவர் என்று உணர்த்துகிறது. அவர் அவற்றின்மேல் ஆட்சி செய்கிறார். அவருடைய மகிமைச் சிறப்பையும், யாரும் எதுவும் அணுக முடியாத அவரது இயல்பையும் பரிசுத்தர் என்ற சொல் உணர்த்துகிறது. இப்பரிசுத்தம் அவருடைய ஒழுக்க நிறைவாகும். எந்த ஒழுக்கக் குறைவும் அவருக்குப் புறம்பானது. தமது மக்களிடம் அவர் எந்த ஒழுக்கச் சீர்கேட்டையும் குறையையும்

பொறுத்துக் கொள்ளாதவர். அவர்களது பாவங்களைக் கடுமையாகத் தண்டிக்கத் தயங்காதவர். எனினும் அவர்களை மனந் திரும்பி வருமாறு அழைக்கிறார் (1:16-20). மனம் திரும்பியவர்களைக் கருணையோடு ஏற்றுக் கொள்வார். யாவும் கடந்த இவ் விறைவன் தாம் தேர்ந்து கொண்ட மக்களின் சார்பாக வரலாற்றில் செயல்படும் இறைவ னாவார். அவர் பரிசுத்த மயமாயினும் பலவீன மிக்க மனிதன்பால் அவர் இரக்கம் காட்டி, அவனைத் தேடி அரவணைக்கும் இறைவ னைப் பற்றிய மறைபொருளைப் ''பரி சுத்தரை'' என்ற பெயர் எடுத்துக் கூறுகிறது. இதற்கேற்ப ''இஸ்ராயேலின் பரிசுத்தரை'' முதல் முறை காட்சியில் கண்டபோது, ஏசயா தனது பாவநிலையையும் தான் சேர்ந்து வாழும் மக்களின் பாவ நிலையை யும் உடனடியாக உணர்கிறார். ''ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகளைக் கொண்டவன். நான் அசுத்த உதடுகளைக் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கிறவன்'' (6:5). இறைவன் பரிசுத்த வடிவானவன்; தமது மக்களிடமிருந்தும், தமது பரிசுத்தத் திற்கு நிகரான ஒழுக்கமிக்க பரிசுத்தத்தையே கோருகிறார்.

9. இ. இறைவனும் படைப்பும்:-

இறைவன் மேன்மை அவரது படைப்பில் காணப்படுகிறது. உலகமுழுவதும் அவரது மகிமையால் நிறைந்துள்ளது (6:3). அது அவரது மேன்மையின் புறத் தோற்றமாகும். யாவே அமைதியாக அரியணையில் வீற்றி ருந்து படைப்பை ஆளுகிறார். ஆனால் அவ ரது அமைதி செயலற்ற நிலையினை உடைய தல்ல; அது செயல்மிக்க அமைதியாகும்; ஆற்றல் அமைதியாகும்; ஏனெனில் ஏசயா வுக்கும் மற்ற இறைவாக்கினர்களுக்கும் வர லாற்றின் ஒரே ஆண்டவர் யாவேதான். மனி தக் காரியங்களில் அவர் ஆற்றலோடு செய லாற்றுகிறார். ஆகையால் வரலாற்று அரசி யல் நிகழ்ச்சிகளில், தமது கரம் செயலாற்று வதை மனிதன் கண்டுணர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் ( 5:12). இக்கருத்து ஏசயா வுக்குத் தனிப்பட்ட விதத்தில் விருப்பமா னது (5:12; 10:12-23; 14:24-27; 21:11; 28:21-22).

இறைவன் வரலாற்றில் செயல்படுவதை யாவேயின் திட்டம் அல்லது பணி என்று ஏசயா அழைக்கிறார். இதில் இஸ்ராயே லோடு இறைவன் கொண்டுள்ள உறவைத் தனிப்பட்ட முறையில் இறைவாக்கினர் மன தில் கொண்டுள்ளார் என்பது இயற்கையே. ஆனால் அவரது கொள்கை இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதல்ல; சில இடங்களில், அதைப் பிற இன நாடுகளுக்குச் சிறப்பான முறையில் சாற்றிக் கூறுகிறார். இறைவனது திட்டம் காலம் முழுவதையும் உள் அடக்கிய ஒன்றாகும். தமது திட்டத்தை நிறைவேற்ற இறைவன் பல சாதனங்களைப் பயன்படுத்து கிறார் (28:23 - 29). மனித அகந்தையை அழிப்பதும் (2:9 - 11தொ; 5:15), நிகழ்ச்சிக ளின் வழியாக மனிதனது கதியின் உண்மை யான ஆண்டவர் தாமே என்று நிரூபிப்பதும், தமது மக்களையும் பிற இனத்தவரையும் அவர்களுடைய பாவங்களுக்காகத் தண் டித்து அதன் விளைவாகச் சுத்திசெய்யப் பட்ட எஞ்சியோரிலிருந்து நிறைவுடைய மக்களை தயாரிப்பதும் இறைவனது குறிக் கோளாகும் (10:15 தொ). மனிதக் காரியங்க ளில் இறைவன் பல விதங்களில் தலையிடுகி றார். அவரது இடையீட்டை ஏசயா ஆண்ட வரது நாள் என்றழைக்கிறார் (2:12; 17:20). ஆமோசைப்போல் ஏசயாவும் இந்நாளைத் தண்டனையின் நாளாகக் கருதினார். அது பெரும் புயலாகவோ நிலநடுக்கமாகவோ, எதிரிகளின் படையெடுப்பாகவோ உரு வெடுக்கலாம். அப்போது மக்கள் தாங்கள் தொழுது வந்த ஆற்றலற்ற சிலைகள் தங்க ளைக் காக்க முடியாது என்பதை உணர்வர். அவற்றை ''அகழ் எலிகளுக்கும் வௌவால் களுக்கும், வீசி எறிந்து விடுவர்'' (2:20). பாவத்தைப் பொறாத இறைவன் பரிசுத் தத்தை இந்நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கும் (5:16).

இறைவன் தமது மக்களையும், அவர்க ளது அயலாரையும் அவர்கள் பாவங்களுக் காகத் தீர்ப்பிடும்போது அத்தீர்ப்பு உலகம்

முழுவதையும் இயற்கையனைத்தையும் படைப்பு முழுவதையும் இறைவனது கடும் சீற்றத்திற்கு ஆளாக்கும்; சுத்தி செய்யப்பட்ட மனிதர் அடங்கிய உலகம் தோன்றும்போது படைப்பும் விடுதலை அடையும்.

9. ஈ. யாவேயும் இஸ்ராயேலும்:-

ஏசயா முதன்மையாகத் தனது மக்களுக்கே தூதுரைத்தார். ஆகவே அவர் இறைவனோடு இஸ்ராயேல் கொண்ட உறவுக்கு முதன்மை யான இடம் அளிப்பது இயல்பே. பிற மக்களோடு இறைவன் கொண்ட உறவு பற்றித் தற்செயலாகத்தான் குறிப்பிடுகிறார். அதுவும் இஸ்ராயேலரோடு இறைவன் கொண்ட உறவு பற்றிய கொள்கையிலிருந்து தான் வருகிறது.

வட, தென் அரசைச்சேர்ந்த தேர்ந்தெடுக் கப்பட்ட மக்களாகிய இஸ்ராயேலர், இறை வனாகிய யாவேயோடு கொண்ட உறவு, சீனாய் மலையில் மோசேயோடும் இஸ்ரா யேலரோடும் செய்து கொள்ளப்பட்டுப் பிற் காலத்தில் மோவாயிலும், செக்கேமிலும், புதுப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன் படிக்கையால் ஒழுங்கு செய்யப்பட்டதாகும்.

இந்த உடன்படிக்கையை ஏசயாவும் அவர் காலத்தவரும் நன்கு அறிந்திருந்தனர். இது, அதன் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்க ளுக்குச் செழிப்பையும் அதைப் புறக்கணிப்ப வர்களுக்குத் தண்டனையும் உறுதிப்படுத்தி யது. அதன் ஒளியில் இறைவாக்கினர்கள் இறைவனது சித்தத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினர். தங்கள் காலத்திய ஒழுக்க நிலையை எடுத்துக் கூறி அதை மதிப்பீடு செய்து, தீர்ப்பிட்டனர்.

இறைவனுக்கு அருவருப்பைத் தரக்கூடிய சிலை வழிபாடுகளால் (1:3தொ; 1:29; 2:8 - 18) இந்த உடன்படிக்கை மீறப்படுவதை ஏசயா கண்டார். தனது மக்களின் சமூக அநீதிகளைப் பார்த்தார். செல்வந்தர்கள் பணப்பைத்தியம் பிடித்துப் பாதுகாப்பற்ற விதவைகளையும், அநாதைகளையும் வாட்டி வருத்தினர். நீதிபதிகள் ஊழல் பேர் வழிகளாகத்திகழ்ந்தனர் (1:23). இவற்றை யெல்லாம் கண்டனம் செய்வதில் இறை வாக்கினர் சிறிதும் தயங்கவில்லை; வசை மாரி பொழிந்தார். யூதாவின் அகந்தையை யும், சுகபோகப் போக்கையும், மரத்துப் போன சமூக அநீதிகளையும் கண்டனம் செய்து, ஒளிவு மறைவு இன்றிப் பேசுவதில் பழைய ஏற்பாடு முழுவதிலுமே ஏசயாவை மிஞ்சியவர் எவருமில்லை எனலாம். ஊதி யத்திற்காக இறைவாக்குரைத்தலைத் தொழி லாகக் கொண்டவர்களை இவர் விட்டு வைக்கவில்லை. அவர்கள் தங்கள் காட்சியி லேயே மதிமயங்கிப் போயினர். அவர்கள் இறைவனது மீட்பளிக்கும் செய்தியை மக்க ளுக்கு எடுத்துக்கூறவில்லை.

சில இடங்களில் இறைவனோடு ஒருவர் கொள்ள வேண்டிய உறவை விட சமூக நீதியை ஏசயா அதிகமாக வலியுறுத்துவதாக ஓர் உணர்வு ஏற்படலாம். ஆனால் தனது அயலாரோடு ஒருவர் கொள்ள வேண்டிய உறவு போன்ற அடிப்படைக் காரியங்களைப் புறக்கணிக்கும் எந்தச் சமயமும் உறுதியற்ற அடிப்படையின் மேல் கட்டப்பட்டதாகும். இறைத் தந்தையோடு நாம் கொள்ள வேண் டிய உறவையும், ஆவியிலும் உண்மையி லும் இறைவனை வழிபடுவதுபற்றியும் பேசும் புனித யோவான்கூட ''நம் அய லாரை நடத்தும் விதத்தால்தான் நாம் தீர்ப்பி டப்படுவோம்'' எனப் போதிக்கிறார் (1யோவா 4:20).

இறைவனது சட்டத்தைப் புறக்கணித்தால், அதற்குரிய தண்டனையிலிருந்து தப்பமுடி யாது என ஏசயா மக்களுக்கு எடுத்துரைக்கி றார். அக்காலக் கருத்துக்களுக்கேற்ப இத் தண்டனை தற்காலிகத் தண்டனையாகத் தோற்றமளிக்கலாம். அது அசீரியாவிலிருந்து வரும் படையெடுப்பாக இருக்கலாம். இந் நாட்டைத் தம் மக்களுக்கு எதிராக இறை வன் தேர்ந்தெடுக்கலாம். ''கோடத்தில் நாம் எடுக்கும் கோல் அது. ஆத்திரத்தில் நாம் எடுக்கும் தடி அந்நாடு'' (10:5). அசீரியா வைப் பயன்படுத்தித் தம் மக்களை இறை

வன் தண்டிக்கிறார் என்ற கருத்து ஏசயாவில் அடிக்கடி காணப்படுகிறது.

அசீரியாவின் தாக்குதல் இஸ்ராயேல் யாவேயிடம் கொண்ட விசுவாசத்திற்குப் பெரும் சோதனையாக அமைந்தது. முற்காலத்தில் பலம் வாய்ந்த எகிப்திலிருந்து தம் மக்களை விடுவித்து அவர்களை இறைவன் வழிநடத்தினார். யாவே அசீரியக் கடவுள்களை விட இஸ்ராயேலரின் இறைவன் பலம் வாய்ந்தவர் என்று நிரூபிக்க வெறும் படைபலத்தை ஒட்டிய சோதனையா இத் தாக்குதல்? ஐயமறப் பல இஸ்ராயேலர்கள் இம்முறையிலேயே சிந்தித்தனர். ஆனால் ஏசயாவைப்போன்ற ஆன்மீகத்தலைவர்கள் வேகமாக மாறிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சூழ்நிலையில் வேறுபட்ட விளக்கம் அளித்தனர். இழிவும், தோல்வியும், அழிவும் பற்றுறுதியுமில்லாத மக்கள்மேல் வரும் இறைவனது தீர்ப்பாகும். அவை உயர்ந்த ஆற்றல் உடைய அசீரிய கடவுள்களுக்குமுன் சரண் அடைவதன்று. இறை அருள்பரிபாலிப்பில் அசீரியா தன் பாகத்தை நிறைவேற்றியபின் அதுவும் மற்றொரு நாட்டுக்குச் சரணடையும். இறைவாக்கினரின் இவ்வருள்வாக்கு பாலஸ்தீனத்தில் மட்டும்தான் கேட்கப்பட்டது. அங்குதான் இறைவன் தமது நோக்கத்திற்கேற்ப அவற்றைப் பயன் படுத்துகிறார் என்றும் அறிக்கையிடப்பட்டது. ஒரு விதத்தில் வரலாற்றுப் பெருமையற்ற நாடுகளான இஸ்ராயேலும், யூதாவும் எழுச்சி கொண்ட அசீரியப் படைபலத்தின்முன் சிறியவையாயினும், இவைதான் இறைவாக்கினரின் கூற்றுகளில் உலக வரலாற்றின் மையமாகத் திகழ்கின்றன. அசீரியாபோன்ற மற்றவையெல்லாம் இறைவனுடைய கருவிகளேயாகும்.

உடன்படிக்கையைப் பிரமாணிக்கமாகப் பின்பற்றாத போக்கே சமாரியாவின் அழிவுக்குக் காரணமாகும். சீர்திருத்தம் இல்லையெனில் யூதாவும் அதே முடிவைத்தான் எதிர்நோக்க வேண்டும். இஸ்ராயேலின் இறைவன் பரிசுத்தர்! நிறைவானவர்! அவருடைய மக்களே, ஏன்? யூதாவே கூட, இடைஞ்சலாக மாறினாலும், வரலாற்றில் இறைவனது திட்டம் உறுதியாக நிறைவேறியே தீரும். அவர்கள் துக்கப்பட வேண்டும்; தங்கள் வழிமுறைகளை மாற்ற வேண்டும்; நேர்மையோடும் நீதியோடும் உடன்படிக்கையைப் பற்றுறுதியோடும் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையேல், அழிவையே கூலியாகப் பெறுவர். மக்கள் அவரிடம் விசுவாசம் கொள்ள வேண்டும். அவரது பரிசுத்த சித்தத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்களது வாழ்வின் எல்லாக் கூறுகளும், இறைவனை நோக்கியே செயல்பட வேண்டும். இத்தகைய விசுவாசமின்றி உறுதியாக நிலை நிற்க முடியாது.

9. உ. எஞ்சியோர் குழு:-

இறைவன் பரிசுத்தமும் நீதியும் உள்ளவர். ஆகவே, அவர் தமது மக்களின் பாவங்களைத் தண்டிக்கிறார். இது ஏசயாவினுடைய போதகத்தின் ஒரு பகுதியாகும். அதன் மறு பகுதியோ, எஞ்சியோர்பால் அவரது இரக்கமும் பற்றுறுதியும் செயல்படுவதைக் காட்டுகிறது. பிற்பகுதி, முற்பகுதிக்கு ஈடுகட்டும் விதத்தில் அமைந்துள்ளது.

எஞ்சியோர் பற்றிய போதகம் ஏசயாவுக்கு அளிக்கப்பட்ட தொடக்கக்காட்சியிலேயே காணப்படுகிறது. பாழ்பட்ட யூதா ''தேவதாரு மரமோ, கருவாளி மரமோ, வெட்டி வீழ்த்தப்பட்டபின், அதில் அடித் துண்டு எஞ்சியிருப்பது போலவே, அதுவும் இருக்கும்..... அந்த அடித்துண்டு பரிசுத்த வித்தாகும்'' (6:13). ''எஞ்சியோர்'' பற்றிய கருத்துக்கள் நூலின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகின்றன (1:9.24.28; 4:2தொ 10:9-21; 28:5தொ; 37:3தொ).

இறைவனது தீர்ப்பு எனும் நெருப்பு சுத்தி செய்ய, மக்களின் ஒரு சிறு பகுதி, வாக்குறுதிகளுக்குப் பற்றுறுதியான - மக்களாக எழுச்சியுறுவர். யாவே, சீனாய் உடன்படிக்கையில் விளங்கும் வாக்குறுதிகளுக்கு எப்போதும் பற்றுதியானவர். அவ்வுடன்படிக்கை எஞ்சியோரைக் காப்பாற்ற அவரைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த எஞ்சியோர், தங்க

ளின் தகுதியால் அன்றி, இறைவனுடைய தேர்வால் உண்மையான இஸ்ராயேலர் ஆவார். ''எஞ்சியோர்'' சுத்தி செய்யப்பட்ட புதிய நாடாக அமைவர். இச்செய்தி இறைவனது கட்டளையால் ஏசயா தன் முதல் மகனுக்கு அளித்த 'எஞ்சியோர் திரும்புவர்' என்ற பொருளுள்ள செயார் - யாசூபு என்ற பெயரில் உள்ளடங்கியுள்ளது. இவர் ஏசயா இறைவாக்குரைக்கும் அலுவலுக்கு அழைக்கப்பட்ட சிறிது காலத்திற்குப் பின் பிறந்தவர் (7:3; 10:21தொ).

எஞ்சியோர் பரிசுத்தமாய் இருப்பர். இறைவனது பரிசுத்தம் மக்களைப் புனிதமாக்கும் (4:2தொ). இவர்கள் இறைவனுக்குப் பற்றுறுதியாக இருப்பர். தீர்ப்பு எனும் நெருப்பில் சுத்தி செய்யப்பட்ட எஞ்சியோர் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு உரிமையுடைய மரபாவார். இறைவன் அளித்த தண்டனை மனம் திருந்துவதையும், உள்ளம் தூய்மை அடைவதையும், தலையாய நோக்கமாகக் கொண்டது. இறைவன் யூதாவையோ, எருசலேமையோ, அழிக்க விரும்பவில்லை. சுத்தி செய்வதும், தீயோர் அழிந்தபின் எஞ்சியிருக்கும் பரிசுத்த மானவர்கள் வழியாகத் தமது திட்டத்தை வெற்றிகரமாகச் செயல் பெறச் செய்வதும், தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுமே இறைவனது குறிக்கோளாகும்.

''எஞ்சியோர்'' பற்றிய கருத்து ஏசயாவில் மைய இடத்தை வகிக்கிறது. எஞ்சியோர் பற்றிய போதனையின் அடிப்படையில் இறைவன் வரலாற்றைக் கட்டுப்படுத்துகிறார் என்று ஏசயா உறுதியாக விசுவசித்தார். இந்த விசுவாசம், வருங்காலம் பற்றி அவர் கொண்டிருந்த விசுவாசத்தில் வேரூன்றிய, அசைக்கமுடியாத, ஆழ்ந்த மனஉறுதியாகும். இந்த எஞ்சியோர் ''யூதா'' தான் என்று அடையாளம் காட்டும் தவற்றை, அவர் செய்யவில்லை. ஏனெனில், அவர் யூதாவை நன்கு அறிவார்.

தனது காலத்தைக் கடந்து, எஞ்சியோர் பற்றிய தனது காட்சியை விவரிக்கிறார் ஏசயா. தூரத்திலுள்ள மெசியா காலத்தை முன்னோக்கிப் பார்க்கிறார். அக்காலத்தைத் திருத்தி அமைக்கப்பட்ட தாவீதின் அரச மரபாகவும், மீண்டும் அமைக்கப்பட்ட இன்ப வனமாகவும் காட்சிவரைகிறார். எத்தகைய உருவங்களைப் பயன்படுத்தினாலும் இறைவன் தமது நோக்கத்திற்காகவே, எஞ்சியோரைக் காப்பாற்றுவார் என்ற உறுதியான விசுவாசத்திலிருந்து ஏசயாவின் வாக்குகள் வந்தன என்பது உண்மை.

எஞ்சியோரைப் பற்றிய இறையியல் 2-ஆம் 3-ஆம் ஏசயா நூல்களில் வளர்ந்து மெருகேறும். அங்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களையே ''எஞ்சியோர்'' என்று கருதுகின்றார். ஏச 11:11 இக்காலத்தைச் சேர்ந்ததாகும். ஏசயாவின் அலுவலைத் தொடர்ந்து நடத்திய அவரது சீடர் குழாம், தங்களையே யாவேயின் எஞ்சியோர் குழுவாகக் கருதியிருக்கலாம். அந்த மனப்போக்கில், யாவேயில் ஏசயா கொண்டிருந்த விசுவாசத்தை உயிருள்ள விதத்தில் காப்பாற்றுகின்றனர்.

9. ஊ. மெசியா-புதிய காலம்:-

மெசியா என்ற கருத்தை, யூதா தனது இதயத்தைக் கடினமாக்கிக் கொள்ளுதல், அதன் விளைவாகத் தண்டனை பெறுதல், ''எஞ்சியோர்'' பரிசுத்தமான நிலையினை மீண்டும் எய்துதல் ஆகியவை அடங்கிய விரிவான சூழ்நிலையில், அறிய முயல வேண்டும். இதயத்தைக் கடினமாக்குதல், அதனால் தண்டனை பெறுதல் அடங்கிய காலத்திற்குப்பின், புதிய காலம் தோன்றும். அசீரியாவின் அகந்தை தண்டிக்கப்பட்ட பின், பொற்காலம் தொடங்கும். ஆகவே, ஏசயாவின் வாக்கின்படி, மெசியா, வருங்காலத்தைச் சேர்ந்தவராவார்; ஆனால் வெகு தொலைவில் உள்ள வருங்காலத்தைச் சேர்ந்தவர் என்பது அவசியமன்று; ஏனெனில் அசீரியா தனது காலத்திலேயே அழிவதை ஏசயா எதிர்பார்க்கலாம். ஆயினும், மெசியா காலம், வருங்காலத்தைச் சேர்ந்ததாகும். தாழ்த்தப்பட்ட தாவீது மரபிலிருந்து, மெசியா தோன்றுவார் என்பது (9:1-7) 11:1-9-இலிருந்து தெளிவாகிறது. அசீரியா அழிக்

கப்படுதல், யூதா இறைவனிடம் திரும்புதல் ஆகியவைகளுக்கு முன்னமேயே இவர் குறிக்கும் காலம், ஏற்கனவே தொடங்கியுள்ளது என்று நம்புவது ஏசயாவின் பொது நோக்குக்கு முழுவதும் மாறானதாகும். இக் காரணத்திற்காக, இம்மானுவேலை, மெசியா-ஆளாக ஏசயா கருதினால், இம்மானுவேலை ஆகாசின் மகனாகவோ, சீரியா-எப்பிராயிம் போரைச் சேர்ந்த எவரையும் ஏசயா அடையாளம் கண்டுள்ளார் என்றோ ஏற்றுக் கொள்வது கடினமாகும்.

மெசியாவையும் அவர் அரசையும் இரு மேன்மைமிக்க பகுதிகளில் *(1-7; 11:1-9;* மேலும் பார்க்க *16:1-5; 32:1*தொ; *7:14*தொ) ஏசயா விவரிக்கிறார். மெசியா தாவீதின் மரபில் தோன்றுவார். ''தாவீது அரசை அவர் ஆளுவார்''. அவருக்கு ''வியத்தகு ஆலோசனையாளர்-வல்லமையுள்ள இறைவன்-முடிவில்லாத தந்தை-அமைதியின் மன்னன்'' என்ற நான்கு அடையாளப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இவை, மெசியாவையும் அவரது அரசையும் விவரிக்கின்றன. அவர் ஆண்டவரது ஆவியால் தனிப்பட்ட விதத்தில் நிரப்பப்படுவார். அதனால், அப்போது தொடங்கப்படும் புதிய காலத்தில் அவரது ஆட்சி இறைவனது திட்டத்திற்கு ஏற்றதாயிருக்கும். இப்பெயர்களும் பண்புகளும் மெசியாவுக்குக் கொடுக்கப்பட்டாலும், மெசியாவை, ஓர் இறை ஆளாக ஏசயா கருதினார் என்று கூற முடியாது. அவரது காலம், மக்களின் மொழி, நடை அடங்கிய சூழ்நிலையில், மெசியா இறை ஆள் ஆவார் என்ற முடிவு முறையானதன்று.

மெசியா இறைவனது பிரதிநிதியாக இருந்து, அவரது சித்தத்திற்கு ஏற்ப ஆளுவார். தாவீது மரபைச் சேர்ந்த இவரது அரசு, அமைதியும் நீதியும் நிறைந்ததாயிருக்கும். இறை அரசைப் பரப்புவார் *(2:1-5; 7:10-17; 9:1-7; 11:1-9; 28:16-17)*. ஏசயா காலத்தில், தாவீது அரியணையில் அமர்ந்திருந்த அரசர்களின் பிரமாணிக்கமற்ற, நிலையற்ற அரசு அகற்றப்படும். பொதுவாக, எபிரேய இறை
25 வாக்கினர் கருத்துப்படி, ''புதிய எடுத்துக் காட்டான காலம்'' யாவேயின் படைப்பாகும். யாவேயே உண்மையான அரசர்! யாவேயின் பிரநிதியாகவே, மெசியா சித்திரிக்கப்படுகிறார். மெசியாவைக் குறிக்காமலே இந்தப் புதிய காலத்தைப்பற்றிப் பேசலாம் *(எரே 31; ஏச 40-48; தானி 7)*. ஏச *9-11*-இல் குறிக்கப்படும் மெசியாவின் மகிமைமிக்க பண்புகள் இன்றியே வருங்கால அரசைப்பற்றி இடையில் எண்ணியிருக்கலாம் *(32:1*தொ*)*.

மெசியாவின் வருகையை விட, புதிய மகிமைமிக்க காலமே ஏசயாபோதனையின் மையக்கருத்தாகும். புதிய காலத்தில் உலகெங்கும் அமைதியும் நீதியும் நிலவும் *(1:25-28; 2:2-4)*. இந்த நம்பிக்கை யூத தத்துவத்திற்கு மையக்கருத்தாகும். இது பற்றிய குறிப்புகளை, நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய ஏசயாவின் நூலின் இணைந்த பகுதிகளில்காண்கின்றோம் *(11:10-12:6; 14:1-6)*. இந்த ஆசிர்பெற்ற வருங்காலம் பற்றிய கருத்து புதிய ஏற்பாட்டுக் காலம்வரை, யூதர்களின் நம்பிக்கையை வளர்த்து வந்துள்ளது. இன்றும் யூதர்களால் போற்றப்படுகின்றது.

அரச மெசியாவில் இஸ்ராயேல் வைத்த நம்பிக்கை காலப் போக்கில் ஒரு நிலையான வடிவம் கொண்டது. இந்த விசுவாசம் இறைவன் தமது ஒரே பேறான மகனை அனுப்பிய போது நிறைவேறியது என்றும், அவர் உலகம் முழுவதிலும் தமது அமைதியின், நீதியின் அரசை நிறுவினார் என்றும், நமது விசுவாச அறிக்கை கூறுகின்றது. மெசியாவைப் பற்றிக் கூறிய இறைவாக்கினர்களுள் ஏசயா மிகப் பெரியவர்.

9. எ. எருசலேம்:-

சீயோன் தனிச்சலுகை பெற்றது. அங்கிருந்து யாவே ஆட்சி செய்தார் என்ற நம்பிக்கை, ஏசயாவுக்கும் முக்கியமானதாகும். ஆனால், இறைவன் தம் மக்கள்பால் கொண்ட திட்டத்தில், பரிசுத்த நகரம் கொண்டிருந்த இடத்தை வெளிப்படுத்துவது, ஏசயாவின் அலுவலாக அமைந்தது. இறைவனது அரசில், எருசலேம் தனிச்சிறப்

பான மேன்மை கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஏனெனில், அது யாவேயின் பரிசுத்த நகராயிருந்தது. அது பற்றுறுதியற்றிருந்தாலும், அவரால் அன்பு செய்யப்பட்டது. உலகின் ஆன்மீக மையமாகக் கருதப்பட்டது. உயிருள்ள இறைவன் தாம் தங்கி உறையும் இடமாகவும் தம்மை வெளிப்படுத்தும் இடமாகவும், அதைத் தேர்ந்தெடுத்தார். இக்கருத்து மீண்டும் மீண்டும் இந்நூலில் வருகின்றது. அசீரியச் சேனையிடமிருந்து, யாவே எருசலேமைக் காப்பாற்றுவார் (10:32தொ; 31:5; 33-35). எருசலேம் முதலில் சுத்தி செய்யப்படும். பின்பு அதன் மூல பரிசுத்த நிலையில் நிறுவப்படும் (1:27). இறைவனது சட்டத்தை அறிய, மக்கள் எருசலேமில் கூடுவர் (2:2-5). மெசியாவின் காலத்தில் இறைவனது ஆசீர்பெற, மனிதர்கள் இந்நகரை நோக்கி வருவர்.

கி.மு. 701-இல் சனகெரிபு படையெடுத்த போதும், தனது தொடக்கப்பணிக்காலத்திலும் எருசலேம் அழியக்கூடுமென்று ஏசயா கருதியிருக்கலாம் (5:14-17). ஆனால், எருசலேமை யாவேயால் பாதுகாக்கக் கூடுமா என்று கி.மு.701-இல் அசீரியர்கள் சவால் விட்ட பின்புதான், எருசலேமின் பாதுகாப்புப்பற்றி ஏசயா இறைவாக்குரைத்தார் (37:21-29). கி.மு.701-இல் நடந்த நிகழ்ச்சிகள் (37:36தொ) ஏசயாவின் இறைவாக்குகள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தின. அப்போது ஆலயத்தையும் பரிசுத்த நகரையும் யாவே காப்பாற்றினார். இதிலிருந்து, எந்த வழியிலும் எக்காலத்திலும் நகரையும் ஆலயத்தையும் அழிய விட மாட்டார் யாவே என்ற கருத்து, யூத மக்களிடையே ஒரு விசுவாச சத்தியமாக மாறியது. எந்த அளவுக்கென்றால், யோயாக்கிமின் ஆட்சிக்காலத்தில் எருசலேம் அழியப் போகிறதென்று, எரேமியா போதித்த போது, அது அவரின் உயிருக்கே ஆபத்தாக அமைந்தது (எரே 126). பிற்காலத்தில் தோன்றிய இந்த விசுவாசம், மக்கள் மனந்திரும்பி யாவேயிடம் திரும்பி வருகின்ற மீட்பில் ஏசயா கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்தைத் திரித்து விட்டது போல் தோன்றியது.

எருசலேமும் தாமும் அழிந்து போவோம் என்ற சூழ்நிலையில் அவை பற்றிய இறைவாக்கினரின் மகிமை மிக்க காட்சி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். எருசலேம் மீட்க முடியாத அழிவை நோக்கிச் செல்லலாம். ஆனால், அதன்உய்வு, போர்-தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

மக்கள் எருசலேமின் வருங்காலத்தைத் தவறாக விளக்கினர். ஆனால், உண்மையான இறைவாக்கினர், ஒரே இறைவனைப் பற்றிய அறிவுக்கு, எல்லா மக்களையும் இட்டுச் செல்வதுதான், எருசலேமின் உண்மையான அழைப்பாகும் என்பதை அறிவர். இது நடக்கும்போது எல்லோரும் ஒற்றுமையாய் அமைதியுடன் வாழ்வார்கள்.

புதிய காலத்தில் பரிசுத்த நகரின் ஆன்மீக மேன்மை பற்றிய ஏசயாவின் போதகத்தை, அவரது சீடர்கள் போற்றிக்காத்து விரிவாக்கினர் (25:6-9; 26:1தொ; 35:4தொ). பிற்காலத்தில் இக்கருத்தை இறைவாக்கினர்கள் பயன்படுத்தினர்; இக்கருத்து வானிலிருந்து வரும் புதிய எருசலேம் பற்றிய யோவானது காட்சியில் நிறைவு பெறுகிறது (திருவெளி 21:2).

9. ஏ. விசுவாசம்:-

இறைவன் வலிமை மிக்கவர்; உறுதியானவர்; பற்றுறுதியானவர்; தமது வாக்குறுதிகளுக்கு எப்போதும் பிரமாணிக்கமுள்ளவர். இத்தகைய இறைவனோடு இஸ்ராயேல் உடன்படிக்கை வாயிலாகப் பிணைக்கப்பட்டிருந்தது. அரசர்களும் மக்களும் யாவேயிடம் கொண்டுள்ள உறுதியான விசுவாசமே, அவர்கள் இறைவனது அழைத்தலுக்கு அளிக்கும் சாணிக்கையாகும். காலம் எவ்வளவு இருண்டதாக இருந்தாலும், அவர்கள் யாவேயிடம் உறுதியான விசுவாசம் கொள்ள வேண்டும். இந்த விசுவாசம், வெறும் கருத்தளவிலான ஒப்புதல் மட்டுமன்று; செயல்முறையான மனஉறுதியாகும். யாவே மட்டுமே, முக்கியமானவர்; பொருட்படுத்த வேண்டியவர். விசுவாசத்தினால், ஒருவன் இறைவனது உறுதியில் பங்கு பெறுகிறான். ஒருவன் இறைவனை மட்டுமே சார்ந்து

இருக்கவேண்டும் *(8:13; 28:16; 30:15)*. அப்போது அவன் அசைவுறாத விதத்தில் நிலை பெறுவான் *(7:9)*.

இந்த விசுவாசத்தை ஏசயா மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். மனிதனை நம்பும் போர்க்கூட்டணிகளையும் அந்நியர் சேனைகள் பற்றிய அச்சத்தையும், விசுவாசி நிராகரிக்க வேண்டும். இத்தகைய விசுவாசத்தை ஆக்காசிடமிருந்து ஏசயா எதிர்பார்த்தார். ஆனால், வீணாயிற்று.

இத்தகைய விசுவாசத்திற்கு ஏசயாவே மேலான எடுத்துக்காட்டாவார். எல்லாம் இழந்த நிலையிலும், சீரிய-எப்பிராமியர் போரின் போது, அரசனும் மக்களும் ஒன்று சேர்ந்து தமது போதனையை நிராகரித்த நிலையிலுமே, ''ஆண்டவருக்காக நான் காத்திருப்பேன். அவரை நான் நம்பியிருக்கிறேன்'' *(8:17)* என்று அவரால் கூறமுடிந்தது. மனிதன் இறைவனது அருளை நிராகரித்தாலும், அவரது திட்டம் உறுதியாக நிறைவேறும் என்று ஏசயா நம்பினார். சனகெரிபு எருசலேமை முற்றுகையிட்ட இக்கட்டான காலத்திலும் கூட, இறைவனில் வைக்கும் நம்பிக்கை ஒன்றே, எருசலேமுக்கு விடுதலை அளிப்பதாகும் என்று ஆணித்தரமாக மொழிந்தார். ''கூண்டில் அடைக்கப்பட்ட பறவைபோல்'' இருந்த எசக்கியாவின் விசுவாசத்தைப் போற்றிக் காத்தனர். இத்தகைய விசுவாசம், நமது காலத்திற்கும் மிக அவசியமாகிறது.

10. ஏசயாவும் விவிலியத்தின் பிற நூல்களும்:-

விவிலியத்தில், ஏசயா திருநூல் கொண்டிருக்கும் செல்வாக்கு மிகப்பெரியது; பரந்தது. இவ்வொப்பியல் பற்றி நீண்டதோர் கட்டுரையே வரையலாம். இங்கு அதனைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவோம்:

உபாகமம், ஆமோஸ், ஓசேயா, மீக்கா போன்ற நூல்களில் காணப்படும் கருத்துக்களை, சிறப்பாக இறையொருமைக் கோட்பாடு, சமூக அநீதி போன்ற கருத்துக்களை முதலாம் ஏசயா எதிரொலிக்கிறது. முதலாம் ஏசயாவில் தென்படும் கருத்துக்கள்- செப்பானியா, நாகூம், அபக்கூக்கு, எரேமியா, எசக்கியேல், யோவேல், ஒபதியா, மலாக்கி போன்ற இறைவாக்கு நூல்களிலும், சங்கீதங்களிலும் காணப்படுகின்றன. சிறப்பாக ஏசயாவில் உள்ள ''எஞ்சியோர்'', சமூக நீதி, வரலாற்று விளக்கம், நீதித்தீர்ப்பு முதலிய கருத்துக்கள் மேற்குறிப்பிட்ட நூல்களில் சிறப்பிடம் பெறுகின்றன; வளர்ச்சியுறுகின்றன. இதனை விவிலியப் பதிப்புகளில் காணப்படும், இணைக்குறிப்பேடுகளின் துணை கொண்டு படித்துப் பயன்பெறலாம்.

புதிய ஏற்பாடு, ஏசயா நூலில் திகழும் பற்பல வாசகங்களைப் பல இடங்களில் கையாளுகிறது. புனித மத்தேயு எழுதிய நற்செய்தி, ஏசயாவின் கூற்றுக்களை அப்படியே எடுத்துக்கூறுவதில், அதிக ஆர்வம் காட்டுகிறது *(மத் 1:22-23; 4:15-16; 11:5; 13:14-15; 15:8-9; 21:33-46; 24:31)*. இவையெல்லாம் அவருடைய போதகத்திற்குச் சிறப்புத் தருவனவாகும். மற்ற நற்செய்திகளும் அப்போஸ்தலப் பணியும் உரோமையர், முதலாம் கொரிந்தியர், முதலாம் தெசலோனியர், எபேசியர், எபிரேயர் போன்ற திருமுகங்களும், திருவெளிப்பாட்டு நூலும் முதலாம் ஏசயாவைப் பல இடங்களில் அடியொற்றிச் செல்கின்றன. சில இடங்களில் வாசகங்களை அப்படியே எடுத்தாள்கின்றன. இவற்றிற்குரிய ஒப்பியலை இணைக்குறிப்பேடுகளிலிருந்து அறியலாம். இந்த ஒப்பியல் முதலாம் ஏசயா, புதிய ஏற்பாட்டில் கொண்டிருந்த செல்வாக்கை நமக்கு நன்கு எடுத்துக் காட்டும்.

ஏசயாவின் செல்வாக்கு, நமது வழிபாட்டிலும் புகுந்துள்ளது. நற்கருணைப்பலியில் ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று, இறைவனைப்போற்றும் போதெல்லாம், ஏசயாவின் தொடக்கக்காட்சி திருச்சபையின் வழிபாட்டில் கொண்டிருக்கும் செல்வாக்கையும், சிறப்பிடத்தையும் நாம் உணர்கிறோம். இக்காட்சியில், காட்சியும், அச்சம் நிறைந்த மரியாதையும், ஆராதனையும்,

பாடலும் மனத்துக்கமும், பாவ அறிக்கையும் மன்னிப்பும், தூய்மையும், இறை வார்த்தையைக் கேட்டலும், அதற்குப் பணிதலும் வெளிப்பாடும் அதற்குரிய பதிலும் உள்ளடங்கியுள்ளன. இக்காட்சி கிறிஸ்துவ அனுபவத்தின் ஒரு மாதிரிகையாகும். இறைவனது காட்சி, பாவ அறிக்கை, மன்னிப்புப் பெறுதல், பணிக்கு ஆணை பெறுதல் ஆகியவை அடங்கிய இந்த மாதிரிகை அனுபவம் கால வளர்ச்சியில், பல புனிதர்களின் வாழ்வில் நிகழ்ந்திருப்பதைக் காண்கின்றோம். இறைவனைக் காணும் போது நமது பாவ மன நிலைமையை உணர்கிறோம். இறைவனால் தூய்மை பெறும்போது அவரது பணிக்கு ஆயத்தமாகிறோம்.

11. இக்காலத்தில்:-

ஏசயாவின் நோக்கில், மனிதன் இறை உதவி பெறாது தனது சொந்த அறிவின்மேல் நம்பிக்கை கொண்டுள்ளான் (ஏச 5:21); தனது வெற்றிகளிலும் படைப்புகளிலும் பெருமை கொள்கிறான் (2:7). அகந்தை எனும் தலையான பாவம் பல தலைகளைக் கொண்ட பாம்புபோல், பலவடிவம் எடுக்கிறது. இறைவனிலும் அவரது செயல்களிலும், விசுவாசமின்மையும் சமயப் பற்றின்மையும் மக்களிடையே பரவிக் கிடக்கின்றன (5:19). ஒழுக்க வாழ்வில் இருளும் குழப்பமும் மிகுந்துள்ளன. மக்கள் நன்மைக்கும், தீமைக்கும் வேறுபாடு காணமுடியாத பரிதாப நிலையில் உள்ளனர் (5:20); மூடப் பழக்க வழக்கங்களும் சிலைவழிபாடும் மிகுந்துவிட்டன. குறிசொல்பவர்களையும், சோதிடர்களையும் மக்கள் ஆர்வத்தோடு நாடுகின்றனர். கம்பங்களுக்கு முன்னும், கற்களுக்கு முன்னும் தலைவணங்குகின்றனர் (2:6-8). உடல் இச்சைகளை நிறைவுபடுத்துவதில் கருத்தாய் இருக்கின்றனர். உலகில் இறைவன் என்ன செய்கிறார் என்று புரியாது, நாள் முழுவதும் குடித்துப் போக்குகின்றனர் (5:11-12). பகட்டும் சிற்றின்பப் போக்குமுடைய பெண்டிர் உடல்பருத்துப் பகட்டான ஆடை உடுத்தி அணிகலன்களால் ஒப்பனை செய்து, கள்ளவிழி கொண்டு நோக்கி, சுகபோகத்தையும் இன்பத்தையும் தேடி அலைகின்றனர் (3:16-4:1). இவ்வாறு பல வடிவம் எடுக்க வல்ல அகந்தை அழிவுக்கே இட்டுச்செல்கிறது என்று ஏசயா எச்சரிக்கை விடுக்கிறார். அதே தொனியில் மக்களிடையே நிலவிய சமூக அநீதியையும் கண்டனம் செய்கிறார். இதையே ஏச 5:1-7-இல் வரும் உவமை எடுத்துக்கூறுகிறது.

மேற்கூறப்பட்டவை ஏசயா தனது காலத்தைப்பற்றிக் கூறினாலும் இக்காலத்துக்கும் முற்றிலும் ஏற்றவையே. ஏன்? மனிதனது அகந்தை பற்றிய அவரது கண்டனம் எக்காலத்திற்குமே பொருந்தும். ஏச 10-ஆம் அதிகாரத்தில் வரும் பாடல், வரலாறு பற்றிய ஏசயாவின் விளக்கமாக அமைந்துள்ளது. வரலாற்று நிகழ்ச்சிகள் எவ்வளவு முரண்பாடாகத் தோன்றினாலும், உலகிற்கு முதலும் முடிவுமாக இருக்கும் இறைவனுக்கே அவை என்றும் கட்டுப்பட்டவை. மனிதக் காரியங்களில் அவரே முழு மேலாண்மை கொண்டவர். தமது குறிக்கோளை நிறைவேற்ற அவர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தித் தமது திட்டத்தை நிறைவேற்றுகிறார். தங்கள் சுயபலத்தை நம்பித் தங்களை அரசர்களுக்கு அரசர் என்று அழைத்து (10:8), தங்களையே வழிபட்டுக் கொள்பவர்களையும், அவர்களது திட்டத்தையும்கூடப் பயன்படுத்தித் தமது தீர்ப்பையும் இரக்கத்தையும் செயல்படுத்துகிறார். ஏனெனில் அவரே உண்மையான அரசர்களுக்கு அரசர், காலங்கள் யாவும் அவருடையன; ஆட்சியும் மாட்சியும் அவருக்கேஉரியன. இந்த உண்மையான அறிவும் அனுபவமும் அமைதிமிக்க நம்பிக்கைக்கும், உறுதியான விசுவாசத்திற்கும் இட்டுச் செல்லும். இதையே ஏசயா தமது கால மக்களுக்கும் எடுத்துக் கூறுகிறார். இக்காலத்துக்கும் பொருந்தும் வண்ணம் எடுத்தியம்புகிறார்.

## ஏசயாவின் திருநூல்(இரண்டாம்) - ஆறுதலின் நூல்(ISAIAH-II)

1. வரலாற்றுப் பின்னணி:-

மேற்காசிய வரலாற்றில், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், பாபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டு நெபுக்கதுனேசார் ஒரு

பேரரசை அமைத்தார். பல நாடுகளை வென்று தனது பேரரசோடு சேர்த்துக் கொண்டார். அப்படிப்பட்ட நாடுகளில் யூதாவும் ஒன்றாகும். கி.மு. 587-இல் எருசலேம் அழிந்தது. அதன் மக்களில் பலரைக் கைதியாக்கி நெபுக்கதுனேசார் தன் நாட்டிற்குக் கூட்டிச் சென்றார். சீரோடும் சிறப்போடும் ஆண்டு, அம்மன்னன் கி.மு. 565-இல் இறந்தார். பாபிலோனியப் பேரரசின் உயிர்த்துடிப்பு அவரோடு முடிவுக்கு வந்தது எனலாம். அவருக்குப் பின் மன்னர்களாக வந்த எவில்-மெரோதாக்கு, நெரிக்லிஸ்ஸார், லாபசி-மார்தாக்கு, நாபோனித்து, பல்தாஸ்ஸார் ஆகியோர் அப்பேரரசைக் கட்டி ஆளும் ஆற்றல் அற்றவர்கள். இவர்களின் விவேகமற்ற ஆட்சியில் நாடு நாளுக்குநாள் தானாகவே சிதைந்து போய்க்கொண்டிருந்தது. பேரரசு அழிவை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருந்தது.

நெபுக்கதுனேசார் இறந்த சிறிது காலத்திற்குள் பாபிலோனுக்குச் சில நூறு மைல்களுக்கு அப்பாலிருந்த பாரசீகத்தில் புதியதோர் அரசர் தோன்றினார். சைரஸ் என்பவர் கி.மு. 559-இல் பாரசீகத்திற்கு அரசரானார். இவர் கி.மு. 549-இல் மேதியாவை வென்று தன் அரசோடு சேர்த்துக்கொண்டார். இதைக் கண்டு, அப்போது பாபிலோனை ஆண்ட நாபோனித்து என்ற மன்னன், அதிகக் கவலைப்படவில்லை. ஆனால் கி.மு. 546-இல் சைரஸ் இலிடியாவை வென்றபோது, பாபிலோனியப் பேரரசு அச்சம் கொண்டது.

ஒரு பேரரசு அழிந்து கொண்டிருந்த நேரத்தில் மற்றொரு பேரரசு தோன்றிக் கொண்டிருந்தது. வரலாற்றிலேயே திருப்பமான இத்தகைய சூழ்நிலையில், பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலரின் சமூகமும் சமயமும் சிதைந்துபோகும் நிலையில் இருந்தது. மக்கள் தங்கள் தாயகம் திரும்பும் நம்பிக்கையிழந்தனர். தங்கள் இறைவனின் ஆற்றலில் கொண்டிருந்த நம்பிக்கையும் குன்றிப் போயினர். இத்தகைய மக்களிடையே புதியதோர் இறைவாக்கினர் தோன்றினார். இவர் மன்னன் சைரசை இறைவனின் ஊழியனாகக் கண்டார். இவர் பாபிலோனியாவை அழித்து, இஸ்ராயேலரைப் பாலஸ்தீனத்துக்கு அனுப்புவார்; அதன் விளைவாகப் பழம்பெரும் இறைவாக்குகள் நிறைவேற உதவும் கருவியாவார் என்று இந்த இறைவாக்கினர் எதிர்பார்த்தார். இவரது முன்னறிவிப்புக்கள் விரைவில் நிறைவேற இருந்தன.

சைரசு தனது படையெடுப்பில் வெற்றி மேல் வெற்றி பெற்றார். கி.மு. 539-இல் பாபிலோனியாவைக் கைப்பற்றினார். இஸ்ராயேலர் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிச் செல்லச் சட்டம் இயற்றினார். இந்நிகழ்ச்சியில் எரேமியா, எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்களது வாக்குகள் நிறைவேறின.

2. யார் எழுதியது?

2. அ) கி.பி. 18-ஆம் நூற்றாண்டுவரை, அறுபத்தாறு அதிகாரங்கள் கொண்ட ஏசயா திருநூல் முழுவதையும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எருசலேமில் வாழ்ந்த இறைவாக்கினர் ஏசயாதான் எழுதினார் என்று மக்கள் பொதுவாக நம்பினர். ஆனால் அதி. 40-55 என்ற பகுதியில் வரும் செய்திகளை, எருசலேமில் வாழ்ந்த தனதுகாலத்து மக்களுக்கன்று; 150 ஆண்டுகளுக்குப்பின் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட மக்களுக்கே, இறைவாக்கினர் அறிவித்தார் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.மு. 705-இல் ஆட்சி செய்த எசக்கியாவுக்கு அளித்த எச்சரிக்கையில் (ஏச 39:5) பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதலை முன்னறிவிக்க வல்ல இறைவாக்கினர், 150 ஆண்டுகளுக்குப் பின் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட மக்களை முன்னிலைப்படுத்திப் பேசமுடியும் என்று கருதப்பட்டது. இக்கருத்துக்கு ஆதரவாகச் சீராக்குத் திருநூலிலிருந்து சான்று காட்டப்பட்டது. 'மிகுந்த அறிவினால் இறுதிக் காலங்களைக் கண்டார்: சீயோனில் துக்கமுற்றவர்களைத் தேற்றினார்: இறுதிக் காலம் வரையிலும் வரப்போகிறவைகளையும், நிகழ்வதற்கு முந்தியே காரியங்களையும் வெளிப்படுத்தினார்' (சீரா 48:27).

ஏசயா திருநூல் முழுவதற்கும் ஏசயாதான் ஆசிரியர் என்ற பாரம்பரியக்கருத்தில் இபன் எஸ்ரா (கி.பி. 1167) போன்றவர்கள் ஐயுறத் தொடங்கினர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிஞர் பலர் இக்கருத்தை வன்மையாக எதிர்த்தனர். திறனாய்வு வளர்ந்தது. பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. இவற்றின் கருத்துப்படி ஏச 40-55-என்ற பகுதியை எருசலேமில் வாழ்ந்த ஏசயாவைத் தவிர்த்த வேறொருவர் எழுதியிருக்க வேண்டும். இவர், எருசலேம் ஏசயாவுக்கு 150 ஆண்டுகளுக்குப்பின், நாடு கடத்தப்பட்ட காலத்தின் இறுதியில் பாபிலோனில் வாழ்ந்தவர்; ஏசயாவின் சீடர்களுள் ஒருவர். அவரைப் போல் முதல்தரமான இறைவாக்கினர். இவரது பெயர் நமக்குத் தெரியவில்லை. ஆகவே ஆய்வாளர்கள் இவரை உப-ஏசயா, இரண்டாம் ஏசயா அல்லது பாபிலோன் ஏசயா என்றழைத்தனர். இந்த நவீனக் கருத்துக்கு ஆதரவாக வரலாறு, இலக்கியம், கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல காரணங்களைச் சுட்டிக் காட்டினர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

2. ஆ) ஏசயாவின் பெயர் இப்பகுதியில் சுட்டிக் காட்டப்படவில்லை. மேலும் இப்பகுதியின் வரலாற்றுப் பின்னணி முதலாம் ஏசயா வாழ்ந்த கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சுட்டவில்லை; மாறாக, அவருக்கு 150 ஆண்டுகளுக்குப் பின்வந்த காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எனெனில் 1) எசக்கியா காலத்தில் எருசலேமில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இப்பகுதி ஒன்றும் கூறவில்லை. 2) ஆசிரியர் எருசலேம் மக்களை முன்னிலைப்படுத்திப் பேசவில்லை; மாறாக, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களைப் பார்த்துப் பேசுகிறார் (40:3-5; 41:17-20; 43:14; 48:20). 3) முதலாம் ஏசயா அசீரியப் பேரரசையும், தனிச் சுதந்தர அரசுகளாக யூதாவையும் இஸ்ராயேலையும் பற்றிக் கவலை கொள்கிறார். இரண்டாம் ஏசயா காலத்தில் யூதா வீழ்ந்து விட்டது; எருசலேம் அழிந்துவிட்டது. யூதாவின் மக்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு விட்டனர். இவை வருங்கால நிகழ்ச்சிகளாக அன்று; கடந்த கால நிகழ்ச்சிகளாகவே விவரிக்கப்படுகின்றன (40:1-2; 46:6; 48:20). இப்போது பாபிலோன் ஒரு நேசக் கூட்டாளியன்று (2 அர 20:12-13). ஏனெனில் அது எருசலேமை அழித்து யூதாவை நாடு கடத்தியது. இந்நூலில் மக்கள் எருசலேம் திரும்ப அமைக்கப் படுவதை எதிர்நோக்கியிருக்கின்றனர். ஆசிரியர் நாடு கடத்தல் முடிவு பெறுவதையும் மக்கள் எருசலேமுக்குத் திரும்புவதையும் பற்றி அக்கறை கொள்கிறார் (44:26-28; 49:14-23). 4) யூதாவுக்கு விடுதலை அளிக்கும் பாரசீக மன்னன் சைரசு வரலாற்று வானில் ஏற்கெனவே விடிவெள்ளியாக உதயமாகி விட்டார். தனது வெற்றிப் படையெடுப்பைத் தொடங்கி விட்டார் (44:28; 45:1). இவை நிகழ்கால நிகழ்ச்சிகளாகவும், பாபிலோனின் வீழ்ச்சி விரைவில் நிகழவிருப்பதாகவும் குறிக்கப்படுகின்றன. 5) பிற இனநாடுகள் இஸ்ராயேல் மேல் படையெடுத்துக் கொடுமைப்படுத்துபவர்களாகச் சித்தரிக்கப் படவில்லை; மாறாக, இஸ்ராயேலுக்கு உதவி செய்பவர்களாகவும், அதன் வழியாக ஆசீர் பெறுபவர்களாகவுமே காட்சி அளிக்கின்றனர் (45:4-2). 6) எருசலேம் அழிவு பற்றிய முந்தைய இறைவாக்குகள் நிறைவேறி விட்டன (ஏச 1:21-31; எரே 7:1-15; எச 22:24). இப்போது நம்பிக்கை அளிக்கும் புதிய இறைவாக்குகளுக்காக இஸ்ராயேல் காத்திருந்தது (ஏச 41:4 21-23; 43:11-13). மகிமைமிக்க புதியதோர் எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளது (40:1-11:43). 7) முதலாம் ஏசயாவின் போக்குக்கு மாறாக இரண்டாம் ஏசயா தாவீது மரபை ஒருமுறைதான் குறிப்பிடுகிறது. அதன் மகிமை அரச குடும்பத்திற்கு மட்டுமன்று, எல்லா இஸ்ராயேலருக்கும் உரியதாகும் (55:3-5). மேற்கூறப்பட்டவைகளிலிருந்து, 2-ஆம் ஏசயா கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்ராயேலின் வரலாற்றையே சுட்டிக் காட்டுகிறது என்பது தெளிவு.

2. இ) இரண்டு பகுதிகளின் இலக்கியப் பண்புகள் வேறுபடுகின்றன. முதலாம் ஏசயாவின் நடை சுருக்கமானது; செறிவு மிக்கது; வலியுறுத்தும் தன்மையுடையது; வேகமுள்ளது; பொறிதெறிக்கும் தன்மையுடை

யது; வெள்ளம் போன்றது; கடுமையானது; கட்டுப்பாடுடையது. இரண்டாம் ஏசயாவின் நடையோ விரிவானது; மீண்டும் மீண்டும் கூறும் மிகையானது; கம்பீரமுடையது; அமைதியானது; சிறந்த சொல்நயமிக்கது; சரளமானது; உணர்ச்சி மிக்கது; திடீரென்று பாடலாக வெடிக்கும் தன்மையுடையது. முதலாம் ஏசயாவின் தொனி அச்சுறுத்தல்களையும், கண்டனங்களையும் கொண்டது. இதற்கு மாறாக இரண்டாம் ஏசயா ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்க வல்லது. முதலாம் ஏசயாவில் சுய வாழ்க்கைக் குறிப்புகள் பல உண்டு. 2-ஆம் ஏசயாவில் ஆசிரியரைப்பற்றிய குறிப்புகள் எதுவுமே காணப்படவில்லை. ஆசிரியர் தனது அடையாளத்தையே மறைத்து விடுகிறார். யோவான் நற்செய்தி ''ஒத்தமை நற்செய்தி'' களிலிருந்து நடையில் வேறுபடுவது போல், 2-ஆம் ஏசயா முதலாம் ஏசயாவிலிருந்து வேறுபடுகிறது எனலாம்.

2. ஈ) கொள்கை விளக்கத்திலும் இருபகுதிகளும் வேறுபடுகின்றன. முதலாம் ஏசயாவில் மறைமுகமாக எடுத்துக் கூறப்படும் இறையொருமைக் கோட்பாடு, 2-ஆம் ஏசயாவில் தெளிவாகவும் நிறைவாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. இறைவன் உலகைப் படைத்தவர், வரலாற்றை ஆள்பவர், இஸ்ராயேலின் மீட்பர்-போன்ற கருத்துக்கள் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. போலிக் கடவுள்களின் ஒன்றும் இயலாமையும், அவற்றின் ஒன்றுமின்மையை மெய்ப்பிக்கும் வாதமாக எடுத்துக் கூறப்படுகிறது. அதே சமயத்தில் இறைவனது அளவிட முடியாத ஞானமும், அருள்பாலிப்பும் வலியுறுத்தப்படுகின்றன. யாவற்றையும் உள்ளடக்கும் சமயக் கருத்து விவிலியத்திலேயே முதல் முறையாகத் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. பிற இனத்தவரும் மனந்திரும்புவர் என்ற கருத்து குறிப்பிடத் தக்கதாகும். முதலாம் ஏசயாவில் காணப்படும் மெசியா கோட்பாட்டிலிருந்து 2-ஆம் ஏசயாவில் வரும் ஊழியன் பற்றிய விவரிப்பு குறிப்பிடத்தக்கமுறையில் வேறுபடுகிறது.

முதலாம் ஏசயாவில், இஸ்ராயேலர் ஓரளவு செல்வமிக்கவர்களாகவும், மிஞ்சிய சுய நிறைவுடையவர்களாகவும், அதிக உலோகாயுதப் போக்குள்ளவர்களாகவும் தோன்றுகின்றனர். ஆகவே, அவர்களைப் பார்த்து இறைவாக்கினர் அச்சுறுத்தல்களையும் கண்டனங்களையும் அறிவிக்கிறார். அதற்கேற்ப அவரது நடையும் கடுமையாக உள்ளது. இவை இஸ்ராயேலர் பெறவிருந்த துன்பங்களைச் சுத்தி செய்யும் சாதனங்களாயின. ஆனால் 2-ஆம் ஏசயா காலத்து இஸ்ராயேலரின் நிலையோ வேறுபட்டது. அவர்கள் அனுபவித்த துன்பங்களால் திகைத்துப் போய் நம்பிக்கையிழந்தவர்கள்; வறுமையில் உழன்றவர்கள்; அவர்கள் மேலும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்(40:2; 42:18-25). மாறாக அது ஊக்குவிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை 2-ஆம் ஏசயா உணர்ந்தார். இறைவன் தாம் ஒரு காலத்தில் உலகைப் படைத்ததுபோல், இப்போதுபுதியதோர் உலகை மீண்டும் படைக்கப்போகிறார் என்று இறைவாக்கினர் அறிவிக்கிறார்( 40:25-28; 42:5; 43:1). இனித்தாவீது அவர்களது அரசனாக இருக்கமாட்டார்; இறைவனே அவர்களது அரசனாக இருப்பார்.

முதலாம் ஏசயா பிறநாடுகளை, இஸ்ராயேலைத் தவறுக்கு இட்டுச் செல்லும் சோதனைகளாகவும் (20:5), இறைவனது கோபத்தின் கருவிகளாகவும் (10:5) சித்தரிக்கிறது. இதற்கு மாறாக 2-ஆம் ஏசயா பிறநாடுகளை, இஸ்ராயேலை மீட்கும் கருவிகளாக விவரிக்கிறது (அதி. 45). பிற நாட்டினர் இஸ்ராயேலுக்கு உதவி செய்யவும், அதனிடமிருந்து ஆசீர் பெறவும் ஒன்று கூட்டப்படுகின்றனர் (41:1; 43:2-6; 45:1; 49:6). இவர்கள் இஸ்ராயேலுக்கு அளிக்கப்படும் மீட்பில் பங்கு கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட வேறுபாடுகளைக் கருத்தில்கொண்டு, இரண்டு பகுதிகளையும் வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதினார்கள் என்று இக்கால அறிஞர்கள் கூறுவர். ஆனால் 2-ஆம் ஏசயா முதலாம் ஏசயாவின் பாரம்பரியத்திலேயே உலவுகிறார்; ஏசயாவின் குழு

வைச் சேர்ந்தவரும் அதன் முக்கியமான அங்கத்தினரும் ஆவார்.

2. உ) பாப்புவின் விவிலியக் குழு அளித்த எச்சரிக்கை:-

ஏச 40-55 என்ற பகுதியை இறைவாக்கினர் ஏசயா எழுதவில்லை; மற்றொரு இறைவாக்கினர் பிற்காலத்தில் எழுதினார் என்ற கருத்துக்கு எதிராக, கி.பி. 1908-இல் பாப்புவின் விவிலியக்குழு கத்தோலிக்க ஆய்வாளர்களை எச்சரித்தது. ஏனெனில், இந்த நவீனக் கருத்து பாரம்பரியக் கருத்துக்கு எதிராக அமைந்தது; இறைவாக்குரைக்கும் இறை ஏவுதலை வரையறை செய்வதாகத் தோன்றியது.மேலும் பாரம்பரியக்கருத்தைக் கைவிட அப்போது கூறப்பட்ட காரணங்கள் போதிய பலம் பொருந்தியவையாகத் தோன்றவில்லை.

''நவீனத் தவறு'' என்ற கொள்கை இறைவாக்குரைத்தலை மறுத்தல் போன்ற சூழ்நிலையில் இந்த எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. இந்த எச்சரிக்கைக்கு விளக்கம் அளிக்கும்போது, பின் வருபவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். கொள்கைப் பிரச்சனைக்கும் இலக்கிய ஆய்வுப் பிரச்சனைக்கும் உரியவற்றை வேறுபடுத்த வேண்டும். எச்சரிக்கை, கொள்கை அடிப்படையில் வெளியிடப்பட்டது; இலக்கிய அடிப்படையில் அன்று. கொள்கை அடிப்படைமாறவில்லை; அப்படியே இருக்கிறது. ஆனால், இலக்கியப் பிரச்சனை அடிப்படையன்று. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய பிரச்சனைக்கு இந்த எச்சரிக்கை பதில் அளிக்கிறது. இது இலக்கிய ஆய்வைத் தடை செய்யவில்லை. பிரச்சனைகளைத் தெளிவு படுத்துகிறது, ஆய்வு வளர்ச்சிக்கு இடமளிக்கிறது.

இந்த எச்சரிக்கைக்குப்பின், 2-ஆம் ஏசயா மற்றொரு இறைவாக்கினரால் எழுதப்பட்டது என்பதற்கு ஆதரவாகப் பல ஆய்வுக் கட்டுரைகளைக் கத்தோலிக்க அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். இவைபற்றிப் பாப்புவின் விவிலியக்குழு எதையும் கூறவில்லை. இலக்கியப் பிரச்சனைபற்றி இக்குழு எதையும் உறுதியாகக் கூறும்வரை, ஏச 40-55 என்ற பகுதியை, கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், பாபிலோனில் வாழ்ந்த ஓர் இறைவாக்கினர் எழுதினார் என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோம்.

3. ஆசிரியர்:-

ஏச 40-55 என்ற பகுதிக்கு ஆசிரியரான இரண்டாம் ஏசயா அல்லது பாபிலோன் ஏசயா என்பவரைப் பற்றிய தெளிவான குறிப்புகள் எங்குமே கிடைக்கவில்லை. எல்லா இறைவாக்கினர்களிலும் இவர்தாம் தம்மை முழுவதுமே மறைத்துக் கொள்பவர். உன்னதமான இலக்கியத்தைத் தந்துள்ளார்; ஆனால் அதை இவர்தான் எழுதினார் என்பதையே நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது. ஆசிரியரைப் பற்றி அறிவதற்காக நாம் இந்நூலைத் துருவி ஆராய்ந்தால், நமது கையைவிட்டு அவர் நழுவிப் போய் விடுவார். பாலையில் ஓடி மறைந்து போகும் நீரைப்பாடும் அவர், அந்நீரைபோன்று தனது பெயரைக் கூடக் குறிப்பிடாது மறைத்து விடுகிறார். ''அவர் வளர வேண்டும்; நானோ குறையவேண்டும்'' (யோவா 3:30) என்ற திருமுழுக்கு அருளப்பரது கூற்று பாபிலோன் ஏசயாவுக்கு மிகப் பொருந்தும். அவர் ''பாலைவனத்தில் உண்டாகும் கூக்குரல்'' (யோவா 1:23; ஏச 40:3). தனது பாடல்களுக்குப் பின்னணிக் காட்சிகளை அமைக்கும்போது, இறைவன் உரையாடல்களைக் கேட்பவரில் ஒருவராகவும் (40:1-5), பாரசீக மன்னன் சைரசுக்குப்பணி செய்பவர்களில் ஒருவராகவும் (44:28), பழைய ஏற்பாட்டிலேயே மிக உன்னத வெளிப்பாட்டைப் பெறுபவர்களில் ஒருவராகவும் (அதி 53) கலந்து மறைந்து போகிறார். பாலையில் ஓடும் நீர்போல் அவர் மறைந்து போனாலும், அந்நீரால் பனைமரங்களும் திராட்சையும் வளர்வதுபோல் அவரது இலக்கியம் இறையியல் வளப்பம் நிறைந்தது; மிகுந்த சிறப்புடையது.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவுபற்றி மிகச் சிறப்பாக அவர்

பாடியிருந்தாலும், நூலில் காணப்படும் சில அகச்சான்றுகளைக் கொண்டு அவரது ஆள் தன்மையை ஊகமாகவே உணரவேண்டி யிருக்கிறது.

இரண்டாம் ஏசயா சிந்தனை மிக்கவர்; ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஆழ்ந்து அனு பவித்தவர்; அவற்றில் அக்கறை கொள்பவர். ஒரு நிகழ்ச்சியின் சிக்கல்மிக்க நிறை உண் மையில் ஈடுபட்டு அமிழ்ந்து போவார். மேல் எழுந்த வாரியாக எதையும் நோக்க மாட்டார். ஒவ்வொரு நிகழ்ச்சியின் பொருள், விளைவு, ஆகியவற்றில் ஆழ்ந்து ஈடு படுவார். எருசலேம் ஏசயாவின் சுறுசுறுப்பான அறிவும், எரேமியாவின் சிந்தனை மிக்க உணர்ச்சித் தன்மையும், நாகூமின் உணர்ச்சி மிக்க நன்னம்பிக்கையும், செப்பானியாவின் பாவஉணர்வும் 2-ஆம் ஏசயாவில் ஒருங்கி ணைகின்றன.

2-ஆம் ஏசயாவின் மனம் பரந்தது; சொற் கள் கவிதை இலயத்தோடு ஓடும். அவரது சிந்தனை மீட்பு வரலாறு முழுவதும் எளி தாய் உலவும்; அதோடு ஒன்றிப்போகும். ஆசிரியர் ஆபிரகாமைச் சுட்டிக் காட்டுவார் (52:1-2). செங்கடலைக் கடப்பதில் பங்கு கொள்வார். சீனாய்ப் பாலைவனத்தில் இஸ்ரா யேல் பயிற்சி பெற்ற காலத்தை மீண்டும் வாழ்ந்து காட்டுவார். தாவீதோடு செய்த உடன்படிக்கை, எருசலேமின் பொருள் ஆகி யவை பற்றி அக்கறை கொள்வார்(49:14-21; 55:3-5) அவருக்கு வரலாறு என்பது ஏட்டில் எழுதப்பட்டுச் சுருட்டி வைக்கப்படுவதன்று; எப்போதும் தொடர்ந்து நிகழ்வதாகும்.

2-ஆம் ஏசயா ஒரு பெரிய இறைவாக்கினர் மட்டுமன்று; ஒரு மிகச் சிறந்த கவிஞரும் ஆவார். அவரது சிந்தனை ஆழ்ந்த அறிவுடை யது. உணர்ச்சிகள் எழுச்சி மிக்கவை; ஆற் றல் உள்ளவை. அவர் உருக்கமான உணர்ச்சி மிக்க பாடல் பாடுவதில் வல்லவர். படைப்பு, வரலாறு, மீட்பு ஆகியவற்றில் இறைவனது செயல்களைத் தியானிக்கும் போது, போற்றுரைப் பாடல்களில் திளைப் பார்; உணர்ச்சிப் பெருக்கோடு பாடினாலும் தன்னைப் பற்றி ஒரு குறிப்பும் தரமாட்டார். நூலில் வரும் ''நாம்'' என்ற சொல், பெரும் பாலும் இறைவனையே குறிக்கும். இறை வன் இந்த இறைவாக்கினர் வாயிலாகப் பேசுகிறார். தன்னை மறைத்து இறைவனது மகிமைக்காகப் பணிபுரிகிறவர் இந்த இறை வாக்கினர்.

4. யாருக்கு? எப்போது? எதற்காக?:-

எசக்கியேலைப் போல் 2-ஆம் ஏசயாவும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ரா யேலரிடையே கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் நேரில் கண்டவர்போல் பாபிலோனை விவ ரிக்கிறார். பாரசீக மன்னன் ஏற்கனவே படை யெடுக்கத் தொடங்கி விட்டார் (40,1:45). அவர் இலிதியாவின் மேல் கொண்ட வெற் றிக்கும் (கி.மு. 546) பாபிலோனின் வீழ்ச்சிக் கும் (கி.மு. 539) இடையிட்ட காலமே 2-ஆம் ஏசயா பணிசெய்த காலமாகும். அதா வது நாடு கடத்தலின் இறுதிக் கட்டமாகும்.

இறைவாக்கினர் நாடு கடத்தப்பட்டு பாபி லோனில் வாழ்ந்த இஸ்ராயேலரைப் பார்த் துப் பேசுகிறார். இவர்கள் எருசலேமுக்குத் திரும்பும் நம்பிக்கையற்றவர்கள். பலர் இறைவனில் நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தனர். சிலர் பாபிலோனின் சிலைவழி பாட்டில் ஈடுபட்டு நெறி தவறிப் போயினர். இவர்களுக்கு இறைவாக்கினர் ஆறுதல் அளிக்கிறார்; உற்சாகப்படுத்துகிறார்; நம்பிக் கையைத் தூண்டுகிறார். யாவேயின் வழி பாட்டில் மக்களை வேரூன்றச் செய்கிறார்; ஒருவேளை ஓய்வுநாள் வழிபாட்டுக்குச் செபக்கூடத்தில் கூடிய மக்களைப் பார்த்து இறைவாக்கினர் இவ்வாக்குகளை அறிவித் திருக்க வேண்டும். உற்சாகமற்ற இவர்க ளைப் பார்த்துப் பின்வரும் உண்மைகளை மீண்டும் மீண்டும் கூறி இவர்களை உற்சாகப் படுத்துகிறார். இறைவன் எல்லாம் வல்ல வர், என்றும் உள்ளவர், அவரோடு ஒப்பிடும் போது மற்றவையெல்லாம் ஒன்றுமில்லாத வையாகும். உலகையெல்லாம் படைத்த இறைவனுக்கு இஸ்ராயேலை மீட்பது எளிதே. கடந்த காலத்தில் யாவே மட்டுமே

வருங்காலத்தைப் பற்றி முன்னறிவித்துள்ளார். அதனால் இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுதல் பற்றிய அவரது வாக்குகளை உறுதியாக நம்பலாம். பாபிலோனின் கடவுளர்கள் ஒன்றுமில்லாதவர்கள், ஒன்றும் இயலாதவர்கள். யாவே ஒருவரே உண்மையான இறைவன். தம்மை உலகிற்கெல்லாம் அறிவிக்கும் தூதை இஸ்ராயேலுக்கு அளித்துள்ளார். ஊழியன் துன்பத்தைப் பகரமாக அதாவது பதிலாகத் துய்ப்பதைப் பயன்படுத்தி இஸ்ராயேலை மீட்பார். உலகம் முழுவதையும் மீட்பார்.

5. இலக்கியச் சிறப்புக்கள்:-

2-ஆம் ஏசயா தன்னைப்பற்றி ஒன்றும் கூறாதிருக்கலாம். ஆனால், அவரது கவித்தன்மை இலக்கிய உலகில் நிலைத்து நிற்கும் சிறப்புடையதாகும். இந்நூலில் வரும் அருமையான உணர்ச்சிப் பாடல்கள் நமக்கு எழுச்சியூட்ட வல்லன. மகிழ்ச்சி மிக்க துதிப் பாடல்கள் நமது மனதை இறைவன்பால் எழுப்பவல்லன. இரங்கல் பாடல்கள் நமது உள்ளத்தை உருக்க வல்லன. கடுமையான வசை மொழிகள் நம்மை எச்சரிக்க வல்லன. அவர் சந்தத்தைப் பயன்படுத்தும் முறையும், எபிரேய இலக்கணத்தின்மேல் அவர் கொண்டிருக்கும் ஆட்சியும் அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்நூலில் வரும் பாடல்கள் கவனமாய்த் தயாரிக்கப்பட்டவை; சிந்தனைச் செறிவு மிக்கவை; கம்பீரமுடையவை. ஆயினும், இவை வாசிப்பதற்காக எழுதப்பட்டவையன்று; அறிவிக்கப்பட்டு, கேட்டுணர உருவாக்கப்பட்டவையாகும். மீண்டும் மீண்டும் கூறுதலும், அறை கூவல்களும் அடிக்கடி காணப்படும். சொல்லின் பொருளுக்கு ஏற்ப, தொனி இணைந்து நிற்கும். கேள்விகள் எழுப்பப்பட்டுப் பதில்கள் கூறப்படும். நீண்ட உரையாடல்கள் உள்ளன. இத்தகைய பண்புகளைக் கொண்டு, எபிரேய இலக்கியத்தின் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது இந்நூல். இந்நூல் பேசப்பட்ட சொற்களின் தூண்டும் ஆற்றலையும், எழுதப்பட்ட சொற்களின் ஒழுங்கு செய்யப்பட்ட சந்த அமைப்பையும் ஒருங்கிணைத்து விளங்குகிறது.

கருத்துக்களில் இணைவுத் தன்மையும் இலக்கிய நயமிக்க சமன்பாடும் இந்நூலில் சிறப்பாகக் காணப்படும். ஒரு முக்கிய கருத்தைப் பல வசனங்களுக்கு நீட்டுவார். ஆனால் அதில் இலக்கிய நயமிக்க ஒழுங்கு செய்யப்பட்ட வளர்ச்சியிருக்கும் (40:6-8; 41:17-20; 51:9-52:12). ''இதோ'' என்ற சொல் அடிக்கடி வருகின்ற நாடகப் பாணியும் பல இடங்களில் காணப்படுகிறது (ஆதி 41).

நூல் ஆழ்ந்த சமய நோக்குடையது. அதற்கேற்பப் பல இலக்கிய அமைப்புகளையும், பல்வேறுபட்ட இலக்கியச் சுவைகளையும் இறைவாக்கினர் பயன்படுத்துகிறார். எபிரேய மொழியின் நடை, தொனி, இலக்கிய அமைப்பு ஆகியவற்றின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக இந்நூல் விளங்குகிறது.

6. வாசகம்:-

மாசரோட்டிக் எபிரேய வாசகம் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது. எழுபது நூல் கிரேக்க வாசகம் தரத்தில் உயர்ந்ததாகத் தெரியவில்லை. எபிரேய வாசகத்தில் பழுதுபட்ட பகுதிகளைத் திருத்த உதவும் நிலையில் எழுபது நூல் வாசகம் இல்லை. சாக்கடல் கும்ரான் ஏடுகள் எபிரேய வாசகத்தோடு ஒத்துப் போகிறது. ''வுல்கத்தா'' இலத்தீன் வாசகம் மெசியா கருத்தை முனைப்பாகக் கொண்டுள்ளது.

7. நூலின் திட்ட அமைப்பு:-

இந்நூலின் திட்ட அமைப்பு பற்றிப் பல வாதங்கள் எழுந்துள்ளன. இந்நூல் ஏறக்குறைய ஐம்பது சிறு பகுதிகளைக் கொண்டது. இவை மூலத்தில் தனித்தனியாக இருந்தன; பிற்காலத்தில்தான் ஒன்றாக இணைக்கப்பட்டன என்று சிலர் கூறுவர். இந்நூல் நீண்ட பகுதிகளின் தொகுப்பாகும். இவற்றில் கருத்து வளர்ச்சி உள்ளது என்று உரைப்பர் வேறு சிலர். இந்நூலில் பல சிறு பகுதிகள்

உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் இவை தொடர்பற்றவையல்ல. இவை கலைப் பண்போடு ஒரே தொகுப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல்பகுதி (40:1-11) முன்னுரையாகும். இரண்டாம் பகுதி (40:12-48:22) பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களைப் பற்றியதாகும். சைரசின் வெற்றிகளைப் பின்னணியாகக் கொண்டது (44:24-48:12). மூன்றாம் பகுதி (49-55) சீயோன் மீண்டும் அமைக்கப்படுதலைப் பற்றியதாகும். இதில் சைரசோ, பாபிலோனோ குறிக்கப்படவில்லை. இப் பகுதி கி.மு. 539-க்கு உடனடியாக முந்திய காலத்தைப் பற்றியதாகும்.

*ஆறுதலின் நூல்(ஏச 40-55)*

I. முன்னுரை (40:1-11)

II. மீட்பராகிய யாவேக்குப் பாடல்: பாபிலோனில் இஸ்ராயேலர் (40:12-48:22)

1. 40:12-31: படைப்பவராகிய இறைவனின் மகிமை.
2. 41:1-29: நீதியின் வீரரான சைரசு.
3. 42:1-4: துன்புறும் ஊழியன் பற்றிய முதல்பாடல்.
4. 42:5-9: நீதியின் வெற்றி.
5. 42:10-17: மீட்பின் புதிய பாடல்.
6. 42:18-25: மற்றொருபாடல்: மக்களைக் குருடாக்கல்.
7. 43:1-44:23: இஸ்ராயேலின் விடுதலைபற்றிய இறைவாக்குகள்.
8. 44:24-45:26: யாவேயின் அபிடேகம் பெற்ற சைரசு.
9. 46:1-13: பாபிலோனின் போலிக்கடவுளர்களும் யாவேயின் மகிமையும்.
10. 47:1-15: பாபிலோன்மேல் வசைமொழிப் புலம்பல்.
11. 48:1-22: முதல் பகுதியின் முடிவுரை.

III சீயோன் மீண்டும் அமைக்கப்பெறுதல்: புதிய எருசலேமைப் பற்றிய பாடல் (49:1-55:13)

1. 49:1-26 இஸ்ராயேலின் விடுதலை.
2. 50:1-11: இருளில் இஸ்ராயேல்.
3. 51:1-52:12: யாவேயில் நம்பிக்கை கொள்ளும் படி அறிவுரை.
4. 52:13-53:12: துன்புறும் ஊழியன் பற்றிய 4-ஆம் பாடல்.
5. 54:1-17; புதிய சீயோன்.
6. 55:1-13: முடிவுரை.

8. சிறப்புக் கருத்துக்கள்:-

8. அ. படைப்பவரும் மீட்பவருமான இறைவன்:-

உலக வரலாற்று அரங்கில் இறையரசு வருகையைப் பாடி அறிவிக்க 2-ஆம் ஏசயா ஆணை பெறுகிறார். அதை நிறைவேற்றும் போது இறைவனது படைப்புச் செயலையும் வரலாற்றுச் செயல்களையும் எடுத்துக்கூறி இறைவனைப் பற்றிய அரியதோர் காட்சியை வரைகிறார். உலகைப்படைத்த இறைவனே, கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளில் செயலாற்றியுள்ளார்; நிகழ்காலத்திலும் தொடர்ந்து செயலாற்றுகிறார் (45:12-13). இரண்டிலும் ஒரே குறிக்கோள் செயல்படுகிறது. மக்கள் வாழ்வதற்காக உலகைப் படைத்த இறைவன் இப்போது அவர்களுக்காகத் தாம் கொண்டிருக்கும் திட்டத்தை இறைவாக்கினர் வழியாக வெளிப்படுத்துகிறார் (45:18-19). இறைவனது படைப்புச் செயலை எடுத்துக் கூறுவதன்வழியாக, இறைவாக்கினர், நிகழ்காலத்தில் இறைவன் செயலாற்றுவதை வலியுறுத்துகிறார். படைப்பவரும் மீட்பவருமான இறைவனது செயலை ஓர் உன்னதப்பாடல் போற்றிப் புகழ்கிறது. ''ஆண்டவர் புயமே விழித்தெழு! விழித்தெழு! ஆற்றலை அணிந்துகொள்! பண்டை நாட்களில் கிளம்பியது போல் விழித்தெழு'' (51:9). விடுதலைக்கு ஏங்கும் இந்த உணர்ச்சிக் கூக்குரல், இறைவன் தமது பண்டைக் கால ஆற்றல் மிக்க செயல்களைப் படைப்பிலும் வரலாற்றிலும் மீண்டும் செய்ய வேண்டும் என்று அவரைத் தூண்டுகிறது.

பாபிலோனியத் தேவர்களின் படைப்புக் கடவுள்கள், வாழ்வின் தொடக்கச் செயலுக்கும், தொடர்ந்து வரும் வாழ்கைச் சுழலுக்கும் பொறுப்பானவர்கள் என்று கருதப்பட்டனர். ''வெறும் காற்றும் வியர்த்தமுமானவர்கள்'' (41:29). யாவேயே எல்லா உலகங்க

ளையும் கடந்தவர். 2-ஆம் ஏசாயாவின் படைப்பு இறையியலைப் பரந்த மீட்புச் சூழ்நிலையில் நாம் புரிந்து கொள்ள முயல வேண்டும். இறையாற்றல், உலகின் தோற்றம் பற்றிய கருத்தியலில் இறைவாக்கினர் அக்கறை கொள்ளவில்லை. மாறாக அவரது பாடல்கள் மீட்பராம் இறைவனைப் பறைசாற்றுகின்றன. இந்த இறைவன் தமது மக்களை மீட்கவும் அவர்களை மகிழ்விக்கவும் அவர்களிடையே பிரசன்னமாய் உள்ளார்.

மக்களது வாழ்வு மூலக்குழப்பநிலைக்கு இழிந்து போயிற்று; ஆகவே மீட்பு புதிய படைப்பாக அமையவேண்டும். ஆனால் அவர்கள் இறைவனின் ஆற்றலில் விசுவாசம் கொள்ள வேண்டும். யாவேதாம் எல்லாப் பொருட்களையும் படைத்த இறைவன் என்று இறைவாக்கினர் உறுதி அளிக்கிறார். (41:4; 46:4; 48:12) இறைவனே ''முதலும் முடிவுமானவர்'' (44:6). அவரே வாக்குறுதி அளிக்கிறார்; அவரே நிறைவேற்றுகிறார்.

படைப்பைக் குறிக்கும் ''பாரா'' என்ற முன்றயான சொல்லைப் பதினாறு முறை இறைவாக்கினர் பயன்படுத்துகிறார். இறைவனது படைப்புச் செயல் அவரது ஆற்றலின் வெளிப்பாடாக அன்று; அவரது பரிவு, அக்கறையின் வெளிப்பாடாக எடுத்துக் கூறப்படுகிறது. இறைவன் குழப்பத்தின் ஆட்சியைத் தமது சொல்லால் அடக்கித் தமது மக்களுக்கு இன்பமிக்க நாட்டைத் தயாரிக்கிறார் (51:6-16). ''கடல் நீரை உள்ளங்கையால் அளந்தவர் யார்? வானத்தின் நீள அகலங்களைக் கணித்தவர் யார்?'' (40:12). இந்த விவரிப்பு யாவேயை, அக்கறையின்றித் தமது ஆற்றலைச் சிதறடிக்கும் கடவுளாகக் காட்டவில்லை. மாறாக இறைவன் ஓவியனுடைய மென்மையான கவனத்தோடு செயலாற்றுபவர் என்று காட்டுகிறது. படைப்பு பாராட்டை எழுப்பும் செயலன்று; வியத்தகு அன்பை விரும்பிக்கோரும் முயற்சியாகும்.

இறைவன், எந்த உதவியாளரும் ஆலோசகரும் இல்லாமல், கடல், வானம், பூமி, மலைகள் யாவற்றையும் படைத்தார் (40:12-14). அவர்முன் பெரும் காடுகளும் ஒன்றுமில்லாதவை. லெபனோனின் காடுகளும், அதன் விலங்குகளும் அவருக்குத் தகுதியான பலிசெலுத்தப் போதுமானவையன்று (40:15-17). அவர் மனிதன் சிந்திக்கக்கூடிய எதற்கும், அவனது கை செய்யும் எதற்கும் முற்றிலும் மாறானவர். உலகங்களுக்கெல்லாம் மிக உயர்ந்தவர். உலகில் அவரது ஆற்றல் வெளிப்படுகிறது. அவரே வரலாற்றை ஆளுகிறார். மனிதர்களையும் நாடுகளையும் நடத்துகிறார் (40:18-24). தாம் படைத்த கோடிக் கணக்கான விண்மீன்களை அறிந்து கட்டுப் படுத்த வல்ல அவர், நாடு கடத்தப்பட்ட தமது மக்களின் அவல நிலையை அறியாமலோ அவர்களுக்கு உதவிசெய்ய ஆற்றல் இல்லாமலோ இல்லை (40:25-26). எல்லாக் காலங்களுக்கும் அவர் ஆண்டவர். ஆற்றலிலும் ஞானத்திலும் வரையற்றவர். தமக்காகப் பொறுமையோடு காத்திருப்பவர்களைப் புதுப்பிக்கும், பலப்படுத்தும் வற்றாத ஊற்றாவார் (40:27-31).

தொடக்கத்தில் குழப்பத்தை அடக்கி வெற்றி கொண்டு உலகைப் படைத்த இறைவனே, எகிப்திலிருந்து புறப்பட்ட யாத்திரையில் இஸ்ராயேலரைப் படைத்தார் (51:9-11). அந்த யாத்திரையில் பெருஞ்செயல்களைச் செய்தார்; செங்கடலை வெற்றி கொண்டார். ''தேர்களையும் குதிரைகளையும் படைகளையும் வீரர்களையும்'' அழித்தார். அந்த யாத்திரையை நாடுகடத்தப்பட்டவர்கள் நினைவுகூர வேண்டிய அவசியமிருக்காது, ஏனெனில் அதைவிட மகிமையான புதிய யாத்திரையை இறைவன் நிறைவேற்றப் போகிறார். அது, நாடு கடத்தப்பட்டவர்கள் பாபிலோனிலிருந்து விடுதலையடைந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மகிமையோடு திரும்புதலாகும்.

இறைவனின் மீட்புச் செயலை, இஸ்ராயேலின் சமூக வாழ்விலிருந்து எடுக்கப் பட்ட உருவங்களால், இறைவாக்கினர் எடுத்துரைக்கிறார். ஒருவன் அடிமையாக விற்கப் பட்டால் அவனைத் திரும்ப வாங்கி விடுதலை அளிப்பது அவனுடைய நெருங்கிய

உறவினனுடைய கடமையாகும். அப்போது அடிமையானவனுக்கு உறவினன் மீட்பனாகிறான். இம்முறையைப் பின்பற்றி, இறைவன் நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேலை எவ்வளவு அன்பு செய்தார் என்றால், அவர்களை மீட்க எந்த விலையையும் கொடுக்க அவர் தயாராக இருக்கிறார். ''உன் இறைவனாகிய ஆண்டவர் நாமே. உன்னுடைய இஸ்ராயேலின் பரிசுத்தராகிய நாமே உன் மீட்பர், உன்னுடைய மீட்புக்கு ஈடாக எகிப்தையும் எத்தியோப்பியாவையும் சாபாவையும் கையளிக்கிறோம். நமது கண்ணுக்கு நீ விலையேறப் பெற்றவன், மதிப்புக்குரியவன்; உன்மேல் மிகுந்த அன்பு கொண்டோம்; ஆதலால்தான் உனக்காக மக்களைக் கையளிப்போம். உன் உயிருக்காக மக்களை மாற்றிக்கொள்வோம். அஞ்சாதே, ஏனெனில் நாம் உன்னோடிருக்கிறோம்'' *(43:3-4)*.

இவ்வாறு பேசும் மீட்பராகிய இறைவன் தம்மை இஸ்ராயேலின் பரிசுத்தர்'' *(43:3)* என்று அழைக்கிறார். இப்பெயரை 2-ஆம் ஏசயா பதினோரு முறைகள் பயன்படுத்துகிறார்; தன் குருவாகிய முதலாம் ஏசயாவின் போதகமான இறைவனது பரிசுத்தம் பற்றிய போதகத்தை விரிவு படுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு, மனிதரிலிருந்து வேறுபட்டு, மறைபொருள் மிக்க இறைவன், தமது மாட்சிமையில் அஞ்சத்தக்கவர். ஆயினும் இஸ்ராயேலோடு உடன்படிக்கை செய்து கொண்டார். மக்களின் பரிசுத்தம் இறைவனது பரிசுத்தத்திலிருந்து வருவதாகும். ''இஸ்ராயேலின் பரிசுத்தரே உன் மீட்பர்'' *(41:14; 43:3)* அவர் தம் மக்களை விடுவித்துச் சுதந்தரம் அளிக்கிறார். அவர்களுக்குப் பரிசுத்த வழியைப் போதித்து வழிநடத்துகிறார் *(48:17)*.

*8. ஆ. யாவே உலகம் முழுமைக்கும் இறைவன்:-*

படைப்பவரும் மீட்பவரும், இஸ்ராயேலின் பரிசுத்தமானவரும் வரவிருக்கும் ஆண்டவருமான யாவேயே ''உலகுக்கெல்லாம் இறைவனாவார்'' *(54:5)*. அவரது குறிக்கோளை எய்துவதற்கு எல்லாம் வல்லவர். அவரது மேலாண்மையிலிருந்து எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. அவருக்குப் போட்டியாக யாருமில்லை. முழுப்படைப்பும் வரலாறும் அவருக்குக் கட்டுப்பட்டவை. ''நாமே ஆண்டவர், வேறு எவருமில்லை. ஒளியை உருவாக்குகிறவரும், இருளைப் படைக்கிறவரும், வாழ்வை வழங்குகிறவரும், தாழ்வைத் தருகின்றவரும் நாமே. இவற்றையெல்லாம் செய்கிற நாமே ஆண்டவர்'' *(45:7)*. பிறஇறைவாக்கு நூல்களில் பொதுவாகக் கூறப்பட்ட இறையொருமைக் கோட்பாடு, இந்நூலில், தெளிவாக, வெளிப்படையாக எடுத்துக்கூறப்படுகிறது.

சிலைகளைச் செய்வதையும் வழிபடுவதையும் நையாண்டி செய்யும் பலபகுதிகள் இந்நூலில் காணப்படுகின்றன. பாபிலோனிய அந்நிய வழிபாட்டுச் சடங்குகளாலும் சிலைகளாலும் ஈர்க்கப்பட்டு அவற்றில் தங்களையே இழந்துவிடும் ஆபத்தில் நாடு கடத்தப்பட்டவர்களில் சிலர் இருந்திருக்கலாம். அந்த ஆபத்துக்கு எதிராக இறைவாக்கினர் போராடுகிறார். சிலை செய்து களைத்துச் சோர்ந்து போகும் கொல்லனது செயலை வசையாடுகிறார் *(44:12)*. மரத்தின் ஒருபகுதியிலிருந்து ''விறகு எடுக்கிறான். அப்பஞ் சுடவும் அதையே பயன்படுத்துகிறான். அதிலும் மீதியாய் இருப்பதைக் கொண்டுதான் தெய்வத்தை உருவாக்கி வணங்குகிறான். உளியால் ஒரு சிலை செதுக்கி அதன்முன் தெண்டனிடுகிறான்'' *(44:15)*. மனிதன் கற்பனையையும் கலையையும் பயன்படுத்தி, ஒப்புவமையில்லா இறைவனின் உண்மைச் சாயலைச் செய்யமுடியும் என்பது எவ்வளவு நகைப்புக்குரியது *(40:18-20; 46:5-7)*. தங்களை வழிபடுவோரைக் காப்பாற்ற முடியாத இச்சிலைகளை, சைரசு படையெடுத்து வந்தபோது, பாதுகாப்பான இடத்திற்குத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. இப்போலிக் கடவுள்கள் ஒரு சுமையாக மாறினர். உண்மையான இறைவன் சுமக்கப்படுபவர் அல்லர்; தமது மக்களைத் ''தூக்கிச் செல்பவர்,'' ''விடுவிப்பவர்'' ஆவார் *(46:1-4)*. ''நாமே படைத்தோம், நாமே உங்களைத்

*தாங்கினோம், நாமே தூக்கிப் போவோம், உங்களை விடுவிப்போம்''.*

இறைவனின் மகிமையும் மீட்பும் இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதன்று. படைப்பு எல்லாவற்றுக்கும் உரியதாகும். ''அப்போது ஆண்டவரின் மகிமை (மீட்புப் பிரசன்னம்) வெளிப்படுத்தப்படும்; மனிதர் அனைவரும் ஒருங்கே அதைக் காண்பர்'' *(40:5)*. இக்கூற்றில், எபிரேய வாசகம் ''மனிதர் அனைவரும்'' என்பதற்குப் பதிலாக ''ஊன் அனைத்தும்'' என்பதைப் பயன்படுத்துகிறது. ஊன் பலவீனத்தையும், பாவநிலையையும் இறைவனுக்கு எதிராகக் கொள்ளும் பகைமையையும் குறிக்கும். நாடு கடத்தலின்போதும் அதற்கு முன்னும் இஸ்ராயேல் இத்தகைய நிலையில்தான் இருந்தது. அதனால் அவர்களது கெடுமதியே அவர்களைக் ''குழப்பத்தில்'' ஆழ்த்தியது. ''ஊனுக்கும்'' ''குழப்பத்திற்கும்'' அதிக ஒற்றுமையுண்டு. இஸ்ராயேலை மீட்க இறைவன் புதியதோர் இன்பவனத்தைப் படைக்க வேண்டும். ஆகையால் பிறநாடுகளிலிருந்து இஸ்ராயேல் சிறிதும் வேறுபடவில்லை. இஸ்ராயேல் மீட்கப்படக் கூடுமானால், பாபிலோனியரும் பாரசீகரும் மற்றவர்களும் மீட்கப்படலாம்.

தொடக்கத்தில் இறைவன் கோருவதெல்லாம் விசுவாசம், அவருடைய மீட்கும் ஆற்றலுக்குத் திறந்தமனது, ''குழப்பம்'' வெற்றி கொள்ளப்பட்டுப் புதிய படைப்பாகும் என்ற நம்பிக்கை, எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறும் என்ற நம்பிக்கை ஆகியவைதான். நாடுகள் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியும். ஏனெனில், இந்த ஆன்ம பக்குவம், வருத்தம், மனத்துக்கம் ஆகியவற்றிலிருந்து தோன்றுவதாகும். இந்நூலின் சில பகுதிகளில் இறைவன் பிறநாடுகளுக்கு எதிராக அதிகச் சீற்றம் கொள்வதாகத் தோன்றுகிறார். ஆனால் இறைவன் தம்மக்களைவிட மற்ற மக்களை அதிகக் கொடுமையாக நடத்தியதில்லை. இறைவனது அன்பின் மிகுதிக்கேற்ப, தாம் அன்பு செய்தவர்களுக்காகத் திட்டமிட்ட பெரும் குறிக்கோளை அடைவதில் உறுதிபூண்டுள்ளார் *(43:1-44:5)*.

துன்புறும் ஊழியன்பற்றிய பாடல்களில்தான், இறைவன் யாவற்றையும் அன்பு செய்வது தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. இறைவனின் ஊழியனாகிய இஸ்ராயேல் ''மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்'' *(42:1)*. ''உலகத்தின் எல்லை வரையில் நமது மீட்பு எட்டும்படி பிற இனத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்'' *(49:6)*.

8. இ. வரலாற்றின் ஆண்டவர்:-

பிற இன மக்களும் அவர்களது கடவுள்களும் இறைவனது நீதிமன்றத்தின்முன் அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்குச் சவால் விடப்படுகிறது. ''உங்கள் வாழ்க்கை இப்போது சொல்லுங்கள்.....உங்களுக்குச் சார்பான சான்றுகளை எடுத்துக்காட்டுங்கள்'' *(41:21)*. அவர்களில் யார் வரலாற்று நிகழ்ச்சிகளை முன்னறிவித்தனர்? அவர்கள் காலத்து நிகழ்ச்சிகளின் பொருளை இப்போது அவர்களால் விளக்க முடியுமா? அவர்களுக்கு ஒன்றும் தெரியாது; வரலாற்றுப் போக்கில் செல்வாக்குச் செலுத்த அவர்கள் ஆற்றல் அற்றவர்கள்; ஆனால் உண்மையான இறைவனே வரலாற்றின் ஆண்டவராவார். நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கிறார். தமது இறைவாக்கினர் வழியாக அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறார். ''தமது வலிமை மிக்க ஆற்றலால் அவை நிறைவேறச் செய்கிறார்'' *(41:21-29)*. இறைவனைப் பற்றி 2-ஆம் ஏசயா தரும் காட்சி மிக விரிவானதாகும். இறைவாக்கினர் ''தொடக்கத்தையும் முடிவையும்'' அறிவிக்கிறார். அவர் தொடக்கத்திற்கும் முடிவுக்கும் இடைப்பட்ட கால வரலாற்றின் இறைவாக்கினர் ஆவார். அவர் இறைவனது செயல்களாகிய படைப்பு, வரலாறு, வெளிப்பாடு, மீட்பு ஆகியவற்றை, ஒன்றோடொன்று தொடர்புடைய முழுமையாகப் பார்க்கிறார். அவற்றை ஒரு பெரிய நாடகத்தின் வரிசைக்கிரமமாய் வரும் காட்சிகளாகக் காண்கிறார். அவர் தொடக்கம் முடிவு ஆகியவற்றின் ஆண்டவருடைய இறைவாக்கினர் ஆவார். ''முதலும் நாமே, முடிவும் நாமே, நம்மையன்றி வேறு இறைவன் இல்லை'' *(44:6)*. இறுதியில் அவரை மாட்சிமைமிக்க, உன்னதமிக்க படைப்பவ

ராகவும் மீட்பவராகவும் எல்லாப் படைப்புகளும் ஏற்றுக் கொள்ளும் (45:22-23). ஏனெனில் யாவும் அவரிடமிருந்தே வந்தன. அவராலேயே உண்டாயின. அவருக்காகவே இருக்கின்றன. அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாகுக'' (உரோ 11:36).

*8. ஈ. மெசியா:-*

இறைவன் இஸ்ராயேலைப் பயிற்றுவிப்பதில் தண்டனையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்; கடந்த காலத்தில் அசீரியாவையும் பாபிலோனையும், தமது கசையாகவும் தடியாகவும் பயன்படுத்தியுள்ளார். இப்போது இஸ்ராயேலுக்கு ஒரு மீட்பரைத் தோற்றுவிக்கிறார். இந்த மீட்பின் வீரர் முதலில் மறைமுகமாக விவரிக்கப்படுகிறார் (ஏச 41:2-3:25). பிறகு இவர் சைரசுதான் என்று தெளிவாகக் குறிக்கப்படுகிறார் (44:28-45:13). சைரசு இலிதியாவை வெற்றிகொள்கிறார். பாபிலோனின் பாதுகாப்புகள் சரிகின்றன. சைரசின் வெற்றி பாபிலோனுக்கு அறிவிக்கப்படுகிறது. அங்கு வாழ்ந்த மேல்குலத்தோரும் அர்ச்சகர்களும் தனித்துக்கூடி நகரைப் பாதுகாப்பதைப்பற்றி ஆலோசனை செய்து திட்டமிடுகின்றனர். ஆனால் நகரில் வாழாத அரசனாலும் சுகபோகத்தைத்தேடும் ஆளுநர்களாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. நகரின் நிலை நம்பிக்கையற்று மிகவும் நலிந்து போய்விட்டது.

ஆனால் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனில் குடியிருந்த இஸ்ராயேலர்களுக்கு மேற்கூறப்பட்ட வரலாற்றுத் திருப்பச் செய்தி புதிய யுகத்தின் தொடக்கமாகும். யூதக் குடியிருப்புகளில் இளைஞர்கள் வீட்டுக்கு வீடு ஓடி, சைரசின் வெற்றிபற்றிய செய்தியை அறிவிக்கின்றனர். முதியவர்கள் அதுபற்றி வாதிக்கின்றனர். தாவீது மரபைச் சேர்ந்த செருபாபேலும் அர்ச்சகர்களின் குடும்பத்தைச்சேர்ந்த யோசுவாவும் பாலஸ்தீனத்திற்குத் திரும்புவது பற்றித் திட்டம் தீட்டுகின்றனர் (எஸ் 1-3). 2-ஆம் ஏசயாவோ, தனித்து அமர்ந்து மாபெரும் பாடல் ஒன்றை உருவாக்குகிறார். அதை அடுத்த ஒய்வுநாள் வழிபாட்டுக் கூட்டத்தில் அறிவிக்கிறார். அவர் மகிழ்ச்சிமிக்க செய்தியைத் தூதுரைப்பவர் ஆவார். மெசியாவின் மகிமை ஒளி வீசத் தொடங்கியது (40:9). இறைவன் தமது விண்ணக அவையைக் கூட்டி, இஸ்ராயேல் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குத் திரும்புதலாகிய புதிய யாத்திரையைத் தீர்ப்பிடுவதை இறைவாக்கினர் பரவச இன்ப நிலையில் கேட்கிறார். ''மனிதர் அனைவரும் ஆண்டவரின் மகிமையை ஒருங்கே காண்பர்'' (40:1-5). இறைவாக்கு நிவைவேறுதலை அறிவிக்க இறைவாக்கினர் ஆணைபெறகின்றார் - (40:9). அவர் தன் அடையாளத்தை மறைத்து, எருசலேமையே இந்த நற்செய்தியை அறிவிக்கச் செய்கிறார்.

இறையரசு அண்மையில் உள்ளது. 2-ஆம் ஏசயா தாவீது மரபை ஒதுக்கி விட்டு, யாவே மட்டும் அரசாற்றல் உடையவர் என்று அறிவிக்கிறார். ஒரு காலத்தில் தாவீதுக்கும் அவரது மரபுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள், இப்போது இஸ்ராயேலர் யாவருக்கும் உரிய உரிமைச் சொத்தாக மாறுகின்றன. தாவீது அரசமரபு நெறி தவறியது; தவறுகள் செய்தது; பழிப்புக்குரியதாகியது. ஆகவே அந்த மரபை இறைவாக்கினர் வேண்டுமென்றே புறக்கணிக்கிறார். யாவேயே ''இஸ்ராயேலின் மாமன்னர், அதன் மீட்பர்'' ஆவார் (44:6). அவரது மகிமையால் உலகெங்கும் களிப்புறும் (41:24 தொ; 42:10-16).

ஒழுங்கையும் அமைதியையும் சமூக நீதியையும் மீண்டும் நிறுவ இறைவன் சைரசை உறுதிப்படுத்துவார். அவரோ யாவேயின் மெசியா; அவரது அபிடேகம் பெற்றவர் (45:1); அவரது மேய்ப்பன் (44:29); இறைவனால தூண்டி இயக்கப்படுபவர். பாபிலோனியர், அசீரியர்களைப் போல் சைரக வெற்றி வெறி கொண்டு அலையவில்லை. தான் வென்றவர்களைக் கொடுமைப்படுத்தவில்லை; கொள்ளையிடவில்லை: நாடு கடத்தவில்லை. மாறாகக் கைதிகளை விடுவித்தார். அந்தந்த இடத்து மக்களின் சமயங்களுக்கு மதிப்பளித்தார். ஒரே உலகப் பேரரசை அமைக்க மட்டுமே அதிகாரத்தை விரும்பினார். இவர் நாடு கடத்தப்பட்ட

*இஸ்ராயேலை விடுவிப்பார் (45:13). எருசலேமை உலக மையமாக மீண்டும் அமைக்கவும், அதன் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் ஆணையிடுவார் (41:2-4; 25-29; 44:28-45:6).*

*இறைவனது வாக்குறுதிகள் ஒவ்வொன்றும் நிறைவேறும் நிலையில் உள்ளது. அவரது தர்மம் நிலை நாட்டப்பெறும் (42:6). இவரது நீதி தளிர்க்கும் (45:8)*

*8. உ. புதிய யாத்திரை அல்லது விடுதலைப் பயணம்:-*

*விடுதலை அளிப்பவரான சைரசின் வெற்றி, இஸ்ராயேல் பாலஸ்தீனத்திற்குத் திரும்புவதின் முன்னோடியாகும். இஸ்ராயேல் விடுவிக்கப்பட்டு, யாவேயால் நடத்தப்பட்டு, சீரியாப் பாலையின் ஊடே, மிகக் குறுகிய காலத்தில், பவனியாய்ப் பயணம் செய்து எருசலேம் திரும்பும் (40:3 தொ). அப்பயணம் மெதுவான மாட்சிமை மிக்க ஊர்வலமாக அமையும். அதை யாவேயே தலைமை தாங்கி நடத்துவார் (52:11-12). இப்பயணத்தை எளிதாக்கப் பாலைவனமே மாற்றி அமைக்கப்படும் (40:3-5; 41:17-19; 43:19-2). யாவே அரசராக எருசலேமுக்குள் செல்வார் (51:7). பிறநாட்டு மக்கள் எல்லாம் இதைப் பார்த்து மனந்திரும்புவர்; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களோடு உறவு செய்து கொள்வர் (44:5).*

*பாபிலோனிலிருந்து பாலஸ்தீனத்துக்குத் திரும்புதலை ஒரு புதிய யாத்திரையாகவும், இறைவனது மற்றுமொரு உறுதியான தலையீடாகவும் 2-ஆம் ஏசயா காண்கிறார். மோசேயின் காலம் தனது காலத்தில் மீண்டும் நிகழ்வதாகக் காண்கிறார். ஆனால் தன்னை ஒரு மோசேயாகக் கற்பனை செய்யவில்லை. இறைவனே "ஆயனைப் போல் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக் குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார்; அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார்; சினையாடுகளை இளைப்பாறும் இடத்திற்குக் கூட்டிச் செல்வார்" (40:11). இறைவாக்கினர் யாத்திரைக் கருத்தை மீண்டும் மீண்டும் நினைவு கூர்கிறார். இறைவன் பாதையைத் திறந்து விடும் வரை, பலமிக்க பாபிலோன் இறைமக்களின் பாதையை மறைக்கும், மற்றொரு செங்கடலாகும். பாலஸ்தீனத்திலிருந்து பாபிலோனைப் பிரிக்கும் அராபியப் பாலைவனம், சீனாய்ப் பாலைவனத்தின் ஒரு நீடிப்பே ஆகும். மோசே பாறையிலிருந்து நீர் கொடுத்தார். இறைவனோ வறண்ட நிலத்தையே நீரூற்றாக மாற்றுவார் (41:18). இது புதுயுகத்தின் நிறைவாழ்வையும் அதன் வெளிப்பாட்டையும் அடையாளமாக அறிவிக்கிறது. மன்றாட்டு மிக்க தியானத்தாலும் அப்போஸ்தலப்பணியாலும் 2-ஆம் ஏசயா முதல் யாத்திரையின் உள்ளத்துடிப்பை வெளிப்படுத்தித் தன் சமகாலமக்களின் இதயத்தில் பதிய வைக்கிறார்.*

*நாடு கடத்தலிலிருந்து திரும்புதல் பாவ மன்னிப்பின், மீட்பின் அடையாளமாகும். இஸ்ராயேலின் உறவினரான யாவே தமது மக்களை மீட்பார் (48:53-25; 48:6-11). மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட தலைநகரிலிருந்தும் ஆலயத்திலிருந்தும் (44:26-28; 49:16) யாவே நாட்டை ஆள்வார் (52:7). இஸ்ராயேலர் பல்கிப் பெருகுவர் (46:19-20; 54:1). சமாதான உடன்படிக்கையிலும் (54:10), யாவேயைப் பற்றிய உண்மையான அறிவிலும் (54:13; 51:7; 48:17) நீண்ட காலம் வாழ்வர் (51:6-7). மற்ற நாடுகள் எல்லாம் இஸ்ராயேலுக்குப் பணிசெய்யும் (45:15; 49: 22-23).*

*8. ஊ. இறைவார்த்தையின் ஆற்றல்:-*

*மற்றெந்த இறைவாக்கினர்களையும்விட 2-ஆம் ஏசயா இறைவார்த்தையின் ஆற்றலைப் பெரிது படுத்துகிறார். இறைவார்த்தை வெல்ல முடியாத ஆற்றல் மிக்கது. இறைவனின் முந்தைய வார்த்தைகள் அல்லது வாக்குறுதிகள் ஏட்டில் வரும் வெறும் வார்த்தைகள் அன்று. மாறாக அவை செயல்களாகும். படைப்பு இறைவனது வார்த்தையிலிருந்தே தோன்றுகிறது. படைப்பு இறைவனது இரகசியத் [illegible]டர்சிலிருந்தும் ஆழ்ந்த அன்பு மிகுதியிலிருந்தும் தோன்றுகிறது.*

ஏனெனில் வார்த்தை, மனதிலிருந்தும் இதயத்திலிருந்தும் தோன்றுகிறது.

வார்த்தை விசுவாசத்தை உள்ளடக்குகிறது. இறைவன் தமது இறைவாக்கினர் வழியாகக் கூறியவை நிறைவேற வேண்டும். ஆனால் அவற்றை நிறைவாக அனுபவிக்க இஸ்ராயேல் சிறிது காலத்திற்குக் காத்திருக்க வேண்டும். ஆனால் அவை நிறைவேறும் போது புதுப்படைப்பு மிகப் பெரியதாய் இருக்கும். அதைக் கண்டு எல்லாரும் வியப்பெய்துவர் (43:9 தொ; 48:3-11). இறை வார்த்தை உண்மையான அறிவை அளிக்கிறது. ஆனால் அது இறைவனைப் பற்றிய நிறைசெய்தியை ஒருபோதும் அளிக்க முடியாது. ஆகவே,இறைவன் செயலாற்றுபவர் மட்டும் அல்லர்; மனிதக் கணிப்புகளுக்கு அப்பால் செல்பவர் என்ற உறுதியில் மனிதன் விசுவாசத்தால் அவருக்குப் பதில் அளிக்கிறான். இறைவார்த்தையில் விசுவாசம் கொள்வது, இந்நூலின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். அதன் பல பாடல்கள் இக்கருத்தில் உச்சநிலையை அடைகின்றன. ''ஆண்டவர்தாமே திருவாய் மலர்ந்தார்... நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்'' (40:1-8).

இறைவார்த்தை ஆற்றல் மிக்கது; மழையையும் பனியையும் போன்றது. மழை நீர் நடுவானில் தொங்கிக் கொண்டிருப்பதில்லை. அது பூமியில் விழுந்து தரையைச் சோர நனைத்துச் செழிப்பாக்கி அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவும் தருகிறது. அவ்வாறே இறைவார்த்தையும் செயல்படுகிறது. இரண்டும் உலக வடிவம் பூண்டு மனிதனை அடைகின்றன. மழை புல்லாகவும் அறுவடையாகவும் மரங்களாகவும் மனிதனை அடைகிறது. இறை வார்த்தை மனிதக் குறியீடுகளின் நிறைவிசையோடு மனிதனை அடைகிறது. இறைவன் விரும்பியதைச் செய்கிறது. எதற்காக அதை அனுப்பினாரோ அதை நிறைவேற்றுகிறது (55:10-11).

*8. எ. இறைவனது மக்கள்:-*

நாடுகடத்தப்பட்ட காலத்தில்தான் இஸ்ராயேல் தனது அழைப்பைத் தியானித்து உணர்ந்தது எனலாம். தன் கடந்தகால வரலாற்றின் வழியாகத் தனது அழைப்பை உணர்கிறது. இந்த வரலாற்றில் மூன்று கட்டங்களைச் சிறப்பித்துக்கூறுகிறார் 2-ஆம் ஏசயா. அவை ஆபிரகாம் (41:8-9; 51:2), இங்குமங்குமாகக் குறிக்கப்படும் யாத்திரை, தாவீது (55:3) ஆகியவையாகும். இந்த வரலாற்றைப் புதிய இஸ்ராயேல் தனது மரபுரிமையாகப் பெற்றது. இந்த மரபுரிமையில் ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோரின் சலுகைகளும் தூதும் மீண்டும் வாழ்கின்றன; எல்லோருக்கும் உரியனவாகக் காட்டப்படுகின்றன.

நித்திய இறைவன் படைப்பிலும், வரலாற்றிலும் தாம் ஆற்றும் செயல்களில் தமது மக்களோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளார். அவர், ''இஸ்ராயேலின் பரிசுத்தர்'' ஆவார். இந்த உடன்படிக்கை உறவு ஆபிரகாமை இறைவன் தேர்ந்தெடுத்து அழைத்ததில் தொடங்குகிறது. இஸ்ராயேல் தனது தகுதியால் இறைவனது அன்பைப் பெற்றது என்று கூறமுடியாது. ஆபிரகாமின் வாழ்விலிருந்து 2-ஆம் ஏசயா காலத்து இஸ்ராயேலர், ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் (51:2). நாடுகடத்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் சிலராயினும் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனெனில் ஆபிரகாம் வயது சென்றவரும் குழந்தையில்லாதவருமாய் இருந்தாலும், இறைவனது ஆசீரால், பல இனங்களுக்குத் தந்தையானார். அவர்களும் அதே ஆசீரில் பங்கு பெறுகின்றனர். ஏனெனில், இஸ்ராயேலர் அனைவரும் ஆபிரகாம் என்ற பாறையிலிருந்து, செதுக்கி எடுக்கப்பட்ட கற்களாவர் (51:1). இந்த உறவு ஒருமைப்பாட்டால், இஸ்ராயேலர், ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு மரபு உரிமையாளர் ஆவர். இறைவனின் ஊழியனும் அன்பனுமான ஆபிரகாமின் வழித்தோன்றல்களான இஸ்ராயேலுக்கு ''உன்னைத் தேர்ந்து கொண்டோம்; உன்னைத் தள்ளி விடவில்லை'' (41:9) என்ற

வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. நாடு கடத்தப்பட்டதால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் தகுதியை அவர்கள் இழந்து விடவில்லை. இறைவனான கணவன் தம் மனைவியாகிய இஸ்ராயேலுக்கு விவாகரத்துக் கொடுக்கவில்லை (50:1-2). ''குறுகிய காலந்தான்'' இஸ்ராயேல் கைவிடப்பட்டது. திருமண உறவு மீண்டும் அமைக்கப்படும்; புதுப்பிக்கப்படும். இந்த உறவு பெருவெள்ளத்திற்குப்பின் நோவாவோடு செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கைபோல், நிலையானதாகும்; முறிக்க முடியாததாகும் (54:4-10). ''மலைகள் நிலைபெயரலாம்; குன்றுகள் அசைந்து போகலாம்; ஆனால் உன் மீது நாம் கொண்ட அன்பு நிலைபெயராதிருக்கும்; நமது சமாதானத்தின் உடன்படிக்கை அசையாதிருக்கும் என்கிறார் உன்மேல் இரக்கம் கொள்ளும் ஆண்டவர்'' (54:10).

சீனாய் உடன்படிக்கையை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், இறைவாக்கினர் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைக் (2 சாமு. 7:1-29) குறிப்பிடுகிறார். தாவீதின் அரசமரபு என்றும் நிலைத்திருக்கும் என்று தாவீதோடு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இஸ்ராயேலின் வாழ்விலும் வரலாற்றிலும் நிறைவேறும் (ஏச 55:3; லூக் 1:32-33). இந்த உடன்படிக்கை உறவு நூல் முழுவதும் காணப்படுகிறது. தொடக்க வார்த்தைகளிலேயே அறிவிக்கப்படுகிறது. ''ஆறுதல் கொடுங்கள், நம் மக்களைத் தேற்றுங்கள், என்கிறார் உங்கள் இறைவன்'' (40:1), இந்நூலின் ஆறுதல் செய்தி, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரால் அன்பு செய்யப்பட்டு, அவரோடு ஒன்றிக்கப்பட்ட மக்களைப் பார்த்துக் கூறப்படுகிறது. இந்த உடன்படிக்கை அன்பு, நூலின் பல் இடங்களில் வரும் வாக்குறுதிகளிலும், உறுதி மொழிகளிலும், எடுத்துக்கூறப்படுகிறது. பிற இனத்தவரின் கடவுளர்கள் அவற்றை வழிபடுவோரால் தூக்கிச் செல்லப்படவேண்டும். ஆனால் யாவே தமது மக்களைத் ''தாய் வயிற்றிலிருந்து. தலைநரைக்கும் வரை'' தூக்கிச் சென்றுள்ளார் (46:3-4). அவர்கள் நீரையும் நெருப்பையும் கடந்து செல்லும் போதும் பாபிலோனின் வீழ்ச்சியின் விளைவான குழப்பங்களையும் ஆபத்துக்களையும் கடந்து செல்லும்போதும் அவர்களை இறைவன் எப்போதும் காப்பாற்றுவார் (43:2). இறைவனது இந்த அன்பு, இரக்கத்திற்கு இஸ்ராயேல் தகுதிபெறவில்லை. ஏனெனில், இஸ்ராயேல் குருடனும், செவிடனுமானது. மோசே இறைவாக்கினர்கள் வழியாக அளிக்கப்பட்ட தனிச்சிறப்பான வெளிப்பாட்டின் உட்பொருளைப் புரிந்து கொள்ளவில்லை (42:18-12). கடந்த காலத்தில் இஸ்ராயேல் பலதவறுகள் செய்திருந்தாலும், இறைவன் தம் மக்கள்மேல் இரக்கம் கொள்வார். ஏனெனில் எவ்வளவு ஆழமான மனித அன்பையும் விட இறைவனது அன்பு பலமானது. ''பெற்றவள் தன் பிள்ளையையே மறந்து விட்டாலும், நாம் உன்னை ஒரு போதும் மறக்க மாட்டோம். இதோ, நம் கைகளில் உன்னைப் பொறித்துள்ளோம்'' (49:15-16).

இறைவனது இந்த வலிமைமிக்க அன்பு செயலில் காட்டப்படவிருக்கிறது. அவரது அபிடேகம் பெற்ற சைரசு வழியாகக் கைதிகள் விடுதலை பெறுவர். சிதறிக்கிடக்கும் நாடு கடத்தப்பட்டவர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் சீயோனுக்குத் திரும்புவர் (43:5-7). ''அரசர்கள் இஸ்ராயேலின் வளர்ப்புத் தந்தையர்களாகவும், அரசிகள் செவிலித்தாயாகவும் இருப்பார்''. அந்நிய நாட்டினர் இஸ்ராயேலின் பயணத்தை விரைவுபடுத்துவர்; வணக்கம் செலுத்துவர் (49:22-23). இஸ்ராயேலர் பெரும் எண்ணிக்கையில் திரும்புவதால் தாயாகிய சீயோன் தனது கூடாரத்தை அகலப்படுத்த வேண்டியிருக்கும். நாடு கடத்தப்பட்டபோது, தன் கணவரால் கைவிடப்பட்டுப் பிள்ளைகளையும் இழந்த அவள், முன்கொண்டிருந்ததைவிட, பலபிள்ளைகளைக் கொண்டிருப்பாள் (54:1-5). இந்த விடுதலைச் செயலில் இறைவனின் மகிமை எல்லா நாடுகளுக்கும் வெளிப்படுத்தப்படும். இஸ்ராயேலின் பழங்கால எதிரிகளும் வந்து வணக்கம் செலுத்துவர். தங்கள் சிலை வழிபாட்டைக் கைவிட்டு ஆண்டவரை

ஏற்றுக் கொள்வர். ஏனெனில் ''உன்னிடத தில் மட்டுமே இறைவன் இருக்கிறார்; உன் னிடத்திலன்றி வேறெங்கும் இறைவன் இல் லை'' *(45:14)*. மீட்பராகிய இறைவனின் செயலும் மீட்கப்பட்ட பரிசுத்த மக்களின் பிரசன்னமும் புற இன மக்களை மனந்திருப் பப் போதியனவாக இருக்கும்.

இப்படிப்பட்ட இறைமக்களாகிய இஸ்ரா யேலுக்கு இரு வகை தூதுப் பணிகள் உண்டு. ஒன்று சாட்சியாக இருத்தல்; மற்றொன்று நடுவராக இருத்தல். வரலாற்றில் இஸ்ரா யேல் இறையொருமைக் கோட்பாட்டுக்குச் சாட்சியாக இருத்தல் தெளிவாக எடுத்துக் கூறப்படுகிறது *(40:18-25; 43:11; 44:7; 45:5-6. 18-22; 46:5-9)*. இறையொருமைக் கோட் பாடு ஒரு விசுவாச அறிக்கையாக மாறுகிறது *(44:6; 54:5)*. யாவேயின் படைப்புச் செயலுக் கும் மீட்புச் செயலுக்கும் உள்ள உறவை 2-ஆம் ஏசயா தெளிவாய் எடுத்துக் கூறுகி றார். உலகப்படைப்பும் இஸ்ராயேலின் ஊழும் ஒருங்கிணைந்து எடுத்துக்கூறப்படு கின்றன *(42:5-64; 44:2-28; 45:12-13; 51:9-10)*. யாவே தமது திட்டத்தை முன்னறிவித்த லுக்கு இஸ்ராயேல் சாட்சியாக உள்ளது *(43:10 தொ)*. யாவே தமது மக்களைத் திரும்ப அமைக்கப்போகும் செயலுக்கும் இஸ்ராயேல் சாட்சியாக உள்ளது. அப்படி அமைக்கப்படுவதன் எதிர் விளைவுகள் பிற இனத்தவரின் மனந்திரும்புதலின் தொடக்க மாக அமையும் *(40:5; 42:10; 45:14; 52:10; 54:5)*.

இந்த மனந்திரும்புதலும் மீட்பும் இஸ்ரா யேலின் வழியாகவும் இஸ்ராயேலின் ஆதிக் கத்திலும் நிகழும் *(45:22-24; 44:5)*. உடன் படிக்கை எல்லா மனிதருக்கும் பயனளிக்கும். இதற்குப் பொறுப்பாகும் பெருமையுள்ள வர்கள் - ''எஞ்சியோர்'' *(41:14; 46:3)*, ''யாவேயின் எளியோர்'' *(49:13)*, யாவே யின் ஊழியர்கள் *(44:1; 54:17)*, யாவேயில் நம்பிக்கை வைப்பவர்கள் *(40:31)*.

*8. ஏ. யாவேயின் துன்புறும் ஊழியன்:- காண்க. ஆண்டவரின் ஊழியர்*

**ஏசயாவின் திருநூல் (மூன்றாம்) - புதிய வானம் புதிய பூமி** (ISAIAH-III)

*1. தனித்தொகுப்பு:-*

முதலாம் இரண்டாம் ஏசயாப் பகுதிக ளுக்கு அளித்த அறிமுகங்களில் ஏசயா திரு நூலை, அறிஞர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து அவற்றை முதலாம் ஏசயா (அதி 1-39), இரண்டாம் ஏசயா (அதி 40-55), மூன்றாம் ஏசயா (அதி 56-66) என்று அழைத் தனர் என்று கூறுவோம். இந்தப் பிரிவு ஆராய்ச்சியை ''தாம்'' என்ற அறிஞர் தொடங்கி வைத்தார்.

அறிஞர் சிலர் இரண்டாம் மூன்றாம் ஏச யாப் பகுதிகளை வேறுபடுத்தவில்லை. ஒரே தொகுப்பாகவே கருதினர். ஏனெனில் இரு பகுதிகளுக்கும் இடையில் மீட்பு அனைவ ருக்கும் உரியது, நாடு கடத்தப்பட்டவர் தாயகம் திரும்புதல், எருசலேம் ஆலயம் கட்டப்படுதல், சுத்தி செய்யப்படுதலின் அவ சியம், நம்பிக்கை நிறைவேறுதல் போன்ற கருத்துக்கள் பொதுவாய் உள்ளன. ஆகவே இரு பகுதிகளையும் ஒரே ஆசிரியர் எழுதி னார் என்றும் கூறுவர். இவர் இரண்டாம் ஏசயா என்றும், நூலை நாடு கடத்தப்பட்ட காலத்தில் பாபிலோனில் வாழ்ந்தபோது எழுதினார் என்றும், அவரே தாயகம் திரும் பியபின் யூதாவில் மூன்றாம் ஏசயாவை எழு தினார் என்றும் விவிலிய அறிஞர் பலர் கருதினர்.

இரண்டாம், மூன்றாம் ஏசயா பகுதிகளுக் கிடையில் ஒற்றுமை இருப்பது போல் முக்கி யமான வேறுபாடுகளும் உண்டு. 2-ஆம் ஏசயாவுக்குப் பாபிலோன் பின்னணியாக அமைகிறது. ஆனால் 3-ஆம் ஏசயாவுக்கு எருசலேம் பின்னணியாக அமைகிறது. இரண்டு பகுதிகளிலும் காணப்படும் தொனி வேறுபடுகிறது.

ஆறுதலுக்குப் பதிலாக அச்சுறுத்தலும், நம்பிக்கைக்குப் பதிலாக அதைரியமும், சுத்தி செய்தலுக்குப் பதிலாகத் தண்டனை யும், வியக்கத் தக்கவைகளுக்குப் பதிலாக இறுதித் தீர்ப்பும் மூன்றாம் ஏசயாவில் முக்கி

யத்துவம் பெறுகின்றன. இதில் பாரசீக மன்னன் சைரசும் நாடு கடத்தப்படுதலும் சுட்டிக் காட்டப்படவில்லை. உள்நாட்டுத் தலைவர்களே குறிக்கப்படுகின்றனர். நாடு கடத்தப்பட்டவர்கள் ஏற்கனவே தாயகம் திரும்பி விட்டதாகவும் ஆலயம் கட்டி முடித்து விட்டதாகவும் தெரிகிறது. ஒழுக்க சமய நிலைகள் ஆகாய், செக்கரியா ஆகியோரின் நூல்களில் காணப்படுவதற்கு இணையாயுள்ளன. ஆலயம் ஓய்வுநாள், சட்டம், சடங்கு, வழிபாடு முதலியவற்றைப் பற்றி நன்கு தெரிந்தவர் போலப் பேசுகிறார் இப்பகுதியின் ஆசிரியர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இப்பகுதி ஒரு தனித் தொகுப்பாக இருக்கவேண்டும் என்றும், பிற்காலப் பதிப்பாசிரியர்கள், இதை ஏசயாவின் நூலோடு சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண்டும் என்றும், இப்போது அறிஞர்கள் கருதுகின்றனர்.

2. காலம்:-

ஆலயம் பற்றிய குறிப்புகள் (56:7; 60:7) ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட கி.மு. 516-க்குப் பின் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் எனச் சுட்டுகின்றன. ஆகவே இந்நூல் ஆகாய், செக்கரியா ஆகியோரின் இறைவாக்குப் பணிக்குப்பின் தோன்றியிருக்க வேண்டும். ஆனால், எருசலேமின் சுவர்களை கி.மு. 444-இல் நெகமியா கட்டி முடித்தார். ஆகவே மூன்றாம் ஏசயா நெகமியாவுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் (58:12; 60:10). மேலும் மூன்றாம் ஏசயா கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யூதாவில் நிலவிய மக்கள் நிலை பற்றிய பல முக்கிய விவரங்களைக் கொடுக்கிறது. நூலின் செய்தி பாலஸ்தீனத்து மக்களைப் பார்த்துக் கூறப்படுகிறது. யூத சமயத்திற்கும் சமூகத்திற்கும் வெளியிலிருந்து ஆபத்து வரவில்லை. ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு ''தங்களுடைய எண்ணங்களையே பின்பற்றிக் கொண்டு, தீயவழியில் நடக்கும் விசுவாசமற்றவர்களின் (65:2) பிரமாணிக்கமின்மையிலிருந்தே ஆபத்து வந்தது. இவர்களை இப்பகுதி வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

3. ஆசிரியர்(கள்):-

மூன்றாம் ஏசயா பகுதிக்குப் பலர் ஆசிரியர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது இப்போது பெரும்பாலான ஆய்வாளர்களது கருத்தாகும். இந்த ஆசிரியர்கள் இரண்டாம் ஏசயாவின் பாரம்பரியத்தில் வந்த சீடர்களுடைய குழுவைச் சேர்ந்தவர்கள். நூலின் நடை சிந்தனைப் போக்கு, வரலாற்றுச் சூழ்நிலை ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. இந்த ஆசிரியர்களைப் பொதுவாக 3-ஆம் ஏசயா என்றழைப்பது இப்போதுள்ள மரபாகும்.

3-ஆம் ஏசயாவில் வரும் வாக்குகள் 2-ஆம் ஏசயாவையும் எசக்கியேலையும் தழுவி எழுதப்பட்டுள்ளன. எசக்கியேலிடமிருந்து எருசலேம், ஆலயம் ஆகியவற்றின் புனிதம் பற்றிய அக்கறையை மூன்றாம் ஏசயா குறிப்பிடுகின்றார். உண்ணா நோன்பு, ஓய்வுநாள் ஆகியவற்றை வலியுறுத்துகிறார். பிற இன மக்கள்மேல் அக்கறை, இதயம் சார்ந்த சமயம், எருசலேமின் மகிமை போன்ற கருத்துக்களை இரண்டாம் ஏசயாவைப் பின்பற்றி உரைக்கிறார். இந்த இரண்டு பெரிய இறைவாக்கினர்களிடமிருந்து, சுத்தி செய்யப்பட்ட எருசலேம் இஸ்ராயேலுக்கு அளிக்கப்படும் பெரும் கொடையாகும், சிலைவழிபாட்டு எதிர்ப்புப் போன்ற கருத்துக்களை எடுத்துக் கையாளுகிறார். சிலை வழிபாட்டைக் கண்டனம் செய்யும் கடைசி இறைவாக்கினர் 3-ஆம் ஏசயா ஆவார்.

நாடு திரும்பிய யூத மக்களுக்கு 3-ஆம் ஏசயா வழி காட்டியாகத் திகழ்கிறார். பரிசுத்த நாட்டில் மக்கள் மீண்டும் குடியேறிய காட்சிகளை விவரிக்கிறார். யாவேயின் எளியோரான விசுவாசிகளை ஆதரித்து விசுவாசமற்றவர்களைக் கண்டனம் செய்து அவர்களை மனந்திரும்ப அழைக்கிறார்.

4. இலக்கிய நடை:-

3-ஆம் ஏசயா 2-ஆம் ஏசயாவிலிருந்து சொற்றொகுதியிலும் நடையிலும் வேறுபடுகிறது. இது இப்பகுதி ஒரு தனித்தொகுப்பா

கும் என்று சுட்டிக்காட்டுகிறது. இப்பகுதியில் 2-ஆம் ஏசயா நேரடியாகப் பேசவில்லை. மாறாக, அவரின் கூற்றுகளிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிப் புதிய நிலைக்கேற்ப விளக்கம் அளிக்கின்றார் ஆசிரியர். இது இதுவரை விவிலியப் பாரம்பரியத்தில் காணப்படாத புதிய மரபாகும் (57:14ஐ 40:3- ஒடும்; 60:13ஐ 4:1- ஒடும்; 60:16ஐ 49:22- ஒடும் ஒப்பிடுக)

5. நூலின் திட்ட அமைப்பு:-

இந்நூல் பல அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் கொண்டு திகழ்கிறது.

1) நாடு கடத்தலுக்குப் பின்காலத்து அறிவுரை: தோரா அல்லது சட்டம் (56:1-8).

2) நாடு கடத்தலுக்கு முன்காலத்து அறிவுரை (56:9-57:13).

3) நாடு கடத்தலுக்குப் பின்காலத்துப் பாடல்கள் (57:14-59:21).

4) தாயகம் திரும்புதல்பற்றிய பாடல்கள் (60:1-62:12).

5) தனித்து நின்று வெல்லும் வீரராகிய இறைவன் (63:1-6).

6) மன்றாட்டுத் திருப்பாசுரம் (63:7-64:12)

7) இறுதித் தீர்ப்பு (65:1-66:24)

6. சிறப்புக் கருத்துக்கள்:

6. அ. பற்றுறுதியுடையவர்களும், நெறி தவறியவர்களும்:-

3-ஆம் ஏசயா நூல் தோன்றிய காலத்தில், யூத சமூகத்தின் நிலை கோதுமையும் களைகளும் நிரம்பிய நிலத்துக்கு ஒப்பாய் இருந்தது. ஆகவேதான், ஆறுதல்களும் தீர்ப்புகளும் இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. இக்கால யூதர்களைப் பிரமாணிக்கமுள்ளவர்கள், விசுவாசமற்றவர்கள் என்று இருவகையாகப் பிரிக்கலாம். ''தங்களுடைய எண்ணங்களையே பின்பற்றிக் கொண்டு தீயவழியில் நடக்கும் விசுவாசமற்றவர்கள்'' (65:2) ஒரு புறம்; ''யாவேயின் வாக்கைக் கேட்டு அஞ்சும்'' (66:5) பக்தியுள்ள விசுவாசிகள், மறுபுறம், விசுவாசமற்றவர்கள் நாடு கடத்தலிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். அவர்களுடைய சிலைவழிபாட்டையும், ஒழுக்கக் கேடுகளையும் நூலின் இறைவாக்கினர் வன்மையாகக் கண்டிக்கிறார். குறிப்பாக, ஆன்மீகத்தலைவர்களாகத் திகழ்ந்த தீர்க்கதரிசிகளையும், அர்ச்சகர்களையும் அவர்களுடைய சீர்கெட்ட வாழ்க்கைமுறைக்காகச் சாடுகின்றார்; அவர்கள் குருட்டுக் காவலர்கள், ஊமைநாய்கள், சோம்பேறிகள், போதுமென்ற மனமில்லாத பேராசை பிடித்தவர்கள், மந்தையைக் கவனிக்காது தங்களையே கவனித்துக் கொள்ளும் மேய்ப்பர்கள், குடிவெறியர்கள், சீர்கேடான வாழ்க்கையுடையவர்கள் என்று இந்நூல் அவர்களைத் தாக்குகின்றது. மக்கள் சிலை வழிபாட்டிலும் வேசித்தனத்திலும் ஈடுபட்டனர். பாலின வழிபாட்டில் பங்கெடுத்தனர். சிறுகுழந்தைகளைப் பலியிட்டனர். அந்நியக் கடவுள்களின் தலங்களுக்குத் தூது விடுத்தனர். உண்மையான விசுவாசத்தைப் பார்த்துக் கேலி செய்தனர் (57:3-13). இந்நிலையில் இறைவன் அவர்களிடமிருந்து விலகியவர்போல் விளங்கியதொன்றும் வியப்பதற்கில்லை. ''உங்கள் அக்கிரமங்கள்தான் உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையே பிரிவினையை, ஏற்படுத்தின. உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதபடி உடங்களிடமிருந்து அவரது முகத்தை மறைத்தன'' (59:2). அவிசுவாசிகளைப் பார்த்துக் கொலை, பொய், அநீதி, நேர்மையின்மை, தீய திட்டங்கள் ஆகிய குற்றங்கள் சாட்டப்படுகின்றன (59:3-7). இத்தகைய தீமைகளை எதிர்க்க எந்த மனிதனாலும் முடியாது. ஆகையால் இறைவனே தலையிடுவார். பெரிய வீரனைப்போல் ''மார்க்கவசமாய் நீதியையும், தலைச்சிராவாய் மீட்பையும்... பழிதீர்க்கும் சினத்தையும் உடையவராகவும் ஆத்திரத்தை மேலாடையாகவும்'' (59:17) அணிந்து போராடுவார் (1 தெச 5:8; எபே 6:10-17). யூதாவிலும், உலக முழுவதிலும் தம் எதிரிகளின் செயல்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார். அவர்களைத் தீர்ப்பிட ''ஆவியால் உந்தித்தள்ளப்பட்ட காட்டாற்று வெள்ளம்போல் வருவார்'' (எச 59:18-19).

- அவிசுவாசிகள் மேல் தீர்ப்பிடவரும் இறைவன் ''சீயோனுக்கும் யாக்கோபின்

வீட்டாருள் தீமையை விலக்கித் திரும்புகிறவர்களுக்கும் மீட்பராய் வருவார்'' (59:20). அவர்களுக்கும் சமூக ஒழுக்க, சமய நிலைகளிலே மனத்தளர்ச்சியடைந்தவர்களுக்கும் ஆறுதல் அளிக்கப்படுகிறது. அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்; நம்பிக்கை உறுதியளிக்கப்படுகிறது. இந்தப் பகுதியைக் கிறிஸ்தவர்கள் நன்கு அறிவர். ''ஆண்டவரின் ஆவி என்மேலே, ஏனெனில், ஆண்டவர் என்னை அபிசேகம் செய்துள்ளார், எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து, உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும், கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும், ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டையும், நம் இறைவன் பழிவாங்கும் நாளைத் தெரிவிக்கவும், அழுகிறவர்கள் அனைவர்க்கும் ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுகிறவர்களை மகிழ்விக்கவும், சாம்பலுக்குப் பதிலாய் மணிமுடியையும், அழுகைக்குப் பதிலாக மகிழ்ச்சியின் தைலத்தையும், நைந்த உள்ளத்திற்குப் பதிலாகப் புகழ் எனும் போர்வையைத் தரவும், ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார் (61:1-3). இதுவே இறைவாக்கினரது தூது. இதை அவர் நன்குணர்ந்திருந்தார். நாடு கடத்தலுக்குப்பின் வந்த துன்பமிக்க சூழ்நிலையில் அவதியுற்ற விசுவாசிகளுக்கு மீட்பளிக்கும் ஆண்டவரது நாளின் வருகையை முன்னறிவித்து, அவர்களுக்குப் புதுப்பலமும், நம்பிக்கையும் அளிப்பது அவரது தூதாகும்; அதே நாள் அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களுக்கும் தீயவர்களுக்கும் தீர்ப்பின் நாளாக இருக்கும். இப்பகுதியில் முதல் இரு வசனங்களை இயேசு தமது பணியின் தொடக்கத்தில், நசரேத்தூர் செபக்கூடத்தில் வாசித்து, அதன் விளக்கவுரையாக ''நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று'' (லூக் 4:21) என்று கூறினார். இயேசு நிறைவேற்ற வந்த பணியை 3-ஆம் ஏசயாவின் வாக்கு முழுமையாக விவரிக்கிறது எனலாம்.

6. ஆ. சமய முறைகளைக் கடைப்பிடித்தல்:-

ஆலயம், உண்ணா நோன்பு, ஓய்வுநாள், செபம் ஆகியவை பற்றிய 3-ஆம் ஏசயாவின் போதகம் முக்கியம் வாய்ந்ததாகும். நாடு கடத்தலுக்குப் பின்வந்த இறைவாக்கினர்கள், ஆலயமும் அதன் பலி வழிபாடும் இறைவனால் நிறுவப்பட்டவை என்று நம்பினர். ஆகாயும் செக்கரியாவும் ஆலயம் கட்டுவதைத் தொடங்கி வைத்து உற்சாகப்படுத்தினர். யூதச் சமூகத்தின் செழிப்பும் யாவே திரும்பி வருதலும் ஆலயம் மீண்டும் கட்டுவதோடு தொடர்புடையது என்று ஆகாய் வலியுறுத்தினார். மலாக்கியா ஆலயவழிபாடு சரியான முறையில் செய்யப்படுவதிலும், அதன் தூய்மைக்கும் ஆர்வம் காட்டினார். இவ்வாறு ஆலயமும் அதன் வழிபாடும் வழியுறுத்தப்படுவதற்கு எதிராக 3-ஆம் ஏசயா அறைகூவல் விடுப்பதாகத் தெரிகிறது. ''வானம் நம்முடைய அரியணை, பூமி நம்முடைய கால் மனை; அப்படியிருக்க, நீங்கள் நமக்கெனக் கட்டும் கோயில் எங்கே? நாம் வீற்றிருக்கும் இந்த இடந்தான் யாது? இவற்றையெல்லாம் நமது கையே படைத்தது; இவையனைத்தும் நம்மால் உண்டாக்கப்பட்டவை'', என்கிறார் யாவே(ஏச 66:1-2). யாவற்றையும் படைத்து, உலகத்தையே நிரப்பும் இறைவனை ஓர் இடத்தில் தங்க வைக்கவோ, மனிதர் கட்டிய கட்டடங்களில் தங்க வைக்கவோ முடியாது. இறைவனுக்கு வேண்டியது நல்ல இதயம் ஒன்றே. தனது தகுதியின்மையை உணர்ந்து இறைவனது வார்த்தைக்காக, அச்சத்தோடும் எதிர்பார்ப்போடும் காத்திருக்கும் எளியவர்ளையே யாவே கண்ணோக்குகிறார் (66:22). ''காலம் கடந்திருப்பவரும் மேன்மை தங்கிய உன்னதரும், பரிசுத்தர் என்னும் பெயரினருமானவர்'' என்று கூறுகிறார். 'உயர்ந்ததும் பரிசுத்தமுமான இடமே நமது உறைவிடம். ஆனால் பாவத்திற்காக வருந்திடும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தினரோடும் நாம் குடி கொண்டிருக்கிறோம்'' (57:15). 2-ஆம் ஏசயாவின் சீடர்களுக்கு ஆலயம் மீண்டும் கட்டப்படுவதற்கு முக்கியத்துவம் அளிப்பது தவறாகத் தோன்றியிருக்கவேண்டும். ஆலயத்தை அன்று; அதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி வலியுறுத்துவதையும்; பலிகளை அன்று, அவற்றைக் கீழ்ப்படிதலுக்கு மாற்றுப்பொரு

ளாக ஆக்குவதையும்; ஊழல் மிக்க காணிக் கைகளை ஒப்புக் கொடுப்பதையும் 3-ஆம் ஏசயா கண்டனம் செய்கிறார் (66:3-4).

இதே மனப்போக்கு உண்ணா நோன்பு பற்றிய கூற்றுகளிலும் பளிச்சிடுகிறது. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமின் வீழ்ச்சியை நினைவுகூரும் விதத்தில் நான்கு உண்ணா நோன்புகளை இறைவன் கண்ணோக்க வில்லை என்று உணர்ந்து அவற்றை ஏன் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்கின்றனர். அவர்களது ஒழுக்கம் கெட்ட நடத்தையாலும் பிறருடைய தேவைகளுக்கு மனம் இரங்காமல் அவர்கள் காட்டிய மரத் துப்போன புறக்கணிப்பாலும் அவர்களு டைய உண்ணாநோன்புகள் செயலற்றவை யாகி விட்டன என்று இறைவாக்கினர் பதில் அளிக்கிறார். அவர்கள் உண்ணா நோன்பைத் தூய்மையற்றதாக்குகின்றனர். ஏனெனில் அந் நாட்களில் அவர்கள் தங்கள் விருப்பத்தையே தேடுகின்றார்கள்; கூலியாட்களை வாட்டி வதைக்கின்றனர்; சண்டை சச்சரவு செய்கின்ற னர். பிறருக்கு அநீதி செய்கின்றனர். ''நாண லைப் போலத் தலை குனிவதும், கோணி ஆடைகளை உடுத்துவதும், சாம்பலில் உட் கார்வதும்'' ஆகிய வெளிச் சடங்குகளால் பயனே இல்லை (58:2-5). இறைவன் விரும் பும் மேலான உண்ணா நோன்பு: ''அக்கிரமத் தின் சங்கிலிகளை அறுத்துவிடு; அழுத்தியி ருக்கும் நுகத்தடிகளை இறக்கு; ஒடுக்கப்பட் டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்; சுமையானதையெல்லாம் உடைத் தெறி: பசித்திருப்பவனுக்கு உன் அப்பத் தைப் பகிர்ந்து கொடு; ஏழைகளுக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடு; ஆடை யில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தவனை அவமதிக் காதே........; உன் நடுவிலிருந்து நுகத்தடி யைத் தள்ளிவிட்டு உன் அயலார்க்கு எதிரா கக் கையோங்காமல், அடாத தொன்றையும் சொல்லாமல் இருந்தால், பசித்திருப்பவ னுக்கு உன் உணவைப் பகிர்ந்து கொடுத்துத் துன்புற்றவன் விருப்பத்தை நிறைவு செய் தால்...'' (58:6-7.10). இத்தகைய மேலான நோன்பு பலன்மிக்க கைம்மாறைக் கொண்டு வரும். ''அப்போது உன் ஒளி காலைக் கதிரவன் போல் தோன்றும். விரைவில் உனக்கு நலம் கிடைக்கும். ஆண்டவருடைய மகிமை உன்னைப்பின் தொடரும்; அப் போது ஆண்டவரைக் கூவியழைப்பாய்; அப் போது அவரும் உன் மன்றாட்டைக் கேட்ட ருள்வார்; அவரை நோக்கிக் கூக்குரலிடு வாய்; அவரும் இதோ இருக்கிறோம் என் பார்... உன் வெளிச்சம் இருள்நடுவில் உதய மாகும்; பட்டப்பகல் போல் இருக்கும்; ஆண்டவர் உன்னை என்றும் வழிநடத்து வார்; பாலைநிலத்தில் உன் உள்ளம் நிறைவு பெறச் செய்வார்; உன் எலும்புகளை உறுதிப் படுத்துவார்; நீர்வளமிக்க தோட்டம் போலும், வற்றா நீரூற்றுப்போலும் உன்னை விளங்கச் செய்வார். தலைமுறை தலை முறையாகக் கிடந்த அடிப்படைகளை நீ கட்டி எழுப்புவாய்; மதிற்சுவர் உடைப்புகளைக் கட்டுகிறவன் என்றும், மக்கள் குடியேறும் படி தெருக்களை அமைக்கிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்'' (58:8-9.10-12). சமூக நேர்மையையும் அன்பிரக்கத்தையும் கோரும்போது இறைவாக்கினர் புறச்சடங்கு களைக் கடைப்பிடிப்பதைக் கொள்கை அள வில் நிராகரிக்கவில்லை. நேர்மை, உதவி செய்தல், நீதி, அன்பு, இரக்கம், அடங்கிய உண்மையான நோன்புகளிலிருந்து அறவே விலக்கப்பட்ட சடங்கு நோன்புகள் இறைவ னுக்கு ஏற்புடையதன்று என்றே இறைவாக் கினர் வலியுறுத்துகிறார்.

நாடு கடத்தலுக்குப்பின், உண்ணா நோன் போடு, ஓய்வு நாள் அனுசரிப்பும் முக்கியத்து வம் பெற்றது; பெரிதும் வலியுறுத்தப் பெற் றது. ஓய்வு நாள் இறைவனது நாளாகும், வியாபாரம், இன்பம் தேடல், வீண் பேச்சுக் கள் முதலியவற்றால் அதன் புனிதத்தன்மை கெடக்கூடாது. மாறாக அதை மகிழ்ச்சியோ டும், மகிமையோடும் ஏற்றுப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு வேளை நாடு கடத்தப்பட்ட காலத்தில்தான் செபக்கூட மும் அதன் வழிபாட்டுமுறையும் தோன்றின என்று கூறலாம். ஓய்வுநாள் ஆண்டவரில் பேரின்பம் அடைய வாய்ப்பு அளித்தது (58:13-14). யூதர்கள் மட்டுமன்று, மதம்மாறி

ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பவர்களும் ''எல்லா மக்களினங்களுக்கும் உரிய செப வீட்டில்'' மகிழ்ச்சி எய்துவர் (56:1-8). ஓய்வு நாள் கடைப்பிடிப்பு நாடு கடத்தப்பட்ட காலத்தில், உண்மையான இஸ்ராயேலின் அடையாளமாயிற்று. அதனால் அதன் முக்கியத்துவம் சிறப்புடையதாகும். ஏனெனில் குறித்த காலங்களைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிப்பவர்கள்தான் இறைவனுக்கு எப்போதும் பற்றுறுதியுடையவர்களாயும், எப்போதும் அவரது வழிகளில் நடக்கக்கூடியவர்களாயும் இருக்க முடியும்.

இந்த இறைவாக்கு நூலில் செபம் செய்யும் பழக்கம் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. அன்பின் சூழ்நிலையில் செபம் ஆற்றலுள்ளதாகிறது (58:9). மக்களின் செபங்களுக்குப் பதில் கிடைக்கவில்லையென்றால், அது இறைவனது செவி மந்தமாகி விட்டதால் அன்று; மாறாக ''உங்கள் பாவங்களே அவர் செவி சாய்க்காதபடி உங்களிடமிருந்து முகத்தை மறைத்தன'' (59:2). மக்கள் மன்றாட ஆயத்தமாய் இருப்பதைவிட, இறைவன் அதற்குச் செவிமடுக்க ஆயத்தமாய் உள்ளார்; அவரைத் தேடாதவர்களும் கண்டு கொள்ளுமாறு காத்து நிற்கிறார் (65:1-2). 3-ஆம் ஏசயாவின் பாவ அறிக்கை, மனத்துக்கம் மன்றாட்டு போற்றுரை ஆகியவை அடங்கிய செபங்களையும், வழிபாட்டு வடிவிலுள்ள பல பாடல்களையும் காணலாம். இவற்றில் ஒன்று கிறிஸ்துவத் திருச்சபையின் நற்கருணைச் செபத்திற்கு ஒத்த நன்றியுரைப் பாடலாகும். இதில் இறைவன் தமது மக்களது வரலாற்றில் செய்த மீட்புச் செயல்கள் ஆடம்பரமாய் நினைவுகூரப்படுகின்றன. ''அவர்களுடைய துன்பங்களைக் குறித்து அவர் கலங்கினார்; அவருடைய திருமுன் இருக்கும் தூதர் அவர்களைக் காத்தார்; தம் அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை அவரே மீட்டார்'' (63:9). இறைவனை ''நீரே, எங்கள் தந்தை'' என்றழைக்கும் இந்த உன்னத செபம் கடந்த காலத்தில் மீட்பராகத் தம்மை வெளிப்படுத்திய இறைவன் இப்போது புதிதாகத் தம்மையே மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று உருக்கமாக வேண்டுவதில் உச்சநிலை அடைகிறது (63:7-6 4:12).

தாழ்ச்சி, மனத்துக்கம், கீழ்ப்படிதல், அன்பு, வழிபாட்டுணர்வு, செபம் ஆகியவற்றை இந்நூல் வலியுறுத்துவதைப், புற அனுசரிப்புக்கு முரணானதாகக் காட்டுவது தவறாகும். பிற அகக்கூறுகளிடையே வேறுபாட்டை விவிலியம் ஏற்றுக் கொள்வதில்லை. விவிலியப் பொருளில் ''இதயம்'' என்பது உள்ளார்ந்த வாழ்வை மட்டும் குறிப்பதில்லை; இறைவனோடு உறவு கொள்ளும் முழு மனதையும் குறிக்கிறது. இறைவாக்கினர் வழிபாட்டைக் குறை கூறினாலும் அவர்கள் அதோடு தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் ''தூய்மையான ஆன்மீக'' சமயத்தை மட்டும் பரிந்துரைக்க வில்லை. ஆலயம், பலி, உண்ணா நோன்புகள், ஓய்வு நாள் அனுசரிப்பு ஆகியவை யாவும் முக்கியமானவையுமாகும். இறைவன் பால் கொண்டிருக்கும் பக்தியையும், பற்றுறுதியையும் எடுத்துக்காட்ட அவை அவசியமானவையுமாகும். அவை இறைவனது அருளின் வடிகால்களாக நிறுவப்பட்டவையாகும். ஆனால் இரண்டாம் ஏசயாவின் சீடராகிய மூன்றாம் ஏசயா அவருக்கு முன்வந்த பெரிய இறைவாக்கினர்களைப் பின்பற்றிப் பக்தியோடும் தாழ்ச்சியோடும் இறைவன்முன் வாழ்வதற்கும், மனிதர்களுக்கு நீதியும் பிரமாணிக்கமிக்க அன்பும் காட்டுவதற்கும் முதன்மையளிக்கிறார்.

6. இ. புதிய எருசலேம்:-

3-ஆம் ஏசயா மீட்பின் நாளை, உரிமையை மெய்ப்பிக்கும் நாளின் வருகையை அறிவிக்க ஆவியால் ஆற்றல் அளிக்கப்பட்டு இறைவனால் தான் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் (61:1-2). மீட்புப் பற்றிய வாக்குறுதி நிறைவேறும்வரை போதிப்பையும் செபிப்பதையும் தான் நிறுத்தப் போவதில்லை என்று உறுதிகொள்கிறார் (62:1). இறைவனின் சாமக்காவலர்களான இறைவாக்கினர்கள் யாவேயின் நாளின் வருகைக்காக இடைவிடாது செபிக்கவேண்டும் (62:6-7). இறைவன் வரவேண்டும் என்றும், அவர்

தம் மகிமையை எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் மன்றாடும் ஒரு செபத்தில் அவர்களின் உருக்கமிக்க ஆவல் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. ''வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வர மாட்டீரோ, புற இனத்தார் உம் திருமுன் நடுங்கவும் வர மாட்டீரோ'' (66:1-2).

இறைவன் தம்மை வெளிப்படுத்துவதும், தமது மகிமையைத் தோன்றச் செய்வதும் எருசலேமின்மேல் சூரியன் எழுவதுபோல் இருக்கும். ''உன் ஒளி வந்துவிட்டது. ஆண்டவரின் மகிமை உன்மேல் உதித்துவிட்டது''. சுற்றியுள்ள மக்கள் காரிருளில் மூழ்கிக் கிடப்பர். ஆனால் இறைவனது ஒளி சீயோன் மேல் வீசும். சீயோன் எழுந்து அவ்வொளியைப் பிரதிபலிக்கக் கட்டளை பெறுகிறது (60:1-2). அந்நாளில் சீயோனில் சூரியனுக்கோ சந்திரனுக்கோ தேவையிராது. ஏனெனில் ஆண்டவரே தம் மக்களுக்கு என்றென்றைக்கும் ஒளியாக இருப்பார் (60:19). இறைவனது இந்த மகிமைமிக்க நிலையான வெளிப்பாடு எருசலேமை மாற்றியமைக்கும். எல்லாவற்றையும் புதுப்பிக்கும், சமூகத்தின் புற, அகவாழ்வு சீர் திருத்தப்பெறும். சாலமோன் கட்டிய எருசலேமின் மகிமையையும் கடந்து சென்று, புதிய எருசலேமின் சுவர்கள் ''மீட்பு'' எனவும், அதன் வாயில்கள் ''போற்றி'' எனவும் அழைக்கப்பெறும். கடந்த கால வன்செயல்கள் அழிந்து, நிலையான பாதுகாப்பும் அமைதியும் நிலவும் (60:17-18). நகருக்குப் புதிய பெயர் கொடுக்கப்படும். அதற்கேற்றவாறு சமூகத்தின் தன்மை மாற்றியமைக்கப்படும். மக்கள் ''பரிசுத்த மக்கள் - ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள்'' என்றழைக்கப்படுவர் (62:2-12).

நாடு கடத்தப்பட்டவர்கள் சிதறிப்போன இடங்களிலிருந்து, பரிசுத்த நகருக்குத் திரும்பி வருவர். சிதறிப்போன தன் குழந்தைகள் வெகு தொலைவிலிருந்து திரும்பி வந்து தன்னிடம் கூடும்போது, தாயாகிய சீயோன் அக்களிப்பாள்; அவளது உள்ளம் வியப்பினாலும் மகிழ்ச்சியாலும் பூரிப்படையும் (60:4-5). பிறநாட்டினர் அவளது மக்கள் வெற்றியோடு திரும்புவதை விரைவுபடுத்துவர் (66:18-20). அவளது மகிமையைப் பற்றிக்கேள்விப்பட்டபோது, பிற இன மக்களும் அரசர்களும் பரிசுத்த நகரை நோக்கி வரிசையாக வருவர் (60.3). அப்படி வரும்போது தங்கள் நாட்டுச் செல்வங்களைக் கொண்டுவருவர் (60:5). அவர்களின் வருகைக்காக நகரின் வாயில்கள் எப்போதும் திறந்திருக்கும். புதிய எருசலேமின் மக்களுக்குப் பிற இனத்தவர் பணிபுரிவர். அதன் மக்கள் உலகின் அர்ச்சகர்களாக இருப்பர். அவர்கள் இறைவனது வார்த்தையை எடுத்துரைப்பர்; மனுக்குலத்திற்காக மன்றாடுவர் (60:6-14; 61:5-6). சீயோனின் சமூகம் புதிய அமைப்பைப் பெறும். ஆண்டவரின் வருகைக்காக இயற்கையே மாற்றி அமைக்கப்படும். ''இதோ! புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைக்கிறோம்'' (65:17). இதன் பொருள் இந்த உலகம் முழுவதும் அழிக்கப்பட்டுப் புதிய உலகம் படைக்கப்படும் என்பதன்று; இந்த உலகம் முழுவதும் புதியதாய் மாற்றியமைக்கப்படும் என்பதாகும்.

ஆயினும் இந்நூலில் காணப்படும் வருங்காலம் பற்றிய சித்திரத்தில் இருளும் ஒளியும் கலந்துள்ளன. ஆண்டவரின் அருள் தரும் ஆண்டே பழிவாங்கும் நாளாகவும் இருக்கும் (61:2). மீட்பவரும் பழிவாங்குபவருமான யாவே ஏதோமிலிருந்து வருகிறார். இறைவனுக்கு எதிரான உலகை ஏதோம் அடையாளமாகக் குறிக்கிறது. அவரது தோற்றம் அச்சம் தருவதாய் அமைந்துள்ளது. திராட்சைப் பழங்களை மிதிப்பவர்களைப் போல் அவருடைய ஆடை, அவரது பகைவர்களது செந்நீரால் சிவந்திருக்கும். ஆண்டவரின் நாள் உலகம் அனைத்திற்கும் தீர்ப்பு நாளாகும்; அவரது நாள் பரிசுத்த சீற்றம் வெளிப்படும் நாளாகும்; எல்லாப்பாவங்கள் மேலும் எத்துணையுமின்றி வெற்றிகொள்ளும் நாளாகும் (63:1-6). நூலின் இறுதி வாக்கியத்தில் தீர்ப்புப்பற்றிய மற்றுமொரு பயங்கர விவரிப்பு உள்ளது. எருசலேமுக்குத் தெற்கிலுள்ள இன்னோம் பள்ளத்தாக்கு நகரின் கழிவுக் கிடங்காகும். அங்கு அரிப்புழு பிணங்களைத் தின்று கொண்டேயிருக்கும்;

நெருப்பும் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும்; வெறுப்பை உண்டாக்கும் இடமாகும். இறுதித் தீர்ப்பின் தண்டனைக்கு இது ஓர் அடையாளமாயிற்று (66:24; மாற் 9:43-48).

இந்நூலில் வரும் புதிய எருசலேம் பற்றிய காட்சி சில அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது. இந்த விவரிப்புகளை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டுமா? அல்லது உருவகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? புதிய எருசலேம் பருப்பொருளால் ஆனதா அல்லது ஆன்மீகமானதா? அவை இவ்வுலகில் நிறுவப்படுவதா அல்லது வானகத்தைச் சேர்ந்ததா? இந்நூலின் ஆசிரியர் (கள்) இந்த வேறுபாடுகளைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் எண்ணத்தில் கொள்ளாத வேறுபாடுகளை அவர்கள்மேல் நாம் சுமத்தக்கூடாது. இந்த விவரிப்புக்களை உள்ளபடியாகவும், உருவகமாகவும் எடுத்துக்கொள்ளலாம். புதிய எருசலேம் பருப்பொருளால் ஆனதும், ஆன்மீகமானதுமாகும். புதிய அமைப்பு பூமியில் நிறுவப்படவேண்டும். ஆனால் இந்தப் பூமி இறைவனது பிரசன்னத்தால் மாற்றியமைக்கப்பட்டதாக இருக்கும். இந்த உலகை வருங்கால உலகிலிருந்து நாம் வேறுபடுத்துவதை மனதில் கொண்டு, இறைவாக்குக் காட்சி பிற்காலத்திற்கே பொருந்தியது என்று கருதுவது பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாகாது. இறைவனது சித்தம் நிறைவேறும் இறைவனது நகரைப் பூமியில் நாம் எதிர்பார்க்கலாமா? இந்த நம்பிக்கைதான் எல்லாச் சமூக நல முயற்சிகளிலும், விடுதலை, நீதி, நேர்மையான அரசு ஆகியவற்றிற்காகச் செய்யப்படும் தியாகங்களிலும் உந்து காரணமாக அமைந்துள்ளது. பூமியில் இறையரசின் வருகையை நாம் நம்ப வேண்டும்; அதற்காக மன்றாட வேண்டும்; உழைக்க வேண்டும்.

மாறாக, புதிய எருசலேம் வரலாறு கடந்த உண்மைக்கும், என்றென்றும் நிலைத்திருக்கும் சமூகத்திற்கும், இந்த உலகின் முடிவுக்கு அப்பாற்பட்ட புதிய யுகத்திற்கும், ஓர் அடையாளமாகும். மனிதக் கண்கள் கண்டிராத சில உண்மைகள் புதிய எருசலேம் பற்றிய காட்சியில் ஆவியால் வெளிப்படுத்தப்படுகின்றன. புதிய எருசலேமின் இறைவன் பிரசன்னமாயிருக்கிறார்; தம்மையே வெளிப்படுத்துகிறார். அவரது மகிமை எல்லாவற்றையும் மாற்றி அமைக்கிறது. இங்கு மனிதர்கள் மிக உன்னதமான காணிக்கைகளைச் சமர்ப்பித்து இறைவனை வழிபடுகின்றனர். அம்மக்களின் இதயங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அந்நகருக்குள் தீமைக்கு இடமே இல்லை. அதன் மக்கள் சமூகம் பொதுத் தன்மையுடையது, கத்தோலிக்கப் பண்புடையது. எல்லா இன மக்களும் இறைவனது மகிமையால் ஈர்க்கப்பட்டு எப்போதும் திறந்திருக்கும் அதன் வாயில்களுக்குள் நுழைகின்றனர். அது அழகும், மகிழ்ச்சியும் அன்பும் மிளிரும் இடமாக இருக்கும். ''ஆண்டவரின் கையில் நீ மகிமையின் மணிமுடியாக இருப்பாய்...மணவாளன் தன் மணவாட்டியைக் குறித்து மகிழ்வது போல் உன் இறைவன் உன்னைக் குறித்து மகிழ்ச்சியடைவார்'' (63:3.5). அது நிலையானதாக இருக்கும். ''நாம் படைக்கும் புதிய வானமும் புதிய பூமியும் நம்முன் நிலைபெயராதிருக்கப் போவதுபோல் உங்கள் சந்ததியும் பெயரும் நிலைபெயராதிருக்கும் என்கிறார் ஆண்டவர்'' (66:22).

7. இக்காலத்திற்கு:- இறைவாக்கினரது உண்மையான நோன்பைப் பற்றிய போதகம் நமது கவனத்தைக் கவர வேண்டும். புதிய பூமி, புதிய வானம் பற்றிய விவரிப்பு, அவற்றின் நிறைபொருளில், திருச்சபையின் குறிக்கோள்களாகும். அதை நோக்கி நாம் ஆர்வத்தோடு இயங்க வேண்டும்; செயலாற்ற வேண்டும்.

### ஏசயாவின் விண்ணேற்பு (ASCENSION OF ISAIAH)

இது கத்தோலிக்கத் திருமறையால் ஏற்றுக் கொள்ளப்படாத புதிய ஏற்பாட்டுக் காலத்தைச் சார்ந்த போலி நூலாகும். இது 1. ஏசயாவின் வேதசாட்சி மரணம், 2. எசக்கியாவின் ஏற்பாடு, மற்றும் 3. ஏசயாவின் திருக்காட்சி என்ற மூன்று மூல நூல்களால் ஆனது.

*1. ஏசயாவின் வேதசாட்சி மரணம்:-* 2 அரச 21:1-ஆவது வசனத்தினைக் குறிப்பாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட யூத மிட்ராசு கதையாகும். இதன்படி ஏசயா மனாசே மன்னனுக்கு எதிராகத் தீர்க்க தரிசனம் சொல்கிறார். இதனால் கடுங்கோபமுற்ற மன்னனால் ஏசயா இரம்பத்தால் இரண்டாக அறுக்கப்பட்டு இறந்தார். இப்புத்தகம் யூதத் தோற்றமுடையது. கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் எபிரேயத்திலோ அரமேயிக்கிலோ எழுதப்பட்டுக் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

*2. எசக்கியாவின் ஏற்பாடு:-* இது ஒரு கிறிஸ்தவ வெளிப்பாட்டு நூலாகும். இந்தப் பகுதி கி.பி. 6-ஆம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இதில் கிறிஸ்து ஏழாவது விண்ணகத்திலிருந்து வருகை, மனித அவதாரம், இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்கள், இயேசுவின் போதகம், பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்றவற்றைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பலவும், இவ்வுலகில் சாத்தான் தன்மையுடைய பெலமியரின் கொடுமை மிக்க ஆட்சி, ஆண்டவரின் இறுதி வெற்றி ஆகியவையும் காணப்படுகின்றன. ஏசயா இறைவாக்கினர் எசக்கியாவிற்குத் தனது தீர்க்கதரிசனங்களைக் கூறுவதாக அமைந்திருப்பதால் எசக்கியாவின் ஏற்பாடு என்ற பெயர் வந்திருக்கலாம்.

*3. ஏசயாவின் திருக்காட்சி:-* ஏசயா இக்காட்சியில் ஏழாம் வானகத்திற்குச் செல்வதாகக் கூறப்படுகிறது. அது கடவுளின் இருப்பிடம். இங்கு நல்லவர்கள் அனைவரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு விண்ணகத்திலும் ஆண்டவரது மகிமை போற்றப்படுவதைக் காண்கிறார். கடவுள் இயேசுவை பூமிக்கு அனுப்பி மக்களை மீட்கச் செய்வது கூறப்படுகிறது. இயேசுவின் புதுமைகள், துன்பங்கள், சாவு, உயிர்ப்பு போன்றவற்றை ஏசயா எசக்கியாவுக்கு அழகாக எடுத்துக் கூறுகின்றார். பின்னர் இயேசு இவ்வுலகில் அவரது அரசைப்பரப்பத் தமது பன்னிரு சீடர்களுக்குக் கட்டளை கொடுக்கிறதாகக் கூறப்படுகிறது. தனது சாட்சியை நிலைநிறுத்த ஏசயா காட்டிய உறுதிக்காக ஆண்டவரைக் காணும் பேறுபெற்றார்.

இந்தப் புத்தகம் முழுமையான வடிவில் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இப்போது எத்தியோப்பிய மொழி பெயர்ப்பில் மட்டும் தான் பாதுகாக்கப்பட்டுள்ளது. நூலில் அறிவியல் வாத தோசேத்திய சுவடுகள் காணப்படுகின்றன.

**ஏசர்கதோன்** *(ESARHADDON - அசூர் ஒரு சகோதரனைக் கொடுத்தார்)*

*அசீரியப் பாபிலோனிய (681-699 கி.மு.) வின் அரசன்; சனகெரிபின் புதல்வன்; அசூர் பாணிப்பாலின் தந்தை.*

இவருடைய தந்தை சனகெரிபு கொலை செய்யப்பட்டபோது ஏசர்கதோன் ஆட்சியைப்பிடிக்கப் போராட வேண்டி வந்தது. சனகெரிபு என்ன சூழலில் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி நமக்குத் தெரிந்தவை வெகுசொற்பம். அந்தக் குறிப்புகளின் வழியாக ஒரு முடிவுக்கு வருவது கடினம். இவர் முடிசூட்டும் முன்பே இளவரசனாக நியமிக்கப்பட்டிருந்தாலும் சனகெரிபுக்குப் பின் அரசன் இவன்தான் என்பதை இவரது சகோதரர்களும் மேலதிகாரிகளும் ஆணை இட்டிருந்தாலும் சனகெரிபு கொலை செய்யப்பட்ட போது, இவர் மறைந்திருந்ததாகக் கூறுகிறார். ஆனால் கனிகல்பட்டில் நடந்த போரில் அவருடைய சகோதரர்களைத் தோற்கடித்து அர்பேலா, அசூர், நினிவே போன்றவைகளையும் கைப்பற்றி உள்நாட்டுப் போரை உடனே ஒரு முடிவுக்குக் கொண்டுவர அவருக்குப் போதுமான அளவு உதவி கிட்டியது. ஏசர்கதோன் பாபிலோனிய ஆதரவாளனாக இருந்ததால் பாபிலோனியாவிலிருந்து எந்த எதிர்ப்பையும் அவர் எதிர்கொள்ளவில்லை. ஏலாம், அந்தக் காலக்கட்டத்தில் எந்த ஒரு கலகத்துக்கும் துணைபுரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மெரோதாக்கு-பாலதானின் ஒரு புதல்வனை பித்யாக்கினுக்கு ஆளுநனாக நியமித்தார். அவனும் தன் அரசனுக்குப் பிரமாணிக்கமாக நடந்து கொண்டான். ஏசர்கதோனின் போர்த்தந்தி

ரம் எகிப்தை அடிமைப்படுத்திக் கொள்வதிலே கருத்தாய் இருந்தது. ஏனெனில் எகிப்து பாலஸ்தீனத்தையும், சீரியாவையும் அடிக்கடி கலகம் செய்யத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தது. சீதோன், குந்திக்கு எதிராக ஆற்றலோடு செயல்பட்டு (677), அரேபியர்களை முழுமையான தூது முறைகளால் செயலளவில் கட்டுப்படுத்தி (676), எகிப்தைத் தாக்குமுன் தயாரிப்பாகச் செய்தார் (675). ஏசர்கதோன் எகிப்துக்குச் செல்லும் வழியாகக் காரான் சென்றார். அங்கே 'சின்' என்ற நிலவு-கடவுளிடமிருந்து உற்சாகப்படுத்து அடையாளத்தைப் பெற்றார். முதலில் தோல்வியைக் காண்பதுபோல் தோன்றினாலும் தொடர்ந்து போராடி வெற்றிபெற்றார். மெம்பிசை வெகுவிரைவில் கைப்பற்றினார். அசீரியர்களின் ஆதிக்கம் கிளர்ச்சிகளால் ஆபத்துக்குள்ளாவதுபோல் தோன்றவே ஏசர்கதோனுக்கு 669-இல் புதிய போரைத் தொடங்குவது அவசியமாகப்பட்டது. இருப்பினும் எகிப்துக்குப் போகும் வழியில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். வடக்கிலும், மேற்கிலும் முக்கிய எல்லைகளில் சிமிரியர்கள் மற்றும் மேதியர்களின் ஊடுருவல் தாக்குதல்களை முறியடிப்பதில் அவரது இராணுவமும், அரசியல் தந்திரச் செயலும் சாதகமாக அமைந்தன. 679-இல் சிமிரியர்கள் தோல்வியைத் தழுவினார்கள். 673-இல் மேதியர்கள்மேல் கடுமையான முறையில் தந்திரத்தோடு போர் தொடுத்தார். மேதியர்களுக்கு எதிரான நோக்கத்தோடு சித்தியர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு அந்நாட்டு அரசனுக்குத் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து, அந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். காலாக்கில் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட மேதியர்களைப் பற்றிய உடன்படிக்கைச் சுவடிகள் பகைவர்களிடமிருந்து ஆபத்துக்கள் நெருங்கியபோது ஏசர்கதோன் செய்த அறிவுக் கூர்மையான செயலை வெளிப்படுத்துகின்றன. இதேபோல அவருக்குப் பிறகு தன் மகன் ஆட்சிக்கு வருவதற்குச் செய்த வழிமுறைகளும் அவருக்குச் சாதகமாக அமைந்தன. அவருடைய சகோதரன் சமாகம்-உக்கின் பாபிலோனிய அரசனாக நியமிக்கப்பட்டபோது, அவனுக்கு அடுத்துவரும் அரசனுக்குரிய தகுதியைத் தன் மகன் அசூர்பானிபால் பெற அதிகாரப்பொறுப்புக் கொடுத்துத் தயார் செய்துவிட்டுச் சென்றார். 672-இல் நாட்டு மேலதிகாரிகள் அசூர்பானிபாலை அடுத்த அரசனாக ஏற்று ஆணையிடச் செய்தார். இதனால் எந்த ஒரு பெரிய இடைஞ்சலுமின்றி அவனும் அரசனானான்.

பாபிலோனியாவைப் புதுப்பிப்பதிலும் தெற்கில் பல நகரங்களை நிர்மாணிப்பதிலும் அவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். தன் தலைநகர் நினிவேயை அழகுபடுத்துவதில் அசீரிய அரசர்களிலேயே அவ்வளவாக அக்கறை காட்டாதவர் இவர்தான்.

ஏசல்மரம் (TAMARISK - இறகு போன்ற கிளைகளையுடைய நெய்தல் நிலச் செடி வகை)

இறகு போன்ற இலையமைப்பையுடைய ஒரு தனிப்பட்ட மரவகையாகும். ஆபிரகாம் பேயேர் செபாவில் (ஆதி 21:33) ஏசல் மரத்தை நட்டார். சவுல் கிபயாவில் ஒரு ஏசல் தோப்பில் தங்கினார் (1 சாமு 22:6). அவருடைய எலும்புகள் கலாத்தில் இருந்த யாபேசு கிலாயதுக்குக் (1 சாமு 31:13) கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. இதற்கு இணையான விவரிப்பாகிய 1 நாள் 10:12-இல் கருவாலி மரம் குறிப்பிடப்படுகின்றது. ஏசல் என்ற சொல் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒரு புனித மரத்தையோ தோப்பையோ குறிக்கலாம்.

ஏசா (ESAU மயிர் நிறைந்த, சிவந்த)

ஈசாக்கு-இரெபேக்கா ஆகியோரின் முதல் புதல்வன்; யாக்கோபின் மூத்த சகோதரன் (ஆதி 25:24-26; 27:1.32.42; 1 நாள் 1:34). ஏதோமின் வம்சத்தாரின் பாரம்பரிய முன்னோர் (ஆதி 36; மலா 1:2-3).

1. சொல்லாக்க விளக்கம்:- இந்தக் குல முதியவரோடு இரண்டு சொல்லாக்க விளக்கங்கள் தொடர்புபட்டிருக்கின்றன. 'மயிர்செறிந்தவன்' என்ற கருத்து இவரோடு தொடர்பு படுத்தப்படுகிறது. ''மயிர்செறிந்த தோலுடை

யவனாக இருந்ததால் அவனுக்கு 'ஏசா' என்று பெயரிட்டார்கள் (ஆதி 25:25; 27:11.21-23). இருப்பினும் இரு சொற்களிலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. ஏதோமைக் குறிக்கும் சேயீர் என்ற பெயருக்குத்தான் இந்தப் பொதுமுறை சொல்விலக்கணம் பொருத்தமாக இருக்கும். இதை ஏசாவிற்குத் தொடர்புபடுத்துவது இரண்டாந்தரமாகத் தான் இருக்கிறது. இவரது பெயர் பிங்கல (சிவந்த) நிறத்தோடு தொடர்புபடுத்தப்படு கிறது (ஆதி 25:25). 25:30-இல் இவர் யாக் கோபிடமிருந்து ''செந்நிற'' உணவை விரும் பினார். ஆகவே ஏதோம் என்று அழைக்கப் பட்டார்.

2. ஏசாவின் பிறப்பு:- ஈசாக்கின் உருக்க மான வேண்டுதலுக்குப் பதிலாக, அவரது மலடியான மனைவி ரெபேக்காவுக்கு இரு குழந்தைகளைக் கொடுத்தார் ஆண்டவர். ரெபேக்கா கருவுற்றிருந்த போது ''அவளுக் குள் சண்டை போட்டுக் கொண்டிருந்த'' இரு குழுந்தைகளைப் பெற்றெடுத்தாள். சிவப்பாகவும் மயிர்செறிந்தவனாகவும் இருந்த முதலாமவன் ஏசா என்று பெயரிடப் பட்டான். இரண்டாமவன் தன் சகோதரன் குதிங்காலைப் பற்றிக் கொண்டு வெளிவந்த வன், யாக்கோபு என்று பெயரிடப்பட்டான்.

இஸ்ராயேலர்களுக்கும் ஏதோமியர்களுக்கு முள்ள (உபா 2:4) இனத் தொடர்பை வர்ணித்துக் குலத்தோன்றல் காரண காரியத் தோடு விளக்கும் கோட்பாடு இந்தப் பிறப்பு வரலாற்றிலே பதிக்கப்பெற்ற முன்னறி விப்பு ஆகும் (ஆதி 25:23). ஏசா முதலாவதா கப் பிறந்தவனாக இருந்தபோதிலும் யாக் கோபுதான் அவனுக்குத் தலைவனாக இருப் பான் என்ற இறைமுன்னறிவிப்பு (25:25) யாக்கோபு-ஏசா பாரம்பரியத்தில் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது (காண்க ஏரோ 49:8; ஒபா 6; உரோ 9:10-13).

3. ஏசாவின் பிறப்புரிமை:- யாக்கோபு; அலைந்துதிரியும் இடையனாயும் ஏசா திறமை மிக்க வேட்டைக்காரனாகவும் மாறினர். அவன் வேட்டையாடிக் கொணர்வதை ஈசாக்கு விரும்பி உண்டார். வெற்றியின்றித் திரும்பிவந்தபோது சிறிது கஞ்சிக்கும் ரொட் டிக்கும் யாக்கோபிடம் தலைப்பேற்றான் பிறப்புரிமையைப்பேரம்பேசி முன்யோச னையின்றி விற்று விடுகிறார் (காண்க. எபி. 12:16).

4. திருமணம்:- நாற்பது வயதில், ஏசா, அந்நாட்டின் மக்களைச் சார்ந்த யூதித்து, பாசமத்து என்ற இரு பெண்களை மணந்தார் (26:34). இருவரும் ஏசாவின் பெற்றோரை ஏற்கெனவே மனம் நோகச் செய்திருந்தனர் (26:35). இது அவர்கள் ஆபிரகாமின் வழி வராததைக் குறிக்கலாம். பிறகு ஈசாக்கு தனது புதல்வர்கள் கானானியப் பெண்களை மணப் பதை விரும்பவில்லை என்பதை அறிந்து ஏசா, எகிப்திய ஆகார் வழியாக ஆபிரகாமுக் குப் பிறந்த இசுமயேலின் புதல்வியான மக லாத்தைத் தடையையும் எதிர்த்துத் திரும ணம் செய்து கொண்டார் (28:6-9; இவள் 36:3-இல் பாசமத்து என்றழைக்கப்படுகி றார்). 36:1-2-இன்படி கித்திய இனத்தைச் சேர்ந்த ஆதாவையும், கீவிய இனத்தைச் சேர்ந்த ஒகலிபாமாவையும் மணந்து கொண் டார்.

5. ஆசீரை இழந்தது:- ஏசா மூன்றாம் முறையும், யாக்கோபின் தந்திரத்தால், தலைப்பேற்றானுக்குரிய தந்தையின் ஆசீரை யும் இழந்தார். தந்தையின் மரணத்தருவா யில் ஆசீரைப் பெற நல்ல உணவை எடுத்துக் கொண்டு சென்றபோது, ஏசா ஆசீருக்குப் பதிலாகச் சாபத்தை வாங்கிக் கட்டிக் கொண் டார். பாலஸ்தீன வளமைமிக்க நிலத்தில் அவருக்குப் பங்கு கிடைக்கவில்லை. வேட் டையாடியும் சகோதரனுக்குப் பணிவிடை செய்தும் வாழ வேண்டி வந்தது (27:39-40).

கி.மு. 10,9-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயே லரோடு ஏதோமியரின் உறவு மேற்கூறப்பட் டதற்கு இணையாக அமைந்துள்ளது. ஏதோ மியர்களைத் தாவீது வெற்றி கொண்டார் (2 சாமு 8:12-14; 1 நாள் 18:13; காண்க. எண் 24:18). பிறகு ஏதோமியர் யோராமின் ஆட்சி வரை யூதாவுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்

கள் (2 அர 8:20-22; 2 நாள் 21:8-10). இந்த ஏமாற்று வேலையின் விளைவாக ஏசா யாக்கோபை வெறுத்தார், அவனைக் கொல்லவும் உறுதி பூண்டார். ஆனால் ரெபேக்கா சரியான சந்தர்ப்பத்தில் தலையிட்டு அதை முறியடித்தாள் (ஆதி 27:41-45).

6. ஒப்புரவாதல்:- 20 வருடங்களுக்குப் பிறகு யாக்கோபு பாலஸ்தீனத்துக்குத் திரும்பி வந்தபோது ஏசாவோடு சுமூகமான உறவு வைத்துக் கொள்ளவும், தன் அண்ணனின் கோபத்திற்கு எதிராகத் தன்னைக் காத்துக் கொள்ளவும் கவனமான ஏற்பாடு செய்திருந்தார் (32:3-21; 33:1-3). ஆனால் யாக்கோபின் ஏற்பாடுகள் தேவையற்றுப் போய்விட்டன. ஏசா தன் சகோதரனை எந்தத் தீங்கான எண்ணமுமின்றி ஏற்றுக் கொண்டார் (33:4-16). ஏசா மன்னிப்பை வழங்கினான். ஈசாக்கு இறந்தபோது இருவரும் சேர்ந்து அவரை அடக்கம் செய்தனர் (35:29).

இவரது ஆட்தன்மையை மதிப்பீடு செய்யும்போது, இளைஞனாக இருக்கும்போது காட்டிய இவரது குறுகிய நோக்குடைய சுயநலத்தை, இந்த ஒப்புரவில் சிறப்புப் பெறும் இவரது தாராள குணத்தோடும் மன்னிப்போடும் சமன் செய்யவேண்டும். முந்தைய நிகழ்ச்சியில் யாக்கோபு தந்திரத்தால் சொத்துடைமை பெற்றார். இங்கு ஏசா பெருந்தன்மையோடு மன்னிப்பு எனும் விலைமதிப்பில்லாத கொடையை வழங்குகிறார்.

7. விளக்கம்:-

அ) பழைய ஏற்பாடு: ஆதி. 25:23-இல் ரெபேக்காவுக்கு அளிக்கப்பட்ட ஆண்டவரின் செய்திக்குப் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களில் மலாக்கி ஒருவர் மட்டும் விளக்கம் அளிக்கிறார். இந்தச் செய்தி, இஸ்ராயேல், ஏதோம் ஆகியோரின் பிற்கால வரலாற்றில் நிறைவேறியதாக அவர் காண்கிறார் (மலா 1:2-3). இறைவனது சினத்திற்கு ஏதோம் தொடர்ந்து பலியாவதை மலாக்கி முன்னோக்குகிறார். இது நபத்தேயர் படையெடுப்பில் ஒருவேளை செயல்பட்டிருக்கலாம் (1:3-4).

ஆ) புதிய ஏற்பாடு:- இறைவன் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலையில் ரெபேக்காவுக்கு இறைவன் அளித்த முன்னறிவிப்பையும், மலாக்கியின் விளக்கத்தையும், அப்போஸ்தலர் பவுல் எடுத்துக் கூறுகிறார் (உரோ 9:12-13). பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களுக்கு மாறாகப் பவுல், இஸ்ராயேலின் மூத்த மகனுக்கு எதிரான இறைவனது சினம், அவரது செயல்களுக்கு முன்பே, விண்ணிலேயே தோன்றியதாக நோக்குகிறார். இதை ஏசாவை நித்திய அழிவுக்கு இறைவன் முன்பே திட்டம் செய்து விட்டார் என்று பொருள் கொள்வார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் ஏசாவுக்குக் ''காமுகன்'' ''உலகப் பற்றுள்ளவன்'' என்று பட்டம் சூட்டுகிறார். இதற்குச் சான்றாக, ''ஒருவேளை உணவுக்கு ஈடாகத் தன் தலைப்பேற்றுரிமையை விற்று விட்டதை'' எடுத்துக் கூறுகிறார் (எபி 12:16). தன் தந்தையின் மனதை மாற்ற வாய்ப்பில்லாமல் போகவே, அதாவது, ஆசீர் வழங்கப்படுமுன் செய்த மடமைக்கு மனம் வருந்த வாய்ப்பில்லாததால் அவரது ஆசீரைப் பெற ஏசா தவறிவிட்டார் என்று முடிவு செய்கிறார் (12:17). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஏசா உரோமைக்கு ஓர் அடையாளமானார். அவரது பாவமுள்ள தன்மை உரோமையோடு தொடர்பு படுத்தப்பட்டது.

ஏசான் (ESHAN ஆதரவு)

கெபிரோன் மலைப்பகுதியிலுள்ள யூதாவின் ஒரு கிராமம் (யோசு 15:52). இந்த இடத்தைச் சரியாகக் கணித்து 'இதுதான்' என்று கூறமுடியாது. எழுபது நூல் ''சோமா'' என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு துமேயின் (தூமா) மேற்கில் கெபிரோனுக்குத் தென் மேற்கில் 16 கி.மீ. அப்பால் உள்ள கிர்பெத் சாமாதான் ஏசான் ஆக இருக்கலாம்.

ஏசூவா (JESHUA - யாவே மீட்பாவார்) - ஆள்

1. தாவீதின் காலத்தைச் சேர்ந்த ஆரோன் குருக்களின் ஒன்பதாவது பிரிவின் தலைவராவார் (1 நாள் 24:11). இவரது வழித்தோன்றல்

கள் பாபிலோனின் நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்களுள் இருந்திருக்கலாம் (எஸ் 2:36; காண்க. நெக 7:39).

2. எசக்கியாவின் ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு குருவிற்கும் சேரவேண்டிய தொகையைப்பிரித்துக் கொடுப்பதில் உதவிய ஒரு லேவியர் (கி.மு. 715-687; 2 நாள் 3:15).

3. பாபிலோனியா அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த லேவியர் குடும்பத்தின் பெயர் கொண்ட மூதாதையர் (எஸ் 2:2; நெக 7:7). இவர் பகாத்து - மோவாப்பின் புதல்வர்களில் ஒருவராக எண்ணப்படுகிறார் (எஸ் 2:6;நெக 7:1-1).

4. பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து செருபாபேலோடு எருசலேமிற்குத் திரும்பி வந்த லேவியர்கள் குழுவின் தலைவர் (எஸ் 2:40; காண்க. நெக 7:43; 12:8-24). ஆலயம் மீண்டும் கட்டப்படுவதில் உதவி செய்தவர்களில் ஒருவர் (எஸ் 3:9). சட்டத்தை விளக்கிக்காட்டுவதில் (நெக 8:7) உதவியவர். வழிபாட்டுக்குத் தலைமைதாங்கினார் (9:4-5; 12:8). நெக 24-இல் இவர் கதிமியேலின் மகன் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் எந்த விதத்தில் உறவு என்பது தெளிவாக இல்லை (காண்க. எஸ் 2:40; நெக 7:43; 10;9).

5. இவர் கி.மு. 560 முதல் 490 வரை உள்ள காலத்தில் பெரிய குரு. கி.மு. 586-இல் பாபிலோனியாவிற்கு அடிமைகளாக யூதர்களோடு அழைத்துச் செல்லப்பட்ட யோசாதாக்கு என்பவரின் புதல்வர் (1 நாள் 6:15). இவர் ஆளுநர் செருபாபேல், இறைவாக்கினர் ஆகாய், செக்கரியா போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இவரது மகன் யோயாக்கிம், நெகமியாவின் சமகாலத்தவர் (நெக 12:26).

எருசலேமில் செருபாபேல் ஆளுநராக இருந்தபோது சமயத்தின் தலைவராக அதாவது பெரிய தலைமைக்குருவாக ஏசூவா எருசலேமில் பொறுப்பேற்றிருந்தார் என்று ஆகாய், எஸ்ரா போன்றவர்களின் நூல்கள் கூறுகின்றன. இருவருக்குமிடையே உள்ள உறவைச் செக்கரியாவின் காட்சிகளில் ஒன்று விவரிக்கிறது (செக் 4:11-14). அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களாகக் கூறப்படும் குறிப்பில் செருபாபேலுக்கு அடுத்து ஏசூவாவின் பெயர் தரப்பட்டுள்ளது (எஸ் 2:2; நெக 7:7; 12:1.10.26). இவர் எருசலேம் ஆலயத்தைக் கட்டுவதற்கான பொறுப்பைச் செருபாபேலுடன் இணைந்து தாமும் ஏற்றுக் கொள்கின்றார் (ஆக 1:1.12.14; 2:2.4; காண்க. எஸ் 5:1; சீரா 49:11-12).

பொதுவாக இறைவாக்கினர் செக்கரியா கண்ட காட்சிகளின் மையப்பொருளாக இருப்பவர் ஏசூவாதான். ஒருகாட்சியில் விண்ணக அவையிலுள்ள ஆண்டவரின் தூதர்முன் தலைமைக்குரு நிற்கின்றார். அங்கு அவருடைய அழுக்குப்படிந்த ஆடை அகற்றப்பட்டு, புதிய ஆடை உடுத்தப்படுகின்றது. பின் தலைமைக்குரு என்ற முறையில் ஆண்டவரின் இல்லத்தை ஆளுவதற்கான அதிகாரம் அளிக்கப்படுகின்றது (செக் 3). மேலும் அடிமைத்தளையிலிருந்து திரும்பி வந்த மக்களிடையே ஆலயப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் எப்படியிருக்கவேண்டும் என்று சந்தேகம் எழுந்த சூழ்நிலையில் ஆண்டவரின் இல்லத்தை ஆளும் அதிகாரமானது தலைமைக்குருவிற்கு ஆண்டவரால் அருளப்படுகின்றது என்பதை வெளிக்காட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியாக இந்தக்காட்சி தோன்றுகின்றது.

குருக்கள் புதல்வர்களிலே புறவினப் பெண்களை மணந்து கொண்டவர்களில், பெரிய குருவாகிய ஏசூவாவின் புதல்வர்கள் சிலரும் உள்ளடங்குவர் (எஸ் 10:18).

6. எஸ்ராவோடு எருசலேமுக்குத் திரும்பிய லேவியர் யோசபாதின் தந்தை (எஸ் 8:33). இவர் (4)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

7. எருசலேம் சுவரில் ஒரு பகுதியைப் பழுதுபார்த்த ஏசேரின் தந்தை (நெக 3:19).

8. நூனின் மகனான யோசுவா பெயரின் மற்றொரு வடிவம் (நெக 8:17).

9. அசனியாவின் மகன். புதிப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஒரு லேவியர் (நெக 10:9). இவர் (4)-இல் குறிக் கப்படுபவராக இருக்கலாம்.

**ஏசூவா** (JESHVA - யாவே மீட்பாவார்) இடம்

நாடு கடத்தலிலிருந்து திரும்பிய யூதர்கள் குடியேறிய, தென் யூதாவிலுள்ள ஒரு நகர் (நெக 11:26). இது சேமாவாக இருக்கலாம் (யோசு 15:26) என்று கருதப்படுகிறது. இது பெயேர் - செபாவுக்கு வடகிழக்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலத் தேல் எஸ்-சாவியாக இருக்கலாம்.

**ஏசேக்கு** (ESHEK கொடுமைப்படுத்துபவன்)

சவுலின் மகன் யோனத்தான் வழியாக வந்த பென்யாமின் வம்சத்தின் ஓர் ஆள் அல்லது ஒரு குடும்பம் (1 நாள் 8:34). இருப்பினும் இந்த வாக்கியம் தவறான சூழ் நிலையில் இருக்கலாம் (1 நாள் 9:35-44).

**ஏசேம்** (EZEM - எலும்பு)

யூதாவின் நெகேபில் உள்ள சிமியோன் குடும்பத்தாரின் நகர் (யோசு 15:29; 19:3; 1 நாள் 4:29). இது இருந்த இடத்தைக் குறிப் பிட்டுக் காட்ட முடியாது. ஆயினும் பெயேர்-செபாவுக்குத் தென்கிழக்கில் 36 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால உம் ஏல்-அஸாம்-ஆக இருக்கலாம்.

**ஏசேல்** (EZEL - புறப்பட்டுப் போதல்)

யோனத்தான் தாவீதை மூன்றாம் நாளில் வந்து அமர்ந்திருக்கச் சொன்ன கல் (1 சாமு 20:19). இங்கு இருவரும் பிரியாவிடை செய்து கொண்டனர்.

**ஏசேர்** (EZER - உதவி)

1. செயிரின் ஆறாவது புதல்வர்; ஏதோம் நாட்டிலிருந்த கோரியர் தலைவர்களில் ஒருவர் (ஆதி 36:21; 27:30; 1 நாள் 1:38-42).

2. யூதா குலத்தவர், கூசாவின் தந்தை (1 நாள் 4:4).

3. காத்தைக் கொள்ளையடித்ததற்காக, அதன் மக்களால் கொலை செய்யப்பட்டவர். எப்பிராயிமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:21).

4. காது இனத்தைச் சேர்ந்த அனுபவமிக்க போர் வீரர். பாலைவனத்தில் தாவீது தலை மறைவாக இருந்தபோது அவரோடு சேர்ந்து கொண்டவர்களில் ஒருவர் (2 நாள் 12:9).

5. நெகமியாவின் தலைமையின்கீழ் எருச லேம் மதில்களைப் பழுது பார்த்த லேவியர். ஏசூவாவின் மகன். மிசுப்பாவின் ஆளுநன் (நெக 3:19).

6. எருசலேமில் மீண்டும் கட்டப்பட்ட மதில் சுவர் அர்ப்பண விழாவிலே பங்கு கொண்ட ஒரு குரு (நெக 12:42).

**ஏசேர்** (JESHER - நேர்மையான, இறைவன் நீதியுள்ளவராகத் தம்மை காட்டுகிறார்)

யூதா கோத்திரத்தில் காலேபு-அசூபாவின் மகனும் கெசிரோனின் பேரனுமாவார் (1 நாள் 2:18).

**ஏட்டுச்சுருள்** (SCROLL)

புல்தாளால் அல்லது தோலினால் செய் யப்பட்ட நூல் ஏட்டுச்சுருள் (ஏச 34:4; லூக் 4:17).

**ஏதாம்** (ETAM - வேட்டைப் பறவைகள் உள்ள இடம்)

1. 'ஏதாம்' சிமியோனுக்குப் பங்கீடு செய்து கொடுக்கப்பட்ட ஓர் ஊர் (1 நாள் 4:32). ஒருவேளை யோசு 15:32-இல் உள்ள அயின்-ரிம்மோனுக்கு முன் வைக்கப்பட வேண்டும். நெகேபு மாவட்டத்தைச் சேர்ந்த

பெயோர்செபாவில் இருந்திருக்கலாம் (காண்க. யோசு 19:7). இந்தப் பகுதி அறியப் படாத பகுதியாக இருக்கிறது.

2. பெத்திலகேமின் மலைநாட்டிலுள்ள யூதாவின் நகரம் (யோசு 15:59 'எழுபது நூல்' பெத்திலகேமைச் சுற்றியுள்ள பதினொன்று நகர்களோடு தெக்கோவா, பெயோர், ஏதாம், கெரேம் மற்ற நகரங்களையும் அந்த வரிசையில் இணைக்கிறது காண்க. 1 நாள் 4:3). அர்த்தாகக்கு அருகில் பெத்திலகேமின் தென்மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்-ஏல்கோக் ஏதாமாக இருந்திருக்க லாம் என்று கருதப்படுகிறது. இதன் சுற்று வட்டாரத்தில் உள்ள அயின் அயித்தான் என்ற நீரூற்று உள்ளது. கிரேக்க-உரோமையர் காலத்துக் கால்வாய்கள் வழி யாகச் ''சாலமோன் குளங்களுக்கு'' நீர் வழங்கியது. இந்தக் கால்வாய்கள் பெரிய ஏரோதால் கட்டப்பட்டுப் போந்தியுபிலாத் துவால் பழுதுபார்க்கப்பட்டது.

அரசு பிளவுபட்டு, வட அரசாகிய இஸ்ரா யேல் தோன்றியபின், இரகபெயாம் ஏதா மைச் சுற்றி மதில் எழுப்பினார் (2 நாள் 11:6). இஸ்ராயேலிலிருந்து தென் அரசைப் பாது காத்துக் கொள்வதற்காகவும், தென்கிழக்கிலி ருந்து வரும் ஆபத்துக்களைத் தடுப்பதற்காக வும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.

சாலமோன் விடியற்காலையில் தன்தேரில் 14 கி.மீ. பயணம் செய்து இக்கிராமத்தில் தனித்திருக்க விரும்பியதாக யோசிபஸ் கூறு கிறார். போந்தியு பிலாத்து ஆளுநன் புனிதப் பணத்தை எடுத்து 36 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் கட்டியதாக யோசிபஸ் எழுதுகி றார்.

தால்முதின் பல பகுதிகள், தரைமட்டத்தி லிருந்து 100 அடி உயரத்திலுள்ள கோவி லுக்கு ஏதாம் நீரூற்றிலிருந்து கால்வாய் வழி யாகத் தண்ணீர் பெறப்பட்டதைக் குறிப்பிடு கின்றன. இன்று அயின்-அயித்தானிலிருந்து பெத்திலகேம் குழாய்கள் வழியாக நீரைப் பெறுகின்றது.

**ஏதாம் பாறை** (ROCK OF ETAM)

பெலிஸ்தியர்களுடைய விளைச்சல்களை எரித்த பிறகு சிம்சோன் புகலிடம் தேடிய ஒரு குகை. கோபமுற்ற பெலிஸ்தியர்களி டம் சிம்சோனை ஒப்படைக்க யூதாவின் மக்கள் அங்கிருந்துதான் அவரைப் பிடித்துக் கொடுத்தார்கள் (நீதி 15:8,11-13). சோராவுக் குக் கிழக்கு தென்கிழக்கில் 4 கி.மீ. அப் பால் உள்ள ஆராக் இஸ்மயினாக இது இருக்கலாம். குகையின் முன்னாலுள்ள ஒரு மேடையிலிருந்து செப்பேலா மலையின் எழில் தோற்றத்தைக் காணலாம்.

**ஏது** (ED - சாட்சி)

ஏது என்பது பலிபீடத்திற்குக் கொடுக்கப் பட்ட பெயர் ஆகும் (யோசு 22:34). யோர்தா னுக்கு அப்பால் குடியேறிய ரூபன் புதல்வ ரும், காது புதல்வரும் தாங்கள் கட்டிய பீடத்திற்கு, தாங்கள் இறைவனது மகத்துவத் தையும் பிரமாணிக்கத்தையும் அனுபவித்த தற்கு அடையாளமாக ''எங்கள் சாட்சி'' என்று பெயர் வைத்தனர். இச்சொல் மாச ரோடிக் ஏடுகளில் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் சிரியக்கின் வாச அடிப்படையிலும் பொரு ளைப் பொறுத்தும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தை அடையாளம்காட்ட இயல வில்லை.

**ஏதென்ஸ்** (ATHENS - அத்தெனா தேவதை யின் மக்கள்)

இன்றைய கிரேக்கத்தின் தலைநகரும், அன்றைய அத்திகா மாவட்டத்தின் முக்கிய நகரமும் ஆகும். ஏதினா எனப்படும் பெண் தெய்வத்தின் பெயரால் இந்நகரின் பெயர் வந்திருக்கலாம். ஏதென்ஸ் நகர் சென்ற பவுல், அங்குள்ள செபக் கூட்டத்திலும், சந்தையிலும், அரயோப்பாகுவிலும் பேசியி ருந்தாலும் இங்கு எத்திருச்சபையையும் நிறு வவில்லை (அ.ப.17:16-34).

புதிய கற்கால மட்பாண்டங்கள் இங் குள்ள அக்ரோபோலிசில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் பின்னைய கற்காலத்திலேயே இங்கு மக்கள் குடியேறி உள்ளனர் என்பது தெரிய வருகிறது (கி.மு. 3000-க்கு முன்பு).

கி.மு.1600-ஐ ஒட்டி இங்கு அக்ரோபோலீஸ் ஒரு மிகப்பெரிய அரண் சூழ்ந்த கோட்டை ஆகியது. இன்றும் சுவர்கள் காணப்படுகின் றன. பல கல்லறைகளிலிருந்து எடுக்கப் பட்ட மட்பாண்டங்களில் முந்தைய காலத்து வண்ண வரைபடங்களிலிருந்து வேறுபட் டவை இங்கு இருப்பதைக் காண்கிறோம்.

சோலோன், என்பவரும் அவருக்குப்பின் பிசிஸ்திரதுசும் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இங்குச் சட்டம், ஒழுங்கைத் தந்து மக்க ளாட்சி அமைப்பை உருவாக்க முனைந்தார் கள் என்பதைப் பார்க்கிறோம். நகரத்தின் மையப் பகுதியான 'அகோரா' கொலோ னஸ் அகோராயுஸ் என்ற குன்றின் அருகே அமைக்கப்பட்டது. இப்பகுதிகளில் மிகப் பழமையான பொதுக்கட்டடங்களின் அடிப் படைகளும் வழிபாட்டுத் தலங்களின் அடிப் படைகளும் காணப்பட்டன. புலூதெரி யோன் எனப்படும் ஆலோசனைக்குழு மன் றம் 'சோலொன்'' காலத்தில் இருந்ததை விடப் பிற்காலத்தில் 500 நபர்களை அதிகம் கொண்ட ஒரு அமைப்பாகியது.

பாரசீகர்கள் உட்புகுந்து விடுவார்கள் என்ற பயத்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏதென்ஸ் மிக வலிமையுள்ள சுவர்களால் சூழப்பட்டது. இதனைச் சீர்செய் தவர் ''தெமிஸ்டோகிலிஸ்'' என்பவராவார். கி.மு. 480-479-இல் ஏதென்ஸ் பாரசீகர்களால் ஓரளவு அழிக்கப்பட்டபோது, பழைய பார் தெனோன், புரொபிலேயா ஆகியவை அக் ரோபோலிசில் அமைக்கப்பட்டுவிட்டன. பாரசீகர்கள் துரத்தப்பட்டபின் பெரிக்லிஸ் (459-29) என்பவரால் பார்தெனோன், புரொ பைலா, எரெக்தெயியோன் ஆகியவை எழுப்பப்பட்டன.

பெரிக்லிசின் காலம் அரசியலிலும் கலாச் சாரத்திலும் பொற்காலமாகும். பெரிக்லிசின் காலத்தில்தான் கெபாஸ்தசின் ஆலயமும் அரேசின் ஆலயமும் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இதே நூற்றாண்டில்தான் 'அகோ ராவிலும்'' பல முக்கிய கட்டடங்கள் எழுப் பப்பட்டன. பெயிதியாசும் அவரது மாண வர்களும் நகரத்தைச் சிலைகளாலும் மற்றும் பல கலைப் பொருட்களாலும் நிறைத்து அழகுபடுத்தினர். ஏதென்ஸ் தனது மகிமை யில் பெயர் பெற்று விளங்கியதை அரிஸ் தோபானஸ் என்பவர் ''ஓ ஏதென்ஸே நீ அனைவரும் வியந்து பொறாமைப்படுமள வுக்கு மிகச் சிறப்பாக அமைந்துள்ளாய்'' என்கிறார்.

பெலொபோனேசியப் போர் விளைவு ஏதென்சுக்கு எதிராக அமைந்தது (431-404). ஸ்பார்தாவின் கை ஓங்கியிருந்தது. நான்காம் நூற்றாண்டில் ஏதென்சின் நிதி அமைச்சராய் இருந்த இலிசூர்கஸ் என்பவர் (338-326) திபிலோன் எனும் வாயிலையும் மிகப் பெரிய விளையாட்டரங்கத்தையும், தியோ னிசியஸ் அரங்கத்தையும் கட்டி, பினிக்ஸ் குன்றில் உள்ள பெரிய அரங்கையும் விரிவு படுத்தினார்.

மக்கதோனியாவைச் சேர்ந்த பிலிப்புக்கு ஏதென்ஸ் ஆதரவு அளித்தது. ஆனால் அதன் ஆதரவு தளர்ந்தபோது கடுமையாகத் தண்டிக் கப்பட்டது. பிலிப்புவின் மகன் பெரிய அலக்சாந்தரின் மரணத்துக்குப்பின் (323) ஏதென்கம் அதன் கலாச்சாரமும் முதன்மை பெற்றன.

சீரியா நாட்டின் அரசரான அந்தியோக்கு எப்பிபான் என்பவர் ஒலிம்பிய செயூஸ் கட வுளுக்கு மிகப்பெரிய ஆலயத்தை எழுப்பி னார். இந்த நூற்றாண்டின் இரண்டாம் பகுதி யில் கட்டடங்கள் எழுப்பப்பட்டன.

உரோமைத் தளபதி சுல்லா காலத்தில் கி.மு. 86-இல் பல தனியார் கட்டடங்கள் இடிக்கப்பட்டன. உரோமையர் இந்நகரைத் தாக்கிப் பாழாக்கினாலும், அதன் மகிமை மிக்க கடந்த காலத்தை முன்னிட்டு ஒரு சுதந்தர நகரமாகப் பாவித்தனர். கி.பி. 14-இல் அகுஸ்து சீசெர் பல புதிய கட்டடங் களை எழுப்பினார். அக்ரோபோலிசில் அகுஸ்துவுக்கு ஒரு கோவில் எழுப்பப்பட் டது. அகோராவின் மையத்தில் இசை மைய மொன்று ஒதேயும் என்ற பெயரில் விப்சானி

யுஸ் அக்ரிப்பா என்பவரால் எழுப்பப் பட்டது. அரேசின் ஆலயம் இதற்கருகில் கொண்டுவரப்பட்டது.

பழைய சந்தைக்கூடம் (அகோரா) அகுஸ் துவின் காலத்தில் கட்டடங்களால் நிரம்பி யது. இதன் வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட சிதைவுகள் அதிரியானின் நூலகமாகக் கரு தப்படுகிறது (கி.பி. 117-38). இதற்குப்பின் வந்த அரசரும் ஒலிம்பியன் செயூசின் ஆல யத்தை நன்கு சிறப்புறச் செய்தார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏதென்சு, ஞானம், கட்டடக்கலை, ஆகியவற்றிற்கு மையமாகத் திகழ்ந்தது. பொருளாதாரத்தில் கொரிந்தும், அறிவில் அலக்சாந்திரியாவும், ஏதென்சைவிட வளர்ச்சியடைந்தாலும், இந் நகர் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்தது.

கி.பி. 143, 159-களில் ஏதென்சை அடைந்து அதனைக் கண்டு, ''பௌசானியஸ்'' என்ற புவியியலார் தரும் குறிப்பு இன்றுள்ள நினைவுச் சின்னங்களை அடையாளம் காணப் பேருதவியாக உள்ளது. ஒருசில பிந்தைய உரோமையக் கட்டடங்களைத் தவிர ''பௌசானியஸ்'' குறிப்பிடும் ஏதென் சுக்கும், கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் பவுல் சந்தித்த ஏதென்சுக்கும் அதிக வேறுபாடு இருந்திருக்க முடியாதென்றே தோன்றுகி றது. இவ்வாறு ஏதென்சு அன்றைய கிரேக்க உரோம உலகில் தலைசிறந்த பண்பாட்டு, கலைமையமாக அமைந்திருந்தது என்பதில் வியப்பில்லை.

விவிலியக் குறிப்புக்கள்:-

தனது தோழர்கள் சிலாஸ், திமோத்தேயு வுக்கு முன்பே தற்செயலாக இந்நகர் வந்து சேர்ந்த பவுல், அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் பொதுவிடங்க ளில், பொதுமக்களோடும், செபக்கூடத்தில் யூதர்களோடும் ஒவ்வொரு நாளும் வாதாடி வந்தார் (அ.ப.17:16-17). அவர் சாலையில் நடந்து சென்ற போது ''நாம் அறியாத தெய்வத்துக்கு'' உரிய பீடத்தைப் பார்த்தி ருக்க வேண்டும் (17:23). ஸ்தோயிக்கியரும் எப்பிக்கூரியரும் விடுத்த அழைப்பை ஏற்று, அவர்களிடம் பேசினார். ஆனால் அவர்களி டம் அதிகம் தர்க்கம் ஏற்படுத்தவில்லை (17:32-34). விரைவில், ஒருவேளை, 3 அல் லது 4 வாரங்களுக்குப்பின், பவுல் இந்நகரை விட்டுக் கொரிந்துக்குச் சென்றார் (18:1). ஏதென்சில் ஒரு திருச்சபையை நிறுவ வில்லை. அவரது வேதபோதகப் பயணங்க ளிலும், திட்டங்களிலும் இந்நகர் முக்கிய இடம் வகிக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில் பவுல் ஏதென்சில் தங்கி யதாக ஒரே ஒருதரம் குறிப்பிடப்படுகிறது. 1 தெச 3:1-இன்படி, தான் புதியதாக மனந் திரும்பிய தனது பிரமாணிக்கமுள்ள தோழ ரான திமோத்தேயுவைத் தெசலோனிக்கே யர்களிடம் அனுப்பிவிட்டுத், தனியாக இந் நகரில் தங்கினார். இப்பகுதி நற்செய்தியின் பால் ஐயப்பாடு உடையவர்களுக்கும் அதை நகைப்பவர்களுக்கும் கிறிஸ்துவை அறி விக்க முயன்றபோது, அங்கிருந்த கிறிஸ்த வர்களின்பால் அவர் கொண்டிருந்த பற்றைக் காட்டுகிறது.

**ஏதேர்** (EDER - உதவியாளர்) - ஆள்

1. எருசலேமில் வாழ்ந்த, பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:15).

2. தாவீது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மெராரியின் பேரனும், மூசியின் இரண்டாம் மகனுமாவார். ஒரு லேவியர் (1 நாள் 23:21-23; 24:30).

**ஏதேர்க் கோபுரம்** (TOWER OF EDER - மந்தைக் கோபுரம்) - இடம்

1. பெத்லகேமுக்கும் கெபிரோனுக்கும் இடைப்பட்ட இடம். இவ்விடத்தில் ராக் கேல் இறந்தவுடன் யாக்கோபு தங்கியிருந் தார் (ஆதி 35:21). இது ஒரு காவல் கோபுர மாக இருக்கலாம். இது சியார் ஏல் கனாமுக்குக் கிழக்கிலுள்ள சிற்றூராக இருக் கலாம் அல்லது செனிசேத் ஏர்-ரேவாத் அரு கிலுள்ள இடமாயிருக்கலாம் என்று கருதப் படுகிறது. இச்சொல் இயல் பொருளில் மீக் 4:8-இல் சீயோன் மலையைக் குறிப்பதற்கும்

பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இங்கு மந்தைக் கோபுரம் என 'மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இது ஒரு காவல் கோபுரம் போல், உருவகமாக இறைமக்களின் செயல் களை நோக்குகிறது.

2. யூதாவின் செப்பேலாவில், பெயேர்-செபாவின் நெகேபு மாநிலத்திலுள்ள சிற்றூ ராகும் (யோசு 15:21). காசாவுக்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் ஏல்-அதார் ஆகவோ, கிழக்கில் தொலைவிலுள்ள ஒரு நகரமாகவோ இருக்கலாம் (எழுபது நூல் இதை ஆராத் என்றழைக்கிறது. இது சரியாக இருக்கலாம்).

**ஏதேன்** (EDEN - இன்பம்) - ஆள்

அரசர் எசக்கியா காலத்தில் உள்ள ஒரு லேவியர். யோவாகின் மகன். ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியவர்களுள் இவரும் ஒரு வர் (2 நாள் 29:12). 2 நாள் 31:15 குறிப்பிடு கின்ற ஏதேன் முன்குறிப்பிட்ட அதே ஆளைத்தான் குறிப்பிடுகின்றதா என்பது தெளிவாக இல்லை. இவர் ''ஆண்டவருக் குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும், பரிசுத்தப் பொருட்களையும் பங்கீடு'' செய் யும் வேலையைச் செய்தவர்களுள் ஒருவர்.

**ஏதேன்** (GARDEN OF EDEN - இன்பவனம்) - இடம்

I. ஏதேன் என்பது யாவேயினால் உருவாக் கப்பட்ட செழிப்பான மரங்கள் அடர்ந்த தோட்டம். இதில்தான் ஆதாமும் ஏவாளும் முதன் முதலில் வாழ்ந்து வந்தனர்.

1. வார்த்தையின் தோற்றம்:- 'ஏதேன்' என்ற வார்த்தையின் மூலத்தை எபிரேய மொழியிலிருந்து குறிப்பாக அறிய இயல வில்லை. பாலைவனம் என்ற பொருள்தரும் 'எதினூ' என்ற சுமேரிய அக்காதிய வார்த்தை யோடு இச்சொல்தொடர்புடையதாக இருக் கலாம். 'மகிழ்ச்சிப்படுத்த' என்று பொருள் தரும் எபிரேயச் சொல்லில் இருந்து எழுபது நூல் இச்சொல்லைப்பெற்று, 'ஏதேன் தோட் டம்' என்பதை இன்பவனம் என்று மொழி பெயர்த்தது.

2. பயன்படுத்தப்பட்ட முறை:- 'ஏதேன்' என்ற சொல் ஒருமையில் 13 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூன்று இடங்க ளில் (ஆதி 2:8.10; 4:16) தோட்டம் இருக்கும் இடத்தைக் குறித்துக்காட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இறைவாக்கினர் நூல்களில் இத னுடைய பொருள் சிறிது மாறுபடுகிறது. ஏச 51:3-இல் 'ஏதேன்' என்பது யாவேயின் சோலைக்கு இணையாகக் கூறப்படுகிறது. ஏச 28:13-இல் 'ஏதேன்' என்பது இறைவ னின் சோலைக்கு எதிர்மாறானதாகக் கூறப் பட்டுள்ளது (எச 31:9.16.18; 36:35; யோவே 2:3).

3. இருந்த இடம்:- ஆதி 2:10-14 என்ற பகுதி இவ்வதிகாரத்தின் மற்றப்பகுதிகளிலி ருந்து வேறுபட்ட பழைய மரபிலிருந்து தோன்றிய பகுதியாகும் என்பது விவிலிய அறிஞர்களின் கருத்தாகும். இப்பகுதியில் இன்பவனத்திலிருந்து நதி ஒன்று உருவாகி அது நான்கு ஆறுகளாகப் பிரிந்து உலகெங் கும் சென்றடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆறுகளில் மூன்றாவதும், நான்காவது மான ஆறுகள் எல்லோரும் அறிந்தவையா கும். மூன்றாவது ஆறான இதக்கேல் என்ற 'திகிரிசு' அசீரியாவின் கிழக்குப் பகுதிகளில் பாய்ந்தது. 'ஐபிராத்து' என்ற 'யூப்பிரத்திசு' என்பது நான்காவது ஆறாகும். இதக்கேல் மீண்டும் பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு தரம் மட்டும் வருகிறது (தானி 10:4).

முதல் இரண்டு ஆறுகளைப் பற்றி முரண் பாடுகள் அதிகம் காணப்படுவதால் அறிஞர் களால் தீர்க்கமான முடிவுக்கு வரஇயல வில்லை. பிசோன் என்ற முதல் ஆறு பொன், குங்கிலியம், கோமேதகக் கல், போன்ற விலையுயர்ந்த பொருள்கள் கிடைக்கும் செழிப்பான பூமியாகிய கெவிலா நாட்டைச் சுற்றி ஓடுகின்றது. பிசோன் பழைய ஏற்பாட் டில் ஒரே ஒருதரம் தான் காணப்படுகிறது (ஆதி 10:28) கவிலா என்பது தென்மேற்கு அரேபியாவைக் குறிப்பது போல் தோன்றுகி றது. மேலும் இசம்யேலிய அராபியர்களின் கிழக்கு எல்லைப்புறம் போன்றும் தோன்று கிறது (ஆதி 25:18). கெவிலா என்பது

'மணல்' என்று பொருள்படுவதால் சிலர் இதனை மணல் நிலத்துடன் தொடர்புபடுத்துகின்றனர்.

கீகோன் என்ற ஆறு கூசு நாடு முழுவதும் பாய்கிறது. இச்சொல் எதிலிருந்து தோன்றியது என்பது தெரியவில்லை. பழைய ஏற்பாட்டில் இதனை மற்றெந்த இடத்திலும் ஓர் ஆறாகக் குறிப்பிடவில்லையென்றாலும் கிழக்கு எருசலேமிலுள்ள ஓர் நீரூற்றாகத் தோன்றுகிறது. யூத கிறிஸ்தவ மரபுகள் கீகோனை நைல் நதியோடு தொடர்புபடுத்துகின்றன (காண். எரே 2:18). சில இடங்களைத் தவிர (ஆதி 10:8) கூசு என்பது எத்தியோப்பியாவைக் குறிக்கின்றது.

இந்த ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது இந்த இடத்தின் பூகோள அமைப்பினை நிர்ணயிப்பது ஊகத்தின் அடிப்படையில்தான் அடங்கியிருக்கிறது என்பது தெளிவு. இன்பவனத்தில் தோன்றிய இரண்டு ஆறுகளைப் பாபிலோனியக் கால்வாய்களுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் விவிலியம் தரும் பூமி அமைப்பானது, தற்காலத்தைய அறிவியல் தரும் பூகோள அமைப்போடு தொடர்பு இல்லாததுபோல் தோன்றுகிறது. இந்த இரு ஆறுகளும் ஒரே மூலத்தோற்றத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது உறுதி.

பூமி முழுவதையும் சூழ்ந்துள்ள நான்கு உலக ஆறுகள் பற்றிய பழைய மரபினை இவ்விளக்கம் பிரதிபலிக்கின்றது என்று ஒரு கோட்பாடு கூறுகின்றது. பிசோன் என்பது சிந்து நதியாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. இந்நதி அரேபியாவைச் சூழ்ந்து நைல்வழியாக ஓடுகிறதாகக் கருதப்பட்டது. நைல்நதி, யூப்பிரத்திக நதியோடு சேர்ந்து பாரசீக வளைகுடாவைக் கடந்து எத்தியோப்பியாப் பகுதிகளில் பாய்கிறது. இந்த ஆறுகள் பாயும் பகுதிகளில் ஆப்பிரிக்காவும், அரேபியாவும் உள்ளடங்கும் என்பது பொதுவான கருத்து. இது ஆப்பிரிக்காவும் இந்தியாவும் இணைக்கப்பட்டிருந்தன என்பதைச் சுட்டுகிறது.

4. இறையியல் உட்கருத்து:- தொடக்க காலத்தில் 'பேரின்ப இடம்' பற்றிய கருத்து பல சமயங்களில் வளர்ச்சியடைந்திருந்தாலும் மேற்காசிய நாடுகளில் இக்கருத்து இங்கு மங்குமாகத்தான் காணப்படுகிறது. சுமேரியாவின் தில்மூனின் நாடு என்பதும், பாபிலோனியாவின் 'கிரினியின் கேதுரு காடு' மற்றும் ''சிதூரி தோட்டம்'' என்பதும் இன்பவனத்திற்கு மறைமுகமானவையாகும்.

ஆதி ஆகமம் இரண்டாம் அதிகாரத்தின் ஆசிரியர் ஒரு புராணத்திலிருந்து எழுந்த மொழியின் அடிப்படையில் ஏதேன் தோட்டத்தை விவரித்திருக்கின்றார். இருப்பினும் ஆசிரியர் தனித்தன்மையைக் காட்ட, புராணக் கதையை மாற்றித் தந்திருக்கின்றார். மனிதன் படைக்கப்பட்ட பின்தான் தோட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் முதலிலே யாலே அங்கு வாழ்ந்தார் என்ற புராணக் கருத்து மறுக்கப்படுகின்றது. மனிதன் அந்தத் தோட்டத்தின் இன்பங்களை அனுபவிப்பதற்கு மட்டுமல்ல அங்கே உழைப்பதற்காகவும் அனுப்பப்படுகிறான். ஏதேன் தோட்டம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் முறிவுபடாத உறவிற்கு அடையாளமாக இருப்பதால் மனிதனது கீழ்ப்படியாமையால் அங்கிருந்து அவன் துரத்தப்படுகின்றான்.

II. ஒருவேளை கார்கெமிசு அருகில் யூப்பிரத்திக ஆற்றின் மேல்பகுதி கரையிலுள்ள தெலசாரில் உள்ள ஒரு நகரமாக இருக்கலாம் (2 அர 19:12). ''ஏதேன் மக்கள்'' அசீரியர்களால் கைப்பற்றப்பட்டவர்களில் அடங்குவர். தீரோடு வியாபாரம் செய்த மற்ற நகரங்களோடு ஏதேனும் குறிக்கப்படுகிறது (எச 27:23). ஆமோ 1:15-இல் பேத்து-ஏதேன் என்று பெயர் வருகிறது.

## ஏதோம் (EDOM - சிவப்பு நிலப்பகுதி)

இஸ்ராயேலின் கிழக்கு தெற்குப் பகுதிகள் ஏதோம் ஆகும். இந்நாட்டு மக்களைப் பற்றிய எழுத்துப் பதிவேடுகளும், நினைவுச் சின்னங்களும் அழிந்ததால் இந்நாட்டிற்கு அண்டை நாட்டார்களும், இவர்களது எதிரி

களுமான இஸ்ராயேலர், எகிப்தியர், அசீரியர்கள், பாபிலோனியர்கள் ஆகியவர்கள் நூல்களிலிருந்தும், தொல்பொருள் ஆராய்ச்சி மூலமும் இவர்களைப் பற்றி அறியமுடிகின்றது. ஏதோம் நாட்டைப் பற்றியும், அதன் மக்களைப்பற்றியும் விவிலியத்தில் அடிக்கடி சொல்லப்படுகிறது.

1. நில அமைப்பு: ஏதோமின் நில அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) ஏதோம் கோட்டை:-

இக்கோட்டை வடக்கிலிருந்து தெற்காக 70 மைல்களும் வடக்கிலிருந்து மேற்காக 15 மைல்களும் கொண்ட ஒழுங்கற்ற நாற்கரமாகும். வடக்கு எல்லை, மலைகளுக்கு இடையே ஓடும் செரேது என்ற ஓடையாகும். இது ஏதோமை மோவாப்பிலிருந்து பிரித்தது. கிழக்கு எல்லை தமஸ்குவிலிருந்து மெக்கா வரைக்கும் உள்ள இக்கால இரயில்வே தண்டவாளங்களிலிருந்து ஒரு சில மைல்களுக்குப் பாலைவனப்பகுதியை எதிர்கொண்டது. தெற்கு எல்லை இஸ்மே என்ற பள்ளத்தாக்கை மேல் இருந்து கீழ் நோக்கிய நெகேபு-எஸ்-ஸ்தாரின் பகுதிகளைக் கொண்டிருந்தது. மேற்கில் அராபாவை நோக்கியுள்ள கிழக்கு மலைத்தொடர்கள் ஆகும். இவ்வெல்லைப் பகுதிதான் ஏதோம் என்ற பெயர் பெற்றது. அராபாவின் கிழக்குச் சரிவில் உள்ள மரங்களடர்ந்த பகுதிக்குச் சேயீர் என்ற பெயர் குறிப்பாகக் கொடுக்கப்பட்டாலும் விவிலியத்தில் ''ஏதோம்'' ''சேயீர்'' என்ற இரண்டு பெயரும் ஒன்றுக்குப்பதிலாக மற்றது பயன்படுத்தப்பட்டது. ஏதோமின் எல்லைகள் யாவும் முக்கியமாகக் கிழக்கு எல்லைகள் மலைக்கோட்டைகளே ஆகும்.

ஆ) அடுத்துள்ள பிரதேசங்கள்:-

அராபாவும் நெகேபெஸ்தாரின் தெற்குப் பகுதியும் அக்காபா வளைகுடாவும் இவற்றில் உள்ளடங்கும். இப்பகுதிகள் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை தீர்க்கப்படவில்லை. ஆனால் ஏதோம் கோட்டைகளுக்கு அருகில் இருப்பதால் ஏதோமியர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. சீரியா, மெசபொத்தாமியா நாடுகள், எகிப்து, அரபு நாடுகளுடன் வாணிபம் செய்வதற்கு முக்கியமான சாலைகள் இங்கு உள்ளன. அராபா நாடு செம்பு, இரும்பு, சுரங்கங்களைப் பெற்றிருப்பதால் ஏதோமியர் வேலைசெய்து அவர்களது செல்வத்தைப் பெருக்க உதவின. இச்சுரங்கப்பகுதிகள் எபிரேயர்களின் அதிகாரத்தில் இருந்தபொழுது இச்செல்வத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இ) நதிக்கரைப் பிரதேசங்கள்:-

அராபாவின் மேற்குப்பகுதிவரை இப்பிரதேசம் நீண்டிருந்தது. ஏதோமியர்களின் ஆளுகைக்கு இப்பகுதி உட்படவில்லை. நாடோடிக் கூட்டத்தினர் இப்பகுதியைப் பெற்றிருந்தனர். இவர்கள் ஏதோமியருடன் உடன்படிக்கை செய்திருந்தனர். கெனிசியா, அமலேக்கியர் போன்ற இருவரும் ஏதோம் இனத்தைச் சார்ந்தவர்களாக எண்ணப்படுகின்றார்கள் (ஆதி 36:11-12). மோசே ஏதோம் அரசனுக்கு அந்நாட்டு வழியாகக் கடந்து செல்ல வேண்டுமென்று கடிதம் எழுதினார் (எண் 20:16). ஆனால் அவ்வரசன் பாதை தர மறுத்துவிட்டான். ஆகவே இஸ்ராயேலர்கள் ஏதோம் நாட்டு மலைப்பிரதேசங்களைத் தவிர்த்து அடுத்துள்ள பிரதேசங்கள், நதிக்கரைப் பிரதேசங்கள் வழியாகவும் கடந்து சென்றார்கள்.

2. மக்கள்:-

ஆதியாகமத்தில் வருகின்ற விவிலிய விளக்கங்களும் இறைவாக்கினர்களின் புத்தககங்களில் வருகின்ற மறைமுகமான குறிப்புகளும் இஸ்ராயேலர்களுக்கும், ஏதோமியர்களுக்கும் இன ஒருமைப்பாடு இருப்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே, ஒருவேளை ஏதோமியர் ஆராமிலிருந்து வந்தவர்களாக இருக்கலாம். இருந்தபோதிலும் இவர்கள் கானானியர் (ஆதி 26:34, இங்கு 'கித்தியர்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது). இசுமயேலர் (ஆதி 29:9), ஆதிவாசி கோரியர் ஆகியோருடன் திருமணம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. ஆகவே இது உப

2:12-க்கு முரண்பாடாக இருப்பதால் இவர்கள் கலப்பினமாக இருக்கலாம்.

ஏதோமியர் விவசாயம் செய்த போதிலும் அவர்களது முக்கிய வருவாய் வியாபாரத்திலிருந்து கிடைத்தது. மலைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட செம்பு, பொன் போன்றவைகளை எகிப்து, சீரியா, பாபிலோனியா, மற்றும் வியாபாரக் கூட்டத்தினரிடம் பண்டமாற்று செய்து கொண்டனர். ஏதோமியர் அடுத்த நாட்டினரைப் போலவே எபிரேயத் திரிபு மொழியைப் பேசியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. இவர்கள் பல தெய்வங்களையும் மதித்தனர். அவர்களுள் கோக அல்லது கோசான், மேலும் கதாது ஏதோம் சிலராவர். இவர்களது அரக அரசாட்சி முறையுடையது (ஆதி 36:31-39).

3. வரலாறு:-

ஏதோமில் கி.மு. 23-ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டு வரை நாகரீகம் பரவி இருந்தது. அதற்குப் பிறகு 13-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் இங்குக் குடியேறி வாழவில்லை. இதற்குக் கெதொர்லா-கோமேரும் அவரைச் சார்ந்த் அரசர்களும் படையெடுத்ததே காரணமாய் இருக்கலாம் (ஆதி 14). விவிலியத்தில் கூறப்படுகின்ற ஏதோமியர் 13-ஆம் நூற்றாண்டில் வந்து ஓர் அரசரின் தலைமையில் யாத்திராகம காலத்தில் நாட்டை நிறுவினர். ஏதோம். சேயீர் நகரங்கள் மெர்னப்தா (1225-1215) மூன்றாம் இராம்செஸ் (1198-1167) ஆகிய பார்வோன்களால் அவர்களுக்கு அடிமைப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றன.

ஏதோமுக்கும் இஸ்ராயேலுக்கும் நீதிபதிகளின் காலத்தில் எவ்விதத் தொடர்பும் இல்லை. சவுல் அரசன் ஏதோமியர்களைத் தோற்கடித்ததாகச் சொல்லப்படுகின்றது (1 சாமு 14:47). தாவீது நாடு முழுவதும் படையெடுத்து வென்றார். தாவீதின் படைத்தலைவர் யோவாபு இதுமேயாவிலிருந்த ஆண் மக்களையெல்லாம் கொன்று குவித்தார் (2 சாமு 8:13-14; 1 அர 11:15-17). சாலமோன் ஆட்சிக் காலத்தில் நாட்டின் செழிப்பிற்கு இவ்வெற்றி முக்கிய காரணமாய் இருந்தது. இதனால் அரேபிய நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டனர். ஏதோம் நாட்டுச் சுரங்கங்களைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். கதாதின் கொரில்லாப் போர் முறை சாலமோனுக்குப் பெரும் இடையூறாக இருந்தது (1 அர 11:14-22).

இஸ்ராயேல் பிளவுபட்டதால் யூதா நாட்டின் பலம் குன்றியது. ஏதோம் யூதாவின் ஆட்சியிலேயே இருந்ததாகத் தெரியவில்லை. கி.மு. 935-இல் சீசாக்கு என்பவனால் சூறையாடப்பட்ட நகரங்களில் ஏதோமின் பெரும்பகுதியும் அடங்கும். இதனால் ஏதோம் யூதாவின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்று தெரிகின்றது. யோசபாத்து காலத்தில் ஏதோமில் அரசன் இல்லை. ஆகவே சில காலத்திற்கு ஆளுநரால் ஆளப்பட்டிருக்க வேண்டும். பிறகு அந்நாட்டிலிருந்தே ஒருவர் அரசனாக நியமிக்கப்பட்டார் (2 அர 3). இந்நியமனம் அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஏதோம், யூதாவின் அடுத்த அரசன் யோராமின் காலத்தில் கிளர்ச்சி செய்தது (2 அர 8:20-22). ஏதோம் 50 அல்லது 60 வருடங்களுக்கு மறுமுறை யூதா தாக்கும் வரை சுதந்தரமாய் இருந்தது. அமசியா (14:7) ஏதோமின் நடுப் பகுதியினை முற்றுகையிட்டார். தொடர்ந்து அசாரியா எலாத்து நகரை முற்றுகையிட்டு யூதாவுடன் இணைத்துக் கொண்டார் (14:22). 735-இல் மீண்டும் ஒரு முறை ஆராம், இஸ்ராயேல் இவற்றுடன் கொண்ட உடன்பாட்டால் ஆகாசிடமிருந்து சுதந்தரம் பெற்றது (16:6). இவ்வுடன்பாடு அசீரியர்கள் யூதாவிற்கு அடைக்கலம் அளித்தபோது உடைபட்டது. 732-ஆம் ஆண்டில் ஏதோம் அரசன் காஸ்மாலாக்கு திகிலாத்து பிலேசருக்குத் தமஸ்குவில் கப்பம் செலுத்துகிறார். அடுத்த நூறாண்டுகளுக்கு ஏதோம் அசீரிய நாட்டுக்குக் கீழ்ப்பட்டதாக இருந்தது. 711-ஆம் ஆண்டிலும் 701-ஆம் ஆண்டிலும் அடுத்துள்ள நாடுகளுடன் சேர்ந்து கொண்டது. அடிக்கடி போர் மூண்டதாலும், நாடுகளுக்குக் கப்பம் செலுத்தியதாலும் 13-8-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த செல்வாக்கும் செழிப்பும்

அடுத்த இருநூறு ஆண்டுகளில் குறைந்தது. ஏதோம் நாட்டினர் அமைதியாகப் பாபிலோனிய அரசுக்குத் தங்களைக் கையளித்தார்கள் (கி.மு.604). 586-இல் நெபுக்கதுனேசார் எருசலேம் நகரை முற்றுகையிட்டபோது ஏதோமியர் அவருடன் சேர்ந்து கொண்டு தங்களது பழைய எதிரிகளை அழித்தனர் (சங் 137:7; புல 4:21-22; ஒப 10-16). யூதாவின் பெரும் பகுதியினர் பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டு, எஞ்சியோர் கெதலியாவின் கொலைக்குப் பிறகு தப்பியோடியபோது ஏதோமியர் வடக்குப் பக்கமாகச் சென்று தெற்கு யூதேயாவில் நுழைந்து கெபிரோனைத் தங்கள் தலைநகராகக் கொண்டனர். இது நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய இதுமேயா ஆகும். பாரசீகர்கள் காலத்தில் நபதேயர்கள் ஏதோமியர்களின் எல்லைக்குள் புகுந்து ''பெத்திரா''வைத் தலைநகராகக் கொண்டனர். பெரும்பாலான ஏதோமியர்கள் இதுமேயாவிற்குக் குடியேறினர்; மீத முள்ளோர் நபத்தேயரோடு ஒன்றிப்போயினர்.

மக்கபேயர்களுடைய புரட்சி வரைக்கும் இதுமேயர்களுடைய வரலாறு தெரியவில்லை. யூதா மக்கபேயர் இதுமேயர்களை 164-இல் அக்கிரபத்தேன் என்னுமிடத்தில் தோற்கடித்தார் (1 மக் 5:1-5). கி.மு.120-ஐ ஒட்டி, யோவான் இர்க்கானு இதுமேயா முழுவதையும் கைப்பற்றி அதன் மக்களைக் கட்டாயமாக யூதமதத்திற்குள் சேர்த்துக் கொண்டார். அதன் விளைவாக இதுமேயா நாட்டு ஆண்டிபாத்தர் கி.மு.63-இல் ஆளுநராக வந்தார். இவருடைய மகன் ஏரோது கி.மு.37-இல் பாலஸ்தீன அரசர்களின் கடைசி அரசமரபை நிறுவினார். இவர்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வரசை ஆண்டார்கள். 600 ஆண்டுகளுக்குமுன் எருசலேமின் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்வுற்ற ஏதோமியர், உரோமையருக்கு எதிரான கடைசிப் போராட்டத்தில் (கி.பி.68-73) எருசலேமின் தீவிரமிக்க பாதுகாப்பாளர்களாகத் திகழ்ந்தனர்.

4. விவிலியத்தில் ஏதோம் :-

யாக்கோபு இஸ்ராயேல் நாட்டுடன் ஒப்பிடப்படுவதுபோல் ஏசா ஏதோம் நாட்டுடன் ஒப்பிடப்படுகின்றார் (ஆதி 36:1). ஏதோம் என்ற பெயர் ஏசாவின் சிவப்பு நிறத்தாலே விளக்கப்படுகிறது (ஆதி 25:30). இஸ்ராயேலின் தெற்கு எல்லையான காலாக்கு ஏதோமின் எல்லையான சேயிரை நோக்கியுள்ளது (யோசு 11:17; 12:7). யாக்கோபு மென்மையான உடலைப் பெற்றிருந்ததாகவும் (ஆதி 27:11) ஏசா உரோமமுள்ள உடலைப் பெற்றிருந்ததாகவும் விவரிக்கப்படுகின்றனர். ஈசாக்கு ஏசாவுக்குக் கொடுக்கும் ஆசிர், ஏதோம் சிறிது காலத்திற்கு யூதாவுக்கு அடிமைப்பட்டபின் சுதந்தரமாக இருக்கும் என்ற வரலாற்று உண்மையை, முன்பே நிழலிட்டுக் காட்டுகின்றது (27:39-40).

அரசர்கள் காலத்தில் யூதாவுக்கும் ஏதோமுக்கும் தொடர்ந்து பகையாக இருந்ததால் யூதா நாட்டு இறைவாக்கினர்கள் அனைவரும் ஏதோம்மேல் விரோதம் கொண்டிருந்தனர். ஆமோஸ் இறைவாக்கினர் ஏதோம் அடிமைகள் பற்றியும், அவர்கள் போரின் கொடூரம் பற்றியும் கண்டனம் செய்கிறார். மோவாபியர் ஒரு தரம் ஏதோம் அரசனின் எலும்புகளைச் சுட்டுச் சாம்பலாக்கியதைப் பற்றியும் பேசுகின்றார் (ஆமோ 1:6.9.11; 2:1). ஒபதியா நூல் முழுவதும் ஏதோம் நாட்டின் அழிவை முன்னறிவிக்கிறது. இதே போன்று மற்றப் பகுதிகளிலும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன (சங் 137:7; ஏச 11:14; 34:5-17; எரே 49:7-22; எச 35; மலா 1:2-4). செப்பனியாவும், செக்கரியாவும் அழிவுறக் கூடிய நாடுகளில் ஒன்றாக ஏதோமைச் சேர்க்கவில்லை. உபஆகமச்சட்டம் ஏதோமியரை ஆண்டவருடைய சபையில் சேர்ப்பதில் கடுமையைக் காட்டுகிறது (உப 23:8). யோபு நூல் ஆசிரியர், நாட்டுப் பற்றைக் கடந்து, தனது நூலின் தலைவனையும், மற்றப் பாத்திரங்களையும் யூதாவைச் சேர்ந்தவர்களாக ஆக்கவில்லை, மாறாக ஏதோமியராக ஆக்குகிறார்.

**ஏத்தாம்** (ETHAM - கடல் நோக்கிய)

கக்கோத்தை விட்டுக் கிளம்பியபின் இஸ்ராயேலர்கள் தங்கிச் செல்லப் பாளையம் இறங்கிய முதல் இடம். யாத் 13:20; எண்

33:6-8 ஆகிய இரு பகுதிகளுமே அதை ''பாலை நிலத்தின் ஓரமாய் உள்ள ஏத்தா மிலே'' என்று குறிப்பிடுகின்றன. சூர் பாலை வனத்தின் ஒரு பகுதிக்கும் இதே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது (எண் 33:8). எகிப் தின் கிழக்கு எல்லையில் உள்ள எகிப்தியக் கோட்டை இந்தப் பகுதியாக இருக்கலாம். இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்துக்குள் தப்பிச் சென்றுவிட நம்பிய வாடி துமிலாத் துக் கரையிலுள்ள திமிசா ஏரிக்கு வடக்கில் இதன் இருப்பிடம் குறிப்பிடப்படுகிறது. இதன் எல்லை மதிற்கவர்களால் வழிதடைப் பட்டதால் பாகால்-செபோனுக்கு முன்னால் உள்ள கடலுக்கும் மிகிதோலுக்கும் இடையி லுள்ள பியகிரோத்திற்குமுன் திரும்பிவந்து பாசறை அமைக்க வேண்டி வந்தது.

**ஏத்தானிம்** (ETHANIM - என்றும் ஓடும் ஓடைகள்)

எபிரேயத்தின் ஏழாம் மாதத்திற்குப் பாபி லோனிய அடிமைத்தனத்துக்கும் முற்காலத் தைச் சார்ந்த பெயர் (செப்டெம்பர் - அக் டோபர்; புரட்டாசி). இது கானானிய கலாச் சாரத்திலிருந்து பிறந்த பெயராகும். வறட்சி யின் கடைசிக் காலக்கட்டமாக இது இருப்ப தாலும், இந்த மாதத்தில் நிலையான ஓடைக ளில் மட்டும் இன்னும் நீர் ஓடியதாலும் இப்பெயர் பெற்றது. பிற்காலத்தில் இந்த மாதம் ''திசுரி'' என்று அழைக்கப்படுகிறது.

இம்மாதத்தின் 10-ஆம் நாள் பரிகார நாளா கக் கடைப்பிடிக்கப்பட்டது; 15-23-ஆம் நாட் களில் கூடார விழாக் கொண்டாடப்பட்டது. 1 அரச.8:2-4-இன்படி இந்த ஏத்தானிம் மாதத் தில்தான் குருக்கள் உடன்படிக்கைப் பேழையை எருசலேமிலுள்ள ஆலயத்துக் குள் எடுத்துச் சென்றனர்.

**ஏத்தான்** (ETHAN - நித்திய, நிலையான)

1. எசிராவியர் என்று அழைக்கப்படும் அறிவிற் சிறந்த ஞானி. சாலமோன் காலத்தி யவராக இருக்கலாம் (1 அர 4:31). இவரோடு சாலமோன் ஒப்பிடப்படுகிறார். இவர் ஒரு வேளை சங்.89-ஐ எழுதியிருக்கலாம்.

2. தாமார் வழியாக யூதாவின் புதல்வ னான செராகின் புதல்வன், அசரியவின் தந்தை (1 நாள் 2:6.8). இவருடைய சகோதரர் களான ஏமான் மற்றும் கல்கோல் ஆகியோர் 1 அரச. 4:31-இல் குறிக்கப்பட்ட ஞானிகளா னால், இவர் (1)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

3. ஒரு லேவியர். சிம்மாவின் மகனும் அதாயாவின் தந்தையுமாவார். கெரிசோ மைச் சார்ந்த ஆசாபின் முன்னோர் (1 நாள் 6:41). ஒருவேளை இவர் யோவாகு-(1) ஆக இருக்கலாம்.

4. லேவியர் மெராரியின் பிரிவைச் சேர்ந்த கீசியின் (1 நாள் 6:44) அல்லது கூசாயியாவின் (15:17) மகனாவார். எருசலேமுக்கு உடன் படிக்கைப் பேழை கொண்டுவரப்பட்ட விழா வில் பாடகர்களுக்கும் இசைக் கலைஞர்க ளுக்கும் தலைமை தாங்க ஏமான் மற்றும் ஆசாபு ஆகியவர்களோடு நியமிக்கப்பட்ட வர் (15:17.19). இவன் ஒருவேளை எதுத்தூன்-(1) ஆக இருக்கலாம்.

**எந்தோர்/ஏன் - தோர்** (ENDOR - தோரின் ஊற்று)

கானானியரின் கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்ற இஸ்ராயேலர் கடினப்பட்ட நக ரங்களில் இதுவும் ஒன்று (யோக 17:12-13). இங்குதான், கில்போவா மலைக்கு வடக்கில் பெலிஸ்தியர்களோடு உடனடியாக வரவி ருந்த போர் பற்றிச் சவுல் குறிகாரியிடம் ஆலோசனை கேட்டார் (1 சாமு 28:7). சங் 83:9-10-இன்படி ஏந்தோரில்தான் சீசெரா, யாபீன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் நீதி 4-5 இப்பெயரைக் குறிக்காத தால் அறிஞர் சிலர் கில்போவா மலை அடிவாரத்திலுள்ள ஏங் கரோத்து ஆகத் திருத் தியுள்ளனர் (நீதி 7:1).

இது தாபோர் மலைக்குத் தெற்கில் 6 கி.மீ. தொலைவில் சிறிய கொர்மோனின் (நெபி தர்கீ) வடசரிவில் அமைந்துள்ளது. இது இக் கால ஏந்தோர் என்ற கிராமப் பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் உண்மை

யான இடம் கிர்பெத் எஸ் -- சப்சாபேயாக இருக்கலாம்.

**ஏபால்** (EBAL - வெறுமையான) - ஆள்

1. கோரிய சேயிரின் வழித்தோன்றல்.
சோபாலின் மூன்றாவது புதல்வர் (ஆதி 36:23; 1 நாள் 1:40).

2. சேமை மூதாதையராகக் கொண்ட யோக்கிதானின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 1:22). இதற்கிணையான பகுதியில் (ஆதி 10:28) இவரது பெயர் ஒபால் என்பதாகும்.

**ஏபால் - மலை** (EBAL - MOUNT)

கெரிசிம் மலைக்கு நேர் எதிரில் வடக்கில் அமைந்துள்ள ஒரு மலை. இருமலைகளுக்கும் இடையில் கிழக்கு மேற்காக ஒரு கணவாய் அமைந்துள்ளது. அதன் கிழக்கு வாயிலில் செக்கேம் நகர் உள்ளது. இருமலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்கில் இக்கால நபுலூஸ் உள்ளது. இதன் தற்போதைய பெயர் எபோல் எஸ்லாமியோ ஆகும்.

மோசேயின் காலத்திற்குப் பிறகு எபிரேயர்கள் கானான் நாட்டில் நுழைந்தபின் தாங்கள் யாவேயுடன் கொண்ட உடன்படிக்கையை உறுதி செய்யவேண்டியிருந்தது. இந்நிகழ்ச்சியில் கெரிசிம் மலையின் மேல் ஆசீரையும், ஏபால் மலையின் மேல் சாபத்தையும் இஸ்ராயேல் கூற வேண்டியிருந்தது (உப 11:29). மேற்சொன்ன சான்றிலிருந்து, பாரம்பரியமாக வழங்கி வந்தபோதிலும், மலையே சாபமிடப்பட்டதா என்பது தெளிவாக இல்லை. உப ஆகமம் 27:13-இல் இருந்து ஆண்டவருடைய கட்டளைகளை மீறியவர்களுக்குச் சாபங்கூற ரூபன், காது, ஆசேர், செபுலோன், தாண், நப்தலி ஆகிய கோத்திரக்காரர்கள் ஏறி நின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. உபஆகமம் 27:4 பகுதியிலிருந்து இம்மலையின் புனிதத்துவம் தெரிய வருகின்றது. ''நான் உங்களுக்கு இட்ட கட்டளைகளைப் பொறித்த கற்களை ஏப::ல் மலையில் நாட்ட வேண்டும்'' என்று பாரம்பரியம் கூறுவதிலிருந்து புனிதத்துவம் விளங்குகின்றது. யோசுவா ஆகமம் 8:30.33-இன்படி ஆயி நகரை வென்றபின் ஏபால் மலையின் மேல் யோசுவா பலிபீடம் எழுப்பினார் என்றும், மேலும் இவருடைய தலைமையில் மக்கள் உடன்படிக்கைக்குரிய சடங்குகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிய வருகின்றது. அப்போது கூட்டத்தில் பாதிப் பேர் ஏபால் மலையின் முன்பகுதியிலும் மறு பாதிப் பேர் கெரிசிம் மலையின் முன்பகுதியிலும் அமர்ந்திருக்க உடன்படிக்கைக் கூடாரம் இரு சாராருக்கும் நடுவில் அமைந்தது.

**ஏபேது** (EBED - ஊழியன்)

1. ஒபேது காகால் என்பவனுடைய தந்தை. இவர் அபிமெலேக்கிற்கு எதிராகச் செக்கேமில் கிளர்ச்சியை நடத்தினார் (நீதி.9: 26-35).

2. எஸ்ராவுடன் பாலஸ்தீன நாட்டிற்குத் திரும்பிய 50 பேரில் ஒருவர் (எஸ் 8:6). யோனாத்தானின் மகன்.

**ஏபேது - மெலக்கு** (EBED - MELECH - அரசனின் ஊழியன்)

செதேக்கியா அவையிலிருந்த எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த அண்ணகர். இவர் ஏரேமியாவைப் பாழுங்கிணற்றிலிருந்து காப்பாற்றியவர் (ஏரே 38:7-13). ஏரே 39:15-18-இல் ஏபேது-மெலக்கைப் பற்றிக் கூற படுகின்ற இறைவாக்குகள் சில சமயங்களில் பிற்சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. அதிலே அவர் எரேமியாவுக்குச் செய்த நற்செயலுக்குச் சன்மானமாக, அரசின் அழிவிலிருந்து 'காப்பாற்றப்படுவார் என்று எரேமியா வாக்குறுதி அளிக்கிறார். 'ஏபேது' (அடிமை) என்ற இந்த வார்த்தை அக்காதியர்களின் வழக்கிலிருந்து முதன்முறையாகத் தாவீது காலத்தில் கையாளப்பட்டதாகத் தெரிகின்றது. மேலும் ஏதோமிலும் அம்மோனிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

**ஏபேர்** (EBER - ஊழியன்)

1. எபிரேயர்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்த குலப்பெயர் முதியவர்கள்.

சேமின்பேரனும் செலாகின் மகனுமாவர் (ஆதி 10:21; 24:25; 11:14-17; எண் 24:25; 1 நாள் 1:18-19.25). இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர் (லூக் 3:35). யாவே பாரம்பரியம் ஏபேரை செமித்தியர்களுக்கு முன்னோராகக் கருதுகின்றது (ஆதி 10:21); மாறாகக் குருக்கள் பாரம்பரியம் எபிரேயர்களுக்கு மட்டும் முன்னோராகக் கருதுகின்றது (ஆதி 11:4-26). நாள் ஆகமம் இவ்விரண்டு பாரம்பரியங்களையும் இணைத்துப் பேசுகின்றது (1 நாள் 1:17-27). எண் 24:24-இல் 'ஏபேர்' பெயர்ச்சொல்லாக வாசிக்கப்பட முடியாது. மாறாக ''அப்பாலுள்ள பகுதிகள்'' என்ற பொருளைக் கொடுக்கும் ஒரு சொல்லாக மட்டும் வாசிக்க வேண்டும். இப்பகுதிகள் யூப்பிரத்திசுக்கு அப்பால் உள்ளவையாகும். எபிரேய மொழியிலும் 'ஏபேர்' என்ற சொல்லாலேயே குறிக்கப்படுகின்றது.

2. காது குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 5:13).

3. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:12).

4. பென்யாமின் சாசாக்கின் இரண்டாம் புதல்வர் குலத்தைச் சேர்ந்த மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:22).

5. பாபிலோனிய அடிமைத் தனத்துக்குப் பிறகு (நெக 12:20) யோயாக்கிமின் பணிக் காலத்தில் ஒரு குருவும், அமோக்கு வீட்டாரின் தலைவருமாவார்.

**ஏபோது** (EPHOD) - ஆள்

யோர்தானுக்கு மேற்குப்புறத்திலுள்ள கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிடுதலை மேற்பார்க்க நியமிக்கப்பட்டவர்களிலே ஒருவர். மனாசேயின் கோத்திரத்திலே கன்னியேலின் தந்தை (எண் 34:23).

**ஏபோது** (EPHOD) - ஆடை, பொருள்

பழைய ஏற்பாட்டுச் சொல்லாகிய இதன் சொல்லாக்கமும் பொருளும் தெளிவாக இல்லை. ஆனால் ஒரு பொருள் மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

குருக்கள் அணியக்கூடிய ஒருவகையான சணல்நூல் ஆடை (1 சாமு 22:18). சிறுவன் சாமுவேலும் சணல் ஆடை உடுத்தியிருந்தான் என்று 1 சாமு 2:18-இல் குறிப்பிடுகிறது. திருப்பேழை எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டபோது அதற்குமுன் ஆடிக் கொண்டு வந்த தாவீது உடுத்தியிருந்த (2 சாமு 6:14) 'ஏபோது' சணல் ஆடை அல்லது இளநீல ஆடை போன்ற சொற்கள் 'நிர்வாணத்தை மறைக்கின்ற' என்ற பொருளையும் கொடுப்பதாகத் தெரிகிறது. சாமுவேலும், தாவீதும் இந்த இடுப்பை மறைக்கின்ற சிறிய ஆடையை அணிந்து கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. குருக்கள் பாரம்பரியம் பெரிய குரு அணிந்து கொள்ளும் ஏபோதைப் பற்றி எடுத்துரைக்கின்றது (யாத் 28:28-29; 35:27; 39). பொன் நூல், இளநீலம், இருமுறை சாயம் தோய்த்த இரத்த நிறம் கொண்ட நூல்கள், மெல்லிய சணல் நூல் முதலியவற்றால் நெய்யப்படும் விலைமதிப்புமிக்க, இருபுயங்களிலிருந்து தொங்கும் அங்கியாகும். இறைத் திருவுளத்தைக் கணிக்க உதவும் ஊரிம், தும்மீம் என்ற குறிசொல்லும் தாயக்கட்டைகளைக் கொண்ட வழிபாட்டுக்குரிய ஆடை. கைப் பகுதியற்ற இருக்கமாகப்பொருந்தக்கூடிய 'ஏபோது' என்ற இந்த ஆடை குருக்கள் அணிவதா, சிலைகளுக்குப் போடுவதா என்பதிலும் சிறு சந்தேகம் இருப்பது போலத் தெரிகிறது.

பொருள் தெளிவாக இல்லாத பல பகுதிகள் காணக்கிடக்கின்றன. நீதி 8:27-இல் கிதயோன் ஓர் ஏபோதைச் செய்து தன் ஊராகிய ஓபிராவில் வைத்ததாகவும், அதுவே இஸ்ராயேலரின் சிலைவழிபாட்டுக்குக் காரணமாக அமைந்ததென்றும் குறிப்பிடப்படுகிறது. இது யாவேயைக் குறித்துக்காட்டும் தங்க உருவமாக இருக்கலாம். குறிசொல்லும் தாயக்கட்டைகளைப் போட்டுக் கொள்ளக் கூடிய பைகளை உடைய தேவதையின் உருவ ஆடையாகவும் இது இருக்கலாம். ஏச 30:20 ''தங்க மூலாம் பூசிய சிலைகளையும்'' என்று குறிப்பிடும் இடத்தில் உருவங்களின் மேற்கவசத்தை விவரிக்கும்போது ஏபோ

தைப், பெண் தன்மையுள்ள சொல்லாக வர்ணிக்கின்றது. 2 அர 23:7 என்ற பகுதி ''சிலைசோலைக்கு'' வரும் பெண்கள் செய்த ஆடையைப் பற்றி விவரிக்கிறது. ஆனால் இந்தப் பகுதியில் 'ஏபோது' என்னும் சொல் பற்றிக் குறிப்பு ஒன்றுமில்லை. ஆனால் சிலர் பேழைக்கும் 'ஏபோது'க்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கின்றனர். இவ்வாறு 1 சாமு 14:1-இல் எபிரேய 'ஆண்டவருடைய பேழை'யை எழுபது நூலில் 'ஏபோது' என்று வாசிக்கின்றோம். இதிலிருந்து பேழையும் 'ஏபோதும்' நெருங்கிய தொடர்புடையன என்றும் பல பேழைகள் இருந்திருக்கலாம் என்றும், சிறிய விதத்தில் அமைக்கப்பட்ட கோயிலைக் குறிக்கும் பேழைக்கு மறு பெயர் 'ஏபோது' என்றும் எண்ணும் முடிவுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இவ்வாறு 'ஏபோது' என்றால் ஒரு சிறிய கோவில் என்று எண்ணப்பட்டது.

ஆனால் இது 'ஏபோது' என்பது ஓர் ஆடை என்று பொருள் கொடுக்காத பகுதிகளை விளக்கலாம். 'ஏபோது', தெரபிம்களுக்கு இடையே உள்ள உறவு தெளிவாகத் தெரியா விட்டாலும் அவையிரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது தெளிவு (நீதி 17:5; 18:14. 17-18.20; ஓசே 3:4). மேலும் இறைத்திருவுளத்தை அறிந்து குறிசொல்வதற்குப் பயன்படுத்தப்படும் கட்டைகளை வைத்துக் கொள்ளப்பயன்படுத்துவதால் 'ஏபோது' இறைவாக்கைத் தெரிந்து கொள்ளப் பயன்படுத்தப்படும் கருவியாக இருப்பதும் தெளிவாகும். 1 சாமு 14:3. 18-19; 23:9; 1 அர 2:26 இதைத் தெளிவாக்குகின்றன. ஏனெனில் ஏபோது தூக்கிச் செல்லப்பட்டு ஆலோசனை பெறப் பயன்படுத்தப்பட்டது.

விவிலியப் பேழை குறிசொல்லும் கருவியாகக் கருதப்படாததால், பேழையையும் ஏபோதையும் ஒன்றாக்கவோ ஒப்பிடவோ முடியாது. 'ஏபோது' சுற்றுப் புறங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடியது என்றும் ஆடையைக் குறிப்பதாகவும் கிதயோனில் இருந்தது போலச் சில சமயங்களில் விலை உயர்ந்த பொருட்களாகவும், சில நேரங்களில் புனித இடத்தில் அமைக்கப்பட்டதாகவும், சுமந்து செல்ல முடியாத அளவுக்குப் பெரிதாகவும் (நீதி 17:5; 18:14...; 1 சாமு 19:13), சில சமயங்களில் போர்ப் பாசறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இப்பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன. ஏபோது போர்ப் பாசறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், குறிசொல்லும் போதும், குரு அணியக்கூடியது என்று சந்தேகமறக் குறிப்பிடப்படுகிறது. சிலுவைகள் பலவகையில் ஆலயத்தின் சுவர்களில் பொருத்தக்கூடிய வகையில் பெரியதாகவும், சில சமயம் உடலில் சுமந்து செல்லக்கூடிய சிறிய வகையிலும் இருப்பதுபோல 'ஏபோது' பல வகைப்பட்ட கன உருவங்களில் இருந்திருக்கலாம்.

**ஏப்பா** (EPHAH - இருள்) - ஆள்

1. மிதியானின் புதல்வர்களில் மூத்த மகனும், ஆபிரகாம் - கெத்தூராவின் பேரனும் ஆவார் (ஆதி 25:4; 1 நாள் 1:3). ஓர் அரபிய இனத்தின் குலப்பெயர் முதியவர். மிதியான் இனம், ஆண்டவரின் புகழ்பாடிக் கொண்டு எருசலேமுக்குப் பொன்னும், தூபமும் கொண்டுவருவதாக இறைவாக்கினர் காண்கிறார் (ஏச 60:16).

2. காலேபின் வைப்பாட்டி. ஒரு குலப் பெயர் (1 நாள் 2:46).

3. யூதா இனத்தைச் சேர்ந்த யகுதாயின் புதல்வர்களில் ஒருவர் (2 நாள் 2:47).

**ஏப்பா** (EPHAH) - பொருள்

மாவு போன்ற பொருள்களை அளக்கும் ஒரு அளவை. கோமேரில் பத்தில் ஒரு பங்கு (எச 45:11; காண்க. நீதி 6:19; ரூத் 2:17; ஏச 5:10).

**ஏப்பாய்** (EPHAI - பறவை பறத்தல்)

நெத்தோபா ஊரைச் சேர்ந்தவர். எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு கெதலியாவுடன் சேர்ந்து கொண்ட யூதப்படைத் தலைவர்களில் இவருடைய புதல்வர்களும் அடங்குவர் (எரே 40:8). நெத்தானியாவின் மகனான இசுமயேல் இந்தக் கூட்டம் முழுவதையும்

கொன்று அழித்தான் (41:1-3). இதற்கு இணையான பகுதியில் (2 அர 25 : 23) ''ஏப்பாயின் புதல்வர்கள்'' என்ற சொற்றொடர் விடப்பட்டுள்ளது. அதனால் தங்குமேத்தை ஒரு நெத்தோபாத்தியராக்குகிறது.

**ஏப்பேர்** (EPHER - இளம் கலை மான்)

1. மிதியாவின் இரண்டாவது மகனும், ஆபிரகாம் - கெத்தூராவின் பேரனுமாவர் (ஆதி 25:4; 1 நாள் 1:33). ஒரு தென் அராபிய இனத்தின் குலப்பெயர் முதியவர்.

2. யோர்தானின் கிழக்குப் புறத்திலே வாழ்ந்த மனாசே இனப்பகுதியின் ஒரு குடும்பம். ''ஆற்றல்மிக்கவரும் ஆண்மையுடையவரும்'' அடங்கிய பட்டியலில் முதலாவதாகக் குறிக்கப்படும் பெயர் (1 நாள் 5:24; காண்க. எண் 26:32).

**ஏமாம்** (HEMAM)

ஏமாம் குலத்தலைவனான உலோத்தானின் இரண்டாவது புதல்வர் ஆவார். ஏதோமில் ஒரு கோரிய துணை வம்சத்தின் முன்னோர். 1 நாள் 1:38-இல் கோமாம் என்று இப்பெயர் தரப்பட்டிருக்கிறது.

**ஏமான்** (HEMAN - பிரமாணிக்கமுள்ள)

1. ஞானமிக்கவர். கல்கோல், தர்தாவைப் போல் இவரும் மாகோலின் புதல்வர் (1 அர 4:31). சாலமோன் தன் ஞானத்தில் இவரையும் மிஞ்சியவர். 1 நாள்.?:6-இல் செராசின் புதல்வன் என்று அழைக்கப்படுகின்றார். இதை நாள் ஆகம ஆசிரியர் ''எசுராவியர்'' என்பதிலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கலாம் (சங்.88). ஏமானுக்கு, ஏதோமியர் கானானிய முன்மரபுகள் கூறப்படுகின்றன. இவர் ஒருவேளை (2)-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

2. கெகாத்திய கோத்திரத்தில் யோவேலின் மகன்; சாமுவேலின் பேரன், தாவீது, சாலமோன் ஆட்சியில் கோயில் பாடகர் தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 6:33-47; 15:17-19; 16:41; 2 நாள் 5:12). அரசனது திருக்காட்சியாளர் என்று அழைக்கப்படுகிறார் (1 நாள் 25:5). இன்னிசைக் கருவிகளை ஒலித்து இறைவாக்குரைத்தவர்களில் ஒருவர் (25:1). ஏமானின் குழு வழிபாட்டு இறைவாக்கினர் குழுவாக முன்பு இருந்தது (காண்க எரே 35:4); பிறகு இசைக்குழுவாக மாறியதாக இருக்கலாம். சாலமோன் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டதில் இவர் பங்கெடுத்திருக்கிறார் (2 நாள் 5:12).

3. ஏசாவின் வழிவந்த கோரியர் வம்சத்தைச் சார்ந்தவர் (ஆதி 36:22). 1 நாள் 1:39-இல் கோமாம் என்றழைக்கப்படுகிறார்.

**ஏமியர்** (EMIM - பயங்கர)

யோர்தானுக்குக் கிழக்கில் சமவெளியில் வசித்து வந்த பயங்கரமான தோற்றத்தையுடைய அசுர மக்கள். இவர்கள் சாவே - கிரியாத்தாயிமில் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர் (ஆதி 14:5). ஆனால் மற்ற இடங்களில் இரப்பாயிம் என்றழைக்கப்படுகின்றனர். மோவாபியர்கள் அவர்களை ஏமியர் என்று அழைத்தனர். இவர்கள் தான் மோவாபின் முந்தைய குடிமக்கள். மோவாபியர் இவர்களை விரட்டியடித்தனர் (உப 2:10-11). இவர்கள் மிக்க வலிமையும் நெடிய உருவமும் உடையவர்கள். இவர்கள் அரக்கர்களான அனாக்கிமியர்களைப் போன்றவர்கள் என்றும் எண்ணப்பட்டார்கள். ஆதி 14:5-இன்படி சாக்கடலுக்குக் கிழக்கிலுள்ள சமவெளியான சாவே - கிரியாத்தாயிமில் கெதர்லா - கோமோரால் இவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

**ஏய்ப்பு/ஏமாற்றம்** (DECEPTION/DISAPPOINTMENT)

விவிலியமானது ஏய்ப்பும் ஏமாற்றமும் இருப்பதை அறிந்திருப்பதோடு மட்டுமில்லாமல், அவற்றைப் பற்றியும் விவரிக்கிறது. கிரேக்கரும் வாழ்வின் ஒரு பகுதியாக உள்ள தோல்விகளையும் ஏமாற்றங்களையும் உணர்ந்தவர்களாய் இருந்தனர். மனிதனுடைய செயல்களின் இத்தகைய கூறுகளைப் பற்றி அவர்கள் அடிக்கடி விவரித்தாலும் மதிப்பான முறையில் அதனை ஏற்றுக் கொள்ளுதல் என்ற எண்ணத்துடன் அவர்கள் அத

னைக் கிட்டதட்ட ஒளிவு மறைவாகவும் சிறப்பாகவும் செய்கின்றனர். ஆனாலும், விவிலியமானது இந்தப் போக்கைச் சிறித ளவே காட்டுகின்றது. உண்மையில், யோபு வினுடைய குற்றச்சாட்டுகளும், சங்கத்திரு வுரை ஆகமத்தினுடைய வசைச்சொற்களும் கேட்கச் செய்வதில் பேரின்பம் அடைவதா கத் தோன்றுகிறது. இது கிரேக்கருடைய கட்டுப்பாடு மற்றும் எபிரேயருடைய உணர்ச்சி ஆகியவற்றிற்கு இடையிலுள்ள மனநிலை மற்றும் கலாச்சாரத்தினுடைய வேறுபாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இது சமய மனப் பான்மையில் உள்ள வேறுபாடாகும். அதனு டைய விசுவாசத்தின் காரணமாக, இஸ்ரா யேலானது, படைப்பின் மதிப்பையும் மற் றும் அதன் நிலைமையையும் பற்றிய கூர் மையான உணர்வைக் கொண்டிருந்தது. தோல்வியுணர்வு துன்பத்திற்குரியதொன்றா னாலும், அதை இஸ்ராயேல் துறப்பமைவுட னும் இறுதிவெற்றி பற்றிய உறுதியுடனும். ஏற்றுக் கொண்டது.

1. வெட்கம், பொய் மற்றும் வீண் தன்மை:- ஏய்ப்பு மற்றும் ஏமாற்றம் பற்றிய எண்ணத்திற்கான எபிரேயச் சொற்றொடர்ப் பகுதியில் பொருளின் இருவித நிலைகளின் மீது குறிப்பாக அழுத்தம் வலியுறுத்தப்படுகி றது: ஏமாற்றுகின்ற புறப்பொருளின் வீண் தன்மை அல்லது பயனின்மை மற்றும் ஏமாற்றப்பட்டவரில் ஏற்படும் குழப்பம்.

அ. பயனற்ற பொருட்களின் பொய்மை நிலை:- எபிரேயர், நிலைத்து நிற்பதற்கான ஆழமான தேவையையும், முரண்பாடான மற்றும் மாயத் தோற்றங்களின் பயங்கரத்தை யும் அனுபவிக்கின்றனர். பொய்பேசுதல் கண்டிக்கப்படும்போது, வாய்மை தவறுதல் பற்றிய எண்ணத்தைவிட அதனுடைய அடிப் படை ஒன்றுமில்லாமையே அதிகமாகக் கண்டிக்கப்படுகின்றது. ஏமாற்றுகின்ற பொருட்கள், ஒன்றுமின்மையை உருவாக்கு கின்ற பொருட்கள், ''பேலியாலின் மக்கள்'' (உப 13:13) ஆகியவற்றை விவரிக்கச் சாதா ரணச் சொற்களாகப் பொய், வீண், வீணா னவை, ஒன்றுமின்மை ஆகியவை பயன்படு கின்றன. காற்று, தூசி, மற்றும் ஒன்று மின்மை என்பன அடிக்கடி காணப்படும் உருவகங்களாகும்.

ஆ. குழப்பமடைந்திருத்தலின் வெட்கம்:- எல்லா வாழ்வும் மற்றவர்களின் பார்வை யின் கீழ் வாழ்கின்ற இவ்வுலகில், ஏய்ப்பா னது தவிர்க்கமுடியாமல் தனது பலியாளை வெட்கத்தினால் போர்த்துகிறது. பயன் தராத ஒன்றின்மேல் தனது நம்பிக்கையை வைத்த ஒருவன், அனைவரின் முன்னிலையில் தான் குழப்பம் அடைந்திருப்பதை உணர்கிறான். தனக்கு ஒப்பானவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற மனிதனுடைய இறுமாப் பிற்கு இது பயங்கரச் சோதனையாகும். ஏய்ப் பினை விவரிக்கப் பரவலாகப்பயன்படு கின்ற சொற்கள் வெட்கம் மற்றும் குழப்பத் தைக் குறிப்பவையாகும். இந்த அவசிய மான நுட்ப வேறுபாடானது நமது கவனத்தி னின்று எளிதில் தப்பிவிட நாம் விட்டுவிடுகி றோம். ஆகவே, பவுலின் கூற்றை ''நம்பிக் கையே, பொய்க்காது'' என்று மொழி பெயர்க்கிறோம் (உரோ 5:5). இதற்கு ''நம்பிக் கையோ குழப்பத்திற்கு இட்டுச்செல்லாது'' என்பது மேலான மொழிபெயர்ப்பாகும். இங்கு இக்கூற்று, நற்செய்தி மற்றும் சிலு வையை அறிவிப்பதில் அப்போஸ்தலர் கொள்ளும் பெருமையை விளக்குகிறது.

2. எல்லாமே ஏமாற்றுதல்:-

தாங்கள் மனிதருடைய நம்பிக்கைக்கு உரி யவர்கள் என்றும் அவர்களது முடிவை உறு திப்படுத்தக்கூடியவர்கள் என்றும் உரிமை கொள்வதால் இரு வகையானவர்கள் சிறப் பான முறையில் ஏமாற்றுகின்றனர். அவர் கள் பேராற்றல் மிக்க அரசும் போலித்தெய் வங்களும் அதாவது எகிப்தும் சிலைகளும் ஆவார். பகட்டான வெளிப்புறத்தின்கீழ், ''செயலிழந்த இராகாபு'' எனப்படும் எகிப்து உண்மையில் ''வீண்முயற்சியாகவும் பயனற்றதாகவும்'' உள்ளது (ஏசா 30:7). அதனுடைய ஆற்றல்மிக்க குதிரைகள் வெறும் சதைப் பிண்டங்களாகவும், எகிப் தின் ஒரு மனிதனாக மட்டுமாகவும் உள்ள

னர் (ஏச 31:1 தொ; எரே 2:37). இக்குதிரைகளும் போர்வீரர்களும் உண்மையான உயிர்களாக இருந்தாலும், போலித் தெய்வங்கள் ஒன்றுமில்லாதவையாகவும், அவற்றினுடைய சிலைகள் பொய்யாகவும், ஆற்றலற்றவையாகவும் உள்ளன. இதன் காரணமாகவே, அவற்றினுடைய ஊழியர்களும் படைப்பாளர்களும் வெட்கி நாணவேண்டியவர்களாக உள்ளனர் (எரே 2:28; ஏசா 44:9 தொ).

ஆனால் திருவுரையாளர் இதற்கும் அப்பால் சென்று, இந்த ஏமாற்று உணர்வைப் பொதுவான ஒன்றாக அமைக்கிறார். ''சூரியன் முகத்தே எல்லாம் வீணிலும் வீண், எல்லாமே வீண்'' என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார் (திருவுரை 1:2.14). வாழ்க்கையே ஓர் ஏமாற்றம் என்பதை எவ்வளவு உணர்கிறார் என்றால், இந்த உறுதியை எல்லாக் கொடைகளையும் கொண்டு இருந்த சாலமோன் அரசனுக்கே அவர் சாற்றிக் கூறுகிறார். ஆனாலும், உலகப் பொருட்களை அவர் இகழவில்லை. ஆனால், அதற்கு எதிர் மாறான நிலையில் அவற்றிலிருந்து பெருமளவிற்கு எதிர்பார்க்கிறார். இதுவே அவருடைய அடிப்படையான கசப்பான மனப் போக்கிற்குக் காரணமாகிறது. இதுவே ஒரு விடையையும் காண்கிறது; அது கெட்டதையும், நல்லதையும் கற்றுக் கொள்வதாகும் (7:13-14).

3. இறைவன் ஏமாற்றுவதில்லை:-

மனிதன் தன்னுடைய அயலாருக்கு ஏய்ப்பின் ஊற்றாய் இருப்பதுடன் (எரே 17:5; சங் 118:8) இறைவன் ஏமாற்றத்தின் ஊற்றாகவும் இருக்கிறான். அவர் அன்போடு பேணி வளர்த்த திராட்சைக் கொடியானது, புளிப்பான திராட்சைப் பழங்களையே விளைவித்தது (ஏச 5:4). ''ஒரு மனிதன் தன்னுள் என்ன கொண்டுள்ளான்'' என்பதைக் கூறக்கூடிய இயேசு (யோவா 2:25), இந்த ஏய்ப்பினை அனுபவித்தார். தமது அயலாரால் புறக்கணிக்கப்பட்டு (மாற் 6:3-4), எந்த அளவு அவர் அவர்களை அடைய முயன்றாரோ, அந்த அளவிற்கு மனிதர்கள் தங்களுடைய இதயங்களை மூடிக்கொள்வதையும் அவர் கண்டார் (மத் 23:37-38; யோவா 12:37-40). அவர் தம்மையே அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும்போதே தமது சீடர்கள் தம்மைக் கைவிடுவதை அவர் கண்டார் (மாற் 4:50).

சில நேரங்களில் இறைவனே ஏமாற்றுபவராகத் தோன்றுகிறார். தங்களுடைய முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன என்றும், இறைவன் தங்களுடைய வழிகளிலேயே தங்களை விட்டுவிட்டார் என்றும் எண்ணுகின்ற சோதனையை மிக விசுவாசமுள்ள ஊழியர்கள் நன்கு அறிவர். தனது தந்தையரைவிடத் தான் எவ்விதத்திலும் உயர்ந்தவன் அல்லன் என்பதைக் கண்டடைந்தபிறகு எலியா இறக்க விரும்புகிறார் (1 அர 19:4). இறைவனின் நம்பத்தகுந்த தன்மையைப் பற்றி ஐயம் எழுப்பவும் தூண்டப்படுகிறார்; ''நீர் எனக்கு நீரற்று ஏமாற்றும் ஓடைபோல் ஆகிவிட்டீரோ!'' (எரே 15:18 ஆனது எரே 2:13; ஏச 58:1-ஓடு ஒப்பிட்டு வேறுபடுத்த வேண்டும்). இறைவனால் கைவிடப்படும் நிலையானது எவ்வளவு தூரம் செல்லக்கூடியது என்பதை, இயேசுவே அனுபவித்தார் (மாற் 15:34).

இறைவன் மட்டுமே ஏமாற்றுபவரல்லர் என்று கூறுவதென்பது, எல்லாத் தோற்றங்களுக்கும் அப்பால் செல்லும் ஒரு படியாகும். இது விசுவாசத்தின் அனுபவமாகும். இது பெரும்பாலும் இருளில் வாழப்பெற்று, கசப்பாக உணரப்பட்ட ஏமாற்றங்களின் விலையால் பெறப்படுகிறது. தந்தையின் கரங்களில் தனது ஆவியைக் கையளித்து (லூக் 23:46) அதனால் மறைவானவராகவும், கவலையற்றவராகவும் தோன்றுகிறவருடைய இறைவனிடம் தன் விசுவாசத்தை வெளிப்படுத்திய இயேசு கிறிஸ்துவால் கொண்டுவரப்பட்ட மீட்புடன் இணையாவிடில், இந்த அடிப்படையான உறுதியானது அனுபவிக்கப்பட முடியாது. இவ்விசுவாசத்தினால் உறுதுணை அளிக்கப்பட்டு, இறைவன் விசுவாசமுள்ளவராக உள்ள காரணத்தால், நாம் இனிமேலும், எதனாலும் ஏமாற்றப்பட

முடியாது (உரோ 8:31-39). எல்லா ஏமாற்றங் களுக்கும் எதிரான உறுதிப்பாடான இந்தப் பிரமாணிக்கத்தின் அச்சாரம் அவருடைய மக னின் கொடையாகும். அவரில் அழைக்கப் பட்டு அவர் வரும்வரை பாதுகாக்கப்படுகி றோம் (1 கொரி 1:9; 1 தெச 5:23-24).

**ஏரான்** (ERAN - விழிப்புள்ள இன்பம்)

சுத்தலாக்கின் புதல்வனும் எப்பிராயிமின் பேரனும் ஏரானிய வம்சத்தலைவனும் ஆவார் (எண் 26:36). 1 நாள் 7:21-இல் குறிப்பிடப்படும் எப்பிராயிமின் தலை முறை அட்டவணையில் எண் 26:36 ஏரான் கொண்டிருக்கும் இடத்தை எலயாதா பிடித் துக்கொண்டிருக்கிறார். இது எழுபது நூல் மற்றும் சில வாசகங்களுக்கு ஆதரவு அளிக்கி றது.

**ஏரானியர்** (ERANITES)

ஏரானின் வழித்தோன்றல்கள் (எண் 26:36).

**ஏரி** (ERI - விழிப்புள்ள)

காதின் ஐந்தாவது புதல்வர் ஏர் (ஆதி 46:16). இவரது சந்ததியினர் ஏரியர் என்ற ழைக்கப்பட்டனர். இவர்கள் பாலைவனத் தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் குறிக் கப்படுகின்றனர் (எண் 26:16).

**ஏரியர்** (ERITES)

ஏரியின் வழித்தோன்றல்கள் (எண் 26:26). எழுபது நூலில் அதித்தியர் என்றழைக்கப் படுகின்றனர்.

**ஏரோது** (HEROD)

உரோமைப் பேரரசிற்காகப் பாலஸ்தீ னத்தை ஆண்ட (கி.மு. 37-கி.பி. 70) இதுமே யக் குடும்பம். இந்த அரசமரபானது இதுமே யாவின் ஆளுநராக அலக்சாந்தர் யன்னாயுவி னால் நியமிக்கப்பட்ட முதலாம் அந்திப்பாத் தரால் கி.மு. முதலாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் தொடங்கப்பட்டது. இரண்டாம் அந் திப்பாத்தர் கசமோனிய இரண்டாம் இரிக்கா னைத் தந்திரமாகக் கையாண்டதன்மூலம் படிப்படியாக அதிகாரஆற்றல் பெற்று உரோ மைத் தலைமையின் ஆதரவையும் அடைந் தார். கி.மு. 47-இல் யூலியு சீசர் இவரை யூதாவின் கருவூல அதிகாரியாக அதாவது ஆளுநராக நியமித்தார். கி.மு. 125-இல் இவர் களை யோவான் இரிக்கானு வென்று இது மேய மக்கள் எல்லாரையும் விருத்த சேத னத்தை ஏற்று யூதமதத்தைத் தழுவுமாறு கட்டாயப்படுத்தினார். ஆனால் இக்குடும் பம் பெயரளவில்தான் யூத மதத்தைச்சார்ந்த தாக இருந்தது.

1. பெரிய ஏரோது (கி.மு. 73-கி.பி. 4):- இரண்டாம் அந்திப்பாத்தரின் இரண்டாம் மகனாகிய இவர் கி.மு. 47-ஆம் ஆண்டில் இருபத்து ஐந்தாம் வயதில் கலிலேயாவின் ஆளுநராகத் தனது தந்தையால் நியமிக்கப் பட்டார். இவர் தொல்லை கொடுத்து வந்த கொள்ளையரை விரைவிலேயே சிறைப் படுத்தித் தூக்கிலிட்டார். இச்செயலானது உரோமையர் மற்றும் கலிலேய யூதருடைய ஆரம்பப் பாராட்டுக்களைப் பெற்றுத்தந்தது. ஆனால் இச்செயல் யூதத்தலைமைச் சங்கத் தின் சினத்தை எழுப்பியது. கசமோனிய அந்திகோனுவின் படையெடுப்பை முறிய டித்தார். அந்திப்பாத்தரின் படுகொலையைத் தொடர்ந்து உரோமை ஆட்சியாளர் மூவரில் ஒருவராகிய மாற்கு அந்தோணி ஏரோதை யும் அவரது மூத்த சகோதரர் பாசேலையும் யூதேயாவின் ஆளுநர்களாக நியமித்தார். 40-ஆம் ஆண்டில் எருசலேமானது பார்த்திய சக்திகளால் முற்றுகையிடப்பட்டு அந்தி கோனு அரசனாக்கப்பட்டார். பார்த்தியரின் காவலில் பாசேல் தற்கொலை செய்து கொண்டார். ஏரோது உரோமைக்குத் தப்பிச் சென்று அங்கு யூதேயாவின் அரசனென அறிவிக்கப்பட்டார். 38-இல் பார்த்தியர்கள் உரோனமப்படைகளால் வெளியேற்றப்பட் டனர். ஒரு வருடம் கழித்து அந்திகோனுவை வென்றதன் மூலம் ஏரோது அரியணையைக் கைப்பற்றினார்.

ஏரோதுவின் ஆட்சி, அடிப்படையில், அமைதியானதாக இருந்தது. யூத மக்களி டையே ஆதரவை உறுதிப்படுத்துவதிலும்

உரோமைத் தலைவர்களுடன் நல்லுறவைக் கொண்டிருத்தலிலும் அவர் தனது இராணுவ வலிமையையும் அரசியல் துணிவையும் வெளிப்படுத்தினார். அவரது புரவலராகிய அந்தோணியின் மரணத்திற்குப்பின், அகுஸ்துவின் (ஆக்டேவியன்) ஆதரவைப் பெறுவதில் வெற்றிபெற்றார். அந்தோணி மற்றும் அகுஸ்துவின் உதவியுடன் வடக்கிலும் தெற்கிலும் யூதேயாவின் எல்லைகளை ஏரோது விரிவுபடுத்தினார். மேலும் கிரேக்கக் கலாச்சாரத்தின் வளர்ச்சி மற்றும் நாட்டின் வரலாற்றில் ஈடிணையற்ற கட்டடத்திட்டம் போன்றவற்றினால் அவரது ஆட்சியானது மேன்மை மிக்க ஒன்றாக இருந்தது. அவர் பிரம்மாண்டமான பல கோட்டைகளைக் கட்டியெழுப்பினார். சமாரியா, எருசலேம் மற்றும் எரிகோ போன்ற நகரங்களை மீண்டும் கட்டிச் சிறப்பான முறையில் அலங்கரித்தார். அகுஸ்துவினுடைய மாட்சிமைக்காகச் செசாரியா என்று அவரால் பெயர் மாற்றப்பட்ட சித்ராத்தோவினுடைய கோபுரமானது பாலஸ்தீனத்தில் உரோமைத் தலைநகராக ஆயிற்று. உண்மையான கிரேக்க நாகரிகத்தில் அவர் அரங்கங்களையும் விளையாட்டு மைதானங்களையும் கட்டி விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆதரவளித்தார். இவையாவும் யூதர்களுக்கு வெறுப்பூட்டின. ஆயினும் அவருடைய மிகப் பெரிய சிறப்பான கட்டடப்பணி கி.மு. 20-இல் தொடங்கிய எருசலேமிலுள்ள ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பியதாகும்.

முற்றிலும் முரண்பட்ட நிலையில் ஏரோதுவினுடைய குடும்பவாழ்வு குழப்பம் மிக்கதாய் இருந்தது. இது அவரது இயல்பான கொடூரம் மற்றும் நிலையின்மையை வெளிப்படுத்துகிறது. கசமோனிய இரண்டாம் இரிக்கானுடைய பேத்தியாகிய மரியம்னே மற்றும் தலைமைக்குரு சீமோனுடைய மகளாகிய மற்றொரு மரியம்னே உட்படப்பத்து மனைவியரை (பலரை அரசியல் காரணங்களுக்காக) அவர் மணம் புரிந்தார். ஏரோதுவின் சகோதரி சலோமி மற்றும் கசமோனிய மரியம்னேயின் தாயாகிய அலக்சாந்திரா ஆகியோரால் பெருமளவில் தூண்டப்பட்டு அரண்மனைச் சூழ்ச்சிகள் பெருகின. அவற்றின் விளைவாக இரண்டாம் இரிக்கானு, மரியம்னே அவளது சகோதரனும் தலைமைக் குருவுமான அரித்தோபுல் மற்றும் ஏரோதினுடைய மூன்று மகன்கள் ஆகியோர் உட்படப்பலபேர் கொலை செய்யப்பட்டனர்· தூக்கிலிடப்பட்டனர். படுகொலைகளால் சிக்கலுடையதாக்கப்பட்ட, ஏரோதுவினுடைய மாறுபடும் போக்கால் ஏரோது தனக்குப்பின் வரும் வாரிசைப்பற்றிய தனது தேர்வில் எண்ணற்ற மாறுதல்களைச் செய்யவேண்டியது அவசியமாயிற்று. விவாதத்திற்குட்பட்டதாயினும் ஏரோதுவினுடைய இறுதிஉயிலின் ஆறாவது வடிவானது அர்க்கெலாவை யூதேயாவிற்கும் சமாரியாவிற்கும் அரசனாக அறிவித்தது. தனது மகன் அந்திப்பாவைத் தூக்கிலிட்டு, (வெற்றியடையாநிலையில்) வெளியளவில் ஏரோதுவினுடைய மரணத்தின்போது தேசிய அளவில் துக்க காலத்தை உறுதிப்படுத்துவதற்கென எரிகோவிலுள்ள பந்தயச் சதுக்கத்தில் பல முன்னணி யூதர்களைக் கொலை புரியுமாறு தனது சகோதரி சலோமிக்கும் அவளது கணவர் அலக்சாகக்கும் கட்டளையிட்ட சிறிது காலத்திற்குப் பின்னர் கி.மு. 4-இல் ஏரோது நாடிகளின் இறுக்கத்தினால் மரணம் அடைந்தார்.

ஏரோதினுடைய ஆட்சிக்காலத்தின் இறுதியிலேயே இயேசு பிறந்தார் (மத் 2:1). இப்பிறப்பானது தனது அதிகாரத்துக்கு ஓர் அச்சுறுத்துதலாக ஏரோது நோக்கியதாக மத்தேயு குறிப்பிடுகிறார் (2:3). இயேசுவை அழிப்பதை மட்டும் நாடாமல் (2:13) பெத்லகேமிலுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்லுமாறு கட்டளையிட்டார் (2:16):இதைப்பற்றிய வேறு சான்றுகள் இல்லையாயினும் இச்செயல் ஏரோதுவினுடைய கொடூரத்தன்மைக்கு ஓர் அடையாளமாகும்.

2. ஏரோது அந்திப்பாஸ் (கி.மு. 21-கி.பி.39):- இவர் பெரிய ஏரோது, அவரது சமாரிய மனைவியாகிய மால்தேசு ஆகியோரின் மகன். இயேசுவின் காலத்தில் கலிலே

யாவிற்கும் பெரேயாவிற்கும் ஆளுநராக இருந்தார். ஏரோது என்னும் அரச சிறப்புப் பெயரைத் தனக்கு அளித்த பேரரசரைச் சிறப் பிப்பதற்கெனத் திபேரியாவை அவர் தலை நகராக நிறுவினார். புதிய ஏற்பாடு இப்பெய ராலேயே அவரைக் குறிக்கிறது. தன் சகோத ரன் இரண்டாம் ஏரோதின் (புதிய ஏற்பாட் டில் பிலிப்பு) மனைவி ஏரோதியாள்மீது இச்சை கொண்ட இவர், தனது முதல் மனை வியும் நபத்தேய அரசன் நான்காம் அரேத்தா வின் மகளுமானவளை விலக்கிவிட்டு, ஏரோதியாளைத் திருமணம் செய்து கொண் டார். இச்செயல் யூதரைப் புண்படுத்தியது. இதற்காக அந்திப்பாவை வெளிப்படையா கக் கண்டித்த திருமுழுக்கு யோவான் சிறை யிலடைக்கப்பட்டார் (மத் 14:3-5). அதன் பின்னர் ஏரோதியாளின் மகன் சலோமிக்குப் பரிசாக யோவானின் தலையை அளிக்கு மாறு ஏரோது சூழ்ச்சிக்குட்படுத்தப்பட்டார் (14;6-11)

இயேசுவைத் தொல்லைமிக்க திரு முழுக்கு யோவானின் வாரிசாக நோக்கிய அந்திப்பா (மத் 14:1-2) அவருக்கெதிராக ஒரு சூழ்ச்சியைக் கருதியிருக்கக்கூடும் (லூக் 13:31-33). பிற்காலத்தில் போந்தியு பிலாத்து, கலிலேயன் என்ற அளவில் தீர்ப்பிடுவதற் கென இயேசுவை அந்திப்பாவிடம் அனுப்பி னாலும், ஆளுநர் தண்டனைக்கென அவ ரைப் பிலாத்துவிடமே திருப்பியனுப்பி விடு கிறார் (23:7-12).

கி.பி. 36-இல் தனது மகளை அவமானப் படுத்தியதற்குப் பதிலடியாக அரேத்தா அரசன் எல்லைப்புறச் சிக்கலில் அந்திப்பாவின் படைகளைத் தோற்கடித்தான். திபேரியு உரோமைப் படைகளை அனுப்பி வைத்தா லும் பேரரசரின் மரணத்திற்குப் பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது. அவரைத் தொடர்ந்து வந்த கலிகுலா பெரிய ஏரோது வின் மற்றொரு மகனாகிய பிலிப்புவின் நிலப்பரப்பின்மீது (லூக் 3:1) ஏரோதியாவின் சகோதரன் முதலாம் அகிரிப்பாவை அரச னாக ஏற்படுத்தினான். பொறாமை கொண்ட ஏரோதியாள் உரோமையினின்று அதே போன்ற சலுகையை நாடுமாறு அந்திப்பா வைத் தூண்டினாள். ஆனால் அகிரிப்பாவோ ஏரோது பார்த்தியருடன் தொடர்பு கொண்டி ருப்பதாக அவன்மீது குற்றஞ்சுமத்தினார். இதற்காக ஏரோதியாளுடன் சேர்ந்து அந் திப்பா காலில் உள்ள இலியோனிற்கு நாடு கடத்தப்பட்டார்.

3. முதலாம் ஏரோது அகிரிப்பா (கி.மு. 10-கி.பி. 44):- அரித்தோபுலின் மகன், பெரிய ஏரோது மற்றும் கஸ்மோனிய மரி யம்னே ஆகியோரின் பேரன். ஏரோதியா ளின் சகோதரன் மற்றும் ஏரோது அந்திப்பா வினுடைய சகோதரனின் மகன். தனது தந் தையின் படுகொலைக்குப் பிறகு உரோ மைக்கு அனுப்பப்பட்ட அவன் பேரரசரின் அவையில் உயர்த்தப்பட்டு திபேரியுவின் மகன் துருசினுடைய நண்பனானான். இளைஞனாக வீண் விரையம் செய்து வாழ்ந்த இவர் வறுமையில் பாலஸ்தீனத் திற்கு ஓடிய பின்னர் தனது புரவலராகிய அந்திப்பாவின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டார். கி.பி. 36-இல் உரோமைக்குத் திரும்பியபின்னர் காயு கலிகுலாவின் நட் பைப் பெற்றாலும், பேரரசைப் பற்றிய விவேகமில்லாப் பழியுரையின் நிமித்தம் சிறைப்படுத்தப்பட்டார். திபேரியுவின் மர ணத்திற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவரது வாரிசாகிய கலிகுலா ஏரோது பிலிப் புவின் பகுதிமீது அரசனாக அகிரிப்பாவை அறிவித்தார். அந்திப்பாவினுடைய நாடு கடத்தலில் பங்கெடுத்து, கலிலேய மண்ட லம்மீது அகிரிப்பா செல்வாக்குப் பெற்றார். எருசலேம் ஆலயத்தில் அரச சிலையை நிறு வுவதைத் தவிர்க்குமாறு கலிகுலாவைத் தூண்டுவதற்கென உரோமைக்குச் சென்ற போது, பேரரசர் படுகொலை செய்யப்பட் டார். கிளாதியுவின் வாரிசுரிமையை உறுதிப் படுத்த மூப்பர் குழுவிடம் அவர் மன்றாடி னார். இதற்காகப் புதிய பேரரசர் அவருக்கு யூதேயாவையும் சமாரியாவையும் அளித் தார். கி.பி. 41-44-இல் அகிரிப்பா அரசனாக ஆண்ட நிலப்பரப்பானது பெரிய ஏரோதுவி னுடைய நிலப்பரப்பிற்கு இணையாக இருந் தது.

மேலீடான அளவிலாவது, யூதச்சட்டத்திற்கு மரியாதை அளித்ததன் மூலமும், கிறிஸ்தவ திருச்சபையைத் துன்புறுத்தியதன் மூலமாகவும், முதலாம் அகிரிப்பா யூதமக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார். செபதேயுவின் மகன் யக்கோபுவைக் கொலை செய்து (அ.ப.12:2; ஏரோது), பேதுருவைச் சிறைப்படுத்தினார் (12:3-5). அவரது குடிமக்கள் அவரைக் கடவுளாக மகிமைப்படுத்திய சிறிது காலத்திற்குள்ளாகவே கி.பி. 44-இல் அவர் திடீரென்று இறந்தார் (12:20-23).

4. இரண்டாம் அகிரிப்பா (கி.பி. 27-100):- முதலாம் அகிரிப்பாவின் மகன். உரோமை அரசவையில் வளர்ந்த அவர், தனது தந்தையினுடைய மரணத்தின்போது பதினேழு வயதுடையவராக இருந்ததால், அவருடைய ஆட்சிப்பகுதிகளை ஆள்வதற்கு மிகச் சிறியவர் என்றுகருதப்பட்டு, அப்பகுதிகள் ஆளுநர் பொறுப்பின்கீழ் விடப்பட்டன. கி.பி. 50-இல் அவர் அவருடைய மாமா ஏரோதிற்குப்பின் காலகியின் (இன்றைய லெபனோன்) அரசரானார். இப்பகுதிக்கு ஈடாக 53-இல் பேரரசர் கிளாதியு எரோது பிலிப்பினுடைய அகன்ற நிலப்பரப்பையும் (பத்தானேயா, திராகோனிது, கலானித்து) இலிசானியாவால் ஆளப்பட்டு வந்த அபிலெனே பகுதியையும் மாற்றிக்கொடுத்தார். 54-இல் தான் அரியணை ஏறிய சிறிது காலத்திற்குள் திபேரியு, தரிகெயா, யூலியா மற்றும் அபிலா உள்ளிட்ட பல நகரங்களை நீரோ இந்த அகிரிப்பாவுக்கு அளித்தார்.

தனது சகோதரி பெரினிக்காவுடன் தகாப் புணர்ச்சி உறவிற்காக யூதரிடையே அகிரிப்பாவுக்கு அவ்வளவு மரியாதையில்லை. குருத்துவத்தின்மீது ஆதிக்கத்தைச் செயல்படுத்தினார். இச்சமய அதிகாரத்தினால் பவுலின் காப்புரையைக் கேட்குமாறு, இவரைப் பெஸ்து கேட்டுக்கொண்டார் (அ.ப.25:13-26:32; அகிரிப்பா). எருசலேமிலுள்ள கசமோனியருடைய அரண்மனையை அகிரிப்பா விரிவுபடுத்தினார். செசரியாவில் கட்டடத் திட்டங்களையும் மேற்கொண்டார். 66-இல் முதல் யூதப்புரட்சி வெடித்தபோது, அவர் வெஸ்பாசியனுடைய பக்கம் சேர்ந்து கொண்டார். 70-இல் எருசலேம் மீதான வெற்றிக்குப்பின்னர் தீத்துவுடன் சேர்ந்து உரோமைக்குச் சென்று அங்கே குற்றவியல் நடுவராக நியமிக்கப்பட்டார். ஆட்சிபுரிந்த ஏரோதுகளில் கடைசியானவராகிய இவர் 100-ஆம் ஆண்டில் இறந்தார்.

ஏர் (ER - விழிப்புள்ள காவலாளி)

1. யூதாவுக்கும் கானானிய சூவா அல்லது பது-சூவா-வுக்கும் (காண்க. 1 நாள் 2:3) பிறந்த மூத்த புதல்வன். இவர் தாமாருக்கு மணமுடிக்கப்பட்டிருந்தும் குழந்தைப்பேறு இல்லாமல் இறந்துவிட்டார். ஏனென்றால் ஆண்டவர் முன்னிலையில் கொடியவனாய் இருந்ததால் ஆண்டவர் அவனைச் சாகடித்தார் (ஆதி 38:3-7; 1 நாள் 2:3).

2. ஏர் இலேக்காவின் தந்தையும் செலாகின் புதல்வர்களில் ஒருவரும் யூதாவின் பேரனுமாவார் (1 நாள் 4:21).

3. லூக்கா தரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் எல்மாதாமின் தந்தையாவார் (லூக் 3:28).

ஏலம் (HELEM - சுகம், நலம்)

ஆசேர் குலத்திலே தோன்றிய ஒரு குடும்பம் (1 நாள் 7:35). 7:32-இல் இவர் கோத்தாம் என்றழைக்கப்படுகிறார்.

ஏலா (ELAH - ஒருவகையான பெரிய மரம், ஓக் அல்லது தெரெபின்த் மரத்தைக் குறிக்கலாம்).

1. ஏசாவின் வழித்தோன்றல். ஏதோம் நாட்டுத் தலைவனாக இருக்கலாம் (ஆதி 36:41; 1 நாள் 1:52). இக்குறிப்பு ஓர் ஆளைக் குறித்துக்காட்டுகிறது என்பதைக் காட்டிலும் ஓர் இடத்தையே அதிகமாகக் குறித்துக்காட்டுகிறது. அக்காபா வளைகுடாவிலுள்ள எலாத்து என்ற ஏதோமியத் துறைமுகமாக இருக்கலாம்.

2. இஸ்ராயேல் நாட்டு அரசர் (கி.மு. 886-885) பாசா என்பவரின் மகன் (1 அர

*16:6.8.13-14). யூதாவின் அரசர் ஆசாவோடு சமகாலத்தவர். இரு ஆண்டுகளுக்குக் குறைவாகவே ஆட்சி செய்தார். தன் தந்தை பாசாவின் ப்ாவ வழிகளைப் பின்பற்றினார் (16:2-4.10-11). குடிபோதையில் இருந்தபோது, அரச தேர்ப்படைத் தலைவனான சிமிரி என்பவனால் கொல்லப்பட்டார் (16:9-10). இதன் விளைவாக ஓமிரியின் அரச மரபு ஆட்சிக்கு வந்தது.*

*3. வட அரசனான இஸ்ராயேல் நாட்டின் கடைசி அரசனான, ஓசியாவின் தந்தை (2 அர 15:30; 17:1; 18:1.9).*

*4. காலேபின் இரண்டாம் மகனும் எப்புன்னேயின் பேரனும், கெனாசின் தந்தையுமாவர் (1 நாள் 4:15). ஆளைக் குறிப்பதைவிட ஓர் இடத்தையே அதிகமாகக் குறித்துக் காட்டுகின்றது.*

*5. அடிமைத் தனத்துக்குப் பின்னால் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குடும்பத்தைச் சேர்ந்த ஊசியின் மகன் (1 நாள் 9:8; இதற்கு இணையான நெக 11-இல் பெயர் காணப்படவில்லை).*

**ஏலாத்து** *(ELATH - வளர்த்தியான மரங்கள் அடர்ந்த சோலை)*

*ஏலாத்து என்பது அக்காபா என்ற வளைகுடாவின் முனையில் அமைந்திருக்கும் ஒரு நகரமாகும். அராபியாவிலிருந்து கப்பல் ஏறும் இடமாகும். இந்நகர் எசியோன்-கெபேருக்கு அடுத்து இருப்பதாகப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏலாத்து என்ற நகர் இருந்த இடத்தைத் தோண்டி ஆய்வு செய்த நெல்சன் க்ளுயெக் என்பவர் இவ்விடத்தில் இரு நகரங்கள் இருந்ததற்கான எந்தவிதமான தடயங்களையும் காணவில்லை. எனவே எசியோன்-கெபேர் என்ற பகுதி பிற்காலத்தில் ஏலாத்து என்ற பெயரில் அழைக்கப்பட்டது என்று முடிவு செய்தார். ஏலாத்து என்ற பெயர் ஏதோமியர் குலத்தில் தோன்றியதாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஆதி 36:41-இல் ஏலா என்பவர் ஏதோமின் தலைவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இஸ்ராயேலர் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது, இங்குதான் வடக்கு நோக்கித் திரும்பி ஏதோமின்மேல் படையெடுத்தனர் (உப 2:8). உப்புப் பள்ளத்தாக்கில் ஏதோமியரை வென்றபோது தாவீது இந்நகரைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது (2 சாமு 8:13-14). பிற்காலத்தில் சாலமோன் இத்துறைமுகத்தில் ஒரு கப்பற்படையைக் கட்டினார் (1 அர 9:26-27; 2 நாள் 8:17-18).*

*யோசபாத்தின் மகன் யோராமின் பதவிக் காலத்தில் நடந்த கிளர்ச்சியில் எசியோன்-கெபேர்-ஏலாத் என்ற நகரத்தை ஏதோமியர் திரும்பப் பெற்றனர் (2 அர 8:20-22). பின் அறுபது ஆண்டுகள் கழித்து யூதாவின் அரசன் ஊசியா இந்நகரை மீண்டும் கைப்பற்றி மீண்டும் கட்டியெழுப்பினான் (14:22). வலிமையில்லாத ஆகாசு காலம் வரை இது யூதாவின் ஆட்சிக்குள் இருந்தது. ஆகாசின் காலத்தில் இந்நகர் மீண்டும் ஏதோமியர் உடைமையாயிற்று (16:6; கி.மு. 735). இதற்குப்பின் இந்நகர் ஏதோமியர் கைகளில் இருந்தபொழுதும் அதனுடைய முக்கியத்துவம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் நபத்தேயர்கள் இந்நகரைக் கைப்பற்றி, சற்றுக் கிழக்கே அயிலா என்ற புதிய நகரைக் கட்டியெழுப்பினர். அராபிய நகரமாகிய தற்காலத்தைய அக்காபா இவ்விடத்திற்கு அருகில் கட்டப்பட்டது.*

**ஏலா பள்ளத்தாக்கு** *(VALLEY OF ELAH - தெரேபின்த் பள்ளத்தாக்கு)*

*இப்பள்ளத்தாக்கின் மேற்பகுதியில் அசக்காவுக்கு அருகில் தங்கியிருந்த பெலிஸ்தியர்களோடு போரிடுமுன், சவுலும் இஸ்ராயேல் மக்களும் இப்பள்ளத்தாக்கின் கிழக்குப்பகுதியில் ஒருமலைமேல் தங்கியிருந்தனர். இப்போரில் தாவீது பெலிஸ்திய வீரன் கோலியாத்தைக் கொன்று இஸ்ராயேலுக்கு வெற்றி அளித்தார் (1 சாமு 17:2-3.19; 21:9). இது யூதாவின் மலைப்பகுதிகளுக்கு வாயிலாக அமைந்திருந்தது. இந்த வாயில் அசக்கா (தேல் எஸ்-சக்கரியே) கோட்டையால் பாது*

காக்கப்பட்டது. இதற்கும் சோக்கோவுக்கும் இடையில் பெலிஸ்தியர் பாளையம் அமைத்திருந்தனர். இது செப்பேலாவிலுள்ள செழிப்பான பள்ளத்தாக்காகும். இது பெத்திலகேமுக்கு மேற்கு தென்மேற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள வாடி எஸ்-சான்த்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

**ஏலாம் (ELAM** - மேட்டு நிலம், இறைவன் நாடு) - ஆள்

1. சேமின் முதல் மகன் (ஆதி 10:22; 1 நாள் 1:17). எலாமிதியரின் குலப் பெயர் குல மூதாதையர்.

2. எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சாசாக்கின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:24-25; எஸ் 8:7).

3. தாவீது ஆட்சிக் காலத்து வாயிற் காவலராகவும் இருந்த லேவியர் (1 நாள் 26:3).

4. செருபாபேலோடு நாடு திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:7; நெக 7:12). எஸ் 2:31 மற்றொரு ஏலாமின் குடும்பம் பற்றிப் பேசுகின்றது. ஆனால் இரண்டு குடும்பமும் 1254 என்ற ஒரே எண்ணிக்கையில் இருப்பதால் இரண்டு குடும்பமும் ஒரே குடும்பமாக இருக்கலாம். இக்குடும்பத்தைச் சேர்ந்த அத்தாலியாவின் மகன் எசாயாவும் எஸ்ராவுடன் திரும்பி வந்தார் (எஸ் 8:7). இக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றொருவர் செக்கனியா புறவினத்தாரைத் திருமணம் செய்தவர்களுக்கு எதிராகச் செயல்பட வேண்டும் என்று எஸ்ராவை தூண்டினார் (10:2). இக்குடும்பத்தின் 6 பேர் புறவின மனைவியரை ஒதுக்கிவிட்டனர் (10:26). எஸ்ராவுடன் செய்த உடன்படிக்கையில் ஏலாமும் கையொப்பமிட்டதாகச் சொல்லப்படுகிறது (நெக 10:14).

5. நாடுகடத்தப்பட்டதிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவர். இதில் அநேகர் இருந்தனர் (எஸ் 2:31; நெக 7:34). இதில் 1254 பேர் இருந்தாலும் இவர் ''மற்றொரு ஏலாம்'' என்று குறிக்கப்படுகிறார். 4-இல் வருபவரிடமிருந்து வேறுபடுத்தப்படுகிறார்.



6. புதிப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குடும்பத் தலைவர் (நெக 10:14).

7. நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலை அர்ப்பணம் செய்ததில் பங்கு பெற்ற ஒரு குரு (நெக 12:42).

**ஏலாம் (ELAM)** - நாடு

குசிஸ்தான் சமவெளியையும், அருகிலுள்ள சக்ரோ மலைகளையும் உள்ளடக்கிய தென்மேற்கு ஈரானிலுள்ள ஒரு நாடு. தனது வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் இந்நாடானது வடகிழக்கிலும், வடமேற்கிலும் உள்ள பகுதியையும் கொண்டிருந்தது. ஏலாம் நாடு, இயற்கையான வியாபார வழிகள், மற்றும் வளமான மரம் மற்றும் உலோக மூலப்பொருட்களால் வணிகமுறையில் வலிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் பல் வகைப்பட்ட திணை நிலமானது அரசியல் ஒன்றிப்பினை இடையூறுக்குள்ளாக்குகிறது. இவ்வாறு இது நகர அரசுகளைக் கொண்ட தளர்வான கூட்டமைப்பாகப் பொதுவாகச் செயல்பட்டது.

1. வரலாறு:-

ஏலாமின் நகரமயமாக்கலானது கி.மு. நான்காயிரம் ஆண்டின் பிற்பகுதியிலேயே நிகழ்ந்திருக்கிறது. மூன்றாயிரம் ஆண்டின் பெரும்பகுதி முழுவதும் கீழ் மெசபொத்தாமியாவுடனான கலாச்சாரத் தொடர்புகள் உயர்ந்த நிலையில் இருந்தன. இக்காலமானது ஏலாமியருக்கும் அவர்களது சுமேரிய அயலாருக்குமிடையே அடிக்கடி சண்டைகளைக் கண்டது. 2700-ஆம் ஆண்டு சுமேரிய அரசராகிய கீசு ஏலாம் மீது படையெடுத்துக் கொள்ளையடித்ததாகக்கூறப்படுகிறது. 2500-இல் தொடக்ககாலப் பாபிலோனிய அரசின் மேல் எலாம் படை எடுத்தது. கீசின் என்னாதும் என்பவர் ஏலாமை அடக்கி 2400-இல் சூசாவிலுள்ள அதனுடைய தலைநகரை

அழித்தார். அக்காதின் சார்கோனுக்குக் கீழ்ப் படுவதற்கு முன்னர் (2300) ஏலாம் தன்னுடைய சுதந்தரத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது. அவருக்குப் பின்வந்த நரம்-சின்-அவான் என்னும் ஏலாமிய அரசுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தினாலும், இருவருமே 2100-இல் ஏற்பட்ட குசியன் படையெடுப்பில் வீழ்ச்சியுற்றனர். ஏலாமானது இலகாசு மற்றும் ஊரினுடைய மூன்றாம் அரசுக்கு உட்பட்டதாக இருந்தது.

ஊர் அரசினுடைய வீழ்ச்சியுடன் சிமாசு அரசைத் தலைமையாகக் கொண்ட ஏலாமியக் கூட்டணியானது 2030-இல் ஊரை அழித்து அதனுடைய அரசன் இப்பி-சினை அன்சானிற்கு நாடு கடத்தியது. அதனுடைய இசிபி-இர்ராவினால் ஊரிலிருந்து வெகு விரைவிலேயே வெளியேற்றப்பட்டாலும் ஏலாமியக் கூட்டமைப்பின் ஆளுநர்கள் லார்சாவின் அரியணையில் ஏலாமிய ஆட்சியாளர்களை அமர்த்துமளவிற்குப் (1800-இல் வரத்-சின், ரிம்-சின்) பாபிலோனிய அரசியலில் தலையிடுவதற்குப் போதிய வல்லமையைக் கொண்டிருந்தனர். ஏலாமிய தூதர்கள் பற்றிய சான்றுகள் சீரியாவிலும் பாலஸ்தீனத்திலும் காணப்படுகின்றன. அவர்களது கூலிப்படையினர் மெசபொத்தாமியப் படைகளில் சாதாரணமாக இருந்தனர். கெதர்லா கோமேருடைய செயல்கள் (ஆதி 14:1-17) இக்காலத்திற்குரியவையாக இருக்கலாம். ஏலாமிய விரிவை வலிமைமிக்க கமுராபி (1792-1750) கட்டுப்படுத்தினார். காசிதிய முற்றுகையாளர்களுக்கு 1595-இல் வீழ்ச்சியுறும் வரை, ஏலாமானது பாபிலோனிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. 1330-இல் காசிதிய இரண்டாம் குரிகல்சு முற்றுகையிடப்பட்டபோது, பாபிலோனிய மாகாணமாக ஒன்று சேர்க்கப்பட்ட வரையில், ஏலாமானது வெளிப்படையாகவே எண்ணற்ற நகர அரசுகளாகக் கலைக்கப்பட்டிருந்தாலும், அக்கால இருண்டகாலத்தைப்பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. உம்பன்-நுமேனாவின்கீழ் (1285-1266) ஏலாமானது ஒன்றுபட்ட நாடாகப் புதுப்பிக்கப்பட்டது. சுத்ருக்-நகுந்தே பாபிலோனியாவை முற்றுகையிட்டுக் கமுராபியின் சட்டநெறிகள் பொறிக்கப்பட்ட கல்தூணைக் கைப்பற்றினார். திகிரிசு நதிக்குக் கிழக்கிலுள்ள மெசபொத்தாமியாவின் பெரும்பகுதி முழுவதும் ஏலாமிய ஆதிக்கத்தை சிலாக்-இன்சுசிநக் பரப்பினார். 1130-இல் நெபுக்கதுனேசார் சூசாவைத் தரைமட்டமாக்கித் தனது பாபிலோனிய அரசுடன் ஏலாமைச் சேர்த்தவுடன், அதன் சுதந்தரமானது திடீரென முடிவுக்கு வந்தது. ஏலாமினுடைய அடுத்த மூன்று நூற்றாண்டுகள் தெளிவற்ற நிலையில் உள்ளன.

இதற்குப் பின் வந்த ஏலாமிய வரலாறு, மேதியர், பாரசீகர் மற்றும் பல்வேறு சுதந்தர இனத்தவரின் தாக்குதலால் பாதிக்கப்பட்டது. அசீரியாவிற்கு எதிராகப் பாபிலோனியாவுடன் இணைந்ததன் மூலம், நாடானது பெருமைப்படத்தக்க அளவில் அரசியல் முக்கியத்துவம் பெற்றது. இரண்டாம் மெரோதாக்கு பலதானுக்கான இராணுவ உதவி, பாபிலோனியருக்குப் புகலிடம், மற்றும் பிறவடிவிலான பகைச்செயல்கள் போன்றவற்றிற்கு இரண்டாம் சார்கோன், சனகெரிபு மற்றும் அசூர்பானிப்பால் ஆகியோர் பதிலடிகொடுத்தனர். அசூர்பானிப்பால் இறுதியாக சூசாவை அழித்து ஏலாமின் கடைசி அரசனாகிய உம்பன்கல்தாசை (640) வெளியே விரட்டினார். பல முக்கிய குடிமக்கள் அசீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டுப் பின்பு சமாரியாவில் குடியமர்த்தப்பட்டனர் (எஸ் 4:9).

அன்சானைச் சூழ்ந்துள்ள பகுதியானது, 680-இல் பாரசீகர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது. 612-இல் நினிவேயின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ஏலாமின் மற்றப் பகுதிகள் மேதியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன (586-இல் பாபிலோன்மீதான மேதிய-ஏலாமிய தாக்குதல்; ஏச 22:2). இது பிற்பாடு இரண்டாம் சைரசிற்குக் கீழ்ப்பட்ட பாரசீகத்திற்கு மாற்றப்பட்டு (550-ஆம் ஆண்டு; எரே 49:35-37), பாரசீகப் பேரரசின் மூன்றாவது மாகாணமாக ஆயிற்று. தனது ஆட்சியின் தொடக்கத்திலேயே ஒரு கிளர்ச்சியை அடக்கியதன்

மூலம் முதலாம் தாரியஸ் சூசாவில் தனது உறைவிடத்தை ஏற்படுத்தினார் (எஸ்த 1:1-2). கிரேக்கக் காலங்களில் இப்பகுதியானது எலிமாயிசின் ஓரளவு தன்னாட்சி உரிமையுடைய பார்த்திய அரசாக இருந்து வந்தது (1 மக் 6:1).

2. மரபுரிமை:-

தொடக்கக் காலம் முதல் ஏலாமானது கீழ்மெசபொத்தாமியாவின் நகரங்களுடன் கலாச்சார முறையில் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. இது சேமினுடைய சந்ததியினருடன் கொண்ட இணைப்பை விளக்கலாம் (ஆதி 10:22). அநேகமாய்ப் பண்டைய சுமேரிய எழுத்து முறையினால் தூண்டப்பட்ட நிலையில், ஏலாமின் ஓவிய வடிவ எழுத்து முறையானது, அக்காதின் சார்கோனின் ஆட்சியைத் தொடர்ந்து, அக்காதிய ஆப்பு வடிவ எழுத்து முறையால் மாற்றியமைக்கப்பட்டது. ஏலாமைச் சேர்ந்த இலக்கியங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உயர்வான கலை நுணுக்கச் செயல்பாடுகள், பதின்மூன்றாம் நூற்றாண்டுக் காலத்திய வெண்கல உருவங்களில் கிடைத்துள்ளன. அகழ்வாராய்ச்சிகள் குறிப்பிட்ட அளவிலேயே இருப்பினும் ஏலாமிய கட்டடக் கலையானது, குறிப்பாக அதனுடைய கோயில்கள் மற்றும் கோயில் கோபுரங்கள், மெசபொத்தாமியாவினுடையதற்கு ஒத்ததாகத் தோன்றுகின்றன

சமய இதிகாசங்கள் அல்லது சடங்கு வாசகங்கள் கிடைக்காவிடினும், எழுத்துப் பொறிப்புகளும், நீள் உருளை முத்திரைகளும் ஏலாமிய சமயம் பற்றிய அடிப்படைச் செய்திகளை அளிக்கின்றன. உம்பன் தலைமைக் கடவுளாக இருந்தாலும் அவருடைய துணைவராகிய கிரிரிசா (சூசாவில் பினிக்கீர் என அழைக்கப்படும்) தெய்வங்களின் குழுவினருக்குத் தலைவராக இருந்தார். சூரியக் கடவுளாகிய நகுந்தே மற்றும் எண்ணற்ற உள்நாட்டுப்புரவலர்கள் ஆகியோர் மற்ற முக்கியக் கடவுளர் ஆவர். இவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் இன்சூசிநக் (சூசாவின் ஆண்டவர்) ஆவார். அரச கல்லறைகளிலிருந்த அடக்கஞ்சார்ந்த கொடைகள் மறுவாழ்வு பற்றிய நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றன.

மெசபொத்தாமியாவில் முதன்மையான அதிகாரப் போராட்டங்களில் சிக்கிய நிலையில், இஸ்ராயேலின் வரலாற்றில் ஏலாமியர் முக்கிய பங்கு எதையும் வகிக்கவில்லை. இஸ்ராயேல் மக்களில் ஒரு பகுதியினர் ஏலாமுக்கு நாடு கடத்தப்பட்டனர் (ஏச 11:11). புதிய ஏற்பாடு காலங்களிலும் யூதக் குடியேற்றங்கள் அங்குத் தொடர்ந்தன (அ.ப. 2:9). திறமைமிக்க தங்களுடைய வில்லாளர்களுக்காகப் புகழ்பெற்றது ஏலாம் (ஏச 22:6; எரே 25:25). மற்ற நாடுகளைக் கொடூரமாக இரக்கமற்ற முறையில் ஏலாமியர் நடத்தினர் (எச 32:24-25). ஏலாமினுடைய நற்பேறுகள் மற்றும் தண்டனை, மீட்சி பற்றிய இறைவனுடைய இறைத் திட்டத்திற்கு உட்பட்டவையாகக் காட்டப்படுகின்றன (எரே 49:38-39).

ஏலி (Eli - யாவே உயர்த்தப்பட்டார்)

சீலோவிலுள்ள, காலத்தால் முந்திய, இஸ்ராயேலின் புனித இடத்தின் பெரிய குருவும், இறுதியான சிறிய நடுவர்களில் ஒருவருமாவார். சிறிய நடுவராக 40 ஆண்டுகள் பணிபுரிந்தார் (1 சாமு 4:18; கி.மு. 1119-1079). இது இவரைச் சிம்சனோடு சமகாலத்தவராக்கலாம். பழைய ஏற்பாட்டில் ஏலியின் மூதாதையர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் இவர் ஆரோனின் கடைசிமகன் இத்தாமாரின் வழித்தோன்றலாக இருக்கலாம் (காண்க. 1 நாள் 24:3). மற்றொரு பாரம்பரியம் இவரை எலயாசரோடு தொடர்புபடுத்துகிறது (காண்க. யாத் 6:23,25). மூலத்தில் ஏலியின் குடும்பம் சீலோவிலுள்ள தொன்மையான குருத்துவத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

இந்த முதியகுரு ஆலயக் கதவு நிலைக்கு அருகில் அமர்ந்து, ஒரு மகவை வேண்டி அன்னா செய்த மன்றாட்டுக்குச் சாட்சியாக முதலில் தோன்றுகிறார் (1 சாமு 1:9-18). பிறகு குழந்தையான சாமுவேல் ஆண்டவ

ரது பணியில் அர்ப்பணிக்கப்பட, ஏலியிடம் கொண்டுவரப்படுகிறார் (1:24-28; காண்க.2: 19-20). தனது புதல்வர்களான கொபினியும் பினகாசும் குருத்துவத் தொழிலைத் தவறாசுப் பயன்படுத்துதலைக் கட்டுப்படுத்த முடியாதவராய் (2:12-17.22-25; 4:1) ஏலி தனது குடும்பத்தின் பயங்கர, கொடிய முடிவைப் பற்றி ஒரு பெயர் தெரியாத இறைவாக்கினர் வழியாக எச்சரிக்கப்படுகிறார் (2:27-36). பாதிக் குருடான குரு, தனது முடிவை உறுதிப்படுத்தும் இறைவெளிப்பாட்டைப் பெற சாமுவேலுக்கு உதவிசெய்கிறார் (3:1-18). இறைவாக்கின் நிறைவேறுதலாக, ஏலியின் இரு புதல்வர்களும் எபனேசரில் பெலிஸ்தியர் இஸ்ராயேலரைத் தோற்கடித்த போது மரித்தனர் (9:11.17). ஆனால் அதே போரில் உடன்படிக்கைப் பேழை கைப்பற்றப்பட்டது பற்றிய செய்திதான், இந்த ஆற்றலற்ற, ஆனால் பக்திமிக்க, குருவின் மரணத்திற்குக் காரணமாயிற்று (4:18; காண். 4:13).

1 சாமு 2:31-33-இல் முன்னறிவிக்கப்பட்ட, ஏலியின் வழித்தோன்றல்களின் முடிவு நோபில் ஏலியின் குடும்பக் குருக்களைச் சவுல் கொன்று அழித்ததில் நிறைவேறுகிறது (22:19). இந்தப் படுகொலையிலிருந்து தப்பிய ஒரே ஆளான அபியத்தார் (22:20) பிற்காலத்தில் சாதோக்கோடுசேர்ந்து தாவீதின் பெரிய குருவானார் (2 சாமு 20:15). இவர் அதோனியாவுக்கு அளித்த ஆதரவுக்காக, சாலமோன் இவரைப் பதவி நீக்கம் செய்தார் (1 அர 2:27; காண்க. 1:7).

ஏலி (HELI)

இயேசுவின் தலைமுறை பற்றிய லூக்காவின் பட்டியலில் வருபவர். யோசேப்புவின் தந்தை (லூக் 3:23).

**ஏலி, ஏலி, லாம சபக்தானி** (ELI, ELI, LAMA SABACHTHANI - என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்?)

இது எபிரேய வடிவத்தின் கிரேக்க அசை ஒலி பெயர்ப்பாகும். சிலுவையில் இயேசு எழுப்பிய கூக்குரலாகும். இயேசு இறக்கு முன் சிலுவையில் கூறிய நான்காம் வாக்காகும் (மத் 27:46). மாற் 15:34-இல் வரும் எலோயி அரமேயிக் வடிவத்தைப் பிரதிபலிக்கிறது. வாசகங்களில் பலத்த வேறுபாடுகள் உண்டு. மூன்று மணிநேர இருட்டிற்குப் பிறகு, மீட்பர் ''என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று கூறினார். இதில் சங்கீத ஆசிரியர் ஆழ்ந்த துன்பத்தை எதிரொலிக்கிறார் (சங் 22:1). விளக்கவுரையாளர்கள் சிலர், பரிகாரத்தை வற்புறுத்தி இறைவனுக்கு மனித பாவத்திற்காகச் செலுத்த வேண்டிய விலைகண்டு அச்சமுற்று, இயேசு இவ்வார்த்தைகளைக் கூறியதாக விளக்குவர். வேறுசிலர், அவரது சொற்கள் முழுச் சங்கீதத்தையும் நினைவுபடுத்துகிறது என்றும், இச்சங்கீதம் இறைவனைப் போற்றுவதோடு முடிகிறது என்றும், இது இயேசு தம் தந்தையிடம் கொண்ட விசுவாசத்தை இழந்துவிடவில்லை என்றும் விளக்குவர்.

''என் கடவுளே'' என்பதற்குரிய ஏலி என்ற எபிரேயச் சொல்லுக்கும் எலியாவுக்கும் உள்ள ஒற்றுமை, இயேசு எலியாவை அழைப்பதாகக் கூட்டத்தில் சிலர் கூறத்தூண்டியது. எலியா என்ற எபிரேய இறைவாக்கினர் இறக்காமல், விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றும், அவர் ஆபத்திலும் துன்பத்திலும் இருப்பவர்களைப் பாதுகாப்பதாகவும் நம்பப்பட்டது.

இயேசு இயற்கையாகவே எபிரேய மொழியில் பேசியிருப்பாரா? அராமேய மொழியில் பேசியிருப்பாரா? எது அவருடைய சொந்தத் தாய்மொழி? என்ற கேள்விகளுக்குத் திட்டவட்டமான பதில்கள் இல்லை. அதுபற்றிப் பலவெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. விவிலியத்தின் வாசகங்கள் ''அராமேயம் அல்லது ஓர் எபிரேய-அரமேயிக் கலப்பு மொழி'' வடிவத்திற்கு ஆதரவு அளிக்கின்றன.

ஏலிம் (ELIM - பெரிய, வலிமையான மரம்)

இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்த பிறகு தங்கிய நான்காவது இடம். மேலும் நல்ல குடிதண்ணீரை அவர்கள் கண்ட முதல்

இடம். பன்னிரண்டு நீரூற்றுக்களும் எழுபது பனை மரங்களும் இருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது (யாத் 15:27; 16:1; எண் 33:9-10).

காய்கறித் தோட்டங்களும், பனை மரங்களும் அதிகமாக நீரும் காணப்படுகிற வாடி கருண்தேல் என்ற இடம்தான் ஏலிம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சூயசிலிருந்து 100 கி.மீ. தொலைவில் இருக்கிறது இந்த இடம். சீனாய் மலையிலிருந்து எகிப்து செல்லும் பயணிகள் பொதுவாக இங்குத் தங்கிவிட்டுச் செல்வது வழக்கம். சீனாய் மலையை அரேபியாவில் குறிக்கும் ஆராய்ச்சியாளர் சிலர் அக்காபா வளைகுடாவில் ஏலாத்துக்கு அருகில் ஏலிம் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஏலிம் என்ற பெயருக்குக் 'கடவுள்கள்' என்று தவறாகப் பொருள் கொடுத்து, அது பனைமரங்களுக்கும் நீரூற்றுக்களுக்கும் அருகில் சிலை வழிபாடு செய்யக்கூடிய இடத்தைக் குறிக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

**ஏலோத்து** (ELOTH)

ஏலாத்தின் மறுபெயர். காண்க. ஏலாத்து.

**ஏலோன்** (ELON - ஓக் மரம் அல்லது தெரெபின்த் மரம்)

1. ஏசாவை மணந்த பாசமத்து (ஆதி 26:34) அல்லது ஆதா (36:2)வின் தந்தை. ஒரு கித்தியர்.

2. செபுலோனின் இரண்டாம் மகன் (ஆதி 46:14), ஏலோனியர்களில் குலமுதுபெரும் தந்தை (எண் 26:26).

3. பத்து ஆண்டுகள் இஸ்ராயேலுக்குச் சிறிய நடுவராக விளங்கியவர் செபுலோன் இனத்தைச் சேர்ந்தவர் (நீதி 12:11). இது அய்யலோன் என்ற ஊர்ப் பெயரின் காரண மான விளக்கமாக இருக்கலாம் (12:12). இரண்டு பெயர்களும் எபிரேயத்தில் ஒரே எழுத்துக்களில் எழுதப்படுகின்றன. அய்யலோனில் அவர் தங்கியிருந்து இறைவாக்கு அருளிய ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டுவதாகத் தெரிகிறது (4:5; 6:11; 9:6).

4. தாண் பகுதியில் அய்யலோனுக்கும் திமினாவுக்கும் இடையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:43). இது பெயிட்-மக்சீர் அல்லது கிர்பெத் வாடி அலீன் மேற்கில், தெயிர் அபானுக்கும் அயின் செம்சுக்கும் இடையிலுள்ள அலெயினாக இருக்கலாம். அறிஞர் சிலர் இதுவும் ஏலோன்-பேத்து-கனானும் ஒன்றே என்று கருதுகின்றனர் (1 அர 4:9).

**ஏலோனியர்** (ELONITE)

ஏலோன்-(2)இன் சந்ததியினர் (எண் 26:26).

**ஏலோன்-பேத்து-கானான்** (ELON-BETH-HANAN - ஏலோன் வீட்டு ஓக்)

சாலமோனின் அரசியலமைப்பில் இரண்டாவது மாவட்டமான தாணில் உள்ள ஒரு கிராமம். இது அரச மாளிகைக்கு உணவுப் பொருட்கள் அனுப்ப வேண்டும் (1 அர 4:9). இது ஏலோன் 'யோசு 19:43) ஆக இருக்கலாம். பின்பகுதி பேத்து-கனான் இந்தக் கிராமத்தை அருகிலுள்ள அய்யலோனிலிருந்து வேறுபடுத்துகிறது. ஒருவேளை பெயிட் மக்சீர் அல்லது தேல் கோப்பாவுக்கு மேற்கிலும் யாலோ (அய்யலோன்)க்குத் தென்மேற்கிலும் உள்ள இக்கால அலேயினாக இருக்கலாம்.

**ஏல்.** (EL - இறைவன்)

செமித்திய மொழியில் 'கடவுளைக்' குறிக்கும் அடிப்படைச் சொல்லாகும். ஆற்றல் அல்லது ஈடு இணையற்ற என்ற அடிப்படையின் பொருளில் இவ்வார்த்தை எழுதப்பட்டிருக்கலாம். பழங்காலத்தில் உள்ள மூலங்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட எச்சக்தியையும் குறிக்கலாம். ஆகவே உயர்ந்த கடவுளான 'ஏல்' கடவுளுக்குச் சாற்றிக் கூறப்பட்டது. இக்கடவுளே எல்லாக் கடவுள்களுக்கும் தந்தையான கடவுள்; விண்ணகத்தில் உள்ள கடவுள்; காற்றுக்கும் புயலுக்கும் உரிய கடவுள்.

**ஏல் எலியோன்** (EL-ELYON - மிக உன்னதரான இறைவன்)

இறைவனின் பெயர்களில் ஒன்று. மிக உன்னதமானவர், மிக உயர்த்தப்பட்டவர்

என்று பொருள்படும். இஸ்ராயேலர்களுக்கு முன் எருசலேமில் வழிபடப்பட்ட கானானிய படைப்புக் கடவுளிடமிருந்து இப்பெயர் வந்ததாகக் கருதப்படும் (காண். ஆதி 14:18.20). இது யாவேக்குரிய இடுபெயராக (அல்லது அடைமொழியாக) மாற்றிப் பயன்படுத்தப்பட்டது (14:22; சங் 7:17; 91:9). காலத்தால் முந்திய விவிலியப் பாடல்களிலும் (உம். எண் 24:16; உப 32:8) பிற்காலத்தைச் சேர்ந்த பழைமைப்படுத்தும் பாடல்களிலும் (உம். சங் 78:35; தானி 7:18.22.25.27) காணப்படுகிறது.

**ஏல்-எலோகே-இஸ்ராயேல்** (EL-ELOHE-I-SRAEL)

இறைவன் இஸ்ராயேலின் இறைவன் (ஆதி 33:20) அல்லது இஸ்ராயேலின் இறைவன் எல்லாம் வல்லவர் என்று பொருள்படும்.

கானானுக்குப் பாதுகாப்போடு திரும்பிய பின் யாக்கோபு செக்கேம் அருகில் கட்டியெழுப்பிய பீடத்தின் பெயராகும் (ஆதி 33:20). பெனியேலில் இறைவனை நேரில் கண்ட அனுபவத்தோடு (32:24-32) இப்பீடத்தை யாக்கோபு தொடர்புபடுத்தினார். அவருக்கு இஸ்ராயேல் என்ற புதுப்பெயர் அளித்த இறைவனின் வல்லமையில் கொண்ட விசுவாசத்தை எடுத்துரைக்கக் கட்டப்பட்ட பீடமாகும்.

**ஏல் சதாய்** (EL-SHADDAI - எல்லாம் வல்ல இறைவன்)

இப்பெயர் எல்லாம் வல்ல இறைவன் என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இப்பெயருக்கு (அண்ட) மலையின் இறைவன் என்றும் பொருள் கொடுக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். குருக்கள் பாரம்பரியப்படி ''ஏல்சதாய்'' குல தெய்வமாக வணங்கப்பட்டு வந்தது. ஏல் என்ற வார்த்தை பொதுவாக இறைவனைக் குறிக்கிறது. அது இங்கு ஒரு தனிப்பட்ட செயலின் இறைவனோடு இணைக்கப்பட்டுச் சொல்லப்படுகிறது. ஆபிரகாமின் இறைவன் (ஆதி 31:53) என்று மரபு சொல்லுகிறது. ஈசாக்கின் உறவினன் (ஆதி 31:42) சேனைகளின் ஆண்டவர், இஸ்ராயேலின் வல்லவர் (ஏச 1:24) என்றும் சொல்லப்படுகிறது.

இப்பெயரைத் ''தந்தையர்களின் இறைவன்'' என்று குலமுதியவர்கள் புரிந்து கொண்டனர். இது பிற்காலத்தில் ''யாவே'' என்ற பெயரோடு ஒன்றாக்கப்பட்டது (யாத். 6:2-3). ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொண்டபோது, ஆபிரகாமுக்கும் (ஆதி 17:1) பிற்பாடு பெத்தேலில் யாக்கோபுக்கும் (35:11; 48:3) இப்பெயரில்தான் தம்மை இறைவன் வெளிப்படுத்தினார். ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் ஆசீர்களிலும் இப்பெயர் வருகிறது (28:3; 43:14). தொடக்க கால எபிரேயப் பாடல்களிலும் (ஆதி 49:25; எண் 24:4.16; காண்க. சங் 68:14) இது காணப்படுகிறது. இவை 11-ஆம் நூற்றாண்டு நடுவர் காலத்தைச் சேர்ந்தவை (காண்க. ரூத் 1:20-21). அரசாட்சிக் காலத்தில் இப்பெயர் அவ்வளவு அதிகமாகப் பயன்படவில்லை. பின் 6-ஆம் நூற்றாண்டில்தான் சிறிது பயன்படுகிறது (உ.ம். ஏச 13:6; யோவே 1:15).

இறைவனைக் குல தெய்வமாகவும், குடும்பத் தலைவராகவுமே அவர்கள் பார்த்தனர். இறைவன் தமது சக்தியை இயற்கையில் வெளிப்படுத்தாமல், குடும்பத்தைக் காப்பதற்கும், சமூக வாழ்க்கையை உயர்த்துவதற்கும், புனித வாழ்வுக்கு வழிநடத்துவதற்குமே அதை வெளிப்படுத்தினார். இதைத்தான் யாத்திராகமத்தில் காண்கிறோம்.

குலதெய்வ வழிபாட்டிற்குப்பின்பு சதாய் என்பதற்கு 'யாவே' என்று பொருள் கொண்டனர் (ரூத் 1:20-21; சங் 68:14; எச 1:24; 10:5). இச்சொல் பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம், யாத்திராகமத்தைத் தவிர 35 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் 29 முறை யோபு புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்பும் புதிய ஏற்பாட்டில் கூறுவதுபோல, சதாய் என்பது கடவுள், எல்லாம் வல்லவர், மாட்சிமையில் உள்ளவர் எனப் பொருள்படும்.

சதாய் என்ற பெயர் அம்மிசதாய் (சதாய் என் உறவினர், எண் 1:12). சூரிசதாய் (சதாய் என் பாறை, 1:6) என்ற ஆட்களின் பெயரில் இறைக்கூறாகப் பயன்படுகிறது.

**ஏல்சபாது (ELZABAD - இறைவன் கொடுத்தார்)**

1. சிக்கிலாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட காது இனத்தைச் சேர்ந்த வீரர்களில் ஒன்பதாவது வருபவர். ஆற்றல் மிக்க, திறமைமிக்க பேரர் வீரர். ஈட்டியும் கேடயமும் தாங்குபவர். மான் போல ஓடக் கூடியவர் (1 நாள் 12:8.12).

2. தாவீது காலத்தில் கோராகைச் சேர்ந்த வாயிற் காவலர். செமாயாவின் புதல்வர் (1 நாள் 26:7).

**ஏல் சபான் (ELZAPHAN)**

எலிசாபான் என்ற பெயரின் சுருக்கம். ஊசியேலின் புதல்வர்களில் ஒருவர் (யாத் 6:22).

காண்க. எலிசாபான்-(1)

**ஏல்தெக்கே (ELTEKEH - சந்திக்கும் இடம், இறையச்சம்)**

எக்கரோனுக்கும் கிபத்தோனுக்கும் இடையில் (யோசு 19:44) கெகாத்திய லேவியர்களுக்கு (21:23) ஒதுக்கப்பட்ட தாணைச் சேர்ந்த நகரமாகும். பின்பு இது சிம்சோனின் மனைவியின் ஊரான திமினாவோடு பெலிஸ்தியரால் கைப்பற்றப்பட்டது. கி.மு. 701-இல் எகிப்திய-எத்தியோப்பியப் படைக்கும் சனகெரிபின் படைக்கும் எல்தெக்கே என்ற இடத்தில் நடந்த கடும் போரில், சனகெரிபு வெற்றி அடைந்து, எல்தெக்கேயையும் திமினாவையும் முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். எக்கரோனில் கிளர்ச்சி செய்தவர்களைக் கொன்றார். யூதாவின் மீது படையெடுத்தார்.

கிர்பெத்து ஏல்-முக்கென்னாவை எக்கரோன் என்று அடையாளம் காட்டினால் எக்கரோனுக்கு வடக்கிலும் திமினாவுக்கு மேற்கிலும் இருந்த ஏல்தெக்கேயை அடையாளம் காட்டுவது உறுதியாக இல்லை. தேல் எஸ்-சாலேப் இவ்விடமாக இருந்திருக்கலாம்.

**ஏல்தெக்கோன் (ELTEKON - இறைவனால் நிறுவப்பட்டது)**

யூதா நாட்டிலுள்ள பேத்துசூர் மாவட்டத்தில் ஒரு மலைப்பகுதியில் ஏல்தெக்கோன் என்ற ஊர் அமைந்துள்ளது (யோசு 15:59). பெத்திலகேமிற்கு மேற்கில் 6.5 கி.மீ. தொலைவிலும் கவுசானுக்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள கிர்பெத் எத்-தேயிர் என்ற ஊரோடு இது அடையாளம் காட்டப்படுகிறது.

**ஏல்தோலாது (ELTOLAD - இறைவனே நீர் பெற்றெடுத்தீர், இறைவனின் உறவினன்)**

யூதாவிற்குத் தெற்கில் சிமியோனுக்குத் திருவுளச் சீட்டின் மூலம் கிடைத்த ஒரு நகரம் (யோசு 15:30; 19:4) 1 நாள் 4:29-இல் இது தோலாது என்றழைக்கப்படுகிறது. இந் நகரம் யூதாவின் தென் ப்குதியில் ஏசேம், கோர்மா ஆகிய நகரங்களுக்கு அருகில் உள்ளது. இது பெண்கள் பிள்ளைகள் வேண்டிக் கூடுகின்ற ஒரு திருத்தலமாகும் என்று பெயர் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அந்த இடம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. பேயேர்-செபாவுக்குத் தென்கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எர்கா சக்ரவாக இருக்கலாம்.

காண்க: தோலாது.

**ஏல்-பாரான் (EL-PARAN பாரான் மரம்)**

பாரான் சமவெளி. இந்தச் சமவெளியில் தான் பதினான்காம் நூற்றாண்டில் கெதர்லாகோமேர் என்பவர் தன்னைச் சேர்ந்த அரசர்களுடன் வந்து சேயிர் என்ற மலைகளில் வாழ்ந்து வந்த கோரியர்களை முறியடித்தார். அவரும் அவர் கூட்டணியும் பாலஸ்தீனத்தில் அடைந்த தெற்குக்கோடி எல்லையாகும். இந்தப் படையெடுப்பில்தான் லோத்து கைதியாக்கப்பட்டார்.

பாரான் பாலைவனத்தின் ஓரத்தில் அக்காப வளைகுடா முனைக்கு அருகில் அதற்கு இடம் குறிக்க வேண்டும். இது ஏலாத்து-ஏசியோன் கெபேரின் முந்திய காலப் பெயராக இருக்கலாம்.

**ஏல்பாலேத்து** (ELPELET)

எலிப்பெலத்தின் மற்றொரு பெயர். எருசலேமில், பெயர் தெரியாத தாய்க்குப் பிறந்த தாவீதின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 14:5). 1 நாள் 3:6-இல் இவருக்கு எலிப்பெலத்து என்று மற்றொரு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எழுத்தர்களின் பிழையாக இருக்கக்கூடும் என்று அறிஞர் சிலர் கருதினாலும், இப்பெயர் 2 சாமு 5:14-16-இல் வரும் மரபுமுறைக் கொடியை விரிவாக்க வேண்டுமென்றே எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக இருக்கலாம்.

காண்க. எலிப்பெலத்து.

**ஏல்பால்** (ELPAAL - இறைவன் செய்தார் அல்லது படைத்தார்)

பென்யாமின் இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவர் (1 நாள் 8:11-12.18) கூசிமின் வழியாகச் சாரயிமின் மகனாவார்.

**ஏல்-பெத்தேல்** (EL-BETHEL பெத்தேலின் இறைவன்)

யாக்கோபு பெத்தேலில் கட்டியெழுப்பிய பீடத்திற்கு அளித்த பெயராகும் (ஆதி 35:7). ஒருவேளை ''பெத்தேலின் இறைவன்'' என்று பொருள்படலாம். அதாவது அவர் தம் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பியோடிய போது அவருக்குத் தோன்றிய யாவே ஆவார் (28:10-22). ஒருவேளை இது இறைவனது பெயராக இருக்கலாம்.

**ஏல்பெரீத்து** (EL-BERITH - உடன்படிக்கையின் இறைவன்)

செக்கேமில் வழிபடப்பட்ட ஒரு கானானியத் தெய்வம் (நீத 9:46).

**ஏவா** (EVE உயிர் அளிக்கும்)

முதல் பெண். ஆதாமின் மனைவி. மனுக்குலத்தின் தாயாகக் கருதப்படுவாள்.

1. சொல் விளக்கம்:- இப்பெயரின் தோற்றம் சர்ச்சைக்குரியது. ஆதி 3:20-இச்சொல்லை 'வாழ்தல்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்ததாகத் தொடர்புபடுத்துகிறது. இதன்படி, ஏவா காயின், ஆபேல், சேத்து என்ற மூன்று பேரைப் பெற்றெடுத்தாள். ஆகவே வாழ்வோரின் தாய் என்றழைக்கப்பட்டாள். ராபிகள் பாரம்பரியம் இப்பெயரை அரமேயிக் 'பாம்பு' என்ற சொல்லோடு தொடர்புபடுத்துகிறது. இக்கருத்து இன்றைய நவீன காலத்தில் அறிவியல் சொல்லிலக்கணமாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொது ஆதரவு பெறவில்லை.

2. ஆதி ஆகமம் விவரிப்பதிலிருந்து:- ஆதி 3:20-இல் வரும் குறிப்பு அதனுடைய இப்பொழுதைய இடத்தில் சரியான பொருத்தம் இல்லை. கதையின் திருத்தப்பட்ட பல விதமான மூலப்பாடத்திலிருந்து இந்த வாக்கியம் தோன்றுகிறது என்பது பொதுவாகக் கருதப்படுகிறது. 'பெண்' என்ற பொதுப் பெயரான படிவத்துக்குப் பொதுவாக இது ஒத்ததாகும். 2:23-இல் வரும் 'மனிதன்' என்ற சொல்லோடு சொல்லாடல் தொடர்புடையது.

ஆதி 1:27-இன்படி மனிதகுலம் ஆண், பெண், என்ற 'பால்' பிரிவில் படைக்கப்பட்டது. ஆதி 2:18-இன்படி ஆண்தான் முதலில் படைக்கப்பட்டான். வெறும் மிருகங்களின் துணையோடு வாழ்ந்திருந்த மனிதனின் தனிமையை உணர்ந்த இறைவன் அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தார். அந்தப் பெண் பாம்பால் ஏமாற்றப்பட்டு விலக்கப்பட்ட கனியைத் தின்று, தன் கணவனையும் உண்ண வைத்தாள். அதற்கு அவள் பெற்ற தண்டனை துன்பப்பட்டுப் பிள்ளை பெறுவதும், மனிதனுக்கு அடங்கி நடப்பதுமாகும். ஏவா, காயின், ஆபேல், சேத்து முதலாக மற்றக் குழந்தைகளையும் வரிசையாகப் பெற்றெடுத்தாள் (ஆதி 4:1-2. 25-26; 5:1-5). இங்கு எடுத்தாளப்பட்டிருக்கும் காரண காரிய இயல் பண்புக் கூறுகளால் இக்கருப்பொருளின் தொன்மைக்காலம் சுட்

டப்படுகிறது. பெண் விலா எலும்பிலிருந்து வந்தவள் (2:21). மனிதனும் அவன் மனைவியும் ஒருடலாக (2:24-25), பிள்ளைப்பிறப்பின்போது ஏற்படும் வேதனை சாபமாகும் (3:16 தொ). இவை காரண காரியமாகப் பின்னப்பட்டிருக்கின்றன.

3. புதிய ஏற்பாடு:- ஏவா புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை குறிப்பிடப்படுகிறாள். 1 தீமோ 2:11-15-இன் புதிய ஏற்பாட்டு ஆசிரியர் கோவிலில் பெண்கள் அடக்கத்தோடும் அமைதியோடும் இருக்க வேண்டும் என்று வாதிடுகின்றார். பெண்ணின் பலவீன நிலையைச் சரியென்று காட்டவும், படைப்பின் ஒழுங்கை நிலைநிறுத்தவும் ஆதி ஆகமக் கதையைக் குறிப்பாகக் காட்டுகின்றார். ராபிகளின் விளக்கவுரைகளைத்தான் பெரும்பாலும் இவ்விரிவுரை சார்ந்திருக்கிறது. புனித பவுல் ஒருவன் எவ்வளவு சுலபமாகத் தவறான வழிக்குச் செல்லலாம் என்பதைப்படம் பிடித்துக் காட்ட 2 கொரி 11:3-இல் ஏவாளைப் பயன்படுத்துகிறார். இதில் பவுல், தவறான கோட்பாடுகள், போலி மீட்பர்கள் ஆகியவற்றிற்கு எதிராகக் கொரிந்தியர்களை எச்சரிக்கிறார்.

இந்த இருபகுதிகளும் ஏவாளுக்குப் பாதகமாக அமைந்தாலும், உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகம் ஓரளவு சமன்செய்கிறது. அதில் ஆதாம் மனுக்குலத்தில் பாவத்தையும் இறப்பையும் புகுத்தியதாக ஐயமின்றிக் குற்றம் சாட்டப்படுகிறார் (உரோ 5:12-19). ஆதி 2:24-ஐ எடுத்துக் கூறும் எபே 5:31 கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவை, வீழ்ச்சிக்குமுன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உள்ள உறவோடு ஒப்பிடுவதாக அறிஞர் சிலர் கருதுகின்றனர். திருச்சபையின் தந்தையரும் கத்தோலிக்கத் திருச்சபையும் மரியாளை இரண்டாம் ஏவா என்று சித்தரிக்கின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

## ஏவி (EVI விருப்பம்)

மோசேயின் தலைமையில் இஸ்ராயேல் மக்களால் போரில் கொல்லப்பட்ட ஐந்து மிதியா நாட்டு அரசர்களில் ஒருவர் (எண் 31:8; யோசு 13:21). மிதியா நாட்டவரின் கவர்ச்சியில் மயங்கிப் பாவத்தில் விழுந்து இறைவனுக்குத் துரோகம் செய்ததின் பின்னணியில் இப்போர் உண்டானது என்று எண் 31-ஆம் அதிகாரம் கூறுகிறது. ஆனால் யோசு 13-ஆம் அதிகாரத்தின்படி சீகோனின் அரசர்கள் என்று அழைக்கப்பட்ட ஐந்து மிதியா நாட்டுத் தலைவர்களும் எமோரிய அரசன் சீகோனை மோசே தோற்கடித்த அதே போரில் தோல்வியைத் தழுவினார்கள்.

## ஏழு, ஏழாவது, எழுபது (SEVEN, SEVENTH, SEVENTY)

பல்வேறு செமித்திய மக்களிடையிலும் மற்ற மக்களினத்தாரிலும் ஏழு என்ற எண்ணானது புனிதமானதாகக் கருதப்பட்டது.

எகிப்தில் நான்கு என்ற எண் புனித எண்ணாகக் கருதப்பட்டது. அதை அடுத்து ஏழு என்ற எண் படிப்படியாக விருப்பத்துக்குரிய புனித எண்ணாயிற்று. இறந்த மனிதனைக் கீழுலகில் ஏழு பசுக்களும் ஒரு காளையும் சந்தித்தன. ஏழு தெய்வங்களும் ஏழு பாம்புகளும் அவனுக்குச் செவிமடுத்தன. ஐசிசு கழிமுகத் துவாரத்திற்கு ஏழு தேள்களுடன் இணைந்து சென்றாள். புதிதாய்ப் பிறந்தவரின் விதியானது ஏழு பேர்களால் கூறப்பட்டது. மாந்திரீகத்திலும், மருத்துவத்திலும் ஏழானது ஆற்றல் மிக்க எண்ணாக இருந்தது. மந்திர உச்சரிப்பில் ஏழு தெய்வங்கள் அழைக்கப்படுகின்றன. புனித எண்ணெய்களும், தைலங்களும் ஏழாகும். மாத்திரை அளவின் சரியான எண் ஏழு. சில குறிப்பிட்ட குணமாக்குதல்களில் ஏழு கற்கள் உபயோகிக்கப்பட்டன. ஏழின் மடங்குகளாகிய பதினான்கு, இருபத்தியொன்று, நாற்பத்து இரண்டு, எழுபது, எழுபத்தியேழு முதலியனவும் முக்கியமானவையாகும்.

மெசபொத்தாமியாவில் ஏழானது ஆதி காலத்தினின்றே புனிதமானதாக இருந்தாலும் அதனுடைய புனித இயல்பின் தோற்றமானது பிரச்சனைக்குரியதாகும். நிலாவின் நிலைகளைக் கவனிப்பதானது மாதத்தினுடைய வாரமுறைப் பிரிவுகளுக்கு வழிகோ

வியது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆயினும் சந்திரனை அடிப்படையாகக் கொண்ட மாதம் முழு எண்ணிக்கையான நாட்களைக் கொண்டிருப்பதில்லை. ஆகவே மாதமும் ஏழு நாட்கள் கொண்ட வாரக் கணிப்பும் ஒத்துப் போகவில்லை. ஆப்பு வடிவ ஏடுகளில் ஏழு நாள் காலம் பற்றிய தொன்மையான குறிப்பு கி.மு. இருபத்து மூன்றாம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது. இது மாதத்தின் பிரிவுகளைப் பற்றியதாக இல்லாமல், ஏழு நாள் சமயக் கொண்டாட்டங்களையும் அதனுடைய நடைமுறைகளையும் குறிப்பிடுவதாக உள்ளது. மெசபொத்தாமியாவில் ஏழு நாள் வாரமானது சடங்குகளில் தோன்றியதாகவும் சமூக வாழ்வில் காலத்தைக் கணக்கிடுதலின் அடிப்படையாக இருந்த சந்திர மாதத்தைச் சார்ந்திருக்கவில்லை என்றும் தெரிகிறது. ஏழுநாள் வாரமானது சுமேரிய-அக்காதிய இறையியல் மற்றும் அண்டவியலிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏழு கோள்களும் ஐயமின்றி எண்ணினுடைய புனிதத்துவத்தின் ஒரு கூறாகும். இப்பிரச்சனை சிக்கல் மிக்கதாகும். ஆகவே அதை விவாதிக்காது, மெசபொத்தாமிய சமயத்தில் ஏழு முக்கிய அங்கம் வகித்தது என்று கூறுவதோடு நிறுத்திக்கொள்வது மேல்.

பழைய ஏற்பாட்டிலும் ஏழு முக்கிய அங்கம் வகிக்கிறது. அதன் முக்கிய கூறுகளை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டுவோம். அதனுடைய அடையாள உபயோகமானது பரந்த அளவினதாய் இருப்பதன் காரணமாக, சாதாரணக் குறிப்பிட்ட எண்ணாக எப்போது அது எண்ணப்பட்டது என்பதைக் கூறுவது மிகக் கடினமாகும். மெசபொத்தாமியாவில் இருந்ததைப் போன்று, சில முக்கிய விழாக்களுக்கும், சடங்குமுறைமைகளுக்கும் ஏழு நாட்களே காலமாக இருந்தன. பாஸ்காவும், கூடாரத் திருவிழாவும் ஏழு நாள் கொண்டாடப்பட்டன. புத்தாண்டு, பரிகார நாள், கூடாரத் திருவிழா முதலியன ஏழாம் மாதத்திலேயே நடைபெறுகின்றன. வாரங்களின் விழாவும் (உப 16:9) ஜூபிலியும் (லேவி 25:8-10) ஏழின் தற்பெருக்கத்தையே சார்ந்திருந்தன. சடங்குகளின் ஒவ்வொரு தன்மையிலும் ஏழு பரவியுள்ளது. ஏழு நாட்கள் என்பது குருக்களைத் திருநிலைப்படுத்துவதற்கும் பீடங்களை அபிடேகம் செய்வதற்குமான காலமாகும் (யாத் 29:35-37). பெரும்பாலும் பலிக்கான பொருட்கள் ஏழு (ஆதி 7:2; 8:20; 21:28-30; எண் 28:11; 1 நாள் 15:26; யோபு 42:8); பீடங்களின் எண்ணிக்கை ஏழு (எண் 23:1-2.4.14.29; 2 நாள் 29:21); பலியின் இரத்தம் ஏழு முறை தெளிக்கப்பட்டது (லேவி 4:6.17; 14:7; 16:14; எண் 19:4); அபிடேகம் செய்யும் எண்ணெயும் அவ்வாறே (லேவி 8:11).

ஆலயத்தினுடைய உடைமைகளும் பெரும்பாலும் ஏழுகளிலேயே இருந்தன (1 அர 7:17; எச 40;22, 26; பழ 9:1). உடன்படிக்கைப் பேழையைத் தவிர்த்து ஏழு கிளைகளுடைய விளக்குத்தண்டானது (யாத் 25:31-37; 1 அர 7:49; செக் 3:2.11) ஆலயத்தில் மிகப் புனிதமான பொருளாக இருந்தது. உறுதிமொழியானது ஏழுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முறிந்துபோன உடன்படிக்கைக்கு ஏழு உயிர்ப்பலிகள் பரிகாரமாக அளிக்கப்பட்டன (2 சாமு 21:1.9). சிம்சோனுடைய மயிர்க்கற்றைகள் நாசரேய வாக்குடன் தொடர்பு கொண்டவையாக இருக்கலாம் (நீதி 16:13.19). ஏழானது பழிவாங்குதலிலும் தண்டனையிலும் முக்கியமானதொன்றாக இருந்தது (ஆதி 4:24; யாத் 7:25; லேவி 26:18; பழ 6:31; தானி 4:16.23.25). வானதூதருடனான தொடர்பில் ஏழானது முக்கிய இடத்தை வகிக்கிறது (எச 9:2; செக் 4:10; திருவெளி 15:1.6-8). தீய ஆவிகளும் நோய்களும் கூட ஏழடுக்காகவே வந்தன (லூக் 8:2; 11:26). ஏழுகளின் தொகுப்பினால் யோசுவா எரிகோவைத் தரைமட்டமாக்குவது (யோசு 6:4.8.13) யோர்தானில் ஏழு குளியல்களால் நாகமான் குணமாவது (2 அர 5:10) ஆகியவற்றில் காணப்படுவதுபோல் ஏழானது மந்திரத்திலும் ஆற்றல் மிக்கதாய் இருந்தது. ஆயினும் சிம்சோனைக் கட்டுப்படுத்த ஏழு புதிய உலராத நரம்புக் கயிறுகளால் முடியவில்லை (நீதி 16:7). அசல் எண்ணாகிய ஏழு

முக்கியமானதாக இருந்தாலும் இல்லாவிடினும் உயிர்ப்பிக்கப்பட்ட குழந்தையின் தும்மல்கள் (2 அர 4:25) நல்ல சகுனமாகும். மக்களினுடைய பொருத்தமான எண்ணானது ஏழாகும் (ரூத் 4:15; யோபு 1:2; 2 மக் 7; அ.ப. 19:14). ஏழு நாள் மற்றும் ஏழாண்டுக் காலங்கள் எண்ணற்ற மாறுபட்ட சூழ்நிலைகளில் குறிப்பிடப்படுகின்றன. பஞ்சமும் வளமையும் ஏழாண்டு வரிசையில் வந்தன (ஆதி 41; 2 அர 8:1). காத்திருப்பதற்கான பொதுவான காலமானது ஏழு நாட்களாகும் (ஆதி 7:3-4.10; 8:10.12; 1 சாமு 10:8; 11:3; எச 3:16-17). திருமண விழாக்கள் ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டன (நீதி 14:12.17; தோபி 11:19). முக்கிய சமயத் தீட்டுகள் ஏழு நாட்களுக்கு நீடித்தன (லேவி 15:19.28; எண் 19:11.14.16). உப 7:1-இல் ஏழு என்பது ''பல'' என்பதற்கு ஒத்த சொல்லாக உபயோகிக்கப்படுகிறது. பெரும்பாலான நேரங்களில் குறிப்பிடத்தக்க ஒரு பெரிய எண்ணிற்கான முழுமையான எண்ணாக இது தோன்றுகிறது (ஆதி 31:23; யோபு 1:2; சங் 12:6; பழ 26:16.25; ஏச 4:1; 11:15; 30:26; எரே 15:9; மத் 12:45; லூக் 11:26; அ.ப. 20:6; 21:4; 28:14). ஏசாவின் முன்னிலையில் யாக்கோபு ஏழு முறை தரைமட்டும் குனிந்து வணங்கியதைக் குறிப்பிட்ட எண்ணாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை (ஆதி 33:3). அமர்ணா கடிதங்களிலும், ஓர் உகாரித்து கடிதத்திலும் தஞ்சம் கேட்போர் ஏழு முறை மற்றும் ஏழுமுறை தாங்கள் தரைமட்டும் தலைகுனிந்து வணங்குதலைப் பற்றிக் கூறுகின்றனர். இஸ்ராயேலின் பகைவர்கள் தப்பியோடுகின்ற ''ஏழு வழிகளானது'' (உப 28:7,25) பண்டைய சுமேரிய ஏழு திசை முறையை மீண்டும் சுட்டுவதாக இருக்கலாம். இது பின்னர் நான்கு திசை முறையால் மேற்கொள்ளப்பட்டது.

ஏழாண்டு துன்ப காலமானது இறைத் தலையீட்டினால் இடையிலேயே தடுக்கப்படுகின்றது (தானி 7:25; 9:27; 12:7; லூக் 4:25 யாக் 5:17; திருவெளி 11:2). ஏழின் மடங்குகள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. நல்லவற்றைக் குறிக்க ஏழானது இரட்டிக்கப்படுகிறது (ஆதி 46:22; லேவி 12:5; எண் 29:13; 1 அர 8:65; தோபி 8:19). ஆபிரகாமிற்கும் கிறிஸ்துவிற்கும் இடையிலான காலத்தை மூன்று பதினான்கு தலைமுறைகளாகப் பிரிப்பது உண்மையிலேயே செயற்கையானதென்பது தெளிவு (மத் 1:17). எழுபது என்பது பெரும்பாலும் ஒரு தோராயமான எண்ணிக்கையாகும் (ஆதி 46:27; யாத் 1:5; 15:27; 24:19; எண் 11:16.24; 2 சாமு 24:15; 2 அர 10:1; சங் 89:10; ஏச 23:15; எரே 25:11; 29:10; எச 8:11; தானி 9:2; 24:4; செக் 1:12; 7:5; லூக் 10:1). எகிப்தியர்கள் இஸ்ராயேலுக்காக எழுபது நாட்கள் துக்கம் கடைப்பிடித்தனர் (ஆதி 50:3). உகாரித்திய புராணக்கதையிலுள்ள பாகாலுக்கான இழவு வினைக்கேற்ற காணிக்கைகள் எழுபது விலங்குகளாகும். உகாரித்துத் தெய்வங்கள் அனைவரும் மொத்தமாக ''அசேராவின் எழுபது பிள்ளைகள்'' என்று குறிப்பிடப்படுகின்றனர். இலாமேக்கினுடைய எழுபத்தேழு மடங்கு பழி வாங்குதலும் (ஆதி 4:24), இயேசு கற்பித்த எழுபது மடங்கு ஏழு மன்னிப்பும் (மத் 18:22) எல்லையற்ற எண்ணை உருவகமாகக் குறிக்கின்றன. பாகாலுக்கு என்றுமே முழந்தாளிடாத ஏழாயிரம் பேர் (1 அர 19:18; உரோ 11:14) எண்ணற்ற சமயப்பகைவர்களின் ஒரு சிறு பகுதியையே குறிப்பிடுகிறது. திருவெளி 11:12-இல் எண்ணிக்கையானது பத்திலொரு பங்கையே வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. மோவாபிய கல்லில், மேசாவின் தெய்வங்கட்குப் பலியிடப்பட்ட நேபோவின் மொத்த இஸ்ராயேல் மக்கள் தொகையும் குறிப்பிடப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள எண்ணற்ற வெளிப்படையான ஏழன்தொகுதிகளைத் தவிர்த்து, ஏழாக எண்ணக்கூடிய பல மறைவான செயல்களும் உள்ளன. உ.ம். மனிதனிலான ஆண்டவருடைய ஆவியின் ஏழு குணங்கள் (ஏச 11:2); சாலமோனுடைய செபத்தின் ஏழு வேண்டுதல்கள் (1 அர 8:29-53); ஆண்டவருடைய செபத்தின் ஏழு வேண்டுதல்கள் (மத் 7:9-13); மத் 13-இன் ஏழு உவமைகள்; மத் 23-இன் ஏழு சாபங்கள்; சிலுவையில் இயேசுவின்

ஏழு வாக்குகள் உயிர்ப்பிற்குப் பின்னர் ஏழு சீடர்களுக்குத் தோன்றுதல் (யோவா 21:2); ஏழு வேதனைகளும் (உரோ 8:25) கொடைகளும் (உரோ 12:6-8); விண்ணக ஞானத்தின் ஏழு குணங்கள் (யாக் 3:17); விசுவாசத்தை நிறைவாக்குகின்ற ஏழு நற்பண்புகள் (2 பேதுரு 1:5-8). திருவெளிப்பாட்டு நூலானது ஏழன் தொகுதிகளை வெளிப்படையாகவும் (திருவெளி 4:20; 3:1;4:5;5:1-6; 8:2; 10:3-4; 12:3; 13:1; 15:1; 17:7) மறைமுகமாகவும் (5:12; 6:15; 7:12; 19:18; 21:18) குறிப்பிடுகிறது.

விவிலியத்திலுள்ள ஏழினுடைய எண்ணற்ற அடையாள உபயோகங்கள் பொதுவாக எதைக் கொண்டுள்ளன என்று கூறுவது மிகக் கடினமாகும். ஏழானது நிறைவினை, முழுமையினை, முடிவினைக் குறிப்பிடுகிறது என்பதே எளிதான, எல்லாவற்றையும் உள்ளடக்கும் பொது விளக்கமாகும்.

### ஏழு சபைகளின் தூதர்கள் (ANGELS OF THE SEVEN CHURCHES)

விளக்கவுரையாளர்கள் இதற்குப் பல்வேறான விளக்கங்களைத் தருகிறார்கள். அவை பின்வருமாறு:-

1. ஆசிய நாட்டுத் திருச்சபைகள் யோவானிடம் அனுப்பிய தூதர்கள் (திருவெளி 1:4).

2. ஆசிய நாட்டுத் திருச்சபைகளின் ஆயர்கள்

3. அத்திருச்சபைகளின் காவல்தூதர்கள் (உப 32:8; தானி 10:13; 12:1; சீரா 17:17; மத் 18:10; அ.ப. 12:15)

4. அவர்களின் விண்ணுலகத் தோற்றங்கள் (பாரசீக மதத்தினர் கருத்துப் போன்றது).

5. திருச்சபைகளின் ஞான மையக் குழுவினர் அல்லது ஒழுக்க முதிர்ச்சிபெற்ற முக்கிய அங்கத்தினர்கள் (1 கொரி 2:6)

6. ஆண்டவர் தம் வலக்கரத்தில் ஏந்திக் கொள்ளப்பட்டிருப்பவர்கள் (திருவெளி 1:16). திருவெளி 1-2-இல் செய்தி பெறுபவர்கள் கிறிஸ்துவின் உண்மையான திருச்சபை ஆவர். இவர்களை விளக்குத் தண்டுகளிலிருந்தும், தளத்திருச்சபை முழுக்குழுவிலிருந்தும் வேறுபடுத்த வேண்டும்.

### ஏழு சபைகள் (SEVEN CHURCHES)

ஏழு சபைகள் ஆசியாவிலிருக்கும் உரோமை மாவட்டத்திலுள்ள நகரங்களில் உள்ள திருச்சபைகளாகும். இவை ஒன்று சேர்ந்து திருவெளி 1:4.11.20-இலும் தனித்தனியாக 2-3-ஆம் அதிகாரங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இந் நகரங்கள் அஞ்சல் நீதித்துறை மாவட்டங்களுக்குத் தலைநகராக இருந்ததால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று ஒரு கருத்து உண்டு. இது கூடார மனையிலுள்ள ஏழு கிளை விளக்குத் தண்டைக் குறிப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது (திருவெளி 1:1 1,20; யாத் 25:31 தொ).

### ஏழு வார்த்தைகள் (SEVEN WORDS FROM THE CRORS)

இந்த ஏழு வார்த்தைகளும் சிலுவையில் அறையுண்டிருந்த நேரத்தில் இயேசுவால் சொல்லப்பட்ட வார்த்தைகளாகத் திருமுறை நற்செய்தியாளர்களால் கொடுக்கப்படுபவையாகும். ஏழு என்ற எண்ணிக்கை தற்செயலாக உருவானது. எந்த நற்செய்தியாளரும் மூன்று வார்த்தைகளுக்கு மேல் கொடுக்கவில்லை. ஏழு வார்த்தைகளின் பாரம்பரிய வரிசை பின்வருமாறு:-

1. தந்தையே இவர்களை மன்னிக்கவும்; இவர் செய்வது இன்னதென்பது அறியாது செய்கிறார்கள் (லூக் 23:34). இவ்வார்த்தை பல கையெழுத்துப் படிகளில் காணப்படவில்லை. இக்கூற்றை இயேசுவைச் சிலுவையில் அறையமுன்னோ, தரையில் கிடத்தி அவரது கைகளை ஆணியால் அடிக்கும் போதோ சொல்லியிருக்கலாம் (அ.ப. 7:60)

2. ''உண்மையாக உனக்குச் சொல்கிறேன். இன்று நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்'' (லூக் 23:43). இவ்வார்த்தை ''அரசரி

மையோடு வரும்போது என்னை நினைவு கூறும்'' என்று சொன்ன நல்ல கள்வனைப் பார்த்து இயேசு சொன்னது. மத்தேயுவும் மாற்கும் இரு கள்வரை அறைந்தனர் என்று மட்டும் எழுதியிருக்கிறார்கள்.

சிலர் ''இயேசு இவ்வார்த்தையைச் சொன்னதன்மூலம் உடலை விட்டுப் பிரிந்த ஆவியின் அழியாத் தன்மையைப் போதித்திருக்கிறார்'' என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

3.. ''அம்மா இதோ உன் மகன்...இதோ உன் தாய்'' (யோவா 19:26-27). இது இயேசுவால் தான் அன்பு செய்த தாயிடமும் சீடரிடமும் சொல்லப்பட்டது. நான்காவது நற்செய்தியில் மரியாள் என்ற பெயர் சொல்லப்படவில்லை. ''அன்பு செய்த சீடர்'' என்பது இங்குத் தெளிவற்ற நிலையில் உள்ளது. இந்த இடத்தில் இவர் இயேசுவின் தாயை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். ஆனால் அ.ப. 1:14-இன்படி பார்த்தால், அவள் எருசலேமில் உள்ள எல்லாச் சீடர்களோடும் இருக்கிறாள்.

4. ''என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' (மத் 27:46; மாற் 15:34). இவ்வார்த்தை சங் 22:1-இன் மேற்கோள் ஆகும். இந்தச் சங்கீதத்தின் பல வரிகள் சிலுவைப் பாடுகளை நினைவூட்டுவனவாக உள்ளன. இது முழுதும் பாவமறியா ஒரு நல்ல மனிதன் படும் துன்பத்தை விவரிக்கிறது. இது இயேசு இறக்குமுன் அவரது உள்ளத்தில் இருந்திருக்கலாம். இருப்பினும் இது அவரது தனிமைத் துன்பத்தைக் குறைக்கவில்லை.

5. ''தாகமாயிருக்கிறேன்'' (யோவா 19:28). இவ்வார்த்தையைச் சொன்னவுடன் பாத்திரத்திலிருந்த காடியில் கடற்காளானைத் தோய்த்து ஈசோப்பில் பொருத்தி வாயில் வைத்தனர். அதை அவர் சுவைத்தார். ஆனால் இது லூக் 22:18-க்கு எதிரிடையாக உள்ளது. அங்கே ''கடவுளின் அரசு வரும் வரை திராட்சைப் பழரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார்.

6. ''எல்லாம் நிறைவேறிற்று'' (யோவா 19:30).

7. ''தந்தையே, என் ஆவியை உமது கையில் ஒப்படைக்கிறேன்'' (லூக் 23:46). இந்தச் செபம் சங் 31:5-ஐ அடிப்படையாகக் கொண்டுள்ளது. யூதர்களால் மாலை நேரத்தில் சொல்லப்பட்டது. சங் 31 முழுவதும் துன்பத்திலும் இறப்பிலும் கடவுள்மேல் கொண்ட நம்பிக்கையை வெளிக்காட்டுகிறது.

## ஏழைகள் (POOR)

நம்முடைய பண்டைக்கால உயர்தர இலக்கியங்களில் அடிக்கடி மறக்கப்பட்டு விட்டாலும் ஏழைகள் விவிலியத்தில் பெரும்பங்கு வகிக்கின்றனர். அக்காலப் புலவீடான எபிரேயச் சொற்றொகுதி ஏழ்மை, சிக்கனம், எளிமை, நிறைவடையாப் பிச்சைக்காரன் தரங்குறைந்த மற்றும் துயருறும் மனிதன் போன்ற பரிதாபகரமான சொற்களைக் கொண்டுள்ளது. விவிலியம் எடுத்து உரைக்கின்ற ஏழ்மையானது பொருளாதார மற்றும் சமூக நிலைமையாக மட்டுமில்லாமல் அக நிலையாகவும் ஆன்மீக மனப்பான்மையாகவும் இருக்கக்கூடும். பழைய ஏற்பாடு ஆன்மீகச் செல்வங்களை வெளிப்படுத்தும்போது, புதிய ஏற்பாடு உண்மையான ஏழைகளையே இறைவனுடைய அரசின் பேறுபெற்ற வாரிசுகளாகக் காண்கிறது.

I பழைய ஏற்பாடு:-

1. ஏழ்மையின் அவதூறு:-

ஏழ்மையினை ஆன்மீகக் குறிக்கோளாகத் தன்னிச்சையாகவே கருதுவதற்குப் பதிலாக, இஸ்ராயேல் சுமக்க வேண்டிய துர்ப்பேறாகவும் வெறுக்கத்தக்க நிலையாகவும் அதனைக் கண்டது. பொருட்செல்வங்களை இறைவனுக்குக் காட்டும் பிரமாணிக்கத்தின் பிரதிபலனாகக் கருதிய இறைகைம்மாறு பற்றிய நீண்டகாலமாக நிலவிய குறையுடைய கருத்தின்படி, ஏழ்மையை மதிப்பிடுவதன் விளைவே இது (சங் 1:3; 113:1.3).

நேர்மையுடைய ஏழைகள் இருப்பதை ஞானிகள் அறிந்திருந்தனர் (பழ 19:1.22; 28:6;

29

திருவுஜா 4:13). ஆனால் பெரும்பாலும் துயரமிக்க நிலையானது சோம்பல் (பழ 6:6-11; 10:4-5) அல்லது ஒழுங்கின்மையின் (13:18; 21:17) விளைவே என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆகவே வறுமைக்கு இட்டுச் செல்லும் சோம்பேறித்தனத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றனர் (பழ 6:6-11; 10:4-5; 20:4.13; 21:15). இதைத்தவிர மீண்டும் இது பாவத்திற்கான சந்தர்ப்பமாக உருவாகலாம். எடுத்துக்காட்டான நிலை ''ஏழ்மையுமில்லை செல்வமுமில்லை'' (பழ 30:8-9; தோபி 5:18 தொ) என்னும் மகிழ்ச்சியான இடைநிலையாகத் தோன்றுகிறது.

2. ஏழைகளுக்குரிய கவனம்:-

மற்றொரு உண்மை தெளிவாகவும் உறுதியாகவும் கூறப்படுகிறது. யோபுவினால் விவரிக்கப்படுகின்ற பயங்கரமாகத் துன்பப்படும் நாட்டுப்புறக் கடைநிலை மக்களைப் போல (யோபு 24:2-12) ஏழைகளில் பலர் உண்மையில் விதி அல்லது மனிதனுடைய அநீதிகளின் பலியாக உள்ளனர். இத்தகைய உரிமையிழந்தோர், இறைவாக்கினர்களில் தங்களுடைய பெயருள்ள பாதுகாவலர்களைக் கண்டுகொண்டனர். இஸ்ராயேலின் குற்றங்களைப் பற்றி வெட்கி நாணும் ஆமோசைப் பின்பற்றி (ஆமோ 2:6 தொ; 4:1; 5:11), யாவேயின் தூதர்கள் நாட்டை மாசுபடுத்துகின்ற வன்முறை மற்றும் நெடுஞ்சாலைக் கொள்ளை (எச 22:29), வியாபாரத்தின் வெட்கமற்ற முறைகேடுகள் (ஆமோ 8:5-6; ஓசே 12:8), நிலத்தைக் கவர்தல் (மீக் 2:2; ஏச 5:8), சிறியவர்களை அடிமைப்படுத்தல் (எரே 31:8-22; நெக 5:1-13), அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துதல் மற்றும் நீதியையே நெறிகோணச் செய்தல் (ஆமோ 5:7; ஏச 10:1-2; எரே 22:13-17) ஆகியவற்றை இடைவிடாமல் பழிக்கின்றனர். துயருடையோர் மற்றும் ஏழைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது மெசியாவின் குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கும் (ஏச 11:4; சங் 72:2 தொ 12 தொ).

இவை அனைத்திலும் இறைவாக்கினர்கள், சட்டத்திற்கு உடன்பாடு உள்ளவர்களே (யாத் 20:15 தொ; 22:21-26; 23:6). தேவையுள்ளோரின் துன்பங்களைத் தணிப்பதற்குப் பிறர் சிநேக மனப்பான்மைகளையும் சமூக நடவடிக்கைகளையும், குறிப்பாக உப ஆகமமானது கட்டளையிடுகிறது (உப 15:1-15; 24:10-15; 26:12). வல்லமை மிக்க பாதுகாவலராக ஆண்டவரைக் கொண்டுள்ள (பழ 22:22-23; 23:10-11) ஏழைகளின் புனித உரிமைகளை எடுத்துக்கூற ஞானிகள் தவறியதில்லை (பழ 14:21; 17:5; 19:17). பிச்சையளித்தல் என்பது உண்மையான விவிலிய பக்தியின் முக்கியமான கூறாகும் என்பது யாவரும் அறிந்ததே (தோபி 4:7-11; சீரா 3:30-4:6).

3. யாவேயின் எளியோரின் மன்றாட்டும் மனப்பான்மையும்:-

இறைவனின் செவிகள் மட்டும் எட்டுகின்ற ''ஏழைகளின் கூக்குரலானது'' (யோபு 34:28) பெரும்பாலும் சங்கீதங்கள் முழுவதிலும் எதிரொலிக்கின்றது. நாம் அங்குத் தேவையுள்ளோரின் இறைஞ்சுதலை மட்டும் கேட்கவில்லை என்பது உண்மையே. துன்புறுத்தப்பட்டோர் துர்ப்பேறுடையோர் மற்றும் துயருறுவோர் ஆகியோரின் செபத்தையும் கேட்கிறோம். இவர்கள் அனைவரும் ஏழைகளைச் சேர்ந்தவர்களே. அவர்களின் பொது மனப்பான்மையைச் சங்கீதங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன (சங் 9-10; 21; 24; 68). அவர்கள் சூழ்நிலையானது மாற்றியமைக்கப்படும்போது நல்ல வருங்காலம் பற்றிய தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்த ஆழமாகத் தூண்டப்படுகின்றனர் (53:7 தொ; 68:23-30). ''எளிய'' எரேமியா தனது நிலைமையை ஆண்டவரிடம் ஒப்படைத்தது போல (எரே 20:12-13) அவர்கள் தாங்கள் சார்ந்து நிற்கும் யாவேயிடமிருந்து தங்களது மீட்பை எதிர்நோக்குகின்றனர். இறைவனற்ற (சங் 9:14-19), செருக்கு வாய்ந்த (சங் 17:28) கபடுள்ளவர்கள் (20:26), இறைப்பற்றற்றவர்கள்போன்ற அவர்களுடைய பகைவர்கள் இறைவனுடைய பகைவர்களாகவும் உள்ளனர். அவர்களது துயரமானது இறையன்பிற்குரிய பட்டயமாகும் (சங் 10:14).

சங்கீதங்களின் ஏழைமனிதர் யாவேயின் நண்பனாகவும் ஊழியனாகவும் தோன்றுகிறார் (86:1-2). அவரில் நம்பிக்கையுடன் புகவிடம் கொண்டு அவருக்கு அஞ்சி அவரைத் தேடி நாடுகிறார் (34:5-11) இங்கு ஏழையைக் குறிக்கப்பயன்படும் ''அனாவ்'' என்ற எபிரேயச்சொல் பொருள் சார்ந்த வறுமையை மட்டும் குறிக்கவில்லை. சாந்தமிக்க மனிதன் சோதனைகளில் அமைதியானவர், தாழ்ச்சியுள்ளவர் என்ற பொருளையும் உணர்த்த வல்லது (சங் 10:18; 18:27; 37:11; ஏச 26:5 தொ). அவர்களுடைய அடிப்படை மனப்பான்மை தாழ்ச்சியாகும். இக்கருத்தோடு சில பழைய ஏற்பாட்டு வாசகங்கள் நீதி (செப் 2:3) இறையச்சம் (பழ 15:33; 22:4), விசுவாசம் அல்லது பற்றுறுதி (சீரா 45:4; என் 12:3) ஆகிய கருத்துக்களையும் இணைக்கின்றன.

துன்புறுவோர் இதேபோன்ற உணர்வுகளுடன் மன்றாடுகிறபோது யாவேயின் ஏழைகள் என்றும் பெயரைப் பெறும் தகுதியை உண்மையாகவே அடைகின்றனர் (சங் 74:19; 149:4-5). அவர்களே அவருடைய இரக்கமிக்க அன்பிற்குரியவர்கள் (ஏச 49:13; 66:2). எளிய தாழ்ச்சியுள்ள மக்கள் (செப் 3:12-13) மற்றும் ''ஏழைகளின் திருச்சபை'' ஆகியவற்றின் முதற்கனிகள் ஆவர். மெசியா இவர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பார்.

II புதிய ஏற்பாடு:-

1. ஏழைகளின் மெசியா:-

ஏழைகளைப் பற்றிய நற்பேறுகளைப்பற்றித் தமது தொடக்கவுரையின் முதலிலிருந்தே (மத் 5:3; லூக் 6:20), தாம் போதிக்கின்ற அரசினுடைய சலுகைக்குரிய வாரிசுகள் என்று ஏழைகள் கருதப்பட வேண்டுமென இயேசு விரும்புகிறார் (யாக் 2:5). ஆண்டவருடைய தாழ்ச்சியுள்ள அடியாளாக மரியாள் பாடியது போன்று (லூக் 1:46-55) முன்குறிப்பிட்ட வாக்குறுதிகள் நிறைவேறக் கூடிய காலம் இப்போது வந்துள்ளது. ''எளியோர் உண்பர், நிறைவு பெறுவர்'' (சங் 22:26); அவர்கள் அனைவரும் இறைவனுடைய பந்தியில் ஒன்று சேர்க்கப்படுகின்றனர் (லூக் 14:21). இவ்வாறு அவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டு வருவதற்கென எண்ணெயால் அபிசேகம் செய்யப்பட்ட எளியோரின் மெசியாவென இயேசு தோன்றுகிறார் (ஏச 61:1 = லூக் 4:18; மத் 11:5).

மேலும் எளியோரின் மெசியாவே ஓர் ஏழை மனிதராக உள்ளார். பெத்லகேம் (லூக் 2:7), நாசரேத்து (மத் 13:55), பொது வாழ்வு (8:20), சிலுவை (27:35) போன்றவை முற்றிலும் வறிய நிலைமைவரை ஏற்றுக் கொண்டது இயேசுவின் ஏழ்மையின் பல்வேறு வடிவங்களாகும். அவர் ''சாந்தமும் மனத்தாழ்ச்சியும்'' உள்ளவராக இருப்பதால் (மத் 11:29), அவரிடம் வர, சுமை சுமந்து சோர்ந்திருப்பவர் அனைவரையும் அவர் வரவேற்க முடியும். குருத்துக்களை ஆட்டித் தம்மை வரவேற்றவர்களிடையே எருசலேமிற்குள் அவர் வெற்றிகரமாய் நுழைந்த போதும்கூட, செப் 9:9-இல் பறைசாற்றப்பட்ட எளிமையான அரசராகவே அவர் உள்ளார் (மத் 21:5). சிறப்பாகத் தமது பாடுகளில் அவர் துன்பங்களை ஏற்றுக்கொண்டு ஆண்டவருடைய யாவேயின் ஏழைகள் யாவரின் செபத்தையும் தொடர்ந்து மேற்கொள்கிறார் (சங். 22; மத் 27:35.43.46)

2. ஆன்மீக ஏழ்மை:-

பழைய ஏற்பாட்டில் ஏழ்மையை ஆன்மீக மனப்பான்மையாகக் கருதிய சமயக் குழுவினர் ஏற்கனவே இருந்திருந்தால், அதே முறையில் ஏழ்மையானது இயேசுவின் சீடர்களாலும் கருதப்படுவது சாதாரணமானதே. மத்தேயுவால் வலியுறுத்தப்பட்ட கருத்து இதுவே. ''எளிய மனத்தோர் பேறுபெற்றவர்'' (மத் 5:3), அதாவது ''ஆன்மீக ஏழ்மையைக் கொண்டிருப்பவர்கள்'' தம்மைப் பின்பற்றுவோர் இவ்வுலக உடைமைகளைக் கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், உண்மையான செல்வங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்கான தகுதியை அடைவதற்கு இவ்வுலக உடைமைகள்பால் பற்றற்றவர்களாக இருக்க வேண்டுமென இயேசு விரும்புகிறார் (மத் 6:24.33; 13:22;

திருவெளி 2:9; 3:17). பொருளாதாரச் செழிப்பின் காலத்தில் ஒருவர் தமது ஆன்மீக வறுமைபற்றிய பொய்த்தோற்றம் காணும் பேராபத்து உள்ளது (அ.ப. 3:17). இவை எவ்வாறாயினும் உலகத்தை உண்மையிலேயே பயன்படுத்தாததுபோல் அதைப் பயன்படுத்துவது மேல். ஏனெனில் ''இவ்வுலகத்தின் அமைப்பு கடந்து செல்கிறது'' (1 கொரி 7:31). இயேசுவின் சீடராக இருக்க வேண்டும் என்றால், ஒருவர் உலகப் பொருட்கள் யாவற்றையும் துறக்க இணங்கவேண்டும் (லூக் 14:26.33). தனக்கேயுரிய நீதியின் மீது நம்பிக்கை கொண்டு பரிசேயன் காட்டிய பொய்வடிவமான சுயநிறைவைக் கொண்டிருப்பதைவிட உவமையிலுள்ள ஆயக்காரனுடைய தாழ்ச்சியில் அவர்கள் பங்கேற்கின்றனர் (லூக் 18:9-14). தங்களுடைய தேவை மற்றும் வலிமையற்ற நிலையில் அவர்கள் சிறுபிள்ளைகளை ஒத்துள்ளனர். இத்தகையவர்களைப் போன்றே அவர்கள் இறையரசையும் கொண்டுள்ளனர் (லூக் 18:15 தொ; மத் 19:13-24).

3. செயலளவிலான ஏழ்மை:-

எளிய மனத்தை நற்செய்தி வலியுறுத்துவது செயலளவிலான ஏழ்மையின் சமய மதிப்பீட்டை நாம் மறக்க வழிகோலக் கூடாது. ஏனெனில் அதுவே உள்ளார்ந்த துறத்தலின் அடையாளமும் சாதனமும் ஆகும். இறைவனில் மகனுக்குரிய நம்பிக்கை, இயேசுவைப் பின்பற்றுவதற்கான விருப்பம், அயலார் மீதான ஈகை ஆகியவற்றால் தூண்டப்படும்போது உலகப் பொருட்களைப் பொறுத்தமட்டில் நல்லதாகும். இறைவனுடைய கொடையினைத் தடையின்றி ஏற்பதற்கும், அவரது அரசில் பணி புரிவதற்காக முழுமையாக அர்ப்பணிப்பதற்கும் அது வழிகோலுகிறது. புதிய ஏற்பாடு ஆசிரியர்களில், குறிப்பாக லூக்கா, உலக ஏழ்மைக்கான உந்து காரணங்களை எடுத்துக் கூறுகிறார் (லூக் 12:32 தொ).

அ) விருப்பமாக ஏற்றுக் கொள்ளும் ஏழ்மை:-

செல்வத்தினுடைய ஆபத்துகளுக்கு எதிராக இயேசு தம்முடைய அனைத்துச் சீடர்களையும் எச்சரிக்கிறாரெனில் (மத் 6:19 தொ; லூக் 8:14), அவரை நெருங்கிப் பின்பற்ற விரும்பிகிறவர்களை, குறிப்பாக அப்போஸ்தலர்களை, செயலளவிலான ஏழ்மையைத் தழுவுமாறு கேட்கிறார் (லூக் 12:33; மத் 19:21.27). ''இஸ்ராயேல் வீட்டினுடைய'' இறை பணியாளர்கள் தங்களுடன் ''பொன் வெள்ளி செப்புக்காசு'' எதையும் தங்களுடன் எடுத்துச்செல்லக்கூடாது (மத் 10:9; அ.ப. 3:6). இத்தகைய கட்டளையை அப்படியே செயல்படுத்துவதென்பது எப்போதுமே இயலக்கூடியதன்று. ஆனால் பாலஸ்தீனத்தில் பரவலாக நிலவிய விருந்தோம்பலைக் கொண்டு இதை ஓரளவு விளக்கலாம். ஆனால் கிரேக்க - உரோமையர் உலகில் இதை அப்படியே செயல்படுத்த முடியாது. ஆகவே போதகம் மாற்றம்; பிறர் சிநேகப் பணிக்கெனப் பவுல் ஒரு வரவு செலவுப்பட்டியலைக் கொண்டிருப்பார் (2 கொரி 8:20; 11:8-9; அ.ப. 21:24; 28:30). ஆனாலும் எவ்வித ஊதியமுமின்றி அப்போஸ்தலர் தொடர்ந்து நற்செய்தியைப் போதிக்கிறார் (1 கொரி 9:18; மத் 10:8). தேவையிலும் வாழ்வதற்கு அவரால் முடிகிறது (பிலி 4:11-12). எருசலேமில் அப்போஸ்தலர்களைச் சுற்றி ஒன்று சேர்ந்த முதல் கிறிஸ்தவர்களின் சமுதாயமும் அவர்களுடைய ஏழ்மையைப் பின்பற்றப் பெரு முயற்சி எடுத்தது. ''ஒருவனும் தன் உடைமை மீது உரிமை பாராட்டவில்லை'' (அ.ப. 4:32; 2:44-45) எனப்படும் அப்போஸ்தலிக்க வாழ்வின்பால் நாட்ட உணர்வினைத் திருச்சபையானது என்றுமே பாதுகாத்து வந்துள்ளது.

ஆ) ஏழ்மையைப் பொறுமையாக ஏற்றுக் கொள்ளல் :- விரும்பி ஏழ்மையானவர்களைப்போல் சூழ்நிலைகள் அல்லது மறைக்கப்படும் துன்பங்களின் காரணமாகச் செயலளவிலான ஏழ்மையை ஏற்றுக் கொள்பவர்கள் தங்களுடைய தேவையிலும் தாராளமாக இருந்தாலோ (மாற் 12:41-44), மற்றும் ''மேலானவையும் நிலையுள்ளவையுமான செல்வங்களை எதிர்நோக்கியவாறு'' (எபி 10:34) தங்களது நிலையை விரும்பி ஏற்றுக் கொண்டாலோ, இறை அரசில் அவர்கள்

பேறுபெற்றவர்களாக இருப்பர். இவ்வுலகில் ஏழைகளாக இருந்தாலும், சோதனைகளில் அவர்கள் பிரமாணிக்கமாய் இருப்பதால், அவர்கள் உண்மையில் இப்போதிருந்தே செல்வந்தர்களாக இருக்கின்றனர். வருங் கால வாழ்வில் இறைவன் அவர்களுக் கெனத் தயாரித்துள்ள வியக்கத்தக்க வெகு மதிகளை லூக்கா சுட்டிக்காட்டுகிறார் (லூக் 6:20-21). ஏழை இலாசரைப்போன்று அவருடன் சேர்ந்து முடிவற்ற ஆறுதலை அவர்கள் கண்டடைவர் (16:19-25).

இ) ஏழைகள்பால் கிறிஸ்துவப் பணி:- துன்பகரமான சூழ்நிலைகள் மனிதத்தன்மை யற்ற நிலையில் எவ்விதத்திலும் குறைந்த வையல்ல. இறைவாக்கினர்கள் கொண்டி ருந்த, சமூக நீதிக்கான அதே கோரிக்கை களை நற்செய்தியும் கொண்டுள்ளது (மத் 23:23; யாக 5:4). ஆனால் இங்குச் செல்வர்கள் ஏழைகள்பால் ஒரு அவசரப்பணியைக் கொண்டுள்ளனர். இறைவனின் எடுத்துக் காட்டைப்பின்பற்றி அவர்கள் ஏழைகளை ஏற்றுக்கொண்டு (லூக் 14:13.21) ''அநீத செல் வத்தினால்'' நண்பர்களைச் சேர்த்துக் கொண்டால் (16:9), அவர்கள் தங்களுடைய முடிவற்ற மகிழ்ச்சியில் ஏழைகளுடன் ஒன் றித்திருப்பர். மேலும் இயேசுவினுடைய மகிமை மிக்க மறுவருகைக்காகக் காத்திருக் கும் வேளையில் ஏழைகளுக்கு உதவும் போது உண்மையில் அவருக்கே உதவுவதன் காரணமாக (மத் 25:34-46; 26:11), இக்கால முதல் ஏழைகளுக்கு நாம் செய்யும் பணி இயேசுவின்பால் நாம் கொண்டிருக்கும் அன் பிற்கு எடுத்துக் காட்டாகும். ''ஒருவன் தன் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில் அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்?'' (1 யோவா 3:17).

இறைவாக்கினர் முதல் இயேசு வரை விவிலியமானது ஏழைகளின் துன்பங்கள் மீது அக்கறைகொண்டு அவற்றின் பொருளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளது. நம்பிக்கையுள்ள விசுவாசத்திலும் பொறு மையான தாழ்ச்சியிலும் இறைவனின் கொடைக்குத் திறந்த நிலையில் உள்ள ஆன் மீக மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட ஏழ்மை உள்ளது. இந்த ஆன்ம ஏழ்மைக்கு அப்பாற் பட்ட நிலையில் சலுகைபெற வழியாக உண்மையான ஏழ்மையானது உள்ளது. ஆனால் இதனுடைய கோட்பாடு மற்றும் நோக்கமானது ''நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பரந்த வள்ளண்மையின்'' மறைபொருளில் ஒன்று படுத்துவதாகும். ''அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவரு டைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார்'' (2 கொரி 8:9).

## ஏளனஞ்செய்பவன், இகழ்பவன் (SCO-FFER)

ஞானத்தின் வழியை அவமதிக்கின்ற வனை விவரிப்பதற்காகப் பழமொழி ஆக மத்தில் உள்ள ஏராளமான இணைச் சொற்க ளில் இதுவும் ஒன்று. பழைய ஏற்பாட்டில் ஏளனம் செய்பவன் பேதையர்களிலும் முட் டாள்களிலும் (பழ 1:22); தீயவர்களிலும் (9:7) ஒருவனாக எண்ணப்பட்டுள்ளான். மேலும் மோசமானவர்களிலும் (9:7) ஞானத் திற்கு எதிராக இருப்பவனாகவும் (13:1; 14:6; 15:12) மகிழ்ச்சியாக இருப்பதற்கு மாறானவ னாகவும் (சங் 1:1) கருதப்பட்டுள்ளான். பெரும்பாலான நேரங்களில் அவன் உடல் அளவில் தண்டிக்கப்படுவதாகத் தோன்றினா லும் (பழ 19:25.29; 21:11; 22:10), இது அவனுடைய வளர்ச்சிக்கு உதவுவதில்லை. ஏனெனில் அவன் தன்னைத் திருத்துபவர் களை அவமதிப்பான் (9:7), வெறுப்பான் (9:8), அவர்களுக்குச் செவி மடுக்க மாட் டான் (13:1). ஞானவழிகளையும் நேர்மைவழி களையும் கேலி செய்வதற்காகவே கேலி செய்வான் (1:22). அவன் சண்டை, சச்சரவு, பழிச்சொல் ஆகியவற்றுக்குக் காரணமாய் இருப்பான் (22:10).

அவனுடைய நடத்தை மிகத் தெளிவாக பழ 21:24-இல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அங்கு அவன் அகந்தையுள்ள கோபக்கார னாக விவரிக்கப்பட்டுள்ளான். இவன் வீணாக ஞானத்தைத் தேடுகின்றான் (14:6; 15:12). இவன் தன்பாவத்தில் மடமையால்

மனிதருக்கு வெறுப்பைத் தருகின்றான் (24:9). இப்படியாகக் கடவுளின் ஏளனத்தைப் பெறுகின்றான் (3:34). ஏச 29:20-இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிலிகளின் தலைவிதியில் இவன் பங்கு கொள்வான். அதே வேளையில் ஏழைகளும் சாந்தமுள்ளவர்களும் ஆண்டவரில் மகிழ்வார்கள் (பழ 3:34).

''பழித்துரை'' என்ற சொல் பகைவனைக் கேலிக் கூத்தடிப்பதைப் பற்றி விவரிக்கின்றது (சங் 79:4; 89:51; 102:8). பழித்துரை செய்யப்படுதல் வீழ்ச்சியையும் துன்புறுத்தலையும் காட்டுகின்றது. சங்கீத ஆசிரியர் தன்னுடைய துன்பங்களையும், பகைவர்களின் (சங் 102:8) அல்லது அவருடைய நண்பர்களின் பழித்துரையாக (நெக 6:13) விவரிக்கின்றார். சங் 44:13; 79:4 போன்றவை இஸ்ராயேல் அண்டை நாடுகளின் கேலிக்கு ஆளாகிவிட்டதாக எண்ணிக் கூக்குரலிடுகின்றன. நெக 4:4; சங் 79:12 போன்றவை பகைவர்களுடைய பழிச்சொற்கள் அவர்களுடைய தலைமீதே விழும்படி யாவேயிடம் வேண்டுகின்றன. ஏனெனில் உண்மையில் யாவேயைத்தான் அவர்கள் பழித்துரைக்கின்றனர் (சங் 79:12). பகைவனின் நிந்தனை, அழிந்த இஸ்ராயேலுக்கு எதிராகவும், கடவுளுக்கு எதிராகவும், ''உங்கள் கடவுள் எங்கே'' (சங் 42:10) என்று எழுதப்பட்டது. செப் 2:8 ஆண்டவரைப் பழித்துரைத்தவர்கள் அடையும் சன்மானத்தை முன்னோக்குகிறது. மேலும் பழித்துரை ஒரு பொருள் பல சொல்லாக இறைத்தீர்ப்பினால் ஏற்படும் முழுமையான அழிவினை விவரிக்கும் போது பயன்பட்டுள்ளது (எரே 24:9; 42:18; 44:8; 12:49;13; எச 3:15).

## ஏற்றப்பாடல்கள் (SONGS OF ASCENTS)

இது சங் 120-134 வரை உள்ள சங்கீதங்களுக்கு அளிக்கப்படும் தலைப்பு. இந்தத் தலைப்பின் பொருளை விளக்குவ்து கடினம். ஒரு வேளை, புத்தாண்டின் ஊர்வலத்தில் ஆலயத்தை நோக்கி ஊர்வலம் போகும் போது பாடப்படும் பாடல்களாக இருக்கலாம். அல்லது எருசலேமை நோக்கிச் செல்லும் திருப்பயணிகளால் பாடப்பட்டிருக்கலாம்.

இத்தொகுப்பு படிக்கீதம் என்றும் அழைக்கப்படும். இப்படிகள் இரண்டாம் ஆலயத்தில் பெண்கள் முற்றத்திலிருந்து ஆண்கள் முற்றத்திற்கு இட்டுச் செல்லும் படிகளாகும். யூதப்பாரம்பரியப்படி இப்படிகளில் லேவியர் இச்சங்கீதங்களைப் பாடினர்.

## ஏற்றம் இறக்கம் (ASCENTS, DESCENTS)

ஏறுதல், இறங்குதல் என்ற செயல் பொதுவாக மேலோ கீழோ செல்கின்ற சாலையை வைத்தோ, ஒருவன் செல்லும் திசையைப் பார்த்தோ கூறப்படும் சொல். குறிப்பாக மலைக் கணவாய்களைக் குறிக்கும். தாவீது எருசலேமை விட்டு ஒலிவமலைமேல் ஏறிச் சென்றார் (2 சாமு 15:30). இயேசுவும் அதே மலையில் இருந்து கீழிறங்கி நகரை நெருங்கினார் (லூக் 19:37). எருசலேம் மதிலில் உள்ள படிக்கட்டு (நெ 12:37), நகரிலுள்ள ஆயுதக் கிடங்குக்குச் செல்லும் வழி (நெக 3:19), அரசர்களின் கல்லறைக்குச் செல்லும் பாதை (2 நாள் 32:33) ஆகியவை ஏற்றத்தைக் குறிக்கும்.

பாலஸ்தீனில் இஸ்ராயேலிடமிருந்த முக்கியமான பகுதி யோர்தானுக்கு மேற்கே உள்ள கரடு முரடான மலைப்பகுதியாக இருந்தது. இங்குச் செல்லும் கணவாய்ப் பாதைகள், புவியியல், பொருளாதார, இராணுவ அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தன. அவைகள் மலைகளை நோக்கிச் செல்வதால் ஏற்றம் என அழைக்கப்பட்டன. மலைப்பகுதிகளுக்கு மேற்கே அப்படிப்பட்ட 2 பாதைகள் உள்ளன. ஒன்று பேத்து-கோரோன் ஏற்றம். இங்குதான் யோசுவா எமோரிய அரசர்களின் கூட்டணியைத் துரத்திச் சென்று தோற்கடித்தார் (யோசு 10:10-11). மற்றொன்று சமாரியாவில் உள்ள கூர் என்னும் இடத்திற்குப் போகும் வழி. இங்குதான் ஏகூ அகசியாவைக் கொன்றார் (2 அர 9:27). இம்மலைப்பகுதிகளுக்குக் கிழக்கிலுள்ள யோர்தானின் பிளவுப்பள்ளத்தாக்கில் சிறிய பிளவுகளின் வழியாகத்தான் பயணம்

செய்ய முடியும். இவற்றில் யூதா மலைத் தொடருக்குச் செல்லும் 3 செங்குத்தான பாதைக்கு ''ஏற்றம்'' எனப் பெயருண்டு. சாக்கடலில் இருந்து 25 கி.மீ தொலைவில் தெற்கே உள்ள வாடி அராபாவில் தொடங்கி வடமேற்குத் திசையில் அகிரபிம் ஏற்றம் அமைந்திருந்தது (எண் 34:4; யோசு 13:3; நீதி 1:36). ஏங்கேதியிலிருந்து வடகிழக்குப் பகுதியில் 11கி.மீ. தூரத்தில் சாக்கடலை ஒட்டி சீஸ் என்ற குன்றிற்குச் செல்லும் ஏற்றம் உண்டு (2 நாள் 20:16). வடக்கே அதுமிமிற்குச் செல்லும் ஏற்றம் உண்டு. எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் ஏற்றம் யூதாயாவின் வட பகுதியில் உள்ளது (யோசு 15:7; 18:17). யோம்தான் பள்ளத்தாக்கின் கிழக்கிலுள்ள உலூகித்துக்கு ஏறிப்போகும் வழி (ஏச 15:5; எரே 48:5), கோரோனயிமுக்கு இறங்கிப் போகும் வழி (எரே 48:5), கிலயாத்தில் உள்ள கெரசுக்கு ஏறிச் செல்லும் வழி (நீதி 8:13), யோசுவா வெற்றி பெற்ற ஆயி என்ற இடத்திற்கு அருகே உள்ள செபாரிமுக்குச் செல்லும் வழி (யோசு 7:5) ஆகியவை பெயர் பெற்ற சில ஏற்ற, இறக்கங்களாகும்.

## ஏற்புடைமை (JUSTIFICATION)

பொதுவாக ஒருவர் தம்முடைய செயலானது எதிராளியின் செயல்மீது வெற்றியடையச்செய்து தமது செயலின் நீதியைப் பிறரறியச்செய்யும்போது ஏற்புடையவராகிறார். நீதி அவைக்குமுன் இது நிகழ வேண்டும் என்பதோ, எதிராளியானவன் பகைவனாக இருக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை. நீதியின் எல்லை, சட்டம் அல்லது பழக்கவழக்கம் ஆகியவற்றினுடைய எல்லையையும் கடந்து செல்லுகிறது. ஒவ்வொரு மனித உறவு முறையும் தனக்கேயுரிய நீதியையும் விதிமுறையையும் கொண்டுள்ளது. அந்தச் சிறப்பான நீதியையும் விதியையும் ஒருவர் மதிக்கும்போது, தான் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவரையும் அவருக்குரிய துல்லியமான முறையில் நடத்துகின்றார். இந்நிலையானது புறக்காரியங்கள், சமூக நிலை மற்றும் நிறைவேற்றிய செயல்கள் ஆகியவற்றால் மட்டுமின்றி, ஒவ்வொருவருடைய ஆழ்ந்த தகுதி, அவருடைய திறமைகள் மற்றும் தேவைகள் ஆகியவற்றாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் பொருந்திய முறையில் நடத்தும்போது ஒரு நபர் நீதியுள்ளவராக உள்ளார். ஒருவர் தமது நடத்தையிலே குற்றமின்மையைவிட அதன் ஒழுங்குமுறையை விளக்கிக்கூறும்போது அவர் விசாரணையில் அல்லது வழக்கு வாதத்தில் நேர்மையுள்ளவராகிறார்; ஏற்புடையவராகிறார். இம்முறையில் அவர் தமது நேர்மையைப் பிறரறியச் செய்கிறார்.

I இறைவன் முன்னிலையில் ஏற்புடையவனாக்கப்படுதல்:-

இறைவன் முன்னிலையில் ஏற்புடையவனாகத் தோன்றுதல் மற்றும் அவருக்கெதிராக ஒருவன் வெற்றிபெற விரும்புதல் என்பது சிந்தித்துப் பார்க்க முடியாததாகத் தோன்றலாம். இத்தகைய செயலில் ஈடுபடத்துணிவதைவிட, தொடக்கத்திலிருந்தே அழிவிற்குரிய விளைவைக் கொண்ட செயல்முறைகளை இறைவனே தொடங்குவார் என்பது ஒருவரைப் பேரச்சம் கொள்ளச் செய்கிறது. ''நீதி விசாரணைக்கு அடியேன் என்னை அழைக்காதேயும். ஏனெனில் வாழ்வோருள் எவனும் உமது திருமுன் நீதிமான் என்று சொல்வதற்கில்லை'' (சங் 143:2). ஏனெனில் ''யான் செய்த பாவங்களை நினைவு கூர்வீராகில் உமக்குமுன் யார் நிற்க முடியும்?'' (சங் 130:3). ஞானமிக்க முறையானது தனது பாவங்களை அறிக்கையிட்டு, இறைவன் தமது நீதியை வெளிப்படுத்துமாறு அமைதியாக அனுமதிப்பதாகும்; ''உமது நியாய வாக்கினில் உம் நேர்மை துலங்குகின்றது'' (சங் 51:4).

இறைவனின் பார்வையில் மனிதன் என்றுமே ஏற்புடையவனாவதில்லை என்பது விநோதமானதன்று. ஆனால் அவன் இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்பதும் விவிலியம் இதனைப் பகுத்தறிவுக்கு மாறானது என்று கருதாததுமே இதில் வியப்புக்குரியதாகும் என்றும், இறைவன் முன்னிலையில் மனிதன் நீதிமானாகத் தோன்ற முடியாது என்றும் (யோபு 9:2) இருவரும்

சேர்ந்து வழக்காடவும் அவருக்குப் பதில் சொல்லவும் இறைவன் மனிதர் அல்லர் என்றும் (9:32), யோபு அறிந்திருந்தார். ஆனாலும் ''தம்முடைய உரிமையைப்பற்றி அறிந்தவராய், தம்முடைய வழக்கை எடுத்துரைப்பதை'' விட்டுவிடமுடியவில்லை. இறைவன் நீதியுள்ளவராய் இருப்பதால், இறைவன் ஒரு நீதிமானைத் தமது எதிரியாக எதிர்கொள்ளும், யோபு தனது வழக்கை வெற்றி பெறச் செய்யக் கூடியதான (23:7), எதிரெதிர் சந்திப்பினில் அஞ்சக்கூடியது எதுவும் யோபுவிற்கு இல்லை. உண்மையில் இறைவனே யோபுவை மௌனமாக்கி அவரை மடமை மற்றும் நிலையற்ற தன்மை என்னும் குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தினாலும் (38:2; 40:4) அவர் தவறுசெய்தவர் என்று ஒருபோதும் கூறவில்லை. யோபு இறைவனே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளாமல், ஆபிரகாமின் விசுவாசத்தில் ஒரு செயலைக் கண்டு பிடிக்கிறார். அதில் ஆபிரகாம் தன்னிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட அனைத்திற்கும் சரியாக ஒத்திருக்கிறார் (ஆதி 15:6).

எனவே பழைய ஏற்பாடானது இறைவனின் முன்னிலையில் அடைய இயலாத ஒன்றாகவும், மனிதன் படைக்கப்பட்டதற்குரிய ஒரு நிலையாகவும், ஏற்புடைமையை எடுத்துக் கூறுகிறது. இறைவன் நீதி உள்ளவர். அதாவது அவர் ஒருபோதும் தவறுசெய்வதில்லை. மற்றும் எவரும் அவருடன் விவாதிக்க முடியாது (ஏச 29:16; எரே 12:1). ஆனால் மனிதரையும் அவர் உருவாக்கிய மண்ணையும் அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கமான ஒன்றிப்பையும் அறிந்திருந்ததால், அவர்கள் அவர் முன்னிலையில் நேர்மையுள்ளவர்களாய் இருக்கும் வாய்ப்பை அவர்களுக்கு மறுக்கவில்லை. அப்படித்தான் அவர்கள் இருக்க வேண்டும்.

II. இயேசு கிறிஸ்துவில் ஏற்புடையவராதல்:-

1. சட்டத்தின் ஆற்றலற்றதன்மை:

பரிசேயனாகிய பவுல் வளர்ந்த யூதச் சட்டமுறையானது பழைய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்தை உண்மையில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அதனை நோக்கியாவது சார்ந்திருக்க வேண்டுமென நம்பியது. அதாவது சட்டமானது இறைவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாகும்; அதை மனிதன் அடையமுடியும் என்று நம்பியது (உப 3:11 - உண்மையில் மனிதனுடைய அறிவுத் திறமையால் அதைப் புரிந்துகொள்ளவும் எளிதில் அறிந்து கொள்ளவும் முடியும்). இதன் விளைவாக இறைவன் முன்னிலையில் வருவதற்கும், ஏற்புடையவனாவதற்கும், சட்டத்தைக் கடைப்பிடிப்பது மட்டும் மனிதனுக்குப் போதுமானதாகும். இறைவனை அவருக்குரிய தகுதியான முறையில், நீதிக்கேற்ப மனிதன் நடத்த முடியும் என்று எண்ணியதில் பரிசேயருடைய தவறு அடங்கியிருக்கவில்லை. தனது ஆற்றல்களினாலேயே தான் இதனை அடையக்கூடும் என்று நம்பியதிலும் மற்றும் இறைவன் மனிதரிடம் எதிர்பார்ப்பதும், இறைவனை அடைவதுமான மனநிலையைத் தன்னிலேயே காண விரும்பியதிலும் பரிசேயருடைய தவறு அடங்கியுள்ளது. ''இறைவன்முன் பாராட்டப்படும் உரிமையை'' (உரோ 3:27) விரும்பும் இதயத்தின் இந்த நெறிகோணுதல், உடன்படிக்கையை விளக்குவதில் உள்ள அடிப்படைத் தவறிலிருந்து வருகின்றது. இந்தத் தவறான விளக்கமானது வாக்குறுதிகளினின்று சட்டத்தைப் பிரிக்கின்றது. இறைவன் முன்னிலையில் ஏற்புடையவராக்கப்படுதலின் ஒரு சாதனத்தை அது சட்டத்தில் காண்கிறது. சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருப்பதே இறைவனுடைய செயலாகவும், அவரது வார்த்தையின் நிறைவேறுதலாகவும் மட்டுமே இருக்க முடியும் என்பதை மறந்து விடுகிறது.

2. இயேசுகிறிஸ்து:-

இப்போது இயேசு கிறிஸ்து உண்மையிலேயே நீதிமானாக இருந்தார் (அ.ப.3:14). இறைவனின் பார்வையில், இறைவன் விரும்பியவாறு, தந்தையே இறுதியாகப் பூரிப்படைய திருப்தியடையக்கூடிய ஊழியனாக அவர் தோன்றினார் (ஏச 42:1; மத் 3:17). ''எல்லா நீதியையும் நிறைவேற்றுவது'' (மத் 3:15) எப்படி என்பதை அவர் இறுதிவரை

*அறிந்திருந்தார். இறைவன் மகிமைப்படுத் தப்படுவதற்கென அவர் இறந்தார் (யோவா 17:1.4). அதாவது எல்லாப் பலிகளுக்கும் தகுதியுடையவரும், எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்யப்படக்கூடியவருமாய் (யோவா 14:30), இறைவன் தமது எல்லாமகி மையிலும் மேன்மையிலும் உலகிற்கு முன் பாகத் தோன்றுவார். ஒதுக்கப்பட்டவராக இயேசு தோன்றித் தமது மரணத்தில் (ஏச 53:4; மத் 27:43-46), இயேசு உண்மையி லேயே ஏற்புடையவரானார். அவரை உயிர்ப் பித்து, தூய ஆவியை முழுமையாக அடைந் தவராக அவரை உருவாக்கியதன் மூலம் (1 திமோ 3:16), இறைவன் அவர் செய்து முடித்த பணியை ஏற்று அங்கீகரித்தார் (யோவா 16:10).*

*3. அருள்:-*

*ஆனால் இயேசுவினுடைய உயிர்ப்பின் நோக்கம் ''நம்மிடையே ஏற்புடைமையா கும்'' (உரோ 4:25). சட்டமானது நிறை வேற்ற முடியாமல் உறுதியாக விலக்கிவிட் டதை, இறைவனின் அருளானது கிறிஸ்து வின் மீட்பில் நமக்கு அளித்துள்ளது (உரோ 3:23-24). ஏற்புடைமையாகிய இந்தக் கொடை வெறும் பாசாங்கு நடிப்பன்று; இறைவனைப் பொருத்த மட்டும் சலுகை கொடுக்கும் அருள்பாலிப்பன்று. இந்தக் கொடையின் விளைவாக, கிறிஸ்துவின் முழுமையான ஏற்புடைமையின் பொருட்டு, நாம் கிறிஸ்துவோடு கொண்டி ருக்கும் தொடர்பின் காரணமாக, நாம் ஏற்பு டைமை அடைந்தவர்களாய்க் கருதப்பட அவர் விருப்பமாய் இருக்கின்றார். மன்னித் தல் மற்றும் விடுவித்தல் எனும் ஒரு எளிய தீர்ப்பைப் பவுல் சுட்டிக்காட்ட விரும்பிய போது, ஏற்புடைமையோடு தொடர்புடைய சொல்லையே அவர் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அது தெளிவான சட்ட உரி மையை அங்கீகரிப்பதையும், ஒருவருடைய நிலையின் செயல் முறையை உறுதிப்படுத்து வதையும் உணர்த்தலாம். பவுல், நம்மை ஏற்புடையவராக்கும் இறைவனுடைய செயலை அவரது நீதிக்குச் சாற்றிக் கூற வில்லை. அவருடைய தூய இரக்கத்திற்கே சாற்றிக் கூறுகிறார். இறைவன், கிறிஸ்துவில் ''அவர் அருள் மிக்கவராகவும்,இயேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடைய வனாகும் படியும், தமது நீதியைக் காட்ட விரும்பினார்'' (உரோ 3:26) என்பதே உண் மையாகும்.*

*4. இறைவனின் பிள்ளைகள்:-*

*இறைவன் முதன் முதலாக ''நமது பாவங் களுக்காகக் கையளிக்கப்பட்டு'' (உரோ 4:25), தனது கீழ்ப்படிதல் மற்றும் நேர்மை யின் மூலமாகப் பலருக்கு ஏற்புடைய நிலை யினையும் நீதியையும் பெற்றுத்தந்த (உரோ 5:16-19) தமது மகனுக்குத் தமது நீதியை வெளிப்படுத்துகிறார். நமது ஏற்புடைமை யைப் பெற்றுத்தரும் வல்லமையை இறை வன் இயேசுகிறிஸ்துவிற்கு அளித்தார் என்ற உண்மையானது, இறைவன் தமது மகன் பால் கொண்ட மதிப்பின் காரணமாக, நம்மை நேர்மையுடையவர்களைப்போல நடத்த இணங்கினார் என்ற பொருள் கொடுக்கவில்லை. அவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் சரியான மனநிலையைக் கொண்டிருக்கவும், அவருக்குரிய விதத்தில் அவரை நடத்தவும் மற்றும் அவருக்குரிய நீதியை உரிய விதத்தில் அவருக்குச் செயல் முறையில் அளிக்கவும், கிறிஸ்து நம்மால் கூடுமானதாக ஆக்குகிறார். கருக்கமாக உண் மையிலேயே அவர் முன்னிலையில் ஏற்பு டையவராக்குகிறார் என்பதே பொருளா கும். தாம் உரிமைகொண்டுள்ள மாட்சிமை மற்றும் மகிமையை விட்டுக் கொடாமல், இவ்வாறு இறைவன் தமக்கே நேர்மையுள்ள வராக உள்ளார். அவரை நோக்கி நேரிய விதத்தில் அமைக்கப்படவும், தங்களுடைய தந்தையாக அவரை நடத்தவும், அதாவது அவருடைய உண்மையான பிள்ளைகளாக வும் இருக்குமாறு (உரோ 8:14-17; யோவா 3:1-2) அவர்களுடைய உள்மனதுவரை ஊடு ருவிச் செல்கின்ற தமது அருளினால் மட்டும் அனுமதிக்கின்ற தமது படைப்புகளிடமும் அவர் நேரியவராக உள்ளார்.*

*III விசுவாசத்தினால் ஏற்புடையவராதல்:-*

*இறைவன் நம்மை ஏற்புடையவராகச் செய்கின்ற மறுபிறப்பானது எந்தவித மாந்தி*

ரீக மாற்றமல்ல. நம்மோடும் நமது மகிமையோடும் உள்ள நம்முடைய பிடிப்புகளினின்று நம்மை விடுவிப்பதன் மூலமும் (யேவோ 7:18) விசுவாசத்தில் நம்மைக் கிறிஸ்துவோடு இணைப்பதன் மூலமும் (உரோ 3:22தொ), நமது இயக்கங்களிலும் இது உண்மையாகவே நம்முள் நிகழ்கிறது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதென்பது உண்மையில் தந்தை அனுப்பிய அவரை அறிதலாகும். இந்த விசுவாசத்தினால், ஒவ்வொருவரும் அவருடைய வார்த்தைகளை அன்புடன் போற்றி வளர்க்கின்றனர்; அவரது அரசிற்காக அனைத்தையும் இழக்கத் தயாராக உள்ளனர்; கிறிஸ்துவை அடைவதற்காக அனைத்தினுடைய இழப்பையும் ஏற்கின்றனர்; விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு இறைவனிடமிருந்து வருகின்ற நீதியைப் பெறுவதற்காகச் சட்டத்தினின்று வருகின்ற ஒருவருக்குரிய நீதியையும் தியாகம் செய்கின்றனர் (பிலி 3:8-9). இயேசுகிறிஸ்துவில் விசுவாசங்கொள்பவர் ''இறைவன் நமக்கெனக் கொண்டுள்ள அன்பை அறிந்தவராய்'', ''அன்பே கடவுள்'' என்று பறைசாற்றுகின்றார் (1 அரு 4:16). கிறிஸ்துவினுடைய மறைபொருளின் மையத்தை விசுவாசி அடைந்து விட்டார். அவர் நேர்மையானவர் ஏற்புடையவர் ஆகிறார்.

**ஏனா** (HENA - தொந்தரை செய்யும்)

2 அர 18:34; 19:13; ஏச 37:17-இல் குறிப்பிடப்படுகின்ற ஒரு நகர். இது இருந்த இடம் தெரியவில்லை. 1 அர 18:13-36-இல் அசீரிய அரசன் சனகெரிபோடு தொடர்புபடுத்தப் படுகிறது. கி.மு. 838-இல் இவர் எருசலேமுக்கு எதிராக முற்றுகையிட்டார். இலாக்கீசிலிருந்த தன் தலைமையகத்திலிருந்து, தூதுவர்களை எசக்கியாவிடம் அனுப்பி, அசீரியாவுக்கு எதிரான கொள்கையை விட்டுவிடும்படித் தூண்டினார். அசீரியத் தூதுவர்கள் எசக்கியா வெற்றி பெறமுடியாது என்றும், மற்ற அரசர்களும் இதேபோல் செய்தார்கள் ஆனால் வெற்றிகிட்டவில்லை என்றும் எடுத்துக் கூறினார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக மற்ற நாடுகளின் வீழ்ச்சியைக் குறிப்பிடும்போது 'ஏனா' இந்நகர்களில் ஒன்று என்று குறிப்பிடப்படுகிறது.

இது இருந்ததாகப் பல இடங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவற்றில் ஒன்று யூப்பிரத்திசின் கரையிலுள்ள இக்கால ''ஆனா'' வாகும். மற்றது பாரசீக வளைகுடாவின் பகுதியிலுள்ளது.

**ஏனாம்** (ENAM - ஊற்றுள்ள இடம்)

யூதாவில் உள்ள சோரா-அசக்காவின் செப்பேலா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். அநேகமாக இது எனாயிமாக இருக்கலாம் (யோசு 15:34).

**ஏனான்** (ENAN - சிறியஊற்று)

நப்தலி கோத்திரத்தில் அகிராவின் தந்தை (எண் 1:15; 2:29; 7:78.83; 10:27). இப்பெயர் கசர்-ஏனான் என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

**ஏனெகிலயிம்/ஏன்-எகிலயிம்** (EN-EGLAIM - இருகன்றுக் குட்டிகளின் ஊற்று)

சாக்கடலின் கரையில் அமைந்துள்ள ஓர் இடம். இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப் படுவது பற்றிய எசக்கியேலின் காட்சிப்படி, திருக்கோயிலின் நீரூற்றிலிருந்து புறப்படுகின்ற ஆற்றில் செம்படவர் மீன்பிடிப்பார்கள். அவர்கள் ஏங்கேதி ஊர் தொடங்கி இந்த ஏனெகிலயிம் ஊர் வரையிலும் மீன் வலைகளை உலர்த்துவார்கள் (எச 47:10).

இந்த இடம் எங்குள்ளது என்று உறுதியாகக் கூறமுடியாது. அயின் கச்லா (பேத் கோக்லா) இவ்விடமாக இருக்கலாம் என்று சிலர் கூறினாலும், கிர்பெத் கும்ரானுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள அயின் பெசுகா பொருத்தமான இடமாக இருக்கலாம்.

**ஏனோக்கு** (ENOCH - அர்ப்பணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட) - ஆள்

1. காயினின் மகன். ஏனோக்கிற்கு ஈராது என்னும் புதல்வன் ஒருவன் உண்டு (ஆதி 4:17.18).

*2.* மகலலேலவின் வாரிசான யாரேது என்பவரின் மகன் *(ஆதி 5:17-24).* ஏனோக்கு *65* ஆண்டுகள் வாழ்ந்தபின் மெத்துசலாவைப் பெற்றார் *(5:21).* அதற்குப்பின் *300* ஆண்டுகள் இறைவனுக்கு உகந்த விதமாய் வாழ்ந்து புதல்வர் புதல்வியரைப் பெற்றார் *(5:22.24; 6:9; 17:1).* அவருடைய மொத்த வாழ்நாட்கள் *365* ஆண்டுகள் *(1 நாள் 1:3; லூக் 3:37).* ஏனோக்கு விண் எடுக்கப்படுதல் பிற்காலத்திய பல கதைகள் தோன்றச் செய்தது *(ஞான 4:10; யூதா 14).* காண்க. ஏனோக்கின் நூல்.

**ஏனோக்கு** (ENOCH - அர்ப்பணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட) - இடம்

இது, காயின் மூத்த மகன் பெயரால் கட்டிய நகரம் *(ஆதி 14:17).*

**ஏனோக்கின் நூல்** (BOOK OF ENOCH)

கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்கப்படாத ஒரு நூலாகும். இந்நூல் எபிரேயத்திலோ, அராமாயிக்கிலோ எழுதப்பட்டது. ஆதி.*5:18-24*-ஐ அடிப்படையாகக் கொண்டது. இது *108* அதிகாரங்களைக் கொண்டது. கி.பி. *6*-ஆம் நூற்றாண்டில் இந்நூல் கிரேக்கம், எத்தியோப்பியா, இலத்தின் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. யூதர்கள், மற்றும் கிறிஸ்தவர்கள் இந்நூலைப் பற்றி அறிந்திருந்தனர். கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக் கொள்ளப்படாத பல நூல்கள் ஏனோக்கின் நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். இந்நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஏனோக்கின் நூல் பொதுவாக ஒரு வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. இந்நூலின் ஒரு சிறுபகுதியே வெளிப்பாடாகும். இப்புத்தகத்தை *7* பகுதிகளாகப் பிரிக்கலாம்.

*1.* முன்னுரை:- *(1* முதல் *5* வரையிலான அதிகாரங்கள்)

இதில் இப்புத்தகத்தின் மையக்கருத்து கூறப்படுகிறது. தீயோர் தண்டிக்கப்படுவர், நல்லோர் ஆசிர்வதிக்கப்படுவர் என்பதே இக்கருத்து. உலகத்தின் முடிவு முன்னுரைக்கப்படுகிறது.

*2.* புத்தகம் *1:-* வானதூதர்களும், பிரபஞ்சமும்:- *(6-36* அதிகாரங்கள்)

இதில் வீழ்த்தப்பட்ட வானதூதர்களைப் பற்றியும், அவற்றின் தீய, நாச வேலைகளைப் பற்றியும் காண்கிறோம். ஏனோக்கு, சபிக்கப்பட்ட இந்த வானதூதர்களுக்காக மன்றாடுகிறார். ஆனால் அவர்களின் முடிவில்லாத தண்டனை அவருக்குக் காட்டப்படுகிறது.

*3.* புத்தகம் *2:-* உவமைகள்: *(37-71* அதிகாரங்கள்)

தீயோரின் தண்டனையும் நல்லோரின் வெற்றியும் உவமைகளில் கூறப்படுகின்றன. ஏனோக்கு ஒரு தெய்வப்பிறவியாகக் காட்சியளிக்கிறார். இதில் மூன்று உவமைகள் கூறப்படுகின்றன.

*4.* புத்தகம் *3:-* வானக விளக்குள்:- *(72-82* அதிகாரங்கள்)

இதில் ஏனோக்கைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் வருடங்களைப் பற்றியும் அவற்றின் கணக்கீடு பற்றியும் செய்திகள் உள்ளன. எழுத்தியல், கணிதம், வானவியல் போன்றவற்றின் தந்தையென ஏனோக்கு போற்றப்படுகிறார்.

*5.* புத்தகம் *4:-* கனவுக் காட்சிகள்:- *(83-90* அதிகாரங்கள்)

இரண்டு காட்சிகள் விவரிக்கப்படுகின்றன. முதல்காட்சி தண்டனையின் பெருவெள்ளத்தைப் பற்றியும், தவறிய வானதூதர்களைப் பற்றியும் கூறுகிறது. இரண்டாம் காட்சி ஆதாமிலிருந்து ஏனோக்குவரை நடந்த நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. இதில் கற்பனையாகக் குறிப்பு உருவகம் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, எருதுகள் முன்னோர்களுக்கும், ஆடுகள் இஸ்ராயேல் மக்களுக்கும் உருவகப்படுத்தப்படுகின்றன.

*6.* புத்தகம் *5:-* ஒழுக்க அறிவுரைகள்:-*(91-105* அதிகாரங்கள்)

ஏனோக்கு, தீயோரின் தண்டனையையும், நல்லோரின் வாழ்வையும் முன்னுரைக்கின்றார். இதில் *10* வாரங்களில் நிகழ்ந்த வெளிப்

பாடு வர்ணிக்கப்படுகிறது. இதில் படிப்படியாக தீமை எப்படி ஒழிக்கப்படுகின்றது என விளக்கப்படுகிறது.

*7. முடிவுரை:- (106-108 அதிகாரங்கள்)*

முடிவுரையிலும் இறுதித் தீர்ப்பின் தன்மைகள் கூறப்படுகின்றன. இந்நூல் ஒரு சிக்கலான நூலாகும். இதில் காணப்படும் கருத்துக்களும், அவை கையாளப்பட்டுள்ள விதமும் ஒழுங்காக அமையவில்லை. இந்நூலின் செல்வாக்கு பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களில் காணப்படுகிறது. இந்நூலில் காணப்படும் பலகருத்துக்கள் புதிய ஏற்பாட்டு நூல்களில் காணப்படுகின்றன. திருச்சபையின் தந்தையரும் இதைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் செல்வாக்கு நெடுங்காலத்திற்கு நீடித்தது.

**ஏனோசு** (ENOSH - *மனுக்குலம், மனிதன்)*

சேத்தின் மூத்த மகன். ஆகாமின் பேரன். கேனாவின் தந்தை (ஆதி 4:26; 5:6-11; 1 நாள் 1:1; லூக் 3:38). ஏனோசின் மொத்த வாழ்நாட்கள் 905 ஆண்டுகள்.

ஏனோசு காலத்தில்தான் 'யாவே வழிபாடு' அதாவது ஆண்டவரின் திருப்பெயரைச் சொல்லி வழிபடும் முறை தொடங்கப்பட்டது என்று யாவே பாரம்பரியம் எடுத்துரைக்கிறது (ஆதி 4:26).

**ஏன்** (EN - *ஊற்று)*

ஊற்றைக் குறிக்கும் எபிரேயச் சொல். ஊற்றுக்கருகில் உள்ள இடங்களின் பெயர்களுக்குமுன் இச்சொல் சேர்க்கப்படுகிறது.

உ.ம். ஏன் சேமசு, ஏன்-தப்புவாகு.

**ஏன் சேமசு** (EN-SHEMESH - *சூரியன் ஊற்று)*

யூதாவின் வட எல்லையிலும் (யோசு 15:7), பென்யமீனின் தென் எல்லையிலுமாய் (18:7) அமைந்துள்ள ஓர் ஊற்றாகும். எருசலேமுக்குக் கிழக்கே 4 கி.மீ. தொலைவிலும் பெத்தானியாவுக்குக் கிழக்கிலும் அயின் ஏல்-கோத் என்ற இடம் இதற்கு அடையாளம் காட்டப்படுகிறது. எருசலேமையும் யோர்தான் பள்ளத்தாக்கையும் இணைக்கும் பாதையில் உள்ள கடைசி நீரூற்றாகும். கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாரம்பரியப்படி, அப்போஸ்தவர்கள் இந்நீரூற்றில் நீர் அருந்தினர். அப்போதிலிருந்து இது ''அப்போஸ்தலர்களின் நீரூற்று'' என்றழைக்கப்படுகிறது.

**ஏன் தப்புவாகு** (EN-TAPPUAH - *தப்புவா ஊற்று)*

மனாசேயின் தென் எல்லையில் தப்புவாகு அருகில் அமைந்துள்ள ஒரு நீரூற்று (யோசு 17:7). தப்புவாகு என்ற ஊர் அநேகமாக எப்பிராயிம் புதல்வரின் கைவசமாய் இருந்தது எனலாம் (17:8). நீரூற்றால் பயனடைந்த இடம் மனாசேக்குச் சொந்தமாயிருந்தது. அவர்களைப் பாதுகாத்த பெரிய ஊர் எப்பிராயீமுக்குச் சொந்தமாய் இருந்ததாகத் தெரிகிறது. இந்த இடம் செக்கேமுக்குத் தெற்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள யாசூப் நீரூற்றாக இருக்கலாம்.

**ஏன் - மிசுபாத்து** (EN-MISHPHAI - *தீர்ப்பின் ஊற்று)*

நெகேபில் உள்ள ஒரு பாலைவனச் சோலை. ஒரு வழிபாட்டு இடமாகவும் இருக்கலாம். இங்குக் கெதர்லாகேமோரும் அவரது கூட்டணி அரசர்களும் அமலேக்கியர்களைத் தோற்கடித்தனர் (ஆதி 14:7). இது பிற்காலத்தில் காதேசு அல்லது காதேசு-பார்னேயா என்றழைக்கப்பட்டது. காண்க: காதேசு

**ஏன்-ரிம்மோன்** (EN-RIMMON - *(மாதுளை ஊற்று)*

சிமியோன் கோத்திரத்திற்குக் கிடைத்த நகரங்களில் ஒன்று (யோசு 19:7; 1 நாள் 4:32). பின்பு யூதாவிலுள்ள கோர்மாவின் நெகேபு மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது (யோசு 15:32).

நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்கள் ஏன்-ரிம்மோனில் மீண்டும் குடியேறினர் (நெக 11:29). இவ்விடம் பேயேர்-செபவுக்கு

வடகிழக்கில் 14 கி.மீ. தொலைவில் பெயிட்-இப்ரின் நோக்கிச் செல்லும் சாலையில் உள்ள கிர்பெத் உம்மா-ஏர்ரமாமின் என்று அடையாளம் காட்டுவர். எழுபது நூல் வாசகத்தைப் பின்பற்றி யோசு 15:32; 1 நாள் 4:32-இல் வரும் அயினும் ரிம்மோனும் சேர்த்து அயின்-ரிம்மோன் அதாவது ஏன்-ரிம்மோன் என்று வாசிக்கப்படவேண்டும். கிறிஸ்துவக் காலத்தில் ஏன்-ரிம்மோன் ஒரு பெரிய கிராமமாக விளங்கியது என்று யுசேபியு கூறுகிறார்.

**ஏன் ரோகேல்** (EN-ROGEL - வண்ணான் ஊற்று)

எருசலேமிற்கு அருகில் கிதரோன் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு நீர் ஊற்று. யூதாவுக்கும் பென்யாமின் பகுதிகளுக்கும் எல்லையாக அமைந்திருந்தது (யோசு 15:7). தாவீது தனது மகன் அபிசலோமுக்குப் பயந்து ஒடிந்திரிந்த போது, கிளர்ச்சி செய்யும் தன் மகனது திட்டத்தைப் பற்றி முக்கியமான செய்தியை இங்குதான் பெற்றார் (2 சாமு 17:17). தாவீதின் இரண்டாம் மகன் அதோனியா, இந்த ஊற்று அருகிலுள்ள சோகெலத்து என்ற பாம்பின் கல்லின் அருகில் இரகசியமாக முடிசூட்டிக்கொள்ள முயற்சித்தார் (1 அர 1:19).

கிதரோன், இன்னோம் பள்ளத்தாக்குகள் சந்திக்கும் இடத்தில், ஆலயப் பாதைக்குச் சிறிது கீழேயும், கிகோன் ஊற்றுக்கு மிகவும் தாழ்ந்த இடத்திலும் அமைந்துள்ளது இந்த ஊற்று. எருசலேமுக்கு நிலையாக நீர் தந்தது. இந்த ஊற்று 37 மீட்டர் ஆழமுடையது. ஒருவேளை நெக 2:13-இல் வரும் நரியின் கிணறு அல்லது பறவை நாகம் என்ற நீரூற்று ஏன் ரோகேலையே குறிக்கலாம். இதன் இக்காலப் பெயர் பீர் அய்யூப் (யோபின் ஊற்று) என்பதாகும். ஏனெனில் அராபியர் பாரம்பரியப்படி யோபு, தனது நோய்களினின்று இங்குதான் குணமானார். யூதப் பாரம்பரியம் இதை யோவாபின் ஊற்று என்றழைக்கிறது. ஏனெனில் அதோனியா இங்கு அழைத்தவர்களுள் தாவீதின் படைத் தலைவன் யோவாபும் இருந்தார்.

# ஐ

## ஐசீஸ் (ISIS)

ஓர் எகிப்தியத் தேவதை. ஓசிரிசினுடைய மனைவியும், கோருசினுடைய தாயும் ஆவார். முற்கால எகிப்து நாட்டில், வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, இத்தேவதையை மேலான தாய்த்தேவதையாகவும், மண்ணின் படைப்புச் சக்தியின் உருவமாகவும் வழிபட்டு வந்தனர். இவளிடம் பெரும் மாய சக்திகள் இருந்ததாகவும், குழந்தைகளின் பாதுகாவலாகவும் கருதப்பட்டாள். தொடக்கத்தில் தெற்கு எகிப்து நாட்டில் இருந்த பெண்னிதுஸ் என்பவர்கள் மட்டுமே வழிபட்டு வந்த தேவதையாக ஐசீஸ் இருந்த போதிலும், விரைவில் பலர் வழிபடும் தேவதையாகப் புகழ்பெற்று விளங்கினாள். பல செமித்திய, கிரேக்க, உரோமைத் தேவதைகளோடு ஐசீஸ் ஒன்றுபடுத்தப்பட்டதால் முற்கால உலகம் முழுவதிலும் அவள் வழிபாடு பரவியது. இவள் வழிபாடு உரோமையர்கள் மத்தியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை நிலவியது.

## ஐசோரோ (AESORA)

கோபா மற்றும் சாலேம் பள்ளத்தாக்குடன் சேர்ந்த ஒரு நகரம் (யூதி 4:47); யோசு 11:1-10; நீதி 4:2.17-இல் வரும் காசோரும் இந்நகரமும் ஒன்றே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். நப்தலியில், கலிலேயாக் கடலுக்கு வடக்கேயுள்ள இன்றையத் தேல்-ஏல்-கேதா அன்றையக் காசோர் நகரமாகும்.

## ஐந்நூல் அல்லது தோரா (PENTATEUCH OR THORAH)

1. பெயர்:-

விவிலியத்தின் முதல் ஐந்து நூற்கள் அடங்கிய தொகுப்பை யூதர்கள் ''தோரா'' என்றழைத்தனர். 'தோரா' என்ற சொல்லுக்குக் கோட்பாடு, போதகம், கல்வி புகட்டுதல், வழி, சட்டம் என்பன போன்ற பல பொருள் உண்டு. ஆனால் சட்டம் என்ற பொருளே வழக்கில் நிலைபெற்றது. ''மோசேயின் சட்டம்'' என்றும் இத்தொகுப்பு அழைக்கப்பட்டது. இத்தொகுப்பின் பெரும்பகுதி சட்டங்களாகும். மேலும் எப்பொருள் பற்றியும் இறைவன் வெளிப்படுத்தும் விருப்பமே அப்பொருளுக்குரிய சட்டமாகும். மனிதனை மீட்க வேண்டும் என்ற இறைவன் யாவேயின் விருப்பத்தை அல்லது வழியைத் ''தோரா'' வெளிப்படுத்துவதால் இந்நூல் ஒரு சட்டமாகும். எந்தப் பொருளில் எடுத்துக் கொண்டாலும் இது யூதர்களின் சட்ட அமைப்பாகும். அவர்களின் உரிமைப் பத்திரமாகும். இஸ்ராயேலின் வாழ்க்கை மையமாகும். யூத மக்களின் சமய, சமூக வாழ்க்கையை வகுத்து, ஒழுங்குமுறை செய்யும் அடிப்படைச் சட்டமாகும். இத்தொகுப்புக்குத் ''தோரா'' என்ற பெயர் அளிக்கப்பட்டிருந்ததற்குக் காலத்தால் முந்திய சான்று சீராக் ஆகமத்தின் முன்னுரையில் காணக்கிடக்கிறது. இது பற்றிய மேலும் சில குறிப்புகள் எஸ் 6:18; 10:13; நெக 8:2; 13:1; 2 நாள் 25:4; 30:15; 35:12-இல் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கியபோது, இச்சொல் ஏற்கெனவே வழக்கில் இருந்தது (மத் 5:17; மாற் 12:16; லூக் 2:22; 10:26; யோவா 1:17; உரோ 2:12). எபிரேய மொழி பேசிய யூதர்கள் விவிலியத்தின் இம்முதல் தொகுப்புக்குச் 'சட்டத்தின் ஐந்தில் ஐந்து பாகம்'' என்ற மற்றொரு பெயரும் கொடுத்தனர். இதிலிருந்து ''தோரா'' ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டதற்குப் பின்வரும் காரணம் காட்டலாம். பழங்காலத்தில் நாணற்புல்லால் (பாப்பிரஸ்) செய்யப்பட்ட தாளில் எழுதினர். அல்லது தோலினால் செய்யப்பட்ட தாளில் எழுதினர். இவ்வாறு எழுதப்பட்டவை சுருள் சுருளாக இருக்கும். தோரா முழுவதும் ஒரே நீண்ட சுருளில் எழுதப்பட்டிருந்ததால் அது மிகப் பெரிதாக இருந்திருக்கும். அன்றாடப் பழக்கத்திற்கு மிகப் பெரியதாக இருப்பது இடைஞ்சலாக இருந்திருக்கும். ஆகையால் ஒரே சுருள் ஏறக்குறைய சமமான ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டு ஐந்து உறைக் கூடுகளில் வைத்துக் காப்பாற்றப்பட்டது. காலப்போக்கில் இப்பிரிவே வழக்கில் நிலைத்துவிட்டது எனலாம். ''சட்

டத்தின் ஐந்தில் ஐந்து பாகம்'' என்ற எபிரேயப் பெயரைக் கருத்தில் கொண்டு, இரேக்க மொழி பேசிய யூதர்கள் ''ஐந்து பகுதியுள்ள நூல்'' என்று பொருள்படும் ''பெண்டாடெயுக்கோஸ்'' என்று இத்தொகுப்பை அழைத்தனர். ''பெண்டா'' = ஐந்து; ''டெயுக்கோஸ்'' =கருவி, கலம், தாழி. பெண்டாடெயுக்கோஸ் என்பது முதலில் எழுத்துச் சுருளை வைத்திருந்த தாழியைக் குறித்தது; இந்தக் கிரேக்கச்சொல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே வழக்கில் இருந்துள்ளது. தோரா ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டது அதற்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். திருநூலின் கிரேக்க மொழிபெயர்ப்பான எழுபது நூல் தோராவை ஐந்து பாகமாகக் கொண்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே வழக்கில் இருந்திருக்க வேண்டும். பெண்டாடெயுக்கோஸ் என்பது இலத்தீன் மொழியில் ''பெண்டடெயுக்குஸ்'' என்று எழுத்துப் பெயர்ப்பாயிற்று. இதைக் கருத்தில் கொண்டு, இத்தொகுப்பை ''ஐந்நூல்'' என்றழைக்கலாம். இக்கட்டுரைத் தொடரில் இத்தொகுப்பைத் தோரா என்றும், ஐந்நூல் என்றும் அழைப்போம். இரண்டும் ஒரே தொகுப்பைக் குறிக்கவல்லன.

2. ஐந்து பாகங்களின் பெயர்கள்:-

ஒரே நூலாகிய தோரா, பிரிக்கப்பட்டு ஐந்து உறைக்கூடுகளில் அல்லது தாழிகளில் வைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் ஒவ்வொரு பகுதியும் ஒரு நூலாகக் கருதப்பட, ஐந்நூல்கள் கொண்ட ஒரு தொகுப்பாகத் தோரா கருதப்பட்டது. ஒவ்வொரு பாகத்திற்கும் தனிப்பெயர் அளிக்கப்பட்டது. எபிரேய மரபில் ஒருநூலுக்கு அது தொடங்கும் முதல் வார்த்தையைப் பெயராகக் கொடுப்பதுண்டு. அதைப் பின்பற்றி. இவ்வைந்து நூலுக்கும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மாறாகக் கிரேக்கப்படிவமான எழுபதுநூல் நூலின் பொருளடக்கத்தைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் பெயர் கொடுக்கிறது.

இவ்வாறு முதல் நூல், எபிரேயத்தில் 'தொடக்கத்தில்' என்ற பொருள்படும் ''பெரேசித்'' என்ற சொல்லோடு தொடங்குகிறது. ஆகையால் எபிரேயத்தில் அச்சொல்லையே முதல் நூல் தன்பெயராகக் கொண்டுள்ளது. மாறாக, முதல்நூல் உலகம் உண்டாக்கப்பெற்ற வரலாற்றோடு தொடங்கி, உலகமும் அதன் பொருட்களும் தோன்றிய வரலாற்றைக் கூறுவதால் ''தொடக்கம்'' என்று பொருள்படும் ''கெனேசிஸ்'' என்று இந்நூலை அழைத்தது எழுபதுநூல். நாம் தமிழில் ''ஆதியாகமம்'' என்றும் ''தொடக்கநூல்'' என்றும் அழைக்கிறோம்.

இரண்டாவது நூல் எபிரேயத்தில் ''இவை தான் பெயர்கள்'' என்ற பொருள் உள்ள பெயரைக் கொண்டுள்ளது. எழுபது நூல் இந்நூலை ''வெளிப்போதல்'' என்றழைத்தது. ஏனெனில் இந்நூல் எகிப்திலிருந்து இஸ்ராயேல் கானான் நாட்டுக்குப் புறப்பட்ட வரலாற்றைத் தருகிறது. இதனை நாம் ''யாத்திரை ஆகமம்'' அல்லது ''விடுதலைப் பயணநூல்'' என்றழைக்கிறோம். மூன்றாவது நூல் எபிரேயத்தில் ''அவர் அழைத்தார்'' என்ற பொருளுள்ள பெயரைக் கொண்டுள்ளது. இந்நூல் லேவிகுலக் குருக்களுக்குரிய சட்டத்தைக் கொண்டுள்ளது. ஆகையால், எழுபது நூல் இதனை ''லேவியர் சட்டம்'' என்றழைத்தது; நாம் ''லேவியர் ஆகமம்'' அல்லது ''வழிபாட்டு நூல்'' என்றழைக்கிறோம். நான்காவது நூல் எபிரேயத்தில் ''அவர் பேசினார்'' என்று பொருள்படும் பெயராலும், ''பாலைவனத்தில்'' என்று பொருள்படும் பெயராலும் அழைக்கப்பட்டது. இந்நூலின் முதல் நான்கு அதிகாரங்கள் கணக்கெடுப்பைப் பற்றிக் கூறுகின்றன. ஆகையால் எழுபதுநூல் இதை ''எண்ணுதல்'' அல்லது கணக்கெடுப்பு என்றழைத்தது. நாம் எண்ணாகமம் அல்லது ''எண்ணிக்கைநூல்'' என்றழைக்கிறோம். ஐந்தாவது நூல், எபிரேயத்தில், ''இவை (மோசே பேசிய) சொற்கள்'' என்று பொருள்படும் பெயரால் அழைக்கப்பட்டது. இந்நூலின் பெரும்பகுதி சட்டங்களால் ஆனதாகும். ஆகையால் எழுபது நூல் இதை ''இரண்டாம் சட்டம்''என்றழைத்தது. நாம் இதை ''உபாகமம்'' அல்லது ''துணை

அல்லது இரண்டாம் சட்டநூல்'' என்றழைக் கிறோம்.

தோரா, யூத வேத இலக்கியங்களில் உண்மையில் ஒரே நூலாக விளங்கியது. இது இஸ்ராயேலின் வரலாற்றின் முக்கியத்துவமிக்க சீனாய் உடன்படிக்கை நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு விளங்குகிறது. இவ்வுடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டங்கள் மோசேயால் அளிக்கப்பட்டனவாகக் கருதப்பட்டன. வரலாற்று நிகழ்ச்சிகளும் சட்டங்களும் அடங்கிய இத் தொகுப்புக்கு இவ்வுடன்படிக்கை ஒருமைப்பாட்டை அளிக்கிறது; பொருள் அளிக்கிறது. வரலாற்று நிகழ்ச்சியுரைகள் இச்சட்டத் தொகுப்பிற்குப் பணிச்சட்டமாக அமைகின்றன.

3. பிரச்சனை:-

தோரா என்ற இந்நூலை யார் எழுதியது? இந்நூல் எப்படித் தோன்றியது? இக்காலத்தில் வெளிவரும் நூல்களுக்கு இக்கேள்விகள் பெரும்பாலும் எழுவதில்லை. நூற்பெயரையும், முன்னுரை முதலியவற்றையும் பார்த்தால், நூல் தோன்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் விவிலிய நூல்களில் இச்செய்திகள் காணப்படுவதில்லை. ஆகையால் நம்மால் முடிந்த மட்டும் நூலையே ஆராய்ந்து இச்செய்திகளைச் சேர்க்க வேண்டும். இந்த முறை பொதுவாக இலக்கியப் பகுப்பாராய்ச்சி என்றழைக்கப்படும். இது நூலின் மூல வாசகங்களைக் கவனத்தோடு பகுத்து ஆராய்ச்சி செய்து கருதுகோள் அமைத்தலாகும்.

கிறிஸ்துவ சகாப்தத் தொடக்கத்திலிருந்து, திருச்சபையில் தோராவாகிய இவ்விலக்கியத் தொகுப்பின் பெரும் பகுதிக்கு மோசே ஆசிரியர் என்று கூறப்பட்டது. இது பற்றி, இயேசுவோ அப்போஸ்தலர்களோ எவ்வினாவும் எழுப்பவில்லை (யோவா 1:45; 5:45-47; உரோ 10:5). நமக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பழைய பாரம்பரியங்களும் மோசேதான் ஐந்நூல் முழுவதையும் எழுதினார் என்று வெளிப்படையாகக் கூறியதில்லை. ஐந்நூலே மோசே எழுதினார் என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய போதும், இது குறிப்பிட்ட பகுதிகளையே குறிக்கிறது. இந்நூலுக்கு மோசேதான் ஆசிரியர் என்பதைக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை யூதர்களோ, கிறிஸ்தவர்களோ ஐயுற்றதாகத் தெரியவில்லை. அதன்பின் பல ஐயப்பாடுகள் எழுந்தன. இவற்றிற்கு இந்நூலின் பொருளடக்கமும் இலக்கிய நடையும் இடம் அளிப்பதாகத் தெரிகிறது. இந்நூலைப் பலர் எழுதியிருக்கக்கூடும் என்பதைக் காட்டுவதாகத் தெரிகிறது.

இந்நூலை நாம் முதலில் வாசிக்கும்போது நமது பட்டறிவு என்ன? சில சமயங்களில் இந்நூலின் வாசகங்கள் மந்தமாயுள்ளன. அயர்ச்சி தருகின்றன, சோர்வு கொடுக்கின்றன. பொருளற்றவையாகத் தோன்றுகின்றன. உலகப்படைப்பு பற்றி இரு விவரிப்புகள் உள (ஆதி 1:2-2:4; 2:4-24). முதல் அதிகாரத்தில் மனிதன் இறுதியில் படைக்கப்படுகிறான். இரண்டாவது அதிகாரத்தில் மனிதன் முதலில் படைக்கப்படுகிறான். ஆதாமின் சந்ததியினர் மரபுமுறை இருமுறை தரப்படுகிறது (ஆதி 4:25-26; 5:1-31). பெருவெள்ளம் பற்றி இரு விவரிப்பைக் காணலாம் (ஆதி 6:5-9:18). ஆகார் இருமுறை வெளியனுப்பப்படுகிறாள் (ஆதி 16:6; 21:14). மோசேயை யாவே இருமுறை அழைக்கிறார் (யாத் 3-4). மன்னா பொழியும் அருஞ்செயல் இருமுறை விவரிக்கப்படுகிறது (யாத் 16; எண் 11). குலமுதியவரின் மனைவி இருமுறை அந்நிய அரசனால் அவனது மாதர் பகுதிக்குள் அழைத்துச் செல்லப்படுகிறாள் (ஆதி 12:15; 20:2). பத்துக் கற்பனைகளின் விவரிப்பு இருமுறை வருகிறது (யாத் 20; உப 5).

மோசேயின் மாமன் ஓர் இடத்தில் இரகுவேல் என்றும் (யாத் 2:18). மற்றோர் இடத்தில் இத்திரோ என்றும் (யா 3:1, 18:1) அழைக்கப்படுகிறார். இறைவனது பெயர் ''யாவே'' யாத் 3:14-இல்தான் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் ஏற்கெனவே ஆதி 2:4-இலும், ஆதி 4:26-இலும் காணப்படுகி

றது. விளைபொருட்கள், விலங்குகள் சில வாரங்களுக்குள் பல தடவை அழிந்து போவதாகப் பத்து வாதை நிகழ்ச்சியுரையில் காட்டப்படுகிறது. இது அறிவுக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. நிகழ்ச்சியுரைகள் தொடர்பின்றிக் காணப்படுகின்றன. சான்றுகள் பெருவெள்ளம் பற்றிய விவரிப்பு; யாத் 4:19; யாத் 2:23-ஐ அடுத்து வரவேண்டும்; யாத் 19:25-ஐயும் அடுத்த வரியையும் பார்க்க. கோராகுவின் கலகக்கதையிலிருந்து தாத்தான், அபிரோன் கலகக் கதையை முழுவதும் அகற்றிவிடலாம் (எண் 16); இப்படிப் பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

சில இடங்களில் இறைவன், கடவுள் எனப்படும் பொதுப்பெயரில் ''எலோகிம்'' என்றும், சில இடங்களில் ''ஆண்டவர்'' எனப்பொருள்படும் ''யாவே'' என்ற பெயரிலும் மற்ற இடங்களில் ஆண்டவராகிய கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார். யாத்திரை ஆகம மலை சீனாய் என்றும் கோரேபு என்றும் அழைக்கப்படுகிறது. சில சமயம் எழுதும் பாணி உயிருள்ளதாகவும், அழகாகவும், சொற்பொழிவு போலவும், மனிதப் பண்புமிக்கதாயும், உளது; மற்ற இடங்களில் வறட்சியாகவும், மாறுதலற்றதாகவும், சலிப்பைத் தருகிறதாகவும், திட்டம் செய்ததாகவும் இருக்கிறது. ஐந்நூலில் பலவகை இலக்கிய அமைப்புகளைக் காணலாம்.

இவைபோன்றவை விவிலிய ஆராய்ச்சியாளர்களைச் சிந்திக்கச் செய்தன. பல வினாக்களும் ஐயங்களும் எழுந்தன. ஆய்வாளர்கள் தோராவின் வாசகங்களைப் பகுத்து ஆராய்ந்து பல கருதுகோள்களை வெளியிட்டனர். விளக்கங்களையும் தந்துள்ளனர். இவற்றைச் சிறிது நாம் அறிந்திருப்பது நன்று.

*4. ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சி:-*

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சி-திறன் ஆய்வு-கடந்த இருநூறு ஆண்டுகளாக நடந்துவருகிறது. கி.பி 1678-இல் ரிச்சர்டு சீமோன் என்ற குரு பழைய ஏற்பாடு பற்றி ஒரு திறனாய்வு நூலை வெளியிட்டார். கத்தோலிக்கர்களும் பிரிவினைச் சகோதரர்களும் இந்நூலைக் கண்டனம் செய்து, வாசிக்கப்படக்கூடாத நூலாக ஆக்கினர். ஆயினும் அவர்செய்த தொடக்க முயற்சிக்காக, அவர் விவிலியத் திறன் ஆய்வின் தந்தையென அழைக்கப்படுகிறார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவரும் கத்தோலிக்கருமான ஜான் ஆஸ்ட்ருக் என்பவர் ஆதியாகமம் பற்றி ஓர் இலக்கியப் பகுப்பாராய்ச்சி நூலை 1753-இல் எழுதினார். ஆதியாகமத்திற்கு இருமூலங்கள் இருந்திருக்க வேண்டும் என்று இவர் கருதினார். இறைவனுக்கு யாவே என்ற பெயரைப் பயன்படுத்தும் பகுதிகளைப் பிரித்து யாவே பாரம்பரியம் என்றார். ''எலோகிம்'' என்ற பெயரை இறைவனுக்குச் சாற்றிக்கூறும் பகுதிகளை எலோகிம் பாரம்பரியம் என்றார். இவை ஏற்கனவே இருந்தவை; இவற்றை ஒன்று சேர்த்து மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்றார். இது ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளின் தொடக்கமாகும். இந்நூலைக் கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆதரிக்கவில்லை. ஏய்க்கார்னும் (1780), இல்கென்னும் (1798) எலோயிம் பாரம்பரிய ஏடுகளில் கவனம் செலுத்தினர். இதில் மூன்று மூலங்கள் இருப்பதாகக் கண்டனர். இதில் ஒன்று, பிற்காலத்தில், குருக்கள் பாரம்பரியம் என்றழைக்கப்பட்டது. கெடெஸ் (1792), வாட்டர் (1802) போன்றவர்கள் நிகழ்ச்சியுரைகளில் காணப்படும் ஏறுமாறான தன்மையால் ஈர்க்கப்பட்டனர். இவர்கள் ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளை நிராகரித்துவிட்டு, துணுக்கு ஏடு கருதுகோளை மேல் எனக் கருதினர். இதன்படி பல தொடர்பற்ற பகுதிகள் வெறுமனே சேர்த்துத் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளியிடப்பட்டன. இவால்டு என்பவர் (1831). ''ஐந்நூலுக்கு ஓர் அடிப்படை ஏட்டு மூலம் இருந்தது; அதோடு பிற மூலங்களிலிருந்தும் பல பகுதிகள் சேர்க்கப்பட்டன'' எனக் கருதினார்.

கெப்பெல்டு (1853) ஏடுகள் கருதுகோளைப் புதுப்பித்தார். ஆதியாகமத்தில் இரு எலோகிம் பாரம்பரியங்களும் (எலோகிம், குருக்கள் பாரம்பரியங்கள்) ஒரு யாவே

பாரம்பரியமும் இருப்பதாக அவருக்கு முந்திய ஆராய்ச்சியாளர்களைவிடத் தெளிவாகக் காட்ட முயன்றார். குருக்கள் பாரம்பரியத்தை மிகப் பழையதாகவும், அடிப்படையானதாகவும் கருதினார். அவருக்குப்பிறகு ரீம் (1854) என்பவர் உபாகமப் பாரம்பரியத்தைப் பிரித்துக் காட்டினார். இம்முயற்சிகள் தோராவில் நான்கு பாரம்பரியங்கள் இருப்பதாகக் காட்ட முயன்றன; நான்கு பாரம்பரியக் கருதுகோளுக்கு உறுதியாக அடிகோலின. இக்கருதுகோளை உறுதிசெய்வதும் விவரங்களைத் திருத்தி அமைப்பதும் ஆகிய வேலைகள் இன்னும் நிறைவுபெறாதிருந்தன.

ரேயுஸ் (1833), கிராப் (1866), கோஸ்டர்ஸ் (1868), குயெனென் (1870), வெல்காசன் (1878) ஆகியோரின் அயரா உழைப்பால் ஒரு கருதுகோள் உருவெடுத்தது. இதன்படி, ஐந்நூல் நான்கு பாரம்பரியங்களின் கலவையாகும்; இவ்வேடுகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றியவை. இவ்வேடுகள் தோன்றிய காலத்தைக் குறிப்பாக வரையறுப்பது, இக்கருதுகோளுக்கு வேண்டிய பணித்திட்டத்தை அளித்தது. இக்கொள்கைப்படி முதலில் ''யாவே ஏடு'' ''எலோகிம் ஏடு'' என இரு பாரம்பரிய ஏடுகள் இருந்தன. யாவே ஏடு, கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் யூதேயாவில் எழுத்து வடிவம் எடுத்தது. சிறிது காலத்திற்குப்பின் வடஅரசாகிய இஸ்ராயேலில் எலோகிம் ஏடு எழுதப்பட்டது (சாலமோன் ஆட்சிக்குப் பின், யூதர்களின் அரசு இரண்டாகப் பிரிந்தது. சாலமோனின் புதல்வர்கள் ஆண்ட தென்பகுதி யூதா என்றழைக்கப்பட்டது. பிரிந்து சென்ற வடபகுதி இஸ்ராயேல் என்றழைக்கப்பட்டது). வட அரசாகிய இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் இவ்விரு பாரம்பரிய ஏடுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. யோசியா காலத்துக்குப்பின் உபாகம ஏடு சேர்க்கப்பட்டது. உபாகம ஏடு, யோசியாவின் காலத்தில் (கி.மு. 622) ஆலயத்தில் கண்டுபிடித்த நூல்தான் என்று இவ்வாராய்ச்சியாளர்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது. இதனோடு ஒத்துப் பார்த்து மற்ற ஏடுகள் காலவரையறை செய்யப்பட்டன. யாவே, எலோகிம் ஏடுகள் பல வழிபாட்டு இடங்களை ஏற்றுக்கொள்ளுகின்றன. இதற்கு எதிராக உபாகமம் போராடுகிறது. ஆகவே யாவே, எலோகிம் ஏடுகள் உபாகம ஏட்டிற்கு முந்தியனவாக இருக்க வேண்டும். யூதர்கள் வெல்லப்பட்டு அடிமையாக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டபின் ஏற்கெனவே இருந்த தொகுப்போடு குருக்களின் பாரம்பரியம் சேர்க்கப்பட்டது. இப்பாரம்பரியம் ஒரே ஒரு புனிதத்தலத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆகவே இது உபாகம ஏடுகளுக்கு மிகப் பிந்தியதாகும். இதில் நிகழ்ச்சியுரைப் பகுதிகள் சிலவே. பெரும்பகுதி சடங்கு விவரிப்புகளையே கொண்டுள்ளது. இது ஏற்கனவே இருந்த தொகுப்புகளைக் கட்டிப் பிணைக்க உதவுகிறது.

இந்த ஒப்புமை சார்ந்த காலவரையறை, மற்ற ஒப்புமைச் சான்றுகளாலும் உறுதிசெய்யப்பட்டது. இவை இப்பாரம்பரியங்கள் எழுத்து வடிவமெடுத்த காலத்தை ஓர் அளவு உறுதியாக வரைமுறை செய்ய உதவின. இதன்படி யாவே ஏடு கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் தென் அரசாகிய யூதாவில் தோன்றியது. எலோகிம் ஏடு கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் வடஅரசாகிய இஸ்ராயேலில் தோன்றியது. உபாகம ஏடு கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு யூத ஆசிரியரால் எழுதப்பட்டதாகும். குருக்கள் பாரம்பரியம், நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் கி.மு.5-ஆம் நூற்றாண்டில் எருசலேம் குருக்களால் தொகுக்கப்பட்டதாகும். இந்நூல் தொகுப்பில் காணப்படுவதாகக் கருதப்படும் சமய, சமூக, சட்டக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு கால வரையறை செய்தனர். இக்கருதுகோளுக்காக வெல்காசன் என்ற அறிஞர் பெரிதும் பாடுபட்டார். இலக்கியத்திறனாய்வு இயலைப் பரப்பப் பெரிதும் பாடுபட்டார். ஆனால் வரலாறு, மெய்யியல் பற்றி அவர் முன்னர்க் கொண்டிருந்த அவரது முன்கருத்துக்கள் அவரது நூல்களின் கருத்துக்களை ஓரளவு பழுதாக்கின. இஸ்ராயேலின் அரசர் காலத்திற்கு முன்னிருந்த அவர்களின் வரலாற்றைத் திரும்பத்

திருத்தி அமைக்க முடியுமா என்பது பற்றி ஐயம் தெரிவித்தார். யாத்திரை, அலைந்து திரிதல், வெற்றி ஆகியவை பற்றிச் சில வரலாற்று விவரங்கள் தெரியலாம். இவற்றை வைத்துக்கொண்டு, இஸ்ராயேலரின் வரலாற்றை ஒன்றித்த, தொடர்ந்த, வரலாறாகத் திருத்தி அமைத்தல் முடியாததாகும் என்றார். யாத்திரைக்கு முந்தியவை யாவும் வெறும் கட்டுக் கதையும் கற்பனையுமாகும் என்றார். எனவே இஸ்ராயேலரின் வரலாற்றைச் சரியான சூழ்நிலையில் அமைக்க இவர்களுக்குப் போதிய சான்று கிடைக்கவில்லையாதலால், சமயவளர்ச்சி பற்றிய பரிணாமக் கொள்கையைப் பயன்படுத்தி, பழைய ஏற்பாட்டு இலக்கியத்தை ஆராயத் தலைப்பட்டனர். இந்த முறையில் இறைவனது இடையீட்டுக்கு இடமேயில்லை. ஆகவே மற்ற மக்களிடமிருந்து வேறுபட்ட விதத்தில் இஸ்ராயேலிடையே சமயம் வளர்ந்திருக்கக் கூடும் என்பதற்கு வழியில்லை. வெல்காசனுடைய இந்த ஒருதலைச் சார்பான போக்கால், அவருடைய கொள்கை ஆழ்ந்த உட்கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், பிறர் இக்கொள்கையை ஐயத்தோடு நோக்க இடமளித்தது; இதைப் பலர் எதிர்க்கவும் செய்தனர். ஆயினும் அவரது நான்கு பாரம்பரியக் கருதுகோளைச் சில மாற்றங்களுடன் அறிஞர் பலர் ஏற்றுக் கொண்டனர். அவரது மற்ற முடிவுகள் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை. இந்த ஏடுகள் பற்றிய கருதுகோள் அவரது பெயரால் அழைக்கப்படுவதும் உண்டு.

1906-இல் பாப்புவின் விவிலியக்குழு விடுத்த அறிக்கை இந்த ஏடுகள் பற்றிய கருதுகோளைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி கத்தோலிக்கர்களைக் கேட்டுக் கொண்டது. பொருள் அடக்க அளவில், ஐந்நூல் முழுமைக்கும் மோசேதான் ஆசிரியர் என்று கருதவேண்டும் என்று கேட்டுக் கொண்டது. மோசேக்கு முன்னர், வாய்மொழிப் பாரம்பரியங்களும், எழுத்துப் பாரம்பரியங்களும் இருந்திருக்கலாம் என்றும், மோசேக்குப்பின் பல திருத்தங்களும், பிற்சேர்க்கைகளும் நடந்திருக்கலாம் என்றும், இவ்வறிக்கை ஏற்றுக் கொண்டது, 1948-இல் கர்தினால் சுகார்டுக்கு எழுதிய திருமுகத்தில் இக்குழு ஐந்நூலுக்குப் பல மூலங்கள் இருந்திருக்கவேண்டும் என்பதையும், மோசேயின் சட்டம், வரலாற்று நிகழ்ச்சியுரைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பதையும், இவ்வளர்ச்சிக்குப் பிற்காலத்திய சமூக சமயநிலைகள் காரணம் என்பதையும் ஏற்றுக் கொண்டது.

இந்த ஏடுகளின் கொள்கை, அதன் மூல வடிவத்தில் மீண்டும் தர்க்கத்துக்குரியதாகியது. இக்கொள்கையை வரையறுக்க எடுத்த முயற்சிகள் யாவும் அது முடியாத காரியம் என்று காட்டின. அஃதோடு இலக்கியப் பிரச்சனை வரலாற்றுப் பிரச்சனையாக மாறியது. இந்நூல் எப்போது இறுதிவடிவம் எடுத்தது என்பதைவிட எந்த வாய்மொழிப் பாரம்பரியம் அல்லது எழுத்துமூலம் நூலின் பகுதிக்குப் பின்னணியாக உள்ளது என்பது சிறப்புப் பெற்றது; உடனடிப் பிரச்சனையாக மாறியது. இப்பிரச்சனையை அணுகும் புது முறை முழுவதும் இலக்கியம் சார்ந்ததாகவும் இல்லை; செயற்கையானதாகவுமில்லை; உண்மை நிகழ்ச்சிகளுக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைக்கும் நெருங்கியதாக மாறியது. ஆய்வாளர்களுக்கு இந்நூலின் மூலங்கள் மிகப்பழையனவாகத் தோன்றத் தொடங்கியுள்ளன. புதைபொருள் ஆராய்ச்சியும் தொல் பொருள் ஆராய்ச்சியும், இந்நூல் தோன்றியதாக இதுவரை கூறப்பட்ட காலத்திற்கு முன்பே இந்நூல் இருந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. வெல்காசன் போன்றவர்களின் ஐயப்போக்கிற்கு இடமே இல்லை என்றும் காட்டின. அவை, ஐந்நூலின் பல நிகழ்ச்சியுரைப் பகுதிகள் எழுதப்பட்டது எனக்கூறப்படும் சூழ்நிலைக்கு வேறுபட்டதும், காலத்தால் முந்தியதுமான சூழ்நிலையில் நடந்திருக்கக்கூடும் என்று காட்டுகின்றன.

ஐந்நூல் ஆராய்ச்சி பிற்காலத்தில் மூன்று திசைகளில் வளர்ந்தது. முதலாவது, ஆழ்ந்த இலக்கியப் பகுப்பாராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இந்நூல், வரலாற்றின்

ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஓர் ஆசிரியரால் ஒன்றுமின்மையிலிருந்து எழுதப்பட்டது அல்ல. ஒவ்வொரு பாரம்பரிய ஏடும் ஒரு கலப்பு இலக்கியமாகும். அவற்றின் அடிப் படையான மூலங்களைப் பிரித்தெடுக்க முயற் சிகள் செய்யப்பட்டன. பிரச்சனைகள் தெளி வாயின. அதேபோழ்து இப்பிரச்சனைகளை மற்றையக் கோணங்களிலிருந்தும் ஆராய வேண்டும் என்பதும் தெளிவாயிற்று.

இரண்டாவது திசை, வடிவம் பற்றிய திறனாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. இது ஐந்நூலை ஒரு முழு நூலாகக் கருத்தில் கொண்டு ஆராயவில்லை, மாறாக, அதில் காணப்படும் கதைகள், பாடங்கள் போன்ற தனிப்பட்ட சிறு பகுதி களை ஆராய்ந்து, இப்பகுதிகள் தோன்றவும், இலக்கியவடிவம் எடுக்கவும் அடிப்படை யான பழம் இஸ்ராயேலின் வாழ்க்கை நிலையை வரையறை செய்ய முயன்றது. இம்முறை, ஐந்நூலின் பெரும் பகுதிகள் மிகப் பழையன என்று காட்டியது. இஸ்ரா யேலின் இறையியல் பற்றிப் பல விளக்கங் கள் அளித்துள்ளது. ஐந்நூல் பற்றிய எந்தக் கருதுகோளையும் ஏற்றுக்கொள்ளுமுன் இன் னும் ஆழ்ந்த ஆய்வு இன்றியமையாதது என்று காட்டியது. இக்காலத்தில் இவ்வடி வம் பற்றிய திறன் ஆய்வுமுறையை ஏறக் குறைய எல்லா விவிலிய அறிஞர்களும் ஓர் அளவு பயன்படுத்துகின்றனர். இவ்விதம் ஐந்நூலை ஆராய்தல், ஏடுகள் கருதுகோ ளுக்கு மாறானது அல்லவென்றாலும் இதன் முடிவுகள் ஏடுகள் கருதுகோளைப் பாதித் தன.

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சியின் மூன்றாவது திசை, ஏடுகள் கருதுகோளையே அடியோடு மாற்றியமைத்தது எனலாம், ஏன் அதை நிராகரித்தது என்றுகூடச் சொல்லலாம். இம் முறை சுவீடனைச் சேர்ந்த உப்சாலா குழுவி னரால் புகுத்தப்பட்டது. இக்குழுவினரும், சிறப்பாக இவர்களுள் என்னெல் என்பவ ரும், யூதர்கள் நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வரும் வரை இஸ்ராயேலில் பரந்த அளவில் எழுத்து இலக்கியம் அமைக்கும் தொழில் இருந்தது என்பதை மறுத்தனர். நாடு கடத் தப்படுமுன் இஸ்ராயேலில் ஐந்நூலின் பொருள்கள் வாய் மொழிப் பாரம்பரியமாக வழிவழியாக ஒப்படைக்கப்பட்டன என்ற னர். வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத் தன்மையையும் இக்குழு வலியுறுத்தியது. ஐந்நூல் எழுத்து வடிவம் எடுத்த பின்னும் வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து அதைப் பாதித்தது. இந்நூலில் காணப்படும் பொருள்களில் பெரும் பகுதி பழமைமிக்கதாகும். இப்பழமைக்கு உயர் மதிப்புக் கொடுத்தது, வரவேற்கப்படவேண் டிய ஒரு திருப்பமாகும். வெல்காசின் குழு தனது முதிராத முடிவுகளால், இந்நூலின் பெரும்பகுதிகள் தோன்றிய காலத்தை மிக வும் பின்தள்ளிப் போட்டது. இதற்கு ஒரு திருத்தம் வேண்டியிருந்தது. உப்சாலாக்குழு, வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத் தன்மையையும் வலியுறுத்திய தோடு, பழமைக்குரிய மரியாதையையும் மதிப்பையும் அளித்தது.

இந்நூலின் பாரம்பரியங்கள், பொருள் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, இறுதி வடிவம் ஆகியவற்றைப் பற்றி எதையும் உறுதி யிட்டுக் கூறத் தயங்குவர் இக்கால அறிஞர் கள். ஆனால் குறிப்பிட்ட அம்சங்கள் பற்றி உறுதியான முடிவுகள் கூறலாம். இந்நூலில் இரட்டிப்பு உரைகள், இணை வடிவங்கள் இருப்பது நிலைநாட்டப்பட்டதொன்றா கும். இறையியல் சிந்தனை கருத்துக் குவி யல்களை ஒருங்கிணைக்கின்றது; அவற் றைப் பிணைத்துக் காட்டுகின்றன. மேலும் நடைப்போக்கு, சொற்றொகுதி ஆகியவை பற்றியும் தெளிவாகக் கூறலாம், இவை இஸ்ராயேலில் வளர்ச்சியடைந்த தனிப்பா ரம்பரியங்கள் இருப்பதைச் சுட்டுகின்றன. இப்பாரம்பரியங்களைப் பகுத்து யாவே, எலோகிம், உபாகமம், குருக்கள் பாரம்பரி யங்கள் என்று வசதியான முறையில் அழைக் கலாம். (இப்பாரம்பரியங்கள் விவிலிய இலக்கிய உலகில் முறையே J or Y,E,D,P ஆகிய எழுத்துக்களால் சுருக்கமாகக் குறிக்கப்படும்). இவற்றை ஒப்பிட்டுப் பார்த்து இத்தனிப்பாரம்பரியங்கள் எப்

போது இறுதிவடிவம் எடுத்தன என்று ஒரு வாறு பொருத்தமான காலவரையறையை நிலைநாட்டலாம்.

5. கத்தோலிக்கக் கருத்து:-

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சியைக் கத்தோலிக்கர்கள் தான் தொடங்கினர். ஆனால் இவ்வாராய்ச்சி கத்தோலிக்கர்களிடையே பெரும்பாலும் ஐயத்தையும் எதிர்ப்பையுமே எழுப்பியது. இலக்கியத் திறனாய்வையும் வரலாற்றுத் திறனாய்வையும் வேறுபடுத்த ஆய்வாளர்கள் தவறியதே இவ்வெதிர்ப்புகளுக்குக் காரணம். 19-ஆம் நூற்றாண்டு அறிவியல், மெய்யியல், இவ்விவிலியத் திறனாய்வை வெகுவாய்ப் பழுதுபடச் செய்துவிட்டன எனலாம். 19-ஆம் நூற்றாண்டு முடிவில், லாக்ரான்ஜ் போன்ற கத்தோலிக்க அறிஞர்கள் விவிலியத்திறன் ஆய்வில் அறிவியல் சார்ந்த முறையில் செல்லக்கூடிய கருத்துக்களைப் பிரித்தெடுக்க முயன்றனர். ஆனால் ''நவீன தப்பறைக் கொள்கை'' கத்தோலிக்க ஆராய்ச்சியைப் பாதித்தது; தடைசெய்தது. இச்சூழ்நிலையில் பாப்புவின் விவிலியக் குழு விடுத்த எச்சரிக்கையை முன்பே கூறினோம், இரு பெரும் போர்களுக்கிடையில் விவிலிய ஆராய்ச்சி சிறிது சிறிதாக வளர்ந்தது; வெல்காசினுடைய கொள்கையில் மிகைப்படுத்தப்பட்ட முடிவுகள் திருத்தப்பட்டன. 1943-இல் பாப்பு விடுத்த திருமுகம் கத்தோலிக்க விவிலிய ஆராய்ச்சிக்கு எல்லாவிதத்திலும் வாயிலைத் திறந்துவிட்டது எனலாம். ஆனால் ஓர் எச்சரிக்கையையும் விடுத்தது. விவிலிய ஆராய்ச்சியில் இலக்கிய வடிவம் பற்றிய திறனாய்வு முறையைப் பயன்படுத்துவது, ''இறைவனது புனிதத் தன்மைக்கும் உண்மைத் தன்மைக்கும்'' எவ்விதத்திலும் முரணாக இருக்கக்கூடாது. 1948 இல் கர்தினால் சுகார்டுக்கு பாப்புவின் குழு எழுதிய திருமுகத்தில் விவிலிய ஆராய்ச்சிக்கு மேலும் உற்சாகம் அளிக்கப்பட்டது. இவ்வாராய்ச்சிபற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதாவது:

''இறைவன் திருநூலில் மக்களது வழக்கப்படி மக்கள் வழியாகப் பேசினார். எனவே, திருநூலின் இறைவன் நமக்கு அளிக்க விரும்புவது என்னவென்பதை இன்னும் நன்கு உணரும்படி திரு ஆசிரியர்கள் உண்மையிலேயே கூற நினைத்ததின் பொருளையும் அவர்கள் சொற்கள் வழியே இறைவன் அளிக்க விரும்பியது என்ன என்பதையும் திருநூல் பொருள் உரையாளர் உன்னிப்பாக ஆராய வேண்டும்''.

''திரு எழுத்தாளர்களின் நோக்கத்தை ஆய்ந்தறிய மற்றவையோடு இலக்கிய அமைப்புகளையும் கவனிக்கவேண்டும். ஏனெனில் இலக்கிய உண்மையானது, வரலாறு, இறைவாக்கு, கவிதை இன்னும் பல்வேறு இலக்கிய அமைப்புகளில் வெவ்வேறு விதமாய் வெளியிடப்பட்டு விளக்கப்படுகிறது. இன்னும், தன் காலத்திற்கும் பண்பாட்டு நிலைமைக்கும் ஏற்ற வண்ணம் அக்கால வழக்கத்திலிருந்த இலக்கிய அமைப்புக்களை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பயன்படுத்தியதின் பொருள் என்ன என்பதைப் பொருள் உரையாளர் காண முயல வேண்டும். திரு ஆசிரியர் கூற விரும்பியதின் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள, அவர் காலத்தில் வழக்கிலிருந்த - உணரும், பேசும் எடுத்துக் கூறும் - இயல்பான முறைகளையும் அக்கால மக்கள் தம் அன்றாட வாழ்வில் ஒருவரோடொருவர் பழகும் போது பயன்படுத்திய முறைகளையும் ஆராய்ந்தறிதல் அவசியம்.''

''எந்த ஆவியானவரால் திருநூல் எழுதப் பெற்றதோ, அதே ஆவியானவரின் துணை கொண்டு, அதை நாம் படிக்கவும் அதற்குப் பொருள்விளக்கம் செய்யவும் வேண்டும். ஆகவே, திருநூலின் பொருளைச் சரிவரக் கண்டுணர்வதற்கு, அதில் பொதிந்து கிடக்கும் உண்மைகளையும், திருநூல் முழுவதின் ஒன்றிப்பையும் கூர்ந்து நோக்கவேண்டும். முழுத்திருச்சபையின் உயிருள்ள மரபும், விசுவாச உண்மைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைக் கோப்பும் கவனிக்கப்பெறவேண்டும். இவ்விதிகளைப் பின்பற்றித் திருநூலின் பொருளை நன்குணரவும் விளக்கவும் உழைப்பது, திருநூல் வல்லுநர்களின் கட

மையாகும். இத்தகைய ஆராய்ச்சியின் வழியே திருச்சபையின் நூலை விளக்கிப் பொருள்கூறும் வழிகளைப் பற்றிய இவை யாவும் இறுதியாகத் திருச்சபையின் தீர்ப்புக்கு உப்பட்டனவாகும். இறைவனின் வார்த்தையைக் காத்து விளக்கிப் பொருள் கூறும் இறைக்கட்டளையையும் இறைவனின் அலுவலையும் திருச்சபைதான் நிறைவேற்று கிறது.''

''இறைவனின் உண்மையும், புனிதத்தன்மையும் திருநூலில் பழுதின்றி இருக்க, காலங்கடந்த ஞானத்தின் வியப்பிற்குரிய இரக்கச் செயல்கள் திருநூலில் காட்டப்பட்டுள்ளன. இது சொல்லற்கரிய இறைவனின் இரக்கத்தைக் காட்டுகிறது. அவர் நம்மேல் கொண்ட பராமரிப்பை நமக்குப் புலப்படுத்துகிறது. அவர் நம்மீது அக்கறைகொண்டு தம் மொழியை எத்துணை அளவு நமக்கேற்ப மாற்றிக்கொண்டார் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. காலங்கடந்த தந்தையின் வார்த்தையானவர் தொடக்கத்தில் பலவீனம் நிறைந்த மனித உடலை ஏற்றபோது எவ்வாறு மனிதனைப் போல் இருந்தாரோ அவ்வாறே மனிதனின் மொழியில் வெளியிடப்பட்ட இறைவனின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன'' (இறை வெளிப்பாடு எண் 12:13).

6. எப்படித் தோன்றின?

யாவே பாரம்பரியம், எலோகிம் பாரம்பரியம், உபாகமப் பாரம்பரியம், குருக்கள் பாரம்பரியம் ஆகியவற்றை அவற்றின் இறுதி வடிவத்தில்தான் நாம் அறிவோம். ஆனால் இவை முதலில் எப்படித் தோன்றின? மேற்கூறப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டு, ஐந்நூல் எப்படித் தோன்றின என்பது பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக்கூற விழைகிறோம். ஐந்நூல் தோன்றிய வரலாற்றில் ஏழுபடிகளை நாம் வேறுபடுத்திக் கூறலாம்.

6.அ. முதல்படி: ஆபிரகாமிலிருந்து மோசே வரை:-

அலைந்து திரியும் ஆயர் வாழ்க்கையைக் கொண்ட கலாச்சாரம் எழுத்து வடிவ இலக்கியத்திற்கு எளிதில் ஆக்கமளிப்பதில்லை. சமயபோதகமும் குடும்ப வரலாறும் தந்தையிடமிருந்து மகனுக்கு வாய்மொழிப் பாரம்பரியமாக வந்தது. இறைவன் ஆபிரகாமுக்கு ஒரே இறைத்தன்மைக் கொள்கையைக் கற்பித்தார். ஆனால் ஆபிரகாமின் முன்னோர்கள் கொண்டிருந்த பாரம்பரியங்கள் பற்றிய நினைவு அவரிடமிருந்து ஒழிந்திடவில்லை. அவர்களின் செமித்தியப் பண்பாட்டுப் பின்னணிகொண்ட பல நாட்டுப் பாடல்களும் பழங்கதைகளும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் உண்மை இறைவனின் சேவையில் பயன்படுத்தப்பட்டன.

குல முதியவர்களின் குடும்பங்கள் குலமாகவும் இனங்களாகவும் வளர்ந்தபோது, அவரவர்களுக்குரிய பாரம்பரியங்களின் தொகுப்பும் வளர்ந்தன. ஒவ்வொரு குலத்தவரும், இனத்தவரும் தங்களது மூதாதையர் செய்தவற்றைத் தொகுத்து அருஞ்சொத்தாக ஞாபகத்தில் வைத்துக் காத்து வந்தனர் (ஆதி 38).

6.ஆ. இரண்டாம் படி: யாத்திரைக் காலம்: உடன்படிக்கையும் போர் வெற்றிகளும்:-

இஸ்ராயேலர் மக்கள், எகிப்தில் கொடுந்துயர் அனுபவித்தபின், சீனாய் மலைக்கு வந்தனர். அங்கே அவ்ர்களுக்கு ஓர் உன்னதமான அனுபவம் காத்திருந்தது. மோசே இஸ்ராயேலை அதன் இறைவன் யாவேயோடு உடன்படிக்கையால் பிணைத்தார். இறைவன் அவர்களுக்காக ஆற்றிய அருஞ்செயல்களின் பதிவேடுகளை இஸ்ராயேலின் முன்வைத்தார். அவற்றோடு அவர்களுடைய கடமைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தையும் அளித்தார். அப்போதுதான் ஐந்நூல் ஒரு நூலாக உருவெடுக்கத் தொடங்கியது எனலாம் (யாத் 24:4; 34:27; 17:14). எண் 33-ஆம் அதிகாரம் இஸ்ராயேல் செய்த யாத்திரையின் வழித்துறைப் படிகளைப் பதிவு செய்கிறது. ஆயினும் நாம் கொண்டிருக்கும் வடிவில், ஐந்நூலின் எப்பகுதிகள் மோசேயால் எழுதப்பட்டன என்பது பற்றி எதையும் தெளிவாகக் கூறமுடியாது. குலப் பாரம்பரியங்களில் சில மோசே காலத்திற்கு முன்பே

எழுத்து வடிவம் எடுத்திருக்கலாம். அல்லது நிலையான வாய்மொழிப் பாரம்பரிய உருவம் எடுத்திருக்கலாம். பத்துக் கற்பனைகளும் உடன்படிக்கைச் சட்டத்தின் பெரும்பகுதியும் மோசேயின் காலத்திய இஸ்ராயேலைப் பிரதிபலிக்கின்றன. இவை மோசேயிடமிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட சட்டங்களும் மோசே மனப் போக்குப்படி உருப்பெற்றன. ஆகவே அவை அவரது அதிகாரம் பெற்றவையாகக் காட்டப்பட்டன.

வாக்களிக்கப்பட்ட நாட்டை உடைமையாக்கிக் கொண்டபின் ஒவ்வொரு இனத்தவரும் தாம் விரும்பிய வழியே சென்றனர்; சிறிது சிறிதாகக் 'குடியேறி,' நிலையாக்த் தங்கி வாழத் தொடங்கினர்; பயிர்த் தொழில் செய்து வாழும் சமூகமாக மாறினர். அரசியல் அமைப்பு இன்னும் தளர்ச்சியுள்ளதாகவே இருந்தது. இஸ்ராயேலின் பல குலத்தவரும் சமய, இன மரபுகளாகிய பொதுப் பிணைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டனர். இதைத் தவிர, நெருக்கமான பிணைப்பு எதுவும் அவர்களிடையே இல்லை. அவ்வப்போது சீனாய்மலை உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ள ஒன்று கூடினர். செக்கேம், சீலோ போன்ற புனித இடங்களில் (தங்களது இறைவனாகிய) யாவேயிடம் தாங்கள் கொண்டிருந்த பற்றுறுதியை மீண்டும் புதுப்பித்து உறுதிப்படுத்தினர். தங்களது புனித வரலாற்றைப் பொது மக்களுக்கு எடுத்துக்கூறி நினைவுகூர்ந்தனர் (யோசு 24).

இப்படிப்பட்ட பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளின்போதுதான் பாரம்பரிய வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப வரும் நிகழ்ச்சியுரைகளாகவும், கதைத் தொகுப்புக்களாகவும் உருவெடுத்திருக்கவேண்டும். பல தலைப்புகளை மையமாக வைத்து இவை தொகுக்கப்பெற்றன. சில சமயம், குல முதியவர்களின் தீரச் செயல்களைச் சுற்றி இக்கதைகள் ஒன்று சேர்க்கப்பட்டன. சிலசமயம் இஸ்ராயேல் தனது வரலாற்று நினைவில் வைத்துப் போற்றிய செக்கேம், பெத்தேல், மமிரே, பேயேர்-செபா, காதேசு போன்ற இடங்களை மையமாகக் கொண்டு இத்தொகுப்புகள் எழுந்தன. மற்றத் தொகுப்புகள் உடன்படிக்கைப் பெட்டகத்தையோ, ஆரோனது குருத்துவத்தையோ மையமாக வைத்து வடிவெடுத்தன. வரலாற்று நிகழ்ச்சியுரைகளைத் திட்டம் செய்து எழுதும் வேலை நீதிபதிகளின் காலத்தில் செயல்பட்டதாகத் தெரிகிறது.

காலம் செல்லச்செல்ல, பழைய அடிப்படைக் கொள்கைகளைப் புதிய கலாச்சாரத்திற்கும், புதிய சமூக நிலைக்கும் ஏற்றவாறு பொருத்திக்கூறவேண்டிய தேவை ஏற்பட்டது. ஆகையால் சட்டத்தைப் புதுமுறையில் எடுத்துக்கூற வேண்டியிருந்தது. அதையும் புதுச்சூழ்நிலையோடு பொருத்திக் கூற வேண்டியிருந்தது. இப்பணி, மக்கள் தொழுவதற்குக் கூடும் புனித இடங்களில் நிகழ்ந்தது. பிரச்சனைகள் எழுப்பப்பட்டு விடைகள் காணப்பட்டன. அதன் விளைவாகப் புதுச்சட்டங்களும் புது விளக்கங்களும் எழுந்தன. அதனால் மோசேயின் சட்டத்தொகுப்பு பெருகியது. ஒவ்வொரு சட்டமும் மோசேயிடமிருந்து வந்ததாகவும் அவரது அதிகாரம் பெற்றதாகவும் காட்டப்பெற்றது. ஏனெனில் உடன்படிக்கையின் மாபெரும் நடுவரான மோசேயின் அதிகாரம் பெற்றிருந்தால் ஒழிய எந்தச் சட்டத்திற்கும் மதிப்பு இல்லை; மக்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுமில்லை.

6.இ. மூன்றாம் படி: யாவே பாரம்பரியம்:-

எதிரிகளின் தொடர்ந்த அச்சுறுத்தலைத் தடுக்க அரசபரம்பரை நிறுவப்பட்டது. யாவே, சவுலை இஸ்ராயேலின் முதல் மன்னனாகத் தேர்ந்தெடுத்தார். சவுலுக்குப் பின் ஏறக்குறைய கி.மு. 1000-இல் தாவீது அரசரானார். இந்நிகழ்ச்சி உடன்படிக்கைக்குப் புதியதோர் உருவம் கொடுத்தது. அரசனே உடன்படிக்கையின் நடுவரானார். தாவீது பல மாற்றங்கள் செய்தார். எருசலேம் தலைநகரமானது. அங்கு உடன்படிக்கைப் பேழை வைக்கப்பெற்றது. சாலமோன் ஆலயத்தைக் கட்டினார். இது நாட்டின் பொதுப் புனித

இடமாகியது; இஸ்ராயேலின் பிற புனித இடங்களை மங்கச் செய்தது. புனித அரச பரம்பரையை மையமாகக் கொண்டு சலுகை பெற்ற அதிகாரிகள், குழுவினர் தோன்றினர். எழுத்தர்கள் அரச ஆயப்பதிவேடுகளை வைத்துக் காக்கத் தொடங்கினர். தங்களது ஆண்டுக் குறிப்பேடுகளில் அரசன் செய்த சிறப்பு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தனர். கானான் தேசத்தாருடைய வழிபாட்டுமுறைகள் இஸ்ராயேலின் இன்றவனது சேவைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டன. நீதிபதிகள் மோசேயின் சட்டப்படி நீதி வழங்கினர். இறைவாக்குரைஞர்கள், உடன்படிக்கையின் இறைவனிடம் அரசர்கள் கொண்டிருந்த கடமைகளை அவர்களுக்கு எடுத்துக்கூறி நினைவுபடுத்தினர்.

இவையாவும் ஐந்நூலின் பாரம்பரியப் பொருள் அடக்கத்தையும், அவை பிற்கால மக்களுக்குக் கையளிக்கப்பட்ட விதத்தையும், பெரிதும் பாதித்தன. அரசவை அறிவியலும், கலாச்சாரச் சூழ்நிலையும், புனித இலக்கிய எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஆதரவு காட்டின. இந்நிலையில் யாவே பாரம்பரியம் உருவெடுக்கத்தலைப்பட்டது எனலாம்.

சாலமோனின் ஆட்சியில், ஏறத்தாழ கி.மு. 970-931 இடையிட்ட காலத்தில் யாவே பாரம்பரியத்தின் அடிப்படைப் பண்புகள் திட்டமிட்ட உருவம் எடுத்தன. இலக்கிய வேலைக்கு ஏற்ற சூழ்நிலையில் யாவே பாரம்பரிய வரலாறு எழுத்து வடிவம் பூண்டது. ஒருவர் எழுதினாரோ, பலர் எழுதினார்களோ என்பது பற்றி ஒன்றும் கூறமுடியாது. எழுத்து வடிவம் எடுத்தபின்னும் இப்பாரம்பரியத்தின் வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்தது. இது பிற்காலத்தில் யாவே பாரம்பரியத்தின் வரலாற்றை மாற்றியமைக்கும் அளவுக்குப் பாதித்தது எனலாம்.

ஐந்நூலில் நாம் தெளிவாகக் கண்டு அறியக்கூடிய முதல் பாரம்பரியம் இந்த யாவே பாரம்பரியமாகும். படைப்பு முதல் இறைவனை ''யாவே'' என்ற, அவரது சொந்தப் பெயரால் அழைக்கிறது ஐந்நூல். இப்பெயர் யாத் 3:15-இல் தான் வெளியிடப்பட்டாலும், ஆதியாகமத்திலேயே கால மயக்கமாக இச்சொல் பயன்படுத்தப்படுதலிலிருந்து, இப்பாரம்பரியம் ''யாவே பாரம்பரியம்'' என்றழைக்கப்படுகிறது. இப் பாரம்பரியத்தை இஸ்ராயேல் மக்களின் பெரும் வீரகாப்பியம் என்றழைப்பர். தாவீது, சாலமோன் ஆகியோர் காலத்தில் யூத இனத்தவரை இறைவன் மகிமைமிக்க மேன்மைக்கு உயர்த்திய உணர்வால் உந்தப்பட்டு மனிதனோடு இறைவன் கொண்ட உறவை மனஉறுதியுடன் எடுத்துக் கூறுகிறது. தாவீதின் அரசமரபுக் கொள்கைக்கு இறைவன் ஒப்புதல் அளித்ததால் இதில் அரசியல் ஆர்வத்தையும் நாட்டுப்பற்றையும் ஓரளவு காணலாம்.

யாவே பாரம்பரியம், ஐந்நூலில் நிகழ்ச்சியுரைகளை ஓர் இணைப்பாகத் தொகுத்துத் தருகிறது. இத்தொகுப்புகள், அவற்றின் இலக்கியப் பண்புகளையும், கொள்கைத் தலைப்புகளையும் திட்டவட்டமாகக் காட்டுகின்றன. சிறப்பான சொற்றொகுதிகள், காட்சிகளைப் பல வண்ணத்தோடு எடுத்துக் கூறும் போது பிரதிபலிக்கும் உயிருள்ள, தெளிவான, கவர்ச்சியுள்ள நடையழகு, சிறப்பான உரையாடல்கள், மனித நிலைகளை உணரும் ஆற்றல் மிக்க உளவியல் நோக்கு முதலியவை இப்பாரம்பரியத்தின் இலக்கியச் சிறப்புகளில் சிலவாகும். மனிதர்களையும், அவர்களுடைய பண்புகளையும், ஒழுக்கநெறிகளையும் சித்தரிப்பதில் அக்கறை காட்டுகிறது இப்பாரம்பரியம். கதைகள், உரையாடல்கள், உருவகங்கள், சித்திரங்கள் வழியாக ஆழ்ந்த சமயக் கருத்துக்களை எடுத்துக்கூறுகின்றது. இப்பாரம்பரிய இலக்கிய வடிவங்கள் ஐந்நூலில் கருத்தாழம் மிக்கவையாகத் திகழ்கின்றன.

இப்பாரம்பரியத்தில் ஆழ்ந்த இறையியல் உள்நோக்கு உள்ளது. மனிதப் பண்புகள் இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. கடவுள் மனிதனை உருவாக்குகிறார். அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதுகிறார்; தோட்டம் அமைக்கிறார்; மனிதனோடு பேசுகி

றார்; தோட்டத்தில் 'நடந்து போகிறார்; ஆடை செய்து தருகிறார்; காணிக்கைகளை விருப்புடன் ஏற்றுக் கொள்கிறார்; சினம் கொள்கிறார்; வருந்துகிறார்; இரக்கம் கொள்கிறார்; அன்பு காட்டுகிறார். ஆயினும் இவற்றில் இறைத்தன்மைபற்றிய ஆழ்ந்த கருத்துக்களைக் காணலாம். தன் சொந்த ஆவல்கள், நம்பிக்கைகளோடுகூடிய தனித்திருக்கும் மனிதன் விவரிக்கப்படவில்லை. மாறாக, இறைவனோடு தொடர்புடைய அவரிடமிருந்து அவர்பற்றிய உண்மைகளைப் பெறும் மனிதனைக் காண்கிறோம். இறைவனது செயல் மற்றத் தேவர்களின் செயல்களிலிருந்து வேறுபட்டது. தேர்ந்தெடுத்தல், வாக்குறுதி, உடன்படிக்கை ஆகியவை அடங்கிய ஓர் இறைத்திட்டத்தைக் காண்கிறோம். இதில் இறைவனது முன்முயற்சி முந்திக் கொள்வது, வலியுறுத்தப்படுகிறது. இம் முயற்சி யாத்திரையின் வலிமைமிக்க மீட்புச் செயல்களில் வெளிப்படுகிறது. இறைவன் தம்மையே வெளிப்படுத்துகிறார். இவ் வெளிப்பாடே இறைவனின் தீர்ப்பாகிறது. அதுவே மீட்புமாகிறது.

இப்பாரம்பரியம், காரியங்கள் தொடங்கியது எவ்வாறு என்ற கேள்விகளில் உற்சாகம் காட்டுகிறது. சான்று துன்பங்களின் ஊற்று, தீமையின் தொடக்கம், மனிதனது பாவநாட்டம், மக்களினங்களின் மொழிகள் ஆகியவற்றின் தோற்றம், நாகரிகத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையே உள்ள தொடர்பு முதலியன. இவற்றில், மனிதனுடைய மிக உடனடிச் சிக்கல்களுக்கு ஆழ்ந்த பதிலைக் காணலாம். இஸ்ராயேலின் வரலாற்றில் இறைவன் நுழைந்துள்ளார். இம்மக்கள்பால் தமது அன்பு கனிந்த அக்கறையைக் காட்டியுள்ளார். இவையாவும் இறைவெளிப்பாட்டு ஒளியில் விவரிக்கப்படுகின்றன. இவற்றில், இறைவனது செயலும், அதன் மறைபொருளும், வியப்பும் மலருகின்றன; சிறப்புப் பெறுகின்றன.

இப்பாரம்பரியம் வரலாற்றைப் பரந்த நோக்கோடு எளிய விரைவான முறையில் விறுவிறுப்போடு எடுத்துக்கூறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஆயினும் அதன் சிறப்பான நோக்கம் மீட்புவரலாறு ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்காக இறைவன் ஒரு திட்டம் வகுத்துள்ளார் என்பது, வரலாற்றின் தொடக்கத்திலிருந்து சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பாரம்பரியங்கள் எழுத்துவடிவம் எடுத்தகாலத்தில் இருந்த தனிப்பட்ட குறைகளை எடுத்துக் கூறுவதற்கும், கண்டிப்பதற்கும் ஏற்ற காரியங்கள் சொல்லப்படுகின்றன. பாவங்கள் பரவலாக இருந்தாலும், தோல்வியின்போது வெற்றியை எதிர்நோக்கும் நன்னம்பிக்கையும் எடுத்துக் கூறப்படுகிறது (ஆதி 3:15; 4:7). மெசியாவைப் பற்றிய இறைவாக்குகளில் பெரும்பாலானவை இப்பாரம்பரியததில் காணப்படுகின்றன. இளைய மகன் சலுகைபெறும் கருத்து தெளிவாகக் கூறப்படுகிறது. இசுமயேலைவிட ஈசாக்கும், ஏசாவைவிட யாக்கோபும், யோசேப்பின் கதையில் மற்றச்சகோதரர்களைவிட யூதாவும், உயரிய எகிப்தியர்களைவிட இஸ்ராயேலர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இப்பாரம்பரியத்தில் பெரும்பாலும் சட்டத்தொகுப்பே இல்லை எனலாம். இப்பாரம்பரியம் தெற்கு அரசாகிய யூதாவில் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகப் பொதுவாகக் காலவரையறை செய்யப்படுகிறது. இக்காலவரையறை நூலின் பொருட்களைப் பொறுக்கியெடுத்தல், ஒழுங்குபடுத்துதல், திருத்திப் புதுப்பித்தல் ஆகியவை நிரந்தரமாக நடந்த காலத்தையே குறிப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும். முந்திய அல்லது பிந்திய பதிப்புவேலைகளை இக்காலவரையறை ஒதுக்கிவிடுவதில்லை.

6.ஈ. நான்காவது படி: எலோகிம் பாரம்பரியம்:-

சாலமோனுக்குப்பின் கி.மு. 922-இல் இஸ்ராயேலர்களின் அரசு இரண்டாகப்பிரிந்தது. வடபகுதி இஸ்ராயேல் என்றும், தென்பகுதி யூதா என்றும் அழைக்கப்பட்டன. வட அரசில் வாழ்ந்த இறைவாக்குரைஞர்கள் மோசேயின் பாரம்பரியத்தைக் காத்துவந்தனர். எலியாவால் தூண்டப்பட்டு வட அரசு

சீர்திருத்தம் அடைந்தது. இச்சீர்திருத்தம், இஸ்ராயேலின் வரலாற்றை எலோகிம் பாரம்பரியம் திருத்தி அமைப்பதற்குப் பின் னணியாக இருந்திருக்கவேண்டும். இப்பா ரம்பரியத்தில் இறைவாக்குரைஞரின் பணி தெளிவாகக் காணப்படுகிறது. இறைவாக்கு ரைஞரே இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே நிற்கும் சரியான நடுவராவர். அவர், மனிதனுக்காகப் பரிந்துரைப்பவராக, மனிதனது கவலைகளையும் வேண்டுகோள் களையும் இறைவன் முன் கொண்டு வரு வார் (ஆதி 20:7-17; யாத் 15:20; எண் 11; 12:6). இறைவாக்குரைஞரைப்பற்றி இப்பா ரம்பரியம் அழுத்தந்திருத்தமாகக் கூறுவது, இப்பாரம்பரியம் முழுவதும் இறைவாக்கு ரைஞர்களது வேலைப்பாடாக இருக்கலாம் என்ற கருத்திற்கு ஆதரவு தருகிறது.

இறைவன் ''எலோகிம்'' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகிறார். இதிலிருந்து இப்பாரம்பரியம் தன் பெயரைப் பெறுகி றது. சீனாய்மலைக்குக் கோரேபு என்ற பெய ரையும் கானானியர்களுக்கு எமோரியர்கள் என்ற பெயரையும் பயன்படுத்துவதிலிருந்து இப்பாரம்பரியத்தை எளிதில் அடையாளங் கண்டுகொள்ளலாம்.

யாவே பாரம்பரியத்தின் நோக்கத்தைவிட இப்பாரம்பரியத்தின் நோக்கம் மிகவும் வரையறை செய்யப்பட்டதாகும்; குறுகியதா கும். இப்பாரம்பரியத்தில் தொடக்க வர லாறு இல்லை. இது ஆபிரகாமின் வரலாற் றோடு தொடங்குகிறது. இதில், இறைவாக் குரைஞர் என்ற பெயர் ஆபிரகாமுக்குக் கால மயக்கமாக ஏற்றிக் கூறப்படுகிறது (ஆதி 20:7). இறைவனது மிக உயர்ந்த மேன்மை பற்றி எலியா கொண்டிருந்த ஆர்வத்தாலும், இறைவனுக்கு உருவம் செய்வதைத்தடுக் கும் விருப்பத்தாலும் உந்தப்பட்டு இறைவ னுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக்கூறு வது இப்பாரம்பரியத்தில் கவனமாய்த் தவிர்க்கப்படுகிறது. யாவே பாரம்பரியதில் காணப்படுவதுபோல், இப்பாரம்பரியம் இறைவனை உயிர்ச் சித்திரத்தன்மையோடு விவரிப்பதில்லை. இறைவனுக்கும் மனித னுக்கும் இடையேயுள்ள தூரம் மிகக் கவனத் துடன் காக்கப்படுகிறது. ''ஒரு மனிதனும் நம்மைக் கண்டபின் உயிரோடிருக்க முடியாது'' (யாத் 33:20). மனிதன் இறைவனோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. பொதுவாக, மேகங்களிலிருந்தும், கனவி லும், தீயின் நடுவிலிருந்தும் வான தூதர்க ளின் வழியாகவும் இறைவன் மனிதனோடு உறவாடுகிறார். அருஞ்செயல்களில் வியத்த கும் கருத்து அழுத்தமாக உணர்த்தப்படுகி றது. கனவுகளுக்கும், இறைவாக்குகளுக்கும் பெரும் உட்கருத்து அளிக்கப்படுகிறது. இறைவனது வழிகாட்டுதலும், அவரது அருஞ்செயல்களும், மக்களுக்காக அவர் வகுத்துள்ள திட்டமும் இப்பாரம்பரியம் முழுவதும் வெளிப்படையாக வலியுறுத்தப் படுகின்றன (ஆதி 15:6; 20:11; 21:17).

வட அரசில் புறமதத்தினர்களின் பழக்க வழக்கங்களுக்கு எதிராகச் சிறப்பாகக் கானா னியர்களின் பழக்கவழக்கங்களுக்கு எதிராக, எலியா போராடினார். இப்புரட்சிகரமான மனப்போக்கு இப்பாரம்பரியத்தில் பிரதிப லிக்கின்றது. அயலார் தேவதைகளை நீக்கிவிடு மாறு யாக்கோபு கட்டளையிட்டதாக இப் பாரம்பரியம் கூறுகிறது (ஆதி 35:2). இறைவ னுக்கு ஏற்காத, பொதுமக்களின் சமய பழக்க வழக்கங்களையும் கண்டித்து எதிர்க்கிறது. இப்பாரம்பரியத்தில் பாவம் பற்றிய ஆழ்ந்த உணர்வு காணப் படுகிறது. இப்பாரம்பரியம் விரும்பும் ஒழுக்க வாழ்வு மிகக் கண்டிப்பா னதாகும் (ஆதி 20; 26:16-11).

யாத்திரைக்காலமும், வாக்களிக்கப்பட்ட நாட்டை வென்று கைப்பற்றிய காலமும், இப்பாரம்பரியத்தில் உன்னதக் காலங்களா கும். இஸ்ராயேலரோடு இறைவன் செய்து கொண்ட சீனாய்மலை உடன்படிக்கை இப் பாரம்பரியத்தின் உச்ச நிலையாகும். உடன் படிக்கைக்காரர்களுக்குள் உயர்ந்தவர் தாழ்ந்த வர் என்ற நிலை கொண்ட உடன் படிக்கைத் தன்மையில் உருவாக்கப்பட்டு, இவ்வுடன் படிக்கையும், அதன் கட்டுப்பாடுகளும் மாற்ற முடியாத விதத்தில் இஸ்ராயேலின் வாழ்வை நிர்ணயிக்கும் சமய நிகழ்ச்சியாகத்

திட்டவட்டமாக அறிவிக்கப்படுகின்றன. சுற்றியிருந்த புறமதக் கலாச்சாரம் இஸ்ராயேலைப் பாதிப்பதற்கு எதிராகப் பாலைவன வாழ்வு உன்னதமானதாகவும், விரும்பத்தக்கதாகவும் காட்டப்படுகின்றது. இப்பாரம்பரியம் வடவரசின் புனித இடங்களை மையமாகக் கொண்டு விளங்குகிறது; அரசியலில் ஆர்வம் இல்லை. வரலாற்றைக் குறுகிய நோக்கத்தோடு இப்பாரம்பரியம் காண்கிறது. யாவே பாரம்பரியத்தைப் போன்று இது பரந்த போக்குடையதன்று.

இப்பாரம்பரியத்தின் இலக்கிய நடையில், யாவே பாரம்பரியத்தில் காணப்படுவது போன்று, அவ்வளவு அணிநயமும் ஆற்றொழுக்கும் இல்லை. ஆனால் அதனினும் நல்ல சிறப்பான நடை உள்ளது. இதில் மிடுக்கும் உண்டு. யாவே பாரம்பரியத்தைவிட எலோகிம் பாரம்பரியத்தில் போதிக்கும் தன்மையும் காப்புரைத் தன்மையும் உண்டு. இதில் மனிதர்கள்பால் அல்லாது நிகழ்ச்சிகள்பால் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் சட்டத்தொகுப்புகள் உண்டு (யாத் 20:1-17; 20:22-23:33). கி.மு.950-850-க்கு இடையிட்ட காலத்தில் இப்பாரம்பரியம் இறுதியான வடிவில் பதிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

6.உ. ஐந்தாவதுபடி: யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இணைதல்:-

கி.மு. 721-இல் அசீரியர்களிடம் சமாரியா வீழ்ந்தது. அத்தோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அகதிகள் தென் அரசாகிய யூதாவிற்குச் சென்றனர். அவர்களோடு எலோகிம் பாரம்பரியமும் யூதாவிற்குள் கொண்டுவரப்பட்டது. யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் ஒன்றையொன்று பாதிக்கத் தொடங்கின. யூதாவைச் சேர்ந்த எசக்கியா ஆண்ட காலத்தில் (கி.மு. 716-687) இரு பாரம்பரியங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. இது எருசலேம் புனித இடத்தில் நடைபெற்ற யாவேயின் வழிபாட்டுக்கு எல்லா இஸ்ராயேலரையும் கொண்டுவர எசக்கியா செய்த முயற்சியின் விளைவாக இருக்கலாம். ஆனால் இந்தக் கலத்தல் யாவே பாரம்பரியத்திற்குச் சாதகமாகச் செய்யப்பட்டது. அதன் விளைவாக எலோகிம் பாரம்பரியம் சிறிது பழுதுபட்டது. இப்போது ஒரு துணைப் பாரம்பரியமாகத் தோன்றுகிறது. இருபாரம்பரியங்களும் மிக நெருங்கியவிதத்தில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. அவற்றை வெவ்வேறாகப் பிரிக்க முயல்வது இரு பாரம்பரிய வாசகங்களையும் பழுதுபடச் செய்கிறது. இக் கலத்தலில் சில இடங்களில், குருக்கள் பாரம்பரியக் கருத்துக்களும் காணப்படுகின்றன.

6.ஊ. ஆறாவது படி: உபாகமப் பாரம்பரியம்:-

யூதர்களின் சட்டமாகிய தோராவிற்கு, யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் வரலாற்றுப் பின்னணி அளிக்கின்றன. உபாகமம் முழுவதும் சட்டம் இல்லையென்றாலும், அதன் பெரும்பகுதி சட்டங்களையே கொண்டுள்ளது. இப்பாரம்பரியத்தின் சுவடுகள் ஐந்நூலின் மற்ற நான்கு நூல்களிலும் காணப்படுகின்றன. ஆயினும் ஐந்தாவது நூலாகிய உபாகமத்தில்தான் இப்பாரம்பரியம் மிகுந்து காணப்படுகிறது. இந்நூலின் மையமாக உள்ள சட்டத்தொகுப்பு (உப 12:2-26:15) இந்நூலுக்கும் இப்பாரம்பரியத்திற்கும் பெயரை அளிக்கிறது. இப்பாரம்பரியத்தை ஓரளவு எளிதாக வேறுபடுத்திக் காலவரம்பிட்டு விடலாம்.

இப்பாரம்பரியத்திற்கு நீண்ட முன்வரலாறு இருந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் சட்டம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் உட்கரு வடவரசில் தோன்றியிருக்க வேண்டும். இதில் காணப்படும் அழுத்தம் எலோகிம் பாரம்பரியத்தில் காணப்படுவதற்கு ஒத்ததாக இருக்கிறது. வடவரசைச் சேர்ந்த குருக்கள், லேவியர்கள் ஆகியோர் ஏற்கனவேயிருந்த சட்டங்களைத் தொகுத்தனர். அதன் விளைவு உபாகம நூலின் சட்டத் தொகுப்பாகும். இத்தொகுப்பை மோசேயின் அறிவுரைப் பகுதிக்குள் புகுத்தி, அதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி அளித்தனர். கி.மு. 721-இல் அசீரியர்களின் வெற்றிக்குப்பின், அகதிகளால் தென் அரசுக்குக் கொண்டுவரப்பட்டு, இந்தச் சட்டங்களும்,

பழக்கவழக்கங்களும் சிறிது சிறிதாக வரைய றுக்கப்பெற்று ஒழுங்கு செய்யப்பெற்றன. எசக்கியா ஆண்ட காலத்தில் இப்பாரம்பரியம் முதல்முதலாக நூல் வடிவம் எடுத்திருக்கலாம். இந்த இரண்டாவது சட்டத்தின் ''நகல்'' ஒன்று ஆலயத்தில் வைக்கப்பட்டது கி.மு. 7-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் யோசியா ஆலயத்தைச் செப்பனிட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட நூல் இதுவாக இருக்க வேண்டும். இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட நூலுக்கும் (2 அர 22:8-10) உபாகமப் பாரம்பரியத்திற்கும் பெரும் ஒற்றுமையுண்டு. கண்டுபிடிக்கப்பட்ட நூல் கி.மு. 621-ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்திற்கு வழி கோலியது என்று சிலர் கூறுவர். உபாகமச் சீர்திருத்தமும் யோசியாவின் சீர்திருத்தமும் ஏறத்தாழ ஒரே விதமாய் அமைந்துள்ளன. இந்நூல் உப 5-முதல் 29-வரையுள்ள அதிகாரங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இவற்றை உள்ளடக்கும் மோசேயின் அறிவுரையும்கூட இக்காலத்தின் மனப்போக்கையே காட்டுகிறது.

பிற்காலத்தில் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட போது இன்னும் பல செய்திகள் இப்பாரம்பரியத்தோடு சேர்க்கப்பட்டன. இந்த முழுத்தொகுப்பும் ஒருவேளை நாடு கடத்தப்பட்ட காலத்தில் இறுதி வடிவம் எடுத்திருக்கவேண்டும். எக்காலத்தில் உபாகமப் பாரம்பரியம் யாவே, எலோகிம் பாரம்பரியங்களோடு இணைக்கப்பட்டது என்று கூற அறிஞர்களால் முடியவில்லை. மோசே சட்டத்திற்குக் குருக்கள் பாரம்பரியம் எழுத்து வடிவம் கொடுக்குமுன் இது நிகழ்ந்திருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்வர்.

இப்பாரம்பரியத்தின் நடை அதற்கே உரிய, செறிந்த சொல்திறன் வாய்ந்ததாகும். உபாகமம் முழுவதும் மூன்று சொல்வன்மை மிக்க மறைப்பொழிவாக அமைகிறது. நடையில் சொற்பொழிவுத் தன்மையும் உபதேசத் தன்மையும், ஒழுக்கமுறைப் பண்பும், சட்டத்தன்மையும் செவிமடுப்போரைத் தூண்டும் தன்மையும் காணப்படுகின்றன. 'தேர்ந்தெடுத்தல்' ,''நல்நாடு'' ''முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும்'', ''அவரது பெயர் குடியிருக்கச் செய்'', ''வலியகரத்தாலும் ஓங்கிய புயத்தாலும்'', ''நீ'' ''நீங்கள்'', ''இப்போது'', ''இன்று'' முதலிய சொற்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இப்பாரம்பரியம் இறைவனை எலோகிம் என்றும், சீனாய்மலையைக் கோரேபு என்றும் அழைக்கிறது.

இப்பாரம்பரியம் இறுதிவடிவம் எடுத்த காலத்தில் இஸ்ராயேல் சமயத்துக்கு ஏற்பட்ட இடுக்கண்மிக்க காலத்தைச் சுட்டுகிறது இந்நூலின் நடை. அப்பேர்ப்பட்ட காலங்களில் ஒன்று இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் வந்த காலமாகும். யூதாவுக்கு அசீரியர்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது. மேலும் யூதா அரசர்கள் யாவேயின் சமயத்துக்கு இடர்களை விளைவித்துக் கொண்டிருந்தனர். இச்சூழ்நிலையில் யோசியாவின் சீர்திருத்தம் வருகிறது. உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. சமயத் தூய்மையைக் காக்கவேண்டும்; சமய இடுக்கண்களைக் களையவேண்டும்; வழிபாட்டை மையப்படுத்தவேண்டும். இவற்றில் இச்சீர்திருத்தம் எலோகிம் பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறது. உபாகமப் பாரம்பரியம், உடன்படிக்கையை இறைவன் இஸ்ராயேலை அன்போடு தேர்ந்தெடுத்தலாகவும், சட்டத்தை இத்தேர்வுக்கு இஸ்ராயேல் அளிக்கும் பிரமாணிக்கமிக்க பதிலாகவும் கருதுகிறது. இவை இப்பாரம்பரியத்தின் அடிப்படை இறையியல் கருத்துக்களாகும். யாவேயின் உடன்படிக்கைச் சட்டத்திற்குப் பிரமாணிக்கமான பதில் அளிப்பதிலும், எருசலேமின் ஒரே புனித இடத்தில் இறைவனுக்கு அளிக்கப்படும் தூய வழிபாட்டிற்குத் திரும்பி வருவதிலும்தான் மீட்பு அடைய முடியும். இந்தப் பிரமாணிக்கமிக்க பதிலை ஒவ்வொருவனும், சொந்தமாக, சுதந்தரமாக அளிக்கவேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொருவனும் இப்பதிலை அளிக்க வேண்டும் (உப 26:5-11). இந்த உடனடித் தேவை, இந்த அழுத்தம், ''நீ'', ''இன்று'', ''இப்போது'', என்று அடிக்கடி சுட்டிக்காட்டுவதில் வெளிப்படுகின்றது இந்தக் குறிக்கோளையும் அதைச் செயல்படுத்துவதையும்

பொறுத்தது இறைவனின் இறுதித் தீர்ப்பு (உப 23). எருசலேமைத் தவிர்த்த பிற புனித இடங்கள், சிறப்பாக வட அரசைச் சேர்ந்த புனித இடங்கள் விலக்கி ஒதுக்கப்படுகின்றன. அதன் விளைவாகக் குலமுதியவர்கள் அவ்வளவு சிறப்பிடம் பெறுவதில்லை.

6.எ. ஏழாவதுபடி: குருக்கள் பாரம்பரியம்:-

எருசலேம் குருக்கள் இப்பாரம்பரியத்தை எழுதியதாகக் கூறப்படுவது இப்பெயருக்குக் காரணமாகிறது. சாலமோனின் காலத்திலிருந்து சாதோக்கின் மக்கள் எருசலேமிலுள்ள ஆலயத்தில் பணிபுரிந்து வந்தனர். இவர்களுடைய மனப்பாங்கும் நோக்கும் வடஅரசைச் சார்ந்த குருக்கள், லேவியர் ஆகியோர்களுடையவையிலிருந்து வேறுபட்டவை. இவர்கள் தங்களுடைய பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தனர். அதன் விளைவு ''தூய்மையின் சட்டமாகும்'' (லேவி 17-26). இந்தச் சட்டத் தொகுப்பில் பழங்காலத்துச் சட்டப்பாரம்பரியமும், எருசலேமின் ஆலயப்பணியாளர்களின் பழக்க வழக்கச் சட்டங்களும் அடங்கியிருக்கின்றன. இந்தச் சட்டத் தொகுப்பில் உள்ள கருத்துக்களில் பெரும் பகுதி காலத்தால் மிகப்பழமையானது. அதன் போக்கு சாதோக்கின் மக்களின் மனப்போக்கை எடுத்துக் காட்டுகிறது.

கி.மு. 586-இல் யூதேயா வீழ்ச்சியுற்றதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சமய சமூகத் தேவைகள் மாறின. நாடு கடத்தப்பட்ட யூதர்கள் தங்கள் கடமைகள் பற்றி, குருக்களால் கற்பிக்கப்பட ஒன்று கூடினர். பரிசுத்த வரலாறு அவர்களுக்கு மீண்டும் எடுத்துச் சொல்லப்பட்டது. குருக்கள் யாவே பாரம்பரியத்தைப் பின்பற்றி அதை மேலும் செம்மைப்படுத்தி, தங்கள் மனப்போக்குக்கு ஒத்த விதத்தில், தாங்கள் விரும்பியவற்றை எடுத்துக்கூறினர். இஸ்ராயேலின் வரலாற்றுக்குப் புதியதோர் பணித் திட்டம் அமைத்தனர். கடந்த காலத்தை அன்பு உடன்படிக்கையின் தொடர்கதையாக எடுத்துக் கூறினர். அதில் ஆரோனுக்குச் சிறப்பிடம் தரப்பட்டது. ஆரோனின் வழித் தோன்றல்களான குருக்களைத் தலைவர்களாக மக்கள் ஏற்றுக் கொண்டனர். இஸ்ராயேல் மீளவும் இறையாட்சி கொண்டு விளங்கியது. இவர்கள் தம் குருக்களின் வழியாகத் தம் மக்களை ஆட்சி செய்தார். வழிபடுதல் இஸ்ராயேலர் வாழ்வின் மையமாக விளங்கியது.

கி.மு. 538-இல் சைரஸ் யூதர்களை எருசலேமுக்குத் திரும்பிப் போக அனுமதித்தபின் புதிதாகச் சீர்திருத்தப்பட்ட சமூகத்தில் குருக்கள் சிறப்பிடம் பெற்றனர். குருக்களின் நூல்களோடு, பணிகள், தூய்மை (பெறல்) பற்றிய புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டன. எருசலேம் புனித ஆலயம், பலி, திருநாட்கள், ஆரோனின் குமாரர்கள், அவர்களுடைய அலுவல்கள் ஆகியவை பற்றிய ஒழுங்குகளில் இப்பாரம்பரியம் ஆர்வம் காட்டுகிறது. பிற்காலத்தில் இன்னும் பலவிதிகள் சேர்க்கப்பட்டன. விரைவில் இக்குருக்கள் பாரம்பரியம், யாவே, எலோகிம், உபாகமப் பாரம்பரியங்களோடு ஒன்றியது. இவற்றோடு சேர்ந்து புதிதாக மீளவும் அமைக்கப்பட்ட நாட்டின் அடிப்படையாகி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றப் பாரம்பரியங்களைப் போல் இப்பாரம்பரியமும் நீண்ட முன்வரலாற்றைக் கொண்டது. இதில் மிகப் பழமைமிக்க கருத்துக்களைக் காணலாம். ஆனால் நாடு கடத்தப்பட்ட காலத்தில் தான் ஒரு தனிப்பட்ட நூலாக இப்பாரம்பரியம் இறுதிவடிவம் எடுத்திருக்கவேண்டும்.

தென்னரசான யூதாவில் இது தோன்றினாலும், இலக்கியத் தன்மையில் யாவே பாரம்பரியத்திற்கு மாறான தன்மையுடையது. நடை மெய்யியல் போன்றது, ஆள் தன்மையற்றது, கவையற்றது, வறட்சியுடையது. வாக்கியங்கள் குறுகியவை, பொருள் செறிந்தவை, நடையில் கடுகடுப்பும், ஆய்வில் புலமையும் உள்ளவை. வாய்பாட்டுத் தன்மையும், மீண்டும் மீண்டும் கூறும் தன்மையும் கொண்டவை. ஆனால் இவற்றில் கலைத் தன்மையில்லை, உருவக வண்மையில்லை. மாறாக இவற்றில் நிழல் தன்மை மிளிர்கிறது. கருத்துத் துல்லியமாக இருக்க முயலுகிறது; கலைச் சொற்கள் பயன்படு

கின்றன, இப்பாரம்பரியம், மரபு வரிசைகளி லும் காலவரையறை செய்வதிலும், வழி பாட்டுச் சடங்குகளிலும் விருப்பமுடன் அக் கறை செலுத்துவதாகத் தெரிகிறது; கணக்கி டுதலிலும் மரபு முறைகளிலும் புகுந்து திளைக்கிறது.

இப்பாரம்பரியம் முழுவதும் கொள்கை கள் நிறைந்து கிடக்கின்றன. திட்டவட்ட மான இறையியல் சிந்தனைப்போக்கு தெளி வாகக் காணப்படுகிறது. இப்பாரம்பரியத் தில் வரலாறு முழுவதும் நான்கு பாகங்களா கப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பாகமும் இறைவன் மனிதனோடு செய்து கொண்ட உடன்படிக்கையில் சிறப்பிக்கப்பெறுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் தம் மையே வெளிப்படுத்தியதைச் சுட்டிக்காட்டு கிறது. இஸ்ராயேல், இறைவனின் புதிய படைப்பாகும்.

எலோகிம் பாரம்பரியத்தை விட, குருக்கள் பாரம்பரியம் இறைவனுக்கு மனிதப்பண்புக ளைப் பொறுத்திக்கூறுவதைத் தவிர்க்க மிகக் கவனமாய் இருக்கிறது, இதில் எலோகிம் பாரம்பரியத்தையும் மிஞ்சுகிறது எனலாம். இறைவனுக்கும் மனிதனுக்கும், இறைவ னுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களுக்கும் உல கப் பொருள்களுக்கும், தூய்மைக்கும் தூய் மையின்மைக்கும், இடையேயுள்ள வேறு பாடு அழுத்திக்கூறப்படுகிறது. இறைவனது தூய்மையும் பரிசுத்தமும் சிறப்பிக்கப்படு கின்றன. இறைவன் முழுவதும் தூய்மையா னவர். வெகுதூரத்தில் உள்ளவர். மனிதன் அவரை அணுக முடியாது. ஆயினும் அவ ரைப்போல் இருக்கவேண்டும். இப்பாரம்ப ரியத்தின் தொலைநோக்கு வான்வீட்டை மையமாகக் கொண்டது. இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவைமேல் கவனம் செலுத்துகிறது.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் இஸ்ராயே லின் விசுவாசம் பல இடர்களுக்கு உள்ளா யிற்று. இது, குருக்கள் பாரம்பரியத்திற்குப் பின்னணியாயிற்று. யாவே தூய்மையாக இருப்பது போல் இஸ்ராயேலும் தூய்மை யாய் இருக்கவேண்டும். அதாவது மனித னால் படைக்கப்பட்ட ஒழுக்கவாழ்வு, சமய வழிபாடு ஆகியவற்றிலிருந்து இஸ்ராயேல் பிரிந்து, தனித்திருந்து, அவற்றால் கறைபடா மல் இருக்கவேண்டும். இப்போக்கு, சட்ட ஒழுக்கங்கள் பற்றியும், சட்டத் தூய்மை பற்றியும் காட்டும் அக்கறையில் தெளிவாகி றது. நாடு கடத்தல் முடிந்தபின், திரும்பி வந்து எருசலேம் ஆலயத்தில் இறைவனை வழிபடுவதை இஸ்ராயேல் ஒரு குறிக்கோ ளாக எதிர்நோக்கவேண்டும். இதைப் படிப் பிப்பதற்கு, குருக்கள் பாரம்பரியம் ஆழ்ந்த வழிபாட்டு அடிப்படையில் இஸ்ராயேலின் வரலாற்றை எடுத்துக்கூறுகிறது. எல்லா நிகழ்ச்சியுரைகளிலும் கொடுக்கப்படும் துல் லியமான காலவரையறை இப்பாரம்பரியத் தின் ஆண்டுக் குறிப்பேட்டில் வழிபாட்டுப் பொருளுடையது. விழாக்கள், பிற்காலத்தில் இஸ்ராயேலரிடையே கொண்டாடப்பட்ட விதத்தில் அவற்றின் வழிபாட்டுச் சடங்குப் பொருளை விளக்குவதற்காக யாத்திராகம வரலாற்றுச் சூழ்நிலையில், விவரிக்கப்படு கின்றன. யாத்திரையும், பாலைவனம் வழி யாகக் கூடாரங்களோடு செய்யப்பட்ட பய ணமும் ஒரு மாபெரும் புனித வழிபாட்டு ஊர்வலமாகக் காட்டப்படுகின்றன. சீனாய் மலையில் காணப்படும் இறையாற்றல், இறைவெளிப்பாட்டில் உச்சநிலை அடைகி றது. வரலாற்றின் ஒவ்வொரு பகுதியிலும் மனிதன் இறைவனுக்கு அளித்த பலிவழி பாட்டின் படிப்படியான வளர்ச்சியை, குருக் கள் பாரம்பரியம் எடுத்துக்காட்டுகிறது. எகிப்திலிருந்து விடுதலையடைந்த இஸ்ரா யேலை ஒருவழிபாட்டு மக்களினமாக மாற் றுகிறது. இங்கு இறைவனது புதிய படைப் பாக, ஒரு புனித மக்களினமாக மாறுவ தையே நம்பிக்கையூட்டும் ஒரு குறிக்கோ ளாக இப்பாரம்பரியம் பாபிலோனியா விற்கு நாடுகடத்தப்பட்டுத் துணையற்றுக் கைவிடப்பட்ட இஸ்ராயேலுக்கு அளிக்கி றது.

யாத்திரையாகமத்தின் பிற்பகுதியும், லேவியர் ஆகமம் முழுவதும், எண்ணாகமத் தின் பெரும் பகுதியும் குருக்கள் பாரம்பரி

யத்தைச் சேர்ந்தவையாகும். இப்பாரம்பரியத்தில் இங்குமங்குமாக வரும் நிகழ்ச்சியுரைப் பகுதிகளும் ஆதியாகம நிகழ்ச்சியுரைப் பகுதிகளும் சட்டத்தையும் வழிபாட்டுச் சடங்குகளையும் பெரும்பகுதியாகக் கொண்ட இப்பாரம்பரியத்திற்குப் பணிச்சட்டமாக அமைகின்றன. நிகழ்ச்சியுரைப் பகுதிகளிலும் சட்டமும் வழிபாட்டுக் கருத்தும் காணப்படுகின்றன.

ஐந்நூலை அமைப்பதில் இறுதியான பங்கு, குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். ஒருவேளை, எஸ்ராவின் காலத்தில் ஐந்நூல் ஒரு தொகுப்பாக, ஒன்றித்த ஒரு தனிநூல் தொகுதியாக உருவெடுத்திருக்கலாம். இது பிற்கால யூதர்களின் அடிப்படைச் சட்டமாக அல்லது தோராவாக ஆகிறது. இதில் மோசேயின் மரபுரிமை உடைமை முழுவதும் அடங்கியுள்ளது. இது தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும், போக்கிலும் பெரும்பாலும் மோசேயைச் சார்ந்ததாகும். இஸ்ராயேல் மக்களின் நாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. நாடு கடத்தப்பட்டபின் யூதர்கள் மோசேயின் சட்டத்தை இறைவனது பெருங்கொடையாகக் கருதினர். அதைப் பிரமாணிக்கமாய் மனிதன் கடைப்பிடித்தபோது உண்மையான மகிழ்ச்சிக்கு அவன் வழிநடத்தப் பெறுகிறான் எனக் கருதினர். ஐந்நூலை புலமைமிக்க ராபிகள் சூழ்ந்து படித்தனர். அதற்கு விளக்கவுரை அளித்தனர். இவ்வாறு இஸ்ராயேலின் மறை வாழ்வுக்கு மையமாகத் திகழ்ந்தது தோரா.

7. ஐந்நூலும் மோசேயும்:-

ஐந்நூலில் காணப்படும் நான்கு பாரம்பரியங்களும், கி.மு. 6-ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தில் வெவ்வேறு காலங்களில் திட்டவட்ட இறுதிவடிவம் எடுத்தன எனலாம். ஆகையால் இப்பாரம்பரியங்களில் காலத்தால் முந்தியதுகூட மோசேக்கு மிகப் பிந்தியதாகும். மோசே கி.மு. 13-ஆம் அல்லது 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆயினும் மோசேதான் ஐந்நூலை எழுதினார் என்று யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் கூறிவந்துள்ளன. இது ஒரு புறம்; மறுபுறம் இலக்கிய வரலாற்று ஆய்வுத்திறனின் உறுதியான முடிவுகள் உள்ளன. இவற்றுள் எது உண்மை? பிரச்சனை எளிதானதன்று. சிக்கல் மிக்கது. இந்த இரண்டில் எந்த ஒன்றையும் மறுத்துப் பிரச்சனைக்கு விடை காண முடியாது. நான்கு பாரம்பரியங்கள் தோன்றிய விதம், இஸ்ராயேலும் ஆதிக்கிறிஸ்துவர்களும் புரிந்து கொண்ட ஆசிரியத்தன்மைபற்றிய கருத்து ஆகியவற்றை, மிக நுணுக்கமாய் அணுகி விடை காண வேண்டும்.

இப்பிரச்சனைக்கு விடைகாண, ஆசிரியத்தன்மைபற்றிய பழம் முன்னோர்கள் கொண்டிருந்த கருத்துக்கும், நம்மிடையே நிலவும் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். ஒரு நூலுக்கு யார் ஆசிரியர் என்பதுபற்றி நாம் கருதுவது குறுகிய பொருளுடையது. ஆனால் பழம் முன்னோர்கள் இவ்வாறு கருதவில்லை. அவர்கள் கருத்து மிகப்பரந்த மனப்போக்கு உடையதாகத் தெரிகிறது. விவிலியத்தில் ஐந்து வகையான ஆசிரியர்களைக் காண்கிறோம்.

முதலாவது:- ஒருவர் தமது சொந்த உழைப்பாலும் தமது கைப்படவும் ஒரு நூலை எழுதியிருந்தால் அந்நூலுக்கு அவர் ஆசிரியராவார். லூக்கா எழுதிய நற்செய்தி இவ்வகையைச் சேர்ந்தது.

இரண்டாவது:- ஒருவர் சொல்லச் சொல்ல மற்றொருவர் அப்படியே எழுதினால் நூல் வாசகத்தை வழங்கியவர் இந்நூலுக்கு ஆசிரியராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இது சாதாரணமாய் வழக்கில் இருந்ததாகும். இவ்வகையைப் புனித பவுலின் திருமுகங்களில் காணலாம். மேற்கூறப்பட்ட இரண்டுவகை ஆசிரியத்தன்மையும் நவீன காலக் கருத்தோடு ஒத்துப்போகக்கூடியவை.

மூன்றாவது:- ஒருவர் கருத்தை அளித்தார், மற்றொருவர் அதை நூலாக எழுதினார். புனித யாக்கோப்புவின் திருமுகம் இவ்வகையைச் சார்ந்தது என்பர் அறிஞர். காரணம் யாக்கோபு அரமேயிக்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட கலிலேயாவைச்

சார்ந்த நாட்டுப்புறத்தவர். அவரது திருமுகம் குறையற்ற, உயரிய கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.

நான்காவது:- குருவின் சீடரால் எழுதப் பட்ட நூலுக்குக் குருவே ஆசிரியராகக் கரு தப்படுவார். இந்நூல் எழுதப்படுவதற்குக் குருவின் கருத்துக்களும் மனப்போக்கும் சொற்களும் அடிப்படையாகும். இப்படிப் பட்ட நூல்கள் குரு இறந்த பின்னும் எழுதப் படலாம். ஏசயா, எரேமியா நூல்களின் பகுதி கள் இவ்வகையைச் சார்ந்தனவாகும். புனித யோவான் எழுதிய நற்செய்தியில் சிலபகுதி களும், புனித மத்தேயு எழுதிய நற்செய்தி யும், புனித பேதுருவின் இரண்டாம் திருமுக மும் இவ்வகையைச் சேர்ந்ததாக இருக்க லாம் என்பர் அறிஞர்.

ஐந்தாவது:- ஆசிரியர் பற்றிய பரந்து விரிந்த கருத்தாகும்; அதாவது ஒருவர் சிறந் துவிளங்கிய இலக்கியப் பாரம்பரியத்தில் எழுதப்பட்ட எந்த ஒரு நூலுக்கும், அவரே ஆசிரியராகக் கருதப்பட்டார். மோசே திருச் சட்டம் அளித்தவர். ஆகையால் திருச்சட்ட நூலாகிய தோரா முழுமைக்கும் அவரே ஆசிரியராக அழைக்கப்பட்டார். அவர் இறந்து, பல நூற்றாண்டுகளுக்குப்பின்தான் இத்தொகுப்பு இறுதிவடிவம் எடுத்தாலும், தோராவுக்கு மோசேயேதான் ஆசிரியர். சங்கீ தங்களுக்குத் தாவீது ஆசிரியர் என்பதும் ஞானாகம இலக்கியங்களுக்குச் சாலமோன் ஆசிரியர் என்பதும் இவ்வகையைச் சேர்ந்த தேயாகும். நவீன காலத்தில் இவர்களை ஆசிரியர் என்று கூறமாட்டோம், புரவலர் என்போம். கடைசி இருவகை ஆசிரியத்தன் மையிலும் புனைபெயர் புகுகிறது. இவற் றைப் பழைய முன்னோர்களின் கருத்துப்படி நோக்கவேண்டும்.

யாவே, எலோகிம், உபாகம, குருக்கள் ஆகிய நான்கு பாரம்பரியங்களின் பொருள டக்கம், அவற்றைப் புதுப்பித்த அல்லது அவற்றிற்கு இறுதிவடிவம் அளித்த பிற்கால ஆசிரியர்களால் படைக்கப்பட்டது அன்று என்று, ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம். இவர்களுக்கு முன்னமேயிருந்த வாய் மொழி, எழுத்துப் பாரம்பரியங்களைப் பெரு மளவில் பயன்படுத்தி எழுதப்பெற்றதாகும். அண்மைக்கால அறிவியலாய்வு இம்மக்களி டையே நிலவிய வாய்மொழிப் பாரம்பரியத் தின் உண்மைத் தன்மையை அழுத்தந்திருத்த மாகக் கூறுகிறது. இவ்வாராய்ச்சி உப்சாலாக் குழுவினரின் பணியாகும். தொல்பொருள், புதைபொருள் பற்றிய ஆராய்ச்சிகள், இப் பாரம்பரியங்களின் வரலாற்றுப் பொருள் கள், சட்டப்பொருள்கள் ஆகியவை, கையெ ழுத்து வடிவம் எடுத்த காலத்தைவிட மிக முந்திய காலத்தைச் சார்ந்தவை என்று காட்டி யுள்ளன. பிற்கால ஆசிரியர்களும், பதிப்பா சிரியர்களும் கடந்த பழைய வரலாற்றுக்குத் தங்கள் காலச் சூழ்நிலைக்கேற்ப விளக்கிக் கூறுவதிலும், பழைய சட்டத்தையும் சூழ் நிலைக்கேற்ப மாற்றியமைப்பதிலும் கவனம் செலுத்தினர். ஐந்நூலில் கண்டுள்ளபடி மூதா தையர்களின் வரலாறும், எகிப்திலும், பாலைவனத்திலும் வாழ்ந்த எபிரேயர்களின் வரலாறும், அக்காலத்தில் சமூக அரசியல் வரலாற்று நிலைகளாக இருந்ததாக மற்ற அறிவியல் கூறுகளிலிருந்து தெரியவருகின்ற வற்றோடு, குறிப்பிடத்தக்க அளவில் ஒத்துள் ளன. பிற்காலத்தில் வாழ்ந்த எந்த ஆசிரிய ரும் இவ்வரலாற்றைத் தாமாகக் கண்டுபிடித் திருக்கமுடியாது. மேலும் பொருள் அளவில் பரந்த வரலாற்றுத் தன்மையுடைய யாவே. எலோகிம் பாரம்பரியங்கள் இரண்டிற்கும் பொதுவான, காலத்தால் முந்திய ஒரு பாரம் பரியம் இருந்திருக்கவேண்டும் என்பது அறி யக்கிடக்கிறது. இதையே சட்டத் தொகுப் பிற்கும் பொருத்திக் கூறலாம். முறைப்படுத் திக் கூறுவதில் வேறுபாடு இருந்தாலும், எல்லாச் சட்டங்களும் ஒரே சமய உறுதிப் பாட்டிலிருந்து வரும் சட்டக் கொள்கை யைச் சார்ந்தவையாய் இருக்கின்றன. அவை சமய வழிபாட்டையும், சமய வாழ்வையும் ஒழுங்குபடுத்தின. அவை எல்லாம் தங்க ளின் தோற்றத்தையும் தாங்கள் இருப்பதற்கு ரிய காரணத்தையும் விளக்க, சீனாய்மலை நிகழ்ச்சியையே ஒருமுகமாய்ச் சுட்டிக்காட்டு கின்றன.

இவை கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட் காலவரையறையில் நிகழ்ந்த சில அசாதாரண நிகழ்ச்சிகளின் உண்மையை உய்த்தறிய உதவுகின்றன. இந்நிகழ்ச்சிகள், இஸ்ராயேல் தன்னோடு கொண்டிருந்த கருத்துக்களையும், அது இறைவனோடு கொண்டிருந்த உறவையும் அடிப்படையிலேயே பாதித்திருக்கவேண்டும்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பொருள் அளித்துத் திசை காட்டக்கூடிய ஆற்றல் மிக்க ஒரு மதத்தலைவர் இருந்திருக்கவேண்டும் என்று உய்த்துணரலாம். யாத்திரையின் போதும் பாலையில் அலைந்து திரிந்த போதும் இஸ்ராயேலின் வரலாற்றில் இப்படிப்பட்ட தலைவராகத் திகழ்கிறார் மோசே. அவர் தலைமை தாங்கி ஆதிக்கம் செலுத்துகிறார்; நாட்டையும் மக்களையும் திட்டமிட்டு அமைக்கிறார். இஸ்ராயேலின் சமயத் தலைவராக விளங்குகிறார். அதற்குச் சட்டம் அளிப்பவர்களில் தலைமையானவர். முந்தைய பாரம்பரியங்கள் அவரை நோக்கி இயங்குகின்றன. இவையும், அவரது தலைமையின்கீழ் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் நினைவும் சேர்ந்து ஒரு பெரும் நாட்டுக் காவியமாக உருவெடுக்கின்றன.

மோசேயில் தோன்றிய மறை, மக்களின் விசுவாசத்தையும் அவர்களின் நடைமுறையையும் பாதித்து அவர்கள் மேல்நீடித்த நிலையான முத்திரையிட்டது. மோசேயின் சட்டம் நாட்டிற்கு மேல்வரிச்சட்டமாக நிலைத்தது. மாறிய நிலைகளுக்கு வேண்டிய திருத்தங்களும், மோசேயின் மனப்போக்கை விளக்குவனவாக எடுத்துக் கூறப்பட்டன. ஆகையால் அவரது அதிகாரத்தைப் பெற்றதாகக் கருதப்பட்டன. மோசேயும் அவரைச் சேர்ந்தவர்களும் ஓரளவு இலக்கியம் அமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று விவிலியம் சான்று கூறுகிறது. இதை நாம் எளிதில் மறுத்துவிடமுடியாது. இலக்கியப் படைப்பு, அதன் மூலங்களைப்போல் அவ்வளவு சிறப்புடையது அன்று. ஐந்நூலில் காணப்படும் பாரம்பரியங்கள், மோசேயைத் தலைமையாகவும், ஊற்றாகவும் கொண்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வது, மிக முக்கியமாகும். இலக்கிய, அல்லது வரலாற்றுத் திறனாய்வுகள் எவ்வளவு முயன்றும் இந்த அடிப்படையுண்மையை மறுக்க முடியவில்லை.

மோசே 13-ஆம் அல்லது 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். நாமும் அவரை அறிந்து கொள்ளக்கூடும். ஐந்நூலில் விவரிக்கப்படும் அவரது பொறுப்புள்ள மேற்பார்வை அவர் காலத்தில் விடுதலை அடைந்த எபிரேயர்களின் ஒற்றுமையான கூட்டுச் செயல்களுக்கும், பிற்காலத்தில் பாரம்பரியங்களின் ஒரே சீரான வளர்ச்சிக்கும் பொருள் அளிக்கிறது. அவரின்றி அல்லது அவரைப் போன்ற ஒருவரில்லாமல் இந்நிகழ்ச்சிகளுக்குப் போதிய விளக்கம் அளிக்கமுடியாது. ஆகையால் மோசே ஐந்நூலின் மையமாக இருப்பவர். பழங்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொண்டதுபோல், அவர் ஐந்நூலுக்கு ஆசிரியர் என்று அழைக்கப்படுவது சரியே.

பழங்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்கருத்தைப் பற்றி, லாக்ராஞ் என்ற அறிஞர் 1897-இலிருந்து பகுப்பாராய்ச்சி செய்து வந்துள்ளார். ஆசிரியத் தன்மைபற்றிய கருத்தைச் சிதைவுறாது காக்கும்படி இக்காலம் முனைப்பான கருத்தைக் கொண்டுள்ளது. ஆகையால் பொருள்களைத் தொடர்ந்த, பரந்த நீண்ட காலத்தில் நடந்த பதிப்பு வேலையை, சிறப்பாக இறையூக்கம் பெற்ற நூலைப் பொருத்தமட்டும், ஏற்றுக் கொள்ள இக்காலத்தவர் தயங்குவர். சிந்தையிலும், எழுதப்பட்ட வார்த்தையிலும் ஒற்றுமையைக் கடைப்பிடித்த மிகப் பழைய மேற்காசிய மக்கள், இத்தகைய நுண்ணிய கருத்தைக் கொண்டிருக்கவில்லை. பழம் மேற்காசிய மக்கள் குழுவாகச் சிந்தித்தனர்.

ஆகையால் பிற்காலத்தில் நடந்த திருத்தங்களையும் வளர்ச்சியையும் மூல வரலாற்று அல்லது இலக்கிய ஆசிரியரே செய்தார் என்று கூறத்தயங்கவில்லை. இவர்களைப்

பொறுத்தளவில் நூலுக்கு இறுதி எழுத்து வடிவம் கொடுத்தவரை விட, முதலில் நூலைத் தொடங்கி வைத்து அதன் போக்கை வரையறை செய்தவரே ஆசிரியராகத் தோன்றினார். பதிப்பு வேலைகளும் பிற்சேர்க்கைகளும் பிற்காலத்திலும் நடைபெற்றனவாகத் தெரிகிறது. மேலும், ''இறைவன் மோசேக்குக் கூறியது'' என்ற வாய்பாடு, தற்செயலாக, அபூர்வமாக, அதுவும் குறிப்பிட்ட வாசகங்களோடு பொருந்திக்கூறப்படுகிறது. இம்முறை சட்டத்தின் மாறும் தோற்றத்தை அதன் நித்தியத் தன்மையோடு இசைந்ததாக, ஒற்றுமையுள்ளதாகச் செய்யப்படும் இலக்கிய உத்தியாகும். இந்த நித்தியத் தன்மை நேரடியாகவோ, முதல் சட்டத்தை அளிப்பவரான மோசே வழியாகவோ பேசும், இறைவனின் அதிகாரமாகும். ஆகையால் இந்த வாய்பாடு சட்டத்தின் நிலையான கருப்பொருளை வலியுறுத்துகிறது. சட்டம் ''எல்லாக் காலத்துக்கும்'' செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

ஐந்நூலுக்கு மோசே ஆசிரியராவர் என்ற யூத, கிறிஸ்துவப் பாரம்பரியக் கருத்துக்கு எதிராக எழுந்த மறுப்புகளுக்கு, மேலும் பதில் அளிக்க லாக்ராஞ் முயன்றார். மோசேயின் வரலாற்றுப் பங்கை, அவரது இலக்கியப் பங்கிலிருந்து வேறுபடுத்திப் பதில் அளிக்க முயன்றார். இவற்றுள் வரலாற்றுப் பங்கு சிறப்பிடம் பெறுகிறது. ஆகவே மோசே தோராவின் ஆசிரியர். ஏனெனில் இஸ்ராயேலுக்கு விடுதலை அளிப்பவர் அவர்தாம். அவரே சட்டம் அளிப்பவர். இஸ்ராயேல் வரலாற்றின் மையமும் மோசே தான். இவ்வரலாற்றைத் தோரா எடுத்துக் கூறுகிறது. ஆகையால் மோசே இன்றி இஸ்ராயேலின் வரலாறு இல்லை. இவ்வரலாறு இல்லையென்றால் தோராவும் இல்லை. இப்பொருளில் தோரா முழுமைக்கும் மோசே வரலாற்று ஆசிரியர் ஆவார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டால் தோரா ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையைச் சேர்ந்ததென்பது தெரியும். இது இஸ்ராயேலில் கடந்த கால வரலாற்றை நினைவுபடுத்திப் புதிய திட்டம் வகுத்து எழுதப்பட்டதாகும். தோரா முழுவதின் கருத்துத் தொடர்பு இந்நூலை ஒன்றாகச் சேர்த்திணைக்கிறது. ஆசிரியத் தன்மை பற்றிய விவிலியக் கருத்துப்படி, மோசே ஐந்நூலுக்கு ஆசிரியர் என்பதும் இந்நூலுக்கு ஒருமைப்பாட்டை அளிக்கிறது. இதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

8. நிகழ்ச்சியுரைப் பகுதிகளும், வரலாறும்:-

ஐந்நூலும் அதன் பாரம்பரியங்களும் தோன்றியவிதத்தைப் பார்த்தோம். அவற்றிற்கு மோசே ஆசிரியர் என்பது எவ்வளவிற்குப் பொருந்தும் என்றும் பார்த்தோம், நவீன காலத்திய வரலாற்று ஏடுகளையும் நுணுக்கமான வரம்புகளையும், இப்பாரம்பரியங்களில் எதிர்பார்ப்பது அறிவுக்கு ஒத்ததாகாது என்பதை மேற்சொன்னவை தெளிவாகக் காட்டும். இப்பாரம்பரியங்கள் உயிரற்ற வெறும் எழுத்துப் படிவங்கள் அன்று. அவை ஒரு மக்களினத்தின் உயிர்த்துடிப்புகளாகும். அம்மக்களிடையே ஒற்றுமையைப் பேணி வளர்க்க வல்லதாகும்; அவர்களின் விசுவாசத்திற்கு வலிமை அளிக்கவல்லதாகும். அப்பாரம்பரியங்களில் இக்கால வரலாற்றுத் துல்லியம் இல்லை என்பதால் அவற்றை நாம் நம்ப மறுப்பது அறிவுக்கு ஒத்தது ஆகாது.

தோரா ஒரு வரலாற்று நூலா? வரலாற்று நூல் பற்றிய இக்காலக் கருத்தை மனதில் கொண்டால், தோரா ஒரு வரலாற்று நூல் இல்லை. அதாவது வரலாற்றுக்காக எழுதப்பட்ட நூல் அன்று.

வரலாற்று நூல் என்று கூறும் போது நாம் புரிந்து கொள்வது என்ன? நூல் எக்காலத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளதோ, அக்காலத்தைப்பற்றிய மூல ஏடுகள், நினைவுச் சின்னங்கள். கல்வெட்டுகள், நேரடிச் சாட்சிகள் முதலியவற்றை ஆய்வு செய்து எழுதப்பட்டது வரலாற்று நூலாகும். கிடைத்த சான்றுகளும் அவற்றின் உண்மைத்தன்மையும் நம்பத்தகுதியுடைமையும் சோதிக்கப்பட்ட

பின், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலும் கடந்த கால நிகழ்ச்சிகளை, அவை நடந்தபடியே விவரங்களோடு சேர்த்து ஒழுங்குபடுத்தி எழுதுவது வரலாற்று நூல் ஆகும். வரலாற்று நூல் பற்றிக் கிரேக்க, மேல்நாட்டு கருத்துக்களும் இவை போன்ற வையே.

ஆனால், இம்முயற்சிகளும், தூய கலப் பில்லாத வரலாற்றை மட்டும் தருவதில்லை. ஏனெனில் வரலாற்று ஆசிரியன் தனது சொந்த விளக்கங்களோடுதான் தனது நூலை எழுதுகிறான். ஆகையால்தான் ஒரே நிகழ்ச்சி யைப் பற்றி அல்லது ஒரே காலத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுகின்றன. எந்த மனிதனும் எக்காரியத்தையும் தனக்கே உரிய கருத்தோடும், கோணத்திலும் பார்க்கிறான். தூய கலப்பில்லா நிகழ்ச்சிகளை மட்டும் கூறும் வரலாறு என்பது கற்பனையாகும்.

வரலாறு பற்றிய இக்காலக் கருத்துக் களை மனதில் கொண்டு, தோராவை நோக் குவோம். இக்காலக் கருத்துப்படி தோரா வரலாற்று நூல் அன்று; அதாவது கடந்த நிகழ்ச்சிகளை நடந்தவாறு மட்டும் எழுதிய பதிவேடு அன்று. இவ்வாறு சொல்வதா னால், தோரா கடந்த நிகழ்ச்சிகளைக்கூறும் பதிவேடுகளைக் கொண்டிருக்கவில்லை என்று நாம் கூறவில்லை. தோரா வெறுமனே செய்தி சொல்வதற்காக மட்டும் நிகழ்ச்சி களை எடுத்துக்கூறவில்லை என்று கூற விரும்புகிறோம். வெறும்வரலாற்று நோக்கத் தைத் தவிர்த்த, சமய, இறையியல் நோக்கத் திற்காக இந்நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

நிகழ்ச்சிகளுக்கு மட்டும் சிறப்பிடம் அளித்து, பதிவு செய்தல் உலகியல் வரலாற் றின் நோக்கமாகும். இத்தகைய வரலாற்றில தோராவுக்கு அக்கறையில்லை. ஆனால் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய உட்பொருளை எடுத்துக் கூறுவதில் பெரிதும் அக்கறை காட்டுகிறது. உலகியல் வரலாற்று ஆசிரிய னும் தனது சொந்த விளக்கங்களைப் புகுத்தி நிகழ்ச்சிகளுக்குஉட்பொருள் அளிக்க முயலு கிறான் என்று முன்பு கூறினோம். உலகியல் வரலாற்று ஆசிரியன் நிகழ்ச்சிகளுக்கு உலகி யல் சார்ந்த பொருள் அளிக்கிறான். இதற்கு மாறாக, தோரா நிகழ்ச்சிகளுக்கு இறையியல் பொருள் அளிக்கிறது. உலகியல் வரலாற்று ஆசிரியன் வரலாற்றில் மனிதக் கரத்தை மட்டும் பார்க்கிறான். இந்நோக்கைக் கடந்து, விவிலிய ஆசிரியர், வரலாற்றில் இறைவனது ஆற்றல்மிக்க கரத்தைக் காண்கி றார். எனவே இவர் நிகழ்ச்சிகளைப் பார்க் கும் நோக்கம் வேறுபட்டது. இந்த நோக்க மும் முந்தியதைப்போல நேர்மையானது, முறையானது. இரண்டிலும் ஆசிரியர் தமது அறிவுத்திறனைப் பயன்படுத்தி உருவாக்கிய நூலை அவரது சொந்தச் சரக்காகவும், கற்ப னையாகவும் கருதுதல் நன்றன்று. புத்தி, ஒன்றுமின்மையில் வேலை செய்வதில்லை. பொருள் பெறவும் அல்லது ஒரு தனிப்பட்ட கோணத்தில் நோக்கப்பட ஒரு நிகழ்ச்சி வேண்டும். அந்நிகழ்ச்சியும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும். ஒரு புதிய நோக்கு உண்மைக்கு அளிக்கப்படும் ஒரு புதிய மதிப்பீடாகும். திருநூல் ஆசிரியர்கள் தங்களுக்குரிய கோணத்தில் நிகழ்ச்சிகளை நோக்க இறைவ னிடமிருந்து சிறப்பான அருள் ஒளி பெறு கின்றனர்; இறையூக்கம் பெறுகின்றனர். இவை அவர்கள் கூறும் உண்மைக்கு உத்திர வாதம் அளிக்கின்றன; உறுதியும் உயர்வும் அளிக்கின்றன.

பஞ்சம் போன்ற ஒரு பெருங்கேடு நிகழ் கின்றது என்று வைத்துக் கொள்வோம். உலகியல் வரலாற்று ஆசிரியன் இந்நிகழ்ச்சி களைக் குறிப்பான். அதற்குரிய காரணத்தை ஆராய்வான். இதற்குப் பருவமழை தவறி யது அல்லது தவறான பொருளாதாரத் திட் டம் என்று காரணம் காட்டுவான். ஆனால் சமய வரலாற்று ஆசிரியன் இக்கேட்டைக் குறிப்பான். அதற்கு மக்கள் பாவத்தின் விளைவு எனறும் இறைவனின் செயல் என வும் பொருள் கூறுவான். ஆனால் இவ்விரு நோக்குகளில் அல்லது மதிப்பீடுகளில் முரண்பாடு இல்லை. உலகியல் வரலாற்று ஆசிரியன் கடவுள் இருப்பதையோ அவர் உலககாரியங்களில் தலையிடுவதையோ

மறுப்பதில்லை. உலகியல் வரலாற்று ஆசிரியன் என்ற அளவில் அவனுக்கு இவற்றில் அக்கறையில்லை. அவன் இம்மாதிரிக் காரியங்களில் தலையிடுவதுமில்லை. தன்னுடைய வரலாற்று ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு, அவன் மனிதப்புலனுக்கும், புத்திக்கும், புலப்படக்கூடியவற்றைக் குறிப்பிடுகிறான். அதேபோல் சமய வரலாற்று ஆசிரியன் தனது எல்லைக்குள் உலவுகிறான். கடவுள் வரலாற்றில் தலையிட்டுச் செயல்படுவதால், மனிதன் செயல்படவேண்டாம் என்று இறையியல் வல்லுநர் கூறுவதில்லை.

ஆகவே நாம் இதுவரை கூறியவற்றிலிருந்து பின்வருவது தெளிவாகும். தோரா வரலாற்று நோக்கோடும், வரலாற்றுக்காகவும், வரலாற்றில் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் வரலாற்றில் அக்கறை கொண்டிருந்தது. அந்த வரலாறு சமய, இறையியல் வரலாறு ஆகும். அது, மனித வரலாற்றிலும் இறைவன் தலையிட்டுச் செயல்படுவதைச் சிறப்பித்துக் கூறும் வரலாறு ஆகும். வரலாறு பற்றிய மற்றெந்த நோக்குக் கூறினையும்போல் இந்த நோக்கும் நேர்மையானது, முறையானது, இவற்றை மனதில் கொண்டு பொதுவாக விவிலியம் முழுவதையுமே, சிறப்பாகப் பழைய ஏற்பாட்டையும் தோராவையும் நாம் வாசிக்க வேண்டும். இனித் தோராவிற்கு வருவோம்.

தோராவிற்கு ஒருமைப்பாடு அளிக்கும் பணியை வரலாற்று நிகழ்ச்சியுரைப் பகுதிகள் திட்டமிட்டுச் செய்கின்றன. இப்பகுதிகள் படிப்பவரைப் படைப்பு முதல் மனுக்குலத்தின் தொடக்க வரலாறு, மூதாதையரின் வரலாறு, சீனாய் உடன்படிக்கை, பாலை வனத்தில் அலைந்து திரிதல் முதலியவற்றின் வழியாக யோர்தானுக்கு அப்பாற்பட்ட நாட்டுக்கு இட்டுச் செல்லுகின்றன. மோசேயின் இறப்பு, மோவாபு நாட்டில் அவர் அடக்கம் செய்யப்படுதல் ஆகியவற்றோடு பழைய ஏற்பாட்டின் ஒரு பிரிவான இந்தத் தோரா முடிகிறது. இத்தோராவின் பெரும்பகுதி சட்டங்களாகும். இவை மோசேக்கு அளிக்கப்பட்ட இறைவெளிப்பாட்டின் சிறப்பாக விவரிக்கப்படுகின்றன. இந்த அளவில்தான் தோரா நிகழ்ச்சியுரைப் பகுதிக்குள் புகுத்தப் பெறுகின்றது.

ஆதியாகமத்தின் முதல் பதினொன்று அதிகாரங்களைத் தனியாக நாம் கவனிக்கவேண்டும். அவை சாதாரணமான மக்களுக்கு ஏற்ற பாணியில், மனித இனத்தின் தொடக்கம் பற்றிக் கூறுகின்றன. சூதுவாது அறியாத கபடமற்ற மக்களின் மனப்போக்கிற்கேற்ப எளிய, ஓவியப்பாணியில், மீட்புத் திட்டத்தின் அடிப்படை உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன. இந்த உண்மைகள் ஆதியாகமம் பற்றிய தலைப்பின்கீழ்க் கூறப்படும். இவை இறையியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளாகும். இவற்றிற்குத் திருநூல் அதிகாரத்தோடு உறுதியளிக்கிறது. இவை உண்மை நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. இந்நிகழ்ச்சிகளின் உறுதி அவற்றின் உண்மைத் தன்மையையும் குறிப்பாக உணர்த்துகிறது. இவற்றால்தான் ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் வரலாற்றுப்பகுதி என்று கூறப்படுகிறது.

குலமுதியவர்களின் வரலாறு, முதலாவதாக ஒரு குடும்ப வரலாறு ஆகும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகிய மூதாதையர் பற்றிய அரும்பொதுச் சொத்தாகக் கவனமாய்க் காப்பாற்றப்பட்டு வந்த நினைவுகளை இந்த வரலாறு சேர்த்துத் தொகுத்துத் தருகின்றது. இது சாதாரண மக்களுக்கு ஏற்ற பாணியில் அமைக்கப்பட்ட வரலாறு ஆகும். இவ்வரலாறு தனிப்பட்டோரின் வாழ்க்கை பற்றிய செய்தித் துணுக்குகளின் மீதும், மேலும் உணர்ச்சிகளைத் தூண்டும் நிகழ்ச்சிகளைப் படிப்படியாய் விவரிப்பதிலும் அக்கறை காட்டுவதாகத் தெரிகிறது. இவ்வரலாறு சமய நோக்கத்தோடு எழுதப்பட்டதாகும். அதாவது வரலாற்றில் திருப்பம் ஏற்படுத்தும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனது தலையிடல் சிறப்புப் பெறுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனது பரிபாலிக்கும் அருட்கரம் காணப்படுகிறது. வரலாற்றில் இப்போக்கு இறையியல்படி சரியானது. ஆனால் இப்

போக்கு இரண்டாம் தரக் காரணங்களின் பாகத்தைப் புறக்கணிக்கிறது. மேலும் சமயக் கொள்கையை எண்பிப்பதற்காகவே பல நிகழ்ச்சிகள் உட்புகுத்தப்படுகின்றன; விரிவாக்கப்படுகின்றன; ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இச்சமயக் கொள்கைகள் பற்றிப் பின்பு காண்போம். சமயக் கொள்கைக்காகவே இடம் பெற்றாலும் நிகழ்ச்சியுரைகள் வரலாற்றுத் தன்மையுடையதுவுமாகும். அவை எடுத்துக்கூறும் விதம் அவைகளுக்கே உரியதாக இருக்கலாம்.

ஆனால் அவ்வுரைகள் உண்மை நிகழ்ச்சிகளையே கூறுகின்றன. இஸ்ராயேலின் குல முதியவர்களின் தோற்றம், குடியேற்றம், அவர்களது நிலநூல் பின்னிலைகள், இனமரபுப்பின்னிலைகள் ஆகியவை பற்றி அவ்வுரைகள் பிரமாணிக்கமாய் வருகின்றன. இந் நிகழ்ச்சியுரைகளை ஐயத்தோடும் நம்பிக்கையின்றியும் நோக்குதல் அறிவியல் சார்ந்த ஒரு பாணியாக இருந்து வந்தது. இத்தகைய போக்கைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்காசியப் பகுதிகள் பற்றிய வரலாற்று ஆசிரியர்களும், தொல்பொருள் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் அண்மைக் காலத்தில் அளித்துள்ள தகவல்களும், விளக்கங்களும் சேர்ந்து மேற்படி நிகழ்ச்சியுரைகள் உண்மையானவை, நம்பிக்கைக்குரியவை என்று நாம் ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்றன. ஏன், கட்டாயப்படுத்துகின்றன.

யாத்திரை ஆகமத்திலும், எண்ணாகமத்திலும் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளும், உபாகமத்தில் தொடர்ந்து கூறப்படும் நிகழ்ச்சிகளும் மிகவும் பிற்காலத்தில் நடந்தவற்றைக் கூறுகின்றன. அவை மோசேயின் பிறப்புடன் தொடர்கின்றன. அவரது இறப்போடு முடிகின்றன. இவற்றில் எகிப்திலிருந்து புறப்பட்ட யாத்திரை, சீனாயில் தங்கியது, காதேசுக்குப் பயணம், மோவாபு சமவெளியில் குடியேறி நிலைத்திருந்தும் யோர்தானைக்கடக்கத் தயாராக இருத்தல் ஆகியவை அடங்கும். நிகழ்ச்சிகள் யாவும் உண்மையென்றும் மோசே உண்மையிலேயே ஒரு வரலாற்று ஆள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஒழிய, இஸ்ராயேலின் பின்வரலாற்றுக்கும் இஸ்ராயேல் யாவேக்குக் காட்டிய பிரமாணிக்கத்திற்கும், சட்டத்தின் பால் கொண்ட ஆழ்ந்த பற்றுக்கும் போதிய விளக்கம் காண முடியாது என்று கூறலாம். அதே சமயம் இந்நினைவுத் தொகுப்புகள் மக்களின் வாழ்க்கை அமைப்புக்கு அளிக்கும் சிறப்பிடமும் சடங்கு வழிபாட்டில் அவை எழுப்பும் எதிரொலிகளும் இந்நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு வீரப்பெருங்காப்பியத் தன்மையை அளிக்கின்றன. நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு இத்தொகுப்புகள் வழிபாட்டுச் சடங்கு நிகழ்ச்சியின் பண்புகளை அளிக்கின்றன. இதை நாம் ஆழ்ந்து உணரவேண்டும். எனவே இஸ்ராயேல் ஏற்கனவே ஓர் இனமாக இருந்து, உலக வரலாற்று மேடையில் தோன்றுகிறது. இந்த உண்மை பாரவோன் மெனப்தாவின் கல்லறைக் கல்வெட்டுகளில் மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. மற்றப்படி மிகப் பழஞ்சான்றுகளில் இவ்வினம் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் பிற நூல்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் ''கைக்சோஸ்'' என்ற ஒருவகைச் செமித்தியர்கள் எகிப்தின்மேல் படையெடுத்தது பற்றியும், நைல்நதி கழிமுகப்பகுதியில் எகிப்தியரின் ஆட்சி பற்றியும், யோர்தான் பகுதியில் நிலவிய அரசியல் நிலை பற்றியும் கூறுகின்றவற்றோடு, விவிலியம் கூறுகின்றவை பரவலான ஒற்றுமை கொண்டுள்ளன.

பொது வரலாற்று நிகழ்ச்சிகளோடு, விவிலியம் தரும் விவரங்களை வரிசைப்படுத்துவது இன்றைய வரலாற்று ஆசிரியனது கடமையாகும். விவிலியக் குறிப்புகள் பற்றாக் குறையானவை. விவிலியத்துக்குப் புறம்பான வரலாற்றுக் காலவரையறையில் உறுதிப்பாடின்மை தெரிகிறது. இவ்வரையறைகளை மனதில் கொண்டு மதி நுட்பமுள்ள அடக்கத்துடன், ஆபிரகாம் கானாவில் தங்கிய காலத்தை ஏறக்குறைய கி.மு. *1850* என்று கூறலாம்.

எகிப்தில் யோசேப்பும் அவர் தம் சகோதரர்களும் வாழ்ந்த காலத்தை கி.மு. *1700*

என்று குறிக்கலாம். யாத்திரையாகம நிகழ்ச்சிகளின் காலம் தர்க்கத்திற்குரியதாகும். எகிப்தில் 18-ஆவது அரச மரபினர் ஆண்ட காலமாகிய கி.மு. 15-ஆம் நூற்றாண்டில் யாத்திரை ஆகம நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம் என்ற கருத்து, முன்பு பரவலாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது சிலர்தாம் இக்கருத்துக்கு ஆதரவு தருவர். மற்றொரு கருதுகோள் 19-ஆவது அரச மரபின் கீழ் கி.மு.13-ஆம் நூற்றாண்டில் யாத்திரை ஆகம நிகழ்ச்சிகள் நடந்திருக்கவேண்டும் என்பதாகும். இக்கருத்து முன்னதைவிட, வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு ஒத்துள்ளதாகத் தெரிகிறது. அதாவது, 19-ஆவது மரபு பாரவோன்கள் ஆற்றின் கழிமுகப் பகுதிகளில் வாழ்ந்து, மாபெரும் கட்டடம் கட்டும் வேலைகள் இரண்டாம் இரமேசஸ் ஆட்சியின் இறுதியில் சீரியா, பாலஸ்தீனப் பகுதிகளின் மேல் எகிப்து கொண்டிருந்த பிடி தளர்தல் ஆகியவையோடு இக்கருதுகோள் ஒத்துப்போகிறது. மேலும் யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் ஏதோமியர், மோவாபியர் அரசுகள் பற்றிய தொல்பொருள் ஆராய்ச்சிச் சான்றுகளோடும், இஸ்ராயேல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய காலத்துக்கு ஒத்த இரும்புக் காலத்தின் தொடக்கத்தில் நகரங்கள் சிலவற்றில் காணப்படும் கலாச்சார மாற்றங்களோடும் இரண்டாவது கொள்கை ஒத்துப்போகிறது. மேற்கூறியதை அடிப்படையாகக் கொண்டு இஸ்ராயேல் எகிப்தில் கொடுமையுற்ற காலத்திற்கு இரண்டாம் இரமேசசின் காலத்தையும் (கி.மு. 1290-1224), யாத்திரை நிகழ்ச்சிகளுக்கு மெனப்தாவின் காலத்தையும் (1224-1214) குறிக்கலாம். இன்னும் கொடுமையின் தொடக்கத்திற்குச் சேத்தின் ஆட்சிக்காலத்தையும் (கி.மு. 1310-1290), யாத்திரை நிகழ்ச்சிகளுக்கு இரண்டாம் இரமேசசின் நீண்ட ஆட்சியின் பின் பகுதியையும் குறிப்பிடுவது மேல் எனக் கருதுவோரும் உள்ளனர்.

9. நிகழ்ச்சியுரைப்பகுதியும் சட்டப்பகுதியும்:-

யூத விவிலியத்தின் ஐந்நூல் தோரா அல்லது சட்டம் என்றழைக்கப்பட்டது. உண்மையில் ஐந்நூல் யூத இனத்தின் ஒழுக்க, சமூக, சமய வாழ்வை வகைப்படுத்தி, வழிகாட்டும் சட்டங்களின் முழுத் தொகுப்பையும் கொண்டுள்ளது. ஐந்நூலில் காணப்படும் சட்டத்திற்கும் வரலாற்றுக்கும் இடையேயுள்ள உறவு சிறப்புமிக்கதாகும். சட்டம் பற்றிய இஸ்ராயேலின் இறையியல், வரலாறு பற்றிய யூத இறையியலால் வரையறுக்கப்படுகின்றது. அயல் இனத்தாரிடையே காணப்படுவது போல், தனித்து இயங்கும் சட்டத் தொகுப்பையோ சடங்கு முறைத் தொகுப்பையோ இஸ்ராயேல் கொண்டிருக்கவில்லை. அதன் சட்டங்கள் யாவும் மீட்பு வரலாற்றில் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது, அவ்வாறே எடுத்துக்கூறப்பட்டது. இஸ்ராயேலைக் கட்டுப்படுத்திய சட்டத் தொகுப்பு இறைவன் வரலாற்றில் இடையிட்டதற்கு அவர்கள் அளிக்கும் பதிலாகக் காட்டப்பெற்றது. இந்த இடையீடு மீண்டும் மீண்டும் நடந்ததால், சட்டத்தின் கட்டளைகள் இந்த வரலாற்றுப் பணித்திட்டத்தினுள் வைக்கப்பட்டு, ஆற்றல்மிக்க தன்மையோடு விளங்கின; மக்கள் வாழ்வின் ஒரு பகுதியாயின. ஐந்நூல் நிகழ்ச்சியுரைப்பகுதி சிறிதாக இருந்தாலும், கிளைக்கதை கூறும் தன்மையைக் கொண்டிருந்தாலும், அப்பகுதி, இஸ்ராயேல் இறைவனோடு கொண்டிருந்த உறவு பற்றிய கருத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இறைவன் தம் மக்களை இறையாட்சி மக்களாகத் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சியை ஐந்நூலில் வரலாற்றுப் பகுதி வருணிக்கிறது; அதன் சட்டப்பகுதி அந்த மக்களின் உரிமைப்பத்திரமாகும்.

இவ்வைந்து நூல்களின் கருக்கமான பகுப்பாராய்ச்சி, சட்டத்திற்கும் வரலாற்றுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவாக எடுத்துக்காட்டும். அதன் விளைவாக ஐந்நூலில் காணப்படும் அடிப்படை ஒற்றுமையையும் கண்டுணரலாம். படைப்பு முதல் மீட்பு வரலாற்றுக்கு முன்னுரையான நாடகம் வரை அடங்கிய மனுக்குலத் தொடக்கம் பற்றிய பகுதி (ஆதி 1-11), ஐந்நூல் முழுத் தொகுப்புக்கும் முன்னுரையாக அமைகிறது. தனிப்பட்ட குல முதியவர்களின் கதை

யில் (ஆதி 12-50), ஒரு மக்களினத்தைத் தேர்ந்தெடுக்க இறைவன் செய்த முன்னேற்பாடு தெளிவாகத் தெரிகிறது. கொடுமைப் படுத்தப்பட்ட எபிரேயரை எகிப்திலிருந்து விடுவிக்கும் முயற்சியில் இறைவன் முந்திக் கொள்வது (யாத் 1-18), சீனாய்மலையில் உடன்படிக்கை பறைசாற்றப்படுதலில் உச்ச நிலை அடைகிறது. அதன் விளைவாக இறைவனின் புதிய மக்களுக்குப் புதிய கடமை ஏற்படுகிறது (யாத் 19-23). இதை மக்கள் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளுகின்றனர் (யாத் 24). யாத்திரை ஆகமத்தின் மீதிப்பகுதியிலும் லேவியர் ஆகமத்திலும் மக்களின் சமய வாழ்வுக்கு வழிவகுக்கும் சட்டங்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் புனித இடத்தையும், அதன் பணிக்குரிய இடங்களையும் கட்டுதல், குருக்களைத் திருநிலைப்படுத்துதல் ஆகியவை பற்றிய கட்டளைகள் முதலில் வருகின்றன (யாத் 25-31). மக்கள் உடன்படிக்கையை முறிப்பதும் சட்டப்பலகைகள் புதுப்பிக்கப்படுதலும் பற்றிய நிகழ்ச்சியுரை (யாத் 32-34) இடையில் வருகிறது. புனித இடத்தை அமைப்பதும், அணி செய்தலும் இந்நூலின் முடிவுரையாக அமைகிறது (யாத் 3:40).

மூன்றாம் நூலாகிய லேவியர் ஆகமத்தில், பலி (லேவி 1-7), சட்டத்தூய்மை (11-5), சட்டப்புனிதம் (17-26), நேர்ச்சிகள், தசமபாகம் (27) ஆகியவை பற்றிய ஒழுங்குகள் காணப்படுகின்றன. இந்நூலில் இரண்டு நிகழ்ச்சியுரைப் பகுதிகள் உண்டு. ஒன்று, ஆரோனும் அவர் மக்களும் திருநிலைப் படுத்தப்படுதல் பற்றியது (8-10). மற்றது பரிகார நாளைப்பற்றியது (16). நான்காம் நூல் மக்கள் கணக்கெடுப்போடு தொடங்குகிறது. பின் பன்னிரண்டு கோத்திரங்களையும் வரிசைப்படுத்துவது பற்றிய கட்டளைகளையும் மற்றச் சட்டங்களையும் குறிப்பிடுகிறது (எண் 1:1-10:10). நூலின் மீதியுள்ள பகுதியில், சீனாய்மலையிலிருந்து மோவாபு நாட்டுக்குச் செய்த பயணம் (எண் 10:11-22:1), அந்நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள், சமய வழிபாடு பற்றிய ஒழுங்குகள் முதலியன கலந்து வருகின்றன (எண் 22:2-36); இறுதியான ஐந்தாவது நூலில் மோவாபு நாட்டில் மோசேயைச் சந்திக்கிறோம். அவர் கடந்த கால நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கிறார் (உப 1:1-4:43). உடன்படிக்கையை மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார் (4:44-11). இது உபாகமச் சட்டப்பகுதிக்கு (12-26) மறையுரையால் ஆன முன்னுரையாக அமைகிறது. இச்சட்டங்களின் வலிமை, சாபங்கள், ஆசிகள் ஆகியவை தொடர் கோவையில் விளக்கப்படுகின்றன (27-30). மோசே யோசுவாவுக்கு அளிக்கும் ஆணை (31), அவரது வெற்றிப் பாடல் (32), பன்னிரண்டு கோத்திரங்களையும் அவர் ஆசிர்வதித்தல் (33), அவரது இறப்பு, அடக்கம் (34) ஆகியவற்றின் விவரிப்போடு இந்நூல் முடிகிறது. ஐந்நூலும் முடிகிறது.

உண்மையில் ஐந்நூல் ஒரு சட்ட நூலாகும். இதில் வரும் நிகழ்ச்சியுரைப் பகுதிகள் சட்டத்திற்கு ஒரு பணிச்சட்டமாகத் திகழ்கின்றன. இச்சட்டத் தொகுப்பின் சிறப்பு அதன் சமயப் பண்பாகும். இது மனதை ஈர்க்கவல்லது. மிகப் பழைமையான மேற்காசியப் பகுதிகளில் காணப்படும் பிறமக்களின் சட்டங்களிலும் இத்தன்மையுண்டு. ஆனால் உலகியல் போக்கைவிட இறைத்தன்மை எங்கும் பரவி விளங்கும் இஸ்ராயேலின் சட்டத் தொகுப்பைப் போன்ற வேறு ஒன்றும் இல்லை. இஸ்ராயேலின் இறைவனே சட்டத்தை அளிக்கிறார். மனிதன் இறைவன்பால் கொண்டிருக்க வேண்டிய கடமையை இச் சட்டம் விளக்குகிறது. சட்டத்தின் ஒவ்வொரு கட்டளையிலும் சமய நோக்குத் தொக்கி நிற்கிறது. பத்துக்கற்பனை அடங்கிய ஒழுங்குச் சட்டங்களும், சமய ஒழுங்குகளும் ஒரேதொகுப்பில் பின்னிப்பிணைந்து கிடப்பதும், முழுவதும் யாவேயுடன் செய்த உடன்படிக்கைத் தொடர்பு கொண்டிருப்பதும் இங்குக் கண்டு கொள்ள வேண்டிய சிறப்புகளாகும். ஆகையால் உடன் படிக்கையின் போது பாலைவனத்தில் நடந்தவை பற்றிய நிகழ்ச்சியுரைகளோடு இச்சட்டங்கள் பறைசாற்றப்படுதலும் இணைக்கப்பெற்றுள்ளது.

இச்சட்டத் தொகுப்பின் அடிப்படைக் கருப்பொருள்கள், மோசே காலத்தைச் சேர்ந் தவையென்று ஏற்கனவே கூறியுள்ளோம். சட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். ஆகவே காலம் இடம் ஆகியவற்றின் மாறும் சூழ்நிலைக்கேற்பச் சட்டங்கள் மாற்றிய மைக்கப்படவேண்டும். இதனால்தான் ஐந் தாவது நூலின் மிகப்பழங்காலத்துக் கருத்துக் கள் பிற் காலத்தில் எழுந்த பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் கருத்துக்களோடும் வாய்பா டுகளோடும் அடுத்தடுத்துக் காணப்படுகின் றன. இதோடு பிறஇனக்கலாச்சாரங்களாலும் இஸ்ராயேல் மிகுதியும் பாதிக்கப்பட்டது எனலாம். உடன்படிக்கை உபாகமச் சட்டத் தின் சிலபகுதிகளுக்கும், மெசபொத்தாமி யாச் சட்டம், அசீரியாச் சட்டத்தொகுப்பு, இத்தியர் சட்டத்தில் சில பகுதிகள் ஆகியவற் றுக்கும் இடையே வியத்தகு ஒற்றுமை காணப்படுகிறது. இந்த ஒற்றுமை நேரடியா கக்கடன் வாங்கியதால் வந்த விளைவு என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. புறஇனத்தாரின் சட்டம் இஸ்ராயேலின் சட் டத்தை ஓரளவு பாதித்தது எனலாம். மேலும் பழங்காலத்தில் மேற்காசிய மக்கள் ஓரளவு பொதுவான சட்டம் ஒன்றைக் கொண்டிருந் திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. தவிர, யாத்திரைக்குப் பின், கானானியர்க ளின் பழக்க வழக்கங்கள் இஸ்ராயேலின் சட்ட அமைப்பையும் வழிபாட்டுச் சடங்கு முறையையும் பெரிதும் பாதித்தன.

சீனாய்மலையில் அளிக்கப்பட்ட பத்துக் கற்பனைப் பலகை உடன்படிக்கையின் அடிப்படையான சட்டமாகும். இச்சட்டம் ஒழுக்கத்தைச் சார்ந்தது; சமயத்தையும் சார்ந் தது. இதுபற்றி வாசக வேறுபாடுகளுடன் கூடிய இரு வாசகங்கள் உள்ளன; யாத் 20:2-17; உப 5:6-18. இந்த இரண்டு வாசகங்க ளுக்கும் காலத்தால் முந்தியதும் ஆனால் சுருக்கமானதுமான வாசகம் ஒன்று இருந்தி ருக்கவேண்டும் என ஊகிக்க இடமிருக்கிறது.

எலோகிம் பாரம்பரியத்தை அடிப்படை யாகக் கொண்ட உடன்படிக்கைச் சட்டம், யாத் 20:22-23:14, ஆயர்களும் உழவர்களும் அடங்கிய சமூகத்தின் சட்டமாகும். ஆகை யால் இச்சட்டம் இஸ்ராயேல் ஒரு நாடாக உருவெடுத்து வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கிய காலத்திற்குப் பொருந்தியதாகும். காலத்தால் முந்தியதும் உடன்படிக்கைச் சட்டத்தோடு தொடர்புடையதுமான மெசபொத்தாமியா வின் சட்டத்தோடு இந்த உடன்படிக்கைச் சட்டத்தை ஒப்பிடும் போது, இச்சட்டத்தில் சிக்கல்கள் இல்லை எனலாம். இது ஓரளவு விரிவு அடைந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்துள்ளது. இக்கருத்துக்கு, சுமை சுமக் கும் விலங்குகள், வேளாண்மைத்தொழில், திராட்சை வளர்ப்பு, வீடமைப்பு ஆகியவை பற்றிச் சட்டம் காட்டும் அக்கறை ஆதரவு தருகிறது. இவ்வாறு இச்சட்டம்இஸ்ராயே லின் நாடோடி வாழ்வுக்காலம் பாதிமுடிந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. மேலும், நிபந்தனையற்ற கட்டளைகளாகவும், நிபந்த னையுடைய கட்டளைகளாகவும் சட்டங் களை இருவகையாகக் கூறும் முறை, இச்சட் டம் ஒரு கலப்பு என்று காட்டுகிறது. நாம் கொண்டிருக்கும் வடிவில் இச்சட்டம் நீதிபதி களின் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

யாவே பாரம்பரியத்தின்படி உடன்படிக் கையைப் புதுப்பிக்கும் சட்டம் யாத் 34:14-26 ஆகும். இப்பகுதி சில சமயம் ''இரண்டாம் பத்துக்கற்பனை'' அல்லது ''சடங்குப் பத் துக் கற்பனை'' என்றழைக்கப்படுகிறது. இது அதிகாரத் தொனியில் அளிக்கப்படும் சமயக் கட்டளைகளைக் கொண்டது. இப் பகுதி உடன்படிக்கைச் சட்டக் காலத்தைச் சார்ந்ததாகும். ஆனால் இப்பகுதி உபாகமப் பாரம்பரியத்தால் பாதிக்கப்பட்டு, சிறிதளவு திருத்தம் பெற்றதுமாகும்.

லேவியர் ஆகமம், அதன் இறுதி வடிவில், நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின்தான் தோன்றியிருக்கவேண்டும். ஆனால் அதில் மிகப்பழங்காலத்துக் கருத்துக்கள் காணப்படு கின்றன. உணவு பற்றிய ஒழுங்குகள் (லேவி 11) சட்டத்தூய்மையை விவரிக்கும் பகுதி (13-15) ஆகியவை ஆதியிலிருந்தே

வந்திருக்கலாம்; இவ்வாறு பரிகார நாள் சடங்கு (16) மிகப்பழைய சுத்திகரிப்பு செய்யும் சடங்கை உள்ளடக்கியுள்ளது. மேலும் இங்குப் பாவம் பற்றிய மிக வளர்ச்சியடைந்த கருத்தும் சேர்த்துக் கூறப்படுகிறது. லேவி 17-26 என்ற பகுதி பொதுவாகப் ''புனிதத்தின் சட்டம்'' என்றழைக்கப்படும். இப்பகுதி அரசர்கள் ஆட்சியின் இறுதிக்காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம். உப 12-26 இதே காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். இதிலுள்ள பழங்காலக் கருத்துக்கள் ஒழுங்குமுறை இல்லாமல் தற்செயலாகத் தொகுக்கப்பட்டன போலத் தெரிகிறது. எனினும் இப்பகுதியில் உள்ள கருத்துக்கள் சமய சமூகப் பழக்க வழக்கங்களின் வளர்ச்சிக்கு ஒரு சாட்சியாக உள்ளன. சான்று: புனித இடம் ஒரே இடமாக இருப்பது பற்றிய ஒழுங்குகளும், பீடம், தசமபாக வரி, அடிமைகள் ஆகியவை பற்றிய ஒழுங்குகளுமாகும். கட்டளைகளில் காணப்படும் கோரிக்கையும் போதகமும், சமய நோக்கும் இந்த ஒழுங்குகளில் மாற்றம் அடைந்துள்ளன.

10. ஐந்நூலின் இறையியல்:-

யாவே, எலோகிம், உபாகமம், குருக்கள் ஆகிய நான்கு பாரம்பரியங்களின் இலக்கியப் பகுப்பாராய்ச்சி, பழைய ஏற்பாட்டுக் காலத்தில்-இறைவெளிப்பாடு படிப்படியாக வளர்ச்சியும், செழிப்பும் உற்ற உள் அமைப்பை எடுத்துக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் சமயம் வரலாற்றைச் சா...்த சமயமாகும். அதாவது, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையில், குறிப்பிட்ட தனி நபர்களுக்கு அளிக்கப்பட்ட இறைவெளிப்பாட்டையும், மனித வரலாற்றின் குறிப்பிட்டகாலங்களில் இறைவன் தலையிட்டதையும் அடிப்படையாகக் கொண்டசமயமாகும். வரலாற்றுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பால் இஸ்ராயேலின் இறையியல் எப்போதும் உயிருள்ளதாக விளங்கியது; புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்த இறையியல் மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருந்தது. புதிய சூழ்நிலைகள் வழியாக இறைவன் தொடர்ந்து தம் மக்களை இறுதிக் கால முடிவு நோக்கித் தொடர்ந்து வழிநடத்திச் செல்லுகிறார். ஐந்நூலில் வைத்துக் காப்பாற்றப்பட்டுள்ள நான்கு பாரம்பரியங்களின் இறையியல்களும், இஸ்ராயேலின் திருஆசிரியர்களின் நீண்ட பட்டியலும் சேர்ந்து பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நிகழ்ந்த உயிருள்ள உரையாடலுக்குச் சாட்சி கூறுகின்றன.

ஐந்நூல் உலகோடு இறைவன் கொண்ட தொடர்பின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூலே யூத சமயத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது. இந்நூலே ஒப்புயர்வற்ற அளவுகோல் நூலாக மாறியது. இஸ்ராயேலின் சட்டம் மாறியது. இந்த ஐந்நூலில் இஸ்ராயேல் தனது ஊழின் பொருளைக் கண்டது. உலகம், வாழ்வு ஆகியவற்றின் பொருள் என்ன என்பது பற்றியும், துன்பம், சாவு, முக்தி முதலியபிரச்சனைகள் பற்றியும் ஒவ்வொரு மனிதனுள்ளும் எழும் கேள்விகளுக்கும், ஒரே கடவுளாகிய யாவே எப்படி இஸ்ராயேலின் இறைவன் ஆனார், உலகிலுள்ள மக்கள் எல்லாரிலும் இஸ்ராயேல் மட்டும் எப்படி இந்த இறைவனின் மக்களாயினர் என்பன போன்ற தன்னைப் பற்றிய கேள்விகளுக்கும் இஸ்ராயேல் ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களில் விடை கண்டது. மற்ற எல்லா மக்களையும் விட, இஸ்ராயேல் இறைவனது சலுகையை அதிகமாகப் பெற்றிருந்தது. இம்மக்கள் மகிமைமிக்கதொரு கடந்த காலத்தைக் கொண்டிருந்ததாகப் பெருமைப்படமுடியாது. ஏனெனில் அவ்விதம் பெருமைப்பட இம்மக்கள் ஒன்றும் செய்து விடவில்லை. அவர்களின் கடந்தகால இழிவான, தாழ்ந்த நிலையைத் தெளிவாக நினைவுகூறும் வகையில் அமைந்துள்ளன அவர்களின் பழைய விசுவாச அறிக்கைகள். இஸ்ராயேலரின் முன்னோர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தவர்கள் (உப 16:21) அதற்குமுன் இம்முன்னோர்கள் நாடோடியாகத் திரிந்த ஆராமிய இனத்தைச் சார்ந்தவர்கள் (உப 26:5). குலமுதியவர்களின் காலமும் மனிதப் பெருமைக்கு வித்திடுவதாக இல்லை. தன்னையே நம்பிய மனிதன், வீழ்ச்சியுற்று, இறைவனிடமிருந்து தூரவிலகிச்

சென்றான். (ஆதி 3-11). இருப்பினும், தொடக்கத்திலிருந்து இஸ்ராயேல், இறை வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை எப்போதும் தனக்கிருப்பதாக எப்போதும் உணர்ந்திருந்தது.

10. அ. வாக்குறுதி:-

ஐந்நூலை இறைவாக்குறுதிகளின் நூல் எனலாம். இறைவனது அருளிலிருந்து வழுவிய முதல் வீழ்ச்சிக்குப்பின், ஆதாம் ஏவாளுக்கு, ஏன், மனுக்குலமுழுவதற்குமே முடிவான வெற்றியை அளிப்பதாக இறைவன் வாக்களிக்கிறார் (ஆதி 3:15). இது மூல முதல் நற்செய்தியாகும். வரவிருக்கும் மீட்பு பற்றிய முதல் நற்செய்தியாகும். பெருவெள்ள அழிவிற்குப்பின் நோவாவுக்கும், அவர் வழியாகப் படைப்பு முழுமைக்கும், புதியதோர் அமைப்பை இறைவன் வாக்களிக்கிறார் (ஆதி 9:8-17). ஆபிரகாமுக்கும், மீண்டும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும், இறைவன் அளிக்கும் வாக்குறுதியில் அவர் தரும் வாக்குறுதியின் தன்மை தெளிவாகிறது. இவ்வாக்குறுதி அவர்கள் வழிமரபினைப் பாதிக்கவல்லது. இவ்வாக்குறுதி ஒரே நாட்டையும் ஒரே மக்களினத்தையும் உடைய எதிர்கால அமைப்பை நோக்கி இயங்குகிறது. இவ்வாக்குறுதி (12:1-3) ஆதியாகமத்தின் மீந்துள்ள பகுதி நெடுகிலும் தோன்றும் ஒவ்வொரு தலைமுறையோடும் புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாக்குறுதி மக்களை ஒன்றாக இணைக்கிறது; தனிப்பட்ட வரலாறுகளுக்கு ஒன்றிப்பும் இணைப்பும் அளிக்கிறது. குல முதியவர்கள் வாழ்ந்ததும், வாக்குறுதி செய்யப்பட்டதுமான நாட்டை இஸ்ராயேல் கைப்பற்றி அதில் வாழவேண்டும். இவ்வாறு நிகழ்வது வாக்குறுதியின் உடனடிக் குறிக்கோளாகும். ஆனால் வாக்குறுதியின் உட்கருத்து ஆழமானது; அதன் பின்விளைவு பரந்தது. அதாவது, இந்த வாக்குறுதி வழியாக இஸ்ராயேலுக்கும் அதன் மூதாதையர்களின் இறைவனாகிய யாவேக்கும் இடையே ஓர் உறவு நிறுவப்படுகிறது. இந்த உறவு தனிச்சிறப்புள்ள சலுகையுடையது; உண்மையிலேயே தனித்தன்மை உடையது. உடன்படிக்கை நிகழும் காலங்களில் இவ்வாக்குறுதி மக்களுக்கு நினைவுபடுத்தப்படுகிறது (யாத் 32:11-14; உப 4:32-40; யோசு 24:1-28).

10. ஆ. தேர்ந்தெடுத்தல்:-

வாக்குறுதி தேர்ந்தெடுத்தலுக்காகவும் தேர்ந்தெடுத்தலை விளக்கவும் கொடுக்கப்படுகிறது. இங்கு நாம் குறிக்கும் தேர்ந்தெடுத்தல் திருநூலின் மிக ஆழ்ந்த சமயக் கருத்துக்களுள் ஒன்றாகும். இறைவன் ஒரு மக்களினத்தைத் தம் மக்களாகத் தேர்ந்தெடுக்கின்றார். ஆபிரகாமை யாவே அழைத்ததிலேயே இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தல் முன்னறிகுறியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இறைவனைப் பொறுத்தமட்டில் தேர்ந்தெடுத்தல் தலைமையுரிமையடைய சுதந்தரத்துடன் தேர்ந்தெடுத்தலாகும். மனிதனைப் பொறுத்தமட்டும் இவ்வாறு தேர்ந்தெடுத்தல் பலரில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பெறுதலாகும். ''உள்ளபடி நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட குடியாய் இருக்கிறாய். மண்ணிலுள்ள எல்லா மக்களிலும் உன்னைக் கடவுளாகிய ஆண்டவர் தம் சொந்த மக்களாகத் தேர்ந்து கொண்டார்'' (உப 7:6). இத்தேர்ந்தெடுத்தலைக் குறிக்கும் ''பாஹார்'' என்ற கலைச்சொல் பிற்காலத்தில் தோன்றியதானாலும், இறைவனது தொடக்கச் செயலை எடுத்துக்கூறும் முந்திய வாசகங்களிலே இக்கருத்து அடங்கியுள்ளது. இறைவன் இஸ்ராயேலைச் சுதந்தரமாகத் தேர்ந்தெடுத்தல் குல முதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் நிறைவும் முடிவுமாகும்.

தேர்ந்தெடுத்தல், குல முதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இன்றியமையாத விதத்தில் பின்தொடர்கிறது. வெளிப்படையாக எக்காரணமும் இன்றி, ஆபிரகாம் இறைத் திட்டத்தின் ஒரு கருவியாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆபிரகாமின் வரலாறு முழுமையும் நிபந்தனையற்ற முறையில் இறைவன் முந்திச் செயல்படுவதோடு தொடங்குகிறது (ஆதி 12:1-2). வாக்குறுதியின் பின்வந்த உரிமையாளர்களான ஈசாக்கு, யாக்கோபு

ஆகியோரைத் தேர்ந்தெடுத்தலுக்கு எந்த இயற்கையான காரணமும் இல்லை. அவர்களிடம் எவ்விதத் தகுதியும் இல்லாமல் இருந்தும் இறைவனால் வெறுமனே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களில் இறைத்திட்டம் நிறைவேறுதலில் நேரடியாகப் பங்கு பெற விரும்பாதவர்களை நயமாக, மெல்ல மெல்ல மெதுவாக ஒதுக்கி அந்த இறைத்திட்டம் செயல்படுவது வெளியாகிறது. இது மரபு வரிசைப் பட்டியலில் மிகச் சிறப்பாகத் தெரிகிறது. இதில் பின்வந்த மரபினர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டாலும், இறுதியில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின்மேல் தான் கவனம் செலுத்தப்படுகிறது. தாமே சுதந்தரமாகத் தேர்ந்தெடுத்தலால், படைப்பின் தொடக்கத்திலிருந்து அன்போடு திட்டம் செய்து, மனிதனது தான்தோன்றித்தனத்தையும் பாராது, தொடர்ந்து செயல்பட்டு யாவே ஒரு மக்களினத்தை அமைத்து அதைத் தமதாக்கிக் கொள்கிறார்.

மக்களுக்கு இந்தத் தேர்ந்தெடுத்தல் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது *(உப 7:6)* இந்தத் தேர்ந்தெடுத்தல் இறைவன் யாவேயின் அன்புச் செயலாகும் *(4:37)*. ஆனால் இத்தேர்ந்தெடுத்தலை வெறும் சலுகையாகவோ, இறைவனது தனிப் பற்றாகவோ எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தத் தேர்ந்தெடுத்தல் இஸ்ராயேலின்மேல் பொறுப்பையும் கடமையையும் சுமத்துகிறது. இஸ்ராயேல் யாவேயை மட்டும் தனது ஒரே கடவுளாக ஏற்கவேண்டும் *(4:39)* அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் *(4:40; 7:9தொ; 10:16 தொ)*.

10. இ. உடன்படிக்கை:-

ஐந்நூலில் தேர்ந்தெடுத்தலை உடன்படிக்கை எப்போதும் பின்தொடர்கிறது. அதை உறுதிப்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டதின் விளைவான உறவை உடன்படிக்கை விளக்குகிறது. அதன் உண்மைத் தன்மைக்கும் சட்டப்படி செல்லக்கூடிய தன்மைக்கும் உறுதிப்பாடு அளிக்கிறது. பழங்காலத்து மேற்காசிய மக்களிடையே உடன்படிக்கைகள் சமூக அமைப்பின் சாதாரண உறுப்பாகும். உடன்படிக்கைகளில் பங்கு கொள்பவர்களிடையே விளையும் உறவை உடன்படிக்கை விளக்கியது; வரையறை செய்தது. சான்றாகத் தாவீதுக்கும் யோனத்தானுக்குமிடையே நிலவியது, அன்பு உடன்படிக்கையாகும் *(1 சாமு 23:18)*. ஆபிரகாமுக்கும் அபிமெலக்குக்குமிடையே இருந்தது, சமாதான உடன்படிக்கையாகும் *(ஆதி 21:22-33)*. இவையிரண்டும் சம நிலையானவர்களுக்கிடையே நிலவிய உடன்படிக்கையாகும் உயர்ந்தவருக்கும் தாழ்ந்தவர்க்குமிடையே உள்ள உடன்படிக்கைச் சான்றுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இத்தியர் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களில் இத்தியப் பேரரசனுக்கும், சுற்றியிருந்த சிற்றரசர்களுக்குமிடையே தனிப்பட்ட மேலரசுரிமை உடன்படிக்கைகள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விலக்கியங்கள் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை வடிவத்தை நன்றாகப் புரிந்து கொள் உதவுகின்றன என்று அறிஞர் கருதுகின்றனர்.

ஐந்நூலை வாக்குறுதிகளின் நூல் என்றது போல் அதை உடன்படிக்கைகளின் நூல் என்றும் அழைக்கலாம். இவ்வுடன்படிக்கைகள் சமநிலையானவர்களுக்கிடையே ஏற்பட்டவை அன்று. ஏனெனில் இறைவனுக்கு உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் தேவையில்லை. இறைவன் உயர்நிலையில் உள்ளார். மனிதன் தாழ்ந்த நிலையில் உள்ளவன். இருவருக்குமிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் தேர்ந்தெடுத்தலைப் போல் இறைவன் முந்திச் செயல்படுவதை இன்றியமையாத விதத்தில் கொண்டுள்ளன. விவிலியத்தில் காணப்படும் எல்லாப் பாரம்பரியங்களும் உடன்படிக்கைகளைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் குருக்கள் பாரம்பரியம் தான் வரலாற்றைத் திட்டமிட்டு நான்கு பாகமாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஓர் உடன்படிக்கையால் சிறப்பிக்கிறது. முதல் உடன்படிக்கை ஆதாமோடு செய்யப்பட்டதாகும். அது குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படுகிறது *(ஆதி 1:26-2:4)*. நோவாவோடு செய்யப்பட்

டது இரண்டாம் உடன்படிக்கை (9:8-17). இது நிபந்தனையற்றது. மூன்றாம் உடன் படிக்கை ஆபிரகாமோடு செய்யப்பட்டதாகும் (ஆதி 17). இதுவும் நிபந்தனையற்றதாகும். நான்காவது உடன்படிக்கை சீனாய்மலை யில் இறைவன் மோசே வழியாகத் தம் மக்களனைவரோடும் செய்து கொண்டதா கும் யாத் (19:3-6). முந்திய உடன்படிக்கை யாவும் நான்காவது உடன்படிக்கைக்காகவே செய்யப்பட்டன. மற்ற உடன்படிக்கைகளின் இலக்கிய அமைப்புக்கும் சடங்குமுறைக ளுக்கும் சீனாய்மலை உடன்படிக்கை எடுத் துக் காட்டாக விளங்குகிறது. சீனாய்மலை உடன்படிக்கை ஐந்நூலுக்கு மட்டுமன்று, பழைய ஏற்பாடு முழுமைக்குமே உச்சநிலை யானதாகும். இவற்றில் தொடக்கச் செயல் இறைவனைச் சார்ந்தது. ஆனால் உடன்படிக் கைகளின் விளைவை இறைவன் ஏற்றுக் கொள்ளுகிறார். மேலும், ஒரு விதத்தில், தாம் அளிக்கும் வாக்குறுதிகளின் காரணமாக இவ்வுடன்படிக்கைகளுக்குத் தம்மையே இறைவன் கட்டுப்படுத்துகிறார். ஆனால் அதற்குப் பதிலாகத் தம் மக்களிடமிருந்து பிரமாணிக்கத்தைக் கோருகிறார். இஸ்ரா யேல் பிரமாணிக்கம் தவறினால், இவ்வாறு தவறுவது பாவமாகும். இதனால் அன்பு ஏற்படுத்திய பிணைப்பு முறிந்து விடுகிறது.

உயர்ந்தோர்-தாழ்ந்தோர் செய்யும் உடன் படிக்கையில் தாழ்ந்தோர் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மாறாக நடந்தால் உயர்ந் தோர் இனி அவ்வுடன்படிக்கைக்குக் கட்டுப் பட்டவரல்லர். இதற்கு அடையாளமாக உடன்படிக்கைச் சாசனத்தை அழித்துவிட லாம் (யாத் 32:15-19). ஆனால் சீனாய் மலை யில் நிகழ்ந்த இறைவனது உடன்படிக்கை யில் இஸ்ராயேலின் தவறான போக்கு யாவேயின் கோபக்கனலை எழுப்பியது. அவர்கள் பாவத்திற்கு மனம் வருந்தித் திரும்பி வரும்வரை அவர்களுக்குத் தண் டனை அளிக்கப்பட்டது. ஆனால் யாவே தாம் இஸ்ராயேலரோடு செய்த உடன்படிக் கையை ஒரேயடியாக முறித்துவிடவில்லை. ஏனெனில் அவர் அருள் நோக்கும் தயையும் பொறுமையும் மிக்கவர். அவரது உடன் படிக்கை என்றும் நிலைத்திருப்பது. அவர் மன்னிக்கும் பெருந்தன்மையுடையவர். மக் களுக்கு எப்போதும் நன்மையே செய்பவர். ஆகையால் உடன்படிக்கைக்கு மாறாகப் பாவம் செய்தபின் மக்கள் இந்நல்ல யாவே யிடம் மன்னிப்பு வேண்டுவர். மன்னிப்பும் பெற்றனர் (யாத் 34:6தொ; எண் 14:19; எரே 3:12).

ஒவ்வோர் ஆண்டும் கூடார விழாவின் போது உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. இவ்வாறு இஸ்ராயேலின் வாழ்வில் உடன் படிக்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்த்தப்பட்டது.

10. ஈ. சட்டம்:-

இஸ்ராயேலர் இறைவன்பால் கொண்டி ருக்க வேண்டிய பிரமாணிக்கத்தை இறை வனே விளக்குகிறார். அவர் அளிக்கும் சட் டத்தால் இதை விளக்குகிறார். அவர் அளிக் கும் சட்டம் இறைமக்களுக்கு அவர்களின் கடமைகளை எடுத்துக் கூறுகிறது. அச்சட் டம், இறைவன் விரும்புகிறவாறு மக்களின் வாழ்வையும், இறைவனோடு அவர்கள் கொள்ள வேண்டிய உறவையும் ஒழுங்கு படுத்துகிறது. உடன்படிக்கையை ஆதரித்து வலிமை அளிப்பதால், சட்டம் வாக்குறுதி கள் நிறைவு எய்துவதற்கு வழிகோலுகிறது. சட்டம் உடன்படிக்கையோடு சிறப்பான உற வுடையது; உடன்படிக்கை நிறுவும் சடங் கில் சட்டம் முழுமைக்குரிய பாகமாகும். முதல் உடன்படிக்கையில் ஓய்வு நாள் சட் டம் அளிக்கப்பட்டது. பெருவெள்ளத்துக் குப்பின் வந்த உடன்படிக்கையில் இரத்தம் சிந்துவது தடுக்கப்பட்டது. ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையில் விருத்தசேதனம் சுமத்தப்பட்டது. சீனாய்மலை உடன்படிக் கையில் பத்துக் கற்பனைகள் கொடுக்கப்பட் டன. இஸ்ராயேலின் வரலாற்றில் வெவ் வேறு காலத்தில் வெவ்வேறு சூழ்நிலைக்கு ஏற்பச் சட்டங்கள் முறைப்படுத்திக் கூறப்பட் டாலும், இவை சீனாய்மலை உடன்படிக்கை யின் விளைவாகவும், இறைவனின் ஆட் சியை விளக்குவதாகவும் கருதப்பட்டன. ஆகையால் இந்தக் கட்டுப்பாட்டுக் கோரிக்

கைச் சட்டங்கள் எப்போதும் சீனாய் உடன் படிக்கையோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டன. ஐந்நூல் இறைவன் தந்த நிலைத்து நீடிக்கும் சட்டநூலாகும். இந்நூல் இஸ்ராயேல் தவறும்போது இஸ்ராயேலுக்கு எதிராக எப்போதும் இருக்கும் சாட்சியுமாகும் *(உப 31:26 பின்).*

இங்கே நாம் சட்டம் என்று கூறும்போது, இக்காலப்பொருளில் அச்சொல்லை எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக எபிரேயர் கருத்தை மனதில் கொள்ளவேண்டும். சட்டத்திற்குச் சாதாரணமாய் நாம் அளிக்கும் பொருளில் பத்துக்கற்பனைகள் சட்டமன்று. ஆனால் அவை சட்டங்களுக்கு அடிப்படையாகும். உடன்படிக்கையின் மூலக்கோரிக்கை, யாவே வெளிப்படுத்திய தம்முடைய சித்தமாகும், விருப்பமாகும். யாவே ஒழுக்க அமைப்புக்குக் காவலர் மட்டுமன்று, அதன் மூலமும் ஆவார். அதற்கு விளக்கம் அளிப்பவரும் அவரே. உடன்படிக்கைச் சமுதாயத்தில் இறைவன் சித்தம் மிக உயர்ந்த அதிகாரமுடையதாகும். இந்த அதிகாரத்திற்கு மற்ற எந்த மனித அதிகாரமும் பணிந்திருக்கவேண்டும். உடன்படிக்கைக் கோரிக்கைகளில் வெளியிடப்படும் ஒழுக்க அமைப்பைச் சார்ந்த யாவேயின் சித்தம், இஸ்ராயேலின் வாழ்க்கை முறையைத் தனிச்சிறப்புடன் நிறுவுகிறது. அவ்வாழ்விற்கு ஆசிகளையும் சாபங்களையும் வழங்குகிறது யாவேயின் சித்தம்.

*10. உ. ஐந்நூல்:-*

ஐந்நூல் சற்று வேறுபட்ட, தனிச்சிறப்புடன் அழுத்திக் கூறப்படும் இறையியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் முழுநூலும் ஒருமைப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த ஒருமைப்பாடு, பிற்காலத்தில் இத்தொகுப்பு இறையூக்கம் பெற்ற நூலாகக்கருதப்படுவது சரியென்று எண்பிக்கிறது. மேற்கூறிய வாக்குறுதி, தேர்ந்தெடுத்தல், உடன்படிக்கை, சட்டம் ஆகிய கருத்துக்கள் இந்நூலைச் கட்டிப் பிணைத்து, இதற்கு உள்ளார்ந்த ஒற்றுமை அளிக்கின்றன. இக்கருத்துக்கள் பழைய ஏற்பாட்டுப் பிற நூல்களிலும் தொடர்ந்து காணப்படுகின்றன. இந்நூலில் காணப்படும் ஒருமைப்பாடு மேலான மற்றொன்றுக்காகச் செயல்படுகிறது. இஸ்ராயேலைத் தேர்ந்தெடுப்பதை மட்டும் இறைச் செயலின் இறுதி நோக்கமாகக் கருதுவதற்கு இறைவனைப்பற்றிய இஸ்ராயேலின் கருத்து இடம் தரவில்லை. ஐந்நூல், ஒரு கதையின் முடிவன்று. ஐந்நூல் வாக்குறுதியைப் பற்றிக் கூறுகிறது.அவ்வாக்குறுதி நிறைவேறுதலைப்பற்றிக் கூறவில்லை. வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டினுள் நுழையுமுன்பே ஐந்நூல் முடிவுறுகிறது. குலமுதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் பெருமளவிற்கு இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. பாலைவனத்தில் சுற்றித்திரிந்த மக்கள், வாக்கு அளிக்கப்பட்ட நாட்டை வென்று உடைமையாக ஆக்கிக் கொள்வதை வாக்குறுதியின் நோக்கமாகக் கருதினர் என்பது உறுதி. ஆனால் நாட்டைக் கைப்பற்றியமுறை வேறுவிதமாய் இருந்தது. ஐந்நூல் தன்னிலே முடிவுரை பெற்ற நூலன்று. வாக்குறுதி செய்யப்பட்ட வருங்காலத்தில் நம்பிக்கையுள்ள நூலாகும். ஐந்நூல் வருங்காலத்தை எதிர்நோக்கி நிற்கிறது. கானான் நாடு கைப்பற்றப்பட்ட போது இவ்வாக்குறுதி நிறைவேறியது போல் தோன்றியது *(யோசு 23:14).* ஆனால் மக்களின் பாவங்கள் குறுக்கிட்டு வாக்குறுதி நிறைவேறுதலைக் கெடுத்தன. யேசுவா ஆகமம் ஐந்நூலுக்கு இலக்கிய மரபு முடிவன்று; வாக்குறுதி நம்பிக்கையின நிறைவுமன்று. உண்மையில், பின்வரலாறு, இஸ்ராயேலின் காலத்தில் இந்நம்பிக்கை ஒரு போதும் முழுவதும் நிறைவேறவில்லை என்று காட்டுகிறது. வாக்குறுதி, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்கும், ஆறுதல அளிக்கும் வாக்குறுதியாக இருந்தது. எனவே ஐந்நூல் எப்போதும் எதிர்காலத்தை நோக்கி இயங்கும் சிறந்த நூலாகவே இருந்தது.

*11. ஐந்நூலும், புதிய ஏற்பாடும்:-*

கிறிஸ்து [illegible] இயேசுவிடம் எதிர் நோக்கியே இருந்தது ஐந்நூல். அவரை நோக்கித் தெளிவற்ற முறையில் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. இவ்வாறு எதிர்

நோக்கி இயங்கும் திறந்த தன்மை, ''அழிப்ப தற்கன்று நிறைவேற்றுவதற்கே வந்தேன்'' என்று இயேசுகிறிஸ்து கூற அனுமதித்தது (மத் 5:17). கிறிஸ்துதாம் நீண்ட மீட்பு வர லாற்றுக்கு அதற்குரிய முழுப்பொருளையும் அளிக்கிறார்.

இப்போதகத்தை கலா 3:15-29-இல் கண்டு ணரலாம். பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை கள் எல்லாம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக் கைக்கு ஒத்திகையாகும். இப்புதிய உடன் படிக்கையில் கிறிஸ்துவர்கள், ஆபிரகாமுக்கு விசுவாச சந்ததியினராக, கிறிஸ்துவில் பங்கா ளர்களாக ஆக்கப்படுகின்றனர். சட்டத்தின் முக்கிய பணி, வாக்குறுதிகள் சேதமுறாது அவைகளை முழுமையாகக் காத்தலாகும். ஆகையால் சட்டம், குழந்தையைப் பள் ளிக்கு இட்டுச் செல்லும் தாதியைப் போன்ற தாகும்; சட்டம், வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றும் கிறிஸ்துவிடம் இட்டுச் செல் கிறது.

கிறிஸ்துவன் இனி இத்தாதியின் பாதுகாப் பில் இல்லை. அவன் சட்டத்தை அனுசரிக் கக் கட்டுப்பட்டவனல்லன். ஆனால் சட்டத் தின் ஒழுக்க, சமயபோதகத்திலிருந்து விடு பட்டவனும் அல்லன். ஏனெனில் கிறிஸ்து சட்டத்தை அழிக்க வரவில்லை; நிறைவேற் றவே வந்துள்ளார் (மத் 5:17). புதிய ஏற் பாடு, பழைய ஏற்பாட்டின் செய்தியை நீக்கி அப்புறப்படுத்தவில்லை, மாறாக அச்செய் தியை முன்னோக்கி எடுத்துச் செல்லுகிறது; அதை நிறைவு செய்கிறது. குல முதியவர் கள், மோசே காலங்களிலும் பாலைவனத்தி லும் நடந்த பெரும் நிகழ்ச்சிகளிலும், விழாக் களிலும், சடங்குகளிலும் (ஈசாக்கின் பலி, செங்கடலைக் கடத்தல், பாஸ்கு முதலியன) திருச்சபை புதிய சட்டத்தின் பெரும் உண் மைகளைக் (கிறிஸ்துவின் பலி, திரு முழுக்கு, கிறிஸ்துவப் பாஸ்கு) காண்கிறது. இது மட்டுமன்று, ஐந்நூல் நிகழ்ச்சியுரைக ளும் கட்டளைகளும் இஸ்ராயேலரிடம் இருந்து கோரும் சமயம் சார்ந்த பதிலுக்கும், நமது கிறிஸ்துவ விசுவாசம் கோரும் பதிலுக் கும் அடிப்படையில் வேறுபாடு இல்லை. புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு கிறிஸ்துவ னுக்கும் ஒரு செய்தியுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்துவனும் இறைவனை நோக்கிச் செல் லும்போது இஸ்ராயேலின் பாதையையே பின்பற்றுகிறான். இறைவழியினின்று வழு வுகிறான்; சோதிக்கப் பெறுகின்றான் சுத்தி செய்யப்பட்டு எழுகிறான்; இறைவனை நோக்கிச் செல்லுகிறான்.

## ஐம்பதாம் நாள் விழா (PENTECOST)

''கடந்து செல்லுதல்'' எனப்பொருள் படும் பாஸ்கா விழாவிற்குப்பின் ஐம்பதாம் நாளில் கொண்டாடப்பட்ட இவ்விழா கிரேக்க மொழியில் ''பெந்தகோஸ்தே'' என அழைக் கப்பட்டது. இவ்விழாவின் பொருள் நாள டைவில் விரிவுற்று வளர்ந்தது. முதலில் அது வேளாண்மை சார்ந்த விழாவாகத் தோன்றி யது; பின்னர் இஸ்ராயேல் மக்களின் வரலாற் றில் அவர்களோடு யாவே செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூரும் விழாவா கியது. இறுதியாக அது தூய ஆவியாரைக் கொடையாகப் பெற்று, இம்மண்ணுலகில் புதிய உடன்படிக்கையின் தொடக்க விழா வானது.

1. பழைய ஏற்பாடும், யூத மறையும்:

இஸ்ராயேல் மக்களின் பெருவிழாக்கள் மூன்று. அவை, ''கடந்து செல்லுதல் விழா,'' ''கூடாரத் திருவிழா,'' ''ஐம்பதாம் நாள் விழா'' என்பன. இவ்விழாக்களின்போது யாவே தமது திருப்பெயருக்கெனத் தேர்ந்து கொண்ட இடத்தில் இஸ்ராயேலர் தம்முன் வரப்பணித்திருந்தார் (உப 16:16).

1. தொடக்கத்தில் ஐம்பதாம் நாள் விழா அறுவடை விழாவாக இருந்தது. அன்று மகிழ்வுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தி னர் (யாத் 23:16; எண் 28:26; லேவி 23:16 தொ). இந்நாளில் விளைநிலங்களின் முதற் பலன் பலியாக அளிக்கப்பெறல் வேண்டும் (யாத் 34:22-இல் இவ்விழா வாரங்களின் திருவிழா எனக்குறிப்பிடப்படுகிறது. ''கடந்து செல்லுதல் விழாவிற்கு'' ஏழு வாரங்க ளுக்குப்பின் வரும் இவ்விழாவின் போது புதுப்பலன்களில் முதல்கதிர்க்கட்டு காணிக் கையாக அளிக்கப்பட்டது. லேவி 23:15).

2. பின்னர் இவ்விழா ஆண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. எகிப்து நாட்டினின்று வெளியேறிய நாளின் நினைவாகக் ''கடந்து செல்லுதல் விழா'' கொண்டாடப்பட்டதெனின், வெளியேறிய பின் ஐம்பதாம் நாள் ஏற்பட்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்தது இந்த விழா (யாத் 19:1-16). இதே விழா கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் உடன்படிக்கையை நினைவுகூரும் ஆண்டு விழாவாகியது. யூதராபிகள் வழிவந்த நூல்களிலிருந்தும், கும்ரான் ஏடுகளில் இருந்தும் இவ்விழாவானது கிறிஸ்தவ காலத் தொடக்கத்தில் இந்நோக்குடன் கொண்டாடப்பட்டு வந்தது எனத் தெரிய வருகின்றது.

II. கிறிஸ்தவ ஐம்பதாம் நாள்:-

1. இறைமாட்சித் தோற்றம் பழைய ஏற்பாட்டில் காணப்படும் இறைமாட்சித் தோற்றத்தின் வழியில், புதிய ஏற்பாட்டில் பெருங் காற்று, தீ எனும் வெளி அடையாளங்களோடு தூய ஆவியானவர் கொடை அளிக்கப்பெற்றது. கிறிஸ்தவ ஐம்பதாம் நாள் விழாவின் உட்பொருளை உணர்த்துமாறு அருங்குறிகள் தோன்றின. அப்போஸ்தலர்கள் இறைவனின் அற்புதங்களைப் புகழுமாறு ''அயல் மொழிகளில்'' பேசினது முதல் அருங்குறியாகும் (அ.ப. 2:3). இவ்வாறு பேசுதல் ''அருட்கொடை செப முறையில்'' ஒன்றாகும். இச்செபமுறை முதல் கிறிஸ்தவக் குழுக்களில் வழக்கிலிருந்தது. தன்னிலேயே விளங்காததொன்றாயினும் (1 கொரி 14:1-25) ''அயல் மொழிகளில்'' பேசினது அன்று அங்குக் குழுமியிருந்த அனைத்து நாட்டினராலும் புரிந்து கொள்ளப் பட்டது (அ.ப. 2:5-11). இந்த இரண்டாம் அருங்குறி திருச்சபையானது மனித குலம் அனைத்தையும் தன்னுள் ஏற்கும் பொது இயல்புடையது என்பதன் அடையாளம்.

2. இந்நிகழ்ச்சியின் உட்பொருள்:-

அ) இறுதிக் காலத்தில் பொழியப்படும் ஆவியார்:-

இறைவாக்கினர் யோவேலை மேற்கோள் காட்டுவதிலிருந்து இறைவனின் வாக்குறுதிகள் ''ஐம்பதாம் நாள்'' அன்று நிறைவேறின என்று பேதுரு சுட்டிக் காட்டுகின்றார். காலம் நிறைவுறும் போது ஆவியானவர் அனைவருக்கும் அளிக்கப்பெறுவார் (எச 36:27). தூய ஆவியாரில் திருமுழுக்காட்டுபவர் மக்கள் நடுவில் எழுந்திருப்பதை முன்னோடியரான யோவான் அறிவித்தார் (மாற் 1:8). உயிர்த்தெழுந்த இயேசு ''இன்னும் சில நாட்களில் தூய ஆவியாரில் திருமுழுக்காட்டப்பெறுவீர்கள்'' என்று அந்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்தினார் (அ.ப. 1:5).

ஆ) கிறிஸ்துவின் கடத்தலின் உச்சநிலை:-

இயேசு இறந்து, எழுந்து, இறைத்தந்தையின் வலப்பக்கத்தில் உயர்த்தப் பட்டு அப்போஸ்தலிக்கக் குழுமத்தின்மீது தூய ஆவியாரை அனுப்பியதில் தமது மீட்பின் பணியை முற்றுப் பெறச் செய்தார் என்பது ஆதித்திருச்சபையின் போதனையாகும் (அ.ப. 2:23-33). கிறிஸ்துவின் உயிர்தெழலின் நிறைவே ஐம்பதாம் நாள் விழாவாகும்.

இ) மெசியாவைத் தலைவராகக் கொண்ட திருக்கூட்டத்தை ஒன்று சேர்த்தல்:-

முன் காலத்தில் சிதறுண்டவர்கள் மீண்டும் சீயோன் மலைமீது ஒன்று சேர்க்கப்படுவர்; இவ்வாறு யாவேயைச் சுற்றி இஸ்ராயேலின் சபை ஒன்று சேர்க்கப்படும் என இறைவாக்கினர் போதித்தனர். யூதர்களுக்கும், யூதமறையைத் தழுவவிரும்பிய புறவினத்தாருக்கும் இடையேயுள்ள ஆன்மீக ஒன்றிப்பை எருசலேம் நகரில் உண்மையாக்கியது ஐம்பதாம் நாள். அப்போஸ்தலர்களின் போதனைக்குச் செவிசாய்த்து, அவர்களது படிப்பினையைக் கேட்டு, நட்புடன் உறவாடி, அப்பம் பிட்டல் எனும திருவிருந்தில் பங்கு கொண்டனர் (அ.ப 2:42 தொ)

ஈ) மக்கள் குலம் அனைத்தையும் ஏற்கும் பொதுக்குலம்:-

இம்மண்ணுலகின் இறுதி எல்லைவரை சாட்சிகளாக இருப்பதற்கே ஆவியார் ஆதித் திருச்சபையின் உறுப்பினருக்கு அளிக்கப் பெற்றார் (அ.ப. 1:8). மெசியாவைத் தலைவராகக் கொண்ட இக்குழுமம் மக்கள் குலம் அனைத்தையும் ஏற்கும் தன்மைத்து என்ற உண்மையை வலியுறுத்துமாறு அமைந்ததே ''அயல்மொழிப்பேச்சைக்'' கேட்டுணரும் அற்புதம் (அ.ப. 2.5 11). யூதரல்லாத புறச் சமயத்தினர்மீதும் ஆவியானவர் பொழியப்

பட்டபோது இதே உண்மைதான் வெளிப் படுத்தப்பட்டது (10:44 தொ). பாபேவில் தொடங்கிய பிளவு இங்கு அதற்கு நேர்மா றான ஒன்றிப்பாக, முடிவாக அமைகின்றது (ஆதி 11:1-9).

உ) மறைபரப்புப்பணிக்காகப் புறப்படல்:-

மக்கள் குலத்தின் நடுவிலிருந்து மெசியா வைத் தலைவராகக் கொண்ட குழுமத்தைக் கூட்டுவித்த அதே நாள் மறைபரப்புப் பணி யின் தொடக்க நாளும் ஆகும். ''தூய ஆவி யார் உங்கள் மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று..... மண்ணுலகின் இறுதி எல்லைவரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள்'' என்று (அ.ப. 1:8) இயேசு கட்டளையிட்ட திருப்பணியின் முதற்கட்டம் ''பேதுரு பதினொருவரோடு எழுந்து நின்று'' ஆற்றிய திரு உரையாகும்.

இயேசு யோர்தானில் திருமுழுக்குப் பெற்ற போது இறைமாட்சித் தோற்றம் ஒன்று நிகழ்ந்தது. தூய ஆவியாரில் ஏற்பட்ட ஐம்ப தாம் நாள் திருமுழுக்கை இந்த அருட்தோற் றத்திற்கு ஒப்பிடுகின்றனர் திருச்சபைத் தந் தையர். ஐம்பதாம் நாள் விழாவின்போது திருச்சபைக்குப் புதிய திருச்சட்டம் வழங்கப் பட்டது (காண். ஏரே 31:33; எச 36:27). புதிய படைப்புத் தோன்றியது (ஆதி 1:2). அ.ப. 2-ஆம் அதிகாரத்தில் இவை வெளிப்படை யாகக் கூறப்படாவிடினும், இவை உண்மை யானவை என்பது மனித உள்ளத்தில் தூய ஆவியார் ஆற்றும் செயலிலிருந்தும், இச்செய லின் விளைவான மறுபடைப்பிலிருந்தும் தெரியவருகின்றது.

3. ஐம்பதாம் நாள் விழா மீட்பின் மறை பொருள்:

இறைமாட்சித் தோற்றத்தின் வெளி அடை யாளங்கள் என்றும் நிலைத்திருப்பவை யன்று, மறைந்துவிட்டன. ஆனால் திருச் சபைக்குக் கொடுக்கப்பட்ட கொடை மறை யாது, என்றும் நிலைத்திருப்பது. தனது தலைவராம் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்லும் திருப்பயணத்தையும், தன்னை விசுவாசத்திலும், அன்பிலும் ஏற்று, புனிதப் படுத்தித் தனது திருமறைபரப்பும் பணிக்கு அனுப்பும் தூய ஆவியாரை இடையறாது பெற்றுக் கொள்ளும் காலத்தையும் தொடங்கி வைக்கின்றது ஐம்பதாம் நாள் விழா. ''தூய ஆவியாரின் நற்செய்தி'' எனப் படும் அப்போஸ்தலர் பணிநூல் நிலை பெற் றிருக்கும் தலைசிறந்த இந்த அருட்கொ டையை வெளிப்படுத்துகின்றது. இவ்வருட் கொடையின் உண்மை திருச்சபையை இலக்கை நோக்கிச் செல்லும் செயலிலும், தூதுரைப் பணியிலும் (அ.ப. 4:8; 13:2; 15:28; 16;6), இவ்வருட்கொடையின் வெளிப்படை யான புறக்கூறுகளிலும் (4:31; 10:44 தொ), இருந்து தெளிவாகின்றது. ''காலத்தின் நிறைவு'' எத்தகையது என்பதைத் தூய ஆவியாரின் கொடை தீர்மானிக்கின்றது. அதாவது இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்றத்தில் தொடங்கும் இக்காலம் அவர் மீண்டும் வரும்போது நிறைவுறும்.

**ஐனேயா** (AENEAS - புகழத்தக்க)

இலிதா நகரைச் சேர்ந்த கிறிஸ்தவர். எட்டு ஆண்டுகளாக இருந்த திமிர்வாத நோயிலி ருந்த இவரைப் புனித பேதுரு குணமாக்கி னார் (அ.ப. 9:32-35). இப்பெயர், கோமேர், துசிதைதஸ், செனோபோன், பிந்தார் மற்றும் யோசிப்பஸ் ஆகியோரின் நூல்களில் வருகிறது.

**ஐனோன்** (AENON - இரட்டை நீரூற்று)

இது தண்ணீர் நிரம்பிய இடம். கிறிஸ்து வின் பணித் தொடக்க காலத்தில் இங்குதான் திருமுழுக்குயோவான் திருமுழுக்குக் கொடுத்து வந்தார் (யோவா 3:23). இந்த இடத்தை அடையாளம் காண எடுக்கப்பட் டுள்ள முயற்சிகள் எதுவும், ஒன்றும் மன நிறைவு தருவதாய் இல்லை. இது சலீமிற்கு அருகில் இருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் யோவா 3:22-இல் 'யூதேயா'' வருவ தால் ஐனோன் யோர்தானுக்கு அப்பாலுள்ள பெரயாவில் குறிக்கப்படும் பாரம்பரியம் உறுதிப்படுகின்றது. இவ்விடம், யுசேபிய சின் கூற்றுப்படி பேத்-சானுக்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில், ஒருவேளை இக்கால உனிம்-ஏல்-அம்தானுக்கு அருகில் இருந்தி ருக்கலாம்.

# ஒ

**ஒகலிபா** *(OHOLIBAH - என் கூடாரம் அவளில் உள்ளது)*

*எசே.23-இல் வரும் உருவகத்தில் எருசலேமைக் குறிக்கும் பெயர். இரு சகோதரிகளில் இளையவளான, ஒகலிபா, தனது விபச்சார, காம வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தினாள் (23:11-12). ஆகவே யாவே, அவளுடைய காதலர்களையே அவளுக்கு எதிராக எழுப்புவார். அவர்கள் அவளுடைய ஆடைகளை உரித்துப்பங்கப்படுத்துவர். அவளுடைய புதல்வர்களையும் புதல்விகளையும் கொன்று போடுவர். அவளுடைய முறைகேடான வாழ்கையின் விளைவுகளை அனுபவிப்பாள். அதனால் யாவேயே உண்மையான இறைவன் என்று கண்டறிவாள் (23:22-35.46-49).*

**ஒகலிபாமா** *(OHOLIBAMAH - உயர் நிலத்தின் கூடாரம்)*

*1. ஈவியர் சிபயோனின் மகனான ஆனாக்கின் மகள். இவளை ஏசா மணந்து கொண்டார். இவள் மூன்று புதல்வர்களைப் பெற்றாள் (ஆதி 36:2.5.14.18.25). இவளுடைய பெயரானது மற்ற ஏசாவின் மனைவிகள் அட்டவணையில் கொடுக்கப்படவில்லை (ஆதி 26:34; 28:9).*

*2. இவன் ஏதோம் குலத்தின் ஒரு தலைவன் (ஆதி 36:41; 1 நாள் 1:52).*

**ஒகலியாபு** *(OHOLIAB - தந்தையின் கூடாரம்)*

*இவர் தாண் கோத்திரத்தில் உதித்த அகிசமாக்கின் புதல்வர். இவர் பெசலேலோடு உடன்படிக்கைக் கூடாரம், சாட்சியப் பெட்டகம் போன்றவற்றைச் செய்தார் (யாத் 31:6; 35:34; 36:1-2; 38:23). இவர்களுக்கு வேண்டிய ஞானமும் அறிவும் இறை ஆவியினாலே வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.*

**ஒக்கிரான்** *(OCHRAN - தொந்தரவு, துன்புறுதல்)*

*பாலைவனத்தில் ஆசேர் கோத்திரத்தின் தலைவனாயிருந்த பகியேலின் தந்தை (எண் 1:13; 2:27; 7:72.77; 10:26).*

**ஒக்கினா** *(OCINA )*

*இது தீர் நகருக்குத் தெற்கில் உள்ள கடற்கரைப் பகுதி (யூதி 2:28). இது இருந்த இடம் தெரியவில்லை. பெயர் ஒற்றுமையையும் பொது இட அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு இது இக்கால அக்கோவாக இருக்கலாம் என்று அறிஞர்சிலர் கருதுகின்றனர்.*

**ஒசினப்பார்** *(OSNAPPAR )*

*இந்த அசீரிய அரசன் அந்நிய நாட்டு மக்களை அழைத்து வந்து சமாரியாவில் குடியேறச் செய்தார் (எஸ் 4:10). இவர், அசூர்பானிப்பாலாக இருக்கலாமென வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவர் குடியேற்றிய மக்களில் எலாமியர்களும், சூசாவின் மக்களும் இருந்தனர். இந்நகர்கள் இவரால் 640-இல் அழிக்கப்பட்டன.*

**ஒசினி** *(OZNI - என் காது)*

*வனாந்திரத்தில் மோசே இரண்டாம் முறையாக மக்கள் கணக்கு எடுத்தபோது அதில் இவர் பெயர் வருகிறது. இவர் காதின் கோத்திரத்தில் தோன்றியவர். மேலும் இவர் ஒசினி வம்சத்தின் குலத்தலைவராவார் (எண் 26:16). ஆதி. 46:16-இல் வரும் இணைப்பட்டியலில் இவர் எசிபோன் என்று அழைக்கப்படுகிறார்.*

**ஒசிரிசு** *(OSIRIS )*

*இது எகிப்தியத் தெய்வங்களின் கூட்டத்தில் முதன்மையானவற்றுள் ஒன்று. இது தாவரங்களின் கடவுளும், மறுஉயிர் கொடுக்கும் தெய்வமுமாகும். மேலும் இறந்தவர்களின் தெய்வமாகக் கருதப்படுகிறது. கிரேக்க-உரோமையர் காலத்திலே ஆபிஸ் என்ற பெயருடன் இணைக்கப்பட்டு, செராபிஸ் என்ற பெயரோடு இத்தெய்வம் மிக முக்கிய [illegible] விளங்கியது.*

இத்தெய்வம் ஐசிசின் சகோதரனும் கணவ னுமாவார்; கோருசின் தந்தை. மனுக்குலத் திற்குக் கலாச்சாரக் கலைகளைக் கற்றுக் கொடுத்தவராகப் பாரம்பரியத்தால் கருதப் பட்டார்.

### ஒட்டக மயிராடை - (CAMEL'S HAIR)

திருமுழுக்கு யோவானின் மேலாடை ஒட் டகமயிரால் செய்யப்பட்டிருந்தது. சில சம யங்களில் ஒட்டகத்தின் மயிரால் செய்யப் பட்ட கடினமான மேற்போர்வையைப் பாலஸ்தீனத்தில் வாழும் பெடுயினியர் இன் றும் அணிகின்றனர். இப்படிப்பட்ட ஆடை திருமுழுக்கு யோவானின் தவவாழ்க்கைக் கும் செய்திக்கும் பொருத்தமானதாகும். யோவானின் ஆடைக்கும் அரசர் மாளிகை யில் அணியப்பட்ட மெல்லிய ஆடைக்கும் உள்ள முரண்பாட்டை இயேசு எடுத்துக் கூறுகிறார் (மத் 11:8).

மயிரினால் செய்யப்பட்ட போர்வை இறைவாக்குப்பணிக்கு ஓர் அடையாளம் (செக் 13:4). யோவானின் மாதிரியான எலியா இதுபோன்ற மயிர் மேலாடையை அணிந்திருந்தார் (2 அர 1:8). அனேகமாக இது ஒட்டகத்தின் மயிரால் செய்யப்பட்ட தாக இருந்திருக்கலாம்; இது எலியாவின் முடியைப்பற்றிய விவரிப்பு என்று சிலர் கருதுகின்றனர்.

### ஒட்டக முள் (CAMEL'S THORN)

மன்னாவைப் போன்ற ஒருவிதப் பொரு ளைக் கொடுக்கும் குட்டையான முள் நிறைந்த செடி. இதனுடைய வேர் வாசனைப் பொருள்களைச் செய்யப்பயன்படுத்தப்பட் டது என்று பிளினி கூறுகிறார். இந்த வார்த்தை சீரா 24:15-இல் வருகின்றது; இலத் தீன் இந்த வார்த்தையைப் ''பால்சம்'' என்று மொழிபெயர்க்கிறது. வாசனைச்செடியைப் போன்று ஞானம் இஸ்ராயேலை நறுமணத் தால் ஆசிர்வதித்துள்ளது என்று இப்பகுதி கூறுகிறது.

### ஒட்டகம் (CAMEL)

3000 ஆண்டுகளுக்கு மேலாக ஒட்டகமா னது பயணத்திற்காகவும் பொதிசுமக்கும் மிருகமாகவும் பயன்படுத்தப்பட்டது.

1. பெயர்:- ஒட்டகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொற்கள் ஆதி 12:16; மத் 3:4; 19:24; 23:25; மாற் 1:6; 28:25; லூக் 18:25; ஏச 60:6; எரே 2:28-இல் காணப்படுகின்றன.

2. இனங்கள்:- விவிலியக் குறிப்புகள் ஏறக்குறைய எல்லாம் அரேபிய ஒட்டகத் தைத்தான் குறிக்கின்றன. இது ஒற்றைத் திமில் கொண்டது. இதில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. பொதிசுமக்கும், மெது வாகச் செல்லும் ஒட்டகம் (ஆதி 37:25); வேகமாகச் செல்லும் ஒட்டகம் (1 சாமு 30:17). மத்திய ஆசியாவைச் சேர்ந்த பக்திரி யன் ஒட்டகத்தைப் பற்றி ஏச 21:7; தோபி 9:2; யூதி 2:17-இல் சொல்லப்பட்டுள்ளது. இந்தவகை இரண்டு திமில்கள் கொண் டவை. இந்த ஒட்டகம் நீளமான முடியைக் கொண்டது; ஒற்றைத் திமில் அரேபிய ஒட்ட கம் மிக வேகமாகச் செல்லக் கூடியது.

3. பழக்கப்பட்ட காலம்:- ஆதி ஆகமக் குறிப்புகளின்படி இஸ்ராயேலரின் குலமுதி யவர்கள் காலத்திலேயே (கி.மு. 2000) ஒட்டக மானது பயன்படுத்தப்பட்டது. ஆனால் விவிலியத்துக்குப் புறம்பான குறிப்புக்கள் ஒட்டகம் பிற்காலத்தில்தான் பழக்கப்படுத் தப்பட்டது என்று காட்டுகின்றன. தோலமி காலம்வரை எகிப்தியச் சித்திரம், இலக்கியம் ஆகியவை ஒட்டகத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அசீரியர்களின் குறிப்புகள் படி ஒட்டகமானது முதன் முதலில் முதலாம் திகிலாத்துபிலேசர் காலத்தில் வீட்டுவிலங் காகப் பழக்கப்பட்டது (கி.மு. 1100). கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் சில பிரயாணத்திற்குப் பயன்படுத்தப்பட்டன என்று தெரிகிறது. பெருமளவில் ஒட்டகப் பிரயாணம் செய்தது கி.மு. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை தோன்றவில்லை (நீதி 6:5) என்று தெரிகி ன் றது. ஆனால் ஆதி 24-இல் உள்ளதுபோல் இதற்கு முன்பு தனி ஆட்களும் குடும்பங்க ளும் ஒட்டகங்களைப் பயன்படுத்தியிருக்க லாம். குலமுதியவர்கள் காலத்தில் ஒட்டகம்

வருவது கால மயக்கக் குறிப்பாகும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

4. பழைய ஏற்பாட்டில் ஒட்டகங்களை வைத்திருந்தவர்கள்:-

அ. எபிரேய குலமுதியவர்கள்:- ஆபிரகாம் எகிப்தில் ஒட்டகங்களை வைத்திருந்தார் (ஆதி 12:16). கானானிலிருந்து தன்னுடைய ஊழியனைப் பதான்-ஆராமுக்கு 10 ஒட்டகங்களுடன் அனுப்பினர் (24:10). யாக்கோபு பதான் ஆராமில் ஒட்டகங்களை வைத்திருந்தார் (30:43). ஒட்டகத்தில் அவர் கானானுக்குப் பயணம் செய்தார் (31:17). ஏசாவுக்கு ஒட்டகங்களைப் பரிசாக அனுப்பினார் (32:15).

ஆ. அரேபியர்களும் மற்ற நாடோடிகளும்:- யோசேப்பை வாங்கிய இசுமயேலர்கள் ஒட்டகங்களில் சென்றனர் (ஆதி 37:25). மிதியானியர்கள் இஸ்ராயேலரைக் கொள்ளை அடித்தபோது நிறைய ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (நீதி 6:5). ஓர் இறைவாக்கினர் தனது மெசியாக்காலத்துச் செய்தியில் சீயோனுக்குக் காணிக்கைகளைச் சுமந்து கொண்டு ஒட்டகங்கள் வருவதைக் காண்கின்றார் (ஏச 60:6). அமலேக்கியர்கள் சவுல் மன்னன் காலத்தில் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (1 சாமு 15:3). தாவீது காலத்திலும் கூட (1 சாமு 27:8; 30:17) ரூபன் குலத்தவர் எதிரிகளிடமிருந்து 30000 ஒட்டகங்களைக் கைப்பற்றினர் (1 நாள் 5:21). மற்றத் தெற்குப் பாலஸ்தீனக் கோத்திரத்தாரும் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (1 சாமு 27:8-9; 2 நாள் 14:15). சேபாவின் அரசி சாலமோனுக்குத் தன்னுடைய நன்கொடைகளை ஒட்டகத்தின் மேல் கொண்டு வந்தாள் (1 சாமு 10:2). கேதார் கசோர் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (எரே 49:29.32). அம்மோனின் தலைநகரான அரபா ஒட்டகமேய்ச்சல் நிலமாகும் என்று எசக்கியேல் முன்னோக்கினார் (எச 25:5). யோபு 3000 ஒட்டகங்களைக் கொண்டிருந்தார் (யோபு 1:3; 42:12).

இ. இஸ்ராயேலர்கள்:- கெபிரோனிலிருந்த தாவீதிற்கு இஸ்ராயேலர்கள் ஒட்டகங்களில் கொடைகள் கொண்டுவந்தனர் (1 நாள் 12:40). தாவீதிடம் ஒட்டகங்கள் இருந்தன (1 நாள் 27:30). யூதா நாட்டவர் ஒட்டகங்களின்மேல் எகிப்திற்குப் பரிசுகளைக் கொண்டு சென்றார்கள் (ஏச 30:6). நாடுதிரும்பியவர்கள் ஒட்டகங்களின் மேல் வந்தார்கள் (ஏச 6:20; எஸ் 2:67; நெக 7:69). மேதியா நாட்டு இஸ்ராயேல் அடிமைகள் ஒட்டகங்களில் பயணம் செய்தனர் (தோபி 9:2)..

ஈ. மற்றவர்கள்:- சீரியா நாட்டு அரசனான பென்-அதாது 40 ஒட்டகங்களுடன் பரிசுகளை எலிசாவிற்கு அனுப்பி வைத்தான் (2 அர 8:9). ஒரு காட்சியில் (ஏச 21:7) ஒட்டகங்களில் வந்த ஏலாமியர்களும் மேதியர்களும் பாபிலோனைத் தாக்குவதாகக் காண்கின்றார் ஏசயா. அசீரியா படை ஒட்டகங்களைப் பயன்படுத்தியது (யூதி 2:17). முடிவுக் காலங்களில் இஸ்ராயேலின் எதிரிகள் ஒட்டகங்களைப் பயன்படுத்துவார்கள் (செக் 14:15).

5. புதிய ஏற்பாட்டில்:- திருமுழுக்கு யோவான் ஒட்டக மயிராடையை அணிந்திருந்தார் (மத் 3:4; மாற் 1:6). மூன்று நற்செய்திகளும் (மத் 19:24; மாற் 10:25; லூக் 18:25) ''பணக்காரன் விண்ணரசில் நுழைவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' என்று கூறுகின்றன. பாலஸ்தீனத்தில் யாவரும் அறிந்த மிகப் பெரிய விலங்கு ஒட்டகமாகும். ஊசியின் காது மிகச் சிறிய துவாரத்தைக் கொண்டது. ஆகவே இக்கூற்று மிகையுரையாகும். ஆகவே நினைவில் வைக்கத் தகுந்த கருத்தாகும். உடனடியான முன் கூறப்பட்ட பொது உண்மையை வலியுறுத்துகிறது (மத் 19:23இ). இத்தகைய கூற்று தால்மூதிலும் காணப்படுகின்றது. இது போன்று மற்றொரு மிகையுரையில் ''கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்'' என்று (மத் 23:24) இயேசு பரியேசர்களைக் கண்டனம் செய்கிறார். இங்குப் பரிசேயர்களின் மதிப்பீடுகள் கண்டனம் பெறுகின்றன. மூன்று ஞானிகள் எதன் மேல் ஏறிவந்தனர் என்று நற்செய்தி சொல்லவில்லை (மத் 2:1). ஆனால் அவர்கள் ஒட்டகத்தின் மேல் வந்ததாகப் பாரம்பரியமும் கூறுகின்றது.

6. ஒட்டகத்தின் பயன்கள்:-

அ) பயணம் செய்ய:- கானானிலிருந்து பாதான்-ஆராமுக்கு எலியேசர் சென்று ரபேக்காளுடன் திரும்பி வந்தது (ஆதி 24), பாதான் - ஆராமிலிருந்து கானானுக்கு யாக் கோபின் குடும்பம் வந்தது (ஆதி 31:17), இரபேல் இராகியுவிலிருந்து எகுபத்தானா வுக்குச் சென்றது (தோபி 9:2) போன்ற அமைதியான ஒட்டகப்பயணங்கள் விவிலி யத்தில் குறிக்கப்பட்டுள்ளன. போரிலும் ஒட்டகம் பயன்படுத்தப்பட்டது (நீதி 6:5; 7:12; 8:21.26; 1 சாமு 30:17; ஏச 21:7). ஒட்டகத்தைப் பயன்படுத்தி ஒருநாளில் 90 முதல் 110 கி.மீ பயணம் செய்யலாம்.

ஆ) பொதிசுமக்க:- அமைதியான காலத் தில் வியாபாரப்பொருட்களைச் சுமந்து செல்ல (யோபு 6:18-19; ஏச 21:13) குறிப்பாக வாசனைப் பொருட்களையும் (ஆதி 37:25) பரிசுப் பொருட்களையும் (ஆதி 24:53; 1 அர 10:2; 2 அர 8:9; 1 நாள் 12:40; ஏச 30:6; 60:6) சுமந்து செல்லவும் ஒட்டகங்கள் பயன் பட்டன. போர்க்காலத்தில் படைக்கு வேண் டிய பொருட்களை ஒட்டகங்கள் சுமந்து படைக்குப்பின் சென்றன (ஆதி 2:17; செக் 14:15). சமதளத்தில் ஓர் ஒட்டகம் 450 முதல் 550 பவுண்டு எடையைத் தூக்கிச் செல்லக் கூடும்.

இ) கம்பளி ஆடையாக ஒட்டகமயிர் பயன்பட்டது.

ஈ) உணவாக:- மோசேயின் சட்டம் ஒட்ட கத்தை உண்ணுவதைத் தடைசெய்தது (லேவி 4:4; உப 14:7). இது அராபியர்களால் உண்ணப்பட்டது. இவர்கள் ஒட்டகப் பாலையும் பருகினர். யாக்கோபு பால் கறக் கும் ஒட்டகங்களை ஏசாவிற்குக் கொடுத்த தில் இக்கருத்து சுட்டிக்காட்டப்படலாம் (ஆதி 32:15).

உ) உருவகமாக:- இஸ்ராயேல் பிற தெய் வங்களை வழிபட்டது ''இங்கும் அங்கும் விரைந்தோடும் பெண் ஒட்டகத்திற்கு'' ஒப் பிடப்பட்டுள்ளது (எரே 2:23). பரிசேயர் ஒதுக்கிய முக்கியமானதை ஒட்டகம் உருவக மாக உணர்த்துகிறது (மத் 12:24).

## ஒட்டவைத்தல் (GRAFT)

இவ்வினைச்சொல் உரோ 1:17-24-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உயர்வகைச் செடியிலிருந்து பறிக்கப்பட்ட கிளையை மற்றொரு சாதாரண வகைச் செடியோடு பொருத்தி வைத்தல் ஒட்டு முறையாகும். பவுல் இவ்வுருவகத்தைப் பயன்படுத்தி எவ் வாறு புறவின விசுவாசிகள் விசுவாச மற்ற இஸ்ராயேலர்களுடன் ஒட்டப்பட்டிருக்கி றார்கள் என்பதைச் சுட்டியுள்ளார். ஆனால் புதிய கிளை பலனளிக்க வில்லையென்றால் அது வெட்டப்படலாம் என்று எச்சரிக்கிறார்.

## ஓதமேரா (ODOMERA)

பெடுயினர் இனத் தலைவர். ஒரு சமயம், யோனத்தான் மக்கபேயர் இவரையும் இவ ரைச் சார்ந்தவர்களையும் தாக்கி அழித்தார் (1 மக் 9:66).

## ஒதினி (OTHNI - சிங்கம்)

செமாயாவின் மூத்த மகன். தாவீது காலத் தில் ஆலய வாயில் காவலராக இருந்த லேவியர் (1 நாள் 26:7).

## ஒதினியேல் (OTHNIEL - சிங்கம்)

1. கெனாசின் மகன். காலேபின் உறவினன் (யோசு 15:17). இஸ்ராயேலர்களை மீட்க இறைவனால் அனுப்பப்பட்ட முதல் நீதிபதி (நீதி 3:7-11). இவர் தெபீர் நகரை எதிரியிடமி ருந்து பிடித்தமையால் காலேபு தன் மகள் அகிசாவை இவருக்கு மணமுடித்து வைத் தார் (யோசு 15:15-19; நீதி 1:11-15). பிறகு மெசபொத்தாமிய அரசன் கூசான்-ரிசத்தாயீமுக்கு 8 ஆண்டுகள் அடிமையாயி ருந்த இஸ்ராயேல் மக்களை மீட்டார் (நீதி 3:11).

இஸ்ராயேலர் ஆண்டவர் திருமுன் பாவம் புரிந்தனர். தங்கள் இறைவனை மறந்து போய்ப் பாகாலையும், அசித்தோரேத்தை யும் வழிபட்டனர். இவர்களைக் கண்டிக்க இறைவன் மெசபொத்தாமியாவின் அரச

னான கூசா-ரிசாத்தாயீமிடம் அவர்களைக் கையளித்தார். அவர்கள் மனந்திருந்தி இறைவனிடம் மன்றாட இறைவன் ஒதினியேலை அவர்களை மீட்க அனுப்பினார். இவர் யூதா நாட்டைச் சார்ந்தவர். மற்ற நீதிபதிகள் இஸ்ராயேலைச் சேர்ந்தவர்கள். ஆண்டவரின் ஆவி ஒதினியேல்மீது இருந்ததால் எதிரிகளைத் தோற்கடித்து இஸ்ராயேலரை மீட்டார்.

2. தாவீது அரசன் காலத்தில் போர்ப்படையின் ஒரு பிரிவாகும் (1 நாள் 27:15). ஒருவேளை (1)-இல் கூறப்பட்ட ஒதினியேலின் மரபுக் கிளையாக இருக்கலாம்

**ஒத்தமை நற்செய்திகள்** (SYNOPTIC GOSPELS)

முதல் மூன்று நற்செய்திகளை யோவான் எழுதிய நற்செய்தியோடு ஒப்பிடும்போது இவை அதிலிருந்து பொருளடக்கத்திலும், திட்ட அமைப்பிலும், இலக்கியத் தன்மையிலும் பெரிதும் வேறுபடுகின்றன. ஆனால் ஒன்றோடொன்றாய் இவற்றை ஒப்பிடும்போது இவற்றிற்கிடையே, வியத்தகு ஒற்றுமையும் மிகுந்த வேறுபாடுகளும் தோன்றுகின்றன. ஆகவே இம்மூன்று நற்செய்திகளையும் மூன்று இணைப் பத்திகளில் பதிப்பித்தனர். இப்பதிப்புகள் இம்மூன்றையும் ஒப்பிட்டுப் பார்க்க ஏதுவாயின. ஒற்றுமையைக் காட்டுவதோடு வேற்றுமையையும் திரிபையும் எடுத்துக் காட்டின. சில சமயங்களில் இம்மூன்று நற்செய்திகளும் இயேசுவின் வாழ்வின் அதே நிகழ்ச்சிகளை அதே வரிசைக்கிரமத்தில் அதே வார்த்தைகளால் அல்லது ஒத்த வார்த்தைகளால் விவரிக்கின்றன. சில இடங்களில் பெரும் வேறுபாடு காணக்கிடக்கிறது. மற்ற இடங்களில் ஓரளவு சிறிய வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. ஆயினும் தெரிந்து கொள்ளப்பட்ட நிகழ்ச்சி, முறைவைப்பு, விளக்குதற்குப் பயன்படுத்தப்படும் சொற்கள் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. ஆகவே இம்மூன்று நற்செய்திகளில் ஒற்றுமையோடு கூடிய வேற்றுமையும், வேற்றுமையோடு கூடிய ஒற்றுமையும் உண்டு. இத்தன்மையை ஒத்தமை நற்செய்தித்தன்மை என்றும், இம்மூன்று நற்செய்திகளையும் ஒத்தமை நற்செய்திகள் என்றும் இவற்றின் ஆசிரியர்களை ஒத்தமை நற்செய்தியாளர்கள் என்றும் அழைக்கிறோம்.

இந்த ஒத்தமை நற்செய்தித் தன்மையை விளக்க ஓர் எடுத்துக் காட்டைக் காண்போம்.

நோன்பு பற்றிய விவாதம்:-

| மத் 9:14-15 | மாற் 2:18-20 | லூக் 5:33-35 |
|---|---|---|
| அப்பொழுது யோவானுடைய சீடர்கள் அவரிடம் (இயேசுவிடம்) வந்து | ஒரு நாள் யோவானுடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்தனர். | |
| நாங்களும் பரிசேயரும் அடிக்கடி நோன்பிருக்க | அப்பொழுது சிலர் அவரிடம் வந்து ''யோவானுடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பிருக்க | அவர்களோ, ''யோவானின் சீடர் அடிக்கடி நோன்பு இருந்து செபம் செய்கின்றனர். பரிசேர்களின் சீடரும் அவ்வாறே செய்கின்றனர்.'' |
| ''உம்முடைய சீடர்கள் என் நோன்பு இருப்பதில்லை'' என்றார்கள். | ''உம்முடைய சீடர் ஏன் நோன்பு இருப்பதில்லை'' என்றனர். | ''உம்முடைய சீடரோ உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே என்று அவரிடம் சொன்னார்கள்'' |

| | | |
|---|---|---|
| இயேசு அவர்களை நோக்கி ''மணமகன் தங்களோடு இருக்குமளவும் அவன் தோழர்கள் துக்கம் கொண்டாடலாமா?'' | இயேசு அவர்களை நோக்கி; ''மணமகன் தங்களோடு இருக்குமளவும், அவன் தோழர்கள் நோன்பு இருக்கலாமா? மணமகனுடன் இருக்கும ளவும் அவர்கள் நோன்பு இருக்க முடியாது''. | அதற்கு இயேசு ''மணமகன் தன் தோழர்களோடு இருக்கு மளவும் அவர்கள் நோன்பு இருக்கச் செய்யக்கூடுமா?'' |
| ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும் அப்பொழுது அவர்கள் நோன்பிருப்பார்கள்'' என்றார். | ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்போது அவர்கள் நோன்பு இருப்பார்கள் '' என்றார். | ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும் அப்பொழுது அவர்கள் நோன்பிருப்பார்கள்'' என்றார். |

இவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் கொண்ட மூன்று நற்செய்திகள் எவ்விதம் தோன்றின என்ற பிரச்சனை எழுகிறது. இப்பிரச்சனையைத்தான் ''ஒத்தமை நற்செய்திப் பிரச்சனை'' என்று கறுவர். இப்பிரச்சனை 18-ஆம் நூற்றாண்டுக்கு முன் எழவில்லை. 18-ஆம் நூற்றாண்டிலிருந்தே இப்பிரச்சனை ஆய்வாளர்களது கவனத்தை ஈர்த்தது. பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. ஆயினும் இப்பிரச்சனைக்கு யாவராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதும், மன நிறைவு அளிக்கக்கூடியதுமான விடை இதுவரை காணப்படவில்லை. அப்படிப்பட்ட விடை கிடைக்கக்கூடுமா என்றுகூட ஐயுறுவர் ஆய்வாளர் சிலர். இக்கட்டுரையில் மூன்று நற்செய்திகளிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைத் தந்து இந்த ஒத்தமை நற்செய்திப் பிரச்சனையைச் சிறிது விளக்குவோம். பின் இப்பிரச்சனைக்கு விடையாகத் தரப்பட்டுள்ள பலஉத்தேசக் கொள்கைகளின் கருத்தைத் தொகுத்துத் தருவோம். இவற்றில் எதுவும் இப்பிரச்சனைக்கு முழு விடையாக அமையவில்லை. ஒவ்வொன்றிலும் ஓரளவு உண்மையுள்ளது; ஒவ்வொன்றும் நற்செய்தித் திறனாய்வுக்கு உதவியுள்ளது. நற்செய்தியை நன்கு அறியப் பெரிதும் உதவியுள்ளது. இவையாவும் உத்தேசக் கொள்கைகளேயன்றி முழுவிடைகள் அல்ல. முற்றிலும் மனநிறைவுதரும் விடை அளிப்பது எளிதன்று.

2. ஒத்தமை நற்செய்தித் தன்மை:-

இப்பிரச்சனையை நன்கு அறிய விரும்பினால், இம்மூன்று நற்செய்திகளில் காணப்படும் பொருளடக்கத்தையும், அவற்றின் வரிசைக்கிரமத்தையும், சொற்றொகுதிகளையும் விரிவாக ஆராய வேண்டும்.

இவ்வொத்தமை நற்செய்திக் கருத்தைப் பற்றிய தர்க்கத்தை எளிதாக்கச் சில கலைச் சொற்களை ஆய்வாளர்கள் பயன்படுத்துவர். அவற்றை அறிந்திருத்தல் நலம். பொதுவாக மூன்று நற்செய்திகளும் இயேசுவின் அதே வார்த்தைகளையும், செயல்களையும் கொடுக்கின்றன. அவரது வாழ்வின் அருஞ்செயல்கள், உவமைகள், தர்க்கங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிய விவரிப்புகள் ஒரே மாதிரி இருக்கின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவருக்கும் பொதுவான பகுதிகள் ''மூவடிவப் பாரம்பரியம்'' என்றும் யாராவது இருவருக்கு மட்டுமே பொதுவான பகுதிகள் ''இருவடிவப் பாரம்பரியம்'' என்றும் அவரவர்க்கு உரிய தனிப்பட்ட பகுதிகள் ''தனிப் பாரம்பரியம்'' என்றும் அழைக்கப்படும். ஒரே நற்செய்தியில் ஒரு நிகழ்ச்சி இருமுறை வந்தால் அது ''இரட்டிப்பு நிகழ்ச்சியுரை'' எனப்படும்.

3. பொருளடக்கம்:-

மாற்கில் ஏறக்குறைய 677 வசனங்களும் மத்தேயுவில் ஏறக்குறைய 1070 வசனங்க

ளும், லூக்காவில் ஏறக்குறைய 1150 வசனங்களும் உள்ளன. மத்தேயு, மாற்கின் 600 வசனங்களைக் கொண்டுள்ளது. லூக்கா மாற்கின் 350 வசனங்களைக் கொண்டுள்ளது. இவ்வசனங்கள் பெரும்பாலும் மத்தேயு-லூக்கா நற்செய்திகளில் ஒரே மாதிரியானவை. மேலும் மத்தேயு-லூக்காவுக்கிடையில் 230 வசனங்கள் பொதுவானவை. இவை இயேசுவின் போதகத்தை வாக்குகளாகவும் உவமைகளாகவும் தருகின்றன. சில இடங்களில் நிகழ்ச்சியுரைப் பகுதியும் இடையிடும் (மத் 4:1-11-உம் இணைப் பகுதிகளும், மத் 8:6-13-உம் இணைப்பகுதிகளும்)-இவை பெரும்பாலும் போதகத்திற்கு வரலாற்றுப் பின்னணியைக் கொடுக்கும். மூவருக்கும் பொதுவான பகுதி மாற்கைச் சார்ந்த ஏறக்குறைய 360 வசனங்களாகும். மாற்கிற்கு மட்டும் உரிய பகுதி 70 வசனங்களாகும். மத்தேயுவுக்கு மட்டும் உரிய பகுதி 330 வசனங்களாகும். 520-540 வசனங்கள் லூக்காவுக்கே உரியவை. மத்தேயு, லூக்கா, ஆகியவர்களுக்குரிய தனிப் பாரம்பரியங்கள் பெரும்பாலும் இயேசுவின் இளமைப் பருவத்தையும், உயிர்த்தபின் நடந்த நிகழ்ச்சிகளையும் பற்றியவை.

இதுவரை கூறியவற்றைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்:-

மொத்த வசனங்கள்:
மத் 1070; மாற்கு 677; லூக் 1150.

தனிப்பாரம்பரியம்:-
மத்-330; மாற்-70; லூக்-520-540.

இருவடிவப் பாரம்பரியம்:-
170-180 (மத்-மாற்); 170-180 (மாற்-மத்); 230 (லூக்-மத்); 230 (மத்-லூக்); 50 (மாற்-லூக்); 50(லூக்-மாற்).

மூவடிவப் பாரம்பரியம்:-
மத்-350-370; மாற்கு-350-370; லூக்-350-370

இம்மூன்று நற்செய்திகளின் பொதுத்திட்டம் ஒத்திருக்கிறது. அதனைக் கீழ்வரும் அட்டவணை விளக்கும்:-

அ. தயாரிப்பு:- மாற் 1:1-13; மத் 3:1-4:11; லூக் 3:1-4:13.

ஆ. கலிலேயாவில் பணி:- மாற் 1:14-9:50; மத் 4:12-18:35; லூக் 4:14-9:50.

இ. எருசலேமில் (அல்லது) யூதேயாவில் பணி:- மாற் 10:1-56; மத் 19:1-20:34; லூக் 9:51-18:43;

ஈ. பாடுகளும், உயிர்ப்பும்:- மாற் 11-16; மத் 21-28; லூக் 19-24

இத்திட்ட ஒற்றுமையோடு, இயேசுவின் வாழ்வின் சில முக்கிய நிகழ்ச்சிகளாகிய இயேசுவின் திருமுழுக்கு, எதிரிகளோடு தர்க்கம் செய்தல், அப்பங்களைப் பெருகச் செய்தல், பேதுருவின் விசுவாச அறிக்கை, பாடுகளை முன்னறிவித்தல், எருசலேமின் இறுதி நாட்கள், கைது செய்யப்படுதல், தீர்ப்பிடப்படுதல், மீட்பரின் இறப்பு ஆகியவை சிறந்த முறையில் ஒத்துள்ளன. பொருளடக்கத்தில் ஒற்றுமையிருந்தாலும், வேற்றுமைகளும் உண்டு. சில நிகழ்ச்சிகளை இருவர் மட்டும் தருவர். மற்றவை அவரவர்க்குரியனவாகும். ஒரே நிகழ்ச்சியை இருவர் தந்தாலும் விவரிக்கும் முறை பெரும்பாலும் வேறுபட்டிருக்கும். சான்றாக, இயேசுவின் இளமைப் பருவத்தைப் பற்றி மாற்கு ஒன்றும் தரவில்லை. அதை விவரிக்கும் மத்தேயுவும் லூக்காவும் மிகவும் வேறுபடுகின்றனர். இயேசுவின் மூதாதையர் பட்டியலிலும் இதே தன்மை காணப்படுகின்றது (மத் 1:1-17; லூக் 3:23-38). இயேசுவின் மூன்று சோதனைகள் மத்தேயு லூக்காவில் காணப்பட்டாலும் அவை விவரிக்கப்படும் வரிசை முறை வேறுபட்டதாகும். உயிர்ப்பைப் பற்றிய வரலாறும் ஒரே தன்மையுடையதன்று. மத்தேயு தரும் இரட்டிப்பு நிகழ்ச்சிகளை லூக்கா பெரும்பாலும் தவிர்க்கிறார்.

ஆனால் தாமாகவே சில இரட்டிப்பு நிகழ்ச்சிகளைத் தருகிறார். மற்ற இரு நற்செய்திகளில் வரும் புற இனத்தவர்க்குக் கடினமான பகுதிகளையும், தேவையற்ற பகுதிகளையும் லூக்கா விட்டு விடுகிறார். மாற்கு நிகழ்ச்சிகளை ஒரு தனித்த சூழ்நிலையில் விவரித்திருக்க, அவற்றையே லூக்கா மற்றொரு சூழ்நிலையில் விவரிப்பார்.

(மாற் 1:16-20 = லூக் 5:1-11;
மாற் 3:22-30 = லூக் 11:14-23; 12:10;
மாற் 4:30-32 = லூக் 13:18 தொ;
மாற் 6:1-6 = லூக் 4:16-30;
மாற் 8:11-13 = லூக் 11:29-32;
மாற் 9:42 தொ = லூக் 17:1 தொ;
மாற் 9:49 தொ = லூக் 14:34 தொ;
மாற் 10:11 தொ = லூக் 16:18;
மாற் 10:31 = லூக் 13:30;
மாற் 10:35-45 = லூக் 22:24-27;
மாற் 12:28-34 = லூக் 10:25-26;
மாற் 13:15 தொ = லூக் 17:31;
மாற் 13:21-23 = லூக் 17:23;
மாற் 13:33-37 = லூக் 12:35-40;
மாற் 14:27-31 = லூக் 22:31-34).

இயேசுவின் வாக்குகளிலும் மிகுந்த வேற்றுமையுள்ளது. சான்றாக, ஆண்டவர் கற்பித்த செபம் (மத் 6:19-13; லூக் 11:2-4), நற்கருணை நிறுவன நிகழ்ச்சியுரை (மத் 26:26-28; மாற் 14:22-24; லூக் 22:19-20) ஆகியவற்றைக் கூறலாம், மேலும் மலைப்பொழிவு மாற்கில் காணப்படவில்லை. மறைவாக வளரும் விதையின் உவமை மாற்கில் மட்டும்தான் காணப்படுகிறது. களைகள், மறைந்து கிடக்கும் புதையல், விலைமிக்க முத்து, புளிக்காரம், வலை, நேர்மையற்ற ஊழியக்காரன் ஆகிய உவமைகள் மத்தேயுவில் மட்டும் காணப்படுகின்றன. ஊதாரிப் பிள்ளை, நல்ல ஆயன், பரிசேயன் - ஆயக்காரன், பணக்காரன் - லாசர் ஆகிய உவமைகள் லூக்காவில் மட்டும் காணப்படுகின்றன. பாடுகள் உயிர்ப்பின் வரலாறு மூன்று நற்செய்திகளிலும் ஒரே மாதிரி தோன்றினாலும் சிறப்பான வேறுபாடுகள் உண்டு..

4. நிகழ்ச்சிகளின் வரிசைக்கிரமம் அல்லது அமைப்பு:-

வெளிப்படை வாழ்வின் அட்டவணையில் இம்மூன்று நற்செய்திகளுக்குமிடையேயுள்ள ஒற்றுமையை எடுத்துக் கூறினோம். இயேசுவின் வாழ்வு, செயல் ஆகியவை பற்றிய அமைப்பிலும் ஒற்றுமையுள்ளது. அவை வருமாறு: திருமுழுக்குயோவானின் தோற்றம், இயேசு திருமுழுக்குப் பெறுதல், பாலைவனத்தில் சோதிக்கப்படல், கலிலேயப்பணி, எருசலேமை நோக்கிப் பயணம், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு. ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையோ, அவரது ஆட்தன்மையையோ வரைய முயலவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம், இயேசுவின் வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றைத் தொகுத்துத் தருவதே. அவை அவரது சூழ்நிலையை எவ்விதம் பாதித்தன என்று சாதாரண நடையில் தருவதே. ஆகவே இவற்றில் தனித்தனிப் பகுதிகளும், முழுமை பெற்ற அறிவுரைகளும் உண்டு. ஒரு பகுதியோடு மற்றொரு பகுதி காலத்தாலோ இடத்தாலோ தொடர்பு கொண்டிராது. சில சமயங்களில் ஒரு தன்மையுள்ள பொருட்கள் தொகுத்துத் தரப்படும். சான்றாக உவமைகளைக் கூறலாம்.

மத்தேயு 14-ஆம் அதிகாரம் முதல் 28-ஆம் அதிகாரம் முடிய அடங்கிய பகுதி மாற்கு 6:14 முதல் 16:8 முடிய அடங்கிய பகுதியோடு இணைந்துள்ளது. அதேபோல் மாற்கிற்கும் லூக்காவிற்கும் இடையில் அடிப்படையான வரிசைக்கிரமத்தைக் காணலாம். மத்தேயுவைவிட லூக்கா தனது சொந்தச் சொற்களை உட்புகுத்தினாலும், மாற்கின் திட்டத்திலிருந்து சாதாரணமாகப் பிறழ்வது இல்லை. பல இடங்களில் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக அதே வரிசையில் மூன்று நற்செய்திகளிலும் கொடுக்கப்படுகின்றன. சான்றாக, கப்பர்நகூமில் வாதக்காரனைக் குணப்படுத்துதல், லேவியை அழைத்தல், நோன்பு பற்றிய தர்க்கம் (மத் 9:1-17; மாற் 4:35-5:20; லூக் 8:22-39); புயலை அடக்குதல், கெரசேனர் நாட்டின் பேய் பிடித்தவன் (மத்: 23-24; மாற் 4:35- 5:20; லூக் 5:17-39); பேதுருவின் விசுவாச அறிக்கை, பாடுகள்பற்றிய முதல் அறிவிப்பு, வலிப்புக்காரனைக் குணமாக்குதல், பாடுகள் பற்றிய இரண்டாம் அறிவிப்பு (மத் 16:3-17:23; மாற் 8:27-9:32; லூக் 9:18-45) ஆகியவற்றைக் கூறலாம்.

இவ்வொற்றுமைகளோடு பல வேற்றுமைகளும் உண்டு. ஒருவர் பலவற்றை ஒரே

இடத்தில் தொகுத்துத் தருவார். மற்றவர் அவற்றைப் பல இடங்களில் பிரித்துக் கூறுவர். சான்றாக, மலைப் பொழிவு மத்தேயுவில் தொடர்ந்து தரப்படுகிறது (மத் 5-7). லூக்காவில் அது பல இடங்களில் சிதறிக் கிடக்கிறது. மாற்கில் காணப்படவேயில்லை. உவமைப்பகுதி மூவருக்கும் ஒவ்வொருவரிலும் வேறுபடும். மத் 4-11-இல் வரும் திருப்பணியின் வரிசைக்கிரமம் மாற்கிலிருந்து தெளிவாக வேறுபடுகிறது. லூக்கா, மாற்கில் காணப்படும் 6:45-8:26 என்ற பகுதியை விட்டு விடுகிறார். அதற்குப் பதிலாக மாற்கைச் சாராத இரு பகுதிகளை உட்புகுத்துகிறார் (6:20-8:3; 9:51-18:14). இயேசு கப்பர் நகூமில் முதல் முறையாகப் போதித்தபின் அப்போஸ்தலர்களின் அழைப்பு நடந்தது என்று லூக்கா கூறுகிறார் (5:1-11). ஆனால் மாற்கு முன்னதாகக் கூறுகிறார் (1:16-20). நசரேத்தூரார் இயேசுவை ஏற்க மறுத்ததை மாற்கு கலிலேயப் பணியின் முடிவிலும் (6:1-6), லூக்கா அதன் தொடக்கத்திலும் (4:16-30) கூறுகின்றனர். மாற்கு 1:21-6:13-இலும் லூக்கா 4:31-9:6-இலும் திட்டம், மத்தேயு 4:23-13:58இல் காணப்படும் திட்டத்திலிருந்து வேறுபட்டதாகவுளது. மாற்கு, லூக்காவில் எந்த அடிப்படையில் நிகழ்ச்சிகள் வரிசைக்கிரமம் செய்யப்படுகின்றன என்று கூறுவது கடினம்.

மத்தேயு லூக்காவுக்குப் பொதுவான, ஆனால் மாற்கைச் சாராத 235 வசனங்களிலும், ஒற்றுமையோடு கூடிய வேற்றுமைகள் உள. பொருளைப் பொறுத்த மட்டும் ஒற்றுமையும், வரிசைப்படுத்தும் விதத்தில் வேற்றுமையும் உண்டு. அவை தொகுக்கப்படும் விதமும் வேறுபட்டது. இயேசுவின் வாக்குகள், மத்தேயுவில், ஐந்து பெரும் அறிவுரைகளாகத் தொகுக்கப்படுகின்றன. லூக்காவில் இவற்றின் பெரும் பகுதி எருசலேம் பயணத்தில் காணப்படுகின்றன. பல அதிகாரங்களில் பரவிக்கிடக்கின்றன. ஒரே நிகழ்ச்சியை விவரிக்கும் போதும் கூட வரிசையை மாற்றிக் கூறுவர் (மத் 4:1-11; லூக் 4:1-13).

5. சொல் தொகுதியும், சொல்லும் முறையும்:-

இம்மூன்று நற்செய்திகளையும் ஒப்பிடுங்கால், பல இடங்களில் சொற்றொகுதிகளிலும், விவரிக்கும் விதத்திலும் நெருங்கிய ஒற்றுமையுள்ளது (மத் 4:18 = மாற் 1:16; மத் 9:6 = மாற் 2:10 = லூக் 5:25; மத் 3:7-10 = லூக் 3:7-9). ஆயினும் இவ்வொற்றுமைகள் ஓர் ஒழுங்கு முறைபற்றி அமைந்தனவாகத் தெரியவில்லை. சில இடங்களில் அரிதாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் ஒற்றுமையுள்ளது.

நற்செய்தியாளர்கள் அதே வாக்குகளைக் கூறினாலும், வேற்றுமைகள் பல உள. சான்று: பெரும் பேறுகளின் வேறுபட்ட வடிவங்கள் (மத் 5:3-4.6.11-12 = லூக் 6:20.23), ஆண்டவர் கற்பித்த செபம் (மத் 6:9-13 = லூக் 11:2-4). நாம் நற்செய்தியாளர்களிடையே ஒற்றுமை எதிர்பார்க்கும் இடங்களில் பல வேற்றுமைகளைக் காண்கிறோம் (மத் 6:9-13; லூக் 11:2; லூக் 11:2; மத் 26:26 தொ; மாற் 14:22 தொ; லூக் 22:19 தொ). சில இடங்களில் ஒற்றுமையிருப்பதாகத் தோன்றினாலும், சொற்றொகுதியிலும் கருத்துகளின் அமைப்பிலும் ஒவ்வொரு நற்செய்தியாளரும் தம் போக்கிலேயே செல்லுவர் (மாற் 4:9 - லூக் 8:14; மத் 22:25 - மாற் 12:20; மத் 28:7-லூக் 24:6). சில நிகழ்ச்சிகள் ஒரே நிலையான அமைப்பைக் கொண்டிருந்தாலும் வர்த்தைகளில் வேறுபாடு உண்டு. அதாவது அதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் அவை வேறுபட்ட பொருளிலும் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் வேறுபட்ட நோக்கத்துடனும் பயன்படுத்தப்படுகின்றன. (மத் 15:27 = மாற் 7:28; மாற் 4:19 = லூக் 8:14; மத் 22:25 = மாற் 12:20; மத் 9:19 = மாற் 5;24; மத் 10:27 = லூக் 12:3; மத் 27:50 = மாற் 15:37; மத் 13:55 = மாற் 6:5).

6. பழைய ஏற்பாட்டு வாசகங்களின் ஒற்றுமை:-

ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் பழைய ஏற்பாட்டு வாசகங்கள் பெரும்பா

லும் மோசரோட்டிக்கு வாசகத்தை அல்லது 'எழுபது நூல்' வாசகத்தை, அமைப்பில் சார்ந்திருக்கவில்லை. ஆனால் இவ்வாசகங்களில் நெருங்கிய ஒற்றுமையுளது (மத் 3:3 = மாற் 1:3 = லூக் 3:4; மத் 11:10 = மாற்கு 1:2 = லூக் 7:27). இவ்விதம் அதிகாரப்பூர்வமான நூல்களைச் சாராது தரப்படும் பழைய ஏற்பாட்டு வாசகங்கள் ஆதிக் கிறிஸ்தவர்கள் தொகுத்த பழைய ஏற்பாட்டு வாசகங்கள் அடங்கிய ஒரு தொகுப்பைச் சுட்டுகின்றன.

இம்மூன்று நூல்களிடையே காணப்படும் ஒற்றுமைவேற்றுமைகளை அறிய, மத்தேயு லூக்காவை விரிவாக ஒப்பிடுதல் நன்று. அது இருவரும் பயன்படுத்தும் வெவ்வேறு முறைகளையும் இருவருக்கும் இடையேயுள்ள தொடர்பின் சிக்கல்களையும் வெளிப்படுத்தும்.

இந்த ஒத்தமைப் பிரச்சனையைப் பின்வருமாறு கூறலாம். இம்மூன்று நற்செய்திகளிலும் ஒற்றுமை உண்டு. இஃது இவை ஒன்றையொன்று சார்ந்தவை என்று காட்டுகிறது. ஆனால் வேறுபாடுகளும் உண்டு. இஃது இவை ஒன்றையொன்று சாராதவை என்று காட்டவல்லது. இந்த ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குவது எப்படி? இப்பிரச்சனைக்கு ஆய்வாளர் கண்ட, காண முயன்ற, விடைகளை இனித் தொகுத்துத் தருவோம்.

7. அ. வாய்மொழிப் பாரம்பரிய உத்தேசக் கொள்கை:-

இதன்படி, நற்செய்திகள் எழுத்து வடிவம் எடுக்கு முன்பே, அப்போஸ்தலப் பணிக்கு ஏற்ப, அப்போஸ்தலப் போதகம், ஏறக்குறைய நிலையான, ஒரே வடிவமுடைய அமைப்பில் அரமேயிக்கிலும் கிரேக்கத்திலும் அளிக்கப்பட்டது. பெரும்பாலும் ஒரே விதமாகப் போதிக்கப்பட்டது. ஆனால் திருச்சபை பல இடங்களிலும் பரவியபோது இப்போதகம் இடங்களுக்கு ஏற்றவாறு சிறிது மாற்றியும் போதிக்கப்பட்டது. இப்படியாக ஒரே வாய்மொழிப் பாரம்பரியம் சிறிது மாறியும் சிறிது மாறாமலும் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த வேறுபட்ட வடிவங்கள், காலப்போக்கில் எழுத்து வடிவில் மூன்று நற்செய்திகளாகத் தோன்றின. பாலஸ்தீனத்தில் வழக்கில் இருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை மத்தேயு எழுதினார். மாற்கு உரோமையில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார். லூக்கா அந்தியோக்கியாவில், அல்லது பவுல் நிறுவிய சபைகளில் வழக்கிலிருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை எழுதினார். ஆகவே ஒவ்வொரு நற்செய்தியாளரும் ஒரே வாய்மொழிப் பாரம்பரியத்தை இடங்களுக்கு ஏற்ப வெவ்வேறு முறையில் பயன்படுத்தினர். ஆகவே ஒற்றுமை வேற்றுமைகளுடைய நற்செய்திகள் தோன்றின.

மதிப்பீடு:- நற்செய்தி ஆய்வாளர்கள் நற்செய்திகளின் தோற்றத்தில் வாய் மொழிப் பாரம்பரியத்தின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் ஒரே மனதாய் ஏற்றுக் கொள்வர். நற்செய்திகள் எழுத்து வடிவம் எடுக்குமுன் வாய்மொழிப் பாரம்பரியம் இருந்தது. அது ஒத்தமை நற்செய்திகள் எழுதுவதற்குத் துணையாய் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இவ்வுத்தேசக் கொள்கை ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு முழுவிடை அளிக்கக் கூடியதல்ல. வாய்மொழிப் பாரம்பரியம், இந்நற்செய்திகளுக்கு இடையேயுள்ள வேற்றுமைகளையும், ஒவ்வொரு நற்செய்திக்கும் உரிய சிறப்பு நிகழ்ச்சிகளையும் விளக்கப் பயன்படலாம். ஆனால் இவற்றிடையே காணப்படும் ஒற்றுமையை விளக்கக் கூடியதல்ல. பொருளடக்கத்திலும், வரிசைக் கிரமத்திலும், சொல் தொகுதியிலும் காணப்படும் நுண்ணிய ஒற்றுமைகளை இவ்வுத்தேசக் கொள்கை விளக்கவில்லை. இவ்வொற்றுமைகள் வாய்மொழிப் பாரம்பரியம் மட்டுமன்று, இலக்கிய ஏடுகளும் நற்செய்திகள் எழுதப்படுவதற்குத் துணையாய் இருந்தன என்று சுட்டுகின்றன. மேலும் நற்செய்தியைப் பலரும் எழுத முயன்றனர் என்ற லூக்காவின் கூற்றை (1:1-4) நாம் புறக்கணிக்க முடியாது. இக்கொள்கை மிகச் சிக்கலான பிரச்சனைக்கு மிக எளிய விடையாக

அமைகிறது. ஆகையால் இக்கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டால் நற்செய்தியாளர்கள் உண்மையான ஆசிரியர்கள் அல்லர், நற்செய்தியின் வாய்மொழிப் பாரம்பரியத்தை வெறுமனே எழுதி வைத்த எழுத்தர்கள் என்று கருத வேண்டியிருக்கும்.

7. ஆ. உத்தேசக் கொள்கை:- இலக்கியத் துண்டுகளிலிருந்தே நற்செய்திகள் தோன்றின:- இதன்படி இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள், அறிவுரைகள், பாடுகள் பற்றிச் சில சிறு சிறு நினைவேடுகளிலிருந்து ஒத்தமை நற்செய்திகள் தோன்றின என்பர். ஒவ்வொரு நற்செய்தியாளரும் தம் நற்செய்தியில் இவற்றைத் தம் விருப்பம்போலப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மதிப்பீடு:- இவ்வுத்தேசக் கொள்கை மூன்று நற்செய்திகளுக்கிடையே காணப்படும் விரிவான, நுணுக்கமான ஒற்றுமைகளை விளக்கப்பயன்படவில்லை. ஆகையால் ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு ஒரு விடையாக அமையவில்லை.

7.இ. ஒன்றை ஒன்று தழுவிய இலக்கியச் சார்புடைமை உத்தேசக் கொள்கை:-

இதன்படி முதலில் எழுதப்பட்ட நற்செய்தியை இரண்டாவதாக எழுதியவர் பயன்படுத்தினார். மூன்றாவதாக எழுதியவர் முதல் இரண்டையும் பயன்படுத்தினார். இவ்விதம் நற்செய்திகள் ஒன்றையொன்று சார்ந்தவை. இச்சார்புடைமை இந்நூல்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும். இலக்கிய ஏடுகளைப் பயன்படுத்தியதோடு வாய்மொழிப் பாரம்பரியத்தையும் பயன்படுத்தினர். இது அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளை விவரிக்கும் என்பர். இச்சார்புடைமை உத்தேசக் கொள்கை பல வடிவம் எடுத்துள்ளது. இரண்டு மட்டும் சிறிது ஆராய்ச்சிக்குரியன. அவை: 1) மத்தேயு → மாற்கு → லூக்கா → 2) மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் மாற்கு மூலம்.

1) மத்தேயு → மாற்கு → லூக்கா:- சிறிய ஆசியாவைச் சார்ந்த பிரிசியாவிலுள்ள எராப்பொலிநகர் ஆயரான பாப்பியஸ், ''மத்தேயு இயேசுவின் வாக்குகளை எபிரேய மொழியில் தொகுத்தார். அதை ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த மட்டும் மொழி பெயர்த்துக் கொண்டனர்'' என்று கூறியுள்ளார். இவர் கூற்றின்படி ஓர் அரமேயிக்கு நற்செய்தி இருந்திருக்க வேண்டும். அது கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதை மூன்று ஒத்தமை நற்செய்தியாளரும் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று கருதினர் பலர். மத்தேயு → மாற்கு → லூக்கா → என்றவரிசையில் மூன்று நற்செய்திகளும் தொடர்புடையன என்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். முதலாவது எழுதப்பட்டது அரமேயிக்கு மத்தேயுவாகும். இந்நூல், கிரேக்கத்தில் முழுமையாக அல்லது பகுதிகளாக மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். கிரேக்க மத்தேயு, அரமேயிக்கு மத்தேயுவின் நெருங்கிய மொழிபெயர்ப்பாகும். மாற்கு மேற்கூறிய மொழிபெயர்ப்புகளையும் பேதுருவின் உரோமைப் போதகத்தையும், வாய்மொழிப் பாரம்பரியத்தையும் பயன்படுத்தித் தமது நூலை எழுதினார் எனலாம். லூக்கா மேற்கூறிய மொழிபெயர்ப்புகளையும் மாற்கையும் பயன்படுத்தி, இதுவரை சேர்க்கப்படாத மூலங்களையும் சேர்த்து எழுதினார் எனலாம். கிரேக்க மத்தேயுவும் லூக்காவும் சில காரியங்களில் ஒத்திருக்கும்போது அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க ஒருவர் (மத்தேயு) அரமேயிக்கு மத்தேயுவையும், மற்றவர் (லூக்கா) அதன் மொழி பெயர்ப்பையும் பயன்படுத்தினார் என்று கூறலாம். கிரேக்க மத்தேயு வேறுபல மூலங்களைச் சார்ந்திருந்தாலும், அரமேயிக்கு மத்தேயுவை மிகத் தழுவிய நூல் என்று கூறலாம்.

மதிப்பீடு:- மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய இவ்வரிசை சமீப காலம்வரை பல கத்தோலிக்க விளக்கவுரையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்செய்திப்பட்டியல் வரிசையை அடிப்படையாகக் கொண்டது. இப்போது கத்தோலிக்க அறிஞர் சிலர் இக் கொள்கையைச் சிறிது மாற்றிக் கூறுவர்.

மத்தேயு, மாற்கு, லூக்கா என்ற இவ்வரிசையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று 1911-ஆம் ஆண்டில் பாப்புவின் விவிலியக் குழு கட்டளையிட்டது. ஆகையால் கத்தோலிக்க அறிஞர் பலர் இதை ஆதரித்தனர். ஆனால் இப்போது திறனாய்வாளருக்கு நேரிய சுதந்தரம் அளிக்கப்பட்டிருக்கிறது. நேரிய சுதந்தரத்தோடு ஆராயும் அறிஞர்கள் இக்கொள்கையின் குறைபாடுகளை நன்கு அறிவர்.

பாப்பியசின் கூற்றை அப்படியே எடுத்துக் கொண்டால், அவர் நாம் கொண்டிருக்கும் கிரேக்க மத்தேயுவைக் குறிக்கவில்லை. அரமேயிக்கு மத்தேயுவைக் குறிக்கின்றார். நாம் கொண்டிருக்கும் மத்தேயு காலத்தால் முந்தியது என்று கூற விரும்புவோர், கிரேக்க மத்தேயு பாப்பியன் குறிக்கும் அரமேயிக்கு மத்தேயுவோடு தொடர்புடையது என்ற எண்ணம் உடையவர்கள். இத்தொடர்பு ஒரு யூகமேயன்றி இதனை நிரூபிக்க முடியாது.

2) மத்தேயு, லூக்கா எழுதிய நற்செய்திகளுக்கு மாற்கின் நற்செய்தி ஒரு மூலமாகும்:- இக்கூற்றை அறிஞர் துணிந்த முடிபாக ஏற்றுக் கொள்வர்; ஆயினும் பலமாகத் தர்க்கிப்பர்.

லூக்கா மாற்கைத் தழுவி எழுதுகிறார் என்பதை யாவரும் ஏற்றுக் கொண்டாலும் அச்சார்பின் அளவு மற்றும் தன்மை ஆகியவை பற்றித் தர்க்கம் உண்டு. லூக்காவில் காணப்படும் ''மாற்கின் பகுதிகளைப்'' பற்றித் (லூக் 4:31-6:19; 8:4-9:50; 13:15-21:38) தர்க்கத்திற்கு இடமேயில்லை. ஆனால் லூக்காவில் காணப்படும் ''இரட்டிப்புக் கூற்றுக்கள்'' நமது கவனத்துக்குரியன. இவ்விரட்டிப்புக் கூற்றுக்கள் மாற்கைச் சார்ந்து எழுதும்போது ஒருதரமும், லூக்காவுக்கே உரிய பகுதியில் மற்றொரு தரமும் வருகின்றன (லூக் 8:16 = 11:33; 8:17 = 12:2; 11:43 = 12:38; 9:5 = 10:10; 9:23 = 14:27; 9:24 = 17:33; 9:26 = 12:9; 9:50 = 11:23).

இது மாற்கிற்கு இணையான மற்றொரு மூலம் இருந்திருக்கக்கூடும் என்று காட்டுகிறது. சில இடங்களில் மாற்கில் காணப்படும் விவரிப்புகளை மத்தேயுவும் லூக்காவும் விட்டு விடுகின்றனர். ஆகையால் லூக்கா மாற்கைச் சாதாரணமாய்ச் சார்ந்து எழுதுகிறார் என்று எளிதில் கூறிவிட முடியாது. அது போதிய விளக்கமும் அல்ல. லூக்கா நாம் கொண்டிருக்கும் மாற்கையும் அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்பையும் பயன்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் இவற்றை அப்படியே பயன்படுத்தாது தமது தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மத்தேயு மாற்கைச் சார்ந்து எழுதுகிறார் என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் இக் கூற்று வன்மையான தர்க்கத்திற்குரியது. மத்தேயுதான், காலத்தால் மற்ற நற்செய்திகளுக்கு முந்தியது என்ற கொள்கை விவிலியத் திறனாய்வில் முழுவதும் கைவிடப்படவில்லை. மூவடிவப்பாரம்பரிய நிகழ்ச்சியுரைகளில் சார்புடைமை தெரிகிறது. ஆனால் லூக்காவைப்போல மத்தேயுவிலும் இரட்டிப்புக் கூற்றுப் பிரச்சனை உண்டு. மாற்கைச் சார்ந்து எழுதும்போது ஒரு தரமும், மத்தேயுவுக்கே உரிய பகுதியில் ஒருதரமும் வருகின்றன (மத் 5:29 தொ = 18:8 தொ; 5:31 தொ = 19:9; 10:38 தொ; 17:20 = 21:21). இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையைச் சார்புடைமைக் கொள்கை நன்கு விளக்கவில்லை என்பர் அறிஞர். மத்தேயு-மாற்குவிற்குப் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்க வேண்டும் என்பர்.

மத்தேயு-லூக்கா ஒருவரை ஒருவர் சார்ந்து எழுதியதாகத் தெரியவில்லை. இருவரும் தனித்தன்மையுடையவர்களாகத் தோன்றுகின்றனர். மாற்கைச் சார்ந்து எழுதாதபோது, தங்களது கருத்துக்களைத் திட்டம் செய்வதிலும், சொல்லும் விதத்திலும் பெரிதும் வேறுபடுவர். மாற்கு மத்தேயுவின் சுருக்கம் என்பர் சிலர். இது உண்மையாயின் அதில் ஏன் பல காரியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன? மத்தேயுவைவிட மாற்கில் நிகழ்ச்சியுரைகள் உயிர்ச் சித்திரத்தன்மை கொண்டு மிளிர்கின்

றன. இவை மாற்கு காலத்தால் முந்தியது என்று காட்டுகின்றன.

மதிப்பீடு:- மாற்கு காலத்தால் மத்தேயு - லூக்காவை முந்தியது என்று அறிஞர் ஏற்றுக் கொள்வர். இவ்வுத்தேசக் கொள்கை பல பிரச்சனைகளுக்குச் சிறந்த விடையாகவும் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த உதவும் அடிப்படையாகவும் அமைகிறது. ஆனால் மத்தேயு - லூக்கா மாற்கை எவ்விதத்தில் எந்த அளவுக்குச் சார்ந்துள்ளன என்பது விளக்கப்படவில்லை.

லூக்கா மாற்கைச் சார்ந்து எழுதியுள்ளார் என ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் மத்தேயு மாற்கைச் சார்ந்து எழுதுகிறார் என்ற கூற்றை எச்சரிக்கையுடன்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

7.ஈ. ஏடுகள் பற்றிய உத்தேசக் கொள்கைகள்:-

1. ஒரே ஏட்டு மூலக் கொள்கை:- மூவடிவப் பாரம்பரியத்திற்கு அடிப்படையாக ஒரே ஏட்டுமூலம் இருந்திருக்க வேண்டும். இது ஓர் அரமேயிக்கு நற்செய்தியாக இருந்திருக்க வேண்டும். இது பலதரம் திருத்தியமைக்கப்பட்டிருக்கலாம். மூவரும் இதைப் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது இதன் கிரேக்க மொழிபெயர்ப்பையோ, பலதரம் திருத்தப்பட்ட நூலையோ பயன்படுத்தியிருக்கலாம்.

மதிப்பீடு:- இக்கொள்கை 18-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன்றியது. இக்கொள்கை முதலில் எளிதாகத் தோன்றினாலும் பின் சிக்கல் மிக்கதாக மாறியது. இக்கொள்கை உண்மையானால் மூன்று நற்செய்திகளிடையே, இப்போது இருப்பதை விட அதிகமாகப் பொருளிலும், திட்ட அமைப்பிலும், மொழியிலும் ஒற்றுமை இருக்க வேண்டும். மேலும் இக்கொள்கை இவற்றில் காணப்படும் வேறுபாடுகளை விளக்குவதில்லை. இக்கொள்கையை ஒருவரும் இப்போது ஏற்றுக்கொள்ளார். ஆனால் இதனால் ஒரு நன்மை உண்டு. அதாவது நாம் கொண்டிருக்கும் நற்செய்திகள் ஓர் இலக்கிய வடிவ வரலாற்றின் முடியாகும் என்று அறிஞர் உணரத் தொடங்கினர். உணர்ந்து ஏற்றுக் கொண்டனர்.

2) இரு ஏட்டு மூலக் கொள்கை:-

இக்கொள்கை பல வடிவம் எடுத்துள்ளது. அறிஞர் பலர் இக்கொள்கையை ஏதாவது ஒரு வடிவத்தில் ஏற்றுக் கொள்வர். இதன்படி முதல் மூன்று ஒத்தமை நற்செய்திகள் காணாமற்போய்விட்ட இரு ஏட்டு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டன.

அ) நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு அடிப்படையாக "மூல மாற்கு" என்ற நூல் இருந்திருக்கவேண்டும். இதற்குச் சான்றாக மாற்கில் காணப்படும் நிகழ்ச்சியுரைகளெல்லாம் சிறு மாறுதல்களுடன் மத்தேயுவிலும் காணப்படுவதை எடுத்துக் காட்டுவர். நுணுக்கமான விவரங்கள், உயிர்ச்சித்திர விவரிப்புகள், எளிமை, செயற்கைத் திட்டமின்மை ஆகிய குணங்கள் மாற்கில் காணப்படுகின்றன, மாறாக மத்தேயு-லூக்கா மாற்கைத் திருத்தி அமைத்துத் திட்டத்துடனும், இலக்கிய நயத்துடனும் எழுத முயன்றதாகத் தெரிகிறது. ஆகவே மத்தேயுவும் லூக்காவும் நாம் கொண்டிருக்கும் மாற்கையோ, மூல மாற்கையோ மூன்று நற்செய்திகளுக்கும் பொதுவான நிகழ்ச்சியுரைகளில் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

ஆ) இரண்டாவது மூலம்:- மத்தேயுவும் லூக்காவும் ஒருவரை ஒருவர் சாராது எழுதினாலும் மாற்கைச் சாராத பகுதிகளில் இருவருக்குமிடையே ஒற்றுமையுள்ளது. மேலும் இயேசுவின் வாக்குகள், அறிவுரைகள், மத்தேயுவிலும், லூக்காவிலும் சிறப்பாகக் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படையாக இருவருக்கும் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்க வேண்டும். இதைக் "Q" என்று அழைப்பர். (மூலம் என்று பொருள்படும் Quelle என்ற செர்மன் வார்த்தையின் முதல் எழுத்தால் இவ்வாறு அழைக்கப்பட்டது). இது ஒரு நற்செய்தி வடிவமுடைய நூல் அன்று. இது இயேசுவின் வாக்குகளையும்

அறிவுரைகளையும் கொண்டதாகும். சில நிகழ்ச்சியுரைகளும் சேர்ந்திருக்கலாம். இதைத்தான் ஆயர் பாப்பியஸ் அரமேயிக்கு மத்தேயு என்று கூறியிருக்கலாம். வாய் மொழிப் பாரம்பரியங்களையும் மூல மாற்கை யும் பயன்படுத்தி மாற்கு தமது நூலை எழுதியிருக்கவேண்டும். நாம் கொண்டிருக் கும் மத்தேயுவும் லூக்காவும் மாற்கிலிருந் தும் இயேசுவின் வாக்குகள் அடங்கிய இரண்டாவது மூலத்திலிருந்தும் தோன்றியி ருக்கவேண்டும். ஆனால் தங்களது நோக்கத் திற்கும் வாசகர்களின் தேவைக்கும் ஏற்ப இம்மூலங்களை மாற்றி அமைத்திருக்க வேண்டும். மேற்கூறிய இரு மூலங்களும் காலப்போக்கில் வழக்கொழிந்து மறைந்து போயின. இவ்விரண்டையும் தவிரத் தங்க ளுக்கே உரிய பகுதிகளுக்கு மத்தேயுவும் லூக்காவும் பிற மூலங்களைப் பயன்படுத்தி யிருக்கலாம். இவை வாய்மொழிப் பாரம் பரியங்களா, அல்லது எழுத்துப் பாரம்பரியங் களா என்று முடிவு செய்ய முடியாததொன் றாகும்.

மதிப்பீடு:- இக்கொள்கையில் சிக்கனமும் எளிமையுமுள்ளது. இக்கொள்கை ஒத்தமை நற்செய்திப் பிரச்சனையில் எழும் கேள்வி கள் யாவற்றிற்கும் விடையளிக்க வில்லை யாயினும் இப்பிரச்சனை பற்றிய ஆராய்ச்சி யில் ஒரு சிறப்புமிக்க கட்டமாகத் திகழ்கிறது.

இரண்டாவது மூலத்தின் தன்மை பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இல்லை. சிலர் இது ஒரு நற்செய்தி அல்ல, வாக்குக ளின் தொகுப்பு என்பர். இது எழுத்து மூலமா அல்லது வாய்மொழிப் பாரம்பரி யமா? இது பல வடிவங்களுடையதா? இதில் நிகழ்ச்சியுரைகளுக்கு இடம் உண்டா? இவ்வாக்குகள் எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன? பொருள் தலைப்புப் படியா? காலவரைப்படியா, இடத்தைச் சார்ந் ததா? என்பன போன்ற கேள்விகளுக்கு மன நிறைவளிக்கும் பதில் ஒன்றும் கிடைக்க வில்லை. இம்மூலத்தின் தன்மையை அறி யப்பலரும் பலவாறு முயன்றுள்ளனர். ஒரு வரும் போதிய அளவு வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. வாக்குகளுக்கு ஒரு மூலம் அவசியமானால், மாற்கைச் சாராத, மத்தேயு - லூக்காவுக்குப் பொதுவான நிகழ்ச்சியுரைக ளுக்கு ஒரு மூலம் அவசியமில்லையா? என்ற கேள்விக்கு விடையளிக்கவில்லை இக்கொள்கை.

இக்கொள்கையில் பெரும் குறையொன்று ளது. இக்கொள்கை நற்செய்திகளின் தோற் றத்தை ஓர் எழுத்துவடிவ வரலாறாகக் கொண்டதாகத் தெரிகிறது. இக்கொள்கை யில் வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு இடமே இல்லை.

இக்கொள்கையைக் கத்தோலிக்கர் அல் லாத அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். வக் னோனோ போன்ற அறிஞர்கள் பல மாற்றங் களுடன் இக்கொள்கையை ஏற்றுக் கொள் வர்.

3) பல ஏட்டு மூலக் கொள்கை:-

இக்கொள்கை வாய்மொழிப் பாரம்பரி யங்களும் ஏடுகளும் கலந்த பல மூலங்களை ஏற்றுக்கொள்ளும். இதன்படி இயேசுவின் வார்த்தைகளும், செயல்களும் அடங்கிய ஒரே நூல் மட்டும் தோன்றவில்லை. பல தொகுப்புகள் பல வடிவங்களில் தோன்றின. இவை பல கிறிஸ்தவச் சமூகங்களால் பயன் படுத்தப்பட்டன. மேலும் இவை வேத போதகர்களுக்கும் உபதேசிமார்களுக்கும் ஞாபகமூட்டும் சாதனமாக விளங்கின. இவர்கள் தங்களின் நோக்கத்திற்கு ஏற்பவும் தங்களுக்குச் செவிமடுப்போரின் தேவைக்கு ஏற்பவும் இவ்வேடுகளிலிருந்து எடுத்து விளக்குவர். சிறு தொகுப்புகள் காலப்போக் கில் பெரும் தொகுப்புகளாக மாறின, இத் தொகுப்புகளைப் பிற்காலத்தில் ஒத்தமை நற்செய்தியாளர் சேர்த்துத் தங்கள் நூல்களை எழுதினர். இவ்வாறு சரித்திரச் சூழ்நிலையா லும் வேதபோதகத் தேவையாலும் நற்செய் திகள் முழு வடிவம் எடுத்தன.

மதிப்பீடு:- இது உண்மைக்கு மிக நெருங் கியதாகும். இக்கொள்கை, தொடர்ச்சியான வாய்மொழிப் பாரம்பரியத்தையும், நாம்

கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகள் வடிவெடுக்கும்வரை அவற்றை இவ்வாய்மொழியில் பாரம்பரியம் பாதித்தல் செய்து வந்ததையும் ஏற்றுக்கொள்ளுகிறது. எனினும் இக்கொள்கையில் துல்லியம் இருப்பதாகத் தெரியவில்லை. சிக்கல் மிக்கதும் ஆகும். ஆனால் வாய்மொழிப் பாரம்பரியங்களுக்கும், ஏட்டு மூலங்களுக்கும் இக்கொள்கை இடமளிக்கிறது. இக்கொள்கையைச் செர்போ, லியோன் துயூர் போன்ற கத்தோலிக்க அறிஞர் பல மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்வர்.

மேற்கூறிய பல உத்தேசக் கொள்கைகளிலிருந்து ஒத்தமைப் பிரச்சனைக்கு மனநிறைவு அளிக்கக்கூடிய விடை காணுதல் எளிதான செயல் அன்று என்பது தெளிவு. ஒவ்வொரு கொள்யிலும் பல தவறுகள் உண்டு; ஆயினும் இப்பிரச்சனை ஆராய்ச்சிக்கு ஏதாவது ஒரு வகையில் பயன் அளித்துள்ளது. பல உண்மைத் தெளிவுகளை அளித்துள்ளது. இப்பிரச்சனையின் ஏதாவது ஒரு கோணத்தைச் சிறப்பித்துக் காட்டி அதற்கு விடை காண முயன்றுள்ளது.

இப்பிரச்சனைக்கு விடைகாண முயலும் போது கீழ்க்கண்டவைகளை மனதிற் கொள்ள வேண்டும். 1) வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு அதிமுக்கியஇடம் அளிக்க வேண்டும். ஆயினும் வாய்மொழிப் பாரம்பரியம் மட்டுமே விடையளிக்க வல்லது அன்று. அதனால் மட்டும் நற்செய்திகளில் காணப்படும் ஒற்றுமையை விளக்க முடியாது. 2) மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் மாற்கு மூலமாகும். இதை அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். மத்தேயுவும் லூக்காவும் மாற்கோடு இலக்கியச் சார்பு கொண்டுள்ளன. கிரேக்க மொழியில் மாற்கு காலத்தில் முந்தியதாகும். 3) நாம் கொண்டிருக்கும் மத்தேயு நேரடியாகக் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். அது ஒரு மொழி பெயர்ப்பன்று. 4) Q போன்ற மூலங்கள் வெறும்
யூகங்களே. 5) வாய் மொழிப்பாரம்பரியத்திற்கு இடமளிக்காத வெறும் ஏட்டு மூலம் சார்ந்த விடைகள் ஒவ்வாதனவாகும்.

8. இவற்றைக் கருத்தில் கொண்டு வக்னானோ, செர்போ, லியோன் துயூர், கரிங்டன் போன்றவர்களைப் பின்பற்றிப் பின்வரும் விடையளிக்க முயலுகிறோம். நற்செய்திகளின் தோற்றத் தொடக்கத்தில் பாலஸ்தீன் மூல அப்போஸ்தலப் போதகம் இருந்தது. இது பெரும்பாலும் வாய்மொழிப் பாரம்பரியமாகும். இதை அப்போஸ்தலர்களே நிர்ணயித்தனர். இது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் பேசிய அரமேயிக்கு மொழியில் இருந்தது. பாலஸ்தீனத்திலும் எருசலேமிலும் கிரேக்க மொழி பேசிய யூதர்கள் இருந்தால், இவ்வாய்மொழிப் பாரம்பரியம் கிரேக்க மொழியிலும் உருவெடுத்தது. இவ்வாய்மொழிப் பாரம்பரியத்தின் சில பகுதிகள் தொகுத்து எழுதப்பட்டன (லூக் 1:1).

சில, தொகுப்புகள் நீண்டனவாயும், சில சிறியனவாயும் இருந்திருக்க வேண்டும். வாய்மொழிப் பாரம்பரியத்தைப்போல, எழுதப்பட்ட இத்தொகுப்புகளும் அரமேயிக்கிலும் கிரேக்க மொழியிலும் உருவெடுத்தன. சில பகுதிகள் எழுதப்பட்டதால், வாய்மொழிப் பாரம்பரியம் மறைந்து போகவில்லை. அது தொடர்ந்து வளர்கிறது. தொடர்ந்து, எழுதப்பட்ட பகுதிகளைப் பாதித்தல் செய்கிறது. நற்செய்திகள் இறுதிவடிவெடுக்கும் வரை வாய்மொழிப் பாரம்பரியம் நற்செய்தி நூல் வளர்ச்சியைப் பாதித்தல் செய்கிறது. ஆண்டவரது போதகத்தைக் கொண்ட பல தொகுப்புகளும் ஆங்காங்குள்ள கிறிஸ்துவ சமூகங்களின் தேவைகளுக்கேற்ப வெவ்வேறு வடிவெடுக்கின்றன. பாலஸ்தீனத்திலுள்ள ஏட்டுத் தொகுப்புகளையும், அப்போஸ்தலிக்கப் போதகத்தையும் சேர்த்து அரமேயிக்கில் நற்செய்தி நூல் ஒன்று எழுதப்படுகிறது. இதுதான் அரமேயிக்கு மத்தேயு அல்லது மூலமத்தேயுவாக இருக்கலாம். இந்நூல் கிரேக்க மொழியில் பலரால் மொழிபெயர்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட கிரேக்க மொழி பெயர்ப்புகள் இருந்திருக்கலாம். இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்புகளை எல்லா நற்செய்தியாளரும் அறிந்திருந்ததாகத் தெரிகிறது. இம் மொழி பெயர்ப்புகளுக்குள்ளும் பரந்த வேறுபாடு

இருந்திருக்க வேண்டும். இவை கிறிஸ்துவச் சமூகங்களுக்குள் இருந்த உயிருள்ள பாரம்பரியத்தால் திருத்தப் பெற்றிருக்க வேண்டும். மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழிபெயர்ப்புகளைத்தவிர வேறுபல மூலங்களும் இருந்திருக்கவேண்டும். மத்தேயுவும் லூக்காவும் தங்களுக்குரிய செய்திகளை, வாக்குகளை ஒரு தனிப்பட்ட மூலத்திலிருந்து, எடுத்தாண்டதாகத் தெரிகிறது. இம்மூலம் எத்தன்மையுடையது? திட்ட வட்டமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. இம்மூலம் இயேசுவின் வாக்குகளையும், உவமைகளையும் கொண்டிருந்திருக்கலாம். (இது Q என்ற மூலமாக இருந்திருக்கலாம்). இது முதலில் அரமேயிக்கில் தோன்றிப் பின் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை, இவ்வாக்குகள், உவமைகள் ஆகியவற்றின் தொகுப்பு அரமேயிக்கில் வாய்மொழிப் பாரம்பரியமாக இருந்திருக்கலாம். கிரேக்க மொழி பேசிய கிறிஸ்துவர்களின் நன்மைக்காகக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். இதுவும், வெவ்வேறு சமூகங்களின் தேவைக்கு ஏற்பத் திருத்தி அமைக்கப்பட்டு வெவ்வேறு வடிவங்கள் எடுத்திருக்க வேண்டும்.

இன்னும் நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகள் வடிவெடுக்கவில்லை. மத்தேயுவின் பல மொழிபெயர்ப்புகளில் சில வாய்மொழிப் பாரம்பரியங்களாலும், கிறிஸ்துவச் சமூகங்களாலும், பிற மூலங்களாலும் திருத்தப்பெற்று மாற்றி அமைக்கப் பெற்றுத் தனிச்சிறப்பு வாய்ந்த பாரம்பரியங்களாகத் திகழ்கின்றன. இவற்றில் மூன்று நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகளாகத் தோன்றுகின்றன.


முதலாவதாகத் தோன்றியது மத்தேயுவின் நற்செய்திநூல் அன்று. மாற்கினுடையது தான் நாம் கொண்டிருக்கும் நற்செய்தி வடிவங்களில் முதலாவதாகத் தோன்றியது. இதை விவிலிய அறிஞர் யாவரும் ஏற்றுக் கொள்வர். மாற்கு ஓர் அப்போஸ்தலரோ நேரடிச் சாட்சியோ அல்லர். ஆகையால் அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்புகளில் ஒன்றையோ பலவற்றையோ பயன்படுத்தித் தமது நூலை எழுதியிருக்க வேண்டும். இந்நற்செய்தி விரிவான விவரிப்புகளையும் உயிர்ச் சித்திரத்தன்மையையும் நேரடிச் சாட்சித் தன்மையையும் கொண்டது. மாற்கு பேதுருவின் சீடராக இருந்ததாகப் பாரம்பரியம் கூறுகிறது. பேதுருவோடு கொண்ட இத்தொடர்பு மேற்கூறிய பண்புகள் இந்நற்செய்தியில் இருப்பதற்குக் காரணமாகலாம்.

மத்தேயுவும் லூக்காவும் ஒருவரை ஒருவர் சாராது எழுதியதாகத் தெரிகிறது. ஆகையால் யாருடைய நூல் முதலில் தோன்றியது என்று கூறுதல் கடினம். இப்பிரச்சனை முக்கியம் வாய்ந்ததும் அன்று.

மத்தேயுவால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் அரமேயிக்கு மத்தேயுவை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நாம் கொண்டிருக்கும் கிரேக்க மத்தேயு தோன்றியிருக்க வேண்டும். நற்செய்திகளுக்குள் உள்ள தொடர்பை ஆராயுங்கால் கிரேக்க மத்தேயு மாற்கையும் சார்ந்து எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. மேலும் முன்பு கூறியதுபோல் லூக்காவுக்கும் மத்தேயுவுக்கும் பொதுவான ஒரு மூலம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத்தேயுவுக்கே உரிய நிகழ்ச்சிகளுக்கு அவர் ஒரு தனிப்பட்ட மூலத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

லூக்கா மாற்கைத் தமது முக்கிய மூலமாகப் பயன்படுத்தியிருக்கிறார். இதுபற்றி இப்போது அறிஞர் ஐயுறார். மாற்கின் வரிசைக் கிரமத்தை லூக்கா தெளிவாகப் பின்பற்றுகிறார். ஆனால் இதில் தமது ஆசிரியர் சுதந்தரத்தைக் கைவிட்டு விடவில்லை. ஆகையால் சுதந்தரத்துடன் நிகழ்ச்சியுரைகளையும், அறிவுரைகளையும் மொழிநடையையும் பயன்படுத்துகிறார். இது லூக்கா, மாற்கு ஆகியோருக்கிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்க வல்லது. ஒருவேளை அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்புகளில் ஒன்றையும், அதில் காணப்பட்ட வரிசைக்கிரமத்

தையும் லூக்கா பின்பற்றியிருக்கலாம். மத்தேயுவோடு சேர்ந்து மற்றொரு மூலத்தையும் பயன்படுத்தியிருக்கலாம். தமக்கே உரிய மற்ற மூலங்களையும் பயன்படுத்தியிருக்கலாம். மேற்கூறியவற்றைக் கீழ்வரும் படம் விளக்குகின்றது.




ஒத்தமை நற்செய்திகள் தொடர்புத்திட்டம்

மேற்கூறிய நமது விடை முற்றிலும் மனநிறைவு அளிக்கவல்லதன்று. ஆனால் உண்மைக்கு மிக நெருங்கியதாகும். நற்செய்தி வடிவங்களில் தோற்ற வரலாற்றின் நெடுகிலும் வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு முக்கியம் அளிக்கப்படுகிறது. அதாவது நற்செய்தித் தோற்றத் தொடக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் அது எழுதப்படுமுன்னும் இறுதி வடிவம் எடுக்குமுன்னும், வாய்மொழிப் பாரம்பரியத்திற்குரிய இடம் அளிக்கப்படுகிறது.

இக்கொள்கைப்படி நற்செய்திகளுக்கிடையே ஏட்டு இலக்கியத் தொடர்பு இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருந்தததென்றாலும் ஒரு மூலம் மட்டுமன்று. பல மூலங்கள் இருந்திருக்க வேண்டும். அப்போது நற்செய்திகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் விளக்கம் பெறுகின்றன. நாம் அளித்திருக்கும் விடை நற்செய்திகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கப் போதுமானது. அதிலே நற்செய்திகள் பற்றிய இலக்கியத் திறன் ஆய்வும் பாரம்பரியமும் இடம் பெறுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நற்செய்தியாளர்கள் சுதந்தரமுடைய ஆசிரியர்கள்; அவர்கள் தங்களது நோக்கத்திற்கு ஏற்பவும் தங்களது வாசகங்களின் தேவைக்கு ஏற்பவும் தமது நூல்களை எழுதினர் என்பதை மறந்துவிடக் கூடாது. இவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நற்செய்திகளையும் ஆழ்ந்து படித்தால், அவற்றிடையுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் நன்கு விளங்கும். ஒவ்வொன்றின் மேன்மையும் தனிச்சிறப்பும் தெளிவாகத் தோன்றும்.

9. முடிவுரை:- முன்பு கூறியதுபோல் ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு முற்றிலும் மனநிறைவு அளிக்கும் விடை காணுதல் கடினமானதாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்தோன்றிய நற்செய்திகள் எவ்விதம் தோன்றின என்று தெளிவாகக் காண்பது அரிதாகும். ஒருவேளை இப்பிரச்சனை தீர்க்க முடியாததாகப் போகலாம். இப்பிரச்சனை அறிஞர்களுக்கு ஒரு சவாலாக இருந்து கொண்டிருக்கிறது; இருந்து கொண்டேயிருக்கலாம். ஆனால் இப்பிரச்சனையைத் தீர்க்க அறிஞர் பலர் தங்களையே அர்ப்பணித்திருக்கின்றனர்; அர்ப்பணித்துக் கொண்டே இருப்பர் என்பதும் உறுதி.

**ஒபதியா** (OBADIAH - *யாவேயின் ஊழியன்*)

*1. இவர் ஆகாபு மன்னனின் அரண்மனைத் தலைமை மேற்பார்வையாளர். தெய்வபயம் கொண்டவர். ஈசபேலின் கொடுமைக் காலத்தில் யாவேயின் 100 இறைவாக்கினர்களை மறைத்துவைத்து உணவளித்தவர் (1 அர 18:3-16).*

*2. இவர் தாவீது மன்னனின் வழியில் ஆர்னானின் மகனான கனனியாவின் புதல்வர்களில் ஒருவர். செருபாபேலின் வழித்தோன்றல் (1 நாள் 3:2).*

3. இசக்கார் குலத்தின் ஒரு தலைவர். இவர் தந்தையின் பெயர் இசுரகியா (1 நாள் 7:3).

4. பென்யாமின் குலத்தினரான இவர் ஆசேலின் ஐந்தாம் மகனாவார். சவுலின் வழித்தோன்றல் (1 நாள் 8:38; 9:44).

5. அடிமைத்தனத்திலிருந்து முதலில் எருசலேமுக்குத் திரும்பி வந்த லேவியருள் ஒருவர். செமாயாவின் மகன் (1 நாள் 9:16). இவர் நெகமியா நூலில் சம்மூவானின் மகனான அபுதா என அழைக்கப்படுகிறார் (நெக 11:17).

6. காது குலத் தலைவர்களில் ஒருவரான இவர் சிக்கிலாகில் தாவீது மன்னனின் படையில் சேர்ந்து அதிகாரியானார்(1 நாள் 12:9).

7. தாவீது மன்னனின் இறுதி நாட்களிலே செபுலோனின் தலைவர்களுள் ஒருவர். இசுமயாவின் தந்தை (1 நாள் 27:19).

8. யோசபாது மன்னன் யூதா நகர்களில் ஆண்டவரின் திருச்சட்ட நூலைப் போதிக்க அனுப்பிய மூப்பர்களில் (இளவரசர்களில்) ஒருவர் (2 நாள் 17:7-9).

9. யூதாவின் அரசன் யோசியாவின் காலத்திலே நடந்த ஆலயச் செப்பனிடும் பணிகளை மேற்பார்வை பார்த்த லேவியர். மெராரியின் குலத்தைச் சேர்ந்தவர் (2 நாள் 34:12).

10. பாபிலோனிலிருந்து திரும்பிய யோவாபின் வழித்தோன்றல். எகியேலின் (10)-இன் மகன் (எஸ் 8:9).

11. எஸ்ராவோடு அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த குருக்களில் ஒருவர். இவர் நெகமியாவின்கீழ் இறைவனுக்கும் மக்களுக்குமிடையேயான புதிய உடன்படிக்கையில் கையெழுத்திட்டார் (நெக 10:5).

12. பெரிய குரு யோயாக்கிம் காலத்திலே வாயில் காவலரான இவர் வாயில்களையும், அவற்றின் அருகே இருந்த கருவூலங்களையும் காவல் காத்தார் (நெக 12:25).

13. ஒபதியா நூலில் தொகுக்கப்பட்டிருக்கும் காட்சிகளுக்குரிய இறைவாக்கினர். இவருக்கு எந்த மரபு வரிசையும் கொடுக்கப்படவில்லை. நூலின் எந்த உள்ளார்ந்த சுட்டிக்காட்டல்களும், பழைய ஏற்பாட்டில் இப்பெயரையுடைய எந்த நபரோடும் அடையாளம் காட்ட ஆதரவு தரவில்லை. இராபிகளின் பாரம்பரியங்களில் ஒன்று (1)-இல் கூறப்பட்ட அரசன் ஆகாபின் அரண்மனையில் தலைமை அதிகாரியாக்குகிறது (1 அர 8:3-16). தொடக்க கால ஒரு கிறிஸ்தவ எழுத்தாளர் இவரை ஆகாபின் மகன் அகசியாவின் அதிகாரியாக்குகிறார். காண்க. ஒபதியா (1).

## ஒபதியா திருநூல் (BOOK OF OBADIAH)

1. பெயரும் வாழ்வும்:- ஒபதியா என்ற சொல்லுக்கு ''யாவேயின் அடிமை'' என்று பொருள் கூறலாம். இவரைப் பற்றி அதிகமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. நூலிலிருந்து, இவர் ஆலயத்தைச் சேர்ந்த இறைவாக்கினராகவோ, ஆலய இறைவாக்கு இலக்கியப் பாரம்பரியத்தில் எழுதியவராகவோ இருக்க வேண்டும். இறைவாக்கினர் நாகூமைப் போல், இவர் தீவிர நாட்டுப்பற்றுடையவர். ஏதோமுக்கு எதிராக மிகுந்த சீற்றமுடையவர்.

1. நூலும் காலமும்:- இந்நூல் பழைய ஏற்பாட்டிலேயே மிகச் சிறிய நூலாகும். ஆகவே இறைவாக்கினர் நூல்கள் பற்றிய ஆய்வில் இந்நூலை அறிஞர் அதிகம் சிந்திப்பதில்லை. ஆயினும் எதிர்கால நம்பிக்கை என்னும் கருத்து வளர்ச்சியில் இந்நூல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இதில் இறுதிக்கால இறையியலும் அமைந்துள்ளது.

இந்நூலை இரு பகுதிகளாகப் (வச 1-15; 16-21) பிரிக்கலாம். ஏதோமுக்கு எதிராக ஏற்கனவே இருந்த இறைவாக்குகளைத் தொகுத்துத் திருத்தி அமைத்து ஒபதியா முற்பகுதியை எழுதினார் எனலாம் (ஆமோ 1:11-12; ஏச 34:1-17; 63:1-6; எரே 49:7-22;

எச 25:12-17; 35:1-15). அதன்பின், இரண்டாம் பகுதியில் தனது சொந்த வாக்குகளைத் தொகுத்து எழுதி, இரண்டையும் இணைத்தார் எனலாம்.

இந்நூல் தோன்றிய காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. சிலர் இந்நூல் கி.மு.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்; வேறுசிலர் கி.மு. 312-ஐ ஒட்டியது என்பர். கி.மு. 587/86-இல் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின்னும் ஏதோமை நபத்தேய அராபியர்கள் கைப்பற்றிய ஆண்டுக்கும் (கி.மு. 312) இடைப்பட்ட காலத்தில் இந்த இறைவாக்கு கூறப்பட்டிருக்கலாம். ஏனெனில் எருசலேமின் வீழ்ச்சியின்போது ஏதோமித்தர் செய்த துரோகச் செயல்கள் ஆசிரியரது எண்ணத்தில் பசுமையாக இருக்கின்றன. இதற்குத் தண்டனையாக இறைத்தீர்ப்பாக, அராபியப் படையெடுப்பையும் அதன்பின் வந்த துன்பங்களையும் இறைவாக்கினர் விளக்குகின்றார்.

இந்நூலைத் தழுவி, இறைவாக்கினர் யோவேல் தனது இறைவாக்கைக் கூறுவதாகத் தெரிகிறது (வச 15-ஐ யோவே 1:15; 4:4.7. 14 ஓடும், வச 17-ஐ யோவே 3:5; 4:17-ஓடும் ஒப்பிடுக).

*3. வரலாற்றுப் பின்னணி:- ஏதோம் நாடும் மக்களும்:-* ஏதோம் நாட்டையும் அதில் வாழ்ந்த ஏதோமித்தரையும் நோக்கி இந்த இறைவாக்கு கூறப்படுகிறது. ஆகவே ஏதோம் நாட்டையும் ஏதோமித்தரையும் பற்றிச் சிறிது அறிந்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். கி.மு. 23-20 நூற்றாண்டுகளில் ஏதோம் பகுதியில் ஒரு சிறந்த கலாச்சாரம் வளர்ந்திருந்தது. கி.மு. 19-ஆம் நூற்றாண்டில் நாடோடி இனத்தவர் இப்பகுதியைக் கைப்பற்றி அங்கு நிலவிய கலாச்சாரத்தை அழித்தனர். இக்காலம், ஆபிரகாம், அரசர்கள்கூட்டணிக்கு எதிராகப் போரிட்ட கதை நடந்த காலத்தைச் சேர்ந்ததாகும். இந்த நாடோடி இனத்தவர், இப்பகுதியை ஆறு நூற்றாண்டுகளுக்கு ஆட்சி செய்தனர். கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் ஏதோமித்தர் அரபா வாடிக்குக் (ஓடை) கிழக்கே குடியேறினர். இவர்கள் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதியாகமக் குறிப்புப்படி இவர்கள் யாக்கோபின் சகோதரனான ஏசாவின் சந்ததியாவார். ஆகவே இஸ்ராலேயர்களுக்கு உறவினர். ஆயினும் இரு இனத்தவரிடையே எப்போதும் பகைமையும் போராட்டமும் இருந்து கொண்டே இருந்தன.

ஏதோம், தன் எல்லையாக, வடக்கில் சாக்கடலையும், கிழக்கே அரேபியா பாலைவனத்தையும் தெற்கில் அக்காபா வளைகுடாவையும் மேற்கில் அரபா வாடி (ஓடை) யையும் கொண்டிருந்தது. வடக்குத் தெற்கில் எழுபதுமைல் நீளமும் கிழக்கு மேற்கில் பதினைந்து மைல் அகலமும் கொண்டது. இப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 5000 அடி உயரத்திலுள்ள பீட பூமியாகும். நாட்டைச் சமமில்லாத இருபகுதிகளாகப் பிரிக்கலாம். வடக்கிலுள்ள சிறியதொரு பகுதி போஸ்ரா என்றும் தெற்கிலுள்ள உயர்ந்த பெரிய பகுதி சேலா என்றும் அழைக்கப்பட்டன. தெற்குப் பகுதியில் பழங்காலக் கோட்டைகள் உண்டு. விவிலியத்தில், ஏதோம், அதனுள் உள்ளமுக்கிய மலைத்தொடரின் பெயரால் செயீர் மலை என்றழைக்கப்படும் (எச 35:1-9); ஏதோமித்தரின் மூதாதையரின் பெயரால் ஏசாவின் மலை என்றும் குறிக்கப்படும் (வச 9). ஏதோம் என்ற சொல் ''சிவப்புப்பகுதி'' என்று பொருள்படும்; அங்குள்ள பாறைகள், மண் ஆகியவற்றின் நிறத்தைக் குறித்தது. இப்பகுதி மணலும் க்ல்லும் நிறைந்த பரப்புடையது பெரும் செங்குத்தான பாறைகளையும், ஆழமான பயங்கரக் குகைகளையும் கொண்டது. இவையாவும் அச்சமிக்க சூழ்நிலையை எழுப்பக்கூடும். இத்தகைய நிலத்தில் வேளாண்மை செய்து வாழ்வு நடத்த முடியாது. ஆகவே பெனிசியர்களைப்போல், ஏதோமித்தரும் வியாபாரத்தில் தங்கள் செல்வத்தைத் தேடினர். செங்கடல் துறைமுகமான எசியோன்-கெபேர் தெற்கில் இருந்தது. அரேபியா, ஆப்பிரிக்காவின் பொருட்களைச் சுமந்து கொண்டு ஒட்டகங்கள் ''அரசனது பெருவழி'' வழியாகச் சென்றன (எண் 20:17). இவ்வழி ஏதோமின் இடையில்

தெற்கு வடக்காகச் சென்றது. வியாபாரம் இவர்களைக் கிழக்கு நாடுகளோடு தொடர்பு கொள்ளச் செய்தது. இத்தொடர்பால் இவர்கள் ஞானத்திற்கும் அறிவுக்கும் புகழ்பெற்றவர்கள் என்ற சிறப்பினைப் பெற்றனர் (வச 9; எரே 49:7).

இஸ்ராயேல் வரலாறு முழுவதும், ஏசாவுக்கும் யாக்கோபுவுக்கும் இடையேயும், அவர்களுடைய சந்ததியினர்களிடையேயும் கசப்பான பகைமை நீடித்தது. யாத்திரைக்குப் பின் ஏதோமின் வழியாக எபிரேயரை நடத்திச் செல்ல மோசே அனுமதி கேட்ட போது, அதன் அரசன் இழிவான முறையில் மறுத்துவிட்டான் (எண் 20:14-21). சவுல் ஏதோமித்தரோடு போரிட்டார். தாவீது இவர்களை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தினார். சாலமோனுக்கும் அவருக்குப் பின் வந்த யூதாவின் அரசர்களுக்கும் ஏதோமித்தர் அடிமையாய் இருந்தனர். சாலமோன் தனது புகழ்பெற்ற செம்புச் சுரங்கங்களை அக்காபா வளைகுடாவில் நிறுவினார். அங்கிருந்து தனது கடல் வணிகத்தை நடத்தினார். இஸ்ராயேலுக்கும் யூதாவுக்கும் பிளவு ஏற்பட்டபின், யூதாவின் அரசன் யோராம் காலத்தில் ஏதோமித்தர் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். பலமுறை கிளர்ச்சி செய்து படிப்படியாக வெற்றி பெற்றனர். அதன்பிறகும் ஏதோமுக்கும் யூதாவுக்குமிடையே உறவு இழுபறியாகவே இருந்தது. யூதாவின் அரசர்களான அமாசியா, ஊசியா ஆகியோர் ஏதோமித்தரை மீண்டும் வென்று அடிமையாக்கினர். அமாசியா சேலாவைக் (பெட்ரா) கைப்பற்றினார். ஊசியா, ஏலாத்தைக்கைப் பற்றி யூதாவின் ஆட்சியை விரிவுபடுத்தினார். ஆனால், ஆகாசின் காலத்தில் ஏதோமித்தர் மீண்டும் சுதந்தரம் பெற்றனர்.

கி.மு. 604-க்குப்பின் ஏதோம் அசீரியர்களுக்கும் பாபிலோனியர்களுக்கும் கப்பம் கட்டும் நாடாயிற்று. பிற்காலத்தில் பாபிலோனியர் யூதாவை வென்றபோது ஏதோம் பாபிலோனியர்களோடு சேர்ந்து கொண்டு, யூதாவுக்கு எதிராகப் பழம் பகையைத் தீர்த்துக்கொள்ள முயன்றது. கி.மு. 587-இல் நெபுக்கதுனேசார் எருசலேமை முற்றுகையிட்டபோது, பரிசுத்த நகரை அழிக்கும்படி பாபிலோனியரை ஏதோம் தூண்டியது. இதை ஒரு சங்கீத ஆசிரியர் மிகுந்த கசப்போடு நினைவு கூர்கிறார்; ''தகர்த்தெறியுங்கள், அடியோடு தகர்த்தெறியுங்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள் (சங் 136:7). யூதாவின் மக்கள் நாடு கடத்தப்பட்டபோது, ஏதோமித்தர் இறை மக்களது வேதனைமிக்க துன்பநிலை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்; யூதாவைச் சூறையாடினர்; பொருட்களைக் கொள்ளையடித்தனர்; தப்பி ஓடியவர்களைக் காட்டிக் கொடுத்து எதிரியிடம் ஒப்படைத்தனர் (வச 10-14). தங்கள் தலை நகரைக் கெபிரோனுக்கு மாற்றினர். கொடுமை மிக்க இந்தச் சகோதரத் துரோகத்தை (ஏனெனில் ஏசாவும் யாக்கோபும் சகோதரர்கள்) நாட்டுப் பற்றுடைய யூதர்கள் மனதார வெறுத்தனர்; ஒரு போதும் மறக்கவில்லை.

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட காலத்திலும், அதற்குப் பின்பும், ஏதோமித்தர் பிறரால் பல முறை கொள்ளை அடிக்கப்பட்டனர். தென் கிழக்கிலுள்ள பாலையைச் சேர்ந்த நபத்தேய அராபியர்கள் ஏதோமின் மேல் அடிக்கடி படையெடுத்தனர். இப்படையெடுப்புக்கு அஞ்சி, ஏதோமின் அகதிகள் யூதாவின் தென் பகுதியில் குடியேறினர். இப்பகுதி பிற்காலத்தில் இதுமேயா என்றழைக்கப்பட்டது (வச 7). அவர்கள், இங்குப் பெட்ரா என்ற இடத்தில் தங்கள் தலை நகரை நிறுவினர். இவ்விடம் ஏதோமித்தரின் மிகப் பழைய குடியிருப்பாகும்: ஒரு வேளை, சேலாவாக இருக்கலாம். பெட்ரா என்றால் பாறை என்று பொருள் (வச 3). இது இப்போது யோர்தான் நாட்டில் உள்ளது. இன்றும் இதைப் பல சுற்றுலாவாசிகள் பார்க்கச் செல்கின்றனர்.

பாபிலோனிலிருந்து யூதர்கள் தாயகம் திரும்பிய பின்னும் இரு இனத்தவரிடையே உறவு மேம்படவில்லை. இதை ஒபதியா நூல் சுட்டிக் காட்டுகிறது. இந்நூலில் காணப்படும் ஏதோமுக்கு எதிரான பழிப்புரை, யூதாவின் அரசர்கள் காலத்தில் ஏதோமுக்கு

எதிராகக் கூறப்பட்ட இறைவாக்குகளை எதிரொலிக்கிறது. ஏற்கெனவேயுள்ள ஏதோமின் பாவநிலை, யூதாவுக்குச் செய்த சகோதரத் துரோகத்தால் மேலும் மோசமாயிற்று என்று ஒபதியா கூறுகிறார் (வச. 10). இதில், இருநாடுகளையும் அவற்றின் இனப்பெயர் காட்டும் மிகப் பழைய பாரம்பரியத்தையும் இறைவாக்கினர் எதிரொலிக்கின்றனர் (ஆதி 36:1). இக்கதைகளில் வரும் பல செய்திகள் இரு இனத்தவரின் பிற்கால வரலாற்றை எதிரொலிக்கின்றன. சிவப்பு என்று பொருள் படும் ஏதோம் என்ற பெயர், அதே என்ற பெயர் கொண்ட மலைகளின் நிறத்தாலோ, ஏசாவின் சிவப்பு உடல் நிறத்தாலோ, ஏசா தனது பிறப்புரிமையை விற்று வாங்கிய கூழ் உணவின் நிறத்தாலோ விளக்கப்படுகிறது (ஆதி 25:25.30) பகால்-காதுமலை யூதாவின் தென் எல்லையைக் குறித்தது. இது ஏதோமின் மலையாகிய செயீர்மலைக்கு எதிராக இருந்தது (யோசு 11:17; 12:7). இதன்படி, யாக்கோபு மழுமழுப்பானவனாகவும் (பகால்-காது), ஏசா ரோமக்சுட்டு உள்ளவனாகவும் (செயீர்) விவரிக்கப்படுகின்றனர் (ஆதி 27:11). இஸ்ராயேல் சமூகத்தில் ஏதோமித்தரைச் சேர்த்துக் கொள்வதற்கு உபாகமச் சட்டம் இணக்கம் காட்டுகிறது (உபா 23:8). யோபு திருநூலின் ஆசிரியர், யூதர்களை அன்று ஏதோமித்தரையே தன் கதாநாயகனாகவும், பிற நடிகர்களாகவும் ஆக்குகிறார்.

4. நூலின் திட்டம்:-

வச. 1 தலைப்பும் முன்னுரையும்

I. வச. 2-15; ஏதோமுக்கு எதிரான இறைவாக்கு.
   - வச. 2-4; ஏதோமின் மேல் தீர்ப்பு
   - வச. 5:9; ஏதோமின் அழிவு.
   - வச. 10-15; அழிவுக்குக் காரணம்.

II. வச. 16-18; இஸ்ராயேல் பழிவாங்குவான்.
   - வச. 19:21; இறைவனின் புதிய அரசு; புதிய இஸ்ராயேல்.

6. சிறப்புக் கருத்துக்கள்:-

33A முறைமைக் கைம்மாறு நியதி இச்சிறு நூலின் முக்கிய இறையியல் கருத்து இறைவனுடைய நேர்மை மிக்க தீர்ப்பாகும். தீயவர்களோ, தீய நாடுகளோ செய்யும் தீமைகளை இறைவன் கவனிக்காமல் விடுவதில்லை; புறக்கணிப்பதில்லை. அவரவர்களுக்கு உரிய தண்டனையை முறைமைக் கைம்மாறாக அளிக்கிறார்.

முதலில் அகந்தைமேல் இறைவனது தீர்ப்பை இறைவாக்கினர் அறிவிக்கிறார். ஏதோமுக்கு எதிராகப் போரிடப் பிற இனத்தவரைத் தூண்ட இறைவன் மனிதத் தூதுவனை அனுப்புவதைப் பற்றி இறைவாக்கினர் கேள்விப்படுகிறார். இந்தப் போர்க் கூட்டணி அமைப்பில், வரலாற்றின் ஆண்டவர் செயலாற்றுவதை ஒபதியா தெளிவாகக் காண்கிறார். பாவம் மலிந்த ஏதோமை இறைவன் சிறுமைப்படுத்தப் போகிறார்; நிந்தைப்படுத்தப் போகிறார். ஆனால் ஏதோம் இறுமாப்போடு எதிர்த்து நிற்கிறது. தனது மலைப்பாங்கான அரணை யாரும் அணுக முடியாது; கோட்டைகள் மிகப் பாதுகாப்பானவை. உயர்ந்த செங்குத்தான பாறைகள் சூழ்ந்த தன் தலை நகரத்தை யாரும் எளிதில் வெல்ல முடியாது என்று ஏதோம் செருக்குக் கொண்டிருக்கலாம். கழுகுகள் கூடு கட்டும் உயரத்தில் ஏசா வாழ்வது உண்மையே. ஆயினும் ''கழுகைப்போல் உயரப்பறந்தாலும் விண்மீன்கள் நடுவில் அவன் தனது வீட்டை அமைத்தாலும் '' இறைவன் அவனைக் கீழே வீழ்த்துவார் (ஒப 1-4). மற்றப் புதிய எபிரேய இறைவாக்கினர்களோடு சேர்ந்து ஒபதியாவும் மனிதர்களின் அகந்தை; சுய நிறைவு ஆகியவற்றின் மேல் இறைவனது தீர்ப்பை அறிவிக்கிறார். ''அகங்காரம் முன்னும், அழிவு பின்னும் வருமுன்னே, மனம் செருக்குறும்'' (பழ 16:18). இது மக்களிடையே நிலவிய ஒரு பழமொழியாக இருக்கலாம். இதை இயேசு அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றார்: ''தன்னையே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்''. பகலுக்குப் பின் இரவு வருவதுபோல், ஒழுக்க அமைப்பில், அகந்தைக்குப் பிறகு அழிவும் இழிவும் வருவது உறுதி. ஏனெனில், ''செருக்குற்றவர்களை இறைவன்

எதிர்க்கிறார்; தாழ்ச்சியுள்ளவர்களுக்கோ அருளை அளிக்கிறார்'' (1 பேதுரு 5:5).

இந்நூலில் அடுத்து வரும் முக்கியமான இறைவாக்கில் ''முறைமைக் கைம்மாறு நியதியை'' இறைவாக்கினர் கூறுகிறார். ''நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும்; நீ செய்த வினைகள் உன்மேல் விழும்'' (வச 15). ஏதோம் செய்தவை வச 10-14-இல் விவரிக்கப்படுகின்றன. இனி ஏதோம் அனுபவிக்க இருப்பவைகளை வச 5-9-இல் இறைவாக்கினர் எடுத்துரைக்கின்றார். ஏதோமித்தர் எருசலேமின் வீழ்ச்சியின்போது செய்தவை, உரிய காலத்தில், அவர்களுக்குத் திரும்ப விளைகின்றன. இரவில் திருடும் கொள்ளைக்காரர்கள் எல்லாவற்றையும் திருடுவதில்லை. திராட்சைப் பழங்களைப் பறிக்கிறவர்கள் பழங்களில் சிலவற்றையாவது விட்டுச் செல்வர். ஆனால், ஏதோமின் அழிவு முழுமையாக இருக்கும். அது ஏற்கெனவே தொடங்கி விட்டது. ஏசா தன் சகோதரன் யாக்கோபுவைக் கொள்ளையடித்து அவன் நாட்டின் ஒரு பகுதியைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான். அதுபோல், ஏதோமும் தன் நாட்டை இழப்பது நீதியே; இதை அவனது நண்பனும் கூட்டாளியுமான நபத்தேய அராபியரே செய்வர். ஏதோமித்தரின் ஞானிகளும் வீரர்களும் அப்படியே அழிக்கப்படுவர்.

''நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும்'' என்ற கொள்கைக்கு எடுத்துக்காட்டாகப் பல நிகழ்ச்சிகளை விவிலியத்தில் காணலாம். ரூத் தன் மாமியாள் நகோமிக்குப் பேரன்பு காட்டினாள்; பிற்காலத்தில் பெத்லகேமில் போவாசிடமிருந்து பேரன்பு பெற்றாள் (ரூத் 2:8-13). யாக்கோபு தன் தந்தை ஈசாக்கை ஏமாற்றினார்; ஆனால் தன் பிள்ளைகளாலேயே ஏமாற்றப்பட்டார் (ஆதி 27;1-29; 27:29-36). ஆமான், மோர்தெக்காயைக் கொல்லக் கழுமரம் தயாரித்தான்; அதிலேயே அவன் கழுவேற்றப்பட்டான் (எஸ்த 7:9-10). நன்மையோ தீமையோ, நாம் எந்த அளவில் பிறருக்கு அளக்கிறோமோ அதே அளவில் தான் நமக்கும் அளக்கப்படும். நாம் பிறரை எந்த முறையில் நடத்துகிறோமோ அதே முறையில்தான், அவர்கள் நம்மை நடத்துவர். இந்தக் கொள்கை நாடுகளுக்கும் தனிப்பட்டோருக்கும் பொருந்துவதாகும். இதில் ஒரு முக்கிய மாற்றம் உண்டு. எந்த உழவனும் விதைத்தவுடன் அறுவடை செய்வதில்லை. ஏதோமித்தர் செய்த வெறுக்கத்தக்க செயல்களின் பயன், உடனே அவர்கள் மேல் விழவில்லை. வரலாற்றில் இறைவனது தீர்ப்பு நெடுங்காலத்திற்குப் பிறகு தான் வெளிப்படுகின்றது.

ஆண்டவரது நாள், ஏதோமித்தர் மேல் மட்டுமன்று, எல்லாப் பிற நாடுகள் மேலும் வரும் - இறைவனது தீர்ப்பு ஆகியவை பற்றிய விவரிப்போடு இந்நூல் முடிகிறது. பாபிலோனியர் வாயிலாக யூதா ஏற்கெனவே இறைவனது தீர்ப்பை அனுபவித்து விட்டது. பிற நாடுகளும் ஆண்டவரது சீற்றமாகிய துன்பக் கிண்ணத்தை விரைவில் பருகுவர். அந்தத் தீர்ப்பிலிருந்து தப்பிய யூதர்களாகிய எஞ்சியோர் சீயோன் மலையில் அச்சமின்றி வாழ்வார்கள்; தங்களைக் கொள்ளையடித்தவர்களைக் கொள்ளையடிப்பார்கள். பரிசுத்த நாட்டின் இழந்து போன பகுதிகளைத் திரும்பவும் கைப்பற்றுவர். தீ வைக்கோலை எரிப்பதுபோல் யூதாவும் இஸ்ராயேலும் சேர்ந்து ஏதோமை அழிக்கும்; மீட்பர்களால் நடத்தப்பட்டு இஸ்ராயேல் ஏதோமை வெற்றி கொள்ளும். இறைவனது அரசு நிறுவப்படும் (வச 15-21). இந்தக் கருத்தைப் புனித பவுலும் கையாளுகின்றார். ஆண்டவரது நாளில் உலக அமைப்பு முழுவதும் மாற்றி அமைக்கப்படும்; காரியங்கள் தலைகீழாக மாற்றப்படும்; சரி செய்யப்படும். இந்த யுகத்தில் கொடுமை செய்வோர் வரும் யுகத்தில் தண்டிக்கப்பெறுவர். இப்போது கொடுமைப்படுத்தப்படுவோர் அமைதியும் பாதுகாப்பும் பெறுவர் (2 தெச 1:5-10).

ஒபதியாவின் செய்தி, நமது காலத்தில் நிலவும் மிகுதியான உணர்ச்சிப் போக்குக்

கும், தனிநபரைப் போற்றும் கொள்கைக்கும் ஒரு திருத்தமாக அமைந்துள்ளது. அயல் நாடுகளைப் பற்றிப் பேசும்போது, இறைவாக்கினர் நாகூமைப் போல், ஒபதியாவும் ஆண்டவரது அன்பைவிட அவரது கடுமையையும், இறைவனது அருள்மிக்க இரக்கத்தையும் மீட்பையும்விட அவரது கோபத்தையும் பழிவாங்குதலையுமே வெளிப்படுத்துகிறார். இறைவனது அன்பு பற்றிப் பொதுவாக நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் உருத்திரிந்து நம்மிடையே உள்ளன. இவை இறைவனது கோரிக்கை, தீர்ப்பு ஆகியவற்றைப் புறக்கணிக்கின்றன. இவற்றைத் திருத்த ஒபதியாவின் செய்தி அவசியமாகின்றது.

மேலும் மனிதர்களோடு தனிநபர் என்ற அளவிலேயே இறைவன் உறவு கொள்கிறார் என்ற எண்ணப்போக்கு இக்காலத்தில் நிலவுகிறது. இதைச் சரி செய்யும் முறையில் ஒபதியாவின் செய்தி அமைந்திருக்கிறது. ஏனெனில் அது சமூகம், இனம் நாடுகள் பற்றியதாகும். மறைமுகமாகவே இறைவன் வரலாற்றில் செயலாற்றுகிறார். ஒரு நாடு, அது எவ்வளவு பலமுள்ளதாயினும், பாதுகாப்புடையதாயினும், இறைவனது தீர்ப்பிலிருந்து தப்ப முடியாது. பிறநாடுகளைக் கருவியாகக் கொண்டே, இறைவன் முறைமைக் கைம்மாறு நியதியைச் செயல்படுத்துகிறார். நாம் இன்று ஒபதியாவின் செய்தியை இவ்வாறு எடுத்துக் கூறலாம். ஆனால் ஒபதியா இவ்வாறு கருத்தியலாக, ஆள் தன்மையற்ற முறையில் சிந்திக்கவில்லை. அவர் நாடுகளின் வீழ்ச்சியிலும் எழுச்சியிலும் உயிருள்ள இறைவனது கரத்தைக் கண்டார். வரலாற்றில் செயலாற்றும் ''எல்லா உலகங்களின் நீதிபதியின்'' நோக்கம், தூய்மைப் படுத்தப்பட்ட எஞ்சியோரை விடுவிப்பது மட்டுமன்று, எல்லா நாடுகளின் மேலும் தமது அரசை நிறுவுவதும் ஆகும். ''அரசாட்சி ஆண்டவருக்கே உரித்தாகும்'' (வச 21).

**ஒபிரா** (OPHRAH - இளம் கலைமான்) - ஆள்

இவர் மெயொனத்தாயின் மகன். இவர் கெனாசு, ஒதினியேல் மூலமாக யூதா வழித்தோன்றலானார் (1 நாள் 4:14).

**ஒபிரா** (OPHRAH - இளம் கலைமான்) இடம்

1. பென்யாமினுக்குக் கொடுக்கப்பட்ட நகர்களில் இதுவும் ஒன்று. லெபனோனிலிருந்து மிகிமாசுக்கோ எரிகோவுக்கோ போகும் பாதையில் உள்ளது (யோசு 18:23; 1 சாமு 13:17). இந்த நகர் எருசலேமுக்கு வடமேற்கில் உள்ள மலைநாட்டில் உள்ளது.

2 நாள் 13:19-இல் வரும் எபரோனும், 2 சாமு 13:23; யோவா 11:54-இல் வரும் எப்பிராயிமும், 1 மக் 11:34-இல் வரும் அபேய்ரமாவும் இவ்வூராக இருக்கலாம். பெத்தேலைப்போல இதுவும் தொடக்கத்திலேயே கானானியர்களிடம் இழந்து போகப்பட்டிருக்க வேண்டும். இதைப்பிறகு எப்பிராயிமியர்கள் கைப்பற்றித் தங்களுடையதாக உரிமை கொண்டாடியிருக்க வேண்டும் (காண்க. நீதி 4:5; 1 அர 12:29). பெத்தேலுக்கு வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள நவீன எத்-தையீபே இவ்வூராக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. மனாசே வம்சத்தில் அபியேசர் குலத்திற்குக் கொடுக்கப்பட்ட இந்நகர் கிதயோனின் சொந்த ஊர் (நீதி 6:11; 9:5). இது இஸ்ரயேல் மக்கள் குடியேறுமுன்னே ஒரு திருத்தலமாக இருந்திருக்க வேண்டும். கிதயோன் இவ்விடத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். அதில் ''ஆண்டவர் சமாதானம்'' என்று பொறித்து வைத்தார் (6:24). இது நீதிபதிகள் நூல் எழுதப்பட்டபோதும் இருந்தது. கிதயோன் இங்கே ஒரு எபோதையும் கட்டினார் (8:27). இதை இஸ்ராயேலர் வழிபட ஆரம்பித்தனர். அவருடைய மைந்தர்களில் ஒருவன் தவிர மற்ற யாவரும் அதே ஊரில் அபிமெலக்கால் கொல்லப்பட்டனர் (9:5). இவ்விடம் மோரே, தாபோர், இசிரியேல் பள்ளத்தாக்கு ஆகியவை சுற்றியுள்ள, ஒருவேளை இக்கால அப்லூயேவில் இருந்திருக்கலாம்.

**ஒபினி** (OPHNI)

இது பென்யாமினுக்குக் கொடுக்கப்பட்ட நகர் (யோசு 8:24). இந்த இடம் எங்குள்ளது

என்று தெரியாவிட்டாலும் இது கெபாவுக்கு அருகில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருப் பதால் வடக்கு மத்திய மாகாணத்தில் ஒபினி இருந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. இந்த இடம் பெத்தேலுக்கு வடவடமேற்கில் 5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு வடக் கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்கால இப்னாவோடு அடையாளம் காட்டப்படுகி றது. மேலும் இது எருசலேம்-செக்கேம் நெடுஞ்சாலையும் சாரோன் சமவெளியிலி ருந்து பெத்தேலுக்குச் செல்லும் பாதையும் சந்திக்கிற இடத்துக்கருகில் உள்ளது.

யோசிப்பஸ் இதைக் கோப்னா என்ற ழைக்கிறார். யூதேய மாகாணத்தின் தலைநகர மாகவும், முக்கியத்துவத்தில் எருசலே முக்கு மட்டும் அடுத்ததாகவும் இருந்ததாக அவர் கூறுகிறார்.

## ஒப்படைக்கப்பட்ட பொருள் (DEPOSIT)

ஒருபொருளை மற்றவர் கண்காணிப்பதற் காகத் தருவது. இது பத்திரப்படுத்துவதற் காகவோ (ஏச 10:28) கடனுக்கு அடகுப் பொரு ளாகவோ தரப்படுவது. ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பற்றிய விதிமுறைகள் பழைய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளன (யாத் 22:7-13). ஒப்படைக்கப்பட்ட பொருளுக்கேற்ப இவை பாகுபடுத்தப்படுகின்றன. இவை பணமாகவோ பொருளாகவோ விலங்குக ளாகவோ இருக்கலாம். ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் ஆணை, பாவக்காணிக்கை ஆகியவை உள்ளடங்குகின்றன (லேவி 6:2-4). ஒப்படைக்கப்பட்ட பொருள் கருவூலத் தில் சேர்த்து வைக்கப்படலாம் (2 மக் 3:10-15). நற்செய்தி சீடர்களிடம் சிறப்பான முறை யில் ஒப்படைக்கப்பட்டதாகும் (1 திமோ 6:20; 2 திமோ 1:12.24)

## ஒப்பனைப் பூச்சுக்கள் (COSMETICS)

விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள அலங் காரப் பூச்சுக்கள் எண்ணெயையும், வாச னைப் பொருட்களையும் கண்மையையும் கொண்டிருந்தன.

1. எண்ணெய், வாசனைத் தைலம்:- விவி லியத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட அலங்காரப் பூச்சு எண்ணெய் ஆகும். இது பெரும்பாலும் வாசனைப்படுத்தப்பட்டிருக் கும். மேற்காசியாவின் வறண்ட வெப்ப மான காலநிலையில் தோலும் முடியும் உலர்ந்து காய்ந்து போகாமலிருக்க எண்ணெ யும் உடல் நாற்றத்தைக் குறைக்க வாசனைப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டன.

2. கண்மை:- கண்களைச் சுற்றி அழகுக்காகப் பூசப்படும் கருப்பு நிறமான ஒரு பசை. இஸ்ராயேலில் கெட்ட நடத்தையுள்ள பெண்கள் தான் இதைப் பயன்படுத்தினர்.

3. மருதோன்றி:- இது இன்றும் மேற்காசி யாவில் கைகளுக்கும், கால்களுக்கும், நகங்க ளுக்கும், முடிக்கும் சிவந்த மஞ்சள் நிறம் அளிக்கும் பொருளாகவும் வாசனைப் பொருளாகவும் பூசப்படுகிறது. இது ஒரு ஒப்பனைப் பூச்சு என்று விவிலியத்தில் தனி யாகச் சொல்லப்படவில்லை. உ.ச. 1:14; 9:13 வாசனை மிகுந்த மருதோன்றி மலர்களைப் பற்றிச் சொல்கின்றது. வாசனைப்பொருள் தயாரிக்க இச்செடியும் பயன்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தலைக்குப் பூசப்படும் ஒரு சாயம் என்று 7:5-இல் உள்ளதாகச் சிலர் சொல்கின்றார்கள். இது ஆச்சரியத்திற்குரி யது.

4. ஒப்பனைப் பூச்சுத் தட்டுகள்:- ஏறக் குறைய கி.மு. 800-600 வரை சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட இந்தப் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இவை 4 அங்குலம் விட்டமும் தட்டையான அடிப்பாகமும் ஒரு சிறிய வட்டமான குழியும், இதைச் சுற்றி அலங்கரிக்கப்பட்ட தட்டையான பரந்த ஓர மும் பெற்றிருந்தன. இவை முகத்திற்கு வண் ணங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன.

5. எகிப்து, பாபிலோனியாவில் இருந்த அழகுப் பூச்சுக்கள்:- முகப்பூச்சானது எகிப்தி லும் பாபிலோனியாவிலும் பயன்படுத்தப் பட்டது. எகிப்தியக் கல்லறைகள் நிறைய அழகுப் பூச்சுச் சாதனங்களைக் காட்டுகின் றன; எண்ணெய்ச் சாடிகள், கண்மைக் குச்சி கள், உலோகக் கைப்பிடியுள்ள கண்ணாடி கள்.

6. யூதர்கள் அழகுப் பூச்சுகள்:- முகம் (இதழில்) பூசும் செவ்வண்ணப்பசை, வாச னைச் சுண்ணப் பொடி, .முடி சாயம் ஆகி யவை யூதர்களால் பயன்படுத்தப்பட்டன. ஆனால் விவிலியத்தில் குறிப்பிடப்பட வில்லை. ஓய்வு நாளில் முகத்தில் பூசும் செவ்வண்ணப்பசை பயன்படுத்துவதை மிஷ்னா தடுத்தது. பாஸ்கா திருவிழாவிற்கு முன்னால் மாவினால் செய்யப்பட்ட சுண் ணத்தை வீட்டிலிருந்து எடுத்துவிட வேண் டும். மாமன்னன் ஏரோது முடிக்குச் சாயம் போட்டான் என்று சொல்லப்படுகிறது.

**ஒப்பீர்** (OPHIR - குன்று) - ஆள்

நாடுகளின் பட்டியலின்படி சேமின் சந்ததி யில் அருபகசாது, செலாகு, ஏபேர், யொக்கி தான் மரபு வழியில் வந்தவர். யொக்கிதா னின் மகன். செவிலாவின் சகோதரர். ஒப்பீர் பகுதியின் இனப்பெயர் முதியவராக இருக்க லாம் (ஆதி 10:29; 1 நாள் 1:23).

**ஒப்பீர்** (OPHIR - குன்று) - இடம்

இந்த இடமானது தங்க உற்பத்திக்கும் ஆலமுக் வாசனை மரங்களுக்கும் பெயர் போனது. தாவீது ஆலயத்திற்காக விட்டுச் சென்ற மூவாயிரம் தாலந்துப் பசும்பொன் இங்கிருந்து கிடைத்ததாகக் கூறப்படுகிறது (1 நாள் 29:4). சாலமோனின் கடற்படை ஒப்பீருக்குப் போய் அங்கிருந்து நானூற்று ஐம்பது தாலந்துப் பொன்னை ஏற்றிச் சால மோனிடம் கொண்டு வந்தது (2 நாள் 8:18). மேலும் பொன்னும், வாசனை மரங்களும், இரத்தினங்களும் இங்கிருந்து கொணரப்பட் டன (2 நாள் 9:10). யோசபாத்து அரசன் பொன் திரட்ட ஒப்பீருக்குப் போகக் கப்பல் கட்டினார். ஆனால் அவைகள் எசியோன் கெபேரில் உடைந்து போயின (1 அர 22:48). மேலும் தேல் காசிலேயில் கண்டுபிடிக்கப் பட்ட சாசனம் இந்நகரைப் பற்றிக் கூறுகி றது. ஒப்பீர் நாட்டுத் தங்கத்தை விவிலிய ஆசிரியர்கள் பாடல்களிலும், இறைவாக்குப் பகுதியிலும் புகழ்ந்துள்ளனர் (யோபு 22:24; 28:16; சங் 45:9; ஏச 13:12).

இந்த ஒப்பீர் இருந்ததாக இந்தியா, ஆப்பி ரிக்கா, அராபியா போன்ற பல நாடுகள் அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் கருத்தொற்றுமையில்லை 1 அர 10:22; 2 நாள் 9:21-இல் குறிக்கப்படும் பொருட்கள், ஒப் பீர் ஆப்பிரிக்காவில் இருந்திருக்கலாம் என்ற கருத்துக்கு ஆதரவாயுள்ளன.

**ஒப்புரவு** (RECONCILIATION)

I. பிரிந்த இருவர் ஒன்று கூடுவது. விவிலி யத்திலே இந்தக் கருத்து பல இடங்களில் வந்தாலும், மனிதன் இறைவனோடு ஒப்பு ரவு கொள்வதே முக்கியமான செயல். மனி தன் இறைவனை விட்டுப் பிரிந்து சென் றான். ஆனால் கடவுள் மகனையும் உலகிற்கு அனுப்பினார். இறைவனோடு நாம் கொள் ளும் ஒப்புரவு நம்மை நம்மோடும் நம் சகோதரரோடும் உலகோடும் ஒப்புரவு கொள்ளத் தூண்டுகிறது.

1. பழைய ஏற்பாடு:- பழைய ஏற்பாட் டிலே பாவமானது உடன்படிக்கைக் கடமை களை மீறுவதாகும். இது குறியைத் தவற விடுதல், சரியான பாதையை விட்டு விலகு தல், எனப் பலவாறு பேசப்படுகிறது. சில சமயம் மனிதன் இறைவனுக்கு எதிராகவும் எழுகிறான். எனவே தெரியாமல் செய்யும் பாவத்திற்குப் பரிகாரமாகப் பலிகளும் (லேவி 4:1-5; 16:17-1) அகந்தையினால் செய் யும் பாவத்திற்குக் கொலைத் தண்டனையும் (எண் 15:30-31) நடத்தப்படவேண்டும். ஆனால் மனிதனுடைய பாவத்திற்காக அவன் மனம் வருந்த வேண்டியது கடமை (சங் 51:செ 18).

2. புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாட்டிலே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை கதல்லலோவாகும். மனிதன் இறைவன் உறவு புதுப்பிக்கப்படுகிறது. கடவுள் மனித னோடு ஒப்புரவு கொள்ள விரும்பினாலும் மனிதன் அவரை விட்டு விலகியே செல்கி றான். நம்பிக்கையற்றவனாய்க் கடவுள் இல் லாதவனாய் இருக்கிறான் (எபே 2:12). மேலும் பாவம் மனிதனை இறைவனிட மிருந்து பிரிக்கிறது. எனவே ஒப்புரவு பாவத் திற்குப் பரிகாரம் செய்வதால் ஏற்படுகிறது. இறைவனோடு ஒப்புரவு கொள்வதே முதன்

மையானது. அதன் பிறகுதான் சகோதரரோடும் (மத் 5:24; 1 கொரி 7:11) யூதர், புறவினத்தாருடனும் (உரோ 11:7-32; எபே 2:3) ஒப்புரவு கொள்வது அவசியம்.

நான்கு பத்திகள் ஆராயப்பட வேண்டியவை.

அ. உரோ 5:8-11:- இங்கே பிரிவு நிலையானது பகைமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (உரோ 11:28; கொலோ 1:21). ஆனால் இறையன்பு இந்நிலையை மாற்றிச் சமாதானத்தை ஏற்படுத்துகிறது (உரோ 5:8). பாவத்தினால் செயலிழந்த மனிதன் இறைஇரக்கத்தை உணர வேண்டும். பாவத்தை வெறுக்கும் இறைவன், பாவிகளை வெறுப்பதில்லை (உரோ 5:6-8). இறையன்பின் தோற்றமே கிறிஸ்துவும் அவரது பலியுமாகும். இப்பலியானது மனிதனுடைய பாவக்கறைகளைப் போக்கவல்லது. ஒப்புரவு உண்டாக்க வல்லது.

ஆ. கொலோ 1:20-22:- இங்கே ஒப்புரவு விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றுக்கும் அளிக்கப்படுகிறது. மாசு மறு, குறைபாடு இன்றிப் பரிசுத்தராய் ஆக்குகிறது (1:22). கிறிஸ்துவின் இறப்பே இதற்குக் காரணம்.

2 கொரி 5:14-21:- கிறிஸ்துவுக்குள் ஒருவன் வாழ்ந்தால் அவன் புதியதொரு படைப்பாகிறான். அவர் நமக்காகப் பாவ உருவெடுத்து அதன் விளைவாகச் சாவையும் ஏற்றார். இது மனிதனுக்குப் புதிய வாய்ப்பை அளித்தது. இந்த ஒப்புரவுப் பணி சீடர்களால் தொடரப்படுகிறது.

ஈ. எபே 2:12-17:- கிறிஸ்து யூத இனத்தாரையும் புறவினத்தாரையும் ஒன்றாய் இணைத்தார். சிலுவையினால் பகையை ஒழித்து, இவ்விரு இனத்தாரையும் ஒப்புரவாக்கினார்.

II பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே இறைவன் மனிதருக்குத் தமது மன்னிப்பு வழங்க ஒய்ந்ததில்லை; இவ்வாறு மக்களைத் தம்மோடு ஒப்புரவு செய்துகொள்வதை முன் குறிப்பாக உணர்த்தலானார்; அவர் தம்மை இரக்கமும் தயவும் உள்ள இறைவனாகவும் (யாத் 34:6) தமது கடுஞ் சினத்தின் வெப்பத்தைத் தாமாகவே தணிப்பவராகவும் (சங் 84:4; 102: 8-12) தம் மக்களுக்குச் சமாதானம் கூறுகிறவராகவும் (சங் 84:9) வெளிப்படுத்துகிறார். இஸ்ராயேலர் தம் பாவங்களால் சீனாய் உடன்படிக்கையைக் கைவிட்டனர். இந்நிலையிலும் இறைவன் வாழா இருப்பதை விடுத்து, புதிய நித்திய உடன்படிக்கைக்கான முயற்சியில் முந்திக் கொள்வார் (எரே 31:31; எச 16:60-63). இங்கெல்லாம் ஒப்புரவு என்பதற்கான சொல் பயன்படாவிடினும், உண்மையில் யாவே தமது நம்பிக்கையிழந்த துணைவியோடும் (ஓசே 2:16-22), அடங்காத பிள்ளைகளோடும் (எச 18:31 தொ) ஒப்புரவு செய்து கொள்ள முன்வருகிறார். இன்னும் பல்வேறு குற்றங்குறைகளிலிருந்து சுத்திகரிப்புப் பெறுவதற்கென்று மோசேயின் சடங்கு முறை கற்பித்த பரிகாரச்சடங்குகள் எல்லாம், இறுதியாக மனிதன் இறைவனோடு ஒப்புரவு காண்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன; எனினும் பாவங்களுக்கு முழுமையான மன்னிப்புப் பெறும் காலம் இன்னும் வரவில்லை; எனவே உண்மை இறைவனிடம் நம்பிக்கை வைத்த ஊழியர்கள் நல்லதொரு காலத்தை எதிர்பார்த்தவர்களாய் இருந்தனர் (2 மக் 1:5; 7:33; 8:29).

கடவுளையும் மனிதரையும் இணைப்பவரான (1 திமோ 2:5) இயேசுகிறிஸ்து குறைபாடற்றதும் நிலையானதுமான ஒப்புரவு செய்துவிட்டார். கிறிஸ்து செய்துமுடித்த மீட்பினில் ஒப்புரவாக்குதல் ஒரு கூறுதான். எனினும் பவுலில் கண்டுள்ள ஒரு சில வாக்கியங்களின் ஒளியில் (உரோ 5:10 தொ; 2 கொரி 5:18 தொ; எபே 2:16 தொ; கொலோ 1:20 தொ) மீட்பின் மறையுண்மையை ஒப்புரவு என்ற இந்தக் குறிப்பிட்ட கோணத்திலிருந்து ஆழ்ந்து சிந்தனை செய்வது சரியே. இவ்வாறு சிந்தனை செய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. கிறிஸ்து வழியாக நாம் இறைவனோடு ஒப்புரவாக்கப் பெறுதல்:-

இறைவனே இதற்குத் தொடக்கம்:- மனிதன் தன் பாவத்தால் புண்படுத்திய படைப்பவரோடு தானாகவே ஒப்புரவுகொள்ள இயலாதவன். இங்கு இறைவனின் செயல் முதன்மையானது, முடிவானது: ''எல்லாம் கடவுள் செயல்தான்; அவரே கிறிஸ்துவின் வழியாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்'' (2 கொரி 5:28). நாம் அவருக்குப் ''பகைவர்களாக'' (உரோ 5:10) இருந்தபோதே, அவர் நம்மை அன்பு செய்தார்; அப்பொழுதுதான் அவர் திருமகன் ''நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்'' (5:8). நமது ஒப்புரவு பற்றிய மறையுண்மை சிலுவை பற்றிய (எபே 2:16) மறையுண்மையோடும், நம்மீது காட்டப்பட்ட ''பேரன்பு'' பற்றிய (எபே 2:4) மறையுண்மையோடும் தொடர்பு கொண்டது.

2. ஒப்புரவாக்கப் பெறுதலின் விளைபயன்கள்:- இறைவன் இனிமேல் மனிதரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிப்பதில்லை (2 கொரி 5:19). இறைவனின் இச்செயல் சட்டத்தைச் சார்ந்த ஒரு சாமானிய போலி நடவடிக்கையன்று; மாறாக, சரியாகச் சொன்னால், அது பவுலின் வாக்குகளில், ''புதியதொரு படைப்பை'' (5:17) ஒத்ததாகும். ஒப்புரவாக்கப் பெறுதல் ஒருவாறான புதுப்பித்தலைக் குறிப்பாக உணர்த்துகிறது. இப்புதுப்பித்தல் பயனடைய விரும்புகிறவர்களிடம் நிறைவுபெறும்; ஒப்புரவாக்கப்படுதல் ஏற்புடையராவதோடும் (உரோ 5:9 தொ) பரிசுத்தராவதோடும் (கொலோ 1:21 தொ) இணைந்திருக்கிறது. நமது தீய நடத்தையால் இதுமட்டும் இறைவனுக்குப் பகைவராய் இருந்தோம் (உரோ 1:30; 8:7); இப்பொழுதோ, நமக்குக் ''கடவுளில் பெருமை கொள்ளக்'' (5:11) கிடைத்துள்ளது; அவர் நம்மை ''மாசுமறுவும் குறைபாடுமின்றிப் பரிசுத்தர்களாய் நிறுத்த'' (கொலோ 1:22) விரும்புகின்றார்; நாம் அனைவரும் ''ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு'' (எபே 2:18) பெற்றுள்ளோம்.

3. ஒப்புரவு செய்தல்பற்றிய திருப்பணி:- இறைவனைப் பொறுத்தமட்டில், மீட்புப் பணி ஏற்கெனவே முழுமையாக நிறைவேறி விட்டது; ஆயினும் மற்றொரு வகையில் இப்பணி கிறிஸ்து திரும்பி வருமட்டும் தொடர்ந்து நடைபெறுகின்றது; எனவே பவுல் அப்போஸ்தலத்துவப் பணியை, ''ஒப்புரவு செய்யும் திருப்பணி'' (2 கொரி 5:18) எனத் தெளிவுபடுத்தக் கூடுமாயுள்ளது. ''கிறிஸ்துவின் தூதுவர்கள்'' என்ற அளவில் அப்போஸ்தலர்கள், ''ஒப்புரவுச் செய்தியை'' அறிவிப்பவர்களாவர் (5:19 தொ). இந்த ஒப்புரவுச் செய்தியைப் பண்டைய மூலப் படிவம் ஒன்று இந்த இடத்தில் ''ஒப்புரவு நற்செய்தி'' என்றுகூடக் குறிப்பிடுகின்றது; இதுவே அப்போஸ்தலச் செய்தியின் போக்குமாகும் (எபே 6:15; ''சமாதான நற்செய்தி''). எனவே நற்செய்திப் பணியாளர்கள் தங்களது திருப்பணியில், பவுலை மாதிரியாகப் பின்பற்றி, தங்களைப் பொறுத்த அளவில் தாங்கள் அறிவிக்கும் சமாதானத்தைத் தோற்றுவிப்பவர்களாக இருக்க முயற்சி செய்கிறார்கள் (2 கொரி 6:4-13).

4. இறைவனின் கொடையை வரவேற்றல்:- முதன்மையானவராகவும் முக்கியமானவராகவும் ஒப்புரவுசெய்கின்றவர் இறைவன்தான் என்பதால், இங்கு மனிதன் முற்றிலும் செயல்பட முடியாத ஒரு நிலையில் உள்ளான் என்ற முடிவுக்கு வரலாகாது: இறைவனின் கொடையை அவன் பெற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசத்தால் இக் கொடையை விரும்பி அதைப் பெற்றுக் கொள்ள உடன்படுகிறவர்களுக்குத்தான், இறைவனின் முயற்சி பயன் அளித்ததாகும். எனவேதான், ''கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகிறோம். கடவுளோடு ஒப்புரவாகுங்கள்'' (2 கொரி 5:20) எனப் பவுல் வற்புறுத்தி அழைப்பு விடுக்கின்றார்.

5. அனைத்தும் ஒப்புரவாக்கப் பெறுதல்:-

அ. ஒப்புரவாக்கப் பெற்ற படைப்பு:- உலகம் ஒப்புரவாக்கப் பெறுதலைக் குறித்துப் பேசுகையில் (2 கொரி 5:19; உரோ 11:15) பவுல் இத்கருவாய் மட்டும் பாவ மனித

இனத்தைக் கருத்தில் கொண்டிருக்கிறார்; எனினும் பருப்பொருள் உலகமே மனித இனத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதையும் அது மனித இனத்தின் விடுதலையில் பங்கு கொள்ள உள்ளது என்பதையும் பவுல் புறக்கணித்திடவில்லை (உரோ 8:19-22). சிறைக்கூட மடல்களில், கொலோசேயருக்கும் எபேசியருக்கும் எழுதிய திருமுகங்களில், அப்போஸ்தலருடைய பார்வை விரிந்து, ''விண்ணிலும் மண்ணிலும்'' (கொலோ 1:20) உள்ள படைப்பனைத்தையும் உள்ளடக்குகின்றது. கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தால் இறைவனோடு ஒப்புரவாக்கப்பெற்ற மனிதர் விண்ணக ஆவிகளோடும் ஒப்புரவாகின்றனர்; சட்டத்தின் ஆட்சி எடுபடாதிருந்த காலத்தில் (கொலோ 2:15) அதிகாரம் தாங்கிய தேவ தூதர்கள் நம்மீது கொள்ளக் கூடுமாயிருந்த பகைமை உணர்ச்சி இப்பொழுது தீர்ந்தது.

ஆ. யூத இனத்தாரும் புற இனத்தாரும் ஒப்புரவாக்கப் பெறுதல்:- எபே 2:11-22-இல் பவுலின் போதனை உச்ச நிலையை அடைகிறது. இங்கு ''நம் சமாதானம்'' (2, 14) எனப்படும் கிறிஸ்துவின் செயலும், சிறப்பாக அவர் முந்தியகாலத்துப் புறவினத்தாருக்குப் பெற்றுத் தந்துள்ள வியத்தகு நலன்களும் முழுமையாக விளக்கம் கண்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்களுள் இப்பொழுது யூத இனத்தார் ஒன்றாய் இணைக்கப் பெற்றதுபோலப் புறவினத்தாரும் ஒன்றாய் இணைக்கப் பெற்றுள்ளனர்; பிரிவினையும் பகைமையும் கொண்டிருந்த காலம் ஒய்ந்தது; மக்கள் அனைவரும் கிறிஸ்துவில் ஒரே உடலாகவும் (2:16) ஒரே புனித ஆலயமாகவும் (2:21) உருவாகி வருகின்றனர். புறவினத்தாரின் அப்போஸ்தலர் அவர்களுக்கு இந்த மறைபொருளை அறிக்கையிட்டு, அதனால் பெருமைப்படுத்துவதற்குரிய வகையில் தாம் பட்ட வேதனைகளை அவர் பொருட்படுத்துவதில்லை (எபே 3:1-13).

பவுல் ஒப்புரவுபற்றி இறை ஏவுதலால் சிந்தனை செய்த மறையியலாரும், ஒப்புரவுக்காகச் சோர்வின்றி உழைத்த திருப்பணியாளரும் ஆவார்; ஆனால் இயேசுவே தனது ''ஊனுடலில்'' (கொலோ 1:22) தம் பலியினால் ஒப்புரவை ஆக்கியவர் ஆவார்; இயேசுவே முதன் முறையாக இந்த ஒப்புரவுபற்றிய மிக ஆழ்ந்த உடனடித் தேவைகளை வலியுறுத்தினார்; இறைவனால் ஒப்புரவாக்கப்பெற்ற பாவி முதன்முதலில் தன் சகோதரனோடு ஒப்புரவு (சமாதானம்) செய்து கொள்ளாவிடில் (மத் 5:23 தொ) இறைவனுக்கு உகந்த வழிபாடு செலுத்த இயலாது.

**ஒப்பேல்** (OPHEL - குன்று அல்லது மேடு)

இப்பெயரானது பழைய எருசலேமின் ஒரு பகுதிக்குக் கொடுக்கப்பட்டது. கிதரோன், தீரோபேயோன் பள்ளத்தாக்குகளுக்கிடையிலுள்ள மலை முகடு. கடல் மட்டத்திலிருந்து 600 மீ (2000 அடி) உயரமுள்ளது. தாவீதால் தனது தலைநகராக நன்கு பாதுகாக்கப்பட்டது (காண்க 2 சாமு 5:7.9; 1 நாள் 11:5.7). இங்கே அமைக்கப்பட்ட அரண்களுக்கு யூதாவின் பிற்கால அரசர்கள் யோத்தாம் (2 நாள். 27:3) மனாசே (33:14) முக்கியத்துவம் கொடுத்தனர் (2 நாள் 27:3; 33:14). அடிமைத்தனத்திற்குப்பின் ஆலய ஊழியர்கள் இந்த அரண் அழிவுகளைப் புதுப்பித்து அங்குத் தங்கினர் (நெக 3:25-27; 11:21). இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி இந்த இடமானது தாவீதின் நகரம் அமைந்திருக்கும் முக்கோணமலையில் வடகிழக்குப் பகுதியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. யோசிப்பசு இந்த இடம் ஆண்டவனின் ஆலயத்திற்கு அருகிலிருந்ததாகக் கூறுகிறார்.

பழைய ஏற்பாடு சமாரியாவிலுள்ள ஓர் ஒப்பேலைக் குறிக்கிறது (2 அர 5:24). மற்ற இடங்களில் ஒரு குன்றைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது (எச 32:14; மீக் 4:8).

**ஓமார்** (OMAR - பேச்சுத்திறனுடைய, சொல், பாட்டு, புகழ்ச்சி)

இவர் ஓர் ஏதோம் குலத்தலைவர். இவர் தந்தையின் பெயர் எலிப்பாக (ஆதி 36:11.15; 1 நாள் 1:36).

**ஓமிரி** (OMRI - யாவேயை வழிபடுபவன்)

*1. அரசன்:-* கி.மு.876 முதல் 869 வரை இவர் இஸ்ராயேலின் அரசனாக இருந்தார். இவர் சிமிரி மன்னனுக்குப் பின் அரசாண்டவர். மேலும் இவர் ஓமிரி அரச வம்சத்தை நிறுவினார். ஓமிரியின் ஆட்சிக் காலம் பற்றி விவிலியத்தில் முரண்பாடான, குழப்ப மிகுந்த குறிப்புகள் தரப்பட்டுள்ளன (1 அர 16:15.21-22.23.29).

ஏலா மன்னனை அவரது படைத்தலைவர் சிமிரி கொன்று அரசனானபோது நாட்டிலே குழப்பம் ஏற்பட்டது. இந்த நேரத்திலே இஸ்ராயேலர் எல்லோரும் கூடி அப்பொழுது பாளையத்தில் இஸ்ராயேலின் படைத் தலைவனாயிருந்த ஓமிரியை அரசனாக்கினர். அப்பொழுது ஓமிரி கிபத்தோனை விட்டுப் புறப்பட்டு இஸ்ராயேல் படையோடு வந்து திரிசாவை வளைத்து முற்றுகையிட்டார். நகர் பிடிபடப்போகிறது எனச் சிமிரி அறிந்து அரண்மனைக்குள் புகுந்து அதைத் தீக்கிரையாக்கினான். தானும் தீக்குளித்தான். அப்போது உள்நாட்டுப் போர் மூண்டது. இஸ்ராயேல் மக்கள் இருவகுப்பாய்ப் பிரிந்து ஒரு சாரார் கீனாத்தின் மகன் திபினியை அரசனாக்கி அவனைப் பின்பற்றிச் சென்றனர். மறுசாரார் ஓமிரியைப் பின்பற்றிச் சென்றனர் (1 அர 16:15-21). பின்னர் திபினி இறக்கவே ஓமிரி இஸ்ராயேலுக்கு அரசனானார். இருவருக்கும் உள்நாட்டுப் போர் 4 ஆண்டுகளுக்கு நடந்து. திபினியின் மரணத்தோடு முடிந்தது (872).

ஓமிரியின் ஆட்சிக்காலம்பற்றிக் குழப்பமான, எதிர்மாறான குறிப்புக்கள் உள்ளன (1 அர 16:15.21-22.23.29). யூதாவின் அரசனான ஆசாவின் 31-ஆவது ஆண்டு இவர் ஆட்சி தொடங்கினால் (16:23), மேலும் இவருக்கு அடுத்து இவர் மகன் ஆகாபு ஆசாவின் 38-ஆவது ஆண்டு ஆட்சிக்கு வந்தால், இவர் 7 ஆண்டுகள்தான் ஆட்சி செய்தார், சொல்லியிருக்கிறபடி 12 ஆண்டுகள் (16:23) அல்ல என்பது தெளிவு. ஆனால் 7 நாட்களுக்கு மட்டும் ஆண்ட சிமிரி ஆசாவின் 27-ஆவது ஆண்டு ஆட்சிக்கு வந்தார் (16:15). இது இவரது ஆட்சி, ஆசாவின் 27-ஆவது ஆண்டிலிருந்து 38-ஆவது ஆண்டு வரை அதாவது 12 ஆண்டுகள் நீடித்தது என்றுசுட்ட வல்லது. இவர் அரசனானது பற்றிய சூழ்நிலைகளின் விளைவாகும் இந்தக் குழப்பம். உள்நாட்டுப் போர் நடந்த 4 ஆண்டுகளையும் சேர்த்ததால் இவரது ஆட்சி 12 ஆண்டுகள் நீடித்தது எனலாம்.

மேலும் திபினியின் தந்தையின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கும்போது ஓமிரியின் தந்தை பெயர் கொடுக்கப்படவில்லை. இது இவர், சிமிரியைப்போல் ஓர் அந்நியன், தனது சொந்த ஆற்றலாலும் முயற்சியாலும், பதவிக்கு வந்தவர் என்பதைச் சுட்டுகிறது.

ஓமிரி மன்னன் மிகுந்த திறமையுடனும் பலத்துடனும் ஆண்டு வந்தார். இவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கினார். எனவே இவர் இஸ்ராயேலின் மிகச் சிறந்த மன்னர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். ஆனால் அரசர்கள் நூல் அவரைப் புகழ்ந்து பேசவில்லை. ஏனெனில் விவிலிய ஆசிரியர் அரச சாதனையை நோக்காமல் மதக் கோட்பாட்டையும், மதத்திற்கு அவர் செய்த சேவையையுமே நோக்கினார். எனவே ஓமிரி ஆண்டவர் திருமுன்பாவம் புரிந்து தனக்கு முன் இருந்த எல்லோரையும் விட மிகவும் இழிவான முறையில் நடந்து வந்தார்' என்று அரசர்கள் நூல் ஆசிரியர் எழுதுகின்றார் (1 அர 16:25).

ஓமிரியின் ஆட்சிக் காலத்திலே யூதாவும், இஸ்ராயேலும் நட்புறவோடு இருந்தன. இவ்வரசுகளின் அரச திருமணம் இவ்வுறவை மேலும் வலுப்படுத்தியது. ஓமிரி மோவாபியர்களை வென்று அவர்கள் தனக்குக் கப்பம் செலுத்தச் செய்தார் (2 அர 3:4). தாவீது, சாலமோன் மன்னர்களைப் போல ஓமிரியும் பெனிக்கிய நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். தம் மூத்த மகன் ஆகாபுக்கு, சீதோனியரின் அரசன் எத்துபாகாலின் மகள் ஈசபேலை மணமுடித்து வைத்தார் (1 அர 16:31).

இந்த உடன்படிக்கையும் மணமுடிப்பும் இஸ்ராயேலுக்கு வாணிப வளர்ச்சியையும், படைபலத்தையும் பெருக்கினாலும், இறுதியில் ஒமிரி வம்சம் அழிவுறுதலுக்குக் காரணமாக அமைந்தது. மேலும் இது பெரும்பாலான ஏழை மக்களுக்கு எதிராய்ச் செல்வம் கொழிக்கும் வாணிப வர்க்கத்தையும் உருவாக்கியது.

இதற்கெல்லாம் மேலாக ஒமிரி கி.மு. 870-இல் தம்முடைய நகரைத் திரிசாவிலிருந்து சமாரியாவிற்கு மாற்றினார். இப்புதிய தலைநகரின் பெயரானது வடக்கு அரசை மட்டுமல்லாமல், பிற்காலத்தில் அசீரிய மாகாணத்தையும் குறித்தது (1 அர 16:23). இறைவாக்கினர் ஒசேயாவும் இப்பெயரைத் தம்சொந்த நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தினார் (ஒசே 10:5.7).

ஒமிரி மன்னனின் புகழ் அவர் இறந்து பல ஆண்டுவரை நிலைத்திருந்தது. அவர் இறந்த நூறு ஆண்டுகளுக்குப் பின்னும், சமாரியா, ''ஒமிரியின் வீடு'' என்றும், இஸ்ராயேல் நாடு ''ஒமிரியின் நாடு'' என்றும் அசீரிய ஏடுகளில் குறிக்கப்படுகிறது. ஒமிரி அரச மரபை இரத்தக் களரியில் அழித்த ஏகூ கூட ''ஒமிரியின் மகன்'' என்றழைக்கப்படுகிறார். அவரது பெருமையை இறைவாக்கினர் மீக்கா ''ஒமிரியின் கட்டளைகளைச்'' (மீக 6:16) சுட்டுதல் எடுத்துக் காட்டுகிறது.

ஒமிரியை அடுத்து அவர் மகன் ஆகாபு 869-இல் அரசனானார் (1 அரச 16:28).

2. பென்யாமின் குலத்தைச் சார்ந்த இவர் பெக்கேரின் புதல்வராவார். பென்யாமினின் பேரன் (1 நாள் 7:8).

3. யூதாவின் வழியில் தோன்றிய இவர் இமிரியின் மகன். நாடு கடத்தலிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய ஊத்தாயின் தாத்தா (1 நாள் 9:4).

4. மிக்காயேலின் மகன். இவர் தாவீது மன்னன் காலத்தில் இசக்காருக்கு முக்கியத் தலைவராயிருந்தவர் (1 நாள் 27:18).

**ஒமேகா (OMEGA)**

கிரேக்க நெடுங்கணக்கில் கடைசியும் 24-ஆவதுமான எழுத்தாகும். முடிவைக் குறிக்க அடையாளமாகப் பயன்பட்டுள்ளது. ஆனால் அதன் நேர் எதிர் முதல் எழுத்தான ''ஆல்பா'' வோடு இல்லாமல் பயன்படுவதில்லை. இது ஆல்பாவோடு சேர்ந்து ''தொடக்கமும் முடிவும்'' (காண்க. திருவெளி 1:17; 2:8) என்ற பொருளில் இறைவனையும் (1:8; 21:6) கிறிஸ்துவையும் (22:43) குறிக்க உருவகமாகப் பயன்பட்டுள்ளது.

காண்க. ஆல்பா ஒமேகா

**ஒருநாள் பயணம், ஒரு நாள் வழி (DAY'S JOURNEY)**

விவிலியத்தில் ஒரு நாள் பயணம் (எண் 11:3; 1 அர 19:4; யோனா 3:4; லூக் 3:18), மூன்றுநாள் பயணம் (ஆதி 30:3; யாத் 3:18; 5:3; 8:27; எண் 10:33; யோனா 3:3), ஏழு நாள் பயணம் (ஆதி 31:23; 2 அர 3:9) என்று பலவிதநாள் பயணங்கள் பற்றிக் குறிக்கப் பட்டுள்ளன. இதன்படி தூரத்தை நாம் கணக்கிட முடியாது. கடக்கும் தூரம் ஒரு மனிதன் பயணம் செய்யும் இடத்தையும் பயணம் செய்பவரையும் பொருத்தது. பொதுவாக ஒரு நாள் பயணம் என்பது 25 முதல் 40 கி.மீ வரை இருக்கும்.

**ஒரித்தோசியா (ORTHOSIA)**

சீமோன் மக்கபேயு காலத்தில், உரிமையில்லாது பதவியைக் கைப்பற்றிக் கொண்ட நான்காம் அந்தியோக்கு சிதேதேசால் தோற்கடிக்கப்பட்ட துருபோன் இவ்விடத்திற்குள் தான் ஓடினார் (1 மக் 15:37). இது பெனிக்கியாவில் திரிபோலிசுக்கு வடக்கிலுள்ள ஊர். அர்த்-அர்தூசி ஆக இருக்கலாம்.

**ஒரிபா(ORPAH - கழுத்து, அல்லது மேகம்)**

இவள், ரூத் ஆகமத்தில் வரும் கதாபாத்திரங்களுள் ஒருத்தி. மோவாபியர்களான ஒரிபாவும், ரூத்தும் யூதா நாட்டுப் பெத்லகேம் ஊரிலிருந்து மோவாபு நாட்டிற்குச் சென்று குடியேறிய எபிரேயரை மணந்தனர். அவர்கள் கணவர்கள் இறந்தபின், இருவரும் தங்

கள் மாமியார் நகோமியுடன் பெத்திலகேமுக்கு வரவிழைந்தனர். பெத்திலகேமில் அவர்களுக்கு வரும் இன்னல்களைப் பற்றி நகோமி வருந்தி எடுத்துக் கூறியவுடன் ஒரிபா தன் வீடு திரும்பினாள். ஆனால் ரூத் தன் மாமியை விட்டுப் பிரியவில்லை (ரூத் 1:4-14)

**ஒரினான்** (ORNAN)

அரவுனாவின் மற்றொரு பெயர் (நாளாகம நூல்கள்)

**ஒலிவ மரம்** (OLIVE TREE)

இது எப்பொழுதும் பசுமையாய் இருக்கக்கூடிய வகையை சார்ந்தது. உண்ணுவதற்குரிய பழங்களைத் தரும் மரம். மத்தியதரைக் கடல் பகுதிகளில் இதன் முக்கியத்துவத்திற்குப் பழங்கால இலக்கியங்களில் காணப்படும் பல குறிப்புகள் சான்று பகர்கின்றன. இது மருந்தாக, எரிபொருளாக, உணவாக, பொதுவாக வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும், பயன்படுகிறது. விவிலியத்தில் பல்வேறு இடங்களில் இம்மரம், அதன்கட்டை, பழம், எண்ணெய் ஆகியவை பற்றி வரும் குறிப்புகள் இதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன.

ஒட்டு முறையிலே ஒலிவ மரங்கள் வளர்கின்றன. கொஞ்சம் தண்ணீரும் மண்ணைக் கிளறிவிடுவதும் அதன் வளர்ச்சிக்குப் போதுமானது. எனவேதான் இது வறட்சிக் காலத்திலும் மலைப்பாங்கான பகுதிகளிலும் வளர்கின்றது. நூறு ஆண்டுகள் வரை ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் பலனைக் கொடுக்கக் கூடியது. இம்மரத்தின் முதல் எதிரி வெட்டுக்கிளிகளாகும் (ஆமோ 4:9). பொதுவாக இம்மரங்கள் பாலஸ்தீனத்தின் மத்தியப் பகுதியிலும், கெபிரோன், பெத்திலகேம் ஆகியவற்றைச் சுற்றிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

விவிலிய காலத்திலே ஒலிவ எண்ணெய் தயாரித்தல் பெரும் தொழிலாக இருந்தது. ஒலிவக் கொட்டைகளைச் செக்கில் இட்டு ஆட்டுவார்கள் (மீக் 6:15). பாலஸ்தீனத்தில் காணப்படும் செக்கு அமைப்புகள் இந்த உண்மையை நிரூபிக்கின்றன. மெசபொத்தாமியாவின் கலையில் ஒலிவ மரமானது வாழ்வின் மரமாகச் சித்தரிக்கப்பட்டது. பெரும் வெள்ளத்தின்போது புறாகொண்டுவந்த ஒலிவக்கிளையானது அமைதிக்கும் நட்புக்கும் அடையாளமாக அமைந்தது (ஆதி 8:11). யூதர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்தபோது அவர்கள் பெற்ற வளங்களுள் ஒலிவமரமும் ஒன்றாக இருந்தது. ஆனால் நாடு இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாதபோது மோசேயால் அளிக்கப்பட்ட சாபங்களிலும் காணப்படுகிறது (24:40; ஏச 17:6).

விவிலியத்தில், ஒலிவ மரங்கள் அனேக இடங்களில் உருவகமாக எடுத்தாளப்பட்டுள்ளன. யோவாத்தாமின் கதையிலே ஒலிவ மரங்களே முதன் முதலாக மரங்களில் அரசனாக இருக்கக் கேட்கப்பட்டன (நீதி 9:8-9). தீயவனின் மரணத்தை வசந்தகாலத்தில் ஒலிவப்பூக்கள் உதிர்வதற்கு ஒப்பிடுகிறார் எலிப்பாசு (யோபு 9:8-9).

குழந்தைகளால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமானது நன்கு தளிர்விடும் ஒலிவ மரத்துடன் ஒப்பிடப்பட்டது (சங் 128:3). இஸ்ராயேலின் கடந்தகால மற்றும் எதிர்கால ஆன்மீக வாழ்க்கை செழித்துச் சிறந்து கனிகளால் நிறைந்த ஒலிவமரத்திற்கு ஒப்பிடப்படுகின்றன (எரே 11:16; ஒசே 14:6). செக்கரியா காட்சியிலே யோசுவாவும் செருபாபேலும் இரண்டு ஒலிவ மரங்களுடன் ஒப்பிடப்படுகின்றனர் (செக் 4:3. 11:12).

ஒலிவக்கிளை ஒட்டுவைக்கப்படுதல் பற்றிய பவுலின் உருவகம் புற இனக் கிறிஸ்தவர்கள் பற்றிய அவரது நம்பிக்கையை ஆற்றலோடு எடுத்துக் கூறுகிறது (உரோ 11:17-24).

**ஒலிவமலை** (MOUNT OF OLIVES, OLIVET)

இது எருசலேமின் கிழக்குப் பகுதியில் கிதரோன் பள்ளத்தாக்கிற்கு அப்பால் உள்ள மலை.

*1. விவரிப்பு:- ஒலிவ மலையானது பாலஸ்தீனத்தில் வடக்கிலிருந்து தெற்கில் வரும் மலைத் தொடர்ச்சியின் 4 கி.மீ. நீளமுள்ள ஒரு பகுதி. இம்மலையிலே மூன்று மலைச்சிகரங்கள் உள்ளன. இவை கிதரோன் பள்ளத்தாக்குக்கு அப்பாலுள்ள எருசலேமை நோக்கியுள்ளன. வடகோடிச் சிகரம் ராஸ்-ஆபூ-கர்னூ ஆகும். இது துல்லிய மற்றது ஸ்கோப்பஸ் மலை என்றும் அழைக்கப்படுகிறது. மூன்றிலும் இதுதான் மிக உயரமானது. மத்திய தரைக்கடலின் மட்டத்திலிருந்து 903 மீ (2963 அடி) உயரமுள் ளது. பெரிய யாத்திரை விழாக்களைக் கொண்டாட வந்த கலிலேயர்கள் இங்குதான் தங்குவர். ஒரு கிரேக்கக் கத்தோலிக்கப் பாரம்பரியம், இங்குதான் இயேசு தமது ''பெரிய ஆணையைக்'' கொடுத்தார் என்று கூறுகிறது (மத் 28:10-16).*

*சிறிது தெற்கில் எருசலேம் ஆலயப்பகு திக்கு நேர் எதிராக, எபேல் எத்-தூர் என்ற இரண்டாம் சிகரம் உள்ளது. கடல்மட்டத்தி லிருந்து 818 மீ (2684 அடி) உயரமுடையது. பாரம்பரியப்படி இங்கிருந்துதான் இயேசு விண்ணேற்றமானார் (லூக் 24:51; அ.ப. 1:12). இக்கால எருசலேம்-எரிகோ பெருஞ் சாலை இதற்குச் சிறிது தெற்கில் செல்கிறது.*

*மூன்றில் தென்கோடிச் சிகரமான எபேல் பத்ன ஏல் - காவா (காற்றின் வயிறின் மலை) குறைந்த உயரமுடையது. இது ''அவதூரின் மலை'' என்றும் அழைக்கப்படுகிறது. இது சாலமோன் இங்குச் சிலைவழிபாட்டுக்குக் கோவில்கள் கட்டியதைச் சுட்டுகிறது (1 அர 11:7; 2 அர 23:13-14). இதன் அடியில் கிதரோன் சுழன்று, தென்கிழக்கில் சாக்க டலை நோக்கிச் செல்லுகிறது. இது செல் வான் கிராமத்துக்கு அருகிலுள்ளது. ஆலயப் பகுதிக்குத் தெற்கிலுள்ள பழங்காலக் கானா னிய மற்றும் தாவீதின் எருசலேமை மேல் நோக்குகிறது.*

*இந்த மலைப்பகுதி கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் அடிக்கும் காற்று களைத் தடுப்பதோடு, மத்தியதரைக்கடலிலி ருந்தும் மேற்கிலிருந்தும் அடிக்கும் காற் றைத் தடுத்து மழைபெய்யச் செய்கிறது. இதனால் எருசலேம் போதிய நீரைப் பெறுகி றது. நீர் அதிகமாகக் கிடைத்ததால், பழங் காலத்தில் அடர்த்தியான தோப்புகள் இருந்தன. அதனால் ஒலிவாமலை (ஒலிவத் தோப்பு, காண்க, 2 சாமு 15:30) என்ற பெயர் பெற்றது. இதில் பெரும்பகுதி கி.பி 70-இல் தீத்து நகரை அழித்தபோது அழிந்து போயின.*

*2. பழைய ஏற்பாடு, இறுதிக்கால யூத மதத்தில் ஒலிவ மலை:-*

*அபிசலோம் செய்த கிளர்ச்சியை அடக்க முடியாமல் தாவீது எருசலேமை விட்டு ஒலிவ மலை மேல் ஏறிச் சென்றார் (2 சாமு 15:30). மலையின் உச்சியிலே ஆண்டவரை வழிபடும் இடம் ஒன்று இருந்தது. தாவீது நடந்து சென்று இம்மலையின் கிழக்குச் சரிவில் உள்ள பகுரிமை அடைந்தார் (2 சாமு 16:5).*

*ஒலிமலை கூடாரவிழாவோடு நெருங்கிய தொடர்புடையது. ஒருவேளை, நாடு கடத் தப்பட்டுத் திரும்பியவர்கள் முதல் தடவை யாக இவ்விழாவைக் கொண்டாட ஒலிவக் கிளைகளைச் சேகரித்திருக்க வேண்டும் (நெக 8:15).*

*செக்கரியாவின் எருசலேம் அழிவைப் பற் றிய இறைவாக்கில் ஆண்டவரின் நாளிலே ஒலிவ மலை இரண்டாகப் பிளவுபடும் என்று கூறுகிறார். ''உயிருள்ள நீர் எருசலே மிலிருந்து ஓடிக் கிழக்கு மேற்குக் கடல்களு டன் சேரும். அப்போது எஞ்சியுள்ள எல்லா நாடுகளும் கூடார விழாவைக் கொண்டாட எருசலேமுக்குச் செல்வர்'' (செக் 14). எசக்கி யேலின் காட்சியில் ஆலயத்திலிருந்து ''ஆண்டவரது மகிமை'' அகன்று சென்ற போது இங்குத் தங்கியது (எச 11:23).*

*மேலும் சுத்திகரச் சடங்கிற்கு நீர் தயாரிக் கச் செந்நிறக் கிடாரியைச் கட்டெரித்து அதன் சாம்பலை நீரில் கலந்தனர் (எண் 19:1-10). தால்மூதின்படி இந்தச் சடங்கு ஆல*

*யத்தின் கிழக்கு வாயிலின் எதிரே இம்மலையில் நடந்தது.*

*3. புதிய ஏற்பாட்டில் ஒலிவ மலை:-*

*இயேசு இவ்வுலகில் வாழ்ந்த கடைசி நாட்களின் பல நிகழ்ச்சிகள் இம்மலையில் நடைபெற்றன. மேலும் ஆண்டவரின் விண்ணேற்றத்திற்குமுன் தம் சீடர்களை இயேசு கடைசி முறையாக இங்கே சந்தித்தார் என அப்போஸ்தலர் பணி கூறுகிறது. இயேசு மகிமையுடன் எருசலேம் நோக்கி நுழையும் செய்தியில் ஒலிவ மலை குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவும் அவருடைய சீடரும் ஒலிவ மலையின் கிழக்குப் பகுதியில் உள்ள பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு ஒலிவ மலையருகில் இருந்த பெத்துபாகேயை அடைந்தனர் (மத் 21:1).*

*எருசலேம் அழிவைப்பற்றியும், இறுதிக் காலத்தைப் பற்றியும் இயேசு இம்மலையிலிருந்துதான் அழுது இறைவாக்குரைத்தார் (மத் 24:3; மாற் 13:3-4; லூக் 21:4).*

*இயேசு பாடுபடுவதற்கு முந்திய வாரம் பகலிலே எருசலேமில் போதித்து, இரவிலே ஒலிவத் தோப்பு மலைக்குப் போய் வெட்டவெளியில் தங்குவார் (லூக் 21:37). இம்மலையில், இயேசு பெத்தானியா ஊரில் தொழுநோய்ச் சீமோன் வீட்டிலோ, கெதுசமனித் தோட்டத்திலோ தங்கியிருக்கலாம். மேலும் ஆண்டவரின் விண்ணேற்பு இந்த மலையிலேதான் நிகழ்ந்தது (லூக் 24:50; அ.ப. 1:12).*

*4. பிற்காலத்தில்:-*

*ஒலிவ மலையோடுகொண்ட பல வேறு பட்டபாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு, பல காலங்களில் யூத, கிறிஸ்தவ, முகமதிய புனிதத்தலங்கள் இங்குத் தோன்றியுள்ளன. இறுதித்தீர்ப்பை (செக் 14: காண்க யோவே 3:2) முன்னோக்கி இங்குப்பெரிய யூதக் கல்லறை இருக்கிறது. விண்ணேற்பு ஆலயம், மரியாளின் கல்லறை. ''ஆண்டவர் அழுதார்'' ஆலயம், ஆண்டவர் செபத்தை இயேசு கற்பித்த இடமாகக் கருதப்பட்டுக் கட்டப்பட்டுள்ள ஆலயம், எல்லா நாடுகளின் பெயரால் கெதுசமனித் தோட்டத்தில் எழுப்பப்பட்ட ''துன்பத்தின் பேராலயம்'' போன்ற கிறிஸ்தவப் புனித இடங்கள் இங்குள்ளன. முகமதியர்களின் ''விண்ணேற்ற மசூதியும்'' இங்கு உண்டு.*

**ஒலிம்பா** *(OLYMPUS விண்ணக)*

*கிறிஸ்தவராகிய இவருக்கு உரோமையர் மடலிலே வாழ்த்து அனுப்பப்படுகிறது. இவர் பிலோலகு யூலியா ஆகியோரின் மகனும் நேரயுவின் சகோதரனாகவும் இருக்கலாம் (உரோ 16:15). ஏனெனில் ஒரே வரியில் இவர்கள் யாவரும் குறிக்கப்படுகின்றனர்.*

**ஒலிம்பிய செயுசின் ஆலயம்.** *(TEMPLE OF OLYMPIA ZEUS)*

*எருசலேம் ஆலயம் கிரேக்கர்களால் தீட்டுப்படுத்தப்பட்டபோது அதற்குக் கொடுக்கப்பட்ட பெயராகும் (2 மக் 6:2). யூதர்கள் ''தங்கள் நாட்டினுடையவும் இறைவனுடையவும் கட்டளைகளைக் கைவிட்டு விடும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்''.*

**ஒழுக்கச் சட்டமறுப்புக் கோட்பாடு** *(ANTI-NOMIANISM)*

*இக்கோட்பாடு ஒழுக்கக் கட்டுப்பாடும், சட்டங்களும் விசுவாசத்தினால் தேவையற்றவை ஆகின்றன, பயனற்றவை ஆகின்றன என்றும், மீட்பருடைய விசுவாசம் ஒன்றே அவசியமானது, போதுமானது என்றும் கூறுகிறது. இப்பதம் விவிலியத்தைச் சேர்ந்ததன்று. யோகான் அகிரிகொலாவின் கருத்துக்களை விவரிக்க லூத்தரால் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் இக்கருத்து யாக்கோபின் திருமுகத்தில் தாக்கப்படுகிறது. அதன் ஆசிரியர் ''தன்னிடம் விசுவாசம் உண்டு எனச் சொல்கிறவன் செயலில் அதைக் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த விசுவாசம் அவனை மீட்க முடியுமா?'' (யாக் 2:14) என்று கேள்வி எழுப்புகிறார். செயல்கள் அற்ற விசுவாசம் மீட்பளிக்க முடியுமா? இதில் மறைந்துள்ள விடை முடியாது என்பதாகும். விசுவாசத்தால் ஏற்புடையவர்களாவது பற்றிய பவுலின் போதகத்தைத் (உரோ 3:23 தொ) தவறாகப் புரிந்து*

கொண்டவர்களை யாக்கோபு இங்குத் தாக்கித் திருத்துகிறார். ஆயினும் பவுலின் கருத்துப்படி செயல் இல்லாமல் விசுவாசம் இருக்க முடியாது. ஏற்புடையவனாக்கப்பட்ட மனிதன் தூய ஆவியையும் பெற்றுக் கொள்கிறான்; ஆவி அளிக்கப்பட்டால் ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும்.

ஒழுக்கச் சட்ட மறுப்புக் கோட்பாடு புதிய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது அறிவுநெறிக்கோட்பாட்டின் சில வடிவங்களில் காணப்பட்டது. வரலாற்றில் இக் கோட்பாடு சில குழுக்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது.

## ஒழுக்கநெறி இயல் (ETHICS)

இக்கட்டுரையானது விவிலிய ஒழுக்க நெறிஇயலைப் பற்றியதாகும். இத்தலைப்புப்பற்றிய எவ்வித முறையான ஆய்வும் இல்லாமையால் வரலாற்று ஆசிரியர்கள், இறைவாக்கினர்கள், கவிஞர்கள், அப்போஸ்தலர் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஒழுக்கக் கருத்துக்களை யூத மற்றும் கிறிஸ்துவ நூல்களினின்று சேகரிப்பது மட்டுமே இயலக்கூடியதாகும். பழைய வரலாறானது நிறைவானவரான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய வரலாற்றில் உச்சநிலை அடைகிறது. அவரினின்று உயர்ந்த ஒழுங்கமைப்பும், பரந்த செல்வாக்கும் உடைய வாழ்வு அளிக்கப்படுகிறது.

I. பழைய ஏற்பாட்டு ஒழுக்க நெறி இயல்:- விவிலியத்தின் பல நூல்களின் காலமானது உறுதிப்படுத்தப்படாமலிப்பதால் எபிரேயரிடையே ஒழுக்க வளர்ச்சியின் நிலைகளைத் துல்லியமாக எடுத்துக் கூறுவது அவ்வளவு எளிதான காரியமன்று. உலகில் ஒழுக்க அமைப்பு இருக்கின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒழுக்கநிலையை இயன்றதாக்குகின்ற சுதந்தரம், அறிவுத்திறன் முதலியன மனித உயிர்களுக்கு உண்டு என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 'மனசாட்சி' என்ற சொல்லானது புதிய ஏற்பாட்டுக் காலம் வரை காணப்படவில்லை. அனேகமாக ஸ்தோயிக்கியரிடமிருந்து இக்கருத்து பெறப்பட்டிருக்கலாம். ஆனால் இக்கருத்து இறைவனுடைய பண்டைய மக்களின் குறிப்புகளில் வேண்டிய அளவிற்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆதி 3:5-இல் நன்மை, தீமை என்னும் இரு தன்மைகளை நாம் காண்கிறோம். முதலாவதானது 1:31-இல் அமைப்பிற்குப் பதிலளிப்பதாகவும் 2:18-இல் நன்மைத்தனத்திற்கு ஏற்றதாகவும் இருப்பதைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. சில நேரங்களில் முடிவுகளுக்கும், சில நேரங்களில் சாதனங்களுக்கும் பயன்படும் இச்சொற்கள் அனேகமாக உள்ளுணர்வின் இறுதிக்கட்டங்களைச் சுட்டிக்காட்டுவதனால் இன்பம், துன்பம் போன்று வரையறுக்கப்பட முடியாது. ஒழுக்க நிகழ்ச்சிகளை மூதாதையரின் கதைகளிலே காண்கிறோம். மோசேயின் அல்லது மற்ற சட்டநெறியானது வடிவமைக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே, இழிவான அல்லது பெருந்தன்மைமிக்க, உண்மையான அல்லது பொய்யான, பாராட்டுக்குரிய அல்லது பழிச்சொல்லுக்குரியவராக மனிதர்கள் ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளனர்.

1. வாழ்வின் சமயத் தோற்றம்:-

எபிரேய இலக்கியத்தில் வாழ்வினுடைய சமயத் தோற்றங்கள் உயிர்நாடியானவையாக இருப்பதனால், ஒழுக்க நெறிகளும் வழிபாடும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன. இறைவனை மனிதன் பார்க்கிறான்; அவரைத் திருப்திசெய்ய ஆசை கொள்கிறான். அவரது கோபத்தைத் தூண்டியெழுப்புகின்ற எதையும் செய்ய நடுங்குகிறான் (ஆதி 20:6; 39:9). எனவே ஒழுக்கமின்மையானது பாவமாகிறது. பற்றுறுதியானது ஒரு தூய நபருக்கு உரியதேயன்றி ஆட்தன்மையற்ற சட்டத்திற்கு உரியதல்ல. பிற மனிதருக்குச் செய்யும் கடமையானது இறைவனுக்குச் செய்யும் கடமையாகும். ஒழுக்கமானது இறை பாதுகாப்பின் கீழ் உள்ளது. உடன்படிக்கைப் பேழையிலுள்ள சட்டத்தின் பலகைகள் யாவேயின் கோயிலில் மிகவும் புனிதமான இடத்தை வகிப்பதில்லையா? (யாத் 40:20; உப 10:5; 1 அர 8:9; எபி 9:4). கட்டளைகள் தன்னிச்சைத் தன்மையுடைய

தாய் இருப்பதற்குப் பதிலாக, இறைவனுடைய குணத்தின் பொழிவுகளாக உள்ளன. நேர்மையாயும் இரக்கமுடனும் இருக்க வேண்டும் என்று கோரும் இறைவன் இவை தமக்கே உரியதனித்துவமிக்க மகிமை என்று கருதுகிறார்; இக்குணங்களைக் கொண்டிருக்குமாறு மனிதரை அழைக்கிறார் (யத் 33:19; 34:6-7). மனித அன்பினுடைய பதிலுக்காக ஏங்குவதாக இறை அன்பை ஓசேயா எடுத்துரைக்கிறார். நேர்மையுள்ள இறைவனின் பெயரால் நேர்மையினை ஆமோஸ் கோருகின்றார். சங் 111 மற்றும் 112-ஐ ஒப்பிடுவதில் தோன்றுவதுபோன்று அதே சொற்களால் விவரிக்கப்படும் மனிதனின் நன்மைத் தனமானது ஒரு வகையில் இறைவனது நன்மைத்தனத்தைப் போன்றே உள்ளது.

2. தேசிய நோக்கு:-

பழைய ஏற்பாட்டு நோக்கு தனிநபர்த் தன்மையுடையதாய் இருப்பதைவிடத் தேசியப் பண்புடையதாக உள்ளது. சமூகத்தின் கூறுகள் பொது நன்மைக்கெனப் பங்களிக்காவிடின் அவற்றிற்கு மதிப்பில்லை. தனிமனிதன் சமூக அமைப்பின் ஒரு சிறு பகுதி மட்டுமே. குழுவினுடைய பகுதிக்கு எதிராகப் பெரும் பாவம் குற்றம் சாற்றப்பட்டால், அக்குழுவோடு சேர்ந்து எந்தத் தனிமனிதனும் கொல்லப்படலாம் (யோசு 7:19-26). மக்களனைவரும் சேர்ந்த முழு இஸ்ராயேல் தான் இறைவனுடைய மகன் என்று அழைக்கப்படுகிறது. செபங்கள், பலிகள், விழாக்கள், நோன்புகள் முதலியன நாட்டைச் சேர்ந்த பொதுக்காரியங்களாகும். இஸ்ராயேல் காக்கப்படுமெனில் சாவதற்கும் தயாராக இருத்தல் மிக உயர்ந்த மாட்சியாகும் (யாத் 32:31-32; நீதி 5:15-18). பெரும்பாலும் சட்டங்கள் நடுவர் மட்டுமே செயல்படுத்தக் கூடியவையாக உள்ளன. வாதாடும் குழுக்களுக்கிடையில் நியாயமாக நடுவரால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' என்னும் உரிமையானது (உப 19:21), நீதி மன்றத்திற்கு வெளியே வழிகாட்டுதலுக்கு மிகவும் கொடூரமானதாக உள்ளது (மத் 5:38-39). இஸ்ராயேல் பாவம் செய்தபோது தண்டிக்கப்பட்டது; இறைவனுக்குக் கீழ்படிந்திருந்தபோது வளமுற்றிருந்தது. எபிரேய தேசிய வாழ்வு அழிக்கப்பட்ட பின்னரே, இறைபராமரிப்பின் நேர்மை (யோபு; சங் 36:72) மற்றும் சுய அறியாமை முதலியன பற்றிய வினாக்களைத் தனிமனிதன் அனுபவம் எழுப்புகின்றது. பிற்கால இறைவாக்கினரில் ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மா பற்றி மிகுந்த ஆர்வம் காட்டப்பட்டபோதும் (எச 18), தேசிய இலட்சியங்கள் உயர்ந்த நிலையைக் கொண்டுள்ளன. நாடுதான் உயித்தெழவேண்டும் (ஏச 25:8; எச 37:1-14; ஓசே 13:14; செக் 8-1-9). தனி நபர்களின் அக்கறைகளில் மூழ்கிப் போவதற்கு எதிரான குழுவின் நலனுக்குக் காட்டும் இந்த ஆர்வமிக்க பற்றுறுதிதான் எபிரேய வரலாற்றினுடைய உன்னத முத்துக்கள் கோக்கப்படுகின்ற தங்கக்கயிறாக உள்ளது எனலாம்.

3. உடன்படிக்கை:-

நடத்தையைத் தீர்ப்பிடுவதற்கான நிலையான மேல் வரிச்சட்டமாக எப்போதும் கருதப்படுகிறது. உடன்படிக்கைக்குக் காட்டும் மரியாதை இறைவனுக்குக் காட்டும் மரியாதையாகும் (ஓசே 6:7; 8:1; ஆமோ 3:1-3). இறைவன் எப்போதும் பிரமாணிக்கமுள்ளவராய் இருப்பதால் தங்களுடைய முன்னோர் முழுப்பற்றுதலுடன் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் வரை அவரது மக்கள் வளமுற்றிருப்பார் (யாத் 24:37). இஸ்ராயேலின் மீது உடன்படிக்கை கோருபவைகளின் சுருக்கமாக உள்ள பத்துக்கட்டளைகளின் முதற்கட்டளைகள் விசுவாசம், மதிப்பு மற்றும் பணி ஆகியவற்றைக் கோருகின்றன. பின்னர் வருபவை (யாத் 20; கட்டளைகள் 5 முதல் 9 முடிய) மனிதன் மனிதனுக்குச் செய்யும் கடமை, யாவேக்கு மனிதன் ஆற்றும் கடமையின் ஒரு பகுதியாகும் என்று எடுத்துக்கூறுகின்றன. ஏனெனில் ஒருவர் மற்றவரோடு நடந்து கொள்ளும் முறையால் இறைவன் திருப்தியோ அதிருப்தியோ அடைகிறாரென மோசேயும் அனைத்து இறைவாக்கினர்களும் பறைசாற்றுகின்றனர். மனிதனின் உள்ளார்ந்த வாழ்வையும் ஊடுருவிச் செல்லும்

பத்துக் கட்டளைகள், அனைத்துக் கட்டளைக ளும் அவற்றின் சொற்பொருளில் மட்டு மின்றி, அவற்றின் உட்பொருளிலும் எடுத் துக் கொள்ளப்பட வேண்டுமென நினைவு றுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (லேவி 19:17-18; உப 6:5; சங் 138; உரோ 7:14). யாத் 20-23; சங் 15;23 ஆகிய பகுதிக ளில் தொகுக்கப்பட்டிருப்பதுபோல் மனிதக் கடமைகள், ஒழுக்கம் மற்றும் சடங்குக் கோரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியுள் ளன. மனிதக்கடமைகளைப் புறக்கணிக்கும் நிலையைக் குற்றஞ்சாட்டுதல் அடிக்கடி இறைவாக்கினர்களில் காணப்படுகிறது (ஏச 1:11-12; எரே 6:20; 7:21-22; ஓசே 6:6; ஆமோ 5:21-22). இக்கடமைகள் ஏராளமான் குறிப்பு களைக்கொண்டுள்ளன. அனுபவத்தின் ஒவ் வொரு துறையையும் உள்ளடக்குகின்றன. உடலூனமுற்றோர் (லேவி 19:14), ஏழைகள் மற்றும் அன்னியர் (உப 10:18-19; 15:7-11; 24:17-19; யோபு 31:16-18.32. சங் 41:1; ஏச 58:6; எரே 7:5-7; 22:3; செக் 7:9-10) முதலி யோர்மீது இரக்கம் காட்டுதல் அழுத்திக் கூறப்படுகிறது. பெற்றோரும் முதியோரும் மதிக்கப்படவேண்டும் (யாத் 20:12; உப 5:16; லேவி 19:32). பிள்ளைகளின் கல்வி வற்புறுத் தப்படுகிறது (யாத் 12:26-27; 13:8.14; உப 4:9; 6:7 20-25; 11:19; 31:12-13; 32:46; சங் 78:5-6). பழமொழிநூலில் சுறுசுறுப்புத்தன்மை (6:6-11), தூய்மை (7:6), ஏழைக்கு இரங்குதல் (14:21), உண்மை (7:7), முன்சிந்தனை (24: 27) ஆகியவற்றின் மீது அழுத்தம் செலுத்தப் படுகிறது. விலங்குகள் நடத்தப்படும் முறை யும் விடப்படவில்லை (யாத் 23:11; லேவி 25:7; உப 22:4.6; 25:4; சங் 104:11-12; 148:10; பழ 12:10; யோனா 4:11). சில நேரங்களில் சிறப்பான குணங்களின் கவரக்கூடிய சித்தி ரங்களைக் காணலாம் (குடும்பப்பெண், பழ 31; அரசன், 2 சாமு 23:2-4; குரு, மலா 2:5-7). மனிதன் மீதான இறைவனுடைய ஆட்சியா னது உலகின் மீதான அவரது ஆட்சிக்கு ஒத்ததாக உள்ளது. இறைவன் யாவற்றின் மேலும் அக்கறை கொண்டுள்ளார் என்பதை மனிதன் உணர வேண்டும். ஏனெனில் அவர் எவ்வளவு உயர்ந்தவரெனில் விண்மீன்களுக் கும் மனித துயரங்களுக்கும் அவர் சமமாக ஈடுபாடு செலுத்த முடியும் (சங் 19:33; 147:3-6).

4. நடத்தைக்கு அளிக்கப்படும் சன்மானம் அல்லது தண்டனை பெரும்பாலும் இவ்வுல கத்தைச் சார்ந்ததாகும் (விளைச்சல், பஞ்சம், பகைவர் மீதான வெற்றி முதலியன). ஆயி னும், அவை தேசிய அளவினவாய் இருப்ப தால் சுயமதிப்பானது மந்தமானதல்ல. மேலும் எந்த எபிரேய மனமும் ஒழுக்கத்தி னுடைய உள்ளார்ந்த மதிப்பினை உணர வில்லை என்று கருதுவது தவறாகும். சட்ட மனப்போக்கு உலகளாவியதல்ல. இறை வன் தம் உடன்படிக்கையின் சொற்பொரு ளுக்குள் மட்டுமே தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்று எண்ணுவதில் இறைவாக்கினர்கள் பெருமகிழ்வு கொண்ட னர். இந்த உடன்படிக்கை யாவே தம்மு டைய அன்பின் உயர்தன்மையில் இஸ்ராயே லைத் தன்னுடைய சிறப்பான செல்வமாகத் தேர்ந்தெடுத்தார் என்பதை எடுத்துக்காட்டு கிறது.

வெறும் நீதியினாலன்றி அருளினால் இறைசெயலானது வழிநடத்தப்பட்டது. இறைவனே இரக்கமிக்க மீட்பர் (உப 7:8; ஓசே 11:1; 14:4). மக்கள் சட்டத்தைப் புறக் கணித்ததுகூட அவரது மன்னிக்கும் அன்பை அழித்து விடவில்லை (சங் 25:6-8; 103:8-10; ஏச 63:9; எரே 3:12; 31:3; 33:7-8; மீக் 7:18-19). இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தாராள குணத்துக்குப் பதிலுரையாகக் கூவி எதிர் பார்க்காத ஆர்வமானது இஸ்ராயேலில் உண் டாயிற்று. இதனால், இறைவன் அவருக்கா கவே அன்பு செய்யப்பட்டு, வறுமையும் இருளும், பொறுத்துக் கொள்ளப்பட வேண் டிய வேளையில், அவரது புன்னகையானது செல்வமாகவும் ஒளியாகவும் கருதப்பட் டது. ''உம்மையன்றி வேறுயாரை நான் விண்ணகத்தில் கொண்டுள்ளேன்?'' ''எந்த அளவு உமது சட்டத்தை நான் அன்பு செய்கி றேன்!'' என்பன போன்ற கூற்றுக்கள் இஸ்ரா யேலின் பக்தி இலக்கியத்தில் மிகுந்து காணப்படுகின்றன. அவை இறைவன்பால் தன்னலமற்ற பக்தியையும் கடமையில் உண்

மையான மகிழ்ச்சியையும் காட்டுகின்றன. பழ 8-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஞானத்தின் அழகையும் மாண்பையும் சிறந்த முறையில் போற்றுவதும் அதே கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டதே.

II. புதிய ஏற்பாட்டு ஒழுக்கநெறி இயல்:- பல புதிய கூறுகளை அனுமதிக்கின்ற வேளையில் (மத் 11:11; 13:17.35.52; மாற் 2:21-22; யோவா 13:34; எபே 2:15; எபி 10:20; திருவெளி 2:17; 3:12; 5:9), பழைய ஏற்பாட்டின் சிறப்பான பகுதிகளைக் கிறிஸ்தவம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது (மத் 5:17; உரோ 3:31). அதில் மதிப்பு மிக்கவற்றையெல்லாம் கிறிஸ்து பாதுகாத்து, ஒன்றுபடுத்தி விரிவாக்கினார். பழைய கோட்பாடானது இறக்கைகளைப் பெற்று, உயரிய, இனிய பாடலைப் பாடியது (யோவா 1:17). ஆனால் இயேசு அளிக்கவந்த மகிழ்ச்சியான, உயரிய, வாழ்வானது, மனிதனுடைய உண்மையான நிலையின் மீதான நெருங்கிய கவனத்திலிருந்தே வரக்கூடும்.

1. பாவம்:- அதற்கேற்பக் கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது பாவத்தின் முழுப்பொருளையும் கவனத்தில் கொள்கிறது. உள்ளிருந்து, வெளியிலிருந்து, கீழிருந்தான சோதனைகளின் தோற்றத்துடன் சேர்ந்து மனித இயல்பின் குற்ற நிலையானது, மனிதர்கள் நல்லவர்கள் அல்லது ஒழுக்கம் சாராதவர்கள் என்று மட்டும் கருதும்போது உள்ள நிலைக்கு மிகவும் வேறுபட்ட ஒரு பிரச்சனையை எழுப்புகிறது. நன்மையினின்று மிக நன்மையான நிலைக்கு முன்னேறுவதனுடைய கலையின் பாடங்களால் நமது தேவை நிறைவுசெய்யப்படுகிறதா? மனித சித்தமானது பழுதுபட்டதும் கிளர்ச்சிமிக்கதும் அல்லவா? தனி நபரிலும் சமூகத்திலும் உள்ள ஒழுக்கக் கேடுகள் இறை மீட்புச் செயல்களையும், மனித மனத்துக்கத்தையும், விசுவாசத்தையும் கோருகின்றன. கிறிஸ்து மனிதரிடையே வாழ்ந்த காலம் முதல் பாவ உணர்வானது மிகவும் முனைப்பாக இருந்தாலும், எபிரேய உள்ளுணர்வானது தனது

ஒழுக்க வேதனையைக் கொண்டிருந்தது. பண்டைய வெளிப்பாட்டினுடைய சொற்றொகுப்பானது ஒழுக்கமின்மையின் பல் வேறு தோற்றங்களுக்குக் கவனத்தை ஈர்க்கின்றது. பாவமானது பாய்வதற்குத் தயாராகப் பதுங்கியுள்ள மிகுந்த பசியுடன் உண்கிற விலங்காகும் (ஆதி 4:7). அது பரந்து நிலவும் துன்பத்தினுடைய ஒரு காரணமாகும் (ஆதி 3:15-19; 9:25; 20:9; யாத் 20:5). அது உலகளாவியது (ஆதி 6:5; 8:21; 1 அர 8:46; சங் 130:3; 143:2). அது மடமையானது; அது குறிக்கோள் தவறுதல், வன்முறை, வரம்பு மீறுதல், கிளர்ச்சி, தூய்மைக்கேடு முதலியவையாகும் (சங் 51). இந்தக் கடுமையான கருத்தானது புதிய ஏற்பாட்டினாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆண்டவரும் அவரது அப்போஸ்தலர்களும் மனவருத்தத்தை உருவாக்க உழைக்கின்றனர். பாவ உலகைத் தீர்ப்பிடுவது தூய ஆவியின் பணிகளில் ஒன்றாகும் (யோவா 16:8). வருத்தும் இதயத்தினால் தீய ஒழுக்கமானது விலக்கப்பட்டாலொழிய, நல்வாழ்வு வாழ முடியும் எனக் கருதமுடியாது. நடத்தையின் ஊற்றுகள் தூய்மையாக்கப்படவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆன்மாவின் பழைய கெட்ட நிலையினாலும், மற்றும் கொடிய சூழ்ச்சிமிக்க சோதனைகளுக்கு உட்படுவதனாலும், ஆன்மா தன் மேல்நோக்கிய எழுச்சியில் பெரும் துன்பங்களை எதிர்கொள்கிறது என்பது எப்போதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. தனிநபர்த்தன்மை:-

ஒழுக்கக்கேடு கோட்பாட்டிற்கு ஒத்த நிலையில் தனிநபர்த் தன்மையை ஏற்றுக்கொள்வது தெளிவாக உள்ளது. ஓர் ஆள் தான் பாவம் செய்யமுடியும். பாவம் புரியும் திறனானது ''ஆளுமை'' என்று குறிக்கப்படும் உயரிய நிலையின் அறிகுறியாகும். கிறிஸ்தவம் மனிதனுடைய வேறாக்கும் தனித் தன்மைக்கு மரியாதை கொண்டுள்ளது. மற்ற உயிர்கள் உட்புக முடியாத தடைகளால் சூழப்பட்டதன்மையையும், பெரும் வேறுபட்ட தீமையையும் மற்றும் மாட்சிமை மிக்க செயல்களை ஆற்றும் திறமைகளையும், மற்றும் உலகங்களிடையிலே ஓர் உலக அமைப்பையும் காண்கிறது. மனித

உயிரானது தன்னிலேயே ஒரு முடிவாகும். இறைவன் நம்மை ஒவ்வொருவராக அன்பு செய்கிறார். தனிமனிதனுடை அளவற்ற மதிப்பை இயேசு உறுதிப்படுத்துகிறார். மேய்ப்பர் தொலைந்துபோன ஓர் ஆட்டின் மீது அதிக அக்கறை கொண்டுள்ளார் (லூக் 15:4-7). மந்தையின் ஆடுகள் அனைத்திற்கும் அவர் பெயர்கொடுத்துள்ளார் (யோவா 10: 14). சில பொதுவான சொற்களால் மக்கள் திரளைக் குணப்படுத்தியிருக்கக்கூடிய மருத்துவர், துன்புறும் ஒவ்வொருவர்மீதும் தமது நலந்தரும் கரங்களை வைக்கிறார் (லூக் 4:40). நற்செய்தி நூல்களினின்றும், அப்போஸ்தலர் பணியினின்றும் தனிப்பட்ட பணிகளின் கதைகளை நீக்கிவிட்டால், அவற்றில் பெரும் இடைவெளிகள் காணப்படும் (யோவா 1:35-37; 3:4; அ.ப. 8:26-39; ...). தனிநபரை ஓர் அளவாக எடுத்துக் கொண்டு, அவரை மையமாக வைத்துச் செயல்படுவதில், புதிய ஏற்பாட்டு ஒழுக்க நெறி அவரது செயல்களை மட்டுமே கருத்தில் கொள்வதில்லை (மத் 6; உரோ 2:28-29). அவற்றின் உள்ளார்ந்த தன்மையையும், நோக்குகிறது (மத் 5:21-22; 27-28; 6:1.4.6.18; 12:34-35; 23:5.27; மாற் 7:2-8. 18-23; லூக் 16:15; 18:10-14 யோவா 4:23-24). திருவருகைக்கு முற்பட்ட சிறந்த மனங்களுக்குத் தோன்றிய கருத்துக்களின் தொடர்ச்சியே ஆகும் இது (1 சாமு 16:7; சங் 7:9; 24:3-4; 51:17; 139:2-3.23; எரே 17:10; 31:33).

3. சமூகக் கூறு:- அனுபவத்தினுடைய சமூகக்கூறுகள் மேலோட்டமாகப் பார்க்கப் படவில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய சுமையைச் சுமக்க வேண்டும் (உரோ 14:4; கலா 6:5). அனைத்து மனிதருடைய நடுவரிடம் தனக்குரிய கணக்குக்கொடுக்கவேண்டும் (2 கொரி 5:10). ஆனால் அவர் தனிமைப் படுத்தப்படவில்லை. மற்றவருக்கான அக்கறையானது தவிர்க்க முடியாததாகும். கட்டளைக்குட்பட்டதாகும். ஏனெனில் மன்னிக்காத மனநிலையானது மன்னிப்பு அடைய முடியாது (மத் 6:15; 18:23-35). சகோதரத்தன்மையற்ற வழிபாடு நிராகரிக்கப்படுகிறது (மத் 5:23-24). கிறிஸ்தவ அன்பானது புத்துயிர்பெறுதலின் அடையாளமாகும் (1 யோவா 5:1). தீங்கு விளைவிக்கும் செயல்கள் இன்மைமட்டுமே ஒருவரைத் தண்டனையினின்று காக்க முடியாது. பிறருக்கு நேரடியாக உதவுதல் தேவைப்படுகிறது (மத் 25:41-45; லூக் 10:25-37; 16:19-31; எபே 4:28-29). இந்த உதவிசெய்தலே புதிய சடங்குமுறையாகும் (எபி 13:16; யாக் 1:27). பெற்றோர், பிள்ளைகள் மற்றும் ஊழியருடனான குடும்பம் (எபே 5:22-6:9; கொலோ 3:18-4:1); பல்வேறுபட்ட தன்மையும் மற்றும் கொடைகளும் கொண்ட திருச்சபை (உரோ 14:15; கலா 6:1-2; 1 கொரி 13;14;15); அரசன் மற்றும் நடுவர்களையும் கொண்ட நாடு (மாற் 12:14-17; உரோ 13:1-7; 1 தீத் 2:1-2) முதலியன, கிறிஸ்துவின் ஊழியன் உன்னதமானவருக்குத் தனது பக்தியை வெளிப் படுத்த வேண்டிய தலமாக அமைந்துள்ளன. கீழ்ப்படிதல், பொறுமை, தயாளம், தூய்மை, தாழ்ச்சி, உலகினின்றும் ஊனுடலினின்றும் விலகியிருத்தல் முதலியன நடைமுறையில் கிறிஸ்தவ இலட்சியம் பரிந்துரைக்கின்ற தலையாய, புதிய மற்றும் குறிப்பிடத்தக்க பண்புகளாகும். கிறிஸ்தவ ஒழுக்க நெறி இயலானது பாவம், தனிநபர்த் தன்மை, சமூகக்கோரிக்கைகள் மற்றும் விண்ணக உதவியின் தேவை முதலியவற்றை ஏற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

4. இயேசுவின் இயல்பே கிறிஸ்தவ மேல்வரிச்சட்டம்:- இறைவனுக்காகவும் மனிதனுக்காகவும் நிறைவாய் வாழ்ந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தன்மையே கிறிஸ்துவ மேல்வரிச் சட்டமாகும். அவர் தீமையை வெல்கிறார் (மத் 4:1-11; யோவா 16:33). தமது வாழ்வின் குறிக்கோளைச் செய்து முடித்தார் (யோவா 17:4). மற்றும் பாவம் புரியவில்லை (யோவா 8:46; 2 கொரி 5:21; எபி 4:15; 1 பேதுரு 2:22; 1 யோவா 8:46;). மகனுக்குரியதாகவும் சகோதரத்துவத்தினுடையதாகவும் இருக்குமளவில் அவருடைய வாழ்வே மாதிரியாகும். மகனுக்குரியதைப் பொறுத்தமட்டில் அவரது மேல்நோக்கிய பார்வையையும், அவரது அன்பின்

மிகுதியில் போற்றுரையாகவும் மன்றாட்டாகவும் வெளிப்படுத்துதலையும், அவரது கடமை உணர்ச்சியையும், பணிவையும் சுட்டிக்காட்டலாம். ''தந்தையின் மார்பில்'' அவர் வாழ்ந்தார். இறைவனுக்கு விருப்பமானதையே அவர் செய்ய விரும்பினார். சகோதரத்துவத்தைப் பொறுத்தமட்டில் மனிதருக்கான அவரது இரக்கம் அளவற்றதாக உள்ளது. மனித நன்மைக்கான அவரது பலியானது எல்லையற்றதாக உள்ளது. 'நீங்கள் இறைவனை அன்பு செய்ய வேண்டும்; நீங்கள் மனிதனை அன்பு செய்ய வேண்டும்' இவ்விரு துருவங்களுக்கிடையில் நிறைவாழ்வானது சுழல்கிறது. அவரும் அவரது போதனைகளும் ஒன்றே. ஒழுக்கச் சட்டமானது அவரில் உயிருடன் இருப்பதன் காரணமாக, மனிதனுடைய எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள்மீது தலைமையுரிமை கோருகின்றார் ''ஆண்டவர்'' என்று அவர் போதிக்கப்படுகிறார் (2 கொரி 4:5). மனிதனோ (அ.ப. 11:25-26) வானதூதரோ பெறமுடியாத வணக்கத்தை (திருவெளி 22:8-9) பெறுவதைச் சரியானதாக அவர் கருதுகிறார் (யோவா 13:13). இது மாறுபட்ட விதமாக இருக்க முடியுமா? ஒழுக்கச் சட்டமே மேலாண்மையுடையதாக இருக்க வேண்டும். அவரே அந்தச் சட்டம். எனவே பழைய உடன்படிக்கையின்கீழ்ச் சிலை வழிபாடு கொண்டிருந்த அதே விபரீத இடத்தினை, அவரிடமிருந்து விலகியிருக்கும் நிலையும் கொண்டுள்ளது. அதையொத்த காரணத்திற்காகச் சிலை வழிபாடு நேர்மையும் இரக்கமும் உள்ள அவரைத் துறப்பதாகும். இயேசு தம்முடைய மகனுக்குரிய மற்றும் சகோதர நிறை தன்மையினால் ஆண்டவராக இருப்பதனால், அவரைவிட்டு விலகி நிற்பதென்பது அழிவுக்குரியதாகும் (லூக் 10:13-16; யோவா 3:18; 8:24; 15:22-24; 16:8-9; எபி 2:3; 6:4-8; 10:26). உண்மை மற்றும் நேர்மையின் கோரிக்கைகளுக்கு எதிராக மனைவியோ குழந்தையோ, வாழ்வோ தேர்ந்துகொள்ளப் படக்கூடாது. எனவே உண்மையாகவும் நேர்மையாகவும் ஆள்வடிவில் உள்ள கிறிஸ்துவிற்கு மேலாக அவை தேர்ந்து கொள்ளப் படக் கூடாது (மத் 10:37-39; லூக் 9:59-60; 14:26-27). இயேசு கிறிஸ்துவினுடைய அடிமை ஊழியனாகத் தன்னை அழைப்பதென்பது (உரோ 1:1; யாக் 1:1; 2 பேதுரு 1:1) ஞானமும் இரக்கமும் மிக்கவருக்குத் தனது மிகவலுவான அன்பையும் அவரின் மகனில் உருவங்கொண்டுள்ள இறைவனுடைய தூய சித்தத்திற்கு மிகுந்த பிரமாணிக்கத்தையும், ஒரே சமயத்தில் உறுதிப்படுத்துவதாகும். இயேசு கிறிஸ்துவுக்குக் காட்டும் பாசமிக்க இணக்கத்தின் மூலமாக இறைவனுடைய சித்தமானது தனக்குரியதாகிறது; இந்த இயேசு கிறிஸ்துவிற்காகத் துன்புறுவதென்பது மெய்யான பேரின்பமாகிறது (மத் 5:10-12; அ.ப. 5:41; 2 கொரி 4:11; பிலி 1:29; 1 தெச 2:14; எபி 10:32-34).

5. உதவி அளிப்பதாக வாக்குறுதிகள்:-

கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது அதன் மேல்வரிச் சட்டத்தின் தரத்தினுடைய உயர்ந்த தன்மையைப்போன்று, அதிக அளவில் உதவிபற்றிய உறுதிமொழிகளாலும் சிறப்புப்பெறுகிறது. மகனை அளிக்கும் கொடையிலும் பலியிலும் முழுமையாக விவரிக்கப்படுகின்ற இறைவனுடைய இரக்கத்தன்மையானது புனிதத்திற்கான பெரிய தூண்டுதலாகும். இறை ஆதரவினால் மனிதன் சூழப்படுகிறான். விண்ணக இரக்கமானது அவர்களது போராட்டங்களில் அவர்களுடன் துணைநிற்கின்றது. அடையவேண்டிய நற்குணங்களும் (மத் 5:1-16; கலா 5:22-23; கொலோ 3:12-17; 2 பேதுரு 1:5-7; தீத் 2:12) வெறுத்துத் தவிர்க்கப்பட வேண்டிய தீய பண்புகளும் (மாற் 7:21-22; கலா 5:19-21; கொலோ 3:5-9), ஆற்றலுள்ள உதவியின் வாக்குறுதியுடன் சேர்ந்து நோக்கப்பட வேண்டும். ஆர்வமுடையோர் சார்ந்திருப்பதற்கென அதிசயிக்கத்தக்க அன்பு ஒன்று உள்ளது (யோவா 3:16; உரோ 5:7-8; 2 கொரி 5:19-20). அந்த அன்பினை இதயபூர்வமாக ஏற்பதென்பது விசுவாசமாகும். அந்த விசுவாசம் நற்குணமாகவும், நற் குணங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகவும் மதிப்பிடப்படுகிறது (2 பேதுரு 1:5; உரோ 5:1-2; 1 கொரி 13; எபி 11). விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு முதலியன பண்டைய நற்குணங்க

ளான அடக்கம், திடம், ஞானம், நீதி முதலியவற்றை உருமாற்றி நிறைவூட்டுகின்றன. கிறிஸ்துவால் உண்மையான தகுதி அளிக்கப்படுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத பல உயர்ந்த சிறப்புகள் அவற்றைச் சுற்றி வளர்கின்றன. ஆயினும், கிறிஸ்தவம் தன்னுடைய ஒழுக்க போதனையின் செல்வாக்கை விட அதிக அளவில் சோதனையை எதிர்த்து, புனித மனித முழுவளர்ச்சியை அடைவதற்கான திறமையின் உறுதிப்பாட்டால் முதன்மை அடைகிறது. கிறிஸ்துவினுடைய புதுமைகள், அவருடைய மன்னிப்பின் நற்செய்தி, மறு பிறப்பு, மற்றும் புதிய அதிகாரங்கள் முதலியவற்றினுடைய விளக்கங்களாக உள்ளன (மத் 9:5-6). மனிதனுக்கு முன் அமைக்கப்பட்ட வாழ்வு இயேசுவால் வாழப்படுகிறது. அவர் தமது ஆவியால் மனிதருக்கு மீண்டும் உயிரளித்துத் தம்முடனான ஒன்றிப்பில் அவர்களை ஏற்றுக்கொள்கிறார் (யோவா 3:3.6; 8:36; 15:1-10; உரோ 8:2.9.29; 1 கொரி 1:30; 2 கொரி 5:17; கலா 5:22-23; பிலி 2:5.12-13; கொலோ 3:1-4; யாக் 1:18; 1 பேதுரு 2:21; 1 யோவா 2:6). ஆண்டவருக்கும் சீடருக்கும் இடையிலான இணைப்பானது நிரந்தரமானதாக இருப்பதால் (மத் 28:20; யோவா 14:3.19; 17:24; எபி 2:11-18; 1 யோவா 3:1-3) விவேகத்தோடும் நீதியோடும் பக்தியோடும் (தீத் 2:12-14) வாழப்பயில்வது மிகுந்த ஆதரவைப்பெறுகிறது. புனிதத்தன்மை என்பது, ஒரு சமயம் ஒழுக்க அளவில் இயலாதவர்கள் என்று கருதப்பட்ட நபர்களால், அடையக்கூடியதாக மட்டுமில்லாமல் (மாற் 2:16-17; லூக் 7:47; 15; 19:8-9; 23:42-43; 1 கொரி 6:11; எபே 2:1-7) ஒவ்வொருகிறிஸ்தவனும் உடனேயோ, பின்னரோ நன்மைத் தனத்தின் உயர்வான வடிவங்களுக்குத் தகுதியானவராக இருக்க வேண்டும் என்பதுமாகும் (மத் 5:1-10). அழியாமையும் அதோடு மீட்பரோடு முடிவில்லாத ஒன்றிப்பும் ஆன்மாவுக்கு வாக்களிக்கப்படுகிறது. அவருடைய சாயலானது அவர் மீட்கும் ஒவ்வொரு மனிதனிலும் காணப்படவேண்டும் (உரோ 8:37-39; 1 கொரி 15:49-58; 2 கொரி 5:8; பிலி 3:8-14; 1 தெச 4:17; 1 யோவா 3:2-3; திருவெளி 22:4).

III. மறுப்புகள்:-

விவிலிய ஒழுக்கநெறி இயல் இக்கட்டுரையில் சிறிதளவு குறிக்கப்பட்டாலும் அதற்கு எதிராக எழுப்பப்பட்ட மறுப்புகளை ஒதுக்கிவிட முடியாது. பழைய ஏற்பாட்டின் சில பகுதிகள் ஒழுக்கமற்றவையெனப் பழிக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளன. கடமையின் சில முக்கிய நிலைகள் முழுமையான விதத்தில் விளக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அ. பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை நமது ஒழுக்க உணர்வானது புண்படுத்தப்படும் போது, அது இறைஏவுதலுக்குக் காட்டப்படும் அவமரியாதையாகும் என்ற குற்ற உணர்வு கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில், மோசேயின் சட்டமானது நிறைவற்றது என்னும் கருத்தை ஆண்டவராகிய இயேசு அதிகாரபூர்வமானதாக ஆக்குகிறார் (மத் 5:21-23; மாற் 10:2-9). இறைஅதிகாரத்திற்கு உரியவை என்று கருதப்பட்டு ஏற்கப்பட்ட கோட்பாடுகளை எரேமியாவும் எசக்கியேலும் பாதகமான முறையில் விமர்சிக்கின்றனர் (யாத் 20:5; எரோ 31:29-30; எச 18:2-3. 19-20). மனிதரை முன்னேற்ற வேண்டுமெனில் நம்முடையதைப்போல இராத சூழ்நிலைகளுக்கும் மனதின் நிலைகளுக்கும் சிறிது இடம் அளிப்பது அறிவுக்குகந்ததாயினும், சில சட்டங்கள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. உடனே அழிக்கமுடியாத பலதாரமணம், அடிமைத்தனம் முதலியவை தங்களுடைய எல்லையில் ஒடுக்கப்பட்டு, அவற்றினுடைய சில மோசமான தீமைகள் நீக்கப்பட்டிருக்கின்றன (யாத் 21:2-4; லேவி 25:42-49; 1 நாள் 2:35; பழ 17:2). இறைவனுடைய கட்டளை இணக்கம் கோரப்பட்ட நிலையிலும் இறைவனுக்கு எப்போதுமே அருவருக்கத்தக்கவையாக உள்ள பல சட்டங்களும், நடைமுறைகளும் அங்கு உள்ளன (யாத் 22:18-20; 31:14-15; 35:2-3; லேவி

*20:27; எண் 15:32-36; 31; உப 13:5.16; 17:1-5; 18:20; 21:10-14; 2 சாமு 21:1-9).* முற்றிலும் ஒழுக்கமற்ற உணர்ச்சிகளும், கருத்துகளும் இறைவனுடைய சித்தத்தோடு இசைந்து செல்லக்கூடும் என்ற உண்மையை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத்து இந்த அச்சமூட்டும் தவறுகள், தவறுசெய்வதன் மூலமும் நாம் இறைவனுக்குப் பணிபுரிகிறோம் என்று தவறாகக் கருதுவதிலிருந்து நம்மை எச்சரிக்க எழுதப்பட்டிருக்கலாம் (யோவா 16:2). 1) சில கொடிய சம்பவங்கள் அரிதாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. 2) சில அவற்றின் சூழ்நிலையால் கண்டிக்கப்பட்டுள்ளன; 3) வாசிப்பவரே அவற்றை உடனே கண்டிப்பார் என்ற எண்ணத்தில் ஆசிரியரே சிலவற்றைப் பற்றி எக்கருத்தும் கூறாமல் விட்டு விடுகிறார். இவற்றைக் கருத்தில் கொண்டால், சில பகுதிகளே தகுதியில்லாத போதனைகளைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகும், மற்றவற்றைப் பொறுத்தமட்டில், இறைசித்தத்திற்கு முரண்பட்ட நிலையில் இறைமுத்திரையானது உபயோகிக்கப்பட்டிருப்பது உறுதியாகும். வெறுப்பைத்தரும் பகுதிகளைக் கொண்டுள்ள நூலே மாபெரும் கொடுமைகளைக் கண்டிப்பதை இயன்ற தாக்குகிறது என்பது குறிப்பிடப்படவேண்டும். இந்த உயரிய சிறந்த இலக்கியம் முழுவதும் பொதுவாக வெளிப்படுத்தப்பட்ட உயர் தொனியையும், ஒவ்வொரு தலைமுறையிலும் இஸ்ராயேலின் புலவர்கள், வரலாற்று ஆசிரியர்கள், மற்றும் இறைவாக்கினர்கள் முதலியோரால் பாராட்டப்பட்ட நீதி, இரக்கம் மற்றும் உண்மை முதலியவற்றையும் மேலோட்டமாகப் பார்ப்பதென்பது அடிப்படையிலேயே சரியல்ல.

ஆ) புதிய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டில் மலைப்பொழிவு கீழ்ப்படியக்கூடியது ஆனாலும் இந்தக் கீழ்ப்படிதலானது அழிவிற்குரியது எனக் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் இது கிறிஸ்துவினுடைய கருத்திற்கு நேர் எதிராக உள்ளது (மத் 7:24-27). இது ஓரளவு, ஒவ்வொரு சட்டமும் ஒவ்வொரு மனிதனுக்கும் உயரியது என்ற ஊகத்தின் விளைவாகும். ஆண்டவரே தன்னுடைய செல்வங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, தம்முடைய அறிவுரையில் குறிப்பிட்ட கருத்துக்களை வாழ்ந்து காட்டியது போலச் சிறப்பான பணியைக் கொண்டுள்ள சீடர்கள், சிறப்பான கட்டளைகளைப் பெறக்கூடும் (2 கொரி 8:9). பயன்பட்டுள்ள முரணான வடிவங்கள், பல கூற்றுக்களுக்குத் தவறான விளக்கம் அளிப்பதற்கு எதிரான போதுமான எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவை எல்லா உயிர்களையும் வழிநடத்த வேண்டிய கோட்பாடுகளைத் தியானிப்பதற்கு நம்மை வற்புறுத்தவேண்டும். நாம் கேட்பது சட்டமுறையின் குரலாக இல்லாமல் அன்பின் குரலாக உள்ளது. கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது சமூக அமைப்புகளைப் பற்றி அக்கறையற்றதாக இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அடிமைத்தனம் போன்றவற்றிற்கு எதிராக உடனடியாகப் போதிக்காமலிப்பதற்காகக் கிறிஸ்தவமானது குறைகூறப்படுகிறது. அனேகமாக, ஒதுக்கிவைக்கப்பட்ட மனிதரால் அளிக்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார உரைகளால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக விளைந்திருக்கவேண்டும். ஆனால் நாட்டிற்கெனப் புதிய கோட்பாட்டினை முன் கொண்டுவர, கிறிஸ்தவச் சிந்தனைப் போக்கு போதுமான அளவில் அறிவுறுத்தப்பட்டது என்று எதிர்பார்க்கக் கூடியதன்று.

மேலும் உலகமானது தனது முடிவிற்கு அருகில் உள்ளது என்ற எண்ணம் சமூகத் திட்டங்களினின்று கவனத்தைத் திருப்பியிருக்கக்கூடும். உலகினின்று பிரிந்திருப்பதானது தீமையினின்று விலகியிருப்பதேயன்றி மனிதத் துன்பம், துக்கம் ஆகியவற்றின்மீது அக்கறையின்மையல்ல. விசுவாசிகளினுடைய வறுமை, அதிகாரவர்க்கத்தினர் விசுவாசிகளுக்குக் காட்டிய இகழ்ச்சி, சிலைவழிபாட்டிற்கு உடன்படாமல் பொதுக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ள முடியாத நிலை, அரசுகள் அவர்களின்பால் பரந்த மனப்பான்மை காட்டாமை முதலிய அனைத்தும் கிறிஸ்தவனை அவனது உடனி

ருப்போரினின்று ஒதுக்கி வைத்தன என லாம். மக்கள் கூட்டமும், அரசுகளும் நாகரீக வகுப்பும், தங்களுடைய வெறுப்பு மற்றும் இகழ்ச்சியால் அதனுடைய போக்கிலேயே இயங்குமாறு கிறிஸ்தவத்தை வற்புறுத்தின. முதலாவதாகப் பல்வேறு வகையான கலாப னைகளின் மூலமாக வரும் கேட்டினின்று அது காப்பாற்றப்பட்டது. மேலும் அப்படித் தனித்து இயங்கியது மனித இனத்திற்கு ஓர் ஆசியாக அமைந்தது. ஏனெனில் புது வாழ் வானது தனது ஆற்றல்களை ஒன்று சேர்த்துத் தன்னுடைய வல்லமைகள் மற்றும் பணி யின் அறிவைப் பெறக்கூடியதாயிற்று. புதிய இலட்சியம் அதனுடைய பிரபலமின்மையி னாலேயே பாதுகாக்கப்பட்டது. அதே வேளையில் இறைவனுக்கும் மனிதனுக்கு மான அன்பு வாழ்வு வாழ்வதற்கும் முயற்சி எடுக்கப்பட்டது. மேலும் பலவிதமான கனி களைத் தரக்கூடிய மரங்களாக வளரக்கூடிய பல புனித விதைகளை மிகவும் நம்பிக்கை யளிக்கின்ற காலத்திற்காகப் பாதுகாப்பாக வைத்திருந்த நற்செய்தி நூல்களையும் திரு முகங்களையும் பாதுகாப்பதற்கும் முயற்சி யெடுக்கப்பட்டது. இறைதந்தை பற்றிய கோட் பாடானது ஒவ்வொரு சமூக, அரசியல் தீமை யையும் மறைமுகமாகக் கண்டனம் செய்கி றது. அதேசமயம் நாடுகளுக்கிடையே சமா தானத்தை வளர்க்கவும், ஒவ்வொரு நாட்டி னுடைய ஏழைகளையும் அறிவிலிகளையும் சீர்கெட்டவர்களையும் பொருளாதார, அறி வுசார்ந்த, ஒழுக்க ஆசிருக்கு உயர்த்தவும் முயற்சிகள் எடுப்பதற்கு வழிகோலியது. ''உமது அரசு வருக, உமது திருவுளம் விண்ணு லகில் நிறைவேறுவது போல மண்ணுலகி லும், நிறைவேறுக'' என்ற செபத்தில் இல் லாத நன்மை எதுவும் இல்லை.

## ஒழுக்கநெறிப் பட்டியல்கள் (ETHICAL LISTS)

புதிய ஏற்பாட்டிலே இரண்டு விதமான ஒழுக்க நெறிப் பட்டியல்களைப் பார்க்கின் றோம். 1. குடும்பத்தையும் வாழ்கின்ற சமூ கத்தையும் பொறுத்த வகையில் தனிப்பட்ட வரின் கடமைகள். 2. பொதுவான ஒழுக்க நெறிகள்.

1. சொற்பொருள்:-

சில விவிலிய மொழி பெயர்ப்புகளில் ''குடும்ப ஒழுக்கம்'' என்ற தலைப்பின்கீழ் இரு பட்டியல்களைக் காணுகின்றோம் (எபேசி 5:21-6:9; கொலோ 3:18-4:1). ''கிறிஸ் தவ ஒழுக்கம்'' என்ற தலைப்பின்கீழ் மற்றொரு தொகுப்பானது திருச்சபையிலுள் ளவர்கள் தங்களுக்குள்ளேயும் மற்றவர்க ளோடும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறது (1 தீமோ 2:1-15; 5:1-21; 6:1-21; 1 பேதுரு 2:13-3:7). மிகப் பொதுவான ஒழுக்க நெறிப் பட்டியல்கள் ஒழித்துவிடவேண்டிய பாவங்களையும் தீய பழக்கங்களையும், அணிந்து கொள்ள வேண் டிய புண்ணியங்களையும் எடுத்துக் கூறுகின் றன (கொலோ 3:514; கலா 5:19-23). இப்பட் டியல்களின் பின்னணியும் தோற்றமும் இன் னும் பரவலான சர்ச்சைக்குரியவையாகும்.

2. குடும்ப நெறிகளின் பின்னணி:-

அ) யூதப்பின்னணி பழைய ஏற்பாட்டிலே உள்ள உடன்படிக்கைப் புத்தகத்தில் உள்ள பத்துக் கட்டளைகளில் ஐந்தாவது கட்டளை யானது குடும்ப ஒழுக்க நெறிகளைப் பற்றிய பின்னணிக்குக் கருவாக அமைந்துள்ளது (யாத் 20:12; உப 5:16). இதுவே எபேசி 6:2-13, மாற் 7:10:1 ஆகிய பகுதிகளில் மேற் கோள் காட்டப்பட்டுள்ளது. தந்தைக்கும் தாய்க்கும் மரியாதை செலுத்துவது பரிசுத்தத் தின் சட்டத்திலும் (லேவி 19:3) உபாகமச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட பழித்துரையிலும் (உப 27:16; யாத் 21:15, 17) முதலிடம் பெறுகிறது. மகன் தந்தைக்குச் செலுத்துவது போன்றும், அடிமை தலைவனுக்குச் செலுத் துவது போன்றும், இறைவனுக்குச் செலுத் தும் மரியாதை அமைய வேண்டும் (மலா 1:6). இவ்வாறே ராபிகளின் போதகமும் யாத் 20:12-ஐ, பழ 3:9-ஓடும் லேவி 19:3-ஐ உப 6:13-ஓடும் ஒன்றிணைத்தது. தோபி 4:3-5; சீரா 3:1-16 ஆகிய பகுதிகளும் பிலோவின் நூலும் பெற்றோர்க்குக் காட்டும் மரியா தையை இறைவனுக்குரிய கடமைகளோடு இணைக்கின்றன. எபிரேயக் குடும்ப உறுப் பினர்கள் கணவன், மனைவி, ஆண்பிள்ளை கள், பெண்பிள்ளைகள் மட்டுமல்லாமல்,

மருமகள், மாமியார், அடிமைகள், அவர்களுடைய மக்களையும் கொண்டதாக இருந்தது. மிஸ்னா என்ற நூலின்படி மனைவி, பிள்ளைகள், அடிமைகள் ஆகியோர் ஆண்களைப் போன்று அல்லாமல் சில மதக் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்கள். ஒரு பெண் கலியாணம் ஆவதற்கு முன்பு தந்தையின் கட்டுப்பாட்டிலும், பின்பு கணவனின் கட்டுப்பாட்டிலும் வளர்ந்தாள். குடும்பத் தலைவன் தன் மனைவி, பிள்ளைகள், அடிமைகள் ஆகியோரின் சில செயல்களுக்குப் பொறுப்புடையவன் ஆவான் என்று இராபிகளின் போதனை விரித்துரைக்கிறது. பொதுவாக யூதக் குடும்பநெறி, வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் பாதிக்கின்ற வகையில் அமைந்திருந்தது. நண்பர்கள், மனைவி, அடிமைகள், பிள்ளைகள், வீட்டு விலங்குகள், பெற்றோர்கள், ஆண்டவர் அவருடைய குருக்கள், ஏழைகள், இறந்தோர், துக்கம் கொண்டாடுபவர்கள், நோயுற்றோர் ஆகிய அனைவரையும் இந்நெறி உள்ளடக்கியது (சீரா 7:18-36).பிலோ அளிக்கும் பட்டியல் நாட்டிற்கும் ஆளுநர்களுக்கும் காட்ட வேண்டிய கடமைகளையும் எடுத்துக் கூறுகிறது. கண்டு எடுக்கப்பட்ட சாக்கடல் ஏடுகள் குடும்ப ஒழுக்க நெறிகளோடு சம்பந்தப்பட்டவை அல்ல. மாறாக சமூக அமைப்புகளே.

ஆ) கிரேக்க உரோமைப் பின்னணி:- தெய்வங்களுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையும் வணக்கமும் பெற்றோர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கிரேக்க உரோமை ஒழுக்க நெறியாளர்கள் கருதுகின்றனர். பித்தாகோரசு தெய்வங்களுக்கு அடுத்துப் பெற்றோர்கள் மதிக்கப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்துகின்றார். கிரேக்க, உரோமையர் குடும்பத்தில் உறவினர்கள் மட்டுமல்லாமல் பணியாளர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். தந்தையே குடும்பத் தலைவராக இருந்து, மனைவி மக்கள் மற்றும் பணியாளர்களை வழிநடத்தினார். குடும்ப ஒழுக்க நெறிகள் எதுவும் எழுத்து வடிவில்லாமல் பழக்க வழக்கமாகயிருந்ததால், அவ்வப்போது அதைக் குறித்துக் குழப்பங்கள் எழுந்தன. செனேக்க என்பவர் எவ்வாறு கணவன் தன் மனைவியையும், தந்தை தன் பிள்ளைகளையும், தலைவன் தன் அடிமைகளையும் நடத்த வேண்டும் என்பது பற்றி அறிவுரை இருந்ததாகக் கூறுகிறார். எப்பிக்தேத்துசு பொதுவான கடமைகளைப் பற்றிப் பேசும்போது, மகன், தந்தை, சகோதரன், கணவன், மனைவி, அந்நியர்கள், ஆட்சியாளர், ஆளப்படுவோர், ஆகியவர்களின் கடமைகளைத் தெளிவாக விளக்குகின்றார். எனவே தெய்வங்களுக்கு வணக்கத்தையும் பெற்றோருக்கும் பெரியோர்களுக்கும் மரியாதையும் அளிக்க வேண்டும்; சட்டங்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். பிள்ளைகளிடம் அன்பாயும் நடந்து கொள்ள வேண்டும், அடிமைகளிடம் அன்பாய்ப் பழக வேண்டும், என்று ஒழுக்க நெறிகள் விளக்குகின்றன.

3. புதிய ஏற்பாட்டிலே குடும்ப நெறிகளின் வளர்ச்சி:

இக்கால அக்கறைகள் கடந்து செல்வதால், ஆதித்திருச்சபையின் இறுதிக்காலம் பற்றிய ஆர்வமிக்க எதிர்பார்ப்புகள் குடும்ப உறவுகளைப் பலவீனப்படுத்துவதாகத் தோன்றுகிறது (மாற் 10:29-30; 13:12; மத் 8:21-22; 10:35 தொ; லூக் 12:52-53; 14:26). இந்தச் சூழ்நிலையில் பவுல் அவர் அழைக்கப்பட்ட நிலைக்கு ஏற்ற வாழ்க்கை நடத்த அழைப்பு விடுக்கின்றார். திருமணம் செய்து கொள்வதை அவர் பரிந்துரைக்கவில்லை. அடிமைத் தனத்தைப்பற்றி அவ்வளவு அக்கறை கொள்ளவுமில்லை (1 கொரி 7:17-35). 1 கொரி 7:3-6-இல் கணவனும் மனைவியும் விசுவாசிகளாயிருந்தால் அவர்களுடைய கடமையையும், 7:12-இல் யாராவது ஒருவர் மட்டும் விசுவாசியாயிருந்தால் அவர்களுடைய கடமையையும் தெளிவாக்குகின்றார். கொலோ 3:18-4:1-இல் வரும்பட்டியலில் குடும்பநெறிக் கோட்பாடுகளை நாம் காண்கின்றோம். பிலமோனுக்கு எழுதிய கடிதமானது எவ்வாறு தலைவன் அடிமைகளை வழிநடத்த வேண்டும் என்று தெளிவான அறிவுரை வழங்குகிறது. தலைவனாகிய ஒனேசிமு தன் அடிமையாகிய பிலமோனை அடிமையாக அன்று, அடிமையை விட

மேலானவனாக, அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் (பில 16). உன் அடிமை உனக்குப் பிரமாணிக்கமுள்ளவனானால் அவனைச் சகோதரனைப்போல நடத்து (சீரா 33:31). எபே 5:22-6:4 இல் மனைவிகள், கணவன்கள், பிள்ளைகள், பெற்றோர்கள் ஆகியோருடைய கடமைகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிஞர் சிலர் இத்தகைய ஒழுக்க நெறிப் பட்டியல்கள் திருமுழுக்குப்பெறத் தயாரித்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் பழங்காலத்தில் பெயர் பெற்று விளங்கிய ஸ்தோயிக்கு மெய்யியல் கருத்துகளான இவை கிறிஸ்துவத் தன்மையுடையதாக மாற்றிக் கொள்ளப்பட்டன என்று கருதுகின்றனர். 1 தீமோ 3:2-7; தீத் 1:7-9-இல் விவரிக்கப்பட்டுள்ள ஆயருக்குத் தேவையான தகுதிகள், கிரேக்கப் பின்னணி கொண்டவையாய் உள்ளன. ஆனால் பொதுவாகப் புதிய ஏற்பாட்டு ஒழுக்கநெறிப்பட்டியல்கள் யூதப் பின்னணியைப் பெரிதும் சார்ந்ததாகத் தெரிகிறது. கொலோ 3:22 தொ என்ற பகுதியில் ''ஆண்டவருக்கு அஞ்சுதல்'' ''நேர்மையான உள்ளம்'' ''மனிதருக்காக'' போன்ற பதங்கள் காணப்படுகின்றன. ஆதி 2:24; யாத் 20:12 ஆகிய பகுதிகளை எபே 5:31தொ எடுத்துக் கூறுவதோடு மற்றப் பழைய ஏற்பாட்டுச் சிந்தனைகளையும் மொழித்தன்மையையும் கொண்டுள்ளது.

4. சமூக வாழ்விற்குப் புதிய ஏற்பாடு காட்டும் நெறிமுறைகள்:-

மேய்ப்புப்பணித் திருமுகங்கள் குடும்ப நெறிமுறைகள் சமூக வாழ்வில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குத் தெளிவாக விளக்கம் கொடுக்கின்றன. 1 தீமோ 3:4-15-இல் ஓர் ஆயர் முதன் முதலில் தன்னுடைய குடும்பத்தைக் கட்டிக் காத்து வழிநடத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மந்தையை அவரால் நல்ல முறையில் வழிநடத்த முடியும். இந்தப் பெரிய குடும்பத்தில் பெண்களும், பெரியவர்களும், பெற்றோர்களுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் பெற வேண்டும். இளைஞர்களும், பெண்களும் சகோதர சகோதரிகளைப் போலும் நடத்தப்படவேண்டும் (1 தீமோ 5:1-2; மத் 23:8; மாற் 3:35). அதேபோல் ஒரே விசுவாசத்தில் பங்கு கொண்ட தலைவர்கள் தங்கள்கீழ்ப் பணிபுரியும் அடிமைகளை அன்பாய்ச் சகோதரனைப் போல் வழிநடத்த வேண்டும் (எபே 6:9; கொலோ 4:17). அடிமைகளும் தங்கள் தலைவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்த வேண்டும் (1 திமோ 6:2).

இவ்வாறாக இருந்த சமூகநெறிக் கோட்பாடுகள் திருச்சபையின் மக்களிடையேயும் மற்றவர்களுடனும் ஒரு நல்ல உறவை ஏற்படுத்தத் தூண்டுகின்றன. அதே போல் விசுவாசம் பெற்ற அடிமைகள் அதைப்பெறாத தலைவர்களிடம் வேலை செய்கின்றபோது தங்கள் நடத்தையால் இறைவனுடைய பெயருக்கும் திருச்சபையின் போதனைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டும் (1 திமோ 6:1; தீத் 2:9-10; 1 பேதுரு 2:18). அதேபோல் கிறிஸ்தவர்களும் விசுவாசத்தைப் பெறாத ஆட்சியாளர்களுக்காக வேண்டிக்கொள்வதோடு அவர்களுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும் (1 தீமோ 2:1; தீத் 3:1; 1 பேதுரு 2:13). எல்லாவற்றுக்கும் மேலாகக் கிறிஸ்தவர்கள் நெறியற்ற முறையில் துன்புறுத்தப்பட்டால் அதை அவர்கள் கிறிஸ்துவைப்போல் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைத் தவிர்த்துத் தண்டிக்கப்படக் கூடிய தீச் செயல்களைச் செய்யக் கூடாது (1 பேதுரு 3:13; 4:13). சமூகத்தில் ஒழுக்கநெறிகளைச் செயல்படுத்த அரசாங்க அதிகாரத்தையும் பயன்படுத்தலாம்.

5. பிற ஒழுக்க நெறிப்பட்டியல்கள்:-

சில இடங்களில் குடும்ப சமூக ஒழுக்க நெறிப் பட்டியல்களைத் தொடர்ந்து விலக்கப்பட வேண்டிய தீச்செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன (எபே 5:3-8; கொலோ 3:5-9; 1 தீமோ 1:9-10; தீத் 3:3; 1 பேதுரு 4:3). சில இடங்களில் புண்ணியங்களுக்கெதிரான தீச்செயல்கள் தொகுக்கப்பட்டுள்ளன (கலா 5:22-23; கொலோ 3:12; எபே 4:25; 5:2; தீத்

3:2). அறிஞர் சிலர் இத்தகைய ஒழுக்க நெறிப் பட்டியல்கள் ஸ்தோயிக்கு மெய்யியலின் பாதிப்பு எனக் கருதுகின்றனர். உரோ 1:28தொ-இன் தலைப்பாகிய தகாத செயல்கள் கிரேக்க யூதத்துவத்தின் பாதிப்பு ஆகும். 1 தீமோ 3:2-4-இல் வந்துள்ள பாதிக்கும் மேற்பட்ட கருத்துக்கள் எழுபது நூலில் காணப்படவில்லை. மாற் 7:21-22 இதற்கு மேலும் ஓர் உதாரணமாகும். எபிரேய எண்ணப்படி தீய செயல்களும் தீய இச்சைகளும் உள்ளத்திலிருந்தே எழுகின்றன (மத் 5:28; ஆதி 6:5).

சாக்கடல் ஏடுகளில் காணப்படும் ஒழுக்க நெறிப் பட்டியலில் மனிதனின் உள்ளத்தில் இருந்தே தீமைகள் எழுகின்றன என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. ஒரு வேளை இது அந்நியர்களின் கருத்துப் பாதிப்பாகக் கூட இருக்கலாம்.

முடிவாக ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் மனிதனின் உள்ளத்தையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன (மாற் 7:21-22; லூக் 6:35). எல்லாப் புண்ணிய நெறிகளையும் ஆவியின் கனிகளாகப் பவுல் பட்டியல் படுத்துகின்றார் (கலா 5:22-23).

## ஒளியும் இருளும் (LIGHT AND DARKNESS)

விவிலிய வெளிப்பாடு முழுவதும் ஒளி பற்றிய கருத்து காணப்படுகிறது. இருளையும் ஒளியையும் பிரித்ததே படைத்தவரின் முதல் செயலாகும் (ஆதி 1:3 தொ). மீட்பு வரலாற்றின் இறுதியில், புதியபடைப்பானது (திருவெளி 21:5) இறைவனையே ஒளியாகக் கொண்டிருக்கும் (21:23). இரவின் இருளுடன் மாறுதலடைகின்ற உலக ஒளியினின்று அழியாத ஒளியாகிய இறைவனிடம் மனிதன் கடந்து செல்வான் (1 யோவா 1:5). இத்தகைய இரு எல்லைகளுக்கு இடையில் உண்டாகின்ற வரலாறு, வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் ஏற்படும் போராட்டத்தைப் போன்று, இருளும், ஒளியும் ஒன்றையொன்று நேரெதிராக எதிர்ப்பதான நிலையிலான அமைப்பைக் கொண்டிருக்கும் (யோவா 1:4 தொ). ஈரானிய சிந்தனையில் உள்ளதைப் போன்று, இந்த நாடகப் பாணியான உலக நோக்கை எந்த மீபௌதீக இருமைக் கோட்பாடும் இறுக்கமுடையதாக்குவதில்லை. ஆனால், இக்கிளர்ச்சியில் மனிதனின் பங்கு எந்த அளவும் குறைந்ததல்ல; அவனுடைய இறுதி முடிவானது ஒளி மற்றும் இருள், வாழ்வு மற்றும் சாவு ஆகிய சொற்களால் விளக்கப்பட்டுள்ளது. மறை நூல்கள் பயன்படுத்தும் சமய அடையாளத்தில் இக்கருத்து மைய இடத்தினை வகிக்கின்றது.

I பழைய ஏற்பாடு:-

1. ஒளியின் இறைவன்:-

அ) ஒளியைப் படைத்தவர்:- மற்றவற்றைப் போன்றே ஒளியும் இறைவனின் படைப்பாகவே உள்ளது; எடுத்துக்காட்டாக, பகலின் ஒளியானது மூலக் குழப்பத்திலிருந்து எழுகிறது (ஆதி 1:1-5); பூமியை இரவிலும் பகலிலும் ஒளியால் நிரப்பும் விண்மீன்கள் ஒளிர்விக்கின்றன (1:14-19). இறைவன் அதனை அனுப்புகிறபோதும், திரும்ப அழைக்கும் போதும், ஒளியானது அச்சத்துடன் கீழ்ப்படிகிறது (காண் பாரூ 3:33). அதே இறைவன் இருளையும் ஒளியினையும் அமைத்தமையால் ஒளியிலிருந்து மாறுபடும் இருளும் இதே நிலையிலேயே உள்ளது (ஏச 45:7; ஆமோ 4:13). ஆகவே இருளும் ஒளியும் படைத்தவருக்கு ஒரே புகழ்ச்சிக் கீதத்தையே பாடுகின்றன (சங் 19:2 தொ; 148:3; தானி 3:71 தொ). இவ்வாறாக அனைத்துப் புராணக் கருத்துகளும் இவற்றிலிருந்து நீக்கப்படுகின்றன. ஆயினும், இருளும் ஒளியும் தனிப்பட்ட அடையாளப் பொருளைக் கொண்டிருப்பதை இது தடுக்கவில்லை.

ஆ) ஒளியால் உடுத்தப்பட்ட இறைவன்:- மற்றப் படைப்புகளைப் போன்று, ஒளியும் இறைவனின் சில கூறுகளை வெளிப்படுத்தும் அடையாளமாகியது. ஒளி இறைவனது மகிமையைப் பிரதிபலிக்கின்றது. இந்நிலையில், ஒளி இறைத்தோற்ற மகிமையை எடுத்துக்காட்டும் இலக்கிய யுக்திகளில் ஒன்றாகும். ஒளியானது இறைவனின் உடையாகும்

(சங் 104:2). அவர் தோன்றும் பொழுது, ''அவருடைய பேரொளி பகலைப்போல் இருக்கிறது, அவர் கையினின்று ஒளிக்கதிர்கள் வெளிப்படுகின்றன'' (அப 3:3-4). அவரது அரியணையைத் தாங்கியுள்ள வானத்தின் அமைப்பானது நீலமணிக்கல் போல ஒளி வீசுகின்றது (யாத் 24:10; எச 1:22). தீயினால் சூழப்பட்டவராகவும் (ஆதி 15:17; யாத் 19:18; 24:17; சங் 18:9; 50:3), புயலிலிருந்து வெளிப்படும் மின்னலைப்போலவும் (எச 1:13; சங் 18:15) அவர் வர்ணிக்கப்படுகிறார். இத்தகைய உயிர்ச்சித்திரமான அடையாள வர்ணனையானது இறைபிரசன்னத்திற்கும், மனிதரில் பளிச்சிடும் ஒளி ஏற்படுத்தும் எண்ணத்திற்கும் இடையில் ஒரு இணைப்பை அமைக்கின்றது. இருளைப் பொறுத்தவரை அதனை ஆராய்ந்து அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதால், இறைவனின் பிரசன்னம் அங்கிருந்து விலக்கப்படுவதில்லை (சங் 139:11 தொ; தானி 2:22). ஆனாலும், முழுமையான இருளினைக் குறிக்கும் ''செயோல்'' என்னும் பாதாளமானது இறைவனின் கரத்தினின்று பிரிக்கப்பட்ட மனிதர்கள் இருக்கும் இடத்தினைக் குறிப்பிடுகின்றது (சங் 88:6-7.13). இத்தகைய இருளில் இறைவன் காண்கிறார், ஆனால் காணப்படுவதில்லை; இருக்கிறார், ஆனால் வெளிப்படையாக அல்ல.

இ) இறைவனே ஒளி:- ஒளியின் அடையாளம் பற்றி மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்குப் பின்னும், ஒளியை இறைவன் தன்மைக்குச் சாற்றிக்கூற 'ஞான ஆகமம்' வரை காத்திருக்க வேண்டியதிருந்தது. இறைவனின் மகிமையினின்று பொழியப்படுகின்ற ஞானமானது, முடிவில்லா ஒளியின் பிரதிபலிப்பாகவும், படைக்கப்பட்ட அனைத்து ஒளியிலும் உயர்வானதாகவும் உள்ளது (ஞான 7:27. 29-30). புதிய ஏற்பாட்டில் முழுமையாகப் பயன்படும் அளவில் இவ்வடையாளம் இங்கு ஓரளவு முன்னேற்றம் அடைகின்றது.

2. ஒளி, இறைவனின் கொடை:-

அ) வாழ்வோரின் ஒளி:- ''ஒளி மகிழ்ச்சியூட்டும்; கதிரவன் தோற்றத்தைக் கண்டு கண்கள் களிக்கும்'' (திருவுரை 11:7). இது ஒவ்வொருவருடைய அனுபவம் ஆகும். இத்தகைய பொதுவான அனுபவத்தினின்று ஒளிக்கும் வாழ்வுக்கும் இடையிலுள்ள நெருங்கிய உறவு உருவாகின்றது. பிறப்பது ''ஒளியைக் காண்பதாகும்'' (யோபு 3:16; சங் 58:9). இறை ஒளியைக் கண்டிராத குருடன் (தோபி 3:17; 11:8) மரணத்தின் முன்சுவையைக் கொண்டிருக்கிறான் (5:11-12). செயோல் இருளின் அரசாக இருப்பதனால் (சங் 88:13), சாவின் பிடியினின்று இறைவனால் விடுவிக்கப்பட்ட நோயாளி மனிதன், தன்மீது மீண்டும் 'வாழ்வின் ஒளி ஒளிர்வதைக் கண்டு' மகிழ்ச்சியடைகிறான் (யோபு 33:10; சங் 56:14). இவ்வாறு மனிதனுக்கு இருளும் ஒளியும் எதிர்மாறான பொருளைக் கொண்டிருக்கின்றன; இதுவே அவற்றின் அடையாளத் தன்மைக்கு அடிப்படையாகும்.

ஆ) ஒளியின் அடையாளம்:- முதலாவதாக, இறை மகிமைத்தோற்றத்தின் ஒளியானது, பங்கு பெறுவோருக்கு உயிருள்ள அனுபவப் பொருளை அளிக்கின்றது. ஒளியானது, இறைவனின் மாட்சியை மனிதனுக்கு நெருக்கமான சொற்களால் அழுத்திக் கூறலாம் (யாத் 24:10-11) அல்லது மனிதன் அவரது அச்சம் தரும் தன்மையை உணரச் செய்யலாம் (அப 3:3 தொ). இறைபிரசன்னத்தை மறைபொருளாக வெளிப்படுத்தும் நிலைக்கு, சுடர்வீசும் தோற்றத்தின் உருவகமானது உறுதியூட்டும் தயாள மனப்பான்மையினைச் சேர்க்கின்றது (சங் 4:7; 31:17; 89:16; எண் 6:24 தொ; பழ 16:15). ஆனால் எல்லாவற்றையும் விட, மனிதனுடனான இறைபிரசன்னமானது பாதுகாக்கும் பிரசன்னமாகும். தமது சட்டத்தின் மூலம், மனிதருடைய பாதையை ஒளிமயமாக்குகிறார் (பழ 6:23; சங் 119:105); எனவே, அவர் வழிகாட்டும் விளக்காக உள்ளார் (யோபு 29:3; சங் 18:29). கண்களில் ஒளியேற்றுவதன் மூலம் துன்பங்களினின்று காப்பாற்றுகிறார் (சங் 13:4). இவ்வாறு, அவர் மனிதனுடைய ஒளியாகவும் மீட்பாகவும் உள்ளார் (27:1). இறுதியாக அவர் நீதிமான்களை ஒளிமிக்க நாளின்

*மகிழ்ச்சிக்கு நடத்திச் செல்லுகிறார் (ஏச 58:10; சங் 36:10; 97:11; 112:4); ஆனால் தீயவன் இருளில் தடுக்கி விழுந்து (ஏச 59:9 தொ), தனது விளக்கு அணைந்து போவ தைக் காண்கிறான் (பழ 13:9; 24:20;யோபு 18:5 தொ). முடிவில், இருளும் ஒளியும் மனிதனுடைய இறுதிநிலையின் இருபகுதிக ளாகிய துன்பம் மற்றும் இன்பத்தினைக் குறிக்கின்றன.*

*இ) ஒளி பற்றிய உறுதிமொழி:- இருளும் ஒளியும் பற்றிய அடையாளம் இறைவாக்கி னர்களின் நூல்களில் இறுதிக்கால நோக்கில் காணப்படுவது வியப்பளிக்க வேண்டிய தில்லை. எகிப்தியருக்கு மிரட்டுகிற தொல் லையாக இருந்த இருளானது (யாத் 10:21), யாவேயின் நாளை அறிவிக்கும் அடையா ளங்களில் ஒன்றாகும் (ஏச 13:10; எரே 4:23; 13:16; எச 32:7; ஆமோ 8:9; யோவே 2:10; 3:4; 4:15). பாவ உலகிற்கு இந்நாளானது ஒளியாக இல்லாமல் இருளாக இருக்கும் (ஆமோ 5:18; ஏச 8:21 தொ).*

*ஆயினும், தாழ்ந்து துன்புற்ற நிலையி லுள்ள எஞ்சிய நீதிமான்களுக்கு யாவேயின் நாள் மீட்பின் நாள் என்ற மற்றொரு கூறைக் கொண்டிருக்கும். அப்போது ''இருளில் நடக்கும் மக்கள் பேரொளியைக் காண்பர்'' (ஏச 9:1; 42:7; 49:9; மீக். 7:8 தொ). உருவகமா னது தெளிவான பொருளைக் கொண்டுள் ளது. ஆனால் பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கிறது. முதலாவதாக, இது பகல் இரவு என்னும் மாற்றங்கள் இல்லாத (செப் 14:7), நீதியின் கதிரவனால் ஒளிமயமாக்கப் பட்ட (மலா 3:20), வியப்புக்குரிய நாளின் தெளிவான நிலையைச் சுட்டுகிறது (ஏச 30:26). ஆயினும், புதிய எருசலேமின் மீது தோன்றுகின்ற புதிய விடியலானது (60:1 தொ) இன்றைய உலகைச் சேர்ந்ததிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். உயிருள்ள இறை வனே அவருக்குரியவர்கள் மீது ஒளி வீசு வார் (ஏச 2:5; 51:4; காண். பாரூ 4:2). அவருடைய ஊழியன் நாடுகளுக்கெல்லாம் ஒளியாக இருப்பார் (ஏச 42:6; 49:6).*

*எனவே அந்த உன்னத நாளில் யாத்திரை யின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டது போன்று, நீதிமான்களுக்கும் பாவிகளுக்கும் இருவகை முடிவுகள் தோன்றும். அது தீய வர்களுக்கு இருளும், புனிதர்களுக்கு ஒளி யும் அளிக்கும் நாளாக இருக்கும் (ஞான 17:1-18:4). நீதிமான்கள் ஆகாயம் மற்றும் விண்மீன்களைப்போன்று ஒளிவீசும் வேளையில், பாவிகள் சேயோலின் இருள் சூழ்ந்த துன்பத்தில் மூழ்கியிருப்பர் (தானி 12:3; ஞான 3:7). இது ஒளியின் இறைவனு டைய சாயலினால் மறுஉருவான உலகினை முன்னோக்குகிறது.*

*II புதிய ஏற்பாடு:*

*1. கிறிஸ்து உலகின் ஒளி:-*

*அ) வாக்குறுதியின் நிறைவேற்றம்:- இறைவாக்கினர்களால் வாக்களிக்கப்பட்ட இறுதிக்கால ஒளியானது, புதிய ஏற்பாட்டில் உண்மையாக உருவாயிற்று. இயேசு கலிலே யாவில் போதிக்கத் தொடங்கியபொழுது, ஏச 9:1-இன் இறைவாக்கு நிறைவேறிற்று (மத் 4:16). இறைவாக்குகளின்படி அவர் உயிர்த்தெழுந்தது, ''தம்மினத்தாருக்கும் புற வினத்தாருக்கும் ஒளியை அளிப்பதற்கே யாம்'' (அ.ப. 26:23). இவ்வாறாக, லூக்கா நற்செய்தியில் காணப்படும் பாடல்கள், அவ ரது குழந்தைப் பருவத்திலிருந்தே அவரை இருளில் இருப்போரை ஒளிக்குக் கொண்டு வரும் இளஞாயிறாகவும் (லூக் 1:78 தொ; மலா 3:20; ஏச 9:1; 42:7), நாடுகளுக்கு இருள் அகற்றி ஒளிமயமாக்கும் ஒளியாகவும் (லூக் 2:32; ஏச 42:6; 49:6) விவரிக்கின்றன. புற வினத்தாருக்கு நற்செய்தி அறிவிப்பதற்காகப் பவு லின் அழைப்பும் இதே இறைவாக்கு வரிசை யில் அமைந்திருக்கும் (அ.ப.13:47; 26:18).*

*ஆ) கிறிஸ்து ஒளியாக வெளிப்படுத்தப் படல்:- முதன்மையாகத் தமது சொற்களா லும், செயல்களாலும் கிறிஸ்து தம்மை உல கின் ஒளியாக வெளிப்படுத்துகிறார். பிறவி யிலேயே குருடனான மனிதனின் நிகழ்ச்சி யில் யோவான் குறிப்பிடுவது போல (யோவா 9), குருடரைக் குணமாக்குதல் (மாற் 8:22-26) இங்கு ஒரு சிறப்பான பொரு*

ளைக்கொண்டுள்ளது. ''இவ்வுலகில் இருக்கும் வரை நான் உலகிற்கு ஒளி'' என்று இயேசு அங்குக் குறிப்பிடுகிறார் (யோவா 9:5). மற்றொரு இடத்தில், ''என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (8:12) என்கிறார். ''என்னில் விசுவாசங் கொள்பவன் எவனும் இருளிலேயே இருந்துவிடாதபடி நான் ஒளியாக இவ்வுலகத்திற்கு வந்தேன்'' (12:46). இறைவார்த்தையாகவும் மனிதர்களின் உயிராகவும் ஒளியாகவும், உலகிற்கு வருகை புரிந்ததன் மூலம் ஒவ்வொரு மனிதனையும் ஒளிர்விக்கும் ஒளியாகவும் (யோவா 1:4.9) தம்மிலேயே அவர் இருப்பதிலிருந்து, அவரது ஒளிமயமாக்கும் செயல் தொடங்குகின்றது. அவ்வாறே, அவரைச் சுற்றி நிகழும் செயல்களும், இருளுக்கும் ஒளிக்கும் இடையிலான போராட்டமே யாகும். இருளில் ஒளிரும் ஒளியினைப் (யோவா 1:4), பாவ உலகம் அழிக்க முயல்கிறது; ஏனெனில், மனிதனுடைய செயல்கள் தீயவையாக இருப்பதால் (3:19) அவன் ஒளியைவிட இருளையே விரும்புகிறான். இறுதியாக, பாடுகளின் நேரத்தில் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாஸ் பந்தியினைவிட்டு எழுந்து செல்லுகையில், ''அப்பொழுது இரவு'' (13:30) என்று யோவான் உள்நோக்கத்துடனேயே கூறுகின்றார்; இயேசுவும் கைது செய்யப்படும்போது, ''இது உங்கள் நேரம்; இருள் ஆட்சி புரியும் நேரம்'' என்றே கூறுகின்றார் (லூக் 22:53).

இ) இயேசு உருமாறுதல்:- இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில், அவர் தம்மகத்தே கொண்டிருந்த இறை ஒளியானது, தாழ்மையான ஊனுடலின்கீழ் 'மறைக்கப்பட்டிருந்தது. ஆனாலும், சிறப்புமிக்க ஒரு சிலருக்கு ட்டும் அவரது உருமாற்றத்தினால் இறைஒளி வெளிப்படுத்தப்பட்டது. அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிவீசியது; அவர் ஆடைகள் ஒளியைப்போல் வெண்மையாயின (மத் 17:2). இனி அவை அழிந்து போகும் மனிதத்தின் வெறும் பகுதிகள் அல்ல. பவுலுக்கு மிளிரும் ஒளியில் அளித்த காட்சியான இயேசுவின் உயிர்த்த நிலையின் முன்னோடியாக இது உள்ளது (அ.ப.9:3; 22:6; 26:13). உருமாற்றமானது பழைய ஏற்பாட்டு இறைத்தோற்ற மகிமைக்குரிய அடையாளத்தினைச் சார்ந்ததாகும். கிறிஸ்துவின் முகத்தில் வீசிய ஒளியானது, இறைவனுடைய மகிமையின் ஒளியே ஆகும் (2 கொரி 4:6). இறைமகன் என்னும் நிலையில் அவர், அவரது 'மகிமையின் பிரதிபலிப்பாக' இருக்கிறார் (எபி 1:3). ஒளியாகிய கிறிஸ்துவின் மூலம், இறைத்தன்மையானது வெளிப்படுத்தப்படுகிறது. இறைவன் அணுகமுடியா ஒளியில் உறைபவர் மட்டுமல்லர் (1 தீமோ 6:16), மற்றும் 'ஒளியின் தந்தை' என்று மட்டும் அழைக்கப்படுபவர் மட்டுமல்லர் (யாக் 1:5), மாறாக, யோவான் விளக்குவது போல ''இறைவன் ஒளியாய் இருக்கிறார், அவருள் இருள் என்பதே இல்லை'' (1 யோவா 1:5). முதல் நாளில் படைக்கப்பட்ட உலகின் ஒளியிலிருந்து (யோவா 1:4), நமது இதயங்களை ஒளிமயமாக்கும் கிறிஸ்துவின் ஒளி வரை (2 கொரி 4:6), ஒளியாகிய அனைத்தும் அவரிடமிருந்தே வருகின்றன. இவ்வொளிக்குப் புறம்பான, இரவின் இருள், சேயோலின் பாதாளம் மற்றும் மரணம் ஆகியவற்றின் இருள், சாத்தானின் இருள் ஆகிய அனைத்தும் இருளின் அரசைச் சேர்ந்தவை யாகும்.

2. ஒளியின் பிள்ளைகள்:-

அ) இருளுக்கும் ஒளிக்கும் இடையில் மனிதன்:- இயேசுவே உலகின் ஒளி என்னும் வெளிப்பாடானது, இயல்நிலை கடந்த முன்னோக்கில் அல்லாது, ஒழுக்க முறை அளவில் இருள்-ஒளி என்னும் எதிர் முரண் நிலையை வெளிக் தொணர்கிறது. ஒளியானது இறைவன் மற்றும் கிறிஸ்துவின் அரசை நீதியும் நேர்மையும் கொண்டதாக விளக்குகிறது. சாத்தான் சில நேரங்களில் ஒளியின் தூதனாகத் தன்னை வெளிப்படுத்தி மனிதனை ஏமாற்றினாலும் (2 கொரி 11:14), இருளானது சாத்தானின் ஆட்சியைத் தீயதாகவும் இறைபற்றற்றதாகவும் குறிப்பிடுகின்றது (2 கொரி 6:14-15). 'இருளின் மகன்' அல்லது 'ஒளியின் மகன்' ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும்படியாக' மனிதன் இரண்

டுக்குமிடையில் வாழ்கிறான். கும்ரான் குழுவினர் இறுதிக்காலப் போருக்கு இவ்வர்ணனையினை ஏற்கெனவே பயன்படுத்தியுள்ளனர். தாம் உருவாக்கிக் கொண்டிருந்த அரசினின்று இன்றைய உலகை வேறுபடுத்திக் காட்ட இயேசு இதனைப் பயன்படுத்துகிறார். அவரது எண்ணத்தில், மனிதர்கள் 'உலகின் மக்கள்' என்றும் 'ஒளியின் மக்கள்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர் (லூக் 16:8). ஒளியாகிய கிறிஸ்து தோன்றும்போது இப்பிரிவினை தெளிவாகும். தீமை புரிவோர், தங்கள் செயல்கள் வெளிப்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஒளியைவிட்டு விலகி ஓடுவர். உண்மையில் செயல்படுவோர் ஒளியை நோக்கி வருவர் (யோவா 3:19 தொ). ஒளியின் மக்களாக உருவாவதற்காக அவர்கள் ஒளியினை விசுவாசிக்கின்றனர் (12:36).

ஆ) இருளினின்று ஒளிக்கு:- பிறப்பினால் அனைத்து மனிதரும், குறிப்பாகத் 'தம்து சிந்தனைகளில் இருட்டடிக்கப்பட்ட' புற இனத்தார் (எபே 4:18), இருளின் ஆட்சிக்கு உட்பட்டவர்களே. 'நம்மை இருளினின்று வியத்தகு ஒளிக்கு அழைத்தவர்' இறைவனே (1 பேதுரு 2:9). இருளின் ஆட்சியினின்று நம்மை வெளிக்கொணர்ந்த அவர், ஒளியில் புனிதர்களின் ஊழியில் பங்கு பெற, அவரது மகனின் அரசிற்கு நம்மை மாற்றினார் (கொலோ 1:12-13). திருமுழுக்கில் 'கிறிஸ்துவினால் ஒளிமயமாக்கப்பட்டு' (எபே 5:14), 'ஒளிக்குக் கொண்டு வரப்பட்ட நாம்' (எபி 6:4) அனுபவித்த உறுதியான அருள் இதுவேயாம். முன்பு இருளில் இருந்த நாம் இப்போது ஆண்டவரில் ஒளியாக உள்ளோம் (எபே 5:8). 'ஒளியின் பிள்ளைகளாக வாழ்வது' (எபே 5:8; 1 தெச 5:5) நமது நடத்தையின் மேல்வரிச்சட்டத்தை நிர்ணயிக்கிறது.

இ) ஒளியின் மக்களுடைய வாழ்வு:- பவுலின் மேற்குறிப்பிடப்பட்ட ஊக்குரை ஏற்கனவே இயேசுவால் போதிக்கப்பட்டதுவே (யோவா 12:35-36). உடலின் விளக்காகிய கண்களை ஒருவன் ஒதுக்காமல் இருப்பது போல, தனது உள்ளொளியானது இருளடைவதை மனிதன் அனுமதிக்கக்கூடாது (மத் 6:22-23). இந்த அறிவுரையைப் பவுல் வழக்கமாக எடுத்துக் கூறுகிறார். இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக (உரோ 13:12); இல்லாவிடில், அந்நாள் உங்களைத் திடுக்கிடச்செய்யும் (1 தெச 5:4-8). நல்லவை, நேரியவை மற்றும் உண்மையானவை அனைத்தும் ஒளியின் செயல்களாகும்; இருளின் இழிசெயல்கள், அனைத்துவகைப் பாவங்களையும் தம்முன் கொண்டிருக்கும் (எபே. 5:9-14) என்பதில் அவரது அனைத்து ஒழுக்கநெறிப்போதனைகளும் உள்ளடங்கும். யோவானின் கோட்பாடும் இத்தகையதே. ஒளியாகிய இறைவனில் இணைந்திருக்க, 'ஒளியில் நடந்து செல்லுங்கள்' (1 யோவா 1:5 தொ). ஒரு மனிதன் இருப்பது ஒளியிலா அல்லது இருளிலா என்பதை அறிய உதவும் அளவுகோல் சகோதர அன்பேயாகும் (2:8-11). ஒளியின் உண்மையான மகனாக வாழும் மனிதன், தன்னுள் இருக்கும் இறை ஒளியை மனிதர்முன் ஒளிரச் செய்கிறான். உலகின் ஒளியாகிய மனிதன் தனது பங்கிற்கு (மத் 5:14), கிறிஸ்து தனக்கு அளித்த பணியை ஏற்றுக்கொள்கிறான்.

ஈ) முடிவற்ற ஒளியினை நோக்கி:- ஒளிக்கு அர்ப்பணிக்கப்பட்ட மனிதன், இறைவன் தமது அரசில் நீதிமானுக்கு வாக்களித்த சிறப்புமிக்க மாற்றத்தினை எதிர்பார்க்கலாம் (மத். 13:43). இறைவாக்கினர்களின் கருத்துப்படி, அவர்கள் இறுதியாகச் சென்றடையும் விண்ணக எருசலேம் இறை ஒளியினை அவர்கள் மீது ஒளிர்விக்கும் (திருவெளி 21:23 தொ; ஏச 60). பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இறைவனின் திருமுகத்தைக் கண்டு தியானிப்பதால் இவ்வொளியினால் ஒளிர்விக்கப்படுவர் (திருவெளி 22:4-5). ஒளியின் மக்களுடைய நம்பிக்கை இத்தகையதாகும்.தனது இறந்த உறுப்பினர்களுக்காக இறைவனிடம் திருச்சபை செய்யும் செபமும் இத்தகையதே.

## ஒற்றர்கள் (SPIES)

வேவுக்காரர்கள், தூதர், உளவுக்காரர் என்போர் எதிரிகளின் நாடுகளிலும் வேற்று நாடுகளிலும் தங்கி இரகசியமாகத் தங்கள் சொந்த நாட்டின் நலத்திற்குத் தேவைப்படுகின்ற நாட்டு நடப்புகளையும் செய்திகளையும் சேகரித்து அனுப்புவோர் ஆவர். "ஒற்றர்களு"க்கான எபிரேய மூலச் சொல்லின் சாதாரணப் பொருள் இரகசிய வழிப்போக்கர்கள் அல்லது அயல்நாட்டு வணிகர்கள் என்பதாகும் (எண் 14:6; 1 அர 10:15; 1 நாள் 9:14). இக்கால நடைமுறையின்படியே பழங்காலத்திலும் பகைநாட்டாரின் படைகளின் வலுவையும் வலுவின்மையையும் உளவு பார்த்துத் தெரிவிப்பதற்காக ஒற்றர்களை அனுப்பும் வழக்கம் இருந்தமை தெரிகின்றது (ஆதி 42:9.12). எண் 13; யோசு 2:1; 2 சாமு 15:10 - ஆகிய குறிப்புகளும் உளவு பார்க்கும் ஒற்றர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. ஒற்றர்கள் செய்திகள் சேகரிப்பதற்குமட்டுமன்று வதந்திகளைப் பரப்புவதற்கும் பயன்படுத்தப்பட்டனர் (2 சாமு 15:10). புதிய ஏற்பாட்டில் காணும் ஒற்றர்களைப் பற்றிய குறிப்புகள் இரண்டு; லூக் 20:20; எபி 11:31.

## ஒன்றிப்பு (COMMUNION)

நற்கருணை ஒன்றிப்பில் கிறிஸ்துவன் தன்னுடைய விசுவாசத்தின் தனித் தன்மையை வெளிப்படுத்துகிறான். அதாவது விவரிப்பதற்கு அப்பாற்பட்ட முறையில் இறைவனுடன் கொண்டுள்ள நெருங்கிய மற்றும் உண்மையான தொடர்பின் அறுதியான நிலையை வெளிப்படுத்துகிறான். இந்தத் தனிச்சிறப்பான அனுபவம் விவிலிய மொழியில் பிரதிபலிக்கிறது. இந்த அனுபவத்தை விவரிக்கும் சிறப்புச்சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு வெளிப்படுத்திய இறைவனோடு கிறிஸ்தவன் கொள்ளும் உறவையும் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளேயே கொண்டிருக்கும் உறவையும் ஒன்றித்த உறவு என்று பொருள்படும் "கொய்னோனியா" என்ற கிரேக்கச் சிறப்புச் சொல் எடுத்துக் கூறுகிறது.

இறைத்தலைமையுடனான ஒன்றிப்பிற்கான ஆர்வமானது, மனிதனுக்கு ஒன்றும் புதிதல்ல. பெரும்பாலும் இறைவனுடன் ஒன்றிப்பதைச் சமயம் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் இறைவன் தம்முடைய விசுவாசிகளுடைய உணவில் பங்குகொள்வதாகக் கருதி அளிக்கப்படும் பலிகள் அல்லது புனித உணவு என்னும் வடிவை அடிக்கடி சமயம் ஏற்கின்றது. மற்றொரு புறத்தே உடன்படிக்கை உணவானது சகோதரத்துவத்தின் பிணைப்பு அல்லது நட்பு ஆகியவற்றை முத்திரையிட முயல்கிறது.

ஒரே இணைப்பாளராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே ஒன்றிப்பிற்கான ஆவலை நிறைவேற்ற முடியும். ஆனால் பழைய ஏற்பாடானது, மனிதாவதாரத்திற்கு முன்பு கடக்க முடியாததாகிய இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பரந்த இடைவெளியைக்கவனத்துடன் காத்து வந்தாலும், மனிதனுடைய ஆசையை நிறைவேற்றுதற்குத் தயாரித்து வந்தது.

1. பழைய ஏற்பாடு:-

அ) வழிபாடு:- இஸ்ராயேலின் வழிபாடானது இறைவனுடனான ஒன்றிப்பில் புக வேண்டியதன் தேவையை வெளிப்படுத்துகிறது. இந்த அவசியமானது, பலிப்பொருளின் ஒரு பகுதியானது பலியிடுபவருக்கே திருப்பி அளிக்கப்படுகின்ற "சமாதானப்பலிகளில்" முக்கியமாக வெளிப்படுத்தப்படுகிறது. இப்பகுதியை உண்பதன் மூலம், மனிதன் இறைவனுடைய விருந்துக்கு அனுமதிக்கப்படுகிறான். இந்த உணவில் பங்கு கொள்வதை இறைவனோடு ஒன்றிப்பாகப் பழைய ஏற்பாடு ஒருபோதும் கூறவில்லை. மாறாக இறைவன் முன் எடுக்கப்பட்ட உணவாக மட்டுமே விவரிக்கிறது (யாத் 18:12; 24:11). பல மொழிபெயர்ப்புகள் இதை வெறுமனே "ஒன்றிப்புப் பலிகள்" (லேவி 3) என்றே அழைத்தன.

ஆ) உடன்படிக்கை:- உண்மையான பரிமாற்றத்திற்காக அமைப்பு மற்றும் வாழ்வின்

சமுதாயம் ஆகியவற்றை இறைவன் தம் மக்களுக்கு அளிக்காதிருந்திருந்தால் ஒன்றிப்பிற்கான தேவையானது ஒரு வெறுமையான கனவாகவே இருந்திருக்கும். உடன்படிக்கையில் யாவே இஸ்ராயேலின் வாழ்விற்குப் பொறுப்பேற்று, இஸ்ராயேலின் அக்கறைகளைத் தமக்குரியவை ஆக்குகிறார் (யாத் 32:22). அவர் இஸ்ராயேலைச் சந்தித்து (ஆமோ 3:2) அவன் இதயத்தை வெல்ல விரும்புகிறார் (ஓசே 2:16). ஒன்றிப்பிற்கான இத்திட்டமானது உடன்படிக்கையில் தெளிவாகுகிறது. தமது முன்முயற்சியைச் செயல்படுத்த இறைவன் பயன்படுத்தும் அமைப்பினின்று தெளிவாகிறது. மோசேயுடன் நீண்ட உரையாடல்கள் (யாத் 19:20-24:12-18) மற்றும் அவர் மோசேயைச் சந்திக்கின்ற இடத்தின் ''சந்திப்பின் கூடாரம்'' என்னும் பெயரே (யாத் 33:7-11) இதை வெளிப்படுத்துகின்றன.

இ) சட்டம்:- உடன்படிக்கையின் சாசனமான சட்டம் இறைவனுடைய பதிலளிக்கும் முறையை இஸ்ராயேலுக்குக் கற்பிப்பதற்காகவே அளிக்கப்பட்டது (உப 24:18; லேவி 19:2). சட்டத்திற்குக் கீழ்ப்படிதல் மற்றும் அதனுடைய கட்டளைகளின்படி நடத்தப்படும் வாழ்க்கை முறையானது இறைவனைக் கண்டுபிடிக்கவும் அவருடனான ஒன்றிப்புக்கும் இட்டுச் செல்லுகின்றன (சங் 119). இதையே மறுபுறம் நோக்கினால் இறைவனைத் தேடுதல், அவரை அன்பு செய்தல் ஆகியவை அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாகும் (உப 10:12-13).

ஈ) செபம்:- உடன்படிக்கைக்கு விசுவாசமாக வாழ்கின்ற இஸ்ராயேலர் மிக நெருக்கமாகச் செபத்தினுடைய இரண்டு அடிப்படையான வடிவங்களில் இறைவனைச் சந்திக்கின்றனர். 1) இறைவனின் பெரும் செயல்களைக் கண்டு தன்னிச்சையாகப் பொங்கி வடியும் வியப்பும் மகிழ்ச்சியுமாகும். இவை ஆசீர், போற்றுரை மற்றும் நன்றி கூறுதலுக்கு இட்டுச் செல்கின்றன. 2) மரணத்திற்கு அப்பாலும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்றிப்பில் (சங் 16:9; 49:16; 73:24) இறைவனின் பிரசன்னத்தை அனுபவிப்பதற்கான ஆர்வமிக்க விண்ணப்பம் (சங் 42:2-5; 63:2-6) ஆகும்.

உ) மக்களிடையிலான இதயங்களின் ஒன்றிப்பானது உடன்படிக்கையின் விளைவாகும்:- குடும்பம், குலம், கோத்திரம் ஆகியவற்றிடையே உள்ள இயற்கையான ஒருமைப்பாடானது இஸ்ராயேலை ஒன்றுபடுத்திய இறைவனுடைய பணியில் எண்ணம் மற்றும் வாழ்வினுடைய கூட்டமைப்பாக உருவாகிறது. இந்த மீட்பளிக்கும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதென்பது, சக இஸ்ராயேலரைச் ''சகோதரராகக்'' கருதச் செய்கிறது (உப 22:1-4; 23:20); உரிமைச் சொத்து ஏதுமில்லாதவர்களிடம் தாராளமாக இருக்கச் செய்கிறது (24:29 தொ). குருக்கள் பாரம்பரியத்தின் வழிபாட்டுச் சபையும் தன்னுடைய இறைமுடிவை நோக்கி முன்னேறுகின்ற சமூகமாக (எண் 1:16 தொ; 20:6-11; 1 நாள் 13:2) ''யாவேயின் சமூகமாக'' மற்றும் அனைத்து இஸ்ராயேலரின் சமூகமாக (1 நாள் 15:3) விவரிக்கப்படுகின்றது.

2. புதிய ஏற்பாடு:-

இயேசு தன்னுடைய இறையியல்பில் மனிதருக்குப் பங்களிப்பதால் இறைவனுடனான ஒன்றிப்பானது கிறிஸ்துவில் உண்மையாகிறது (2 பேதுரு 1:4). ஏனெனில் அனைத்து மனிதருக்கும் பொதுவான இயல்பில், அதன் வலுவின்மையிலும் கூட, அவரே பங்குகொள்கிறார் (எபி 2:14).

அ) திருச்சபையில் அனுபவிக்கப்படும் இறைவனுடனான ஒன்றிப்பு:- தன்னுடைய பொதுவாழ்வின் தொடக்கத்தில், போதித்தல் மற்றும் இரக்கம் ஆகிய தமது பணியில் மிக நெருங்கிய விதத்தில் பங்குகொள்ளப் பன்னிரண்டு தோழர்களை இயேசு தம்முடன் சேர்த்துக் கொள்கிறார் (மாற் 3:14; 6:7-13). தமக்குத் தகுதியுடையவர்களாயிருக்க வேண்டுமென்றால் தம்மைப் பின்செல்வோர் தம்முடைய துன்பங்களிலும் பங்கு பெற வேண்டும் என்று அவர் கூறுகிறார் (மாற் 8:34-37; மத் 20:22; யோவா 12:24 தொ;

15:18). அவரே உண்மையான மெசியா, தம்முடைய மக்களுடன் ஒன்றித்துள்ள அரசர். அதே நேரத்தில், இரண்டு அன்புக்கட்டளைகளின் அடிப்படை ஒற்றுமையையும் அவர் வலியுறுத்துகிறார் (மத் 22:37 தொ).

முதல் கிறிஸ்துவர்களுடைய சகோதர ஒன்றிப்பானது ஆண்டவர் இயேசுவின் மீதான அவர்களுடைய பொதுவான விசுவாசம், ஒன்றுபட்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆசை, மற்றும் ஒருவருக்கொருவர் பால் கொள்ளும் அன்பு அவசியமாக இட்டுச் செல்லும் இயேசுவின்பால் கொள்ளும் அன்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். அவர்கள் ''ஒரே உள்ளமும் ஒரே உயிரும்'' மட்டுமே கொண்டிருந்தனர் (அ.ப. 4:32). அவர்களுக்கிடையே நிலவிய இந்த ஒன்றிப்பானது, முதலில் அப்பம் பிடுதலில் ஏற்கப்பட்டது (2:42). எருசலேம் திருச்சபையில் அவர்களுடைய உடைமைகளைப் பகிர்தலிலும் (4:32-5:11) யூதரல்லாதோரிடையேயும் எருசலேமிலிருந்து வந்த சமுதாயங்களுக்கிடையேயும் வறியவர்களுக்காகப் பவுல் சேகரித்த காணிக்கைகளிலும் (2 கொரி 8-9; உரோ 12:12) இது நிகழ்கிறது. நற்செய்தியைப் போதிப்பவர்களுக்கு அளிக்கப்படுகின்ற பொருளுதவியானது ஆன்மீக நன்றியறிதலின் குணவியல்பை அதற்கு அளிப்பதன் மூலம், சிறப்பான ஒளியில் இந்த ஒன்றிப்பினைக் காட்டுகின்றது (கலா 6:6; பிலி 2:25). நற்செய்தியைப் பரவச்செய்வதில் காட்டிய கூட்டுறவைப்போன்று (பிலி 1:5) ஒன்றாக வேதகலாபனைகளை அனுபவிப்பதும் இதய ஒன்றிப்புக்கு இட்டுச் சென்றது (2 கொரி 1:7; எபி 10:33; 1 பேதுரு 4:13).

ஆ) ஒன்றிப்பின் பொருளும் ஆழமும்:-

பவுல்:- விசுவாசம் மற்றும் திருமுழுக்கினால் கிறிஸ்துவுடன் ஒன்றிக்கப்பட்ட விசுவாசி, அவரது மறைபொருளில் பங்கு கொள்கிறார். கிறிஸ்தவன் கிறிஸ்துவுடன் பாவத்திற்கு இறந்து, அவரோடு புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுகிறான் (உரோ 6:3-4; எபே 2:5-6). தனது பாடுகள் மற்றும் மரணத்தின் மூலம் ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்பினில் அவரைப்போல அமைக்கப்படுகிறான் (2 கொரி 4:14; உரோ 8:17; பிலி 3:10-11; 1 தெச 4:14).

கிறிஸ்துவின் நற்கருணை உடலில் பங்கு கொள்ளுதல், ஒரே சமயத்தில், ''மகனுடன் கொள்ளும் ஒன்றிப்புக்கும்'' (1 கொரி 1:9) உடலின் உறுப்புகளுக்கிடையே ஒற்றுமைக்கும் இட்டுச் செல்கிறது (10:17). அதே சமயம் அனைத்துக் கிறிஸ்தவருக்குமான தூய ஆவியின் கொடையானது அவர்களுக்கிடையிலான நெருங்கிய ஒன்றிணைப்பின் மீது முத்திரையிடுகிறது (2 கொரி 13:13; பிலி 2:1).

ஆ) யோவான்:- ''வாழ்வின் வார்த்தை'' பற்றிய அறிவிப்பை வரவேற்கின்ற சீடர்கள், அதனுடைய சாட்சிகளுடனும் (அப்போஸ்தலர்கள்) அவர்கள் மூலமாக இயேசு மற்றும் தந்தையுடனும் ஒன்றிக்கின்றனர் (1 யோவா 1:3; 2:24). தந்தையும் மகனும் ஒருவர் மற்றவரில் ஒன்றியிருப்பதுபோல், தங்களுக்குள் ஒன்றுபட்ட கிறிஸ்தவர்கள் இறுதியாகத் தந்தை மற்றும் மகனுடைய அன்பில் உறைகின்றனர் (யோவா 14:20; 15:4:7; 17:20-23; 1 யோவா 4:12). இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதே இந்த முடிவற்ற ஒன்றிப்பிற்கான ஆவலின் நிலையான அடையாளமாகும் (யோவா 14:21; 15:10). தூய ஆவியின் வல்லமை இதனை வெளிக்கொணர்கிறது (யோவா 14:17; 1 யோவா 2:27; 3:24; 4:13). நற்கருணை உணவானது இதனுடைய அத்யாவசியமான ஊட்டச்சத்தாகும் (யோவா 5:56).

ஆண்டவருடைய மகிமையில் பங்கு கொண்டு (1 பேதுரு 5:1) ''அவரோடு என்றென்றும் இருக்க வேண்டும்'' (1 தெச 4:17; யோவா 17:24) என்னும், ஒவ்வொரு மனித இதயத்தினுடைய கனவாகவும் இஸ்ராயேலின் நம்பிக்கையாகவும் உள்ள முடிவில்லா மகிழ்ச்சியின் முன்சுவையைக் கிறிஸ்தவர் இவ்வாறு கொண்டுள்ளார்.

### ஒற்றுமை (UNITY)

தந்தை, மகன் மற்றும் தூய ஆவி எனும் ஒரே இறைவனைப்பற்றிய விசுவாசம் தந்

தையையும் மகனையும் ஒன்றுபடுத்துகிற அன்புக்கும் விசுவாசிப்பவருக்குத் தூய ஆவியால் அளிக்கப்படுகிற அன்புக்கும் மனிதனை அறிமுகப்படுத்துகிறது (யோவா 15:9; 17:26; உரோ 5:5). ஒரே இறைவனுடன் மனிதனை ஒன்றுபடுத்துவதன் மூலம் இந்த அன்பானது மனிதனை உலகில் இறைவனுடைய சாட்சியாகவும், ஒரே மகனில் முழு உலகையும் அனைத்து மனிதரையும் ஒன்றிணைக்க விரும்பும் இறைவனின் திட்டத்தில் துணையாளராகவும் ஆக்குகிறது (உரோ 8:29; எபே 1:5;10).

1. ஒற்றுமையின் ஊற்றும் பாவத்தால் அது உடைபடுதலும்:-

பல்வகை வேறுபாடுகளை உடைய உலகமானது இறைவனுடைய படைப்பாகும். ''பலுகிப் பூமியை நிரப்பி அதனை ஆளுங்கள்'' (ஆதி 1:28) என்னும் ஆண், பெண்ணிற்கான அவருடைய கட்டளையில் இறைவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. இறைசெயலில் வெளிப்படையான வேற்றுமை மற்றும் ஒற்றுமையினையுடைய உடன்பாடு உள்ளது. மனிதனுடைய ஆதிக்கத்தின்கீழ், படைப்பானது ஒன்றுபடுத்துவதற்கு மனிதன் பெருகவேண்டும். மனிதன் பலுகுவதற்கு, தனது மனைவியுடனான அன்பு ஒன்றிப்பால் அவனுக்கேயுரிய ஒற்றுமையானது அடையப்படுகிறது (ஆதி 2:23-24). ஆனாலும் இத்திட்டம் நிறைவேறுவதென்பது, மனிதன் இறைவனுடன் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதையும் கோருகிறது.

இவ்விசுவாச நிலையை ஏற்க மறுப்பதுதான் அடிப்படையான பாவமாகும். இறைவனுக்கு இணையானவனாக வேண்டும் என்பதற்காக மனிதன் இப்பாவத்தைச் செய்கிறான். உண்மையில் இப்பாவம் இறைவன் ஒருவரே என்பதை மறுப்பதாகும். எனவே ஒற்றுமையின் ஊற்றாக உள்ள அன்பாகிய இறைவனிடமிருந்து முறித்துக் கொள்வதாகும் இது (1 யோவா 4:16). இத்தொடக்க முறிவானது, விவாகரத்து மற்றம் பலதார மணம் மூலம் திருமணத்தின் ஒருமைப்பாட்டையும் (ஆதி 4:19; உப 24:1) பயங்கரப் பொறாமையின் மூலம் சகோதரர்களின் ஒற்றுமையையும் (ஆதி 4:6 தொ 24) பல்வேறு மொழிகளால் உயிர்ச்சித்திரமாக அடையாளப்படுத்தப்படுகின்ற தப்பெண்ணத்தின் மூலம் சமூகத்தின் ஒற்றுமையையும் (11:9) தகர்க்கப்போகின்ற பிளவுகளை உருவாக்குகின்றது.

2. உடன்படிக்கை மூலம் ஒற்றுமை தேடுதல்:-

ஒரு பரிகாரமாக, இறைவன் மனிதரைத் தேர்ந்தெடுத்து, விசுவாசத்தில் உறுதிசெய்யப்பட்ட தமது உடன்படிக்கையை அவர்களுக்கு அளிக்கிறார் (ஒசே 2:22). விசுவாசமானது உண்மையில் இறைவனுடனான ஒன்றிப்பிற்கும் அவருடைய ஒன்றிணைக்கும் பணியில் ஒத்துழைப்பதற்கும் நிபந்தனையாகும். இந்தப் பணியைப் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாகிய நோவா, ஆபிரகாம் (எச 51:2), மோசே, தாவீது, துன்புறும் ஊழியன் போன்றவர்களை அழைப்பதன் மூலம் இடைவிடாமல் புதுப்பிக்கின்றார். அவர் தமது மக்களுக்குச் சட்டத்தை அளிக்கிறார். தாவீதின் குடும்பத்திலிருந்து ஓர் அரசரைத் தேர்ந்தெடுக்கிறார். எருசலேம் ஆலயத்தில் அவர் தமது மக்களுடன் தங்குகிறார். விசுவாசத்தின் மாதிரியாக அவர் ஊழியனை அளிக்கின்றார். ஒன்றுபட்ட இஸ்ராயேலைக் கொணர்வதற்கென இவையனைத்தையும் இறைவன் செய்கிறார். பின்னரே, இஸ்ராயேல் குருத்துவ மக்களாகவும் (யாத் 19:6) ஒரு சாட்சியாகவும் (எச 43:10) தனது பணியை நிறைவு செய்ய முடியும்.

இறைவன் இஸ்ராயேல் மக்களைத் தனிப்பட்ட குலமாகப் பிரிப்பதென்பது அவர்கள் மூலமாக மற்ற நாடுகளுக்குத் தன்னை வெளிப்படுத்துவதற்கும், வழிபாட்டின் ஒன்றிப்பில் மீண்டும் அவர்களை ஒன்றுசேர்ப்பதற்குமாகும். இஸ்ராயேலின் பிரமாணிக்கமின்மையைத் தண்டிக்கச் சிதறிப்போகச் செய்தல், படைத்தவரும் மீட்பவருமாகிய ஒரே இறைவனைப் புறவினத்தாருக்கு அறிமுகப்படுத்துவதற்காகவே (எச 45). ஆனா

லும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பணியை நிறைவு செய்யவும், சாலமோனின் பிரமாணிக்கமின்மைக்குப் (1 அர 11:31 தொ) பிற்பாடு ஏற்பட்ட பிளவால் தகர்க்கப்பட்ட ஒற்றுமையை மீளவும் அமைக்கவும், ஒரே வழிபாட்டில் இஸ்ராயேலுடன் பிறநாடுகளை ஒன்று சேர்க்கவும் (ஏச 56:6 தொ), ஊழியனும், புதிய தாவீதும், மனுமகனுமானவர் வரவேண்டும். வரவிருப்பவரே இஸ்ராயேலை ஒன்றுபடுத்தி, தனது மரணத்தினால் எண்ணற்ற பாவிகளைக் காப்பாற்றுவதற்கெனப் பணிக்கப்பட்ட ஊழியன்ாவார் (ஏச 42:1; 49:6; 53:10 தொ). புனித மக்களின் தலைவராகிய மனுமகன் இவரே. இவரது ஆதிக்கம் முடிவற்றது, எல்லாவற்றையும் உள்ளடக்கியது (தானி 7:13-14.27). வரவிருக்கும் ஒருவரின் காரணமாக ஆண்டவருடைய முடிவற்ற அன்பின் ஒரே துணைவியாகிய சீயோன் எல்லா நாடுகளுக்கும் பொதுவான தாயாக உருவாவாள் (சங் 87:5; ஏச 54:1-10; 53:3 தொ). இந்த நாடுகளுக்கு ஆண்டவர், ஒருவர் மட்டுமே அரசராக இருப்பார் (செக் 14:9).

3. திருச்சபையில் அடையப் பெறும் ஒற்றுமை:-

இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட இவர், கிறிஸ்துவாகிய அவருடைய ஒரே மகன் இயேசுவே (லூக் 9:35). தம்மை அன்பு செய்து தம்மில் விசுவாசங்கொள்பவர்களுக்குத் தமது ஆவியையும் தமது தாயையும் அளித்தும் (உரோ 5:5; யோவா 19:27) சிலுவையில் பலியிடப்பட்ட தமது உடலாகிய ஒரே அப்பத்தால் அவர்களை உணவூட்டியும் (1 கொரி 10:16-17) அவர்களை ஒன்றுபடுத்துகிறார். அதன் பயனாக அனைத்து மக்களையும் அவர் ஒருடலாக்குகிறார் (எபே 2:14-18). இவ்வுடலின் உறுப்புகளாக அவர் விசுவாசிகளை அமைக்கிறார். ஏனெனில், திருச்சபையாகிய தமது உடலின் முழு நன்மைக்காகக் குறிக்கப்பட்ட அருங்கொடைகளால் அவர் தமது உறுப்பினர்களை நிரப்பியுள்ளார் (1 கொரி 12:4-27; எபே 1:22-23). இறைவனுடைய ஒரே ஆலயத்தின் உயிருள்ள கற்களாக இயேசு விசுவாசிகளை அமைக்கிறார் (எபே 2:19-22; 1 பேதுரு 2:4-5). ஒரே ஒரு மேய்ப்பர் என்ற நிலையில் எல்லாவித வேறுபாடுகளிலும், இயேசு தமது ஆடுகளை அறிகிறார் (யோவா 10:3). தமது வாழ்வை அளித்து, அதன் மூலம், இறைவனுடைய சிதறிக் கிடக்கும் பிள்ளைகளைத் தமது மந்தைக்குள் சேர்க்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம் (10:14 தொ; 11:51-52).

இச்சைகளால் கிழிக்கப்பட்ட மனிதனுடைய உள்ளார்ந்த ஒற்றுமை (உரோ 7:14-15; 8:2,9), கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமாக ஒன்றிப்பை மாதிரியாகக் கொண்ட மண வாழ்வு ஒற்றுமை (எபே 5:25-32), ஆவியினால் இப்போது அதே தந்தையின் மக்களாக்கப்பட்ட அனைத்து மக்களின் ஒற்றுமை (உரோ 8:14 தொ; எபே 4:4 தொ), போன்ற எல்லா நிலைகளிலும் கிறிஸ்து ஒற்றுமையை மீண்டும் அமைக்கிறார். இப்பிள்ளைகள் ஒரே உள்ளமும், ஒரே ஆன்மாவும் உள்ளவர்களாக இருப்பர் (அ.ப. 4:32). அவர்கள் ஒரே குரலில் தங்களுடைய தந்தையைப் போற்றுவர் (உரோ 15:5-6; அ.ப. 2:4,11).

பிளவுகளால் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாயினும் (1 கொரி 1:10), ஒரே ஆண்டவரில் ஒரே விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட (எபே 4:5.13; மத் 16:16 தொ) இந்த ஒற்றுமையை வளர்ப்பது தனிநபர்களைச் சார்ந்துள்ளது. பேதுருவின் அன்பிற்குக் கையளிக்கப்பட்டுள்ள ஒரே திருச்சபையின் அடையாளம் (யோவா 21:15 தொ) அதனுடைய ஒற்றுமையே. மனிதர்கள், கிறிஸ்துவின் அன்பில் வாழ்வதன் மூலமும், "நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்" (13:34-35) என்னும் அவருடைய உயரிய கட்டளையை விசுவாசத்துடன் கடைப்பிடிப்பதன் மூலமும், இந்த ஒற்றுமையை அடைகின்றனர். பிரமாணிக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியானது திராட்சைக் கொடிக்கும் கிளைகளுக்குமிடையிலான இணைப்புடன் (15:5-10) ஒப்பிடப்படக்கூடிய, கிறிஸ்துவோடு கொள்ளும் ஒன்றிப்பால் அளவிடப்படுகின்றன. கிறிஸ்தவ ஒற்றுமையானது, தமது ஒரே

*மகனை அளிப்பதிலான இறைவனின் அன்பை மனிதருக்கு வெளிப்படுத்துவதற்கும் (3:16), கிறிஸ்துவில் ஒற்றுமையை அடைவதற்குமான (எபே 4:13) இன்றியமையாத தேவையாகும். இது நிகழும்போது, ''தந்தாய், நாம் ஒன்றாய் இருப்பதுபோல், அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி'' (யோவா 17:21 தொ) என்னும் இயேசுவின் உயர்வான ஆசை முழுமை பெறும்.*

**ஒற்றைத்திமில் ஒட்டகம்** (DROMEDARY)

*இது வேகமாக ஓடக்கூடிய அரேபியாவைச் சேர்ந்த ஒட்டக வகையைச் சேர்ந்தது.*

*அரிஸ்தாத்திலின் காலத்திலிருந்தே இரண்டு திமில்களுள்ள பக்திரியன் ஒட்டகத்திலிருந்து ஒரு திமிலுள்ள அரேபிய ஒட்டகம் வேறுபடுத்தப்பட்டிருந்தது. ஒரே திமில் உள்ள அரேபிய ஒட்டகங்களில், பொதிசுமக்கும் ஒட்டகம் என்றும், வேகமாக ஓடும் ஒட்டகம் என்றும் இரண்டு வகை இருந்தன. இதில் இரண்டாம் வகைதான் ஏச 66:20; எரே 2:23; 1 சாமு 30:17; 1 அர 4:28; எஸ்த 8:10 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது.*

*தாவீதின் தாக்குதலிலிருந்து தப்பியோடிய அமலேக்கியர்கள் அநேகமாக இந்த ஒட்டகத்தின் மேல்தான் தப்பியோடியிருந்திருக்க வேண்டும் (1 சாமு 30:17). இதே மாதிரியான ஒட்டகம்தான் ஏச 6:20-இலும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.*

**ஒனேசிப்போர்** (ONESIPHORUS - பயன் கொண்டு வரும்)

*எபேசைச் சேர்ந்த கிறிஸ்தவனாகிய இவர் திருச்சபைக்கும் பவுலுக்கும் விசுவாசத்துடன் உழைத்தார் (1 திமோ 1:16-18). ஒனேசிப்போரின் குடும்பத்தின்மேல் இரக்கம் காட்டப் பவுல் இறைவனிடம் வேண்டுகிறார். அவருடைய வீட்டாரை வாழ்த்தும்படி திமோத்தேயுவுக்குக் கூறுகிறார். பவுல் எபேசிலும் உரோமையில் சிறையிலிருந்த போதும் ஒனேசிப்போர் ஆறுதல் அளித்ததாகக் கூறுகிறார். இங்கே ஒனேசிப்போரின் குடும்பத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளனவே தவிர, ஒனேசிப்போரைப் பற்றிய குறிப்புகள் இல்லை. எனவே அவர் வீட்டில் இல்லாமலோ இறந்திருக்கவோ கூடும். அப்படி அவர் இறந்திருப்பாரேயானால் 1 திமோ 1:18-இல் நாம் முதல் முறையாகக் கிறிஸ்தவ இறந்தோர்க்கான செபத்தைக் காணலாம்.*

*பவுல் உரோமையில் சிறைப்பட்டிருந்த போது ஒனேசிப்போர் அவரைக் குறித்து வெட்கப்படாமல் அவரைச் சென்று தேடினார். அவருடைய தேவைகளை நிறைவு செய்தார். அவர் செய்த நன்மைகளுக்கெல்லாம் கைமாறாகக் கிறிஸ்து இயேசுவின் அருளைப் பவுல் அருளுகிறார்.*

**ஒனேசிமு** (ONESIMUS - பயனுள்ள)

*பவுல் இந்த ஒனேசிமு அடிமைக்காகப் பரிந்து பேசி, பிலமோனுக்குக் கடிதம் எழுதினார். கொலோசியர் மடலைக் கொணரும் திக்கிக்குடன் ஒனேசிமு செல்வதாகக் கொலோசியர் மடல் கூறுகிறது. 'ஒனேசிமு உங்கள் சபையைச் சேர்ந்தவன் தான்' எனவும் அதில் எழுதப்பட்டுள்ளது (கொலோ 4:9).*

*ஒனேசிமு பிலமோனுக்குக் கீழே அடிமையாக இருந்து திருடிக்கொண்டு தப்பி ஓடியவர். பின்னர் உரோமையில் பவுலோடு சேர்ந்து கிறிஸ்தவனாகி, அவரது அன்பிற்கு ஆளானார். பவுல் இவரைத் தன் மகனாகக் கருதினார் (பில 10). ஒனேசிமு என்ற சொல்லின் பொருளான ''பயனுள்ள' என்பதை வைத்துச் சொல்லாடி, பவுல் பயனற்றவனாக இருந்த அவன் பயனுள்ளவனாக இருப்பதாகவும், அவனை அனுப்புவது தன் உயிரையே அனுப்புவதை ஒக்கும் எனவும் எழுதுகிறார். அவரைப் பிலமோன் தன் சகோதரனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவரைப் பிலமோனிடம் பவுல் அனுப்புகிறார்.*

*இந்த ஒனேசிமு இரண்டாம் நூற்றாண்டில் (கி.பி. 115) அந்தியோக்கிய இஞ்ஞாசியார் எழுதிய மடலில் குறிப்பிடப்பட்டுள்ள எபேசிய ஆயராக இருக்கலாம். இங்கும் இஞ்ஞாசியார் அதே வகைச் சொல்லாடல் விளையா*

டுகிறார். இப்பெயர் முதலில் அடிமைகளி டையிலும், பின் பவுலோடு தொடர்புடைய கிறிஸ்தவர்களிடையேயும் சாதாரணப் பழக் கத்தில் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவர் தான் புதிய ஏற்பாட்டில் வருபவராக இருந் தால், அவர் உயிருடன் இருந்திருந்தால் மிகுந்த வயோதிகராக இருந்திருக்க வேண் டும். அல்லது திமோத்தேயு இரண்டாம் மடலிலே வரும் ஒனேசிப்போராக் இருக்க லாம் என்று சிலர் கருதுகின்றனர். இவர் எபேசில் அதிகப் பணிபுரிந்தவர். ஒனேசிமு பயன் கொண்டுவரும் என்ற பொருளுடைய ஒனேசிப்போரின் சுருக்கமாக இருக்கலாம். இருவரும் பவுலுக்குச் சிறையில் பணிபுரிந்தி ருக்கின்றனர் (2 திமோ 1:16-17). ஒனேசிமு, திக்கிக்குடன் சென்று கொலோசே மக்களுக் கும், பிலமோனுக்கும் மடல்களைத் தந்தார். இவர்கள் இருவரும் சிறந்த நண்பர்களாய் இருந்தனர்.

# ஓ

**ஓகலா** (OHOLAH - கூடாரமுடையவர்)

இப்பெயர் சமாரியாவைக் குறிக்கிறது (*எச 23:4-5.36.44*). சமாரியா, எருசலேமைப் பற்றிய உருவகத்தில் ஓகலா, ஓகலிபா என்ற சகோதரிகளுடன் சமாரியாவும் எருசலேமும் ஒப்பிடப்பட்டுள்ளன. அக்காள், தங்கை இவ்விருவரும் முதலில் எகிப்திலும், பின்பு பக்கத்து நாட்டு மக்களுடனும் விபச்சார உறவு கொண்டிருந்தனர். எசக்கியேல், இவர்களுள் மூத்தவளான ஓகலாவைச் சமாரியாவுக்கு ஒப்பிடுகிறார் (*23:4*). அசீரிய ஆண்கள்பால் காதல் கொண்டாள். ஆண்டவர் இவளுக்குத் தண்டனையாக இவளை அசீரியர் கையில் வேசியாக ஒப்படைத்தார். இதன் காரணமாக அவள் பெண்களுக்குள்ளே பழிமொழிக்காளானாள். இந்த உருவகத்தின் வழியாக எசக்கியேல் இறைவாக்கினர் எருசலேம், சமாரியா மக்களின் சிலைவழிபாட்டையும் யாவேக்குப் பிரமாணிக்கமின்மையையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த அசீரிய சிலை வழிபாடு எசக்கியாவின் மரணத்திற்குப்பின் மனாசேயின் காலத்திலே பரவியது. இதன் காரணமாக, ஆண்டவர் அம்மக்களுக்கு அழிவை ஏற்படுத்துவதாகக் கூறுகிறார்.

**ஓகாது** (OHAD - பலம்)

இவர் சிமியோனின் மூன்றாம் மகன் (*ஆதி 46:10; யாத் 6:5*). *எண் 26:12-14; 1 நாள் 4:24-25*-இல் வரும் இதற்கிணையான மரபுமுறைப் பட்டியலில் இவர் குறிக்கப்படவில்லை.

**ஓகாம்** (HOHAM - ஓட்டப்பட்ட)

கெபிரோனின் அரசர் (*யோசு 10:3*). எருசலேமின் தென்மேற்குப் பகுதியை யோசுவா கைப்பற்றுவதைத் தடுத்து நிறுத்தப் போர் புரிந்த எமோரியர்களோடு கூட்டணியில் சேர்ந்துகொண்ட ஐந்து அரசர்களில் இவரும் ஒருவர். இவர்கள், கிபயோனியர் இஸ்ராயேலர்களோடு சமாதானம் செய்து கொண்டதற்குப் பழிதீர்க்க முயன்றனர். இதனால் யோசுவா இவரையும் இவரது கூட்டணியினரையும் பேத்து-கோரோனில் தோற்கடித்து, தூக்கிலிட்டார் (*யோசு 10:3-4.23-27*).

**ஓகு** (OG - மேன்மையான, பெரிய)

வலிமை மிகுந்த இவர் யாபோக்கு ஆற்றுக்கு வடக்கில் உள்ள பாசானின் எமோரிய மன்னன். மனாசேயின் கோத்திரத்தார் இவருடைய நாட்டைச் சொந்தமாக்கினர் (*எண் 21:33; 32:33; உப 1:4; 3:1.3-4.10-11.13; 4:47; 29:7; யோசு 2:10; 9:10; 12:4; 13:12.30-31; 1 அர 4:19; நெக 9:22; சங் 135:11; 136:20*).

இஸ்ராயேலர் மரபிலே ஓகு மன்னன் அரக்க வம்சத்தைச் சார்ந்தவராகவும் கற்பனைக் கதாநாயகனாகவும் கருதப்பட்டார். அவருடைய இரும்பினால் செய்யப்பட்ட கட்டில் ஒன்பது முழ நீளமும், 4 முழ அகலமும் கொண்டதாக இருந்தது; அவர் இறந்த வெகு காலத்திற்குப் பின்னும் ஒரு காட்சிப் பொருளாகக் கருதப்பட்டது (*உப 3:11*). இந்த ஓகுவைப் பற்றிய செய்திகள் கற்பனையாக இருக்க முடியாது. ஏனெனில் உப ஆகமம் ஓகுவைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. இவர் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள சமவெளியின் வடபகுதியில் 60 நன்கு பலப்படுத்தப்பட்ட நகரங்களைக் கொண்டிருந்தார் (*3:1-10*). மேலும் அவரது அரசில் அசித்தரோத்திலும், எதிரையிலும் இரு தலைநகர் இருந்ததாக யோசுவா நூல் கூறுகிறது (*யோசு 12:4*). ஓகு மன்னனை இஸ்ராயேலார் எதிரையில் தோற்கடித்துக் கொன்றனர் (*எண் 21:33-35; உப 1:4*). இவரது நாடு மனாசே கோத்திரத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஓகும் எமோரிய அரசன் சீகோனும் மிகப் புகழ்பெற்ற கானானிய அரசர்களாகக் கருதப்பட்டனர் (*சங் 135; 10-12; 136:18-21*). இப்பகுதியின் மேல் இஸ்ராயேலர் கொண்டிருந்த ஆதிக்கம் பலவீனமானது. அடிக்கடி தமஸ்குவின் அரேமேயர்கள் இவர்களுக்குச் சவால் விட்டனர்.

**ஓகேல்** (OHEL - *இறைவனின் கூடாரம்)*

*இவர் தாவீது மன்னனின் வழித்தோன்றல். ஒருவேளை செருபாபேலின் பேரனும் மெசுல்லாமின் மகனுமாக இருக்கலாம் (1 நாள் 3:20).*

**ஓசன்னா** (HOSANNA)

*இஃது ஓர் எபிரேய வார்த்தை. இதற்கு 'எங்களை மீட்டருளும் உம்மை வேண்டுகிறோம்' என்பது பொருள் (சங் 118:25; காண் க.2 சாமு 14:4; சங் 20:9; மத் 21:9; மாற் 11:9; யோவா 12:13).*

*அல்லேல் சங்கீதங்களின் ஒரு பகுதியான சங்.118-இல் ஒரு திருப்பயணி, பயனற்றவனாக ஒதுக்கப்பட்ட அவன் மீண்டும் நீதிமானாக ஏற்றுக் கொள்ளப்படுகிறான். எனவே ஆண்டவரின் நன்மைத்தனத்துக்கு நன்றி கூறும் வண்ணம் அவன் ஆலயத்தினுள் நுழைகிறான். யாவேயின் பெயரால் வருபவர் வாழி எனக் குருக்கள் வரவேற்கின்றனர். வசனம் 25-இல் இறைவனிடமிருந்து அதிகமாக மீட்பையும் வெற்றியையும் தரும்படி மன்றாடுகின்றான். கூடாரத் திருவிழாவின் போது இவ்வசனம் பாடப்படும். பீடத்தைச் சுற்றி நின்று இதைப் பாடுவர். அப்போது பகமைமாறாத நறுமணச் செடி மற்றும் குருத் தோலைகளைத் தூக்கிப் பிடித்து மக்கள் ஆட்டுவர். சில நேரங்களில் இம்மரக் கிளைகளையே ஓசன்னா என்பர்.*

*விவிலியக் காலத்தின் பிற்கால யூத நூல்களில் ஓசன்னா' என்பது மெசியாவின் வருகையோடு இணைத்துக் கூறப்பட்டது. ஆண்டவர் பெயரால் வருபவரே மெசியா எனப் பட்டார். ஆனால் இது பழமையானதொரு விளக்கமாகக் கருதப்படுகிறது. நறுமணச் செடிகளை ஆட்டுவது என்பதைக் கருத்திடை கொள்ளும்போது இது இயேசு எருசலேம் நகரத்தில் நுழைந்த சூழ்நிலையை நன்கு விளக்கும். அவர் வருகைக்காகக் காத்திருந்தவர்கள் குருத்தோலைகளை ஏந்தித் தாவீதின் மகனே என வாழ்த்தினர் (சங் 20:9).*

*இவர் வழியாகவே ''நம் தந்தை தாவீதின் அரசு'' வருகிறது என மாற்கு குறிப்பிடுகிறார். இவரே இஸ்ராயேலரின் அரசர் என யோவான் கூறுகின்றார். ஆதித் திருச்சபையிலே திருவிருந்தை அர்ச்சிப்பதற்குமுன் கூறப்பட்ட ''தூயவர், தூயவர், தூயவர்'' பாடலில் மத்.21:9 இடம் பெறுகிறது. இதைத் திதாங்கே-யிலும் காணலாம். ''இறைவனின் அருள் வருவதாக; உலகம் அழிவதாக; தாவீதின் இறைவனுக்கு ஓசன்னா'' என அப்போஸ்தலிக்கச் சட்டம் கூறுகிறது.*

**ஓசாமா** (HOSAMA - *யாவே கேட்டருளினார்)*

*யோயாக்கினின் ஏழு புதல்வர்களில் ஒருவர். நாடுகடத்தப் பட்டிருந்த போது பிறந்தவர் (1 நாள் 3:18).*

**ஓசாயா** (HOSHAIAH - *யாவே மீட்டுவிட்டார்)*

*1. அசரியா (16) (எரே 42:1) அல்லது எசனியாவின் தந்தை. எரேமியாவுக்கு எதிரி. அசரியா எருசலேம் வீழ்ச்சிக்குப் பிறகு யூதர்கள் மத்தியில் தலைவராக விளங்கியவர். அவர் ஒரு மாக்காவியர்போல் தோன்றுகிறது (40:8).*

*2. எருசலேம் மதிலைப் புதுப்பித்து அர்ப்பண விழா எடுத்தபோது, விழா ஊர்வலத்தில் கலந்துகொண்ட யூதாவின் இளவரசர்களில் ஒருவர் (நெக 12:32).*

**ஓசியா** (HOSHEA *யாவே காப்பாற்றுவாராக)*

*1. இது யோசுவாவின் மூலப் பெயராகும். இவர் எப்பிராயிமியக் கோத்திரத்தாரான நூனின் புதல்வராவார் (எண் 13:8). மோசே தான் இவரது பெயரையும் அதன் பொருளையும் மாற்றி (13:16), யாவேயின் மீட்புச் செயல்களை உறுதிப்படுத்தினார் (எண் 13:17).*

*2. தாவீதின் அலுவலர்களில் ஒருவர். எப்பிராயிம் கோத்திரத்தாரின் தலைவராவார். அசசியாவின் புதல்வராவார் (1 நாள் 27:20).*

*3. ஓசேயா என்ற பெயரின் எபிரேய வடிவம். 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த*

இறைவாக்கினர். இவரது கூற்றுகள் ஓசேயா நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. காண்க ஓசேயா.

*4. இவர் வட அரசாகிய இஸ்ராயேலின் கடைசி அரசராவார் (கி.மு. 732-724). ஏலா வின் புதல்வராவார். பெக்காவைக் கொலை செய்தவரும் அவருக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவரும் ஆவார் (2 அர 15:30). ஐந்தாம் சால்மனேசரால் சிறைக்கைதி யாகக் கொண்டு செல்லப்பட்டார்.*

*இவர் பெக்காவைச் சூழ்ச்சி செய்து கொலை செய்து, அரசராகப் பொறுப்பேற் றார். ஆனால் திகிலாத்து-பிலேசர் என்பவர் தான் ஓசியாவை அரசராக்கியதாக உரிமை கொண்டாடுகிறார். அசீரிய மன்னனின் சம்ம தம் இல்லாமல் ஓசியா அரசர் ஆகியிருக்க முடியாது. எனவே இரண்டு கூற்றுக்களும் சரியானதாகும். இவர் ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சி செய்தார் (2 அர 17:1).*

*'ஆண்டவரின் பார்வையில் எது தீமையா கப்பட்டதோ அதையே இவர் செய்தார்' என்று உபாகமப் பாரம்பரிய ஆசிரியர் கூறி னாலும் இவருக்கு முன்னிருந்த அரசர்க ளைப்போல் இவரில்லை என்ற கருத்தும் (2 அர 17:2) சேர்த்துக் கூறப்படுகின்றது.*

*அசீரியாவின் ஆதிக்கம் இன்னும் நீடித் தது. கி.மு. 727-இல் மூன்றாம் திகிலாத்து-பிலேசர் இறந்தபின் அவரது புதல்வர் ஐந் தாம் சால்மனேசர் ஆட்சிக்கு வந்தார். இந்த ஆண்டுவரைக்கும் ஓசியா தொடர்ந்து திகி லாத்து-பிலேசருக்குச் செலுத்தவேண்டிய திறையினைச் செலுத்திக் கொண்டுதான் இருந்தார். கப்பம் செலுத்தும் சுமையினைத் தாங்க இயலாமல் திகிலாத்து-பிலேசர் இறக் கும் தருவாயில் இருக்கும்பொழுது ஓசியா கிளர்ச்சி செய்தார். இந்தப் புரட்சிக்கு எகிப் தும் உதவியது. மீண்டும் சால்மனேசர் ஆட் சிக்கு வந்தபின் கி.மு. 704-இல் ஓசியாவிற்கு எதிராகப் படையெடுத்துவர, அவர் அடி பணிந்து கப்பம் செலுத்தலானார் (2 அர 17:3). ஆனால் ஓசியா திறை செலுத்த மறுத்ததால் அவரைச் சிறையிலடைத்துவிட்டு, சால்ம னேசர் சமாரியாவை முற்றுகையிட்டார். இந்த முற்றுகையானது மூன்று வருடங்களுக் குத் தொடர்ந்தது. அதற்குள் சால்மனேசர் இறந்துவிட்டார். 2-ஆம் சார்கோன் பதவிக்கு வந்தார்.*

*விவிலியக் குறிப்பினைப் பொறுத்தவரை யிலும் அசீரிய அரசனின் பெயரில் குழப்படி இருக்கின்றது. ஏனென்றால் 2 அர 17:6-இல் ''ஓசியாவின் ஆட்சியின் ஒன்பதாம் ஆண் டில் அசீரிய அரசன் சமாரியாவைப் பிடித் தான்'' என்று கூறப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இதற்கு இணையான பகுதியா கிய 18:9-10-இல் 'அசீரிய அரசன் சால்மனே சர் சமாரியாவிற்கு வந்து அதை முற்றுகை யிட்டுப் பிடித்தார். அதைப்பிடிக்க மூன்று ஆண்டுகள் ஆயின' என்று கூறப்பட்டிருக் கின்றது. சால்மனேசருக்குப்பின் அரசராக வந்த 2-ஆம் சார்கோன் இஸ்ராயேல் மக்க ளைச் சிறைப்பிடித்துக்கொண்டு போய்க் கெலாகு, காபோர், கோசான் மேதிய நகரங் கள் போன்ற இடங்களில் குடியேறக் கட்ட ளையிட்டார் (2 அர 17:6). சமாரியாவில் இவர்கள் இருந்த இடத்தில் பாபிலோன், கூத்தா, அவ்வா, கமாத்து, செப்பாவாயிம் ஆகிய இடங்களிலிருந்து வேற்று மக்களைக் குடியேற்றினார் (17:24).*

*5. எஸ்ரா-நெகமியா காலத்தில், புதுப்பிக் கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்ப மிட்டவர்களில் ஒருவர் (நெக 10:23).*

**ஓசியேல்** *(OZIEL)*

*யூதித்தின் முன்னோர் (யூதி 8:1).*

**ஓசிரிங்கஸ் துணுக்குகள்** *(OXYRHYNCHUS FRAGMENTS)*

*கயிரோவுக்குத் தெற்கே 185 கி.மீ. தொலை விலுள்ள பழங்கால ஓசிரிங்கசில் (நவீன பெக்னேசாவில்) கண்டுபிடிக்கப்பட்ட பல கையெழுத்துத் துணுக்குகளில் பல புதிய ஏற்பாட்டு நூல்களின் துணுக்குகளும் திரு முறை சேராத நற்செய்திகளிலிருந்து நான்கு துணுக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பின் னவற்றில் மூன்று கி.பி. 3-ஆம் நூற்றாண்*

டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இவை புல் தாள் துணுக்குகளாகும். இவற்றில் திரு முறைத் தொகுப்பைச் சேராத தோமையாரின் நற்செய்தி நூலில் இயேசுவின் கூற்றுகளும் கிரேக்க மொழியில் உள்ளன. இவற்றின் கோப்டிக் மொழிபெயர்ப்பு நக்-கம்மாதீ ஏட் டுத் தொகுப்பில் முழுவதும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

நான்காவது துணுக்கு கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோல் துணுக் காகும். இதில் லேவி என்ற ஒரு ''பரிசேயப் பெரிய குரு'' இயேசுவும் அவரது சீடர்களும் ஆலயத்துக்குள் நுழைவதற்குரிய தூய்மைச் சடங்குகளைச் செய்யவில்லை என்று குற்றம் சாற்றி, ஆலய முற்றத்தில் சவால் விடுகிறார். லேவி குழித்த நீரையும் ''உயிருள்ள நீரையும்'' வேறுபடுத்தி இயேசு பதில் அளிக்கிறார். இச்சட்டம் பற்றிய பரிசேயர்களின் பாரம்ப ரிய விளக்கங்கள் பற்றிச் சட்டவல்லுநர்க ளோடு இயேசு நடத்திய தர்க்கங்கள் ஒத் தமை நற்செய்திகளின் விவரிப்புகளோடு ஒத்திருக்கிறது (காண்க.மாற் 2:23-28; 7:1-23).

**ஓசு** (OX - தெளித்தல்)

இஸ்ராயேல் இனத்தில் தோன்றியவர். இவர் மெராரியின் தந்தை. யூதித்தின் தாத்தா (யூதி 8:1; ஆதி 22:21).

**ஓசேம்** (OZEM - பலம்)

1. இவர் ஈசாயியின் ஆறாவது மகனும் தாவீது மன்னனின் சகோதரனுமாவார் (1 நாள் 2:15).

2. யூதா வழித்தோன்றலாகிய இவர் எரகு மேலின் ஐந்து புதல்வர்களில் நான்காமவர் ஆவார் (1 நாள் 2:25).

**ஓசேயா** (HOSEA - யாவே காப்பாற்றுவாராக) - இறைவாக்கினர்

நூல் பெற்ற பன்னிரண்டு சிறிய இறை வாக்கினர்களில் ஒருவர். கி.மு.8-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தவர். நூல் பெற்ற இறை வாக்கினர்களில் இவர் ஒருவர்தான் வட அரசாகிய இஸ்ராயேலைச் சேர்ந்தவர்.

பெயேரீ என்பவர் இவரது தந்தையாவர் என்பதைத் தவிர, அதிகம் இவரைப் பற்றிக் கூறமுடியாது. ஆமோசை அடுத்து, இவர் இஸ்ராயேலில் தனது பணியைத் தொடங்கி 40 ஆண்டுகளுக்குச் செய்திருக்கவேண்டும். இஸ்ராயேலில் 2-ஆம் எரொபயாமின் இறு திக்காலத்திலிருந்து (779-747) யூதாவில் எசக் கியாவின் எழுச்சிவரை (715 ஓசே 1:1) இவர் இறைவாக்குரைத்திருக்க வேண்டும். ஆனால் 721-இல் சமாரியா வீழ்ந்தபின் இவர் இறைவாக்குரைத்தற்கு ஒரு சான்றுமில்லை. இவரது பின்னணியைப் பற்றி அறிஞர்களி டையே கருத்தொற்றுமையில்லை. இவர் குருத்துவத்தோடோ, அதிகாரப்பூர்வமான இறைவாக்கினர்களோடோ தொடர்புடைய வரா? இவர் வட அரசைச் சேர்ந்தவர்தானா? கோமேரோடு இவர் செய்து கொண்ட திரு மணம் துன்பமிக்கது. ஆனால் உண்மையானது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். இத்திருமணம் இறைவனுக்கும் இஸ்ராயே லுக்குமிடையே நிலவிய உறவை எடுத்துக் காட்டியது.

**ஓசேயா நூல்** (BOOK OF HOSEA)

1. முன்னுரை:-

வட அரசாகிய இஸ்ராயேலுக்கு, எலியா, எலிசா, ஆமோஸ், ஓசேயா ஆகிய நான்கு இறைவாக்கினர்கள் அனுப்பப்பட்டனர். இறுதியாக வந்த ஓசேயா, இஸ்ராயேல் ஓர் அளவு செல்வச் செழிப்பில் மிதந்து கொண் டிருந்த காலத்தில் தோன்றினார். ஆமோசுக் குச் சமகாலத்தவர். ஆனாலும் ஆமோசின் போதகத்திலிருந்து ஓசேயாவின் போதகம் பெரிதும் வேறுபட்டது எனலாம். ஆமோஸ் தன் பணி முடிந்து தன் இறைவாக்குகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்துக் கொண்டிருந்த போது, ஓசேயா போதிக்கத் தொடங்கினார் என்று கருத இடமிருக்கிறது. அப்போது, எசயாவும் மீக்காவும் யூதாவில் இன்னும் போதிக்கத் தொடங்கவில்லை. ஓசேயா வட அரசைச் சேர்ந்தவர்; தனது சொந்த மக்க ளுக்கே இறைவாக்குரைத்தவர். இறை யன்பை எடுத்துக்காட்டி மக்களை அவர்க ளது சமயத் தூக்க மயக்கத்திலிருந்து எழுப்ப முயன்றார். ஓசேயா பழைய ஏற்பாட்டு

கவர்ச்சிமிக்க இறைவாக்கினர்களுள் ஒருவராவர். உணர்ச்சி வசப்படக் கூடியவர். மன எழுச்சி தரும் வாக்குகளை அறிவிக்க வல்லவர். இறையன்பு பற்றிய கருத்துக்களில் புதிய ஏற்பாட்டுக்கு மிக நெருங்கியவற்றை வழங்கிய பழைய ஏற்பாட்டு ஆசிரியர். இஸ்ராயேல் வரலாற்றில் இடுக்கண்மிக்க காலத்தில் செயலாற்றினார். கி.மு. 721-இல் அசீரியர்களால் வரவிருந்த பேரழிவு நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தக் கொடிய துன்பமிக்க நிகழ்ச்சிக்குமுன், இஸ்ராயேலரை இறைவன்பால் ஈர்க்கும் அலுவல் ஓசேயாவுக்கு அளிக்கப்பட்டது. இப்பணியை வெகு சிரத்தையாகச் செய்தார். உணர்ச்சி மிக்க விதத்தில் மனவெழுச்சி தரும் சொற்களில், கிளர்ச்சிசெய்யும், பிடிமுரண்டான இஸ்ராயேலுக்கு இறைவனது அன்பை எடுத்தியம்பினார். இறையன்பு பற்றிய சொல்லோவியம் வரைவதில் வல்லவர்.

2. பெயரும் வாழ்க்கையும்:-

ஓசேயா என்ற சொல்லுக்கு மீட்பர் என்ற பொருளுண்டு. இயேசு, யோசுவா என்ற பெயர் ஓசேயா என்ற பெயரோடு தொடர்புடையன. மோசேயின் பணியாளரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு இட்டுச் சென்றவருமான யோசுவா, முதலில் ஓசேயா அல்லது ஓசியா என்று அழைக்கப்பட்டார். இதை மோசே எகோசுவா (யாவே மீட்கிறார்) என்று மாற்றினார் (எண் 13:17). இச்சொல் ஏசுவா என்று மாறியது. இப்பெயர்தான் கன்னிமரியாளின் மகனுக்குச் சூட்டப்பட்டது. இப்பெயர் கிரேக்க மொழியில் இயேசுஸ் என்று மாறியது. இதை நாம் இயேசு என்று பயன்படுத்துகிறோம்.

இறைவாக்கினர் ஓசேயா பெயேரியின் மகனாவார் (ஓசே 1:1). இவர் வட அரசாகிய இஸ்ராயேலைச் சேர்ந்தவர் (2:1; 7:5). இவரைப் பற்றி வெகு சிறிதே அறிகிறோம். அதுவும் இந்நூலில் காணப்படும் குறிப்புகளில் இருந்துதான் அறிகிறோம். ஓசேயாவின் திருமண அனுபவம் அவரது வாழ்க்கையைப் பாதித்தது; அவர் இஸ்ராயேலருக்கு அளித்த செய்தியையும் பாதித்தது; உருக்கொடுத்தது. ஓசேயா திபிலாயிமின் மகளான கோமேரை மணந்தார். இது அவரது வாழ்க்கையைத் துன்பமிக்கதாகவும் குழப்பமிக்கதாகவும் ஆக்கியது. கோமேர் மூன்று குழந்தைகளைப் பெற்றளித்தாள். முதல் குழந்தையும் மகனுமானவனுக்கு இசிரியேல் (பல தலை முறைகள் பெறுவான்) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இரண்டாவது குழந்தையாகிய மகளுக்கு ''லோருகாமா'' (அன்பு பெறாதவள்) என்றும், மூன்றாவது குழந்தையாகிய மகனுக்கு ''லோஅம்மீ'' (என் மக்கள் அல்லர்) என்றும் தீய அடையாளப் பெயர்கள் கொடுக்கப்பட்டன. இவர்களுக்கும் இவர்களது தாயின் விபச்சாரத்திற்கும் தொடர்பில்லை. அவரது குற்றம்பற்றிய குறிப்பேயில்லை. ஆகவே ஓசேயாவின் மக்கள் முறையான திருமணத்தில் பிறந்தவர்கள் என்று ஏற்றுக் கொள்ளலாம். காலப்போக்கில் கோமேர் தன் கணவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவில்லை. பிற ஆடவரிடம் இன்பம் தேடத் தொடங்கினாள். இறுதியில் சடங்கு விபச்சாரியானாள். ஆனால் ஓசேயா இப்படிப்பட்ட கோமேரை இன்னும் அன்பு செய்தார். அவளைத் தேடி மீட்டு வந்து தன் வீட்டில் ஏற்றுக் கொண்டார். இந்தத் துன்பமிக்க ஆனால் மன்னிப்பும், நிலையான அன்பும் கலந்த வாழ்க்கைதான் ஓசேயாவினுடையது. இது ஒரு நம்பமுடியாத கதையாகத் தோன்றலாம். இக்கதை இறைவாக்கினரின் சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதா, அல்லது வெறும் உருவகவடிவமான இறைவாக்குப் பாடல் கதையா என்பது பற்றி வாதங்கள் உண்டு. முன்னது உண்மையாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்நூலில் காணப்படும் இறைவாக்கினரின் மனைவியின் பெயர், 1:8-இல் வரும் குழந்தையைப்பால் குடி மறக்கச் செய்தல், கோமேரை விலை கொடுத்து வாங்குதல் போன்றவை இறைவாக்கினரின் வாழ்க்கை விவரிப்பை வெறும் உருவகமாகக் கருதத் தடையாயுள்ளன. நூலில் காணப்படும் குறிப்புகளில் இருந்து இறைவாக்கினரின் திருமண அனுபவம் அவருடைய வாழ்க்கையையும் அவரது செய்தியையும் பாதித்தது;

தனிச் சிறப்புடைய தாக்கியது; மனதில் பதிய வைக்கும் ஒன்றாக்கியது. இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே நிலவிய அன்புறவை எடுத்துக் காட்டும் மிகச் சிறந்த அடையாளமாகியது.

மற்ற இறைவாக்கினர்களைப் போன்று, ஓசேயாவையும் மக்கள் பழித்துரைத்தனர்; கேலி செய்தனர் (9:7 தொ). தனது இறைவாக்கு உரைக்கும் பணியை ''என் கடவுளின் மக்களாகிய எப்பிராயிமுக்கு இறைவாக்கினன் காவல் காரனனாய் இருக்கின்றான்'' என்று ஓசேயா விவரிக்கின்றார் (9:8). இஸ்ராயேலர் அசீரியர்களோடு கொண்ட நட்புறவு பற்றி ஓசேயா குறிப்பிடுவதிலிருந்து அசீரியர்கள் இஸ்ராயேலர்களை மூர்க்கத்தனமாய், முழுமையாக, கி.மு. 722-இல் அழித்ததற்குச் சில ஆண்டுகளுக்குமுன் (2 அர 17) ஓசேயாவின் பணி முடிந்திருக்க வேண்டும் என்று கருதலாம். அவரது இறுதிக்காலம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது.

ஓசேயாவில் காணப்படும் வரலாற்று அறிவு, கடந்த காலம் பற்றிய பரந்த முதிர்ந்த தீர்ப்பு, அவர் காலத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு, அவரது நடையில் காணப்படும் நயமான நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உருவகங்கள் ஆகியவை அவர் பண்பாடுடைய வகுப்பினரைச் சேர்ந்தவர் என்று காட்டுகின்றன. அவர் குருகுலத்தைச் சேர்ந்தவர் என்று கூறமுடியாது. 9:7-இல் காணப்படும் இடித்துரையிலிருந்து அவர் நபிகளின் குழுவைச் சேர்ந்தவர் என்றும் கூறமுடியாது.

3. அரசியல் பின்னணி:-

இந்நூலின் பொதுப் பின்னணி ஆமோசில் காணப்படுவதைப்போன்றதே. ஆனால் ஆமோஸ் முன்னறிவித்த சமூகவீழ்ச்சி இப்போது ஏற்கனவே நிகழ்ந்த விட்டதொன்றாகும்.

நூலின் தொடக்கம், ஓசேயா இரண்டாம் எரொபயாமின் ஆட்சிக் காலத்தில் இறைவாக்குரைத்ததாகக் கூறுகிறது. ஆனால் இரண்டாம் எரொபயாமின் மகனான செக்கரியா (746-45), சல்லூம் (745), மெனகேம் (கி.மு. 745-738) ஆகிய மூன்று அரசர்கள் காலத்திலும் ஓசேயாவின் இறைவாக்குரைக்கும் பணி நீடித்தது என்பது உறுதி. எரொபயாமின் மரணத்துக்குப்பின் இருபது ஆண்டுகளுக்கு நாட்டில் அரசியல் குழப்பம் தொடர்ந்து நிலவியது. சல்லூம், செக்கரியாவையும், மெனகேம் சல்லூமையும் கொன்றனர். மெனகேமின் காலத்தில் ''அசீரியாவின் அரசன் பூல் இஸ்ராயேல் நாட்டின் மீது படையெடுத்தான்'' (2 அர 15:19). பூல் என்பது மூன்றாம் திகிலாத்து பிலேசருடைய பாபிலோனியப் பெயராகும். பேரழிவுக்குத் தீர்ப்பிடப்பட்ட இஸ்ராயேல்மீது அசீரியர்களின் பேரபாயம் இறங்கியது.

உண்டு கொழுத்துச் சுகத்தைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்ட இஸ்ராயேலர் ஆற்றல் மிக்க பூலின் தலைமையில் முன்னேறிக் கொண்டிருந்த பெரும் சேனையின் பேரிரைச்சலைக் கேட்கத் தவறினர் அல்லது புறக்கணித்தனர். இதன் விளைவாக மெனகேம் பூலுக்குப் (738/37) பெரும் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. மெனகேமின் மகனான பாசேயாவை அவன் அரசுக்கு வந்த இரு ஆண்டுகளில் பெக்கா (737-32) கொன்றான். பெக்காவை இரு வருடங்களுக்குப் பின் ஓசியா (732-724) கொன்றான். ஓசியா தான் இஸ்ராயேலரின் கடைசி அரசன். பத்து ஆண்டுகளுக்குப்பின் வட அரசு அழிந்து போயிற்று. இந்தச் சிக்கல் மிக்க அரசியல் பின்னணியில் இறைவாக்கினர் ஓசேயா தனது பணியை நிறைவேற்றினார்.

4. சமய, சமூகப்பணி:-

எரொபயாமின் ஆட்சிக் காலத்தில் இஸ்ராயேல் நாடு பல வழிகளில் செல்வச் செழிப்பு நிலையில் இருந்தது. உண்டு கொழுத்த செல்வர்களையும் தலைவர்களையும் ஆமோசின் போதகம் ஒரு சிறிதும் மாற்றவில்லை. ஊழல் மிகுந்தது. அநீதி பெருகிற்று. எளியோரும் வறியோரும் பெரிதும் துன்புற்றனர். ஆமோசின் காலத்தில் நிலவிய சமய சமூக நிலையே ஓசேயாவின் காலத்திலும் நிலவியது. இவற்றை ஆமோஸ் - திருநூல் என்ற தலைப்பின் கீழ் வாசித்தறியலாம்.

இந்நூலில் உடன்படிக்கை இறையியல், உபாகமச் சட்டமரபு, சிலை வழிபாடு ஆகிய மூன்று சமயக் கருத்துக்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

5. எப்போது? எங்கு?

யூதாவில் ஊசியா (கி.மு. 793-750), யோத்தாம் (750-742) ஆகாசு (742-715), எசக்கியா (715-687) ஆகியோரும் இஸ்ராயேலில் எரொபயாமும் ஆட்சி செய்தபோது ஓசேயா இறைவாக்குரைத்தாரென்று அறிகிறோம் (1:1). இவர் தன் பணியை ஏகூவின் மரபு ஆட்சி செய்தபோது தொடங்கியதாகத் தெரிகிறது (1:4). இதன்படி எரொபயாமின் மகன் செக்கரியாவின் மரணத்திற்குமுன் செயல்படத் தொடங்கி இருக்கலாம். 7:16; 8:4; 10:3.15 ஆகிய வாசகங்களின்படி, கி.மு. 746-க்குப் பின் அரச மாற்றங்களின் துன்பங்களுக்கு இறைவாக்கினர் ஓசேயா சாட்சியாகிறார். திகிலாத்து-பிலேசருக்கு மெனகேம் கப்பம் கட்டியதற்கும், அசீரியர்களோடு அவன் கொண்ட உறவுக்கும் 5:13; 7:11-12; 8:9; 10:5-7; 12:2 ஆகிய குறிப்புகள் சான்றாக அமைகின்றன. சீரியர்களும் எப்பிராயிமும் நடத்தியபோரை 5:8-6:6 என்ற பகுதி சுட்டுகிறது. இஸ்ராயேலரின் கடைசி அரசரான ஓசியா எகிப்தியரோடு கொண்ட உறவு பற்றி 7:11; 9:6; 12:2 ஆகிய வாசகங்கள் சுட்டுகின்றன. சமாரியாவின் வீழ்ச்சி, வட அரசின் அழிவு ஆகியவற்றுக்குப்பின் இறைவாக்கினர் ஓசேயா பணியாற்றினார் என்று சுட்டும் எக்குறிப்பும் இல்லை. ஆகவே 2-ஆம் எரொபயாம், செக்கரியா, சல்லூம், மெனகேம் ஆகியோர் காலத்தில் ஓசேயா இறைவாக்குரைத்திருக்கலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஓசேயா கி.மு. 750-25-க்கு இடைப்பட்ட காலத்தில், தன் பணியைச் செய்திருக்கலாம் என்று கூறலாம். இவர் ஆமோசுக்கு இணையான காலத்தவரானாலும், ஆமோசுக்குப் பின்னரே இறைவாக்குரைத்தார். ஏசயாவுக்குச் சமகாலத்தவராயினும் ஏசயாவுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே இறைவாக்குரைத்தார் எனலாம். ஓசேயாவின் இறைவாக்குகள் எப்போது நூல்வடிவம் பெற்றன என்றும், நமக்குக் கிடைத்துள்ள வடிவம் எப்போது இறுதியாகப் பதிப்பிக்கப்பட்டது என்றும் உறுதியாகக் கூற முடியாது.

இந்நூலின் தொடக்க வாக்கியம் யூதாவாகிய தென் அரசில் ஆட்சி செய்த அரசர்களுக்கு முக்கியம் அளிப்பதாகத் தெரிகிறது. இந்த யூகம் இந்நூல் இறுதியாக யூதாவில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகிறது. இது விநோதமாகத் தோன்றலாம். ஏனெனில் ஓசேயா வட அரசைச் சேர்ந்தவர். அங்குதான் இறைவாக்குரைத்தார். வடஅரச மக்களுக்குத்தான் தனது சிறப்புச் செய்தியை அளித்தார். சமாரியா பிடிபட்டு அழியுமுன், இருண்ட கொடுமை மிக்க அவநம்பிக்கை மிகுந்த, அரசியல் குழப்பமிக்க வட அரசின் இறுதி ஆண்டுகளில் ஓசேயா கொடிய மரணம் எய்தியிருக்கலாம். இந்நூல் வட அரசில் தோன்றியிருந்தால், வட பகுதி அரசர்களை மட்டுமே வைத்துக் காலவரையறை செய்து தோன்றியிருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கலாம். ஆனால் யூதாவின் அரசர்கள் சிறப்புப் பெறுகின்றனர். இதற்கு ஓசேயா இறந்தபின் கி.மு. 722-இல் சமாரியா அழிந்தபின் யூதாவில் இந்நூல் பதிக்கப்பட்டது காரணமாய் இருக்கலாம். இந்த அழிவிலிருந்து தப்பிய ஓசேயாவுக்குப் பற்றுறுதியான சீடர்களும் ஒருவரோ பலரோ இறைவாக்குகளை ஒன்று சேர்த்து ஒரே நூலாகத் தொகுத்திருக்கலாம். அப்படிச் செய்தபோது யூதாவுக்குப் பொருத்தமான குறிப்புகளைச் சேர்த்து ஓசேயாவின் இறைவாக்குகளைத் தங்கள் காலத்திற்கு ஏற்றதாகவும் யூதாவுக்கு உரியதாகவும் செய்தனர் (1:1.7; 4:15; 5:5; 6:4.11; 8:14; 10:11; 12:1). ஏனெனில் யூதாவும் சமய, சமூக இழிநிலையிலேயே இருந்தது. அதற்கும் சமய சமூகச் சீர்திருத்தம் தேவைப்பட்டது.

6. இலக்கியச் சிறப்பு:-

பழைய ஏற்பாட்டு எபிரேய வாசகத்தில் இந்நூலின் வாசகம்தான் மிகவும் பழுதுபட்ட நிலையில் நமக்குக் கிடைத்துள்ளது. இதற்குப் பொறுப்பானவர் யாவர் என அறியோம். சில பகுதிகளை மொழி பெயர்க்க மூலமொழி வாசகம் இதுவாகத்தான் இருக்

குமென ஊகிக்க வேண்டியுள்ளது. ஆயினும் புலமைவாய்ந்த மொழி பெயர்ப்புகள் பல வற்றினிடையே ஓரளவு ஒற்றுமை காணப் படுவது வியப்புக்குரியதாகும்.

இந்நூலில் எத்தகைய திட்டமும் அமைப் பும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குப் பொறுப்பானவர் ஓசேயாவா? அல்லது அவ ரது சீடர்களா? யாராய் இருந்தாலும் இறை வாக்கினரின் பல கூற்றுக்களை ஒட்டு மொத் தமாகக் குவித்துத் தருகின்றனர். முதல் மூன்று அதிகாரங்களில் மாறா அன்புடைய காதலனாகிய யாவேயைப் பற்றிய விவரிப்பு வருகிறது. அதி. 14-இல் மெசியாவைப்பற் றிக் குறிப்பு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையில் மற்றக் கருத்துக்கள் எல்லாம் குவிக்கப்படுகின்றன. தந்திச்செய்திபோன்ற நடையுண்டு. மனவெழுச்சி மிக்க போக்கும் எங்கும் பரவிக்கிடக்கிறது. ஓர் உணர்ச்சியிலி ருந்து திடீரென மறு உணர்ச்சிக்குத் தாவுதல் சர்வசாதாரணம். தனித்து நிற்கும் வாக்குப் பகுதிகள் பல உண்டு. மொழிகடினமானது. வாக்குகள் சுருக்கமானவை; பொருள் பொதிந்தவை. காலவரையறைப்படியோ, அறிவு சார்ந்த முறையிலோ, ஆன்மீகப் பொருள் அடிப்படையிலோ, எத்தகைய திட்டத்தின் படியும் நூல் அமைக்கப்பெறவில்லை. ஆசிரி யர் ஓர் உணர்ச்சியிலிருந்து நேர் எதிர் உணர்ச் சிக்குத் தாவும் தன்மையுடையவர். இத்தகை யவரிடமிருந்து திட்டமிட்ட நூலை நாம் எதிர்பார்க்க முடியாது. நாட்டில் நிலவிய அரசியல் குழப்ப நிலையும் இந்நூலைப் பாதித்தது எனலாம். ஓசேயாவின் வாக்குகள் இறை ஏவுதல் பெற்றவர்களால் பாதுகாக்கப் பட்டுப் பிற்காலத்தில் எத்தகைய திட்டமும் இல்லாமல் ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டி ருக்க வேண்டும். அறிவுசார்ந்த முறையிலும், தலைப்பின் அடிப்படையிலும் ஒழுங்கு செய்ய வேண்டியதின் அவசியத்தையோ, அப்படிச் செய்வது இயலும் என்றோ பதிப் பாசிரியர்கள் உணர்ந்ததாகத் தெரிய வில்லை. கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. ஆகையால் இந்நூலை வாசிக்கும் போது ஒரு பகுதி அதே அதிகாரத்தில் வரும் மற்றப்பகுதிகளோடு எப்படித் தொடர்புடை யது என்று வியந்து கொண்டிராமல் ஒவ் வொரு பகுதியிலும் காணப்படும் செய்தி யோடு வாசகர்கள் மனநிறைவடைய வேண் டும். சாதாரணமாய் நூலில் கொடுக்கப்பட்டி ருக்கும் துணைத்தலைப்புக்களும், விளக்கங் களும் தனிப்பகுதிகளின் செய்தியைக் கண்டு ணர வாசகர்களுக்கு உதவலாம்.

இந்நூலில் அச்சுறுத்தல்கள் உண்டு; மனந் திரும்பக்கோரும் அழைப்புகள் உண்டு. வருங்காலத்திற்கு நம்பிக்கை அளிக்கும் மெசியா பற்றிய வாக்குகளும் காணக்கிடக் கின்றன. நகரவாயில்களில் மூப்பர்கள்முன் நடக்கும் வழக்காடும் அமைப்பை இறை வாக்கினர் விரும்பிப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அதனால் யாவேவின் சொற்க ளையும் இறைவாக்கினரின் சொற்களையும் வேறுபடுத்துவது கடினம். நூல் முழுவதும் அன்பு பற்றிய உருவகங்கள் நறுமணம் கமழ் கின்றன. இணையமைப்பு, சொற்களை வைத்து விளையாடுதல், எதுகை மோனை யோடு முக்கிய கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறுதல் ஆகியவற்றைச் செவிசாய்ப் போரின் கவனத்தை ஈர்க்க ஓசேயா பயன் படுத்துகிறார்.

யூதாவைப் பற்றிய கூற்றுகள் (1:7; 5:5; 6:11; 12:1), சில பகுதிகளில் சிந்தனை ஓட் டத்தைத் தடை செய்கின்றன. ஒரு வேளை ஓசேயாவின் மரணத்திற்குப்பின் யூதாவைச் சேர்ந்த பதிப்பாசிரியர்களால் இவை புகுத் தப்பட்டிருக்கலாம். இவை யூதாவைச் சார்ந்த மக்களுக்கும் ஓசேயாவின் கூற்றுக்கள் பொருத்தமானவை என்று காட்டப் புகுத்தப் பட்டிருக்கலாம்.

நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் இந் நூல் கி.மு. 700-ஐ ஒட்டி நிலையான எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம். அறிஞர்கள் பொதுவாக இந்நூலின் உண்மைத் தன் மையை ஏற்றுக்கொள்வர். இந்நூலை ஓசே யாவே எழுதினார் என்று கருதுபவர்களும் உண்டு. ஆனால் பெரும் பகுதி ஓசேயாவின் சீடர்களால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்ட தென்பதே உண்மையாக இருக்கலாம்.

*7. திட்டம்:*

இந்நூலில் தெளிவான திட்டம் இல்லையாயினும் இதைப் பின் வருமாறு பிரித்துத் திட்டம் அமைக்கலாம்.

*1) முன்னுரை 1:1.*

*2) ஓசேயாவின் திருமணமும் அதன் உட்பொருளும் (1:2-3:5).*

*3) இஸ்ராயேலுக்கு எதிரான இறைவாக்குகள் (4:1-14:1).*

*4) இஸ்ராயேல் மனந்திரும்ப அழைப்பு (14:2-9).*

*5) முடிவுரை:- அறவுரை (14:10).*

*8. சிறப்புக் கருத்துக்கள்:-*

*8. அ. உடன்படிக்கை அன்பு:-*

ஓசேயாவின் முக்கிய செய்தி ''கெசது'' என்ற சொல்லைச் சுற்றிச் சுழல்கிறது. இச்சொல் பழைய ஏற்பாட்டில் 247 தடவை வருகிறது. இச்சொல்லை இரக்கம், அருள், அன்பிரக்கம் என்று பலவாறு மொழிபெயர்ப்பர். ஆனால் இவற்றில் எதுவும் அதன் உண்மைப் பொருளை முழுமையாக உணர்த்தவில்லை எனலாம். இது உடன்படிக்கையோடு உறவு கொண்ட சொல்லாகும்; உடன்படிக்கை செய்து கொள்வோரிடையே நிலவ வேண்டிய பற்றுறுதியையும், உறவையும் உணர்த்தும். இறைவனைப் பொறுத்தமட்டும், இச்சொல் அவர் காட்டும் இரக்கத்தையும் அன்பையும் உணர்த்தும். அது எப்போதும் பற்றுறுதியான அன்பும் உடன்படிக்கை செய்யப்பட்ட இரக்கமும் ஆகும். மனிதனைப் பொறுத்தமட்டும், அவன் இறைவனைச் சார்ந்து இருந்து, அவருக்குக் காட்டும் பற்றுறுதியான பிரதி அன்பு மிக்க வாழ்க்கை நியதி ஆகும். நாம் ''கெசது'' என்ற சொல்லை உடன்படிக்கை அன்பு என்று குறிப்பிடுவோம். இது இறைவன் மனிதனுக்குக் காட்டும் அன்பையும், மனிதனிடமிருந்து அவர்கோரும் அன்பையும் குறிக்கும்.

பழைய ஏற்பாட்டிலேயே முதல் முறையாகத் திருமணத்தை உவமையாக ஓசேயா பயன்படுத்தி, இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கை உறவை விவரிக்கிறார். இந்த உவமை உடன்படிக்கை அன்பை எடுத்துக்கூற இயற்கையான அடையாளமாகத் தோன்றலாம். ஓசேயாவினுடைய சொந்தவாழ்க்கை அனுபவத்திலிருந்து இந்த உவமை அவருக்குக் கிடைத்தது. அவரது துன்பமிக்க வாழ்க்கையே அவரது நற்செய்தியாயிற்று. யாவேக்கும் அவரது மக்களுக்கும் இடையேயுள்ள உறவை எடுத்துக்காட்ட இது சரியான உவமை என்று உணர்ந்தார். திருமண அன்பின் தன்மை மனிதரோடு இறைவன் கொள்ளும் உறவின் பொருளையும், யாவேயின் அன்பின் உண்மையையும் ஆழத்தையும் வியத்தகு முறையில் எடுத்துக் கூறவல்லது என்று உணர்ந்தார். இந்த உவமையைத் துணிவோடு கையாண்டார். இறைவனது அன்பையும் கோபத்தையும் உணர்ச்சி மிக்க விதத்தில் விவரிக்கிறார்.

ஓசேயாவின் நூலில் வரும் நிகழ்ச்சிகளின் அடையாளப் பொருள் தெளிவாக உள்ளது. இறைவனே கணவன்; பாகாலை வணங்கும் இஸ்ராயேலே கோமேர் என்பவள். இறைவாக்குப் பராம்பரியத்தில் சிலைவழிபாடு விபச்சாரமாகும். இந்த விபச்சாரத்தால் இஸ்ராயேல் இறைவனைக் கைவிட்டது. இஸ்ராயேலாகிய மனைவி, ''தன் கணவனாகிய யாவேயையும் அவரது வீட்டையும் விட்டு, அந்நிய தேவதைகளைத் தீவிரமாகத் தேடி ஓடினாள். இது இஸ்ராயேல் இறைவனுக்குக் காட்டிய பிரமாணிக்கமின்மையாகும்; விபச்சாரமாகும். இத்தேவதைகளுக்கு அளிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளும் இக்குற்றத்தை இரட்டிப்பாக்கின. இவ்வழிபாடு சடங்கு விபச்சாரமாகும். இனப்பெருக்கத் தேவர்களும் தேவதைகளும் புணர்ச்சி கொள்வதைச் சடங்கு முறையில் செய்து காட்டுவதாகும். இது நிலத்தின் பெரும் விளைச்சலுக்கும், வீட்டு விலங்குகள் பெருகுவதற்கும், அநேகப் பிள்ளைகளைப் பெறுவதற்கும் உத்திரவாதமாகக் கருதப்பட்டது. இவற்றின் உண்மையான காரணமான யாவேயைப் புறக்கணித்தனர். இது அக்கால மதிகேடான பைத்தியப் போக்காகும். இதை ஓசேயா வன்மை

யாகக் கண்டிக்கிறார். இத்தகைய சிற்றின்பச் சடங்குச் செயல்கள் யாவேயை அவமானப் படுத்தின. இவ்வாறு இறைவனுக்கும் தனக்குமுள்ள உடன்படிக்கை உறவை இஸ்ராயேல் உடைத்தெறிந்தது. உடன்படிக்கையின் கொள்கையான ''நாம் உங்கள் இறைவன்; நீங்கள் எமது மக்கள்" என்ற கூற்று வெறுமையாயிற்று. யாவேதான் தனது தனிச் சிறப்பான ஒரே இறைவன் என்பதை இஸ்ராயேல் நிராகரித்தது. ஆகவே இறைவன் இஸ்ராயேலை நிராகரிக்கவிருந்தார். ஆனால் இஸ்ராயேலைத் திரும்பத் தம்முடையதாக்கவே விரும்புகிறார்; தேடுகிறார். திருந்துவதற்காகக் கோமேரை ஓசேயா அடைத்து வைத்திருப்பது, இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டுச் சுத்தி செய்யப்படுவதைக் குறிக்கிறது. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் இஸ்ராயேல் அடையப் போகும் தண்டனைகளைக் குறிக்கின்றன. இஸ்ராயேலை மீண்டும் இறைவனிடம் கொண்டு வருவதே இஸ்ராயேல் அனுபவிக்கும் தண்டனைகளின் ஒரே நோக்கமாகும்.

இஸ்ராயேல் அந்நிய நாட்டவரோடு செய்து கொண்ட நேச உடன்படிக்கையில் தனது பலத்தையும் நம்பிக்கையையும் வைத்தது. இது யாவேக்கு இஸ்ராயேல் காட்டும் பிரமாணிக்கமின்மையின் மற்றொரு கூறாகும். தான் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொள்வதற்குத் தகுதியற்றவராக யாவேயை இஸ்ராயேல் கைவிட்டது. அக்காலத்தில் பலம் வாய்ந்த அரசாகத் திகழ்ந்த அசீரியர்களின் சேனையை நம்பியது. இந்த மூடத்தனத்தை ஓசேயா கண்டிக்கிறார். விரைவில் அசீரியப் பேராசைக்கு இஸ்ராயேல் பலியாகும் என்றும், கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படும் என்றும் எச்சரிக்கிறார். ஓசேயாவுக்கும் கோமேருக்கும் திருமணம் புதுப்பிக்கப்படுதல் யாவேக்கும் அவரது மக்களுக்குமிடையே நல்லுறவு மீண்டும் ஏற்படுவதை உறுதிப்படுத்துகிறது. அவர்களது இறையன்பு வளர்ச்சிக் காலமாகிய யாத்திரைச் சூழ்நிலைக்கு மீண்டும் ஒருமுறை இஸ்ராயேலைக் கொண்டுவர இறைவன் திட்டமிடுகிறார் *(2:16 தொ)*. இஸ்ராயேலின் மகிமை மிக்க பழங்காலத்தையும், அதன் பாலை வாழ்வையும் *92:17)* உடன்படிக்கையையும் ஓசேயா விரும்பித் திரும்பிப் பார்க்கிறார். ஓசேயாவுக்குப் பாலை, தண்டனையின் இடமாகும்; சோதனை இடமாகும் *(2:15)*; இறைவனும் இஸ்ராயேலும் உடன்படிக்கை அன்புறவு கொள்ளும் இடமாகும் *(2:16)*; தண்டனையோ சுத்தி செய்யும் சாதனமாகும்.

இறைவன் இஸ்ராயேலை பாலையையும் கடந்து கூட்டிச் செல்லுகிறார். புதிய இன்ப வனத்துக்குக் கொண்டு வருவதாக உறுதியளிக்கிறார் *(2:23-24)*. அங்கே இஸ்ராயேலுக்கும், இறைவனுக்குமுள்ள அன்பு, முதல் தம்பதியர் கொண்டிருந்த அன்பின் நிறைவாகவும் கொடுமுடியாகவும் இருக்கும் *(2:21-25)*. ''முடிவில்லாக் காலத்திற்கு உன்னோடு நான் மண ஒப்பந்தம் செய்து கொள்வேன்; நேர்மையிலும் நீதியிலும், பேரன்பிலும் உன்னோடு மணஒப்பந்தம் செய்து கொள்வேன்; மாறாத அன்புடன் உன்னோடு மணஒப்பந்தம் செய்து கொள்வேன்; ஆண்டவரை நீயும் அறிந்து கொள்வாய்'' *(2:21-22)*.

ஓசேயாவின் முக்கிய செய்தி இறைவனது அன்பாகும். பிரமாணிக்கமற்ற மனைவியாகிய இஸ்ராயேலைக்கூட இறைவனால் அன்பு செய்யாமல் இருக்கமுடியாது *(11:8-9)*. இது அன்பும் எழுச்சியுமிக்க அழுத்தத்தோடு எடுத்துக் கூறப்படுகிறது. இறைவனும் இறைவாக்கினனும் இம்மக்களிடமிருந்து இரக்கம், பிரமாணிக்கம், இறையறிவு போன்ற சமய அடிப்படை உண்மைகளைக் கோருகின்றனர் *(2:21-22; 4:1; 6:6)*. இவற்றின் வழியாக இம்மக்கள் இறைவனது தன்மையிலேயே பங்கு கொள்ளுகின்றனர். இறைவன் தம் அன்பு நிறை கொடைகளில் இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல், தமது ஞானமிக்க அருள்பாலிப்பில் மனிதத் தேவைகளை அறிந்தவராய் இருப்பதுபோல், மனிதன் இறைவனது கொடைகளுக்கு அளிக்கும் அன்பு நிறை பதிலில் இரக்கமிக்கவனாய் இருக்கவேண்டும்; உடன்படிக்கைக் கோரிக்கைகளுக்கு அளிக்கும் பதிலில் பிரமாணிக்கமுள்ளவனாக இருக்க வேண்டும். அவரத

அருள்பாலிப்பு உதவியில் எப்போதும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். இறைவனது சித்தத்தை அறிந்து அதற்கேற்றபடி நடப்பது என்ற பொருளில் மனிதன் இறைவனை அறிய வேண்டும். இவைதான் இறைவாக்கினர் மக்கள் முன் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளாகும். அவர்களுக்கு அளிக்கும் வாய்ப்புகளாகும்.

இறைவன் தனது மக்கள்பால் கொண்டிருக்கும் அன்பை வலியுறுத்திக் கூறுவதில் ஓசேயா தலைசிறந்தவர். ஓசேயா தனது மனைவி கோமேருக்குக் காட்டிய அன்பு ஓர் எடுத்துக் காட்டாகும்; அதுவும் பலவீனமான எடுத்துக்காட்டாகும். இஸ்ராயேலை இறைவன் அன்பு செய்கிறார். அதைத்தேடிக் கண்டுபிடிக்கிறார்; நயமாகப் பேசி அதை இணங்கச் செய்கிறார்; அதற்குப் போதிக்கிறார்; அதை எச்சரிக்கிறார்; அதை மீண்டும் வரவேற்று ஏற்றுக்கொள்கிறார். ''நாம் இறைவன்; வெறும் மனிதனல்லன்'' *(11:19)*. அன்பே இறைவனது தன்மையாய் இருப்பதால், இவ்வாறு இறைவன் செயலாற்றுகிறார். இதை விளக்கப்பயன்படும் மனித எடுத்துக்காட்டுகள் தோல்வியுறுகின்றன என்று கூறலாம். ஓசேயா போன்ற கணவனாக இறைவன் தோன்றுகிறார். இஸ்ராயேலாகிய தமது குழந்தையைக்கையில் ஏந்தும், அதற்கு நடை பயிற்றுவிக்கும், உண்ணக்கற்றுக்கொடுக்கும் தந்தைபோல் இருக்கிறார் *(11:1-4)*. இவையெல்லாம் எடுத்துக் காட்டுகள்தான். உண்மை நிலையோ இவற்றையெல்லாம் கடந்தது; உயர்ந்தது. இறைவன் இறைவனாய் இருப்பதால் அன்பு செய்கிறார். இதைவிட மேலானதொன்றும் கூற முடியாது. இவ்விளக்கத்தில் மனிதனுக்கு இறைவன் அளித்த வெளிப்பாட்டின் உச்சநிலையை ஓசேயா எய்துகிறார். புதிய ஏற்பாட்டின் ஆழ்ந்த ஆன்மீக இறையியல் வல்லுநராகப் புனித யோவான் தனது நற்செய்தியிலும் திருமுகங்களிலும் இந்த உண்மையைச் சிறப்பித்துக் கூறுவார். ''அன்பே கடவுள்; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான்; கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்'' *(1 யோவா 4:16)*.

இறைவன் மனிதனுக்குக் காட்டும் அன்பையும், மனிதரிடமிருந்து, அவர் கோரும் அன்பையும் குறிக்க மட்டும் ''கெசது'' என்ற சொல்லை ஓசேயா பயன் படுத்தவில்லை. மனிதன் தன் உடன் மனிதர்களுக்குக் காட்ட வேண்டுமென்று இறைவன் எதிர்பார்க்கும் அன்பைக் குறிக்கவும் இச்சொல்லைப் பயன் படுத்துகிறார் *(ஓசே 4:1; 12:6)*. இஸ்ராயேலர் அனைவரும் ஒரே உடன்படிக்கையால் இறைவனோடு இணைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் ஒருவர் ஒருவரோடு இணைக்கப்பட்டிருக்கின்றனர். ஒருவர் தன் அயலாருக்குக் காட்டும் அன்பும் பற்றுறுதியும் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தலின் ஒரு பகுதியாகும்.

இறைவனது அன்பில்தான் வருங்கால மகிமை பற்றிய வாக்குறுதி இறைவாக்கின் ஒன்றிணைந்த பாகமாகிறது. இறைவனது அன்பின் திட்டம் பாழ்படமுடியாது. பல நூற்றாண்டுகளுக்குமுன், குலமுதியவர்களுக்கும், மோசேக்கும், தாவீது மரபு அரசர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற வேண்டும். ஏனெனில் இறைவன் அன்பும் பிரமாணிக்கமும் மிக்கவர். ஒளி மிக்க, மகிமை மிக்க வருங்காலத்தைப் பற்றிய பகுதிகளில் இக்கருத்து காணப்படுகிறது. ஓசேயா தனது பிரமாணிக்கமற்ற மனைவியை அன்பு செய்து அவளை மீண்டும் ஏற்றுக் கொண்டதுபோல், யாவேயும் தமது பிரமாணிக்கமற்ற மக்களை அன்பு செய்து மீண்டும் ஏற்றுக்கொள்வார். ஓசேயாவின் சொந்த வாழ்வானது பாவம், இழிவு ஆகியவற்றின்மேல் வெற்றி கொண்டது போல், யாவேயின் அன்பு இஸ்ராயேலின் பாவத்தின் மேல் வெற்றிகொள்ளும் *(அதி 14)*. இஸ்ராயேல் இறைவனிடம் திரும்பிவரும். ஓசேயா இதை உறுதியாக நம்பினாலும் இத்திரும்புதல் பற்றிய விபரங்கள் அவரது நூலில் கொடுக்கப்படவில்லை. இதைப் புதிய ஏற்பாடு ஈடுசெய்கிறது *(உரோ 11:26; 2 கொரி 1:20)*.

*8. ஆ. மக்களின் ஒழுக்க வாழ்வு:-*

இஸ்ராயேலின் ஒழுங்கீனம் ஆமோசின்

காலத்தைவிட, ஓசேயாவின் காலத்தில், மோசமாக இருந்தது. குருக்களும் (ஓசே 4:8; 6:9), பெருங்குடி மக்களும், அரசர்களும் (5:1; 7:3) கலகத்தலைவர்களாய் இருந்தனர்.

இஸ்ராயேலின் வரலாற்றில் காணப்படும் கடந்தகாலப் பாவங்கள், இறைவாக்கினர் கால நிலைக்குத் தீய அடையாளமாக அமைந்தன என்று ஓசேயா எடுத்துக் கூறு கின்றார். பல நூற்றாண்டுகளுக்குமுன் பாகால் பெயோருக்குச்செய்த சிலைவழிபா டும் (9;10), கில்காலில் இருந்த ஒழுக்கங் கெட்ட அரச நிறுவனமும் (4:15; 9:15), கிபயாவில் நடந்த பயங்கர காமக்கொலை யும் (9:9; 10:9), பேத்தேலில் காளையை வணங்கியதும் (8:4-6), இஸ்ராயேல் மக்க ளின் மூதாதையரான யாக்கோப்பின் தவ றான போக்கும் (அதி 12) ஆகிய பாவங்கள் இஸ்ராயேலின் வரலாற்றில், நீண்ட துன்ப நிழலை விட்டுச் சென்றன. ஆனால் ஓசேயா வின் கால மக்கள் இவற்றையெல்லாம் மிஞ்சி விட்டனர் என்பதை இறைவாக்கினர் சுட் டிக்காட்டுகிறார்.

முதல் கற்பனைக்கு எதிரான குற்றங்க ளோடு இஸ்ராயேலர் நிற்கவில்லை. தனது இறைப்பற்றற்ற தன்மையாலும் பாவப் போக்காலும் மற்றக் கற்பனைகளையும் கைவிட்டது, மீறியது; சபித்தல், பொய்யு ரைத்தல், கொலை, கொள்ளை, விபச்சாரம், நேர்மையின்மை, பேராசை, கபடம் ஆகி யவை இறைவாக்கினரின் போதகத்தில் குறிக்கப்படும் சில பாவங்களாகும். குருக்க ளும் இறைவாக்கினர்களும் ஊழல் மிக்கவர் களாயினர். குருடர்கள் குருடர்களுக்கு வழி காட்டினர். அரசியல் கொலைகள் பெருகின. அரச மரபு இழிவுபட்டது. இஸ்ராயேல் சவுலை அரசனாகப் பெற்றபோதே அர சாட்சி இஸ்ராயேலுக்கு முழுவதும் நன்மை பயப்பதாக அமைய வில்லை (1 சாமு 8:4-22). தீமை கலந்ததாகவே இருந்தது. காலப்போக்கில் அரசர்கள் இறைவனிடமி ருந்து இன்னும் வெகு தூரம் அகன்று போயி னர் (7:3-7; 8:4-10; 9:15; 10:3.4.19; 13:9-11).

ஓசேயா ஆட்சிசெய்யும் வகுப்பினரை வன்மையாகக் குற்றம் சாட்டுகிறார். இறைவ னது சித்தத்திற்கு எதிராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசர்கள் உலகியல் போக்கைப் பின் பற்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைப் பிற மக்களின் நிலைக்குத் தாழ்த்தினர்; இழிவு படுத்தினர். அறியாமையும் பேராசையும் மிக்க குருக்கள், மக்களை அழிவுக்கு இட்டுச் சென் றனர். அநீதி மிகுந்தது. இதை ஓசேயா வன் மையாகக் கண்டிக்கிறார். இன்னும் கடினமா கப் பதிதத்தின் தீய விளைவுகளை வலியுறுத் துகிறார்.

8. இ. மக்களின் சமயம்:-

மக்களின் புறவழிபாட்டு முறையைப் பொறுத்த மட்டும் குறையிருக்கவில்லை. பலிபீடங்களும் பலிகளும், திருயாத்திரைக ளும் பெருகின. ஆனால் இவற்றில் யாவேக்கு இடமே இல்லை. மனிதன் படைத்த தேவதைகளும் விண்பொருட்க ளுமே பெரும்பாலும் வழிபடப்பட்டன. இஸ்ராயேலர் குடியேறுமுன் கானானில் வாழ்ந்த மக்களின் சிற்றின்ப வழிபாட்டு முறைகள் இஸ்ராயேலரிடையே ஆழமாக வேரூன்றின. மனிதனுக்கு வேண்டியது பூமி யின் செழிப்பும் விலங்குகளின் பெருக்கமும் குடும்பப்பெருக்கமும் ஆகும். இவற்றிற்காக எல்லா நலன்களையும் நல்கும் யாவேயை அணுகாது பாகாலை நாடினர். இச்செயலில் உள்ளத்தாலும் உடலாலும் விபச்சாரம் செய் தனர். இறைவனைக் கைவிட்டு, அகன்று போனதால் ஆன்மீக விபச்சாரம் செய்தனர். இன்பப்பெருக்கச் சிற்றின்பச் சடங்குகளால் உடலாலும் விபச்சாரம் செய்தனர். இதன் உண்மைத் தன்மையைத் திரை கிழித்துக் காட்டி ஓசேயா வன்மையாகக் கண்டனம் செய்கிறார் (4:14; 2 அர 23:7; ஆமோ 2:7).

புறச்சடங்குகளை நோக்கின் ஓசேயா காலத்து மக்கள் இறைப்பற்று உள்ளவர்களா கத் தோன்றலாம். ஆனால் இவற்றில் எல் லாம் விபச்சாரத்தையே ஓசேயா கண்டார். அதிமா, கிபயா, செக்கேம், மிசுப்பா, தாபோர்மலை, தாண், பேத்தேல், சமாரியா ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட கோர

மான வழிபாடுகள் நடந்ததாகக் குறிக்கப் பெறுகின்றது. இவ்விடங்களில் காளை வழி படப்பட்டது. ''மனிதர் கன்றுக் குட்டிகளை முத்தமிடுகிறார்களே'' (ஓசே 13:2). இனப் பெருக்க வழிபாடு பெருகுகிறது. இச்சிலை கள் பயனற்றவை, சக்தியற்றவை என்று ஏற்றுக்கொள்ள மக்கள் மறந்து விட்டனர். பாகாலின் வழிபாட்டோடு இணைத்துத் தமக்கு வழிபாடு செய்வதை யாவே மறுத்து விட்டார் (2:16; 13:2). அவர்களது புற ஆசாரச் சடங்குகளை ஏற்க மறுத்தார் (8:13; 10-1.5.6; 12:2). குருக்கள் தங்கள் கடமையைச் செய்ய வில்லை. மாறாக மக்களின் தவறான போக் கைத் தங்களுக்கு ஆதாயமாக்கிக். கொண்ட னர். இவையெல்லாம் மக்களின்மேல் போரையும் அழிவையும் தண்டனையாகக் கொண்டு வரும் என்று ஓசேயா எச்சரிக்கி றார்.

8.ஈ. நூலின் சமய போதகம்:-

பிற்காலத்தில் எரேமியா திகழ்ந்ததுபோல், ஓசேயா ஆழ்ந்த உணர்ச்சியும் நுண்ணுணர் வும் கொண்டவர். அவரது சொந்த வாழ்க் கையின் சிறப்பு அவரது இறைவாக்குரை யோடு கொண்ட நெருங்கிய தொடர்பில் அடங்கியிருக்கிறது. கோமேரோடு கொண்டி ருந்த திருமண உறவில் தான் உணர்ந்ததை யும் அனுபவித்ததையும் இறைவெளிப்பாட் டுச் சேவைக்கு அர்ப்பணிக்க வேண்டு மென்று அவரது ஆழ்ந்த சமய அறிவு ஓசே யாவுக்கு உணர்த்தியது. அதை எடுத்தியம் பிய அவரது மனவெழுச்சி பெரிதும் உதவி யது: இறைவனே அன்பு; அந்த அன்பு, ஒருபோதும் தவறாது; கைவிடாது (2:12 தொ; 3:1; 9:15; 11:1 தொ; 14:15 தொ). இதுவே ஓசேயாவின் சொந்த அனுபவம். இதுவே அவரது உறுதியான சமய போதகம்.

இஸ்ராயேலின் தொடக்கம் பற்றிய காப்பி யத்தில் யாவே பாரம்பரிய ஆசிரியர் இறை வனது அன்பை விவரிப்பதை ஓசேயா அறிந் திருந்தார். இஸ்ராயேலரோடு கொண்ட உற வில் இறைவனது அன்பே உந்து காரணமாய் இருந்தது என்று உபாகமம் தெளிவாய் அறிக் கையிடுவதை ஓசேயா படித்திருந்தார். ஆனால் இந்த உறவை விளக்கத் திருமண உறவு, தந்தை-மகன் உறவு ஆகிய அழகிய உருவகங்களைப் பயன்படுத்திப் பழைய ஏற் பாட்டில் இறையன்பின் மைய நிலையை உலகிற்கெல்லாம் ஓசேயா பறை சாற்றுகி றார். இது அவருக்குப் பெருமையும் மகிமை யுமாகும். இரண்டாம் அதிகாரத்தில் வரும் கணவன்-மனைவி என்ற உவமையில் தன் இனத்தவரின் கடந்த காலத்தை உருக்கத் தோடு நோக்க ஓசேயாவைத் தூண்டுகிறது. இந்த அன்பை இஸ்ராயேலர் அவமதித்துப் புறக்கணித்து யாவேயைக் கைவிட்டாலும் அதை அழிக்க முடியாது. இதை அறிவிக்கும் உணர்ச்சி மிக்க தூதுவராகத் திகழ்கிறார் ஓசேயா. மனித வரலாற்றில் தூண்டும் ஆக்க சக்தி யாவேயின் வாக்கும் அன்புமாகும் (2 சாமு 7:21) என்று தாவீது ஏற்கனவே அறிவித் திருந்தார். இக்கருத்தை ஓசேயா நிறைவு படுத்துகிறார். அதனால் அவர் அன்பின் இறை வாக்கினர் என்ற பட்டம் பெறத் தகுதி பெறுகி றார். அதனால் அன்பே அவரது வாக்குக ளுக்குத் திறவுகோலாக அமைகிறது.

இறையன்பை இஸ்ராயேலர் புறக்கணித்த னர். இதுவே அவர்களுக்குத் தீர்ப்பாயிற்று. ஆகவே இத்தீர்ப்பைக் கடுமையான சொற்க ளால் ஓசேயா எடுத்துக் கூறுகிறார் (ஓசே 5:14; 13:7 தொ). ஆனால் இத்தீர்ப்பு வெறும் தண்டனை மட்டுமன்று; அது ஒழுங்குமுறை படுத்தும், படிப்பிக்கும், குணமளிக்கும் அன் பாகும். தீர்ப்பு கடுமையாக இருந்தாலும் இஸ்ராயேலை அதன் தொடக்க கால அன்புற விற்குத் திரும்ப அழைத்தலே அதன் குறிக் கோளாகும். இறைவனது அன்புக்குப் பதில் அன்பு செலுத்த வேண்டும்; வரையற்ற முழுமை யோடு அவரை அன்பு செய்ய வேண் டும். இதயம், ஆவி, சித்தம் ஆகிய அனைத் தோடும் மனிதன் இறைவனிடம் சரணடைய வேண்டும். 4:1; 6:6-இல் ஓசேயா கோரும் பிரமாணிக்கம், உடன்படிக்கை அன்பு, கட வுளை அறியும் அறிவு ஆகியவற்றின் பொருள் இதுதான்.

பத்துக் கற்பனைகளை நினைவுபடுத்தும் அடிப்படை ஒழுக்கக் கட்டளைகளும் எடுத்

துக் கூறப்படுகின்றன. இவை யாவரையும் கட்டுப்படுத்தவல்லன (4:2). இவ்வாறு யாவேயின் உண்மையான உடன்படிக்கை வழிபாட்டுப் பாரம்பரியத்தின்மேல் ஓசேயா தனது போதகத்தைக் கட்டி எழுப்புகிறார். அவ்வழிபாடே அவர் அறிவிக்கும் தீர்ப்புக்கும் திருமண உவமையில் வருங்காலம் பற்றிய அவரது நம்பிக்கைக்கும் (2:18. 21 தொ) அடிப்படையாகிறது.

நற்செய்தியில் விவரிக்கப்படுவதுபோல் (மத் 23) பரிசேயர்களின் சட்டத்தன்மையுடைய நெறிக்கோட்பாடுகளைப்பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்டு, பழைய ஏற்பாடு பற்றிய தங்கள் கருத்துக்களை அமைத்துக் கொள்பவர்களுக்கு, ஓசேயா அவசியமான திருத்தம் ஒன்று அளிக்கிறார். பழைய ஏற்பாட்டு இறைவன் நீதியுள்ளவராகவும், பழிக்குப் பழிவாங்குபவராகவும் தம்மை வெளிப்படுத்துகிறார் என்ற தவறான கருத்து மக்களிடையே உண்டு. இது மிகைப்படுத்திக் கூறுதலாகும். இதைத் திருத்தி இறைவன் மனிதனோடு கொண்ட உறவில் அன்பே மையமாகும் என்று பறைசாற்றுகிறார் ஓசேயா. இறைவன் பழைய ஏற்பாட்டில் நீதியின் இறைவனாகவும், புதிய ஏற்பாட்டில் அன்பின் இறைவனாகவும் தோன்றுகிறார் என்பர். இறைவனிடம் மாற்றம் இருக்க முடியாது. ஆனால் அவர் தமது பண்புகளை வெளிப்படுத்தும்போது வேறுபாடு தோன்றலாம். ஒரு சமயம் நீதியையும் மற்றொரு சமயம் அன்பையும் அறிவுறுத்தலாம். இந்த அடிப்படையில் இறைவனது அன்பின் மிக உன்னத வெளிப்பாடு மனு உருவாதலில் காணப்படுகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் இறைவன் ஓசேயா எடுத்துக் கூறுவதுபோல் ஒரே சமயத்தில் நீதியின் இறைவனாகவும் அன்பின் இறைவனாகவும் விளங்குகிறார். மாற்றம் இருந்ததென்றால் அது தரத்தில் தான்; வகையில் அன்று. ஏனெனில் இறைவன் தமது அன்பையும் நீதியையும் எல்லாக் காலங்களிலும் வெளிப்படுத்துகிறார்.

*8. உ. ஓசேயாவில் காணும் வரலாற்று ஆய்வும் தீர்ப்பும்:-*

ஓசேயாவில் வரலாற்று ஆய்வு குலமுதியவரான யாக்கோபிலிருந்து தொடங்குகிறது (12:3-7). யாக்கோபின் மேன்மையான பண்புகளை ஓசேயா விவரிக்கவில்லை. மாறாக ஏமாற்றுதலில் வல்லவனாகவே யாக்கோபை விவரிக்கிறார். ''யாக்கோபு தன் தாயின் வயிற்றிலேயே தமையனை முந்திக் கொண்டான்; பெரியவனாக வளர்ந்த பின்போ கடவுளோடு போராடினான்'' (12:4). முன்னோர் இப்படியென்றால் அவருடைய வழித்தோன்றல்கள் எப்படியிருப்பர்?

இஸ்ராயேலர் பாலையில் அலைந்து திரிந்த காலத்தில் யாவேக்கும் அவர்களுக்கும் இடையே அன்பு தொடங்கியது. இக்காலம் நோக்கி மீண்டும் மீண்டும் ஓசேயா தமது சிந்தனையைத் திருப்புகிறார். ''இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோது, அவனின்மேல் அன்புகூர்ந்தேன்'' (11:1). தாயைப் போன்று இஸ்ராயேலைக் கவனித்து வந்தார் இறைவன். அதற்கு நடை பயிற்றுவித்தார் (11:2). எகிப்து காலத்திலிருந்து அவரே அவர்களது இறைவனும் மீட்பரும் ஆவார் (13:4). அவர்களோடு உடன்படிக்கை செய்து (2:20; 8:1; 10:4) அவர்களுக்குத் தமது சட்டத்தை அளித்தவரும் அவரே.

ஓசேயாதான், சீனாய்மலை உடன்படிக்கையைத் திருமண உடன்படிக்கையோடு ஒப்பிடுகிறார். இறைவன் இஸ்ராயேலரை அறிந்து தேர்ந்தெடுத்து அன்பு செய்தார். ''வறண்ட நிலமாகிய பாலை வெளியில் உன்னை அறிந்து ஆதரித்தவர் நாமே'' (13:5). இறைவனது இந்த முன்முயற்சி அதற்கொத்த தாராளமிக்க அன்பு நிறைந்த பதிலை இஸ்ராயேல் மக்களுள் தோற்றுவித்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ ''அறிவின்மையால் அழிகிறார்கள். நீ அறிவைப் புறக்கணித்தாய்; நாமும் நீ எமக்கு அர்ச்சகனாய் இராதபடி உன்னைப் புறக்கணிப்போம்; நீ உன் கடவுளின் திருச்சட்டத்தை மறந்து விட்டாய்; நாமும் உன் மக்களை மறந்துவிடுவோம்'' (4:6). உடன்படிக்கை அன்பு அவர்க

ளிடமிருந்து பதிலன்பையும் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கத்தையும் கோரியது *(6:6)*. ஆனால் அவர்கள் உடன்படிக்கையை முறித்தனர். ஆதலால் இறைவனது அன்பு மேன்மைமிக்கதாயினும் அவர்களுக்குப் பயன்படவில்லை.

உடன்படிக்கை உறவு முறிக்கப்பட்டுவிட்டது. கலைக்கப்பட்டு விட்டது என்று ஓசேயா தனது கால மக்களுக்கு அறிவிக்கிறார். ''நாட்டில் உண்மையும் இல்லை; இரக்கமும் இல்லை; கடவுளை அறியும் அறிவும் இல்லை'' *(4:1)*. அதன் விளைவாக ஒழுக்கமும், இசைவிணக்கமும் அழிந்துவிட்டன. பொய்யும் வன்செயல்களும் மிகுந்தன *(4:2; 12:1)*. இறைவன் தமது உரிமையை இழந்த போது, மனிதனுக்கு மிஞ்சியது அழிவு ஒன்றே. அரசியல் பாதுகாப்பு ஆன்மீக இழப்பை ஈடுசெய்யமுடியாது. அசீரியர்கள், எகிப்தியர் ஆகியவரோடு இஸ்ராயேல் செய்யும் நேச உடன்படிக்கைகளில் அர்த்தமில்லை. அவைகளால் பயனுமில்லை. இவ்வுடன்படிக்கைகள் யாவேயில் இஸ்ராயேலர் கொண்ட நம்பிக்கையின்மையைக் காட்டுகின்றன. இவை இஸ்ராயேலின் கீழ்ப்படியாமைக்கும் பதிதத்திற்கும் எடுத்துக்காட்டுகளாகும் *(5:13-14; 7:8-16; 8:8-10; 12:1)*.

இவையெல்லாம் இஸ்ராயேல் கிளர்ச்சி செய்யும் விபச்சார இனம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களின் குற்றங்களுக்குரிய சான்றுகளைத் தொகுத்துத் தருகிறார் ஓசேயா. அக்கால நிலைக்கேற்பத் தீர்ப்புக் கூறுவதே அவரது கடமையாகும். அத்தீர்ப்பு கண்டனமாகக் ''கேளுங்கள்'' என்ற அறைகூவலில் எக்காளமாய் ஒலிக்கிறது *(4:11; 5:1)*. ''தற்போது இரக்கம் என்னிடமில்லை'' *(13:14)*. தண்டனை விரைவில் கடும் புயல் போல் வரும் *(8:7)*. அது அழிவையும் *(8:14; 10:8)*, சாவையும் *(14:1)* கொண்டுவரும். பிள்ளைகளும் கர்ப்பவதிகளும் கொடூரமாய்க் கொலை செய்யப்படுவர் *(14;1)*. அரண்கள் அழிக்கப்படும் *(8:14)*. மேட்டு நிலங்கள் அழிக்கப்படும். அங்கே முட்களும் புதர்களும் வளரும் *(10:8)*. எகிப்தோடும் அசீரியர்களோடும் உடன்படிக்கை செய்த அரசியல் சூழ்ச்சிகள் முழுவதும் அழிந்துபோகும். அரசர்களோ, பெருங்குடி மக்களோ, பலிகளோ, கற்றூண்களோ இனி இரா. இறைவனது சித்தத்தை அறியப்பயன்படும் ''ஏபோது'' என்ற குருவின் ஆடையும் இராது. வீட்டுத் தெய்வங்கள் அழிந்துபோம் *(3:4)*.

அழிவே இறைத் தீர்ப்பின் முடிவன்று. அழிவின் வழியாகவும் அதைக்கடந்தும் இறைவனது நன்மையும் அன்புமே தீர்ப்பின் முக்கிய பண்பாகும். இறைவனது உடன்படிக்கை அன்பு இஸ்ராயேலின் தொடக்கத்திற்குக் காரணமாய் இருப்பதுபோல, அதன் முடிவும் இறுதி விளக்கமும் ஆகும் *(2:21)*. இந்த அன்பு மக்களிடம் கோருவது உறுதியான அன்பும், உண்மையான இறையறிவுமாகும் *(6:6)*. உண்மையான சமயம் செயல்முறையான அன்போடு இறைவனை ஏற்றுக்கொள்ளுதலாகும்; அவருக்குத் தங்களை முழுவதும் அர்ப்பணிப்பதாகும்.

*8. ஊ) மனந்திரும்புதலும் வருங்கால மகிமையும்:-*

ஓசேயாவின் காட்சியில் இறைவனின் உடனடியான தீர்ப்பு இருள் மிக்கதாயும் துன்பமிக்கதாயும் இருந்தாலும், வருங்காலம் ஒளிமிக்கதாயும் மகிமை மிக்கதாயும் இருக்கிறது. இறைவாக்கினர் காலத்து இஸ்ராயேலுக்கு இறைவன் சிங்கம், வேங்கை, பெண் கரடி போல் இருப்பார். சாவையும், அழிவையும் இஸ்ராயேல்மேல் கொண்டுவருவார். இத்தீர்ப்பு நிகழவேண்டிய ஒன்று. ஏனெனில் ''அவர்கள் தங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பவில்லை. அவரைத் தேடவில்லை'' *(7:10)*. ''இருமனம் கொண்ட மக்கள் அவர்கள்'' *(10:2)*. ''மன நிறைவடைந்து செருக்குற்று எம்மை மறந்து போனார்கள்'' *(13:6)*. மதுபானமும் திராட்சைரசமும் அவர்கள் அறிவைக் கெடுத்தன. இறைவனது அழைப்புக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை *(4:11)*. அவர்கள் ''தங்கள் உள்ளத்திலிருந்து எம்மை நோக்கிக் கூக்குரலிடவில்லை'' *(7:14)*. உடன்படிக்

கையை முறித்தனர். இதன் விளைவு அழிவு தான்.

அழிவை அறிவிப்பதுதான் ஓசேயாவின் முக்கிய செய்தி என்று எண்ணுபவர்கள் அவரைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். அழிவுதான் முடிவன்று. அழிவு புதிய தொடக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் மகிமைக்கும் வித்தாகும். இதுதான் ஓசேயாவின் சிறப்புச் செய்தியாகும். இறைவனது நோக்கமும், அன்பின் உருக்கமும் ''எப்பிராயிமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ராயேலே உன்னை எப்படிக் கைந்நெகிழ்வேன்? உன்னை எப்படி அதிமாவைப் போலாக்குவேன்? செபோயிமுக்குச் செய்தது போல் உனக்குச் செய்வேனா? என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகிறது. என் இரக்கம் பொங்கி வழிகிறது. என் சீற்றத்தின் கனலைக் கொட்டமாட்டேன்; நான் இறைவன்;, வெறும் மனிதன் அல்லன். நானே உங்கள் நடுவிலிருக்கும் புனிதர்'' (11:8-9), என்ற அருள்வாக்கில் தெளிவாக உள்ளன. இறைவனோடு கொண்டிருந்த உரையாடலை இஸ்ராயேல் முறித்தது. அது மீண்டும் புதுப்பிக்கப்படும் (2:16). மக்கள் தபசு செய்ய வேண்டும். உண்மையாக மனந்திரும்ப வேண்டும். அழிவுத்தீர்ப்பின் நடுவிலும் உணர்ச்சிமிக்க அறைகூவல் கேட்கப்படுகிறது; ''வாருங்கள் ஆண்டவரிடம் திரும்புவோம்; நம்மைக் காயப்படுத்தியவர் அவரே; அவரே நம்மைக் குணம் ஆக்குவார். நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே; அவரே நம் காயங்களைக்கட்டுவார். இரண்டு நாட்களுக்குப் பிறகு நமக்குப் புத்துயிர் அளிப்பார். மூன்றாம் நாளில் நம்மை எழுப்பி விடுவார் அப்பொழுது நாம் அவர் முன்னிலையில் வாழ்ந்திடுவோம்'' (6:1-2). முதலில் காயப்படுத்துதல், குணமாக்குதல்; இரண்டாவது புத்துயிர் அளித்தல்; மூன்றாவது எழுப்புதல், வாழ்த்தல். இந்தப் படிமுறையே இஸ்ராயேலின் வருங்காலம் ஆகும். இதை இறைவன் வல்லமையோடு செய்வார்; அவரே அவர்களின் மீட்பர். வேறு ஒருவருமில்லை (13:4). ''ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்'' (14:3) என்பதே இறைவாக்கினர் மக்களுக்குக் கூறும் அறிவுரையாகும். தீமையிலிருந்து மனந்திரும்பாவிடில் இறைவனிடம் திரும்பாவிடில் (5:4) மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திற்குத் திரும்பிச் செல்வர். உறுதியாக மனந்திரும்பினால், யாவேயை நாடிவந்தால் (2:9; 5:15; 6:1), யாவேயின் சீற்றம் தணியும் (14:5); மக்களை அவர் தம்து அன்பால் ஈர்ப்பார் (11:7 தொ).

மனந்திரும்புதலுக்குப்பின் உடன்படிக்கை புதுப்பிக்கப்படும். அரசியல் உடன்படிக்கைகள் மீட்பைத் தரா (14:4). அவை அழிவுக்கே இட்டுச்செல்லும். உண்மையான மீட்போ சீனாய்மலை உடன்படிக்கை புதுப்பிக்கப் படுவதால் வருவதாகும். யாவே எப்போதும் மறவாதவர்; அப்படியே அவரது உடன்படிக்கையும் மாறாததாகும். அவரில் புதிய யுகம் தொடங்கும். அவரது அன்பைப் பதிதமும் பிரமாணிக்கமின்மையும் வெல்லமுடியாது. ''அந்நாளில்'' (2:20) இறைவனின் அன்பு வெற்றியடையும். ஏனெனில் அந்நாளில் இறைவனுக்கும் மக்களுக்கும் புதிதாகத் திருமணம் நடைபெறும். இத்திருமணம் எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும். இவ்வுடன்படிக்கை ''முடிவிலாக்காலத்திற்கும்'' (2:21) நிலைத்திருக்கும் புதிய உடன்படிக்கையாகும். ஓசேயா உடன்படிக்கையை ஆன்மீகப் படுத்தி எல்லாருக்கும் உரியதாக ஆழ்ந்த ஆட்தன்மையுடையதாக ஆக்குகிறார். இறைநீதி தீர்ப்பளிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் அதைவிட இறையன்பு மேலானது. புதிய யுகத்தின் பண்புகளாவன: புறஇனத்தேவதைகளும் அவற்றின் வழிபாடும் அழிந்து போகும்; கிளர்ச்சி செய்யும் குருக்கள் மறைந்து போவார்கள்; மக்கள் நாடு கடத்தப்படுவர்; நாடு பாலையாகும்; ஆனால் இந்த அழிவிலிருந்து புதிய மக்களினம் தோன்றும். இம்மக்கள் பிரமாணிக்கத்திலும் அன்பிலும் நீதியிலும் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணிப்பர். பூமி மீண்டும் இன்பவனமாகும் (2:23). இஸ்ராயேல் பல ஆசீர்களைப் பெறும் (14:6-9). அவற்றில் ஒன்று புதிய மக்கள் ''தங்கள் அரசனாகிய தாவீதைத் தேடி வருவார்கள்'' (3:5). ஓசேயாவின் கருத்தின்படி வடஅரசு இருப்பதே ஒரு

பாவமாகும் (8:14; 13:11). தாவீது மரபு அரசன்கீழ் வட, தென் அரசுகள் ஒன்று படுவது ஓசேயாவின் முன்னோக்காகும் (2:2; 3:5). மெசியா கோட்பாடு இந்நூலில் இரண்டாம் தர நிலையையே கொண்டுள்ளது. தாவீதின் வீட்டிற்கும் புதிய உடன்படிக்கைக்கும் முடிவில்லா அரசு வாக்களிக்கப்படுகிறது. ஓசேயாவில், மெசியா கோட்பாடு வருங்காலம் பற்றிய நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். இதை அடிப்படையாகக் கொண்டு பிற்கால இறைவாக்கினர்கள் இக் கோட்பாட்டை விரிவாக்குவார்கள்.

9. ஓசேயாவும் விவிலியத்தின் பிறநூல்களும்:-

ஓசேயா நூலின் போதகம் பழைய ஏற்பாடு முழுவதும் பரந்து காணப்படுகிறது. பிற்கால இறைவாக்கினர்களில் இவருடைய குரல் எங்கும் எதிரொலிக்கிறது. இவர் இறைவனது அன்பை முக்கிய கருத்தாகக் கொண்ட இதயம் சார்ந்த சமயத்திற்கு மக்களைத் தூண்டினார். ஓசேயாவைப் பின்பற்றி, இறைவன் தம் மக்கள்பால் கொண்ட அன்புக்குத் திருமணத்தை உவமையாகப் பயன்படுத்துவதில் எரேமியாவும், எசக்கியேலும், 2-ஆம் ஏசயாவும், உன்னத சங்கீதமும் சிரத்தை காட்டுகின்றன (எரே 2:1-3; 2:20-21; 3:1-5; 31:22; எச 16:23; ஏச 54:1-10; 61:10-12; 62:4-5).

புதிய ஏற்பாடு ஓசேயா ஆகமத்தை மேற்கோள் காட்டுவதிலோ சில சமயம் இதன் கருத்துகளைப் பயன்படுத்துவதிலோ வியப்பில்லை. திருமண உவமை கிறிஸ்துவப் பண்படைகிறது (மத் 9:15; 23:3 தொ; யோவா 3:4; 2 கொரி 11:2; எபே 5:22-23 தொ; திருவெளி 21:1-49). புதிய ஏற்பாட்டின் தொடக்க காலக் கிறிஸ்தவ சமூகம் இந்த உவமை வழியாகக் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள உறவை விளக்கியது. கிறிஸ்தவ இறையனுபவ நூல்களும் இறைவனுக்கும் தனிப்பட்ட ஆன்மாவுக்கும் உள்ள உறவை இந்த உவமை வழியாக விளக்குகின்றன.

இந்நூலைப் புதிய ஏற்பாடு பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. உரோ 9:25; 1 பேதுரு 2:10 ஆகியவை ஓசே 2:25-ஐயும், உரோ 9:26 என்பது ஓசே 2:1-ஐயும், லூக் 23:20; திருவெளி 6:16 ஆகியவை ஓசே 10:8-ஐயும், மத் 4:13; 12:7 ஆகியவை ஓசே 6:6-ஐயும் எடுத்துக்கூறுகின்றன. ஓசே 11:1-இல் விவரிக்கப்படும் யாத்திரை விவரிப்பு, புதிய இஸ்ரேலாகிய கிறிஸ்துவுக்கு மத் 2:15-இல் சாற்றிக் கூறப்படுகிறது.

10. முடிவுரை:-

இந்நூல் ஆழ்ந்து படிப்பதற்குச் சிறிது கடினமானது. ஆனால் இறைவாக்கு நூல்களில் சிலதான், இந்நூலைப் போன்று பெரும் ஆன்மீக செல்வத்தை அளிக்கின்றன. இறைவனது அன்பு பற்றிப் புதிய ஏற்பாட்டுக் கருத்துக்குப் பழைய ஏற்பாட்டு நூல்களில் இந்நூல்தான் மிக நெருங்கியது. விவிலியத் தொகுப்பாசிரியர்கள் இந்நூலைக் காலத்தால் முந்தியதாகக் கருதவில்லை. ஒருவேளை நூலின் குறுகிய தன்மை இப்படி நினைக்கத் தூண்டியிருக்கலாம். கால வரைப்படி ஆமோஸ் ஓசேயாவுக்கு முந்தியவர். இறைவனது நீதி பற்றிய வெளிப்பாடு அவரது அன்பு பற்றிய வெளிப்பாட்டுக்கு முன் வரவேண்டும். இதற்கேற்பக் காலவரையும் அமைந்திருக்கிறது. ஆனால் ஆன்மீக முறையில் ஆமோசைவிட ஓசேயா அதிக உன்னதமான வெளிப்பாட்டை அளிக்கிறார். இதை உணர்ந்த இஸ்ராயேலின் பாரம்பரிய விவிலியப்பட்டியல் சிறிய இறைவாக்கினர் பட்டியலில் ஓசேயாவின் நூலை முதலில் வைத்தது. இது இந்நூலின் சிறப்பையும் மேன்மையையும் விளக்குகிறது.

## ஓடு (TILE)

கூரைகள் வேய ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன (லூக் 5:19). மேற்கண்ட ஒரே இடத்தில்தான், ஓடுகளைப் பற்றி விவிலியம் கூறுகின்றது. எச 4:1 செங்கல்லின் ஒருவகை ஓடு என்று கூறுகின்றது.

## ஓடுதல் (RUN)

அரச பாதுகாப்புப் படையில் ஓடுபவர்கள்

(1 சாமு 22:17) போரைப் பற்றிய செய்தியை அறிவிக்க விரைவாகச் செல்வது போன்ற (2 சாமு 18:19-27) இயல்பான பொருளில் ஓடுதல் பயன்பட்டுள்ளது. இதற்குமேல் இறைவனுடைய வார்த்தையின் செயலாற்றல் அல்லது அதனை அறிவிப்பவர்களின் செயலாற்றலை விவரிக்க ''ஓடுதல்'' என்ற சொல்லை விவிலியம் உருவகமாக உபயோகிக்கின்றது. பிற்காலத்தில் கிரேக்க உலகினுடைய விளையாட்டுப் போட்டிகளுடைய தாக்கத்தால், இச்சொல்லானது, ஒரு குறிக்கோளை நோக்கி விரைகின்ற வாழ்க்கைக் கட்டத்தை விவரிக்கப் பயன்படுகின்றது.

1. இறைவனுடைய வார்த்தை ஓடுகிறது:- இறைவனுடைய வார்த்தையானது விரைவானது, பயனுறுதியுடையது. மற்றும் ஆற்றல் மிக்கது: ''எல்லாம் வல்ல உம் சொல் விண்ணகத்திலுள்ள அரச அரியணைவிட்டு எழுந்து....பாய்ந்து வந்தது'' (ஞான 18:15; 1 சாமு 22:17). அது வீரனைப் போல் யோபுவின்மேல் பாய்கிறது (யோபு 16:14). இதில் ஓடுகிறவனின் வேகத்திற்குப் பாய்தல் பயன்படுகிறது. இறைவன் தனது வார்த்தையை நம்மை நோக்கி அனுப்புகிறார்; அவருடைய வார்த்தை வேகமாகச் செல்கிறது (சங் 17:15; ஏச 55:11). ''இறைவனுடைய வார்த்தை தன்னுடைய ஓட்டத்தை முடிப்பதற்கென'' (2 தெச 3:1) பவுல் செபத்தைக் கேட்கும்போது ஒருவேளை இப்பகுதியை மனதில் கொண்டிருக்க வேண்டும். அரசனுடைய தேருக்குமுன் ஓடுகிறவர்களைப் போன்று (1 சாமு 8:1) இறைவாக்கினர்களும் வார்த்தையை அறிவிக்க ஓடுகின்றார். ''ஆண்டவரின் கை எலியாவின் மேல் இருந்தது. அவரும் தம் இடையை வரிந்து கட்டிக் கொண்டு இசிரியேல்வரை ஆகாபுக்கு முன்னே ஓடினார்'' (1 அர 18:46). இறைவனால் அனுப்பப்படாத இறைவாக்கினர்களும் இதையே செய்கின்றனர்: ''நாம் அந்தத் தீர்க்கத் தரிசிகளை அனுப்பவில்லை; அவர்களாகவே ஓடினார்கள்; நாம் அவர்களிடத்தில் பேசினதுமில்லை; அவர்களாகவே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்'' (எரே 23:21).

2. வாழ்க்கை ஓர் ஓட்டம்:-
அடிக்கடி பயணத்துடன் ஒப்பிடப்படுகின்ற மனித வாழ்வானது (யோவா 8:12; 1 பேதுரு 1:6-7), ஆர்வமிக்க கீழ்ப்படிதல் அல்லது அவசரப் பணியைக் குறிக்கும் போது ஓட்டமாக உருவாகிறது. தனது பணியை முடித்துவிட்ட திருமுழுக்கு யோவான் (அ.ப. 13:24-25) அல்லது நற்செய்தியைப் போதிப்பதன்மேல் கவனம் கொண்டுள்ள பவுல் (20:24) ஆகியோரைப் போன்று, சில நேரங்களில் ஓடுதல் என்பது வார்த்தையை அறிவிப்பதையே உணர்த்துகிறது (20:24). மகிழ்ச்சி ஆர்வம் மற்றும் உயிருள்ள வாழ்வு போன்ற குறிப்பை இறைவனுடைய வழிகளில் நடத்தல் என்ற உருவகத்துடன் சேர்த்து நேர்மையான வாழ்வினால் வரும் சுறுசுறுப்பையும் மகிழ்ச்சி ஆர்வத்தையும் ஓடுதல் என்பது கட்டிக் காட்டலாம். ''நீர் என் அறிவை விரிவாக்கும் போது, உம் கற்பனைகள் காட்டும் வழியில் நான் செல்வேன்'' (சங் 119:32). ''ஆண்டவர் மேல் நம்பிக்கை வைப்பவர்கள்... கழுகுகளைப் போல் இறக்கைகள் பெற்றுப் பறந்திடுவர், ஓடுவார்கள். ஆனால் களைக்க மாட்டார்கள்'' (ஏச 40:31). உன்னத சங்கீத மொழியில், ஆண்டவருடைய பணியில் செலவழிக்கப்பட்ட முழு வாழ்வின் இந்த ஆர்வமானது, மணமகனின் குரலின் சத்தத்தைக் கேட்டவுடன் மகிழ்ச்சியால் பொங்கிவழிகின்ற மணமகளின் ஆவலாக உருவாகிறது. ''என்னை உம்மோடு கூட்டிச் செல்லும்; ஓடிடுவோம்'' (உ.ச. 1:4). தலைவரின் கல்லறை நோக்கிய பேதுரு மற்றும் யோவானும் ஓடுவது இதே கருத்தையே கட்டுகிறது (யோவா 20:4).

பவுலின் நூல்களில், வெற்றி எய்த, தியாகங்களைக் கோருகின்ற விளையாட்டுப் போட்டியாக இந்த ஓட்டம் உருவாகின்றது (1 கொரி 9:24-27). அதே உருவகமானது வேறொரு வினைச்சொல்லைப் பயன்படுத்திப் பவுலின் வாழ்வின் மொத்த வீரச்செயல்களையும் விவரிக்கிறது. கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தும் நோக்கோடு தமஸ்கு செல்லும் பாதையில், கிறிஸ்து அவருடன்

சேர்ந்து கொள்கிறார். இதனால் தனது குறிக்கோளை அடைந்துவிட்டதாக அவர் கற்பனை செய்யவில்லை: ''எதற்காகக் கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டாரோ, அதை நான் பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து ஓடுகிறேன்...கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசு பெற வேண்டி இலக்கை நோக்கி முனைந்து ஓடுகிறேன்''. கிறிஸ்து இயேசுவுக்குள் என்னைக் கடவுள் மேலுலகுக்கு அழைப்பதே அப்பரிசாகும் *(பிலி 3:12 தொ).*

தடைகளால் நம்மைத் தடுத்து நிறுத்துவதற்கு அனுமதிக்காமல் *(கலா 5:7)* ''எண்ணிக்கையில்லாச் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க (அதாவது அரங்கிலுள்ள பார்வையாளர்களும், முந்தைய வெற்றி வீரர்களும்) நமக்குக் குறிக்கப்பட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. விசுவாசத்தைத் தொடங்கி வைத்தவரும் அதை நிறைவு பெறச் செய்பவருமான'' நமது முன்னோடியாகிய ''இயேசுவின் மேல் கண்களைப் பதிய வைப்போம்'' *(எபி. 12:1 தொ; 6:20).* அப்போது ஓட்டமானது பயனற்றதாக இருக்காது *(1 கொரி 9:26; கலா 2:2; பிலி 2:16).* அப்போது ''சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன்; ஓட்டத்தை முடித்துவிட்டேன்; விசுவாசத்தைப் பாதுகாத்தேன்'' *(2 திமோ 4:7)* என்று பவுலுடன் சேர்ந்து கூறக்கூடியவர்களாக நாமும் இருக்க முடியும். ஆனால் அனைத்தும் இறைவனிடமிருந்து மட்டுமே வருகின்றன என்பதை இவையனைத்திலும் நாம் மறந்துவிடக்கூடாது. ''விரும்புகிறவனாலும் அன்று; உழைக்கிறவனாலும் அன்று; இரக்கம் வைக்கும் கடவுளாலேயே எதுவும் ஆகும்'' *(உரோ 9:16).*

**ஓடை** (BROOK)

ஒரு சிறு நீரோடையையும் அது தோன்றும் பகுதியையும் இவ்வார்த்தை குறிக்கும். அராபிய மொழியில் இது வாடி என்றழைக்கப்படுகிறது. மழையைப் பொறுத்து இது வறண்டும், நீர் நிறைந்தும் காணப்படும். *லேவி 23:40; உப 9:21; 1 சாமு 17:40; 1 அர 17:7* ஆகிய பகுதிகளில் ஓடை என்பது எபிரேய வார்த்தையின் மொழி பெயர்ப்புதான். இந்த வார்த்தை, வாசகம் மற்றும் நிலப்பரப்பு ஆகிய சூழ்நிலையைப் பொறுத்து, ஆறு, பள்ளத்தாக்கு என்பதையும் குறிக்கும். எபிரேய வாசகம் ஓடை, ஆறு, பள்ளத்தாக்கு ஆகியவற்றை வேறுபடுத்துகிறது. ஆயினும் இந்த வேறுபாட்டை அறிவது கடினம். காரணம், ஓடை மழைக் காலங்களில் ஆறாக மாறும் தன்மையுடையது.

பாலஸ்தீனத்திலும் யோர்தானுக்குக் கிழக்கிலும் ஓடைகள் ஏராளம் இருந்தன. இவை கடற்கரைச் சமவெளிகளுக்குள்ளும், கலிலேயாக்கடலுக்கும், யோர்தான் பள்ளத்தாக்குக்குள்ளும் சாக்கடலுக்கும் ஓடின. இவைகளின் பக்கமுள்ள ஊர்களுக்கு இவைகள்தான் நீர்நிலைகளாக இருந்தன. விவசாயத்திற்குப் பெருமளவு பயன்பட்டன *(உப 8:7; 2 நாள் 32:4; சங் 110:7; எரே 31:9).* இவை மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துக் காட்டாறு போல் செல்லும் *(யோபு 6:15)* அபாயம் எப்போதும் இருந்தது. இவ்வோடைகள் நாட்டின் இனப்பிரிவுகளின் எல்லைகளைச் சுட்டிக்காட்டும் பொருட்டுக் குறிக்கப்படுகின்றன (எ.கா. அரபா, பெசோர், கெரித்து, எகிப்திய, கானா, .கிதரோன், கீசோன், அலரி, செரேத்து ஆகிய ஓடைகள்).

**ஓணான்** (CHAMELEON)

இது மரத்தில் வாழும் பல்லி வகையைச் சேர்ந்தது. சூழ்நிலைக்கேற்றவாறு தனது தோலின் வண்ணத்தை மாற்றும் ஆற்றலுடையது. பாலஸ்தீனத்தில் இது மரங்கள் மற்றும் நீர் நிலைகளுக்கருகில் பொதுவாகக் காணப்படும். தனது நீண்ட ஒட்டிக்கொள்ளும் காலால் தனது இறையைப் பிடிக்கும். இது அசுத்த விலங்குகளில் ஒன்றாகும் *(லேவி 11:30).*

**ஓதவா** (HODEVAH)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய லேவிய குடும்பத்தின் தலைவர் *(நெக 7:43)* காண்க. ஓதவியா (4).

**ஓதவியா** (HODAVIAH - ஆண்டவரைப் போற்று)

1. தாவீதின் வழித்தோன்றல் (1 நாள் 3:24). எலியோனாயின் மகனும் செருபாபேலின் வழித்தோன்றலுமாவர்.

2. மனாசேயின் பாதிக்கோத்திரத்துக் குடும்பத்தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 5:24).

3. பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்த அசனுவாவின் மகன் (1 நாள் 9:7).

4. நாடு கடத்தலுக்குப்பிறகு செருபாபேலின் தலைமையில் திரும்பிவந்த லேவியர்கள் குடும்பத்து முன்னோர் (எஸ் 2:40). நெக 7:43-இல் ஓதவா என்றழைக்கப்படுகிறார். எஸ் 3:9-இல் வரும் யூதா இவரையே குறிக்கலாம். லேவியரைப் பற்றிக் குறிப்பு இருப்பதால், ''யூதாவின் புதல்வர்கள்'' என்ற எபிரேய வாசகம் ''ஓதவியாவின் புதல்வர்கள்'' என்று மாற்றப்பட வேண்டும்.

**ஓதியா** (HODIAH - யாவே என் பேரொளி)

1. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கணவர். நாகாமின் மைத்துனர் (1 நாள் 4:19).

2. தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் எஸ்ரா மக்கள் முன்னிலையில் சட்டப்புத்தகத்தை வாசித்தபோது அதை மக்களுக்கு விளக்கிச் சொன்ன லேவியர்களுள் ஒருவர் (நெக 8:7). பாவப் பரிகார நாளில் வழிபாட்டை வழிநடத்த உதவியவர் (9:5). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட லேவியர்களில் சந்தேகமின்றி இவரும் ஒருவர் (10:10 அல்லது 10:13). இவர் 3-இல் வருபவராக இருக்கலாம்.

3. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட வேறொரு லேவியர் (நெக 10:10 அல்லது 10:13).

4. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு மக்கட் தலைவர் (நெக 10:18).

**ஓது** (HOD - மாட்சிமை, மகிமை)

ஆசேரின் குலத்திலே ஒரு குடும்பத்தலைவர் (1 நாள் 7:37) சோப்பாகின் மகன்.

**ஓதேது** (ODED - திரும்ப அமைப்பவர், நேரம் கணிப்பவர்)

1. ஆசா மன்னன் காலத்திலே வாழ்ந்த இறைவாக்கினர் அசரியாவின் தந்தை (2 நாள் 15:1,8).

2. ஆகாக மன்னன் காலத்தில் வாழ்ந்த ஓதேது இறைவாக்கினர், பெக்கா யூதா மக்களை அடிமைகளாக்குவதைக் கடுமையாக எதிர்த்தார்; விடுவித்தார் (2 நாள் 28:8-15).

**ஓத்திர்** (HOTHIR - அபரிமிதம், ஏராளம்)

ஆண்டவரின் ஆலயத்திலே தாளம், தம்புரு, சுரமண்டலம் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கவும், ஆலயத்திலே திருப்பணி செய்யவும் தாவீதால் நியமிக்கப்பட்ட ஏமானின் (2) புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 25:4). ஆலயத் திருப்பணி செய்யக் குறிக்கப்பட்ட நேரம் 24 பிரிவுகளில் 21ஆவது சீட்டு ஓத்திருக்கு விழுந்தது (25:28).

**ஓநாய்** (WOLF)

இது நாய் இனத்தைச் சார்ந்த புலால் உண்ணும் காட்டு விலங்காகும். இந்நாய் தனியாகவும், கூட்டமாகவும் சென்று, சாதாரணமாக இரவில் (அ.ப. 1:8) வேட்டையாடும். அதன் விருப்பமான இரை ஆடுகளாகும். இது அசுரப் பசியுடைய கொடூரமான விலங்காகும் (எச 11:6; யோவா 10:12). பெரும்பாலும் விவிலியத்தில் ஓநாய் உருவகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. ''ஓநாய்களிடையே ஆடுகளைப்போல் உங்களை நான் அனுப்புகிறேன்'' என்று இயேசு தம்முடைய சீடர்களை எச்சரிக்கிறார் (மத் 10:16; லூக் 10:3). பென்யாமின் பீறிக்கிழிக்கும் ஓநாய்க்கு ஒப்பாவார் (ஆதி 49:27). யூதாவின் எதிரி, மற்றும் யூதாவின் தலைவர்கள் ஓநாய்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் (எரே 4:6; எச 22:27; செப 3:3). போலி இறைவாக்கினர்கள், போலி ஆசிரியர்கள் ஓநாய்களுக்கு ஒப்பிடப்படுகின்றனர் (மத்

7:5; அ.ப. 20:29). மெசியாவின் ஆட்சியில் இக்கொடிய ஓநாயும் சாந்தமுறும்; செம்மறி யோடு சேர்ந்து வாழும் என்று ஏசயா இறை வாக்கினர் இறுதிக்கால அமைதியை விவரிக் கிறார் (ஏச 11:6; 65:25).

**ஓபால்** (OBAL - அம்மணமான, திறந்துள்ள)

இவர் யோக்கிதானின் மகன். மேலும் இப்பெயரானது ஓர் அராபிய இனத்தையும் குறிக்கிறது. இந்த இனம் எங்கு வாழ்ந்ததெனத் தெளிவாகத் தெரியவில்லை (ஆதி 10: 28). இவர் 1 நாள் 1:22-இல் ஏபால் என்றழைக்கப்படுகிறார்.

காண்க. ஏபால் (2)

**ஓபில்** (OBIL - ஒட்டகம் ஓட்டுபவன்)

இசுமயேல் குலத்தினனான ஓபில் தாவீது மன்னனின் அரச கண்காணிப்பாளராக இருந் தார். இவர் அரசனின் ஒட்டகங்களுக்குப் பொறுப்பாளராக இருந்தார் (1 நாள் 27:30).

**ஓபேது** (OBED - ஊழியன், வழிபடுபவன்)

1. இவர் போவாசுக்கும் ரூத்திற்கும் பிறந்த மகன். இவர் தாவீதின் தந்தையாகிய ஈசாயி யுடைய தந்தை (ரூத் 4:17.21-22; 1 நாள் 2:12). நகோமி இவருடைய குழந்தைப் பருவத் திலே தாதியாக இருந்தாள். மேலும் இவர் இயேசு கிறிஸ்துவின் முன்னோராவார் (3த் 1:5; லூக் 3:32).

2. இவர் ஒரு யூத குலத்தினர். எபிலாவின் மகனும் எரகுமேலின் வழித் தோன்றலுமாவார் (1 நாள் 2:37-38).

3. தாவீதின் வலிமை வாய்ந்தவர்களில் ஒருவர் (1 நாள் 11:47).

4. சாலமோனின் ஆலயத்திலே வாயில் காப்பவராக இருந்த லேவியர். ஒருவேளை கோராகியர் ஆவார். செமாயாவின் புதல்வர் களில் ஒருவர் (1 நாள் 26:7).

5. இவர் யூதாவை ஆண்ட அத்தாலியா அரசியின் காலத்தில் படைத் தலைவர் அசரியாவின் தந்தை (2 நாள் 23:1).

**ஓபேது-ஏதோம்** (BED-EDOM - ஏதோமின் ஊழியன்)

1. காத்து நகரத்தைச் சேர்ந்த பெலிஸ்தியர். கிரியத்து-எயாரிமுக்கும் எருசலேமுக்கும் இடையில் வாழ்ந்தார். ஊசாவின் அவலமான இறப்புக்குப் பிறகு, இவர் வீட்டிலே தான் தாவீது மன்னன் ஆண்டவரின் பேழையைவிட்டு வைத்தார். இப்பேழையின் பொருட்டு ஆண்டவர் ஓபேது-ஏதோமையும் அவருக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் எனக் கேள்விப் பட்ட தாவீது அதை எருசலேமுக்குக் கொண்டு வர முடிவு செய்தார் (2 சாமு 6:10-12; 1 நாள் 13:13-14; 15:25).

2. தாவீது காலத்தில் ஒரு லேவிய இசைக் கலைஞர் (1 நாள் 15:18-21). இசை வல்லுநர் எதுத்தூனின் மகன் (16:38). பெட்டகத்தின் வாயில் காப்போனாகவும் இருந்தார் (15:24). இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் பெட்டகத்தின் முன் பணி செய்ய நியமிக்கப்பட்டனர் (16:5.38). ஆய்வாளர் சிலர் இவர் 1-இல் குறிக்கப்படுபவரே என்று கருதுகின்றனர் அல்லது வாயிற்காப்பவர்கள் பெலிஸ்தியரான ஓபேது-ஏதோமைத் தங்கள் குலப் பெயர் மூதாதையராகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்பர்.

3. ஆண்டவர் ஆலயத்தின் தெற்கு வாயிலையும் பண்டக சாலையையும் காவல் காத்தவர். கோராக்கிய லேவியர் (1 நாள் 26:4-8.15). இவர் 2-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம் (1 நாள் 15:18.21).

4. அமசியா அரசன் காலத்தில் பொருட்களின் பொறுப்பாளர். இஸ்ராயேல் அரசன் யோவாசு யூதாவின் அரசன் அமசியாவைத் தோற்கடித்து எருசலேமைக் கைப்பற்றிய பின் (கி.மு. 790) ஓபேது-ஏதோமை ஒரு பிணையாளியாக அழைத்துச் சென்றார் (2 நாள் 25:24). 2 அரச 14:14-இல் வரும் இணையான விவரிப்பில் இவர் பெயர் காணப்படவில்லை.

**ஒபோத்து** (OBOTH - நீர்ப்பை)

இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது மோவாபிலுள்ள பூனோனுக்கும் இயே-அபாரிமுக்கும் இடையில் உள்ள ஒபோத்தில் தங்கினர் (எண் 21:10; 33:43-44). இது பூனோனுக்கு (இக்காலப் பெயினான்) மேற்கில் உள்ள அயின் ஏல்-வேய்பா அல்லது வடக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள அயின் கோசோப் ஆகிய இரு இக்காலப் பாலைவனச் சோலைகளில் ஒன்றாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

**ஓமர்** (OMER)

ஓர் அளவை. ஏப்பா என்ற அளவையில் பத்தில் ஒரு பாகமாகும் (யாத் 16:16-36).

**ஓய்வு** (REST)

பல விவிலிய உபயோகத்தில் இளைப்பாறுதல் என்னும் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாடு:- இங்கு இது தங்கியிரு, குடியேறு என்னும் பொருளிலும் (ஆதி 8:4; யாத் 33:14; உப 3:20; யோசு 1:13-20; யோசு 1:13-15; 23:1; ரூத் 1:9;3:1; 2 சாமு 7:1.11; 1 அர 5:4; 1 நாள் 22:9; யோபு 3:17-9), யோபு 23:13-இல் அமைதி என்னும் பொருளிலும் செயோலின் ஓய்வைக் குறிக்கவும் (யோபு 21:13; எரே 6:16) ஓய்வு, முடிந்துபோதல் என்னும் பொருளிலும் (யாத் 20:10; 23:12; 31:15-17) பயன்பட்டுள்ளது.

ஓய்வு என்பது பொதுவாக உடல் ஓய்வையே குறிக்கும். அது மனிதர்கள் தாமே எடுத்துக் கொண்டாலும் சரி கடவுளால் அளிக்கப்பட்டாலும் சரி, ஆன்ம இளைப்பாற்றியைவிட உடல் இளைப்பாற்றியையே குறிக்கிறது. இது பலவகைப்படும். பழைய ஏற்பாட்டைப் பொறுத்த அளவில், முதன் முதலில் குறிக்கப் பெறுவது தங்களுக்கென ஒரு நாட்டைப் பெற்றவுடன் அவர்கள் பெறும் நிம்மதி ஓய்வாகும். ''எனது பிரசன்னம் உன்னோடு செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்'' (யாத் 33:14). அடுத்து, இந்த ஓய்வு போரிலிருந்து கிடைக்கும் விடுதலையையும் குறிக்கும் (யோசு 23:1; 2 சாமு 7:1.11; 1 அர 5:4). சாலமோன் ஓய்வின் மனிதன் அல்லது அமைதியின் மனிதன் என அழைக்கப்பட்டது இந்தப் பொருளில்தான். ஆண்டவர் அவரது எல்லா எதிரிகளினின்றும் போரினின்றும் விடுவித்து அவருக்கு அமைதி அளிப்பார் என்பதாகும். கணவனை இழந்த தனது மருமகளுக்கு நகோமி விரும்பிய சாந்தி என்பது பாதுகாப்பு நிறைந்த ஒரு வாழ்வுதான் (ரூத் 1:9; 3:1). ஓய்வு நாளில் இஸ்ராயேலுக்கு மட்டுமல்ல அவர்களின் வேலையாட்கள், அங்கு தங்கியிருக்கும் அன்னியர்கள், விலங்குகள் (யாத் 20:10) ஆகிய அனைவரும் ஓய்வெடுக்கவேண்டும்; சாதாரண வேலையிலிருந்து இளைப்பாற வேண்டும். மீண்டும் புத்துணர்ச்சி பெறுவதே இதன் நோக்கம் ஆகும் (23:12). கடவுள் தனது படைப்பின் இறுதியில் ஏழாம் நாள் ஓய்வெடுத்து இளைப்பாறினார் (31:15-17). சாவுக்குப் பிறகு கிடைக்கும் ஓய்வு பற்றி யோபு 3:17-19-இல் மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இது எந்தவிதச் செயலுமற்ற ஓய்வானாலும், தொடர்ந்து வரும் துன்ப வாழ்க்கையைவிட மேலானதாகக் கருதப்பட்டது. இக்கருத்து சீரா 22:11; 30:17-இல் குறிக்கப்படுகிறது; அங்குச் சாவு நித்திய இளைப்பாற்றி என்றழைக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் இளைப்பாற்றி, ஓய்வு என்பது மன அமைதியைக் குறிப்பதாக எவ்விடத்திலும் வரவில்லை. எரே 6:16-இல் கூறப்படும் அமைதி, அரசியல், சமூகப் பாதுகாப்பைச் சுட்டுவதாகும். ''உங்கள் ஆன்மாவுக்'' கென்று கூறுவது உங்களுக்கு மட்டுமே எனும் பொருள்படும். ''ஆண்டவரில் அமைதிகொள்'' எனச் சங் 37:7-இல் வருவது தவறான மொழிபெயர்ப்பாகும். ''ஆண்டவர்முன் அமைதியாக இரு'' என்பதே சரி.

2. புதிய ஏற்பாட்டில்:- ஓய்வுபற்றி இங்கு அதிகம் பேசப்படவில்லை. அப்படியே பேசப்பட்டாலும், சமய, இறையியல் முக்கி

யத்துவம் அதற்கு அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. ''உங்களை நான் இளைப் பாற்றுவேன்'' என்று மத் 11:28-29-இல் கூறப் படும் பொருளிலே பொதுவாக எல்லா இடங்களிலும் ''ஓய்வு'' என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது. ஊக்கமூட்டப்படுதல் புத் துணர்ச்சி பெறுதல் எனும் பொருளிலும் 1 கொரி 16:18; 2 கொரி 7:23; பில 7:20 போன்ற இடங்களில் பவுலால் பயன்படுத்தப்பட்டுள் ளது.

புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் ஆசிரியரே ஓய்வு பற்றி அதி கம் பேசுகிறார் (3:7-4:11). கிறிஸ்துவின் நற்செய்தி நிறைவடைவது அனைவரும் ஆண்டவரின் அமைதி பெறுவதேயாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் பாலை வனத்திலே சுற்றித் திரிவர்; ''அவர்கள் என் இளைப்பாற்றி அடையமாட்டார்'' (சங் 95:1) என்பது கானான் நாட்டை அடைய மாட்டார்கள் என்பதையே குறிக்கிறது. ஆனால் இதே வரியை எடுத்துக் கொண்டு (ஆதி 2:2-இன் ஒளியில்) கடவுளின் திட்டப் படி அவரது அமைதியில் பங்குகொள்ள வேண்டுமெனப் பரந்த, ஆழ்ந்த பொருள் கொடுக்கிறார் எபிரேயர் திருமுக ஆசிரியர். கடவுளின் அமைதியில் பங்கு கொள்கிறவன் அவனது வேலைகளிலிருந்தும் இளைப் பாற்றி அடைகிறான் (எபி 4:9-10). இறந்த பேறு பெற்றோர் கடினமான உழைப்பி னின்று மட்டுமே ஓய்வு பெறுகின்றனர் என்ற கருத்து இருந்தது. பொதுவாக ஆதி 2:2-இன் ஆழ்ந்த பொருளை உணராமல் கடவுளை மனிதத் தன்மையில் பார்த்தால், மீட்படைந்தோரின் மகிமையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் உடல் உழைப்பி னின்று விடுதலை எனப் புரிந்து கொண்ட னர்.

புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியி லும் ஓய்வுக்கு அதிகம் சமய முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படவில்லை.

## ஓய்வு ஆண்டு (SABBATICAL YEAR)

ஓய்வு வருடம் அல்லது ஏழாவது வருடம் ஐந்நூலில் உள்ள மூன்று சட்டத் தொகுப்பில் தரப்பட்டுள்ளது. உடன்படிக்கைச் சட்டம் (யாத் 23:10-11); உபாகமச் சட்டம் (உப 15:1-3); புனிதச் சட்டம் (லேவி 25:2-8).

யாத்திரையாகமமும், லேவியராகமமும் இந்த ஓய்வு வருடத்தைப்பற்றிக் கூறுகையில் ஒத்துள்ளன. இச்சட்டமானது ஏழாம் வரு டம் பயிர் செய்வதைத் தடுக்கிறது. மனித னைப்போல் விலங்குகளும் நிலமும் ஓய்வு எடுக்க வேண்டும். உப ஆகமத்தின் ஏழாம் வருடம் பற்றிய சட்டம் (15:1-3.9) நிலத்தைப் பற்றியோ ஓய்வைப் பற்றியோ பேச வில்லை. இது வாங்கப்பட்ட கடன் ஏழாம் வருடம் மன்னிக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது. உப 15:9-இன்படி இந்தச் சட்டம் 7 வருடச் சுழலைக் குறிக்கிறது. இந்த ஓய்வு வருடச் சட்டமும் யாத் 21:2; உப 15:12-14 ஆகிய இடங்களில் வரும் 7 வருட உழைப் பிற்குப்பின் அடிமைகளுக்குச் சுதந்தரம் வழங்க வேண்டும் என்ற சட்டமும் தொடர் புடையதா என்பது தெரியவில்லை.

இந்தச் சட்டங்களை ஆராயும்போது இவை நடைமுறைக்கு ஒத்து வருமா? அப் படிக் கடைப்பிடிக்கப்பட்டனவா? என்பது சந்தேகமே இறைவாக்கினர் எரேமியா அடி மைகளைப் பற்றிய சட்டங்களை இஸ்ரா யேல் மக்கள் கடைப்பிடிக்கவில்லையெனச் சாடுகிறார் (எரே 38:8-22). மேலும் கடனைக் கட்ட முடியாத நிலையில் மன்னிக்க வேண் டுமென எல்லா இனத்தவரும் அக்காலத்தில் கருதிவந்தனர். இதையே சட்டமாக மாற்றி யது கடன்கொடுப்பவர் தாராள மனத்துடன் செயல்பட வேண்டுமென்பதற்காகவே ஆகும்.

ஏழு, ஏழு ஆண்டுச் சுழலுக்குப்பின் ஜுபிலி ஆண்டு வந்தது (லேவி 28:8-55). ஒவ்வொரு ஓய்வு ஆண்டிலும் கூடாரவிழாவின்போது சட்டம் வாசிக்கப்பட்டது (உப 31:10-11). நெகமியாவின் தலைமையில் புதுப்பிக்கப் பட்ட உடன்படிக்கையில் ஓய்வு ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது (நெக 10:31). அச மோனியர்கள் காலத்தின் தொடக்கத்தில்

சில சமயங்களிலாவது ஓய்வு ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது (1 மக் 6:48.53).

**ஓய்வு நாள்** (SABBATH - DAY OF REST)

I. பழைய ஏற்பாட்டில்:-

1. ஓய்வுநாளின் அடிப்படைக் கருத்து:- ''ஓய்வு நாள்'' என்பது இறைவனால் புனிதப்படுத்தப்பட்ட ஓர் ஒப்பற்ற நாளாகும். நம்மைப் படைத்து, (ஓய்வின்றிக்) காத்து வரும் இறைவனுக்காக இந்நாளில் வேலை முதலியவற்றில் ஈடுபடாமல் இறைவழிபாட்டில் ஈடுபடுவதைக் குறிக்கிறது. முன்னோர்களுக்கு ஓய்வுநாளை அனுசரிப்பது சட்டமாதலால் அவர்கள் அதைத் தொன்று தொட்டுப் பரிசுத்தமாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர் (யாத் 20:8; 23:12; 34:21). இறைவாக்கினர் மோசே காலத்திற்கு முன்பே ஓய்வு நாளை அனுசரிக்கும் பழக்கம் இருந்து வருவதால் எப்பொழுதுமுதல் இப்பழக்கம் வழக்கத்திலிருந்து வருகிறது என்பதை நிர்ணயப்படுத்திக் கூற இயலாது. ஓய்வு நாள் வாரத்தின் இறுதி நாளாகவும், மகிழ்ச்சிக்குரிய நாளாகவும், இறைவனை எல்லாரும் ஒன்று சேர்ந்து தொழுவதற்கு ஒரு முக்கிய நாளாகவும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஓசே 2:13; 2 அர 4:23; ஏச 1:13).

2. ஓய்வு நாளை அனுசரிக்கக் காரணம்:- இறைவன் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கைச் சட்டம் மனிதன் ஓய்வு நாளை அனுசரிப்பதின் மனிதாபமான கோணத்தை வலியுறுத்துகிறது (யாத் 23:12). இதுவே உபாகமச் சட்டத்தின் நோக்கமாகும் (உப 5:12). ஆனால் 'குருக்களின் சட்டம்' ஓய்வு நாளைப்பற்றிக் குறிப்பிடும்போது அதன் பொருள் வேறுபட்டுக் காணப்படுகிறது. மனிதன் தனது வேலைகளைச் செய்யும் போது படைப்புத் தொழில் புரியும் இறைவன் வழியைப் பின்பற்றுகின்றவனாகக் காட்சி அளிக்கிறான். மனிதனும் வாரத்தில் ஏழாவது நாளன்று வேலைகளில் ஈடுபடாமல் ஓய்வெடுத்துக் கொள்ளும் போது இறைவனுடைய புனித ஓய்வைப் பின்பற்றுகிறான் (யாத் 31:12 தொ; ஆதி 2:2 தொ). இவ்வாறாக இஸ்ராயேல் மக்களுக்கு ''அவர்களைப் பரிசுத்தப்படுத்தும் ஆண்டவர் நாமே என்பதை அவர்கள் அறியும்படி நமக்கும் அவர்களுக்கும் அடையாளமாக ஓய்வு நாட்களை'' (எச 20:12) அவர்களுக்கு அருளினார்.

3. ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல்:- ஓய்வு நாளைப் புனித நாளாக அனுசரிப்பதை இஸ்ராயேல் மக்கள் கட்டளையாகக் கருதி வந்தனர்: ''ஓய்வு நாளிலே...உங்கள் உறைவிடங்கள் எங்கும் நெருப்பு மூட்டாதீர்கள்'' (யாத் 35:3). ஓய்வு நாளிலே சட்டத்திற்கு விரோதமாகப் பாலைவனத்தில் விறகு பொறுக்கியவனுக்குத் தண்டனை வழங்கப்பட்டது (எண் 15:32). ஓய்வு நாளில் சமைக்கக்கூடக் கூடாது என்பதற்காக அதற்கு முந்தின நாளே சமைத்துக் கொண்டார்கள் (யாத் 16:23). ஆண்டவர் மக்களுக்கு வாக்களித்த இறுதிக்கால வாக்குறுதிகள் நிறைவேறும் பொருட்டு ஓய்வுநாளைப் புனித நாளாக அனுசரிப்பது அவசியம் என்பதற்கு இறைவாக்கினர்கள் சான்று பகர்கின்றனர் (எரே 17:19-27; எச 58:13 தொ). இதன்படி நெகமியா எவ்வாறு ஓய்வு நாளைக் கடைப்பிடித்தார் என்பதையும் (வேதாகமத்தில்) காண்கின்றோம் (நெக 13:15-22). ஓய்வுநாளைப் புனித நாளாக்கும் பொருட்டு (உப 5:12) புனிதக் கூட்டங்களும் (லேவி 23:3) தகனப் பலிகளும் (எண் 28:8) நிறைவேற்றப்பட்டன. அந்நாளில் ''நித்திய உடன்படிக்கையாக இஸ்ராயேல் மக்களிடம் பெற்றுக்கொண்ட அப்பங்களை ஆண்டவர் முன்னிலையில் மாற்றிப்'' புதுப்பித்துக் கொண்டனர் (லேவி 24:8; 1 நாள் 9:32). எருசலேம் நகருக்கு வெளியே சுற்றுப் புறத்திலுள்ள மக்கள் மேற்கூறப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளுக்குப் பதிலாகச் செபக்கூடங்களில் பொதுச் செபம் செய்வதிலும் வேதாகமத்தின் வாசகங்களுக்கு விளக்கங்கள் பெறுவதிலும் ஓய்வு நாளைப் புனித நாளாகக் கடைப்பிடித்தனர். மக்கபேயர் காலத்தில் கசிதேயர் ஓய்வு நாளினை எந்த அளவுக்குப் புனித நாளாகக் கருதினார்கள் என்றால் அந்நாளில் எதிரிகளால் வெட்டுண்டு மடிவதற்குத் தயாராக

இருந்தார்களே தவிர அப்புனித நாளின் ஒழுங்குக்கு மாறாகப் போருக்குரிய ஆயுதங் களைக் கையிலேந்திப் போராடவில்லை (1 மக் 2:32-48). புதிய ஏற்பாட்டின் காலத்தில் எஸ்ஸேனியக் குழுவைச் சேர்ந்தவர்கள் ஓய்வு நாளைக் கடுமையாகக் கடைப்பிடித்த னர் என்பதையும், பரிசேயர் ஓய்வுநாளை அனுசரிப்பதில் ஒரு சிறு காரியத்தையும் பெரிதுபடுத்தித் தர்க்கித்தனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

II. புதிய ஏற்பாட்டில்:-

1. இயேசுவும் ஓய்வுநாளின் சட்டத்திற்கு அமைந்தே நடந்து வந்தார்:- அந்நாளைச் செபக் கூடங்களுக்குச் சென்று பலமுறை போதிப்பதற்குச் சாதகமான நாளாகக் கருதி வந்தார் (லூக் 4:16). இயேசு ஓய்வு நாளை அனுசரிக்கும் ஒழுங்குகளுக்கும் சட்டத்திற் கும் விரோதமாக எதையும் செய்யவில்லை. மாறாகப் பரிசேயர்களின் ஆசாரத்தின் கண் டிப்பை அகற்றினார். ''ஓய்வுநாள் இருப்பது மனிதனுக்காக, மனிதன் இருப்பது ஓய்வு நாளுக்காக அன்று'' (மாற் 2:27) என்றும், சட்டத்தின் வெறும் வார்த்தைகளுக்குப் பணிந்து, கருத்தினை உணராமல் ஓய்வு நாளை அனுசரிப்பதைவிடப் பிறருக்கு அன்பு செய்வது முதன்மையானதும் சிறப்பு வாய்ந்ததும் ஆகும் என்றும் எடுத்துரைத்தார் (மத் 12:5; லூக் 13:10-16; 14:1-5). மேலும் மனுமகன் ஓய்வு நாளுக்கு ஆண்டவர் என் றும், தமக்கு அதன்மேல் அதிகாரம் உண்டு என்றும் உரிமை கொண்டாடினார் (மாற் 2:28). அதன் பொருளை உணராத யூத மக்கள் இயேசுவுக்கு எதிராகத் தொல்லை கொடுக் கத் தொடங்கினர் (யோவா 5:9); ஆனால், தந்தை எவ்வாறு படைப்பு வேலைகளுக்குப் பிறகு ஓய்ந்தபின்னும் இவ்வுலகை ஆட்சி செய்யவும் வாழ்வளிக்கவும் தொடர்ந்து செய்கிறாரோ அதுபோல இயேசுவும் தந்தை வழிநின்று நன்மை செய்வது தவறு என்று எவரும் கூற இயலுமோ?

தொடக்கத்தில் இயேசுகிறிஸ்துவின் சீடர் கள் ஓய்வு நாளுக்கு முந்தின நாளை ஆயத்த நாளாகவும் ஓய்வு நாளைப் புனித நாளாக வும் கடைப்பிடித்து வந்தனர் (மத் 28:11; மாற் 15:42; 16:1; யோவா 17:42). இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகும் ஓய்வுநாளை யூதர்களிடையே நற்செய்தி பரப்புவதற் குகந்த நன்னாளாகக் கொண்டாடி வந்தனர் (அ.ப. 13:14; 16:13; 17:2; 18:4). ஆனால் வாரத்தின் முதல்நாள் இயேசு உயிர்த்த நாளா னதால் விரைவில் அந்நாள்த் 'திருச்சபை' ன்று கூடி இறைவனை வாழ்த்தி வணங்கும் நன்னாளாகப் போற்றப்பட்டு வந்தது (அ.ப. 20:7; திருவெளி 1:10). பிறருக்குப் பொருளு தவி செய்வதும் இறைவனை வாழ்த்தி வணங்குவதுமாகிய யூதர்களின் பழக்கவழக் கங்கள் ஆண்டவருடைய நாளாகிய இன்று கடைப்பிடிக்கப்பட்டன. இந்தப் புதிய நோக் கில் மற்றப் பழைய ஏற்பாட்டு நிறுவனங்க ளைப்போல் யூதர்கள் கடைப் பிடித்து வந்த ஓய்வுநாளும் உருவகப் பொருள் பெற்றது. இறைவன் படைப்பின் வேலை கள் அனைத்தும் முடித்தபின்பு ஏழாம்நாள் ஓய்வெடுத்துக்கொண்ட நாளை நினைவு படுத்தும் புனித நாளாக மக்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்து வந்தனர். இப்போது இயேசு தமது உயிர்ப்பினால் ஒரு புனிதமான ஓய்வு நிலையை அடைந்திருக்கின்றார். இயேசு வைப் பின்பற்றுவோர் அனைவருக்கும் இப் புனிதமான ஓய்வை அளிப்பதாகவும் வாக்க ளித்துள்ளார் (எபி 4:1-11). இறைவனின் இளைப்பாற்றியை அடைந்தவனே வேலை களிலெல்லாம் ஈடுபடாமல் உண்மையான ஓய்வைப் பெறுவான். அப்பொழுது இறை வன் ''தம் வேலையை முடித்து இளைப்பா றுவது போலவே, தானும் தன் வேலையை முடித்து இளைப்பாறுகிறான்'' (எபி 4:10; திருவெளி 14:13).

## ஓய்வுநாள் பயணத் தூரம் (SABBATH DAY'S JOURNEY)

யூத மதச்சட்டம் ஒருவர் ஓய்வு நாள் அன்று, இவ்வளவு தொலைவு பயணம் செய்யலாம் என்று அனுமதி அளித்துள்ளது.

அ.ப. 1:12-இல் ஒலிவத்தோப்பு என்னும் மலையிலிருந்து எருசலேம் வரை செல்லும் தொலைவு ''ஓய்வு நாளில் நடக்கக்கூடிய

தூரம்'' என்று கூறப்படுகிறது. யோசிப்பஸ் என்பவர் இதை 5 அல்லது 6 பர்லாங்கு என்று குறிப்பிடுகிறார். எனவே ஏறக்குறைய 990 மீட்டர் அல்லது 1200 மீட்டர் ஆகிறது. இந்தச் சொற்றொடர் விவிலியத்தில் வேறெங்கும் பயன்படுத்தப்படவில்லை. இது யோசு 3:4-இலிருந்து பெறப்பட்டது. அதில் ''உங்களுக்கும் உடன்படிக்கைப் பேழைக்கும் 2,000 முழ தூரம் இருக்கட்டும்'' என்றிருக்கிறது. இதிலிருந்துதான் 2,000 முழு தூரம் என்பது பேழையிலிருந்து இஸ்ரா யேல் இருப்பிடத்திற்கு அதிகப்பட்ச தூர மாக மாறியது. எனவே 2,000 முழதூரம் ஓய்வு நாளில் பயணம் செய்யக்கூடியதாய் மாறியது. யாத் 16:29-இல் ''ஏழாம் நாளிலே உங்களில் எவனும் தன் இடத்தை விட்டு நகராமல் அங்கேயே இருக்கட்டும்'' என்றி ருக்கிறது. எண் 35:5-இல் ''சுற்றுவெளிகள் நகரின் மதிற்சுவரிலிருந்து நகருக்கு 2,000 முழம் எப்பக்கமும் இருக்கும்''. யூத இராபிக ளின் பாரம்பரியம் இதை ''ஓய்வு நாள் பயண'' அளவாக விளக்குகிறது.

யாத் 16:29 என்ற பகுதிக்கு எருசலேம் தார்கூம் ''எவனும் ஏழாம் நாளிலே 2,000 முழ தூரம் இந்த இடத்திலிருந்து போக வேண்டாம்'' என்று விளக்கம் கொடுத்துள் ளது. அதே முறையிலேயே மற்ற யூத போதக மும் அமைந்துள்ளது.

**ஓரசு** (HORESH - காடு)

தாவீது பாலைவனத்திலுள்ள சிப்பு என்ற காட்டில், சவுலிடமிருந்து தப்பித்து வந்து, சில காலம் தங்கிய இடம். இங்குதான் சவுலின் மகன் யோனத்தானுக்கும் தாவீதுக் கும் ஆண்டவருக்கு முன்பாக உடன் படிக்கை நடந்தது (1 சாமு 23:15-19). கெபிரோ னுக்குத் தென்கிழக்கில் 9.6 கி.மீ. தொலைவி லும், தேல் சிப்பிலிருந்து 3 கி.மீ. தொலைவி லும் உள்ள கிர்பெத் கொரெசியா தான் இவ்விடம் என்று வழக்கமாகக் குறிப்பிடப் பட்டு வருகின்றது.

**ஓராம்** (HORAM - ஆணவம்)

கெசெரின் அரசர். இவர் இலாக்கீசுக்குத் துணை செய்ய வந்திருந்தபோது, யோசுவா வால் வெட்டி வீழ்த்தப்பட்டவர் (யோசு 10:33).

**ஓரியன்** (ORION - மிருக சீரிடம்)

இது மிருக சீரிடம் என அழைக்கப்படும் விண்மீன் கூட்டத்தின் பெயர். இதே வார்த்தை மற்ற இடங்களில் மந்தத்தன்மை, முட்டாள் தனம் இறைப்பற்றற்ற தன்மை போன்ற பொருட்களையும் குறிக்கிறது (சங் 49:10; 92:6; 94:8). விவிலியத்தில் மூன்று இடங்களில் இந்த மிருகசீரிடம் வெளிப் படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 9:9; 38:31; அமோ 5:8).

பண்டைய புராணக் கதைகள், ஓரியன் ஒரு பலமுள்ள மனிதன் எனவும், அவர் சாகும் போது வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட் டாரெனவும், ஆகாயத்தில் கட்டுண்டு இந்த விண்மீன் கூட்டமானாரெனவும் கூறுகின் றன. யோபு 38:31-இன்படி இந்தப் பலசாலி இறைவன்மேல் நம்பிக்கை கொள்ளாமல் தன் சுயபலத்தை நம்பினார். எனவே அவரை, அவரைவிடப் பலமுள்ள சக்தியா கிய இறைவன் அடக்கிவிட்டார்.

**ஓரேபு** (OREB - அண்டங்காக்கை)

மிதியானிய இளவரசர்களான ஓரேபு, செயேபு ஆகியோரின் படைகள் கிதயோ னால் தோற்கடிக்கப்பட்டபின், இவர்கள் எப் பிராயிமியர்களால் பிடிக்கப்பட்டுக் கொல் லப்பட்டனர்.

இஸ்ராயேலர் பாவம் செய்ததால், இறை வனால் அனுமதிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் மிதியானியர், இவர்கள்மேல் ஆட்சி செலுத்தி வந்தனர். இவர்களை எதிர்த்து நீதிபதி கிதயோன் இசிரியேல் பள்ளத்தாக் கில் பாளையம் இறங்கியிருந்த மிதியானிய ரைத் தாக்கினார். கிதயோன் எப்பிராயிம் மலைநாடெங்கும் தூதர்களை அனுப்பி ''மிதி யானியருக்கு எதிராய் இறங்கிப் பேத்துபா ராவின் நீர்த்துறைகளையும், யோர்தானின் நீர்த்துறைகளையும் கைப்பற்றிக் கொள்ளுங் கள்'' என்றார். அவர்களும் அப்படியே செய்து மிதியானிய இளவரசர்களான

ஓரேபை, ஓரேபு பாறையிலும், செயேபு வைச் செயேபு என்ற ஆலையிலும் கொன்ற னர். மேலும் அவர்கள் இவ்விளவரசர்களின் தலைகளை யோர்தான் நதிக்கு அப்பால் இருந்த கிதயோனிடம் அளித்தனர் (நீதி 7:24-8:3). இவர்கள் கொல்லப்பட்ட இடத்திற்கு இவர்கள் பெயர் சூட்டப்பெற்றது. இவ்விரு வரது கொலையும் மிதியானியர் தோல் வியும் இஸ்ராயேலர்களிடையே ஒரு முது மொழியாயிற்று (சங் 83:11; ஏச 9:4; 10:26).

ஓரேன் (OREN வெற்றி மாலை, புன்னை)

யூதா வழித்தோன்றலான இவர் எரகுமே லின் மகனாவார் (1 நாள் 2:25).

ஓர் (HOR ) - மலை

1. ஏதோமின் எல்லையில் உள்ள ஒரு மலை. ஒரு பாரம்பரியத்தின்படி, ஆரோன் இங்குதான் புதைக்கப்பட்டதாகக் கூறப்படு கிறது (எண் 20:22; 21:4; 33:37; உப 32:50). ஆனால் இதற்கு மாறாக உப 10:6-ஐப் பின் பற்றும் பாரம்பரியம் ஆரோன் மொசேரா வில் இறந்ததாகவும் அங்கேயே புதைக்கப் பட்டதாகவும் கூறுகிறது.

பெத்திராவுக்கு அருகில் உள்ள மலைக ளில் ஒன்றுதான் ''ஓர்'' என்று யோசிப்பஸ் கூறுகிறார். இது ஏதோம் மலைத் தொடர்ச்சி யிலே மிகவும் கரடுமுரடானதும், உயரமான துமான அதாவது 1460 மீட்டர் உயரத்தில் இரட்டைச் சிகரம் கொண்ட மணல் கற்க ளால் ஆன குன்று. ஆரோனின் மலை என் கிற எபேல் ஆரூன் 'ஓர்' மலை என்று பாரம்பரியம் கூறுகிறது. எபேல் ஆரூன் மேல்தான் ஆரோனுக்குச் சொந்தமான கல் லறை இருக்கிறது என்று சொல்லப்படுகி றது. மேல்பகுதியில் முகமதிய மசூதி ஒன்று இருக்கிறது. ஆனால் பேரரசன் யுஸ்தினியன் காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ கோயில் தான் ஒரு வேளை இக்கல்லறையாக இருக்க லாம்.

ஏதோமின் எல்லையில் அல்லாமல் (எண் 20:22) நடுப்பகுதியில் ஓர் மலையைக் குறிப்பி டும் இந்தப் பாரம்பரியம் பல பெரிய சந்தே கங்களுக்கு வழிகாட்டுகிறது. ஏதோமைக் கடந்து செல்ல இஸ்ராயேலருக்கு அனு மதியை மறுத்துவிட்டதுமல்லாமல், பெரும் படையை ஏதோம் தன் எல்லையில் நிறுத்தியி ருந்தால் (எண் 20:17-21; உப 2:8) இஸ்ரா யேல் ஏதோமைக் கடக்காமல் எபேல் ஆரூனை அடைந்திருக்க முடியாது. எனவே காதேசிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ள எபேல் மதுராதான் 'ஓர்' மலையாக இருந்தி ருக்கவேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. அதனுடைய இட அமைப்புக் கூட, மக்கள் முன்னிலையில், தந்தையிடமிருந்து மகனுக் குக் (எண் 20:22-29) குருத்துவ பட்டத்தை மாற்றிக் கொடுக்கும் வழிபாட்டை நடத்துவ தற்கு ஒத்துப் போவதாக அமைகிறது. ஆனால் எபேல் ஆரூன் மிக உயரமானதும், அங்கு என்ன நடந்தது என்று மக்களால் சாட்சி சொல்ல எட்டாததாகவும் உள்ளது. இருப்பினும் 'இதுதான் ஓர்' என்று உறுதியா கக் கூறப்போதுமான அளவு சான்றுகள் இல்லை.

2. இன்னொரு மலைச்சிகரமும் இதே பெயரில் அழைக்கப்படுகிறது (எண் 34:7-8). இஸ்ராயேல் ஆட்சியின் வடக்கு எல்லை யில் இது குறிக்கப்படுகிறது. லெபனோன் மலைத் தொடரிலே முக்கியமான சிகரமாக இருக்கலாம். கெர்மோன் மலையும், லெப னோனின் வடகிழக்கு முகட்டிலுள்ள எபேல் அக்காரும், 'ஓர்' மலைச்சிகரம் இருந் திருக்கக் கூடிய இடங்களாகச் சுட்டிக் காட் டப்படுகின்றன.

ஓலபெரினே (HOLOFERNES - ; நதிரமுள்ள, ஏமாற்றுகிற)

'மேற்கு நாட்டினர் அனைவர்மீதும்' படையெடுக்க நெபுக்கதுனேசரால் நியமிக் கப்பட்ட அசீரியப் படைத்தளபதியாவார் ஓலபெரினே. இவர் ஒரு பெண்ணின் கைக ளில் இறுதித் தோல்வியைத் தழுவினார்.

நூற்றிருபதினாயிரம் (120,000) காலாட் படையினரையும், வில் எய்யும் 12,000 குதி ரைப் படையினரையும் கொண்ட பெரும் படையை நடத்திச் சென்ற ஓலபெரினே மத்திய

தரைக்கடல் நாடுகளில் பெரும் பீதியை உண்டாக்கி அசீரிய ஆட்சியை நிலைநாட்டினார். நெபுக்கதுனேசாரைத் தவிர வேறு யாரை வழிபட்டாலும் அவர்கள் எங்கிருந்தாலும் அழித்துவிட, தேடிக் கொண்டிருந்தார். யூதேயாவையும் கைப்பற்ற அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தபோது, 'யாரும் வெற்றி கொள்ளமுடியாத இறைவனுடைய பாதுகாப்பில் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று அம்மோனியர் அனைவருக்கும் தலைவனான அக்கியோரால் ஓலபெரினே எச்சரிக்கப்பட்டார். கலகக்காரனான படைத்தளபதி ஓலபெரினே அக்கியோரின் அறிவுரையைத் தூக்கி எறிந்துவிட்டு, அவரைக் கட்டி யூதேயாவில் கொண்டு போய்ப் போட்டுவிடக் கட்டளையிட்டார். பெத்தூலியா என்ற நகரை முற்றுகையிட்டார். இந்த அவல நேரத்தில் எபிரேயர்கள் அவர்களுடைய தலைவர்களைப் பணிந்துவிடத் தூண்டினர். விதவை யூதித்து எல்லைகளைக் கடந்துச் செல்ல அனுமதி பெற்றுக் கொண்டு அவளுடைய அழகால் அந்த ஆற்றல் மிக்க போர்வீரனை மயக்கினாள். அவர் குடித்து மயங்கிக் கிடந்தபோது, அவர் தலையைக் கொய்து, இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பைப் பெற்றுத்தந்தாள்.

அதிகாரத்தில் நெபுக்கதுனேசாருக்கு அடுத்தபடியாக இருந்த அவர் ஒரு பெண்ணின் அழகில் நிராயுதபாணியானார். அசீரிய ஏடுகளில் இப்படிப்பட்ட ஒரு தளபதியைப் பற்றிய வரலாறு இல்லை. ஆனால் மூன்றாம் அர்த்தா செருசின் கீழ் ஓலபெரினே என்ற பெயரில் இருந்த தளபதி சிறிய ஆசியாவைக் கைப்பற்றினார் என்று அறிகிறோம்.

**ஓனாம்** (ONAM - *பலமான, ஊக்கமான*)

*1. ஏதோம் நாட்டிலிருந்த ஒரு கோரியர் உப-குலத்தின் மூதாதையர் (ஆதி 36:23; 1 நாள் 1:40). இவர் சோபாலின் ஐந்தாம் மகனாவார்.*

*2. எரகுமேல்-அத்தாரா-வின் மகன் (1 நாள் 2:26.28).*

**ஓனான்** (ONAN - *ஊக்கமிக்க, செல்வமிக்க*)

யூதாவுக்கும் கானானிய (பது-) சூவாவுக்கும் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 38:4-10; 46:12; எண் 26:19; 1 நாள் 2:3). தன் தீய அண்ணன் ஏர் வாரிசு இல்லாது இறந்தபின், அவன் மனைவியைத் தன் மனைவியாக ஏற்று அவளோடு தன் தமையனுக்கு மகப்பேறு அளிக்க, சமூக வழக்கமும் (காண்க. 25:5-10) பெற்றோர் கட்டளையும் வற்புறுத்தின. அந்தச் சந்ததி தன் சந்ததியாய் இராதென்று அறிந்து அவன் தன் தமையனின் விதவையான தாமாரோடு படுக்கையில், தன் தமையனுக்கு மகப்பேறு உண்டாகாதபடிக்குத் தன் விந்தைத் தரையிலே விழ விட்டுவிட்டு வந்தான். அவன் செய்தது பெரிய அக்கிரமமென ஆண்டவர் அவனை அழித்து விட்டார் (38:9-10).

**ஓனியா** (ONIAS)

*மக்கபேயர் காலத்தில், குருக்கள் குடும்பத்தில் இப்பெயரைத் தாங்கியவர் பலர் இருந்தனர்.*

*1. முதலாம் ஓனியா:- யூதேயாவிலிருந்த பெரியகுரு. யாதுவா என்ற பெரிய குருவின் மகனாவார் (கி.மு. 320-290). இவருடைய மகன் பெரிய குரு முதலாம் சீமோன் ஆவார். ஓனியா, ஸ்பார்த்தரின் மன்னன் அரியோசு (கி.மு. 309-265) காலத்தில் வாழ்ந்தவர். அரியோசு, ஸ்பார்த்தர் யூதருக்கு உறவினர் ஆகும்படி, அவர்களுடன் நட்பையும் உடன்படிக்கையையும் ஏற்படுத்திக் கொண்டார் (1 மக் 12:7-23). இந்த ஓனியா குடும்பம், சாலமோன் மன்னரால் நியமிக்கப்பட்ட பெரிய குரு சாதோக்கின் வழித்தோன்றல் என எண்ணப்படுகிறது (1 அர 2:35).*

*2. இரண்டாம் ஓனியா:- (227 கி.மு.) முதலாம் சீமோனின் மகனாவார். சீரா 50:1, இந்தச் சீமோனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறது. இரண்டாம் ஓனியா மூன்றாம் தோலமி மன்னருக்குத் திரை செலுத்த மறுத்தார். இவர் தோலமியை எதிர்த்துப் பாபிலோனியர் பக்கம் சேர்ந்தார். இதற்குப் பதிலடியாக எகிப்தியர் அச்சுறுத்தியபோது தோபியாது*

யோசேப்பு தலையிட்டுத் தடுத்தார். இதற்காகத் தோபியாதுக்கு எகிப்தியர் போர்த்துறையில்லாத அரச அதிகாரத்தைக் கொடுத்தனர். மேலும் ஓனியா காலத்தில் அரசாட்சி இவர் தம் சகோதரி மகன் தோபியாது யோசேப்பு கையிலும், மத அதிகாரம் குருக்கள் கையிலும் இருந்தது. இந்த அரசாட்சி இழப்பு பெரிய குருவின் பதவியையும் ஓனியா குடும்பத்தின் வருங்காலத்தையும் பெரிதும் பாதித்தது.

3. மூன்றாம் ஓனியா:- இரண்டாம் சீமோனின் மகனாவார். 4-ஆம் செலூக்கிய பிலோபாத்தேர் காலத்தில் பெரிய குருவாக இருந்தவர். செலூக்கிய ஆட்சியில் நிலவிய ஆற்றலற்ற தன்மையால், இவர் தோலமேயர்களுக்கு ஆதரவு தந்தார். இதனால், எருசலேம் ஆலயத்திற்கு அலெக்சாந்திரியாவிலிருந்து செல்வமிக்க திருயாத்திரீகர்களைக் கவர எண்ணினார்.

செலூக்கிய அரசுக்குப் பொருளாதார ஆட்சியைக் கொண்டிருந்த தோபியாது 3-ஆம் ஓனியா அநியாயமாகப் பணத்தைக் கொடுக்காது வைத்துக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டினார். செலூக்கஸ் தன் அமைச்சன் கெலியதோரை இக்குற்றத்தை ஆய்வு செய்ய அனுப்பினார். ஓனியா தடுத்தும் ஆலயத்துக்குள் கெலியதோர் நுழைந்த போது, ஒரு பயங்கரக் காட்சி கண்டு மயங்கி வீழ்ந்தார். கெலியதோர் சாகக் கிடந்தபோது, அவரது நண்பர்கள் இறைவனிடம் மன்றாடப் பக்தியுள்ள ஓனியாவைக் கேட்டுக் கொண்டனர். அவர் மன்றாடக் கெலியதோர் நலம்பெற்றுத் தன் அரசனிடம் திரும்பினார் (2 மக் 3).

தோபியாதின் குடும்பத்தைச் சேர்ந்தவனும் ஆலயப்படைத் தலைவனுமான சீமோன், கெலியதோரின் துன்பத்துக்கு ஓனியாவே காரணம் என்று குற்றம் சாட்டினார். அரசன்முன் இவற்றை விளக்கிக்காட்ட ஓனியா அந்தியோக்கியாவுக்குப் பயணம் செய்தார். இதற்கிடையில் கெலியதோர் 3-ஆம் அந்தியோக்கைக் கொன்றார். அவனது சகோதரன் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் அடுத்து அரச பதவி ஏற்றார். ஓனியா எகிப்துக்கு ஓடிப்போனதாகத் தெரிகிறது. யோசிப்பசின் கருத்துப்படி அங்குக் கெலியோபோலிசில் ஒரு போட்டி ஆலயம் கட்டினார் எனத் தெரிகிறது. போட்டி தோபியாதால் தூண்டப் பெற்று, ஓனியாவின் சகோதரன் யோசுவா யாசோன், பெரிய குருப்பதவிக்காக ஒரு பெருந்தொகையை அந்தியோக்குக்குக் கொடுக்க முன் வந்தார். 2 மக்கபேயர் நூலின்படி பிற்காலத்தில் யாசோனுக்குப் பின் வந்த, சாதோக்கின் குடும்பத்தைச் சேராத மெனலாவு அவரைச் சிறையில் அடைத்துக் கொன்று போட்டார் (2 மக் 4:1-34; தானி 9:26).

இந்த மூன்றாம் ஓனியாதான் ஓசே 10:12; யோவே 2:23-இல் குறிக்கப்படும் 'நீதியின் ஆசிரியர்' என்று கருதப்படுகிறது.

4. நான்காம் ஓனியா:- மூன்றாம் ஓனியாவின் மகனாவார். இவர் பெரிய குருவாக இருக்கவில்லையெனத் தெரிகிறது. 5-ஆம் அந்தியோக்கு பெரிய குரு மெனலாவைக் கொன்று ஆல்கிமுவை நியமித்த போது நேர்மையான உரிமையுள்ள இவர் எகிப்திற்குத் தப்பி ஓடி, அங்கே தோலமி பிலோமேத்தரிடம் கி.மு. 154-இல் 'யாவே' கடவுளுக்கு லெயோன்டொபோலிசில் ஓர் ஆலயம் கட்ட உத்தரவு கேட்டுக் கட்டினார். அங்கு ஒரு போர்ப் படைக் குடியிருப்பையும் அமைத்தார். இவரது புதல்வர்கள் மூன்றாம் கிளியோபத்திராவின் போர்ப்படைத்தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

5. இவர் ஓனியா மெனலாவு என்றழைக்கப்படுகிறார். இவர் யோசேப்பு பென்தொபியாவின் புதல்வர்களில் ஒருவர். 3-ஆம் ஓனியாவின் உறவினர். யோசேப்பு-யாசோன் பெரிய குருப்பதவியிலிருந்து விலக்கப்பட்டவுடன் 4-ஆம் அந்தியோக்குவின் படையின் ஆதரவோடு பெரிய குருப்பதவிக்கு வந்தனர். இதற்குப் பதிலாக, 4-ஆம் அந்தியோக்குக்குப் பெரும் பணம் தருவதாக வாக்களித்தார். இந்தப் பணத்தைச் சேர்க்க முடியாத

தால், தன் சகோதரன் இலிசிமாக்கைத் தற்காலிகப் பெரிய குருவாக நியமித்துவிட்டு, அந்தியோக்குவிடம் சென்றார். இலிசிமாக்கு பணம் சேர்ப்பதற்காக, ஆலயத்தைக் கொள்ளையடித்து, இறைக்குற்றம் செய்தான். ஆகவே உயிருடன் தோலுரிக்கப்பட்டான்.

**ஓனோ** (ONO - ஊக்கமுள்ள)

பென்யாமினின் நகரம். சாரோன் சமவெளியின் தெற்குக் கோடியில் யோப்பாவிலிருந்து தென்கிழக்கில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது (நெக 11:35). லோது, காதிது நகரங்களுடன் ஓனோவும் பாபிலோனியாவிலிருந்து வந்த எழுநூற்று இருபத்தைந்து அகதிகளுக்கு மூதாதையர் நாடாக இருந்தது (எஸ் 2:33; நெக 7:37; 11:35). பென்யாமின் வழித்தோன்றலான எல்பாலின் புதல்வர்கள் இந்நகரைக் கட்டினர். ஆரம்பகாலத்தில் இது ஒரு முக்கியமான மதில் சூழ்ந்த நகரமாக விளங்கியது (1 நாள் 8:12).

3-ஆம் துத்துமோஸ் இந்நகரைக் கி.மு.1468-இல் வென்றதாக அவனது கர்னாக் பட்டியலில் உள்ளது. பிற்காலத்தில் ஓனோவுக்கு அருகிலுள்ள சமவெளியில்தான், சம்பல்லாத்து, கெசம் ஆகியோர் நெகமியாவுக்குத் தீங்கு செய்ய அவரை ஈர்க்க முயற்சித்தனர் (நெக 6:2; 11:35). வாடி முஸ்ராராவிலுள்ள கெப்ருஆன என்ற கிராமம் விவிலிய இடத்தின் பெயரைக் கொண்டுள்ளது.

**ஓன்** (ON - பலம், செல்வம்) - ஆள்

ரூபனின் குலத்திலுள்ள பெலத்தின் புதல்வரான ஓன், கோராகுடன் சேர்ந்து கொண்டு மோசேக்கு எதிராகக் கலகம் செய்தார் (எண் 16:1).

**ஓன்** (ON - பலம், செல்வம்) - இடம்

எகிப்தியப் பெயரான கெலியோபோலிசின் எபிரேய வடிவம் இது. நைல் நதியின் தெற்கு முனையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இது ஓர் எகிப்திய மாவட்டத் தலைநகரமாகவும், சூரியக் கடவுள் அசான்-ரே-இன் வழிபாட்டு இடமாகவும் விளங்கியது. யோசேப்பின் மாமனார் போத்திபார் ''ஓன்''-இன் குரு என்றழைக்கப்படுகிறார். ஒரு வேளை இந்த வழிபாட்டோடு தொடர்புடையவராக இருக்கலாம் (ஆதி 41:45.50; 46:20).

எபிரேய இறைவாக்கினர்கள் இந்த நகரை ஆவேன் என்றழைக்கின்றனர் (எசே 30:17).

# க

**ககாபா** (HAGABAH - *வெட்டுக்கிளி)*

*பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத் தலைவர் (நெக 7:48; எஸ் 2:45). இவர் காகாபு என்பவரிடமிருந்து (எஸ் 2:46) வேறுபட்டவர்.*

**ககாம்** (GAHAM - *கொழுந்துவிட்டு எரிகிற)*

*நாகோர் என்பவருக்கும் அவருடைய வைப்பாட்டி இரயுமாவுக்கும் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 22:24).*

**ககார்** (GAHAR - *மறைந்துகொள்ளும் இடம்)*

*நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:47; நெக 7:49).*

**ககிமோனி** (HACHMONI - *ஞானி)*

*எகியேலின் தந்தை; தாவீதின் ஊழியன். அரசருடைய மக்களைக் கவனித்து வந்தார் (1 நாள் 27:32). 11:11-இல் சொல்லப்பட்டிருக்கின்ற ககிமோனியா என்பதும் இச்சொல்லும் எபிரேயத்தில் ஒன்றையே குறிக்கின்றன.*

**ககிமோனியர்** (HACHMONITE)

*தாவீதின் வலிய வீரர்களில் ஒரு தலைவனான யாசொபெயாம் குடும்பத்தினர் (1 நாள் 11:11). 2 சாமு 23:8-இல் வரும் தக்கமோனியா என்பது வாசகத் தவறாக இருக்கலாம்.*

**கக்குபா** (HAKUPHA - *வளைந்த, கோணலான)*

*அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின்பு உள்ள தாழ்மட்ட ஆலய ஊழியர்களின் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:51; நெக 7:53).*

**கசசோன் - தாமார்** (HAZAZON-TAMAR - *பனைமரங்களுள்ள மணற்பகுதி)*

*கெதர்லா கோமேர் தன் கூட்டணியுடன் சேர்ந்து கைப்பற்றிய எமோரியரின் நகரம் (ஆதி 14:7). சோதோம் நகருக்கும், சமவெளி நகரங்களுக்கும் அருகில் இருந்திருக்கவேண்டும். 2 நாள் 20:2-இல் சாக்கடலுக்கு மேற்கேயுள்ள ஏங்கேதியாக அடையாளம் காட்டப்படுகிறது.*

*சாலமோனால் மீண்டும் கட்டப்பட்டு, பலப்படுத்தப்பட்ட தாமார் நகரமாக இருக்கலாம் (1 அர 9:18). இந்நகருக்கு இஸ்ராயேல் நாட்டின் தென்கிழக்கு மூலையில் எசக்கியேல் இடம் குறிக்கிறார் (எச 47:28). அயின் இதிக்கு வடமேற்கிலுள்ள பாலைவனச் சோலையான இக்கால வாடி ஏல்-கசாசா என்ற பெயரில் இந்நகரப் பெயர் பாதுகாக்கப்பட்டுள்ளது.*

**கசபத்தானா** (HASHBADDANAH - *யாவே கருத்தில் கொண்டார்)*

*ஒரு லேவியராக இருக்கலாம். திருச்சட்ட நூல் வாசிக்கப்பட்டபோது எஸ்ராவுக்கு இடப்பக்கத்தில் நின்று சட்டத்திற்கு விளக்கமளித்தவராக இருக்கலாம் (நெக 8:4). நெக 9:5-இல் குறிக்கப்படும் கெசப்னயாவும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.*

**கசப்பு** (BITTER, BITTERNESS)

*விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், பல இலக்கியங்களில் சுவைகளைப்பயன்படுத்தி விவரிக்கப்படுவதுபோல் விவிலியத்திலும் சொல்லப்படுகின்றன. விவிலியத்தில் 'கசப்பு' என்பது துன்பம், அடிமைத்தனம், கொடூரம், போன்றவற்றைக் குறிக்கும். கசப்பு அனுபவத்தை நான்காகப் பிரிக்கலாம்.*

*அ. உணர்ச்சிகள்:- இரக்கமற்ற சுடுசொற்கள் (ஆதி 27:34; யோபு 13:26; சங் 106:33), புறக்கணித்தலை வெளிப்படுத்துதல் (உரோ 3:14); உள்ளார்ந்த உணர்வுகள் (ஓசே 12:14; யாக் 3:14).*

ஆ. வாழ்வின் நிலைகள்:- உயிர்ச்சித்திர மாக விவரிக்கப்படுதல் (ஆதி 26:35; யாத் 1;14; 2 சாமு 2:26; 2 அர 14:26).

இ. உணவுப்பொருட்கள்:- கசப்பான பழங்கள் (உப 29:18; 32:32), கசப்பான கீரைகள் (யாத் 12:8; எண் 8:11); சுவையான உணவுக்கு எதிரானவை (ஏச 5:20; பழ 5:4).

ஈ. தண்ணீர் அல்லது பிற பானங்கள்:- (யாத் 15:23; ஏச 24:9). குற்றம் செய்த பெண்ணைக் கண்டுபிடிக்கக் கசப்பான தண் ணீர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சமூக ஒழுக்க மதிப்பீடுகளைக் குறிக்க இந்த வகைப்பட்ட சொற்கள் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டன (உப 29:8; 32:32). கசப்பான பொருட்களைப் பல திருவிழாக்க ளில் அடையாளமாகப் பயன்படுத்தினார் கள். காண்க. கசப்புக்கீரை.

### கசப்பு, நஞ்சு (GALL)

கசப்பானதும் நஞ்சானதுமான ஒரு பூண்டு. அதன் சாறு சாக்ரடீஸ் குடித்த நச்சுப் பானமாக இருக்கலாம் என்று பொதுவாக எண்ணப்படுகிறது. எட்டிக்காயுடன் சேர்த் துக் கூறப்படுகிறது (உப 29:18; எரே 9:15; புல 3:19; ஆமோ 6:12); கசப்புத் தன்மையை யும், துக்கத்தையும் குறிக்கிறது.

புல 3:19-இல் ''கசப்பு'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உப 29:18-இல் ''நஞ்சு'', ''கசப்பான கனி'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சொல் லுக்கு ''நஞ்சு கலந்த தண்ணீர்'' (எரே 8:14; 9:15; 23:15), ''நச்சுப் பூண்டுகள்'' (ஓசே 10;4), ''நஞ்சு'' (உப 32:32; சங் 69:21; ஆமோ 6:12), ''கசப்பு'' (புல 3:5) என்றும் பொருள் கொடுக்கப்படும்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தபொழுது, ''கசப்பு கலந்த திராட்சை ரசம்'' அவருக்குக் கொடுக் கப்பட்டது (மத் 27:34; சங் 69:21; மாற் 15:23). அ.ப. 8:23-இல் இந்தச் சொல் அடையாளச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

### கசப்பு ஏரிகள் (BITTER LAKES)

இணைக்கப்பட்ட இரு ஏரிகள். பெரிய கசப்பு ஏரி, சிறிய கசப்பு எரி என்றழைக்கப் பட்டன. ஒருகாலத்தில் இவை சூயெஸ் வளைகுடாவோடும் செங்கடலோடும் நேரடி யாக இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் இடைப்பட்ட பகுதிகள் வண்டல் மண் ணால் மேவப்பட்டுவிட்டன. நவீன காலத் தில், இந்த இரு ஏரிகளும் சூயெஸ் கால்வாய் வழியாகச் செங்கடலோடு இணைக்கப்பட் டுள்ளன.

யாத்திரை நிகழ்ச்சியில் நாணல் கடலை இஸ்ராயேலர் கடந்தது, இந்தக் கசப்பு ஏரிக ளுக்கு வடக்கே நடந்திருக்கவேண்டும் என்று சிலரும், இவற்றின் தெற்கே நடந்தி ருக்கவேண்டும் என்று வேறு சிலரும், இன் னும் சிலர் இவற்றின் கிழக்குப் பகுதியில் நடந்திருக்கவேண்டும் என்றும் கருதுவர்.

### கசப்புக்கீரைகள் (BITTER HERBS)

பாஸ்கு விழாவில் பாஸ்குச் செம்மறி யோடு (யாத் 12:8; எண் 9:11) ·கசப்புக் கீரைகள் உண்ணப்பட்டன. இது தொடக்கத் தில் உணவு தயாரிக்கப்பட்டு உண்ணப்பட்ட விரைவைக் குறித்தது. ஆனால் காலப்போக் கில் எகிப்திய அடிமைத்தனத்தின் கசப்பான அனுபவத்தை நினைவு கூரும் அடையாள மாகக் கருதப்பட்டது.

பலவகைக் கசப்புக் கீரைவகைகளில், பாஸ்கா நாளில் பயன்படுத்திய கசப்புக் கீரை எது என அறியப் பல தாவர இயல் வல்லுநர்கள் முயற்சி செய்துள்ளார்கள்; வெற்றியடையவில்லை எனலாம். நாடு கடத்தப்படுவதற்கு முந்தைய கிரேக்க, எபி ரேயச் சொற்களின் மூலத்திலிருந்து 'பல வகைக் கசப்புக் கீரைகள்'' பயன்படுத்தப்பட்டி ருக்கலாம் என்று தெரிகிறது. இதற்கு ஆதார மாக மிஸ்னாவில் ஐந்துவிதக் கசப்புக் கீரைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது சரியானது என்று தெரியவில்லை.

### கசப்பு நீர் (WATER OF BITTERNESS)

திருக்கூடாரத்தின் தரையிலிருந்து எடுக்கப்

பட்ட துகள், சாபம் எழுதப்பட்ட தோல் ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட மை, தீர்த்தம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வகை மந்திரப் பானமாகும். இது சினத்தின் உணவுப் படையலில் பயன்பட்டது. இது எண் 5:11-31-இல் ஒரு கணவன் தன் மனைவியின் மீது சந்தேகம் கொண்டால் அதை நிரூபிக்க வழி இல்லை என்றால், தவறியவர்களுக்குரிய சாபம் சொல்லப்பட்டு அவள் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டது. ஆண்டவருடைய தண்டனை அல்லது ஆசிர்வாதம் அவள்மேல் விழும்படி அவள் பீடத்தின் முன்பாக அமர்வாள். அவள் தலைமுடி அவளின் வெட்கக்கேட்டின் அடையாளமாக அவிழ்த்து விடப்பட்டிருந்தது. மிஸ்னாவின் கூற்றுப்படி அவள் கருப்பு ஆடை உடுத்தி இருந்தாள். பின் குரு அவளின் கையில், அவள் கணவனின் நினைவுப்பலியை வைப்பார். பின் சாட்சியாகக் கூடாரத்தின் புழுதியில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் போடுவார். பின் அவள்முன் நின்று மிகக் கொடிய சாபத்தைச் சொல்வார். அவள் 'ஆமென்' என்று இருமுறை சொல்லி அதை ஏற்றுக் கொள்வாள். பின் இந்தச் சாபங்கள் எழுதப்பட்டு அவை நீரில் கலக்கப்பட்டு, அவள் அந்நீரைக் குடிக்கும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அவள் குற்றமுள்ளவளாயின் அவள் உடலின் கீழ்ப்பகுதி அழுகி விடும்; குற்றம் அற்றவளாயின் அவள் பிள்ளைப்பேற்றை அடைவாள். நீர், நெருப்பு, போர் இவைகளின் மூலம் நடத்தப்படும் சோதனை எபிரேயர்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வருவதாகும். இஸ்ராயேலரின் எண்ணப்படி இந்தச் சோதனைகளின் முடிவுகளெல்லாம் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன.

**கசமோனியர்கள், அசமோனியர்கள்** (HA-SMONEANS)

1. கசமோனியு:-

கி.மு. 142 முதல் 63 வரை யூதேயாவை ஆண்டு வந்த அரசகுலத்தினைச் சார்ந்த தலைமைக்குருக்களும் அரசர்களும் கசமோனியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்பெயர் அவர்களது குடும்பப் பெயராகும். முதலாம் மக்கபேயர் நூலானது ஆதிகாலத்தைச் சேர்ந்த கசமோனியர்களை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. 1 மக் 5:62-இல் இஸ்ராயேல் மக்களை மீட்பதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் கசமோனியர்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆதிகாலத்தைச் சேர்ந்த கசமோனியர்கள் சில சமயங்களில் மக்கபேயர்கள் என்று அழைக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது. மக்கபேயர் என்ற பெயரானது மத்தத்தியாவிற்கும் அவரது புதல்வர்களுக்கும் மட்டும்தான் கொடுக்கப்பட்டது. கசமோனியர் என்ற பெயரானது கி.மு. 135 முதல் 63 வரை அவர்களின் வழித்தோன்றல்களுக்குக் கொடுக்கப்பட்டது. வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் என்பவரால் மத்தத்தியாவின் தந்தையாகக் குறிப்பிடப்பட்ட அசமோனியு என்ற பெயரிலிருந்து 'கசமோனியர்' என்ற பெயர் பெறப்பட்டது. இந்த அரசகுலமானது 65 ஆண்டுகாலமாக யூதமக்களை அமைதியிலும், சுதந்தரத்திலும் வழி நடத்தி வந்தது.

மத்தத்தியாவின் தந்தையாகக் கூறப்பட்ட அசமோனியு என்பவரைப்பற்றிக் குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை. 'அசமோனி' என்ற பெயரானது 'கெசிமோன்' அல்லது ''கசமோனா'' என்ற இடப்பெயரிலிருந்து தோன்றியிருக்கவேண்டும்.

2. கசமோனியர் எழுச்சி:-

'கசமோனியர்' என்ற பெயரானது மக்கபேயர் நூல்களில் காணப்படவில்லை என்றாலும் யோசிப்பசின் குறிப்புக்களில் காணப்படுகின்றது. மிஸ்னாவில் யூதா மக்கபேயுவும் அவரது சகோதரரும் மக்கபேயர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர். கி.மு. 167-இல்தான் இந்தக் குலமானது வரலாற்றில் காலடி எடுத்து வைத்தது. கி.மு. 167-இல் முதன்முதலாக மோதயின் நகரில் மத்தத்தியா என்ற குரு அந்நியத் தெய்வங்களுக்குப் பலி செலுத்துமாறு கட்டளை பிறப்பித்த செலூக்கிய அரசரின் கட்டளையை எதிர்த்து, அரச அலுவலன் ஒருவனையும், யூதன் ஒருவனையும் கொலை செய்து விடுகின்றார்.

*இதைத் தொடர்ந்து மத்தத்தியாவும், அவரது புதல்வர்களும், இன்னும் பல யூதர்களும் பலிபீடங்களை உடைத்தெறிந்தனர். குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்தனர். இத்தகைய சமயக்கிளர்ச்சியை மத்தத்தியா இறந்த பின் அவரது மகனாகிய யூதா மக்கபேயு முன்னின்று நடத்தினார். இவர் தன்னை எதிர்த்துப் போரிட்ட மூன்று சீரியத் தளபதிகளை எம்மாவு என்ற இடத்தில் தோற்கடித்தார். பின் சீரியாத் தலைவனாகிய இலிசியா என்பவனைச் சந்தித்து, சமாதான உறவினை ஏற்படுத்தினார். இத்தகைய சமாதான உறவினால் உண்மையான இறைவனை வழிபடும் உரிமை யூதர்களுக்கு வழங்கப்பட்டது. கி.மு. 165-இல் ஆலயத்தில் நடந்த சிலை வழிபாடுகள் நீக்கப்பட்டு ஆலயத்தின் அபிடேக விழா நடத்தப்பட்டது.*

*சமய சுதந்தரம் வழங்கப்பட்டபோதிலும் சில இடங்களில் யூதர்களை மிகவும் இழிவான முறையில் நடத்தியதால், யூதா மக்கபேயு தனது இறப்பு வரையிலும் யூத மக்களின் உரிமைக்காகப் போராடினார் (1 மக் 9:22). பின் இவரது சகோதரர் யோனத்தான் மக்கபேயர்களின் தலைவனாக இருந்து புரட்சியைத் தொடர்ந்து நடத்தினார். சீரியப் படைகளைத் தாக்கினார். கிரேக்கப் பண்பாடு பரவுவதைத் தடுத்து நிறுத்தினார். சில காலங்கள் கழித்து அந்தியோக்கியாவில் செலூக்கிய அரசகுலத்தின் வலிமை குறைய ஆரம்பித்தது, இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு யூதர்கள் முழுச்சுதந்தரமும் பெறுவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னால், யோனத்தான் அலக்சாந்தர் பாலா என்பவரால் தலைமைக்குருவாக நியமிக்கப்பட்டார். பின், தன் சொந்தப் பிரச்சனைகளில் மூழ்கிவிட்ட பாலாவின் செயல்பாடுகளைச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களின் மத்தியில் பெரும் புகழும் பெற்றார். சமாரியாவின் பெரும் பகுதிகள் யோனத்தானின் தலைமையின்கீழ் வந்தன. வரிசெலுத்துவதிலிருந்து முழுச்சுதந்தரம் கிடைத்தது. செலூக்கிய அரசர்களை எதிர்த்து நின்று வெற்றி பெறுகின்ற அளவிற்குப் படைபலத்தை யோனத்தான் பெருக்கினார். ஆனால் கி.மு. 143-இல் சீரிய உளவாளியால் தந்திரமாகப் பிடிக்கப்பட்டு யோனத்தான் கொலைசெய்யப்பட்டார். யோனத்தானுக்குப்பின் அவரது சகோதரர் சீமோன் மக்கபேயு தலைமைக்குருவாகவும், அவர்களுக்குக் குறிக்கப்பட்டிருந்த எல்லைப் பகுதியின் தலைவனாகவும் பொறுப்பேற்றார். எருசலேமைச்சுற்றி யோனத்தான் கட்ட ஆரம்பித்த கோட்டைச் சுவரினை இவர் முழுமையாகக் கட்டி முடித்தார். அந்தியோக்கிய அரசு அவருக்கு ஒன்றன்பின் ஒன்றாகச் சலுகைகளை வழங்கியது. எருசலேமிலுள்ள சீரியர்களின் படைமையத்தைக் கைப்பற்றிடவேண்டும் என்ற அவரது ஒரே எண்ணம் நிறைவு பெறுகின்றது. இதுவே அவரது இறுதி வெற்றியாகும் (1 மக் 13:33-52). மக்கபேயர்களின் இரத்தமானது வீணாகச் சிந்தப்படவில்லை என்பதை மத்தத்தியாவின் கடைசி மகன் நிரூபித்துக் காண்பித்துவிட்டார்.*

*3. கசமோனியர்களின் ஆட்சி (142-63)*

*அ. சீமோன் (141-135):- கி.மு. 141-இல் சீமோன் தலைவராக இருக்கும்படியும், அவரது வழிவருபவர்கள் இனிமேல் தலைவர்களாக இருக்கும் உரிமையைக் கொண்டிருப்பார்கள் என்றும் மக்களால் உறுதி செய்யப்பட்டது (1 மக் 14:41-49). இந்தத் தீர்மானங்களெல்லாம் பலகைகளில் எழுதப்பட்டு ஆலயத்தில் வைக்கப்பட்டன. புதுயுகம் ஆரம்பித்தது. நாணயங்கள் புதிதாக வெளியிடப்பட்டன. இந்த அமைதியின் காலமானது யூதேயாவின் வளமையைப் பெருக்குவதற்கும், ஆளும் திறமையை வளர்ப்பதற்கும் குருக்களின் உறவை வலுப்படுத்துவதற்கும் பெரிதும் உதவியாக இருந்தது. இவர் நாடு கடத்தலுக்குப்பின் யூதர்களின் மிகச் சிறந்த அரசர் ஆவார். இவர் இலக்கியம், கலை வாணிபம் போன்றவைகளை வளர்த்தார். உரோமையரோடும் ஸ்பார்தர்களோடும் உடன்படிக்கை ஏற்பட்டது. இவரது ஆட்சிக்காலத்தில் முடிவில் யூதேயாவானது சீரிய அரசராகிய ஏழாவது அந்தியோக்களால் தாக்கப்பட்டது. சீமோனின் இரண்டு புதல்வர்களாகிய யூதா, யோவான் ஆகிய இருவராலும் மோதயின் என்ற இடத்திற்கு அருகில் சீரியத் தளபதி*

தோற்கடிக்கப்பட்டார். பின் 135-இல் சீமோனின் மருமகனாகிய தோலமி என்பவர் அதிகாரத்தை அல்லது பதவியைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் தோக்கு என்ற இடத்தில் சீமோனையும், அவரது இரண்டு புதல்வர்களையும் முறியடித்தார். ஆனால் தோலமியின் கிளர்ச்சியானது எருசலேமை அடைவதற்குள், சீமோனின் புதல்வர்களில் ஒருவராகிய யோவான் என்பவர் தப்பிச்சென்று தன் தந்தை கொண்டிருந்த தலைவர் பொறுப்பையும், தலைமைக்குரு பதவியையும் தனதாக்கிக் கொண்டார். இவர்தான் இரிக்கானு என்று அழைக்கப்பட்டவர்.

ஆ. யோவான் இரிக்கானு (135-105):- இவர் சீமோனின் மகனாவார். இவர் தனது தந்தைக்குப்பின் யூதேயாவின் தலைவராகவும், தலைமைக்குருவாகவும் விளங்கினார். இவர் தனது ஆட்சிப்பகுதியைக் கிழக்குப் பாலஸ்தினம், ஏதோம் வரையிலும் நீட்டினார். ஏதோமில் இதுமேயர்களை விருத்த சேதனம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். இவர் சமாரியர்களைத் தாக்கி, கெரிசிம் மலையிலிருந்த சமாரியர்களின் ஆலயத்தைத் தரைமட்டமாக்கினார். பரிசேயர்கள் இவரது அரசியல் இலட்சியங்களையும், தன்னலப்போக்கினையும் கண்டு கொதித்தெழுந்தனர். இவரது ஆட்சிக்காலத்தில் கசமோனியர்களிடம் பரிசேயர் கொண்டிருந்த உறவு முறிவுபட்டது.

இ. முதலாம் அரித்தோபுல் (105-104):- இவர் யோவான் இரிக்கானுவின் மகனாவார். இரிக்கானு தனது அரச உரிமையைத் தனது மனைவிக்குக் கொடுத்திருந்ததால் தனது அம்மாவை அரித்தோபுல் சிறையில் வைத்தார். இவர் அவரது சகோதரர்களில் அந்திக்கோனுவைத் தவிர மற்ற அனைவரையும் சிறையிலடைத்தார். பின் அந்திக்கோனுவைக் கொலை செய்தார். இவர்தான் 'அரசன்' என்ற அடைமொழியை ஏற்றுக்கொண்டார்.

ஈ. அலக்சாந்தர் யன்னாயு (யோனத்தான்) (104-76):- இவர் முதலாம் அரித்தோபுலின் சகோதரர் ஆவார். அரித்தோபுலின் விதவையான சலோமை அலக்சாந்திரா தன் கணவனின் சகோதரர்களை எல்லாம் விடுவித்தாள். இவர் யோனத்தான் என்ற பெயரை யன்னாயு என்ற கிரேக்கப் பெயராக்கி, அலக்சாந்தர் என்ற கிரேக்கப் பெயரையும் சேர்த்துக் கொண்டார். இவர் பண்டைக்காலத்தைச் சேர்ந்த தாவீதின் அரசப்பகுதிக்கு இணையாகத் தனது அரசப்பகுதியைப் பரந்து விரியச் செய்தார். இவர் பெலிஸ்தியா கிழக்குப் பாலஸ்தீனத்தின் பகுதிகள் வரைக்கும் தனது அரசை விரிவாக்கினார். பாலஸ்தீனத்தின் வடபகுதியைத் தனது அரசுடைமைப்பகுதியாக மாற்றும்போது நபத்தேய அரசனாகிய ஒபோதாத்தை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. இதில் தோல்வியடைந்தார். தன் சொந்த மக்களின் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியிருந்தது. இவரை எதிர்த்த யூதர்கள் செலூக்கிய அரசராகிய மூன்றாம் தெமேத்திரியுவின் உதவியை நாடினார்கள். எனவே, தெமேத்திரியு யூதேயாவைத்தாக்கி அலக்சாந்தரைத் தோற்கடித்தார். ஆனால் யூதர்கள் தாங்கள் கொண்டிருந்த தேசப் பற்றால் அலக்சாந்தர் மீது அனுதாபம் கொண்டு தெமேத்திரியு, பின்வாங்க வேண்டிய நிலைவருமாறு தங்கள் ஆதரவை நிறுத்திவிட்டனர். பின் மூன்றாம் தெமேத்திரியுவுக்குப் பின்வந்த 12-ஆம் அந்தியோக்கு தியோனிசு பாலஸ்தீனத்தைத் தாக்கியதை அலக்சாந்தரால் தடுக்க இயலவில்லை. ஆனால் நபத்தேயர்களால் அந்தியோக்கு தோற்கடிக்கப்பட்டபின், மீண்டும் அலக்சாந்தர் பாலஸ்தீனப் பகுதிகளில் தனது வெற்றியைத் தொடர்ந்தார். அவருக்கும் பரிசேயர்களுக்குமிடையே இருந்த பகைமை வலுப்பெற்றுக் கொண்டே சென்றது. ஆனால் தான் அரசுரிமை வழங்கிய தனது மனைவியிடம் பரிசேயர்களுடன் ஒப்புரவாக இருக்க முயற்சி எடுக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியதாக யோசிப்பஸ் கூறுகின்றார்.

2. சலோமை (75-67):-

இவள் அலக்சாந்தரின் விதவை ஆவாள். இவர் தனது மூத்த மகனாகிய இரண்டாம் இரிக்கானுவைத் தலைமைக் குருவாக்கி

னாள். இளையமகன் இரண்டாம் அரித்தோபுலை, அவர் பேராசை கொண்டிருந்ததால், தன்னோடு வைத்துக் காத்து வந்தாள். இவளது இறப்பிற்குப்பின் இரிக்கானுவுக்கும் அரித்தோபுலுக்குமிடையே நிகழ்ந்த போரினால் இருவருமே பாம்பேயின் உதவியை நாடினார்கள். இறுதியில் அரித்தோபுல் உரோமையரின் சமரசத் தீர்ப்பினை ஏற்க மறுத்தார். கி.மு. 63-இல் பாம்பே எருசலேமைத் தாக்கி அதைக் கைப்பற்றினார். பாம்பேதான் கசமோனியர்களின் அரச மரபுக்கு முடிவுகட்டியவர். கசமோனியர்களால் வெற்றி கொள்ளப்பட்ட எல்லைப் பகுதிகள் பிரிக்கப்பட்டு சீரியா மாகாணத்தின் ஒருபகுதியாக யூதேயா ஆக்கப்பட்டது. இரண்டாம் அரித்தோபுல் உரோமைக்குச் சிறைக்கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டாம் இரிக்கானு தலைவராகவும், தலைமைக்குருவாகவும் பொறுப்பேற்றார்.

இரண்டாம் இரிக்கானு அந்திப்பத்தாரின் பொம்மையாகவே விளங்கினார். அரித்தோபுல் உரோமையிலிருந்து தப்பிவந்த, தன் புதல்வர்களுடன் சேர்ந்து கிளர்ச்சி உண்டு பண்ணினார். யூதர்களின் நம்பிக்கையை வளர்த்து வந்தார். யூலியு சீசரால் விடுவிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் கி.மு. 49-இல் கொலை செய்யப்பட்டார். அவரது உயிர் தப்பிய ஒரே புதல்வனான இரண்டாம் அந்திக்கோனு கி.பி. 40-இல் அரசனாகவும் தலைமைக்குருவாகவும் அறிக்கையிட்டுக் கொண்டார். ஆனால் உரோமையரின் ஆதரவு பெற்ற பெரிய ஏரோது, கி.மு. 37-இல் எருசலேமைக் கைப்பற்றி, அந்திக்கோனுவைக் கொலை செய்தார். ஆனால் இரண்டாம் இரிக்கானுவின் மகளும் எரோதின் மாமியுமான அலக்சாந்திரா, ஏரோது பெரிய குருவாக அனானேலை நியமித்திருந்தை ஒதுக்கிவிடும்படி அந்தோனி, கிளியோப்பத்திரா ஆகியவர்களைக் கொண்டு கட்டாயப்படுத்தி, தனது மகனான மூன்றாம் அரித்தோபுலை நியமிக்கும்படிச் செய்தாள். ஆனால் மக்களிடையே பிரபல்யமான இந்தப் பதினேழு வயது அரித்தோபுலை நீரில் மூழ்கடித்துக்கொல்ல ஏரோது வழிவகுத்தார். இரண்டாம் இரிக்கானு (கி.மு.30) அலக்சாந்திரா (28), தனது மனைவி மரியம்னே (29) ஆகியோரைக் கொன்றதோடு, கசமோனியச் செல்வாக்கை முழுவதும் நீக்கும் நோக்கோடு கி.மு. 7-இல் மரியம்னேயின் எஞ்சிய புதல்வர்களான அலக்சாந்தர், அரித்தோபுல் ஆகியோரைக் குற்றம் சாட்டிக் கொலை செய்தார். கசமோனியர்களின் காலத்தில் தான் யூதசமயமும், யூதர்களின் நாடும் நல்ல வளர்ச்சி பெற்றது. சட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும், அதை ஆலயமுற்றங்களில் வாசித்துப் பொருள் புரிந்து கொள்ளும் பழக்கமும் வளர்ந்தன. இறைவாக்கு நூல்களின் மேல் அவர்கள் அதிகமான மதிப்புக் கொண்டிருந்தனர். மேலும் இறப்பிற்குப்பின் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கை இவர்கள் காலத்தில்தான் தோன்றியது. காண்க. தனிப்பட்ட தலைவர்களின் பெயர்கள்; மக்கபேயர்கள் நூல்கள்.

**கசயேல்** (HAZAEL - இறைவன் பார்க்கிறார்)

அரசவையின் ஒரு சாதாரண ஊழியன். உரிமையில்லாது அரசைக் கைப்பற்றி, அசீரியர்களின் படையெடுப்பை எதிர்க்கும் அளவுக்கு, ஆற்றல்மிக்க அரசனாக விளங்கினார். இஸ்ராயேலுக்கும் யூதாவுக்கும் எதிரியாக விளங்கினார் (2 அர 13:3; ஆமோ 1:3-5).

இரண்டாம் பென் அதாது என்ற அரசனால் அவரது நோய்பற்றி எலிசாவிடமிருந்து அறிந்துவரக் கசயேல் அனுப்பப்பட்டார் (2 அர 8:7-9). அப்போது இறைவாக்கினர் எலிசா, கசயேல் தமஸ்கு அரசைக் கைப்பற்றி, இஸ்ராயேலர்களுக்குத் தீமை செய்வார் என்று அறிவித்தார் (8:10-13). எலிசா தனக்குக் கட்டளையிட்டதாகக் கருதி, கசயேல் தமஸ்கு திரும்பி, அரசனைக் கொன்று அரசைக் கைப்பற்றினார் (8:15). விரைவில் இஸ்ராயேலின் அரசன் யோராமும், யூதாவின் அகசியாவும் சேர்ந்த கூட்டணிக்கு எதிராக இராமோத்து-கிலயாதில் கசயேல் போரிட்டு, காயப்பட்ட யோராமை இசிரியேலுக்குத் தப்பியோடச் செய்தார். அங்கு யோராம் அவரது தளபதி ஏகூவால் கொல்லப்பட்டார் (8:28-24; 9:14-26).

எந்தக் கூட்டணியின் உதவியுமின்றிக் கச யேல் கி.மு. 841-இல் அசீரியாவைச் சேர்ந்த மூன்றாம் சால்மனேசரின் தாக்குதலை எதிர்த்து, தமஸ்குவில் தன் ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டார். கி.மு. 837-இல் சால் மனேசர் மத்திய சீரியாவில் பல அழிவுகளை உண்டாக்கினாலும், கசயேல் தமஸ்குவில் தனது ஆட்சியை இழந்துவிடவில்லை. இறு தியில் அசீரியர்கள் தமஸ்குவுக்கு எதிரான தங்கள் தாக்குதலைக் கைவிட்டனர். கசயேல் தனது கவனத்தைப் பாலஸ்தீனத்திற்குத் திருப்பி, யோர்தானுக்கு அப்பால் ஏகூவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கைப்பற்றி னார். இதற்குப்பின் யோவகாசின் படை களை அழித்து, சீரியர்கள் பாலஸ்தீனத்தில் சுதந்தரமுடன் நடமாட வழி செய்தார் (13:4-7.22). பின்பு காத்தையும், பெலிஸ்தியாவில் உள்ள வியாபாரச்சாலையையும் கைப்பற்றி னார் (12:17). யூதாவின் அரசன் யோவாக, ஆலயத்திலிருந்தும் அரண்மனையிலிருந்தும் செல்வங்களைக் கப்பமாக அளித்ததால், எரு சலேமைத் தாக்காது கைவிட்டார்.

கசயேல் கி.மு. 798-இல் இறந்தார். அவரு டையமகன் மூன்றாம் பென்-அதாது ஆட் சிக்கு வந்தார் (2 அர 13:24). எட்டு நூற்றாண் டுகளுக்குப் பின் வந்த யோசிப்பஸ் தமஸ்கு வின் வளர்ச்சியில் கசயேலின் பங்கைப்பற் றிக் குறிப்பிடுகிறார். ''எங்கள் தலைவர் கசயேலுக்குச் சொந்தமானது'' என்ற வாசகத் தைக் கொண்ட ஒரு தங்கப்படுக்கை அசீரிய மாகாணத் தலைநகரமான அதாத்து என்னும் இக்கால அரசுலான் தாஸ் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் அதாதநிராரியின் படையெடுப்பில் கொள் ளையடிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்ட தாக இருக்கலாம்.

**கசர்-அத்தார்** (HAZAR-ADDAR - வலிமை வாய்ந்த கிராமம்)

கானானின் தென் எல்லையில், ஏதோமை நோக்கி அமைந்த ஓர் இடமாகும் (எண் 34:4). காதேசு-பார்னேயாவுக்கும் அசிமோ னுக்கும் இடையில் குறிக்கப்படும் இந்த இடம், யூதாவின் தென் எல்லையில் அமைந் துள்ள கெசிரோனாகத் தெரிகிறது (யோசு 15:30). இது எங்கு இருந்தது என்று உறுதியா கக் கூறமுடியவில்லை. ஆயினும், காதேசு பார்னேயாவுக்கு வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து ஏல்குதெய் ராத்து என்ற இடம் சுட்டிக்காட்டப்படுகிறது.

**கசர்-ஏனான்** (HAZAR-ENAN - நீரூற்றுக்கிரா மம்)

எண் 34:7-10-இன்படி பாலஸ்தீனத்துக்கும் கமாத்துக்கும் இடையில் எல்லைப்பகுதி யில் அமைந்துள்ள ஒரு நகரம் (எச 27:16-17). தற்பொழுது கெர்மோன் மலை அடிவாரத் தில் உள்ள காதார் நகரத்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

**கசர்-கதா** (HAZAR-GADDAH - நற்பேற்றின் கிராமம்)

யூதாவின் தென்பகுதியான நெகேபில், பேயேர்-செபாவுக்கருகில் கெசிமோன், மோலதா ஆகிய இரண்டு நகரங்களுக்கும் இடைப்பட்ட நகரமாகக் குறிப்பிடப்படுகி றது (யோசு 15:27). 'கதா' என்ற பகுதி இவ்விடத்தில் நற்பேற்றின் கடவுளான காது கடவுளுக்கு ஒரு புனித இடம் இருந்திருக்க லாம் என்று சுட்டுகிறது. இவ்விடம் இருந்த இடம் தெரியவில்லையானாலும், இராஸ் சுவெயிராவுக்குத் தென்மேற்கிலுள்ள கிர் பெத்து காசாவாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

**கசர்-சூசா** (HAZAR-SUSAH - குதிரைக் கிராமம்)

யூதாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சிமியோனுக்குரிய நகரம். இந் நகரில் சாலமோன் எகிப்திலிருந்து இறக்கு மதி செய்த குதிரைகளை வைத்திருந்த சீரியர் களுக்கும், இத்தியர்களுக்கும் விற்பார் (1 அர 4:26; 9:19; 10:29; காண் குதிரை வீரர்கள் இருந்த நகரம்; 2 நாள் 8:6). பேயேர்-செபாவுக்குக் கிழக்கில் 32 கி.மீ. தொலை வில் உள்ள சபாலாத்து அபு-செசெயினாக இருக்கலாம்.

*கசர்-சூசிம்* (HAZAR-SUSIM)

கசர்-சூசாவின் மற்றொரு பெயர் (1 நாள் 4:31).

*கசர்-சூவால்* (HAZAR-SHAUAL - நரியின் கிராமம்)

யூதாவின் தென்பகுதியான நெகேபில் சிமியோனுக்குரிய ஒரு நகரம். இது எப்போதும் பேயேர்-செபாவுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது (யோசு 15:28; 19;3; 1 நாள் 4:28). யோசு 15:28-இல் யூதாவுக்குரிய பகுதியாகக் குறிக்கப்படுகிறது. இந்நகரம் அடிமைத்தனத்திற்குப் பின்பு, யூதர்களால் மீண்டும் குடியேற்றப்பட்டது (நெக 11:27). இப்பெயர் நரியைச் சின்னமாகக்கொண்ட கானானிய இனத்தவரால் குடியேற்றப்பட்டதாகும் இப்பகுதி என்று சுட்டுகிறது.

*கசர்-மவேத்து* (HAZAR-MAVETH - சாவின் கிராமம்)

சேமின் வழித்தோன்றலும் யோக்திானின் மகனும் ஆவார் (ஆதி 10:26; 1 நாள் 1:20). ஓர் இனத்தையும் குறிக்கலாம். நாடுகளின் பட்டியலில் இடப்பெயர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, தென் அரேபியத் தீபகற்பத்தின் ஒரு மாவட்டமான கதிமவுத்து என்று அடையாளம் காட்டப்படுகிறது. இப்பழங்கால நாடும், அதன் தலைநகரான சப்வாவும், வாசனைப்பொருட்கள் வியாபாரத்தால் செல்வமிக்கதாகவும் வலிமை வாய்ந்ததாகவும் விளங்கியது.

*கசாம்* (GAZZAM - அழிப்பவன், ஒருவகைப் பறவை அல்லது பூச்சி)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களின் முன்னோர் அல்லது ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:48; நெக 7:51).

*கசாயா* (HAZAIAH - யாவே பார்க்கிறார்)

அடிமைத்தனத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த மாசேயாவின் வழிவந்த யூதத்தலைவர் (நெக 11:5).

*கசிதீம்* (HASIDIM)

கடவுளின் இரக்கத்தைத் (கெசது) தம் வாழ்விலே கடைப்பிடிப்பவார்கள் 'கசித்' எனப்பட்டனர். 'கெசது' என்ற வார்த்தையானது உடன்படிக்கையோடு தொடர்பு உடையது. இந்த இரண்டு சொற்களுமே ஒரே கடமையைத்தான் குறிக்கிறது என்பது 'உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர்' என்ற வாக்கியத்தின் மூலம் தெளிவாகின்றது (உப 7:9). உடன்படிக்கை என்பது சடங்குகளின் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது; ஆனால் 'இரக்கம்' (கெசது) என்ற பண்பு உடன்படிக்கையை வாழ்ந்து காட்டுவதில் வெளிப்படுகின்றது. பரந்த பொருளில் 'இரக்கம்' (கெசது) என்பது சமூக, அரசியல், பொருளாதாரக் காரியங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் அல்லது எதாவது ஒருவழியில் ஒன்றித்துள்ளவர்களின் இணைந்த பொறுப்புடைமையைக் குறிக்கிறது. சமூகத்தை ஒன்றிணைக்கும் பண்பு என்று சுருக்கமாகக் கூறலாம். இச்சொல்லானது லோத்தைக் காப்பாற்றிய வானதூதர்களுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றது (ஆதி 19:19). இப்பண்பானது மனைவி கணவனுக்கும், மகன் தந்தைக்கும், மருமகள் மாமியார்க்கும் காட்டும் பிரமாணிக்கமாகும் (ஆதி 20:13; 47:29; ரூத் 1:8); வேவு பார்ப்பவர்களுக்கு அளிக்கப்படும் சன்மானம் (நீதி 1:24), தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையே இருந்த நட்புறவு (1 சாமு 20:8; 2 சாமு 9:1), மக்கள் அரசனுக்குக் காட்டும் பிரமாணிக்கம் (2 சாமு 3:8; 2 நாள் 24:22), வெற்றிபெற்றவன் தோல்வியுற்றவனுக்குக் காட்டும் இரக்கம் (1 அர 20:31), நல்ல மனைவியும், தாயும் தன் குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கும் உயர்லட்சியங்கள் (பழ 3:20) ஆகிய அனைத்துச் செயல்களும் 'கெசது' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. இச்சொல்லை மொழி பெயர்ப்பது கடினம். இச்சொல் 'இரக்கம்', 'அன்பு', 'அன்பிரக்கம்' என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிரமாணிக்கம் அல்லது 'பற்றுறுதி' என்பதுதான் 'கெசது' என்ற சொல்லின் அடிப்படையான பொருளாகத் தோன்றுகிறது. மனித உறவுகளைக் குறிக்கச் சிலமொழி

பெயர்ப்புகள் இச்சொல்லினைப் பயன் படுத்தியிருக்கின்றன (1 சாமு 20:15; 2 சாமு 2:5; 3:8; 16:17; 1 அர 2:7; சங் 101:1; பழ 3:3; 14:22; 16:6; 19:22; 20:6.8; யோனா 2:8).

'கெசது' என்ற சொல்லானது நல்ல வாழ்க் கையில் காண்பிக்கப்பட்ட பற்றுறுதியினை உணர்த்தும் நல்ல செயல்களைக் குறிக்கக் 'கசிதீம்' என்று பன்மையில் பயன்படுத்தப் பட்டுள்ளது (2 நாள் 32:32; 35:26; நெக 13:14). இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினைக் குறிக்கும் வகையில் கெசது என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தில் எல்லாம் சில மொழிபெயர்ப்புக் கள் 'நிலையான அன்பு' என்ற சொல்லி னைப் பயன்படுத்தியிருக்கின்றன. யோபு 37:13-இல் கெசது என்ற சொல்லானது 'அன்பு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கெசது என்ற பண்பினைக் கொண்டிருக் கும் மனிதர் 'கசிதி' என்று அழைக்கப்படு கின்றார் (பழ 11:17; எச 57:1). பொதுவாகக் 'கசிதி' என்ற சொல்லானது சங் 145:17; எரே 3:12 ஆகிய இரண்டு இடங்களைத்தவிர மற்ற இடங்களிலெல்லாம் மனிதனைக் குறிப்பதற் குத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் சொல்லானது இறைவனைக் குறிக்கப் பழைய ஏற்பாட்டிலோ, தால்மூதிலோ, பிற் காலத்தைய யூத இலக்கியங்களிலோ பயன் படுத்தப்படவில்லை. விசுவாசிகளின் சமூகத் தில் மனிதன் கடவுள்மட்டில் கொண்டிருக் கும் பற்றுறுதியைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்பட்டது. சில மொழிபெயர்ப் புகள் கசிதீம் என்பதைப் 'புனிதர்கள்' என்று மொழிபெயர்த்திருக்கின்றன (சங் 16:3; 30:4; 31:23; 37:28; 79:2; 85:8; 97:10; 116:15; 132:9.16; 145:10; 148:14; பழ 2:8).

'ஆண்டவரின் புனிதர்கள் ' (சங் 85:8; 148:14; 149:1) என்று இஸ்ராயேல் மக்கள் அனைவரையும் சேர்த்துக் குறிப்பிட இவ் வார்த்தையானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கசிதேயர்** (HASIDEANS - பக்தியுள்ளவர், புனிதர்)

மக்கபேயர் காலத்தில் சட்டத்திற்காகத் தங்களையே அர்ப்பணித்துக்கொண்ட யூதக் கூட்டம் (1 மக் 2:42). ''போரை நீடிக்கச்செய் கின்றார்கள், கலகம் மூட்டுகின்றார்கள், நாட் டின் அமைதியைக் குலைக்கின்றார்கள்'' என்று ஆல்கிமு என்பவரால் குற்றம் சாட்டப் பட்டவர்கள் (2 மக் 14:6). இந்த யூதக் கூட்டம் யோசிப்பஸ் என்பவரால் குறிப்பிடப் படவில்லை. இப்பெயர் இராபிகளின் நூல்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்டாலும் இவர்களைத்தாம் குறிப்பிடுகின்றார்களா என்பது தெரியவில்லை. இக்கூட்டம் சட்டத் திற்கு அர்ப்பணித்துக் கொண்டதால், இவர் களிலிருந்து உருவானவர்களே பரிசேயர்கள் என்பது விவிலிய வல்லுநர்களின் நம் பிக்கை. கும்ரான் கூட்டத்தினருக்கும், கசி தேயர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

**கசிபோ** (CHASPHO)

கிலயாது நாட்டில் அமைந்த ஒரு நகரம். யூதா இந்நகரைப் பிடித்து அங்குச் சீரியர்க ளால் சிறைபடுத்தப்பட்டிருந்த யூதர்களை விடுவித்தார். இது கசிப்பின் என்ற இடமாக இருக்கலாம். ஆகவே இது கலிலேயாக் கடலின் கிழக்கே அமைந்துள்ள கிசிபின் நகரமாக அல்லது யார்முக்கு ஆற்றின் கரை யோரம் உள்ள ஏல்-முசேரிபா நகரமாக இருக்கலாம் என்பது பலர் கருத்து.

**கசிப்பின்** (CASPIN)

பாலங்களாலும், மதில்களாலும் சூழப் பட்டுப் பல இனத்தார் கலந்து வாழ்ந்துவந்த ஒரு வலிமையான நகரம். யூதா மக்கபேயு என்பவர் இந்நகரைத் தாக்கி ஏராளமான மக்களைக் கொன்றார் (1 மக் 12:13). இது 1 மக் 5:26.36-இல் வரும் கசிபோ என்னும் இடமாக இருக்கலாம். தற்போது இது கலி லேயக் கடலின் கிழக்கே 14 கி.மீ. தொலை வில் அமைந்துள்ள கிசிபின் என்னும் நகர மாக அல்லது கவுரான சமவெளியில் உள்ள ஏல்-முசேரிபா என்னும் நகரமாக இருக்க லாம் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

**கசுத்தோர், பொல்லுக்சு** (CASTOR, POLLUX)

காண்க. மிதுனம்.

**கசுமோனா** (HASHMONAH - கொழுத்த, பருத்த)

சீனாய் பாலைவனத்திலிருந்து இஸ்ரா யேல் நாட்டிற்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு தங்கும் இடம் (எண் 33:29-30). யூசேபியு, காதேசு-பார்னேயாவின் சுற்றுப்புறத்தி லுள்ள அசெமோன் (விவிலிய அசிமோன்) தான் இந்த இடம் என்று அடையாளம் காட்டுகிறார். அறிஞர் சிலர், காதேசு-பார்னேயாவுக்கு வடமேற்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள அயின் ஏல்-கெசெமேயின் அருகிலுள்ள புதைபொருள் சிதைவுகள்தான் கசுமோனா என்று கூறுவர்.

**கசுரா** (HASRAH - ஏழ்மையான)

1. கார்காசு என்ற பெயரின் நாளாகம வடிவம்.

2. சல்லூமின் தாத்தா (2 நாள் 34:22; 2 அர 22:14).

**கசுலுகிம்** (CASLUHIM)

ஆதி 10:14; 1 நாள் 1:12-இல் இனவிவரிப் பில் வரும் அடையாளம் காணமுடியாத தோற்றமுடைய இப்பெயர், காமின் மக னான மிசுராயிம் சந்ததியினரையும் (எகிப்தி யர்கள்) பெலிஸ்தியர்களின் முன்னோரை யும் குறிக்கிறது. விவிலியத்தில் இப்பெய ருக்குமுன் இலீதியர், அனாமியர், இலாகாபி யர் நெப்துகிமியர், பத்துருசியர் ஆகிய பெயர்களும் பின்னால் கப்பதோரியர் என்ற பெயரும் வருகின்றன. இவர்கள் நைல் கழி முகப்பகுதிக்குக் கிழக்கில் கசியுமலைக்கு அருகில் வாழ்ந்து வந்த மக்களோடு தொடர் புடையவர்கள் என்று அறிஞர் சிலர் கருது கின்றனர்.

**கசூபா** (HASUPHA - வேகமான)

அடிமைத்தனத்திலிருந்து செருபாபே லோடு திரும்பிவந்த ஆலய ஊழியர் குடும் பங்களில் ஒன்றின் முன்னோர்கள் (எஸ் 2:43; நெக 7:46).

**கசூபு** (HASSHUB - கருத்தில்கொண்ட)

1. அடிமைத்தனத்திற்குப்பின் எருசலே மில் குடிபுகுந்த மெராரி என்ற லேவிய வம்சத்தைச் சேர்ந்தவர். செமாயா என்பவ னின் தந்தை (1 நாள் 9:14; நெக 11:15).

2. எருசலேம் மதிலைத் திரும்பக் கட்டுவ தற்கு நெகமியாவின் காலத்தில் இரண்டு அலுவலைப் பெற்ற ஒரே ஆள் அல்லது ஒரே பெயரைத்தாங்கிய இரண்டு ஆட்கள் (நெக 3;11.23). ஒரே ஆள் என்றால் பகாத்து-மோவாபு என்பவரின் மகன் (3:11).

3. எருசலேம் மதில்களைத் திரும்பக்கட்ட உதவியர்களுள் ஒருவர் (நெக 3:23). இவர் அல்லது 2-இல் குறிக்கப்பட்டவர் நெகமியா வின் தலைமையில் எஸ்ராவின் உடன்படிக் கையில் கையொப்பம் இட்டார் (நெக 10:23).

**கசேசு** (GAZEZ - மயிர் கத்தரிப்போர்)

1. கெபிரோனின் பேரன்; ஏப்பா என்ற வைப்பாட்டி வழியாகக் காலேபுக்குப் பிறந்த மகன். ஆரானுடைய சகோதரனாக வும் மகனாகவும் இரண்டுமுறை இந்தப் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது (1 நாள் 2:46). ஆனால் இந்த வாக்கு தெளிவில்லா மல் உள்ளது. பின்னால் சேர்க்கப்பட்டிருக்க லாம்.

2. காலேபின் பேரனும் ஆரானின் மகனு மாவார் (1 நாள் 2:46) 1-இல் கூறப்பட்டிருப் பவர்க்கு உறவினர்.

**கசேர் - அத்திக்கோன்** (HAZER-HATTICON - நடுமுற்றம், நடுக்கிராமம்)

இலச்சிய இஸ்ராயேலின் வடகிழக்கு மூலையில் கவுரானின் எல்லையில் உள்ள ஒரு இடமாக இதை எசக்கியேல் குறிப்பிடுகி றார் (எச 47:16). இதன் படிவம் வினோதமாக இருப்பதால் ஒருவேளை கசர்-ஏனோனுக்குப் பதிலாக, கசேர்-அத்திக்கோன் என்று மறைநூல் வல்லுநர்கள் தவறாக எழுதி யிருக்கலாம்.

**கசையடி** (SCOURGING, FLOGGING)

தடியால், குச்சியால் அடிப்பது. அடிமை கள், குழந்தைகள், ஞான இலக்கியங்களில் மூடர்கள் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்ட

தண்டனையாகும். பயிற்சியிலும் பயன்பட்டது (யாத் 21:20; பழ 13:24:3; ஏச 9:4). இதைவிட வலிதருவது, தோலால் செய்யப்பட்ட கசையாகும் (1 அர 12:11.14). இதில் முள்சாட்டை மிகக் கொடியதாகும்.

உப 25:1-3-இல் 'அடித்தல்' சட்டப்பூர்வமான தண்டனையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பழமொழி ஆகமத்தின்படி முன்கருதலில்லாத சரியாகக் கணிக்காமல் செய்யப்படும் தீர்ப்புகள், கவலையற்ற பேச்சைப்போல், சண்டை சச்சரவுக்கு இட்டுச் செல்லும். யார் தவறாக நடந்து கொண்டார்களோ அவர்களுக்குத் தண்டனை கொடுத்துச் சண்டை தீர்த்து வைக்கப்படும். 'மதிகெட்டோரின் உடம்புகளுக்கு'த்தான் கசையடி என்பது அங்கீகரிக்கப்பட்டிருந்தது (பழ 19:29; காண் 18:6; 20:3). சிறுவனைப் பிரம்பால் அடிப்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. அவனைத் திருத்த வேண்டுமென்பதே இதற்குக் காரணம் (பழ 23:13-14).

பழைய ஏற்பாட்டின் வேறொரு இடத்தில் ஒன்றுமறியாத அப்பாவிகூடச் சில நேரங்களில் கெட்ட தனி நபர்கள், தனிக்குழுக்களால் அடித்து நொறுக்கப்படலாம்' என்பதும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது (ஏச 52:13-53:12). மாசற்றவர்களின் துயரம் அடிக்கடி தீமை செய்பவர்களின் கரங்களிலிருந்தே வருகிறது என்பதுதான் சங்கீதங்களின் பொதுவான உட்கருத்தாக அமைந்திருக்கிறது (சங் 13:22; 28; 31:19-24; 35; 38; 41; 69; 71; 86; 102; 109).

நீதிமுறைத் தண்டனையாக உயர்ந்த அளவாக நாற்பது அடி அனுமதிக்கப்பட்டிருந்தது (உப 25:1-3). அளவுக்கு அதிகமாய்க் குற்றவாளியை இழிவுபடுத்துவதைத் தடுப்பதே இதற்குக் காரணமாகும். குற்றத்திற்கேற்றவாறு அடிகளின் எண்ணிக்கை வேறுபட்டது. ஆனால் எந்தக் குறிப்பிட்ட குற்றங்கள் கசையடியால் தண்டிக்கப்பட்டன என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை. குற்றவாளி படுக்கவைத்து நீதிபதியின் மேற்பார்வையில் அடிக்கப்பட்டார்.

பிற்காலத்தில் யூதச்சட்டம் விவிலியத் தடைகளுக்கு மாறாகக் கசையடியால் தண்டித்தது (மாற் 3:1-9). மிஸ்னாவின்படி, குற்றவாளி கசையடித் தண்டனைக்குரியவனா என்று விசாரித்தறிந்தபின், அவரது கைகள் ஒரு தூணில் கட்டப்பட்டன. அவரது நெஞ்சும் முதுகும் வெறுமையாக்கப்பட்டன. கன்றுகளின் தோலால் செய்யப்பட்ட கசையால் செபக் கூடத்தலைவர் அடித்தார். சிலசமயம் இக்கசை இரட்டைத் தோலுடையதாகவும் கழுதைத் தோல் சேர்ந்ததாகவும் இருக்கும் (உப 25:2-3; மத் 10:17). மூன்றில் ஒருபகுதி நெஞ்சிலும் மூன்றில் இருபகுதி முதுகிலும் அடிக்கப்பட்டன. மொத்தம் முப்பத்தொன்பது அடிகள் கொடுக்கப்பட்டன. இது சட்டம் அனுமதித்ததைவிட ஒன்று குறைவாகும். எண்ணிக்கையில் தவறு நேர்ந்துவிடக்கூடாது என்பதால் இவ்வாறு குறைக்கப்பட்டது.

உரோமையரின் கசையடிமுறை குற்றவாளியின் நிலையைப் பொருத்ததாகும். சுதந்தரக் குடிமகன் தடியால் அடிக்கப்படலாம் (1 கொரி 4:21; அ.ப. 16:22.35.38; 2 கொரி 11:25). அடிமைகளும் உரோமையர் அல்லாதவரும் கசையடி கொடுத்து விசாரிக்கப்படலாம் (அ.ப. 22:24-25). குற்றவாளி ஆடைகள் நீக்கப்பட்டு (16:22), ஒரு தூணில் வார்களால் கட்டப்பட்டு அடிக்கப்பட்டார். மரணத் தீர்ப்புக்குட்பட்ட அடிமைகளும், அந்நியரும், குற்றவாளிகளும் முடிச்சுள்ள வார்களால் அடிக்கப்பட்டனர். இந்த வார்களில் சிலசமயம் உலோகத் துண்டுகளும் எலும்புத் துண்டுகளும் கட்டப்பட்டிருக்கும்.

இயேசு தம் சீடர்களிடம், நீங்கள் நற்செய்தியைத் தொடர்ந்து போதித்தால் செபக் கூடங்களில் சாட்டைகளால் அடிபடுவீர்கள் என்று எச்சரிக்கின்றார் (மாற் 13:9). அ.ப. 5:40 இன்படி அப்போஸ்தலர்களைத் தலைமைச் சங்கத்தின் பிரதிநிதிகள் கசையால் அடித்து இனி இயேசுவின் பெயரைச் சொல்லிப் போதிக்கலாகாதபடி எச்சரிக்கை விடுத்தார்கள். கமாலியேல் சங்கத்தாரை இவர்கள் சாவுக்கு உள்ளாக்கவேண்டாம் என்று கேட்

டுக் கொண்டதற்குப் பிறகே கசையடி கொடுத்தார்கள். பவுலே பல கிறிஸ்தவர்களைச் சாட்டையால் அடித்துச் சிறையில் தள்ளியிருக்கிறார் (அ.ப. 22:19-20). மும்முறை தடியால் அடிபட்டிருக்கிறார் (2 கொரி 11:25; அ.ப. 16:11-24).

### கசையின் கயிறு (LASH)

தண்டிக்கப் பயன்பட்ட ஒரு கருவி. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கசை விலங்குகள் மேல்தான் பயன்படுத்தப்பட்டது (பழ 26:3; நாகூ 3:2). மனிதர்களைத் தண்டிக்கக் குச்சிகள், தடிகள் பயன்பட்டன (யாத் 21:20; பழ 10:13; 26:3). மிஸ்னாவின்படி, உப. 25:2-3-இன்படி நாற்பது கசையடி கொடுக்கப்பட்டபோது, முள் முனையுள்ள கசை பயன்படுத்தப்பட்டது. 1 அர 12:11.14; 2 நாள் 10:11.14-இல் வரும் சாட்டையடி விலங்குகளுக்குக் கொடுக்கப்பட்டதாகும். இங்கு உருவகமாகப் பயன்படுகிறது.

நாற்பது அடிகொடுக்கும் யூதவழக்கு, எண்ணிக்கையில் தவறு வந்துவிடுமோ என்ற அச்சத்தில் முப்பத்தொன்பதாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு, 2 கொரி 11:14-ஐ எழுதுவதற்கு முன்பே பவுல் ஐந்துமுறை அடிபட்டிருந்தார்.

உரோமை ஆட்சியில் உரோமையைச் சேராத மக்களுக்கே கசையடி வழங்கப்பட்டது (அ.ப.22:24-25). உரோமைக் குடிமக்கள் தடியால் அடிக்கப்பட்டனர். அதுவும் அவர்கள் குற்றம் சாற்றப்பட்டு எண்பிக்கப்பட்ட பின்புதான் கொடுக்கப்பட்டது. சிலசமயம் இக்கசைக் கயிறுகளில் உலோகத்துண்டுகள், கண்ணாடித்துண்டுகள் கட்டப்பட்டிருக்கும். இதனால் அடிபடுதல் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியதாகும். இயேசு, சிலுவையில் அறையப்படுமுன் கசையால் அடிக்கப்பட்டார் (மத் 27:26).

### கச்சை (BELT)

அசீரிய போர் வீரர்களுடைய போர் அணிகளுள் (எ.ச. 23:15) ஒன்று. வீரர்களால் அணியப்பட்ட ஒரு கச்சை (நீதி 14:19; 2 சாமு 2:21). தோலோடு ஒட்டிக் கட்டப்பட்ட ஒரு கச்சையும் (சங் 109:19) உண்டு.

'கச்சையைத் தளர்த்திவிடுவது' என்ற சொற்றொடர் ஒரு போர்வீரனை வலிமையற்றவனாக்கி விடுவதைக் குறிக்கிறது (யோபு 12:21).

ஆதி 38:18-இல் வரும் இடைவார் மல்யுத்தக் கச்சையாகும் என்று பொருள் கூறப்படுகிறது. மத் 10:9; மாற் 6:8-இல் வரும் குறிப்புகள் பணம் வைத்திருக்கும் கச்சையைச் சுட்டுகின்றன.

### கடந்துபோகும் விழாவும், புளியாத அப்ப விழாவும் (PASSOVER AND UNLEAVENED BREAD)

காண்க: பாஸ்கா விழாவும் புளியாத அப்ப விழாவும்.

### கடப்பாறை (PICK)

இரும்பினால் செய்யப்பட்ட ஒரு கூர்மையான ஆயுதம். தாவீது தோல்வியுற்ற அம்மோனியர்களை இரம்பம், கடப்பாறை, கோடரி முதலியவற்றால் வேலை செய்யும்படியும், செங்கற்சூளையில் வேலை செய்யும்படியும் செய்தார் (2 சாமு 12:31; 1 நாள் 20:30). அம்மோனியர்கள் துன்புறுத்தப்பட்டார்களா அல்லது கடினமான வேலைகளைச் செய்யுமாறு பணிக்கப்பட்டார்களா என்பது பற்றிக் கருத்துவாதம் உண்டு.

### கடமையுணர்வுள்ள ஊழியன் - உவமை (லூக் 12:35-38)

இறைமகன் இயேசுவின் வருகைக்காக விழிப்புடனும் கடமையுணர்வுடனும் அவர்தம் சீடர்கள் காத்திருக்க வேண்டும். தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்து உலகில் நல்வாழ்க்கை வாழ வேண்டும். இதற்காகத் தூய ஆவியானவர் சீடர்தம் உள்ளங்களிலே செயல்படுகின்றார். நம்முடைய அன்றாட வாழ்க்கையிலே துணையாக இருந்து நம்மை நற்செயல் புரியத் தூண்டுகிறார். மனுமகனின் வருகை எதிர்பாராத நாளில் இருக்கும் என்பதால், சீடர்களுக்கு விழிப்புணர்வு அவசியம்.

## கடலின் அடிப்பரப்பு (CHANNELS OF THE SEA)

இது விவிலியத்தில் கடல் பாதாளங்களை யும் (2 சாமு 22:16) கடல் நீரோட்டங்களை யும் குறிக்கிறது (சங் 18:15). இந்தக் கடல் நீரோட்டங்கள்தான் பூமியைச் சுற்றியும், கீழ் உலகிற்கு மேல்புறத்திலும் இருக்கின்ற கடல் நீரை ஆற்றுப்படுத்தி, நெறிப்படுத்திச் சீரான முறையில் இருக்க வழிப்படுத்துகிறது.

## கடலின்பெருநாகம், திமிங்கலம் (SEA MONSTER)

இது கடலின் பெருநாகம் என்றும் (ஆதி 1:21), நீரில் வாழும் பறவைநாகம் என்றும் (சங் 74:13-14) பலவாறு குறிப்பிடப்படுகின் றது. எபிரேய வழக்கில், இது கடலில் வாழும் ஒருபெரிய விலங்காகும். இது உண் மையாகவோ, புராணக் கருத்தாகவோ இருக் கலாம் (யோபு 7:12; ஆதி 1:21; சங் 148:7). இஸ்ராயேலர் கடலை ஒரு விநோதமான, ஆபத்தான இடமாகக் கருதினர். கடலையும் அதன் பெரிய விலங்குகளையும் யாவே அடக்கி ஆள்வார் என்ற கருத்து இஸ்ராயே லின் விசுவாசத்தின் ஒரு முக்கிய கருத்தா யிற்று (சங் 74:13-14; 89:9-10; 93:3-4; 104:6-9).

## கடலூராஞ்சி (OSPREY)

ஆந்தையைப் போல் உடல் அமைப்புக் கொண்ட மீன் தின்னும் பறவை. இது அசுத்தமான பறவைகளில் ஒன்று (லேவி 11:13; உப 14:12).

## கடல் (SEA)

1. இந்த வார்த்தை ஒன்றாகச் சேர்ந்த நீர்த் திரள்களையும் குறிப்பிட்ட தண்ணீர்ப் பகுதி களையும், செம்புக்கடல், கண்ணாடிக் கடல் போன்ற அமைப்புக்களையும் குறிக்கின்றது. குருக்கள் பாரம்பரியப்படி இறைவன் காய்ந்த தரையிலிருந்து தண்ணீரைப் பிரித்து அதைக் கடல் என்று அழைத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது (ஆதி 1:9-10). இறை வனின் வல்லமை கடல் மீதும் இருந்தது என்று விவிலியம் குறிப்பிடுகின்றது (யோசு 26;12; அ.ப. 14:15). அங்கு மீன்கள் வாழ்கின் றன (ஆதி 1:26.28). இதை வைத்துதான் திருவெளிப்பாட்டின் எழுத்தாளர்கள், உலக சக்திகளின் பயங்கரமான பெரிய மிருகங்கள் கடலிலிருந்து வெளி வருவதாக எழுதியிருக் கின்றார்கள் (தானி 7:3; திருவெளி 13:1). பாலஸ்தீன மக்கள் மத்தியதரைக்கடலில் கப் பல்வழியாகப் பயணம் செய்ததற்கு எந்தவித மான ஆதாரமும் இல்லை.

பாலஸ்தீன மக்கள் அடிப்படையில் கடற் பயண வாழ்வு வாழாதவர்களாக இருந்தா லும் தங்களுக்கு அருகிலுள்ள கடல்பிரதே சங்களையும், அவற்றின் வரலாறுகளையும் தெரிந்து வைத்திருந்தனர்; பொதுவாகப் பாலஸ்தீன மக்கள் அவைகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். மேற்கு எல்லை எப்பொழு துமே பெருங்கடல் அல்லது மேற்கத்தியக் கடல் என்று குறிக்கப்பட்டுள்ளது. இன்னும் சிறப்பாகக் ''கடல்'' என்றும் அழைக்கப்பட் டது (யோசு 16:8; 1 அர 5:9; அ.ப. 10:6). செங்கடல், சாக்கடல், கலிலேயாக் கடல் போன்றவைகளும் விவிலியத்தில் இடம் பெறுகின்றன. எபிரேயர்களின் விடுதலை வரலாற்றில் செங்கடல் இடம் பெறுகின்றது (யாத் 10;19; 15:4). கடல் அல்லது கடலின் ஒரு பகுதி ஏச 11:15-இல் எகிப்தியக் கடல் என்று அழைக்கப்பட்டுள்ளது. சாக்கடல் பொதுவாக உப்புக் கடல் என்று அழைக்கப் படுகின்றது (ஆதி 14:3; உப 34:12; உப 3:17; யோசு 3:16). இது ''அரேபியாக் கடல்'' என்றும் (உப 3:17; 4:49; யோசு 3:16) கிழக்கத்தியக் கடல் என்றும் (எச 47:18; யோவே 2:20; செக் 14:18) அழைக்கப்படுகி றது. கலிலேயாக் கடல்தான் பாலஸ்தீனத்தி லேயே மிகப்பெரிய சுத்தமான தண்ணீர் உள்ள ஏரியாகும். இயேசுவின் அப்போஸ்த லிக்கப் பணியிலே அடிக்கடி குறிப்பிடப்பட் டுள்ள இடமாகும் (மத் 4:18; 15:29; மாற் 7:31). இது புதிய ஏற்பாட்டிலே கெனசரேத்து என்றும் (லூக் 5:1), திபேரியாக்கடல் என் றும் (யோவா 6:1; 21:1) அழைக்கப்படுகின் றது; பழைய ஏற்பாட்டிலே கின்னரேத்துக் கடல் (எண் 34:11; யோசு 3:27) என்றும் கின்னரோத்துக் கடல் (யோசு 12:13) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. விவிலியத்தில் 'கடல்' என்று குறிப்பிட்டிருந்தால் அது பெரும்பாலும் மத்தியதரைக் கடலையே குறிக்கும். கலிலேயக் கடல், செங்கடல், கருங்கடல் என்பதும் இஸ்ராயேல் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட கடல்கள்தாம். பொதுவாக இஸ்ராயேல் மக்கள் கடலோடு அதிகம் தொடர்பு கொண்டிருந்ததாகவோ, கடற்பயணத்தை விரும்பியதாகவோ தெரியவில்லை. யோனாவும் புனித பவுலும் கடற்பயணம் செய்ததாக விவிலியம் கூறுகிறது. கடலென்று குறிப்பிடும் பொழுதெல்லாம் கடலின் கொடூரத் தன்மையைத்தான் குறிப்பிடுகிறார்கள். இதற்குக் காரணம், பாலஸ்தீனத்தின் நிலவமைப்பும், கடற்கரைகள் இயற்கைத் துறைமுகமில்லாது அமைந்திருத்தலும்தான். மேலும் இக் கடல்களில் எழும் புயல்காற்றையும், மூன்று முறை தான் அனுபவித்த கப்பற்சிதைவையும், கடலில் பலமுறை பட்ட இடறல்களையும் புனித பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரி 11:25 தொ). புயலடிக்கும்போது கப்பலோடு கடலில் மூழ்குபவரது துன்பத்தின் பயங்கரத்தையும், அவர்களை இறைவன் யாவே காப்பாற்றுவதையும் சங் 107:23-30 நன்கு சித்தரிக்கிறது. இறைவன் யாவேதான் கடலில் புயலை எழுப்புகிறார் என்பது இஸ்ராயேலரின் நம்பிக்கை (எரே 31-35). இந்தக் கருத்துக்களுக்கு மாறாக, சங் 104:25 கடலைச் சிறிது உயர்வாகக் கருதிப் பேசுகிறது: ''பரந்து விரிந்தது கடல்; பரபரப்பூட்டும் எழுச்சிமிக்கது கடல்; கப்பல்கள் மிதக்கும் கடல்; கடவுளின் கைவேலையே கடல்.'' புராண இதிகாசக் கதைகளும் இஸ்ராயேல் மக்கள் கடலின் மீது கொண்டிருந்த பயத்துக்குக் காரணமாக இருந்தது. அழிவின் அரக்கன் கடல் என்றும், அதைப் படைப்பு இறைவன் பணிய வைக்கிறார் என்றும் பழைய படைப்புக் கதைகள் கூறுகின்றன. பழைய ஏற்பாடும் பல இடங்களில் கடலை அரக்கன் என்றே குறிப்பிடுகிறது. படைப்புத் தேவனின் எதிரிகளில் ''யாம்'' என்னும் கடலும் ஒன்று என்று உகாரித்துப் புராணப் பாடல்கள் கூறுகின்றன.

3. இறைவனின் படைப்பு:- தரையிலிருந்த நீரெல்லாவற்றையும் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேர்த்தபோதுதான் கடல் உண்டானது என்று ஆதியாகமம் கூறுகிறது (ஆதி 1:9 தொ). இறைவன் யாவேதான் கடலைப் படைத்தார்; கடலும் அவரது பெரும்புகழைப் பறைசாற்றுகிறது என்று விவிலியம் கூறுகிறது (நெக 9:6; சங் 24:2; யோனா 1:9; திருவெளி 10:6). இறைவன் யாவேதான் கடல்நீரை முகந்தெடுத்து மாநிலத்தின்மேல் பொழிகிறவர் (ஆமோ 5:8). கடலலைகளை அடிபணிய வைக்கிறவர், கடலுக்கு எல்லையையும் அமைக்கிறவர் (பழ 8:29). அவரது கடுங்சினத்திற்குக் கடலும் காய்ந்துவிடும் (ஏச 50:2; நாகூ 1:4). யாத்திரையாகமத்தில் யாவே கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ராயேல் மக்களைக் காக்கின்றார் (யாத் 14:15). யாத்திரையாகமத்தில் காணும் காட்சியை, அதாவது கடலினின்று மீட்புப் பெறும் காட்சியை, இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தளையினின்று மீட்புப் பெறும்போது மீண்டும் காண்கிறோம் (ஏச 11:15). கடலின் எல்லா எல்லைகளிலும் இறைவன் யாவே இருக்கிறார் (சங் 139:9). கடலும் கடலிலுள்ளவைகளும் ஆண்டவரைப் புகழ அழைக்கப்படுகின்றன (சங் 148:7).

4. சமய அடையாளம்:- கடலைப்பற்றிய புராண இதிகாசக் கதைகளின் உட்கருத்தைப் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் நன்மை விளைவிக்கும் விதத்தில் கையாளுகின்றனர். அரசராகமத்தில் வரும் ''வார்ப்புக் கடல்'' அல்லது ''வெண்கலக்கடல்'' என்ற வட்டமான தொட்டி ஆழ்கடலின் அடையாளமாக விளங்குகிறது (1 அர 7:23 தொ; 25:13). ஆனால் விவிலியம் இதனை வேறொரு முறையில் உபயோகிக்கிறது.

வெண்கலக் கடல் என்றால் ஒரு பெரிய வெண்கலத்தால் செய்யப்பட்ட தொட்டியைக் குறிக்கின்றது. இது எருசலேம் ஆலயத்தின் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்தது; 2 நாள் 4:6-இன்படி இது ஒரு தண்ணீர்ச் சேமிப்பு இடமாகும். குருக்கள் இதைத் தங்களுடைய கழுவும் சடங்கில் பயன்படுத்தினர். இது வெண்கலக்கடல் என்று அழைக்கப்பட்டதோடு (2 அர 25:13; 1 நாள் 18:8)

வார்ப்புக்கடல் என்றும் (1 அர 7:23; 2 நாள் 4:2), அல்லது வெறுமனே ''கடல்'' என்றும் (1 அர 7:24; 2 அர 16:17) அழைக்கப்பட்டது. ஆழியின் தண்ணீர் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அடையாளமாக உள்ளது (சங் 69:3). ஏனென்றால் அதன் அடிப்பாகம் பாதாளத்தின் அருகில் உள்ளது என்ற கருத்து, பரவலாக நிலவி வந்தது (யோனா 2:6 தொ). தீமையின் விளைவான அழுகிய அருவருப்பான நாற்றம், சீர்குலைந்த. கொடிய தாக்குதல்கள் போன்றவை கடலில் மிதந்து வருகின்றன. அந்தக் கொடிய சக்திகளை இறைவன் யாவே வெல்ல வேண்டும்; அப்போதுதான் அவர் வெற்றி வாகை சூடுவார் என்பதன் அடையாளமாக அது இருக்கிறது.

இந்தக் காப்பியத்தன்மையுடைய உருவகமனைத்தும் மூன்று கருத்துக்களை உணர்த்துகின்றன. முதலாவது, படைப்பின் எதிரிகளோடு சண்டையிட்டு, வெற்றி பெறுவதன் அடையாளமாக இறைவனது படைப்பின் செயல் அமைகிறது எனப் படைப்புப் பாக்கள் எடுத்துரைக்கின்றன (ஏச 51:9; யோபு 7:12; 38:8-11). இரண்டாவதாக, இந்த உருவகங்களை, அல்லது வருணனைகளைச் சரித்திர நிகழ்ச்சியென்றும் கொள்கின்றனர். எ.கா. செங்கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ராயேல் மக்களைக் காத்தது (யாத் 14-15; சங் 77:17-20; 114:3-5); ஆழ்கடலின் அரக்கனை வென்றதாகக் கருதப்பட்டது (ஏச 51:10). இதுபற்றிக் கடலின் அமைதியற்ற நிலை, கடவுள் நம்பிக்கையற்ற நாடுகளில் கடவுளுக்கு எதிராக எழும் கலகத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது (ஏச 5:30; 17:12). கடைசியாக (மூன்றாவதாக) ஆழியினின்று கொடிய மிருகங்கள் வரும் (தானி 7:2-7). அவைகளைப் படைப்பின் இறைவன் பணியச் செய்து உலகில் அமைதி நிலவச் செய்வார் (சங் 65:8; 89:10; 93:3 தொ).

5. கிறிஸ்துவும் கடலும்:- புதிய ஏற்பாட்டிலும் கடலைச் சமயக்கண்கொண்டு நோக்கும் முறை காணப்படுகிறது. இது நற்செய்தியில் கண்கூடாக அமைகிறது. கடல் ஒரு சாத்தானின் இடம் என்று கருதப்படுவதால் பேய்பிடித்த பன்றிகளெல்லாம் கடலில் புகுந்து இறக்கின்றன (மாற் 5:13). தமது தெய்வீகத் தன்மையைக் காண்பிப்பதற்காகக் கடலின் மீது இயேசு நடக்கிறார் (மாற் 6:47 தொ; யோவா 6:19 தொ). கடற்காற்றையும், அலையையும் கண்டித்து அடிபணிய வைக்கிறார் (மத் 8:23-27; மாற் 4:35-41; லூ 8:22-25). புராண இதிகாசங்களை அறிந்ததினாலோ என்னவோ, திருவெளிப்பாட்டின் ஆசிரியர் கடலைப் புதிய வானம், புதிய பூமியிலிருந்து விலக்கி வைக்கிறார் (திருவெளி 21:1). அமைதி நிலவும், ஆண்டவன் ஆட்சியிருக்கும் இடத்தில் பகையை விளைவிக்கும் எதற்கும் இடங்கிடையாது என்பது ஆசிரியரின் கருத்து.



### கடற்கரை (SEA COAST)

மத்தியதரைக்கடலை ஒட்டிய ஒரு நாட்டின் (ஏச 23:2) அல்லது தீவின் (எரே 2:10; 47:4) கடல் ஓரமாகும். கடற்கரைநாடு, தூரத்திலுள்ள (புற இனத்தாரின்) நாட்டைக் குறிக்கிறது (ஏச 40-66; எரே 31:10; எச 26:15). பாலஸ்தீனத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளில் முதலில் கானானியர்களும் (உப 1:7), பின்னர்ப் பெலிஸ்தியர்களும் (எச 25:16), அதையடுத்துப் பெனிக்கியர்களும் (லூக் 6:17) குடியேறினர்.

### கடற்காளான் (SPONGE)

கடற்பாசி, கடற்பஞ்சு, உறிஞ்சும் இயல்புள்ள பஞ்சு; நுண் துளை நிறைந்த மென்மையான பொருள், நீண்டு சுருங்கும் தன்மையுள்ள பொருள்.

கடற்காளான் நிறைந்த உள்துளைகளை உடையதால் உறிஞ்சும் தன்மையுள்ள பொருள். ஆகையால் தவறிச் சிதறிய திரவங்களைச் சேகரிக்கப் பயன்படுத்தப்பட்டது...

புதிய ஏற்பாட்டில் கடற்காளான் மூன்று நற்செய்திகளில் இடம் பெறுகின்றது (மத் 27:48; மாற் 15:36; யோவா 19:29). சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவுக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தது இத்தகைய கடற்காளானைக் கொண்டுதான்.

**கடன், கடன்பட்டவன்** (DEBT, DEBTOR)

பாலஸ்தீனத்தில் கடன் கொடுப்பது, வாங்குவது பற்றி உள்ள விதிமுறைகளையும், ஒழுங்குகளையும், விவிலியத்தில் உள்ள பழமொழிகளிலிருந்தும், ஐந்நூலில் உள்ள சட்டங்களிலிருந்தும், நாம் தெரிந்து கொள்ளலாம்.

1. இரவல் வாங்குவதே கடனுக்குக் காரணம்:-

செமித்திய மக்கள் கடனுக்கு வட்டி வாங்கி வந்தனர். இந்தப் பழக்கமானது ஐந்நூலிலே கண்டிக்கப்பட்டுள்ளது. தன்னோடு வாழ்கிறவனிடமிருந்து வட்டி வாங்குதல் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது (யாத் 22:25; லேவி 25:36-37; உப 23:19-20). ஆனால் இந்த விதியை மீறி இஸ்ராயேல் மக்கள் வட்டி வாங்கினர். கடன்பட்டவன் மிகவும் மோசமான நிலையில் இருந்தான். எனவே எசக்கியேலும், நெகமியாவும் வட்டி வாங்குவதை விட்டு விட்டு மக்கள் சட்டத்தை ஒழுங்காக அனுசரிக்க வேண்டும் எனக் கூறுகின்றனர் (எச 18:8.13.17; 22:12; நெக 5:6-13). பழமொழி ஆகம ஆசிரியர் வட்டியால் சேகரிக்கப்பட்ட பணம் நிலையற்றது. அது உடைமையாளனுக்கும் காலப்போக்கில் பயன் படாது என்கிறார் (பழ 28:8). இஸ்ராயேலர் வட்டி வாங்க அனுமதிக்கப்படவில்லையாதலால் அவர்கள் வட்டியை முதலில் இருந்தே பிடித்துக்கொள்வார்கள். அதாவது ஒருவன் 40 செக்கேல் கடன் வாங்கினால், வட்டியோடு சேர்த்து 60 செக்கேல் என எழுதிக் கொள்வார்கள். இதில் 20 செக்கேல் மறைமுகமாக வட்டியாகப் பெறப்படுகிறது.

2. அடகுப்பொருள்:-

கடன் கொடுப்பவர், தான் கொடுத்த கடனைத் திரும்பப்பெற உத்தரவாதமாக ஏதாவது பொருளைப் பெற்றுக் கொள்வது மேற்கு ஆசியாவிலும், இஸ்ராயேலிலும் இருந்த பழக்கம். உப 24:10-11 இன்படி கடன் கொடுப்பவன் அடகுப்பொருளை வாங்கக் கடனாளியின் வீட்டிற்குள் நுழையக் கூடாது. கடன் வாங்குபவனே வாசலில் வந்து, சாட்சிகள் முன்னிலையில் அதைத் தரக் கடன் கொடுப்பவன் அதைப்பெற வேண்டும். அன்றாட வாழ்க்கையில் விற்க முடியாத பொருட்கள் அடகுப் பொருளாக வாங்கப்படமாட்டாது (உப 24:6). ஈடாக வாங்கப்பட்ட மேலாடை சூரியன் மறையுமுன் திருப்பித்தரப்படவேண்டும் (யாத் 22:26-27; உப 24:12-13). மேலும் அடகாக மகனையோ, மகளையோ வைப்பது இஸ்ராயேலர் வழக்கம். சட்டத்திலே கண்டிக்கப்பட்ட இப்பழக்கத்தை மக்கள் விட மனமில்லாதவராய் இருந்தனர். நெகமியாக் காலத்தில் மக்கள் வயல்களையும் திராட்சைத் தோட்டங்களையும் ஒற்றி வைத்தபின் தங்கள் புதல்வர் புதல்வியரை அடகாகக் கொடுத்தனர். அவர்களின் உழைப்பு வட்டியாகக் கருதப்பட்டது. இது அடிமைத்தொழிலாகும் (நெக 5:2-3). மேலும் கடன் வாங்குபவன் ஒரு செல்வமிகுந்த மூன்றாம் ஆளையும் அடகாக வைக்கலாம். இவர் கடனைத் திரும்பக்கொடுப்பதில் பொறுப்புடையவராகிறார். பழமொழி ஆகமம், அன்னியனுக்குப் பிணையாகிறவன் துன்பத்தால் வருந்துவான் எனக் கூறுகிறது (பழ 6:1; 11:15; 17:18; 20:16; 22:26; 27:13).

3. புதிய ஏற்பாட்டில் கடனும் கடன்பட்டவனும்:-

இயேசுவும் தம்முடைய போதனையில் கடன், அடகுப்பொருள் போன்றவற்றைக் குறிப்பிட்ட கருத்தைக் கூறப் பயன்படுத்தியுள்ளார். கெட்ட ஊழியன் உவமையிலே (மத் 18:23-35) அவன் தன்னிடம் கடன்பட்ட உடனூழியனைச் சிறையில் அடைக்கிறான் (மத் 5:25-26; லூக் 12:58-59). இந்தப் பழக்கம் கிரேக்கர், உரோமையர் பழக்கம். இப்படிச் சிறையில் அடைப்பது, அவனிடமிருந்து எப்படியாவது கடன் கொடுத்தபணத்தைத் திரும்பப் பெறவேயாகும். மேலும் இந்தக் கடன், ஈடு போன்ற சொற்கள் புதிய ஏற்பாட்டில் உருவகப்படுத்திப் பேசப்பட்டுள்ளன (மத் 6:12; லூக் 11:4; எபி 7:22). இவற்றை இஸ்ராயேலரின் மற்றும் யூதர்களின் வழக்கப் பின்னணியில் புரிந்து கொள்ளவேண்டும்.

## கடன் கொடுத்தல் (LENDING)

மோசேயின் சட்டத்தில் ஒரு கடமை. ஏழைகளுக்கு உதவிடும் நோக்குடையதாகும் (உப 15:7-11). சக யூதர்களிடமிருந்து வட்டி பெறக்கூடாது. ஆனால் அந்நியர்களிடமிருந்து வட்டிபெறுவது அனுமதிக்கப்பட்டிருந்தது (யாத் 22:25; லேவி 25:35-37; உப 23:19-20). கடனுக்கு அடகுப்பொருள் பெறுவதுகட்டுப்படுத்தப்பட்டிருந்தது (யாத்22:26-27; உப 24:6.17). ஓய்வு ஆண்டில் எல்லாக்கடனும் தள்ளுபடி செய்யப்பட்டது (உப 15:1-6). ஆயினும் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் இவ்வடிமைத்தன்மை வழக்கில் இருந்தது (நெக 5:1-5). உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தால், ''நீ பலமக்களுக்கும் கடன் கொடுப்பாயேயன்றி எவனிடத்தும் கடன்வாங்கா'' நிலையை இஸ்ராயேலுக்கு அளித்து இறைவன் ஆசிர்வதிப்பார் (உப 15:6).

இந்தப் பழைய ஏற்பாட்டின் போதனையையும் கடந்து செல்லுகிறார் இயேசு. ஓய்வு ஆண்டின் தொடக்கத்திலே இருப்பது போலவே ஒருவன் நடந்து கொள்ளவேண்டும். முதலையோ வட்டியையோ எதிர்பார்க்கக் கூடாது (லூக் 6:35).

## கடன் வாங்குதல், கொடுத்தல் (BORROW, LEND)

வாங்கிய பொருள் அல்லது அதற்குச் சமமான வேறொரு பொருள் திரும்பிக் கொடுக்கப்படும் என்ற எண்ணத்தில் வாங்கப்படும் கடனுதவி. கடன் வாங்கியவர்களுக்கு அடைமானப் பொருளின் மீது தற்காலிக உரிமை உண்டு. சில சமயம் கடன் கேட்பவரிடமிருந்து, அடகுப்பொருள் வாங்கப்படும் (உப 24:11.13; யாத் 22:7 தொ). பொதுவாகப் பணமே கடனாக வாங்கப்படும். இஸ்ராயேல் குலத்திற்குள் கடனுக்கு வட்டி வாங்கக்கூடாது (யாத் 22:25; லேவி25: 35). ஆனால் புறவினத்தாரிடமிருந்து வட்டி பெற்றுக் கொள்ளலாம் (உப 23:20). தகாவட்டிமுறை என்பது இஸ்ராயேல் ஒருவரிடமிருந்து அல்லது பிறரிடமிருந்து அளவுக்கு அதிகமாக வட்டி வாங்குவதே ஆகும். கடன் கொடுத்தலும், திருப்பிக் கொடுத்தலும் பிறவன்புச் செயல்களாகக் கருதப்பட்டன (சீரா 29:1-14). இயேசுகூட கடன் கொடுத்தலை ஊக்கப்படுத்துகிறார் (மத் 5:42; லூக் 6:34-35; 7:41தொ; பழ 19:17). எனினும் கடன் வாங்குபவன் மகிழ்ச்சியாக இருக்க முடியாது (பழ 22:7; மத் 18:23 தொ).

## கடுகுச்செடி (MUSTARD)

கடுகுச்செடி என்பது ஒரு வருடப்பயிர். மிகவும் சிறிய விதைகளைக் கொண்டது. கடுகுச்செடி இயேசுவின் உவமை ஒன்றின் வாயிலாக விவிலியத்தில் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 13:31; மாற் 4:31; லூக் 13:19). இக்கடுகு விதையின் வாயிலாக விசுவாசம் இருக்க வேண்டிய நிலையை விவரிக்கின்றார் (மத் 17:20; லூக் 17:6), இவ்வுவமையில் கடுகை விண்ணரசுக்கு ஒப்பிடுகின்றார்.

கடுகு விதையைவிட ஆர்கிட் என்ற மலர்ச்செடியின் விதை மிகவும் சிறப்பாக உள்ளது. கடுகு விரைவில் முளைத்துப் பலன் தரக்கூடியது; ஆனால் மரமாக வளருவதில்லை. பறவைகள் தங்கிக் கூடுகட்டும் இடமாக அமைந்திருப்பதில்லை. ''கடுகு விதைகளிலெல்லாம் மிகச் சிறியதாயினும், வளர்ந்து செடிகளில் எல்லாம் மிகப் பெரியதாகி வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில் தங்கக்கூடிய மரமாகும்'' (மத் 13:32) என்று கூறியிருப்பது மிகவும் சிறிய பறவைகளுக்கே. இதையே மறைமுகமாக, தானி 4:11-12.20-21-இல் கூறுவதைப் பார்க்கலாம்.

## கடுகு விதை - உவமை

சிறிய கடுகு விதை பெரிய செடியாக வளர்ந்து வானத்துப் பறவைகளுக்கு இடம் அளிப்பதுபோல இறையரசும் இருக்கும். இயேசுவின் போதனையின் விளைவு பரந்து விரிந்த இறையரசாக இறுதியில் வளர்ச்சியடையும். இறையரசு வரக் காலந்தாழ்த்துகிறது என்பது இரண்டு கருத்தை வலியுறுத்துகிறது. முதலாவதாக, இறையரசு அரசியல் சம்பந்தப்பட்டது; வன்முறையால் நிறுவப்படப் போகிறது என்ற கருத்திற்கு எதிரானது.

இரண்டாவதாக, மனித முயற்சிகளுக்கு மேலாக இறைவன் இந்த அரசிற்காக வேலை செய்கிறார் என்பதை உணர்த்து கிறது (மத் 13:18-19; மாற் 4:30-32; லூக் 13:18-19).

## கடைசி இடம் - உவமை

பரிசேயர் பலர் விருந்துண்ணக் கூடியிருந்த போது இயேசு இந்த உவமையைக் கூறி னார் (லூக் 14:7-11). இவர்களைப் பார்த்து இயேசு, தாழ்ச்சியைப் பற்றிப் போதிக்கி றார். கீழிடத்தைத் தேர்ந்தெடுப்பதால் ஏற்ப டும் நன்மைகளைப் பற்றி இயேசு விளக்குகி றார். பழமொழி ஆகமமும் இதே கருத்தைக் கூறுகிறது (பழ 25:6-7). மற்ற உவமைக ளைப்போல் அல்லாமல் இந்த உவமையின் கருத்தாகிய 'தாழ்ச்சி' வெளிப்படையாகத் தெரிகிறது. கடவுள் விருந்தை ஏற்பாடு செய் வதால் அவரே இருக்கைகளையும் அளிப் பார். இறையரசை அடையத் தாழ்ச்சி அவசிய மாதலால், அதிகத் தாழ்ச்சியுடையவன் முதலிடத்தைப் பெறுகிறான்.

## கடைவீதி (BAZAAR)

வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்ட சாலை யின் ஒரு பகுதியாகும். பென்-அதாது தனது தந்தை சமாரியாவில் வைத்திருந்ததுபோல், ஆகாபு தமஸ்குவில் கடைவீதிகளை அமைத் துக் கொள்ள அனுமதி அளித்தார் (1 அர 20:34).

## கட்சி (PARTY)

பரிசேயர் (அ.ப.15:5; 23:9; 26:5), சதுசேயர் (5:17), மற்றும் விருத்தசேதனம் செய்தோர் (அ.ப.11:2; கலா 2:12; தீத் 1:10) ஆகியோ ரைக் குறிக்கும் ஒரு சொல். இப்பொருளை உடைய எபிரேயச்சொல் புதுநெறி (அ.ப.24: 14), பிரிவினை (1 கொரி 11:19), மற்றும் தவறான கொள்கை (2 பேதுரு 2:1) என் றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'கட்சி' சில நேரங்களில் குற்றச்சாட்டில் லாப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. எ.கா.சதுசேயர் (அ.ப.5:17), மற்றும் பரிசே யர் (15:5; 26:5). ஆனால், பவுல்கட்சி மனப் பான்மையினை ஊனியல்பின் செயலாகக் கலா 5:20-இல் குறிப்பிடும்போது, அது ஒரு குற்றமாகக் கருதப்படுகின்றது.

விருத்தசேதனக் கட்சி என்பது, இயேசு வின் சகோதரராகக் கருதப்பட்ட யாக்கோ பைத் தலைவராகக் கொண்ட சில யூதக் கிறிஸ்தவர்களின் அமைப்பாகும். இந்த யாக் கோபுதான் பேதுரு புறஇனத்தாருடன் அமர்ந்து உணவு உண்டபொழுது யூத உண வுச் சட்டங்களை அவர் மீறினார் என்று குறைகூறியவர்.

## கட்டளை (COMMANDMENT)

இது அதிகாரபூர்வமான ஒரு கட்டளை. இது பெரும்பாலும் இறைவனின் கட்டளை யைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. 'ஆண்டவரின் வாய்ச்சொற்படி' அல்லது 'ஆண்டவரின் கட்டளைப்படி' என்று மொழிபெயர்க்கப்படுகிறது (யாத் 17:1). இதற்குச் 'சொல்லப்பட்டது' என்ற பொரு ளும் கொள்ளப்படும்.

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டி லும் கட்டளை என்பது ஐந்நூலில் காணப் படும் பத்துக் கட்டளைகளைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டிலே இந்தக் கற்பனை அல் லது கட்டளைகள் இரண்டாகச் சுருக்கப்பட் டன. இயேசு இவைகளைச் சுருக்கமாக 2 கட்டளைகளில் அடக்கினார். அதாவது கட வுளையும் நம் அயலானையும் அன்பு செய் வது (மத் 22:35-40; மாற் 12:28; லூக் 10:25-28; உப 6:5; லேவி 19:18).

## கட்டி எழுப்புதல் (BUILD)

தமக்கு வேண்டிய கட்டடங்களைத் தாமே அமைப்பதிலும் தங்களது வீடுகள், நகரங் கள், கோவில்கள் முதலியவவற்றைத் தாமே கட்டுவதிலும் ஈடுபட்டிருந்த மக்கள் இனம் ஒன்றைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கும் நூல் ஒன்றுதான் வேதாகமம். எனவே, கட்டடம் அமைத்தல், நினைவுச் சின்னங்கள் எழுப்பு தல் போன்ற கருத்துக்கள் இந்நூலில் சிறப்பி டம் பெறுகின்றன. பொருட்களை உருவாக் குவது என்பது மனிதனிடம் இயற்கையா

கவே உள்ள ஓர் உள்ளக்கிடக்கை. இம்மனித இயல்பை இறைவன் தமது மீட்புத்திட்டத்தின் அச்சாணிகளில் ஒன்றாக ஆக்கிக்கொள்கிறார்.

I. பழங்கால இஸ்ராயேல் மக்கள் உருவாதல்:-

1. ஒரு குடும்பம் உருவாகின்றது, ஒரு நினைவுச் சின்னம் எழுகிறது:-

''பனா'' என்ற எபிரேய வினைச்சொல்லின் முதல் பொருள் நாம் கண்கூடாகக் காணக்கூடிய நினைவுச் சின்னங்கள் எழுப்புதல் என்பதுதான். இந்த நினைவுச் சின்னங்கள் ஒரு பீடமாகவோ (ஆதி 8:20), ஒரு வீடாகவோ (33:17) ஒரு நகரமாகவோ (4:17) இருக்கலாம். இம்மாதிரி மனித முயற்சிகளை இறைவன் பொதுவாக வெறுத்து ஒதுக்குவதில்லை. ஆனால் இவை இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தக் காரணமாக இருக்குமானால் அவற்றை இறைவன் உடனே தண்டிக்கிறார் - எடுத்துக்காட்டாக, பாபேல் கோபுரம் (ஆதி 11:1-9). ஓர் அலுவலானது தவிர்க்க முடியாத தோல்வியிலிருந்து தவிர்க்கப்பட வேண்டுமானால் அது இறைவனின் முன்னிலையில் நடந்தேறுவது இன்றியமையாத தேவையாகும் (சங் 127:1). புறமதத்தார் எழுப்பும் கட்டடங்கள் இறைவனின் கண்களில் அரிய பெரிய காரியங்களாகப் படுவதில்லை. அவை எத்துணை எழில் மிக்கவையாக, உறுதியாகக் காணப்படினும் அவற்றைத் தாம் விரும்பும்போது இறைவன் அழிப்பார் (ஆமோ 3:13; செப் 2:4தொ; செக் 9:3).

ஒரு கட்டடம் அமைவதைப் போல, உருவாதலைப் போல, எழுதலைப்போல ஒரு குடும்பமும் அமைகிறது; உருவாகிறது; எழுகிறது. ஆதாமின் விலா எலும்பிலிருந்து இறைவன் ஏவாளை உருவாக்கினார் (ஆதி 2:22). தான் இவ்வுலகில் பெறும் பிள்ளைகள் வழியாக ஒருதாய் உருவாகின்றாள் (ஆதி 16:2; 30:3). ஆனால் குடும்பம் என்ற இக்கட்டடத்தைக் கட்டுபவர் இறைவனே (1 அர 11:38). ஆள், குடும்பம், குலம், மக்களினம் இவற்றை எல்லாம் நாம் ஒரு வீடு எனக் கருதுவோமானால், ஆளிலிருந்து குடும்பத்திற்கும், குடும்பத்திலிருந்து குலத்திற்கும், குலத்திலிருந்து மக்களினத்திற்கும் நாம் எளிதாகவும் இயற்கையாகவும் தாவிச் செல்லலாம். இங்கும் செயல்புரிபவர் இறைவன் தான். அவர்தாம் தாவீதின் அரச மரபை அமைத்தவர் (2 சாமு 7:11); அவர்தாம் இஸ்ராயேல் என்ற மக்களை அல்லது வீட்டைக் கட்டியவர் (எரே 12:16; 24:5; 31:4).

2. ஆக்கமும், அழித்தலும்:-

மனிதனின் கை செய்யும் வேலைகளை எல்லாம் இறைவன் ஆசிர்வதிப்பதில் (உப 14:29; 15:10) அவைகளுக்கு அவர் இறுதிப் பூச்சு அளித்து உறுதிப்படுத்துகிறார். அவரே அவற்றைக் ''கட்டி எழுப்புகிறார்;'' இறைவனை மனிதன் மறக்கும்போது அவருடைய துணையின்றிக் கட்டப்பட்ட எல்லாவற்றையும் அவர் அழிப்பார் (எரே 24:6; 42:10). ஆட்களின், அவர்கள் தங்குமிடங்களின், அவர்கள் வாழும் நகரங்களின், அவர்களது இனங்களின், அழிவு இறைவனின் தண்டனைக்குச் சாட்சியங்களாயிருக்கும். இந்த அழிவின் இறைவாக்கினரான எரேமியா ''பிடுங்கிப்பறிக்கவும், இடித்துத் தகர்க்கவும், அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும், கட்டி உயர்த்தவும், நட்டுவைக்கவும்'' அனுப்பப்பெறுகிறார் (எரே 1:10). இறைவன் நம்பிக்கைக்குரியவர்; கட்டுபவர். எனவே அவர் முற்றிலும், திரும்பக்கட்ட முடியாதவாறு எதையும் அழிப்பதில்லை. அழிக்கும் தன்மையுள்ள தமது கோபம் மடைபுரண்டு வரும்போதும் (ஏச 28:18; 30:28) அதை மனித மேன்மையை, சிறப்பை நோக்கித் திருப்பிவிடுகிறார் (2:11). இன்னும் அவர் ஆக்கப்பூர்வமாகத் தொடர்ந்து செயலாற்றுகிறார் (44:26; 58:12). விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரம் மறுபடியும் கட்டி எழுப்பப்பெறும் (ஆமோ 9:11). மக்கள் நாடு கடத்தலிலிருந்து தம் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவர்; அவர்களது நகரங்களை மீண்டும் அமைப்பர் (எரே 30:4, 18); எருசலேம் நகரும் அதிலுள்ள தேவாலயமும் மீண்டும் அமைக்கப்பெறும் (ஆகா 1:8;

செக் 6:13; எரே 31:38). அதாவது, சிதைந்து கிடக்கும் கட்டடங்கள் எல்லாம் திரும்பக் கட்டப் பெறுகின்றன. மக்கள் மீண்டும் தம் சொந்த நிலையைத் திரும்பப் பெறுகின்றனர்; வீடுகள் எழுகின்றன, மக்கள் தொகை பெருகும் (ஏச 49:19-21; எரே 30:18தொ) என்று மேற்கூறிய வேதாகம வர்ணனை நமக்கு விளக்குகிறது.

II. புதிய அடித்தளம்:-

புதிய நினைவுச் சின்னமானதும், புதிய மக்களினமானதும் உண்மையாகவே புதியதன்று. அது பழைய இஸ்ராயேல் மக்களின், அவர்களது நிறுவனங்களின் தொடர்ச்சிதான். ஆனால் இப்புதிய நிறுவனம் பழையதைச் சார்ந்து, அதன்மேல் கட்டப்பட்டிருக்கவில்லை. அது இன்றியமையாத ஒரு மூலப் பொருள் ஒன்றின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. இஸ்ராயேல் மக்களிடையே இறைவனால் கட்டப்பெற்ற எல்லாவற்றினது உச்சியும் கொடு முடியுமாக இருக்கவேண்டும் என்று அவராலேயே நிர்ணயிக்கப்பெற்ற ஒரு பாறைதான் இம்மூலப் பொருள் (ஏச 28:16; செக் 4:7). ஆனால் இவ்வலுவல் ஒப்படைக்கப்பெற்ற வேலையாட்களோ இக்கல்லை ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஏனெனில், அது அவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது (காண் மத் 21:41; சங் 118:22). இவ்வாறு ஒதுக்கித் தள்ளப்பெற்ற கல்லானது முதல்கட்ட அமைப்பு வேலையில் வியப்புக்குரியதொரு சிறப்புத்தன்மை பெறுகிறது. எனவேதான், அதைப்புதிய நினைவுச் சின்னத்தின் அடிக்கல்லாக இறைவன் அமைத்ததன் மூலமாக (சங் 117:22) அவர்தம் முந்திய அலுவலை எல்லாம் மறுபடியும் தொடங்கி முடிக்கிறார். வேலையாட்கள் தீய உள்ளத்தினராயிருப்பதால் ''காண்போர் வியக்கும் வேலை ஒன்றை'', நம்ப முடியாத தலை சிறந்த படைப்பு ஒன்றை இறைவன் தாமே செய்து முடிக்கிறார். விலக்கி ஒதுக்கப்பெற்ற கல் ''மூலைக்கல்லாய் அமைகிறது'' (1 பேதுரு 2:7). இம் மூலைக்கல்தான் இப்படைப்பிலேயே இருக்கக்கூடிய ஒரே அடித்தளமாகிற இயேசு கிறிஸ்து (1 கொரி 3:11).

எனவே, இயேசு கிறிஸ்துதான் புதிய தேவாலயம். இறைவாக்கினர் எரேமியாவைப்போல் (காண் எரே 7:12-15) இயேசுவும் இஸ்ராயேல் மக்களின் தனிப்பெருமையாக விளங்கிய எழில் மிக்க நினைவுச் சின்னத்தின் அழிவைப்பற்றி இறைவாக்குரைக்கின்றார். ஏனெனில், அது ''கள்வர் குகையாகிவிட்டது'' (எரே 7:11; மத் 21:12). அதே வேளையில், மற்றொரு தேவாலயத்தை அவர் மூன்று நாட்களில், அதாவது ஒருசில தினங்களில் எழுப்பிவிடுவதாகச் சவால் விடுகிறார். ''அவர் இங்குக் குறிப்பிடுவது அவரது உடலாகிய ஆலயத்தை''. இக்கட்டடத்தின் அமைப்பாளராக அமைபவர் கிறிஸ்து (யோவா 2:19-22).

III. கிறிஸ்துவின் உடல் உருப்பெறுதல்:-

1. எனது திருச்சபையை நான் கட்டுவேன்:-

இயேசுதான் மூலைக்கல், அவரே புதிய தேவாலயம். மூலைக்கல்லும் புதிய தேவாலயமுமாகிய இக்கிறிஸ்து புதியதொரு நினைவுச் சின்னம் மட்டுமில்லை, அதைக் கட்டுபவரும் அவர்தான். இப்புதிய நினைவுச் சின்னம் அவரது கைவேலை; அவரது திருச்சபை (மத் 16:18). அதைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை எல்லாம் தாமே தேர்ந்தெடுத்து, அவற்றை எல்லாம் அவையவை இருக்க வேண்டிய இடத்தில் இடுகிறார். இவ்வாறு அவர் பேதுருவை அதன் அடிக்கல்லாக நியமித்தார். இப்புதிய கட்டடத்தின் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒருமைப்பாட்டையும் இணைப்பையும் அளிப்பவரும் அவர்தாம். தம் சொந்த உடலாகிய அன்பின் சின்னத்தை எழுப்புகிறவரும் அவர்தாம் (எபே 4:11-16).

2. கட்டடம் அமைப்போர்:-

கிறிஸ்துவின் உடலாகிய கட்டடத்தின் அடிக்கல்லாகக் கிறிஸ்துவினாலே நியமிக்கப்பட்டோர் சிலருள்ளனர். இவர்களைத்தான் நாம் அப்போஸ்தலர்கள் என அழைக்கிறோம் (எபே 2:20). இவர்கள் நிறுவின இறைமக்களின் குழுக்கள் அதாவது திருச்சபைகள் பல. இவைகளுக்கெல்லாம் அடிக்

கற்களாகவும் அடிக்கல்லிட்டவர்களாகவும் திகழ்பவர்கள் இந்த அப்போஸ்தலர்கள். எவ்வாறு ''கட்டி எழுப்புதல்'' எரேமியா இறைவாக்கினரது பணியின் ஒரு பகுதியாக அமைந்திருந்ததோ (எரே 1:10; 24:6), அது போல ''ஞான வளர்ச்சியானது'' பவுலின் அப்போஸ்தலிக்க அலுவலின் சிறப்பியல்பாக அமைகிறது (2 கொரி 10:8; 12:19; 13:10). ''இறைவனோடு உழைப்பவர்'' என்ற முறையில் நடுவதும் (1 கொரி 3:9.6), இயேசு கிறிஸ்து என்ற ''அடித்தளத்தை இடுவதும்'' (3:10தொ) அப்போஸ்தலர்களின் கடமையாகும்.

3. உருப்பெறும் உடல்:-

கிறிஸ்து தலைவராக நின்று நடத்திச் செல்ல முழு உடலும் அதன் ஒவ்வொரு உறுப்பும் தாமே வளர்ச்சி பெறுகின்றன (எபே 4:15 தொ). ''அப்போஸ்தலருக்கும், இறைவாக்கினருக்கும், நற்செய்தித் தூதருக்கும், ஆயருக்கும், போதகருக்கும்'' (எபே 4:11) குறிப்பிட்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் திருச்சபையைக் கட்டுவது என்பது இவர்களுக்கு மட்டும் அளிக்கப்பெற்ற ஒரு பணியன்று, தூயவர் அனைவரும் இறைவனுக்குகந்தவர்களாக, அவருக்கு ஊழியம் புரியும் அனைவரும் இக்கட்டடப்பணியில் முக்கியப்பங்கு எடுக்கவேண்டும். அது எல்லோருக்கும் பொதுவான, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டிய ஓர் அலுவல். ஒருவர் வளர்ச்சிக்கு ஒருவர் உறுதுணையாகப் பக்கபலமாக இருக்கவேண்டும் (உரோ 14:19; 15:2; 1 தெச 5:11; யூதா 20). திருச்சபையிலுள்ள பல சிறப்புப்பணிகளின் விவரங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இக்கட்டடப் பணியானது ஒரு முக்கிய கடமையாகவும் இன்றியமையாத அளவு கருவியாகவும் அமைகிறது.

திருச்சபையின் ஞான வளர்ச்சிக்காக உழைப்பதுதான் இக்கட்டடப்பணிகளிலெல்லாம் தலைசிறந்ததும் மதிப்புமிகுந்ததுமாகும் (1 கொரி 14:12). நமது சகோதரர்களின் சீர்திருத்தத்திற்காக உழைப்பதன் வழியாக நாம் திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைக்கிறோம். ஆனால் இப்பணியில் ஒரு முக்கிய நிபந்தனை என்னவென்றால் சீர் திருத்தப்பெற்ற இச்சகோதரர்கள் கிறிஸ்துவிலும் அவரது உண்மையான நம்பத் தகுந்த பராம்பரியத்திலும் ''வேரூன்றி, அவர்மீது அவர்கள் வாழ்க்கையாகிய கட்டடத்தை எழுப்பவேண்டும்'' (கோலோ 2:6 தொ). இறுதி நாளில் நெருப்பானது இக்கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கள் ''எத்தன்மையது என்பதை எண்பித்துவிடும்'' (1 கொரி 3:10-15).

4. புதியதொரு நினைவுச் சின்னம்:-

புதிய நகரம், புதிய எருசலேம் என்றெல்லாம் விவரிக்கப்படுவதுதான் இப்புதிய சின்னம் (திருவெளி 21:2). அது விண்ணிலிருந்து வருகிறது, இறைவனால் எழுப்பப்பெற்றது. எனவே, பாவம் விளைவிக்கும் எக்காரியங்களும் இங்குக் காணப்படுவதில்லை. இங்குக் ''கடவுள்தாமே அவர்களோடு இருப்பார், அவர்களுடைய கண்ணீரனைத்தையும் துடைத்துவிடுவார்; இனிச்சாவில்லை, புலம்பலில்லை, அழுகையில்லை, நோவில்லை'' (21:4). ''இந்நகரில் மதில் பன்னிரு அடிக்கற்கள் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அவற்றின் மேல் செம்மறியின் பன்னிரு அப்போஸ்தலர்களின் பன்னிரு பெயர்களும் இருக்கின்றன'' (21:14). ''இஸ்ராயேலின் பன்னிரு குலத்தாரின் பெயர்கள் (இந்நகரின்) வாயில்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன'' (21:12). இதுதான் கிறிஸ்துவினால் நிறுவப்பெற்ற அவரது அப்போஸ்தலர்களிடம் ஒப்படைக்கப்பெற்ற நினைவுச் சின்னம். இதுதான் புனிதர் அனைவரது உழைப்பாலும் கட்டப்பெற்ற திருச்சபை. இதுதான் உண்மையான மணமகள். ''இறைமக்களின் நீதிச் செயல்களே'' இம்மணமகளின் அணிகலன்கள் (19:8). இந்த நினைவுச் சின்னத்தில் எல்லாமே கடவுளது கைவேலைதான். அது முற்றிலும் புனிதர்களால் அமைக்கப்பெற்றிருக்கிறது. இதுதான் அருளைப்பற்றிய மறையுண்மை.

**கட்டில்** (BEDSTEAD)

படுக்கையைத் தாங்கும் ஓர் அமைப்பு. யோபு 7:13, ஆமோ 6:4-இல் கட்டிலைக் குறிக்கும் எபிரேயச்சொல் பொதுவாக மொழி பெயர்க்கப்படும்; ஆனால் உப 3:11-இல் உள்ள அதே வார்த்தை 'கட்டில்' என்று மொழிபெயர்க்கப்படும்; இது பாசானின் அரசனான ஓகு என்பவனுடைய 'இரும்புக் கட்டிலைக்' குறிக்கின்றது; இது ஒன்பது முழம் நீளமுடையது. யோர்தான் பகுதியில், தொடக்க இரும்புக் காலத்தில் இதுபோன்று கட்டில்கள் செய்ய இரும்பு கிடைத்திருக்க லாம்; ஆனால் இங்குச் சொல்லப்பட்டுள்ள கட்டிலின் அளவு இது கந்தகப்பாறையால் செய்யப்பட்ட ஒரு பொருளாக இருந்திருக்க லாம் என்று தோன்றுகிறது. கருமையாக வும், உறுதியாகவும் இருக்கும் இந்தப் பாறை யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதி யில் சாதார்ணமாகக் கிடைக்கக்கூடியது. கந் தகப் பாறையை இரும்போடு அடையாளப் படுத்தும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பிளினியில் அரக்கனின் படுக்கை என்று மக்களால் கருதப்பட்ட ''தோல்மெனை'' அநேகமாக இது குறிக்கலாம்.

**கட்டுக்கதை, கற்பனைக்கதை** (FABLE)

அறிவுரை வழங்குவதற்காகச் செடிகள், விலங்குகள் எல்லாம் மனிதர்களைப் போல் பேசுவதாகவும் செயல்படுவதாகவும் கூறப் படும் கதைகள். இது உவமையோடும், தொடர் உருவகத்தோடும் தொடர்புடையதா கும். இம்மூன்று வகையிலும் அவற்றைப் படிப்பவர்கள் அவைகள் தெரிவிக்கும் அறி வுரைகளை உணர்ந்து கொள்வார்கள். மரங் கள், விலங்குகள், உயிரற்ற பொருட்கள் ஆகியவற்றின் பேச்சும், மனிதச் செயல் களுமே கட்டுக்கதையை மற்ற இரண்டு வகையினின்றும் வேறுபடுத்துகிறது.

எபிரேய விவிலியத்தில் இத்தகைய கற்ப னைக் கதைகள் இரண்டு காணப்படுகின்றன. இரண்டும் அரசியலைச் சார்ந்ததாகும். முத லில், அபிமெலக்கின் புரட்சிக்குப் பிறகு எருபாகாலின் உயிர் பிழைத்த ஒரே மகனான யோத்தாம் செக்கேம் நகர மக்களுக்குக் கற்ப னைக் கதை ஒன்று கூறினார் (நீதி 9:8-15). இதில் மரங்கள் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டி ஒலிவ மரத்திடமும், அத்தி மரத்திட மும், திராட்சையிடமும் கேட்கின்றன. முட்செடி மட்டுமே அரசனாக இருக்கச் சம்ம தம் தெரிவிக்கிறது. ஆனால் கொடுங்கோல் புரிவதாக வாக்களிக்கிறது. இரண்டாவதாக, யோவாசு யூதாவின் அரசனான அமாசியாவி டம், லீபான் நாட்டு நெருஞ்சிச் செடி கேதுரு மரத்திடம் தூது அனுப்பியதாகவும், காட்டு மிருகங்கள் அந்த நெருஞ்சிச் செடியை மிதித் துப் போட்டதாகவும் கூறுகிறார் (2 அர 14:9). முதல் கதை அபிமெலக்குக்கு எதிராகச் செக் கேம் மக்களை எச்சரிக்கிறது. இரண்டாவது கதை அமாசியா அழிவுப்பாதையில் செல் கின்றார் என்று கூறுகிறது. கதையில் கூறப் பட்டுள்ளவை உண்மையில் நிகழ்ந்தவை அல்ல. அறிவுரைக்காகவே இக்கதைகள் கூறப்படுகின்றன. இத்தகைய கதைகள் சொல்வதில் சாலமோன் புகழ் பெற்றிருந் தார் (1 அர 4:33).

**கட்டுதலும், அவிழ்த்தலும்** (BINDING AND LOOSING)

கட்டுதற்கும் அவிழ்ப்பதற்கும் உரிய அதி காரம் பேதுருவுக்கு அளிக்கப்பட்டது. ''வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்தி லும் கட்டப்பட்டதாகவே இருக்கும். எதெல் லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப் பட்டதாகவே இருக்கும்'' (மத் 16:19). பின்பு, அதே சொற்களில், அதே வாக்குறுதி யைச் சீடர்கள் அனைவருக்கும் இயேசு அளிக்கிறார் (18:18). ஆனால் திறவுகோல் பற்றிய கூற்று இல்லை. திறவுகோல் அதிகா ரம் பேதுருவிடம் மட்டுமே ஒப்படைக்கப் பட்டது. கட்டுதலுக்கும் அவிழ்த்தலுக்கும் இணையான கூற்று, இயேசு தாம் உயிர்த்த நாளில் அளித்த போதகத்தில் காணக்கிடக்கி றது: ''எவர்களுடைய பாவங்களை மன்னிப் பீர்களோ அவர்களுக்கு அவை மன்னிக்கப் பெறும். எவர்களுடைய பாவங்களை மன்

னியாது விடுவீர்களோ அவை மன்னிப் பின்றி விடப்படும்'' (யோவா 20:23).

இவ்விரு சொற்களும் இராபிகளின் இலக் கியங்களில் இரு தனிப்பட்ட பொருள் களைக் கொண்டுள்ளன. முதலில் ''தடைசெய் தல், அனுமதித்தல்'' என்ற பொருளையுடை யன. சட்ட ஆசிரியர் ஒரு செயல் அவிழ்க்கப் பட்டதாக (அனுமதிக்கப்பட்டதாக) அறி விப்பதாகும். இரண்டாவது ஒரு தடையுத் தரவை இடுவதையும் நீக்குவதையும் அதா வது தண்டனை கொடுப்பதையும் நீக்குவ தையும் குறிக்கின்றன.

இரண்டு பொருள்களிலும் மேற்கூறப் பட்ட வாசகங்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது. இரண்டாவது பொருள் மிகப் பொருத்தமுள்ளதாகும். ஏனெனில் சீடர்கள் சட்ட வல்லுநர்கள் அல்லர். மாறாக நற்செய் தியின் தூதர்களாவர். இந்த நற்செய்தி, அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்பவர்களுக்கு மன்னிப்பை அளிக்கிறது (மத் 10:13-14). இதுவே, யோவானின் கூற்றுக்கும் பொரு ளாகும். சுருக்கமாக, ''அவிழ்த்தல்'' பாவங் களை மன்னிக்கும் இறை அதிகாரத்தைக் குறிக்கிறது. இவ்வாறு திருச்சபைக்குள் புதி யவர்களை ஏற்றுக்கொள்வதையும் மனம் வருந்தும் பாவிகளைத் திருச்சபையின் தோழமைக்கு மீண்டும் ஏற்றுக்கொள்வதை யும் குறிக்கிறது. ''கட்டுதல்'' அவிசுவாசிக ளுக்கும் மனம் வருந்தாத பாவிகளுக்கும் இறைவனுடைய தண்டனைத் தீர்ப்பை அறி விப்பதாகும்.

இவ்வாறு, (வெளிப்பாட்டின் அதிகாரத் தாலும், அதன் விளைவான ஆவி வழிகாட்டு வதாலும், யோவா 16:13), வாழ்வு மற்றும் போதகம் பற்றிய ஒழுங்குகளை நிர்ணயிக் கும் அதிகாரமும் திருச்சபையிடமிருந்து கீழ்ப்படிதலைக்கோரும் அதிகாரமும் பேதுரு வுக்கு அளிக்கப்படுகிறது. இது பழைய ஏற்பாட்டில் அரச முதல் அமைச்சனுடைய அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது (ஏச 22:22). கட்டும்-அவிழ்க்கும் அதிகாரம் முதலில், சீடர்களின் தலைவர் என்ற முறையில் பேது ருவுக்கு அளிக்கப்படுகிறது. பின்பு மற்றச் சீடர்களுக்கும் (மத் 18:11) அதாவது பன்னிரு அப்போஸ்தலர்களுக்கும் (யோவா 20:23) அளிக்கப்படுகிறது. திருச்சபைக்கு அளிக்கப் படவில்லை. இதுபோலவே அப்போஸ்த லக் காலத்தின் முடிவில் இந்த அதிகாரம், அப்போஸ்தலர்களின் வழித் தோன்றல்களா கிய பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது; சமூகத்திற்கன்று (2 திமோ 2:24-26; தீத் 3:10).

மற்றொரு விளக்கம், ''கட்டுதலும் அவிழ்த்தலும்'' என்பது அப்போஸ்தலர் களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் முழுமை யைக் குறிக்கும் என்பதாகும். பழைய ஏற்பாட்டில், சில இடங்களில் ''நல்லது மற்றும் கெட்டது'' என்பது யாவற்றையும் குறிப்பதாகப் (ஆதி 24:50) பொருள் கொள் ளப்படுவதுபோல், இங்கும் இவ்விரு சொற் கள், ''எல்லாவற்றையும்'' செய்ய அப் போஸ்தலர்கள் அதிகாரம் கொண்டிருந்தனர் என்று, பொருள் கொள்ளலாம்.

### கட்டுதல் (EDIFICATION)

புதிய ஏற்பாட்டில் இச்சொல் 'கட்டு', 'கட்டுபவர்', 'கட்டடம்', 'உற்சாகப்படுத்து தல்' போன்ற வடிவங்களில் வருகிறது (1 கொரி 8:10; எபே 2:21). ஒத்தமை நற்செய்திக ளில் இச்சொல் வினைச் சொல் வடிவிலே, கட்டுதல் என்ற பொருளிலே பயன்படுத்தப் படுகிறது.

பவுல் இச்சொல்லை வினைச்சொல் வடி விலும், பெயர்ச்சொல் வடிவிலும் பயன் படுத்துகிறார். ஆனால் அவர் இதைக் கட்ட டம் கட்டும் பொருளில் ஒருபோதும் பயன் படுத்தவில்லை. மாறாக, உருவகமாக, திருச் சபையைக் கட்டுவதற்கும், விசுவாசிகளைக் கட்டுவதற்கும் பயன்படுத்துகிறார். பவுல் திருச்சபையை ஒரு கட்டடமாக வர்ணிக்கி றார் (1 கொரி 3:9; எபே 2:21). தான் இட்ட அடித்தளத்தில் திருச்சபையைக் கட்டுவது பற்றியும் (1 கொரி 3:10.12.14), அப்போஸ்த லர்களையும் இறைவாக்கினர்களையும் அடிக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட திருச்

சபையைப் பற்றியும் (எபே 2:20) பவுல் கூறுகிறார்.

பவுல் அடிக்கடி இவ்வார்த்தையை 'வலிமைப்படுத்துதல்', 'ஒன்று சேர்த்தல்' 'அமைதிக்கு உழைத்தல்' போன்ற பொருட்களில் பயன்படுத்துகிறார். இது 'தளர்ச்சிப்படுத்துதல்', 'பிரித்தல்', 'அழித்தல்', 'பிரிவினை உண்டாக்குதல்' முதலியவற்றின் எதிர்ச் சொல்லாகும். ''எல்லாம் ஞான வளர்ச்சி தர நடைபெறட்டும்'' (1 கொரி 14:26) என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார். அதாவது திருச்சபையைக் கட்டி எழுப்புவதற்கும், பலப்படுத்துவதற்கும், ஒன்றுபடுத்துவதற்கும் எல்லாம் நடைபெறட்டும் என்பது பொருளாகும். இங்குக், 'கட்டுதல்' என்பது உணர்ச்சிவசத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. மாறாக, இச்சொல் 'நிறைவாக்குதல்', 'ஒற்றுமைப்படுத்துதல்', 'ஒன்றுபடுத்துதல்' என்ற பொருட்களைத் தாங்கியிருக்கிறது. எனவே, கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியெழுப்ப வேண்டும் (1 தெச 5:11). அதாவது, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திப் பலப்படுத்த வேண்டும். அன்பு ஒன்று தான் ஒருவரை ஒருவர் கட்டியெழுப்ப முடியும் (1 கொரி 8:1).

### கட்டுமரம் (RAFT)

மிதக்கக் கூடிய மரக்கட்டைகளை இணைத்துக் கட்டிய கட்டுமரம் நீரில் பயணம் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய முறையில்தான் கேதுரு மரங்களையும், சைப்ரஸ் மரங்களையும் தீர் நாட்டின் கீராம், கடல் வழியாக லெபனோனிலிருந்து யோப்பாவுக்கு, ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கட்டி அனுப்பினார். இத்தகைய கட்டுமரம் போன்ற அமைப்பில் உள்ள மரங்கள் படகுகளால் கட்டியிழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். யோர்தான் பகுதிகளில் விலங்குகள் அதிகம் சுமையுள்ள பொருட்களை முதுகில் சுமந்து செல்வது கடினமானதால், இத்தகைய கட்டுமரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இத்தகைய கட்டுமரங்களின் மிதக்கும் தன்மை, ஊதச் செய்யப்பட்ட தோல் சித்தைகளால் அதிகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

### கணவாய் (PASS)

வழி, மலையிடுக்கு அல்லது மலைச்சம வெளியில் செல்லும் ஒடுக்கமான வழி. மெகிதோ, செக்கேம், மிக்மிமாசு எனப் பல்வேறு மலைக்கணவாய்கள் கானான் நாட்டில் இருந்தாலும். மிக்மிமாசு கணவாய் மட்டுமே, கணவாய் என்ற பெயரில் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 13:23; 14:4). ஏச 10:28-29-உம் இதே கணவாயினை மீளவும் குறிப்பிடுகிறது.

மலைநாடுகளில் கணவாய் என்பது ஏற்றம் அல்லது இறக்கம் என்றும் அழைக்கப்படுகின்றது. எ.கா. கடற்கரைச் சமவெளிக்கும் எருசலேமிற்கும் இடையிலான பேத்துகோரோன் ஏற்றம், யோர்தான் பள்ளத்தாக்கிற்கும் மலைநாட்டிற்கும் இடையிலான அதுமிம் ஏற்றம், மற்றும் கானான் நாட்டின் தென் எல்லையில் உள்ள 'அக்ராபிம்' ஏற்றம் போன்றன.

### கண் (EYE)

விவிலியத்தில் செவியைப் போன்று கண் அவ்வளவு இறையியல் முக்கியத்துவம் பெறவில்லை. செவியைப் போன்றே, இறைவனுடைய வார்த்தைகளை அறிந்து, புரிந்து கொள்வதைக் குறிப்பதற்குச் சில வேளைகளில் கண் பயன்படுத்தப்பட்டுள்ளது (எரே 5:21). இச்சொல் அடிக்கடி ''தீர்ப்பு'' அல்லது ''கருத்து'' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது (பழ 3:7; எரே 7:11). வெகு அரிதாகவே கண் கடவுளைக் ''காண்பதாகக்'' கூறப்பட்டுள்ளது (ஏச 6:5). ஆனால் இச் சலுகை இறுதி நாட்களையே சாரும் (ஏச 33:17; எச 18:23; திருவெளி 1:7).

பார்க்கக்கூடிய, வருத்தத்தைத் தெரிவிக்கக் கூடிய உறுப்பு என்ற பொருளில் 'கண்' அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. வருத்தத்தை வெளிப்படுத்துவது கண்களின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும் (சங் 119:136; எரே 9:1). ஒளிர்க்க கண்கள் உடல் நலத்தின்

அறிகுறியாகும் (1 சாமு 14:27; சங் 38:10); ஒளி இழந்த கண்கள் உடல்நலக் குறைவைக் குறிக்கின்றன (யோபு 17:7). கண்களினால் இறுமாப்பையும் (பழ 6:17), தாழ்ச்சியையும் (சங் 123:2), இரக்கத்தையும் (எச 16:5), கேலியையும் (பழ 30:17) தெரிவிக்க முடியும். அடிக்கடி காமவெறி, ஆசை போன்ற சொற்களுக்குச் சமமாகக் கண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன (பழ 17:24; சீரா 4:8; 2 பேதுரு 2:14).

''தீய கண்'' என்ற சொல் மந்திரவாதத்தைக் குறிப்பதல்ல. மாறாக, இது அக்கண்ணுடையவனின் தீய எண்ணங்களையே குறிக்கிறது (பழ 23:6; மாற் 7:22).

**கண்களுக்கிடையில் சீட்டுப்பட்டம்** (FRONTLETS)

செப நேரத்தில் இரு கண்களுக்கும் இடையில் தலை மயிருக்குக் கீழ், நெற்றியில் அணிந்திருக்கின்ற அல்லது தொங்கவிடப்பட்டிருக்கின்ற அணி. இது அவர்களின் நினைவுச் சின்னமாகவும், அடையாளமாகவும், மட்டுமல்லாமல் தீய சக்திகளுக்கு எதிர்ப்பாகவும் இருக்கின்றது. அதில் ''நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே; உன் முழு இதயத்தோடும் அன்பு செய்வாயாக'' என்ற கட்டளை எழுதியிருக்கும் (யாத் 13:1-10.11-16; உப 6:4-9; 11:13-21).

தலைப்பேற்றாண்களின் மீட்பிற்கு இது ''கையிலே ஓர் அடையாளமாகவும், கண்களுக்கு முன் நிற்கும் ஒரு நினைவுச் சின்னமாகவும்'' இருக்கிறது (யாத் 13:16). ஆண்டவருடைய கட்டளைகள் அடங்கியதே அந்த நினைவுச் சின்னம் (யாத் 13:9).

**கண்களைப்பிடுங்குதல்** (GOURGING THE EYES)

துளை போடுதல், தோண்டி எடுத்தல், அகழ்ந்து எடுத்தல் போன்ற வினைச் சொற்கள் இரண்டாம் வேற்றுமைச் சொற்களாகக் கண்ணுடன் வருகின்றன (நீதி 16:21; 1 சாமு 11:2; காண். எண் 16:14; யோபு 30:17; பழ 30:17; ஏச 51:1). இவ்விடங்களில் கண்களைப்பிடுங்குதல் அல்லது தோண்டி எடுத்தல் என்று மொழி பெயர்க்கப்படுகிறது. 1 சாமு 11:1-4-இன்படி போருக்குப் பிறகு யபேசின் ஆட்கள் அம்மோனியனாகிய நாகாசுடன் உடன்படிக்கை செய்ய முற்பட்டார்கள். ஆனால் ''உங்கள் எல்லோருடைய வலக்கண்களையும் பிடுங்கிய பிறகே அமைதியின் உடன்படிக்கைக்கு உட்படுவேன்'' என்று நாகாசு கூறினான். நாகாசு அரசன் இதை ஓர் இழிவாகவே கருதியிருக்க வேண்டும். இது சவுலைத் தூண்டி எழுப்பிப் போருக்குத் தலைமை தாங்கச் செய்தது.

அடிமைகளின் கண்களைப் பிடுங்குவது அப்பொழுது பழக்கமாயிருந்தது. அசீரியர்கள் தங்களது சிறைக் கைதிகளின் கண்களைக் கூரிய கருவிகளால் குருடாக்கினார்கள். பெலிஸ்தியர் சிம்சோனைப் பிடித்து அவர் கண்களைப் பிடுங்கிக் காசா சிறைக்கு இழுத்துச் சென்றனர் (நீதி 16:21). கி.மு. 586-இல் பாபிலோனியர்கள் எருசலேமைக் கைப்பற்றியபோது செதேக்கியாவின் புதல்வர்களை அவரது கண் முன்னே வெட்டினர். மேலும் அவரது இரு கண்களையும் பிடுங்கியபின் விலங்கிட்டு அவரைப் பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர் (2 அர 25:7).

**கண்காணிப்பாளர், கண்காணிப்புப்பணி** (STEWARD, STEWARDSHIP)

மேலாளர், செயல்முகவர், செயலாட்சித் துணைவர், கருவூலக் காவலர், ஒழுங்கு காப்பாளர், சொத்து மேற்பார்வையாளர், காரியக்காரன்.

செல்வந்தர்களின் இல்லங்களில் வேலைக்காரர்களை மேற்பார்வையிடுதல், வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்தல், வீட்டுத் தலைவனின் பந்தியினைப் பார்வையிடுதல் பொறுப்பேற்றல் முதலான காரியங்களைக் கவனிக்கும் பணியாளர் தலைவனே ''கண்காணிப்பாளன்'' ''காரியக்காரன்'' என்று அழைக்கப்பட்டான்.

யோசேப்பின் வீட்டுவேலைகளை எல்லாம் மேற்பார்வையிடுவதற்கு இத்தகைய

கண்காணிப்பாளன் இருந்தான் (ஆதி 43:19; 44:4; 1 அர 16:9).

இஸ்ராயேல் அரசர்கள் இத்தகைய கண்காணிப்பாளர்களை, பொருளாளர்களைக் கொண்டிருந்தனர் (1 அர 15:18; 1 நாள் 27:31; 28:1). ''கண்காணிப்பாளன்'' என்ற சொல்லும் ஏச 22:15-இல் ''பொறுப்பாளன்'' என்ற சொல்லும் இடம்பெறுகின்றது.

புதிய ஏற்பாட்டில் அனைத்துக் கிறிஸ்தவர்களுமே இவ்வுலகில் இறைவனின் மறைபொருள்களின் கண்காணிப்பாளர்களாக இருக்கவேண்டும் (1 கொரி 4:1; கலா 4:2; 1 பேதுரு 4:10). தீத் 1:7 ஆயர்களைக் கடவுளுடைய காரியங்களை மேற்பார்வையிடும் கண்காணிப்பாளர்கள் என்று அழைக்கின்றது. கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் கண்காணிப்புப் பணி என்பது தன் நேரம், திறமைகள் சொத்துக்கள் இவைகளை மட்டுமல்லாது தன்னையே அர்ப்பணிக்க அழைக்கும் ஒரு பணியாகும் (லூக் 12:42; எபே 3:2).

சில நேரங்களில் ஒரு நகரத்தின் பொருளாளனையும் கண்காணிப்பாளன் என்று அழைப்பது வழக்கமாக இருந்தது (உரோ 16:23).

''நீதியற்ற கண்காணிப்பாளன்'' உவமையில் ஒரு கண்காணிப்பாளனின் கடமைகள் விவரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம் (லூக் 16:1-8) யோவா 2:8-9 கானாவூர் கல்யாணத்தில் விருந்து மேற்பார்வையாளனைப் பற்றியும், மத் 20:8; லூக் 8:3 திராட்சைத் தோட்டக் கண்காணிப்பாளனைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

**கண்ணாடி (GLASS)**

1) கண்ணாடி எளிதில் ஒளி ஊடுருவக் கூடிய ஒரு பொருளாகும் (யோபு 28:17). எபிரேயர்கள் கண்ணாடியை மிக மதிப்புள்ள பொருளாகக் கருதினார்கள். கண்ணாடி கவின் ஒப்புமைகளில் அதிகமாகச் சொல்லப்படுகின்றது (யோபு 28:17; திருவெளி 4:6; 15:2; 21:18.21).

கி.மு.2500-ஐ ஒட்டி, மேற்காசியாவில் கண்டுபிடிக்கப்பட்டு, பெனிக்கியர்களாலும் எகிப்தியர்களாலும் பல பொருட்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டது. கி.மு. 50-ஐ ஒட்டிக் கண்ணாடியை உருக்கிக் காற்று ஊதிப் பொருட்கள் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் மலர்க்குவளை, புட்டி, உருண்டை மணி, மற்றும் பல அலங்காரப் பொருட்கள் செய்யப்பட்டன. யோசிப்பசின் கருத்துப்படி இத்தொழிலில் பெனிக்கியர்கள் புகழ்பெற்று இருந்தனர்.

யோபு 28:17-இல் கண்ணாடி மற்ற விலையுயர்ந்த உலோகங்களோடு குறிப்பிடப்படுகின்றது. இவை யாவும் ஞானத்தின் மதிப்பிற்குச் சமமானவையன்று. இது அதிக அளவில் கிடைக்காததால் பழங்கால மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டுக் கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டது.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் இருமுறை ''கண்ணாடி போன்ற கடல்'' என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால் பொருள் தெளிவாக இல்லை. திருவெளி 4:6-இல் ஆசிரியர் ''பளிங்கெனத் தெளிந்த கடல் போன்றதொன்று'' இறைவனின் அரியணை முன் இருப்பதைக் காண்கிறார். இது ஒரு வேளை மகத்துவத்தையும் தூய்மையையும் சுட்டலாம் (21:18). அல்லது எபிரேயர்கள் பழக்கப்பட்ட கொந்தளிப்புள்ள கடலிலிருந்து வேறுபட்ட அமைதியைச் சுட்டலாம். இதன் பொருள் எதுவாயிருந்தாலும் யாத் 24:10-இலும், இறைவனது அரியணை அருகில் ஒளி ஊடுருவும் பொருட்களைக் கூறும் மற்றப் பகுதிகளிலும் ''கண்ணாடிக்கடல்'' பின்னணி காணப்படுகிறது. திருவெளி 15:2-இல் இப்பதம், பழைய ஏற்பாட்டுப் புனிதர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும் முன் செங்கடலைக் கடந்ததுபோல், விசுவாசிகள் இறைவன் திருமுன் நுழையத் தகுதி பெறுமுன் அனுபவிக்கவேண்டிய கடுந்தேர்வை அடையாளமாக உணர்த்தலாம்.

**கண்ணாடிக்கடல்** (SEA OF GLASS, GLASSY SEA)

திருவெளிப்பாட்டு நூலாசிரியரின் காட்சியிலே இது தென்படுகின்றது (திருவெளி 4:6; 15:2). விண்ணக அரியணை உள்ள அறையிலே, இந்தக்கடல் பளிங்கு போல் காணப்படுகின்றது. இந்தக் கருத்து எசக்கியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது (எச 1:22); ஆனால், திருவெளி 15:2 கண்ணாடிக்கடல் நெருப்புடன் கலந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றது. யோவானின் கண்ணாடிக் கடலைப் புரிந்து கொள்வதற்கு முன்னதாக யூதர்களின் படைப்புப் படிப்பினையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். யூதர்களின் நம்பிக்கையின்படி வானவெளிக்கு மேலேயும், கீழேயும் தண்ணீர் இருந்ததாகக் கருதப்பட்டது (ஆதி 1:7; சங் 148:4; லேவி 2:7; யோபு 2:4). பின்வரும் கருத்துக்கள் இதன் பின்னணியில் அமைந்துள்ளன. அ) இறைவனுடைய பேழைக்கும், ஆலயத்திற்கும் நுழைவதற்கு முன்னால் வெண்கலத்தாலான தொட்டியிலோ (யாத் 30:17 தொ), வார்ப்புக் கடல் என்ற தொட்டியிலோ (1 அர 7:23 தொ) யாவேக்கு வழிபாடு செலுத்தச் செல்கின்ற குருக்கள் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆ) செங்கடலைக் கடந்த போது அடைந்த வெற்றி யோவானைப் பொறுத்தவரை மனிதன் இறைவனுடைய தீர்ப்பு என்னும் இறுதிக்கால நெருப்பைக் கடந்து செல்லும் நிகழ்ச்சியை அடையாளமாகக் குறிக்கின்றது. இந்த இரண்டு நிகழ்வுகளும், மோசேயின் பாடலிலும் செம்மறியின் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன (திருவெளி 15:3 தொ; யாத் 15). ஆகையினாலே கண்ணாடிக் கடலில் விண்ணகப் பேழையின் ஒரு பகுதியான வெண்கலத் தொட்டியையும், அதே நேரத்தில் மனிதனுடைய பாவத்திற்குக் கடவுளுடைய தண்டனையையும் அதனுடைய பரிகாரத்தையும் குறிக்கும் அடையாளத்தையும் நாம் காண வேண்டும் (எபி 12:14; சங் 24:4; மத் 5:8; 1 கொரி 10:1 தொ; திருவெளி 22:3-4) கண்ணாடிக் கடலை நெருப்புக்கடலுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது (திருவெளி 19: 20). இது இரண்டாவது சாவைக் குறிக்கின்றது (20:14).

**கண்ணி, வலை, பொறி** (SNARES AND TRAPS)

பறவைகளையும் விலங்குகளையும் வேட்டையாடுவதில் பயன்படுத்தப்படும் கருவிகளை இது குறிக்கும்.

பெரும்பாலும் இது உருவகமாகப் பயன்பட்டுள்ளது. குறிப்பாக எதிர்பாராது, திடீரென்று வரும் ஆபத்துக்களையும், வாழ்க்கையில் எதிர்பாராது வரும் கேடுகளையும் (திருவுரை 9:12), தீயவர்கள் திட்டமிடும் கொடுமைகளையும் (சங் 140:4-5), தீயவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் அழிவையும் (யோபு 18:7-10), போர்த்தோல்வியையும் (எச 19:8) இறுதிக்கால அழிவையும் (லூக் 21:34) குறிக்கக் கண்ணி, வலை என்ற சொற்கள் பயன்பட்டுள்ளன. சங் 69:22-இல் பலி உணவு, கவர்ந்திழுத்துப் பொறியாக மாறும் தூண்டில் இரைக்கு ஒப்பிடப்படுகிறது. ஆமோ 3:5-இல் இறைவனுடைய தனிச் சிறப்பான மக்கள் மீது வரவிருக்கும் அவருடைய தவிர்க்கமுடியாத தண்டனையை விளக்க வேடனது வலை பயன்படுகிறது.

**கண்மணி** (APPLE OF THE EYE)

கண்ணுக்கு அதன் மணி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமான, ஆகவே மதிப்பு மிகுந்த ஒருபொருள் என்பதனைக் காட்டப் பயன்படும் சொல்லாகும் இது (பழ 7:2). உப 32:10; சங் 17:8 ஆகியவற்றில் கடவுளுக்கு மிகவும் பிரியமானவரைக் குறிக்க இது பயன்படுத்தப்படுகிறது. ''இறைவன் கண்மணியைப் போல் காத்து வழிநடத்தினார்'' எனக் கூறப்படுகிறது.

**கண் மை** (EYE PAINT)

முற்கால எகிப்திலும் பாபிலோனியாவிலும், கண்களைச் சுற்றி வர்ணம் பூசிக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால் யூதர்களிடையே தீய பெண்கள் மட்டுமே பெரும்பாலும் கண் மை பூசிக்கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*1. விவிலியத்தில் கண்மை:-*

விவிலியத்தில் மூன்று முறை 'கருப்புக் கண்மை' என்ற சொற்றொடர் காணப்படுகிறது; ஏகூ இசிரியேலுக்கு வந்தபோது ஈசபேல் தன் கண்களுக்கு மையிட்டுத் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள் (2 அர 9:30). விபச்சாரப் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்ட எருசலேம் கண்களுக்கு மைதீட்டி அணி செய்வதாக எரேமியா கூறுகிறார் (எரே 4:30). யோபுவின் புதல்வியரில் ஒருத்தியின் பெயர் கெரன்-அப்பூக்கு. இதன் பொருள் ''கண் மை வைக்கும் அல்லது அஞ்சனச் சிமிழ்'' ஆகும். (யோபு 42:14).

எச 23:40-இல், எருசலேமைக் குறிக்கும் விபச்சாரியான ஒகலிபா கண்களுக்கு மை தீட்டுகிறாள். யூதர்களிடையே தீய குணமுடைய பெண்களே மை தீட்டும் பழக்கம் கொண்டிருந்தனர் என்பதற்கு மேற்கூறிய குறிப்புகளே சான்றாகும்.

*2. பொருட்கள்:-*

முற்கால எகிப்தில், உயர்மெருகு ஏற்கும் பச்சை நிறக் கனிப்பொருள் வகையும், பிற்காலத்தில் பளபளப்பான ஈயச் சுரங்கக் கலவை வகையும் பொதுவாகக் கண் மையாகப் பயன்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் இவை வியாபாரத்திற்காகவும் தயாரிக்கப்பட்டன. பாபிலோனில் இக் கண்மை 'குக்லூ' என்றழைக்கப்பட்டது. சனகெரிபுக்கு எசக்கியா அரசன் அளித்த கொடைகளில் கண் மையும் ஒன்றாகும். இன்று எகிப்தில் ஈயக் கனிமத்திலிருந்தும், எரித்த சாம்பிராணியிலிருந்தும், வாதுமைக் கொட்டையின் தோட்டிலிருந்தும், குசும்புப் பூவிலிருந்தும் கண் மை செய்யப்படுகிறது.

*3. அஞ்சனச் சிமிழ்:-*

யோபுவின் புதல்வியின் பெயரிலிருந்து, கண் மை கொம்பினால் செய்யப்பட்ட கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்தது (யோபு 42:14) என்பது தெரிகிறது. எகிப்தில் பண்டைக் காலத்தில் கண் மை மாவை நாணலால் செய்யப்பட்ட அல்லது நாணல் வடிவில் கல்லாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட குழாய்களில் வைத்தனர். எகிப்திலும் பாபிலோனிலும் சில வேளைகளில் கண் மை மாவு குழம்பாக்கப்பட்டுத் தோடுகளில் வைக்கப்பட்டது.

*மை தடவப்பட்டவிதம்:-*

பண்டைய எகிப்தில், மரம், தந்தம் அல்லது உலோகத்தாலான சிறிய குச்சி ஒன்றை முதலில் ஈரப்படுத்திப் பிறகு கண் மை மாவைக் குழப்பி, அதனால் உண்டாகும் குழம்பைக் கண்களைச் சுற்றிப் புருவத்தின் மேல் பூசினார்கள். சில வேளைகளில் கண்களின் அடிப்பாகத்தில் பச்சை நிறக் களிம்பும், மற்ற இடங்களில் கருப்பு நிறமும் பூசப்பட்டன. உலோகத்திலும், தந்தத்திலும் செய்யப்பட்ட தடவும் குச்சிகள் பாலஸ்தீன அகழ்வாராய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

*நோக்கம்:-*

கண்கள் துல்லியமாகக் காணப்படுவதற்கும், அவை வாதுமைக் கொட்டை அளவில் தோன்றுவதற்கும் கண் மை பயன்படுத்தப்பட்டது. கூசுவதினின்றும் வியாதியினின்றும் இது கண்களைப் பாதுகாப்பதாக அவர்கள் நினைத்தார்கள்.

## கதவு, வாயில் (DOOR)

சங் 141:3; எச 25:20-இல் குறிக்கப்படுபவை குடைகுழியில் பொருத்தப்பட்ட சுழலும் கதவுகளாகும். உலோகத் தகடுகள் அடிக்கப்பட்ட கதவுகள் (2 நாள் 4:9.22) உலோகக் கீல்களுடன் பொருத்தப்பட்டிருந்தன. சுவரில் துளையிட்டு அதில் ஒன்று அல்லது இரண்டு சுழலும் கதவுகள் இருந்தன. 'கதவு நிலையில் மேலுத்திரமானது படுக்கையாகப் போடப்பட்டிருந்த ஒரு மரவிட்டம். நிலைகள் பக்கங்களில் இருந்தன. யாத் 35:17; யோபு 38:17-இல் உள்ளது சரியாக வாயில் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மத் 6:6;27:6-இல் 'சுழலும் கதவுகள்' குறிக்கப்படுகின்றன. மேலும் உவமானமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன (யோவா 10:7; 18:16; அ.ப. 14:27).

**கதவுத்துளை** (LATCH)

உ.ச. 5:4-இல், இது ''கதவுத்துளை'' எனக் கூறப்படுகிறது. இது சரியான மொழி பெயர்ப்பாக இல்லை. ஒருவேளை இது (வேறொன்றைக் குறிப்பதற்காக) மறைத்துக் கூறும் மங்கல வழக்கமாக இருக்கலாம்.

**கதாது** (HADAD - இடி இடிப்பவன்)

1. இசுமாயேலின் எட்டாவது புதல்வன். ஆபிரகாமின் பேரன் (ஆதி 25:15; 1 நாள் 1:30).

2. ஏதோமின் அரசன் பெதாதின் மகன் (ஆதி 36:35-36; 1 நாள் 1:46-47). அவிதுவில் ஆட்சி செய்தார்.

3. ஏதோமின் மற்றுமொரு அரசன் (ஆதி 36:39; 1 நாள் 1:50-51). பாகூவில் ஆட்சி செய்தார். வாசகத் தவறால், ஆதி 36:39-இல் இப் பெயர் ஆதார் என்றுள்ளது.

4. தாவீது ஏதோமை வெற்றிகொண்ட பொழுது எகிப்திலிருந்து தப்பிய ஏதோமின் அரச குடும்பத்தைச் சார்ந்த ஓர் உறுப்பினர். பின்பு அவர் சாலமோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய மீண்டும் தாய் நிலத்திற்கு வந்தார் (1 அர 11:14-22.25).

5. பழங்காலத்தில் புயலின் கடவுள். உகாரித்துக் கடவுள்களின் தலைவர்.

**கதிமியேல்** (KADMIEL - இறைவன் முன்செல்கிறார்)

பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஒரு லேவியர் குடும்பத் தலைவர் (எஸ் 2:40; நெக 7:43; 12:8.24). இவரும் இவருடைய புதல்வர்களும் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதை மேற்பார்த்தனர் (எஸ் 3:9). பொதுப் பாவ அறிக்கையில் பங்கெடுத்தனர் (நெக 9:4-5). புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டனர் (10:9).

**கதிமோனியர்** (KADMONITES - கீழ்த் திசையினர்)

இவர்கள் பாலஸ்தீன-சீரியாவுக்கும், யூப்பிரத்திசு ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியான சீரிய அரேபிய பாலைவனத்தில் இஸ்ராயேலருக்குமுன் வாழ்ந்த நாடோடி இனத்தவர்கள். கதிமோனியா நாட்டைக் கடவுள் ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தவர்க்கும் தந்தார் (ஆதி 15:18-21). இவர்களும் ''கெதாமின் புதல்வர்களும்'' ஒரே இனமாக இருக்கலாம். சில மொழிபெயர்ப்புக்கள் இவர்களைக் ''கிழக்கில் வாழும் மக்கள்'' என்றழைக்கின்றன (ஆதி 29:1; நீதி 6:3.33; யோபு 1:3).

**கதியேல்** (GADDIEL - இறைவன் என் நற்பேறு ஆவார்)

செபுலோன் கோத்திரத்தில் சோதியின் புதல்வன். இவரும் கானான் நாட்டில் உளவறிய அனுப்பப்பட்டவர் (எண் 13:10). இவருடைய பெயர்தான் அனேகமாகக் காது என்ற பெயரின் முழுவடிவமாக இருக்கலாம்.

**கதிரவன்** (SUN)

விவிலியத்தில் உலகத் தொடக்கம், முடிவு ஆகியவற்றைக் கூறும் பகுதிகளில் கதிரவன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதனைப் புறவினத்தார் வழிபட்டதாகவும் குறிப்புகள் உள்ளன. இது நிலைத்த தன்மையின் அடையாளமாகக் கருதப்பட்டது.

1. சொல்:- கதிரவனைக் குறிக்கும் எபிரேயச் சொல் எல்லா செமித்திய மொழிகளிலும் காணப்படுகிறது. இது பெரும்பாலும் ஆண் பாலாகக் கருதப்பட்டாலும், சில சமயங்களில் (யாத் 22:3; உப 24:15; 2 சாமு 2:24; சங் 104:22; யோனா 4:8; மீக் 3:6; நாகூ 3:17) பெண்பாலாகவும் கருதப்படுகிறது. இதற்குக் காரணம் முற்காலச் செமித்தியப் புராணங்களில் சூரிய தேவதைக்கு அளிக்கப்பட்ட பாலின வேறுபாடாகும். கதிரவனைக் குறிக்க மற்றப் பெயர்களும், குறிப்பாக அதன் தன்மையை விவரிக்கும், பெயர்களும் விவிலியத்தில் காணப்படுகின்றன.

2. அண்டப் பிறப்பு இயலிலும், இறுதிக் கால இயலிலும்:- நான்காவது நாள் படைப்பில் பகலில் ஒளி கொடுக்கவும், காலங்க

ளைக் குறிக்கவும் பகலை ஆளவும், கதிரவன் உண்டாக்கப்பட்டு விண்ணுலக வானத்தில் அமைக்கப்பட்டது (ஆதி 1:14-19). மண்ணுலகம் அழிந்து எல்லாப் பொருட்களும் மூல நிலையை அடையும்போது கதிரவன் இருண்டுவிடும் (ஏச 13:10; எச 32:7; யோவே 2:10; 2:31; செப் 1:15; மத் 24:29; திருவெளி 8:12) அல்லது அது தன் போக்குத் திசையை மாற்றிக் கொள்ளும் யாவேயின் இறுதி வெற்றியில் புதிய அமைப்புத் தோன்றும்போது கதிரவன் இப்போதுள்ளதைவிட ஒளிவிடும் (ஏச 30:26).

3. கதிரவன் வழிபாடு:- கதிரவன் (செமசு) எல்லாச் செமித்திய பல தெய்வக் கோவில்களிலும் காணப்படுகிறது. பாலஸ்தீனத்தில் சூரிய வழிபாடு இருந்தது என்பதற்கு "பேத்து-செமசின் வீடு" (யோசு 15:10; 1 சாமு 6:9; 1 அர 4:9), "ஏன் செமசு" (சூரியனின் ஊற்று) (யோசு 15:7; 18:17) போன்ற பெயர்கள் சான்று பகர்கின்றன. உகாரித்து இராஸ்-சாம்ராவில் இருந்து வரும் சடங்குப் பட்டியலில் சூரியனுக்குப் பலிகள் குறிப்பிடப்படுகின்றன. தேல் ஏல் அமர்னாவின் கடிதங்களில் ஒன்று சூரியனைப் பிப்ளோஸ் பெண்ணோடு தொடர்புபடுத்துகிறது.

சூரிய வழிபாடு, மற்றக் கிரக வழிபாட்டைப் போலவே யூதர் சமயத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தது (உப 4:19; 17:3). ஆனாலும் சூரிய வழிபாடு, விசுவாசத்தை இழந்த மனாசே மன்னனால் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது (2 அர 21:3.5). இது அவருடைய வழித்தோன்றல்களாலும், மக்களாலும் பயன்படுத்தப்பட்டது (எரே 8:2). இவ்வழிபாடு யோசியா மன்னனால் (2 அர 23:5) கி.மு.621-இல் அழிக்கப்பட்டிருந்தாலும் எசக்கியேல் இறைவாக்கினர் காலத்திலும் பழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது (எச 8:16).

சூரியனின் குதிரை, தேர்களின் உருவங்கள் கடவுள் ஆலயத்தின் மேற்புறத்தில் நிறுவப்பட்டன (2 அர 23:11). செமசுக்கு, அக்காதியன் மொழியில் எழுதப்பட்ட பாடல்களில், சூரியன் தேரோட்டியாகச் சித்தரிக்கப்படுகிறது. இதுபோன்ற இணையான கருத்தைப் பழங்கால இந்தியாவிலும், கிரீசிலும் காணலாம்.

4. விவிலிய நாடோடிப் பாடலில்:-

இஸ்ராயேல் மக்கள், அவர்கள் எதிரிகளைக் கிபயோனில் முறியடிக்கும் மட்டும், யோசுவாவின் கட்டளைப்படி சூரியன் ஒரே இடத்தில் நின்றது (யோசு 10:12). கிரேக்கக் காவியமாகிய இலியதில் ஏரா கிரேக்கர்களுக்கு உதவி செய்யும் பொருட்டுச் சூரியனைச் சீக்கிரமாக மறைந்து போகச் செய்கிறார். ரிக் வேதத்தில் வரும் நிகழ்ச்சியான, இந்திரன் தேவர்களோடு போரிடும்போது, சூரியனின் தேரின் ஒரு சக்கரத்தை இழுத்து விடுவது, சூரியனைச் சீக்கிரம் மறையாதிருக்கச் செய்த முயற்சி என்று கருதப்படுகிறது.

2 அர 20:8-11; ஏச 38:7 ஆகிய பகுதிகளில் எசக்கியா அரசன் உடனே இறக்கமாட்டான், இன்னும் பதினைந்து ஆண்டுகள் வாழ்வான் என்பதைக் காட்டக் கதிரவக் கடிகையில் பத்துப்பாத அளவு பின்னோக்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இடுக்கண் மிக்க காலத்தில் கதிரவன் தன்போக்கை மாற்றிக்கொள்ளும் என்ற பொதுப்பாணிக்கருத்தின் பிரதிபலிப்பாகும் இது. மலா 4:2-இல் நீதியின் நாளில் "உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான்; தன் இறக்கைகளில் நலத்தைத் தாங்கி வருவான்" என்று கூறப்பட்டுள்ளது.

நண்பகல் சூரியன் ஒரு பேயாகக் கருதப்பட்டது (சங் 91:6). இக்கருத்து பழங்காலத்தில் பரவலாகக் கருதப்பட்டது.

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது கதிரவன் இருண்டுவிட்டதாக நற்செய்திகள் கூறுகின்றன (மத் 27:45-56; மாற் 15:33; லூக் 23:44-49; யோவா 19:28-30). மிகவும் சிறப்பு வாய்ந்த மனிதர் இறந்தால் கதிரவன் இருண்டுவிடும் என்ற நம்பிக்கையை இங்குக் காணலாம்.

**கதிரவன் நகரம் (CITY OF SUN)**

எகிப்தில் உள்ள ஒரு நகர். யாவேயின்

வழிபாடு எகிப்தில் பெருகும் என்று கூறப் பட்ட இறைவாக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நகர் (ஏச 19:18-22).

**கதிராக்கு** (HADRACH - குடியிருத்தல்)

லெபனோனின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். தமஸ்கு, கமாத்து ஆகிய நகரங்களோடு சேர்ந்து இஸ்ராயேலோடு பகைமை கொண்ட நகரம் (செக் 9:1). இது அலேப்போவிற்குத் தென்மேற்கில் 45 கி.மீ. தொலைவிலுள்ள தேல் அபிசாகு என அடை யாளம் காட்டப்படுகிறது.

**கதிர்** (EAR OF GRAIN)

தானியம் உருவான ஒரு தனித்தனி முனை. மேலும் உப 23:25; லேவி 2:14; 2 அர 4:42 ஆகியவற்றிலும் 'கதிர்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பார்லி (யாத் 9:31), கோதுமை (உப 23:25; லேவி 2:14) போன்ற தானியங்களின் முத லில் உருவாகும் தானிய முனை இப்பெய ரால் குறிக்கப்பட்டது (மாற் 4:28; ஆதி 41:5-7; ரூத் 2:2; யோபு 24:24; ஏச 17:5).

**கதீ** (GADDI - என்நற்பேறு)

1. மோசேயால் அனுப்பப்பட்ட ஒற்றர்க ளில் இவரும் ஒருவர். கானான் நாட்டைப் பற்றிய செய்தியை அறிய அனுப்பப்பட்ட வர். யோசேப்பின் கோத்திரத்தில் மனாசே வம்சத்தானாகிய சூசியின் புதல்வன் (எண் 13:11).

2. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் யூதர்களின் விடுதலைப் போராட்டத்தில் தலைவராக இருந்த யோவானின் பட்டப்பெயர் (1 மக் 2:2). இவர் யூதா மக்கபேயரின் மூத்த சகோத ரன் ஆவார்.

**கதீத்தா** (HATITA - ஆய் செய்யும், தேடும்)

ஆலய வாயில்காப்போர்களின் குடும்பங் களில் ஒன்று (எஸ் 2:42; நெக 7:45).

**கதுலாய்** (HADLAI - பொறுமையுள்ள, அமை தியான)

39A

ஓர் எப்பிராயிமின் நபர் அல்லது குடும் பம். எப்பிராயிமியர் அமாசாவின் தந்தை (2 நாள் 28:12).

**கதை** (LEGEND)

இச்சொல் கட்டுக்கதைகளையும், தேவ தைக்கதைகளையும் மற்றும் பலதரப்பட்ட கதைகளையும் குறிக்கிறது. இது பழங்காலக் கதைகளை மட்டுமல்லாது புலமைமிக்க கலைத்திறம் வாய்ந்த கதைகளையும் குறிக் கின்றது.

இச்சொல் கி.பி.12 ஆம் நூற்றாண்டுமுதல் வேதசாட்சிகளையும் புனிதர்களையும் பற் றிக் குறிப்பிடத்தொடங்கியது. அவர்களது நினைவு நாட்களில் இவை வாசிக்கப்பட்டு அதனால் புதுமைக்கதை என்று அழைக்கப் பட்டன. இறுதியில், வீரர்களைப்பற்றி நூதன மான, உண்மையற்ற கட்டுக்கதைகள் அனைத்திற்கும் இச்சொல் நிலைபெறத் தொடங்கியது. அறிஞர்களின் கூற்றுப்படி இச்சொல், சமய சம்பந்தமான பிரிவுகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும். இவ் வாறு புராணங்களுக்குச் சமமாக உள்ள மற் றப் பிரிவு இலக்கியங்களிலிருந்து இவை வேறுபடுத்தப்படுகின்றன. இச்சொல்லின் பொதுவான உபயோகத்தினாலும், பல் வேறு பிரிவுகளிலும் ஒவ்வொரு முறையும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவது கடின மாயுள்ளதாலும், மற்றப் பிரிவுகளைப்பற்றி இங்குக் குறிப்பிடுவது முறையாகும்.

1. தேவதைக்கதை:- தேவதைக் கதை என் பது எங்கும், எக்காலத்திலும் காணப்படும் புதுமையான வாய்மொழி இலக்கியமாகும். மனிதனின் உட்புலனில் உள்ள கட்டுக்கதை ஆசையினாலும், அவற்றின் நூதனத்தினால் ஏற்படும் ஒருவித உவகையினாலும் இக் கதைகள் ஆரம்பித்தன. காலத்திற்கும் இடத் திற்கும் அப்பாற்பட்ட நிலையில் தேவதை கள், வேதாளம், இயற்கையான ஆவிகள், பூதங்கள், மிருகங்கள், தாவரங்கள் மற்றும் பொருட்கள் முதலியவற்றோடு, பெரும்பா லும் சகோதரர்களால் வெறுக்கப்பட்ட இளையமகனைத் தலைவனாகக் கொண்டு இக்கதைகள் எழுதப்படுகின்றன. ஏராள

மான துன்பங்கள், சோதனைகள், அனுபவித்த பின் வியக்கத்தக்க செயல்களைச் செய்த பின் அவன் இளவரசியையும் அரசில் பாதியையும் பெறுவான்.

பழைய ஏற்பாட்டில் தேவதைக் கதையானது பாடலில் உருவகமாக மட்டுமே காணப்படுகிறது. விடியற்காலையில் சிறகடித்துப் பறக்கும் மனிதன் (சங் 139:9); சபித்தலை ஆடையாக அணிபவன் (சங் 109:18); வரலாற்றுப் பின்னணியுடனோ, இல்லாமலோ அமையும் கதைகள்: பேசும் பாம்பு (ஆதி 3), பிலயாமின் பேசும் கழுதை, யோனாவை விழுங்கிப் பின்னர்க் கரையில் துப்பும் கடல் மீன். இங்கு நாம் நாடு விட்டு நாடு சுற்றும் நிலையில், உலகளாவிய நோக்கம் கொண்டிருக்க வேண்டும். மோசேயின் சிறப்பு மற்றும் இளம்பிராய வாழ்க்கை பற்றிய கதையும் இத்தகையதே. பழைய பாபிலோனிய அரசன் சார்கோன், சைரஸ், பொசெயு, உரோமுலு மற்றும் இரேமுஸ் (சகோதரர்களின் வஞ்சக நோக்கமும் இணைந்தது) ஆகியோரைப் பற்றியும் இதே நோக்கத்துடன் கூடிய கதைகள் கூறப்படுகின்றன. சில சமயங்களில் முழுக்கதையுமே மற்றொரு கதைக்கு இணையாகவுமிருக்கும்: சாலமோனின் தீர்ப்பு (1 அர 3:16-28) கதைக்கு இணையான கதை ஒன்று இந்தியாவிலும் உள்ளது - போத்திபாரின் மனைவி மற்றும் யோசேப்பு பற்றிய கதைக்கு இணையான கதை எகிப்திய நிகழ்ச்சிகளிலும் உள்ளது. சகோதரர்களின் வஞ்சகத்தைப் பின்னணியாகக் கொண்ட யோசேப்பின் கதையைப் போலவே யாக்கோபு எசாயு கதையும் உள்ளது; தோபியாவின் கதையின் நோக்கமாக உள்ள நன்றியுள்ள இறந்தவர்கள் என்னும் கருத்து பழங்காலப் பல்வேறு கதைகளில் காணப்படுகிறது. யோனா, எஸ்தர், யூதித்து மற்றும் ரூத் பற்றிய கதைகளும் இத்தகைய வரலாற்றுப் புதினங்களுடன் தொடர்பு உடையவையே.

மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றையும் இணைத்துக் கூறப்படுபவையே கட்டுக்கதைகள்.

2. வீர காப்பியத் தொகுப்புக்கள்: 1-இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல இதுவும் நூதனக் கதையே; ஆனால், உண்மையாகவே வாழ்ந்த மனிதன், பொருள், நிகழ்ச்சி, இடம், சமூகக் கலாச்சார உறவு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு, உண்மை நிகழ்ச்சியாகக் காட்டப்படுவது. நிலவுகின்ற பாரம்பரியமானது தலைவர்களையும், நிகழ்ச்சிகளையும் பெருமைப்படுத்துவதற்காகப் பல்வேறு தேவதைக் கதைகளையும், கவிதை வர்ணனைகளையும் இணைத்துக் கூறுகின்றது.

அ) மூதாதையர் பற்றிய கதைகள்:- எபிரேயர் மற்றும் செமித்திய இனத்தவர் இடையே மூதாதையர் கதைகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. மூதாதையர் என்பவர் அவர்களது கோத்திரத்தின் பெயரைக் கொண்ட கற்பனை உருவமாகவும் இருக்கலாம்; அவர்களது மரபின் சிறந்த குறிக்கோள்களின் மனித வடிவமாக அவர் இருப்பார். அம்மரபின் மக்கள், நிகழ்ச்சிகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுடன் முற்றிலும் இணைந்து காணப்படுவதால், இக்கதைகளைத் தற்சமயம் விலக்கிவிடுவது என்பது இயலாத ஒன்று. மரபின் குணங்களைக் கொண்டு விளங்கும் விவிலியக் கதைகள் காயின் மற்றும் இலாமேக்கு (ஆதி 4), தாமார் மற்றும் யூதா (ஆதி 39) போன்றவையாகும். இலாமேக்குக் கதையை நோக்கும்போது இத்தகைய குணநலன்களின் வர்ணனையானது அடிக்கடி கவிதை நடையினை மேற்கொள்வது தெரிகிறது. மூதாதையர் என்பது சில நேரங்களில் வரலாற்றின் தனித்துவக் கோட்பாடுகளைக் கொண்ட, சமுதாயத்தில் காணப்பட்ட உண்மையாகும். மூதாதையருக்கும் இவை பொருந்தும். அவர்கள் சார்ந்து நின்ற சமூகக் கோட்பாடுகளைப் பற்றி நோக்குவது ஆபிரகாம், யாக்கோபு போன்ற தனி மனிதர்களைப் பற்றிச் சிந்திப்பதைவிட மிக முக்கியமாகும்.

ஆ) பண்பாட்டு வீரக்கதைகள்:- மூதாதையர், முக்கியமாகக் குலமரபுச் சின்னம் கொண்டோர் பெரும்பாலும் பல்வேறு

மனித கலாச்சாரங்கள், சமயச் சடங்குகள், வழிபாடுகள் மற்றும் மறைவான ஞானம் ஆகியவற்றைக் கண்டுபிடித்தவர்களாகவும், தொடங்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களாகவும், இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறவிகளாகவும் கருதப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டில் முதல் நகரத்தைத் தோற்றுவித்த ''ஏனோக்கு'', ஆடு மேய்ப்பவர் மற்றும் கூடாரத்தில் வசிப்போரின் தந்தையாகிய யாபால், இசைக்கலைஞர்களின் தந்தையும் இசை மற்றும் இசைக்கருவிகளைக் கண்டுபிடித்தவருமான யூபால், முதல் கொல்லனாகிய தூபால்-காயின், முதலில் திராட்சை ரசத்தை உருவாக்கும் நோவா, மற்றும் முதலில் கடவுளின் பெயரைச் சொல்லி அழைக்கத் தொடங்கிய ஏனோசு (ஆதி 4:26) ஆகியோரைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இங்கிருந்து முதல் மனிதனாகிய ஆதாம், ஏனோசு ஆகியோரைப் பற்றிய உன்னதச் செயல்களும், ஊகங்களும் ஆரம்பமாகின்றன. 1

இ) அண்டம் பற்றிய கதைகள்:- இவை உலகம் மற்றும் உயிரினங்கள் ஆகியவற்றின் படைப்பு மனிதனின் உண்மையான இன்பம் (ஏதோன் தோட்டம், இன்பவனம்), மனித வாழ்வின் இன்றைய நெருக்கடி ஆகியனவற்றைப் பற்றிய கதைகளாகும். பாரசீகத்திலிருந்து பின்னாளைய யூதர்கள் எடுத்துக் கொண்ட ஆதிமனிதனைப்பற்றிய நூதன யூகங்களும், இவற்றைப் போன்றவையே. மனிதனுடைய உலகின் படைப்புப் பற்றிய கதைகள், சடங்குகளின் மூலம் தினசரி படைக்கப்பட்டவற்றையே விவரிக்கின்றன; அவை கட்டுக்கதையின் நடையையும் கொண்டுள்ளன. ஆனால், இந்தக் கட்டுக்கதைகள் பிற்காலத்தில் வரலாற்று உண்மைகளுடன் இணைக்கப்பட்டு உண்மை நிகழ்ச்சியாகவும் மாற்றப்படலாம். இவ்வாறே, வெள்ளம் பற்றிய விவிலிய மற்றும் பாபிலோனியக் கதைகளின் மூலம், நீரிலிருந்து அனைத்தும் படைக்கப்பட்டன என்னும் எண்ணம் உதயமானது.

ஈ) காரண விளக்கக் கதை:- மேற்குறிப்பிட்ட பிரிவுகள் அனைத்தும், பெரும்பாலும் கதைக்குக் காரணங்களையும் கொண்டிருக்கும். தற்சமயம் ஒரு சில பொருட்கள் அவ்வாறு உள்ளதற்கான காரணங்களை இக்கதைகள் விளக்குகின்றன. உ-ம் உப்புத்தூண் (லோத்தின் துர்ப்பாக்கிய மனைவி), பாபேல் கோபுரம், வழக்கம், சடங்கு, சமூக அரசியல் நிலையின் தோற்றம், மற்றும் ஒரு மனிதனின் அல்லது குணத்தின் பெயருக்கரன பின்னணி, போன்ற கேள்விக்கிடமான உண்மை நிகழ்ச்சிகளின் காரணங்கள், மற்ற நிகழ்ச்சிகள்: காதேசில் உள்ள புனிதக் கிணறு எவ்வாறு தோன்றிற்று? மேல் மற்றும் கீழ் நிலையிலுள்ள நீர்ச்சுனைகள் ஏன் காலேபுக்கு இல்லாமல் ஒதினியேல் கோத்திரத்திற்கு மட்டும் உரிமையாக்கப்பட்டன? ஆயி நகரைப் பற்றிக் கூறப்பட்டதெல்லாம் என்ன ஆயிற்று? யோசுவா ஆகமம் கூறும் பெரும்பாலான வெற்றிகள், இத்தகைய காரணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவையே.

உ) வழிபாட்டு இடங்கள் பற்றிய காரணக் கதைகள்:- பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு மூதாதையருக்கும் பொதுவாக ஒதுக்கப்படும் ஒரு புனித இடத்தின் ஆரம்பத்தைப்பற்றிக் குறிப்பிடும் ஒருவகையான காரணக் கதை உண்டு. மூதாதையரின் கருத்துப்படி, புனித இடமானது அதற்குரிய புனிதத் தன்மை கொண்டிருப்பதால், தலைவன் அதனை எவ்வாறு கண்டுபிடித்தான் என்பதை இக்கதை கூறுகின்றது. உ-ம்: யாக்கோபு பெத்தேலில் செய்தது. பழைய ஏற்பாட்டில் ஒரு இறையியல் விளக்கம் தவறாமல் அளிக்கப்படுகிறது: கடவுளின் சாட்சியினால் அவ்விடம் புனிதப்படுத்தப்பட்டு ஏற்படுத்தப்பட்டது. பலிபீட விழாவின்போது, இடம் மற்றும் புனிதரின் புகழ்ச்சிக்காக, இத்தகைய வழிபாட்டுக் காரணம் சொல்லப்பட்டதால், இஃது வழிபாடு பற்றிய கதை எனப்பட்டது.

3. வரலாற்று வர்ணனை:- வீரர்களைப் பற்றிய கதைகளையும் வரலாற்று வர்ணனை

களையும் பிரிப்பதற்கென்று எந்தவித எல்லையுமில்லை. தாவீது மற்றும் அவரது குடும்பத்தவரின் வாழ்க்கை மற்றும் செயல்களைப்பற்றிய கதைகளிலும், கதை சொல்பவரின் பாடற்கலை நயத்தையும், அவரது காலத்திய சடங்குகள் மற்றும் வழக்கங்களின் படி அவர் நடந்த சம்பவங்களை அமைக்கும் விதத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 சாமு 6). நாட்டை வெல்வதற்குமுன் யோகவா மேற்கொண்ட இருபெரும் போர்களைப் (யோக 10-11) போன்ற வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சிகள்கூட, பிற்காலப் புராண ஆசிரியர்களாலேயே அமைக்கப்பட்டிருக்கலாம்.

4. முறையான கதை.- இவ்வகையானது, மேற்குறிப்பிட்ட எல்லாவிதமான கதைகள் மற்றும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. சமயத் தலைவர்கள் புனிதர்கள், இறைவாக்கினர், மூதாதையர் மற்றும் பண்பாட்டு வீரர்கள் ஆகியோரின் வாழ்வு மற்றும் எழுத்துகளிலிருந்து அமைக்கப்பட்ட மனதைக்கவரும், பக்தி உருக்கத்துடன் கூடிய கதைத்தொகுப்பு என்று இதனைக் குறிப்பிடலாம். தெய்வத்தின் அதிசயங்களும், செயல்களும் இதில் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. புனிதர்களைப் பற்றிய வியப்பு, அதிசயம் மற்றும் சமய, சமுதாய நற்கோட்பாடுகள் போன்றவையும் இத்துடன் இணைக்கப்படும். புனிதருடன் சம்பந்தப்பட்ட விழாக்களின்போது, அவரைப்பற்றிய கதைகள் அனைவருக்கும் கூறப்படும். இன்றைய வடிவில் மோசே மற்றும் யாத்திரைக் கதைகள் உள்ளதைப் போன்று, கதை வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு அமையலாம்.

இங்கு இறைவனுடைய மீட்புச் செயல்கள் மீண்டும் கூறப்பட்டு, மீண்டும் வாழ்ந்து காட்டப்படுகின்றன. எனவே, இவை விழா சம்பந்தப்பட்ட புராணக்கதை என்று கூறப்படலாம்.

பழைய ஏற்பாட்டிலுள்ள பெரும்பாலான கதைகள் இறைவாக்கினர்களுடனும், அவர்களது அதிசயிக்கத்தக்க முன்னறிவிப்புகள், புதுமைகள் போன்றவற்றுடன் தேவதைக் கதைகளைப் போன்ற நோக்கங்களை வைத்தும் எழுதப்பட்டுள்ளன. எலியா பற்றிய கதைகளே இக்காவியங்களில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. எலிசா பற்றிய கதைகள் 'தூய மனிதர்' என்னும் சொல்லையே கொண்டு விளங்குகின்றன. ஏசயா கதைகளில் பக்தி மனப்பான்மையும் (36-39) கதையின் நோக்கங்களும் இணைந்து காணப்படுகின்றன. சிதறிப்போதல் என்பதன் ஆன்மீக நிலை தானியேல் கதைகளில் சிந்திக்கப்படுகிறது.

திருமுறையைச் சேராத இலக்கிய ஏடுகளான, மோசேயின் விண்ணேற்றம்; ஜுபிலிகளின் புத்தகம், கும்ரான் குகைகளில் எடுக்கப்பட்ட, ''போலி ஆதியாகமப் பகுதிகள்''; பன்னிரு மூதாதையர்களின் ஏற்பாடுகள், பெரிய செபக்கூடம் போன்றவை சிறிதளவு உலக அளவிலான தேவதைக் கதைகளின் நோக்கங்களும், சிறிதளவு விரிவுபடுத்தப்பட்ட விவிலியப் பகுதிகளும் சேர்த்து எழுதப்பட்டவையாக உள்ளன. யோசிப்பசிலும் தால்மூதிலும் உள்ள பிலயாம் இதற்குத் தக்க உதாரணமாகும். பின்னாளைய யூதமதம், வேதசாட்சிகளைப்பற்றிப் பலகதைகளைக் (உ-ம் 2 மக்கபேயர் மற்றும் ஏசயாவின் மரணம்) குறிப்பிடுகின்றது.

5. புராணக்கதை:- வழிபாட்டில் மீளவும் நிகழ்கின்ற, வாழ்ந்து காட்டப்படுகின்ற மீட்பின் கோட்பாடுகள் மற்றும் செயல்களின் உண்மையான புராணம் என்பது, கதையினின்று வேறுபட்டதாக இருக்க வேண்டும். ஆனால், இங்கும் அவற்றிற்கு இடையிலான எல்லை கூர்மையானதாக இல்லை. கவிஞர்களின் கையில் இருக்கும்போது வழிபாட்டுப் பு[illegible]ணம்கூட வழிபாட்டுடன் உள்ள நேரடித் [illegible]தொடர்பை இழந்துவிட்டு, காரணக் கதை பே[illegible]ன்ற பாடல் இலக்கியமாக மாறி விடுகின்ற[illegible]. சுமேரிய கில்காமிஸ் காப்பிய[illegible] [illegible]று கடவுள் பாதி இறைத் தன்மை [illegible]ண்ட தலைவனாக வருவதாகவும், உகா[illegible] இலக்கிய[illegible] போன்று மனித

ரின் சிறப்பான வம்சத்தை ஏற்படுத்துபவராக வும், இவ்விலக்கியம் வாழ்க்கையில் இடம் பெறுகிறது.

**கத்தாத்து** (HATHATH)

காலேபின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒதினியேலின் மகன் (1 நாள் 4:13).

**கத்தாத்து** (KATTATH - சிறிய)

இது செபுலோனில் உள்ள ஓர் ஊர் (யோசு 19:15). இந்த ஊரும் கேத்திரோனும் ஒன்று எனக் கருதப்படுகிறது (நீதி 1:30). பின்னதிலிருந்து கானானியர்களை இஸ்ராயேலரால் விரட்ட முடியவில்லை. இந்த இடம் தேல் கெயிமுன்னுக்குத் (விவிலிய யோக்கினயாம்) தென்மேற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் கொத்தையினாவாக இருக்கலாம்.

**கத்தி** (KNIFE)

வீட்டு வேலைகளில் வெட்டுவதற்குப் பயன்பட்ட ஒரு கருவி. இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

அகழ்வாய்வுகளின்படி, சாதாரணமாய்ப் பயன்பட்ட கத்தி 15-25 செ.மீ. நீளமுள்ளதாகும். கற்கத்திகள் கி.மு. 3500 வரைக்கும், செம்புக்கத்திகள் கி.மு. 1220 வரைக்கும், மீதமுள்ள விவிலியக் காலம் முழுவதிலும் இரும்புக் கத்திகளும் பயன்பட்டன. இவை விலங்குகளைக் கொல்லவும் (ஆதி 22:6-10; நீதி 19:29) மரங்களைக் சுவாத்து செய்யவும், உணவு உண்ணவும் (பழ 30:14) இது போன்ற பல நோக்கங்களுக்கும் பயன்பட்டன.

இஸ்ராயேலரை விருத்த சேதனம் செய்வதற்காகக் ''கற்களால் கத்திகள்'' செய்யும்படி யோசுவாவுக்கு இறைவன் கட்டளையிட்டார் (யோசு 5:2-3). போர் பற்றிய இறைவாக்கை எடுத்துக் காட்ட, இதையொத்த கருவியால் முடியை வெட்டிக்கொள்ளுமாறு எசக்கியேலுக்கு இறைவன் கட்டளையிட்டார் (எச 5:1-2). சவரக்கத்தி குறிக்கப்படுகிறது; பயன்பட்டதாகத் தெரிகிறது. சைரசு திரும்பக் கொடுத்த ஆலயப் பொருட்களில் கத்தியும் இடம்பெறுகிறது (எஸ் 1:9).

**கத்திபா** (HATIPHA - கைதியாகப் பிடிபட்ட)

அடிமைத் தனத்தினின்று திரும்பிவந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:54; நெக 7:56).

**கத்திரி, அணைப்பான்** (SNUFFERS)

விளக்கின் கரிந்த திரியினை வெட்டப் பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் (2 அர 12:13; 25:14; எரே 52:18) அல்லது குறடு (ஏச 6:6) போன்ற கருவி.

ஆலயங்களிலும் வாக்குத்தத்தத்தின் பெட்டகத்திலும் விளக்கு அணையாமல் காப்பதற்காக அதன் கருகிய திரியினை அவ்வப்போது வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைக் கத்தரி அல்லது குறடு (யாத் 37:23;...)

இக்கருகியதிரி கத்தரிப்புக் கருவி பசும் பொன்னால் செய்யப்பட்டிருந்ததாக ஒரு கருத்து நிலவி வந்திடினும், 2 அர 25:14; எரே 52:18 குறிப்புகளின்படி இவை வெண்கலத்தினால் செய்யப்பட்டமை தெரியவருகின்றது. 2 அர 24:14; எரே 52:8 ஆகியவை இக்கருவி திரியை வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைக் கத்தரி என்று கூறினாலும், ஏச 6:6-இல் உள்ளபடி இது கரிநெருப்பினை எடுக்கவல்ல ஒருவகைக் குறடாகவும் இருந்திருக்கலாம் என்பதை மறுக்கமுடியாது.

**கத்தீல்** (HATTIL - தடுமாறும், ஐயுறும்)

சாலமோனின் ஊழியர்களுடைய மக்கள் குடும்பங்களில் ஒன்று (எஸ் 2:57; நெக 7:59).

**கத்தூசு** (HATTUSH)

1. அடிமைத்தனத்திற்குப் பின் தாவீதின் வழிவந்தவர்களில் ஒருவரும், எஸ்ராவுடன் யூதாவுக்குத் திரும்பி வந்தவரும் ஆவார் (1 நாள் 3:22; எஸ் 8:2). 1 நாள் ஆகமத்தில் கத்தூசு செக்கனியாவின் பேரனாகவும், எஸ்ராவின் மகனாகவும் குறிப்பிடப்படுகிறார்.

2. நெகமியாவின் தலைமையில் எருசலேம் மதிலை மீண்டும் கட்டியவர்களுள் ஒருவர் (நெக 3:10). சிலர் மேலே (1)

குறிப்பிடப்பட்டிருக்கும் ஆளோடு ஒன்றாக் குகின்றனர்.

3. அடிமைத்தனத்திற்குப் பின் உள்ள ஒரு குரு (நெக 12:2). இவர் இஸ்ராயேலின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார் (நெக 10:4; 12:2).

**கந்தகம், கந்தகக்கல்** (BRIMSTONE)

இது சோதோம் கொமோரா நகரங்களை அழிப்பதற்கும் (ஆதி 19:24; லூக் 17:29), நெறிகெட்டவர்களையும், தீயவர்களையும் அழிப்பதற்கும் (உப 29:23; யோபு 18:15; சங் 11:6), அசீரியா மன்னனை அழிக்கவும் (ஏச 30:33), ஏதோம் நாட்டை அழிக்கவும் (34:9), கோகுவை அழிக்கவும் (ஏச 38:22), சிலை வழிபாட்டுக்காரர்களை அழிக்கவும் (திரு வெளி 14:10), கொடிய மிருகங்களையும், போலி இறைவாக்கினர்களையும், அழிக்கவும் (19:20), அலகையை அழிக்கவும் (20: 10), மற்றும் பொதுவாகப் பாவிகளை அழிப்பதற்கும் (21:8) கடவுள் பயன்படுத்திய ஒரு பொருளாக விவரிக்கப்படுவது ஆகும்.

**கந்தாக்கு** (CANDACE)

எத்தியோப்பியா அரசிகளில் ஒருத்தி. பிலிப்பு இவளுடைய அண்ணகரான பொருளாளனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். கந்தாக்கு என்பது ஒரு பட்டம், (ஏறக்குறைய 'அரசி' எனப் பொருள்படும்; சரியான பொருள் தெரியவில்லை) ஆள்பெயரல்ல. இன்றைய சூடானில் நைல் நதியின் கரையிலுள்ள மெரோ, நபத்தா நகர்களைக் கொண்ட அரசைச் சேர்ந்த எத்தியோப்பியாவின் பல அரசிகள் இந்தப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அ.ப.8:27-இல் உள்ள கந்தாக்கு (கி.பி.30-ஐ ஒட்டிய காலம்) என்பது ஆளும் அரசித்தாய்க்குக் கொடுக்கப்பட்டது. இது பூர்வீக வரலாற்று ஆசிரியர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அகுஸ்து, நீரோ காலத்தில் இருந்த அரசிகள் இந்தப் பட்டத்தைப் பயன்படுத்தினர். கி.மு. 300க்கும் கி.பி.300க்கும் இடைப்பட்ட காலத்திய பல கந்தாக்குகளின் பிரமிடு கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கபசினியா** (HABAZZINIAH - யாவேயின் களிப்பு)

எரேமியாவால் சோதிக்கப்பட்ட இரக்காபியரான யாசானியாவின் தாத்தா (எரே 35:3).

**கபடு, வஞ்சகம்** (GUILE)

சூழ்ச்சி, ஏமாற்றுத்தந்திரம்; நம்பிக்கைத் துரோகம்; வஞ்சகம், ஏய்ப்பு. ஒருவனுக்கு வஞ்சகம் செய் என்றால், அது அவனை ஏமாற்றுவதாகும். இச்சொல்லுக்குத் தகுந்த எதிர்ச்சொல் நேர்மையும், வாய்மையுமாகும். உரோ 16:19-இல் பவுல் உரோமைக் கிறிஸ்தவர்களை ''நீங்கள் நன்மை செய்வதில் ஞானிகளாகவும், தீமை செய்வதில் பேதைகளாகவும் இருக்கவேண்டுமென விழைகிறேன்'' என்று தூண்டுகிறார். ஒரு வேளை வாய்மையுள்ள, நேர்மையுள்ள கிறிஸ்தவர்கள் நன்மையையும் தீமையையும் இனம் கண்டுகொள்ளக் கற்றுக் கொண்டு, தங்கள் ஒழுக்கத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பது அவரது நம்பிக்கையாக இருக்கும். யோவா 1:47-இன்படி நத்தானியேலிடம் கபடு இல்லாததால் இயேசு பாராட்டினார். 1 பேதுரு 2:22-இல் 'அவர் பாவம் எதுவும் செய்ததில்லை, அவரது வாயினின்று வஞ்சகம் வெளிப்பட்டதில்லை' என்று இயேசு பாராட்டப்படுகின்றார். அதே திருமுகத்தின்படி 3:10-இல் ''வாழ்வை விரும்பி இன்ப நாளைச் சுவைக்க விழைபவன் தீமையினின்று தன் நாவைக் காத்துக் கொள்க; வஞ்சகப் பேச்சினின்று தன் வாயைக் காத்துக்கொள்க'' என்று குறிப்பிடப்படுகிறது. ஆதி 27:35-இன்படி 'யாக்கோபு கபடமாய் வந்து உனக்கு உரித்தான ஆசிரைப் பெற்றுச்சென்றுவிட்டானே' என்று ஏசாவிடம் ஈசாக்கு ஒத்துக்கொண்டார் (காண் சங் 119:78; பழ 26:26).

**கபத்தா** (GABATHA)

அகசுவேரு அரண்மனையில் தங்கியிருந்த அரண்மனைக் காவலரும் அரசனுக்கு எதிராகச் சதி செய்த இரு அண்ணகர்களில் ஒருவரும் ஆவார். இவர்களுடைய சதியை மோர்தெக்காய் கண்டுபிடித்து வெளிப்படுத்தினார் (எஸ்த 12:1).

**கபத்தா** (GABBATHA - திறந்தவெளி, உயர்ந்த இடம்)

கபத்தா என்ற அரமேயச் சொல்லுக்குக் கல்தளம் என்பது பொருள். திறந்தவெளி, அல்லது உயரமான இடம் என்றும் பொருள் வரும். எருசலேமில் ஏரோதின் அரண் மனைக்கு முன்னால் உள்ள உயரமான இருக்கை அமைந்த கல்பாவப்பட்ட இடத்தைக் கபத்தா என்று கூறுவார்கள்.

இந்தச் சொல் விவிலியத்தில் ஒருமுறை மட்டுமே பயன்பட்டுள்ளது (யோவா 19:13). இதற்கு இணையான கிரேக்கச் சொல் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. போந்தியு பிலாத்தின் முன்னிலையில் இறுதித் தீர்ப்புக்காக இயேசு நின்ற இடம் இதுவே. இது ஆளுநர் தங்கும் இடத்திற்கு வெளியில் இருந்தது. இந்த இடம் உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லை. மத்திய காலத்திலிருந்து ஏரோது கட்டிய கோட்டையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது என்றனர். தியடோசியஸ் ''பிலாத்தின் வீடு'' என்றழைக்கும் ஏரோதின் அந்தோனியாக் கோட்டை அருகில் இந்த இடம் இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் கல்பாவப்பட்ட இடம் காணப்படவில்லை. அருகிலுள்ள ''சியோனின் தாய்'' என்ற துறவியர் இல்லத்தின் நிலவறையில் காணப்படும் கல்பாவப்பட்ட தளம் இக்கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. இவ்விடத்தில் 2000 ச.மீ.பரப்புள்ள கல்தளம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஓரத்தில் ''இதோ மனிதன்'' என்ற தோரண வளைவு உள்ளது (19:5). இங்குக் காணப்படும் கற்கள் ஒரு ச.மீ.பரப்பும் 30 செமீ. பருமனும் உடையவை. அவற்றின் மேல் விளையாட்டுக்கோடுகள் காணப்படுகின்றன. இந்தத்தளம் ''கசையடித்'' துறவியர் இல்லம்வரை பரவியுள்ளது. இயேசுவின் காலத்தில் இந்த இடம் நகரின் வடசுவருக்கு வெளியில் அமைந்திருந்தது. பிற்காலத்தில் முதலாம் ஏரோது அகிரிப்பாவும், அதிரியானும் கட்டிய சுவர்கள் இதை அந்தோனியாக் கோட்டையின் வடகிழக்குப் பகுதியில் உள்ளடக்கின. வேறு சிலர், கல்தளத்தையும் தோரண வளைவையும் அதிரியான் காலத்தில் கட்டப்பட்டதாகக் கணித்து, கபத்தாவை நகரின் மேல்பகுதியில் அடையாளம் காட்டுகின்றார். இது அர்மேனியன் கிழக்குத்திருச்சபைக் குருகுலமடத்திற்கருகில் இக்கால யாப்பா வாயிலுக்குக் கிழக்கே உள்ளது.

**கபயா** (HABAIAH - யாவே மறைத்து வைத்தார்)

அடிமைத்தனத்தினின்று செருபாபேலோடு திரும்பிய கபயாவின் மக்கள் தங்கள் குருத்துவப் பாரம்பரியத்தை எண்பிக்கமுடியாததால் குருத்துவப் பணியினின்று நீக்கப்பட்டனர் (எஸ் 2:61; நெக 7:63).

**கபர்ச்சலாமா** (CAPHARSALAMA)

யூதா மக்கபேயுவுக்கும், சீரியாவின் தளபதியான நிக்கானோருக்கும் இங்குப் போர் நடைபெற்றது. இதில் யூதர்கள் வென்றார்கள். நிக்கானோர் ஐநூறு வீரர்களை இழந்தார் (1 மக் 7; 31-32). இந்தப் போரானது 2 மக் 4;6 -இல் சொல்லப்பட்டுள்ள தெசாவில் நடந்த போராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எருசலேமிற்கு வடமேற்கே ஏறக்குறைய 10 கி.மீ.தொலைவில் பெத்துகோரானுக்கு அருகிலுள்ள கிர்பெத்செல்மா என்ற இடமாக இது இருக்கலாம் என்று வேறு சிலர் கருதுகின்றனர்.

**கபிசேல்** (KABZEEL - இறைவன் ஒன்று சேர்ப்பாராக)

இது யூதேயாவின் தென் கிழக்குக் கோடியில் ஏதோமின் எல்லை ஓரமாக உள்ள ஊர் (யோசு 15:21). தாவீது, சாலமோன் மன்னர்களின் தலைமை அதிகாரிகளுள் ஒருவனான பெனாயாவின் சொந்த ஊர் (2 சாமு 23:20; 1 நாள் 11:22). இந்நகரானது பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் யூதேயர்களால் மீண்டும் குடியேறப்பட்டது. இது இருந்த இடம் தெரியவில்லை.

**கபிரி** (CHABRIS)

இவர் கொதொனியேவின் மகன். பெத்தூலியாவில் உள்ள மூப்பர்களுள் ஒருவர். இவர்களிடம்தான் யூதித்து உதவி கேட்டுச் சென்றார் (யூதி 6:15; 8:10; 10:6).

**கபிரியா** (GABRIAS)

கபேலின் சகோதரர் அல்லது தந்தை. கபேலிடம் தோபித்து விட்டுச்சென்ற பணத்தை வாங்கிவருவதற்காகத் தோபியா அனுப்பப்பட்டார் (தோபி 1:14; 4:20).

**கபிரியேல்** (GABRIEL - இறைவன் ஆற்றலுடையவர்; இறைவனது மனிதர்)

இந்த வான தூதர் தானியேலுக்குக் காட்சியில் தோன்றி இறைவாக்கை விளக்குகிறார் (தானி 8:6). வரவிருக்கும் தீர்ப்பின் நாளை வெளிப்படுத்தவும், காட்சியை விளக்கிக் காட்டவும் அனுப்பப்படுகிறார் (8:17). தானியேலுக்கு விவேகத்தையும் மெய்யுணர்வையும் அளிக்க அவர் வந்தார் (9:22). பிற்கால இலக்கியங்களில் அவருடைய பெயரும் அலுவலும் சிறப்புப் பெறுகின்றன. கபிரியேல் தூதர் விண்ணிலிருந்து பார்ப்பவர். கடவுளின் மகிமை மிக்கவர்களில் ஒருவர்; பரிசுத்த அதிதூதர். கடவுளின் இடப்பக்கம் அமர்ந்திருப்பவர். வெளிப்படுத்துபவர் மட்டுமின்றிப் பரிந்துபேசுபவரும் ஆவார். சில சமயம் கடுமையாகச் செயல்படுவார். தீயவர்களை அழித்து, இறைவனுக்காகப் பழிவாங்குகிறார் (ஏனோக்கின் நூல்கள்). புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துபவராகவும் உறுதி அளிப்பவராகவும் காட்டப்படுகிறார். திருமுழுக்கு யோவானின் பிறப்புச் செய்தியை அறிவிக்கிறார் (லூக் 1:11-20). மரியாளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று அறிவிக்கிறார் (லூக் 1:26-35). அவர் கடவுளின் நிலையில் இருப்பதால் ''பயப்படாதே உன் செபம் கேட்கப்பட்டது'' என்றும், ''அஞ்சாதே, நீ இறைவனிடம் சலுகை பெற்றுள்ளாய்'' என்றும் உறுதி அளிக்கிறார்.

இறைதூதர் இருக்கின்ற இடத்தில் இறைவன் முழுமையாகப் பிரசன்னமாயிருக்கிறார். கபிரியேல் தூதர் அதிகாரத்தாலும், அருள் தன்மையாலும் அனுப்பியவரையே வெளிப்படுத்துகிறார். அறிஞர் சிலர் திருவெளி 8:2-இல் வரும் ஏழு வானதூதர்களில் கபிரியேலும் ஒருவராவார் என்று கருதுகின்றனர்.

**கபீரு** (HABIRU)

ஒரு மக்கள் கூட்டத்தின் பெயர். இச்சொல்லுக்குரிய இரண்டு விதமான உச்சரிப்புகளில் எது சரியானது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆதலால் இரண்டு பெயருமே அதற்கு விளங்குகிறது.

ஊரின் மூன்றாவது அரச பரம்பரையில் கி.மு.2050 ஆண்டளவில் இந்தக் கபீரு என்ற சொல் காணப்படுகிறது. அதிலிருந்து மேற்காசியாவில் காணப்படும் ஏடுகளில் இச்சொல் இடம் பெறுகின்றது.

கபீருகளின் சமூக வாழ்க்கையைப் பொறுத்தவரையில் ஏதாவது ஓர் அரசனது பணியில் குறிப்பாகப் போர் வீரர்களாகப் பணிசெய்கின்றனர். அவர்களின் பெயர்கள் பெரும்பாலும் மேற்குச் செமித்தியப் பெயர்களாக உள்ளன. சில பெயர்கள் அக்காதியப் பெயர்களாகவும் உள்ளன; செமித்தியப் பெயர்களைச் சாராதவைகளாகவும் உள்ளன. இது இச்சொல் ஓர் இனப்பெயரன்று, ஒருவகைச் சமூகக் குழுவையே குறிக்கிறது என்று கருத ஆய்வாளர்களைத் தூண்டியுள்ளது. இவ்வாறு போகாஸ்கோய் பட்டியலில் கபீரு என்பது ஒரு சமூக வகுப்பைக் குறிக்கிறது. அவர்கள் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பட்டிருக்கிறார்கள். சுதந்தரக் குடிமகனுக்கும், அடிமைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் ஒரு வகையினராக இருந்திருக்கிறார்கள். இன்னும் சில சுவடிகளில் கபீரு இனத்தவரின் கடவுள்கள் குறிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் ஒரு தனி வகுப்பினரைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது.

சில சுவடிகளில் இது இனப்பெயராகத் தோன்றுகிறது. இவ்வாறு மாரி ஏடுகளும், அலலாகு ஏடுகளும் குறிக்கின்றன. இதிரிமி என்ற அரசர் கபீரு போர் வீரர்களிடையே ஏழு ஆண்டுகளாக இருந்தார். அவர்கள் குழுக்குழுவாக வாழ்ந்து வந்தார்கள். அமர்னா ஏடுகளில் கபீரு மக்கள் மேற்கு செமித்தியப் பெயர்களைக் கொண்டவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள். மேலே கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அவர்கள்

சில இடங்களில் ஒரு சமூகக் குழுவாகவும் மற்ற இடங்களில் இனக்குழுவாகவும் தோன்றுகின்றனர். மூலத்தில் குழுவைக் குறித்த பெயர் பின்பு இனத்தைக் குறிக்கும் பெயராக மாறியிருக்கலாம். இந்த வளர்ச்சி, கானானியர் என்ற பெயரின் வளர்ச்சிக்கு ஒத்ததாகும். ஆதி 14-இல் ஆபிரகாம் எபிரேயர் என்றழைக்கப்படுகிறார். இது இனப்பெயராகவும், சமூகக்குழுப்பெயராகவும் இருக்கலாம். ஆனால் பழைய ஏற்பாட்டில் எபிரேயர் என்ற பெயர் பொதுவாக ஓர் இனப்பெயராகும். ஒரு வேளை எபிரேயர் என்பதன் அக்காதியவடிவம் கபீராக இருக்கலாம்; எபிரேயர் கபீருவின் ஒரு பிரிவினராக இருக்கலாம்.

கபேல் *(GABAEL)*

*1.* தோபித்தின் ஒரு முன்னோர் *(தோபி 1:1).*

*2.* கபிரியாவின் புதல்வன் அல்லது சகோதரன். இவர் இராகியுவில் வாழ்ந்து வந்தார். இவரிடம்தான் தோபித்து 14 தாலந்து வெள்ளியை விட்டு வைத்திருந்தார். பின்பு அதைப் பெற்றுவரத் தோபியாவை அனுப்பினார் *(தோபி 4:1-20; 5:6;10:2)* இரபேல் இராகியு சென்று, கபேலைக் கண்டு அவரது பத்திரத்தை அவரிடம் கொடுத்து, பணம் முழுவதையும் பெற்றுக்கொண்டு அவரைத் தம்மோடு தோபியாவின் திருமண விருந்திற்கு அழைத்து வந்தார் *(9:2-6).*

கபோன் *(CABBON - சுற்றிப்போர்த்து, சுற்றிவளை)*

இலாக்கீசிலுள்ள செப்பேலாவில் யூதாவைச் சேர்ந்த ஓர் ஊராகும் *(யோசு 15:40).* அனேகமாக இலாக்கீசிற்குக் கிழக்கேயுள்ள கெபிராவாக அடையாளம் காட்டப்படலாம். சில சமயங்களில் இதுவும் மக்கபேனாவும் ஒன்றாகும் என்று கருதப்படுகிறது *(1 நாள் 2:49).*

கப்பதோக்கியா *(CAPPADOCIA)*

இது, புதிய ஏற்பாட்டின்படி, சிறிய ஆசியாவில் கிழக்குப் பகுதியிலிருந்த ஒரு பெரிய உரோமை மாகாணம்.

கப்பதோக்கியாவின் எல்லைகள் காலப்போக்கில் பெருமளவு மாறியிருக்கின்றன; ஆனால், பொதுவாகப் போந்துவையும் காவி ஆற்றோடு கூடிய மலைப்பகுதியையும் தெற்கு எல்லையாகவும், கலாத்தியாவையும் இலிக்கவோனியாவையும் கிழக்கு எல்லையாகவும், சிலிசியாவையும் தவுரஸ் மலையையும் வடக்கு எல்லையாகவும், அர்மேனியாவையும் யூப்பிரத்திசு ஆற்றையும் மேற்கு எல்லையாகவும் கொண்டிருந்தது.

பாரசீகர் காலத்திலும், செலூக்கியர் காலத்திலும் இப்பகுதி குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. உரோமையர் இதை ஆண்ட காலத்தில் இதற்கு ஒரு சிற்றரசன் இருந்தான். இதனுடைய கடைசி அரசனான அர்கெலாவு என்பவன் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு உரோமைக்கு அழைக்கப்பட்டான். இவன் கி.பி. 17-இல் இறந்த பிறகு, இஃது ஓர் அரச மாகாணமாக மாற்றப்பட்டு, ஆளுநரின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இச்சமயத்தில் இதனுடைய பரப்பளவு 33000 சதுர மைல்கள். பிறகு வந்த பேரரசர்களின் ஆட்சியின்கீழ் இதன்பரப்பளவு இன்னும் வளர்ந்தது; இது முக்கியமான எல்லை மாகாணமாகியது.

கப்பதோக்கியா ஒரு கரடுமுரடான மலைப்பகுதியாகும்; சில நகரங்களையே கொண்டிருந்தது. அவற்றில் முக்கியமானவை தியான், மசாக்கா (செசரியா) ஆகியவையாகும். இதில் மரங்கள் இல்லை, ஆனால் விளைச்சலுக்கு, சிறப்பாக கோதுமைக்குப் பெயர்போனது. கால்நடைகளுக்கும், குதிரைகளுக்கும் புகழ் வாய்ந்தது. மஞ்சள் களிமண், வெண்கலம், அப்பிரகம், வெள்ளி, ஈயம் போன்ற தாதுப்பொருட்களை ஏற்றுமதி செய்தது. சில பகுதிகளில் அருமையான திராட்சைரசம் தயாரிக்கப்பட்டது. இங்குச் சென்ற சாலைகளின் பொருட்டு, போர் முக்கியத்துவம் வாய்ந்து திகழ்ந்தது.

கி.மு.2-ஆம் நூற்றாண்டிலேயே கப்பதோக்கியாவில் குறிப்பிடத்தக்க யூத சமுதா

யம் இருந்தது என்று கப்பதோக்கிய அரச னான, அரியாரதேசுக்கு எழுதப்பட்ட கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது (1 மக் 15:22). கப்பதோக்கியாவிலிருந்து யூதர்கள் ஐம்ப தாம்நாள் விழாவின்போது எருசலேமுக்கு வந்திருந்தனர் (அ.ப.2:9). முதல் நூற்றாண் டின் முடிவிற்குள் கிறிஸ்துவ மதமானது கப்பதோக்கியாவிலிருந்து போந்துக்குப் பர வியது (1 பேதுரு 1:1). கி.பி.4-ஆம் நூற்றாண் டிற்குள் புதிய மதம் செழிப்புற்று வளர்ந் திருந்ததாகத் தெரிகிறது. கப்பதோக்கியத் திருச் சபை சிறந்த தலைவர்களைக் கொண்டிருந் தது. அதன் தலைநகரான செசரியா (மசக்கா) கிறிஸ்தவ மதத்தின் முக்கிய மையங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

### கப்பதோரியர் (CAPHTORIM)

கப்பதோரில் வாழ்ந்த மக்கள் (ஆதி 10:14; உப 2:23; 1 நாள் 1:11)

### கப்பதோர் (CAPHTOR)

விவிலியப் பாரம்பரியத்தின்படி இங்கு தான் பெலிஸ்தியர்கள் முதன்முதலில் தோன் றினார்கள்.

அக்காதிய ஏடுகளில் இப்பெயர் முதலில் கப்பதாரா என்று உள்ளது. மாரி ஏடுகளிலும், அக்காதிய, உகாரித்து வாசகங்களிலும் இப் பெயர் காணப்படுகிறது. மிகத் தொன்மை யான புவியியல் குறிப்பு, இது பெருங்கட லுக்கு அப்பால் அமைந்துள்ளதாகவும், அக் காதின் அரசன் சார்கோனின் ஆதிக்கத்திற்குட் பட்டதாகவும் விவரிக்கப்படுகிறது.

கெப்டியு என்ற வார்த்தை கி.மு.2200-1200க்கு இடைப்பட்ட எகிப்திய ஏடுகளில் காணப்படுகிறது. எகிப்திய இயல் அறிஞர்க ளின் கருத்துப்படி இது கப்பதாரா அல்லது கப்பதோரின் எகிப்திய வடிவமாகும். புவியி யல், வரலாறு, இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் இது கிரேத்துத் தீவாகும் என்பது தெளிவு. இதனுடன், கி.மு.2200-க்குப் பிறகு எகிப்து பொருளாதார உறவு களை வைத்திருந்தது.

விவிலியப் பாரம்பரியத்தில் பெலிஸ்தியர் கள் கப்பதோரிலிருந்து வந்தவர்களாவர் (எரே 47:4; ஆமோ 4:7). உப 2:23-இல் அவ்வியர்களை விரட்டியடித்த பெலிஸ்திய ருக்குப் பதிலாகக் கப்பதோரியர் என்ற பெயர் பயன்படுத்தப்படுகிறது. ஆதி 10:14 (1 நாள் 1;12)-இல் கப்பதோரியர் எகிப்திய வழித்தோன்றல்கள் என்றும் பெலிஸ்தியர் கசுலுகியர் என்றும் விவரிக்கப்படுகிறது. இந்த இரு பாரம்பரியங்களுக்கிடையே பல பிரச்சனைகள் உள்ளன; ஏனெனில் பெலிஸ் தியர்கள் கிரேத்தில் தங்கியிருந்ததற்கு ஒரு ஆதாரமுமில்லை. புதைபொருள் ஆராய்ச்சி களிலிருந்தும், இலக்கிய மூலங்களிலிருந் தும் பெலிஸ்தியர்களைப் பற்றி அறிந்தவை களிலிருந்து, இவர்கள் கிரேத்தில் தங்கினார் கள் என்பதற்கு அறிகுறியில்லை. சில வல்லு நர்கள் கப்பதோரானது சிறிய ஆசியாவின் கடற்கரைப் பகுதி என்றும் அல்லது கார்ப தோஸ் தீவு என்றும் கூறுகின்றார்கள். ஆனால் இவைகளுக்கு ஆதாரமில்லை.

மேற்சொன்ன இருபாரம்பரியங்களுக் கிடையே உள்ள முரண்பாட்டை விளக்க, சில பெலிஸ்தியர்கள் கிரேத்தைவிட்டு, கசுலுகி யர் வாழ்ந்த நைல்நதிக் கழிமுகத்தில் குடியே றினர். பின்பு பாலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியான பெலிஸ்தியாவில் குடியேறினர் என்று அறிஞர் சிலர் ஏற்றுக்கொள்வர்.

### கப்பம், திறை (TRIBUTE)

வெற்றிபெற்ற நாடு, தோற்கடிக்கப்பட்ட நாட்டை வலுக்குறையச் செய்வதற்காக அத னிடமிருந்து பணமாகவோ பொருளாகவோ கோரும் பெரும் தொகையாகும்.

மேற்காசியாவில் இது சாதாரண வழக்க மாகும். கானான் நாட்டில் குடியேறிய தொடக்கத்தில் இஸ்ராயேலர் மோவாபிய ருக்குக் கப்பம் செலுத்தினர் (நீதி 3:15-18). பிற்காலத்தில் தாவீது மோவாபியரிடமிருந் தும் (2 சாமு 8:2), சீரியர்களிடமிருந்தும் (8:6) கப்பம் வாங்கினார். சாலமோன் ''யூப்பிரத் திசு தொடங்கிப் பெலிஸ்தியரின் நாடுவரை யிலும், எகிப்தின் எல்லை வரையிலும்

இருந்த நாடுகளிடமிருந்து'' கப்பம் வாங்கினார் (1 அர 5:1; சங் 72:10). நாடு இரண்டாகப் பிளவுபட்டபின் யூதா நாடு பெலிஸ்தியர், அராபியர்கள், மற்றும் அம்மோனியர்களிடமிருந்து கப்பம் பெற்றது (2 நாள் 17:11; 26:8). மெரொதாக்கு - பலதானின் தூதுவர்கள் எசக்கியாவுக்கு ''அன்பளிப்பு'' கொடுத்தனர் (2 அர 20:12). இது ஒருவேளை, இரண்டு நாடுகளில் சிறியதான யூதாவை அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டுவதற்காக இருக்கலாம். இஸ்ராயேல் நாடு அடிக்கடி கப்பம் செலுத்த வேண்டியிருந்தது. ஓசியா அசீரியர்களுக்குக் கப்பம் செலுத்த மறுத்தது அந்நாட்டை முடிவுக்குக் கொண்டுவந்தது (17:3-6).

**கப்பர்நகூம்** (CAPERNAUM - நகூமின் கிராமம்)

கலிலேயாக் கடலின் வடமேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஊர்.

1. இருப்பிடம்:- 'நாகூம்' என்ற நபரின் பெயரால் 'கப்பர் நகூம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டில் இப்பெயர் கொண்ட இறைவாக்கினருக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. யோசிப்பஸ், நற்செய்திகள் அளிக்கும் சாட்சியங்கள் இந்த ஊரின் இருப்பிடத்தைப் பற்றி உறுதியாகக் கூறப் போதியவையல்ல.

இந்த ஊர் இருந்ததாக இரண்டு இடங்கள் குறிக்கப்படுகின்றன. வடமேற்குக் கரையில், கெனசரேத்துச் சமவெளியின் வடகிழக்கு எல்லையிலுள்ள இன்றையக் கிர்பெத்து மின்யே என்ற இடத்திலுள்ள பழங்காலச் சிதைவுகள்தான் இந்த இடம் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. இக்கருத்துக்கு யோசிப்பஸ் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் கெனசரேத்திலுள்ள நீரூற்றுகள் நிறைந்த இடத்தின் பெயராகக் கப்பர்நகூமைக் குறிப்பிடுகிறார். மின்யேவிற்கு அருகில் இரண்டு நீரூற்றுகள் உள்ளன. பயணிகளும் (கி.பி.670) இந்த இடத்தைக் கப்பர்நகூம் என்று அழைத்தாலும், 1931-இல் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் இது ஓர் அரேபியருடைய இடம் என்று நிரூபித்துள்ளன.

கிர்பெத்து மின்யேவிற்கு வடகிழக்கே ஏறக்குறைய 4 கி.மீ. வட கிழக்கிலுள்ள தேல்கும் என்ற இடம்தான் கப்பர்நகூம் என்று இப்பொழுது முடிவாகத் தெரிந்துள்ளது. தியதோசியஸ் (530) காலத்திலிருந்து உள்ள கிறிஸ்துவப் பாரம்பரியம் இதுதான் கப்பர்நகூம் என்று சொல்கிறது.

தேல் கும் ஆனது கடற்கரையில் குறுகிய சமவெளியில் அமைந்துள்ளது. இது நற்செய்திகளில் நகரம் என்று அழைக்கப்படுவதும், அதனுடைய சிதைவுகள் 1 கி.மீ. நீளத்திற்குப் பரவியுள்ளதும் இதன் முக்கியத்துவத்தைச் சுட்டுகின்றன. கிழக்கிலிருந்து மேற்கே சென்ற முக்கிய வணிகச் சாலை இதற்கு அருகில் சென்றது இதைச் செழிப்புற்றதாக்கியது.

2. புராதனப் பொருட்கள்:-

தேல் கும்மின் சிதைவுகளில் எண்கோண அமைப்புடைய ஒரு கட்டடம் உள்ளது. இது பேதுருவின் வீடு என்று காட்டப்படுகிறது. ஆனால் இது ஒரு கோவிலாகப் பேதுருவின் வீட்டின் மேல் கட்டப்பட்டு, எத்தேரியாவால் (385) குறிக்கப்படும் ஆலயமாக இருக்கலாம்.

பாலஸ்தீனத்தில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள செபக்கூடங்களில் ஒன்றுதான் இங்குள்ள சிதைவுகளில் மிகவும் முக்கியமானது. இது முதலில் லூக் 7:5-இல் கூறப்பட்டுள்ள ஒரு கட்டடம் என்று கருதப்பட்டது. இது கி.பி.3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட செபக்கூடமாக இருக்கமுடியாது என்று பின்பு 1905-இல் நடந்த ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இந்தச் செபக்கூடம் 20 மீட்டர் நீளமும், இரண்டு மாடிகளும் கொண்டுள்ளது. இது கண்ணாம்புக் கற்களினால் கட்டப்பட்டுள்ளது.

3. நற்செய்திகள்:-

நற்செய்திகளில் சிறப்பாக இயேசுவின்

கலிலேயப் பணியில், இது மிகவும் முக்கிய மான இடம். இயேசு தம்முடைய பணியைத் தொடங்கியபொழுது, ஏன் நாசரேத்தைவிட்டுக் கடற்கரையிலிருந்து பெரிய நகரமான கப்பர்நகூமிற்குச் சென்றார் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை (மத் 4:13). இவ்விடத்தை இயேசு தம் ''வீடாகக்'' (மாற் 2:1) கருதியதாகத் தெரிகிறது. ஆலயத்தைச் சுத்திசெய்தபின் இயேசுவும், அவருடைய குடும்பமும், சீடர்களும் கப்பர்நகூமிற்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தனர். (யோவா 2:12). பேதுரு, அந்திரேயா ஆகியவர்களுடைய வீடுகள் இங்குதான் இருந்தன (மத் 8:14; மாற் 1:29; லூக் 4:38). கப்பர்நகூமில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவ்விடத்துச் செபக்கூடத்தில்தான் இயேசு பேய்பிடித்தவனைக் குணமாக்கினார் (மாற் 1:21-28; லூக் 4:31-38). இந்தச் செபக்கூடத்தைக் கட்டியதாகச் சொல்லப்பட்டுள்ள நூற்றுவர் தலைவனின் ஊழியனைக் குணப்படுத்திய நிகழ்ச்சியிலும் இந்தச் செபக்கூடம் குறிக்கப்படுகிறது (மத் 8:5-13). ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சிக்கும், அதன்பின் அளித்த போதகத்திற்கும் இந்தச் செபக்கூடம் பின்னணியாக அமைகிறது (யோவா 6:16-59).

கப்பர்நகூமில் இயேசு திமிர்வாதக்காரனைக் குணமாக்கினார் (மாற் 2:1-12). யார் பெரியவன் என்பதைப் பற்றிய தர்க்கமும் (மாற் 9: 33-37), வரிசெலுத்துபவரைப் பற்றிய ஆராய்ச்சியும் (மத் 17;24-27),செபக்கூடத்தலைவன் யாயீரின் மகள் உயிர்பெற்றதும் இங்குதான் நடைபெற்றன (மாற் 5:21-24. 35-43). இயேசு ஓர் அதிகாரியின் மகனைக் குணப்படுத்தினார் (யோவா 4:46-54). இயேசுவின் பணியின் மையமாகவும், பலரைக் குணப்படுத்திய இடமாகவும் இந்நகரம் விளங்கியது (லூக் 4:23). இது இயேசுவினுடைய வீடாக இருந்திருந்ததால், தன்னுடைய மகத்தான செயல்களைக் கண்டும் மனம் திரும்பாத நகர்கள் மேல் இயேசு சொன்ன சாப மொழிகளில் இதுவும் பங்கேற்றது (மத் 11:23; லூக் 10:15).

## கப்பலின் பாய் (SAIL)

இது நூலினால் நெய்யப்பட்ட கடினமான விரிப்பாகும். இது காற்றை வாங்கித் தண்ணீரில் படகு உந்திச் செல்வதற்குப் பெரிதும் பயன்படுகிறது.

கலிலேயாக் கடலில் படகுகள் சிறிய பாய்களைக் கொண்டுள்ளதாய் இருந்தன. மேலும் துடுப்புகளும் உண்டு (லூக் 8:22-23).

விவிலியக் காலத்தில், மத்தியதரைக் கடலில் உள்ள கப்பல்கள் இரண்டு பாய்களைக் கொண்டிருந்தன. இது சதுர வடிவம், செவ்வக வடிவம் கொண்டிருந்தது. அ.ப. 27:40-இல் வரும் வார்த்தை முன்பாயைக் குறிக்கிறது. இது அக்கப்பல் இரு பாய்களைக் கொண்டது எனச் சுட்டுகிறது. கப்பல்கள் காற்றுக்கு முன்னால் ஓடிக் கொண்டிருக்கும் போது, நல்ல கப்பல் தலைவன் காற்றடிக்கும் திசை நோக்கிச் செல்ல முடியும். இது பொதுவானதல்ல. காற்றினுடைய முக்கியத்துவம் அ.ப.27: 4.7.15-இலிருந்து தெரிகிறது.

## கப்பலின் மேல்தளம் (DECK)

இது கப்பலில் பக்கத்துக்குப் பக்கமாகச் சென்று தளமாகவும் கூரையாகவும் பயன்படும் தட்டடுக்காகும். எசக்கியேல் ஆகமத்திலே யானைத் தந்தங்களைப் பொருத்திக் கப்பலின் மேல்தளத்தை அமைத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது (எச 27:6).மேலும் நோவாவின் பெட்டகம் மூன்று தளத்தைக் கொண்டதாக இருந்தது (ஆதி 6:16).

## கப்பலோட்டி, மாலுமி (SAILOR)

பவுலை உரோமைக்குக் கொண்டு சென்று கொண்டிருந்த கப்பல், மால்தாவை நெருங்கியது. கரை அருகிலிருப்பதைத் தெரிந்து கொண்ட மாலுமிகள் நங்கூரம் இறக்குவது போலச் சிறு ஓடங்களைக் கடலில் இறக்கினர். ஆனால் படைவீரர் படகின் கயிறுகளை அறுத்து விட்டனர். அப்போஸ்தலர் பணி நூல், மாலுமிகள் படகிலிருந்து தப்பிக்க வழி தேடினர் என்கிறது. ஆனால் ஏன் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் சிறிய

படகு இல்லாமல் கரையேற முடியாது (அ.ப.27:27.30).

திருவெளிப்பாட்டில் யோவான், உரோமையின் அழிவைப் பற்றிக் கப்பல் தலைவர்களும் மாலுமிகளும் புலம்புவதைப் பற்றிய காட்சி கண்டார். அதில் ''கடலில் கப்பல் செலுத்திய அனைவரையும் தன் செல்வ வளத்தால் செல்வம் மிக்கவராக்கிய இம் மாநகர்'' என்று இருக்கிறது (திருவெளி 18:19).

**கப்பல்களும் கப்பலோட்டுதலும்** (SHIPS AND SAILING)

1. இஸ்ராயேலிலும் மேற்காசியாவிலும்:- உலகின் மற்றப் பகுதிகளைப் போல், பழங் கால மேற்காசியாவில் நீரில் போக்குவரத்துக்குப் படகுகளும் மரங்களாலும் நாணலாலும் செய்யப்பட்ட கட்டுமரங்களும் பயன் பட்டன. கி.மு.மூன்றாம் ஆயிரமாண்டை ஒட்டி எகிப்திலும் மெசப்பொத்தாமியாவிலும் நாணல் கட்டுகளைப் பிணைத்து ஓரளவு திறனுடைய படகுகள் செய்யப்பட்டன. இக்காலத்தில் அனத்தோலிய மற்றும் சீரியாவோடு கடல் வழித் தொடர்பு கொண்டிருந்த கிரேத்தும் சைப்பிரசும் படகுகளின் வளர்ச்சியில் மையங்களாகத் திகழ்ந்தன. கி.மு.2500-ஐ ஒட்டிக் கடலில் செல்லக்கூடிய கப்பல்கள் நாணல்கட்டுகளைப்போல் இணைக்கப்பட்ட பலகைகளால் செய்யப்பட்டன. அல்லது பெரும் மரக்கட்டைகளைக் குடைந்து பலகைகளால் அடைக்கப் பட்டுச் செய்யப்பட்டன. இத்தகைய கலங்கள் ஒரே ஒரு சதுரப்பாயையும் பத்திலிருந்து இருபது துடுப்புகளையும் கொண்டிருந்தன. நுண்ணிய கலை வளர்ச்சியால் பெரிய கப்பல்கள் கட்டுவது ஏதுவாயிற்று. ஒரு முக்கிய முன்னேற்றம் கப்பலின் அடிக்கட்டை சேர்க்கப்பட்டதாகும். சதுரப் பாய்களும் துடுப்புகளும் பழங்காலம் முழுவதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. துடுப்பு வலிப்போரின் எண்ணிக்கை கப்பல்களின் நீளத்தோடு மட்டுமல்லாமல் துடுப்புகளின் கூடுதலான வரிசையோடும் அதிகரித்தது.

மத்தியதரைக்கடலில் பெனிக்கியர்கள் தான் முதல் பெரிய கடல் வணிகர்கள். இவர்களின் கடல் வாணிபத்தில் இஸ்ராயேலின் தொடக்ககாலப் பங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது (ஆதி 49:13; நீதி 5:17). தாவீது, சாலமோன் அரசர்கள் காலத்தில் இஸ்ராயேல் பெனிக்கியர்களின், குறிப்பாகத் தீரியரின், திறமையை நம்பியிருந்தது (1 அர 5:9; 10:11). அக்காபா வளைகுடாவிலிருந்த ஏசியோன் கெபேருக்குத் தெற்கிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்காகவும் (9:26-28) மத்தியதரைக்கடற்கரையிலிருந்து தார்சிசுக்குக் கப்பல் வழியாகச் செல்லவும் (10:22) சாலமோன் ஒரு கப்பற்படையைக் கட்டியிருந்தார். ஆனால் பெனிக்கிய மாலுமிகளைப் பயன்படுத்தினார். இந்தப்படையைக்கொண்டு எகிப்திலிருந்து வந்த வியாபாரத்தையும், தெற்கிலிருந்து சீரியாவுக்கும் வடக்கில் அனத்தோலியாவுக்கும் நடந்த வியாபாரத்தையும் சாலமோனால் கட்டுப் படுத்த முடிந்தது (10:29). பிற்காலத்தில் யூதாவின் அரசன் யோசபாத்து தெற்கில் இந்த வியாபாரத்தைப் புதுப்பிக்க முயற்சி எடுத்தார். ஆனால் வெற்றி பெறவில்லை (22:48).

ஒரு குறுகிய காலத்திற்கே இஸ்ராயேல் கடற்பயணம் செய்யும் நாடாகத் திகழ்ந்தது. மற்றபடி, கடல் இஸ்ராயேலர்களுக்கு அச்சம் தரும் இடமாகும் (சங் 107:23-30; ஏச 51:15; 57:20; எரே 31:35). தார்சிசு போன்ற கடலுக்கு அப்பால் உள்ள இடங்களின் பெயர்கள் தெளிவில்லாமல் பயன்பட்டன; சில சமயம், வணிகர்களுக்கு மட்டும் தெரிந்திருந்த தூரமான இடங்களை உருவகமாகக் குறித்தன (1 அர 10:22; 22:48; சங் 72:10; எச 38:13).

கடல் வியாபாரத்தாலும், வியாபாரக் குடியிருப்புகளை ஏற்படுத்துவதாலும் பெனிக்கியா தொடர்ந்து வளர்ச்சியுற்றது. அவர்கள் வியாபாரத்தால் மிகுந்த செழிப்புற்றிருந்ததாகக் கருதப்பட்டது (சங் 45:12-13; செக் 9:3). நெபுக்கதுனேசாரால் தோற்கடிக்கப்படும் வரை பெனிக்கியா முக்கிய துறைமுகமாக விளங்கியது. தீர் நகரம் பற்றிய எசக்கியேலின் புலம்பல், பெனிக்கியர்களின் பரந்த வியாபாரத்தைப் பற்றிச் சித்தரிக்கிறது (எச

*கப்பல்களும் கப்பலோட்டுதலும் (தொடர்ச்சி)*

*26:1-28:19; ஏச 23; யோவே 3:4-8).* காலப் போக்கில் பெனிக்கியா கிரேக்கர்களோடும் உரோமையர்களோடும் போட்டியிடவேண்டியிருந்தது. உரோமையர் பிற்காலத்தில் மத்தியதரைக் கடலில் ஏகபோக உரிமை கொண்டாடினர். தீரைப்பற்றிய எசக்கியேலின் புலம்பலைப் போன்று, பாபிலோனைப் (உரோமை) பற்றித் திருவெளி, 18-இல் வரும் புலம்பல் அந்நகர் கடல்வியாபாரத்தில் கொண்டிருந்த ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

2. புதிய ஏற்பாடு:- பவுல் பெரும்பாலும் சரக்குக் கப்பல்களில் பயணம் செய்தார் *(2 கொரி 11:25).* செசரியா பிலிப்பியிலிருந்து உரோமைக்குச் செய்த பயணம் பற்றிய விவரிப்பு பழங்காலத்தில் கப்பலோட்டுதல் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு முக்கியமான ஏடாகும் *(அ.ப.27:1-28:14).* அவரது குழு முதலில் பயணம் செய்த ''அதிராமித்தியக் கப்பல்'' *(27:2)* ஒரு சிறிய கப்பலாக இருந்திருக்கலாம். இது சிரியா மற்றும் சிறிய ஆசியாக் கடற்கரையோரங்களை ஒட்டியே பயணம் செய்தது. இந்தப் பயணத்தில் மேற்கிலிருந்து அடித்த காற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டியிருந்தது *(27:4).* இலிக்கியாவிலுள்ள மீராவிலிருந்து இச்சிறு கப்பல் புறப்பட்டு மேற்கு நோக்கிப் பயணம் செய்து, பிறகு வடக்கு நோக்கித் துறைமுகம் துறைமுகமாகத் தங்கி அதிராமித்தியம் நோக்கிப் பயணம் செய்தது. இங்குப் பவுலின் குழுவினர், எகிப்திலிருந்து உரோமைக்கும் மற்றக் கோவில்கள் உள்ள நகரங்களுக்கும் தானியங்களைச் சுமந்து சென்ற ஒரு கப்பலுக்கு மாற்றப்பட்டனர். இக்கப்பலிலும் பல பயணிகள் இருந்தனர் *(27:5-6.37).* இக்கப்பலும் சிறிய ஆசியாக் கடற்கரையை ஒட்டி வடக்கு நோக்கிப் பயணம் செய்திருக்கவேண்டும். கினிதுவில் எதிர்காற்றால் பயணம் முன்னேற முடியவில்லை. ஆகவே கப்பல் தெற்கு நோக்கிக் கிரேத்துவுக்குச் சென்று பாதுகாப்புப்பெற்றது. கிரேத்தின் மேற்குக் கோடித் துறைமுகமான செந்துறை என்ற இடத்தில் கப்பல் நங்கூரம் இறக்கியது. ஏனெனில் இவ்விடத்தை நோக்கிக் கப்பல் பாதுகாப்பாய்ப் பயணம் செய்ய முடிந்தது *(27:7-8).*

கப்பலோட்டுதல் குளிர்காலத்தில் முடியாததாகவும், இலையுதிர் காலத்தில் கடினமானதாகவும் இருந்தது. ஏற்கெனவே அது அக்டோபர் மாதமாய் இருந்ததால், பயணம் செய்து அனுபவப்பட்ட பவுல், கப்பல் வசந்த காலம் வரை அங்குக் காத்திருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார் *(27:9-10).* குளிர்காலத்தில் தங்குவதற்குச் செந்துறை ஏற்ற துறைமுகமாக இல்லாததால், கிரேத்துவில் இன்னும் வடக்கிலிருந்த பேனிக்சு துறைமுகத்துக்குப் புறப்பட்டுச் சென்றது *(27:11-12).* சில நாட்களுக்குப் பயணம் நன்கு அமைந்திருந்தது *(27:13).* ஆனால் வடகிழக்கிலிருந்து அடித்த புயல் இக்கால லிபியா மற்றும் துனிசியாவின் கடற்கரையில் உள்ள ஆழமில்லா வளைகுடாவான சீர்த்தில் தரையில் புதையும் ஆபத்தைக் கொண்டு வந்தது. காற்று கப்பலைத் தீவின் காற்றுக்கு மறைவான இடத்திற்குத் துரத்தியது. ஆனால் இது தற்காலிக ஓய்வையே கொடுத்தது. ஆகவே, சாதாரணமாக் கப்பலின்பின் இணைக்கப்பட்ட உயிர்ப் பாதுகாப்புப் படகைத் தூக்கிக் கட்டினர்; அதன்பின் வடக்கயிற்றினால் கப்பலைச் சுற்றிக்கட்டினர்; கப்பலின் வேகத்தைக் குறைக்கத் தடுப்புப் பலகைகளை இறக்கினர் *(27:14-17).* கடுமையான காற்று தொடர்ந்து அடித்தது. காற்றின் போக்கில் கப்பல் மேற்கு வடமேற்கில் சென்று கொண்டிருந்தது. கடும்புயல் கப்பலை மிகவும் அலைக்கழிக்கவே, கப்பலின் சுமையைக் குறைக்கச் சரக்குகளையும் தளவாடங்களையும் கடலில் எறியத் தொடங்கினர் *(யோனா 1:5).* புயல் வானத்தை மறைத்திருந்ததால் எங்குப் போகின்றார்கள் என்று அறிய முடியவில்லை. கப்பல் மூழ்கிப்போகும் பயம் எழலாயிற்று. தப்பிப்பிழைப்போம் என்ற நம்பிக்கை பயணிகளுக்கு இல்லாமல் போயிற்று *(27:18-20).*

இரு வாரங்களுக்குப்பின் இரவில் மால்தாத் தீவை நோக்கி வந்தனர். விடியும்

மட்டும் நங்கூரமிட்டுக் காத்திருந்தனர். கப்பலின் முக்கிய சரக்கான கோதுமையைக் கடலில் எறிந்தனர் (27:27-38). காலையில், மாலுமிகள் கப்பலைக் கரையோரம் செலுத்தத் திட்டமிட்டனர். எனவே கயிறுகளை அவிழ்த்து நங்கூரங்களைக் கடலிலேயே விட்டுவிட்டுச் சுக்கான் கட்டுகளைத் தளர்த்தினர். முன்பாயை விரித்துக் கப்பலைக் காற்றுக்கிசைவாகக் கரையை நோக்கிச் செலுத்தினர்., ஆழமற்ற ஓரிடத்தில் கப்பல் மோதி, அதன் முன்னணியம் மண்ணில் புதைந்து அசையாமல் போகவே, பின்னணியும் அலைகளின் வலிமையால் சிதைவுறத் தொடங்கிற்று. ஆனாலும் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தனர் (27:39-44).

அடுத்த வசந்த காலத்தில் பவுல் உரோமையை நோக்கிச் செய்த பயணம் அவ்வளவு நிகழ்ச்சிகள் மிக்கதன்று. ஆனால் அது பற்றிய விவரிப்பு கப்பலோட்டுதல் பற்றிய சில விவரங்களைக் கொடுக்கிறது. அலக்சாந்திரியாவிலிருந்து வந்த ஒரு கப்பல் பவுலையும் அவரது குழுவினரையும் மால்தாவிலிருந்து சிசிலியிலுள்ள சிரக்கூசாவிற்குக் கொண்டு சென்றது. ஒரு வேளை இக்கப்பலும் தானியம் ஏற்றிச்செல்லும் சரக்குக் கப்பலாக இருக்கலாம். காற்று சாதகமில்லாமல் இருந்ததால், அங்கு மூன்று நாட்கள் தங்க வேண்டியதாயிற்று. அங்கிருந்து கரையோரமாக இத்தாலிய நாட்டின் இரேகியும் என்ற துறைமுகத்தை அடைந்தனர். அங்கிருந்து ஒரு சாதாரணமான காற்று நெயாப்போலி வளைகுடாவிலுள்ள புத்தயோலி துறைமுகத்திற்குக் கொண்டு சென்றது. அங்கிருந்து பவுலின் பயணம் தரைமார்க்கமாகத் தொடர்ந்தது.

### கப்பல் தலைவன் (SHIP MASTER)

இந்தச் சொல் கப்பல் இயக்குநர், மாலுமி போன்ற பொருளைக் கொடுக்கின்றது. அதே வேளையில் ஒரு சில நேரங்களில் கப்பலின் சொந்தக்காரனையும் குறிக்கும்.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் உரோமை நகரின் அழிவைப் பற்றிக் காட்சி கண்டதை விவரிக்கின்றபோது, உரோமை நகர அழிவிலிருந்து புகை வந்ததைக் கண்ட கப்பல் தலைவர்களும், கடற்பயணம் செய்தவர்களும் ''இம் மாநகருக்கு நிகரான ஒரு நகருண்டோ?'' என்று கூக்குரலிட்டு அழுததாக எழுதியுள்ளார் (திருவெளி 18:17-19).

அ.ப.27:11-இல் வரும் கிரேக்கச் சொல் கப்பலோட்டியையும், கப்பலுக்குரியவனையும் குறிக்கின்றது.

### கப்பற்பாய் இழுப்பு வடக்கயிறு (TACKLE)

கப்பலைச் செலுத்துவதில் பயன்படும் கயிறுகள், மற்றும் கப்பிகள் அடங்கிய சாதனம். ஏச 33:23-இல் இதனால் பாய் மரத்தை நிலையாகப் பிடிக்கவும், விரிக்கவும் இயலாது என்று கூறப்படுகின்றது. அ.ப.27:19-இல் இது, ஆபத்தில் தவிர்க்கக் கூடிய எல்லாத் தளவாடங்களையும் குறிக்கும் எனக் கருதப்படுகிறது.

### கப்பனாத்தா (CHAPHENATHA)

எருசலேம் நகருக்கு வெளியே அமைந்த ஓர் இடம். இது தற்காலத்தில் எது என்று தெரியாது. இந்நகரின் இடிந்துபோன சுவர்களை யூதா மக்கபேயு மீண்டும் கட்டியெழுப்பினார் (1 மக் 12:37).

### கப்பாரயிம் (HAPHARAIM)

இசக்காரின் நகர்களில் ஒன்றாகும் (யோசு 19:19). இந்நகர் சீசாக்குப் பட்டியலில் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீன நகர்களோடு காணப்படுகின்றது (கி.மு.918). பேத்துசானிலிருந்து வடமேற்காக ஏறக்குறைய 14 கி.மீ. தொலைவிலுள்ள எத்தாயிபேயில் இந்நகர் இருந்ததாகக் கூறப்படுகிறது. யுசேபியுவைப் பின்பற்றி அறிஞர் சிலர், உரோன லேகியோவுக்கு (ஒரு வேளை விவிலிய அதூதுரிம்மோன், இக்கால லெயூன்) வடமேற்கில் 9.6 கி.மீ. தொலைவிலுள்ள அல்பாரியாவாக (இக்காலக் கிர்பெத்து ஏல்-பர்ரியே) இதை அடையாளம் காட்டுவர்.

### கமாது (GAMAD - குள்ளர்கள்)

சீரியாவில் கடலோரப் பகுதியில் ஆர்வா

துக்கு அருகில் உள்ள நகரத்திலிருந்து வந்த மனிதர்கள். தீரின் படைவீரர்களில் இவர்கள் இருந்ததாக எசக்கியேல் இறைவாக்கினர், இந்நகருக்கு எதிராகக் கூறிய இறைவாக்கில் குறிப்பிடுகிறார் (எச 27:11). இந்த இடம், அமர்னா ஏடுகளில் குறிக்கப்படும் குமிடி என்ற இடமாக இருக்கலாம்.

**கமாத்தின் நுழைவாயில்** (ENTRANCE OF HAMATH)

வாக்களிக்கப்பட்ட நாட்டின் வட எல்லையாகவும் (எண் 34:5), புதிய காலத்தில் இஸ்ராயேல் கோத்திரத்தாருக்குச் சொந்தமான பகுதியின் வட எல்லையாகவும் அமைந்திருப்பது (எச 47:15; 48:1). சாலமோனின் அரசு எகிப்து ஓடையிலிருந்து கமாத்தின் நுழைவாயில் வரை பரவியிருந்தது (2 அர 4:25; ஆமோ 6:14).

லெபனோன் மலைத்தொடர்களுக்கு இடையில் ஒன் பள்ளத்தாக்கில் இவ்விடம் உள்ளது. கெர்மோன் மலைக்கும், லெபனோன் மலைக்கும் இடையே கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள சமவெளி என்று சிலர் கூறுவர். எண் 13:21-இல் இது தாணுக்கு அருகில் உள்ள இரகோபுவோடு குறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் செதாதோடும் (இக்காலச் சதாது) கசர்-ஏனானோடும் (இக்காலக் கரியத்தேயின்) உள்ள தொடர்பு, இது இரிபிலாப் பகுதியில் இருக்கவேண்டும் எனச் சுட்டுகிறது. லெபோ-கமாத்து என்ற சொல்லின் எழுத்துப் பெயர்ப்பின் அடிப்படையில் பாகால்பேக்குக்கு வட-வட கிழக்கில் 22 கி.மீ. தொலைவிலுள்ள பழங்கால லெபோ (இக்கால லெப்போ) என்ற இடமாகக் கருதுகின்றனர் ஆய்வாளர்கள் சிலர்.

**கமாத்து** (HAMATH - கோட்டை)

1. சீரியாவில் ஒரோன்தெஸ் ஆற்றங்கரையில் முக்கியமான நகரம் இது. இப்பொழுது நகிர் ஏல்-ஆசி எனப்படுகிறது. ஆற்றங்கரையில் இரு மருங்கிலுமுள்ள சமவெளியில் அலெப்போவுக்கும், தமஸ்குவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பூமத்திய ரேகைக்கு 35°-க்குச் சிறிது தெற்காக அமைந்துள்ளது. இந்த இடம் கடல்மட்டத்திலிருந்து 305 மீட்டர் உயரத்தில் உள்ளது. சுதந்தர அரசின் மையமாக அதிக காலம் இது இருந்தது. இதன் தென் எல்லை இஸ்ராயேல் அரசின் வட எல்லையாக அமைந்தது (எண் 13:21; யோசு 13:5; நீதி 3:3; எச 47:15; 48:1).

புதிய கற்காலத்திலே இங்கு மக்கள் குடியேறியிருந்தனர். இது முக்கிய இத்திய நகரமாக விளங்கியது. அமர்னா காலத்தில் எமோரியர்களின் அரச மையமாக இருந்தது. இது புகழ்பெற்ற அபிதி-அசிர்த்தாவால் வெல்லப்பட்டது.

இங்கு இத்திய ஆப்பு எழுத்து வாசகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தாவீது காலத்தில் கமாத்து ஒரு முக்கியமான அரசின் தலைநகரம். அதோடு தாவீது ஒத்துழைத்தார். பின்பு சோபாவின் அரசர் அதாதெசரைத் தாவீது வெற்றிகொண்டார். இதில் கமாத்தின் அரசர் தோய் என்பவர் உதவி செய்ததாகத் தெரிகிறது. சோபாவின் அரசர் தமஸ்குவோடு கூட்டணி வைத்திருந்தார் (2 சாமு 8:3-12). இரண்டாம் எரொபயாம் இஸ்ராயேல் அரசின் பகுதிகளை மீண்டும் நிலைப்படுத்தியபோது மீண்டும் கமாத்தின் எல்லை இஸ்ராயேலின் வட எல்லையாக அமைந்தது (2 அர 14:25). இதற்குத் தமஸ்கு, மற்றும் கமாத்தால் கைப்பற்றப்பட்ட பகுதியை மீளவும் வென்றிருக்கவேண்டும். அசீரியர்களின் அரச ஏடுகளிலும் கமாத்து குறிக்கப்படுகிறது. இரண்டாம் சால்மனேசர் வெற்றிகொண்ட பல நகரங்களுள் கமாத்தும், தமஸ்கும் அடங்கும். 2 - ஆம் சார்கோனின் வெற்றி இந்த உறுதிப்படுத்தியது. இப்போது அசீரிய வழிபாட்டு முறைகள் கமாத்தில் கடைப்பிடிக்கப்பட்டன.

கிரேக்கர்கள் காலத்திலும் கமாத்து முக்கியமான நகரமாக இருந்தது. நான்காம் அந்தியோக்கு காலத்தில் கமாத்து எப்பிபானியா என்று பெயர் மாற்றப்பட்டது. மக்கபேயர்களின் போர்க்காலத்தில், கமாத்து போர் அரங்கமாகச் செயல்பட்டது. 1 மக் 12:24-25-இன்படி தெமேத்திரியுவின் படைகள் இங்

குத் தங்கியிருந்தன. இஸ்லாமியர்கள் காலத்தில், கமாத்து கிறிஸ்தவர்களின் முக்கிய மையமாக விளங்கியது.

இப்போது உல்லாசப் பயணிகளுக்குக் கமாத்து நகரம் ஒரு விருந்தாக அமைந்துள்ளது. இந்தக் கமாத்து நகரம் வாணிபத்திலும், தொழிலிலும் சிறந்து விளங்குகிறது.

2. கமாத்து - சோபா என்றழைக்கப்பட்ட நகரம் (2 நாள் 8:3) அல்லது 1-இல் குறிக்கப்படும் இடத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள சோபா (2 சாமு 8:9; 2 நாள் 8:3-4), ஒரு வேளை எச 47:1 இல் குறிக்கப்பட்டிருக்கும் நகரமாக இருக்கலாம். அநேகமாகச் சோபா நகரமாகவே இருக்கலாம்.

கமாத்து – சோபா (HAMATH - ZOBAH)

சோபாவைக் குறிக்கும் மற்றொரு பெயர். சாலமோனால் வெல்லப்பட்ட ஒரு நகரம் அல்லது ஒரு பகுதி (2 நாள் 8:3). இப்பெயர் நாளாகமங்கள் தொகுக்கப்பட்ட பாரசீகர்கள் காலத்தைப் பிரதிபலிக்கிறது. அப்போது சோபா, கமாத்து மாகாணத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இதற்கு இணையான விவரிப்பான 1 அர 19:17-19-இல் இந்நகரின் பெயரும் நிகழ்ச்சியும் கொடுக்கப்படவில்லை. இது வாசகம் பழுதுபட்டிருக்கலாம் என்று எண்ணத் தூண்டுகிறது. 2 நாள் 8:3-இல் எழுபதுநூல் வாசகம் பேத்து-சோபா அல்லது சோபாவின் வீடு என்று வாசிக்க இடமளிக்கிறது.

கமாலியேல் (GAMALIEL - இறைவனின் சன்மானம்)

1. மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த பெதாசூரின் மகன். பாலையில் அலைந்து திரிந்த போது, தனது கோத்திரத்தின் தலைவராகத் திகழ்ந்தார். முதல் கணக்கெடுப்பில் மோசேக்கு உதவி செய்தார் (எண் 1:10; 2:20; 7:54.59; 10:23).

2. கமாலியேல் ஒரு பரிசேயர். மக்கள் எல்லாரிடமும் நல்ல மதிப்பைப் பெற்றிருந்த சட்டவல்லுநர். சனேதிரின் பொதுச்சங்கத்தில் ஓர் அங்கத்தினர். பவுல் இவரிடம்தான் சட்ட நுணுக்கங்களைக் கற்றறிந்தார் (அ.ப.22:3). இவர் சங்கத்தில் எழுந்து பேசுகையில் அனைவரும் அவரை ஏற்றுக்கொண்டனர். பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் மட்டோடு நடத்தும்படி இவர் அறிவுரை கூறினார் (5:34-39).

இவர் புகழ்பெற்ற இராபி இல்லேலின் பேரனும் இரண்டாம் கமாலியேலின் பாட்டனுமாவார். இராபி (என் தலைவர்) என்பதற்குப் பதிலாக, இராபான் (நம் தலைவர், நம் பெருந்தலைவர்) என்ற பட்டம் பெற்றவருள் முதலானவர். யூத ஒழுக்கப் பாரம்பரியத்தில் தாராள மனப்போக்கைப் புகுத்தியவர்.

யூத பாரம்பரியம் அவரைச் சனேதிரின் சங்கத் தலைவராகத் தவறாகக் கருதியது. இக்கருத்து இவரது முக்கியத்துவத்தைச் சுட்டுகிறது. எல்லோரும் அவரை ''இராபான் (எங்கள் தலைவர்) கமாலியேல் இறந்த போது, சட்டத்தின் மகிமையும், புனிதத்தன்மையும் கட்டுப்பாடும் அழிந்தன'' என்று சொல்லி அவருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

கமாலியேல் தனது உரையில் (அ.ப.5:36-37) கலிலேயனான யூதாவுக்குமுன் 'நான் ஒரு பெரிய மனிதன்' என்று கூறிய தெயுதாவைப் பற்றிப் பேசுகிறார். மேலும் பவுல் கமாலியேலின் மாணவர் என்ற குறிப்பு உள்ளது (22:3). இவை காலக்கணிப்புப் பிரச்சனைகளை எழுப்புகின்றன. ஏனெனில் யூதாவின் கிளர்ச்சி கி.பி.6-இல் நடந்தது. தெயுதா ஆளுநன் பாதுவின் காலத்தில் (கி.பி.44) கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது

உண்மையிலேயே இவர் பவுலுக்கு ஆசிரியரா? அப்படியென்றால் பவுல் தன்னுடைய கடிதத்தில் ஏன் குறிப்பிடவில்லை? பவுல் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தும் செயல்களையும், அவர் பயன்படுத்தும் விளக்க முறையையும், சட்டத்தின்பால் கொண்டிருந்த மனப்பான்மையையும் விளக்குவது கடினம். இப்பிரச்சனைகளுக்கு அளிக்கப்படும் விளக்கங்கள் நிறைவு அளிப்பதாக அமையவில்லை.

**கமோங்கோகு** (HAMON - GOG - கோகுவின் கூட்டம்)

யோர்தானுக்கு அப்பாலுள்ள இப்பள்ளத்தாக்கில் கோகுவின் சேனையில் இறந்தவர்கள் புதைக்கப்படுவார்கள் என்று எசக்கியேல் இறைவாக்கினர் முன்னறிவித்தார் (எச 39:11.15).

இது பயணிகளின் பள்ளத்தாக்கு என்றும் அழைக்கப்பட்டது (39:11). சாக்கடலுக்கும் மோவாபு சமவெளிக்கும் இடைப்பட்ட வட மோவாவிலுள்ள அபாரிம் மலைகளோடு இது தொடர்புபடுத்தப்படலாம்.

**கமுத்தாள்** (HAMUTAL - பனிபோன்ற, மாமனார் பனி போன்றவர்)

யோசியாவின் மனைவியும் இலிபுனாவைச் சேர்ந்த எரேமியாவின் மகளும் யோவாக்காசு, செதேக்கியா ஆகியோரின் தாயுமாவாள் (2 அர 23:31; 24:18; எரே 52:1). 2 அர 24:18; எரே 52:1-இல் சில வாசகங்கள் கமித்தாள் என்ற பெயரைக் கொண்டுள்ளன. எச 19:2-இல் வரும் பெண்சிங்கம் கமுத்தாள் அரசியைக் குறிப்பதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

**கமோர்** (HAMOR - கழுதை)

செக்கேம் நாட்டின் இத்திய அரசன். இவருக்குச் செக்கேம் பெயரில் ஒரு மகன் இருந்தார். கமோரும், செக்கேமும் யாக்கோபின் புதல்வரான சிமியோன், லேவி என்பவர்களால் பழிவாங்கிக் கொல்லப்பட்டனர் (ஆதி 34; நீதி 9:28). கமோரின் புதல்வரிடமிருந்து யாக்கோபு நிலம் ஒன்று வாங்கி அங்கே ஒரு பீடத்தைக் கட்டினார் (ஆதி 33:19). இங்குதான் பிற்காலத்தில் யோசேப்பின் எலும்புகளைப் புதைத்தனர் (யோசு 24:32). ஆனால் ஸ்தேவான் மக்கபேலாவோடு செக்கேமைக் குழப்பிவிடுகிறார் (அ.ப.7:16; காண் ஆதி 23;48:22;50:13-25).

**கம்பளி** - (WOOL)

இது செம்மறியாடுகளின் உரோமத்தால் நெய்யப்பட்டதாகும். மோவாபு மன்னன் மெசா இஸ்ராயேல் மன்னன் ஆகாபுக்குக் கம்பளியைக் காணிக்கையாகக் கொடுக்கிறான் (2 அரச 3:4). பாலஸ்தீனத்தில் இது அதிகமாகத் தயார் செய்யப்படுகிறது. அதிகமாகவும் பயன்படுத்தப்பட்டது. குளிர்காலத்தில் இது சிறந்ததொரு பாதுகாப்பாகும். கம்பளி வெண்மைக்கும், தூய்மைக்கும் உருவகமாகக் கூறப்பட்டது (சங் 147:16; ஏச 1:18).

ஆட்டு மயிரும் சணல்நூலும் கலந்து நெய்யப்பட்ட ஆடைகள் இஸ்ராயேலின் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளன (உப 22:11; லேவி 19:19). இதற்குக் காரணம் தெளிவாக இல்லை. ஒருவேளை, யோசிப்பஸ் கருதுவது போல், இப்படிப்பட்ட கலப்பு ஆடை குருக்களுக்கு உரியது என்பது காரணமாக இருக்கலாம்.

**கம்பளிப்பூச்சி** (CATERPILLAR)

வண்ணத்துப்பூச்சி அல்லது மற்றப் பூச்சிகளின் புழுப்போன்ற இலார்வா ஆகும். இது வெட்டுக்கிளியுடன் கூறப்படுகிறது (1 அர 8:37; 2 நாள் 6:28). இது சில இடங்களில் வெட்டுப்புழு என்று கூறப்படுகிறது (யோவே 1:4; 2:25).

இது சங் 78:46-இல் வெட்டுக்கிளியைக் குறிக்கலாம். இலைகளைத் தின்று அழிக்கும் கம்பளிப்பூச்சி (பச்சைப்புழு), போருக்குப் பின் வீரர்கள் கொள்ளை அடிப்பதற்கு உவமையாகக் கூறப்படுகிறது.

**கம்பளிப் பொருட்கள்**

இச்சொல் பழைய ஏற்பாட்டில் பல சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) இச்சொல் நீலம், கருஞ்சிவப்பு, அல்லது சிவப்பு முதலிய நிறமுடைய பொருட்களைக் குறிப்பிடும் பகுதிகளில், ''பொருள்கள்' அல்லது ''துணி'' ஆகியவற்றைக் குறிக்கும் துணைச்சொல்லாகும். இந்தப் பொருட்கள், வழிபாட்டுப் பொருட்கள் (யாத் 25;4; 35:6.23.25), திரைகள் (யாத் 26:1; 36:8), மெல்லிய திரை (யாத்26:31; 36:35), பெரிய திரைகள் (யாத் 28:5-6; 39:1-3.5), குருக்கள் அணியும் அலங்கார ஆடைகள், புனித உடை

கள் (யாத் 28:33; 39:24.29) ஆகியவை தயாரிக்கக் காணிக்கையாகத் தரப்பட்டன. சிவப்புக் கம்பளி நோயைக் குணமாக்கப் பயன்படுத்தும்படி குறிக்கப்பட்ட பொருட்களுள் ஒன்றாகும் (லேவி 14:4.6.49.51; எண் 19:6).

பலவண்ணம் கொண்ட விரிப்பு வாணிகத்தில் விலையுயர்ந்த பொருளாகக் கருதப்பட்டது (எச 27:24).

கம்மாத்து (HAMMATH - சூடான விவாதம்)

1. நப்தலியில் உள்ள கோட்டைகள் கொண்ட நகரம் (யோசு 19:35). கலிலேயக் கடலின் மேற்குக் கரையில் திபேரியாவிற்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள கம்மாம் தபரியே என அடையாளம் காட்டப்படுகிறது. இதுவும் லேவியர்களின் நகரமான கம்மோனும் (1 நாள் 6:76) யோசு 21:32-இல் குறிக்கப்படும் கம்மோத்து-தோரும் ஒன்றேயாகும். தால்மூதில் அடிக்கடி குறிக்கப்படுகிறது. பழங்காலத்திலிருந்தே இது மருந்துகள் கலந்த நீரூற்றுகளுக்குப் பெயர் பெற்றது.

2. இரக்காபு குடும்பத்தின் ''தந்தை'' (1 நாள் 2:55) அல்லது இரக்காபு குடும்பத்தைச் சேர்ந்த கேனியர்களின் நாடு. இதை இடப் பெயராகக் கருதினால், இது யூதாவின் நெகேபில் அல்லது அதற்குத் தெற்கில் இருந்திருக்கலாம்.

கம்முராபி (HAMMURABI)

பாபிலோனை ஆண்ட முதல் அரச மரபில் ஆறாவது அரசன் (கி.மு. 1792 - 1750). இவர் சின்-முபாலித் என்பவரின் மகனும், சம்சு-இலுனா என்பவரின் தந்தையுமாவார்.

கம்முராபி அரசனைப் பற்றிய வரலாறு மிகவும் சுருக்கமாகவே உள்ளது. ஆனால் மற்ற அரசர்களைவிட அதிகமாக அறிகிறோம். அரச எழுத்துப் பொறிப்புகளைத் தவிரப் பல அரசியல் கடிதங்களும், கம்முராபி அரசன் ஆண்ட 42 ஆண்டுகளுக்கு அளிக்கப்பட்ட பெயர்களும் இவரைப் பற்றிக் கூறுகின்றன. நகரைச் சுற்றிச் சுவர் கட்டுதல், பலியிடுதல், கோவிலில் சிலைகளை வைத்தல், போர்கள் முதலிய அரசனுடைய செயல்களைக் குறிப்பனவாக இருந்தன. கம்முராபி சட்டத் தொகுப்பின் முகவுரையிலுள்ள வரலாற்றுப் பகுதி அவருடைய அரசின் பரப்பைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது. கம்முராபியால் ஆளப்பட்ட பெரிய நகரங்களின் பெயர்களும், இந்நகர்களில் அவர் ஆற்றிய பக்திச் செயல்களும், சமூகப் பணிகளும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. கம்முராபியைப் பற்றிக் கவிதை வடிவில் அமைந்த இரு கற்பொறிப்புகள் உள்ளன. முதல் கற்பொறிப்பு ஊர் நகரத்தில் காணப்பட்டது. இதில் கம்முராபி, சுமேரிய மொழியிலும் அக்காதிய மொழியிலும் தான்குத்தியும், சுபார்து, துருக்கி போன்ற மலைப்பகுதிகளை வென்றதைப் பற்றிப் பொறித்து வைத்துள்ளார். இரண்டாவது எழுத்துப் பொறிப்பு ஓர் உடைந்த சிலையின் மீது காணப்படுகிறது. கட்டடங்களில் காணப்படும் பொறிப்புக்களில் கோவில்களைப் பழுது பார்த்தது பற்றியும், நகரச் சுவர் கட்டியது பற்றியும் குறிப்பு உள்ளது. சில சுமேரிய மொழியிலும் சில அக்காதிய மொழியிலும் பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளன.

சட்ட முறைகளைப் பற்றியும் நிர்வாக சம்பந்தப்பட்டவைகளைப் பற்றியும் பல உயர் நிர்வாக அதிகாரிகளுக்குக் கம்முராபி எழுதிய 140 கடிதங்கள் கிடைத்துள்ளன. மாரியிலுள்ள சுவடித் தொகுப்பில் இக் கடிதங்கள் உள்ளன. இங்கு அரசாங்க அதிகாரிகளுக்குக் கம்முராபி எழுதிய மூன்று கடிதங்களும், மாரியின் அரசன் சிம்ரிலிமுக்கு எழுதிய ஒரு கடிதமும் உள்ளன. மாரியின் அரசனால் கம்முராபிக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றும், மாரியின் அரசத் தூதுவர்களால் கம்முராபியைப் பற்றி எழுதப்பட்ட 15 கடிதங்களும் அங்குள்ளன.

மெசபொத்தாமிய வரலாற்றிலும், பாபிலோனிய நகரத்து வரலாற்றிலும், பாபிலோனிய கலாச்சாரத்தின் வளர்ச்சியிலும் கம்முராபி முக்கிய இடத்தை வகிக்கிறார். அவருக்கு முன்னால் நூறு ஆண்டுகளாகப் பாபி

லோனை ஆண்ட ஐந்து அரசர்களின் காலத்தில் பாபிலோன் ஒரு மறைவான நகரமாக இருந்தது. இந்த அரசர்கள் அண்டை நாடான ஈசு நகரை இழந்ததோடு அல்லாமல், திகிரிசு நதிக்கு அப்பால் பல இடங்களில் போரிட்டுத் தோற்றனர். சிறிது காலம் சுதந்தரம் அடைந்திருந்தாலும் மீண்டும் ஐசின் அல்லது லார்சா அரசர்கள் பாபிலோனைத் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தனர். கம்முராபியின் தந்தையான சின் முபாலித்து எழுதிய குறிப்புகளில் முன்பு இருந்ததை விட அதிகமான நகரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர் காலத்தில்தான் பாபிலோன் புகழ்பெற்றிருக்க வேண்டும். இருந்தபோதிலும், சின்முபாலித்து தென்பகுதியில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. ஏனெனில் வடக்குப் பகுதியில் அசீரியா மன்னனான முதலாம் சம்சி ஆதாத் சக்தி வாய்ந்தவனாக இருந்தார்.

கம்முராபி அரசனான போது, இந்த அசீரிய மன்னன் இறந்துவிட்டதால், கம்முராபி பாபிலோனை விரிவுபடுத்துவதில் தீவிரமாக இறங்கினார். அவர் ஆட்சி செய்த ஏழாம் ஆண்டிலிருந்து பதினொன்றாம் ஆண்டுக்குள்ளாக உருக்கு நகரையும் ஐசின் நகரையும் கைப்பற்றினார். மால்குமை அழித்துவிட்டு, திகிரிசு நதியைக் கடந்து எமுத்பாலுக்குச் சென்றார். அங்கிருந்து யூப்பிரத்திசு நதி ஓரமாக இராபிக் வரை சென்றார். அதற்குப்பின் தனது ஆட்சியின் இருபத்தொன்பதாம் ஆண்டுவரை தனது நாட்டைப் பலப்படுத்துவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டார். ஆனால் முப்பதாம் ஆண்டிலிருந்து தனது காலம் முடியும்வரை இடைவிடாமல் போர் செய்தார். இரண்டாவதாக அவர் போர்தொடுத்த காலங்களில் அவரது அரசின் பரப்பு குறைவுற்றதுபோல் தோன்றுகிறது. கம்முராபியின் இறுதி ஆண்டுகள் அவர் தனது நாட்டின் வடக்குப் பகுதியில் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன. உதாரணமாக 42-ஆம் ஆண்டுக்குத் திகிரிசு, யூப்பிரத்திசு நதிகள் ஓரமாகக் கட்டப்பட்ட சுவர் என்றும், 43-ஆம் ஆண்டுக்குச் சிப்பாரில் மணலைக் குவித்து எழுப்பப்பட்ட சுவர் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

கம்முராபி இறந்தபோது நாட்டில் போர் நிலைமை எப்படி இருந்தது என்று நமக்குத் தெரியாது. அவரது மகன் சம்சு இலுனா அரசனானவுடன் முதல் வேலையாகச் சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் கடன்களை எல்லாம் இரத்து செய்ததாகக் கற்பலகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. ஆனால் கம்முராபிக்குப் பிறகு 150 ஆண்டுகளாகப் பாபிலோனை ஆண்ட 5 அரசர்களும் எவ்வாறு பாபிலோனை ஆண்டார்கள் என்பது தெரியவில்லை. கம்முராபி ஆட்சியின் நிலையான வெற்றி என்னவென்றால் பின்னால் பாபிலோனை ஆண்ட மன்னர்கள் எல்லாம் பாபிலோனிலேயே தங்கியிருந்தனர். மற்ற நகரங்களெல்லாம் மாகாணங்களாக்கப்பட்டன. இரண்டு ஆறுகளின் முகத்துவாரத்திலுள்ள பகுதி மட்டும் மாகாணமாக்கப்படவில்லை.

கம்முராபியின் 12-ஆம் ஆண்டிலிருந்து 30-ஆம் ஆண்டுவரை பாபிலோனியாவில் அமைதி நிலவியதால் அது வளம் நிறைந்த முக்கியமான நகரமாக விளங்கியது; கல்வியும் தழைத்தோங்கியது; சுமேரிய மொழியில் அரச எழுத்துப் பொறிப்புகளைவிட்டுச் சென்ற முதல் அரசன் கம்முராபியே ஆவார். கம்முராபியின் ஆட்சிக்குப்பின் வந்த நூற்றாண்டுகள் பொற்காலமாக விளங்கின என்று பல பழைய பாபிலோனிய இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. கம்முராபியின் சட்டத்தொகுப்பு ஒன்று அசீரிய மன்னன் அசூர்பானிபாலின் நூலகத்தில் காணப்பட்டது.

கம்முராபி என்ற பெயர் அக்காதியப் பெயரல்ல. இப்பெயரைக் கொண்டிருப்பவர்களின் மொழி 'கிழக்குக் கானான் நாட்டு மொழி' அல்லது 'மேற்குச் செமித்திய மொழி' அல்லது 'எமோரிய மொழி' என்று கூறப்படுகிறது. இலார்சாவை ஆண்ட மன்னர்சிலரைத் தவிர கம்முராபி மன்னன் தான் இப்பெயரைக் கொண்ட முதல் மன்னன் ஆவார். கம்முராபியின் தந்தையும், அவ

ருக்கு முன் ஆண்ட இரு மன்னர்களும் அகாதியப் பெயர்களையே கொண்டிருந்த னர். கம்முராபி என்ற பெயர் மாரியிலுள்ள இலக்கியங்களில் அரச குலப் பெயராகத் தோன்றுகிறது. இதிலிருந்து இப்பெயரைக் கொண்டிருப்பவர்களின் இன, சமூக, முக்கி யத்துவம் நமக்குத் தெளிவாகிறது. இதன் பொருள் இன்னும் தெளிவாகவில்லை. 'கம்மு' என்பது இறைவனைக் குறிப்பதாகவும் உள்ளது. ஆதி 14:1.9-இல் கூறப்படும் அம்ரா பேல் அரசனின் பெயரோடு கம்முராபியின் பெயரும் இணைக்கப்பட்டு வருகிறது.

**கம்முவேல்** (HAMMUEL - இறைவனின் சினம்)

சிமியோன் கோத்திரத்தில் ஒரு குலத்தின் அல்லது குடும்பத்தின் பெயர் (1 நாள் 4:26). மிசிமாவின் மகனும், சாக்கூரின் தந்தையுமா வார்.

**கம்மோத்து-தோர்** (HAMMOTH-DOR - தேரின் சூடான ஊற்று)

நப்தலி பகுதியிலுள்ள ஒரு லேவியர் நக ரம் (யோசு 21:32). கம்மோன் (1 நாள் 6:76), கம்மாத்து (யோசு 19:35) ஆகியவை இந்நக ரின் மற்றப் பெயர்களாக இருக்கலாம்.

**கம்மோன்** (HAMMON - சூடான ஊற்று)

1. அசேர் புதல்வரின் கோத்திரத்துக்குக் கிடைத்த எல்லை நகர் (யோசு 19:28). இராஸ்-ஏன் நாக்குரா பகுதிக்குத் தென்மேற் காக 8 கி.மீ. தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ள 'உம் ஏல் அவாமித்' நகரும் கம்மோன் நகரும் ஒன்றாக இருக்கலாம்.

2. நெப்தலி கோத்திரத்துக்குச் சொந்தமான ஒரு லேவியர் நகர் (1 நாள் 6:76). இதுவும் கம்மாத்து - (யோசு 19:35) கம்மோத்து-தோர் (21:32) ஆகிய பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**கம்ரான்** (HAMRAN)

குலத்தலைவரான திசோனின் மூத்த மகன் (1 நாள் 1:41). ஆதி 36:26-இல் கெமிதான் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கயாபா, யோசேப்பு** (CAIPHS, JOSEPH)

இயேசுவை விசாரனை செய்த ஒரு தலை மைக்குரு.

யோசிப்பஸ் இவருடைய பெயரை இரண்டு முறை சொல்கிறார். முதலில் இவர் வலே ரியு கிராத்து என்பவரால் தலைமைக் குரு வாக நியமிக்கப்பட்டார்: இரண்டாவதாக, இவர் ஆளுநர் விட்டேலியு இவரை நீக்கி விட்டு அனானுசின் (ஒருவேளை அன்னா சாக இருக்கலாம்) மகனான யோனாத்தானைத் தலைமைக்குருவாக நியமித்தார். இக் குறிப்பு யோசேப்பு என்ற பெயரையும் சேர்க்கி றது. அனேகமாகக் கயாபா கி.பி. 18-இல் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டிருக்க லாம்; ஆகவே 18 ஆண்டுகள் தலைமைக்குரு வாகச் சேவை செய்திருக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே அன்னாசு, கயாபா ஆகியோரைப்பற்றி மேலும் கூறும் முக்கிய சான்றுகள் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கதைகள் உள்ளன (உ.ம். கயாபா கிறிஸ்துவனானார்).

இயேசு கைது செய்யப்பட்ட பின்பு தலை மைக்குருவிடம் கொண்டு செல்லப்பட்டார் என்று மாற் 14:53 சொல்கின்றது; ஆனால் மாற்கு அவர் பெயரைச் சொல்லவில்லை. இதற்கு இணையான மத் 26:57-இல் இவர் பெயர் கயாபா என்று சொல்லப்பட்டுள்ளது. ''இயேசுவைத் தந்திரமாகக் கைது செய்து கொலை செய்யவேண்டும்'' என்று திட்டம் தீட்டியவர்களில் ஒருவராக இவர் மத் 26:3-இல் சொல்லப்பட்டிருக்கின்றார். மற்றொரு இணைப்பகுதியான லூக் 22:54-இல் இவர் பெயர் விடப்பட்டுள்ளது. ஆனால் அ.ப. 4:6 தொ-இல் பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டபின்பு தலைமைக்குரு அன்னாசு, கயாபா, யோவான், அலெக்சாந்தர் ஆகிய யூதத் தலை வர்கள் கூடியிருந்ததைப் பற்றிக் கூறுகின் றது. அன்னாசு கயாபாவுக்கு முன்பு தலை மைக்குருவாக இருந்தார் என்றும், அன்னா சின் பதவிக்காலம் கி.பி.14(அ)15-இல் முடிந்த தென்றும் யோசிப்பஸ் தெளிவாகக் கூறுவ தால், கி.பி.30-இல் அன்னாசு தலைமைக்குரு வாக இருந்தார் என்று சொல்வது வியப்புக்குரி யதாகவும், குழப்பமாகவும் இருக்கின்றது. மேலும் லூக் 3:2-இல் 'அன்னாசு, கயாபு

தலைமைக்குருக்களாக இருக்க' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கீழ்க்கண்ட கேள்விகள் எழலாம்.

1) அன்னாசு, கயாபாவிற்கு முன்பு தலைமைக்குருவாக இருந்தாரா?

2) அப்படியானால் எப்பொழுது அன்னாசின் பதவிக்காலம் முடிந்து கயாபாவின் பதவிக்காலம் ஆரம்பமானது?

3) லூக் 3:2-இல் உள்ளதுபோல் இருவரும் ஒரேசமயத்தின் தலைமைக் குருக்களாக இருந்தனரென்றால் அந்தப் பழக்கம் யூதர்கள் மத்தியில் இருந்ததா?

4) கயாபா அன்னாசோடு சேர்ந்தோ அவருக்குப்பின்போ, தலைமைக்குருவாக இருந்திருந்தார் என்றால், ஏன் அ.ப. 4:6 அன்னாசை மட்டும் தலைமைக்குரு என்று சொல்கின்றது?

ஆனால் யோவான் நற்செய்தியில் இந்தப் பிரச்சனை இன்னும் கடுமையாகிறது. யோவா 11:49-50 கயாபாவைத் தலைமைக் குரு என்று அழைக்கின்றது (அவ்வாண்டில் தலைமைக்குருவாக இருந்தார்). யோவா 18: 13.22.24 ஆகிய பகுதிகள் கயாபாவைத் தலைமைக்குருவாகக் குறிக்கின்றன. அப்படியானால் மீண்டும் கேள்வி எழலாம்;

1) தலைமைக்குரு பதவி ஓராண்டு மட்டும்தானா (எவ்வாண்டு)?

2) சரிசமமான இரண்டு தலைமைக்குருக்கள் ஒரேசமயத்தில் இருந்திருக்கமுடியுமா?

3) ஏன் லூக்காவும், மத்தேயுவும், அன்னாசு, கயாபாவின் மாமனார் என்பதைச் சொல்லவில்லை?

இக்கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் பலரும் பலவாறு முயன்றுள்ளனர். எப்பதிலும் திருப்தி அளிப்பதாக அமையவில்லை. மேலும் பல கேள்விகளை எழுப்பக்கூடியவைகளாகவே அமைந்துள்ளன.

நற்செய்திகள் துல்லியமான வரலாறு அல்ல; ஆகவே அதன் விவரங்கள் துல்லியமான வரலாறாக இருப்பது மிகமிகக் கடினம்.

இப்பிரச்சனைகளைத் தவிர்க்கப் பின்வரும் விளக்கம் சாதாரணமாக அளிக்கப்படும். அன்னாசு கயாபாவின் மாமனார் என்ற முறையிலும், பதவி நீக்கப்பட்டாலும் முன்னாள் தலைமைக்குரு என்ற முறையிலும், தலைமைக்குரு அதிகாரத்தைக் கொண்டிருந்தார் என்று மக்கள் மதித்தனர். ஆனால் இக்கருத்துக்குப் போதிய சான்றுகள் இல்லை எனலாம்.

## கயிறு (CORD, ROPE)

பூர்வீகக் காலத்தில் கயிறுகளைச் செய்வதில் பலவகை நார்கள் பயன்படுத்தப்பட்டன. கருஞ்சிவப்பு நிறமுள்ள சணல் (எஸ்த 1:6), வெள்ளி (திருவுரை 12:6), பொன் (யாத். 28:24-25) ஆகியவைகளில் கயிறுகள் செய்ததாக விவிலியம் கூறுகிறது. பிற்காலத்தில் ஆட்டுமயிர், ஒட்டகமயிர் ஆகியவை இந்த வேலைக்காகப் பயன்படுத்தப் பட்டன.

கயிற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. கயிறு என்னும் பொதுப்பெயர் மனிதனுடைய எடையைத் தாங்கக் கூடியதாக இருக்கும் (யோசு 2:15; எரே 38:6); கற்களை இழுக்கவும் (2 சாமு 19:13) திரைச் சிலைகளைக் கட்டவும் பயன்படுத்தப்பட்டது (எஸ்த 1:5). விளக்குகளைத் தொங்கவிடவும் (திருவுரை 12:6) பயன்படுத்தப்பட்டது. இது பொறிக்கும் (சங் 119:61), தீயோருக்கும் (யோபு 18:10), பாதாளம் அல்லது மரணத்தால் அமைக்கப்படும் கண்ணிவலைக்கும் உவமையாகப் பயன்படுத்தப்பட்டது (சங் 18:4-5). அளக்கும் கருவியாகவும் இது பயன்படுத்தப்பட்டது (மீக். 2:5; செக் 2:1).

கயிற்றைக் குறிக்கும் மற்றொரு எபிரேயச் சொல் கூடாரத்தின் கயிறுகளையும் (ஏச 54:2; எரே 10:20) உடன்படிக்கைக் கூடாரத்தின் கயிறுகளையும் (யாத் 35:18; எண் 3:17)

வில்லின் கயிறுகளையும் (சங் 21:2) குறித்தது.

மற்றொரு எபிரேயச் சொல் ''சுற்ற, பிணைக்க'' என்ற மூலப்பொருள்களைக் கொண்டுள்ளது. அடிமைகளைக் கட்டும் கயிற்றைக் குறிக்கும் (நீதி 15;13;சங் 23; எச 4:8; ஏச 3:24). இது தலைமைக் குருவின் ஆடையிலிருந்த பின்னல் வேலைப்பாட்டையும் குறிக்கும்.

புல்லினால் செய்யப்பட்ட ஒரு கயிறும் (யோவா 2:15; அ.ப. 27:32) வழக்கில் இருந்தது. கப்பலில் இரட்டைச் சுக்கான்களை இணைக்கவும் கயிறு பயன்பட்டது (அ.ப. 27:40).

முறுக்கப்பட்ட தோல், தசைநார்கள், செடி நார்களால் செய்யப்பட்ட ஒரு வலிமையான பருமனான சுயிறும் பயன்பட்டது. இது வேளாண்மைக்கு, போரிடும் படைக்கு, கப்பலுக்கு, மற்றும் வீட்டு வேலைக்குப் பெரிதும் பயன்பட்டது.

எபிரேய மொழியும், கிரேக்க மொழியும், இக்கயிற்றுக்கும் நூல் கயிற்றுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பிரித்துக் காட்டவில்லை. இந்தக் கயிறு செய்யும் கலை நூற்றலையும், நெய்தலையும் விடப் பழமையானது. படகுகளைக் கட்டி வைப்பதிலிருந்து சிறைப்பட்டவர்களைக் கட்டி வைப்பது வரைக்கும் கயிறு பயன்படுகிறது என்று எகிப்திய, மெசபொத்தாமியக் கலை காட்டுகிறது. இஸ்ராயேலில் கயிறு மிகவும் குறைந்த விலைக்குக் கிடைத்தது. அதை உடையாகப் பயன்படுத்துவது ஏழ்மைக்கு அடையாளமாக இருந்தது (ஏச 3:24). மேலும் சரணடைவதற்கு அடையாளமாக இருந்தது (1 அர 20:31). விவிலியம், கயிறு எப்படிச் செய்யப்படுகிறது என்று சொல்லவில்லையானாலும், அதன் பயன்களை அது விவரிக்கிறது. இது சேணம் பூட்டுவதற்கும் விலங்குகளை வழிநடத்துவதற்கும் (யோபு 41:2; ஏச 5:18), கண்ணிகளை உருவாக்கவும் (யோபு 18:10), சிறைப்பட்டவர்களைக் கட்டவும் (நீதி 15:13; 16:11-12; சங் 2;3;129:4; எச 3:25), கற்களை இழுக்கவும் அரணை இடிக்கவும் (2 சாமு 17:13) கப்பற்பாயையும் (ஏச 33:23), கூடாரத்தையும் இழுத்துப் பிடிப்பதற்கும் (ஏச 33:20), அளப்பதற்கும் (2 சாமு 8:2; செக் 2:1) கனமான பொருட்களை மேலே தூக்குவதற்கும் கீழே இறக்குவதற்கும் (யோபு 2:15; எரே 38:11) பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில், கயிறு கப்பலில் பாய்மரக் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது (அ.ப. 27:32.40).

**கயீன் (KAIN) - ஆள்.**

இது ஒருமையில் உள்ள குழுப்பெயர். கேனியர்களைக் குறிக்கிறது. இது பிலயாமின் குறி சொல்லுதலிலும் (எண் 24:22) நீதி 4:11-இலும் வருகிறது.

**கயீன் (KAIN) இடம்.**

இது யூதா மலைநாட்டின் தென் பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:57). சோதோம், கொமோரா நகர அழிவுகளை ஆபிரகாம் ஒரு மலை உச்சியில் நின்று பார்த்ததாக அரேபியப் பாரம்பரியம் கூறுகிறது. அது இந்தக் கயீன் பகுதியாக இருக்கலாம். ஆனால் கயீன் கேனியர்களின் குடியிருப்பு என்று பெயர் சுட்டுகிறது. கெபிரோனுக்குத் தென்கிழக்கிலுள்ள இக்காலக் கிர்பெத் யாகினை இந்நகருக்கு அறிஞர் சிலர் அடையாளம் காட்டுகின்றனர்.

**கரடி (BEAR)**

நீண்ட முடி, குட்டையான வால், உள்ளங்கால்களைத் தரையில் பதித்து நடக்கின்ற முரட்டுத்தனமான பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்காகும் கரடி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடபகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பாலஸ்தீனக் கரடிகள், சீரியாவில் உள்ள சாம்பல் நிறக்கரடிவகையைச் சார்ந்ததாகும். இவ்வகைக் கரடிகள் மாமிசத்தை உண்பதைவிடக் காய்கறிகள், பழங்கள், பூச்சிகள் ஆகியவற்றையே அதிகமாக உட்கொள்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் குறிப்புக்கள் பழங்கால இஸ்ராயேலில் கரடிகள் இருந்ததாகக் கூறுகின்றன. பொதுவாக இவைகள் சாதுவா

னவை என்றாலும், தொந்தரவு செய்யப்பட்டாலோ, பசி ஏற்பட்டாலோ ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாக மாறிவிடுகின்றன. கரடியின் இத்தகைய கொடூரத் தன்மை பற்றி ஆமோ 5:19-இலும் கூறப்படுகின்றது. புல. 3:19-இல் உணவுக்காகப் பதுங்கி இருக்கும் கரடி கடவுளைக் குறிக்க உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. 1 சாமு 17:34. 36-37-இல் கரடி மந்தையைத் தாக்குவது தாவீதின் வீரத்திற்கு ஒப்பிடப்படுகிறது. ஏச. 11:7-இல் பசுவும் கரடியும் அமைதியான காலத்தில் கூடிமேயும் என்று கூறப்படுகிறது. குட்டிகளைத் துன்புறுத்தினால் கரடிகள் அதிகக் கோபமடைகின்றன (2 அர 2:24-க்கான விளக்கம் இதுவே). 2 சாமு 17:8-இல் (மேலும் காண் ஏச. 59:11; திருவுரை 25:17) குட்டிகளைப் பறி கொடுத்த பெண் கரடியின் கோபம் மனிதனின் கோபத்திற்கு உவமையாகவும், ஓசே 13:8-இல் இறைவனின் கோபத்திற்கு உவமையாகவும் சொல்லப்படுகின்றது. பழ 17:17-இல் தன் மதியீனத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற மடையனைப் பார்ப்பதைவிடத் தன் குட்டிகளை இழந்த பெண் கரடியைப்பார்ப்பது மிக நல்லது என்று கூறப்பட்டுள்ளது.

வெளிப்பாட்டுக் கற்பனையிலும் கரடி பங்கு வகிக்கிறது. தானி 7:5-இல் கடலில் இருந்துவரும் நான்கு விலங்குகளில் கரடி இரண்டாவதாகக் கூறப்படுகிறது. கரடியின் பருமன், பலம், கடினத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மிதியான் நாட்டைப்பற்றிக் கூறுவதற்கே இந்த விலங்கு இங்குக் கூறப்படுகிறது. திருவெளி 13:2-இல் வரும் விலங்கு உரோமைப் பேரரசரை மனதில் கொண்டு தானி 7-ஆம் அதிகாரத்தைத் தழுவி எழுதப்பட்டதாக இருக்கலாம். திருவெளிப்பாடு கரடியின் கால்களைப்பற்றிக் குறிப்பிடுவது, பகைவர்கள் அனைவரும் வீழ்ந்துவிடுவார்கள் என்பதை அடையாளமாக உணர்த்துகிறது.

## கரம் மற்றும் புயம் (ARM AND HAND)

கரம் மற்றும் புயம் என்பவை பொதுவாகச் செயல், வெளியிடுதல் தொடர்பு ஆகியவற்றை உணர்த்தும் உறுப்புகள் மற்றும் அடையாளங்களாகும். புயம் வலிமையையும், கரமானது திறமை மற்றும் செயல் வல்லமையையும் அடையாளமாக எடுத்துக் காட்டுகின்றன.

1. இறைவனின் கரமும் புயமும்:- இறைவனின் கரமானது வானத்தையும் பூமியையும் உருவாக்கியது (ஏச 66:2). குயவனுடைய கரத்தைப் போன்று, அது உருவம் அளிக்கின்றது (யோபு 10:8; எரே 18:6; ஆதி 2:7). இவ்வாறாகப் படைப்பிலும் (எரே 32:17) வரலாற்றிலும் (உப 4:34; லூக் 1:51) இறைவன் அவருடைய கரத்தின் (அவரது கரம் என்பது பொதுவான பொருளில், எச 53:1) வலிமையை வெளிப்படுத்துகிறார். பெரும்பாலும் அவர் ''விரிந்த புயத்துடனும்'' வலிமையான கரத்துடனும் செயலாற்றுகின்றார். அவரது ''புனிதப் புயம்'' (ஏச 52:10) அவரது ''நற்கரம்'' (எஸ் 7:9), ''அவரது கரத்தின் நிழல்'' (ஏச 49:2), உறுதிமொழியில் அவரது உயர்த்தப்பட்ட கரம் (உப 32:40) ஆகியவை, அவரது வலிமைமிக்க பாதுகாப்பை நிறைவிற்குக் கொண்டுவருகின்றன (யோவா 10:29). இறைவனின் கரத்தில் பாதுகாப்பு கண்டடையப்படுகிறது (ஞான 3:1; சங் 3:6; லூக் 23:46). இறைவனின் கரமானது ஓர் இறைவாக்கினரின் மீது இருக்கும்போது, அது அவரை உடைமையாக்கிக் கொண்டு, காட்சியின் ஆவியை அவருக்கு அளிக்கின்றது (எச 1:3). இறைவனுடைய கரமானது காப்பாற்றுவதற்கு மிகக் குறுகியதல்ல (ஏச 50:2). ஆயினும், தான் அடையாளங்காட்டிய இடைவிடா அன்பானது (ஏச 65:2; உரோ 10:21) வெறுத்து ஒதுக்கப்படும் போது, அது கடினமாகித் (சங் 32:4) தண்டிக்கக்கூடும் (ஏச 5:25; எபி 10:31). இறைவனுடைய கரத்தைப் போன்று கிறிஸ்துவினுடைய கரமும் எல்லாம் வல்லதாக உள்ளது (மாற் 6:2; யோவா 10:28); அது அனைத்தையும் கொண்டுள்ளது (யோவா 3:35); அது நோய் தணிக்க விருப்பமுடையது (மத் 8:3).

2. மனிதனுடைய கரமும் புயமும்:- இறைவனுடையதுடன் ஒப்பிடும் போது ஊனா

லான புயமானது வலிமையற்றது (2 நாள்.32:8; ஏச 40:12; பழ 30:4). ஆனாலும், மனிதனிலும் புயமானது தீவிரமான செயலின் கருவியாகவும் அடையாளமாகவும் உள்ளது (சங் 18:35). கரத்தினுடைய சைகையானது மகிழ்ச்சி (2 அர 11:12), துன்பம் (எரே 2:37), ஆசி (ஆதி 48:14), உறுதிமொழி (ஆதி 14:22) மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாகச் செபம் மற்றும் ஆராதனை (சங் 28:2; 1 திமோ 2:8; யோபு 31:27) முதலிய ஆன்மாவின் இயக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. இறுதியாக, வேண்டுவோரின் கரங்கள் மாசற்றவையாக இருக்க வேண்டும் (சங் 24:4; யாக் 4:8; ஏச 1:15). இறைவனுடைய கரம் எவருடனாவது இருக்குமெனில் (லூக் 1:66), அவரைப் பாதுகாக்க அல்லது அவரது செயலுக்கு ஆற்றல் அளிப்பதற்கேயாம் (அ.ப. 11:21; 5:12). இவ்வாறு, அப்போஸ்தலர்கள் தங்களுடைய கரங்களை விரிப்பதன் மூலம், இறைவனின் ஆவியை அளிக்க முடியும் (அ.ப. 19:6; 1 திமோ 4:14).

இன்றும், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களைப் போல, ஆயர் அல்லது குருவின் கரமானது, முக்கியமாக அருட்சாதனச் செயல்களில் வாழ்வை அளிக்கின்றது.

### கராதா (HARADAH - அச்சம், திகில்)

இஸ்ராயேலர் சீனாய் மலையிலிருந்து பயணம் செய்தபோது பாளையம் இறங்கிய இடம் (எண் 3 3:24-25). இந்த இடம் எங்கேயிருந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை.

### கரி (CHARCOAL)

தாதுப் பொருள்கள் அல்லது கனிப் பொருள்களிலிருந்து கரி தயாரித்ததாக விவிலியக் காலத்தில் காணப்படவில்லை. விறகிலிருந்து தயாரிக்கப்பட்ட கரிதான் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது (பழ. 26:21; யோவா. 18:18).

### கரிசனா (CARSHENA - கறுப்பான, சிறப்புப் பெற்ற)

அகசுவேரு மன்னனின் ஏழு அமைச்சர்களில் ஒருவர். இவர்கள் பேரரசின் சிற்றரசர்களாகவும் சட்ட திட்டங்களில் அறிஞர்களாகவும் இருந்தனர் (எஸ்த. 1:14).

### கரிமியர் (GARMITE)

யூதாவைச் சேர்ந்த கெயீலாவின் இனக் குறிப்புப் பெயர் (1 நாள் 4:19)

### கருங்காலி மரம் (EBONY)

மிகவும் விலையுயர்ந்த ஒரு வகை மரத்தின் அடிப்பாகம், இலங்கையிலிருந்தும் தென் இந்தியாவிலிருந்தும், எத்தியோப்பாவிலிருந்தும் இது இறக்குமதி செய்யப்பட்டது. யானைத்தந்தமும், கருங்காலி மரமும் தீர் நாட்டின் வியாபாரப் பொருட்களாகும் (ஏச 27:15). எகிப்தியர்களும், பெனிக்கியர்களும், பாபிலோனியர்களும், கிரேக்கர்களும், உரோமையர்களும் கருங்காலியையும், யானைத் தந்தத்தையும் மனைத்துணைப் பொருட்களும், பாத்திரங்களும் செய்வதற்குப் பயன்படுத்தினர். மேற்காசிய நாடுகளில் விக்கிரகங்கள் செய்வதற்குக் கருங்காலியைப் பயன்படுத்தினர்.

### கருஞ்சிவப்பு (PURPLE)

பழங்காலத்திலிருந்து மதிக்கப்பட்ட ஒரு நல்ல வண்ணச் சாயம். இது வயிற்றால் நகர்ந்து செல்லும் ஒருவகை நத்தையிலிருந்து, குறிப்பாக மத்தியதரைக்கடலில் கிடைத்த நத்தையிலிருந்து தயாரிக்கப்பட்டது. இதைப், பின்னப்படும் நூலுக்கும், உடைகளுக்கும் தெளித்துச் சாயம் ஏற்றினார்கள். இதுபோன்ற தொழிற்சாலைகள் மத்தியதரைக்கடல் பகுதியில்தான் தொடங்கப்பட்டது. நாளடைவில் அது விரிவடைந்தது. கருஞ்சிவப்பு என்பது கிரேத்து, பெனிக்கியாவில் காணப்படும் கதைகளில் முக்கிய இடம் பெறுகின்றது. கானான் என்பதற்குக் ''கருஞ்சிவப்பு நிலம்'' என்பது பொருள். இச்சாயம் தெளிக்கப்பட்ட துணிகள் உகாரித்தில் (கி.மு.1500) கிடைத்தது. இது அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் கருஞ்சிவப்புச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெனிக்கியர்களின் ஏகபோக உரிமையாக இருந்தது. எனி

னும் இது மற்ற இடங்களிலும் கிடைத்தது (ஏச 27:7).

நத்தையின் செவுளின் அடிப்புறத்திலுள்ள சுரப்பியிலிருந்து இந்தச் சாயம் தயாரிக்கப் படுகின்றது. சாயங்கள் மாற்ற வேண்டுமானால் நத்தையின் வகையைச் சேர்ந்த பல வகை நத்தையின் சுரப்பியிலிருந்து சுரக்கின்றவற்றை எடுத்து ஒரு குறிப்பிட்ட விதத்தில் கலந்து இதனுடன் செங்கொட்டையென முன்பு கருதப்பட்ட கருத்தரித்த பெண் பூச்சியினத்தின் உடலிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப் பொருளைக் கலந்து ஒளியையும் காற்றையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் செலுத்தினால் அவற்றின் நிறம் மாறும். சிறந்த தீர் சாயம் என்பது இரண்டு வண்ணச் சாயங்களின் கலவையாகும். நத்தையைப் பற்றியும் சாயம் சேர்த்தல் பற்றியும் பிளினி, விட்ருவியாஸ் ஆகியோர் குறிப்புகள் எழுதியிருந்தாலும் அவைகள் போதுமானதாக இல்லை.

எபிரேயர்கள் சாயங்களை இறக்குமதி செய்தார்கள் என்பதில் சந்தேகமில்லை (எச 27:16.27). நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலால் செய்யப்பட்ட நார்ப்பட்டையால் ஆலயத்தின் திரைகளும் (யாத்.26:1.31), குருக்களின் ஆடைகளும் (யாத் 28:4-6; 39:1. 28-29) செய்யப்பட்டன. கும்ரான் குருகுலத்தில் காணப்பட்ட போர் ஆடைகள் இச்சாயத்தில் தோய்க்கப்பட்டிருந்தன. சாலமோன் எருசலேமின் ஆலயம் கட்டுவதற்கு ஊதா, கருஞ்சிவப்பு நூல், நீல நூல் ஆகியவற்றிலும் வேலைசெய்யும் நிபுணனாகவும் சித்திர வேலை தெரிந்தவனாகவும் இருக்கும் கைவினைஞர்களை அனுப்புமாறு தீர் நாட்டைக் கேட்கின்றார் (2 நாள் 2:6.13; 3:14). அவரது சிவிகை செம்பட்டு மெத்தையால் அலங்கரிக்கப்பட்டிருந்தது (2 ச.3:10). அககூவேரு அரசனின் அரண்மனையில் கருஞ்சிவப்பு நிறமான மெல்லிய சணல் கொண்டு கட்டப்பட்ட நீலம், பச்சை ஊதா நிறமுள்ள மெல்லிய சணல் திரைகள் தூண்களின் நான்கு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தன (எஸ்த 1.6); உ. ச. 7:5-இல் கூந்தல் செம்பட்டுப் போன்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. சிலைகளின் உடை ஊதாவாலும் கருஞ்சிவப்பாலும் செய்யப்பட்டிருந்தது என்று எரேமியா 10:9-இல் பார்க்கிறோம். ஒரு நல்ல மனைவியின் உடை மெல்லிய சணலும் கருஞ்சிவப்பு ஆடையும் ஆகும் என்று 31:22 கூறுகின்றது.

கருஞ்சிவப்புச் சாயங்கள் எபிரேய மக்களினால் வரவேற்கப்பட்டது. கருஞ்சிவப்புச் சாயங்கள் ஏற்றிய உடைகள் மற்றவர்களிடமிருந்து வேறுபாட்டை அளித்தது; மதிப்பைக் கொடுத்தது; ஒருவனது செல்வத்தின் சிறப்பை எடுத்துக்காட்டியது. அரசத்தன்மையைக் காட்டியது. மிதியானிய அரசர்கள் பொன்னாடைகள் அணிந்தனர் (நீதி 8:26). மோர்தெக்காய் அரண்மனையையும் அரச சமூகத்தையும் விட்டுப்புறப்பட்டு நகரத்தினுள் சென்றபொழுது கருஞ்சிவப்பு மென்துகில் அணிந்திருந்தார் (எஸ்த 8:15); வலிமை வாய்ந்த உரோமையர்கள் கருஞ்சிவப்பு ஆடை அணியாததைக் கண்டு யூதா மக்கபேயு வியப்படைந்தார் (1 மக் 8:1.14); கோர்கியாவிடமிருந்து யூதா போரிலிருந்து திரும்புகையில் விலை உயர்ந்த பட்டாடைகளைக் கொள்ளைப்பொருளாக எடுத்து வந்தார் (1 மக் 4:23). அலக்சாந்தர், யோனத்தானைத் தலைமைக் குருவாக நியமித்தபோது, அதற்கு அடையாளமாக அவர் கருஞ்சிவப்பு உடையும் பொன்முடியும் அனுப்பினார் (1 மக் 10:20; 11:58). ஓனியா அநியாயமாய்க் கொல்லப்பட்ட இடத்தில் அந்திரோணிக்கு கருஞ்சிவப்பு உடை உரியப்பட்டுக் கொல்லப்பட்டார் (2 மக் 4:38). பால்தசார், தானியேலுக்கு அளிக்கப்பட்ட வெகுமதியில் ஒன்று கருஞ்சிவப்பு ஆடையாகும் (தானி 5:7).

கருஞ்சிவப்புச் சாயம் ஏற்றப்பட்ட துணிகள் மனிதனின் பொருளாதார நிலைக்கும் தன்மைக்கும் அடையாளமாக உள்ளது என்பதைப் புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளிலிருந்து அறிகின்றோம். தியாத்தைரா நகரைச் சார்ந்த இலீதியா என்பவள் இரத்தாம்பரம் விற்பவள் (அ.ப. 16:14). சாயம் ஏற்றப்பட்ட

ஆடைகள் பொருளாதார நிலையை எடுத்துக்காட்டுகின்றன (லூக் 18:19). இயேசுவை அரசனாகப் பாவித்துக் கேலி செய்தபோது அவருக்குச் சிவப்புப் போர்வையை அணிவித்தார்கள் (மாற் 15:17-20; யோவா 19:2.5). இரத்தாம்பரமும் செந்நிற ஆடையும் அரசவையில் ஓர் உறுப்பினன் என்பதை எடுத்துக் காட்டின (திருவெளி 17:4). திருவெளி 18:16 உரோமை நகரமானது ''மெல்லிய துணியும் இரத்தாம்பரமும் செந்நிற ஆடையும் அணிந்தவள்'' என்று உருவகப்படுத்தப் பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியிலுள்ள கருஞ் சிவப்புச் சாயமுள்ள பட்டாடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பற்றியும், இப் பட்டாடைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே பல கல்வெட்டுகளும் சரித்திரக் குறிப்பேடுகளும் குறிப்பிடுகின்றன.

## கருத்து வேறுபாடு, பிளவு, கலகம் (DISSENSION)

இது ஆதித்திருச்சபையின் பிரிவினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைக் குறிக்கும். இரண்டாம் தரமாகத்தான் பிளவைக்குறிக்கும் (அ.ப. 15:2). பதிதம் கடும் கருத்து வேறுபாட்டைக் குறிக்கும்.

கருத்து வேறுபாடுகள் பிரிவினைகளை உண்டாக்க அனுமதிப்பதற்கு எதிராகப் பவுல் எச்சரிக்கிறார் (1 கொரி 1:10 தொ). மேலும் ஆண்டவருடைய இரவுணவைக் கடைப்பிடிப்பதில், திருச்சபையின் பல சமூகக் குழுக்கள் பிரிவுகளையோ வேறுபாடுகளையோ உண்டாக்க அனுமதிப்பதற்கு எதிராகவும் எச்சரிக்கிறார் (11:18.20-21). ஆயினும் இறையியல் வாதங்களில் உண்மையான விசுவாசத்திலிருந்து தப்பானவற்றை வேறுபடுத்துவதில் இத்தகைய கருத்து வேறுபாடுகளின் மதிப்பீட்டை ஏற்றுக்கொள்கிறார் (11:19).

## கருநிறங்கொண்ட (SWARTHY)

மிகவும் பாதுகாப்போடு, பராமரிக்கப்பட்ட அழகான பெண்ணின் நிறத்தோடு, மாநிறம் கொண்ட நாட்டுப்புறப் பெண்ணின் நிறம் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது (உ.ச. 1:6).

## கருமாபு (HARUMAPH - ஊனமுற்ற மூக்கு)

நெகமியாவின் காலத்தில் எருசலேம் சுவரைப் பழுது பார்க்க உதவி செய்த எதாயா என்பவரின் தந்தை (நெக 3:10).

## கருமை, காரிருள் (BLACK)

இயற்கையின் சீற்றம், குழப்பம், துயரம் போன்றவற்றை விளக்கும்போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில், இருளின் தரத்தை விவரிக்கப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் கருமையும் ஒன்று. கருமை என்ற சொல் மயிருக்கும் (லேவி 13:31.37;உ.ச. உ.ச. 5:11), தோலுக்கும் (யோபு 30:30; உ.ச.1:5.6), மனித முகத்திற்கும் (புல 8) குதிரைகளுக்கும் (செக் 6:2.6) அடைச் சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது.

வானம் இருளாக இருப்பது மழையின் அடையாளமாகும் (1 அர 18:45). கருமை அல்லது இருள் அண்டத்துயரத்தையும் (எரே 4:28), அழிவின் அடையாளமாகவும் (ஏச 50:3) திருக்காட்சியற்ற நாளையும் (மீக் 3:6), சோகத்தையும் (யோபு 30:28) மனிதரின் துயரமிக்க அழுகையையும் (எரே 8:21) அடையாளமாகக் குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் கருமை முடி (மத் 5:36), திருவெளிப்பாட்டுக் குதிரைகள் (திருவெளி 6:5), இருளடைந்த சூரியன் (6:12) ஆகியவற்றின் விவரிப்பில் பயன்பட்டுள்ளது. சீனாய் மலைக்காட்சி (எபி.12:18), பாதாள உலகம் (யூதா 13) ஆகியவற்றின் விவரிப்பிலும் இருள் பயன்பட்டுள்ளது.

## கருவாலி மரம் (OAK)

பல எபிரேயச் சொற்கள் கருவாலி மரம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இம் மரம் பாலஸ்தீனத்திலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் சாதாரணமாய்க் காணப்பட்ட

மரங்களில் ஒன்று. இதில் முந்நூறுக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. சில எப்போதும் பச்சையாக இருக்கும். இந்த மரங்கள் அதனுடைய வலிமைக்கும், உயரத்திற்கும் பெயர்போனது. இந்த மரத்தின் ஒரு வகையான ''கோல்ம்'' மரமானது 25 முதல் 30 அடி உயரமும், தாபோர் மலை போன்ற பகுதிகளில் 40 முதல் 50 அடி வரையும், வளர்கிறது. இந்த மரம் எந்த இனத்தைச் சார்ந்தது என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. விவிலியத்திலே தெளிவாக இந்த மரத்தைப் பற்றி ஆதி 35:8; ஏச 2:13; 6:13; 44:14; எச 27:6; ஓசே 4:13; ஆமோ 2:9; செக் 11:2 போன்ற பகுதிகள் குறிப்பிடுகின்றன.

சில கருவாலிமரங்கள் அவை இருந்த இடத்தின் அடிப்படையில் சிறப்புப்பெயர் பெறுகின்றன; பாசானின் கருவாலி மரங்கள் (ஏச 2:13; எச 27:6; செக் 11:12), மமிரேயின் கருவாலி மரம் (ஆதி 13:18; 14:13; 18:1), சிலைத்தூண் கருவாலி (நீதி 9:6).

கருவாலி மரம் சிலைகள் செய்யப் பயன்பட்டது (ஏச 44:14-17). எமோரியரின் வலிமை கருவாலி மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது (ஆமோ 2:9).

### கருவூலம், கருவூலக்காப்பாளர் (TREASURY, TREASURER)

1. இது செல்வங்களைச் சேர்த்து வைப்பதற்குப் பயன்பட்ட பாதுகாப்பான இடமாகும். சொந்த உடைமைகளைச் சேர்த்து வைப்பதற்குப் பேழை பயன்படலாம் (எச 27:24). ஞானியின் பேழை ஒரு கருவூலமாக இருக்கலாம் (மத் 2:11). இயற்கையின் வழியாகச் செயல்படும் இறைவனது அருளும் பராமரிப்பும் அவரது ஆசிர்களின் கருவூலத்தை வெளிப்படுத்துகிறது (உப 28:12; 33:19; ஏச 45:3).

அ) ஆலயக் கருவூலம்:- சுமேரின் தொடக்க காலக் கோவில்கள் செல்வமிக்கவையாக இருந்தன. கருவூலங்களைக் கொண்டிருந்தன. தீர் ஒரு நகரக் கருவூலத்தைக் கொண்டிருந்தது (எச 28:4). இது இந்த வியாபார நகரத்தின் பொதுவான சொத்தைக் குறிக்கலாம். ஆண்டவரின் கூடாரத்தில் ஒரு கருவூலம் இருந்ததாகத் தெரிகிறது (யோசு 6:19). எருசலேம் ஆலயம் பலவகையான செல்வங்களுக்கு அறைகளைக் கொண்டிருந்தது (1 அர 7:51;1 நாள் 28:11தொ). சாலமோன் சொத்துக்களை ஆலயக் கருவூலங்களில் சேர்த்து வைத்தார் (1 அர 7:51; 2 நாள் 5:1) கானானியக் கோவில்கள் பற்றிய அகழ்வாய்வுகள் தானியங்களைச் சேர்த்து வைக்கும் குழிகளையும்,கருவூலங்கள் எனக் கருதக் கூடிய இடங்களையும் காட்டுகின்றன.

ஏரோதின் ஆலயத்தில் வருவாயில் பத்தில் ஒரு பங்கும்,வரிகளும் கருவூலத்திற்குச் செலுத்தப்பட்டன. யோசிப்பஸ், ஆலய வரியைச் சேர்த்து வைக்கப் பதின்மூன்று பேழைகள் இருந்ததாகக் கூறுகிறார். கருவூலப்பேழைகள் எக்காள வடிவில் மகளிர் முற்றத்தில் இருந்ததாக மிஸ்னா கூறுகிறது. யூதாஸ் வெள்ளிக் காசுகளைத் திருப்பிக் கொடுத்த போது அவற்றைக் கருவூலத்தில் போடக் குருக்கள் மறுத்துவிட்டனர் (மத் 27:6). கருவூலத்தில் போடப்படும் காணிக்கைகளைக் கவனிக்கும் வண்ணம், அதன் சுற்று வட்டாரத்தில் இயேசுவை அடிக்கடி காண்கிறோம் (மாற் 12:41 தொ; லூக் 21:1 தொ;யோவா.8: 20)

ஆ) அரசக் கருவூலம்:- ஆலயக் கருவூலமும் அரசக் கருவூலமும் சாலமோன் காலத்தில் ஒன்றாய் இருந்திருக்கலாம். ஆனால் எசக்கியா தமது சொத்துக்களைச் சேர்த்து வைக்கக் கருவூலங்களையும் சேமிப்பு இடங்களையும் கொண்டிருந்தார் (2 நாள் 32:27-28; ஏச.39:2). சமாரியாவைச் சேர்ந்த இடங்களில் ஏடுகளும் வரி இரசீதுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆவணங்களும் சட்டங்களும் அரசக் கருவூலத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் (எஸ் 5:17). பாரசீகத்தில் கைக்கூலி அரசக் கருவூலத்திற்குச் சென்றது (எஸ்த 3:9;4:7). பொதுச் சொத்துக்களைப் பொருத்தமட்டில் நெகமியா பாரசீகப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார் (நெக 10:37; 13:7). மக்கபேயர் காலத்தில் பொது ஆவணங்கள் கருவூலத்

தில் வைக்கப்பட்டன (1 மக் 14:49). சில சமயங்களில் கருவூலம் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் குறிக்கவில்லை. அரசனது சொத்துக்கள் சேர்த்து வைக்கப்பட்ட இடங்களையெல்லாம் குறித்தது (எஸ். 7:20). களஞ்சியங்களும் சேமிப்பு நகரங்களும் அரசக் கருவூலங்களாகத் திகழ்ந்தன (நெக 13:12; ஆதி 41:48 தொ; யாத். 1:11; 1 அர 9:19; 2 நாள். 8:4-6).

2. கருவூலக்காப்பாளர்:- அ) பழைய ஏற்பாட்டில்:-

இவர், பொருட்கள்,ஆவணங்கள், பணம், மற்றும் அணிகலன்கள் அடங்கிய அரச அல்லது ஆலயச் சொத்துக்களுக்குப் பொறுப்பாளர் ஆவார். இவரே அரசனது சொத்துக்களைக் கண்காணிப்பவரும் கருவூலத்தை மேற்பார்ப்பவரும் ஆவார்.

அசிமவேத்து தாவீதின் கருவூலக்காப்பாளர் ஆவார் (1 நாள் 27:25). இவர் அரசக் கருவூலத்திற்குப் பொறுப்பான அதிகாரி. ஒருவேளை அவருக்குக்கீழ், உசியாவின் மகனான யோனத்தான் நாட்டின் கருவூலங்கள் அனைத்திற்கும் பொறுப்பாளராக இருந்தார். ஒருவேளை இவர் அரச வரிகளின் சேமிப்பிற்கும் அரச நிலங்களுக்கும் பொறுப்பாய் இருந்திருக்கலாம். ஆனால் இருவரும் கண்காணிப்பாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் ( 1 நாள் 27:31). அகியா, தாவீதின் கீழ், ஆண்டவருடைய வீட்டின் கருவூலத்தைக் காப்பவராகக் கூறப்படுகிறார் (1 நாள் 26:20). அதே வேலையைச் சாலமோன் காலத்தில் எகியேல் செய்தார் (1 நாள் 29:7-8). எசக்கியா காலத்தில் செப்னாவை ஏசயா அரண்மனைப் பொறுப்பாளன் என்று கூறுகிறார் (ஏச 22:15).

நெபுக்கதுனேசார் தமது அதிகாரிகளில் கருவூலக்காப்பாளர்களைக் கொண்டிருந்தார் (தானி 3:2). மித்திருதாத்து சைரக காலத்தில் கருவூலக் காப்பாளராக இருந்தார்; கைப்பற்றப்பட்ட கொள்ளைப் பொருட்களுக்கும் பின்பு அவற்றை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கும் பொறுப்பாளர் ஆவார் (எஸ். 1:8). பாழடைந்த நாட்டை மீண்டும் அமைக்கப் பொருள்கொடுத்து எஸ்ராவுக்கு உதவிடுமாறு அர்த்தாசெருசு தமது கருவூலக் காப்பாளர்களுக்குக்கட்டளையிட்டார்(7:21-22) காணிக்கைகளைக் கவனிக்கப் பல கருவூலக் காப்பாளர்களை நெகமியா நியமித்தார் (நெக 13:13; 1 நாள் 9:26; நெக 12:44).

ஆ) புதிய ஏற்பாட்டில்:- எத்தியோப்பிய அண்ணகன் அரசி கந்தாக்குவின் கருவூலத்திற்குப் பொறுப்பாளர் ஆவார் (அ.ப. 8:27). ஏரத்து கொரிந்து நகரத்தின் பொருளாளர் ஆவார் (உரோ 16:23).

**கரூபியர்** (HARUPHITE)

தாவீது சிக்கிலாகு என்னுமிடத்தில் இருந்த போது அவரோடு சேர்ந்துகொண்ட பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க வீரனான செப்பத்தியா என்பவரின் இனப் பெயர் (1 நாள் 12:5). இப்பெயர், 1 நாள் 2:51-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் காலேபு குலத்தினரான காரேபு அல்லது நெக 7:24; 10:19-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் காரிபு குடும்பத்தோடும் தொடர்புடையதாக இருக்கலாம். ஆனால் இங்குக் காரேபு அல்லது காரிபு என்பது தெரியாத ஓர் இடத்தின் பெயரையே குறிக்கின்றது.

**கரோசத்து — ககோயிம்** (HAROSHETH - HAGOIIM — புறவினத்தாருடைய காடு)

கானான் நாட்டவர்கள் வாழ்ந்த ஒரு நகரம். இஸ்ராயேலர்களான பாராக்கு, தெபோரா ஆகியவர்களால் தோற்கடிக்கப்பட்ட சிசரா இவ்வூரைச் சேர்ந்தவர் (நீதி 4:2-13.16). இது எங்கிருந்தது என்று சரியாகத் தெரியாத போதிலும், தேல் அமுர் அல்லது தெல் எல் ஆர்பாசு பகுதியே இந்நகரமாக இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இந்த இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் இக்கருத்துக்கு எதிராக இருக்கின்றன. அநேகமாகக், கரோசத்து-ககோயிம் என்பது அமர்னாக் கடிதங்களில் காணப்படும் முக்ராஸ்தி என்ற நகராக இருக்கலாம். அப்படியானால், இந்நகர் சரோன் சமவெளியில் அமைந்திருக்க வேண்டும்.

**கரோது** (HAROD — பயம், நடுங்குகிற)

1. மிதியானியரோடு போரிடுவதற்காகக் கிதயோன் பாளையம் இறங்கியிருந்த இடத்திற்கு அருகில் இருந்த நீருற்று (நீதி 7:1). பெலிஸ்தியரோடு போரிடும்போது சவுல் பாசறை அமைத்திருந்த நீரூற்றும் இதுவாக இருக்கலாம் (1 சாமு 29:1). கில்போவா மலைக்கு வடமேற்காக அமைந்துள்ள அயின் சலுது என்ற நீரூற்றே இது என்று அடையாளம் காட்டப்படுகிறது.

2. தாவீதின் வீரர்களில் இருவரான சம்மா, எலிக்கா என்பவர்களின் ஊராகும் (2 சாமு 23:25). எருசலேமிலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள பேத்து — கதூத்து இவ்விடமாக இருக்கலாம். யூதப் பாரம்பரியப்படி இங்கிருந்து காடு தொடங்குகிறது. இது, கிதரோன் ஓடையில் எருசலேமுக்கும் மார்சாபாவுக்கும் இடையிலுள்ள கிர்பெத்துகரேய்தான் இவ்விடமாக இருக்கலாம் என்று கருத ஆதரவு அளிக்கிறது.

**கர்கமிசு** (CARCHEMIS)

யூப்பிரத்திசுக்கு மேலுள்ள ஒரு முக்கியமான சீரிய — இத்தியத் தலைநகரம், இப்பொழுது தோண்டி எடுக்கப்பட்டுள்ள இடம் செராபுலுஸ் என்றழைக்கப்படுகின்றது.

அசீரியர்களால் கர்கமிசு பிடிபட்டதை ஏச 10:9 சுட்டிக்காட்டுகிறது. யோசியாவின் முப்பத்தொன்றாம் ஆண்டில் பாரவோன் இரண்டாம் நெக்கோ கர்கமிசின் மேல் படையெடுத்தது, 2 நாள் 35:20 இல் குறிப்பிடப்படுகிறது. யோசியாவின் மகனான யோயாகிமின் நான்காம் ஆண்டில் நெபுக்கதுனேசார் கர்கமிசில் இரண்டாம் நெக்கோ பாரவோனைத் தோற்கடித்தார் (எரே, 46:2).இந்தப்போர் நெபுக்கதுனேசாரின் ஆட்சிக்குறிப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்கமிசு பற்றிய குறிப்புகள எகிப்திய சித்திர எழுத்து ஏடுகளில் காணப்படுகிறது. உகாரித்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இத்திய ஏடுகள் அமர்னாக் காலத்தில் இந்நகரத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.

**கர்காசு** (CARKAS - அனேகமாக ''ராஜாளி'' என்று பொருள்படும்)

அகசுவேரு மன்னனின் அரண்மனையில் பணிசெய்த ஏழு அண்ணகர்களில் ஒருவர். அரசி வாஸ்தியை அழைத்து வரும்படி இவரும் அனுப்பப்பட்டார் (எஸ்த 1:10).

**கர்க்கா** (KARKA — தரை)

இது யூதாவின் தென் எல்லையில் அசிமோனிற்கு அருகில் உள்ள ஓர் ஊர் (யோசு 15:3). இது வாடி ஏல் — அயினும் உம்காசும் ஒன்றுகூடும் இடத்திலுள்ள இக்கால அயின் ஏல் — கோசேயிமேயாக அடையாளம் காட்டப்படுகிறது.

**கர்க்கோர்** (KARKOR)

இது தெற்குக் கிலயாத்தின் மலைப் பகுதியில் உள்ள ஓர் இடம். நீதிபதி கிதயோன், இந்த இடத்தில் மிதியானியர்களை இரண்டாம் முறை தோற்கடித்தார் (நீதி 8:10-11). பழைய காலத்து நகரம் பாலஸ்தீனத்திற்கும் துமாவுக்கும் இடையிலுள்ள வர்த்தகச் சாலையில் இருந்தது. இது வாடி சீர்கான் சமவெளியில் உள்ள இக்காலக் கார்க்கார் என்பதோடு அடையாளம் காட்டப்படுகிறது.

**கர்த்தா** (KARTAH)

செபுலோனுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியிலுள்ள ஒரு லேவியர் ஊர் (யோசு 19:15; 21:34).

**கர்த்தான்** (KARTAN)

கெர்சோனியருக்குக் கொடுக்கப்பட்ட நப்தலி இனப்பகுதியைச் சேர்ந்த ஒரு லேவியர் நகர் (யோசு 21:32). இதற்கு இணையான விவரிப்பில் (1 நாள் 6:76) இந்நகர் கிரியத்தயிம் என்று குறிக்கப்படுகிறது. வட கலிலேயாவில் கெதேசுக்கு வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து ஏல்-

குரேயியே இந்நகர் இருந்த இடமாகக் கூறப்படுகிறது.

*கர்மி* (CARMI — *திராட்சைத் தோட்ட உரிமையாளன்*)

1. ரூபனின் நான்கு புதல்வர்களில் கடைசி மகன் (ஆதி 46:9; யாத் 6:14; எண் 26:6; 1 நாள் 5:3). கர்மி என்பவர் கர்மியர் குடும்பத்தின் குலத்தலைவராவார்.

2. இவர் யூதா இனத்தைச் சார்ந்தவர். ஆக்கான் என்பவனின் தந்தை (இவர் 1 நாள் 1:7-இல் ஆக்கார் என்றழைக்கப்படுகிறார்). இந்த ஆக்கான்தான் எரிகோவில் கடவுளின் கட்டளையை மீறியவர் (யோசு 1:18; 1 நாள் 2:7; 4:1 இல் காலேபு என்பது கர்மி என்று வாசிக்கப்படவேண்டும்).

3. ஒருவேளை காலேபின் மற்றொரு பெயராக இருக்கலாம் ( 1 நாள் 4:1)

*கர்மியர்* (CARMITES)

கர்மி என்பவரைக் குலத்தலைவராகக் கொண்ட குடும்பத்தின் பெயர் (1 எண் 26:16).

*கர்மேலியர்*(CARMELITE)

கர்மேல் நகரின் குடிமகன் நாபால் (1 சாமு 30:5;2 சாமு 2:2; 3:3) கெசிரோ (2 சாமு 23:35; 1 நாள் 11:37) ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்தவர்களாவர்.

*கர்மேலியள்*(CARMELITESS)

கர்மேல் நகரைச் சேர்ந்த பெண். நாபாலின் மனைவியான அபிகாயிலுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது (1 சாமு 27:3; 1 நாள் 3:1).

*கர்மேல்* (CARMEL - *திராட்சைத் தோட்டம்*) - *நகரம்*.

யூதாவிலுள்ள மாவோன் மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊர் (யோசு 15:55). தற்காலத்தில் இது ஏல் - கெர்மில் என்பதாகும். கெபிரோனிலிருந்து தெற்கே, தென்கிழக்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது. அமலேக்கியர்களை முறியடித்தபின் மன்னர் சவுல் இவ்விடத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை ஏற்படுத்தினார் (1 சாமு 15:12). தாவீது மன்னனுக்கும் நாபால் என்பவனுக்கும் இடையே ஏற்பட்ட நிகழ்ச்சி இவ்விடத்தில்தான் நிகழ்ந்தது. அதன் விளைவாகத் தாவீது நாபாலின் மனைவியாகிய அபிகாயில் என்ற விதவையைத் தம் மனைவியாக ஏற்றுக்கொண்டார் (1 சாமு 25:2-40; 27:3; 30:5; 2 சாமு 2:2; 3:3; 1 நாள் 3:1). மன்னன் தாவீதின் வலிமையான போர் வீரர்களுள் ஒருவரான கெசிரோ கர்மேல் ஊரைச் சார்ந்தவர் (2 சாமு 23:35; 1 நாள் 11:37).

*கர்மேல் மலை* (CARMEL MOUNT - *தோட்டம், திராட்சைத் தோட்டம்*)

பாலஸ்தீனக் கடற்கரையில் அமைந்த மிக முக்கியமானதொரு மலை. இது மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள மலைத் தொடர்களுக்குத் தலைமையாக உள்ளது. இறைவாக்கினர்கள் எலியா, எலிசா ஆகியவர்களோடு அதிகமாகத் தொடர்புடையது. சின்னமானியன் என்ற கடுமையான சுண்ணாம்புக் கற்களால் ஆன இந்த மலை தென் கிழக்கே சுமார் 13 மைல் தூரம் நீண்டு செல்கிறது. எசிபியா என்னுமிடத்தில் மிக அதிகமாக 530 மீட்டர் உயரம் கொண்டது. சாதாரணமாகத் தரைமட்டத்திலிருந்து 140 மீட்டர் உயரம் கொண்டது. இம்மலையின் வடகிழக்குப் பகுதியானது சரிந்து செங்குத்தாகக் காணப்படுகிறது. ஆனால் தென்மேற்குப் பகுதியானது கடல்மட்டத்தை நோக்கி வரும்போது படிப்படியாக உயரம் குறைந்து செல்கிறது. செழிப்புவாய்ந்த அடர்த்தியான செடி கொடிகள் இம்மலையில் காணப்படுகின்றன.

ஆப்பு வடிவத்தில் காணப்படும் இம்மலை பாலஸ்தீனக் கடற்கரையை இருபகுதிகளாகப் பிரிக்கிறது. வடக்கே ஆக்கோ சமவெளி என்றும் தெற்கே சாரோன், பெலிஸ்தியா சமவெளிகள் என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கிறது. இம்மலையின் அடி மட்டத்திற்கும் கடலுக்கும் இடையே காணப்படும் குறுகிய கடற்கரைச் சாலைதான் இந்த இரு பகுதிகளையும் இணைக்கிறது. இம்மலைத்

தொடரின் கணவாய்கள் வழியாகத்தான், வணிக, இராணுவப்பாதைகள், இபுலயாம், தனாக்கு, மெகிதோ, யோக்குனேயாம் ஆகிய இடங்களுக்குச் சென்றன.

கர்மேல் மலை பிறபகுதிகளிலிருந்து பிரிந்து இருப்பதால் வரலாற்றுக் காலங்களில் இதன்மேல் மக்கள் குறைவாகவே குடியேறினர். எனினும் இம்மலையின் மேற்குப் பகுதியில் காணப்படும் குகைகளில் கற்காலங்களில் மனிதர்கள் வாழ்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன. இம்மலையைப்பற்றிய முதல் வரலாற்று விளக்கங்கள் மூன்றாம் துத்து — மோசு, இரண்டாம், மூன்றாம் இராமசேக ஆகியோரது குறிப்புகளில் காணப்படுகின்றன. எனினும் பலர் இக்குறிப்புகளில் காணப்படும் ரோஸ் கிதுசு என்ற இடத்தைக் கர்மேல் மலையெனக் கூறுவர். ரோஸ் கிதுக என்பதன் பொருள் புனிதமுனை என்பதாகும். இதுதான் கர்மேல் மலைக்குப் பெயர் என்றால், இம்மலை முற்காலத்தில் புனித இடமாக அல்லது பீடமாகக் கருதப்பட்டது என்பது பலரது கருத்து.

விவிலிய வரலாற்று ஏடுகளில் இம்மலை முக்கியத்துவம் வாய்ந்தது. இறைவாக்கினர் எலியாவிற்கும் பாகால் தெய்வத்தின் இறைவாக்கினர்களுக்கும் போட்டி நடந்தது இம் மலையில்தான் (1 அர 18:19-40). இறைவாக்கினர் எலிசா கர்மேல் மலையில் தான் தங்கிச் செபித்து வந்தார் ( 2 அர 2:25; 4:25). கர்மேல் மலையின் அழகும் (உ.ச. 7:5) அதன் வலிமையும் விவிலிய ஆசிரியர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. எனவேதான் அவர்கள் இம் மலையைச் சாரோன், லெபனோன், பாசா, கிலயாது, (ஏச 33:25; எரே 50:19; மீக் 9:14) ஆகிய சமவெளிகளோடு ஒப்பிட்டுக் கூறுவர். அல்லது இம்மலையின் காய்ந்த நிலையைப் (வறட்சியை) பெரும் வறட்சி என்று உவமைப்படுத்தியும் கூறுவர் (ஏச 33:9; ஆமோ 1:2; நாகூ 1:4).

எலியாவின் பெயர் இன்றும் இம்மலையோடு தொடர்புபடுத்தப்பட்டு இறைவாக்கினர் எலியாவின் மலை என்ற பொருளில் ''எபெல் மார் எலியா'' என்றழைக்கப்படுகிறது. இம்மலை அடிவாரத்தில் இக்காலத்திய கயிபா என்ற நகர் உள்ளது.

**கர்னயிம்** (CARNAM)

அசித்தரோத்து — கர்னயிம் என்பதன் மற்றொரு பெயர் (1 மக் 5:26;2 மக் 12:21.26)

**கலப்பை** (PLOUGH)

நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கருவி. அக்காலத்தில் கலப்பைகளின் தரம் மிகக் குறைவாகவே இருந்தது. இந்தக் காலத்திலும்மேற்காசிய நாடுகள் சிலவற்றில் கலப்பையின் தரம் இன்னும் முன்னேறவில்லை. இக்கலப்பைகள் நிலத்தின் மேல்பரப்பை நான்கு அல்லது ஐந்து அங்குலங்களுக்குத் தோண்டி ஆழப்படுத்தும். நல்ல மழை பெய்தபின் கெட்டியான நிலத்தில் பயிரிடுமுன் நிலம் இக்கலப்பையின் மூலம் உழப்படுகிறது. உப 22:10-இல் மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழும் அரேபியப் பழக்கத்தை இஸ்ராயேல் மக்கள் பின்பற்றக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

இக்காலம் போல் அக்காலத்திலும் பல்வேறு மிருகங்களை உழுவதற்குப் பயன்படுத்தியிருப்பார்கள் என அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**கலயம்** (CRUSE)

பத்து முதல் பதினைந்து செ.மீ உயரமுள்ள இந்தக் கலயம் ஒலிவ எண்ணெயை வைத்திருக்கப் பயன்பட்டது. இறைவாக்கினர் எலியா சரேப்தா ஊரின் விதவையிடம் உணவு கேட்கும்போது, அவள் பானையில் சிறிது மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் இருப்பதாகக் கூறுகிறாள் (1 அர 17:12-16). 1 சாமு 26:11-16-இல் களிமண்ணால் செய்யப்பட்ட தண்ணீர்க் குவளையைக் குறிக்கப் பயன்படுகிறது. 2 அர 2:20-இல் கிண்ணம் என்று குறிக்கப்படுகிறது.

**கலயேது** (GALEED - சாட்சிக் குவியல்)

கலயேது என்பதற்குச் சாட்சியக்குவியல் என்று பொருள். கற்குவியல், எல்லைக்கல்,

நினைவுத்தூண் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். யாக்கோபும் இலாபானும் தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாகவும், தங்களுக்குரிய பகுதியின் எல்லையாகவும் அமைத்துக் கொண்ட கற்குவியலுக்குக் கலயேது என்ற பெயரை யாக்கோபு இட்டார். இதையே இலாபான் எகர்-சகதூத்தா என்றழைத்தார் (ஆதி 31:46-54). பின்னது அரமேயிக்குப் பெயராகும். சொல்லிலக்கணப்படி கலயேது கிலயாதுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

## கலாத்தியருக்குத் திருமுகம் (LETTER TO THE GALATIANS)

*1. ஆசிரியர்:-* இந்தத் திருமுகத்தைப் பவுல் தான் எழுதினார் என்பது பற்றித் தொடக்க காலத் திருச்சபையில் ஐயம் இருந்ததில்லை. இதையே பழங்காலத் திருச்சபை ஆசிரியர்களும் நவீனகால ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டனர். இதற்கு மாறாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சில புரட்சி ஆய்வாளர்கள் எழுத ஆரம்பித்தனர். இவர்கள், பாவுர், வான்மொனென். லூரவாசி, துபியன் குழுவினர் போன்றவர்களாவர். இந்தத் திருமுகத்திலிருந்து அந்தியோக்கிய இஞ்ஞாசியர், போலிக்கார்பு, யூஸ்தீன் போன்றவர்கள் எடுத்துக்காட்டுக் கூறுகின்றனர். இரனேயு, இந்நூல் பவுலால்தான் எழுதப்பட்டது என்று தெளிவாகக் கூறுகிறார். இது முராதோரியன் பட்டியலிலும், தொடக்க காலத் திருச்சபைச் சங்கங்களின் பட்டியலிலும் இடம் பெறுகின்றது. மேலும் உள்ளார்ந்த ஆய்வு, நூலின் ஒவ்வொரு வரியிலும் பவுலின் கரத்திற்குச் சான்று காட்டுகிறது.

*2. கலாத்தியா:-* சிறிய ஆசியாவின் மத்தியிலுள்ள ஒரு பகுதியாகும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறிய காலியரின் (கெல்தியர்) பெயரால் கலாத்தியா என்றழைக்கப்பட்டது. இவர்கள் இந்தோ-ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஐரோப்பாவிலிருந்து தென் ஐரோப்பப் பகுதிகளுக்கும் மக்கதோனியாவுக்கும், கிரேக்கத் தீபகற்பப் பகுதி வரையும்கூடப் படையெடுத்து வந்தனர். இங்குப் பித்தினியாவின் அரசன் முதலாம் நிக்கோதேமு தன் சகோதரனுக்கு எதிராக இவர்களின் உதவியைப் பயன்படுத்தினார். இந்தக் கலாத்தியக் கூட்டத்தினர் மேற்குச் சிறிய ஆசியாவில் பரவ ஆரம்பித்தனர். இவர்களின் முன்னேற்றம் செலூக்கிய அரசன் முதலாம் அந்தியோக்குவால் தடுக்கப்பட்டு, காலி ஆற்றின் இருமருங்கிலும் உள்ள பகுதி இவர்களின் பகுதியாயிற்று. இப்பகுதி வடக்கில் பித்தினியாவாலும் மற்றும் பாப்லகோனியாவாலும், தெற்கிலும் மேற்கிலும் பிரிகியாவாலும் கிழக்கில் போந்துவாலும் தென்கிழக்கில் கப்பதோக்கியாவாலும் சூழப்பட்டிருந்தது. இப்பகுதியின் முக்கிய நகரங்கள் அன்சிரா (இக்கால அங்கரா) பெசினு, தாவியும் ஆகும். பிற்கால விவிலிய இலக்கிய வாத எதிர் வாதத்தில் ''வட பகுதி'' என்றழைக்கப்படும். தொடக்க காலக் கலாத்தியா மூன்று காலிய இனத்தவர் சேர்ந்த கூட்டரசு ஆகும். பன்னிரண்டு தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இவர்கள் சுற்றியுள்ள பகுதிகளைத் தாக்கித் தொந்தரவு கொடுத்து வந்தனர். கி.மு. 189-ஐ ஒட்டி மனலியு வுல்சோ என்ற உரோமைப் படைத் தலைவர் இவர்களை அடக்கினார். மித்திரிதேத்தியப் போரில் பெர்காமோனுக்கு எதிராக இப்பகுதியைத் தாக்குதலைத் தாங்கும் இடைப்பகுதியாக உரோமையர் பயன்படுத்தினார். பின்னர் இப்பகுதி உரோமையருக்குப் பணிந்த நாடாகியது. கலாத்தியர் செய்த உதவிக்குச் சன்மானமாக இப்பகுதி விரிவாக்கப்பட்டது. கி.மு. 40-ஐ ஒட்டிப் பிசிதியா, பிரிகியா, இலிக்கவோனியா, பாப்லகோனியா, போந்து மற்றும் இசாவுரியா ஆகிய பகுதிகள் கலாத்தியாவின் பகுதிகளாகின. இவை பிற்காலத்தில் பிற்கால விவிலிய இலக்கிய வாத எதிர் வாதத்தில் ''தென்னாடு'' என்றழைக்கப்படும். கி.மு.25-இல் கடைசி காலிய அரசன் அமின்தாஸ் இறந்தபின் இப்பகுதி ஓர் உரோமையர் மாகாணமாயிற்று. அன்சீரா இம்மாகாணத்தின் தலைநகராயிற்று. பிசிதிய அந்தியோக்கியா, இக்கோனியா, இலிசித்திரா, தெர்பை போன்றவை தென்பகுதியின் முக்கிய நகரங்களாகும்.

பவுல் தமது முதல் (அ.ப. 13:14; 14:24) இரண்டாம் (16:1-5) மறைபரப்புப் பயணங்களில் இம்மாகாணத்தின் பல நகரங்களுக்கும் சென்றார். 2 திமோ 4:10; 1 பேதுரு 1:1-இல் குறிக்கப்படும் கலாத்தியா உரோமை மாகாணத்தையே குறிக்கலாம்.

3. யாருக்கு எழுதப்பட்டது?:- ''கலாத்தியா'' என்ற சொல்லை எந்தப் பொருளில் பவுல் பயன்படுத்தினார்? யாருக்கு இந்தத் திருமுகத்தை அவர் எழுதினார்? கலாத்திய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கா? அதாவது வட பகுதியில் வாழ்ந்தவர்களுக்கா? அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கா? அதாவது, உரோமை மாகாணத்தின் தென் பகுதியில் வாழ்ந்தவர்களுக்கா? வட பகுதியினருக்குத்தான் பவுல் இத்திருமுகத்தை எழுதினார் என்றனர் சிலர். வேறு சிலர் தென்பகுதியினருக்குத்தான் பவுல் இத்திருமுகத்தை எழுதினார்என்று வாதிட்டனர். முதல் வாதத்தைப் புனித எரோனிமு தொடங்கி வைத்தார். கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தியோகிலேசியன் உரோமை மாகாணத்தை இருபகுதியாகப் பிரித்தார். கலாத்தியா வட பகுதியை மட்டுமே குறித்தது. ஆகவே இந் நூல் வட கலாத்தியாவுக்கு எழுதப்பட்டது என்று எரோனிமு கருதினார். இதைப் பின் பற்றிப் பலரும் இக்கருத்தையே எடுத்துக் கூறினர். இதற்கு மாறாக, கலாத்தியா என்பது உரோமை மாகாணத்தையும் குறிக்கலாம். இப்பகுதி வடபகுதியையும் தென்பகுதியையும் பிரிகியா, பிசிதியா இலிக்வோனியப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். தென்பகுதியின் நகர்களுக்குப் பவுல் சென்றுள்ளார் (அ.ப. 13:13-14:23). ஆகவே இப் பகுதியினருக்குத்தான் பவுல் தம் திருமுகத்தை எழுதினார் என்று சிலர் கூறினர். இக்கருத்து யோகனான் சிமித்து என்பவரால் (கி.பி. 1748) தொடங்கி வைக்கப்பட்டது; இரேனான், இராம்சே போன்றவர்களும் இக் கருத்தை ஆதரித்தனர்.

இரண்டாவது கருத்துப்படி, அந்தியோக்கியா, இக்கோனியா, இலிசித்திரா, மற்றும் தெர்பை ஆகிய இடங்களிலுள்ள திருச்சபைகளுக்கு இந்தத் திருமுகத்தைப் பவுல் எழுதியிருக்கலாம். ஏனெனில் அவரே தமது முதல் மறைபரப்புப் பயணத்தில் இத்திருச்சபைகளை நிறுவினார் (அ.ப. 13:14.51; 14:6); இரண்டாவது பயணத்தில் இத்திருச்சபைகளைப் பார்வையிட்டார் (16:1-2). இக்கருத்துக்கு ஆதரவாகக் கூறப்படும் காரணங்கள் அ) லூக்காவைப்போல் அல்லாமல், பவுல் தாம் குறிப்பிடும் இடங்களுக்கு, நாட்டுப் பெயர்களை அளிக்காமல், உரோமை மாகாணப் பெயர்களையே கொடுப்பது அவரது வழக்கம். சான்றுகள்: உரோ 15:26-அக்காயா; 1 தெச 1:7-8-மக்கதோனியா; உரோ. 16:5-ஆசியா....ஆ) கலாத்தியா வழியாகப் பவுலின் பயணங்களைக் குறிக்கும் அ.ப. 16:6 என்ற பகுதியோ அ.ப. 18:23 என்ற பகுதியோ வட கலாத்தியாவில் எந்தத் திருச்சபையும் நிறுவப்பட்டதாகச் சுட்டவில்லை. இ) பவுல் கலாத்திய மொழியைப் பேசியிருக்க முடியாது. ஏனெனில் அது அப்போது எரோனிமு காலம்வரை கெலித்திய மொழியாகும். ஈ) கலா 3:2, 13-14.23-24; 4:25; 5:1 என்ற பகுதிகள், இந்தத் திருமுகம் யூத-கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகச் சுட்டுகின்றன. அப்படிப்பட்ட யூதக் கிறிஸ்தவர்கள், தென் கலாத்தியாவிலுள்ள கிரேக்கக் கலாச்சாரத்தைத் தழுவிய நகரங்களில்தான் வாழ்ந்து வந்தனர்.

இக்காரணங்கள் உண்மையிலேயே மதிப்பீடு உடையவையா? இவற்றிற்கு எதிராக, இத்திருமுகம் வடகலாத்தியருக்குத்தான் எழுதப்பட்டது என்று கூறுபவர்கள் பின் வரும் பதில்களைத் தருகின்றனர். அ) கலா 1:21, ''சிரிய மற்றும் சிலிசியா'' என்பவற்றை உரோமை மாகாணங்களின் பெயர்களாக அல்லாமல், நாடுகளின் பெயர்களாகப் பவுல் பயன்படுத்துவதைக் காட்டுகிறது. 1:17-இல் அவர் ''அராபியா'' வைப் பற்றிப் பேசுகிறார். இப்பகுதி கி.பி.106 வரை உரோமை மாகாணமாகவில்லை. 1:1-இல் வரும் ''கலாத்தியா'' என்ற பெயர் பற்றி ஒருவர் தயங்கினாலும், 3:1-இல் வரும் ''கலாத்தியா'' பற்றி அவர் ஐயுற வேண்டியதில்லை. பின்னதில் ''அறிவிலிகள்'' என

ஒரு நாகரீகமற்ற இனத்தைப் பற்றிக் குறிப்பிடு கிறார் பவுல். இக்கூற்று தென்கலாத்தியா வைச் சேர்ந்த கிரேக்கக் கலாச்சார மக்களுக் குப் பொருந்தாது. ஆ) சுருக்கிக் கூறப்பட்ட லூக்காவின் அ.ப. விவரிப்புகளில் ஒன்று கூறப்படவில்லை என்பதிலிருந்து வாதிப் பது அவ்வளவு பொருத்தமுடையதன்று. உண்மையில் அ.ப. *18:23;* இப்பகுதியில் ஏற்கெனவே திருச்சபைகள் நிறுவப்பட்டிருந் தன என்பதை உணர்த்துகின்றது. பவுல், இலிசித்திரா மற்றும் இக்கோனியாவிலி ருந்து பிரிகியாவுக்கும் ''கலாத்தியா பகுதிக ளுக்கும்'' சென்றார் என்பது அ.ப. *16:6*-இன் விளக்கமாகும். ''கலாத்தியா பகுதிகள்'' என்ற அதே சொற்கள் *18:23*-இலும் வருவ தைக் காண்க. இ) வடகலாத்தியர் வேறொரு மொழி பேசியது உண்மையே. பவுலுக்கு மொழி பெயர்ப்பாளர் தேவைப்பட்டது இந்த இடத்தில் மட்டுமன்று (அ.ப. *14:11*). ஈ) கலா *3:2-3; 13:14.23-24; 4:2; 5:1* என்ற பகுதியும், யூதப் பற்றுடையவர்களைத் தவிர்த்த மற்ற யூதக் கிறிஸ்வர்கள் கலாத்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர் என்று குறிக்க வேண்டும். உண்மையில் கலா *4:8; 5:2-3; 6:12-13* ஆகிய பகுதிகள் இத்திரு முகத்தின் வாசகர்களின் புற மதப்பின்னணி யையே சுட்டுகின்றன. யூதர்கள் வாழ்ந்ததா கக் கருதப்பட்ட அந்தியோக்கியா, இலிசித் திரா போன்ற நகர்களில், கிறிஸ்துவத்தோடு சட்டம் கொண்டிருந்த உறவு பற்றிய பிரச் சனை ஏற்கெனவே எழுந்திருக்கலாம். கலா *1:6*-இல் குறிக்கப்படும் சட்டக் கவர்ச்சி சமீப காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இவை காரணமாக, பவுல் இத்திருமுகத்தை வட கலாத்திய புறவினச் சமூகங்களுக்குத்தான் எழுதியிருக்க வேண்டும் என்று வடகட்சியி னர் கூறுகின்றனர்.

இத்திருமுகம் கலாத்தியாவின் வடபகு திக்கு எழுதப்பட்டதா தென்பகுதிக்கு எழு தப்பட்டதா என்ற பிரச்சனை இப்போது அவ்வளவு முக்கியத்துவமுடையதன்று. இப் பகுதிகளில் இருந்த திருச்சபைகள் பற்றி அறியும் செய்திகள் மிகக் குறைவே. அவை திருமுகத்தை விளக்குவதில் அளிக்கும் உதவி மிகக் குறைவே.

5. எப்போது எழுதப்பட்டது?:- இதைக் கணிப்பது கடினம். ஒருவேளை மூன்றாவது பயணத்தில் அ.ப. *18:23*-இல் குறிக்கப்படும் கலாத்தியாவுக்குப் பவுல் இரண்டாம் முறை சென்றதற்குப் பிறகு இத்திருமுகம் எழுதப் பட்டிருக்கலாம் என்று கலா *4:13* சுட்டுகிறது. எபேசிலிருந்து பவுல் இத்திருமுகத்தை எழுதி யிருக்கலாம். தொடக்கத் திருச்சபையில் யூதப் பற்றுடையவர்களின் செல்வாக்கோடு பவுல் ஆற்றிய முக்கிய போராட்ட காலத் தைச் சேர்ந்ததாகும் இத்திருமுகம் என்றும் கூறலாம். இந்தக் காலத்தில்தான் கொரிந்திய ருக்கு முதல், இரண்டாம் திருமுகங்களை யும் உரோமையருக்குத் திருமுகத்தையும் ஒருவேளை பிலிப்பியருக்குத் திருமுகத்தை யும் பவுல் எழுதினார். கலாத்தியருக்குத் திருமுகம் உரோமையருக்கு முந்தியது என்று உறுதியாகக் கூறலாம். இத்திருமுகம் கொரிந் தியருக்கு முதல் இரண்டாம் திருமுகங்க ளோடு கொண்டுள்ள தொடர்பு சர்ச்சைக்குரி யதாகும். இவற்றின் அடிப்படையில் தமது மூன்றாம் பயணத்தில் எபேசுக்கு வந்த பிற் பாடு கி.பி. *54-55*-ஐ ஒட்டிப் பவுல் இத்திரு முகத்தை எழுதியிருக்கலாம்.

தென் கலாத்தியருக்குப் பவுல் இத்திரு முகத்தை எழுதினார் என்று கூறுபவர்கள், முதல் பயணத்திலிருந்து திரும்பியபின், சீரி யாவிலுள்ள அந்தியோக்கியாவிலிருந்து, எருசலேம் சங்கத்திற்குமுன் இத்திருமுகம் எழுதப்பட்டது என்பர். இக்கருத்தைத் திரு முகத்தில் காணப்படும் எல்லாச் செய்திக ளோடும் ஒத்துப் போகச் செய்வது கடினம். இத்திருமுகம் இரண்டாம் கொரிந்தியருக் கும் உரோமையருக்கும் இடையில் எழுதப் பட்டதாகவும் சிலர் கருதுவர்.

5. சூழ்நிலையும் நோக்கமும்:- மீட்புப் பெற, கிறிஸ்துவில் கொண்டிருக்கும் விசு வாசத்தைப்போல், விருத்த சேதனமும் மோசேயின் சட்டமும் கடைப்பிடிப்பது அவசியமாகும் (கலா *2:16; 5:2*) என்று

போதித்துக் ''கள்ளச் சகோதரர்களின்'' கோட்பாட்டால் புதிதாய் மனந்திரும்பிய கலாத்தியர் மயங்கிப்போய், அதைப் பின் பற்ற ஆரம்பித்தனர். இவர்கள் பெரும்பாலும் புற இனத்தாராகத் தெரிகிறது (அ.ப. 13-14; கலா 4:8). இவர்களின் புதிய போக்கைப் பற்றிய செய்தியே, இத்திருமுகத்தைப் பவுல் எழுதத் தூண்டியது. இப்புதிய கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால், மோசேயின் சட்டத்தை ஏற்றுக் கடைப்பிடிக்காவிட்டால் இயேசுவில் விசுவாசமும் அவர் சிலுவைச் சாவின் மூலம் அளித்த மீட்பும் ஒருவரை ஏற்புடையவராக்கப் பற்றாக்குறையானவை என்ற முடிவு ஏற்படும். அதாவது மனந்திரும்பிய கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதமுறைப்படி வாழ வேண்டும். இது, திருச்சபையின் உலகளாவிய தன்மைக்கும் ஒரு மரண அடியாகும். இயேசுவின் போதனைக்கும் பேதுருவுக்கு அ.ப. 10-11-இல் அளிக்கப்பட்ட போதனைக்கும் முற்றிலும் மாறானதாகும்.

யூதமயமாக்கும் இக் ''கள்ளச் சகோதரர்கள்'' அந்தியோக்கியாவுக்குச் சென்று, அங்குத் தங்களின் கோட்பாட்டுக்கு அப்போஸ்தலர்களின் ஆதரவு இருப்பதாக உரிமை கொண்டாடியதாகத் தெரிகிறது (அ.ப. 15:1. 5.24). அந்தியோக்கியாவில் கலகம் விளைவித்ததோடு திருப்தி அடையாமல், இவர்களில் சிலர் இரகசியமாகக் கலாத்தியாவுக்குச் சென்று (கலா 2:4) பவுல் மனந்திருப்பியவர்களைத் தங்கள் கோட்பாட்டுக்கு மனந்திருப்ப முயன்றனர்.

இவர்களின் வாதமானது, மோசேயின் சட்டம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையும்,சட்டத்தை ''அழிப்பதற்கன்று நிறைவேற்றுவதற்கே வந்தேன்'' என்று இயேசு கூறியதுமே ஆகும் (மத் 5:17). இவர்கள் கலாத்தியர்களின் மனவுறுத்தல்களைப் போக்கப் பவுலின் அதிகாரத்தை விட மேலான பன்னிரு அப்போஸ்தலர்களின் அதிகாரம் தங்களது கோட்பாட்டுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறினர். பவுலும் தம் உள்ளத்திலே இவர்களோடு ஒத்த கருத்துடையவராய் இருப்பதாக இவர்கள் உரிமை கொண்டாடினர். பவுலின் அதிரடிச் செயல் வேகமாகவும் கடுமையாகவும் இருந்தது. உள்ளம் கலங்கியவராய், நேர்மையான சினத்தால் துடித்தவராய், இத்திருமடலை எழுதினார். இதிலே உணர்ச்சிப் பெருக்கோடு தமது அப்போஸ்த்துவ அதிகாரத்தை எண்பிக்கிறார். கள்ளச்சகோதரர்களின் தீயதவற்றையும், அதைப் பின்பற்றியவர்களையும், அதற்கு ஆதரவு அளித்தவர்களையும் கடுமையாகக் கண்டனம் செய்கிறார். தவறாகப் புரிந்து கொள்ள முடியாத ஆற்றலோடும் தெளிவோடும் கலாத்தியருக்கு உண்மையான பிரச்சனையை எடுத்துக் கூறுகிறார். அதாவது ''நீங்கள் விருத்தசேதனம் செய்து கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்குப் பயனே இல்லை'' (கலா 5:2). சட்டத்திற்கு மாறாகக் கிறிஸ்தவர்கள் அடைந்திருக்கும் ''புதிய சுதந்தரத்தை'' வலியுறுத்துகிறார். தாம் போதித்த நற்செய்தியே ஒரே சரியான நற்செய்தியாகும் என்று அறிவிக்கிறார். அவரது கோட்பாட்டையும் செயல்முறையையும் எருசலேம் சங்கம் ஏற்றுக் கொண்டது.

5. நூலின் திட்டம்:-

1. முன்னுரை (1:1-19).

அ. இறைவாழ்த்து (1:1-5).

ஆ. வியப்பும் (1:6-7) சாபமும் (1:8-10).

2. பவுல் தம் நற்செய்திக்கு அளிக்கும் காப்புரை (1:11-21).

அ. இந்நற்செய்தி மனிதனின் படைப்பன்று இறைவனால் அளிக்கப்பட்டது (1:11-24).

ஆ. இந்நற்செய்தி எருசலேம் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது (2:1-10).

இ. இந்நற்செய்தி பேதுருவின் முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது (2:11-14).

ஈ. பவுலின் நற்செய்தியின் சுருக்கம் (2:15-21).

3. இறைவனின் திட்டத்தில் மீட்பளிப்பது விசுவாசமே, சட்டமன்று (3:1-4:31).

அ. விசுவாசத்தின் ஆட்சி (3:1-29).

ஆ. கிறிஸ்தவ சுதந்தரத்தின் ஆட்சி (4:1-20).

இ. இச்சுதந்தரத்தை விளக்கும் சாரா மற்றும் ஆகார் பற்றிய உருவகம் (4:21:31).

4. அறவுரை: கிறிஸ்துவில் இச்சுதந்தரத்தைப் பாதுகாத்தல் (5:1-6:10).
அ. கிறிஸ்துவில் அடைந்த இச்சுதந்தரத்தை இழக்காமலிருக்க எச்சரிக்கை (5:1-12).
ஆ. இச்சுதந்திரத்தைப் பயன்படுத்தும் முறை (5:13-6:10).

5. முடிவுரை (6:11-18).

6. போதகம்:-

1. யாவருக்கும் மீட்பும், அதனோடு சட்டத்தின் தொடர்பும்:-

இறைவனின் வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டதும், யூதர்கள் மற்றும் புறஇனத்தவர்கள் ஆகிய அனைவருக்குமானதுமான மீட்புத்திட்டமும், அதோடு மோசேயின் சட்டம் கொண்டுள்ள தொடர்பும் இத்திருமுகத்தின் போதனையாகும். இத்திருமுகத்திற்கும், பவுலின் இறையியலுக்கும் தொடக்கம், தமஸ்கு சாலையில் மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவைப் பவுல் காட்சியில் கண்டதாகும். கிறிஸ்துவே பவுலின் மீட்பர். அவரே யூதர்களையும் புற இனத்தாரையும் மீட்க வந்தவர். மீட்பின் பலனில் பங்குகொள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் மோசேயின் சட்டத்தையும் விருத்தசேதனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்; இல்லையென்றால் மீட்புப்பெற முடியாது என்று யூதப்பற்றுடையவர்கள் வலியுறுத்தினர். இந்த யூதப்பற்றுடையவர்கள் அவர்கள் காலத்து யூதத்துவத்தின் சிந்தனைப் போக்கால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இந்தச் சிந்தனைப்போக்கு, மோசேயின் சட்டம் நித்தியமானதென்றும், மாற்றமுடியாதது என்றும், இறைஞானத்தோடு ஒன்றானது என்றும் அருளுக்கும் வாழ்வுக்கும், மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் ஊற்றானது என்றும் கருதியது.

சட்டம் இறைவனால் கொடுக்கப்பட்டது என்று பவுல் ஏற்றுக் கொள்கிறார் (கலா 3:19). ஆனால் அதற்கு மீட்பாற்றலையோ ஏற்புடையவராக்கும் ஆற்றலையோ அளிக்கப் பவுல் மறுத்துவிடுகிறார். அப்படி ஏற்றால் கிறிஸ்து சிலுவையில் செலுத்திய தனிச்சிறப்பான எல்லாம் நிறைவான பலிக்குச் சமமான இடத்தைச் சட்டத்திற்கு அளிப்பதாகும் (3:21). இந்தத் தவறு அடிப்படையானது, உடனேதகர்க்கப்பட வேண்டும். இதில் எந்த விட்டுக்கொடுத்தலும் கிறிஸ்துவின் சிலுவையை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும் (2:21). ஆகவே இத்திருமுகத்தில், கிறிஸ்துவிலும், ஏற்புடையவராக்கும் அவரது அருளிலும் கொண்ட விசுவாசத்தை எல்லா மனிதர்களுக்கும் எல்லாக் காலங்களிலும் அளிக்கப்படும் மீட்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது, கொண்டிருக்கிறது, கொண்டிருக்கும் என்று பவுல் காட்டுகிறார். அதே சமயத்தில், சட்டம் ஒருவரை ஏற்புடையவராக்க முடியாது என்றும், மீட்புத் திட்டத்தில் அதன் உண்மையான இடம் எது என்றும் கலாத்தியருக்குக் காட்டுவதில் பவுல் மிகவும் சிரத்தை எடுக்கிறார்.

யூதா இனத்தின் தந்தையான ஆபிரகாமிலிருந்து உலக சமய வாழ்வில் மூன்று கட்டங்களைப் பவுல் காண்கிறார். அ) ஆபிரகாமிலிருந்து மோசே வரைக்கும்:- இக்காலத்தில் இறைவனின் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தினால் ஏற்புடைமை வந்தது. இக்காலத்தில் நேரடிச் சட்டம் என்று கூறப்படும் ஒன்றுமில்லை. விருத்தசேதனம் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் அடையாளமேயாகும் (ஆதி 17:11). ஆ) மோசேயிலிருந்து கிறிஸ்து வரைக்கும்:- இக்காலத்திலும் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தினாலேயே ஏற்புடைமை வந்தது. ஆனால் சீனாய் மலையில் அளிக்கப்பட்ட சட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் (சட்டமன்று விசுவாசமே ஏற்புடையவர்களாக்கியது). இ) கிறிஸ்துவிலிருந்து:- அவரில் கொண்டுள்ள விசுவாசத்தாலும் அதே சமயம் நற்செய்தியைக் கடைப்பிடிப்பதாலும் ஏற்புடைமை வருகிறது. இந்நற்செய்தி புதிய, முன்னேற்றமான யூதத்துவத்தைவிட மேலானது.

கிறிஸ்துவம் குறையுள்ள பழைய ஏற்பாட்டு முறைமைகளோடு சேர்க்கப்பட்டது, அதை நிறைவு செய்வது என்பதைவிட அதிகமானது, அது கிறிஸ்து வழியாகவும் கிறிஸ்துவிலும் மன்னிப்பு, ஏற்புடைமை, மீட்பு மற்றும் வாழ்வின் சமயமாகும். ஆபிரகாமோடும் அவரது சந்ததியினரோடும் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையை மோசேயின் சட்டத்தின் இடைக்காலத்திற்கு அப்பாலும் நீடிக்கச் செய்வது. இந்தத் திருமுகத்தில், மோசேயின் அமைப்பின் நிலையில்லாத் தன்மை தெளிவாகக் காட்டப்படுகிறது. சட்டம் வானதூதர்கள் மற்றும் மோசே ஆகியோரின் இடையீட்டாலும் அறிவிக்கப்பட்டது என்பதாலும், இருதரப்பினர் உட்பட்ட உடன்படிக்கை வடிவிலும் அளிக்கப்பட்டது என்பதாலும் மோசேயின் சட்டத்தின் நிலையில்லாமை வலியுறுத்தப்படுகிறது. யூத மக்களின் பதிதம் இவ்வுடன்படிக்கையைச் செயலற்றதாகச் செய்யக்கூடும். இதற்கு மாறாக, வாக்குறுதிகள், ஆபிரகாமுக்கு நேரடியாகவும் ஒருதரப்பாகவும் அளிக்கப்பட்டன. அவை சலுகையாகவும் நிபந்தனையின்றியும் அளிக்கப்பட்டன. உலக மக்கள் எல்லாரையும் சார்ந்ததாகும். விருத்தசேதனம் பிற்பாடுதான் உடன்படிக்கையின் அடையாளமாகவும் முத்திரையாகவும் கொடுக்கப்பட்டது. இயேசுவுடன் கூடிய ஒன்றிப்பின் வழியாக, இறைவாழ்வு நிறுவப்படுவதும் வளர்ச்சியடைவதும்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமானதாகும் என்று பவுல் கருதுகிறார். சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் இதை அடையமுடியாது (கலா 3:20.21). இந்த இறைவாழ்வு, சட்டத்தின் செயல்களைச் சேராமலும், முழுவதும் சலுகையாகவும் இறைவனின் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தால் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்டது (3:6-9). பவுலின் கருத்துப்படி ஏற்புடைமை என்பது மூலப் பாவத்தாலும் ஒருவனுடைய சொந்தப் பாவத்தாலும் விளையும் இறைவனோடு கொள்ளும் பகைமை நிலையிலிருந்து மகன் நிலைக்கு மாறுவதாகும். இதில் மனிதன் தன்னிலேயே கிறிஸ்துவின் இறைவாழ்க்கை கொண்டுள்ளான். இது எப்போதும் விசுவாசத்தின் விளைவாக அளிக்கப்படும் இறைவனின் சுதந்தரமான கொடையாகும். இதிலே கிறிஸ்தவர்கள் அவர்கள் யூதர்களானாலும் புறவினத்தார் ஆனாலும், இப்போது ஆபிரகாமின் உண்மையான புதல்வர்களும் வாக்குறுதிகளின் உரிமையாளர்களும் ஆவர். ஏனெனில் அவர்களும் இறைமகனில் கொண்டுள்ள விசுவாசத்தால் ஏற்புடைமையைப் பெற்றுள்ளனர். அதையும் முழுமையும் இறைவனுடைய வள்ளன்மையிலிருந்து பெற்றுள்ளனர். கிறிஸ்து, மனுகுலத்தின் பிரதிநிதி என்ற அளவில் தமது சிலுவை மரணத்தால் மனித இனத்தில் எல்லாப் பாவங்களும், அவை மோசேயின் சட்டத்திற்கோ இயற்கைச் சட்டத்திற்கோ மாறானதாய் இருந்தாலும், பரிகாரம் செய்துள்ளார். இறைவனில் வாழும் பொருட்டு, கிறிஸ்துவைப்போல கிறிஸ்தவனும் திருமுழுக்கில் பெறும் மறுபிறப்பு அவனை ஒருபுதிய மட்டத்தில் வாழச் செய்கிறது. அதில் அவன் ''ஆவியினால் வாழ்கிறான்'' (5:25 தொ). அதனால் அவன் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவனல்லன் (5:18). இறைவன் புதல்வர்களின் இந்தச் சுதந்தரம், தீய பழக்கங்களையும் ஊனின் இச்சைகளையும் சாகடிப்பதால் வருவதாகும். அவன் ஒரு புதிய படைப்பாகிறான் (6:15). அவனது வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வு ஆகிறது. அவரில் அவன் ஓர் அங்கமாகிறான். அவரின் ஆலயமாகிறான் (2:20). 1 கொரி 6:15,19 ஆவி விளைவிக்கும் பலன்களைக் காட்டுகிறது (கலா 5:22-23). இவையுள்ள இடத்தில் சட்டம் எத்தடையும் விதிப்பதற்கு இடமில்லை.

ஆ) மோசேயின் சட்டத்தின் உண்மையான தன்மை:- ஏற்புடைமை ஒருபோதும் மனுக்குலச் சமயவரலாற்றில் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் வருவதில்லை. மாறாக வாக்குறுதிகளில் கொண்டுள்ள விசுவாசத்தால் வருவதால், யூதர்களின் வரலாற்றில் சட்டத்தின் இடம் என்ன?

சட்டம், அதற்குட்பட்டு அதைக் கடைப்பிடிக்கத் தவறியவர்களின் மேல் ''சாபத்தையே'' கொண்டு வந்தது. ஆனால் அதைக்

கடைப்பிடிக்க வேண்டிய சாதனங்களை அது அளிக்கவில்லை. யூதர்கள் தீர்ப்பிடப் பட வேண்டியதும் அவர்களின் குற்றங்களை வெளிப்படுத்தியதுமான ஒரு மேல்வரிச்சட் டத்தை அல்லது விதிமுறையையே அது வெறுமனே கொடுத்தது. அவர்கள் சட்டத் தைக் கடைப்பிடிக்கத் தவறியதால் அவர்கள் குற்றத்தை மேலும் அதிகப்படுத்தியது (கலா 3:19). சட்டம் ஒரு சிறைச்சாலை போன்றது. ஏனெனில், அது மனித இனத்தின் அடிமைத் தன்மையின் இழிநிலையையே வெளிப் படுத்தியதோடு, இந்நிலையிலிருந்து தப்பிப்ப தற்கு வேண்டிய சாதனங்களைக் கொடுக்க வில்லை (3:22). அதே சமயத்தில் சட்டம் ஒரு பயனுள்ள அலுவலைச் செய்தது. புற இனத் தீய பழக்கங்களிலிருந்தும் சிலை வழிபாட்டிலிருந்தும் யூதர்களை அது தனி மைப்படுத்தியது; அவர்களை ஒன்றித்திருக் கச் செய்து, வருங்கால மெசியாவை நோக் கிச் செயல்படச் செய்தது (3:22). இந்தப் பொருளில் கிறிஸ்துவின் வருகைக்குமுன் மனுகுலம் சிறுவனாகவும் மாணவனாகவும் இருந்தது. சட்டம் அவனது வழித்துணையா கவும் கண்காணிப்பாளனாகவும் இருந்தது (3:24). இப்போது கிறிஸ்து வந்துவிட்ட தால், வழித்துணையின் அலுவல் முடிந்து விட்டது. யூதர்கள் இனிச் சட்டத்தின் அதிகா ரத்தில் இல்லை. மாறாக மகன் தன்மையின் முழுமையிலும் உரிமையிலும் புக வேண்டி யவர்களாவர் (4:5-6). இவ்வாறு சட்டம், யூதவரலாற்றில், தற்காலிகமானதும் கடந்து போகும் தன்மையும் கொண்டதாகும். மனு குலத்தின் சிறுவன் பருவத்திற்கு ஏற்றதும். கிறிஸ்துவின் வருகை தனது முழு முதிர்ச்சி யைத் தொடங்கி வைத்தபோது, கடந்து போவதுமாகும். இதன் விளைவாக, இப் போது யூதர்களுக்கும் புற இனத்தார்க்கும் இடையே வேறுபாடு இல்லை.

இ) மோசேயின் சட்டம் அகற்றப்படுதல்:- சட்டம் அகற்றப்படுவது பற்றியும் ஏற்புடை யவராக்க அதன் ஆற்றலற்ற தன்மையைப் பற்றியும் பின்வரும் குறிப்புகளைப் பவுல் தருகிறார் (2:16-21). 1) சட்டத்தின் ஆற்றலற்ற தன்மையின் அடிப்படையிலே அப்போஸ்த லர்களும் விசுவாசிகளும் எப்போதும் செயல்பட்டனர். 2) திருநூலே இதை அறி விக்கிறது (சங் 143:2). 3) சட்டம், அதைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தன்மை யைக் கொண்டிருந்தால், மீட்பளிக்கச் சட்டம் போதுமானது என்ற அளவில் அதைக் கைவிடு வது பாவமாகும். அதற்குரிய குற்றத்தை இயேசுவின்மேல் சுமத்த வேண்டும். இது இறை நிந்தனையாகும். இதற்கு மாறாகச் சட்டத்திற்குத் தங்களையே கீழ்ப்படுத்திக் கொள்பவர்கள் முதலில் அதைக் கைவிட்ட தற்கான பாவத்தை ஏற்றுக் கொள்ள வேண் டும். 4) கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு சேர்ந்து சட்டத்திற்கு மரித்துவிட்டனர். 5) எல்லா அருளுக்கும் ஊற்றான கிறிஸ்துவின் மரணம் அளவில்லா மதிப்பைக் கொண்டி ருப்பதால், முழுநீதியை அடைய மற்றொரு சாதனத்தை அமைப்பது, கிறிஸ்துவின் சிலு வையின் மீட்பாற்றலை மறுப்பதாகும். 6) சட்டத்தின் ஆட்சியின் பண்புகள் வாக்குறுதி களின் பண்புகளோடு ஒத்துப்போகா. ஏனெ னில் வாக்குறுதிகள் சுதந்தரமாய்க் கொடுக் கப்பட்ட ஆன்மீகக் கொடைகளின் காரண மாய் இருக்கும்போது, சட்டம் எப்போதும் சரிக்குச்சரி தன்மையுடையது, அளந்து செய் யப்பட்ட பணிக்கு அளந்து சன்மானம் அளிக் கக் கூடியது (3:12). 7) கிறிஸ்து தமது சிலுவை மரணத்தால் ''நமக்காகச் சாபமா னார்'' (3:13). அம்மரணத்தால், சட்டத்தின் எல்லாக் கோரிக்கைகளையும் தம்மிலே முழுமையாக நிறைவேற்றியும், அதே சமயத் தில் சட்டத்திற்கு எதிரான யூதர்களுடைய வும், பொதுவாக மனுகுலம் முழுவதினு டையவும், குற்றங்களுக்கு முழுமையும் நிறைவுமான பரிகாரம் செய்தும், சட்டத்தின் சாபத்திலிருந்து நம்மை மீட்டார். இவ்வாறு பரிகாரம் செய்யப்பட்ட சட்டம், அவர் மேலும், அவரோடு திருமுழுக்கால் ஒன்றிக் கப்பட்ட மனுகுலத்தின் மேலும் எந்த உரி மையும் கொண்டாட முடியாது. ஆகவே ''கடவுளுக்கென்று வாழும்படி நான் சட்டத் தின் செயலால் சட்டத்தைப் பொறுத்தமட் டில் இறந்தவன் ஆனேன்'' (2:19) என்று பவுல் கூறமுடியும். 8) தமது வாதத்தின் முடிவுரையாக ஆகார் மற்றும் சாரா பற்றிய

புகழ்பெற்ற உருவகத்தைக் கொடுக்கிறார். இருவரும் இரு ஏற்பாடுகளைக் குறிக்கின்றனர். அடிமையான ஆகார் செபக்கூடத்திற்கும், சுதந்தரப் பெண்ணான சாரா திருச்சபைக்கும் அடையாளமாகின்றனர். அவர்களின் பிள்ளைகள் தங்கள் தங்களின் நிலையையே ஏற்கின்றனர். ஆகவே யூதப்பற்றுடையவர்கள் ஊன் அளவில் மகனான இசுமயேலோடு சேர்ந்துகொள்கின்றனர். வாக்குறுதியின் மகனான ஈசாக்குக்கு அளிக்கப்பட்ட தந்தைவழி உடைமையை நிராகரித்து விடுகின்றனர். அந்த உடைமை, ஆபிரகாமின் உண்மையான வழித்தோன்றல்களாகிய கிறிஸ்தவர்களுக்கும் உரியதாகும். குறையுள்ள ஏற்பாடு, புதிய, நிறைவான ஏற்பாட்டுக்கு இடம்விட்டு அகலவேண்டும் என்பதே இந்த ஒப்புமையின் கருத்தாகும். ஏனெனில் இரண்டும் ஒத்துப் போகமாட்டா; இரண்டும் ஒருசேர இருக்க முடியாது. ''அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் விரட்டிவிடு; அடிமையல்லாத மனைவியின் மகனோடு அடிமைப்பெண்ணின் மகன் உரிமை கொண்டாட முடியாது'' (4:30; ஆதி 21:9-13). இராபிகளின் முறையைப் பின்பற்றி, தமது வாதத்துக்கு ஆதரவாக மறைநூல் வாசகத்தைப் பயன்படுத்துகிறார். இப்படிப்பட்ட வாதங்கள் எப்போதும் நம்மை நம்பச் செய்வதில்லை. பவுல் இங்குப் பயன்படுத்தும் முறை, ஒரு கருத்துக்கு ஆதரவாக மறைநூல் வாசகத்தை ஆன்மீகப் பொருளில் பயன்படுத்துவதற்கு ஒரு மேலான எடுத்துக்காட்டாகும். தாக்கம் முழுவதில் பவுல் இராபிகளோடு தர்க்கமாடும் இராபியாக உள்ளார்.

7. கலாத்தியர், உரோமையர் திருமுகங்களுக்கிடையே உறவு:-

கலாத்தியருக்குத் திருமுகம் உரேமையருக்குத் திருமுகத்தின் வெறும் கருக்கமோ திருந்தா முதல் குறிப்போ அன்று என்பது தெளிவு. ஏனெனில் இரண்டு திருமுகங்களின் முன்னோக்கும் வெவ்வேறானவையாகும். உரோமையருக்குத் திருமுகத்தில் ஏற்புடையவராக ஆகவும், புனிதப்படுத்தப்படவும், கிறிஸ்துவில் இறைவனுக்காக வாழவும், நற்செய்திப் போதகத்தின் வழியாக மனிதர்களுக்கு இப்போது அளிக்கப்படும் வரலாற்று வாய்ப்புப் பற்றிய தமது அப்போஸ்தல மற்றும் மறைபரப்புச் சிந்தனைகளைப் பவுல் தருகிறார். இது அடிப்படையில் மனிதனின் ஏற்புடைமையையும், புனிதப்படுத்தலையும் ஏற்படுத்தும் நேர்மை மற்றும் இறைவனின் அன்பு, ஆகியவை பற்றிய விளக்கமாகும். கிறிஸ்தவ வாழ்வின் இந்தச் செய்முறையை மனிதன் விசுவாச முயற்சியால் தொடங்கிவைக்க வேண்டும். இந்த நற்செய்தி ''மீட்பளிப்பதற்குக் கடவுளின் வல்லமையாக உள்ளது'' (உரோ 1:16).

ஆனால் கலாத்தியருக்குத் திருமுகத்தில், பவுல் வாதத் தன்மையுடைய திருமுகத்தை எழுதுகிறார். இதில், யூதமயமாக்கும் தவறு பற்றிக் கலாத்தியக் கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார். கிறிஸ்துவில் அளிக்கப்பட்ட புதிய சுதந்தரத்தை வலியுறுத்துகிறார். சட்டம் மற்றும் விருத்தசேதனம் ஆகியவற்றை நிராகரிப்பது அவரது கவனத்தை மிகவும் ஈர்க்கிறது. விசுவாசத்தால் ஏற்புடைமையும் கிறிஸ்துவில் வாழ்வும் அடுத்தபடியான இடம் பெறுகின்றன. இவை உரோமையருக்குத் திருமுகத்தின் முதன்மையான கருத்துக்களாகும். கலா 1:1-2:14-க்கு இணையான பகுதி உரோமையரில் இல்லை. ஆனால் கலா 2:15-21-இல் வரும் பவுலின் நற்செய்தியின் கருக்கம், ஏறக்குறைய உரோ 1-8-இன் கருக்கமாகும். இரண்டிலும் அதே சிந்தனை வளர்ச்சியுள்ளது.

### கலாத்தியா (GALATIA)

1. கலாத்தியா என்பது மத்திய சிறிய ஆசியாவிலுள்ள உரோமை ஆட்சிப் பகுதியாகும் (அ.ப. 16:6; 18:23; 1 கொரி 16:1; கலா 1:2;2 திமோ 4:10;2 பேதுரு 1:1).

கலாத்தியர் என்பவர்கள் இந்தோ-ஐரோப்பிய இனமாகிய கெலிதிய இனத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள், சிறிய ஆசியாவில் வந்து குடியேறிய கெலிதிய இனத்தவர்கள் கலாத்தியர் என அழைக்கப்பட்டனர்.

சொல்லிலக்கணப்படி இரண்டு சொற்களும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன.

கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டுகாலத்தில் ஐரோப்பாவில் அலைந்துகொண்டிருந்த கெலிதிய இனத்தவர்கள் ஒரு குழுவாகத் தான்யூப் ஆற்றுப் பகுதிக்கும், கிரீசு நாட்டிற்கும் சென்று கி.மு. 278-இல் தெல்பியை முற்றுகையிட்டனர். பின் போஸ்போரசைக் கடந்து செல்லப் பித்தினியாவின் அரசராகிய முதலாம் நிக்கோமேதால் கெலிதிய இயக்கத்தின் ஒரு பிரிவினர் அழைக்கப்பட்டனர். இவ்வாறு பித்தினியா மன்னரால் உற்சாகப் படுத்தப்பட்ட படையெடுப்பு சிறிய ஆசியாவிற்குப் பேராபத்தாக அமைந்தது. ஏனென்றால் போஸ்போரசைக் கடந்த கலாத்தியர்கள் நிக்கோமேதுவின் குறிக்கோளை நிறைவேற்றியபின் அவர்களுடைய சொந்தப் பலத்தால் மேற்குச் சிறிய ஆசியாவைத் தாக்கிப் பொருள்களைச் சூறையாடினர்.

நகரங்களை முற்றுகையிடுதல், ஊர்களைப் பயமுறுத்துதல், நிலங்களை, கருவூலங்களைச் சூறையாடுதல் போன்றவை அவர்கள் கையாண்ட யுக்திகளாகும். முதன் முதலாகச் செலூக்கிய அரசரான முதலாம் அந்தியோக்கு இந்தக் கலாத்தியர்களை யானைகளின் உதவியால் சண்டையில் தோற்கடித்தான். இதன் விளைவாக அந்தியோக்கு மன்னன் மேற்குச் சிறிய ஆசியாவின் உட்புறத்தில் அவர்களுக்கென்று எல்லைப் புறத்தை ஒதுக்கிக் கொடுத்தான். அப்பகுதி கலாத்தியா என்ற பெயரைப் பெற்றது. இப்பகுதியின் வடக்கில் பித்தினியாவும் பாபிலகோனியாவும், தெற்கிலும் மேற்கிலும் பிரிகியாவும், கிழக்கில் போந்தும், தென்கிழக்கில் கப்பதோக்கியாவும் அமைந்திருந்தன. இதன் முக்கியமான நகரங்கள் அன்சீரா (இக்கால அங்காரா), பெசினு, தாவியும் ஆகியவையாகும். இப்பகுதி மூன்று கலாத்திய இனங்கள் சேர்ந்த கூட்டரசினைக் கொண்டிருந்தது.

கி.மு. 64-இல் கலாத்தியா உரோமின் ஆட்சிக்கு உட்பட்ட நகரமாகியது. மேலும் அதைப் பின்தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அரசாட்சியின் எல்லையானது இதனோடு தொடர்புடைய பகுதிகள் வரைக்கும் விரிந்து சென்றது. கலாத்தியா என்பது கி.மு. 24-இல் கடைசி அரசர் அமிர்தாஸ் இறந்த பின் ஏற்படுத்தப்பட்ட உரோமை மாகாண மாகிய கலாத்தியாவையும் குறித்தது. இம் மாகாணம் கலாத்தியப் பகுதிகளையும், பிசிதியா, பம்பிலியா, இலிக்கவோனியா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது.

மக் 8:2-இல் கலாத்தியா என்பது உரோம் நகருக்கும் ஆல்ப்ஸ் மலைத் தொடருக்கும் இடைப்பட்ட பகுதியைக் குறிக்கின்றது. 2 மக் 8:20 கலாத்தியருக்கு எதிராகச் செலூக்கிய அரசாட்சிக்கு உதவியதாக இருந்து செயல்பட்ட கூலிப்படை வீரர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

பவுல் தமது இரண்டாவது பயணத்திலும் (அ.ப. 16:16) மூன்றாவது பயணத்திலும் (18:23) கலாத்தியாவிற்குச் செல்கின்றார். எருசலேம் சமூகத்திற்கு உதவுவதற்காக எடுக்கப்பட்ட காணிக்கைத் தொகையில் கலாத்தியர்களின் பங்கும் சேரும் (1 கொரி 16:1). கலாத்தியா சபையில் கிரேசெக்கு என்பவர் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டார் (2 திமோ 4:10) என்று கூறப்படுகின்றது. பேதுருவின் முதல் திருமுகம் 1:1-இல் தேர்ந்து கொள்ளப்பட்ட நாடுகளில் ஒன்றாகக் கலாத்தியாவும் கூறப்பட்டுள்ளது.

2. கலாத்தியாவைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சிகள்:-

கலாத்தியர்களின் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் சில கல்வெட்டுக்களும், உரோமைச் சாலைகளைப் பற்றிய குறிப்புகளும், மற்றும் சில பொருட்களும்தான் கிடைத்தன. மூன்று முக்கியமான நகரங்கள் இருந்த இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெசினுஸ், பால்கிசார் போன்ற நகரங்கள் மிகவும் அழிந்துபோன நிலையிலிருந்தன.

பிரிகியர்களின் தலைநகரமாக விளங்கிய கோர்தியம் கலாத்தியாப் பகுதிகளில் முக்கிய

மானதாகக் கருதப்படவில்லை. தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உரோமை மைல்கற்கள் தாவியும் இருந்த இடத்தை நிர்ணயிப்பதற்கு உதவின.

3. வடக்கு, தெற்குக் கலாத்தியக் கோட்பாடுகள்:-

கலாத்தியாவிலிருந்த ஆதி சபைகளின் வரலாறு பற்றி எந்தவிதமான புதைபொருள் ஆராய்ச்சிகள் சார்ந்த ஆதாரங்கள் எதுவுமே இல்லையாகையால், 1 கொரி 16:1-இலும் கலா 1:2-இலும் கூறப்பட்டுள்ள சபைகள் கலாத்தியாவைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் ஆயநிலையாகத்தான் கருதப்படுகின்றன.

வடக்குக் கலாத்தியக் கோட்பாட்டின்படி கலாத்தியா என்று கூறுவது மத்திய அனத்தோலியாவில் உள்ள கலாத்தியாவின் அரசாட்சிப் பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. தெற்குக் கலாத்தியக் கோட்பாட்டின்படி கலாத்தியா என்பது அப்போஸ்தலர் பணியில் கூறப்பட்டிருக்கும் பிசிதியா, தெர்பை, இலிசித்திரா இக்கோனியா போன்ற பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. இந்நகரங்கள் மூல கலாத்தியாவின் எல்லைப்பகுதிக்குள் உட்படவில்லை என்றாலும் கலாத்தியா மாகாணத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. அப்போஸ்தலர் பணிநூல் இங்குள்ள மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டு குறிக்கிறது: பிசிதியா, இலிக்கவோனியா.

இன்றைய விவிலிய விளக்கவுரையாளர்கள் பலர் வடக்குக் கலாத்தியக் கோட்பாட்டையே ஏற்றுக் கொள்கின்றனர். அ.ப. 16:6; 18:23 இந்தக் கலாத்தியாவைத்தான் குறிக்கின்றன. அங்குத் திருச்சபைகள் நிறுவப்பட்டது பற்றி அ.ப. ஒன்றும் கூறாவிட்டாலும், உண்மையான கலாத்தியாவைக் குறிக்கின்றன.

**கலால்** (GALAL - ஆமை, உருண்டு போகிற).

1. மெராரியின் மரபுவழிவந்த நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 9:15).

2. ஒரு லேவியர். எதுத்தூனின் மகனும், செமாயாவின் தந்தையுமாவார். மெராரியின் வழித்தோன்றல் (1 நாள் 9:16; நெக 11:17).

**கலிலேயர்** (GALILEANS)

கலிலேயாவில் வாழ்ந்த யூதர்கள், பிற மதத்தினர் அடங்கிய மக்களைக் குறிக்கும். கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவர்களைக் குறிக்கும். சமயக் கருத்துக்களில் அவர்கள் குறிப்பான முறையில் வேறுபட்டிருக்கலாம்.

1. யூதக் கட்சிகளுக்கிடையே ஒன்று:-

கி.பி. முதல் நூற்றாண்டில் உள்ள யூதமத நூல்களின் சான்றுப்படி அவர்களிடையே பரிசேயர்கள், சதுசேயர்கள், எஸ்ஸேனியர், கலிலேயர் போன்ற பிரிவுகள் இருந்தன. இது, இஸ்ராயேலில் பிற இடங்களில் இல்லாத பழக்கவழக்கங்கள், கலிலேயாவில் இருந்தன என்பதைச் சுட்டுகிறது.

கலிலேயாவில் பாஸ்காவிற்கு முன் தினத்தை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆயத்த நாளிலே பாஸ்கா விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாகிறது. பரிசேயர்கள் கலிலேயர்களின் ஒலிவ எண்ணெயை அசுத்தமானது என்று கருதினார்கள். கலிலேயர்கள் பரிசேயர்கள் சட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள் (யாத் 23:19; உப 14:21). விதவைகளின் உரிமைகள், பரிகார நாள் ஆகியவைபற்றிக் கலிலேயர்கள் வேறுபட்ட கருத்துகள் கொண்டிருந்தனர்.

பரிசேயர்கள் கலிலேயர்களைப் பண்பாடற்றவர்கள், படிக்காதவர்கள், மூடர்கள், சண்டைபோடும் குணமுடையவர்கள் என்று கருதினர். பரிசேயர்கள், எஸ்ஸேனியர்களைப் போன்று கலிலேயர்களும் சமயம் பற்றிய சுய உணர்வுடையவர்கள். கலிலேயர்கள் பலவகையான பழக்கவழக்கங்களை உடையவர்கள். ஆழ்ந்த சமய உணர்வு இல்லாதவர்கள், பழமைவாதிகள், எழுத்தறிவு இல்லாதவர்கள். இயேசு இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு எவ்வகைச் சான்றும் இல்லை.

*2. கலிலேயக் கிறிஸ்தவம்:-*

*கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் கலிலேயாவில் உள்ள கிறிஸ்தவத்தை அறிவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எல்லா நற்செய்தி மூலங்களையும் விட மாற்கு நற்செய்தியே கலிலேயப் பின்னணிக்கு மிக நெருங்கியதாக அமைகிறது. இயேசுவின் திருப்பணிகள் இந்தக் கலிலேயே நாட்டில்தான் அதிம் செய்யப்பட்டிருக்கின்றன. இயேசுவின் போதனைகளை மாற்கு நற்செய்தியாளர் இருபிரிவாகப் பிரிக்கிறார் (அ) இறையரசு பற்றிய போதனை (ஆ) மனுமகனைப் பற்றிய போதனை. இரண்டும் கலிலேயாவைச் சேர்ந்ததாக இருக்கலாம். கலிலேயாவில் திருப்பணிகள் என்ற அமைப்பில் இறையரசு பற்றிய போதனையும் அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு நற்செய்திகளிலும் மாற்கு நற்செய்தியே தென்யூதாவிலிருந்து வரும் கும்ரான் ஏடுகளோடு மிகவும் குறைந்த இணைவுத்தன்மை கொண்டிருக்கிறது. நற்செய்தியின் முடிவில் இயேசுவின் உயிர்ப்பும், வெளிப்பாடும் கலிலேயப் பின்னணியில் கூறப்படுகின்றன. இதில் மத்தேயு, மாற்கைப் பின்பற்றுகிறார். யோவானும், லூக்காவும் இயேசுவின் திருப்பணிகள் சமாரியாவிலும், யூதேயாவிலும் அதிகம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றார்கள்.*

*கலிலேயக் கிறிஸ்தவத்தைப் பற்றிப் பின்னால் வந்த குறிப்புகள் தெளிவில்லாமல் இருக்கின்றன. ஆண்டவரின் சகோதரராகக் கருதப்படும் யாக்கோபு கலிலேயாவிலிருந்து தான் வந்திருக்க வேண்டும்; ஆனால் அப்போஸ்தலர் பணியும் மற்ற மூலங்களும் அவரை எருசலேம் திருச்சபையின் தலைவராகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர் எருசலேமில் நிலவிய விசுவாசத்தின் பிரதிநிதியாக விளங்கியிருக்க வேண்டும். யூதாவும் கலிலேயராக இருக்கலாம். கிளோப்பாவின் மகன் சிமியோன், மற்றும் ஆண்டவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலிலேயர்களே.*

*சில சமயம் யோக்கோபும் யூதாவும் எழுதிய கடிதங்கள் கலிலேயக் கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துவதாக எண்ணப்பட்டன. யாக்கோபு பாலஸ்தீனத்தில் நிலவிய யூதக் கிறிஸ்தவ பழமைவாதிகளின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கலாம்.*

## *கலிலேயா (GALILEE - வட்டம்)*

*வடக்குப் பாலஸ்தீனத்திலுள்ள ஒரு சிறிய பகுதிதான் கலிலேயாவாகும். இதற்கு வடக்கே நகர்ஏல் காசிமியேவும், மேற்கே மத்தியதரைக்கடலும், தெற்கே எசுதிரலோன் சமவெளியும், கிழக்கே யோர்தான் நதியும், கலிலேயாக் கடலும் இதனைச் சூழ்ந்துள்ளன. இப்பகுதியின் பரப்பளவு வடக்கு தெற்காக 80 கி.மீ. தொலைவும், கிழக்கு மேற்காக 40-இலிருந்து 56 கி.மீ. தொலைவும் கொண்டது. வடக்குக் கலிலேயா தெற்குக் கலிலேயாவிலிருந்து மாறுபட்ட இயற்கைக் கூறுகளையும் மலைத்தொடர்களையும் கொண்டிருக்கிறது. இம்மலைத் தொடரின் உயரம் 1200 மீட்டராகும். தெற்குக் கலிலேயா மலைப்பிரதேசமாக இருந்தாலும் இந்தக் குன்றுகள் பெரும்பாலும் சமவெளியால் பிரிக்கப்படுகின்றன. இப்பகுதி மண்வளம் நிறைந்தது. வடக்குக் கலிலேயா வெறுமனே ''மலைப்பகுதி'' என்று (யோசு 11:2) அல்லது நெப்தலியின் மலைகள் என்று அழைக்கப்படும் (20:7).*

*கலிலேயாவின் புவியியல் அமைப்பு தெற்குநோக்கி இருப்பதால் விவிலிய வரலாற்றில் சமாரியாவோடும், யூதாவோடும் இணைத்துக் கூறப்படுகின்றது. எல்லா இடங்களை நோக்கியும் செல்கின்ற முக்கிய சாலைகள் சந்திக்கின்ற இடமாகக் கலிலேயா விளங்குகிறது. எனவே கலப்பு இன மக்களைக் கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்தக் கலப்புத்தன்மை மிகுந்திருந்தது. இப்பகுதியின் ஆட்சிமையமான சேப்போரை மையமாகக் கொண்டு கிரேக்கப் பண்பாடும், மக்கள் தொகுதியும் அமைந்திருந்தன. திபேரியா கலிலேயாக் கடற்கரை நகரமாக விளங்கியது.*

கலிலேயாவைக் கைப்பற்றி வெற்றி கண்டது யோசுவாவைச் சாரும் (யோசு 11). மிக முக்கியமான கானானிய நகரங்களாகிய காதேக, யானோவாம் போன்றவை, குடியேற்றத்திற்குப்பின்னும், கானானிய நகரங்களாகத்தான் விளங்கின. கலிலேயாப் பகுதியில்தான் செபுலோன், நப்தலி, ஆசேர், இசக்கார் ஆகிய இனங்கள் குடியேறின. இந்த இனங்கள் சிசராவை எதிர்த்துப் போரிட்டபொழுது பாராக்கு, தெபோராவால் வழி நடத்தப்பட்டார் (நீதி 4-5). பழைய ஏற்பாட்டு வரலாற்றில் சாலமோன் காலத்திலிருந்து புதிய ஏற்பாட்டுக் காலம்வரை கலிலேயா முக்கியத்துவம் உடையதாகக் கருதப் படவில்லை.

வடநாட்டு அரசின் மாவட்டங்களில் ஒன்றாக விளங்கிய கலிலேயா கி.மு. 784-இல் மூன்றாம் திகிலாத்துபிலேசர் என்பவரால் பிரிக்கப்பட்டு அசீரிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது. கலிலேயாவில் சீமோன் போரிட்டார் (1 மக் 5:14-23). சீமோன் கலிலேயர்களை எதிர்த்துப் போர் புரிந்தவர்களைத் தனது படையினால் விரட்டி அடித்தபின் கலிலேயாவில் உள்ள யூதர்களை யூதேயாவிற்கு அனுப்பினார். ஆனால் அவ்வாறு அனுப்பப்பட்ட யூதர்கள் கலிலேயாவுக்கு விரைவில் திரும்பி வந்தனர். கி.மு. 100-இலிருந்து கி.பி. 100-வரை கலிலேயாவில் ஒரு யூதச் சமூகம் வாழ்ந்து வந்தது. பெரிய ஏரோதின் ஆட்சிப் பகுதியில் ஒரு பிரிவாக விளங்கிய கலிலேயா இயேசுவின் பொதுப் பணிக்காலத்தில் ஏரோது அந்திப்பாவின் ஆளுகைக்கு உட்பட்ட மண்டலத்தின் ஒரு பகுதியாக விளங்கியது.

ஒத்தமைவு நற்செய்திகளில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை கலிலேயாவில்தான் நிகழ்ந்தன. இயேசு தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை இங்குதான் கழித்தார். அவரது அதிகமான பணிகள் இங்குதான் நடந்தேறின. இயேசு கலிலேயாவைச் சேர்ந்தவராகக் கருதப்பட்டார். எருசலேமிலும் யூதேயாவிலும் உள்ள யூதர்கள் கலிலேயா மட்டில் செருக்கு கொள்ளும் மனநிலையை யோவா 1:46;7:52 பிரதிபலிக்கின்றன.

தொடக்க காலத்தில் திருச்சபையின் வரலாற்றில் கலிலேயா முக்கியமானதாகக் கருதப்படவில்லை. நற்செய்திக்குப்புறம்பே புதிய ஏற்பாட்டில் ஒருமுறைதான் கலிலேயாவைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது (அ.ப. 9:31). கி.பி. 66-70-க்குப்பின் கலிலேயாவானது யூதர்கள் தங்கிக் கல்விகற்கும் இடமாக மாறியது.

## கலிலேயாக் கடல் (SEA OF GALILEE)

கலிலேயாக் கடல் யோர்தான் நதியால் உருவாக்கப்பட்டுள்ளது. அங்குக் கிழக்கே கவுரான் மேட்டுநிலப்பகுதிக்கும், மேற்கே கலிலேயாக் குன்றுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் யோர்தான் ஓடுகின்றது. கலிலேயாக் கடலின் தரைமட்டமானது கடல்மட்டத்திற்கும் 212 மீட்டர் தாழ்ந்திருக்கிறது. 50-இலிருந்து 70 மீட்டர் ஆழம் கொண்டது. இக்கடல் 21 கி.மீ. நீளமும் 13 கி.மீ. அகலமும் உள்ளது. இக்கடலைச் சுற்றிக் குன்றுகள் சூழ்ந்துள்ளன. மேற்குப் பகுதியில் உள்ள குன்றுகளைவிடக் கிழக்குப் பகுதியிலுள்ள குன்றுகள் தண்ணீருக்கு அருகில் உள்ளன. இம்மலைச்சரிவு செங்குத்தாகவும் கடலின் தரைமட்டத்திலிருந்து 810 மீ. உயரம் கொண்டதாகவும் இருக்கிறது. இதனால் கிழக்குப் பகுதியிலுள்ள மேட்டு நிலங்களோடு தொடர்பு கொள்வது கடினம். எனவே பண்டைக் காலத்தில் முக்கியமான மையங்கள் எல்லாம் கடலுக்கு மேற்கே இருந்தன.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடலைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டதாக நிலை பெற்றிருக்கும் அழிவுச் சின்னங்கள் குறித்துக்காட்டுகின்றன. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடலின் கரையிலிருந்த ஒன்பது முக்கிய நகரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகரத்தின் மக்கள் தொகை குறைந்தது 15,000 ஆக இருக்கும். புதிய ஏற்பாட்டுப் பாலஸ்தீனத்தில் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியாக கடற்கரைப் பகுதி

விளங்கியது. இது ஒரு வெப்ப மண்டலப் பகுதியாகும்.

இயற்கையிலே கிடைக்கும் மூலதனங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கும், தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் உதவியாக இருந்தன. வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் இப்பகுதியை வளமிக்க கனிகள் கிடைக்கும் பகுதியாக விவரிக்கின்றார். பெரும்பாலும் கடலுக்கு வடமேற்கு மூலையில் உள்ள கெனசரேத்து சமவெளிப்பகுதியில்தான் மண் நிறைந்த சமவெளிப்பகுதிகளில் வேளாண்மைத் தொழிலும் நடைபெற்றது. இப்பகுதிகளில் உள்ள நகரங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் காணப்பட்டன. மீன்பிடித்தலும் மீன்களைப் பதப்படுத்தி அனுப்புவதும் முக்கியமான செயல்களாகும். எனவே, மீன்பிடித்தல் பற்றி அடிக்கடி புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

கடலைச் சுற்றியுள்ள நகரங்களில் நற்செய்திகளில் சொல்லப்படாத 'தாரிக்கேயே' என்ற நகரம்தான் தலைசிறந்த தொழில் மையமாக விளங்கியது. பழைய ஏற்பாட்டில் அத்தி பூத்தாற்போல் கின்னரேத்து அல்லது கின்னரோத்து என்ற பெயரில் இக்கடல் ஒரு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (எண் *34:11*; யோசு *12:3*; *13:27*). யோனத்தான் தன் படையுடன் கெனசார் கடலோரம் என்று அழைக்கப்படும் கலிலேயாக் கடல் பக்கம் வந்ததாகக் குறிப்புக் காணப்படுகின்றது (1 மக் *11:67*). கெனசாரின் வேறு பெயர்தான் நற்செய்திகளில் கடலைக்குறிக்கப் பயன்படுத்தப்படும் கெனசரேத்தாக இருக்கலாம் (மத் *14:34*; மாற் *6:53*; லூக் *5:1*). இதுதான் புதிய ஏற்பாட்டில் கலிலேயாக் கடலாகக் குறிக்கப்படுகிறது (மத் *4:18*; *15:28*; மாற் *1:6*; *7:31*; யோவா *6:1*). பெரிய ஏரோது கட்டிய பெரிய நகரின் பெயரால் இது திபேரியாக் கடல் என்றும் (யோவா *6:1*; *21:1*) அழைக்கப்பட்டது.

கலிலேயாவில் இயேசுவின் பணி கலிலேயாக் கடலையும், குறிப்பாகக் கப்பர்நகூம் நகரையும், மையமாகக் கொண்டிருந்தது. நற்செய்திகளில் கலிலேயாக் கடலில் நடந்த நிகழ்ச்சிகளாகக் கூறப்படுபவைகளில் அளவுக்கு அதிகமாகக் கிடைத்த மீன்பாடும், நான்கு சீடர்களின் அழைப்பும் (லூக் *5:1-11*), கடல்நீரின் மீது நடந்த அருங்குறியும் (மத் *4:21-33*; மாற் *4:35-41*; லூக் *8:22-25*), கடல் கரையில் உயிர்த்த இயேசு தந்த காட்சியும் (யோவா *21:1* தொ) அடங்கும். இன்றையக் காலத்தில் கலிலேயாக் கடற்கரைப் பகுதியில் உள்ள மக்கள் தொகை முதலாம் நூற்றாண்டில் இருந்ததைவிடக் குறைவு. இங்கு நடைபெற்ற வேளாண்மைத் தொழில், பழமரங்கள் வளர்க்கும் தொழில், மீன்பிடித்தல் ஆகிய அனைத்தும் இப்பொழுது அழிந்து போய்விட்டன என்று கூறலாம்.

### கலிலேயாப் பேச்சு (GALILEAN ACCENT)

இயேசுவும், அவரது அப்போஸ்தலர்களும் அரமேய மொழியில் பேசினாலும், அவர்கள் கலிலேயர்களானதால் அரேமேயத் திரிபு மொழியைப் பேசினர். அதையும் கலிலேயப் பகுதிக்கேயுரிய அசைவுடன் பேசினர். இயேசுவைக் கைது செய்தபின், பேதுருவும் அவருக்குப்பின் சென்றார். அப்பொழுது கூட்டத்தில் இருந்த ஒருவன் ''நீயும் கலிலேயன் அல்லவா, உன் பேச்சே உன்னைக் காட்டிக் கொடுக்கிறதே'' என்று கூறுவதாக மத்தேயு குறிப்பிடுகிறார் (மத் *26:3*). ஏனெனில் அவர் அரமேயம் பேசிய முறையிலிருந்து அவர் இயேசுவின் சீடரெனக் கருதினர்.

### கலினே (CALNEH)

ஒரு பாபிலோனியா நகரம். எரேக்கு, அக்காது ஆகியவற்றுடன் சேர்த்துக் கூறப்படுகிறது (ஆதி *10:10*). சீனார் நாட்டில் நிம்ரோதால் நிறுவப்பட்ட நகரங்களில் ஒன்று (ஆதி *10:10*). இன்றுவரை அது இருந்த இடம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆமோ *6:2*-இல் கலினே, கமாத்து, காத்து என்ற வரிசையில் இப்பெயர் காணப்படுகிறது. இது கலினே வடகிழக்கிலுள்ளது என்பதைச் சுட்டுகிறது. ஆதியாகமத்தில் இவ்விடம் தெற்கில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம், வடக்கு

நகரமானது வணிகக் குடியிருப்பாக இருந்திருக்கலாம். ஆனால் அது தெற்கிலுள்ள தாய் நகரின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். (உ.ம்) ஆபிரகாமின் பிறப்பிடமான ஊர் வடக்கேதான் இருந்திருக்க வேண்டும். இது ஒரு வணிகக் குடியிருப்பாகும். இது பாபிலோனியாவிலிருந்த ஊர் என்ற தாய்நகரின் பெயரால் அழைக்கப்பட்டது.

கலினே, கர்கமிசுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது (ஏச 10:9). இது இந்நகர் வடக்கே இருந்தது என்பதைச் கட்டுகின்றது. தால்மூதின்படி, பாபிலோனுக்கும் எரேக்குக் கும் இடையிலுள்ள பாபிலோனிய நகர மான நிப்பூர்தான் கலினேவாகும்.

கலினோ (CALNO)

ஏச 10:9-இல் குறிப்பிடப்படும் ஒரு நகர். கர்கமிசைப் போல், இதுவும் கி.மு. 738-இல் அசீரிய ஏடுகளில் குல்லானி என்றழைக்கப் படுகிறது. இது, அலெப்போவிற்கு வடமேற் கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் குலன்கோய் என்று அடையாளம் காட்டப் படுகிறது, ஆமோ 6:2-இல் வரும் கலினேவும் இதுவும் ஒன்றானால், இந்நகர் அசீரியரால் கைப்பற்றப்படுமுன், ஆமோஸ் இந்நகரை அறிந்திருக்க வேண்டும்.

கலீ (HALI - கழுத்தணி)

ஆசேருக்குக் கிடைத்த பகுதியில் ஒரு எல்லை நகரம் இது (யோசு 19:25). வாசகச் சூழ்நிலையில் கெலிக்காத்துக்கு அருகில் இது இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த நகரத்தின் சரியான இட அமைப்புத் தெரிய வில்லை. இது தேல் ஏல்-கர்பாசுக்குத் தெற் கிலுள்ள கிர்பேத்து இராஸ் அலியாக இருக்க லாம்.

கலை (ART)

இங்கு ஓவியம், சிற்பம் செதுக்குதல் போன்றவை விவிலியக் காலத்தில் எவ்வாறு செய்யப்பட்டன என்பதையும், அழகு செய் யும் கருத்துக்களும் மாதிரிகைகளும் எவ் வாறு தோன்றி வளர்ச்சியுற்றன என்பவற்றை யும் பார்ப்போம். அழகு செய்யப்பட்ட பொருட்களின் தன்மையைப் பற்றியல்ல.

1. வரலாற்றுக்கு முந்திய பாலஸ்தீனத்தில் கலை

கி.மு. 8000-இல் அதாவது இடைக் கற்கா லத்தில் பாலஸ்தீனத்தில் கலை எப்படியிருந் தது என்பதற்கான சான்றுகள் சில கிடைத் துள்ளன. அவைகள், ஓர் அரிவாளின் கைப்பிடி யில் உள்ள ஒய்ந்த நிலையில் படுத்திருக் கும் ஒரு மானின் சித்திரமும், ஒரு காவி பூசப்பட்ட களிமண் பலகையில் உள்ள ஒரு வகை அரேபியமானின் முகச்சாயல் பதிந்த ஓவியமும் ஆகும். மனித உருவங்களை வரைவதற்கான முயற்சிகள் நடந்ததற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன. கர்மேல் மலைக்கு அருகில் உள்ள குகை ஒன்றில் மண்டை ஓடுகளுக்கு, ஒருவித சிப்பியில் முடி செய்து அணிவிக்கப்பட்டதாகத் தெரி கின்றது.

ஏறக்குறைய கி.மு. 6000 ஆண்டுகாலத்தில் எரிகோவில் பயன்படுத்திய பொருட்களில் கலை தொடர்பான பலபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சுண்ணாம்புக் களி மண்ணால் செய்யப்பட்ட மனித முகமூடிக ளும், மனிதக் கண்களுக்கு கடல்சிப்பிகளை யும், நாணல் துண்டுகளை உடல் அமைப்பை அமைப்பதற்கும் பயன்படுத்தி னார்கள்.

தெலெயிலாத்து சாகூல் என்ற இடத்தின் சிதைவுகளில் (கி.மு. 3500) உள்ள மண், செங்கல் ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டில், சுவரில் வரைந்த சித்திரங்க ளைப் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. ஓவியர்கள் உலோகக் கலவையினால் தயா ரிக்கப்பட்ட கருமை, கடுஞ்சிவப்பு, மஞ்சள், காவி, வெள்ளை போன்ற வர்ணங்களைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு வரையப்பட்ட 8 ஒளிக்கதிர்களை உடைய விண்மீனும், அதைச்சுற்றி வரையப்பட்ட வேதாளங்களும், மருத்துவர்கள், சூனியக்கா ரர்கள் அணியும் முகமூடி போன்றவைகளும் ஒழுங்கற்ற முறையில் ஆங்காங்கே சிதறிச்

சிதறி வரையப்பட்டிருக்கின்றன. இன்னொரு இடத்தில் ஒரு பறவையைச் சுற்றி மேற்கண்ட முகமூடிகளும் மற்றவைகளும் வரையப்பட்ட அழிவுற்ற நிலையிலான ஒரு படம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னொரு சிதைந்த ஓவியமும் கிடைத்துள்ளது. அந்த ஓவியத்தின் இடப்பக்க மூலையில் ஒரு விண்மீன் இருந்திருக்கலாம். படத்தில் மனிதனின் கால்கள் மட்டுமே தெரிகின்றன. அவன் சின்னத்திற்கு முதுகைக் காட்டி, மனித அல்லது விலங்கு உருவங்களைப் பார்க்கிறான். படத்தில் உருவங்களின் கால்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றின் பொருளை முழுவதுமாகக் கூற இயலாது. காரணம் இப்படம் சிதைந்துள்ளது.



2. கானானியக் கலை:-

13-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த, நிலையான வாழ்க்கையமைக்காத, பல்வேறு கலாச்சாரங்களால் பாதிக்கப்பட்ட சமூகக் குழுவையே கானானியர்கள் என்கிறோம். கானானியக் கலைஞர்கள், அவர்களது கலைக்கான உள்ளுணர்வை மெசபொத்தாமியா, எகிப்து அனத்தோலியா போன்ற நாட்டு மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். தொடக்க வெண்கலக் காலத்தில் (கி.மு. 3000-2000) வளர்ச்சியடையாத கானானியக்கலை சீரிய-பாலஸ்தீனிய கரையோரப் பகுதியில், அனத்தோலிய மக்களோடு தொடர்பு ஏற்பட்டுப் பின் வெண்கலக் காலத்தில் (கி.மு. 1600-1200) வளர்ச்சியடைந்தது.

அ) உகாரித்துக் கலை:- சீரியாக் கரையோரத்தில் வாழ்ந்த இராஸ் சம்ரா (உகாரித்து) என்ற இடத்து மக்கள், கானானியர்களை விட மொழியில் சிறிது வேறுபட்டாலும் இவர்களின் கலை கி.மு. 14-15 ஆம் நூற்றாண்டுகளில் கானானில் வளர்ந்த கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்தக் காலத்தில் உள்ள கலைகளை அறிய உகாரித்துக் கடவுள்களின் சிலைகள் மட்டுமே கிடைத்துள்ளன. இதில் இடிக் கடவுளைப் பிரதிபலிக்கும் ஒரு சுண்ணாம்புக் கல்லில் செய்யப்பட்ட கடவுளின் உருவம் சிறப்பு வாய்ந்ததாகும். அந்த உருவத்தில் கடவுள் எழுந்து நிற்கிறார். அவரது வலக்கரத்தில் ஓர் அதிகார முத்திரைக் கோல் உள்ளது. அவரது இடக்கை ஈட்டியால் குத்துவது போல் உள்ளது. இது மின்னலை அடையாளமாகக் குறிக்கலாம். இறுகிய இடைக்கச்சையும், இடத் தோள்முழுவதும் தெரியுமாறும், முகமும், உடலும் வலப் பக்கம் முழுதுமாக ஒரு சித்திரம் இருந்தால் நிச்சயமாக அதில் எதிப்தியப் பாதிப்பு இருக்கிறது என்று கூறி விடலாம். இந்தக் கடவுளின் சிலையில் மேற்கூறிய அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் தலைக்கவசங்களும், தொங்கும் மயிர்ப்பின்னலும், சிறிய ஆசியாவின் பாதிப்பு ஆகும். கடவுளின் முன்னால் உள்ள சிறிய உருவம் ஒருவேளை பக்தனைக் குறிக்கலாம். அந்த உருவமானது சீரியா முறைப்படி ஆடை அணிந்துள்ளது. இவ்வாறு, எகிப்து, சீரியா, சிறிய ஆசியா ஆகியவைகளின் குணநலன்களை உள்ளடக்கிய இன்னும் பல சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னொரு சிலையில், தந்தத்தால் செய்யப்பட்ட, மலையின்மேல் அமர்ந்திருக்கும் பெண் தெய்வத்தின் இரண்டு பக்கங்களிலும், இரண்டு காட்டு ஆடுகள் மைசீனியாக் கலையின் அப்பட்டமான பிரதிபலிப்பாகும். மிருகங்கள் ஒன்றையொன்று நேரடியாகப் பார்த்துக்கொண்டிருப்பதுபோல வரையப்பட்ட ஓவியங்கள் மெசபொத்தாமியாக்

கலையைச் சார்ந்தவை என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இயற்கை அலங்கரிப்பிலும், புரான ஓவியங்களிலும் கூட உகாரித்துக் கலையில் கலப்புத் தன்மை பிரதிபலிக்கின்றது. எடுத்துக் காட்டாகத் தங்கத்தால் செய்யப்பட்ட ஒரு சிற்பத்தில் காட்டு எருதுகளும், வில்லோடும் அம்போடும் வேட்டையாடும் ஒரு தேர் ஓட்டியின் உருவமும், அந்தத் தேரின் பக்கத்தில் துள்ளிவரும் மானின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் வீரமிக்க விலங்குகளாகச் சித்தரிக்கும் முறை அகியன் வகைக்கலையைச் சார்ந்தது ஆகும். தேர் ஓட்டுபவரின் முகமும், தோளும் அமைந்திருக்கும் விதம் எகிப்தியக் கலைக்குச் சொந்தம். தேரும் வேட்டையாடும் முறையும் சிறிய ஆசியாவைச் சார்ந்தது ஆகும். 'வாழ்வின் மரம்' எனப்படும் இன்னொரு ஓவியம் ஒரு தங்கக் கோப்பையைச் சுற்றி விலங்குகளும் சிறகுள்ளதோற்றங்களும் நிறைந்த படங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆ. கானானியப் பாலஸ்தீனத்தில் சிற்பக் கலை:-

கானானியர்களுக்கே உரித்தானது என்று கூறப்படுகின்ற சில நினைவுச் சின்னங்கள் பிறநாட்டு உருவங்களை மனதில் கொண்டு வரையப்பட்டவையாகும். எகிப்திய 18-19-ஆவது அரசமரபுக் காலத்தில், எகிப்தியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாலஸ்தீனத்தில் பேத்துசானிலிருந்து கல்சிற்பத் தொழிலாளிகள் வரவழைக்கப்பட்டு, அவர்களின் தெய்வமான மேகலுக்கும், அவரது துணைவிக்கும் கோவில்கட்டி, அதில் நாட்டுத் தூண்களும், நேர்ச்சைக்குரிய தூண்களும் செய்யப் பணிக்கப்பட்டனர். அப்படிப்பட்ட மேகல்கடவுளின், ஆட்சிபீடத்தில் அமர்ந்து, வலப்பக்க முகத்தைக் காட்டி, தாமரை மலர்களை இரண்டு எகிப்தியர்களிடமிருந்து பெறும் உருவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிற்பக்கலைஞர் இந்த உருவத்திற்கு எகிப்திய உருவம் கொடுக்க முயற்சி செய்துள்ளது நன்றாகவே தெரிகிறது. வலக்கரத்தில் செங்கோலையும், இடக்கரத்தில் எகிப்தியக் கடவுளுக்கான முத்திரையையும் கொடுத்ததோடு இடப் புறப்புஜத்தைக் காட்டுவதன் மூலம், இது தெளிவாக விளங்குகின்றது. அதே நேரத்தில் நீண்ட தாடியும், கொம்புகளும், எகிப்திய மணிமகுடத்திற்குப் பதிலாக உள்ள நீண்ட தொப்பியும், நிச்சயமாக எகிப்தியர்களுக்கு உரியன அல்ல.

மெகிதோவில் கிடைக்கப் பெற்ற ஒரு தங்கமுலாம் பூசப்பட்ட, கானானியக் கடவுளின் சிலையும் இவ்வகையைச் சார்ந்ததாகும். இந்தச் சிலையானது பீடத்தில் அமர்ந்து, இறுகிய நீண்ட ஆடை அணிந்து அமர்ந்த நிலையில் உள்ளது. அமர்ந்திருக்கும்முறை எகிப்தியக் கலையைத் தழுவியது. அந்தச் சிலை கைநீட்டி இருக்கின்றதைத் தவிர்த்து மற்ற அமைப்புக்கள் மெசபொத்தாமியக் கலையோடு ஒத்துப்போகின்றன.

இன்னும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, காலம் கணிக்கப்படாத பல களிமண் உருவங்கள் கலைப்பொருட்கள் சொல்லமுடியாத அளவில் உள்ளன.


இ. தந்த வேலைப்பாடுகள்:-

கானானியச் சிற்பக் கலையானது மிகவும் நுணுக்கமான ஒன்றாக இல்லாவிட்டாலும், இங்குள்ள தந்த வேலைப்பாடுகள் மிகவும் கவர்ச்சியானவை. இவைகள் கலைஞர்களின் சிறந்த கைவன்மையை வெளிப்படுத்துவதோடு, இந்தக் கலைகளின் கருத்துகளுக்கு, மையப்பொருளைப் பல இடங்களில் இருந்து எடுத்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இலாக்கீசு என்னுமிடத்தில் கிடைத்த கி.மு. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு தந்தப் பெயர்ப் பலகையில், மயிர்நிறைந்த காளைகளும், சிங்கங்களும் சண்டையிடுவது போன்ற காட்சியும், அதன்மேலே கழுகுகள் பறந்து திரிவதையும் செதுக்கியிருக்கிறார்கள். இந்தச் சித்திரத்தின் கருத்து, மெசபொத்தாமியாப் புரானக் கதைகளில் இருந்து எடுக்கப்பட்டதாகும். தேல் ஏல்-பாராவில் கிடைத்த தந்தப் பேழை ஒன்

றில் எகிப்திய விருந்து நிகழ்ச்சி ஒன்றும், காட்டு வாத்துக்களைப் பிடிக்கும் நிகழ்ச்சி ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளன. விருந்து நிகழ்ச்சியில் உள்ள உடைகள் சிரியக் கலாச் சாரத்தைச் சார்ந்தன. காட்டின் ஓரத்தில் நிற் கும் காளைகள் ஆகியன் கலையைச் சார்ந் தன. காட்டில் உள்ள பனைமரங்கள் மெச பொத்தாமியாவைச் சார்ந்தன.

மெகிதோவில் கிடைத்த இரண்டு தந்த வேலைப்பாடுகள் மிகவும் முக்கியமா னவை. அவற்றில் ஒன்றில் ஓர் அரசனின் வெற்றி பற்றிய சிற்பம் செதுக்கப்பட்டுள் ளது. அதில் வலப் பாதியில், அரசன் அவரது தேரில் எழுந்து நிற்பது போலவும், அவ ருக்கு முன்னால் ஓர் இசை வல்லுநரும் படை வீரனும், மேலும் இரண்டு நிர்வாணக் கைதிகள் குதிரைச் சேணத்தோடு கட்டப்பட் டது போலவும் உள்ளது. இடப் பாதியில், அரசபீடத்தில் அமர்ந்திருக்கும் அரசன் கிண் ணத்தில் ஏதோ குடிப்பது போலவும், அதற் குப் பின்புறம் சமையல்காரர்கள் எதையோ சமைப்பது போலவும், அரசி பூக்களை அரச னுக்கு அளிப்பது போன்ற நிகழ்ச்சிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு எகிப்தியக் கலையம்சம், பிராந்தியக் கலையம்சத்தோடு கலந்துள்ளது. இதில் பயன்படுத்தப்பட் டுள்ள நீண்ட அங்கிகள் சிரியாவைச் சார்ந் தவை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சூரி யத்தட்டு ஆசியாவைச் சார்ந்தது. இன்னொரு தந்தச் சிற்பமானது, ஒரு தந்தச் சிமிழின் மேல் செதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பத் தில் பெண் சிங்கங்களும், நரசிங்கங்களும் ஓய்வெடுத்த நிலையில் உள்ளன. பெண் சிங்கங்கள் சிறிய ஆசியக் கலையைச் சார்ந் தவை. மொத்தத்தில் இந்தச் சிமிழில் உள்ள உருவங்கள் இத்தியர்களின் கடவுளைக் குறிப்பவையாகும். மேலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும், சீப்பு, கண்ணாடி, கரண்டியின் கைப்பிடிகள் ஆகியவற்றின் தோற்றங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

ஈ) பானைகளில் வரையப்படும் அலங்கா ரங்கள்:- தேல் ஏல்-அசுல், தேல் ஏல்-பாரா, இலாக்கிசு, மெகிதோ போன்ற பகுதிகளில்



கிடைத்துள்ள கி.மு. 1500-ஐச் சார்ந்த வரை படங்களோடு கூடிய பானைகள், பாத்திரங் கள் போன்றவற்றில் உள்ள சித்திரங்கள் கானானியக் கலையோடு தொடர்புடையன.

இந்தச் சித்திரங்கள் அப்போது பாலஸ்தீனத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஆகியன் வடிவ இயல் வகையைச் சார்ந்ததாக அல்லாமல் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அந்த வரைபடங்களில் மெசபொத்தாமியக் கலையைத் தழுவிய மிருகங்களின் நேர்த்தியான தோற்றங்கள் நேர், வளைகோடுகளைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளன. பானைகளில் காணப்படும் அழகான மரம், காட்டு ஆடுகள், ஓர் இறந்த மீனைக் கொத்தும் கொக்குகள் போன்ற படங்கள் இதற்கான சில எடுத்துக்காட்டுகள் ஆகும். இத்தகைய கருத்துக்கள் கொண்ட வரைபடங்கள் கி.மு. 2000-இல் மெசபொத்தாமியாவின் தென்பகுதியில் காணப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. கி.மு. 1200-இல் பெலிஸ்தியர்கள் பயன்படுத்திய பாத்திரங்களில் இன்னும் வேறுசில சித்திரங்கள் காணப்படுகின்றன. இந்தப் படங்களில் பறவைகள், தங்கள் தலைகளைத் திருப்பி, அலகுகளால் இறகுகளை மென்மைப்படுத்துவது போன்ற ஒவியங்கள் காணப்படுகின்றன. இந்தக் காட்சியானது பொதுவாகப் பாலஸ்தீனக் கடற்கரை ஓரங்களில்தான் அதிகமாகக் காணமுடியும். எனவே பெலிஸ்தியர்கள், பாலஸ்தீனக் கலையைப் பின்பற்றியே இந்தச் சித்திரத்தை வரைந்திருக்க முடியும்.

3. எபிரேயக் கலை:- எபிரேயர்கள் பாலஸ்தீனத்தில் தங்கள் ஆட்சியை அமைத்தபோது அவர்களுக்கென்று சொந்தமாக எந்தக் கலையும் கிடையாது. வெறும் நாடோடிகளாகத் திரிந்ததால் அவர்களுக்குக் கலைவளர்ப்பதற்கு அதிக வாய்ப்புக்கள் கிடைத்திருக்க நியாயமில்லை. துன்பக் காலத்தில் இருந்து தாவீதின் காலம் வரை அரசியல் நெருக்கடி போன்ற காரணங்களால் கலைவளரவில்லை. சாலமோன் காலத்தில் கலை வளர்ச்சியடையத் தொடங்கினாலும், இதற்காக வெளிநாட்டுக் கலைஞர்களையும் செயல்பாட்டு முறைகளயும்தான் நம்பியிருக்க வேண்டியிருந்தது (1 அர 5:6.18; 7:13-14; 2 நாள் 2:7.14). யூதா, இஸ்ரேல் ஆகியவற்றின் அரசர்களின் அரண்மனையும், ஆலயங்களும், எபிரேயக்கலை ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திவிட்டதாகத் தெரிகிறது.

அ) ஆலய அலங்கரிப்பு:- சாலமோன் கட்டிய ஆலயத்தின் அழகை, 1 அரசர் ஆகமத்திலும் 2 நாள் ஆகமத்திலும் வாசிக்கின்றோம். இதில் காணப்படும் குறிப்புகள் கலை நுணுக்கத்துடன் எழுதப்பட்டவை அல்ல; காரணம் இவற்றை எழுதியவர்கள் சட்ட வல்லுநர்களே அன்றிச் சிற்பிகள் அல்லர். சட்ட வல்லுநர்கள், ஆலயத்தின் அழகைப் பற்றி எழுதுவது 'யாவேயின் இல்லம்' எவ்வளவு அழகாக இருந்தது என்று குறிப்பிடுவதற்கு மட்டும்தான். இவர்கள் ஒரு சில பிழைகளைச் செய்தாலும் மீதி எல்லாவற்றையும் பற்றிய தகவல்களைத் தருகின்றனர். விவிலியக் கூற்றுப்படி, சாலமோனின் ஆலயத்தில் பலிபீடத்தின் உட்சுவர்களில் மரமானது, தங்கமுலாம் பூசப்பட்டு, மினுமினுக்கச் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஆலயத்தில் உள்ள அணிகலன்களின் அமைப்பு, மரவேலைப்பாடுகள் போன்றவை ஒவ்வொரு மொழியிலும் வேறுபட்டவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்தைப்பற்றிக் குறிப்பிடும் பகுதியிலே அலங்கரிப்பு தாவரங்களையும் கெருபீம்கள் என்றழைக்கப்படும் உயிருள்ள உருவங்களையும் கொண்டுள்ளது. இந்த வேலைப்பாடுகளில் சுரை, மலர்ந்த பூ, பனை போன்றவை காணப்படுகின்றன (1 அர 6:18.29.31.35). ஆலயத்தின் கெருபீம்கள், மெசபொத்தாமிய ஆலயவாயில்களில், காவல் நிற்பதாக அமைக்கப்பட்டிருக்கும், மனித முகமும், சிறகும் கொண்ட ஒரு கலப்பு உயிரைப் போல அமைந்துள்ளன. உடன்படிக்கைப் பேழையின் மீதுள்ள கெருபீம்கள் எகிப்திய கடவுள்கள் ஊர்வலம் வரும்போது அமைக்கப்படும் ஒருவகைத் தோற்றத்தைக் கொண்டவையாக உள்ளன. யாக்கின், போவாஸ் ஆகியோரின் நினைவுத் தூண்களில் கூட, மரத்தால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றில் லில்லி, பனை, பூ, கேதுரு (1 அர 7:18.22.24.26.36.42.49) ஆகியவை காணப்படுகின்றன. வார்ப்புக் கடல் தொட்டியை அலங்கரிக்க

12 எருதுகளின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திசையை நோக்கி மூன்று எருதுகள் நிற்கின்றன (1 அர 7:25; 2 நாள் 4:4). கெருபீம்கள், மிருகங்களின் தோற்றங்கள், சிங்கங்கள், எருதுகள், நீர் எடுக்கப் பயன்படும் வெண்கலத் தொட்டி போன்ற அமைப்பு (1 அர 7:27-37) ஆகியவையெல்லாம் சீரிய, இத்திய தெய்வச்சிலைகளின் அடிப்பகுதிகளைத் தழுவி அமைந்தவைகள் ஆகும்.

யாத் 25.27-இல் உடன்படிக்கைப் பேழையின் அமைப்பு கூறப்பட்டிருப்பதைக் கொண்டு, உடன்படிக்கைப் பேழை இவ்வாறுதான் இருக்கும் என்று தீர்மானிக்க இயலாது. காரணம் தெரியாப் பல கருத்துக்களை மனதில் கொண்டு, வசதிக்கு ஏற்றாற்போல ஓர்அமைப்பைக் கொடுத்து எழுதப்பட்டதே உடன்படிக்கைப் பேழையின் அமைப்பு ஆகும்.

ஆ) தந்த வேலைப்பாடுகள்:- இஸ்ராயேலர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய போது ஏற்பட்ட பிரச்சனைகளால் முன்னேறாமல் இருந்த தந்த வேலைப்பாட்டுக் கலையானது மேற்குச் செமித்திய முடியாட்சி வளர்ச்சியின்போது, மீண்டும் முன்னேறத் தொடங்கியது. மரவேலைப்பாடுகளும், வீடுகளும் தந்தத்தால் அழகுபடுத்தப்பட்டதாக விவிலியத்தில் ஆங்காங்கே குறிப்புக்கள் காணப்படுகின்றன (1 அர 10:18; 22:39; ஆமோ 3:15; 6:4). புதைபொருளில் கிடைத்த இரண்டு தந்த வேலைப்பாட்டுப் பலகையில் இருந்து இவற்றை விவரிக்கலாம். ஒரு தந்தப் பலகையானது அசீரியப் பகுதியில் கிடைத்துள்ளது. இந்தத் தந்தத் தட்டில், 3-ஆம் சால்மனேசரால் தோற்கடிக்கப்பட்டு அவனது சொத்துக்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு அதாத்து அரண்மனையில் வைக்கப்பட்ட தமஸ்கு அரசனான கசாயேலின் பெயர் இருப்பதால் இது அவனது காலமான கி.மு. 841-ஐ ஒட்டிய பலகையாகத்தான் இருக்கக்கூடும். அரகலான் தாஸ் என்னுமிடத்தில் கிடைக்கப் பெற்றுள்ள தந்த வேலைப்பாட்டு அமைப்பில், பெண் நரசிங்கங்கள், சிறகுடன் அமைந்த பெண் உருவங்கள், சன்னல் கம்பிவழியாகத் தெரியும் ஒரு பெண்ணின் உருவம் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தச் சிற்பங்களுக்கான கருத்தமைவுகள், மத்தியதரைக்கடல் பகுதியிலிருந்து எகிப்து எடுத்து பயன்படுத்திய, புதிய அரசின் எகிப்தியக் கலை வகையைச் சார்ந்ததாக இருக்கலாம். அரசுலான் தாஸ் என்னுமிடத்திலுள்ள தந்தச் சிற்பிகள் எகிப்தியக் கருத்துக்களை எளிதாகப் பின்பற்றினார்கள். நீண்ட தாடியுடன், சால்வை போர்த்திய மனித உருவம் அமைந்த இன்னொரு தந்தச் சிற்பமானது அசீரிய வகையைப் பின்பற்றியதாக உள்ளது. இன்னொரு சிற்பத்தில் காணப்படும் பசு, தன் கன்றை நக்குவதான காட்சி ஆகியன் சிற்ப வகையைச் சார்ந்ததாக இருக்கலாம்.

சமாரியாப் பகுதியில் கிடைத்த பல தந்த வேலைப்பாடுகளில் தங்கமுலாம் பூசப்பட்டு, நீலக்கற்களும், கண்ணாடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவைகள் சுத்த எகிப்தியக் கலையைச் சார்ந்தவை.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளும், நிம்ரூதில் கிடைத்த தந்தச் சிற்பங்களும், விவிலியம் கூறும் மெசபொத்தாமிய தந்தச் சிற்பங்களும், சீரியா, பாலஸ்தீனம் போன்ற இடங்களில் கிடைத்த தந்தப் பலகைகளும், கி.மு.9-8 நூற்றாண்டுகளில் மேற்குச் செமித்திய நாட்டின் தந்தச் சிற்பங்களும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன என்று தெரிவிக்கின்றன.

4. யூதக்கலை:- நாடு கடத்தப்படுவற்கு முன்பு யூதக் கலை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. நாடுகடத்தப்பட்டபின் அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்து வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும்போதும், செலூக்கிய அரசர்களோடு போர் தொடுத்தபோதும் யூதக்கலை வளர்ச்சியடையவில்லை. யூதர்கள் சொந்தமாக சுய ஆட்சி பெற்றபோதும், உரோமை ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோதும், யூதக்கலை மெல்லத் தலையெடுக்கத் தொடங்கியது. யூதக்கலை என்றுமே தனித்து நின்றதில்லை. மேற்கு

ஆசியாவில் உள்ள கிரேக்கக் கலையைத் தழுவியே அமைந்திருந்தது. இதற்கான சான்றுகள் பாலஸ்தீனத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் ஏராளம் காணப்படுகின்றன. இதுமேயாவிலும், மாரிசாவிலும் அமைக்கப்பட்டுள்ள கிரேக்கமயம் கொண்ட சீதோனியக் குடியிருப்பில் உள்ள கல்லறைகளில் அமைந்துள்ள புராணக் கருத்துக்கள், மிருக முகங்களின் கலவை, பெண் நரசிங்கங்கள் போன்றவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கிரேக்கர்களின் காலத்திலும், உரோமையர் காலத்திலும் இருந்த யூதக்கலையானது இவ்வாறாகப் பலகலைகளை உள்ளடக்கிய ஒரு கலையாகும்.

அ) கல்லறை நினைவுச் சின்னங்களின் அலங்கரிப்பு:-

கிறிஸ்துவம் தொடங்குவதற்கு முன்பு உள்ள சில பணக்கார யூதர்களின் கல்லறையானது தோரிய, அயோனியக் கலைகளோடு எகிப்தியக் கலையையும் சேர்த்து நினைவுச் சின்னங்களாக அமைக்கப்பட்டுள்ளன. கோபுர அமைப்பு, கூம்பு வடிவம், பூச்சின்னம் போன்றவைகள் எகிப்தியக் கலை வடிவமயமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. கிதரோன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள கல்லறைகளின் அமைப்பு கீழ்த்திசை சார்ந்த கலைகளின் இணைவாக வெளிப்படுகின்றன. அபிசலோம், செக்கரியா, சின்ன யாக்கோபு, கெலன் அரசி, யோசுவாவின் கல்லறை, நீதிபதிகளின் கல்லறைகள் என்று இன்று சொல்லப்படுபவை எல்லாம் தாவர உருவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆ) தொடக்க காலச் செபக்கூடங்களில் அலங்கரிப்பு:- கெபிர் பிரிம், தேல் கூம் போன்ற இடங்களில் காணப்பட்ட செபக் கூடங்களில் எல்லாம், யூதக் கல்லறைகளில் காணப்பட்ட தாவர உருவங்கள் அதிகம் காணப்படுகின்றன. இதைத் தவிர்த்து வித்தியாசமான முறையில் ஏழு கிளைகள் உடைய விளக்குத் தண்டும், ஆறுமுனைகளையுடைய தாவீதின் விண்மீனும், 1 நாள் 28:17-இல் குறிக்கப்பட்டுள்ள சக்கரத் தேரும், கடல் குதிரைகள், காதல் தெய்வம் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன.

கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டுகளில் உள்ள பாலஸ்தீனச் செபக்கூடங்களில் பளபளப் பாக்கப்பட்ட மொசைக் தரைகளில் மனிதர்களின் உருவங்களும், மிருகங்களின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. புற இனத்தாரின் புராணங்களில் கூறப்பட்டுள்ள, சூரியக் கடவுளின் தேர், ஐந்நூல் ஆலயம், விளக்குத் தண்டுகள் ஆகியவற்றை இவர்கள் எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். செபக் கூடங்களின் சுவர்கள், உரோமை, அலக்சாந்திரியா வர்ணம் தீட்டும் முறையில் அமைந்துள்ளன. சுவர் முழுவதும், மோசே நைல் நதியில் இருந்து காப்பாற்றப்படுதல், பேயேரில் உள்ள மோசேயின் கிணறு, தாவீதின் அபிடேகம், கர்மேல் மலையில் எலியா இறைவாக்கினரின் பலி போன்ற பல விவிலிய நிகழ்ச்சிகளை வரைந்து அழகுபடுத்தியிருக்கிறார்கள்.

## கலைமான் (HART)

இது சிவந்த மான் வகையில் வயது வந்த ஆண்மானாகும். இது பரவலாகக் காணப்படுகிறது. இதனுடைய நிறம் பருவத்திற்கு ஏற்றவாறு லேசாக மாறுகிறது. ஆனால் இது சிவந்த தவிட்டு நிறமாக இருக்கிறது. இதன் உயரம் கழுத்தில் நான்கு அடி.

பழைய ஏற்பாட்டில் இது பல இடங்களில் குறிக்கப்பெறுகிறது (உப 12:15.22; 14:5; 15:22; 1 அர 5:31). உணவாகவும், வேட்டையாடப்படும் மிருகமாகவும் உள்ளது. வேறு குறிப்புகள்: ஏச 35:6-மான் குதித்தல் பற்றியும்; சங் 42:1-மான் தண்ணீரையும் உணவையும் தேடிச் செல்வதைப் பற்றியும்; உ.ச. 2:9, 17:8:14-மானின் பலத்தையும் வேகத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

## கல் (STONE)

பாலஸ்தீன நாட்டில் கற்கள் இல்லா இடங்களைப் பார்ப்பது அரிது, ஆகையால் எபிரேய மக்களுக்குக் கற்கள் மிக எளிதாக அதிக அளவில் கிடைக்கின்றன. அவர்களு

டைய சிந்தனை, சொல், செயல் வாழ்க்கை முறையில் கற்கள் இடம்பெற்றன. பழம் பெருங்குடி மக்களின் மனத்திலும், வெளி யடையாளங்களைப் பயன்படுத்தும் எல்லா வகையான மக்களிடத்திலும், உறுதியான, உடையாத, கனமான கல் வலிமையைக் காட்டுகிறது.விவிலியம் கல் வடிவங்களின் உருவங்களை மெசியாவிற்குச் சுட்டிக் காட்டி விளக்குவதை மேற்கூறியவற்றின் மூலம் அறிய முடியும்.

1. புனிதக் கற்களும், கிறிஸ்துவின் பீட மும்:- புனிதக் கற்சிலைகளை வணங்கும் வழிபாடு எல்லாப் பழைய மதங்களிலும் வளர்ச்சியுற்றிருந்தது. ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு இந்தச் சிலை வழிபாடு தடை செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் சிலைவழி பாடு செய்யும் அருகிலுள்ள மக்களின் கவர்ச் சியால் அவர்கள் தவறக்கூடும். ஆகையால் அவர்கள் எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும் (லேவி 26:1; உப 16:22; ஏச 57:6). இந்தச் சிலை வழிபாட்டிற்கு அப்பால் புனி தக் கற்களில் கருத்து (பொருள்) இருந்தது. மாய மந்திர வித்தையால் கற்கள் ஆற்றல் பெறவில்லை. ஆனால் இந்தக் கற்களின் பலன் அல்லது ஆற்றல் காலத்தைக் கடந்த இறைவன் அளித்தவையாகும். இக்கருத்து டன் யாக்கோபு ஒரு புனிதக் கற்றூணைப் பெத்தேல் என்ற இடத்தில் நாட்டினார் (ஆதி 28:16 தொ). இஸ்ராயேல் பன்னிரண்டு கோத் திரங்கள் பலிபீடத்தினால் தூய்மையடை கின்றன என்று எடுத்துக்காட்டப் பன்னி ரண்டு கோத்திரங்கள் கற்றூண்களைப் பலி பீடத்திற்கு அருகில் மோசே நிறுவினார் (யாத் 28:10.21; 2:4). இந்தப் பீடங்கள் செதுக்கப் படாத கற்களால் கட்டப்பட்டவை. இந்தப் பீடத்தின் வழியாக இறைவன் தம் ஆசீரை அளிக்கிறார் (யாத் 20:25; காண் 23:19). உண்மையில் இந்தத் தூய கற்கள் இறைவன் இவ்வுலகில் தங்கியிருப்பதைப் பலவகை யான வெளியடையாளங்களால் காட்டுகின் றன. இவை கிறிஸ்துவின் பல்வேறு உருவங் களாகும். கிறிஸ்துவில் இறைவன் இவ்வுல கிற்குத் தம்மைக் காட்டுகிறார். புதிய ஏற் பாட்டில் இது மறைமுகமாகக் காட்டப்பட் டிருக்கிறது (காண் எபி 13:10; 1 கொரி 10:18). வெளிப்படையாகத் திருச்சபையின் தந்தைய ரின் நூல்களிலும் வழிபாட்டு முறையிலும் கிறிஸ்து பீடத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டி ருக்கிறார்.

2. நினைவுத் தூணும் அழியாத உடன்படிக் கையும்:-

தூய கல்லுக்கும் (பீடத்திற்கும்) நினைவுத் தூண்களுக்கும் அவ்வளவு வேறுபாடு இருப் பதாகத் தெரியவில்லை. அழியா, உறுதித் தன்மையைப் பழங்கால நினைவுச் சின்னங் களில் காணலாம். இந்த நினைவுச் சின்னம் உடன்படிக்கையின், சாட்சிய மேடைமட்டு மன்று (ஆதி 31:45-52), இறந்தவர்களின் அழியா நினைவுச் சின்னமுமாகும் (யோசு 8:29; 2 சாமு 18:17). இவை இறைவன் தம் மக்களோடு செய்த உடன்படிக்கையை நினைவூட்டுகிறது (யோசு 4:7.20-24; 24:26). இந்த உடன்படிக்கையின் சட்ட திட்டங்கள் கற்பலகையில் எழுதப்பட்டன (யாத் 24:12). ஆனால் அழியாத வாக்குறுதியின் அடையா ளம் கல்லான இதயங்கொண்ட இஸ்ராயேல் மக்களால் சிறுமையுற்றது (எச 11:19). இறுதி யாக அவர்களது பிடிவாத குணத்தையும், இதயமற்ற மனத்தையும் குறிக்கும் அடையாள மாகவும் மட்டும் நின்றது. இந்த நிலைக்கு மாறாக உணர்ச்சியுள்ள இதயத்தைப் படைத்து, எரேமியா, எசக்கியேல் கூற்றுப் படி (எரே 31:33; எச 11:19; 36:26) ஆவியி னால் எழுதப்படுகிற புதிய சட்டத்தை உள்ள மாகிய உயிர்ப்பலகையில் எழுதுவதாகக் கூறுகிறார் ஆண்டவர் (2 கொரி 3:3).

3. பாலைவனத்தில் பாறையும் மீட்பரான கிறிஸ்துவும்:-

பாலைவனத்தில் மோசே பாறையிலி ருந்து தண்ணீர் வழிந்தோடச் செய்தார். இந்த அருங்குறியில் பவுல் கிறிஸ்துவைக் காண்கி றார். ஏனெனில் கிறிஸ்து தம்மிடமிருந்து அளிக்கும் நீரோ முடிவில்லா வாழ்வளிக்கும் நீராகும் (1 கொரி 10:4). இந்தப் பாலைவனத் தின் பாறையை மக்களோடு செல்கின்ற யாவே இறைவனுக்கு யூத ஆசிரியர்கள் ஒப்பிட்டனர். இந்த விளக்கத்தைப் பவுல்

ஒப்புக் கொள்வதோடு மட்டுமின்றிப் பழைய ஏற்பாட்டின் பாரம்பரியத்தைப் புதிய ஏற்பாட்டுடன் இணைக்கிறார். பழைய ஏற்பாடு ஆசிரியர்கள், பாறையிலிருந்து தண்ணீர் வழிந்தோடிய புதுமையைத் தங்கள் எழுத்துக்களில் எடுத்துக்கூறத் தயங்குவதில்லை (சங் 78:15; 105:41; ஞான 11:4). ஏனென்றால் உலர்ந்த உயிரற்ற பாறையிலிருந்து உயிரும் பலனும் அளிக்கவல்ல நீரைச் சுரக்கச் செய்த நிகழ்ச்சியில் யாவேயின் மாட்சிமைமிக்க அருளின் வல்லமையைக் கண்குளிரக் கண்டனர். மேலும் கற்பாறை இறைவனின் சாயலாக மக்களுக்கு இருந்து, அவருடைய அருளை வழங்கியது (எச 47:1-12; செக் 14:8; திருவெளி 22:1). பாறையிலிருந்து சுரந்த நீருக்கும் இறந்த கிறிஸ்துவின் விலாவிலிருந்து வழிந்த நீருக்கும் உள்ள ஒற்றுமையைப் புனித யோவான் குறிப்பாகக் காட்டுகிறார் (யோவா 19:34; காண் 7:37). இந்த ஒற்றுமையைப் பற்றி வெளிப்படையாகப் பல திருச்சபையின் தந்தையர்கள் எழுதியிருக்கிறார்கள்.

4. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவும், உயிருள்ள கற்களாகிய கிறிஸ்தவர்களும்:-

கிறிஸ்துவின் துன்பங்களும், சோதனைகளும், இறுதியாகத் தோல்வியாகக் கருதப்பட்ட மரணத்தின் வழியாக மீட்புக் கிடைத்தது. ''வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று'' என்று சங் 118:22 மெசியாவைப் பற்றி அறிவித்திருக்கிறது. தம் சொந்த மக்களால் கைவிடப்படுவார் என்ற கருத்தை இயேசு கொடிய குத்தகைக்காரர் உவமையால் கூறினார். இதனால் கிறிஸ்து மூலைக்கல்லாகவும், கட்டடத்தின் அடித்தளமாகவும், மிக முக்கியமான மையக் கல்லாகவும் விளங்குவார் என்பதை அறிகிறோம் (மத் 21:42; அ.ப. 4:11; 1 பேதுரு 2:4.7). புனித ஆலயம் இந்த வழியாக ஒன்றோடு ஒன்று இணைந்து இருக்கும் என்று உறுதியளிக்கிறார். அவரில்தான் கடவுளுடைய இருப்பிடம் கட்டப்பட்டு வளர்ச்சியடைகிறது.

மற்றொரு உருவகத்தின்படி கிறிஸ்து அசையாத கல்லாகக் கூறப்படுகிறார் (ஏச 28:16; உரோ 9:33; 1 கொரி 3:11; 1 பேதுரு 2:6), இந்த அசையாத கல்லில் விசுவாசம் கொண்டு நம்பும்போது, விசுவாசிகள் உயிருள்ள கற்கள் போல மாற்றப்பட்டு, கட்டடத்தில் ஒரு பகுதியாகப் பொருத்தப்பட்டுத் தூய ஆலயமாக்கப்படுகின்றனர் (1 பேதுரு 2:15; எபே 2:21).

5. கிறிஸ்து, அழிக்கும் பாறையும், இடறலான கல்லும்:-

இறைவனது தூய்மையும், அன்பும் வெளிப்படும்பொழுது கிறிஸ்து ஒவ்வொரு மனிதனையும் ஒளியையோ இருளையோ தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறார். தற்பெருமை கொண்ட விசுவாசமற்றவர்களுக்கு இடறல் கல்லாகவும், வழுக்கிவிடும் பாறையாகவும் கிறிஸ்து இருக்கிறார் (ஏச 8:14; உரோ 9:33; 1 பேதுரு 2:8). ஆனால் கிறிஸ்துவின் பகைவர் இறுதியாக அழிக்கப்படுவர். இந்தக் கைவிடப்பட்ட பாறை மூலைக்கல்லாகிற உவமையின் தொடர்ச்சியைப் புனித லூக்கில் காணலாம். ''அக்கல்லின்மேல் விழுபவன் எவனும் நொறுங்கிப் போவான். எவன் மேல் அது விழுகிறதோ அவன் தவிடுபொடியாக ஆவான்'' (லூக் 20:17 தொ). ஒரு வேளை லூக்கா இங்குத் தானியேல் புத்தகத்தில் கூறப்படும் பாறையின் உருவகத்தைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். மெசியாவும் அவருடைய அரசும் இவ்வுலகின் மற்ற எல்லாச் சக்திகளையும் தோல்வியடையச் செய்து, வெற்றியடைவதைப் பாறையின் உருவகத்தில் தானியேல் காண்கிறார். ''நீர் பார்த்துக் கொண்டிருந்தபோது, கைகளால் பெயர்க்கப்படாத கல்லொன்று உருண்டு வந்தது; வந்து சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய அதன் பாதங்களில் மோதி நொறுக்கிப் போட்டது.... சிலையை மோதிய கல் பெரிய மலையாய் வளர்ந்து மண்ணுலகம் முழுவதும் நிரம்பிற்று (தானி 2:34) தொ.

6. விலை உயர்ந்த கற்களும் புதிய எருசலேமும்:-

மகிமை பொருந்திய மாற்றம் அடையக்

காத்திருக்கும் புதிய எருசலேமுக்கு ஓர் அதிசய மான அடையாளம் உண்டு; அந்தத் தூய நகரம் விலை உயர்ந்த கற்களால் கட்டப் படும் (ஏச 54:11 தொ; தோபி 13:16 தொ; திருவெளி 21:10-21).

**கல்கூல்** (HALHUL - நடுங்குகின்ற)

யூதாவின் மலைப்பகுதியில் உளள பேத்து சூர் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:58). கெபிரோனுக்கு வடக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கல்கூலோடு அடையாளம் காட்டப்படுகிறது. இந்த நகரி லுள்ள மசூதியில் யோனாவின் கல்லறை இருப்பதாக ஒரு பாரம்பரியம் உள்ளது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏலிய காப்பித் தோலினா (எருசலேம்) பகுதியின் தென் எல்லை அருகிலுள்ள அலுபோஸ் (கல்கூல்) இருந்தது என்று கூறப்படுகிறது.

**கல்கோல்** (CALCOL)

தாமார் தன் மாமன் யூதாவிற்குப் பெற்ற செராகுவின் புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 2:6). சாலமோனுக்கு அடுத்து ஞானத்தில் சிறந்தவர் என்று போற்றப்படுகிறார்; ''மா கோலின் புதல்வர்களுள்'' ஒருவர் என்று சொல்லப்படுகின்றார். அதாவது, ''இசை மீட்டோரின் சங்கத்தின் அங்கத்தினர்'' (1 அர 5:11).

**கல்தளம்** (LITHOSTROTOS)

அந்தோனியாக் கோட்டையின் முற்றத் தில் இருந்த நீதி இருக்கை. இங்கு இயேசு சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டார் (யோவா 19:13).

**கல்தேயா, கல்தேயர்கள்** (CHALDEA, CHALDEANS)

கல்தேயா என்பது பாபிலோனியாவின் தென்பகுதியில் உள்ள ஒரு பகுதி. கல்தேயர் கள் என்பது அங்கு வாழ்ந்த மக்களைக் குறிக்கும். இப்பெயர் பாபிலோனைக் கடை சியாக ஆட்சி புரிந்த (கி.மு. 626-539) அரச பாரம்பரியத்தையும் குறிக்கும்.

1. நாடு:- கி.மு. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து அசீரிய அரச ஏடுகளில் கல்தூ என்ற நாட் டைப் பற்றியும், அங்கு வாழ்ந்த கல்தாய் என்ற மக்களைப் பற்றியும் அறிகிறோம். இந்நாடு யூப்பிரத்திசு, திகிரிசு ஆகிய நதிக ளின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள பாரசீக வளைகுடாவுக்கும் பாபிலோனியத் தென்கோடி நகர்களுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். ஏரிகள், குளம், குட்டைகள் நிறைந்த இப்பகுதியில் ஒரு சில நகரக் குடியிருப்புகளே இருந்தன. இங்கு வாழ்ந்த மக்களின் முக்கிய தொழில்கள் மீன்பிடித் தல், வேட்டையாடுதல், சிறுசிறு விவசாயத் தொழில்கள், ஆடு மாடு மேய்த்தல் முதலிய னவாகும். இப்பகுதி ஒவ்வொரு இனத்திற் கும் ஏற்றாற்போல் சிறு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு அவைகள் ''வீடுகள்'' என்றழைக் கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் தலைவர் கள் உண்டு. இவர்கள் அரசர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவ்வாறு சிறுசிறு பகு திகளாகப் பிரிக்கப்பட்டதால் இம்மக்கள் சுற்றுப்புறத்தில் வாழ்ந்தவர்களோடு தொடர்பு கொள்ளாமல் தனித்து வாழ்ந்த னர். எனவே அவர்களுக்குள்ளே ஒரு சுதந்தர மான மனப்பாங்கும் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தன.

கல்தேய மக்கள் எந்த மொழியில் பேசி னார்கள் என்பதற்குக் குறிப்பு இல்லை. இவர்கள் அக்காதியர்கள் மொழியையே பேசியிருக்கலாம். எனினும் அவர்கள் அரே பிய மொழியையும் உபயோகப்படுத்தினர் என்பதற்கும் சான்றுகள் உள. கல்தேய இன மும் அரமேய இனமும் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்து வாழ்ந்தாலும் இவ்விரண் டும் வெவ்வேறு இனங்களே.

கிரேக்க மூலங்களும், ஆப்பு எழுத்து வாச கங்களும் கல்தேயா, கல்தேயர்கள் பற்றிப் பேசுகின்றன. ஆனால் நெகமிய, தானியேல் ஆகிய நூல்களின் எபிரேய, அரமேயிக்கு வடிவங்கள், பாபிலோன், பாபிலோனியர் களைப் பற்றிப் பேசுகின்றன. இந்த வேறுபாடு களுக்குப் போதிய மொழியியல் விளக்கம் கிடைக்கவில்லை.

2. வரலாறு:- வரலாற்று ஏடுகளைத் தவிர்த்துக் கல்தேயர்களைப் பற்றி அறிய வேண்டுமெனில் நமக்கு உதவுவன நினிவே அரண்மனையில் கிடைத்துள்ள சான்றுகளே. இவைகள் அசீரியர்கள் கல்தேயர்களோடு எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை விளக்குகின்றன. அசீரியர்கள் ஆட்சிக்குப் பின் கல்தேயர்பற்றி நாம் அறிவதற்கு உதவும் வரலாற்று ஏடுகள் மிகக் குறைவே, எனினும் சில கருத்துக்கள் தெளிவாக உள்ளன. நகரத்தில் வாழ்ந்த மக்களுக்கும் கல்தேயர்களுக்கும் கலாச்சார அடிப்படையில் வேறுபாடு ஏதுமில்லை. இருவரும் ஒரே தெய்வங்களையே வழிபட்டனர். ஆப்பு எழுத்துக்களைப் பயன்படுத்தினர். ஆனால் அவர்களின் சமூக வாழ்க்கைமுறைதான் வேறுபாடாக உள்ளது. கல்தேயர்கள் இனத்தின் அடிப்படையில் குழுக்களாக வாழ்ந்தனர். பணத்திற்கும் சக்திக்கும் ஏற்றாற்போல் கூட்டுச்சேர்வர்; வரிகொடுக்க மறுத்தனர்; சேவை செய்ய மறுத்தனர்; தங்கள் இனத்தைத் (குழுவைத்) தவிர்த்து, பிறருக்குப் பிரமாணிக்கம் காட்டவில்லை; நகரத்துச் செல்வங்களைக் கொள்ளையிடுவர். கருக்கமாகச் சொன்னால் அவர்கள் நகரத்தில் வாழ்ந்த மக்களின் பரம எதிரிகள்.

அசீரிய அரசர்கள் கல்தேயாப் பகுதியில் படையெடுத்தது பாபிலோனிய நகரத்து மக்களுக்கும் கல்தேயர்களுக்கும் உள்ள சமூக உறவை அழித்தது. எனவே பாபிலோனியர் தங்கள் பகுதியில் கோட்டைகள் அமைத்துக் காவல் காத்தனர். இவைகள் கல்தேயர்களை மேலும் ஒற்றுமையுள்ளவர்களாகவும், சுதந்தரமானவர்களாகவும் ஆக்கியது. ஆனால் அசீரியப் பாதுகாப்பில் வாழ்ந்த நகரத்து மக்களோ அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தனர். இந்நிலையில், பாபிலோன் நகரங்களில் ஒன்றாக மட்டும் இராமல், அரசியல் ஆர்வம் மற்றும் கலாச்சாரத்தின் அடையாளமாக விளங்கியது. இதனால், சூழ்நிலை மும்முனைப் போட்டியாக உருவெடுத்தது.

இந்தச் சூழ்நிலைகள் கல்தேயர்களைப் போர்க்கலையில் சிறந்தவர்களாக்கியது. உள்நாட்டுக் கிளர்ச்சி, கொரில்லாப் போர் முறை, திடீர்த் தாக்குதல், உடன்படிக்கைகளைக் கடைப்பிடிக்காத தன்மை ஆகியவற்றால் இம்மக்கள் பிறரின் பயங்கர எதிரிகளாயினர். ஏறக்குறைய 2 நூற்றாண்டு வெற்றி-தோல்விக்குப்பின் கல்தேயர்கள் அசீரியர்களை முறியடித்துப் பாபிலோனியப் பேரரசை நிறுவினர். இப்பேரரசு எகிப்து முதல் சிலிசியா வரை பரவியிருந்தது.

கல்தேயா அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் மெரோதாக்கு-பாலதான் என்பவர். இவர் பாபிலோனிய அரசர்களான மூன்றாம் திகிலாத்துபிலேசர் இரண்டாம் சார்கோன், சனகெரிபு ஆகியவர்களோடு போர்புரிந்தவர். இவர் ஏலாம் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டு அங்கு இறந்து போனார். இவர் திறமைமிக்கவராதலால் இவர் காலத்தில் நாட்டில் அரசியல் நிலை சுமூகமாக நிலவியது. கல்தேயர்கள் அசீரியர்களை எதிர்க்க ஏலாம் நாடு எப்போதும் உதவியது. கல்தேயர்களை அசீரியருடைய படை பலம், அறிவு ஆகியன அச்சுறுத்தியபோதும் ஏலாம்நாடு கல்தேயர்களுக்குப் புகலிடம் தந்தது. இந்தக் கல்தேயர்கள் தொலைவிலுள்ள அசீரிய மேலதிகாரிகளோடு சேர்ந்து மறைமுகமாகச் சூழ்ச்சி செய்வதில் வல்லவர்கள். நகரங்களில் அசீரிய எதிர்ப்புப் படைகள் எப்போதும் இருந்தன. சில சமயங்களில் அசீரியரோடு உடன்படிக்கை செய்து ஆட்சி செய்வதும் உண்டு.

அசீரிய அரசன் அசூர்பானிபால் இறந்தபோது அசீரிய அரசு சிதையத் தொடங்கியது. அப்போது கல்தேயர்கள் வரலாற்றின் இரண்டாம் கட்டம் மன்னன் நபுபோலசரோடு தொடங்குகிறது. இவர்தான் கல்தேயப் பேரரசை நிறுவியவர். இவர் காலத்தில் தான் பாபிலோனியா கைப்பற்றப்பட்டது. மேதிய நாட்டோடு உடன்பாடு செய்து நினிவேயை கி.மு. 614-இல் வென்றார். அடுத்து இவர் மகன் நெபுக்கதுனேசார் பெருமை வாய்ந்தவர்; வலிமை படைத்தவர் (கி.மு. 604-562). இவர் பாலஸ்தீனம், சீரியாப் பகுதிகளில் வாழ்ந்த எகிப்தியரை விரட்டினார். இவர் கர்கேமிசில் எகிப்தியரை வென்றார் (605; எரே 46:2); எருசலேமைத் தாக்கி (597)

587-இல் யூதாவைத் தோற்கடித்தார். இது பாபிலோனிய நாடு கடத்தலுக்கு இட்டுச் சென்றது (2 அர 24-25). இவர் காலத்தில்தான் கல்தேயர்கள் அசீரியாவின் முழுப்பகுதியையும் கைப்பற்றினர். இப்போது பாபிலோனியா என்ற சொல்லுக்குப் பதிலாகக் கல்தேயா என்ற சொல் வழங்கப்பட்டது. நெபுக்கதுனேசார் பிற நாடுகளை வென்று ஏராளமான கொள்ளைப் பொருளைப் பாபிலோனியாவிற்குக் கொண்டு வந்தார். அந்நாட்களில் பாபிலோனின் பெயர் உலகம் முழுவதும் பரவியது. இவரது காலத்தில் கல்தேய ஆதிக்கம் உச்சநிலை அடைந்து, கல்தேயப் பேரரசு முடிவுற்றது எனக் கூறலாம். இவருக்குப்பின் ஆட்சிபுரிந்த இவர் மகன் எவில் மெரோதாக்கு (கி.மு.562-560; 2 அர 25:27-30; எரே 52:31-34), மருமகன் நெர்கெல் சாரெசார் (560-558) ஆகியோர் மிகச் சிறிதுகாலமே ஆட்சி செய்தனர். இக்காலத்தில் கல்தேய அரசன் எனக் கூறப்படும் நபோனிது (556-539) முற்றிலும் வேறுபட்ட உலகைச் சேர்ந்தவராவார். பாரசீக மன்னன் சைரசின் தலைமையில் பாபிலோன் கைப்பற்றப்பட்டதோடு (539) கல்தேயப் பேரரசு முடிவுக்கு வந்தது.

பாபிலோனியர்கள் என்றழக்கப்பட்ட கல்தேயர்கள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறிய போது இவ்வினத்தின் இறுதிக்கட்டம் தொடங்கியது. இவர்கள் பல நாடுகளுக்கு மந்திரவாதிகளாகவோ, வானவியல் அறிஞர்களாகவோ, தீர்க்க தரிசிகளாகவோ சென்றனர். இவர்கள் கிரேக்க ஆதிக்கம் நிலவிய எகிப்திலும் கிரேக்க நாட்டிலும் உரோமையிலும் பெரும் புகழ்பெற்றனர். இவர்களது புகழ் மேற்கத்திய நாடுகளிலும் பரவியது. இந்த இடங்களில் இவர்கள் செய்த தொழில்களுக்குத் தங்கள் பெயர்கள் இட்டனர்.

*3. கல்தேயர்கள் விட்டுச் சென்ற மரபுரிமை:-*

*கல்தேயர்கள் பாபிலோனில் ஆட்சிசெய்த காலத்தில், அவர்கள் விரிவாக்கப்பட்ட எழுத்தர் குழுக்களைப் பாதுகாத்து வந்ததாகத் தெரிகிறது. இவர்கள் சமயம், வரலாறு,* அறிவியல் போன்ற தலைப்புகள் பற்றிப் பரந்த இலக்கிய உலகை விட்டுச்சென்றுள்ளனர். நெபுக்கதுனேசார் காலத்திலும் அவருக்குப்பின் வந்த கடைசிக் கல்தேய மன்னர்கள் காலத்திலும் இலக்கியம் பெரிதும் வளர்ச்சியுற்றது. நெபுக்கதுனேசார் காலத்தில் கட்டடக்கலையும் கட்டடங்களைக் கட்டியெழுப்புதலும் பெரிதும் வளர்ச்சியுற்றிருந்தன (தானி 4:30).

வானியல், சோதிடம் ஆகியவற்றில் இவர்கள் புலமை பெற்றிருந்தனர். கிரேக்கர் காலத்தில் பாபிலோனிலிருந்து வந்த மந்திரவாதிகளும் சோதிடர்களும் மத்திய தரைக் கடல் நாடுகள் முழுவதிலும் பரவியிருந்தனர். இதன் விளைவாகக் கல்தேயர்என்ற சொல் இனப்பொருளிலோ, அரசியல் பொருளிலோ (எஸ் 5:12; தானி 5:35) பயன்படாமல் இந்தக் கலைகளைக் குறிக்கும் கலைச்சொல்லாகியது (தானி 2:2-5.10; 4:5; 5:7-11).

கல்தேயர்களின் மொழி, பாபிலோனில் பயன்படுத்தப்பட்ட அக்காதிய மொழிப்பிரிவைப் போன்றதாகவே இருந்திருக்கவேண்டும். மற்ற மேற்காசிய நாடுகளில் நிகழ்ந்தது போலவே இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியில், கல்தேயர்களும் அரமேயிக்கு மொழியை ஏற்றுக் கொண்டனர். இம்மொழியைக் கல்தேய மொழியென்று அழைப்பது சரியானதன்று.

**கல்தொலைவு** (STADION, FURLONG)

ஸ்தாடியோன் எனற சொல் இச்சொல்லால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (2 மக் 12:9-11; லூக் 24:13; யோவா 6:19; 11:18; திருவெளி 14:20; 21:16). சில மொழிபெயர்ப்புகள் மைல் என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றன. ஸ்தாடியோன் 231 முழம் நீளமுள்ளது.

**கல்மழை, ஆலங்கட்டி மழை** (HAIL, HAIL-STONES)

மழைமுகில் ஒன்று திரண்டிருக்கும்போது ஏற்படும் கடும் கொந்தளிப்பினால் கல்மழை தோன்றுகிறது. கல்மழை பெய்யும்போது

இடியும் மின்னலும் அடிக்கடி ஏற்படுகின்றன. மேகத்தின் மீதுள்ள மழைத்துளிகள் பயங்கர உயரத்திற்கு அதாவது 0°-க்கும் குறைவான வெப்பநிலை உள்ள இடத்திற்குத் தூக்கிச் செல்லப்படுகிறது. பனிக்கட்டிகள் உருவாகி மேலே தூக்கப்பட்டுக் கீழே விழுகின்றன. முடிவாக அவை பூமியை நோக்கி விழும் போது, 1-2 செ.மீ. அளவு விட்டமுள்ள ஆலங்கட்டிகளாக மாறுகின்றன. இவை நிலத்தின் பயிர் விளைச்சலைப் பாதிக்கக் கூடியதாகவும் மனிதர்களையும் மிருகங்க ளையும் சில சமயங்களில் காயப்படுத்தும் அளவுக்கும் அமைகின்றன. சில விதிவிலக் கான நேரங்களில், மிகவும் பெரியதாக இருக் கின்றன. 1937-ஆம் ஆண்டு அக்டோபரில் தேல் அவிவ்வுக்குப் பக்கத்தில் கடற்கரை யோரமாக ஆலங்கட்டி மழையினால் மேல் தள ஓடுகள் உடைந்தன.

விவிலியத்தில் கல்மழை குறிக்கப்பட்டி ருக்கிறது. விளைச்சலை நாசம் செய்வதாக வும் (யாத் 9:18-34; ஆகா 2:17), மனிதர்களை யும் மிருகங்களையும் திறந்த வெளியில் காயப்படுத்தியதாகவும் (யாத் 9:25; யோசு 10:11), மின்னலோடு ஆலங்கட்டி மழை பெய்ததாகவும் (யாத் 9:23; சங் 18:12-13; திருவெளி 11:19), கடும் புயலோடும் (எச 13:11), அலைக்கழிக்கும் மழையோடும் (ஏச 28:17), பனியோடும் (யோபு 38:22) ஆலங் கட்டி மழை பொழிந்ததாகக் குறிப்பிடப்பட் டிருக்கிறது. கிபயோனில் எமோரியர்களைக் கொன்ற ஆலங்கட்டி மழை ''சூரியனும்... இஸ்ராயேலர் தங்கள் எதிரிகளைப் பழி வாங்கித் தீரும் மட்டும் நிலைகுலையாமல் நின்றதற்கு'' (யோசு 10:11-13) பின்னால் மேகங்கள் ஒன்று திரண்ட (பெருமளவில்) போது ஏற்பட்டிருக்க வேண்டும்.

**கல்லாய்** (KALLAI - விரைவான)

இது பெரிய குரு. யோயாக்கிமின் காலத் தில் வாழ்ந்த சல்லாயின் குருகுலத் தலைவர் (நெக 12:20).

**கல்லால் எறிந்து கொல்லல்** (STONING)

விவிலியச் சட்டத்தின்படி பொய்க்கடவு ளரை வணங்குதல் (உப 19:2-7), சிசுக் கொலை அல்லது குழந்தைப்பலி (லேவி 20:2-5), புறக்கடவுளர் பெயரால் தீர்க்கதரிச னம் மொழிதல் (உப 13:1-5), ஆவிகளைக் கொண்டு குறிசொல்லுதல் (லேவி 20:27), இறைநிந்தனை (லேவி 24:15-16), ஓய்வு நாளை மீறுதல் (எண் 15:32-36), சோரம் போதல் (உப 22:22-23) போன்ற குற்றங்க ளுக்குக் கல்லால் எறியப்படுவது தண்டனை யாகக் கருதப்பட்டது. ஓர் ஆடவனோ, பெண்ணோ மாட்டினால் முட்டப்பட்டு இறக்க நேர்ந்தால் அந்தமாடு கல்லால் எறி யப்பட்டுக் (யாத் 21:28-32) கொலை செய்யப் பட்டது.

பாலஸ்தீனம் கற்களால் நிறைந்த ஒரு மலைப்பாங்கான நாடாக இருந்தமையால் கூட்டத்தின் வெறுப்பையோ, கோபத் தையோ வெளிக்காட்டும் ஒரு வெளி அடை யாளமாகக் கல்லெறியும் வழக்கம் இருந்தது. சிலவேளைகளில் கூட்டத்தினர் கல்லால் எறிந்து குற்றவாளியைக் கொன்றுவிடுவதும் வழக்கமாகவே இருந்தது (1 சாமு 30:6; 1 அர 12:18). புதிய ஏற்பாட்டிலும் இத்தகைய கல்லெறி நிகழ்வு முறைகள் பல காணலாம் (மத் 21:35; 23:37; யோவா 10:31; அ.ப. 14:5).

பிற்கால யூதச் சட்டத்தின்படி குற்றவாளி அவன் உடைகள் உரியப்பட்டு, பின்னர்ச் சாட்சிகளுள் ஒருவனால் மேல் சாரத்தி னின்று கீழே தள்ளப்படுவான். சாரத்தி னின்று விழுந்த பின்னும் உயிர் பிழைத்திருந் தால் மற்றொரு சாட்சியினால் பெரிய கல் ஒன்று குற்றவாளியின் நெஞ்சின் மீது உருட்டி விடப்படும். பின்னும் குற்றவாளி உயிருட னிருக்கக் கண்டால் கூடியிருப்போர் அனை வரும் கற்களால் எறிந்து கொன்று விடுவது வழக்கம். அ.ப. 7:57-58 குறிப்பிடும் ஸ்தே வானின் கொலை அங்கு நிகழ்ந்ததனைத்தும் குறிப்பிடாதது போல் உள்ளது அல்லது அன்றைய நிகழ்வுகளின் சுருக்கமான குறிப் பாக இருக்கலாம்.

**கல்லிகத்தேன்** (CALLISTHENES)

சீரியா நாட்டுத் தளபதியான நிக்கானோரு

டன் வந்து யூதர்களின் தலைவரான யூதா மக்கபேயுவிற்கு எதிராகப் போர் செய்த ஒரு சீரியன். நிக்கானோர் தோற்கடிக்கப்பட்ட பின்பு, யூதர்கள் இவனை நெருப்பில் சுட்டுக் கொன்றனர். ஏனெனில் கோவில் வாயிலுக் குத் தீ வைக்க இவன் உதவினான்.

**கல்லியோ (GALLIO)**

கொரிந்தைத் தலைநகரமாகக் கொண்ட அக்காயாவின் ஆளுநராக யுனியு கல்லியோ அன்னாயு அ.ப. 18:12-17-இல் குறிக்கப்படுகி றார். இவர் அன்னாயு செனேகக்ர என்பவ ரின் மகனும், தத்துவ ஞானி செனேகாவின் சகோதரனுமாவார். 'கிளாதியு 26-ஆவது தடவை பேரரசனான அறிக்கையிடப்பட்ட பின்பு கல்லியோ அக்காயாவின் ஆளுநராக இருந்தார் என்று தெல்பியில் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டு காட்டுகிறது. இந்த அறிக்கை கி.பி. 52-இல் நடந்தது. ஆகவே 51-52 அல்லது 52-53-இல் கல்லியோ அக்கா யாவில் ஆளுநராக இருந்திருக்கவேண்டும். இக்குறிப்பு பவுலின் பயணக்காலக் கணிப் புக்கு முக்கியமானதாகும்.

கல்லியோ ஆளுநராக இருந்தபொழுது பவுலின் மேல், யூதர்கள் 'மக்களை இவன் கெடுக்கப் பார்க்கிறான்' என்று குற்றம்சாட் டித் தீர்ப்புக்காக இழுத்து வந்தனர் (அ.ப. 18:13). ஆனால் பவுல் வாய் திறந்து பேசுவ தற்குமுன், கல்லியோ யூதர்களை நோக்கி 'அநீதியோ, அக்கிரமமோ இருந்திருக்கும் என்றால் நானே முறைப்படி விசாரித்திருப் பேன். நீங்கள் சொல்லுவதெல்லாம் வெறும் பூசல்தான்' என்று கூறி இதற்குத் தீர்ப்புச் சொல்ல நான் நடுவராக இருக்க விரும்ப வில்லை என்று அவர்களைத் துரத்திவிட் டான் (18:15-16).

அக்காயாவின் தட்பவெப்பநிலை, கல்லி யோவை நோயுற்றவராக ஆக்கியது. ஆகவே, அவர் உரோமைக்குத் திரும்புவதில் மகிழ்ச்சி கொண்டார். அங்கு ஓர் உயர் அதிகாரியாகத் திகழ்ந்தார். நீரோவின் ஆட் சிக்காலத்தில் ஒரு சதித் திட்டத்தில் ஈடுபட்ட தற்காகக் கல்லியோவின் குடும்பம் முழுவ தும் தற்கொலை செய்ய வேண்டியிருந்தது.

இவர் தனது அவையிலிருந்து யூதர்களை யெல்லாம் அகற்றினார். செபக்கூடத்தலை வர் சோசுதேன் அடிக்கப்பட அனுமதித்தார். இவையும், பவுல் குற்றம் சாட்டப்பட்ட போது நடந்துகொண்ட விதமும், வெறுக்கத் தக்க யூதர்கள்பால் உரோமையர் காட்டிய அகந்தைமிக்க மனப்பான்மைக்கு ஓர் எடுத் துக்காட்டாகும்.

**கல்லீம் (GALLIM - குவியல்கள்)**

1. எருசலேமை நோக்கி அசீரியப்படை முன்னேறிச் செல்லும் பாதையிலுள்ள பென் யாமினைச் சேர்ந்த ஓர் இடமாகக் கல்லீமை ஏசயா விவரிக்கிறார் (ஏச 10:3). ஆல்பிரைட் என்பவர், இப்பாதையின் விவரிப்பைத் திருத்தி அமைத்து இந்த இடத்தைச் சவுலின் கிபயாவுக்குப் பின்வைத்து, அனாத்தோத் துக்கு மேற்கே ஒரு கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து சாகுலை அடையாளம் காட்டுகி றார்.

2. இலாயிசின் மகன் பலித்தியின் சொந்த ஊர். சவுல் தனது மகள் மீக்களின் கணவன் தாவீதோடு பகைமை கொண்டபின், அவ ளைப் பலித்திக்கு மனைவியாகக் கொடுத் தார் (1 சாமு 25:44). ஒருவேளை 1-இல் குறிக்கப்படுபவரும் இவரும் ஒன்றே.

3. எழுபது நூல் வாசகத்தில் குறிக்கப்படும் யூதாவைச் சேர்ந்த மலைப்பகுதியிலுள்ள ஓர் ஊர். கரேமுக்கும் பெத்தேருக்கும் இடை யில் அமைந்திருந்தது (யோசு 15:59). பெத்தில கேமுக்கு மேற்கே வடமேற்கில் அடையா ளம் காட்டப்படும் இக்காலப் பெயித்யாலா வாக இருக்கலாம்.

**கல்லீரல் (LIVER)**

கல்லீரலைப் பற்றிய விவிலியக் குறிப்பு கள் மிகக் குறைவாகவே உள்ளன. அப்போ தும் உடல் அங்கத்தையே குறிக்கிறது. இதற் கான விவிலியச் சொல் 'கனமாக இருத்தல்' என்ற பொருளினைக் கொண்டதாகப் பயன் படுத்தப்படுகிறது. இதற்குக் கல்லீரலின்

அடர்த்தித் தன்மையே காரணம். உடலில் இந்த உறுப்பு மிகக் கனமானதாக உள்ள தெனக் கருதப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சமா தானப் பலியிலே இரண்டு சிறுநீரகங்களை யும், விலாப்புறத்திலிருக்கிற கொழுப்பை யும், சிறுநீரகங்கள், கல்லீரல் ஆகியவற்றின் சவ்வையும், ஆண்டவனுக்கு மிக்க நறுமண முள்ள காணிக்கையாகச் செலுத்துவதற்காக ஒதுக்கி வைத்தனர் (லேவி 3:4.10.15).

பண்டைய கிழக்கத்திய நாட்டில், புனிதத் தன்மையைக் கண்டுபிடிப்பதற்காகக் கல்லீர லின் அமைப்பு அடையாளங்களையும், செயல்வடிவினையும் கவனித்தனர். எபிரே யர்களிடம் இத்தகைய பழக்கம் இருந்ததற் கான எந்தவித நேரடிச் சான்றும் இல்லை. ஆனால் பாபிலோனிய மன்னன் ஒருவனின் நிகழ்ச்சியை உதாரணமாகக் கொடுத்துள்ளது பழைய ஏற்பாடு (எச 21:21). அசுத்த ஆவி களை விரட்டுவதற்காக, மீனின் கல்லீரல் பயன்படுத்தப்பட்டதாகத் தோபி நூலில் குறிப்பிட்டுள்ளது (தோபி 6:4-7; 8:2).

கல்லீரல், மனநிலை வாழ்வின் இருப்பிட மாகவும், குறிப்பாக உணர்ச்சிப் பண்புளைக் கொண்டதாகவும் கருதப்பட்டது. இதைப் பற்றிய சான்று, இன்றைய எபிரேய விவிலி யத்தில், ஒன்று மட்டுமே உள்ளது (புல 2:11). இன்று ''மகிமையைக்'' குறிப்பிடப் பயன்படுத்தப்படும் மற்றச் சில பகுதிகள் உண்மையிலே கல்லீரலைக் குறிப்பிடுபவை களாக இருக்கலாம். ஏனென்றால் எபிரேய மொழியில் 'மகிமை', 'கல்லீரல்' ஆகிய இரண்டிற்கும் ஒரே சொல்லே பயன்பட்டது (ஆதி 49:6). ஆதி 49:6; சங் 16:9; 57:8 போன்ற பகுதிகளில் கல்லீரலைக் குறிப்பிடக்கூடிய நிலையைச் சற்று மாற்றி 'ஆவி', 'ஆன்மா' என்ற பொருளில் பயன்படுத்தினர்.

**கல்வாரி** (CALVARY - மண்டை ஓடு)

கொல்கொத்த என்ற இடத்தின் பெயரின் இலத்தீன் மொழிபெயர்ப்பாகும் (லூக் 23: 33). காண் கொல்கொத்தா.

**கல்வி** (EDUCATION)

I. கடவுளின் திட்டம் கணிக்கப்பட்ட காலத்தில் நிறைவெய்துகிறது. கடவுள் தேர்ந்தெடுத்த இனம், படிப்படியாக வளர்ந்து அதன் உன்னத நிலையை அடைந் தது. இறைவனின் இம்மீட்பு வழியைத்தான் கடவுளின் கல்வித்திட்டம் எனக் குறிப்பிடுகி றார் புனித பவுல். குழந்தை, மனிதனாக வளர்ச்சிடைவதற்கு ஒப்பிடுகிறார். இறை வன் குறித்த காலம் வரும்வரை, ஆசிரிய னின் கண்காணிப்பில் வளரும் மாணவன் போலத் திருச்சட்டத்தின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தது இஸ்ராயேல் இனம். இறுதி நாளில் நம் அனைவருக்கும் இறைவனின் புதல்வர்களுக்கான உரிமைகளை வழங்கும் பொருட்டுத் தம் திருமகனையே இவ்வுல கிற்கு அனுப்பினார். பரிசுத்த ஆவியே இதற் குச் சான்று பகர்கின்றார் (கலா 4:1-7; 3:2 தொ). ஆயினும் இறைவனின் கல்வித்திட் டம் கிறிஸ்துவின் வருகையோடு முடிந்து விடவில்லை. ''நாம் கிறிஸ்துவின் முழுப் பருவத்தின் நிலையை அடைந்து, முழு மனி தர்களாக வேண்டும்'' (எபே 4:13). ஆதி முதல் அந்தம் வரை, இறைவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்குக் கல்வி புகட்டி வருகி றார். இக்கல்வித்திட்டத்தின் பாங்கை விசு வாசக் கண்கொண்டு காணும் எக்கிறிஸ்துவ னும், அதனின் பலநிலைகளையும், அவைக ளின் சீரிய பண்புகளையும் உணரமுடியும். கல்வி என்பது இருவரிடையே ஏற்படும் கருத்துப் பரிமாற்றமே ஆகும். கற்றுக்கொடுப் பவர், அறிவுபுகட்டுகிறார்; தெளிவுபடுத் துகிறார்; அறிவுரை கூறுகிறார்; வாக்களிக்கி றார்; தண்டிக்கிறார்; பரிசளிக்கிறார்; முன் மாதிரியாக விளங்குகிறார்; தான் வகுத்த திட் டத்தை நிறைவேற்றியபின், பலனை எதிர் நோக்கி, பொறுமையாகக் காத்திருக்கிறார். இறைவனின் கல்வித்திட்டத்தைக் குறிப்பி டும்போது ''மூசார்'' என்னும் சொல்லை உபயோகிக்கிறது வேதநூல். இச்சொல்லிற் குக் கற்பித்தல், தவற்றைத் திருத்துதல் போன்ற பல பொருட்கள் உண்டு. ஞானாக மத்தில் குடும்பக்கல்வி முறையைக் குறிக்க

வும், தீர்க்க தரிசனங்களில் பொதுவாக இறைவன் செயல்படும் முறையைக் குறிக்க வும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

வேதநூலின்படி இறைவன் மட்டுமே முதன்மையான ஆசிரியர். தமது சட்டதிட் டங்கள், சோதனைகள் ஆகியவைகளின் மூலம், தாம் தேர்ந்தெடுத்த மக்கள் மட்டு மன்று ஒவ்வொரு மனிதனும் தமக்குப் பணிந்து நடக்கவேண்டும் என விரும்புகிறார். குடும்பத்தில் உள்ள ஆசான்கள் அளிக்கும் கல்வி, இறைத்திட்டத்திற்கு மாறுபட்டதாக இருப்பினும், அவையும் இறைவனின் கல்வி முறையின் ஓர் அங்கமே என்று கூறுகி றது ஞானாகமம் (பழ 1:7). கடவுள் ஆசானுக் கெல்லாம் மேலான ஆசான். அவர் கல்வித் திட்டத்தை மூன்று நிலைகளில் நிறைவேற்று கிறார். ஆசிரியர் மாணவனின் வளர்ச்சியில் நேரடிப் பங்கு வகிக்கிறார் என்பதை உணர்த் தவே இந்நிலைகள்.

II. கடவுள் தம் மக்களுக்குக் கல்வி புகட்டு கிறார்:-

*1. தந்தை மகனுக்கு அறிவு புகட்டுகிறார்:-* கடவுள் தம் மக்களை அடிமைத்தனத்திலி ருந்து மீட்டு, தமக்குரிய மக்களாக மாற்றிய பெருஞ்செயலை விவரிக்கும்போது, ஒரு தந்தை தன் மகனுக்குக் கல்வி புகட்டும் விதத்திற்கு ஒப்பிடுகிறது உப ஆகமம். ''ஆத லால் ஒருவன் தன் மகனுக்குக் கற்பிப்பது போல், கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கற்பித்தாரென்று நீ உன் இதயத்தில் உணர்ந்து கொள்வாயாக'' (உப 8:5). இவ் வாசிரியர் தீர்க்க தரிசிகளின் வழியாகக் கல்வி புகட்டினார். ஓசேயா கூறுகிறார்: ''இஸ்ரா யேல் குழந்தையாய் இருந்தபோதே, நாம் அவன்மேல் அன்பு கூர்ந்தோம்...எப்பிராயி முக்கு நடை பயிற்றுவித்தவர் நாம்தான். அவர்களைக் கையிலேந்தி நாம் சீராட்டி னோம்...பரிவு என்னும் கயிற்றால் அவர்க ளைப் பிணைத்து, அன்புக் கயிற்றால் கட்டி நடத்தி வந்தோம். அவர்களை இளைப்பாரச் செய்து உணவளித்தோம்'' (ஓசே 11:1-4). எசக்கியேல் கூறும் சாலையோரத்தில் கன் டெடுக்கப்பட்ட குழந்தை உருவகமும் இவ் வன்பையே வெளிப்படுத்துகிறது (எச 16). ''இஸ்ராயேல் என் தலைமகன்'' என மொழி கிறார் இறைவன்.

இவ்வாக்கின் முழுப்பொருளையும் உணர வேண்டுமாயின், இஸ்ராயேல் மக்களின் கலாச்சாரத்தையும், குழந்தைகளுக்கு வழங் கப்பட்ட கல்வி முறையையும் பற்றி அறி வது அவசியம். இஸ்ராயேலின் கல்வித்திட் டத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்க ளைக் காணலாம். கல்வியின் குறிக்கோள் மெய்ஞ்ஞானம், அந்த ஞானத்தைப் புகட் டும் முக்கிய வழி தவற்றைத் திருத்திக் கண்டித்தல். ஆசிரியர் ஞானத்தையும், அறி வையும், ஒழுக்கத்தையும் மாணவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் (பழ 23:23). நல்லொழுக்கமே நல்ல கல்வியின் உன்னத விளைவு; ஒருவன் தன்னையே வாழ்வில் நடத்திச் செல்லும் நுண்திறத்தைக் கற்றுக் கொள்வதும், அதனைப் பயன்படுத்தி வாழ் வதும் அவசியம் (பழ 4:13; 5:23; 10:17). வாழ்வில் வெற்றிபெற வேண்டுமாயின் கட் டுப்பாட்டை முழுமனதோடு கடைப்பிடிக்க வேண்டும் (பழ 23:12 தொ; சீரா 21:21). பெற்றோரும், ஆசிரியர்களும் சட்டத்தால் குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட மேலா ளர்கள் ஆவார் (யாத் 20:12). தன் தாய் தந்தைக்குச் செவி கொடுக்க ஒவ்வொருவ னுக்கும் கடமையுண்டு (பழ 23:22). அதை மீறுபவன் தண்டனைக்குள்ளாவான் (பழ 30:17; உப 21:18-21). கற்பது ஒரு கடினமான கலை; ஏனெனில் ''சிறுவனின் இதயத்தில் மடமை கட்டப்பட்டிருக்கிறது (பழ 22:15). சீர்கெட்ட சமுதாயம் கேட்டின் வழியில் மயக்கிச் சிக்க வைக்கிறது'' (பழ 1:10; 5:7-14; 6:23-25). இதைக் கண்டு பெற்றோர்கள் கவ லையுறுகிறார்கள் (சீரா 22:3-6; 42:9 தொ). அப்பொழுது தடுப்புரைகளும், அது வெற்றி பெறாவிட்டால் கசையும், தேவைப்படுகி றது. ஞானம், என்றும் போதனையையும், தண்டனையையும் கையாளுகின்றது (சீரா 22:6; 30:1-13; பழ 23:13).

2. இறைவன் இஸ்ராயேலுக்குக் கற்பிக் கும் முறையிலும், அறிவுபுகட்டுதல், குறைக

ளைத்'திருத்திக் கண்டித்தல் ஆகிய குடும்பக் கல்வி முறையின் இரண்டு அம்சங்களையும் காணலாம். மக்களின் பாவ வாழ்க்கையின் காரணமாகத் தீய வழியிலிருந்து முதலில் மக்களைத் திருத்துவது அவசியமாயிற்று.

2. அ) இறைவனின் படிப்பினைகள்:-

கடவுள் எகிப்தில் ஆற்றிய அருஞ்செயல் கள், பலைவனத்தில் விளைவித்த புதுமை கள், இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்தி னின்று மீட்ட முறை, ஆகிய இவையனைத் தும் அவரின் கல்வித் திட்டத்தில் அளிக்கப் பட்ட பாடங்கள் (உப 11:2-7). இஸ்ராயேல் தான் பாலைவனத்தில் அனுபவித்த பாடங் கள், துயரத்தை என்றும் மறவாதிருக்க வேண்டும். மனிதன் அப்பத்தினால் மட்டு மின்றி இறைவனின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கி றான் என்பதை உணரப் பசியால் வாடினர். ஒவ்வொருநாளும் இறைவனின் கரு ணையை மட்டுமே நம்பி வாழ்வதன் மூலம் தந்தையாகிய கடவுள் இஸ்ராயேல்மேல் கொண்டுள்ள அக்கறையை உணரவேண் டும். அவர்கள் பாலைவனத்தைக் கடந்து சென்ற நாற்பது ஆண்டுகளிலும், அவர்களின் உடைகள் கிழியவோ அவர்களின் கால்கள் காயமுறவோ கடவுள் விடவில்லை (உப 8:2-6). இறைவன், இஸ்ராயேல் தம்மேல் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அறியவும், தம்மோடு உறவுகொள்ள அழைக்கவும் எண்ணி இச்சோதனைகளை அவர்களுக்கு அனுப்பினார். கடவுளின் திருச்சட்டம் அவ ரின் கல்வித் திட்டத்தை நிறைவேற்றும் வழி முறையாக ''உனக்குக் கற்பிக்கக் கருதி, அவர் வானத்தினின்று தனது குரலொலியை உனக்குக் கேட்கச் செய்து'' (உப 4:36), தம் சித்தத்தைக் கட்டளைகள் மூலம் தெரிவித் தது மட்டுமின்றித் தாம் மக்கள்மேல் கொண் டுள்ள அளவற்ற அன்பையும் வெளிப்படுத் தினார் (உப 4:37). உனக்கு நல்வாழ்வையும், உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ நெடுங்காலம் வாழும்பொருட்டும் இதைச் செய்தார். அவரின் கட்டளைகளைக் கடைப் பிடிப்போருக்கு வாக்குத் தவறா ஆசிரியரா கிய இறைவன் வெகுமதியளிக்கிறார். அவ ரின் திருச்சட்டம் ஆசானின் வாக்கு என்றும் நம்முன் நிலைத்திருப்பதைக் குறிக்கிறது. அவ்வாக்கு உயரே ஆகாயத்திலோ, கடல் கடந்து தூரத்திலோ இல்லை அக்கட்டளை ''உனக்கு அண்மையிலேயே இருக்கிறது'' (உப 30:14-14).

2. ஆ) கண்டிப்புகள்:- கடவுளின் கட்ட ளைகளை மக்கள் சரிவர அனுசரிக்கவேண்டு மாயின், கண்டிப்பு அவசியம் தேவை. சில நேரங்களில் இக்கண்டிப்பு குற்றங்களை எடுத்தியம்பிக் குறைகூறுவதோடு நின்று விடும். சில நேரங்களில் தண்டனை கொடுக் கும் நிலையும் வரலாம். இஸ்ராயேல், பாவ நாட்டத்தால், மடமை கொண்ட குழந்தை போல் இதயத்தைக் கடுமைப்படுத்திக் கொண்டனர். ஆகவே கடவுள் தம் தீர்க்கதரி சியை வலிமைக்கரங்களால் பற்றி மக்கள் செல்லும் தீய வழியினின்று விலகிப் போகச் செய்தார் (ஏச 8:11). இத்தீர்க்கதரிசி, அள வற்ற நிலையான பொறுமையோடு, காலை யும், மாலையும், கடவுளின் அன்பையும், திருச்சித்தத்தையும் அறிக்கையிடுவார். இறைவனின் தண்டனையால் மனிதன் கற் றுக்கொள்வது அதிகம் (ஓசே 7:12; 10:10). இறைவன் தம் மக்களைக் கண்டிப்பதைத் தன் பிரமாணிக்கமற்ற மனைவியைத் தன் பால் இழுக்க ஒரு கணவன் மேற்கொள்ளும் வீண் முயற்சிகளுக்கு ஒப்பிடுகிறார் ஒசேயா (2:4-5; ஆமோ 4:6-11). எரேமியா மீண்டும், மீண்டும் ''எருசலேமே, எச்சரிக்கையாய் நடந்து கொள்'' என்று எச்சரிக்கிறார் (எரே 6:8). ஆனால் இவையனைத்தும் பயனற்றுப் போயின. அடங்காக் குழந்தைகள் இப்போத னைக்குச் செவிமடுப்பதில்லை. கற்றுக் கொள்ள மறுக்கின்றனர் (எரே 2:10; 7:28; செப் 3:2.7). ''அவர்கள் தங்கள் முகத்தைக் கல்லினும் கடியதாக்கிக் கொண்டனர்'' (எரே 5:3). அப்பொழுது கண்டிப்பு கடும் தண்டனையாக மாறி, கடுமையாகவும், ஆனால் காரணத்தோடும் வந்தடையும் (லேவி 26:18.23 தொ.28). இறைவனின் கோபம் எதையும் அழிக்காது (எரே 10:24; 30:11; 46:28; சங் 6:2; 38:2). மனமாற்றத்தைத் தூண்டுகிறது. ''நீர் என்னைத் திருத்தினீர்,

அடங்காத காளைபோல் இருந்த நான் உமக்கு அடிப்ணிந்தேன்'' என இஸ்ராயேல் பறைசாற்றி, அதன் துயரத்தில் ''நீர் என்னைத் திரும்ப அழைத்துச் செல்லும்; நானும் திரும்பி வருவேன்; ஏனெனில் என் கடவுளாகிய ஆண்டவர் நீரே'' என்று மன்றாட வேண்டும் (எரே 31:8). இறைவனின் நல்வழி காட்டும் முக்கியத்துவத்தை உணர்ந்த சங்கீத ஆசிரியர், ''இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது'' (சங் 6:7) என்கிறார். மேலும், ''கடவுளால் திருத்தப்படுகிறவன் உண்மையில் பேறுபெற்றவன். ஆதலால் எல்லாம் வல்லவரின் திருத்தத்தைப் புறக்கணிக்காதீர்'' (யோபு 5:17). ஏனெனில் இறைவன் மக்களை ஆளும் முறை அது (சங் 94:10; ஏச 28:23-26).

2. இ) தம் மக்களின் இதயத்தில் தம் திருச்சட்டம் அழியாது நிலைக்கும்வரை, கடவுளின் கல்விப் பயிற்சி தொடரும். அந்நேரத்தில் ஒருவன் மற்றவனுக்குக் கற்றுக் கொடுக்கமாட்டான். ''அவர்களில் சிறுவர் முதல், முதியவர் வரை அனைவரும் என்னை அறிந்து கொள்வார்கள்'' (எரே 31:33). இந்நிலையை அடைவதற்கு, ஊழியன் திருத்தப்படவேண்டும். ''நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது, அவருடைய காயங்களால் குணமடைந்தோம்'' (ஏச 53:5). அப்பொழுதுதான், தன் அருமை மகனைத் தண்டிக்க மிரட்டும்போது எவ்வளவு தூரம் யாவேயின் உள்ளம் உருகுகின்றது என உணர இயலும் (எரே 31:20; ஓசே 11:8 தொ).

III. இயேசு கிறிஸ்து - இஸ்ராயேலின் ஆசிரியர்:-

கடவுளின் ஊழியனாகிய இயேசு கிறிஸ்து, மக்கள்முன், தம் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டும் யூத ஆசிரியர்போல் தோன்றுகிறார். அவர் வழியாக இறைவனே தம் சித்தத்தை நிறைவேற்றும் விதத்தை வெளிப்படுத்துகிறார். இறை ஊழியன், நம் அனைவரையும் தீய நெறியிலிருந்து திருத்தும் அலுவலையும் மேற்கொண்டுள்ளார். அவரே இஸ்ராயேலின் மீட்பர். இவ்விரண்டு அலுவல்களைச் சிவர உணர்த்தக் கூடச் சொல்லைக் காண்பது அரிது. ஆயினும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் உருவகங்களிலிருந்து இவற்றை உணரலாம்.

1. வெளிப்படுத்துபவர்:- கிறிஸ்துவின் போதனா முறையை விவரிப்பதற்குப் பொதுவாக நற்செய்தியாளர்கள், முக்கியமாகப் புனித மத்தேயு, எழுதியுள்ள பின்னோக்கிய குறிப்புக்களை நன்கு கவனிப்பது அவசியம். தமது சீடர்களுக்கு விசுவாசத்தைக் கற்பித்த இயேசு படிப்படியாகத் தாம்தான் வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பதை வெளிப்படுத்துகிறார். மத்தேயு இயேசுவின் படிப்பினையை இரண்டு அங்கங்களாகப் பிரிக்கிறார். பேதுரு இயேசு மெசியா, உயிருள்ள கடவுளின் மகன் என்று விசுவாச அறிக்கையிட்ட நாள்முதல், அவர் தம் செயல்முறையை மாற்றியமைத்தார் (மத் 16: 21). முதலில் அவரோடு வாழ்பவர்கள் இறைவனால் வாக்களிக்கப்பட்ட அரசு அவரில் வந்தடைந்திருக்கிறது என்பதை உணர வேண்டும் (4:17). அவர்தம் அதிகாரபூர்வமான போதனையாலும் (மத் 7:28 தொ; மாற் 1:27), அவருடைய புதுமைகளாலும் (மத் 8:27; லூக் 4:36), மக்களின் மனதில், ஏன் திருமுழுக்கு யோவானின் மனதிலும் சங்கேதக் குறிகளை எழுப்பினார் (மத் 11:3). தமக்குச் செவிமடுப்போரின் மனநிலைக்கேற்ப அவர் போதித்தார். அவர் கையாண்ட உவமைகளே இதற்குச் சான்று. இவ்வுவமைகள் மூலம் மக்களுக்கு அறிவு புகட்டுவது மட்டுமின்றி, அவற்றின் முழுப்பொருளையும் உணர்ந்துகொள்ள ஓர் ஆர்வத்தையும் செவிமடுப்போரின் உள்ளத்தில் ஏற்படுத்த விரும்புகிறார் (மத் 13:10-13.36). மக்கள் எல்லாக் கருத்துக்களையும் நன்கு புரிந்து கொள்ளும்வரை கற்பிக்கிறார் (13:51). தம் சீடர்கள் தங்களின் இயலாமையையும், வெறுமையையும் அதே நேரத்தில் பாலைவனத்தில் மக்களுக்கு உணவளிக்க அவருக்குள்ள வல்லமையையும் உணரச் செய்கிறார் (14:15-21). அப்பத்திலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதை அவர்களுக்கு உணர்த்துகிறார் (16:8-12). அவர்களுக்குத்

தேவையான போதனைகளையும், படிப்பினைகளையும் அளித்தபின் (10:5-16) தம் பணியில் அவர்களின் பங்கை நிறைவேற்ற அனுப்புகிறார் (மாற் 6:30; லூக் 10:11). அவரை மீட்பர் என்று ஏற்றுக் கொண்ட பிறகு, அவர்களுக்குக் கசப்பான பரமரகசியமான சிலுவை மரணத்தைப்பற்றி அறிவிக்கிறார். அதன் பிறகு அவரது போதனைகள் மிகவும் கண்டிப்பானதாக மாறுகின்றன. அவரைக் கண்டிக்கத் துணிந்த பேதுருவைத் திருத்துகிறார் (மத் 16:22 தொ). தம் சீடர்களின் விசுவாசமின்மையை எண்ணி வருந்துகிறார் (17:17). ஆயினும் அவர்கள் பேய்களை விரட்ட இயலாததற்குக் காரணங்களையும் எடுத்தியம்புகிறார் (17:19 தொ). அச்சிறிய குழுவில் ஏற்படும் பொறாமை மனப்பான்மையைக் கொண்டு அவர்களுக்கோர் பாடம் புகட்டுகின்றார் (20:24-28). அவரின் ஒரே குறிக்கோள், தமது படிப்பினைகள் என்றென்றும் அவர்களது உள்ளத்தில் பதிய வேண்டும் என்பதே என்பது அவர் கையாண்ட வழிமுறைகளிலிருந்து தெளிவாகிறது. அவர் மும்முறை பேதுருவிடம் 'நீ என்னை நேசிக்கிறாயா?' என்று கேட்டதன் மூலம் தம்மை மறுதலித்தலால் அவர் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் துயரத்தை நீக்க விளைகிறார் (யோவா 21:15 தொ).

2. மீட்பர்:- உண்மையான போதகராகிய இயேசு, தாம் போதிப்பதோடு நின்றுவிடாமல் அதன்படி எல்லோருக்கும் முன்மாதிரிகையாக வாழ்ந்து காட்டினார். ஏழ்மை வாழ்வின் எடுத்துக்காட்டு அவர். ஏனெனில் அவருக்குத் தலைசாய்க்க இடமில்லை (மத் 8:20). தொண்டுபுரிவதில் பிரமாணிக்கத்தின் முன்னோடி அவர். அதனால்தான் யூதத் தலைவர்களுக்கு எதிராகப் பேசினார், காரியங்களைச் செய்தார், வியாபாரம் செய்வோரைக் கோவிலிலிருந்து விரட்டியடித்தார். கடவுளின் சேவையில் அவர் காட்டிய அளவற்ற ஆர்வம்தான் அவரை மரணத்துக்குள்ளாக்கியது (யோவா 2:17). சகோதர அன்பின் எடுத்துக்காட்டு அவர். ஆண்டவரும் போதகருமான அவர் தமது சீடர்களின் பாதங்களைக் கழுவினார் (13:14 தொ).

தாம் கற்பிப்போருக்கு முன் மாதிரிகையாக இருப்பது மட்டுமின்றி, அவர்களோடு ஒன்றித்து விடுகின்றார். அவர்கள்மேல் கடின, பளுவாக விழுந்துள்ள தண்டனையைத் தம்மேல் ஏற்றுக்கொள்கிறார் (ஏச 53:5). அவர்களின் பிணிகளை ஏற்றுக் கொண்டார் (மத் 8:17). உலகின் பாவத்தைப் போக்கினார் அவர் (யோவா 1:29). இவ்விதமாக மனிதனின் வலிமையற்ற நிலையை அவர் உணர விரும்பினார். பாவம் தவிர, மற்றெல்லாவற்றிலும், சோதனை, துன்பங்களுக்கு உட்பட்டவரானார் (எபி 4:15). "அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். அவ்விதம் நிறைவுள்ளவரானார்" (எபி 5:8). கல்வாரிப்பலி மூலம் இஸ்ராயேலுக்குக் கல்வி புகட்டுவதை முடிவுக்குக் கொணர்ந்தார். மனிதருக்குமுன் அவர் தோற்றுவிட்டதாகக் காணப்பட்டார். ஆனால் தமக்கு நேரப்போவதை முன்கூட்டியே தெளிவாக அறிவுறுத்தியிருந்தார் (யோவா 16:1-4). ஆயினும் தம் முயற்சியாலேயே சீடர்களுக்கு எல்லாவற்றையும் புரியவைக்க இயலவில்லை (16:12). ஆகவே இவ்வுலகைவிட்டுச் சென்று தூய ஆவியை அனுப்புவது தேவையாயிற்று (17:7).

IV. மாணவனும், ஆசிரியனுமாகிய திருச்சபை.

1. அறிவுபுகட்டும் ஆவி:- இறைவனால் அனுப்பப்பட்ட ஆவியானவர்தான் இறைக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றி வைக்கிறார். சட்டம் இனி நமக்கு ஆசிரியனாக இருக்க இயலாது (கலா 3:19; 4:2). நம் உள்ளத்தில் உறைந்து, நம்மை அப்பா, தந்தையே என அழைக்கவைக்கும் ஆவியானவர் மட்டுமே நம் ஆசிரியர் (4:6). இனிமேல் நாம் ஊழியர்கள் அல்லர், ஆனால் நண்பர்கள், குமாரர்கள் (யோவா 15:15). ஆவியானவர் விசுவசிப்போர் மனத்தில் இறை இயேசுவின் போதனைகளை நினைவூட்டுவதன் மூலமும் (14:26; 16:13), இவ்வுலகின் தாக்கு

தலிலிருந்து அப்போதனைகளைக் காப்பதன் மூலமும், இந்த அலுவலை நிறைவேற்று கின்றார் (16:8-11). அப்போது தந்தையின் அழைப்புக்கு எல்லோரும் செவிசாய்க்கின்ற னர் (6:45). அபிடேகத்தின் விளைவாக ஏற்படு கிறது இது (1 யோவா 20:20.27). ஏனெனில் நம் கண்ணுக்கெட்டாத, உள்ளத்தே உறை யும் இறைவன் மட்டுமே தலைசிறந்த ஆசிரி யன்.

2. போதனையும், திருத்துதலும்:- பழைய ஏற்பாட்டில் காணப்படுவதுபோல், கல்விப் பயிற்சி பயன்பெற வேண்டுமாயின், கண் டிப்பும், திருத்துதலும் அப்பயிற்சியின் முக் கிய அம்சமாக இருக்க வேண்டும். புனித பவுல் கூறுவதுபோல் ''கடவுள் உங்களைத் தம் மக்கள் என நடத்துகிறார். தகப்பன் கண்டித்துத் திருத்தாத மகன் உண்டோ? நீங்கள் அவ்வாறு திருத்தப்படாவிடின் உண் மையான பிள்ளைகளல்லர், வேசிப்பிள்ளை களே'' (எபி 12:7). நாம் ஆர்வம் குன்றி இருக்கும்போது கண்டிப்பும், தண்டனையும் நம்மை வந்தடையும் (திருவெளி 3:19). நம்மை அழிப்பதற்கன்று, ஆனால் அழிவிலி ருந்து காத்து, சொற்பத் துன்பத்திற்குப்பின், மகிழவைக்கும் இறைத்தீர்ப்புக்கள் இவை கள் (2 கொரி 6:9). கண்டிப்பு கல்வி புகட்டுவ தற்கு மட்டுமின்றித் தவறான வழியினின்று திருத்தவும் உதவுகிறது (1 கொரி 10:11; தீத் 2:12;2 திமோ 3:16). புனித பவுல் தன் கடிதங்களில் தன் முன்மாதிரிகையைப் பின் பற்றுமாறு அறிவுறுத்துகிறார் (1 தெச 1:16; 2 தெச 3:7; 1 கொரி 4:16; 11:1). இறுதியாக ஒவ்வொரு விசுவாசியும், இயேசுவின் கட்ட ளைக்கிணங்கத் தம் சகோதரனைத் திருத்தி நல்வழி நடத்தக் கடமைப்பட்டுள்ளான் (மத் 18:15; 1 தெச 5:14; 2 தெச 3:15; கலா 3:16; 2 திமோ 2:21). பவுல் இக்கடமையை நிறை வேற்றப் பிரம்பெடுக்கக்கூடத் தயங்க வில்லை (1 கொரி 4:4-11). குற்றம் புரிந்தோ ரின் மனம் புண்படச் செய்வதற்குக்கூட அவர் தயங்கவில்லை (2 கொரி 7:8-11). அவர் அயராது நம் மக்களுக்குப் போதிக்கி றார்; எச்சரிக்கிறார் (1 கொரி 4:14; அ.ப. 20:31). தங்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் பெற்றோர்கள் உன்னதமான ஒரே ஆசானாகிய கடவுளின் பிரதிநிதிகளா கவே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் குழந்தைகளுக்குச் சினமூட்டாமல், இறை வனே செய்வது போல் கற்பிக்கவும், கண்டிக் கவும், கடமைப்பட்டிருக்கிறார்கள் (எபே 6:4).



## கல்வெட்டுவோர் (STONE CUTTERS)

சாலமோன் அரசன் கோவில் கட்டுவதற் கெனக் கல்வெட்டுபவர்கள் எண்பதாயிரம் பேரை மலையில் வைத்திருந்தார் என்று 1 அர 5:15 தொ கூறுகிறது. புதைபொருள் ஆராய்ச்சியில் கல்வெட்டும் பாணியும் வெட்டுவோரின் முத்திரைகளும் காலத்தைக் கணிக்கப் பெரிதும் உதவுகின்றன.

## கவண்; கல்லெறி கருவி (SLING)

சிறு கற்களையும், களிமண் கட்டிகளை யும் சுழற்றி எதிரிகளின்மேல் எறிந்து அவர்க ளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த மிகப் பழமை வாய்ந்த ஒரு கருவி. இரு தோல்வார்கள் கற்களை வைத்துச் சுழற்ற வசதியான சிறிது அகலமான தோல் பட்டை நடுவில் இணைக்கப்பட்ட இக் கருவி பாலஸ்தீனத்தில் ஆட்டிடையர்களினா லும் (1 சாமு 17:40) படைவீரர்களினாலும் பயன்படுத்தப்பட்டது (2 அர 3:25; 2 நாள் 26:14).

தாவீது கோலியாத்தைக் கொன்று பெலிஸ்தியரின்மேல் வெற்றி கொண்டது இக்கல்லெறி கருவியைக் கொண்டுதான் (1 சாமு 25:29; 17:40). கவண் எறிபவர்கள் துல்லியமாகக் குறியைத் தாக்கக்கூடும். கிப யாவில் வாழ்ந்த பென்யாமினியர் ''தலை முடி இழையளவும்'' குறிதவறாது இடக்கை யால் கவண் எறிவர் (நீதி 20:16; 1 நாள் 12:2).

## கவலை, கலக்கம் (ANXIETY)

கவலை பலதரப்பட்டது. அக்கறையிலி ருந்து அச்சம் மற்று கிலிவரை செல்லக் கூடியது. இதுபற்றிய விவரிப்புகள் இரு ஏற்பாடுகளிலும் காணப்படுகிறது. பெற் றோர் தங்கள் பிள்ளைகள் மேல் காட்டும்

கவலை (1 சாமு 9:5) அல்லது சகோதரர்கள் மேல் காட்டும் அக்கறை (பிலி 2:20) இயற்கையானதாகும். கவலை, அன்னா தன் மலட்டுத் தன்மை பற்றியும் (1 சாமு 1:16) தானியேல் தான் கண்ட கனவு பற்றியும் (1 தானி 7:15) கொண்ட கலக்கத்தையும் உள்ளடக்கும்; போரினாலும் (1 நாள் 17:9) இயற்கைப் பேரழிவுகளாலும் (எரே 17:8) வரும் அச்சத்தையும் நடுக்கத்தையும் உள்ளடக்கும். இத்தகைய உணர்வுகளைச் சங்கீதங்கள் எடுத்துக் கூறுகின்றன (சங் 127:2; 102:7; பழ 12:25).

அன்புடைய அக்கறை ஆக்கபூர்வமானதாக இருக்கலாம் (2 கொரி 11:28). ஆனால் விசுவாச வாழ்வையும் இறையரசில் கிறிஸ்தவன் பங்கெடுப்பதையும் தடை செய்யக் கூடிய உடல் சார்ந்த தேவைகளைப்பற்றிய அக்கறை, மற்றும் ''இவ்வுலகக் கவலைகளையும்'' பற்றி இயேசு எச்சரிக்கிறார் (மத் 6:25-34; லூக் 12:22-31; மத் 13:22; மாற் 4:19; லூக் 8:14). கிறிஸ்தவன் கடவுள்மேல் தன்கவலைகள் அனைத்தையும் சுமத்திவிடவேண்டும். அவர் தமது மக்கள்பால் அக்கறை கொண்டுள்ளார்; அவர்களைப் பாதுகாக்கிறார் (பிலி 4:6; 1 பேதுரு 5:7).

கவலை பற்றிய இயேசுவின் போதனை புதிய, மற்றும் அடிப்படை மாற்றுக் கோணத்தையுடையது. அவர் எல்லாக் கவலையையும் புறம்பாக்குகிறார். அது புறமதத்தினருடையதும் உலகம் சார்ந்ததும் ஆகும். ஆனால் ''அவர் மக்கள் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஆயனில்லா ஆடுகள்போல் தவித்துக் கொண்டிருந்தமையால், அவர்கள்மேல் மனமிரங்கினார்'' (மத் 9:36). அவருடைய சீடர்கள் ''ஓநாய்களிடையே ஆடுகளைப் போல்'' உள்ளனர் (10:16). எருசலேமின் வருங்காலம் அவரைக் கண்ணீர் விட்டுப் புலம்பச் செய்தது (லூக் 19:41-44). ஆனால் தம்மையும் தம் வருங்காலத்தையும் பொருத்தமட்டும், மனிதரால் பாதிக்கப்படாத உள்ளார்ந்த வலிமையும் அமைதியும் உள்ளவராகவுள்ளார். ஏரோதின் அச்சுறுத்தலைக் கேட்டு, அங்கிருந்து ஓடிப்போய்விட மறுத்துவிடுகிறார் (13:31-33). அவரைக் குறை கூறியவர்கள் கூட அவரது இந்த மன அமைதி குலையாத தன்மையைக் கண்டுணர்கின்றனர்: ''போதகரே, நீர் உண்மையுள்ளவர், எவர் தயவும் உமக்கு வேண்டியதில்லை''.

கவலை பற்றிய இயேசுவின் தெளிவான போதனை மலைப்பொழிவில் கொடுக்கப்படுகிறது (மத் 6:15-34; லூக் 12:22-31). சாதாரணத் தேவைகள் பற்றியும், அவற்றிற்கு அதிகமானவைகளைப் பற்றியும் கவலைப்படுவதை இயேசு தடை செய்கிறார். ''உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்று கவலைப்படவேண்டாம்''. ஏனெனில் முதலில் இவற்றைவிட வாழ்வு மேலானது. வாழ்வின் உண்மையான நோக்கம் பற்றியே மனிதன் கவலைப்படவேண்டும். இரண்டாவது உணவு மற்றும் உடை பற்றிய கவலைகள், உலகில் இறைவன் கொண்டுள்ள பராமரிப்பை மறுத்துக் காட்டுகின்றன. பறவைகளுக்குக்கூட, உணவளிக்கும் இறைவன், அவரது சாயலில் படைக்கப்பட்ட மனிதனுக்குத் தேவையானதெல்லாம் கொடுப்பார் என்று மனிதன் நம்பலாம். மூன்றாவது மனிதனது கவலைக்குத் தடையாயிருக்கும் விதத்தில் இறைவன் பராமரிப்பு செயல்படுகிறது. ''கவலைப்படுவதால் எவனும் தன் வளர்த்தியில் ஒரு முழம் கூட்டமுடியுமா?'' நான்காவது இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் போடப்படும் மலர்களையும் இறைவன் அழகு செய்கிறார் என்றால் மனிதன் அவரிடமிருந்து தனக்கு வேண்டிய குறைந்த அளவு ஆடையாவது எதிர்பார்க்கலாம். ஐந்தாவது இத்தகைய கவலை புறவினத்தாருக்குடையதாகும். இது இறைவனுடைய முன்னறிவு மற்றும் அக்கறைக்கு நேர்மாறானதாகும். ஆறாவது மனிதன் முதலில் இறைஅரசையும் அவருக்கு ஏற்புடைமையையும், விண்ணுலகின் செல்வத்தையும் (மத் 6:19) இறைவனான ஒரே தலைவருக்குப் பணி செய்வதையும் (6:24) தேடவேண்டும். இந்தக் கவலை மற்றக் கவலையெல்லாம் அகற்றிவிடும்.

வேறொரு இடத்தில் ''உலகக் கவலையும், செல்வமாயையும் மற்ற இச்சைகளும்

நுழைந்து வார்த்தையை நெரித்து'' விடுவதாக இயேசு கூறுகிறார் (மற் 4:19). லூக் 21:34-இல் ''களியாட்டத்தாலும், குடிவெறியாலும், உலகக் கவலையாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடி'' எச்சரிக்கையாக இருக்கும்படிக் கூறுகிறார். இறையரசின் வாழ்வுக்கு இவையெல்லாம் தகுதியற்றவையாகும்.

இப்போதகத்தை அப்படியே சொற்பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என இயேசு கருதினாரா? அல்லது ஓர் இடைக்கால ஒழுக்கமுறையாகவோ இறுதிக்காலப் பொருளிலோ கூறினாரா? இயேசுவைப் பொருத்தமட்டும் இறையரக ஏற்கெனவே உலகிற்குள் வந்துவிட்டது. தன் நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அரசை ஏற்றுக் கொள்ளும் சீடர்கள் வாழ்விற்குப் புதிய ஒழுங்கு அமைவைக் கண்டுபிடித்து விட்டனர். அதிலே இறைவனது சித்தம் எல்லா நோக்கங்களையும் குறிக்கோளையும் கட்டுப்படுத்துகிறது. மனிதன் இப்போது கவலை நிறைந்த சுயநலத்தில் வாழாமல், இறையரசாகிய இறைவனுடைய பெரிய கொடைக்கு நன்றியறிதலில் வாழவேண்டும். இறையரசில் மனிதனின் எல்லாஅக்கறையும் ஆசைகளும் தங்களுக்குரிய உண்மையான இடத்தையும் தரத்தையும் பெறுகின்றன. ஏனெனில் இறைவனின் சித்தமும் பராமரிப்பும் சிறிய தேவையிலிருந்து மிக உயர்ந்த குறிக்கோள்வரை யாவற்றையும் உள்ளடக்குகிறது.

**கவுதா** (CAUDA)

இரேத்தா தீவின் தெற்கே 37 கி.மீ. தொலைவில் அமைந்த ஒரு சிறு தீவு. தற்காலத்தில் கவுதோஸ் அல்லது கோஸோ என்றழைக்கப்படுகிறது. புனித பவுல் தன் இறுதிப்பயணத்தில் உரோமைக்குச் சென்றபோது அவருடைய கப்பல் இத்தீவின் ஒதுக்கிலே சென்றது (அ.ப. 27:16). மாரிக்காலத்தில் தங்குவதற்கென ஒரு துறைமுகத்தை நாடிக் கிரேத்தா தீவின் தெற்குக் கரையோரமாய்ப் பயணம் செய்தனர். அப்போது தெற்கிலிருந்து வாடைக் கொண்டல் வீசவே கப்பல் காற்றை எதிர்த்துச் செல்ல முடியாமல் போனது. காற்றடித்த திசையிலேயே கப்பல் சென்றது. இறுதியில் கவுதா தீவின் கரையில் கப்பலின் படகைத் தூக்கிக் கட்டினர். புயலினின்று தப்பிக்க இத்தீவில் ஒதுங்கித் தங்கள் சரக்குகளையும், கப்பல் தளவாடங்களையும் கடலில் எறிந்தனர் (27:17-19).

**கவுதாரி** (PARTRIDGE)

பாலஸ்தீனத்தில் பொதுவாகக் காணப்படும் கவுதாரி, சகோரப்பறவை வகையைச் சேர்ந்தது. ஆனால், மற்ற வகைகளும் காணப்படுகின்றன. இந்திய கருப்புக் கவுதாரி இனத்தைச் சேர்ந்த, வான் கோழி போன்ற பறவையினைத் தாழ்ந்த சமவெளிகளில் காணலாம்.

பறவையைத் தொடர்ந்து துரத்திச் சென்று வேட்டையாடுவதை 1 சாமு 26:20 குறிக்கிறது. பாலஸ்தீனத்தில் பெரும்பாலான கவுதாரிகள் இவ்வாறே பிடிக்கப்பட்டன.

கவுதாரி தான் இடாத முட்டைகளை அடைகாக்கும் எனும் பொதுவான, ஆனால் தவறான, கருத்தை எரே 17:11 கூறுகின்றது. சகோரப்பறவை தனக்காகவும், சேவலுக்காகவும் இருபிரிவுகளாக முட்டையிடுவதால், இத்தகைய தவறான நம்பிக்கை ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

**கவுரான்** (HAURAN - குகை)

கலிலேயாக் கடலுக்குக் கிழக்கில் யார்முக்கு ஆற்றுக்கு வடக்கிலுள்ள, யோர்தானுக்கு அப்பால் உள்ள ஒரு மாவட்டம். இப்பெயர் எசக்கியேல் நூலில் மட்டும் காணப்படுகிறது (எச 47:16.18). திரும்ப அமைக்கப்படும் எடுத்துக்காட்டான இஸ்ராயேல் நாட்டின் வடக்கு, கிழக்கு எல்லையாக இப்பெயர் குறிக்கப்படுகிறது. இது பழைய ஏற்பாட்டில் பாசான் பகுதியின் பிற்காலப் பெயராகும். ஆனால் இப்பெயர், எகிப்திய பத்தொன்பது அரசமரபு காலத்திய ஏடுகளில் காணப்படுகிறது. இஸ்ராயேல் நாடு பிளவுபட்ட காலத்தில் இது தமஸ்குவின் அரமேயர்களின் ஆட்சிக்குட்பட்டது. அசீரியாவின்

மூன்றாம் சால்மனேசர் இதைக் கி.மு. 842-இல் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அசூர்பானிப்பால், இங்கு நடந்த ஒரு கிளர்ச்சியை அடக்கினார். நான்காம் நூற்றாண்டில் இங்கு யூதர்கள், கிரேக்கர்கள், நபத்தேயர்கள் ஆகியோர் வாழ்ந்து வந்தனர். ஆதிக்கம் இவர்களுக்குள்ளே அடிக்கடி மாறியது. இரண்டாம் நூற்றாண்டில் மக்கபேயர்களால் கைப்பற்றப்பட்டது. அலக்சாந்தர் யன்னாயு கி.மு. 90-இல் நபத்தேயர்களிடம் இழந்தார். பாம்பே இதைத் தெக்காப்போலியோடு இணைத்தார். அப்போது இது அவுரான்டிசு என்றழைக்கப்பட்டது. அகுஸ்து இதைப் பெரிய ஏரோதுக்கு அளித்தார். (கி.மு. 23) நாற்பகுதிக்குத் தலைவனான ஏரோது பிலிப்பு இறந்தபின், கலிகுலா முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்கு அளித்தார் (கி.பி. 37). உரோமையர் போருக்குப்பின் இது மீண்டும் நபத்தேயர்களின் ஆட்சிக்குட்பட்டது. ஆனால் கி.பி. 106-இல் .திரேசன் இதை உரோமையரின் சீரியா மாகாணத்தில் ஒரு பகுதியாக்கினார்.

இதன் கிழக்கு எல்லையில் 1830 மீட்டர் உயரமுள்ள எபெல் எத்-துருசு மலையுள்ளது. நிலம் செழிப்பானது. கிரேக்கர், உரோமையர் காலத்தில் பாலஸ்தீனத்தின் அப்பம் செய்ய விளைபொருட்களை அளித்தது.

**கவ்வோத்து - யாயிர்** (HAVVOTH - JAIR - யாயிரைச் சேர்ந்த கூடாரக் கிராமங்கள்)

பாசான் நாட்டுக் கிலயாத்து மாவிட்டத்திலுள்ள அருகோபிலுள்ள பல கிராமங்கள் அடங்கிய பகுதி. இதுபற்றிப் பல குறிப்புகள் உள்ளன. கிராமங்களின் எண்ணிக்கை வேறுபடுகின்றன. உப 3:4; யோசு 13:30-இல் அறுபது என்றும், நீதி 10:4-இல் முப்பது என்றும், 1 நாள்.2:22-இல் இருபத்து மூன்று என்றும் குறிக்கப்படுகின்றது. இது இவற்றின் அரசியல் சார்பின் வேறுபட்ட காலங்களைக் குறிக்கிறது எனலாம். எண் 32:41; உப 3:14-இன்படி இந்த ஊர்கள் பாசான் மாவட்டத்தில் இருந்தன, யாயிரின் புதல்வர்களால் அதாவது யாயிரின் இனத்தவரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிகிறது.

1 நாள் 2:21-இல் மனாசே இனத்தவருக்கும் யூதா இனத்தவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. யூதாவின் பேரன் கெசிரோன் கிலயாத்தைச் சேர்ந்த மாக்கரின் புதல்வியை மணந்து செகூபு என்பவரைப் பெற்றார். செகூபின் மகன் யாயிர், கெசூர், ஆராம் உள்ளடங்கிய பல பகுதிகளை வென்றார். நீதி 10:3-4-இல் கிலயாத்தைச் சேர்ந்த யாயிர் என்ற நீதிபதிக்கு 30 புதல்வர்கள் இருந்ததாகவும், இவர்கள் 30 ஊர்களை ஆட்சி செய்ததாகவும், இவை இவர்களின் தந்தையின் பெயரால் அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

கவ்வோத்து-யாயிர் என்ற பெயருக்கு விளக்கம் அளிக்கும் விதத்தில் இந்த விவரிப்புகள் தோன்றியிருக்கலாம். நாளாகமத்தில் வரும் விவரிப்பு, மனாசே இனத்தவரோடு கொண்ட உறவுக்கும் கிலயாத்து பகுதியின் மேல் ஆட்சிக்கும் உரிமை கொண்டாட யூதா இனத்தவர் அளித்த விளக்கமாக இருக்கலாம். நீதிபதியான யாயிர் பற்றிய விவரிப்பு ஐயத்திற்குரியது. நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பன்னிரண்டாக்க எடுத்த பிற்கால முயற்சியாக இருக்கலாம். யாயிர் இனத்தவர் வென்ற பகுதி என்ற விளக்கம் வரலாற்று உண்மைக்கு நெருங்கியதாக இருக்கலாம்.

**கழிபேருவகை** (ECSTASY)

உணர்வு சக்தி முழுவதுமோ ஒரு பகுதியோ செயலற்ற ஒரு மன நிலை; மெய் மறந்த நிலை. அப்படிப்பட்ட ஆள் கடவுளின் ஆவியால் உந்தப்படுவார். ஆவியோ, ஆன்மாவோ உடலைவிட்டுச் சிறிது நேரம் பிரிந்திருக்கும் நிலையையும் (கிரேக்கக் கருத்து), தெய்வத் தன்மையோடு தொடர்பும் உறவும் கொண்டுள்ள நிலையையும் இச் சொல் விவரிக்கிறது. இது எபிரேயக் கருத்துக்கு மாறானது. இதன்படி, மெய் மறந்த நிலையில் இருப்பவன், அவன் தானாக இருப்பதில்லை. தெய்வத்தன்மை ஆட் கொள்ளப்பட்டவராக உள்ளார். இந்த மெய் மறந்த நிலை தானாகவோ, இசை, நடனம், பொருட்கள் ஆகியவற்றோடு கூடிய தியானத்தாலோ (1 சாமு 9:2 அர 3:15) உந்தப்பட

லாம். இந்நிலையோடு நிகழும் உடல் அசைவுகள், உளறல்கள், ஆவேசமிக்க நடத்தை ஆகியவற்றால் இந்நிலை பைத்தியமாகவும் சிலசமயம் கருதப்படும். (2 அர 9:11; 1 கொரி 14:23). இது பொதுவாகப் பல்வேறு தன்மையில் இருக்கிறது.

1. பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில், தொன்மையான இறைவாக்குகளை இந்த வகையில் பார்க்கலாம். இவை, குழுப்பாடல்களாலும், நடனங்களாலும் உண்டாகலாம் (1 சாமு 10:15. 12; 19:20). இது மோசே 'ஆண்டவரின் எல்லா மக்களும்' இறைவாக்கினர்களாக ஆசைப்படும்போதும் (எண் 11:25-29), எலியா காற்று, பூகம்பம், நெருப்பு, குரல் போன்றவற்றை அனுபவிக்கும்போதும் (1 அர 19:11-18), பெட்டகத்திற்கு முன் தாவீது நடனமாடும்போதும் (2 சாமு 6:12-13) மெய் மறந்த நிலை உருவானது. ஆபிரகாம் ஆழ்ந்த தூக்கத்தில் கண்ட காட்சியும், எரியும் புதர்க் காட்சியும் அங்குக் கேட்ட குரலும், யாக்கோபின் போராட்டமும் ஆகிய எல்லாம் மெய் மறந்த நிலையின் அடையாளங்களைக் கொண்டுள்ளன (ஆதி 15:12; 32:24, யாத் 3:2-14).

முதல் தரமான இலக்கிய நடை சார்ந்த இறைவாக்குகள் தோன்றியவுடன் இந்த மெய்மறக்கும் நிலை போய்விடவில்லை. ஏசயா, ஆமோஸ் இவர்களின் பணிகள், மெய்மறந்த நிலையில்தான் ஆரம்பமாகின்றன (ஏச 6; ஆமோ 7-9) ''நான் ஒரு குடிகாரன்'' என்று தன்னைப் பற்றிக் கூறுகிறார் எரேமியா (ஏரே 23:9; அ.ப.2:13-15). வானும் இருண்டதாகவும், மலைகள் சப்தம் இடுவதாகவும், குன்றுகள் நகருவதாகவும், பூமி வெறுமையாய்ப் போனதாகவும் அவர் காணும் காட்சி அவரது மெய் மறந்த நிலையைக் காட்டுகிறது (எரே 4:23-26). மேலும் எசக்கியேல் தன்னுள் ஆவி புகுந்ததாகவும், உயரத் தூக்கி எழுப்பியதாகவும், முகம் குப்புற விழுந்ததாகக் கூறுவதும், ஆவி அவரைத் தூக்கிக் கொண்டு போனதாகக் கூறுவதும், ஆகிய இவையெல்லாம் மெய்மறந்த நிலையைச் சார்ந்ததாகும் (எச 2:2; 3:14, 23-27; 8:3; 11:1.5; 37:1).

2. புதிய ஏற்பாட்டில்:-

இயேசுவின் பிறப்பு, பணி இவற்றைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மெய் மறந்த நிலையின் அடையாளங்களைக் கொண்டுள்ளன. மரியாள், எலிசபெத்து வாழ்த்தும் பாடலும் (லூக் 1:41-55) செக்கரியா, சிமியோன், அன்னா ஆகியவர்களின் ஆவியால் தூண்டப்பட்ட கூற்றுகளும் (லூக் 1:67-79; 2:25-39), இயேசுவின் திருமுழுக்குச் சமயத்தில், வானம் திறக்கப் புறா வந்ததும் (மாற் 1:9-11), அவரது சோதனை, எசக்கியேல் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டது போல் நடப்பதும் (லூக் 4:1-12; எச 8:3), மேகம், குரல், சூழ்ந்த ஒன்றிப்பால் எழும் மீள்பொளதீக நிலை ஆகியவற்றோடு கூடிய, அவரது தந்தையோடு ஆன்மீக இணைப்பைக் கூறும் அவரது குருத்துவச் செபமும் (யோவா 17), ஆகிய எல்லாம் இந்த வகையைச் சார்ந்ததாகும்.

திருச்சபை மெய்மறந்த நிலையில்தான் தொடங்கியது. காற்று, நெருப்பு, பரவசப் பேச்சு ஆகியவையெல்லாம் இருந்தன (அ.ப. 2:24). பேதுரு செபத்தில் கண்ட காட்சியும் குரலும் மெய் மறந்த நிலையைச் சார்ந்ததே (அ.ப. 10:9-16). ஸ்தேவானின் காட்சியிலும் இக்கூறுகள் இருக்கலாம் (7:55; 6:15).

கொரிந்து திருச்சபையில், மெய் மறந்த நிலையில் பேசும் பரவசப் பேச்சு பெரும் குழப்பத்தை உருவாக்கியது (1 கொரி 12-14; 1 தெச 5:9-21). பவுல் பரவசப்பேச்சு பேசினார் (1 கொரி 14:6.18). அவர் தெய்வீகக் குரலைக் கேட்டார் (2 கொரி 12:9; அ.ப. 18:9; 22:17). அவரது மனம்திரும்பும் அனுபவமும் அப்படியே (அ.ப. 9:22; 26); மூன்றாம் வானம்வரை கவர்ந்தெடுக்கப்பட்டு, சொல்லமுடியாத பொருட்களைக் கேட்டார் (2 கொரி 12:2-4). இவையெல்லாம் இதைச் சார்ந்தவையே, ஆனால் இவற்றிற்கு அவர் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க

வில்லை. புறவினத்தாரின் கழிபேருவகையில் வரும் அறிவையெல்லாம் கடந்து செல்லும் கிறிஸ்துவின் அன்பையே தேடவேண்டும் என்று அவர் கிறிஸ்தவர்களைத் தூண்டுகிறார் (உரோ 8:38; அ.ப. 3:14-19). யோவானில் ''ஆண்டவரின் நாளில் ஆவியில் இருத்தல்'', குரலைக் கேட்டல், காட்சி காணுதல் போன்றவை ஐயமற கழிபேருவகை நிலையைச் சார்ந்தவையே. ஆனால், பொதுவாகப், புதிய ஏற்பாட்டு சமயத்தில் ''ஆவியில் இருத்தல்'' சாதாரணக் கிறிஸ்தவ வாழ்வைச் சேர்ந்ததாகும்.

## கழிவறை (LATRINE)

பொது உபயோகத்துக்கோ, தனி உபயோகத்துக்கோ பயன்பட்ட மறைவிடம். பாகாலின் கோயிலை இடித்து அதைக் கழிவறையாக்கியது வெற்றியின் மற்றும் அவமதிப்பின் அடையாளமாகும் (2 அர 10:27). இறைவாக்கினர் ஆதரவு பெற்ற ஏகூவின் புரட்சி, ஓமிரியின் வீட்டுக்கும், அதன் அந்நிய தேவர்களின் வழிபாட்டுக்கும் எதிராகச் செயல்பட்டதின் கடுமையை எடுத்துக்காட்டுகிறது.

## கழுகு (EAGLE)

கழுகு அசுத்தமானது என்று லேவி 11:13; உப 14:12 ஆகிய பகுதிகளில் கூறப்பட்டிருக்கிறது. கழுகு பாலஸ்தீன நாட்டிலே உள்ள பறவைகளில் மிகவும் பெரியதாகும். விவிலியம் எழுதப்பட்ட காலத்தில், 'தங்கக் கழுகு', 'அரச கழுகு' என்ற இருவகையான கழுகுகள் காணப்பட்டன. கழுகுகள் விரைவாகப் பறப்பது பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களை மிகவும் கவர்ந்தது (பழ 23:5; ஏச 40:31; ஒப 4). கழுகுகளின் பறக்கும் சக்தி உவமானமாகப் பயன்படுத்தப்பட்டது (உப 28:49; 2 சாமு 1:23; எரே 49:16) குஞ்சுகளின் மேல் அவற்றிற்கு உள்ள அக்கறை பற்றியும் (உப 32:11) விவிலியம் கூறுகிறது. சங் 102:5 கழுகுகளின் இளமை புதுப்பிக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து இப்பறவைகள் அதிக நாள் உயிர் வாழ்வதாகக் கருதப்பட்டது என்பது தெரிகிறது.

கழுகைக் குறிக்கும் அதே எபிரேயச் சொல் பிணந்தின்னிக் கழுகைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. வானத்தில் உயரே பறக்கும்போது இருவகைக் கழுகுகளுக்கும் வேறுபாடு கண்டுபிடிப்பது மிகக் கடினம்.

பறவைகளின் அரசனாகக் கழுகு இருந்ததால் இறைவாக்கினர்களுக்கும் திருக்காட்சி காண்பவர்களுக்கும் அது உவமானமாகப் பயன்பட்டது. எசக்கியேல் கண்ட காட்சியில் கெருபிம்கள் கழுகு முகம் உடையதாக இருந்தன (எச 1:10; 10:17). மேலும் எச 17-இல் உள்ள உவமையில் இரு கழுகுகளைப் பயன்படுத்துகிறார். தானி 7-இல் விலங்குகளில் சிறந்ததான சிங்கமும், பறவைகளில் சிறந்ததான கழுகும் இணைந்து பாபிலோனிய அரசைக் குறிக்கின்றன. திருவெளி 4:7-இல் கடவுளின் அரியணையைச் சூழ்ந்து நிற்பவைகளில் ஒன்று பறக்கும் கழுகைப் போன்ற தோற்றமுடையதாகும். திருவெளி 8:13-இல் ஒரு கழுகு மண்ணில் வாழும் மனிதர்களை எச்சரிக்கின்றது. முற்காலத்திலேயே கடவுளையும் கழுகையும் தொடர்புபடுத்தியிருக்கின்றனர்.

## கழுதை (ASS)

இஸ்ராயேல் மக்கள் தங்கள் மூதாதையர் காலத்தில் கழுதைகளை வீட்டில் வளர்த்தனர். இவ்வாறு வளர்ப்பது மேற்கு ஆசியாவில் நாகரீகமாகும். கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே மெசபொத்தாமியாவில் பழக்கப்படுத்தப்பட்ட சுமை சுமக்கும் கழுதைகளும், எகிப்திய நுபியின் என்ற காட்டுக் கழுதைகளும் இருந்தன. இவ்வகையான கழுதைகள் அன்றைய பாலஸ்தீனிலும், விவிலியத்திலும் இருந்ததாகத் தெரிகிறது.

(1) வேலை செய்யும் விலங்கு:-

சுமைகளைத் தூக்கவும் (ஆதி 42:46; 1 சாமு 16:20; 25:18; நெக 13:15), விவசாயத் தொழில் செய்யவும் (எச 30:24) இவை பயன்படுத்தப்பட்டன. கழுதையின் வலிமை இசக்காருக்கு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 48:14). மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழலாகாது (உப 20:10) என்ற சட்டம் கழுதை

யின் மேல் உள்ள அக்கறையினால் வந்தது. பழங்கால எகிப்தில் கழுதைகள் போரடிக்கும் இடத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் உப 25-இல் மாட்டுக்கு இருக்கும் சக்தி இதற்கு இருப்பதாகக் கூறவில்லை. பிற்கால யூதர்கள் வாடகைக்குக் கழுதைகள் வைத்திருந்ததாக மிஸ்னா கூறுகிறது.

(2) பயணம் செய்யப்பயன்பட்ட விலங்கு:-

கடிவாளம் போடப்பட்ட கழுதையானது (பழ 26:3) ஆண்களாலும் (எண் 22:21; 2 சாமு 17:23) பெண்களாலும், குழந்தைகளாலும் (யாத் 4:20; யோசு 15:18; 2 அர 4:24) பயணம் செய்யப்பயன்படுத்தப்பட்டது. மக்களால் மதிக்கப்பட்டவர்களும், உயர்பதவியில் இருப்பவர்களும் இதைப் பயன்படுத்தினர் (நீதி 10:41; 12:14; 1 சாமு 25:20). சீயோனின் வருங்கால அரசர் கழுதையில் வருவார் என்பது அமைதி நாடும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது (செக் 9:9; மத் 21:1-7; யோவா 12:14).

(3) உணவாகப் பயன்பட்ட விலங்கு:-

செனோபன், பிளினி ஆகிய இருவரும் கழுதையின் உடல் உணவாகப் பயன்பட்டதாகக் கூறுகின்றனர். 2 அர 6:25-இன் படி கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் எபிரேயர்களிடையே கழுதையின் இறைச்சி பழக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இஸ்ரேல் மக்கள் உணவு உண்ணும் முறையில் (லேவி 11:1-8; உப 14:3-8) கழுதையின் இறைச்சி அசுத்தமானது என்று கருதப்பட்டதால் அதை உணவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

(4) பொருளாதாரச் சொத்து:-

ஒருவன் தான் வாழக் குறைந்தது ஒரு கழுதையாவது வைத்திருக்கவேண்டும் (யோபு 24:3). மிருகங்கள்தான் சொத்து எனக் கருதப்பட்டது. அந்த மிருகங்களில் பொதுவாகக் கழுதையும் உண்டு (ஆதி 12:16; 24:35; யோபு 1:3). கழுதைகள் ஏற்புடைய காணிக்கையாகக் கொடுக்கப்பட்டன (ஆதி 32:13-15). யூதா மக்கள் நாடு கடத்தப்பட்ட பிறகு, கழுதைகளின் எண்ணிக்கை மற்ற மிருகங்களை விட அதிகமாக இருந்ததாகக் குறிப்புகள் உண்டு (எஸ் 2:66-67; நெக 7:68-69). ஒரு கழுதை இறந்துவிட்டால் அதன் பிணம் உடனே அப்புறப்படுத்தப்படவேண்டும். இந்நிலையை எரேமியா யோவாக்கிமின் அடக்கத்தின் முன் உருவகமாகக் கூறுகின்றார்.

(5) இஸ்ராயேலின் சமய மரபில்:-

கழுதையும் ஓய்வு நாளில் ஓய்வு எடுக்க வேண்டும் (உப 5:14). ஓய்வு நாளில் தனக்கு வேண்டியதைப் பெறுகிறது (லூக் 13:15; 14:5). கழுதைகளும் தலையீற்றுக் கொள்கைக்கு உட்பட்டன (யாத் 13:13). பிலயாமின் எண்ணத்தைக் கடவுள் கழுதை மூலம் முறியடிக்கிறார் (எண் 22:24; 2 பேதுரு 2:16). பிற்காலத்தில் கழுதையின் தலைகளை யூதர்கள் வழிபட்டதாக எகிப்திய நாட்டைச் சேர்ந்த அபியோன் கூறுகின்றார்.

## கழுதைப்புலி (HYENA)

இது மாமிசம் உண்ணும் இரவில் உலவும் விலங்கு. இது பூனைகளுக்கும் நாய்களுக்குமிடைப்பட்ட ஒரு விலங்காகும். அழுகிய இறைச்சியைத் தின்னும் இந்த விலங்கு கோழைத்தன்மையும் கொடூரத்தன்மையும் உடையது. இதனுடைய சப்தம் சகிக்கமுடியாததும், மண்ணுலகில் கேட்கமுடியாததும் ஆகும். கோடுகளுள்ள கழுதைப்புலி, பாலஸ்தீனத்தில் நரிக்கு அடுத்தபடியாக எல்லாருக்கும் தெரிந்த மிருகமாகும். இது வட ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா வரை காணப்படுகிறது.

விவிலியத்தில் கழுதைப்புலி பாழ்நிலையோடும் கைவிடப்பட்ட மனிதக் குடியிருப்புகளோடும் தொடர்புபடுத்தப்படுகிறது (ஏச 13:22; 34:14). இடப்பெயரான செபோவிமின் பொருள் கழுதைப்புலியாகும் (நெக 11:34). 1 சாமு 13:18-இல் அது வாடி அபுதபாவைக் குறிக்கிறது.

## கழுத்துத்துண்டு (SCARF)

அராபியப் பாரம்பரியப்படி இரட்டை மறைப்பாகும். இதில் ஒன்று கண்களுக்கு

மேலே தலையைச் சுற்றி அமைந்திருக்கும் மற்றது கண்களுக்குக் கீழே அமைந்திருக்கும். அதன் முனைகள் நெஞ்சில் தொங்க விடப்பட்டிருக்கும் (ஏச 3:19).

## கழுத்தை நெரித்துக் கொல்லுதல் (STRANGLING)

கழுத்தை நெரித்துக் கொல்லுதல் இராபிகளின் சட்டத்தில் குறிப்பிடப்படும் நான்கு வகையான மரண தண்டனைகளில் ஒன்றாகும். கல்லால் எறிதல், உயிரோடு எரித்தல், தலையை வெட்டுதல் ஆகியவை பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், கழுத்தை நெரித்துக் கொல்லுதல் குறிப்பிடவில்லை. தால்மூதின் கூற்றுப்படி இதுதான் மிகவும் இரக்கம் வாய்ந்த சாவுத் தண்டனை ஆகும். எனவே விவிலியச் சட்டம் எதுவும் தெளிவாகக் கூறாத இடங்களில் இந்தத் தண்டனை பொருந்தும். சிலைவழிபாடு, கெட்ட நடத்தை, கழுத்தை நெரித்து கொல்லப்பட்டதன் இறைச்சியை உண்ணுதல் ஆகியவற்றிலிருந்து புறவினக் கிறிஸ்தவர்கள் விலகியிருந்தால் சட்டங்களை முழுமையாகக் கடைப் பிடிக்கத் தேவை இல்லை என்று யாக்கோபு (அ.ப. 15:20) கூறுகின்றார். புறவினக் கிறிஸ்தவர்கள் யூதர்களின் முறையான கழுத்தை வெட்டி இரத்தத்தைச் சிந்திவிடும் சட்டத்தைப் பின்பற்றும்படி கூறுகின்றார். ஆனால் பிலோ விலங்குகள் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டன என்று கூறுகின்றார். ஆனால் மற்ற மூலங்களைக் கண்ணோக்கும் போது, இது யூதச்சட்டம் அமைதியான எல்லா வகையான மரண தண்டனைகளையும் குறித்ததாகத் தெரிகிறது.

## கழுவ உதவும் தொட்டி (LAVER)

யூதமதக் குருக்கள், கழுவுவதற்காகப் பயன்படுத்திய பெரிய வெண்கலப் பாத்திரமாகும். பழைய ஏற்பாட்டில் இந்தப் பொருளைக் கொடுக்கும் எபிரேயச் சொல்லானது துப்புரவுச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் குழிவான வட்டவடிவமான உலோகத்தாலான பாத்திரத்தைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த எபிரேயச் சொல்லுக்கு இணையான கிரேக்கச் சொல் திருமுழுக்குக் கொடுக்கும் தண்ணீரோடு தொடர்புடையது (எபே 5:26; தீத் 3:5).

1. கூடாரத்தில்:- கழுவுவதற்கென வெண்கலத்தால் செய்யப்பட்ட தொட்டி ஒன்று கூடார வாயிலுக்கும் பீடத்திற்கும் நடுவில் வைக்கப்பட்டு அதில் தண்ணீர் நிறைக்கப்பட்டிருக்கும் (யாத் 30:18.28; 31:9; 35:16; 38:8; 39:9; 40:7.11.30). மேலும் ஆசாரக் கூடாரத்து வாயிலிலே காத்துக் கொண்டிருந்த பெண்களின் வெண்கலக் கண்ணாடிகளைக் கொண்டு இந்த வெண்கலத் தொட்டியும் அதன் பாதமும் செய்யப்பட்டிருக்கிறது (யாத் 38:8; காண் 1 சாமு 2:22). லேவியர்கள் ''தூப வகைகளை ஒப்புக்கொடுக்கும்படி பலிபீடத்திற்கு வரும்பொழுது, அவர்கள் கை கால்களைக் கழுவாவிட்டால் ஒரு வேளை சாவார்கள்'' (யாத் 30:20-21; எண் 8:7) என்று கூறப்பட்டுள்ளதை வைத்துப் பார்க்கும்பொழுது குருக்களும், பலிகளும் புனிதப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தண்ணீர் நிரம்பிய பாத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

2. சாலமோன் ஆலயத்தில்:- (அ) உருக்கி வார்க்கப்பட்ட கடல் என்ற தொட்டியும் (ஆ) சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பத்து வெண்கலப் பாதங்களால் தாங்கப்பெற்ற பத்து வெண்கலத் தொட்டிகளும் இருந்தன (1 அர 7:27-39; 2 நாளா 4:6). ஒவ்வொரு தொட்டியும் 'நாற்பது' குடம் கொள்ளும் (1 அர 7:38).

ஒவ்வொரு பாதமும் நான்கு முழ நீளமும், நான்கு முழ அகலமும், மூன்று முழ உயரமுமாய் இருந்தன. அந்தப் பாதங்களில் சிங்கங்கள், காளைகள் போன்ற சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாதத்துக்கும் நான்கு பித்தளை அச்சுகளும், உருளைகளும் இருந்தன. தொட்டியின் கீழ் நான்கு கோடிகளுக்கும் கொப்பறையைத் தாங்க வார்க்கப்பட்ட புயங்களின் நான்கு காதுகளும் ஒன்றுக்கொன்று நேராய் இருந்தன. பாதத்தினுடைய நான்கு மூலைகளிலும்

தாங்கும் கால்கள் பாதத்திலிருந்து புறப்படு கிற தனிவார்ப்பாக இருந்தன.

ஒவ்வொரு பாதத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமுள்ள வளைவான வரம்பு இருந்தது. அதன் மேற்பகுதி தொட்டி பதியத் தக்க விதமாயும், பலவித வேலைப்பாடுக ளோடும் அமைக்கப்பட்டிருந்தது (1 அர 7:27-37). மேலும் மேலே கூறப்பட்ட சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பத்துத் தாங்கிக ளும் அரசன் ஆகாசினால் அசீரியாவிற்கு அனுப்பப்பட்டன (2 அர 16:17; காண் 2 அர 25:13.16; எரே 52:17.20).

2 நாள் 4:6-இல் தகனப்பலிப் பொருட்க ளெல்லாம் பத்துக் கொப்பரைகளிலுள்ள நீரில் கழுவப்பட்டதாகக் கூறப்படடிருக்கி றது. எசக்கியேல் ஆலயத்தைப் பற்றி விவரிக் கும்பொழுது இந்தக் கொப்பறைகள் பற்றி ஒன்றும் கூறவில்லை (எச 40:48-43:17).

3. புதிய ஏற்பாடு 'தண்ணீர் நிரப்பப்பட்ட கொப்பரை' என்ற வார்த்தையைக் குறிக்க 'எழுபது நூல்' வார்த்தையாகிய ''லூத்ரோன்'' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. இவ்வார்த்தையானது ''திருமுழுக்கோடு'' உருவகமாகத் தொடர்புபடுத்தப்படுகிறது (எபே 5:26; தீத் 3:5). இச்சொல்லானது 'கழுவுதல்' என்று மொழிபெயர்க்கப்படுகி றது.

## கழுவுதல், துவைத்தல் (WASH)

இது உடலைச் சுத்தி செய்வதையும் சடங்கு முறையில் தூய்மைப்படுத்தலையும் குறிக்கும். சாதாரணக் கழுவுதல் பற்றிய குறிப்புக்கள் கால்களையும் (ஆதி 13:4; 19:2; 24:32; 43:24) கைகளையும் (யாத். 30:19.21) முகத்தையும் (ஆதி 43:31) குறிக்கிறது. சடங்கு முறைத் தூய்மைப்படுத்துதலில் குருக்களும் லேவியர்களும் குளிக்கவேண் டும் (யாத் 40:12; லேவி 8:6; 16:4.24). ஆடைகளைத் துவைக்க வேண்டும் (எண் 8:21; 19:7). அப்படிச் செய்யாவிட்டால், யாத் 30:20-இன் படி, அவர்கள் ''செத்து மடிவார் கள்''. நோயிலிருந்தும் உயிரற்ற ஊனைத் தொடுவதிலிருந்தும் தூய்மைப்படுத்த, சமூ கத்தினரும் மற்ற அங்கத்தினர்களும் சடங் குத் தூய்மை செய்து கொள்ள வேண்டும் (லேவி 14:8; 15:5; 17:15). முகத்தையும் (மத் 6:17) கைகளையும் (15:2) கால்களையும் (யோவா 13:3-9) கழுவும் வழக்கத்தை இயேசு அறிந்திருந்தார்.

கும்ரானில் நடத்தப்பட்ட அகழ்வாய்வு கள் சடங்குமுறைத் தூய்மைப்படுத்தலில் பயன்பட்ட குளங்களின் சிதைவுகளை வெளிக் கொணர்ந்துள்ளன. குருக்களுக் குரிய லேவியர் சட்டத்தில் கோரப்பட்ட சடங் குத் தூய்மைப்படுத்துதல் கும்ரான் குழுவில் அனைவருக்கும் கட்டளையிடப்பட்டதாகத் தோன்றுகிறது.

கழுவுதல் .பாவத்திலிருந்து தூய்மை அடைதலையும் (சங் 51:2; ஏச 1:16) ஆன்மீ கப் புதுப்பிறப்பையும் (தீத் 3:5; யோவா 3:5) உணர்த்துகிறது.

## கழுவுதல் சடங்கு (ABLUTIONS)

சடங்குமுறைப்படி கழுவும் நிகழ்ச்சியை இது குறிக்கிறது. புதிய ஏற்பாட்டிலே 3 முறை இது குறிப்பிடப்பட்டுள்ளது. எபி 6:2-இல் கழுவுதல் சடங்குகள் போன்றவை தொடக்க நிலைக் காரியங்களாகும். கிறிஸ்த வர்கள் இதையெல்லாம் தாண்டி முதிர் நிலையை அடையவேண்டும் என்று ஆசிரி யர் படிப்பிக்கிறார்.

கிறிஸ்தவத் திருமுழுக்கிற்கும், மற்றக் கழு வுதல் சடங்கிற்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றிய தர்க்கத்தை இவ்வாறு ஆசிரியர் குறிப்பிடலாம். லேவியர் சட்டம் கூறும் பலவகைக் கழுவுதல் சடங்குகளைப்பற்றிச் சற்று இகழ்ச்சியோடு பேசுகிறார். இவை அனைத்தும் உடலைச் சார்ந்த புறச்சடங்கு களே. கிறிஸ்தவர்கள் நிறைவுள்ளவர்கள் ஆக இவ்வெளிச் சடங்குகளைவிட ஓர்படி மேலே செல்லவேண்டும் என்றும் கூறப்பட் டுள்ளது.

மாற் 7:4-இல் பரிசேயர்களால் பின்பற்றப் பட்டுவந்த சில பாரம்பரியங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றில் கிண்ணங்களையும், பாத்திரங்களையும் கழுவுதல் உள்ளடங்கும்.

### கழுவும் பாத்திரம் - (WASH BASIN)

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் சாதாரணமாக அகன்ற வாயுடைய சமைக்கும் பானையைக் குறித்தது. இவற்றைச் சடங்கு முறையில் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். சங் 68:8; 108:9-இல் சமைப்பதற்குரிய பானை, கழுவ உதவும் பாத்திரமாக இழி நிலை அடைந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். இவற்றில் மோவாபு இறைவனின் கழுவும் பாத்திரம் என்று விவரிக்கப்படுகிறது. இதற்கு, இந் நாடு சாக்கடலுக்கு அருகில் இருந்தது காரணமாகலாம்.

### கழுவேற்றுதல் (IMPALEMENT)

தூக்குத்தண்டனை அளிக்கும் பழைய மேற்காசிய முறையாகும். அங்கே கூர் முனையான கழுமரம் நிலத்தில் அல்லது சுவரில் அமைக்கப்பட்டது. அதன்மேல் உயிருள்ள உடலைக் குத்தித் தள்ளினார்கள் (வழக்கமாகக் கால்களுக்கு இடையில்). எஸ் 6:11-இல் எவனும் எருசலேம் ஆலயத்தை மீண்டும் எழுப்புவது பற்றிய தாரியுவின் கட்டளையை மாற்றினால், அவனுக்கு இத் தண்டனை அளிக்கப்படும். அவன் வீட்டிலிருந்தே ஓர் உத்திரத்தை எடுத்து நாட்டி, அதில் அவன் கழுவேற்றப்படவேண்டும் என்று காணப்படுகிறது. தாரியு அரசன் எருசலேமிலுள்ள கடவுளின் ஆலயத்தைப் பலிகள் செலுத்தப்படுவதற்குத் தகுந்த ஓர் இடத்தில் கட்டக் கட்டளை இடுகிறார். மறுப்பவர்களுக்குத் தண்டனையாகக் கழுவேற்றுதல் நடைபெற்றது. கழுவேற்றுதல் அசீரியர்களால் போர்க் கைதிகளுக்கும், இயற்கைக்கு மாறான குற்றவாளிகளுக்கும் செயல்படுத்தப்பட்டது. தாரியு பாபிலோன் நகரைக் கைப்பற்றியபோது 3000 பேரைக் கழுவேற்றியதாகச் சொல்லப்படுகிறது. எண் 25:4; உப 21:22-23; யோசு 8:29;2 சாமு 21:6.9; எஸ்தர் 9:14 ஆகிய விவிலியக் குறிப்புகள் கழுவேற்றுதலைக் குறிப்பதாக அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

### களஞ்சிய நகரங்கள் (STORE CITIES)

களஞ்சிய நகரங்கள் பண்டகசாலை கட்டி அரசாங்கப் பொருட்களைச் சேமித்து வைக்கப்பயன்படுத்தப்பட்ட நகரங்கள் ஆகும்.

எகிப்து இத்தகைய களஞ்சிய நகரங்களுக்குப் பெயர் பெற்றிருந்தது. இவை தேல்ரெத்தபா (பித்தோம்), தானிஸ் (இராம்சேசு; யாத் 1:11) ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. தாவீது பாலஸ்தீனத்தில் பல ஊர்களிலும் நகரங்களிலும் இத்தகைய பண்டகசாலைகளைக் கட்டியிருந்தார் (1 நாள் 27:25). ஒவ்வொரு மாதத்திற்கும் அரண் மனைக்கு வேண்டிய பொருட்களைச் சேமித்து வைக்க நாட்டின் பல பகுதிகளிலும் சாலமோன் பல களஞ்சிய நகரங்களைக் கட்டினார் (1 அர 4:7-19; 9:19). யோசபாத்து யூதா நாடெங்கிலும் பல பண்டகசாலைகளை அமைத்தார் (2 நாள் 32:27-29). இந்தப் பண்டக சாலைகள் மக்கள் செலுத்தும் பத்தில் ஒரு பகுதியின் கிடங்காகவும் விளங்கின (மாலா 3:10). இவை லேவியர்களால் கண்காணிக்கப்பட்டிருக்க வேண்டும் (1 நாள் 9:26.29). பெரிய தனியார் கிடங்குகளும் இருந்தன.

### களஞ்சியம் (GRANARY, BARN)

பதர் நீக்கிய தானியங்களைச் சேமித்து வைக்குமிடம். இவை மிகப்பெரிய சாடியிலிருந்து மிகப் பெரிய பள்ளம் வரை ஆகும்.

சேமிக்கும் இடங்களைக் குறிப்பதற்கு எபிரேயச் சொற்கள் நிறைய உண்டு. ஆனால் எல்லாச் சொற்களும் களஞ்சியத்தைத் தெளிவாகக் குறித்துக்காட்டுவதில்லை (ஆகா 2:19; யோவே 1:17; உப 28:8; பழ 3:10; எரே 50:26). மத் 3:12; லூக் 3:17-இல் குறிப்பிடப்படும் சேமிக்கும் இடங்கள் களஞ்சியத்தைக் குறிக்கின்றன. பாலஸ்தீனத்தில் நடந்த அகழ்வாய்வுகளில் தானியங்களைச் சேமித்து வைக்கும் பல முறைகள் காணப்பட்டன.

தானியக் களஞ்சியம் நிறைந்திருந்தால், அது செழுமைக்கு அறிகுறி (உப 288; பழ 3:10; லூக் 12:18). களஞ்சியம் வெறுமையாக இருந்தால் அது பஞ்சத்தின் அறிகுறியாகும் (யோவே 1:17).

### களவு, திருட்டு (THEFT)

பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்ட

ளையில் களவு செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது (யாத் 20:15; உப 5:19; லேவி 19:11). யாத் 21:1-4 களவு செய்தலுக்குரிய தண்டனை பற்றிய குறிப்பிட்ட ஒழுக்கங்களைக் கொடுக்கிறது. ''ஆட்டையோ மாட்டையோ ஒருவன் திருடி வெட்டிவிட்டால் அல்லது விற்றுவிட்டால், ஒரு மாட்டுக்கு ஐந்து மாடு என்றும், ஓர் ஆட்டுக்கு நான்கு ஆடு என்றும் ஈடு கட்டுவான்'' (21:1). ''திருட்டுக்கு ஈடாக அவனிடம் எதுவுமே இல்லையெனில் அவன் விற்கப்படுவான்'' (21:3). ''அவன் திருடின மாடோ கழுதையோ, ஆடோ, உயிருடன் அவன் கையில் பிடிபட்டால்'' திருடுபோன பொருளோடும் அல்லது பணத்தோடும் ''இருமடங்காக ஈடுகொடுப்பான்'' (21:4.7). பழமொழி நூல் (6:30-31) ஏழுமடங்கு ஈடுகொடுக்கவேண்டும் என்று கூறுகிறது.

களவு செய்தலைப் பொருத்தமட்டும் கம்முராபியின் சட்டம் மிகக் கொடுமையாக இருந்தது. ஒரு குடிமகன் கடவுளுக்கோ அரண்மனைக்கோ சொந்தமான ஆட்டையோ, மாட்டையோ, கழுதையையோ, பன்றியையோ, படகையோ திருடினால் அவன் முப்பது மடங்கு ஈடுகொடுக்கவேண்டும். திருடப்பட்ட பொருள் சமூகத்தின் தாழ்ந்த மக்களுக்குச் சொந்தமாயிருந்தால், அதற்குப் பத்து மடங்கு ஈடுகொடுக்கவேண்டும். ஈடுகொடுக்கக் கள்வனிடம் எதுவுமே இல்லையெனில் அவன் கொல்லப்படுவான். இத்தியச் சட்டம் பதினைந்து மடங்கு ஈடுகொடுத்தலைப் பற்றிப் பேசுகிறது. பிற்கால உரோமைச்சட்டம், திருடன் களவு செய்யும்போதே பிடிபட்டால் நான்கு மடங்கு ஈடுகொடுக்கவேண்டும் என்று கூறுகிறது.

யாத் 22:2-இன்படி இரவில் ''திருடன் கன்னமிடுகையில் கண்டு பிடிக்கப்பட்டுத் தாக்குண்டு இறந்துபோனால் அவனுக்கு இரத்தப்பழி இல்லை''. ஏனெனில் இரவு நேரத்தில் கன்னமிடுபவன் தடுக்கப்படாவிட்டால் கொலைகாரனாக மாறக்கூடும் (மத் 24:43). ஆனால் பகல் வெளிச்சத்தில், கள்வன் கொல்லப்பட்டிருந்தால், கொன்றவன் இரத்தப்பழிக்கு உள்ளாகுகிறான் (யாத். 22:3).

புதிய ஏற்பாட்டில் களவு செய்தல் பாவங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது (மத் 15:19; மாற் 7:21; 1 கொரி 6:10; 1 பேதுரு 4:15; திருவெளி 9:21; எபே 4:28).

## களிமண் (CLAY)

இதைக் குறிக்க எபிரேய மொழி பல சொற்களைப் பயன்படுத்துகிறது. மொழிபெயர்ப்புகள் அவற்றின் வேறுபாடுகளை வெளிக் கொணர்வதில்லை.

ஆதியில், இறைவன் களிமண்ணால் மனிதனை உருவாக்கியதாக வாசிக்கிறோம் (ஆதி 2:5). இயேசு குருடனைக் குணமாக்குவதற்கு மண்ணைப் பயன்படுத்தினார் (யோவா 9:1 தொ).

களிமண் கல் செய்வதற்கும், பாண்டங்கள் செய்வதற்கும் பயன்பட்டது. கற்கள், சூரிய வெப்பத்தில் காயவைக்கப்பட்டதாகவும் சூளையில் சுடப்பட்டதாகவும் விளங்கின. கைவினை ஆற்றலுடன் குயவன் களிமண்ணைப் பயன்படுத்தினான். சட்டி, பானைகளுடன், பொம்மைகள், சிலைகள், கலைப் பொருட்கள் செய்வதற்கும் களிமண் பயன்பட்டது. ஆப்பு எழுத்து ஏடுகள் களிமண் தகடுகளில் எழுதப்பட்டன. பாண்டங்களில் எழுதுவதும் உருவங்கள் வரைவதும் உண்டு. உலோகத் தொழிலில், களிமண் வார்ப்பட அச்சாகவும், சுடப்பட்டபோது மூசையாகவும் பயன்பட்டது. தானி 2:33-இல் குறிக்கப்பட்ட களிமண் தெராக்கோட்ட வகையைச் சேர்ந்ததாகும்.

## களிமண் தகடு (CLAY TABLETS)

மெசபொத்தாமியாவில் சாதாரணமாய், எழுதப்பயன்பட்ட பொருளாகும். புல்தாளைப் போன்ற அதிக விலையில்லாமல், களிமண் மிகுதியாகக் கிடைத்தது. தகடு வடிவில் களிமண் அமைக்கப்பட்டு, வழுவழுப்பாக்கப்பட்டு, அதன்மேல் ஆப்பு எழுத்து அடையாளங்கள் பதிக்கப்பட்டன. தகடு,

காய்ந்தபின் அல்லது சுடப்பட்ட பின், கடின மாகியது. அழிக்கமுடியாததாயிற்று. இம் முறையில் எழுதுவது முதலில் சுமேரியர்க ளால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின் இம் முறை, செமித்தியர், அக்காதியர்களால் ஏற் றுக்கொள்ளப்பட்டது. பின்பு மேற்கு ஆசிய மக்களிடையே கூரியர்கள், இத்தியர்கள், ஏலாமியர்கள் உகாரித்தைச் சேர்ந்த கானானி யர்களால் ஏற்றுப் பயன்படுத்தப்பட்டது.

**களிம்பு** (DROSS)

எரியும் தீச்சூளையில் சேர்ந்திருக்கும் உலோக, சிறப்பாக வெள்ளியின் அழுக்கு கள் (பழ 25:4). வெள்ளி 'களிம்பாக மாறு வது' கீழ்த்தரமான ஒழுக்கத்தின் விளைவா கும். பழைய ஏற்பாட்டில் களிம்பு ஒழுக்கக் கேட்டிற்கு அடையாளம் (ஏச 1:22; எச 22: 18:19; சங் 119:119).

**களை** (WHEED)

இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

1. ''வேண்டாதவைகளைக்'' (யோபு 31: 40) குறிக்கும் எபிரேயச்சொல். களைகளின் பொதுப்பெயராகும். இது பார்லி போன்ற தோற்றமுடையது.

2. கடற்பாசி (யோனா 2:6). சில இடங்க ளில் இது நாணல் என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

3. ''நச்சுப்பூண்டு'' (ஓசே 10:4)

4. தானிய வயலில் வளரும் களை. கோது மைச் செடியைப்போல் தோன்றும். அத னின்று இதை எளிதாக வேறுபடுத்த முடி யாது. சில சமயம் இக்களைகள் அறுவடை வரை விட்டு வைக்கப்படும். அப்போது பெண்களும் குழந்தைகளும் இவற்றைக் கையால் பிடுங்கிப் போடுவர்.

களைகள் பற்றிய உவமையில் (மத். 13:24-30. 36-43) சீடர்கள் இறுதித் தீர்ப்புவரை பொறுமையாக இருக்கவேண்டும் என்று இயேசு போதிக்கிறார். காலத்திற்குமுன் களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெ டுப்பது நிராகரிக்கப்படுகிறது (1 கொரி 4:5); அறுவடைவரை பொறுமையாகக் காத்திருக் கத் தூண்டப்படுகிறது. இதற்கு இயேசு இரு காரணங்கள் கூறுகிறார். அ) களைகளோடு கோதுமையையும் பிடுங்கிவிடக்கூடும் (மத் 13:29). ஆ) பிரித்தெடுப்பதற்கு இறைவன் நேரத்தைக் குறித்துள்ளார். அதை முந்திக் கொள்ளக்கூடாது. ''எல்லா வகை மீன்களை யும் வாரி வரும் வலை'' பற்றிய உவமையும் (13:47-43) இதே பாடத்தைப் போதிக்கிறது. ஒரு கருத்தை வலியுறுத்த இயேசு பயன்படுத் திய ''இரட்டை உவமைக்கு'' இந்த இரண்டு உவமைகளும் எடுத்துக்காட்டுகளாகும்.

களைகள் பற்றிய உவமையின் விளக்கம் (13:36-43) காலத்தால் பிந்தியதாகும். ஒரு வேளை மத்தேயுவே இதை எழுதியிருக்க லாம். இவ்விளக்கம் உவமையை உருவகப் படுத்துகிறது. விளக்கம் இறுதித் தீர்ப்பைப் பற்றிக் கவனம் செலுத்துகிறது.

**களைகளின் உவமை:** (மத் 13:24-30; 36-43)

விண்ணரசைப் பற்றிய இந்த உவமையை இயேசு கூறி அதன் விளக்கத்தையும் அளிக்கி றார். விதைவிதைப்பவர் இயேசு (மத் 18:11). நிலம் விசுவாசிகளைக் குறிக்கிறது. களை கள் நேர்மையற்ற மனிதர்கள் ஆவர். அவர் கள் விண்ணரசிற்கு ஏற்றவரல்லர். களையை விதைத்தவன் அலகை. அறுவடை இறுதி நாளைக் குறிக்கிறது. அறுப்போர் வானதூத ராவர். நெறிகெட்டவர்க்குத் தண்டனையும், நீதி மான்களுக்கு மகிழ்ச்சியும் கிடைக்கும் படி அறுவடை நடைபெறும். இதிலே குறிப் பாக மணமகன் ஆரம்பத்திலேயே களைக ளைக் களைந்துவிட மறுக்கிறார். இதே போல இறைவன் நல்லவர்களுடன் தீயவர்க ளையும் வாழ அனுமதிக்கிறார். இறுதி நாளில் தீயவர் நல்லவர்களிடமிருந்து அகற் றப்படுவர்.

**கற்கள்** (STONES)

பாலஸ்தீனம் கற்களும் கற்பாறைகளும் நிறைந்த ஒரு மலைப்பாங்கான நாடாகும். பாலஸ்தீனத்தில் கற்களும் கற்பாறைகளும்

பல தேவைகளுக்காக மக்களால் பயன்படுத் தப்பட்டு வந்தன. விவிலியத்தில் காணும் பலவகைக் கற்களைப் பற்றியும் அவற்றின் பயன்களைப் பற்றியும் இங்குக் காண்போம்.

ஒரு சில கற்கள் மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களாகப் பயன் படுத்தப்பட்டன. கூரிய கற்கள் கத்திகளாகப் பயன்படுத்தப்பட்டன (யாத் 4:25; யோசு 5:2). சில க்ற்கள் நெருப்பு உண்டாக்குவதற் கான சக்கி முக்கிக் கற்களாகப் பயன்படுத்தப் பட்டன (2 மக் 10:3). மிகவும் கன எடை யுள்ள கற்கள் எடைக்கற்களாகப் பயன்படுத் தப்பட்டன (லேவி 19:36; உப 25:13.15; 2 சாமு 14:26; பழ 11:1; 16:11; 20:10.23; மீக் 6:11; செக் 5:8); தூக்கு நூற்குண்டுகளாகவும் (ஏச 34:11; ஆமோ 7:7-8) பயன்படுத்தப்பட் டன. நீரை முகந்து செல்வதற்கேற்ற கற் குடங்களும் உபயோகத்தில் இருந்ததை யாத் 7:9 யோவா 2:16 உறுதிப்படுத்துகின்றன.

ஒருசில பெரும் பாறைகள் எல்லைக்கற்க ளாகவும் திசைகாட்டும் கற்களாகவும் பயன் பட்டன. கிபயோனின் பெரும்பாறையும் (2 சாமு 20:8) போகானின் பெரும் பாறையும் (யோசு 15:16; 18:17) சோகெலேத்து என்ற பாம்புப் பெரும்பாறையும் (1 அர 1:9), எசேல் பெரும் பாறையும் (1 சாமு 29:19), இத்தகைய எல்லைக் கற்களாக விளங்கிய பாறைகளாகும். கற்கள் கைகாட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டமையை எரே 31:21-இலிருந்து அறிகிறோம். அவை எல்லைக் குறிகளாகவும் பயன்பட்டன (உப 19:14)

கட்டட வேலைகளுக்கும் கற்கள் (பாறைக்கற்கள்) வெகுவாகப் பயன்படுத்தப் பட்டன. செங்கற்களைவிட, கட்டடங்க ளுக்கு உறுதி தருபவை என இக்கற்கள் கருதப்பட்டன. கற்கள் கிடைக்காத பாபி லோனிலும் (ஆதி 11:3) மற்றும் பாலஸ்தீனத் தின் ஒருசில பகுதிகளிலும் கற்களுக்குப் பதிலாகச் செங்கற்கள் பயன்படுத்தப்பட் டன. ஆலயம் கட்டுவதற்காகத் தாவீது அர சன் இத்தகைய பாறைக்கற்களைச் சேகரித் ததை 1 நாள் 22:14-15; 29:2 குறிப்பிடுகின்றன. ஆலயத்தின் அடித்தளமும் (1 அர 5:17-18; 7:10), கட்டடத்தின் பெரும்பகுதியும் செதுக் கப்பட்ட கற்களால் கட்டப்பட்டிருந்தன (1 அர 6:18; 7:9; 11.12). ஆலயத்தைப் பழுது பார்த்த யோவாசும் (2 அர 12:2), யோசியா வும் (2 அர 22:6; 2 நாள் 34:11) செதுக்கப் பட்ட கற்பாறைகளையே பயன்படுத்தினார் கள். ஏரோது அரசனின் ஆலயக்கற்களைப் பற்றிய குறிப்புக்கள் மத் 24:1-2; மாற் 13:1-2; லூக் 21:5-6 ஆகியவற்றில் காணப்படுகின் றன. மேலும் கற்பாறைகள் நகரச் சுவர்களுக் கும் (நெக 4:3), வீடுகள் கட்டுவதற்கும் (லேவி 14:45; ஆமோ 5:11) அரண்மனைக ளுக்கும் (1 அர 7:1.9), கோட்டைச்சுவர்களுக் கும் நடைபாதைகளுக்கும் (யாத் 24:10; யோவா 19:13) நெடுந்தூண்களுக்கும் (எஸ்த 1:6) கட்டட வேலையில் பயன்படுத்தப்பட் டன. பெரும்பாறைகள் மூடுகற்களாகவும் பயன்படுத்தப்பட்டன. கிணறுகளை மூடுவ தற்கும் (ஆதி 29:3.8.10), குகைகளை மூடுவ தற்கும் (யோசு 10:18.27) கல்லறைகளை மூடுவதற்கும் (மத் 27:60, யோவா 11:38) பயன்படுத்தப்பட்டன. புதிய கற்காலத்தில் பெரும் பாறைகள் ''டோல்மென்ஸ்'' என்ற ழைக்கப்படும் சவக்கிடங்குகள் கட்டுவதற் கும் பயன்படுத்தப்பட்டன.

போர் செய்வதற்கும் கற்கள் பயன்படுத் தப்பட்டன. கற்களை எறிந்து எதிரிகளைத் தாக்குவது பழங்காலப் போர்முறைகளில் ஒன்றாக இருந்தது (யாத் 21:18; 2 சாமு 16:6.13; சீரா 22:29; 27:25; 2 மக் 1:10; 4:41; மாற் 12:4). கற்களை எறிவதற்கென்று ''கவண்'' எனப்படும் கல்லெறி கருவிகளையும் மக்கள் பயன்படுத்திவந்தமை நீதி 20:16; 1 சாமு 17:40.49-50; 1 நாள் 12:2; 2 நாள் 26:14; பழ 26:8; யூதித் 6:12; சீரா 47:4; 2 நாள் 26:15; 1 மக் 6:51 ஆகியவற்றிலிருந்து அறியப்படு கின்றது.

அணிகலன்களைச் செய்வதற்கும் சில விலையுயர்ந்த கற்கள் பயன்படுத்தப்பட் டன. குருவின் மார்புக்கவசம் பல கற்கள் பதிக்கப்பட்டு அணி செய்யப்பட்டிருந்தது (யாத் 28:17.21). மாணிக்கக்கல், முத்து,

வைடூரியம், செவ்வந்திக்கல், சிவதாதுக்கல், சவரக்காரக்கல் போன்ற கற்களினின்று மணிகள் செய்யப்பட்டு அணிகளுடன் பதிக்கப்பட்டன.

கற்கள் நினைவுச் சின்னங்களாகவும் பயன்படுத்தப்பட்டதை விவிலியத்திலிருந்து நாம் அறிய வருகிறோம் (யோசு 7:26; 8:29; 2 சாமு 18:17). சில இடங்களில் கற்றூண்கள் நினைவுச்சின்னங்களாகவும் (யோசு 24:26.27; 1 சாமு 7:12), இறந்தவர்களின் ஞாபகச் சின்னமாகவும் (2 அர 23:17; எச 39:15), நினைவுத் தூண்களாகவும் (ஆதி 28:18-22; ஏச 19:19) பயன்படுத்தப்பட்டமை அறிகிறோம்.

நினைவுத் தூண்களின் மீதும், பலிபீடங்களின் மீதும் கல்வெட்டுக்களும் இருந்திருக்கின்றன (உப 29:4.8 யோசு 8:32). சட்டங்கள் கற்பலகைகளில் செதுக்கப்பட்டிருந்தன. (யாத் 32:15.16.19; 34:4.29).

இஸ்ராயேலர்கள் செதுக்கப்படாத பெருங்கற்களையே பலிபீடங்களாகப் பயன்படுத்தினர் (யாத் 20:25; உப 27:5-5; யோசு 8:31). கர்மேல் மலையில் கட்டப்பட்டிருந்த எலியாவின் பீடம் இத்தகைய கற்பீடமே. எச 40:22; 1 மக் 4:46-47 இதுபற்றிய பிற குறிப்புகளாகும்.

சில நேரங்களில் செதுக்கப்படாத கற்களும், பலவேளைகளில் செதுக்கப்பட்ட கற்களும் வழிபாட்டிற்குரிய சிலைகளாகப் பயன்படுத்தப்பட்டன (லேவி 26:1; உப 29:17; 2 அர 19:18; எரே 2:27; அப 2:19). இஸ்ராயேலர்கள் அயல்நாட்டு மக்களின் நம்பிக்கைகள், வழிபாடுகளைப் பார்த்துத் தங்கள் வாழ்க்கையிலும் சிலை வழிபாட்டை மேற்கொண்டிருக்கலாம்.

விவிலியத்தில் கற்களின் கடினத்தன்மை உறுதி ஆகியவற்றைக் கருதி உருவகமாகவும் ''கல்'' என்னும் சொல் பலவிடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத் 15:5.16; 1 சாமு 25:17; நெக 9:11; யோபு 6:12; 38:30; 41:24; எச 11:19; 36:26). புதிய ஏற்பாட்டில் கற்களின் பலனளிக்காத் தன்மையும் (மத் 3:9), செவிட்டுத் தன்மையும் (மத் 4:3; 7:9) குறிப்பிடப்படுகின்றன. விதைகள் முளைக்காமற்போன கற்பாறை நிலம்பற்றி மத் 13:5; மாற் 4:16; லூக் 8:4-8 கூறுகின்றன. செக் 3:9-இல் காணும் ஏழு பக்கங்களையுடைய கல்லொன்று தலைமைக்குருவின் முன் வைக்கப்படுகின்றது. இக்கல் செக்.4:7-இல் காணும் தலைக்கல்லாகவோ, தலைமைக்குருவின் மார்புக் கவசத்தினை அலங்கரிக்கும் கற்களில் ஒன்றாகவோ, செருபாபேலின் தலைக்கிரீடத்தினையோ, கட்டிமுடிக்கப்பட்ட பேராலயத்தையோ குறிக்கலாம்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் உயிருள்ள கற்கள் (1 பேதுரு 2:4-8). ஏனெனில் கிறிஸ்துவே மூலைக்கல்லாக அமைந்துள்ள பரிசுத்த ஆலயம் அவர்களாலேயே கட்டப்பட்டுள்ளது (எபே 2:20-22). கிறிஸ்துவே மூலைக்கல் (சங் 118:22; ஏச 28:16; மத் 21:42; லூக் 20:17-18).

திருவெளிப்பாடு 2:19 ''வெள்ளைக்கல்'' ஒன்றினைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த வெள்ளைக் கல்லுக்குப் பல்வேறு பொருள்களும் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. ஒருவேளை வெற்றி கொள்பவனுக்கு அளிக்கப்படும் இந்த வெள்ளைக்கல் அவன் பெயரைத்தாங்கிய இரகசியக் கல்லாக இருக்கலாம். அதன் வெண்மைநிறம் விண்ணகத்தின் தூய்மையையும், அதனை அடைந்தோன் தீமைகளை வென்று தூய்மை அடைய வல்லவன் என்பதனையும் குறிக்கலாம்.

### கற்குவியல் (HEAP OF STONES)

விவிலிய காலத்தில் கற்குவியல் என்ற அடையாளம் பல வகையில் பயன்படுத்தப்பட்டது. வெட்கப்படுகின்ற அளவு நடந்து கொள்கின்ற ஒருவனின்மேல் குவிக்கப்பட்ட கற்குவியல்கள் பிறருக்கு எச்சரிக்கையாக அமைந்தன. ஆக்கானும் அவரது குடும்பமும் கற்களால் எறியப்பட்டு எரிக்கப்பட்ட பின்பு, அவரது உடல்மேல் கற்களைப் போட்டு மூடினார்கள் (யோசு 7:26). யோசுவாவால் ஆயிநகர் அரசன் தூக்கிலிடப்பட்ட

பிறகு, அவன் உடல்மேல் கற்களைக் குவித் தார்கள் (யோசு 8:29). யோவாபும் அவருடன் இருந்தவர்களும் அபிசலோமைத் தூக்கிச் சென்று காட்டிலுள்ள மிகவும் ஆழமான ஒரு பள்ளத்தாக்கில் எறிந்தனர். பின் அவர்மேல் கற்களைப் பெருமளவில் குவித்தனர் (2 சாமு 18:17).

இந்த எபிரேயச் சொல் அழிவின் குவியல், கற்குவியல் என்று பலவாறு மொழி பெயர்க் கப்படும். அழிவின் குவியல் என்பது சிதைந்து குவியலான இடத்தைக் குறிக்கும். இது இறைவன் பாவிகளுக்கு அளிக்கவிருக் கும் அழிவை நினைவுபடுத்தியது (ஏச 25:2).

ஒரு நகரமோ, வீடோ, பீடமோ கற்குவிய லாகும் என்பது வரவிருக்கும் அழிவை அறி விப்பதாகும் (யோபு 15:28; ஏச 37:26; எரே 9:11; ஓசே 12:11). இக்கால அரபு கிராம மக்களைப்போல் முற்கால இஸ்ராயேலரும் இத்தகைய கற்குவியல்கள் தீய அல்லது ஆபத்தான ஆவிகள் தங்குமிடமாகக் கருதி னர் (ஏச 13:21; 34:14; யோபு 8:17).

## கற்சுரங்கங்கள் (QUARRY)

கட்டடங்களுக்கான கற்கள் தோண்டி யெடுக்கப்படும் இடம். யோசு 7:5-இல் ஆயி நகர மக்கள் இஸ்ராயேல் மக்களைச் செபா ரிம் வரை துரத்திச் சென்று அவர்களில் முப்பத்தாறு பேரைக் கொன்றனர். இந்தச் செபாரிம் என்ற பெயரை இடப்பெயராக அல்லாமல் கற்சுரங்கம் என்று மொழி பெயர்க்க வேண்டும் என்று விளக்கவுரையாளர் பலர் கருதுகின்றனர். பல நூற்றாண்டுகளா கப் பாலஸ்தீன தேசத்தில் கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான இடங் களில் சிறிதளவு ஆழத்திலேயே சுண்ணாம் புக் கற்பாறைகள் கிடைத்தன. மக்கள் இவற் றைப் பாளம் பாளமாக வெட்டி எடுத்தனர். எருசலேம் ஆலயத்திற்கு அருகிலுள்ள சால மோனின் தொழுவம் எல்லாம் பழங்காலத் தில் கல்வெட்டி எடுக்கும் இடமாகத்தான் இருந்தது

நீதி 3:19-இல் குறிப்பிடப்படும் சிலைகள் அழகான கன்னாம்புக் கற்களால் செய்யப் பட்டவையாகும். இவையே உப 7:5; ஏச 10:10; மீக் 5:12 ஆகிய பகுதிகளில் குறிக்கப் படுகின்றன.

முதலில் பெரிய பெரிய கற்களாகச் சுரங் கங்களிலிருந்து வெட்டி எடுப்பார்கள். பிறகு தங்களுக்குத் தேவையான அளவைக் குறி யிட்டு, முதலில் லேசான பிளவு உண்டாக்கி மரக்கட்டை செருகி விடுவார்கள். பிறகு சற்று இடைவெளியில் மற்றொரு குழியைப் போடுவார். இவ்வாறு இவர்கள் பலகை யைப் போன்று அறுப்பார்கள். 27 அடி நீளம் 3 அடி அகலமும் உள்ள பலகையை, எருச லேமிலுள்ள யூதர்கள் தங்குமிடத்தில் 1934-இல் கண்டுபிடித்தார்கள்.

## கற்பாறை (FLINT)

தூய்மையற்ற படிகக்கல்லின் ஒருவகை. மிகவும் கடினமாக இருக்கும். எளிதாகப் பிளக்கமுடியாது. கற்களினாலான கலைத் தொழில் வேலைப்பாடமைந்த பொருட்கள் ஆதிமனிதனின் கருவிகளில் இடம்பெற்றன. இவற்றின் அடுக்கான அமைப்பைக் கொண்டு காலம் குறிக்கப்படும். கற்கருவிக ளால் வரலாற்றுக்கு முந்தைய கலாச்சாரம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. உலோகக் கருவிகள் மனிதனுடைய வாழ்க்கையில் இடம்பெறத் தொடங்கிய பிறகும் கற்களி னால் செய்யப்பட்ட கருவிகள் தொடர்ந்து அவனது வாழ்வில் பயன்படுத்தப்பட்டன. பல நோக்கங்களுக்காக அவை பயன்படுத் தப்பட்டன. செதுக்கு கருவியாகவும் கோடரி களாகவும், கத்திகளாகவும், போர்த்தளவா டங்களாகவும், கதிர் அரிவாளாகவும், குத் துக் கோடரிகளாகவும், தோல் தைக்கும் ஊசிகளாகவும் பயன்படுத்தப்பட்டன.

'மிகக் கூர்மையான கல்' சிப்போரா தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்யப் பயன் படுத்திய கருவியாகும் (யாத் 4:25). கில்காலில் யோசுவா இஸ்ராயேல் மக்களுக்கு விருத்த சேதனம் செய்யக் கற்கருவிகளைப் பயன் படுத்தினார் என்பதை யோசு 5:2-3-இல் 'கற் கத்திகள்' குறிப்பிடுகின்றன. ஏச 5:28-இல் குதிரைகளின் குளம்புகள் கருங்கல் போலக்

கெட்டியானவை எனக் குறிப்பிடப்படுகின்றன. எச 3:9 வைரக்கல்லின் குணம் கல்லைவிடக் கெட்டியானது எனக் கூறப்படுகிறது. ஆண்டவர் பாறையை நீரூற்றாக மாற்றினார் (சங் 114:8) என்பது யாத்திரைப் புதுமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது (உப 8:15; காண் யாத் 17:6; எண் 20:8-11; உப 32:13). ஏச 50:7-இல் ஆண்டவருடைய ஊழியனின் மனோதிடத்தைக் கற்பாறை அடையாளமாகச் சித்தரிக்கிறது.

### கற்பாறையில் வீட்டைக் கட்டிய அறிவாளி - உவமை

(மத் 7:24-27; லூக் 6:47-49)

இயேசுவின் போதனைகள் மக்களுக்கு அழைப்பையும் அதே நேரத்திலே நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுதலையும் அளிக்கின்றன. அவருடைய போதனையைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது, வாழ்க்கையில் செயல்படுத்தியும் காட்ட வேண்டும். இவ்வாறு செயல்படுத்த இயேசுவின் சீடன் மறந்தால் அவன் பெரும் அழிவுக்கு உள்ளாவான். வீடு கட்டுபவர்கள் பற்றிய உவமை பாலஸ்தீன மக்களது வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. லூக்கா நற்செய்தியாளர்களுக்குப் பாலஸ்தீன நாட்டு நிலவரம் தெரியாது. ஆழக்குழி தோண்டிக் கட்டடம் கட்ட வேண்டும் என்பது கிரேக்கரின் முறை. இதே போல வெள்ளத்தை, ஆற்று வெள்ளமாகச் சித்தரிக்கிறார். ஆனால் பாலஸ்தீன நாட்டிலே மழை பெய்யும்போது பெருமளவில் நீர் பாயும் என்பதை மத்தேயு அறிவார். இந்த வேளையிலே மணல்மீது கட்டிய வீடுகள் பலத்த சேதமடைகின்றன. எனவே சிறந்த வாழ்க்கையே விசுவாசிகளுடைய வாழ்க்கையின் அடித்தளமாக அமைய வேண்டும். அறிவும், ஆண்டவனுடைய கட்டளைகளில் நம்பிக்கையும் மட்டும் இருந்தால் போதாது. அவற்றின்படி நடப்பது மிகவும் அவசியமானது.

### கற்பித்தல் (TEACH)

இரு ஏற்பாடுகளிலும், விசுவாசமானது இறைவாக்கினர்கள் (மிகப் பொதுவான பொருளில்) கொண்டு வந்த இறைவெளிப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால், இவ்வெளிப்பாடானது அதனுடைய விவரங்களிலும் செயல்முறை விளைவுகளிலும்கூட மனிதருடைய அறிவிற்கு வர வேண்டும். எனவே, இறைவனுடைய மக்களில் இறைபொருட்கள் பற்றிய அறிவைப் போதிக்கும் முறையில் அளிக்கின்ற கற்பிக்கும் பணியானது முக்கியத்துவம் பெறுகின்றது. முதற்படியாக இக்கற்பித்தலானது, வரலாற்றில் தோற்றுகிறவாறே இறைவனது மீட்பைப் போதிக்கும், அறிவிக்கும் வடிவை ஏற்கின்றது. பின்னர், அது ஓர் ஆழமான பொருளை அளித்து, இறைவனால் படைக்கப்பட்ட உடன்படிக்கைச் சூழ்நிலையானது எவ்வாறு செயல்முறையில் அவரது மக்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

I. பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில் இப்பணியானது, அதனை நிறைவேற்றுகின்றவர்களின் குணவியல்பிற்கேற்பப் பல்வேறு வழிகளில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் அவர்கள் அனைவரின் மூலமாகவும் தமது மக்களுக்குக் கற்பிப்பது எப்போதும் இறைவனே.

1. கற்பித்தலின் பல்வேறு வடிவங்கள்:-

அ. குடும்பத்தின் தந்தை:- பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பாளர் தந்தையே. அவர் கற்பிப்பதன் மூலம் நாட்டின் கடந்தகால சமய உரிமைச் சொத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும். இது ஆழமான போதனையை அளிக்க வேண்டும் என்பதில்லை. விசுவாசத்தினுடைய அத்யாவசியமான கூறுகளைக் கொண்ட அடிப்படை ஞான உபதேசத்தை அது கொண்டிருக்க வேண்டும். இறைச்சட்டத்தினுடைய கட்டளைகளைக் குறிப்பிடுகின்ற ஒழுக்க உபதேசமாக அது அமைந்திருக்க வேண்டும். ''நான் உனக்குக் கற்பிக்கின்ற இக்கற்பனைகளை உன் புதல்வர்களுக்கு நீ விவரித்துச் சொல்வாய்....'' (உப 6:7; 11:19). இஸ்ராயேலின் பெருவிழாக்களின் வாய்ப்பைப் பயன்படுத்திப் பெரும் நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து அவற்

றின் பொருளை விளக்கும் வழிபாட்டு மற்றும் வரலாற்று உபதேசங்கள் உண்டு. பாஸ்காப் பலி (யாத் 12:26), மற்றும் புளியாத அப்பச்சடங்கு (யாத் 13:8) போன்றவை இவ்வாறு பயன்பட்டன. பழக்கங்கள் மற்றும் சடங்குகள் பற்றிப் பிள்ளைகள் எழுப்பும் கேள்விகள், இஸ்ராயேலின் விசுவாசத்தைக் கற்பிக்க, அவர்களின் தந்தைக்கு இயல்பாகவே வாய்ப்பளித்தன (உப 6:20-25). மரபின் ஒரு பகுதியாகிய பழைய கவிதைகளை அவரே அவர்களுக்குக் கற்பிக்கிறார் (உப 31:19.22; 2 சாமு 1:18-19). இவ்வாறாக, சமயப் படிப்பினையானது குடும்பச்சூழலில் தொடங்குகின்றது.

ஆ. குருக்கள்:- இப்பணியில் குருக்கள் அதிகப் பொறுப்பைக் கொண்டுள்ளனர். வழிபாடு மற்றும் சட்டத்தினுடைய பணிக் கடமைகளை அவர்கள் தொழிலாகக் கொண்டிருப்பதால் அவர்கள் ஆசிரியர்களாகத் தங்கள் பங்கை நிரப்புகின்றனர். மக்களுக்கு அறிவிக்கும் பணியுடன் மோசே சீனாய் மலையில் சட்டத்தைப் பெற்றார். இவ்வாறு அவரே இஸ்ராயேலில் முதல் ஆசிரியர் ஆவார் (யாத் 24:3.12). லேவியர்கள் இப்போது இச்சட்டத்தினை வாழ்வில் கடைப்பிடிப்பதற்கெனக் கற்பித்து விளக்க வேண்டும் (உப 17:10-11; 33:10; 2 நாள் 15:3). மற்றக் குருக்கள் இதனைப் புறக்கணித்து, அதன் விளைவாக இறைவாக்கினர்களின் கண்டனங்களுக்கு உட்பட்டனர் (ஓசே 4:6; 5:1; எரே 5:31; மலா 2:7). இப்போதனையில் செயல்முறையான பின்னணியைக் கற்பனை செய்வது கடினமல்ல. செக்கேமில் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகின்ற புனித இடங்களில் கொண்டாடப்பட்ட விழாக்களை அது கொண்டிருந்தது (உப 28:9 தொ; யோசு 24:1-24). எஸ்ரா அறிவித்த சட்டம் இதன் மற்றொரு வடிவமாகும் (நெக.8). அளிக்கப்பட்ட படிப்பினையானது, மீண்டும் படிக்கப்பட்டு விளக்கப்பட வேண்டிய சட்டத்தையும் (உப 31:9-13) இறைவனுடைய திட்டத்தின் வரலாற்றையும் (யோசு 24) கொண்டிருந்தது. இயல்பாகவே, விசுவாச வாழ்விற்கு மக்களை வழிநடத்துவதற்கும், சட்டத்தைச் செயல்படுத்துவதற்குமான அறிவுரைகள் கலந்திருந்தன. உப. 4-11-இல் காணப்படும் கற்பித்தல் பற்றிய பல சொற்களில் இந்தக் குருத்துவக் கற்பித்தலின் எதிரொலி காணப்படுகின்றது: ''இஸ்ராயேலே, கேளுங்கள்...'' (உப 4:1; 5:1); ''அறிந்து கொள்ளுங்கள்....'' (4:39); ''விசாரித்துக் கேள்...'' (4:32); ''மறவாதே....'' (4:9; 8:11-12). செயல் விளைவில், இது இஸ்ராயேலானது இதனை அடிக்கடி மனதில் கொண்டிருக்குமாறு, இறைவனின் வார்த்தையை அறிவிப்பதாகும் (உப 11:18-21).

இ. இறைவாக்கினர்கள்:- வேறுபட்ட பணியினைக் கொண்டுள்ளனர். அவர்கள் அளிக்கின்ற இறைவனுடைய வார்த்தையைப் பாரம்பரியத்திலிருந்து பெறாமல் இறைவனிடமிருந்தே அவர்கள் நேரடியாகப் பெறுகின்றனர். போதிக்கும்போது அவர்கள் மிரட்டுகின்றனர், கண்டிக்கின்றனர், வாக்களிக்கின்றனர், ஆறுதல் அளிக்கின்றனர். இவையனைத்தும் கற்பித்தலைச் சார்ந்ததன்று. ஆனால், அறியப்பட்டுள்ளதென அவர்கள் கருதிய ஓர் உபதேசத்தை (ஒப்பிடுக ஓசே 4:1-2 மற்றும் பத்து கற்பனைகள்) அவர்கள் . அடிக்கடி வலியுறுத்துகின்றனர்; அதனின்று அவர்கள் தங்களுடைய போதகத்தின் முக்கிய கருத்துக்களை எடுத்துக் கையாளுகின்றனர். தங்களுடைய தீர்க்கதரிசனங்களை அறிவிக்கின்ற சீடர்களாகவும் அவர்களே உள்ளனர் (ஏச 8:16; எரே 36:4). அவர்களுடைய செய்தியானது பாரம்பரிய போதனையோடு சேர்க்கப்பட்டு, அதனை வளப்படுத்துகின்றது... பிறகு இறைவாக்கினரின் போதனையே ஒரு பாரம்பரிய வடிவம் எடுக்கிறது. ஒரு இறைவாக்கினருக்கும் அடுத்தவருக்கும் இடையில் தொடர்ச்சியுள்ளது. இதை எரேமியா நூல் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது (எரே 28:8). தனது செய்தியை அறிவிப்பதற்கென ஓர் இறைவாக்கினர் தனக்கு முற்பட்ட ஒருவரின் வார்த்தைகளை உபயோகிக்கும்போதும் (எரேமியாவின் நூலை எசக்கியேல் பயன்படுத்தும்விதம்), அல்லது உப ஆகம மறைநூல் அறிஞர்கள் தங்களுக்கே உரிய இறையி

யலில் வரலாற்றை இறைவாக்கு முறையில் விளக்கம் தரும்போதும், இது தெளிவாகக் காணப்படுகிறது.

ஈ. ஞானிகள்:- இவர்கள் தன்மையிலே ஆசிரியர்கள் ஆவர் (திருவுரை 12:9). தங்களுடைய சீடர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தந்தையும் தனது பிள்ளைகளுக்குச் செய்வது போன்ற அதே போதிக்கும் பணியையே மேற்கொள்கின்றனர் (சீரா 30:3; பழ 3:21; 4:1-17.20). அவர்களுக்குச் செவிமடுக்காத சீடர்களுக்கு ஐயோ கேடு! (பழ 5:12-13). நாடு கடத்தப்படுவதுவரையில் ஞானப் படிப்பினையானது இறைவனின் வார்த்தையைவிட அதிகமாக முன்னோர்கள் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. என்றாலும், அதன் பின்னர் அது படிப்படியாகச் சட்டம் மற்றும் இறைவாக்கு நூல்களின் உட்பொருளை ஏற்றுக்கொண்டு, அனைவரின் உபயோகத்திற்காகவும் அதனை அளிக்கின்றது. இவ்வாறு பாரம்பரிய செய்தியால் நிரப்பப்பட்டவராய் ஆசிரியர் தன்னுடைய பிள்ளைகளுக்கு உண்மையான ஞானம் (யோபு 33:33) அறிவு, மற்றும் ஆண்டவரைப் பற்றிய பயம் (பழ 2:5; சங் 34:12) ஆகியவற்றை அளிக்க விரும்புகிறார். கருக்கமாக, மகிழ்ச்சியான வாழ்வின் நிபந்தனையாகிய சமய அறிவை அளிக்கின்றனர். இறை பற்று அற்றவர்களுக்கு இறைவனின் வழிகளைக் கற்பிப்பதாலன்றோ, அவர்களை அவர் மனமாற்றத்திற்கு வழி நடத்திச் செல்கிறார் (சங் 51:5)! மறைநூல் அறிஞர்களில் சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற போதிக்கும் முயற்சியானது குருக்கள் மற்றும் இறைவாக்கினர்களின் இடத்தை ஏற்கின்றது. இப்பள்ளிகளில் (சீரா 51:23), இறைவனைக் கண்டடைய அனுமதிக்கும் விதமாக, அறிஞர்கள் அனைவருக்கும் நிலையான உறுதியான அறிவுரையை அளிக்கின்றனர் (சீரா 51:25-26).

2. யாவேயே, மேலாண்மைமிக்க ஆசிரியர், குரு:-

அ. அனைத்து மனித ஆசிரியர்களுக்கும் அப்பாற்பட்டு, அவர்கள் தங்களுடைய எல்லா அதிகாரத்தையும் பெறுகின்ற ஒரே உண்மையான ஆசிரியராகிய யாவேயைக் கண்டடைவது முக்கியமானதாகும். மோசேக்கும் மற்ற இறைவாக்கினர்களுக்கும் உந்து உணர்ச்சி அளிக்கின்ற அவரது வார்த்தையே, பெற்றோர், குருக்கள் மற்றும் ஞானிகள் முதலிய அனைவருக்கும் அளிக்கின்ற பாரம்பரியத்தின் ஊற்றாக உள்ளது. அவர்களின் மூலமாக, ஞானத்தையும் அறிவையும் மனிதருக்குக் கற்பிக்கின்ற அவரே, அவரது வழிகளையும் சட்டத்தையும் அவர்களை அறியச் செய்கிறார் (சங் 25:9; 94:10 தொ). ஆட்தன்மைப்படுத்தப்பட்ட அவரது ஞானமானது, ஓர் இறைவாக்கினரோ மருத்துவரோ செய்வது போன்று, அவர்களுக்கு அறிவுறுத்தத் தன்னையே அறிவிக்கின்றது (பழ 8:1-11.32-36). இதன் வழியாக அனைத்து நற்பொருட்களும் அவர்களுக்கு வருகின்றன (ஞான 7:11 தொ). இவ்வாறாக ஒவ்வொரு பக்தியுள்ள யூதனும் தனது இளமைப் பருவத்தினின்று இறைவனால் கற்பிக்கப்பட்ட உணர்வினைக் கொண்டிருந்தான் (சங் 71:17). அதற்குப் பிரதிபலனாகத் தனக்கு அவரது வழிகளையும், கட்டளைகளையும், விருப்பங்களையும் கற்பிக்குமாறு அவன் தொடர்ந்து அவரை வேண்டுகிறான் (சங் 25:4; 143:10; 119:7.12). இறைபோதனைக்கு இதயத்தைத் திறப்பதென்பது, சட்டம் மற்றும் இறைவாக்கினுடைய வார்த்தைக் கோட்பாடு அறிவிற்கு அப்பாற்பட்டு செல்கிறது, இறைவனுடைய செய்தியை ஆழமாகப் புரிந்து கொள்ளுதலுக்கும், அதனை வாழ்வில் செயல்படுத்துவதற்கும் இட்டுச் செல்லுகின்ற நெருங்கிய பற்றினைச் சுட்டுகிறது.

ஆ. ஆயினும், இறைவன்பால் இஸ்ராயேலின் மனப்பான்மையானது இத்தகைய இதயப்பணிவை எப்போதும் கொண்டிருக்கவில்லை என்பது தெரிந்ததே. இறைவன் தனது படிப்பினைகளை அறிவிக்கும்போதெல்லாம் அவற்றிற்குச் செவிமடுக்காமல், இறைவனுடைய மக்களின் உறுப்பினர்கள் தங்களுடைய முதுகைத் திருப்பிக் கொண்டனர் (எரே 32:33). எனவே, இறைவன் தமது பிரமாணிக்கமில்லாச் சீடர்கள்மீது எடுத்துக்

காட்டான தண்டனைகளை விதித்தார். இத்தகைய இதயத்தின் கடினத்தன்மையை அகற்ற, இறுதியில் ஒப்பிடமுடியாத ஆசிரியராக மனிதருக்குத் தன்னையே வெளிப்படுத்தப் போவதாகத் தமது இறைவாக்கினர்கள் மூலமாக இறைவன் வாக்களிக்கிறார் (ஏச 30:20-21). ஒருவருக்கொருவர், கற்பிக்காமலே அவரது சட்டத்தை அவர்கள் அறிவதற்கென, அவர்கள் உள்ளாழத்தில் அவர் செயல்புரிவார் (எரே 31:33-34). இவ்வாறு அவரால் நேரடியாகக் கற்பிக்கப்பட்டதன் மூலம், அவர்கள் மகிழ்ச்சியைக் கண்டடைவர் (ஏச 54:13). அவரது இறைபிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கற்பிக்கும் முயற்சியையும் உன்னத அருள் பயனுடையதாக மாற்றும். சங்கீத ஆசிரியர்களின் செபமும் இவ்வாறு அருளப்படும்.

II. புதிய ஏற்பாடு:-

அனைவரிலும் மிகப் பெரிய ஆசிரியர் கிறிஸ்துவே. ஆனால், தமது வார்த்தையைத் தமது சீடர்களுக்கு, ஒப்படைப்பதன் மூலம், தம்முடையதைத் தொடர்கின்ற போதிக்கும் பணியை அவர் அவர்களுக்கு அளிக்கின்றார்.

1. ஆசிரியராகிய கிறிஸ்து:-

அ. இயேசுவினுடைய பொது வாழ்வின் போது, கற்பித்தலானது அவரது செயலின் முக்கியமான கூறாகும். விழாக் காலங்களிலும் (யோவா 8:20), அனுதினமும் கூட (மத் 26:55) செபக்கூடங்களிலும் (மத் 4:23; யோவா 6:59), கோயிலிலும் (மத் 22:23; யோவா 7:14) கற்பிக்கிறார். அவரது படிப்பினையின் வடிவங்கள், அவர் தமது இளமைப்பருவத்தில் கலந்து பழகிய (லூக் 2:46), சில சந்தர்ப்பங்களில் அவரே வரவேற்ற (யோவா 3:10), ஒருமுறைக்கு மேலாக அவரை வினவிய (மத் 22:16-17.36) இஸ்ராயேலின் ஆசிரியர்கள் பயன்படுத்திய முறைகளுக்கு ஒத்ததாகவே இருந்தன. இவ்வாறு ஆசிரியர் என்று பொருள்படும் ''இராபி'' என்ற பெயர் அவர்களைப் போன்று அவருக்கும் அளிக்கப்படுகிறது. மனிதருக்கு ஒரேயொரு ஆசிரியராகிய இறைவன் இல்லாதது போன்று, ஆசிரியர்பட்டமீது நாட்டம் கொண்ட அக்கால மறைநூல் அறிஞர்களை அவர் கண்டித்தாலும் (மத் 23:7-8) அவர் அதனை ஏற்கிறார் (யோவா 13:13).

ஆ. ஆயினும் மற்றவர்களிடையே ஓர் ஆசிரியராக அவர் கூட்டத்தினருக்குத் தோன்றினாலும், அவர் தம்மை மற்றவர்களிடமிருந்து பல்வேறு வழிகளில் வேறுபடுத்துகின்றார். சில நேரங்களில் ஓர் இறைவாக்கினரைப்போன்று பேசவும் செயல்புரியவும் செய்கிறார். அல்லது மீண்டும் தாம் முழுமைக்குக் கொணர்கின்ற சட்டத்தின் அதிகாரபூர்வமான விளக்கவுரையாளராக அவர் தம்மைக் காட்டுகிறார் (மத் 5:17). இத்தகைய நிலையில், முன்னோரின் அதிகாரத்திற்குப் பின்னால் மறையத் தயாராக உள்ள மறைநூல் அறிஞர்களினின்று மாறுபட்டுள்ளார் (மத் 7:29). தனிச்சிறப்பான அதிகாரத்தோடு அவர் கற்பிக்கிறார் (மத் 13:54). மேலும் அரசு பற்றிய அவரது அறிவிப்புகளைப் பற்றியோ அவரளிக்கின்ற வாழ்க்கை விதிமுறைகளைப் பற்றியோ அவர் பேசினாலும் அவருக்குச் செவிமடுக்கிறவர்களிடையே அவரது போதகம் ஒரு புதுமை மயத்தை உண்டாக்கியது (மாற் 1:27; 11:18). அவர் நிராகரிக்கின்ற பாரம்பரியத்தின் கருத்து, போதக முறைகளிலிருந்து பிரிந்து (மத் 15:1-9), இறைவனுடைய உண்மையான செய்தியை அறியச்செய்து, அதனை ஏற்குமாறு மனிதனை நடத்திச்செல்ல அவர் விரும்புகிறார்.

இ. இத்தகைய புதிய போக்கின் இரகசியம் என்னவெனில், அதிகாரபூர்வமாக ஏற்கப்பட்ட மனித ஆசிரியர்களைப் போலன்றி, அவரது போதகம் அவருடையதாக இல்லாமல், அவரை அனுப்பியவருடையதாக உள்ளதே ஆகும் (யோவா 7:16-17). தந்தை மட்டுமே தமக்குக் கற்பிப்பதாக அவர் கூறுகிறார் (8:28). அவரது படிப்பினையை ஏற்றுக்கொள்வதென்பது இறைவனுக்கே பணிந்திருப்பதாகும். ஆனால் இந்நிலையை அடைவதற்கு இறைசித்தத்தைச் செயல்படுத்தலை நாடுகின்ற இதயத்தினுடைய உறுதியான மனநிலையை ஒருவன் கொண்டிருக்க வேண்டும் (7:17). மேலும்

ஆழமான அளவில், இறைவாக்கினர்களுடைய வாக்குறுதியின்படி, மனிதனை இறைவனுடைய படிப்பினைக்குப் பணிவுகொள்ளச்செய்கின்ற உள் அருளை அவன் பெற்றிருக்கவேண்டும் (6:44-45). இங்கே அருளுடன் இறுகப்பிடிப்புக் கொள்ளும் மனித சுதந்தரத்தின் மறைபொருளை ஒருவன் தொடுகிறான். ஆசிரியராகிய கிறிஸ்துவின் வார்த்தையானது, தெளிவாகக் காண்பது போல நடிக்கின்றவர்களின் தன்னிச்சையான குருட்டுத்தன்மைக்கு எதிராகச் செயல்படுகிறது (9:39 தொ).

2. அப்போஸ்தலிக்க படிப்பினை:-

அ. தமது பொதுவாழ்வின்போது இயேசு, விரிவான படிப்பினையைவிட நற்செய்தியைப் போதிப்பதில் அக்கறைகொண்ட தற்காலிகத் தூதுகளைத் தமது சீடர்களுக்கு அளித்தார் (மத் 10:7). அவரது உயிர்ப்பிற்குப் பின்னரே, அவர்களை ஒரே நேரத்தில் ''போதகர்களாகவும், அப்போஸ்தலர்களாகவும், ஆசிரியர்களாகவும்'' (2 திமோ 1:11) உருவாக்குகின்ற உறுதியான கட்டளையை அவரிடமிருந்து அவர்கள் பெறுவர்: ''போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்'' (மத் 28:19-20). இத்தகைய பரந்த பரிணாமங்களையுடைய பணியை நிறைவேற்ற, அவர்களுக்கு அனைத்தையும் கற்பிக்கக்கூடிய தூய ஆவியைக் குறித்த காலத்தில் அவர்களுக்கு அனுப்புவதாக அவர் வாக்களிக்கிறார் (யோவா 14:26). கிறிஸ்துவினுடைய முழுமையான சீடர்களாவதற்கென ஆவியின் சீடர்கள் ஆகி, அவர்கள் தங்களிடமிருந்து வராமல், இறைவனிடமிருந்து வரவிருக்கின்ற போதனையை மனிதருக்கு அளிப்பர். இதற்காகவே அவர்கள் அதிகாரத்துடன் பேசக்கூடியவர்களாவர். உலக முடிவுவரை ஆண்டவரே அவர்களுடன் இருப்பார் (மத் 28:20; யோவா 14:18-19).

ஆ. பெந்தகோஸ்தேவிற்குப் பின்னர் அப்போஸ்தலர்கள் கற்பிக்கும் இந்தத்தூதுப்பணியைத் தங்களுடைய இயேசுவின் பெயரால் நிறைவேற்றுகின்றனர் (அ.ப. 4:18; 5:28). அவரது அதிகாரத்தைக் கவசமாகக் கொண்டு அவருடைய சொற்கள் மற்றும் செயல்களைப் பற்றி எடுத்துக்கூறுகின்றனர். இயேசுவைப் போன்று கோயிலிலும் (அ.ப.5:21), செபக்கூடத்திலும் (13:14....), தனி வீடுகளிலும் (5:42) அவர்கள் கற்பிக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கற்பித்தலின் குறிக்கோள் மீட்பின் செய்தியைப் போதிப்பதாகும். மெசியாவும் இறைமகனுமாகிய இயேசு, இஸ்ராயேலின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிறார். அவரது மரணமும் உயிர்ப்பும் இறைவாக்குகளை நிறைவு செய்கின்றன. வாக்களிக்கப்பட்ட ஆவியைப் பெற்று, தண்டனையினின்று தப்பிப்பதற்கென அவர்கள் மனம்மாறி அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும் (காண். அப்போஸ்தலர் பணியின் உரைகள்). மனிதரை விசுவாசத்திற்கு நடத்திச்செல்ல எண்ணுகின்ற அடிப்படை உபதேசமானது (அ.ப. 2:22-40) திருமுறைக்குப்பின் இன்னும் ஆழமான போதனையால் நிறைவு செய்யப்படும். அதற்கு முதல் கிறிஸ்தவர்கள் கவனமாய்ச் செவிமடுத்தனர் (2:42). கிறிஸ்தவர்களைச் சேராதவர்களில் சிலர் அதனுடைய புதுமையைக் கண்டு வியப்புற்றனர் (17:19-20). யூத அதிகாரிகள் அதன் வெற்றியைக் கண்டு அஞ்சினர். மறைநூல் அறிஞர்களின் சாதாரணப் பயிற்சியையே பெறாத மனிதருக்கு அதனைத் தடைசெய்ய அவர்கள் முயல்கின்றனர் (4:13; 5:28). ஆனால், அது வீண் முயற்சியே. யூதேயாவில் பரவிய பின்னர், இப்படிப்பினையானது மொத்தக் கிரேக்க உலகில் பெரும் மக்கள் திரளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அது வார்த்தை (18:11), சான்று நற்செய்தி என்று அடையாளம் காணப்படுகிறது. இதயங்களுக்குள் அது இடம் பெறுகிறதென்றால், ஆவியின் ஆற்றல் துணை செல்வதே அதற்குக் காரணமாகும் (2:17 தொ). இந்த ஆவியின் அபிடேகம் கிறிஸ்தவர்கள் மீது தங்கி, எல்லாவற்றிலும் அவர்களைப் படிப்பிக்கிறது (யோவா 2:27).

இ. மேலும் அதே ஆவியானவர் தமது அருங்கொடைகளால் (1 கொரி 12:8.29),

திருச்சபையில் அப்போஸ்தலர்களைத் தவிரப் போதிக்கும் பணியில் அவர்களுக்கு உதவுகின்ற மற்ற ஆசிரியர்களையும் எழுப்புகின்றார். இவர்கள் இளம் சமுதாயத்தினருக்கு நற்செய்தியின் உட்பொருளைத் தீர்மானித்து விரிவாக்கப் பணிக்கப்பட்ட போதகர்கள் ஆவர் (அ.ப. 13:1; எபே 4:11). அதே நேரத்தில் விசுவாசத்தின் விதிமுறையாகிய கோட்பாட்டின் உருவம் வடிவமைக்கப்படுகிறது (உரோ 6:17). மேய்ப்புப்பணித் திருமுகங்களின் காலத்திற்குள், அது ஏற்கனவே ஒரு பாரம்பரிய அமைப்பைக் கொண்டிருக்கிறது (1 திமோ 4:13.16; 5:17; 6:1 தொ). விசுவாசமானது போலி ஆசிரியர்களால் பரப்பப்படுகின்ற (2 திமோ 4:3:2 பேதுரு 2:1) தவறான அல்லது விளையாட்டுத் தனமான படிப்பினைகளால் அச்சுறுத்தப்படுவதாகக் காணப்படும் போது (உரோ 16:17; எபே 4:3.14; 1 திமோ 1:3; 6:3; திருவெளி 2:14-15.24), இந்த அதிகாரபூர்வ சேமிப்பைப் பாதுகாத்து மற்றவருக்களிப்பது போதகர்களின் முதன்மையான அக்கறைகளில் ஒன்றாக உள்ளது.

**கனமேல்** (HANAMEL - *இறைவன் கருணை மிக்கவர்)*

எரேமியா இறைவாக்கினரின் பெரியப்பாவான சல்லூம் என்பவரின் மகன் (எரே 32:7-15). எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது இவரிடமிருந்துதான் எரேமியா அனத்தோத்து என்னுமிடத்தில் ஒரு நிலம் வாங்கினார்.

**கனவுகள்** (DREAMS)

பண்டைக்காலமும் இக்கால அறிவியலும் மாறுபட்ட காரணங்களுக்காகக் கனவுகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கின்றன. பண்டைக்காலமானது இயற்கைக்கு மேற்பட்ட உலகுடன் மனிதன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழியை அவற்றில் கண்டது. ஆனால், இக்கால அறிவியலானது மனித ஆளுமையின் ஆழத்தின் வெளிப்பாட்டை அவற்றில் காண்கிறது. இவ்விரண்டு கருத்துக்களும் பொருந்தாதவை அல்ல; இறைவன் மனிதன்மீது செயல் ஆற்றுகிறார் எனில், அது அவனுடைய மனதின் ஆழத்திலாகும்.

1. பழைய ஏற்பாடு:-

இஸ்ராயேலுக்கு முன்சென்றவர்களும், அதனைச் சூழ்ந்த மக்களும் கனவுகளை இறை வெளிப்பாடாகக் கண்டனர். கனவுகளை அதிகாரபூர்வமாக விளக்குபவர்களைத் தங்களது பணியில் வைத்திருக்குமளவிற்கு எகிப்து மற்றும் மெசபொத்தாமியா அரசர்களுக்கு அவை அடிக்கடி நிகழ்ந்தன (ஆதி 41:8; எரே 27:9).

இஸ்ராயேலிலும் வெளிப்பாடானது கனவுகளில் ஏற்பட்டது எனப் பழைய ஏற்பாடு குறிப்பிடுகிறது. இவற்றுடன் இரவில் நிகழும் இறைவனின் வார்த்தைகளும் காட்சிகளும் சேர்க்கப்படவேண்டும். இவ்வெளிப்பாடுகள் சில நேரங்களில் தனி நபர்களுக்கும் (யோபு 4:12-21; சீரா 34:6), யூதரல்லாதோருக்கும் (ஆதி 40-41; தானி 4) உரைக்கப்பட்டன. ஆனால், பெரும்பாலானவை தமது மக்களுக்கான இறைவனின் திட்டத்தைப் பற்றியனவாகவே இருந்தன: அவை மூதாதையருக்கும் (ஆதி 15:12-21; 20:3-6; 28:11-22; 37:5-11; 46:2-4: எலோகிம் மரபில் இவ்வழியிலேயே இது எப்போதும் உள்ளது), கிதயோனுக்கும் (நீதி 6:25-26), சாமுவேலுக்கும் (1 சாமு 3), நாத்தானுக்கும் (2 சாமு 7:4-17), மற்றும் சாலமோனுக்கும் (1 அர 3), அறிவுரை அளிக்கின்றன, வழிகாட்டுகின்றன. நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர், மீட்பின் வருகையைப் பற்றிச் செக்கரியாவிற்கும் (1-6), தானியேலுக்கும் (2:7) கனவுகளில் கூறப்பட்டது. ஆவியைப் பொழியும் காலத்திற்கு யோவேல் கனவுகளை வாக்களிக்கிறார் (3:1).

தங்களுடைய யூதரல்லா அயலாரைப் போன்று, இஸ்ராயேலானது அதிகாரபூர்வ கனவு விளக்குநர்களைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சாமுவேல், நாத்தான் மற்றும் சாலமோன் ஆகியோர் எந்த உதவியுமின்றி அவற்றைப் புரிந்து கொண்டனர். மேலும்,

கோவில்லும் அரசவையிலும் இத்தகைய விளக்குநர்கள் காணப்படவில்லை. ஆனால், யூதரல்லாத அரசர்களுக்கு ஆண்டவர் கனவுகளை அனுப்பியபொழுது, யூதரல்லாத விளக்குநர்களுக்கு இயலாத நிலையில், உண்மையான இறைவனின் ஊழியர்களே இவற்றின் மறைபொருளை விளக்கினர் (ஆதி 41; தானி 2:4). இதன் மூலமாக, ஆண்டவர் மட்டுமே மறைபொருளின் தலைவர் என்றும், தமக்குரியவர்களுக்கு அவர் மட்டுமே அவற்றை வெளிப்படுத்தினார் என்றும் அறிந்துகொள்ளுமாறு யூதரல்லாதோர் கட்டாயப்படுத்தப்பட்டனர். மெய்யான மற்றும் போலியான இறைவாக்கினர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை இறைவாக்கினர்கள் பிரதிபலித்ததுபோன்று, பொய் கூறும் கனவுகளை அவர்கள் கண்டித்தாலும் (உப 13:2-6; எரே 23:25-32; செக் 10:2), தங்களுடைய முன்னோரின் கனவுகளின் இறைதொடக்கத்தை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால், சாலமோனுக்கும் செக்கரியாவிற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளிலும், இறைவாக்கினர் காலம் முழுவதிலும் விவிலியமானது கனவுகளைப் பற்றிக் குறிப்பிடாதது தனக்கேயுரிய பொருளைக் கொண்டுள்ளது. இக்காலத்தில் கனவானது தனிநபருக்காக (முற்காலத்தில் மூதாதையர் கனவுகளைக் கண்டனர், ஆனால் அக்காலத்தில் மக்களோ இறைவாக்கு இயக்கமோ இருக்கவில்லை), அல்லது யூதரல்லாதவருக்காக ஒதுக்கப்பட்ட, வெளிப்பாட்டின் இரண்டாம் தர வடிவமாகக் கருதப்பட்டதை இது சுட்டுகிறது. மற்றொரு புறத்தே இறைவாக்கு வார்த்தையானது மக்களுக்கு உரைக்கப்பட்ட மிக உயர்ந்த வடிவான வெளிப்பாடாக இருந்தது.

2. புதிய ஏற்பாடு:-

இயேசு கண்டதாக எந்தக் கனவையும் புதிய ஏற்பாடு கூறவில்லை. இதற்கு அவரது உளவியலைப் பற்றிப் பேசாதது காரணமாக இருக்கலாம். இதைவிட, எவ்வித இடையுதவியும் இன்றித் தந்தையை அறிகிற ஒருவரை அது அவரில் காண்பதும் முக்கிய காரணமாக இருக்கலாம்.

ஆனாலும் புதிய ஏற்பாட்டிலிருந்து கனவுகள் முற்றிலுமாக மறைந்துவிடவில்லை. பெந்தகொஸ்தே நாளில், யோவேலினுடைய இறைவாக்கின் (3:1) நிறைவேற்றம் பற்றிப் பேதுரு குறிப்பிடுவதில், இறுதி நாட்களிலான ஆவியின் வெளிப்பாடாகக் கனவுகள் கருதப்படுகின்றன (அ.ப. 2:17). அப்போஸ்தலர் பணியானது பவுலின் பல இரவுக் காட்சிகளைக் குறிப்பிடுகிறது (16:9-10; 18:9; 23:11; 27:23). இக்காட்சிகள் அப்போஸ்தலரை அவரது பணியில் வலிமைப்படுத்தி வழிகாட்டினாலும், அவருக்கு எவ்விதக் கோட்பாட்டுச் செய்தியையும் கொண்டுவரவில்லை. யூதரல்லாதோருக்கு வெளிப்பாட்டை அளிக்கவும் (மத் 27:19) அல்லது இயேசுவின் குழந்தைப்பருவத்தில் யோசேப்புக்கு வழிகாட்டவும் (1:20; 2:13-19.22: இவை பழைய ஏற்பாட்டு முறையிலமைந்த ஆண்டவருடைய தூதரின் மூன்று காட்சிகள்), பழைய ஏற்பாட்டிலுள்ளவற்றையொத்த பல கனவுகளை மத்தேயு குறிப்பிடுகிறார். இவ்வாறு, பழைய ஏற்பாட்டின் தொடக்க காலங்களில் இறைவனால் உபயோகிக்கப்பட்ட வெளிப்பாட்டின் இவ்வித முறைகளைப் புதிய ஏற்பாடு அறிந்திருக்கிறது. அது இறைவாக்கினர்களைப்போன்று, தனி நபரை (சில நேரங்களில் யூதரல்லாதவரை) ஒளிமயமாக்கக் குறிப்பிடப்பட்ட ஒரு வெளிப்பாட்டினை அவற்றில் காண்கிறது. ஆனால், முழுத்திருச்சபைக்கும் உரைக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவில் மிக உயர்ந்த முறையில் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைக்குக் கீழ்ப்பட்டவைகளாக அவற்றை அது கருதுகிறது.

**கனனியா** HANANIAH - யாவே கருணைமிக்கவர்)

1. தாவீது காலத்தில் ஏமான் குழுவைச் சேர்ந்த ஒரு பாடகர். ஆலயப் பாடகர்களின் பதினாறாம் பிரிவின் தலைவர் (1 நாள் 25:4.23).

2. ஊசியாவின் படையிலிருந்த படைத் தலைவர்களுள் ஒருவர் (2 நாள் 26:11).

*3.* எரேமியாவின் காலத்திலிருந்த அரசன் யோயாக்கிமின் உயர் அதிகாரிகளில் ஒருவரான செதேக்கியாவின் தந்தை *(எரே 36:12).*

*4.* எரேமியாவுக்கு எதிராக இறைவாக்குரைத்த போலி இறைவாக்கினர், கிபயோனைச் சேர்ந்தவர். அசூரின் மகன். இவர் பாபிலோனிய மன்னன் விரைவில் வீழ்ச்சியடைவான் என்றும், யூதாவினின்று பாபிலோனுக்குச் சென்றவர்கள் விரைவில் திரும்பி வருவார்கள் என்றும் எரேமியாவின் இறைவாக்குக்கு எதிராகக் கூறினார் *(எரே 28:1.5.10-17).* இந்த விவரிப்பு எரேமியா காலத்திலிருந்த போலி இறைவாக்கினர்கள் பிரச்சனையைப் பற்றியும், இறைவாக்கினர்களின் அடையாளச் செயல்களின் முக்கியத்துவத்தையும் தெளிவாகக் கூறுகிறது *(எரே 28).* இவர், யோவேயின் வார்த்தையின்படி, இரு மாதங்களுக்குப்பின் இறந்தார் *(28:12-17).*

*5.* எரேமியா எருசலேமை விட்டுப் பென்யாமின் நாட்டுக்குப் போனபோது, அவர் கல்தேயர் பக்கம் சேரப்போவதாய்க் குற்றம் சாட்டி அவரைப் பிடித்த காவலாளியான இரியாவின் தாத்தா *(எரே 37:13).*

*6.* தானியேல் நூலில் விவரிக்கப்படும் மூன்று இளைஞர்களில் ஒருவரின் எபிரேயப் பெயர். நெபுக்கதுனேசாரின் அண்ணகர், இவரது எபிரேயப்பெயரைச் சதிரக்கு என்று மாற்றினார் *(தானி 6:6-7.11.19).*

*7.* செருபாபேலின் மகன். பெலத்தியா, எசாயா ஆகியோரின் தந்தை. இவர் தாவீதின் வழித்தோன்றல் *(1 நாள் 3:19-21).*

*8.* சாசாக்கின் மகன். பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர் *(1 நாள் 8:24).*

*9.* பெபாய் குடும்பத்தைச் சேர்ந்தவர். எஸ்ராவின் காலத்தில் புறவினமனைவியரை விலக்கியவர்களில் ஒருவர் *(எஸ் 10:28).*

*10.* நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டுவதற்கு உதவிய நறுமணப் பொருள் விற்பனையாளர் *(நெக 3:8).*

*11.* அரண்மனைத் தலைவன். நெகமியா தன் சகோதரன் கனானியிடமும் இவரிடமும் எருசலேமின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார் *(நெக 7:2).* எபிரேய மொழியில் இந்த வசனத்திற்குக் ''கனானி என் சகோதரன்'' என்று பொருள் அளிக்கலாம். அதாவது ''கனனியா, கோட்டை ஆளுநன்''. எபிரேய மொழியில் கனானி என்பது கனனியா என்பதன் கருக்கமாகும்.

*12.* உடன்படிக்கைப் பத்திரத்தில் கையொப்பமிட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் *(நெக 10:23).*

*13.* எருசலேம் மதிலை அர்ப்பணிக்கும் போது எக்காளத்தை ஏந்தி நின்ற குருக்களில் ஒருவர். பெரிய குரு யோயாக்கிம் காலத்தில் எரேமியாவின் வீட்டுத் தலைவர். இவர் செருபாபேலோடு நாடு திரும்பியவர் *(நெக 12:12.41.*

*14.* நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டியவர்களில் ஒருவர் *(நெக 3:30).* *10-*இல் கூறப்பட்ட கனனியாவும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம். பட்டியலில் இது தெளிவாக இல்லை. அதேபோல *9;12;14-*இல் காணப்படும் மூவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

*15.* எஸ்ராவோடு நாடு திரும்பிய ஒரு லேவியர் குடும்பத்தின் முன்னோர் *(காண். எஸ் 8:19).*

**கனனேலின் கோபுரம்** (TOWER OF HANANEL - கருணைமிக்க இறைவனின் கோபுரம்)

எருசலேம் நகரின் வடக்குக் காப்பரணில் ஒரு கோபுரம். யாருடைய பெயரால் இக் கோபுரம் கட்டப்பட்டது என்பது தெரியவில்லை.

முதலில் எரேமியாவாலும் *(எரே 31:38),* நாடு கடத்தப்பட்டபின், திருத்தி அமைக்கப்பட்ட எருசலேமின் வடகிழக்கு மூலை என்று செக்கரியாவாலும் *(செக் 14:10)* இது குறிப்பிடப்படுகிறது. இது மீன் வாயிலுக்கும் ஆட்டுவாயிலுக்கும் இடையில் அமைந்

திருந்தது (நெக 3:1; 12:39). இது ஆலயத்தின் கோட்டை என்றழைக்கப்பட்டது (2:8). மக்க பேயர்களின் தலைமையகமாகவும் இருந்தது (1 மக் 4:41). யோசிப்பசின் கூற்றுப்படி, இது 4-ஆம் அந்தியோக்கு எப்பிபானால் ஒரு செலூக்கிய அக்ராவாகவும் முதலாம் யோவான் இரிக்கானுவால் கசமோனிய அரணாகவும் கட்டப்பட்டது. இங்கு, ஒவ்வொரு மூலையிலும் ஒரு கோபுரத்தைக் கொண்ட அந்தோனியாக் கோட்டையைப் பெரிய ஏரோது கட்டினார். இவற்றில் உயரமான கோபுரம் ஆலயப் பகுதியைக் கட்டுப் படுத்தியது.

**கனானி** (HANANI - கருணையுடைய)

1. இறைவாக்கினர் ஏகூவின் தந்தை (1 அர 16:1.7; 2 நாள் 19:2; 20:34). 2 நாள் 16:7-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் இறைவாக்கினர் கனானியும் இவரே. இவர் ஒரு காட்சியாளர். அரசன் ஆசா சிரிய அரசன் பென்-அதாதோடு கொண்டிருந்த கூட்டணியைக் குறை கூறியதால் அவனால் சிறை செய்யப் பட்டார் (2 நாள் 16:7-10)

2. ஏமான் குழுவைச் சேர்ந்த ஆலயப் பாடகர்களில் ஒருவர். தாவீது காலத்தில் ஆலயப் பாடகர்களின் பதினெட்டாம் பிரிவின் தலைவர் (1 நாள் 25:4.25).

3. எஸ்ராவின் காலத்தில் புறவினத்தைச் சேர்ந்த மனைவியரை விலக்கிய குருக்களில் ஒருவர். இம்மேர் குடும்பத்தைச் சேர்ந்தவர் (எஸ் 10:20).

4 அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த யூதர்களைப் பற்றியும், எருசலேமைப் பற்றியும் செய்திகள் கொணர்ந்த இவர் நெகமியாவின் சகோதரர் அல்லது உறவினர் ஆவார். இவர் கொணர்ந்த செய்திகளைக் கொண்டு நெகமியா செயலாற்றத் தொடங்கினார். பிறகு எருசலேமின் ஆட்சிப் பொறுப்பு இவரிடமும் கனனியாவிடமும் ஒப்படைக் கப்பட்டது (நெக 1:2-3; 7:2).

5. நெகமியா காலத்தில் எருசலேமின் மதில் அர்ப்பணிக்கப்படும்போது இருந்த ஒரு பாடகர் (நெக 12:36). மேலே 3-ஆவது எண்ணில் கூறப்பட்டிருப்பவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**கனான்** (HANAN - யாவே கருணையுடையவர்)

1. பென்யாமினின் வழித்தோன்றலும், சாசாக்கின் மகனும் ஆவார் (1 நாள் 8:23).

2. பென்யாமின் குலத்தில், சவுல், யோனத்தான் வழியாக வந்த வழித்தோன்றல்களில் ஒருவர் (1 நாள் 8:38; 9:44).

3. தாவீது அரசனின் படையிலிருந்த வல்லமைமிக்க ஒரு படைவீரர். மாக்காவின் மகன் (1 நாள் 11:43).

4. கோவிலின் கருவூல அறையில் தங்கியிருந்த இறைவாக்கினர் குழுவின் தலைவர். இகிதலியாவின் மகன் (எரே 35:4).

5. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு பாலஸ்தீன நாட்டுக்குத் திரும்பிய ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் தலைவர் (எஸ் 2:46; நெக 7:49).

6. எஸ்ராவால் கூட்டப்பட்ட சபையில் திருச்சட்ட நூலை மக்களுக்கு விளக்கிக் கூறிய லேவியருள் ஒருவர் (நெக 8:7). உடன்படிக்கையில் இவரும் கையொப்ப மிட்டார் (நெக 10:10:11). இவர் 9-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

7. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மற்றொருவர் (நெக 10: 22).

8. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிறிதொருவர் (நெக 10: 26).

9. கருவூல அறைக் கண்காணிப்பாளர்களுக்குத் துணையாக நெகமியாவினால் நியமிக்கப்பட்டவர் சாக்கூரின் மகள் (நெக 13:13).

**கனி, பலன்.** (FRUIT)

சரியான பொருளில் கனிதரும் தன்மையி

னையோ (திருவயிற்றின் கனி:லூக் 1:42), உருவகப் பொருளில் பெறப்படும் விளைவையோ (ஒருவரது செயல்களின் பலன்: எரே 17:10) குறிப்பிட்டாலும், கனி என்ற சொல்லானது உயிர்வாழும் பொருளால் குறிப்பாக ஒரு படைப்பினால், உருவாக்கப் படுவதைக் குறிப்பிடுகிறது. ஏனெனில் இறைவன் மனிதனைப்போல் பயிரிட்டு விதைவிதைத்தாலும் அவர் கனி தருகிறார் என்று நாம் கூறுவதில்லை. மாறாக, அவரது மகிமையை வெளிப்படுத்த வேண்டிய பலனை அவர் அறுவடை செய்கிறார்.

I. கனி கொடுக்கவேண்டிய கடமை:-

ஒவ்வொரு உயிரிலும் வாழ்வின் வித்தைப் பொருத்திய படைப்புச் செயலானது வெற்றிகரமான ஆசியாகும். தங்களது வகைக்கேற்பக் கனி தருகின்ற கனி மரங்களை நிலமானது உருவாக்க வேண்டும் (ஆதி 1:11-12). விலங்குகளும் மனிதனும் ''பல்கிப் பெருகுங்கள்'' என்னும் கட்டளையைப் பெற்றனர் (1:22.28). நிலத்தில் விதைக்கப்பட்ட உயிரானது அளப்பரிய விதத்தில் கனி தருகின்றது. பயிர் செய்பவன் பலனை அறுவடை செய்வான் என்பது வாழ்வின் அடையாளங்களில் ஒன்றாகும் (ஏச 37:30; 1 கொரி 9:7; 2 திமோ 2:6). ஆகவே இறைவன் தமது திராட்சைத் தோட்டத்தின் கனிகளுக்கு உரிமை கொண்டாடுகிறார். எல்லாச் செயலற்ற தன்மையும் கண்டிக்கப்பட வேண்டியது (யூதா 12); கனிகொடாக் கிளைகள் தீயில் போடப்பட்டு எரிக்கப்படும் (யோவா 15:6; மத் 21:41). காய்க்காத அத்திமரம் நிலத்தில் இருக்க எவ்வித உரிமையும் இல்லை (லூக் 13:6-9). இறுதியாக, வியாபாரச் செயல்பாடுகள் பற்றிய பண்டைக்காலக் கிழக்கத்திய அமைப்பின்படி, ''நான் வரும் வரை வாணிகம் செய்யுங்கள்'' என்றும் தனது உடன்பாட்டின்படி வாழாதவரைத் தண்டிக்க உரிமையாளருக்கு உரிமையுண்டு (லூக் 19:13).

II. இறைவனோடு மனிதனின் ஒத்துழைப்பு:-

1. வாழ்வில் ஆண்டவராகிய இறைவன்:- கனிகளை உருவாக்கும் சாதனங்களை அளிக்காமல் இறைவன் தன்னுடைய படைப்புகளிடம் கனிகளைக் கோருவதில்லை. கனியை உருவாக்குவதில் தனது உழைப்பினால் ஒத்துழைப்பதன் மூலம், முதன்மையாக இது இறைவனின் வேலை என்பதை மனிதன் அறியவேண்டும். பேரின்ப வனத்தில் இறைவனால் விடப்பட்ட ஆதாமிற்கு, அத்தோட்டத்தில் பயிர்செய்து, மரங்களின் கனிகளைச் சேகரிக்குமாறு கூறப்பட்டது. ஆனால், வாழ்வின் மரத்தினுடைய கனியைத் தொடவேண்டாமென அவர் தடுக்கப்பட்டார் (ஆதி 3:22). இது மற்றவற்றோடு, இறைவன் மட்டுமே வாழ்வின் மூலம் என்று அவருக்குக் கூறப்படுவதைச் சுட்டுகிறது. தனது வரலாறு முழுவதிலும், தான் கனி கொடுத்தால் அது பசுமையான தேவதாரு மரமாகவும் வாழ்வின் மெய்யான மரமாகவும் உள்ள ஆண்டவருடைய செயலால்தான் என்பதை (ஓசே 14:9) எப்பிராயிம் (''யோசேப்பை விருத்தியாக்குகிறவர்'' என்று பொருள்படுவது ஆதி 41:52) உணர்ந்து கொள்ள வேண்டும் (உப 26:2); எல்லாவற்றிற்கும் மேலாக இத்தகைய வியத்தகு கனியை அளிக்கின்ற மலர்களையுடைய இறைஞானத்தில் புகலிடம் கொண்டிருக்கவேண்டும் (சீரா 24:17).

2. வாழ்வு தரும் நீர்:- அதே இன்பவனத்தில் பயிர் வளர்வதற்கு, மழையைப் பெய்யச் செய்வதும், மண்ணைப் பயன்படுத்த ஒரு மனிதனை உருவாக்கும் இறைவனுக்கு அவசியமாயிருந்தது (ஆதி 2:5). விவிலிய அடையாளவியலின்படி, நீரானது விதையை முளைக்கச் செய்யாவிடில், மனிதனுடைய உழைப்பினால் நிலமானது தன்னுடைய கனிகளை உண்டாக்க முடியாது. நீரில்லாவிடில் நிலமானது தரிசாகவே இருக்கும். அது சோதோமைப் போன்று ''கனித்துப் பழுக்காத காய்களை மரங்கள் தரும் பாலைவனமாகும்'' (ஞான 10:7). ஒரே பிரமாணிக்கமுள்ள பாறையாகிய ஆண்டவர் இன்றி, மனிதனால் கனிதர இயலாது: ''அவர்களுடைய கொடி முந்திரியானது நஞ்சு போன்றது'' (உப 32:32). மழையின் கருணையால் ''நிலமானது தனது கனியைத் தருவதற்கென''

(யாக் 5:17-18), எலியாவைப்போன்று அவனும் செபிக்க வேண்டும். அப்போது நிலமானது இறைவனின் ஆசியைப் பெற்று, பயன்தரும் பயிரை முளைப்பிக்கும் (எபி 6:7-8). மற்றும், ''நீரருகில் நடப்பட்ட மரத்தைப் போன்று'' (எரே 17:8; சங் 1:3) நீதிமான் ''முதிர்வயதிலும் பலனளிப்பார்'' (சங் 92:14).

3. மனிதனின் பங்கு:- நீரானது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனைச் சார்ந்துள்ளதெனில் நிலத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்வது மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முற்களின் நடுவே விதைக்கப்பட்ட விதையானது முதிர்ச்சியடைவதில்லை (லூக் 8:14); மற்றும், அது விழுகின்ற மண்ணின் தரத்திற்கேற்பப் பலன் தரும் (மத் 13:8). ஆனால் ஒவ்வொரு முறையும் வளர்ச்சியானது மனிதனுடைய முயற்சிகளைச் சார்ந்திருப்பதில்லை; நிலமானது தானாகவே தனது கனிகளை உருவாக்குகிறது (மாற் 4:26-29). ஞானத்தைப் பயிர் செய்ய உழைக்கவேண்டியது அவசியம் என்பதில் எச்சந்தேகமும் இல்லாவிடினும், அதனுடைய சிறப்புமிக்க கனிகளை ஒருவன் கணிக்கலாம் (சீரா 6:19). அதே சமயத்தில் உழைப்பினாலான பணியின் படிப்பினையும், கனிகளுக்காகக் காத்திருப்பதனுடைய பொறுமையின் படிப்பினையும் உள்ளது.

III. நல்ல மற்றும் கெட்ட கனி:-

தனக்கெனக் குறிக்கப்பட்ட வாழ்வின் கனியை இறைவனிடமிருந்து பெறுவதை மட்டுமே விரும்பாமல், ஆதாம், ''பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய'' தோட்டத்து மரங்களுக்குப் பதிலாகச் (ஆதி 2:9) சபிக்கப்பட்ட நிலத்தில் பயிர் செய்யுமாறு தான் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறார். அது முட்களையும் முட்செடிகளையும் விளைவிக்கும் (ஆதி 3:18). நன்மை, தீமை பற்றி அறியும் மரத்தின் கனியைச் சுவைத்த பின்னர், நன்மை எது தீமை எது என்பதைத் தனக்கே தீர்மானிப்பதாக ஆதாம் நடிக்கிறார். அவருடைய கண்களிலேயே அவரது செயலானது பொருள் மயக்கமுள்ளதாக உள்ளது. ஆனால், மனிதனைச் சோதித்தறியும் இறைவன் தமது தோட்டமாகிய இஸ்ராயேல் அளிக்கின்ற கனியின்படி அதைத் தீர்ப்பிடுகிறார். அதனின்று திராட்சைக்கனிகளை எதிர்பார்க்க அவை காட்டுக் கனிகளாக இருப்பதைக் கண்டார் (ஏச 5:1-7). இதயத்தின் எண்ணங்களை உலகம் வெளிப்படுத்துவதுபோலக் கனியானது பழத்தோட்டத்தின் தரத்தை அறிவிக்கிறது (சீரா 27:6). ஆபிரகாமின் பிள்ளைகள் என்று கூறிக்கொண்டு, எவ்வித நற்கனியும் தராதவர்களுடைய பொய்த்தோற்றத்தினைத் திருமுழுக்கு யோவான் வெளிப்படையாகப் பழித்துரைக்கிறார் (மத் 3:8 தொ). ''தன்னுடைய கனியினாலேயே மரமானது அறியப்படும்'' என்று போதிக்கும் இயேசு, பரிசேயத் தோற்றத்தின் கீழுள்ள கொடிய சத்தை வெளிப்படுத்துகிறார் (மத் 12:33 தொ). போலி இறைவாக்கினர்களைக் கண்டறியுமாறு அவர் தமது சீடர்களுக்குப் போதிக்கிறார். ''அவர்கள் கனிகளைக்கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்புதர்களில் அத்திப்பழங்களையோ பறிப்பதில்லை'' (மத் 7:16). மிகப்பொதுவாக ''வாழ்விற்குக் கனிகொடுக்க வேண்டிய'' சட்டத்தில் ''சாவிற்குக் கனிதர'' விரும்பும் மனிதனின் இதயத்தில் தெளிவற்ற தன்மை நிலவுகின்றது (உரோ 7:4 தொ).

IV. கிறிஸ்துவின் ஆற்றலும், ஆவியின் கனியும்:-

ஆனால், கிறிஸ்து இத்தெளிவற்ற தன்மைக்கு அடிபணிந்தார். ''கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால்தான், மிகுந்த பலனளிக்கும்'' (யோவா 12:24) என்று, உலகிற்குமுன் தாம் அறிவித்த பலனளிப்பதன் சட்டத்தின்படி அவர் வாழ்ந்தார்; அது பலியின் நேரத்தை ஏற்றுக்கொண்டு, தந்தையால் மகிமைப்படுத்தப்பட்டதாகும். கிறிஸ்துவின் மூலமாக இயற்கையின் சட்டமானது, கிறிஸ்தவ வாழ்வின் சட்டமாக உருவாயிற்று. ''நானே உண்மையான திராட்சைக்கொடி; என் தந்தையே பயிர் செய்ப

வர்; என் கிளைகளில் கனிகொடாத எக்கிளையையும் அவர் தறித்துவிடுவார்'' (யோவா 15:1-2); கனி தருவதற்கு அது கொடியிலேயே இருக்கவேண்டும் (15:4); அதாவது, கிறிஸ்துவிற்கு விசுவாசமாக இருக்கவேண்டும். இயேசுவுடனான ஒன்றிப்பானது பலனுள்ளதாகவும், தாராளமானதாகவும் இருக்கவேண்டும்: ''கனி தரும் கிளையையோ மிகுந்த கனி தரும்படி கழித்துவிடுவார்'' (15:2). அபரிமிதமாகப் பலன் அளிப்பது சீடனையும், அவனது பொறுமையினையும் தொடர்ந்து தூய்மைப்படுத்துவதை முன்கொண்டுள்ளது. இதுவே இறைவழி ஆகும் (லூக் 8:15). ''கடவுளின் மகிமைக்காகவும் புகழுக்காகவும் கிறிஸ்துவின் மூலம் நாம் கொண்டுள்ள நீதியின் கனியானது முழுமுதிர்ச்சிக்குப்'' பின்னர் வந்துசேரும் (பிலி 1:11; யோவா 15:8).

இறுதிக்காலம் பற்றிய இறைவாக்கானது அப்போது நிறைவேறும். முன்னர் மாட்சிமிக்கதாயிருந்து (யாத் 17:8), பின்னர் உலர்ந்து போன (19:10-14; ஓசே 19:1; எரே 2:21) இஸ்ராயேலின் திராட்சைத் தோட்டமானது தனது கனியை மீண்டும் அளிக்கும். மற்றும் நிலமும் அதனுடைய விளைச்சலை அளிக்கும் (செக் 8:12). ஒருவன் ஞானத்தினால் போதையூட்டப்பட்டவனாகவும் (சீரா 1:16), வாழ்வின் ஊற்றாகவும் உருவாகலாம்; ''நீதிமானுடைய கனி வாழ்வு தரும் மரமாம்'' (பழ 11:30). கிறிஸ்துவினுடைய உயிர்ச்சத்தால் விளைவிக்கப்படும் ஆவியினுடைய கனியின் உட்பொருளைக் குறிப்பிட புதிய ஏற்பாடு நம்மை அனுமதிக்கிறது. இது பலவகையானதல்ல, ஆனால் பலுகக்கூடியது; எல்லாவிதமான குணநலன்களாகவும் விரியக்கூடிய அன்பு ஆகும் (கலா 5:22-23). அன்பு என்பது துணையாளருடைய ''நாவுக்கு இனிப்பாக உள்ள'' பழம் மட்டுமல்ல (உ.ச. 2:3). அன்புக்குரியவரே ''தம் தோட்டத்திற்கு வந்து அதன் சுவைமிக்க கனிகளைச் சுவைப்பார்'' (4:16). காலத்தின் இறுதியில், காலங்களின் வரிசைமுறையானது புதுப்பிக்கப்படுவதை இறைவாக்கினர் கண்டார் (ஆதி 8:22; அ.ப. 14:17). பரிசுத்த இடத்திலிருந்து புறப்பட்டு வரும் வெள்ளத்தின் ஓரமாய் நிற்கும் மரங்கள் மாதந்தோறும் புதிய கனிகளைக்கொடுக்கும் (எச. 47:12). இக்காட்சியைப் பேரின்ப வனக் காட்சியுடன் இணைப்பதன் மூலம் திருவெளிப்பாடானது, யூதரல்லாதோரையும் குணப்படுத்த வல்லதாக உள்ள சிலுவை மரமாக உருவாகிய வாழ்வின் ஒரு மரத்தைப் பற்றியே சிந்திக்கிறது (திருவெளி 22:2).

**கனிஉலோகக் கலவை** (ORE)

உலோகங்கள் பிரிக்கப்படும் பாறை. யோபு 28:3-இல் ''மனிதர்கள் எட்டின மட்டும் மண்ணில் வெட்டிச் சென்று இருட்டிலும் காரிருளிலும் உலோகங்களைத் தேடுகின்றார்கள். மனிதர்கள் வாழுமிடத்திற்குத் தொலைவிலுள்ள பள்ளத்தாக்குகளில் சுரங்கங்கள் தோண்டுகிறார்கள்'' என்ற குறிப்பைக் காண்கிறோம்.

**கனுக்கா** (HANUKKAH - திருநிலைப்படுத்துதல், அர்ப்பணித்தல்)

மறு அர்ப்பணிப்புத் திருவிழா. கி.மு. 165-ஆம் ஆண்டில், யூதா மக்கபேயு புறவினத்தாரின் வழிபாடுகளை ஒழித்து ஆலயத்தைப் புனிதப்படுத்தினார். ஆண்டுதோறும் கிசிலேவு (டிசம்பர்) மாதத்தின் 25-ஆம் நாளை இதன் நினைவு நாளாகக் கொண்டாடினார்கள். காண்க அர்ப்பண விழா.

**கனூன்** (HANUN - சலுகைபெற்ற)

1. அம்மோனியர்களின் அரசன். நாகாசின் மகன். தாவீதின் ஊழியர்களை அவர் அவமானப்படுத்தியதால், இஸ்ராயேலர்கள் இரபா நகரை முற்றுகையிட்டனர். கனூன் அராமேயரைத் துணைக்கு அழைத்தார். இந்த முற்றுகை அரமேயப்போர்வரை தள்ளிவைக்கப்பட்டது (2 சாமு 10:1-14). இறுதியில் இஸ்ராயேலர்கள் இரபா நகரைக் கைப்பற்றி அதன் மக்களை அடிமைகளாக்கினர் (2 சாமு 11:1; 12:26-31). கனூனுக்குப் பதிலாக அவருடைய தம்பி சோபியைத் தாவீது அரசனாக நியமித்தார் (2 சாமு 17:27).

2. சானோவாகு ஊரைச் சேர்ந்த இவர் நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதி

லைக்கட்ட உதவினார் (நெக 3:13.30). நெக 3:30-இல் இவர் 'சாலாப்புவின் ஆறாவது மகனான கனூன்' என்று அழைக்கப்படுகின்றார். தலைமுறைப் பட்டியல்களில் இவர் பெயர் காணப்படவேயில்லை. எனவே, 'சானோவகு ஊரார்' என்பதே மருகி இவ்வாறு வந்திருக்கலாம்.

3. சாலாப்புவின் ஆறாவது மகன். எருசலேம் சுவர்கள் மீண்டும் கட்டப்பட்டபோது உதவியவர் (நெக 3:30). இவரும் 2-இல் கூறப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**கனோக்கு** (HANOCH - ஞானி, அர்ப்பணிக்கப்பட்ட)

1. மிதியானின் மகனும் ஆபிரகாம், கெத்தூரா ஆகியோரின் பேரனுமாவார் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

2. யாக்கோபின் மூத்த மகனான ரூபனின் மூத்தமகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). இவரது வழித்தோன்றல்கள் கனோக்கியர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:5).

**கன்று போடாத இளம்பசு** (HEIFER)

இத்தகைய இளம்பசு புணையடிக்கவும் (ஓச 10:11; உப 25:4) மற்ற விவசாய வேலைகளுக்கும் பயன்பட்டது. இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் மூன்று வயதுள்ள இளம்பசுவும் இடம் பெற்றது (ஆதி 15:9). சாமுவேல் ஓர் இளம் பசுவைப் பலியிட்டார் (1 சாமு 16:2). கொலை செய்தவன் இன்னாரென்று தெரியாத கொலைக்குப் பரிகாரம் செய்தலில், ''நுகத்தடியில் இன்னும் பிணைக்கப்படாததும் கலப்பையால் நிலத்தை உழாததுமான'' இளம் பசுவின் தலை வெட்டப்பட்டது (உப 21:1-9).

சிம்சோன் தன் பெலிஸ்திய மனைவியைக் குறிக்கவும் (நீதி 14:18) எகிப்தையும் (எரே 46:20), பாபிலோனையும் (50:11), கட்டுக்கடங்காத இஸ்ராயேலையும் (ஓசே 4:6), பணிவுடைய எப்பிராயிமையும் (10:11) உருவகமாகக் குறிக்கவும் இளம்பசு பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்ட இடத்தில், புல் தின்னும் இளம்பசு அழிவழக்கத்தின் அடையாளமாகிறது (எரே 50:11).

இடப்பெயரான எகிலாத்து-செலீசியாவை (எச 15:5; எரே 48:34) ''மூன்று வயதுள்ள இளம்பசு'' என்று சில வாசகங்கள் மொழி பெயர்க்கின்றன.

**கன்னாத்தோன்** (HANNATHON - கருணையுடைய, தயவுடைய)

செபுலோன் புதல்வர்கள் வாழ்ந்த நாட்டின் எல்லையில் அமைந்த ஒரு நகரம் (யோசு 19:14). கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்னா கற்பலகையில் இருமுறையும், மூன்றாம் திகிலாத்துபிலேசாரின் வாழ்க்கைக் குறிப்பில் ஒரு முறையும் இந்நகர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேல் ஏல்-பெதைவியே பகுதியில் இந்நகர் இருந்திருக்கலாம். இப்பகுதி நசரேத்துக்கு வடக்கே ஏறக்குறைய 9-கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் ஆக்கோ சமவெளியின் தென் எல்லையில் உள்ள ஏல் கார்பாசு என்ற இடத்தில் இருந்ததாகச் சிலர் வாதாடுகின்றனர்.

**கன்னான்** (COPPERSMITH)

வெண்கலம் அல்லது செம்பு உலோகத்தைப் பயன்படுத்தி வேலை செய்யும் கொல்லன். 2 திமோ 4:14-இல் குறிக்கப்படும் அலக்சாந்தர் ஒரு கன்னான் ஆவார். இவர் திருமுகத்தின் ஆசிரியருக்குப் பெரும் தீங்கிழைத்தார்.

சொற்பொருளியல்படி இவ்வகைக் கொல்லர்கள் கேனியர் என்றழைக்கப்பட்டனர்.

**கன்னிமை** (VIRGINITY)

பண்டைக்காலச் சமயங்களில் கன்னிமை சிறப்பானதொரு புனிதத்தன்மையைப் பெற்றிருந்தது. அனத்து, அர்திமிஸ், அத்தினா போன்ற அக்காலத் தேவதைகள் தங்களது நிரந்தரமான இளமைப்பருவத்தையும், வலிமையும் பொலிவையும் அவர்தம் அழியாமையையும் உறுதிப்படுத்தும் வகையில் 'கற்பு நிறை கன்னியர்' என்றே அழைக்கப்

பெற்றனர். இத்தகைய கன்னிமைக்கு நிறைவான மறைபொருள் கொடுத்து, பழைய ஏற்பாட்டில் கண்டதுபோல், ஒவ்வொரு மனிதனும் தனது விசுவாசம் அன்பின் அடையாளமாக இறைவனுக்குப் படைக்கக்கூடியதொரு ஒப்பற்றபொருள் கன்னிமை என உலகறியச் செய்தது கிறிஸ்துவத் திருவெளிப்பாடேயாகும்.

I. பழைய ஏற்பாட்டில் காணும் கற்பு:-

1. மலட்டுத் தன்மையும் கன்னிமையும்:-

பண்டைக்கால இறைமக்களின் பண்பாட்டில் கன்னிமை மலட்டுத்தன்மைக்கு நிகராகக் கருதப்பட்டது. மலட்டுத்தன்மை ஓர் இழிவானதாகவும் வெட்கத்திற்குரியதாகவும் கருதப்பட்டது (ஆதி 30:23; 1 சாமு 1:11; லூக் 1:25). இதனை இபிதாகுவின் மகள் மகப்பேறு அடையா நிலையில் மரணத்திற்குத் தீர்வையிடப்பட்டபோது, அவள் தன் கன்னிமைக்காக நான்கு மாதங்கள் வருந்தியழுதாள் (நீதி 11:37); ஏனெனில் அவள் மகப்பேற்றிலும் (சங் 127:3), இறைவனின் கிருபையிலும் (சங் 128:3-6) பங்கு பெறமாட்டாள், என்பதிலிருந்தும் அறியலாம். இருந்தபோதிலும் திருமணத்திற்கு முன்னால் கன்னிமையுடையவராய் இருப்பது சிறப்பாகக் கருதப்பட்டது (ஆதி 24:16; நீதி 19:24). உதாரணமாகத் தலைமைக்குரு (லேவி 21:13 தொ) சாதாரண குருகூட (எச 44:22; லேவி 21:17) ஒரு கன்னிகையை மட்டுமே மணக்க முடியும். ஆனால் சிற்றின்ப எல்லைக்குள், சடங்கு முறைத்தூய்மைக்கே அக்கறை காட்டியது (லேவி 12:15). கன்னிமைக்கு உண்மையான அக்கறை காட்டவில்லை.

கிறிஸ்துவத்தின் கன்னிமை குறித்த முன்னேற்பாடானது இறைவனது வாக்குறுதியிலும் அவரது உடன்படிக்கையின் சூழ்நிலையிலும் காணப்படுகிறது. மலடாயிருந்த பெண்டிரை மகப்பேறு பெறச் செய்கிறதன் மூலம், வாக்குறுதியளிக்கப்பட்ட மக்கள், ஆக்க வளமுடையதும் மகப்பேறளிக்கிறதுமான சாதாரண வழிமுறைகளின் மூலம் அல்லாது, ஆண்டவர்தம் சக்திவாய்ந்த முடிவில்லாத் தலையீட்டின் காரணமாகவே உயர்த்தப்படுகிறார்களென்பதை உணர்த்த விரும்புகிறார் இறைவன். மலட்டுத்தன்மையுடையோருக்குக் காட்டப்படும் செயல் நோக்குடைய இந்தச் சலுகையில் இறைவனுடைய தேர்வின் பலன் கருதாமை வெளிப்படுகிறது.

2. தானாக விரும்பி முன்வரும் தன்னடக்கம்:-

கன்னிமை பற்றிய இத்தகைய முக்கிய கருத்தைத் தவிர்த்து, சுயதன்னடக்கத்தைப் பற்றிய வேறுபல நிகழ்ச்சிகளும் காணக்கிடக்கின்றன. இறைவனின் கட்டளைப்படி எரேமியா தன் திருமணத்தைத் துறக்கவேண்டும் (எரே 16:2); ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு அண்மையில் நடக்கவிருக்கும் தண்டனையைப் பறைசாற்றும் ஓர் அடையாளச் செயலாகவே இது இருக்கிறது (16:3 தொ; 10-13). கட்டுப்பாட்டுடன் வாழும் எஸ்ஸேனியர் என்ற யூதத் துறவியர் சட்டத்தின் அடிப்படையினாலான தூய்மை கருதியே தன்னடக்கத்தோடு வாழ்வதாகத் தோன்றுகின்றனர்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் சமயப் பொருளும் தனிச் சிறப்பும் கொண்டிருக்கின்றன. தெபோரா (நீதி 5:7) என்பவள் ஒரு காலத்தில் இருந்தது போலவே, யூதித்து என்பவளும் தான் மேற்கொண்ட கைமையினாலும், நோன்பினாலும் (யூதி 8:4 தொ; 16:22), தனது இனததார்க்கெல்லாம் தாயாகும் தகுதியுடையவளானாள் (16:4.11.17). அவளுடைய வாழ்க்கை முறையானது புதிய ஏற்பாட்டில் கைமை வாழ்வுக்கும் கன்னிமைக்கும் அளிக்கப்பட்ட சாதாரண மரியாதைக்குத் தயாரிக்கிறது. புதிய ஏற்பாட்டில் அன்னா என்பவள் ஆண்டவரோடு நெருங்கி நிலைத்திருக்க எண்ணி மறுமணத்தை மறுக்கிறாள் (லூக் 2:37). மீட்பரின் வருகைக்காகத் தயார் செய்யும் வகையில் கடுந்துறவினை மேற்கொள்ளும் திருமுழுக்கு யோவான், தன்னை மணமகனின் நண்பன் என அழைக்கத் துணிகிறார் (யோவா 3:29).

*3. இறைவனுக்கும் இறைமக்களுக்கு மிடையேயான திருமணம்:-*
*மேற்கண்டபடி, மீட்பரின் முன்னோடி யான திருமுழுக்கு யோவான் இறைவனுக் கும் அவர்தம் மக்களுக்குமிடையே திருமண உறவுகள் பற்றிய இறைவாக்குப் பாரம்பரி யத்தின் வாரிசாகக் காண்பிக்கப்படுகிறார். இதுவே கிறிஸ்துவக் கன்னிமைக்கு முன் னேற்பாடாக இருந்தது. இறைவாக்கினர், பெரும்பாலும் வென்றடைந்த நாட்டிற்குக் (ஏச 23:12; 47:1; எரே 46:11) குறிப்பாக இஸ்ராயேல் நாட்டிற்கு (ஆமோ 5:2; ஏச 37:23; எரே 14:17; 1:15; 2:13), கன்னி என்ற பெயரையே சூட்டுகின்றனர். இது இஸ்ரா யேல் நாட்டின் முழுமை இழந்தமை குறித் தெழும் புலம்பலாகவே இருக்கிறது. இது போன்றே, இஸ்ராயேல், உடன்படிக்கையை மீறியபோது அவளுடைய விசுவாசம் எப் படி இருந்திருக்கவேண்டுமென்பதை நினைவு படுத்துவதுபோல, எரேமியா இறைவாக் கினர், அவளைக் ''கன்னி இஸ்ராயேல்'' (எரே 18 : 13) என்றே அழைக்கின்றார். இதே பட்டம் பின்னர்க் கடவுளுக்கும் அவர்தம் மக்களுக்குமிடையேயான அன்பு, பிரமா ணிக்கம் என்னும் உறவானது புதுப்பிக்கப் படும் தறுவாயில் மீண்டும் குறிப்பிடப்படுகி றது (எரே 31:4,21). இளம் ஆண் பெண் இருவருக்கிடையே நிகழும் திருமணமா னது, கடவுளுக்கும் இஸ்ராயேல் மக்களுக் கும் இடையே மெசியாக் காலத்தில் நடக் கும் திருமணத்தைக் குறிப்பதாக ஏசயா இறைவாக்கினர் எண்ணுகிறார் (ஏச 62:5). தனிப்பட்டதொரு உரிமையின் மூலம், இறைவன், தன் மக்கள், தன்மட்டில் கொண் டுள்ள முழு அன்பினையும், தனக்கென ஒதுக்கிவைக்குமாறு அவர்களைத் தயார் செய்கின்றார்.*

*II. புதிய ஏற்பாடு:-*
*கிறிஸ்துவின் காலத்திலிருந்தே, கன்னி யான இஸ்ராயேல் 'திருச்சபை' என அழைக் கப்படுகின்றாள். கன்னிமை கொள்ளவிரும் பும் விசுவாசிகள் திருச்சபையின் கன்னிமை யில் பங்கு கொள்கின்றார்கள். கன்னிமையா னது, தன்மையாலே இறுதிக்கால இயல் புண்மையாகும். மெசியாத் திருமணத்தின் இறுதி நிறைவில் மட்டுமே தனது முழுப் பொருளையும் அடைகிறது.*

*1. கன்னித் திருச்சபை, கிறிஸ்துவின் துணைவி:- பழைய ஏற்பாட்டில் காணப்படு வது போலவே, புதிய ஏற்பாட்டிலும் கன்னி மையின் தலைமைக்கருத்து இறைவனுக்கும் இறைமக்களுக்குமிடையேயான மண ஒப் பந்தக் கருத்தைக் குறிப்பதாக இருக்கிறது. ஏனெனில், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கு மிடையேயுள்ள ஒன்றிப்பு, மண உறவால் அடையாளப்படுத்தப்பட்டாலும், கன் னிமை ஒன்றிப்பாக இருக்கிறது. ''கிறிஸ்து திருச்சபையை நேசித்தார், அதற்காகவே தம் மைக் கையளித்தார்'' (எபே 5:25). கொரிந்து நகரிலிருக்கும் கடவுளின் திருச்சபையைக் கிறிஸ்துவோடு மண ஒப்பந்தத்தில் பிணைக் கும் புனித பவுல், அதனைக் கற்புள்ள கன்னியாகவே நிறுத்த விரும்புகிறார் (2 கொரி 11:2; எபே 5:27). அத்திருச்சபையின் மட்டில் கடவுள் கொண்டிருக்கும் அன்பார் வத்தைப் போலவே தானும் கொண்டிருப்ப தால் (2 கொரி 11:2), புனித பவுல், அத்திருச் சபையைச் சார்ந்த மக்களின் விசுவாசத்திற்கு எவ்விதக் களங்கமும் எவரும் விளைவிக்க விரும்பவில்லை.*

*2. மரியாளின் கன்னிமை:- திருச்சபையின் கன்னிமையானது சீயோன் மகளான கன்னி மரியாளிடத்தில் உருவாகும் இரு உடன் படிக்கையின் பிணைப்பில் செயல்படத் தொடங்குகிறது. புதிய ஏற்பாட்டில் 'கன்னி' என்ற பெயர் சூட்டப்படுபவள், இயேசுவின் அன்னையாகிய மரியாள் மட்டுமே (லூக் 1:27; மத் 1:23). அவள் தனது கன்னிமை யைப் பாதுகாக்க விரும்பி (லூக் 1:34), மகப்பேறில்லா அநேகப் பெண்களோடு தன் னையும் ஒருத்தியாகக் கருதிக் கொண்டாள். ஒரு காலத்தில் தாழ்வுக்குரியதாக இருந்தது பின்னர் அவளுக்குப் பெரும் பேற்றினைத் தரவிருந்தது.*

*ஒரு காலத்தில் சிறுமையெனக் கருதப்பட் டது, பின்னர் மரியாளுக்கு முன்னமே தீர்வு*

செய்து வைக்கப்பட்டதொரு அருள் வளத்தைத் தரக்கூடியதாக இருந்தது (லூக் 1:48). தூதரது வருகைக்கு முன்னால் மரியாள் கடவுளுக்கே முழுவதும் சொந்தமானவளாக இருக்க விரும்பினாள். மங்கள வார்த்தையின்போது (லூக் 1:38) அவள் கொடுத்த ஒப்புதலின்மூலம் மரியாள், இறைமகனுக்கு முழுமையாகவும் பிரிக்க முடியாதவிதத்திலும், அர்ப்பணிக்கப் பட்டவளாயிருக்கின்றாள். பழைய ஏற்பாட்டில் நீண்டகாலமாகத் தயார் செய்யப்பட்டு வந்த கன்னிமையானது, புதிய ஏற்பாட்டில், கடவுளின் மகனுக்குத் தாயான மரியாளின் கன்னிமையில் நிறைவு பெறுகின்றது. இதுபோன்றே மகப்பேறில்லாப் பெண்களின் வேண்டுதலும் கேட்கப்பெற்று அவர்தம் மகப்பேற்று விருப்பமும் இறைவனால் நிறைவேற்றப் படுகிறது.

3. கிறிஸ்துவ மக்களின் கன்னிமை:- திருமுழுக்கு யோவானும் மரியாளும் கன்னிமையில் நிலைத்திருந்தது போலவே, தானும் நிலைத்திருந்துகொண்டு, அக்கன்னிமையின் உண்மையான பொருளையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட அதன் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்தியவர் கிறிஸ்துவே ஆவார். கன்னிமை என்பதானது ஒரு கட்டளையன்று (1 கொ 2:25). ஆனால் கடவுளிடமிருந்து வரும் நேரடி அழைப்பாகும். அதுவொரு தனிப்பட்ட வரம் (1 கொரி 7:7). ''பிறவியிலேயே அண்ணகராகப் பிறந்தவரும், பிற மனிதரால் அவ்வாறு ஆக்கப்பட்டவருமேயல்லாது விண்ணரசை முன்னிட்டுத் தம்மைத் தாமே அண்ணகராக ஆக்கிக் கொண்டவரும் உளர்'' (மத் 19:12). விண்ணரசு ஒன்றே கிறிஸ்துவக் கன்னிமையை நேர்மையென்று எண்பிக்கிறது. தனிப்பட்ட வரம் பெற்றவர் மட்டுமே இதனையுணர்ந்து கொள்ளுதல் முடியும் (மத் 19:11).

கன்னிமையைக் கைக்கொண்டவர் கடவுளோடு பிளவுபடாது காலமெலாம் கலந்து இருப்பதால், கன்னிமையானது திருமணத்தைக் காட்டிலும் உயர்வாக இருப்பதாகக் காண்கின்றார் புனித பவுல் (1 கொ 7:32-35). ஆகையால் திருமணமானவர்களின் மனம் பிளவுபட்டபோதிலும், மணமாகாது கன்னிமை பூண்டவரது இதயம் கிறிஸ்துவுக்கு முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்ட நிலையில், பிளவுபடாமலிருந்து கடவுளுக்குரியவற்றில் கருத்தாயிருக்கும். இத்தகையோர் கடவுளுக்குப் புறம்பான காரியங்களைச் சகித்துக் கொள்ளமாட்டார்கள்.

புனித மத்தேயு எழுதிய நற்செய்தியில் வரும், 'விண்ணரசை முன்னிட்டு' (மத் 19:12) என்னும் இயேசுவின் வார்த்தையானது, கன்னிமைக்கு அதனுடைய உண்மையான இறுதிக் காலவியல் பருமனைத் தருகின்றது. ''இப்போதுள்ள நெருக்கடியை முன்னிட்டும்'' (1 கொரி 7:26) குறுகிய காலத்தை முன்னிட்டும் (7:29) கன்னிமையே பொருத்தமானதெனப் புனித பவுல் கருதுகின்றார். இல்லறத்தைத் தெரிந்துகொண்டோர், இவ்வுலகத்திற்குக் கட்டுப்பட்டவராயிருக்கின்றனர்; ஆனால் இவ்வவுலக அமைப்போ கடந்து கொண்டே செல்கிறது (7:31). கன்னிமையைக் கைக்கொண்டோர் இக்காலத்தோடு பற்றற்றவராயுள்ளனர். உவமையில் வருவது போன்று (மத் 25:1-6) அவர்கள் மணாளனையும் விண்ணரசையும் எதிர்பார்த்திருக்கின்றனர். திருச்சபையின் கன்னிமையின் நிரந்தர வெளிப்பாடாகக் கன்னிமை பூண்டவரின் வாழ்க்கையானது, கிறிஸ்துவர்கள் இவ்வுலகத்தைச் சார்ந்தவர்களல்லர் என்பதற்குச் சாட்சி கூறுகிறது. கன்னிமையானது திருச்சபையின் இறுதிக்காலவியல் நெருக்கடி நிலையின் நிரந்தரமானதொரு அடையாளமாக இருக்கின்றது; உயிர்த்தெழுதலின் முன் எதிர்பார்த்தலாகவும் உள்ளது. அதிலே, வரும் உலகத்திலே பங்கு பெறத் தகுதிபெற்றோர் வானதூதரைப் போன்றும் இறைவனது புதல்வர்களைப் போன்றும் இருப்பர் (லூக் 20:34 தொ).

ஆகையால் கன்னிமையில் அந்தஸ்தானது திருச்சபையின் உண்மையான நிலையினைக் குறிப்பதாக இருக்கின்றது. விவேகமுள்ள கன்னியரைப் போலக் கிறிஸ்தவ மக்கள் தங்களுடைய மணாளனாகிய கிறிஸ்து

வோடு சேர்ந்து திருமண விருந்தில் பங்கு கொள்ளுமாறு அவரைச் சந்திக்கச் செல்கின்றனர் (மத் 25:1-13). விண்ணக வீடாகிய எருசலேமில் வாழும் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களனைவரும் கன்னியரென்றே அழைக்கப்படுகின்றனர் (திருவெளி 14:4). காரணம் அவர்கள் சிலை வழிபாடான வேசித்தனத்திற்குட்பட மறுத்தவர்கள்; தங்களை முழுதுமாகக் கிறிஸ்துவுக்குள் கையளித்தவர்கள். முழுப்பணிவோடு, செம்மறியானவர் செல்லுமிடமெல்லாம் அவரைத் தொடர்ந்து செல்பவர்கள் (யோவா 10:4.27). இது முதற்கொண்டு அவர்கள் வானக வீட்டைச் சார்ந்தவர்களாயும் செம்மறியின் மணமகளாயுமிருக்கின்றனர் (திருவெளி 19:7.9; 21:9)

**கன்னியின் விண்ணேற்பு** (ASSUMPTION OF THE VIRGIN) - நூல்

கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த, தோசேத்திக்கு, அறிவு நெறிக் கோட்பாட்டு நற்செய்திநூல். புதிய ஏற்பாட்டுப் போலி நூல்களில் ஒன்று. அதில் காணப்படும் பதித போதகத்திற்காக கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் செலாசியன் சட்டத்தால் கண்டனம் செய்யப்பட்டது. இது கோப்டிக்கு, கிரேக்கம், இலத்தீன், சீரியக்கு மொழிகளில் காணப்படுகிறது. இவை பெரும்பாலும் 11-14-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாகும். இந்த வாசகங்கள் விவரங்களிலும் பின்னணியிலும் வேறுபட்டாலும், அடிப்படையில் ஒற்றுமை கொண்டுள்ளன. மரியாளுக்கு உடனடியாக வரவிருக்கும் மரணமும் உருமாற்றமும் உயிர்த்த இயேசுவாலோ தூதனாலோ அவளுக்கு அறிவிக்கப்படுவதும், அவளுடைய உடலைத் தொடுவதால் நிகழும் புதுமையான குணமாகுதல்கள் விவரிக்கப்படுவதும் மனித ஆன்மாவைப் பற்றி இயேசு தம் சீடர்களுக்கு அளிக்கும் உரையும் இந்நூலில் அடங்கியுள்ளன.

**கன்னியின் வெளிப்பாடுகள்** (APOCALYPSES OF THE VIRGIN)

இவை கத்தோலிக்கத் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்படாத நூல்களாகும். இவை கிரேக்க மொழியில் ஒன்றும் எத்தியோப்பிய மொழியில் மற்றொன்றுமாக உள்ளன. ஆனால் இரண்டுமே தண்டிக்கப்பட்டோரின் வேதனைகளைக் கன்னிமரியாளுக்குக் காட்சியில் காட்டுவதுபோல அமைந்திருக்கின்றன. கிரேக்கத் திருவெளிப்பாட்டில், கன்னி மரியின் வேண்டுகோளுக்கிணங்கி அவளுக்கு நரகத்தின் காட்சியைக் காண்பிக்கிறார், மிக்கேல் அதிதூதர். நரகத்தில் அவிசுவாசிகள், மூவொரு இறைவனை மறுப்பவர்கள், கெட்ட குருக்கள், குருக்களை மதிக்காத பெண் துறவியர், இயேசுவைக் கொலை செய்த யூதர்கள் மற்றும் கொலைகாரர்கள் துன்புறுவது காட்டப்படுகிறது. இக்காட்சியைக் கண்ட கன்னிமரி மனவேதனையுற்று, அவர்களுக்கான தனது மன்றாட்டில் உதவிடுமாறு புனிதர்களைக் கேட்கிறார். இறுதியில் தன்மகனையே சந்திக்கிறாள். அவர், நரகத்தில் துன்புறுவோருக்கு, ஐம்பதாம் நாள் விழாவிற்குப்பின் வரும் நாட்களில் ஓய்வு அளிக்கிறார்.

மற்ற வெளிப்பாடு எத்தியோப்பிய மொழியில்தான் உள்ளது. இது கிரேக்க மொழியில் எழுதப்பட்டு அரபிக் அராபிய மொழிக்கும், பின் அதிலிருந்து எத்தியோப்பிய மொழிக்கும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். இது பவுலின் வெளிப்பாடு என்ற நூலிலிருந்து திருடப்பட்ட கருத்துக்களைக் கொண்ட நூலாகும். இதில் கூடுதல் சேர்க்கை, பெண் துறவியரின் கருச்சிதைவு மற்றும் சிசுக்கொலை பற்றிய கருத்துக்களாகும். தனிமையில் கொல்கொத்தாவில் செபித்துக் கொண்டிருந்தபோது தான் கண்ட காட்சியைக் கன்னிமரி யோவானுக்குக் கூறுவதாக இந்த உப்புச்சப்பற்ற நூல் அமைந்துள்ளது. அவளது மகன் தோன்றி ஒரு மாபெரும் இரகசியத்தைக் காட்டப்போவதாகக் கூறுகிறார். காட்சியின் முடிவில், ''இவர்களை மன்னிக்கமாட்டீரா?'' என்று மரியாள் கேட்க, ''அவர்கள் மனம் வருந்தினால் மன்னிப்புப் பெறுவர். ஆனால் இவர்களை எச்சரிக்கத் தவறிய ஆயர்கள், தனது மக்களைக் கண்டிக்கத் தவறிய ஏலியைப்போலவும், ஒரு மாட்டிற்காகத் தனது புதல்வியர்களை

விற்ற போலாவைப் போலவும் நடத்தப்படுவர்'' என்று மகன் கூறுகிறார்.

**கன்னியேல்** (HANNIEL - இறைவன் கருணை மிக்கவராக இருந்தார்)

1. மனாசேயின் கோத்திரத் தலைவனும், எபோதுடைய புதல்வனுமாவார் (எண் 34: 23). யோர்தானுக்கு மேற்கில் கானான் நாட்டில் குடியேறவிருந்த பத்துக் கோத்திரத்தாருக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுக்க எலயாசர், யோசுவா ஆகியோரின் தலைமையில் நியமிக்கப்பட்ட கோத்திரத் தலைவர்களில் இவரும் ஒருவர். கன்னியேல் என்ற பெயரும், மற்றத் தலைவர்களின் பெயர்களும் கானான் நாட்டின் புதிய வாழ்வுக்கு இஸ்ராயேலர்கள் இறைவனைச் சார்ந்திருக்கின்றனர் என்று உணர்த்துகின்றன.

2. ஆசேரின் குலத்திலே குடும்பத் தலைவராகவும், படைத்தலைவராகவும் விளங்கியவர்; உல்லாவுடைய புதல்வர் (1 நாள் 7:39).

**கன்னே** (CANNEH)

தீரோடு வியாபாரத்தொடர்புடைய மெசபொத்தாமிய நகர் (எச 27:23). இது கலினேயாகவோ (ஆமோ 6:2) கலினோவாகவோ (எச 10:9) இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

# கா

**காகசு** (GAASH - நில அதிர்ச்சி)

*1. தனது 110-ஆவது வயதில் உயிர்நீத்த யோசுவாவை இஸ்ராயேலர் திமினாத்து-செராகுவில் அவருக்குச் சொந்தமான ஒரு நிலத்தில் அடக்கம் செய்தனர் (யோசு 24:30; நீதி 2:9). இவ்விடம் எப்பிராயிமின் மலை நாட்டில் காகசு மலைக்கு வடக்கே உள்ளது. காகசு செக்கேமுக்குத் தென்மேற்கில் 32 கி.மீ. தொலைவில் உள்ளது.*

*2. காகசின் நீரோடைகள் ஆற்றுப்பகுதி(சம வெளி). இப்பகுதியில் தாவீதின் முப்பது வலிமைமிக்க வீரர்களில் ஒருவருடைய வீடு இருந்தது (2 சாமு 23:30; 1 நாள் 11:32).*

**காகல்** (GAAL - அருவருப்பான)

*ஏபேதுவின் மகன்; இவர், அரசாட்சி செய்த அபிமெலக்குக்கு (3) எதிராகச் செக்கேமியர் கிளர்ச்சியை நடத்தினார். அப்பொழுது நகரின் தலைவன் செபூல் கோபமுற்று மறைமுகமாகச் செய்தியை அரசருக்குத் தெரிவித்தான். அபிமெலக்கும் தன்னுடைய எல்லாப் படைகளோடும் இரவில் செக்கேமைச் சுற்றிப் பதுங்கியிருந்தான். காகல் தன் சகோதரர்களோடு அங்குப் போரிட வந்தார். ஆனால் செபூலின் சூழ்ச்சியால் காகல் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய ஆள்களும் இறந்துபோயினர் (நீதி 9:26-41).*

**காகாபு** (HAGAB - வெட்டுக்கிளி)

*பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த ஆலய ஊழியர்களின் குடும்பம் ஒன்றின் தலைவர் (எஸ் 2:46). இதற்கு இணையாக உள்ள நெக 7:48-இல் இந்தப் பெயர் இல்லை.*

**காகித்து** (HAGGITH - விழாநாளில் பிறந்த)

*தாவீதின் ஒரு மனைவி. இவள் அதோனியாவின் தாய் ஆவாள் (2 சாமு 3:4; 1 அர 1:5.11; 2:13; 1 நாள் 3:2).*

**காகியா** (HAGGIAH - விழா நாளில் பிறந்த)

*ஒரு லேவியர். மெராரியின் வழித்தோன்றல் (1 நாள் 6:30).*

**காகீ** (HAGGI - விழா நாளில் பிறந்த)

*காதுவின் இரண்டாம் புதல்வர். யாக்கோபு, சிலிப்பா ஆகியோரின் பேரன் (ஆதி 46:16; எண் 26:15). காகியரின் இனப்பெயர் குலமுதியவர்.*

**காகீயர்** (HAGGITES)

*காகீயின் வழித்தோன்றல்கள் (எண் 26:15). காண்க:காகீ.*

**காக்கை** (Raven)

*விவிலியத்தில் காக்கை என்ற பெயர் பல வகைப் பறவைகளை உள்ளடக்குகிறது. காக்கைகள் மிகக் கறுமையாயிருக்கும் (உ.ச.5:11). காக்கை பொதுவாகக் கீழே கிடப்பதை எடுத்து உண்பது என்றாலும் பலமற்ற, எதிர்ப்புக்காட்டாத சிறு விலங்குகளைக் கொன்று தின்னும் இயல்புடையது (பழ 30:17).*

*தூய்மையற்ற பறவைகளின் வரிசையில் ''காக்கையும் அதன் இனமும்'' பற்றிக் குறிப்பிடப்படுகிறது (லேவி 11:15; உப 14:14); இதிலிருந்து ''காகம்'' என்ற பெயரில் பல வகையான அதே இனத்தைச் சேர்ந்த பறவைகள் உள்ளன எனத் தெரிகிறது. திரிஸ்திராம் என்பவர் பாலைவனத்தில் இவற்றின் எட்டு வகைகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். தனக்கும், தனது குஞ்சுகளுக்கும் உணவு தேடிக்கொள்ளும் காகத்தின் பண்பு, இறைவன் தம் படைப்புக்குக்காட்டும் அருள் பாலிப்புப் பராமரிப்பை எடுத்துக்காட்ட, பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் எடுத்துக்கூறப்படுகிறது (யோபு 38:41; சங் 147:9; லூக் 12:24; மத் 6:26). காக்கைகளைச் சிறப்பித்துக் கூறும் இரு பகுதிகள் வெள்ளம் முடிந்த நிகழ்ச்சியும் (ஆதி 8:7) எலியாவுக்குக் காகம் உணவு கொடுத்ததுமாகும் (1 அர 17).*

*காசா* (GAZA - வலிமையான)

பாலஸ்தீனத்தில் தென்மேற்கில் அமைந்துள்ள நகரம் இது. பெலிஸ்தியாவில் உள்ள 5 முக்கிய நகரங்களுள் தென்கோடியில் அமைந்துள்ளது. எகிப்திற்குச் செல்லும் வழியிலும், கடற்கரைக்கு 5 கி.மீ. தொலைவிலுமாக இது அமைந்துள்ளது.

விவிலியத்தில் இந்த நகரம் இருபது முறையும், மற்ற இலக்கியங்களில் அடிக்கடியும் காணப்படுகிறது. வரலாற்றில் முக்கியமான இடமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. நீண்ட வரலாற்றையும் கொண்டுள்ளது. இது ஒரு கடற்கரைத் துறைமுகமல்ல. மாறாக ஆசியாவிற்கும் எகிப்திற்கும் செல்லுகின்ற ஓர் இராணுவ வழியாக அமைந்திருக்கின்றது. தென் அரேபியாவோடு வியாபாரம் கொண்டதற்குச் சான்றுகளும் உள்ளன.

காசா நகரம் கானானியர்கள் காலத்தில் அமைந்த ஒரு பழைய நகரம் (ஆதி 10:19; உப 2:23). காலத்தால் முந்திய எகிப்தியக் குறிப்புகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இது எகிப்தியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மூன்றாம் துத்துமோக தமது ஆசியப் படையெடுப்பைத் தொடங்குமுன் இங்குத் தங்கினார். அமர்னா ஏடுகளும் காசா எகிப்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்றும் ஆனால் கபிருகளின் ஆபத்துக்குட்பட்டிருந்தது என்றும் கூறுகின்றன.

இஸ்ராயேலர் காசாவில் காலடி வைக்க முயற்சித்தனர். ஆனால் அங்கு வந்த பெலிஸ்தியர்கள் தென் கடற்கரைப் பகுதியைப் பிடித்துக் காசாவைத் தமதாக்கிக் கொண்டனர் (யோசு 10:41; 11:22; 13:3; 15:47; நீதி 1:18; 6:4; 16:1-2:21; 1 சாமு 6:17). சாலமோனின் எல்லை காசாவரை சென்றது. ஆனால் அதை உள்ளடக்கவில்லை (1 அர 4:24).

ஏதோமோடு நடத்திய அடிமை வியாபாரத்திற்காக, ஆமோஸ், கி.மு. 8-ஆம் நூற்றாண்டு மத்தியில், காசாவைக் கண்டனம் செய்கிறார் (ஆமோ 1:6-7). இது இங்கு நடந்த வலுவான வியாபாரத்திற்குச் சான்று கூறுகிறது. ஆனால் இது ஒழுக்க நெறியுடன் நடந்தது என்று கூறமுடியாது. காசாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண் அடிமைகளைப் பற்றி மினாயன் ஏடுகளும் சான்று கூறுகின்றன. மூன்றாம் திகிலாத்து பிலேசார் (கி.மு. 744-727) தமஸ்குவுக்கும் இஸ்ராயேலுக்கும் எதிராகப் படையெடுத்தபோது, காசாவையும் தாக்கிக் கைப்பற்றினார். அசீரியர்களுக்கு எதிரான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய காசாவின் அரசன், கன்னோ, எகிப்துக்கு ஓடிப்போனார். ஆனால் விரைவில் திரும்பிவந்து தனது சதித்திட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார். கி.மு.721-720-இல், அவரது படைகள் எகிப்தியரோடு சேர்ந்து 2-ஆம் சார்கோனோடு காசாவில் போரிட்டன. அப்போது கன்னோ பிடிபட்டு அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அதன்பின்பு காசா அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்தது. அசீரியாவுக்கு எதிரான கிளர்ச்சியில், யூதாவின் அரசனான எசக்கியா காசாவைத் தாக்கினார் (2 அர 18:8). இதன் விளைவாக, சனகெரிபு படையெடுத்து வந்து, யூதாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றி அதனை அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமான காசாவின் அரசனான சில்லிபெல்லுக்கும் மற்றப் பெலிஸ்திய ஆளுநர்களுக்கும் பங்கிட்டு அளித்தார் (701). எகிப்தை வென்ற ஏசர்கதோனுக்கும் (680-669), அசீரியாவின் கடைசி வலிமைமிக்க அரசனான அசூர்பானிப்பாலுக்கும் (668-633) காசா கப்பம் செலுத்தியது. யூதா பெலிஸ்தியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இக்காலத்தில்தான் காசாவுக்கும் பெலிஸ்தியர்களுக்கும் எதிரான செப் 2:4-7. 13-14-இல் காணப்படும் கசப்பான இறைவாக்குகள் கூறப்பட்டிருக்கலாம்.

பாரவோன் நெக்கோ கல்தேயர்களுக்கு எதிராக அசீரியர்களுக்கு உதவ வடக்கு நோக்கிச் சென்றபோது, காசாவையும் கல்தேயர்கள் வெற்றிகொள்வர் என்று எரேமியா முன்னறிவித்தார் (எரே 25:20; 47:5). நெபுக்கத்னேசாரின் ஏடுகள், காசா, யூதா முதலிய பகுதிகளின் அரசர்கள் பாபிலோனுக்கு அடிமைப்பட்டிருந்தனர் என்று கூறுகின்றன.

காசாவும், பெலிஸ்தியாவும் பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப் பின்பும் யூதர்களால் வெறுக்கப்பட்டன (செக் 9:5). கம்பிசேஸ் காலத்தில் (525) பாரசீகப் பேரரசோடு காசா இணைக்கப்பட்டது. ஆயினும் சுதந்தரமாய் விள்ங்கியது. அலக்சாந்தரைக் காசா இருமாதங்களுக்கு எதிர்த்து நின்றது (322). இக்காலத்திற்குப்பின் பெலிஸ்தியர்கள் மறைந்து போயினர். பாரசீகர்களும் அரேபியர்களுமே அங்கு வாழ்ந்தனர். அங்குள்ள அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பின்பு மீண்டும் அமைக்கப்பட்டுக் கிரேக்கக் கலாச்சாரத்தின் மையமாக விளங்கியது. மக்கபேயர்கள் காலத்தில் யோனத்தானிடம் அடிபணிந்தது (1 மக் 11:61-62). அதற்குப்பின் யூதர்களுக்கு எதிராகக் காசா சதி செய்தது. அதனால் அலக்சாந்தர் யன்னாயுவால் கி.மு. 96-இல் அழிக்கப்பட்டது. பாலைவனமாக்கப்பட்டது' என்று எழுத்தாளர் கூறுகின்றனர். கி.மு.57-இல் உரோமைய காபினு என்பவரால் திரும்பக் கட்டப்படக் கட்டளையிடப்பட்டது. சிலருடைய கருத்துப்படி புதிய இடம் பழையதிலிருந்து சிறிது தொலைவில் கட்டப்பட்டது. எனவே அங்கு இரண்டு காசா நகரம் இருந்திருக்கலாம். அ.ப. 8:26-க்கு விளக்கவுரை தரும்பொழுது இதனால் அங்குச் சில பிரச்சனைகள் எழுகின்றன.

உரோமையர்களின் காலத்தில் காசா புற இனத்தாரின் பண்பாட்டுக் கூடமாக விளங்கியது. கி.பி.400-இலிருந்துதான் பல இன்னல்களுக்கிடையில் கிறிஸ்தவம் அங்கு வேரூன்றியிருக்கிறது. கி.பி.635-இல் மகமதியர்களால் ஆட்கொள்ளப்பட்டது. சிலுவைப் போருக்குப் பின் ஒரு சிறிது காலத்தைத் தவிர மற்றக் காலங்களில் இன்றுவரை பலமான மகமதிய மையமாகத் திகழ்ந்துள்ளது.

பழைய இடத்தில் இன்றைய நகரம் இருப்பதாலும் மற்றப் பிரச்சனைகளாலும் பயனுள்ள புதைபொருள் ஆராய்ச்சி எதுவும் நடத்தப்படவில்லை. தோண்டிக் கண்டு பிடிக்கப்பட்ட தேல் ஏல்-அசூல் என்ற இடம் முன்பு காசா இருந்த இடமாகக் கருதப்பட முடியாது. அது பேத்து-எகி-லாயிம் ஆக இருக்கலாம். கிரேக்க, உரோமையர்கள் காலத்தில் மயோமாஸ் என்று பெயர்கொண்ட துறைமுகம் கரையோரத்தில் இருந்தது. பின்பு கிறிஸ்தவமாக்கப்பட்ட பின் அது கான்ஸ்டான்டியா என்று பெயர் பெற்றது. அதற்கு வடக்கில் ஆந்திடோன் அல்லது அகிரிப்பியா என்ற இடம் இருக்கிறது.

**காசாவியர்** (GAZAITES)

காசாவில் வாழ்ந்தவர்கள் (நீதி. 16:2). காண்க. காசா.

**காசிப்பியா** (CASIPHIA - வெண்மையான, வெள்ளி ஆசாரிகளின் இடம்)

இவ்விடத்திலிருந்துதான் எருசலேம் ஆலயத் திருப்பணிக்கென லேவியர்களை எஸ்ரா அழைத்து வந்தார் (எஸ் 8:17). இது பாபிலோனில் இருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. இது ஒரு நகரமாகவோ, மாவட்டமாகவோ இருக்கலாம். யூதப் பாரம்பரியம் இதனைப் ''பரந்த வெளி'' என்று கூறுகிறது (ஏச 22:18). இந்த இடத்திற்கு எசக்கியாவின் செயலர் செபினா நாடு கடத்தப்பட்டார்.

**காசூம்** (HASHUM - பரந்த மூக்குடைய)

இவருடைய சந்ததியினர் செருபாபேலின் தலைமையில் நாடு கடத்தலிலிருந்து திரும்பினர் (எஸ் 2:19; நெக 7:22). ஒருவேளை இந்தக் குடும்பத்தினர்தான் எஸ்ரா சட்டத்தை வாசித்தபோது அவரது இடப்புறம் நின்றனர் (நெக 8:4). இவர் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார் (10:18). இக்குடும்பத்தினர் தங்கள் புற இன மனைவியரை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**காசேசு** (GAZEZ - மயிர் கத்தரிப்போர்)

1. கெசிரோனின் பேரன். ஏப்பா என்ற வைப்பாட்டி வழியாகக் காலேபுக்குப் பிறந்த மகன் (1 நாள் 2:46). ஆரானின் சகோதரனாகவும் மகனாகவும் இருமுறை இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாசகம் தெளிவில்லாமல் உள்ளது.

2. காலேபின் பேரனும் ஆரானின் மகனுமாவார் (1 நாள் 2:46). 1-இல் கூறப்பட்டிருப்பவர்க்கு உறவினன்.

காசோர் (HAZOR - வேலி அடைக்கப்பட்ட மனை).

1. கூலே ஏரிக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவிலும், கலிலேயோக் கடலுக்கு வடக்கே 14 கி.மீ. தொலைவிலும், தேல் ஏல்-வக்கர்ஸ் என்றும் அழைக்கப்படும் இக்காலத் தேல் ஏல்-கெதா இருக்கும் இடத்தில் இருந்த வடகலிலேயாவைச் சேர்ந்த முக்கிய நகரமாகும். கூலேச் சமவெளியில் முக்கிய போர் மையத்தில் அமைந்த இந்த இடம் கடல் வழியைக் கட்டுப்படுத்தியது.

இந்த இடம் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய பழிவாசகங்களில் முதலில் காணப்படுகிறது.18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாரி ஏடுகளில் முக்கிய வணிக மையமாகக் குறிக்கப்படுகிறது. மூன்றாம் துத்துமோஸ் (கி.மு. 1490-1436) இரண்டாம் அமென்-கோதேப்பு (1438-1412), முதலாம் சேத்தி (1301-1287) ஆகியோரால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீன ஊர்களின் பட்டியலில் காணப்படுகிறது. அமர்னா ஏடுகளிலும், விவிலியத்திலும் இப்பெயர் இடம்பெறுகிறது.

காசோர் என்பது யாபின் என்ற அரசனால் ஆட்சிசெய்யப்பட்டு வந்த கானானிய நகரமாகும். இவர் யோசுவாவிற்கு எதிராகக் கூட்டாகக் கிளம்பிய வட கானானிய அரசுகளை முன்னின்று வழி நடத்தினார். இந்தக் கூட்டணி முறியடிக்கப்பட்டுக் காசோர் நகர் தீக்கிரையாக்கப்பட்டது (யோசு 11:1-15; 12: 19). ஒரு நூற்றாண்டு கழித்துத் தெபோராவும், பாராக்கும், வட இஸ்ராயேலை ஆண்டு வந்த மற்றொரு யாபினுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். தனாக்கு என்ற இடத்தில் நடந்த இந்தப் போரானது இஸ்ராயேலுக்குச் சாதகமாக முடிந்தது. அதில் சிசராவின் தலைமையில் வந்த யாபின் படைகள் முறியடிக்கப்பட்டன (நீதி 4-5). கூலே சமவெளியைப் பாதுகாக்க, காசோர்நகரைச் சுற்றிச் சாலமோன் மன்னன் அரணைக் கட்டியெழுப்பினார். கி.மு. 732-இல் மூன்றாம் திகிலாத்துபிலேசார் என்பவரால் காசோர் கைப்பற்றப்பட்டது (2 அர 15:29). கி.மு. 147-இல் காசோர் நகரச் சமவெளிப்பகுதிகளில் செலூக்கிய அரசரான இரண்டாம் தெமெத்திரியுவின் படைகளை எதிர்த்து யோனத்தான் வெற்றிகரமாகப் போர் புரிந்தார் (1 மக்க 11:67).

1928-இல் காசோர் நகரத்தினை ஆராய்ச்சி செய்ய ஜான் கர்ஸ்டாக்கு என்பவர் முயன்றார். ஆனால் 1955-56-இல் இகயேல் யாதின் என்பவரால்தான் முழுமையான புதைபொருள் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. காசோர் நகரினைப்பற்றி நடத்திய அகழ்வாராய்ச்சியில் கைக்சோஸ், அமர்னா காலத்தைச் சேர்ந்த நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சில யோசுவாவால் அழிக்கப்பட்டிருக்கலாம். இவை மீண்டும் கட்டப்படவில்லை. மற்றொரு கண்டுபிடிப்பில் ஒன்றன் மேல் ஒன்றாகக் கட்டப்பட்ட நான்கு கானானிய ஆலயங்களின் அமைப்பானது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நான்கு ஆலயங்களில் இறுதியாகக் கட்டப்பட்ட ஆலயம் சாலமோனால் கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்பினைப் பிரதிபலித்தது. காசோரின் 'தாழ்வான நகரம்' கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்பினைப் பிரதிபலித்தது. காசோரின் 'தாழ்வான நகரம்' கட்டப்பட்ட பொழுதுதான் காசோர் நகரானது மிகவும் செழிப்புடன், வளமையானதாகக் காணப்பட்டது. கி.மு. 13 ஆம் நூற்றாண்டில் காசோர் நகரானது சாலமோனால் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

2. காசோர் என்பது நெகேப்பில் உள்ள யூதாவின் கோத்திரத்தார்க்குரிய நகராகும் (யோசு 15:23). இந்நகரானது பிர்கபிருக்கு அருகில் ஏல்-அவுசாவுக்குத் தென்கிழக்கே 14 கி.மீ. பெயேர்-செபாவுக்குத் தென்மேற்கில் 60 கி.மீ. தொலைவிலும் வாடி உம்-எத்னான் மேல் உள்ள ஏல்-பெரியே என்ற நகரோடு தொடர்புபடுத்தப்படுகின்றது.

3. காசோர் என்பதும் கெரியோத்து-கெசுரோன் என்பதும் ஒன்றுதான் (யோசு 15:25). மாவேனுக்குத் தெற்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்-ஏல்-கரியத்தேயின் என்பதாக அடையாளம் காட்டப்படுகிறது.

4. காசோர் என்பது அடிமைத்தளையிலிருந்து திரும்பி வந்தபின் பென்யாமின் கோத்திரத்தார் மீண்டும் வந்து குடியேறிய நகராகும் (நெக 11:33). இந்நகர் எருசலேமிற்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத் கசூர் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது.

5. கி.மு. 598-இல் நெபுக்கதுனேசாரால் கொள்ளை அடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட, அடையாளங்காட்டப்படாத, நகர் காசோராகும். இது பாலஸ்தீனத்துக்குக் கிழக்கே அரேபிய பாலைவனத்தில் உள்ளது (எரே 49:28-33). இங்குக் காசோர் என்பது தனிப்பட்ட இடத்தைக் குறிக்கிறதா அல்லது அங்குத் தங்கியிருந்த கோத்திரங்களைக் குறிக்கிறதா என்பது தெளிவாக இல்லை.

*காசோர் - கதாத்தா* (HAZOR - HADATTHAH - புதிய காசோர்)

பெயர் செபா என்ற நெகேபு மாவட்டத்திலுள்ள யூதாவைச் சேர்ந்த ஓர் ஊர். ஏதோமை நோக்கிய திசையில் இருந்தது (யோசு 15:25). மாவோனுக்குத் தென்கிழக்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள ஏல்-குடெய்ராவாக இருந்திருக்கலாம். இது துவானிக்குத் தென்மேற்கில் சாக்கடலை நோக்கிய பகுதியாகும்.

*காடி* (VINEGAR)

விவிலிய காலத்தில் காடி அதிகமாகப் புளிப்பேறிய அல்லது அதிகமாக நொதித்துப் போன திராட்சை ரசத்திலிருந்து பெறப்பட்டது (எண் 6:3). சாறு பிழிந்தபின் விடப்பட்ட திராட்சைகளின் மேல் நீரை ஊற்றி எல்லாவற்றையும் நொதிக்கச் செய்தும் பெறப்பட்டது. நீர்கலக்கப்பட்ட காடி, உற்சாகமளிக்கப்பயன்படும் பானமாக இருந்தது. சங்கீத ஆசிரியர் ''கசந்த பிச்சை.... என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தனர்'' என்று முறையிடுகின்றார் (சங் 69:21). காடி சுவையூட்டும் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது. போவாசு ரூத்தை அவளுடைய ரொட்டித்துண்டைக் காடியில் தோய்த்துக் கொள்ளும்படி கூறுகிறார் (ரூத் 2:14). காடி திராட்சை ரசத்தோடு தொடர்புடையது. ஆகையால், நசரேயர்களுக்கு இது விலக்கப்பட்ட பொருளாகும்.

காடியின் அமிலப்பண்பு பழமொழி நூலில் சுட்டப்படுகிறது. காடியைப் புண்ணில் வார்த்தால் புண் மிகுதியாக எரியும் (பழ 25:20). ''பல்லுக்குக் காடியும் கண்ணுக்குப் புகையும் எப்படி இருக்குமோ அப்படியே ஒரு சோம்பேறி தன்னைத் தூது அனுப்பினவனுக்கு இருப்பான்''(10:26).

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் சிலுவை இறப்பின்போது காடி குறிப்பிடப்படுகிறது. நான்கு நற்செய்திகளிலும் (மத் 27:48; மாற் 15:36; லூக் 23:36; யோவா 19:29-30), இயேசு இறப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் அவருக்குக் காடி கொடுக்கப்பட்டதாக வாசிக்கிறோம். இங்கு நற்செய்தியாளர்கள் பழைய ஏற்பாட்டு வாசகத்தை எடுத்துக் கூறவில்லை. ஆயினும் இந்நிகழ்ச்சியில் சங் 69:21 நிறைவேறுவதாக விளக்கப்பட்டிருக்கலாம். அனேகமாக இது காடி, தண்ணீர், முட்டை முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட, படைவீரர்களும், அடிமைகளும் அருந்தும் உரோமையரின் பானமாக இருக்கலாம்.

*காடு* (FOREST)

விவிலியத்தில் காடு பற்றிய குறிப்புகள் பல உள்ளன. இப்போது இருப்பதைவிடப் பழங்காலத்தில் மரங்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்திருக்கவேண்டும் என்று பிற்காலப் பயணிகளின் ஏடுகள் சுட்டுகின்றன. பாலஸ்தீனத்தில் எத்தனை மரங்கள் இருந்தன என்று கூறமுடியாவிட்டாலும், அவை சிறியவையாக இருந்திருக்கலாம். அவற்றின் மரம், புகழ் பெற்ற லெபனோனின் கேது

மரங்களைப் போல் விலையுயர்ந்ததன்று (1 அர 7:2; 10:17.21;.....). காடுகள் பற்றிய குறிப்புகள் 1 சாமு 22:5; 2 அர 19:23; சங் 50:10; ஏச 21:13; மீக் 3:12; உப 19:5; யோசு 17:15.18; 1 சாமு 14:25-26; 2 சாமு 18:6; சங் 8:13; 2 நாள் 27:4; 1 சாமு 23:15-ஆகிய பகுதிகளில் சிறப்பாகக் காணப்படுகின்றன. நெக 2:18-இல் அரசருடைய காடுகள் குறிக்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் காடு என்ற சொல் யாக் 3:5-இல் மட்டும்தான் வருகிறது; ''சிறியதொரு நெருப்புபொறி எவ்வளவு பெரிய காட்டை எரித்து விடுகிறது, பாருங்கள். நாவும் அந்த நெருப்புப் போலத்தான்''.

பழங்காலப் பாலஸ்தீனத்தில் காடுகள் பரந்த அளவில் காணப்படவில்லையானாலும், எப்பிராயிமின் மலைப் பகுதிகளிலும் (யோசு 17:15.18; 2 சாமு 18:6), நெகேபிலும் (எச 2:46-47) காடுகள் இருந்ததாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. கிலயாதிலும் காடுகள் இருந்திருக்கலாம். இங்கு இப்போதும் மரங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இன்று இருப்பதுபோல பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்மேல் மலையில் மரங்கள் பல இருந்திருந்தாலும் 2 அர 19 :23-இல் வரும் ''காடுகளின் மிக அடர்ந்தபகுதி'' என்ற சொற்றொடர் (செ 37:24) லெபனோனின் அடர்த்தியான காடுகளையே குறிக்கிறது. காட்டில் காட்டுவிலங்குகள் வசித்தன (சங் 80:13; எரே 5:6; ஆமோ 3:4;...). ஆகவே அது அஞ்சத்தக்க இடமானது (2 சாமு 18:18). 1 சாமு 22:5-இல் தாவீது காரேத்துக் காட்டில் தஞ்சம் புகுந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக்காடு எங்கிருந்தது என்று உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லையானாலும், தாவீதின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, இக்காடு பெலிஸ்தியர் சமவெளிக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று யூகிக்கலாம்.

## காடை (QUAIL)

இது நாடு கடந்து நாடு செல்லக்கூடிய பறவை. கவுதாரியைப் போன்றது. சில காடைகள் பாலஸ்தீனத்திலும், சீரியாவிலும் வருடம் முழுவதும் அங்கேயே இருந்திருக்கின்றன. காடைகள் பாலஸ்தீனம், சீரியா, எகிப்து இவைகளைக் கடந்து மார்ச்சு ஆரம்பத்தில் வடதுருவத்தை நோக்கியும், நவம்பரில் தென்துருவம் நோக்கியும் செல்லும். இது உருவத்தில் பெரியது. நெடுந்தூரம் கஷ்டப்பட்டுப் பறந்தாலும் உயிர்வாழும் வலிமை பெற்றது. சில சமயம் சோர்வினால் கீழே விழுந்துவிடும். காற்றடிக்கும் திசையிலேயே பறந்து மத்திய தரைக்கடலைக் கடந்து செல்லும். இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தைக் கடந்து செல்லும் பொழுது மாலையில் காடைகள் வந்து விழுந்து பாளையத்தை மூடிக் கொண்டதாகப் பார்க்கின்றோம் (யாத் 16:13; எண் 11:31 தொ; சங் 105:40). பறவைகளின் பழக்கவழக்கங்கள் பற்றிய தலைப்பில் இதைப்பற்றிய விவரங்களை அறியலாம்.

## காட்சி (VISION)

கடவுள் இறைமனிதர்களோடு பெரும்பாலும் இறைவாக்கினர்களோடு, கொள்ளும் தொடர்பாகும். பொதுவாக அணுகக்கூடிய தொடர்பல்ல. எபிரேய மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை உடனடியாக ''அறிபவர்'' அல்லது ''காட்சியாளர்'' என்ற பழைய ஏற்பாட்டு வார்த்தையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இச்சொல் எசக்கியேல், தானியேல் ஆகிய நூல்களில் சாதாரணமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆதி 46:2; எண் 12:6; 1 சாமு 3:15-இலும், புதிய ஏற்பாட்டில் மத் 17:9; லூக் 1:22; 24:23; அ.ப. 26:19; 2 கொரி 12:1; 2:17; திருவெளி 9:17-இலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இறைவாக்கினர் தானியேல் நூலிலே இந்தச் சொல், பலவடிவங்களில் வருகிறது; வருங்காலம் பற்றிய அறிவை முப்பது முறை, வியத்தகுமுறையில் வெளிப்படுத்துவதைக் குறிக்க இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தானியேலுக்குப்பிறகு, காட்சியைக் குறிக்கும் எபிரேயச் சொல் அடிக்கடி எசக்கியேல் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லின் பொருள் ''ஆண்டவரது

*மாட்சியினுடைய சாயலின் காட்சி'' (1:28)-'இல் தொடங்கி அக்கால இஸ்ராயேலின் தன்மை மற்றும் பொருள், மற்றும் அதன் வருங்காலம் (எச 8) ஆகியவற்றை உள்ளடக்குகிறது. வருங்காலத்தில் மீட்படைந்த புதிய இஸ்ராயேலின் உன்னதமான அமைப்பையும் உள்ளடக்கும் (எச 40-48). ஒருவேளை, எசக்கியேலின் காட்சிகள் அசாதாரண உளவியல் அனுபவத்தின் விளைவாக இருக்கலாம். ஆனால் அவற்றை உளவியல் அடிப்படையில் மதிப்பீடு செய்வது அவ்வளவு விவேகமுடையதன்று.*

*தொடக்ககால இறைவாக்கினர் மத்தியிலே ''காட்சி'' என்பது கடவுள் இறைவாக்கினர்களுடன் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்திய மரபு வழக்கமான ஒரு சாதனமாகும். இதன் வழியாக இஸ்ராயேலின் வரலாற்றில் உடனடியாக நடக்கப் போவதின் பொருளை யாவே கூறுவார். ''காட்சி'' யானது யாவேயின் வார்த்தையை வெளிப்படுத்துவதற்கு இணையானதாகும்; இவ்வாறு தான் பின்வரும் கூற்றுக்களைப் புரிந்து கொள்கிறோம். ''ஆமோஸ் என்பவர் யூதாவின் அரசனாகிய ஊசியா காலத்திலும், இஸ்ராயேலின் அரசனாகிய எரொபயாம் காலத்திலும்,.... இஸ்ராயேலைக் குறித்துக் கண்ட காட்சியின் வார்த்தைகள்'' (ஆமோ 1:1); ''யூதாவின் அரசர்களாகிய ஊசியா, யோத்தாம், ஆகாசு, எசக்கியா ஆகியோரின் காலத்தில், யூதா, எருசலேம் இவற்றைக் குறித்து, ஆமோஸ் என்பவரின் மகன் ஏசயா கண்ட காட்சி'' (ஏச 1:1); ''ஓபதியா கண்ட காட்சி யாவே... இவ்வாறு கூறுகிறார்'' (ஓப 1:1).*

*பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், இறைவாக்குரைத்தலில் காட்சியின் மறைபொருள் வார்த்தையின் மறைபொருளாகும். அதாவது கடவுள் தம்மையே வெளிப்படுத்துதல், வரலாற்றைப் பாதிப்பு செய்யும் கண்ணோட்டத்தில் வரலாற்றின் பொருளும், அதன் மீது அவரது ஆட்சி, இறுதியாக எல்லா வரலாற்றையும் மீட்பதில் அவரது நோக்கம் ஆகியவற்றின் மறை பொருளாகும்.*

**காட்சியாளர் (SEER)**

காண்க. இறைவாக்கினர்

**காட்டாடு, வரையாடு (WILD GOAT)**

இவ்வகையான ஆடுகள் மலைப்பகுதியிலும், பாறைகளிலும் வாழ்ந்து வந்தன. இவ்வாடுகளை நூபியின் இபெக்ஸ் என அழைப்பதும் உண்டு. இது, அடக்கப்படாத, பின்புறமாக வளைந்த கொம்புகளையுடையது. இவற்றைப் பற்றி விவிலியம் பல இடங்களில் குறிப்பிடுகிறது *(1 சாமு 24:2; யோபு 39:1; சங் 104:18).*

**காட்டாடுகளின் பாறை, வரையாடுகளின் பாறை (WILD GOAT'S ROCKS)**

*தாவீது, சவுலுக்குத் தன்னுடைய பெருந்தன்மையைக் காட்டிய ஒரு குகையிருந்த இடம் (1 சாமு 24:2). இது இருந்த இடம் சரியாகத் தெரியாவிட்டாலும், சாக்கடலின் மேற்குக் கரையின் நடுப்பகுதியில் ஏன்-கேதிக்கு அருகில் இருக்கும் சுண்ணாம்புக் கல் வனாந்தரத்தில் இருந்தது. இங்கு இன்றும் காட்டாடுகள் மிகுந்துள்ளன.*

**காட்டு அத்திமரத் தோட்டக்காரன் (DRESSER OF SYCAMORE TREE)**

*மரங்கள் நல்ல பயன் கொடுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக மரத்தைக் கவாத்து செய்பவர் அல்லது அதன் பழத்தின் பின்பகுதியைக் கிள்ளிவிடுபவர். ஆமோஸ் தன்னைப் பற்றிக்கூறும்போது ''நான் இறைவாக்கினனும் அல்லேன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் அல்லேன்-நான் ஆடு மேய்ப்பவன், காட்டு அத்திமரங்களின் கண்காணிப்பாளன்''. அப்படிப்பட்ட தன்னை ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்குக் கூற அனுப்புகிறார் என்கிறார் ஆமோஸ் (ஆமோ 7:14).*

**காட்டு அத்திமரம் (SYCAMORE)**

இது, செப்பேலவோடு சிறப்புத் தொடர்புடைய ஒரு மரமாகும். இது முசுக்கொட்டை

இலைகள் போன்ற இலைகளையுடைய அத்தி மரம். தாவீது இந்தக் காட்டு அத்திமரங்களைக் கவனிக்கத் தனியாக மேற்பார்வையாளர்களை நியமித்ததிலிருந்து (1 நாள் 27:28; சங் 78:47, ஏச 9:10) இதன் முக்கியத்துவம் விளங்குகிறது. ''காட்டத்திமரங்கள் போல மிகுதியாய் இருந்தன'' (1 அர 10:27; 2 நாள் 1:15; 9:27) என்னும் வாக்கியத்திலிருந்து அவை எவ்வளவு அதிகமாய்ப் பயிரிடப்பட்டன என்பது விளங்கும். ஆமோஸ் காட்டத்தி மரங்களைக் கண்காணிப்பவராக இருந்தார் (ஆமோ 7:14). இது பழுக்காத காய்களைக் கனியச் செய்வதாகும். சக்கேயு எரிகோவில் இயேசுவைக் காண ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டார் (லூக் 19:4). இது அத்திமரங்களை விடத் தரத்தில் குறைந்ததாக இருந்தாலும், ஆண்டில் பல முறை பழங்கள் தருவதால் ஏழைகளுக்கு ஓரளவு உணவு கொடுக்கின்றது.

## காட்டுக்கழுதை (WILD ASS)

இது காட்டில் வாழும் நான்கு கால்களையுடைய, குதிரை இனம் சார்ந்த ஒருவகை விலங்காகும். விவிலிய காலத்தில் இவை மேற்கு ஆசியாவில் காணப்பட்டன. செனோபோன் என்பவர் தனது நூலில், இக்காட்டுக்கழுதைகள் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் மெசபொத்தாமியாவில் காணப்பட்டதாகக் கூறுகிறார். காட்டுக் கழுதைகள் மிக வேகமாக ஓடக்கூடியனவாகவும், கட்டுப்படுத்த முடியாதனவாகவும் இருந்தன. விவிலியத்தில் கூறவேண்டிய ஒன்றை வலியுறுத்தவும் உருவகமாகவும் காட்டுக்கழுதை குறிக்கப்படுகிறது. ஆதி.16:12-இல் இசுமாயேலின் கட்டுக்கடங்காத தன்மை ''காட்டுக் கழுதை போல்'' என்று விவரிக்கப்படுகிறது. ஏச 32:14-இல், முன்பு மக்கள் குடியிருந்த பகுதியில் காட்டுக்கழுதை காணப்படுவது, அப்பகுதியில் அப்போது மக்களே இல்லை என்பதைச் சுட்டுகிறது. எரே 4:6 அச்சுறுத்திய பஞ்சம், காட்டுக் கழுதைகள் கூடப் பெருக முடியாத அளவுக்குக் கொடுமையாக இருக்கும் என்று கூறுகிறது. இறைவாக்கினர் ஓசேயா இஸ்ராயேல் நாட்டை அசீரியாவுக்குத் தனியாக ஓடிச்செல்லும் காட்டுக்கழுதைக்கு ஒப்பிடுகிறார் (ஓசே 8:9). எரேமியா, இந்த உவமையைப் பின்பற்றி மக்கள் பொய்த்தேவன் பாகால்மேல் கொண்டுள்ள பற்றைக் காட்டுக்கழுதையின் காமத்திற்கு ஒப்பிடுகின்றார் (எரே 2:24). ''அவர் காட்டுக் கழுதைகளோடு வாழ்ந்தார்'' என்ற குறிப்பு (தானி 5:21) நெபுக்கதுனேசாரின் நிலைமாற்றத்தைக் குறிக்கிறது. காட்டுக்கழுதைகள் மற்ற விலங்குகளுடன் ஆண்டவரின் நீரூற்றில் நீர்பருகுவதைச் சங்கீதம் கூறுகிறது (சங் 103:11). யோபு நூலில் இக்காட்டுக்கழுதை பற்றி நிறையக் குறிப்புக்கள் காணப்படுகின்றன (யோபு 6:5; 11:12; 39:5-8; 24:5).

## காட்டுத்திராட்சை (WILD GRAPES)

திராட்சையில் மோசமான, துர்நாற்றம் வீசக்கூடிய ஒருவகையாகும். இதை இஸ்ராயேல் மக்களுக்கு ஒப்பிட்டுக்கூறுகிறார், இறைவாக்கினர் ஏசயா (ஏச 5:2.4). இறைவன் இரக்கமும், கருணையும் நிரம்பியவராய் இருந்தும்கூட இஸ்ராயேலர் தீய காட்டுத்திராட்சைகளையே அதாவது நன்றிகெட்டதனத்தையே கைம்மாறாகக் கொடுத்தனர் என்று விளக்குகிறார்.

## காட்டுப்பன்றி (BOAR)

வீட்டுப்பன்றிகளின் மூதாதையாக இருந்திருந்தாலும் இது ஒரு காட்டுப்பன்றி.

விவிலியத்தில் காட்டுப்பன்றியைப் பற்றிய ஐயமற்ற ஒரே ஒரு குறிப்பு உள்ளது: 'காட்டுப்பன்றிகள்' திராட்சைத் தோட்டங்களை (இஸ்ராயேலை) அழித்துவிட்டன (சங் 80:13). பயிர்களுக்கும், திராட்சைத் தோட்டங்களுக்கும் இதுபோன்ற ஆபத்துக்கள் விவிலிய காலங்களில் அப்பொழுதும் இருந்திருக்க வேண்டும். லேவி 11:7; உப 14:8-இல் சொல்லப்பட்டுள்ள அசுத்த விலங்கு (சாதாரணமாகப் 'பன்றி' என்று மொழி பெயர்க்கப்படுவது), அனேகமாகக் காட்டு, வீட்டுப் பன்றியைக் குறிப்பிடலாம்; ஏனெனில் இப்பெயர் இடம் பெறும் பட்டியலில் வனவிலங்குகளும், பழக்கப்படுத்தப் பட்ட விலங்குகளும் இடம் பெறுகின்றன.

### காட்டுப்புறா (TURTLE DOVE)

புறாக்களில் சிறுத்துக் காணப்படும் ஒரு வகையான புறாக்கள் இவை. பாலஸ்தீனத்தில் மூன்றுவகைக் காட்டுப்புறாக்கள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட பருவ காலங்களில் காட்டுப்புறாக்கள் தோன்றுவது உ.ச.2:12; எரே 8:7-இல் கட்டப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், காட்டுப்புறா மாடப்புறாவோடு சேர்த்து வழிபாட்டு அல்லது பலிப்பொருளாகக் கூறப்படுகிறது. லூக் 2:24 இதை எடுத்துக்காட்டுகிறது. லேவி 12-இல் கூறப்பட்டுள்ள கட்டளைக்கு இணங்க மரியாள், இயேசுவின் பிறப்புக்குப் பிறகு, வழக்கான காணிக்கையான இரு காட்டுப்புறாக்களையோ மாடப்புறாக்குஞ்சுகளையோ அளித்தாள்.

இஸ்ராயேலைக் குறிக்க, புறா உருவகமாகப் பயன்படுவது சங் 74:19-இல் மட்டும் வருகிறது.

### காட்டு வெள்ளாடு (IBEX)

இஸ்ராயேலர் உண்ண அனுமதிக்கப்பட்டிருந்த விலங்குகளின் பட்டியலில் ஒன்று (உப 14:5). இதன்பொருள் தெளிவாக இல்லை. இது கொம்பு மானாக இருக்கலாம் என்றும் கருதப்படும்.

### காட்டெருது (WILD OX)

இது காட்டில் வாழும், இரு கொம்புகளையும், நான்கு கால்களையும் கொண்ட எருது வகையைச் சார்ந்த விலங்காகும். விவிலிய மக்கள் இவ்விலங்கினைப் பற்றி அறிந்திருந்தனர். இதுபற்றி விவிலியத்தில் ஒன்பது குறிப்புகள் உள்ளன. இவ்வெருதுகளின் வலிமை, மற்றும் கொம்புகள் சிறப்பாகக் கூறப்படுகின்றன (யோபு 39:9-12; சங் 92:10; எண் 23:22; 24:8; உப 33:17). ஏதோமின் காட்டெருதும் ஆண்டவரின் தண்டனையால் வீழ்த்தப்படும் என ஏசயா இறைவாக்கினர் கூறுவது தண்டனையின் தன்மை எத்தகையது என்பதை விளக்குகிறது (ஏச 34:7). இவ்வகையான காட்டெருதுகளைப் பற்றிய குறிப்புகள் அசீரிய ஏடுகளில் காணப்படுகின்றன. மெசபொத்தாமியாவில் இவை வாழ்ந்ததாக வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன.

### காணாமற் போன ஆடு (LOST SHEEP) - உவமை

மத்தேயு நற்செய்தியிலே விண்ணரசில் நுழைய குழந்தை மனம் அவசியம் என்பதைக் கூறிக் குழந்தைகளின்மேல் இறைவனுக்குள்ள அன்பை இயேசு விவரிக்கிறார். இந்த வேளையிலே இந்தக் காணாமற்போன ஆடு உவமையையும் கூறுகிறார். லூக்கா நற்செய்தியிலே இந்த உவமை பாவிகளும் பரிசேயரும் ஒன்றாய்க் கூடியிருந்தபோது கூறப்படுகிறது. இயேசுவின் காலத்திலே மேற்காசிய நாடுகளில் ஆயர்கள் தங்கள் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நேசித்தனர். எனவே இந்த உவமை கடவுள் மனிதர்மேல் கொண்டிருக்கும் அளவற்ற அன்பை விவரிக்கிறது. இயேசு பாவிகள் மேல் கொள்ளும் பரிவைப் பரிசேயர் எதிர்த்தபோது, இயேசு தாம் இத்தகையோருக்கே அதிகம் தேவை என்பதை உணர்த்துகிறார்.

### காணாமற்போன பணம் (LOST COIN) - உவமை

ஆயக்காரரும் பாவிகளும் ஆண்டவரை அணுகினர். ஆனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும் அவருக்கு எதிராக முணுமுணுத்தனர் (15:1-2). மனந்திரும்புபவர்களை ஆண்டவர் ஏற்கிறார் என்பதை விளக்க இந்த உவமை கூறப்படுகிறது. சாதாரண நடைமுறை நிகழ்ச்சிகளைக் கொண்டு நற்செய்தியை வழங்கிய இயேசு இங்கே இந்த உவமை மூலம் அன்பும், பரிவும், பாசமும், மன்னிக்கும் மனப்பான்மையும் கொண்டவர் இறைவன் எனக் கூறுகின்றார்.


### காணாமற்போன மகன் (LOST SON) - உவமை.

காண்க. ஊதாரியின் உவமை.

### காதணி (EAR - RING)

இஸ்ராயேலர்களிடையே ஆண்களும் பெண்களும் ''புதல்வர் புதல்வியரும்''

கூடக் காதில் அணியும் அணிகலனாகும் (யாத் 32:2-3). இதைக்குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. இவற்றில் சில வளையல்களையும் தகடுகளையும் (எச 16:12) குறிக்கலாம். காதிலோ (யாத் 35:22; நீதி 8:24-26), மூக்கிலோ (ஏச 3:21) அணியப்படும் வளையல்களைக் குறிக்கும் பொதுச் சொற்களும் உண்டு (ஆதி 35:4, யாத் 32:2). உ.ச. 1:10-இல் வரும் அணி இப்படிப்பட்ட அணிகளையே குறிக்கலாம். இஸ்ராயேலர் தங்கள் நகைகளைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டனர். பகட்டாக அணிந்துகொண்டனர். பொற்கன்று செய்வதற்கு அவர்களின் அணிகலன்களை ஆரோன் கேட்டபோது அதற்கு அவர்கள் மறுப்பு எழுப்பவில்லை (யாத் 32:2-3). பிற்பாடு பேழைசெய்வதற்கு ஏற்படும் செலவிற்கும் (35:22) மற்றக் காணிக்கைகளுக்கும் (எண் 31:50) இவற்றைக் கொடுத்தனர்.




காதாரா (GADARA - சுவருடைய)

தெக்காப்பொலியில் உள்ள நகரம் இது. பேய்பிடித்தவனைக் கொண்டுவர, அவனிடமுள்ள அசுத்த ஆவியை இயேசு விரட்டிய நற்செய்திப் பகுதி ஒன்றுதான் இதற்கு ஆதாரமாக உள்ளது (மத் 8:28; மாற் 5:1; லூக் 8:26.37).

காதரேனா மத் 8:28, மாற் 5:1; லூக் 8:26.37-இல் குறிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் வரும் மாற்றுப்பெயர்களான ''கெரசேனர்'' மற்றும் ''கெர்கசானியா'' ஆகியவை வாசகத்தின் குழப்ப நிலையைச் சுட்டுகின்றன.

காதாரா, கலிலேயாக் கடலுக்குத் தென் கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் இருந்தாலும் அதன்பகுதி யார்முக்குக்கு வடக்கில் அமைந்துள்ள எல்கம்மேயின் வெப்பநீர் ஊற்றுகளையும் கொண்டிருந்தது. இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ள நாணயங்கள், கப்பல் வாணிபத்தில் ஆர்வத்தைக்காட்டுகின்றன.

பழங்காலக் காதாரா நகரமானது இப்பொழுது உம்குயில் என்றழைக்கப்படுகிறது. யோர்தான் சமவெளியின் கிழக்கு முனையில் இது கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் புதிதாக ஒன்றும் புதைபொருள் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. அங்கு வெளிப்படையாகக் காணக்கூடிய அளவில் இருக்கின்ற அடையாளங்களே 3 கி.மீ. சுற்றளவுள்ள நகரம் இது எனக் காட்டுகிறது. அங்கு வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் கிரேக்கர்களே. ஏனெனில் அந்த நகரின் அமைப்பும், 2 அரங்குகளும், ஓர் ஆலயமும், தூண்கள் கொண்ட தெருக்களும், குளியலகங்களும் கிரேக்க அமைப்புக்குச் சரியான எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன.

காதி (GADI - என் நற்பேறு)

இஸ்ராயேலின் அரசன் மெனகேமின் தந்தை (2 அர 15:14). ஒரு வேளை கதியேல் என்ற பெயரின் சுருக்கமாக இருக்கலாம்.

காதியர் (GADITES)

காது இனத்தைச் சேர்ந்தவர்கள்.

காதிது (HADIO — கூர்மையான)

செப்பேலாவின் வடமேற்கு எல்லையில், கடற்கரைப் பகுதியை நோக்கி அமைந்த பென்யாமினைச் சேர்ந்த நகரம். உலோது, ஓனோ ஆகியவற்றுக்கருகில் அமைந்திருந்தது (எஸ் 2:33; நெகே 7:37). பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களுள் 720-க்கும் மேலானவர்கள் குடியேறிய

இடம். அய்யலோன் சமவெளியின் ஆரம்பத்தில் உள்ளது.

இதுபற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் நாடு கடத்தலுக்குப் பிற்பட்டவையாக உள்ளன. மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் இது காணப்படுகிறது. இது யோசுவா காலத்தில் சுற்றுச் சுவரைக் கொண்டிருந்ததாக மிஸ்னா விவரிக்கிறது.

இந்த இடம் இலிதியாவிற்கு, வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவில் செங்குத்தான குன்றில் அமைந்திருந்தது. இப்போது ஏல் சுதித்தே என்றழைக்கப்படுகிறது. இந்த இடம் சீமோன் மக்கபேயரால் வலுப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது (1 மக் 12:35; 13:13). இந்த இடத்திற்கு அருகில்தான் அலக்சாந்தர் யன்னாயுவை நபத்தேய மூன்றாம் அரேத்த தோற்கடித்தார். பிற்காலத்தில் எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்தபோது வெஸ்பாசியன் இந்நகரைப் பலப்படுத்தினார்.

காது (EAR) — அங்கம்

ஒலியை ஏற்கும் உடல் அங்கங்களில் ஒன்றாகும். இதன் உதவி கொண்டு மனிதரும் விலங்குகளும் புறத்தூண்டுதலைப் பெறுகின்றனர் (யோபு 12:11). உடல் அங்கமாகிய காதை இஸ்ராயேலர் நன்கு தெரிந்திருந்தாலும் புரிந்து கொள்ளுதலிலும் (13:1) கேட்டவற்றின்படி நடப்பதிலும் அதிகம் கவனம் (உப 6:3) செலுத்தினர். பழைய ஏற்பாட்டு மக்கள் கேட்கும் சக்தியை இறைவனின் படைப்புச் செயல் என்று கருதினாலும் (சங் 94:9; பழ 20:12) படைப்பவரின் செய்தியை அடிக்கடி கண்டுணர முடியாமல் போவதையும் உணர்ந்திருந்தனர். சங்கீத ஆசிரியர், தனது மன்றாட்டுக்களைக் கேட்க இறைவனால் முடியாமல் போவதைப்போல் தோன்றுவதாகப் பலதடவை முறையிடுகிறார் (உம்.சங் 31:2). இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பைப் பாவம் பாழாக்கிவிட்டதால் மனிதர் இறைவனது குரலைக் கேட்டுப் பதில் அளிக்க (ஏச 50:5) இறைவனே ''அவர்களுடைய செவிகளைத் திறக்க வேண்டும்'' (யோபு 36:10.15; சங் 40:6). அதன்பின் இறைவன் மனிதமன்றாட்டுக்களைக் கேட்டுப் (1 சாமு 8:21; ஏச 59:1) பதில் அளிப்பார்.

யூதாவுக்கும், ஒருவேளை இஸ்ராயேலுக்கும், அவர்கள் புரிந்துகொள்ள முடியாத போது, இறைவாக்குரைக்க ஏசயாவைக் கட்டளையிடுவதில் (ஏச 6:9-10) வஞ்சப்புகழ்ச்சி அடங்கியிருக்கிறது. இக்கூற்றை இயேசு பிற்காலத்தில் தமது தலைமுறை மக்களைப் பற்றிக் கூறுகிறார். ஏனெனில் இறையரசின் தன்மையைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அருளப்படவில்லை (மத் 13:14-15 இணை; 13:16-17). இஸ்ராயேலர் மனந்திரும்ப வேண்டுமென்று இறைவன் மீண்டும், மீண்டும் எச்சரித்த பின்னே, ஏசயாவின் கூற்று வந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தக் கிளர்ச்சி செய்யும் மக்கள்பால் (ஏச 7) தற்காலிகமாவது, இறைவனது பொறுமை எல்லை கடந்துவிட்டது என்பதை இந்த இறைவாக்கு உணர்த்தலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசு செவிடரும் ஊமையுமானவரைக் குணப்படுத்துகிறார் (மாற் 7:35). பெரிய குருவின் ஊழியனது காது வெட்டப்பட்டபோது அதைக் குணப்படுத்துகிறார் (லூக் 22:51). ''கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்'' என்ற பழைய ஏற்பாட்டு எச்சரிக்கையை மீண்டும் மீண்டும் இயேசு கூறுகிறார் (மத் 11:15; 13:9). திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர், ''ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்'' (திருவெளி 2:7) என்று கூறுகிறார். நற்செய்தியின் செய்தி போதிக்கப்படுவதைக் கேட்பதால் விசுவாசம் வருவதாகப் பவுல் கருதுகிறார். கிரேக்கர்களைப்போல் அல்லாமல் அப்போஸ்தலர் வெளிப்பாட்டை, கண்ணோடு தொடர்புபடுத்தாமல், காதோடு தொடர்புபடுத்துகிறார்.

கொரிந்தியர்களுக்கு ஆன்மீகக் கொடைகளைப் பற்றி எழுதும்போது காது உட்பட்ட உடலின் அங்கங்கள் அனைத்தும் ஒருங்கமைந்து செயல்படும் போதுதான் உடல் சிறந்த முறையில் செயல்படுகிறது என்பதை

ஒரு வாதமாகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர் (1 கொரி 12:16).

**காது** (GAD /நற்பேறு) — ஆள்.

1. யாக்கோபின் மனைவி லேயாவின் வேலைக்காரி சிலிப்பாவின் வழியாகப் பிறந்த யாக்கோபின் ஏழாவது மகன். காது பிறந்தபோது, லேயா ''நன் நற்பேறு பெற்றுள்ளேன்'' என்று கூறியதிலிருந்து இப்பெயர் வருகிறது (ஆதி 30:11). காதுக்கு ஏழு புதல்வர்கள் இருந்தனர் (46:16; எண் 26:15-18).

யாக்கோபின் ஆசிர், காதை ஒரு கொள்ளைக் கூட்டமாக விவரிக்கிறது (ஆதி 49:19). இவ்வினத்தவர் போரில் ஆர்வம்மிக்கவர். இவர்களது போராற்றல் அவர்களுக்கு யோர்தானுக்கு அப்பால் முதன்மையான பகுதியைப் பெற்றுத் தந்தது; மோசேயின் பாடலில் போற்றப்படுகிறது (உப 33:20-21). இஸ்ராயேல் பாலையில் பயணம் செய்தபோது எடுக்கப்பட்ட முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் காது இனத்தைச் சேர்ந்தவர்களில் போர்க்கடமை செய்யத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை 45, 650 ஆகவும் (எண் 1:24-25), இரண்டாம் கணக்கெடுப்பில் 40,500 ஆகவும் (எண் 26:15-18) கொடுக்கப்படுகிறது. சிசராவுக்கு எதிராகத் தெபோரா செய்தபோரில் காது இனத்தவர் பங்கெடுக்காவிடினும் (நீதி 5:17), பென்யாமினுக்கு எதிராகப் பழிவாங்குவதில், காது இனத்தவர் மற்ற இனத்தாரோடு சேர்ந்து கொண்டனர் (20:1). சிக்கிலாகில் தாவீது மறைந்து வாழ்ந்தபோது, காது இனத்தலைவர்களும் தாவீதுக்கு உதவி புரிந்தனர் (1 நாள் 12:8-15). காதுக்குரிய இன உரிமைப்பகுதி சீகோனின் முந்தைய அரசுக்குள் அமைந்தது. இது யோர்தானுக்குக் கிழக்கிலும் தெற்கில் ரூபன் பகுதிக்கும், வடக்கில் மனாசேயின் பாதி இனத்திற்கும் இடைப்பட்ட பகுதியாயும் அமைந்தது (யோசு 13:24-28; எண் 32:33 தொ). எசக்கியேல் இறைவாக்கில், காதுக்கு அளிக்கப்படும் பகுதி, எல்லா இனத்தவருக்கும் தெற்கிலுள்ள மிகச் சிறந்த அரசாகும் (எச 48:27). இந்தச் செழிப்பான பகுதி, பெலிஸ்தியர்களிடமிருந்து தப்பித் தஞ்சம் புக இடமளித்தது (1 சாமு 13:7); அபிசலோமின் கிளர்ச்சியின்போது, தாவீதுக்குத் தஞ்சம் அளித்தது (2 சாமு 17:24). இருப்பினும் இது மோவாபியர், அம்மோனியர் தாக்குதலுக்கு உட்பட்டது (1 நாள் 15:18-22). இறுதியில் அவர்களிடம் வீழ்ச்சியுற்றது (ஏரே 49:1).

2. காட்சியாளர்:-

தாவீது அரசனோடு தொடர்புடைய இறைவாக்கினர் அல்லது திருக்காட்சியாளர். ''சவுலுக்குத் தப்பியோடி, அதுல்லாம் குகையில் தாவீது மறைந்து வாழ்ந்தபோது, காது அவரை யூதாவுக்குத் திரும்பிப்போகச் செய்தார் (1 சாமு 22:5). மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தாவீது யாவேயின் சீற்றத்தைத் தூண்டியபோது, தாவீது தேர்ந்தெடுக்க மூன்று தண்டனைகளைக் காது அரசனுக்கு எடுத்துரைத்தார் (2 சாமு 24:11-14; 1 நாள் 21:9-12). பின்பு, அரவுனாவின் சூட்டடி நிலத்தில் ஒரு பீடம் கட்டுமாறு தாவீதுக்குக் கட்டளையிட்டார். இந்த இடத்தில் பிற்காலத்தில் சாலமோன் ஆலயத்தைக் கட்டுவார் (2 சாமு 24:18; 1 நாள் 21:18). லேவியர் பாடகர்களின் கடமைகளைத் திருத்தி அமைப்பதில் தாவீதுக்கும் இறைவாக்கினர் நாத்தானுக்கும் இக்காட்சியாளர் உதவி செய்தார் (2 நாள் 29:25). நாளாகமங்களின் மூலங்களை இவர் தொகுத்திருக்கலாம். கெபிரோனுக்கு வடக்கில் 6 கி.மீ. தொலைவில் இவரது வீடும் கல்லறையும் கல்கூலில் இருப்பதாகப் பாரம்பரியம் கூறுகிறது.

''தாவீது அரசனின் வரலாறு முழுவதும், அவர் செய்த ஆற்றல்மிக்க செயல்களும்.... திருக்காட்சியாளரான சாமுவேல்,...காது ஆகியோரின் நூல்களில் எழுதப்பட்டுள்ளன'' (1 நாள் 29:29). இக்கூற்றில் வரும் காதின் நூல் ''அரசர்களின் நூல்'' (2 நாள் 24:27) பற்றிய விளக்கவுரையாக இருக்கலாம். இதிலிருந்து நாளாகம நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கலாம் (20:34).

காது (GAD — நற்பேறு) — தேவதை.

உண்மையிலேயே இது ஒரு மனிதனின் பெயராக இருந்தாலும் மற்றவர்கள் தெய்வத்தைக் குறிப்பதற்கு இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் (ஏச 65:11).

நற்பேற்றின் தேவதை. நாடு கடத்தலுக்குப்பின் யூதப் பதிதர்கள் இதை வழிபட்டனர் (ஏச 65:11). இதன் வழிபாடு கவுரானில் சிறப்பான முறையில் இருந்தது. ஏசயாவில் வரும் இத்தேவதை பற்றிய குறிப்பு, நாடு கடத்தலுக்குப்பின், ஏதோமியர் அல்லது அராபியர் பாலஸ்தீனத்திற்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்தியதைச் சுட்டுகிறது.

இப்பெயர் கெர்மோன் மலைக்கடுத்த பாகால் காது (யோசு 13:5), யூதாவில் மிகிதல் - காது போன்ற இடப்பெயர்களிலும், காதி, கதியேல், அசிகாது போன்ற ஆட்களின் பெயர்களிலும் காணப்படுகின்றது.

காது நோக்கிய பள்ளத்தாக்கு (VALLEY TOWARD GAD)

தாவீதின் மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு தொடர்புடைய ஓர் இடம் (2 சாமு 24:5). சில மொழிபெயர்ப்புக்கள் ''பள்ளத்தாக்கின் மத்தியிலுள்ள நகரிலிருந்து, காது நோக்கி....'' என்றுள்ளது. இது ஒரு வேளை ஆர்னோன் பள்ளத்தாக்கைக் குறிக்கலாம்.

காதேசு, காதேசு — பார்னேயா (KADESH, KADESH — BARNEA — புனிதமான)

சின் பாலைவனத்திலுள்ள ஒரு பாலைவனச் சோலை. இங்கு, இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து கானானுக்குச் சென்ற விடுதலைப் பயணத்தில் நெடுங்காலம் தங்கினர்.

1. பெயர்:- காதேசு, கெதேசு என்ற பெயர்கள், பழங்காலத்தில் புனித இடங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. மோசரோட்டிக் வாசகம், தென்பகுதியான யூதாவைச் சேர்ந்த நகரங்களைக் காதேசு என்றும் வடபகுதியிலுள்ள நகரங்களைக் கெதேசு என்றும் அழைப்பதில் கவனமாக உள்ளது. இந்தக் காதேசை மற்றவற்றிலிருந்து பிரித்துக்காட்டச் சேர்க்கப்பட்டிருக்கும் பார்னேயா என்ற சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை. இது ஓர் ஆளின் சொந்தப் பெயராக இருக்கலாம்.

2. இருந்த இடம்:- காதேசு-பார்னேயா, இஸ்ராயேலின் எல்லைக்குத் தெற்கிலும் எகிப்திய ஆற்றின் முனைக்கு மேற்கிலும் அமைந்திருந்தது (எண் 34:4-5; எச 47:19; 48:28). இங்கு அயின் ஏல்-குதெயிராத், அயின-கேதேயிஸ், அயின் கொசெய்மே என்ற மூன்று நீரூற்றுகள் இருந்தன. இவற்றில் பெரியதான அயின் ஏல்-குதெயிராத்தில் ஆண்டு முழுவதும் நீர் ஓடுகிறது. ஓரளவு பயிர் செய்வதற்கும் ஏதுவானது. இங்குக் கி.மு.10-8-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையிட்ட இஸ்ராயேலரின் கோட்டைச் சிதைவுகள் உள்ளன. இப்பகுதியில் தங்கிய இஸ்ராயேலர் மூன்று நீரூற்றுகளையும் பயன்படுத்தியிருக்கலாம்.

வரலாறு:- இவ்விடம் பற்றிய முதல் குறிப்பு அதன் பழைய பெயரான ஏன்-மிசுபாத்து என்பதனோடு ஆதி 14:7-இல் வருவதாகும். ஆபிரகாம் காலத்தில் படையெடுத்த அரசர்கள் இதைத் தங்கள் பகுதியாகக் கைப்பற்றினர். இது பெயேர்-லகாய்ரோயிக்கு அருகில் இருந்தது என்று 16:14 கூறுகிறது. இந்த இடத்தில் ஆபிரகாமும் ஈசாக்கும் அடிக்கடி தங்கியதாகத் தெரிகிறது. அப்போது இவ்விருவரும் காதேசு-பார்னேயாவில் தங்கியிருந்திருக்கவேண்டும் (20:1).

சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டபின் மோசேயும் இஸ்ராயேலரும் பாலைவனத்தில் அமலேக்கியர் நாட்டை நோக்கிப் பயணம் செய்து, காதேசு-பார்னேயாவில் தங்கினர் (உப 1:19-20). இது எண் 13:26-இல் பாரான் என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து கானான் நாட்டில் உளவு பார்த்துவர வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். இங்குதான் மோசேக்கு எதிராக இஸ்ராயேலர்கள் முணுமுணுத்தனர். அதற்காகத் தண்டிக்கப்பட்டனர். மோசேயின் ஆலோசனையை

நிராகரித்து இங்கிருந்து இஸ்ராயேலர் எமோ ரியர் நாட்டிற்குள் படையெடுத்தபோது, பேரழிவுடன் தோற்கடிக்கப்பட்டனர். அதற் குப்பின் நீண்ட காலத்திற்கு இங்குத் தங்கினர் *(எண் 13:14; உப 1)*.

இங்கிருந்துதான் மோசே, ஏதோம் நாட் டின் வழியாகச் செல்ல அதன் அரசனிடம் அனுமதி கேட்டுப் பெறவில்லை *(எண் 20:14-21)*. இன்னும் அலைந்து திரிந்தபின் இஸ்ரா யேலர் காதேசுக்குத் திரும்பினர் *(33:36-37)*. இங்குதான் ஆரோன் இறந்தார் *(33:38)*.

இங்குதான் பாலைவனப்பயணத்தின் துன் பங்கள் பற்றி இஸ்ராயேலர் முறையிட்டனர்; மோசேயைக் கோபமுறச் செய்தனர். மோசே பாறையை இருமுறை அடித்தார் *(எண் 20:1-13; யாத் 17:1-7)*. மோசே நீரூற்றுக்கு மெரிபா என்று பெயரிட்டார். இந்தப் புதிய பெயர் புதிய இஸ்ராயேல் பற்றிய எசக்கியேலின் காட்சியில் வருகிறது *(எச 47:19; 48:28)*.

**காத்தாம்** (GATAM — எரிபட்ட பள்ளத் தாக்கு).

எலிப்பாசின் புதல்வர்களில் ஒருவர். ஏதோமிய குலத்தலைவர், ஏசாவின் வழித் தோன்றலாக இருக்கலாம் *(ஆதி 36:11.16; 1 நாள் 1:36)*.

**காத்திருத்தல்** (WAIT)

இப்பொருளைத்தரக்கூடிய பல எபிரேய கிரேக்கச் சொற்கள் உள்ளன. சிலசமயம், இவை ஒன்றுமே செய்யாது வெறுமனே இருத்தல் அல்லது தள்ளிப்போடுதலை உணர்த்துகின்றன. மற்றச் சமயங்களில் எதிர் நோக்கிக் காத்திருத்தலை உணர்த்துகின்றன.

பழைய ஏற்பாட்டில் ஒன்றும் செய்யாது தங்கியிருத்தல் என்ற பொருளிலும் *(நீதி 3:25; ரூத் 1:13; 1 சாமு 14:9;..)*, பதுங்கியிருத்தல் என்ற பொருளிலும் *(எண் 35:20; நீதி 16:2; 1 சாமு 5:5; சங் 59:3)* பல குறிப்புகள் உள்ளன. பழைய ஏற்பாட்டு மக்கள் முதன் மையாக இறைவனுக்குக் காத்திருக்கின்ற னர். ''இறைவனுக்காகக் காத்திருத்தல்'' என்ற சொல் ஆக்கப்பொருளுடையது. ''இடுக்கண் நிலையையும்'' ''நீடித்துச் செயல் ஆற்றுவதையும்'' உணர்த்தவல்லது. இறைவ னுக்காகக் காத்திருப்பதில், எபிரேயர் முனைப்பாக எதிர்நோக்கினர்; நம்பிக்கை நிறைந்தவர்களாக இருந்தனர்; இறைவன் வருமட்டும் நீடித்துப் பொறுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர் *(சங் 25:3.5.21; 27:14; 39:7; எச 26:8; 33:2; 49:23; 51:5; 60:9)*. இறைவனுக்காகக் காத்திருத்தல் அவரி டம் நம்பிக்கை வைப்பதாகும் *(எரே 14:22*; இரண்டிற்குமுள்ள உறவை *சங் 39:7; 130:5; ஏச 8:17*-இல் காண்க). ஆனால் காத்திருப்பது அல்லது எதிர்நோக்கி இருப்பதுமட்டும் போதாது; காத்திருப்பவர் ''இறைவனு டைய வழிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்'' *(சங் 37:34)*; ''இரக்கத்தையும் நீதியையும் கடைப்பிடிக்க வேண்டும்'' *(ஓசே 12:6)*. இப்படிப்பட்டவர் ''வெட்கமடையார்'' *(ஏச 49:23)*; ''புதுவலிமை பெறுவர்'' *(40:31)*. ஆண்டவர் இவரைக் காப்பார் *(பழ 20:22)*. இறைவனுக்காகக் காத்திருப்பவர் ''பக்க மாய்க் குனிந்து'' அவரது ''கூக்குரலை'' இறைவன் கேட்பார் *(சங் 40:1)*. இறைவனுக் காகக் காத்திருப்போர் ''புனித நாட்டை உரிமையாக்கிக் கொள்வர்'' *(37:9)*; ''இறை வன் தரும் மீட்பில்'' அகங்களிப்பர் *(ஏச 25:9; ஆதி 49:18)*. இறுதியாக, இஸ்ராயேல் நற்கனி களைக் கொடுப்பர் என்று இறைவனே எதிர் பார்த்துக் காத்திருந்தார் *(ஏச 5:2.7)*.

புதிய ஏற்பாட்டில் ஒரேவார்த்தை எதிர் பார்த்திருப்பதையும் *(மாற் 15:43)*, ஏற்றல், பெறுதலையும் *(உரோ 16:2)* உணர்த்தவல் லது. காத்திருப்பவர் பெற்றுக் கொள்ளு தலை எதிர்நோக்கியிருக்கிறார். புதிய ஏற் பாட்டில் 'காத்திருத்தல் வழக்கமாக மீட் போடு தொடர்புடையதாகும். இதற்கு விதி விலக்குகளும் உண்டு *(அ.ப.17:16; 1 கொரி 11:33; யாக் 5:7)*. கிறிஸ்தவர்கள் ''இறைமக்க ளாக்கப்படுதலை'' *(உரோ 8:23)* எதிர்நோக் கியுள்ளனர்; ''மீட்பர் வருவாரெனக் காத்தி ருக்கின்றனர் *(பிலி 3:20*; மேலும் காண்க: *உரோ 8:19.25; 1 கொரி 1:7; கலா 5:5; 1 தெச 1:10; தீத் 2:13; எபி 9:28; 10:13; 11:10; யூதா 21)*. ''நோவா பேழையைச் செய்து

கொண்டிருந்த காலத்தில் கடவுள் பொறுமையோடு காத்திருந்ததாகக்'' (1 பேதுரு 3:20) கூறப்பட்டுள்ளது.

காத்து (GATH — திராட்சை ஆலை)

பெலிஸ்தியரின் ஐந்து முதன்மையான நகரங்களில் ஒன்று. யூதேயாவிற்குக் கிழக்கிலும், எக்கரோனுக்குத் தெற்கிலுமாக அமைந்துள்ளது. இது அமைந்திருந்த இடத்தின் காரணமாக இது அடிக்கடி வெவ்வேறு ஆட்சிக்குக் கைமாறியது. யூதேயாவின் அதிகாரத்திற்கும் சில சமயங்களில் உட்பட்டிருந்தது. அதனால் பழைய ஏற்பாட்டில் 40 முறைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மற்றப் பெலிஸ்திய நகரங்களைப்போலக் காத்தும் கானானியர்கள் காலத்தில் உள்ள ஒரு பழைய நகரம் என்று இஸ்ராயேலர்களால் கருதப்பட்டது. ஒரு காலத்தில் அனாக்கியர்கள் அங்கு வாழ்ந்தார்கள் (யோசு 11:22). எப்பிராயிம், பென்யாமின், இனத்தவர்களின் உடைமையைக் கைப்பற்றக் காத்து நகரத்தைச் சார்ந்தவர்கள் அவர்களைக் கொலை செய்தனர் (1 நாள் 7:21; 8:13). யோசுவா இந்நகரைக் கைப்பற்றவில்லை. இது பெலிஸ்திய நகரமாகவே விளங்கியது.

உடன்படிக்கையின் பேழை அசுதோத்தில் துன்பம் வருவித்ததால் காத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் துன்பம் வருவித்ததால் எக்கரோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (1 சாமு 5:6-10; 6:17). பிற்காலப் பாரம்பரியம் காத்தும் எக்கரோனும் சாமுவேல் காலத்தில் கைப்பற்றப்பட்டதாகச் கட்டுகிறது (1 சாமு 7:14). ஆயினும் இந்த இடங்கள் (எக்கரோன், காத்து) எல்லாம் பெலிஸ்தியரின் ஆட்சிக்கு உட்பட்டதாகவே இருந்தன. புகழ்பெற்ற கோலியாத்து என்ற பெலிஸ்திய வீரன் காத்தைச் சேர்ந்தவன் (1 சாமு 13:4.23; 2 சாமு 21:19). மற்றத் திறமை படைத்த வீரர்களும் காத்திலிருந்து தோன்றினர் (2 சாமு 21:20-22; 1 நாள் 20:5-8). பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலர்களால் தோற்கடிக்கப்பட்டபோது பாதுகாப்பிற்காக அருகிலிருந்த எக்கரோன், காத்து ஆகிய நகரங்களுக்கு ஓடினார்கள்.

சவுலிடமிருந்து தப்பியோடியபோது தாவீது காத்தின் அரசன் ஆக்கீசிடம் தஞ்சம் தேடிச் சென்றார். ஒரு பாரம்பரியப்படி அவர் நல்ல முறையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை (1 சாமு 21:10-15; சங் 56:1). இன்னொரு மரபு, அவசியம் ஏற்பட்டால் இஸ்ராயேலருக்கு எதிராகப் போரிடுவதற்குத் தாவீது தயாராக இருந்ததால், அவர் வரவேற்கப்பட்டார் என்று கூறுகிறது (1 சாமு 27:1 - 28:2; 29). சவுலைப் பற்றியும் யோனத்தானைப் பற்றியும் புலம்பும் பொழுது நகரின் பெலிஸ்தியப்பண்பும் வெளிப்படுகிறது.

பேழையை எருசலேமுக்குள் கொண்டுவருவதைக் (2 சாம 1:20), காலம் தாழ்த்திய போது தாவீது காத்தைச் சேர்ந்த ஓபேது - ஏதோமின் பாதுகாப்பில் மூன்று மாதங்களுக்கு அதை விட்டுவைத்தார் (2 சாமு 6:10; 1 நாள் 13:13). தாவீது பெலிஸ்தியர்களை முறியடித்து அவர்களை அடிமைப்படுத்தினார் (1 நாள் 8:1; 2 சாமு 8:1). காத்திலிருந்து வந்த ஆற்றல் வாய்ந்த அறுநூறு வீரர்கள் அரசருக்குமுன் நடந்து போனார்கள் (2 சாமு 15:18-22). இவர்களுக்குக் காத்தைச் சேர்ந்த இத்தாய் தலைமைதாங்கினார்.

சாலமோனின் காலத்தில் அவருடைய நட்புறவும், அரசியல் நிர்வாகமும் காரணமாக எருசலேமிற்கும், காத்திற்கும் நல்ல தொடர்பு இருந்தது. ஆக்கீசு தாவீதின் நண்பன் (1 அர 2:39-42). இரகபெயாம் யூதாவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட காத்தைப் பலப்படுத்தினார் (2 நாள் 11:8-10). சீரியா நாட்டு அரசன் கசயேல் காத்து நகரோடு போரிட்டு அதைக் கைப்பற்றினார் (2 அர 12:17). யூதாவைச் சேர்ந்த ஊசியா பெலிஸ்தியரோடு போரிட்டுக் காத்து நகரின் மதிலைத் தகர்த்தெறிந்தார் (2 நாள் 26:6). கி.மு. 74-இல் இரண்டாம் சார்கோன் காத்தையும் மற்றக் கிளர்ச்சிசெய்த நகரங்களையும் கைப்பற்றிக் கொள்ளை அடித்ததைப் பேசுகி

நார். இதற்குப் பின் இந்நகரம் வரலாற்றில் இருந்து மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆமோ 6:2-இல் காத்து அழிந்துபோன நகரத்திற்கு அடையாளமாகப் பயன்படுகிறது. பெலிஸ்திய நகர்களின் பட்டியலில் காத்து நகரத்தை இறைவாக்கினர்கள் குறிப்பிடவில்லை (ஆமோ 1:6-8; செப் 2:4; எரே 25:20; யோசு 13:3; 1 சாமு 6:17). புதிய ஏற்பாட்டிலும் திருவெளிப்பாட்டிலும் காணப்படவில்லை.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இடம் அழிந்துபோனதால் காத்து இருந்ததாகக் கருதப்படும் பல இடங்கள் அடையாளங்கள் காட்டப்படுகின்றன. இரண்டு இடங்கள் முக்கியமானவை: ஒன்று அசுதோதுக்குக் கிழக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள, தேல் எஸ்-சாவி, மற்றது அசுக்கலோனுக்குக் கிழக்கில் 24 கி.மீ. தொலைவிலும் தேல் எஸ்சாபிக்குத் தெற்கில் 11 கி.மீ. தொலைவிலும் அராகு எல்-மென்சியேக்கு அருகிலுள்ள தேல் செயிக் அகமது ஏல்-அரேய்னி ஆகும்.

பாலஸ்தீனத்தில் பல இடங்களில் திராட்சை ரசம் பிழியும் ஆலைகள் காணப்படுகின்றன. அஃதோடு தொடர்புடைய பல பெயர்கள் விவிலியத்தில் வருகின்றன. அவற்றில் சில: காத்து-கேப்பர், காத்து-ரிம்மோன், மோரசேத்து-காத்து, கித்தாயிம்.

**காத்து - கேப்பர்** (GATE-HEPHER - கிணற்றின் ஆலை)

செபுலோனின் எல்லையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:13). இஸ்ராயேலின் இரண்டாம் எரொபயாமுக்குச் சமகாலத்தவராகிய இறைவாக்கினர் யோனாவின் இல்லம் (2 அர 14:25). அனேகமாகக் கிர்பெத்து எஸ்-சூரா என்ற இடமாக இருக்கலாம். இது நாசரேத்திற்கு வடகிழக்கில் 5 கி.மீ.மைல் தொலைவில் உள்ளது.

இரும்புக்காலத்திலும் பிற்கால வெண்கலக் காலத்திலும் இங்கு மக்கள் வாழ்ந்ததாக அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. இந்த இடத்திற்குச் சிறிது வடக்கில், யோனாவின் கல்லறை இருப்பதாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் மெஸ்டகெத் என்ற கிராமம் உள்ளது. எரோனிமுவின் கருத்துப்படி, திபேரியாவுக்குச் செல்லும் பாதையில் செப்போரிசிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள முக்கியமற்ற கிராமம் ஆகும் காத்து - கேப்பர்.

**காத்து-ரிம்மோன்** (GATH-RIMMON - மாதுளம் பழ ஆலை)

1. தாண் கோத்திரத்தின் புதல்வர்களுக்கு அளிக்கப்பட்ட லேவியர் நகரங்களில் ஒன்று. இது கெகாத்தியருக்கு அளிக்கப்பட்டது (யோசு 21:24; 1 நாள் 6:69).

யார்கோன் ஆற்றின் தென்கரையில் வாடி முசுராரா சேருமிடத்தில் உள்ள தேல் எக்-கெரிசேயாக இருக்கலாம். இங்குக் கைக்சோசின் தொடக்ககாலக் கோட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஊர், மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் வரும் காத்து ஆக இருக்கலாம்.

2. மனாசேப் பகுதியில் கெகாத்தியருக்கு அளிக்கப்பட்ட ஒரு லேவியர் நகரம் (யோசு 21:25). இங்கு வாசகம் பழுதுபட்டிருக்கலாம். இதற்கு இணையான வாசகமாகிய 1 நாள் 6:70-இல் பிலியாம் என்ற பெயர் வருகிறது.

**காபாய்** (GABBAI - ஒன்று சேர்ப்பவன்.)

நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒருவர் (நெக 11:8). அறிஞர் சிலர் இவ்வாசகம் பழுதுபட்டது என்று கருதிக் காபாயை ''வலிமை மிக்க வீரர்கள்'' என்று திருத்துகின்றனர்.

**காபு** (GAPH)

எபிரேய நெடுங்கணக்கில் பதினோறாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல், இவ்வெழுத்து தலைப்பாக அமைந்து ஒவ்வொரு வரியும் இவ்வெழுத்தோடு தொடங்குகிறது.

**காபூல்** (CABUL - மகிழ்ச்சிதராத, வெறுப்புத் தருகிற)

1. ஆசேரின் நிலப்பரப்பிலுள்ள ஓர் எல்லை நகரம் (யோசு 19:27). அக்ரோவிற்

குக் கிழக்கு தென்கிழக்கில் ஏறக்குறைய 15 கி.மீ. தொலைவிலும், கர்மேல்மலைக்குக் கிழக்கு வடகிழக்கில் 16 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய காபூலாகக் கருதப்படுகிறது. இது இரு சமவெளிக்கிடையிலுள்ள மலைமேல் அமைந்திருந்தது. செம்புக்காலத்திலேயே மக்கள் இங்குக் குடியேறியிருந்தனர்.

2. கலிலேயாவிலுள்ள ஒரு மாவட்டம். 1 அர 9:13-இன்படி தீரைச் சேர்ந்த கிராம் என்பவர் ஒருசமயம் ஆலயம் கட்டுவதற்கு உதவிசெய்ததற்காகச் சாலமோன் தனக்குக் கொடுத்த 20 நகரங்களைக் காபூல் என்று அமைத்தார். 2 நாள் 8:2-இல் வரும் இணையான வாசகம் கிராம் அல்ல, சாலமோன்தான் இந்த இடங்களைப் பரிசாகப் பெற்றார் என்கின்றது. இருப்பினும் அரசராகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளதுதான் சரி என்று விளக்கவுரையாளர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள். தீர் அரசன் ஆக்கோ சமவெளியிலுள்ள கடற்கரை நகரங்களை விரும்பினார். ஆகையால், மலைமேலுள்ள பயனற்ற இந்த ஊர்கள் அவருக்குப் பிரியமான கொடையாக அமையவில்லை.

இந்த மாவட்டத்தில் ஆட்சி மையம் காபூல் என்ற இடத்தில்தான் இருந்தது. ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லாமையால் இந்த மாவட்டத்தை அடையாளம் காட்ட முடியவில்லை.

## காபோர் (HABOR)

யூப்பிரத்திக என்ற பெரிய நதியின் உபநதியாகும். மக்கள் நெருக்கமாக வாழ்ந்த பகுதியில் ஓடியதாகத் தெரிகிறது. இது வடகிழக்கிலிருந்து பாய்கிறது. ஓசயா அரசரின் ஒன்பதாவது ஆண்டில் சில இஸ்ராயேலர்களைச் சால்மனேசர் என்பவர் இந்த ஆற்றங்கரைக்கு நாடு கடத்தினார் (2 அர 17:6; 18:11; 1 நாள் 5:26).

இந்த ஆறு இப்போது நகிர் ஏல்-காபூர் என்றழைக்கப்படுகிறது. இது காரான் சுற்றுவட்டாரத்தில், ஒருவேளை கோசான்பகுதியில், தோன்றித் தென்மேற்காக ஓடி, சிர்கேசியும் என்ற இடத்தில் யூப்பிரத்திகடன் சேர்கிறது. இதையும் கெபார் நதியையும் குழப்பிவிடக்கூடாது.

## காப்புக்கருவி (MANTELET)

இது, நகரம் முற்றுகையிடப்படும்போது, முற்றுகையிடுபவர்களைத் தற்காப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட, நகர்த்தக்கூடிய அமைப்பாகும் (நாகூ 2:6).

நினிவேயின்மீது தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதலைப்பற்றிய விவரிப்பில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதன் தெளிவான பொருள் தெரியவில்லை. இதனுடைய எபிரேய மூல வார்த்தை, ''இணைந்து நெய்தல்'', ''திரையிடல், பாதுகாத்தல்'' என்ற பொருளைத் தருகின்றது. எழுபதுநூலும் வுல்கத்தா வாசகமும் ஆகிய இரண்டும், 'பாதுகாப்பு' என்ற பொருளையே கொண்டுள்ளன (நாகூ 2:5).

## காமவெறி (LICENTIOUSNESS)

தீயொழுக்கம், சிற்றின்ப அல்லது புலனுணர்ச்சி இன்பங்களில் ஒழுக்க வரம்பு கடந்த செயல்கள். இது புறவினத்தார் (எபே 4:17-13), பதிதர்கள் (யூதா 4; 2 பேதுரு 2:2) ஆகியோரைக் குறித்துக் காட்டும் பண்பாகும். இச்சொல்லைப் பவுல் பயன்படுத்தும்போது, சிற்றின்ப ஒழுக்க வரம்பு கடந்த செயல்களையே சிறப்பாகக் குறித்துக்காட்டுகிறார் (உரோ 13:13; 2 கொரி 12:11).

## காமியர் (HAMITES)

நோவாவின் கடைசிப்புதல்வனான காமின் சந்ததியினர். நாடுகளின் பட்டியலின்படி (ஆதி 10); காமின் புதல்வர்களான கூசு, எகிப்து (மிகராயிம்), பூத்து, கானான் ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டு நான்கு பிரிவினராகப் பெயர் பெற்றனர்.

இலக்கியப்படியும் அதன் விளைவாகக் கலாச்சாரப்படியும் காமிய மொழிகள் பேசிய மக்கள் காமியர் என்றழைக்கப்பட்டனர். இம்மொழிகள் செமித்திய மொழிகளோடு தொடர்புடையன. எனவே காமிய-

செமித்திய அல்லது ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் என்றழைக்கப்பட்டன. இந்த மொழிக்குழுவில், வடஆப்பிரிக்கா, கனரித் தீவுகளில் பேசப்படும் பேர்பேர் மொழிகளும், பழங்கால எகிப்திய மொழிகளும், எத்தியோப்பியா, செமாலிய ஆகிய பகுதிகளில் பேசப்பட்ட கூசிய (அல்லது கிழக்குக் காமிய) மொழிகளும், வட நைசீரியாவில் பேசப்பட்ட சாது மொழிகளும், கிழக்கு ஆப்பிரிக்காவில் பேசப்பட்ட நீலோ-காமிய மொழிகளும் அடக்கும்.

**காமுல்** (GAMUL - பால்குடி மறக்கச் செய்யப் பட்ட, பயனடைந்த)

தாவீது காலத்தில் ஒரு குருவும், குருக்களின் இருபத்திரண்டாவது பிரிவின் தலைவரும் ஆவார் (1 நாள் 24:17).

**காமூலியர்** (HAMULITES)

காமூலின் சந்ததியினர். யூதாவின் ஒரு இனப்பிரிவினர் அல்லது துணைப் பிரிவினர் ஆவர் (எண் 26:21).

**காமூல்** (HAMUL - காப்பாற்றப்பட்ட)

யூதாவின் பேரனும், பேரேசின் இளைய மகனுமாவார் (ஆதி 46:12; எண் 26:21; 1 நாள் 2:5). காமூலிய மரபின் தலைவர் (எண் 26:21).

**காமோன்** (KAMON - நிலையம்)

இது நீதிபதி யாயிர் உயிர் துறந்த, புதைக்கப்பட்ட நகரம் (நீதி 10:5). இது கிலயாத்தில் உள்ளது. யாயிரின் வழித்தோன்றல்களுக்குச் சொந்தமான முப்பது ஊர்களில் ஒன்று. இவையாவும் சேர்ந்து கவ்வோத்து-யாயிர் என்றழைக்கப்பட்டன. இது பொதுவாகக் கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கம் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. இது இருந்ததாக அடையாளம் காட்டப்படும் மற்றொரு இடம் இர்பித்துக்குக் கிழக்கு - வடகிழக்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள குமெயிம் ஆகும்.

**காம்** (HAM - சூடான) - ஆள்

நோவாவின் மூன்று புதல்வர்களுள் காம் என்பவர் இரண்டாவது மகன் (ஆதி 5:32; 6:10; 1 நாள் 1:4). ஆனால் 9:24-இன்படி இவர்தான் இளையமகனாவார். நோவா பெட்டகத்தில் காம் தன் மனைவியோடும், மணமுடித்த மற்றச் சகோதரர்களோடும், தந்தையோடும் சேர்ந்து கொண்டார் (7:13). பெருவெள்ளத்திற்குப் பிறகு இவர் இறை உடன்படிக்கையிலும், ஆசியிலும் பங்கு கொண்டார் (ஆதி 9:1-17).

யாவே மரபின்படி நோவா போதைத் தூக்கத்திலிருந்து விழித்தெழும்போது அவருடைய மகன் செய்தது கண்டு கானானைச் சபித்தார். காமை அல்ல அவருடைய சகோதரர்கள் சேமுக்கு யாப்பேத்துக்கு ஊழியம் செய்யும்படித் தண்டித்தார் (ஆதி 9:20-27). வடிவ ஆய்வுப்படி, இக்கதையைப் பெருவெள்ளக் கதையிலிருந்து பிரிப்பது நல்லதெனத் தெரிகிறது. மூலவரிசையில் நோவாவின் புதல்வர்கள் சேம், யாப்பேத்து, கானான் என்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இரண்டு கதைகளையும், ஒன்றுபடுத்த பதிப்பாசிரியர் காமைக் கானாவின் தந்தை எனக் கூறுகிறார் (9:18.22).

காமின் மக்களாகக் கூசு, மிசுராயிம் (எகிப்து), பூத்து, கானான் என்பவர்கள் நாடுகளின் பட்டியலிலும் (10:6-20), மரபுமுறைக் கொடியிலும் (1 நாள் 1:8-16) குறிக்கப்படுகின்றனர்.

''காமின் கூடாரங்கள்'' (சங் 78:51), ''காமின் நாடு'' (சங் 105:23.27; 106:22), காமின் வழித்தோன்றல்களின் நாடான எகிப்தைக் குறிக்கின்றன. 1 நாள் 4:40-இன்படி ''காமைச் சேர்ந்தவர்கள்'' கானானியர்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

**காம்** (HAM) - இடம்.

யோர்தானுக்குக் கிழக்கே உள்ள சூசிம் பகுதியில் உள்ள ஒரு நகரம். ஆபிரகாம் காலத்தில் கெதர்லாகோமேரும் அவரது கூட்டணியும் இந்நகரைத் தோற்கடித்தனர் (ஆதி

14:5). மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் இருகூமா என்றழைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இர்பித்தின் தென்மேற்கில் 7 கி.மீ தொலைவிலும் யாப்போக்குக்குக் கிழக்கிலுமுள்ள தேல்காமாக இருக்காலாம். இது பழங்கால நகரம் என்பதை அங்கு இருக்கின்ற பெரிய கற்களால் கட்டப்பட்ட முப்படிச் சுவரின் சிதைவுகளிலிருந்து அறியலாம்.

**காயி** (GAI - பள்ளத்தாக்கு)

1 சாமு 17:52-இன் படி பெலிஸ்தியாவில் எக்கரோனுக்கு அருகிலுள்ள பகுதியாகும். சில மொழிபெயர்ப்புகள் ''பள்ளத்தாக்கு'' என்று கொண்டுள்ளன. இது சரியாக இருக்க முடியாது. சில மொழிபெயர்ப்புகள் காத்து என்று கொண்டுள்ளன.

**காயினான்** (CAINAN)

1. அருபகசாதுவின் மகன் (லூக் 3:36; எழுபதுநூல் ஆதி 10:24; 11:12).
2. கேனானின் மற்றொருபெயர் (லூக் 3:37).

**காயின்** (CAIN - காழ்ப்புணர்ச்சியுள்ளவன், பிறப்பு அளித்தல்)

பாவம் புகுந்தபின் ஆதாம்-ஏவாளுக்குப் பிறந்த மூத்தமகன். நிலத்தைப் பயிர் செய்பவர் (ஆதி 4:1-2). பெயரின் பொருளை விளக்குவது கடினம். ஏவாள் தன் மகனுக்குப் பெயரிட்டபோது ஆதி 3:15-இல் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நினைவில் கொண்டிருக்கலாம். பாம்பை அழிக்கும் வித்தாக அமைவான் என்று கருதியிருக்கலாம். தங்களுடைய விளைச்சலின் பலன்களைச் சகோதரர்களான காயினும், ஆபேலும் யாவேயின் முன்கொண்டு வந்தனர்; ஆனால் யாவே காயினின் காணிக்கை பற்றிக் கவலைப்படவில்லை. ஆகவே காயின் சினந்து தன்னுடைய சகோதரனைக் கொன்றார் (ஆதி 4:2-8). அதைப்பற்றி யாவே கேட்டபோது ''என் சகோதரனுக்குக் காவலாளியோ?'' என்று முரட்டுத்தனமாகப் பதில் கூறினார். அதன் விளைவாக யாவே அவரைச் சபித்தார்.

காயினுக்கு அளிக்கப்பட்ட தண்டனை அவரைத் தன்னுடைய நாட்டினின்றும், வீட்டினின்றும், கடவுளிடமிருந்தும் அந்நியனாக்கிவிட்டது. ''மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்'' என்று யாவே காயினைச் சபித்தார். ஆனால் காயினின் மன்றாட்டுக்கிணங்கித் தண்டனையைக் குறைத்தார் (ஆதி 4:9-16). அது இந்தக் கொலைகாரனை யாரும் கொல்லக்கூடாது என்று எச்சரித்தது.

''ஆண்டவர் திருமுன்னைவிட்டுச் சென்று'' காயின் நோதில் குடியேறித் தன் மனைவியுடன் வாழ்ந்தார். அவர்களுக்கு ஏனோக்கு பிறந்தார். காயின் ஒரு நகரை நிறுவி அதற்கு ஏனோக்கின் பெயரை வைத்தார் (4:16-17). காயினைப் பற்றிய பழைய ஏற்பாட்டில் வரும் ஒரே குறிப்பு, இலாமேக்கின் பாடலில் காயினின் சாபம் குறிக்கப்படுவதாம் (4:24).

யாவே ஏன் ஆபேலின் காணிக்கையைமட்டும் ஏற்றுக்கொண்டார்? காயினுடையதைப் புறக்கணித்தார்? என்பதற்கு ஆதியாகமமும் தெளிவாகக் காரணம் காட்டவில்லை. விளக்கங்கள் அனைத்தும் பிற்காலத்தில் தோன்றியவையே (ஞானம் 10:3-4).

தன் சகோதரனைக் கொன்ற இந்தக் கொலைகாரனைப் புதிய ஏற்பாடு சில இடங்களில் குறிப்பிடுகிறது (மத் 23:35இ; லூக் 11:51). காயின் சென்ற வழியில் தீயவர்கள் சென்றார்கள் என்று யூதா கூறுகிறது.

யோவா் 3:12, காயின் ''தீயோனைச் சார்ந்தவனாக'' இருந்ததால், காழ்ப்புணர்ச்சி கொண்டு தன் தம்பியைக் கொன்றார் என்று கூறுகிறது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், ஆபேலின் காணிக்கை விசுவாசத்தினால் அளிக்கப்பட்டது. ஆகவே ஏற்புடையதாயிற்று என்று கூறும்போது, காயினின் காணிக்கையில் இப்பண்புகள் காணப்படவில்லை என்று சுட்டுகிறது (எபி 11:14). கிறிஸ்தவர்கள், காயினைப்போல் இல்லாது (1 யோவா 3:12) விசுவாசமுள்ள ஆபேலைப் பின்பற்றுமாறு (எபி 11:4) அறவுரை கூறப் பெறுகின்றனர்.

காயுக (GAIUS)

*1. பவுலின் பயணத்தில் துணைநின்ற மக்கதோனியக் கிறிஸ்தவர். எபேசு நகரில் தெமேத்திரியு என்னும் பொற்கொல்லன் கிறிஸ்தவ நெறிக்கு எதிராகப் பெரும் கலகத்தை உண்டு பண்ணினபோது பவுலோடு பிடிக்கப்பட்ட இருவருள் காயுசும் ஒருவராவர் (அ.ப.19:29).*

*2. இவர் சிறிய ஆசியாவில் தெர்பை நகரத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர். எபேசிலிருந்து மக்கதோனியாவிற்குப் பவுலோடு பயணம் செய்தவர். அ.ப. 20:4-இல்வருபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் இருவரும் அரித்தார்க்கோடு சேர்த்துக் குறிக்கப்படுகின்றனர். பழங்கால வாசகம் இவர் கிழக்கு மக்கதோனியாவில் தோபேருவில் வாழ்ந்ததாகக் குறிக்கிறது.*

*3. கொரிந்து நகரத் திருச்சபையில் பவுலால் திருமுழுக்குப்பெற்ற இரு கிறிஸ்தவர்களுள் இவரும் ஒருவர் (1 கொரி 1:14). உரோம 16:23-இல் சொல்லப்படுகின்ற காயுசும் இவராகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் கொரிந்து நகரில் இவரது வீட்டில் தங்கித்தான் பவுல் உரோமையருக்குக் கடிதம் எழுதினார். அ.ப.18:7-இல் வருகிற தீத்து என்று கருதப்படுகிறார்.*

*4. பவுல் திருமுழுக்கு அளித்த, கொரிந்தைச் சேர்ந்த கிறிஸ்தவர் (1 கொரி 1:14). இவரது முழுப்பெயர் காயுசு தீத்து யுஸ்து என்று கூறப்படுகிறது. அ.ப. 18:7-இல் வரும் இவர், பவுலை விருந்தோம்பியவர். இவரும் 3-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.*

*5. யோவானின் மூன்றாம் திருமுகம் இவருக்கு எழுதப்பட்டது (3 யோவா 1). இவர், தனக்கு அன்னியரான கிறிஸ்தவர்களையும் விருந்தோம்பினார் (வச 5-6). யோவான்தான் இவரை விசுவாசத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம்.*

காய்கறி, மரக்கறி (VEGETABLES)

*அவரை, வெள்ளரி, வெங்காயம், உள்ளிப் பூண்டு, பீன்ஸ் முதலியவை பாலஸ்தீனத்தில் பயிரிடப்படும் காய்கறிகளாகும். காய்கறிகளைப் பொருத்தமட்டில் பாலஸ்தீனம் எகிப்தைவிடத் தாழ்ந்தது. எகிப்தில் விதைகளை விதைத்து, நீர்பாய்ச்சினால் தோட்டம் உருவாகிவிடும்(உப 11:10). காய்கறிகள் பெரும்பாலும் தோட்டங்களில் பயிரிடப்பட்டன. இதற்காகத்தான் ஆகாபு நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைத் தனக்குத் தரும்படி கேட்டார் (1 அர 21:2).*

*தானியேலும் அவருடைய தோழர்களும் தங்களுக்கு மரக்கறி உணவு தருமாறு கண்காணிப்பாளரிடம் கேட்டுப்பெற்றுக் கொண்டனர் (தானி 1:12.16). காய்கறிகள் மட்டும் போதிய உணவாக அமையாது. விசுவாசத்தில் வலுவில்லாதவர்களை மரக்கறி உணவை மட்டும் உண்பவர்களோடு ஒப்பிடுகிறார் பவுல் (உரோ 14:2).*

காய்க்காத அத்திமரம்: (லூக் 13:6-9) - உவமை

*இந்த உவமை மனந்திரும்ப வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றது. மூன்று வருடங்களாகப் பலன் தராத இம் மரத்தை வெட்டிவிடு எனத் தலைவன் கூற, தோட்டக்காரன் இன்னும் ஒருமுறை பொறுத்திருக்கலாமென்கிறான். இந்த உவமையை மூன்று விதமாக விளக்கலாம். முதலாவதாக, அத்திமரம் யூதர்களையும், மூன்று ஆண்டுகள் இயேசுவின் பணிக்காலத்தையும் அவ்வேலையில் யூதர்கள் அவரை ஏற்க மறுத்ததையும் குறிக்கிறது. அடுத்த ஆண்டு இயேசுவின் பாடுகள், உயிர்ப்பையும் குறித்து, அப்போதும் மனமாறவில்லையெனில் அவர்களுக்கு மீட்பு மறுக்கப்படும் என்பதையும் குறிக்கிறது. இரண்டாவதாக, அத்திமரம், பாலஸ்தீன நாடாகிய தோட்டத்திலே நடப்பட்ட ஊராக எருசலேமைக் குறிக்கிறது. இந்நகரில் மக்கள் இயேசுவைத் தொடர்ந்து மறுத்ததால், இந்நகரம் அழிக்கப்*

படும். கி.பி. 70-இல் எருசலேம் அழியப் போவதை இது குறிக்கிறது. மூன்றாவதாக அத்திமரம் ஆன்மீகக் கனி கொடாத மனித இனத்தைக் குறிக்கிறது. தோட்டத்தலைவன் மனிதரின் ஆன்மீக முன்னேற்றத்திலே அக் கறை கொண்டிருக்கும் கடவுள். தோட்டக்கா ரன் மனிதர்களைக் கட்டிக்காத்து இயேசுவை அவர்கள் முழுமையாக ஏற்க வகை செய்யும் திருச்சபை. இம்மூன்று விளக்கங்களும் இயேசுவை ஏற்காதவர்க்கு எச்சரிக்கையாக அமைகிறது.

### காய்ச்சல் (FEVER)

விவிலியத்தில் குறிப்பிடப்படும் வியாதி களை இனம் கண்டுகொள்வது எப்பொழு தும் சுலபமில்லாதபோது, காய்ச்சல்வரும் சூழ்நிலை எப்பொழுதும் ஒரே மாதிரியான விளக்கத்தோடு வர்ணிக்கப்படுகிறது.

உப 28:22-இல் காய்ச்சல் கடும் காய்ச்சல் அல்லது விட்டுவிட்டு வரும் காய்ச்சலை வர்ணிப்பதாக அமையலாம். 28:22-இல் வரும் கடுங்குளிர் மலேரியாக் காய்ச்சலைக் குறிப்பிடலாம். உப 28:22 காய்ச்சலின் இரண்டு நிலைகளைக் குறிப்பிடுகிறது. முத லில் வருவது மலேரியாக் காய்ச்சலோடு மஞ்சள்காமாலை வருவதைக் குறிப்பிடுகி றது. இரண்டாவது காய்ச்சலை மட்டும் குறித்துக்காட்டுகிறது.

லேவி 26:16; உப 28:22 ஆகிய பகுதிகளில் ''என்புருக்கி நோயும் காய்ச்சலும்'' குறிக்கப் படுகின்றன. இது காய்ச்சலினால் மெலிய வைக்கிற வியாதி. இந்நோய் சீரியாவில் அவ்வளவாக இல்லை. விட்டுவிட்டு வரும் காய்ச்சலைத்தான் இந்நோய் குறிப்பிடுகிறது. இவ்வியாதி இரத்தசோகை, கடும் காய்ச்சலி னால் வரும் வலிப்பு, மெலிந்துபோதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தும். மலே ரியாக்காய்ச்சல் பழங்காலப் பாலஸ்தீனத்தில் மக்களை வருத்திப் பலரை மரிக்கச்செய்ததா கத் தெரிகிறது. பேதுருவின் மாமியாரும் (மத் 8:14; மாற் 1:30; லூக் 4:38) அரச அலுவலர் மகனும் (யோவா 4:52) இவ்வித நோயால் பீடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அ.ப. 28:8-இல் காய்ச்சல், சீதபேதியோடு குறிப்பிடப்படுகிறது. இது மலேரியாக்காய்ச் சலின் தளர்ந்த நிலையாக இருக்கலாம். ஆனால் இங்கு விவரிக்கப்படுகின்ற காய்ச் சல் ஆளைக்கொல்லும் கொடூரக் காய்ச்சலா கச் சித்தரிக்கப்படுகிறது.

### காய்வான் (KAIWAN)

சனிக் கிரகத்தின் பாபிலோனியப்பெயர். இதை ஆமோஸ் ''விண்மீன் கடவுள்'' என அழைக்கிறார் (ஆமோ 5:26). இஸ்ராயேலர் பாபிலோனியத் தெய்வத்தை வழிபட்டதால் (அத்தெய்வத்தின் அருகில் இருக்கும் பொருட்டு) பாபிலோனுக்கு அனுப்பப்படு வர் என்று ஆமோஸ் முன்னுரைக்கிறார். ஸ்தேவான் எழுபது நூலைப்பின்பற்றி எடுத் துக்கூறும்போது (அ.ப. 7:43) இது இரப் பான் என்று கூறப்படுகிறது. இது ஓர் எழுத் துப் பெயர்ப்புத் தவறாகும்.

### காரக்கரைசல், சாம்பல் உப்பு (LYE)

இது தூய்மை செய்வதற்காகப் பயன்படுத் தப்படும் ஒரு பொருள். இது சோடியம் கார்பனேட்டாக இருக்கலாம். இந்தப் பொருள், எகிப்து, அர்மீனியா ஆகிய நாடுக ளில் இயற்கையாகக் கிடைத்தது என்று பண் டைய எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது, பொட்டாசியம் கார்பனேட்டையும் குறிக்கலாம். இது மரச்சாம்பல் அல்லது மற்றக் காய்கரிப் பொருட்கள் முதலியவற் றைக் கொண்டு செய்யப்படும் காரத்தன்மை கொண்ட கரைசலாகும். பாலஸ்தீனத்தில் பின்னதுதான் பயன்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், பாலஸ்தீனத்தில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய சோடியம் கார்பனேட் டைப்பற்றி நாம் அறியவில்லை.

பொட்டாசியம் கார்பனேட்டு மற்றும் சோடியம் கார்பனேட்டு இரண்டும் தூய் மைப்படுத்தும் பண்பினைக் கொண்ட வையே. ஆகவே சுத்தப்படுத்தப்பயன்பட்

டன. புளிக்காடியை இதுபோன்ற காரத்தன்மையுடைய பொருட்களில் ஊற்றினால் (பழ 25:20) அவை பயனற்றவைகளாகிவிடும்.

காரயாகு (KAREAH - வழுக்கத்தலை) •

இவர் யோகனானின் தந்தை. இறைவாக்கினர் எரேமியாவின் காலத்தில் வாழ்ந்தவர். இராணுவத் தலைவர். நெபுக்கதுனேசார் மன்னனின் நாடு கடத்தலில் இருந்து தப்பித்தவர் (2 அர 25:23; எரே 40:8-16; 41:11-16; 42:1.8; 43:2 தொ).

காராகு (CHARAX)

யோர்தானின் கிழக்கே அமைந்த யூதர்கள் குடியேறி வாழ்ந்த ஒரு நகரம். இது தற்காலத்தில் எது என்று தெரியாது. யூதா மக்கபேயு காலத்தில் இந்நகரம் இருந்தது (2 மக் 12:17).

காரான் (HARAN) - இடம்.

வடக்கு மெசபொத்தாமியாவைச் சேர்ந்த இந்நகரில் ஆபிரகாம் வாழ்ந்தார் (ஆதி 11:31; அ.ப. 7:2.4). ஆபிரகாமின் தந்தை இங்கு இறந்தார் (ஆதி 11:32). இங்கிருந்துதான் ஆபிரகாம் கானான் நாட்டிற்குக் குடிபெயர்ந்தார் (ஆதி 12:4-5). மூதாதையர்களின் உறவினர்கள் இந்நகரிலேயே அரமேயர்களாக வாழ்ந்து வந்தனர். ஈசாக்குக்கு மணமுடிக்க ஆபிரகாமின் ஊழியன், பெத்துவேலின் மகளாகிய ரெபேக்காவைக் காரானிலிருந்துதான் கூட்டிக்கொண்டு வந்தார் (ஆதி 24). பிறகு லாபானோடு வாழ்வதற்கு யாக்கோபு லாபானின் புதல்வியரான லேயாவையும் ராக்கேலையும் மணந்து கொண்டார். பென்யாமினைத் தவிர மற்ற எல்லாக் குழந்தைகளும் அங்குதான் பிறந்தார்கள் (ஆதி 29:32-30:24).

பாபிலோனிலிருந்த சந்திர வழிபாடு இங்கும் காணப்படுவதால், ஏறக்குறைய கி.மு. 2000 ஆண்டில் மூன்றாவது ஊர் வம்சத்தின் அரசரால் இந்நகர் உருவாக்கப்பட்டிருக்கலாம். புகழ்வாய்ந்த வியாபாரத் தலங்களில் இந்நகரும் ஒன்றாகும் (எச 27:23). சனகெரிபுவின் முன்னோர் மற்ற நகரங்களோடு இந்நகரையும் அழித்துவிட்டதாக 2 அர 19:12 கூறுகிறது (ஏச 37:12) காண்க. காரானில் அகழ்வாராய்வு இந்நகரின் நீண்ட வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறது.

காரிபு (HARIPH - இலையுதிர்காலம், அவமதிக்கின்ற)

நாடு கடத்தப்பட்ட பின் செருபாபேலோடு திரும்பி எருசலேமில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றின் தலைவர் (நெ 7:24). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் இவரும் ஒருவர் (நெக 10:19). எஸ் 2:18-இல் யோரா என்ற பெயர் காணப்படுகிறது. இது காரிபு என்ற பெயருக்கு இணையான பெயராக இருக்கலாம்.

காரிம் (HARIM - இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்)

1. ஆரோவின் வழித்தோன்றல்களில் ஒருவர். தாவீது அரசரின் காலத்தில் இருந்த ஒரு குருகுலத்தின் இனப்பெயர் முதல்வர். குருக்களில் மூன்றாவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:8). பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களின் பட்டியலிலும் இப்பெயர் காணப்படுகிறது (எஸ் 2:39; நெக 7:42; 12:15). இக்குடும்பத்தைச் சேர்ந்த பலர் புறவின மனைவியரை விலக்க வேண்டியிருந்தது (எஸ் 10:21). இவர்களில் ஒருவர் நெகமியாவின் தலைமையில் எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர் (நெக 10:5).

2. பாபிலோனிலிருந்து திரும்பி வந்த குருகுலத்தைச் சேராத குடும்பம் ஒன்றின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:32; நெக 7:35). இவர்களில் சிலர் எஸ்ராவின் காலத்தில் தங்கள் புறவின மனைவியரை விலக்க வேண்டியிருந்தது (எஸ் 10:31). எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டுவதில் உழைத்த மலக்கியா இக்குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் (நெக 3:11).

3. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட குருக்களில் ஒருவர் (நெக 10:5).

4. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் (நெக 10:27).

காரியா (CARIA)

பூர்வீகக் காலத்திலிருந்து இது சிறிய ஆசியாவின் தென்மேற்குப் பகுதிக்கு அளிக்கப்பட்ட பெயராகும். இதன் வடக்கில் இலிதியாவும், கிழக்கில் இலிசியாவும், தென்மேற்கிலும், மேற்கிலும் மத்திய தரைக்கடலும் அகியன் கடலும் சூழ்ந்திருந்தன. அயோனியா, தோரியா கிரேக்கர்கள் கடற்கரைப் பகுதியில் சுதந்தரமான நகர்களை நிறுவியிருந்தனர். கி.மு.139-இல் யூதர்களின் பெயரால் உரோமையரசன் காரியாவிற்குக் கடிதம் எழுதினான் (1 மக் 15:23). இங்கு யூத மக்கள் இருந்ததாக இந்தக் கடிதம் காட்டுகின்றது. ஏறக்குறைய கி.மு. 1290-இல் ஆசியாவிலிருந்து, உரோமை மாகாணத்தின் ஒரு பகுதியாகக் காரியா மாற்றப்பட்டது. ஆகையால், புதிய ஏற்பாட்டில் இது தனியாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதன் இரு நகரங்கள் அப்போஸ்தலர் பணியில் குறிக்கப்படுகின்றன. பவுல் தனது மூன்றாம் மறைபரப்புப்பணியின் முடிவில் இங்குத் தங்கினார் (அ.ப.20:15-17). அவர் உரோமைக்குப் பயணம் செய்தபோது அவரது கப்பல் ''கடினமான பயணம் செய்து'' கினீது நகரம் சேர்ந்தது (27:7).

காருசு (HARUS - தங்கம், உழைப்புமிக்க)

அரசன் மனாசேயின் மனைவி மெசுல்லமேத்தின் தந்தை; தாயின் வழியில் அரசன் ஆமோனுடைய தாத்தா (2 அர 21:19). இவருடைய பெயர் ஓர் அராபியப் பெயராக இருக்கலாம். இவர் பிறந்த ஊர் யோத்திபா.

காரேபு (GAREB - சொறிநாய்)

1. ஓர் இதிரியர்; தாவீதின் ஆற்றல்மிக்க முப்பது வீரர்களில் ஒருவர். அனேகமாக யத்திர் நகரைச் சேர்ந்தவராக இருக்கலாம் (2 சாமு 23:38; 1 நாள் 11:48).

2. தென்மேற்கு மலைப்பகுதியில் இருந்ததாகக் கருதப்படும் எருசலேமின் ஒரு பகுதி. நகரம் மீண்டும் அமைக்கப்படுவது பற்றிய எரேமியாவின் இறைவாக்கில் (எரே 31:39) குறிக்கப்படுகிறது.

காரேபு (HAREPH - முந்திப்பிறந்த, அவமதிக்கிற)

யூதாவைச் சேர்ந்தவர். கூரின் மகன். காலேபுவின் பேரன். பேத்து - காதரின் தந்தை அல்லது நிறுவியவர் (1 நாள் 2:51).

கார்கயா (HARHAIAH - ஆண்டவர் சீற்றம் கொண்டார்)

நெகமியாவின் காலத்தில் எருசலேம் சுவரைக் கட்டுவதற்கு உதவி செய்த பொற்கொல்லர் ஊசியேலின் தந்தை (நெக 3:8).

கார்கரேக (HAR-HERES - சூரியனின் மலை).

அய்யாலோனுக்கு அருகில் உள்ள ஒரு மலை. தாண் பகுதியைச் சேர்ந்தது. ஆனால் தாணியர் இதை எமோரியரிடமிருந்து கைப்பற்ற முடியவில்லை. அனேகமாக எல்லைக் கோட்டையாகிய ஈர்செமேஸ் (யோசு 19:4) அல்லது பேத்துசெமெஸ் (யோசு 15:10; 21:16) ஆக இம்மலை இருக்கலாம்.

இது யாலோ (விவிலிய அய்யாலோன்) வுக்குத் தென்கிழக்கில் மலைச்சரிவிலுள்ள இக்காலக் கிர்சாவாக அடையாளம் காட்டப்படலாம்.

கார்காசு (HARHAS - ஏழ்மையான, வறுமையான)

இவர் குலிதா இறைவாக்கினரின் கணவனாகிய சல்லூம் என்பவரின் தாத்தா. யோசியாவின் திருச்சட்ட நூலைப் பற்றிக் குலிதாவிடம் கலந்து பேசினார்கள் (2 அர 22:14). 2 நாள் 34:22-இல் இவர் கசுரா என்றழைக்கப்படுகிறார்.

கார்கூர் (HARHUR - காய்ச்சல்)

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் முதல்வர் (எஸ் 2:51; நெக 7:53).

**கார்சா** (HARSHA - ஊமையான)

பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:52; நெக 7:54).

**கார்த்திகை விண்மீன்குழு** (PLEIADES)

இது விண்ணில் எருது வீட்டில், மார்கழி அல்லது மான்தலை விண்மீன் குழுவுக்கு அருகிலுள்ள ஒரு விண்மீன் கூட்டமாகும் (யோபு 9:9; 38:31; ஆமோ 5:8). கிரேக்கப் புராணக் கதைப்படி கார்த்திகை விண்மீன்கள், அட்லாஸ் மற்றும் பிலேயோனே ஆகியோரின் ஏழு புதல்வியர்கள் ஆவர். இவர்கள் வேட்டைக்காரன் ஓரியனால் துரத்தப்பட்டார்கள். ஓரியன் இவர்களைத் தொந்தரவு செய்ய முயன்றபோது சேயுவால் விண்மீன்களாக இவர்கள் மாற்றப்பட்டனர்.

**கார்ப்பு** (CARPUS - பலன், பலம்)

2 திமோ 4:13-இன்படி, துரோவா ஊரரான இவர் பவுலின் நண்பர். இவரிடம் பவுல் தன் போர்வை, நூல்கள், தோல் சுருள்கள் ஆகியவற்றை விட்டுச் சென்றிருந்தார். இவற்றைத் துரோவாவிலிருந்து கொண்டு வரும்படி திமோத்தேயுவைப் பவுல் கேட்டுக் கொண்டார்.

ஒரு பாரம்பரியத்தின்படி, இவர் திரேசிலுள்ள பெரித்துவின் ஆயரானார். பெர்கமோனில் வேதசாட்சியாக மரித்ததாக எண்ணப்படுகிறது.

**கார்மி** (CHARMIS)

மெக்கியேலின் மகன். பெத்தூலியாவில் இருந்த நகர நடுவர்களுள் ஒருவர். இவர்களிடம் யூதித்து உதவி கேட்டுச் சென்றாள் (யூதி 6:15; 8:10; 10:6).

**கார்னப்போர்** (HARNEPHER - கோரஸ் இரக்கமுள்ளவர்)

ஆசேரின் கோத்திரத்தில் ஒரு குடும்பம் அல்லது இடம். சோப்பாகுவின் மகன் (1 நாள் 7:36).

**கார்னாயீம்** (KARNAIS - இரு கொம்புகள் அல்லது சிகரங்கள்)

இது யோர்தானுக்கு அப்பால் வடபகுதியில் உள்ள ஓர் ஊர் (ஆமோ 6:13). இதுவும் அசித்தரோத்து-கார்னாயிமும் (ஆதி 14:5) ஒரு வேளை நாடுகடத்தப்பட்ட பிற்காலக் கார்னாயிமும் ஒன்றே. ஆமோ 6:13-இல் இறைவாக்கினர் கார்னாயிம் (எருதின் கொம்புகள், ஆகவே வலிமை) என்ற சொல்லையும் லோ-தபார் (ஒன்றுமின்மை) என்ற சொல்லையும் வைத்து விளையாடுகிறார். இவையிரண்டும், இஸ்ராயேலின் இரண்டாம் எரொபயாம் அரசனால் கைப்பற்றப் பட்டவை.

**காலநிறைவு** (FULLNESS OF TIME)

''காலநிறைவு'' என்று எபே. 1:10-இலும் ''காலம் நிறைவுற்றபோது'' என்று கலா 4:4-இலும் இக்கருத்து வருகிறது. இரண்டு பகுதிகளும் மனிதனுக்கும் வரலாற்றுக்குமான இறைவனது நோக்கங்கள் இறுதியாகப் பலன் தருவதைக் குறிக்கின்றன. இறைவனது நோக்கங்கள் நிறைவடைய இறைவனால் குறிக்கப்பட்ட நேரத்தைக் குறிக்கின்றன.

**காலந்தப்பிய பிறப்பு** (UNTIMELY BIRTH)

பழங்காலத்தில் முழுவளர்ச்சிக்குரிய சுமார் நாற்பது வாரங்களுக்குமுன் பிறக்கும் குழந்தைகள், அவை தனியாக வாழ முடிந்தாலும், இறந்துவிடும் கருவாக இருந்தாலும், அது குறைப் பிரசவமாகவே கருதப்பட்டது. இது ''முதிராப்பிண்டம்'' (யோபு 3:16); ''சிதைந்தழியும் கரு'' (சங் 58:8); ''கருச்சிதைந்த பிண்டம்'' (திருவுரை 3:16); ''காலந்தப்பிய பிறவி'' (1 கொரி 15:8) என்று பலவாறு விவரிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டின்படி காலம் தப்பிய பிறவிகள் ''ஒளியைக் காணாததால்' இது கருச்சிதைவைக் குறிக்கலாம். எண் 12:12 தாயின் கருவிலிருந்து செத்து விழுந்த கருவைப் பற்றிப் பேசுகிறது. இதில் இறந்துவிட்ட கருவானது தாயின் வயிற்றிலேயே பலநாள் இருக்கும்.

பவுல் தன்னைக் 'காலந்தப்பிய' பிறவி என்று கூறும்போது, இயற்கைக்கு மாறாகத் தான் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்ததைக் குறிப்பிடுகின்றார் (1 கொரி 15:8).

**காலம், நேரம் (TIME)**

யாவும் கடந்த இறைவனுடைய வெளிப்பாடாகிய விவிலியமானது, காலம் பற்றிய குறிப்புடன் தொடங்கி முடிகின்றது: ''ஆதியிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார்'' (ஆதி 1:1), மற்றும் ''ஆம், விரைவாகவே வருகிறேன்'' (திருவெளி 22:20). பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டிலைப்போன்று இறைவன் அவரது நித்தியத் தன்மையில், கருத்தியலான முறையில் விவிலியத்தில் அறிந்து கொள்ளப்படவில்லை. ஆனால், உலக வரலாற்றைப் புனித வரலாறாக்குகின்ற அவருடைய இவ்வுலகத் தலையீடுகளால் அறியப்படுகிறார். இதன் காரணமாகவே, வளர்ச்சியுறும் மனிதத்தன்மை தன்னிடமே காலத்தைப்பற்றிக் கேட்கின்ற சமய வினாக்களுக்கு விவிலிய வெளிப்பாட்டினால் விடையளிக்க முடிகிறது. ஏனெனில், இவ்வெளிப்பாடே தன்னுடைய அமைப்பில் வரலாற்றுப் பூர்வமானதாக உள்ளது.

I. முன்னுரை:-

1. ''ஆதியிலே'':- ஆதியாகமமானது தனது தொடக்கமாக இறைவனின் படைப்புச் செயலைப் பற்றிப் பேசுகிறது. நீடித்த அளவில் படைக்கப்பட்ட பொருள்களின் அமைப்பைச் சேர்ந்த முறையில், இச்செயலானது முழுமையான தொடக்கத்தைக் குறிக்கிறது. இத்தகைய சிந்தனை முறையானது, சூழ்ந்துள்ள யூதரல்லாதோரில் காணப்படும் தொடக்கம் பற்றிய கருத்தினின்று முற்றிலுமாக வேறுபடுகிறது. உதாரணமாகப் படைப்புப் பற்றிய பாபிலோனியக் கவிதையில், மார்துக் கடவுள் மனித மற்றும் அண்டத்தின் காலவரைச் சட்டத்தினை நிறுவுகிறார்: விண்மீன்கள், விண்மீன் குழுக்கள், இயற்கையின் பருவங்கள், பின்னர், வானூலுக்குரிய மற்றும் அளவிடப்படக்கூடிய காலம் தொடங்குகிறது. ஆனால், அதற்கு முன்னரே, அண்ட காலத்தின் மாதிரியாகிய மூல அமைப்புக் காலத்தில் பாபிலோனிய சிந்தனை அறிந்திருந்த ஒரே புனித வரலாறாகிய புராண வடிவ வரலாற்றைக் கடவுள்கள் ஏற்கனவே கொண்டிருந்தனர். அப்சு மற்றும் தியாமாத் என்னும் மூல இறைத் தம்பதியினரிடமிருந்து தொடர்ச்சியான சந்ததிகள் வெளிவந்தன. ஒரு போராட்டமானது கடவுளர்களை அடிபிடிச் சண்டைக்கு உட்படுத்தியது. இப்போராட்டத்தின் இறுதி விளைவாக, உலகமும் மனிதரும் தோன்றினர். இவ்வாறு, கடவுளர்களே முழுமையற்ற நிலையில் காலத்தின் பகுதியினின்று புறம்பாக்கப்பட்டவர்கள் போன்று, ஒரே தொடக்கத்தில் முழு அண்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கு முரண்பட்ட நிலையில், விவிலிய ஆதியாகமத்தில், இறைவனின் யாவும் கடந்த தன்மை வேர்நிலையான முறையில் உறுதிப்படுத்தப்படுகிறது. ''தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்'' (ஆதி 1:1); ''அந்நாளில் ஆண்டவராகிய கடவுள் விண்ணையும், மண்ணையும் உண்டாக்கியபொழுது'' (2:5). ஒரு இறைவரலாற்றை விவரிக்கின்ற மூல அமைப்புக்காலம் எதுவுமில்லை. ஏனெனில் குழப்பச் சக்திகளை இறைவன் எதிர்கொள்கிற அண்டப் போரைப் பற்றிய காட்சிகள் (சங் 74:13-14; 89:11) இறைவனைப் பற்றிய வரலாற்றைச் சுட்டவில்லை, இறைவன் ஒழுங்குபடுத்திய உலகின் வரலாற்றையே கட்டுகிறது. படைப்புச் செயலானது, மற்றப் படைப்புகளைப் போன்று நல்லதாக உள்ள நமது காலத்தினுடைய முழுமையான தொடக்கத்தைக் குறிக்கின்றது; ஆனால், இக்காலத்தில் இறைவன் ஏற்கனவே இருந்தார். காலத்தில் விவரிக்கப்படுவது அதற்கான திட்டமேயாகும். அது முதலில் மனிதனை நோக்கி அனைத்துப் படைப்பையும் ஒழுங்குபடுத்துகிறது. பின்னர் மறைபொருளான முடிவைநோக்கி நடத்துகிறது; மனிதனின் ஊழியை நடத்துகிறது.

2. காலமும் நித்தியமும்:-

அ) காலம்:- இறைவனின் படைப்பாகிய காலம், நம்மைப் பொருத்த வரலாற்றுக்கும் பணித்திட்டமாக அமைகிறது. படைப்புப் பற்றிய விவிலிய வர்ணனையில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. படைப்பின் ஏழு நாட்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஒரு போதனைமுறை அமைப்பைக் கொண்டுள்ளன; அவை ஓய்வுநாளின் புனிதத்தை ஆழப் பதிய வைக்கின்றன. பூவுலகானது படிப்படியாக முழுமையாக்கப்பட்ட காலத்தினுடைய சமயக் கருத்தையும் அளிக்கின்றன. இறைவன் வளர்ச்சியுள்ள முறையில் மனிதனைக் காலத்தில் அமைக்கிறார். இறுதியாக மனிதனைப் பெறவிருக்கின்ற பணிச்சட்டம் படிப்படியாக நிறைவு செய்யப்படுகிறது. மேலும், மனிதனுடைய தோற்றமானது அவனுக்கு முன்சென்ற அனைத்திற்கும் பொருளைத்தரும். இதனின்று, காலமானது வெறுமையான வடிவம் அல்ல; அடுத்தடுத்த நொடிகளின் வெறும் தொடர்ச்சியல்ல என்று காணலாம். அது பூமியின் கால அளவாகும். அந்த அளவில், அது தன்னைச் செயல்முறையில் வெளிப்படுத்துகிறது. முதலாவதாக, மனிதனின் வருகையால் ஒரு முகப்படுத்தப்பட்ட அண்டகாலம்; பின்னர், மனிதன் தனது குறிக்கோளை நோக்கிப் பயணிக்கின்ற சந்ததிகளின் இலயத்தால் குறிக்கப்பட்ட வரலாற்றுக்காலம்.

ஆ) நித்தியம்:- இந்த இருவிதக் காலத்தைப் பொறுத்தவரை இறைவன் யாவும் கடந்தவராக இருக்கிறார். மனிதன் காலத்திலும், இறைவன் நித்தியத்திலும் வாழ்கின்றனர். நித்தியத்தைக் குறிக்கும் ''ஓலாம்'' என்ற எபிரேயச்சொல் பலவாறு மொழிபெயர்க்கப்படுகிறது. இவை யாவும் மனித அறிவைக் கடந்த காலத்தை உணர்த்துகின்றன. இறைவன் காலங்களின் காலங்களில் எப்போதும் வாழ்கிறார். நாம் எவ்வித அனுபவமும் கொண்டிராத இக்காலத்தின் இயல்பை அறியச் செய்வதற்கென விவிலியமானது, அதை, அண்ட காலத்தின் (''உமக்கு ஆயிரம் ஆண்டுகள் கூட, கடந்துபோன நேற்றைய தினத்தைப் போலவும், ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன'' சங் 90:4) மற்றும் புனித காலத்தின் (''என்னுடைய வாழ்நாள் மாலை நிழலுக்கு ஒப்பாயிற்று...உமது பெயரின் புகழ் தலைமுறை தலைமுறையில் நிலைத்திருக்கும்'' சங் 102: 11-12) நிலையற்ற குணவியல்பிற்கு மாறான தாக்குகிறது. இத்தகைய சிந்தனைப்போக்கு, பிற்கால வாசகங்களில் தனிப்பட்ட விதத்தில் எடுத்துக்கூறப்படும் இறைவனின் யாவும் கடந்த தன்மையின் பொருளை வலியுறுத்துகிறது. ஆதியாகமமானது இறைவனை அவரது படைப்புச் செயலின் தொடக்கத்தில் கருதும்போது, பழமொழி ஆகமமானது, அவருக்குமுன்னால் ஞானத்தைத்தவிர வேறெதுவுமில்லாத, காலத்திற்கு முற்பட்ட, நித்தியத்தில் அவரைப்பற்றிச் சிந்திக்கிறது (பழ 8:22 தொ). இந்த நித்தியம் யோபுவைக் குழப்புகிறது (யோபு 38:4); ''ஊழ் ஊழிக்காலமாக, இறைவா, நீர் இருக்கிறீர்'' எனச் சங்கீத ஆசிரியரும் அறிவிக்கிறார் (சங் 90:2). பின்னர் விவிலியமானது, இறைவனின் யாவும் கடந்த தன்மை பற்றிய தனது கருத்தை, வரலாற்றில் அவருடைய தலையீட்டினுடைய உறுதியான உண்மையுடன் சமரசப்படுத்துவதில் வெற்றியடைகிறது. காலத்தை இறைமைப்படுத்துதல் (கிரேக்கக் கடவுள் தொகுப்பின் கிரானோ கடவுள்) அல்லது இஸ்லாமியரைப்போன்று, இறைவனுக்கு முன் அதற்கு எச்சிறப்பையும் மறுத்தல் என்னும் இருவித சோதனையினின்றும் அது இவ்வாறு தப்பிக்கிறது.

II. பழைய ஏற்பாடு:-

மனித அனுபவத்தில் காலத்தின் இரு கூறுகள் ஒன்றன்மீது ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. அவை, இயற்கையின் பருவங்கள், ஆட்சி புரியும்கூறு (அண்ட காலம்), மற்றும் நிகழ்ச்சிகளின் வரிசையில் தன்னையே வெளிப்படுத்தும் கூறு (வரலாற்றுக் காலம்) ஆகும். இறைவன் இரண்டையும் சமமாக நடத்தி, ஒரே குறிக்கோளை நோக்கி ஒன்றாக அவற்றிற்குத் திசை அளிக்கிறார்.

1. அண்ட காலம்:-

அ) காலத்தின் அளவுகள்:- இரவு பகல் என்னும் மாற்றம் (ஆதி 1:5), ஒன்றை யொன்று கட்டளையிடுகின்ற விண்மீன்க ளின் இயக்கம் (1:14), மற்றும் பருவங்களின் சுழற்சி (8:22) போன்ற இயற்கை கீழ்ப்படி கின்ற ஒழுங்கமைப்புகளைப் படைத்தவரா கிய இறைவன் நிறுவியுள்ளார். குறிப்பிட்ட இடைவெளிகளில் இச்சுழற்சிகள் நிகழ்கின் றன என்ற உண்மையானது, அவர் தமது படைப்பில் அமைத்தளித்த அமைப்பின் அடையாளமாகும் (சீரா 43). காலத்தை அளப்பதற்கான அடிப்படையாக அனைத்து மக்களும் இச்சுழற்சிகளை ஏற்றுக் கொண் டுள்ளனர். இக்கருத்தின் நோக்கில் யூத நாட் காட்டியானது, அதனுடைய இறுதி ஓய்வு நாளுடன் கூடிய வாரத்தை உபயோகிப்ப தைத் தவிர, வேறு தனித்தன்மையைக் கொண்டிருக்கவில்லை. மற்றவற்றைப் பொறுத்தவரை அது பிறரிடமிருந்து கடன் வாங்கிய கூறுகளைக் கொண்டதாகவும், காலங்களின் போக்கில் பரந்த அளவில் மாறு பட்டதாகவும் தோன்றுகிறது. பழைய ஏற் பாட்டில் இது சூரிய காலக்கணிப்புக்கும், சந்திர காலக் கணிப்புக்கும் இடையில் ஊச லாடுகிறது. வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்திருப்பது சூரிய சுழற் சிக்கு ஏற்ப அமைகிறது. ஆனால் மாதமா னது அதனுடைய பெயரிலும் பிரிவுகளிலும், சந்திர சுழற்சியைப் பின்பற்றுகிறது. ஏனெ னில் அது அமாவாசையோடு தொடங்குகி றது (சீரா 43:6 தொ). இஸ்ராயேலின் ஆண் டானது முதலில் இலையுதிர் காலத்தில் திசிரி மாதத்திலும் (யாத் 23:16; 34:22), பின்னர் இளவேனில் காலத்தில் நிசான் மாதத்திலும் (யாத் 12:2) தொடங்கியது. முதலில் தீர்மானிக்கும் நிகழ்ச்சிகளாகிய ஆட்சிகள் (ஏச 6:1) அல்லது இயற்கை நிகழ்ச்சிகள் (ஆமோ 1:1) ஆகியவற்றின்படி ஆண்டுகள் கணக்கிடப்பட்டன. பிற்காலத் தில் வரலாற்றுச் சகாப்தம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது; சான்று செலூக் கிய சகாப்தம் (1 மக் 1:10: 14:1; 16:14); பின்னர் இராபிகளின் காலத்தில் உலகைப் படைத்தது முதல் தொடங்கியுள்ள யூத ஆண்டு.

அ) காலத்தைப் புனிதப்படுத்துதல்:- நாட் காட்டியால் அளவிடப்பட்ட அண்ட காலமா னது முற்றிலும் சமயசார்பற்ற பொருளல்ல. அனைத்துப் பண்டைய சமயங்களும் இத னைப் புனிதப்படுத்தின. இயற்கையின் சுழற் சிகளில் ஒரு புனிதப் பொருளைக் கண்டனர்; ஏனெனில் இறை வல்லமைகள் அவற்றை ஆட்சி புரிந்து அவற்றின் மூலமாகத் தங்க ளையே வெளிப்படுத்தின என்று அவர்கள் எண்ணினர். இந்தப் புராணப் புனிதப்படுத் தல், பருவங்கள் மற்றும் மாதங்களின் இல யத்தைப் பின்பற்றுகின்ற விழாக்களுடைய நாட்காட்டியினை நிறுவத்தூண்டியது. புனித காலங்களின் இத்தகையதொரு கோட்பாடா னது, இஸ்ராயேலுக்கு நிரந்தரமான சோத னையாக அமைந்தது. அதை இறைவாக்கி னர்கள் கண்டனம் செய்கின்றனர் (ஓசே 2:13). ஆனால், அதனுடைய சமய நாட்காட் டியினின்று பலதெய்வப் புராணங்களுக்கான அனைத்துக் குறிப்புகளையும் விளக்குவதன் மூலம், பழைய ஏற்பாடானது அண்ட சுழற் சிகளின் இயற்கையான புனிதத்தன்மை யினை நிராகரித்து விடவில்லை.

அமாவாசைக் கொண்டாட்டத்தையும் (1 சாமு 20:5; ஆமோ 8:5; ஏச 1:3) இளவேனிற் காலத்தில் நாடோடிகளின் பாஸ்கா விழாவையும் (யாத் 12), அது பாதுகாத்துள் ளது. கானானிய நாட்காட்டியின் உழவு சார்ந்த பழக்கங்களை அது மதித்தது. அவை, இளவேனிற்காலத்தில், பார்லி விளைச்ச லின் தொடக்கத்திலுள்ள புளியாத அப்ப விழாக்கள் (யாத் 23:15; உப 16:8), முதற்கனி கள் (உப 26:1) மற்றும் முதற்கதிர்க்கட்டுக ளைக் (லேவி 23:10-11) காணிக்கையாக்கு தல்; மற்றும் வாரங்களின் விழா, அல்லது பெந்தகோஸ்தே எனப்படும் அறுவடையின் விழா (யாத் 23:16; 34:22; லேவி 23:16); இலையுதிர் காலத்திலான விளைச்சலின்

விழாவும் அப்பருவ இறுதியிலான கொண்டாட்டங்களும் (யாத் 23:16; உப 16:13; லேவி 23:3 43) ஆகும். ஆனால், வெளிப்பாடானது அவற்றின் புனிதப்பண்பை மாற்றியமைத்த ஒரு புதிய உட்பொருளைப் படிப்படியாக இந்தப் பாரம்பரியமான கொண்டாட்டங்களுக்கு அளித்தது. வரலாற்றில் இறைவனுடைய பெரும் செயல்களின் நினைவுகூர்தலாக அது அவற்றை ஆக்கியது. பாஸ்காவும், புளியாத அப்பவிழாவும் எகிப்திலிருந்து புறப்பட்டதையும் (யாத் 12:17.26-27), கானானில் வந்து சேர்ந்ததையும் நினைவுபடுத்துகின்றன (யோசு 5:10தொ). மேலும், பெந்தகோஸ்தே, சீனாய் மலை உடன்படிக்கையையும், இலையுதிர்கால விழாவானது பாலைவனத்தில் அலைந்து திரிந்ததையும் நினைவுபடுத்துகின்றன (லேவி 23:43). புனித வரலாற்றின் மற்ற நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துகின்ற மற்ற விழாக்கள் தோன்றின (உ.ம். அர்ப்பண விழா 1 மக் 4:36-59).

ஆண்டுக்கணிப்பிற்கு அப்பாற்பட்டு, மூன்றாண்டிற்கு ஒரு முறை பத்திலொரு பங்கு அளித்தல் (உப 14:28-29), ஓய்வு மற்றும் ஜூபிலி ஆண்டுகள் (லேவி 25) போன்ற மற்ற நீண்ட சுழற்சிகளும் காணப்படுகின்றன. வாரங்களின் முறையான சுழற்சியானது ஒரு விழாவினின்று மற்றொன்றிற்குச் சென்று கொண்டே இருக்கிறது. இறுதியாகக் காலத்தைச் சமயப் புனிதப்படுத்தலானது, பலிகள், காணிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் செபங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சடங்குமுறைகளைக் கொண்ட அன்றாடச் சுழற்சிக்குள் நுழைகின்றது (2 அர 16:15; எச 46:13-14; எண் 28:3-8). இவ்வாறாக, மனிதனுடைய முழுவாழ்வானது அதனைப் புனிதப்படுத்துகின்ற சடங்குகளின் வரிசைக்குள் உட்படுத்தப்படுகிறது. இஸ்ராயேலின் வாழ்வில் புனித நாட்காட்டியின் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் உடையதெனில் அதற்கெதிராகக் குற்றம் புரிவதன் மூலம், கொடுமைப்படுத்தும் அரசனாகிய அந்தியோக்கு எப்பிபான் இறைவனுக்கெதிராகவே எழுகிறான் (தானி 7:25; 1 மக் 1:39.43.55). ஏனெனில் வெளிப்பாட்டினால் அளிக்கப்பட்ட முறையில் காலத்தைப் புனிதப்படுத்துவதற்குப் பதிலாகப் புறமதப் புனிதச்சடங்கை ஈடுபடுத்த ஆசைப்படுவான்.



2. வரலாற்றுக்காலம்:-

அ) அண்டச் சுழற்சியும் வரலாற்றுக் காலமும்:- அண்டக்காலமானது சுழற்சி இயல்புடையது. கிழக்கத்திய அல்லது கிரேக்க சிந்தனையானது அண்டத்தின் இத்தகைய சுழற்சிகளில் மனித வாழ்வு புகுத்தப்படுவதால் எந்த அளவு தாக்கப்பட்டதெனில், அவர்கள் பொருட்களின் நித்திய திரும்புதலைக் காலத்தின் அடிப்படை விதியாக அமைத்தனர். திருவுரை ஆசிரியர் இவ்வுண்மையால் பெரிதும் கவரப்பட்டார். மனித வாழ்வானது, தப்பிக்கமுடியாத காலங்களினாலும் (''பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு'' திருவுரை 3:18), அதே நிகழ்ச்சிகளின் இடைவிடாத திருப்புதல்களினாலும் (''முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே இனிமேலும் செய்யப்படும்'', 1:9; 3:15) ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு மனித முயற்சியின் வரையறைக்கும் இறை ஆட்சியின் செயலைப் பொருட்களின் இடைவிடாத் திரும்புதலில் காண்பதின் கடினத்தன்மையும் கட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால் இந்த நம்பிக்கையின்மை ஒரு விதிவிலக்காகவே உள்ளது. ஏனெனில் விவிலியமானது காலம்பற்றிய மற்றொரு கோட்பாட்டால் ஆதிக்கம் செய்யப்படுகிறது. அது வரலாறு பற்றிய விவிலிய விவரிப்போடு ஒத்துப் போகிறது.

வரலாறானது முடிவில்லாத் திரும்புதலின் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. இது திரைவிலக்கப்பட்டு அதனில் வெளிப்படுத்தப்படுகின்ற இறைவனின் திட்டத்தால் அடிப்படையகத் திசை அளிக்கப்படுகிறது. திரும்ப நிகழாமல், மனிதருடைய நினைவுகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தனிச்சிறப்

புப் பண்பைக் கொண்ட நிகழ்ச்சிகளால் அது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, காலம் பற்றித் தனது அனுபவத்தினால் படிப்படியாக ஊட்டம் பெற்ற நிலையில், மனித இனமானது முன்னேறும் திறனுடையதாகிறது. இம்முறையில் வரலாற்றுக் காலமானது, அண்டைக்காலத்தினின்று தரத்தைப் பொறுத்தவரையில் மாறுபட்டு உள்ளது. அதை ஏற்று, மனிதனது சாயலில் உருமாற்றம் அளிக்கிறது. மனித வாழ்வுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்ச்சிகளுக்கு, அது தனக்கேயுரிய அளவைகளைக் கொண்டுள்ளது. தொடக்க காலங்களில் இஸ்ராயேலானது காலம்பற்றிக் குடும்பக் கருத்தைக் கொண்டிருந்தது. காலம் தலைமுறைகளால் எண்ணப்பட்டது (ஆதி 2:4; 5:1). அரசாட்சித் தொடக்க முதல், காலமானது ஆட்சிகளால் கணிக்கப்பட்டது. சகாப்தங்கள் பின்னர் வரவிருந்தன. இத்தகைய வரலாற்றுக் கணிப்புகளில், எண்களில் குறிப்பிட்ட ஆர்வம் பலமுறை தோன்றுகின்றது. ஆயினும் நம்பகமான விவரங்கள் இல்லாமையின் காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்ட எண்ணிக்கைகள் இப்போது நாம் வரலாற்றில் எதிர்பார்ப்பவைகளுடன் எப்போதும் ஒத்துப் போவதில்லை. அவற்றில் சில தோராயமானவையாகவும் தெளிவற்றவையாகவும் உள்ளன (ஆதி 15:13-இன் 400 ஆண்டுகள்); மற்றவை அடையாள மதிப்பைக் கொண்டுள்ளன (ஏனோக்கினுடைய 365 ஆண்டுகால வாழ்வு ஆதி 5:23). ஆனால், வெளிப்பாட்டைக் காலத்தினில் புகுத்தப்பட்டதாகக் காட்டப் புனித ஆசிரியர்கள் எடுத்த ஆர்வத்தை அவை காட்டுகின்றன.

ஆ) வரலாற்றுக் காலத்தைப் புனிதப்படுத்துதல்:- புறச் சமயங்களில், வரலாற்றுக் காலமானது இயற்கையின் சுழற்சியைப் போன்று, ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியானது, இயற்கையின் சுழற்சிகள் செய்வதுபோலத் தெய்வங்களின் மூல அமைப்பு வரலாற்றை மீண்டும் உருவாக்கிய அளவிலேயே புனிதத் தன்மையைக் கொண்டிருந்தது. இது புராணப் புனிதத்தன்மையைச் சார்ந்ததாகும். இக்கருத்தில் விவிலிய வெளிப்பாடானது வேர்நிலையான ஒரு புதுமுறையை உருவாக்குகிறது. உண்மையில் இறைவன் புனித வரலாற்றின் சாதனங்களால் திருவெளிப்பாட்டில் தம்மையே வெளிப்படுத்துகின்றார். இப் புனித வரலாற்றைப் பின்னூகின்ற நிகழ்ச்சிகளாக இருப்பவை கீழுலகிலான அவரது செயல்களே. இதன் காரணமாக இந்நிகழ்ச்சிகள் குறிப்பிட்டுள்ள காலமானது, இறைவன் ஒரே தடவையில் உலகைப் படைத்தபோது மூல அமைப்புக் காலத்தை மீண்டும் நிகழ்த்துகிறது என்பதற்காக அல்லாமல், இறைவனுடைய திட்டத்தின்படிகள், தங்களுக்கே உரியபொருளுடன், ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன என்ற அளவுக்கு அது புதுமையைக் கொண்டுவருகிறது என்ற உண்மையில் தன்னிலேயே புனித மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. காலத்தினுடைய இந்தக் காலக்கட்டங்களுக்குப் பொருளை அளிப்பது பின்னிப் பிணைந்த வரலாற்று உண்மைகளின் பின்னல் அல்ல. விவிலியமானது உண்மையில் பொருட்களின் இந்தக் கூறு பற்றி முழுவதும் அக்கறையற்றதாக உள்ளது. ஏனெனில் இறை எண்ணம் மட்டும், காலமானது தனது முடிவையும் நிறைவேறுதலையும் ஒரே நேரத்தில் அடைகின்ற மறைபொருள் மிக்க முடிவை நோக்கித் தனிப்பட்ட விதத்தில் அவைகளை நடத்துகிறது.

3. காலத்தின் முடிவு:-

அ) தொடக்கமும் முடிவும்:- இறைவனுடைய மக்களின் முழு ஊழையும் கொண்டுள்ள புனித வரலாறானது, தொடக்கம் மற்றும் முடிவு என்னும் இரண்டும் தொடர்புடைய சொற்களுக்கிடையில் எழுதப்படுகின்றது. பண்டைய சிந்தனையானது மனித நிறைவினைக் குறிப்பிடும்போது அதைப் பொற்காலமாகத் தொடக்கத்தில் அமைத்தது; அதைத் தொடர்ந்து வளர்ச்சியுள்ள இழிநிலை ஏற்பட்டது. காலம் பற்றிய சுழற்சியின் கோட்பாட்டுடன் இன்னமும் பிணைக்கப்பட்டுள்ள பெரிய ஆண்டின் மறுவருகையுடன், அது சில நேரங்களில் இப் பொற்காலத்தின் மறுமலர்ச்சியைக் கண்டது.

மனிதனுடைய தொடக்கத்தில் விவிலியமும் ஒரு மூல முழுமையை அமைக்கின்றது

*(ஆதி 2)*. ஆனால் விவிலியத்தைப் பொறுத்த வரையில், இத்தொடக்கநிலையின் இழப்பானது, அண்டம் பரிணாமத்தின் இயல்பான வளர்ச்சியின் விளைவல்ல; இந்த முழு நிகழ்ச்சிக்கும் காரணமாக இருப்பது மனிதனுடைய பாவமே ஆகும். அது முதல், வரலாறானது இரு முரண்பட்ட இயக்கங்களால் செயல்படுத்தப்படுகிறது. ஒருபுறம், தவறாமல் இறைவன் தண்டனையைத் தூண்டுகின்ற ஆன்மீக வீழ்ச்சியாகிய தீமையின் முன்னேற்றமான வளர்ச்சி காணப்படுகிறது. இவ்வாறு, வரலாற்றிற்கு முற்பட்ட காலமாகிய தொடக்கமுதல், தண்டனையின் ஒரு வகையாகிய வெள்ளப்பெருக்குக் காலம் வரையில் அது இருந்தது. இவ்வாறே பின் வந்த காலத்திலும் இருந்தது. இதன் விளைவாக வெளிப்பாட்டுநூல்கள் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பேரழிவு விளக்கங்கள் அளித்தன *(தானி 2:7)*. ஆனால், மற்றொரு புறம், தவறாமல் மனிதனின் மீட்பைத் தயாரிக்கின்ற நன்மையை நோக்கியும் முன்னேற்றம் உண்டு. வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில், இறைவன் நோவாவைக் காக்கவும், அவருடன் உடன்படிக்கையை ஏற்படுத்தவும் அவரைத் தேர்ந்துகொண்ட போது இவ்வாறு இருந்தது. புனித வரலாற்றின் முடிவில், இவ்வுலகில் மூல நிறைவு திரும்ப அமைக்கப்படும்போதும் இவ்வாறே இருக்கும். இந்த மூல நிறைவு மீண்டும் அமைக்கப்படுதல், தொடக்கத்திற்குத் திரும்பவும் தன்னியக்கமுடைய செயல்முறையின் மூலமாக இல்லாமல், ஒரே நேரத்தில் பாவ உலகிற்கான தண்டனையையும் நீதிமான்களின் மீட்பையும் நிறைவேற்றுகின்ற இறைவனுடைய மேலாண்மைமிக்க செயலால் நிகழும். புறமதக் கவர்ச்சியினின்றும், அதனுடைய மனிதக் காலம் பற்றிய கோட்பாட்டினின்றும், இஸ்ராயேலைக் காப்பாற்றுவதற்குக் காலத்தினுடைய இந்த முடிவையும் அது கோரும் ஒழுக்கத் தயாரிப்பையும் இறைவாக்கினர்கள் வலியுறுத்துவர்.

ஆ) இறுதிநிலை எவ்வாறிருக்கும்:- முதலாவதாகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகிய ஆண்டவரின் நாளானது *(ஆமோ 5:18; ஏச 2:12)*, பாவ உலகின் மேல் அந்தரத்தில் தொங்கும் எப்போதும் உடனடி அச்சுறுத்தலாக முதலில் தோன்றுகிறது. அதனுடைய காலமானது இறைவனின் இரகசியங்களில் குறிக்கப்பட்டிருந்தாலும், அறியப்படாமலே உள்ளது. அதனைக் குறிப்பிட இறைவாக்கினர்கள் வெறுமனே ''இறுதி நாட்கள்'' *(ஏச 2:2)* பற்றிப் பேசுகின்றனர்; அல்லது கடந்தகாலமாகிய ''முதல்காலத்தை'' இறுதிக்காலத்தோடு எதிர்கொள்ளச் செய்து, இரண்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகின்றனர் *(ஏச 8:23)*. பாவ உலகின் காலவட்டமாகிய இன்றைய காலக் கட்டமானது உறுதியான தண்டனையால் முடிவுக்குக் கொண்டுவரப்படும். பின்னர், புதிய காலம் தொடங்கும். இக்காலம் பற்றிய வாசகங்கள் கவர்ச்சிமிக்க விவரிப்புக்களைக் கொடுக்கின்றன. நீதி மற்றும் மகிழ்ச்சியின் காலமானது கீழுலகில் இன்பவனத்தின் முழு நிறைவை மீண்டும் அமைக்கும் *(ஓசே 2:20 தொ; ஏச 11:1-9)*. எதிர்காலமானது இனியும் நிகழ்காலத்துடன் ஒத்த அளவாக இராது. ஆனாலும் தொடக்கத்தில், இறைவாக்கினர்கள் இவ்விரண்டிற்குமிடையே எவ்வித அடிப்படையான பிளவையும் அமைக்கவில்லை: எல்லையற்ற காலக்கட்டத்தினுடைய புதிய காலங்கள் *(ஏச 9:6)*, வரலாறு இப்போது வெளிப்படும் நிலையை விட்டுவிடாமல் வரலாற்றிற்கு முடிவாக அமையும். நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் ''வரவிருக்கும் காலத்திற்கும்'' (அல்லது உலகத்திற்கும்), இன்றைய உலகிற்கு இடையிலான வேறுபாடானது முற்போக்கான அளவில் வலியுறுத்தப்பட்டது. வரவிருக்கும் உலகமானது ''புதிய வானங்கள்'' மற்றும் ''புதிய மண்ணுலகம்'' ஆகியவற்றின் படைப்பினால் தொடங்கப்படும் *(ஏச 65:17)*. அதாவது, அது அடிப்படையிலே புதிய மட்டத்தில், இறைமறைபொருள்களின் மட்டத்தில் அமைக்கப்படும். இந்த மறைபொருள்களின் வெளிப்பாடு, வெளிப்பாட்டு நூல்களின் பொருளாகிறது.

இ) முடிவு எப்போது வரும்:- யூதர்களுடைய நம்பிக்கையானது பொறுமையின்றி

எதிர்நோக்கியுள்ள இம்முடிவை (தானி 9:2), முடிவின் காலத்தை (11:40) வெளிப்பாட்டு நூல்கள் ஏக்கத்தோடு நோக்குகின்றன. எரிந்து போகும் நிகழ்காலத்தை இடைவிடாது தொடரும் நெருங்கிய எதிர்காலத்தில் அதை அவை காண்கின்றன. ஆனால், இறைவனால் குறிக்கப்பட்டுள்ள ''நேரங்களும் காலங்களும்'' அவரது மறைபொருளாகவே உள்ளன (அ.ப. 1:7). இதுபற்றி முன்னுரைக்கப்படுகின்ற எண்ணியல் யூகங்கள், அடையாளவியல் அமைப்பைச் சேர்ந்தவையாகும். உதாரணமாக எரேமியாவினுடைய எழுபது வருடங்கள் (எரே 29:10); தானியேலின் எழுபது வார வருடங்கள் (தானி 9). இக்காலங்களின் பொருள் ஓய்வு ஆண்டு மற்றும் ஜுபிலி ஆண்டு ஆகியவற்றின் பொருளோடு ஒத்ததன்மையுடையது (ஏச 61:2; லேவி 25:10). இம்முறையின் மூலமாக, இறுதிக்காலங்கள் பற்றிய விவிலிய அறிவிப்பானது, பிரச்சனைக்குரிய காலங்கள் எப்போதும் வாய்ப்பளிக்கின்ற இறுதிக்கால ஊகங்களினின்று முழுமையாகப் பிரித்துக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பு அல்லது உலக முடிவின் தேதியினுடைய கணிதவியல் தீர்மானத்தைப் பழைய ஏற்பாடு தரவில்லை. அது கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய காலத்தின் முழுமையின் ஆழம்பற்றிய காட்சியாகும். அதன் இரகசியத் திசைநோக்கை வெளிப்படுத்துகிறது; அதனால் அதன் பொருளை வெளிப்படுத்துகிறது. மனிதன் நிம்மதியற்ற ஆர்வத்திற்கு எவ்விதத் திருப்தியையும் அதிலிருந்து அடைய முடியாது. மனிதன் தான் வாழ்கின்ற காலம் கோரும் ஆன்மீகத் தேவைகளைப் பற்றி உணரமட்டுமே கூடும்.

III புதிய ஏற்பாடு:-

1. இயேசுவும் காலமும்:-

அ. இயேசு வரலாற்றின் காலத்தில் வாழ்கிறார்:- தயாரிப்பின் காலங்கள் எதிர்நோக்கியிருந்த முடிவானது இயேசுவுடன் வந்தடைந்துள்ளது. இறைவனுடைய இந்த இறுதியான செயலானது வரலாற்றின் காலத்தில் துல்லியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது: ''ஏரோது அரசனின் நாட்களில்'' இயேசு பிறந்தார் (மத் 2:1); ''திபேரியு செசார் ஆட்சியேற்ற பதினைந்தாம் ஆண்டில்'' யோவானின் போதனை தொடங்குகின்றது (லூக் 3:1); ''போஞ்சு பிலாத்தின் முன்னிலையில் இயேசு தனது விசுவாச அறிக்கையைச் செய்கிறார்'' (1 திமோ 6:3). ''ஒரேமுறை நிகழ்ந்த (உரோ 6:10; எபி 9:12) இந்தக் கடைசிச் செயலானது புனித வரலாற்றின் மைய, முக்கிய நிகழ்ச்சியாக இருப்பதால், கிறிஸ்தவ விசுவாசத்தின் அனைத்து அறிக்கைகளும், மனித காலத்தில் இது நிகழ்ந்த தருணத்தைக் குறிப்பிடுகின்றன. மேலும் அனைத்து மனித முதிர்ச்சிக்கும் தேவையாக உள்ள சாதாரணத் தாமதங்களையும் தனது மண்ணுலக வாழ்வில் இயேசு ஏற்றுக் கொள்கிறார் (லூக் 2:40,52). காலம் பற்றிய நமது அனுபவத்தில் அவர் முழுமையாகப் பங்கேற்கிறார். அவருடைய இறைவாக்குணர்வு மட்டுமே நிகழ்ச்சிகளின் போக்கிற்குத் தலைவராக அவரை ஆக்கியது. அதனால் பிற்பாடு உயிர்த்தெழுவதற்காக அவர் படவேண்டிய மரணத்தில் கண்களைப் பதித்தவராய் வாழ்ந்தார் (மாற் 8:31; 9:31; 10:33-34). இதுவே அவரது நேரம் (யோவா 17:1). அதை முன்பே ஏற்றுக்கொள்ள, தந்தைபால் அவர் காட்டிய கீழ்ப்படிதல் தடை செய்கிறது (2:4).

ஆ) இயேசுவின் காலம், காலத்தின் நிறைவாகும்:- இயேசுவினுடைய இக்காலத்தின் பொருளை அறிதல் மிகவும் அவசியமாகும். தமது போதனையின் தொடக்கத்திலிருந்தே, தனிப்பட்ட தெளிவுடன் அவர் அதனைப் போதிக்கிறார்: ''காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கிவிட்டது'' (மாற் 1:15; லூக் 4:21). தன்னுடைய பணிக்காலம் முழுவதும், தாங்கள் வாழ்கின்ற காலத்தின் அடையாளங்களைப் புரிந்துகொள்ளுமாறு, தமக்குச் செவிமடுப்பவர்களை அவர் தூண்டுகிறார் (மத் 16:1 தொ). இறுதியாக, இறைவனின் வருகையினுடைய காலத்தைப்பற்றி அறியாத எருசலேமிற்காக அவர் அழுகிறார் (லூக் 19:44). பின்னர், இயேசு யூதர்களின் காத்திருத்தலுக்கு முடிசூட்டுகிறார். ''காலத்தின் நிறைவானது'' அவரோடு வந்துவிட்டது (கலா 4:4; எபே 1:10). நற்செய்தியின்

போதனையானது தெளிவாக ஒளியில் அளிக்கின்ற உறுதியான கூறை, இஸ்ராயேலின் வரலாற்றில் அவர் அறிமுகப்படுத்துகிறார்: ''இப்பொழுதோ கடவுளின் திருவருட் செயல்முறை திருச்சட்டத்தின் சார்பின்றியே வெளியாக்கப்பட்டுள்ளது; அச்செயல்முறையையே திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்தனர்'' *(உரோ 3:21)*. இறைவனின் திட்டத்தினை வெளிப்படுத்துதலில், அனைத்தும் ''முன்னால்'' அல்லது ''பின்னால்'' என்று பகுக்கப்படும் உறவுடைய ஒரு நிகழ்ச்சியானது நிகழ்ந்து விட்டது: ''ஒரு காலத்தில் மெசியாவின்றி, வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அந்நியராக இருந்தீர்கள்'' *(எபே 2:12)*; ''இப்பொழுதோ உங்களைத் தம்முடைய ஊனுடலில் ஒப்புரவாக்கினார்'' *(கொலோ 1:22)*. எனவே, இயேசுவின் காலமானது மண்ணுலகக் காலத்தின் மத்திய பாகமாக மட்டுமே இருக்கவில்லை; காலத்தைத் தனது முழுமைக்குக் கொண்டுவந்து, முழுமையாக அதன்மீது ஆதிக்கம் செலுத்துகிறது.

*2. திருச்சபையின் காலம்:-*

*அ) இறுதிக்காலத்தை நீட்டித்தல்:-* பழைய ஏற்பாட்டின் நோக்கில், முடிவானது ஒட்டுமொத்தமான முறையில் எதிர்நோக்கப்பட்டது. கீழுலகில் ஒரே நேரத்தில் தண்டனையையும் மீட்பையும் நிறுவுவதன் மூலம் இறைவனின் திட்டமானது தனது முடிவை அடையும். புதிய ஏற்பாடானது இம்முடிவின் இடையில் ஒரு சிக்கலை அறிமுகப்படுத்துகிறது. காலத்தின் முடிவான நிகழ்ச்சியானது இயேசுவில் வந்துள்ளது; ஆயினும், தனது பலன் அனைத்தையும் அது அளித்துவிடவில்லை. இறுதிக்காலங்கள் தொடங்கப்பட்டு மட்டுமே உள்ளன; உயிர்த்தெழுதல் முதல், இறைவாக்கினர்களும், இறைவெளிப்பாடுகளும் வெளிப்படையாக முன்னோக்காத முறையில் அவை விரிவுபடுத்தப்படுகின்றன. இயேசு உவமைகளில் குறிப்பிட்ட கால இடைவெளியைக்கொண்ட எதிர்கால முழுமையை நோக்கிய அரசின் பயணத்தை நோக்க ஏற்கனவே வழிதிறந்து விடுகிறார் *(மத் 13:30; மாற் 4:26-29)*. உயிர்ப்பிற்குப் பின்னர், அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு அளிக்கின்ற பணியானது, இறுதிக்காலத்தின் அதே நீட்டித்தலை முன்னுரைக்கிறது *(மத் 28:19-20; அ.ப. 1:6 தொ)*. இறுதியாக விண்ணேற்பின் காட்சியானது, இறைவனின் வலப்புறத்தில் இயேசு தமது இடத்தை ஏற்கும் தருணத்தையும், மீண்டும் அவர் மகிமையில் வந்து இறைவாக்கினர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுதலைச் செய்துமுடிக்கும் தருணத்தையும் கூர்மையாக வேறுபடுத்துகிறது *(அ.ப. 1:11)*. இவை இரண்டிற்கும் இடையில் ஓர் இடைக்காலம் அமையும். யூதரல்லாதோர் மூழ்கடிக்கப்பட்ட ''அறியாமையின் காலம்'' *(17:30)*, மற்றும் இஸ்ராயேல் மக்கள் இதுவரை வாழ்ந்த பாதுகாப்புக்காலம் *(கலா 3:23 தொ; 4:1 தொ)* ஆகிய இரண்டினின்று பண்பால் இவ்விடைக்காலம் வேறுபட்டிருக்கும். இது திருச்சபையின் காலம்.

*ஆ) திருச்சபையினுடைய காலத்தின் பொருள்:-* திருச்சபையின் இந்தக் காலமானது சலுகை பெற்ற காலமாகும். இது மீட்பிலிருந்து அனைவரும் பலன் பெறுவதற்கென யூதர் மற்றும் யூதரல்லாதோர் முதலான அனைத்து மனிதருக்கும் நற்செய்தி போதிக்கப்படுகிற காலமாகும்; ஆவியின் காலமாகும் இது *(யோவா 16:5-15; உரோ 8:15 தொ)*. இது உண்மையிலேயே ஒரு புதிரான சூழ்நிலையாகும். ஒருபுறம், விவிலியம் முன்னுரைத்த பொருட்களின் குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்ததாக உள்ள இக்காலம், ஞானஸ்நானத்தினால் இக்காலத்திற்குள் நுழையும் நமக்கு ''இறுதிக்காலமானது'' வந்துள்ளது *(1 கொரி 10:11)*. ஆனால், மற்றொருபுறம், இவ்வுலகின் உருவம் கடந்து செல்வதுபோலக் *(1 கொரி 7:29 தொ)* கடந்து செல்லவேண்டிய ''இக்காலத்துடன்'' இது இணைந்து இருக்கிறது *(தீத் 2:12)*. இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தியை நோக்கி மனந்திரும்புதலானது ஒவ்வொரு மனிதனுக்கும் கால மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. ஏனெனில் இது, இன்றைய உலகினின்று வர இருக்கும் உலகிற்கும், அழிவை நோக்கிச்செல்லும் பழைய காலத்தினின்று

அதனுடைய முழு விரிவாக்கத்தை நோக்கிப் பயணிக்கின்ற புதிய காலத்திற்கும், செல்லும் பாதையாக உள்ளது. இப்பாதையை இயலக்கூடியதாகச் செய்வதில், திருச்சபையினுடைய காலத்தின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. அனைவருக்கும் எட்டுகின்ற அளவில் அளிக்கப்படும் ''ஏற்புடைய காலம், மீட்பின் நாள்'' இதுவே (2 கொரி 6:1-2). ஒவ்வொரு மனிதனும் மனமாற்றத்திற்கு அழைக்கப்படுகின்ற, இறைவனுடைய குரலுக்குக் கவனம் செலுத்த வேண்டிய, இறைவனின் ''இந்நாள்'' இதுவே (எபி 3:7-4:11).

இறைவனுடைய மறைபொருளான சித்தத்திற்கேற்பப் பழைய ஏற்பாட்டில் மீட்பின் திட்டமானது வெளிப்படுத்தப்பட்டது போலத் திருச்சபையின் காலமும் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்குக் கீழ்ப்படிகிறது. இத்திட்டத்தின் அமைப்பைச் சிலவாசகங்களில் காணலாம். முதலில் இரண்டு கூறுகளை உள்ளடக்கிய ''யூதரல்லாதோரின் காலம்'' உள்ளது. ஒருபுறம், (பண்டைய மொத்த இஸ்ராயேலின் அடையாளமாகிய) ''எருசலேம் புறவினத்தாரால் மிதிபடும்'' (லூக் 21:24). மற்றொருபுறம், இதே புறவினத்தார் படிப்படியாக நற்செய்திக்கு மனமாற்றப்படுவர் (உரோ 11:25). இறுதியாக, இஸ்ராயேலின் காலம் வரும்; பின்னர், அதன் பங்கிற்கு ''மொத்த இஸ்ராயேலும் மீட்கப்படும்'' (உரோ 11:26). அதன்பின்னர், முடிவு வரும். மொத்த மனித வரலாற்றையும் சேர்ந்த காலத்தின் மறைபொருள், அது முழுமையாக வெளிப்படுத்தலில் இத்தகையதே. இக்காலத்தின்மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற இயேசு மட்டுமே, உலகின் முடிவுகள் எழுதப்பட்டுள்ள, ஏழு முத்திரைகளுடன் கூடிய நூலைத் திறக்க முடியும் (திருவெளி 5).

இ) திருச்சபையின் காலத்தைப் புனிதப்படுத்துதல்:- எதிர்கால உலகைச் சேர்ந்தது என்ற நிலையிலே திருச்சபையின் காலமானது புனிதமானதாக உள்ளது. ஆயினும் மனிதரால் காலமானது புனிதப்படுத்தப்படுவதானது செயல் ஆற்றல் மிக்கதாயிருக்க, பரிசுத்தகாலம் மற்றும் சமய விழாக்கள் ஆகிய காணக்கூடிய அடையாளங்களால் குறிக்கப்படவேண்டும். இவை ஆண்டுதோறும் மீண்டும் வருவதால் அண்டக்காலத்தின் இலயத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. ஏற்கனவே பழைய ஏற்பாடானது புனித வரலாற்றின் பெரும் செயல்களின் கொண்டாட்டத்தில் இவ்வடையாளங்களுக்குப் புனிதத்தின் புது ஊற்றைத் தேடியது. இயேசுவின் இவ்வுலக வருகைக்குப்பின், மீட்பின் நிகழ்ச்சியானது வரலாற்றுக் காலத்தில் அமைக்கப்பட்டதன் காரணமாக, இச்செயல்கள் இனிமேல் உருவக மதிப்பை மட்டும் கொண்டிருப்பதில்லை. மனித காலத்தைப் புனிதப்படுத்துவதற்கென அதன் வழிபாட்டு நாட்காட்டியின் வட்டத்தில் திருச்சபையானது மெய்யாக்குவது இத்தனிச்சிறப்பான நிகழ்ச்சியையே. ஆண்டவரின் நாளாகிய (திருவெளி 1:10; அ.ப. 20:7; 1 கொரி 16:2) ஒவ்வொரு ஞாயிறும், வாரத்தின் வரைச் சட்டத்திற்குள் இயேசுவினுடைய உயிர்ப்பின் கொண்டாட்டமாக ஆகிறது. சிறப்புமிக்க விழாவாகிய பாஸ்காவின் தேதியும் (1 கொரி 5:8), ஆண்டவருடைய மரணம் மற்றும் உயிர்ப்பின் ஆண்டு நினைவும், ஆண்டுதோறும் கொண்டாடப்படும்போது, கொண்டாட்டமானது மிகச்சிறப்புப்பண்பைப் பெறுகிறது. இவ்வாறு, திருச்சபையில் வளர்ச்சிபெற இருக்கின்ற கிறிஸ்துவ வழிபாட்டு வட்டங்களின் முதல் தோற்ற அமைப்புக்களைப் புதிய ஏற்பாட்டில் காணலாம். இதன் மூலமாக அனைத்து மனித வாழ்வும், வரலாற்றில் வந்துவிட்ட மீட்பின் மறைபொருளோடு தொடர்புபடுத்தப்படும். இந்த உண்மையிலேயே எடுத்துக்காட்டான காலம், புறமதப் புராணங்களின் மூல அமைப்புக் காலத்தின் இடத்தை இறுதியாக எடுத்துக்கொள்ளும்.

3. காலங்களின் நிறைவு:-

அ. கிறிஸ்தவ இறுதிக்கால இயல்:- ஆயினும் திருச்சபையின் காலமானது அதனிலேயே போதியதாக இல்லை. பழைய ஏற்பாட்டுடன் ஒப்பிடும்போது ''இறுதிக்காலங்களின்'' ஒரு பகுதியை இது அமைக்கிறது; ஆனால், அதே முறையில் வரவிருக்கும்

முழுநிறைவை நோக்கி விரிவுபடுத்தப்பட்டும், ஆண்டவரது நாளாகிய முடிவை நோக்கித் திசைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஆவியானவர் மனிதருக்கு அளிக்கப்பட்ட நிலையில், அனைத்துப் படைப்புகளும் இறைவனுடைய பிள்ளைகளின் இறுதி வெளிப்பாட்டிற்காகவும், தங்களது உடலின் மீட்பிற்காகவும் ஏங்குகின்றன (உரோ 8:18-24). அதன் பின்னர் மட்டுமே கிறிஸ்துவின் பணியானது அகரமும் னகரமும் ஆனவரும், ''இருக்கிறவர், இருந்தவர், இனிவருபவருமாகிய'' அவரால் செய்து முடிக்கப்படும் (திருவெளி 1:8). அந்நாளில், இக்காலமும் திருச்சபையின் காலமும் ஒன்றாக முடிவுறும். ஏழாவது வானதூதர் தனது கிண்ணத்திலிருந்து ஊற்றும்போது மற்றும் ''முடிந்துவிட்டது'' (16:17) என்ற குரலொலி ஒலிக்கின்ற நேரத்தில், ஒரு உறுதியான பேரழிவில் மூழ்குவதன் மூலம், இக்காலம் முடிவடையும். புதிய வானங்களும், புதிய வையகமும் தோன்றும்போது, தனது முழுமையான உருமாற்றத்தை அடைவதன் மூலம் திருச்சபையின் காலம் முடிவுபெறும் (21:1). அப்போது, மனிதர்கள் இறைவனின் முடிவிலா வாழ்வில் நுழைந்து விடுவார்களாதலால், பழைய உலகில் இருந்ததைப்போன்று காலத்தைக் குறிப்பிடச் சூரியனோ, சந்திரனோ இருக்காது (21:23).

ஆ) முடிவு எப்போது வரும்?:- காலங்களின் நிறைவு, இவ்வுலகின் முடிவு எப்போது வருமென இயேசு அறிவிக்கவில்லை. அது தந்தைக்கேயுரிய இரகசியமாகும் (மாற் 13:32). தமக்கேயுரிய அதிகாரத்தினால் அவர் குறித்துள்ள காலங்களையும் பருவங்களையும் அறிவது மனிதருக்குரியதல்ல (அ.ப. 1:7). தொடக்ககாலத் திருச்சபையானது, ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் மீதான ஆர்வமிக்க நம்பிக்கையில், அது நெருங்கியுள்ளது என்ற தொடர்ச்சியான எண்ணத்தில் வாழ்ந்தது: ''காலம் குறுகியது'' (1 கொரி 7:9); ''நாம் விசுவசிக்கத் தொடங்கியபோது இருந்ததைவிட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது. இரவு முடியப்போகிறது. பகல் அண்மையிலுள்ளது'' (உரோ 13:11-12). இக்கருத்து எவ்வளவு வலிமையடையதாய் இருந்ததெனின், இம்மொழியைப் பயன்படுத்தும்போது பவுல் இறைவாக்கு நாளைத் துல்லியமான கணக்கீடு செய்வதற்கு எதிராகத் தெசலோனியரை எச்சரிக்க வேண்டியிருந்தது (2 தெச 2:1 தொ). படிப்படியாக, அனுபவத்தின் விளைவாக இறுதிக்காலங்களின் நீட்டிப்பைப்பற்றி மனிதர்கள் அறியலாயினர். மனுமகன், இரவில் திருடனைப்போல் வருவதன் காரணமாக, ஆண்டவருடைய மறுவருகையின் உடனடித்தன்மை நம்பிக்கையினுடைய உளவியலின் முக்கிய கூறாகியது (மத் 24:43; 1 தெச 43; 1 தெச 5:2; திருவெளி 3:3). நாம் காண்கின்ற திருச்சபையின் காலமானது முடிவை முன்குறித்துக் காட்டுகின்ற அடையாளங்களால் குறிக்கப்பட்டுள்ளது (2 தெச 2:3-12; திருவெளி 6:19). இவ்வாறு, பழைய ஏற்பாடு வரைபடமாக அமைத்த மனித வரலாற்றின் இறைவாக்குக் காட்சியைப் புதிய ஏற்பாடு நிறைவு செய்கிறது.

## காலவரிசைமுறை (CHRONOLOGY)

விவிலிய விவரிப்புகள், நிகழ்ச்சிகளின் காலத்தைக் குறிக்கும்படி முழுமையான தொடர்ச்சியான காலவரிசைமுறையைத் தருவதில்லை. அகழ்வாய்வுக் கண்டு பிடிப்புக்கள் பொதுவாக ஒப்புமை சார்ந்த தொடர்பையே கொடுக்கின்றன. ஆட்கள், நிகழ்ச்சிகள் மற்றும் சில சமயங்களின் வரலாற்று வரிசையின் காலத்தை நிர்ணயிக்கும்முறை ஆகியன பல்வேறுபட்ட காலக்கணிப்பு முறைகளாலும், நூல்களின் தன்மையாலும் இன்னும் சிக்கல் மிக்கதாக ஆகிறது. ஏனெனில் இந்நூல்களின் அக்கறை வரலாற்றுத் துல்லியத்தைவிட இறையியலை முதன்மையாகக் கொண்டது.

1. பழைய ஏற்பாடு:-

காலவரிசைமுறையை நிர்ணயிக்க அறிவு சார்ந்த தொடக்கம் விவிலிய நூல்களே ஆகும். சில ஆட்கள் அல்லது நிகழ்ச்சிகளில் பொதுப்படையாகக் காலம் குறிக்கப்பட்டாலும் (ஆதி 10:1) மற்றவைகள் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி, புலனான

முறையில் விவரிக்கப்பட்டுள்ளன; இதற்குச் சான்றுகள் ஆபிரகாம் கானானை வந்தடைந்தது (ஆதி 16:3); யாத்திரை (யாத் 16:1; 19:1; 33:38; 1 அர 6:1); நாடுகடத்தப்படுதல் (எச 8:1; 20:1; 24:1) போன்றவையாகும். சிலசமயம் யூதாவின் அரசன் யோயாக்கினின் நாடு கடத்தலிலிருந்தும் (2 அர 25:27 இணை; எரே 52:31; எச 1:2) அல்லது எருசலேமின் வீழ்ச்சியிலிருந்தும் (எரே 1:3; எச 40:1) காலம் கணிக்கப்படுகிறது.

இத்தகைய விவிலிய நிகழ்ச்சிகளின் காலத்தைத் துல்லியமாகக் கணிப்பதற்கு ஒரு முக்கிய சாதனம், ஒத்த நிகழ்ச்சி அடிப்படையில் வரலாற்று நிகழ்ச்சிகள் அல்லது வான இயல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வதாகும். இவற்றைப் பழங்கால மற்ற மூலங்களோடு ஒப்பிட்டு இவற்றிற்குக் காலம் குறிக்கலாம். சான்றாக, எகிப்திய பாரவோன் சிசாக்கு பாலஸ்தீனத்தின்மேல் படையெடுத்தது, எகிப்திய நாளேடுகளிலிருந்து, கி.மு. 926-இல் நடந்ததாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சி இரகபெயாமின் ஐந்தாம் ஆண்டு நடந்ததாக விவிலியத்தில் குறிக்கப்படுகிறது (1 அர 14:25). இவ்வாறு சாலமோனின் மரணம் 931-இல் நிகழ்ந்ததாகக் கூறலாம். மற்ற நிகழ்ச்சிகள் இதற்கேற்றவாறு கணிக்கப்படலாம். ஆனால் துர்லபமாக, எட்டாம் நூற்றாண்டுக்குமுன் சில ஒத்த நிகழ்ச்சிகளே உள்ளன. மேலும் மற்ற நாடுகளின் நாளேடுகளில் இஸ்ராயேலைப் பற்றிய குறிப்புகள், குறிப்பாக அரசு பிளவுபடுவதற்கு முந்திய காலத்தைப் பற்றிய குறிப்புகள் அரிதாகவே உள்ளன. பிற்காலத்தைப் பொருத்தமட்டும், பாபிலோனிய மற்றும் அசீரிய அரசர்களின் பட்டியல், நாளேடுகள் அடங்கிய மெசபொத்தாமிய ஏடுகளோடும், வானஇயல் அமைப்புக்கள் மற்றும் விண்ணக நிகழ்ச்சிகளின் பட்டியல்களோடும் ஒப்புமை ஆய்வுகள் செய்யலாம். இவ்வாறு, கர்காரில் சால்மனேசர் நடத்திய போர் பற்றிய அசீரிய ஏடுகளிலிருந்தும், அவருக்குக் கப்பம் செலுத்திய அந்நிய அரசர்களின் பட்டியலிலிருந்தும், ஆகாபின் மரணம் 853-இலும், ஏகூ ஆட்சிக்கு வந்தது 842-இலும் என்று காலம் குறிக்கலாம். 763, ஜூன் மாதமும் அசீரிய அரசன் மூன்றாம் அசூர்தானின் ஒன்பதாம் ஆண்டு சில்வான் மாதமும் நடந்த சூரிய கிரகண அடிப்படையில் பழங்கால மேற்காசிய வரலாற்றுக்கும், விவிலிய நிகழ்ச்சிகளுக்கும் காலம் குறிக்கலாம். மேலும் உறுதியாகக் காலம் கணிப்பதில் மதிப்புடையவை நைல் நதி எழுச்சிக்கும் விடிவெள்ளியாகச் சீரியசின் எழுச்சிக்கும் இடையில் உள்ள தொடர்பால் நிர்ணயிக்கப்பட்ட 1460-ஆண்டுகள் அடங்கிய காலமாகிய சோதிக்கு சுழலோடு கொண்டுள்ள எகிப்திய குறிப்புகளும் கி.மு. 747-இலிருந்து மெசபொத்தாமியாவிலும் எகிப்திலும் வான் இயல் குறிப்பீடுகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் கொண்டுள்ள, தோலமியாவின் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டியலும் ஆகும்.

விவிலியத்தில் காணப்படும் காலவரிசைச் செய்திகள் எகிப்தில் இஸ்ராயேலர் தங்கிய காலம் (400 ஆண்டுகள்-ஆதி 15:13; 430 ஆண்டுகள்-யாத் 12:40-41), வனாந்தரத்தில் அலைந்து திரிந்த காலம் (40-ஆண்டுகள்-எண் 14:33) யாத்திரைக்கும் சாலமோன் ஆலயம் கட்டியதற்கும் இடைப்பட்ட காலம் (480 ஆண்டுகள்-1 அர 6:1) இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரசர்கள் ஆட்சி செய்த காலம் (1 அர 15:10; 16:8.15.23.29) ஆகியவை பற்றிய எண்ணிக்கைகள் ஆகும். மற்றச் செய்திகள் பெருவெள்ளத்திற்கு முந்திய மூதாதையர்களின் அசாதாரணமான வயதுக் காலத்தையும் உள்ளடக்கும் (ஆதாமின் வயது 930; யரேதின் வயது 962; மெத்துசலாவின் வயது 969-ஆதி 5). கி.மு. 931-இல் நடந்த சாலமோனின் மரணத்துடன் தொடங்கி இந்த விவரங்களைக் கொண்டு இஸ்ராயேலின் தொடக்க வரலாற்றின் காலங்களைக் கணிக்கலாம். இதன்படி 967-இல் சாலமோன் ஆலயத்தைக் கட்டினார்; யாத்திரை ஏறக்குறைய 1447-ஐ (அல்லது நீதிபதி நூலில் காணப்படும் எண்ணிக்கைகளின் அடிப்படையில் 1445-ஐ) ஒட்டி நிகழ்ந்திருக்கலாம்; யாக்கோபு 1875-இல் எகிப்துக்குச் சென்றார். ஆபிரகாம் 2165-இல் பிறந்தார்; பெருவெள்ளம் 2457-ஐ ஒட்டி

நடந்தது; 4113-இல் உலகம் படைக்கப்பட்டது.

19-ஆம் நூற்றாண்டின் மத்தி வரை பெரும்பாலான அறிஞர்கள் இத்தகைய எண்ணிக்கைக் கணிப்பை ஏற்றுக் கொண்டனர்; பழைமைவாதிகள் பலர் இன்றும் ஏற்றுக்கொள்கின்றனர்; ஆனால் ஆய்வுகளும் தொல்பொருள் சான்றுகளும் இத்தகைய எண்களின் மதிப்பீட்டுக்குச் சவால்விடப் பலரைத் தூண்டின. ஆதி 5 மற்று 11-ஆம் அதிகாரங்களில் காணப்படும் எண்ணிக்கைகள் எபிரேய மாசரோட்டிக் வாசகத்திலும், எழுபது நூல் வாசகத்திலும் சமாரியரின் ஐந்நூலிலும் குறிக்கப்பட்டிருக்கும் முறையில் காணப்படும் வேறுபாடுகளால் இச்சவால் தூண்டப்பட்டது. மேலும் ஐந்நூலிலும் நீதிபதிகள் நூலிலும் காணப்படும் விவரிப்புகளுக்கிடையிலும் அரசர்கள் மற்றும் நாளாகம நூல்களுக்கு இடையிலும் பல முரண்பாடுகள் கவனிக்கப்பட்டன. வாசகக் கடினங்களைத் தவிர்த்து, இந்த வேறுபட்ட எண்ணிக்கைகள் நிகழ்ச்சியுரைகள் காலத்தில் கையளிக்கப்பட்ட பல்வேறு கட்டங்களில் பழங்கால விவரிப்புக்குக் குறிப்பிட்ட விவரங்களை அளிக்க அல்லது தோராயமாக எடுத்துக் கூறச் செய்த முயற்சிகளை எடுத்துக்காட்டுகின்றன என்று ஒரு விளக்கம் கூறலாம். சில எண்ணிக்கைகள் உருவகப் பொருளைக் கொண்டிருக்கலாம் (சான்றாக 40 என்பது மிகவும் நீண்ட காலத்தைக் குறிக்கலாம்) அல்லது விவரிப்பைச் ''சமன்'' செய்யத் திட்டமிட்ட முயற்சியாக இருக்கலாம் (சான்று 40 ஆண்டுகளைக் கொண்ட 12 தலைமுறைகளைக் குறிக்க முழுமையாக்கப்பட்ட எண்ணாக 480 பயன்படுகிறது). இந்த எண்ணிக்கைகள் பலவற்றின் துல்லியமான பொருள் யூகமாகவே உள்ளது. பழங்காலத்தையும் நவீன காலத்தையும் சேர்ந்த மற்றச் சமூகங்களின் மரபு முறைப்பட்டியல்களின் தன்மை மற்றும் பயன்முறை பற்றிய ஆய்வுகள் விவிலிய மரபு முறைப்பட்டியல்கள் மிகவும் திட்டமிட்டவையாகும் என்று சுட்டுகின்றன. தனி நபர்களுக்கிடையிலும் குழுக்களுக்கிடையிலும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்ட இவை பாதுகாக்கப்பட்டன. இந்தப் பட்டியல்கள் ஒரு திட்ட அமைப்பைக் கொண்டுள்ளன (சான்று ஆதாமுக்கும் நோவாவுக்கும் இடையில் 10 தலைமுறைகள்-ஆதி 5; சேமிலிருந்து தெராகு வரையில் 11 தலைமுறைகள்; 14 தலைமுறைகள் கொண்ட மூன்று தொகுப்புக்கள்-மத் 1). இவை, திட்டத்திற்கு ஒத்ததாகச் செய்ய, தனிநபர் சிலரை விட்டுவிடுகின்றன அல்லது வரலாற்றைச் சுருக்கித் தருகின்றன. இத்தகைய விளக்கங்கள் விவிலிய விவரிப்புகளின் வரலாற்றுத்தன்மையை நம்பத்தகாததாகச் செய்கின்றன என்று சிலர் கருதினாலும், மற்றவர்கள், ஆசிரியர் வரலாற்றைப் புரிந்து கொள்வதின் இறையியல் பொருளைப் புரிந்துகொள்ள எடுக்கப்பட்ட முயற்சியாக இவைகளை நோக்குகின்றன.

பழங்கால எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய ஏடுகளோடு செய்யப்பட்ட ஒத்தமை ஆய்வுகள், அரசாட்சிக் காலத்தில் காலவரிசைக் கணிப்பின் சிக்கல்களைப் பொருத்த மட்டும், பொருள் பொதிந்த நுண்ணறிவைக் கொடுத்துள்ளன. இவற்றில் ஆட்சி அல்லது பெயர்கள் பயன்பட்டிருக்கும்முறையும், குறிப்பாக யூதாவில் உடன் ஆட்சிகள் அடிக்கடி கூறப்படுவதும் அடங்கும் (2 அர 15:1-7.32-33). மேலும் அரசர்களின் ஆட்சியைக் கணிக்க இருமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அ) எகிப்திய ''அரியணை ஏறும் ஆண்டு'' அல்லது முன்குறிக்கும் முறை: இதில் அரசன் அரியணை ஏறிய ஆண்டே அவனது ஆட்சியின் முதலாண்டாகக் கணிக்கப்பட்டது. ஆ) மெசபொத்தாமிய ''அரியணை ஏறா ஆண்டு'' அல்லது பின் குறிக்கும் முறை: அரியணை ஏறியபின் வரும் முதல் முழு காலண்டர் ஆண்டிலிருந்து கணிப்பைத் தொடங்குவது. யோராமிலிருந்து யோவாஸ் வரையுள்ள ஆட்சிகளைத் தவிர, மற்றவற்றில் யூகா முன்குறிக்கும் முறையைப் பயன்படுத்தியது என்றும், கி.மு. 798-ஐ ஒட்டி, யோவாசு முன்குறிக்கும் ஆண்டை ஏற்றுக் கொள்ளும் வரை இஸ்ராயேல் பின்குறிக்கும் முறையைப் பயன்படுத்தியது என்றும் புரிந்துகொண்டால், அரசாட்சி பற்றிய எண்ணிக்கைகளில் காணப்

படும் வேறுபாடுகள் விளக்கப்படலாம் (*2 அர 12; 2 அர 9:24-27; 10:10*). இதனோடு தொடர்புடைய மற்றொரு கூறு அரச ஆட்சித் தொடக்கத்தைக் கணிக்க இருவகைக் 'காலண்டர்கள்' பயன்பட்டதாகும். யூதா, இலையுதிர்காலத்தில் (செப்டம்பர்-அக்டோபர்) தொடங்கிய திசிரி 'காலண்டரையும்' (*1 அர 6:1.37-38*), இஸ்ராயேல் வசந்த காலத்தில் (மார்ச்-ஏப்ரல்) தொடங்கிய நீசான் 'காலண்டரையும்' பயன்படுத்தினர். இந்த வழக்கங்கள் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்வது எருசலேமின் அழிவு 586-இல் நடந்தது என்று கணிக்க உதவுகிறது (*அப 7* [ஆகஸ்ட் 12]; *2 அர 25.8; அப 10* [ஆகஸ்ட் 15]). யூதா அல்லது இஸ்ராயேலைச் சேர்ந்த அரசர்களின் காலத்தைக் கணிப்பதும், ஒரே காலக்கணிப்பு முறைப்படி ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகச் செய்வதும் கடினமானதாகும்.

யாத்திரை போன்ற தனிப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய காலக்கணிப்பை அந்தத் தலைப்புகளில் காண்க.

2. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாடு உள்ளடக்கும் வரலாற்றுக் காலம் குறுகியது. ஆனாலும் அதில் எழும் காலவரிசைமுறை பற்றிய பிரச்சனைகள் பழைய ஏற்பாட்டைப்போல் பரந்ததும் சிக்கல்மிக்கதும் ஆகும். இங்கு மற்றப் பழங்கால உலகோடு ஒப்புமைப்படுத்தி நிறைவாகக் காலம் குறிக்க விவிலிய விவரிப்புகள் வெகு சிறிதே அடிப்படை அளிக்கின்றன. இதில் காணப்படுபவற்றில் பெரும்பாலானவை பொருத்தமில்லாதவைகளாகவோ தெளிவில்லாமலோ இருக்கின்றன. மேலும் பலவகையான ஆண்டுக் கணிப்புமுறைகள் இருந்ததால் காலவரிசைக் குறிப்புகள் சிக்கல் மிக்கவையாக உள்ளன.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நிர்ணயிக்கப்பட்டபடி ''கிறிஸ்தவ சகாப்தம்'' இயேசு பிறந்த ஆண்டாகிய ''உரோமை நிறுவப்பட்ட'' 753-இலிருந்து கணிக்கப்பட்டாலும், இயேசுவின் பிறப்பு சில ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்து விட்டதாக நம்பப்படுகிறது. கி.மு. 4-இல் மரித்த பெரிய ஏரோதின் ஆட்சியில் இயேசுவின் பிறப்பு நடந்ததாக மத்தேயு குறிப்பிடுகிறார் (*மத் 2:1*). திருக்குடும்பம் எகிப்துக்குப்போனது பற்றிய விவரிப்பு (*2:13 தொ*) ஏரோதன் இறந்தபோது இயேசுவுக்கு ஏறக்குறைய இரண்டு வயது ஆகியிருக்கக்கூடும் என்று சுட்டுகிறது. இது இயேசு கி.மு. 7 அல்லது 6-இல் பிறந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. கி.மு. 43-இலிருந்து கி.பி. 14 வரை ஆண்ட சீசர் அகுஸ்துவால் கட்டளையிடப்பட்ட மக்கள் கணக்கெடுப்புப் பற்றிய லூக்காவின் குறிப்பு இது ''சீரியா நாட்டைக் கிரேனியு ஆண்ட காலத்தில்'' நடந்தது என்று கூறுகிறது (*லூக் 2:1-2*). ஆனால் கிரேனியுவின் காலம் கி.பி. 6 அல்லது 7-க்குமுன் கணிக்கப்படுவதில்லை (*அ.ப. 5:37*). இவையெல்லாம் பெத்திலகேமில் மரியாளும் யோசேப்பும் இருந்ததை விளக்கவே லூக்கா முயலுகிறார் என்று சுட்டலாம்; இதைவிட மேலான விளக்கம் முந்தைய காலக்குறிப்பு வரிசையாகச் செய்யப்பட்ட மற்றொரு கணக்கெடுப்பையோ கிரேனியுவின் காலத்தில் உண்மையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் தொடக்கக் கட்டத்தையோ குறிக்கிறது என்பதாகும்.

இயேசுவின் பணிக்காலத்தைக் கணிப்பதும் பிரச்சனைக்குரியதாகும். அவர் திருமுழுக்கு யோவானால் திருமுழுக்குப் பெற்றது திபேரியுவின் பதினைந்தாம் ஆண்டு நடந்ததாகக் குறிக்கப்படுகிறது. மேலும் போந்திய பிலாத்து, நான்கில் ஒரு பகுதிகளுக்குத் தலைவர்களான அந்திப்பா, பிலிப்பு மற்றும் இலிசானியா, பெரிய குருக்கள் அன்னா மற்றும் கயாப ஆகியோரின் ஆட்சியோடும் தொடர்புபடுத்தப்படுகிறது (*லூக் 3:1-2*). உரோமையர் காலக்கணிப்பு முறை அரியணை ஏறிய நாளிலிருந்து ஆட்சிக்குக் காலம் குறித்தது. இதன்படி இயேசுவின் திருமுழுக்கு கி.பி. 28 அல்லது 29-இல் நடந்திருக்க வேண்டும். அகுஸ்துவோடு உடன்-பேரரசனாகத் திபேரியு நியமிக்கப்பட்டதிலிருந்து கணித்தால் திருமுழுக்கு கி.பி.

25 அல்லது 26-இல் நடந்திருக்கலாம். இயேசு பணிதொடங்கியபோது ''அவருக்கு வயது ஏறக்குறைய முப்பது'' என்ற லூக்காவின் குறிப்பு தோராயமானது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அது, திபேரியுவின் பதினைந்தாவது ஆண்டை முன் குறிப்பதோடும், இயேசு கி.மு. 4-இல் பிறந்தார் என்பதோடும் ஒத்துப்போகும். கிறிஸ்துவின் பணியில் முதல் பாஸ்கு ஏரோதின் ஆலயம் கட்டப்பட்ட 46-ஆவது ஆண்டு என்ற யோவானின் குறிப்பு (கி.பி. 28 அல்லது 29; யோவா 2:13-20) திபேரியுவின் பிற்காலக் கணிப்போடு ஒத்துப்போகிறது. ஆனால் இயேசுவின் பிறப்பு ஆண்டைப்பற்றிய பிரச்சனையை எழுப்புகிறது. மேலும் இயேசுவின் பணியின் காலமும் சிலுவையில் அறையப்படுதலின் கணிப்பும் பல சர்ச்சைகளுக்குரியவையாகும். இப்பணிக்காலத்தில் வரும் பாஸ்கு கடைப்பிடிப்புப் பற்றிய குறிப்புகளின் எண்ணிக்கையையும் அவை பரவிக் கிடக்கும் தன்மையையும் மனதில் கொண்டால், இயேசுவின் பணிமுழுவதும் ஒரே ஆண்டில் நிகழ்ந்திருக்கலாம் என்று ஒத்தமை நற்செய்திகள் சுட்டுகின்றன (லூக் 4:19); ஆனால் யோவானின் நற்செய்தி இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்காலத்தைச் சுட்ட வல்லது (யோவா 2:13; 6:4; 11:55; 5:1). இறுதி இரவுணவைப் பாஸ்கு உணவோடு ஒன்றாகக் கருதும் அறிஞர்கள் இயேசு மற்றொரு 'காலண்டரை' ஒருவேளை எஸ்ஸேனியரின் 'காலண்டரைப்' பின்பற்றியிருக்கலாம் என்று கருதுகின்றனர் (யோவா 13:29; 18:28).

பின்வரும் ஆண்டுகள், அப்போஸ்தலர் காலத்துக் காலவரிசைக்கு வேறுபட்ட அளவில் முக்கியத்துவம் உடையவையாகும். 1) கி.பி. 36வரை பிலாத்து யூதேயாவின் ஆளுநராக இருந்தார். 2) நபத்தேய அரசன், நான்காம் அரேத்தா, கி.பி. 37-இலிருந்து அவர் மரித்த 40 வரை தமஸ்குவைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். 3) முதலாம் ஏரோது அகிரிப்பா (அ.ப.12) கி.பி. 44-இல் இறந்தார். 4) கி.பி. ·'6-48-க்கு இடைப்பட்ட காலத்தில் பாலஸ்தீனத்தில் பஞ்ச நிலை நிலவியிருக்கலாம். 5) கிளாதியு யூதர்களை உரோமையிலிருந்து விரட்டிய ஆண்டு ஒருவேளை கி.பி. 49 ஆகலாம். 6) கி.பி. 51-52-இலோ 52-53-இலோ கல்லியோ ஆக்காயாவுக்கு ஆளுநராக இருந்தார். 7) பெஸ்து, பெலிக்சுக்குப் பதிலாக யூதேயாவுக்கு ஆளுநராக ஆன ஆண்டு சர்ச்சைக்குரியதாயினும் அது ஒருவேளை கி.பி. 59 அல்லது 60-இல் நடந்திருக்கலாம்.

முந்திய காலவரிசைமுறையிலிருந்து பின்வரும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைத் துல்லியமாகக் கூறமுடியாவிட்டாலும் அவை நடந்த காலத்தைத் தோராயமாகக் கூறலாம். 1) ஸ்தேவான் மக்கள் கூட்டத்தால் கல்லால் எறிந்து கொல்லப்படுதல் (அ.ப. 7:58) பிலாத்து ஆளுநராக இருந்தபோது ஒருவேளை நடந்திருக்காது. ஆகவே இந்நிகழ்ச்சிக்கு கி.பி. 36-க்கு முந்திய ஆண்டுகளைக் குறிக்கமுடியாது 2) பவுல் மனந்திரும்பியது, அவர் தமஸ்குவிலிருந்து தப்பி எருசலேமுக்குச் சென்றதற்கு மூன்று ஆண்டுகள் முன்பும் (அ.ப. 9:23-26; 2 கொரி 11:32-33; கலா 1:18), ஸ்தேவானின் மரணத்துக்குப்பின்னும் (அ.ப. 7:58; 8:1; 9:1) நிகழ்ந்தது. ஆகவே இது 36-37-ஐ ஒட்டி நடந்திருக்கலாம். 3) அ.ப. நூல், பவுல் மற்றும் பார்னபாவின் பஞ்ச நிவாரணத்திற்காக எருசலேம் சென்றதையும் (11:27-30; 12:25), ஏரோதின் கீழ் நடந்த கொடுமையையும் (12:1-23), தோன்றுவதுபோல், அவ்வளவு நெருக்கமாகத் தொடர்புபடுத்த விரும்பவில்லை. இந்தக் கொடுமைகள் பாஸ்கு காலத்திலும் (12:3), ஏரோதின் மரணத்திற்குச் சிறிது முன்பும், 43 அல்லது 44-இல் நடந்தன.பஞ்ச நிவாரணத்திற்காக இரு அப்போஸ்தலர்களும் எருசலேம் சென்றது ஏரோது மரித்துச் சில ஆண்டுகளுக்குப்பின் நடந்திருக்கலாம். 4) பவுல் மற்றும் பார்னபா எருசலேமுக்குச் சென்றது பவுல் மனந்திருந்திய பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் நடந்ததாகக் கலா 2:1-10 கூறுகிறது. எனவே அது கி.பி. 48-ஐ ஒட்டி நடந்திருக்கலாம். பொதுவாக இது அ.ப.15:1-29-இல் வரும் அப்போஸ்தல சங்கத்தோடு ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால் இது,

அ.ப. 11:29-30; 12:25-இல் வரும் பஞ்ச நிவாரணத்திற்காகச் சென்றதாக இருக்கலாம். 5) உரோமையிலிருந்து யூதர்கள் விரட்டப்பட்ட பிற்பாடும் (18:1-3) அக்காயாவுக்குக் கல்லியோ ஆளுநராக ஆவதற்கு முன்னும் (18:12) ஒருவேளை 18 மாதங்களுக்கு முன்னும் (18:11) பவுல் கொரிந்தை அடைந்திருக்கலாம். ஒருவேளை இந்த 18 மாதங்கள் பவுல் கொரிந்தில் தங்கிய காலம் முழுவதையும் குறிக்கலாம். பவுல், தனது இரண்டாம் மறைபரப்பும் பயணத்தில் 49-51-இலிருந்து 51-53 வரை கொரிந்தில் தங்கியிருந்திருக்கலாம். 6) பவுல் எருசலேமில் கைதியானது (21:27-2:29) அல்லது அவர் செசரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது (23:16-35) போன்ற சில நிகழ்ச்சிகள் (24:27; 25:1) நடந்த இரு ஆண்டுகளுக்குப்பின் பெஸ்து பதவி ஏற்றார். பவுல் எருசலேமிலிருந்து புறப்பட்டது கி.பி. 57-58 இலும், செசரியாவிலிருந்து புறப்பட்டது, பெஸ்து பதவி ஏற்ற சிறிது காலத்திற்குப்பின் 59-60 இலும் நடந்திருக்க வேண்டும்.

பவுலின் திருமுகங்களுக்குத் தோராயமாகக் காலம் குறிப்பதை அகச்சான்றுகளின் அடிப்படையில் பின்வருமாறு செய்யலாம். 1, 2 தெசலோனியர் கி.பி. 50-இலும் கலாத்தியர், கொரிந்தியர் கி.பி. 52-54 இலும், உரோமையர் 54-இலும், கொலோசியர், எபேசியர் மற்றும் பிலேமோன் 58-இலும், பிலிப்பியர் 59-இலும் (54-இல் எழுதப்பட்டதாகச் சிலர் கூறுவர்) எழுதப்பட்டதாகக் கூறலாம். இதுபற்றி அந்தந்தத் திருமுகங்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் காண்க.

**காலாகு** (CALAH - முதிர்ந்த வயது, பரிசுத்த வாயில்)

எபிரேய பாரம்பரியத்தில் நிம்ரோதினால் கட்டப்பட்ட நகரங்களுள் ஒன்று (ஆதி 10: 11). இது ஓர் அசீரியா நகரம்; நினிவேக்குத் தெற்கே 35 கி.மீ. தொலைவில் திகிரிசு நதியின் இடக்கரையில் சாபஆறு சேருமிடத்தில் உள்ள ஒரு நகரம். முதலாம் சால்மனேசர் ஆட்சியின்கீழ் (கி.மு. 1273-1244) இது முதன்முறையாகக் குறிக்கப்படுகிறது; ஆனால் இதைத் தொடர்ந்து இந்நகர் அழிவுக்கு உட்பட்டது. இது இரண்டாம் அசூர்-நசீர்-பால் என்பவரால் மீண்டும் கட்டப்பட்டு, சனகெரிபு (கி.மு. 704-681) ஆட்சி வரை அசீரிய அரசனின் இருப்பிடமாக இருந்தது. பிறகு சனகெரிபு தன் தலைநகரை நினிவேக்கு மாற்றிவிட்டார். ஏசர்கதோன் (கி.மு. 680-669) ஒரு புதிய அரண்மனை காலாகுவில் கட்டினார்; ஆனால் அசூர்-பானி-பால் (கி.மு. 668-626) தன்னுடைய உறைவிடத்தை மீண்டும் நினிவேக்கு மாற்றிக் கொண்டார். அசூர்-எதில்-இலானி (கி.மு. 625-621) ஒரு புதிய அரண்மனையை இங்குக் கட்டினான். நிம்ரோது என்ற மேட்டில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் அசூர்-நசீர்-பால், மூன்றாம் திகிலாத்து-பிலேசார் ஏசர்கதோன் ஆகியவர்களின் அரண்மனைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. இஸ்ராயேலின் கப்பம் கட்டும் சித்திரம் கொண்ட மூன்றாம் சால்மனேசரின் கருங்கல்தூண் காலாகுவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை சொல்லப்பட்டுள்ளது ஆச்சரியமாக உள்ளது (ஆதி-10:11-12).

**காலாக்கு** (HALAK - மொட்டையான மலை)

அராபாவுக்குக் கிழக்கில், காடுகள் நிறைந்த சரிவுகளில் சேயிருக்குச் செல்லும் வழியில் உள்ளது என்று விவரிக்கப்படுகிறது. இம்மலை நெகேபில் உள்ளது. பெயரும் இடமும் பேயேர் செபாவுக்குத் தென்கிழக்கில் 42 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால எபேல் காலாக்கு என்னுமிடத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**காலானியர்** (GAULANITIS)

கலிலேயாவிற்குக் கிழக்கில் உள்ள யோர்தானுக்கு அப்பால் உள்ள பீடபூமிப்பகுதி. யார்முக்கு இதன் தெற்கு எல்லையாகவும் உலாத்தா, பானே ஆகிய மாவட்டங்கள் வடக்கு எல்லையாகவும் அமைந்திருக்கின்றன. யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து செங்குத்தாக எழும் மலை உச்சிகளிலிருந்து கிழக்கில் திராக்கோனித்து, பத்தனேயா வரை பரவியிருந்தது.

விவிலியத்தில் இந்தப் பெயர் சொல்லப் படாவிட்டாலும் பழைய ஏற்பாட்டில் மனா சேயுக்குச் சொந்தமான பாசான் நாட்டில் உள்ள கோலான் என்ற பகுதியின் பெயராக விளங்கியது (யோசு 20:8; உப 4:43). யோசிப் பஸ் காலம் வரை இந்த நகரம் இருந்தது. பெரிய ஏரோதின் ஆட்சியில் இருந்ததால் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் தன் மகன் பிலிப் புக்கு அதைக் கொடுத்தார். பிலிப்புவின் மரணத்திற்குப் பின்பு கி.பி:34-இல் உரோ மைப் பேரரசில் உள்ள சிரியாவோடு இது இணைக்கப்பட்டது. ஆனால் பின்பு பேரரசர் காலிகுவா என்பவரால் முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்குக் கொடுக்கப்பட்டது. கி.பி. 66-70-இல் உரோமைக்கு எதிராக யூதர்கள் செய்த புரட்சியில் இதுவும் பங்கு கொண் டது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாசான் பகுதியைப்போன்று புதிய ஏற்பாட்டுக் காலத்தில் காலானியா செழிப்புற்று விளங்கி யது. இப்போதும் செழிப்புள்ள பகுதியாகத் திகழ்ந்தாலும் இப்போது உள்ள மக்கள் தொகையைவிட முன்னால் அதிக மக்கள் வாழ்ந்தனர். இப்பகுதிக்கு யாலான் என்று இப்பொழுது பெயரிடப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள கோலான் என்ற பெயரின் வடிவைக் கொண்டுள்ளது.

### காலிபி (CHALPHI)

இறந்துபோன ஒரு குழந்தைக்குப் பதிலா கக் கிடைத்த குழந்தை என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல். யூதாவின் (2) தந்தை. இவர் யோனத்தான் படையில் ஒரு தளபதி (1 மக் 11:70)

### காலியர் (GAULS)

பழங்கால எழுத்தாளர்களால் கெலித்தியர் என்று அழைக்கப்பட்ட மக்கள் இவர்கள். இவர்கள் முக்கியமாக இப்பொழுது இருக் கின்ற பிரான்ஸ், வட இத்தாலியா ஆகிய பகுதிகளில் இருந்தனர். ஆனால் மக்கதோ னியா, அக்காயா, திராக்கு, சிறிய ஆசியா ஆகிய பகுதிகளிலும் குடியேறிக் காலாத்தி யர்கள் என்று அழைக்கப்பட்டனர். உரோ மையர்கள் காலியர்களைத் தோற்கடித்ததாக 1 மக் 8:2 கூறுகிறது. இது ஐரோப்பாவிலுள்ள காலியர்களைக் குறிக்கலாம். பாபிலோனி யாவில் கலாத்தியருக்கு எதிராக யூதர்கள் செய்தபோரில் ஆண்டவருடைய உதவி கொண்டு வெற்றி பெற்றார்கள் (2 மக் 4:10). கிரேசெக்கு என்பவர் கலாத்தியாவிற்கு நற் செய்திப்பணி ஆற்றச் சென்றார் என்று 2 திமோ 4:10 கூறுகிறது. காண்க. கலாத்தியா.

### காலேபியர் (CALEBITE)

நாபாலின் மற்றொரு பெயர். எப்புன்னே யின் மகனான காலேபின் வழித்தோன்றல் (1 சமு 23:3)

### காலேபு (CALEB — நாய், அடிமை)

கானான் நாட்டை வேவு பார்க்க மோசே யால் அனுப்பப்பட்ட ஒற்றர்களுள் ஒருவர். பிற்காலத்தில் கெபிரோனை வென்றவர்.

ஒற்றர்கள் குழுவில் இவர் யூதா கோத்திரத் தின் பிரதிநிதி. ஒற்றர்கள் திரும்பியதும், உடனடியாகக் கானானின்மீது படையெடுக்க வேண்டும் என்று காலேபு தூண்டினார். யோசுவா இதை ஆமோதித்தார். ஆனால் மக்கள் மற்ற ஒற்றர்கள் சொன்னதைக் கேட்டு இதை எதிர்த்தனர். பிற ஒற்றர்களின் விவரிப்புகளைக் கேட்டு, மக்கள் அஞ்சி மோசேக்கு எதிராகக் கலகம் செய்தனர். இது யாவேக்கு எதிரான கலகமாகவும் யாவே தங்களுடன் இருப்பதை மறுப்பதாகவும் கரு தப்பட்டது (எண் 14:9). இதனால்தான் காலே பும், யோசுவாவும் தவிர மற்ற வயது வந்த சந்ததியார் அனைவரும் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையவில்லை. ஆனால் ''என் அடியான் காலேபு வேறுபட்ட மனநிலை கொண்டு என்னை முழுமையாகப் பின்பற்றி னான்'' என்று தனிப்பட்டவிதமாக யாவே யால் போற்றப்பட்டார் (எண் 14:24; உப 1:36). இஸ்ரேலுக்கு நாடு அளிப்பதாக இறை வன் அளித்த வாக்குறுதியில் அச்சமற்ற, தளராத நம்பிக்கைக்குக் காலேபு ஓர் எடுத் துக்காட்டாக விளங்குகிறார்.

பழைய ஏற்பாட்டில், கெபிரோனைச் சுற் றியுள்ள இடங்களுடன் இவர் தொடர்பு

படுத்தப்பட்டுள்ளார். இந்த இடம் கடவுளால் குறிக்கப்பட்ட பாரம்பரியச் சொத்தாக இவருக்குக் கொடுக்கப்பட்டது. இதிலிருந்து இதனுடைய குடிமக்களான அனாகியர்கள் அல்லது 'இராட்சதர்களை' இவர் வெளியேற்ற வேண்டியிருந்தது. கெபிரோனுக்குத் தென்மேற்கிலுள்ள தெபீரை ஒதினியேல் வென்று அதனால் காலேபின் மகளான அகிசாவைத் திருமணம் செய்து கொண்டாலும், இவ்விடத்தை வென்றது காலேபுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது (யோசு 15:16-17; நீதி 1:12-13). காலேபு கெபிரோனை ஆளவில்லை (ஏனெனில் கெபிரோன் லேவியரின் நகரமாக்கப்பட்டது). ஆனால் அதைச் சுற்றியிருந்த நிலங்களையும், ஊர்களையும் ஆண்டார் (யோசு 21:12; நாள் 6:56). காலேபு யூதாவிற்குத் தெற்கேயிருந்த நெகேபையும் ஆண்டார் (1 சாமு 30:14).

யூதாவை வென்ற வரலாற்றில் காலேபின் பங்குபற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் சிக்கலானவையாகும். காலேபு, யூத கோத்திரத்தில் சேர்க்கப்பட்ட ஒரு பிற குலத்தவராகத் தெரிகிறது. குருக்கள் பாரம்பரியமும் (எண் 13:6; 34:19) நாளாகமமும் (1 நாள் 2:18; 2:4-5) காலேபுவின் மூதாதையர் யூதாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றன. ஆனால் அவைகளைவிடப் பழைய மூலங்கள் இவர் கெனிசியனான எப்புன்னேயின் மகன் என்றும் (எண் 32:12) அல்லது ஒதினியேலின் தந்தையான கெனாசின் மூத்த சகோதரன் என்றும் (யோசு 15:17; நீதி 1:13) கூறுகின்றன. ஆகவே இது காலேபியர்கள் இஸ்ராயேலைச் சாராதவர்கள் என்று சுட்டுகிறது; கெனாசு ஏதேமியக் குழுத்தலைவன் அல்லது அதனுடைய தலைவன் (ஆதி 36:4; நாள் 1:53). கெனிசியர்கள் குலமுதியவர்கள் காலத்தில் அநேகமாகத் தெற்குப் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 15:19). காலேபும், கெனாசும், கூரியப் பெயர்கள்; மேலும் கூர் என்பது ஓர் ஆள் பெயராக நாளாகம குலமரபுக்கொடியில் தோன்றுகின்றது (1 நாள் 2:19.50).

1 நாள் 2:4-இல் உள்ள காலேபியர்களின் குலமரபுப் பட்டியல்கள் இவர்கள் யூத கோத்திரத்தில் ஒன்றாகக் கலந்ததைச் சுட்டுகின்றன. காலேபியரிடையே பல திருமணங்களும் அவைகள் வழியாகப் பெற்ற பிள்ளைகளும் இவர்களுடைய இத்தகைய கோத்திர வரலாற்றைச் சுட்டுகின்றன (1 நாள் 2:18-19.24.42-50; 4:15).

காலேபின் மனைவி எப்பிராத்தா பெத்திலகேம் பகுதியைக் கைப்பற்றியதை அடையாளமாகக் குறிக்கிறார் (1 நாள் 2:24; மீக் 5:2). சிப்பு, கெபிரோன் போன்ற பெயர்கள், காலேபியர்கள் இன்னும் தெற்குப்பகுதியில் குடியேறியதைக் குறிக்கின்றன. கெசிரோனின் மகனாகக் காலேபு குறிக்கப்படுவது (1 நாள் 2:18.24) இவரேதான் எப்புன்னேயின் மகனாவர் என்று சுட்டுகிறது. இதை நாளாகமம் அறிந்திருக்கிறது (1 நாள் 4:15). இரு நிகழ்ச்சியிலும் காலேபின் மகள் அகிசா என்றே அழைக்கப்படுகிறாள் (யோசு 15:16; 1 நாள் 2:49). கெசிரோன் எரகுமேல் ஆகியோருடன் காலேபைத் தொடர்புபடுத்துவது, காலேபு யூதாவின் வழித்தோன்றல் என்று உறுதிப்படுத்த நாளாகமம் பயன்படுத்தும் ஒரு யுக்தியாக இருக்கலாம்.

2. கெசிரோனின் மகன். எரகுமேலின் சகோதரன் (1 நாள் 2:12-20. 42-50). 2:9-இல் இவர் செலூபாய் என்றழைக்கப்படுகிறார்.

### காலேபு — எப்பிராத்தா (CALEB — EPHRATAH)

இது கெசிரோன், அவரது மனைவி அபியா, அவரது மகன் அசூரைப் பெற்றெடுக்கும் முன் இறந்த இடமாகும் (1 நாள் 2:24). சில வாசகங்களின்படி எப்பிராத்தா கெசிரோனின் விதவையாவாள்; அவரது மகன் காலேபுக்கு அசூரைப் பெற்றெடுத்தாள். காலேபு தன் தந்தையின் உடைமைகளுக்கு உரிமைகொள்ளத் தன் தந்தையின் மனைவியைச் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

### கால், காலடி (FOOT)

விவிலியத்தில் இச்சொல் சாதாரணமாக, உடலின் அங்கத்தையே குறித்தது. சில சம

யங்களில் இது உருவகமாகப் பயன்பட்ட போது, இது சிறப்பான முறையில் ஆட்களைக் குறிக்கிறது (1 சாமு 2:9; சங் 40:2; 66:9; உரோ 3:15; சங் 36:11). ''காலடியில் வைத்தல்'' என்ற சொற்றொடர், வெற்றி மற்றும் ஆதிக்கத்தையும் அடையாளமாக உணர்த்துகிறது (சங் 8:6). இது பழங்காலத்தில் வெற்றி பெற்றவர்கள் நடந்துகொண்ட முறையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது (யோசு 10:24). ''காலடியில் அமர்தல்'' (லூக் 10:39; அ.ப. 22:3) சீடரைக் குறிக்கும் அடையாளமாகும். கால்கள் கழிவறைக்குச் செல்வதை மங்கல வழக்காகக் குறிக்கலாம் (நீதி 3:24; 2 அர 18:27; ஏச 6:2; எச 16:25).

பழங்காலத்தில் சாலைகள் தூசு படிந்திருந்ததால், பயணம் செய்யும்போது கால்கள் விரைவில் அசுத்தமாகின (மாற் 6:11). ஆகவே விருந்தாளிகளின் கால்களைக் கழுவ வசதி செய்து கொடுப்பது விருந்தோம்பலின் ஒரு பகுதியாகும் (ஆதி 18:4; லூக் 7:44; யோவா 13:5). மிதியடிகள் தூசுபடிந்திருக்கக் கூடுமானதால் புனித இடங்களில் அவற்றை நீக்குதல் அவசியமாகும் (யாத் 3:5). கால்களின் தாழ்ந்த நிலையினாலும் அவை கீழ்ப்படுதல், சீடனாய் இருத்தல் ஆகியவற்றின் அடையாளமாய் இருப்பதாலும், தன்னையே ஒருவன் தாழ்த்திக் கொள்வதின் இயற்கையான செயல் காலடியில் முகம் குப்புற விழுவதாகும் (1 சாமு 25:24; மாற் 5:22). பழங்கால இஸ்ராயேலில் சாதாரணமாய்த் தண்டிக்கும் முறை கால்களைக் கட்டிச், சிறையில் அடைப்பதாகும் (யோபு 13:27; எரே 20:2).

## கால் கழுவுதல் (FOOT — WASHING)

பாலஸ்தீனத்தில் விருந்தாளி வீடு சேர்ந்தவுடன் விருந்தோம்புபவர் செய்யும் முதல் பணியாகும். வீட்டு வேலைக்காரனோ வீட்டுத்தலைவியோ இப்பணியைச் செய்தனர் (லூக் 7:44; மாற் 1:7 இணை). இயேசு இறுதி இரவுணவின்போது இப்பணியைத் தாழ்ச்சியின் அடையாளமாகத் தம் சீடருக்குச் செய்ததாக யோவான் தன் நற்செய்தியில் கூறுகிறார் (யோவா 13:4தொ). இப்படிப்பட்ட தாழ்ச்சி மிக்க பணிகளைச் செய்ய அவர்கள் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். இது ''உங்களுக்கு எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ அவன் எல்லோருக்கும் ஊழியனாய் இருக்கட்டும்'' (மாற் 10:43-44) என்ற இயேசுவின் போதகத்தின் செய்து காட்டப்பட்ட உவமையாகும். இதில் தாழ்ச்சி பற்றிய பாடம் கற்பிப்பதை விட ஆழ்ந்த பொருளைக் கூற விழைகிறார் யோவான். இச்செயல் இயேசுவைச் சிலுவையின் இழிவுக்கு இட்டுச்சென்ற அவரது முழுவதும் சுயநலமற்ற அன்பின் அடையாளமாகும் (13:1). இக்கால்களைக் கழுவும் செயலைத் திருமுழுக்கு மற்றும் நற்கருணை ஆகிய அருட்சாதனங்களின் அடையாளமாகக் கருதுகின்றனர் பல விளக்கவுரையாளர்கள். இவ்வருட்சாதனங்கள் வழியாகக் கிறிஸ்தவர்கள் பாவத்தீட்டிலிருந்து தூய்மையடைகின்றனர். ஆண்டவரோடும் தங்களுக்குள்ளேயும் கொண்டுள்ள அன்பு ஒன்றிப்பால் ஊட்டம் பெறுகின்றனர்.

சபையில் சேர்க்கப்படத் தகுதியுள்ள கைம்பெண்களின் பண்புகளில் ''இறைமக்களின் பாதம் கழுவுதல்'' ஒன்றாகும் (1 திமோ 5:10). திருச்சபையின் வழிபாட்டில் ''கால் கழுவும் சடங்கு'' பற்றிக் கி.பி.400-ஐ ஒட்டி அகுஸ்தினார் சான்று கூறுகிறார். பெரிய வியாழக்கிழமை வழிபாட்டில் கடைப்பிடிக்கப்படும் கால்கழுவும் சடங்கு, கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் முதலில் ஸ்பெயின் திருச்சபையில் தோன்றியதாகும். பல திருச்சபைகளில் இச்சடங்கு இப்போதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

## கால்நடை, ஆடுமாடு (CATTLE)

வீட்டு வேலைகளுக்குப் பழக்கப்பட்ட விலங்குகளைக் குறிக்கும். விவிலிய வழக்கில், இச்சொல் ஆடு, மாடு, மற்ற விலங்குகளையும் உள்ளடக்கும்.

கால்நடை, காட்டு மற்றும் பழக்கப்பட்ட விலங்குகளைக் குறிக்கலாம் (ஆதி 7:23).

சில சமயம் ஆடுகளிலிருந்து வேறுபடுத்தப்பட்டுப் பெரிய விலங்குகளைக் (எருது, கழுதை) குறிக்கலாம் (எண் 31:9). பெரும்பாலும் காளை வகையைச் சேர்ந்த விலங்குகளைக் குறிக்கிறது (எண் 31:9.33.44; 1 அர 1:9.19.25; சங் 144:14; ஏச 7:25;...). பொதுவாக வீட்டில் பழக்கப்பட்ட விலங்குகளையும் (ஆதி 1:24; 2:20; 33:14; எண் 20:4.8.11; சங் 50:10; யோவா 4:12;...), குறிப்பாக எருதுகள் செம்மறியாடு, வெள்ளாடு முதலியவைகளையும் (ஆதி 13:2-7; 46:32; எண் 7:87-88), குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, எருது, கழுதை முதலியவற்றையும் (ஆதி 47:16-17), ஒட்டகங்களையும்கூட (யாத் 9:3; 1 நாள் 5:21) குறிக்கலாம். இதற்கு மாறாகக் கால்நடை என்பது செம்மறியாடு, வெள்ளாடு ஆகியவற்றை மட்டும் குறிக்கும் இடங்களும் உண்டு (ஆதி 30:39-31:43; திருவுரை 2:7).

கால்நடைகளின் ஒலி எரே 9:9-இல் குறிக்கப்படுகிறது. இவை சாதாரணமாகப் புல்லைத் தின்றன (உப 11:15; யோக 21:2; 1 அர 5:3; சங் 104: 14; ஏச 30:23). சில தொழுவங்களில் வைக்கப்பட்டிருந்தன (2 நாள் 32:28). விலங்கோடு புணர்தல் எச்சரிக்கப்படுகிறது (யாத் 22:19). கால்நடைகள் மூடமானவை என்ற கருத்தைப் பிலிதாதுவின் கேள்வி பிரதிபலிக்கிறது (யோபு 18:3). ''உன் கால்நடைகளை வேறுவகை விலங்குகளோடு பெலியவிடாதே'' (லேவி 19:19). எல்லாக் கால்நடைகளும் ஆண் தலையீற்றுச் சட்டத்திற்கு உட்பட்டனவாகும் (யாத் 13: 12). இவைகளுக்கு ஓய்வு நாளில் ஓய்வு அளிக்கவேண்டும் (20:10). மற்ற விலங்குகளைப்போல் கால்நடைகளும் சுத்தமானவை அசுத்தமானவை என்று வேறுபடுத்தப்பட்டுள்ளன. சுத்தமானவை மட்டுமே உணவாகவும் பலியாகவும் பயன்படுத்தப்படலாம் (லேவி 5:2; 11:1-8). பெருமளவில் கால்நடைகளைக் கொண்டிருப்பது ஒருவரின் நிலையையும் செல்வத்தையும் குறிக்கும் (ஆதி 13:2; 1 சாமு 25:2; யோபு 1:3;...). இவைகளுக்கு வரிவிதிக்கலாம். இவை அந்நியத் தலைவர்களால் பறிமுதல் செய்யப்படலாம் (நெக 9:37). போரின் கொள்ளைப் பொருளாகலாம் (யோசு 8:2; எரே 49:32).

## கால்நடைத்தீவனம் (FODDER)

பல தானியங்களைக் கலந்து தயாரிக்கப்பட்ட கால்நடை விலங்குகளின் உணவு (யோபு 6:5; 24:6). ஏச 30:24 (காண் நீதி 19:21) - இல் இதே வார்த்தை ''தீனி'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வுணவு உப்புக் கலக்கப்பட்டிருக்கும். விலங்குகளுக்கு உப்பின் தேவையை நிறைவு செய்து சுவைமிக்கதாக மாற்றும் பொருட்டு இப்படிச் செய்திருக்கலாம். ''பல்லா'' (ஈரமாக்குதல்) என்ற அராமேய வார்த்தையின் அடிப்படையில் அறிஞர் சிலர் ''இவ்வுணவு நீரில் ஊறவைத்துப் புளிக்க ஆரம்பிக்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டதாக இருக்கும்'' என்று நம்புகிறார்கள்.

## கால்மணை (FOOT — STOOL)

வழக்கமாக இச்சொல் உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. சாலமோனின் அரியணைக்குப் பொன்னாலான ஒரு கால்மணை இருந்ததாகக் கூறப்படுகிறது (2 நாள் 9:18). சங் 99:5; 132:7; புல 2:1-இல் ஆலயத்தையே குறிக்காவிட்டாலும் (ஏச 60:3; எச 43:7) கால்மணை என்பது சீயோனை உருவகமாகக் குறிக்கிறது. 1 நாள் 28:2-இல் இச்சொல் பொதுவாக, உடன்படிக்கைப் பேழையின் மேல் உள்ள இரக்க இருக்கையைக் குறிக்கிறது. இந்நான்கு குறிப்புகளிலும் வழிபாட்டில் காணப்பட வேண்டிய வணக்கத்தை உருவகமாகக் குறிக்கிறது. ஏச 66:1; மத் 5:35; அ.ப.7:49-இல் ஆண்டவரது அரியணையாகிய விண்ணகத்தோடும் ஆலயத்தோடும் ஒப்பிட்டு வேறுபட்ட நிலையில், ஆலயத்துக்கு மாற்றுக் கால்மணையாக, இச்சொல் உலகை உருவகமாகக் குறிக்கிறது. சங் 110:1-இல் இச்சொல் உருவகமாகத் தாவீதின் அரசைச் சுட்டுகிறது.

பரிசேயரோடும் சட்ட வல்லுநர்களோடும் நடத்திய வாதத்தில் (மத் 22:44; மாற் 12:36; லூக் 20:43) இயேசு சங் 110:1-ஐ எடுத்துக் கூறுகிறார். இயேசுவின் அரசு மற்றும் விண்

ணேற்றத்திற்கும் சான்றாகப் பேதுரு இவ்வச னத்தை எடுத்துக் கூறுகிறார் (அ.ப. 2:35). இதே கருத்தை எபி 1:13; 10:13-என்ற வசனங் கள் எதிரொலிக்கின்றன. யாக் 2:3-இல் செல் வந்தர்களுக்கு நல்ல இருக்கைகளை அளித்து, ஏழைகளைத் ''தரையில் உட்கார்'' (கால்மணை) என்று கூறுவதைப் பற்றிக் கிறிஸ்தவர்களை யாக்கோபு எச்சரிக்கிறார்.

இறைவனின் கால்மணை, முதலில் பேழையையும் (1 நாள் 28:2), பின்பு ஆலயத் தையும், பின்பு உலகையும் உணர்த்திற்று. இங்குதான் பகைவர்கள் தங்கள் வணக்கத் தால் இறைவனது அரசை எடுத்துக்காட்டு கின்றனர். கால்மணை பற்றிய கருத்தைப் புதிய ஏற்பாடு விண்ணேற்றத்திற்குச் சாற்றிக் கூறுகிறது.

**கால்வாய்** (CONDUIT)

நீரைக்கொண்டு செல்லப் பயன்படும் சாத னம் ( 2 அர 18:17; 20:20; ஏச 7:3; 36:2). எசக்கியேல் கிகோன் குளத்தைத் தடுத்து, அதன்நீர் எருசலேமுக்குச் செல்ல, கட்டிய கால்வாய் புகழ்பெற்றதாகும். இது 1838-இல் கண்டுபிடிக்கப்பட்டது.

**காவலர், சாமக்காவலர்** (WATCHMAN)

காவலர், பெரும்பாலும் இரவில், ஓர் ஆளையோ பொருளையோ பாதுகாப்பவர் ஆவார். புதிய ஏற்பாட்டில் சிறையைப் பாது காக்க அமர்த்தப்பட்டவர்கள் காவலர்களா கக் கருதப்பட்டனர் (அ.ப. 5:23; 12:6.19).

குறிப்பாக அறுவடையின்போது திராட் சைத் தோட்டத்துக்கும், மற்ற நிலங்களுக் கும் காவலர்கள் அமர்த்தப்பட்டனர். பார் வையிட வசதியாகக் கோபுரங்கள் கட்டப் பட்டன (2 அர 17:9; 2 நாள் 20:24; யோபு 27:18...).

காவலாள் இரவில் நகரின் சுற்றுச்சுவர் களை எதிரிகளிடமிருந்து பாதுகாத்தான் (1 சாமு 14:16; 2 சாமு 28:14; 2 அர 9:17; உ.ச. 3:3; 5:7). முற்றுகையின்போது இவர்கள் மிகவும் தேவை (எரே 51:12). இஸ்ராயே லின் எண்ணப்படி ஆண்டவரே நகரைக் காத்தாலொழிய அதைக் காப்பவன் விழிப் பெல்லாம் வீணே (சங் 127:1). பக்தியுள் ளோர் ஆண்டவரது ஆசிர்களுக்காகக் காத்தி ருக்கும் காவலர்கள் ஆவர் (130:6).

இறைவாக்கினர்கள் கடவுளின் காவலர்க ளாக, வரப்போகும் தண்டனையை உணர்ந்து அதை மக்களுக்கு எடுத்துக் கூறி னர் (ஓசே 9:8). ஓர் இறைவாக்கினரின் பணி ஆண்டவரின் மக்கள்மீது சாமக்காவலனாக இருப்பதுதான் (எச 21:6; எரே 6:17; எச 3:17). இறைவாக்கினர்கள் எப்போதுமே கண்டனத் தைக் கொண்டு வருவதில்லை (எச 52:8; 62:6). இறைவாக்கினர், மக்களை மீண்டும் இறைவனிடம் கொண்டு வருவதில் கண் ணும் கருத்துமாய் இருக்கின்றார் (எரே 31:6). இதுவே அவரது சுமையான பொறுப்பா கும். பொய்த்தேவர்களின் இறைவாக்கினர் கள் அல்லது போலி இறைவாக்கினர்கள் குருட்டுக் காவலர்கள் ஆவர் (எச 56:10).

இறைவனின் தூதர் காவலர் என்றழைக் கப்படுகிறார் (தானி 4:13). இறைவனே மனி தரைக் காவல் செய்கிறார் (யோபு 7:20).

**காவலர்கூடம்** (COURT OF THE GUARDS)

அரண்மனைப் பகுதியில் கைதிகளைத் தங்க வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட திறந்தவெளி இடமாகத் தெரிகிறது. எருச லேம் முற்றுகையிடப்பட்டபோது இவ்வித இடம் பயன்பட்டதாகத் தெரிகிறது. இங்கு எரேமியா அடைத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் இங்கிருந்து அவர் தொடர்ந்து இறை வாக்கு உரைத்து வந்தார். தன்னுடைய செய லனின் வழியாக அவசியமான வேலைக ளைச் செய்ய முடிந்தது (எரே 32:8.12; 33:1; 37:21; 38:6.13.28; 19:14-15).

**காவலர் வாயில்** (GATE OF THE GUARD)

எருசலேமில் அரண்மனைச் சுற்றுச் சுவரில் இருந்த ஒரு வாயிலாக இருக்கலாம் (நெக 12:39). சூழ்நிலை விவரிப்பு, மந்தை வாயி லைச் (3:31) கட்டலாம்.

**காவலாளி** (KEEPER)

இது பல எபிரேய, கிரேக்கச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) கால்நடைகள், திராட்சைத்தோட்டம், பழத்தோட்டம், மந்தைகள் ஆகியவற்றைக் காவல் செய்ய நியமிக்கப்பட்டவர்கள். தேல்-ஏல்-ஒபேய்து என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சங்கில் இத்தகையவர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். எகிப்தில் கால்நடைகளைக் கவனிப்பவர்கள் சமூகத்தில் மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால் இஸ்ராயேலரிடையே இவர்களுடைய தொழில் மேன்மையாகக் கருதப்பட்டது (ஆதி 47:6; 1 சாமு 11:5; 21:7; 1 நாள் 27:29;...). நகரக் கலாச்சாரம் வளர்ந்தபோது இவர்களது பெருமை தாழ்வுற்றது (1 அர 4:23; திருவுரை 2:7). யூதாவைச் சேர்ந்த ஊசியா, எசக்கியா, யோசியா ஆகியோரும் மோவாபைச் சேர்ந்த மேசாவும் கால்நடைகளை வளர்ப்பவர்கள் ஆவர் (2 அர 3:4 தொ; 2 நாள் 26:10; 32:28-29; 35:7-9). ஆமோஸ் கால்நடைகளைக் கவனிப்பவர் ஆவார் (ஆமோ 7:14). ஆபேல் செம்மறிகளைக் கவனிப்பவரும் ஆயனும் ஆவார் (ஆதி 4:2). திராட்சைத் தோட்டங்களையும் (உ.ச.1:6; 8:11; ஏச 27:3) பழத்தோட்டங்களையும் (பழ 27;18) கவனிப்பவர்களையும், காவல்காரர்களையும் (2 அர 17:9; யோபு 27:18; எரே 31:5) இச்சொல் குறித்தது.

ஆ) சிறைக்கூடங்களைக் காப்பவர்களையும் இச்சொல் குறித்தது (ஆதி 39:21.23; அ.ப. 5:23; 12:6). இயேசுவின் கல்லறையைக் காக்கக் காவலர்கள் அனுப்பப்பட்டனர் (மத் 27:65).

இ) உருவகமாக, ஒருவன் தன்னுடைய நாவையும் உதடுகளையும் காவல் செய்ய வேண்டும் (சங் 34:13; 141:3).

### காவல் கோபுரம் (WATCH — TOWER)

ஓரிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தைப் பாதுகாக்கப் பயன்படும் கோபுர அமைப்பாகும் (2 அர 18:8; ஏச 5:2; 21:8; 32:14; 2 நாள் 20:24). நிலச் சொந்தக்காரரோ, அவருடைய வேலையாளோ மேலே நின்று பார்க்கவும், பாதுகாக்கவும் வயல்களில் கோபுரங்கள் கட்டப்பட்டன. இந்தக் கோபுரங்கள் கற்களால் கட்டப்பட்டன. இவை தற்காலிகமாகத் தங்க அறைகளையும் கொண்டிருந்தன. ஏனெனில் ஒரு காலத்திற்கு இரவும் பகலும் காவல் செய்ய வேண்டியிருந்தது. இன்றைய பாலஸ்தீனத்தில் காவல்புரியும் கோபுரங்கள் வட்ட வடிவமாகவும், 10 அடி உயரமுள்ளவைகளாகவும் உள்ளன. இவை பெரும்பாலும் இரண்டு நிலைகளைக் கொண்டிருந்தன. கீழ்ப்பகுதியில் தங்குவதற்கான வசதிகள் உண்டு. மேற்பகுதியிலிருந்து வயல் முழுவதையும் காணலாம்.

### காளை (BULL)

யாக்கோபு ஏசாவுக்கு அளித்த அன்பளிப்பில் காளைகளும் இடம் பெறுகின்றன (ஆதி 32:16). வெற்றிகரமாகக் காளை பொலிதல் யோபு 21:10-இல் சுட்டிக்காட்டப்படுகிறது.

காளைக்குப் பலவித உருவகப்பொருள் கொடுக்கப்படுகிறது. ''இவனழகு பசுவின் தலையீற்றுக் காளையின் அழகைப்போலாம்'' (உப 33:17) என்று யோசேப்பின் தாக்கும் ஆற்றல் விவரிக்கப்படுகிறது. அசீரியாவின் அகந்தையும் பலமும் (ஏச 10:13), சங்கீத ஆசிரியரின் எதிரிகள் (சங் 22:12), புறஇனத்தாரின் அரசர்கள் (68:30), ஏதோமின் தலைவர்கள் (ஏச 34:7), பாபிலோன் (எரே 50:27) ஆகியோர் காளை என்ற உருவகத்தால் விவரிக்கப்படுகின்றனர். எச 39:18-இல் வரும் குறிப்பும் இவ்விதமே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலும் பலி செலுத்தவே காளை பயன்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட காளை ''விதையடிக்கப்படாததாய்'' இருக்க வேண்டும் (லேவி 22:24). அதன் வயது குறிக்கப்படவில்லை. ஆனால் ஏழு நாளாவது அதன் வயது இருக்கவேண்டும் (22:27). காளைக்கன்று (9:2), மூன்று வயதுடைய (1 சாமு 1:24), ஏழு வயதுடைய (நீதி 6:25) வகையில் குறிக்கப்படுகின்றன.

காளைகள் பலியிடப்படும் குறிப்பிட்ட காலங்களும் நோக்கமும் கொடுக்கப்படுகின்றன (லேவி 22:33; எண் 23:1; எஸ் 6:9; சங்

*50:13; 51:19;* ஏச *1:11;* ஓசே *12:11).* நீதி *6:25; 1* சாமு *1:24; 1* அர *18:23;* எஸ் *8:35;* யோபு *42:8*-இல் குறிப்பிட்ட சூழ்நிலையில் தனிநபர்களால் காளை பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகிறது.

காளை பற்றிய பெரும்பாலான பழைய ஏற்பாட்டுக் குறிப்புக்கள் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தவையாகும். அவை பலியமைப்புத் தொடக்கத்தோடோ, வெவ்வேறு புனித நாட்களில் அளிக்கப்பட்ட பலிகளோடோ தொடர்புடையன. அப்படிப்பட்ட முக்கிய காலங்கள், குருக்கள் திருநிலைப் படுத்தப்படுதல் (யாத் *29:1-37*), பீடமும் கூடாரமும் அர்ப்பணிக்கப்படுதல் (எண் *7;* எச *48:18-27*), லேவியர் தூய்மைப்படுத்தப்படுதல் (எண் *8:5-22*), பல்வகையான பாவக் காணிக்கைகள் (லேவி *4:16;* எபி *9:13; 10:4*), அமாவாசை நாள் (எண் *28:11-15*), பாஸ்கு விழா (*28:16-25;* எச *45:21-25*), வாரங்களின் விழா (*28:26-31*), ஏழாவது மாதத்தின் முதல் நாள் (*29:1-6*), கூடாரங்களின் விழா (*29:12-40*) ஆகியவையாகும். கூடாரவிழாவின் போது அதிகமான காளைகள், (எழுபத்தி ஒன்று) பலியிடப்பட்டன. எஸ் *6:17*-இல் நூறு காளைகளும், *1* நாள் *29:21*-இல் ஆயிரம் காளைகளும் பலியிடப்பட்டதாகக் கூறப் பட்டுள்ளது.

இஸ்ராயேலின் வழிபாட்டில் காளைகளைப் பயன்படுத்தியது மேற்காசிய சமயப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். காளைகளையும் மற்ற விலங்குகளையும் பலியிடுவது கடவுள்களைத் திருப்திப்படுத்தும் வழக்கமாகக் கருதப்பட்டது. மேலும் காளை இனப் பெருக்க அடையாளமாகும். இது இப்பழக்கம் பரவலாக இருந்ததற்குக் காரணமாகலாம். உகாரித்துத் தேவர் குழுவின் தலைவரான ஏலைத் ''தந்தையாகிய காளை ஏல்'' என்று கானானியர் ஏற்றுக்கொண்டது மத்தியதரைக் கடற்கரைப் பகுதிகளில் இந்த வழிபாட்டுமுறை பரவுவதற்குப் பெரிதும் உதவியது. ஏலைக் காளையாக ஏற்றுக் கொண்ட கானானியப் பாரம்பரியம் பாகாலோடு காளை தொடர்புபடுத்தப்பட்ட போது, பெத்தேல் மற்றும் தாணிலும் எரொபயாம் நிறுவிய பொன்னாலான காளைகளோடு (கன்றுக்குட்டிகள்) (*1* அர *12:28*) நேரடித்தொடர்புடையதா என்பது சர்ச்சைக் குரியது. எருசலேம் ஆலயத்தில், வெண் கலக்கடலைப் பன்னிரண்டு காளைகள் தாங்கி நின்றன (*1* அர *7:25; 2* அர *16:17;* எரே *20*).

## காற்சிலம்புகள் (ANKLETS)

கணுக்காலுக்குமேல் அணியப்படும் வளை அணிகலன்கள். சியோன் மகளிர் அணிந்த சொகுசுப்பொருட்கள் பற்றிய ஏசயாவின் விவரிப்பில் இவை வருகின்றன (ஏச *3:18*). பாலஸ்தீனத்தில் நடந்துள்ள தொல் பொருள் அகழ்வாய்வுகளில் பல காற்சிலம்புகளும் கணுக்கால் காப்புகளும் கண்டெடுக் கப்பட்டுள்ளன; இலாக்கீசில் புதைகுழிகளில் காணப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் செம்பினால் செய்யப்பட்டவை; தட்டையான பக்கங்களைக்கொண்டவை. $5^1/_2$ முதல் *11* செ.மீ.விட்டமுடையவை; *5* செ.மீ. அகலமுடையவை.

## காற்று (WIND)

விவிலியத்தில் இவ்வார்த்தை பல பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

அ) பரந்து வீசும் காற்றின் வலிமை (யோபு *21:18*), வேகம் (சங் *17:10*), வெறுமை (எரே *5:13*), சடப்பொருளற்ற தன்மை (திருவுரை *1:14*), இரைச்சல் (அ.ப. *2:2*), கணிக்க முடியாத நிலை (யோவா *3:8*), மாறும் தன்மை (எபே *4:14*) என்பவை மக்களை வியக்கச் செய்கின்றன. இது பொதுவாகப் புயல் காற்றாகவே இருக்கும். இது கடவுளின் காணமுடியாச் சக்தியை எண்பிக் கிறது (ஓசே *13:15*).

ஆ) இறைவனது இறையாற்றல் காட்சியில் வரும் புயல்காற்று (*2* சாமு *22:11;* எச *1:4*).

இ) கடவுளின் ஆவி: வெறுமையை யாவே வெற்றிகொள்ளும் சாதனம் (ஆதி *1:2;*

*8:1)*; இறைவாக்கினரைத் தூக்கிச் செல்லும் சாதனம் *(1 அர 18:12; 2 அர 2:16; எச 8:3; 11:1)*.

**கானா** (CANA — *நாணல்)*

*கலிலேயாவைச் சேர்ந்த ஓர் ஊர். இது இருந்த இடம் தெரியவில்லை. விவிலியத்தில், நற்செய்திகளில் மட்டும் சொல்லப்படுகின்றது. இதே பேர் கொண்டு அழைக்கப்பட்ட மற்ற இடங்களிலிருந்த இதை வேறுபடுத்திக்காட்டுவதற்காக (யோசு 16:8; 19:28) இதைக் 'கலிலேயாவிலுள்ள கானா' என்று அழைத்தனர். (யோவா 2:2; 21:2).*

1. இருப்பிடம்:- சொல்லிலக்கணத்தையும் பாரம்பரியத்தையும் தவிர இதன் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுக்காட்ட வேறு அடிப்படையில்லை. நற்செய்திகளில் வருகின்ற கானாவிற்கு இரண்டே இரண்டு இடங்களைச் சுட்டிக்காட்டலாம். இது இருந்திருக்கக்கூடுமான இடம் கேபர் கேன்னா என்பதாகும். இக்கருத்துக்கு ஆதரவாகப் பூர்வீக, இடைக் காலப் பாரம்பரியங்களும், கிரேக்க, உரோமைய கோவில்களும் துணை நிற்கின்றன. இது கப்பர்நகூமிலிருந்து பெத்துசயிதாவிற்குச் செல்லும் சாலையில் நாசரேத்திலிருந்து ஏறக்குறைய 6 கி.மீ தொலைவில், திருயாத்திரிகர்கள் வருவதற்குச் சுலபமாக இருப்பதால், இந்த இடம் கானாவாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

ஏறக்குறைய எல்லா வல்லுநர்களும் இந்த இடம் இன்றைய கிர்பெத்கானா என்ற இடத்தில் இருந்திருக்கலாம் என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். இவ்விடம் நாசரேத்திற்கு வடக்கே ஏறக்குறைய 12 கி.மீ. தொலைவில் உள்ளது. இது ஒரு பாழடைந்த இடம். கி.பி.12ஆம் நூற்றாண்டு தொடங்கிப் பல யாத்திரிகர்கள் இது நற்செய்தியில் சொல்லப்பட்டுள்ள கானா என்று நினைத்து இந்த இடத்திற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அரேபியப் பெயரான கானா, கேனா என்பதைவிடக் கானாவிற்கு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது. இந்த இடத்தின் முழுப் பெயரான கானாரல் கெலில் என்பது கலிலேயாவின்கானா என்பதைப் பாதுகாத்துள்ளது. இப்பெயரின் பொருள் ''நாணல் நிறைந்த இடம்''. உண்மையில் இப்பகுதியில் இன்றும் நாணல் நிறைந்த சதுப்பு நிலம் காணப்படுகிறது.

பழங்காலச்சமவெளியான அசோக்கிசிலுள்ள ஏல்—பாட்டுபுச் சமவெளியின் ஓரத்தில் உள்ளது இவ்விடம். இதற்கு யோசிப்பசும் யூசெபியுவும் ஆதரவு அளிக்கின்றனர். இந்த அழிவுகள், மலையுச்சியில் உள்ள சிதைவுகள் இன்னும் தோண்டப்படாமல் இருக்கின்றன. ஆனால் நீர்க்குட்டைகளும் கட்டடங்களின் சிதைவுகளும் காணப்படுகின்றன. பாறைகளில் செதுக்கப்பட்ட கல்லறைகள் உள்ளன. கி.பி.முதலாம் நூற்றாண்டு நாணயங்களும், பாண்ட ஓடுகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

2. நற்செய்தியில்:- இது பன்னிருவருள் ஒருவரான நத்தனியேல் என்பவரின் சொந்த ஊராகும் *(யோவா 21:2)*. சீமோன் இவ்வூர் தான் என்று சிலர் கூறினால், இது இருந்திருக்கமுடியாது எனத் தோன்றுகிறது. *மத் 10:4; மாற் 3;18*-இல் சீமோன் கானானியர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் இதற்குத் 'தீவிரவாதி' என்று பொருள் கொடுக்கப்படுகிறது *(காண் லூக் 6:15)*

நற்செய்தியில் இரண்டு நிகழ்ச்சிகள்தான் கானாவில் நடைபெற்றன. ஒன்று, இயேசு தண்ணீரை இரசமாக மாற்றிய திருமண நிகழ்ச்சியாகும் *(யோவா 2:1-11)*; மற்றது தன்னுடைய மகனைக் குணமாக்கும்படி இயேசுவை அணுகிய கப்பர்நகூமைச் சேர்ந்த ஓர் அதிகாரி *(4:46-54)*.

**கானா** (KANAH — *நாணல்)*

*1. கானா ஓடைப் பள்ளத்தாக்கு எப்பிராயிம் மனாசேயின் எல்லையில் உள்ள முக்கியப் பகுதி. எப்பிராயிமின் வடஎல்லையானது தப்புவாகுவிலிருந்து கானா ஓடை வழியாக ஓடி மத்தியதரைக்கடலில் முடிகிறது (யோசு 16:8). மனாசேயின் தென்எல்லையும் இந்த ஓடையை உள்ளடக்குவதாகக் கூறப்*

பட்டுள்ளது (யோசு 17:9). இந்த ஓடை கெரிசீம் மலையின் தண்ணீர்ப் பந்தலில் தொடங்கிப் பாலஸ்தீனத்தின் ஆறாகிய யார் கோனின் உப ஆறாகிக் கடலில் பாய்கிறது. இது இக்காலத்தில் வாடி கானா என்றழைக் கப்படுகிறது.

2. கானா நகரம் (புதிய ஏற்பாட்டுக் கானா அல்ல). ஆசேருக்கு உரிமையான நிலத்தின் வட எல்லையில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:28). இது தற்பொழுது நவீன கானா என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இது தீர் நகருக்குத் தென்கிழக்கில் 10 கி.மீ.தொலை வில் உள்ளது.

**கானானியர்** (CANANAEN — ஆர்வமிக்க, தீவிரவாதி)

இயேசுவின் சீடருள் ஒருவர். சீமோன் பேதுருவிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட, சீமோனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு காரண இடுகுறிப்பெயர் (மத் 10:4; மாற் 3:18).

லூக் 6:15-இல் அதே சீடர் ''தீவிரவாதி என்னும் சீமோன்'' என்று அழைக்கப்படுகி றார். இவர் ஆண்டவர்பால் ஆர்வம் கொண் டவர் என்று சிலர் பொருள் கொண்டாலும், தீவிரவாதிகளின் கட்சியைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. காண். தீவிரவாதி.

**கானானியர்கள்** (CANAANITES)

இஸ்ராயேலர்கள் படையெடுத்த காலத் தில், யோர்தானுக்கு மேற்கிலுள்ள பாலஸ்தீ னப் பகுதியைக் கொண்டிருந்த மக்கள் இவர் கள். இந்த வார்த்தை 'வியாபாரிகள்' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படும். இது இயேசுவின் சீடர்களில் ஒருவருக்கு அடை பெயராகவும் உள்ளது.

1. பெயர்:-

இது செமித்திய மூலமொழி வார்த்தை என்று சொல்லிலக்கணமுறையில் விளக்க முடியாது. இது கூரியன் வார்த்தையாகக் கருதப்படுகிறது. கி.மு.15-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த இரண்டாம் அமெனோபிசின் கானானியர்கள் பற்றிய குறிப்பு ஒன்று இருக் கிறது. இதுதான் தொன்மைவாய்ந்தது.



இதில் சீரியாவின் மேல் படையெடுத்ததாகக் குறிப்பு உள்ளது. இதிலுள்ள குறிப்புப்படி 'கானானுக்கு' 'நாணல் நாடு' என்ற பொரு ளும் கூறலாம்.

இரண்டாம் அமெனோபிசின் பதிவேட் டில் ''கானா'' ஒரு சமூகக் குழுவாகவுள்ளது. இது கூரியன் இராணுவ உயர்குடியாட்சி ''மரியானாவுடன்'' நெருங்கிய தொடர்பு டையது. ''கானா'' வியாபாரிகளைக் குறிக்க லாம் என்பதற்குப் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆதாரமாக இருக்கின்றன (ஏச 23:8-இன்படி கானானியர்கள் (வியாபாரி கள்) ஏசயா காலத்தில் தீரின் உயர்குடிமக்க ளாக இருந்தனர். ஏச 17:4; ஓசே 12:8; செப் 1:11; செக் 11:7.11-இதில் வருபவற்றை 'ஆட்டு வியாபாரிகள்' என்று வாசிக்கவேண் டும்).

2. மக்களும் நாடும்:-

தலைமுறை அட்டவணைகளை நாம் அப் படியேஎடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென் றால் இவை இன வரலாற்றை அப்படியே கூறுவது கிடையாது. பூகோள, பண்பாட்டுக் குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளன. ஆதி 9:18; 10:6-இல் கானான் ''காமின் புதல்வரா கக்'' கூறப்பட்டுள்ளது. இதன்மூலம், காமின் ஒரு குழுவினர் கானானியர்கள் ஆவர் என்று நம்ப வாய்ப்பிருக்கிறது. ஆதி 10:15-18-இல் கானானின் புதல்வர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கானா னின் தலைமகன் சீதோன்; ஏனைய புதல்வர் கள்: கேத்து, எபூசு, எமோரி, கிருகாசி, ஈவி, அரக்கி, சீனீ, ஆர்வாதி, செமாரி, கமாத்தீ''. இந்தப் பல்வேறு, கானானியர்களின் பிரிவு கள் தெற்கிலிருந்து வடக்கு வரை உள்ள பூகோள வரைமுறையைப் பிரதிபலிக்கிறது (10;19). இரண்டாம் ஆயிரமாண்டுத் தொடக் கத்தில், கானானியர்களோடு செமித்திய குழுக்களில் முக்கியமான ஒன்றான எமோரி யர்கள் மிகுந்த தொடர்பு கொண்டிருந்தார் கள் என்பது தெளிவாகிறது. மற்றொரு கருத் தும் கூறப்பட்டுள்ளது. அதாவது காம் கானா னின் தந்தையாகவும், கேத்து கானானின் புதல்வராகவும் சொல்லப்பட்டுள்ளது. இது

எதைக்காட்டுகிறதென்றால், இந்தத் தலைமுறை அட்டவணையை இன ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைக் காட்டுகிறது. இத்தியர், காமியர்களின் வழித்தோன்றலாக இருக்கமுடியாது, பழைய ஏற்பாட்டில் வரும் இத்தியர்களும், சிறிய ஆசியாவைச் சார்ந்த இத்தியர்களும் ஒரே இனத்தவர் அல்லர். இத்தியர்கள் இஸ்ராயேல் மக்களின் முன்னேற்றத்தில் மிக முக்கியமான பங்கு கொண்டுள்ளனர் (எச 16:45). 2-ஆம் அமெனோபிசு காலத்திலே செமித்திய இனத்தைச் சேராத மக்கள் நாட்டில் காணப்படுகின்றனர். அனேகமாகக் கி.மு. 2000-க்கும் பிறகு இது நிகழ்ந்திருக்கலாம். இராஸ்சம்மரா ஏடுகளின்படி இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியில், இப்பகுதியில் செமித்திய மக்களே பெருவாரியாகக் குடியேறியிருந்தனர். கானானியர்கள்செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

பழைய ஏற்பாட்டில் கானான் என்பது யோர்தானின் மேற்குப் பகுதியில் உள்ள பகுதியை முழுவதும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது (ஆதி 12:5; எண் 33:51). இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் கானானியர்கள் ஆவர் (ஆதி 12:6; 50:11; யோசு 7:9). ஆனால் மற்றப் பகுதிகளின்படி ஒரு சிறியபகுதியில்தான் கானானியர்கள் குறிக்கப்படுகிறார்கள் (எண் 13:29; 14:25; யோசு 11:3). சில இடங்களில் பெனிக்கியர்களையும் குறிப்பதாக இந்த வார்த்தை வருகிறது (நெக 9:8; ஏச 23:11; ஓப 20). எனவே, இச்சொல் பொதுவாகப் பழைய ஏற்பாட்டு யோர்தானின் மேற்குப்பகுதியை முழுதும் கானானாகக் குறிக்கிறது எனலாம். தற்கால இலக்கிய மரபில், கானான் யோர்தான். சீரியா பகுதிகளின் மேற்குப் பகுதியைக் குறிப்பதாக உள்ளது; இதில் வாழ்ந்த மக்கள் கானானியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். எனவே கானானியர்களும், எமோரியர்களும் உண்மையில் ஒரே குழுவினராகக் கருதப்படலாம்.

3. கானானியர்களின் மொழி:-

இவர்களின்மொழி, செமித்திய மொழிகளின் வடமேற்குக் குழுவைச் சார்ந்தது. இம்மொழி அதிகமான பகுதிகளில் பேசப்பட்டதால், பிரிவுமொழிகளும் திரிபுமொழிகளும் இருப்பதைக் காணலாம். இருந்தாலும் மற்றச் செமித்திய மொழிகளிலிருந்து எளிதாகத் தனித்துப்பிரித்துப் பார்க்கக் கூடியது; ஒரே சீரான தன்மையுடையது. கானானியர், எமோரியர் ஆகியவர்களிடையே நிலவிய தொடர்பு மிகவும் முக்கியமானதாகும். அறிஞர்சிலர் இரண்டு மொழிகளையும் தொடர்புபடுத்திப் பார்க்கின்றனர். உகாரித்து மொழி கண்டுபிடிக்கப்பட்டபின் இவை முக்கியமடைந்துவிட்டன. எமோரியர் என்ற வார்த்தை அக்காதிய மொழியிலிருந்து வந்ததாகும். எமோரிய மொழி ஒரே சீராக அமைந்தது அல்ல. ஆனால் கானானிய மொழி ஒரே சீராக அமைந்ததாகும். கானானிய மொழியும், எமோரிய மொழியும் ஒரு காலத்தில் ஒரே மொழியாக இருந்ததுதான் என்று கோட்பாடு ஒன்றும் உண்டு.

சில கண்டுபிடிப்புகளின்படி, கானானிய, எமோரிய, எபிரேய, அரமேய மொழிகளுக்கிடையில் சில பொதுவான பண்புகள் இருக்கின்றன, கி.மு. 2000-க்கு முன்பு ஒரு கானானிய நெடுங்கணக்கு எண்பது அடையாளங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பழைய பிரதி எகிப்திய சித்திர எழுத்து முறையோடு சிறிது தொடர்பு உடையது. பிபுலோசில் பல கானானியப் பதிவேடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இராஸ்சம்சராவில் மற்றொரு கானானிய எழுதும்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெனிக்கியர் பயன்படுத்திய நெடுங்கணக்குமுறை மூன்றாவது கானானிய எழுத்து முறையாகும்.

4. வரலாறு:-

பழைய கற்காலத்திலிருந்தே பாலஸ்தீன, சீரிய நாடுகளில் மக்கள் வசித்து வந்துள்ளனர் என்பது நெகேபு பகுதிகளில் உள்ள குகைகளில் கற்கால நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து தெளிவாகிறது. மேலும் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிதைவுகள் பல படிகளைக்கொண்டுள்ளதால் இங்குச் செமித்தியர்கள் கி.மு. 3000

-த்திலிருந்தே வசித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இது இங்குள்ள நகரங்கள் செமித்தியப் பெயர்களைக் கொண்டுள்ளதிலிருந்து தெரியவருகிறது. இப்பெயர்கள் எரிகோ, பெத்துசெயான், மெகிதோ, பிபுலோஸ், உகாரித்து முதலியனவாகும். அதே நேரத்தில் செமித்தியமில்லாத பெயர்களும் காணப்படுகின்றன. வெண்கலக் காலத்திலிருந்து கானானியர் வரலாற்றை நன்கு அறிய முடிகிறது. கி.மு. 2600-2200 எகிப்தியர்கள் கானானியர்கள் மேல் அதிகாரம் செலுத்தியுள்ளனர், ஐந்தாம், ஆறாம் எகிப்திய அரச வம்சங்கள் சீரியா, பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தனர். 20-ஆம் நூற்றாண்டில் எகிப்தியர் பாலஸ்தீனம், சீரியாவின் ஒரு பகுதி, போன்றவற்றை அடிமைப்படுத்தினர் என்பது பிபுலோஸ், இராஸ்சம்ரா போன்ற சான்றுகளிலிருந்து தெளிவாகிறது. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கானானியர்கள் எகிப்திய ஆட்சியினின்று விடுபட்டனர். கி.மு. 2000-ஐ ஒட்டி எமோரியர்கள் உருவாக்கிய முதல் பாபிலோனிய அரசின் பண்பாட்டு, அரசியல் பாதிப்பு மெசபொத்தாமியாப் பகுதியில் இருந்து, பாலஸ்தீனம் வரை பரவியது. அதனால் கானானியர்களின் பண்பாடும் பெரிதும் அவர்களது பாதிப்பைக் கொண்டிருந்தது. இக்கானானியர்கட்குப் பொதுவான கலாச்சாரத்தை அடையாளம் காட்ட முடியாது; ஏனெனில் அவர்கள்பல சிறு, சிறு அரசுகளாகப் பிரிந்தே வாழ்ந்தனர்.

கைக்சோஸ், இத்தியர், கூரியர் ஆகியோர் கானானிய வரலாற்றில் புகுந்தனர். இவர்களின் பண்பாடும் கலாச்சாரமும் கானானியரின் கலாச்சாரத்தில் பெரிதும் கலந்து அதைப் பாதித்தது. முக்கியமாக வடசீரியாவில் இத்தியரின் பாதிப்புப் பெரிதும் இருந்தது. அதே நேரத்தில் கிழக்குச்சீரியாவில் மெசபொத்தாமியாப் பாதிப்புதான் இருந்தது. இவ்வாறு பல பாதிப்பு இருந்தாலும் கானானியர்களுக்கென்றே சிறப்பான தனியான கலை ஒன்று வளர்ந்திருக்கிறது என்பது பல ஓவியங்களிலிருந்து தெரிகிறது.

கைச்சோசியர் கி.மு. 16-ஆம் நூற்றாண்டில் எகிப்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின், எகிப்தியர் மீண்டும் இப்பகுதியில் அரசியல் ஆதிக்கம் செலுத்தத்தொடங்கினர். மீண்டும் கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் எகிப்தியரின் வீழ்ச்சிக்குப் பிறகு என்ன நிகழ்ந்தது என்பது பற்றி அமர்னா சான்றுகள் எடுத்துக் கூறுகின்றன. பிபுலோசின் அரசனே எகிப்தியரோடு ஒத்துழைத்த இறுதி அரசனாவான். பிபுலோசின் அரசன் பாரவோனின் உதவியை நாடினாலும் பாரவோனால் உதவி ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்தக் காலத்தில் கானான்நாட்டில் இருந்த சிறு, சிறு அரசுகள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டன. இதன்பிறகு தான் 'இஸ்ராயேல்' என்ற நாடு தனிவடிவம் எடுத்தது, இஸ்ராயேலர் கானானியர்களை அடுத்த அரசியல், பண்பாட்டு வாரிசுகளாக வந்தனர். கானானியர்களின் மற்றொரு பிரிவினரான 'பெனிக்கியர்' கடலோடிகளாகவும், வியாபாரிகளாகவும் இருந்தனர். வட ஆப்பிரிக்கா வரை தங்கள் வாணிபத்தை விரிவுபடுத்தி அங்குத் தங்களது குடியேற்றங்களை நிறுவினர். கிழக்குப் பிரான்சுவரை இவர்களது செல்வாக்குச் சென்றது.

5. சமூக அமைப்பு:-

அன்றைய தென்கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட சமூக அமைப்பே கானானியர்களிடம் காணப்பட்டது. சமூகத்தில் பணியாளர்கள் மூன்று பிரிவுகளாக இருந்தனர். சுதந்தர மனிதர்கள், பணியாளர்கள், அடிமைகள் ஆகியோர். மூன்று பிரிவினராக இருந்தாலும் அடிமைகளும், கூலிகளுமே அதிகம் இருந்தனர், இவர்களில் பலர் அந்நிய நாட்டுப் போர்க்கைதிகளாகவோ, அடிமைகளாகவோ வந்தவர்கள். பெரும்பாலோர் உள்நாட்டைச் சேர்ந்தவர்களே. இவர்கள் கடன் கட்டத்தவறியவர்களும் வேலையில்லாதவர்களும் ஆவர். இவர்கள் தங்களையே அடிமைகளாக விற்றுக்கொண்டனர். தங்கள் குழந்தைகளை விற்றுவிடுவர். அவர்கள் அடிமை வேலை செய்தே பிழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு பெரும்பாலானோர் அடிமைகளாகவே இருந்தனர். அன்றைய கானானிய சமூகத்தில், அடிமைகள் நாட்டு அடிமைகள், ஆலய

அடிமைகள், தங்களுக்கெனச் சொந்த நிலமில்லாது நிலத்தில் உழைத்த அடிமைகள் எனப் பலவகையாக இருந்தனர். குறிப்பிட்ட அளவே விடுதலை பெற்ற பணியாளர்களும் இருந்தனர்.

கானானியர்களின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அரசுக்கும், கோவிலுக்கும் சொந்தமான நிலங்களைத் தவிர தனியார் நிலங்களும் அதிகம் இருந்தன. சிறு விவசாயிகளும் நிலங்கள் வைத்திருந்தனர். விவசாயிகளே பொருளாதாரத்தின் முதுகெலும்பு எனுமளவுக்கு உழைக்கும் வர்க்கமாக இருந்தனர். விவசாயிக்கு அதிக நிலமில்லாவிடினும் அவரது வீட்டுவேலைக்காரர்களே அவரது வேலைகளுக்குப் பெரிதும் உதவினர். அதே நேரத்தில் நிலத்தில் பணிபுரிந்த கூலியாட்கள், நிலத்தின்பெரும் பகுதியைக் கொண்டிருந்த நிலச்சுவான்தார்களது நிலங்களில் வேலை செய்து பிழைத்தனர். நாட்டிலே அரசன்தான் அதிக சொத்துக்களை வைத்திருந்தான். அரசநிலங்கள் பல சிறு அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டது. அவற்றை அவர்கள் பலவிவசாயிகளிடம் குத்தகைக்கு விட்டனர். கோவில் நிலங்கள் கோவில் அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டன.

தென்கிழக்காசிய நாடுகளில் நிலவிய நிலப்பிரபுத்துவ முறை கானானியர்களிடையிலும் இருந்தது, ஆனால் இது முழுமையான நிலப்பிரபுத்துவமுறை என்று கூறமுடியாத ஒன்றாக உள்ளது என்பதை உகாரித்து, அலலாக் வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. அரசன் இவ்வமைப்புகளுக்குத் தலைவனாகவும், படை, பாதுகாப்பு, சமயம் போன்ற அமைப்புகளுக்குத் தலைவனாகவும் இருந்தான். மற்றப்படி சமூகம் பெரும் அமைப்புகளால் தன் கடமைகளை நிறைவேற்றியது. அவை, குருக்களின் அமைப்பு, போர்வீரர்கள், வாணிகர்கள், கைவினைஞர்கள் என்பனவாகும்.

அக்காதிய ஆதார மூலங்கள் அரச நிலங்கள் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டன என்பது பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. ஒரு சில நிலங்கள் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கட்கும், அரச அலுவலர்கட்கும், மற்றும் சிலருக்கும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு நிலம் பெறுவோர் அரசனது ஊழியன் எனப்படுவர். அவர் அரசனுக்கு வரி செலுத்த வேண்டும். இத்தகைய சொத்துக்களில் திராட்சைத் தோட்டங்கள், பழத்தோட்டங்கள், ஒலிவ மரத்தோட்டங்கள், ஆடுகள், கழுதைகள், அடிமைகள் ஆகியவை அடங்கும்.

அரசின் மற்றச் செலவினங்களுக்கெனக் குடிமக்கள்மேல் வரிவிதிக்கப்பட்டது. பலவகையான வரிகள் விதிக்கப்பட்டதாக இராஸ்சம்ரா வாசகம் தெரிவிக்கிறது. மேலும் அரசன் தான் நிர்மாணிக்கும் சாலைகள், கோட்டைகள், ஆலயங்கள், அரசநிலங்கள் ஆகியவற்றில் வேலை செய்ய, குடிமக்களைப் பயன்படுத்தினான். இத்தகைய அமைப்புதான் அன்றைய கானானியர்களிடையேயும், சிரியாவிலும் காணப்பட்டது.

6. இலக்கியமும், சமயமும்:-

30 ஆண்டுகளுக்கு முன்வரை ஒரு சில விவரங்களைத்தவிர, கானானிய இலக்கியமோ, சமயமோ எதுவென்று யாருக்கும் தெரியவில்லை 'இராஸ் சம்ரா' எனுமிடத்தில் கிடைத்த ஆதாரங்கள் கானானிய சமயம், இலக்கியம் பற்றிய பரந்த அறிவை நமக்குத் தருகின்றன. கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வாசகங்கள் களிமண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ளன. ஆப்பு எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

உகாரித் இலக்கியங்களுக்கு இணையானவை பல விவிலியத்தில் உள்ளன. உகாரித்துக் கடவுளர்களில் முக்கியமான 'இல்' எனப்படும் வானங்களின் கடவுள், மற்றக் கடவுள்களின் தந்தையும் தலைவரும் ஆவார். பாகால் எனப்படும் கடவுள் பற்றிக் கூறப்படுகிறது. பாகாலும் அவரது மனைவி அனாத்தும் இயற்கைக் கடவுளர் ஆவர். இவர்கள் தாவரங்கள் மடிந்து புதிதாக முளைத்து எழுவதின் அடையாளமாகத்

திகழ்கின்றனர். முக்கியமாகப் புதுவருட விழாவில் இது நினைவுகூரப்பட்டுக் கொண்டாடப்பட்டது. எனவே, பாகால் இறந்து மீண்டும் உயிர்பெறும் கடவுள். அவரை வழிபடும் பக்தர்களுக்கும், அவரின் பிரதிநிதியாக அரசன் வழியாக இதே வரம் அருளப்படும் என்ற நம்பிக்கை அவர்களி டையே இருந்தது.

**கானான்** (CANAAN) - ஆள்

*கானானியரின் மூதாதையார் (ஆதி 10:15-19; 1 நாள் 1:13-16). காமின் மகனும் நோவாவாவின் பேரனுமாவார் (ஆதி 9:18; 10:6; 1 நாள் 1:8). ஆதி 9:24-28-இல், கானான் நோவாவின் இளைய மகனாகவும், சேம், யாப்பேத்து ஆகியோரின் சகோதரன் எனவும் குறிக்கப்படுகிறார். (காண் நோவா).*

**கானான்** (CANAAN) - இடம்

இஸ்ராயேலர் வருவதற்கு முன்பு கானானியர்களால் குடியேறப்பட்ட இடம்; இது யோர்தானுக்கு மேற்கேயுள்ள பாலஸ்தீனத்தையும், சீரியாவின் சில பகுதிகளையும், பெனிக்கியா என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்ட கடற்கரைப்பகுதிகளையும் கொண்டிருந்தது.

**கானேசு** (HANES - அரசக்குழந்தையின் வீடு)

வடஎகிப்து நாட்டின் 20-ஆவது பகுதித் தலைநகரின் பிற்காலத்திய பெயர். கெரிசேபு என்ற கடவுளும், கெர்குலசும் ஒன்று என்று கருதிய கிரேக்கர்கள் இந்நகருக்கு ''எராப் போலி'' என்று பெயரிட்டனர். தென் எகிப்தில் இதே பெயரைக் கொண்ட நகர் ஒன்று இருந்ததால் இதனோடு பெரிய என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டனர். இந்தக் கிரேக்கப் பெயருக்கு எபிரேய மொழியில் 'அரசக் குழந்தையின் வீடு' என்பது பொருள்.

இங்கு எகிப்தியரும் இஸ்ராயேலரும் கூட்டணி அமைக்கக் கூடினர் (எச 30:4). இது, கயிரோவுக்குத் தென்மேற்கில் 129 கி.மீ. தொலைவிலுள்ள அனூசிஸ் அல்லது பெரிய எராப்பொலி (இக்கால இகுனாசியே ஏல்-மெதினா) ஆக அடையாளம் காட்டப்படுகிறது. இஸ்ராயேல் சுலபமாக வரக்கூடிய கழிமுகப்பகுதியில் இது இருந்திருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

**கானோக்கு** (HANOCH - ஞானி, பின்பற்றுபவர், அர்ப்பணிக்கப்பட்டவர்)

1. எபோதின் மகன். கெத்தூராவழியாக ஆபிரகாமின் பேரன் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

2. யாகோப்பின் மூத்த மகனான ரூபனின் மூத்தமகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). இவருடைய வழித்தோன்றல்கள் கானோக்கியர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:5).

# கி

**கிங்காம்** (CHIMHAM)

இவர் கிலயாதைச் சேர்ந்த பார்சில்லாயின் மகன். இவர் தன் தந்தைக்குப் பதிலாகத் தாவீதுடன் சென்றவர் (2 சாமு 19:37-40). பார்சில்லாய் அரசனுக்கு மகனாயிம் என்ற இடத்தில் அளித்த தாராள உதவியைப் பாராட்டி அரசன் கிங்காமுக்கு அரசமானியம் அளித்தார் (1 அர 2:7). அத்துடன் பெத்திலகேமுக்கு அருகில் ஒரு நிலப்பகுதியையும் பரிசாக அளித்தார். அந்த இடம் பிற்காலத்தில் கேருத்து கிங்காம் (கிங்காம்-தங்கும் இடம்) என அழைக்கப்பட்டது. காரயாகுவின் மகன் யோகனானும், அவரது படைகளும் எகிப்துக்குச் செல்லத் திட்டமிட்ட போது இந்த இடத்தில்தான் தங்கினர் (எரே 41:17).

**கிசிக்கி** (HIZKI - என் வலிமையே)

பென்யாமினின் ஒரு வழித் தோன்றல் (1 நாள் 8:17).

**கிசிப்ப** (GISHPA - கெஞ்சுதல், மன்றாடுதல்)

நெகமியாவின் காலத்தில் ஆலய ஊழியர்களை மேற்பார்த்தவர்களில் ஒருவர் (நெக 11:21). எஸ் 2:43-இல் வரும் கசூபா என்ற பெயரின் திரிபாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

**கிசியோன்** (KISHION)

இசக்கார் பகுதியிலுள்ள ஒரு லேவியர் நகரம் (யோசு 19:20; 21:28) - இதற்கு இணையான பகுதியில் (1 நாள் 6:72) இந்நகர் கெதேசு (1) என்றழைக்கப்படுகிறது. மூன்றாம் துத்துமோசு வெற்றிபெற்ற நகர்ப்பட்டியலில் இப்பெயர் வருகிறது. இது இருந்த இடம் உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லை என்றாலும், அறிஞர் சிலர் ஏந்தோருக்கும் தாபோர் மலைக்கும் இடையிலுள்ள கிர்பெத் காசியுன் என்ற இடத்தையும், வேறு சிலர் ஏந்தோருக்குக் கிழக்கேயுள்ள தேல் ஏல்-முகார்காசு என்ற இடத்தையும் இது இருந்ததாக அடையாளம் காட்டுவர்.

**கிசிலேவு** (CHISLEV)

எபிரேயர்களின் நாள்காட்டியில் உள்ள ஒன்பதாவது மாதத்தின் பெயர். (நவம்பர் திசம்பர் காலத்திற்கும், கார்த்திகை மாதத்திற்கும் இணையானது). இந்த மாதத்தில் தான் நெகமியா பாபிலோனிய அடிமைத்தனத்தில் துன்புற்ற யூதர்களின் நிலையை அறிந்தார் (நெக 1:1). இம்மாதத்தில்தான் நோன்பு இருத்தல் பற்றிய கேள்விக்கு இறைவனுடைய பதில் செக்கரியாவுக்குக் கிடைத்தது (செக் 7:1). இம்மாதத்தின் 25-ஆம் நாளில் தான் யூதர்கள் ஆலயம் புதுப்பிக்கப்பட்டதின் விழாவைக் (ஆலய அர்ப்பண விழாவை) கொண்டாடினர் (யோவா 10:22).

**கிசிலோத்து தாபோர்** (CHILSLOTH - TABOR - தாபோரின் சரிவுகள்).

இது கலிலேயாவின் கீழ்ப்பகுதியில் உள்ள செபுலோன், இசக்கார் ஆகிய இடங்களின் இடைப்பட்ட எல்லையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:12).

நசரேத்துக்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால இக்சால் இவ்விடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இதுவும் யோசு 19:18-இல் வரும் கெசுலோத்தும் ஒன்றே என்று பலர் கருதினாலும், ''தாபோர்'' என்ற கூடுதல் வார்த்தை இரண்டையும் வேறுபடுத்துகிறது.

**கிசிலோன்** (CHISLON - வலிமை, நம்பிக்கை)

பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்த இவர் எலிதாத்தின் தந்தையாவார். எலிதாது, யோர்தானுக்கு மேற்கே கானான் நாட்டைப் பத்துக் கோத்திரங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கக் கண்காணிப்பாளருக்கு உதவி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார் (எஸ் 34:21).

**கிசோனியர்** (GIZONITE)

தாவீதின் முப்பது வலிமைமிக்க வீரர்களில் ஒருவரான ஆசேம் என்பவருக்கு அளிக்

கப்படும் இனப்பெயர் (1 நாள் 11:34). இப்பெயர் தோன்றக்கூடிய கிசோன் அல்லது கிசோ என்ற பெயர்கள் எங்கும் காணப்படா ததால், அறிஞர் சிலர் இச்சொல்லைக் ''கூனி யர்'' என்று திருத்துகின்றனர் (1 நாள் 5:15; 7:13). வேறு சிலர் ''கிஞ்சோவிலிருந்து'' என்று திருத்துகின்றனர் (2 நாள் 28:18).

**கிஞ்சோ** (GIMZO - கிக்கமோர் உள்ள இடம்)

செப்பேலாவில் உள்ள ஒரு நகரம் (யூத நாட்டில்). கிஞ்சோவும் அதைச் சார்ந்த கிரா மப்பகுதிகளும் ஆகாசு காலத்தில் பெலிஸ்தி யர்களால் கைப்பற்றப்பட்டன (735-715; 2 நாள் 28:18). நாகம் என்ற புகழ்பெற்ற இராபி யின் உறைவிடமாகக் கிஞ்சோ இருந்தது.

இந்த இடம் லோதுக்குத் (இலிதா) தென் கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலும், ஏர்-ரம்லேக்குக் கிழக்கில் 6 கி.மீ. தொலைவி லும் உள்ள இக்காலக் கிஞ்கவாக அடையா ளம் காட்டப்படுகிறது.

**கிண்ணம், கோப்பை** (CUP)

விவிலியக் காலத்தில் இருவகை வடிவ முடைய கிண்ணங்கள் வழக்கில் இருந்தன. ஒன்று நாம் கொண்டிருக்கும் கிண்ணங்க ளின் வடிவிலேயே, கைப்பிடியோடும் அது இல்லாமலும் செய்யப்பட்டது. மற்றது பொதுவாகப் பயன்பட்டது. இது பள்ள மான பாத்திரமாகும். இது பல வடிவங்களி லும் பலவிதப் பருமனிலும் இருந்தது. யோசேப்பு குறிபார்க்கப் பயன்படும் வெள் ளிக் கோப்பையை வைத்திருந்தார் (ஆதி 44:2-5). ஆலய விளக்குத்தண்டின் கிளைகள் வாதுமை வடிவில் மூன்று கிண்ணங்களைக் கொண்டிருந்தன.

கிண்ணமானது, விவிலியத்திலே பல இடங்களில் உருவகப்படுத்திப் பேசப்பட் டுள்ளது. எரேமியா நூலில் ''இறந்த தாய் தந்தையர்க்காகத் துயரப்படுகிறவனுக்கு ஆறுதலாக ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப் பார் யாருமில்லை'' எனக் கூறப்பட்டுள்ளது (16:7). நல்லவர்களுக்கு இறைவன் தமது ஆசிரின் கிண்ணத்தை அளிக்கிறார் (சங் 23: 15; 116:13). கெட்டவர்களுக்கு இறைவன், தமது கோபத்தின் கிண்ணத்தை அளிக்கிறார் (ஏச 51:17.22; எரே 25:15; 49:12; அ.ப. 2:15-16; சங் 11:6; 75:8). பாபிலோன் ஆண்டவர் கையில் பொற்கிண்ணம் போலிருந்தது. அது உலகமனைத்துக்கும் போதையூட்டிற்று. மக் களினங்கள் அதன் இரசத்தைப் பருகின (எரே 51:7). சிலை வழிபாட்டினால், துயரமும் அழிவும் கொண்ட பாத்திரமே சமாரியாவின் பாத்திரம். அதே வழியைப் பின்பற்றிய எருச லேம் அதே பாத்திரத்தைப் பருக வேண்டு மெனக் கூறப்பட்டுள்ளது (எச 23:31-33). எருசலேம், சுற்றியுள்ள மக்களினங்களுக் கெல்லாம் போதையேற்றும் மதுக்கிண்ண மாகச் செய்யப்படும் (செக் 12:2). இயேசு வின் கிண்ணம் துன்பங்கள் நிறைந்த ஒன்றா கும் (மத் 20:22-23). கடவுளின் கோபம் என்னும் கிண்ணம் திருவெளிப்பாட்டில் பேசப்படுகிறது (திருவெளி 14:10; 16:19; 17:4; 18:6). ஆண்டவரின் இரவுணவு விவரிப் பில் கிண்ணம் தனிச்சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டவரே விசுவாசிகளின் கிண்ணம் என்று கூறப்படுகிறார் (சங் 16:5). ''மீட்பின் கிண்ணம்'' (சங் 116:13) ஆண்டவரின் மீட்ப ளிக்கும் உதவியை அடையாளமாக உணர்த் தும் ஆலய வழிபாட்டில் பயன்பட்ட திராட் சைரசப் பானப்பலியாக இருக்கலாம். எரே 16:7-இல் வரும் ''ஆறுதலின் கிண்ணம்'' துக்கம் கொண்டாடுவோர்க்கு, நோன்பின் முடிவில் அளிக்கப்பட்ட திராட்சைரசமாக இருக்கலாம். ஆண்டவரின் இறுதி உணவின் கிண்ணம் ''ஆசிர்களின் கிண்ணம்'' என்ற ழைக்கப்பட்டது. இது பாஸ்கு உணவின் போது பருகப்பட்ட மூன்றாவது கிண்ணத் தைக் குறித்தது. இது ''பேய்களின் கிண்ணத்'' திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது (1 கொரி 10:16-21).

**கிதக்கேல்** (HIDDUKEL)

திகிரிசு ஆற்றின் எபிரேயப் பெயர் (ஆதி 2:14; தாணி 10:4).

**கிதசிபே** (HYDASPES)

எலிமாயிலுள்ள ஓர் ஆறு (யூதி 1:6). இதை வுல்கத்தா வாசகம் யாதோசோன் என்றழைக்கிறது. இது பஞ்சாபில் ஓடும் கிதசிபே (வித்தஸ்தா) ஆறாக இருக்க முடியாது. ஒரு வேளை, யூப்பிரத்திக, திகிரிசு ஆகியவற்றின் கழிமுகப்பகுதியில் ஓடும், இப்போது கேராகு என்று அழைக்கப்படும், ஆற்றின் பழுதுபட்ட வாசகமாக இருக்கலாம்.

**கிதயோனி** (GIDEONI - *மரங்களை வெட்டுபவர்*)

பாலைவனத்தில் பென்யாமின் கோத்திரத்துக்குத் தலைவனாக இருந்த அபிதானின் தந்தை (எண் 1:11; 2:22; 7:60.65; 10:24).

**கிதயோன்** (GIDEON - [(*கையை*) *வெட்டுபவர்*)]

கிதயோன் என்பவர் மனாசேயின் கோத்திரத்தில் உள்ள அபியேசாரின் குலத்தைச் சேர்ந்த யோவாசின் புதல்வர். இவர் இஸ்ராயேலின் நீதிபதிகளில் ஒருவர். பாலைவனத்தில் இஸ்ராயேலர்களைத் தாக்கிய மிதியானியர்கள் (நீதி 6:1-7), ஓர் இறைவாக்கினரால் கண்டிக்கப்படுகின்றனர் (6:7-10). மேலும் கிதயோன் என்பவர் இஸ்ராயேல் மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆண்டவரின் தூதரால் அழைக்கப்படுகின்றார் (6:11-16). உடனே தன்னிடம் பேசுவது ஆண்டவர் தாம் என்றறிய கிதயோன் அடையாளம் கேட்கின்றார். உடனே அடையாளமாக அவர் ஒப்புக் கொடுத்த பலிப்பொருள்கள் அனைத்தும் தீயினால் சுட்டெரிக்கப்படுகின்றன. எனவே இந் நிகழ்ச்சியைக் கொண்டாட ஒரு பலிபீடம் அமைத்து அதை 'ஆண்டவனின் சமாதானம்' என்று அழைக்கின்றார் (6:17-24). பின் தன் தந்தைக்குரிய பாகால் பீடத்தை அழித்துவிட்டு, தந்தையிடமிருந்து 'எருபாகால்' என்ற பெயரைப் பெற்றுக் கொள்கிறார். அதாவது பாகாலே அவனைப் பழிவாங்கட்டும் என்று பொருள் (6:25-32). இங்குக் கிதயோனைச் செக்கேமை ஆண்டுவந்த குலத்தின் தலைவராகிய எருபாகாலோடு தொடர்புபடுத்திக் கூறவும் வாய்ப்புண்டு (நீதி 9:1 தொ).

பின் கிதயோன் தன் சொந்தக் குலத்திலிருந்தும் மனாசே ஆசேர், நப்தலி, செபுலோன் குலத்திலிருந்தும் வீரர்களை அழைத்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, இஸ்ராயேல் மக்கள் மீட்கப்படுவார்கள் என்பதைக் காட்ட ஓர் அடையாளம் கேட்டு உறுதி செய்து கொண்டார் (6:33-40). பின் வீரர்கள் அனைவரோடும் ஏன்-காரேது நீரூற்றோரம் சென்றார். வீரர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்ததால், கடவுளின் கட்டளைப்படி அவர்களைத் தண்ணீரைக் குடிக்க வைத்து நீரைக் குடிக்கும் முறையிலிருந்து எண்ணிக்கையைக் குறைத்தார் (7:1-8). அன்று இரவில் ஏற்பட்ட கனவின் மூலமாகக் கிதயோன், மிதியானியர், ஆகிய இருவருக்கும் இஸ்ராயேல் மக்களின் வெற்றி அறிவிக்கப்பட்டது. கிதயோனின் போர்வீரர்கள் எக்காளத்தை முழங்கிக் கொண்டு செல்ல மிதியானியர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு அவர்கள் பயந்து ஓட இஸ்ராயேல் மக்கள் வெற்றி பெற்றனர் (7:9-25).

கிதயோன் மிதியானியர்களை எதிர்த்தெழுந்து சுதந்தரமாகப் போர்புரிந்த செயலைக் கண்டு உயர்ந்தகுலமாகக் கருதப்பட்ட எப்பிராமியர் கோபித்துக் கொள்ள, கிதயோன் தனது பணிவான சொற்களால் அவர்களின் கோபத்தைத் தணிக்கிறார் 8:1-3). கிதயோன் யோர்தானைக் கடந்து மிதியானியர்களைத் தொடர்ந்து சென்றார். செல்கின்றவழியில் அவர்களது களைப்பை ஆற்றச் சுக்கோத்து ஊராரும் பெனுவேல் ஊராரும் மறுக்கின்றனர். எனவே வெற்றி பெற்றுத் திரும்பி வரும் பொழுது அவர்களைப் பழிவாங்குவதாகப் பயமுறுத்திச் செல்கின்றார் (8:4-5). அவர் மிதியானியர்களைத் தோற்கடித்து அவர்களின் இரண்டு மன்னர்களையும் பிடித்தபின் தங்களது களைப்பை ஆற்ற மறுத்த இரண்டு நகரங்களையும் பழிவாங்குகின்றார் (8:10-16). பின் தாபோர் மலையில் தன் சகோதரர்களைக் கொன்ற அந்த இரண்டு அரசர்களையும் கொலை செய்கின்றார் (8:18-21). கிதயோன் தனது இளையபுதல்வனாகிய எத்தேருக்கு அந்த இரண்டு மன்னர்களைக் கொலை செய்யுமாறு கட்டளையிட அவ

னால் அதை நிறைவேற்ற இயலவில்லை. ஏனென்றால் சிறுபிள்ளையாக இருந்ததால் அவனுக்கு அவ்வளவு வலிமையில்லை. அனால் சிறுவர்களைக் கொலை செய்யும் செயலுக்கு உட்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடிய பழக்கமாகும். இஸ்ராயேல் மக்கள் கிதயோனைத் தங்கள் அரசராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் அவர் யாவே ஒருவர் மட்டும்தான் இஸ்ரா யேலின் அரசர் என்று அரசபதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். மேலும் மக்கள் மிதியானியரிடமிருந்து கொள்ளையிட்ட பொற்கடுக்கண்களைக் கொண்டு வரச் சொல்லி அதைக் கொண்டு ஓர் எப்போத்தைச் செய்தார். இதுவே அவருடைய குடும்பத்தின் அழிவைத் தேடித்தந்தது (8:22-28).

பழைய ஏற்பாட்டில் பிற இடங்களில் கிதயோனின் வெற்றியைக் குறிப்பிட்டிருக்கும் பகுதிகளெல்லாம் (சங் 83:10; ஏச 9:3; 10:26) இஸ்ராயேல் மரபிலே கூறப்படும் மாபெரும் செயல்களில் இதுவும் ஒன்றாகும் என்று எடுத்துக்காட்டுகிறது. நீதி 6-8 அதிகாரங்களில் கிதயோனைப் பற்றிய கதையின் பல்வேறுபட்ட பதிப்புக்களைக் காணலாம் என்று இன்றைய மதிப்பீட்டாளர்கள் கூறுகின்றனர். நீதி 8:4-21-இல் கூறப்பட்டிருக்கும் கதையானது நீதி 7:1-8:3-இல் கூறப்பட்டிருக்கும் கதையோடு தொடர்பில்லாத தனித்த கதையாகும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முதல் கதையில் கிதயோன் தன்குலத்தைத் தாக்க வரும் பகைவர்களை எதிர்த்து எழுகின்றார். இரண்டாவது கதையில் கிதயோனும் அவரது குடும்பத்தாரும் தம் சகோதரர்களைக் கொலை செய்தவர்களைக் கொலை செய்கின்றனர். அவருடைய சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி முன்னால் கூறப்படவில்லை. இந்தக் கதைக்கு எந்தவிதமான முன்னுரையும் கிடையாது. இரண்டு கதைகளிலும் தலைவர்களின் பெயர்கள் வேறுபடுகின்றன. 7:1-8:3-இல் ஓரேவு, செயேபு என்பன தலைவர்களின் பெயர்களாகவும், 8:4-21-இல் செபாகு, சல்முன்னா என்பன தலைவர்களின் பெயர்களாகவும் தரப்பட்டுள்ளன முதல் கதையில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் மீட்பும் சுதந்தரமும் மனிதனின் வலிமையினால் அல்ல, கடவுளின் செயல்பாட்டால் தான் முடியும் என்பதை வலியுறுத்துகின்றன.

கிதயோனின் அழைப்பைப்பற்றிய இரண்டு வேறுபட்ட உரைகளை (6:11-24; 6:25-35) வின்செண்டு என்பவர் எடுத்துக்காட்டுகின்றார். ஆண்டவரின் தூதர் தந்த காட்சியானது, மனோவாவுக்கும் அவரது மனைவிக்கும் தூதர் தந்த காட்சியினை அடிப்படையாக வைத்து இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

இஸ்ராயேல் மக்கள் வந்து குடியேறிய விவசாயிகளாகவும், தங்களைத் தாக்க வரும் எதிரிகளை எதிர்த்து நிற்கும் வலிமையற்றவர்களாகவும் இக்கதையில் காட்டப்படுகின்றனர். மேலும் பொருள்களைச் சூறையாட வருபவர்கள் வேகமாகவும், வெகுதூரமும் பயணம் செய்யக்கூடிய குதிரைகளை வைத்திருந்ததால் விவசாயிகளால் அவர்களை எதிர்த்து நின்று சூறையாடுவதைத் தடுக்க முடியவில்லை. முடிவுரை (8:22-28), உண்மையான பாரம்பரியமானாலும் அரசாட்சி முறைக்கு எதிர்வாதமாக அமைந்துள்ளது.

**கிதரோன்** (KIDRON — கருப்பான, இருண்ட)

கிதரோன் ஓடையின் பள்ளத்தாக்கு எருசலேமிற்குக் கிழக்கில் உள்ளது. இது ஒலிவ மலையையும் கிழக்கு எருசலேமையும் பிரிக்கிறது. இது நவீன காலத்தில் வாடி சித்தி மரியாம் (புனித மரியாவின் பள்ளத்தாக்கு) அல்லது வாடி என்-நார் (தீப்பள்ளத்தாக்கு) என்றழைக்கப்படுகிறது. இந்த ஓடை யூதா மலைநாட்டின் வழியாகச் சென்று சாக்கடலில் கலக்கிறது. மழைக்காலத்தில் மட்டும் இப்பள்ளத்தாக்கில் நீர் ஓடும். இஸ்ராயேல் முடியாட்சியின் ஆரம்ப காலத்தில் கீகோன் நீரூற்றிலிருந்து கிதரோன் பள்ளத்தாக்கிற்குள் நீர் வடிந்தது. பிறகு இந்நீரானது சீலோவாம் குளத்திற்கு மாற்றி அனுப்பப்பட்டது.

தாவீது மன்னர் காலத்திலே இப்பகுதியில் பழச்சோலைகளும், தோட்டங்களும் வளர்க்

கப்பட்டன (2 அர 23:4; எரே 3:40). தாவீதுக்குப் பின் வந்த அரசர்கள் இப்பள்ளத்தாக்கின் சில பகுதிகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கினர். எனவே இது அரசரின் பள்ளத்தாக்கு என அழைக்கப்பட்டது. அபிசலோம் இவ்விடத்தில் அவர் பெயரால் ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினார் (2 சாமு 18:18). எசக்கியா கீகோனைத் தடுத்து நீரோட்டத்தை மாற்றியதால் இப்பகுதியில் விவசாயம் தடைப்பட்டது.

கிதரோன் எருசலேமின் கிழக்கு எல்லையெனப் பொதுவாகக் கருதப்படுகிறது. அபிசலோமின் கலகத்தின்போது தாவீது தலைநகரைவிட்டு ஓடினார். அவ்வாறு ஓடும்போது தாவீது இவ்வருவியின் வழியாகத் தப்பிச் சென்றார் (2 சாமு 15:23). சாலமோன் அரசன் சிமயியை எருசலேமில் கட்டாயமாகத் தங்க வேண்டுமெனவும் கிதரோனைக் கடக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டார் (1 அர 2:37).

இப்பள்ளத்தாக்கும் இதையொட்டிய பகுதிகளும் எபிரேயக் கடவுள் வழிபாட்டிற்கும், மற்ற வெளிநாட்டுக் கடவுள் வழிபாட்டிற்குமிடையே சர்ச்சைகள் பல கண்ட இடமாகும். ஆசா அரசனும், யோசியா அரசனும் இவ்விடத்தில் நடந்த சிலை வழிபாட்டையும் விண்சக்தி வழிபாட்டையும் அழித்தொழித்தனர் (1 அர 15:13; 2 அர 23:4.6.12; 2 நாள் 15:16; 29:16; 30:14). இப்பள்ளத்தாக்கின் கரடுமுரடான கிழக்குப் பகுதி இறந்தவர்களைப் புதைக்கப் பயன்பட்டது (2 அர 23:6).

இறைமகன் இயேசு கடைசி இராவுணவு முடிந்தபின் தம் சீடரோடு கிதரோன் ஓடையைக் கடந்து கெதுசமனித் தோட்டத்திற்குச் சென்றார் (யோவா 18:1).

**கிதலிதி** (GIDDALTI — நான் யாவேயைப் பெருமைப்படுத்தினேன்)

ஏமான் என்பவரின் மகன். திருத்தலத்தில் இன்னிசைக் கருவிகளோடு இறைவாக்குரைக்க, தாவீது அரசனால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் (1 நாள் 25:4-29). இப்பெயரின் பொருள் ''நான் கடவுளை ஏற்றிப் போற்றுகிறேன்'' என்பது போல் தோன்றுகிறது. ஆனால் இப்பெயர் முற்காலத்திய வழிபாட்டுச் செபம் ஒன்றின் ஒரு பகுதியாகும்.

**கிதலீசு** (CHITLISH — சுவர்)

இலாக்கீசின் செப்பேலா மாவட்டத்திலுள்ள யூதாவைச் சேர்ந்த நகரம் (யோசு 15:40). மூன்றாம் துத்துமோசு (கி.மு.1490-1436) பாலஸ்தீன நாட்டிலுள்ள இடங்களைப் பற்றித் தயாரித்த குறிப்பில் காணப்படுகின்ற கெந்திசா என்ற இடமாகவும் இது இருக்கலாம் என எண்ணுகின்றனர். கெந்திசா என்ற இதன் பெயர் மெர்நப்தா(கி.மு. 1224-1216)வின் ஆட்சிக் காலத்தில் தள்ளிவைக்கப்பட்ட ஒன்றாக இருந்தது என்பது இலாக்கீசில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இலாக்கீசுக்குத் தென்மேற்கில் 8 கி.மீ தொலைவிலுள்ள கிர்பெத்து எல்-மாகாஸ்-என்று அடையாளம் காட்டப்படுகிறது.

**கிதேல்** (GIDDEL)

1. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த ஆலய ஊழியர் குடும்பம் ஒன்றின் குலத்தலைவர் (எஸ் 2:47; நெக 7:49).

2. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த சாலமோன் ஊழியர்களுடைய மக்கள் குடும்பம் ஒன்றின் குலத்தலைவர் (எஸ் 2:56; நெக 7:58).

**கிதோம்** (GIDOM — வெட்டுதல், பாழடைந்த நிலை)

கிபயாவுக்கு மேற்கேயுள்ள பாலைவனத்தில் அமைந்துள்ள இரிம்மோன் என்ற பாறைக்கு அருகிலுள்ள பென்யாமின் கோத்திரத்துக்குச் சொந்தமான இடம். உள்நாட்டுச் சண்டையின்போது இந்த இடம் வரையிலும் இஸ்ராயேலர் பென்யாமினரைத் துரத்திச் சென்றனர் (நீதி 20:45). இந்த இடம் பெத்தேலுக்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

**கித்தாயிம்** (GITTAIM — இரு திராட்சைரச ஆலைகள்)

சவுலின் கொடுமையிலிருந்து தப்பிக்க, பேரோத்தின் மக்கள் ஓடித் தஞ்சம் புகுந்த

இடம் (2 சாமு 4:3; யோசு 9:17). நாடு கடத்தலுக்குப்பின் பென்யாமினர் இங்குக் குடியேறினர் (நெக 11:33). இந்த இடம் இக்கால இரம்லேக்கு அருகில் இருந்திருக்க லாம்.

**கித்தித்து (GITTITH)**

பொருள் தெளிவில்லாத சொல். 8;81; 84-ஆம் சங்கீதங்களின் மேல் குறிப்பாக வரு கிறது. கித்தித்துப்படி சங்கீதம் பாடவேண் டும் என்று குறிப்பு உள்ளது. இது காத்தோடு தொடர்புடைய ஒரு மெட்டையோ இசைப் பாங்கையோ குறிக்கலாம். இது பாடப்படு வதற்குப் பயன்பட்ட இசைக்கருவி காத்தி லிருந்து வந்திருக்கலாம். அல்லது காத்தி லிருந்து வந்த ஒருவரின் மேன்மைக்காகப் பாடப்படுவது என்று பொருள் கொள்ள லாம்.

எபிரேய மெய்யெழுத்துக்களை உச்சரிக் கும் விதத்தைப் பொருத்து ''திராட்சை ஆலையில் வேலை செய்யும்போது பாடப் படுவது'' என்று பொருள் கொள்ளலாம். அப் போது இது திராட்சை அறுவடைக் கொண் டாட்டத்தோடு தொடர்புடையதாகும்.

**கித்தியர் (GITTITE)**

காத்திலிருந்த பெலிஸ்திய நகர மக்களின் இனப்பெயர் (2 சாமு 6:10-11; 15:18).

**கித்திரோன் (KITRON — முடிச்சான)**

செபுலோனில் உள்ள கித்திரோன் என்ற ஊரிலிருந்து கானானியர்களைத் தொடக்கத் தில் இஸ்ராயேல் மக்களால் வெளியேற்ற முடியவில்லை (நீதி 1:30). அனேகமாகக் கத்தாத்து (யோசு 19:15) என்பதும், கித்தி ரோன் என்பதும் ஒன்றாக இருக்கலாம். சரியான இடம் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் யோக்கினயாமுக்குத் தென்மேற் கிலுள்ள கிர்பெத் கொத்தினாவையும் தேல் ஏல்-பாரையும் இது இருந்த இடமாக அடை யாளம் காட்டுவர்.

**கித்தீம், கித்தியர் (KITTIM)**

கித்தீம் என்ற எபிரேயச் சொல்லானது சைப்ரசு தீவின் பெயரைக் குறிக்கின்றது. பிற்கால எழுத்தர்களால் கிரீசையும் உரோ மையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பழைய ஏற்பாட்டிலும் கித்தீம் என்பது சைப் ரசு தீவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கித்தீம் என்னும் சொல், சைப்ரசு தீவின் தென்கிழக்கிலுள்ள கித்தியோன் என்ற நகரத் தின் பெயரிலிருந்துதான் பெறப்படுகிறது என்று யோசிப்பஸ் கூறுகின்றார். கி.மு.9-ஆம் நூற்றாண்டில் இது பெனிக்கியாவின் முக்கிய நகரமாகும். அங்குக் காணப்பட்ட சாசனங்களும் நகரைக் 'கித்தி' என்று அழைக் கின்றன. அந்நாட்டவரே அங்கு வசித்தாலும் கி.மு.8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிரேக்க மக்களே அங்கு அதிகமாக வாழ்ந்த னர். கித்தீம் யாவானின் மக்களில் ஒருவரா கக் கருதப்படுவதிலிருந்து இவ்வுண்மை புல னாகிறது (ஆதி 10:4;1 நாள் 1:7). இஸ்ராயேல் மக்கள் கித்தீம் என்ற பெயரைக் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளைக் குறிக்கப் பயன் படுத்தினர் என்பதைப் பிலயாமின் பாடலி லிருந்து அறியலாம் (எண் 24:24). சைப்ரசு, தீர் நாட்டினருடன் வாணிக உறவு கொண்டிருந் தது; சில காலம் அசீரியாவிலிருந்து வந்தவர் களுக்கு அதாவது தீர் சீதோன் நாட்டினருக் குப் புகலிடமாகவும் இருந்தது (எச 23:1; எச 27:6). அசீரிய மன்னன் சார்கோன் ஆட்சியில் அவருடைய அரசு சைப்ரசு வரையிலும் பரவி இருந்தது. சனகெரிபின் ஆட்சியில் இவ்வரசு விரிவாக்கப்பட்டது. இறைவாக்கி னர் எரேமியா மக்களின் கீழ்ப்படியாமை யைப் பற்றிப் புலம்பும்போது கிழக்கில் கேதாரையும் மேற்கில் கித்தீமையும் சுட்டிக் காட்டுகிறார் (எரே 2:10). எசக்கியேல் இறை வாக்கினர் தீர்நாட்டைப்பற்றிப் புலம்பும் போது கித்தீமிலிருந்த கார்வாலி மரங்கள் கப்பல் மேல்தளம் அமைக்கப் பயன்பட்ட தாகக் கூறுகிறார் (எச 27:6). சைப்ரசு கிரேக் கர்களின் ஆதிக்கத்திலிருந்ததால், கித்தீம் என் பது கடலுக்கு அப்பாலுள்ள எல்லா நாடுக ளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. 1 மக் 1:1-இல் கித்தீம் மக்கதோனியாவைக் குறிக்கின்றது. 1 மக் 8:5-இல் மக்கதோனியா வின் அரசன் பெர்செயு கித்தீமின் அரசன் என்று குறிப்பிடப்படுகின்றார். தானி 11:30-

இல் கித்தீம் உரோமையர்களைக் குறிக்கின்றது. சாக்கடலின் சுருள்களிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஒளியின் மக்களுக்கும், இருளின் மக்களுக்கும் நடந்த போரில், இருளின் மக்களை இச்சொல் குறிக்கின்றது. கித்தீம் மக்களின் அழிவே போரின் நோக்க மாகும்.

**கிபத்தோன்** (GIBBETHON — உயர்ந்தகுன்று)

தாண் கோத்திரத்தார் வடக்கே குடிபெயர்வதற்கு முன்னால் மத்திய பாலஸ்தீன நாட்டில் அவர்களுக்குக் கிடைத்த நகர் (யோசு 19:44). கெகாத்து இனத்தைச் சேர்ந்த லேவியர்கள் வாழ்ந்த நகராகவும் இது கருதப்பட்டது (யோசு 21:23). பெலிஸ்தியர்கள் இந்நகரைக் கைப்பற்றினர். இஸ்ராயேலை ஆண்ட இரு அரசர்கள் அதை மீண்டும் கைப்பற்ற முயன்றனர். ஆனால் வெற்றி பெறவில்லை (1 அர 15:27; 16:15.17). கெசருக்கு மேற்கே யுள்ள தேல் ஏல்-மெலாத்து என்பது இவ்விடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**கிபயா** (GIBEA — குன்று)

யூதாவின் வழித்தோன்றலும் காலேபின் பேரனும் ஆவார். செவாவுக்கும் காலேபின் வைப்பாட்டி மாக்காவுக்கும் பிறந்தவர் (1 நாள் 2:48-49).

காலேபு வழியாக யூதாவின் வழித்தோன்றல்களின் புவியியல் தொடர்புகள், கெபிரோனுக்குத் தெற்கேயுள்ள மலைப்பகுதியிலுள்ள ஓர் ஊரைச் சுட்டிக்காட்டலாம். இதைச் செவா நிறுவியிருக்கலாம்.

**கிபயா** (GIBEAH — குன்று) - இடம்

இந்த எபிரேயச் சொல்லுக்குப் பொதுவாகக் 'குன்று' அல்லது 'உயர்வு' என்பது பொருள். இருப்பினும் பழைய ஏற்பாட்டில் இது இடப்பெயராகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. யூதாவிலுள்ள மலைப்பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:57; 1 நாள் 2:49). பெத்திலகேமிலிருந்து தென்கிழக்காக 12 கி.மீ தூரத்திலிருக்கும் இப்போதைய ஏல்-எபா இந்நகராக இருக்கலாம். ஆனால் இந்நகர் கெபிரோனுக்குத் தென்மேற்கேயுள்ள யூதாவின் நகரங்களோடு குறிப்பிடப்பட்டிருப்பதால், சிப்பு, கர்மேல், மாவோன் முதலிய நகரங்கள் அடங்கிய பீடபூமிப் பகுதியில் இருந்திருக்க வேண்டும்.

2. ஆரோனின் பேரனும் எலயசாரின் மகனுமாகிய பினகாசுக்கு எப்பிராயிம் மலையிலே கொடுக்கப்பட்ட ஊர். இங்குதான் எலயசார் அடக்கம் செய்யப்பட்டார் (யோசு 24:33). கிரேக்க விவிலியத்தின் பிற்சேர்க்கைப்படி, பினகாசும் கிபயாவிலேயே அடக்கம் செய்யப்பட்டார். இந்த இடத்தைப் பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இப்போதைய இபியா, நெபிசாலே அல்லது எத்தேல் இந்த இடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சமாரிய மரபு ஒன்றின்படி, எலயசாரும் பினகாசும் நப்லுசுக்குத் தென்மேற்காக 6 கி.மீ தொலைவிலிருக்கும் அவர்தா என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

3. பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்த நகர் (நீதி 19:14; 20:4.10; 1 சாமு 13:2.15; 14:16; 2 சாமு 23:29; 1 நாள் 11:31). மேலும் இந்நகர் சவுலின் ஊராகிய கிபயா என்றும் (1 சாமு 11:4; 15:34; ஏச 10:29), கிபயாத்து என்றும் (யோசு 18:28), 'கடவுளின் மலை' என்று பொருள்படும் கிபயாத்து-எலோகிம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 10:5).

கிபயா நகர மக்கள், பயணம் செய்யும் வழியில் அங்குத் தங்க நேர்ந்த எப்பிராயிமைச் சேர்ந்த லேவியரையும் அவரது வைப்பாட்டியையும் வரவேற்காதது மட்டுமில்லாமல், அவரது வைப்பாட்டியைப் பங்கப்படுத்திக் கொன்று விட்டனர். இதை அறிந்த இஸ்ராயேல் மக்கள் ஒன்றுகூடி, இப்பழியைச் செய்த கிபயா மனிதரைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று பென்யாமின் கோத்திரத்துக்குத் தூது அனுப்பினார்கள். பென்யாமின் கோத்திரத்தார் அதற்கு இணங்காமல் போகவே, இஸ்ராயேல் மக்கள் கிப

யாவுக்கு எதிராகப் போரிட்டு அந்நகரை அழித்தனர். பென்யாமின் கோத்திரத்தில் பலர் இறந்தார்கள் (நீதி 19-20).

சவுலின் ஊர் கிபயாவாகும் (1 சாமு 10:26); இங்குதான் சாமுவேலின் முன்னறிவிப்பின்படி சவுல் இறைவாக்கினர்கள் கூட்டத்தில் இறைவாக்குரைத்தார் (1 சாமு 10:1.5. 10). மிசுப்பாவில் அரசராக அறிவிக்கப்பட்ட பின் சவுல் கிபயாவைத் தலைநகராக்கிக் கொண்டார் (1 சாமு 15:34; 22:6; 23:19). பெலிஸ்தியர்களோடு சவுல் செய்த போர்களில் கிபயா முக்கிய பங்கு பெற்றது (1 சாமு 13:2; 14:2.16). கொடுமைப்படுத்திய அம்மோனியர்களுக்கெதிராக உதவ வருமாறு முற்றுகையிடப்பட்ட யாபேசு-கிலயாதிலிருந்து தூதுவர்கள் இங்கு வந்தனர் (1 சாமு 11:4). அவர்களுக்கு உதவிடுமாறு இஸ்ராயேலுக்கு இங்கிருந்துதான் சவுல் கட்டளையிட்டார் (11:47). இங்குதான் சிப்பு ஊரார் தாவீதின் மறைவிடத்தைப் பற்றிச் சவுலிடம் கூறினர் (23:19; 26:1). இரிபாயின் மகன் இத்தாய் (2 சாமு 23:29; 1 நாள் 11:31), செமகாவின் புதல்வராகிய அகியேசர், யோவாசு (1 நாள் 12:2-3) ஆகிய தாவீதின் வலிய வீரர்களில் மூவர் கிபயா நகரைச் சேர்ந்தவர்களே. யூதாவின் அரசன் அபியாவின் தாய் மீக்காயாவுக்குக் கிபயா சொந்த ஊராகும் (2 நாள் 13:2).

கி.மு.எட்டாம் நூற்றாண்டின் இறைவாக்கினர் சிந்தனையில் இந்நகர் முக்கியத்துவம் பெற்றது. ஏனெனில் எருசலேமை நோக்கிப் படையெடுக்கும் அசீரியர்கள் கிபயா வழியே செல்வார்கள் என்று ஏசயா முன்னறிவித்தார் (ஏச 10:29). ஓசேயா இறைவாக்கினரோ ''முன்னாட்களில் கிபயாவில் நடந்தது போல அவர்கள் கனமான பாவங்களைக் கட்டிக் கொண்டனர்'' (ஓசே 9:9; 10:9; 5:8) என்று அன்றைய இஸ்ராயேலரின் பாவத்தன்மையைக் கிபயாவோடு ஒப்பிட்டுப் பேசினார்.

பழைய ஏற்பாட்டின்படி கிபயா நகரம்
19 எருசலேமிற்கு வடக்கே, எருசலேமுக்கும் இராமாவுக்கும் இடையில், வடக்குத் தெற்காகப் பென்யாமின் மலைநாடு வழியாகச் செல்லும் சாலையின் அருகில் அமைந்திருக்க வேண்டும் (நீதி 19:11-15; ஏச 10:28-32). யோசிப்பசின் கூற்றுப்படி இந்நகர் எருசலேமிலிருந்து 30 பர்லாங்கு தூரத்தில் அமைந்திருந்தது. எனவே எருசலேமுக்கு வடக்கே 5.5 கி.மீ தொலைவில் சற்று உயர்ந்து காணப்படும் தேல் ஏல்-புல் என்பதே இந்நகராகும். இது வசதியான இடத்தில் அமைந்திருந்ததால் பென்யாமின் குலத்தாரின் மலைநாடுகளுக்குக் காவல் மாடமாகப் பயன்பட்டு வந்தது. தேல் ஏல்-புல்லில் 1922-23, 1933, ஆகிய ஆண்டுகளில் நடந்த அகழ்வாராய்வில் கி.மு.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமம் நெருப்பில் அழிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது பென்யாமின் குலத்தாருக்கும் இஸ்ராயேலருக்கும் நடைபெற்ற போரின் விளைவாக இருக்கலாம் (நீதி 19-20). சவுல் மன்னனின் அரண்மனையும் இங்குக் காணப்பட்டது. மற்றவை பிளவுபட்ட அரசாட்சிக்காலத்தில் (கி.மு.7-6-ஆம் நூற்றாண்டு) நிலவிய வேறுபட்ட செழிப்பையும் கிரேக்க, உரோமை காலத்து நிலையையும் சுட்டுகின்றன.

4. பெலிஸ்தியரிடமிருந்து திரும்பப் பெற்ற கடவுளின் பேழை தாவீதால் எருசலேமுக்குக் கொண்டு செல்லப்படும்வரை அபினதாபின் வீட்டில் இருந்தது. அபினதாபின் வீடு இருந்த கிரியத்து எயாரிமில் உள்ள ஒரு குன்றின் பெயர் கிபயாவாகும் (2 சாமு 6:3-4; 1 சாமு 7:1-2). இங்கு இப்பெயரை ஓர் இடப்பெயராக அல்லாமல் வெறுமனே 'மலை' என்றுதான் மொழி பெயர்க்க வேண்டும்.

**கிபயாத்து — எலோகிம்** (GIBEATH — ELOHIM — இறைவனின் மலை)

சாமுவேல் முன்னறிவித்தபடி, இம்மலையில் சவுல் இறைவாக்கினர்கள் கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டு இறைவாக்குரைத்தார். இஸ்ராயேலின் அரசனாக இறைவனால் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதை இம்மூன்றாம் அருங்குறியின் மூலம் சவுல் அறிந்து கொண்டார் (1 சாமு. 10:5-6).

*1 சாமு 10:10-இல் வெறுமனே 'மலை' என்று அழைக்கப்படும் இடம் உயரியதாகவும் பெலிஸ்தியர்களின் தலைமையின் சின்னத்தைக் கொண்டதாகவும் இருந்தது. இச்சின்னம் படையின் வடிவிலோ, தூணின் வடிவிலோ, படைத்தலைவர் வடிவிலோ இருந்திருக்கலாம். இச்சின்னம் அங்கு இருந்ததால், கடவுளின் மலையும், 1 சாமு 13:2-3-இல் குறிப்பிடப்படும் பென்யாமினின் கிபயாவும் ஒன்றே எனக் கூறலாம். கிபயா எனப்படும் இந்நகர்தான் சவுலின் சொந்த ஊராகும். சவுலின் பயணமும் (1 சாமு 10:2-5), நகரில் சவுலை அடையாளம் கண்டு கொள்ளுதலும் (1 சாமு 10:11-16) மேற்கூறியவற்றையே எடுத்துரைக்கின்றன. எனவே எருசலேமுக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவிலிருக்கும் இன்றைய தேல் ஏல்-புல் என்னும் இடம்தான் கடவுளின் மலையாகும். இந்த நகரம் இருந்ததாக அடையாளம் காட்டப்படும் மற்ற இடங்கள் அருகிலுள்ள நெபிசம்வில்லும் பெத்தேலும் ஆகும்.*

*கிபயாத்து-கா-அரலோத்து* (GIBEATH-HA-ARALOTH — *நுனித்தோலின் குன்று)*

*எரிகோவுக்கும் யோர்தானுக்கும் இடையில், கில்காலுக்கு அருகில் அமைந்துள்ள ஒரு குன்று. இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டினுள் நுழைந்த பிறகு விருத்தசேதனம் செய்து கொண்டதை இக்குன்று நினைவு படுத்துகிறது (யோசு 5:3)*

**கிபயோன்** (GIBEON — *குன்று)*

பென்யாமின் கோத்திரத்தார் வாழ்ந்த நகர். எருசலேமிற்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவிலிருக்கும் இப்போதைய ஏல்-சிப் நகரமே கிபயோனாகும்.

1. விவிலியத்தில் இதன் வரலாறு:-

*எரிகோவும், ஆயிநகரும் யோசுவாவால் அழிக்கப்பட்டதைக் கண்டு பயந்த கிபயோன் நகரத்தினர் இஸ்ராயேலரோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட ஐந்து எமோரிய அரசர்கள் ஒன்று சேர்ந்து கிபயோன் நகரை முற்றுகையிட்டனர். ஆனால் யோசுவா அவர்களை முறியடித்தார் (யோசு 10:1-11). இத்தருணத்தில்தான் சூரியனும் சந்திரனும் நிலைகுலையாமலும் அசையாமலும் நின்றதாக யோசுவா ஆகமம் கூறுகிறது.*

*யோசு 9:17-இல் கெப்பிரா, பேரோத்து, கிரியத்து எயாரிம் ஆகிய நகர்களோடு கிபயோன் நகரும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிபயோனில் குடியிருந்தவர்கள் கிவியர்கள் என்பவர்களாவர் (யோசு 9:7; 11:19). பென்யாமினின் நகர்களாகிய மிசுப்பா, இராமா, பேரோத்து ஆகியவற்றோடு கிபயோனும் யோசு 18:25-26-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றரை நூற்றாண்டு அளவுக்குக் கிபயோன் எந்த நிகழ்ச்சியிலும் பங்கு பெறவில்லை. ஏறக்குறைய கி.மு.1000 ஆண்டில் சவுலின் படையும், தாவீதின் படையும் கிபயோனில் தான் போர் தொடுத்தன. சவுலின் மகனான இசிபோசத்தின் தளபதியான அபிநேரும், தாவீதின் தளபதியான யோவாபும், கிபயோனின் குளத்தருகே சந்தித்தனர் (2 சாமு 2:12-17). இங்கு, சவுலின் படையிலிருந்து பன்னிருவரும், தாவீதின் படையிலிருந்து பன்னிருவரும் ஒருவருக்கொருவர் விலாவில் வாளால் குத்தி இறந்தனர். எனவே அந்த இடம் ''வாள்முனைகளின் நிலம்'' என்று அழைக்கப்பட்டது. கிபயோனிலுள்ள பெரும்பாறை அருகேதான் யோவாபு அமாசாவை வாளால் வெட்டிக் கொன்றார் (2 சாமு 20:8)*

*கிபயோனியர்கள்தாம் சவுலின் புதல்வரில் எழுவரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் (2 சாமு 21:1-9). கிபயோனியர்கள் பலரைச் சவுல் கொன்றதற்குப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று கிபயோனியர் தாவீதைக் கேட்டுக் கொண்டதால் தாவீது அதற்கு இசைந்தார். சாலமோன் ஆட்சிக்காலத்தில் கிபயோனில் பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன ( 1 அர 3:4). இங்குதான் சாலமோனுக்கு இறைவன் கனவில் தோன்றி அவர் விரும்புவது யாது என்று கேட்டார் (1 அர 3:4-15).*

*எரேமியா இறைவாக்கினரை எதிர்த்த போலி இறைவாக்கினரான கனனியர் கிப*

யோன் நகரைச் சேர்ந்தவர் (எரே 28:1). எரே 41:12 கிபயோனிலுள்ள 'பெரிய நீர் நிலை' பற்றிக் கூறுகிறது. கி.மு.5-ஆம் நூற்றாண்டில் எருசலேம் சுவர் கட்டப்பட்டபோது கிபயோன் நகரத்தார் மிகவும் உதவினார்கள் (நெக 3:7).

2. விவிலியத்திற்குப் புறம்பான நூல்களில் கிபயோன் பற்றிய குறிப்புகள்:-

முதலாம் செசோங்கு (விவிலிய சீசாக்கு) என்ற எகிப்திய அரசனின் பட்டியலில், கிபயோன் அவர் சென்ற இடமாகவோ கைப்பற்றியதாகவோ கூறப்பட்டுள்ளது. யோசிப்பசின் குறிப்புப்படி, கி.பி.66-இல் செஸ்தியுஸ் எருசலேமிலிருந்து 50 பர்லாங்கு தொலைவிலுள்ள காபாவோலில் (கிபயோன்) முகாமிட்டார்.

3. அகழ்வாராய்வின் முடிவுகள்:-

ஏல்சிப் என்ற இடத்தில் 1956-இலிருந்து 1957 வரை அகழ்வாராய்வுகள் நடைபெற்றன. ஏல்சிப் அமைந்துள்ள மலை தரைமட்டத்திலிருந்து 60 மீட்டர் அடி உயரத்திலிருக்கிறது. 8 நீரூற்றுகள் இங்குள்ளன. மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட குகை ஒன்றும் இங்குள்ளது. இந்த இடத்தின் மொத்தப்பரப்பளவு ஏறக்குறைய 16 ஏக்கர்களாகும்.

இப்பகுதியில் முதன் முதலாகக் கி.மு.2900-ஐ ஒட்டி (தொடக்க வெண்கலக்காலம்) மக்கள் குடியேறினர். கி.மு.800-ஐ ஒட்டி (மத்திய வெண்கலக்காலம்) இப்பகுதியின் வடகிழக்குப் பகுதியில் மக்கள் குடியேறினர். எபிரேய அரசர்கள் காலத்தில் (முதலாம் இரும்புக்காலம்) இக்குன்றின் வடகிழக்குப் பகுதியில் கட்டடங்கள் கட்டப்பட்டன. கி.மு.900-600 (2-ஆம் இரும்புக்காலம்) ஆண்டுகளில்தான் அதிக மக்கள் இங்கு வந்து குடியேறினர்; நகரைச் சுற்றிச் சுவர் கட்டப்பட்டது.

இந்த இடத்தின் வடபகுதியில் 8 மீட்டர் விட்டமுள்ள குளம் ஒன்று , படிக்கட்டுகளோடு உள்ளது. இக்குளம் 25 மீட்டர் ஆழமுடையது. 'கிபயோன் குளம்' என்று 2 சாமு 2:13-இல் குறிப்பிடப்பட்டிருப்பது இதுவே.

1959-60-இல் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின்போது கற்களிலிருந்து வெட்டப்பட்ட 66 கொப்பறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. திராட்சை ரசம் வடிக்கும் தொழிற்சாலைகள் இங்கு நிறைந்திருந்தன.

**கிபார்** (GIBBAR — வலியவன், வீரன்)

பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து பாலஸ்தீன நாட்டிற்குத் திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:20). இதற்கு இணையான வாசகம் நெக 7:25-இல் காணப்படும் பட்டியலில் கிபயோன் என்ற ஊர்ப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எஸ் 2:21-இல் ஊர்ப் பெயர்களும் கூறப்பட்டிருப்பதால், கிபயோன் என்பதுதான் மருவிக் கிபாராக மாறியிருக்க வேண்டும்.

**கிபிசயிம்** (KIBZAIM — இரு குன்றுகள், இரு குவியல்கள்)

கானான் நாட்டைக் கைப்பற்றியபின் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாற்பத்தி எட்டு நகர்களில் இதுவும் ஒன்று. எப்பிராயிமைச் சேர்ந்தது (யோசு 21:22).

முதலாம் நாள் ஆகமம் இந்த நகர்களின் பெயருக்கு இணையான அட்டவணையில் இப்பெயர் குறிக்கப்பட்ட இடத்தில் யோக்குமயாம் என்ற பெயரைத் தருகிறது (1 நாள் 6:68). கிபிசயிம், யோக்குமயாம் ஆகிய இரு நகரங்களும் மூல வாசகத்தில் இந்த இடத்தில் காணப்பட்டன என அறிஞர் சிலர் கருதுவர்.

**கிபிரோத்து — அத்தாவா** (KIBROTH — HATTAAVAH — இச்சைகோரி, பெரும்பசி, பேராவல்)

இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு, கெசெரோத்தை அடையுமுன் இவ்விடத்தில் முதலில் தங்கினர் (எண் 11:34-35; 33:16-17). இந்த இடத்தில் ஆண்டவர் வீசச் செய்த ஒரு பெருங்காற்று கடலுக்கு அப்பாலுள்ள நாட்டிலிருந்து

காடைகளைத் திரளாக அடித்துக்கொண்டு வந்தது. அவைகளின் மாமிசத்தை இஸ்ரா யேல் மக்கள் பேராவலுடன் உண்டதால் கொள்ளை நோய் அவர்களைத் தாக்கியது. இதில் பலர் மாண்டனர் (எண் 11:31-33; உப 9:22). மாண்டவர்களைப் புதைத்த கல்லறை கள் இந்த இடத்திற்கு இப்பெயரை வழங்கு கின்றன. இது ரூலிஸ் ஏல்-ஏபெய்லி என அடையாளம் காட்டப்படுகிறது. இது வழக் கமாகச் சீனாய் மலையென்று அடையாளம் காட்டப்படும் எபெல் மூசாவிலிருந்து கிழக் கில் 50 கி.மீ.தொலைவிலுள்ளது.

**கிமல்** (GIMEL)

எபிரேய நெடுங்கணக்கில் மூன்றாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் மூன்றாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது.

**கியாகு** (GIAH — ஊற்று, அருவி)

அபினேர் தப்பி ஓடிய வழியில், கிபயோ னிலிருந்து பாலைவன வழியாக அரபாவுக் குச் செல்லும் வழியில், உள்ள ஓர் இடம் (2 சாமு 2:24). ஆனால் இவ்வாசகம் பழுது பட்டிருப்பதாகத் தெரிகிறது. கிபயோனுக் குப் பதிலாகக் 'கெபா' என்றிருக்கவேண் டும். ஏனெனில் கெபா தான் யோர்தானுக் குச் செல்லும் பாலைவன வழியில் அமைந் துள்ளது.

**கியோர்கியன் மொழிபெயர்ப்பு (விவிலி யத்தின்)** (THE GEORGIAN VERSION)

கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட இடத்தில் வாழ்ந்த மக்கள் கியோர்கியன் என்ற மொழியைப் பேசிவந்த னர். இப்பகுதி, இப்போது உருசியா நாட் டில் அடங்கியுள்ளது. கி.பி.4-ஆம் நூற்றாண் டில்தான் கிறித்துவ மதம் இங்குப் பரவ ஆரம்பித்தது. இந்த 4-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், கியோர்கியன் மொழிக்கு எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டது என்று அர மீனியர் பாரம்பரியம் கூறுகிறது. மெஸ் ரோபு என்பவர்தான் இம்மொழிக்கான தனி எழுத்துக்களைக் கண்டுபிடித்தார் என்று தொடர்ந்து அப்பாரம்பரியம் கூறுகிறது.

யார் முதலில் விவிலியத்தைக் கியோர்கி யன் மொழியில் மொழி பெயர்த்தார்கள்? எந்தப் புத்தகங்கள் முதலில் மொழியாக்கம் செய்யப்பட்டன? எந்த மொழியிலிருந்து கியோர்கிய மொழிக்கு விவிலியம் மொழி யாக்கம் செய்யப்பட்டது என்பன போன்ற விபரங்களை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

அனேகமாக நற்செய்திகளும் சங்கீதங்க ளும் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண் டும். ஆனால் திருவெளிப்பாடு கி.பி.10-ஆம் நூற்றாண்டு இறுதிவரை மொழிபெயர்ப்புச் செய்யப்படவேயில்லை.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அனைத் தும் ஒரே நேரத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்படவில்லை. புத்தகங்கள் தனித்தனி யாக வெவ்வேறான இடத்திலும், வெவ்வே றான மற்றமொழி விவிலியங்களிலிருந்தும் வேறுபட்ட காலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாகப் பழைய ஏற்பாட்டின் முதல் எட்டுப் புத்தகங் கள், எழுபது நூல்கள் என்ற கிரேக்க விவிலி யத்திலிருந்து மொழி பெயர்ப்புச் செய்யப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இறைவாக் கினர் நூல்கள், அரமீனிய மொழிபெயர்ப்பு விவிலியத்திலிருந்து மொழி ஆக்கம் செய் யப்பட்டுள்ளன.

கியோர்கிய மக்களின் பாரம்பரிய கருத் துப்படி புதிய ஏற்பாடு, கிரேக்க மூலத்திலி ருந்தே கியோர்கிய மொழிக்கு ஆக்கம் செய் யப்பட்டது என்பதாகும். ஆனால் இதன் மொழி நடையை ஆராய்ந்து பார்க்கும் போது, அநேகமாக அரமீனிய மொழி பெயர்ப்பு அல்லது சீரிய மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டுதான், இந்தக் கியோர்கிய புதிய ஏற்பாடு ஆக்கம் செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகி றது. ஆனால் கியோர்கிய மொழியில் பல முறை, புதிய ஏற்பாடு மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. கி.பி.10ஆம் நூற்றாண்டின் இறுதியில் எத்திமியஸ் என்பவர் அவருக்கு

முன் நிலவிய பல மொழிபெயர்ப்புகளை ஒருங்கிணைத்துத் திருத்தினார். அப்போது குறைந்தது ஐந்து வேறுபட்ட மொழி பெயர்ப்புகள் பழக்கத்தில் இருந்தன. இதற்கு அடுத்த சுஜியோரைப் என்ற ஜார்ஜ் கி.பி.11-ஆம் நூற்றாண்டில், கியோர்கிய புதிய ஏற்பாட்டை முற்றிலுமாக நன்கு திருத்தினார். இதனை அத்தோஸ் மலை என்ற இடத்தில் செய்து முடித்தார். இவ்வாறு ஜார்ஜ் செய்த திருத்தமான மொழி பெயர்ப்புதான், பிறகு அச்சிட்டு வெளியிட ஆதாரமாயிருந்தது.

### கிரத்தே (CRATES)

இவர் சைப்பிரசு தீவை அந்தியோகு எப்பிபான் கைப்பற்றியபோது சிறிது காலம் அதன் அரசபிரதிநிதியாக இருந்தவர். இவர், சோசித்திராத்து எருசலேம் கோட்டையில் ஆளுநனாக இருந்தபோது அவருக்கு உதவி செய்ய, சைப்பிரசிலிருந்து வந்த கூலிப்படையின் தலைவன் (2 மக் 4:29).

### கிராமம் (VILLAGE)

கிராமம், சில குடியிருக்கும் வீடுகளையும் பலவகைக் கட்டடங்களையும் கொண்டதும், நகரத்தைவிடச் சாதாரணமான அமைப்பையும், எளிய ஆட்சிமுறையையும் உடைய தொகுப்பு ஆகும். பழைய ஏற்பாட்டில், நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு தெளிவாகக் கூறப்படுகிறது (லேவி 25:29.31; உப 3:5; 1 சாமு 6:18; 1 நாள் 27:45). நகரம் பெரியதாகவும், சுற்றுச் சுவர்களைக் கொண்டதாகவும் இருந்தது. ஆனால் கிராமம் ஓர் அறையுள்ள சிறிய வீடுகளைக் கொண்டதாகவும், சுற்றுச்சுவர்கள் இல்லாமலும் இருந்தது. மேற்காசியப் பகுதிகளில் கிராமங்களில் மண்குடிசைகள் இன்றும் காணப்படுகின்றன. கிராமங்கள் அகழிகளையும் உயர்ந்த கோபுரங்களையும் கொண்டிருக்கவில்லை (எச 38:11). இவை அரணற்ற, திறந்த கிராமங்கள் ஆகும் (எஸ்த 9:19). இதில் ஒரு விருந்தினர் மாளிகை இருந்தாலும் ஆலயம் இல்லை. தால்முதின் காலத்தில் கிராமம் செபக்கூடம் இல்லாத இடம் என்று வரையறுக்கப்பட்டது. புதிய ஏற்பாடு இத்தகைய வேறுபாட்டைப்பற்றிப் பேசவில்லை என்றாலும் (மாற் 1:38-39) பழைய ஏற்பாட்டுக் காலத்திய வேறுபாடுகள் இன்னும் இருந்ததாகத் தோன்றுகிறது (மத் 9:35; 10:11; மாற் 6:56; லூக் 8:1; 13:22).

விவிலிய காலத்தில் சிறப்பாகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நகரங்கள்கூட சிறியதாக இருந்தன. மெகிதோவும் எரிகோவும் 13 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தன. இலாக்கீசும், தெபீரும் 8 ஏக்கருக்கும் குறைவான பரப்பளவைக் கொண்டிருந்தன. கானானை வெற்றிகொண்ட காலத்தில் இஸ்ராயேல் தன் நகரங்களை அநேகமாகக் கைப்பற்றின என்றும், பின் மலைநாடுகளில் அவர்களின் கிராமங்களை அமைத்தார்கள் என்றும் சொல்லலாம்.

கிராமங்கள் நாளடைவில் வளர்ந்தன. அவற்றிற்குப் பாதுகாப்புகள் அமைக்கப்படலாம் (1 சாமு 23:7). இந்தக் கிராமங்களின் அளவு நாட்டில் நிலவும் சூழ்நிலையைப் பொருத்தது. அமைதியான காலங்களில் மக்கள் நகரச் சுவர்களுக்கு வெளியே வாழவும் தயங்கவில்லை. கிராமங்கள் நகரங்களாக வளர்ந்தது அவற்றின் பெயர்களில் காணப்படுகின்றன. கப்பர்நகூம் (நகூம் கிராமம்) கசர்-அத்தார் (அத்தார் கிராமம்) பெத்திலகேம் முதலியன நகரமென்றும் (லூக் 2:14) கிராமம் என்றும் (யோவா 7:42) அழைக்கப்படுகின்றன. அழிக்கப்பட்ட நகரம் கிராமமாக மாறலாம் (செக் 2:4). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கலிலேயாவில் இருந்த பல கிராமங்கள், சுற்றுச்சுவர்களைக் கொண்டிருந்தன. பல சமயங்களில் கிராமம், பாதுகாப்பிற்கும், பொருளாதார, அரசியல் காரியங்களிலும் நகரத்தைச் சார்ந்திருந்தது. இதனால் நகரங்களின் ஆட்சியில் கிராமங்கள் இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் மூப்பர் குழுவே கிராமத்தின் நீதி மன்றமாக இருந்தது. இந்த உண்மை, யோசுவா யூதாவுக்கு 114 நகரங்களையும் அவற்றைச் சார்ந்த கிராமங்களையும் பகிர்ந்தளிப்பதிலிருந்து புலனாகிறது (யோசு 15:32-62; 18:24.28; 1 நாள் 6.24 தொ).

கிராமங்கள் நகருக்கு மிக அருகிலேயே இருந்தன. இவை இக்காலத்திய புறநகர்ப் பகுதிகளை ஒக்கும். நகரில் வசிப்பவர்கள் ஓய்வெடுக்கவும், பொழுது போக்கிற்காக வும் கிராமங்களுக்குச் செல்வார்கள் (உ. ச. 7:11). இதனால் இந்தக் கிராமங்கள் நகரத்து டன் இணைய வாய்ப்புண்டு என்பதை, இரண்டு சுவர்களையுடைய நகரங்கள் கூறு கின்றன. பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு மாவட்டம் ஆகும். எ.கா. எமோரியர்களின் ஊர்கள் (எண் 21:23), செசரியா பிலிப்பி ஊர்கள் (மாற் 8:27), சமாரியர்களின் ஊர்கள் (அ.ப. 8:25). பின்வரும் நகரங்கள் இத் தகைய கிராமங்களைக் கொண்டிருந்தன. பேத்து-சான் (யோசு 17:11; நீதி 1:27), செக் கேம் (1 நாள் 7:28), கெசர் (1 நாள் 7:28), காத்து (1 நாள் 18:1), தோர் (1 நாள் 7:29) தானாக்கு (1 நாள் 7:29), மெகிதோ (1 நாள் 7:29), இரபா (எரே 49:2), கொபோன் (எண் 21:25). பெத்துசயிதா, பெத்தானியா, எம் மாவு முதலியவை புதிய ஏற்பாட்டுக் காலக் கிராமங்களாகும்.

கிராமங்களில் முக்கியத் தொழில் விவசாய மாகும். கிராமத்தைச் சுற்றி இருந்த நிலங்க ளில் அவர்கள் பயிரிட்டனர். இது விவசாய மையமாகவும், குளிர்காலத்தில் ஆடுமாடு கள் மேய்ப்போர் கூடுமிடமாகவும் இருந் தது. கிராமத்திற்குப் பொதுவான ஒன்றுக்கு மேற்பட்ட போரடிக்கும் களங்கள் இருந் தன. கோடையில் அவர்கள் ஊருக்கு வெளியே இருந்தனர். மேய்ச்சல் நிலங்கள் கிராமத்திற்கே சொந்தமானவையாகக் கரு தப்பட்டன (1 நாள் 6:54).

நாடோடிகளின் பாளையங்கள் கிராமங்க ளாகக் கருதப்பட்டன (ஆதி 25:16; ஏச 42:11; எண் 32:41). இஸ்ராயேலின் கிராமங்களிலி ருந்து சவுல், தாவீது போன்ற தலைவர்கள் தோன்றினர். குடியானவர் இஸ்ராயேலில் தாழ்ந்தவராகக் கருதப்படவில்லை (நீதி 5:11).

**கிரிசிப்பு** (CRISPUS - சுருண்ட)

கொரிந்தில் தங்கியிருந்த ஒரு யூதர்; செபக் கூடத் தலைவர் (அ. ப. 18:8). பவுலின் போதனைகளின் மூலம், இயேசுதான் கிறிஸ்து என்று விமர்சித்து இவரும் இவரு டைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார் கள்; பவுல் தானே ஞானஸ்நானம் கொடுத்த சிலருள் இவரும் ஒருவர் (1 கொரி 1:14). பிறகு இவர் எகினாவிற்கு ஆயரானார் என்று பாரம்பரியம் கூறுகிறது.

**கிரியத்தயிம்** (KIRIATHAIM - இரட்டை நகரம்)

1. கிரியத்தயிம், சீகோன் என்ற அரசனின் மோவாபு நாட்டில் இருந்தது. இதில் எமோ ரியர்கள் வாழ்ந்தனர். இந்நகரம் சாக்கடலில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. வர லாற்று நோக்கில் இந்நகரம் மோவாபிய பீட பூமியில் அமைந்திருந்தது (எரே 48:1.23; எச 25:9). இது ரூபன் கோத்திரத்தாருக்கு மோசே யால் பிரித்துக் கொடுக்கப்பட்டது (எண் 32:27; யோசு 13:19). மேசா மன்னனின் ஆட்சியில் இது மோவாபு மக்களின் பிடியில் இருந்தது. அந்த இடமானது தீபோனுக்கு வடமேற்கில் 9 கி.மீ. தொலைவிலும், ஆர் னோன் ஆற்று முகப்பிலிருந்து வடகிழக்கில் 15 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய கிர்பெத் ஏல்-கைரெய்யாத் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

2. கெரிசோம் லேவியர்களுக்கு அளிக்கப் பட்ட நப்தலியைச் சேர்ந்த ஓர் ஊர் (1 நாள் 6:76). இதற்கு இணையான பட்டியலில் (யோஅ 21:32) வரும் கர்த்தானும் இதுவும் ஒரே ஊரைக் குறிக்கலாம்.

**கிரியத்தரிபா/கிரியத்து - அரிபா** (KIRIATH - ARIBA - நால்வரின் நகரம்)

கிரியத்தரிபா என்பது யூதா மலை நாட்டி லுள்ள கெபிரோன் என்னும் நகரத்தின் பழைய பெயர். இதன் அருகில்தான் ஆபிர காம், சாரா, ஈசாக்கு முதலியோர் அடக்கம் செய்யப்பட்ட இரட்டைக் குகையான மக்க பேலா உள்ளது (ஆதி 23:2; 35:27). இந்நகரம் அரபிக் மொழியில் 'எல் காலில்' அதாவது 'நண்பன்' என்பதாகும். காலேபு என்பவர் இதை அனாக்கின் புதல்வர்களிடமிருந்து கைப்பற்றினார். அனாக்கியருள் மிகப் பெரி

யவனாக மதிக்கப்பட்டு வந்த அர்பே என்பவன் அங்குப் புதைக்கப்பட்டிருந்ததால் இது கிரியாத்தரிபே என்று அழைக்கப்பட்டது (யோசு 14:15; 15:13). இது மலைநாட்டின் முக்கிய நகரமாகவும் (15:14) அடைக்கல நகரமாகவும் (20:7) லேவியரின் நகரமாகவும் விளங்கியது. விவிலிய காலம் முழுவதும் கெபிரோனின் பழைய பெயர் விளங்கியது. கெபிரோன் தானிஸ் கட்டப்படுவதற்கு 7 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கட்டப்பட்டு விட்டதாகக் கருதப்படுகிறது. இது ஆதி 14:13-இல் எமோரியர்களுக்குச் சொந்தமானதென்றும், ஆதி 23-இல் கேத்து என்பவனுக்கு உரிமையானது என்றும், பாரம்பரியத்தின்படி அனாத்துக்கு உரியது என்றும் (யோசு 11:21; 14:15) கூறப்படுகிறது. நீதி 1:10-இல் யூதா நாட்டினர் கெபிரோனை வென்றதாகக் கூறப்படுகிறது. சிம்சோன் காசா நகரத்தில் வாயிலைத் தூக்கிக் கொண்டு கெபிரோனை நோக்கியுள்ள குன்றுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது (நீதி 16:3). தாவீது கெபிரோன் நகரைத் தலைநகரமாகக் கொண்டு 7 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அபினேருடன் உடன்படிக்கை செய்தார். இங்குதான் தாவீது அரசராக முடி சூட்டப்பட்டார். அபிசலோம் கெசூர் நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தபோது ஆண்டவருக்குச் செய்த நேர்ச்சையைத் தீர்க்கக் கெபிரோனுக்குச் சென்றது அது ஒரு சிறந்த வழிபாட்டு இடமாகவும் விளங்கியது என்பதைத் தெளிவாக்குகிறது. இங்கு விடுதலை அடைந்த யூதர்கள் வந்து தங்கினார்கள் (நெக 11:25). கெபிரோனும் மற்ற மூன்று நகரங்களும் ''அரசருக்கு'' என்ற வாசகமும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் ஜாடிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இது அரசரால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகள் கொண்ட மட்கலன்கள் செய்வதில் சிறந்திருந்திருக்க வேண்டும். மக்கபேயர் போரில் இது யூதா என்பவரால் கொள்ளை அடிக்கப்பட்டது. பைசாண்டைன் காலத்தில் கெபிரோன் குறிப்பிடாதது அது பல ஆண்டுகள் கைவிடப்பட்ட நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. இது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இது மீண்டும் முகமதியர்களால் கைப்பற்றப்பட்டது.

**கிரியத்தாரிம்/கிரியத்து - ஆரிம் (KIRIATH - ARIM)**

நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்களின் ஊர்ப்பட்டியலில் வரும் ஒரு பெயர் (எஸ் 2:25). இதன் பெயரின் சரியான வடிவம் கிரியத்து எயாரிம் ஆகும். இது இப்பட்டியலின் இணைப்பகுதியான நெக 7:29-இல் வருகிறது.

**கிரியத்து (KIRIATH)**

பென்யாமின் பகுதியைச் சேர்ந்த ஒரு நகர் (யோசு 18:28). இது கிரியத்து எயாரிம் என்றும் அழைக்கப்பட்டது.

**கிரியத்து எயாரிம் (KIRIATH - JEARIM - காடுகளின் நகரம்)**

யூதாவின் நகரங்களில் ஒன்றான கிரியத்து எயாரிம் இன்றைய தேர் அல் - அஸ்கார் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இந்நகரம் ஏறக்குறைய 13 கி.மீ. தொலைவில் எருசலேமிற்கு வடக்காக அமைந்திருந்தது. யுசேபியு கிரியத்து எயாரிம் நகரைப் பற்றி இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றார். முதலில் அது எருசலேமிலிருந்து தியோசுப்பொலி செல்லும் சாலையில் 14 கி.மீ. தொலைவில் உள்ளது என்றும், பின் 15 கி.மீ. தொலைவில் உள்ளது என்றும் கூறுகிறார். தியாக்கோன் பேதுருவும் கிரியத்து எயாரிம் எருசலேமிலிருந்து 14 கி.மீ. தொலைவில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். தேர் ஏல்-அஸ்கார், அபுகோஸ் என்ற இடத்திற்கு மேற்கில் உள்ள குன்றின் மீது அமைந்திருந்தது. பாதுகாப்பாகவும் மற்ற நகரங்களைக் கவனிக்கவும் வசதியாக இருந்த இந்நகரம் குன்றிலிருந்து, 'அபுகோஸ்' என்ற இடத்திற்கு உரோமானியர் காலத்தில் மாற்றப்பட்டதாக 1944-இல் நடந்த அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதலில் கிரியத்து எயாரிம் கோட்டைகளுடன் கூடிய நான்கு நகரங்களின் கிபயோனிய

ஐக்கியத்தின் அங்கத்தினராக விளங்கியது. இந்நகரம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இதன் பழைய பெயர் கிரியத்து பாகால் அதாவது ''பாகால் கடவுளின் நகரம்'' என்பதாகும். யூதா நாட்டின் வடக்கு எல்லைகளைக் குறிப்பிடும்போது இது ''பாகலா'' (யோசு 15:9-10; 18:14) என்றும் பென்யாமின் நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடும்போது ''கிரியத்து பாகால்'' (யோசு 15:60; 18:14) என்றும் அழைக்கப்பட்டது. இந்நகரம் ''தாண்'' கோத்திரத்தின் கிழக்கு எல்லையும், பென்யாமின் நாட்டின் மேற்கு எல்லையும், யூதா நாட்டின் வடக்கு எல்லையும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. எபனேசர் (கி.மு. 1050) போருக்குப் பிறகு பெலிஸ்தியர்கள் உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கைப்பற்றி அசுதோதுக்குக் கொண்டு சென்றனர். இதனால் அவர்கள் பாளையத்தில் பல கொள்ளை நோய்கள் உண்டாயின. எனவே அதைப் பெலிஸ்தியர்கள் பேத்து செமேசுக்கு அனுப்பிவிட்டனர். இதன் பின்னர் உடன்படிக்கைப் பேழை கிரியத்து எயாரிமில் வைக்கப்பட்டிருந்தது. தாவீது அரசர் அதை எருசலேமுக்குக் கொண்டு வரும் வரை அங்கேயே இருந்தது (1 சாமு 5:1-7:2; 2 சாமு 6:1-15; 1 நாள் 13:1-13; 15:1-29). அரசு திருத்தி அமைக்கப்பட்ட போது அந்நகரம் எருசலேம் மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது (யோசு 15:60; 18:28). யோயாக்கிம் அரசனால் கொலைசெய்யப்பட்ட உரியா இறைவாக்கினர் கிரியத்து எயாரிமில் இருந்து வந்தவர் (எரே 26:26-23). நாடுகடத்தப்பட்டு விடுதலை அடைந்தவர்களுள் கிரியத்து எயாரிமைச் சேர்ந்தவர்களும் இருந்தனர் (எஸ் 2:25; நெக 7:29).

**கிரியத்து குசோத்து** (KIRIATH - HUZOTH - *வீதிகளின் நகர்*)

கிரியத்து குசோத்து என்பது மோவாபியர்களின் நகரங்களில் ஒன்று. பாலாக்கு குறிசொல்லும் பிலயாமை இங்குதான் முதன் முதலில் அழைத்துவந்தார் (எண் 22:39). இது ஆர்னோன் ஆற்றின் வடக்கில் அமைந்திருந்தது (22:39).

**கிரியத்து-சன்னா** (KIRIATH - SANNAH)

கிரியத்து-சேபர் என்ற பெயரின் மற்றொரு வடிவம் அல்லது எழுத்துப் பிழையாகும் (யோசு 15:49). இவ்வடிவம் மோசரோட்டிக் வாசகத்தில் மட்டும் வருகிறது.

**கிரியத்து-சேபர்** (KIRIATH - SEPHER - *நூல்களின் நகர்*)

கிரியத்து சேபர் என்பது தெபீர் (1)-இன் பழைய பெயர் ஆகும் (யோசு 15:15-16; நீதி 1:11). யூதாவின் நகரங்களில் ஒன்றான தெபீர் இன்றைய தேல் பெயித்து மிர்சுன் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது கெபிரோனில் இருந்த செப்பேலாவில் இருந்து 19 கி.மீ. மேற்கு வடமேற்கில் உள்ளது. யோசுவா தெபீரை வென்ற நிகழ்ச்சி இரண்டு இடங்களில் குறிப்பிடப்படுகிறது (யோசு 10:30; 11:21). இத்தியரின் நகரம் என்றும் அழைக்கப்பட்ட இந்நகரம் ஒதினியேல் என்பவரால் கைப்பற்றப்பட்டது (யோசு 15:15). தெபீர் யூதாவின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 15:49), லேவியரின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 21:15; 1 நாள் 6:43) எண்ணப்பட்டது. ஆல்பிரைட் என்பவர் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது அந்நகரம் 7.5 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும் என்பதைக் கண்டுபிடித்தார். தெபீர் முதன்முதலில் முற்கால வெண்கலக் காலத்தில் கட்டப்பட்டது (கி.மு. 2300-2100). 19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 11 அடி குறுக்களவுள்ள சுவர் ஒன்றும் சுண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீன நாட்டில் நிலவிய குழப்பநிலை கி.மு. 1800-1500-க்கு இடைப்பட்ட காலத்தில் நடந்த நான்கு பெரிய அழிவுகளாலும் நான்கு சிறிய அழிவுகளாலும் எண்பிக்கப்படுகிறது. கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிற்கால வெண்கலக் காலத்துக்குரிய அணிகலன்களிலிருந்து கானான் நாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் நிலவிய இனப்பெருக்க வழிபாட்டு முறை தெளிவாகிறது. இவற்றில் பெண்கடவுளும் பாம்பு உருவமும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முக்கியமானதாகும். இந்நகரம் கி.மு. 1200-இல் மிகவும் கொடூரமாகத் தீயால் அழிக்கப்பட்டாலும், மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இந்த அழிவும் புதுப்பித்தலும் இஸ்ராயேல் மக்களால் நடந்திருக்கக்கூடும் என்று கருதப் படுகிறது. இறுதியாகத் தெபீர் கி.மு. 598-587-க்கு இடைப்பட்ட காலத்தில் பாபிலோனிய ரால் அழிக்கப்பட்டுக் கைவிடப்பட்டது.

## கிரியத்து - பாகால் (KIRIATH - BALL - பாகாலின் நகர்)

கிரியத்து எயாரிம் என்ற இடத்தின் மற் றொரு பெயர் (யோசு 15:60; 18:14).

## கிருகாசியர் (GIRGASHITE)

கானானில் தொடக்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் பட்டியலில் மட்டும் குறிக்கப்படும் ஓர் இனம் . இவர்கள் ஏழுமுறை குறிக்கப் படுகின்றனர் (ஆதி 10:16; உப 7:1; யோசு 3:10; 24:11; 1 நாள் 1:14 நெக 9:8). இவர்களை இஸ்ராயேலர் நாட்டைவிட்டு அகற்றினர். இவர்களுக்கென்று ஓர் இடமில்லை. புதிய ஏற்பாட்டில் காதராவியர் வாழ்ந்த, கலிலே யக் கடலுக்கருகில், யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதியாக இருக்கலாம் (மத் 8:28; மாற் 5:21; லூக் 8:26).

## கிருசியர் (GIRZITE)

எகிப்துக்கும் பெலிஸ்தியாவுக்கும் இடை யில் வாழ்ந்த ஒரு வித இனமக்கள். கெசூரி யர், அமலேக்கியர் போன்று இவர்களும் தாவீது சீக்கிலாகில் தங்கியிருந்தபோது அடித்த கொள்ளைகளுக்குப் பலியாயினர் (யோசு 13:2; 1 சாமு 27:8). இதைத் தவிர வேறொன்றும் இவர்களைப்பற்றித் தெரிய வில்லை.

## கிரேக்க மெய்யியலும், மதமும் (GREEK PHILOSOPHY AND RELIGION)

கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கிரேக்க உலகினில் காணப்பட்ட மெய்யியல், மற்றும் மதம் சம்பந்தமான செய்திகளை இக்கட்டுரை அளிக்கிறது.

1. முன்னுரை:- கி.மு. 338-இல் கிரீசு நாடு மக்கதோனிய மன்னரான பிலிப்புவின்கீழ் வந்தது. இது கிரேக்க நாட்டின் நகர அமைப்பு முறையை மாற்றி நாட்டாட்சிமுறையைத் தோற்றுவித்தது. அரசியல் சுதந்தரத்தினை இழந்தபோதிலும் கிரேக்கர்கள் தங்கள் நாகரீ கத்தை விட்டுவிடவில்லை. மாறாகக் கிரேக் கர்களின் நாகரீகம், மக்கதோனிய மன்னன் மகா அலக்சாந்தர் காலத்தில் மேற்காசிய நாடுகளில் வெகுவாகப் பரவியது. சீரியா, பாபிலோனியா, பாரசீகம், எகிப்து போன்ற மேற்காசிய நாடுகளில் கிரேக்க நாகரீகம் செழிப்புற்று வளர்ந்தது. கிரேக்க நாகரீகமும் மேற்காசிய நாடுகளின் நாகரீகமும் சேர்ந்து ''ஹெல்லனிசம்'' என்ற கிரேக்கக் கூட்டு நாகரீகம் பிறந்தது. இது மதம், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைத் தழுவிய பன் னாட்டு, நாகரீகமாகும். இந்த நாகரீகம் கிரேக்க, மெய்யியல் மற்றும் மறையை அதிகமாகப் பாதித்தது.

2. பழைய கடவுள்களும் வழிபாடுகளும்: புதிய மறை சம்பந்தமான கொள்கைகள் பல தோன்றினாலும் கிரேக்கர்கள் தங்களது பண் டைய வழிபாடுகளையும், தெய்வங்களை யும் விலக்கிவிடவில்லை. தொன்று தொட்டே இயற்கையினை வழிபட்ட இவர் கள் இயற்கையை ஒரு மாபெரும் சக்தியா கவே கருதினர். காலப்போக்கில் இயற்கையி னைப் பற்றிய அறியாமை அகன்றது. இருப் பினும் இயற்கையில் வழிபட்ட பல தெய் வங்களை அவற்றின் பண்புகளுக்காவே பின் னும் வழிபட்டனர். பண்டைய கடவுள் களில் மிகவும் முக்கியமானவர்கள், சேயுஸ், அத்தீனா, தியோனிசியஸ் ஆவார்கள். பெர்க மோன் என்னுமிடத்தில் சேயுசுக்குப் பிர மாண்டமான ஒரு பீடம் கட்டப்பட்டது (திருவெளி 2:13). எகிப்து, சீரியா போன்ற நாடுகளில் தியோனிசியசின் கோவில்கள் கட்டப்பட்டன. எருசலேமில் இந்தக் கிரேக்க மறை திணிப்புக் காரணமாக மக்க பேயர்களின் புரட்சிவெடிக்கிறது. கிரேக்கக் கடவுள்களின் விழாக்கள் கிரேக்க உலகம் முழுவதும் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டன. பழைய கடவுள்களும் விழாக்க ளும், புதிய வழிபாடுகள் மற்றும் புதிய நாகரீகத்தால் பாதிக்கப்பட்டாலும் முழுமை யாக அழிந்துவிடவில்லை.

*3. தனிப்பட்ட மறைகள்:-* அலக்சாந்தரின் ஆட்சிக்குப்பிறகு மக்கள் தங்களுக்கு விருப்பமான மறையினைப் பின்பற்றத் தொடங்கினர். இது ஒரு கூட்டு வழிபாடாகவே அமைந்தது. ஒவ்வொரு குடும்பமும் ஒரு தெய்வத்தைக் குடும்ப தெய்வமாக ஏற்று வழிபட்டது. குலம் வாரியாகவும் தெய்வங்களை மக்கள் வழிபட்டனர். தியோனிசியஸ் என்ற அழகுக் கடவுளே வணங்கப்பட்ட கடவுள்களில்' குறிப்பிடத்தக்கவர். கிரேக்க உலகம் பரந்து விரிந்திருந்ததால், அதன் கிளை நாட்டுமக்கள் கிரேக்க ஆதிக்கத்தின் பாதிப்பு ஏற்பட்டபின்னும் தங்களது மறைகளையே பின்பற்றினர்.

*4. கிரேக்க உலகின் கிழக்கத்திய மறைகள்:-* கிரேக்க உலகம் எகிப்து, சீரியா, பாபிலோனியா, பாரசீகம் போன்ற நாடுகளைத் தன்னகத்தே கொண்டதாகும். இந்நாடுகள் தங்களின் மறைகள் மூலமாகக் கிரேக்க நாகரீகத்தைப் பெருமளவில் பாதித்தன.

*அ) எகிப்திய வழிபாட்டுமுறைகள்:-* இம்முறை செராபிஸ் என்னும் கடவுளை வழிபடுவதாகும். தோலமிகளின் ஆட்சிக்காலத்தில் எகிப்தில் இம்முறை காணப்பட்டது. செராபிஸ் என்ற கடவுள் எகிப்தில் மெம்பிசில் ஓசிரிஸ் என்றும், பிரியாக்சிசில் சேயுஸ் ஏலியோஸ் என்றும் அழைக்கப்படுகிறார். எகிப்திலிருந்து இவ்வழிபாடு கிரேக்கத்திற்குப் பரவுகிறது. கிரேக்கக் கடற்கரைப் பகுதியிலுள்ள மக்கள் இம்முறையைத் தழுவுகின்றனர். செராபிஸ் என்ற இக்கடவுளின் வழிபாடு எகிப்தின் பண்டைய கடவுளான ஐசீஸ் என்பவரின் வழிபாட்டையும் மறையையும் ஆரம்பித்து வைத்தது. ஐசீஸ் கிரேக்க மக்களின் கடல்கடவுளாகக் கருதப்பட்டாள். இவளுடைய வேறுபெயர்கள், ஆர்தமிஸ், அப்ரோடைட், தெமெட்டர், ஏரா, எஸ்தியா, நானை, என்பனவாம். இவள் உலகின் தாய்க் கடவுளாகக் கருதப்பட்டாள். இவளுக்கு 10,000 பெயர்களுக்கு மேல் உண்டு. இவளை வழிபடுபவர்கள், விதியின் தண்டனையிலிருந்து விடுபடுவார்கள்.

*ஆ) அனதோலிய வழிபாட்டு முறைகள்:-* அனதோலிய முறைகளில் மிகவும் தொன்மையானது, தாய்க்கடவுள் 'மா'வின் மறையாகும். இக்கடவுளுக்குச் சிபில், அக்டிஸ்டிஸ் என்ற பெயர்களும் உண்டு. கிரேக்கர்கள் இவளை ''மண்மாதா'' என அழைத்தனர். இக்கடவுளின் கோவில்களை அடிமைகளும், தேவதாசிகளும் பராமரித்து வந்தனர்.

*இ) சீரியா வழிபாட்டுமுறைகள்:-* சீரியா முறைகள் வானக்கடவுள் அதாதை வழிபட்டன. இந்த அதாது சேயுஸ் என்ற கிரேக்கக் கடவுளாகக் கருதப்பட்டார். இது தவிர அதர்காதிஸ் என்ற பெண்கடவுளும் வணங்கப்படுகிறாள். இவள் அனதோலிய கடவுளான 'மண்மாதாவின்' வடிவமாகக் கருதப்பட்டாள்.

*ஈ) பாரசீக வழிபாட்டு முறைகள்:-* பாரசீக முறைகள், சொராஸ்டர் அறிவித்த மாஸ்டா என்னும் கடவுளை ஆதாரமாகக் கொண்டவையாகும். 'அகூரா மாஸ்டா' என்ற இக்கடவுள், ஞானத்தின் கடவுளாகக் கருதப்பட்டார்.

*மறை உண்மைகள்:-* கிரேக்க உலகில் தெமெத்தர் என்னும் கடவுள் பற்றியும், தியோனிசியஸ் என்னும் கடவுள் பற்றியும் மறை உண்மைகள் பல நம்பப்பட்டன. மறை உண்மைகள் அறிவுக்கு விபரீதமாகத் தோன்றும் கட்டுக்கதைகளைப் போல் காணப்பட்டாலும் அவற்றின் மூலமாக மக்கள் தங்கள் இயலாமையை, அறியாமையைப் போற்றிவந்தனர். மறைஉண்மைகள் மக்களை இத் தெய்வங்களிடத்து அபரிமிதமான நம்பிக்கை கொள்ளத் தூண்டின.

*6. இறைவனாகப் போற்றப்பட்ட அரசர்கள்:-* இவ்வகையான பழக்கம் எகிப்திய மக்களிடம் காணப்பட்டது. மன்னன் இறைவனின் அவதாரமாகக் கணிக்கப்பட்டான். அதற்கேற்றவாறு பெருமையும் மதிப்பும் அதிகாரமும் கொண்டிருந்தான். கிரேக்கரிடையேயும் இப்பழக்கம் பரவியது. கிரேக்கர்கள் அரிய பெரிய செயல்களைச் செய்த சாதாரண வீரர்களையும் இறைவனாக வழிபட்டனர்.

7. நல்லூழும் விதியும்; சோதிடமும் மாய வித்தையும்:- இவை மதங்களோடு சென்றன. கிரேக்கர்கள் நல்லூழையும், விதியையும் கடவுளாக வழிபட்டனர். சோதிடம் மக்களின் எதிர்காலத்தை எடுத்துரைப்பனவாக அமைந்தன. கோள்களைக் கொண்டு சோதிடம் கணிக்கப்பட்டது. கோள்களே கடவுள்களாகவும் மாறின. பற்பல மாயமந்திர வேலைகள் நடைபெற்றன. மக்களிடம் மதம் சம்பந்தப்பட்ட மூடநம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் வளர ஆரம்பித்தன. இவற்றுக்கெல்லாம் எதிராக மெய் ஞானம் பிறந்து வளர ஆரம்பித்தது.

8. மெய்யியல் பள்ளிகள்:- கிரேக்கர்கள், மேலை நாட்டு மெய்யியலின் தந்தையர்கள். அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சாக்ரடீஸ் போன்ற தத்துவ மேதைகளை உலகினுக்கு அளித்தவர்கள் கிரேக்கர்கள். அரிஸ்டாட்டிலின் காலத்திற்கு முன்பிருந்த நகராட்சி அமைப்புமுறை மறைந்தது. பின்னர்த் தேசிய ஆட்சிமுறை வளர்ச்சி பெற்றது. ஆனால் இம்முறையும் மக்களை மகிழ்ச்சிகரமாக வாழவைக்கவில்லை. எனவே கிரேக்க மெய்யியல் பள்ளிகள் தோன்றின. இவை மனிதனின் மெய்யறிவை ஆராய ஆரம்பித்தன. மனித வாழ்வின் பகுத்தறிவினை மூலதனமாகக் கொண்டு மனித வாழ்வினை மேம்படுத்தத் திட்டம் தீட்டினர். இதன் விளைவாக மெய்யியல் அறிவு வளர்ந்தது. மனிதனின் வாழ்வுக்குப் புண்ணியம் அதாவது நல்லநடத்தை இன்றியமையாதது என்னும் கொள்கை பரவ ஆரம்பித்தது. தனிமனித சுதந்தரம், சிந்தனை போன்றவை வலுப் பெற்றன.

அ) ஐய வாதமுறை:- இந்த முறை மெய்யியலை ஆதாரமாகக் கொண்ட முறையாகும். பழைய கால வழிபாடுகளில் அறிவு பூர்வமான எதுவும் காணப்படவில்லை என்பதால் இம்முறை தோன்றியது. அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோவின் பள்ளிகள் இந்த ஐயவாதமுறையை வளர்த்தன. மனிதனுடைய அறிவு முழுமையான ஞானத்தை எட்ட முடியாது. எதையும் முழுமையாக அறியமுடியாது என்பது இம்முறையின் வாதமாகும்.

ஆ) சினிக் முறை (எடுத்ததெற்கெல்லாம் குறைகூறும் முறை):- இம்முறையின் கருத்துப்படி, கலாச்சாரம், மதம், மற்றும் மனிதனின் எந்த ஒரு அமைப்பும் சரியானதொன்றல்ல. எனவே ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு வாழவேண்டும். இம்முறை கடுமையான தபசையும், எளிய வாழ்க்கையையும் போதித்தது. இம்முறையில் மிகப்பிரசித்தி பெற்றவர் ஆண்டிஸ்தேனஸ் ஆவார். தனிப்பட்ட கொள்கையுடைய மக்களே பொதுமக்களிடம் காணப்படும் அநீதிகளைக் குறிப்பிட முடியும் என்பது இம்முறையின் கருத்தாகும். இம்முறையின் மற்றொரு சிறந்த ஆசிரியர், தியோசெனஸ ஆவார். இவரின் எளிய வாழ்க்கையும், கடுமையான நீதிப்போராட்டமும் குறிப்பிடத்தக்கவை.

இ) ஸ்டோயிக் முறை:- இம்முறையை ஆரம்பித்தவர் செனோ ஆவார். இவர் குறைகூறும் முறையின் மாணவர். இவருடைய கருத்துப்படி நன்னடத்தையே மிகச் சிறந்த கொள்கையாகும். நன்னடத்தைஎன்பது இயற்கையுடன் இயைந்து வாழும் வாழ்க்கையாகும். இயற்கை என்பது மனிதனின் பகுத்தறிவோடு இணைந்தது. எனவே பகுத்தறிவால் மட்டும் இயற்கையை முழுமையாக அறிய முடியும். மனித சுதந்தரம் என்பது உலகக் குறிக்கோளுக்குக் கட்டுப்பட்டதேயாகும். மனிதன் குழுவாக வாழவே ஏற்படுத்தப்பட்டுள்ளான். உலகம் என்பது, கடவுள்கள், மனிதர்கள் மற்றனைத்து உயிர்களும் வாழும் ஒரு பொது இடமாகும். தெய்வீக சக்தி ஒவ்வொரு உயிர்களிடத்தும் காணப்படுவதாகக் கருதப்படுகிறது. தெய்வீக சக்தி ஒவ்வொரு உயிரிடத்திலும் சிறு பொறியாக அமைந்துள்ளது. இப்பொறியே உயிர்களை மோட்சத்தில் சேர்க்கும் கருவியாகும்.

ஈ) எப்பிக்கூரிய முறை:- இம்முறையின் கோட்பாடு என்னவென்றால், ''இன்பமே

மனிதனின் குறிக்கோளாகும்''. எப்பிக்கூருஸ் என்பவர் இம்முறையை நிறுவினார். வாழ்க்கை இன்பமானதாய் இருக்கவேண்டும். இன்பமே மனித வாழ்வின் இறுதிக் குறிக்கோள். ஆனால் இந்த இன்பம் அளவானது, அறிவுபூர்வமானது. அளவுகடந்த, அறிவுபூர்வமற்ற இன்பம் இன்பமாகாது. அது துயரத்தையே கொடுக்கும். இம்முறையின் கருத்துப்படி சாவு மனித துயரங்களிலிருந்து நாம் பெறும் விடுதலையாகும்.

கடவுள் தொடர்புக்கோட்பாடும், மெய்ஞானமும்:- மெய்யியல், பகுத்தறிவினை மேம்படுத்தியது. இதன்விளைவாக அறிவியல் வளர்ந்தது. மூடநம்பிக்கைகள் குறைந்தன. இருப்பினும் மனித அறிவுக்கு எட்டாதன பல இருக்கின்றன. இவைகளை அறிய இறைவெளிப்பாடு அவசியம். இதைக் கருத்தில் கொண்டு புதிய மறைகள் பல தோன்றின. இவை அனைத்தும் இறைவெளிப்பாட்டினையும், மெய்ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டவையே. கிறித்தவ மறை, இஸ்லாம் மறை போன்ற இறைவெளிப்பாட்டு மறைகள் மனிதனை வெகுவாகக் கவர்ந்தன. இருப்பினும் பகுத்தறிவு வாதிகள் தங்கள் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் புதிய கருத்துக்களை வெளியிட்டு இறையியல், மெய்யியல் இரண்டையும் வளர்த்து வந்திருக்கிறார்கள்.

**கிரேக்க மொழி (GREAK LANGUAGE)**

கிரீசிலும் அதன் குடியேற்றப் பகுதிகளிலும் பேசப்பட்ட மொழியாகும். பெரிய அலக்சாந்தரின் வெற்றிக்குப்பின் கிரேக்க உலகத்தின் பொதுமொழியாகத் திகழ்ந்தது. இது இந்தோ-ஐரோப்பிய மொழிக்குழுவைச் சேர்ந்தது. கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியிலேயே இம்மொழி பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. கோமேருக்கும் (கி.மு. 8-ஆம் நூற்றாண்டு) அலக்சாந்தருக்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மொழி உயர்தரமடைந்தது. இக்காலத்தில் இதன் அத்திக்காவைச் சேர்ந்த திரிபுமொழி முதன்மை பெற்றது. இதை உரோமையர் மற்றும் பைசாந்தியன் பேரரசுகள் பயன்படுத்தின. உரோமைப் பேரரசர்களும் மேலவை அங்கத்தினர்களும் தங்கள் சட்டங்களை இம்மொழியில் வெளியிட்டனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை, உரோமைத்திருச்சபை தனது வழிபாடுகளை இம்மொழியிலேயே நடத்தியது. நவீன கிரேக்க மொழிக்கு இலக்கிய வடிவங்களை அளிப்பதோடு கிரேக்க மொழியின் செல்வாக்கை உருசிய மற்றும் சேர்பிய மொழிகளின் அகரவரிசையிலும் காணலாம். புதிய ஏற்பாடு, பழங்கால மெய்யியல் மற்றும் தொடக்ககால அறிவியல் ஆகியவை இம்மொழியைத்தான் பயன்படுத்தின. அதன்விளைவாக மேற்கு நாடுகளின் கலாச்சார அமைப்பில் கிரேக்க மொழி முக்கிய இடம்பெறுகிறது.

எழுபது நூலிலும் புதிய ஏற்பாட்டிலும் பயன்பட்டுள்ள கிரேக்கமொழி ''கோய்னே'' என்றழைக்கப்படுகிறது. இச்சொல்லுக்குப் பொதுவானது என்பது பொருளாகும். இதற்குக் காரணம் இது பலதிரிபு மொழிகளின் கலப்பு மொழியாகும் என்பது மட்டுமன்று வணிகத்திலும் அரசியலிலும் இது பொது மொழியாகப் பயன்படுத்தப்பட்டதுமாகும். மத்திய தரைக் கடலுக்குக் கிழக்கிலுள்ள நாடுகள் முழுவதிலும் இம்மொழி பயன்பட்டது. இந்தநிலை நற்செய்தி பரப்புவதற்கு மிகுந்த உதவியாக இருந்தது.

அடிப்படையில் கோய்னே கிரேக்கமொழி அத்திக்கு அல்லது உயர்தர ஏதென்ஸ் திரிபு மொழிகளின் எளிமையாக்கப்பட்ட வடிவமாகும். இதன்விளைவாக, இம்மொழி தனக்கேயுரிய இலக்கிய, இலக்கணச் சிறப்புக்களை உடையது.

விவிலியத்தில் காணப்படும் கோய்னே கிரேக்கமொழி ''உயிருள்ள'' மொழியாகும். இதற்குக் கடந்த காலத்தைச்சேர்ந்த விவிலியத்துக்குப் புறம்பான புல்தாள் ஏடுகள், கல்வெட்டுக்கள் மற்றும் உடைந்த பாண்டச் சிதறல்களில் காணப்படும் வாசகங்கள் சான்று பகர்கின்றன. இம்மொழியை இயேசு அறிந்திருந்தாரா அல்லது பயன்படுத்தினாரா என்பதுபற்றி அறிஞர்களிடையே கருத்துவேறு

பாடு உண்டென்றாலும் கிரேக்க உலகில் தோன்றிய பவுல், மாற்கு போன்ற அப்போஸ்தலர்கள் இம்மொழியைப் பயன் படுத்தினர் என்பது உறுதி. புதிய ஏற்பாட்டில் காணப்படும் கோய்னே கிரேக்க மொழியில் தர வேறுபாடுகள் உண்டு. லூக்காவின் நடை உயர்தரமானதாகும். பவுலின் நடை அவ்வளவு நயமிக்கதன்று. திருவெளிப்பாட்டு நடையில் தொடக்கநிலையுடையதாகும். புதிய ஏற்பாட்டுக் கோய்னே மொழியில், குறிப்பிட்ட அக்கறை மற்றும் சூழ்நிலை காரணமாக, செமித்தியப் பண்புகளையும் (மத் 19:5; லூக் 1:34) இலத்தீன் மொழித் தாக்கத்தையும் காணலாம்.

## கிரேக்க மொழிபெயர்ப்புகள் (விவிலியத்தின்) (GREAK VERSIONS)

கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து, அலக்சாந்தர் மன்னனின் பெரும் வெற்றியால், கிரேக்க அரசாட்சி பல நாடுகளில் பரவியது. இதனால் கிரேக்கக் கலாச்சாரம் என்று ஒன்று பிறந்தது. இந்தக் கிரேக்க அரசாட்சியிலும் கலாச்சாரத்திலும், கலந்து வாழ்ந்து வந்த யூத மக்களுக்காக, விவிலியத்தைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும் அவசியம் ஏற்பட்டது. இம்மொழியாக்கத்தினால் யூதர்கள் அல்லாதாரும் சற்றுப் பயனடைந்தனர் என்று சொல்லலாம்.

1. அரிஸ்டெயாஸ் கடிதம் தரும் வரலாற்றுக் கதை:-

விவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பில் மிக முக்கியமானது செப்துவா ஜின்த் என்று அழைக்கப்படும் எழுபது நூலாகும். இதுவே கிரேக்க விவிலிய மொழி பெயர்ப்புகளில் மிகப் பழமையானதாகும். இம்மொழிபெயர்ப்பைப் பற்றி ஒருபாரம்பரியமான கதை கூறப்படுகிறது. இந்தக் கதை அரிஸ்டெயாஸ் என்பவர் எழுதிய கடிதத்தில் காணப்படுகிறது.

இக்கதையின்படி இரண்டாம் தோலமின் பிலடெல்புஸ் என்ற அரசன், அலக்சாந்திரிய நகரில் ஒரு பெரிய நூலகம் அமைக்க விரும்பினார். இவர் வாழ்ந்த காலம் கி.மு. 285 முதல் 247 வரை. இந்நூல் நிலையத்தில் உலகிலுள்ள எல்லா முக்கிய புத்தகங்களையும் சேகரிக்க விரும்பினார். யூதர்களின் வேதப்புத்தகம் விவிலியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, அப்புத்தகத்தைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க விரும்பினார். எனவே எருசலேமிலிருந்த பெரிய குருவிற்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதினார். கடிதத்தில் விவிலியத்தைக் கிரேக்கத்தில் மொழி பெயர்த்துத்தரத் தகுந்த வல்லுநர்களை அனுப்பி வைக்கக் கேட்டிருந்தார். எருசலேம் பெரிய குருவும் 72 மொழி பெயர்ப்பாளர்களை எகிப்திய அலக்சாந்திரியா நகருக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அலக்சாந்திரியா நகருக்கு வந்து, தனித் தனியாக 72 அறைகளில் தங்கினர். சில நாட்கள் கழித்து அனைவரும், மொழிபெயர்ப்பை முடித்து வெளியே வந்தனர். அப்போது 72 மொழி பெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எல்லா மொழிபெயர்ப்புகளும் ஒரே வண்ணமாயிருந்தன. இது ஒரு கதை தான்.

ஆனால் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து பார்க்கிறபோது கீழ்க்கண்ட விபரங்களை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஐந்நூல் என்றழைக்கப்படும் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூற்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்க மொழியில் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. அதற்கடுத்து இரண்டு நூற்றாண்டுகளில் பழைய ஏற்பாட்டின் மற்றப் புத்தகங்களும், சீராக், தோபியாஸ், ஞானஆகமம், யூதித், எஸ்தர், மக்கபேயர் ஆகமங்கள் போன்ற புத்தகங்களும் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. மேலே பெயர் கொடுத்துக் கூறப்பட்டிருக்கும் புத்தகங்கள் இணை அல்லது துணைத் திருமுறைநூல்கள் என்று அழைக்கப்படும். ஏனென்றால் அவைகளைப் பிரிவினைச் சகோதரர்கள் தங்கள் விவிலியப் புத்தகங்களின் அட்டவணையில் சேர்த்துக் கொள்வதில்லை.

இத்தோடு, இன்னும் பல புத்தகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. அவை இப்

போது நமது விவிலியத் தொகுப்பில் இடம் பெறவில்லை. ஆனால் கி.மு. முதலாம் நூற்றாண்டில் மேற்கூறப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு எழுபதுநூல் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், நற்செய்தியாளர்களும், மற்றவர்களும் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டியபோது, இந்த எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்திலிருந்துதான் எடுத்துக் கூறுகின்றனர். மூலமான எபிரேயமொழி விவிலியத்திலிருந்து மேற்கோள் காட்டப்படவில்லை. கிறிஸ்துவ மறையைத் தழுவிய புறவினத்தாரும், அவர்களுக்கு எபிரேயம் தெரியாதாகையால் இந்த எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்தையே பயன்படுத்தினர். இவ்வாறு கிறிஸ்தவர்களால் இந்த எழுபது நூல் என்ற கிரேக்க விவிலியம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால், யூதர்கள் இந்த எழுபதுநூல் சரியான மொழிபெயர்ப்பல்ல என்று அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். எனவே அவர்களுக்கென்று தனியாகக் கிரேக்க மொழியாக்கம் செய்ய ஆரம்பித்தனர்.

இவ்வாறு கிறிஸ்தவர்களுக்கு எதிராக மொழிபெயர்க்கப்பட்ட புதிய கிரேக்க விவிலியம் நிறைய உண்டாயின. இவைகளில் 6 மொழிபெயர்ப்புகளைப் பற்றிக் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. இந்த ஆறு மொழிபெயர்ப்புகளிலும், மூன்று மொழிபெயர்ப்புகளுக்கு, அவைகளை மொழிபெயர்த்தவரின் பெயர்கள் தெரிகின்றன. மற்ற மூன்றிற்கும், அவைகளை எழுதிமுடித்தவர் பெயர்கள் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் மேற்கண்ட எல்லா மொழிபெயர்ப்பின் ஏடுகள் அனைத்தும் அழிந்துபோய் விட்டன. ஒரு சில உடைந்த துண்டு ஏடுகள் மட்டுமே இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றன. அத்துடன் கி.பி.4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, மறைத்தந்தையர்கள் என்று அழைக்கப்படும் அறிஞர்கள் எழுதிவைத்த குறிப்புகளிலிருந்தும் மேற்கண்ட மொழிபெயர்ப்புகளின் ஒருசில வசனங்களை நாம் காண முடிகிறது.

2. அக்குவிலாஸ் செய்த மொழிபெயர்ப்பு:-

கி.பி.160 ஆம் ஆண்டு வாக்கில், போன்துஸ் என்ற இடத்தில் பிறந்த அக்குவிலாஸ் என்பவர் எபிரேய மூலத்திலிருந்து, கிரேக்க மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்தார். இவர் கிறிஸ்துவ மதத்திலிருந்தார். பிறகு திருச்சபையில் சில வருத்தங்கள் ஏற்பட்டு, யூத மதத்தைத் தழுவினார். இவர் எபிரேய மூலத்திலிருந்த ஒவ்வொரு எபிரேய வார்த்தைக்கும், ஒவ்வொரு கிரேக்க வார்த்தையிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மொழிபெயர்த்தார். திரிபுபட்ட எபிரேய வார்த்தைகளுக்குக்கூட, அதே போன்ற திரிபுபட்ட கிரேக்க வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதினார். எனவே இவரது மொழி பெயர்ப்பு, புரிந்து கொள்ள முடியாத நிலையில், அமைப்பற்ற கிரேக்க வாக்கியங்களில் நிறைந்திருந்தது. எபிரேயமும் கிரேக்கமும் ஆகிய இரண்டு மொழிகளும் தெரிந்தவர்களுக்குத்தான், இவரின் மொழிபெயர்ப்பை யூகித்துப் புரிந்து கொள்ள முடியும். அத்தகையவர்கள் யாரும் அப்போது அதிகம் இருந்ததில்லை.

அத்துடன் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவே தன் மொழிபெயர்ப்பு அமைய வேண்டும் என்பதில் மிகக் கருத்தாகயிருந்தார். இயேசு தான் மெசியா என்று மேற்கோள்காட்ட முடியாதபடி சில பகுதிகளை மொழி பெயர்ப்பு செய்தார். இப்பகுதிகளை வேண்டுமென்றே எழுபதுநூல் மொழி பெயர்ப்பை விட மாறுபட்டிருக்கச் செய்தார்.

3. தியோடிசியன் செய்த திருத்தம்:-

இதற்கடுத்து கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தியோடிசியன் என்பவர், வழக்கத்திலிருந்த எழுபதுநூல் கிரேக்க மொழி பெயர்ப்பை, எபிரேய மூலமொழியிலிருந்த விவிலியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தம் செய்தார். இவர் யூத மதத்தைத் தழுவியவர் என யுசேபியு கூறுகிறார். ஆனால் எரோனிமு இவர் எபியோனியக் கிறிஸ்தவர் என்கிறார். யோபு ஆகமத்தை மிகவும் சுருக்கி எழுபதுநூல் மொழிபெயர்த்துள்ளது. அதா

வது உண்மையான அளவிலிருந்து ஆறில் ஒருபாகத்தைத்தான் எழுபதுநூல் மொழி பெயர்த்திருக்கிறது. எனவே தியோடிசியன் இப் புத்தகத்தைத் திருத்தும்போது எபிரேய விவி லியத்தைப் பின்பற்றித் தன் மொழிபெயர்ப் பைத் தந்திருக்கிறார். தானியேல் ஆகமத்தை, எழுபதுநூல் மொழிபெயர்ப்பு, சில விளக் கங்களை இடையிடையே தந்து மொழி பெயர்த்திருக்கிறது. எனவே அத்தகைய வேண்டாத விளக்கங்களை நீக்கிவிட்டுச் சீர மைத்தார் தியோடிசியன். இச்சீர்திருத்தங்க ளைக் கிறிஸ்தவம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு, தியோடிசியனின் திருத்தப் பதிப் பைத் திருச்சபை நடைமுறையில் பயன் படுத்தவும் தலைப்பட்டது. ஆனால் தியோடிசி யனின் திருத்தத்தில் காணப்படுகின்ற முக் கிய குறை என்னவென்றால், எபிரேய வார்த் தைகளை அப்படியே கிரேக்க மொழியில் எழுத்துப் பெயர்ப்பு செய்கிறார். உதாரண மாக GOD என்ற ஆங்கில வார்த்தையை இறைவன் என்று மொழி பெயர்க்காமல் ''காட்'' என்று எழுதுவதைப்போல எபிரே யச் சொற்களைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்காமல், எபிரேயச் சொற்களை அப்ப டியே கிரேக்க எழுத்தால் எழுதிவிடுகிறார்.

எழுபது நூலிலிருந்து வேறுபட்டுப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் பல பழைய ஏற் பாட்டு மேற்கோள்கள் தியோடிசியனின் திருத்திய பதிப்பை ஒத்திருக்கின்றன. (இம் மேற்கோள்கள் எழுபது நூல் மேற்கோளிலி ருந்து மாறுபட்டு விளங்குகின்றன. இதற்குக் காரணம் தியோடிசியன் பல பழைய கிரேக்க மொழி பெயர்ப்புகளையும், மற்ற மூல மொழி ஆதாரங்களையும் பயன்படுத்தித் திருத்தி எழுதியிருக்கிறார்). எபேசு நகரில் கி.பி.முதலாம் நூற்றாண்டில் தவழ்ந்த பல கிரேக்க மொழியாக்கங்கள் இவருக்குத் துணையாய் நின்றிருக்கின்றன.

4. சிம்மாகுசின் புதிய மொழிபெயர்ப்பு:-

இதையடுத்து, கி.பி.இரண்டாம் நூற்றாண் டின் இறுதியில், எபியோனிய நாட்டைச் சார்ந்த சிம்மாகுஸ் என்பவர் விவிலியத்தின் ஒரு புதிய கிரேக்க மொழிபெயர்ப்பைச செய்தார். அக்குவிலாஸ் மொழி பெயர்ப் பில் விளங்கிய எழுத்துப் பெயர்ப்பையும் தியோடிசியனில் விளங்கிய எபிரேய நெடி யையும் களைந்து, தன் மொழி பெயர்ப்பைச் செய்தார். நல்ல கிரேக்க மொழி நடையை இவரது மொழிபெயர்ப்பில் காணமுடிகி றது. ஆனால் ஒரு சிலவிடங்களில், நல்ல கிரேக்க மொழி நடைக்காக வேண்டி, பல வசனங்களைச் சேர்த்து, அவ்வசனங்களின் பொருள் மட்டும் கிடைக்கும் அளவில் எழுதி யிருக்கிறார். அத்துடன் விவிலியத்தில் இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற் றிக்கூறும் பகுதிகளை மாற்றி எழுதியிருக்கி றார். யூதமதத்தில் காலப்போக்கில், இறை வன் மனிதனை விட முற்றிலும் வேறுபட்ட வர் என்ற கருத்து இடம்பிடித்தது. இதனால் தான் சிம்மாகுஸ் இவ்வாறு மனிதப் பண்புக ளைச் சாற்றிக்கூறும் பகுதிகளை மாற்றி எழுதுகிறார்.

5. ஓரிஜன் தயாரித்த ஆறுபடிவ நூல்:-

அக்காலத்தில் அனைத்தும் கைப்படவே எழுதிப் படிசெய்ய வேண்டியிருந்ததால், ஒவ்வொரு படியிலும் பல பிழைகள் நுழைய ஆரம்பித்தன. பிழைகள், தவறுக ளைப் பிறப்பிக்க, இவைகள் வளர்ந்து கொண்டேயிருந்தன. அத்துடன் பல கிரேக்க மொழிபெயர்ப்புகள் மக்கள் மத்தியில் பழக் கத்திலிருந்தன. இவ்வாறு வளர்ந்து வந்த பிழைகளைத் தடைசெய்து நிறுத்த வழி ஒன்று தேடினார் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓரிஜன் என்ற அறிஞர்.

இவர் ''ஹெக்ஸாப்லா'' என்ற ஆறுபடி வத் தொகுப்பைச் செய்தார். 20 ஆண்டுகள் இதற்காக இடைவிடாது உழைத்து, விவிலி யத்தின் ஆறுவித மொழிபெயர்ப்புகளை, ஆறு பத்திகளில் வைத்து நேருக்கு நேராக மொழிபெயர்ப்புகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ள வழி செய்தார்.

ஒருதாளின் பக்கம் 6 பத்திகளாக மேலி ருந்து கீழாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்தியிலும் கீழ்க்காணும் விவிலியத்தின்

மொழிபெயர்ப்புகள் எழுதப்பட்டன. ஒரு பத்தியில், ஒருவரிக்கு, ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகள் மட்டும் எழுதப்பட்டன. முதல் பத்தியில் எபிரேய விவிலியத்தின் வாக்கியம் எபிரேய மொழியிலேயே எழுதப்பட்டது. இரண்டாவது பத்தியில் எபிரேய வார்த்தைகளைக் கிரேக்க மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது பத்தியில் அக்குவிலாஸ் செய்த கிரேக்க மொழி பெயர்ப்பு எழுதப்பட்டுள்ளது. நான்காவது பத்தியில் சிம்மாக்குஸ் தயாரித்த கிரேக்க மொழிபெயர்ப்பு இடம் பெற்றது. ஐந்தாவது பத்தியில் எழுபதுநூல் மொழிபெயர்ப்பு எழுதப்பட்டது. ஆறாவது பத்தியில் தியோடிசியன் தயாரித்த கிரேக்க மொழிபெயர்ப்பு இடம் பெற்றது. இதைக் கீழ்க்காணும் படத்தின்மூலம், சற்று விளக்கமாகத் தெரிந்து கொள்ளலாம்.

| எபிரேய விவிலியம் | எபிரேயவிவிலியம் கிரேக்க எழுத்துகளில் | அக்குவிலாஸின் கிரேக்க மொழி பெயர்ப்பு | சிம்மாக்குஸ் செய்த கி.மொ.பெ. | எழுபது நூல் கி.மொ.பெ | தியடோசியன் செய்த கி.மொ.பெ |
|---|---|---|---|---|---|
| | | | | | |

இக்கடினமான வேலையை மிக நுணுக்கமாகச் செய்தார் ஓரிஜன். எழுபது நூல் மொழி பெயர்ப்பை, இந்நூலில் எழுதியபோது, திருத்தப்பட்ட மொழி பெயர்ப்பைத்தான் பயன்படுத்தினார். அத்தோடு துல்லியமாகச் சில விபரங்களையும் ஆங்காங்கே சில குறியீடுகள் கொடுத்துத் தருகிறார். சிறப்புக் குறியீட்டைப் பயன்படுத்தி, கிரேக்க மொழி பெயர்ப்பில் காணப்படும் இவ்வார்த்தைக்கு இணையான எபிரேய வார்த்தை, எபிரேய மூலத்தில் இல்லை என்று சுட்டிக் காட்டுகிறார்.

★என்ற குறியீட்டைத் தந்து தியோடிசியன் செய்த திருத்தத்தைத் தருகிறார். அதாவது ஒரு குறிப்பிட்ட வார்த்தை எபிரேய மூலத்தில் இருக்கிறது. ஆனால் எழுபதுநூல் அவ்வார்த்தைக்குச் சரியான கிரேக்க வார்த்தை கொடுக்காமல் விட்டுவிட்டது. ஆனால் தியோடிசியன் அதைக் கண்டு பிடித்து, சரியான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தி, தன் மொழிபெயர்ப்பில் நிறைவு செய்திருக்கிறார். எனவே வார்த்தை விடுபட்டுள்ள இடத்தை எழுபதுநூலில் ★ என்ற குறியிட்டு அவ்வார்த்தை தியோடிசியனின் மொழி பெயர்ப்பில் அதாவது ஆறாவது பத்தியில் காணலாம் என்று குறிப்புக் கொடுக்கிறார். இவ்வாறு பல குறியீடுகளைப் பயன்படுத்தி அவற்றிற்கு விளக்கம் காணும் இடத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு ஒரு பெரும் பணியைச் செய்து முடித்தார் ஓரிஜன். ஆறு பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை ஒன்று சேர்த்துக் கட்டினாற் போலப் பெரிய புத்தகமாக அமைந்தது இப்புத்தகம். சுமார் 7000 பக்கங்களைக் கொண்டதாக விளங்கியது. இப்புத்தகம் முழுவதும், மறுபிரதி ஒருமுறைகூட எடுக்கப்படவில்லை.ஆனால் இந்தப் புத்தகத்தைத் திருச்சபையின் தந்தையர்கள் பலயிடங்களில் மேற்கோள்காட்டி எழுதியிருக்கிறார்கள். இதனால் இந்த ஆறுபடிவ வேதாகமத்

தைப் ப்ற்றிச் சிறிதாவது தெரிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் இந்த ஆறுபடிவ விவி லியத்தின், ஐந்தாவது பத்தியில் எழுதப் பட்ட, எழுபதுநூல் வேதாகமம் மட்டும் தனியாக எடுக்கப்பட்டுப் பதிப்பு செய்யப் பட்டது. இவ்வாறு எழுபதுநூல் பத்தி மட் டும் பிரித்து எழுதப்பட்டது சில பிரச்சனைக ளையும் உருவாக்கியது. மற்றக் கிரேக்க மொழி பெயர்ப்புகளுக்கும், இன்னும் குறிப் பாக எபிரேய மூலத்திற்கும் தொடர்பு படுத்தி, ஓரிஜன் கொடுத்த குறியீடுகளைப் படிகள் எடுத்தவர்கள் பலமுறைகளில் தவ றாகப் புரிந்து கொண்டார்கள். தியோடிசி யன் சேர்த்துத்தந்த பல வார்த்தைகளைப் படிகள் எடுத்தவர்களால் புரிந்து கொள் ளவே முடியவில்லை. இதனால், ஓரிஜன் செய்த மாபெரும் பணி, பல குழப்பங்க ளையே எழுபதுநூல் படிவங்களில் தோற்று வித்தது என்று கூறலாம்.

6. லூசியனின் திருத்தம்:-

ஓரிஜனின் இந்தப் பணியை அடுத்து, அதற்கடுத்த நூற்றாண்டில் மூன்று முக்கிய திருத்தப்பட்ட எழுபதுநூல் கிரேக்க விவிலி யப் பதிப்புகள் வெளியிடப்பட்டன. (1) செசரையா நகரைச் சார்ந்த யுசேபியு என்ப வர், தன் நண்பர் பாம்பிலுஸ் என்பவரின் உதவியுடன், ஓரிஜன் எழுதிய ஆறுபடிவ விவிலியத்தின், ஐந்தாவது பத்தியிலிருந்த எழுபது நூலை மட்டும் பிரித்தெடுத்து, அதனை 50 பிரதிகள் செய்தார். இது கான்ஸ் டன்டைன் என்ற அரசனுக்காகச் செய்யப்பட் டது. இதில் பக்கங்களின் ஓரத்தில் மற்ற மொழிபெயர்ப்புகளில் காணப்பட்ட வேறு பட்ட வாசகங்களைத் தந்திருக்கிறார். (2) சமோஸ்தா நகரைச் சார்ந்த லூசியன் என்ப வர் எழுபது நூல் கிரேக்க விவிலியத்தைத் திருத்தி வெளியிட்டார். இவரது திருத்தத்தில் இவரின் ஒரு தனிப்பட்ட குணத்தை நாம் காண முடிகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட சொல்லிற்கு இணையான மற்றொரு சொல், மற்றக் கிரேக்க மொழி பெயர்ப்புகளிலி ருந்து காணப்பட்டால், அச்சொல்லையும் அதேயிடத்தில் இணைத்து எழுதியிருக்கி றார். இவர் அந்தியோக்கியா நகரில் குரு வாக இருந்தவர். நிக்கோமெதியா என்ற இடத்தில் மறைசாட்சியாகத் தன் இன்னு யிரை ஈந்தார். (3) எகிப்து நாட்டில் ஆயராக இருந்த கெசிகியுசு என்பவரும் எழுபதுநூல் கிரேக்க வேதாகமத்தைப் பதிப்பித்துத் திருத்தி வெளியிட்டார். இவரைப்பற்றி யுசே பியு தன் வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். இவரும் மறை சாட்சியாகவே இறந்திருக்கி றார்.

மேற்கண்ட மூன்று எழுபதுநூல் கிரேக்க வேதாகமங்களும், தங்களுக்கென்று தனித் தனி நாடுகளைப் பிடித்துக் கொண்டன. அங்கு அவைகள் மக்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. யுசேபியுவும் பாம்பி லகம் சேர்ந்து வெளியிட்ட பதிப்பு பாலஸ் தீன நாட்டில் பயன்படுத்தப்பட்டது. லூசி யன் வெளியிட்ட பதிப்பு, அது வெளியான அந்தியோக்கியா நாட்டில் மட்டுமல்லாமல், கான்ஸ்டான்டிநோபிள், சிறிய ஆசியா ஆகிய இடங்களிலும் பயன்படுத்தப்பட்டது. கெசிகியுசு வெளியிட்ட திருத்தப்பட்ட எழு பதுநூல், எகிப்து நாட்டில் பயன்படுததப்பட் டது.

மேற்கூறப்பட்டுள்ளவை, விவிலியத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பின் ஒரு சுருக்க மான வரலாறுதான். எதுதான் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க விவிலியம் என்று ஆராய்ந்தால் அதில் பல சிக்கல்கள் மறைந்திருக்கின்றன. தற்போது நமக்குக் கிடைக்கும் எழுபதுநூல் பழம் ஏடுகள், காலப்போக்கில் பல முறை திருத்தப்பட்ட வசனங்களின் கலப்புத்தான் என்று சொல்ல வேண்டும்.

நமக்குக் கிடைக்கும் பழம் ஏடுகளை, மற்ற மறைத்தந்தையர்கள் எழுதிய மற்றப் புத்தகங்களோடு கவனமாக ஒப்பிட்டுப் பார்த்துத்தான், இக்குறிப்பிட்ட ஏடு, இவர் செய்த பதிப்பின் படிவம் என்று கூற முடி யும். எனவே நமக்குக் கிடைக்கும் ஏடுகளை யெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்து, ஒப் புமை செய்துதான், எது முதலில் செய்யப் பட்டது, எது எதைச் சார்ந்தது என்ற வர

லாற்றை நாம் முறையாகத் தொகுக்க முடியும்.

இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பு காலப் போக்கில் தொடர்ந்து திருத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் மூலமொழி எபிரேய விவிலியத்துடன் ஒப்பிட்டு பார்க்கிறபோது சரியான மொழிபெயர்ப்பின்மையை எப்போதுமே காண முடியும்.

அத்துடன் கிரேக்க மொழி பேசிவந்த யூதர்களிடம் ஒருபழக்கம் இருந்து வந்திருக்கிறது. அதாவது, அவர்களின் செபக்கூட வழிபாட்டிற்காக, அவரவர் நினைத்ததைப் போல் கவனமின்றி மொழிபெயர்ப்பு செய்யும் வழக்கம் உண்டு. இந்த வழக்கத்தின் பின்னணியில் பார்த்தால், நாம் மேற்கண்டவாறு, எழுபதுநூல் கிரேக்க விவிலியம் எகிப்தில் முறையுடன் தயாரிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. மாறாகப் பலவிடங்களில், பலவிதமாக வழங்கப்பட்ட மொழிபெயர்ப்புகளைச் சேர்த்து இணைக்கப்பட்டதாகும் என்றுதான் சொல்ல வேண்டும். எனவே முதலில் ஆக்கம் செய்யப்பட்ட கிரேக்க விவிலியம் எது என்று கண்டுபிடிப்பது,ஆராய்ச்சியாளர்களின் கடும் பணியாக விளங்குகிறது.

## கிரேக்க மொழி பேசும் யூதர்கள் (HELLENIST)

இவர்கள் அ.ப.6:1; 9:29-இலும், சிறிது மாறுபட்டவிதத்தில் 11:20-இலும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் எபிரேயர்களிடமிருந்து அதாவது எபிரேயம் அல்லது அராமேயம் பேசும் யூதர்களிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். இரண்டு குழுக்களிடையே நிலவிய பதட்ட நிலையை அ.ப.7-உம் மற்றப் பகுதிகளும் பிரதிபலிக்கின்றன. இந்நிலை புறவினத்தாரைத் திருச்சபைக்குள் சேர்ப்பது பற்றிய பிரச்சனையைச் சந்தேகமின்றி மிகைப்படுத்தியது (அ.ப.15; கலா 1-2). அ.ப.2:5-6-இன்படி எருசலேமில் தங்கியிருந்த வேற்றுநாட்டில் பிறந்த யூதர்கள் பல்வேறு மொழிகளைப் பேசினர். முதல் நூற்றாண்டில் இவர்கள் கிரேக்க மொழி பேசினார்கள். ஏனென்றால் மேற்காசிய நாடுகள் முழுவதிலும் (அ.ப.2:9 குறிப்பிடும் நாடுகள் உதாரணங்களாகும்) கிரேக்கம் பொதுவாகப் பேசப்பட்ட மொழியாகும். ''ஹெல்லேனியர்கள்'' என்ற சொல்லுக்குப் 'புறஇனத்தவர்கள்' என்று பொருள் கொள்வதைவிட ''அந்நியர்கள்''என்று கொள்வது மேலாகும்.

''கிரேக்கர்கள்'' என்றால் 'யூதரல்லாதவர்கள்' என்று சொல்வது பல காரணங்களில் பொருத்தமில்லாததாகும். அவற்றில் சில: அ) அ.ப.1-5 கருத்துக்கள் எருசலேமிலுள்ள யூதர்கள் மத்தியிலும் திருச்சபை பரவியது என்று கூறுகின்றன. ஆ) பந்தியில் பரிமாறும் பிரச்சனை வருகிறது என்றால் ''கிரேக்கர்கள்'' ஒரு பெரிய குழுவாக இருந்திருக்கவேண்டும் என்பதைத்தான் குறித்துக்காட்டுகிறது. இ) பிலோ எபிரேயர்களுக்கும் ''நமக்கும்'' அதாவது கிரேக்கம்பேசும் யூதர்களுக்கும் என்று பிரித்துக் காட்டுகிறார். ஈ) கொய்னே கிரேக்க மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட கிறிசோஸ்தோம் என்பவர் ''ஹெல்லேனியர்கள்'' என்றால் 'கிரேக்க மொழி பேசும் யூதர்கள்' என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். உ) புறஇனத்தாரின் மனந்திருப்புதல் (அ.ப.10:45; 15:3) புதிய ஒன்றை எடுத்துக் கூறுகிறது. ஊ) யூதச் சட்டமும் விருத்தசேதனமுமின்றிப் புறஇனத்தவர் திருச்சபையில் சேர்வது பற்றிய பிற்காலப் பிரச்சனை தொடக்கத்திலிருந்தே திருச்சபையில் இருந்திருந்தால், சிக்கல் மிக்கதாய் இருந்திருக்கும்.

## கிரேக்கர்கள் (GREEKS)

கிரீசு என்ற சொல்லானது கி.மு.700-க்குப்பின் ஒரு பொதுவான மொழி, சமயம், பண்பாடு,கலை, இலக்கியம் போன்றவைகளைக் கொண்டிருந்த மாநிலங்கள், நகர்கள், மக்கள் குழுக்களைக் குறிக்கக் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது. உலகத்தில் உள்ள மற்ற மக்களும், மற்ற நாடுகளும் அயல் நாட்டவராக எண்ணப்பட்டனர். உலகிலே சிறந்த பண்பாடுகளைக்கொண்ட நாகரிகமுள்ள மக்கள் கிரேக்கர்கள் தாம் என்று

அவர்களிடையே நிலவிய தந்நம்பிக்கைக்கும், தாங்கள் தேந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று யூதர்கள் கொண்ட தந்நம்பிக்கைக்கும் தொடர்பிருக்கின்றது., கிரேக்கர்களின் பெருமையும், மகத்துவமும் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அல்லது இறைவெளிப்பாட்டை உணர்ந்தவர்கள் என்பதிலோ, மற்றும் எந்தச் சமய காரியங்களின் அடிப்படையிலோ அமையவில்லை. மாறாகக் கலை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகளில் அவர்கள் கொண்ட முன்னேற்றத்தில்தான் அவர்களது பெருமையும், மாண்பும் அடங்கியிருந்தது.

கிரேக்கர்களின் பண்பாட்டின் சிறப்பினை அவர்கள் கொண்டிருந்த நகர அமைப்பு, சமூக அமைப்பு ஆகியவற்றிலிருந்து அறியலாம். அலக்சாந்தரின் மாபெரும் வெற்றிக்குப்பின் 'கிரேக்கர்' என்ற சொல்லானது கிரேக்கமொழி பேசிய அனைவரையும், கிரேக்கப் பண்பாட்டை நாகரீகத்தைப் பின்பற்றிய எல்லா மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. மேற்காசியப் பகுதிகளில் வளர ஆரம்பித்த கிரேக்கப்பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகிய அனைத்தும் யூதர்களையும் பாதிக்க ஆரம்பித்தது. இத்தகைய பரந்த கண்ணோட்டத்தில் 'கிரேக்கர்' என்ற சொல் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்பணி, உரோமையர், கொரிந்தியர், கலாத்தியர், கொலோசேயர் போன்ற திருமுகங்களில் இவ்வார்த்தையானது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் தனது நற்செய்தி அறிவிப்புப் பயணங்களின்போது ஒவ்வொரு நகரத்திலும் முதலில் யூதர்களிடமும், பின் கிரேக்கர்களிடமும் பேசினாரென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இங்குக் கிரேக்கர்கள் என்பது யூதர்கள் அல்லாத எல்லா மக்களையும் புதிதாக யூதமதக் கோட்பாடுகளை, கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களையும் குறிக்கின்றது *(அ.ப.11:20; 14:1; 18:4; 19:10.17; 20:21; உரோ 2:9; தொ; 1 கொரி 1:24; 10:32)*. ஞானத்தைப் பெற ஆவல் கொண்டவர்கள் அதாவது தத்துவ இயலிலும் இலக்கியத்திலும் ஆர்வம் கொண்டவர்கள் என்று பவுல் கூறுகின்றார் *(1 கொரி 1:18-2:16)*.

சிலுவையைப் பற்றிய செய்திகள் எல்லாம் மடமையானது என்று எண்ணுபவர்கள் கிரேக்கத் தத்துவ ஆசிரியர்கள். பவுல் கிரேக்கர்களின் அப்போஸ்தலராக இருந்தபோதிலும், யூதன் என்ற முறையில் மீட்பு யூதர்களுக்கு மட்டும்தான் என்ற குறுகிய கண்ணோட்டத்தை நன்கு உணர்ந்திருந்தார். பின்புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிப்பதே தனது பணி என்று உணர்ந்து, உழைக்க ஆரம்பித்த பவுல் நற்செய்தியானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஆற்றல் மிக்க கருவி என்று உணர்ந்தார். இயேசு கிறிஸ்துவில் மீட்புப்பெற யூதனென்றோ; கிரேக்கனென்றோ வேறுபாடு இருக்கத் தேவையில்லை என்று ஏற்றுக்கொண்டார் *(உரோ 19:12)*. எனவே கிறிஸ்தவ சமூகத்தில் இந்த இரண்டு குழுக்களிடையே காணப்படும் வேறுபாடுகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும் *(கலா 3:28; கொலோ 3:11)*. ஏனென்றால் யூதராயினும் கிரேக்கராயினும் நாம் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாகத் திருமுழுக்குப் பெறுகின்றோம் *(1 கொரி 12:13)*. எருசலேம், தமஸ்கு நகர்களில் வாழ்ந்து கொண்டு கிரேக்க மொழிபேசும் யூதர்கள் கிரேக்கமொழி பேசுவோர் என்று அழைக்கப்பட்டார் *(அ.ப.6:1; 9:29)*

**கிரேசெக்கு** *(CRESCENS — வளர்ச்சியடைகிறது, பெருகுகிறது)*

பவுல் சிறைப்பட்டிருந்த ஒரு சமயத்தில் கிரேசெக்கு அவருடைய தோழராக இருந்தார் *(2 திமோ 4:10)*. திமோத்தேயு திருமுகம் எழுதப்பட்டபோது, இவர் கலாத்தியாவுக்குச் சென்றுவிட்டார். இவர் சென்றதற்குக் காரணம் கூறப்படவில்லை.

**கிரேத்து** *(CRETE)*

கிரேக்க நாட்டிற்குத் தென் கிழக்கில் மத்திய தரைக்கடலில் உள்ள ஒரு பெரிய தீவு.

கி.மு.இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியில் மிகவும் வளர்ச்சியடைந்த மினோவான் நாகரீகம் இங்குச் சிறந்து விளங்கியது. இதை அக்காதியர்கள் கப்தாரா என்றும், எகிப்தியர்கள் கெப்டியு என்றும் எபிரேயர்கள் கப்பதோர் என்றும் அழைத்தனர். கி.மு.2-ஆம் நூற்றாண்டில் யூதர்கள் இங்குக் குடியேறினர். யூதமக்கள் நல்லமுறையில் கவனிக்கப்பட வேண்டும் என்று உரோமைய அதிகாரி உலூக்கியு கிரேத்துவிலிருந்த கோர்த்தினா என்ற நகருக்குக் கடிதம் எழுதினார் (1 மக் 15:23). எருசலேமிற்கு வந்த யூதர்களின் இடங்களில் கிரேத்தும் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது (அ.ப.2:11). பவுல் உரோமைக்குச் சென்றபொழுது கிரேத்துத் தீவின் கரையோரம் சென்றார் (அ.ப.27:7-21). கீழ்த்தரமான வாழ்க்கைமுறை இங்கு இருந்தாலும், இந்தத் தீவில் கிறிஸ்துவ மதம் ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. வேலைகளைக் கண்காணிக்கவும், யூத மயமாக்கும் போக்கை எதிர்த்துப் போராடவும் தீத்து இங்கு நியமிக்கப்பட்டார்.

### கிரேனியு (QUIRINIUS)

இவர் இயேசு பிறந்தபோது, மக்கட் கணக்கெடுப்பு நடந்த சமயத்தில் சீரியாவின் ஆளுநராக இருந்தவர் (லூக் 2:1-3:1). தாசித்தசிடமிருந்தும், சில கல்வெட்டுகளிலிருந்தும் இவரைப்பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். இவரது முழுப்பெயர் சல்பிசியுஸ் கிரேனியு ஆகும். இவர் செனட்டராகவும், கிரேத்து, சீரேனேஆகியவற்றில்ஆளுநராகவும்கி.பி.6-7-இல் சீரியாவில் உரோமைப் பிரதிநிதியாகவும், சிலகாலம் பணியாற்றியுள்ளார். யோசிப்பஸ் இவரது ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புப்பற்றிக் குறிப்பிடுகிறார்.ஆனால் இயேசு பிறந்தது இதற்கு மிகவும் முந்திய காலமாதலால் இதனோடு ஒத்துப் போகவில்லை. அப்படி இருக்க வேண்டுமெனில் கிரேனியு ஆண்டகாலம் இயேசு பிறந்தபோது இருந்திருக்க வேண்டுமெனக் கொள்ளவேண்டும். ஆனால் அப்படி ஏதும் எக்குறிப்பிலுமில்லை. சீரியாவின் பிரதிநிதிகள் பற்றி கி.மு.9-1 வரை உள்ளவர்களின் வரிசையில் யோசிப்பஸ் குறிப்பிடுவதில் கிரேனியு இல்லை. புதிய ஏற்பாட்டில் 'ஆளுநர்' என்ற சொல் ஏதாவது ஒரு அலுவலரைக் குறிப்பதாகப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட சொல்லேயெனச் சிலர் கருதுகின்றனர்.ஆனால் கிரேனியு ஆளுநராக இல்லாமல், சீரியாவை நிர்வகித்தார் என்பது ஏற்றுக்கொள்ளவியலாத ஒன்றாகும்.

### கிர்பெத்து கும்ரான் (KHIRBET QUMRAN)

சாக்கடலுக்கு அருகில் இருந்த கும்ரான் சந்நியாசிகளின் இருப்பிட அழிவுச் சின்னங்கள். இது சாக்கடலின் மேற்குக் கரையிலும், எரிகோவிலிருந்து 13 கி.மீ.தொலைவிலும் உள்ளது. காண்க: எஸ்ஸேனியர்; உப்பு நகர்; சாக்கடல் ஏடுகள்.

### கிர்பெத்து — கேராக்கு (KHIRBET KERAK — அரணில் எஞ்சியுள்ளவை)

கலிலேயக் கடலின் தென்கரைப் பகுதியிலும், யோர்தானுக்கு மேற்கு வாய்ப்பகுதியிலும் உள்ள ஒரு முக்கிய புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய இடம். இந்த இடமானது பாலஸ்தீனத்திலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இது வணிகத் துறையில் ஒரு முக்கிய இடத்தை வகித்தது.

இந்தக் குன்றானது அறுபது ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது. 1944-55 ஆண்டுகளில் இங்குப் புதைபொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சியின்படி இவ்விடத்தில் மக்கள் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தனர். பின்பு பாரசீகர் காலம் வரை இங்கு மக்கள் வாழவில்லை. எனவே பழைய ஏற்பாட்டில் இவ்விடம் குறிப்பிடப் படவில்லை. கிரேக்கர்களின் காலத்திலே இந்த இடத்தில் அழகிய மதில் சூழ்ந்த நகர் ஒன்று கட்டப்பட்டது. இந்த நகரிலே அழகான வண்ணம் பூசப்பட்ட சுவர்களுடைய வீடுகள் இருந்தன. உரோமையர் காலத்தில் இங்கு ஓர் அரணும் நீச்சல் குளமும் கட்டப்பட்டன.

### கிலயாத்தின் பொன்மெழுகு (BALM OF GILED)

மருத்துவப் பண்புகளுடைய ஒரு பொருள். எரே 8:22; 46:11-இல் குறிக்கப்படு

கிறது. இது ஒரு வேளை கிலயாத்தில் செய்யப்பட்டிருக்கலாம். அல்லது இப்பகுதியிலிருந்து எகிப்திற்கும் (ஆதி 37:25), பெனிக்கியாவிற்கும் (எச 27:17) ஏற்றுமதியாகி இருக்கலாம். எந்தச் செடியிலிருந்து இந்த வாசனைப் பிசின் செய்யப்பட்டது என்று அடையாளம் காட்ட முடியவில்லை.

**கிலயாத்து** (GILEAD — *கற்களின் சின்னம்*) — ஆள்.

*1. கிலயாத்து என்பவர் மாக்கிரின் புதல்வரும் மனாசேயின் பேரனுமாவார் (எண் 26:29-30; 27:1; 36:1; யோசு 17:1.3; நீதி 5:17; 1 நாளா 2:21.23; 7:14.17). ஆனால் பொதுவாகக் கொடுக்கப்படும் பெயர்கள் ஆளைக் குறிக்கிறதா அல்லது குலத்தையோ ஓர் இடத்தையோ குறிக்கிறதா என்று அறிவது கடினம். நீதி 5:17-இன்படி கிலயாத்து யோர்தானுக்கு அப்பாலேயே தங்கியிருந்தார். சிசராவுக்கு எதிரான போரில் தெபோரா, பாராக்கு ஆகியோருடன் சேரவில்லை. இது அப்போது இந்த இனத்தில் நிலவிய அமைதியின்மையைச் சுட்டலாம். கிலயாத்து இனத்தின் இடத்தைக் காது இனம் எடுத்துக்கொண்டது.*

*2. கிலயாத்து இபிதாகுவின் தந்தையாவார் (நீதி 11:1-2).*

*3. கிலாயாத்திலுள்ள காதின் எல்லையில் வாழ்ந்த ஒரு குடும்பம் அல்லது இனம். (1 நாள் 5:14).*

**கிலயாத்து** (GILEAD) — இடம்

அ. யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு நகரம், ஒரு குலம் அல்லது ஒரு பகுதியின் பெயராகும்.

கிலயாத்து என்ற வார்த்தையானது கலியேது என்ற சொல்லில் இருந்து வந்ததாக விவிலியம் கூறுகின்றது. கிலயாத்து என்றால் கரடுமுரடான பகுதியாகும் என்பது பொருள். இந்நகரம் 'தீயவர்களின் நகரம்' என்று கூறப்பட்டுள்ளது (ஓசே 6:8). தெபோராவின் பாடலில் (நீதி 5:17) கிலயாத்து என்பது ரூபன், தாண் போன்ற கோத்திரங்களுக்கு இணையானதாகவும், காது கோத்திரத்திற்குச் சமமாகவும் கருதப்படுகிறது.



கிலயாத்து என்பது குறுகிய பொருளில் தெற்கே ஆர்னோனாலும், மேற்கே யோர்தான் பள்ளத்தாக்காலும் கிழக்கில் யோபோக்கின் தெற்கு-வடக்குப் பகுதியாலும் பாலைவனத்தாலும் வடக்கில் யார்முக்கு ஓடையாலும் சூழப்பட்ட பகுதியாகும். பரந்த பொருளில் கிலயாத்தின் நிலப்பகுதி வடக்கே பாசானுக்குள்ளும், யார்முக்கிற்கு அப்பாலும் விரிந்து செல்கின்றது. கிலயாத்து யோர்தான் பள்ளத்தாக்கில் உயரமாக உள்ள உயர்ந்த நிலப்பகுதியாகும். இங்கு யாபோக்கு ஆறு கிழக்கு மேற்காக ஓடுகின்றது.

ஆ. வரலாறு:-

கி.மு.23-ஆம் நூற்றாண்டிலிருந்து கிலயாத்தின் வடபகுதியில் மக்கள் தங்கி வாழ ஆரம்பித்தனர். ஆனால் தென்பகுதியில் யாபோக்கிற்குக் கீழே கி.மு.20 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் அதிகமாகக் குடியேறவில்லை. இஸ்ராயேல் மக்கள் இவ்விடத்தில் நுழைவதற்குச் சிறிது முன்னால் அங்கு எமோரியர்களும், மோவாபியர்களும் வாழ்ந்து வந்தனர். பின் இஸ்ராயேல் மக்கள் மோசேயின் தலைமையில் எமோரியர்களை வெளியேற்றிவிட்டு அப்பகுதியை ரூபன், காது, மனாசே போன்ற கோத்திரத்தாருக்குக் கொடுத்தனர் (எண் 21). கானானைக் கைப்பற்றியதற்குப்பின் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த கோத்திரங்கள் அனைத்தும் பாதுகாப்புடன் வாழ்ந்துகொண்டு, மேற்குப் பகுதியில் சிசராவிற்கு எதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கும் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு உதவ மறுத்துவிட்டனர் (நீதி 5:16-17). விரைவில் அவர்கள் கிழக்கிலிருந்து வந்த பகைவர்களால் தாக்கப்பட்டனர். சிறிது காலத்திற்கு மிதியானியர்கள் அமலேக்கியர்களுடன் சேர்ந்து இந்தப் பகுதியைக் கைப்பற்றினர். கிதயோனால் இப்படையெடுப்பு நீக்கப்பட்டது (நீதி 6-7). பின் அரை நூற்றாண்டு கழித்து அம்மோனியர்களால் இந்நகரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்

டது. இதனால் கிலயாத்திலுள்ள மூப்பர்கள் இபிதாகுவிடம் சென்று தங்களை இந்த அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர் (நீதி 10-11).

அம்மோனியர்களை இபிதாகு வெற்றி கொண்டாலும் அவர்களிடமிருந்து ஆபத்து தொடர்ந்து இருந்து கொண்டு இருந்தது. சவுல் அரசரானபின் முதல்செயல் அம்மோனியர்களின் அரசராகிய நாகாசிடமிருந்து யாபேசு-கிலயாத்தை மீட்பதற்காக அம்மன்னனை எதிர்த்துப் போரிட்டதாகும் (1 சாமு 11). சவுல் தோற்கடிக்கப்பட்டுப் பெலிஸ்தியர்களால் கொலைசெய்யப்பட்டபோதிலும், அபினேர் என்பவர் சவுலின் மகனான இசிபாகால் என்பவனுக்குக் கிலயாத்தில் ஓர் அரசாட்சியை அமைத்துக் கொடுத்தார் (2 சாமு 2:8-9). இவருக்குப்பின் அரசராக வந்த தாவீது மீண்டும் ஒருமுறை அம்மோனியர்களை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது (2 சாமு 8:12; 10:1-17); அபிசலோமின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி ஓடிவந்த தாவீது கிலயாத்தில் அடைக்கலம் புகுந்தார். பின் கிலயாத்தில் இருவருக்கும் பெரிய போர் நிகழ்ந்தது. அதில் அவர் வெற்றியடைந்து மீண்டும் அரியணை ஏறினார் (2 சாமு 15-19).

கி.மு.ஒன்பதாம் எட்டாம் நூற்றாண்டில் சீரிய அரசாட்சிப் பகுதியாகிய தமஸ்குவில் புதிய கிளர்ச்சி உருவாகி அது கிலயாத்தை ''இருப்புருளையில் வைத்து ஆட்டியது'' (ஆமோ 1:3). இந்த ஆட்சிப்பகுதியில் நடந்த போர்களில் சீரியா முதலிலும், இஸ்ராயேல் பின்னும் வெற்றிகொண்டன. ஏகூவின் ஆட்சிக்காலத்தில் கசயேலால் இந்த ஆட்சிப்பகுதியானது இஸ்ராயேலின் கையிலிருந்து எடுக்கப்பட்டது (2 அர 10:32 தொ). யோவாசு, இரண்டாம் எரோபயாமின் காலத்தில்தான் இஸ்ராயேலரால் இப்பகுதி மீண்டும் கைப்பற்றப்பட்டது. இந்த அழிவின் விளைவாகவும் அசீரிய ஆதிக்க எழுச்சியின் காரணமாகவும் கிலயாத்தில் பிளவு ஏற்பட்டது. ஒருகட்சி, சீரியாவோடு சேர்ந்து அசீரியாவை எதிர்க்க விரும்பியது. யாபேசின் மகன் சல்லூம் ஏகூவின் ஆட்சி மரபை அகற்றினார். அவரும் ஒரு மாதத்திற்குள் அசீரியர்களுக்குச் சார்பான கட்சியைச் சேர்ந்த மெனகேமால் கொல்லப்பட்டார் (2 அர 15:10-14). பின் இரமலியாவின் மகன் பெக்கா ஆட்சிக்கு வந்தார். அவருக்கு அளிக்கப்படும் இருபது ஆண்டு ஆட்சி (2 அர 15:27) காலவரைக் கணிப்போடு ஒத்துப்போகவில்லை. இவர் தனக்கு முந்திய அரசனைக் கொன்று ஆட்சிக்கு வந்தபோது, ஏற்கெனவே பெக்கா சுதந்தர ஆட்சியைக் கிலயாத்தில் ஏற்படுத்தியிருக்கவேண்டும். இவர் அசீரியர்களுக்கு எதிராகச் சுற்றியுள்ள பகுதிகளையெல்லாம் ஒன்று திரட்டினார். இதன் விளைவு 734-இல் இப்பகுதியில் மூன்றாம் திகிலாத்து பிலேசர் என்பவரால் இஸ்ராயேலரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அசீரிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது (2 அர 15:29). கிலயாத்திலுள்ள இஸ்ராயேலர் அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

மக்கபேயர்களின் காலத்தில் கிழக்குப் பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களைப் புறவினத்தாரிடமிருந்து காப்பாற்றுவதற்காக யூதா என்பவரால் கிலயாத்தில் இராணுவத்தளம் அமைக்கப்பட்டது. இராணுவம் வெற்றி கண்டபின் கிழக்குப் பாலஸ்தீனத்தில் இருந்த யூதர்களை மேற்குப் பாலஸ்தீனத்திற்கு மாற்ற யூதா தீர்மானித்தார் (1 மக் 5:9-54).

**கிலயாபு** (CHILEAB — தந்தையைப் போன்ற)

கிலயாபு தாவீதின் இரண்டாவது மகன். கெபிரோனில் நாபாலின் விதவை அபிகாயிலுக்குப் பிறந்தவர் (2 சாமு 3:3). 1 நாள் 3:1-இல் இவர் தானியேல் என்று அழைக்கப்படுகிறார்.

**கிலலாய்** (GILALAI - கனமான)

கி.மு.6-ஆம் நூற்றாண்டில் எருசலேம் மதில் மீண்டும் கட்டப்பட்டு அர்ப்பணம் செய்த நாளில் இசை மீட்டிய பெரும் இசை வல்லுநர் (நெக 12:36).

**கிலிக்கியா** (HILKIA - யாவே என் பாகம் ஆவார்)

1. எசக்கிய அரசனின் அரண்மனை மேலதிகாரியான எலியாக்கிமின் தந்தை (2 அர 18:18.26; எச 22:20; 36:3).

2. சல்லூமின் மகன். யோசியா அரசன் காலத்திய பெரிய குரு. திருச்சட்ட நூலைக் கோயிலில் கண்டெடுத்தவர். அரசனது மதச் சீர்த்திருத்தங்களுக்கு உதவிசெய்தவர் (2 அர 22:4-14; 1 நாள் 6:13; 2 நாள் 34:9-22; 35:8). எஸ் 7:1-இன் படி எஸ்ராவின் முன்னோர். ஒரு பாரம்பரியம் இவரை எரேமியாவின் சகோதரர் என்றழைக்கிறது.

3. அம்சியின் மகன். மெராரியின் வழி வந்த லேவியர் (1 நாள் 6:45).

4. கோசாவின் மகன்; மெராரி வழிவந்த லேவியர். தாவீது காலத்தவர் (1 நாள் 26:11).

5. எஸ்ரா திருச்சட்டத்தை மக்கட்கூட்டத்தாரின் முன் வாசித்தபோது பக்கக்கில் இருந்தவர்களுள் ஒருவர். ஒருவேளை குருகுலத்தைச்சாராத சாதாரண மக்களில் ஒருவராக இருக்கலாம் (நெக 8:4).

6. நாடு கடத்தலுக்குப் பிறகு செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் குருக்களுக்குத் தலைவர் (நெக 12:7); நாடு கடத்தலுக்குப் பிந்தைய காலத்திலிருந்த குருகுல வீட்டாரையும் குறிக்கலாம் (12:27). அறிஞர் சிலர் இவரரையும் 5-இல் குறிக்கப்பட்டவரையும் ஒரே ஆளாகக் கருதுகின்றனர்.

7. அனதோத்தைச் சேர்ந்த குரு. இறைவாக்கினர் எரேமியாவின் தந்தை (எரே 1:1).

8. கெமரியாவின் தந்தை. செதேக்கியா பாபிலோனிய அரசனாகிய நெபுக்கதுனேசாரிடம் அனுப்பிய தூதர் (எரே 29:3).

9. எரேமியாவின் ஊழியன் பாரூக்கின் முன்னோர் (பாரூ 1:1).

10. சூசன்னாவின் தந்தை (தானி 13:23.63). சிலர் இவரை 2-இல் கூறப்பட்டவரோடு ஒரே ஆளாகக் கருதுகின்றனர்.

**கிலிமாது** (CHILIMAD - மூடப்பட்ட).

அசூர் என்ற இடத்திற்கு அடுத்துக் கூறப்படுகின்ற ஓர் இடத்தின் பெயர். இது தீரோடு வியாபாரம் செய்தது (எச 27:23). இது இப்பொழுது பாக்தாத் என்று அழைக்கப்படும் இடத்தின் அருகே அடையாளம் காட்டப் படுகிறது.

**கிலியாசம்** (CHILIASAM)

இது 'ஆயிரம் ஆண்டுக்காலம்' என்ற பொருளைக் குறிக்கின்ற ஒரு சொல். குறிப்பாக ஆயிரமாண்டுக்காலம் பற்றிய ஆதிக் கிறிஸ்தவர்களின் கொள்கையைக் குறிக்கும் சொல். இக் கொள்கை பருப்பொருள் சார்ந்த புலன்சார்ந்த இன்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால், இகழ்ச்சிக்குரியதாயிற்று.

**கிலியோன்** (CHILION - சோர்வு, அழிந்து போதல்)

இவர் மோவாபு நாட்டில் குடியேறச் சென்ற எலிமெலக்கு நகோமி என்பவர்களுக்குப் பிறந்த இளைய புதல்வன். இவர் ஓர்பா என்ற மோவாபிய பெண்ணை மணந்து கொண்டார் (ரூத் 1:2தொ; 4:9). இவரது சகோதரன் மகலோனைப்போல் இளம் வயதிலேயே மரித்துத் தன் மனைவியை விதவையாக்கினார் (1:5).

**கில்கால்** (GILGAL - கற்களின்வட்டம்)

இந்த இடத்தின் புவியியல் அமைப்பு இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. இப்பெயர் பல இடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

1. எரிகோவுக்கு அருகில் ஓர் இடம் (யோசு 4:19). கானானை இஸ்ராலேயர் கைப்பற்றியபோதும், அரசாட்சியின் தொடக்க காலத்திலும் சிறப்புப் பெற்றிருந்தது. இது இருந்த இடம் உறுதியாக அறியப்படவில்லை. ஆயினும் தேல் எல்சுல்தானுக்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து ஏன்-நித்திலேதான் என்று சில

*ரும், தேல் எஸ்-சுல்தானுக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து மெபர் தான் என்று வேறுசிலரும், அடையாளம் காட்டுவர்.*

*இஸ்ராயேலர் ஆயியையும் எரிக்கோவையும் தாக்குமுன் இங்குக் கூடாரம் அடித்துத் தங்கினர். யோர்தானிலிருந்து கொண்டு வந்திருந்த பன்னிரண்டு கற்களை யோசுவா இங்கு நாட்டினார் (யோசு 4:19-20). எகிப்திலிருந்து வந்தவர்களுக்குப் பிறந்தவர்களுக்கு இங்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது (5:3). இச்செயலால் ''உங்கள்மேல் இருந்த எகிப்தின் பழியை இன்று நீக்கிவிட்டோம்'' என்று ஆண்டவர் அறிவிக்கிறார். ஆகவே இந்த இடம் கில்கலா என்றழைக்கப்படுகிறது என்று பொதுப்பணிச் சொல்லிலக்கணம் இப்பெயருக்கு அளிக்கப்படுகிறது (5:9).*

*இஸ்ராயேல் தொடக்க வரலாற்றில் பல முக்கிய நிகழ்ச்சிகள் கில்காலில் நிகழ்ந்தன. ஆயின் அழிவிற்குப்பிறகு கிபயோனியர் யோசுவாவை ஏமாற்றி அவரோடு இங்கு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர் (9:6). எருசலேம் அரசன் அதோனி சதேக்கு தங்களைத் தாக்கியபோது, யோசுவாவிடமிருந்து உதவி கேட்டனர் கிபயோனியர் (10:6-7.9.15.43). கில்காலில், யோர்தானுக்கு மேற்கேயுள்ள பகுதிகளைக் கோத்திரங்களுக்குள் யோசுவா பகிர்ந்தளித்தார் (14:6). உடன்படிக்கைக் கடமைகளை அனுசரிக்கத் தவறியதற்காக இஸ்ராயேலரைக் கண்டிக்க, கில்காலிலிருந்து ஒரு தூதர் பயணம் செய்தார் (நீதி 2:1). கில்காலுக்கு அருகில் பென்யாமின் இனத்தவராகிய ஏகூது மோவாபின் அரசன் எகிலோனின் கொலைகளிலிருந்து இஸ்ராயேலரை விடுவித்தார் (3:12-30).*

*இரு நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு சாமுவேலின் சுற்றுப்பயணம் பெத்தேல், கில்கால், மிசுப்பா ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது (1 சாமு 7:16). இஸ்ராயேலின் அரசனாகச் சவுலை அபிடேகம் செய்தபின், அவரைக் கில்காலுக்குச் செல்லுமாறு, சாமுவேல் பணிக்கிறார். அப்போது அது ஒரு முக்கியமான வழிபாட்டுத்தலமாகும். அங்குச் சவுல் அரசராசு வெளிப்படையாக அறிவிக்கப்படுவார் (10:8; 11:14-15).*

*பெலிஸ்தியர்களின் கொடுமையிலிருந்து விடுதலை பெற இஸ்ராயேலர் கில்காலிலிருந்துதான் போராடினர் (13:2-4). சாமுவேல் தாம் வருமுன் பலிசெலுத்திய செயலுக்காகச் சவுலைக் கண்டித்து, அவரை ஆண்டவர் நிராகரித்துவிட்டார் என்று அறிவித்ததும் இங்குதான்.*

*அபிசலோமின் கிளர்ச்சி அழிக்கப்பட்டபின், எருசலேமைநோக்கி வந்து கொண்டிருந்த தாவீதை, யூதாவின் மக்கள் கில்காலில் சந்தித்தனர் (2 சாமு 19:15). கி.மு.8-ஆம் நூற்றாண்டில், அந்நிய அல்லது பதித வழிபாட்டுக்காகக் கில்காலைப்பற்றி ஓசேயாவும் (ஓசே 4:15; 9:15; 12:11), ஆமோசும் (ஆமோ 4:4; 5:5) மீக்காவும் (மீக் 6:5) வசைபாடுகின்றனர்.*

*புவியியல் சூழ்நிலை மட்டுமன்று, யோசு 4:19-உம் கில்கால் எரிக்கோவுக்கு அருகில் இருப்பதைக் காட்டுகின்றன.*

*2. எலியா,எலிசா ஆகியோரைப் பற்றிய கதை வட்டங்களில் கூறப்படும் பெத்தேலுக்கு வடக்கிலுள்ளது கில்கால். இருவரும் கில்காலிலிருந்து யோர்தானுக்குப் பயணம் செய்தனர். அங்கு எலியா சுழல்காற்றால் எடுத்துக் கொள்ளப்பட்டார் (2 அர 2:1). சுனாமியப்பெண்ணின் மகனை இறப்பிலிருந்து உயிர்ப்பித்தபின்னும், இறைவாக்கினர் குழுவினர் உண்டு கொண்டிருந்த கெட்டுப்போன உணவைத் தீமையற்றதாக்கியபின்னும், எலிசா கில்காலுக்குத் திரும்பினார்.*

*மலைப்பகுதியில் பெத்தேலுக்கு வடக்கே 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கில்கிலியே, கில்கால் இருந்த இடமாக இருக்கலாம்.*

*3. ஒருவேளை கலிலேயாவிலுள்ள ஒரு கானானிய நகரமாக இருக்கலாம் (யோசு 12:23). இங்குக் கில்காலுக்குப் பதிலாகக்*

கலிலேயா என்று வாசிக்கவேண்டும் என்பர் அறிஞர் சிலர்.

4. எரிகோவுக்கும் எருசலேமுக்கும் இடையில் யூதாவின் எல்லையில் அதும்மீம் ஏற்றத்திற்கு எதிராக உள்ள இடம் (யோசு 15:7). யோசு 18:17-இல் இது கெலிலோத்து என்றழைக்கப்படுகிறது. அறிஞர் சிலர் இந்தக் கில்காலை, நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட பேத்து-கில்காலோடு ஒன்றாக்குகின்றனர் (நெக 12:29). இவ்விடம் பொதுவாக இக்காலக் கான் ஏல்-அக்மாராகக் கருதப்படும் (இது பாரம்பரியமாகக் கருதப்படும் நல்ல சமாரியன் சத்திரமாகும்). ஆனால் தொல்பொருள் ஆய்வுகள் 1.5 கி.மீ. மேற்கேயுள்ள அராகு ஏத்-தெபீரைச் சுட்டுகின்றன.

5. எருசலேமை முற்றுகையிடச் சென்ற வழியில் தெமேத்திரியு கடந்துசென்ற இடம் (1 மக் 9:2). ஒருவேளை எழுபதுநூலில் வரும் வாசகத்தில் இப்பெயர் கலிலேயா என்று வாசிக்கப்படவேண்டும் (யோசு 22:10).

**கில்போவா** (GILBOA — கொப்பளிக்கும் ஊற்றின்மலை) — மலை.

சவுல் பெலிஸ்தியர்களால் இங்குக் கொல்லப்பட்டார். மிதியானியர் ஓர் உயர்ந்த குன்றின் வடபக்கம் பள்ளத்தாக்கில் பாளையம் இறங்கியிருந்தனர். இங்குப் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் கிதயோனின் பாசறைகளைக் குறிக்கின்றது (நீதி 7:1). 1 சாமு 28:4; 2 சாமு 21:12-இலும் கில்போவா என்ற பெயர் 'குன்று' என்ற வார்த்தை இல்லாமல் வருவதால் இவ்வூரின் பெயர் அம்மலைக்குப் பெயராக வந்திருக்கலாம்.

யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து இசிரியேல் சமவெளிக்கு இட்டுச்செல்லும் இரு பள்ளத்தாக்குகளில் ஒன்றின் அருகில் அமைந்திருந்ததால், இது போர் நடக்கும் இடமாக அடிக்கடி பயன்பட்டது. இந்த மலையில் உயரத்தைச் சாதகமாகக் கொண்டு, சவுல் பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் போரிட்டார் (1 சாமு 22:4). அதில் அவரும் யோனத்தான் உள்ளிட்ட அவருடைய மூன்று புதல்வர்களும் கொல்லப்பட்டனர் (1 சாமு 31:1.8; 1 நாள் 10:1.8). அருகில் இருந்த ஓர் அமலேக்கியன், காயம்பட்ட சவுலைக் கொன்றதாக ஒரு பாரம்பரியம் கூறுகிறது (2 சாமு 1:6.8-21).

சவுல், யோனத்தானுக்காகத் தாவீது பாடிய புலம்பல்பாடல் அவர்கள் இறந்த இடத்தைச் சபிக்கிறது: ''கில்போவாவின் குன்றுகளே பனியோ மழையோ உங்கள் மீது பொழியாதிருப்பதாக, உங்கள் வயல்கள் முதற் பலனைத் தராதிருப்பனவாக'', (2 சாமு 1:21).

கில்போவா, இசிரியேல் பள்ளத்தாக்கின் கிழக்கு ஓரத்திலுள்ள மலைத்தொடரிலுள்ள 529 மீட்டர் உயரமுடைய உச்சிமலையாகும். இசக்கார் பகுதியில் மோரே குன்றுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இது பேத்து-சானுக்கு மேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ஏபேல் புக்குவா ஆக அடையாளம் காட்டப்படுகிறது. தெற்குச் சரிவிலுள்ள இக்காலக் கிராமமாகிய ஏல்போனில் பழங்காலப் பெயர் பாதுகாக்கப்படுகிறது.

**கிழக்குக்கடல், கீழைக்கடல்** (EAST SEA, EASTERN SEA)

ஒரு சில பிற்கால இறைவாக்குப் பகுதிகளில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது (எச 47:18; யோவே 2:20; செ 14:8). இது ஐந்நூலிலும், யோசுவாவிலும் உப்புக்கடல் என்று அழைக்கப்பட்ட ஏரி; தற்பொழுது சாக்கடல் என்று அழைக்கப்படுகின்றது. இப்பெயர், பழங்கால இஸ்ராயேலின் கிழக்கு எல்லையில் கடல் இருந்த அமைப்பிலிருந்து பெறப்படுகின்றது.

**கிழக்கு வாயில்** (EAST GATE)

இவ்வாயிற்படி நெக 3:29-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நெகமியாவால் சீர்திருத்தப்பட்ட கட்டடங்களில் ஒன்றல்ல; ஒருவேளை ''யாவேயின் கோயிலின் கீழ்த்திசை வாயிற்படியாக'' இருக்கலாம் (எச 10:19; 11:1). ''கிழக்கு வாயிற்படி'' என்றும் இச்சொல் எரேமியாவில் குறிப்பிட்டுள்ள

மண்கல உடைசல் வாயிலுக்குப் பதிலாகத் (எரே 19:2) தவறாகச் சில மொழிபெயர்ப்பு களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கிளமந்தின் திருமுகங்கள்** (EPISTLE OF CLEMENT)

கிளமந்து பேதுருவின் உற்ற சீடர். இவர் உரோமை நகரத்தின் மூன்றாவது ஆயர். ஒரு கடிதமும் ஒரு மறையுரையும் இவரால் எழுதப்பட்டதாகக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கூறப்படுகின்றன. இவை சில புதிய ஏற்பாட்டுச் சுவடிகளின் தொகுப்பு நூலிலும் இணைக்கப்பட்டுள்ளன. 2-ஆம் நூற்றாண்டில் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்ட இவரது நூல்தான் பழைமையான கிறிஸ்தவ இலக்கியத்திலே முதன் முதல் எழுதப்பட்டது. ஆனால் கிளமந்துதான் மறையுரையை எழுதினாரா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. இரண்டிற்கும் உள்ளார்ந்த தொடர்பு இல்லை.

அ) கிளமந்தின் கடிதம்:- இது உரோமை நகரத் திருச்சபை அதிகாரபூர்வமாக ஆலோசகர் பலரின் ஆலோசனைப்படி, கொரிந்து நகரத் திருச்சபைக்கு எழுதிய மடல். சில தேவையற்ற காரணங்களுக்காகக் கொரிந்து நகரத் திருச்சபையில் விளைந்த குழப்பத்தைக் கண்டித்துத் திருத்த இது எழுதப்பட்டது. கொரிந்து திருச்சபையின். சிலர், குருகுல முதியவர்களை நீக்கிவிட்டு திருச்சபையின் அதிகாரத்தை எடுத்துக்கொண்டனர். இது இறைவனது சித்தத்தால் வெளிப்படுத்தப்பட்ட குருகுல படிமரபுக்கும் அப்போஸ்தலர்கள் நிறுவிய திருநிலைப்படுத்தப்பட்டோரின் வாரிசுமுறைக்கும் மாறானது என்று உரோமைத் திருச்சபை கண்டித்து, தன்னுடைய மூன்று முதியவர்களை இக்கடிதத்துடன் கொரிந்து திருச்சபைக்கு அனுப்பியது. ஆகவே இம்மடல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், இதில், ஆயர்கள், முதியவர்கள் மற்றும் தியாக்கோன்கள் அடங்கிய முப்படியுடைய பணியாளர் மரபும், பணியில் அப்போஸ்தோலிக்க வாரிசு முறைக் கொள்கையும், இடங்கொள்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொரிந்து நகர மக்களுக்குக் கிறிஸ்தவ புண்ணியங்களான அன்பு, தாழ்ச்சி, தன்னடக்கம், பிறரன்பு, ஆகியவற்றைப் பற்றியும் பாவங்களான பொறாமை, கர்வம், சந்தேகம் ஆகியவற்றைப் பற்றியும் இந்நூலின் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். பேதுரு, பவுல் ஆகியோர் எப்படிப் பொறுமையைக் காப்பாற்றி மறைசாட்சியாய் மரித்தார்கள் என்பதை மேற்கோள் காட்டி மக்களைப் புண்ணிய வாழ்விற்குத் தூண்டுகிறார். தன் கருத்துக்குச் சார்பாக இயேசுவின் வார்த்தைகளை மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆனால் இதில் கருத்து வேறுபாடு இல்லையெனினும் நற்செய்தியின் வசனங்கள் சிறு மாற்றங்களோடு மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. பவுலின் திருமுகங்களான உரோமையர், கொரிந்தியர், எபேசியர்கள், எபிரேயர் ஆகியோருக்கு எழுதப்பட்ட திருமுகங்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார் இந்நூலின் ஆசிரியர் (1 கொரி 13). 1 கொரி 13-ஐத் தழுவி அன்பைப் பற்றி விளக்குகிறார்.

கிறிஸ்தவ செபத்தைப் பற்றிய பவுலின் கருத்துக்கள் ஆங்காங்கே இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலின் மொழி நடையும் வார்த்தைகளும் கிரேக்கர்களின் நடையைத் தழுவியதாக அமைந்துள்ளன. திருச்சபைப் பாரம்பரியக் கருத்து இந்தக் கிளமந்துதான் பிலி 4:3-இலும் வருபவர் என்று கூறுகிறது. வேறுசிலர், ஹெர்மாசின் காட்சியில் குறிக்கப்படும் கிளமந்து இவர்தாம் என்று கூறுவர். இவருடைய பெயரிலிருந்து இவர் பிலாவியன் அரச வம்சத்தைச் சேர்ந்தவர் எனலாம். உரோமை நகரத்திலுள்ள மிகவும் பழைமையான ஒரு மறைப்பிரிவான புனித கிளமந்து பேராலயம் இவர் வாழ்ந்த வீடு இருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார்கள். இந்நூல் போலிகார்பின் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்பட்டுள்ள சில நிகழ்ச்சிகளைப் பார்த்தால், இது கி.பி. 95-96-இல், அதாவது தொமிசியன் காலத்தில், எழுந்த வேதகலாபனை காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனலாம்.

ஆ) மறையுரை:- இது மனம் மாறிய புறவினத்தாருக்கு எழுதப்பட்டது. மனமாற்றம், பரிகாரம், விழிப்புணர்ச்சி, தன்னடக்கம், தீர்வை நாள் ஆகியவற்றைப் பற்றி இது கூறுகிறது. இதிலும் புதிய ஏற்பாட்டிலிருந்து பல மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இது இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டிருக்கலாம். இது எழுதப்பட்ட இடமாக, உரோமை, கொரிந்து, அலக்சாந்திரியா ஆகிய நகரங்கள் சுட்டிக்காட்டப்படும். இதை இரேனேயு அறிந்திருப்பதாகத் தெரிகிறது.

**கிளமந்து** (CLEMENT)

இவர் பிலிப்பையில் வாழ்ந்தவர். பவுலின் உடன் உழைப்பாளியான இவர் (பிலி 4:3) முதன் முதலில் ஐரோப்பாவில் திருச்சபையைக் கட்டியெழுப்ப உறுதுணையாக இருந்தார். இங்கே கிளமந்துவின் பெயர் வாழ்வின் நூலில் எழுதப்படுகின்ற அளவு தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. மற்றவர்களின் பெயர்கள் 'உடன் ஊழியம் பலரோடும்' என்று எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து பவுல் பிலிப்பியில் வாழ்ந்தபொழுது கிளமந்து பற்றி அவர் சிறப்பான மதிப்புக் கொண்டிருந்தார் என்பது தெளிவு. இவ்வாறு எழுதுவதிலிருந்து ஒரு வேளை அவர் ஏற்கெனவே இறந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. ஆனால் இவ்விடத்தில் அவரது பெயர் குறிப்பிடப்படும் சூழ்நிலையில் பவுலின் உண்மைத் தோழர்களான எவோதியாள், சிந்திக்கேயாள் என்ற பிலிப்பியில் உள்ள இரண்டு பெண்களிடையேயும் ஒப்புரவை ஏற்படுத்த பவுல் அவருக்கு அறிவுரை கூறுகிறார். இந்த இரு பெண்களும் பவுல், கிளமந்து மற்றும் பலருடன் சேர்ந்து பிலிப்பியில் திருச்சபையை ஏற்படுத்த பணிபுரிந்தவர்கள்.

இவர் உரோமையில் உள்ள கிளமந்தாக இருக்கலாம் என்று கருதுவதற்கும் போதிய சான்று இல்லை. இவர் உரோமைக்குச் சென்றதற்கான ஆதாரமே இல்லை. மேலும் காலச் சூழ்நிலையில் பார்க்கும்பொழுது முதிர்ந்த இவர் முதல் நூற்றாண்டின் முடிவில் இறந்திருப்பார் என்றும், உரோமையில் கிளமந்து அப்பொழுது வாழ்ந்து வந்தவர் எனவும் தெரிகிறது. பொதுவாகக் காணப்படுகின்ற இப்பெயரைப் போதிய ஆதாரமின்றி இவ்வாறு ஒப்புமைப்படுத்த முடியாது.

**கிளயோப்பா** (CLEOPAS)

எம்மாவுக்குச் செல்லும் பாதையில் உயிர்த்த இயேசுவுடன் உரையாடிக் கொண்டு சென்ற இரண்டு சீடர்களில் ஒருவர் (லூக் 24:18). மற்றவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரது உடன் சென்ற சீடர் சீமோன் என்றும், லூக் 10:1-24-இல் கூறப்படுகின்ற 70 சீடர்களில் இவர்கள் இருவரையும் சேர்த்துப் பாரம்பரியம் கூறுகிறது. கிளயோப்பாவும் கிளோப்பாவும் ஒருவரே என்று சில சமயம் கூறப்படுவதுண்டு. எனினும் போதிய ஆதாரமின்றி அவ்வாறு கூற இயலாது.

**கிளாதியா** (CLAUDIA — முடமான)

2 தீமோ 4:2-இல் தீமோத்தேயுக்கு வாழ்த்து அனுப்புகின்ற உரோமைச் சார்ந்த கிறிஸ்தவப்பெண் இவள். உரோமையின் முதல் ஆயரான லீனஸ் என்பவரின் தாய் அல்லது மனைவி ஆவாள் இவள் என்று அப்போஸ்தல சட்டம் கூறுகின்றது. இவள் புதென்ஸ் என்பவரின் மனைவியாகவும் இருந்தாள் எனப்பாரம்பரியம் கூறுகிறது.

**கிளாதியு** (CLAUDIUS)

உரோமைப் பேரரசரான கலிகுலாவை அடுத்து ஆட்சிக்கு வந்தவர் திபேரியு கிளாதியு நீரோ கெர்மானிக்கஸ் ஆவார். அவரது பெயர் அ.ப.11:28; 18:2-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 17:7-இல் குறிக்கப்படும் சீசர் இவரே.

கிளாதியு கி.மு.10-ஆம் ஆண்டில் லிவியாவின் மகனும், திபேரியுவின் சகோதரருமான துருசுஸ் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சிறிது பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட இவர் அகுஸ்து, திபேரியு, கலிகுலா போன்றவர்களால் முட்டாள் எனக் கருதப்பட்டார். கலிகுலா கொலை செய்யப்பட்டபொழுது ஏற்

பட்ட கலவரத்தில் இவர் பிரேத்தோரியன் படைவீரர்களால் அரசரான அறிக்கையிடப் பட்டதால்தான் அரியணைக்கு வந்தார். அவர்கள் செய்த உதவிக்குக் கைம்மாறாக இராணுவத்தை வைத்துப் பல போர்கள் நடத்தினார். பிரிட்டனின்மீதும் படையெடுத்து, அதைப் பேரரசனுக்குரிய ஒரு மாநிலமாக மாற்றினார்.

அவர் ஓய்வு பெற்ற தொடக்க காலத்தில் உரோமை வரலாற்றிலும்,சமயத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 47-ஆம் ஆண்டில் உரோமையில் உள்ள வழிபாட்டு முறைகளைப் புதுப்பித்தார். ஐசிஸ் கடவுளுக்கு நடத்தப்பட்ட வழிபாட்டிற்கு இவர் தடை விதித்ததற்குப் போதிய ஆதாரங்கள் இல்லையெனினும், அகுஸ்து, திபேரியு ஆகியவர்களைப் போன்று துருயித் சமயத்தை வளரவிடாமல் தடுத்தார்.

இவரது ஆட்சியின் தொடக்கத்தில் கலிகுலா ஊக்குவித்த யூத இனத்திற்கு எதிரான சக்தியை அழிக்கப் பெருமுயற்சி எடுத்தார். யூதர்களுக்கு ஆதரவாகக் கிளாதியு இயற்றிய சட்டங்களைப் பற்றி யோசிப்பஸ் குறிப்பிட்டுள்ளது இதற்குச் சான்று. ஒருவேளை இவர் உரோமையில் உள்ள யூதர்களுக்கு எதிராகச் செயல் புரிந்தது இவரது பிற்காலத்தில் நடந்திருக்கலாம். கிளாதியுவின் வெளிநாட்டு உறவைப் பற்றிக் கூறுகையில் சூட்டேனியஸ் என்பவர் ''கிளாதியு உரோமை நகரில் கிரேஸ்தஸ் என்பவரின் கீழ்ப் புரட்சி செய்த யூதர்களை வெளியேற்றினான்'' என்று கூறுகின்றார். கிரேஸ்தஸ் என்ற சொல்லும் கிறிஸ்து என்ற சொல்லும் ஒரே மாதிரி உச்சரிக்கப்பட்டதால், இவர் கிறிஸ்துவை மனதில் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் இது ஐயத்திற்குரியது. இரேனயு என்பவர் இயேசுவின். மரணம் கிளாதியுவின் ஆட்சியின் கீழ்நடந்ததாகக் குறிப்பிட்டிருந்தாலும் கிறிஸ்தவ ''மூட நம்பிக்கைகளைக்'' தோற்றுவித்த கிரேஸ்தஸ் அல்லது கிறிஸ்துஸ் என்பவர் கிளாதியுவின் கீழ் உரோமில் இருந்தவரா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று.

அ.ப.18:3-இல் பவுலின் நண்பர்களான அக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் கிளாதியுவின் கட்டளையினால் வெளியேற்றப்பட்டார்கள் என்பதிலிருந்து இவரது ஆட்சிக் காலத்தில் உரோமையில் கிறிஸ்துவ யூதர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது தெளிவு. உரோமையில் யூதர்கள் கலகம் செய்தார்கள் என்றும் அது கிறிஸ்து என்ற ஒருவரோடு தொடர்புபடுத்தப்பட்டது என்றும் மட்டுமே சூட்டேனியஸ் அறிந்திருந்தார் எனலாம். கிளாதியுவின் உண்மையான சட்டத்தைப் பற்றி தியோகாசியுஸ் விவரித்துள்ளார். உண்மையில் அச்சட்டம் அவர்களை உரோமையிலிருந்து வெளியேற்ற அல்ல; மாறாகக் குழப்பத்தின் காரணமாக யூதர்கள் ஒன்று கூடுவதைத் தடை செய்வதற்காகவே. பக்தியுள்ள யூதனை இச்சட்டம் உரோமையிலிருந்து வெளியேறித் தனது சமயச் சடங்குகளை நல்ல முறையில் செய்யத் தூண்டியது.

கிளாதியு இறை மகிமையை வெறுத்த போதிலும், மக்கள் அவரைக்கடவுளாக மகிமைப்படுத்தினர். பிரிட்டனில் உள்ள கொல்செஸ்டர் என்ற இடத்தில் அவருக்காக ஓர் ஆலயமே கட்டப்பட்டுள்ளது.

இவரது ஆட்சிக்காலத்தில் நார்சிகஸ், பாலாஸ் என்ற இருவரும் அதிகச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தனர். இவரது அந்தரங்க செயலாளரான நார்சிசுஸ், அரசனின் மூன்றாவது மனைவி மெசலீனா செய்த சதியையும் அவளுடைய முறைகேடான வாழ்க்கையையும் அரசனுக்கு வெளிப்படுத்தினார். நிதிச் செயலாளரான பாலாஸ் அரசனின் மருமகளான அகிரிப்பினா என்பவளை மணப்பதற்கும், இறுதியில் அவளது மகன் நீரோவை அரசன் தன் மகனாக ஏற்றுக் கொள்வதற்கும் அரசனைத் தூண்டினார். இவர்கள் வகித்த பதவிக்காக மூப்பர் சபையோரால் இவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர்.

ஆனால் அரசன் 54-ஆம் ஆண்டில் தனக்குப்பின் யார் ஆட்சிக்கு வருவது என்று சிந்தித்துப் பார்க்கையில் மெசலீனா வழியா

கத் தனக்குப் பிறந்த பிரித்தானிகுஸ் என்பவனைத் தேர்ந்தெடுத்தார். நீரோவைத் தேர்ந்தெடுக்கவில்லை. இம்முடிவை அரசர் மக்களுக்கு அறிவிக்குமுன் அகிரிப்பினா காளானில் நஞ்சைக் கலந்து கொடுத்து அவரைக் கொன்றுவிட்டாள். மக்களின் முன் பிரம்மாண்டமான அடக்க ஊர்வலம் நடத்தி, அகிரிப்பினாவும் நீரோவும் கிளாதியுவை ஒரு தெய்வமாக மாற்றிவிட்டனர்.

கிளாதியுவின் காலத்தில் வரிக்கொள்கையிலும், போரிலும் ஓரளவு வளர்ச்சி அடைந்த நாடு, செழிப்படையவில்லை. நாட்டில் நடந்த சதி வேலைகளும், உளவு வேலைகளும், அவரது செயலற்ற தன்மையும் இதற்குக் காரணங்களாகும். அவருக்குப் பின் வந்த நீரோவினால் நாடு இன்னும் மோசமடைந்தது.

### கிளாரோமோன்தானுவின் கையெழுத்துச் சுவடி (CLAROMONTANUS CODEX)

இது ஆறாம் நூற்றாண்டில் இலத்தீனிலும், கிரேக்கத்திலும் எழுதப்பட்ட பவுலின் கடிதங்கள் ஆகும். இது முதலில் எழுதப்பட்டவைகளை அழித்துவிட்டு, அதன்மேல் எழுதப்பட்டதாகும். பழங்காலச் சுவடிகளைப் பற்றி அறிந்து கொள்ள இது ஒரு சிறந்த உதவியாகும்.

இது மொத்தம் 533 மெல்லிய தோல் வகைத் (கன்றின் தோலிலிருந்து செய்யப்பட்டது) தாள்களில் எழுதப்பட்டது. ஒருபக்கம் கிரேக்க மொழியும் மறுபக்கம் இலத்தீன் மொழியும் காணப்படுகிறது. (இடப்புறம் கிரேக்கம், வலப்புறம் இலத்தீன்) ஒவ்வொரு பக்கத்திலும் 21 வரிகள் உள்ளன. இது ஓரளவு அழிந்த நிலையில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

இது எங்கு எழுதப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. ஆனால் மேலை நாடுகளில் ஒன்றில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் நடையிலிருந்து தெரிகிறது. தியோடோர் பேசா என்பவர் இச் சுவடியை 1565-1582-இல் கிளாரோமோன்டில் உள்ள துறவியர் (கன்னியர்) மடத்தில் கண்டுபிடித்தார். பின் இது பாரீசு நகர நாடாளுமன்ற ஆலோசகரான கிளவுதே துபி என்பவர் வசம் வந்தது. இதன்பின் இவர் புதல்வர்கள் கைக்குச் சென்றது. பின் 14-ஆம் லூயிஸ் காலத்தில் இது அரசரின் நூல் நிலையத்தில் இடம் பெற்றது. 1707-இல் நம் முறையை மறுதலித்த ஜான் அய்மண்ட் என்ற பதிதக் குருவால் இதில் ஒரு சுவடி திருடப்பட்டு ஹாலந்து நாட்டில் விற்கப்பட்டுப் பின் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் 1720-இல் பாரீசு நூல் நிலையத்திற்கு வந்தது. மற்ற 34 சுவடிகள் விற்கப்பட்டு, மீண்டும் பாரீசு நூல் நிலையத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இது பேசே கையெழுத்துச் சுவடிக்கு ஒத்ததாக உள்ளது. கிரேக்க இலத்தீன் மொழிபெயர்ப்புகள் எதிர்எதிர்ப் பக்கங்களில் காணப்படுகின்றன. பேசே சுவடியில் காணப்படாத நூல்களும் சேர்க்கப்பட்டு மேற்கத்திய கிரேக்க வாசகத்தை நிறைவு செய்கிறது.

### கிளியோப்பத்திரா (CLEOPATRA - மகிமை மிக்க தந்தையைக் கொண்டிருக்கிற)

1. இப்பெயர் எகிப்திலுள்ள தோலமி வம்சத்தைச் சார்ந்த அரசிகளுக்கு வழங்கப்பட்ட ஒன்று. நான்கு தோலமிகள் இப்பெயரில் மனைவிகள் வைத்திருந்தார்கள். எஸ்த 11:1-இல் கூறப்படும் கிளியோபத்திரா பிலோமேத்தர் (கி.மு. 181-146) என்பவரின் மனைவியாவாள். இவர்களிடம்தான் பூரிம் விழாவைப் பற்றிய மொழி பெயர்க்கப்பட்ட கடிதம் கொண்டுவரப்பட்டது. தலைமைக்குருவான ஓனியாவின் மகனான ஓனியா, கொடிய ஆல்கிமு என்பவர் தலைமைக்குருவின் இடத்தைப் பிடித்ததைப் பார்த்து, எகிப்திய மன்னனான தோலமி பிலோமேத்தரிடம் தஞ்சம் புகுந்தார். அரசனும், அவருடைய மனைவி கிளியோபத்திராவும் தன்னிடம் மிகுந்த மரியாதை கொண்டிருப்பதைக்கண்டு கெலியோப்போலியின் நோமுவில் ஓர் இடத்தைப்பெற்று அங்கு எருசலேமில் உள்ளதைப் போன்று ஆலயம் ஒன்று கட்டினார். ஏச 29:19-இல் வரும்

இறைவாக்கை ஒனியா எடுத்துக்காட்டியது கிளியோபத்திராவையும் அவளது கணவனின் மனதையும் கொள்ளை கொண்டது.

2. 1 மக் 10:57-58-இல் கூறப்படும் கிளியோபத்திரா மேலே கூறப்பட்டவரின் மகள் என்று கருதப்படுகிறது. தெமேத்திரியு கொலை செய்யப்பட்டபின் சிரியா நாட்டைக் கைப்பற்றிய அலக்சாந்தர் பாலாஸ் என்பவனுக்கு இவளை மணம் செய்து வைத்தனர். அவளது தந்தை ''தோலமி அரசர்கள் செய்வதுபோலத் தோலமாயில் மிகச்சிறப்புடன் திருமணம் செய்வித்தார்'' (1 மக் 10:58). 45-ஆம் சங்கீதம் இதையொட்டி எழுதப்பட்ட திருமணப்பாடலாக இருக்கலாம் என்பது சிலரின் கருத்தாகும். அலக்சாந்தர் தன்னைக் கொல்லச் சதிவேலையில் ஈடுபட்டுள்ளதைப் பின்னால் அறிந்த தோலமி தன் மகளை அவனுக்கு மணம் செய்து வைத்ததற்காகவும், தெமேத்திரியுவுக்கு எதிராக உதவி செய்ய இவனுடன் உடன்படிக்கை செய்ததையும் எண்ணித் தன்னை நொந்து கொண்டார். எனவே அவனுடன் கொண்ட உறவைத் துண்டித்துவிட்டுத் தன் மகளை அவனிடமிருந்து பிரித்துத் தெமேத்திரியுவுக்கு மணம் செய்து கொடுத்தார்'' என்று யோசிப்பஸ் கூறுகிறார்.

## கிளை/தளிர் (BRANCH)

இச்சொல் விவிலியத்தில் உள்ள பல வார்த்தைகளின் மொழிபெயர்ப்பு.

பழைய ஏற்பாட்டில் கிளை என்ற பொருளுக்குரிய சொற்கள் பின்வரும் பகுதிகளில் வருகின்றன (எச 17:6; 31:3; எரே 11:16; யோபு 14:9). தளிர் என்ற பொருளில் வரும் சொற்கள் ஏச 11:1; யோபு 8:16 ஆகிய பகுதிகளில் வருகின்றன. எரே 23:5-இல் தாவீதின் அரச குலத்திலிருந்து நீதியுள்ள தளிர் தோன்றும் என்றுள்ளது. பிற பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் ''திராட்சைக்கொடியின் கிளை'' (எண் 13:23) மற்றும் ''ஒலிவ மரக்கிளையையும் நாணலையும்'' (ஏச 9:14; 19:15) ஆகியன. இதில் கிளை என்பது மேல் குலமக்களுக்கும், நாணல் என்பது சாதாரண மக்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

புதிய ஏற்பாட்டில் 4 சொற்கள் கிளை என்ற பொருளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. யோவா 12:13-இல் குருத்தோலை என்பதும், உரோ 11:16-இல் இஸ்ராயேல் குலத்தில் ஓர் உறுப்பினன் என்பதும், யோவா 15:1-8-இல் உண்மையான திராட்சைக் கொடியின் கிளை என்பதும் மாற்கு 11:8-இல் இலைதழைகள் என்பதும் ஆகும்.

ஒரு மரத்தின் அல்லது திராட்சையின் கிளைகள் படர்ந்து வளர்வது என்றால் அது மனிதனின் வளர்ச்சிக்கு உவமையாகக் கூறப்படுகிறது (ஆதி 49:22; யோபு 8:16) அல்லது தேசத்தின் வளர்ச்சியோடு ஒப்பிடப்படுகிறது (சங் 80:11). உலர்ந்து போன (யோபு 18:16), காய்ந்துபோன (எரே 11:16; எச 15:2) வெட்டப்பட்ட (எச 8:14) கிளைகள் அழிவுக்கு உவமையாகக் கூறப்படுகின்றன.

கிளை அல்லது தளிர் என்பது இஸ்ராயேலரின் நிகழ்கால அல்லது வருங்கால அரசர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கம் அரசர்களை, ''நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தோடு'' அடையாளம் காட்டுவதிலிருந்து தோன்றியிருக்கலாம். வாழ்வு தரும் மரம் என்பது இறந்து உயிர்க்கும் தாமுஸ் தெய்வத்தோடு தொடர்புபடுத்திப்பேசப்படுகிறது. யோபு 14:7-இல் மரம் வெட்டுண்டால் மீண்டும் தளிர்க்கும்; ஆனால் மனிதன் அழிந்தால் மீண்டும் உயிர் பெற மாட்டான் என்பதில் மரம் மீண்டும் தளிர்ப்பது மனிதனோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. ஏச 17:10-இல் கிளை என்பது அந்நியத் தெய்வங்களுக்குரிய நாற்றுகள் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. விவிலியத்தில் கிளை என்ற வார்த்தையோடு தொடர்புபடுத்தப்படும் முக்கியமான பகுதிகள் பின்வருமாறு.

அ) ஏச 11:1-இல் ஈசாயின் வாரிசு என்று குறிப்பிடத் தளிர் என்ற வார்த்தை அங்குக் கையாளப்பட்டிருக்கிறது. ஆதி 49:22-இல் யோசேப்பின் அபிவிருத்தியைக் குறிப்பிடக் கிளையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆ) எரே 23:5; 33:15-இல் நீதியுள்ள தளிர் என்று வருகிறது. இச்சொற்றொடர் பெனிக்கிய பரம்பரையிலும் அரசாட்சிக்கு உரிமையுள்ள வாரிசைக் குறிக்க வருகிறது. இவ்விரண்டு விவிலியப் பகுதிகளிலும் பின்னது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக இருக்கலாம். முதலில் உள்ளது இறைவாக்கினராலே எழுதப்பட்ட ஒன்றாக இருக்கலாம். அப்படியானால் அங்கு நீதியுள்ள தளிர் என்பது தன்மையால் இல்லாமல் பெயர்ப் பொருளில் மட்டும் நீதியுள்ள வரவிருக்கும் அரசர் மெசியாவைக் குறிக்கும். எனினும் இரு பகுதிகளும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதே என்பர்.

இ) செ 3:8; 6:12-இல் செருபாபேலைக் குறிப்பிட்டுக் கிளை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இங்குச் செருபாபேல் என்ற பெயரே கிளை என்பதைப் பயன்படுத்தக் காரணமாயிருந்திருக்கலாம். ஏனெனில் செருபாபேல் என்ற சொல்லுக்குப் ''பாபிலோனின் தளிர்'' என்பது பொருளாகும். இவையாவும் அரசனை வாழ்வின் மரத்தோடு அடையாளம் காட்டாமல் வெறும் காவிய உருவகமாய்க் காட்டுவதாக இருக்கலாம். எச 8:17-இல் திராட்சைக் கொடியை எடுத்து முத்தி செய்வது என்பது அந்நிய தெய்வத்தை வழிபடுவதைக் குறிக்கும். இச்செயல் (முத்தி செய்வது) யாவேயின் கோபத்திற்குக் காரணமாயிருக்கும் என்றும் உவமையாகக் கூறப்படுகிறது.

## கிளோப்பா (CLOPAS)

கிளோப்பா என்பவர் சிலுவையின் அடியில் நின்ற பெண்களில் ஒருத்தியின் கணவர். சில சமயங்களில் இவர் கிளோயோப்பாவுடனும், அல்பேயுவுடனும் ஒப்பிடப்பட்டாலும், இவரைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் யோவா 19:25-இல் வேறு தெளிவான குறிப்புக் காணப்படவில்லை. 'கிளயோப்பா' என்ற கிரேக்கப் பெயருக்கும் 'கிளோப்பா' என்ற செமித்தியத் தோற்றத்திலிருந்து வந்த பெயருக்குமிடையே மொழிசார்ந்த உறவுகள் அல்லது தொடர்புகள் இல்லை. யோவான் நற்செய்தி 19:25-இல் இடம் பெற்றுள்ள 'கிளோப்பா' என்ற பெயரானது 'கிளயோப்பா' என்றும் வழங்கப்பட்டது என்பதற்கு எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. மேலும் கிளோப்பாவின் மனைவியாகும் மரியாளும், யாக்கோபு, யோசே ஆகியோரின் தாயான மரியாளும் ஒரே ஆளாகவும் (மாற் 15:40 = மத் 27:56; காண் லூக் 23:49; 24:10), இங்கே குறிப்பிட்டுள்ள யாக்கோபும் அல்பேயுவின் மகன் யாக்கோபும் ஒரே ஆளாகவும் (மாற் 3:18 = மத் 10:3 = லூக் 6:15; அ.ப. 1:33) இருந்தால் மட்டும் தான் அல்பேயு என்ற பெயருக்கும், கிளோப்பாவிற்கும் தொடர்பு இருப்பதாகக் கூறமுடியும். இவ்வாறு கிளோப்பாவின் மனைவி மரியாளை, அல்பேயுவின் மனைவியாகக் கருதினால் அல்பேயுவும் கிளோப்பாவும் ஒரே ஆள்தான் என்று பெரும்பாலும் கருதலாம்.

கிளோப்பாவையும் ஆகவே அல்பேயுவையும் அவரது புதல்வர்களையும் இயேசுவின் குடும்பத்திற்கு உறவுபடுத்த அல்லது தொடர்புபடுத்தக் கையாளுகின்ற முயற்சிகள் அனைத்தும் யோவான் நற்செய்தி 19:25 ''அவருடைய தாயும், தாயின் சகோதரியுமான கிளோப்பாவின் மனைவி மரியாளும், மதலேன் மரியாளும்'' என்பது மூன்று பெண்களை மட்டுந்தான் குறிப்பிடுகிறது என்ற அடிப்படையில் அமைந்துள்ளது (காண் மாற் 15:40 = மத் 27:56). எனவே கிளோப்பாவின் மனைவியாகிய மரியாள், இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரியாகக் கருதப்பட வாசகம் இடமளிக்கிறது. ஆனால் அப்படித்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அதேநேரத்தில் யோசேப்பின் சகோதரனின் பெயரும் கிளோப்பாவாகும் என்று கெசிப்பஸ் கூறுவதையும் உற்றுநோக்கவேண்டும்.

## கிறிஸ்தவப் பணி அமைப்பு (CHRISTIAN MINISTRY)

'பணி, பணியாளன்' என்ற சொற்கள் முதலில் சாதாரணத் தொழில் செய்பவர்களுக்

குப் பயன்படுத்தப்பட்டது (எஸ்த 1:10; 6:1-5). பிறகு குருக்களுக்கும், வழிபாடுகளில் உதவி செய்பவர்களுக்கும் வழங்கப்பட்டது (யாத் 24:13; ஏச 61:6; எச 44:11; 1 யோவா 1:9). எப்படியிருந்தாலும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே சமயசேவை என்பது கடவுளின் மக்களால் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு சமய சேவை செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அரசர்கள், இறைவாக்கினர்கள், குருக்கள் ஆவார்கள். இவர்கள் இறைவனுக்கும் இறைமக்களுக்கும் இடையில் இருந்து ஊழியம் புரிந்து வந்தார்கள். எனவேதான் பவுல் மோசேயை முதல் உடன்படிக்கையின் பணியாளன் என்று அழைக்கின்றார் (2 கொரி 3:7-9). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து ஒருவரே மனிதர்களையும் கடவுளையும் இணைக்கும் இணைப்பாளராக இருக்கின்றார். இவரே தலைமைக் குருவாயிருந்து மீட்பின் பலியைச் செலுத்துகின்றார். இறைவனையே தன்னில் முழுவதும் வெளிப்படுத்தும் வார்த்தையாகவும், மனித உருவெடுத்த இறைவனாகவும் இருக்கின்றார். அவர் ஏற்படுத்திய திருச்சபையில் அவருடைய வார்த்தைக்கும் அவருடைய அருளுக்கும் புதிய பணிகள் செய்யப்படுகின்றன.

I. திருச்சபையில் பணிகள்:-

இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் தாங்கள் செய்யும் பணியை ஊழியமாகவே கருத வேண்டும் என்று போதித்தார். நாட்டுத்தலைவர்கள், தங்கள் பணியால் கொடையாளர்கள், தலைவர்கள், என்று அழைக்கும்படி விரும்பினார்கள். ஆனால் இயேசு ''உங்களுக்குள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும்'' (மாற் 10:42தொ) என்று கூறுகின்றார். மேலும் ''எங்கே நான் இருக்கிறேனோ அங்கே என் பணியாளனும் இருப்பான். எவனாவது எனக்குப் பணிவிடை செய்தால் அவனுக்கு என் தந்தை மதிப்பளிப்பார்'' (யோவா 12:26) என்று கூறுகின்றார்.

இறைவனுக்கு ஊழியம் புரிய யூதாசின் இடத்தில் மத்தியாவைத் தேர்ந்தெடுத்தார்கள் (அ.ப. 1:17.25). பவுலும் இயேசுவின் பணிக்காக அழைக்கப்பட்டார் (1 தீமோ 1:12; 2 கொரி 4:1). ''கடவுளுடைய அருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவராகிய இயேசு என்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கைப் பயணத்தை முடிப்பேனாகில் அதுவே போதும்'' (அ.ப. 20:24) என்று கூறுகின்றார். தமது திருப்பணியின் வாயிலாகப் புறவினத்தார்க்குச் செய்த ஒவ்வொன்றுக்கும் நன்றி கூறுகின்றார் (21:19). கடவுளின் பணியாளன் என்றும் (2 கொரி 6:3தொ), இயேசுவின் ஊழியன் (11:23) என்றும் தன்னையே அறிமுகம் செய்துகொண்டார். தனது பணியில் பவுல் என்றும் நிறைவு கொண்டார். மோசேயின் பணியிலும் சிறந்த பணியாகத் தன் பணியைக் கருதினார். ஏனென்றால் கடவுளே அவருக்குப் புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைத் தந்தார். நீதியை வழங்கவும், ஆவியை அளிக்கவும் ஒப்புரவு செய்யும் திருப்பணியை அவர்களுக்கு அளித்தார் (2 கொரி 3:6-9; 5:12) ''வானத்தின் கீழுள்ள எல்லாப் படைப்புக்கும் அறிவிக்கப்பட்ட இந்த நற்செய்திக்குத்தான் பவுலாகிய நான் பணியாளன் ஆனேன்'' (கொலோ 2:23) என்று கூறுகின்றார். மேலும் ''கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் அலுவலை நிறைவேற்ற, கடவுள் உங்களை முன்னிட்டு எனக்களித்த பொறுப்பை ஏற்றுள்ளதால் நான் திருச்சபையின் பணியாளன் ஆனேன்'' (கொலோ 1:25) என்று கூறுகின்றார்.

புதியதாக உருவான திருச்சபையில் பணியாளர்களின் பொறுப்பு அதிகமாக்கப்பட்டது; விரிவடையச் செய்யப்பட்டது. எனவே 'பணியாளன்' என்றசொல் முதன் முதலாகப் பந்தியில் பணிவிடை செய்பவர்களுக்கும் (அ.ப. 6:1-4; லூக் 10:40), எருசலேமிலுள்ள ஏழைகளுக்குப் பொருளுதவி சேகரிப்பவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது (அ.ப. 11:29; 12:25; 1 கொரி 16;15; 2 கொரி 8;4; 9:1-12). இத்துடன் அர்க்கிப்புவுக்கும்

(கொலோ 4:17), தீமோத்தேயுவுக்கும் (2 திமோ 4:5) திருப்பணிகள் ஒப்படைக்கப்பட்டன. திருப்பணியாளன் என்ற பட்டம் பவுலுக்கு அளிக்கப்பட்டதுபோல் அப்பொல்லோவுக்கும் (1 கொரி 3:5), தீமோத்தேயுவுக்கும் (1 தெச 3:2; 1 தீமோ 4:6), திக்கிக்கும் (கொலோ 4:7); எப்பப்பிராவுக்கும் (கொலோ 1:7), பொய் யூத அப்போஸ்தலர்களுக்கும் (2 கொரி 11:23) அளிக்கப்பட்டது. இதிலிருந்து திருச்சபையில் பல பணிகள் இருந்ததாகத் தெரிகின்றது (1 கொரி 12:5). கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும், திருப்பணிக்குரிய வேலையை முடிக்கவும், இறைமக்களைப் பக்குவப்படுத்தவும் பரிசுத்த ஆவி இக்கொடைகளை வழங்கியுள்ளார் (எபே 4:12). எல்லாத் திருப்பணிகளும் பரிசுத்த ஆவியின் ஏவுதலாலேயே நடைபெறுகின்றன (திருவெளி 12:7). பணி செய்யும் வரம் கடவுளிடமிருந்தே பெறப்பட்டது (1 பேதுரு 4:11). கொடுக்கப்பட்ட பணிகள்: அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்கள், நற்செய்தியின் தூதர்கள், ஆயர்கள், போதகர்கள் அனைத்தும் கிறிஸ்துவின் வார்த்தைகள் நிறைவு பெறச் செய்வதற்கே. இதைச் சேராத பணிகளும் கிறிஸ்துவின் உடலைக்கட்டி எழுப்ப உதவுமாயின் அவையும் ஏற்றுக் கொள்ளப்படும் (எபே 4:11).

II. படிமரபுடைய பணிகள்:-

அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே திருச்சபைப் பணிகள் பல பிரிக்கப்பட்டு வளரத்தொடங்கின. எல்லா யூத சமூகத்திலும் மூப்பர்கள் இருந்தார்கள். பவுலும் பார்னபாவும் ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்களை ஏற்படுத்தினர். நோன்பிருந்து செபம் செய்த பின்னர், அவர்கள் விசுவசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர் (அ.ப. 14:23). சிக்கல் ஏதாவது வரும்போது ''எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தனர்''. யாக்கோபு சபைக்குத் தலைமை தாங்கினார் (அ.ப. 15:2-4;22தொ; 16:4). பவுல் மறுபடியும் யாக்கோபைக் காண வந்தபோது அங்கே மூப்பர்கள் அனைவரும் கூடியிருந்தார்கள் (21:18). கடைசிப் பயணத்தின்போது பவுல், மிலேத்திலிருந்து எபேசுக்கு ஆள் அனுப்பிச் சபையின் மூப்பர்களை வரவழைத்தார் (20:17). அந்த நாள் முதல், அப்போஸ்தலர்கள் நேரிடையாகவோ ஆட்களை அனுப்பியோ மூப்பர்களை ஏற்படுத்தினார்கள் (தீத் 1:5). மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. யார்மேலும் பதற்றத்தோடு கைகளை விரித்துப் பட்டம் கொடுக்காதீர் என்று 1 திமோ 5:17-22-இல் கூறப்பட்டுள்ளது. எனவே மூப்பர்கள் பரிசுத்த ஆவியினால் இயக்கப்படுகின்றார்கள். எனவே அவர்களுடைய பணிகள் சாதாரணப் பணிகள் அன்று. யாக்கோபு எழுதிய திருமுகத்தில் ''உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால் அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும். அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன் மீது எண்ணெய் பூசி அவனுக்காகச் செபிப்பர் (யாக் 5:14) என்று எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக மூப்பர்கள் சபைகளுக்குத் தலைமைதாங்கி அதைச் செவ்வனே நடத்தினார்கள் (1 திமோ 5:17). ''சகோதரரே உங்களிடையே உழைத்து ஆண்டவர் பெயரால் உங்களுக்குத் தலைவர்களாக இருந்து, அறிவுபுகட்டுவோரை மதித்து நடக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்'' (1 தெச 5:12தொ). இங்கு, தலைவர் மூப்பர்களைக் குறிக்கின்றது.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் மேற்பார்வையாளரும் திருப்பணியாளரும் அறிமுகப்படுத்தப்படுகின்றார்கள் (பிலி 1:1). இப்போது திருச்சபையின் பணி ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் தேவ ஆவியும் ஞானமும் நிரம்பப் பெற்ற எழுவரை அறப்பணி செய்வதற்காக ஏற்படுத்தினர். அப்போஸ்தலர்கள் செபம் செய்து அவர்கள் மேல் கைகளை விரித்தனர் (அ.ப. 6:1-6). பிலிப்பு என்பவர் திருப்பணியாளர் மட்டுமன்று அவர் ஒரு போதகர் (8:4.26தொ). திருப் பணியாளருக்கு உரியதகுதிகளை மேய்ப்புப்பணிக் கடிதங்களில், குறிப்பாக 1 திமோ 3:8-13-இல் பார்க்கலாம். மற்றும் சில பணிகள், கடமைகள் உள்ளன. இவைகளைக் குறிப்பிட்டு விளக்கமுடியாது. திருவழிபாட்டிலும் சபையிலும்

பெண்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பவுல் அழகாக விளக்குகின்றார் (1 கொரி 11;1-16; 14:33தொ).

ஆயர்கள் அனைவரும் ''மேற்பார்வையாளர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் சபைகளுக்குத் தலைவர்களாயிருந்து அனைத்தையும் மேற்பார்வையிட்டார்கள். யூதர்கள் நடுவில் இப்பணி இருந்ததாகத் தெரியவில்லை. கும்ரான் சமூகத்தில் இப்படிப்பட்டவர்கள் இருந்ததாகத் தெரிகிறது. ''மந்தை முழுவதும் குறித்து விழிப்பாயிருங்கள். ஏனெனில் கடவுள் தமது இரத்தத்தினால் சொந்தமாக்கிக்கொண்ட தம் திருச்சபையை ஏற்படுத்தியுள்ளார்'' (அ.ப. 20:28) என்று பவுல் கூறுகின்றார். தலைமை ஆயர் கிறிஸ்துவுக்குப்பின் தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட மந்தைகளுக்கு முன்மாதிரியாய் இருந்து அதை மேய்க்க வேண்டும் (1 பேதுரு 5:4) என்று பேதுரு கூறுகின்றார். இவர்கள் மந்தைகளின் ஆன்மாக்களின் ஆயரும் காவலருமானவர்கள் (1 பேதுரு 2:25). மேய்ப்புப்பணி திருமுகங்களில் காண்பது என்னவெனில் ஒவ்வொரு சபைக்கும் ஒரு மேய்ப்பாளரே இருந்ததாகத் தெரிகின்றது. மேய்ப்பாளருக்கு உள்ள தகுதிகளை 1 திமோ 3:1-7-இல் காணலாம். பெரும்பாலும் இவர்கள் மூப்பர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் (தீத் 1:5-9). இவர்களே மேய்ப்புப்பணியை முழுமை அடையச் செய்கிறார்கள் (அ.ப. 20:28 தொ). இவர்கள் மந்தைகளை மேய்ப்பதில் முழுக்கவனம் செலுத்திக் கடமையை நிறைவேற்றுகின்றார்கள் (யோவா 21:15தொ; மத் 18:12தொ). பவுலின் தூதுவர்களான தீத்துவும் திமோத்தேயுவும், திருச்சபை ஒப்படைக்கப்பட்டுள்ள குருக்கள், திருப்பணியாளர்கள் மேற்பார்வையாளர்களின் மீது அதிகாரம் கொண்டிருந்தனர். வழிபாடுகளிலும், விசுவாசக் கோட்பாடுகளிலும், போதனையிலும் அதிகக் கவனம் செலுத்தினர் (1 திமோ 2:1-15; 4:6.13-16; 6:3). மேற்பார்வையாளர்கள் தங்களுக்கு உட்பட்டவர்கள் மீதுதான் அதிகாரம் செலுத்தமுடியும் (தீத் 1:9). இவ்வாறு திருச்சபையில் பணிகள் படிப்படியாக வளர ஆரம்பித்தன. அப்போஸ்தலர்களின் மறைவுக்குப் பின் திருச்சபையின் தலைவர்கள் மேற்பார்வையாளர், மூப்பர், திருத்தொண்டர் என்ற மூன்று பதவிகள் மட்டுமே பெற்றார்கள் (பிலி 1:1; அ.ப. 20:17.28; 1 திமோ 3:1.8; தீத் 1:5.7). அவர்களின்மீது கைகளை விரித்துக் கடவுளின் வரம் வேண்டி அவர்களைப் பணிகளுக்கு அனுப்புகின்றார்கள் (2 தீமோ 1:6).

புதிய உடன்படிக்கையின் ஊழியர்களுக்குக் குருக்கள் என்ற பட்டம் அளிக்கப்படவில்லை. அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்தது. ஒரே தலைமைக்குருவாகிய இயேசுவின் பணிகளை இவர்கள் தொடர்ந்து செய்தார்கள். அப்போஸ்தலர்களுக்குப் பிறகு குருக்கள் கடவுளுக்கு ஊழியம் புரிந்தார்கள் (தீத் 1:7); மறைபொருளின் கண்காணிப்பாளராய் இருந்தார்கள் (1 கொரி 4:1-2); கடவுளுடைய பலவகைப்பட்ட அருளின் சீரிய கண்காணிப்பாளராக இருந்தார்கள் (1 பேதுரு 4:10). இத்தகைய தன்மைகளோடு கிறிஸ்துவத்தில் குருத்துவம் மூன்று நிலைகளில் வளருகின்றது. திருத்தொண்டர்கள், குருக்கள், ஆயர் ஆகியநிலைகள் ஆகும். புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்ட அத்தனைப் பணிகளையும் இவர்கள் நிறைவேற்றுவார்கள். தங்களுக்களிக்கப்பட்ட அருள் நிலைக்கேற்ப இதைச் செய்வார்கள்.

**கிறிஸ்தவர்கள்** (CHRISTIANS - கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள்)

இறைமகனும் மனுக்குலத்தின் மீட்பருமான இயேசு கிறிஸ்துவை விசுவசித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். இது உண்மையான பட்டப் பெயராக, அல்லது கேலியாகவும் அவமரியாதையாகவும் அளிக்கப்பட்ட பெயராக இருக்கலாம். கலப்பின மக்கள் வாழ்ந்த அந்தியோக்கியாவில் பவுலும் பார்னபாவும் ஓர் ஆண்டு தங்கிப் போதித்தபின் அங்குக் கிறிஸ்துவின் சீடர்களானவர்களுக்கு இப்பெயர் அளிக்கப்பட்டது (அ.ப.11:26).

அ.ப. 26:18-இல் பவுல் அகிரிப்பா அரசனைப் பார்த்து ''அரசே, நீர் இறைவாக்கு

களை நம்புகிறீரா? நம்புகிறீர் என்று அறிவேன்'' என்று சொல்ல, அரசன் ''நீ சொல்வதையெல்லாம் நம்பச் செய்து, சிறிது நேரத்திற்குள் ஈ என்னைக் கிறிஸ்தவனாக்கிவிடுவாய் பாலிருக்கிறதே'' என்றார். துன்பத்திற்கு ளாவதும் (1 பேதுரு 4:16), சிலுவையில் கிறிஸ்து அனுபவித்த துன்பங்களை நினைவு கூர்வதும் (2:21-25; 4:1) கிறிஸ்தவனாய் இருப்பதின் பங்காகும்.

## கிறிஸ்து (CHRIST)

I யூதர்கள் தாங்கள் எதிர்பார்த்த வருங்கால அரசரை மெசியா, அபிடேகம் செய்யப்பட்டவர் என்றழைத்தனர். இச்சொல்லுக்கு இணையான புதிய ஏற்பாட்டுச் சொல்தான் கிறிஸ்து என்பது. இது இயேசுவுக்குப் புதிய ஏற்பாடு அளிக்கும் பட்டமாகும். பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் முன்னுரைத்த உண்மையான அபிடேகம் செய்யப்பட்டவர் இவரே என்பதை (1 சாமு 2:10; சங் 2:2), நற்செய்திகள் மீண்டும், மீண்டும் ''கிறிஸ்து இவரே'' எனக்கூறி வலியுறுத்துகின்றன (யோவா 20:31).

நற்செய்திகளில் கிறிஸ்து என்னும் சொல் பெயருரிப் பொருளில் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாக, 'நீர் மெசியா' (மாற் 8:29); ''ஆண்டவருடைய மெசியா'' (லூக் 2:26); ''இயேசு கிறிஸ்துவை'' (அ.ப. 5:42). ஆனால் இது ஏறத்தாழ இயேசுவின் மற்றொரு பெயராக அல்லது பட்டமாக மாறிவிட்டது எனலாம். சான்றாகக் ''கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி'' (மாற் 1:1); ''நாம் பாவிகளாக இருந்தபோதே, கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்'' (உரோ 5:8); ''கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும்'' (6:3).

ஆனால் இந்த இரு பெயர்களும் உண்மையில் ஒன்றுக்கு மற்றொன்றாக மாற்றுப் பெயர்கள் அன்று. ஏனெனில் இயேசு என்பது அவர் விருத்தசேதனம் பெற்றபோது கொடுக்கப்பட்டபெயர் (லூக் 2:21). ஆனால் மெசியா அல்லது கிறிஸ்து என்பது, அவர் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் ஒப்புரவு ஆக்குபவராக, இடைநிலையினராக உள்ள அவரது மீட்புப் பணியைச் சிறப்பாகக் குறித்துக் காட்டும் பெயராக உள்ளது. சில நேரங்களில் வழக்கமாகப் பயன்படுத்தும் முறையை மாற்றிக் 'கிறிஸ்து இயேசு' என்று பவுல் குறிப்பிடுகிறார் (உரோ 3:24; 8:2.39).

''அபிடேகம் செய்யப்பட்டவர்'' என்ற அடைமொழி பழங்கால மேற்காசிய நாடுகளில் உருவான ஒன்றாகும். அதாவது, உயர் பதவி பெறப்போகும் ஒருவரை எண்ணெயால் அபிடேகம் செய்து, அவரைப் பொறுப்பேற்கச் செய்வது வழக்கம். இது இஸ்ராயேல் மக்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு பழக்கமாகும். ஏனெனில், அவர்கள் சமூகத்தில் இறைவாக்கினர்கள், அரசர்கள், குருக்கள் அனைவருமே (1 அர 19:16; சங் 133:2) அவர்கள் பதவிப் பொறுப்பேற்பதன் அடையாளமாகவும், அதை அறிமுகப்படுத்தும் முகமாகவும் இதைப் பயன்படுத்தினர். ஆனால் இத்தகைய பழைய ஏற்பாட்டு மனிதர்கள் குறுகிய காலத்திற்கே பணிசெய்தனர். அதுவும் முழுமையான சிறப்பான பணியாக அமையவில்லை. எனவே, என்றும் குறைவில்லாத பணிசெய்யக்கூடிய ஓர் அபிடேகம் செய்யப்பட்டவரை மக்கள் எதிர்பார்த்தனர். அவர் மனிதர்களாலோ அவர்கள் கையால் செய்யப்பட்ட எண்ணெயாலோ அபிடேகம் செய்யப்படமாட்டார். மாறாகக் கடவுளாலும் அவரது ஆவியாலும் அபிடேகம் செய்யப்படுவார் (மத் 3:16-17; மாற் 1:10-11; லூக் 3:21-22). அதனால்தான் இயேசு தம்மைப் பற்றி ''ஆண்டவரின் ஆவி என்மேலே. ஏனெனில் என்னை அவர் அபிடேகம் செய்துள்ளார்'' (லூக் 4:18; ஏச 61:1; அ.ப. 10:38) என்று சான்று கூற முடியும். எனவே கிறிஸ்து அல்லது மெசியா என்ற பெயர் அவரது புனிதமான பணியாகிய மீட்பையும் நடுநிலையாளராக விளங்கியதையும் மட்டும் குறிக்கவில்லை. மாறாக அவரது ஆட்தன்மையையும் அதிகாரத்தையும், ஆற்றலையும் அவற்றின் வழியாக அவர் பணிமுடித்த விதத்தையும் குறிக்கிறது.

II. வாசகம் ஆய்வு:-

1. பழைய ஏற்பாட்டுப் பின்னணி:- பழைய ஏற்பாட்டு மக்கள் வரப்போகின்ற அரசரிடத்தும், மீட்பின் எதிர்காலத்திலும் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் கிறிஸ்து இயல் எழுந்தது. எபிரேய அரசனும் (1 சாமு 10:1; 16:13) தலைமைக் குருவும் (எண் 35:25) அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்கும்போது அபிடேகம் செய்யப் பட்டனர். எனவே அரசன் பொதுவாக ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவர் என்றே (1 சாமு 16:6; லூக் 2:26) அழைக்கப் பட்டார். ஆனால் பழைய ஏற்பாட்டின் பிந்தைய காலத்திலே அவர்களின் எதிர்பார்ப்பு மாறியது. அதாவது தாவீதின் வழியிலே ஓர் இலட்சிய அரசர் வரவேண்டுமென்றும் அப்பொழுது கடவுள்என்றும் அழியாத ஓர் அரசை மண்ணில் நிறுவுவார் என்றும், அதனால் இந்த அரசு அமைதி, வளம், நீதி, நேர்மை, கடவுளை உண்மையாக வழிபடும் அறிவு அனைத்தையும் கொண்டு விளங்கும் என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் ஒரு சில பழைய ஏற்பாட்டு நூல்களிலும், திருமறைப் புறநூல்களிலும் கடவுளே தமது அரசை நிறுவுவார் என்று கூறப்பட்டுள்ளதேயொழிய, இதுபோன்ற மெசியாபற்றிய எந்தக் கூற்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

மெசியாவைப் பற்றிய கூற்றுக்கள் இஸ்ராயேலின் எதிர்காலம் பற்றிய இறைவாக்குகளிலிருந்து வருகிறதா (ஆதி 12:1-3; 49:10; எண் 24:17-19) அல்லது தாவீதின் சந்ததி என்றென்றும் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையிலிருந்து வருகிறதா என்பது மிகத் தெளிவாக இல்லை. தாவீது அரசு பற்றிய காலத்தால் முந்திய இறைவாக்கு சங் 18;2 சாமு 22:2-51 ஆகும். யூதாவும், இஸ்ராயேலும் ஒரே தலைவரின் கீழ் இணைக்கப்படும் என்று ஓசே 1:11 கூறுகிறது. எசக்கியேல் நாடுகடத்தப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் தாவீதின் சந்ததியில் தோன்றும் இளவரசன் மக்களின் உண்மையான மேய்ப்பராக இருப்பார்; அவர் என்றென்றும் அரசாள்வார் (எச 37:24) எனக் கூறுகிறார். தாவீதின் வழித் தோன்றல் என்றென்றும் அரசாள்வர் என்ற நம்பிக்கை பழைய ஏற்பாட்டிலே இறுதியாக மிகத் தெளிவாக வருவது, ஆகா 2:21-23; செக் 4:6-10 ஆகிய இறைவாக்கினர்களின் எதிர்பார்ப்பில்தான். இவ்விரு இறைவாக்கினர்களுமே செருபாபேலின்கீழ் மீண்டும் ஆட்சி நிலைநிறுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், இது பாரசீக மன்னருக்கெதிராக நிகழ்த்தும் புரட்சியால் வராது. சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார், ''எனது ஆவியால் நிகழும்'' (செக் 4:6).

சங் 132 நாடு கடத்தலுக்கு முன்னர் உள்ள நம்பிக்கையை மட்டுமே பிரதிபலிக்கிறது (சங் 78:65-72; 89;19-37). ஆமோ 9:11-12 நாடுகடத்தலுக்குப் பின் எழுந்த இறைவாக்காக இருக்கலாம்.

''அந்த நாளில் விழுந்த தாவீதின் கூடாரத்தை
மீண்டும் நிலைநாட்டுவேன்.....

பழைய நாளைப் போலவே அதனைக் கட்டியெழுப்புவேன்''. ஏச 9-11-இல் உள்ள இறைவாக்குகள்தாம் பழைய ஏற்பாட்டில் உள்ள தாவீது பற்றிய நம்பிக்கைகளில் மிகச் சிறந்ததாக, உயர்ந்ததாக உள்ளன. 'அமைதியின் மன்னர்' எனப்படும் அவர் தாவீதின் அரியணையில் அமர்ந்து அமைக்கும் நீதியின் ஆட்சிக்கு என்றுமே முடிவு இராது (ஏச 9:6-7). ஈசாயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளம்பும்; ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கும்; அவர் நீதியை நிலைநாட்டுவார்; ஏழைகளுக்கும் நீதி வழங்கி நிலைநிறுத்துவார். ''ஏனெனில் கடலில் நீர் சூழ்ந்திருப்பது போல ஆண்டவரது அறிவால் இப்பூமி நிறைந்திருக்கும்'' (11:1-9).

ஆனால் இக்கருத்து இரண்டாம் ஏசாயாவில் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. ''தாவீதுக்கு இறைவன் காட்டும் மாறாத பேரன்பு'' தவறாது. இறைவன் என்றுமுள உடன்படிக்கையைச் செய்வார் (55:3). ஆனால் அரசாட்சியை மீண்டும் அமைப்பது பற்றிய வெளிப்படையான வாக்குறுதியில்லை. மக்கள் முழுவதும் எதிர்பார்ப்புக்குரியவர்களாகின்

றனர். இங்கு மக்களின் பாவங்களுக்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் ஒரு துன்புறும் ஊழியனைப் பார்க்கிறோம். அவர் தனிப்பட்ட மனிதராக விளக்கப்படுகி றார் (52:13-53:12). ஆனால் அவர் இஸ்ரா யேல் முழுவதையும் அடையாள முறையில் குறித்துக்காட்டுகிறவராக இருக்கிறார் (49:3). இக்கருத்து பின்னர்த் தோன்றிய மெசியா பற்றிய கருத்து வளர்ச்சிக்கும், கிறிஸ்து இய லுக்கும் முக்கியமான ஒன்றாக அமைகிறது. யோவேல், நாகூம், செப்பனியா போன்ற இறைவாக்கினர்கள் கடவுளே நேரடியாக வந்து ஆட்சி செய்வார் என்று குறிப்பிடுகி றார்களேயொழிய இலட்சிய அரசனைப் பற் றிய இதே கருத்தைத்தான் பிரதிபலிக்கின்ற னர். ஆனால் ஆண்டவரின் நாள் வரு முன்னே இறைவாக்கினர் எலியா வருவார் எனக் கூறுகிறார் (மலா 4:5-6). தானியேல், ஒரு புதிய யுகத்தை இறைவன் தொடங்கி வைப்பார்; அப்பொழுது மனுமகனைப் போன்ற ஒருவர் இவ்வுலகத்தின் ஆட்சி யைக் கையிலேந்தி என்றென்றும் அரசாள் வார் என்கிறார் (தானி 7:13-14.26-27).

2. வெளிப்பாட்டு இலக்கியங்களில்:-

இந்த இலக்கியங்களில் மெசியா பற்றிய நம்பிக்கை நாடுகடத்தலிலிருந்து திரும்பிய பிறகே இடையிடையே வளர்கிறது. யூதா பாரசீக தோலமி ஆட்சிக்குட்பட்டிருந்த போது இந்நம்பிக்கை பின்னோக்கித் தள்ளப் பட்டாலும், மக்கபேயர்களின் புரட்சிக்கு முன்னால் எழுந்த சீராக் ஆகமம், சங்கத் திருவுரையாகமம் ஆகியவை தாவீதின் அரிய ணையை வானளாவப் புகழ்கின்றன (சீரா 47;22). அது மட்டுமல்ல. தாவீது, எசக்கியா, யோசியாவைத் தவிர மற்ற எல்லா அரசர்க ளுமே பாவிகள் எனக் குறிப்பிடுகிறது. சீராக் கிலே சீமோன் எனும் தலைமைக் குருதான் கதாநாயகனாகக் காட்சியளிக்கிறார். சால மோனின் ஞானத்தில் 'தாவீதின் வழிமெசியா' பற்றிய எந்தப் பேச்சுமே இல்லை.

மக்கபேயர்களின் தலைமைக் குருக்கள் இஸ்ராயேலில் முக்கியத்துவம் பெற்ற போது, மெசியா நம்பிக்கை ஒரு புதுத்திருப் பத்தைப் பெற்றது. அதாவது மாபெரும் அற்புதங்களுடன் என்றென்றும் நிலையான ஆட்சியை நிறுவ வருகிற அவர் 'கடவுளால் தேர்ந்து கொள்ளப் பெற்றவர்' அல்லது மனுமகன் எனும் கருத்து 'ஏனோக்கின்' புத்தகத்தில் காணப்படுகிறது. ஆனால் பிந் திய மக்கபேயர்களின் கொடுமை அதிகரித்த போதும், கி.பி.63-இல் பாம்பே எருசலே மைக் கைப்பற்றிய போதும், 'தாவீதின் மெசியாக் கொள்கை' புதியவடிவம் பெற் றது. கடவுள் நம்பிக்கையற்ற எல்லா நாடுக ளையும் அழிக்க ஒருவர் வருகிறார். அவர் குதிரையின் மேலோ, பொன் வெள்ளியின் மேலோ நம்பிக்கை வைக்க மாட்டார். ஏனெ னில் ஆண்டவரே அரசராக வருகிறார். அந்த அரசர் கடவுளால் அபிடேகம் செய்யப்பட்ட வர் எனப்படுவார்.

கும்ரான் சமூகத்தினர், அதாவது எஸ்ஸே னியர்கள், மக்கபேயக் குருக்களை எதிர்த்த னர். ஆனால் இலட்சிய குரு ஒருவரை எதிர்பார்த்தனர். இஸ்ராயேலை ஆள, ஒரு மெசியாவும், ஒரு குருவும் தோன்ற வேண் டும். ஆனால் குரு அரசர்மேல் முன்னுரிமை கொண்டு புனித விருந்திற்குத் தலைமை ஏற்கவேண்டும் என்று எதிர்பார்த்தனர். இக் கருத்துக்களை 'சாக்கடல் சுவடிகளிலிருந்து' பெறுகிறோம். ஆனால் இவர்களின் எதிர் பார்ப்பு குழப்பமாக உள்ளது. இருவரும் மெசியாக்கள்தாம் என்பது தெளிவாக இல்லை. ஒரு சில இடங்களில் மெசியா ஆரோனின் குலத்திலிருந்தும், இஸ்ராயேலி லினின்றும் தோன்றுவார் எனக் கூறப்பட்டுள் ளது. மற்ற இடங்களில் மெசியா ஓர் அரசி யல் ஆட்சியாளராக இருப்பார் எனும் எதிர் பார்ப்பு இருந்தது.

மெசியா என்ற கருத்தைப் பற்றிப் பேசும் கிறிஸ்துவம்அல்லாத முதல்புத்தகம் ''பாரூக் கின் சீரியா வெளிப்பாட்டு ஆகமம்'' ஆகும். இது யூதப்போர்களின் காலமான கி.பி.66-70-இல் எழுதப்பட்டிருக்க வேண் டும். பாவமும், துன்பங்களும் உச்சத்தை அடையும்போது மெசியா வெளிப்படுத்தப் படுவார். பெகமோத், இலவியத்தான்

போன்ற பூதங்கள் உணவாகக் கொடுக்கப் படும். அதே புத்தகத்தில் இதைத் தொடர்ந்து அற்புதமாக உணவு பெருகியதைப்பற்றி வரு கிறது. இதனை ஏராப்போலி நகர் பப்பி யாஸ் இயேசு கிறிஸ்துவோடு தொடர்பு படுத்துகிறார். மெசியாவின் நேரம் வந்ததும் அவர் மகிமையோடு திரும்புவார். அவர்மீது நம்பிக்கைகொண்டு இறந்தோர் அனைவ ரும் வாழ்வுபெற எழுவர். இவ்வாறு மெசி யாவின் விருந்து, மன்னர் போன்ற கருத்துக் கள் நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்டவை எனத் தெளிவாகிறது (லூக் 14:15; 22:28-30; யோவா 6:27-35). எஸ்திரா எனப்படும் திரு மறை சேராத புறநூலிலே மெசியா வெளிப் படுத்தப்பட்ட பிறகு 400 ஆண்டுகள் வாழ் வார். அதன்பின் அவரும் அனைத்து உயிரி னங்களும் இறந்துவிடுவர். அதற்குப் பிறகு ஏழுநாட்கள் உலகம் முன்பிருந்த மூல அமை தியை அடையும். இவை முடிந்தபின் புதிய உலகம், உயிர்ப்பு, நீதித் தீர்ப்பு அனைத்தும் நிகழும்.

மெசியா வருவார் என்ற நம்பிக்கை இரண் டாம் யூதக் கலகம்வரை (கி.பி. 135) மிக உயிருள்ளதாக இருந்தது. அக்காலக் கட்டத் தில் பலர் தங்களை மெசியாவாகக் காட்டிக் கொண்டனர். அதேநேரத்தில் கடவுளே நேரடி யாகத் தமது அரசை நிறுவுவார் என்ற நம்பிக் கையும் வளர ஆரம்பித்தது.

3. இராபிகளின் யூதத்துவம்:-

இராபிகளின் நூல்களில் மெசியா பற்றிய எதிர்பார்ப்பு முக்கியத்துவம் பெறவில்லை யெனினும், பரிசேயர்களின் மத்தியில் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் மெசியா பற்றிய பேச்சு இருந்ததை மரபுகள் கூறுகின்றன. மெசியா வருவது கடவுளுக்கு மட்டுமே தெரியும். மெசியா தாமே தோன்றி அற்புதங் களாலும் அருங்குறிகளாலும் தாம் மெசியா என்று வெளிப்படுத்தும் நாள்வரை இவ் வுண்மை மறைந்தே இருக்கும் என மெசியா வின் வருகைபற்றி இராபிகள் போதித்தனர். அவர்கள் பொதுவாக மெசியா வரும் காலத் தைக் கணிப்பதை விரும்பவில்லை. கணிப்ப வர்களையும் உற்சாகப்படுத்தவில்லை. இஸ் ராயேலின் பாவம்தான் அவரது வருகை யைத் தாமதப்படுத்துகிறது என்று இராபிகள் கூறினர். பல இராபிகளின் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களை ஒத்திருக்கின்றன. உதாரணமாக மெசியா மக்களுக்கும் கடவு ளுக்குமிடையே இடைநிலையாளராக இருந்து அவர்களுக்காகப் பரிந்துபேசி மன் னிப்பைப் பெற்றுத் தருகிறார். 'தார்கும்' மெசியாவை இரண்டாம் ஏசயா கூறும் துன் புறும் ஊழியனோடு தொடர்புபடுத்திப் பேசினாலும் இறுதியில் அவரது துயரங்க ளைக் குறைத்து வெற்றி வீரராக அடையா ளம் காட்டுகின்றது. இராபிகள் மெசியாவின் நீதித்தன்மையையும், ஞானத்தையும் பாராட்டி அவர் ஆண்டவரின் ஆவியால் நிரம்பியிருப்பதால் சட்டத்தைச் சரியான முறையிலே புரிய வைப்பார் என்கின்றனர் (யோவா 4:25). அவர் மீட்பரும், ஆறுதல் தருபவருமாவார்.

இராபிகளின் நூல்களில், தாவீதின் மக னான மெசியா என்பதோடு யோசேப்பின் மகனான மெசியா என்ற கருத்தும் வருகி றது. மேலும் முதல் நூற்றாண்டில், மெசியா இறந்து அவர் ஒரு தற்காலிக ஆட்சியைக் கொண்டிருக்க வேண்டும் எனும் கருத்து புதிதல்ல. இக்கருத்து யூதக்கலகங்களில் ஈடு பட்டு இறந்த சீமோன் கொகிபா போன்றவர் களையும் வைத்து எழுந்திருக்கலாம். செக் 12:10-14-இல் காணப்படும் இறக்கும் மெசி யாவை யோசேப்பின் மகன் மெசியாவோடு ஒப்பிட்டுப்பார்க்க முயன்றாலும் யோசேப் பின் மெசியா பற்றிய கருத்து கி.மு. முதல் நூற்றாண்டில் தெளிவாக இருந்ததா என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஏனெனில் அவர் மக்களின் பாவங்களுக்காகத் தம்மையே பலி யாக்கிக் கொள்ளவில்லை. அவர்வெறும் போர்வீரர் மட்டுமே.

4. மோசேயும், பிலோவில் வார்த்தையும்:-

அலக்சாந்திரியா நகரத்து மெய்யியலார் பிலோ இறைவார்த்தையைப் பற்றிக் கொண் டிருந்த கருத்துதான் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்து இயலைப் பெரிதும் பாதித்தது என்பதை நிரூபிக்கமுடியாது. ஆனால் இறை

வார்த்தையைப் பற்றி அக்காலத்தில் நிலவிய தத்துவத்தைக் கூறுகிறார். உலகுக்கும் கடவுளுக்குமுள்ள உறவையே இத்தத்துவத்தால் விளக்குகிறார். வார்த்தை கடவுளின் முதல் மகனாவார். முதலில் கடவுள் வார்த்தையையும் கருத்துக்களையும் படைத்தார். அவற்றை மாதிரியாக வைத்துதான் உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் படைக்கப்பட்டன. பிலோ, யாக்கோபுக்குப் பெத்தேலில் தோன்றிய கடவுள் இந்த இறைவார்த்தைதான் (ஆதி 31:13) என்று கூறுகிறார். இந்த வார்த்தைதான் மனித இனத்தின் சார்பாக நிற்பவரும், கடவுளின் தூதுவராக மனிதரிடம் வருபவருமாக இருக்கிறார் எனக் குறிப்பிடுகிறார்.

தலைமைக்குரு வார்த்தையை அடையாள முறையில் காட்டுபவராக இருக்கிறார் என்று 'பிலோ' கூறினாலும் மேசேக்கும் வார்த்தைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை வலியுறுத்துகிறார். மோசே சட்டம் கொடுத்தவர் மட்டுமல்லர். அவர் ஓர் இறைவாக்கினர். அந்த இறைவாக்கினர் தமது ஆன்மீகக் கண்களினால் பருப்பொருள்களின் உருவமற்ற தன்மையைக் காண முடிந்ததால் தான் உடன்படிக்கையின் பேழை செய்வதற்கான அமைப்பு அவர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து போயிற்று. மோசேயை ஒரு நிலையில் வார்த்தையின் வடிவாகவே காண்கிறார் பிலோ. இத்தகைய கருத்துக்களை நோக்கும் போது இது கிறிஸ்து இயலுக்கு ஒரு தொடக்கமாக இருக்கிறதென்று சொல்லலாம். ஏனெனில், பிலோவின் 'வார்த்தை ஒரு தனிமனித என்று.

5. மாற்கு நற்செய்தி:-

முதல் நற்செய்தியிலேயே கிறிஸ்து இயல் போதியஅளவு வளர்ச்சிபெற்றுவிட்டது என்றுதான் கூறவேண்டும். மாற்கு இயேசுவுக்குக் கொடுக்கும் அடைமொழிகளில் சிறப்பானது 'கடவுளின் மகன்' என்பது. அதே நேரத்தில் இயேசு துன்புற்று இறந்து, உயிர்த்து மீண்டும் விண்ணகம் செல்லும் 'கடவுளின் மகன்'. ஆதலால், அவரை அவ்வப்பொழுது மெசியா என்றும் (மாற் 8:29; 14:61-62) ''ஆண்டவர்'' என்றும் (11:3), கடவுளுக்குப் பிரியமானவர் என்றும் (1:11; 9:7) அழைக்கிறார். 'தாவீதின் மகன்' என்ற அடைமொழியை அவர் மற்றவர்களைப் போல (10:47-49) இயேசுவுக்குக் கொடுப்பதில்லை. ஏனெனில் இயேசுவே தாவீதுக்கு ஆண்டவராகும் பொழுது (12:35-37) அது ஒத்துவரும் அடைமொழியாக இல்லை என்பதால் ஒதுக்கிவிடுகிறார். அதே நேரத்தில் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள் எதுவுமே இயேசுவின் முழுமையான தன்மையை வெளிக் கொணர்வதாக அமையவில்லை. ஏனெனில் அவர் அவைகளையெல்லாம் கடந்து நிற்கும் மகாமனிதர். அவரே இறையரசின் தூதுவரும் நற்செய்தி அறிவிப்பவருமாக இருக்கிறார் (1:14-15). ஒரு புதுயுகத்தைத் தொடங்கி வைப்பவர் அவர் (2:19). அவர் ஓர் இறைவாக்கினர் (6:4); வெளிப்படாத உண்மைகளையெல்லாம் உணர்ந்து போதிக்கும் ஆற்றல் பெற்றவர் (மாற்கு 13). அவர் இவையெல்லாவற்றையும் மிகுந்த அதிகாரத்தோடு போதித்தார் (11:33); அப்போஸ்தலர்களை அதிகாரத்தோடு அழைத்தார் (1:16-20; 2:14). ஏனெனில் அவரை ஏற்பது கடவுளை ஏற்பதாகும் (9:37). இறைவனின் விருப்பத்தைச் செயல்படுத்துபவர் இயேசுவின் உறவினராவார். அவர் குணமாக்கிப் பாவங்களை மன்னிக்கிறார் (2:10). இயற்கையின் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு (4:35-41; 6:34-44. 45-42). அப்போஸ்தலர் மாபெரும் ஆச்சரியத்திற்கு உள்ளாகிறார்கள். ஒருமுறை அவர் உருமாற்றம் பெறுவதைக் காண்பதால் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது பெற்ற அனுபவத்தை அவர்களும் பகிர்ந்து கொள்கிறார்கள் (1:9-11). இறுதியாகச் சிலுவையருகில் ஓர் உரோமைய நூற்றுவர் தலைவன்கூட ''இவர் உண்மையிலே கடவுளின் மகனாக இருந்தார்'' (15:39) என்று கூறுமளவுக்கு இயேசுவின் வாழ்வு அமைகின்றது.

இயேசுவின் பணியும், அவரது தன்மையும் சீடர்களுக்கு மறைபொருளாகவே உள்ளது. அவர் துன்புறுவதை அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை (6:52;

8:17-21. 32-33). இயேசுவின் போதனையைக் கூட, இயேசுவின் சிறப்பானவிளக்கம் பெறாமல் (4:10-13. 33-34) அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது எதிரிகளிடம், தாம் எந்த அதிகாரத்தால் போதிக்கிறார் என்பதை அவர் விளக்க மறுக்கிறார் (11:27-33). 'தீய ஆவிகள்' ஆவிகளாக இருந்ததால் அவை இயேசுவை மிக எளிதாக இனம் கண்டு கொண்டு (1:34) கடவுளின் தூயவரே (1:24), கடவுளின் மகனே (3:11) என அழைப்பதைக் காட்டுகிறார். மாற்கு நற்செய்தியாளர் தாம் பயன்படுத்தியுள்ள மூலங்களில் 'மெசியா ரகசியம்' எனும் கொள்கையைப் புகுத்தியுள்ளதால், இயேசு ஏன் மறுக்கப்பட்டார், ஒதுக்கப்பட்டார் என்பதை ஆதிக் கிறிஸ்தவர்கள் விளக்குவதற்கு வசதியாக அமைந்தது.

மாற்கு காட்டும் இயேசு, மனிதத்தன்மையும் தெய்வீகத் தன்மையும் இணைந்தவராகக் காட்சியளிக்கிறார். ஞானஸ்நான நிகழ்ச்சியில் பரிசுத்த ஆவி அவர்மீது இறங்கிவருவதால் (1:10) அவர் கடவுளின் மகனாகச் சுவிகாரம் செய்யப்படுகிறார் என்ற எண்ணம் எழலாம். அதைத் தொடர்ந்து அவர் சாத்தானால் சோதிக்கப்படுகிறார் (1:13); கடவுளைத் தவிர நல்லவர் வேறு எவருமில்லை என்பதை நிலைநாட்டுகிறார் (10:18). அவரது வலப்பக்கமும் இடப்பக்கமும் அமர அருள்வது அவருடைய கையில் இல்லை (10:40). அவரது அழைப்பின் தனித்தன்மை எளிமையான சேவையில் அடங்கியிருக்கிறது (10:45). எதிர்காலத்தைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அவர் அறிந்திருக்கவில்லை (13:32). கெதுசமனியிலே தந்தையிடம் அவர், ''இந்தப்பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது ஆயினும் என்னுடைய விருப்பமன்று; உமது விருப்பத்தின் படியே எனக்கு ஆகட்டும்'' என்று செபிக்கிறார் (14:35). சிலுவையிலே உரத்த குரலெழுப்பி ''என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?'' (15:34) எனக் கூறுகிறார்.

6. மாற்கைச் சேராத, மத்தேயு, லூக்காவின் பகுதிகள்:-

மத்தேயு நற்செய்தியிலும், லூக்காவின் நற்செய்தியிலும் மாற்கு எழுதாத பகுதிகள் இருந்தால் அந்த மூலச் செய்திகள் எல்லாம் 'கியூ' (Q) என்ற எழுத்தால் குறிக்கப்படுகின்றன. இவை வழக்கமாக இயேசுவின் பணியையும், ஆள்தன்மையையும் விளக்குவதிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கின்றன.

இந்தக் 'கியூ' மூலச் செய்திகள் காட்டும் இயேசு ஓர் ஒழுக்க ஆசிரியராகத் தென்படுகிறார். அவரை, ''ஆண்டவரே, போதகரே'' என அழைத்தபோது அதைவிட என்விருப்பத்தை ஏற்று நடப்பதே மிகமுக்கியமானது என்கிறார். அவரோடு உண்டது குடித்தது ஆகிய எதுவுமே, இறையரசின் இறுதிநாள் தீர்ப்புக்குப் பயன்படாது என எச்சரிக்கிறார் (லூக் 13:26-27).

கிறிஸ்து இயல் முக்கியத்துவம் வாய்ந்த பல பகுதிகள் இயேசுவின் ஆள்தன்மையைப் பற்றிய நேரடியான, வெளிப்படையான எப்போதனையையும் கொண்டிருக்கவில்லை. காணாமல்போன ஆடு உவமையில் (மத் 18:12-14 = லூக் 15:3-7) பாவிகள்மீது இயேசு கொண்ட அக்கறையும், கடவுள் கொண்டிருக்கும் பரிவும் வெளிப்படுகிறது. அஃதோடு இறையரசு இத்தகைய ஒதுக்கப்பட்டவர்களுக்கு உரியதாக மாறியதை உள்ளார்ந்த விதத்திலே நியாயப்படுத்துகிறது. இயேசு தம் பணியைச் சரியென்று காட்டுவது மத்தேயு நற்செய்தியின் திராட்சைத் தோட்ட உவமையில் (20:1-15), சிறப்பாகப் பெரும் விருந்து பற்றிய உவமையில், வெளிப்படையாகத் தெரிகிறது (மத் 22:1-10 = லூக் 14:15-24). தாலந்துகளின் உவமை அப்போஸ்தலர்கள் நற்செய்தி அறிவிக்க வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகிறது எனப புரிந்து கொள்ளலாம் (மத் 25:14-30=லூக் 19:1-17).

இயேசு தொடங்கி வைத்துள்ள புதிய யுகத்திற்கும் பழைய யுகத்திற்குமுள்ள வேறுபாட்டை விளக்கும் பகுதிகள் பல உள்ளன

(மத் 11:4-6=லூக் 7:28-23; மத் 11:11=லூக் 7:28; மத் 11:12=லூக் 16:16; மத் 12:28=லூக் 11:20; மத் 13:16-17=லூக் 10:23-24). ''கியூ'' செய்தி மூலங்களில் தம் சீடர்களை இறையரசின் நற்செய்தியை அறிவிக்குமாறு கட்டளையிடும் இயேசு (லூக் 10:1-16=மத் 9: 37-38; 10:7-16.21-23.40) கூறுகிறார்: ''உங்களை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்: என்னை ஏற்றுக்கொள்பவனோ என்னை அனுப்பியவரையே ஏற்றுக்கொள்கிறான்''. எனவே, இயேசு கடவுளின் தூதர். அவர் மனிதனது மீட்பிற்கு முடிவானவராக இருக்கிறார். இதைத் தொடர்பாகக் கொண்டு, இயேசுவும் அவரது சீடர்களும் புறக்கணிக்கப்படுவது பற்றியும், புதியபணி ஏற்படுத்தியுள்ள முரண்பாடுகள் பற்றியும், விசுவாசிப்போர் ஏற்றுக்கொள்ளவேண்டிய தியாகம் பற்றியும் (மத் 10:34-38=லூக் 12:51-53; 14:26-27; மத் 12:30=லூக் 11:23) பல பகுதிகள் தெளிவாகக் கூறுகின்றன.

புது யுகத்தைப் பற்றிக்கூறும் பகுதிகளும் (லூக் 11:29-32=மத் 12:38-42), இயேசு புறக்கணிக்கப்படுவதைச் சொல்பவையும் (மத் 8:20 =லூக் 9:58; மத் 11:19=லூக் 7:34), சீடத்துவத்தைப் பற்றிக் கூறுபவையும் (மத் 10:26-33=லூக் 12:2-12; மத் 24:43-51=லூக் 12:35-46) ஆகிய அனைத்துமே இயேசுவை 'மனுமகனாக' அடையாளம் காட்டுகின்றன.'கியூ' மூலத்தைத் தொகுத்தவர் இயேசுகிறிஸ்து மீண்டும் மனுமகன் என்ற பெயரில்தான் இவ்வுலகைத் தீர்ப்பிடும் நடுவராக வருவார் என எண்ணியிருக்கலாம்.

மேலே கூறப்பட்டவையெல்லாம் ஒரு தொடர்ச்சியான கருத்தை நமக்கு உணர்த்துகிறது. ஆனால் இவற்றினூடே ஒரு புதிய கருத்தும் புகுத்தப்படுகிறது. அதில் இயேசு கடவுளின் மகனாகவும், கடவுளின் ஞானமாகவும் அடையாளம் காட்டப்படுகிறார். இயேசு சோதிக்கப்படும்பொழுது 'கடவுளின் மகன்' என அழைக்கப்படுகிறார். கடவுளின் மகன் எனும்போது மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருப்பதாகப் பொருளாகிறது. அவர் உலக அரசைக் கைப்பற்றுவதென்பது அவரால் செய்து முடிக்கக்கூடியது; அப்படிச் செய்யத்தூண்டும் சோதனையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. எனவே, 'கியூ' காட்டும் கடவுளின் மகன் என்பது ஒருபுதுவகை மெசியாவை நமக்கு அடையாளம் காண்பிக்கிறது. மத் 11:25-30=லூக் 10:21-22-இல் இயேசு ''மகன்''என்றே அழைக்கப்படுகிறார். ஆனால் இது மெசியாவின் பணியோடு தொடர்புடையதாகக் காட்டப்படாமல், இறைவனைப் பற்றிய அறிவு ஞானிகளுக்கும், விவேகிகளுக்கும் மறைக்கப்பட்டு, குழந்தைகட்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டதோடு தொடர்புபடுத்தப்பட்டு, அதனால் தந்தை யாரென்பது மகனுக்கும், மகன் யாருக்கு வெளிப்படுத்துவாரோ அவர்களுக்கு மட்டுமே தெரியும் என்றும் விளக்கப்படுகிறது. இக்கருத்து யூதர்களுக்கு முற்றிலும் புதிது. எனவே மெசியா பற்றியகருத்தில் ஒரு புதிய சிந்தனை புகுகிறது. இத்தகைய பகுதிகள் பழமொழியிலும், சாலமோனின் ஞானத்திலும் வரும் 'விண்ணக ஞானத்தோடு' இயேசு ஒன்றாகக் கருதப்படுவதைக்காண முடிகிறது. எருசலேமை நினைத்துக் கண்ணீர்விடும் நிகழ்ச்சியில் (மத் 23:37-39 = லூக் 13:34-35) ஞானம் தன் குழந்தைகள் மீது ஒரு புறாவைப்போல் அசைந்தாடிக்கொண்டிருப்பதாகச் சுட்டுகிறது.

7. மத்தேயு:-

'கியூ'-வில் காணப்படும் கிறிஸ்தியல் மாற்கு நற்செய்தியைப் போலவே நன்கு வளர்ச்சி பெற்றதாக உள்ளது. எனவே மத்தேயு தாம் பெற்ற மூலச் செய்திகளோடு மிகக் குறைவாகவே கருத்துக்களைச் சேர்க்கிறார். மத்தேயு இயேசுவைக் கடவுளின் மகனாக, மெசியாவாக, சட்டத்தை அளிப்பவராகக் காட்டுவதிலே அதிக முக்கியத்துவமும், முயற்சியும் எடுக்கிறார். இதனை நிலைநாட்டுவதற்கு அவர் கொடுத்த முதல் கருத்து கன்னியிடம் இயேசு பிறப்பதைப் பற்றியதாகும் (மத்1:18-25). மெசியா என்ற முறையிலே தமது அரச மாண்பை இயேசு சட்டப்படி தமது தந்தையான யோசேப்பிடமிருந்து பெறுகிறார் (1:1-17). இயேசு வளர்ந்த ஊர்

நசரேத்து என்பதை அறிந்த நற்செய்தியாளர், அவர் பிறந்த ஊர் பெத்திலகேமாகத்தான் இருக்கவேண்டும் என்பதை மனதில் வைத்து மிகக் கவனமாக இரண்டு உண்மைகளும் முரண்படாதபடி பார்த்துக் கொள்கிறார். எனவே அவரும் லூக்காவும் இயேசு பெத்திலகேமில்தான் பிறந்தார் என்பதை வலியுறுத்துகின்றனர். மத்தேயு இயேசுவின் வாழ்விலேயே அவரைப் பற்றிய பழைய ஏற்பாட்டு மெசியா பற்றிய முன்னறிவிப்புகளைக் காண்கிறார் (1:23; 2:6.15.18; 4:15-16; 8:17; 12:18-21; 13:35). மத்தேயு பயன்படுத்தியுள்ள சிறப்பான தனிப்பட்ட கருத்துக்கள் எவையென்று பார்க்கப்போனால், மலைப் பொழிவில் இயேசு கூறுபவற்றைப் பழைய போதனைகளோடு இணைத்து வேறுபடுத்திக் காட்டுவதில்தான் உள்ளது. உதாரணமாக ''உங்கள் முன்னோருக்கு இப்படிக் கூறியுள்ளதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.....நானோ உங்களுக்குச் சொல்கிறேன்''(5:21-22).

8. லூக்கா - அப்போஸ்தலர் பணி:-

நற்செய்தியாளரின் கருத்துக்களையும் அவர் பயன்படுத்திய மூலத்தின் கருத்துக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது மிகக் கடினமென்றாலும், மெசியா தாவீதின் மகன் எனும் கருத்தில் ஆழமாக ஊன்றிய மரபோடு லூக்கா அதிகமாகத் தொடர்புகொண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இயேசுவின் வியப்புக்குரிய பிறப்பு காபிரியேல் தூதரால் அறிவிக்கப்படுகிறது (லூக் 1:26-38). அவர் பெத்திலகேமில் பிறக்கிறார் (2:4). மரியாவின் கன்னிமைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை. ஆனால் 1:34;2:5-இல் சுட்டிக்காட்டப்படுகிறது. லூக் 1:11.32-33.35; 2:26.38-இல் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழிநடை யூத மெசியா கொள்கையின் அப்பட்டமான பிரதிபலிப்பாகத் தெரிகிறது. ஒரே ஒரு கருத்துமட்டும் வேறுபட்டு நிற்கிறது. அதாவது இயேசு கடவுளின் மகன் என அழைக்கப்படுகிறார். இயேசு இஸ்ராயேலுக்கு இறையரசை மீட்டுத்தருவார் என்ற கருத்து லூக் 24:21; அ.ப.1:6 என இரண்டிலும் கூறப்படுகிறது. லூக்காவும் மத்தேயுவைப் போல மறைநூல் இயேசுவின் வாழ்வில் நிறைவேறுவதை வலியுறுத்துகிறார் (லூக் 24:25-27.44-46).

கடவுளின் மகனான தான் தந்தையின் இல்லத்தில் இருப்பது இயல்பு எனச் சிறுவனான இயேசு நினைக்கிறார் (2:49). அதே நேரத்தில் அவர் ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவரானார். தூய ஆவி அவர்மேல் காணக் கூடிய வடிவிலே அவரது ஞானஸ்நானத்தின் போது இறங்கி வருவதால் அவர் தூய ஆவியால்நிரப்பப்படுகிறார்(4:1;அ.ப.10:38-இல் பேதுரு இயேசு கிறிஸ்துவைக் கடவுள் பரிசுத்த ஆவியாலும், ஆற்றலாலும் நிரப்பினார் என்கிறார்). லூக்கா நற்செய்தியாளர் கொணரும் இயேசுவின் தலைமுறை அட்டவணை (3:23-38) இயேசு யோசேப்பின் வழியிலே ஆதாமின் மகனாகவும், இறுதியில் கடவுளின் மகனாகவும் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறார். வேறு ஓர் இடத்தில் இயேசு, கடவுளைத் தம் தந்தையாகக்காட்டிப் பேசுகிறார் (22:28-30; 23:46; 23:34).

லூக்காவின் சிறப்பான பகுதிகள் இயேசுவை இறைவாக்கினராகவும் (7:16) இயேசு தம்மையே இறைவாக்கினராகக் கூறுவதையும் காட்டுகின்றன (13:33). 24:19 இலும் ''கடவுளுக்கும் மனிதருக்கும் முன்னால் சொல்லிலும் செயலிலும் வல்லமை பெற்ற இறைவாக்கினராகத் திகழ்ந்தார்'' எனும் அதே கருத்து வலியுறுத்தப்படுகிறது. அப்போஸ்தலர் பணியில் இயேசு, மோசேயினால் முன்னறிவிக்கப்பட்ட, மோசேயைப் போன்ற இறைவாக்கினர் என்று கூறப்படுகிறது (அ.ப.3:22-23). லூக்காவின் சிறப்புப் பகுதிகளில் பல இயேசுவின் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. அவை அனைத்தும் இறைவாக்குத்தன்மை கொண்டவையாக உள்ளன (லூக் 11:27-28; 12:14.54-56; 13:1-9; 16:19-31).

நற்செய்தியின் பிறபகுதிகள், பல புதுமைகளும் அற்புதத்தன்மைகளும் கொண்டதாக உள்ளன. ஏராளமான மீன்பாட்டைக்கண்ட

பேதுரு, ''ஆண்டவரே பாவியெனைவிட்டு அகலும்'' என்கிறார் (லூக் 5:8). ''சாத்தான் மின்னலைப்போல் விழக்கண்டேன்'' (10:17-20) என இயேசு கூறுகிறார்; நல்ல கள்ளனிடம் ''இன்றே என்னோடு வான் வீட்டில் இருப்பாய்'' என்கிறார் (23:43).

லூக்கா நற்செய்தியாளர் இயேசுவை ஆண்டவர் என அழைப்பதிலே மற்ற ஒத்தமை நற்செய்தியாளர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கிறார் (10:1; 11:39; 12:42; 17:5-6; 19:8; 22:61; 24:34). 'ஆண்டவரே' எனும் வார்த்தை 'மதிப்பிற்குரியவரே' என்பதிலிருந்து கடவுளைக் குறிக்கும் அடைமொழி வரை பல பொருள்களிலே புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இயேசுவின் வாழ்க்கையில் பொதுவாக அவர் 'இராபி' என அழைக்கப்பட்டார் (மாற் 9:5; 11:21; 13:1; லூக் 7:40). இராபி என்ற சொல்லுக்குப் பதிலாக நற்செய்தியாளர்கள் ஆண்டவரே எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றார் (மத் 7:21-22; 17:4-15; லூக் 7:6; 11:1; 18:41). ஆனால் லூக்கா ஆண்டவரே எனும் சொல்லைப் பயன்படுத்தும்போது அவர் மக்களனைவருக்கும் ஆண்டவராக இருக்கிறார் என்பதை மனதில்வைத்து, அவரது விண்ணக மாண்பை உணர்ந்து கூறுகிறார்; அப்போஸ்தலர் பணி, கடவுள் அவரை உயர்த்தி அவரை ஆண்டவராகவும், மெசியாவாகவும் மாற்றினார் என்பதற்குச் சான்று பகர்கின்றது (2:36; 3:13; 10:40-42; 13:32-35).

அப்போஸ்தலர் பணியில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றும் பல அடைமொழிகள் இயேசுவைப் பற்றிய போதனைகளிலிருந்து எடுக்கப்பட்டவை: மீட்பர் (5:31; 13:23); ஊழியன் (3:13.26; 4:27.30); மன்னர், வாழ்வின் ஊற்றானவர் (3:15; 5:31); தூய்மையும், நீதியும் மிக்கவர் (3:14; 7:52; 22:14); வரப்போகிறவர் (19:4) எனப் பல அடைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

9. பவுல்:-

இயேசு சிலுவையிலறையப்பட்ட சில ஆண்டுகளிலே மிகச் சிறந்த கிறிஸ்தியல் உருவாகி வளர்ந்துள்ளதைத்தான் பவுலின் திருமடல்கள் காட்டுகின்றன. பவுல் கிறிஸ்து இயல் கொள்கைகளில் ஆர்வம் கொண்டவரல்லர். ஆனால் கிறிஸ்துவுக்கு விசவாசத்தோடு, பணிந்து, ஊழியம் செய்யமுன் வருபவனே அவர்வழியாக மீட்புப் பெறமுடியும் எனும் கருத்தைக் கூற வருகிறார். இதனால் அவரது கிறிஸ்து பற்றிய சிந்தனைகள் நான்காம் நற்செய்தியின் சிந்தனையை ஒட்டியுள்ளன.

பவுலின் எல்லாமடல்களிலும் 'கிறிஸ்து' எனும் பெயர் இயேசு எனும் பெயருக்குத் துணைப் பெயராக, முன்வரும் ஒன்றாக அல்லது இயேசு எனும் பெயருக்குப் பதில் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து என்ற பெயர் உயிர்த்த இயேசுவோடு உள்ள உறவுகளைப் பரந்துபட்ட அளவில் உணர்த்துகிறது. 'கிறிஸ்துவுக்குள்' அல்லது 'இயேசு கிறிஸ்துவுக்குள்' வாழ்வது என்பது ஒருவன் கிறிஸ்தவனாய் அது உள்ளடக்கும் எல்லாப் பண்புகளையும் கொண்டு, வாழ்தல் ஆகும். மேலும் இயேசுவைப் பின்பற்றுபவருக்கு என்ன நிகழும் என்பதைப் பல உருவகங்களால் விளக்குகிறார். அவர் ஏற்புடையவராக்கப்படுவார் (உரோ 3:24); அவரது தீட்டுக் கழிக்கப்படும் (3:25); அவரது அடிமைத்தனம் நீக்கப்பட்டு உரிமையுள்ள மனிதராவார் (3:24; கலா 3:13); ஒரு காலத்தில் கடவுளுக்கு எதிரியாக இருந்தும் இன்று கடவுளோடு ஒப்புரவாக்கப்படுவார் (2 கொரி 5:18-20); கடவுளின் மகனாகச் சுவிகாரம் செய்து கொள்ளப்படுவார் (உரோ 8:15-16). இவையெல்லாம் ஒருவர் வாழ்வில் நிகழவேண்டுமென்றால் அது ஒருவர் கிறிஸ்துவின்மேல் கொள்ளும் விசுவாசத்தையும் அவர் இயேசுவோடு தம்மை இனம் காண்பதைப் பொறுத்தும் இருக்கிறது. எனவே கிறிஸ்து மட்டுமே ஒருவனுக்கு இவை ஒவ்வொன்றையும் செய்ய முடியும் என்பது பவுலின் தெளிவான நம்பிக்கை.

தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகங்கள்தான் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசும் முதல் மடல்.

அவை நற்செய்தி கூறும் மனுமகனைப் போன்றவரைத்தான் தனது செய்தியில் படம் பிடித்துக் காட்டுகின்றன. (1 தெச 1:10; 3:13; 4:13-17; 2 தெச 2:3-12). இயேசு ஆண்டவர் எனவும் அழைக்கப்படுகிறார் (1 தெச 1:1).

கிறிஸ்து, அல்லது மெசியாவைப் பற்றி வழக்கமாகக் கூறப்படும் விளக்கத்தை மாற்றி அமைக்கிறார் பவுல். அவர் சிலுவையில் அறையப்பட்டாலும் அவர் கடவுளின் ஞானமாகவும் ஆற்றலாகவும் இருக்கிறார் (1 கொரி 1:24). இந்த ஞானம்தான் எல்லா அறிவுக்கும் போதனைக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது (1 கொரி 2:10); இதன் மறைபொருளை உலகத்தை ஆள்வோர் அறிவதில்லை (1 கொரி 2:8). பழைய ஏற்பாட்டு மீட்பு நிகழ்ச்சிகளில் இந்த மெசியா ஈடுபாட்டோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்; இவரே பாலைவனத்தில் மோசே வழியாக இஸ்ராயேலர்கள் தண்ணீர் பெற்ற பாறை. இவரே வானிலிருந்து பொழியப்பட்ட மன்னா (1 கொரி 1-4). விசுவசிப்போர் அவரது உடலைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்; இந்த உடலை ஆண்டவரின் விருந்தில் பயன்படுத்தப்படும் ஒரே அப்பம் சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் அனைவரும் அவரது உடலிலும் இரத்தத்திலும் பங்குபெறுகின்றனர் (1 கொரி 10:16-17). திருச்சபையும் உறுப்பினர் பலரோடு சேர்ந்து அவரது உடலாக உள்ளது (1 கொரி 12:13-31). மெசியா என்பவர் விண்ணக மனிதர். அவர் மண்ணில் உள்ள எல்லா எதிரிகளையும் அழித்தொழிக்கும்வரை, சாவு உட்பட அனைத்தையும் வீழ்த்தும்வரை, அவரது ஆட்சி முடிவு பெறாது. ஆனால் தந்தையிடம் அரசாட்சியை ஒப்படைத்தபின் அவரது ஆட்சி நிறைவுறும். ஏனெனில் கடவுளே அனைத்திலும் அனைத்துமாக இருக்கிறார் (1 கொரி 15:24-27). பவுலைப் பொறுத்தவரையில் கிறிஸ்து ஒருவகையில் கடவுளுக்குக் கீழ்ப்பட்டவர்; கடவுளே கிறிஸ்துவுக்குத்தலையாக உள்ளார். எவ்வாறு ஆண் பெண்ணுக்குத் தலையாயிருக்கிறானோ அவ்வாறே என்க (1 கொரி 11:3). உலகிலே பல ஆண்டவர்கள், கடவுள்கள் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு கடவுளாம் தந்தையும், ஒரே ஒரு ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும் மட்டுமே உலகில் இருக்க முடியும் எனும் கருத்தையும் முதல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் பவுல் தெளிவாகக் கொண்டு வருகிறார்.

2 கொரிந்தியர் திருமுகத்திலே கிறிஸ்துவை விசுவசிப்பவன் அவரோடு தன்னை ஐக்கியப்படுத்தி ஒன்றுபடுவதை வலியுறுத்துவதோடு, மூன்று முக்கியகருத்துக்களை முன் வைக்கிறார் (அ) இயேசு கிறிஸ்து ஆண்டவர் விண்ணகச் செல்வங்கள் நிறையப் பெற்றவராயினும் அவரைப் பின்பற்றுவோர் செல்வராகும் பொருட்டுத் தம்மையே அவர் ஏழையாக்கிக் கொண்டார் (2 கொரி 8:9). (ஆ) இயேசுவே புதிய உடன்படிக்கை. இது மோசேயின் வழியாகச் செய்த பழைய உடன்படிக்கையைப் போலன்று; அது தீர்ப்புக்கும் தண்டனைக்கும் பலரை இட்டுச் சென்றது. இவ்வுடன்படிக்கையின் வழியாக ஆண்டவர் இயேசுவின் மகிமை, அப்போஸ்தலர்களின் இதயங்களில் ஒளிவீசுகிறது (4:4-6). (இ) மேலும் கிறிஸ்து தூயஆவியோடு மிக நெருங்கிய முறையிலே ஒன்றித்திருப்பதால் கிறிஸ்துவுக்கும், தூய ஆவிக்கும் எந்த வேறுபாடுமில்லை என்று கூறுமளவுக்கு இணைந்திருக்கிறார்கள். பவுல் இயேசு சிலுவையில் பலவீனமுள்ளவராகத்தான் அறையப்பட்டார் என்பதை வலியுறுத்தியதன் காரணமாக அவரது மனிதத்தன்மையைச் சிறப்பாகக் கொணர்கிறார் (2 கொரி 13:4). உரோமையருக்கு எழுதிய திருமடலிலும், கலாத்தியருக்கு எழுதிய திருமடலிலும் இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்த பலவீனத்தை வேறொரு விதத்திலே சுட்டிக்காட்டுகிறார்; ''கடவுள் தமது மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்'' (கலா 4:4); சட்டத்தின் சாபத்திலிருந்து மனிதனை மீட்க அவரே சாபமானார் (கலா 3:13; 2 கொரி 5:21); பாவத்தின் சாயலான உடலை எடுக்குமாறு செய்தார் (உரோ 8:3). இவ்வாறு பலவகைகளில் அவர் கடவுளைவிடச் சற்றுத் தாழ்நிலையிலே வந்தார் என்பதை உணர்த்துகிறார்.

பிலிப்பியருக்கும், கொலோசேயருக்கும் எழுதிய திருமடல்களிலே மற்றமடல் களைப் போலவே இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகிறார் (பிலி1:6; 3:20; 4:5; கொலோ 3:4). பிலிப்பியருக்கு எழுதிய திருமடலில் வரும் கிறிஸ்து இயல் பாடல் 2:5-11 வேறு மடல்கள், கூறாத எந்தப் புதிய கிறிஸ்தியல் கருத்தையும் கூறவில்லை.''கட வுள் நிலையில் இருந்த அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின்தன்மைபூண்டு நம்மைப்போல் ஒருவரானார். அவர் கீழ்ப் படிதலினால் இறைத்தந்தை அவரை எல்லோ ருக்கும் மேலாய் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்ற பெயரை வழங்கினார்''.

பவுல் இயேசுவின் தெய்வீகத்திலே முழு மையான விசவாசம் கொண்டிருந்தார் என் பது கொலோ 2:9-இல் மிகத் தெளிவாகிறது: தெய்வீகத்தின் முழுமையே இயேசுவிலே உடலெடுத்து வந்ததாகக் குறிப்பிடுகிறார். அவரிலே அவருக்காக அனைத்தும் படைக் கப்பட்டன. அனைத்திற்கும் முந்தியவராக அவர் இருக்கிறார். எனவே அவர் படைப் பிற்கெல்லாம் முந்தியவராகப் பாதுகாப்பு, மீட்பு ஆகிய அனைத்தின் காரணமாகவும் இருக்கிறார்.

எனவே பவுல் தம் சிந்தனையில் இயேசு வின் தன்மையையும், அவரது மனிதச் செயல்பாடுகளையும் பலவகைகளிலே அணுகி ஆய்கிறார். கிறிஸ்துவை, ஆசிரிய ராக, அவரது அப்போஸ்தலர்களின் அன்பு நண்பனாக,மெசியாவின் பல்வேறு நிலைக ளிலே அவரைப் புரிந்து கொள்ளும் விதத் தில், விண்ணக மனிதனாக, ஆண்டவராக, புதிய உடன்படிக்கையைத் தொடங்கி வைப் பவராக, கடவுளின் ஞானமாக இப்படி எல் லாவகைகளிலும் ஒருங்கிணைத்துப் பார்க்கி றார். எனவே, இயேசுவின் எத்தன்மையும் இவரது பார்வையில் விடுபட்டுப் போக வாய்ப்பே இல்லை. இவ்வாறு கிறிஸ்து வைப் பற்றிச் சிந்தனையில் அளவிடமுடி யாத செயல்பாடு பவுலால் நிகழ்ந்துள்ளது. எனவே பின்னர் வளர்ந்த கிறிஸ்து இயலில் காணும் எல்லாக் கூறுகளுமே ஏற்கெனவே பவுலின் மடல்களில் காணும் இறையியலில் பொதிந்துள்ளன. நற்செய்திகள் கூறுவது போல் இயேசுவின் பணியில் நிகழ்ந்த எந்த அற்புதங்களையும் அவர் இங்குக் குறிப்பிட வில்லை. ஏனெனில் மண்ணில் வாழ்ந்த இயேசுவை அவர் சிலுவையில் அறையுண் டவராக மட்டுமே அதிகம் அறிந்திருந்தார் (1 கொரி 7:10.25). இவ்வாறு பவுல் சிந்தனை யில், நன்கு வளர்ச்சி பெற்ற கிறிஸ்து இயல் சிந்தனைகளை நாம் காணமுடிகிறது.

10. பிந்தைய புதிய ஏற்பாட்டு நூல்கள்:- முதலாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பவுலின் மடல்கள் சிறப்பும், பெருமையும் பெற்றன. ஏனெனில் அப்பொழுதுதான் அவை ஒன்று சேர்க்கப்பட்டுப் பல சபைக ளில் வாசிக்கப்பட்டு வந்தன. எனவே மற்றப் புத்தகங்களும் அந்த மடல்களைப்போலவே அமைக்கப்பட்டன.

அ. எபேசியருக்கு எழுதிய திருமுகம்:- இது போன்று எழுதப்பட்டவைகளில் முதலாவது எபேசியருக்கு எழுதிய திருமுக மாகும். இம்மடல் கொலேசியருக்கு எழு திய திருமுகத்திற்கு மேலாகப் புதிதான எந் தக் கிறிஸ்து இயல் கருத்தையும் கூற வில்லை. கிறிஸ்து கீழுலகங்களுக்கு இறங் கிச் சென்றதைப் பற்றிப் பேசுகிறது (4:9-10); இவ்வாறு இறந்தோர்கட்கும் அவர் போதித் தார் எனும் கொள்கைக்கு இது வழிவகுக்கி றது (1 பேதுரு 3:18-22).

ஆ. எபிரேயருக்கு எழுதிய திருமுகம்:- எபிரேயருக்கு எழுதியதிருமுகத்தை ஒரு பெரும் மறையுரை என்றே சொல்லலாம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படப் போகின்ற வேளையிலே இயேசுவையும் அவரது பணி யையும் மையமாக வைத்து அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன்மூலம் கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நோக்கோடு எழுதப்பட்டது இது. மற்ற எல்லாப் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை யும்விட இந்நூல் இயேசு கிறிஸ்துவின் மனி தத்தன்மையைப் பெரிதும் வலியுறுத்துகி

றது. அவர் எல்லா மனிதர்களுக்காகவும் சாவைச் சுமந்தார் (2:9); எனவே அவர் மனித குலத்தின் பிரதிநிதியாகிறார். அவர் மனித உடலெடுத்து வந்தபோது உரத்த குரலெழுப்பிக் கண்ணீரோடு செபித்தார். தம் பாடுகள் வழியாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (5:7-8). மற்ற மனிதர்களைப் போலச் சோதனைக்குட்பட்டாலும் அவர் பாவமில்லாதவராயிருந்ததால் மனிதர்களின் பலவீனத்தின் மீது இரக்கம் கொண்டார் (4:15). அவர் கடவுளின் தனிப்பெரும் அப்போஸ்தலராகவும், தூதுவராகவும், தலைமைக் குருவாகவும் (3:1) இருந்தாலும் அவர் தம்மையே மகிமைப்படுத்திக்கொள்ளவில்லை; கடவுளே அவரை மகிமைப்படுத்தினார் (5:5). இயேசுவின் தலைமைக் குருத்துவம் ஆரோன்வழி வந்த குருத்துவம் போலன்று; இது நிலையானதும் நிறைவானதும் ஆகும் (5:6.10; 6:13-7:17). இது புதிய சட்டத்தையும் புதிய உடன்படிக்கையையும் பிரதிபலிக்கிறது (7:18-28). இயேசு கடவுளின் பிரசன்னத்திலே தம்மைப் பலியாக்குகிறார்; தமது மக்களுக்காகப் பரிந்து பேசும் வண்ணம் அவர் என்றென்றும் வாழ்கிறார் (7:25).

(இ) திருவெளிப்பாடு:-
இந்நூலில் வரும் இறைவாக்குகள் ஏனைய கிறிஸ்து இயல் சிந்தனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிற்கின்றன. ஏனெனில் இது பிந்திய யூத வெளிப்பாட்டு நடையைப் பின்பற்றி மெசியாவின் ஆயிரம் வருடம், புனிதர்களின் உயிர்ப்பு (திருவெளி 20:2-5), சாத்தானின் இறுதிப் போராட்டம் (20:11-22:5) பொதுத்தீர்வும் உயிர்ப்பும், வரப்போகின்ற புதிய காலமும் (20:11-22:5) எனப்பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் காட்டப்படும் மெசியா யூதாவின் சிங்கம்; தாவீதின் அடிப்படை வேர் (5:5; 22:16); விடியற்காலத்தின் நட்சத்திரம் (22:16); அதுமட்டுமல்ல, மனுமகனும் பிறந்தோரினின்று பிறந்தவர்களில் முதல்வரும், மேகங்களிடையே அளவற்ற சக்தியோடு வருபவருமாக இருக்கிறார் (1:5-7.13-16; 14: 14). மெசியா, யூத மரபின்படி ஒரு காளையல்லர், மாறாகப் பலியாக்கப்படும் செம்மறி (5:6); அவரே தம் மக்களிடத்து அன்பு செய்து தமது இரத்தத்தால் அவர்களது பாவங்களிலிருந்து விடுவித்தவர் (1:6).

இந்த நூலின் முழுமையான தோற்றத்தைக் காணும்பொழுது இது கிறிஸ்து மயமாக்கப் பட்டிருக்கிறது எனலாம். விசுவாசத்தின் சான்றாக விளங்கிய, விசுவாசச் சாட்சியான அவர் (1:5) கிறிஸ்தவ வேத சாட்சிகளின் மாதிரியாக விளங்குகின்றார். அவர் கடவுளின் மகன் (14:1); இறைவார்த்தை என்பது அவரது பெயர் (19:13); இங்கே இறைவாக்குரைக்கும் அவரது வார்த்தையையே இப்பெயர் குறிக்கிறதேயொழிய 'வார்த்தை' எனும் பெயர் அவரைக் குறிக்கவரவில்லை. யூத வெளிப்பாட்டு நடையில் வரும் புதிய எருசலேம் அவரது மணமகளாகவும் (21:9-10) மெசியாவின் விருந்து செம்மறியின் திருமண விருந்தாகவும் (19:9) ஆகிறது. நிச்சயமாக இந்த விருந்து நற்கருணை விருந்தோடு உள்ள தொடர்பை உணர்த்தத்தான் வருகிறது (3:20).

(ஈ) 1 பேதுரு:- இந்நூலும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டபோது எழுதப்பட்டாலும் இது கிறிஸ்துவின் மென்மையான தன்மையையும் அவரது பழிவாங்கா மாக மருவற்ற தன்மையையுமே (1:19; 2:21-24) அதிக முக்கியத்துவத்தோடு எடுத்துக்காட்டுகிறது. இக் கோட்பாட்டில் வந்துள்ள புதிய கருத்து என்னவென்றால் இயேசு பாதாளங்களுக்கும் சென்று அங்குள்ளவர்களுக்கும் வாழ்வு தந்தார் (3:18-24; 4:6) என்பதாம்.

(உ) மேய்ப்புப்பணித் திருமுகங்கள்:- திமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதப்பட்ட திருமுகங்கள் கிறிஸ்துவை 'மீட்பர்' என அழைப்பதிலே ஒரு தனி ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது (1 திமோ 1:1;2 திமோ 1:10; தீத் 1:4; 2:13; 3:6). மீட்பர் எனும் வார்த்தை பொதுவாக உலக வழக்கிலிருந்த ஒன்று. இம்மடல்களில் அவரது மனிதத்தன்மையும், மீட்பில் அவர் வகிக்கும் பங்கைப் பற்றியும் அதிகம் பேசப்படுகிறது; அவரே கடவுளுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள

ஒரே இடைநிலையாளர், அவரே இயேசு கிறிஸ்து ஆவார் (1 திமோ 2:5; 6:13-14; 2 திமோ 2:8; 4:1; தீத் 2:11-14).

(ஊ) மற்ற நூல்கள் :- பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகத்திலே, உருமாற்றம் இரண்டாம் வருகையின் முன்சுவையாகக் (1:16-18) குறிக்கப்படுகிறது. காலத்தால் பிந்திய இந்நூல் மீட்பர் எனும் வார்த்தையைப் பல முறைகள் உபயோகப்படுத்துகின்றது (1:11; 2:20; 3:2.18). யாக்கோபு, ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றியும் (5:7) இயேசுவை மகிமையின் ஆண்டவராகவும் (2:1) குறிப்பிடுகிறார்.

11. யோவான் நற்செய்தி:- யோவான் நற்செய்தி புதிய ஏற்பாட்டின் மிகப்பிந்திய நூலாக இல்லாவிடினும், கிறிஸ்து இயல் சிந்தையின் உச்சத்தை இந்நூல் அடைந்திருக்கிறது என்று திண்ணமாகக் கூறலாம். இந்நற்செய்தியாளர் ஒத்தமை நற்செய்திகள், பவுலின் மடல்கள், எபிரேயருக்கு எழுதிய திருமுகம் ஆகிய அனைத்திலும் உள்ள கிறிஸ்து இயல் சிந்தனைகளை எடுத்துக் கொள்கிறார். இயேசு மெசியாவாகவும் (9:22; 21:27; 20:31) ஆண்டவராகவும் இருக்கிறார் (13:13-14; 20:18.28; 21:12). அவர் முழுமையும் கடவுளின் மகனாக இருக்கிறார், அதாவது கடவுளிடமிருந்து வந்து, மீண்டும் கடவுளிடமே செல்கிறார் (13:1-3). அவர் மனிதரிடமிருந்து தோன்றியவரல்லர் (1:12-14.18; 8:58). தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற உலகில் பணியாற்றுகிறார் (2:16; 5:17. 19-29). மீண்டும் தமது நிலையான மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் (11:4; 12:27; 14:13.28; 17:1 பிலி 2:5-11). கடவுளின் மகன் என்ற கருத்தோடு மெசியாவின் மறைந்த தன்மை தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (6:42; 8:19; 19:9). இயேசுவைக் கடவுளின் மகன் என அழைக்கும் இடங்களில் எல்லாம் இக்கருத்தோடு தொடர்புபடுத்தித்தான் அழைக்கிறார் நற்செய்தியாளர் (1:51; 3:13.14; 6:27.53; 8:28; 12:34). இயேசு மீட்பர் எனவும், இறைவாக்கினர் எனவும் அழைக்கப்படுகின்றார். ஆனால் வார்த்தைகள் வரையறுக்கப்பட்டு விளக்கப்படவில்லை (7:40; 6:14: இவ்வுலகிற்கு வரப்போகும் இறைவாக்கினர்). இயேசுவின் மீது முழுமையான விசுவாசமும் அவரைப்பற்றிய முழுமையான அறிவும் இல்லாதவர்களே இறைவாக்கினர் எனும் பெயரைப் பயன்படுத்தினர். இயேசுவே உலகின் பாவங்களைப் போக்கவந்த செம்மறி (1:29). சிறப்பாக இந்த நற்செய்தியில் பாஸ்கா செம்மறிபலியாவதற்கு முன்னே துன்புறுகிறார். பாஸ்கா செம்மறி பலியாகும் போது இறக்கிறார். பாஸ்கா செம்மறி பலியிடப்படுவதின் அடையாளம் சாவிலிருந்து மீட்பதற்கேயொழியப் பாவத்தைப் போக்குவதற்கல்ல; மெசிய வெற்றியுள்ளவராக எழுவார் என்பதை வெற்றிகொள்ளும் செம்மறியாக அதைக் காட்டுவதன் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம். இந்த மெசியா பாவங்களைச் ''சுமப்பவரல்லர்''; அவற்றிற்கு ஓர் இறுதியான முடிவுகட்டுபவர். இந்த மெசியா மோசேயின் சட்டத்திற்கும் மேலானவர் (5:16-18; 7:22-24). ஆனால் அவர்தரும் ஒரே சட்டம் அன்பு எனும் புதிய கட்டளைதான் (13:34). இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி எதுவும் சொல்லாமல், திருமுழுக்கு அருளப்பரின் பணி, அவரிலும் மேலானவர்க்குச்சான்று பகர்வதுதான் (1:19-34; 3:22-30) எனக் கூறப்படுகிறது. மெசியா ரகசியம் என்பது இந்நற்செய்தியிலே மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது; அவரின் சீடர்கள் மட்டும் இதனைப் புரிந்துகொள்கின்றனர் (முழுமையாக இல்லையென்றாலும்); ஆனால் அவரது எதிரிகளோ இயேசு சாதாரணமாகப் பேசியபோதுகூட அது என்னவோ ஏதோ எனத் தங்களைக் குழப்பிக் கொண்டனர்.

மற்ற நற்செய்திகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்திலே யோவான் நற்செய்தியில் வரும் இயேசுவின் போதனைகள் அனைத்துமே விசுவசிப்போரையும் விசுவாசமற்றோரையும் பற்றியே பேசுகின்றன. இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் கடவுளையே ஏற்றுக் கொண்டார்கள் என்பது

உண்மையாயினும் (13:20) இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது மீட்பிற்குக் கட்டாயம் தேவைப்படுகிறது.

இந்நற்செய்தி ஒரு முன்னுரைப் பாடலோடு தொடங்குகிறது. இப்பாடல் இயேசுவை வார்த்தையாகக் கொண்டு வருகிறது. ''வார்த்தை'' என்னும் சொல்லை இந்நற்செய்தியில் எங்கும் பயன்படுத்தாததால் ஏற்கெனவே இருந்த ஒரு பாடலை ஆசிரியர் எடுத்துத் தம் நற்செய்தியில் இணைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இவற்றில் வரும் கருத்துக்கள் எல்லாம் பின்னர் மீண்டும் மீண்டும் வருவதால் இது ஒரு முன்னுரைபோல் அமைந்துள்ளது எனலாம் (1:4; 11:25; 6:35.51; 7:37-38). அதாவது கிறிஸ்துவே வாழ்வு; அவரே உலகின் ஒளி (1:4; 8:12; 9:5) என்பன போன்றவை உதாரணங்களாகும். முன்னுரைப்பாடல் கொலோசேயர் எபிரேயர் திருமுகங்கள் சுமந்துவரும் கருத்தாகிய கிறிஸ்து படைப்பின் முக்கிய கருவியாக இருக்கிறார் எனும் கருத்தைக் கூறினாலும், மீட்பிலே கிறிஸ்து கொண்டிருக்கும் பங்கிற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது (1:11-13). அதோடு வெளிப்பாட்டுக்கும் இணையான முக்கியத்துவம் தரப்பட்டது (1:9.14.1 7-18). யோவான் பவுலைவிட ஒரு படிமேலே போய் இறை வார்த்தையே கடவுள் எனக்கூறி அவர் தந்தையோடு இருந்தாலும் (1:2) தந்தையிடமிருந்து வந்தவர்தான் (1:18) என்கிறார். மற்றொரு கருத்தும் நற்செய்தியின் இடைப்பட்ட பகுதியிலே வருகிறது. மகன் கடவுளுக்கு இணையாக இருப்பதால் (3:35; 5:18; 10:18-30; 16:32; 17:10) அவர் கடவுள் என அழைக்கப்படத் தகுதியுள்ளவரே (10:34-36; 20:28). இவ்வாறு கிறிஸ்து எனும் தெய்வத்தில் கிறிஸ்து இயல் அதன் உச்சத்தையே தொடுகிறது.

கிறிஸ்துவை விளக்க நற்செய்தியாளர் பயன்படுத்தியுள்ள கருத்துக்களைப் போன்றவை ஞானவாதக் கொள்கையினரிடத்திலும் காணப்படுகிறது. அதாவது கிறிஸ்துவே வாழ்வு தரும் உணவு; வாழ்வு தரும் பானம் (6:35; 7:37-38); வாழ்வும் உண்மையும் (14:6); வழியும் வழியில் முன் செல்பவரும் (13:36; 14:2-6); உண்மையான திராட்சைக்கொடி (15:1-10); நல்ல ஆயன் (10:11); அவரே வாயில் (10:7); துணையாளர் அல்லது துணையாளரை அனுப்பும் துணையாளர் (14:16-17.26; 16:13-15). இங்கே முன்னுரைப் பாடலில் யோவானுக்கும் ஞானவாதக் கொள்கையினருக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், யோவான் படைப்பவரையும் வெளிப்படுத்துபவரையும், மீட்பரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை; இவை அனைத்துமே ஒருவர்தாம்; அவர் தாம் கடவுள். உலகம் எவ்வளவுதான் பாவம் நிறைந்ததாக இருந்தாலும், படைப்பு என்பது ஒரு வீழ்ச்சி அன்று; மாறாகக் கடவுள் அன்பின் வெளிப்பாடு (3:16).

யோவானின் மற்றொரு வித்தியாசம் உலகம் கடவுளின் படைப்பு என்பதோடு தொடர்புடையதாகும். ஞானவாதக் கொள்கையினரின் மீட்பர் என்றுமே முழுமனிதனாக உருவெடுக்க முடியாது, மனு உரு எடுத்ததாகத் தோன்றலாம். மேலும் அவரைப்பின்பற்றும் அனைவரையுமே மீட்க முடியாது, மாறாக, யாரிடம் இறைத்தன்மையின் சிறு ஒளியாவது ஒட்டிக்கொண்டிருக்கிதோ அவர்களை மட்டுமே மீட்க முடியும். ஆனால் யோவான் மனுவுருவான வார்த்தை மக்களிடையே கூடாரமடித்தது (உடலைக் கூடாரத்துக்கு ஒப்பிடும் கருத்தைக் காண் 2 கொரி 5:1;2 பேதுரு 1:13), ஏனெனில் அவர் களைத்து (யோவா 4:6), தாகமுற்றுச் (4:7; 19:26) சிலுவையில் இறந்தார்.

இயேசுவின் செயல்களையும், வார்த்தைகளையும் பற்றி நற்செய்தியாளர் கூறும் நிகழ்ச்சிகள் இயேசுவின் இறைத்தன்மைபற்றிய கொள்கையினால் அதிகம் பாதிக்கப்பட்டனவேயொழிய அவரது மனிதத்தன்மை பற்றிய கருத்துக்களால் அல்ல. பைசாந்திய ஓவியங்களில் கிறிஸ்து அனைத்தும் செய்ய வல்லவராகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். எனவே, அவரது மனித சாயல் இறை சாயலைச் சுமந்து செல்லும் ஒரு கருவியாகவே பயன்

பட்டுள்ளது. எனவே நான்காம் நற்செய்தியைக் கிறிஸ்துவைப் பற்றிய இறையியல் விளக்கம் தரும் நற்செய்தி வடிவில் உள்ள ஒரு விசுவாச அறிக்கை எனலாம். இவ்விசுவாச அறிக்கை 'பவுலின் கருத்துப்படி உயிர்த்து மகிமைபெற்று மண்ணகப் பணியிலே தொடர்ந்து ஒளிவிடும் இயேசுவுக்குச் சொந்தமானது. ஒத்தமை நற்செய்திகளில் வரும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பதிலாக, யோவானின் சாட்சியாக மாறுகிறது. இந்நற்செய்தியில் உவமைகளே இல்லை; ஆனால் உருவகங்கள் உள்ளன. சட்டத்தைப் பற்றிய பேச்சே இல்லை; ஆனால் சட்டத்திற்கெல்லாம் மேலான மேல்வரிச் சட்டமாகிய இயேசு புதிய கட்டளையாம் அன்பைப் போதிக்கிறார். மனித இரக்கத்தால் நிறைந்து யாரையும் குணப்படுத்துவதாகக் காட்டாமல் இறைவனின் மாபெரும் இரக்கத்தின் அடையாளமாகக் குணமாக்குதல்கள் காட்டப்படுகின்றன. முடிவில்லா வாழ்வு, கிறிஸ்துவில் விசுவாசம், அவரில் வாழ்வது போன்ற போதனைகள் இறையரசு பற்றிய கருத்துக்களை விளக்குகின்றன. இயேசுவின் பணி இங்கு வெளிப்படையாகச் சமாரியர்களுக்கும், கிரேக்கர்களுக்கும், யூதர்களிலே அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உரியதாகக் காட்டப்படுகிறது.

இயேசுவின் செயல்களையும் வார்த்தைகளையும் இறைவனுக்குரியவையாக நற்செய்தியாளர் காண்கிறார். இயேசு, இயல்புக்கு அப்பாற்பட்ட அறிவுத்திறன் கொண்டு விளங்குவதைக் காட்டுகிறார் (1:47-51; 2:25; 4:17-19; 13:21-27); சில நேரங்களில் புதிராக இருக்கிறார்; அவரிடம் கொடுக்கப்படும் கருத்துக்களைப் புறக்கணிக்கிறார்; அது அவர் பதிலளிக்க மறுப்பதைக் காட்டவில்லை; மாறாக மனிதருடைய கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல என்பதை உணர்த்தத்தான் (2:4-5). தந்தையோடு அவர் செபிப்பது அவருக்கும் தந்தைக்குமுள்ள முழுமையான உறவையும், புரிந்துகொள்ளுதலையும் காட்டுகின்றது (11:41-42; 12:27-28; அதி 17). பிலாத்துவின் முன்னிலையில் உண்மையின் சாட்சியாக, இவ்வுலகத்தைச் சாராத அரசனாக நின்று பேசுகிறார் (18;19-21.33-37;1 9:10-11). அவர் தம்முடைய சொந்த விருப்பத்தினால்தான் தம் உயிரைக் கொடுக்கிறார்; மீண்டும் எடுத்துக்கொள்கிறார் (10:17-18; 15:13). எனவே அவருடைய விருப்பமின்றி யாரும் அவரைக் கைது செய்ய முடியாது (7:44-46; 18:5-8). சிலுவையில் அவரது இறுதி வார்த்தைகள் ''எல்லாம் நிறைவேறிற்று'' என்பதாகும். அதன்பின்னரே தம் ஆவியைக் கையளிக்கிறார். எனவே கிறிஸ்துவின் வாழ்வு முழுவதுமே இறைவனுக்கு இணையானதாய் அமைந்ததை யோவான் தெளிவாகக் காட்டுகிறார்.

12. திருச்சபைத் தந்தையர்கள்:- ஒரு சில பழைய கிறிஸ்துஇயல் சிந்தனைகள் முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையர்களின் நூல்களில் மீண்டும் தோன்றுவதை நாம் காண்கிறோம் (உ-ம்) கடவுள் கிறிஸ்துவைத் தேர்ந்தெடுத்து (1 கிளமெந்து 64:1), அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் (1 கிளமெந்து 24:1). அவரே ஆண்டவரும் மீட்பரும் தலைமைக் குருவுமாக இருக்கிறார். துன்புறும் ஊழியனும், பாலைவனத்தில் உயர்த்தப்பட்ட பாம்பும் அவரையே சுட்டுகின்றன. ஒரு சில கருத்துக்கள் முழுமையான வளர்ச்சியடைவதையும் பார்க்கிறோம். மூவொரு கடவுள் பற்றிய சான்றும் (1 கிளமெந்து 58:2; திதாகே 7:1.3), விசுவாச அறிக்கையின் ஒரு பகுதியாகிய ''வாழ்வோர் இறந்தோரைத் தீர்ப்பிடுவர்'' (2 கிளமெந்து 1:1) எனும் கருத்துக்களும் வருவதைப் பார்க்கிறோம். புனித இஞ்ஞாசியார் (திருச்சபைத் தந்தை) கன்னிப் பிறப்பை வலியுறுத்துகிறார் (7:1; 18:2; 19:1). தோற்றக் கொள்கையினருக்கு எதிராக அவர் மனித உடலெடுத்து வந்தார் என்பதை வலியுறுத்துகிறார். அவர் ஆவியின் இயல்பு கொண்டிருந்தவர், மனித உடலெடுத்து வந்தார் என்கிறார் (எபேசு நகரத்து இஞ்ஞாசியார் 7:1; 20:1).

ஒருசில இடங்களில் திருச்சபைத் தந்தையர்கள், கிறிஸ்து மனிதனாக வருவதற்கு அவர் காட்டிய தாழ்ச்சியைப் பற்றிப் பேசு

கின்றனர். கிறிஸ்து மனிதகுலம் அனைத்தின் பிரதிநிதியாக நிற்கிறார் எனும் கருத்தை இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பேசுகிறார் இஞ்ஞாசியார். கிறிஸ்தவர்கள் சிலுவை எனும் மரத்தில் விளைந்த கனிகள் எனும் கருத்தையும் கூறுகிறார். மேலே கூறிய கருத்துக்களைப் பார்க்கும்பொழுது திருச்சபைத்தந்தையர்கள், இயேசுவில் திருச்சபை வெளிப்பட்டது, இயேசுவே கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயன் போன்ற கருத்துக்களைப் பற்றித் தெளிவாகப் பேசியதில் சந்தேகமே இல்லை. புனித இஞ்ஞாசியார், இயேசு தந்தையோடு இணைக்கப்பட்டுள்ளது போலத் திருச்சபை இயேசுவோடு இணைக்கப் பட்டுள்ளது என்கிறார். தந்தையை அடைவதற்குரிய வழியாக அவர் இருப்பதால் அவரே முதுபெரும் தந்தையர்க்கும், இறைவாக்கினர்கட்கும், அப்போஸ்தலர்கட்கும், திருச்சபைக்கும் வர்யிலாக இருக்கிறார். இவைபோன்ற சில கருத்துக்கள் யோவான் நற்செய்தியில் காணக்கிடக்கின்றன. இஞ்ஞாசியார் இயேசுவை இறைவார்த்தையென அழைத்தபோது அவ்வார்த்தை அமைதியிலிருந்து புறப்படுவதாகக் கூறுகிறார்.

''ஊழியன்'' அல்லது ''குழந்தை'' எனும் வார்த்தை அவர்களின் செபங்களில் வருகிறது. சிறப்பாகப் போலிகார்ப்பு வேதசாட்சியாக மரித்தபோது 'குழந்தை' எனும் வார்த்தை மகனைக் குறிப்பதற்காக வருகிறது என்பதே உண்மை. மேலும், சில புதிய கருத்துக்களும் இவர்களுடைய நூல்களில் தோன்றுகின்றன. இஞ்ஞாசியார் இயேசுவைத் 'தந்தையின் திருவுளம்' என அழைக்கிறார். மேலும், அவரது பிறப்பின்போது அதனை அறிவித்த நட்சத்திரம், மாயவித்தைகள், தீமைகள், அறியாமை அனைத்தையும் அழிக்கவந்த ஒன்றாகக் காண்கிறார்.

III. கிறிஸ்து என்கிற ஆள்:-

பழைய ஏற்பாட்டுப் பெரியவர்களைப் போல இயேசுகிறிஸ்து எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அபிடேகம் செய்யப்படவில்லை; தன் பதவியில் நியமனம் செய்யப் படவில்லை. படைப்பிற்கு முன்னே அவர் அபிடேகம் செய்யப்பட்டுவிட்டார். 1 பேதுரு 1:20-இன்படி கிறிஸ்து உலகம் உருவாவதற்கு முன்னரே கடவுளுக்கும் மனித குலத்திற்குமிடையே இடைநிலையாளராக இருக்கும்படி முன் குறித்து வைக்கப்பட்டார் (2 திமோ 1:9); அதாவது தந்தை எவ்வாறு தம் மக்களை உலகம் தோன்றுவதற்கு முன்னரே தேர்ந்தெடுத்துக் கொண்டாரோ அவ்வாறு கிறிஸ்துவையும் முன்குறித்தார் (எபே 1:4). பவுலின் வார்த்தைகளின்படி ''காலம் நிறைவுறும் முன் மண்ணிலுள்ளவை, விண்ணிலுள்ளவை அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்பதே அவரது திட்டம்'' (எபே 1:10).

கடவுள், உடன்படிக்கையின் மக்களுக்குக் கிறிஸ்துவின் என்றும் நிலவும் மீட்பு, நடுநிலைப்பணி பற்றிய மறையுண்மைகளைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தி, காலம் நிறைவுறும்போது தம்பணியை முடிக்க அவர் வருவார் எனவும் உணர்த்தினார் (கலா 4:4). பழைய ஏற்பாட்டில் மெசியாவின் வருகை பற்றிய செய்தி வெறும் வாக்குறுதியாக இருந்தது. காலம் நெருங்க நெருங்க அது பற்றிய விளக்கங்கள் தரப்பட்டன. இறுதியில் கால-காலங்களுக்கும் மறைத்து வைக்கப்பட்ட அவர் முழுவதுமாகத் தோன்றினார் (கொலோ 1:26; உரோ 16:25).

காலங்களுக்கெல்லாம் முன்பு வாழ்ந்தவர் மட்டுமல்லர் கிறிஸ்து. அவர் மனித குலத்தில் ஒருவராகவும் இருக்கிறார். மற்ற மனிதர்களைப்போல அவரும் பெண்ணிடம் பிறந்தவர் தாம் (ஆதி 3:51). கடவுள் ஆபிரகாமுக்கு வாக்களித்தபோது மெசியா முதுபெரும் தந்தையரின் வழித்தோன்றல்களில் ஒருவராக இருப்பார். அதனால் எல்லா நாடுகளும் ஆசிர்வதிக்கப்படும் என்கிறார் (22:17-19). யாக்கோபு இறக்கும் தருவாயில் யூதாவின் கோத்திரத்திலிருந்தே மெசியா பிறப்பார் என்கிறார் (49:10). பிந்தைய இறைவாக்குகள் மெசியா என்ற ஆளைப்பற்றிய விளக்கங்களைத் தருகின்றன. ஏசயா இறைவாக்கினர் அவரை வெறுத்து ஒதுக்கப்படும் துன்புறும் ஊழியனாகக் காட்டினாலும், 11:4-இல்

எதிரிகளைத் தமது மூச்சினாலே அழித்தொழிக்கும் அரசனாகவும், தமது நீதியின் ஆட்சியை நிலைநாட்டுபவராகவும் காட்டுகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இறுதியிலே அவரை முறிந்துபோன தாவீதின் மரபிலிருந்து வரும் புதிய தளிராகக் கண்டனர் (மீக் 5:2).

1. தெய்வீகத் தன்மை:- புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் முன்னிருப்பைப் பழைய ஏற்பாட்டை விட இன்னும் அதிகமாக விரித்துப் பொருள் கொள்கிறது. அவர் உலகம் உருவதற்கு முன்னரே இருந்தவர் மட்டுமல்லர். அவர் என்றும் வாழும் கடவுளாகவும் இருக்கிறார் (யோவா 1:1). உலகிலே மனித உடலெடுத்தபோதும்கூட (1:14) அவர் இறைத்தன்மை கொண்டவராகவும் விளங்கினார்.

திருச்சபை கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றிக் கூறுவது வெறும் மனிதக் கண்டுபிடிப்பல்ல; இறைவனே அதனை வெளிப்படுத்தியுள்ளார் (மத் 16:17). விவிலியத்தின் எல்லா நூல்களுமே அவர் இறைவன் என்பதைத் தெள்ளத்தெளிவாகக் கூறுகின்றன (மீக் 5:2; ஏச 9:6). புதிய ஏற்பாட்டிலே அவரது தெய்வீகத்தை அடிக்கடி அறிக்கையிடும் போது, கிறிஸ்துவாலே சில நேரங்களில் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பேதுரு கிறிஸ்துவை ''உயிருள்ள கடவுளின் மகன்'' என அறிக்கையிடுகிறார் (மத் 16:16; மாற் 8:29; லூக் 9:20). பவுல் ''அவர் கடவுள் தன்மையில் விளங்கினாலும், கடவுளுக்கு இணையாக, இருப்பதை விடாது பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை'' என்று கூறுகிறார் (பிலி 2:6). யோவான் கிறிஸ்துவை முடிவில்லா வாழ்வைக் கொண்டிருக்கும் உண்மையான கடவுள் எனப் புகழ்கிறார் (யோவா 5:20). தலைமைக்குரு கயாபா ''நீர் கடவுளின் மகனான கிறிஸ்துவா?'' என்று கேட்டபோது ''நீரே சொல்லிவிட்டீர்'' (மத் 26:64; மாற் 15:2) என ஏற்றுக்கொள்கிறார். ஆனால் மற்ற நேரங்களில் தாமும் தந்தையும் ஒன்றே என்வும் (யோவா 10:30), தாம் ஆபிரகாமுக்கு முன்னரே இருப்பதாகவும் கூறுகிறார் (8:58). தலைமைக் குருத்துவச் செபத்தில் தமது தந்தையோடு அவரது மகிமையை உலகம் உருவாவதற்கு முன்னரே பகிர்ந்து கொள்வது பற்றிக் குறிப்பிடுகிறார் (17:5). அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்ததால்தான் நோயாளிகளைக் குணமாக்கிப் பாவங்களை மன்னிக்கிறார் (மாற் 2:5-11; மத் 9:27; லூக் 5:20-2). அது மட்டுமல்ல தம் சீடர்கள் தம்மை விசுவசிக்கும்படி கூறுகிறார் (யோவா 14:1).

புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்து மூவொரு கடவுளில் இரண்டாம் ஆளாகிய கடவுளின் மகன் என அழைக்கப்படுகிறார் (மத் 16:16; 26:63-64). மரியாளைச் சந்தித்த வானதூதரின் செய்திப்படி அவள் மகன் 'கடவுளின் மகன் எனப்படுவார்' (லூக் 1:35). இயேசு திருமுழுக்குப் பெற்றபோது ''இவரே என் அன்பார்ந்த மகன். இவரில் நான் பூரிப்படைகிறேன்'' என்ற குரல் வானத்திலிருந்து கேட்டது (மத் 3:17; மாற் 1:10; லூக் 4:22). கிறிஸ்து எனும் இந்த அடைமொழி மற்ற மண்ணக அரசர்கள் சூட்டிக்கொள்வதுபோல் வெறும் அழகுக்குத் தரப்பட்ட ஒரு பெயரல்ல. விவிலியம் ''கிறிஸ்து தந்தையைப்போலத் தனிப்பெரும் ஆற்றல்கொண்டு விளங்குகிறார்'' (யோவா 5:26) என்று கூறுகிறது. பவுல் கிறிஸ்துவைக் கடவுளின் மகனாகவே அழைக்கிறார் (உரோ 8:32). ஆனால் யோவானோ, ''வார்த்தை கடவுளோடு இருந்தார், கடவுளாகவும் இருந்தார்'' (யோவா 1:1), தந்தையிடமிருந்து வந்த ஒரே மகன் அவரே, எனக் குறிப்பிடுகிறார். (1:14; 5:18 இயேசுவே கடவுளைத் தம் தந்தையெனக் குறிப்பிடுகிறார்).

2. கிறிஸ்துவின் மனிதத்தன்மை:- புதிய ஏற்பாடு அவரது தெய்வீகத்தை எவ்வளவு தூரம் வலியுறுத்தியிருக்கிறதோ அவ்வளவு தூரம் அவரது மனிதத்தன்மையையும் வலியுறுத்தியிருக்கிறது. என்றென்றும் வாழும் கடவுளின் மகன் மனிதர்களைப் போல மனிதவடிவிலே தோன்றினார் (பிலி 2:7-8). அவரே மனிதன் இயேசு கிறிஸ்து (1 திமோ 2:5);

*அவர்தாம் வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டவர் (யோவா 1:14); மனிதர்களோடு உடலையும் இரத்தத்தையும் பகிர்ந்துகொண்டார் (எபி 2:14). எனவே மனிதத் தன்மைகள் எதுவும் அவருக்குப் புறம்பானதல்ல. மனிதர்களோடு மனிதர்களாக வாழ்ந்து மகிழ்ச்சி துன்பங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொண்டார். அவர் மனிதனாக வெறும் தோற்றமளிக்கவில்லை; இயல்பிலே மனிதனாக இருந்தார். எல்லா மனிதர்களையும் போலவே ஆதாமின் வழியில் பிறந்தார் (லூக் 3:38); பெண்ணிடம் பிறந்தவராகவும் (லூக் 2:6-7; மத் 1:18; கலா 4:4) இருந்தார். அவரது முன்னோர்கள் ஆபிரகாமும் (மத் 1:1) தாவீதும் (மத் 1:6) ஆவர்.*

*ஆதாமினால் வந்த வீழ்ச்சியுற்ற இயல்பைக் கிறிஸ்து மனுக்குலத்தின் மற்ற மனிதர்களோடு பகிர்ந்து கொண்டார். அவர் உலகில் பாவ உடலை எடுத்துவந்தாலும் (உரோ 8:3) பாவத்திற்கு அடிமையாகவில்லை (எச 53:2-3). எபிரேயர் திருமுக ஆசிரியர் கூற்றுப்படி அவர் எல்லா வகைகளிலும் சோதனைக்குள்ளானார். ஆனால் இறுதிவரை பாவமற்றவராக வாழ்ந்தார் (எபி 4:15; 2 கொரி 5:21). அதாவது, கிறிஸ்து புனிதமான, குற்றம்சாற்றப்படமுடியாத, கறையற்ற, பாவிகள் அனைவரிடமிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட தலைமைக்குரு (எபி 7:26) ஆவார்.*

*IV. பணிகள்:*

*கடவுளின் உண்மையான மகனும், அவர் மனுமகனுமாக இருந்து ஆவியால் அபிடேகம் செய்யப்பட்ட நோக்கம் என்னவென்றால், ''என்றென்றும் நமது தலைமை இறைவாக்கினரும், ஆசிரியரும், நம் ஒரே பெரிய குருவும், எந்நாளும் உள்ள அரசருமாக'' விளங்க வேண்டுமென்பதே. விவிலியம் பணிகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தாவிடினும், (கி.பி. 330-இல் செசரியாவின் யுசேபியு என்பவர் பயன்படுத்தியது) அவர் பல பணிகளை நிறைவேற்றுதல் என்ற கருத்து விவிலியத்தைச் சேர்ந்ததாகும். உப 18:15-இன்படி கடவுள் ஓர் இறைவாக்கினரை எழுப்புவார். சங் 110:4-இல் ஆண்டவர் என்றென்றைக்கும் குருவாக இருக்கிறார் என்றும், செக் 6:12-13-இல் வருங்காலத் ''தளிர்'' ''அரச மாண்பைக் கொண்டவராய் அரியணை வீற்றிருந்து அவர் ஆட்சி செலுத்துவார்'' என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு பாவத்தில் விழும் நிலைக்குமுன் ஆதாம் கொண்டிருந்த பணிகளை, இயேசு கிறிஸ்து சிறப்பாகத் தமது மூன்று பணிகளால் நிறைவேற்றுகிறார்.*

*அ. இறைவாக்கினர்:- பழைய இறைவாக்கினர்களைப் போலவே கிறிஸ்துவும் கடவுளின் செய்தியை மனிதர்களுக்கு அளிக்கவும், கடவுளின் சித்தத்தை வெளிப்படுத்தவும் நியமிக்கப்பட்டார்; எனவே இறைவாக்கினர் ஆகிறார். ஆனால் அவர் சாதாரண இறைவாக்கினர் மட்டுமல்லர்; இறைவாக்கினர்களில் எல்லாம் தலைசிறந்தவர். அவர் தந்த செய்தியை வேறு எந்த வருங்கால இறைவாக்கினரும் கூட்டமுடியாது. ஏனெனில் அவருக்குள்ளே இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாமே மறைந்துள்ளது. அவர் கடவுளோடு கொண்டிருந்த மிகச் சிறப்பான உறவினால் தந்தை யாரென்பதை உலகிற்கு வெளிப்படுத்தினார் (யோவா 1:18; 15:15). அவரது செய்தி பாவத்தில் உழலும் மனிதனை மீட்பது பற்றியும், அவரால் அழைக்கப்பட்டவர்கள் மன்னிக்கப்பெற்று, ஏற்புடையவர்களாகவும், மகிமை பெறுபவர்களாகவும் ஆவது பற்றியும் ஆகும் (உரோ 8:30). எனவே இறைவனைப் பற்றியும், மீட்பைப் பற்றியும் உண்மையான அறிவு 'உலகின் ஒளியான' கிறிஸ்துவைத் தவிர வேறு யாரிடமிருந்தும் ஒருவர் பெற்றுக்கொள்ள முடியாது (யோவா 8:12). கிறிஸ்துவை ஒதுக்கும் எவனும் ஆன்மீக இருளில் மூழ்கி (யோவா 3:18-20), முடிவில்லா வாழ்வுக்குச் செல்லும் வழியைக் காணமுடியாமல் போகிறான். இறைவாக்கினருக்குரிய அதிகாரத்தோடும், ஆற்றலோடும் கிறிஸ்து மக்களிடம் பேசித் தம்மை விசுவசித்துத் தம் வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிறார்.*

ஆ. குரு:- சங் 110:4-இன் படி ஆண்டவர் அபிடேகம் பெற்றவரிடம் சொன்னதாவது, ''நீ மெல்கிசதேக்கின் முறைமைப்படி என்றென்றும் குருவாக இருக்கிறாய்'' என்பதாகும். இதன்பொருள் என்னவென்றால், இயேசு கிறிஸ்து தலைமைக் குருவாக இருப்பது ஆரோன் குலத்தைச் சேர்ந்த குருக்கள் குறிப்பிட்ட ஆரோனின் குலத்தில் பிறந்தால் குருவாவது போலன்று; மாறாக ஒரு சிறப்பான அழைத்தலாலும் கொடுக்கப்பட்ட பணியாலும் அவர் குருவாக இருக்கிறார் என்பதாகும். உடன்படிக்கையின் பேழைக்கும் ஆலயத்திற்கும் பணி செய்த பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் முழுவதுமே, மனிதக்கைகளால் கட்டப்படாத விண்ணகத்தின் தூயகத்துக்குள் நுழையும் மாபெரும் தலைமைக்குருவாம் கிறிஸ்துவையே முன்னுணர்த்தியது (எபி 9:24).

இயேசு கிறிஸ்துவின் தலைமைக் குருப்பணியை மூன்று பண்புகளில் காணலாம். முதல் பண்பு: தம் வாழ்வையே பலியாக அளித்தல். அதனால் மக்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டது மட்டுமன்றி, அவரது ஏற்புடைமையும் விளங்கிற்று. முன்னர் நிறைவேற்றப்பட்ட பாவப் பரிகாரப் பலிகளில் எல்லாம், கிறிஸ்து நிறைவேற்றப்போகும் பலி முன் உணர்த்தப்பட்டது. சிறப்பாகப் பாஸ்காச் செம்மறி பலியானபோது இது இன்னும் தெளிவாக வெளிப்பட்டது. ஆரோனும் மற்றக் குருக்களும் அடையாள முறையில் மீண்டும் மீண்டும் நிறைவேற்றிய பணியை இயேசு கிறிஸ்து முற்றிலுமாக ஒரேமுறையில் நிறைவேற்றி முடித்தார். காலங்களின் முடிவில் ''தம்மைத் தாமே பலியிட்டுப் பாவங்களைத் தொலைக்க ஒரேமுறை உலகில் தோன்றினார்'' (எபி 9:26); அவரே உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி (யோவா 1:29.36); நமக்காகப் பலியான செம்மறி அவரே (1 கொரி 5:7). தம்மை மனிதப் பாவங்களுக்காகப் பலியாக்கியதால் கடவுளுக்கான பாவக் கடனை அவர் தீர்த்தார். இவ்வாறு பலருடைய பாவங்களை அவர் ''சுமந்தார்'' (எபி 9:28). பழைய ஏற்பாட்டின் தலைமைக்குரு பாவப்பரிகார நாளிலே பலியான விலங்கின் இரத்தத்தோடு இறைவனின் தூயகத்திலே நுழைந்தார். கிறிஸ்துவோ தமது புதிய உடன்படிக்கையின் தமது இரத்தத்தோடே விண்ணகத் தூயகத்தில் நுழைந்து என்றென்றும் பாவத்தை ஒழித்தார். இவ்வாறு அவரை விசுவசிப்பவர்கள் அனைவரையும் குற்றத்திலிருந்தும் பாவத்தின் தண்டனைகளிலிருந்தும் விடுவிக்கிறார். அதுமட்டுமல்ல, தமது ஒப்பற்ற கீழ்ப்படிதலினால் ஒவ்வொருவருடைய மீட்புக்கும் என்னென்ன தேவையோ அவை ஒவ்வொன்றையும் நிறைவேற்றினார். தூய உள்ளத்தோடு பலி நிறைவேற்றிக் கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்ததால் அனைவருடைய பாவமும் கழுவப்பெற்றது. தமது ஏற்புடைமையை மக்களுக்கு வழங்கியதால், ஒவ்வொருவருக்குமே முடிவில்லா வாழ்வுக்கான பிரிக்கமுடியா உரிமையை வழங்கினார்.

அவரது குருத்துவத்தின் இரண்டாம் பண்பு அவரது செபமாகும். முழுநம்பிக்கையோடு மக்களனைவரும் அருளின் அரியணையை அணுகிச் செல்லும் வாய்ப்பை மட்டும் கிறிஸ்து அருளவில்லை (எபி 4:16; 10:19); செபிக்கும் கலையை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை (லூக் 11:1-4; மத் 6:9-13), இவற்றிற்கெல்லாம் மேலாக அவரது பெயரால் நேர்மையாகச் செபிக்கும் எவரும் இறைவனின் துணையைப் பெறுவர். எவராயினும் அவரது செபம் இறைவனால் கேட்கப்படும் (யோவா 16:23-24). இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோதும் சரி, விண்ணகத்தில் மகிமையோடு வீற்றிருக்கும் போதும் சரி, மக்களனைவருக்காகவும், இடைவிடாது இடைநிலையாளராக இருந்து பரிந்துபேசிக் கொண்டேயிருக்கிறார் (லூக் 22:32; 23:34; யோவா 17). நமது துன்பங்களை முற்றிலும் புரிந்து கொண்டு, நம்மீது அளவற்ற இரக்கமும், அன்பும் காட்டுகிறார். மனித தேவைகளையும், அவர்களின் குறையுள்ள செபங்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் குறையற்றதாக்கி, கடவுளின் முன் மணம் நிறைந்த தூபமாக

மாற்றுகிறார் என்பதையே இயேசுவின் செபங்கள் நமக்கு உணர்த்துகின்றன (திரு வெளி 5:8; சங் 141:2).

கிறிஸ்துவின் குருத்துவத்தின் மூன்றாவது பண்பு குருவாக இருந்து மக்களை ஆசீர் வதிப்பது. பழைய ஏற்பாட்டுக் குருக்களின் முக்கியப்பணி மக்கள் மேல் கைகளை விரித்து அவர்களை ஆசிர்வதிப்பதாகும். அவர்கள் ஆண்டவரின் பெயரைச் சொல்லி மக்கள் தலைமீது கரங்களை வைப்பதால் ஆண்டவரின் ஆசீர்வாதம் நிறைய உண்டு என்பதை வாக்களித்தனர் (எண் 6:22-27). இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பிரசன்னமே இம்மண்ணகத்திற்கு மாபெரும் ஆசீர்வாத மாகும். அவர் மண்ணிலே பணி செய்த போது மட்டுமின்றி விண்ணகத்திற்கு ஏறிச் சென்றபோதும் (லூக் 24:50-51), விண்ணகத் திலிருந்து எல்லா ஆன்மீக நலன்களாலும் நிறைத்துத் தமது மக்களை ஆசீர்வதிக்கிறார் (எபே 1:3). அவரது தூய ஆவியின் வழியாக விண்ணகக் கொடைகளால் நம்மை நிரப்பி ஆசீர்வதிக்கிறார்.

இவ்வாறு இயேசு கிறிஸ்துவே தலை சிறந்த தலைமைக் குருவாகத் திகழ்கிறார். அவரே பாவப் பரிகாரப்பலியாக இருந்து சட்டத்தின் படி அனைத்தையும் நிறைவேற் றினார். அவரே இடைநிலையாளராக இருந்து வானகப் பேறுகள் அனைத்தையும் பெற்றுத் தருகிறார். எனவே விசுவாசமின் மையால் ஒருவர் அவரது தலைமைக் குருப் பணியை ஏற்றுக்கொள்ளாதபோது பாவத் திற்காகப் பலியாகும் தலைமைக்குரு வேறு யாரையும் பெற்றுக்கொள்ளமுடியா நிலை யிலே அவர்கள் தவிக்க நேரிடும். அவர்க ளுக்குப் பரிந்து பேசும் ஒருவரை இழந்து விண்ணக நலன்களுக்குப் பதிலாக நீதித் தீர்ப்பினையே பெற நேரிடும்.

இ. அரசர்:- கிறிஸ்துவும் பழைய ஏற் பாட்டு அரசர்களைப் போலவே ஒரு குறிப் பிட்ட பணிக்காக அபிடேகம் செய்யப்பட்ட வர்தாம். ஆனால், மற்ற மண்ணக அரசர்க ளைப் போலத் தமது அதிகாரத்தையும், புக ழையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இல்லாதவர். அவர் என்றென்றும் அரசராக ஒப்பற்ற மகி மையோடு விளங்கினார். பழைய ஏற்பாடும் அவரது அரசு மகிமையைக் கூறுகிறது (ஆதி 49:10; ஏச 9:6; மீக் 5:2). தாவீது, சாலமோன் ஆகியவர்களின் இறையாட்சி அரச அமைப் பில் கிறிஸ்துவின் அரசு முன் உணர்த்தப்பட் டது.

மெசியாவின் அரசத்தன்மையை இஸ்ரா யேல் மக்கள் மிகக் குறைவாகவே புரிந்து கொண்டனர்; சாமுவேல் காலத்தில் தங் களை ஆள மற்ற நாடுகளைப்போலவே தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டுமென்று சொன்னதுபோல (1 சாமு 8:15), இயேசுவும் ஒரு மண்ணக அரசராகவந்து தங்களை உரோ மைப் பேரரசின் பிடியிலிருந்து விடுவிப்பார் என நினைத்தனர் (மத் 21:9-11; 4:8-10; லூக் 4:5). யூதர்களின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறுபட்டதாகும் இயேசுவின் அரசு. அது ஆன்மீக அரசு ஆகும். அது வெளிப்படை யான பகட்டோடும், புகழோடும் தோன் றாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களின் உள்ளங்களிலே அது நிறுவப்படும் (லூக் 17:20-21). யோவான் ''அவர் அரசு இவ்வுல கைச் சார்ந்ததன்று'' (யோவா 18:36) எனக் கூறுகிறார். பவுலின் கூற்றுப்படி ''அது தூய ஆவியில் நீதியும், மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்த அரசு'' (உரோ 14:17; 1 கொரி 1:10) ஆகும். அவர் தமது வார்த்தையால் ஆளு வார் என்று எபிரேயர் திருமுகம் கூறுகிறது.

கிறிஸ்துவின் அரசு யூதர்களுக்கு மட்டும் உரியதன்று. விசுவாசத்தில் இணையும் மனித குலம் (எபே 4:15) அனைத்திற்கும் உரியது. ஓர் அரசரைப் போலக் கிறிஸ்து விசுவாசிக ளின் கூட்டமாகிய இத்திருச்சபையை அனைத்துத் தீமைகளிலிருந்தும் காக்கிறார். நரகத்தின் வாயில்கள்கூட அதை வெற்றி கொள்ளாது எனும்போதே இதன் உண்மை புரியும் (மத் 16:18). ஓர் அரசனைப்போல மக்களை அன்போடும் அருளோடும் ஆள்கி றார். இதனால் மக்களனைவரும் அவருக்குச் சிறப்பான விதத்திலே அடிபணிகின்றனர்.

அவரது அரசத்துவத்தை ஏற்க விரும்பாதவர்கள்கூட அவரது ஆட்சியிலிருந்து தப்பமுடியாது. ஏனெனில் அவருக்கு மண், விண் அனைத்தின் மீதும் இறைத்தந்தை அதிகாரம் அளித்துள்ளார் (மத் 28:18). அவரே அரசர்க்கெல்லாம் அரசராகத் துலங்குவதாகக் (திருவெளி 1:5) கூறப்படுகிறது.

கிறிஸ்துவின் அரசமாண்பு அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கட்கு இல்லாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் அவரது மாட்சிமை விண்ணகத்திலே ஒளிர ''அரசர்க்கெல்லாம் அரசராக ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவராகத் துலங்குகின்றார்'' (திருவெளி 19:16). வான்மேகங்கள் மீது மாட்சியோடு அவர் மீண்டும் வந்து விசுவாசிகளை உயர்த்தி விசுவாசமற்றவர்களைத் தாழ்த்துவார் (மத் 25:31-46). இவ்வாறு கிறிஸ்துவின் அரசு மண்ணிலும், விண்ணிலும் நீதியோடு நிலைநாட்டப்படும் (2 பேதுரு 3:13; திருவெளி 21).

இறையியலார்கள் சிலர் கிறிஸ்து மூன்று பணிகளையும் ஒன்றன்பின் ஒவ்றாக நிறைவேற்றினார் எனக் கருதுகின்றனர்; மண்ணிலே பணியாற்றியபோது அவர் இறைவாக்கினராகவும், சிலுவையில் தொங்கிய போது குருவாகவும், உயிர்த்து விண்ணகம் சென்றபோது அரசராகவும் விளங்கினார் என்கின்றனர். இக்கருத்து அவரது முப்பணிகளைப் பிரித்துப் பிரித்துப் பார்க்கிறது. ஆனால் புதிய ஏற்பாடு, அவர் ஒரே நேரத்தில் இறைவாக்கினராகவும், குருவாகவும், அரசராகவும் விளங்கினார் என்று சித்தரிக்கிறது. எப்படியெனில் அவர் இறைவாக்கினராக இறைவனின் செய்தியைக் கூறியபோது அதிகாரமுள்ள அரசர்போலப் போதித்தார் (லூக் 4:32); பிலாத்துவிடம் அரசர் என்று ஏற்றுக்கொண்டபோது ''உண்மைக்குச் சாட்சியம் பகர்வதே எனது பணி'' என்கிறார்; இங்கே இறைவாக்கிவராகக் காட்சியளிக்கிறார் (யோவா 18:17). புதுமைகள், செய்த போது தமது அரசவல்லமையையும், இறைவாக்குப் போதனையையும், குருவுக்கான இரக்கத்தையும் (மத் 8:17) வெளிப்படுத்துகிறார்.

V. இறையியல் சிந்தனை: காண்க. கிறிஸ்து இயல்.

**கிறிஸ்து இயல்** (CHRISTOLOGY)

1. கிறிஸ்து இயல் என்பது இயேசுகிறிஸ்துவை இறையியல் அடிப்படையில் புரிந்து கொள்ளும் ஒரு முயற்சியாகும். அவரது ஆட்தன்மையையும் பணியையும் சிறப்பாக விளக்கச் செய்யப்படும் இறையியலாக்கமே கிறிஸ்து இயல் எனலாம். புதியஏற்பாடு இயேசு கிறிஸ்துவைப் பல வழிகளில் சித்தரிக்கிறது. அப்போஸ்தலர்களின் போதனை கிறிஸ்துவை மையமாகக் கொண்டது என்பதை யாரும் மறுக்க முடியாது (1 கொரி 2:2). ஆனால் கிறிஸ்துவின் சொந்த சுயவெளிப்பாடோ அப்போஸ்தலப் போதனையோ கிறிஸ்துஇயல் தன்மையுடையது என்று கூற முடியாது. ஏனெனில் திருச்சபையில் கிறிஸ்துவின் ஆட்தன்மைபற்றிய சிந்தனைகள் தோன்றி வளர ஆரம்பித்தது முதல் நூற்றாண்டுக்குப் பிறகுதான். எனவே கிறிஸ்துவின் ஆட்தன்மை, பண்புகள், பணி ஆகியவற்றைப் பற்றித் திருச்சபையில் இன்றுவரை வளர்ந்துள்ள இறையியல் சிந்தனையைக் கிறிஸ்துஇயல் எனப் புரிந்துகொண்டால் அது எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை ஆய்வது முக்கியமானதாகும்.

2. கிறிஸ்து இயலின் தொடக்கம்:- எந்த வகையில் யூத மெசியாக் கொள்கை கிறிஸ்து இயலாக உருவெடுத்தது என்பதைக் கண்டு பிடிப்பது கடினமான ஒன்றாகும். இயேசு தமது பணியைப் பற்றியும், தம்மைப் பற்றியும் கொண்டிருந்த ஆழ்ந்த உணர்வே கிறிஸ்து இயலின் ஊற்றாகும் என்றால் அது நூற்றுக்கு நூறு உண்மை. எல்லா உவமைகளும் இயேசுவை ஒரு இறைவாக்கினராகத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகின்றன. யூதர்கள் ஒரு மனிதனுக்குத் தரக்கூடிய விலைமதிப்பற்ற உயர்வு ஒருவரை இறைவாக்கினர் என அழைப்பதுதான். இயேசு மெசியா எனும் நிலையே அவர் ஓர் இறை

வாக்கினர் எனும் நிலையைச் சார்ந்து நிற்பது தான். இயேசு தாம் கூறவந்த செய்தி உண்மை யென்பதையும் அதை அறிவிக்கவேதான் வந்தேன் என்ற தெளிவோடும் பேசினார். எனவே ''ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்'' என்ற வாய்ப்பாட்டை உபயோகிக்காமல் அவரே கூறுவதாக அதிகாரத்தோடு போதிக் கிறார். இவ்வாறு தம்மில் ஒரு புதிய யுகம் மலர்வதையும் தாம் செய்யும் செயல்கள் அவற்றிற்குச் சாட்சியாக அமைவதையும் அவர் பார்க்கிறார். அத்தோடு இஸ்ராயேல ரின் விதி அவர்கள் இயேசுவுக்குக் கொடுக் கும் பதிலைப் பொறுத்து நிர்ணயிக்கப் படும்; அவர்தரும் செய்தியை ஏற்பதைப் பொறுத்து அவர்கள் வாழ்வு பெறுவதும் பெறாமல் போவதும் முடிவு செய்யப்படும் என்பதை உணரமுடிகிறது. இத்தகைய அதி கார உணர்வோடு இயேசு தனிப்பட்ட சொந் தப் பாவத்தைப் பற்றியோ, கடவுளிட மிருந்து பிரிந்திருப்பதைப் பற்றியோ தெளி வான உணர்வுகொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை. ஆனால் தந்தையோடு நெருங்கிய மகனின் உறவு கொண்டிருந்தார் என்பதும், இந்த உறவின் உணர்வை மற்றவர் களிடமும் தூண்டி அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதையும் இயேசு பெரிதும் விரும்பியதாகத் தெரிகிறது. இதனையே நற் செய்திகள் அவரைக் 'கடவுளின் மகன்' என உணர்த்தவிரும்புவதாக ஒரே பார்வையில் கூறுகின்றன. தம்மையே அவர் 'மனுமகன்' எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட இறு திப் பயணம் ஒரு சமயப் புரட்சியை உரு வாக்கத்தான்; அதனால் அவருக்கும் அவரது சீடர்களுக்கும் ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்திருந்தார். எருசலேமுக்குள் அவர் நுழைந்தமுறையைப் பார்க்கும்பொழுது அவர் மெசியாவாக, அமைதியின் அரசராகக் காட்சியளிக்கிறார். மனிதன் மனந்திருந்தா விடில் இதிலும் மேலான தண்டனையைக் கடவுள் மனிதர்மேல் கொண்டுவருவார் என் பதின் அடையாளமாக அவர் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தினார். தமது இரத்தம் சிந்தப் படும், தம் உடல் சிதைக்கப்படும் என்பதை நன்கறிந்த இயேசு அப்பத்தையும், இரசத்தை யும் தன் சீடர்களுக்குக் கொடுத்து இந்த இறப்பு அவர்களுக்குப் பெரும்பயன் அளிக் கும் என்பதை அடையாள முறையில் உணர்த்துகிறார். மேலும் அவர்களை இறை யரசின் விருந்தில் மீண்டும் சந்திப்பதாக வாக்களிக்கிறார்.

இயேசு தம்மை 'யூதர்களின் அரசன் என் றார்' என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தான் உரோமையர் அவரைச் சிலுவையில றைந்தனர். இறந்து மூன்று நாட்களிலே அவரை அவரது சீடர்கள் உயிர்த்தவராகக் கண்டு அனுபவித்தனர். அவரது பணிக் காலத்தில் அவரிடம் பெரிதும் பிரமாணிக்க மாய் இருந்தவர்கள் கடவுள் அவரை மெசி யாவாகவும், ஆண்டவராகவும் உயர்த்திவிட் டார் என்ற முடிவுக்கு வந்தனர். உடனே அவர்கள் கிறிஸ்துவின் இந்நிகழ்ச்சிகளை முன்னுரைத்த பழைய ஏற்பாட்டுப் பகுதிக ளைத் தேடியிருக்கவேண்டும். இத்தகைய அணுகுமுறையைத்தான் கும்ரான் சமூகத் தின் நூல்களில் நாம் காண்கிறோம். அவர்க ளது விசுவாசமும் அனுபவங்களும், ஞானஸ்நானத்தின்போது பெற்ற தூய ஆவி யாலும், ஆண்டவரின் விருந்தை உண்ட போது அவர்கள் உணர்ந்த உயிர்த்த இயேசு வின் பிரசன்னத்தாலும் நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து உறுதிப்படுத்தப்பட்டன. இப் பொழுது இயேசுவின் சீடர்களுக்கு மெசியா என்ற வார்த்தை இறைவாக்கினரை, புதிய சட்டம் தந்தவரை, கடவுளின் மகனான மனு மகனை, இயேசுவைப்பற்றி என்னென்ன நம்பிக்கைகள் கொண்டிருந்தார்களோ அத்த னையும் சுட்டிக்காட்டியது. இதிலிருந்து புதிய ஏற்பாட்டின் பிற கிறிஸ்து இயல் சிந்தனைகளும் மிக இயல்பாக வளர்ச்சி பெற்றன.

*3. கிறிஸ்து இயல் வளர்ச்சி:-* விவிலிய நற்செய்திகளும் பவுலின் மடல்களும், இயேசு கிறிஸ்து உண்மையிலேயே இறைவ னும் மனிதனுமாக இருந்தார் என்று தெளி வாகக் கற்பிக்கிறது. புதிய ஏற்பாட்டு ஆசிரி யர்களில் ஒரு சிலர் சில நேரங்களில் அவரது

இறைத்தன்மையையும் வேறுசிலர் அவரது மனிதத் தன்மையையும் அதிகம் வலியுறுத்திக் கூறினாலும், அனைவருமே இயேசு இறைவனின் மகன் என்பதை ஏற்கின்றனர். கிரேக்க மொழிபேசும் திருச்சபையில் பல சந்தேகங்கள் எழுந்தன. எவ்வாறு இறைவன் மனிதனாக வரமுடியும்? எவ்வாறு இறைத் தன்மையும், மனிதத்தன்மையும் ஒருவரில் தனித்தனியே அமையமுடியும்? எவ்வாறு கிறிஸ்து சோதிக்கப்பட முடியும்? இவை போன்ற பல சந்தேகங்கள் எழுந்தன. ஆனால் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இவை போன்ற கேள்விகளை அறியாததால் அவற்றிற்கான பதில்களை விட்டுச் செல்லவில்லை.

விரைவில், தொடக்க காலத்திருச்சபையில் கிறிஸ்துவின் ஆட்தன்மைபற்றிக் கடுமையான, ஆழமான தர்க்கம் தோன்றியது. முதல் நூற்றாண்டின் முடிவில் ஒருபுறம் தோசேத்தியர் என்ற குழுவினர் கிறிஸ்து மனித உடலை ஏற்றவராகத் தோன்ற மட்டுமே செய்தார் என்று கூறி அவரது மனிதத் தன்மையை மறுத்தனர். மேலும் இவர்கள் கிறிஸ்துவின் துன்பம், மரணம் உட்பட்ட அவரது இவ்வுலக வாழ்வும் வெறும் மாயைதான் என்று கூறினர். மறுபுறம் எபியோனியர் என்ற குழுவினர் கிறிஸ்துவின் இறைத் தன்மையை மறுத்தனர். மேலும், இயேசு வெறும் மனிதனே, அவரது திருமுழுக்கின் போது, அவருக்கு இறையாற்றல் அளிக்கப் பட்டது என்று கூறினர். இவ்வாறு ஆதித் திருச்சபை இரு முற்றிலும் முரணான போதனைகளை எதிர்கொண்டது.

இத்தர்க்கம் மேலும் மோசமடைந்தது. அலக்சாந்திரியாவைச் சேர்ந்த ஆரியுஸ் என்பவர் (கி.பி. நான்காம் நூற்றாண்டு) இயேசு கிறிஸ்து என்றுமுள்ளவர் அல்லர்; அவர் இறைவனின் இறைத்தன்மையில் பங்குபெறவில்லை; ஆனால் தந்தையாகிய இறைவனால் படைக்கப்பட்ட முதல் படைப்பு மட்டுமே அவர் என்று வாதிட்டார். மேலும் மனிதனுமல்லாத இறைவனும் அல்லாத ஒருவரால் மீட்பு செயலாக்கப்பட்டது என்றும் போதித்தார்.

இந்தக் குழப்பங்களுக்கிடையில், கிறிஸ்துவைப்பற்றிய விவிலிய போதனையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. நீசேயா விசுவாச அறிக்கையில் (கி.பி. 325) திருச்சபையின் தந்தையர்கள் இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மையையும், தந்தையோடு கொண்டுள்ள சமத்தன்மையையும் அறிக்கையிட்டனர். இதன்படி கிறிஸ்து ''யுகங்களுக்கு எல்லாம் முன்பே பிதாவினின்று செனித்தார். கடவுளின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, மெய்யங் கடவுளினின்று மெய்யங் கடவுளாகச் செனித்தவர். இவர் செனித்தவர் உண்டாக்கப்பட்டவர் அல்லர். பிதாவோடு ஒரேபொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன'' என்று திருச்சபை போதித்தது.

திருச்சபையில் மற்றொரு பிரச்சினை எழுந்தது. இயேசு கிறிஸ்து இறைத்தன்மையும் (இறைவனின் மகன்) மனிதத்தன்மையும் (மரியாளின் மகன்) கொண்டவரானால், இரு தன்மைகளுக்குமிடையேயுள்ள உறவு என்ன? நெஸ்தோரியஸ் என்பவர், கிறிஸ்துவின் இரு தன்மைகளுக்கும் இடையில் கடுமையானவேறுபாட்டைப் புகுத்தினார். இதற்காக எபேசு பொதுச்சங்கத்தில் (கி.பி. 431) கண்டனம் செய்யப்பட்டார். ஆனால் அவர் குற்றம் சாட்டப்படும் அளவுக்கு இருமை வாதத்தை அவர் போதித்தார் என்று கூறமுடியாது. அவரது எதிரியான எயுதிக்கஸ், கிறிஸ்துவின் இரு தன்மைகளும் எவ்வளவு இரண்டறக் கலந்துபோயின என்றால், மனித அவதாரத்திற்குப் பிறகு கிறிஸ்து ஒரே தன்மையைக் கொண்ட ஒரே ஆளாக விளங்கினார் என்று போதித்தார். கால்சிதோன் பொதுச்சங்கத்தில் (451) தந்தையர்கள், கிறிஸ்துவின் இரு தன்மைகளும் முழுவதும் பிரிந்தவையுமல்ல, முழுவதும் ஒன்றித்தவையுமல்ல என்று அறிவித்தனர்.

*4. பிற்கால நிலை:-*

கிறிஸ்துவின் இறைத்தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் இடையிலுள்ள உறவை மேலும் ஆய்வு செய்ய மேலும் ஒரு பொதுச் சங்கத்தைக் கிறிஸ்துவத் திருச்சபை கூட்ட

வில்லை. கிறிஸ்துவின் ஒரு தன்மை, ஒரு சித்தம் பற்றிக் கிழக்கத்திய திருச்சபைகள் கொண்டிருந்த முடிவில்லாத் தர்க்கங்களில் மேற்கத்திய திருச்சபை பங்கு கொள்ள வில்லை. சீர்திருத்தவாதிகள் என்று கூறிக் கொண்டவர்கள் கூட கால்சிதோன் விசவாச அறிக்கையை ஏறக்குறைய அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஆனால் லூத்தர் சபையினர். நெஸ்தோரியசின் போதனையை மீண்டும் புகுத்துவதாகக் கால்வினியர்களைக் குற்றம் சாட்டினர். கால்வினியர்கள் லூத்தர் சபையிலே எயுதிக்கசின் போதனையின் தொடக்கநிலை இருப்பதாகக் குற்றம் சாட்டினர். பழங்காலத் திருச்சபைத் தந்தையர்களின் பொருத்தமில்லாத மொழியைப் பல நவீன கிறிஸ்தவர்கள் குறை கூறலாம். ஆனால் கால்சீதோன் விசுவாச அறிக்கையைப் பெருமளவில் ஏற்றுக்கொள்வர். ஏனெனில் கால்சீதோன் தந்தையர்கள் ''கிறிஸ்துவத்தின் சாரத்தையும், கிறிஸ்துவச் சமயத்தின் கலப்பற்ற முழுமையான தன்மையையும், அதனால் அதன் சொந்த சுதந்தரத்தையும்'' பாதுகாத்துள்ளனர்.

### கிறிஸ்து பிறப்பு விழா - கிறிஸ்மஸ் - கிறிஸ்துமஸ் (CHRISTMAS)

கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விழாவாகும். மேற்குத் திருச்சபை, கி.பி. 336-இலிருந்து, இவ்விழாவைத் திசம்பர் மாதம் 25-ஆம் நாள் கொண்டாடி வருகிறது. உரோமையர் ''வெற்றிபெற முடியாத சூரியனின் பிறப்பு நாளையும்'' பேரரசன் அவுரேலியுவின் பிறப்பு நாளையும் கொண்டாடினர். இதற்கு மாற்றாகக் கிறிஸ்து பிறப்பு நாளைக் கொண்டாடினர். அலக்சாந்திரியாவிலும் கிழக்குத் திருச்சபைகளிலும் தொடக்கத்தில் இயேசுவின் பிறப்பு, இயேசுவின் திருமுழுக்கை நிறைவு கூறும் திருவெளிப்பாட்டு விழாவுடன் சேர்த்து, சனவரி 6-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. கிழக்குத் திருச்சபையின் சில பிரிவுகள் இன்றும் இந்நாளிலேயே இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகின்றன. கிறிஸ்துமஸ் என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. மேற்குத் திருச்சபை வழிபாட்டில் தந்தையின் உள்ளத்திலிருந்தும், மரியாளின் உதரத்திலும், விசுவாசியின் ஆன்மாவிலும் இயேசு பிறக்கும் முப்பிறப்பைக் குறிக்கும் முறையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக் கொடுப்பதிலிருந்து இப்பெயர் வருகிறது.

### கிறிஸ்துவின் இறைத்தன்மை (DIVINITY OF CHRIST)

இயேசு கிறிஸ்து தெய்வீகத் தன்மை நிறைந்தவர் என்பது கிறிஸ்துவ மதத்தின் நம்பிக்கை. இயேசுவின் ,இறைத்தன்மைக்கும் அதாவது கிறிஸ்து கடவுள் என்பதற்கும், இயேசு இறைத்தன்மையில் பங்கு பெறுபவர் என்று கூறுவதற்கும் வேறுபாடுகள் உண்டு. ஐந்தாம் நூற்றாண்டில் உண்டான இறையியல் கிறிஸ்துவைக் கடவுள் என்று ஏற்றுக்கொண்டது. இது பாரம்பரியப் போதகமாயிற்று. ''ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார்.'' என்று யோவா 1:1-இல் பார்க்கின்றோம். யோவா 10:34-36-இல் கடவுளின் மகன் என்று எண்பிக்கின்றார்; யோவா 20:28-இல் தோமையார் ''என் ஆண்டவரே, என் கடவுளே'' என்று அறிக்கையிடுகிறார். பவுல் கொலோ 2:9-இல் ''அவருள்தான் (இயேசு) கடவுள் தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் குடிகொண்டிருக்கிறது'' என்று கூறுகின்றார். தீத் 2:13-இல் ''மகத்துவமிக்க கடவுளும் நம் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின்'' என்று கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு இயேசுவைக் 'கடவுளின் மகன்' என்று குறிப்பிடும் போதெல்லாம் ஏதாவது ஒருபொருளில் அவருடைய இறைத்தன்மையை உறுதியாகக் கூறுகிறது. ஏனெனில் இறைமகன் என்ற சொல் இயேசு மனிதரைப்போலல்லாமல் இறைவனைப் போல் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு பண்பைக் குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதியும் இயேசுவை இறைமகனாகச் சித்தரிக்கிறது. 'கிறிஸ்து' என்ற சொல் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டது. இச்சொல் இறைமகன், மனுமகன், ஆண்டவர் போன்ற கருத்துக்களையெல்லாம் உள்ளடக்குகிறது. ஆகவே கிறிஸ்து

வின் இறைத்தன்மை புதிய ஏற்பாட்டில் காணும் பொதுக்கோட்பாடாகக் கருதப்பட லாம். புதிய ஏற்பாட்டு ஆசிரியரில் பெரும் பாலோர் இயேசுவைக் கடவுளின் மகன் என்று கூறியபோது கொண்டிருந்தபொருள் பிற்காலத்திருச்சபை இயேசுவை இறைவன் என்று கூறியபோது கொண்டிருந்தபொருளே ஆகும். ஆனால் யோவான் பயன்படுத்திய மொழிகளைத் தவிர்த்தனர். ஏனெனில் கிறிஸ்துவின் இறைத்தன்மையைப்போல் மனிதத்தன்மையையும் உறுதியாக விசுவசித் தனர். அதே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளை விசுவசித்தனர் என்ற குற்றச்சாட் டையும் தவிர்க்க விரும்பினர். இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் எழுப் பப்பட்ட பிரச்சனைகளை ஆதிக்கிறிஸ்தவர் கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

கிறிஸ்து இயலின் முக்கிய ஆசிரியர்க ளான பவுலும் நற்செய்தியாளர் யோவானும் மகன் தந்தைக்கு ஒருவிதத்தில் தாழ்ந்தவர் என்று கூறமுயலுகின்றனர். எனவேதான் யோவா 5:19-இல் ''மகன் தாமாகவே ஒன் றும் செய்யமுடியாது. தந்தை செய்யக் காண் கிறதையே செய்வார்'' என்றும் 5:30-இல் ''தன் விருப்பத்தை நாடாமல் தன்னை அனுப்பியவருடைய விருப்பத்தையே நாடு வார் என்றும்'' யோவான் கூறுகின்றார். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகத்தில் 'உலகமுடிவில் அனைத்தையும் தகர்த்துவிட்டு இயேசு, கடவுளும் தந்தையு மானவரிடம் அரசை ஒப்படைப்பார்' (15:24) என்றும் 'மகனும் அனைத்தையும் தமக்குப் பணியச் செய்த இறைவனுக்குத் தாமே அடி பணிவார்' (15:28) என்றும் கூறுகின்றார். இது போலவே திருவெளிப்பாட்டு நூலில் மெசியாவின் ஆட்சி முடிவுக்கு வருகிறது (திருவெளி 20:6-7).

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை தொடர்ந்து முடிவில்லாமல் இருக்கின்றது. அதற்கு ஆரம்பம்கூட இல்லையா? நான் காம் நற்செய்திப்படி ''அவர் (வார்த்தை) ஆதியிலே கடவுளோடு இருந்தார்'' (1:2) என்று வாசிக்கின்றோம். எபிரேயருக்கு எழு தப்பட்ட திருமுகமும் காலங்கள், அல்லது உலகங்கள் எல்லாம் மகன் வழியாக உண் டாக்கப்பட்டன என்று கூறுகின்றது. இப்பகுதி யில் வரும் மற்றக் கூற்றுக்களும் மகனின் முடிவில்லா நிலையை எடுத்துரைக்கின்றன. பவுல் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத் தில் 'அவரில் அனைத்தும் உண்டாயிற்று'' (1:16) என்று கூறுகின்றார். மேலும் அவர் கடவுள் தன்மையில் விளங்கினார் (பிலி 2:16); கொலோ 1:15-இல் காணப்படும் 'படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்' என்பது படைப்புக்கெல்லாம் முதல் படைப்பு இவர்தானா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

பவுலின் திருமுகங்களிலிருந்து எழும் மற் றொரு பிரச்சனை, கிறிஸ்து தமது இவ்வுல கப் பணியின் போது தெய்வீகத்தின் குணங்க ளைக் கொண்டிருந்தாரா அல்லது செயலாற் றினாரா என்பதாகும். பிலிப்பியருக்குரிய திருமுகத்தில் வரும் கிறிஸ்து இயல் பகுதி ''இயேசு, தம்மையே வெறுமையாக்கி, அடி மையின் தன்மைபூண்டு மனிதருக்கு ஒப்பா னார்'' (பிலி 2:7) என்று உறுதியாகக் கூறுகி றது. மற்ற இடங்களில் தமது மனித நிலைக ளுக்கு இயேசு கட்டுப்பட்டிருந்தார் (2 கொரி 13:14; கலா 4:4) என்பதைப் பவுல் வலியுறுத்திக் கூறுகின்றார்.

பெரும்பாலான புதிய ஏற்பாட்டு நூல்கள் இதுபோன்ற கருத்துக்களைப் பிரதிபலிப்ப தில்லை. மாற்கு நற்செய்தியைப் பொருத்த மட்டில் இயேசு திருமுழுக்கின் போதுதான் கடவுளின் மகன் ஆனாரா அல்லது அவர் எப்பொழுதும் கடவுளின் மகன் என்றும் திருமுழுக்கின் போது பொதுப்பணிக்குக் குறிக்கப்பட்டார் என்றும் நற்செய்தியாளர் விசுவசித்தாரா என்று கேள்வி எழுப்பலாம். மத்தேயு, லூக்கா நற்செய்திகள், மரியாள் பரிசுத்த ஆவியால் கருவுற்றதிலிருந்து இயேசு கடவுளின் மகன் என்று ஏற்றுக் கொள்கின்றன. இம்மூன்று நற்செய்திக ளுமே கடவுளின் மகனின் முன் வாழ்வு பற்றிய கருத்துக்களைக் கொண்டிருந்தன என்று கண்டுபிடிக்கப்போதுமான சான்றுகள் இல்லை எனலாம்.

## கிறிஸ்துவின் உடல் (BODY OF CHRIST)

புதிய ஏற்பாட்டின் மீட்பின் மறைபொருளில், கிறிஸ்துவின் உடலானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் உள்ளது. ஆனால் இச்சொற்றொடர் பல்வேறுபட்ட பொருட்களை உணர்த்தவல்லது. இச்சொற்றொடரானது சில நேரங்களில் அவரது நற்கருணை உடலையும், மற்ற நேரங்களில் நம்மை உறுப்பினர்களாகக் கொண்ட உடலாகிய திருச்சபையையும் குறிப்பிடுகிறது.

I. இயேசுவின் தனிப்பட்ட உடல்

1. இயேசுவும் அவரது உடல் வாழ்வும்:- இயேசு நமது உடல் வாழ்வில் பங்கு கொண்டார் என்ற உண்மையானது, புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுகின்றது. ஊனுடலின்படி இயேசு குலமூதாதையர்கள் வழிவந்து, தாவீதின் மரபில் (உரோ 1:3; 9:5), பெண்ணுக்குப் பிறந்தவர் (கலா 4:4) என்று பவுல் வலியுறுத்துகிறார். நற்செய்தி நூல்களில் இயேசுவின் மனித இயல்பு எங்கும் தெளிவாக இருப்பதால், அவரது உடலைப்பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவது அவசியமற்றது. அவர், பசி (மத் 4:2), களைப்பு (யோவா 4:6), தாகம் (4:7), உறக்கம் (மாற் 4:38), மற்றும் துன்பம் முதலானவற்றையும் அனுபவிக்கிறார். அதே உண்மைகளை வலியுறுத்துவதற்கென யோவான் இயேசுவின் ஊனுடலைப்பற்றிப் பேசி (யோவா 1:14). ''இயேசு ஊனுடலெடுத்து வந்தார்'' என்பதை மறுப்பவர்கள் மீது சாபத்தை விதிக்கிறார் (1 யோவா 4:2:2 யோவா 7).

2. இயேசுவின் உடல்சார்ந்த மரணம்:- இயேசுவின் உடல் பற்றிய குறிப்புகள், பாடுகளின் நிகழ்ச்சியுரைகளில் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. பெத்தானியாவில் உணவு நேரத்தில், அடக்கம் செய்யப்படுவதற்கென அவரது உடலுக்குத் தைலம் பூசப்படுகிறது (மத் 26:12). இறுதியாக அவர் சிலுவையில் மரித்து (மத் 27:50), கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார் (மத் 27:58 தொ; யோவா 19:38தொ). ஒவ்வொரு மனிதனுக்கும் நிகழும் சிறப்பற்ற இந்தச் சாதாரண முடிவானது, மீட்பின் மறைபொருளில் ஒரு சிறப்பான பொருளைக் கொண்டுள்ளது. ஏனெனில், சிலுவையில் தமது உடலில் இயேசு நமது பாவங்களை ஏற்றுக்கொண்டார் (2:24); இவ்வுடலை மரணத்திற்குக் கையளித்ததன் மூலம், இறைவன் இந்த ஊனுடலில் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:22). உண்மையான பாஸ்காச் செம்மறியாகிய (கொரி 5:7) கிறிஸ்துவின் இவ்வுடல், நம்முடைய மீட்பின் கருவியாக உள்ளது. குத்திஊடுருவப்பட்ட அவரது பக்க வாட்டினின்று இரத்தமும் நீரும் வழிந்தோடியது (யோவா 19:33 தொ). கிறிஸ்துவினுடைய பலியை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக, எபிரேயருக்கான திருமுகம் இயேசுவின் உடலுக்குத் தனிப்பட்ட கவனத்தை அளிக்கின்றது. உலகிற்கு அவர் வருகை தந்தபோது இறைவன் அவருக்கென ஒரு உடலை அமைத்திருந்ததால் (எபி 10:5), தம்மையே பலியாக்குவதற்கு இயேசு தயாராகவுள்ளார். மேலும், தமது உடலையே காணிக்கையாக்கியதன் மூலம் ஒரே முறையாக அவர் நம் அனைவரையும் புனிதப்படுத்தினார் (10:10).

3. இயேசுவின் மகிமைப்படுத்தப்பட்ட உடல்:- உறுதியாகக் கூறுவதாயின், இந்த மறைபொருளானது இயேசுவின் உடல் மரணத்துடன் முடிந்துவிடாமல், அவருடைய உயிர்ப்பிலேயே நிறைவடைகிறது. நற்செய்தியாளர்கள், உயிர்ப்புக் காட்சிகளைப் பற்றிய தங்களுடைய விவரிப்புக்களில், உயிர்த்த இயேசுவினுடைய உடலின் உண்மையை வலியுறுத்தும்போது (லூக் 24:39.42; யோவா 20:27), அவருடைய மரணத்திற்கு முற்பட்டது போன்ற அதே கட்டுப்பாடுகளுக்கு அது இனியும் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பதையும் வலியுறுத்துகின்றனர் (யோவா 20:19.26). அது இனிமேலும் ''மனித உயிர்கொண்ட உடலாக'' இல்லாமல் (1 கொரி 15:44), ''மாட்சிமைக்குரிய உடலாகவும்'' (பிலி 3:21), ''தேவ ஆவிக்குரிய உயிர்கொண்ட உடலாகவும்'' உள்ளது (1 கொரி 15:44). இவ்வாறு, மனிதனானதிலிருந்து தொடங்கிய புதிய அமைப்பில்

இயேசுவினுடைய உடலின் புனிதப்பொருளானது குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுத்தப்படுகிறது. அழிக்கப்பட்டுப் பின்னர் மூன்று நாட்களில் கட்டப்பட்ட இவ்வுடலானது, மனிதரிடையிலான இறைவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாக இப்போது பழைய ஆலயத்தின் இடத்தைக் கொண்டுள்ளது (1 யோவா 2:18-22).

II. கிறிஸ்துவின் உடலினுடைய திருவருட் சாதனம்:-

1. ''இது என் உடல்'':- உயிர்ப்பிற்குப் பின்னர், கிறிஸ்துவினுடைய உடலானது ''இறைவனுடைய வலப்புறத்தில்'', காணவியலா விண்ணக வாழ்க்கையை மட்டும் அனுபவிக்கவில்லை (எபி 10:12). தமது மரணத்திற்கு முன்னர், அடையாளங்களை உபயோகிப்பதன்மூலம், அவர் தாம் பலியாக்கப்பட்ட உடலின் உலகப் பிரசன்னத்தை, நிலைப்படுத்துவதற்கென ஒரு சடங்கை உருவாக்கினார். நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்ச்சிபற்றிய விவரிப்புக்கள், இச்சடங்கானது அண்மையில் நிகழவிருந்த சிலுவையில் முன்னோக்கில் நிறுவப்பட்டது என்பதைக் காட்டி, அதனால், இயேசுவினுடைய உடல் மரணத்தின் பொருளை வெளிப்படுத்துகின்றன. ''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்'' (1 கொரி 11:24); ''உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24). இவ்வாறு, அப்பம் மற்றும் திராட்சை ரசத்தினுடைய அடையாளமானது, இவ்வுலகில் நமக்கெனக் கையளிக்கப்பட்ட இயேசுவின் உடலையும், சிந்தப்பட்ட அவரது இரத்தத்தையும் இப்போது பிரசன்னமாக்குகின்றது.

2. திருச்சபையினுடைய நற்கருணை அனுபவம்:- திருச்சபையில் இதே சடங்கானது புதுப்பிக்கப்படும்போது, கிறிஸ்துவினுடைய மரணத்தின் கொண்டாட்டமாக இது உள்ளது (1 கொரி 11:24 தொ). அதே நேரத்தில், கிறிஸ்துவின் உடலானது ''உயிரளிக்கும் ஆவியாக உருவாகக்'' காரணமாகவுள்ள உயிர்ப்பின் ஒளியில் இந்த நினைவு நிறுவப்பட்டுள்ளது (15:45). மேலும், நற்கருணையானது ஆண்டவரின் வருகையைப் போதித்து, அதனை நோக்குமாறு மனிதனை அழைப்பதன் காரணமாக, இறுதிக்காலப் பரிணாமத்தையும் கொண்டுள்ளது (11:26). எனவே இச்சடங்கின் மூலமாக, மீட்பின் மறைபொருளுக்கு அத்தியாவசியமான அனைத்துக் கூறுகளிலும், திருச்சபை மீண்டும் வாழ்வதற்குக் காரணமாக உள்ள ''கிறிஸ்துவின் உடலில் பங்கு பெறுதல்'' என்னும் ஓர் ஒப்பற்ற அனுபவத்தில் திருச்சபை பங்கு கொள்கிறது.

III. திருச்சபை கிறிஸ்துவின் உடல்:

1. ஒரே உடலின் உறுப்பினர்கள்:- நற்கருணையைப் பெறுவதன்மூலம், நாம் கிறிஸ்துவினுடைய உடலின் உறுப்பினர்கள் என்பதை உணர்கிறோம். ''நாம் அப்பத்தைப் பிடுகிறோமே; அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அன்றோ? அப்பம் ஒன்றே; ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்'' (1 கொரி 10:16-17). எனவே, கிறிஸ்துவுடனான நமது ஒன்றிப்பை நாம் உண்மையான பொருளில் புரிந்துகொள்ளவேண்டும். நாம் உண்மையில் அவரது உறுப்புக்கள். ஆகவே தகாத உறவு கொள்கின்ற கிறிஸ்தவன் ''கிறிஸ்துவினுடைய ஓர் உறுப்பினரை எடுத்து, வேசியுடன் சேர்க்கிறான்'' (1 கொரி 6:15). நாம் ஒருவருக்கொருவர் அங்கத்தினர்களாய் உள்ளோம் (உரோ 12:5) என்று பவுல் கூறும்போது, இச்சந்தர்ப்பத்தில் அவர் உபயோகிக்கின்ற வயிறு மற்றும் பிற உடல் உறுப்புகள் பற்றிய கிரேக்கக் கதைகளைப் போன்று, உருவகமாக அவர் பேசவில்லை (1 கொரி 12:14-26). ஞானஸ்நானத்தினாலும் (1 கொரி 12:13.27) நற்கருணை ஒன்றிப்பினாலும் (1 கொரி 10:17) ஒன்று சேர்ந்த ஒரே உடலின் பல்வேறு உறுப்பினர்களைக் கிறிஸ்துவின் உடலானது ஒன்றிணைக்கிறது. இவ்வுடலில் மொத்த நன்மைக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்குரிய பணியைக் கொண்டுள்ளான் (1 கொரி 12:27-30; உரோ 12:4). சுருக்கமாக இயேசுவின் இந்தச் சிறப்பான உடலில்தான் மனுக்குலத்தின் ஒன்றிப்பு உண்மையாகிறது.

ஏனெனில் இந்த உடலில் தங்களையே ஒன்றிக்க எல்லா மனிதரும் அழைக்கப்படுகின்றனர்.

2. திருச்சபையாகிய கிறிஸ்துவின் உடல்:- சிறைக்கூட மடல்களில் பவுல் மீண்டும் இக்கோட்பாட்டினை வெளிப்படுத்தி, கிறிஸ்து உடலுக்கும் ஆகவே திருச்சபைக்கும் தலையாக உள்ளார் என்பதை வலியுறுத்துவதன் மூலம் மிக முழுமையான வடிவம் அளிக்கின்றார் (கொலோ 1:18).- அதே சமயம், இயேசு படைத்தவராய் இருப்பதால் அவரது அண்டவியல் பங்கையும் (1:16-17; எபே 1:22) வானதூதர்கள் மீதான அவரது உயர்நிலைமையையும் (கொலோ 1:16; 2:10; எபே 1:21) பவுல் வற்புறுத்துகின்றார். உடலின் தலையாகவும் (எபே 5:29) தலைவருமாகவும் உள்ள கணவன் தனது மனைவியைத் ''தனது சொந்த உடலாக'' அன்பு செய்வது போன்று (5:23), கிறிஸ்துவும் திருச்சபையை அன்பு செய்து, மீட்பராகத் (5:23) தம்மையே அவளுக்கு அளித்துள்ளார் (5:25). இவ்வாறு, உடலின் ஒன்றிப்பிற்கு உறுதியளிக்கின்ற (கொலோ 2:19) தலையாக அவர் உள்ள நிலையில் (கொலோ 1:18; எபே 1:22) திருச்சபையானது அவரது உடலாகவும் முழுமையாகவும் உள்ளது (எபே 5:30); நாம் அனைவரும் ஒன்றாக உள்ளோம் (கொலோ 3:15). நம்முடைய தொடக்கம் எப்படிப்பட்டதாயினும் ஒரே மக்களாக, ஒரே புதிய மனிதனாக உருவாவதற்கென, நாம் அனைவரும் இறைவனுடைய நட்புறவிற்குள் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளோம். அதன் விளைவாக நாம் ஒரே மக்களாகிறோம், ஒரே புதிய மனிதனாகிறோம் (எபே 2:14-16). கிறிஸ்துவின் உடலின் பருமனும் பரப்பும் இத்தகையதாகும். கிறிஸ்தவ அனுபவம் கிறிஸ்துவின் மனிதாவதாரம் என்ற வரலாற்று உண்மையிலும், நற்கருணைச் சடங்கிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த அனுபவம் திருச்சபையின் மறை உண்மையுள் புக நமக்கு வாய்ப்பளிக்கிறது.

3. கிறிஸ்துவின் உடலும் நம் உடலும்:- நமது உடல்களும் கூடப் புதிய உலகினுள் புக அழைக்கப்படுகிறது. ஏனெனில் அவை கிறிஸ்துவுக்குள் அவரது அங்கங்களாக ஒட்ட வைக்கப்பட்டுள்ளன. அவை பரிசுத்த ஆவியின் ஆலயங்களாக மாறிவிட்டன (1 கொரி 6:19), ''தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்ற வல்லவரான (பிலி 3:21) கிறிஸ்துவோடு அது உயிர்த்தெழும். இதிலே நமது மீட்பில் கிறிஸ்துவின் உடலின் பணிநிறைவாகச் செயல்படும்.

## கிறிஸ்துவின் தலைமுறை அல்லது மரபுமுறை (GENEOLOGY OF CHRIST)

இத்தலைமுறை அட்டவணைகள் மத் 1;1-16; லூக் 3:23-38 ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இரண்டு அட்டவணைகளும் வேறுபடுவதால், அவற்றைத் தனித்தனியே ஆய்வு செய்வது நன்று.

1. மத்தேயு:- இயேசுவின் தலைமுறை அட்டவணை ஆபிரகாமிலிருந்து தாவீதுக்கும், பின்பு யூதா அரசர்கள் வழியாகவும் எடுத்துக்கூறப்படுகிறது. இதில் முக்கியமானவர்கள் தாவீதும், ஆபிரகாமும் ஆவார்கள் என்று தெளிவாகக் கூறப்படுகிறது (மத் 1:1). மெசியா தாவீதின் வழித்தோன்றலாக இருப்போர் என்பதும் வாக்குறுதிகள் ''ஆபிரகாமுக்கும் அவரது வழித்தோன்றலுக்கும்'' (கலா 3:16; ஆதி 12:7; 22:18) அளிக்கப்பட்டன என்பதும் யூத விசுவாசத்திற்குப் பொதுவானவையாகும்.

மத்தேயு ஆபிரகாமிலிருந்து தொடங்குகிறார். அவரது பெயர் அட்டவணையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் இரண்டு பகுதிகள் ஒவ்வொன்றும் பதினான்கு பெயர்களையும் மூன்றாவது பதின்மூன்று பெயர்களையும் கொண்டுள்ளன. ஆகமொத்தம் நாற்பத்தொரு பெயர்கள் உள்ளன. ஆபிரகாமிலிருந்து தாவீது வரைக்கும், சாலமோனிலிருந்து எக்கொனியா மற்றும் நாடு கடத்தப்படுதல் வரைக்கும், செயல்தியேலிலிருந்து இயேசுவரைக்குமாக இவ்வட்டவணை பிரிக்கப்படுகிறது. இது ஏழுமுறை

இரண்டு, பதினான்காகும். ஏழு தாவீதுக்குரிய அடையாள எண்ணாகும்.

பேரேசிலிருந்து தாவீதுவரைக்குமுள்ள பெயர்கள் ரூத் 4:18-22-இன் எழுபதுநூல் வாசகத்திலிருந்து அப்படியே எடுக்கப்பட்டுள்ளன. சாலமோனிலிருந்து எக்கொனியா வரைக்கும் உள்ள பெயர்கள் 1 நாள் 3:10-15-இல் வரும் பெயர்களோடு ஓரளவு ஒத்துப் போகின்றன. ஆனால் யோராம் ஊசியாவுக் கிடையில் அகசியா, யோவாசு அமசியா ஆகிய பெயர்கள் விடப்பட்டுள்ளன. யோயாக்கிமுக்குப் பதிலாக எக்கொனியா (யோயாக்கின்) வருகிறது. மூன்றாவது பகுதியில் செருபாபேல், லூக் 3:27, எஸ்ரா, நெகமியா மற்றும் ஆக்காயில் உள்ளதுபோல் செயல்தியேலின் மகன் எனக் குறிப்பிடப் படுகிறார். ஆனால் 1 நாள் 3:19-இல் இவர் பெதாயாவின் மகனும் செயல்தியேலின் சகோதரன் மகனும் ஆவார். மூன்றாவது பகுதியில் வரும் பலபெயர்கள் விவிலியத்திலேயே இங்கு மட்டும்தான் காணப்படுகின்றன. செயல்தியேலிலிருந்து யோசேப்பு வரையுள்ள பத்துப்பெயர்கள் ஐந்நூறு ஆண்டுக் காலத்தை நிரப்புகின்றன. இது போதுமானதன்று என்பது தெளிவு. இது சில பெயர்கள் தவறிப்போய்விட்டன அல்லது அகற்றப்பட்டு விட்டன என்பதைக் காட்டுகிறது. இயேசுவின் பாட்டன் பெயர் யாக்கோபு என்று தரப்பட்டுள்ளது.

2. லூக்கா:- இவ்வட்டவணை இயேசுவில் தொடங்கி, பின்னோக்கி ஆதாம் வரைக்கும் ஆதாமைக் கடந்து இறைவன் வரைக்கும் போகிறது. மத்தேயு நாற்பத்தொரு பெயர்களைக் கொடுக்கும்போது லூக்காவின் அட்டவணை எழுபத்தேழு பெயர்களைக் (இறைவனையும் சேர்த்து எழுபத்தெட்டுப் பெயர்களைக்) கொடுக்கிறது. இரண்டு அட்டவணைகளுக்கிடையில் பதினேழு பெயர்கள் பொதுவானவையாகும். ஆர்பகசாதுவின் மகனாகக் காயினானைச் சேர்ப்பதைத்தவிர, இந்த அட்டவணையில் ஆதாமுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் வரும் பெயர்கள் ஆதி 5; 11:10-27; 1 நாள் 1:1-4.24-26-இல் வரும் பெயர்களோடு ஒத்துள்ளன. ஆர்னி, அதிமின் ஆகிய பெயர்களைச் சேர்ப்பது தவிர லூக்காவின் அட்டவணையில் ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் இடையில் வரும் பெயர்கள் மத்தேயுவின் பெயர்களோடு ஒத்துப் போகின்றன. ஆனால் இப்பெயர்கள் தொடர்பான வாசக வேறுபாடுகள் பல உள்ளன. இரண்டு அட்டவணைகளிலும் செயல்தியேல், செருபாபேல், யோசேப்பு ஆகிய பெயர்கள் மட்டுமே பொதுவாக உள்ளன. மத்தாத்தும் (லூக் 3:24), மாத்தானும் (மத் 1:15) ஒரே ஆளைக் குறிக்கலாம். யோதா (லூக் 3:26) அபியூதுவின் (மத் 1:13) சுருக்கமாக இருக்கலாம். செருபாபேலின் மகனாக லூக்கா குறிக்கும் இரேசா என்பது ஆளின் பெயராக இல்லாமல் இருக்கலாம். இளவரசன் என்ற பொருளில் செருபாபேலின் பட்டமாக இருக்கலாம். இரேசாவின் மகனாக லூக்காவால் குறிக்கப்படும் யோவனான் 1 நாள் 3:19-இல் செருபாபேலின் மகனாகக் கொடுக்கப்படும் கன்னியாவாக இருக்கலாம். இப்படியிருந்தால் லூக்காவின் மூல வாசகத்தில் இளவரசான செருபாபேலின் மகன் யோவனான் என்றிருந்திருக்கவேண்டும்.

தாவீதுக்குப் பின்வரும் பெயர்கள் இரண்டு அட்டவணைகளிலும் வேறுபடுவதற்குக் காரணம் இயேசுவின் தலைமுறையை மத்தேயு சாலமோனின் வழியாகவும், லூக்கா நாத்தான் வழியாகவும் தருகின்றனர். இந்த நாத்தான் பதுசோபா வழியாகத் தாவீதுக்குப் பிறந்த மற்றொரு மகனாவார் (2 சாமு 5:14; 1 நாள் 3:5; 14:4). லூக்காவின் அட்டவணையில் நாத்தான் மற்றும் செயல்தியேலுக்கு இடையிலும் செருபாபேல் மற்றும் யோசேப்புக்கிடையிலும் முப்பத்தேழு பெயர்களும் அறியப்படாதவையாகும். யோயாக்கிமின் மீதும் அவரது மகன் யோயாக்கின் மீதும் விழுந்த எரேமியாவின் சாபத்தால் லூக்காவின் அட்டவணை பாதிக்கப்பட்டிருக்கலாம்(எரே22:18-19.28.30;36:30-31). மத்தேயு (1 நாள் 3:17-இல் இருப்பது போல்) செயல்தியேலை எக்கொனியாவின் மகனாகக் குறிப்பிடுகிறார். ஆனால் லூக்கா

செயல்தியேலை நேரியின் மகனாகக் குறிப் பிடுகிறார்.

லூக்காவின் அட்டவணை இயேசுவுக்கும் ஆதாமுக்கும் இடையில் எழுபத்தேழு பெயர்களைக் கொண்டுள்ளது. இது ஏழு முறை பதினொன்றாகும். மத்தேயுவில் உள் ளது போல், லூக்காவின் பெயர்களையும் குழுவாகப் பிரிக்கலாம். ஆனால் இது நான்கு பகுதிகளாகும். அ) இயேசுவி லிருந்து செருபாபேல் வரைக்கும் இருபத் தொரு பெயர்கள்: இ) தாவீதிலிருந்து ஈசாக்கு வரை பதினான்கு பெயர்கள் (ஏழுமுறை இரண்டு); ஈ) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரை இருபத்தொரு பெயர்கள். இந்த அட்ட வணையில் செருபாபேல், தாவீது, ஆபிர காம் ஆகிய பெயர்கள் முக்கியமானவைக ளாகும்.

3. வேறுபாடுகளின் விளக்கங்கள்:- இரண்டு அட்டவணைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் தொடக்கத்திலிருந்து பிரச்ச னைகளை எழுப்பியுள்ளன. கி.பி. 220-ஐ ஒட்டிய யூலியு ஆப்பிரிக்கானு என்பவர் அரிஸ்திதைடு என்பவருக்கு எழுதிய கடிதத் திலிருந்து, இரு அட்டவணைகளும் அடை யாளப் பண்புடையவைகள் என அறிகி றோம். மத்தேயு இயேசுவின் தலை முறையை யூதாவின் அரசர்கள் வழியாகக் கூறு வதால், அவரது அட்டவணை கிறிஸ்துவின் அரசப்பண்பை எடுத்துக்காட்டுகிறது. லூக்கா வின் அட்டவணை கிறிஸ்துவின் குருத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. யுசேபியு வின் கருத்துப்படி, ஆப்பிரிக்கானுவே, தாவீ திலிருந்து யோசேப்புக்கிடையில் வரும் பெயர்களின் வேறுபாடுகளை உடன் பிறந் தான் திருமணச்சட்டம் விளக்கவல்லது என்று நம்பினதாகத் தோன்றுகிறது. இச்சட் டத்தின்படி, ஒரு மகனைப் பெறாத விதவை, தன் கணவனின் சகோதரனை மணக்கவேண் டும். இதன் விளைவாக அவள் பெற்றெடுக் கும் மகன், தன் தாயின் முதல் கணவனின் மகனாகக் கருதப்படுவான். இவ்வாறு ''இறந்தவனுடைய பெயர் இஸ்ராயேலில் மறைந்து போகாது'' (உப 25:5 தொ). இக் கருத்தின்படி லூக்காவில் உள்ளதுபோல், யோசேப்பு உண்மையில் கேலியின் மகனா வார். ஆனால் அவர் (மரியாவின் முதல் கணவனான) தன் சகோதரன் (மத்தேயுவில் உள்ளதுபோல்) யாக்கோபின் பெயரை எடுத் துக் கொண்டார். ஆகவே கேலியும் யாக்கோ பும் சகோதரர்கள். ஆனால் இவர்கள் வெவ் வேறு தகப்பன்களுக்கு ஒரே தாயிடம் பிறந்த வர்கள். கேலியன் தலைமுறை நாத்தான் வழியாகத் (லூக்) தாவீதுக்குச் சென்றது. யாக்கோபுவின் தலைமுறை சாலமோன் வழியாகத் (மத்) தாவீதுக்குச் சென்றது. இந்த விளக்கம் விசித்திரமானது. மத்தேயுவும் லூக்கா வும் இயேசுவின் கன்னிப் பிறப்புப்பற்றிக் கூறுபவற்றோடு ஒத்துப்போகாது. ஆகவே இதை ஏற்கமுடியாது. வேறுசிலர், மத்தேயு இயேசுவின் உடல் சார்ந்த தலைமுறையை யும் லூக்கா, உடன்பிறந்தான் திருமணம் என்ற சட்டமுறையின் கீழ், சட்டமுறையான தலைமுறையையும் கொடுப்பதாகக் கூறு வர். இக்கருத்தின்படி, கேலி குழந்தையின்றி இறந்தார். இதனால் அவரது ஒன்றுவிட்ட சகோதரன் யாக்கோபு கேலியின் வித வையை மணந்தார். அதன் விளைவாக இயேசுவின் தந்தையாகிய யோசேப்பு பிறந் தார். மற்றும் சிலர், மத்தேயு சட்டமுறைத் தலைமுறையையும் லூக்கா உடல்சார்ந்த தலைமுறையையும் கொடுப்பதாகக் கருது வர்.

கி.பி. 1490-ஐ ஒட்டிய அன்னியு வித் தெர்போ என்பவர் மத்தேயு யோசேப்பின் தலைமுறையையும், லூக்கா மரியாவின் தலைமுறையையும் கொடுக்கின்றனர் என் றார். இத்தகைய விளக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. சமீப காலத்தில் இந்த விளக்கத் திற்கு அறிஞர் சிலர் ஆதரவு அளித்துள்ளனர். இதில் ''அவரை மக்கள் யோசேப்பின் மகன் என்று கருதினர்'' (லூக் 3:23) என்ற கூற்றின் அடிப்படையில், லூக்கா இயேசுவுக்கும் யோசேப்புக்கும்இடையில் உள்ள தொடர் பைப் புறக்கணிப்பதாகத் தெரிகிறது.

முடிவாக இரண்டு அட்டவணைகளும் தொடக்கத்திலிருந்தே வெவ்வேறு யூதக் கிறிஸ்தவர்களால், இயேசுவின் மெசியாத் தன் மையை வலியுறுத்தச் சுதந்தரமாக அமைக் கப்பட்டவைகளாகத் தெரிகிறது. இவற்றை இரு நற்செய்தியாளரும் தங்களுடைய இறை யியல் நோக்கத்திற்கு ஏற்றவாறு பயன்படுத் தினர். இதன்படி, மத்தேயு, பொதுப்பாணி யில் அமைந்த தாவீதின் அரச தலைமுறை யைக் கொடுத்து அதோடு யோசேப்பு மற் றும் இயேசுவின் பெயர்களைச் சேர்த்தார். இதன்படி இயேசு தாவீதின் வழித்தோன்ற லாயிருப்பது அவர் தாவீதின் மகன் (மத் 22:45) மற்றும் சாலமோனுக்கும் மேலானவர் (12:42) என்ற அளவில், அவர் நிறைவேற் றும் அலுவல்களைக் குறிக்கிறது. லூக்கா, இயேசுவின் உடல்சார்ந்த தலைமுறையை யும் மனுக்குலத்தோடு அவர் கொண்டிருக் கும் பிணைப்பையும் எடுத்துக்கூறுகிறார். இது தலைமுறைப் பகுதிக்கு உடனடியாக முன்வரும் திருமுழுக்கு விவரிப்பால் எடுத் துக்காட்டப்பெறுகிறது (லூக் 3:21-22). ஆனால் இப்போதுள்ள அட்டவணைகளில் உள்ள பிரச்சனைகளும், அவற்றில் இருக்கக் கூடிய இரட்டிப்பு விவரிப்புகளும் துல்லிய மான வரலாற்று விவரங்களை மறைத்துவிடு கின்றன. பழங்காலத் தலைமுறை அட்டவ ணைகளில் இருப்பதுபோல், முதலும் (இயேசு) முடிவுமே (ஆதாம்) முக்கியமான வையாகும்.

### கிறிஸ்துவின் நாள் (DAY OF CHRIST)

பழைய ஏற்பாட்டில் ''யாவேயின் நாள்'' குறிப்பிடப்படுகிறது (ஏச 2:12; 13:6 தொ; யோவே 1:15; 2:31; ஆமோ 5:18; செப் 1:7 தொ; செக் 14:1; மலா 4:5). இது பொதுவாக இறைவன் பழிவாங்குதலையும் அழிவை யும் தீர்ப்பையும் கொண்டுவரும் பயங்கர நாளாகும். இந்த இறைவாக்குக் கருத்து, யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நாளில் இறைவன் இத்தீமையின் காலத்தை இறைதீர்ப்போடு கூடிய பெருங்கேடான முடிவுக்குக் கொண்டு வருவார். சில வாசகங்களில் இறைவன் அல்லது மெசியாவே நீதிபதியாக இருப்பார்.

''இறைவனின் நாள்'' என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் இருமுறை மட்டும் தான், அதுவும் வெளிப்பாட்டுச் சூழ்நிலையில் வருகிறது. 2 பேதுரு 3:12-இல் இக்காலத்தின் முடிவில் விண்ணும் மண்ணும் நெருப்பால் வெந்துருகி அழிந்துபோவது ''கடவுளு டைய நாள்'' என்று அழைக்கப்படுகிறது. திருவெளி 16:14-இல் ''எல்லாம் வல்ல கட வுளின் பெருநாள்'' இக்காலத்தின் முடிவுக் குச் சிறிது முன்பு, ஆர்மாகதோன் போருக்கா கக் குறிக்கப்பட்ட நாளாகும்.

பழைய ஏற்பாட்டின் எழுபதுநூல் மொழி பெயர்ப்பு ''யாவே'' என்ற எபிரேயச் சொல் லுக்குப் பதிலாக ''ஆண்டவர்'' என்று பொருள்படும் கிரேக்கச் சொல்லைப் பயன் படுத்தியது. ஆகவே எழுபது நூலில் ''யாவேயின் நாள்'' ''ஆண்டவரின் நாளா''யிற்று.

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் இயேசுவை இறைவன், ஆண்டவர் என்றழைத்த தால், கிரேக்க விவிலியத்தில் அவர்கள் கண்ட ''ஆண்டவரின் நாள்'' கிறிஸ்துவின் நாளாய் இயற்கையாகவே புரிந்துகொள்ளப் பட்டது (1 கொரி 5:5). பவுல் ''பாவியைச் சாத்தானுக்குக் கையளிக்கவேண்டும். அவ னது உடல் அழிவுற்றாலும், அவனது ஆன்மா ஆண்டவரின் நாளில் மீட்படையும் படி இவ்வாறு செய்வோம்'' என்று கூறுகி றார்.

1 கொரி 1:8-இல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படவேண்டும் என்று ஆர் வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட இயேசு கிறிஸ்து வின் வருகை ''ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்'' என்று தெளிவாக அழைக்கப்படுகிறது; 2 கொரி 1:14-இல் ''இயேசு கிறிஸ்துவின் நாள்'' என்றும், பிலி 1:10; 2:16-இல் ''கிறிஸ்துவின் நாள்'' என்ற குறுகிய வடிவிலும் அழைக்கப்படுகிறது.

இதற்கு இணையான சொற்றொடர் மனு மகன் வெளிப்பட்டுத் தீயவர்களை அழிக்கும் நாள் என்பதாகும் (லூக் 17:24.30). அதாவது இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகை

யில் விண்ணக மனுமகனாகத் தோன்றும் நாளாகும். புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் கிறிஸ்துவின் நாள் வெறுமனே ''நாள்'' என்றும் (2 திமோ 1:12.18; 4:8; எபி 10:25) ''கடவுள் வரும்நாள்'' என்றும் (1 பேதுரு 2:12), ''தீர்ப்பின் நாள்'' என்றும் (2 பேதுரு 2:9; 1 யோவா 4:17) அழைக்கப்படுகிறது.

கடவுளின் நாளும், ஆண்டவரின் (அதாவது இயேசுவின்) நாளும் எப்போதும் தெளிவாக வேறுபடுத்தப்படுவதில்லை. 2 பேதுரு 3:10.12-இல் இரண்டும் செயல் அளவில் ஒன்றாகப்படுகின்றன. இது போலவே உரோ 2:16-இல் ''இயேசு கிறிஸ்துவின் வாயிலாகக் கடவுள் மனிதர் உள்ளங்களில் மறைந்திருப்பவற்றைத் தீர்ப்பிடும் நாளைப்'' பவுல் குறிப்பிடுகிறார்.

## கிறிஸ்துவின் பாடுகள் (PASSION OF CHRIST)

இத்தலைப்பு கிறிஸ்து தமது இவ்வுலக வாழ்வின் இறுதிநாட்களில் அனுபவித்த மீட்புத் துன்பங்களைக் குறிப்பாக அவரது சிலுவை மரணத்துக்கு இட்டுச்சென்ற நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது. இது ''தாம் பாடுபட்ட பின்னர்'' என்று அ.ப. 1:3-இல் குறிக்கப்படுகிறது. இப்பொருளில் பாடுகள் என்ற சொல்லை அப்போஸ்தலர்காலத் தந்தையர்கள் குறிப்பாக அந்தியோக்கிய இஞ்ஞாசியர் தன் திருமுகங்கள் வழியாக மக்களிடையே பரவச் செய்தனர். இச்சொல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியிலேயே பொது வழக்கில் இருந்தது. அதன்விளைவாக அதன் பொருள் துல்லியத்தைக் கொண்டிருக்கவில்லை. இயேசுவின் சிலுவை மரணத்திற்கு இட்டுச் சென்ற துன்பங்களைக் குறிப்பதோடு, அவற்றை விவரிக்கும் நற்செய்திப் பகுதிகளையும் (குறிப்பாக மத் 26-27; மாற்கு 14-15; லூக் 22-23; யோவா 18-19) குறித்தது. இரண்டாம் வாத்திக்கான் சங்கத்திற்கு முன் உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய இரண்டாம் ஞாயிறு பாடுகளின் ஞாயிறு என்றழைக்கப்பட்டது. உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய இரு வாரகாலம் பாடுகளின் காலம் என்றழைக்கப்பட்டது. இப்போது உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய முதல் ஞாயிறு பாடுகளின் ஞாயிறு என்றழைக்கப்படுகிறது. பொதுவாகப்பாடுகள் என்பது இயேசுவின் இறுதி நாட்களில் நடந்த அவரது இறுதி இரவுணவு, கெதுசமனியில் வேதனை, கைதியாக்கப்படுதல், விசாரணை, மரணம், அடக்கம் ஆகியவை அடங்கிய நிகழ்ச்சியைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

இயேசுவின் பாடுகளைப்பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளை அ) இயேசு கூறியவை ஆ) அவரைப் பற்றிக் கூறப்பட்டவை யென இரு தொகுப்புகளாகப் பிரிக்கலாம். தமது துன்பங்கள், மரணம், மற்றும் உயிர்ப்பு பற்றி இயேசு மும்முறை தம் சீடர்களுக்கு முன்னறிவித்தார் [அ) மாற் 8:31-32; மத் 16:21; லூக் 9:22; ஆ) மாற் 9:31-31; மத் 17:22-23; லூக் 9:43-45; இ) மாற் 10:32-34; மத் 20:17-19; லூக் 18:31-34)]. மலையில் உருமாறிய நிகழ்ச்சிக்குப்பின், மனுமகன் பாடுகள் பலபட வேண்டும் என்று போதித்தார் (மாற் 8:12; மத் 17:12; லூக் 17:25). ''நான் பாடுபடுவதற்குமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாய் இருந்தேன்'' என்று கூறினார் (லூக் 22:15). ''மனுமகன் அவர்களை விட்டுப்பிரியும் நாள்'' (மாற் 2:19; மத் 15; லூக் 5:35), ''நான் பெறவேண்டிய ஞானஸ்நானம் ஒன்றுண்டு'' (லூக் 12:50), இறைவாக்கினர்கள் மடியும் எருசலேம் (லூக் 13:33), கொல்லப்பட்ட மகன் (மாற் 12:8; மத் 2:19; லூக் 20:15), ''என் அடக்கத்தைக் குறித்து முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசினாள்'' (மாற் 14:8; மத் 26:12) ஆகியவை பற்றிய கூற்றுக்கள் அவரது துன்பங்களை உள்ளடக்கியுள்ளன. ''பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்க வந்தார்'' (மாற் 10:45; மத் 20:28), ''உடன் படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24; காண் மத் 26:28; லூக் 22:20), அவரின் பாடுகளின் அவசியத்தைக் கூறும் மறைநூல் (லூக் 24:26-27.46), இறைவனின் விருப்பம் நிறைவேறுதல் (மாற் 14:36; மத் 26:39; லூக் 22:42) ஆகியவை யாவும் பாடுகளில் இயேசுவின் நோக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.

இத்துன்பங்கள் பற்றிய இயேசுவின் கூற்றுக்களைக் கேட்ட சீடர்கள் முதலில் மலைத்துப் போயினர். பிற்பாடு, அவரது மரணம் மற்றும் உயிர்ப்புப் பற்றிய உட்பொருளை உணர்ந்து கொண்டனர். அதற்குத் தங்கள் விசுவாசத்தின் உதவி கொண்டு விளக்கம் அளித்தனர். இயேசுவின் பாடுகளில் பங்கு கொள்ளுதலில் உள்ள வியப்பையும், ஆறுதலையும் வாக்குறுதியையும் பவுல் அறிந்திருந்தார் (உரோ 8:17; 2 கொரி 1:5; பிலி 3:10; கொலோ 1:24). அவர் உயிர்ப்பைக் கிறிஸ்து துன்பங்கள் மற்றும் மரணத்தின்மேல் கொண்ட வெற்றியின் அடையாளமாக நோக்கினார். விசுவாசி கிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொள்வதால் அவனும் புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழுவான். இயேசுவின் பாடுகள் பற்றிய குறிப்புகள் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும், பேதுருவின் முதலாம் திருமுகத்திலும் வருகின்றன. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில், இயேசு பாடுகளால் நிறைவுள்ளவராகிறார் (எபி 2:10). ''தாமே சோதனைக்குள்ளாகித் துன்பப்பட்டதனாலேயே சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவரால் உதவி செய்ய முடிகிறது'' (2:18). ''தமது சொந்த இரத்தத்தால் மக்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டி, நகர் வாயிலுக்கு வெளியே'' (13:12), ''பல்லோர் பாவங்களைப் போக்கும்பொருட்டு ஒரே முறையில் எக்காலத்திற்குமே தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்'' (9:26). பேதுருவின் முதலாம் திருமுகத்தின் ஆசிரியர், இயேசுவின் துன்பங்களுக்குத் தாம் நேரடிச் சாட்சி என்றும், இத்துன்பங்கள் மறைநூலில் முன்னறிவிக்கப்பட்டவை என்றும் (1 பேதுரு 1:11; 4:13; அ.ப. 3:18; 17:3), அவற்றில் அவரது சீடர்கள் மகிழ்வோடு பங்கு பெறுகின்றனர் என்றும், கிறிஸ்துவின் ஊழியர்கள் அநீதியாகத் துன்பப்பட்டாலும், ''இயேசுவின் அடிச்சுவடுகளை'' அவர்கள் பின்பற்றவேண்டும் என்றும் (1 பேதுரு 2:21.23) கூறுகிறார்.

பாடுகளின் பொருளைப் புரிந்துகொள்ள, புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளைக் கடந்து, சிந்தனை மற்றும் பொருள் பற்றிய ஒருமைப்பாடுவேண்டும். இயேசு தம் பாடுகளை முன்னறிந்திருந்தார்; ''பலருடைய'' பாவங்களுக்காக இறைவனின் சித்தத்தின் ஆழ்ந்த மறையுண்மையைத் தம்பாடுகளிலே கண்டார். துன்பங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அரசை எதிர்நோக்கினார். அவருடைய பாடுகளில் அவருடைய சீடர்கள் இரக்கமும் மன்னிப்பும் மிக்க தந்தையைப் பற்றிய வெளிப்பாட்டைக் கண்டனர். அவர்களுக்கு முன்மாதிரியான கிறிஸ்துவில் தங்களின் துன்பங்களை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டனர். பாவத்திலிருந்து மனிதனின் விடுதலைக்காகக் கொல்லப்பட்ட செம்மறியானாலும், அவர் என்றும் வாழ்கிறார். பாடுகளே அவர்களின் போதனையின் காலத்தால் முந்தியதும் பொருள் பொதிந்ததுமான கருவாயிற்று. பாடுகளை மையமாக வைத்தே நற்செய்தி போதிக்கப்பட்டது. நான்கு நற்செய்திகளும் எழுதப்பட்டன.

## கிறிஸ்துவின் மணமகள் (BRIDE OF CHRIST)

இக்கருத்து 2 கொரி 11:2; திருவெளி 19:7; 21:2.9; 22:17; எபே 5:25-26 போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. கன்னி, மனைவி என்ற சொற்களும் பயன்படுத்தப்படலாம். திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவை விளக்கும் ஓர் உவமானம். கிறிஸ்து திருச்சபையின் மணமகன். பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் உள்ள திருமணஉறவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (சங் 45; ஏச 54:6; எச 16:8; ஓசே 2:19-20).

## கிறிஸ்துவின் மரணம் (DEATH OF CHRIST)

1.மீட்புநிகழ்ச்சியின்வரலாற்றுத்தன்மை:- ஆதியிலிருந்து, மீட்பு வரலாற்றின் மையமாக இயேசு கிறிஸ்துவின் மரணமே கிறிஸ்தவத் திருச்சபையால் கருதப்பட்டது. பக்தியுள்ள யூதனோ மீட்பு வரலாற்றின் மைய நிகழ்ச்சி எதிர்காலத்தில் வரும் என இன்னும் எதிர்பார்க்கிறான். ஒரு கடந்தகால நிகழ்ச்சியில், குறிப்பாக, குறிப்பிட்ட நேரத்திலும், இடத்திலும் நடைபெற்ற இயேசுவின் மரணத்தில் கடவுள் உறுதியாகப் பேசியுள்ளார் எனக் கிறிஸ்தவன் அறிந்துள்ளான். இயேசு

கிறிஸ்துவத்தின் தொடக்கத்தில் நிற்கும் எண்பிக்கக்கூடிய இவ்வரலாற்றுச் செயலானது, உறுதிமொழி தேவைப்படும் ஒரு கோட்பாடு அன்று. புதிய ஏற்பாட்டின்படி நாசரேத்து இயேசுவின் மரணத்தைப்பற்றிய ஒருவனது சிந்திக்கும்முறை மீட்பை நிர்ணயிக்கிறது; விசுவாசமற்ற நிலையினின்று விசுவாசத்தை வேறுபடுத்துகிறது. ஆனால், இவ் விசுவாசமும் தனக்கெனத் தனிப்பட்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. எல்லா வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் மேலாகக் கடவுள் உயர்த்திய (பிலி 2:9) ஆண்டவரின் உயிர்ப்பு அனுபவமே, ஏமாற்றம் அடைந்திருந்த சீடர்களின் கண்களைத் திறந்தது. உயிர்ப்பு இல்லாமலிருந்தால் இயேசுவின் மரணம் சாதாரண ஒன்றாகக் கருதப்பட்டு விவாதிக்கப்படாமலே மறைந்திருக்கும். உயிர்ப்பே இயேசுவின் மரணம்பற்றிய சிந்தனைக்கு உண்மையான பொருளை அளிக்கிறது. ஆகவே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் இணைந்தே உள்ளன. இந்த இணைப்பைக் கிறிஸ்தவச்சிந்தனை ஒதுக்கிவிட முடியாது.

2. விளக்கவுரையும் வரலாற்று மூலப் பொருட்களாகும்:- இயேசுவின் மரணம் பற்றிக் கூறும் மூலங்களைப் பொருத்த மட்டும் இது உண்மையே. பாரம்பரியத்தை அமைப்பதில் உயிர்ப்பின் விசுவாசம் பெரிதும் பங்கு பெற்றது என நான்கு நற்செய்திகளின் விரிவான விவரிப்புகள் காட்டுகின்றன (மாற் 14-15; மத் 26-27; லூக் 22-23; யோவா 18-19). நற்செய்தியாளர்கள் வரலாற்று ஆசிரியர்களைப் போலன்றி மீட்பினை அனுபவித்த போதகர்களாக அதனைப் பிறருக்கும் அறிவிக்கவே விரும்புகின்றனர். ஆயினும், வரலாற்றுச் செயல்களாய் இக்குறிப்புகளை அமைப்பதற்கு இவை ஒருபோதும் தடையாக இருக்கமாட்டா. இயேசுவின் மரணம் எண்பிக்கக்கூடிய வரலாற்றின் நிகழ்ச்சியாகும். எனவே, வரலாற்று ஆசிரியர்களின் கண்ணோட்டத்திற்கு முழுவதும் உட்பட்டது.

3. இயேசுவினுடைய கொலை பற்றிய உண்மைகள்:- அக்காலக் கொலைக் கருவியான சிலுவையில் இயேசு குற்றவாளியின் மரணத்தை அடைந்தார். கிறிஸ்தவமல்லாத நூல்களும் இதனை அறிந்திருந்தன (தாசித்துஸ், யோசிப்பஸ்). கிறிஸ்தவர்கள் என்றும் வலியுறுத்தியதுபோல இயேசுவின் மரணத்திற்கு யூதகுலத் தலைவர்களே முழுப்பொறுப்பாவர். இந்தப் போக்கு நற்செய்தி நூல்களிலும், பவுல் (1 தெச 2:14-15) மற்றும் பேதுருவின் போதனைகளிலும் (அ.ப. 2:23; 3:14; 4:10) பார்னபாவின் நற்செய்தியிலும் மற்றும் இடைக்காலத்திய யூத கலாபனை வரையிலும் காணப்படுகிறது. ஆயினும், நீதிப்பொறுப்பானது உரோமை அதிகாரிகளால் ஏற்கப்பட்டுள்ளது. விசாரணை, மரணத் தீர்ப்பு, சிலுவையிலறைதல் ஆகியவை உரோமை முறைப்படி அமைந்தன. இயேசு உரோமையரால் தீவிரவாதி என்றும் அரசியல் போராட்டக்காரன் என்றும் தீர்ப்பிடப்பட்டார். இயேசுவின் அடையாளங்களையும், அவரது அரும்பெரும் செயல்களையும் கண்ட யூதப் பெரியோர்களே ஆளுநன் போந்தியு பிலாத்து (கி.பி. 26-36)-வின் முன் அவரைக் குற்றம் சாட்டினர் (மாற் 11:15தொ. இணை; யோவா 11:47தொ). அவரை உரோமை அவைக்கு அழைத்துச் செல்லுமுன் அவர்மீது குற்றம் கண்டுபிடிக்க, அவரை முதலில் விசாரித்ததும் இக்குழுவே.

லூக் 23:2-இல் வரி தரவேண்டாமென இயேசு கூறியதாகப் பிலாத்துவின்முன் யூதத் தலைவர்கள் குற்றம் சுமத்துகின்றனர் (மாற் 12:13-17). உரோமையர்கள் இதனையே தீவிரவாதிகளின் கோட்பாடு எனக் கருதினர். இக்குற்றமே அவர்களுக்குப் போதுமானது. சிலுவையின் மேற்பகுதியில் அடிக்கப்பட்ட குற்றப் பலகையும் (மாற் 15:26 இணை; யோவா 19:19) சிலுவையில் அறையப்பட்டவர் ஓர் அரசியல் குற்றவாளி, தீவிரவாதி, அவரோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளைப் போன்றவர் என்று குறிப்பிடுகிறது. ஆயினும் இயேசு தீவிரவாதியல்லர். அவரது பணியின்போது தீவிரவாத அமைப்பிற்கு ஒத்துழைப்புத் தருமாறு அவர் கேட்

டுக்கொள்ளப்பட்டார்; அவரது சீடர்களாகத் தீவிரவாதிகளும் இருந்தனர்: உதாரணமாக, கனானிய சீமோன், தீவிரவாதி சீமோனையே குறிக்கிறது (மாற் 3:18; லூக் 6:15) யூதாஸ் இஸ்காரியோத்து என்பது தீவிரவாதி என்று பொருள்படும் சிக்காரியுவிலிருந்து வந்திருக்கலாம் (அ.ப. 21:38). சீமோன் போதுரு ''பார்யோனா'' என்பது சீமோன் போதுரு ''தீவிரவாதி'' என்று பொருள் கொடுக்கலாம்; செபதேயுவின் மக்கள் இருவரும்கூட தீவிரவாதிகளாக இருக்கலாம். ஆனால் இயேசு தீவிரவாதத்தை நிராகரித்தது தெளிவாகக் காட்டப்படுகிறது (மாற் 12;17 இணை; மத் 11:12; யோவா 10:8). சாத்தானின் சோதனையான தீவிரவாத மெசியா என்னும் உருவகத்தை மீண்டும் மீண்டும் நிராகரித்தார் இயேசு. (மத் 4:9-10; 26:53; மாற் 8:33). ஆயினும் தீவிரவாதி போன்று தண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் கொலை செய்யப்பட்ட காலம் வரலாற்றுப் பூர்வமாக, உறுதியாகச் சொல்லப்பட முடியாது. பாஸ்கா காலத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் இது நிகழ்ந்தது என்பதை மட்டுமே உறுதியாகக் கூறமுடியும். யோவான் நற்செய்தியின்படி (19:14) தேதியானது, பாஸ்கா வாரத்தின் முதல் முக்கிய விழாவன்று இல்லாமல் அதன் முந்திய நாளான ''நீசான்'' மாதத்தின் 14-ஆம் நாள் ஆகும். கிறிஸ்து இறந்த ஆண்டு 33-ஆக இருக்கலாம்; ஏனெனில், அவ்வாண்டில் பாஸ்காவின் முதல்நாளும் ஓய்வுநாளும் ஒன்றாக அமைந்தன.

4. இயேசுவுக்கே அவரது மரணத்தின் பொருள்:- இயேசு அவரது மரணத்தை மனதார ஏற்றுக்கொண்டார். வாழ்க்கை தோல்வியில் முடிவதைப் பற்றி அவர் ஒன்றும் கருதவில்லை. அவரது அழைப்பின் மையமாகத் தாம் எதிர்பார்த்த மரணத்தைக் கருதினார். திருமுழுக்கின்போது வானிலிருந்து வரும் குரல் (மாற் 1:11; ஏச 42:1) தந்தையின் பணியை ஏற்பதே அவரது கடமை என்றுரைத்து, அதற்குரிய காலத்தை அவருக்கு உணர்த்துகிறது. ஏச 52-53-இல் வரும் கடவுளின் துன்புறும் ஊழியனைப்போன்று அவர் தமது மரணத்தால் இஸ்ராயேலின் பாவங்களையும் அனைத்து மக்களின் பாவங்களையும் கழுவவேண்டும். இப்போதிலிருந்து தமக்குரிய பாதையை நன்கு அறிந்திருக்கிறார். மனுமகன் என்று தம்மையே அழைப்பதின் விளைவாக, மிக உன்னத மதிப்பு மிக்க பட்டத்தைத் தமக்கே சாற்றிக்கொள்ளும் இவர் துன்புறவேண்டும். ஆகவே இயேசு தனது திருமுழுக்கைப்பற்றிப் பேசும்போது, துன்புறுவதின் எண்ணம் பின்னணியாக எப்போதும் உள்ளது (மாற் 10:38; லூக் 12:50). அவரது சீடர்களால் அவர் புரிந்து கொள்ளப்படாவிட்டாலும் (மாற் 8:33; லூக் 24:31) அவரது போதனை இக்கருத்தினைச் சுற்றியே உள்ளது (மாற் 8:31இணை; 9:31; 10:33-34,45).

வெளிப்படையாக, ''எருசலேமை நோக்கிப்போவதே'' (மாற் 10:32இணை) இம்முடிவைக் கொணர்ந்தது. ஏனெனில் இயேசுவிற்கு உறுதிப்படுத்தப்பட்ட இந்த மரணமானது ஒரு நண்பனாக வரவில்லை; மாறாக, இறுதிவரை எதிர்க்க வேண்டிய (மாற் 14:32தொ.இணை; 15:34 = மத் 27:46; எபி 5:7) கடைசி விரோதியாகக் (1 கொரி 15:26) காணப்பட்டது. ஆனால், அது அவரது அழைப்பின் விளைவாக ஏற்பட்டதால் கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொண்டார். இறைவனின் மகன் எனத் தனிப்பட்ட முறையில் தந்தையுடன் இணைக்கப்பட்ட அவர், தந்தையின் மீட்புத் திட்டத்தின்படி நடத்திச் செல்லப்பட்டார். கடவுளின் எல்லா மீட்புச் செயல்களின் உச்சநிலையாக அவரது மரணம் அமைந்தது. ''எல்லாம் நிறைவேறிற்று'' (யோவா 19:30) என்பதன் பொருள் இதுவேயாகும்.

5. யூதத்துவத்துக்குள் விளக்கம்:- இயேசுவின் சீடர்களுக்கு அவரது முடிவு முதலில் எல்லா நம்பிக்கைகளின் சிதைவாகத் தோன்றிற்று. இஸ்ராயேலின் மெசியாவை எந்த அளவிற்கு அவரில் கண்டார்களோ அந்த அளவு அவரது அவல மரணம் அவர்களுக்கு யூதர்களைப் போன்றே இடறலாகத் தோன்றி

*யது (1 கொரி 1:18). ஏனெனில், துன்புறும் மெசியா என்னும் கருத்து யூதரின் சிந்தனைக்குப் புறம்பானதாகும். துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படும் இறைவாக்கினரின் முடிவைப்போலவே, இயேசுவின் மரணத்தை நோக்கும் வாய்ப்பும் அமைந்திருந்தது (மாற் 13:57; 23:37; 1 தெச 2:15). இவ்விளக்கத்தின் அடையாளங்கள் லூக் 24:19-இலும் இயேசுவை இறுதிக்கால இறைவாக்கினர் எனக் கருதிய பதித யூதக் கிறிஸ்துவத்திலும் காணப்படுகின்றன. எல்லாக் காலத்திலும் அவமானத்தின் பாதையில் கடவுளால் நடத்திச் செல்லப்பட்டும், தங்களது மரணத்தால் கடவுள் முன்னிலையில் பரிகாரம் புரிந்தும் (4 மக் 6:29) வாழ்ந்த இஸ்ராயேலின் துன்புறும் நேர்மையாளர்களில் ஒருவராகவும் சிலுவையில் அறையப்பட்டவர் காணப்படலாம். உண்மையாகவே கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய இவ்வித விளக்கம் ஆதி சமுதாயத்திலும் இருந்தது. பழைய பாரம்பரியங்களில் அவரது துன்பப்பாதையின் காரணமாய் அவர் ''நீதியுள்ளவர்'' எனப்படுகிறார் (அ.ப. 3:14; 7:52; 22:14; 1 பேதுரு 3:18). நேர்மையாளரின் துன்பங்களைக் கூறும் பழைய ஏற்பாட்டுச் சங்கீதங்களுடன் பாடுகளின் வர்ணனை கொண்டுள்ள உறுதியான இணைப்பு இதனையே குறிப்பிடுகின்றது. இறுதியாகப் பொறுப்புள்ள யூதத் தலைவர்கள்-அவரது இரத்தத்தில் சாட்சியம் கூறும் தீவிரவாதியைப்போன்று, நாட்டு நன்மைக்காக அவர் கொலை செய்யப்பட்டார் என அவரது சீடர்கள் அவரை வணங்குவர்- என்னும் காரணத்திற்காகப் பயந்தனர் (மத் 27:64). எனினும், இந்த நிகழ்ச்சிக்குப்பின் சீடர்கள் நடந்துகொண்ட விதமும் (மாற் 14:50 = மத் 26:56; மாற் 14:66இணை) கலிலேயாவில் அவர்கள் ஓரளவு சிதறிப்போனதும் (மாற் 14:28; 16:7) இயேசுவின் மரணத்திற்குப்பிறகு அவர்கள் முதலில் எந்த உதவியுமின்றி நின்றனர் என்பதைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து இயேசுவின் வாழ்நாளில், மெசியாவைப்பற்றிய தீவிரவாதிகளின் பொய்யான கருத்துக்களை அவரைப் பின்பற்றுகிறவர்களிடமிருந்து நீக்க முடியவில்லை என்பது தெரிகிறது.*

*6. உயிர்ப்பின் நோக்கில் விளக்கம்:- அ. மீட்பு வரலாற்றின் மையம்:- உயிர்த்தவரின் காட்சிகள் மட்டுமே இயேசுவின் மரணம் பற்றிய கிறிஸ்தவ விளக்கத்திற்கு வழிதிறந்தன. நிகழ்ச்சியுடன் வளர்ந்த சிந்தனையானது முழுவதும் அனுபவத்திலிருந்து மட்டுமே ஆரம்பித்தது. வேறு வழியில்லை என்பதை நாம் அழுத்திக்கூறவேண்டும். மாட்சிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரெனத் தமது சமூகத்தைத் தெளிவாக நடத்திச் செல்லும் உயிர்த்து வாழ்கின்ற இயேசு பின்னோக்கிப் பார்க்கும்போது தனது மரணத்தைப் புதிய ஒளியில் அமைக்கிறார். கடவுள் சிலுவையில் அறையப்பட்டவருடன் வெளிப்படையாகச் சார்ந்து நிற்கிறார் (அ.ப. 2:24; 3:15; 4:10; 5:31). இதன் விளைவாக, இயேசுவின் மரணம் கடவுளின் மீட்பு வரலாற்றில் ஒரு செயலாகக் கருதப்படவேண்டும். முதல் கிறிஸ்தவர்களின் சிந்தனையில் உயிர்ப்பின் மகிழ்ச்சி முழுவதும் ஆதிக்கம் செலுத்தியது என்பது உண்மையானது. இது ஒரு சார்பான கூற்றே. ஏனெனில் இயேசுவின் மரணத்தைப் புரிந்துகொள்வதிலேயே உயிர்ப்பின் விசுவாசம் விளைவை ஏற்படுத்தியது. மீட்பு வரலாற்றின் மையமாக இயேசுவின் மரணம் அமைந்திருந்ததை, ஆதிக்கிறிஸ்தவர்கள் இம்முறையில்தான் தொடக்கமுதல் புரிந்துகொண்டனர். பவுல் முதலில் இதை வலியுறுத்தவில்லை. இயேசுவின் இறப்பு மற்றும் அதன் மீட்புப் பொருள் பற்றிய இறையியல் சிந்தனைக்குப் புரிந்துகொள்ளக்கூடிய விளக்கத்தை முதலில் அளித்தவர் பவுல் என்பது உண்மையே. அவருக்குச் ''சிலுவை என்ற சொல்'' கிறிஸ்தவப்போதனை முழுவதையும் உணர்த்தும் கலைச்சொல்லாகும் (1 கொரி 1:18). ஆயினும் இதே கருத்து, ஒத்தமை நற்செய்திகளிலும் ஏற்கெனவே காணப்படுகிறது. ஆதியிலிருந்தே சிலுவையானது குறிக்கோளும் உச்சநிலையுமாக இருந்தது (மாற் 3:6; மத் 1:21). யோவான் குறிப்பிடும், இயேசுவின் வாழ்வு நோக்கிச் செல்லும் 'நேரம்' என்பது (யோவா 2:4; 7:6; 8:20; 12:23; 13:1; 17:1) சிலுவையின் நேரத்தை மட்டுமே குறிப்பிடும்.*

ஆ) பழைய ஏற்பாடு நிறைவேறுதல்:- லூக் 24:25.44தொ-இல் உயிர்த்த ஆண்டவர் பழைய ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டி, தமது மரணத்தின் பொருளை அறியுமாறு சீடர்களின் கண்களைத் திறக்கின்றார். ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தில் இயேசுவின் இறப்பை விளக்கப் பழைய ஏற்பாடு பெரிதும் உதவியது என்பது உறுதியாகும். இறைவாக்கு வரலாறு எனப்புரிந்துகொள்ளப்படும் பழைய ஏற்பாட்டு வரலாறு (உரோ 15:4; 1 கொரி 10:6.11), இயேசுவின் மரணத்தைப் புரிந்துகொள்ளத் தேவையான கோட்பாடுகளை அளிக்கின்றது. அவர் கண்டிப்பாய் இறக்கவேண்டும் என்பது பழைய வாக்குறுதிகள் இறுதிக்காலத்தில் நிறைவேறும் என்ற உறுதியை அடிப்படையாகக் கொண்டதாகும் (மத் 26:31; லூக் 22:37; 24:7.26-27.44-45; யோவா 3:14). தொடக்க காலச்சமூகத்தின் இத்தகைய இறையியல் திடீரென்று தோன்றியதன்று. இயேசு மண்ணில் இருந்தபோதே தமது மரணத்தைப் பழைய ஏற்பாட்டின் பின்னணியில் விளக்குகிறார். உயிர்ப்புக்குப் பின் வந்த சமூகம் அவருடைய சிந்தனையோடு தன்னையே நேரடியாகத் தொடர்புபடுத்திக்கொள்ள முடிந்தது. யோவான் நற்செய்தியின்படி சீடர்களின் ''நினைவுகூர்தல்'' இயேசுவினுடைய போதனைகளின் பொருளை அவர்களுக்கு உணர்த்துகிறது (யோவா 12:16). அவர்களுக்குள் உள்ள ஆவியினால் அது அவர்களுக்கு உணர்த்தப்படுகிறது (யோவா 14:26; 15:25-26). இயேசுவின் மரணத்தைப்பற்றிய ஆதிக்கிறிஸ்தவரின் இரட்டை அடிப்படையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்: பழைய ஏற்பாடு மற்றும் உலகில் வாழ்ந்த இயேசுவின் போதனையின்படி அவரே பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தினார். ''துன்புறும் ஊழியன்'' என்னும் சொற்றொடரின்படி, ஆதிக்கிறிஸ்தவ விளக்கங்களைப் பொருத்தமட்டும் இது உண்மையாகும் (அ.ப. 3:13.26; 4:25.30; 8:26). இவை பேதுருவின் சமூகங்களில் இருந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் மரணத்தை, ஏச 53-இல் உள்ள பழைய ஏற்பாட்டு ''கடவுள்தம் ஊழியனின் மீட்புச் செயல்களின் நிறைவை'' ஆதிக்கிறிஸ்தவ சமூகம் உணரும்போது இதில் இயேசுவினுடைய விளக்கத்தையே அச்சமூகம் பின்பற்றுகிறது.

இ) பாவத்திற்குப் பரிகாரம்:- சிலுவையில் இறந்த மனுமகன், இறை ஊழியனின் அலுவலை நிறைவேற்றிப் பாவங்களுக்கும் பரிகாரம் புரிகிறார் (மாற் 10:45) என இயேசுவின் மரணத்தின் உறுதியான பொருளை ஏற்றுக்கொள்கின்றனர். இதில் இயேசுவின் கருத்திலே பங்குகொள்கின்றனர். பாவத்தின் காரணமாகவே 'மீட்பின் வரலாறு அவசியமாகிறது. ஆகவே இயேசு பாவங்களுக்குப் பரிகாரம் செய்கிறார். பாவத்திற்கான இயேசுவின் மரணத்தை ஆதிக்கிறிஸ்தவரின் இறையியல் சிந்தனையுடன் முதலில் இணைத்தவர் பவுல் அல்லர்; பண்டைய சமுதாய போதனை 1 கொரி 15:3-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக இறைவாக்குகளின்படி மரித்தார் (அ.ப. 10:43). இக்கோட்பாட்டில் இந்தக் குறுகிய வாய்பாட்டில் ஆதிக்கிறிஸ்தவ சிந்தனையின் மற்றொரு அடிப்படை வெளிப்படுகிறது. பாவத்திற்கான இயேசுவின் பரிகார மரணத்தில் விசுவாசம் இறைவாக்குகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏச 53-ஐ நினைவுகூறும் 1 கொரி 15:3-இல் உள்ள ''பாவங்களுக்காக'' என்ற சொல், இயேசுவின் மரணத்தைப் பரிகாரத் துன்பமாக விளக்குவதற்கு முக்கியமான சொல்லாகும்; இச்சொல் ஆதிக் கிறிஸ்தவ போதனைகள் அனைத்திலும் உள்ள முக்கிய சொல்லாகவும் காணப்படுகிறது. இயேசுவின் இறுதி உணவினை அடிப்படையாகக் கொண்டு ஆதிக் கிறிஸ்தவ நற்கருணை வழிபாட்டில் இச்சொல் ஏற்கெனவே வருகிறது. [''உங்களுக்காக'' (1 கொரி 11:24; லூக் 22:19) ''பலருக்காக'' (மாற் 14:24; மத் 26:28)]. பின்னர், இது சிறப்பாகப் பவுலின் திருமுகங்களிலும் (உரோ 4:25; 5:8; 8:34; 2 கொரி 5:14-15.21; கலா 1:4; 2:20; 3:13; எபே 5:2; 1 தெச 5:10), மேய்ப்புப்பணி மடல்களிலும் (திமோ 2:6; தீத் 2:14), பொதுத் திருமுகங்களிலும் (1 பேதுரு 2:21; 3:18), மற்றும், யோவானின் நூல்களிலும் (யோவா 10:11; 11:50;

15:13; 1 யோவா 2:2; 3:16; 4:10) வருகிறது. பழைய ஏற்பாடும் மற்றும் யூதச் சொற்களும் கருத்துக்களும், உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக இயேசுவின் மரணத்திற்கு அளிக்கப்படும் விளக்கத்திற்கு இயேசுவின் மரணத்தைப் பொருத்தமட்டும் கடவுளின் முன் பாவியின் நிலை அடிப்படையில் மாற்றியமைக்கப்படுவதாகிய சட்டச்செயலை நீதி என்ற சொல் அதன் குறுகிய பொருளில் வலியுறுத்துகிறது. இங்கு இயேசுவின் மரணத்தை ''விடுதலைச் செயலாக'' விளக்கம் அளிப்பது (உரோ 3:24-25; 1 கொரி 6:20; 7:23; 1 திமோ 2:6; 1 பேதுரு 1:18; திருவெளி 1:5; மாற் 10:45) சிலுவை நிகழ்ச்சியில் அடிப்படையைக் கொண்டுள்ள பவுலின் ''ஏற்புடைமை'' பற்றிய கருத்துக்கள் அனைத்தும் இங்கு இடம்பெறுகின்றன (உரோ 3:24-25; 4:24-25; 5:9-10; 2 கொரி 5:21). பழைய ஏற்பாட்டுப் பலிகள் பற்றிய சொற்களில் பரிகாரச் சட்டச் செயலை விவரிக்கும் வழிபாட்டுச் சொற்களும் இக்கருத்தோடு நெருங்கிய தொடர்புடையனவாகும். இயேசுவின் மரணமானது பாவத்திற்கான பரிகாரப்பலியாகும் (உரோ 3:25); பாஸ்காப் பலியாகும் (1 கொரி 5:7); அல்லது பொதுவான பலியாகும் (எபே 5:2). குறிப்பாக, எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இதனைப் பெரிதும் விவரிக்கிறது. இயேசு இங்கு பலியிடுபவராகவும் பலியாகவும் உள்ளார்; அவரது பலி ஒரே தடவையில் மதிப்புடையதாகும் (எபி 7:27; 9:12.25; 10:10).

பாவத்திற்குப் பரிகாரமாகப் பலியிடுவது என்னும் எண்ணமே, செம்மறியின் வடிவத்திற்கும் அடிப்படையாக உள்ளது. இது எச 53:7-ஐச் சுட்டுகிறது (அ.ப. 8:32; 1 பேதுரு 1:19). யோவானின் நூல்களில் இது பெரும் பங்கு வகிக்கிறது. ஆலயத்தில் பாஸ்காச் செம்மறிகள் கொல்லப்படும் நேரத்தில் இயேசு மரணமடைகிறார் (யோவா 19:14); உலகின் பாவங்களைச் சுமக்கும் உண்மையான பாஸ்காச் செம்மறி அவரே (1:29; 19:36). திருவெளிப்பாட்டில் சிலுவையில் அறையப்பட்டவர் செம்மறி என்றே மீண்டும் மீண்டும் கூறப்படுகிறார்.

பாவங்களைப் போக்க ஊற்றப்படும் கிறிஸ்துவின் இரத்தத்தைப்பற்றிப் பேசுவதன் ஆரம்பமே, பழைய ஏற்பாட்டுப் பலி பற்றிய மொழியாய்க் காணப்படுகிறது (அ.ப. 20:28; உரோ 3:25; 5:9; எபே 1:7; 2:13; கொலோ 1:20; 1 பேதுரு 1:2.19; 1 யோவா 1:7; திருவெளி 1:5). பரிகாரமாக இயேசுவின் மரணத்தை விளக்குவது, இங்குப் புலன் சார்ந்த முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் கிறிஸ்துவுடன் கொள்ளும் பல்வகையான மறைபொருளாக உறவுகளுக்கு வலிமையான தாக்கமாக அமையும். பாரம்பரியப்படி இயேசுவும் கடைசி இராவுணவில் தமது மரணத்தைப் பற்றிக் கூறும்போது, கிண்ணத்தைக் கையில் ஏந்தி இதே வார்த்தைகளை உச்சரிக்கின்றார் (மாற் 14:24 - ''உடன்படிக்கையின் இரத்தம்''; யாத் 24:8-ஐ தழுவியது). பவுல் இயேசுவின் மரணத்தில் நற்கருணையினை இம்முறையில் நிலைப்படுத்துவதும் சரியானதே (1 கொரி 10:16; 11:23 தொ); அனேகமாய், ஆதிக்கிறிஸ்தவனுடைய ஆண்டவரின் இராவுணவில் காணப்படும் மூடத்தனமான, கொள்கை வெறியுடைய பழக்கங்களிலிருந்து காக்கவே பவுல் இவ்வாறு செய்திருக்கலாம். இவ்வாறு இயேசு புரிந்து கொண்டதையே அடிப்படையாகக்கொண்டு அவர் ஆதிக்கிறிஸ்தவ ஞானஸ்நானத்தினைச் சிலுவையுடன் இணைத்துக் கூறுகிறார் (உரோ 6:4).

ஈ) அண்ட நிகழ்ச்சி:- பாஸ்காவிற்குப் பிறகு வந்த சமுதாயம் மாட்சிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரை நோக்கிச் செபித்து, இயேசுவின் மரணத்திற்கு அளித்த விளக்கத்தில் மற்றொரு பருமனைக்கண்டது (1 கொரி 16:22; திருவெளி 22:20; 2 கொரி 12:8). அண்ட நிகழ்ச்சியின் தீர்மானமான செயல் இந்த மரணமே. சிலுவை, கடவுளுக்கு எதிரான சக்திகளின் மீதான வெற்றியினைக் குறிக்கிறது. அவற்றுடனான போராட்டத்தை இயேசு ஏற்கெனவே தொடங்கிவிட்டார் (மாற் 1:12 இணை; 1:34). அவரது வல்லமைமிக்க செயல்களான பேயோட்டுதல், குணப்படுத்துதல், இறந்தோரை உயிர்ப்பித்தல்

போன்றவை சிலுவையால் கொண்ட வெற்றியின் முன் அடையாளங்கள் என ஆதிச் சமூகத்தினரால் கருதப்பட்டது. சங் 109-இலிருந்து கூறப்படும் பல்வேறு எடுத்துக் காட்டுகளில் காணப்படும் இவ்வெற்றியானது (1 கொரி 15:25; எபி 10:13; அ.ப. 2:34; மாற் 12:36; மத் 22:44; லூக் 20:42), விசுவாச அறிக்கையில் முக்கிய இடத்தினை வகிப்பதாகத் தோன்றுகிறது (பிலி 2:10; 1 பேதுரு 3:22; மாற் 16:19). பிலி 2:6 தொ.-இல் உள்ள அறிக்கை சங்கீதத்தில் இயேசுவின் வெற்றிக்கு அவரது மரணத்தை நேரடிக் காரணமாகக் காட்டுகிறது. ''சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படியலானார். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தினார்''.

அண்டம் செயல்படும் முறையில் இயேசுவின் மரணம் ஒரு திருப்புமுனையாக உள்ளது. இயேசுவின் மரணத்தினால் இயற்கையே பாதிக்கப்பட்டதாக ஒத்தமை நற்செய்திகளின் விவரிப்புகள் சுட்டுகின்றன (மாற் 15:33 இணை; மத் 27:5); இதற்குக் கொலோ 1:20 இறையியல் விளக்கம் அளிக்கின்றது: இயேசுவின் சிலுவையின் இரத்தத்தினால், உலகம் கடவுளோடு ஒப்புரவாகிறது. இயேசுவின் மரணத்தினுடைய மீட்பு விளைவுகளிலிருந்து எதுவுமே விலக்கப்படவில்லை. பொதுவான ஆதிக்கிறிஸ்தவ நோக்கின்படி சிலுவையானது மீட்பின் வரலாறு ஒன்றிலிருந்து பலவற்றிற்குச் செல்லவும், குறுகிய பயனுடைமையிலிருந்து அனைத்திற்கும் பயனுடையதாக மாறவும் வழியை வகுக்கிறது (மாற் 10:45;மத் 20:28; மாற் 14:24 இணை). சிலுவை அனைத்திற்கும் உரிய நிலைக்குப் பவுல் மிகவும் ஆய்வுடைய அடிப்படை அளிக்கிறார். பாவத்தின் அனைத்தையும் உள்ளடக்கும் தன்மையின் நோக்கில் அனைவரும் வீழ்ந்துவிட்டனர் (உரோ 3:6.29; 1 கொரி 6:2; 11:32). அதற்கேற்றவாறு கிறிஸ்துவும் அனைவருக்காகவும் இறந்தார் (உரோ 8:32; 2 கொரி 5:14). முன்னர் மதிப்புடைய வரையறைகள் இப்போது நீக்கப்படவேண்டும்; யூதரும் புறவினத்தாரும் மீட்பில் பங்குபெறுகின்றனர் (உரோ 11:32; கலா 3:27; லூக் 24:47). பாவம் மற்றும் மரணத்தின் பக்கமுள்ள சட்டத்தின் முடிவு கிறிஸ்துவே (உரோ 7:5-6; 10:4). உரோ 5:2 தொ-இல் காணப்படும் கூற்று இங்கு முக்கியமாகப் பொருள்பொதிந்ததாகும். அனைவரும் கடவுளின் தண்டனைக்கு உள்ளாவதுபோல் இரண்டாவது ஆதாமாகிய கிறிஸ்துவில் அனைவரும், கடவுளின் மீட்புச்சித்தத்திற்குள் உள்ளடங்குகின்றனர் (உரோ 5:15).

உ) மரணத்தின் மீது வெற்றி:- கீழ்ப்படுத்தப்பட்ட சக்திகளின் மரணம் முக்கியமாக உள்ளடங்குகிறது (உரோ 8:38). கிறிஸ்து மரணத்தின் வல்லமையை அழித்துவிட்டார் என்பது புதிய ஏற்பாட்டின் மைய உறுதிப்பாடாகும். அவரது மரணமானது உருவகப்படுத்தப்பட்ட சாவின் வல்லமைக்கு எதிராகவும் (அ.ப. 2:24; 1 கொரி 15:45-46; திருவெளி 6:8), மற்றும் வல்லமை இழந்த (2 திமோ 1:10) ''இறுதிப்பகைவனுக்கு'' எதிராகவும் (1 கொரி 15:26; திருவெளி 20:14), வெற்றிகரமான போராட்டமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. உடலின் பிடியினின்று மனதை விடுவிக்கும் நண்பன் என மரணத்தைப்பற்றிய கருத்து புதிய ஏற்பாட்டில் எங்கும் இல்லை. பாவத்தினுடைய பயங்கர விளைவு மரணம் என்பதன் மூலம் இக்கருத்து முற்றிலும் நீக்கப்படுகிறது. ஏற்னெவே யூதத்துவத்திலும் பவுலிலும் (உரோ 1:32; 6:7.36; யாக் 1:15; யோவா 8:24) இதைக்காணலாம். இயேசுவின் பரிகார மரணத்திற்கும் மரணத்தின் மீதான வெற்றிக்கும் இடையிலான இணைப்பு இங்கு ஏற்படுகிறது. பாவத்தின் விளைவு மரணம் எனில், மரணத்தின் வல்லமையை அழிக்கப் பாவத்திற்குப் பரிகாரம் தேவை. பாவசாபத்தின் அமைப்பிற்குள் இயேசு புகுவது அவரது வெற்றியின் முன் சுட்டலாகும் (2 கொரி 5:21; கலா 3:13-14; உரோ 8:3). பாவம் வெற்றிகொள்ளப்பட்ட பின் மரணம் தனது வலிமையின் அடிப்படையை இழந்துவிட்டது (உரோ 6:7). மனுமகன் இப்போதுமுதல் மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களைத் தம்மிடம் கொண்டுள்ளார் (திருவெளி 1:18).

இயேசுவின் மரணத்தின்மீதான வெற்றியை நோக்கி அனைத்து விசுவாசிகளும் ஈர்க்கப்படுகின்றனர்; துஞ்சினோரின் முதற்கனி (1 கொரி 15:20)-யின் வெற்றிக்குப்பின் மரணம் தன் கொடுக்கை இழந்துவிட்டது (1 கொரி 15:55). இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குப்பின், உலகிலேயே விசுவாசிகளுக்கு ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட "முடிவில்லா வாழ்வு" பற்றி யோவான் வலிமையாகப் பேசலாம் (யோவா 3:36; 5:24; 6:47). மையமீட்பு நிகழ்ச்சியில் கிறிஸ்தவரின் பங்கை விளக்குவதற்காக, பவுல் 'கிறிஸ்துவோடு இறந்து எழும்' உருவத்தைத் திருமுழுக்கிற்குப் பயன்படுத்துகிறார் (உரோ 6:3; கலா 6:14; கொலோ 2:20; 2 திமோ 2:11). முதல் மற்றும் இரண்டாம் ஆதாமைப்பற்றிய கருத்தும் இதில் பங்குபெறுகிறது. ஏனெனில், பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை மற்றும் அதன் நிறைவு ஆகியவற்றின் மீட்பு நிகழ்ச்சியோடு மரணம் பற்றிய தம் விளக்கத்தை நிலைப்படுத்த பவுல் இக்கருத்தைப் பயன்படுத்துகிறார் (1 கொரி 15:45).

ஊ) துன்பத்தில் சீடனாயிருக்க அழைப்பு:- இயேசு கிறிஸ்துவின் பரிகார மரணத்தை விசுவசிக்கும் கிறிஸ்தவன், புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பின்செல்ல தான் அழைக்கப்படுவதைக் காண்கிறான். சீடனாயிருக்க இந்த அழைப்பு என்பது முதலில் துன்பத்தில் சீடனாய் இருப்பதாகும். இயேசு ஏற்கெனவே தம்முடன் துன்புறவும், துன்புறுத்தப்படவும், தம் சீடர்களைத் தயாரித்திருந்தார். தன்னுடைய சிலுவையைச் சுமப்பது என்பது (மாற் 8;34-35இணை; மத் 10:38; யோவா 12:25-26) தனது குருவைப்போலவே சீடனும் மரணத்தை முடிவாக ஏற்கவேண்டும் (மாற் 10:38-39; லூக் 14:26-27; யோவா 15:20) என்று பொருள்படும். ஆதித்திருச்சபை, கிறிஸ்துவின் பெயருக்காகத் தனது வாழ்வை அளிக்கும் வேதசாட்சி மட்டுமே (மாற் 13:13; அ.ப. 15:26; 21:13) இயேசுவின் சீடராக இருக்கமுடியும் என்று ஒருதலையாகக் கருதியது. ஒருவரது இரத்தத்தினால் சாட்சியம் பகர்பவரை மட்டுமே 'சாட்சி' என்று கருதும்போக்கு, புதிய ஏற்பாட்டில் ஏற்கெனவே காணப்படுகிறது (அ.ப. 22:20; திருவெளி 2:13; 12:11). இயேசுவின் மரணம், சீடர்களின் மரணத்திற்கு விவரங்களில்கூட முன் அடையாளமும் மாதிரியுமாகும். அ.ப. 6-7-இல் உள்ள ஸ்தேவானின் மரணம் பாடுகளின் வர்ணனையினுடைய தாக்கத்தை வெளிப்படுத்துகிறது; ஆண்டவரின் துன்பங்களைப் போலவே சீடரின் துன்பங்களையும் அமைப்பது, பிற பகுதிகளிலும் காணப்படுகிறது (லூக் 23:26-ஐ மாற் 15:21-ஓடு ஒப்பிடுக; மேலும் மத் 10:17; யோவா 15:18-19; அ.ப. 21:13; 2 கொரி 12:7-8).

கிறிஸ்துவின் துன்பங்களைத் தனது உடலில் காட்டுவதாகப் பவுல் கூறும் முறையானது (1 கொரி 15:31; 2 கொரி 4:10; கலா 6:17) ஒருவர் தம் சிலுவையைச் சுமப்பது கிறிஸ்துவனுக்குப் பரந்த பொருளைக் கொண்டுள்ளதாகும் என்பது உறுதி. அவனது முழுவாழ்வும் துன்பத்தில் சீடனாய் இருப்பதாகும். தினசரி சிலுவையைச் சுமப்பது என்னும் லூக்காவின் கருத்தும் (லூக் 9:23) இதே எண்ணத்தில் வழிநடத்தப்படுகிறது (அ.ப. 9:16; 1 பேதுரு 4:13; 1 தெச 1:6). தாழ்ச்சி (பிலி 2:5தொ), சுயநலமின்மை (உரோ 15:3), தொடர்ந்து செயலாற்றல் (எபி 12:1தொ), பொறுமை (1 பேதுரு 12:20), அன்பு (யோவா 15:13) ஆகியவற்றில் பின்பற்ற வேண்டிய குறிக்கோள் பற்றிய கிறிஸ்தவ விளக்கம் இங்கு ஆரம்பமாகிறது. பிற்காலத் துறவறத்தில் முக்கிய பங்கு வகிக்கும் "துன்பத்தின் மறை அனுபவம்" பற்றிய பவுலின் அறவுரைகளும் கிறிஸ்துவின் மரணம் பற்றிய கோட்பாட்டிலிருந்தே தோன்றுகின்றது. உ-ம். மாமிசத்தைச் சாவிற்கு உட்படுத்த அழைப்பு (உரோ 8:13), பழைய இயல்பைச் சிலுவையில் அறைதல் (உரோ 6:6; கலா 5:24; கொலோ 3:5), துன்ப நேரங்களில் கிறிஸ்துவின் மரணம் பற்றிய சிந்தனை என்பன எல்லாக் காலத்துக் கிறிஸ்தவர்களுக்கும் ஆறுதலாய் உள்ளது; சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்லன், ஊழியன் தலைவனுக்கு மேம்பட்டவன் அல்லன் (மத் 10:24; லூக் 6:40; யோவா 13:16).

### கிறிஸ்துவின் மனிதத்தன்மை (HUMANITY OF CHRIST)

புதிய ஏற்பாட்டில் வரும் இக்கருத்து இறைமகன் இயேசுவின் உண்மையான மனிதத்தன்மையை வலியுறுத்துகிறது. நற்செய்திகளில் முதலாவதாக எழுதப்பட்ட மாற்குவின் நற்செய்தி இயேசுவின் மனித பலவீனத்தை அழகாகச் சித்தரிக்கிறது. அவருடைய கருத்துப்படி இயேசுவின் 'அறிவு வரைமுறைக்குட்பட்டது (லூக் 13:32). இயேசுவே தன்னை முழுமையாக நல்லவரென்று ஏற்பதாகத் தெரியவில்லை (10:18). 15:34-இல் வரும் கூற்று அவரது உண்மையான மனிதத்தன்மையை எடுத்துக்கூறுவதாகத் தெரிகிறது. லூக்கா இயேசுவின் மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றார் (லூக் 2:52). பொதுவாக நற்செய்திகள் இயேசுவின் மனிதச் செயல்களை எடுத்துரைக்கின்றன. மக்கள் இயேசுவை போதகரெனவும், இறைவாக்கினர் எனவும் அறிந்திருந்தனர்.

கிறிஸ்து இயலை அதிகம் விரிவாக்கியுள்ள புதிய ஏற்பாட்டு நூலான யோவானின் நற்செய்தி, இயேசுவைக் களைப்படைந்தவராயும், தாகம் கொண்டவராயும் சித்தரிக்கிறது (யோவா 4:6-7; 19:28). இயேசுவின் விலா ஈட்டியால் குத்தப்பட்டு, உடனே இரத்தமும் நீரும் வெளிவந்தன என்ற விவரிப்பு, அவருடைய பாடுகள் வெறும் மாயையல்ல உண்மையானவை என்று காட்டுகிறது (19:34).

பவுல் ஒரு யூதக் குடும்பத்திலிருந்து இயேசுவின் மனிதத் தோற்றத்தையும் அவரிடம் காணப்பட்ட மனித வரையறைகளையும் வலியுறுத்துகிறார் (உரோ 9:5; 2 கொரி 13:4; கலா 4:4; பிலி 2:7-8).

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இயேசு தனிப்பெரும் குரு என்றும், மக்களுடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம் காட்டக் கூடியவர் என்றும், பாவம் தவிர மற்றவற்றில் எல்லாம் சோதனை, துன்பங்களுக்கு உட்பட்டவர் என்றும் (எபி 4:14; மத் 4:1-11 = லூக் 4:1-13), பாடுகளால் நிறைவுள்ளவர் ஆனார் 2:10) என்றும் மனித ஊனையும் இரத்தத்தையும் கொண்டிருந்தார் (2:14) என்றும், கடவுளிடம் பலத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்றாட்டுகளையும் ஒப்புக்கொடுத்தார் என்றும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார் என்றும் வலியுறுத்துகிறது (5:7-8). மேய்ப்புப்பணித் திருமுகங்கள் இயேசுவை ''மனிதனான இயேசு கிறிஸ்து'' என்று குறிப்பிடுகின்றன (1 திமோ 2:5).

### கிறிஸ்துவும் அப்காரும் (CHRIST AND ABGARUS)

காண்க. அப்கார் - கிறிஸ்துவின் திருமுகங்கள்.

### கினிது (CNIDUS)

சிறிய ஆசியாவின் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு கிரேக்க நகரமாகும்.

கினிது பழங்காலத்தில் புகழ்பெற்ற ஒரு நகரமாக இருந்தது. தோரியன் கிரேக்கர்களால் இது குடியேற்ற நாடு ஆக்கப்பட்டது. இந்த இடம் வரலாற்றுக்குமுன் எகியன் பகுதியிலிருந்து மக்கள் வந்து குடியேறிய நிலப்பகுதியில் அமைந்து இருந்தது. கினிதின் நிலக்கூம்புப் பகுதி காரியா கடற்கரையின் தெற்கேஉள்ளது. இது மேற்கிலிருந்து கிழக்காக 64 கி.மீ. நீளம் கொண்டது. கிழக்கே சில கடற்கரைப் பகுதிகள் உள்ளன. இரண்டும் ஒரு நில இடுக்கால் பிரிக்கப்படுகிறது. ஆனால் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இந்தக் கினிதில் 2 துறைமுகங்கள், ஒழுங்காகக் கட்டப்பட்ட ஒரு நகரம், பல வழிபாட்டிடங்கள், 4-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த பெருமை வாய்ந்த கிரேக்கச் சிற்பங்கள் ஆகியவை இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறு பவுல் இலிஸியாவிலிருந்து பயணம் செய்கையில் கடற்காற்றால் துன்பப்பட்டாரோ அதேபோன்று ஓர் அனுபவம் யாராவது கினிது தீபகற்பத்தின் தெற்குக் கடலைத் தாண்டிப் பயணம் செய்தால் ஏற்படும்.

கினிது கோசுத் தீவுக்கு எதிராக உள்ளது. உரோமைக்குப் பவுலையும் மற்றக் கைதிகளையும் சுமந்து சென்ற கப்பல் புயலை எதிர்கொண்டபோது ''கினிது நகர் எதிரே'' பயணம் செய்தது (அ.ப. 27:7).

**கின்னத்தோய்** (GINNETHOI)

நாடுகடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த ஒரு குரு (நெக 12:4). இவர் கின்னத்தோன்-2-ஆக இருக்கலாம்.

**கின்னத்தோன்** (GINNETHON - தோட்டக்காரன்)

1. எஸ்ராவின் கீழ் இஸ்ராயேலின் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டதற்குச் சாட்சி பகர்ந்தவர் (நெக 10:6).

2. யோயாக்கிம் காலத்தில் ஒரு குருக்கள் குடும்பங்களில் ஒன்றுக்குத் தலைவராக இருந்தவர் (நெக 12:16).

நெக 10:12-இல் வரும் பெயர்ப்பட்டியல் குலமுதியவர்களுடையது என்றால், ஒரு கின்னத்தோன்தான் இருக்க முடியும். சிலர் இவரைக் கின்னத்தோயோடு ஒன்றாக்குவர்.

**கின்னரேத்து** (CHINNERETH - யாழ்வகைக் கருவி)

1. கின்னரேத்து என்பது கலிலேயாக் கடலுக்கு (மத் 15:29) வழங்கப்பட்ட முற்காலப் பெயர் (எண் 34:11; யோசு 13:27). இது யோசு 12:3-இல் கின்னரோத்து என்றழைக்கப்படுகிறது. காண்க. கலிலேயாக்கடல்.

2. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பென்அதாது என்பவன் பாசா அரசனின் காலத்தில் கைப்பற்றிய நெப்தலி நாட்டிலுள்ள ஒரு மாவட்டமாகும் (1 அர 15;20). புதிய ஏற்பாட்டில் இது கெனரேத்து என்றழைக்கப்படுகிறது (மத் 14:34).

3. இது நப்தலி நாட்டில் கட்டப்பட்ட ஒரு நகரமாகும் (யோசு 19:35). இது 3-ஆம் துத்துமோசு கைப்பற்றிய நகரங்களின் பட்டியலில் குறிக்கப்படுகிறது. இது தேல்-ஏல்-ஒரேய்மே என்ற இடத்தில் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த நகரம் கலிலேயாக் கடலின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு குன்றின் மேல் காணப்படுகின்றது. இங்கு நடத்திய சிறு அகழ்வாய்வுகள் மூலம் இக்குன்றில் இடைவெண்கலக்காலம் முதல், முதல் இரும்புக்காலம் (சுமார் கி.மு. 2000-900) வரை மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இக்குன்றில் இடைக்கற்காலத்தைச் சேர்ந்த சில கலைப்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

**கின்னரோத்து** (CHINNEROTH)

கின்னரேத்தின் மற்றொரு வடிவம் (யோசு 12:3). காண்க. கின்னரேத்து.

# கீ

**கீகோன்** (GIHON - *பீறிடுதல்*) - ஆறு

ஏதேன் தோட்டத்தில் பாயும் நான்கு நதிகளில் இரண்டாவது (ஆதி 2:13). இது எத்தியோப்பியா நாடு முழுவதும் வளைந்து ஓடுகிறது. அறிஞர்சிலர் தியாலா அல்லது கெர்கா ஆறுகளாக அடையாளம் காட்ட முயன்றுள்ளனர். அனேகமாகக் கீகோன், யூப்பிரத்திசு நதியின் உபநதியாகவோ ஓடையாகவோ இருக்கலாம்.

**கீகோன்** (GIHON - *பீறிடுதல்*) - ஊற்று

கிதரோன் பள்ளத்தாக்கில் தாவீதின் நகருக்குக் கீழ்ப்புறத்தில் உள்ள ஓர் ஊற்று. எபூசியர்கள் கட்டிய தரையடிக் கால்வாய் ஒன்று நகரைக் கைப்பற்றத் தாவீதுக்கு உதவியது. இது பரிசுத்தமானதாகக் கருதப்பட்டது. ஆகவே சாலமோன் அரச அபிடேகம் பெற்றபோது இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (1 அர 1:33.38.45).

அரசர்கள் ஆட்சிக்காலத்தில், கீகோனின் நீர் ஓர் குட்டையில் சேர்க்கப்பட்டுக் கால்வாய் வழியாக மற்றொரு குளத்திற்குக் கொண்டு சேர்க்கப்பட்டது. அது இக்காலப் பிர்கெத்து ஏல்-கமாராவாக இருக்கலாம். அங்கிருந்து அருகிலிருந்த பள்ளத்தாக்கில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அசீரியர்கள் படையெடுத்தபோது அரசன் எசக்கியா அதன் ஓட்டத்தை மறித்துத், தரையடிச்சுரங்கப்பாதை வழியாக, திரோபேயேன் பள்ளத்தாக்கிலுள்ள சிலோவாம் குளத்திற்குத் தண்ணீரைக் கொண்டு சேர்த்தார். இக்குளம் பாதுகாப்பு அரணுக்குள் அமைந்திருந்தது (2 அர 20:20; 2 நாள் 32:30). இந்தச் சுரங்கப்பாதை 536 மீட்டர் நீளமான சிலோவாம் சுரங்கப்பாதையாகும். பிற்காலத்தில் மனாசே கீகோனின் மேற்கு முனைவரை நகர மதிலை விரிவாக்கினார் (2 நாள் 33:14).

இந்த ஊற்று, ஓர் இயற்கையான குகையிலிருந்து விட்டுவிட்டு நீரைப் பீறிட்டது. வறட்சியான காலத்தில் நாளொன்றுக்கு இருமுறையும் மழைக்காலத்தில் நான்கு, ஐந்து முறையும் நீரைப் பீறிட்டது. கீகோன் என்ற சொல்லின் சொல்லிலக்கணம் இச்செயலைச் சுட்டலாம்.

**கீசி** (KISHI)

கூசயா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 6:44).

**கீசு** (KISH - *வில்*) - ஆள்

1. கீசு பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் இஸ்ராயேலரின் முதல் அரசனான சவுல் என்பவரின் தந்தை ஆவார். 1 சாமு 9:1-இல் கீசு அபியேல் என்பவரின் மகன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அனேகமாகக் கீசு 'நேர்' என்பவரின் மகனாகவும் கிபயோனிய எயியேலின் பேரனாகவும் இருக்கவேண்டும் (1 நாள் 8:29-33; 9:35-39). இவருக்குப் பல வேலையாட்களும், கழுதைகளும் இருந்ததாகவும், இவர் செல்வந்தர் என்றும் கூறப்படுகின்றது (1 சாமு 9:3). மிசுப்பாவில் அரசனைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியில் மதிரியர் வம்சத்துக்குச் சீட்டு விழுந்தபோது இவர் அங்கு இருந்திருக்க வேண்டும். இக்குலத்திலிருந்துதான் சவுல் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1 சாமு 10:20-24). கீசு பென்யாமின் நாட்டில் உள்ள சேலாவில் புதைக்கப்பட்டார் என்பதைத் தவிர அவரது வாழ்க்கையைப் பற்றி வேறு எதுவும் குறிப்பிடப்படவில்லை. இங்குதான் சவுலும் யோனத்தானும் அடக்கம் செய்யப்பட்டனர் (2 சாமு 21:14).

2. கீசு பென்யாமின் குலத்தில் எயியேல், மாக்கர் ஆகியோரின் மகனாவார் (1 நாள் 8:30; 9:36). இவர் சவுலின் தந்தை அல்லர்.

3. கீசு மொராரி லேவியர் குடும்பத்தில் மகுலி என்பவரின் மகன் (1 நாள் 23:21). இவருடைய புதல்வர்கள், இவருடைய சகோதரரான எலயாசரின் பெண்களை

மணந்தனர் (23:22). கீசின் மகன் ஏரகுமேல் ஆவார் (24:29).

4. கீசு மொராரி லேவியர் குடும்பத்தில், அபிதியின் மகன். இவர் எசக்கியா அரசனின் ஆட்சியில் ஆலயத்தைத் தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார் (2 நாள் 29:12).

5. இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர் எஸ்தரின் தந்தையின் சகோதரரான மோர்தெக்காயின் சகோதரர் (எஸ் 2:5). அறிஞர் சிலரின் கருத்துப்படி இவர்தாம் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவராவார்; மோர்தெக்காய் அல்லர் (2:6).

**கிசோன்** (KISHON - வளைந்த)

கிசோன் ஆறு இசிரியேல் பள்ளத்தாக்கு அல்லது எசுதிரலோன் சமவெளியின் மேற்குப்பகுதியிலும், ஆக்கோ சமவெளியிலும் பாய்கிறது (நீதி 4:7.13; சங் 83:9). அராபிய மொழியில் நாகர், ஏல்-முக்கட்டா என்று அழைக்கப்படுபவை இதன் முக்கிய ஊற்றுக்களாகும். மழைக்காலத்தில் மட்டும் நீரோடும் பல ஓடைகள் இந்நதியோடு கலக்கின்றன. இசிரியேல் பள்ளத்தாக்கில் சிறு ஓடையாகவே உள்ள கிசோன், சமவெளியின் மேற்கு எல்லையில் 9 மீட்டர் அகலமும் 1 அல்லது 1½ மீட்டர் ஆழமும் கொண்டதாக விளங்குகிறது. இது ஒரு சிற்றாறாக இருந்தாலும் மழைக்காலத்தில் இதன் படுகைகள் சதுசதுப்பாக இருப்பதால் சிறந்த அரணாகவும் உள்ளது. இது சமவெளியைக் கடக்கும் பகுதியில் சுமார் 90 மீட்டர் உயரத்திலிருந்து இறங்கிச் செல்கிறது. சமவெளியின் நடுப்பகுதி சற்று உயரமாக இருப்பதால் வடக்கு நோக்கி ஓடி, இசிரியேல் பள்ளத்தாக்கைக் கடந்து, ஆக்கோ சமவெளியில் நுழைந்து, கர்மேல் மலையடிவாரத்தில் வடக்கு நோக்கி ஓடி, கரையிலுள்ள மணற்குன்றுகளுக்குத் தெற்காக மத்திய தரைக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 37 கி.மீ. ஆகும். ஆக்கோ சமவெளியில் பல துணை ஆறுகள் இதனுடன் கலக்கின்றன. அவை கலிலேயாவின் தென்மேற்கிலுள்ள வாடி ஏல்-மெலக்கு, ஏல்-கர்பாசு ஆகியவற்றின் வடக்கில் உள்ள ஊற்றுகள் ஆகும். கிசோன் ஆறு இச்சமவெளியில் சுமார் 19 மீட்டர் அகலமுடையதாக உள்ளது. கரோசத்தில் தங்கியிருந்த கானானியரின் படைத்தலைவனான சிசரா என்பவர், பாராக்கு, தெபோரா ஆகியவர்களுடன் போரிடப் படைகளை இங்குதான் கொண்டு வந்தார் (நீதி 4:7.13). போர் நடந்த இடம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தெபோராவின் நன்றிப்பாடலில் மெகிதோ நீர்த்துறை அருகே தானாக்கில் போர் நடந்ததாகக் கூறப்படுகிறது (நீதி 5:17). இப்போர் மழைக்காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். சங்கீத ஆசிரியர், அவருடைய காலத்தில் இஸ்ராயேலின் எதிரிகளை வெல்ல இறைவனை வேண்டும்போது இவ்வெற்றியைக் கூறுகின்றார் (சங் 83:9). கர்மேல் மலையில் எலியாவுக்கும், பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் நடந்த சமயப் போராட்டத்தில், அவர்கள் தோற்றபோது எலியா அவர்களைக் கிசோன் ஆற்றங்கரையில் கொன்றார் (1 அர 18:40).

**கிதோன்** (CHIDON - அம்பு)

1 நாள் 13:9-இன் படி உசா என்பவன் உடன்படிக்கைப் பேழையினைத் தொட்டதற்காகக் கொல்லப்பட்ட சூடடிக்கும் களத்தின் பெயர். இது இடத்தின் பெயரா அல்லது உரிமையாளரின் பெயரா என்பது சுட்டிக்காட்டப்படவில்லை. இதற்கு இணையான பகுதி 2 சாமு 6:6-இல் 'நாக்கோனின் களம்' என்று கூறப்படுகின்றது. இது ஓபேது-ஏதோமின் அருகில் எருசலேமின் மேற்குப் பகுதியில் இருந்திருக்கவேண்டும்.

**கியேல்** (HIEL - இறைவன் வாழ்கிறார்)

ஆகாபு காலத்தில் எரிகோ நகரைத் திரும்பக் கட்டிய பெத்தேல் ஊரைச் சேர்ந்தவர் (1 அர 16:34). அவர் தன் புதல்வர்களை இழந்ததற்குக் காரணம் யோசுவாவின் பழைய சாப நிறைவேற்றமே என்று விளக்கப்படுகிறது. யோசுவா எரிகோவை அழித்த போது யாராவது திரும்பக்கட்டினால் அழிந்து போவார்கள் என்று சாபமிட்டார் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது (யோசு 6:26).

நூறாண்டுகளுக்குப் பிறகு ஆகாபின் காலத்தில் கியேல் எரிகோவைத் திரும்பக் கட்டும் மோசமான கடும் வேலையை எடுத்துச் செய்தார். அந்தச் சாபத்தை மீறினார். புதுப்பிக்கும் வேலையைச் செய்து கொண்டிருந்தபோது கியேல் தன் தலைமகன் அபிராமையும் கடைசிப் புதல்வன் செகூபையும் இழந்து தவித்தார். இயற்கையான காரணங்களால் அவர்களுடைய சாவுகள் நிகழ்ந்திருக்கலாம் அல்லது அடிக்கல் நடும்போது பலி கொடுத்திருக்கலாம். வரலாற்று ஆசிரியர் யோசுவாவின் சாபத்தின் விளைவால் வந்த அழிவு என்று கூறுகிறார் (யோசு 6:26; 1 அர 16:34).

**கீயு** (CHIOS)

எகியன் கடலின் கிழக்கு மத்திய பகுதியில் அமைந்திருக்கும் மலைப்பாங்கான ஒரு தீவு ஆகும். இது வடக்கிலிருந்து தெற்காக 50 கி.மீ. நீளமும், கிழக்கிலிருந்து மேற்காக 13 முதல் 26 கி.மீ. அகலமும் கொண்டது. இத்தீவு திராட்சைரசம், பிசின் போன்றவற்றிற்குப் பெயர் பெற்றது. மேலும் கோமேர் பிறந்ததாகக் கூறப்படுகின்ற ஏழு இடங்களில் இதுவும் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இத்தீவின் முக்கிய நகரம் கீயு ஆகும். சிமிருனாவுக்கு 19 கி.மீ. தொலைவிலுள்ளது.

யோசிப்பசின் கூற்றுப்படி ஏரோது மன்னன் வடக்கே கோசு என்ற இடத்திலிருந்து புறப்பட்டு இலஸ்போசு என்ற இடத்தை நோக்கிக் கப்பல் பயணம் செய்தபோது வடகாற்றால் கீயு தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவர் சமஇடைவெளிகளில் நிறுத்தப்பட்ட தூண்களை நல்ல முறையில் கட்டுவதற்கு நிதி உதவி செய்தார்.

பவுல் காலத்தில் கீயு தீவு உரோமையரின் மாநிலத்திலுள்ள சுதந்தர நகரமாகும். பவுல் எருசலேமுக்குச் சென்ற இறுதிப் பயணத்தில் அவர் மித்திலேனிலிருந்து தெற்கே கப்பற் பயணம் செய்தபோது அவர் சென்ற கப்பல் ஓரிரவு கீயு தீவின் எதிரே நங்கூரமிட்டுக் கிடந்தது. மறுநாள்தான் அவர் கடலைக் கடந்து சாமு என்ற இடத்திற்குச் சென்றார் (அ.ப. 20:15).

**கீரா** (HIRAH - உயர்தரமான)

யாக்கோபின் மகன் யூதாவின் அதுல்லாமிய நண்பன் (ஆதி 38:1.12.20-23). கீரோவைச் சந்திக்கச் சென்றபோதுதான் யூதா கானானியப் பெண்ணான சூவாவைச் சந்தித்தார். பின் அவளை மணந்தார்.

**கீராம்** (HIRAM - [(என்) சகோதரர் உயர்த்தப்பட்டவர்]

1. தீர் நாட்டின் அரசன் (கி.மு. 986-935). தாவீது, சாலமோன் ஆகியோரின் சமகாலத்தவர். பத்தாம் நூற்றாண்டில் பெனிக்கியர்களின் வியாபார ஆதிக்கம் பயங்கர முன்னேற்றம் அடைந்ததாகத் தெரிகிறது. கீராமின் ஆட்சியின் மத்தியில் கதஸ், தார்தெசுஸ் (தார்சிக) குடியிருப்புக்கள் ஸ்பெயினில் தொடங்கப்பட்டன. வரலாற்று ஆசிரியர் மெனாந்தர், கட்டடவேலையை விரிவுபடுத்தியது, தீர் நாட்டின் தேவதை மெல்காத்துக்கு விழா எடுக்கும் அமைப்பையும், உத்திகா வாழ் மக்களின் புரட்சியை ஒடுக்கியதையும் முதலாம் கீராம் செய்த செயல்களாகக் குறிப்பிடுகின்றார். தாவீதோடும் சாலமோனோடும் ஒருவருக்கொருவர் தேவையைப் பூர்த்திசெய்யும் அடிப்படையில் நட்பு வைத்திருந்தார். நவீன கருவிகள் உற்பத்தி முன்னேற்றத்திற்குத் தேவையான தொழில் திறமைகள் இஸ்ராயேலிடம் குறைவாக இருந்தன. ஆனால் அதே சமயத்தில பெனிக்கியா விவசாய உற்பத்தித்திறனில் குறைவாக இருந்தது.

தாவீதின் அரண்மனை கட்டத் தேவையான பொருட்களையும், ஆட்களையும் கொடுத்ததன் வாயிலாக இஸ்ராயேலோடு கீராமின் முதல் தொடர்பு தொடங்கியதாகப் பழைய ஏற்பாடு குறிப்பிடுகின்றது (2 சாமு 5:11). எருசலேமைத் தாவீது கைப்பற்றியவுடன் இது நடந்தது. கீராம் அரசனாவதற்கு முன் எருசலேம் கைப்பற்றப்பட்டது. அவருடைய தந்தை அபிபாகாலுக்குப் ...திலாகக் கீராமின் பெயரைப் பழைய ஏற்பாடு தவறா

கக் குறித்திருக்கலாம் அல்லது பழைய ஏற்பாடு கீராமோடு உள்ள தொடர்பை வெகு முன்பே குறிப்பிட்டிருக்கலாம். தாவீது பெலிஸ்தியர்மேல் வெற்றிகொண்ட பிறகு கீராம் தாவீதோடு தொடர்பு கொள்வது நடந்திருக்கலாம்.

கீராம் இதேபோலச் சாலமோனோடும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார் (1 அர 5:12). சிதோனிய இளவரசியைச் சாலமோன் மணந்ததாகத் தெரிகிறது (1 அர 11:1; காண் சங் 45:12). கோதுமைக்கும் ஒலிவ எண்ணெய்க்கும் பண்ட மாற்றாகக் கீராம் இஸ்ராயேலர்களுக்குக் கேதுரு மரங்களையும், திறமைவாய்ந்த தொழிலாளரையும் அவர்களுடைய கட்டடவேலைக்குக் கொடுத்தார் (1 அர 5:1-11; 2 நாள் 2:1-16). இக்காலக்கட்டத்தில் கட்டப்பட்ட அரச கட்டடங்கள் பெனிக்கியர்களுடைய வேலைப்பாடுகளையும் அவர்களுடைய அலங்கார வேலைப்பாடுகளையும் எடுத்தியம்புகின்றன.

வர்த்தகத் தொழிலில் சாலமோனுக்குக் கீராம் உதவினார், ஏசியோன்-கெபேரில் கடற்படை அமைக்கத் தேவையான கப்பல்களையும் திறமைவாய்ந்த ஊழியர்களையும் அனுப்பி உதவினார் (1 அர 9:26-28; 10:11:22; 2 நாள் 8:17-18; 9:10.21). சந்தேகமில்லாமல் கீராம் இலாபத்தின் ஒரு பகுதியைப் பெற்றார். ஒருவேளை அவருடைய கப்பற்படையைச் சாலமோனுடைய துறைமுகத்தில் நிறுத்திக்கொள்ளும் உரிமையையும் பெற்றிருக்கலாம். சாலமோன் தார்சிசு என்ற பெனிக்கியக் குடியிருப்போடு வியாபாரத் தொடர்பு வைத்திருந்தார் (2 நாள் 9:21) என்ற நாள் ஆகம ஆசிரியரின் கூற்று 'தார்சிசு கப்பல் படை' என்ற வார்த்தையைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாகும் (1 அர 10:22). 'தார்சிசு' என்ற வார்த்தை கப்பல் வகையைக் குறிக்கிறது. அது ஓர் இடமல்ல.

சாலமோன் தன்னுடைய கட்டட வேலையை நீட்டிக்கொண்டே போனதால் பணப்பற்றாக்குறை ஏற்பட்டபோது கர்மேலுக்கும், பெனிக்கிய நாட்டிற்கும் இடையே உள்ள கடற்கரைப் பகுதியிலுள்ள 20 நகர்களைக் கீராமிடம் விற்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார். ஆக்கோ துறைமுகமும் இதில் அடங்கலாம். ஏனென்றால் இது தாவீதின் அரச எல்லைக்குள் இருந்தபோதிலும் (2 சாமு 24:5-7) சாலமோனுடைய மாகாணப் பெயர்வரிசை அட்டவணையில் இப்பெயர் காணப்படவில்லை (1 அர 4:8-19).

கீராமுக்குப்பின் அவரது மகன் முதலாம் பாகால்-ஏசெர் அரசனானார். 2-ஆம் நாளாகமத்தில் அவரதுபெயர் கூராம் என்றுள்ளது (2 நாள் 2:3.11-12; 8:2.18; 9:10).

2. தீரைச் சேர்ந்தவர். பித்தளை வேலையில் கைதேர்ந்தவர். ஆலயத்தை அலங்கரிப்பதற்கு இவரைச் சாலமோன் பயன்படுத்தினார் (1 அர 7:13-14.40.45).

**கிரிய எலேயிசோன்** (KYRIA ELEISON - ஆண்டவரே இரக்கமாயிரும்)

இறை இரக்கத்தை மன்றாடும் செபம். மாறிமாறிச் சொல்லப்படும் அல்லது பாடப்படும் செபம். திருச்சபையின் வழிபாட்டின் தொடக்கத்திலிருந்து வருவது. இது மத் 15:22-இல் கானானியப் பெண்ணுடையவும் மத் 20:30-33-இல் குருடர்களுடையவும் மன்றாட்டை நினைவுபடுத்துகிறது.

**கீரை** (HERB)

இது, பல எபிரேயச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும். 2 அர 4:39-இல் காட்டுக்கீரை குறிக்கப்படுகிறது.

**கீர்** (KIR - சுவர், கோட்டை)

1. ஒரு மோவாபிய நகரம் (ஏச 15:1). ஒருவேளை இதுவும் கீர் கரசேத்து என்ற இடமும் ஒன்றாக இருக்கலாம்.

2. மெசபொத்தாமியாவில் உள்ள இந்த இடத்திலிருந்து (ஏச 22:6) அரமேயர்கள் சீரியாவிற்குக் குடிபெயர்ந்து போயினர் (ஆமே 9:7). பிறகு அசீரியாவின் அரசன் மூன்றாம் திகிலாது-பிலேசர் இவர்களைக்

இருக்கு நாடு கடத்தினார் (2 அர 16:9; ஆமோ 1:5).

**கீர்-கரசேத்து** (KIR HARESETH - சுவர் சூழ்ந்த நகரம்)

இது மோவாபின் பழைய தலைநகரம். இது ஆர்னோனுக்குத் தெற்கில் 28 கி.மீ. தொலைவிலும், சாக்கடலின் கிழக்கே 18 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இறைவாக்கினர் எலிசா காலத்தில் இஸ்ராயேல், யூதா, ஏதோமின் அரசர்கள் மோவாபின் அரசனாகிய மேசாவிற்கு எதிராகப் போரிட்டனர் (2 அர 3:4தொ). இப்போரில் மோவாபின் மக்கள் முறியடிக்கப்பட்டனர். எதிரிகள் மோவாபு நாட்டைப் பிடித்துக் கீர் கரசேத்தை முற்றுகையிட்டனர். அப்போது மேசா மன்னன் தனக்குப்பின் அரசாள வேண்டிய தன் தலைமகனைப் பிடித்து மதிலின் மேல் அவனைத் தகனப்பலியாக ஒப்புக் கொடுத்தான். இதனால் இஸ்ராயேலர் தங்களுக்கு எதிராகக் கடுஞ்சினம் மூள்வதைக் கண்டு விரைவில் அவனைவிட்டு அகன்று தம் சொந்த நாடு திரும்பினர் (3:24-27). மோவாபுக்கு எதிரான ஏசயாவின் இறைவாக்கில் இருமுறையும் (ஏச 16;7.11), எரேமியாவில் இருமுறையும் (எரே 42:31.36) கீர் கரசேத்து அல்லது கீர்கரேசு குறிக்கப்படுகிறது. இதுவும் கீர் (1) என்ற இடமும் ஒரே ஊரைக் குறிக்கலாம் (ஏச 15:1).

**கீர் கரேசு** (KIR HERES)

கீர் கரசேத்தின் மற்றொரு பெயர்.

**கீலேன்** (HILEN - குகைகள்)

யூதா மலைநாட்டில் கெகாத்தின் லேவிய குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிராமம் (1 நாள் 6:58). யோசு 15:51; 21:15-இல் இது கோலோன் என்றழைக்கப்படுகிறது.

**கீலோ** (GILOH - நாடு கடத்தல்)

யூதாவின் மலைப்பகுதி. தெபீர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர் (யோசு 15:51). அகித்தோபலின் ஊர் (2 சாமு 15:22; 23:24). பொதுவாகக் கெபிரோனுக்குத் தென்-தென் கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் யாவாவாக அடையாளம் காட்டப்படுகிறது. இது சரியானால், புவியியல்படி கீலோ பேத்து-சூர் மாவட்டத்தைச் சேர்ந்ததாகும் (யோசு 15:58தொ). ஆனால் யோசு 15:48-51 கீலோ கெபிரோனுக்குத் தென்மேற்கில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

**கீல்** (PITCH)

எரியும் தன்மையுடைய பசையான தாதுப் பொருள். ஏறக்குறைய நீரகக்கரியத்தின் நீர்மயமான கலவையாகும்.

பெருவெள்ள நிகழ்ச்சியுரையில், பேழையை உள்ளேயும் வெளியேயும் கீலால் பூசும்படி நோவாவுக்கு இறைவன் கட்டளையிடுகிறார் (ஆதி 6:14). பாபிலோனிய வெள்ளக்கதையிலும் பேழை வெளியிலே கீலால் பூசப்படுகிறது. யாத் 2:3-இல் கோரைப் புல்லால் செய்யப்பட்ட பேழைக்கு நீலக்கீல், கீல் ஆகியவை பூசப்படுகின்றன. ஏதோம் தண்டிக்கப்படும் போது, அதன் ''நீரோடைகள் கீலாகும்;... அதன் நிலம் கொழுந்து விட்டெரியும் கீலாகும்'' (ஏச 34:9).

**கீல்பட்டை, கீல், கதவின் மூட்டுவாய், முளையாணி** (HINGE)

குடை குழியில் பொருந்துமாறு கதவோடு இணைக்கப்பட்ட உலோகத்தாலான ஒரு கீல் பட்டை அல்லது கழலச்சாகும். தன்னுடைய படுக்கையில் உருளும் சோம்பேறி கீல்பட்டையில் சுழலும் கதவைப் போன்றவனாவான் (பழ 26:14).

**கீல் முனை** (CLAMP)

எருசலேம் ஆலயம் கட்டுவதற்காகத் தாவீதால் தயாரிக்கப்பட்ட பொருட்களில் ஓர் இரும்புக்கருவி (2 நாள் 22:3).

**கிவியர்** (HIVITES)

இஸ்ராயேலர்களின் குடியேற்றத்துக்கு முன் கானான் நாட்டில் இருந்த முக்கிய மக்களில் ஒரு குழுவினர்.

*இஸ்ராயேலர்களால் துரத்தப்பட்ட நாடுகளின் பெயர் வரிசையில் ஒன்றாக இவ்வார்த்தை பொதுவாகத் தோன்றுகிறது (யாத் 3:8.17; 13:5; 23:23.28; 33:22; 34:11; உப 7:1; 20:17; யோசு 3:10; 9:1; 11:3; 12:8; 24:11; நீதி 3:5; 1 அர 9:20; 2 நாள் 8:7). ஆனால் இந்நிகழ்ச்சிகள் அந்த மக்களைப் பற்றிச் சிறிதே தெரிவிக்கின்றன. ஆதி 10:17; 1 நாள் 1:15-இல் வரும் உண்மையான தலைமுறைப் பட்டியலும் வெகு சிறிதே தெரிவிக்கின்றன.*

*காமின் மகன் கானானின் வழித்தோன்றல்களாகக் கீவியர்கள் விவரிக்கப்படுகின்றனர் (ஆதி 10:15; 1 நாள் 1:15). ஆதி 34-இல் கீவியரான காமோரின் மகன் செக்கேம், யாக்கோபின் மகள் தீனாவைக் கற்பழிக்கிறான். செக்கேம் தீனாவை மணம் செய்யும் பொருட்டு, காமோர், செக்கேம், நகரிலுள்ள எல்லா ஆண்களும் விருத்தசேதனம் பெறுகின்றனர். ஆனால் அவளுடைய சகோதரரான சிமியோனும் லேவியும் விரைவில் அவர்கள் அனைவரையும் கொன்றுவிடுகின்றனர். கிபயோனைச் சேர்ந்த கீவியர்கள் இஸ்ராயேலரிடமிருந்து உயிர்தப்புவதற்குத் தந்திரம் செய்கின்றனர். அதன்விளைவாக அவர்களின் ஊழியர்களாகின்றனர் (யோசு 9). மற்றக் கீவியர்கள் வடகானானியர்களின் கூட்டணியில் சேர்ந்து யோசுவாவால் மேரோமில் தோற்கடிக்கப்படுகின்றனர் (11: 3.19). இஸ்ராயேலின் போர்வீரர்கள் பற்றிய தாவீதின் எண்ணிக்கையில் கீவியர் நகரங்களும் உள்ளடங்கும் (2 சாமு 24).*

*கீவியர்களைப்பற்றிய மற்றக் குறிப்புகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும் அவர்களைப்பற்றிய பல செய்திக்குறிப்புகளைக் கொடுக்கின்றன. ஆதி 34:2 செக்கேமின் தந்தை காமோரைக் குறித்துக்காட்ட இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறது. எருசலேமின் வடக்குப் பகுதியிலுள்ள கிபயோனின் குடிகள் கீவியரோடு ஒன்றுபடுத்தப் படுகிறார்கள் (யோசு 9:7; 11:19). சீதோனுக்கும் பெயேர்செபாவுக்கும் இடையே வழியில் கீவியர் நகர்கள் காணப்படுகின்றன (2 சாமு 24:7). லெபனோன் மலையில் கீவியக் குடியிருப்புகள் இருந்திருக்கின்றன (நீதி 3:3). கெர்மோன் அடிவாரத்திலும் குடியிருந்திருக்கிறார்கள் (யோசு 11:3). கடைசியாக எழுபது நூலின்படி இஸ்ராயேலின் வெற்றிகளால் ''கீவியர், எமோரியர்களின் நகரங்கள் பாழடைந்தன'' (ஏச 17:9). இவையெல்லாம் கீவியர்கள் தொடக்கத்தில் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.*

*ஆனால் விவிலியத்துக்குப்புறம்பே இவர்களைப்பற்றிய குறிப்புகள் ஒன்றுகூட இல்லை. எபிரேயப் பெயர்களான கீவியர், கோரியர், இத்தியர் ஆகியவை மெய்யெழுத்து அடிப்படை உடையவை. எழுதப்படும்போதுநடு எழுத்து மட்டுமே வித்தியாசமாக இருக்கும். இதுதான் மூல வாசகத்தில் சில குழப்பங்களை ஏற்படுத்தக் காரணமாகும். இவ்வாறு மோசரோட்டிக் வாசகம் ஆதி 36:2-இல் சிபயோனை ஒரு கீவியர் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் 36:20-இல் அதே ஆளைக் கோரியராக வரிசைப்படுத்துகிறது. ஆதி 34:2; யோசு 9:7-இல் மோசரோட்டிக் வாசகம் கீவியர்கள் என்று குறிப்பிடுகிறது. கடைசியாக எழுபது நூல் யோசுவா 11:3-இல் இத்தியர்களைப் பற்றிப்பேசுகிறது. ஆனால் மோசரோட்டிக் வாசகம் கோரியர்களைக் குறிப்பிடுகின்றது. மோசரோட்டிக்கு வாசகம் கீவியர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் கோரியர்களுக்குப் பொருத்தமாக அமைகிறது. பொதுவாக நாடுகளின் பட்டியலில் எபூசியர்களுக்கு முன்னால் கீவியர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். எபூசியர்கள் கோரியர்களோடு வைத்திருந்த தொடர்பு யாரும் அறிந்ததே. எனவே இங்கும் கோரியர்களுக்குப் பதிலாகக் கீவியர்கள் பயன்பட்டிருக்கலாம். பிறகு ஏன் இப்பெயர்கள் மாறிக்கிடக்கின்றன?*

*புவியியல் அடிப்படையில் சில நிகழ்ச்சிகளை விளக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விளக்கமுடியாது. சேயீரில் ஏதோமியருக்கு முன் வாழ்ந்தவர்கள் கோரியர்களாகக் கருதப்பட்ட பாரம்பரியம் ஒன்றுண்டு. ஆனால் இப்பகுதியோடு கோரியர் அதிகத்*

தொடர்பு கொண்டதாகத் தெரியவில்லை. கோரியர் நிலையாகக் குடியேறிய பகுதியில் கீவியர் குறிக்கப்படும் பாரம்பரியம் ஒன்றும் உண்டு. இவை காலப்போக்கில் கோரியர்கள் கீவியர்கள் என்றழைக்கப்படுவதற்கு வழிவகுத்திருக்கலாம்.

**கிழைக்காற்று, அனல்காற்று** (EAST WIND)

இக்காற்று ''வடகாற்று'' *(பழ 25:23)*. இது திசையை மட்டும் குறிக்கும் காற்றல்ல; சிறப்புப் பண்புகள் பெற்ற ஒரு காற்றினுடைய பெயர். தற்பொழுது இதற்குக் காம்சின் அல்லது சிரோக்கோ என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இது பாலைவனப் பகுதியிலிருந்து, பாலஸ்தீன நாட்டுத் தென்கிழக்குப் பகுதிகளை நோக்கி வீசுகின்ற வெப்பமான, உலர்ந்த, தூசு படிந்த காற்றாகும் *(எரே 4:11; ஒசே 13:15)*. இக்காற்று, பருவகால மாற்றங்களின் மாதங்களாகிய ஏப்ரல்-சூன் மாதங்களிலும் செப்டம்பர்-நவம்பர் மாதங்களிலும் பல நாட்களுக்கு வீசும். உயர்ந்த வெப்ப நிலையுடனும், மிகக் குறைந்த ஈரப்பதமும் தூசு கலந்ததுமாய் இருப்பதனால் மிருகங்களையும், மனிதர்களையும் பலவீனப்படுத்துவதாய் உள்ளது *(ஏச 27;8; யோனா 4:8)*. மேலும் செடிகொடிகளை உலரவைக்கின்றது *(ஆதி 41:6; எச 17:10)*. இக்காற்று ஒருசில வேளைகளில் சுழற்காற்றாக மாறி *(யோபு 27:20-21)*, கடலூர்திகளையும் நாசப்படுத்தவல்லது *(சங் 48:7; எச 27:26)*. ஆழமற்ற நாணல் கடல் நீரைப் பின்வாங்கச் செய்யவல்லது *(யாத் 14:21)*.

**கீழ்த்திசை நாடு** (EAST COUNTRY)

ஆபிரகாம் தனது வைப்பாட்டிகளின் பிள்ளைகளை இந்நாட்டிற்கு அனுப்பினார். இச்சொற்றொடர் அரேபியா நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியை, அதாவது பாலஸ்தீன நாட்டுக்குத் தென்கிழக்கிலுள்ள பகுதியைக் குறிக்கிறது.

**கீழ்த்திசை மக்கள்** ((THE PEOPLE OF THE EAST)

இஸ்ராயேலின் கிழக்கில் உள்ள நாடுகளில் வாழ்ந்துவந்த மக்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு கலைச்சொல்லாகும். இவ்வாறு ஆதி 29;1 யாக்கோபு கீழ்த்திசை மக்களின் நாட்டை நோக்கிப் பயணம் செய்தார் என்று குறிப்பிடுகின்றது. நீதி 6-8-இல் இச்சொல் மிதியானியர் அமலேக்கியர்களுடன் சேர்ந்து இஸ்ராயேலைத் தாக்கிய அரபு நாட்டுக் கூட்டத்தைக் குறிக்கின்றது. மேற்சொன்ன பொருளிலேயே எரே 49:28; எச 25:4.10-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏச 11:4-இல் இச்சொல் இதுமேயாவுக்கும் மோவாபுக்கும் சரிநிகராகப் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. மேலும் யோபு 1:3-இல் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கீழ்த்திசை மக்கள் ஞானத்திலும் அறிவு வளர்ச்சியிலும் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர் *(1 அர 5:10)*. இக்காரணத்தை முன்னிட்டே இயேசு கிறிஸ்து பிறந்தபொழுது கீழ்த்திசையிலிருந்து மூன்று ஞானிகள் வந்ததாக அறிமுகப் படுத்தப்படுகிறது *(மத் 2:1-12)*.

**கீழ்ப்படிதல்** (OBEDIENCE)

கீழ்ப்படிதல் என்பது ஒருவர்மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட நீடித்த கட்டுப்பாட்டினை அல்லது அடங்கிப்போகிற பணிவைக் குறிக்கிறதில்லை. மேலாக, ஒருவன் தன் முழுச் சுதந்தரத்தோடு, இன்னும் வெளிப்படாததும் ஆனால் வார்த்தையானவரின் விசுவாசத்தால் முன்மொழியப்பட்டதுமான, இறைவனது திட்டத்தோடு ஒட்டிக் கொள்ளுதலாகும். இக்கீழ்ப்படிதலானது மனிதனை இறைவனது சேவைக்குட்படுத்தி அவனை அவரது மகிழ்ச்சியில் நுழையச் செய்கிறது.

1. படைப்பு இறைவனுக்குப் பணிகிறது:-

மனிதனைத் தவிர, படைப்பிலேயே ஒரு வகைப் பணிவும் மகிழ்வும் உணர்த்தப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆண்டவர் லேவியாத்தனின் இதயத்தை ஈட்டியால் துளைத்ததும் *(யோபு 40:24)* இராகாபை *(சங் 89:11)* ஒழித்ததும், அவரது ஏகோபித்த சர்வ அதிகாரத்திற்குச் சான்றாக இருக்கின்றது.

இயேசு புயலினை அடக்கிய அன்று சாத்தான்களை விரட்டிய செயலானது, சாத்தான்களைப்போலவே, ''காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றன'' (மத் 8:27; மாற் 1:27) என்பதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. இவ்விதச் சக்திவாய்ந்த செயல்கள் தெய்வ பயத்தை உண்டாக்குகின்றன. உலகமே தனது தலைவரை அமைதியோடு ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும், உலகிலுள்ள உயிர்வாழ்வனவெல்லாம் அந்த இறைவனது குரலுக்கு மகிழ்வோடும், ஆர்வத்தோடும் விரைந்தும் மறுமொழி பகர்வதையே விவிலிய ஏடு வியந்து நோக்கி, அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறது: ''தத்தம் சாமத்தில் விண்மீன்கள் ஒளி வீசின, மகிழ்ச்சியாயிருந்தன; அவற்றை அவர் அழைத்தார், அவை 'இதே இருக்கின்றோம்' என்றன; தங்களை உண்டாக்கியவருக்காக இன்பத்தோடு ஒளிவீசின'' (பாரூ 3:34தொ; காண் சங் 104:4; சீரா 42:23; 43:13-26). இத்தகைய ஆர்வமுனைப்புடைய மிகவும் நேர்த்தியான படைப்புகள், தங்களுக்கு இறைவன் தமது பிரபஞ்சத்தில் குறித்துள்ள பணியினை நிறைவேற்றி வருகையில், மனுக்குலம் மட்டும் ''கீழ்ப்படியாமையால் கட்டுண்டு கிடப்பது'' (உரோ 11:32) நமது மனத்திற்கு, மனிதன் எப்படியாகிலும் இறைவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற நினைவை வருத்தத்தோடு உணர்த்துகின்றது. மேலும் இறைவன், தமது ஏக மகனின் கீழ்ப்படிதலின் பொருட்டு விடுதலையடைந்த படைப்பனைத்தும் எப்படி இயல்பாகவே கீழ்ப்படியக்கூடும் என்ற உண்மையை மனிதன் நோக்கவும் அதன் மூலம் அவனுக்கு அசையா நம்பிக்கை பிறக்கவும் செய்தார் (உரோ 8:19-22).

II. கீழ்ப்படியாமையின் விளைவு:-

1. ஆதாம் இறைவனுக்குக் கீழ்ப்படியாதது தொடக்கத்திலிருந்தே அவனது சந்ததியனைத்தையும் இறைவனுக்கெதிராய் நிறுத்திப் (உரோ 5:19) படைப்பனைத்தையும் பயனற்ற நிலைக்கு உட்படுத்தியது (8:20). ஆதாமினுடைய எதிர்ப்பானது அதற்கு மாறாகக் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதையும் அதிலிருந்து இறைவன் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் காட்டுகிறது. கீழ்ப்படிதலானது இறைவனது விருப்பத்திற்கு மனிதன் பணிந்து நடப்பதாகும். இறைவனது கட்டளையை நிறைவேற்றுவதன் பொருளையும் மதிப்பையும் நாம் பார்க்கிறதில்லையானாலும், அதன் சிறப்பியல்பு தெய்வக் கட்டளையாகுமென்பதைக் கண்டுணர்கிறோம். இறைவன் நம்முடைய கீழ்ப்படிதலைக் கோருகின்றாரென்றால், அது, உலகினை உருவாக்கி முடிப்பதற்கானதொரு திட்டத்தினை அவர் வைத்திருக்கிறாரென்பதால்தான்; நமது ஒத்துழைப்பும், விசுவாசத்தில் நமது பற்றுதலும் அவருக்கு வேண்டியிருக்கிறது. விசுவாசம், நம்பிக்கை அல்லது கடவுள் பற்று என்பது கீழ்ப்படிதலன்று, ஆனால் அது கீழ்ப்படிதலின் இரகசியமாக இருக்கிறது. கீழ்ப்படிதலானது விசுவாசத்தின் அடையாளமும் பயனுமாகும். இறைவார்த்தையை மறந்து ஏவாளின் குரலுக்கும், சாத்தானின் குரலுக்கும் செவிமடுத்ததே ஆதாம் இறைவனுக்குக் கீழ்ப்படியாததன் காரணமாகும் (ஆதி 3:4தொ).

2. மனுக்குலத்தைக் காக்கும்பொருட்டு இறைவன் ஆபிரகாமின் விசுவாசத்தினைக் கிளறினார்; அந்த விசுவாசத்தினைக் கீழ்ப்படிதல் மூலமாக உறுதிப்படுத்தும்படி அவர் செய்தார்: ''உன்னுடைய நாட்டைவிட்டுப் புறப்படு'' (ஆதி 12:1), ''நமக்கு முன் நடந்து உத்தமனாய் இரு'' (17:1); ''உன்னுடைய மகனை எடுத்து... அவனைத் தகனப் பலியாய் ஒப்புக் கொடுப்பாய்'' (22:2). ஆபிரகாமின் வாழ்வு முழுவதும் இறைவனது வார்த்தையில் அமைந்திருக்கிறது. ஆனால் அந்த வார்த்தையோ, அவரை எதையும் பாராமல் முன்னோக்கிச் சென்று, தான் புரிந்துகொள்ள முடியாத செயல்களையும் செய்யுமாறு எப்போதும் தூண்டுகிறது. இவ்வாறு ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலானது அவருக்கு இறைவனால் தரப்பட்டதொரு சோதனையும் பலப்பரிட்சையுமாக இருக்கிறது (22:1). அது கடவுளுக்கோ விலைமதிக்க முடியாதவொரு சாட்சியாகும்; ''நம்மைப் பற்றி நீ

உன் ஒரே மகனையும் பலியிட மனம் துணிந்தாய்'' (22:16).

3. கடவுளுடைய உடன்படிக்கையும் இதே நடைமுறையைத்தான் மேற்கோளாகக் கொண்டிருக்கிறது: இறைவன் தங்களுக்கு முன்மொழிந்த உடன்படிக்கையோடு ஒட்டிக்கொண்ட இஸ்ராயேல் அதற்குப் பதிலளிக்கும் வகையில், ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' (யாத் 24:7) என்றார்கள். உடன்படிக்கையானது, இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கைக்கும், அவர்களை இறைமக்களாய் வாழச் செய்யும் நோக்கிற்கும் பொருத்தமான வகையில் ஓர் ஒப்பந்தத்தையும், திருச்சட்டம், கட்டளைகள், நிறுவனங்கள் போன்றவற்றையும் தன்னோடு கொண்டு வந்தது. இவைகளில் அனேக ஒழுங்குகள் மனிதருக்குள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய கடமையினை வலியுறுத்தின. பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல் (உப 21:18-21); அரசர், இறைவாக்கினர் குருக்களுக்குக் கீழ்ப்படிதல் (17:4-18, 22). மனித இயற்கையிலேயே இவ்விதமான கடமைகள் பொதிந்திருப்பினும், இறைவன் அவைகளைத் தமது உடன்படிக்கைக்குள் சேர்ப்பதன்மூலம் மனிதனுடைய பணிவான நடத்தையை அவனது விசுவாசத்திலூன்றியதோர் கீழ்ப்படிதலாக இருக்கச் செய்கிறார். ஒருவனுக்குச் சட்டத்தின் மேலுள்ள உண்மையான பற்றானது அவன் இறைவனது வார்த்தையிலும் அவரது உடன்படிக்கையிலும் கொண்டுள்ள பற்றுதலைப் பொருத்தே மெய்யாகிறது. இதுபோன்றே கீழ்ப்படிதலும் அதனுடைய கட்டளைகளுக்கும் அடிமைத்தனம் பூண்டதோர் பணிவாக அன்பின் மனப்பான்மையில் அமைந்திருக்கிறது. ஏற்கெனவே பத்துக் கட்டளைகளில் முதற்கட்டளை இதனைத் தொடர்புபடுத்துகிறது; ''நம்மிடம் அன்புகூர்ந்து, நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகி வருகிறவர்களுக்கு'' (யாத் 20:6); உப ஆகமமும் இதே கருத்தினைத் திரும்பக் கூறி இன்னும் சற்று விரிவுபடுத்துகின்றது (உப 11:13.22); சங்கீதங்களில் திருச்சட்டத்தினை, மனிதனுக்களிக்கப்பட்ட இறையன்பின் பெருங்கொடை என்றும் அன்பினாலான கீழ்ப்படிதலின் தோற்றுவாயென்றும் கொண்டாடுகின்றன (சங் 19;8-11; 119).

III. கிறிஸ்துவும் நமது கீழ்ப்படிதலும்:-

கடவுளுக்குக் கீழ்ப்படிவது யார்? இஸ்ராயேல் ''ஒரு கலகக்காரர்களின் வீடாக'' (எச 2:5)வும் ''எதிரான பிள்ளைகளாகவும்'' (ஏச 1:2) இருக்கிறது; ''திருச்சட்டத்தைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டு அது அச்சட்டத்தை மீறிக் கடவுளை இழிவுபடுத்துகிறது'' (உரோ 2:23). அது புறவினத்தானைவிட மேலாகப் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது. ஏனெனில் அது அவனோடு சேர்ந்து ''கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கிறது'' (உரோ 3:10; 11:32). பாவத்திற்கு அடிமையான மனிதனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஆவலிருப்பினும் இறைவனுக்குக் கீழ்ப்படிய இயலாதவனாயிருக்கிறான் (7:14). இதற்கு வழிசெய்யும் வகையில் ''திருச்சட்டத்தை அவர்களது உள்ளத்தில்'' (எரோ 31:33) காண்பதற்கு இறைவன் தமது ஊழியனை அவர்களிடம் அனுப்புவது அசியமாயிருக்கிறது. ''நாள்தோறும் காலையில் அவர் அவனது செவிப்புலனைத் தூண்டுகிறார்'' (ஏச 50;4). அதனால் ''இதோ வருகிறேன்...உமது திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம்'' (சங் 40:7தொ) என்று ஊழியனால் கூறமுடிகிறது.

''ஏனெனில், ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகளானது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாவார்கள்'' (உரோ 5:19). இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதல் நமது மீட்பாக இருக்கிறது; அது திரும்பவும் நாம் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு இயலுமாறு செய்கிறது. கிறிஸ்துவின் வாழ்க்கையானது ''அவர் உலகிற்கு வந்ததிலிருந்து'' (எபி 10:5), ''சிலுவையில் மரிக்கும் வரை'' (பிலி 2:8) கீழ்ப்படிதலாக இருந்தது; அதாவது, இறைவனோடு நெருங்கிய பற்றுக்கொண்டு, அவருக்கும் மனிதனுக்குமிடையே நடுவராகத் திகழ்ந்தார். ''தன் விருப்பத்தையல்லாமல், தன்னை

யனுப்பியவருடைய விருப்பத்தையே நிறைவேற்ற வந்த இயேசு'' (யோவா 6:38;-காண் மத் 26:39), தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமது தாய் தந்தையர்க்கும் (லூக் 2:5), சட்டத்தின் அதிகாரிகளுக்கும் (மத் 17:27) பணிந்தேயிருந்தார். அவர் தமது திருப்பாடுகளின்போது, எவ்வித எதிர்ப்பும் காட்டாது, தம்மையே கையளித்து, ''இறைமகனாயிருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார்'' (எபி 5:8). இதனால் இயேசு தமது கீழ்ப்படிதலினால் தமது மரிப்பை அதியுன்னதப் பலியாக இறைவனுக்குப் படைக்கின்றார் (10:5; காண் 1 சாமு 15:22).

IV. கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்:-

தமது கீழ்ப்படிதலினால், ''ஆண்டவராகவும்'' (பிலி 2:11) ''விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரத்தையும்'' (மத் 28:18) பெறக்கூடிய நிலைக்கு வந்துள்ளவருமான இயேசுகிறிஸ்து, உலகின் ஒவ்வொரு படைப்பிடத்திருந்தும் கீழ்ப்படிதலைப் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கின்றார். அவர் மூலமாகவும், அவருடைய நற்செய்திக்கும் அவரது திருச்சபையின் வார்த்தைக்கும் பணிந்து நடப்பதன் மூலமாகவுமே (2 தெச 3:14; மத் 10:40) மனிதன் தனது விசுவாசத்தில் இறைவனையடைகின்றான் (அ.ப. 6:7; உரோ 1:5; 10;3; 2 தெச 1:8). இதனால் அவன் உலகின் தொடக்க காலத்திலிருந்துள்ள கீழ்ப்படியாமையிலிருந்து தப்பித்துக் கொண்டு மீட்பின் இரகசியத்தால் அடியெடுத்துவைக்கின்றான். இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவர்களின் முழுச்சட்டமாக இருக்கிறார் (1 கொரி 9:21). இச்சட்டம், சட்டரீதியான மனித அதிகாரத்திற்கும், பெற்றோர்களுக்கும் (1 கொலோ 3:2), இவ்வுலகில் தலைவர்களாயிருப்போர்க்கும் (3:22), கணவர்களுக்கும் (3:18) பொது அதிகாரிகளுக்கும் மக்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிறது; அத்தோடு, அவை ஒவ்வொன்றிலும் இறைவனது அதிகாரம் நிலைத்திருப்பதை உணர்த்துகின்றது (உரோ 13:1-7). கடவுளுக்குப் பணிசெய்வதற்காக மட்டுமே கீழ்ப்படிவதால், அவசிய மேற்பட்டால், கிறிஸ்தவனால் அநீதியான கட்டளைகளை எதிர்த்து நிற்க முடிகிறது. ''கடவுள் சொல்வதைக் கேட்பதற்கு மேலாக மனிதர்கள் சொல்வதைக் கேட்பது கடவுளுக்கு முன் நீதியற்ற செயல்'' (அ.ப. 4:19) என்பதைக் கிறிஸ்தவன் வரையறுத்துக் காட்டவேண்டும்.

**கீனா** (KINAH - இரங்கற்பா, கொல்லன்பகுதி)

யூதாவின் தென்கிழக்குக் கோடியில் ஏதோமின் எல்லை ஓரமாக உள்ள ஓர் ஊராகும் (யோசு 15:22). இது கேனியர்களின் இருப்பிடமாக இருக்கலாம். இது கெபிரோனுக்குத் தெற்கில் உள்ள வாடி ஏல் கெய்னியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**கீனாத்து** (GINATH - பாதுகாப்பு)

இவர் திபினியின் தந்தை. இஸ்ராயேலின் அரியணைக்கு ஒமிரியுடன் போட்டியிட்டவர். ஆனால் வெற்றியடையவில்லை (1 அர 16:21-22).

# கு

## குகை (CAVE, DEN)

யோர்தானுக்குக் கிழக்கிலும் பாலஸ்தீன மலைகளிலும், சுண்ணாம்புக்கற்கள், மணற் கற்கள் நிறைந்த இடங்களில் இயற்கையாகவோ செயற்கையாகவோ அமைந்த குகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இக் குகைகள் உறைவிடமாகவும், சரணாலயமாகவும், அடக்கம் செய்யப்படும் இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன என்று விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

ஆதி 19:30; 23:9; யோசு 10:16; நீதி 6:2; 1 சாமு 13:6 ஆகிய இடங்களில் வரும் எபிரேயச் சொல் குகையென்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யோபு 30:6; ஏச 2:19; 2:21; உ.ச. 2:14; எரே 49:16; ஒப 3; யோபு 37:8; 38:40; சங் 104:22; உ.ச. 4:8; நாகூ 2:12; சங் 10:9 ஆகிய இடங்களில் குகையைக் குறிக்க வேறுபல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. குகைகள் சாதாரணமாகத் திருடர்களின் தலைமை அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டதால், 'கள்வர் குகை' என்பது எருசலேமுக்கு உவமையாகக் கூறப்பட்டபோது எருசலேம் தீய செயல்கள் திட்டம் செய்யப்படும் குகையாகும் என்று பொருள்படும் (எரே 7:11; மத் 21:13; மாற் 11:17; லூக் 19:46). தானியேல் நூலில் வரும் 'சிங்கக் குகை' அனேகமாக ஒரு செயற்கைக் குகையாக இருந்திருக்கலாம். ஆனால் யூத எழுத்தாளர் இது ஒரு குழி அல்லது நீர்த் தொட்டி என்று நினைத்ததாகத் தோன்றுகிறது. குகையானது தண்ணீர் சேர்க்கும் தொட்டியாகவோ சிறைச்சாலையாகவோ பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் ''குகை'' என்பது மூன்று இடங்களில் வருகின்றது; இந்த மூன்று இடங்களிலும் அடக்கம் செய்யப்படும் இடம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலாசரின் கல்லறை (யோவா 11:38), வேத கலாபனையின்போது அடைக்கலம் புகும் இடம் (எபி 11:38; திருவெளி 6:15).

ஆதி 19:30-இல் லோத்து தன்னுடைய புதல்வியருடன் குகையில் தங்கியிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாராவை அடக்கம் செய்ய ஆபிரகாம் மக்கபேலா குகையை வாங்கினார் (ஆதி 23:11-16). இதே குகையில் ஆபிரகாம் (ஆதி 25:9), ஈசாக்கு, ரபேக்காள், லேயா (ஆதி 49:30-37) யாக்கோபு (ஆதி 50:13) ஆகியோர் அடக்கம் செய்யப்பட்டதாகப் பாரம்பரியம் கூறுகின்றது. யோசுவாவால் தோற்கடிக்கப்பட்ட ஐந்து கானானிய அரசர்களும் மக்கேதா குகையில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களுடைய உடல்களை வைத்துக் கற்களால் மூடியபிறகு அது கல்லறையானது (யோசு 10:17-27).

மிதியானியர்களாலும் (நீதி 6:2) பெலிஸ்தியர்களாலும் (1 சாமு 13:6) துன்புறுத்தப்பட்டபொழுது இஸ்ராயேலர்கள் குகையில் மறைந்து வாழவேண்டியதாயிற்று. தாவீது, சவுலிடமிருந்து தப்பி அதுல்லாம் குகையில் மறைந்து கொண்டார் (1 சாமு 22:1). எலியா ஈசபேலுக்குப் பயந்து கோரேபு மலையிலிருந்த ஒரு குகையில் பதுங்கிக் கொண்டார் (1 அர 19:90). கர்மேல் மலையிலிருந்த ஒரு குகையில் ஒபதியா நூறு இறைவாக்கினர்களைப் பதுக்கி வைத்தார் (1 அர 18:4.13). புதைபொருள் ஆராய்ச்சிகள் குகைகள் உறைவிடமாகவும், வழிபாட்டு இடமாகவும் அடக்க இடமாகவும் பயன்படுத்தப்பட்டன என்று காட்டுகின்றன. பெத்திலகேமுக்கும் சாக்கடலுக்கும் இடையிலும், கர்மேல் மலையிலும் உள்ள குகைகள் கற்காலத்திலிருந்து இன்று வரை ஆடுமேய்ப்பவர்களால் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. கல்லறையாகப் பயன்படுத்தப்பட்ட இயற்கை, செயற்கைக் குகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சாக்கடலுக்கு வடமேற்குத் திசையில் உள்ள கிர்பெத்து கும்ரான் என்ற குகையில் புகழ்பெற்ற சாக்கடல் ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எருசலேம், பெத்திலகேம், கெபிரோன், நாசரேத்து போன்ற இடங்களில் உள்ள பழங் காலக் குகைகளின் மேல் கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் புனித இடங்களை எழுப்பி யுள்ளனர். ஆனால் அகழ்வாய்வுச் சான்றுகள் இன்மையால், இந்த விவிலிய இடங்களை உறுதியாக அடையாளம் காட்ட முடிய வில்லை.

குக்கோக்கு (HUKKOK - ஆழ்ந்தகன்ற பிளவு)

நெப்தலி பகுதியில் ஒரு எல்லையோர நகர் (யோசு 19:34). கின்னரேத்துக்கு மேற் கில் 5 கி.மீ. தொலைவில் எபெல் கபகுக்கு அருகிலுள்ள இக்கால யாகுக்கு ஆக அடை யாளம் காட்டப்படுகிறது.

குங்கிலியம் (ONYCHA)

கடலில் வாழும் ஒருவகையான மிருகத்திட மிருந்து தயாரிக்கப்பட்டது. ஆலயத்தில் பீடத்தில் எரிக்கப்படும் நறுமணக் கலவை யில் சேர்க்கப்பட்ட பொருள்களில் ஒன்று (யாத் 30:34).

குசாம் (HUSHAM - விரைவான)

இவர் ஒரு தேமானியர். ஏதோம் நாட்டை ஆண்டு வந்த மூன்றாம் அரசன். யோபாபு வுக்குப் பின் அரசரானார் (ஆதி 36:34-35; 1 நாள் 1:45-46).

குஞ்சம் ((Tassel)

இஸ்ராயேல் மக்கள் தங்கள் ஆடையில் நான்கு மூலைகளிலும் குஞ்சங்களை வைத் துத் தைத்துக் கொள்ள வேண்டும் (எண் 15:38-39).

குடிகொள்ளுதல், தங்குதல் (ABIDE)

I. இடம்விட்டு இடம் பெயர்ந்து, நாடோ டிகளாகவும், தாயகமிழந்து அயல் நாடுக ளில் அவதியுற்றவர்களாகவும் வாழ்ந்த இஸ் ராயேல் மக்களுக்குக் ''குடிகொள்ளுதல்'' என்றால் என்ன என்பது பற்றிய அனுபவ உணர்வு இருந்ததில்லை. இக்கருத்தைத் துல் லியமாக வெளியிடும் சொல்கூட அவர்க ளிடை வழக்கிலில்லை. எனவே, தாங்கள் கண்ட சில நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு கீழ்க்காணும் விதங்களில் இக் கருத்தை உணர்த்தினர்: ''அமர்ந்திருக்கும் மனிதன்'' (ஆதி 25:27), ''போரிட்டு வெற்றி வீரனாக நிற்பவன்'' (யோசு 7:12), ''அதே இடத்தில் தொடர்ந்து நிலைக்கும் கூடாரங் கள்'' (ஆதி 16:12; 25:18). ஆதலின் 'இல்லம்', 'நிலைத்து நிற்றல்', 'நிலைபேறு' போன்ற இவற்றிற்கு ஒத்த கருத்துக்களைக் கிரேக்க மொழி பெயர்ப்பாளர்களிடமிருந்து பெறுகி றோம்.

எப்போதும் அலைந்து திரிந்த இம்மக்க ளுக்கு, பாலைவனத்தில் களைப்பு நீங்கி இளைப்பாறும் ஆவல் இருந்தது. இறைவன் தங்களுக்குக் கொடுக்கப் போவதாக உறுதிய ளித்த நாட்டில் அமைதியுடன் தங்கிவாழ விழைந்தனர் (ஆதி 49:9.15; உப 33:12.20). அவர்களது வரலாற்றில் வேறு வேறு கட்டங் களின் முடிவில் ''நிலையாகத் தங்கள் கூடா ரங்களை நிறுவக் (உப 12:8 தொ) கனவு கண்டனர். ஒரு கட்டத்தை விடுத்து இன் னொரு கட்டத்தில் அவர்கள் வாழத் தொடங் கியபோது நடக்கவிருப்பதை இறைவாக்கி னர் முன்னுரைத்தது கேட்டுத் திடம் அடைந் தனர்''. ''அவர்கள் சொந்த நாட்டில் அவர்க ளைத் திரும்ப நாட்டுவோம்'' (ஆமோ 9:15); ''அது அமைதியான இருப்பிடம், அசைக்க முடியாத கூடாரம்'' (எச 33:20); ''நம் மக் களை ஓரிடத்தில் நிலைநிறுத்துவோம்; அவர்களை அவ்விடத்தில் உறுதிப்படுத்து வோம்'' (2 சாமு 7:9 தொ; காண் எச 54:2). ஆனால் அம்மக்களைத் தண்டித்து, மீண்டும் பாலைவனத்திற்கு இட்டுச் செல்லவும், அல் லது பசும்புல் தரைகளை நோக்கிச் செல்லும் பாதைகளில் அவர்களை நடத்தவும் மேய்ப்ப ராம் யாவே ''இல்லங்களை அழித்தார்'' (சங் 23; எரே 50:19; எச 34:23-31; காண் ஆமோ 5:15; எரே 2:14). ஓரிடத்தில் நிலைத்துக் குடிகொள்ளுதல் என்பது ஆசித்த இலட்சிய மாக இருந்ததேயொழியக் கைகூடுவதா யில்லை. இந்த இலட்சியம் கடவுளில் மட் டுமே கைகூடவிருந்தது.

II. நிலையாமையும், நிலைமையும்:-

1. ''இவ்வுலகின் அமைப்பு கடந்து செல்

கின்றது'' (1 கொரி 7:31; 2 கொரி 4:18). நித்திய வழிப்போக்கனான மனிதன் இம் மண்ணுலகில் இருக்கும் வரையில் நிலைத்து வாழ முடியாதவன். இன்று தோன்றி நாளை காய்ந்து போகவிருக்கும் புல்லைப்போன்ற வன். ஆதலின் நீடித்து இருப்பவனல்லன். அவன் இறந்து மடியவேண்டியவன். அவ னது வாழ்வோ குறுகியது (ஏச 40:8; யோபு 14:2). இருந்தாலும் மனிதன் வாழும் உலகம் அவனுக்கு நிலைத்திருக்கக்கூடியதொன்றா கத் தோற்றம் அளிக்கிறது (2 பேதுரு 3:4). தனது அடித்தளங்கள் மீது உறுதியாக அமைந்துள்ளது உலகம் (சங் 104:5). இயற் கையின் சட்டங்கள் மாறாமல் நிலைத்திருப் பவை எனக் கடவுள் நோவாவுக்கு உறுதி யளித்தார் (ஆதி 8:12). எனினும் இவ்வாக் குறுதி படைப்புப்பொருள் நிலைக்குமட்டுமே நீடிக்கும். ஏனெனில் வானுலகங்கள் நடுக்க முறும் (எபி 12, 26 தொ): ''விண்ணும் மண்ணும் அழிந்துபோம்; என் வார்த்தை களோ அழியவே அழியா''(மத் 24:35) என்று தம்மவருக்குக் கிறிஸ்து எச்சரிக்கை தந்து உள்ளார்.

கடவுளின் சொற்கள் மீதும், திருச்சட்டத் தின் மீதும் சீனாய் உடன்படிக்கை ஏற்பட்ட தாயினும், அதுகூட நிலையற்றது என முன் னரே அறிவிக்கப்பட்டது. யாவேயிடம் விசு வாசமற்ற அவரது திருச்சட்டத்திற்குப் பணி யாத எபிரேயர்கள் இறைவன் வாக்குறுதி அளித்த நாட்டில் நிலைத்து வாழ இயல வில்லை (உப 8:19 தொ; 28:30-36). சுருங்கக் கூறின் ''அவர்கள் என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவில்லை'' (எபி 8:9.13). மேலும் இந்த உடன்படிக்கை வரவிருக்கும் புதிய உடன்படிக்கையின் நிலையற்ற மாதி ரிப் படிவமேயாம் (எரே 31:31; மத் 26:28; கலா 4:21-31).

புதிய ஏற்பாட்டிலுள்ள மீட்பு உண்மைக ளிலும், அருட்கொடைகள்; இறைவாக்கு அறிவு, பரவசப் பேச்சு போன்ற கூறுகள் சில மறைந்துவிடும் தன்மையன. ஆனால் விசு வாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலைத்து நிற்பவை (1 கொரி 13:8-13). இம்மண்ணுலகம் நிலைத்திருக்கும் நகர மன்று; அதை நீத்தேயாக வேண்டும் (எபி 13:13 தொ). ஒவ்வொரு கிறிஸ்தவனும் ''தான் வாழும் உலகம் ஒரு கூடாரமே''; அதைவிட்டு நீங்கி ஆண்டவருடன் நிலையா கத் தான் வாழவேண்டும் என்பதை அறி வான் (2 கொரி 5:1-8).

2. கடவுள் மட்டுமே நிலைநிற்பவர்: ''இருந் தவரும், இறக்கிறவரும், இனிவருபவ ரும் அவரே'' (திருவெளி 4:8; 11:17). ''என் றும் நிலைத்து வாழும் கடவுள் அவர்'' (தானி 6:27; சங் 102:27 தொ). புனிதமானவை யும், என்றும் நிலைத்திருப்பவையும், யாரா லும் அணுகவொண்ணாதவையுமான வானங்களில் வீற்றிருக்கும் கடவுள் மிரட் டல்களைக் கண்டு எள்ளி நகையாடுகின்றார் (சங் 2:4; 9:8; ஏச 57:15). அசைக்க முடியாத பாறையாகிய அவர்மீது மட்டுமே மனிதன் ஊன்றி நிற்க வேண்டும். அவரது சொல் (ஏச 40:8; 1 பேதுரு 1:23 தொ), திட்டம் (ஏச 14:24), வாக்குறுதி (உரோ 4:16), அரசு (தானி 4:31), நீதி (சங் 11:3), அன்பு (சங் 136) இவை என்றென்றும் நிலைத்திருப்பன. படைக்கப் பட்ட பருப்பொருள் உலகிலோ அறத்துறை சார்ந்தவற்றிலோ எதுவேனும் நீடித்து நிலைப்பின் அதற்கு உறுதி அளிப்பவர் அவரே (சங் 119:89 தொ; 112:3.6).

எனவே, நீதிமான் தீர்ப்புநாள் வரை செழித்து நிற்கும் மரம்போலும் (சங் 1:3 தொ), ஒரே அசைக்க முடியாத மூலைக்கல் லாகிய கிறிஸ்து என்ற பாறையின்மீது தன் வீட்டைக் கட்டியெழுப்பும் மனிதனைப் போலும் (மத் 7:2 தொ; ஏச 28:16; 1 கொரி 3:10-14; எபே 2:20 தொ) வாழ்வான். நிலைத்து வாழவிரும்பும் மனிதன் எவனும் கடவுளின் வல்லமையைச் சார்ந்து நிற்க வேண்டும் (ஏச 7:9). அதாவது ''நேற்றும், இன்றும், என்றும்'' ஒரே தன்மையராகத் திகழும் (எபி 13:8) கிறிஸ்துவில் மாறாத விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவா 8:31; 15:5 தொ; 2 திமோ 3:14; 2 யோவா 9).

III. இறைவன் நம்மில் வாழ்கிறார்; நாம் அவரில் வாழ்கின்றோம்.

*1. கடவுள் திருமுன் மனிதன் வாழ்வதால் அவன் நிலைத்து வாழ்வதை அனுமதிக்கின்றார். சீயோனில் அவர் எழுப்பியுள்ள ஆலயத்தில் அவரது திருப்பெயர் நிலைத்துள்ளது; மாட்சியால் நிறைந்துள்ளது (உப 12:5-14; 1 அர 8:11; மத் 23:21). எனினும் இக்கோவிலும் தற்காலிகமானதே; இது மட்டுமன்று-ஒரு நாள் வரும், அன்று இக்கோவில் பாவத்தால் தீட்டுறும்; ஆண்டவர் மாட்சி அதனின்று நீங்கும்; மக்கள் நாடு கடத்தப்படுவர் (எச 8:1-11:12).*

*2. வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14). இறைவனாகிய தந்தை கிறிஸ்துவிலும், கிறிஸ்து தந்தையிலும் (யோவா 14:10) குடிகொள்வதால் இயேசு ''இம்மானுவேல்''. அதாவது கடவுள் நம்மோடு (மத் 1:23; ஏச 7:14) என அழைக்கப்படுகிறார். அவரது அரசுக்கு முடிவு இராது (லூக் 1:33). அவர் என்றுமே நிலைத்திருப்பார் (யோவா 12:34). ஆயினும் அவர் மனிதப் புலன்களுக்குட்பட்டு வாழும் நிலை முடிவுறும். ஏனெனில் தமது தந்தையின் இல்லத்தில் உள்ள உறைவிடங்களைத் தம்மவர்களுக்கு ஏற்பாடு செய்ய (யோவா 14:2 தொ) அவர்களை விட்டு அவர் விலக வேண்டும் (13:33).*

*3. தூய ஆவியார் நம்மோடு தங்கி, நம்முள் வாழ (யோவா 14:17) கிறிஸ்து தந்தையிடம் திரும்புவது இன்றியமையாதது (16:7). கிறிஸ்துவிடமிருந்து அபிடேகம் பெற்றதால் (1 யோவா 2:27 தொ) ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரது தசையை உண்டால் (யோவா 6:27-56), அவரைப்போலவே வாழ்ந்தால் (யோவா 2:6), பாவத்தை விடுத்து (3:6) அவரது அன்பில் வாழ்ந்தால் (யோவா 3:6), அவரது சொற்களைக் கடைப்பிடித்தால் (14:15-23; 1 யோவா 3:24) என்றும் அவரில் நிலைத்திருப்பான். இதன் காரணமாகக் கிறிஸ்துவுடனும், தூய ஆவியருடனும் சேர்ந்து இறைவனாகிய தந்தை அவனில் குடிகொள்கிறார் (யோவா 14:23). திராட்சைக் கொடிக்கும், அதன் கிளைகளுக்கும் இடையே உள்ள நெருங்கிய பலன்தரும் பிணைப்பைப்போன்று கடவுளுக்கும் கிறிஸ்தவனுக்கும் இடையே ஓர் இணைப்பு உருவாகும் (15:4-7). இந்த இணைப்பே கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்து வாழ, அதாவது கனிதர (15:16), இறவாது என்றும் வாழச் (6:56 தொ) செய்கின்றது.*

*இவ்வாறு கடவுள் தன்மையில் நிறைவுடன் குடி கொண்டுள்ள கிறிஸ்து (கொலோ 1:19; 2:9) என்றென்றும் நிலைத்திருக்கும் (எபி 12:27 தொ) அரசைத் தொடங்கி வைக்கின்றார்; நிலையான நகரத்தைத் (எபி 11:10) தோற்றுவிக்கின்றார். அவரே அதன் ஒரே அடித்தளம் (ஏச 28:16; 1 கொரி 3:11; 1 பேதுரு 2:4).*

## குடிசை (HUT)

*குடிசை என்பது தங்குதலுக்கு அல்லது இரவைக் கழித்தலுக்கு உரிய இடம் எனப் பொருள்படும். ஏச 24:20-இல் ஆசிரியர், வரவிருக்கும் பேரழிவின் கடுமையை முன்னோக்கும்போது, பூமியே ''குடிசைபோல் இடம் பெயர்ந்து செல்கிறது'' என்கிறார். குடிசையைக் குறிக்கும் எபிரேயச்சொல், ஏச 1:8-இல் மட்டும் வருகிறது.*

## குடிமயக்கம் (DRUNKENNESS)

*குடிப்பதன் ஆபத்துக்கள் விவிலியத்தின் பல பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். இத்தகையதொரு நிலையானது மனிதனை, அவனுடைய உணர்ச்சியின் தீய ஆற்றலுக்கும் அவனது பகைவரின் கைகளிலும் கையளிக்கின்றது. இறைவாக்கினரிடையே குடிமயக்கமானது அடிக்கடி, சட்டத்துக்குப் புறம்பான சடங்குகளுடனும் (ஆமோ 2:8; ஓசே 4:11; திருவெளி 17:2), சமுதாயத்தின் இழிவடைந்த நிலையுடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழ்நிலையில் குடிமயக்கமானது அடையாள மதிப்பினை ஏற்கலாம்.*

*1. குடிமயக்கமும் இடர்ப்பாடும்:- குடிமயக்கமானது ஒரு நபரை ஏளனத்திற்கு உள்*

ளாக்குகிறது. விவிலியமானது இடர்ப்பாட்டில் வெட்கத்தின் ஒரு தோற்றத்தை எப்போதுமே காண்கிறது. குடித்த மனிதனும், இடர்ப்பாடுமிக்கவனும் முகமதிப்பு, சம நிலை மற்றும் நல்லதோற்றத்தைப் பாதுகாக்கின்ற அனைத்தையும் இழக்கின்றனர். இரு வித மனிதரும் எடுத்துக்காட்டுகளாலும் காட்சிப் பொருளாகவும் ஆகின்றனர். ஒரு மனிதன் மற்றவனை வெட்கக்கேட்டிற்கு உள்ளாக்குவதற்கென அவனைக் குடிக்கச் செய்ய முடியும். ஆண்டவர் தயாரிக்கின்ற இடர்ப்பாட்டினை விவரிப்பதற்கென அப *2:15-16*, இத்தகையதொரு சூழ்நிலையினை எடுத்துரைக்கின்றது. அப்போது ஒருவன் 'சினத்தினுடைய கிண்ணத்தை' அருந்தலாம் *(எரே 25:27-28; 51:7)*. ஆண்டவரது வார்த்தைகள் வரவிருக்கும் இடர்ப்பாட்டினை இத்தகைய தீவிரமான வழியில் அறிவிப்பதன் காரணமாக, ''ஆண்டவர் மற்றும் அவரது வார்த்தைகளின் காரணமாய்'' *(எரே 23:9)*, எரேமியா குடித்தவனைப் போலாகிறார். எல்லா எதிர்ப்பும் வீணானது மற்றும் அனைத்து அறிமுகமான சாதனைகளும் மறைந்துவிடும் என்பதுபோல, மண்ணுலகமே ஒருவரது பாதங்களின் கீழ்ச் செயல்படுவதுபோல் தோன்றுகிறது. இறுதி நாள் ஏற்கனவே நம்மீது இருப்பதுபோலவும் தோன்றுகிறது *(ஏச 24:19 தொ)*.

2. குடி மயக்கமும், விழிப்புணர்வும்:-

ஓர் ஒழுக்கநெறி எச்சரிக்கை குடிமயக்கமானது நினைவிழக்கச் செய்யலாம், அதனின்று அதிகம் ஊடுருவக்கூடிய உண்மைகளையும் கொணரக்கூடும். அரேபிய அரசன் இலமுவேலின் தாய், கடும் குடிபானங்களில் மறக்கச்செய்யும் ஒரு சாதனத்தைக் காண்கிறார். பேரழிவுகளால் துன்புறுகிறவர்களுக்கு நாம் இதனை அளிக்கலாம். ஆனால், அரசர்களும், இளவரசர்களும், தங்களது அறிவிப்புகளையே மறந்து, நீதியைத் தவறாக விளக்கக்கூடிய அச்சத்தினால் அவற்றைத் தவிர்த்தனர் *(பழ 31:4-7)*. ஏசயா இதற்குமேலும் செல்கிறார். குடித்த மனிதன் மறப்பது ஆண்டவரின் திட்டத்தையே *(ஏச 5:12)*. குடிமயக்கமானது 'தளர்ச்சி மற்றும் குழப்பம் ஆகியவற்றினுடைய நோய்க்குறி மற்றும் சாயலாகும் *(ஏச 19:14; 29:10; எரே 13:13; யோவே 1:5)*. இதே முறையில் புதிய ஏற்பாடானது, உலகில் நிகழ்கின்ற, நிகழவிருக்கின்ற மீட்பில் கிறிஸ்தவனை உறுதியாக நிலைப்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சியைக் கைவிடுதலைக் குடிமயக்கத்தில் காண்கிறது. காத்திருந்தது போதும் என்று எண்ணி, குடிக்க ஆரம்பிக்கின்ற மனிதன், கிறிஸ்து வருவதை அப்போது தான் கண்டுணர்கின்றான் *(மத் 24:45-51)*.கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அறியாதவர்களாக இல்லாமலிருக்க, இரவு செபத்தில் எடுக்கப்பட்டுள்ள பேதுருவின் அறிவுரையைப் பின்பற்றி *(1 பேதுரு 5:8)*, குடிமயக்கமற்றவர்களாகவும் விழிப்புள்ளவர்களாயும் நாம் இருக்கவேண்டும்: ''தூங்குபவர்கள் இரவில்தான் தூங்குவார்கள்; குடிகாரர் இரவில் தான் குடிப்பார்கள்'' *(1 தெச 5:6-7; உரோ 13:13)*.

3. குடிமயக்கமும் ஆவியும்:-

குடிமயக்கம் ஒருவனை அரசினின்று புறம்பாக்குகிறது *(1 கொரி 5:11; 6:10; உரோ 13:13; கலா 5:21; 1 பேதுரு 4:3)*. ஆனாலும் புனிதத்தின் ஆளுகைக்குள் ஊடுருவிச் செல்ல இது முயல்கிறது. கொரிந்தியர்கள் தங்களுடைய அன்பு விருந்திற்குக் குடித்து விட்டு வந்தனர் *(1 கொரி 11:21)*. எருசலேமில் பெந்தகொஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் திரளில் சிலர், ஏளனம் செய்யும் விதமாக, ஆவியின் விளைவுகளைக் குடிமயக்கத்திற்குச் சாற்றிக் கூறினர் *(அ.ப.2:13-15)*. ஆயினும், இவ்விடத்தில் ஏளனத்தைக் கொண்டு வந்தது இனிமேலும் குடிமயக்கமாக இல்லாமல் ஆவியின் விடுவிக்கும் பிரசன்னமாக உள்ளது. ஆவியின் முழுமையை நாடுவதற்குக் குடிமயக்கத்தினைத் தடை செய்யும் போதும், பவுல் அதே உறவினைச் சுட்டுகிறார் *(எபே 5:18)*. மனிதன் தனது உள்மனதின் அறிவையும், தன் பேச்சுச் சுதந்தரத்தையும் தனது முழு மனித நிலையையும் இடையூறுபடுத்துகின்றவற்றினின்று விடுதலை பெறுதலையும் குடிமயக்கத்தில் நாடுகிறான். அந்நிலையில், உன்னத சங்கீதம் அன்புடன் இணைக்கின்ற மகிழ்ச்சியை

அவன் காண்கிறான் (உ.ச. 5:1). ஆனால், ஆவியானவர் மட்டுமே இந்த நிறைவை அவனுக்கு உண்மையில் கொண்டுவர முடியும்.

## குடியானவன் (FARMER)

நிலத்தைப் பண்படுத்துகிறவன். 'விளைச்சலின் பலனை முதலில் பெறவேண்டியவன்' (2 தீமோ 2:6; யாக் 5:7) என்பதிலும், 'கொடிய குத்தகைக்காரர்' என்ற உவமையிலும் (மத் 21:33 தொ; மாற் 12:1 தொ; லூக் 20:9 தொ) 'திராட்சைக் கொடியும், அதன் கிளைகளும்' என்ற தொடர் உவமையிலும், 'திராட்சை விளைவிப்பவர்களிலும்' (யோவா 15:17; காண் 1 கொரி 3:6-9) இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

## குடியிருப்பு (COLONY)

உரோமைய குடியிருப்புகள், யூலியு சீசரின் முயற்சியினால் தொடங்கின; நிலமும் வேலையும் குறைந்த விலைக்குக் கிடைத்ததால் இந்தக் குடியிருப்புகள் ஏற்பட்டன. இந்தக் குடியிருப்புக்கள் உரோமைய மாகாணங்களில் நிறுவப்பட்டன. இதனால் உரோமையின் மக்கள் தொகையைக் குறைக்கவும், இத்தாலிக்கு வெளியில் உரோமையின் பண்பாட்டைப் பரப்பவும் முடிந்தது. இவைகளில் பெரும்பாலானவை, 20 குடியிருப்புகள், மேற்கில் அமைந்தன. கிழக்கில் இக் குடியிருப்புகளில் கொரிந்தும் பிலிப்பையும் அடங்கும்.

அகுஸ்து, சீசரின் கொள்கையைப் பின்பற்றினார். இவர் தன் வேலையைப் பெருமையடித்துக்கொண்டு ''அரச நடவடிக்கையில்'' இவ்வாறு எழுதுகின்றார்: ''நான் போர் வீரர்களுடைய குடியிருப்புகளை ஆப்பிரிக்காவிலும், சிசிலியிலும், மகத்தோனியாவிலும், இஸ்பானியாவிலும், அக்காயாவிலும், ஆசியாவிலும், சீரியாவிலும், கல்லியாவிலும், நர்போனேசியாவிலும், பிசிதியாவிலும் ஏற்படுத்தியுள்ளேன்; இவை புகழ்பெற்றும், மக்கள் தொகை நிறைந்தும் காணப்படுகின்றன''. மேலும், அவர்களுடைய ஆட்சியில் இத்தாலியில் 28 குடியிருப்புகளை நிறுவினார். அந்தியோக்கியா (பிசிதியா), இலிசித்திரா, துரோவா, சிரக்கூசா ஆகியவை அகுஸ்து ஏற்படுத்திய குடியிருப்புகளாக அப்போஸ்தலர் பணியில் சொல்லப்பட்டுள்ளன. தோலாமேய் கிளாதியுவனால் குடியிருப்பாக்கப்பட்டது. இக்கோனியாவும் கிளாதியுவினால் குடியிருப்பாக்கப்பட்டதா அதிரியன்னால் ஆக்கப்பட்டதா என்று உறுதியாகக் கூறமுடியாது.

இந்தக் குடியிருப்புகளைத் தவிர மற்றவையும் உரோமைக் குடியிருப்புகள் என்று வெறுமனே அழைக்கப்பட்டன; இதனால் அவர்களுக்கு உரோமையிடமிருந்த உறவு உறுதிப்படுத்தப்பட்டது. அவற்றின் குடிமக்கள் மேன்மைப்படுத்தப்பட்டனர். இந்தப் பழக்கமானது கிழக்கைவிட மேற்கில் அதிகமாக இருந்தது.

இந்தக் குடியிருப்புகள் தன்னாட்சியைக் கொண்டிருந்தன. சில வரிவிலக்கும் கொண்டிருந்தன; இத்தாலியா சட்டத்தைக்கூட பயன்படுத்த உரிமைபெற்றிருந்தன. அ.ப. 16:12-40-இல் இது போன்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கின்றோம்.

## குடியுரிமை (CITIZENSHIP)

உரோமை அல்லது கிரேக்க நாட்டுக் குடிமகனாக இருக்கும் உரிமையாகும். பவுல் பிறப்பால் உரோமைக் குடியுரிமை பெற்றிருந்ததாக அ.ப. 22:28 குறிப்பிடுகிறது. மாற்கு அந்தோனி இந்தக் குடியுரிமை தனிப்பட்ட மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே கொடுத்தார் எனச் சிசரோ குறிப்பிடுகிறார். சுயுடோனியு ''சீசர் உரோமையில் இருந்த மருத்துவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பிறகலைஞர்களுக்கும் குடியுரிமை வழங்கினார்'' என்று கூறியுள்ளார். இவைகள், எப்படிக் குடியுரிமை வழங்கப்பட்டன என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் ஆகும். கிளாதியு குடியுரிமை வழங்குதலை மேலும் விரிவுபடுத்தினார். குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் போர் வீரர்கள், அவர்கள் படையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் குடியுரிமை பெற்றார்கள். பேரரசரின் மனைவி மெச

வினா முதலில் பெரிய தொகைக்கும், பின்பு ''கண்ணாடித் துண்டுகளுக்கும்கூட'' குடியுரிமையை விற்றார். இந்தச் சூழ்நிலையில் கிளாதியு இலிசியா பணம் கொடுத்துக் குடியுரிமை வாங்கியிருக்கலாம் (அ.ப.22:28).

குடியுரிமை பெற்றதற்கான அடையாளம் ஏதாவது மக்கள் வைத்திருந்தார்களா என்று தெரியவில்லை. ஒருவேளை தற்காலத்துப் 'பாஸ்போர்ட்' போல ஏதாவது வைத்திருக்கலாம். கிளாதியுவின் ஆட்சியின்போது, போலியாகக் குடியுரிமை கொண்டாடியவர்கள் பலர் தண்டிக்கப்பட்டார்கள்.

குடியுரிமை பெற்ற எவரையும் விசாரணை இன்றித் தண்டிக்கக்கூடாது. அ.ப. 16:39-இல் பிலிப்பியைச் சார்ந்த நடுவர்கள், பவுல் உரோமைக் குடியுரிமை பெற்றார் என்பதை அறிந்து அவருக்குத் தண்டனை கொடுத்ததற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்கிறார்கள். குடியுரிமை பெற்றவனைச் சாட்டையால் அடித்தோ, கட்டிவைத்தோ (அ.ப. 22:24-29), விசாரிக்கக்கூடாது. ஆனால் சட்டத்திற்கு விரோதமாகப் பவுல் மூன்று முறை நடுவர்களால் தான் அடிக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார் (2 கொரி 11:25). உரோமைக் குடியுரிமை பெற்றிருந்தால் சீசரிடம் நேரடியாக முறையிடுவதற்கு உரிமை இருந்தது (அ.ப. 25:10-12). ஒரு தடவை இந்த உரிமையைப் பயன்படுத்தினால், அந்தக் கோரிக்கையைத் திரும்பப் பெறமுடியாது (அ.ப. 26:32). கிளாதியு மன்னனின் ஆட்சியின்போது உரோதின் தன்னாட்சி நீக்கப்பட்டதற்குக் காரணம் அங்கு, சில உரோமைக் குடிமக்கள் தூக்கிலிடப்பட்டார்கள்,

அ.ப. 21:39-இன்படி பவுல் சிலிசியாவின் தலைநகரான தார்சுவின் குடியுரிமை பெற்றிருந்தார். அ.ப. 22:3-இல் பவுல் அங்குப் பிறந்ததாகக் கூறப்படுகிறது. முதல் நூற்றாண்டின் இறுதியில் குறைந்தபட்சம் 500 திராக்குமாக்கள் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே தார்சு நகரக் குடியுரிமை வழங்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் குடியுரிமை பெற, அந்தப் பகுதியில் வாழும் இனத்தவரைச் சார்ந்தவராக இருக்கவேண்டும். அத்தகைய இனத்தவரின் சமயப்பண்பு காரணமாகத் தார்சு நகரம் யூதர்கள் மட்டும் வாழ்ந்த ஒரு நகராக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இவ்வாறாகப் பவுல் தார்சு நகரில் உள்ள யூத இனத்தவரைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டும் (அ.ப. 26:4). ஆனால் அவர் தார்சு குடியுரிமையும், உரோமைக் குடியுரிமையும் பெற்றிருந்தார். நகர அரசுகள் இணையும் போது, இப்படி இரண்டு விதக் குடியுரிமைகள் வழங்குவது கிரேக்க உலகில் அப்போது இருந்தது. பவுல் ஒரு குடியுரிமை பெற்ற மனிதராக இருந்தது, அவர் புறவினத்தாரின் அப்போஸ்தலராக ஆவதற்குப் பொருத்தமான கூறாக அமைந்தது.

## குடில், குடிசை, பந்தல், கூடாரம் (BOOTH)

மனிதர்களுக்கும் (யோனா 4:5) ஆடுமாடுகளுக்கும் (ஆதி 33:17) குறிப்பாகப் போர்க்களங்களில் வீரர்களுக்கும் (2 சாமு 11:11; 1 அர 20:12.16) அமைக்கப்படும் தற்காலிகக் கூரையாகும். இது மிலாறு, கிளைகளால் அமைக்கப்பட்டுக் குச்சிக்கால்களால் தாங்கப்பட்டிருக்கும். ஏச 1:8-இல் குடிசை கைவிடப்பட்ட நிலைக்கு உருவகமாகும். யோபு 27:18-இல் இது சிலந்திக் கூடுபோல் மெல்லிய நம்ப முடியாதபொருள்களுக்கு உருவகமாகிறது. குடிசைகள் அறுவடை செய்யப்படக் காத்திருக்கும் விளைச்சலைக் காவல் காப்போர் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. கூடாரவிழா அல்லது சேகரிக்கும் விழா என்ற விழாவில் பின்னப்பட்ட கிளைகளைக் கொண்டு இக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன (லேவி 23:40.42; நெக 8:15).

## குடும்பம் (FAMILY)

விவிலிய காலத்தில் இஸ்ராயேலில் சமூக அடிப்படை அமைப்பாகும். இது வீடு, தந்தையின் வீடு, இனம் போன்ற சொற்களாலும் குறிக்கப்படும்.

1. ''கரு''வான குடும்பம்:-
இது மிகச் சிறிய குடும்ப அமைப்பாகும்.

இது தனக்கே உரிய உறைவிடத்தைக் கொண்டிருந்தது. இக்கருவான குடும்பத்தில் பெற்றோர் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அடங்குவர். சில சமயம் அடிமைகள், விருந்தாளிகள் போன்ற உறவினர் அல்லாதோரும் ஒரே வீட்டில் வாழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வுகள், ஆறு அல்லது ஏழுபேர் சேர்ந்து வாழ்ந்ததற்கான சான்றுகளைத் தருகின்றன. இந்தக் கருக்குடும்பத்தில் பிள்ளைகள் சமூக உணர்வுபெற, அவர்களுக்கு அவர்கள் இனத்தைச் சேர்ந்த பழக்கவழக்கங்களையும், பழங்கதைகளையும் (பழ 1:8; 6:20), இஸ்ராயேலோடு இறைவன் செயலாற்றியது பற்றிய கதைகளையும் (யாத் 10:2; 12:26; 13:8; உப 4:9; 6:7.20-25; 32:7.46) கற்றுக் கொடுத்துப் பயிற்சி அளித்தனர். அரசர்கள் ஆட்சிக் காலம்வரை (கி.மு. 1020-586) இக்கருவான குடும்பங்கள் தங்களையே நிறைவுசெய்து கொள்ளும் பொருளாதாரம் உடையதாக இருந்தன. குடும்பம் பயிர்செய்த விவசாயப் பொருட்கள் வீட்டிலுள்ள சேமிப்பு இடங்களில் சேர்த்துவைக்கப்பட்டன. வீட்டிற்குச் சொந்தமான விலங்குகளும் அங்கு வளர்க்கப்பட்டன.

இக்கருக்குடும்பத்தின் தந்தையே பெரும்பாலான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்; குழந்தைகள், மனைவிகள் மீது சட்டபூர்வமாக கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆனால் இந்த அதிகாரம் வரையற்றதன்று (யாத் 21:7-11; உப 21:15-21). பிள்ளைகள், தாய் தந்தையை மதிக்கவேண்டும்; அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். இவற்றில் தவறுதல் கடுமையாக நோக்கப்பட்டது (யாத் 20:14; லேவி 18:20; 20:10-21; உப 5:18; 22:22). ஆனால் விவாகரத்தால் குடும்பங்கள் கலைக்கப்படலாம் (உப 24:1-4).

பிள்ளைகள், திருமணமாகும்வரை தந்தையின் கட்டுப்பாட்டிலிருந்தனர். திருமணத்திற்குப்பின், அவர்கள் புதுக்குடும்பங்களை அமைத்தனர். திருமணம் கவனமாய் முறைப்படுத்தப்பட்டது (லேவி 18). தொடக்ககால இஸ்ராயேலில் பல மனைவியரைக் கொள்ளுதல் சாதாரணமாய் வழக்கில் இருந்தது (ஆதி 4:19; 16:1-2; 22:20-24; 25:13.6; 29:15-30). ஆனால் அரசாட்சிக்காலத்தில், இவ்வழக்கம் அரசகுடும்பங்களில் மட்டுமே நிலவியதாகத் தெரிகிறது. திருமணத்திற்குப்பிற்பாடும் பிள்ளைகள் பெற்றோரை மதிக்கவேண்டும், அவர்களது முதுமையில் அவர்களைப் பேணவேண்டும் என்ற அறவுரை கூறப்படுகிறது (பழ 23:22).

2. விரிவான குடும்பம்:-

இது ஒரே மூதாதையரிடமிருந்து தோன்றிய இரண்டு அல்லது மூன்று கருவான குடும்பங்களின் கூட்டமைப்பாகும். இது ''தந்தையின் வீடு'' என்றழைக்கப்பட்டது. இந்த விரிவான குடும்பத்தின் நபர்கள் சில சமயம் அருகருகே அமைந்த வீடுகளில் வாழ்ந்தனர். ஆனால் இது பொதுவான பழக்கமன்று. சில சமயம் இவர்கள் ஒரே தொழிலைச் செய்தனர் (1 நாள் 4:14.21.23). இந்த விரிவான குடும்பம் ஒரு கூட்டமைப்பாகச் செயல்பட்டது. அதன் ஒற்றுமையைப் பாதுகாக்க அதற்குச் சில சட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் ஒரு கருவான குடும்பம் தன் சொத்தை விற்கக் கட்டாயப்படுத்தப்பட்டபோது; விரிவான குடும்பம் அதை மீட்க உரிமைபெற்றிருந்தது. இதனால் சொத்து விரிவான குடும்பத்துக்குள்ளேயே இருந்தது (லேவி 22:25; எரே 32:6-15). தனி நபருக்கு அடிமையாக விற்கப்படும் நிலை ஏற்பட்டபோது, அவரை விரிவான குடும்ப நபர் மீட்கலாம். தொடக்க காலத்திலாவது, ஒரு நபருக்குச் செய்யப்பட்ட தீமைக்குப் பழிவாங்க விரிவான குடும்பத்திற்கு உரிமையிருந்தது (லேவி 25:47-49). யாரிடமிருந்து இந்தக் கருவான குடும்பங்கள் தோன்றினவோ, அவரே விவான குடும்பத்தின் மீது அதிகாரம் செலுத்தினார். அவர் உயிருடன் இல்லையென்றால் கருவான குடும்பங்களின் தலைவர்கள் சேர்ந்து அதிகாரம் செலுத்தினர்.

3. குலமும் கோத்திரமும்:-

சில சமயம் பல விரிவான குடும்பங்கள் சேர்ந்து ஒரு குலமாக அமைந்தன. இந்த அமைப்பில், அங்கத்தினர்களின் தலை

முறைப்பட்டியல் ஒரே குலத்தலைவரைக் கொண்டிருந்தது. ஆனால் குலம் என்ற அளவில், உண்மையான இரத்த உறவைத் தவிர்த்த கூறுகளும் குழு ஒற்றுமையை அமைப்பதில் பங்கு பெற்றன. ஒரு குலத்தைச் சேர்ந்த நபர்கள் சாதாரணமாய் ஒரு புவியியல் பகுதியில் வாழ்ந்தனர். சில சமயம் ஒரு கிராமம் முழுவதும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களைக்கொண்டிருந்தது (நீதி 18:11-13). குலம், புறத்திலிருந்து தாக்கப்படுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளப்பயன்பட்டிருக்கலாம். மற்றப்படி அதிகமாகப் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

குலத்திற்கு அப்பால், குடும்பம் என்ற உருவகம் கோத்திரத்திற்கும் இஸ்ரயேல் என்ற நாட்டுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது. சிக்கல்மிக்க பிரிவுபட்ட தலைமுறைப்பட்டியலோடு கூடிய ஒரு பெரும் குடும்பமாக மக்கள் தொகுப்பு முழுவதும் கருதப்பட்டது (ஆதி 46:8-27; எண் 26:5-62; 1 நாள் 1-9). இந்தக் குழுக்களில் அடங்கிய மக்களின் பெரும் எண்ணிக்கையினால், இந்தக் குழுக்கள் சமூக அமைப்புக்களாக எவ்வளவு திறமையாகச் செயல்பட்டன என்று கூறுவது கடினம்.

குலம், கோத்திரம் ஆகியவற்றின் சில அதிகாரங்கள் அரசாட்சியால் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், கருவான குடும்பம், விரிவான குடும்பம் ஆகியவை இஸ்ராயேல் வரலாறு முழுவதும் பழுதுபடாமல் நிலைத்திருந்ததாகத் தெரிகிறது. இஸ்ராயேலின் அமைப்பில் நாடு கடத்தப்படுதல் பல மாற்றங்களை ஏற்படுத்தியபின்னும் மக்களின் ஒருமையை நிலைப்படுத்துவதில் குடும்பம் அதிகமான பங்கு வகித்திருக்கிறது.

4. புதிய ஏற்பாட்டில்:-

பழைய ஏற்பாடு குடும்பத்தை நோக்கிய விதத்திலிருந்து ஓரளவு வேறுபட்ட விதத்தில் புதிய ஏற்பாடு அதை நோக்குகிறது. ஒருபுறம் குடும்பத்திற்குக் காட்டும் பிரமாணிக்கம், நற்செய்திக்குக் காட்டும் பிரமாணிக்கத்திற்குக் கட்டுப்பட்டதே என்று இயேசு கூறுகிறார் (மத் 10:34-39; மாற் 3:31-35; லூக் 12:49-53), மறுபுறம் பெற்றோருக்கு மரியாதை காட்டும் கட்டளையை எடுத்துப் போதிக்கிறார். இதனால் பாரம்பரிய யூதக் குடும்ப அமைப்பை ஆதரிக்கிறார் (மத் 19:16-22; லூக் 18:18-30). தொடக்ககாலத் திருச்சபை, குடும்பத்தைப் பேணுவதை ஒரு நற்செயலாகக் கருதியது (1 திமோ 5:8). ஆனால் குடும்பம் பற்றிய பாரம்பரியக் கருத்தை மாற்றி, கிறிஸ்தவ சமூகத்தை ஒரு புதிய குடும்பமாக நோக்குகிறது (கலா 6:10; எபே 2:19). எல்லா விசுவாசிகளும் இறைவனது வீட்டைச் சேர்ந்தவர்கள்: விசுவாசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

## குடை கால்வாய் (WATER SHAFT)

கனையிலிருந்து நகருக்குள் நீர்கொண்டு வரப் பயன்படும் ஓர் அமைப்பு ஆகும். இத்தகைய நிலத்தடிக் குடை கால்வாய்கள் அல்லது கரங்கக் கால்வாய்கள் அகழ்வாராய்ச்சியின்போது கெசர், கிபயோன், எருசலேம், மெகிதோபோன்ற பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (2 சாமு 5:8).

## குட்டி (COLT)

குதிரையினுடைய குட்டி அல்லது குதிரையைப் போன்ற விலங்குகளின் குட்டிகள். பழைய ஏற்பாட்டில் இது ஒட்டகக் குட்டிகளையும் (ஆதி 32:15), வீட்டுக் கழுதைக் குட்டிகளையும் (ஆதி 49:11; செக் 9:9) காட்டுக் கழுதைக் குட்டிகளையும் குறிக்கும் (யோபு 11:12).

இயேசு எருசலேமிற்குள் நுழைவதற்குப் பயன்படுத்திய விலங்கு இவ்வாறு அழைக்கப்படுகின்றது (மாற் 11:2). இதன் தொடர்பாக இரண்டு நற்செய்தியாளர்கள் செக் 9:9 என்ற பகுதியை எடுத்துக்கூறுகின்றனர் (மத் 21:5; யோவா 12:15). மத் 21:2; யோவா 12:14-இல் இது ஒரு கழுதைக் குட்டி என்று சொல்கின்றார்கள். ஆனால் மாற்கும், லூக்காவும் எந்த அடைமொழியுமின்றிக் குறிப்பிடுகின்றனர்.

**குணமளிக்கும் வரம்** (GIFT OF HEALING)

ஆதித்திருச்சபையிலே இந்தக் குணமளிக்கும் வரம் பலருக்கு இருந்ததை நாம் அறிகிறோம் (அ.ப. 2:22; 3:16; 4:30). தேவ வரங்களில் இதுவும் ஒன்றாகப் பவுல் கூறுகின்றார் (1 கொரி 12:9.28).

இயேசு பலருக்குக் குணமளித்த நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கிறோம் (மாற் 1.29-32. 40-45). ''நோய் தீர்ப்பதற்கென ஆண்டவரின் வல்லமை அவரோடிருந்தது'' என லூக்கா கூறுகின்றார் (5:17). இதை அவரின் எதிரிகள் பேயின் சக்தி என்றனர் (மாற் 3:22). ஆனால் இயேசுவே ''கடவுளின் வல்லமையால் செய்தேன்'' என்றார் (மத் 12:28; லூக் 11:20). ஆவியின் ஆற்றலில் தமது பணியைத் தொடங்கினார் (மாற் 1:10; லூக் 4:18-19). இறையரசை அறிவித்தார் (மாற் 1:15-15). இறைவனின் சட்டமாகிய ''ஆண்டவரின் அருள்தரும் ஆண்டு'' தொடங்கிவிட்டதற்குரிய அடையாளங்களில் குணமாக்குதலும் ஒன்று என்று உறுதியாகக் கூறுகிறார் (மத் 11:5; லூக் 4:19; 7:22). இதுவே புதிய காலத்தின் முன்னறிவிக்கப்பட்ட பண்பாகும் (ஏச 35:5-6; 61:1-2). இயேசு தம் சீடர்களைக் குணமளிக்கும் வல்லமையோடு அனுப்பினார் (மத் 10:1). அவர்களும் வெற்றி பெறுகின்றனர் (மாற் 6:13). இவ்வெற்றியே இறையரசு நெருங்கியுள்ளது என்பதற்குச் சான்றாகும் (லூக் 10:9).

ஆதித்திருச்சபையிலேயும் இப்பணி தொடர்ந்தது. இது பரிசுத்த ஆவியின் கொடையாகவே கருதப்பட்டது (1 கொரி 12:10.28). இந்த ஆவியைக் ''கடவுளின் வல்லமையால் உயர்த்தப்பெற்றவர்'' அளிக்கிறார் (அ.ப. 2:33). குணமளிக்கும் வரம் உள்ளிட்ட பெருஞ்செயல்கள் மெசியாக் காலத்தின் அடையாளங்களாகும் (அ.ப. 2:16-21; யோவே 2:18-31). பரம தந்தை விசுவாசிகளைத் ''தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டு வந்து சேர்த்தார்'' (கொலோ 1:13); ''வரவிருக்கும் உலகத்தைச் சார்ந்த ஆற்றல்கள்'' (எபி 6:5) நிகழ்காலத்திற்குள் புகுந்து விட்டன. கிறிஸ்துவின் ஆற்றல், அவரில் விசுவசிப்பவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பேதுரு, பவுல், பிலிப்பு ஆகியோர் பிறரைக் குணமாக்குவதைக் கண்டு மக்கள் வியப்பெய்துகின்றனர் (அ.ப. 3:11; 5:15; 8:9-13; 14:8-10). ''இயேசுவின் பெயர் மீதுள்ள விசுவாசம்'' (அ.ப. 3:6.16; மத் 9:27-31; மாற் 5:34; 9:14-27), செபம் மற்றும் எண்ணெயால் பூசுதல் (யாக் 5:14-15; மாற் 6:13), ''கைகளை வைத்தல்'' (அ.ப. 9:12.17; 28:8; மத் 9:18; மாற் 5:23) முதலியவை குணமாக்குதலில் பயன்படுகின்றன. குணமளிப்பதும் பாவங்களுக்கு மன்னிப்பும் சேர்ந்து போகின்றன (யாக் 5:16; மாற் 2:3-12; சங் 103:3).

குணமளிக்கும் புதிய ஏற்பாட்டுக்கொடைகள் இயேசுவின் தூது மற்றும் செய்தியின் முழுமையைச் சேர்ந்ததாகும். அவை நிறைவேறுவது தொடக்க காலத் திருச்சபையின் உணர்வுபூர்வமான அனுபவமாகும். அவற்றை உளவியல் நோய் மருத்துவம் விசுவாச குணமாக்குதல் ஆகியவற்றோடு குழப்பிவிடக்கூடாது.

**குணமளித்தல்** (HEALING, HEALTH)

காயத்தை ஆற்றுவதாலோ, தகுந்த சிகிச்சை அளிப்பதாலோ ஒரு நோயினின்று விடுதலை அளிப்பதே குணமளித்தல். குணமாக இருப்பது, சௌக்கியமாக இருப்பது என்பது வியாதியின்றி இருப்பது மட்டுமல்ல; மாறாக ஒருவரின் உடல் உள்ள நிலை சீராகப் பணிபுரிவதையே இது குறிக்கும்.

ஆரோக்கியமான வாழ்வு மேற்காசிய நாடுகளில் எல்லோராலும் போற்றப்பட்ட ஒன்று. ஆரோக்கியம் ஒருவரின் நல்வாழ்விற்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டது. நோய் என்பது உடலின் ஏதாவது ஒரு பகுதியில் ஏற்படும் கோளாறு எனவும் கருதப்பட்டது. அக்கால அரசுகளும் தங்கள் குடிமக்களின் ஆரோக்கிய வாழ்விற்கு ஆவன செய்தன. முடியாதவர்களும், நோயுற்றோரும் மிகவும் இழிவாகக் கருதப்பட்டனர். எடுத்துக்காட்டான உடல்நலம், தாவீதை விவரிக்கும்போது கொடுக்கப்படுகிறது. ''அவன் யாழ் மீட்டுவதில் வல்லவன்; வீரமுள்ள

வன், போர்த்திறம் பெற்றவன், பேச்சுத்திறம் உடையவன்; அழகானவன். மேலும் ஆண்டவர் அவனோடு இருக்கிறார்'' (1 சாமு 16:18). சீரா 30:14. உலக நன்மைகளில் எல்லாம் நலம் மிகப்பெரியது என்று கருதுகிறது.

1. உடல் நலமும் நீண்ட வாழ்வும்:-

ஒருவனை ஆசிர்வதிக்க வேண்டுமென்றால் அவனின் ஆரோக்கிய வாழ்விற்காக வேண்டப்பட்டது. ''எங்கள் வாழ்நாள் 70 ஆண்டுகள்; வலிமையுடையோருக்கு 80 ஆண்டுகள்'' என்றும் சங் 90:10-இல் கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்வை வாழ்கிறான் என்பதைக் குறிக்க அவன் நூற்றுப்பத்து ஆண்டுகள் வாழ்ந்தான் எனக் கூறப்பட்டது (ஆதி 50:26; 6:3). ஆனால் திருவுரை 12:1-8, முதிய வயதின் துன்பங்களை உருவகமாக எடுத்துக் கூறுகிறது.

மெசபொத்தாமியா, எகிப்து போன்ற நாடுகளில் பல தொத்து வியாதிகள் தோன்றியதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் பாலஸ்தீனத்தில் இவ்வாறு காணப்படவில்லை, இதற்கு, அதன் சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாய் இருக்கலாம். ஆனாலும் வேறு நாட்டிலிருந்து சில வியாதிகள் பாலஸ்தீனத்தில் பரவியிருக்கலாம். எனவே பழங்கால எபிரேயர்கள் இக்காலத்தைவிட ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்தார்கள் என்று உறுதியாகச் சொல்லமுடியாது.

பழங்காலத்தில் நோய் என்பது பாவிகளுக்கு இறைவன் தரும் தண்டனை என்றே கருதப்பட்டது (யோபு 2:7). கடவுளின் உத்தரவோடுதான் தீய ஆவிகள் மனிதனை ஆட்கொண்டிருக்கின்றன எனவும் எண்ணப்பட்டது (மாற் 9:17). பெற்றோரின் பாவங்களாலும், தனிநபரின் பாவங்களாலும் ஒருவர் நோயால் வருந்தலாம் (யோவா 9:2; சீரா 37:30-31; யாத் 15:26).

சிலரின் கவனக்குறைவால் தனி மனிதனுக்கோ சமுதாயத்திற்கோ ஏற்படும் நோய்களைத் தவிர்ப்பதற்காக அவர்களின் ஆரோக்கிய வாழ்விற்காக மோசேயின் சட்டத்தில் சில விதிகள் உள்ளன. இது பழங்கால மருத்துவ அறிவைப் பிரதிபலிக்கிறது. இச்சட்டம் நோய்களை, மாய மந்திரங்களிலிருந்து வேறுபடுத்தியது. ஆனால் மக்களோ நோய் பேயின் சக்தியால்தான் ஏற்படுகிறது; எனவே கடவுளோடு ஒருவன் வைத்திருக்கும் தொடர்பினாலேயே இதைச் சமாளிக்க முடியும் எனக் கருதினர். நோய் வருமுன் பாதுகாப்பதையே பெரிதாகக் கருதினர். இது எவ்வாறு முடியுமென்றால் ஒருவன் கடவுளோடு கொண்டிருக்கும் தொடர்பினால் மட்டுமே இயலும். ஆனால் நோய் வந்தபின் அதைத் தடுக்க முயல்வது தவறு. எனவே மோசேயின் சட்டத்தில் கூறப்பட்டிருப்பது நோய்த்தடுப்பு முறையே எனக் கூறலாம். இந்த மருத்துவக் குறிப்புகளை நாம் லேவியராகமத்தில் காணலாம். இந்த மோசேயின் சட்டத்தில் ஏழு அடிப்படையான கூறுகளைக் காணலாம்.

அ) ஓய்வு நாள்:-

கடின உழைப்புக்குப்பின் மாதத்தில் ஒரு நாள் ஓய்வெடுப்பது அக்காதியான் மத ஒழுங்குகளில் ஒன்று (கி.மு. 2360-2180). எபிரேயர்களின் ஓய்வுநாள் முதலில் வளர்பிறையை ஒட்டியே அமைந்தது. ஓய்வு நாளன்று கடவுள் வழிபாட்டோடு உடல் ஓய்வும் தேவை என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது (யாத் 31:13-17; 23:12). இந்த ஓய்வு நாளுக்கு 2 நோக்கங்கள் உண்டு. 1) சமயக் கூறு:- மனிதன் ஓய்வு பெறுவதால் புத்துணர்ச்சி பெறுவான். அவன் உடலும் உள்ளமும் தெளிவு பெறும். 2) உடல்கூறு:- மனிதனின் வலிமை திறமை அழியாமல் காப்பதற்கு இது அனுசரிக்கப்பட்டது. இது மனிதனுக்கு உழைப்பிற்குப்பின் ஓய்வு அவசியம் என்னும் அரிய தத்துவத்தை விளக்குகிறது. இவ்வாறாக, ஓய்வு நாள் சட்டம் (களைப்பினால் வரும்) நோயைப் போக்க வழிவகுக்கும் ஒரு சிறந்த சட்டமாக உள்ளது. ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் நிலம் பயிர் சாகுபடியின்றி, விடப்பட்டது. ஏனெனில் நிலத்தில் உர, வளச்சத்து முழுவதும் உறிஞ்சி விடாதபடிக்கு இந்த முறை கையாளப்பட்டது (லேவி 25:2-7).

ஆ) இதைத்தவிர உண்ணும் உணவு வகைகள் பற்றிய சில சட்டங்களும் குறிப்பிடத்தக்கவை. இவை, மற்ற மேற்காசிய நாடுகளில் காணப்படுவதைவிட அறிவியலானதாகும். இந்தச் சட்டங்களின்படியே சில உணவுகள் அசுத்தமானவை என்றும் மற்றும் சில சுத்தமானவை எனவும் கூறப்பட்டது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள சமய காரணங்களைத் தவிர வேறு காரணங்கள் இருக்க முடியுமா என்ற கேள்விக்கு விடை விவிலியத்தில் காணப்படவில்லை. ஆனால், இது பழங்காலத்தில் இருந்த ஒரு பழக்கம் என்றே தெரிகிறது (ஆதி 7:2; லேவி 11:3-8; 14:4-8). தசையிலிருந்து இரத்தம் வடிந்த பின்னரே அந்த இறைச்சி சமைக்கத் தகுந்தது. மூச்சடைத்துச் செத்ததன் இறைச்சியை உண்ணலாகாது (உப 14:21; லேவி 11:13-19). இது அவர்களின் சமூக ஆரோக்கிய வாழ்வைக் கருதியே ஏற்படுத்தப்பட்டது எனச் சிலர் கருதுகின்றனர்.

வெப்ப மண்டலத்தைச் சார்ந்த இந்நாடுகளில் தாவரங்களை உண்டுவாழும் பிராணிகள், உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடும். குறிப்பாக யூதர்களுக்குப் புறம்பான பன்றி இறைச்சியில் பரவக்கூடிய பல வியாதிக் கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இப்பன்றி இறைச்சியில் உள்ள கிருமிகள் சில குடலில் வளர்ந்து தசைகளுக்குப் பரவிக் காய்ச்சல், கை கால்களில் உருண்டைவடிவான கட்டிகள் ஆகியவற்றை ஏற்படுத்தும். மற்றும் சில வியாதிகள் கிருமிகள் தாக்கப்பட்ட பிராணிகளைக் கடித்த கொசு மனிதரைக் கடிப்பதாலும், அத்தகைய பிராணிகளின் இறந்த உடல்களை மனிதன் இயல்பாய்த் தொடுவதாலும் பரவலாம். இந்த வெப்பநிலையில் எந்தக் குளிர்சாதன முறையுமின்றி இறைச்சியை நீண்டநாள் வைத்திருக்க முடியாது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலே எபிரேயர்களின் உடல் நலத்தைக் காக்கவே இத்தகைய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன (லேவி 11:31-38). இத்தகைய ஓர் ஒழுங்கு வெப்பமண்டலத்தில் உள்ள நாடுகளுக்கு அவசியமான ஒன்று.

இ) விருத்தசேதனம் என்பது வெறும் சமயச் சடங்கு மட்டுமல்ல. அவர்கள் சமூகத்தில் சேருவதைக் குறிக்கும் ஒரு வெளி அடையாளமும் ஆகும். எகிப்தியர்கள் இதை நாகரீக மக்களின் சின்னமாகக் கருதினர். இஸ்ராயேலுக்கு இது உடன்படிக்கையின் சின்னமாகவே விளங்கிற்று. இது மேக நோய், நச்சுப்பரு, பிளவை போன்ற நோய்களைத் தடுப்பதாகக் கருதப்பட்டது. நவீன மருத்துவத்தின்படி இது ஆண்குறியில் ஏற்படும் புற்றுநோயைத் தவிர்க்கும்.

ஈ) பாலுறவைப் பற்றிய சட்டங்கள்:- இவை குடும்பம் என்பது சமுதாயத்தை உருவாக்கும் ஒரு கூறு என்ற கருத்தைக் கொண்டே இயற்றப்பட்டன. பழங்காலத்தில் இருந்த சில பழக்கங்களை ஆதி 20:12-இல் காணலாம். இது லேவியரின் சட்டத்தால் புறக்கணிக்கப்பட்டது (லேவி 18:6-18). அவர்களின் உடன்படிக்கையின்படி அவர்கள் ஒழுக்கத்துடன் வாழவேண்டும். இதற்கு இச்சட்டங்கள் வழிசெய்தன. அவர்களைச் சுற்றி வாழ்ந்தமக்கள் நெறி தவறி வாழ்ந்த போது இவர்களுக்கு இந்தச் சட்டங்கள் தேவையாயின.

உ) பாலுறவு சுகாதாரம் பற்றிய சட்டங்கள், அவர்களின் ஆரோக்கிய வாழ்வைக் காப்பதற்கு அவசியமாயின (லேவி 15:16-18). அவர்களைச் சுற்றி வாழ்ந்தவர்கள் நெறிகெட்ட உடலுறவு கொண்டு சுகாதாரமாக இல்லாமல் வாழ்ந்ததால் அத்தகைய ஒரு பழக்கம் இஸ்ராயேலருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்திற்காக இச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன (லேவி 15:19-24; 20:18). மருத்துவ ரீதியாக, மாதவீடாய்க் காலத்தில் உடலுறவு கொள்பவனுக்குச் சிறுநீர்க் குழாயில் கோளாறுகள் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இது தடைசெய்யப்பட்டிருந்தது.

ஊ) யூதர்களுக்குக் 'கழுவுதல்' என்பது முக்கியமானது. தீட்டுப்பட்டிருந்தால் தங்களைக் கழுவிவிட்டால் அது சரியாகிவிடும் எனக் கருதப்பட்டது. தொழுநோயாளி குண

மானபின் அவனை ஏற்றுக்கொள்ளும் சடங்கில் கழுவுதல் ஒரு முக்கியமான சடங்காகும் (லேவி 14:2-32; யாத் 30:18-21). இவையெல்லாம் நோய் பரவுவதைத்தடுப்பதையும், உடல்நலத்தை முன்னோக்காகக் கொண்டவையுமாகும்.

ஏ) பழங்கால நாடோடி மக்கள் தங்களின் சுகாதாரத்தைப் பற்றி அதிகம் கவலைகொள்ளவில்லை. எனவேதான் பல தொத்து நோய்கள் அவர்களிடையே பரவின. இந்த ஒரு சூழ்நிலையில்தான் மோசேயின் சட்டம் இஸ்ராயேலருக்கு ஒரு தனிச் சுகாதாரச் சட்டத்தை வகுத்துக் கொடுத்திருந்தது (உப 23:12-13; எண் 31:7-24).

பழைய ஏற்பாட்டிலே, மேற்கூறியுள்ளவைகளை நோக்கும் போது ஆரோக்கியம் என்பது கடவுளின் கொடை எனக் கருதப்பட்டது. அவரே அவர்கள் மருத்துவர். அவர்களுக்கு நோயிலிருந்து மீட்புத் தேவையாயின் கடவுளையே நாடவேண்டும் (2 நாள் 16:12). ஆரோக்கிய வாழ்வு என்பது நல்லோர்க்கு மட்டுமே இறைவன் தரும்கொடை என்பதால், நோயுற்றவன் அதனின்று மீளத் தனக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவைப் பலப்படுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஏதோ ஒருசில கை மருந்துகளைத் தவிர முறையான சிகிச்சை என்று எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

இயேசு வியாதிகளைப் பற்றி விளக்கவில்லையானாலும், அதைப் பற்றிய எண்ணம் பழைய ஏற்பாட்டுக் காலத்தைவிட, சற்று மாறுபட்டிருக்கிறது. பழைய காலம்போல நோயுற்றோரையும் பலவீனர்களையும் வெறுப்பதற்குப் பதிலாக, அவர்களை இயேசு அன்பு செய்தார் (யோவா 3:16; 10:10). நோய், கடவுள் தரும் தண்டனை என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நோய்க்குக் காரணத்தை அந்த மனிதனிடமே உள்ளத்திலோ, உடலிலோ காண்கிறார். யோவா 4-இல் சமாரியப் பெண்ணிடம் இயேசு பேசியது ஓர் உளவியல் சிகிச்சைக்குச் சிறந்த உதாரணம். இயேசு தம் அன்பினாலும் இறையரசின் அருங்குறிகளாலும் நோய்களைக் குணமாக்கினார்; அன்றி மருந்துகள் தந்து குணமாக்கவில்லை. நோயாளிகள் குணமாக முயற்சிக்கக்கூடாது. மாறாகப் பொறுமையாய் அதைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை முற்றிலும் மறுத்தார் இயேசு (மத் 8:2-3; மாற் 1:40; லூக் 5:12-13).

ஆனால் சிலநேரங்களில் நோய் தீயோரின் சக்தியால் வந்தது எனக் கூறுகிறார் (லூக் 13:16). ஏனெனில் அவரின் தலையாய பணி தீயோனின் ஆதிக்கத்தை ஒழிப்பதே. மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் குழப்பத்தாலும், கவலையாலும் அவனுக்கு உள்ளத்தைச் சார்ந்த உடல் நோய்கள் ஏற்படும் என இயேசு அறிந்திருந்தார். இயேசு குணமளித்த சில நிகழ்ச்சிகளில் நாம் இதைக் காண்கிறோம். இயேசு குணமளிக்கும்முன் அந்த நோயாளியின் விசுவாசத்தைத் தூண்டுகிறார் (மத் 9:29; லூக் 17:19; 18:42). சில இடங்களில் இது வெளிப்படையாக இல்லாவிடினும் நோயாளியின் வார்த்தைகளில் இது மறைந்து காணப்படுகிறது (மத் 9:1-8; 12:9-13). இயேசு குணமளிக்கும் போது முழுமனிதனையும் நோக்குகிறார். அவனது விசுவாசம், மனநிலை ஆகியவற்றை ஆராய்கிறார். இதைக்கொண்டு இயேசு வெறும் உளவியல் அடிப்படையில் தான் குணமளித்தார் எனக் கூறமுடியாது. எனெனில் நவீன உளவியல் ஆய்வு கூறும் பலமுறைகளை அவர் கையாளவில்லை. ஏச 3:4-இல் கூறப்பட்டுள்ள சொற்களின் முழுமையே கிறிஸ்துவின் குணமளிக்கும் பணி என மத் 8:17 கூறுகிறது.

நோய்களைக் குணப்படுத்துவது அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்து அளித்த சிறந்த பணியாகக் கருதப்பட்டது. பெந்தகோஸ்தே திருநாளை ஒட்டிப் பலர் குணம் பெற்றனர் (அ.ப. 2:43; 5:12; 8:7). இயேசுவின் பெயரால் அவர்கள் குணம் பெற்றனர் (யாக் 5:14-15; 2 திமோ 4:20).

பாலஸ்தீனத்தில் பல மூலிகைகள் இருந்தும் அதன் சிகிச்சை பற்றிய குறிப்புக்கள்

எதுவும் காணப்படவில்லை. மாறாக, எகிப்திலும், மெசபொத்தாமியாவிலும் இவை காணப்படுகின்றன. சாம்பிராணி, வெள்ளை போளம், கலிபான்பிசின், குங்கிலியம் போன்ற நறுமணப் பொருட்களின் கலவையான தூபவகை ஒரு மருந்தாகவும் பயன்பட்டது (யாத் 30:34-36). இறைவனைப் புகழவே இது முதன்மையாகப் பயன்பட்டது. மேலும் புகையூட்டவும் நாற்றத்தைப் போக்கவும் பயன்பட்டது. சில வாசனை எண்ணெய்கள் சுகாதாரமாக இருக்கப் பயன்படுத்தப்பட்டன. விருந்தாளிகளுக்கு எண்ணெய் பூசுவது அவர்களுக்கு மரியாதையைக் காட்டும் ஒரு சின்னம் (ரூத் 3:3; 2 சாமு 12:20; உப 28:40). சில சமயங்களில் ஒலிவ எண்ணெயும் திராட்சைரசமும் நோய்த் தடுப்பு மருந்தாகக் கையாளப்பட்டன (யாத் 12:8). நறுமணப் பொருட்களால் ஆன ஒரு வகைக் களிம்பும் மருந்தாகப் பயன்பட்டது. சமைக்கக்கூடிய கீரைகளைப்பற்றிய குறிப்பும் உள்ளது (யாத் 12:8).

## குதிங்காலைத் தூக்குதல் (HEEL LIFTED)

மிதிக்க, காலைத்தூக்குதல் (சங் 41:9) இச்சொற்றொடர் நண்பர்களின் துரோகத்தைக் குறிக்கிறது. இந்த நண்பர்கள் செமித்திய பழக்கத்தின்படி நோயுற்றவனின் துன்பத்தை இறைவனுடைய தண்டனையாகும் என்று பொருள்கொண்டு அவனைச் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவராகக் கருதினர். உதைத்துத் தாக்கக் காலைத் தூக்குவது பற்றியோ (ஓசே 12:3) குதிங்காலைத் தூக்குதலையோ (ஆதி 25:26; 27:36) மற்போர் வீரன் தந்திரமாய்ப் பாய்வதையோ (யோவா 13:18) இச்சொற்றொடர் குறிக்கவில்லை; புறக்கணித்தல், விலகிச்செல்வதையே குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் ''எனக்கு எதிராகக் காலைத் தூக்கினான்'' அதாவது ''என்மேல் பாய்ந்தான்'' (யோவா 13:18) என்ற இயேசுவின் சொற்கள் யூதாவின் துரோகத்தைச் சுட்டுகிறது. யூதாவின் செயல் இச்சொற்றொடருக்குப் புதுப்பொருள் அளிக்கிறது. சமாதான உடன்படிக்கையில் பிணைக்கப்பட்ட ஒருவர் - உணவில் பங்குகொண்ட ஒருவர் - விருந்தோம்பலின் ஒழுங்குகளை மீறி, விருந்தளித்தவருக்கு எதிராகத் துரோகம் செய்தலைப் புதிய ஏற்பாட்டில் இச்சொற்றொடர் குறிப்பிடுகிறது.

## குதிரை (HORSE)

பழங்கால மேற்காசியாவில் குதிரை போரிலும், பயணங்களிலும் வேட்டையாடுவதிலும் பயன்பட்டது. சுமைதூக்கவோ, விவசாயத்திலோ அரிதாகத்தான் பயன்பட்டது. விவிலியத்தில் போர் மற்றும் சடங்குச் சூழ்நிலையில் குதிரைகள் குறிக்கப்படுகின்றன. உருவகமாகவும் பயன்பட்டுள்ளன.

கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டுகளில் இஸ்ராயேலில் குதிரையைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. கப்பதோக்கிய ஏட்டுப்பலகைகளில் (கி.பி.19-ஆம் நூற்றாண்டு) முதல்முதலாகக் கழுதைகளைப்போன்று, குதிரைகளும் குறிக்கப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் ஆரிய இனத்தைச் சேர்ந்த மித்தானியர்கள் இருசக்கரமுடைய குதிரைகள் பூட்டிய போர்த் தேர்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இத்தகைய தேர்களைக் கொண்டு காசியர்கள் பாபிலோனியாவில் ஆதிக்கம் செலுத்தினர். கைக்சோஸ் இனத்தவர் (18-16-ஆம் நூற்றாண்டுகள்) எகிப்தில் குதிரைத்தேரை அறிமுகம் செய்தனர். அமர்னா ஏடுகள் (14-ஆம் நூற்றாண்டு) குதிரைத்தேர் பாலஸ்தீனத்தில் பயன்பட்டதைக் குறிப்பிடுகின்றன.

தொடக்ககால இஸ்ராயேலில், புறஇனத்தவரின் சொத்தோடும் சொகுசோடும் குதிரை தொடர்புபடுத்தப்பட்டது (உப 17:16; 1 சாமு 8:11). தாவீதின் ஆட்சிவரை இஸ்ராயேலின் படையில் தேர்ப்படை இடம் பெறவில்லை (2 சாமு 8:4). சாலமோன் ஆட்சிக்காலத்தில், இஸ்ராயேலர் கொண்டிருந்த குதிரைகளின் பெரும் எண்ணிக்கை நாட்டின் செல்வத்தையும் போர்ப்படை ஆற்றலையும் சுட்டுகிறது. சாலமோன் எகிப்திலிருந்து தனது சொந்த உபயோகத்துக்காகக் குதிரைகளையும் தேர்களையும் வாங்கி, மற்ற நாடுகளுக்கும் அவற்றை விற்றார் (1 அர 10:28-29). அவர்

குதிரைகளுக்குப் பரந்த இலாயங்கள் கட்டினார்; அற்றிற்குத் தீவனம் கொடுக்கக் குறிப்பிட்ட முறையை அமைத்திருந்தார் (5:6-8). குதிரைகள் எருசலேமில் வெகு சாதாரணமாய்விட்டபடியால் நகரச் சுவரிலும், அரண்மனையிலும் குதிரைவாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன (2 நாள் 23:15; நெக 3:28; எரே 31:40). குதிரைகள் போரிலும் (யாத் 14:9; யோசு 11:6.9; நீதி 5:22; 2 சாமு 1:6; 8:4; 1 அர 4:26; 18:5; 20:1.20; 22:4; 2 அர 3:7; 18:23; 2 நாள் 9:25; ஏச 5:26; எரே 4:13; 50:42; எச 38:4; நாகூ 3:2; செக் 14:15; அ.ப. 23:23.32; திருவெளி 19:18). பயணம் செய்வதற்கும் (ஆதி 41:43; 2 சாமு 15:1;2 அர 5:9; 14:20; 2 நாள் 23:15; எண் 2:66; நெக 3:28; எஸ்த 6:8-11; எரே 31:40; 17:25; 22:4; செக் 14:20) வேட்டையாடுவதிலும் (யோபு 39:8), உணவாகவும் (லேவி 11:4; 2 அர 7:13), போரடிக்கவும் (ஏச 29:28), வழிபாட்டிலும் (2 அர 23:11), வியாபாரத்திலும் (ஆதி 47:17; 1 அர 10:28; எச 27:14) பயன்படுத்தப்பட்டன.

இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரக முடிவு வரை, குதிரைகள் முக்கிய இடம் வகித்தன என்பதற்கு விவிலியத்திலும் விவிலியத்துக்குப் புறம்பேயும் சான்றுகள் உண்டு. அசீரிய அரசன் மூன்றாம் சால்மனேசர் (9-ஆம் நூற்றாண்டு) இஸ்ராயேலின் அரசன் ஆகாபு அசீரிய எதிர்ப்புக் கூட்டணிக்கு இரண்டாயிரம் குதிரைகள் கொடுத்ததாகக் கூறுகிறார். சனகெரிபு (8-ஆம் நூற்றாண்டு) யூதாவிலிருந்து கொள்ளையடித்த குதிரைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். எகிப்தியக் குதிரைகளையும் தேர்களையும் யூதா நம்பியிருப்பதைப் பதிதத்தின் அடையாளமாகக் கருதி வெறுப்புடன் ஏளனஞ்செய்கிறார் இறைவாக்கினர் ஏசயா (ஏச 2:7; 31:1). பிற்பாடு மெசியாக்காலத்தில் குதிரைகள் கைவிடப்படும் என்று செக்கரியா முன்னறிவிக்கிறார் (செக் 9:10). தென் அரசின் இறுதி நாட்களில், யூதாவின் அரசர்கள் யாவேக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் குதிரைகளிலும் தேர்களிலும் வெற்றிச் சவாரி செய்வர் என்று எரேமியா கூறுகிறார் (எரே 17:24-25; 22:4).

குதிரையின் பலமும், வேகமும், மற்ற உடற்பண்புகளும், பழைய ஏற்பாட்டின் பாடல்களிலும் இறைவாக்கு நூல்களிலும் ஒப்புமையாகவும் உருவகமாகவும் பயன்பட்டுள்ளன (சங் 32:9; ஏச 63:13; எரே 12:5; எச 23:20). யோபு 39:19-25 விவிலியத்தில் குதிரைபற்றிய முழுமையான விவரிப்பைக் கொடுக்கிறது.

புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலில் குதிரை உருவகமாகப் பயன்பட்டுள்ளது. திருவெளி 6:2.4-5.9-இல் வரும் நான்கு குதிரைகள், அவற்றின் மேல் ஏறியிருந்தவர்கள் பூமியின்மேல் செயல்படுத்திய தீர்ப்பை உருவகமாக விவரிக்கின்றன. சிங்கத்தின் பற்களையும் பாம்பின் வால்களையும் கொண்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட குதிரைகளைக் கொண்ட குதிரைப்படையும் தீர்ப்பைச் செயல்படுத்துகிறது (திருவெளி 9:17.19). காலமுடிவில் வரும் வெற்றிப்பவனியில் கிறிஸ்துவும் அவரது படையும் வெண்குதிரைகளில் சவாரி செய்வர் (19:11.14.19.21).

## குதிரைப்படை (CAVALRY)

இது திருவெளி 9:16-இல் மட்டும் காணப்படுகிறது. இது படைகளைக் குறிக்கும். யூப்பிரத்திக நதியில் கட்டப்பட்டிருந்த நான்கு தூதர்களை அவிழ்த்து விட்டபோது, இருபது கோடி குதிரைகளும் குதிரைமேல் ஏறியிருந்தவர்களும் தோன்றினர். இதன் விளக்கம் அழிவைப்பற்றிக் காட்சியாகம ஆசிரியர் கூறும் சில காட்சிகள் ஆகும். இங்குக் கூறப்பட்டுள்ள படைகளின் எண்ணிக்கை சங் 68:17-ஐப் பொருத்தது. மனித இனத்தில் மூன்றில் ஒரு பாகம் கொல்லப்பட்டது என்றும் இங்கே கூறப்பட்டுள்ளது. திருவெளி 9:6-இல் சாத்தானின் சேனை அழிவைக் கொண்டு வருவதாக விவரிக்கப்படுகிறது. 19-ஆம் அதிகாரத்தில் விண்ணுலகப் படைகள் சிறப்பாக ''நம்பிக்கைக்குரியவர் மற்றும் உண்மையுள்ளவர்'' எனப்படும் மெசியா வெண்குதிரைகள் மீது வருவதாகவும் விவவரிக்கப்படுகிறது.

## குதிரைவாயில் (HORSE GATE)

அரண்மனைக்கு அருகில் (எரே 31:40) கோயில் நிலப்பரப்பின் தென்கிழக்குத் திசையில், கிதரோன் நோக்கிச் செல்லும் எருசலேமின் வாயில் (எரே 31:40). இவ்வாயில் நெகமியாவால் மீண்டும் கட்டப்பட்டது (நெக 3:28). அரசி அத்தாலியாவின் கொலையோடு தொடர்புடைய வாயில் இதுவாக இருக்கலாம்.

## குதுகோதா (GUDGODAH)

பாலைவனப் பயணத்தில் இஸ்ராயேலர் தங்கிய இடங்களில் ஒன்று (உப 10:7). ஆரோன் மரித்த இடமாகிய மொசேர(மோசரோத்து)வுக்குப்பின் முதலிடமாகக் குறிப்பிடப்படுகிறது. எண் 33:32-33-இல் இது கோர்-சுகிதுகாது என்றழைக்கப்படுகிறது.

## குத்தூசி (AWL)

இது ஒருவன் என்றென்றும் அடிமையாக இருக்கத் தானாக முன்வரும்போது அவனது காதைக்குத்தப் பயன்படும் ஒரு கருவியாகும் (யாத் 21:6; உப 15:17). கற்காலத்திலிருந்தே இக்கருவி பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மரத்தாலும், எலும்பாலும் கடினமான கற்களாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட இக்கருவிகள் பல அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## குப்பா (HUPPAH - மேற்கட்டி, பாதுகாப்பு)

தாவீது காலத்தில் குருக்களின் பதின்மூன்றாம் பிரிவிற்குத் தலைவர் (1 நாள் 24:13).

## குப்பிம் (HUPPIM - கடற்கரை மக்கள்)

பென்யாமினின் வழித்தோன்றல் (ஆதி 46:21; 1 நாள் 7:12). 1 நாள் 7:15-இல் இவர் மனாசேயின் வழித்தோன்றலாகத் தெரிகிறார். இப்பெயர் ஒரு இஸ்ராயேல் துணைக்குழுவின் குலப்பெயராக மாறியதாகத் தெரிகிறது. இது ஒருவேளை, கூப்பாமின் திரிபாக இருக்கலாம்.

## குப்பை மேட்டுவாயில் (DUNG GATE)

இன்னோம் பள்ளத்தாக்கிற்கு இட்டுச் செல்லக்கூடிய எருசலேம் நகரத்து வாயில். நெகமியாவால் மீண்டும் கட்டப்பட்டது (நெக 3:14; 12:31). வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் இதனை ''எஸ்ஸேனியர்களின் வாயில்'' என்கிறார். இது எருசலேமின் தெற்குச் சுவரில் தென்மேற்கு மூலையிலோ அருகிலோ இருந்திருக்கவேண்டும் என்று அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இங்கு நகரத்தின் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டிருக்கலாம்.

## குமிதா (HUMITHA - கோட்டை)

மலைநாடான கெபிரோனில் யூதா கோத்திரத்தாரின் ஊர் (யோசு 15:54). இதன் இன்றைய இருப்பிடம் அறியப்படவில்லை.

## குமிழ்கள் (BOSSED, BOSSES)

குமிழ்கள் பெரும்பாலும் தட்டையான மேற்பரப்பில் அழகொப்பனையாக அமைக்கப்பட்டன. பழங்காலத்தில் இவைகள் கேடயத்தில் அமைக்கப்பட்டு அவற்றைப் பலப்படுத்தின. பெரும்பாலும் மரக்கட்டைச் சட்டத்தின்மேல் தோலால் சுற்றி இக்குமிழ்கள் அமைக்கப்பட்டன. உலோகக் கேடயங்கள் வழக்கில் வந்தபோது, இவை ஒப்பனையாக அமைந்தன.

யோபு 15:25-இல் தீயவன் கடவுளுக்கெதிராகத் ''திண்ணிய கேடயம் தாங்கியவனாய்ப் பாய்ந்தான்'' என்றுள்ளது. அதாவது சொற்பொருளில் ''அவனது கேடயத்தின் தடித்த குமிழ்களுடன் பாய்ந்தான்'' என்றுள்ளது. இது கடவுளிடம் அவன் காட்டும் திமிரான போக்குக்கு ஓர் உருவகமாகும்.

## கும்ரான் (QUMRAN)

எரிக்கோவிலிருந்து தெற்கே 14 கி.மீ. தொலைவில், சாக்கடலின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது கிர்பெத்து கும்ரான். எஸ்ஸேனியர்கள் வாழ்ந்த துறவற மடத்தின் சிதைவுகள் இங்குக் காணப்படுகின்றன. அன்றைய கும்ரான் சமூகத்தின் மையமாக விளங்கிய துறவற மடம் இதுவே.

## கும்ரான் ஏடுகள்

காண்க: சாக்கடல் ஏடுகள்

## குயவன் சக்கரம் (POTTER'S WHEEL)

குயவன் சக்கரம் என்பது வட்டவடிவமான தட்டுப் போன்றதொரு அமைப்பு. இது ஒரு செங்குத்தான தண்டின் மேல் பொறுத்தப்பட்டிருக்கும். இத்தண்டின் மேல் தான் இச்சக்கரம் சுழலும். இப்படிப்பட்ட அமைப்பு குயவன் களிமண்ணால் பாத்திரங்களைச் செய்ய உதவுகிறது.

குயவன் சக்கரம் எங்கும் வழக்கத்தில் இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் கூறப்படவே இல்லை. பழைய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டும் இது கூறப்பட்டுள்ளது (எரே 18:3). குயவன் ஓர் வடிவமற்ற களிமண்ணை இக்கருவியின் மூலம் ஒரு வடிவாக அமைத்து மண்கலமாக ஆக்குகிறான். இது கடவுளின் செயலுக்கு ஒப்பிடப்படுகிறது. இறைவனும் தம் மக்களின் முடிவைத் தம் கையால் வழிநடத்துகிறார் (ஏச 29:1; 45:9; 64:8; எரே 18:6; உரோமை 9:21-23). பழைய ஏற்பாட்டில் 'படைப்பவர்', 'குயவன்' ஆகிய இரண்டுமே ஒரே சொல்லால் கூறப்பட்டன. எகிப்து நாட்டிலும் இத்தகைய கருத்தைக் காணலாம் எகிப்தியாின் புராணப்படி குனும் என்ற கடவுள் மனிதனைக் குயவன் சக்கரத்தில்தான் படைக்கிறார்.

புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகள் பாலஸ்தீனத்தில் கி.மு. 3000-2000-இலிருந்து குயவன் சக்கரம் இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. முதலில் இது ஓரே ஒரு வட்ட அமைப்பு மட்டுமே கொண்ட ஒரு தட்டுப் போல் காணப்படுகிறது. கி.மு. 2000-ஐ ஒட்டிப் பெனிகாசனின் கல்லறையில் இத்தகைய சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. மத்திய செம்புக்காலத்தில் இத்தோடு வேறொரு தட்டும் இணைக்கப்பட்டது. இச்சக்கரங்கள் வேகத்தைக் கூட்டின. இது காலால் இயக்கப்பட்டது. நூல்களில் முதன்முதலில் சீரா 38:29-இல் நாம் இதைப்பற்றிக் காண்கிறோம்.

மெகிதோ, தேல்-எல்-அகுகல், இலாக்கீசு, காசோர் ஆகிய இடங்களிலும் குயவன் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதைபொருள் ஆராய்ச்சியில் இவைகளைக் கண்டுபிடிப்பது அரிது. ஏனெனில் இச்சக்கரம் பொதுவாக மண், களிமண், மரம் போன்ற அழியக்கூடிய பொருட்களாலேயே செய்யப்பட்டது. ஆனால் இதன் எபிரேய வார்த்தை இது கல்லால் செய்யப்பட்டது எனச் சுட்டுகிறது.

## குயவன் நிலம் (POTTER'S FIELD)

காண்க. அக்கலிதமா

## குரு (PRIEST)

பழைய ஏற்பாட்டில் குருவின் அலுவல் இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் இடையாளராக, நடுவராக இருத்தலாகும். இறைவனின் உடன்படிக்கை மக்கள் என்ற அளவில், இஸ்ராயேலர் உலகமக்களிடையே ''குருக்களின் அரசாகவும் தூயமக்களினமாகவும்'' (யாத் 19:5-6) இருக்கவேண்டும். குருவின் இந்த ஆட்பேரான அலுவலில் இறைவன்முன் இஸ்ராயேலின் பணியைப் பாதுகாக்கவும், எளிதாக்கவும் வாய்ப்புடையதாகச் செய்யவும், பரிசுத்தத்தின் எடுத்துக்காட்டான நிலையும் இடையாளர் பணியும் வலியுறுத்தப்பட்டுப் பேணிப்போதிக்கப்பட்டது.

குருவைப் பெரும்பாலும் குறிக்கும் எபிரேயச் சொல்லான ''கேகேன்'' எந்தச் சமயத்திலும் குருவைக் குறிக்கும் மேற்குச் செமித்திய பொதுவான சொல்லாகும். மூலத்தில் இச்சொல் ''நிற்றல்'' என்ற பொருளுடைய ''காகன்'' என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். அதன் விளைவாகத் தேவதையின்முன் பணிசெய்ய நிற்பவரைக் குறிக்கலாம் ''கேகன்'' என்றசொல் (உப 10:8). இச்சொல் சோதிடரைக் குறிக்கும் ''ககீன்'' என்ற சொல்லோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இறுதியில், இஸ்ராயேலில் குரு கொண்டிருந்த நிலை மற்றும் அலுவலிலிருந்து இச்சொல்லுக்குப் பொருள் காண வேண்டும்.

1. குருவின் பதவி:-

1. ஆரோனின் வழித்தோன்றல் அல்லது சந்ததியினர்:-

ஆதியாகம விவரிப்பில், குருவின் நிலையை இனத்தின் தலைவர் கொண்டிருந்

தார் (சான்று: நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு). ஆரோனும் அவரது புதல்வர்களாகிய நாதாபு, அபிகு, எலயாசர், இத்தாமர் (யாத் 28:1) ஆகியவர்களும் குருக்களென முறையாகக் குறிக்கப்பட்ட முதல் இஸ்ராயேலர் ஆவர். ஆயினும் சீனாயில் இஸ்ராயேல் வந்து சேர்ந்தபோது, அடையாளம் குறிக்கப்படாத குருக்கள் இஸ்ராயேலரிடையே குறிக்கப்படுகின்றனர் (19:24). ஒருவேளை இவர்கள் யாவேக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட தலைப்பேற்றான்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

ஆரோனும் அவரது புதல்வர்களும் லேவியின் இனத்தைச் சேர்ந்தவர்கள். லேவியர்களின் தோற்றமும், குருகுலத்தோடு அவர்களின் வரலாற்றுத் தொடர்பும் விவிலிய ஆய்வுக்கு மிகவும் சிக்கலான பிரச்சனையை அளித்தாலும், திருமுறைப்பட்டியல் வாசகமும் லேவியர்களை வழிபாட்டுப்பணியிலிருந்து வேறுபட்ட இனமாகக் காட்டுகிறது. பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலம்முதல் நாடுகடத்தப்பட்ட காலம் வரை, யாவேயின் பணிக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட ''இஸ்ராயேலின் தலைப்பேற்றாண்களின்'' இடத்தில் (எண் 3:5-13) குருக்களுக்குப் பணிவிடை செய்யும் கடமையை லேவியர் கொண்டிருந்தனர். ஆனால் அதிகாரபூர்வமான குருக்களாகப் பணிசெய்வது ஆரோன் வீட்டிற்கு மட்டுமே உரிய சலுகையாகும்.

இத்தகைய சிறப்பான அமைப்பு இருந்தாலும், வழக்கில் சிலமுறைகேடுகள் புகுந்தன. எருசலேமில் மையப்புனிதத்தலம் நிறுவப்படுவதற்குமுன் வழிபாட்டில் புகுந்த முறை கேட்டுக்கு எடுத்துக்காட்டாக நீதி 17-18 ஒரு நிகழ்ச்சியைக் கொடுக்கிறது. அதில் மோசேயின் வழித்தோன்றலான ஓர் இளம் லேவியர், வீட்டுக்குருவாகச் செயலாற்றுகிறார். அவர் பிற்பாடு, தான் இனத்தின் குருவாகச் செயலாற்றப்பணிக்கு அமர்த்தப்படுகிறார். சாமுவேல் எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவராக அறிமுகப்படுத்தப்படுகிறார் (1 சாமு 1:1). அவர் யாவேக்கும் குருத்துவப்பணிக்கும் அர்ப்பணிக்கப்படுகிறார் (1 நாள் 6:25-28). ஏலியின் வீட்டின் வீழ்ச்சிக்குப்பின், இறைவாக்கினராகவும், நடுவராகவும், குருவாகவும் செயலாற்றும் சாமுவேலும் (1 சாமு 4), சிலைவழிபாட்டில் மூழ்கிப்போயிருந்த வட அரசில் பலிசெலுத்தும் இறைவாக்கினரான எலியாவும் (1 அர 18), இடுக்கண்மிக்க காலங்களில் சுற்றி வளைத்துக் குருத்துவத்தை நிறுவுவதற்கு எடுத்துக்காட்டுகளாவர்.

2. மற்ற நிபந்தனைகளும், முன்னேற்பாடுகளும்:-

குருக்கள் ஆரோனின் சந்ததியினராக இருப்பதுடன், உடல் ஊனமற்றவர்களாக இருக்கவேண்டும் (லேவி 21:17-23). திருமணம் மற்றும் சடங்குத் தூய்மை பற்றிய ஒழுங்குகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் (21:10-15). குருத்துவ நிறுவனம் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே நடுவரின் அவசியத்தை வலியுறுத்தியது போல், பரிசுத்தத்தின் சட்டத்தின் தாக்கம் இஸ்ராயேலின்முன் இறைவனின் பரிசுத்தத்தை வலியுறுத்துவதாகும்.

லேவியின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அளவில் குருகுலத்திற்குக் கானான் நாட்டு நிலப்பகுதி பங்கீடு செய்து அளிக்கப்படவில்லை (எண் 18:20.23-24). ஆனால், லேவியர்களுக்கென ஒதுக்கப்பட்ட நாற்பது நகரங்களில் பதின்மூன்றில் குருக்கள் தங்கி வாழ வசதி அளிக்கப்பட்டிருந்தது. அவர்களது வருவாய் நிலத்திலிருந்து நேரடியாக வரவில்லை. மக்கள் அளித்த பத்தில் ஒரு பாக வரி (18:26-28), பீடத்தில் எரிக்கப்படாத பலிப்பொருட்களின் பகுதி (லேவி 5:13; 6:26; 7:31-34; 10:14-15), மந்தையின் முதற்பலன், அறுவடையின் முதற்பலன், இஸ்ராயேலின் தலைப்பேற்றான்களுக்காக அளிக்கப்பட்ட மீட்புப்பணம் (எண் 18:12-19), திருமுன் அப்பம் (லேவி 24:5-9) ஆகியவற்றிலிருந்து குருக்களுக்கு வருவாய் வந்தது. இதோடு, எருசலேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த குருக்களுக்கு வீடுகளும்

நிலமும் அளிக்கப்பட்டன (நெக 11:31; 1 நாள் 9:2).

3. ஆடைகளும் பதவி ஏற்பும்:-

மெல்லிய நார்ப்பட்டால் ஆன உள்ளங்கி, நீலம் கருஞ்சிவப்பு நிற நூலால் நெய்யப்பட்டுப் பின்னல் வேலைப்பாடும் உடைய இடைக்கச்சை, நார்ப்பட்டுக் காற்சட்டை, வெண்ணிறத்தலைப்பாகை, கச்சை ஆகியவை குருக்களின் ஆடைகளாகும் (யாத் 28:40-43). பெரியகுரு நீல நிறத்தில் நெய்யப்பட்ட ஆடை அணிந்திருந்தார். அதிலிருந்து பொன்மணிகளும் கருஞ்சிவப்பு, சிவப்பு, நீலநிற மாதுளைகளும் ஒன்றுவிட்டு ஒன்று தொங்கின. இந்த ஆடைமேல், பக்கத்திற்கு ஒன்றாகத் தோள்களில் ஏபோது என்ற ஆடை அணிந்திருந்தார். இவை நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலால் நெய்யப்பட்டிருந்தன. இரு கோமேதகக் கற்கள் பொருத்தப்பட்டிருக்கும், ஒன்றில் ஆறுபெயர்களும் மற்றதில் ஆறுபெயர்களுமாக, இவற்றில் இஸ்ராயேலின் பன்னிரண்டு இனங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கும். ஏபோதிலிருந்து பசும்பொன் சங்கிலியால் தொங்கவிடப்பட்டு இடையில் இழுத்துக்கட்டப்பட்ட மார்புப்பட்டை அமைந்தது. அதில் வரிசைக்கு மூன்றாக நான்கு வரிசையில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஓர் இனத்தின் பெயராகப் பன்னிரண்டு இனத்தாரின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த மார்புப்பட்டையில் ஒரு பையிருந்தது. அதில் ஊரிம் தும்மீம் என்றழைக்கப்பட்ட புனிதச் சீட்டுப் போடும் கருவிகள் இருந்தன. பரிகார நாளில், நாட்டிற்காகப் பரிகாரம் செய்யத் திருத்தூயகத்துள் நுழையும்போது பெரிய குரு நார்ப்பட்டாடை மட்டுமே அணிந்திருப்பார்.

பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலத்தில் ஆரோனின் புதல்வர்கள் குருக்களாக ஏற்படுத்தப்பட்டபோது எண்ணெயால் அபிடேகம் செய்யப்பட்டனர் (யாத் 28:41; 40:15; லேவி 8:30). பிற்காலத்தில் பதவி ஏற்றபோது பெரிய குரு மட்டுமே அபிடேகம் செய்யப்பட்டிருக்கலாம். இந்த அபிடேகம் பரிகத்தப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டதைக் குறித்தது.

4. கடமைகள்:-

அவர்களின் திருத்தலப்பணியில் குருக்கள் பரிசுத்தத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் மட்டுமே பொன் தூபப்பீடம், விளக்குகள், திருமுன் அப்பம், பலிபீடம் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால் மக்கள்முன் இறைவனையும், இறைவன் முன் மக்களையும் பிரசன்னப்படுத்தும் நடுவர் அலுவலே ஒரு குருவின் முதன்மையான அலுவலாகும்.

மக்கள் முன் இறைவனைப் பிரசன்னப் படுத்தி, நடத்தை மற்றும் வழிபாடு பற்றிய இறைவனின் சட்டத்தை மக்களுக்குக் குரு போதித்தார் (உப 33:11; 2 நாள் 17:7-9). இந்த அலுவல், நாடு கடத்தப்பட்ட காலத்திலும் அதற்குப்பின்னும் மேலும் விரிவடையும். கடினமான சட்டத் தீர்ப்புக்களில், உயர்நீதி மன்றம்போல் குரு ஆலோசிக்கப்பட்டார் (உப 17:8-13; 19:16-17; 2 நாள் 19:8-11). மக்கள்மேல் இறைவனின் ஆசிரைக்கூறவும் (எண் 6:22-27), சடங்குத் தூய்மையை நிர்ணயிக்கவும் (லேவி 13) குருவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இவற்றோடு, ஊரிம் தும்மீம் என்ற புனிதச் சீட்டுப்போடும் கருவியைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட காரியங்களை யாவேயைக் கேட்டுச் சொல்லும் பொறுப்பும் குருவுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இறைவன் முன் மனிதர்களைப் பிரசன்னப்படுத்திப் பலிச்சடங்கைச் செய்தனர். அவர்கள் மட்டுமே பலிப்பொருள்களின் இரத்தத்தைக் கையாளவும், பலிப்பொருட்களான விலங்கையோ (லேவி 4:30-31), தானியத்தையோ (5:11-12), பீடத்தின்மேல் வைப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

குருக்களின் பணி அவர்களின் பிரிவுகளின்படி முறைசெய்யப்பட்டிருந்தது. தாவீது காலத்தில் இப்பிரிவுகள் தோன்றியது பற்றிச் சர்ச்சைகள் இருந்தாலும் 1 நாள் 24:7-18

பிரிவுகளைக் கொடுக்கிறது. இது ஒவ்வொரு பிரிவினரும் ஆண்டில் இரு வாரங்களுக்கு ஆலயத்தில் பணிசெய்யும் சலுகை அளித்தது (லூக் 1:5.8).

II. குருத்துவத்தில் வளர்ச்சி:-

அரசாட்சி அமைக்கப்பட்டு, எருசலேமில் வழிபாடு மையப்படுத்தப்படுதலோடு, குருத்துவம் அரசனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. தாவீதின்கீழ், குருவின் பதவி, ஏலியின் வீட்டைச் சேர்ந்த அபியத்தாரையும், எலயசாரின் வழித்தோன்றலான சாதோக்கையும் (2 சாமு 8:17; 15:24-29.35) மையமாகக் கொண்டிருந்தது. சாலமோனின் ஆட்சியிலிருந்து மீண்டும் ஆட்சி அமைக்கப்படும் வரை, சாதோக்கின் வீட்டார் எருசலேமில் பெரிய குருவாக நியமிக்கப்பட்டனர் (1 அர 2:26-27.35). நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பிற்காலத்தில் பெரிய குருப்பதவி சாதோக்கின் வீட்டினரிடையே இருந்தது. ஆனால் பாபிலோனிலிருந்து வரப் பலர் விரும்பாமையால், குருக்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்பட்டது. தாவீது மரபு வழி வந்த அரசர்கள் காலத்தைத்தவிர, மற்றக் காலங்களில் பெரியகுருவின் நிலையும் தன்னாட்சியும் வளர்ந்து, அது செல்வாக்கிலும் அதிகாரத்திலும் அரச குல வழித்தோன்றல்களுடையதற்குச் சமமாக இருந்தது. இது குரு குலத்தவர் எருசலேமின் ஆலய-ஆட்சியில் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தது. செலூக்கிய அரசன் நான்காம் அந்தியோக்கு எப்பிபான், மெனலாவு என்ற சாதோக்கு குடும்பத்தைச் சேராதவரைக் குருவாக நியமிக்கும் வரை (கி.மு. 171) சாதோக்கின் குடும்பத்தினரே குருக்களாக இருந்தனர். கி.பி. 6-ஐ ஒட்டிச் சதுசேயர் பிரிவைச் சேர்ந்த செல்வமிக்க குருக்கள் குடும்பங்களிலிருந்து பெரிய குரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

III. புதிய ஏற்பாடு:-

சதுசேய குருக்களால் குற்றம் கூறப்பட்டாலும் இயேசுவோ, அவரது சீடர்களோ குருத்துவம் மற்றும் பலிகளின் நேர்மையை நிராகரிக்கவில்லை. ஆயினும், தொடக்கத்திலிருந்தே திருச்சபை இயேசுவின் பரிகார மரணத்தைப் பலி என்று நோக்கியது (மாற் 10:45; உரோ 3:25; 8:23; 1 கொரி 5:7); உயர்த்தப்பட்ட கிறிஸ்துவை நடுவராகக் கருதியது (உரோ 8:34). கிறிஸ்துவின் குருத்துவம் பற்றிய போதனையை எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் மிகவும் நிறைவாக விவரித்துள்ளார். அதிலே, பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்தையும் பலியையும் முடிவுக்குக் கொண்டுவரும் நிறைவான பெரிய குரு மற்றும் பலிப்பொருள் ஆகியவற்றின் பாகத்தைக் கிறிஸ்து நிறைவேற்றுகிறார் (எபி 8:1-6). சங் 110:4-இன் அடிப்படையில், கிறிஸ்து மெல்கிசதேக்கின் முறைப்படியான குருவாக அடையாளம் காட்டப்பட்டு, ஆரோனின் குருத்துவ அமைப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது (எபி 7:11-19). பிற இடங்களில் விசுவாசிகளே ''ஞான இல்லமாகவும்... அரச குருத்துவத்திருக்கூட்டமாகவும்'' அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது (1 பேதுரு 2:5.9; திருவெளி 1:6; 5:10; 20:6). இது இறைவனின் பழைய ஏற்பாட்டு மக்களின் மாதிரிகையியல் நிறைவேறுதலாகும் (யாத் 19:6).

## குருகு (CARRION VULTURE)

அசுத்தப்பறவைகளில் ஒன்று (லேவி 11:18; உப 14:17). இது கருப்பு, வெள்ளை இறகுகளைக் கொண்டிருந்ததால் எகிப்திய வெள்ளை, கருப்புக் கழுகு என்றழைக்கப்பட்டது. இது கழுகு வகையிலே மிகவும் சிறியது. பாலஸ்தீனத்தில் அதிகம் காணப்பட்டது. இது பருமனிலும், நடையிலும் அமருவதிலும் காக்கையை ஒத்திருக்கும்.

## குருக்கள் பாரம்பரிய ஏடு (PRIESTLY DOCUMENT)

ஐந்நூலின் கருதுகோளான மூலங்களில் ஒன்று. பொதுவாகப் "P" என்று குறிக்கப்படும். இந்த ஏட்டைச் சேர்ந்ததாகப் படைப்புப்பற்றிய முதல் விவரிப்பு (ஆதி 1:1-2:4), ஐந்நூலில் வரும் தலைமுறைப்பட்டியல்கள், யாத்திரை, லேவியர், எண்ணிக்கை ஆகமங்களில் வரும் குருக்கள், பலிகள் பற்றிய சட்டங்களின் பெரும்பகுதியும் கருதப்படும்.

நாடு கடத்தப்பட்டபோதும் அதற்குப் பின்னும் இதற்குக் காலம் குறிக்கப்படும்.

காண்க. ஐந்நூல்.

குருட்டுத்தன்மை (BLINDNESS)

மேற்காசிய நாடுகளில் குருட்டுத்தன்மை மிகவும் சாதாரணமாகக் காணப்பட்டது. விவிலியம் இரண்டுவிதமான குருட்டுத்தன்மை பற்றிப் பேசுகின்றது. 1. அதிக 'சூரிய ஒளி, தூசு, மணல் போன்றவை கண்ணில் படுவதாலும், தூய்மைக்குறைவினாலும் வரும் ஒருவகைக் கண்நோய். இது ஒரு தொத்துநோய். இந்நோய் தொடங்கும் போது கண்கள் சிவப்பாகவும், பார்வை குறைவாகவும் இருக்கும். ஒருவேளை லேயா இந்நோயினால் துன்பப்பட்டிருக்கலாம் (ஆதி 29:17). 2. வயது முதிர்ச்சியினால் ஏற்படும் குருட்டுத்தன்மை எ. கா. ஈசாக்கு (ஆதி 27:1), ஏலி (1 சாமு 3:2), அகியா (1 அர 14:14). குருடன் குருவாக முடியாது என்பது சட்டம் (லேவி 21:18). குருட்டு விலங்கு பலியாக ஒப்புக்கொடுக்கப் படக்கூடாது (உப 15:21). செதேக்கிய மன்னன் கண்கள் நெபுக்கதுனேசரால் குருடாக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார் (2 அர 25:7). ''குருடாக்கப்படல்'' என்ற தண்டனை கம்முராபியின் சட்டப் புத்தகத்தில் இரண்டுமுறை கூறப்பட்டுள்ளது. எபிரேயர் சட்டத்தில் இது இடம்பெறவில்லை. குருடர்களுக்கு இரக்கமும் உதவியும் காட்டவேண்டுமென்றும், அவர்களுக்கு இடறலாக இருப்பது தடை செய்யப்பட்டது என்றும் சட்டம் கூறுகிறது (லேவி 19:14; உப 27:18). யோபுவின் இரக்கச் செயல்களில் யோபு குருடர்களுக்குக் கண்களாகத் திகழ்ந்தார் என்று கூறப்படுகிறது (யோபு 29:15). இயேசு மூன்றுமுறை குருடர்களைக் குணமாக்குகிறார்; பேத்து-சாயித்தில் (மத் 9:27 தொ; மாற் 8:22); எரிகோவில் (மத் 20:30 தொ; மாற் 10:46 தொ; லூக் 18:35 தொ); எருசலேமில் பிறவிக்குருடனுக்குப் பார்வை அளிக்கிறார் (யோவா 9:1 தொ). குருடர்களைப் பார்வையடையச் செய்வது இயேசுவின் மெசியாப் பணிகளில் ஒன்று என்று அவர் கூறுகிறார் (மாற் 11:5; லூக் 7:22).

ஆன்மீகத்தில் ஈடுபாடற்ற தன்மைக்குக் குருட்டுத்தன்மை உவமையாகக் கூறப்படுகிறது (ஏச 42:19; 29:18; 56:10; உரோ 2:19; 2 கொரி 4:4;2 பேதுரு 1:9; 1 யோவா 2:11; திருவெளி 3:17). மெசியாவின் மீட்புச்செயல் குருடுக்கு 'ஒளி கொடுத்தலாக விளக்கப்படுகிறது (ஏச 35:5; 42:16.18; 43:8; எரே 31:8; சங் 146:8). பரிசேயர்கள் குருட்டு வழிகாட்டிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் (மத் 15:14; லூக் 6:39).

ஆதி 19:11; 2 அர 6:18-இல் வரும் தற்காலிகக் குருட்டுத்தன்மை உடல் சம்பந்தப்பட்ட குருட்டுத்தன்மை அல்ல. மாறாக, உளவியல் சார்ந்த குருட்டுத்தன்மையையே குறிப்பிடுகிறது. பவுலுக்கு ஏற்பட்ட குருட்டுத்தன்மை (அ.ப. 9:8.18) உளவியல் தன்மையுடையது மட்டுமன்று. உடல்சார்ந்த குருட்டுத்தன்மையுடையதுமாகும்; இதை எந்த நோயோடும் ஒப்பிடமுடியாது.

குருத்துவம் (PRIESTHOOD)

''இயேசு என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவத்தைப் பெற்றுள்ளார்'' என்கின்றார் புனித பவுல் (எபி 7:24). கிறிஸ்துவின் இணைப்பாளர் பணியை விளக்கிக் கூறுகின்ற எபிரேயருக்கு எழுதிய திருமுகம், அப்பணியை வரையறுக்கும்படியாகச் சுற்றிலுமிருந்த மற்றெல்லாச் சமயங்களிலும் காணப்பட்டதுபோலப் பழைய ஏற்பாட்டிலும் காணப்பட்ட ஒரு பணியோடு கிறிஸ்துவின் பணியை ஒப்பிட்டுப் பார்க்கிறது; அந்தப் பழைய ஏற்பாட்டுப் பணி குருக்களின் பணியாகும். எனவே, இயேசுவின் குருத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், பழைய ஏற்பாட்டில் உள்ள குருத்துவத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவு முக்கியம். ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் இயேசுவின் குருத்துவத்திற்கு ஆயத்தமும் முன்னடையாளமுமாய் அமைந்துள்ளது.

அ. பழைய ஏற்பாடு:-

I. குருத்துவ நிறுவனத்தின் வரலாறு:-

1. குல முதுவர்கள் காலத்தில்:-

இஸ்ராயேலரைச் சூழ்ந்துள்ள பல்வேறு இனத்து மக்களும் நாகரீகமடைந்தவர்கள்; அவர்களிடையே சிறப்பாக , மெசபொத்தாமியா, எகிப்து மக்களிடையே குருத்துவப் பணி பெரும்பாலும் அரசனின் பாதுகாப்புப் பெற்றதாகும்; திரு ஆட்சி முறைப்படி அமைந்த குருகுலத்தார் அரசனுக்குத் துணை புரிகின்றனர். இக்குருகுலம் ஏறத்தாழ எப்பொழுதுமே பிறப்புரிமை கொண்டாடி, உண்மையில் ஒரு சாதியை உருவாக்குகிறது. பழைய ஏற்பாட்டில் குலமுதியவர்களின் காலத்தில் இத்தகைய குருகுலம் பற்றி எதுவும் தென்படக் காணோம். அப்பொழுது ஆலயம் என்பதில்லை; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுளுக்குரிய தனிப்பட்ட குருக்கள் என்று இல்லை. ஆதியாகமத்து மரபுகள் கட்டிக்காட்டுகின்றபடி, குலமுதியவர்கள் கானான் நாட்டில் பீடங்கள் அமைக்கின்றார்கள் (ஆதி 12:7 தொ; 13:18; 26:25); பலிகள் ஒப்புக்கொடுக்கிறார்கள் (22; 31:54; 46:1). இவர்கள் குடும்பச் சூழலில் குருத்துவப்பணி புரிகின்றனர். இத்தகைய பழக்கம் பண்டைய மக்களினத்தாரிடையே மிகப் பரவலாகக் காணப்படுகிறது. ஆதியாகமத்தில் ஒருசிலர் குருக்களாக மட்டும் தோன்றுகிறார்கள் எனில், அவர்கள் அந்நியர்கள். அவர்கள், எருசலேமின் அரசனும் குருவுமான மெல்க்கிசதேக்கும் (14:28தொ), பாரவோனுடைய குருக்களுமாவர் (41:45; 47:22). லேவி குலத்தவர் இன்னும் திருப்பணிக்கென்று திருநிலைப்படுத்தப் பெறாத குலத்தவர்தாம் (34:25-31; 49:5 தொ).

2. மோசேயின் காலத்தில்:-

மோசே ஒரு லேவியர்; இந்த லேவியர் தொடங்கித்தான் வழிபாட்டுப் பணிகளில் லேவி குலத்தவர் தனிப்படக் குறிப்பிடப் பெறுவது ஆரம்பமானதாய் உள்ளது. யாத் 32:25-29-இல் கண்டுள்ள பண்டைய வருணனை, லேவி குலத்தவர் பெறும் குருத்துவத்தின் தனிச்சிறப்பியல்பினை உணர்த்துகிறது; அதாவது, லேவி குலத்தாரை இறைவனே தமது ஊழியத்திற்கென்று தேர்ந்து, திருநிலைப்படுத்துகிறார். யாக்கோபு லேவியருக்கு அளித்த ஆசியுரையிலிருந்து வேறுபடுகின்ற மோசேயின் ஆசியுரை, அவர்களுக்குக் குருக்களின் தனிப்பட்ட பொறுப்புகளை உரித்தாக்குகிறது (உப 33:8-11). இந்த விவிலிய வாசகம், மோசேக்கு மிகப் பிந்திய தொரு சூழ்நிலையினை எடுத்துக்கூறுகிறது என்பது உண்மை. இந்தப் பிந்தைய சூழ்நிலையில், லேவியர் தனிச்சிறப்புள்ள குருக்கள் (நீதி 17:7-13; 18:19). நாட்டின் பல்வேறு வழிபாட்டு இடங்களுக்கு உரியவர்கள். எனினும், லேவியரின் குருத்துவம் ஒருபுறம் இருக்க, மறுபுறம் குடும்பத்துக் குருத்துவமும் தொடர்ந்து செயல்படுகிறது (நீதி 6:18-29; 13:19; 17:5; 1 சாமு 7:1).

3. முடியாட்சிக் காலத்தில்:-

முடியாட்சிக் காலத்தில், சூழ்ந்துள்ள மக்களினத்தாரின் அரசர்களைப் போலவே இஸ்ராயேலரின் அரசரும் பல்வேறு குருத்துவப் பணிகள் ஆற்றுகிறார். சவுல் (1 சாமு 130:9), தாவீது (2 சாமு 6:13.17; 24:22-25) ஆகியோர் தொடங்கி, ஆகாக (2 அர 16:13) ஈறாக அரசன் பலி ஒப்புக்கொடுக்கிறான்; அரசன் மக்களுக்கு ஆசி வழங்குகிறான் (2 சாமு 6:18; 1 அர 8:14). எனினும், குரு என்ற சிறப்புப் பட்டத்தை அரசன் பண்டையச் சங்கீதம் 110-இல்தான் பெறுகிறான். இச்சங்கீதம் அரசனை மெல்க்கிசதேக்கோடு ஒப்பிடுகிறது. இவ்வாறு கானான் நாட்டு அரச குருத்துவத்தைப்பற்றிய குறிப்பு இருப்பினும், மெல்க்கிசதேக்கு குருக்கள் எனும் புனித சாதியில் ஓர் உறுப்பினர் என்பதைவிடக் குருத்துவத்தின் காப்பாளர் என்பது உண்மையாகும்.

இச்சூழ்நிலையில் இந்தப் புனித சாதி ஒழுங்காய் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகிறது; சிறப்பாக இத்தகைய நிறுவனம், தாவீது காலத்திலிருந்து இஸ்ராயேலரின் வழிபாட்டு மையமாக அமைந்துவிட்ட எருசலேம் திருவிடத்தில் உருவாகிறது. தொடக்கத்தில் இரு குருக்கள் திருப்பணியைப் பகிர்ந்து கொள்கின்றார்கள்: அவர்கள் அபியத்தாரும் சாதோக்குமாவார்: அபியத்தார் சீலோவில் இருந்த திருவிடத்தில் பணிபுரிந்த ஏலியின் வழித்தோன்றல்; அவர் அநேகமாய் லேவியர் குலத்தவராய் இருக்கலாம் (2 சாமு

8:17); ஆனால், அவருடைய குடும்பம் சாலமோனால் சிதறுண்டு போகும் (1 அர 2:26 தொ). சாதோக்கின் மரபு தெரியவரக் காணோம்; எனினும், அவருடைய வழித்தோன்றல்களே இரண்டாம் நூற்றாண்டு மட்டும் ஆலயத்தில் குருத்துவப் பொறுப்பு உள்ளவர்கள். பிற்காலத்தில் தோன்றிய தலைமுறை அட்டவணைகள் அபியத்தாரைப்போலச் சாதோக்கையும் ஆரோன் மரபு வழியினரோடு தொடர்புபடுத்தும் (1 நாள் 5:27-34).

எருசலேமில் குருத்துவம் தலைமைக் குருவின்கீழ்ப் பல்வேறு பணித்துணைவர்களைக் கொண்டது. இஸ்ராயேலர் நாடுகடத்தப்படுவதற்கு முன்னரும்கூட, ஆலய ஊழிய ஆட்களுள் விருத்தசேதனம் செய்யப்பெறாத ஒருசிலரும் உண்டு (எச 44:7 தொ; யோசு 9:27 காண்). தவிர மற்றத் திருவிடங்களில் குறிப்பாக யூதா நாட்டில் அமைந்த திருவிடங்களில் லேவியரின் எண்ணிக்கை போதுமானதாய் இருத்தல் வேண்டும். தாவீதும் சாலமோனும் லேவியரை நாடு முழுவதற்கும் பகிர்ந்து கொடுக்கப் பார்த்தார்கள் எனத் தோன்றுகிறது (யோசு 21; நீதி 18:30 காண்). ஆனால், ஆங்காங்கு அமைந்த பல திருவிடங்களில் உள்ள குருக்கள் வெவ்வேறு மரபினராவர் (1 அர 12:31).

4. யோசியாவின் சீர்திருத்தம்:-

கி.மு.621-ஆம் ஆண்டில் நிகழ்ந்த யோசியாவின் சீர்திருத்தம் ஆங்காங்கு அமைந்த திருவிடங்களை ஒழித்துக்கட்டி, லேவியரின் ஏகபோகத்தனி உரிமையையும், எருசலேமில் உள்ள குருத்துவத்தின் தலைமைத்துவத்தையும் நிலைநாட்டுகிறது. இச்சீர்திருத்தம் உப 18:6தொ குறிப்பிடும் விதிகளைப் பொருட்படுத்தாது, நடைமுறையில், குருத்துவப் பணிகளை ஆற்றும் பொறுப்பினைச் சாதோக்கின் வழித்தோன்றல்களுக்கு மட்டும் என்று ஒதுக்கி வைக்கிறது (எரே 43:19); இவ்வாறு, இச்சீர்திருத்தம் பின்னர்க் குருக்கள் என்றும் லேவியர் என்றும் வேறுபடுத்துவதற்குத் தொடக்கமாக அமைகிறது; இந்த வேறுபாடு எச 44:10-31-இல் மிகத் தெளிவடைகிறது.

ஆலயமும் முடியாட்சியும் ஒரே சமயத்தில் (587) அழிவுக்குள்ளாகின்றன; இதனால், அரசர்கள் குருத்துவத்தைப் பாதுகாத்து வந்த நிலை முடிவுறுகிறது; குருத்துவம் மக்கள் மீது மிகுந்த அதிகாரம் பெறுகிறது. இப்பொழுது முதல், புறச்சமயத்தினர் ஆட்சிக்குரிய அதிகாரத்தைக் கையாளுகின்றனர்; இந்த அதிகாரத்தின் செல்வாக்கு, சோதனைகளிலிருந்து விடுதலை பெற்றதாய்க் குருத்துவம் நாட்டின் சமய வழிகாட்டியாகிறது. இறைவாக்குரைத்தல் என்பது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தேய்பிறைபோல் மறைந்துபோகிறது. இதன் காரணமாகக் குருத்துவ அதிகாரம் இன்னும் சிறப்படைகிறது. 573-ஆம் ஆண்டிலிருந்து, எசக்கியேல் கொணர்ந்த சீர்திருத்தத் திட்டங்களின்படி, ''தலைவன்'' திருவிடத்தில் நுழையத்தடை விதிக்கப்படுகிறான் (எச 44:1தொ; 46). இனி முதல், லேவியர் இனம் போட்டியற்ற ஏகபோகத் தனியுரிமை கொண்டாடுகிறது (எச 66:21-இல் கண்டுள்ள ஒரே விதிவிலக்கும் இறுதிக்காலத்தை மட்டும் சார்ந்ததாகும்). இறுதியாக, (5-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய) ஐந்நூலில் உள்ள குருக்களைப் பற்றிய பகுதிகளும், அடுத்து (3ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய) நாளாகம ஆசிரியரின் வேலையும் சேர்ந்து குரு ஆட்சிமுறையின் முழு விவர வருணனையைத் தருகின்றன.

5. குரு ஆட்சிமுறை:-

இக்குரு ஆட்சிமுறை, ஒழுங்குமுறைக் கண்டிப்புள்ளது. இந்த ஆட்சி முறையின் உச்சியில் இருப்பவர் சாதோக்கின் மகனான தலைமைக்குரு; இவர் குருவுக்கோர் எடுத்துக்காட்டான ஆரோனின் வழிவருபவராவார். ஒவ்வொரு திருவிடத்திலும் எப்பொழுதும் குரு ஒருவர் தலைவராக இருந்து வந்திருந்தார். அரசர் இல்லாமையால் இறையாட்சிக்கான ஒரு தலைவர் தேவை என்று உணர்ந்தபோதுதான், தலைமைக்குரு என்ற சிறப்புப்பட்டம் தோன்றலாயிற்று. தலை

மைக்குரு 4-ஆம் நூற்றாண்டிலிருந்து தைலம் பூசி அபிடேகம் பெறுதல் (லேவி 8:12; தவிர 4:13; தானி 9:25 காண்), கடந்த காலத்தில் அரசர்கள் இவ்வாறு திருநிலைப்படுத்தப் பெற்றதை நினைவூட்டுகின்றது.

தலைமைக்குருவின் கீழ் ஆரோனின் மக்க ளான குருக்கள் உள்ளனர். இறுதியாக, துணைக் குருகுலத்தாரான லேவியர் மூன்று குடும்பங்களாகத் தொகுக்கப்பெறுகின்ற னர்; இம்மூன்று குடும்பங்களோடு பாடகர்க ளும் வாயிற்காவலரும் ஒருங்கிணைக்கப் பெறுகின்றனர் (1 நாள் 25-26). இம்மூன்று வகுப்பினரும் சேர்ந்து புனித குலத்தார் என் பவரை உருவாக்குகின்றனர்; இக்குலத்தார் அனைவரும் ஆண்டவரின் ஊழியத்துக் கென்று தம்மை நேர்ச்சி செய்கின்றனர்.

6. பழைய ஏற்பாட்டின் இறுதியில்:-

இனிவரும் காலத்தில் குரு ஆட்சிமுறை, தலைமைக்குரு நியமனத்தைத் தவிர, மற்றப் படி மாறுபாடு எதற்கும் ஆளாகாது. 172-ஆம் ஆண்டில் சாதோக்கின் வழித்தோன்றலான இறுதித் தலைமைக்குரு 3-ஆம் ஓனியா அரசி யல் சதிகளின் விளைவாகப் படுகொலை செய்யப்படுகிறார். அவரைத் தொடர்ந்து வந்த தலைமைக்குருக்கள் அவருடைய மரபு வழிக்குப் புறம்பே இருந்து, சீரியா நாட்டு அரசர்களால் நியமனம் பெறுகிறார்கள். மக்க பேயரின் எதிர்ப்பு, யோனத்தான் என்பவ ரைத் தலைமைக்குருவாகப் பதவியேற்றி வைப்பதற்கு இட்டுச்செல்கிறது; இந்த யோனத்தான் அத்துணை இனந்தெரியாத ஒரு குருத்துவக் குடும்பத்தின் வழித்தோன்ற லாவார். யோனத்தானைத் தொடர்ந்து (143) தலைமைக் குருவான அவருடைய சகோதரர் சீமோன், குருக்களும் அரசர்களுமான கச மோனிய குலத்தவருள் (134-37) முதல்வர் ஆவார். இத்தலைமைக் குருக்கள் சமயத் தலைவர்களாய் இருப்பதைவிட அரசியல் தலைவர்களாயும் படைத்தலைவர்களாயும் இருக்கிறார்கள். எனவே இவர்கள் பரிசேய ரிடையே எதிர்ப்பைக் கிளப்புகிறார்கள். பரி சேயர் பக்கமிருக்கும் சம்பிரதாயப் பற்று டைய குருகுலத்தார், கசமோனிய குலத்தார் சாதோக்கின் வழிவந்தவராய் இல்லாததைக் கண்டிக்கின்றனர்; கசமோனிய குலத்தாரை ஆதரிப்பதா இல்லையா என்பதுபற்றிக், கும் ரானைச் சேர்ந்த குருத்துவப் பிரிவினர் பிளவு படும் நிலைக்குக்கூட ஆளாகின்றனர். இறு தியாக, ஏரோதின் ஆட்சிக் காலத்திலிருந்து (37), அரசியல் அதிகாரமுடையவர் தலை மைக்குருக்களை நியமனம் செய்கின்றார். இத்தலைமைக்குருக்களைப் பேர்போன குருத்துவக் குடும்பத்தினரிடமிருந்து தேர்ந்து கொள்கின்றார்; இத்தலைமைக் குருக்களே, புதிய ஏற்பாடு ஆங்காங்குத் ''தலைமைக் குருக்கள்'' எனக் குறிப்பிடும் வகுப்பினரை உருவாக்குகின்றார்கள்.

II. குருத்துவப் பணிகள்:-

பண்டைய சமயங்களில், குருக்கள் வழி பாடு நடத்தும் திருப்பணியாளர்களாகவும், புனித மரபுகளைப் பாதுகாப்பவர்களாக வும், சமயத்துறை அறிஞர்கள் என்றளவில் இறைவாக்குரைஞர்களாகவும் இருந்தனர். இஸ்ராயேலரிடையே குருத்துவம் நூற்றாண் டுகளின் போக்கில் சமுதாய வளர்ச்சியையும் கோட்பாட்டு விளக்கத்தையும் குறிப்பிடத் தக்க அளவில் காணுகின்றது; எனினும், இக்குருத்துவம் எப்பொழுதும் அடிப்படை யான இரு பணிகளை ஆற்றிவருகின்றது; அப்பணிகள் இணைப்பாளரின் (தொடர்பு படுத்துகிறவரின்) இருவகைச் செயல்களா கும்: அவை, 1. வழிபாடு நடத்தும் பணியும், 2. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணி யுமாகும்.

1. வழிபாடு நடத்தும் பணி:- குரு திரு விடத்து ஆள். பழங்காலத்தில் குரு கடவுளின் பேழைக்குப் பாதுகாப்பாளர் (1 சாமு 1-4; 2 சாமு 15:24-29); இப்பொறுப்பினில், குரு விசுவாசிகளை ஆண்டவரின் ஆலயத்தினுள் வரவேற்கிறார் (1 சாமு 1); மக்கள் விழாக்கள் நடத்தும்போது குரு வழிபாட்டில் தலைமை தாங்குகிறார் (லேவி 23:11.20). குருவின் இன்றியமையாத பணி பலிசெலுத்துதலா கும். பலி செலுத்துவதில்தான் குரு, இணைப்பாளர் என்ற பொறுப்பின் நிறைவு பூண்டவராய்க் காணப்படுகிறார்; குரு கடவு

ளுக்கு மக்களின் காணிக்கையை முன்னிலைப்படுத்துகிறார்; கடவுளின் ஆசியைப் பெற்று மக்களுக்கு அளிக்கிறார். இவ்வாறு தான் சீனாய் மலையருகில் நடந்த உடன்படிக்கைப் பலியின்போது மோசே செய்கிறார் (யாத் 24:4-8); இவ்வாறுதான் குருத்துவக் குலமனைத்தின் தலைவரான லேவியும் செய்கிறார் (உப 33:10). நாடு கடத்தப்பட்ட பின்னர், நாள்தோறும் குருக்கள் இப்பணியை இடையறாத பலியில் நிறைவேற்றுகிறார்கள் (யாத் 29:38-42). ஆண்டுக்கொரு முறை, பரிகார நாளன்று தலைமைக்குரு தம் மக்களின் குற்றங்கள் அனைத்திற்கும் மன்னிப்புப் பெறும்படி பணியாற்றும்போது, தலைசிறந்த இணைப்பாளர் என்ற பொறுப்புள்ளவராய்க் காணப்படுகிறார் (லேவி 16; சீரா 50:7-23). மேலும், குரு திருநிலைப்படுத்துதல், தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றின் சடங்குமுறைகளுக்கும் பொறுப்புள்ளவர்; அரசரை அபிடேகம் செய்தல் - தைலம் பூசித் திருநிலைப்படுத்துதல் (1 அர 1:39; 2 அர 11:12); தொழுநோயாளிகளையும் (லேவி 14) பேறுகாலமான பெண்களையும் (லேவி 12: 6தொ) சுத்திகரிப்புச்செய்தல் - தூய்மைப் படுத்துதல் ஆகியவை.

2. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணி:- மெசபொத்தாமியாவிலும் எகிப்திலும் குரு குறிசொல்லும் பணியாற்றினார்; விசுவாசிகள் (மக்கள்) அறிவுரை நாடிய போது, குரு தம் கடவுளின் பெயரால் பதில் அளித்தார். பண்டைய இஸ்ராயேலரிடையே குரு எபோதையும் (1 சாமு: 307மு). யூரிம் தும்மீம் என்பவற்றையும் (1 சாமு 14:36-42; உப 33:8 காண்) பயன்படுத்திக் குறிசொல்லுவது போன்றதொரு பணியாற்றுகிறார்; ஆனால், தாவீதுக்குப் பின்னர், இதுபோன்ற நடைமுறைகளைக் குறிப்பிடக் காணோம்.

இஸ்ராயேலரைப் பொருத்த அளவில், இறைவனின் வாக்கு வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல, வேறு ஒரு வழியாக இறைமக்களை வந்தடைகின்றது. அந்த வழி, ஆவியால் தூண்டப்பெற்ற இறைவாக்கினர்களாவர். ஆனால், பரம்பரை வடிவில் வரும் இறைவாக்கும் உண்டு; இந்த இறைவாக்கு புனித வரலாற்றின் மாபெரும் நிகழ்ச்சிகளிலிருந்தும், சீனாய் மலை உடன்படிக்கை விதியின் கூறுகளிலிருந்தும் தொடங்குகிறது. மேற்குறிப்பிட்ட புனிதப் பரம்பரை, கடந்த காலத்துச் சிறந்த நினைவுகளை உயிர்ப்பிக்கும் விவரமான அறிக்கைகளில் ஓரளவும், அந்த அறிக்கைகளைக் கொண்டு தனது பொருளை உணர்த்தும் சட்டத்தில் ஓரளவும் உருப்பெறுகிறது. உப 4:14-16-இல் காணப்படும் ஆரோனைப்போலக் குருக்கள் இறைவனின் வாக்கை எடுத்துரைக்கும் திருப்பணியாளர்கள். திருவிழாக்களில் வழிபாட்டின்போது குருக்கள் விசுவாசிகளுக்கு, அவர்கள் விசுவாசத்திற்கு அடிப்படையாக இருக்கும் மேற்குறிப்பிட்ட அறிக்கைகளைத் திரும்ப எடுத்தோதுகிறார்கள் (யாத் 1-15; யோசு 2-6 ஆகியவை ஒருவேளை இத்தகைய வழிபாட்டுக் கொண்டாட்டங்களின் எதிரொலியாக இருக்கலாம்). உடன்படிக்கையைப் புதுப்பிக்கின்ற காலத்தில் குருக்கள் மோசேயின் சட்டத்தை விளம்பரப்படுத்துகிறார்கள் (யாத் 24:7; உப 27; நெக 8); அவ்வாறே குருக்கள் வழக்கமாக மோசேயின் சட்டத்தை விளக்கி, அறிவுரை நாடும் விசுவாசிகளுக்கு நடைமுறைக்குரிய போதனைகள் தருகிறார்கள் (உப 33:10; எரே 18:18; எச 44:23; ஆகா 2:11 தொ); தீர்ப்பளிக்கும் பொறுப்பினையும் நிறைவேற்றுகிறார்கள் (உப 17:8-13; எச 44:23 தொ). இத்தகைய பணிகளின் தொடர்ச்சியாகக் குருக்கள் பல்வேறு சட்டத்தொகுப்பேடுகளில் கண்ட திருச்சட்டத்தின் புதிய பதிப்பை எழுதி உறுதிப்படுத்துகிறார்கள்: உபாகமம், பரிசுத்தமாக்குதல்-தூய்மைப் படுத்துதல்-பற்றிய சட்டம் (லேவி 17-26), எசக்கியேல் தரும் திருச்சட்டம் (40-48), குருத்துவச் சட்டதிட்டங்கள் (யாத், லேவி, எண்), ஐந்நூலின் இறுதித்தொகுப்பு (எஸ் 7:14-26; நெக 8 காண்). எனவே, பரிசுத்த புத்தகங்களில் ஏன் குரு அறிவொளியாகக் காணப்படுகிறார் என்பது தெளிவாகிறது (ஓசே 4:6; மலா 2:6தொ; சீரா 45:21). வரலாறு, சட்டத்தொகுப்பேடுகள் என்று பரம்பரையாக வரும் வடிவத்தில், குரு

இறைவனின் வார்த்தைக்கு இணைப்பாளராய் இருக்கிறார்-இறைவனின் வார்த்தையை வாங்கி வழங்குபவராய் இருக்கிறார்.

யூதத்துவத்தின் இறுதி நூற்றாண்டுகளிலோ, செபக்கூடங்களின் எண்ணிக்கை பெருகிட, குருத்துவம் சடங்குமுறைப் பணிகளிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்துகிறது. அதே சமயத்தில், பொது நிலையினருள் தோன்றும் மறைநூல் அறிஞர்களின் அதிகாரம் வளர்வதைக் காணலாம். இவ்வறிஞர்கள் இயேசுவின் காலத்தில் பெரும்பாலும் பரிசேயர் கட்சியிற் சேர்ந்துகொண்டு இஸ்ராயேலரிடையே முதன்மையான ஆசிரியர்களாய் விளங்குவார்கள்.

III. நிறைவான குருத்துவத்தை நோக்கி:- பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் மொத்தத்தில் தன் திருப்பணிக்குப் பிரமாணிக்கமாய் இருந்து வந்துள்ளது: குருத்துவம் தன் வழிபாடுகளாலும் தன் போதனைகளாலும் பரிசுத்த நூல்களைப் புதிதாகப் பதிப்பித்தும் மோசேயின் வழியும் இறைவாக்கினர்கள் வழியும் வந்த பரம்பரையை இஸ்ராயேலரிடையே உயிருள்ளதாய்த் தொடர்ந்து பாதுகாத்துமுள்ளது. தலைமுறை தலைமுறையாக இறைமக்களின் சமய வாழ்வுக்குக் காப்புறுதி அளித்துள்ளது. எனினும், இக் குருத்துவம் இறுதியாக இடம் பெயர்ந்தாக வேண்டும்.

1. குருத்துவத்தைப் பற்றிய மதிப்பீடு:- குருத்துவப் பணி மிகக் கண்டிப்பான கடமைகளைக் கொண்டது; தமது பணிக்குத் தரம் குன்றிய குருக்களே எப்பொழுதும் இருந்தனர். இறைவாக்கினர்கள் குருக்களின் தவறுதல்களை இடித்துரைத்தனர்; இஸ்ராயேலரிடையே ஆங்காங்கு இருந்த திருவிடங்களில் நடந்த யாவேயின் வழிபாட்டினைக் கானானியரின் பழக்க வழக்கங்களைக் கொண்டு தீட்டுப்படுத்துதல் (ஓசே 4:4-11; 5:1-7; 6:9), எருசலேமில் புறச்சமயக் கலப்படம் (எரே 2:26தொ; 23:11; எச 8), திருச்சட்டத்தை மீறுதல் (செப் 3:4; எரே 5:8; எச 22:26), இறைவாக்கினர்களை எதிர்த்தல் (ஆமோ 7:10-17; ஏச 28:7-13; எரே 20:1-6; 23:33தொ; 26), தனி ஒருவரின் தன்னலம் (மீக் 3:11; தவிர 1 சாமு 2:12-17; 2 அர 12:5-9 காண்), ஆண்டவருக்குரிய வழிபாட்டில் ஆர்வக் குறைவு (மலா 2:1-9). இத்தகைய கண்டன உரைகளில், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு வகுப்பினர், அதாவது இறைவாக்கினர், குருக்கள் ஆகியோரிடையே எழுந்த வாதங்களை மட்டும் கண்டுகொள்ளுதல் அரைகுறை மதிப்பீடாகும். எரேமியாவும் எசக்கியேலும் குருக்கள்; உபாகமத்தையும், தூய்மைப்படுத்துதல் பற்றிய சட்டத்தையும் நூலாக்கிய குருக்கள் தம் சொந்த வகுப்பினரைச் சீர்திருத்த விரும்பினார்கள் என்பது வெளிப்படை; யூதத்துவத்தின் இறுதி நூற்றாண்டுகளில், 'கடவுள் பற்றற்ற' குரு ஒருவருக்கு எதிராக ஆலயத்தை விட்டு விலகிச் சென்ற கும்ரான் சமுதாயத்தினர் ஒரு குருத்துவப் பிரிவினர் ஆவர்.

2. குருத்துவத்தின் உயர்குறிக்கோள்:- குருத்துவ உயர் குறிக்கோள் ஒன்று இந்தக் கண்டனவுரைகள், சீர்திருத்தத் திட்டங்கள் ஆகிய அனைத்தையும் தூண்டியுள்ளது என்பது இங்குக் காணப்படும் முதன்மையான நோக்கம். இறைவாக்கினர்கள் தங்கள் காலத்துக் குருக்களுக்கு அவர்களுடைய கடமைகளை நினைவூட்டுகிறார்கள்: திருச்சட்டத்தின்மீது மெய்யான பற்றுதல் கொண்டிருத்தல் என்ற தூய வழிபாட்டினைக் குருக்களிடமிருந்து வற்புறுத்திக் கேட்கிறார்கள். குருத்துவச் சட்ட அறிஞர்கள் குருக்களின் தூய்மை, புனிதத்துவம், ஆகியவற்றை வரையறுத்துக் கூறுகிறார்கள் (எச 44:15-31; லேவி 21:10).

ஆனால், இத்தூய்மையையோ புனிதத்துவத்தையோ மனிதன் தன் சொந்த ஆற்றலால் மட்டும் கண்டடைய முடியாதென அனுபவம் உணர்த்துகிறது. இன்னும், இறுதியாகத் திரும்ப மீட்படையும் நாளன்றும் (செக் 3), தீர்ப்பின் நாளன்றும் (மலா 3:1-4) நிறைவான குருத்துவம் எய்தப்பெறும் என்ற நம்பிக்கை உள்ளதெனில், இறைவனே அந்த நம்பிக்கைக்கு அடிப்படை. தாவீதின் மக

னாக, மெசியாவுக்குப் பக்கத்தில் உண்மையான குரு ஒருவர் எதிர்பார்க்கப்படுகின்றார் (செக் 4;6:12தொ; எரே 33:17-22). இவ்வாறு, ஆரோன் வழித்தோன்றலும் இஸ்ராயேலர் வழித்தோன்றலுமான இரு மெசியாக்களைப்பற்றிய நம்பிக்கை, கும்ரான் நூல்களிலும், விவிலியத்தில் இடம் பெறாத ''குலத் தந்தையர்களின் உடன்படிக்கைகள்'' என்ற நூலிலும் பன்முறை காணப்படுகிறது. இந்த வாசகங்களில் உள்ளதுபோல் (செக் 3:8; 6:11) மேற்படி நம்பிக்கை இடம் பெற்ற பகுதிகளிலும் குருத்துவ மெசியா அரசுரிமை கொண்ட மெசியாவைவிட முக்கியத்துவம் பெறுகிறார். குருவின் இத்தகைய தலைமைச் சிறப்பு, உடன்படிக்கை பற்றிய கோட்பாட்டின் இன்றியமையாத பண்புக்குப் பொருத்தமாய் உள்ளது: இஸ்ராயேலர் ஒரு ''குருத்துவ மக்கள்'' ஆவர் (யாத் 19:6; ஏச 61:6; 2 மக் 2:17 தொ); இம்மக்கள் மட்டுமே உலகில் உண்மைக் கடவுளுக்குரிய வழிபாட்டை உறுதிப்படுத்துகிறவர்கள்; இம்மக்களே முழுமையடைந்த தமது இறுதி நிலையில் ஆண்டவருக்கு நிறைவான வழிபாடு செலுத்துவார்கள் (ஏச 40-48; ஏச 60-62; 2:1-5). ஆனால், இம்மக்களின் தலைமையில் குருத்துவம் இல்லையெனில், இதுவெல்லாம் எங்ஙனம் ஆகும்?

பழைய ஏற்பாட்டில், இறைவனையும் அவர்தம் மக்களையும் தொடர்புபடுத்தும் பணிகளுள் குருவின் பணியைத் தவிர்த்து வேறு பணிகளும் உண்டு. அரசன் இறைவனின் மக்களை அவர்களின் அமைப்பு, படை, அரசியல், சமயம் ஆகியவற்றின் தலைவராக வரலாற்றில் வழிநடத்துகிறார். இறைவாக்கினர் குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் தம் சகோதரர்களின் மீட்புக்குப் பொறுப்புள்ளவராய், அச்சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், இறைவனிடமிருந்து நேராகச் செய்தி ஒன்று கொண்டு செல்லும்படியாகத் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பெறுகிறார். இறைவாக்கினரின் பணியைப் போலக் குருவின் பணியும் கண்டிப்பாகச் சமயப் பணியாகும்; ஆனால் குரு நிறுவனங்களின் திட்ட அமைப்புக்குள் இருந்து தமது பணியாற்றுகிறார்; குரு பிறப்புரிமையாக நியமனம் பெற்று, திருவிடத்திற்கும் அதன் மரபுகளுக்கும் உரியவராகிறார். குரு, மக்களுக்கு, அவர்களின் சரியான தலைவர் என்றளவில் அல்ல, பரம்பரையின் பெயரால் இறைவனின் வார்த்தையைக் கொண்டு வருகிறார்; குரு புனித வரலாற்றில் நடந்த நினைவுகூரத்தக்க நிகழ்ச்சிகளைக் கொண்டாடுகிறார், மோசேயின் திருச்சட்டத்தைக் கற்பிக்கிறார். குரு வழிபாட்டின்போது மக்களின் செபத்தை இறைவனிடம் எடுத்துச் செல்கிறார், அருளாசி கூறி மக்களின் செபத்திற்குப் பதிலளிக்கிறார். குரு தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களிடத்தில் புனித பரம்பரையைக் கொண்டு சமய வாழ்வு நிலைபெற்றிருக்கும்படி உறுதிசெய்கிறார்.

ஆ. புதிய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டுச் சிறப்புக்கள் இயேசுவில் மட்டுமே தம் முழுப்பொருளையும் சிறப்பையும் பெறுகின்றன; இயேசுவே அச்சிறப்புகளை நிறைவுசெய்து, மேம்பாடுறச் செய்கிறார். இறைவெளிப்பாட்டின் இப்பொதுச் சட்டம் எல்லாவற்றிற்கும் மேலாகக் குருத்துவக் காரியத்திற்குப் பொருந்துகிறது.

I. இயேசு, ஒரு தனித்தன்மை வாய்ந்த குரு:-

1. ஒத்தமை நற்செய்தி நூல்கள் - இயேசு தாமே குரு என்ற பட்டப்பெயருக்கு ஒரு முறைகூட உரிமை கொண்டாடுகிறதில்லை. இதற்குக் காரணம் போதுமான அளவு புரிந்து கொள்ளத்தக்கது. இயேசுவின் சூழ்நிலையில் இப்பட்டப்பெயர் வரையறுக்கப்பட்ட ஒரு பணியைக் குறித்துக்காட்டுகிறது; அப்பணி லேவிகுலத்து உறுப்பினருக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது; இயேசுவோ லேவியர் பணியினின்றும் தமது கடமைப் பொறுப்பு முற்றிலும் வேறுபட்டதாகவும், இவ்வாறாக மிக முழுமையானதாகவும் மிகப் படைப்புத் திறனுள்ளதாகவும் கண்டுணர்கிறார். இயேசு தம்மை மகன் என்றும், மனுமகன் என்றும் பெயரிட்டு அழைத்திடப் பெரிதும் விரும்புகிறார். எனினும், அவர் தமது திருப்பணியை வரையறுத்துக் கூறுவ

தற்காகக் குருவிற்குரிய சொற்களைப் பயன் படுத்துகிறார். அவருடைய வழக்கப்படி, இத்தகைய சொற்றொடர்கள் பொருள் தொக்கி நிற்கின்றனவாகவும், உருவகப்படுத் திக்காட்டுகின்றனவாகவும் உள்ளன.

இவ்வாறு கூறுவதெல்லாம், இயேசு தமது சாவைக்குறித்துப் பேசும்போது சிறப்பாக வெளிப்படுகிறது. இயேசுவின் சாவு, அவரு டைய பகைவர்களுக்கு, இறை நிந்தைக் குரிய தண்டனையாக உள்ளது; இயேசுவின் சீடர்களுக்கு அச்சாவு இடறலாயிருக்கும் ஒரு தோல்வி. இயேசுவுக்கோ அவருடைய சாவு ஒரு பலியாகும். அவர் அப்பலியை பழைய ஏற்பாட்டு உருவகங்களைக் கொண்டு வரு ணிக்கிறார். சில வேளைகளில் இயேசு தமது சாவை, இறை ஊழியன் பரிகாரப்பலியாவ தோடு ஒப்பிடுகிறார் (மாற் 10:45; 14:24;த விர, ஏச 53காண்). இன்னும் சிலவேளைக ளில் இயேசு தமது சாவை, மோசே சீனாய் மலையடிவாரத்தில் ஒப்புக்கொடுத்த உடன் படிக்கைப்பலியோடு ஒப்பிடுகிறார் (மாற் 14:24; தவிர, யாத் 24:8 காண்); மேலும், பாஸ்கா விழாவின் போது இயேசு அளிக் கும் இரத்தம் பாஸ்கா செம்மறியின் இரத் தத்தை நினைவூட்டுகிறது (மாற் 14:24; தவிர, யாத் 12:7.13.22 தொ காண்). இயேசு தமக்குத் தண்டனையாக அளிக்கப்படும் சாவை ஏற் றுக்கொள்கிறார்; குரு பலிப்பொருளை ஒப் புக்கொடுப்பதுபோல், இயேசுதாமே தமது சாவை ஒப்புக்கொடுக்கிறார்; இவ்வாறு, அவர் பாவங்களைப் பரிகரிக்கவும், புதிய உடன்படிக்கையை நிலைநாட்டவும், தம் மக்களின் மீட்பைக் காணவும் எதிர்பார்க்கி றார். சுருங்கச் சொல்லின், இயேசு தமது சொந்தப் பலியை ஒப்புக் கொடுக்கும் குரு வாய் உள்ளார்.

பழைய ஏற்பாட்டுக் குருக்களின் இரண் டாம் பணி, திருச்சட்டத்தைச் சார்ந்த பணியா கும். இயேசுவோ மோசேயின் சட்டத்தைச் சார்ந்த அளவில் தெளிவானதொரு பொறுப் புள்ளவர், அவர் அச்சட்டத்தை நிறைவேற்ற வருகிறார் (மத் 5:17 தொ). அவர் எழுதிய சட்டத்திற்குக் கட்டுண்டவராய் இராது, அச் சட்டத்தை உயர்த்துகிறார் (மத் 5:20-48). அவர் அச்சட்டத்தின் ஆழ்ந்த மதிப்பை வெளிப்படுத்தி, அம்மதிப்பை முதன்மை யான கட்டளையிலும், அதையொத்த இரண் டாம் கட்டளையிலும் உள்ளடக்குகிறார் (மத் 22:34-40). இயேசு ஆற்றும் பணியின் இந்தப்பண்பு, பழைய ஏற்பாட்டுக் குருக்கள் பணியின் தொடர்ச்சியாக இருந்து, அதே பொழுது அவர்களின் பணியினையும் மிஞ்சு கிறது; ஏனெனில், இயேசுவின் வார்த்தை ஒப்புயர்வற்ற இறைவெளிப்பாடாகும், திருச்சட்டத்தை இறுதியாக நிறைவு செய்யும் மீட்பின் நற்செய்தியாகும்.

2. பவுல் தொடங்கி யோவான் வரை:-

பவுல் எத்தனையோ முறை இயேசுவின் சாவைப்பற்றிச் சிந்திக்கிறார்; அவர் தம் தலைவரான இயேசுவைப் பின்பற்றி, அச் சாவைப் பல உருவங்களில் காட்டுகிறார்: பாஸ்கா செம்மறிப் பலி எனவும் (1 கொரி 5:7), இறையடியானின் தாழ்ச்சிப் பலி என வும் (பிலி 2:6-11), பரிகாரத்திருநாள் பலி எனவும் (உரோ 3:24 தொ) காட்டுகிறார். தவிர, இத்தகைய பலிசார்ந்த விளக்கம் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொண்டு உறவாடுதல் (1 கொரி 10:16-22) கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்புப் பெறுதல் (உரோ 5:9; கொலோ 1:20; எபே 1:7; 2:13) போன்ற வருணனைகளிலும் திரும்ப வெளிப்படு கிறது. பவுலுக்கு இயேசுவின் சாவு இயேசு தன்னுரிமையுடன் (சுதந்தரமாய்) ஆற்றிய ஒப்புயர்வற்ற செயலாகும், எல்லாவற்றிற் கும் மேலான பலியாகும்; குருவுக்கே உரிய செயலாகும், இவ்வாறு இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். எனினும், அப் போஸ்தலரான பவுல் தம் தலைவரான இயேசுவுக்கும் மிஞ்சியவராய், இயேசுவுக் குக் குரு என்ற பட்டப்பெயரைச் சூட்டுகிறா ரில்லை; இந்தப் பட்டப்பெயருக்கு உரிமை கொண்டாடாதிருக்க, இயேசு கொண்டிருந்த காரணங்களையே அப்போஸ்தலரும் கொண்டுள்ளார் போலும்.

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைத் தவிர்த்து, புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்கள்

அனைத்திலும் இவ்வாறுதான் உள்ளது. இந்நூல்கள் இயேசுவின் சாவை இறைஊழியப் பலியாகவும் (அ.ப. 3:13.26; 4:27.30; 8:32 தொ; 1 பேதுரு 2:22 தொ), செம்மறியின் பலியாகவும் (1 பேதுரு 1:19) காட்டுகின்றன. இந்நூல்கள் இயேசு இரத்தத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் செய்கின்றன (1 பேதுரு 1:2.19; 1 யோவா 1:7). இந்நூல்கள் இயேசுவைக் குரு என்று அழைக்கக் காணோம். இப்போக்கில் யோவானுடைய நூல்கள் சிறிதளவு அடக்கக் குறைவு காட்டுகின்றன; இந்நூல்கள் இயேசுவைப் பெரிய குருவின் உடையில் வருணிக்கின்றன (யோவா 19:23; திருவெளி 1:13). பலிச் செயலான பாடுகளின் தொடர் உரை, இந்நூல்களில் ''குருவுக்குரிய செபத்தைக்'' கொண்டு தொடங்குகிறது (யோவா 17); பல ஒப்புக்கொடுக்கப்போகும் குருவைப்போல், இயேசு ''தம்மையே அர்ச்சனையாக்குகிறார்'', அதாவது, பலி ஒப்புக்கொடுத்துத் தம்மையே அர்ச்சனையாக்குகிறார் (திருநிலைப்படுத்துகிறார்) (17:19); இவ்வாறு இயேசு பயனுறுதி படைத்த இணைப்பாளரின் பணியாற்றுகிறார்; இத்தகைய பணிக்குப் பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் உரிமை கொண்டாடியது வீணாகத்தான்.

3. எபிரேயருக்கு எழுதிய திருமுகம் மட்டும் தெளிவாகவும் நிதானமாகவும் கிறிஸ்துவின் குருத்துவத்தைப்பற்றிப் பேசுகிறது. இது பற்றி ஏற்கனவே கண்டுள்ள அடிப்படையான கருத்துக்களை இத்திருமுகம் திரும்பவும் கையாண்டு, சிலுவைப் பலியைப் பரிகாரப்பலியாகவும் (9:1-14; தவிர, உரோ 3:24 தொ காண்), உடன்படிக்கைப் பலியாகவும் (9:18-24), இறைஊழியனின் பலியாகவும் (9:28 காட்டுகிறது. எனினும், இத்திருமுகம், கிறிஸ்து ஒப்புக்கொடுத்த பலியில், ஒப்புக்கொடுத்த கிறிஸ்து என்ற ஆளின் பணியைப்பற்றி முழுக்கவனம் செலுத்துகிறது. இந்த ஆள் இயேசு, இவர் ஆரோனைப் போலவும், இன்னும் அவருக்கு மேலாகவும் இறைவனால் அழைக்கப் பெறுகிறார்; எதற்காகவெனில், மனிதர்களின் சார்பாகத் தலையிடவும், அவர்களின் பாவங்களுக்காகப் பலிகள் ஒப்புக்கொடுக்கவுமாகும் (5:1-4). இயேசுவின் குருத்துவம், சங் 110:4-இல் கண்டுள்ள அருள்வாக்கினுக்குப் பொருத்தமாய், மெல்க்கிசதேக்கின் குருத்துவத்தில் நிழலாடியது (ஆதி 14:18 தொ). இக்கருத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, இத்திருமுக ஆசிரியர் பழைய ஏற்பாட்டு வாசகங்களுக்கு நுட்பமான விளக்கம் அளிக்கின்றார்; அரசரும்குருவுமான மெல்க்கிசதேக்கின் தலைமுறை வரலாறு பற்றி ஆதியாகமம் மவுனம் காப்பது இத்திருமுக ஆசிரியருக்குக் கடவுளின் மகன் என்றென்றுமுள்ளவர் என்பதற்கு அறிகுறியாகத் தென்படுகிறது (7:3); ஆபிரகாம் மெல்க்கிசதேக்கிற்குப் பத்திலொரு பங்கு அளிப்பது மேற்படி ஆசிரியருக்கு, இயேசுவுக்கு முன்னால் லேவியின் குருத்துவம் தரம் குறைந்தது என்பதைக் குறித்துக் காட்டுகிறது (7:4-10); இன்னும் அந்த ஆசிரியருக்கு, சங் 110: 4-இல் கண்டுள்ள இறைவனின் ஆணை, இறுதியாக வரும் குருவின் மாறாத முழு நிறைவினை அறிக்கையிடுகிறது (7:20-25); இயேசு ஒரு தனித்தன்மையுடைய குரு; புனித குரு (7:2 தொ). பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்திற்கு அவருடைய குருத்துவம் முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறது.

இயேசுவின் குருத்துவம் அவருடைய இயல்பிலும் இருப்பிலுமே வேரூன்றியது; இந்த உண்மை அவரை எல்லாருக்கும் மேலான இணைப்பாளர் ஆக்குகிறது: அவர் உண்மை மனிதன் (2:10-18; 5:7 தொ); சோதனைக்கும் உள்ளாகும் அளவுக்கு நமது தாழ்நிலையில் பங்கு கொண்டவர் (2:18; 4:15). அதேபொழுது, இயேசு கடவுளின் மகன்; வானதூதர்களுக்கும் மேலானவர் (1:1-13). இயேசு ஒரு தனித்தன்மையுடைய குரு; என்றென்றுமுள்ள குரு. அவர் ஒரே முறையில் எக்காலத்திற்குமே தமது பலியை நிறைவேற்றிவிட்டார் (7:27; 9:12.25-28; 10:10-14). இதுமுதற்கொண்டு, அவர் என்றென்றும் பரிந்து பேசுகிறவர் (7:24 தொ); புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் (8:6-13; 10:12-18).

*4.* கிறிஸ்து என்னும் மறையுண்மையை எந்த ஒரு பட்டப்பெயரும் தனிப்பட்ட நிலையில் முற்றிலும் உணர்த்துகிறதில்லை. இயேசு இறைத்தந்தையிடமிருந்து பிரிக்க முடியாத மைந்தன், மனுக்குலமனத்தையும் தம்முள் ஒன்றுகூட்டிச் சேர்க்கும் மனுமகன். அவர் ஒரே வேளையில் புதிய உடன்படிக் கையின் தலைமைக்குருவும், மெசியா-அரசரும், இறைவனின் வார்த்தையும் ஆவார். பழைய ஏற்பாடு, அரசன், குரு ஆகிய இணைப்பாளர்களின் பணிகளை (இம்மைக்குரிய பணி என்றும், ஆன்மீகப் பணி என்றும்) வேறுபடுத்தியிருந்தது; அவ்வாறே, குரு, இறைவாக்கினர் ஆகிய இணைப்பாளர்களின் பணிகளையும் (நிறுவ நிரந்தரமான பணி என்றும், குறிப்பிட்ட சூழ்நிலையில் நிகழ்கிற பணி என்றும்) வேறுபடுத்தியிருந்தது; இத்தகைய வேறுபாடுகள் இறைவெளிப்பாட்டிற்கு உரிய தனிச் சிறப்புக்களைப் புரிந்துகொள்வதற்கும் தேவையாகும். ஆனால், இயேசுவின் இயற்கை கடந்துநிற்கும் தன்மை அவரை வரலாற்றின் தெளிவற்ற நிலைகளுக்கு மேலே நிறுத்துகிறது; எனவே, தனி ஒருவர் என்ற நிலையில் அவர் தம்மிலேயே இணைப்பாளரின் மேற்குறிப்பிட்ட பல் பணிகள் அனைத்தையும் மீண்டும் ஒன்றுபடுத்துகிறார்; இறைமகன் என்ற அளவில், இயேசு நித்திய (நிலைபேறுடைய) வார்த்தை. இவ்வார்த்தை இறைவாக்கினர்களின் செய்தியை நிறைவுசெய்து, மேம்பாடுறப் பண்ணுகிறது; மனுமகன் என்ற அளவில், இயேசு மனுக்குலமனைத்தையும் தம்முள் மேற்கொள்கிறார்; அவர் மனுக்குலத்தின் அரசர்; அவர் காலம்வரை நாம் கண்டிராத அதிகாரமும் அன்பும் கொண்ட அரசர், கடவுளுக்கும் தம் மக்களுக்கும் இடையே ஒரு தனிப்பட்ட இணைப்பாளர் என்ற அளவில், இயேசு நிறைவான குரு; அவர் வழியாக மனிதர்கள் புனிதப்படுத்தப் பெறுகிறார்கள்.

II குருத்துவ மக்கள்:-

*1.* இயேசு குருத்துவத்தைத் தெளிவாகத் தமக்கு உடமையாக்கிக் கொள்வதில்லை; அதுபோலவே, தம் மக்களுக்கும் அதை உடைமையாக்குவதில்லை. ஆனால் இயேசு குருவாகச் செயல்புரிவதைத் தவிர்க்கவில்லை, இன்னும், அவர் புதிய ஏற்பாட்டு மக்களைக் குருத்துவ மக்கள் எனக் கருதியதாகத் தெரிகிறது. இயேசு தமது பலியை ஒப்புக்கொடுத்தும், இறைவார்த்தையை அறிவிக்கும் பணிபுரிந்தும் தம்மைக் குரு என வெளிப்படுத்துகிறார். இயேசு தமது குருத்துவத்தின் இவ்விரு பணிகளிலும் தம் சொந்த மக்கள் ஒவ்வொரும் பங்குகொள்ள அழைக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். சீடர் ஒவ்வொருவரும் அவருடைய சிலுவையைச் சுமக்கவேண்டும் (மத் 16:24); அவ்வுடைய கிண்ணத்தில் குடிக்கவேண்டும் (மத் 20:22; 26:27). ஒவ்வொருவரும் அச்செய்திக்காகச் சாகுமளவுக்கும்கூடச் சான்று பகரவேண்டும் (மத் 10:17-42). இயேசு மக்கள் அனைவரையும், மகன், அரசர்-மெசியா என்ற தமக்குரிய பட்டப்பெயர்களில் பங்கு கொள்ளச் செய்கிறதுபோல், அவர்களைத் தம்மோடு குருக்களாகவும் ஆக்குகிறார்.

*2.* அப்போஸ்தவர்கள் இயேசுவின் இத்தகைய கருத்தைப் பின்பற்றுகிறார்கள்; எனவே கிறிஸ்துவ வாழ்வை ஒரு வழிபாடாகவும், ஒரு தனித்தன்மையுடைய குருவின் குருத்துவத்தில் ஒருவகையில் பங்குகொள்வதாகவும் காட்டுகின்றார்கள். பவுல் விசுவாசிகள் கொண்டுள்ள விசுவாசத்தைத் 'திருப்பலியாகவும்' 'காணிக்கையாகவும்' (பிலி 2:17) கருதுகிறார்; அவர் பிலிப்பிய திருச்சபையிடமிருந்து பெறும்பல உதவிகள் ''நறுமணம் வீசும் காணிக்கையும், கடவுளுக்குப் பிரியமான, உகந்த பலிப்பொருளுமாகும்'' (பிலி 4:18). பவுலைப் பொறுத்த அளவில், கிறிஸ்துவர்களின் வாழ்வு முழுவதும் ஒரு குருத்துவச் செயலாகும்; கிறிஸ்துவர்கள் தங்கள் ''உடலைக் கடவுளுக்கு உகந்த பரிசுத்த பலியாகவும் உயிருள்ள பலியாகவும்'' ஒப்புக்கொடுக்கும்படி பவுல் அழைக்கிறார்; ''இதுவே நீங்கள் செலுத்தவேண்டிய ஆன்மீக வழிபாடு'' என்கிறார் (உரே 12:1; தவிர பிலி 3:3; எபி 9:14; 12:28 காண்). இந்த வழிபாடு, ஆண்டவரைப் புகழ்வதில் அடங்கும் அள

வுக்குப் பிறருக்கு உதவி புரிவதிலும், உடைமைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதிலும் அடங்கும் (எபி 13:15 தொ). யாக்கோபு எழுதிய திருமுகம், உண்மை வழிபாட்டினை உருவாக்கும் திட்டவட்டமான செயல்களை விவரமாகக் கூறுகிறது; நாவடக்கம், அனாதைகளையும் கைம்பெண்களையும் ஆதரித்தல், உலகத்தால் மாசுபடாமல் ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ளுதல் ஆகியன (யாக் 1:26 தொ).

பேதுரு எழுதிய திருமுகமும் திருவெளிப்பாடு நூலும் மக்களின் குருத்துவம்பற்றி வெளிப்படையாகப் பேசுகின்றன: இத்திருமுகமும் நூலும் இஸ்ராயேலரின் ''அரச குருத்துவத்தை'' கிறிஸ்துவ மக்களுக்கு உரித்தாக்குகின்றன (1 பேதுரு 2:5.9; திருவெளி 1:6; 5:10; 20:6; தவிர, யாத் 19:6 காண்). பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் அறிவிப்பதுபோல, இஸ்ராயேலர் அரச குருத்துவத்தினர் என்ற பட்டப்பெயர் பெற்றதன் காரணமாகப் புறச்சமய மக்களினங்கள் நடுவே, உண்மைக் கடவுளுக்குரிய வழிபாட்டை உறுதிப்படுத்த வேண்டும்., இப்பணியை இனிக் கிறிஸ்துவ மக்கள் மேற்கொள்வார்கள். இவ்வாறு கிறிஸ்துவ மக்கள் மேற்கொள்வதற்குக் காரணம், இயேசு அரசரும் குருவுமான மெசியா எனும் தமது மேன்மையில் அம்மக்களைப் பங்குபெறச் செய்வதாகும்.

III. இயேசுவின் குருத்துவத்தைச் சார்ந்த திருப்பணியாளர்கள்

புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு வாசகமும் திருச்சபையில் பொறுப்புடையவர்களுள் எந்த ஒரு நபருக்கும் குரு என்ற பெயரைக் கொடுக்கிறதில்லை. ஆனால், இயேசு, குரு என்ற பட்டப்பெயரைப் பயன்படுத்துவதில் மிக அடக்கமாக நடந்துகொள்கிறார்; இவ்வாறு, அவர் இப்பட்டப்பெயரைப் பொறுத்தளவில் மவுனம் காப்பது எதையும் மெய்ப்பிக்கிறது என்பது அரிது. இயேசு தம் மக்களைத் தமது குருத்துவத்தில் பங்குபெறச் செய்கிறார்; பழைய ஏற்பாட்டில் உள்ளது போலப் புதிய ஏற்பாட்டிலும் இறைமக்களுடைய இந்தக் குருத்துவம், இறைவனால் அழைக்கப்பெற்ற திருப்பணியாளர்களால் மட்டுமே உண்மையில் செயல்பட முடியும்.



1. இயேசு பன்னிருவரை அழைத்து, தமது திருச்சபைமீதான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார் என்பது நிலைநாட்டப்பட்ட உண்மை. அவர் அவர்களை இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணிக்கென்று ஆயத்தம் செய்தார்; அவர்களுக்குத் தமது அதிகாரத்திலும் ஓரளவு பங்குகொடுத்தனுப்பினார் (மத் 10:8.40; 18:18); மேலும், தமது இறுதி நாள் மாலையில் அவர்களிடம் நன்றித் திருப்பலித் திருவிருந்தினை ஒப்படைத்தார் (லூக் 22:19). இவையெல்லாம் இயேசுவின் குருத்துவத்தில் திட்டவட்டமான முறைகளில் பங்கு பெறுதலாகும்.

2. அப்போஸ்தலர்கள் இவ்வாறெல்லாம் புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு அடுத்துத் தங்கள் பணியைத் தொடர்ந்தாற்றும்படி பொறுப்புடையவர்களை ஏற்படுத்துகிறார்கள். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டவர்களுள் ஒருசிலர் மூப்பர்கள் என்ற பட்டப்பெயரைக் கொண்டிருக்கிறார்கள்; மூப்பர்கள் என்பது, குருக்கள் என்று நடைமுறையில் உள்ள பெயருக்குத் தொடக்கமாகும் (மூப்பர்கள்: அ.ப. 14:23; 20:17; தீத்து 1:5). பவுல் அப்போஸ்தலத்துவம், அருட்கொடைகள் ஆகியவை பற்றிச் செய்யும் ஆழ்ந்த சிந்தனை ஏற்கெனவே, திருச்சபையில் உள்ள திருப்பணியாளர்களின் குருத்துவத்தை நோக்கிச் செல்கிறது. பவுல் சமுதாயக் குடும்பங்களில் பொறுப்புடையவர்களுக்குக் குருத்துவப் பட்டப்பெயர்களை வழங்குகிறார்: ''கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர்கள்'' (1 கொரி 4:1 தொ) ''புதிய உடன்படிக்கையின் பணியாளர்கள்'' (2 கொரி 3:6); இன்னும் அவர் அப்போஸ்தலத்துவப் போதனையை ஒரு வழிபாட்டுப் பணிபோல வருணிக்கிறார் (உரோ 1:9; 15:15 தொ); இங்கிருந்துதான், பணிவிடைக் குருத்துவம்பற்றிய பரம்பரையில் மிகுதிப்படியான விளக்கங்கள் எல்லாம் தொடங்குகின்றன. எனவே, இப்பணி

*விடைக்குருத்துவம் தனிச்சலுகை பெற்றவர்களால் ஆன சாதி ஒன்றினை உருவாக்குவதில்லை. இப்பணிவிடைக் குருத்துவம், கிறிஸ்துவின் தனித்தன்மை வாய்ந்த குருத்துவத்திற்கோ, விசுவாசிகளின் குருத்துவத்திற்கோ தீங்கிழைப்பதில்லை. மாறாக, பணிவிடைக்குருத்துவம் இவ்விரு குருத்துவத்திற்கும் ஊழியம் புரிவதாய, இணைப்பாளரின் பணிகளில் ஒன்றாய் அமைகிறது; இணைப்பாளரின் பணிகள் எல்லாம் இறைமக்களுக்குரிய ஊழியத்தை உறுதிப்படுத்துகின்றன.*

### குருவி (SPARROW)

*காண்க: அடைக்கலான் குருவி.*

### குருவே! (MASTER!)

*இயேசுவின் பட்டங்களில் ஒன்று. பொறுப்பாளர் அல்லது தலைவர் என்ற பொருளில் குருவைக் குறிக்கும் கிரேக்கச் சொல் எழுபது நூலிலும் கிரேக்க இலக்கியங்களிலும் பலவகையான அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்பெயரை லூக்கா மட்டுந்தான் [illegible] இயேசுவை அழைக்கப் பயன்படுத்துகிறார் (லூக் 5:5; 8:24.45; 9:33.49; 17:[illegible])*

### குலத்தந்தையர்கள், குல மூதாதையர்கள்

*இவர்கள் இஸ்ராயேலின் குல முதியவர்கள். இவர்கள் இஸ்ராயேலர் கோத்திரங்களில், குலங்களில் சிறப்புமிக்கவர்கள். அவர்களிடையே ஆட்சித்தன்மை அல்லது நடுவர் பதவி வகித்தவர்களாவர் (1 நாள் 24:31: 27:22; 2 நாள் 19:8; 23:20; 26:12) ஆனால் குறுகிய பொருளில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய மூதாதையரே குலத்தந்தையர் அல்லது குல மூதாதையர்கள் என அழைக்கப்படுவர். புதிய ஏற்பாட்டில் தாவீதும் (அ.ப. 2:29). யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களும் (7:8-9) ஆபிரகாமும் (எபி 7:4) குலமூதாதையர்கள் என்றழைக்கப்படுகின்றனர். தந்தை, என்ற எபிரேயச் சொல் ஒருவருடைய ஆண் பெற்றோரை மட்டுமன்று, தூரத்து இன முன்னோரையும் குறிக்க வல்லது (ஆதி 10:21; [illegible]) இந்[illegible] கிரேக்க மொழியிலும் தந்தை என்ற சொல், இஸ்ராயேலின் குல மூதாதையர் உள்ளிட்ட முன்னோர்களைக் குறிக்கவல்லது (உரோ 9:5; 11:28; 15:8; 1 மக் 2:51-60). விவிலியத்தின் இறைவன், அடிக்கடி ''என்/எங்கள் தந்தையரின் கடவுள்'' என்றும் (ஆதி 31:5; தாணி 2:23: அ.ப.5:30) அல்லது மூதாதையரின் பெயர்களையும் கொண்ட இத்தகைய வாய்பாட்டாலும் (ஆதி 28:13; 31:42; யாத் 3:6) அழைக்கப்படுகிறார்.*

*குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளை மூன்று கதைச் சுழல்களாகப் பிரிக்கலாம். முதலாவது கதைச்சுழல், ஆபிரகாமையும் ஈசாக்கையும் பற்றியதாகும் (ஆதி 11:27-25:18). இரண்டாவது இஸ்ராயேலாகிய யாக்கோபையும் ஏசாவையும் பற்றியதாகும் (25: 19-37:1). மூன்றாவது யோசேப்பும் அவரது சகோதரர்களும் பற்றிய கதைகளைக் கூறுகிறது (37:2-50:26). வாக்களிக்கப்பட்ட நாடு (26:3; 28:4), சந்ததிகள் (12:2; 17:1; 22:17), குலமூதாதையர்கள் வழியாக உலகம் முழுவதும் ஆசிர்பெறும் என்ற வாக்குறுதி (12:3; 26:4; 28:14) ஆகியவற்றின் சூழ்நிலைகளில் இறைவனது அழைப்பு இந்த மூதாதையர்களுக்கு வந்தது. அவர்களும் அதற்குப பணிந்தனர். ஆனால் இந்நிகழ்ச்சியுரை மூதாதையர் கானானில் நுழைந்ததோடு தொடங்குகிறது; எகிப்தில் குடியேறியதோடு முடிகிறது; வாக்குறுதிகள் இனிமேல்தான் நிறைவேறவேண்டும். குலமூதாதையர்கள் அறிந்த கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டவராவார். இரு சந்தர்ப்பங்களில் இறைவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார் (ஆதி 15:17); இரண்டிலும் தாம் கட்டுப்பட்டவராக இறைவன் தோன்றுகிறார். இந்த உடன்படிக்கைச் சடங்குகள் இஸ்ராயேல் மக்களோடு இறைவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் முதல் வடிவங்களாகும் (17:7; யாத் 2:24; 34:10; யோசு 24:2 சாமு 23:5).*

*குலமூதாதையர்கள் நாடோடிகளாக, கூடாரங்களில் வாழ்ந்தவர்களாக ஆடு, மாடுகளைக் கொண்டிருந்தவர்களாகச் சித்த*

ரிக்கப்பட்டிருக்கின்றனர் (ஆதி 13:5-7; 18:7; 30:29-43; 37:2); ஆயினும் கிணறுகள் தோண்டினர் (21:30); பயிர் செய்தனர் (26:12); நகர்களுக் கருகில் குடியேறினர்; பீடங்களைக் கட்டினர் (13:18; 26:25); பலிகள் செலுத்தினர் (31:54; 46:1). இத்தகைய வாழ்வு கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டைச் சேர்ந்த வட யூப்பிரத் திசைச் சேர்ந்த மாரி ஏடுகளில் காணப்படும் மாதிரிகளோடு ஒத்துப்போகின்றது. நூசி ஏடுகளில் காணப்படும் வாழ்க்கைமுறைக்கு இணையாக உள்ளது. ஆயினும் மத்திய வெண்கலக் காலத்தில் எந்த நூற்றாண்டுகளில் இந்தக் குலமூதாதையர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்தொற்றுமை இன்றும் ஏற்படவில்லை.

குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளின் வரலாற்றுத்தன்மை கடுமையான சர்ச்சைக்குரியதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் வளர்ச்சியடைந்த வெல்காசனின் "ஏடுகள் கருதுகோள்" இக்கதைகளில் வரலாற்று மதிப்பீடே இல்லையென்று கருதியது. கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டு காலம் பற்றியச் செய்திகள் இன்று நமக்குக் கிடைத்திருப்பதுபோல் வெல்காசனுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த மூதாதையர்கள் நாட்டுப் பாடல்களாலும், இதிகாசங்களாலும் படைக்கப்பட்ட ஆட்களாகவும், அநேகமாக இந்த மூதாதையர்களிடமிருந்து தோன்றிய இனங்களின் ஆட்தன்மைப்படுத்தப்பட்டதின் விளைவாகவும் அவர்களைக் கருதினர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மெசபொத்தாமிய ஆப்பு எழுத்து ஏடுகளும் மற்றச் சான்றுகளும் ஆதியாகமத்தில் காணப்படும் வழக்கங்களைத் தெளிவுபடுத்தியுள்ளன. இவை ஆய்வாளர்களைக் குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளை மறுபரிசீலனை செய்யச் செய்துள்ளன. ஆயினும் இவர்கள் ஆதி 12-50- என்ற பகுதியின் வரலாற்று மதிப்பீடு பற்றி ஐயப்பாடே கொண்டிருந்தனர். ஆனால் பாலஸ்தீனத்தில் நடந்த தொல்பொருளாய்வுக் கண்டுபிடிப்புக்களால் அறிஞர்பலர் இந்நிகழ்ச்சியுரைகள் தன்மையால் நம்பத்தகுந்த வரலாற்று ஏடுகள் என்றும், இவை வரலாற்றுச் சூழ்நிலையில் வேரூன்றியவை என்றும் ஏற்றுக்கொண்டனர். 1970-இன் மத்தியில் தோன்றிய அறிஞர்களின் புதியதலைமுறையினர் ஆதியாகமம் பற்றிய இலக்கிய ஆய்வின் அடிப்படையிலும், விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகள் பற்றிய மறுபரிசீலனையின் அடிப்படையிலும், மேற்கூறப்பட்ட கருத்தொற்றுமையைத் தாக்கினர். இதன் விளைவாக, கருத்தொற்றுமைக்கு ஆதரவான சான்றுகள் கவனமாய் மறுமதிப்பீடு செய்யப்பட்டன. இதன்விளைவாக, சிலர் கருத்தொற்றுமையைக் கைவிட்டனர். மற்றவர்கள் அதன் திருந்திய வடிவில் அதைத் தொடர்ந்து ஆதரித்தனர்.

குலிதா (HULDAH - கீரியின் வகை)

சல்லூமின் மனைவி. இவள் ஓர் இறைவாக்கினள். "ஆடை வைக்குமிடத்தைக் காவல் செய்பவள்" (2 அர 22:14). சட்ட நூலை ஆலயத்திற்குள் கண்டெடுத்தபிறகு, ஆண்டவருடைய விருப்பத்தைக் கேட்டறிய இவளிடம்தான் யோசியா அரசன் தன் தூதர்களை அனுப்பினார். நாட்டின் மீது கடவுளுடைய தீர்த்தீர்ப்பைப் பற்றி இறைவாக்குரைத்தாள். ஆனால் யோசியாமனந்திரும்பிப் பாவப்பரிகாரம் செய்ததால் அவருக்குச் சமாதானத்தை இறைவாக்குரைத்தாள் (22:16-20). இந்த ஆலோசனைக்குப் பிறகுதான் யோசியா மதச் சீர்திருத்தங்களைச் செய்தார் (2 அர 23:1-25). குலிதாவின் இறைவாக்கு நிறைவேறியதா? என்பது கேள்விக்குரியதாகும். ஏனெனில், யோசியாசு பிறகு கொல்லப்பட்டார். மேலும், வழக்கத்துக்கு மாறாக ஒரு பெண் இப்படித் தீவிரமாக நடந்து கொள்வதற்கு உதாரணமாகவும் அமைந்து விடுகிறது.

குலோயி (CHLOE - பச்சைப்புல்டு, பசுமையாக.)

பவுல் எபேசில் பணிபுரிந்தபொழுது இவளது வீட்டில் உள்ள அடிமைகளோ, இவள் வீட்டாரோ அவரிடம் சென்று கொரிந்து திருச்சபையில் பிளவுகள் இருப்பதாகக் கூறினர் (1 கொரி 1:11). இவள் குறித்து

வப் பெண்ணா, அல்லது எபேசிலோ, கொரிந்து நகரிலோ வாழ்ந்தவளா என்பது பற்றித் தெளிவாகக் கூறப் போதிய ஆதாரங்கள் இல்லை. இருப்பினும் பவுலுக்கும் கொரிந்து மக்களுக்கும் நன்கு அறிமுகமானவளாக இருந்தாள்.

**குவார்த்து** (QUARTUS - நான்காவது)

பவுல் வழியாக உரோமைக் கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்து அனுப்பும் கொரிந்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர் (உரோ 16:23). கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடலில் இவரது பெயரும் அடிக்குறிப்பில் காணப்படுகிறது.

**குளம்** (POND, POOL)

இயற்கையான அல்லது செயற்கையான நீர்த்தேக்கங்களாகும். இவை மழை நீராலும், ஊற்றுக்கள் மற்றும் ஆறுகளிலிருந்தும் நிரப்பப்பட்டன. இவை, விவிலிய கிராமங்களுக்கு நீர் வழங்கியதில் முக்கியமானவையாகும். இவற்றில் பலவற்றை இன்றும் காணலாம். இவற்றைக் குறிக்கப் பல எபிரேயச்சொற்கள் பயன்பட்டுள்ளன.

இவற்றில் சிலவற்றை, சில இடங்களோடு தொடர்புபடுத்தி அடையாளங்காட்டலாம். அப்படிப்பட்ட இடங்களிலுள்ள குளங்களில் சில; கிபயோன் (2 சாமு 2:13); கெபிரோன் (4:12); சமாரியா (1 அர 22:38); கெசிபோன் (2 சாமு 7:4); எருசலேம் (2 18:17; ஏச 7:3; 36:2); சீலோவாம் (9:7).

நகருக்கு அருகிலுள்ள குளங்கள் பாறையில் குடையப்பட்ட நீர்த்தேக்கங்களாகும் (நெக 3:16; திருவுரை 2:6). அவற்றில், பாறையில் வெட்டப்பட்ட கால்வாய்களால் மழை நீர் சேகரிக்கப்பட்டது. முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்த சந்திப்பு இடங்களில் குளங்கள் குறிக்கப்படுகின்றன (2 சாமு 2:13; 1 அர 22:38). நகர் முற்றுகைக்கு ஆயத்தமாகும் போது குளங்களைப் பழுதுபார்ப்பது, புதியவற்றை அமைப்பது என்பன முக்கியமான செயல்களாகும் (2 அர 20:20). சில குளங்கள் குணமாக்கும் இடங்களாகவும் திகழ்ந்தன (யோவா 5:2-3; 9:7).

பாலைவனத்தை மாற்றியமைக்கும் இறைவனது ஆற்றலையும் (ஏச 41:18), நினிவேயின் அழிவையும் (நாகூ 2:8) இளம்பெண்ணின் கண்ணழகையும் (2 சாமு 7:4) சுட்டிக்காட்ட, குளங்கள் உருவகமாகப் பயன்பட்டுள்ளன.

இன்றும் இருக்கும் புகழ்பெற்ற குளங்களில் சில கெபிரோன், கிபயோன், எருசலேம் போன்ற இடங்களில் உள்ளவையாகும். பெத்திலேகேமின் அருகில் உர்தாசு பள்ளத்தாக்கிலுள்ள ''சாலமோனின் குளங்கள்'' மூன்றுள்ளன. 200 அடி அகலமுள்ளவை. இவற்றில் பெரியது 600 அடி நீளமும், 50 அடி ஆழமும் கொண்டது. உரோமையர் காலத்திலேயே இவை எருசலேமுக்கு நீர் வழங்கின. இதற்குக் கால்வாய்களின் சிதைவுகள் சான்று பகர்கின்றன. இப்போது அருகிலுள்ள மக்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

**குளவிகள்** (HORNETS, WASPS)

பாலஸ்தீனத்தில் காணப்பட்ட குளவிகள் பெரியவையாகவும் மஞ்சள், சிவப்பு நிறங்களுடையவையாயும் இருந்தன. எறும்பு, தேனீ போன்ற கூட்டு வாழ்வுடைய பூச்சிகளாகும். கானானியர்களை விரட்டியடிப்பதில், இஸ்ராயேலர்களுக்குச் சார்பாக இறைவனது தலையீட்டை விவரிக்கும்போது குளவிகள் விவிலியத்தில் குறிக்கப்படுகின்றன. (யாத் 23:28; உப 7:20; யோசு 24:12). இவை கொடிய பூச்சிகள், இவை தங்களது வேட்டைப் பொருளைக் கொட்டி அதை உணர்ச்சியற்ற பொருளாக்கியபின், அதன் உயிர்ச்சத்தை உறிஞ்சும். உருவகப்பொருளில், யாவேயின் தாக்குதல் கானானியர்களை உணர்ச்சியற்ற பொருளாக்குவதால், அவர்கள் எபிரேயர்களுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. இது, எகிப்திலிருந்து வந்த விடுதலைப் பயணத்தைப் போலவே, கானானை வெற்றிகொண்டதி

லும் யாவே முக்கியமான பங்கு கொண்டிருந்தார் என்பதைச் சுட்டுகிறது.

**குஃரிசங்கள், இளம்பிறை அணிகள்** (CRESCENT)

இது இளம்பிறை வடிவம் கொண்ட தாயத்து. அந்தக் காலத்திலே இதைக் கழுத்திலோ, ஆடையில் தைத்தோ அணிந்தார் (நீதி 8:21.26).

**குளித்தல், கழுவுதல், துவைத்தல்** (BATH, BATHING)

விவிலிய மொழியில் குளித்தலுக்கும், கழுவுதலுக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. ஆனால் துணிகளைச் சுத்தம் செய்தலுக்கும், உடம்பைச் சுத்தம் செய்தலுக்கும் வேறுபாடு உண்டு. ஆடைகள் நீருக்குள் வைத்துத் துவைக்கப்படுகிறது; மற்றப் பொருட்கள் நீரில் நனைத்துக் கழுவப்படுகிறது.

பாலஸ்தீனத்தில் உள்ள வறட்சியான வெப்பநிலை ஒருவன் குளிப்பதை ஊக்கப்படுத்தவில்லை. ஓடைகள் அல்லது குளங்கள் உள்ள இடத்தில் குளிக்கலாம் (2 அர 5:10; யோவா 9:7). ஆனால் முகம், கை, கால்கள் இவற்றில் காணப்படும் தூசுகள் கழுவப்பட வேண்டும். ஒப்பனையில் எண்ணெய் பூசு முன் ஒருவரது முகம், கை, உடம்பு முழுவதும் கழுவப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது (ஆதி 43:31; 2 சாமு 12:20; ரூத் 3:3; எச 23:40; உ.ச. 5:3). துக்க காலத்தில் முகமும், ஆடையும் கழுவாமல் விடப்படும் (2 சாமு 12:20; 19:25). இதைத்தான் நோன்பு இருக்கும்போது தவிர்க்கப்படவேண்டும் என இயேசு கூறினார் (மத் 6:17). விருந்தாளியை உபசரிக்க அவரது பாதம் கழுவுவதும் (ஆதி 18:4; நீதி 19:21), மற்றவரது பாதம் கழுவுவதும் அடிமையின் வேலையாகும்; இது தாழ்ச்சியையும் குறித்தது (1 சாமு 25:41; 1 தீமோ 5:10; யோவா 13). தாழ்ச்சியின் இந்த அடையாளம் உருவகமாகத் தலைகீழாகச் சங் 58:10-இல் நீதிமான் தீயவரின் இரத்தத்தில் தன் பாதங்களைக் கழுவுவான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிலாத்து இயேசுவின் விசாரணையில், கைகழுவுவது போன்று செய்வது குற்றமில்லாத் தன்மையைக் குறிக்கும் அடையாளமாகும் (உப 21:6; சங் 26:6; 73:13; மத் 27:24). உணவு உண்ணுமுன் கை கழுவுவது ஒரு சடங்காகப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நிலவியது (மத் 15:2; மாற் 7:3; லூக் 11:38). ஆடுகள் மயிர் கத்தரிப்புக்குமுன் கழுவப்பட்டன (உ.ச. 4:2). குழந்தைகள் பிறந்த பிறகும் (எசே 16:4) உடல்களை அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னும் (அ.ப. 9:37) திராட்சை ரசமும் (ஆதி 49:11), பாலும் (உ.ச. 5:12) பாடல்களில் கழுவும் பொருட்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சடங்குகளில் நீரினால் கழுவுவது பற்றிய குறிப்பு எண்ணிக்கையில் விஞ்சிவிட்டன. குருக்களும், லேவியர்களும் பீடத்திற்கு வருமுன்னும், பிற சடங்குகளின்போதும் தங்களது ஆடை, கை, கால், உடம்பு முழுவதையும் கழுவுவார்கள் (யாத் 30:20; லேவி 8:6; எண் 8:21). அத்துடன் தகனப்பலிகளின் தொடைகளையும் குடல்களையும் கழுவுவார்கள் (லேவி 8:21). பலவிதங்களில் தீட்டுப்பட்டவர்கள் தங்களது ஆடைகளையும் உடம்பையும் (லேவி 14:9; 15:5.13; எண் 19:10) கழுவுவார்கள். தீட்டுப்பட்ட ஆடையும் கழுவப்படவேண்டும் (லேவி 6:24).

பழைய ஏற்பாட்டில் கழுவுதல் என்பது பாவத்தைக் கழுவுவது என்று உருவகமாகக் குறிப்பிடப்பட்டது (ஏச 1:16; 4:4). இவ்விதம் குறிப்பது புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் கொடுத்தல் என்ற கருத்தில் கூறப்பட்டது (அ.ப. 22:16; எபி 10:22; எபே 5:26; தீத் 3:5). நான்கு முறை (சங் 51:2; எரே 2:22; 14:14) ஆடைகளைத் துவைத்தல் என்ற சொல் பாவத்திலிருந்து கழுவுதல் என்ற பொருளில் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது.

**குள்ளன்** (DWARF)

பலி ஒப்புக் கொடுக்க உடலளவில் தகுதியற்றவர்களாகக் குறிக்கப்படுபவர்களில் ஒரு வகையினர் (லேவி 21:20); குறிக்கப்படும் சூழ்நிலையில் பார்வைக் குறையுடையவனாகவோ, சூம்பிய அங்கம் கொண்டவனா

கவோ (வாதம், எலும்புறுக்கி நோய்) இருந் திருக்கவேண்டும். மற்ற இடங்களில் இந்த வார்த்தை 'மெலிந்த', 'சிறிய', 'மெல்லிய' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## குழந்தை (CHILD)

எல்லா மக்களையும் போன்று, இஸ்ரா யேல் மக்களும் பிள்ளைப்பேற்றில் இறைவ னுடைய ஆசியின் அடையாளத்தைக் காண் கின்றனர். பிள்ளைகளே ''முதியோரின் மணிமுடியாம்'' (பழ 17:6). மக்கள் ''பந்தி யைச் சுற்றியுள்ள ஒலிவச் செடிகள்'' (சங் 128:3). ஆனால், சில குறிப்பிட்ட நவீன காலத்தவரைப் போலன்றி, விவிலிய ஆசிரி யர்கள் குழந்தையானது முற்றுப்பெறாத உருவம் என்பதை மறந்துவிடாமல், திட்ட மிட்ட உறுதியான கல்வியின் முக்கியத்து வத்தை [illegible] கொண்டிருந்தனர். மடமை யானது அவனது இதயத்தில் [illegible] கொண்டுள்ளது (பழ 22:15), மனம் போலப் போகிற போக்கே அவனது சட்டம் (மத் 11.16 19). மற்றும் எல்லாக் காற்றுகளாலும் பந்தாடப்படாமலிருக்க (எபே 4:14), அவன் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட வேண் டும் (கலா [illegible]). இத்தகைய கூற்றுகளின் பின்னணியில் குழந்தையினுடைய சமயத் தகுதி பற்றிய விவிலியக் கருத்துக்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

1. இறைவனும் குழந்தைகளும்:-

தனக்கேயுரிய வலுவின்மை மற்றும் முழு மையின்மையின் காரணமாகப் பழைய ஏற் பாட்டின் குழந்தையானது இறைவனுடைய சலுகை பெற்றதாகக் காணப்படுகிறது. ஆண் டவரோ அனாதையின் பாதுகாவலராகவும், அவனது [illegible]களை நிறைவேற்றுபவராக வும், உள்ளார் (யாத் 22:21-22, சங் 68:5). எகிப்திலிருந்து வெளியேறல் மற்றும் [illegible] பயணம் போன்ற காலத்தி லிருந்து ''இஸ்ராயேல் குழந்தையாக இருந்த போதே'' தமது தந்தைக்குரிய கனிவையும், இஸ்ராயேலின் கல்விக்கான தமது அக்கறை யையும் அவர் காட்டினார் (ஓசே 11:1-4).

ஆண்டவரை வழிபடுவதிலின்று பிள்ளை கள் விலக்கப்படவில்லை; பாவபரிகார மன்றாட்டுக்களிலும் அவர்கள் பங்கேற்கின் றனர் (யோவே 2:16; யூதி 4:10-11). குழந்தை கள் மற்றும் சிறியோரின் வாயினின்று இறை வன் தமக்கெனப் புகழ்ச்சியைத் தயாரிக்கி றார் (சங் 8:2-3; மத் 21:16). தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இறைவனது ''தாய்க்குரிய'' அன்பின் அனுபவத்தைப் பெறக்கூடிய விண் ணக எருசலேமிற்கும் அவ்வாறே செல்வார் (எச 66:10-13). ஆண்டவரை நோக்கிய தனது உறுதியான கைவிடப்பட்ட நிலையினை வெளிப்படுத்த சங்கீத ஆசிரியரும், தனது தாயின் மடியில் உறங்குகின்ற குழந்தையை விட உயரிய உருவத்தைக் காணவில்லை (சங் 131:2). மேலும் தம்முடைய வெளிப் பாடு மற்றும் மீட்பின் பயனை முதலில் பெறுபவர்களாகவும், அதன் பயனாளர்களா கவும் குறிப்பிட்ட குழந்தைகளைத் தேர்ந்தெ டுக்க இறைவன் தயங்கவில்லை. சிறுவனா கிய சாமுவேல் ஆண்டவரின் வார்த்தை யைப் பெற்று, பிரமாணிக்கத்தோடு அதனை மற்றவருக்கு அளிக்கிறார் (1 சாமு 1-3); தாவீது அவருடைய மூத்த சகோதரர்களை விட, சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார் (1 சாமு 16:1-13); சூசன்னாவைக் காப்பாற்றுவதில் சிறுவனாகிய தானியேல் இஸ்ராயேலின் முதியோரைவிட ஞானமுள் ளவனாக விளங்குகிறார் (தானி 13:44-50).

இறுதியாக, மெசியா பற்றிய இறைவாக்கி னுடைய உயர் நிலையானது, மீட்பின் அடையாளமாகிய இம்மானுவேலின் பிறப் பாகும் (எச 7:14 தொ); தாவீதின் அரசோடு நேர்மையையும் நீதியையும் மீண்டும் ஏற் படுத்தக்கூடிய அரச குழந்தையைப் பற்றி எசாயா அறிவிக்கிறார் (9:1-6).

2. இயேசுவும் குழந்தைகளும்:-

புதிய உடன்படிக்கையினைத் தொடங்கு வதற்கு இறைமகன் தம்மையே ஒரு சிறு குழந்தையாக உருவாக்குவது பொருத்தமான தன்றோ? லூக்கா தேர்ந்தெடுத்த வாறு [illegible] வின் குழந்தைப்பருவத்தின் நிலைமைகளைக் கவனமாகக் குறிப்பிடுகின்றார்; முன்னணையி யில் கிடத்தப்பட்டிருந்த புதிதாய்ப் பிறந்தவர் (லூக் 2:12), ஆலயத்தில் காணிக்கையாக்கப்

பட்ட சிறு குழந்தை (2:27). தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்த குழந்தை ஆனாலும் தம்முடைய தந்தையைச் சார்ந்திருக்கும் நிலையில் மறைபொருள்மிக்க சுதந்தரத்துடன் பெற்றோரைச் சாராதிருந்த நிலை (2:43-51)

இளைஞனாக வளர்ந்த நிலையில், குழந்தைகள்பால் இறைவன் கொண்டிருந்த மனப்பான்மையையே இயேசுவும் கொண்டுள்ளார். ஏழைகளின் பேறுடைமையை அறிவித்ததுபோன்றே அவர் குழந்தைகளையும் ஆசிர்வதிக்கின்றார் (மாற் 10:16). இவ்வாறு அரசிற்குள் நுழைகின்ற நிலையில் அவர்கள் அவ்வாறே இருப்பர் என்பதை வெளிப்படுத்துகின்றார். குழந்தைகள், உண்மையான சீடர்களைக் குறிக்கும் அடையாளமாக உள்ளனர்; ''ஏனெனில், விண்ணரசும், இத்தகையோரதே'' (மத் 19:14). உண்மையில் ஒருவன் சிறுகுழந்தையைப்போன்று விண்ணரசை ஏற்றுக்கொண்டு (10:15) தங்களுக்குரியது என்று கோராமல், முழு எளிமையுடன் தந்தையின் கொடையாக அதைப் பெற வேண்டும். இந்த அரசில் நுழைவதற்கு அவன் ''குழந்தைப்பருவத்திற்குத் திரும்பி'' (மத் 18:3) ''மீண்டும் பிறக்கச் சம்மதிக்க வேண்டும் (யோவா 3:5). உண்மையான மேன்மையின் இரகசியமானது ''ஒரு குழந்தையைப்போலத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதலாம்'' (மத் 18:4). இத்தகைய உண்மையான தாழ்ச்சி இல்லாமல் ஒருவன் விண்ணகத் தந்தையின் மகனாக உருவாக முடியாது.

உண்மையான சீடர்கள் என்பவர்கள், முன்னர் தானியேலுக்குச் செய்ததைப் போன்று, தந்தை அருளுடன் ஞானிகளிடமிருந்து மறைக்கப்பட்ட மறைபொருள்களை வெளிப்படுத்துகின்ற ''சின்னஞ் சிறியோராவர்'' (மத் 11:25-26). நற்செய்தியின் மொழியில், சிறியோர் மற்றும் சீடர் என்னும் சொற்கள் சில இடங்களில் இணையானவையாக உள்ளன (மத் 10:42; மாற் 9:41). இச் சிறியோரில் ஒருவனை ஏற்றுக்கொள்பவர் ஆசிர்வதிக்கப்பட்டவர் (மத் 18:5; 25:40). ஆனால், அவர்களுக்கு இடறலாக இருப்பவர்களும், அவர்களைப் புறக்கணிப்பவர்களும் சபிக்கப்படுவர் (18:6.10).

3. அப்போஸ்தலிக்க மரபு:

குழந்தைப்பருவம் வெளிப்படுத்துகின்ற முழுமையற்ற நிலையினைப்பற்றி, பவுல் சிறப்பான முறையில் உணர்ந்திருந்தார் (1 கொரி 13:11; கலா 4:1; எபே 4:14). ''கிறிஸ்துவின் முழுமையை'' அடைவதற்காக அவர்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துமாறு அவர் கிறிஸ்தவர்களை வலியுறுத்துகின்றார் (எபே 4:12-16). கொரிந்தியரின் குழந்தைத்தனமான நடத்தைக்காக அவர்களைக் கண்டிக்கின்ற அவர் (1 கொரி 3:1 தொ) ஆன்மீகக் குழந்தைப்பருவம் பற்றிய பொய்யான கருத்திற்கு எதிராக அவர்களை எச்சரிக்கிறார். இயேசுவின் வார்த்தைகளைப்பற்றிய தவறான விளக்கத்திற்கு எதிர் எச்சரிக்கையாக இது தோன்றுகிறது (1 கொரி 14:20; மத் 18:3-4). ஆனாலும், சிறியோரின் சலுகையைப்பற்றி பவுல் அறியாமலில்லை; ''வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார்'' (1 கொரி 1:27-28). அவருடைய அப்போஸ்தலிக்க அன்பில் அவருடைய ''சின்னஞ்சிறு குழந்தைகளாகிய'' புதுக்கிறிஸ்தவர்பால் அவரது தன்னியல்பான மனப்பான்மையானது, தாயின் கனிவைக் கொண்டுள்ளது (1 தெச 2:7-8; கலா 4:19-20; 1 கொரி 4:15).

கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சியின் சட்டம்பற்றி இது போன்ற ஒரு கோட்பாட்டை எபி 5:11-14 கொண்டுள்ளது. ஏனெனில் பாலை மட்டுமே அருந்துகின்ற சிறு குழந்தையின் நிலையிலேயே இருப்பது பற்றிய கேள்விக்கு இடமே இல்லை. புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போன்று இறைவனுடைய வார்த்தையின் பாலுக்காக ஏங்குமாறு புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களை 1 பேதுரு 2:2 வலியுறுத்துவதென்பது, மீட்பில் அவர்கள் வளரவேண்டும் என்பதற்காகவே. யோவானைப் பொறுத்தவரை இறைவனது சுவிகாரப் பிள்ளைகளின் புதுப் பிறப்பை

விடக் குறைந்த அளவிலேயே ஆன்மீகக் குழந்தைப்பருவம் பற்றி அவர் பேசுகிறார் (1 யோவா 3:1). ஆனால், தனது பிள்ளைகளை நோக்கிப் பேசும்போது, பவுலைப் போன்றே ஒரு தந்தையாக அவர் அதிகமாகவே பேசுகிறார் (2:1.18; யோவா 13:33).

## குழந்தையைப்பெறுதல் (CHILDBEARING)

முதல் பெற்றோரின் பாவத்திற்குத் தண்டனையாக ''வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய்'' என்று மனுக்குலத்தினை இறைவன் சபித்தார். ஆயினும் விவிலியம் பிள்ளை பெறுதலின் துன்பத்தை அபூர்வமாகத்தான் குறிப்பிடுகிறது. மாறாகப் பிள்ளை பெறுதலை வலியுறுத்துகிறது (ஆதி 4:1.25). இருப்பினும் குழந்தைகள் பெறுவதிலுள்ள துன்பம் பற்றிய உருவகம் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில், குறிப்பாகப் பெரிய இறைவாக்கினர் நூல்களில் காணப்படுகிறது. ''பேறு காலம் நெருங்குகையில் கர்ப்பவதி தன் வேதனையில் வருந்திக் கதறுவது போல்'' இஸ்ராயேல் இறைவனிடம் மன்றாடுகிறது (ஏச 26:16-17). ''சீயோன் மூச்சுத்திணறும்'' பெண்ணாகவும், ''தன் முதற்பிள்ளை பெறுதலில்'' துன்புறும் பெண்ணாகவும் யூதா ஆட்தன்மைப்படுத்தப்படுகிறது (எரே 4:31). எரேமியா, இருமுறை வீரர்களை, பேறு காலப் பெண்கள் துடிப்பதோடு ஒப்பிடுகிறார் (48:41; 49:22). ''பேறுகாலப் பெண்கள் போல் ஏன் வேதனைப்படுகிறாள்?'' என்று ஏளனமாக மீக்கா சீயோனைப் பார்த்துக் கேட்கிறார் (மீக் 4:9-10). இறைவனின் சுத்தி செய்யும் தீர்ப்பின் துன்பங்களைப் பேறுகால வேதனையோடு ஓசேயா ஒப்பிடுகிறார் (ஓசே 13:13).

புதிய ஏற்பாட்டில் படைப்பு அனைத்தும் அழிவிலிருந்து விடுதலை அடைந்து மீட்பு அடைவதற்குமுன் அதன் துன்பத்தை விவரிக்கப் பேறுகால வேதனையை உருவகமாகப் பவுல் பயன்படுத்துகிறார் (உரோ 8:22). மேலும் ''கர்ப்பவதிகளுக்கு வேதனை ஏற்படுவது போலத்'' தீர்ப்பு வரும்; அதிலிருந்து ''யாரும் தப்பிக்க முடியாது'' என்று பவுல் கூறுகிறார் (1 தெச 5:3), மேலும் பெண் ''அடக்க ஒடுக்கத்தோடு விசுவாசம், அன்பு, பரிசுத்தத்தில் நிலைத்திருப்பின் தாய்மைப் பேற்றினால் மீட்புப்பெறுவாள்'' என்று (1 திமோ 2:15) மூன்றாம் முறையாகப் பவுல் குழந்தை பெறுதலைக் குறிக்கின்றார். இது சர்ச்சைக்குரிய வாசகமாகும். பிள்ளைப் பேறு மீட்புப் பெற ஒரு கருவியாக இருக்கலாம் என்று பவுல் கருதியிருக்கலாம். இது தான் அவள் மீட்புப்பெற இறுதியாகக் காரணம் என்று கூறவில்லை. பெண்ணின் பங்கை, குழந்தை பெறுவதற்காக மட்டும் அவர் வரைசெய்யவில்லை எனலாம். ஏனென்றால், எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டிய விசுவாசம் மற்றும் அன்பு என்ற பரந்த சூழ்நிலையில் இவ்வலுவலைக் குறிக்கிறார்.

## குழம்பு (BROTH)

இது இறைச்சி வேகவைக்கப்பட்ட நீராகும். இதிலே ஊட்ட உணவுப்பொருட்கள் தங்கிவிடுவதால் இது புறம்பே ஊற்றப்படுவதில்லை. மாறாக இறைச்சியோடு உண்ணப்பட்டது. கிதயோன், கடவுளின் தூதருக்குப் புளியாத அப்பத்தையும் ஆட்டுக்குட்டியின் இறைச்சியையும் குழம்பையும் உணவாக அளித்தார் (நீதி 6:19-20; ஏச 65:4; எச 24:10).

## குழல் (PIPE)

இசைக்கருவி. இது இரு குழலுடையதாகவோ (1 சாமு 10:5; 1 அர 1:40; ஏச 30:29; எரே 48:36; மத் 11:17; 1 கொரி 14:7; திருவெளி 18:22), ஒரு குழலுடையதாகவோ (ஆதி 4:21; யோபு 21:12; 30:31; சங் 150:4) இருக்கலாம். இது சில இடங்களில் புல்லாங்குழல் என்றும், சில இடங்களில் தாரை என்றும் குறிக்கப்படுகிறது. நெபுக்கதுனேசாரின் அவையில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளுள் பைக்குழல் குறிக்கப்பட்டுள்ளது (தானி 3:5.7.10.15).

குழல்களும் புல்லாங்குழல்களும் அடிக்கடி காதலோடு தொடர்புபடுத்தப்பட்டன. ஆகவே பொதுவாக, எருசலேம் ஆலயத்தில் பயன்படுத்தப்படவில்லை. இவை குறிப்பா

*கத் துக்க நிகழ்ச்சிகளில் பயன்பட்டதாகத் தெரிகிறது (எரே 48:36; மத் 9:23).*

## குழிமுயல், குறுமுயல் (BADGER, ROCKBADGER)

*சிறிய காதுகளையுடைய ஒருவகை முயல். இம்முயல்கள் பாறைகளைக் குடைவதில்லை. ஆனால் பாறைப்பகுதிகளை விரும்புவதாகக் குறிப்பிடப்படுகிறது (சங் 104:18; பழ 30:26). யோர்தான் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளிலும், இஸ்ராயேலின் தென் பாலைவனப்பகுதிகளிலும், கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளிலும் காணப்படுகிறது. இம்முயலின் தாடை ஆடிக்கொண்டேயிருப்பதால், இது அசைபோடும் விலங்கெனத் தவறாகக் கருதப்பட்டது. இது அசுத்த விலங்குகளில் ஒன்றாகும் (லேவி 1 1:5; உப 14;7).*

## குறடு, அள்ளு கருவி (SHOVEL)

*ஆண்டவருடைய பேழையின் முன் வைக்க வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களில் இந்தச் சாதனமும் இடம்பெறுகின்றது (யாத் 27:3; 38:3; எண் 4:14). அதேபோல் சாலமோன் ஆலயத்தைப் பற்றிய விளக்கத்திலும் இது இடம் பெறுகின்றது (1 அர 7:40.45; 2 நாள் 4:11.16). அள்ளுகருவிகள் வெண்கலத்தால் செய்யப்பட்டவை. பலிப்பீடத்தைத் தூய்மைப்படுத்துவதற்கும், நெருப்பு தழல் மீதுள்ள சாம்பலை நீக்கி விட்டு அதைச் சட்டியில் போடுவதற்கும் பயன்பட்டது (யாத் 27:3). கி.மு. 586-இல் எருசலேம் வீழ்ச்சியடைந்தபோது கல்தேயர்கள் எடுத்துச் சென்ற கொள்ளைப் பொருட்களில் இதுவும் இடம்பெற்றிருந்தது (2 அர 25:14; எரே 52:18).*

## குறிகூறல் (DIVINATION)

*சில மறைபொருளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கும் முறை. இது பழங்கால மெசபொத்தாமியாவில் அதிகம் பயிற்சி செய்யப்பட்டு வந்தது. மெசபொத்தாமியாவில் பயிற்சி செய்யப்பட்ட இந்தக் குறிகூறும் பழக்கம் பல இடங்களில் பரவியது. குறிப்பாக ஐரோப்பாவில் மத்திய, நவீன காலங்களில் இது அதிகமாகப் பரவியது. பெரும்பாலான மெசபொத்தாமிய இலக்கியங்கள் இந்தக் குறிகளுக்கு அளிக்கப்படும் விளக்கங்களாக அமைந்துள்ளன. மெசபொத்தாமிய குறிசொல்பவர்கள் கிடைக்கின்ற அடையாளங்களை வைத்தும், கடவுள்களின் அதிகாரம்பெற்ற சிலர் கூறும் வாக்குகளைக் கொண்டும், பல யூகங்களைக் கொண்டும் மக்களின் எதிர்காலங்களை விளக்கினர். சில பழக்கங்கள், செயல்கள் ஆகியவைக்ளை வைத்தும் எதிர்காலத்தைக் கூறினர். குறி சொல்லுவதில் பலவகை உண்டு. சீட்டுப் போட்டும், எய்யப்பட்ட அம்பு செல்லும் போக்கைக் கொண்டும், மந்திரக்கோலினாலும் குறிகூறுதல்; முகத்தோற்றங்கள், மற்றும் மனித நடத்தைகளைக் கவனித்தும், கைகளின் ரேகை பார்த்தும், பிறப்பு முறைகள், குறிப்பாக இயல்மீறி ஈனுதல், மிருகங்களின் நடத்தை ஆகியவைகளை வைத்தும், பலியிடப்படும் மிருகங்களின் கல்லீரலை வைத்தும் பறவைகள் பறக்கும் முறையைக் கொண்டும்; பல்லிகளை வைத்தும், நெருப்பின் கனல் வைத்தும், மரங்களின் அசைவைக் கொண்டும், புகையை வைத்தும், நீரில் ஒருதுளி எண்ணெய் நிலையை வைத்தும், வானத்துக் கோள்கள், மற்றும் அசாதாரண நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக்கொண்டும் குறிகூறினர்.*

*குறிகூறுதலைக் குறிக்கும் பல சொற்கள் எபிரேய மொழியில் உள்ளன. ஆனால் அவைகளின் சரியான பொருளைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினமாய் உள்ளது. யூத சட்டத்தில் குறிகூறுதல் தடுக்கப்பட்டிருந்தது; இதைப் பயிற்சி செய்பவர்களுக்குச் சாவு தண்டனையாக அளிக்கப்பட்டது (லேவி 19:31; 20:6; உப 18:10-11). சிலைவழிபாட்டைப் போல் குறிகூறுதலும் கொடிய பாவமாகும் (1 சாமு 15:23). சவுல் சூனியக்காரரையும் குறிசொல்பவர்களையும் நாட்டில் இராதபடித் துரத்தியிருந்தார் (1 சாமு 28:3). அவரே குறிகாரிகளில் ஒருத்தியைத் தேடி அலைந்தார் (1 சாமு 28:7 தொ). ஏசயா காலத்தில் நாடுகள் முழுவதிலும் குறிகூறுபவர்கள் மலிந்து காணப்பட்டனர் (ஏச 2:6; 8:19). இஸ்ராயேலர் குறிகேட்டும், சகுனம்*

பார்த்தும் இன்னும் பல தீய வழிகளில் நடந்தும் வந்ததனால் ஆண்டவருக்குக் கோபம் உண்டாக்கினர் (2 அர 17:17). மனாசே அரசன் குறிபார்த்துச் சகுனங்களையும் கடைப்பிடித்து ஆண்டவர் திருமுன் பாவம் செய்தான் (2 அர 21:6). யோசியா யூத நாட்டிலும் எருசலேம் நகரிலும் இருந்த மந்திரவாதிகளையும் குறிசொல்வோரையும் சிலைகளையும் தூய்மையற்றவைகளையும் அருவருப்பானவற்றையும் அழித்தொழித்தார் (2 அர 23:24). யூதாவில் காணப்பட்ட போலித் தீர்க்கதரிசிகளை எரேமியாவும், எசக்கியேலும் பயனற்ற குறிகூறுபவர்கள் (எரே 14:14; 27:9; எச 13:6.23) என்று அழைத்தார்கள். எச 21:26-இல் நெபுக்கதுனேசாரின் குறிகூறும் சாதனங்கள் குறிக்கப்படுகின்றன. இங்கு இறைவனே எருசலேமைத் தண்டிப்பதற்குத் தேவையான அடையாளங்களைக் கூறுகின்றார். ''இது என் தலைவர் பருகப் பயன்படுத்துவது அல்லவா? இது அவர் குறிபார்க்கப் பயன்படுத்துவது அல்லவா? (ஆதி 44:5.15) என்று யோசேப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## குறிசொல்பவர், சோதிடர் (ASTROLOGER)

தனி நபருக்கோ சமூகத்திற்கோ வருங்காலத்தில் என்ன நிகழும் என்று உறுதியாக அறிய உள்ள ஆவல், குறிசொல்லும் போலி விஞ்ஞானத்தைத் தோற்றுவித்தது எனலாம். வானத்திலுள்ள கோள்களின் கனம், இயக்கம், மற்றும் அமைப்புக்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் வானநூல் ஆய்வாளர்களைப் போல் அல்லாமல், குறிசொல்பவர்கள் விண்ணகத் தோற்றங்கள் மனித வாழ்வில் ஏற்படுத்தும் விளைவுகளில் அக்கறை செலுத்தினர். பழங்காலத்திலிருந்தே பாபிலோனிலும் எகிப்திலும் குறிசொல்லுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள் இருந்தனர். வானத்தில் தோன்றும் மாற்றங்கள் மற்றும் கோள்களின் இணைப்புக்கள் பூமியில் நிகழவிருப்பவைகளை முன்னறிவிக்க வல்லன என்ற நம்பிக்கையில் இவர்கள் வானத்தில் கோள்களை மிக நுணுக்கமாகக் கவனித்து வந்தனர்.

பழைய ஏற்பாட்டுச் சான்றுகளிலிருந்து, பழங்கால இஸ்ராயேல் குறிசொல்லுதலை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. குறிசொல்பவர்களைக் குறிக்கும் சில பகுதிகளும் பாபிலோனிய பழக்கத்தையே குறிப்பிடுகின்றன. ஏசயா பாபிலோனிய குறிசொல்பவர்களை ஏளனத்தோடு குறிப்பிடுகிறார். ''வான்வெளியைக் கவனிப்போரும், விண்மீன்களை ஆய்வோரும் நிகழவிருப்பதை அமாவாசைகளில் உனக்கு முன்னுரைப்போரும் வந்து நின்று உன்னை விடுவிக்கட்டும்'' (ஏச 47:13). ''வானத்தில் தோன்றும் அடையாளங்களைக் கண்டு கலங்காதீர்கள், வேற்றினத்தாரே அவற்றால் கலக்கமுறுவர்'' என்று எரேமியா (10:2) மக்களை எச்சரிக்கின்றார்.

நெபுக்கதுனேசாரின் கனவுகளை விளக்கிக்காட்ட மந்திரவாதிகளும், மாயவித்தைக்காரர்களும், சூனியக்காரர்களும், கல்தேயர்களும் அழைக்கப்படுகின்றனர் (தானி 2:2). இவர்களது தொழில் கனவுகளை விளக்குவது மட்டுமன்று. ஏனெனில் பேல்சசார் சுவரில் எழுதப்பட்டதை விளக்கவும் இவர்களுக்குப் பணிக்கிறார் (5:7). தானியேல் நெபுக்கதுனேசாரின் ''மந்திரவாதிகளின் தலைவர்'' என்று குறிப்பிடப்படுகிறார் (4:6; 5:11). ஆனால் தானியேல் ''அரசர் கேட்கும் மறைபொருளை அரசருக்கு அறிவிக்க எந்த ஞானியாலும் மாயவித்தைக்காரனாலும், மந்திரவாதியாலும் சோதிடனாலும் இயலாது. மறைபொருள்களை வெளிப்படுத்தும் விண்ணகக்கடவுள் பிற்காலத்தில் நிகழப் போவதை உமக்குத் தெரிவித்துள்ளார்'' 2:27-28) என்று அறிவிக்கிறார்.

## குறிசொல்லும் ஆவி (FAMILIAR SPRIKIT)

இறந்த ஆவிகளோடு தொடர்புகொண்டு பின்னால் நடக்கப்போவதை அறியும் பழக்கம் மேற்காசிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்தது. ஆவியுலகப்பேச்சு, சூனியக்காரன் என்று பொருளுடைய வார்த்தைகள் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன (1 சாமு 28:8; ஏச 29:4; உப 18:11; ஏச 1:19). சவுல் ஓர் ஆபத்தில் இருக்கும்போது இத்தகைய ஒரு சூனியக்காரியிடம் சென்று தனக்குக்

குறிசொல்லுமாறு கேட்டுக்கொண்டார். அவளும் சாமுவேலை வரவழைப்பதாக விவிலியத்தில் நாம் வாசிக்கிறோம்.

இவ்வாறு ஆவிகளோடு பேசிக் குறி சொல்லும் பழக்கம் பழைய ஏற்பாட்டில் தடை செய்யப்பட்ட ஒன்றாகும் (லேவி 19:31; உப 18:11; ஏச 8:19). அவ்வாறு குறிசொல்பவரும் குறி கேட்பவரும் சாவுத் தண்டனைக்குள்ளாவர் (லேவி 20:6.27; 1 நாள் 10:13). தங்கள் நாட்டினின்று குறிசொல் பவர்களைத் துரத்தின அரசர்கள் புகழ்ப்பட் டனர் (1 சாமு 28:3.9:2 அர 28:24). ஆனால் குறிசொல்பவர்களைத் தண்டிக்காத அரசர் கள் வெகுவாகக் கண்டனம் செய்யப்பட்ட னர் (2 அர 21:6; 2 நாள் 33:6).

குறிசொல்வோரின் கருவாலிமரம் (DIVENER'S OAK)

செக்கேம் நகர் அருகிலுள்ள ஒரு மரம். இம்மரத்தை அடையாளமாக வைத்துத்தான் மக்கள் ஊருக்குள் நுழைந்தனர் (நீதி 8:37). செக்கேம் அருகிலிருந்த மோரேயின் கருவாலி மரம் இதுவாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது (ஆதி 12:6; 35:4). முற் காலத்தில் இவ்விடத்தில் புனித மரம் ஒன்று இருந்திருக்கலாம் எனவும், அங்குக் குறி சொல்லுதல் நடந்திருக்கலாம் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது.

குறைபாடு, ஊனம், பழுது, மாசுமறு ((BLEMISH)

சமயச் சூழ்நிலையில் குருவிடமோ பலியி டப்படும் விலங்கிடமோ இருக்கக்கூடிய உடல்சார்ந்த குறைபாடுகளை இக்கருத்து குறிக்கும்.

திருவுறைவிடமாகிய கூடாரத்திலும், பிற் காலத்தில் ஆலயத்திலும் நடக்கும் சடங்கு வழிபாடுகள் எக்குறையுமின்றி மனிதனால் முடிந்த அளவு நிறைவாக நடக்கவேண்டும் என்பதால், ''ஊனமுற்ற குரு உணவுப் படை யலைச் செலுத்தல் ஆகாது'' (லேவி 21:17). ஆனால் ''கடவுளின் தூய அப்பத்தை அவர் உண்ணலாம்'' (21:22). பின்வந்த இறைவாக்கு களில் வரவிருக்கும் மீட்பர் இக்குறைகளி லிருந்து, குறிப்பாகக் குருட்டுத்தன்மை மற் றும் செவிட்டுத்தன்மையிலிருந்து அவரது மக்களை விடுவிப்பார் (ஏச 29:18; 35:5-6; 42:7). புதிய ஏற்பாட்டில் திருச்சபை ''அரச குருத்துவத்திருக்கூட்டம்'' (1 பேதுரு 2:9) என்றழைக்கப்படுகிறது. இது, உடலளவி லும் ஒழுக்க அளவிலும் ''கறைதிரையோ வேறுஎக்குறையோ இன்றி, பரிசுத்தமும் மாசற்றதுமாய்'' (எபே 5:27) இறைவன் முன் துலங்க வேண்டும்.

இவ்வாறே உடல் ஊனமுள்ள விலங்கு கள் பலிசெலுத்தப்படக் கூடாது (லேவி 20:20-24). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து ''மாசு மறுவற்ற செம்மறி'' (1 பேதுரு 1:19) என்ற ழைக்கப்படுகிறார். அவருடைய நிறைவி லிருந்து யாவரும் தூய்மை பெறுகின்றனர் (எபி 9:13).

குற்றங்களும், தண்டனைகளும் (CRIMES AND PUNISHMENTS)

ஒரு குறிப்பிட்ட செயலைச்செய்தால் தண் டனை கிடைக்கும் என்றுள்ள ஒரு சட்டத்தை மீறுவது குற்றமாகும். குற்றம் என்று சொல் லும்போது அது தனிமனிதவாழ்க்கையில் நடந்த ஒரு தவறைக் குறிப்பது அல்ல. மாறாகச் சமூகத்தோடு தொடர்புடைய சமூக நீதியைப் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். பழைய ஏற்பாட்டுச் சட்டமானது, குற்றம் புரிந்தவனைத் தண்டிக்கும் உரிமையைச் சமூ கத்திடம் கொடுக்கவில்லை. மாறாகப் பாதிக்கப்பட்டவனிடமே விட்டிருந்தது. இதுவே பழைய காலத்தில் மக்களிடையே பரவியிருந்த சட்டமுறையும் ஆகும். இப் படிச் செய்யும்போது, குறிப்பாகத் தலையாய குற்றங்களில், தனிப்பட்ட குற்றம் சாட்டுப வர், தனது நலனையும் பொதுநலனையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார். இது தீர்ப்பைச் செயல்படுத்துவதில் வெளிப் படுகிறது. அடிக்கடி குற்றம் செய்தவரைத் தண்டிப்பதில் சமூகம் முழுவதும் பங்கு பெறுகிறது.

I. பழைய ஏற்பாட்டின்படி குற்றங்களும்

குற்றங்களும் தண்டனைகளும் (தொடர்ச்சி)

தண்டனைகளும்:-

1. குற்றத்தின் இயல்பு:- விவிலியத்தில் குற்றவியல் சட்டமானது அண்மை மேற்காசிய நாடுகளில் காணப்பட்ட குற்றவியல் சட்டங்களைவிடச் சற்று வேறுபட்டது. காரணம் விவிலியக் கண்ணோட்டத்தின்படி சட்டம் என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது. அதை மீறினால் பாவம் ஆகும். மேலும், விவிலிய மரபுப்படி, சட்டமானது எல்லா இஸ்ராயேல் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. எனவே, இஸ்ரேலிய சமூகம் முழுவதும் சட்டத்தை நிறைவேற்றவேண்டும். அதன்படி குற்றம் புரிந்தவர்களை இஸ்ரேலிய சமூகம் தண்டிக்காவிடில் கடவுள் இஸ்ராயேல் சமூகம் முழுவதையும் தண்டித்து விடுவார் என்று கருதப்பட்டது. இந்தக் கருத்தானது இஸ்ராயேலின் நல்வாழ்வுக்குச் சொல்லப்படும் சட்டப்பகுதிகளின் முன்னுரையில் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது (லேவி 18:26-28; 26:3-45 உப 28.). பிற தேவர்களை வழிபடுதலும், பாலுணர்வுக் குற்றங்களும், கொலையும், சமூகம் முழுவதையும் குற்றப்படுத்துவதாகக் கருதப்படும் (மேற்சொன்ன குறிப்புகளும், உப 19:10; 21:1-9). ஆகவே குற்றங்களைப் பகிரங்கமாகத் தண்டிக்கும் போக்கைச் சட்டம் கொண்டுள்ளது.

புறவியலான குற்றத்தன்மை விவிலியத் தண்டனைச் சட்டங்களில் அவ்வளவு இடம் பெறவில்லை. குற்றம் செய்பவனின் எண்ணமே குற்றத்தின் இயல்பை நிர்ணயிக்கிறது. எனவே, விரும்பிச்செய்த கொலை, தெரியாமல் செய்த கொலை, என்று குற்றத்தையே சட்டம் பலவாறாகப் பிரித்து நோக்குகிறது. வேண்டுமென்று, திட்டமிட்டு ஒருவனின் உடலைக் காயப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஒருவனைக் காயப்படுத்துவதும், திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு ஒருவனைக் காயப்படுத்துவதும் சட்டத்தால் வேறு வேறாக நோக்கப்பட்டன. மேலும், இஸ்ராயேலர்களின் மதமானது, கடவுளுக்குச் சொந்தமானவை எல்லாம் தூய்மையானவை என்பதைப் பொதுவான மையமாகவும், தனிமனிதனின் அறநெறி வாழ்வின் முக்கியத்துவத்தைத் தனிமனித மையமாகவும், கொண்டிருந்தது. எனவே சட்டத்தின் அடிப்படையில் இந்த இரண்டு மையங்களுக்கும் இடையே போராட்டங்கள் நிகழ்வது உண்டு.

2. தண்டனையின் இயல்பு:- குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தேவ நீதியாகும். அதனால்தான் 1 அர 8:32-இல் ''நீர் விண்ணில் அவனது வழக்கை விசாரித்து, நீதி வழங்கி அநியாயக்காரனைக் கண்டித்து, அவனது கெட்ட நடத்தையை அவன் தலையின்மேல் சுமத்தி அவனைக் குற்றவாளியாகத் தீர்த்து, நீதிமானுக்கு அவனது நீதிக்குத் தகுந்தபடி நீதிமானாக்கி நீதி வழங்குவீராக'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச்சட்டத்தில் இதையே பின்பற்ற மனிதன் கட்டளை பெறுகிறான். ஏனெனில் பழ 11-10-இல் 'தீயோரின் அழிவைப் பார்த்து மக்கள் மகிழ்வார்கள்'' என்று கூறப்படுகிறது.

தலையாய குற்றங்கள் சமூகம் முழுவதையும் கறைபடுத்தியது. குற்றவாளி சட்டத்தின் தீர்ப்புப்படி கொல்லப்படவேண்டியவன். அவன் தண்டனையைப் பெறவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, மாறாகத் தீமையானது இஸ்ராயேலில் இருந்து அகற்றப்படவேண்டும் என்பதற்காகவுமே கொல்லப்படுகின்றான் (உப 17:17; 13:5; 17:7; 19:19; 21:21; 22:21-22.24; 24:7; நீதி 20:13; 2 சாமு 4:11). குற்றமில்லாத இரத்தப்பழியானது இஸ்ராயேலின்மேல் விழாமல் இருக்க, கொலை செய்தவன் சாகடிக்கப்படவேண்டும் (உப 19:13). பால் உணர்வுக் குற்றங்கள் நாட்டையும், நாட்டுமக்களையும் தீட்டுப்படுத்துகின்றன. அத்தகைய பாவங்கள் விலக்கப்படவேண்டும். அன்றி, நீ உன்னைத் தீட்டுக்குரியவன் ஆக்கிவிட்டால் நாடு தன் குடிகளைக் கக்கிவிடும் (லேவி 18:24-28). பொதுவில் ஒருவனுக்கு மரண தண்டனை அளிப்பதன் மதிப்பீட்டையும் விவிலியம் சொல்கிறது. ''மற்றவர்களும், அதைக் கேள்விப்பட்டு, அஞ்சி அப்படிப்பட்ட தீச் செயலைச் செய்ய அஞ்சுவார்கள்'' (உப 10:20; 17:13; 21:21).

சிறிய குற்றங்களுக்கான தண்டனை அந்தக் குற்றத்தைப்பொறுத்து வழங்கப்பட்டது. ஒருவனுடைய சொத்துக்கு எதிராகத் தீங்கு விளைவித்தவன், அவனது சொத்துக்களைக் கொண்டே தண்டிக்கப்படுவான். உடலுக்கு எதிராகத் தீங்கு விளைவிப்போர்கள் பழிக்குப்பழி என்ற முறைப்படி தண்டிக்கப்பட்டார்கள். அதாவது உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் (யாத் 21:23-25; லேவி 24:19-20; உப 19:21) என்று, எந்த அளவுக்கு ஒருவன் துன்புறுத்தினானோ அதே அளவு துன்பத்தையே அவனுக்குக் கொடுக்கவேண்டும். சொத்துக்கு எதிரான குற்றங்களைத் தலையான குற்றங்கள் என்று கருதாமையிலும், பழிக்குப்பழி என்ற கொள்கையிலும் விவிலியம் அண்மை மேற்காசிய நாடுகளின் சட்டங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

விவிலியச்சட்டம் சமயப்பண்பைக் கொண்டிருந்தாலும், சடங்குப்பரிகாரம் தண்டனை அளிப்பதில் இடம் பெறவில்லை எனலாம். திட்டமிட்டு மீறப்பட்டுச் செய்த எந்தக் குற்றத்திற்கும் பாவப்பரிகாரம் செய்ய முடியாது. லேவி 4-5-இல் வரும் பாவம் மற்றும் குற்றக்காணிக்கைபற்றிய விரிவான அமைப்பு அறியாது சட்டத்தினை மீறியது பற்றியதாகும்.

பல சமய, பாலினக் குற்றங்களைக் குருக்கள் சட்டம் தண்டிக்கிறது. குற்றம் செய்பவர்கள் இனத்திலிருந்து விலக்கிவைத்துத் தண்டிக்கப்படுவார்கள் (உம் ஆதி 17:14; யாத் 31:14; லேவி 18:7-29). இத்தகைய தண்டனைகளைப் பிற்காலத்தில் ''கரேத்து'' (வெட்டுதல்) என்று வழங்கியதாகத் தெரிகிறது. இதன் தன்மை தெளிவாக இல்லை. ''கரேத்து'' முறைப்படி தண்டிக்கப்பட்ட பல குற்றங்களுக்குக் குருத்துவ சட்டங்கள் மரண தண்டனை அளித்திருக்கின்றன (லேவி 18:8. 29-ஐ 20:11-ஓடும்; 10:17-ஐ 20:14-ஓடும்; 10:23-ஐ 20:15-ஒடும் ஒப்பிடுக) யாத் 31:14-15-இல் ஓய்வு நாளை மீறுவதற்காகக் கொல்லப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகிய இரண்டு தண்டனைகளும் இடம் பெறுகின்றன.

லேவி 20:4-5-இல் மோலக்கு விக்ரகத்தை ஆராதனை செய்பவனைத் தண்டிக்காதவர்களை ''நாம் நாடு கடத்துவோம்'' என்று கடவுள் பயமுறுத்துவது, இத்தகைய தண்டனையானது மனிதனால் கொடுக்கப்படுவதல்ல, கடவுளால் கொடுக்கப்படுவதே என்று மக்கள் நம்பியதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

II. சட்டங்கள் காணப்படும் இடங்கள்:-

விவிலியத்தில் காணப்படும் சட்டப்பகுதிகளும் நிகழ்ச்சியுரைப்பகுதிகளும் முக்கிய மூலங்களாகும். பிற்கால யூத இலக்கியங்கள் குறிப்பாகத் தன்னாயிமின் சட்ட நூற்கள் மதிப்புள்ள பிற்சேர்க்கைகளையும், விளக்கங்களையும் அளிக்கின்றன. பழங்கால மேற்காசிய நாடுகளில் காணப்படும் சட்டத் தொகுப்புகள் இதற்கு ஒத்த, எதிர்மறையான சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

1. சட்டத்தொகுப்பு:- யாவே-எலோயிம், குருக்கள், உபாகமம் ஆகிய பாரம்பரியங்களைச் சேர்ந்த மூன்று தொகுப்புகளும் தங்களுக்கே உரிய வரலாற்றையும் நடையையும் கொண்டிருந்தாலும், குற்றங்கள் மற்றும் தண்டனைகள் பற்றிக் கொள்கையளவில் ஒருமைப்பாடு கொண்டுள்ளன. அழுத்தம் வேறுபடலாம். வளர்ச்சியின் விவரங்களில் வேறுபாடுகள் தோன்றலாம்.

குற்றவியல் சட்டத்தொகுப்பில் காணப்படும் கீழ்க்காணும் பண்புகள், இவற்றைப் பிற அண்மை மேற்காசிய நாட்டின் சட்டங்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன.

அ) எல்லாச் சட்டத்தொகுப்புக்களும், இறைவனே சட்டம் அளிப்பவர் என்றும், அவற்றை மீறுபவர்களுக்கு இறுதியாகத் தண்டனையைத் தருபவரும் அவரே என்றும் ஏற்றுக்கொள்கின்றன.

ஆ) இவற்றில் மத, சமூகக் குற்றங்களும் அடங்கும்.

இ) இவை திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட கொலையை, எதிர்பாராதவிதமாக

நடக்கும் கொலையிலிருந்து தெளிவாகவும், அழுத்தமாகவும் வேறுபடுத்துகின்றன.

ஈ) இவை சொத்துரிமைச் சட்டத்தை மீறு வதற்காக மரணதண்டனை அளிப்பதில்லை.

உ) இவை தன்னிச்சையான தண்ட னையை விலக்கும் நோக்கத்துடன் பழிக்குப் பழி என்ற தண்டனை முறையைப் பயன் படுத்துகின்றன.

ஊ) இவை தண்டனை அளிப்பதில் இஸ் ராயேல் வகுப்பு வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதில்லை.

சட்டத்தொகுப்பின் சமூக வடிவமைப்பா னது அரசாட்சி வகையைச் சார்ந்தது அல்ல; மாறாகப் பழங்குடி வகையைச் சார்ந்தது என்பதை நாம் கவனிக்கவேண்டும். குற்றங் களைத் தண்டிக்கும் சட்டம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவனோ அவனது உறவி னனோ தண்டிக்கவேண்டும் என எதிர்பார்க் கிறது; நீதிமன்றம் அல்ல. சுயஉதவி உரிமை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற்காக, எபி ரேயர்களின் குற்றவியல் சட்டங்களுக்கு வர லாறு இல்லை என்று சொல்லிவிடமுடி யாது. ஆனால் பிற்கால அரசியல் அமைப் புக்களின் பாதிப்பு இந்தச் சட்டத்தில் ஏற் பட்டு, வளர்ச்சியடைந்த நிலையை, விவிலி யத்தை வாசிக்கும்போது தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிகிறது.

2. சட்டமல்லாத இலக்கியங்கள்:-
சட்டத்தொகுப்புகளுக்குப் புறம்பாகக் குற் றங்கள் கட்டிக்காட்டப்படுவது. இவற்றில் சில, சில நேரங்களில் குறிப்பிட்ட சட்டத் தோடு ஒத்துப்போகின்றன. சில நேரங்களில் ஒத்துப்போவதில்லை. ஏன் ஒத்துப்போக வில்லை என்று பார்ப்போமாயின் ஒன்று சட்டத்தில் வளர்ச்சி ஏற்பட்டு மாற்றம் ஏற் பட்டிருக்கும் அல்லது சட்டத்திற்கும் நடை முறைவாழ்க்கைக்கும் உள்ள இடைவெளி, காரணமாக இருக்கும்.

இதைச்சார்ந்த சில நிகழ்ச்சிகளின் தொடர்பு கேள்விக்குரியதாக இருக்கின்றது. இலாபானின் கடவுளைத் திருடியவர் யாரானா லும் கொல்லப்படுவார்கள் என்று யாக்கோ பின் கதையில் வருவது, தொடக்க காலத்தில் 'தந்தை தலைமைக்குடும்பம்' என்ற கருத் திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறதேயன்றி அங்கு நடந்த திருட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. 2 சாமு 12:5-இல் நாத்தா னின் உவமையில் ஆடுதிருடிய பணக்காரன் கொல்லப்படவேண்டும் என்று தாவீது சொல்வது, திருட்டு தலையாய தண்டனைக் குரிய குற்றம் என்று சொல்வதற்கான சான்று ஆகாது. பழ 6:31-இல் வரும் 'திருடன் ஏழுமடங்கு திரும்பக் கொடுக்கவேண்டும்'' என்ற குறிப்பானது பலமடங்கு தண்ட னையை மிகைப்படுத்திக் கூறுவதேயாகும்.

தந்தையின் மகளை மணந்து கொள்வ தைப்பற்றி விவிலியத்தில் சொல்லப்படுவ தற்கும் சட்டத்திற்கும் இடையே பெரிய வேறுபாடு காணப்படுகின்றது.

தந்தையின் மகளை மணம் செய்வது ஆதி 20:12-இல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாவீ தின் காலம்வரை அனுமதிக்கப்படுகிறது (2 சாமு 13:13). லேவி 18:9; 20:17-இல் இது தடைசெய்யப்படுகிறது. யாக்கோபு கதை யில் (ஆதி 29:21) இரண்டு சகோதரிகளை மணப்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், லேவி 18:18-இல் இது தடைசெய் யப்படுகிறது. சட்டம், நெருங்கிய உறவினர் களுக்குள்ளே புணர்ச்சி என்ற கருத்தை விரிவு படுத்தும் பிற்காலப் போக்கைப் பிரதி பலிக்கிறது. ஒருவருக்குப் பதிலாக இன்னொரு வர் தண்டிக்கப்படக்கூடாது என்கிறது உப 24:16:''மக்களுக்குப் பதிலாய்ப் பெற்றோர்க ளேனும், பெற்றோர்களுக்குப் பதிலாய் மக்க ளேனும் கொலைசெய்யப்படவேண்டாம். அவனவன் செய்த பாவத்திற்கு அவனவனே கொலை செய்யப்படுவான்''. இந்தச் சட்ட மானது அமாசியாவின் ஆட்சியில் மட்டும் ஒரே ஒருமுறை கடைப்பிடிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது (8-ஆவது நூற்றாண்டில் 2 அர 14:6). இதற்கு முன்பு ஒருவருக்குப் பதில் இன்னொருவர் அல்லது கூட்டாகத் தண்டிக்கப்படுதலுக்குப் பல நிகழ்ச்சிகள்

காணப்படுகின்றன. ஆக்கான் செய்த குற்றத்திற்காக அவனது குடும்பமும் கொல்லப்படுகிறது (யோசு 7:24-26), யாபேசு-கிலயாத்து மக்களின் அழிவு (நீதி 21:10-11), குருக்கள் இனத்தவரின் அழிவு (2 சாமு 22:19) சவுலின் மகள்களின் அழிவு (2 சாமு 21) நாபோத்தின் மகன்களின் அழிவு (2 அர 9:26) போன்றவை சில எடுத்துக்காட்டுகள் ஆகும். இதிலிருந்து, உப ஆகமப் பாரம்பரியச் சட்டங்கள் பிற்காலத்தில் உருவாகி வளர்ச்சி அடைந்தவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் மேற்கூறிய அனைத்து எடுத்துக்காட்டுகளும், கடவுளின் கட்டளைகளை எதிர்த்ததால், கடவுளால் அளிக்கப்பட்டவையாகக் கருதப்பட்டவை ஆகும். எனவே, ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் தண்டிக்கப்படுவது சட்ட பூர்வமாக இல்லை என்றாலும், கடவுளின் தீர்ப்பாகச் சில நேரங்களில் கருதப்பட்டது. இதற்கு ஆதாரமாக யாத் 20:5-ஐ சுட்டிக்காட்டலாம். அதில் கடவுளே கூறுகிறார்: ''உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கிற நாம் வல்லவரும், எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம். நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம், மூன்றாம், நான்காம் தலைமுறைவரை விசாரித்து, வருகிறவராய் இருக்கிறோம்''. கடவுளின் இந்தச் சுதந்தரத்திற்கும் உப 24:16-இல் மனிதனால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும் சட்டபூர்வமான தண்டனைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இரண்டும் இரண்டுவிதமான ஆட்சிக்கு உட்பட்டவை.

சட்டம் செயல்பட்டமுறைக்குச் சட்டமல்லாத பகுதிகள்தான் சான்றுபகர்கின்றன. இவற்றில் சில: இரத்தத்திற்குப் பழிவாங்குதல் (2 சாமு 3:27. 30; 14:6-11); அடைக்கலப் பீடம் (1 அர 1:51; 2:28தொ); இறைவனை (மற்றும் அரசனை) நிந்தித்தல் (1 அர 21:10); வேசியை எரித்தல் (ஆதி 38:24); சூனியக்காரர்களை அழித்தல் (1 சாமு 28:9); போலித் தீர்க்கதரிசி(எரே 26:7-24); பிறதேவர்களை வழிபட்டதற்கான தண்டனைகள் ஆகியவை ஆகும்.

பொதுவாகச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் மதிப்புமிக்கவை. காரணம் அரசன், நாடு போன்றவற்றிற்கு எதிராகக் கூறப்படும் குற்றங்கள் எல்லாம் இத்தகைய இலக்கியங்களில்தான் காணப்படுகின்றன.

3. விவிலியம் பற்றிய யூத நூல்கள்:- பீலோ, யோசிப்பஸ் ஆகியவர்களின் நூற்கள் இரண்டாவது ஆலயம் கட்டப்பட்ட நேரத்தில் உள்ள சட்ட ஒழுங்குகளைப்பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. தன்னாயிமின் எனும் சட்டமுறை நூலானது தொடக்ககாலச் சட்டவியலைத் தெளிவாக விளக்குகின்றன.

யூதர்கள் விவிலியச்சட்டங்களை ஒருங்கமைவுடைய முழுமையாகக் கருதியதால் அவர்கள் வரலாற்றைப் பற்றிக் கண்டுகொள்ளவே இல்லை. அவர்கள் பயன்படுத்திய விளக்க முறைகளை இக்கால ஆய்வாளர்கள் கைவிடவேண்டும். விவிலியச்சட்டம் சில பொதுவான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றது என்ற அளவில், ஒத்தமை நோக்கு பயனளிக்கும்.

4. பழைய மேற்காசிய நாடுகளின்சட்டம்:- விவிலியத்தில் உள்ள சட்டங்களைப் புரிந்து கொள்ள பழைய மேற்காசிய நாடுகளின் சட்டம் மிகவும் உதவுகின்றது. இந்த மேற்காசிய நாடுகளின் சட்டமானது விவிலியச் சட்டங்களைப்போல அல்லாமல், மன்னர்கள், அரசமைப்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டவையாகும். சட்டங்களை உருவாக்குவது அரசனுக்குரிய ஒரு தெய்வீகக் கடமையாகக் கருதப்பட்டாலும், ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மதஉணர்வோடு சம்பந்தப்பட்டு ஏற்படுத்தப்படவில்லை. தண்டனைக்குரிய சட்டங்கள் பொருளாதாரத்தை மனதில் கொண்டும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காமல் அவற்றைப் பாதுகாப்பதை மனதில் கொண்டும் இயற்றப்பட்டன. கொலை நிகழ்வில் இழப்புக்கு ஈடாகப் பணமோ, ஓர் உயிரோ கொடுக்கப்படவேண்டும். சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்தார்கள். ஒருவன் செய்த தீச்செயல்களையும்,

அவன் பெற்ற தண்டனைகளையும் கொண்டே சமூகத்தில் அவனது சமூகநிலை கணிக்கப்பட்டது. பாலினக் குற்றங்கள், கடவுளுக்கு எதிராகக் கருதப்படாத குற்றங்கள் போன்றவைகளுக்குக் குறைவான தண்டனைகளே வழங்கப்பட்டன. விவிலியச் சட்டங்களில் பல, மேற்காசிய நாடுகளின் சட்டங்களில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவையாகும். பழைய ஏற்பாட்டுக் குற்றவியல் சட்டமானது, எசுன்னாவின் சட்டத் தொகுப்பு கம்முராபியின் சட்டத்தொகுப்பு, இடைக்கால அசீரியச் சட்டங்கள் ஆகிய பல சட்டத்தொகுப்புக்களிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டவையாகும்.

III. பழைய ஏற்பாட்டின் குற்றவியல் சட்டம்:-

பின்வரும் பகுப்பு, குற்றம் தலையாய, உடல்சார்ந்த, சொத்து சார்ந்த தண்டனையைப் பெற்றதா என்பதைப் பொருத்ததாகும்.

1. கடவுளுக்கும், மதத்திற்கும் எதிரான குற்றங்கள்:-

எல்லாச் சட்டங்களையும் கடவுள் கொடுத்ததால், அவற்றை மீறும்போது எல்லாம் கடவுளுக்கு எதிரான குற்றமாக மாறுகின்றன. என்றாலும், கீழ்க்கண்ட குற்றங்கள், நேரடியாகக் கடவுளுக்கு இழைக்கப்படுகின்ற குற்றமாகக் கருதப்பட்டு, மரணதண்டனை வழங்கப்படும்.

அ. பிறமதக் கடவுளை வழிபடுதல்:-

பிறமதக்கடவுளை வணங்குவது தண்டனைக்குரிய காரியமாகும் (யாத் 20:3-5). அவ்வாறு பிற மதக்கடவுளை வணங்குபவனும், வணங்கத் தூண்டுபவனும் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும் (உப 13:6-10). மோலக்கு விக்கிரகத்துக்குத் தன்னுடைய பிள்ளையை நேர்ந்து கொடுப்பவனையும் நாட்டுமக்கள் கல்லால் எறிந்து கொல்லவேண்டும் (லேவி 20:2-5). பிற கடவுளின் பெயரால் இறைவாக்குரைப்பவன் கொல்லப்படவேண்டும் (உப 13:1-5). பிற தெய்வங்களை வழிபடுவதால் சமுதாயம் மாசுபடுததப்படுகிறது. அது நீக்கப்படும்வரை, மக்கள் கடவுளின் தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவார்கள். எண் 25:1-9 இது பற்றிய நிகழ்ச்சி ஒன்றைத் தெளிவாக விளக்குகிறது.

புறத்தேவர்களோடு தொடர்புடைய யாவும் அழிக்கப்படவேண்டியவை ஆகும். அந்நிய சிலைகளும், அவற்றின் ஆபரணங்களும் (உப 7:25), அந்நிய சிலைகளுக்குப் படைப்பவனும் (யாத் 22:20-22:19), இவ்வாறு அழிக்கப்படவேண்டியவைகளில் அடங்கும். இதில் ஈடுபட்டுள்ள மக்கள் கொல்லப்படவேண்டும். இது சம்பந்தமான பொருட்கள் எரிக்கப்படவேண்டும். பிற விக்கிரகங்களை வீட்டிற்குக் கொண்டு செல்வது, வீட்டிலுள்ள அனைத்தையும் தீட்டு உள்ளதாக ஆக்குகிறது. ஆகவே யாவும் அழிக்கப்படவேண்டும் (உப 7:26; யோசு 6:18; 7:20-26).

சகுனம் பார்த்தல், கனவுகளுக்கு விளக்கம் தேடுதல் போன்றவை கூடாது (லேவி19:26-31; உப 18:10). இதைமீறிப் பில்லி சூனியக்காரர்களையும் குறி சொல்கிறவர்களையும் யாராவது கலந்தாலோசித்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் (லேவி 20:6). சூனியக்காரர்களை உயிர்வாழவிடக்கூடாது (யாத் 22:18). பில்லிசூனியம் பார்ப்பதற்கான பேய்ப்புத்தியுள்ளவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் இழைக்கின்ற குற்றமானது, மக்களின் பொதுவாழ்க்கையை மாசுபடுத்துவதால் அவர்கள் கொல்லப்படவேண்டும் (லேவி 20:2; உப 13:6-18). தண்டனையானது பொதுவாகப் பொதுமக்களால் கல் எறிந்து கொல்லப்படுதலே ஆகும். சட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் இத்தகைய குற்றங்களுக்கும் தண்டனைகளுக்கும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன. அரசாட்சிக் காலத்தில் அரசனே இக்குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் (1 சாமு 28:3.9; 1 அர 15:11-13; 2 அர 10:18-28; 23).

ஆ. இறைநிந்தனை:-

கடவுளைப் பழித்தல் கூடாது என யாத்

*22:28*-இல் கூறப்பட்டுள்ளது. கடவுளை நிந்திப்பவன் கல்லால் எறியப்படவேண்டும் என்று லேவி *24:15-1*-இல் கூறப்பட்டுள்ளது. நாபோத்து *(1 அர 21:10)* கொல்லப்பட யாத்திராகமத்தில் கூறப்படும் சட்டமே அடிப்படையாக அமைந்து வருகின்றது. லேவி *24:10-23; 1* அர *21:8-14* ஆகிய பகுதிகளைக்கொண்டு பார்க்கும்போது, இறை நிந்தனை புரிந்ததைப் பார்த்த சாட்சிகள் குற்றவாளியைக் கொல்லவேண்டும்போலக் காட்டப்படுகின்றது.

இ. மதக்கோட்பாடுகளை மீறல்:-

ஓய்வுநாட்களில் வேலைசெய்வது *(யாத் 20:8-11; 23:12; 34:21;* லேவி *23:3;* உப *5:12-15)* குருக்கள் மரபுப்படி சாவுத்தீர்ப்புக்கு *(யாத் 31:14-15; 35:2)* உரிய குற்றமாகும். எண் *15:32-36*-இல் குறிப்பிடப்பட்டுள்ள கதையானது இத்தோடு தொடர்புடைய கதையாகும். இக்கதையிலிருந்து, ஓய்வுநாளை மீறுபவர்களைக் கண்டுபிடிப்பவர்களே, அவர்களைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும்போலத் தோன்றுகின்றது. எட்டாம் நூற்றாண்டில் இஸ்ராயேலில் ஓய்வு நாளின்போது வியாபாரம் செய்யக்கூடாது (ஆமோ *8:5*). ஆனால் பிற்காலத்தில் இந்தத் தடையானது ஒழுங்காக அனுசரிக்கப்படவில்லை (எரே *17:19-27*). எனவே, நெகமியாவால் மீண்டும் அழுத்தமாக அமுல்படுத்தப்பட்டது (நெக *13:15-22*).

கடவுள் கட்டளையிடாத வார்த்தைகளை, அவரது பெயராலே எந்தத் தீர்க்கத்தரிசியாவது சாதித்துச் சொன்னாலோ, வேறு தேவர்களின் பெயரில் பேசினாலோ அவன் கொல்லப்படவேண்டும் (உப *18:20-22*). இந்தச் சட்டத்தைப் பற்றி எரேமியா ஆகமத்தில் நிறைய குறிப்புகள் காணப்படுகின்றன (*26: 9.15-16; 28:5-9*).

2. கொலைபாதகம்:-

விவிலியக் கண்ணோட்டத்தின்படி மனித உயிர் விலைமிக்கது, கொலை செய்பவனுடைய உயிரைப் பறிப்பதே அவனுக்கு அளிக்கப்படும் தண்டனையாகும். எனவேதான் ஆதி *9:6*-இல் மனிதரத்தத்தைச் சிந்துபவனின் இரத்தமும் சிந்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரினங்களின் இரத்தத்தைக்கூடச் சிந்தக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அதனால்தான் ஆதி *9:5*-இல் உயிரின் இரத்தத்திற்காக எல்லா உயிரினங்களிடத்தும் மனிதனிடத்தும் பழிவாங்குவோம் என்று கூறப்பட்டுள்ளது. விவிலியச் சட்டமானது கொலையை நான்கு வகையாகப் பிரிக்கிறது.

அ. கொலை:-

ஒருவன் திட்டமிட்டு, பிறருக்குத் தீமை செய்தாக வேண்டும் என்ற எண்ணத்தோடு கொலை செய்யும்போது, கொலை செய்தவனும் சாவுக்கு உட்படுத்தப்படவேண்டும். கொலை செய்யக் காத்திருத்தல் (யாத் *2:13;* எண் *35:20.22;* உப *19:11*), இருவருக்குமிடையே பகையுணர்வு (எண் *35:20-21;* உப *19:11*), கொலைசெய்ய ஒரு கருவியைப் பயன்படுத்துதல் (எண் *35:16-18*) ஆகியவை ஒருவன் கொலையைத் திட்டமிட்டே செய்துள்ளான் என்று உணரப்போதுமான சான்றுகள் ஆகும்.

கொலை செய்தவன் உயிர்பிழைக்க எந்த விதப் பரிகாரமும் செய்ய அனுமதிக்கப்படவில்லை: ''இரத்தம் சிந்திய மனிதன் தன் உயிருக்காகப் பணத்தைக் கொடுத்தாலும் நீங்கள் வாங்கலாகாது. அவன் செத்தே தீரவேண்டும்....நீங்கள் குடியேறினநாடு குற்றமில்லாதவருடைய இரத்தத்தினால் தீட்டுள்ளதாகிவிட்டதே! அந்தத் தீட்டு இரத்தம் சிந்திய பாதகனுடைய இரத்தத்தினாலன்றி மற்ற எதனாலும் கழுவப்படாது''. (எண் *35:31-33*). இவ்வாறு இழப்புக்கு ஈடு வழங்கக்கூடாது என்று கூறும் விவிலியச்சட்டம் மேற்காசிய நாடுகளின் சட்டங்களோடு ஒத்துப்போகவில்லை. மனித உயிரின் புனிதத்தன்மைபற்றி ஆதி *9:66* குறிப்பிடுகின்றது.

கொலைபாதகம் செய்தவனை, கொலை செய்யப்பட்டவனின் உறவினர்கள் கொல்லவேண்டும் (எண் *35:19;* உப *19:12*). அவர்கள் செய்யவில்லையென்றால், நிலத்தில் ஏற்

பட்ட தீட்டைநீக்க மற்றவர்கள் அவனைக் கொல்லவேண்டும் (2 சாமு 4:11).

ஆ. எதிர்பாராதவிதமாக நேர்ந்த கொலை:-

கொலையானது, மனப்பூர்வமின்றிச் செய்யப்படும்போது, கொல்பவனுக்குச்சட்டம் புகலிடம் கொடுக்கின்றது (யாத் 21:13; எண் 35:9-15.22.28; உப 19:1-10). கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள் யாவும் எதிர்பாராத விதமாக நடந்த கொலைக்கான சில உதாரணங்கள் ஆகும். ஒருமனிதன் விறகுவெட்டிக் கொண்டிருக்கும்போது, அவனது கோடரி பறந்துவந்து அவனோடு இருந்தவனை வெட்டிக்கொல்லுதல் (உப ஆகமம்); ஒருவன் இன்னொருவனைப் பார்க்காமல் கல் எறிந்ததால் அவன் இறந்தது (எண்ணாகமம்); யாத்திரை ஆகமம் இக்கொலை கடவுளால் அனுமதிக்கப்பட்டது என்று கருதுகிறது. அறியாமல் கொலை செய்தவனுக்குச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புக் கொடுப்பது சமூகத்தின் கடமை. அவனுக்குப் புகலிடம் கொடுப்பதற்கு முன்னால் கொலை செய்யப்பட்டவனின் உறவினர் அவனைக் கொன்றுவிட்டால் அந்த இரத்தப்பழி சமூகத்தையே சாரும் (உப 19:10).

இ. எருது குத்திக்கொலை:-

ஒரு மனிதனின் எருது இன்னொருவனைக் குத்திக்கொல்லும்போது, மிருகத்தின் மீதும் இரத்தப்பழி விழுகின்றது. மாட்டிற்குச் சொந்தக்காரன் யாத் 21:28-32-இல் கூறியுள்ள விதிமுறைகளின்படி தண்டிக்கப்படுவான். அதாவது, ஒரு மாடு ஓர் ஆடவனையோ பெண்ணையோ முட்டியதால் அவர் இறந்தால் அந்த மாடு கல்லால் எரியப்படவேண்டும். அதன் இறைச்சியை உண்ணலாகாது. ஆனால் மாட்டின் உரிமையாளர் குற்றவாளியாகமாட்டார். ஆயினும், தன் மாடு வழக்கமாய் முட்டுகிறமாடு என்று மக்கள் அவனுக்குத் தெரிவித்திருந்தும், அவன் அதைக்கட்டி வைக்காததால் அது ஓர் ஆடவனையோ பெண்ணையோ கொன்றிருந்தால் மாடும் கல்லால் எறியப்படவேண்டும்; மாட்டின் உரிமையாளனும் கொல்லப்படவேண்டும். ஆனால் அவன் குற்றம் செய்ய எண்ணவில்லை என்பதாலும் அவனே நேரடியாக அக்குற்றத்தைச் செய்யவில்லை என்பதாலும், அவன் தன் உயிரை மீட்டுக்கொள்ள சட்டம் அனுமதிக்கிறது. அவன், இறந்தவனின் உறவினனுக்கு அவர் நிர்ணயிக்கும் தண்டம் கொடுக்கக்கடவான். ஒருவனுடைய மகனையோ, மகளையோ மாடு முட்டினால், அந்தத் தீர்ப்புப்படியே மாட்டுக்குடையவனுக்குச் செய்யப்படும். ஊழியனையோ, ஊழியக்காரியையோ (அடிமை) மாடு முட்டியிருந்தால் மாட்டுக்குடையவன் (அவர்களுடைய) தலைவனுக்கு முப்பது சீக்கல் வெள்ளி கொடுப்பான்; மாட்டேனென்றால் கல்லால் எறியப்படவேண்டும்.

இந்தச் சட்டமானது, பாபிலோனிய சட்டங்களோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. ஆனால் பாபிலோனிய சட்டத்தில், மத சம்பந்தமான இரத்தப்பழி போன்றவை இல்லை, மாறாகப் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்குவது பற்றிய எண்ணத்தோடு சொல்லப்பட்டிருக்கின்றது.

ஈ. நியாயப்படுத்தப்படும் கொலை:-

தற்காப்பிற்காகக் கொலை செய்வது இரத்தப்பழியைச் சுமத்தாது. வீட்டில் இரவில் கன்னமிட்டுத் திருடுவோனைக் கொலை செய்யவும் (திருடன் கொலையும் செய்வான் என்ற உணர்வில்) வீட்டுக்காரருக்கு உரிமையுண்டு. ஆனால் பகல்நேரத்தில் அவனைக் கொல்ல உரிமையில்லை (யாத் 22:1-2). போரில் கொல்லப்படுபவர்களின் உறவினருக்குக் கொலை செய்தவர்களைக் கொல்லும் உரிமை இல்லை (2 சாமு 2:18-23; 3:26-30; 1 அர 2:5).

3.பாலுணர்வுக்குற்றங்கள்:-

பால்உணர்வுக்குற்றங்களால் தீட்டும், அசுத்தமும் ஏற்படுகின்றன (ஆதி 34:5.13.27; 49:4; லேவி 19:29; 21:9; எண் 5:29; உப 24:4; ஓசே 5:3; 6:10). பரிகாரம் செய்ய முடிகின்ற சில நிகழ்ச்சிகளைத் தவிர (திருமணமாகாப் பெண்ணைக் கற்பழித்தல்) மற்றவைகளுக்கு

மரணமே தண்டனையாக வழங்கப்பட்டது. அவர்களால் ஏற்பட்ட பாவமும் தீட்டும் சமூகம் முழுவதன் மீதும் விழுகின்றன (ஆதி 20:9; 26:10; உப 24:4).

அ. திருமணத்திற்கு எதிரானவை:-

இஸ்ராயேலரின் திருமண நிகழ்ச்சி, அக்காலத்தில் வாழ்ந்த பிற இனத்தாரைப் போலப் பொருளாதாரம், சமூகத்தோடு தொடர்புடைய நிகழ்ச்சியாக இருந்தாலும். திருமண உறவு மத அடிப்படையின்படி 'புனிதமான உறவு' என்று கருதினார்கள். பிற்கால நூற்கள் இதைப் புனித உடன்படிக்கை (பழ 2:17; மலா 2:14) என்று குறிப்பிடுகின்றன. ஆனால் இந்தப் 'புனித உடன்படிக்கை' என்னும் கருத்து ஓசே 1:6-இல் வரும் உவமையில் குறிப்பிட்டுள்ள கருத்தாகும். எனவே விபச்சாரம் என்பது, கணவனின் உரிமைகளை மீறுவதோடு மட்டுமல்லாமல், கடவுளுக்கு எதிரான பாவமாகவும் கருதப்பட்டது (ஆதி 2:6; 39:9; சங் 51:1.4). மேற்காசிய நாடுகளின் சட்டங்களோடு, விவிலிய சட்டத்தை இக்காரியத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேற்காசிய நாடுகளின் சட்டமானது, விபச்சாரத்தைக் கணவனுக்கு எதிரான குற்றட ாக மட்டுமே கருதுகின்றது. மேலும் அவன் நி. னத்தால் அவனது மனைவியை மன்னிக்கவு ் அவனுக்கு உரிமையுண்டு.

மணமாகி இருந்தாலோ, மண ஒப்பந்தமாகி இருந்தாலோ, அதற்குப்பின் ஒரு பெண் கணவனைத் தவிர்த்து, விருப்பத்தோடு மற்றொருவருடன் உறவு கொண்டால், அவள் விவிலியச்சட்டப்படியும், பாபிலோனியச் சட்டப்படியும் கொல்லப்பட வேண்டும் (லேவி 2:10; உப 22:22.24; யோவா 8:3-7). ஒரு பெண்ணை ஊருக்குள்ளே கண்டு அவளோடு உறவு கொண்டால், ஊருக்கு உள்ளிருந்தும் அந்தப்பெண் கூக்குரலிடவில்லை என்றால் இருவரும் கொல்லப்படுவார்கள். கூக்குரலிட்டு யாரும் உதவிக்கு வரவில்லையென்றால் அவன்மட்டுமே கொல்லப்படுவான். இச்சம்பவம் நகருக்கு வெளியே நடக்குமாயின், அவளுடைய சம்மதத்தோடு நடந்தது என்று கருதி அவளும் கல்லால் எறியப்படுவாள். ''அடிமைப்பெண் ஒருத்தி, ஒருவனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து மீட்கப்படாமலும், விடுதலை அடையாமலும் இருக்கையிலே, அவளோடு ஒருவன் படுத்தான் என்றால் அவர்கள் இருவரும் கொலை செய்யப்படாமல் அடிக்கப்படவேண்டும். இது விபச்சாரமாகக் கருதப்படமாட்டாது'' (லேவி 19:20-22).

விபச்சாரம் செய்தவளை (அவளோடு விபச்சாரம் செய்தவனையும்) தண்டிப்பது கணவனின் கடமையாகும் (எண் 5:11-31; பழ 6:32-35). ஆனால் ஆண் விபச்சாரத்தில் ஈடுபட்டால் பெண்ணானவள் ஆணுக்குத் தண்டனை கொடுக்கமுடியாது.

ஆ. கற்புக்கு விரோதமானவை:-

திருமணமாகாத எந்தப்பெண்ணுடனும் எந்த ஆணும் உறவுகொண்டால் அது தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகக் கருதப்படவில்லை. இத்தகைய வேசித்தனம் தடை செய்யப்பட்டிருந்தாலும் இதற்காக எந்தத் தண்டனையும் இல்லை (லேவி 19:19; உப 23:17). லேவி 21:7-இலிருந்து குருக்கள் அல்லாதவர் இத்தகைய காரியங்களில் ஈடுபடும் வேசியை மணக்கலாம் என்று தெரிகிறது. ஆனால் இதற்கு விதிவிலக்காகக் ''குருவுடைய புதல்வி வேசித்தனம் புரியும்போதே அகப்பட்டுக்கொண்டு தன் தந்தையின் பெயருக்கு இழுக்கு வருவித்தால், அவள் சாம்பலாய்ச் சுட்டெரிக்கப்படக்கடவாள்'' (லேவி 21:9). உப 22:20-21-இல் புதிதாகத் திருமணம் செய்யப்பட்ட மனைவியானவள், ஏற்கெனவே கன்னிகழிந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் (லேவி 21:9) அவள் கல்லால் எறியப்படட்டும் என்றுள்ளது. ஆனால் எப்போது கன்னி கழிந்திருந்தாள் என்பதற்கான சரியான தகவல்கள் இதில் குறிப்பிடப்படவில்லை.

ஒரு கன்னிப்பெண்ணைக் கெடுப்பதும், கற்பழிப்பதும் பற்றித் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. ''கன்னிப்பெண் ஒருத்தியை ஒருவன் வலுவந்தமாய்ப் பிடித்து அவ

ளோடு உறவுகொண்டு, காரியம் வழக்கிற்கு வந்தால், அவளோடு உறவுகொண்ட மனிதன் ஐம்பது சீக்கல் வெள்ளியைப் பெண்ணின் தந்தைக்குக் கொடுக்கக்கடவான். அவன் அவளைக் கெடுத்ததனால், அவளை மனைவியாகக் கொண்டு, உயிர் உள்ளளவும் அவளைத் தள்ளிவிடலாகாது'' (உப 22:28-29). கன்னிப்பெண்ணை அவன் கற்பழித்து அவளோடு படுத்தால் அவன் அவளுக்காகப் பரிசம்போட்டு அவளை மணந்துகொள்ளக் கடவான். பெண்ணின் தந்தை அவளை அவனுக்குக் கொடுக்க இசையாவிடின் கன்னிகளுக்காகக் கொடுக்கப்படும் பரிச முறைமையின்படி கொடுக்கவேண்டும். அவன் அப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால், அவளுடைய மணமுறிவுக்கு எதிராக உறுதிகூற முடியாது. காரணம் குற்றத்தில் அவளுக்கும் பங்கு உண்டு (யாத் 22:16-17; 22:15-16).

இ. நெருங்கிய உறவினர்களுக்குள்ளே புணர்ச்சி:-

பாலின உறவின் கட்டுப்பாடு பற்றி விவிலியக்காலத்தில் அதிகமாகவே பேசப்படுகிறது. உப 27:20:22-இல் தந்தையின் மனைவியோடு உறவு வைத்தவன் சபிக்கப்படுகிறான். தன் தந்தைக்கேனும், தாய்க்கேனும் பிறந்த புதல்வியாகிய தன் சகோதரியோடு தகாத உறவு கொள்பவன்மேல் சாபம் விழும் என்று உப 27:22-23-இல் கூறப்படுகிறது. லேவியர் ஆகமத்தின் குருக்களின் சட்டம் மேற்கண்ட குற்றங்களுக்காக மரணதண்டனை நிச்சயிக்கிறது. மகளை மனைவியாக்கிக் கொண்டு, பிறகு அவளின் தாயையும் கொண்டானாயின், அவனையும், அவர்கள் இருவரையும் சுட்டெரிக்கவேண்டும் (லேவி 20:14).

ஈ. இயற்கைக்குப் புறம்பான உடலுறவு:-

''ஆண் பெண்ணோடு சேர்க்கை கொள்வது போல ஆணோடு சேர்க்கை கொள்ளக் கூடாது.'அது வெறுப்புக்குரிய தீச்செயல். எந்த மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து அதனால் உன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. மிருகத்தோடும் புணரும்படி எந்தப்பெண்ணும் அதற்குத் தன் மடியை வெளிப்படுத்தக் கூடாது. அது பெருந்தீச்செயல்'' (லேவி 18:22-23; 20:13.15-16). இவ்வாறு செய்பவர்கள் கொல்லப்படவேண்டும் என்பது விவிலியச் சட்டம். ஆனால் மேற்காசிய நாடுகளின் சட்டங்கள், ஓரினச் சேர்க்கையாயின் (ஆணோடு ஆண் உடலுறவு கொண்டால்) அவன் காயடிக்கப்படவேண்டும் என்றும், தந்தையும் மகனும் இத்தகைய உறவுகொண்டால் கொல்லப்படவேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. மிருகங்களோடு சேர்க்கை பற்றிக் குறிப்பிடும்போது, வெள்ளாடு, செம்மறியாடு, போன்றவைகளோடு புணர்ந்தால் அவர்கள் கொல்லப்படவேண்டும். இத்தகைய தண்டனையை மன்னிக்க அரசனுக்கு உரிமையுண்டு. ஆனால், குதிரை, கோவேறு கழுதை ஆகியவற்றோடு புணர்ந்தால் அதற்குத் தண்டனை இல்லை.

4. கீழ்ப்படியாமையும், அரசத்துரோகமும்:-

பெற்றோர்களின் அதிகாரம் கடவுள் கொடுத்த ஒன்றாகக் கருதப்பட்டது (யாத் 20:12; லேவி 19:3) அவர்களை அடித்தலோ (யாத் 21:15), சபித்தலோ (யாத் 21:17; லேவி 20:9) சாவுக்குரிய தண்டனைக்குரியவையாகும். பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் நடக்கும் மகனை அவர்கள் நகரத்தலைவர்களிடம் சொல்ல, அவர்கள் அவனைக் கல்லால் எறிந்து கொல்லப் பணிப்பார்கள் (உப 21:18-21). கடவுளால் தேர்ந்து தரப்பட்டிருக்கும் தலைவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் சாவுக்குரிய தண்டனையை அடைவார்கள் (உப 17:8-13).

யாத் 22:28-இல் குலத்தலைவனைச் சபிப்பவன் தண்டிக்கப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இதே சட்டமானது சிறிது மாற்றி அமைக்கப்பட்டு அரசனைப் பழிப்பவன் கொல்லப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது (1 அர 21:10; யோசு 1:18).

அரசாட்சிக்காலத்தில் புதிதாக வந்த சட்ட, சமூக ஒழுங்கமைப்புகளைப் பற்றி அதற்கு

முன்பு செயல்பாட்டில் இருந்த சட்டத் தொகுப்பு அதிகமாகத் தெரிந்து கொள்ளாததால், அரசத்துரோகம் பற்றிச் சட்டத்தொகுப்பு அதிகமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் இஸ்ராயேலிய கண்ணோட்டத்தின்படி அரசத் துரோகம் என்பது என்னவென்பதற்குப் போதிய சான்றுகளை இது தருகின்றது. அ) அரசனுடைய மரணத்தைக் குறித்துக் கூறுதல் (ஆமோ 9:9-10; 1 அர 22:18-27; எரே 32:1-5). அரசனுடைய ஆட்சிக்கு எதிராகக் கிளம்பும் எவனும் மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டான் (1 அர 1:21.50; நீதி 9:5; 1 சாமு 20:31; 2 சாமு 13:30). ஆ) அரசனுடைய மனைவிகளைப் பங்கப்படுத்தல் (2 சாமு 12:8), அரசனின் மனைவியோடு கூடுதல் (1 சாமு 16:21; 1 அர 2:22) போன்றவை அரச பதவியை அபகரித்தலுக்குச் சமமாகும். இ) அரசனுடைய ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் அவனுக்கெதிராகப் போர்தொடுத்தல் (2 சாமு 15:2). ஈ) அரசனின் எதிரிக்கு அடைக்கலமும் உதவியும் கொடுத்தல் (1 சாமு 22:7-19). உ) அரசனுடைய பணியாள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது அவனைக் கொல்லுதல் (1 அர 12:18-19). அரசனைப் பழித்துப் பேசுதல் (2 சாமு 16:5-9; 1 அர 21:10) ஆகியவை அரசத் துரோகம் என்பதற்கு இஸ்ராயேல் மக்கள் கொடுத்த உட்பொருளாகும்.

5. பொய்ச்சாட்சியும் அவதூறு பேசுதலும்:-

பொய்ச்சாட்சி சொல்வதைச் சட்டம் தண்டிக்கிறது (யாத் 20:16; 33:1). அவ்வாறு பொய்ச்சாட்சி சொல்கிறவனுக்கு, அவன் பிறருக்கு என்ன தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று விரும்பினானோ, அதே தண்டனையைக் கொடுக்க வேண்டும் (உப 19:16-21).

தன்னுடைய மனைவி, திருமணத்திற்கு முன் கற்பிழந்தவள் என்று ஒருவன் குற்றம் சாட்டி, அவள் குற்றமற்றவள் என்று கண்டு பிடிக்கப்பட்டால், பெரியோர் முன்னிலையில் அவன் மணப்பெண்ணின் தந்தையால் அடிக்கப்படவேண்டும். கணவன், தன் மாமனாருக்கு 100 செக்கேல் அபராதத் தொகையாகக் கட்டவேண்டும். அப்பெண்ணை இனி விவாகரத்து செய்யக்கூடாது (உப 22:13-19).

6. ஓர் ஆளுக்கு எதிரான குற்றங்கள்:-

அ) ஆளைக்கடத்துதல்:-

அடிமையாக விற்பதற்காக, ஆட்களைக் கடத்தும்போது இது நடந்தது (ஆதி 37:28; 40:15). விற்பதற்காக ஒரு இஸ்ராயேலனைத் திருடுதல். கடத்தப்பட்டவன் கடத்தியவனிடமிருந்தாலும், மரணதண்டனைக்குரியதாகும் (யாத் 21:16; உப 24:7).

ஆ) உடலில் காயம் ஏற்படுத்துதல்:-

இருவர் சண்டை செய்யும்போது, ஒருவன் மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலோ, கையால் குத்தியதினாலோ அவன் சாகாமல் படுக்கையாய்க் கிடந்து, பிறகு எழுந்திருந்து தன்கோலை ஊன்றி வெளியே நடந்தால், அடித்தவன் அவனுக்கு உண்டான மானக்கேட்டைப் பற்றியும் மருத்துவச் செலவைப்பற்றியும் நட்டத்திற்குப் பரிகாரம் செய்தால் அவன் குற்றமில்லாதவனாக இருப்பான் (யாத் 21:18-19). லேவி 24:19-இல் ஒருவனுக்கு எவன் தீங்கிழைத்தானோ அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படும். கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல், என்று குறிப்பிடப்பட்டுள்ளது, வேண்டுமென்றே தீங்கிழைப்பவர்களைத் தாம் குறிக்கிறது என்று யாத் 21:23-25 வசனங்களில் இருந்து தெரிகிறது.

இரு ஆடவர் ஒருவரோடொருவர் வாயாடி, சண்டைபோட ஆரம்பித்திருக்கையில் ஒருவனுடைய மனைவி தன் கணவனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, கையை நீட்டி அடிக்கிறவனுடைய மானத்தைப் பிடிக்கத் துணிவாளாயின் அவளுடைய கை துண்டிக்கப்படவேண்டும் (உப 25:11-12).

மனிதர்கள் சண்டையிலே ஒருவன் கருதாங்கிய ஒரு பெண்ணை அடித்ததினால் கருவிழந்து அவள் உயிர் பிழைத்துக்கொண்டால், அவளுடைய கணவன் கேட்டபடி, நீதிபதிகள் விதிக்கும் தண்டத்தைச் செலுத்தக்கடவான் (யாத் 21:22).

யாரேனும் ஒருவன் தன் அடிமை ஊழியனையோ, ஊழியக்காரியையோ கண்ணில் அடித்ததினால் அவர்கள் கண் குருடானால், பழுதுபட்ட கண்ணுக்குப்பதிலாக அவர்களை விடுதலை செய்யக்கடவான். அப்படியே பல் உதிர அடித்திருந்தாலும் அவர்களை விடுதலை செய்யவேண்டும் (யாத் 21:26-27). அடிமையும் மனிதன் என்ற அளவில் உரிமையுடையவன் எனக் கருதி அக்கறை காட்டும் இச்சட்டத்திற்கு இணையான சட்டம் பிற மேற்காசியச் சட்டங்களில் இல்லை.

7. சொத்துக்கு எதிரான குற்றங்கள்:-

அ) அழிவை ஏற்படுத்துதல்:-

ஒருவன் சொத்து அழியும்படி செய்தாலோ (லேவி 24:18.21), சொத்தைக் கவனிக்காததால் அதுவாக அழிந்தாலோ (யாத் 21:33-34.36; 22:5-6) அவன் குற்றம் செய்தவனாகக் கருதப்படுவான். ஒருவனுடைய மாடு மற்றொருவனுடைய மாட்டைக் காயப்படுத்தினதாலே ஒருவேளை அது செத்தால், உயிரோடிருக்கிற மாட்டை விற்று, இருவரும் அதன் விலையைப் பங்கிட்டு, செத்த மாட்டையும் பங்கிட்டுக்கொள்வார்கள் (யாத் 21:35).

ஆ) திருட்டும் ஆக்கிரமித்தலும்:-

ஒருவனுடைய சொத்தை, அவனது சம்மதமின்றி அவனுக்குத் தெரியாமல் எடுப்பது திருட்டாகக் கருதப்படும். விவிலியத்தின்படி, அந்த உடைமை குற்றவாளிக்குச் சட்டப்படி வந்ததா? வரவில்லையா? என்பது முக்கியமல்ல. ஒருவன் தன்னிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்தினால் அதுவும் திருட்டாகவே கருதப்படும். அதற்காக அவன் உரிமையாளருக்கு இருமடங்கு திரும்பச் செலுத்தவேண்டும் (யாத் 22:4.7.9). மாட்டையோ, ஆட்டையோ திருடிவிற்றவன், அல்லது கொன்றுவிட்டவன், அந்த ஒரு மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், ஓர் ஆட்டுக்குப் பதிலாக நான்கு ஆடுகளையும் கொடுத்து ஈடு செய்யவேண்டும் (யாத் 22:1). திருட்டுக்கு ஈடுசெய்யத் திருடன் கையில் ஒன்றுமில்லையாயின், தான் செய்த திருட்டுக்காக விற்கப்படுவான். விற்கப்பட்ட பணம், திருடப்பட்ட பொருளின் உரிமையாளரைச் சாரும் (யாத் 22: ). இந்த வகைச்சட்டத்தில் விவிலியச் சட்டமானது பாபிலோனியச் சட்டத்திலிருந்து வேறுபடுகின்றது. பாபிலோனிய, அசீரியச் சட்டங்கள் மனித உயிரையும், சொத்தையும், சரிசமமாகவே மதிப்பிடுகின்றன. ஆனால் தண்டனைபற்றிப் பேசும்போது, உயிரிழப்பிற்கு அபராதத் தொகையும், திருட்டுக்கு மரணதண்டனையும் என்று குறிப்பிடுகின்றன.

இ) கொள்ளை:-

ஒருவனுடைய சொத்தை வலுக்கட்டாயமாகப் பறித்தல் (ஆதி 31:31; 2 சாமு 23:21), ஒருவனுடைய உடைமையை அவனிடமிருந்து பிடுங்குதல் (மலா 3:5) ஆகியவை கொள்ளை எனக் கருதப்பட்டு, சட்டத்தால் தண்டிக்கப்பட்டன (லேவி 19:13; உப 24:14-15). ஆனால் குற்றவாளிக்கு என்ன தண்டனை என்று குறிப்பிடவில்லை. (கம்முராபியின் சட்டம் கொள்ளைக்கு மரணதண்டனை அளிக்கிறது). லேவி 6:1-7; எண் 5:5-8-இல் பிறனுடைய சொத்தைப் பறிப்பவன், பறித்த சொத்தோடு மேலும் இழப்பீடாக 5-இல் ஒரு பங்கு சொத்தோடு, பாவமன்னிப்புப் பரிகாரமும் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. ஏழைகள் அதிகமாகக் கொள்ளையடிக்கப்படுவதால் பாதிக்கப்பட்டனர் (சங் 35:10; ஏச 3:14; எரே 7:6; ஆமோ 4:1). அவர்கள் தங்கள் உடைமைகளைத் திரும்பப்பெறுவதில் சட்டமுறைகள் பயனளிக்கவில்லை.

4. தண்டனையின் வகைகள்:-

1. மரணதண்டனை:-

இஸ்ராயேலிலிருந்து தீமையை விலக்குவதற்காகவே, கல்லால் எறிந்து குற்றம் செய்தவன் கொல்லப்படவேண்டும் என்று கூறப்பட்டது. நகருக்கு வெளியேதான் கல்லால் எறிந்து கொன்றார்கள். இதில் சமூகம் முழுவதும் பங்குகொண்டது (லேவி 24:14; உப 22:24; 1 அர 21:13). ஆனால் உப 22:21-இல் ''அவனுடைய தந்தையின் வீட்

டில் கல் எறியப்பட்டதாகக்'' கருதப்படுகிறது. சாட்சிகள், குற்றவாளியின் தலையில் கைவைத்து (லேவி 24:14; தானி 13:34) அவனால், இந்தச் சமூகத்தில் விளைந்த தீட்டு அனைத்தையும் அவன்மேல் சுமத்தியது போல (லேவி 4:15; 16:21), அவர்கள் முதலில் கல் எறிந்தார்கள். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் கல் எறிந்தார்கள் (உப 17:7).

இருவிதப் பாலுணர்வுக் குற்றங்களுக்காக எரித்துக் கொல்லப்பட்டதாக லேவி 2;14, 21:9-இல் காணப்படுகிறது. ஆதி 38:24-இல் வேசித்தனத்திற்காகச் சுட்டெரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கிடைத்த தகவலின்படி இத்தகைய குற்றம் செய்தவர்கள் சுள்ளிக்கட்டால் சுற்றப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடவுள் கொடுத்த நகரங்களில், அவருக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்படவேண்டும் (உப 13: 15; யாத் 32:27). சிலை வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் சொல்லப்பட்டார்கள் (1 அர.18:40: உப 9:21; 2 அர 23:20). தனிப்பட்டவிதத்தில் மரணதண்டனை அளிப்பதற்கும் வாள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (2 சாமு 3:27). அரசனுக்கு எதிராகக் குற்றம் புரிபவர்களின் தலையை வெட்டுவது அரச தண்டனையாகக் கருதப்பட்டது (2 அர 6:31-32; 2 சாமு 16:9). பிற்காலத்தில் கொலையாளிகளுக்கு இத்தகைய தண்டனை வழங்கப்பட்டது.

புனித இடங்களை நெருங்கிப் போனதற்காக, அம்பால் எய்யப்பட்டதாக யாத் 19:13-இல் கூறப்படுகிறது.

தூக்குத்தண்டனை ஒரு தண்டனைமுறையாகக் கருதப்படவில்லை. ஆனால் அவ்வாறாக உடலை உயர்த்தி வைத்திருப்பது பிறருக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது (உப 21:22-23). மரணதண்டனை அளிக்கப்பட்டவரின் உடல் உறுப்புக்களைச் சில நேரங்களில் வெட்டுவதும் உண்டு (2 சாமு 4:12).

சின்னாபின்னமாய்க் கிழிக்கப்படுதல் (தானி 2:5), மிருகங்களுக்கு முன் எறியப்படுதல் (தானி 6:7) போன்ற தண்டனைகளை இஸ்ராயேலர் பின்பற்றவில்லை.

2. உடல் சார்ந்த தண்டனை:-

உடல் சார்ந்த தண்டனைகளில் சில குறிப்பிட்ட தண்டனைகளைப்பற்றி விவிலியச்சட்டம் கூறுகிறது. பாபிலோனிய, அசீரியச்சட்டங்களில், உடல் உறுப்புக்களை வெட்டித் தண்டனை கொடுப்பது பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. எ.கா. நாக்கு, கண், மார்பகம், காது ஆகியவை வெட்டப்பட்டன.

திட்டமிட்டு உடலுக்குத் தீங்கு விளைவித்திருந்தால் 'பழிக்குப்பழி' என்ற சட்டமுறையில் பழிவாங்கவேண்டும். பாதிக்கப்பட்டவனோ, அவனது உறவினரோ தண்டனையை நிறைவேற்றவேண்டும் என்பது அரசாட்சிக்காலத்திற்கு முந்தையசட்டம். ஆனால் விவிலிய சட்டம், பாதிக்கப்பட்டவரே அந்தத் தண்டனையை நிறைவேற்றினால்தான் சரியாகத் தண்டிக்கமுடியும் என்று கருதுகின்றது. பாபிலோனியாவிலும், அசீரியாவிலும் மேற்சொன்ன பழிக்குப்பழி என்ற சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், அது விவிலியத்தில் சற்று வித்தியாசமாகக் காட்டப்படுகின்றது. அதாவது, கடன்பட்டிருந்தவன் ஒருவனின் மகனைக் கடன்கொடுத்திருந்தவன் கொன்றுவிட்டால், கடன் கொடுத்தவனின் மகனும் கொல்லப்படவேண்டும்; ஒருவன் இன்னொருவனின் கர்ப்பமான மகளை அடித்ததால், அவள் கரு கலைந்துவிட்டால் அடித்தவனின் மகள் கொல்லப்படவேண்டும்; ஒருவன் தவறான வீடு கட்டியதால் அது இடிந்து, வீட்டு உரிமையாளரின் மகன்மீது வீழ்ந்து அவன் இறந்தால், கட்டியவனின் மகனும் கொல்லப்படவேண்டும் என்கிறது பாபிலோனிய அசீரியச் சட்டங்கள். ஆனால் விவிலியச் சட்டமானது இத்தகைய பழிவாங்கலை ஏற்றுக்கொள்ளவில்லை (யாத் 21:22-23.31; உப 24:16).

பழிவாங்கல் சட்டம் என்பது சட்டமுறையில் தண்டனை வழங்குவதாகும் என்பது

ஐயத்திற்குரியதாகும். விவிலியத்தின் திருந்திய படிவங்கள்கூட, தவறு செய்தவனுக்கு, அதே அளவு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றதேயன்றி, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பொருள் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடவில்லை. சட்டத்தில், பரிகாரத்தைப்பற்றிப் பேசும் மூன்று பகுதிகள், பழிக்குப்பழி வாங்குவதற்குப் பதிலாக, பணஇழப்பீடு வாங்கியதாகக் கூறுகின்றன. ஆனால் கொலைக்கு மட்டும் இத்தகைய இழப்பீடு இல்லை. யாத் 21:30-இல் மாடு குத்தி ஒருவன் கொலை செய்யப்பட்டால், அதன் உரிமையாளன், அபராதம் கொடுக்கும்படி பணிக்கப்பட்டு அவன் அபராதத்தைக் கொடுத்துத் தன் உயிரை மீட்டுக்கொள்ளட்டும் என்றுள்ளது. எண் 35:31-இல் இரத்தம் சிந்திய மனிதன் தன் உயிருக்காகப் பணத்தைக் கொடுத்தாலும் நீங்கள் வாங்கலாகாது என்று கூறப்பட்டுள்ளது.

விவிலியச்சட்டம் 'தற்காப்பை' ஏற்றுக் கொள்வதால், காயப்படுத்தப்பட்டவன், எதிர்த்துத் தாக்குவது, அவனுக்குரிய உரிமையாகக் கொடுக்கப்பட்டது.

சாட்டையால் அடிப்பது சட்ட பூர்வமான தண்டனையாகும். குற்றத்தின் அளவிற்கு ஏற்ப சாட்டை அடிகள் அதிகமாகும். சட்டத்தின்படி அதிகபட்சத் தண்டனையாக 40 கசையடிகளே வழங்கலாம் (உப 25:1-3).

சிறையில் அடைத்தல் விவிலியத்திலோ, மற்ற மேற்காசிய நாடுகளின் சட்டத்திலோ தண்டனையாகக் கூறப்படவில்லை. குற்றம் சுமத்தப்பட்டவனை விசாரித்துத் தீர்ப்புக் கூறும்வரை அவனைச் சிறைக்குள் வைத்திருந்தார்கள் (லேவி 24:12). ஆனால் பிற்காலத்தில் மிகவும் ஆபத்தானவர்கள் என்று கருதப் பட்டவர்களைச் சிறையில் அடைத்தார்கள் (எரே 32:2-3).

திருடப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு கொடுக்கமுடியாதவனை மட்டுமே அடிமையாக விற்கவேண்டும் (யாத் 22:16) என்றாலும் கடனுக்காகவும் சிலரை இஸ்ராயேலில் விற்றார்கள் (2 அர 4:1; நெக 5:5; லேவி 25:39).

3. பண அபராதம்:-

விவிலியச் சட்டத்தில் பண அபராதம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவனுக்குப் பாதிப்பு ஏற்படுத்தியவன் அபராதம் செலுத்தவேண்டும். நீதிமன்றத்திற்கும், அரசுக்கும் அபராதம் கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. அ) சண்டையில் ஒரு பெண்ணை அடித்ததினால், கருகலைந்திருந்தால் அவளுக்கும் (யாத் 21:22), ஆ) கன்னியைக் கெடுத்ததற்காக அவளது தந்தைக்கும் (உப 22:29; யாத் 22:16-17) இ) ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருந்து, மீட்கப்படாத அடிமைப்பெண்ணைக் கெடுத்தற்கும் (லேவி 19:20), ஈ) முரட்டு மாடு குத்தியதால் இறந்தால், இறந்தவனின் உறவினருக்கும் (யாத் 21:30) அபராதத் தொகைகொடுக்கப்பட வேண்டும். திருட்டுக் குற்றத்திற்கு, இரு மடங்காகவும், நான்கு மடங்காகவும், ஐந்து மடங்காகவும் திருப்பிக் கொடுக்கவேண்டும் (யாத் 22:1-4; 22:3.8). கன்னி கழியாத பெண்ணைக் கழிந்துவிட்டபெண் என்று பொய்க் குற்றம் சாட்டினால், மணப்பெண்ணின் தந்தைக்கு அபராதம் கட்டவேண்டும் (உப 22:19).

V. புதிய ஏற்பாட்டில் குற்றங்களும் தண்டனைகளும்:-

1. பொதுக்கருத்துக்கள்:-

புதிய ஏற்பாடு ஒரு சட்ட நூலின் தொகுப்பு அல்ல. ஆனால் இயேசுவின் போதனைகளில் பல, விவிலியச் சட்டத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றன. ஆனால் அவைகள் சட்டத்தின் வடிவில் இருப்பதில்லை. மாறாக நல்வாழ்க்கை வாழ்வதற்கான அறிவுரையாக இருக்கும் (எ.கா. மத் 5:20-32). கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்ற பழைமை விவிலியச் சட்டமாகக் கருதப்பட்டதை இயேசு எதிர்க்கிறார். யாத் 21:23; மத் 5:38-41-இல் மாற்றிச் சொல்லப்படுகிறது. இந்தப் பரிசுத்த போதனையானது, சட்டத்திற்கு எதிரானதாக அமைகின்றது. புதிய ஏற்பாட்டில் காணப்

படும், குற்றவியல் தண்டனைச்சட்டங்கள், அக்காலத்தில் உள்ள உரோமை, யூதச் சட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. குறிப்பாகப் புதிய ஏற்பாட்டு ஆட்கள், உரோமை, யூத அதிகாரிகளோடு மோதும்போது இது தெளிவாக வெளிப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டுச் சட்டச் சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்வது என்பது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கின்றது. பழைய ஏற்பாடு சட்ட நுணுக்கங்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுவதுபோல் புதிய ஏற்பாடு நுணுக்கமாகக் குறிப்பிடவில்லை. இயேசுவின் தீர்ப்பு, பவுலுக்கு அளிக்கப்பட்ட பல தீர்ப்புக்கள், ஆகியவற்றைக்கூட சரியான சட்டநீதியாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. என்றாலும், உரோமை, யூத குற்றவியல் சட்டங்களைப் பின்னணியாகக் கூறியிருப்பது புதிய ஏற்பாட்டில் குற்றம், தண்டனை போன்றவற்றை விளக்கப்பயன்படுகின்றது.

2. புதிய ஏற்பாட்டில் காணப்படும் யூதகுற்றவியல் சட்டம்:-

6-ஆம் ஆண்டில் யூதேயா, உரோமை ஆளுநர்களின்கீழ், பாரசீக, கிரேக்க ஆட்சியில் தனித்தன்மை பெற்றிருந்ததுபோல், குறிப்பிட்ட சுதந்தரம் பெற்றிருந்தது (எண் 7:25-26). ஏரோதின் ஆட்சியைத் தொடர்ந்து, அரசுக்கு ஆதிக்கம் வழங்கப்பட்டது. நாட்டை ஆள, தலைமைக்குருக்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. யூத சட்டத்தையும், பழக்க வழக்கங்களையும் தழுவிய நீதிமுறை அனுசரிக்கப்பட்டது. சிதறிக்கிடந்த யூதர்கள்மீது தலைமைக்குருக்கள் ஆட்சிசெலுத்தினர் (அ.ப. 9:1-2). சிதறிக்கிடந்த சமூகங்களில் சமயகாரியங்களில் அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் (18:12-17), அது தலைமைக்குருவின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகக் கருதப்பட்டிருக்கலாம்.

அ) மரணதண்டனை:-

யூத சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்கு, யூத அதிகாரிகள் மரணதண்டனை அளிப்பதற்கான தகுதி பெற்றிருந்தார்களா என்பது கேள்விக்குறி. ஆலயம் இடிக்கப்படுவதற்கு 40 ஆண்டுகளுக்குமுன்பே, யூத நீதிபதிகளிடமிருந்து, மரணதண்டனை அளிக்கும் உரிமை பறிக்கப்படுகிறது. ஆனால் இதற்கு யோவா 18:31-இல் கூறப்படுவது முரணாக உள்ளது. உரோமையின் தலையீடு இன்றி யூதர்கள், மரணதண்டனை அளித்ததற்கான பல சான்றுகள் காணப்படுகின்றன. பேதுருவின் மீதான இரண்டாவது விசாரணை (அ.ப. 5:27 தொ), தலைமைக்குருக்களின் அதிகாரத்தை, கொல்வதற்காகப் பெற்றதாகப் பவுல் கூறுவது (26:10) போன்றவை இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும். ஸ்தேவான் கல்லால் எறியப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து (7:57-60) அவர் சட்டத்திற்குப் புறம்பாகக் கொல்லப்பட்டாரா, சட்டபூர்வமாகக் கொல்லப்பட்டாரா என்று தெளிவாகத் தெரியவில்லை.

கொடிய சமயக்குற்றங்களுக்குச் சட்ட பூர்வமில்லாத முறையில் தண்டனை அளிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவேதான், தமஸ்குவில் பவுலைக் கொல்ல முயற்சி செய்ததையும் (அ.ப. 9:23-24), எருசலேமில் கொல்ல முயன்றதையும் (23:12-15), இலிசித்திராவில் கல்லால் எறிந்ததையும், யூதமரபுப்படி, சட்டபூர்வமானது என்றே கருதினார்கள்.

ஆலயத்தின் தூய்மைப்பகுதிக்குள் நுழையும் எந்த அந்நியனையும், அவன் உரோமைக் குடிமகனாக இருந்தாலும் அவனைக் கொல்ல யூதர்களுக்கு உரிமை இருந்தது.

இயேசுவை மதத்திற்கு எதிராகக் குற்றம் செய்ததாகவே தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக்கினார்கள். 'தேவநிந்தனை' கூறியதாக இயேசுவும், ஸ்தேவானும் குற்றம் சுமத்தப்பட்டார்கள் (மத் 9:3; 26:65; யோவா 10:33 தொ; அ.ப. 6:11). கிறிஸ்தவ விசுவாசத்திற்காகவே யூதர்கள் தன்னைக் கொடுமைப்படுத்தியதாகப் பவுல் கூறுகிறார் (அ.ப. 26:19-23). இக்குற்றங்களின் சமயப்பண்பு தெளிவாக இல்லை. தேவநிந்தனை என்பது இறைவனுக்கு அளிக்கப்படும் அவமரியாதை

என்ற பரந்த பொருளைக் கொண்டுள்ளது எனலாம்.

ஆ) உடல் சார்ந்த தண்டனை:-

விவிலிய விதிகளை மீறி நடந்து, அதற்கான தண்டனை விவிலியத்தில் குறிக்கப்படவில்லை என்றால், அக்குற்றத்திற்குத் தண்டனையாக 39 சாட்டையடிகள் யூத சட்டத்தில் கொடுக்கப்பட்டது. கசையடித் தண்டனை என்பது யூத அதிகாரிகளுக்கும், உரோமை அதிகாரிகளுக்கும் அடக்கி ஆளவே பயன்பட்டது (மத் 10:17; அ.ப. 5;40; 22:19; 2 கொரி 11:24). விசாரணைக்கு முன்பு குற்றவாளியாகக் கருதப்படுபவர் சிறையில் வைக்கப்படுவார் (அ.ப. 4:3; 5:18).

செபக்கூட அதிகாரிகளுக்கு, மதத்திற்கு எதிரான குற்றங்களில் அவர்களை ஒதுக்கி வைக்கும் தண்டனை வழங்க உரிமை இருந்தது.

3. புதிய ஏற்பாட்டில் உரோமை குற்றவியல் சட்டம்:-

மக்களின் பொதுவாழ்வில் சட்டத்தையும், அமைதியையும் காப்பதற்கான உரிமை ஆளுநரிடமிருந்தது. கலவரம், கொள்ளை போன்ற நேரங்களில் அவர் இந்த உரிமையைப் பயன்படுத்துவார். தெயுதாவும், கலிலேய யூதாசும் (அ.ப. 5:36-37) கலகம் விளைவித்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள். திருமுழுக்கு யோவானுக்கும் கலகம் விளைவித்ததால்தான் தண்டனை வழங்கியதாக யோசிப்பஸ் கூறுகிறார். இயேசுவின் சீடர்களையும், உரோமைக்கு எதிரான புரட்சிவாதிகளாகவே கருதினார்கள் (அ.ப. 5:35-39). இவ்வாறாக, ஆளுநருக்குத் தண்டனை வழங்கி நிறைவேற்ற உரிமை இருந்தபோது, யூத அதிகாரிகளுக்குக் கைது செய்யவும், விசாரணை செய்யவும், ஆளுநரிடம் ஒப்படைக்கவும் அதிகாரம் இருந்தது (மாற் 14:43 தொ).

அ) தண்டனைகள்:-

பிற்பட்ட வகுப்பினருக்கும், அடிமைகளுக்கும் வழங்கப்பட்ட சிலுவையில் அறையப்படும் தண்டனைதான் உரோமர்களால் வழங்கப்பட்ட மிகக் கொடுமையான மனிதாபிமானமற்ற தண்டனையாகும். இத்தண்டனை வழங்கப்படுவதற்குமுன் குற்றவாளிகள் கட்டிவைக்கப்பட்டு அடிக்கப்படுவார்கள். தலையை வெட்டும் தண்டனை பொதுவாக வாள் கொண்டு நிறைவேற்றப்பட்டது (மத் 14:10). ஆனாலும் பழைய காலத்தில், கோடரிகொண்டு வெட்டியிருக்கிறார்கள் (திருவெளி 20:4). இதற்கு அடுத்தபடியாக, மிகக்கொடூரமான தண்டனையாகக் கருதப்பட்டது காலகாலமாகச் சுரங்கங்களில் வேலை செய்தல் ஆகும். அங்கே அவர்களின் கால்கள் விலங்குகளால் பூட்டப்பட்டிருக்கும். நகர நீதிபதிகள் சிறிய குற்றங்களை விளைவிப்பவர்களுக்குத் தண்டனை வழங்க அனுமதி பெற்றிருந்தார்கள் (அ.ப.16:22). அடிமைகளிடமிருந்து தகவல்களைப்பெற அவர்கள் கட்டி வைக்கப்பட்டு அடிக்கப்பட்டார்கள் (22:24). சிறைக்குள், விசாரணைக் கைதிகளை மட்டுமே வைத்திருந்தார்கள். இதைப் பயமுறுத்துவதற்கும் பயன்படுத்தினார்கள் (16:23-24).

ஆ) உரோமைக் குடியுரிமையின் முக்கியத்துவம்:-

அகுஸ்து சீசரால் ஏற்படுத்தப்பட்ட ''பொது வாழ்வு பற்றிய யூலியுசட்டப்படி'', ஓர் உரோமைக் குடிமகனைக் கட்டிவைத்து அடிப்பதோ, சிறையில் தள்ளுவதோ குற்றமாகும். உரோமைக் குடியுரிமையைப் பவுல் பெற்றிருந்ததால் பல இடங்களில் அவருக்குச் சுதந்தரம் வழங்கப்பட்டது (அ.ப.22:25-29; 16:37). ஆனால் சில நேரங்களில், இந்தக் குடியுரிமை மதிக்கப்படவில்லை (2 கொரி 11:25). யூத மத அதிகாரிகள், அவர்களின் மதத்திற்கு எதிராக யாராவது குற்றம் செய்தால், அவன் இந்தக் குடியுரிமை பெற்றிருந்தாலும் கண்டு கொள்வதில்லை (2 கொரி 11:24). பெரிய வழக்குகளில், ஆளுநரின் முன்னால் வாதாட உரோமைக் குடிமகனுக்கு உரிமையுண்டு (அ.ப.25:12). மேலும், இந்த நீதிமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு நேரடியாக உரோமைப் பேரரசிடம் நீதிகோரவும் இக்குடியுரிமை பெற்றவருக்கு உரிமை உண்டு (25:11-12).

**குற்றஞ்சாட்டுதல், வழக்காடுதல்** (INDICTMENT)

நீதிமன்றத்தில் முறையாகக் குற்றம் சாட்டுதலாகும். ''சட்டத்தில் ஒரு வழக்கு'', ''ஒரு சட்ட பூர்வமான வழக்கை நடத்தல்'', ''ஒருவனுக்கு முன்னால் ஒரு வழக்கைச் சமர்ப்பித்தல்'' போன்ற தொடர்களைக் குறிக்கும் சட்டக் கலைச் சொல்லாகும். (யோபு 31:35; எரே 25:31; ஓசே 12:2; ஏச 3:13-15; எரே 2:9; ஓசே 4:1; மீக் 6:2). குற்றம் சாட்டுதல் என்றபொருளில் இது இறைவனுக்கு மட்டும் பயன்படுகிறது. இஸ்ராயேலின் தீய பெரியவர்களுக்கு எதிராக (ஏச 3:13-4), நாட்டிற்கு எதிராக (எரே 2:9; மீக் 6:2), இஸ்ராயேலுடைய குடிகளுக்கு எதிராக (ஓசே 4:1), யாக்கோபுக்கு எதிராக (ஓசே 12:2), நாடுகளுக்கு எதிராக (எரே 25:31), அவர்களுடைய அறநெறி மற்றும் ஆன்மீக நிலையினை முன்னிட்டு இறைவன் வழக்கினைக் கொண்டு வருகிறார். யோபு அவருடைய குற்றமற்ற நிலையை நிலை நிறுத்துவதில் அவருடைய எதிரியின் எழுதப்பட்ட குற்றச் சாட்டுக்காகக் கூக்குரலிடுகிறார் (யோபு 31:35). மீக் 6:2-இல் '''மலைகளே, மண்ணுலகின் நிலையான அடித்தளங்களே, ஆண்டவருடைய வழக்கைக் கேளுங்கள், ஏனெனில் தம் மக்கள்மேல் ஆண்டவர் வழக்குத் தொடுக்கிறார். இஸ்ராயேல் மீது குற்றம் சாட்டுகிறார்'', என்ற விவரிப்பால் அண்டங்களைக்கொண்டு அமைக்கப்பட்ட நீதி மன்றக் காட்சியைக் காண்கிறோம்.

**குற்றத்தின் குன்று** (MOUNT OF CORRUPTION)

எருசலேமிற்குக் கிழக்கே அமைந்த ஒரு குன்று. இது ஒரு வேளை ஒலிவ மலையின் தெற்கு முனையாக இருக்கலாம். இங்குதான் மன்னன் சாலமோன் தன் அன்னிய மனைவிகளின் தெய்வங்களுக்குக் கோவில்களைக் கட்டினார் (1 அர 11:7). மற்ற ஒழுங்கற்ற வழிபாட்டு மையங்களோடு சேர்த்து இதுவும் மன்னன் யோசியாவால் அழிக்கப்பட்டது. விவிலியத்துக்குபுறம்பே, ஒலிவ மலை, தைலமலை என்றழைக்கப்பட்டது. இதைக் குறிக்கும் மூலச்சொல்லைக் குற்றத்தின் குன்று எனப் பொருள்படும் சொல்லாகத் திரிபுபடுத்தி ஏளனம் செய்கிறார் ஆசிரியர் (2 அர 23:13).

**குற்றம்** (OFFENCE)

அறநெறி அல்லது இறைச்சட்டத்தை மீறுவதாகும். விவிலியப் பொருளில் குற்றம் இடறலாய் இருப்பதையும், பாவத்திற்குச் சந்தர்ப்பமாகவும், காரணமாகவும் இருப்பதையும் உள்ளடக்கும்.

குற்றம் பாவத்தையே குறிக்கலாம். குற்றங்கள் சகமனிதருக்கு எதிராகவோ (மத் 6:14-15; யாக் 5:16) இறைவனுக்கு எதிராகவோ (உரோ 5:17; எபே 1:7) இருக்கலாம்.

**குற்றம் சாட்டுபவர்** (ACCUSER)

பொதுவாக, இச் சொல் நீதிமன்றத்தில் எதிராளியைக் குறிக்கும் (யோபு 9:15); ஆனால் புதிய ஏற்பாட்டில் இரு இடங்களில் இச்சொல் தனிச்சிறப்பான பொருளைப் பெறுகிறது. யோவா 5:45-இல் யூதர்கள் நம்பியிருக்கிற மோசேயே தந்தையிடத்தில் அவர்களைக் குற்றம் சாட்டுவார் என்று இயேசு கூறுகிறார். ஏனெனில், அவர்கள் மோசேயின் செய்திக்குச் செவிமடுத்திருந்தால், அவர்கள் சட்டத்தால் குற்றம் சாட்டப்பட்டு, பாவிகள் என்று தீர்ப்பிடப்படுவர். மிக்கயேலுக்கும் பறவைநாகம் அல்லது சாத்தானுக்குமிடையே நடக்கும் போரில் (திருவெளி 12:10), சாத்தானை ''நம் கடவுளின் முன்னிலையில் இரவும் பகலும்'' இறைவனது மக்களைக் குற்றம் சாட்டியவன் என்று யோவான் குறிப்பிடுகிறார்.

# கூ

**கூசயா** (HUSHAIAH)

கூசயா மெராரியின் புதல்வர்களுள் ஒருவர். இவர் தாவீது அரசன் காலத்தில் பாடகர்களில் ஒருவராக விளங்கினார் (1 நாள் 15:17). இவர் 1 நாள் 6:44-இல் கீசி என்றும் அழைக்கப்படுகின்றார்.

**கூசா** (CHUZA - சிறிய ஜாடி, காட்சியாளர்)

கூசா, ஏரோது அந்திப்பாவின் காரியத் தலைவன். இயேசுவைப்பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்த கலிலேயப் பெண்ணான யோவானாவின் கணவர் (லூக் 8:3). இவர் ஏரோதின் காரியத்தலைவனாக இருந்து ஏரோதின் சொத்துக்களைக் கண்காணிக்கும் பதவியில் இருந்திருக்கலாம். இவரும் இவரது மனைவியும் அதிகாரிகளிடையே விசுவாசிகளாக இருந்திருக்கலாம்.

**கூசா** (HUSHAH - விரைவான)

யூதா மலைநாட்டிலுள்ள ஒரு கிராமம். இது ஏசேரால் நிறுவப்பட்டது (1 நாள் 4:4). தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களில் ஒருவரான சிப்காயின் ஊர் (2 சாமு 21:18; 1 நாள் 11:29; 20:4; 27:11). 2 சாமு 23:27-இல் இது மெபுன்னாய் என்றழைக்கப்படுகிறது. இவ்விடம், பெத்திலகேமுக்குத் தென் மேற்கிலுள்ள இக்காலக் கூசான் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

**கூசாபு** (HUZZAB)

கூசாபைச் சிலமொழி பெயர்ப்புகள் ஓர் ஆளின் பெயராகக் கருதுகின்றன. ஆனால் அதனை வேறுசில ''அதன் தலைவி'' என்று மொழிபெயர்க்கின்றன. இது ஒரு தெளிவில்லாத சொல்லாகும். நாகூம் நூலில் மட்டும் வருகிறது (நாகூ 2:7). மேலும் சில விளக்கங்கள்; (அ) கூசாபு என்பது அசீரியாவின் அரசியான நினிவே அல்லது பெண் தெய்வமாக இருக்கலாம்; (ஆ) இச்சொல் ஒரு வினைச்சொல்லாக இருந்தால் 'நிறுவப்பட்ட' அல்லது 'தீர்ப்புச் செய்யப்பட்ட' என்று பொருள்படும்.

**கூசாபியர்** (HUSHATHITE)

கூசாவில் குடியிருந்த மக்களின் இனப் பெயர் (2 சாமு 21:18; 23:27; 1 நாள் 11:29; 17:11; 20:4).

**கூசாய்** (HUSHAI - விரைவான)

தாவீது அரசனின் நண்பனும் நம்பிக்கைக் குரியவருமாவார் (2 சாமு 15:37; 1 நாள் 27:33). ஓர் அர்க்கியர். சாலமோனின் அதிகாரிகளில் ஒருவரான பானாவின் (2) தந்தை. அபிசலோமின் ஆலோசகராகத் தன்னையே நியமித்துக் கொண்டு, அபிசலோம் அகித்தோபலின் ஆலோசனையைப் பின்பற்றாத படி ஆலோசனை கூறியவர் (2 சாமு 15:32-33; 16-17:14). மேலும், அரண்மனையில் வேவு பார்த்து, சாதோக்கு மற்றும் அபியத்தார் ஆகிய குருக்களின் புதல்வர்கள் வழியாக அவ்வப்போது செய்திகளைத் தாவீதுக்குத் தெரிவித்து வந்தார் (15:34-36).

**கூசான்** (CUSHAN)

அப 3:7-இல் மிதியானுக்கு இணையாக எடுத்துக்கூறப்படும் ஒருமாவட்டம் அல்லது ஒரு மக்களினம். கூசின் சந்ததியினர் மிதியானில் இருந்ததை அடிப்படையாகக் கொண்டு மிதியானியர்களுக்குப் பழைய பாடல் பெயராக இருந்திருக்கலாம். இதனால்தான் அநேகமாக, மோசேயின் மனைவி 'கூச இனத்தாள்' என்று அழைக்கப்பட்டிருக்கிறாள் (எண் 12:1). இங்குக் கூசிய இனத்தவள் என்பது எத்தியோப்பியாவைச் சேர்ந்தவள் என்று பொருள் அளிக்காமல், மிதியானைச் சேர்ந்த சிப்போராவைக் குறிக்கலாம்.

**கூசான்-ரிசத்தாயிம்** (CUSHAN - RISHATHAIM - ''இரு மடங்கு பொல்லாங்குள்ள கூசான்'')

அராம் நகராமின் அரசனுடைய பெயர் அல்லது அவர் பெயரின் திரிபாக இருக்கலாம். நீதிபதிகள் நூலில் கூறப்பட்டுள்ளபடி இவர்தான் இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்திய முதல் அரசர் (நீதி 3:8-10). முதல்

நீதிபதியான ஒதினியேலின் போர் வெற்றியின் மூலம் இவருடைய 8 வருடக் கொடுங்கோன்மை ஒழிந்தது.

**கூசி** (CUSHI)

1. யோயாக்கிமின் அரசவையில் சிற்றரசனாக இருந்த எகுதியின் கொள்ளுப் பாட்டன் (எரே 36:14).

2. இறைவாக்கினர் செப்பனியாவின் தந்தை (செப் 1:1).

**கூசி** (CHUSI - இடம்)

யூதி 7:18-இல் கூறப்பட்டுள்ள ஓர் இடமாகும். இப்பெயர் வுல்கத்தா வாசகத்தில் காணப்படவில்லை, மாறாகப் பழைய இலத்தீன் மொழி வாசகத்தில் காணப்படுகிறது. இந்த இடம் அகிராபே என்ற இடத்தின் மேற்கிலும், நப்லூஸ் என்ற இடத்தின் தெற்கிலும் அமைந்திருந்ததாகக் கூறப்படும்.

**கூசியர்** (CUSHITE)

அபிசலோமின் தோல்வி, மரணம் பற்றிய செய்தியை யோவாபிடமிருந்து தாவீதிற்குக் கொண்டுவந்தவரின் பெயர். இவர் அனேகமாக ஒரு நீக்ரோ அடிமையாகவோ, கூலிப் படை வீரனாகவோ இருந்திருக்கலாம். ஆகவே, அன்னியனான இவர் துக்கச் செய்தியைக் கொண்டு செல்ல, அகிமாசைவிடத் தகுதியானவராக யோவாபால் கருதப்பட்டார்.

எண் 12:1-இல் மோசேயின் மனைவி சிப்போரா ஒரு கூசியப்பெண் என்றழைக்கப்படுகிறாள். இது கூசு மிதியானின் ஒரு மாவட்டம் என்று சுட்டுகிறது.

**கூசிம், கூசியர்** (HUSHIM)

1. தாணின் மகன் அல்லது அவரிலிருந்து தோன்றிய ஒரு சமூகக் குழு (ஆதி 46:23). இப்பெயர் எண் 26:42-இல் சூகாம் என்று வருகிறது.

2. பென்யாமினைச் சேர்ந்த அகேரின் மகன் (1 நாள் 7:12). இந்த வரியின் எபிரேய வாசகத்தை விளக்குவது கடினம்.

3. பென்யாமினைச் சேர்ந்த சாராயிமின் மனைவி. அபிதூது, ஏல்பால் ஆகியோரின் தாய் (1 நாள் 8:8.11).

**கூசு** (CUSH - கரிய) - ஆள்

1. காயின் மூத்தமகன். நிம்ரோதின் தந்தை (ஆதி 10:6-8; 1 நாள் 1:8-10.

2. இவர் சங் 7-இல் தலைப்பில் மட்டும் குறிப்பிட்டுள்ளார். இவர் பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர். இவர் தாவீதுக்கு எதிராக அவதூறு பேசிய எதிரி என்பதை நம்மால் உய்த்துணர முடிகிறது. இது சங்கீதத்திற்கு (7) ஒரு சூழ்நிலையைக் கொடுப்பதால், பிற்காலத் திருப்பணியாளர் இவர் பெயரைத் தலைப்பில் சேர்த்தார்.

**கூசு** (CUSH) - இடம்

1. வட அல்லது மத்திய பாபிலோனியாவிலுள்ள காசியர்களின் பகுதி (ஆதி 2:13; 10:8).

2. அடிக்கடி எத்தியோப்பியா என்றழைக்கப்படும் ஆப்பிரிக்கப் பகுதியாகும் (2 அர 19:9; எஸ்த 1:1; ஏச 11:11). இது எகிப்துக்குத் தெற்கே (எச 29:10) நைல் நதியையொட்டிய நூபிய அரசாக அடையாளம் காட்டப்பட வேண்டும். இதை இக்கால எத்தியோப்பாவோடு (அபிசீனியா) குழப்பக்கூடாது. பெரும்பாலும் எகிப்திய ஆளுகைக்கு உட்பட்ட இப்பகுதி கி.மு.11-ஆம் நூற்றாண்டு மத்தியில் தனது சுதந்தரத்தை வலியுறுத்தியது. கி.மு. 712-663-இல் எத்தியோப்பியர் எகிப்தை அதன் 25-ஆவது அரசமரபாக ஆட்சிசெய்தனர் (2 அர 19:9; ஏச 37:9).

காண்க. எத்தியோப்பியா.

3. அக்காபா வளைகுடாவுக்கு வடகிழக்கில் மிதியானில் உள்ள நகரமாக அல்லது ஒரு மாவட்டமாக இருக்கலாம் (அ.ப. 3:7, எண் 12:1). அறிஞர்கள் இதை, காசாவுக்குத் தென்கிழக்கிலுள்ள கெராரிலுள்ள மாவட்டமாகவும் (2 நாள் 14:9 தொ) காட்ட முயன்றுள்ளனர்.

**கூடாரம்** (TENT)

எளிதாக இடம் பெயரக்கூடிய நாடோடிக

ளாலும், மேய்ப்பர்களாலும், படைவீரர்களாலும் பயன்படுத்தப்பட்ட தங்கும் இடமாகும் (ஆதி 4:20; 25:27; நீதி 8:11). ஆனால் இது குடிசையினின்றும் வேறுபடுகிறது:-

தொடக்கத்தில் விலங்குகளின் தோல், கைகளால் பின்னப்பட்ட கனமான துணிகள் ஆகியவற்றால் கூடாரம் அமைக்கப்பட்டது (உ.ச. 1:5). இதைக் கூடாரக் கம்பங்கள் மேல் போடும்போது மழையினால் ஏற்படும் சுருக்கத்தைச் சமாளிக்க அமைப்புகள் இருந்தன (யாத் 27:10). திருமணத்திற்குப் பின் புது மணத்தம்பதியர்க்கு இனக்குடியிருப்புக்கருகில் புதுக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன (சங் 19:5; யோவா 2:16).

கூடாரத்தின் நடுக்கால் மட்டும் மற்றவற்றை விட உயரமாக இருக்கும். இது, வானம் கூடாரம்போல் விரிந்துள்ளது என்று உவமையாகக் கூறக் காரணமாக அமைந்தது (ஏச 40:22). மேலே போடப்பட்ட விரிப்பைக் காக்கக் கயிறுகள், தரையில் அடிக்கப்பட்ட முளைகளில் கட்டப்பட்டன (யாத் 35:18; யோபு 4:21; ஏச 54:2; எரே 10:20; நிதி 4:21). நடுக்காலில் மேலிருந்து தொங்க விடப்பட்ட பெரிய திரை கூடாரத்தை இரண்டாகப் பிரித்தது. இதில் பின்பகுதி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது (நீதி 15:1; ஆதி 43:40). மமிரேயில் இருந்த ஆபிரகாமின் கூடாரம் இந்த அமைப்பை உடையதாக இருந்திருக்கவேண்டும். எனவேதான் சாராவால் மூன்று விருந்தாளிகளின் பேச்சைக் கேட்க முடிந்தது (ஆதி 18:40). ஆனால் மற்றச் சமயங்களில், குல மூதாதையர் தங்கள் மனைவியருக்குத் தனிக்கூடாரம் அமைக்கும் அளவுக்குச் செல்வர்களாய் இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது (ஆதி 24:67; 31:33).

இந்தக் கூடாரங்களில் இருந்த அடுப்பு தரையில் வெட்டப்பட்டது அல்லது சில கற்களை அடுக்கிச் செய்யப்பட்டது. கோரைப்பாய்கள் இவர்களுடைய படுக்கையாகப் பயன்பட்டது. இவைகளைப் பகலில் சுருட்டி வைத்துவிடலாம். இதுதான் அவர்களுடைய ஆசனம் ஆகும். தரையில் விரிக்கப்பட்ட சிறுதோல் விரிப்பே மேசையாகப் பயன்பட்டது (சங் 23:5; ஏச 21:5). மற்றும் வெள்ளாட்டுத் தோலினால் செய்யப்பட்ட பைகளும், மட்பாண்டங்களும், கிண்ணங்களும், தண்ணீர்ச் சாடிகளும், மாவரைக்கும் உரல்களும், எளிய விளக்குகளும் பயன்படுத்தப்பட்டன.

இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறியபின், அறுவடைக் காலங்களில், விளைச்சலுக்கு அருகில் கூடாரமடித்துத் தங்குவர். இதுவே பிற்காலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த கூடாரத்திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் இஸ்ராயேல் மக்கள் நிலையான வீடுகளில் வாழ்ந்தபோதும், கூடாரம் என்னும் சொல் வீட்டைக் குறிக்கப்பயன்பட்டது (1 அர 8:66; 12:16; ஏச 38:12; எரே 4:20). மேலும் இச்சொல் குடும்பத்தையும், மக்களையும் (செக் 12:7; மலா 2:12) அல்லது திருவிடத்தையும் (எஸ் 9:8) குறித்தது. புனித பவுல் ஒரு கூடாரம் தயாரிப்பவர். அவர் கொரிந்து நகரில் இருந்தபோது இதே தொழிலைச் செய்த அக்கிலா, பிரிசிக்கில்லா ஆகியவர்களுடன் தங்கினார்.

### கூடாரம் செய்பவர் (TENTMAKER)

அ.ப. 18:3-இன் படி பவுலின் தொழில் கூடாரம் செய்வதாகும். பவுலும், அக்கிலாவும் அனேகமாக அவர் மனைவி பிரிசிக்கில்லாவும் கொரிந்து நகரில் இதே தொழிலைச் சேர்ந்து செய்ததாகக் கூறப்படுகிறது.

கிரேக்கச்சொல் கூடாரம் செய்வதைக் குறித்தாலும் அது வழக்கில் தோலைக் கொண்டு வேலை செய்தவர்களையும் குறித்தது. ஆகவே பவுல் ஒரு தோல் தொழிலாளியாக இருந்திருக்கவேண்டும். பழைய விளக்க நூல்கள் பவுல் வெள்ளாட்டு மயிரைக் கொண்டு நெய்திருக்கவேண்டும் என்று சுட்டுகின்றன. இத்தொழிலை அவர் எருசலேமில் கற்றிருக்கவேண்டும் (அ.ப. 22:3).

### கூடாரவிழா, சேகரிப்பு விழா (FEAST OF BOOTHS, FEAST OF INGATHERING)

யூதர்களின் சமூக ஆண்டு திசிரி (செப்டம்

பர்-அக்டோபர்) என்ற ஏழாம் மாதத்தில் தொடர்கிறது. இம்மாதம் விழாக்களின் மாதம் என்றழைக்கப்பட்டது. புத்தாண்டு நாளில் தங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்யுமாறு மக்களை அழைக்கும் நோக்கத்துடன் கொம்புகள் ஊதப்படும். அடுத்த பத்துநாட்களும் மக்கள் நோன்பு இருந்து, பத்தாம்நாள் பாவப்பரிகார விழாக் கொண்டாடப்படும். அதேமாதம் பதினைந்தாம் நாள் யூதர்கள் இந்தக் கூடாரவிழா அல்லது சேகரிப்புவிழாவைக் கொண்டாடினர். இந்த விழா இஸ்ராயேலரின் மூன்று முக்கிய விழாக்களில் ஒன்றாகும் (யாத் 23:16; 34:22; 2 நாள் 8:13). இது இலையுதிர் காலத்தில் அறுவடை முடிவில் வந்தது (யாத் 34:22); ஒருவாரம் நீடித்தது (லேவி 23:34).

இவ்விழா, தொடக்கத்தில் ஒரு விவசாய விழாவாகும். இது ஒரு நன்றி விழாவாகும். அண்மையில் கிடைத்த கனிகளுக்காக, பொதுவாக ஆண்டு அறுவடைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. பிற விழாக்களைப்போல் இஸ்ராயேலின் வரலாற்றின் நிகழ்ச்சிகளை நினைவு கூறும் விழாவாக மாறியது. இஸ்ராயேல் பாலை நிலத்தில் கூடாரங்களில் வதிந்த தொடர் நிகழ்ச்சியை நினைவுகூரும் பொருட்டு யூத ஆண்கள் யாவரும் இவ்விழாவின்போது பரந்தவெளிகளிலும் வீதிகளிலும் வீட்டுக் கூரைகளிலும் தழைகள் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்வர் (லேவி 23:40.42). அதனோடு மாமன்னன் சாலமோனால் ஆலயம் திருநிலைப்படுத்தப்பட்டதும், ஆலயத்துக்குள் திருப்பேழை எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்ச்சியும் நினைவு கூரப்படும். இது ஒரு மகிழ்ச்சி மிக்க விழாவாகும். ஆகவே, இதை வெறுமனே ''விழா'' என்று அழைத்தனர் (1 அர 8:2; 12:32). பீலோ இதை ''மிகப் பெரிய விழா'' என்றும், யோசிப்பஸ் ''புனிதமிக்க மிகப் பெரிய விழா'' என்றும் அழைக்கின்றனர். ஐந்நூல் இதைச் ''சேகரிப்பு விழா'' என்றழைக்கிறது.

இவ்விழாவின் முதல்நாள் ஓய்வுநாளாகவும், சபை கூடும் நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டது (லேவி 23:35). ஏழுநாட்களும் ஆண்டவருக்குத் தகனப்பலி செலுத்தப்பட்டது (23:36). விழாக் கூட்டங்கள் நிகழும். ஓய்வு ஆண்டில் இவ்விழாவின் முதல் நாளில் சட்டம் மக்களுக்கு வாசித்து அறிவிக்கப்பட்டது. விழா முடிந்த எட்டாம் நாளில் ஓய்வும், விழாக் கூட்டமும் கடைப்பிடிக்கப் பட்டன (23:36.39). அன்று அளிக்கப்படும் காணிக்கைகளும் பலிகளும் லேவி 23:37-38.40-இல் விவரிக்கப்படுகின்றன.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் இவ்விழா விவசாயக் கருத்தோடு இறைவனின் அரசத்தன்மையையும் மக்களுக்கு நினைவுபடுத்தியது (செக் 14:17). இவ்விழா வளர்ச்சியடைந்தது. இரு சடங்குகள் சேர்க்கப்பட்டன. ஒன்று நீர்க்காணிக்கையாகும். ''மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து நீங்கள் அகமகிழ்வோடு தண்ணீர் முகந்துகொள்வீர்கள்'' (ஏச 12:3) என்று கூறிக்கொண்டு நீர்க்காணிக்கை செலுத்தப்பட்டது. மற்றது ஏழு நாட்களும் காலைப்பலியின்போது ஒரு தங்கக்குடத்தில் சீலோவாம் ஊற்றிலிருந்து நீர் கொணர்ந்து தகனப்பலிபீடத்தின் தென்மேற்கு முனையில் ஊற்றுவர். இவ்விழாவின்போது சமய வழிபாடு தூயகத்துள் நடந்தது. இவ்விழாவின் முதன்மையான காணிக்கை புதிதாகப் பறிக்கப்பட்ட ஒரு கூடைப்பழங்களாகும். கடவுள் எகிப்திலிருந்து இஸ்ராயேலரை மீட்ட வரலாற்றையும் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை அளித்த வரலாற்றையும் பாடி இக்காணிக்கையை அளிப்பர்.

கிறிஸ்துவின் காலத்தில் இவ்விழா ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது. முதல்நாள் இரவு ஆலய இடங்கள் யாவும், சிறப்பாகப் பெண்கள் முற்றம், விளக்குகளாலும் தீபங்களாலும் ஒளிமயமாய் அலங்கரிக்கப்படும். இவ்வொளியில் சடங்கு நடனம் நிகழும். ஒவ்வொருநாளும், காலைப்பலியின்போது வழிபடுவோர் ஒரு கையில் கிளைகளையும் மறு கையில் பழங்களையும் ஏந்தி வலம் வருவர். அப்போது லேவியர்கள் 113-118 ஆம் சங்கீதங்களைப் பாடுவர். இந்த ஏழு நாட்களும் குருக்கள் கிளைகளை ஏந்திக்

கொண்டு 119-ஆம் சங்கீதத்தின் 28-ஆம் அடியைப் பாடிக்கொண்டு தகனப் பலிபீடத்தைச் சுற்றி வருவர். ஏழாம் நாள் ஏழுமுறை பீடத்தைச் சுற்றிவருவர். இந்நாள் விழாவின் முக்கிய நாளாகும். இவ்விழாவின்போது ஒவ்வொரு நாளும் சீலோவாம் ஊற்றிலிருந்து தங்கக்குடத்தில் ஆடம்பரத்துடன் நீர் கொண்டுவந்து தகனப் பலிபீடத்தின் தென்மேற்கு முனையில் ஊற்றுவர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியின்போதெல்லாம் கொம்புகளும் எக்காளமும் அடிக்கடி ஊதப்பட்டன. யூதர்களது சமூக ஆண்டின் தொடக்கத்தில் வரும் இந்த மகிழ்ச்சி மிக்க விழாவை அவர்கள் பெரிதும் விரும்பினர்.

இவ்விழாப் பற்றிய கட்டளையை இஸ்ராயேலர் ஆண்டுதோறும் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. பழைய ஏற்பாடு இக்கட்டளையை இஸ்ராயேலின் அரசர்கள் நிறைவேற்றியதாக ஒருமுறைதான் கூறுகிறது (2 நாள் 8:13). நெக 8:17-இன்படி யோசுவாவுக்குப்பின் நெகமியா காலத்தில்தான் இவ்விழா சட்டமுறைப்படி கொண்டாடப்பட்டது (நெக 8:13-14; எஸ் 3:4). அப்படியாயின் 1 சாமு 1:3-7-இல் வருவது கூடார விழாவன்று. நாடு கடத்தப்பட்டபின் இவ்விழா யூதர்களிடையே சிறப்பாகச் சிதறிக்கிடந்த யூதர்களிடையே சிறப்புப் பெற்றது. இவ்விழாவில் பங்குபெற யூதர்கள் எருசலேமை நோக்கி நீண்ட திருயாத்திரை செய்தனர்.

புதிய ஏற்பாட்டில் இவ்விழா குறிக்கப்படுகிறது. வெளிப்படையாக எருசலேமுக்குச் செல்ல மறுத்துவிட்டு, மறைவாக இயேசு அங்குச் சென்றது இவ்விழாவின்போதுதான் (யோவா 7). சீலோவாம் ஊற்றிலிருந்து நீர் கொண்டுவரும் நிகழ்ச்சியை ஒட்டி, இயேசு உயிர் ஊற்றைப்பற்றிப் பேசினார் எனலாம் (7:37 தொ). விழாவின் முதல் நாளாகிய ஒளிநாளின் போது இயேசு தாமே ''உலகின் ஒளி'' என்று (8:12) கூறியிருக்கலாம். இச்சூழ்நிலையில் அவரது சொற்களை அறிந்து உணர முயலவேண்டும். இவ்விழாவின் இறுதிநாளை யோவான் ''இறுதியான பெருநாள்'' என்று குறிப்பிடுகிறார் (7:37).

**கூடு (NEST)**

''கூடு'', ''கூடுகள் கட்டுவது'' என்பன பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வழக்கமாகக் ''கூடு'' என்ற சொல்லைப் பறவைகளுக்கே பயன்படுத்துவார்கள். ஆனால் மனிதன் தற்காலிக இருப்பிடமாகக் கொள்ளும் இடத்தையும் ''கூடு'' என்றே கூறிவந்தார்கள்.

புதிய ஏற்பாடு மத் 8:20; லூக் 9:58-இல் ''கூடு'' என்பது ''கூடாரம் கட்டுதல்'' என்ற சொற்பொருளில் குறிப்பிடப்படுகின்றது.

**கூடை (BASKET)**

பொருட்களைத் தூக்கப் பயன்படுவது கூடை. இதைக் குறிக்க எபிரேயத்திலும் கிரேக்கமொழியிலும் பலசொற்கள் உண்டு. அனேகமாக மூங்கிலால் ஆன கூடை உணவுப் பொருட்களை வைக்கப் பயன்படுகிறது. பலவித பலகாரங்கள் (ஆத 40:16-18), புளியாத அப்பம் (யாத் 29:3; 23:32; லேவி 8:2; 26, 31; எண் 6:15.17:19), இறைச்சி (நீதி 6:19) ஆகியவை இதில் வைக்கப்பட்டன. மேலும் குருவிற்குக் கொடுக்க வேண்டிய முதற்கனியை வைப்பதற்கும் (உப 26:2.4; 28:5), உணவு கொண்டுபோவதற்கும் (ஆமோ 8:1-2), பறவைகளின் கூடுபோன்ற கூடை பயன்பட்டது. மேலும் இவை அத்திப்பழம் வைக்கவும் (எரே 24:1-2), செங்கல் அல்லது கட்டடம் கட்டத் தேவையான வேறு கடினமான பொருட்கள் தூக்கவும் (சங் 81:6), ஆகாபின் மக்கள் 70 பேர்களின் தலைகளை வைக்கவும் (2 அர 10:7) பயன்பட்டது.

குழந்தை மோசேயை வைத்த கூடையானது நாணலால் செய்யப்பட்ட சிறிய பெட்டியாகும் (யாத் 2:3.5). மூடி பொருந்திய (வச 5) இப்பெட்டிநீர் புகாதவாறு கீல், நீலக்கீலால் பூசப்பட்டு நீரில் மிதப்பதற்கேற்றவாறு செய்யப்பட்டிருந்தது. நாணல் படகுகளைப் பற்றி ஏச 8:2-இல் குறிப்பு உள்ளது. இதே சொல்தான் நோவாவின் பெட்டகத்தைக் குறிக்கவும் பயன்பட்டது.

நற்செய்தியில் 5000 பேர் உணவு உண்ட பிறகு எஞ்சிய துண்டுகளை 12 கூடைகளில் எடுத்தனர் எனக் குறிப்புள்ளது (மத் 14:20; மாற் 6:43; லூக் 9:17; யோவா 6:13). சில பகுதிகள் 4000 பேர் உண்டபிறகு 7 கூடைகளில் எடுத்ததாக உள்ளது (மத் 15:37; மாற் 8:8). இவ்விரு பகுதிகளிலும் சில வேறுபாடு இருப்பினும் (மத் 16:9-10; மாற் 8:19-20) இரு வெவ்வேறான வகைக் கூடைகள் பயன்பட்டிருப்பது தெரிகிறது. பவுலைக் கூடையில் வைத்துத் தமஸ்குவின் மதில் மேலிருந்து வெளியே இறக்கிவிட்டதிலிருந்து (அப் 9:25) பெரிய கூடைகளும் பயன்பட்டதாகத் தெரிகிறது. பவுல் பழைய சம்பவங்களை நினைவூட்டுகையில் 'கூடையில் வைத்து இறக்கப்பட்டேன்' என்கிறார் (2 கொரி 11: 33).

**கூட்டம், கூட்டமைப்பு** (CONGREGATION, ASSEMBLY)

இது பலவகைப்பட்ட கூட்டங்களைக் குறிக்கும் (யோபு 15:34; சங் 22:16; 82:1). குறிப்பாக இஸ்ராயேலரின் சமயக் குழுக் கூட்டத்தைக் குறிக்கும். ''ஏதா'' என்ற எபிரேயச்சொல், இஸ்ராயேல் சமூகம் அனைத்தையும், சிறப்பாகப் பாலையில் அலைந்து திரிந்த சமூகத்தைக்குறிக்கும் (யாத் 12:3.6.19. 47; எண் 27:17; லேவி 8:4-5). வழிபாட்டுக்கும், சட்டத்தை அறிவிக்கப்பெறவும், நீதி பெறவும் ''காகால்'' என்ற எபிரேயச்சொல் கூடும் சமூகத்தைக் குறிக்கிறது. இச்சொல் குருக்கள் பாரம்பரியத்தில் அடிக்கடி பயன்படுகிறது. இச்சொல் நாட்டைப் பகிர்ந்து கொடுக்கும்போதும், மக்களைச் சேர்ந்த காரியங்களை நிர்ணயிக்கும்போதும் பயன்படுகிறது. சிறப்பாக உபாகமப்பாரம்பரிய வரலாற்றிலும் (உப, யோசுவா, நீதி, 1,2, சாமுவேல், 1,2, அரசர்கள்) சங்கீதங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''எக்லேசியா'' என்ற கிரேக்கச்சொல் திருச்சபையைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் இச்சொல், உலகளாவிய திருச்சபையையும். தலத்துத் திருச்சபையையும் வேறுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சிலர் கூறுவர். இத்தகைய தலத்துத் திருச்சபையைக் குறிக்க இச்சொல் பயன்பட்டிருந்தாலும் (கலா 1:2; 1 தெச 1:1) பொதுவாகத் திருச்சபையைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது (எபே 1:22; கொலோ 1:18).

**கூண்டு** (CAGE)

பறவைகளையும் விலங்குகளையும் அடைத்து வைப்பதற்குப் பயன்பட்ட ஒரு சாதனம் (எரே 5:27; திருவெளி 18:2).

எச 19:2-9-இல் வரும் புலம்பலில் இளஞ் சிங்கம் ஒன்றைப் (தெளிவாக இது யோயாகினைச் சுட்டுகிறது) பிடித்துச் சங்கிலியால் கட்டிக் கூட்டிலடைத்து (19:9), பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர் என்று கூறப்படுகிறது. எசக்கியேலில் இந்த விவரிப்பு உருவகமாக வருகிறது (2 அர 24:12-15; 25:27-30). ஆனால் போர்க் கைதிகளை இவ்வாறு அநாகரிகமாக நடத்துவது பழங்காலத்தில் சர்வசாதாரணமாய் இருந்தது.

**கூத்தா** (CUTHA, CUTH - எரிகின்ற)

வட பாபிலோனியாவின் ஒரு பூர்வீக நகரம்; வடகிழக்குக் பாபிலோனியாவிலுள்ள தேல் இப்ராகிமில் இதனுடைய இடிபாடுகள் காட்டப்படுகின்றன. கீழ் உலகத்தின் அரசனான நெர்கால் வழிபாட்டின் மையமாகப் புகழ் பெற்றிருந்தது. 2 அர 17:24-30-இன்படி அசீரியாவின் அரசனான இரண்டாம் சார்கோன் சமாரியாவைத் தோற்கடித்து அதன் குடிகளை அடிமைகளாக எடுத்துச் சென்ற பின்பு (கி.மு.721), அன்னியர்களால் அதை நிரப்பினார். இவர்களுள் கூத்தாவிலிருந்து வந்த குழுவும் இருந்தது. இவர்கள் புதிய இருப்பிடத்திற்கு நெர்கால் வழிபாட்டையும் கொண்டுவந்தனர்.

**கூபு** (CUB)

எகிப்துக்கு எதிரான இறைவாக்கில் குறிக்கப்படும் அடையாளம் காணமுடியாத இடம் (எச 30:5). இந்த இடமானது கூசு, பூத்தியா, இலீதியா போன்ற நாடுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இது இலி

பியாவைக் குறிப்பதாக இருக்கும் எனப் பலர் கருதுகின்றனர்.

**கூப்பாம்** (HUPHAM - *கடற்கரை மனிதன்)*

பென்யாமின் புதல்வர்களின் வரிசையில் குறிப்பிடப்படுகிறார். ஒரு குலப்பெயர்த் தலைவர் (ஆதி 46:21; எண் 26:39; 1 நாள் 7:12). 1 நாள் 7:15-இல் தவறாக நுழைக்கப் பட்டிருக்கிறது. 1 நாள் 8:5-இல் உள்ள 'கூராம்' என்பதின் சூழ்நிலை அது கூப்பாம் என்று வாசிக்கப்படவேண்டும் என்று காட்டுகிறது. ஒருவேளை இவரும் குப்பிமும் ஒரே ஆளைக் குறிக்கலாம். ஆனால் 7:12.15-இல் குப்பிம் ஈரின் மகன் எனக் குறிக்கப் பெறுகிறார்.

**கூராம்** (HURAM - *உயர்த்தப்பட்டவரின் சகோதரன்)*

1. கீராம் என்ற பெயரின் மற்றொரு வடிவம். தீரின் அரசன் முதலாம் கூராமைக் குறிக்க 2 நாளாகமம் குறிப்பாகப் பயன்படுத்துகிறது.

2. ஆலய அலங்கார வேலைகளில் சாலமோன் பயன்படுத்திய வெண்கல வேலையில் கைதேர்ந்தவர். தீரிலிருந்து வந்தவர் (1 அர 7:13-14.40.45; 2 நாள் 2:13-14; 4:11-16). இவருடைய தந்தை ஒரு தீரியர். தாய் நப்தலியைச் சேர்ந்த இஸ்ராயேலியப் பெண் (1 அர 7:14). 2 நாள் 2:14 இவள் தாண் இனத்தைச் சேர்ந்தவள் என்று கூறுகிறது. இவர் அரசர்கள் நூலில் கீராம் (2) என்றும் 2 நாள் 2:13; 4:16-இல் கூராம்பி என்றும் அழைக்கப்பெறுகிறார்.

3. பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர். பேலாவின் புதல்வர் (1 நாள் 8:5). அநேகமாக இவரது பெயர் கூப்பாம் என்றிருக்க வேண்டும் (எண் 26:39).

**கூராம்பி** (HURAM-ABI)

ஆலய அலங்கரிப்பில் சாலமோன் பயன்படுத்திய, தீரைச் சேர்ந்த, வெண்கல வேலைகளில் கைதேர்ந்தவர் (2 நாள் 2:13). காண். கூராம்.

**கூராய்** (HURAI)

தாவீதின் வல்ல வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:32). 2 சாமு 23:30-இல் இவர் இத்தாய் என்றழைக்கப்படுகிறார்.

**கூரி** (HURI - *பஞ்சு நெய்பவன்)*

காது இனத்தைச் சேர்ந்தவர். யாரொவாவின் மகன்; அபிகயிலின் தந்தை (1 நாள் 5:14).

**கூரியர்கள்** (HURRIANS)

செமித்திய இனத்தைச் சேராதவர்கள். ஆற்றல்மிக்க மித்தானியப் பேரரசை நிறுவியவர்கள். சுமேரிய - அக்காதிய கலாச்சாரம் பரவுவதற்குக் கருவியாக அமைந்தவர்.

1. வரலாறு:- கி.மு. 2400-ஐ ஒட்டிய அக்காதிய வாசகங்களில் கூரியர்கள் முதன் முதலில் குறிக்கப்பெறுகின்றனர். இவர்கள் கார்கமிசுக்கு வடக்கேயுள்ள தாவுரசு மலைத் தொடரில் அமைந்துள்ள, உர்கிசுப் பகுதியில் வாழ்ந்தனர். இதுவே இவர்கள் வரலாறு முழுவதும் இவர்களின் கலாச்சார மையமாகத் திகழ்ந்தது. கி.மு. 2000-க்கு முந்திய வாசகங்கள், திகிரிசுக்குக் கிழக்கிலும் வட சாபு ஆறுகளின் வடக்கிலும் இவர்கள் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கின்றன. இவர்களின் மூன்றாம் அரச மரபின் வீழ்ச்சிக்குப் பின், இவர்கள் வட மெசபொத்தாமியாவிலும் வட சீரியாவிலும் படிப்படியாகப் புகுந்தனர். அலாலாக்கில் இவர்கள் இருந்தது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

பழைய இத்தியப் பேரரசு பலவீனமானது இவர்களை உந்தித் தூண்டியது. கூரியர்கள் பல நகர அரசுகளை அமைத்தனர். இது கி.மு.1500-ஐ ஒட்டி இத்தியப் பேரரசு வீழ்ச்சியுறுவதற்கு வழிகோலியது. இந்த நகர அரசுகளில் முக்கியமானது மித்தானியாகும். விவிலிய காரனுக்கு அருகிலுள்ள வசுக்கன்னியைத் தலைநகராகக் கொண்ட ஒரு பேரரசை அமைத்தது. இது அலாலாக்கிலிருந்து நூசிவரை பரவியிருந்தது. அசீரியாகூட அடிமை நாடானது.

ஒரு நூற்றாண்டுக்குப்பின் முதலாம் சுப்பிலுலியுமாசின் தலைமையில் (கி.1386) இத்தியப் பேரரசின் எழுச்சியோடு கூரியர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. ஆயினும் கூரியர்களின் செல்வாக்கு, கலாச்சாரத்திலும் அரசியலிலும் தொடர்ந்தது. பல நகர அரசுகளில் கூரியர்கள் அரசக்குழுவில் இருந்தனர் என்பது அமர்னா ஏடுகளில் தெரிகிறது. கி.மு.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய 19-ஆவது அரசமரபு ஏடுகள் சீரிய-பாலஸ்தீனத்தைக் ''கூரு நாடு'' என்று குறிக்கின்றன. 12-ஆம் நூற்றாண்டில் புதிய மக்களின் குறிப்பாகக் கடல் மக்களின் வரவால், கூரியர்களின் செல்வாக்கு குறைந்தது. மற்ற மக்களோடு கலந்து போயினர். முதலாம் ஆயிரமாண்டு தொடக்கத்தில் வான் எரிப் பகுதியில் கூரியர்கள் இறுதியாகக் குறிப்பிடப் படுகின்றனர்.

2. விவிலியக் குறிப்புக்கள்:- 14-ஆம் நூற்றாண்டில் செக்கேம், தானாக்கு, மெகிதோ போன்ற பாலஸ்தீன நகர்களில் கூரியர்கள் ஆட்சியாளராக இருந்திருக்கின்றனர் என்பதற்கு அமர்னா ஏடுகள் சான்று கூறுகின்றன. ஆனால் அப்போதோ அல்லது விவிலியக் காலத்தில் எப்போதுமே, அப்பகுதியின் மக்கள் தொகையின் முக்கிய பகுதியாகக் கூரியர்கள் தோன்றவில்லை. கூரியர்களை விவிலியக் கோரியர்களாகவோ, கீவியர்களாகவோ காட்ட எடுக்கும் முயற்சிகளை, வரலாற்று, பெயரியல், இலக்கிய அடிப்படையில் விளக்குவது கடினம்.

3. முக்கியத்துவம்:- கூரியர்களின் மித்தானியப் பேரரசின் அரசியல் வெற்றிகளை விட, பழம் மேற்காசியாவில் இவர்களுடைய கலாச்சார, சமூகச் செல்வாக்கு வெகு முக்கியமானதாகும். மூன்றாம் ஆயிரமாண்டுக் காலத்திலேயே இவர்கள் ஆப்பு எழுத்து முறையை ஏற்றுத் தங்கள் மொழியை வளர்த்துள்ளனர். இம்மொழி உரத்திரியன் மொழி போன்றது; இன்னும் விளக்கப்படவில்லை. இவர்களுடைய வரலாற்று முடிவில், மாரி, அலாலாக்கு, உகரித்து இத்தியப் பேரரசு ஆகியவற்றின் பெயர்களில் கூரியர் வடிவங்கள் தெளிவாக உள்ளன. கூரியர் மொழியிலிருந்து கடன்வாங்கப்பட்ட சொற்கள் இத்திய மொழியில் மிகுந்துள்ளன. கூரியரின் இலக்கிய, மொழி அகரவரிசை, சமயம் சார்ந்த வாசகங்கள் மாரி, பொகஸ்கோஸ், உகரித்து பதிவேட்டு நிலையங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கூரியரின் கடிதம் ஒன்று அமர்னா ஏடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய வரலாற்றின் தொடக்கத்தில் இவர்கள் சுமேரிய-அக்காதிய கலாச்சாரத்தை ஏற்று, அதைத் திருத்தங்களோடு சீரியாவிலும், இத்தியாவிலும், பரப்பினர். இது குறிப்பாகச் சமயத்திற்குப் பொருந்தும். பல கூரியக் கலப்பினத் தெய்வங்களோடு கூரியரின் பருவகாலத் தெய்வமாகிய தெசுபையும் அவரது துணைவி கெப்பாவையும், அவர்களின் மகன் சுரும்மாவையும் இத்தியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

நூசி, அரப்பா ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆயிர ஆப்பு எழுத்து ஏடுகள் கூரியர்களின் சமூக, சட்ட, பழக்க வழக்கங்களை விவரிக்கின்றன. பழைய ஏற்பாட்டுக் குலமுதியவர்களிடம் கூரியர்கள் கொண்டிருந்த செல்வாக்கு, ஒரு காலத்தில் ஆதி 12-50-என்ற பகுதியின் விளக்கவுரையில் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இப்போது அப்படிக் கருதப்படுவதில்லை. ஆயினும் மெசபொத்தாமியா, சீரியா-பாலஸ்தீனத்தில் பல நகர அரசுகளை ஆண்டு வந்த கூரியர் ஆட்சிக்குழுவினர் புதிய போர் முறைகளை அறிமுகப்படுத்தினர். இவற்றில் சில, அம்பு, செதில் கொண்ட போர்க் கருவிகள், தேர்ப்படை, ஆகியவையாகும். இவை போர் முறையை மட்டுமின்றி சமூக அமைப்புகளையும் பாதித்தன. பழம் மேற்காசிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ப்படையுடைய ஆட்சியாளர்களாக மாறினர்.

**கூர்** (GUR - தங்குமிடம்)

யூதா அரசன் அகசியாவை ஏகூவின் படைவீரர்கள், இபுலாம் அருகே இருந்த ஏற்றத்தில் காயப்படுத்தினர் (2 அர 9:27).

**கூர் (HUR - குழந்தை)**

1. அமலேக்கியரோடு இரபிதிமில் நடந்த போரில் இஸ்ராயேல் வெற்றி பெறுவதற்காக இறைவனின் கோல் உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கும் பொருட்டு ஆரோனுடன் சேர்ந்து மோசேயைத் தங்கிநின்ற மோசேயின் உதவியாளர் (யாக் 17:10-12). பின்பு மோசேயும் யோசுவாவும் சட்டப்பலகையைப் பெறும் பொருட்டுச் சீனாய் மலைக்கு ஏறிச்சென்றபோது கூரும் ஆரோனும் மக்களின் முக்கிய தலைவர்களாக விளங்கினர் (24:14). பொன் கன்றுக் குட்டி நிகழ்ச்சியில் இவர் குறிக்கப்படாதது கவனிக்க வேண்டிய தொன்றாகும் (யாத் 32). பிற்கால யூதப் பாரம்பரியப்படி கூர் மோசேயின் சகோதரி மிரியமின் கணவர் ஆவார்.

2. யூதாவின் வழித்தோன்றல்களில் ஒருவர். குலப்பெயர்த் தலைவர். கலேபு-எப்பிராத்து ஆகியோரின் மகன். ஊரியின் தந்தை; பெசலேலின் பாட்டன் (யாத் 31:2; 35:20; 38:22; 1 நாள் 2:19-20; 2 நாள் 1:5). அவருடைய வழித்தோன்றல்களின் கிரியாத்து-எயாரிம், பெத்திலகேம் ஆகிய நகரங்களின் மக்களும், மனகாத்தியரும் உள்ளடங்கும்.

3. ஒரு மிதியான் நாட்டு அரசனும் எமோரிய அரசன் சீகோனின் சிற்றரசனும் ஆவார் (யோசு 13:21). பேகோரில் நடந்த நிகழ்ச்சிக்காக மோசே பதிலடி கொடுத்தபோது பிலயாமோடு கொல்லப்பட்ட ஐந்து மிதியான் நாட்டு அரசர்களில் ஒருவர் (எண் 31:8).

4. எப்பிராயிம் மலைப்பகுதிக்கு அதிகாரியின் தந்தை. இந்த அதிகாரி சாலமோன் அரண்மனைக்கு வேண்டிய உணவுப் பொருட்களுக்குப் பொறுப்பாளி ஆவார் (1 அர 4:8).

5. நெகமியா காலத்தில் எருசலேம் சுவர் பழுதுபார்க்கப்பட்டபோது உதவிய இரப்பாயாவின் தந்தை, அல்லது குடும்பப்பெயர் (நெக 3:9).

**கூர்பாகால் (GURBAAL - பாகால் தங்குமிடம்)**

அராபியர்கள் குடியேறிய நகரம். ஏதோமுக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஊசியா அரசன் இதைக் கைப்பற்றி இதன் பெயரை யாகூர் என்றழைத்தார் (2 நாள் 26:6-8; யோசு 15:21).

**கூர்மையாக்குதல், தீட்டுதல் (WHET)**

கூர்மைப்படுத்துதல் (சங் 7:12; உப 32:41; சங்-64:3; திருவுரை 10:10), ''வாளைக் கூர்மைப்படுத்துதல்'', ''நாக்கினைக் கூர்மைப் படுத்துதல்'' என்பன உவமைப் பொருளிலும் அதாவது மற்றவர்களைத் தாக்குவதற்குத் தயாராகுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உப 32:41; சங் 7:12-இல் இறைவன் இறுதித் தீர்ப்புக்குத் தயாராவதைக் குறிக்கும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கூலி, சம்பளம் (WAGES)**

கூலி என்பது வேலைக்காக அமர்த்தப்பட்ட ஒருவனின் வேலைக்குரிய ஊதியமாகும். குல மூதாதையர் காலத்திய, நாடோடியாக வாழ்ந்த எபிரேயர்களிடையேயும் இஸ்ராயேல் உழவர்களிடையேயும் கூலிக்காரர்கள் தனிப்பட்ட வகுப்பினராகக் கருதப்படவில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக உழைத்தனர். அதற்கு உரிய ஊதியம் அளிக்கப்பட்டது. அது பொருளாகவும் இருக்கலாம் (ஆதி 29:15; 30:32-33; 31:7.41). பழைய ஏற்பாட்டின் வரலாற்று நூல்களின் நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும், தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாகவும், உழைப்பாளிகள் தங்கள் ஊதியத்தை, குறைந்தபட்சம் பாதி ஊதியத்தையாவது, நிறுக்கப்பட்ட வெள்ளியாகவோ, வெண்கலமாகவோ பெற்றனர். பாரசீகர்களின் காலம்வரை நாணயங்கள் பாலஸ்தீனத்தில் தோன்றவில்லை. கிரேக்கர்களின் காலத்தில்தான் ஊதியம் நாணயமாக வழங்கப்பட்டது.

மேய்ப்பவர்கள் (ஆதி 29:15; 30:32-33; யோவா 10:12), தோட்டங்களில் வேலை செய்பவர்கள் (மத் 20:1-16; லூக்10:7; 15:17;

யோவா 4:36; யாக் 5:4), மீன்பிடிப்பவர்கள் (மாற் 1:20), கூலிப்படை வீரர்கள் (லூக் 3:14), தாதிகள் (யாத் 2:9) ஆகியவர்களுக்குக் கூலி வழங்கப்பட்டதற்கு விவிலியத்தில் குறிப்புகள் உள்ளன. வேசிகள் பணத்திற்கு அமர்த்தப்பட்டது உப 23:18; ஏச 23:17; எசே 16:31; ஒசே 9:1; மீக் 1:7 ஆகியவற்றில் கூறப்படுகிறது. கூலியாட்கள் அமர்த்தப் பட்ட மேற்கூறிய வேலைகள் முழுமையான பட்டியல் அல்ல. தொழிற்சாலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும், அதிக அளவில் ஆட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டாலும், அதற்கு நேரிடையான குறிப்புகள், விவிலி யத்தில் அதிகம் இல்லை.

நிலச் சொந்தக்காரர்களுக்கும், அடிமைக ளுக்கும் இடைப்பட்ட கூலியாட்கள் அசீரியாவில் காணப்படுகின்றனர். கூலி, வேலைக்கு அமர்த்தப்படுபவனுக்கும், வேலைக்கு அமர்த்துபவனுக்கும் இடையே நிர்ணயிக்கப்பட்டது. யாக்கோப்பின் கதை, எவ்வாறு கூலி நிர்ணயிக்கப்பட்டது என்ப தற்கும், எவ்வாறு ஒருவரை ஒருவர் ஏமாற்றி இலாபம் பெற நினைக்கின்றனர் என்பதற் கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் (ஆதி 30:31-43; 31:6-7). திராட்சைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் உவமை யில் (மத் 20:1-16) முதலாளி, வழக்கத்திற்கு மாறான தாராளத்தன்மையைக் காட்டுகின் றார்.

கூலியாட்கள் சுரண்டப்படாமலிருக்கச் சட்டங்கள் இருந்தன. கூலியாள் இஸ்ராயேல னாக இருந்தாலும் அல்லது அந்நியனாக இருந்தாலும், அன்றைய கூலி பொழுது சாயுமுன் கொடுக்கப்படவேண்டும் (லேவி 19:13; உப 24:14-15). ஆனால் சட்டம் மதிக் கப்படவில்லை. எனவே நீதியற்ற நிலச் சொந் தக்காரர்களை நோக்கி இறைவாக்கினர்கள் கண்டனக் குரல் எழுப்பினர் (எரே 22:13; மலா 3:5). பொதுவாகக் கூலி வாழ்க்கை மகிழ்ச்சியானதொன்றாகக் கருதப்பட வில்லை. கூலியாட்கள் தங்களது குறைந்த வருவாயைப்பற்றி கவலைகொண்டனர். கைக்கு வாய் வாழ்ந்தனர் (யோபு 7:1-2; 14:6).

கூலி, சன்மானம், சம்பளம் என்ற சொற் கள், இறைவன் மனிதர்களுக்கு அளிக்கும் சலுகைகளையும் (ஏச 23:18; 40:10; 62:11) தண்டனையையும் (சங் 109:20; உரோ 6:23; 2 பேதுரு 2:15) உருவகமாகக் குறித்தன.

## கூலே (HULEH)

யோர்தான் ஆற்றின் ஓட்டத்திலுள்ள மூன்று ஏரிகளுள் மிகச் சிறியது; வடகோடி யில் உள்ளது; கலிலேயாக் கடலுக்கு வடக் கில் 16 கி.மீ.தொலைவில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 2 மீட்டர் உயரத்தி லுள்ளது; கிழக்கு மேற்கில் 6 கி.மீ.நீளமும், தென்வடக்கில் அதிகபட்சமாக 3 கி.மீ. அகல மும் உடையது. இதற்குத் தெற்கில் யிசிர் பெனாத் யாக்கூப (யாக்கோபின் புதல்வியர் களின் பாலம்) உள்ளது. இது கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபியச் சாலை. இது கலிலேயா மலைகளையும் யோர்தானுக்கு அப்பால் உள்ள யோலான் பகுதியையும் இணைக்கிறது. யோர்தானின் பிளவைக் கொண்டுள்ள வடபகுதி கெர்மோன் மலை யின் தென்மேற்கு அடியில் உள்ளது. இது கூலே பள்ளம் என்றழைக்கப்படுகிறது.

கூலே ஏரி விவிலிய விவரிப்புகளில் காணப்படவில்லை. முன்பு இதை மேரோம் நீரோடையோடு அடையாளம் காட்டும் முயற்சியை அறிஞர்கள் இப்போது கைவிட்டு விட்டனர்.

## கூலே - சீரியா (COELE - SYRIA)

லெபனோனுக்கும் எதிர் லெபனோனுக் கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கின் (யோசு 11:17) கிரேக்கப்பெயராகும். இப்போது பேகா என்றழைக்கப்படுகிறது. கிரேக்க ஆட்சி யில் இப்பெயர் பாலஸ்தீனம், பெனிக் கியா முழுமைக்கும் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப்பின் வந்த தோலமி, செலூக்கிய ஆட்சியில் ஒரே ஆளுநரின் கீழ் உள்ள ஒரு மாகாணத்திற்கு இப்பெயர் வழங் கப்பட்டது. இது ஒரு வேளை யூப்பிரத்தி சுக்கு மேற்கே அமைந்த பாரசீகர்களின் மகாகாணமாக இருக்கலாம். இப்பெயர் பெனிக் கியா விலக்கிய சீரியாவின் தெற்குப் பகுதிக்

*குப் பயன்படுத்தப்பட்டது (1 மக் 10:69; 2 மக் 4:4). கி.மு.47-இல் உரோமையர்கள் எரோதுக்கு இந்த இடத்தின்மேல் அதிகாரம் அளித்தபோது, இப்பெயர் யோர்தானுக்குக் கிழக்கே உள்ள எல்லாப் பகுதிகளையும் குறித்தது. அத்துடன் யூதேயா, மாரியா, கலிலேயா போன்ற இடங்களிலிருந்து இந்த இடத்தை வேறுபடுத்தியும் காட்டியது. இயேசுவின் காலத்தில் கூலே-சீரியா, பிலிப்பின் கீழ் உள்ள மாகாணத்தையும், அத்துடன் யார்முக்கின் தெற்கிலிருந்து யாபோக்கு வரை உள்ள இடங்களையும் கொண்டிருந்தது.*

**கூல்** (HUL - வட்டம்)

*ஆதி 10:23-இன்படி ஆராமின் இரண்டாவது புதல்வனும் சேமின் பேரனுமாவார். 1 நாள் 1:17-இல் சேமின் ஏழாவது புதல்வன் என்று குறிக்கப்பெறுகிறார். இவரது வழித்தோன்றல்கள் வாழ்ந்த பகுதியை உறுதியாக அடையாளம் காட்ட முடியாது. ஆயினும் கூலே ஏரிப்பகுதியும், அரேபியத் தீபகற்பம், அர்மேனியன் எல்லை ஆகிய பகுதிகள் இப்பகுதியிருந்த இடமாக அடையாளம் காட்டப்படும்.*

**கூவேல்** (GEUEL - இறைவனின் மாட்சி, இறைவனால் மீட்கப்பட்டவன்)

*மாக்கியின் புதல்வன். கானான் நாட்டைச் சுற்றி வேவு பார்ப்பதற்காகக் காது கோத்திரத்திலிருந்து அனுப்பப்பட்டவர் (எண் 13:15).*

**கூழக்கடா, மீன்கொத்தி, பெலிக்கான்** (PELICAN)

*விரியக்கூடிய பையினை அடியிற் கொண்ட நீண்ட அலகுடன், பெரிய தசையுடன் கூடிய கால்களைக்கொண்ட பறவை இனங்களில் ஒன்று இப்பறவை. இவை சதுப்பு நிலங்கள், வாய்க்கால்கள், கடல்கள், ஆறுகள் ஆகியவற்றின் அருகில் காணப்படும். இவற்றின் முதன்மையான உணவு மீன் ஆகும். இதைக் குறிக்கும் எபிரேயச்சொல், இது ஓர் அசுத்தமான பறவை என்று சுட்டுகிறது (லேவி 11:18; உப 14:17).*

*19-ஆம் நூற்றாண்டில் இப்பறவை பாலஸ்தீன நாட்டில் அவ்வப்பொழுது காணப்பட்டாலும் இதனைக் குறிக்கும் எபிரேயச்சொல் எதுவும் அறியப்படவில்லை. 'வாந்தியெடுப்போர்' எனப் பொருள்படும் எபிரேயச் சொல் இதைக் குறித்ததால், பெலிக்கானுக்கு இவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனில், பெலிக்கான் தான் உண்ட உணவையே கக்கித் தன் குஞ்சுகளுக்கு ஊட்டாது. மேலும், சங் 102:6-7; ஏச 34:11; செப் 2:14-இல் குறிக்கப்படும் பறவை பாழடைந்த இடங்களிலும் ஏதோம் மற்றும் நினிவே நகரங்களின் இடிபாடுகளிலும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், பெலிக்கான் இத்தகைய இடங்களில் சாதாரணமாய்க் காணப்படுவதில்லை. சிலர் இந்த எபிரேயச் சொல்லை 'இரவுப் பறவை' என்றும் 'ஆந்தை' என்றும் கருதுகின்றனர்.*

**கூழ்** (POTTAGE)

*இது காய்கறிகளைக் கொதிக்கவைத்துத் தயாரிக்கப்படும் ஓர் குடிக்கக்கூடிய சாறு. கீரைகளைப் பயன்படுத்தியும் இக்கூழைத் தயாரிப்பர். சில நேரங்களில் மாமிசமும் இதோடு சேர்த்துக் கொதிக்கவைக்கப்படும் (ஆதி 25:34; 2 அர 4:38-39).*

*ஏறக்குறைய இக்கூழ் சிவப்பு நிறத்தில் இருக்கும் (ஆதி 25:30). யோக்கோபு தன் அண்ணன் ஏசாவை ஏமாற்றும் நிகழ்ச்சியில் இக்கூழ் பற்றிய குறிப்பு உள்ளது (ஆதி 25:29-34). எலிசாவின் சீடர்கள் இத்தகைய ஓர் கூழையே தயாரித்தார்கள் (2 அர் 4:38-41). இது அறுவடை செய்பவர்களின் உணவாகவும் பயன்பட்டது (தானி 14:33).*

**கூனன்** (HUNCHBACK)

*கூன் முதுகுடையவர்கள் குருவின் அலுவல்களைச் செய்யத் தகுதியற்றவர்கள் என்று பரிசுத்தத்தின் சட்டம் கூறுகிறது (லேவி 21:20). ஆனால் அவர்கள் திருவுணவில் பங்கு பெறலாம். குரு கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புனிதத் தன்மையுள்ள மனித*

னானதால் அவர் ஆன்மீக அளவிலும், உடலி லும் எந்தக் குறையும் இல்லாதவராக இருக்க வேண்டும்.

**கூனி** *(GUNI - வண்ணம்பூசப்பட்ட)*


*1.* நெப்தலின் இரண்டாவது மகன் *(ஆதி 46:24; எண் 26:48; 1 நாள் 7:13)*. கூனியர்களின் இனத்தலைவர் *(எண் 26:48)*.


*2.* காது இனத்தைச் சேர்ந்த அபிதியேலின் தந்தை *(1 நாள் 5:15)*.


**கூன்** (CUN - *தயாரான)*


இது ஒரு சீரியா நகரம்; இங்கிருந்து தாவீது மிகுந்த வெண்கலத்தைக் கொண்டு சென்றார் *(1 நாள் 18:18)*. இதற்கு இணையான வாசகம் *2 சாமு 8:8*-இல் பேரோத்தாய் என்ற பெயரைக் கொண்டுள்ளது.


*வரைபடம் 1*


காஸ்பியன் கடல்
பாரசீக வளைகுடா
ஆபிரகாமின் அலைவுப் பயணமும்
0 100 200 300 400 500
மத்தியதரைக்கடல்
செங்கடல்


மத்தியதரைக்கடல்
நைல் டெல்டா
இராம சேசு
(தானிசு)
நாணல் கடல்
பாகால் செபோன்
கோசேன்
சொக்கோத்
பித்தோம்
சூர் பாலைவனம்
கசப்பு ஏரிகள்
கெலியோபொலி
மெம்பிசு
எகிப்து
நைல் நதி
பாரான் வனாந்தரம்
சீன் பாலைவனம்
தொபிகா
ஆசெரோத்
பாரான்
இரபிதிம்
சீனாய் மலை
(ஓரேபு)
சீனாய் தீபகற்பம்
செங்கடல்
மீதியான்
ஏலாத்து
ஒபோத்து
புனோன்
எதோம்
காதேசு பர்னேயா
(மெரிபா)
சின் வனாந்தரம்
அசிமோன்
யக்கான்
ஓர்மா
பெயேர்செபா
கானான்
அராது
எபிரோன்
எரிகோ
எசிபோன்
நெபோ மலை
மேதபா
தீபோன்
ஆர்னோன்
மோவாபு
உப்புக்கடல்
இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணம்
(அறிஞர்களின் பொதுவான கருத்துப்படி)
0 20 40 60 80 100
கி. மீ.



கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள்
வாழ்ந்த நிலப்பகுதிகள்)
0 5 10 20 40
வ
சீதோன்
சீதோனியர்
சீரியா
தமஸ்கு
லெபனோன் மலை
எர்மோன் மலை
தீர்
தாண்
காதேசு
காசோர்
மெரோம் ஏரி
ஆக்கோ
யோர்தான் நதி
பாசான்
கலிலேயா ஏரி
கோலான்
அபேக்கு
கர்மேல் மலை
தாபோர் மலை
தோர்
தானாக்கு
பெத்சான்
தோத்தான்
பெருங்கடல்
கிலேயாது
ஏபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
இராமோத்து
பெனியேல்
சுக்கோத்து
அமோரியர்
யோப்பா
சீலோ
யாசேர்
இரபா
ஒப்ரா
எக்கரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
கில்கால்
இராமா
எருசலேம்
எசிபோன்
பெலிஸ்தியர்
அசோத்து
அஸ்கலோன்
நெபோ மலை
பெத்லகேம்
செபிரோன்
சீப்பு
காசா
தெபீர்
சாக்கடல்
பெசேர்
அரேபியர்
இத்தியர்
பெயேர் செபா
அரோயேர்
மோவாபியர்
இரகொபோத்
தாமார்
ஏதோம்
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தாண்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயிம்
12. பெஞ்யமின்


தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
சைப்ரஸ்
பெனிசியா
இஸ்ராயேல்
பெருங்கடல்
சோபா
அம்மோன்
யூதா
மோவாபு
ஏதோம்
அரேபிய பாலைவனம்




பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1.700,000
0 5 10 15 20
வ
மத்தியதரைக்கடல்
சீதோன்
லெபனோன் மலை
தீர்
பெனிக்கியா
இதுரேயா
அபிலேன்
தமஸ்கு
கெர்மோன் மலை
சீரியா
பிலிப்புச் செசரியா
தாண்
திரக்கோனித்து
கொராசின்
பெத்து சயிதா
கப்பர் நகூம்
கானாவூர்
மகதலா
தொலமாய்
கர்மேல் மலை
கலிலேயா
கலிலேயாக் கடல்
திபேரியா
நாசரேத்து
தாபோர் மலை
காதாரா
நயீன்
சலேம்
தெக்காப்பொலி
செசரியா
சமாரியா
ஐனோன்
சமாரியா
ஏபால் மலை
கெரிசிம் மலை
சிக்கார்
செக்கேம்
யாக்கோபின் கிணறு
யோர்தான் நதி
கெரசா
அப்பொல்லோனியா
அந்திப்பத்திரி
அரிமத்தியா
யோப்பா
பெத்தேல்
எப்பிராயிம்
பேத்து பாரா
இலிதா
பிலதெல்பியா
எரிகோ
ஒலிவ மலை
கும்ரான்
பெரயா
எம்மாவு
எருசலேம்
அபின் கெரேம்
பெத்தானியா
எசிபோன்
அசோத்து
யூதேயா
பெத்லகேம்
அசக்கலோன்
யூதேயாவின் பாலைநிலம்
சாக்கடல்
காசா
கெபிரோன்
பெயேர்-செபா
இதுமேயா

வரைபடம் VI




பெத்து சயிதா குளம்
செசரியா
தமஸ்கு வாயில்
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து அரண்மனை (அந்தோனியா)
சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தல்
சிலுவை சுமந்து செல்லல்
கொல்கொத்தா
போதித்தல்
ஆலயம்
தங்க வாயில்
வியாபாரிகளைத் துரத்துதல்
அரச முற்றம்
கெதுசமனித் தோட்டம் (இயேசு பிடிபடுதல்)
யோப்பா
பெத்லகேம்
ஏரோது அந்திப்பாவின் அரண்மனை
பிலாத்துவிடம்
அழைத்துச் செல்லப்படுதல்
ஒலிவ மலை
இயேசு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில்
கயபா அரண்மனை
கயபாவிடம்
பேதுரு மறுதலித்தல்
கெதுசமனித் தோட்டத்துக்கு
சிலோவாம் குளம்
இரத்த நிலம் (குயவன் நிலம்)
இன்னோம் பள்ளத்தாக்கு
எருசலேம் — பாடுகளின் பாதை
மீட்டர்
0 50 100 150
1
2
3
4
5
6
7
8
9

வரைபடம் VII



புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
முதல் பயணம் கி.பி. 46—48 (அப். பணி 13—14)
உரோமைப் பயணம் கி.பி. 59—62 (அப். பணி 27—28:16)
கருங்கடல்
தாகியா
மோசியா
திராக்கே
தல்மாத்தியா
அதிரியாக் கடல்
இத்தாலியா
உரோமை
மூன்று விடுதி
ஆப்பியு சந்தை
புத்தயோலி
சிசிலி
இரேகியும்
சீரக்கூசா
மால்த்தா
மக்கதோனியா
தெசலோனிக்கா
பிலிப்பி
கொரிந்து
அக்காயா
அதிராமித்தியம்
ஆசியா
கலாத்தியா
எபேசு
அந்தியோக்கியா
(பிசிதியா)
இக்கோனியா
பிசிதியா
இலிஸ்திரா
தெருபை
கப்பதோக்கியா
சிலிசியா
கொலோசை
பெருகை
இனிது
அத்தாலியா
பம்பிலியா
மீரா
கிரேத்து
பேனிக்ஸ்
பதுமோ
சல்மோனே
கவுதா
செந்துறை
இலசயா
அந்தியோக்கியா
செலூக்கியா
சீரியா
சாலமி
பாப்போ
சைப்ரஸ்
மத்தியதரைக்கடல்
சீரேன்
லிபியா
சீதோன்
தமஸ்கு
செசரியா
அந்திப்பத்திரி
எருசலேம்
அலெக்சாந்திரியா
எகிப்து
அர்மேனியா
0 100 200 300


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம்
கி.பி. 49—52 (அப். பணி 15:39—18:22)
மூன்றும் பயணம்
கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
கருங்கடல்
போந்து
பித்தினியா
மீசியா
ஆசியா
பிரிகியா
கலாத்தியா
பிசிதியா
பம்பிலியா
சிலிசியா
சீரியா
பெனிக்கியா
சைப்ரஸ்
கிரேத்து
மத்தியதரைக்கடல்
எகிப்து
மக்கதோனியா
அம்பிப்பொலிஸ்
பிலிப்பு
தெசலோனிக்கா
பெரோயா
நெயாப்பொலி
சமொத்திராக்கு
துரோவா
ஆசோ
மித்திலேன்
கீயு
பெருக மோன்
தியத்திரா
சர்தை
சிமிருனா
எபேசு
சாமு
மிலேத்து
கோசு
உரோது
பாத்தாரா
அக்காயா
கொரிந்து
அதென்சு
கெங்கிரேயா
அந்தியோக்கியா (பிசிதியா)
இக்கோனியா
இலிசித்திரா
தெர்பை
தார்சு
அந்தியோக்கியா
செலூக்கியா
தீர்
தொலமாய்
செசரியா
எருசலேம்
அலெக்சாந்திரியா
0
100
200
300

# ஆசிரியரது பிற நூல்கள்

**விவிலிய அறிமுக நூல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | "தோரா" அல்லது "ஐந்நூல்" | (ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்) |
| 2. | வரலாற்று நாயகன் | (யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்) |
| 3. | இஸ்ராயேலின் காவலர்கள் – I | (பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா) |
| 4. | இஸ்ராயேலின் காவலர்கள் – II | (எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்) |
| 5. | ஞான நூல்கள் | (யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு) |
| 6. | சில கதைகளும் காட்சிகளும் | (யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து) |
| 7. | நான்கு வடிவ நற்செய்திகள் | (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்) |
| 8. | புனித பவுலின் திருமுகங்கள் – I | (பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்) |
| 9. | புனித பவுலின் திருமுகங்கள் – II | (2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்) |

**விளக்கவுரை நூல்**

| | | |
|---|---|---|
| 10. | லூக்காவின் நற்செய்தி | (அருள்வாக்கு மன்றப்பதிப்பு) |
| 11. | விவிலியச் சித்திரக் கதைகள் | **பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது) |
| 12. | விவிலியக் களஞ்சியம் – I | **புதிய ஏற்பாடு:** |
| 13. | விவிலியக் களஞ்சியம் – II | |
| 14. | விவிலியக் களஞ்சியம் – III | |
| 15. | விவிலியக் களஞ்சியம் – IV | |
| 16. | விவிலியக் களஞ்சியம் – V | |

**தயாரிப்பில் உள்ளவை :**

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

*கிடைக்குமிடம்*

**தியான ஆசிரமம்**

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

**மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.**